DR. U. V. SWAMINATHA LIBRARY,
TIRUVANMIYUR :: MADRAS-41
112 57

ஸ்ரீ மஹாபாரதம்.

ஆதிபர்வம்

(ஸ்ரீ வேதவ்யாஸபகவான் வடமோழியில் அருளிச்செய்த
ஸ்ரீ மஹாபாரதத்திற்குச் சரியானது.)

155

இது

கும்பகோணம் கலேஜ் ஸம்ஸ்கிருதபண்டிதர்

மஹாவித்வான்

சதாவதானம், ஸ்ரீ உபய - வே

தி. ஈ. ஸ்ரீ நிவாஸாசாரியர்

அவர்களால் மொழிபெயர்க்கப்பெற்றது.

கும்பகோணம் ஹைஸ்கூல் தமிழ்பண்டிதரும்

வி. வீ. ராமானுஜாசாரியரால்

MADRAS-41
DR. U. V. SWAMINATHA LIBRARY,
TIRUVANMIYUR :: MADRAS-41

Madras:
PRINTED AT THE VAIJAYANTI PRESS,
32, MOUNT ROAD.

1909.

விலை ரூபா - 4. | தபாற்செலவு அணா - 8.

(All Rights Reserved.)

DR U.V. SWAMINATHAIYER LIBRARY
TIRUVANMIYUR :: CHENNAI-41

விஜ்ஞாபனம்.

ஸ்ரீ வேதவியாஸமஹரிஷியிஞல் அருளிச்செய்யப்பெற்றதும் உளவிடக்கூடாத மஹிமையுள்ளதுமாகிய ஸ்ரீமஹாபாரதமானது கலைவேதசாஸ்திர நுட்பங்களையும் நன்ருகளிளக்குவது. இஃது உலத்திலுள்ள அனேக கதைகளுக்கு ஆதாரமானது. இவ்வளவுபெரிய ரம் அழகுள்ளதுமான கிரந்தம் உலகத்தில் வேறுபாஷையிலுமில்லை. இஃது இந்துமதஸம்பந்தமான சரித்திரம், தர்மம், ஞானம் முதலான கலைவிஷயங்களுமடங்கிய ஒருபொக்கிஷமேபோன்றது. இது தேசாந்தரங்களிலுள்ள இங்கிலீஷ்முதலிய பாஷைகளிலும் இந்தியாவில் வழங்கும் அனேகபாஷைகளிலும் மொழிபெயர்க்கப்பட்டு வழங்கி வருகையில், தமிழ்ப்பாஷையில்மாத்திரம் வடமொழிக்குச்சரியான மொழிபெயர்ப்பு இல்லாமையால் ஸம்ஸ்கிருதபாரதத்தின் விஷயங்களையும் ரஸங்களையும் தமிழ்நாட்டிலுள்ளயாவரும் முழுதும அறிந்து விக்கக்கூடாமலே இருந்தது. சிலபெரியோர்கள் சரியான மொழிபெயர்ப்புஒன்று எளியவசனநடையில் இருக்கவேண்டு மென்று விரும்பி அதனைச்செய்யுமபடி ஆஜ்ஞாபித்தார்கள். அவர் கட்டளையை பூர்த்திசெய்தற்கஞ்சியும், இந்த இதிஹாஸரத்நத்திலுள்ள அபூர்வமான விஷயங்களைத் தமிழ்நாட்டாருக்குப பயன்படும்படி செய்யவேண்டுமென்கிற ஆவல்மிக்கும், நான் இந்த மொழிபெயர்ப்பைச்செய்வித்து வெளியிட ஆரம்பித்தேன்.

மஹாபாரதம் ஆழ்ந்தகருத்துள்ளதாகலின் அதனைச்சரியாக மொழிபெயர்த்துத்தரத்தக்க பெரியபண்டிதர்களுடைய ஸஹாயத்தை நம்பி, கும்பகோணம் கவர்ன்மெண்டுகாலேஜ் ஸம்ஸ்கிருதபண்டிதராகிய மஹாவித்வான் ஸ்ரீ உபய வேத. சதாவதானம், தி. ஈ. ஸ்ரீநிவாஸாசாரியர் ஸ்வாமிகள் முதலிய பெரியோர்களிடத்து நான் அபிப்பிராயதத்தை விஜ்ஞாபனம்செய்தேன். இது லோகோபகாரமான ஸத்காரியமானதால், என்வேண்டுகோளுக்கிணங்கி அவர்கள் அங்கீகரித்தமையால், யான் அதிக ஊக்கத்தோடு இதில் முயற்சிக்கத்தொடங்கினன். அவரவர்கள் மொழிபெயர்க்கும் பர்வங்களை அவரவர்கள் பெயர்மேலேயே வெளியிடுவேன்.

மஹாபாரதத்தின் அர்த்தம் எளிதில் விளங்காததாயும், விளங்கினாலும் மற்றொருபாஷையில் எடுத்துச்சொல்லக் கடினமுள்ளதாயும் இருப்பதனால், அதுவிஷயத்தில் பண்டிதசிகாமணிகளான ஸ்ரீமத் ஸ்ரீநிவாஸாசாரியாவர்கள் தமதுபுத்தியையும், சாஸ்திரபரிச்சயத்தை

யும், வியாக்கியானங்களின் ஆராய்ச்சியையும் உபயோகப்படுத்தி, காலேஜ் வேலையுடன் இன்னும் இதரகாரியங்களுமிருக்கையில், சிரமத்தைச்சிறிதும் பாராட்டாமல் இதனை மொழிபெயர்த்துப் பலமுறை ஒப்புநோக்கி உதவிய இந்தப்பேருபகாரத்திற்காக இத்தமிழுலகம் அவர்களுக்கு என்றும் நன்றிபாராட்டக் கடமைப்பட்டிருக்கிறது.

விஸ்தாரமான முகவுரையொன்று பின்பு வெளியிடப்படுமாதலால், அவசியம் தெரிவித்துக்கொள்ளவேண்டிய சில முக்கியமான விஷயங்களைமாத்திரம் இங்கே விஜ்ஞாபனம்செய்கிறேன்.

பாஷையைக்காட்டிலும் விஷயத்தை முக்கியமாகக் கவனிக்கவேண்டுமென்று அறிஞர்பலரும் அடிக்கடி வற்புறுத்தினமையால், அந்தமுறைப்படி ஸம்ஸ்கிருதபாஷையிலுள்ள கருத்துக்களை அமைக்கும்வகையில் தமிழ்நடை சிலஇடங்களில் சிறிதுமாறியிருத்தல்கூடும்; மொழிபெயர்ப்பு மூலத்திலுள்ளபடியே இருக்கவேண்டுமென்பதே முழுமோக்கமாதலால் தமிழ்நடை தன் ஸ்வதந்திரநடையைச் சிறிது விட்டிருக்கவேண்டி வருகிறது. எந்தமொழிபெயர்ப்பும் மூலத்திலுள்ள விஷயங்களை விளங்கச்செய்யுமபாத்திரம் முடியுமேயல்லது பாஷையின் நடையோடு இயற்கையில் அமைந்த ரஸபாவங்களை முழுதும் வெளியிடக்கூடாதென்பது, ஓர்பாஷையிலிருந்து மற்றொருபாஷையில் விஷயங்களை மாற்றிக்கொண்டுவர முயற்சிசெய்கிற யாவர்க்கும் தெரிந்தவிஷயமே; ஆதலால் மொழிபெயர்ப்பாக இருக்குமளவில் இருக்கவேண்டிய குணங்களைமட்டுப் பார்த்துக் குற்றங்களை க்ஷமிக்குமாறு விவேகிகளைப் பிரார்த்திக்கின்றேன்.

மஹாபாரதம் பண்டைக்காலம்தொடங்கி எல்லாமதஸ்தர்களாலும் பிரமாணநூலென்று சிரமேற்கொண்டு கொண்டாடப்படுவதனால், இதில் அந்தஅந்தத்தேசங்களில் நெடுநாளாக அதிகபாடங்களும் பாடபேதங்களுமாகிய பலவேறுபாடுகள் சேர்ந்திருக்கின்றன. கும்பகோணம் மத்வவிலாஸபுஸ்தகசாலைத் தலைவர்களாகிய பிரம்மஸ்ரீ, டி. ஆர். கிருஷ்ணசாரியார் அவர்களுடையபதிப்பு அதிகபாடங்களையும் பாடபேதங்களையும்விடாமல் குறிப்புக்களோடும் கூடியதாயிருப்பதனால், அதை அனுஸரித்து இந்தமொழிபெயர்ப்புச் செய்யப்பட்டது. பலவிதமான பரிச்சயங்களை யெடுத்துக்கொண்டு சோதித்துப் பதிப்பித்து வெளிப்படுத்தியபுஸ்தகத்தை இந்த மொழிபெயர்ப்புக்கு உபயோகித்துக்கொள்ளும்படி அனுமதிசெய்ததற்காக ஸ்ரீமத். கிருஷ்ணசாரியார் அவர்களுக்கு நான்என்றும் நன்றிபாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பராசரருக்கும் ஸத்தியவதிக்கும் விவாஹம்நடந்ததாகச் சொல்வதுபோன்ற இரண்டோர் இடங்களில்மட்டும் சிலபகுதிகள் எல்லோருக்கும் விரோதமென்று வெளிப்படையாகத் தோன்றுகிறபடியால்

அந்த அதிகபாடம் மொழிபெயர்க்கப்படவில்லை. அவச்யமான இடங்களில் பாடபேதங்கள் குறிப்பிக்கப்பட்டிருக்கின்றன.

வடமொழிப்பதங்களை உபயோகிக்கும்போது ஜ, ஷ, ஸ, ஹ, க்ஷ இந்தஎழுத்துக்களை அப்படியே உபயோகித்திருப்பதோடு வடசொற்கள் இயன்றஅளவு உச்சரிப்பு மாறுபடாமலிருக்கும்வண்ணம் அமைக்கப்பட்டிருக்கின்றன. வடசொற்களில் நகரம், இடையில்வரும் போதும் தந்நகரமாகவேயிருத்தல் வேண்டுமோவென்ற ஐயம் சிலருக்கு உண்டாகிறது. முன்னோர் இலக்கியங்களால் அப்படித் துணியப்படாமையாலும், நகரம் ஒற்றாகவந்துள்ள வடசொற்களைமாத்திரம் தந்நகர எதுகையிலும், உயிர்மெய்யாகவந்துள்ள ஆனகம், தானம், ஆனியம், வன்னி, தனம், அனந்தன், அனந்தப், அனங்கன், ஜானகி, முனி, ஞானம், யானம், வனம், பனுமுதலிய வடசொற்களை றன்னகர எதுகையிலும்அமைத்து நிகண்டுகள் கூறுதலாலும், அஃது இடையில் உயிர்மெய்யெழுத்தாக வரும்போது றன்னகரமாக வழங்கிவந்ததென்றறிதிகிறது; ஆயினும் சிலவிடத்து வடமொழி ஜ, ஷ, ஸ, ஹ, க்ஷ முதலிய எழுத்துக்களை அப்படியே உபயோகிப்பதுபோல நகரமாகவும் வழங்கப்படுவதுண்டு. ஆதலால், இதில் அந்த இரண்டுவழக்கங்களையும் தழுவி நகரமாகவும் னகரமாகவும் உபயோகித்திருக்கிறேன்.

பெண்களும் பாலர்களும் எளிதில் படித்துணரத்தக்கதாயிருக்கவேண்டுமென்பது கருத்தாதலால், விளங்குதற்பொருட்டுச் சிற்சில விடங்களில் உலகவழக்குச்சொற்களை அமைத்தும், முழுவதும் சந்திவிதிப்படி சொற்களைச்சேர்க்காமலும் இது மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது.

மூலத்திலில்லாதசொற்கள் சிலவிடத்துத் தொடர்ச்சிக்காக வருவிக்கப்பட்டுள்ளன. அந்தச்சொற்களுக்கு இருபுறத்தும் ( ) இம்மாதிரியான அடைப்பாளங்கள் செய்யப்பட்டுள்ளன.

முன்பு, பிரகடனபத்திரிகையில் இரண்டுமாதிரியான காகிதத்தில் பதிப்பிப்பதாகத் தெரிவித்திருந்தேன்; இப்போல், சிலஸைகரியங்களை உத்தேசித்து ஒரேமாதிரியான காகிதத்தில் பதிப்பித்திருக்கிறேன். அங்கீகரிக்கும்படி அறிஞர்களைப் பிரார்த்திக்கிறேன்.

திருவாவடுதுறை ஆதீனத்து மஹாகனம்பொருந்திய ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிகரவர்கள், நான் இளமைதொடங்கிக் கவலையின்றித் தமிழைக்கற்கும்படி வேண்டிய உதவிகளைச்செய்து என்னை நெடுநாளாக ஆதரித்துவருவதுபோலவே, இந்தவிஷயத்திலும் எனக்கு மனத்தளர்ச்சி யுண்டாகாவண்ணம் அடிக்கடிவிசாரித்து வேண்டிய உதவிகளைச்செய்து உத்ஸாகப்படுத்திவருகிற பரமோபகாரத்திற்கு யான்செய்யும் கைம்மாறு என்னஇருக்கிறது. இப்பரமோபகாரிகளுடைய தண்ணளியும் பெருந்தகைமையும் மறக்கற்பாலனவல்ல.

"கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்
டென்ஞற்றுங் கொல்லோ வுலகு"

என்னும் பொய்யாமொழிக்கு இலக்கியமாக விளங்கும் இப்பெருந் தகையாளர்களது புகழ் உலகெங்கும் பரவியிருத்தலின் நான்சொல்லுவது எங்ஙனம்?

சென்னைப் பிரஸிடென்ஸிகாலேஜ் தமிழ்ப்பண்டிதரும், மஹாமஹோபாத்யாயருமாகிய உத்தமதானபுரம் பிரம்மஸ்ரீ, வே. சாமிநாதையரவர்கள், இவ்வரியகிரந்தம் தமிழில் வரவேண்டுமென்பதையே பயனுகக்கருதிச் செய்யும் உதவி என்னுல் மறக்கற்பாலதன்று. இப்பெருங்காரியத்திற்கு முதலிற் கையொப்பஞ்செய்து பொருளுதவி செய்ய முன்வந்தவர்களும் அவர்களே.

தமது சிரமத்தைச்சிறிதும் பாராட்டாமல் இது ஸம்பந்தமான அச்சுக்கூடவேலைகளை ஒப்புக்கொண்டு சலிப்பின்றிப்பார்த்து அன்புடன் உதவிசெய்துவருபவர்கள், மயிலாப்பூர் - பி. சுப்பிரமணியம் ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதராகிய ம-ரா-ரா-ஸ்ரீ, இ. வை. அனந்தராமையரவர்கள். இந்நன்றியை நான் ஒருபொழுதும் மறவேன்.

பலர்சேர்ந்து நெடுநாளுழைத்து நிறைவேற்றக்கூடிய இந்த அரியகாரியத்திற்குத் துணையாகநின்று உதவும் வித்வான்கள், பிரபுக்கள்முதலிய கனவான்களுக்கு என்னுடைய வந்தனங்களை யப்பொழுதும் ஸமர்ப்பிக்கின்றேன். அவர்களைப்பற்றை முகவுரையில் மனவந்தனத்துடன் தெரிவிப்பேன்.

இதிற்காணப்படுங் குற்றங்களை வித்வேகிகள் எழுத்துமூலமாக எனக்குத் தெரிவிப்பார்களானுல் அதைப் பரமோபகாரமாக நினைத்து நன்றியறிவுடன் ஏற்றுத் தணிகை பதிப்பித்துப் புஸ்தகத்துடன் வெளியிட ஸித்தமாக இருக்கிறேன்.

தொடங்கிய இப்பெருங்காரியத்தை நிறைவேற்றுவிக்கும்படி எல்லாம்வல்ல ஸர்வேசுவரனைப் பிரார்த்திக்கின்றேன்.

இங்ஙனம்:

ம. வீ. இராமானுஜாசாரியன்.

ஸ்ரீ

விஷய வரிசை.

ஸ்ரீ மஹாபாரதம்.

ஆதி பர்வம்.

அத்தியாயம். பக்கம்.

அநுக்கிரமணிகாபர்வம்.

1	கடவுள்வாழ்த்து	1
	ஸூதர் நைமிசாரணியம்வருதல்	2
	அவர் வியாஸர்சொன்னகதைகளைச் சொல்லவேனல்...	3
	நைமிசாரணியவாஸிகள் ருஷிப்பிரக்னஞ்செய்தல் ...	3
	நைமிசாரணியவாஸிகள்பாரதங்கூறவேண்டுமெனல் ...	4
	ஹரிஸ்துதி	4
	வியாஸர் பாரதம்வெளியிட்டவரலாறு	5
	ஜண்டமஹாராஜஉற்பத்தியும் பிதவர்பிறப்பும் ...	5- 6
	ஸ்ருஷ்டிக்கிரமம்	6- 7
	பாரதத்தின்தொடக்கம் இன்னதென்பது ...	7
	இவ்வுலகத்தில் பாரதம் யார்வெளியிட்டாரென்பது ...	8
	பாரதத்தின்சுலோகசங்கியை	8
	வியாஸர் சிக்ஷைபுறல்	9
	பிரம்மதேவர் வியாஸரைத்திரிலோகான்றல் ...	9
	வியாஸர்பிரார்த்தனையும் விக்நேஸ்வரர்அங்கீகாரமும்...	11
	வியாஸர் சடிணமானசுலோகங்களைச்செய்தகாரணம் ..	12
	பாரதத்தில் எவ்வளவெவ்வளவுபருதி எங்கெங்கே தங்கிற் றென்பது	12
	யார்யார் எங்கெங்கு வெளியிட்டவரென்பது ..	12
	கௌரவர்களையும் பாண்டவர்களையும் விருக்ஷமாக உருவ கப்படுத்தல்	12- 13
	பாண்டுசரித்திரச்சுருக்கம்	13
	பாண்டவர்ஹஸ்தினாபுரம்புகுந்தது	13
	பாண்டவர்களின்சரித்திரச்சுருக்கம்	14
	துரியோதனன் பொறாமைகொள்ளக்காரணம் ...	15
	திருதராஷ்டிரன் ஸஞ்சயனிடுதியோசித்தல் ..	15- 16
	திருதராஷ்டிரன் ஸஞ்சயனிடத்தில் புலம்பல் ...	16- 24
	அவன் தெளிந்து ஸஞ்சயனைப்பார்த்துச் சொல்லுதல் ...	24- 25
	ஸஞ்சயன்தேற்றல்	25- 27
	பகவத்கீதையின்பெருமையும் கிருஷ்ணபகவான் ஸ்துதி யும்	27- 28
	அநுக்கிரமணிகாபர்வபடனபலன்	28- 29
	மஹாபாரதமென்னும் பேர்வந்தகாரணம் ...	29

விஷய வரலாறு.

அத்தியாயம்.		பக்கம்.
	பர்வஸங்கிரகபர்வம்.	29
2	ஸமந்தபஞ்சகத்தின்வரலாறு	30- 31
	அக்ஷௌஹிணியின் அளவு	31- 32
	கௌரவஸைந்யபதிகளும் அவர்கள்யுத்தஞ்செய்தகாலமும்	32
	தூறுபர்வங்களின்பெயர்கள் ...	33- 37
	பர்வங்களின் விஷயவிவரணமும் அத்தியாய சுலோகசங்கியையும்	37- 56
	மஹாபாரதபடனபலன்	56- 58
	பௌஷ்யபர்வம்.	
3	ஸாரமேயன்வரலாறும் ஸரமைசபித்தலும் ...	58- 59
	ஜனமேஜயர்துக்கமும் சுருதசிரவஸின்உபாயமும் ...	59
	ஆருணியின்உபாக்கியானம்	60- 61
	உபமன்யுவின்உபாக்கியானம்	61- 66
	உபமன்யு அசுவினீதேவரைத்துதித்தல் ...	63- 65
	பைதர்உபாக்கியானம்	66- 67
	உதங்கர் குருதலவாஸஞ்செய்தது	67- 68
	பைதரிஸ்த்ரியின்மனைவி உதங்கரைக் குருதக்ஷிணைகேட்டது	68
	உதங்கர் பௌஷ்யராஜன்மனைவியின் காதணிகளைப் பெற்றது	69- 70
	உதங்கருக்கும் பௌஷ்யனுக்கும் ஸர்ந்தசாபமும் அதன் நிவிருத்தியும்	71
	உதங்கர் குண்டலமழுத்து நாகலோகம்புகுதல் ...	72
	உதங்கர் நாகர்களைத்துதித்தல்	72- 73
	உதங்கர் இந்திரனைத்துதித்தல்	73- 74
	அவர் இந்திரனுல்குண்டலம்பெற்றுக் குருதக்ஷிணைகொடுத்தல்	74
	பைதர் உதங்கர்ஸம்சயத்தைநிவிருத்திசெய்தல் ..	75- 76
	உதங்கர் ஜனமேஜயரை ஸர்ப்பயாகஞ்செய்யத் தூண்டல்	76- 77
	பௌலோமபர்வம்.	
4	ஸூதர் ஸர்ப்பயாகத்துக்கு வேறுகாரணமுண்டெனல் ..	77
5	சௌனகர் பிருகுவம்சகதையைக்கேட்டல் ..	79
	ஸூதர் பிருகுவம்சபரம்பரையைக்கூறல் ...	79- 80
	பிருகுபுத்திரருக்கு சியவனர்என்றபெயர் வந்தகாரணம்...	80- 82
6	சியவனருடையஜனனம்	82
	அக்னிக்குச் சாபம்நேர்ந்தது	83
7	பொய்ச்சாக்ஷிசொல்லுதலின் தீமை	83
	பிரம்மதேவர் அக்னிக்கு நயமொழிகூறல் ...	84- 85
8	பிரமதத்வரையின்வரலாறு	86- 87
	பிரமதத்வரை பாம்புகடித்துஇறத்தல்	87
9	ருருபுலம்பல்	87- 88
	பிரமதத்வரை உயிர்பெற்றெழுதல்...	89
	ருருவுக்கும் பிரமதவரைக்கும்விவாஹம்... ...	89
	ருரு நெண்டுபத்திரக்கண்டது	89
10	ருருவுக்கும் நெண்டுபத்துக்கும் ஸம்வாதம் ...	90

அத்தியாயம்.		பக்கம்.
11	தெண்டுபம் தன்சரித்திரம்சொல்லியது	91
12	ஜனமேஜயருடையஸர்ப்பயாகப்பிரஸ்தாவம்	92
	ஆஸ்திகபர்வம்.	
13	ஜரத்காரு தமதுபிதிருக்களைக்கண்டது ...	94
14	ஜரத்காரு ஜரத்காருவை விவாஹஞ்செய்துகொண்டது ..	96
15	ஜரத்காருவுக்கு ஆஸ்திகர்பிறந்தது	97
16	கத்ரு வினதை இருவரும் கஸியபரைவரங்கேட்டது ..	98
17	அருணன்பிறப்பு	99
	வினதைதாபம்பெறுதல்	99
	கருடன்பிறப்புச்சருக்கம்	100
	அம்ருதகும்பகடைவதைப்பற்றித் தேவர்கள் ஆலோசித்தல்	100-101
18	மந்தரமலையைத்தூக்க ஆலோசித்தல் ...	101
	வாஸுகிஸீயக்கொணடுகடைதல்	102
	விஷமுண்டாதல்	102
	ஹரர்விஷபானஞ்செய்தல்	103
	ஜ்யேஷ்டாதேவியின்பிறப்பு	104
	சந்திரன்முதலானவர்களுடையபிறப்பு ...	104-105
	மோஹினியவதாரம்	105
19	அஸுரர்கலகஞ்செய்தது	105
	ராகுவின்சிலவெட்டப்பட்டது	106
	தேவாஸுரயுத்தமும்தேவர்கள்ஜயித்ததும் ...	106-108
20	வினதைக்கும் கத்ருவுக்கும் பிரகிஜ்ஞை ...	109
	ஸர்ப்பங்கள்கத்ருவினல்சாபம்பெற்றது ..	109
	ஸர்ப்பக்களின்சாபத்தைக்கேட்டுப் பிரம்மதேவர்ஸந்தோஷித்தது	109
	பிரம்மதேவர் கஸியபருக்கு விஷநிவிருத்திவித்தையைக் கற்பித்தது	109
21	உச்சைச்சிரஸ்ஸைப்பார்க்கக் கத்ருவினதைஇருவரும் போதல்	110-111
22	நாகங்கள் உச்சைச்சிரஸ்ஸின் வால்மயிர்கள்கறுத்தல் ...	112
	வினதைபரதந்திருவும் கடல்கடத்தல் ...	112
23	வினதை அடிமையாதல்	113
	கருடஜனனம்	113
	தேவர் கருடனைத்துதித்தல் ..	114-115
24	கருடன் வினதையைக்காணல்	115
	ஸூர்யன்உலகைதஹிக்கக்காரணம்	116
	ஸூர்யனுக்குமுன் அருணன்தோன்றுதல் ...	117
25	வினதை கத்ருவையும், கருடன் பாம்புகளையும்சுமத்தல்...	117
	கத்ரு இந்திரனைத்துதித்தல்	117-118
26	நாகங்கள் ராமணீயகத்தீவை அடைதல் ...	119
27	அமுதங்கொணர்ந்தால் அடிமைநீங்குமென்று நாகங்கள் கருடனுக்குரைத்தல்	121
28	கருடன் தமக்கு ஆகாரம்என்னவென்றுகேட்டல் ...	121
	வினதை உணவுக்குஉபாயஞ்சொல்லல்	121-122
	கருடன்வேடச்சேரியைவிழுங்குதல்	122-123

அத்தியாயம்.		பக்கம்.
29	கருடன் பிராமணனை விழுங்காமல்விடுதல் ...	123
	கருடன் கசியபரைத் தமக்குப்போதுமான ஆகாரம்வேண்டல்	124
	விபாவஸு ஸுப்ரதீகர்களின்சரித்திரம் ..	124-126
	கருடன் யானையையும் ஆமையையும் தூக்கிச்சென்றது	126
	கருடன்உட்கார ஆலமரக்கிளைமுறிந்தது ...	127
30	கருடன் ஆலங்கிளையுடன் கசியபரைக்கண்டது ...	128
	கருடன் இமயமலையிலிருந்து ஆமையையும் யானையையும் பக்ஷித்தது	129
	தேவருலகில் உற்பாதந்தோன்றியது	129
	இந்திரன் அமிருதத்தைக்காத்தது	130-131
31	வாலகில்யர்தபசினால் கருடன்உண்டானது ..	131-133
	வாலகில்யர் இந்திரனைக்கீழ்ப்படுத்தது	132
32	தேவர்கள்கருடனுடன்சமாதானமடைந்தது ...	134-136
33	கருடன் அமிர்தமெடுத்தல்	136
	கருடன் விஷ்ணுவினிடம்வரம்பெறுதல் ...	137
	கருடன் விஷ்ணுவுக்குவரமளித்தல்	137
	கருடன் மரியாதைக்காக மற்றைபக்ஷிகளைவிடுதல் ...	138
	இந்திரன் கருடனுடன்மித்திரம்செய்தல் ...	138
34	இந்திரனிடத்தில் கருடன்வரம்பெறுதல் ...	139
	கருடன்வைத்தபின் அமிர்தத்தை இந்திரன்எடுத்துப்போதல்	140
	வினதை அடிமைத்தன்மைநீங்கியது	140
	நாகர்களுக்குத் தாய்பிளவுபட்டது	140
35	முக்கியமான நாகங்களின்பெயர்கள்	141-142
36	ஆதிசேஷன் தவஞ்செய்தது ...	142
	ஆதிசேஷன் பிரமாவைக்கண்டித்தல்	142
	ஆதிசேஷன் பிரமாவினிடம்வரம்பெறுதல் ...	143
	வாஸுகி நாகராஜப்பட்டம்பெறுதல்	144
37	நாகங்கள் சாபவிமோசனத்திற்கு உபாயம்ஆலோசித்தல்	145-147
38	ஜனமேஜயராஜன் யாகத்தால் சர்ப்பங்கள்விழுவதைநிறுத்தல்	147-149
39	வாஸுகி பிரமனிடத்தில்போதல்	149
	வாஸுகி தன்சகோதரியை ஜரத்காருவுக்குக கொடுக்கத்துணிதல்	150
40	ஜரத்காருவின்னும்பெயரின்காரணம் ...	150
	பரிக்ஷித்து வேட்டையாடுதல்	151
	கிருசன் சிருங்கிக்குச்சாபமுண்டாதல்	152
41	சிருங்கி பரிக்ஷித்தைச்சபித்தல்	154
	சிருங்கியின்பிதா அரசனைச்சபித்தல்தகாதென்றல் ...	154-155
42	சமீகர் சிருங்கிக்குப்புத்திகூறல்	156
	சமீகர் பரிக்ஷித்துக்குச் சாபம்பற்றித்தெரிவித்தல்	157
	பரிக்ஷித்து ஸர்ப்பபயமுண்டாகாமல் செய்யவேண்டியகாப்புகள் செய்துகொள்ளல்	157
	காசியபரைத் தக்ஷகன்ஸந்தித்தல்	158
43	தக்ஷகன்கடித்த ஆலமரத்தைக் காசியபர் பிழைப்பித்தல்	159

அத்தியாயம்.		பக்கம்.
	காசியபருக்கு நாகராஜன் தனங்கொடுத்தனுப்பல் ..	160
	நாகர்கள் பரிகுழித்துக் கப் பழமுதலியனகொடுத்தல் ...	160
	தக்ஷகன் அரசனைக்கடித் தல்	161
44	ஜனமேஜயருக்கு அபிடேகஞ்செய் தல் ...	162
	ஜனமேஜயாவிவாஹம்	162
45	ஜரத்காருவுக் கும் அவர்பி திருக்களுக் கும் ஸம்பாஷணை .	163-165
46	ஜரத்காரு விவாகத் திற்கு ணங்கியது	166
	ஜரத்காரு மனைவிவேண்டுமென யாசித்தது ...	166
	ஜரத்காருவுக்கு வாஸு கி பெண்கொடுத்தது ..	167
47	ஜரத்காருவிவாஹம்	168
	ஜரத்காரு மனைவியைவிட் டுப்போதல்	170
48	ஆஸ்தீகர்ஜனனம்	172
	ஆஸ்தீகரென்னும்பெயரின்காரணம் ...	172
49	பரிகுழித்தின்விருத்தாந்தமும் ஜனமேஜயர்கேட்டல் ..	173-175
50	பரிகுழித்துக்குச் சாபம் ர்த்தவைகைகூறல் ..	175
	காசியபருக் கும் தக்ஷகனுக்கும் டக்ஸம்வாதம் வெளிப் பட்டவரலாறு	178-179
	ஜனமேஜயர் ஸர்ப்பயாகஞ்செய்யத்துணிதல் ...	179
51	ஜனமேஜயர் யாகத்துக்கு இடம்வ கப்பித்தல் ...	180
	ஒருசில்பி நிர்மாணஞ்செய்கூறல்	181
52	ஸர்ப்பயாகஞ்செய்தல்	181
	ஸர்ப்பங்கள் அக்னியில்விழுதல்	181-182
53	யாககாலத்திலிருக் நிமித்தங்கள்	182-183
	தக்ஷகனுக்கு இந்திரன் அபயங்கொடுத்தல் ...	183
	வாஸுகி தன்சகோதரியை வேண்டல்... ...	183
54	ஆஸ்தீகருக்கு அவர்தாய் ஸர்ப்பங்கள்சாபமடைந்த வரலாறுகூறல்	184-185
	ஆஸ்தீகர் வாஸுகிக் தயமளித்தல்	185-186
55	ஆஸ்தீகர் யாகசாலையடைதல்	186
	ஆஸ்தீகர் ஜனமேஜயரைத் துதித்தல்	186-188
	ஆஸ்தீகர் மூன்றடந்த பரியாகங்களை நிறுத்துக்கூறல் ...	187
56	ஜனமேஜயர் தக்ஷகன்வரவி லையென்று சங்கித்தல் ...	189
	இந்திரனே தக்ஷகன் அக்னியில்விழுந் தென்று ஹோமஞ்செய்தல்	190
	ஆஸ்தீகர் யாகத்தைநிறுத்த வரம்பெற்றல் .	191
57	யாகத்தில்வரிக்கப்பட்ட நாகங்களின்பெயர்கள் ...	192-193
58	ஜனமேஜயர் யாகத்தைநிறுத்தல்	194
	ஆஸ்தீகர் நாகர்களிடத்தில் வரம்பெறுதல் ...	195-196
	அம்சாவதாரபர்வம்.	
59	ஸூதர் பாரதஞ்சொல்லத்தொடங்கல்	197
60	ஜனமேஜயர்யாகத்தில் வியாஸர்வருதல் ..	198
	ஜனமேஜயர் பாண்டவர்சரித்திரம்கேட்டல் ...	199
	வியாஸர் வைசம்பாயனரை அந்தக்கதையைச்சொல்லும் படி ஆஜ்ஞாபித்தல்...	199
61	பாரதசதைச்சுருக்கம்	200-204

அத்தியாயம்.		பக்கம்.
62	ஜனமேஜயர் பாரதத்தைவிரிவாகச்சொல்லவேண்டுதல்...	204-205
	பாரதத்தின்மஹிமை	205-208
	வியாஸர் பாரதத்தைஎவ்வளவுகாலத்தில்செய்தாரென்பது	209
63	பூருவம்சபரம்பரை	209-216
	பரதனென்னும்பெயரின்காரணம்	211
	ஹஸ்தினபுரம்என்னும்பெயரின்காரணம் ...	212
	சந்தனுஎன்னும்பெயரின்பொருள்	212
	பரிக்ஷித்துஎன்னும்பெயரின்பொருள்	215
64	உபரிசரவஸுசவஞ்செய்தது	216
	உபரிசரவஸுவுக்கு இந்திரன் விமானமுதலியனகொடுத்தது	217
	உபரிசரவஸு இந்திரன்கொடுத்தகாலுக்குத் திருவிழாச்செய்தது	218
	இந்திரன் வரமளித்தது	219
	உபரிசரவஸுவுக்கு உபரிசரன்என்றபெயர்வந்தகாரணம்	220
	உபரிசரன் சுக்திமதியின்பெண்ணைமணந்தது ...	220
	உபரிசரன் வேட்டைக்குச்செல்லல்	220
	மத்ஸ்யன் ஸத்யவதி இவர்களின்ஜனனம் ...	222
	பராசரர் ஸத்யவதியின்வரலாறுகூறல்	223-225
	பராசரர் ஸத்யவதியைவேண்டல்	225
	ஸத்யவதி ஆக்ஷேபித்தல்	225
	பராசரர் அவளுக்குவரமளித்தல்	226
	வியாஸர்ஜனனம்	226
	த்வைபாயனரென்னும்பெயரின்பொருள் ...	226
	வியாஸர்என்பதன்பொருள்	226
	தர்மம்என்பதன்பொருள்	226 a
	எந்தஎந்தவிவாஹங்கள் பிராமணனுக்கு உரியனஎன்பது	226 a
	பெண்களைத்தானஞ்செய்ய அதிகாரிகள் யாரென்பது .	226 b
	பராசரரிடத்தில் பர்வதமுநி முதலியோர்வருதல் ..	226 b
	வசிஷ்டர் பராசரருடையவிவாஹத்திற்குவரித்தஞ்செய்தல்	226b-226c
	ஸத்தியவதியை உபரிசரவஸு கன்னிகாதானஞ்செய்தல்	226 d
	ஸத்தியவதி முற்படி கன்னிகையாதல்	226 d
	வியாஸருக்குப் பராசரர் நீதிமொழிகூறல் ..	226 e
	வியாஸர் விடைபெற்றுப்போதல்	226 f
	வியாஸர் வேதம்வகுத்தது	226 f
	வியாஸசரித்திரத்தைக் கேட்டலின்பலன் ..	226 f
	பீஷ்மர், விதுரர்ஜனனம்	227
	ஸஞ்சயன் பிறப்பு	227
	கர்ணன்பிறப்பு	227
	கண்ணன்பிறப்பு	227-228

சிலபுஸ்தகங்களில் ஸத்யவதிவிவாஹம் தனியே சேர்க்கப்பட்டிருக்கிறது. அந்த மூதலியபக்கங்களோ அந்தப்புஸ்தகங்களில் 1 - 2 - முதலாகக்கொள்க.

அத்தியாயம்.		பக்கம்.
	நாராயணன்என்பதன்பொருள்	228
	ஸாத்யகி, கிருதவர்மர், துரோணர்இவர்களின்பிறப்பு ...	228
	கிருபாசாரியர், சகுனிமுதலியவர்பிறப்பு ...	228-229
	திரௌபதிக்கு ஐந்துபிள்ளைகள்பிறத்தல் .	230
65	ஜனமேஜயர், மகாதர்க்கு ஜனித்தகாரணத்தைவினவுதல்.	230
	கூத்திரியஸ்திரீகளிடத்தில் பிராமணர்சேர்ந்தது ...	231
	கிருதயுகதர்மங்கூறினது	231
	அஸுரர்கள் பூமியில்ஜனித்தது	232
	பூமிதேவி பிரம்மாவிடம்முறையிட்டது ...	233
	பிரம்மா தேவர்களைப் பூமியிற்பிறக்கும்படி ஆஜ்ஞாபித்தது	234
	இந்திரன்வேண்டுதலால் விஷ்ணுமால் அவதாரஞ்செய்யஉடன் பட்டது	234

ஸம்பவபர்வம்.

66	தக்ஷருடைய பதின்மூன்றுபுத்திரிகளின்பெயர் ...	235
	பன்னிரண்டுஆதித்தியர்களின்பெயர்	236
	திதியின்புத்திரபௌத்திரபரம்பரை	236
	தனுபுத்திரர்கள்	236-237
	சிம்ஹிகையின்புத்திரர்கள்	237
	காலகஞ்ஞஸ்ஸுவர்களின்புத்திரர்கள்	237
	சுக்ராசாரியரும் அவர்புத்திரர்களும்	237
	வினதை கத்ருக்களின்புத்திரர்கள்	237
	முனி ப்ராதை இவர்களின்புத்திரர்கள்... ...	238
	ஸுபகாதேவி அப்ஸரஸுகளைப்பெற்றது ...	238
	பிராணிகளின்ஜனனத்தைக்கேட்டல் படித்தல்முதலிய வற்றின்பலன்	238
67	ஏகாதசருத்திரர்	239
	பிரம்மாவின்ஆறுபுத்திரர்களும் அவர்கள்ஸந்ததியும் ...	239
	தக்ஷர்ஜனனம்	239
	தக்ஷபுத்திரிகளின்விவாஹம்	240
	தர்மபத்தினிகளின்பத்தினிகள்	240
	அஷ்டவஸுக்கள்	240
	தர்மபத்தினிமுதலானதேவர்களின்பிறப்பு ...	240-242
	தேவர்களின்வகைமுப்பத்துமூன்று	242
	சுக்ராசாரியர்ஜனனம்	242
	ச்யவனரின்ஜனனம்	242
	பரசுராமர்ஜனனம்	243
	தாதா, விதாதா, ஸுரைமுதலானவர்பிறப்பு ...	243
	தர்மபத்தினியின்பெண்கள்	244
	கோட்டான், பருந்து, ஹம்ஸம், காக்கை, கிளிமுதலான வைகளின்பிறப்பு	244
	கொடியமிருகங்களும் பக்ஷிகளும் ஜராவதமும்பிற தல்	244
	புல், பசுக்கள், குதிரைகள், [1]கோளிகள், கொடிசெடிகள்,	

[1] பூவாமல்காய்க்கும்மரம்.

அத்தியாயம்.		பக்கம்.
	முனிவர்களின் தர்மம்	313-314
	ஆச்ரமத்துக்கேற்ப ஆகாரநியமம்	314
86	தேவர்களோடு ஒப்புமையை அடைகிறவன் யாரென்பது	314
	யயாதி தான் பூமியில் விழுவதற்குக் காரணங்கூறல் ...	315
	யயாதி அஷ்டகனுக்கு மேலுலகமுண்டெனல் ...	316
	யயாதிக்கு அஷ்டகனும் பிரதர்தனனும் தங்கள் புண்ணியத்தைத் தருவோமெனல்	316
	யயாதி மறுத்தல்	317
87	வஸுமானும் சிபியும் கொடுத்த புண்ணியத்தை யயாதி அங்கீகரியாமை	318
	அஷ்டகன் முதலியவர்கள் விமானத்தைக் காணல் ..	319
	மாதவி யயாதியைக் காணல்	319
	யயாதி தெளகித்ரர் புண்ணியத்தை எற்கமாமெனல் ...	320
	யயாதியுடன் சிபி முதலியோர் ஸ்வர்க்கம் செல்லல் ...	321
	யயாதி சிபியின் மகிமையை எடுத்துரைத்தல் ..	321
	யயாதி தன் பிறப்புவரலாற்றை அஷ்டகனுக்குரைத்தல் .	322
88	பூருவம்சத்தின் ஒருபகுதி	323-324
89	துஷ்யந்தனுடைய ராஜ்யபரிபாலனம்	324-325
90	துஷ்யந்தன் வேட்டைக்குச்செல்லல்	326-328
91	துஷ்யந்தன் புஷ்பவனம் புகுதல்	328-329
	துஷ்யந்தன் கண்ணுவருடைய ஆச்ரமத்தைக்காணல் ...	330
	கண்ணுவர் ஆச்ரமத்தின் சிறப்பு ...	331-332
	துஷ்யந்தன் கண்ணுவர் ஆச்ரமத்தில் நுழைதல் .	332
92	துஷ்யந்தன் சகுந்தலையைவர்ணித்தல்	334
	சகுந்தலை தன் பிறப்புவரலாற்றைக் கூறல் ...	335-340
	மேனகைக்கும் இந்திரனுக்கும் ஸம்பாஷணை ...	335-338
93	மேனகைக்குச் சகுந்தலைபிறத்தல் ..	339
	கண்ணுவர் சகுந்தலையைக் கண்டெடுத்தல் ...	340
	சகுந்தலையென்னும் பெயரின்பொருள் ..	340
94	எட்டுவகைவிவாகங்களும் அவை தழுங்கும்வருணங்களும்	342(405)
	துஷ்யந்தனைச் சகுந்தலைவரம்வேண்டல ...	342-343
	துஷ்யந்தனுக்கும் சகுந்தலைக்கும்விவாகம் ...	343
	சகுந்தலை கண்ணுவருக்கு நடந்ததைகூறைத்தல் ...	345
	சகுந்தலைக்குக் கண்ணுவர் அறுக்கரதிதல்	346
95	சகுந்தலை பரமனைப்பெறுதல் ..	347
	இந்திரன் சகுந்தலை தமாரனை ஆசீர்வதித்தல் ...	347
	சகுந்தலைகுமாரனுடையபராக்ரமம்	348-349
96	கண்ணுவர் சகுந்தலையையும் அவள்குமாரனையும் துஷ்யந்தனிடம்போகும்படி தூண்டல்	350
	சகுந்தலையும் ஸர்வதமனனும் காட்டிலேயே வளர்ப்போமெனல்	351
	சகுந்தலையும் ஸர்வதமனனும் கண்ணுவரிடம் விடைபெற்றுக்கொள்ளல்	352
	கண்ணுவர் தம்சிஷ்யர்களுக்குச் சகுந்தலையையும் ஸர்வதமனனையும் அழைத்துப்போதம்வழியைக்கூறல் ...	353

	ந்தியாயம்.	பக்கம்.
	சகுந்தலைமுதலானவர்கள் பிரதிஷ்டானநகரஞ்சேர்தல் ...	354
	கண்ணுவசிஷ்யர்கள் சகுந்தலையை விட்டுவிட்டுப் பிரதிஷ்டானநகரியைநீங்கல்	355-356
97	சகுந்தலையும் ஸர்வதமனனும் துஷ்யந்தன்முன்னிலையில் நமஸ்கரித்தல்	357
	துஷ்யந்தன் அவர்களைநிராகரித்தல்	358
98	சகுந்தலை துஷ்யந்தமீனுடு விவாதஞ்செய்தல் ...	358-365
	ஜாதகர்மமந்திரத்தின்பொருள்	363
	சகுந்தலை முன்நடந்ததை ஞாபகப்படுத்தல் ...	364
	துஷ்யந்தன் சகுந்தலையைத தூஷித்து நிராகரித்தல் ...	365-366
99	சகுந்தலை தன்உயர்வுகூறல்	366
	சகுந்தலைதுஷ்யந்தனைப்பார்த்து அவன்செய்யும்காரியம் மீதாஸமைனல்	367-368
	எவர்கள் புத்திரனைப்படுவரென்பது ...	368
	ஸத்தியத்தின்சிறப்பு	369
	சகுந்தலை மீகாபித்துத்திரும்பியது	370
100	துஷ்யந்தனைப்பார்த்து அசரீரிசொல்வது ...	370
	தேவர்கள் துஷ்யந்தனுக்கு உரைத்தது ...	370
	சகுந்தலையையும் ஸர்வதமனனையும் அரசன் அங்கீகரித்தது	371
	அரசன் சகுந்தலையை ஸமாதானஞ்செய்து அவ்விருவரையும் ரதந்தனியையிடம் அழைத்துப்போனது ...	372
	பரதனுக்கு யுவராஜபட்டாபிஷேகஞ்செய்வித்தது ...	373
101	பரதனுடையவம்சத்தின், ஒருபகுதி	373-375
	ஸம்வரணன்ராஜ்யமிழந்து திரும்பவும்பெற்றது ...	376
102	மஹாபிஷக் பிரமமந்திரவாலசபிக்கப்பட்டது ...	378•
	வஸுக்களுக்குக் கங்கைவரமளித்தது	380
103	கங்கைக்கும் பிரதீபனுக்கும் ஸம்பாஷணை ...	380-382
	சந்தனுபிறந்தது	382
	பிரதீபன் சந்தனுவின்விவாகத்தைப்பற்றிச் சொன்னது	382-383
	சந்தனு ராஜ்யபாரஞ்செய்தது	383-384
	கங்கையைச் சந்தனு தனக்குமனைவியாகம்வண்டல் ...	385
104	கங்கை சந்தனுவிடம் செய்துகொண்டவற்பாடு ...	385
105	கங்கை தன்ஏழுபிள்ளைகளையும்கொல்லல் ...	387
	கங்கை தன்வரலாறும்தன்னுடையசெய்கைக்குக்காரணமும் சொல்லல்	387-388
106	வஸுக்கள்சாபமடைந்ததைக கங்கைகூறல் ...	389-392
	தீர்யாவென்னும்வஸுவின்மனைவி கந்தினியைவிரும்பல்	390
	தீர்யாவென்னும்வஸு மற்ற வஸுக்களுடன் கந்தினியைக்கவர்தல்	390
	வஸிஷ்டர் வஸுக்களைச்சபித்ததும் அனுக்ரகித்ததும் ...	391
	கங்கை பீஷ்மரைதத்தன்னுடன் அழைத்துப்போதல் ...	392
107	சந்தனுவின்குணமும்மகிமையும்	393-394
	பீஷ்மர் கங்காஜலத்தைத்தடுத்ததைச் சந்தனுகாணல் ...	395
	கங்கை பீஷ்மரைச சந்தனுவிடம் ஒப்புவித்தல் ...	395-396
	சந்தனு ஸத்யவதியைக்காணல்	396

அத்தியாயம்.		பக்கம்.
	செம்படவன் அரசனுக்குச்சொன்ன நிபந்தனை ...	397
	பீஷ்மர் சந்தனுவின் துக்கத்துக்குக் காரணம்விளுவுதல்...	398
	சந்தனு மறுமொழிகூறல்	398
	பீஷ்மர் சந்தனுவின்மனக்கவலைக்குக் காரணத்தையறிதல்	399
	பீஷ்மர் செம்படவனைப் பெண்கேட்டல் ...	399
	பீஷ்மர் பிரதிஜ்ஞைசெய்தல்	400
	பீஷ்மர் பிரம்மசரியவிரதங்கொள்வேனெனல் ...	401
	ஸத்யவதியைப் பீஷ்மர்தம தூருக்கழைத்துவரல் ...	402
	சந்தனு பீஷ்மருக்கு வரமளித்தல்	402
108	ஸத்யவதிக்குப் புத்திரர்கள்பிறத்தல்	402
	சித்rங்கதன்மரணம்	403
	விசித்ரவீரியன்ராஜ்யம்வகித்தல்	403
109	காசிராஜன்பெண்களைப் பீஷ்மர்கவர்தல் ...	405
	எட்டுவகைவிவாஹங்கள் ... (342)	405
	பீஷ்மர் தம்மைஎதிர்த்த அரசர்களைஜயித்துப் பெண்களைக்கொணர்தல்	406
	சால்வராஜனைப் பீஷ்மர் ஜயித்தல்	407-408
	அம்பை தான் சால்வராஜனை இச்சித்ததாகச்சொல்லல் ...	408-409
	அம்பையைப் பீஷ்மர் சால்வராஜனிடம்அனுப்புதல் ...	409
	வேறுபுருஷனை இச்சித்தபெண்ணை வீட்டில்வைத்துக் கொள்ளக்கூடாதென்பது	409
	அம்பையைச் சால்வனும்பீஷ்மரும் நிராகரித்தல் ...	410-411
	முருகக்கடவுள் அம்பைக்கு மாலையளித்தல் ..	411
110	அம்பை யஜ்ஞஸேனனைச் சரணமடைதல் ..	412
	அம்பை யஜ்ஞஸேனன்அரண்மனைவாயிலில் மாலையை மாட்டிவிட்டுப்போதல்	413
	சிகண்டினி மாலையைஎடுத்தணிதல்	413
	சிகண்டினி இஷ்காரிஷ்டியைச் சரணமடைதல் ...	413
	சிகண்டினி சிகண்டியாகித் தன்பிதாவைநமஸ்காரித்தல் ...	414
111	விசித்ரவீரியன்மணமும் மரணமும்	414-415
112	ஸத்யவதி, விசித்ரவீரியன் மனைவிகளிடத்தில்புத்திரோத்பத்திசெய்யும்படி பீஷ்மரைவேண்டல் ...	416
	பீஷ்மர்மறுத்தல்	416-417
113	தீர்க்கதமஸ் குருடானவரலாறு	419
	ஒருபெண்ணுக்கு ஒரேகணவன்தான்கதியென்பது ...	420
	தீர்க்கதமஸ் மனைவிமக்களால் கங்கையில்தள்ளப்பட்டது	421
	பலிஎன்னுமரசன் அவரைஎடுத்துத் தன்மனைவியிடத்தில் புத்திரோத்பத்திசெய்யவேண்டினது ...	421
	பலியின்மனைவி தன்தாதியை அவரிடம்அனுப்பியது ..	421
	பலி தன்மனைவிசெய்ததை அறிந்தது	421
	பலியின்மனைவிக்குஅங்கவங்கக்கலிங்கசேயத்தரசர்பிறந்தது	422
114	பீஷ்மர் பரதகுலத்தைப் பிராமணரால்விருத்திசெய்யவேண்டுமென்றது	422
	ஸத்யவதியைக் குலவிருத்திக்கு உபாயம்சொல்லும்படி பீஷ்மர்வேண்டல்	423

அத்தியாயம்.		பக்கம்.
	சத்யவதி தனக்குவிவாஸர்பிறந்ததை உரைத்தல் ...	423-425
	வியாஸரைக்கொண்டு புத்ரோத்பத்திசெய்விக்கப் பீஷ்மர் உடன்படல்	425
	சத்யவதி வியாஸரை அம்பிகை அம்பாலிகைகளிடம்புத்திரோத்பத்தி செய்யவேண்டல்	427
	வியாஸர் உடன்பட்டுமறைதல்	427
115	வியாஸருடைய விகாரரூபத்தைக்கண்டு அம்பிகை கண்களைமூடிக்கொள்ளல்	429
	வியாஸர் அம்பிகையின்மகன் பொட்டையனாவானென்றது	429
	வியாஸர் அம்பாலிகையின்புத்திரன் வெண்மையாவானென்றது	430
	அம்பிகை தன்வேலைக்காரியை வியாஸரிடம்அனுப்பினது	431
	சூத்திக்கு வியாஸர்வரமளித்தது	431
	விதுரர்ஜனனம்	431
116	ஆணிமாண்டவ்யர் கழுவேற்றப்படுதல்... ...	432-433
117	ஆணிமாண்டவ்யரை அரசன் கழுவினின்றும்இறக்கிவிடுதல்	434
	தர்மதேவதை ஆணிமாண்டவ்யரால் சாபம்பெறுதல் ...	435
118	பாண்டு வில்வித்தையில் தேர்ச்சியடைந்துமுடிசூட்டப்படுதல்	437
119	பீஷ்மர் பாண்டுதிருதராஷ்டிரர்களுடைய விவாஹத்தைப்பற்றி விதுரருடன்யோசித்தல்	438
	காந்தாரியையும் பின்னும்பத்துக்கன்னிகைகளையும் திருதராஷ்டிரன்மணத்தல்	439
	காந்தாரியின்பதிவிரதாதர்மம்	439
	திருதராஷ்டிரன் நூற்றுக்குஅதிகமானமகளிரை விவாஹம்செய்தது	440
120	குந்தி துர்வாஸரிடம்மந்த்ரம்பெற்றது ...	440
	குந்தி ஸூர்யனைஅழைத்ததும் அவன் கர்ணனைஉண்டாக்கினதும்	441-442
	குந்தி குழந்தையைப் பெட்டியுள்வைத்து ஆற்றில்விட்டதும் ஸூதன்எடுத்துவளர்த்ததும்	442-443
	ஸூர்யன் 'கவசகுண்டலத்தைக்கொடாதே'என்று கர்ணனுக்குக் கூறியது	443
	கர்ணன் இந்த்ரனுக்குக் கவசகுண்டலம்கொடுத்துச் சக்தி ஆயுதம்பெற்றது	444
121	பாண்டு குந்தியைவிவாஹம்செய்தது	445
122	பாண்டு மாத்ரியை விவாஹம்செய்தது... ...	447
	பாண்டு திக்விஜயம்செய்து அஸ்தினபுரம்சேர்ந்தது ...	448-449
123	பாண்டு புணர்ச்சியிலிருந்த ரிஷிமான்களையெய்தது...	450
	மானுயிருந்த கிந்தமரிஷி பாண்டுவைச்சபித்து இறந்தது..	452
124	பாண்டு துக்கமுற்றுத் தவஞ்செய்யத்துணிந்தது ...	453-454
	ஸ்யாவாஸியாவேனென்றபாண்டுவைக் குந்தியும் மாத்ரியும் தடுத்தது	455

அத்தியாயம்.		பக்கம்.
	பாண்டு வானப்பிரஸ்தாச்ரமம்வகித்தலும் ஹஸ்தினபுரியில் எல்லாரும்துக்கித்ததும்	456-457
125	பிரம்மலோகம்போகப்புறப்பட்ட ரிஷிகளுடன் பாண்டுவும்புறப்படல்	457
	ரிஷிகள் பாண்டுவைத் தடுத்து அவனுக்கு ஸந்ததிஉண்டனல்	458
126	விதுரர்விவாஹம்	459
	காந்தாரி கர்ப்பந்தரித்ததும் பாண்டு ஸந்ததிக்காகவிசாரப்பட்டதும்	460-461
	தாயபாகத்துக்குரிய ஆறுபுத்திரர்களும் தாயபாகத்துக்குரியரல்லாத ஆறுபுத்திரர்களும்	461
	பாண்டு பிரார்மணரால் புத்திரோத்பத்தி செய்துகொள்ளும்படி குந்தியைவேண்டுதல்	462
127	பாண்டுவுக்குக குந்தி வ்யுஷிதாச்வன்கதையைச்சொல்வது	463-465
128	உத்தாலகர்கதை	466-469
	விபசாரதத்தால் ஸ்திரீபுருஷர்இருவருக்கும் மிதாஷமுண்டென்பது	469
	பாண்டு பிராமணரைச்சீச்சர்ந்து ஸந்ததிவிருத்தியாக்கவேண்டுமென்று குந்திக்குச்சொல்லியது ...	469-470
	குந்தி புத்திரோத்பத்திக்கு உபாயங்கூறல் ...	470
129	குந்தி தர்மதேவதையைஅழைத்து யுதிஷ்டிரரைப்பெறுதல	472-473
	காந்தாரி பொறுமைகொண்டதும் அவளுக்கு மாம்ஸபிண்டம்பிறந்ததும்	473
	பாண்டு வாயுவைஅழைக்கும்படி குந்தியைவற்புறுத்தல்...	474
	பீமன்பிறந்ததும் அவன்மிதகவன்மையும் ...	475
	துரியோதனனபிறந்ததும் அப்பொழுது ம்ர்ந்த உற்பாதமும்	476
	பிராமணர்களும் விதுரரும் துரியோதனனை விட்டுவிடும்படிகூறல	477
	திருதராஷ்டிரனுக்கு யுயுத்ஸுவும் ஒருபெண்ணும் உண்டானது	477
130	துச்சலையின்பிறப்புவரலாறு	478-479
131	துரியோதனாதியருடையபெயர், விவாகம், துச்சலையின் விவாகம	479-480
132	பாண்டுதவமும் இந்திரன்அனுக்கிரகமும	... 485
	குந்தி அர்ஜுனனைப்பெறுதல்	486
	அசரீரி குந்தியைவிளித்துச் சொல்லியது ..	486-487
	மிதவர்முதலியோர் அர்ஜுனனைப்புகழ்ந்ததது ..	487-488
	பாண்டு குந்தியை 'இனனும்பிள்ளைகளைவேண்டு' என்றதும் குந்திமறுத்ததும் ...	489
133	மாதரி பாண்டுவினிடம் புத்திரன்வேண்டினதும் அவன் குந்தியை ஆஜ்ஞாபித்ததும்	490
	குந்தி மாத்ரிக்கு மந்திரோபதேசம்செயததும், மாத்ரிக்கு நகுலஸஹதேவர்பிறந்ததும்	490-491

அத்தியாயம். பக்கம்.

வஸுதேவர் பாண்டுவுக்குப் பிள்ளைபிறந்ததைக் கேள்வியுற்று மகிழ்தல் 492
வஸுதேவருடைய புரோகிதர் பாண்டவருக்கு ஜாதகருமநாமகரணங்கள்செய்தல் 493
சர்யாதியின்குமாரனான சுகனிடத்தில் பாண்டவர் ஆயுதாப்பியஸ்தல் 493-494
134 பாண்டவர் பிராயமும் கிருஷ்ணனுடையபிராயமும் ... 494-495
பாண்டுவின்மரணம் 496
குந்தியும் மாத்ரியும் பாண்டவர்களும் புலம்பல் ... 497-499
பிராமணர்கள் தேற்றலும் மாத்ரி அனுமரணம்செய்யத் துணிதலும் 500-501
பாண்டவர் பாண்டுவுக்கும் மாத்ரிக்கும் ஜலதர்ப்பணஞ் செய்தல் 502
135 ரிஷிகள் பாண்டவரையும் குந்தியையும் அஸ்தினபுரம் அழைத்துப்போதல் 503
ரிஷிகள் பீஷ்மர்முதலானோருக்குப் பாண்டவரைக்காட்டி அவர்களைஉறுதிப்புவித்தல் 504 505
136 பாண்டுவின் அஸ்தி ஸம்ஸ்காரமும் பிரேதக்கிரியைகளும் 506-508
137 ஸத்யவதியும் அம்பிகை அம்பாலிகைகளும் வனஞ்செல்லல் 509
பீமஸேனனிடத்தில் பொறாமைகொண்ட துரியோதனன் அவனைக்கொல்லநினைத்தல் 510-511
பீமஸேனனைக் கங்கையில்தள்ளினதும், ஸர்ப்பங்களினால்கடிப்பித்ததும் 511-512
யுயுத்ஸு பாண்டவருக்குத் துரியோதனன்செய்வதைத் தெரிவித்தல் 512
138 துரியோதனன் பீமஸேனனுக்கு விஷந்கலந்தபக்ஷியங்களைக்கொடுத்துஉண்பித்தல் 513
ஸர்ப்பங்கள்கடித்தபின்னால் பீமஸேனனுக்குஸ்தாவரவிஷம் தொலைதல் 514
ஆர்யகன்வேண்டுகோளால் வாஸுகி பீமஸேனஞ் செய்வித்தல் 515
139 குந்தி பீமனைக்காணுமல் விதுரரைவினவுதலும் அவர்தேற்றலும் 516-517
பீமன் நாகர்களால்விஷநிவிருத்திசெய்யப்பெற்றுத் திரும்புதல் 517
கிருபாசாரியர் பாண்டவருக்கும் கௌரவருக்கும் வில்லாசிரியராதல் 518
140 சரத்வானுக்குக் கிருபரும் கிருபியும் பிறந்தவரலாறு ... 519
நான்குவகையான தனுர்வேதம் 520
துரோணர்பிறப்புவரலாறு 521
அசுவத்தாமாபிறப்பு 522
துரோணர் பரசுராமனிடம் அஸ்த்ரப்பயிற்சிசெய்தல் ... 523-524
141 துருபதனால் துரோணர் அவமானமடைதல் ... 525
துரோணர் கிணற்றினின்று பந்தையும் மோதிரத்தையும்எடுத்தல் 526

அத்தியாயம்.		பக்கம்.
	துரோணரைப்பற்றி ராஜகுமாரர்கள் பீஷ்மரிடம் தெரிவித்தல்	527
	பீஷ்மர் துரோணர்வந்தவரலாற்றைக்கேட்டல் ...	527-530
	துரோணர் கௌரவபாண்டவர்களுக்கு வில்லாசிரியராயமர்தல்	530
142	அர்ஜுனன் துரோணர்செய்தபரீக்ஷையில் தேறியது ..	532-538
	அர்ஜுனன் அப்பியாஸந்தான் காரணமென்றறிந்து இரவில் ஆயுதம்பயின்றது	533
	ஏகலவ்யன் துரோணரைப்போலப் பதுமைசெய்துகொண்டு வழிபட்டது	534
	ஏகலவ்யன்லாகவத்தைக் கௌரவர்கள்கண்டு வியப்புற்றது	534-535
	ஏகலவ்யன் துரோணருக்கு வலக்கைக்கட்டைவிரலைக் குருதக்ஷிணைகொடுத்தது	535
	பாண்டவர்களையும் கௌரவர்களையும் துரோணர்பரீக்ஷித்தல்	537
143	அர்ஜுனன் பாஸபக்ஷியின் சிரத்தைத் துணித்தல் ...	537-538
	அர்ஜுனன் துரோணரை முதலையினின்றும் விடுவித்தல்	538
	அர்ஜுனன் துரோணரிடம் பிரம்மசிரஸ்ஸென்னும் அஸ்த்ரம்பெறுதல்	539
144	துரோணர் தம்சிஷ்யர்களின்திறமையை வெளிப்படுத்த ஏற்பாடுசெய்தல்	540-541
	தர்மபுத்திரர்முதலானவர்கள் ஆயுதப்பயிற்சியைக்காட்டல்	542
	பீமஸேனனும் துரியோதனனும் கதாயுத்தஞ்செய்தல் .	542-543
145	பீமனும் துரியோதனனும் யுத்தஞ்செய்ய, துரோணசாரியர்விலக்குதல்	543
	அர்ஜுனன் வில்திறமையையும் அஸ்த்ரத்திறமையையும் காட்டல்	544-545
146	கர்ணன் அரங்கில்பிரவேசித்தல்	546
	அழைக்கப்படாமல்வருதலும் கேட்கப்படாமற்பேசுதலும் பாபமென்பது	547
	கர்ணன் அர்ஜுனனைஅவமதித்துத் தன்திறமையைக்காட்டல்	547
	கிருபர், 'உயர்பேர்தெரியாதகர்ணனோடு அர்ஜுனன்யுத்தஞ்செய்யான்' என்றது	548
	கர்ணன் அங்கதேசாதிபத்தியாகப் பட்டாபிஷேகம்செய்யப்பெற்றது	549
147	கர்ணனைவளர்த்தவனாகியதேர்ப்பாகன் அரங்கில்வந்தது...	550
	பீமன் கர்ணனைநிந்தித்ததும் துரியோதனன் பரிந்துபேசியதும்	550-551
148	துரோணர், கௌரவர் பாண்டவர்களைக் குருதக்ஷிணைகேட்டல்	552
	கௌரவர் திருபதஞல்தோல்வியடைதல் ...	553-554
	பாண்டவர் திருபதனைவென்றதும், அர்ஜுனன் அவனைப்பிடித்துவந்ததும்	554-556

அத்தியாயம்.		பக்கம்.
	திருபதன பாதிராஜ்யம்பெற்றுத் துரோணருடன்சினே கிதனனது	557
149	திருபதன் உபயாஜரைச் சரணமடைதல் ...	559
	திருபதன் உபயாஜரால்மறுக்கப்பட்டு யாஜரைச்சரண மடைசல்	561
	யாஜர் யாகத்தில் ஹவிஸை அக்னியில்ஹோமஞ்செய்தல்	562
	திருபதனுக்கு அக்னியினின்று திருஷ்டத்யும்னனும் திரௌபதியும்பிறத்தல்	562
	திருஷ்டத்யும்னன் துரோணரிடம் வில்வித்தைபயிலல்...	563
150	திருபதன்ஜனனம்	564-565
151	தர்மபுத்திரர் யுவராஜபட்டாபிஷேகம் செய்யப்பெறுதல்	566
	பீமன் பலராமரிடத்தில் கதாயுசம்பயின்றது ..	566
	அர்ஜுனனுக்குத் துரோணர் பிரம்மசிரஸ்என்னும் அஸ் த்ரத்தின் வரலாறுகூறியது	566
	அர்ஜுனனைத் துரோணர் குருகுலத்தினேகேட்டல் ...	567
	துரோணர் அர்ஜுனனைக் கண்ணனிடத்தில்நட்புக்கொ ள்ளும்படிசொல்லல்	568
	பீமனும் அர்ஜுனனும் திக்விஜயஞ்செய்தல் ...	569-570
152	துரியோதனன் திருதராஷ்டிரனிடம் பாண்டவரை வார ணவகமனுப்பும்படிசொல்லியது	571-572.
153	கணிகர் திருதராஷ்டிரனுக்குப் பகைவெல்லுமுறையைச் சொல்லியது	573-575
	நரியின்உபாக்கியானம்..	576-577
	கணிகர் திருதராஷ்டிரனுக்கு ராஜதந்திரமுரைத்தது ...	577-582

ஜதுகிருஹபர்வம்.

154	பாண்டவர்கள் அரக்குமாளிகையினின்று தப்பினதைச் சுருக்கிக்கூறல்	582-583
	திருதராஷ்டிரனுக்கும் துரியோதனனுக்கும் வாக்குவா தம்	584-585
155	திருதராஷ்டிரன் பாண்டவரை வாரணவதத்துக்கனுப்பு தல்	586-587
156	புரோசனன் அரக்குமாளிகைகட்டியது ...	588-589
157	யுதிஷ்டிரர் தம்முடன்வந்தனங்களை மீளுருக்கனுப்புதல்	590
	வீதிரர் மலைச்சாரலையடைந்து யுதிஷ்டிரருக்குப் புத்தி கூறல்	591
158	பாண்டவர்கள் அரக்குமாளிகையிற்பிரவேசித்தல் ...	593
	யுதிஷ்டிரர் பீமனுக்கு அரக்குமாளிகையைப்பற்றிச்சொ ல்லல்	593
	பீமன் ஸாமத்தினால் ராஜ்யமடைவோமெனல் ...	595
	தர்மராஜர் அரக்குமாளிகையினின்றுதப்பியோடவேண்டு மெனல்	596
159	கனகன் சுரங்கஞ்செய்தது	597
160	குந்தி பிராமணபோஜனஞ்செய்தல்	598
	பீமன் அரக்குமாளிகையைக்கொளுத்திவிட்டுச் சுரங்க வழியாகஓடுதல்	599

அத்தியாயம்.		பக்கம்.
161	பாண்டவர்கள் கங்கையைத்தாண்ட விதுரர் ஓடம்அனுப்புதல்	601
	பாண்டவர் கங்கையின்அக்கரைசேர்தல் ...	602
162	ஐந்துபிள்ளைகளோடு எரிக்கப்பட்ட வேடச்சியைக் குந்தியென்றுநினைத்தல்	603
	பாண்டவரும் குந்தியும் இறந்தார்களென்று கௌரவர்புலம்பியது	604
	பாண்டவர்க்காகப்புலம்பிய பீஷ்மரை விதுரர்தேற்றல்...	604-608
163	பீமன் எல்லாரையும்தூக்கிக்கொண்டு ஓர்ஆலமரத்தடிசேர்தல்	610
	பீமன் ஜலம்கொண்டுவருதல்	610
	பீமன்ஸஹோதரர்களையும் தாயையுங்கண்டு புலம்பல் ...	611-612
	ஹிடிம்பவதபர்வம்.	
164	ஹிடிம்பஞலனுப்பப்பட்ட ஹிடிம்பை பீமனைக்கண்டு மோகித்தல்	614
	ஹிடிம்பை மானிடப்பெண்ணுருவத்துடன் பீமனைவரித்தல்	615-616
	ஹிடிம்பைசொல்லுக்குப் பீமன்உடன்படாமை ..	616
165	ஹிடிம்பன்கோபித்து ஹிடிம்பையைத் தேடிக்கொண்டு வருதல்	617-618
	பீமனுக்கும் ஹிடிம்பனுக்கும் விவாதம் ...	619-620
	பீமனுக்கும் ஹிடிம்பனுக்கும் யுத்தம்	620-621
166	ஹிடிம்பை குந்திக்குத் தன்வரலாறுகூறல் ...	622
	குந்திமுதலானவர்கள் பீமனை உற்சாகப்படுத்தல் ...	623
	ஹிடிம்பவதம்	624
167	ஹிடிம்பையையும்கொல்லநினைத்தபீமனை யுதிஷ்டிரர்தடுத்தது	625
	ஹிடிம்பை தான்ராக்ஷஸிஅல்லள்என்றது ...	626-627
	பீமனைமணந்துகொள்ளத் தர்மபுத்திரர் ஹிடிம்பைக்கு அனுமதிசெய்தது	628
168	குந்திமுதலானவர்களைச் சாலிஹோத்ரஸரஸுக்கு ஹிடிம்பைஅழைத்துப்போதல்	628
	பீமன் குந்திஆஜ்ஞையைஏற்று ஹிடிம்பையைமணத்தல்	629-630
	வியாஸர் நேரில்தோன்றிப் பாண்டவர்களையும் குந்தியையுமழைத்தல்	631-632
169	கடோத்கச்ன்பிறப்பும் அவன் பாண்டவர்நினைத்தபோது வருவதாகச்சொல்லிப்போதலும் .	632-633
	ஹிடிம்பை, நினைத்தபோதுவருவதாகச்சொல்லிப்போதல்	634
170	குந்திமுதலானவர்கள் மற்றொருவனத்தில் வியாஸரைச் சந்தித்தல்	635
	வியாஸர் அவர்களை ஒருபிராமணன்வீட்டிற்குடிவைத்துப் போதல்	635
	பகவதபர்வம்.	
171	பாண்டவர் ஏகசக்ரநகரியில் பிக்ஷையெடுத்தது ...	636
	பீமன் குயவனுக்குச் சுமையெடுத்தது	637

DR. U.V. SWAMINATHA IYER LIBRARY
TIRUVANMIYUR MADRAS-41

அத்தியாயம். பக்கம்.

பிராமணன் வெறுத்துக்கொண்டு புலம்பியது ... 638-640
172 பிராமணனைப்பார்த்து அவன்மனைவி ராக்ஷஸனிடம் சான் போவதாகச்சொல்லியது 640-644
பிராமணன்மறுத்தல் 644
173 பிராமணனைப்பார்த்து அவன்பெண் சொன்னது ... 644-646
பிராமணனைப்பார்த்து அவன்பிள்ளைசொன்னது ... 646
174 பிராமணன் பகன்கொடுமையைக்கூறல் ... 647-649
175 குந்தி பகாஸுரனிடத்துக்குத் தன்புத்திரனை அனுப்புவ தாகச்சொல்லியது 649-651
176 யுதிஷ்டிரர் பீமனைப் பகனிடம்அனுப்புதற்குத் துதித் தல் 651-652
குந்தி யுதிஷ்டிரரைத்தேற்றல் 652-653
177 பீமன் பகனிடத்திற்குப்போகுமுன் வயிறுநிறையஉண்டு போதல் 654
பகாஸுரனுக்காகக் கொணர்ந்தஅன்னத்தைப் பீமன்புஜி த்தல் 655-656
பீமனும் பகாஸுரனும் போர்புரிதல் 657-659
178 பீமன் பகனை வதஞ்செய்தது 659
பகன்தம்பிமுதலாமோர் சாதகர்களாயிருக்க உடன்படல் 660
வியப்புற்றுக்கேட்ட நகரத்தாருக்குப் பிராமணர் மறைத் துச்சொல்லியது 661
நகரத்துஜனங்கள் பீமனைத்துதித்தல் 661

சைத்ரரதபர்வம்.

179 பாண்டவர்கள் திரௌபதியின் ஸ்வயம்வரத்தைக்கேள் விப்பட்டது 662-663
180 துரோணர்பிறப்புமுதலியவரலாறு 663-666
துரோணர் பாஞ்சாலனைச் சிஷ்யர்களால்வென்றது 665
181 துருபதன் துரோணரைக்கொல்லவல்ல புத்திரனையடை யமுயலல் 667-669
உபயாஜர், யாஜர்வரலாறுகூறல் 667-668
திருஷ்டத்யும்னன்பிறந்தது 669
கிருஷ்ணைபிறந்தது 670
திருஷ்டத்யும்னன் கிருஷ்ணைஎன்னும் பெயர்களுக்குக் காரணம் 671
182 பாண்டவர் எரிக்கப்பட்டனரென்று பிராமணர் துருபத னிடம்கூறல் 671-672
துருபதன் துக்கித்ததும் புரோகிதர் பாண்டவர்ஜீவித்திரு க்கின்றனரென்று தேற்றியதும் 672-673
திரௌபதிஸ்வயம்வரத்துக்குக் குந்தியைப்பிராமணன் அழைத்தல் 674
183 பாண்டவர் பாஞ்சாலதேசத்துக்குப்புறப்படல் ... 674-675
184 வியாஸர் திரௌபதியின்விருத்தாந்தத்தைக்கூறல் ... 676
185 பாண்டவர் பாஞ்சாலநகரத்துக்குப்போகும்வழியில் பிரா மணர்களோடு ஸம்பாஷித்தல் 677-678
186 அங்காரபர்ணனுக்கும் அர்ஜுனனுக்கும்விவாதம் ... 679-681

அத்தியாயம்.		பக்கம்.
	அங்காரபர்ணன் சித்ராதனனது	682
	சித்ராதன் அர்ஜுனனுக்குக் குதிரைகளும் காந்தர்வாஸ்திரமும்கொடுத்தது	683
	கந்தர்வன் தான்எதிர்த்தகாரணமுரைத்தல் ...	684
	கந்தர்வன் புரோகிதர்ஒருவரை அடையும்படி பாண்டவருக்குச்சொல்லல	685
187	தபதியை ஸம்வரணன் மலையிற்கண்டது ...	688
	ஸம்வரணன் தபதியைக்காணுமல் நிகைத்துத்தேடுதல்...	689
188	தபதி அரசனிடம்வருதல்	689
	தபதியும் அரசனும் ஸம்பாஷித்தல்	690-691
189	மூர்ச்சித்துவீழ்ந்த ஸம்வரணனை அவனமைச்சன்தெளிவித்தல்	692
	ஸம்வரணனுக்காக வசிஷ்டர் ஸூர்யனைத்துதித்தல் ...	693
	வசிஷ்டர் சூரியனிடமிருந்து தபதியைப்பெறுதல் ...	694
	தபதியை ஸம்வரணனுக்குப் பாணிக்கிரஹணஞ்செய்வித்தல்	694
	ஸம்வரணனுடையகரத்தில் அனுலிருஷ்டியும் பிறகு ஸாபிக்ஷமும்	695
190	கந்தர்வன் வசிஷ்டர்மாகாத்மியத்தைச்சொல்லியது ...	696-697
191	வேட்டைக்குச்சென்ற விசுவாமித்திரருக்கு வசிஷ்டர் ஆதித்யம்செய்தது	698
	விசுவாமித்திரர் காமதேனுவைப் பலாத்காரமாகப் பிடித்தது	699
	காமதேனு கோபித்து விசுவாமித்திரர்சேனையைக் கலக்கியது	700-701
	விசுவாமித்திரர் வசிஷ்டர்மீது அஸ்த்ரம்தொடுத்தல் ...	701
	விசுவாமித்திரர் பிரம்மரிஷியானது	702
192	சக்திக்கும் கல்மாஷபாதனுக்கும் வாக்குவாதம் ..	703
	கல்மாஷபாதன்சக்தியினல் ராக்ஷஸனுகச்சபிக்கப்பட்டது	704
	விசுவாமித்திரர் கல்மாஷபாதன்சரீரத்தில் ராக்ஷஸனேவுதல்	704
	கல்மாஷபாதன் பிராமணரால் கரமாம்பம்பக்ஷிப்பவனுகச்சபிக்கப்படுதல்	705
	கல்மாஷபாதன் வசிஷ்டபுத்திரர்களைப் பக்ஷித்தது ...	706
	வசிஷ்டர் தற்கொலைசெய்துகொள்ளமுயன்றும் முடியாமற்போனது	706
193	வசிஷ்டர் பலவகைகளாலும் இறக்கமுயற்சித்தல் ...	707-708
	அதிருச்யந்தியின்கர்ப்பத்திலிருந்தசக்தி வேதமோதியது	708
	வசிஷ்டர் கல்மாஷபாதன்மேல் ஆவேசங்கொண்ட ராக்ஷஸனை விலக்குதல்	709
	வசிஷ்டர் கல்மாஷபாதன்மனைவியிடம் புத்ரோத்பத்தி செய்தல்	710
194	பராசர்பிறந்தது	711
	பராசர் தமதுபிதாவின்மரணத்தைக்கேட்டு உலகத்தை அழிக்கநினைத்தது	712

அத்தியாயம்.		பக்கம்.
	கார்த்தவீர்யார்ஜுனனைச்சேர்ந்த க்ஷத்திரியர்கள் பார்க்கவரையழித்தல்	712-713
195	கண்ணிழந்தஅரசர்கள் ஔர்வரைச்சரணமடைந்து கண் பெற்றது	714
	ஔர்வமுனிவரின்பித்ருக்கள் அவரைச்சமாதானஞ்செய் தது	714-715
196	ஔர்வமுனிவர் சம்கோபாக்னியை எங்கேவிடுகிறதென் றுகேட்டல்	715-716
	ஔர்வமுனிவர் சம்கோபாக்கினியை ஸமுத்திரத்தில்விட் டது	717
197	பராசரர் ராக்ஷஸயாகஞ்செய்ததை அத்ரிமுனிவர் நிறு த்தமுயன்றது	717
	புலகர் முதலியோர் வேண்டுகோளால் பராசரர் அந்தயாக த்தைநிறுத்தியது	719
198	குமாரக்கடவுள் பராசரரால்மூட்டப்பட்ட அக்னியை விழு ங்கியது	719
	ப்ராமணஸ்த்ரீ கல்மாஷபாதனைச்சபித்தது ...	720
	ப்ராமணி கல்மாஷபாதனுக்குவஸிஷ்டரால் ஸந்ததிஉண் டென்றது	721
199	கந்தர்வன் தௌம்யரைப் புரோகிதராகவரிக்கச்சொல்... லியது	721
	கந்தர்வனிடம் அர்ஜுனன் சாக்ஷுஷியென்னும் அஸ்த்ரம் பெற்றது	722
	பாண்டவர் தௌம்யரைப் புரோகிதராகப்பெற்றது ...	722
	ஸ்வயம்வரபர்வம்.	
200	பாண்டவர் பாஞ்சாலநகரத்தில் குயவன்வீட்டில்தங்கினது	723
	கிந்தூரமென்னும் வில்லின்வரலாறு	724
	திருபதன்செய்த ஸ்வயம்வரப்பிரகடனம் ..	724
	ஸ்வயம்வரமண்டபத்தின்சிறப்பு ...	725
	கிருஷ்ணை அலங்கரித்துக்கொண்டது ...	726
	ஸ்வயம்வரமண்டபத்தில் கிருஷ்ணைபிரவேசித்தது ...	727
	திருஷ்டத்யும்னன் லக்ஷ்யதைதைஅடிப்பவருக்குக் கிருஷ் ணை உரியவளென்றது ...	728
201	கிருஷ்ணைக்கு ஸ்வயம்வரமண்டபத்திலுள்ளஅரசர்களைச் சொல்லியது	728-729
202	கிருஷ்ணன் பலராமருக்குப் பாண்டவர்வந்திருப்பதைக் கூறியது	731
	கர்ணன்முதலியோர் வில்லைநாணேற்றுமல் அவமானமுற் றது	732-733
203	அர்ஜுனன வில்லவளைக்கஎழுந்ததும் ப்ராமணர்கள்பே சிக்கொண்டதும்	734-735
	அர்ஜுனன் வில்லைஏந்துலக்ஷ்யத்தைஅறுத்தது ...	735
	அர்ஜுனனுக்குத் திரௌபதிமாலையிட்டது ...	736
204	அரசர்கள்கோபித்துத் திருபதனைக்கொல்லப் ப்ரயத்த னப்பட்டது	737-738

அத்தியாயம்.		பக்கம்.
	பீமார்ஜுனர்கள் அவ்வரசரைஎதிர்க்க விரித்தமாயிருத்தல்	738
	கிருஷ்ணபலராமர் பாண்டவர்களைப்பற்றிப்பேசிக்கொண்டது	738-739
205	கர்ணன்முதலியோரை அர்ஜுனன்முதலியோர் தோற்கச்செய்தது	740-743
	மற்றஅரசர்கள் கிருஷ்ணரால் ஸமாதானஞ்செய்யப்பெற்றது	744
206	குந்தி கிருஷ்ணையை ஐவரும் பூஜியுங்கள்என்றது ...	745
	திரௌபதியை ஐவரும் விவாகஞ்செய்துகொள்ளவேண்டுமென்பது	746
	கிருஷ்ணன்முதலியோர் துவரைவீடுவருதல் ...	746
207	அர்ஜுனன்முதலியோர்கொணர்ந்தபிக்ஷையைக் குந்தி சொற்படி கிருஷ்ணைபகிர்த்தல்	748
	திருஷ்டத்யும்னன் ஒளிந்து பாண்டவரையறிந்துபோதல்	749
	வைவாஹிகபர்வம்.	
208	திருஷ்டத்யும்னன் அந்தவீரர்கள் பாண்டவர்கள்தாமென்றுரைத்தல்	750-751
	துருபதனுடையபுரோகிதர் பாண்டவரைக் குலகோத்திரம்விசாரித்தல்	752
	யுதிஷ்டிரர் அவருக்கு மறுமொழிகூறல் ...	752-753
209	பாண்டவர் துருபதன் அரண்மனைபுகுந்தது ..	753
	துருபதன் அவரைவர்களையும் எந்தவருணத்தாரெனப் பரீக்ஷைசெய்தல்	755
210	துருபதன் யுதிஷ்டிரரை எவ்வருணத்தீர்என்றுவினாதல்	755
	யுதிஷ்டிரர் துருபதனுக்குத் தம்முடைகுலத்தைச் சொல்லுதலும் அவன்மகிழ்தலும்	756
	கிருஷ்ணையை ஐவரும்கலியாணஞ்செய்துகொள்ளவேண்டுமென்பதைத் துருபதன் ஆக்ஷேபித்தல் ...	757
211	வியாஸர் பலருக்குஒருமனைவிஇருக்கும்விஷயத்தில் அபிப்பிராயம்பத்தைகேட்டல்	758-759
	ஜடிலே ஸப்தரிஷிகளிடமிருந்ததை யுதிஷ்டிரர்கூறுதல்	759
	வியாஸர், கிருஷ்ணை ஐவருக்கும்மனைவி ஆகலாமென்றுகூறல்	760
212	கிருஷ்ணை ஐவருக்கும் மனைவியாவதற்குக் காரணங்களை வியாஸர்உரைத்தது	760-762
	கிருஷ்ணை நாளாயனியாயிருந்து மௌத்கல்யரால் வரமளிக்கப்பெற்றது	761
213	நாளாயனி துருபதனுக்குப் பெண்ணானகாரணம் ...	763-764
	சங்கரர் நாளாயனிக்கு ஐந்துகணவரைஅளித்தது ...	764
	நாளாயனி திரும்பவும் மஹேசுவரரை வரங்கேட்டது ...	765
214	மனிதர்இறக்காமையால் இந்திரன் முதலியோர்வருந்திப் பிரம்மதேவரைச் சரணமடைதல்	766-767
	இந்திரன் நாளாயனியைக கங்கைக்கரையிற்கண்டது ...	767
	இந்திரன் சங்கரரால்கர்வபங்கப்பட்டு அனுக்கிரகிக்கப்பட்டது	767-769

அத்தியாயம்.		பக்கம்.
	ராமகிருஷ்ணர்களின் அவதாரம்	770
	ஞானக்கண்பெற்ற திருபதன் பாண்டவருடையதேவ தேகத்தைக்கண்டது	770-771
	பௌமாச்வியின்வரலாறு	771-772
	கிருஷ்ணையின்முன்ஜன்மம் ...	772
215	திருபதன்ஸ்மதிக்கவியாஸர்முதலில் யுதிஷ்டிரைவிவாகம்செய்துகொள்ளஉரைத்தல்	774
	தௌமியர் யுதிஷ்டிரருக்கும் கிருஷ்ணைக்கும் பாணிக்கிரகணம்செய்வித்தல்	775
	பாண்டவர்வரிசைப்படி கிருஷ்ணையை விவாகம்செய்துகொண்டது	775
	பாண்டவர்களுக்குத் திருபதன் சீரளித்தது ...	776
216	கிருஷ்ணையைக் குந்தி ஆசீர்வதித்தல்	777
	கிருஷ்ணன் அனுப்பியஆபரணங்களை யுதிஷ்டிரர் பெற்றுக்கொண்டது	778
	விதுராகமனபர்வம்.	
217	அரசர்கள் பாண்டவர்விவாகத்தைக்கேள்வியுற்றது ..	778
	சகுனி பாண்டவர்களைக்கொல்லவேண்டுமென்று யோசனைகூறல்	779-780
	ஸோமதத்தன்மகன்ஸமாதானஞ்செய்யவேண்டுமென்றது	780-782
218	கர்ணன் தன்னபிப்பிராயத்தை வெளியிட்டது ...	782-783
	கௌரவசேனையும் திருபதன்சேனையும் எதிர்த்தது ...	784
	பாண்டவர் துரியோதனனுடையரைப் போரில்வென்றது ...	785-786
	கிருஷ்ணன் சேனையோடுபொஞ்சாலநகரம்வந்தது ...	787-788
219	தூச்சாஸனன் பாண்டவர்பெருமைக்குப் பொறுமைப்பட்டது	788-789
	விதுரர் திருதராஷ்டிரனைமாற்றினது ...	789
	துரியோதனன் தந்தைமீது குறைகூறல் ...	790-791
220	துரியோதனன் பாண்டவர்களுக்கும் திருபதனுக்கும்மித்திரபேதம்செய்ய யோசித்தல்	791
221	கர்ணன் பாண்டவரைப் டராக்கிரமத்தினல்வெல்லலாமென்றது	793-794
222	பீஷ்மர் பாண்டவருக்குப் பாதிராஜ்யம் கொடுக்கவேண்டுமென்று உரைத்தல்...	795-796
223	துரோணரும் பீஷ்மரைப்போலவே உரைத்தல் ...	796-797
	கர்ணன், துரோணர் பக்ஷபாதமுள்ளவரென்றது ...	797-798
	கர்ணனைத் துரோணர் கண்டித்தது	799
224	விதுரரும் பீஷ்மத்துரோணர்களுடையஅபிப்பிராயத்தை அங்கீகரித்தது	799-801
225	திருதராஷ்டிரன் பாண்டவரைஅழைத்துவரும்படி விதுரைஅனுப்பியது	802
	விதுரர் திருபதனிடம் பாண்டவரைஅனுப்பும்படிசொல்லியது	803
226	திருபதன் பாண்டவர்களுக்கு அஸ்தினபுரம்போகவிடை தந்தது	804

அத்தியாயம்.		பக்கம்.
	குந்தியும் விதுரரும் ஸம்பாஷித்தது.	805
	திருதராஷ்டிரன் பாண்டவர்க்குச் சேனுப்பியது ...	805-806
	பாண்டவரைக் கௌரவர் எதிர்கொண்டழைத்தது ...	806
	நகராஜனங்கள் ஸந்தோஷித்தது	806-807
	ராஜ்யலாபபர்வம்.	
227	பாண்டவர்கள் தங்கள்வீட்டில்இருகப்பிரவேசஞ்செய்தது	807
	திருதராஷ்டிரன் பாண்டவருக்குப் பாதிராஜ்யங்கொடுத்தது	808
	யுதிஷ்டிரர் பட்டாபிஷேகம்செய்விக்கப்பெற்றது ...	809
	பாண்டவர் காண்டவப்பிரஸ்தத்திற்பிரவேசித்தது ...	810
	விசுவகர்மா காண்டவப்பிரஸ்தத்தை இந்திரப்பிரஸ்தமாக்கியது	811
	விசுவகர்மா அங்கர்க்கு மற்றஅங்கங்களேயும்படைத்தது	812-813
	கிருஷ்ணன் விடைபெற்றுத் துவாரகைசென்றது ...	814
228	நாரதர் யுதிஷ்டிரருடையஸபைக்குவந்தது ..	815-816
	நாரதரை யுதிஷ்டிரர் எதிர்கொண்டதும், அவர்ஆசீர்வதித்ததும்	818
	நாரதர் ஸுந்தோபஸுந்தர்கதையை உரைச்சது ...	818
229	ஸுந்தோபஸுந்தர்கள் பிரம்மதேவரிடம் வரம்பெற்றது	820-821
230	ஸுந்தோபஸுந்தர்களுடையசேனைகள் செய்த அக்கிரமம்	823
231	ஸுந்தோபஸுந்தர்செய்த அக்கிரமத்தைச்சொல்லித் தேவர்கள் பிரம்மதேவரிடம் முறையிட்டது ...	824
	திலோத்தமை ஸ்ருஷ்டியும் திலோத்தமையென்னும் பெயரின்காரணமும், அவள்பிரம்மதேவரால் ஏவப்பட்டதும்	825
	திலோத்தமையின் அழகின்சிறப்பு	826
232	திலோத்தமை ஸுந்தோபஸுந்தர்முன் தோன்றியது ..	827
	திலோத்தமையால் ஸுந்தோபஸுந்தர் ஒருவரையொருவர் கொன்றது	828
	பிரம்மதேவர் திலோத்தமைக்கு வரமளித்தது ...	828
	பாண்டவர் திரௌபதிவிஷயமாகச் செய்துகொண்டவியவஸ்தை	829
	அர்ஜுனவனவாஸபர்வம்.	
233	பிராமணன் பசுகளவுபோயிற்றென்று முறையிட்டது...	830
	தனஞ்சயன் பசுவைமீட்டுக்கொணர்ந்து பிராமணனுக்கு அளித்தது	831
	அர்ஜுனன் வனவாஸஞ்செய்யப் புறப்பட்டது ...	832
234	உலூபி அர்ஜுனனை ஜலத்துக்குள் இழுத்தது ...	833
	அர்ஜுனன் உலூபியிஞல் வரிக்கப்படுதல்	833
	அர்ஜுனனுக்கு உலூபிவரமளித்தல்	835
235	அர்ஜுனன் எங்கும்திரிந்து சித்ரவாகனனென்னும் அரசனிடம்போதல்	836
	சித்ராங்கதையைவிரும்பிய அர்ஜுனனை அவள்தகப்பன் கன்யாசுல்கம்கேட்டது	837

அத்தியாயம். பக்கம்.

236 ரிஷிகள் ஸ்நானஞ்செய்யாதுவிட்ட இந்துதீர்த்தங்களைப் பற்றி அர்ஜுனன்விஞ்தல் 837
வர்க்கையென்னும் அப்ஸரஸ்ஸ தன்முதலியான காரண மூரைத்தது 838-841
237 அர்ஜுனன் முதலிகளாயிருந்த மற்றை நான்குஅப்ஸரஸ்களையும் சாபம்நீக்கல் 841
அர்ஜுனன் பப்ருவாஹனனைச் சித்ரவாகனனுக்குக் கொடுத்துக் கோகர்ணதேசஞ்சென்றது 841-842
238 அர்ஜுனன் ஸுபத்திரையையடையும் உபாயத்தைச்சிந்தித்தல் 842
கிருஷ்ணன்படுக்கையில் சிரித்தகாரணத்தை ஸத்யபாமை விஞ்தல் 843
கிருஷ்ணனும் அர்ஜுனனும் ரைவதகபர்வதத்தில் ஸந்தித்தல் 844
கிருஷ்ணன் துவாரகைக்குத் திரும்புதல் ... 844

ஸுபத்ராஹரணபர்வம்.

239 யாதவர்களால் ரைவதகபர்வதத்தில் கிரிபூஜைஎன்னும் உத்ஸவம்நடத்தப்பட்டது 845-846
அர்ஜுனன் தனக்கு ஸுபத்திரையைத்தரும்படி கிருஷ்ணனைவேண்டியது 846
கிருஷ்ணன் ஸுபத்திரையை அபகரிக்க உபாயங்கூறியது 847
240 பலராமர்முதலியோர் அர்ஜுனனைக்கண்டது ... 848
பலராமர் அர்ஜுனனை ஸுபத்திரையின் அந்தப்புரத்தில் வைக்க நிச்சயித்தது 849
241 துவாரகையில் யாவரும் அர்ஜுனனைப்பூஜித்தல் ... 850
அர்ஜுனன் ஸந்யாஸியாக ஸுபத்திரையின் அந்தப்புரத்தில் வஸித்தது 851
அர்ஜுனனிடம் ஸுபத்திரைக்குண்டாயிருந்த காதல் ... 852
ஸுபத்திரை அர்ஜுனன்விஷயமாக யதியை விஞவியது 853
ஸுபத்திரைக்கு அர்ஜுனன் தன்னைவெளிப்படுத்தியது 853
ருக்மிணியும் தேவகியும் ஸுபத்திரையைத்தேற்றல் ... 854
கிருஷ்ணன் யாதவரனைவரையும் துவாரகையினின்றும் வேற்றிடம்அனுப்பியது 855
242 அர்ஜுனன் ஸுபத்திரையைக் காந்தர்வவிவாகத்துக்கு உடன்படுத்தியது 857-858
இந்திரன்கிருஷ்ணன்முதலியோர் அர்ஜுனனுக்கும் ஸுபத்திரைக்கும் விவாகஞ்செய்வித்தல் ... 858-860
243 ஸுபத்திரை அர்ஜுனனுக்கு ரதம்கொணர்ந்தது ... 861
அர்ஜுனன் ஸ்வயரூபத்தோடு தேரேறிச்சென்றது ... 861
244 விப்ருதுவின்சேனை அர்ஜுனனைஎதிர்த்ததும் விப்ருது ஆசீர்வதித்ததும் 863-865
உன்மீலிலிருந்தவர் அர்ஜுனன்செய்கையை அறிந்தது... 866
பலராமர்கோபித்துக் கிருஷ்ணனுடன்சொல்லியது ... 866-867

அத்தியாயம்.		பக்கம்.
	ஹரணஹரணபர்வம்.	
245	கிருஷ்ணன் அர்ஜுனனை ஸமாதானப்படுத்தி அனுப்ப வேண்டும் என்றது	868
	ஸுபத்திரை அர்ஜுனனிடம் யாதவஸேனைகளைக் கொல்லாதிருக்கவேண்டல்	868
	அர்ஜுனன் ஸுபத்திரையுடன் இந்திரப்பிரஸ்தத்தைக் கண்டது	870
246	ஸுபத்திரை இடைச்சிலிவஷத்தீதாடு இந்திரப்பிரஸ்தத்திற் பிரவேசித்தது	871
	திரௌபதியும் குந்தியும் ஸுபத்திரையை ஆசீர்வதித்தது	871
	அர்ஜுனன் இந்திரப்பிரஸ்தத்தில் எல்லாராலும்கொண்டாடப்பட்டது	872
247	கிருஷ்ணன் ஸுபத்திரைக்குச் சிறப்புக்களெடுத்துக்கொண்டு இந்திரப்பிரஸ்தம்வந்தது	873-874
	பாண்டவர்களும் யாதவர்களும் ஒருவருக்கொருவர் மரியாதைசெய்ததும், கிருஷ்ணன்முதலியோர் ஸுபத்திரைக்குச் சீரளித்ததும்	875-876
	அபிமன்யு பிறந்தது	877
	அபிமன்யுவென்னும் பெயரின்பொருள்... ...	877
	திரௌபதி ஐவருக்கும் ஐந்துபுத்திரர்களைப்பெற்றது ...	878
	திரௌபதிபுத்திரர்களின்பெயர்களுக்குக் காரணங்கள் ..	878-879
	காண்டவதாஹபர்வம்.	
248	கிருஷ்ணார்ஜுனர்கள் காண்டவவனத்தைக்கண்டது ...	881
	கிருஷ்ணார்ஜுனர் எதிரில் அக்னி பிராமணவடிவத்தோடுவந்தது	882-883
249	அக்னி கிருஷ்ணார்ஜுனர்களை ஆகாரம்வேண்டியது ...	883-884
	சுவேதகியென்னும்அரசன் யாகம்செய்தது ...	884-886
	துர்வாஸஸ்என்னுமுனிவரினால் சுவேதகிராஜன்யாகஞ்செய்விக்கப்பெற்றது	887
	அக்னி வாட்டமுற்றது	888
	பிரம்மதேவர் அக்னியைக் காண்டவவனத்தை உண்ணும்படிசொல்லியது	888
	அக்னி ஏழுதடவைகாண்டவவனத்தை எரிக்கத்தொடங்கியும் நிறைவேறாமற்போனது	889
250	அர்ஜுனன் அக்னியிடம் தனக்குத் தேரும் வில்லும் கிருஷ்ணனுக்கு ஆயுதமும்வேண்டல்	890
251	அக்னி அர்ஜுனனுக்குத் தேர்வில்தூணிமுதலியவையும், கிருஷ்ணனுக்குச் சக்கரமும்அளித்தது ...	891-892
	அக்னி காண்டவவனத்தைஎரித்தது	893
252	இந்திரன் மழைபெய்வித்தது	894-895
253	அச்வஸேனனென்னும்நாகம் இந்திரனால்விடுவிக்கப்பட்டது	895-896
	அச்வஸேனன் கிருஷ்ணனாலும் அக்னியாலும்சாபமுற்றது	896
	இந்திரனுக்கும் அர்ஜுனனுக்கும் யுத்தம் ...	896-898

அத்தியாயம். பக்கம்.

மயதர்சனபர்வம்.

254 தேவர்கள் தோல்வியடைந்து திரும்பியது ... 900
இந்திரன் அசரீரிவாக்கைக்கேட்டுத்திரும்பிப்போனது .. 900
மயன் அர்ஜுனனைச்சரணமடைந்தது.. ... 901
காண்டவவனத்தில் எரிக்கப்படாதவர் யார்யாரென்பது 902
255 மந்தபாலரிஷி ஸந்ததிவேண்டி சார்ங்கபக்ஷியுருவெடுத்தது 903
மந்தபாலர் அக்னியைத்துதித்தது 904
256 ஜரிதையென்னும் பெண்சார்ங்கபக்ஷி குஞ்சுகளைக்குறித்துத் துதித்தது 905-906
குஞ்சுகள்மறுமொழிகூறியது 906-907
257 சார்ங்கிக்கும் குஞ்சுகளுக்கும் ஸம்வாதம் ... 907-908
258 குஞ்சுகள்நான்கும் அக்னியைத்துதித்தது ... 909-911
259 மந்தபாலர் லபிதையிடம் புலம்பியது 911
லபிதைகூறியமறுமொழி 911-912
மந்தபாலர் தம்குஞ்சுகளிடம் வந்தது 912
குஞ்சுகள் மந்தபாலரை ஸ்தோத்திரஞ்செய்தது .. 912
மந்தபாலர் தம்குழந்தைகளின் ஜ்யேஷ்டகனிஷ்டமுறையைவினவியது 913
மந்தபாலரைஜரிதைதேடிப்பித்ததும் அவர்ஆற்றியதும் ... 913
260 மந்தபாலர் தம்மனைவியையும் குஞ்சுகளையும் அழைத்துக்கொண்டு வேறிடம்போனது 914
இந்திரன் கிருஷ்ணார்ஜுனர்களுக்கு வரமளித்துப்போனது 914-915
அக்னி காண்டவவனத்தை எத்தனைநாள்எரித்தான்என்பது 915
அக்னி கிருஷ்ணார்ஜுனர்களை ஆசீர்வதித்து விடைபெற்றுப்போனது 915
கிருஷ்ணார்ஜுனர்கள் மயனுடன்புறப்பட்டுப்போதல் ... 915

ஆதிபர்வம்விஷயஸூசிகைமுற்றிற்று.

1.1257.

ஸ்ரீ

ஸ்ரீகிருஷ்ணாயவாஸுதேவாயநமஃ.

ஸ்ரீ கிருஷ்ணாய வாஸுதேவாய நமஃ.

ஸ்ரீ மஹாபாரதம்.

*ஆதிபர்வம்.

முதலாவது அத்தியாயம்.

அனுக்கிரமணிகாபர்வம்.

நாராயணம் நமஸ்க்ருத்ய நரம் சைவ நரோத்தமம் ।
தேவீம் †வாக்³வாதீம் வ்யாஸம் ததோ ஜயமுதீ³ரயேத் ॥

புருஷோத்தமர்களாகிய நரநாராயணர்களையும் ஸரஸ்வதிதேவியையும் வியாஸரையும் நமஸ்கரித்துப் பிறகு ‡ஜயத்தை ஒருவன் சொல்லக்கடவன். §

¶ நாராயணம் நமஸ்க்ருத்ய நரம் சைவ நரோத்தமம்
தேவீம் ஸரஸ்வதீம் வ்யாஸம் ததோ ஜயமுதீ³ரயேத் ॥

தேவர்களுக்குப்பிதாவும், ஜகத்துக்கு ஓரேநாதனும், பக்தர்களுக்குப்பிரியனும், எல்லா உலகங்களாலும் நமஸ்கரிக்கப்பட்ட

* ஆதிபர்வமுதலிய பதினெட்டும் பெரிய பர்வங்கள்; அனுக்கிரமணிகாபர்வமுதலிய நூறும் மேற்கூறிய பெரியபர்வங்களுக்கு உட்பட்ட சிறிய பர்வங்கள்.

† வாக்³வாதீம் தேவீம் என்றும்பாடம்.

‡ ஜயம்=பாரதம்.

§ "நாராயணனையும், நரன் என்கிற ஆதிசேஷனையும், நரோத்தமனென்கிற வாயுபகவானையும், லக்ஷ்மியையும், ஸரஸ்வதியையும், கிரந்தகர்த்தாவாகிய வியாஸரையும் நமஸ்கரித்து ஜயத்தைத்தருவதான இந்தப்பாரதத்தைச்சொல்லவேண்டும்" என்பது மாத்வஸம்ப்ரதாய உரை (மஹாபாரததாத்பர்ய நிர்ணயம், மூன்றும் அத்தியாயம்).

¶ இது மாத்வஸம்ப்ரதாயத்தில் மாத்ரம் அனுஸந்திக்கப்படுகிறது.

வனும், முக்குணங்களும் ஒழிந்தவனும், ஜனனமில்லாதவனும், வியாபகனும், முதல்வனும், ஈச்வரனும், ஸம்ஸாரத்தை நிவிர்த்தி செய்பவனும், தேவர்களாலும் அசுரர்களாலும் ஸித்தர்களாலும் வந்தனஞ்செய்தற்குரியவனுமாகிய நாராயணனே நான் வந்தனம் செய்கிறேன்.

ஒருகாலத்தில், *ரோமஹர்ஷணரென்பவருடைய புத்திரரும் †ஸூதகுலத்தவரும் பௌராணிகருமாகிய ‡உக்ரச்ரவஸ் என்பவர், §நைமிசாரண்யத்தில் சௌனகரென்னும் ¶குலபதியினுடைய பன்னிரண்டுவருஷங்களிற்செய்யத்தக்கதான $ஸத்ரமென்கிற யாகத்தில் வந்துசேர்ந்து ஸுகமாக வீற்றிருந்த கடிந்தவமுள்ள பிரமரிஷிகளிடஞ் சென்றார். அந்த ஸூதபுத்திரர் அவ்வாச்ரமத்தைச் சேர்ந்து அடக்கத்தினால் வணங்கினவராகி, நைமிசாரணியத்தில் வசிப்பவர்களாகிய ரிஷிகளெல்லாரையும்பார்த்து, "இன்றைத்தினம், உங்கள் தரிசனத்தினால் பாக்கியமுள்ளவனானேன். வியாஸபகவானுற் சொல்லப்பட்ட தர்மமும், அர்த்தமும் சேர்ந்தவையான கதைக

புராணப்பிரஸங்கத்தால், கேட்பவர்க்கு மயிர்சிலிர்த்தல் உண்டாகும் படி செய்பவர்.

† பிருதுசக்கரவர்த்தியின் யாகத்தில், இந்திரனுக்கு உத்தேசித்த ஹவிஸோடு பிருகஸ்பதியின் ஹவிஸைச்சேர்த்து ஹோமஞ்செய்ய, சிவ்யனுடைய ஹவிஸில் குருவினுடைய ஹவிஸ் அகப்பட்டுக் கீழ்மேலாகப் போனதினால் ஸூதகுலம் உண்டாயிற்றென்று வாயுபுராணமும், பிராஹ்மணஸ்த்ரீக்கும், க்ஷத்திரியனுக்கும் பிறந்தவன் ஸூதன் என்று யாஜ்ஞவல்கிய ஸ்மிருதியும் கூறுகின்றன.

‡ ஸூதர்; ஸூதகுலத்திற்பிறந்தமையால் ஸூதரென்றும், ஸூதபுராணிகரென்று பிரசித்திபெற்ற ஸூதருக்குப் புத்திராதலின் ஸௌதியென்றும் ஸூதபுத்திரரென்றும் இவர் வழங்கப்பெறுவர். சௌனகாதிமுனிவர்களுக்குப் பாரதத்தைச்சொன்னவர் இவரே.

§ தேவர்களால் அசுரரே ஒருங்கிஷத்திற் கொல்லப்படுதற்கு இடமாக இருந்தமையின், அந்த இடத்திற்கு நைமிஷாரணியமென்னும் பெயர் வந்ததென்று வராகபுராணமும், பிரமதேவர் சூரியனைப்போல் பிரகாசிக்கிற மனோமயமான ஒரு சக்கரத்தை ஸ்ருஷ்டித்து நேமியென்று சொல்லப்பட்ட அதன்முனை எந்த இடத்தில் தெறித்துப்போகிறதோ அந்த இடம் தபஸுக்கு யோக்கியமானதென்று சொல்லி அந்தச் சக்கரத்தைச்செலுத்த அதன்முனை அந்த வனத்தில் தெறித்துப்போனதினால் அதற்கு நைமிசாரணியமெனப் பெயர்வந்ததென்று வாயுபுராணமும் கூறும்.

¶ ரிஷிக்கூட்டங்களில் முக்கியமானவர்; பதினாயிரம் ரிஷிக்களே அன்னபானம் முதலியவற்றைத் காப்பாற்றுகிறவர்.

$ அநேகருக்குத் தானம் செய்வதும், அநேகம் பிராணிகளைத் திருப்தி பண்ணுவதும், அநேக காத்தாக்களினால் செய்யப்படுவதும், யஜமானர்களே ரித்விக்குக்களாக இருக்கப்பெற்றதுமான யாகம்.

ளெல்லாவற்றையும் அறிந்திருக்கிறேன். பிராமணச்ரேஷ்டர்களே! அவற்றை உங்களுக்குச்சொல்லுகிறேன்; தபோதனர்களாகிய நீங்கள் இப்போது கேட்டருளவேண்டும்" என்றனர்.

ஸூதர் அவ்வாறு சொன்னதைக்கேட்டு, நைமிசாரணியத்தில் வஸிப்பவர்களாகிய ரிஷிகள், விசித்திரங்களான கதைகளைக் கேட்பதற்காக அவ்விடத்தில் அவரைச் சூழ்ந்துகொண்டார்கள். ஸூதபுத்திரர் அந்த ரிஷிகளனைவரையும் வந்தனஞ்செய்து கைகூப்பிக்கொண்டு தபஸின் அபிவிருத்தியைப்பற்றிக் குசலப்ரச்னஞ்செய்து அந்தப்பெரியோர்களால் தாமும் கௌரவிக்கப்பெற்றார். அந்தத் தவத்தோர் யாவரும் உட்கார்ந்தபின் ரோமஹர்ஷணபுத்திரர் அவர்கள் காட்டிய ஆஸனத்தைப் பணிவுடன் அங்கீகரித்துக்கொண்டார். அந்தஸூதர் அதில் ஸுகமாக உட்கார்ந்து சிரமபரிஹாரமுற்றதைக் கண்டு ஒருரிஷி, பேசுவதற்கு ஸந்தர்ப்பத்தை உண்டாக்கிக்கொண்டு, "ஸூதபுத்ரரே! எங்கிருந்துவருகிறீர்; தாமரையிதழ்போன்ற கண்களையுடையவரே! இவ்வளவுகாலம் நீர் எங்கே ஸஞ்சரித்தீர்; கேட்கிற எனக்கு இதைச் சொல்லவேண்டும்" என்று கேட்டார்.

இவ்விதம் அந்தரிஷி செம்மையாகவும் உண்மையாகவும் பிரச்னஞ்செய்ய, பேசுவதில் வல்லமையுடையவரான ரோமஹர்ஷணபுத்திரர், ஆத்மத்தியான நிஷ்டர்களான முனிவர்களுடைய விரிவான அந்த ஸபையில் அவர்களுடைய சரித்திரமும் அடங்கிய வாக்கியங்களைக் கூறத்தொடங்கினார்.

"கிருஷ்ணத்வைபாயனரென்னும் பெயர்பெற்ற வியாஸமஹரிஷியினால்சொல்லப்பட்ட மஹாபாரதகதைகளைப் பரிக்ஷித்துமஹாராஜாவின்புத்திரரும் மஹாத்துமாவுமான ஜனமேஜயரென்னும் ராஜரிஷி ஸர்ப்பயாகஞ்செய்தபோது அந்தராஜச்ரேஷ்டருக்கு வைசம்பாயனர் முழுதும் சரியாகச்சொன்னார். மிகுந்த புண்ணியங்களும் ஆச்சரியப்படத்தக்கவிஷயங்களுள்ளவையுமான அந்தக்கதைகளை நான் கேட்டிருந்து, பிறகு பலதீர்த்தங்களுக்கும், க்ஷேத்திரங்களுக்கும் யாத்திரைசெய்து, பாண்டவர்களும் கௌரவர்களும் மற்றுள்ள எல்லாஅரசர்களும் யுத்தஞ்செய்த இடமும், பிராமணர்களால் ஆச்சரியிக்கப்பெற்றதுமாகிய ஸமந்தபஞ்சகமென்னும் புண்ணியக்ஷேத்திரத்திற்குப் போயிருந்தேன். அவ்விடமிருந்து உங்களைத்தரிசனம்செய்ய விரும்பி இங்கேவந்து சேர்ந்தேன். நீண்டவாழ்நாளுள்ளவர்களாகிய உங்களையெல்லாம் பரப்பிரம்மமாகவன்றோ யான் நினைப்பது. பெரியபாக்கியம்பெற்றவர்களும் ஸூர்யனுக்கும் அக்னிக்கும் ஸமா

னமான தேஜஸையுடையவர்களுமாகிய நீங்கள் ஸ்நானத்தை முடித்துக்கொண்டு, பரிசுத்தர்களாகி, ஜபம்செய்துவிட்டு, அக்கினிகளில் ஹோமத்தைமுடித்து, கவலையின்றி இந்தயாகத்தில் உட்கார்ந்திருக்கிறீர்கள். பிராமணர்களே! நான் புராணங்களிலுள்ள அறம்பொருள்களைப்பற்றிய புண்ணியகதைகளைச் சொல்லவா? மகாத்துமாக்களாகிய இராஜாக்கள் ரிஷிகள் இவர்களுடைய சரித்திரத்தைச்சொல்லவா? எதை நான்சொல்லட்டும்" என்று கேட்டனர்.

ரிஷிகள், "வியாஸமஹரிஷியாலேவெளியிடப்பட்டதும், தேவர்களாலும் பிரமரிஷிகளாலும் கேட்டுக் கொண்டாடப்பட்டதும், ஆச்சரியங்களாகியி பதங்களையும் பர்வங்களையும் நுண்மையான பொருள்களையும் நியாயங்களையுமுடையதும், வேதங்களின்பொருள்களையே அணிகலமாகப்பூண்டதும், கதைகளுள்ளே சிறந்ததுமாகிய அந்தப்பாரதமென்னும் பூர்வசரித்திரத்தைப்பற்றியதும், ஒழுங்காகச்சேர்க்கப்பட்ட விஷயங்களடங்கியதும், அநேகவிதமான சாஸ்திரங்களினாற் பூரிக்கப்பட்டதும், வியாஸருடைய ஆஜ்ஞைப்படி வைசம்பாயனரால ஜனமேஜயராஜாவுடைய ஸர்பயாகத்தில் ஸந்தோஷத்துடன் விஸ்தாரமாகச் சொல்லப்பட்டதும், நாலுவேதங்களோடு சேர்ந்ததும், புண்ணியத்தைச்சேர்ப்பதும், பாவத்தையொழிப்பதும், ஆச்சரியமான செய்கையுள்ள வியாஸருடைய *ஸம்ஹிதையுமாகிய அந்தப்பரிசுத்தமான வாக்கைக் கேட்க விரும்புகிறோம்" என்றார்கள். ஸௌதியானவர் சொல்லுகிறார்:—

மூலகாரணமான புருஷனும், ஈசானனும், அநேகர்களாலேயாகங்களில் அழைக்கப்பட்டவனும், அநேகர்களாலே ஸ்துதிக்கப்பட்டவனும், ஸத்தியனும், அழிவில்லாத ஒரு பரப்பிரமமும், ஸ்தூல ஸூக்ஷ்ம ஸ்வரூபனும், சாச்வதனும், பிரகிருதியும் ஜீவர்களுஞ்சேர்ந்த பிரபஞ்சரூபனும், அந்தப் பிரபஞ்சத்திற்கு மேற்பட்டவனும், மேலானவைகளையும் கீழானவைகளையும் படைத்தவனும், என்றும் புதுமையானவனும், பரதத்துவமும், மாறுதலில்லாதவனும், மங்களகரனும், மங்களரூபனும், ஸர்வவியாபியும், பிரார்த்திக்கத்தக்கவனும், பாவத்தைப் போக்குகிறவனும், பரிசுத்தனும், ஐம்புலன்களையும் ஆளுகிறவனும், ஜங்கமங்களுக்கும் ஸ்தாவரங்களுக்கும் பிதாவுமாகிய ஹரியை நமஸ்கரித்து, எல்லாஉலகங்களாலும் பூஜிக்கப்பட்ட மஹாத்துமாவும் ஆச்சரியமான செய்கைகளையுடையவருமாகிய வியாஸமஹரிஷியினுடைய பரிசுத்தமான அபிப்பிராயத்தை

* வேதத்துக்கு ஒப்பான நிரந்தம்.

வெளியிட ஆரம்பிக்கிறேன். அளவற்ற மகிமைபொருந்திய அந்த வியாஸபகவானுக்குநமஸ்கரம்; அவருடைய அனுக்கிரகத்தினால் இந்த நாராயணனுடைய கதையைச் சொல்லத்தொடங்குகிறேன்.

நாராயணனுடைய கதையானது எவ்வாறு பயனைத்தருமோ அவ்வாறு பிரமசரியம் முதலான நான்கு ஆச்சம தர்மங்களைச் செய்வதும், தீர்த்தங்களிலெல்லாம் ஸ்நானஞ் செய்வதும் பயனைக் கொடா. நாராயணனுக்கு ஒப்பு முன்னுமில்லை; இப்போதுமில்லை; இனிமேலுமில்லை; இந்த ஸத்திய வாக்கியத்தினாலே யான் எல்லா விஷயங்களையும் நிறைவேற்றுகிறேன். இந்தஇதிஹாஸத்தைப் பூலோகத்தில் அநேக கவிகள் முன்னேசொன்னார்கள்; பரந்த அறிவுள்ள மற்றுஞ்சிலர் இப்போதும் சொல்லுகிறார்கள்; அப்படியே இனிமேலும் சிலர் சொல்லுவார்கள். மூன்று லோகங்களிலும் நிலைபெற்ற பெரிய ஞானமாகிய இதைப பிராமணர்கள் விரிவாகவும் சுருக்கமாகவும் காப்பாற்றிவைத்துக்கொண்டிருக்கின்றனர். இஃது, அழகான சொற்களாலும், தேவர்களுடைய *வ்யவஹாரங்களாலும், மனிதர்களுடைய வ்யவஹாரங்களாலும் அலங்கரிக்கப பட்டது; பலவகையான சந்தங்களோடு கூடியது; வித்துவான்களுக்குப் பிரியமானது; ஸத்தியவதியின் புத்திரரான வியாஸர் தம்முடைய †தவத்தினாலும் ‡பிரமசரியத்தினாலும் நித்தியமான வேதத்தை வகுத்தபிறகு இந்தப் புண்ணியமான §இதிஹாஸத்தைச் செய்தார். புண்ணியகேஷத்திரமாகிய நைமிசாரண்யத்தின் அடிவாரத்தில் பரிசுத்தமான குஹாக்ருஹத்தில் தர்மாத்துமாவாகிய அந்த வியாஸர் ஸ்நாநஞ்செய்து தருப்பையைப் பரப்பி அதன்மேல் எழுந்தருளியிருந்து சுத்தரும் நியமமுள்ளவருமாய் மன்த்தையடக்கித் த்யானத்திலேயே நிலைபெற்றிருந்து பாரதமென்னும் இதிஹாஸத்தினுடைய அந்தவரலாற்றைத் தபோபலத்தினால் ஆராய்ந்து ¶யோகத்தில் பிரவேசித்து ஞானத்தால் எல்லாவற்றையும் பூர்ணமாகப் பார்த்தார். அவர்கண்டமுறையாவது:—

இவ்வுலகம், பிரகாசமில்லாமலும் அறிவில்லாமலும் எங்கும் இருளால் மூடப்பட்டுமிருந்தபோது, பிரஜைகளின் வித்தாகவுள்ளதும் அழிவில்லாததுமாகிய ஒருபெரியமுட்டை உண்டாயிற்று. பெரியதும் அற்புதமுமான அந்த அண்டத்தை யுகங்களுக்கு ஆதி

---

* சரித்திரம்முதலியவை. † தியானசக்தி.

‡ இந்திரியஜயம். § புராதனசரித்திரம்.

¶ புறப்பொருள்களை உள்ளே காணக்கூடிய சக்தி.

காரணமென்று சொல்லுகின்றனர். ஸத்தியமும் தேஜோமயமும் அழியாததும் ஆச்சரியமும் கிரஹத்தற்கரியதும் எல்லாவற்றிலும் ஒரேதன்மையாக இருப்பதும் வெளிப்படாததும் எல்லாவற்றுள்ளும் பிரவேசித்திருப்பதும், ஜடங்களும் ஜீவன்களும் தானாக இருப்பதுமாகிய பிரம்மமானது, அந்த அண்டத்தில் வேதங்களினால் அறியப்படுகிறது. அந்த அண்டத்தில், பிரஜைகளைப்படைக்கின்றவரும், சக்தியுள்ளவருமாகிய (முதல்) பிரமதேவர் பிறந்தார்.

தேவர்களுக்கெல்லாம் பிதாவாகிய பிரமாவும், ஸ்தாணுவும், பிரமபுத்திரரான ஸ்வாயாபுவமனுவும், பிரசேதஸ்ஸின் புத்திரராகிய தக்ஷரும், தக்ஷருடைய புத்திரிகள் பதினேழுபேர்களும், *இருபத்தொரு பிரஜாபதிகளும் உண்டானார்கள். எல்லா ரிஷிகளாலும் அறியப்பட்டவனும், அறிதற்கரிய ஸ்வரூபமுள்ளவனுமாகிய விராட் புருஷனும், விசுவேதேவர்களும், ஆதித்தியர்களும், வஸுக்களும், அசுவினீதேவர்களும், யக்ஷர்களும், ஸாத்தியர்களும், பிசாசர்களும், †குஹ்யகர்களும், பித்ருதேவதைகளும் பிறந்தனர்; பிறகு எல்லாக் குணங்களும் நிரம்பினவர்களும், வித்வான்களும், சிஷ்டர்களும், சிரேஷ்டர்களுமான அநேக மஹரிஷிகள் உண்டானார்கள்; ஜலம், மேலுலகம், பூமி, வாயு, இடைவெளி, திசைகள், வருஷங்கள், இருதுக்கள், மாஸங்கள், பக்ஷங்கள், பகலிரவுகள் இவை முறையே உண்டாயின; இன்னும் உலகத்திற் காணப்படுகின்ற ஸ்தாவரங்களும், ஜங்கமங்களுமாகிய மற்ற எல்லாப் பொருள்களும் உண்டாயின; ஜகத்துக்கு முடிவுவரும்போது அவையெல்லாம் மறுபடி ஸம்ஹாரஞ் செய்யப்படுகின்றன. அந்தஅந்த ருதுக்களின் அநேகவிதங்களான அடையாளங்கள் ஒவ்வொரு ருதுவும் திரும்பி வரும்போது, அந்த அந்த ருதுக்களில் முன்னிருந்தவையாகக் காணப்படுவதுபோல், ஒவ்வொரு யுகத்தின் ஆரம்பத்திலும் வஸ்துக்கள் அந்தஅந்த முந்தியயுகங்களி லிருந்தவைபோற் காணப்படுகின்றன. இந்தவிதமாக ஆதியும் அந்தமுமில்லாததும் பஞ்சபூதங்களின் சேர்க்கையாகிய பிரபஞ்சத்திற்குக் காரணமுமான இந்தக் காலசக்கரமானது, ஆரம்பமும் முடிவுமில்லாமல் உலகத்திற் சுற்றிக்கொண்டே யிருக்கிறது. மூப்பத்துமூன்று ஆயிரங்களும், மூப்பத்துமூன்று நூறுகளும், மூப்பத்துமூன்றுமாகத் தேவர்களின் ஸ்ருஷ்டி சுருக்கமாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. திவஸ்புத்திரன், ப்ருஹத்பானு, சக்ஷு, ஆத்மா,

---

* மரீசி முதலிய ஸப்தரிஷிகளும், பதினேன்குமனுக்களும்.

† யக்ஷர்களில் ஒருவகையினர்.

விபாவஸு, ஸவிதா, ரிசீகன், அர்க்கன், பானு, ஆசாவஹன், ரவிஎன்னும் இவர்களெல்லோரும் சூரியனுடைய புத்திரர்கள். இவர்களுக்குப் பின்தோன்றியவர் மஹர்யர் என்னப்பட்ட வைவஸ்வதமனு. தேவப்ராட் என்பவர் அந்த மனுவின்புத்திரர்; தேவப்ராட்டின்புத்திரர் ஸுப்ரூட் என்பவர். சந்ததியுள்ளவர்களும் மிகுந்த கல்வியுள்ளவர்களுமாகிய தசஜ்யோதி, சதஜ்யோதி, ஸஹஸ்ரஜ்யோதி என்ற மூன்றுபேர்கள் ஸுப்ராட்டின் புத்திரர்கள். மஹாத்துமாவாகிய தசஜ்யோதிக்குப் பதினாயிரம் புத்திரர்கள் உண்டானார்கள். அதற்குப் பதின்மடங்கானவர்கள் சதஜ்யோதியின் புத்திரர்கள். அதற்குமேல் இன்னும் பதின்மடங்கானவர்கள், ஸஹஸ்ரஜ்யோதியின் புதல்வர்கள். அவர்களிடமிருந்துதான் இந்தக் குருவம்சமும், யதுவம்சமும், பரதவம்சமும், யயாதிவம்சமும், இக்ஷ்வாகுவம்சமும், இன்னும் அநேக ராஜரிஷிவம்சங்களும், மிகவிரிவான பிராணிஸ்ருஷ்டிகளும் உண்டாயின. பிராணிகளிருக்குமிடமீனத்தும், ஜனனம், மரணம், விஸ்தாரமாகிய *மூன்றுவகை ரஹஸ்யங்களும், வேதமும், யோகமும், ஞானமும், தர்மார்த்தகாமங்களும், அவற்றைப்பற்றிய பற்பலசாஸ்திரங்களும், உலகநடையின் ஒழுங்குமாகிய எல்லாவற்றையும் வியாஸமஹரிஷியானவர் கண்டறிந்தார்.

பரதவம்சத்தினுடைய ராஜ்யதந்திரமும், பூர்ணமான அபிவிருத்தியும், சரித்திரங்களும், †உபாக்கியானங்களும், அநேக விதங்களான வேதார்த்தங்களுமாகிய இதிஹாஸக்ரந்தத்தினுடைய லக்ஷண முழுவதும் இந்த அத்தியாயத்தில் ஸங்க்ரஹமாக வரிசைப்படுத்திக் கூறப்பட்டுள்ளன; பிறகு விரிவாகச் சொல்லப்படும். இந்தப் பெரிய ஞானத்தை வியாஸமஹரிஷி, சுருக்கியும் விரித்தும் சொன்னார். ஏனென்றால், உலகத்திற் சுருக்கம் விரிவு இரண்டையும் வைத்துக்கொள்வது வித்துவான்களுக்குப் பிரியமானது.

சில பிராமணர்கள் பாரதத்தை ‡"நாராயணம் நமஸ்கிருத்ய" என்ற சுலோகம் முதலாகவும், இன்னும் சிலர், ஆஸ்தீகர் சரித்திரம் முதலாகவும், மற்றும் சிலர் உபரிசரவஸுவின் சரித்திரமாதியாகவும் ஓதுகின்றனர். அவை ஒவ்வொன்றும் ஸரியே. ஞானவான்கள் தங்களுக்குக் கிரந்தங்களிலுள்ள ஞானத்தை அநேக விதங்களாற் பிரகா

---

* தர்ம அர்த்த காம ரஹஸ்யங்களென்பது பழைய உரை.

† கிளைக்கதைகள்.

‡ மஹ்யர் என்னும் வைவஸ்வதமனுவின் வாலாறுமுதலாகவென்றும் சிலர்கூறுவர்.

சப்படுத்துகின்றனர். சிலர் கிரந்தங்களை விரித்து உரைசெய்ய ஸமர்த்தர்களா யிருக்கின்றனர். மற்றும் சிலர் கிரந்தங்களை மறவாம லிருக்க வல்லவர். ஸத்தியவதியின் புத்திரரான வியாஸர் தம்முடைய தவத்தினாலும் பிரமசரியத்தினாலும் நித்தியமான வேதத்தை வகுத்து, புண்ணியமான இந்த இதிஹாஸத்தைச் செய்தார். முன்பு பராசரர் புதல்வரும், வித்வானும், உக்கிரமான தவமுள்ளவரும், தர்மத்தில் சித்தமுள்ளவரும், சக்திமானுமாகிய கிருஷ்ணத்வைபாயனரென்னும் பிரமரிஷி தம்தாயாருடைய கட்டளையினாலும், சிறந்த புத்தியுள்ள பீஷ்மருடைய கட்டளையினாலும்; விசித்திர வீரியனுடைய பாரியையிடம் மூன்று அக்கினிகளைப்போன்ற குருவம்ச புத்திரர்கள் மூவரையும் உண்டுபண்ணினர்; திருதராஷ்டிரனையும், பாண்டுவையும், விதுரரையும் உண்டுபண்ணிவிட்டு ஞானவானுகிய வியாஸர் மறுபடியும் தவத்திற்காக ஆச்ரமத்திற்கே சென்றார். அவர்கள் பிறந்து வளர்ந்து முடிவையடைந்தபின் வியாஸமஹரிஷி இந்த மனுஷ்ய லோகத்துக்காகப் பாரதத்தைச் சொன்னர். ஜனமேஜய ராஜாவும் ஆயிரக்கணக்கான பிராமணர்களும் பாரதத்தைச் சொல்ல வேண்டுமென்று கேட்க, ஸபீபத்தில் உட்கார்ந்திருந்த வைசம்பாயனரென்னும் சிஷ்யரைச் சொல்லும்படி வியாஸர் ஆஜ்ஞாபித்தார். அந்த யாகத்தில் ஹோமகாரியங்களுக்கு இடையே, ஸபையில் உட்கார்ந்திருக்கும் ஜனமேஜயராஜர் அடிக்கடி கேட்க, வைசம்பாயனர் பாரதத்தைச் சொல்லலானர்.

குருவம்சத்தினுடைய அபிவிருத்தியையும், காந்தாரியின் தர்ம ஒழுக்கத்தையும், விதுரருடைய புத்தியையும், குந்தியினுடைய தைரியத்தையும், *வாஸுதேவனுடைய மகிமையையும், பாண்டவர்களுடைய ஸத்தியத்தையும், திருதராஷ்டிரபுத்திரர்களுடைய கெட்ட செய்கையையும், பகவானான த்வைபாயனமஹரிஷி செவ்வையாகச் சொன்னர். புண்ணிய காரியஞ்செய்தவர்களுடைய உபாக்கியானங்களோடுகூடி நூறுயிரம் சுலோகங்களாகிய இந்தப்பாரதமானது, கேட்கத்தக்கவற்றிலும் அறியத்தக்கவற்றிலும் சிறந்தது; உபாக்கியானங்களில்லாமல் இருபத்துநாலாயிரம் சுலோகங்களாகிய பாரதமென்னும் கிரந்தத்தைச்செய்தார்; அவ்வளவே பாரதமென்று வித்வான்களாற் சொல்லப்படுகிறது. மறுபடியும் அவர் அந்தப்பாரதத்திலிருந்து எல்லாப்பர்வங்களின் விஷயங்களையும் சுருக்கி நூற்றைம்

* கிருஷ்ணன்.

பத்து சுலோகங்களால் அனுக்கிரமணிகாத்தியாயமாகவும் செய்தார். அந்த உத்கிருஷ்டமான இதிஹாஸத்தைச்செய்து, ஸமர்த்தரான தீவைபாயனர், "இதை இங்கே எவ்வாறு சிஷ்யர்களுக்குக் கற்பிப்பேன்" என்று சிந்தையுற்றார்.

த்வைபாயன மஹரிஷியின் அந்தச் சிந்தையையறிந்து உலகங்களுக்குப் பிதாவாகிய பகவான் பிரம்மதேவர், அந்த ரிஷியை மகிழ்விக்கற்காகவும், ஜனங்களுக்கு நன்மைசெய்வதற்காகவும், நேராகவே அவருக்குக் காட்சிகொடுத்தார். வியாஸர் அவரைக்கண்டு திகைத்து, கைகூப்பிக்கொண்டு, தலைவணங்கி நின்று, எல்லா முனிகணங்களினும் சூழப்பட்டவராய் அவருக்கு ஆஸனம் கொடுத்தார்; அந்த உயர்ந்த ஆஸனத்தில் வீற்றிருந்த ஹிரண்யகர்ப்பராயபடித்து, ஆஸனத்துக்கருகில் வியாஸபகவான் நின்றார். பிறகு, மேலான ஸ்தானத்திலிருப்பவராகிய ப்ரஹ்மாவினால் உத்தரவு கொடுக்கப்பட்ட வியாஸர் மகிழ்வுற்றுப் புன்னகையுடன் அவருடைய ஆஸனத்துக்கருகில் இருந்தார். மிக்க தேஜஸோடுகூடிய அந்தவியாஸர் லோகச்ரேஷ்டரான பிரம்மதேவரை நோக்கி, "பகவானே! மிகவும் சிலாக்கியமான இந்தக்காவியம் என்னாலே செய்யப்பட்டது; ப்ரஹ்மாவே! வேதத்தினுடைய ரஹஸ்யமும் மற்றுள்ள விஷயமும் என்னால் இதில்கிலேசத்துடன் தப்பட்டிருக்கின்றன; சிக்ஷை, வியாகரணம், சந்தஸ், நிருக்தம், ஜோதிஷம், கல்பமென்னும் ஆறுவேதாங்கங்களும் உபநிஷத்துக்களும் அடங்கிய வேதங்களைத் தெளிவாகச்செய்வதும், *இதிஹாஸங்கள் †புராணங்கள் இவற்றின் விரிவும் சுருக்கமும், சென்றதும் நடக்கிறதும் வருவதுமாகிய மூன்றுகாலங்களும், மூப்பு இறப்பு பயம் வியாதி உத்பத்தி நாசம் இவைகளின் நிச்சயமும், அநேக விதங்களான தர்மங்களுடைய இலக்கணமும், பிரம்மசரியமுதலிய ஆச்ரமங்களின் இலக்கணமும், நாலுவருணங்கள் எல்லாப்புராணங்கள் தவம் பிரம்மசரியம் இவைகளின் முறையும், பூமி, சந்திரன், சூரியன், ‡கிரகங்கள் §நட்சத்திரங்கள் ¶தாரைகள் யுகங்கள் இவைகளின் அளவும், ரிக்குக்களும், யஜுஸுகளும், ஸாமங்களும், அவ்வாறே வேதத்திலுள்ள ஆத்மஞானபாகமும், தர்க்கசாஸ்திரப்

* சரித்திரத்தைப்பற்றியவை.

† ஸ்ருஷ்டி, பிரளயம், வம்சம், மன்வந்தரம், வம்சத்தின் சரித்திரங்கள் ஆகிய இவைகள் அடங்கியவை.

‡ அங்காரகன் முதலியவை.

§ அசுவினிமுதலிய உ எ. ¶ மற்ற நட்சத்திரங்கள்.

பயிற்சியும், வைத்தியசாஸ்திரமும், பாசுபதமும், *ஞானமும், தேவ மனுஷ்யஜாதிகளும், அவ்வவற்றின் அநேக காரணங்களும், புண்ணியதீர்த்தங்கள், புண்ணியகேஷத்திரங்கள், நதிகள், பர்வதங்கள், வனங்கள், கடல்கள், நகரங்கள், உயர்ந்த தனுர்வேதத்திற்சொல்லப்பட்ட அஸ்திரவிதிகள், தேவர்களுடைய†கல்பங்கள் இவைகளும், யுத்தப்பயிற்சியும், பேசுகிற விதங்களின் வேறுபாடுகளும், உலக நடையின் முறையும், ஸர்வவியாபியானவஸ்து எதுவோ அதுவும் இதிற் சொல்லப்பட்டுள்ளன. ஆனால் இதைஎழுதுகிறவர் பூமியில் யாருமில்லை" என்று சொன்னார்.

பிரமதேவர், "நீர் ஸூக்ஷ்மமான ஞானத்தை அறிந்திருப்பதனால் உம்மைத் தபஸினால் மேன்மைபெற்றவரும் ரிஷிச்ரேஷ்டருமான ‡வஸிஷ்டரைக்காட்டிலும் அதிக ச்ரேஷ்டராக நினைக்கிறேன். உமதுவாக்கு, பிறந்ததுமுதற் பொய்யாததும், வேதத்தைச் சொல்லுவதுமாக இருப்பதை நான் அறிவேன். உம்மாலேயே பாரதம் காவியமென்று சொல்லப்பட்டது. ஆதலால், அது காவியமேயாகும். எப்படி மற்ற மூன்று ஆச்ரமங்களும் க்ருஹஸ்தாச்ரமத்துக்கு மேற்படாவோ, அப்படியே எந்தக்கவிகளும் இந்தக் காவியத்திற்கு மேற்போக வல்லவராகார். நீர் ஞானமென்கிற திபத்தினாலே ஒளிகொடாமற்போனால், உலகமானது ஜடமாகவும், குருடாகவும், செவிடாகவும், பித்துள்ளதாகவும் இருளடைந்துபோய்விடும். தம்தம் செய்கைகளினால் கட்டப்பட்டு, அஜ்ஞானஇருளால் கண்தெரியாத உலகத்துக்கு ஞானமென்னும் §அஞ்சனசலாகையாலே அறிவாகிய கண்கள் மலர்ச்சியுண்டாக்கப்பெற்றன. அறம் பொருள் இன்பம் வீடாகிய புருஷார்த்தங்களைச் சுருக்கமாகவும் விரிவாகவும் சொல்லி, சூரியனைப்போற் பிரகாசிக்கின்ற பாரதத்தினால் நீர் மனிதர்களுடைய இருளை அகற்றிவிட்டீர். உமது ¶புராணம் பூரணசந்திரனைப்போன்றது. இதனாற் பிரகாசம்செய்யப்பெற்ற வேதார்த்தம் நிலவுபோலிருக்கிறது. நிலவினால் ஆம்பற்பூக்கள் மலர்வதுபோல், இந்தப்புராணத்தினால் மனிதர்களின் புத்தி மலரும்படி செய்யப்பட்டது. அஜ்ஞானமென்னும் பாறையை விலக்குகிற இதிஹாஸமென்ற விளக்கினால் உல

---

*ஞானமும் என்றும்பாடம். †பலயுகங்கள்.

‡வேறுபாடம்: தவத்தினாற் சிறந்ததும் ரிஷிகளின் ஸமூஹத்துக்கெல்லாம் மேற்பட்டதுமாகிய ரகஸ்யமான ஞானரூபமாகிய பிரம்மத்தை யறிந்ததினால் உம்மை அதிக ச்ரேஷ்டராக நினைக்கிறேனென்பது.

§கண்ணுக்கு மையெழுதுங்கோல். ¶பாரதம்.

கமென்னும் வீட்டின் உட்புறமுழுவதும் செம்மையாகப் பிரகாசம் செய்யப்பட்டிருக்கிறது. பாரதமென்பது ஒருமரம். அதற்கு ஸங்கிரஹாத்தியாயமென்னப்பட்ட அனுக்கிரமணிகாபர்வமே விதை; பௌலோமம் ஆஸ்தீகமென்கிற பர்வங்களே வேர்கள்; சம்பவபர்வமே பருத்த அடிமரம்; சபாபர்வமே பக்ஷிகள் முதலியவை தங்குமிடம்; அரணியபர்வம் மரத்தின் சிறுகிளை; விராடபர்வமும் உத்தியோகபர்வமும் ஸாரம்; பீஷ்மபர்வம் பெருங்கிளை; துரோணபர்வம் இலைகள்; கர்ணபர்வம் வெண்மையான புஷ்பம்; சல்லியபர்வம் அதன்மணம்; ஸ்திரீபர்வமும் ஐஷீகபர்வமும் *தூனி; சாந்திபர்வம் பெரும்பலம்; அசுவமேதபர்வம் அமிருதத்துக்கு ஒப்பான பழரஸம்; ஆச்ரமவாஸபர்வம் பறவைகளுக்கு ஆதாரமான இடம்; மௌஸலபர்வம் †பறவைகளின் ஒலித்தொகுதி; சிஷ்டர்கள் இம்மரம்காத்த பறவைகள். ஜனங்களுக்கு மேகம் ஜீவனதாரமாயிருத்தலைப்போல் பாரதமென்னும் மரம் அழியாமல் கவிசிரேஷ்டரானவர்க்குள் ஜீவனதாரமாக இருக்கும். ரிஷியே! இந்தக்காவியத்தை எழுதுவதற்காகக் கணபதியைத் தியானஞ்செய்யுங்” என்று சொன்னர். இவ்வாறு வியாஸரைப் பார்த்துச் சொல்லிவிட்டு உலகத்துக்கெல்லாம் ஸ்ருஷ்டி கர்த்தாவும் பகவானுமாகிய அந்தப் பிரமதேவர் ரிஷிகணங்களுடனும் தேவகணங்களுடனும் தம்முடைய ஸ்தானத்துக்குச்சென்றார்.

பிறகு ஸத்தியவதியின் புத்திரராகிய வியாஸமஹரிஷி விநாயகரைத் தியானித்தார். தியானித்தவுடன் பக்தர்கள் அபீஷ்டத்தை நிறைவேற்றுபவரும் கணங்களுக்குத் தலைவருமான விக்நேச்வரர் வேதவியாஸர் இருந்தஇடத்திற்கு எழுந்தருளினர். குற்றமற்ற ஜனமேஜயரே! அப்போது வியாஸர் விக்நேச்வரருக்குப் பூஜை செய்து, விற்றிருந்த அவரைநோக்கி, “கணநாதா! மனத்தில் முன்னமே அழைக்கப்பட்ட இந்தப் பாரதத்தை இப்போது நான் சொல்லுகிறேன்; நீர் இதை எழுதவேண்டும்” என்று பிரார்த்தித்தார். இதைக்கேட்டு விக்நேசுவரர், “எழுதும்போது என்னுடைய எழுதுகோல் ஒரு நிமிஷமாவது நில்லாமலிருக்குமானால் அப்போதுதான் நான் எழுதுபவனாக இருப்பேன்” என்றார். அதுகேட்டு வியாஸ பகவான், “அறிந்துகொண்டே மந்தவிடத்திலும் நீர் எழுதவேண்டும்” என்று அந்த விக்நேச்வரரைக் கேட்டுக்கொண்டார். விநாயகர், ஸம்மதித்து எழுதத் தொடங்கினர். அப்போது மஹரிஷி

* சமபரிகாரம் செய்தற்குரிய நிழலென்பதீ பழைய உரை.

† காதுபோன்ற குழாய்க்குகையின் சேர்க்கையென்பதுபழையவுரை.

யானவர் விளையாட்டாகவே சிருந்தத்தில் பொருள்விளங்காத பாக மாகிய முடிச்சை அமைத்தார். அதுவிஷயத்தில், த்வைபாயனமஹ ரிஷி, "எண்ணுயிரத் தெண்ணூறு சுலோகங்கள் எனக்குத் தெரி யும்; சுகருக்குத் தெரியும்; ஸஞ்சயனுக்குத் தெரியுமோ தெரி யாதோ" என்று பிரதிஜ்ஞை செய்திருக்கிறார். மஹரிஷியே! மிகக் கடினமாக இயற்றப்பட்ட பொருள்விளங்காத அந்தச் சுலோகங் கள் சொல்லும்பொருளும் வெளிப்படையாகவிராமையால், பகுத்த றிய முடியவில்லை. ஸர்வஜ்ஞராகிய விக்நேச்வரர் சற்றுநேரம் அதைச் சிந்தித்துக் கொண்டிருக்குமளவில் வியாஸர் வேறு அநேக சுலோ கங்களைச் செய்தார். இனிமையும் பரிசுத்தமுமான ரஸத்தோடு கூடியதும் தேவர்களாலும் சேதிக்கமுடியாததுமாகிய பாரதமென் னும் அந்த மரத்தின் புஷ்பங்கள், பழங்கள்முதலியவற்றின் உத்பத் தியைச் சொல்லுவேன்: எல்லாப பர்வங்களின் விஷயங்களுமுள்ள அனுக்கிரமணிகாத்தியாயத்தைச சொல்லுகின்றேன். த்வைபாயன ரஹரிஷியானவர் இந்தப பாரதத்தை முதலில் தமமுடையப் புத்திர ராகிய சுகபஹரிஷிக்குக் கற்பித்தார். அந்தப பிரபுவான வியாஸர், பின்பு தகுந்த மற்றச சிஷ்யர்களுக்குப சொல்லிவைத்தார்; அவர் அறுபதுலக்ஷப கிரந்தஸங்கியையுள்ள வேறொரு இதிஹாஸமாகச் செய்தார். அதில் முப்பதுலக்ஷம் கிரந்தங்கள் தேவலோகத்தில் நின் றன; பதினைந்துலக்ஷப கிரந்தங்கள் பிதிர்லோகத்திலும், பதினைந்து லக்ஷம் கிரந்தங்கள் இராக்ஷஸர்கள் யக்ஷர்களிடத்திலும் வெளியி டப்பட்டு நின்றன; ஒருலக்ஷமட்டுமே மனுஷ்யர்களிடம் நின்றன.

(பாரதத்தை) நாரதர் தேவர்களுக்குச் சொன்னார். அஸிதரும் தேவலரும் பிதிர்க்களுக்குச் சொன்னார்கள். கந்தர்வர்களுக்கும் ராக்ஷஸர்களுக்கும் யக்ஷர்களுக்கும் சுகர் சொன்னார். வியாஸருடைய சிஷ்யரும் தர்மத்திலேயே மனமுள்ளவரும வேதமறிந்தவர்க ளெல் லாரிலும் சிறந்தவருமாகிய வைசம்பாயனரென்பவர், இந்த மனுஷ்ய லோகத்தில் வெளிப்படுத்தினர். பரிக்ஷித்தின் புத்திரரும் மஹாத்து மாவுமான ஜனமேஜயராஜாவுக்கு வைசம்பாயனரென்னும் பிரமரிஷி சொன்ன லக்ஷித்தையும் நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; கேளுங்கள்.

துரியோதனன் கோபமே உருக்கொண்ட பெரியவ்ருக்ஷம்; அதற் குக் கர்ணன் அடிமரம்; சகுனி கவடு; துச்சாஸனன் நிறைந்த புஷ் பமும் கனியும்; தன் மனத்தையடக்க வல்லமையில்லாத தர்மராஜா டிமஹாராஜன் வேர்.

யுதிஷ்டிரர், தர்மமே உருக்கொண்ட ஒருபெரியமரம்; அதற்கு அர்ச்சுனன் அடிமரம்; பீமசேனன் கிளைகள்; மாத்திரியின் புத்திரர்களாகிய நகுல ஸஹதேவர்கள் செழுமையான பூவும் கனியும்; கிருஷ்ணனும் வேதமும் பிராமணர்களும் வேர்கள்.

பாண்டு யுத்தம்செய்ய மிகுந்தசக்திமானுயிருந்ததனுல் அநேக தேசங்களை ஜயித்துக் காட்டில்வேட்டையாடிக்கொண்டு தம் ஜனங்களுடனும் ரிஷிகளுடனும் கூடிக் காட்டில்வஸித்தார். அவர் புணர்ச்சியிலிருந்த மானைக்கொன்றதனுல் தடுக்கக்கூடாத ஆபத்தையடைந்தார். பாண்டவர்கள் அத்தவனத்தில் ஜனித்தனர்; அங்கேயே ஆசாரவித்துகளை ஒழுங்காகக் கற்பிக்கப்பெற்றனர். அவர்களின் தாயார்களாகிய குந்தியும் மாத்ரியும், தர்மத்தின் ரஹஸ்யமான துர்வாஸரிஷியின்மந்திரத்தினுல் தர்மதேவதை, வாயு, இந்திரன், அசுவினிதேவர்கள் ஆகிய இவர்களிடமிருந்து அநுக்ரஹம் பெற்றனர். பிறகு பார்த்தாவினிடத்து அன்புள்ளவளாகிய குந்தி பதிவிரதாதர்மத்துக்குரிய துர்வாஸரிஷியின் மந்திரத்தையடைந்து புத்திரர்களை இச்சித்து அந்தமந்திரத்தினுல், தர்மதேவதை, வாயு, இந்திரன் இவர்களையழைத்தாள். குந்தி உபதேசித்த மந்திரத்தினுல் மாத்திரி அசுவினிதேவர்களையழைத்தாள். பிறகு பாண்டவர்யாவரும் குந்தி மாத்ரி இவர்களுடைய மந்திரங்களினுற் பிறந்தனர்; மஹரிஷிகளுடைய புண்ணியமான ஆச்ரமங்களிலும் பரிசுத்தமான காடுகளிலும் தாயார்களாற் காப்பாற்றப்பட்டு ரிஷிகளுடன்கூட வளர்ந்தனர். மஹாத்துமாக்களாகிய அந்தப்பாண்டவர்யாவரும் ஜனித்தபிறகு சிறந்த புண்ணியகேஷத்திரமான சதசிருங்கமென்னும் பெரியகுன்றின்மேல் மாத்ரியோடு கூடப் புணர்ந்து, ரிஷிசாபத்தின் வலிமையினுல் பாண்டு இறந்தார்.

பாலர்களும் அழகுள்ளவர்களும் ஜடைதரித்த பிரமசாரிகளுமாகிய அந்த இளைஞர்கள் ரிஷிகளால் நேராகவே த்ருதராஷ்டிரரிடஞ்சேர்ந்தவர்களிடம்கொண்டுவந்துவிடப்பட்டனர்; "இந்தப்பாண்டவர்கள், உங்களுக்குப் புத்திரர்களும், ஸஹோதரர்களும், சிஷ்யர்களும், மித்திரர்களுமாயிருப்பவர்கள்" என்றுசொல்லிவிட்டு அந்தரிஷிகள் அங்கிருந்துமறைந்தனர். ரிஷிகளால் ஒப்பிக்கப்பெற்ற அந்தப்பாண்டவர்களைக்கண்டு அப்போது கௌரவர்களும் பட்டணத்திலுள்ள சிஷ்டர்களான நான்குவருணத்தார்களும் ஸந்தோஷத்தினுல் அதிகமாக முழங்கினர்; "இவர்கள் பாண்டுவின் புத்திரர்களல்லர்" என்று சிலரும், "பாண்டுபுத்திரர்களே" என்று வேறுசிலரும், "இறந்து வெகுகாலான பாண்டுவுக்குப் புத்திரர்கள் எப்படியிருக்கலாகும்" என்று

மற்றும்சில நாட சொன்னார்கள் ; "எப்படியிருந்தாலும் நல்லவரை ; நல்ல காலமாதலாற் பாண்டவின்ஸந்ததியைப பார்க்கிறோம் ; நல்லவரைச் சொல்லுங்கள்" என்றசொற்கள் எங்கும் கேடகப்பட்டன. அந்தச் சத்தம் ஓய்ந்தபின் மறைந்திருந்த தேவதைகளுடைய பெருமுழக்க மானது எல்லாத்திசைகளிலும எதிரொலியை யுண்டாக்கிக்கொண்டு எழும்பியது. பாண்ட வர்கள் நகரபிரவேசம் செய்புர் போது புஷ்ப வர்ஷமும நல்ல சந்தனமழையும பெய்தன. சங்கதுந்துபிவாத்திய சப்தங்களும முழங்கின. அஃது ஓர் அற்புதமாக இருந்தது. அவர் களிடம் அன்புள்ள ஜனங்களின் ஸந்தோஷத்தினுண்டான பெரிய சத்தம் அவர்களின்கீர்த்தியைப பரவச்செய்து ஆகாசத்தையளாவிக் கொண்டு கிளம்பியது.

அந்தப்பாண்டவர்கள் எல்லா வேதங்களிலும் மிகுதியான சாஸ் திரங்களிலும ஓதியுணர்ந்து பரிபூரணமடைந்து யாரிடத்திலும் பய மில்லாதவர்களாக அங்கே வாஸஞ்செய்தனர். தர்மராஜாவினுடைய தூய்மையினுலும, பீமசேனனுடைய வீரியத்தினுலும அர்ஜுன னுடைய பராக்கிரமத்தினுலும, மாரீயாதனிட மிருந்து தப்பிக்குள்ள பணிவினுலும, *நகுலஸஹதேவர்களுடைய விநயத்தினுலும, ஜனங் கள் ஸந்தோஷமடைந்தனர். அவர்களுடைய பராக்கிரமத்தின் மேன் மையாலும் எல்லா உலகங்களும தருபதியடைந்தன.

பிறகு அர்ச்சுனன் இராஜாக்களின் ஸபையில் யாருமசெய்யமுடி யாத காரியத்தைச்செய்து, தானபார்த்ததாலவரிக்கிற †கிருஷ்ணை யென்னும் கன்னிகையை அடைந்தான். அதுமுதல் அவன் இவ் வுலகில் வில்லாளிகள் எல்லாராலும கொண்டாடப்பெற்றவனாகவும யுத்தங்களில் ஸஹாயமண்டலம்போற் கண்டிடித்துப பார்க்கவுங்கூட தவனுகவும ஆனன். அவ்வர்ச்சுனன் எல்லா அரசர்களையும் எல் லாப் பெருஞ்சேனைகளையும் வென்று ராஜாவான யுதிஷ் டிரருடைய ராஜஸூயமென்னும் பெருவேள்வியை நடத்தினன். அன்னமும தக்ஷிணையும் நிறைந்ததும் சிறப்புக்களெல்லாம்சேர்ந்தது மாகிய ராஜஸூயமஹாயாகமானது, கிருஷ்ணனுடைய நல்ல பாய த்தினுலும் பீமசேனன் அருச்சுனன் இவர்களுடைய சக்தியினுலும் பலத்தினுற் கர்வங்கொண்ட ஜராஸந்தனையும் சிசுபாலனையும்கொன் றபின், யுதிஷ்டிரரால் நிறைவேற்றபபட்டது.

* நகுலஸஹதேவர்களுக்குப் பெரியோர்களிடமுள்ள பணிவினுலும், பொறுமையாலும், விநயத்தினுலும் என்பது மற்றொருபாடம்.

† திரௌபதி.

ஆங்காங்கிருந்து முத்துக்களும், பொன்களும், இரத்தினங்களும், பசுக்களும், யானைகளும், குதிரைகளும், தனங்களும், அமோகவிதங்களான வஸ்திரங்களும், உத்தரியங்களும், பீதாம்பரைகளும், உயர்ந்த கம்பளங்களும், உயர்ந்த தோல்களும், இரத்தினகம்பள விரிப்புக்களுமாகிய காணிக்கைகள் துரியோதனனிடம் வந்துசேர்ந்தன. அப்போது அவ்வாறுநிரம்பியதான பாண்டவர்களுடைய அந்த ஐசுவரியத்தைக்கண்டபின் துரியோதனனுக்குப் பொறுமையாலுண்டானகோபம் மிகவும் அதிகரித்துவிட்டது. அந்த யஜ்ஞத்தில் மயனென்னும் அஸுரசில்பி தேவஸபையைப்போன்றதொருஸபையைச்செவ்வையாக நிர்மாணஞ்செய்து பாண்டவர்களுக்குக் காணிக்கையாகக் கொடுத்ததைக்கண்டு துரியோதனன் பரிதபித்தான். அந்த ஸபையில் நாகரிகமறியாதவனைப்போல் தடுமாறி இடறிவிழுந்த துரியோதனன் கிருஷ்ணனுக்கு எதிரில் பீமசேனனால் கைகொட்டப்பட்டான். அவன் பலவிதமான ஸ்தானங்களையும் அமோகவகைகளான இரத்தினங்களையும் அனுபவிக்கிறவனாயிருந்தும் வெளுத்தும் இளைத்தும் போனானென்று சொல்லுபவர்கள் திருதராஷ்டிரமகாராஜாவுக்குத் தெரிவித்தார்கள். பின்பு புத்திரனிடத்து அன்புள்ள திருதராஷ்டிரன் சூதாட்டத்துக்கு அனுமதிகொடுத்தான். அதைக்கேட்டு, கிருஷ்ணனுக்கு மிகுந்தகோபமுண்டாயிற்று; மனத்தில் அதிக அன்புள்ளவராக இருக்கவில்லை; விவாதங்களில் மத்தியஸ்தராகவேயிருந்தார். விதுரரையும், பீஷ்மரையும், த்ரோணரையும், சரத்துவான் குமாரராகிய கிருபரையும் நிராகரித்துச் சூதுமுதலியவாய்ந்தஅகொடியபயங்கரமான அதிகங்களை, அவற்றிலெல்லாம் பயங்கரமான சண்டையில் கூதாதிரியாகவும் ஒருவரையொருவர் தாக்கிக்கும்படி செய்வதற்காகக் கண்ணால் தூண்டிக்காலி நடந்தார்.

பாண்டு புத்திரர்களுடைய ஐயமாகிய பிதாபிரிய அப்பிரியச்செய்திகளைக்கேட்டு, துரியோதனன் காணன் சகுனி இவர்களுடைய அபிபிராயத்தையுமறிந்து, திருதராஷ்டிரமஹாராஜன் வெகுகோரம் சிரித்து ஸஞ்சயனைநோக்கி அடியில்வருமாறு சொல்லலானன்.

"ஓ! ஸஞ்சய! எல்லாவற்றையும் நீ கேள்; என்மீது வெறுப்புக்கொள்ளாதே; நீ நல்லதேவிவிபரையுடையவன்; கல்வியுள்ளவன்; கூர்மையான புத்தியுள்ளவன்; நல்ல ஞானிகளால் ஓதபுக்கொள்ளப்பட்டவன். எனக்குச் சண்டையில் பண்ணாமில்லை. குலமழிந்து போவதில் நான் இஷ்டமுள்ளவனல்லேன். என் புத்திரர்களிடத்தும் பாண்டுபுத்ரர்களிடத்தும் எனக்குப் பேதமில்லை. என்புத்திரர்

கள் கோபத்தை மேற்கொண்டவர்களாய், முதுமையுற்ற என்னை வெறுக்கின்றனர். நானே கண்ணில்லாதவன்; மனத்தளர்ச்சியினாலும் புத்திரர்களிடமுள்ள அன்பினாலும் அதைப்பொறுக்கிறேன்; புத்தியில்லாத துரியோதனனுடைய மூடத்தனத்தை அனுசரித்து நானும் மூடனாயிருக்கிறேன். இராஜஸூயயாகத்திற் பெரியசக்தி மானும் பாண்டுபுத்திரனுமான யுதிஷ்டிரனுடைய ஐசுவரியத்தைக் கண்டும் ஸபையின் படிகளேப்பார்க்கையில் அந்தப்பரிஹாஸத்தையடைந்தும் ஆற்றுதலவனுகவும், பாண்டவர்களேத் தானுகப்போரில் வெல்ல வல்லமையற்றவனுகவும், கூடித்திரியனுகவிருந்தும் நல்லராஜ்ய லக்ஷ்மியையடையாத உற்சாகமற்றவனுகவும், சகுனியோடுசேர்ந்து மோசமான சூதாட்டத்தை ஆலோசித்தான். ஸஞ்சய! அதனுல் எதைஎதை எவ்வாறுக நான்தெரிந்துகொண்டிருக்கிறேனே அதை அதை நீகேள். எனது புத்தியுள்ள வசனங்களேச சரியாகக்கேட்டு, அதன்மேல் நான் அறிவையே கண்ணுகவுடையவனென்று நீ அறிவாய்.

(ஆதிமுதல் பாண்டவர்களுக்கு ஜயக்குறிப்புக்களாகத் தெய்வஸஹாயமும் மனுஷ்யஸஹாயமும் சக்தியும் இருந்ததைபபற்றித் திருதராடடிரன் புலம்புதல்).

அர்ச்சுனன் வில்லேவளேத்தது ஆசரியமான குறியை யறுத்துத் தரையில் தள்ளினுனென்றும், அரசர்கள் யாவரும் பார்க்கும்போதே திரௌபதியைக் கைப்பற்றிக் கொண்டானென்றும் எப்போது கேட்டேனே அப்போதே நான் ஜயத்தை எதிர்பார்க்கவில்லே. ஸஞ்சய! கிருஷ்ணனுடைய தங்கையான சுபத்திரை துவாரகையில் அருச்சுனனுல் பலாத்காரமாக விவாகப பண்ணிக்கொள்ளபபட்டானென்றும், யாதவவீரர்களான ராமகிருஷ்ணர்கள் இந்திரபிரஸ்தஞ்சென்றார்களென்றும் எப்போது கேட்டேனே அப்போதே நான் ஜயத்தை எதிர்பார்க்கவில்லே. ஸஞ்சய! அதிகமாக மழைபெய்வித்த இந்திரனே அர்ச்சுனன் விசேஷமான பாணங்களால் தடுத்துக் காண்டவவனத்தில் அக்கினிக்குத் திருப்திசெய்வித்தானென்று எப்போது கேட்டேனே அப்போதே நான் ஜயத்தை எதிர்பார்க்கவில்லே. ஸஞ்சய! பாண்டவர் ஐவரும் குந்தியோடுகூட அரக்குமாளிகையிலிருந்து தப்பிப் பிழைத்தார்களென்றும், அவர்களுடைய காரியம் ஜயிப்பதில் விதுரன் ஊக்கமுள்ளவனுக இருந்தானென்றும் எப்போது கேட்டேனே அப்போதே நான் ஜயத்தை எதிர்பார்க்கவில்லே. ஸஞ்சய!

ஸ்வயம்வர மண்டபத்தின் நடுவில் லக்ஷ்யத்தைத் படித்து அர்ச்சுனன் திரௌபதியை அடைந்ததையும், சூரர்களான பாஞ்சாலராஜர்களும் பாண்டவர்களும் சேர்ந்ததையும் எப்போது கேட்டேனோ அப்போதே நான் ஜயத்தை எதிர்பார்க்கவில்லை. ஸஞ்சய! மகததேசத்தாருக்கெல்லாம் சிறந்தவனும் க்ஷத்திரியர்கள் நடுவில் ஜ்வலிப்பவனுமாகிய ஜராஸந்தனை பீமஸேனன் சென்று கைகளாலேயே அடித்தானென்று எப்போது கேட்டேனோ அப்போதே நான் ஜயத்தை எதிர்பார்க்கவில்லை. ஸஞ்சய! திக்குவிஜயஞ்செய்தகாலத்தில் பாண்டவர்கள் அரசர்களை யுத்தஞ்செய்து வசப்படுத்தியதையும், ராஜஸூயமென்னும் மஹாயாகத்தை முடித்ததையும் எப்போது கேட்டேனோ அப்போதே நான் ஜயத்தை எதிர்பார்க்கவில்லை. ஸஞ்சய! திரௌபதி ரஜஸ்வலையாயிருந்தபோது, நாதர்களிருந்தும் அநாதையைப்போல் துக்கபடுக்கொண்டு ஒற்றைவஸ்திரத்துடன் கண்ணீரால் குலுதிக்கபபெற்று ஸபைக்குக் கொண்டுவரபபட்டதை எப்போது கேட்டேனோ அப்போதே நான் ஜயதைத எதிர்பார்க்கவில்லை. ஸஞ்சய! அந்த ஸபையில் வஞ்சகனும் புத்தியில்லாதவனுமாகிய துச்சாஸனன் வஸ்திரக்குவியலிலுமுடி வைபடடும் அடையவில்லையென்பதை எபபோது கேடடேனோ அபபோதே நான் ஜயத்தை எதிர்பார்க்கவில்லை. ஸஞ்சய! யுதிஷ்டிரன், சகுனியினால் சூதாட்டதில் ஜயிக்கபபெற்று ராஜ்யம் அபகரிக்கபபட பிறகும், ஆளவிடக்கூடாத ஸாமர்த்தியமுள்ள ஸஹாதரர்களால் அனுசரிக்கபபட்டானென்று எபபோதுகேட்டேனோ அபபோதே நான் ஜயத்தை எதிர்பார்க்கவில்லை. ஸஞ்சய! தர்மாத்துமாக்களான பாண்டவர்கள் வனத்துக்குபபோனபின்னும் மூர்க்க ஸஹாதரனை யுதிஷ்டிரனிடத்துள்ள அன்பினால், கஷ்டபபடுத்திக்கொண்டு அங்கே கசெய்த அகார்யங்களை எபபோதுகேட்டேனோ அபபோதே நான் ஜயத்தை எதிர்பார்க்கவில்லை. ஸஞ்சய! தர்மாத்துமரான வனத்திலிருக்கும்போது மஹாதபஸ்விகளான ✻ஸ்நாதகர்களும் †பிக்ஷுக்களுமான புகழ்கிறவர்களுமான பிராமணர்கள் ஆயிரக்கணக்காக அவனுடன்சென்றிருந்ததை எபபோதுகேட்டேனோ அபபோதே நான் ஜயத்தை எதிர்பார்க்கவில்லை. ஸஞ்சய! தேவருக்குத தேவரான ஈச்வரன் வேடரூபத்தோடு வந்தபோது அர்ச்சுனன் யுத்தஞ்செய்து அவரை மகிழ்வித்துப் பாசுபதமென்ற உயர்ந்த அஸ்திரத்தைப பெற்றுக்கொண்டா

✻ நியமத்துடன் வேதாத்தியயனத்தை முடித்தவர்.
† பிரமசாரிகளும் சன்னியாசிகளும்.

னென்று எப்போது கேட்டேனை அப்போதே நான் ஜயத்தை எதிர் பார்க்கவில்லை. ஸஞ்சய! பாண்டவர்கள், சிஷ்யக்கூட்டங்களோடு கூடிய விருத்தர்களான மஹரிஷிகளுடன் சேர்ந்ததையும், அவர்க ளால் அடுக்கப்பட்டதையும், அவர்களோடு ஸ்நேஹமாகவிருந்ததை யும் எப்போது கேட்டேனை அப்போதே நான் ஜயத்தை எதிர் பார்க்கவில்லை. ஸஞ்சய! ஸத்தியஸந்தனை தனஞ்சயன் ஸ்வர்க்க லோகத்திலிருந்துகொண்டு இந்திரனிடத்தில் நேரில் திவ்யாஸ்திரத் தைக் கிரமமாக நியமத்தோடு அப்பியாஸம்செய்து. சிலாகிக்கப்பட் டிருந்ததை எப்போது கேட்டேனை அப்போதே நான் ஜயத்தை எதிர்பார்க்கவில்லை. ஸஞ்சய! பாண்டுபுத்திரனுகிய யுதிஷ்டிரன் தீர் த்தயாத்திரைக்குப்போய் ரோமசமகரிஷியுடன் சேர்ந்ததையும், பிரு கதசுவரிடமிருந்து அக்ஷஹ்ருதயமென்னும் * த்யூதசாஸ்திரத்தை அறிந்துகொண்டதையும் எப்போதுகேட்டேனை அப்போதே நான் ஜயத்தை எதிர்பார்க்கவில்லை. ஸஞ்சய! அதற்குப்பிறகு, பிரஹ்ம தேவர் வாங்கொடுத்ததினல் கர்வமடைந்தவர்களும் தேவர்களாலும் ஜயிக்கமுடியாதவர்களும் புலோமாவின் புத்திரர்களுமான கால கேயர்களென்னும் அசுரர்கள் அர்ச்சுனனல் ஜயிக்கப்பட்டார்க ளென்று எப்போது கேட்டேனை அப்போதே நான் ஜயத்தை எதிர்பார்க்கவில்லை. ஸஞ்சய! அர்ச்சுனன் அசுரர்களை வதஞ்செய் வதற்காகப் போய்ச் சத்துருக்களையழித்து, காரியத்தை நிறை வேற்றிக்கொண்டு இந்திரலோகத்திலிருந்து திரும்பிவந்ததை எப் போதுகேட்டேனை அப்போதே நான் ஜயத்தை எதிர்பார்க்கவில்லை. ஸஞ்சய! பீமனும் மற்றப்பாண்டவர்களும் மனுஷ்யர்கள் போகக் கூடாத தேசமாகிய அந்தக் கந்தமாதனபருவதத்திற் குபேரனைச் சந்தித்தார்களென்று எப்போதுகேட்டேனை. அப்போதே நான் ஜயத்தை எதிர்பார்க்கவில்லை. ஸஞ்சய! கர்ணனுடையபுத்தியில் நம் பிக்கையுள்ள என்னுடைய புத்திரர்கள் †கோஷயாத்திரைக்குச் சென்றபோது, கந்தர்வர்களால் பிடிக்கப்பட்டதையும், அர்ச்சுன னல் விடுவிக்கப்பட்டதையும் எப்போது கேட்டேனை அப்போ தே நான் ஜயத்தை எதிர்பார்க்கவில்லை. ஸஞ்சய! ‡லோகபாலனை! தர்மதேவதை யக்ஷரூபத்தோடு தர்மராஜனிடம் வந்ததையும், அந்தத் தேவதை கேட்ட சில கேள்விகளுக்கு அவன் செம்மையாக மறு

---

* சூதுநூல்.

† பசுக்களைப் பார்ப்பதற்குச் செல்லுவது.

‡ தேர்ப்பாகன்.

மொழி சொன்னதையும் எப்போதுகேட்டேனே அப்போதே நான் ஜயத்தை எதிர்பார்க்கவில்லே. ஸஞ்சய! விராடனுடையராஜ்யத்தில் திரௌபதியுடன் மாறுவேஷத்தோடு வஸித்த அந்தப் பாண்டவர் களே என் புத்திரர்கள் கண்டுபிடிக்கவில்லேயென்று எப்போதுகேட் டேனே அப்போதே நான் ஜயத்தை எதிர்பார்க்கவில்லே. ஸஞ்சய! அஜ்ஞாதவாஸத்தில் அக்கினிக்கு ஒப்பான சக்தியுள்ள பாண்டவர் கள் அறியப்படாமலே என் புத்திரர்களிடம் யுத்தத்திற்கு வந்ததை எப்போதுகேட்டேனே அப்போதே நான் ஜயத்தை எதிர்பார்க்க வில்லே. ஸஞ்சய! கீசகர்களுக்குள் முதன்மையான ஜ்யேஷ்டகீசகன் நூறு ஸோதரர்களோடு திரௌபதியின் நிமித்தமாகப் பீமசேன னால் யுத்தத்தில் கொல்லப்பட்டதை எப்போதுகேட்டேனே அப் போதே நான் ஜயத்தை எதிர்பார்க்கவில்லே. ஸஞ்சய! விராட ராஜ்யத்தில் வஸித்த மஹாத்துமாவாகிய தனஞ்சயன் ஒற்றைத் தேராளியாகவேயிருந்து சேனையங்களிலிருந்த சிரேஷ்டர்களேத் தோல்வியடையச் செய்தானென்று எப்போதுகேட்டேனே அப் போதே நான் ஜயத்தை எதிர்பார்க்கவில்லே. ஸஞ்சய! மத்ச தேசத்துராஜாவான விராடன் தனது அன்புள்ள பெண்ணாகிய உத்தரையை அர்ச்சுனனுக்குக் கொடுத்ததையும், அர்ச்சுனன் அவ ளேத் தன் புத்திரனுக்காக வாங்கிக்கொண்டதையும் எப்போது கேட்டேனே அப்போதே நான் ஜயத்தை எதிர்பார்க்கவில்லே. ஸஞ் சய! சூதாட்டத்தில் ஜயிக்கப்பட்டுப் பொருளில்லாமல் வனவாஸம் போய்த் தன் ஜனங்களேயும்விட்டுத் தப்பிப்போன யுதிஷ்டிரனுக்கு ஏழு அக்ஷௌஹிணிகள் சேர்ந்ததை எப்போது கேட்டேனே அப் போதே நான் ஜயத்தை எதிர்பார்க்கவில்லே. ஸஞ்சய! இந்தப் பூமி யெல்லாம் யாருடைய ஓடியென்று சொல்லுகிறார்களோ அந்த ஸ்ரீயஃபதியான கிருஷ்ணன் எல்லாவிதத்திலும் பாண்டவர்களுடைய காரியத்தில் தீக்ஷித்துக்கொண்டிருந்ததை எப்போது கேட்டேனே அப்போதே நான் ஜயத்தை எதிர்பார்க்கவில்லே. ஸஞ்சய! "அந் தக் கிருஷ்ணர்ச்சுனர்கள் இருவரும், நரநாராயணர்கள்; நான் பிரம லோகத்தில் செம்மையாகப் பார்த்திருக்கிறேன்" என்று நாரதர் சொல்ல எப்போது கேட்டேனே அப்போதே நான் ஜயத்தை எதிர் பார்க்கவில்லே. ஸஞ்சய! லோகங்களின் நன்மைக்காகக் கௌரவர் களே ஸமாதானஞ் செய்யக் கருதிவந்து ஸமாதானஞ்செய்தும் காரி யம் நிறைவேறாமல் கிருஷ்ணன் திரும்பியதை எப்போது கேட் டேனே அப்போதே நான் ஜயத்தை எதிர்பார்க்கவில்லே. ஸஞ்சய!

கர்ணனும் துரியோதனனும் கேசவனைக் கட்டுவதற்கு நிச்சயம் செய்ததையும் கிருஷ்ணன் தனது விசுவரூபத்தைக் காட்டினதையும் எப்போது கேட்டேனோ அப்போதே நான் ஜயத்தை எதிர்பார்க்கவில்லை. ஸஞ்சய! கிருஷ்ணன் திரும்பிப்போகும்போது தேரின் முன் தனித்துநின்று வருத்தமுற்ற குந்தியானவள் கேசவனுல் தைரியப்படுத்தப்பட்டதை எப்போது கேட்டேனோ அப்போதே நான் ஜயத்தை எதிர்பார்க்கவில்லை. ஸஞ்சய! அந்தப் பாண்டவர்களுக்குக் கிருஷ்ணன் மந்திரியாகவிருந்ததையும், சந்தனுபுத்திரராகிய பீஷ்மரும் பரத்வாஜ புத்திரராகிய துரோணாசாரியரும் அவர்களுக்கு ஆசீர்வசனம் கூறினதையும் எப்போது கேட்டேனோ அப்போதே நான் ஜயத்தை எதிர்பார்க்கவில்லை. ஸஞ்சய! கர்ணன் பீஷ்மரைநோக்கி, "நீர் யுத்தஞ்செய்யும்வரையில் நான் யுத்தஞ் செய்யமாட்டேன்" என்ற வசனத்தைச்சொல்லி, சேனையைவிட்டு விலகிப்போனதை எப்போது கேட்டேனோ அப்போதே நான் ஜயத்தை எதிர்பார்க்கவில்லை. ஸஞ்சய! அந்தக் கிருஷ்ணார்ச்சுனர்களும் அளவிடக்கூடாத காண்டீவமென்னும் தனுஸும் ஆகிய தாங்கக் கூடாத சக்தியுள்ள இம்மூன்றுபொருள்களும்சேர்ந்ததை எப்போது கேட்டேனோ அப்போதே நான் ஜயத்தை எதிர்பார்க்கவில்லை. ஸஞ்சய! அர்ச்சுனன் மோஹத்தினுல்கவரப்பட்டுத் தேரின்நடுவில் ஒய்ந்து உட்கார்ந்தபோது கிருஷ்ணன் தன்னுடைய சரீரத்தில் எல்லா உலகங்களையும் காண்பித்ததை எப்போது கேட்டேனோ அப்போதே நான் ஜயத்தை எதிர்பார்க்கவில்லை. ஸஞ்சய! சத்துருக்களை அழிப்பவராகிய பீஷ்மர் யுத்தத்தில் பதினைந்திரக்கணக்கான தேராளிகளை மாய்க்கும்போது பாண்டவர்களுள் மிகுந்த கியாதிபெற்றவன் ஒருவனும் கொல்லப்படவில்லையென்று எப்போது கேட்டேனோ அப்போதே நான் ஜயத்தை எதிர்பார்க்கவில்லை. ஸஞ்சய! தர்மநிஷ்டராகியபீஷ்மர் யுத்தத்தில் தம்முடைய மரணத்துக்குத் தாமே மார்க்கஞ் சொன்னதையும், பாண்டவர்கள் ஆனந்தத்துடன் அதைச் செய்ததையும் எப்போது கேட்டேனோ அப்போதே நான் ஜயத்தை எதிர்பார்க்கவில்லை. ஸஞ்சய! அர்ச்சுனன் சிகண்டியை முன்னே நிறுத்திக்கொண்டு யுத்தங்களில் வெல்லமுடியாத மிகுந்த சூராகிய பீஷ்மரை அடித்ததை எப்போது கேட்டேனோ அப்போதே நான் ஜயத்தை எதிர்பார்க்கவில்லை. ஸஞ்சய!*சோமகர்களைப் பெரும்பாலும் ஒழித்தபிறகு வருத்தரும் வீரருமான பீஷ்மர், பாணங்களினுல் அடி

* பாஞ்சாலர்.

க்கப்பட்டு, *சரதல்பத்தில் படுத்ததை எப்போது கேட்டேனோ அப்போதே நான் ஜயத்தை எதிர்பார்க்கவில்லை. ஸஞ்சய! †சாந்தனவர் சரதல்பத்தில் படுத்திருக்கையில் பருகுகிற தீர்த்தத்துக்காக ஏவப்பட்ட அர்ச்சுனன், அங்கேயே பூமியைப்பிளந்து அவருக்குத் தாக சாந்திசெய்வித்ததை எப்போதுகேட்டேனோ அப்போதே நான் ஜயத்தை எதிர்பார்க்கவில்லை. ஸஞ்சய! குந்திபுத்திரர்கள் ஜயிப்பதற்கு அனுகூலமாகக் குளிர்ந்தகாற்றுவீசுத்ததையும்‡சுக்கிரனும்சூரியனும் நல்லஇடத்தில் சேர்ந்திருந்ததையும் நம்மைப்பார்த்து துஷ்டமிருகங்கள் விகாரமாகக் கத்தினதையும் எப்போதுகேட்டேனோ அப்போதே நான் ஜயத்தை எதிர்பார்க்கவில்லை. ஸஞ்சய! விசித்திரமான யுத்தம் செய்பவராகிய துரோணர் யுத்தத்தில் பற்பலவகைகளான அஸ்திரங்களின்வகைகளைக் காண்பித்தும் மிகச்சிரேஷ்டர்களான பாண்டவீரர்களை எப்போதுகொல்லவில்லையோ அப்போதே நான் ஜயத்தை எதிர்பார்க்கவில்லை. ஸஞ்சய! அர்ச்சுனனைக் கொல்ல நிச்சயத்தோடிருந்தவர்களும், நம்மைச்சேர்ந்தவர்களும் மஹாரதர்களுமாகிய§ஸம்சப்தகர்களை அவன் கொன்றுவிட்டதாக எப்போதுகேட்டேனோ அப்போதே நான் ஜயத்தை எதிர்பார்க்கவில்லை. ஸஞ்சய! இதரர்களால் கலைக்கமுடியாததும், ஆயுதபாணியான துரோணரால் காக்கப்பட்டதுமாகிய¶வ்யூகத்தை,சுபத்திரையின்புத்திரனுகிய வீரனான அபிமன்யு தனியாகப்பிளந்து உட்புகுந்ததை எப்போதுகேட்டேனோ அப்போதே நான் ஜயத்தை எதிர்பார்க்கவில்லை. ஸஞ்சய! மஹாரதர்களான வீரும் அருச்சுனனை ஜயிக்கமுடியாமற் பாலனுகிய அபிமன்யுவைச் சுற்றிக்கொண்டு கொன்று எப்போது மிருந்தஸந்தோஷத்தையடைந்தார்களோ அப்போதே நான் ஜயத்தை எதிர்பார்க்கவில்லை. ஸஞ்சய! மூடர்களாகிய துரியோதனுதியர் அபிமன்யுவைக்கொன்ற ஸந்தோஷத்தால் கூச்சலிட்டதையும்,ஜயத்ரதனுகிய ஜயத்ரதன் விஷயத்தில் கோபத்தால் அர்ச்சுனன் பிரதிஜ்ஞைசெய்ததையும் எப்போது கேட்டேனோ அப்போதே நான் ஜயத்தை எதிர்பார்க்கவில்லை. ஸஞ்சய! ஜயத்ரதன் வதம்செய்வதற்காக அர்ச்சுனன் செய்தபிரதிஜ்ஞையையும், சத்துருக்களின் நடுவிலேயே அவன் அதை ஸத்தியமாகும்படி நிறைவேற்றினதையும் எப்போதுகேட்டேனோ அப்போதே நான் ஜயத்தை எதிர்பார்க்கவில்லை. ஸஞ்சய! அர்ச்சுனனுடைய தேர்க்

---

* அம்புகளாலாகிய படுக்கை. † பீஷ்மர்.

‡ சந்திரனும்சூரியனும் நல்லஸ்தானங்களில்சேர்ந்திருந்ததையும் என்பது மற்றொருபாடம்.

§ ஒருவகைக்கூட்டத்தார். ¶ சேனையின்வகுப்பு.

குதிரைகள் களைத்துப்போனபோது கிருஷ்ணன் அவைகளை பூட்ட விழித்துத் தண்ணீர்காட்டித் திரும்பிவந்தபிறகு மறுபடியும் பூட்டி யுத்தத்திற்குப்போனதை எப்போதுகேட்டேனே அப்போதே நான் ஜயத்தை எதிர்பார்க்கவில்லை. ஸஞ்சய! தேர்க்குதிரைகள் சக்தியில் லாமலிருந்தபோது தேரின் உட்பக்கத்திலிருந்துகொண்டு அர்ச்சு னன் எல்லாப்போர்வீரர்களையும் கிடுகிடுவாராமல்தடுத்ததை எப்போது கேட்டேனே அப்போதே நான் ஜயத்தை எதிர்பார்க்கவில்லை. ஸஞ் சய! பகைவர் தாங்கமுடியாமல் யானைச்சேனைகளினால் யுத்தம்செய்த துரோணசேனையைக் கலக்கிவிட்டு சாத்யகியானவன் கிருஷ்ணார்ச் சுனர்களிருந்தவிடம் சென்றதை எப்போதுகேட்டேனே அப்போ தே நான் ஜயத்தை எதிர்பார்க்கவில்லை. ஸஞ்சய! வீரனுகிய பூரிசே னன் கர்ணனிடத்தில் அகப்பட்டுப் அவனுக் கர்ணன் வில்லின்முனை யால் குத்திப் பீசகக்களினால் இகழ்ந்து, கொல்லாமல் விட்டுவிட்ட தை எப்போதுகேட்டேனே அப்போதே நான் ஜயத்தை எதிர்பார்க்க வில்லை. ஸஞ்சய! சூரர்களாகிய துரோணரும் கிருதவர்மாவும், கிரு பரும், கர்ணனும், துரோணபுத்திரரான அசுவத்தாமாவும், ரத்தி ராஜனுகிய சல்லியனும் ஜயத்ரதன் கொல்லப்படுவதை எப்போது பொறுத்திருந்தார்களோ அப்போதே நான் ஜயத்தை எதிர்பார்க்க வில்லை. ஸஞ்சய! தேவேந்திரனுற் கொடுக்கப்பட்ட அருமையான சக்தியாயுதமாகிய கடோத்கசனென்னும் பயங்கரமான ரூபமுள்ள ராக்ஷ ஸன்மேல் விழும்படி கிருஷ்ணனுல் ஒதுக்கப்பட்டதை எப்போது கேட்டேனே அப்போதே நான் ஜயத்தை எதிர்பார்க்கவில்லை. ஸஞ் சய! எதனுல் யுத்தத்தில் *ஸவ்யஸாசியைக் கொல்லவேண்டுமோ அந்தக் கர்ணனுடைய சக்தியாயுதம் கடோத்கசன் இருவரா லும் யுத்தத்தில் வீணாக்கப்பட்டதை எப்போதுகேட்டேனே அப் போதே நான் ஜயத்தை எதிர்பார்க்கவில்லை. ஸஞ்சய! துரோண சாரியர் இரதத்தின்மத்தியில் தனிமையாகப் பிராயோபவேசம்கிடக் கையில் திருஷ்டத்யுமனன் தர்மத்தைக்கடந்து கொன்றதை எப் போது கேட்டேனே அப்போதே நான் ஜயத்தை எதிர்பார்க்கவில்லை. ஸஞ்சய! துரோணபுத்திரராகிய அசுவத்தாமாவுடன் ஜனங்களின் நடுவே மாதிரிபுத்திரனுகிய நகுலன் எதிர்த்தேராளியாகநின்று சண் டைசெய்கையில் அவர் அவனுக்குச் சரியாகவே மண்டலங்களாகச் சஞ்சரித்ததை எப்போதுகேட்டேனே அப்போதே நான் ஜயத்தை

---

* அர்ச்சுனன்; இடக்கையினலும் பாணத்தை எய்பவனென்பது பொருள்.

எதிர்பார்க்கவில்லை. ஸஞ்சய! துரோணர் கொல்லப்பட்டபிறகு துரோணபுத்ரரான அசுவத்தாமா விசேஷமுள்ள நாராயணஸ்திரத்தைப்பிரயோகித்தும் எப்போது அந்தப் பாண்டவர்களை முடிக்கவில்லையோ அப்போதே நான் ஜயத்தை எதிர்பார்க்கவில்லை. ஸஞ்சய! தங்கள் ஸஹோதரனை துச்சாஸனனுடைய ரக்தத்தைப் பீமஸேனன் குடிக்கையில் எனதுபுத்திரர்களில் ஒருவனும் அந்தப்பீமனைத் தடுக்கமாட்டாமற்போனதை எப்போதுகேட்டேனோ அப்போதே நான் ஜயத்தை எதிர்பார்க்கவில்லை. ஸஞ்சய! தேவர்களுக்கும் விளங்காததான அந்த ஸஹோதரர்களுண்டையில், யுத்தங்களில் எதிர்க்கமுடியாத அளவற்ற பராக்கிரமசாலியான கர்ணன் அர்ச்சுனனால் அடிபட்டதை எப்போதுகேட்டேனோ அப்போதே நான் ஜயத்தை எதிர்பார்க்கவில்லை. ஸஞ்சய! சூரர்களும் உக்ரர்களுமாகிய துரோணபுத்ரனையும் துச்சாஸனனையும் கிருதவர்மாவையும் தர்மராஜாவாகிய யுதிஷ்டிரரானவர் ஜயித்ததை எப்போதுகேட்டேனோ அப்போதே நான் ஜயத்தை எதிர்பார்க்கவில்லை. ஸஞ்சய! ஸுதா! எப்போதும் யுத்தத்தில் கிருஷ்ணனுக்கு எதிர்த்தட்டாகவிருக்கிற சூரனுகிய மத்ரராஜனை சல்லியன் தர்மராஜனால் கொல்லப்பட்டதை எப்போதுகேட்டேனோ அப்போதே நான் ஜயத்தை எதிர்பார்க்கவில்லை. ஸஞ்சய! கலகத்தைவிரும்புக்குப் சூதாட்டத்துக்கு மூலபுருஷனும் வஞ்சகத்தையே பலமாகக்கொண்டவனும் பாபியுமான சகுனி பாண்டுபுத்ரனுகிய ஸஹதேவனால் கொல்லப்பட்டதை எப்போதுகேட்டேனோ அப்போதே நான் ஜயத்தை எதிர்பார்க்கவில்லை. ஸஞ்சய! துரியோதனன் இரதம்போய், சக்திகுறைந்து, ஓடுங்கிக் கணைத்துத் தனியாக மடுவுக்குட்சென்று, அதன்ஜலத்தை அசைவறநிறுத்திப் படுத்திருந்ததை எப்போதுகேட்டேனோ அப்போதே நான் ஜயத்தை எதிர்பார்க்கவில்லை. ஸஞ்சய! பாண்டவர்கள் கிருஷ்ணனுடன்கூட மடுவிற்சென்று நின்றுகொண்டு அவமானத்தைப் பொறுக்காதவனை மன்புத்தியை அவமானஞ்செய்ததை எப்போதுகேட்டேனோ அப்போதே நான் ஜயத்தை எதிர்பார்க்கவில்லை. ஸஞ்சய! கதாயுத்தத்தில் மண்டலமாகப் பற்பல புதுவழிகளில் சஞ்சரிக்கும்போது கிருஷ்ணன் குறிப்பித்ததனால் மோசமாகத் துரியோதனனை (பீமசேனன்) வதஞ்செய்ததை எப்போதுகேட்டேனோ அப்போதே நான் ஜயத்தை எதிர்பார்க்கவில்லை. ஸஞ்சய! அசுவத்தாமாமுதலியவர்கள், தூங்கிக்கொண்டிருந்த பாஞ்சாலர்களையும், திரௌபதியின் புத்திரர்களையுங் கொன்று அருவருக்கத்தக்க

தும் அபகீர்த்திக்கு இடமாகவுள்ளதுமாகிய காரியத்தைச் செய்தார் களென்று எப்போதுகேட்டேனோ அப்போதே நான் ஜயத்தை எதிர் பார்க்கவில்லை. ஸஞ்சய! பீமசேனனுற் பின்தொடரப்பட்ட அசுவத் தாமா கோபித்துப்பிரயோகித்த ஐஷீகமென்னும் உயர்ந்த அஸ்திரம் உத்தராதேவியின் கர்ப்பத்தைக் கொல்லமாட்டாமற்போனதை எப் போதுகேட்டேனோ அப்போதே நான் ஜயத்தை எதிர்பார்க்கவில்லை. ஸஞ்சய! அசுவத்தாமாவின் பிரம்மசிரஸ்என்னும் அஸ்திரத்தை, அர் ச்சுனன், 'க்ஷேமம் உண்டாகட்டும்' என்று ஆசீர்வதித்து, தன் அஸ் திரத்தினல் அடக்கினதையும், அசுவத்தாமா தம்முடைய தலையி லுள்ள முக்கியமான இரத்தினத்தைக் கொடுத்துவிட்டதையும் எப் போதுகேட்டேனோ அப்போதே நான் ஜயத்தை எதிர்பார்க்கவில்லை. ஸஞ்சய! விராடபுத்திரியான உத்தராதேவியினுடைய கர்ப்பத் தைத் துரோணபுத்திரர் பெரியஅஸ்திரங்களினல் அழித்தபோது 'பிழைப்பிக்கிறேன்' என்ற கிருஷ்ணனுடைய பிரதிஜ்ஞையை எப் போதுகேட்டேனோ அப்போதே நான் ஜயத்தை எதிர்பார்க்கவில்லை. ஸஞ்சய! வியாஸரும் கிருஷ்ணனுமாகிய இருவரும் சேர்ந்து, அசு வத்தாமாவைச் சபித்தனர். ஸூதனே! நான் அறிந்திருந்தும் புத் திகெட்டுப்போனதினல் இப்போது புத்திரர்களையும் பௌத்திரர்களை யும் இழந்து துக்கமடைகிறேன். புத்திரர்களையும் பௌத்திரர்களை யும் இழந்த காந்தாரியைப்பற்றியும், பதிகளையும் சகோதரர்களையும் இழந்த மருமக்கண்மார்களைப்பற்றியும் துக்கமடைகிறேன். பாண்டு புத்திரர்கள் யாராலும் செய்யமுடியாத காரியத்தைச் செய்தனர். அவர்கள் எதிரியில்லாத ராஜ்யத்தைத் திருப்பியடைந்தனர். யுத்தத் தில் நம்மவர்களில் *மூவரும் பாண்டவர்களில் †எழுவர்களுமாகப் பத்துப்பெயர் மிகுந்தனரென்று நான் கேட்டேன். ஆ! கஷ்டம்!! அந்தப்பயங்கரமான கூத்திரியயுத்தத்தில் ‡இரண்டுகுறைய இரு பது அக்ஷௌஹிணிகள் அழிபட்டன. ஸூதனே! இருள் மிகவும் அதிகமாக இருக்கிறது. பயங்கரமானது மனக்குள் பிரவேசிப்பது போல் தோற்றுகிறது. பிரஜ்ஞை வசமில்லை. என்னுடையமனம் தள ருகின்றது" என்றுசொன்னன்.

துக்கமுள்ள திருதராஷ்டிரன் இவ்வாறு சொல்லி அதிகமாகப் புலம்பி மூர்ச்சித்து, திரும்பவும் தெளிந்து ஸஞ்சயனைப்பார்த்து,

---

* மூவர் - அசுவத்தாமா, கிருபர், கிருதவர்மா.

† எழுவர் - கிருஷ்ணன், சாத்யகி, பாண்டவர் ஐவர்.

‡ கஅ - அக்ஷௌஹிணி.

DR. U.V. SWAMINATHA IYER LIBRARY
TIRUVANMIYUR, CHENNAI-600 041

"ஸஞ்சய! இவ்வாறு நடந்தபிறகு காலதாமஸமின்றி உயிரைவிட்டு விட விரும்புகிறேன். உயிரை வைத்துக்கொள்வதிற் சிறிதேனும் பிரயோசனத்தை நான் காணவில்லை." என்று சொன்னான். அவ்வாறு சொல்லிக்கொண்டும், தளர்ந்து புலம்பிக்கொண்டும், ஸர்ப்பத்தைப்போற் சீறிக்கொண்டும், அடிக்கடி மூர்ச்சித்துக்கொண்டுமிருந்த அந்தத் திருதராஷ்டிரமஹாராஜனுக்குப் புத்திமானுகிய †கவல்கண புத்திரனை ஸஞ்சயன் சிறந்த பொருளடங்கிய அடியில்வரும் வாக்கியத்தைச் சொன்னான்.

"ஓ ராஜாவே! குணங்கள்நிரம்பிய பெரிய ராஜவம்சங்களிற் பிறந்தவர்களும், மேலான அஸ்திரங்களை அறிந்தவர்களும், இந்திரனுக்கு ஒப்பான பராக்கிரமமுள்ளவர்களும், தர்மமாகப் பூமியை ஜயித்துப் பூர்ணதக்ஷிணைகளுள்ள யாகங்களைச்செய்து இந்த உலகத்திற் கீர்த்தியையடைந்து பிறகு காலஞ்சென்றவர்களுமாகிய, மிக்க உத்ஸாஹத்தோடும் மிகுந்த பலத்தோடுங்கூடிய ராஜாக்களை ஞானவானுகிய வேதவியாஸரும் நாரதரும் சொல்லக்கேட்டிருக்கிறீரல்லவா? மகாரதனுகிய ஸைப்யன், ஜயிக்கிறவர்களிற் சிறந்த வீரனுகிய ஸ்ருஞ்சயன், ஸுஹோத்ரன், ரந்திதேவன், உசிக்கின் புத்திரனுகிய *ககக்ஷீவான், பாஹ்லீகன், தமனன், சைத்யன், சர்யாதி, அஜிதன், †நளன், பகைவரை மாய்க்கிறவராகிய விசுவாமித்திரர், மகாபலசாலியான அம்பரீஷன், மருத்தன், மனு, இக்ஷ்வாகு, கயன், பரதன், தசரத புத்திரராகிய இராமர், சசிபிந்து, பகீரதன், பெரிய பாக்கியம்பெற்ற கிருதவீரியன், †ஜனமேஜயன், தேவர்களாலேயே நேரே யாகம் செய்விக்கப்பட்டவனும், வனங்களும் தேசங்களுமடங்கிய பூமி முழுவதையும் தன் ‡யூபஸ்தம்பங்களினுல் அடையாளஞ்செய்தவனுமாகிய புண்ணியகர்மமுள்ள யயாதி ஆகிய இந்த இருபத்து நான்கு ராஜரக்களும் முன்னொருகாலத்திற் புத்திரசோகத்தினுல் வருந்திய ஸ்வைத்தியசென்பவருக்குத் தேவரிஷியாகிய நாரதரால் கூறப்பட்டார்கள். அவர்களுக்கு முன்னேயும் அதிக பலசாலிகளும், மஹாரதர்களும், மஹாத்துமாக்களும், எல்லாக்குணங்களும் நிரம்பினவருமாகிய இன்னுமனேக ராஜாக்கள் இறந்தார்கள். பூரு, குரு, யது, சூரன், பெரிய தேஜஸ்ஸுடைய விஷ்வகச்வன்,

---

* ககக்ஷீவான், கர்மானுஷ்டானத்துக்கு உதாரணமாகச் சொல்லப்பட்டவர். ரிக்வேதம், முதல்மண்டலம்; முதல்அஷ்டகம், முதல்அத்தியாயம், முதல் ஸூக்தம். மாக்ஸ் மூல்லர் பதிப்பு, பக்கம், 103 பார்க்க.

† இவர்கள்வேறு.

‡ யாகங்களிற் பசுவைக் கட்டுகிற ஸ்தம்பம்.

அணுஹன், யுவனச்வன், ககுத்ஸ்தன், பராக்ரமசாலியான ரகு, விஜயன், ஹரிதாஸ்வன், அங்கன், பவன், சுவேதன், பிரஹத்குரு, உசீனரன், சதரதன், கங்கன், துலிதாஹன், துருமன், தம்போத்பவன், வேனன், ஸகரன், ஸங்கிருதி, நிமி, அஜேயன், பரசு, புண்டரன், சம்பு, குற்றமற்ற தேவாவிருதன், தேவாஹ்வயன், ஸுப்ரதிமன், ஸுப்ரதீகன், பிரஹத்ரதன், சிறந்த உத்ஸாகமுடையவனும் பணிவுள்ள மனமுடையவனுமான ஸுக்ரீது, நிஷ்டாராஜாவாகிய நளன், ஸத்தியஸ்ரதன், சாந்தபயன், ஸுமித்திரன், சக்தியுள்ள ஸுபலன், ஜானுஜங்கன், அனாண்யன், அர்க்கன், பிரியபிருத்யன், சுசிவ்ரதன், பலபர்து, நிராமர்த்தன், கேதசிருங்கன், பிருஹத்பலன், திருஷ்டகேது, பிருஹத்கேது, தீப்தகேது, நிராமயன், அவிக்ஷித், சபலன், தூர்த்தன், உறுதியான தூணிகளுள்ள திருதபந்து, சிலாக்கியங்களான பூர்வசரித்திரங்களில் கொண்டாடப்பட்ட பிரத்யங்கன், சத்துருக்களை வதைக்கிறவனுகிய சுருதி ஆகிய இவர்களும் மற்ற ராஜாக்களும் நூற்றுக்கணக்காகவும் ஆயிரக்கணக்காகவும் காலஞ் சென்றனர். பத்துக்கோடி ஸங்கியையுள்ள இன்னும் அநேகராஜாக்களும் இருந்தார்களென்று கேள்விப்படுகிறோம். பிரபுவே! உமது புத்ரர்களைவிட மிகச் சிறந்தவர்களும், உயர்ந்த புத்தியுள்ளவர்களும், மிகுந்த சக்தியுள்ளவர்களுமாகிய அரசர்கள் மிகப்பெரிய ஸங்கங்களை விட்டு மரணமடைந்தார்கள். எவர்களுடைய உயர்ந்தபராக்கிரமமும், கொடையும், மகிமையும், ஆஸ்திகபுத்தியும், ஸத்தியமும், தூய்மையும், தயையும், உள்ளும்புறமும் ஒத்திருப்பதும் வித்வான்களாகிய கவிச்ரேஷ்டர்களால் உலகத்திலுள்ள பூர்வசரித்திரத்திற் சொல்லப்படுகின்றனவோ, எல்லா ஸம்பத்துக்களும் குணங்களும் நிரம்பின அவர்களும் முடிவையடைந்தார்கள். உமது புத்திரர்கள் துராத்துமாக்கள்; கோபத்தாற் கொதிப்படைந்தவர்கள்; பெருராசையுள்ளவர்கள்; கெட்டநடை மிகுந்தவர்கள்; அவர்களைப்பற்றி நீர் துக்கப்படுதல் தகாது. நீர் சாஸ்திரங்களைக் கேட்டவர்; கல்வியுள்ளவர்; சிறந்த புத்தியுள்ளவர்; ஞானவான்களால் ஒப்புக்கொள்ளப்பட்டவர்; ஓ, பரதவம்சத்தவரே! சாஸ்திரத்தை அனுசரிக்கிற புத்தியுள்ளவர்கள் பிரமிப்பதில்லை. ராஜாவே! தண்டிப்பதும் காப்பதும் உமக்குத் தெரிந்தவையே; புத்திரர்களை ரக்ஷிக்கவேண்டுமானால் அவர்கள்போகும்வழியே முழுதும்போவது தகாது. மேலும், அஃது அவ்வழியே நடக்கவேண்டியிருந்தது. பின்னுற் சோகப்படவேண்டாம். விதியை முயற்சியினால் எவன் வெல்லவல்லவன்? பிரம்மாவினால்

ஏற்படுத்தப்பட்ட மார்க்கத்தை யாரும் தாண்டுவதில்லை. பிறப்பும் இறப்பும் இன்பமும் துன்பமுமாகிய இவையனைத்துக்கும் காலமே காரணம். பிராணிகளை ஸ்ருஷ்டிப்பதும் காலமே; அழிப்பதும் காலமே; பிரஜைகளை ஸம்ஹரிக்கிற *காலனைக்கூட ஒழிப்பதும் காலமே; உலகத்தில் எல்லாப் பொருள்களையும் நல்லவையாகவும் கெட்டவையாகவும் மாற்றுவதும் காலம்; பிரஜைகளையெல்லாம அழிப்பதும் காலம்; மறுபடி ஸ்ருஷ்டி செய்வதும் காலம்; எல்லாம் தூங்கும் போதும் காலம் தூங்காமலிருக்கிறது. காலத்தைத்தாண்ட யாருக்கும்முடியாது; காலம் யாராலும் நிறுத்தப்படாமல் எல்லாப் பொருள்களிலும் ஒரேவிதமாகச் சஞ்சரிக்கின்றது; நடந்தவையும் நடப்பனவும் இப்போது நடக்கின்றனவுமாகிய பதார்த்தங்கள் எவையோ அவை காலத்தாற் செய்யப்பட்டவையென்று அறிந்து நீர் விவேகத்தை இழக்காமலிருக்கவேண்டும்" என்றான்.

கவல்கணபுத்திரனாகிய ஸஞ்சயன் புத்திரசோகத்தினால் வருந்தின த்ருதராஷ்டிரமஹாராஜாவுக்கு இவ்வாறு பலவகையாக ஸமாதானஞ்சொல்லி, அப்போது தேறச்செய்தான். ஞானவான்களிற் சிறந்த அந்தத் திருதராஷ்டிரனும் அதைக்கேட்டுத் தெய்வத்தினால் இது நேர்ந்ததென்று நினைத்துத் தைரியத்தையே யடைந்தான்.

முனிச்ரேஷ்டராகிய கிருஷ்ணத்வைபாயனர் உலகங்களுக்கெல்லாம் நன்மைக்காகக் கருணையினாற் பாரதத்தைப்போக்கத்தக்க உபநிஷத்தென்று சொல்லப்பட்ட பகவத்கீதையை இந்தப் பாரதத்திற் சொன்னார். உலகத்தில் வித்துவான்களாயுள்ள கவிச்ரேஷ்டர்கள் பாரதம் †பூர்வம்நடந்த விருத்தாந்தமேயென்று சொல்லுகிறார்கள். பாரதம் ஒதுவது புண்ணியம்; சிரத்தையுடன் ஒரு சுலோகத்தின் ஓர் அடியைப் படிப்பவனுக்கும் எல்லாப்பாவங்களும் சேஷமின்றி விலகிப் போகின்றன. எனென்றால், இந்தப் பாரதத்தில் தேவர்களும் தேவரிஷிகளும் பரிசுத்தர்களானபிரமரிஷிகளும் நல்லகாரியங்களைச்செய்த யக்ஷர்களும் நாகர்களும்சொல்லப்படுகின்றனர். நித்தியரான பகவான் வாஸுதேவரும் இதிற் சொல்லப்படுகிறார். ஞானபலனும் கர்மபலனும்அவரே. பாவத்தைவிலக்குபவரும் புண்ணியத்தைச்சேர்ப்பவரும் அவரே. மாறுதலில்லாததும், தானேபிரகாசிப்பதும், தேசகால வரையறை அற்றதுமாகிய பரப்பிரம்மமும் அவரே. ஞானிகள் அவருடைய செய்கைகளை உலகத்திற்குமேற்பட்டவைகளாகச் சொல்லுகிறார்கள் காரணமும் காரியமுமான ஜடஜீவர்கள் சேர்ந்த உலகமும் அவரிட

* யமன். † முந்தியகல்பங்களிலும் நடந்தது.

மிருந்து உண்டாகிறது. ஸந்ததியாய்வருகிற பிரமன்முதலிய பிராணிகளும், அவற்றின் தொழில்களும், பிறப்பு இறப்புக்களும், ஜன்மாந்தரமும் அவரிடமிருந்து உண்டாகின்றன. அத்யாத்மமென்று சொல்லப்பட்டவையான தேகத்திலுள்ள *ஐந்து பூதங்களும், கந்தம், ரஸம், ரூபம், ஸ்பரிசம், சப்தம் என்னும் அவற்றின் குணங்களும் மூலப்பிரகிருதியும் அதன் காரியங்களும் எல்லாம் அவரேயென்று சொல்லப்படுகின்றன. யதிச்ரேஷ்டர்களும் முக்தர்களும் கண்ணுடியில் பிரதிபிம்பத்தைப் பார்ப்பதுபோல, ஆத்துமாவிலிருக்கும் அவரைத் தியானயோகத்தின் வன்மையைக்கொண்டு பார்க்கின்றனர்.

எப்போதும் நியமமுள்ளவனுகவும் எப்போதும் தர்மத்தைவிடாதவனுகவுமிருந்து இந்தஅத்தியாயத்தைச் சிரத்தையுடன்பாராயணம் செய்கிறமனிதன் பாபத்திலிருந்து விடுபடுகிறான். பாரதத்தினுடைய முதலிலுள்ள இந்த அனுக்கிரமணிகாத்தியாயத்தை எப்போதும் நம்பிக்கையுடன் கேட்பவன் கஷ்டங்களில் அகப்படமாட்டான். அனுக்கிரமணிகாத்தியாயத்தில் ஏதேனும்ஒருபாகத்தை †இரண்டு ஸந்திகளிலும் பாராயணம்செய்பவன் பகலிலும் இரவிலும் செய்த பாபம் எவ்வளவு உண்டோ அவ்வளவிலிருந்தும் உடனே விடப்படுகிறான். ‡ஸத்தியமும் § அமிர்தமுமாகிய இந்தப்பாரதத்தின் ¶சாரம், தயிரில் வெண்ணெய்போலவும், மனுஷ்யர்களில் பிராமணன்போலவும், வேதங்களில் $ஆரண்யகம்போலவும், ||ஓஷதிகளில் அமிர்தம்போலவும், நீர்நிலைகளில் ஸமுத்திரம்போலவும், நாலுகாலுள்ளவைகளிற் பசுவைப்போலவும், இதிஹாஸங்களிற் சிறந்ததாகச் சொல்லப்படுகின்றது. எவன்ஒருவன் இந்தப்பாரதத்திலுள்ள ஒருசுலோகத்தின் அடியையாவது சிராத்தத்தில் பிராமணர்களுக்குக் கேட்பிப்பானே, அவனுடையபித்ருக்களுக்கு × அன்னபானங்கள் அழிவில்லாமல் வந்துசேருகின்றன. இதிஹாஸத்தினாலும், புராணத்தினாலும் வேதத்தை விளக்கிக்கொள்ளவேண்டும். வேதமானது அற்பஞானியைக்கண்டு அவன் தன்னை மோசம்செய்வானென்று பயப்படு

---

* பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம்.

† காலைமாலை. ‡ அழியாதது. § ஆனந்தம். ¶ முழுப்பாகம்.

$ காட்டில் ஒதத்தக்கது.

|| திருப்பாற்கடலில் ஓஷதிகளின் ரஸம்விட்டுக்கடைந்து அமிர்தம் உண்டாக்கினதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆரண்யகமென்பதற்கு உபநிஷத்தென்பதும், ஓஷதிகளில் அமிர்தம் என்பதற்குத் தான்யங்களில் யஜ்ஞ சேஷமென்பதும் பழையஉரை.

ஸந்தியென்று என்பது கருத்து.

கின்றது. கிருஷ்ணத்வைபாயனரால் சொல்லப்பட்ட வேதமாகிய இந்தப்பாரதத்தை ஒருவித்வான் பிறருக்குச் சொல்லுவதினால் திரவியலாபம் பெறுவான்; சிசுஹத்தி முதலான பாவங்களையும் நிச்சயமாக விலக்கிவிடுவான். எவன் பரிசுத்தனாக இருந்து இந்த அனுக்கிரமணிகாத்தியாயத்தை ஒவ்வொரு புண்ணியகாலத்திலும் படிப்பானோ அவனுற் பாரதம்முழுமையும் படிக்கப்பட்டதுபோலாகுமென்பது என்கருத்து. ரிஷியினால் சொல்லப்பட்ட இந்தப்பாரதத்தை எவன் சிரத்தையோடு நித்தியமாகக்கேட்பானோ அந்தமனிதன் தீர்க்காயுளையும், கீர்த்தியையும், ஸ்வர்க்கத்தையும் அடைவன்.

முன்பு தேவர்களெல்லாரும்சேர்ந்து நான்குவேதங்களை ஒரு தட்டிலும் பாரதத்தை ஒருதட்டிலுமாக வைத்துத் தராசில்நிறுத்தனர். உபநிஷத்துக்களடங்கிய நான்குவேதங்களைக்காட்டிலும் பாரதம் அதிகமாகவிருந்தது. அதுமுதல் இவ்வுலகத்தில் இது மஹாபாரதமென்று சொல்லப்படுகிறது; நிறுக்கப்படும்போது மகத்தாகவும் பாரம் என்று சொல்லப்பட்ட அர்த்தகௌரவமுள்ளதாகவுமிருந்ததனாலும், மஹாபாரதமென்று பெயர்பெற்றது. இந்தப் பெயர் வந்த காரணத்தை அறிகிறவன் எல்லாப் பாவங்களாலும் விடப்படுகிறான்; தவமும் பாவத்தைப் போக்குகிறது; வேதத்திற்சொல்லப்பட்ட வர்ணச்ரம ஆசாரங்களும் பாவத்தைப் போக்குகின்றன; சிரமத்தைப்பொறுத்துப் பொருளீட்டுவதும் பாவத்தைப் போக்குகிறது. மேற்சொன்னவையே கெட்ட எண்ணத்தோடு செய்யப்பட்டால் பாவங்களாகின்றன.

அனுக்கிரமணிகாபர்வம் முற்றிற்று.

இரண்டாவது அத்தியாயம்.

*பர்வஸங்கிரகபர்வம்.

(மஹாபாரதத்திலுள்ள பர்வங்களையும் அவற்றின் விஷயங்களையும் கூறுவது).

ரிஷிகள், "ஓ ஸூதபுத்திரரே! ஸமந்தபஞ்சகமென்று சொன்னீரே; அதன்வரலாற்றையெல்லாம் நாங்கள் செவ்வையாகக் கேட்க விரும்புகின்றோம்" என்றுகேட்க, ஸூதர் சொல்லலானார்.

"அந்தணர்களே! அழகானகதைகளை நான்சொல்லுகிறேன்; கேளுங்கள். சிறந்தஸாதுக்களே! ஸமந்தபஞ்சகமென்று பெயருள்ள இடத்தைபற்றியும் நீங்கள்கேடகவேண்டும். த்ரேதாயுகம் துவாபரயுகம் இவ்விரண்டின்ஸந்தியில், க்ஷத்ரதாரிகளிற்சிறந்தவரான பரசுராமர் கோபத்தினால் தூண்டப்பட்டு, பூமிக்கு அரசர்களான க்ஷத்திரியஜாதியாரை அடிக்கடி வதஞ்செய்தார். அக்கினிக்கு ஒப்பான சக்தியுள்ள பரசுராமர் தமதுடைய ப்ராக்கிரமத்தினால் க்ஷத்திரியர் குலமெல்லாவையும் அழித்தது, ஸமந்தபஞ்சகம் என்னும் இடத்தில் ஐந்து ரக்தநதிக்களை உண்டாக்கினரென்றும, கோபமிகுந்த அவர், ரக்தமே ஜலமாகநிரம்பிய அந்தநதிக்களில் ரக்தத்தினாலேயே பிதிர்க்களுக்குத் தர்ப்பணம செய்தாரென்றும நாம் கேட்டிருக்கிறோம். பிறகு, அவர்பிதிர்க்களாகிய ரிசீகர்முதலானவர்கள் பரசுராமரிடத்திற்குவந்து, "ஓ! ராம! ராம! பெரியபராக்கியம்பெற்றவனே! பிருகுகுலத்தோனே! ஸாமர்த்தியமுள்ளவனே! உன்னுடைய இந்தப் பிதிர்பக்தியாலும் அதிகசக்தியாலும் சந்தோஷமடைந்திருக்கிறோம்; பெரியசக்தி உள்ளவனே! உனக்கு க்ஷேமம் உண்டாகக்கடவது. வேண்டியவரதத்தைக்கேள்" என்றுசொன்னார்கள்.

பரசுராமர், "பிதிர்க்களுக்கு என்னிடம் பிரீதியும அனுக்கிரகத்தைப்பெறுவதற்கு என்னிடத்துத் தகுதியுமிருக்குமாயின், நான் கோபத்தினால் மூடப்பட்டு க்ஷத்திரியர்களை அழித்ததாகிய இந்தப் பாவத்தினின்றும் விடுபடக்கடவேன். இதுதான் நான் வேண்டுகிறவரம். என்னுடைய இந்தமடுக்களும் புண்ணியதீர்த்தங்களாகப் பூமியிற் பெயர்பெற்று இருக்கக்கடவன"என்றார். பிறகு, பிதிர்க்கள், "அப்படியேயாகுக" என்று அவருக்குக்கூறி, "நீபொறுத்

* இதிற் பாரதகதைமுழுவதும் சுருக்கமாகச்சொல்லப்படுதலின், இதை ஸூதபாரதமென்பர்.

வேண்டும்" என்று அவரைத்தடுத்தார்கள். உடனே அவர் சாந்த ராயினர். ரக்தமே ஜலமாகவுடைய அந்தமடுக்களின் சமீபத்திலுள்ள தேசம் ஸமந்தபஞ்சகமென்னும் புண்ணியகேஷத்திரமாகச் சொல்லப் படுகின்றது. எந்தத்தேசம் எந்த அடையாளத்தோடுகூடியதாகக் காணப்படுகிறதோ, அந்த அடையாளப்பெயராலேயே அந்தத்தேசம் வழங்கத்தக்கதென்று தெரிந்தவர் சொல்லுகின்றனர். கலியுகத்திற் கும் துவாபரயுகத்திற்கும் ஸந்திகாலமாயிருந்தபோது ஸமந்தபஞ்சகத்தில் கௌரவசேனைக்கும் பாண்டவசேனைக்கும் யுத்தம் உண்டாயிற்று. மிகவும் தர்மம்நிறைந்ததும் பூமியைப்பற்றிய தோஷமில்லாததுமான அந்தத்தேசத்தில் யுத்தஞ்செய்வதற்காகப் பதினெட்டு அக்ஷௌஹிணிகள் சேர்ந்தன. பிராமணர்களே! அந்த அக்ஷௌஹிணிகள் அவ்விடம்சேர்ந்து அங்கேயே முடிவையடைந்தன. பிராமணர்களே! அந்த *ஸமந்தபஞ்சகமென்னும் தேசத்தின்பெயர் இவ்வாறு ஏற் பட்டது. புண்ணியகேஷத்திரமும் அழகியதுமாகிய அந்தத்தேசத் தை உங்களுக்குச்சொன்னேனல்லவா? சிறந்ததவமுள்ளவர்களே! பிரா மணசிரேஷ்டர்களே! அந்தத்தேசத்திற்கு மூன்றுலோகங்களிலும் பிரஸித்திவந்தவரலாற்றைப்பற்றியும் முழுவதும்சொன்னேன்" என்று கூறினர்.

ரிஷிகள், "ஓ, ஸூதபுத்திரரே! அக்ஷௌஹிணிகள் என்பதாக நீர்சொன்னீரல்லவா? அதையெல்லாம் விவரமாகக்கேட்க விரும்பு கின்றோம். ஓர் அக்ஷௌஹிணியின் காலாட்கள், குதிரைகள், தேர் கள், யானைகள் இவற்றின் அளவைச் சரியாக எங்களுக்குச் சொல் லும்; உமக்கு எல்லாம் தெரியுமே" என்றுகேட்டனர்.

ஸூதபுத்திரர், "ஒருதேரும், ஒருயானையும், ஐந்துகாலாட்களும், மூன்றுகுதிரைகளும் சேர்ந்தது ஒருபத்தியென்பதாகச் சேனைவித தெரிந்தவர்கள் சொல்லுகின்றனர்; இந்தப்பத்தி மூன்றுகொண்டதை ஒருசேனைமுகமென்று அறிவுடையோர் கூறுகின்றனர்; மூன்றுசேனை முகங்கள் சேர்ந்தது ஒருகுல்மமென்று உரைக்கப்படுகின்றது; மூன்று குல்மங்கள் ஒருகணமென்று பெயர்பெறும்; மூன்றுகணங்கள் ஒரு வாகினி; மூன்றுவாகினிகளே ஒருபிருதனையென்று தெரிந்தவர்கள் சொல்லுகின்றனர்; மூன்றுபிருதனைகள் சேர்ந்தது ஒருசமூ; மூன்று சமூக்கள் சேர்ந்தது ஓர் அனீகினி; பத்துஅனீகினிகளே ஓர் அக்ஷௌஹி ணியென்று அறிவுடையோர்கள் சொல்லுகிறார்கள். பிராமணர்களே! அக்ஷௌஹிணி ஒன்றுக்கு ரதங்களின் எண் இருபத்

* காலபுறங்களிலும் ஐந்துமடுக்களையுடையது.

தோராயிரத்து எண்ணூற்றெழுபது என்பதாக அக்ஷௌஹிணிஸங்கியை தெரிந்தவர்கள் நிர்ணயித்திருக்கின்றனர். யானைகளின் ஸங்கியையும் இவ்வளவே. பதாதிகள் லக்ஷத்தொன்பதினாயிரத்து மூன்நூற்றைம்பது. குற்றமற்றவர்களே! குதிரைகள் அறுபத்தையாயிரத்து அறுநூற்றுப்பத்தென்று ஸங்கியை செய்திருக்கிறார்கள். தபோதனர்களே! ஸங்கியை சரியாகத்தெரிந்த ஜனங்கள், அக்ஷௌஹிணியென்று சொல்வதை நான் உங்களுக்கு விரிவாகச்சொன்னேன்.

பிராமணசிரேஷ்டர்களே! இந்தஸங்கியைப்படி, கௌரவபாண்டவருடைய சேனைகள் மொத்தம் பதினெட்டு அக்ஷௌஹிணிகள் இருந்தன. ஆச்சரியமான செய்கையையுடையகாலந்தான், கௌரவர்களைக்காரணமாக்கி அந்தச்சேனைகளை அந்தஇடத்திற் சேர்த்து அங்கேயே முடித்தது.

உயர்ந்த அஸ்திரங்களையறிந்த பீஷ்மர் பத்துதினங்கள் யுத்தஞ் செய்தார். துரோணர் ஐந்துதினங்கள் கௌரவசேனையை ரக்ஷித்தார். சத்துருஸைன்யங்களைப்பீடிபபவனாகிய கர்ணன் இரண்டுநாள் யுத்தஞ்செய்தான். சல்லியன் அரைநாள் யுத்தஞ்செய்தான்; அதற்கு மேலே கதாயுத்தம்நடந்தது. அந்தக்கதாயுத்தம்நடந்த பகல்முடிந்த பிறகு அசுவத்தாமாவும் கிருதவர்மாவும் கிருபாசாரியரும் இராத்திரியிற கவலையற்றுத்தூங்கிக்கொண்டிருந்த பாண்டவசேனைத்தலைவரை வதஞ்செய்தனர். சௌனகரே! உமதுஸத்ரியாகத்தில் நான்சொல்லுகிறதும் ராஜாக்களின்கீர்த்தியையும் சக்தியையும் தெரிவிப்பதுமாகிய உத்தமமான பாரதகதையை ஜனமேஜயருடைய ஸர்ப்பயாகத்தில் வியாஸருடைய சிஷ்யராகிய சிறந்தபுத்தியுள்ள வைசம்பாயனர் விரிவாகச்சொன்னார். அந்தப்பாரதத்திற் பௌஷ்யபர்வமும் பௌலோமபர்வமும் ஆஸ்திகபர்வமும் சொல்லப்பட்டன.

மோக்ஷத்தை அடையவிரும்புகிறவர்களால் வைராக்கியம் அங்கிகரிக்கப்படுவதுபோல் புதியபுதிய விஷயங்களும் பதங்களும் சரித்திரங்களும அநேகதர்மவியவஸ்தைகளுமுள்ளதாகிய பாரதம் புத்திசாலிகளான மனிதர்களால் அங்கிகரிக்கபபட்டது. அறியத்தக்கவற்றுள் ஆத்மாவைப்போலவும், விரும்பத்தக்கவற்றுள் உயிரைப்போலவும், மேலான அர்த்தமுள்ள இந்த இதிஹாஸம் எல்லாஉபதேசங்களிலும் மிகச்சிறந்தது. ஆகாரத்தைவிட்டுத் தேகம் எப்படிநிற்பதில்லையோ அப்படியே இக்கதையைவிட்டு எந்தக்கதையும் இப்பூமியில் இல்லை. சிரேயஸைவிரும்புகிற வேலைக்காரர்கள் நல்லகுலத்திற்பிறந்த

பிரபுவை அடிப்பதுபோலக் *கவிகள் இந்தப்பாரதத்தை ஆதாரமாக அடைகிறார்கள். உலகத்தையும் வேதத்தையும்சேர்ந்த சொற்களணைத்தும் உயிரெழுத்து மெய்யெழுத்துக்களில் அடங்கியிருப்பதுபோல, உயர்ந்த ஞானமானது இந்த உத்தமமான இதிஹாஸத்தில் அடங்கியிருக்கிறது. புத்திமான்களால் ஆதரிக்கப்பட்டதும், புதியபுதிய சொற்களமைந்த பர்வங்களோடுகூடியதும், நுட்பமாகிய விஷயங்களும் நியாயங்களும்சேர்ந்ததும், வேதார்த்தங்களினல் அலங்கரிக்கப்பட்டதுமாகிய பாரதமென்னும் இதிஹாஸத்தின் பர்வஸங்கிரகத்தைக்கேளுங்கள்.

(நூறுபர்வங்களின் பெயர்கள்).

முதலாவதாகிய் ஆதிபர்வத்தில், †அனுக்கிரமணிகாபர்வம், பர்வஸங்கிரகபர்வம், பௌஷ்யபர்வம், பௌலோமபர்வம், ஆஸ்திகபர்வம் இவை முறையேயுள்ளன; இவை பாரதத்தின் முதல்முகவுரை; அம்சாவதரணபர்வமும், பிறகு ஆச்சரியமும் மயிர்க்கூச்சலுண்டாக்கத்தக்கதுமாகிய ஸம்பவபர்வமும், ‡ஜதுக்ருகதாஹபர்வமும், ஹிடிம்பவத பர்வமும், பிறகு பகவதபர்வமும், அதன்பிறகு சைத்ரரதபர்வமும், அதன்பிறகு பாஞ்சாலிதேவியின் ஸ்வயம்வரத்தைப்பற்றிய ஸ்வயம்வரபர்வமும், பிறகு அரசர்களைப் பராக்கிரமத்தினல் ஜயித்துத் திரௌபதியை விவாகம்செய்து கொள்வதைப்பற்றிய வைவாஹிகபர்வமும், விதுராகமனபர்வமும், அதன்பிறகு ராஜ்யலாபபர்வமும், அர்ச்சுனவனவாஸ பர்வமும், பிறகு சுபத்ராஹரணபர்வமும், சுபத்ராஹரணத்துக்குமேல் §ஹரணாஹரணபர்வமும், பிறகு காண்டவதாஹமென்னும் பர்வமும், அந்தச்சமயத்திலே மயனென்னும் அசுரசில்பியைக் கண்டதைக் குறித்த மயதர்சனபர்வமும் ஆகிய இவை சொல்லப்பட்டன.

ஆதிபர்வத்திற்குப் பிறகு ஸபாபர்வம் சொல்லப்பட்டிருக்கிறது. அதில் மந்திரபர்வமும், அதன்பிறகு ஜராஸந்தவதபர்வமும், பிறகு திக்குவிஜயபர்வமும், திக்குவிஜயத்துக்குமேல் ராஜஸூயபர்வமும், அதன்பிறகு ¶அர்க்காபிஹரணபர்வமும், பிறகு சிசுபாலவதபர்வ

---

* பார்த்த ஞானமுடையவர்கள்.

† கதையை வரிசைப் படுத்திச் சொல்வது.

‡ அரக்குமாளிகையைக் கொளுத்தியது.

§ பெண்ணுக்குச் சிறப்புக்களைக் கொண்டுபோவது.

¶ வந்தவர்களுக்குப் பூஜையைச் சேர்த்தல்.

மும், அதன்பிறகு *த்யூதபர்வமும், அதன்பிறகு †அநுத்யூதபர்வமும் சொல்லப்பட்டன.

சபாபர்வத்துக்குப்பிறகு அரண்யபர்வம் சொல்லப்பட்டிருக்கிறது. அதில் ஆரண்யகபர்வமும், கிர்மீரவதபர்வமும், அதன்பின் ‡அர்ச்சுனபிகமனபர்வமும், அதன்பிறகு வேடவேஷம்பூண்ட சிவபிரானுக்கும் அர்ச்சுனனுக்கும் நடந்த யுத்தத்தைப்பற்றிய கைராத பர்வமும், அதன்பின் §இந்திரலோகாபிகமனபர்வமும், தர்மத்தையும் தயையையும் தெரிவிக்கிற நளோபாக்யானபர்வமும், பிறகு மிகுந்த ஞானமுள்ள தர்மராஜாவினுடைய தீர்த்தயாத்திரையைப் பற்றியதாகிய தீர்த்தயாத்ராபர்வமும், ஜடாஸுரவத பர்வமும், அதன்பிறகு யக்ஷயுத்தபர்வமும், நிவாதகவசயுத்தபர்வமும், அதன்பிறகு ¶அஜகர்பர்வமும், அதன்பிறகு மார்க்கண்டேய ஸமாஸ்யாபர்வமும், அதன்பிறகு திரௌபதி ஸத்யபாமா ஸம்வாதபர்வமும், அதன்பிறகு கோஷயாத்ராபர்வமும், தூரிமேயாதனன் பிராமோபாவேசம் செய்ததும், கர்ணனுடு மேற்காரியத்திற்காக மந்திராலோசனை செய்ததும், அதன்பிறகு மிருகஸ்வப்னோத்பவ பர்வமும், $விரீஹித்ரௌணிக மென்கிற சரித்திரத்தைப்பற்றிய விரீஹித்ரௌணிகபர்வமும், ||இந்திரத்யும்னோபாக்யானமும், திரௌபதீ ஹரணபர்வமும், ஜயத்ரத விமோக்ஷணபர்வமும், ராமோபாக்யானமும், அதன்பிறகு ஸாவித்திரியென்னும் பதிவிரதையினுடைய ஆச்சரியமான மகிமையைப் பற்றிய பதிவிருதாமாகாத்மியபர்வமும், அதன்பிறகு ×குண்டலாஹரணபர்வமும், அதன்பிறகு ஆரணேயபர்வமும் ஆகிய இவைகள் சொல்லப்பட்டன.

அதன்பிறகு விராடபர்வம்: அதில் பாண்டவப்பிரவேசபர்வமும், ஸமயபாலனபர்வமும், கீசகவதபர்வமும், அதன்பிறகு கோக்ரஹணபர்வமும், அதன்பிறகு அபிமன்யுவுக்கும் விராடபுத்திரியாகிய உத்தரைக்கும் நடந்த விவாஹத்தைப்பற்றிய வைவாஹிகபர்வமும் ஆகிய இவை சொல்லப்பட்டன.

---

* சூதாட்டத்தைப் பற்றியது.

† இரண்டாமுறை சூதாடியதைப் பற்றியது.

‡ அர்ச்சுனன் பாசுபதாஸ்திரத்திற்காகச் செல்வது.

§ அர்ச்சுனன் இந்திரலோகத்துக்குப் போனது.

¶ மலைப்பாம்பாக இருந்து பீமசேனனைப் பிடித்துக்கொண்ட நகுஷனைத் தர்மராஜா ஸந்தித்தது. $ பதக்குரென் ,தானஞ்செய்ததைப்பற்றியது.

|| இதை அரண்யபர்வத்தில் மார்க்கண்டேய ஸமாஸ்யாபர்வத்தில் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

× கர்ணனுடைய குண்டலத்தை இந்திரன் வாங்குவது.

அதற்குமேல் வெகு ஆச்சரியமாயுள்ள உத்தியோகபர்வம்: அதில் ஸேநோத்யோகபர்வமும், அதன்பின் ஸஞ்சயயானபர்வமும், திருதராஷ்டிரன் கவலையினால் தூங்காமலிருப்பதைப் பற்றிய ப்ரஜாகரபர்வமும், ரஹஸ்யமான ஆத்மஞானம் அடங்கிய ஸநத்ஸுஜாதீய பர்வமும், அதன்பிறகு *யானஸந்திபர்வமும், பகவத்யானபர்வமும், மாதலியின் உபாக்கியானமும், காலவருடைய சரித்திரமும், ஸாவித்திரோபாக்கியானமும், வாமதேவோபாக்கியானமும், பிருதூபாக்கியானமும் †ஜாமதக்கினீய உபாக்கியானமும், ஷோடச ராஜகமென்னும் உபாக்கியானமும், கிருஷ்ணஸபாப்பிரவேசமும், விதுலையென்பவள் தன் புத்திரனுக்குப் புத்திசொன்னதும், ‡லைங்ய நிர்யாணபர்வமும், விசுவோபாக்கியானமும், மஹாத்மாவாகிய §கர்ணனுக்குக் கிருஷ்ணனுடன் நடந்த விவாதமும், காரியாலோசனையில் நிச்சயத்தைச்செய்து கிருஷ்ணன் சுவேதனைச் சேனாபதியாக அபிஷேகம் செய்ததைப்பற்றிய விசித்திரமும் அநேக கதைகள் சேர்ந்ததுமாகிய ஓர் உபாக்கியானமும், அதன்பின் கௌரவசேனையும் பாண்டவசேனையும் புறப்படுவதாகிய ஸைன்ய நிர்யாணபர்வமும், அதன்பிறகு ரத அதிரத ஸங்க்யானபர்வமும, அதன்பிறகு கோபத்தை விருத்திசெய்வதாகிய ¶உலூக தூதாகமனபர்வமும், அம்போபாக்கியான பர்வமும் ஆகிய இவையுள்ளன.

அதன்பிறகு பீஷ்மபர்வம்: அதில் பீஷ்மரைச் சேனாபதியாக்கப் பட்டாபிஷேகம் செய்ததைப்பற்றிய ஆச்சரியமான பீஷ்மாபிஷேகபர்வமும், அதன்பிறகு ஜம்பூத்வீபநிர்மாணபர்வமும், அதன்பின் த்வீபங்களின் விஸ்தாரத்தைப்பற்றிச் சொல்வதாகிய பூமிபர்வமும், மஹரிஷியாகிய வியாஸர் ஸஞ்சயனுக்கு ஞானக்கண்ணைக் கொடுத்ததாகிய பகவத்கீதாபர்வமும், அதன்பின் பீஷ்மவதபர்வமும் சொல்லப்பட்டன.

அதன்பின் துரோணபர்வம்: அதில் துரோணாபிஷேகபர்வமும், $ஸம்சப்தகவதபர்வமும், அபிமன்யுவதபர்வமும், பிரதிஜ்ஞாபர்வமும், ஜயத்ரதவதபர்வமும், கடோத்கசவதபர்வமும், மயிர்க்கூச்ச

---

* இரண்டுசேனைகளும் நிற்கவேண்டிய இடங்களைச் சேர்ந்தது.

† பரசுராமர்.

‡ சேனையைப் புறப்படச் சித்தஞ்செய்வது.

§ இது பகவத்யானபர்வத்தைச் சேர்ந்தது.

¶ உலூகதூதாகமன பர்வத்தை ஸைன்யநிர்யாணபர்வத்திற் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

$ ஒருவகைக் கூட்டத்தார்.

லெடுக்கத் தக்கதாகிய துரோணவதபர்வமும், நாராயணாஸ்திரமோக்ஷ பர்வமும் உள்ளன.

அதன்பின் கர்ணபர்வம் சொல்லப்பட்டது.

அதன்பின் சல்லியபர்வம்: இஃது அறியத்தக்கது; இதில் *ஹ்ரதப்ரவேசபர்வமும், பிறகு கதாயுத்தபர்வமும், புண்ணிய தீர்த்தங்களையும் வம்சங்களையும் பற்றிய ஸாரஸ்வதோபாக்கியானமும் உள்ளன.

அதன்மேல் மிகவும் அருவருக்கத்தக்க ஸௌப்திகபர்வம் சொல்லப்படுகின்றது. இதன்மேல் வெகு கொடுமையான ஐஷீகபர்வமுள்ளது.

(அதன்பிறகு ஸ்த்ரீபர்வம்). அதில் ஜலப்ரதானிக பர்வமும், அதன்பின் ஸ்த்ரீவிலாப பர்வமுமுள்ளன.

அதன்பின், கௌரவர்களுடைய பிரேதகாரியங்களைப்பற்றிய †சாந்திபர்வம், பிராமணரூபமாகவந்த சார்வாகனென்னும் ராக்ஷஸனைச் சிக்ஷித்ததாகிய சார்வாக நிக்ரஹபர்வம், புத்திமானாகிய தர்ம ராஜாவின் பட்டாபிஷேகத்தைப் பற்றிய அபிஷேகபர்வம், அதன்பின் க்ரஹவிபாகபர்வம் (இவைகள் உள்ளன).

பிறகு சாந்திபர்வம்: அதில், ராஜதர்மாநுசாஸனபர்வமும், ஆபத்தர்மபர்வமும், அதன்பின் மோக்ஷதர்மபர்வமும் சொல்லப்பட்டுள்ளன. சுகப்ரச்னபிகமனமும், நாராயணீயமென்ற ப்ரம்மப் ப்ரச்னாநுசாஸனமும், துர்வாஸரிஷியின் உத்பத்தியும், மாயையோடு அவர்செய்த ஸம்வாதமும் சொல்லப்பட்டுள்ளன.

அதன்பிறகு, ஆநுசாஸனிகபர்வம்; அதன்பின், ஞாதாவாகிய பீஷ்மர் ஸ்வர்க்கம்போனதைப்பற்றிய ஸ்வர்க்காரோஹண பர்வம் உள்ளது.

பிறகு, எல்லாப்பாபங்களையும் போக்கத்தக்க ஆச்வமேதிகபர்வம்; அதன்பின், ஆத்மஞானத்தைப் போதிக்கும் அநுகீதாபர்வமுள்ளது.

(அதன்பின்) ஆச்ரமவாஸபர்வம்: ‡இதில் புத்ரதரிசனபர்வமும், அதன்பிறகு, நாரதாகமனபர்வமும் உள்ளன.

அதன்பின், பயங்கரமும் வெகுகொடுமையுமான மௌஸலபர்வம்.

(அதன்பின்) மகாப்ரஸ்தானபர்வம்.

---

* துரியோதனன் மடுவில் ஒளித்தது.

† சாந்திபர்வமுதலியநான்கும் சாந்திபர்வத்தி லுள்ளவை.

‡ இறந்துபோன புத்திரர்களைத் திருதராஷ்டிரன் பார்த்தது.

அதன்பின், *ஸ்வர்க்காரோஹணபர்வம்.

அதன்பிறகு, †கிலமென்று பெயருள்ள புராணமாகிய ஹரிவம்சம்; அதில் முதலில் ஹரிவம்சபர்வமும், பிறகு குழந்தைப்பருவமுள்ள கிருஷ்ணன்செய்கைகளும் அப்படியே கம்ஸனுடைய வதமும் அடங்கிய விஷ்ணுபர்வமுமுள்ளன; பவிஷ்யபர்வமென்பதும் மிக ஆச்சரியமானது; அதுவும் கிலங்களிலே சேர்ந்தது.

பூர்ணமாக இந்த நூறுபர்வங்களும் மகாத்மாவாகிய வியாஸரால் சொல்லப்பட்டன. பிறகு ரோமஹர்ஷணரின் புத்திரராகிய ஸௌதியால் தலைமையாகிய பதினெட்டுப் பர்வங்களும் ஸரியாக நைமிசாரண்யத்தில் உபந்யஸிக்கப்பட்டன. பாரதகதையின் சுருக்கம் அனுக்கிரமணிகாத்யாயத்திற் சொல்லப்பட்டது. இதில் பர்வஸங்கிரகம் சொல்லப்பட்டிருக்கிறது.

(பர்வங்களின் விஷயவிவரணமும் அத்யாய ச்லோக ஸங்கியையும்).

பௌஷ்யபர்வம், பௌலோமபர்வம், ஆஸ்தீகபர்வம் இவை பாரதத்திற்கு ஆரம்பமானவை; அம்சாவதரணபர்வம், ஸம்பவபர்வம், ஜதுக்ருகதாஹபர்வம், ஹிடிம்பவதபர்வம், பக வதபர்வம், சைத்ரரத பர்வம், திரௌபதிஸ்வயம்வரபர்வம், பராக்கிரமத்தினல் ராஜாக்களை ஜயித்து விவாஹஞ்செய்ததைப்பற்றிய வைவாஹிகபர்வம், விதுராகமனபர்வம், ராஜ்யலாபபர்வம், அர்ச்சுனவனவாஸபர்வம், சுபத்ராஹரணபர்வம், ஹரணஹரணபர்வம், காண்டவதாஹபர்வம், மயதர்சனபர்வம் ஆகிய இவை ஆதிபர்வத்திற் சொல்லப்பட்டன.

(இவற்றுள்)பௌஷ்யபர்வத்தில் உதங்கமுனியினுடையமஹிமை வர்ணிக்கப்பட்டுள்ளது. பௌலோமபர்வத்திற் பிருகுவம்சத்தின் ஆவிர்பூதி கூறப்பட்டது. ஆஸ்தீகபர்வத்தில் ஸர்ப்பங்களெல்லாவற்றின் உத்பத்தியும், கருடோத்பத்தியும், திருப்பாற்கடலிலக்கடைந்ததும், உச்சைச்சிரவம் உண்டானதும், பரிக்ஷித்தின்புத்திரராகிய ஜனமேஜயமகாராஜா ஸர்ப்பயாகஞ்செய்யும்போது மகாத்மாக்களாகிய இந்தப்பரதவம்சராஜாக்களுடைய இக்கதைசொல்லியவரலாறும் சொல்லப்பட்டன.

ஸம்பவபர்வத்தில் அநேகராஜாக்கள், ரிற்றச்சூரர்கள், த்வைபாயன மகரிஷி இவர்களுடையஉத்பத்திகள் சொல்லப்பட்டன. இந்தஸம்பவபர்வத்தில், தேவர்கள், திதியின்புத்ரர்களும் தனுவின்புத்ரர்களுமாகிய அசுரர்கள், மிகுந்தசக்தியுள்ள யக்ஷர்கள், நாகர்களென்னும்

* பாண்டவர்கள் ஸ்வர்க்கம் போனதைத் தெரிவிப்பது.
† தெறிப்போன விஷயங்களடங்கியது.

ஒருவகைத் தேவஜாதிகள், ஸர்ப்பங்கள், கந்தர்வர்கள், பக்ஷிகள் ஆகியஇவர்களுடைய அம்சங்கள் பூமியில்வந்ததும், இன்னும் அநேக விதங்களான தேவஜாதிகளின் உத்பத்தியும் சொல்லப்பட்டன. சிறந்த தவமுள்ள கண்ணுவமகரிஷியின் ஆச்ரமத்தில் சகுந்தலையி னிடத்துத் துஷ்யந்தனுக்குப் பரதசக்கரவர்த்தி பிறந்ததும், அவனு டையபெயரையிட்டு இக்குலத்திற்கே உலகத்திற் பாரதமென்றபெயர் வந்ததும், சந்தனுவின்வீட்டிற் கங்காதேவியினிடம் மஹாத்மாக்க ளாகிய வஸுக்கள்பிறந்ததும், அவர்கள் மறுபடியும் ஸ்வர்க்கம்சென் றதும், அவர்களுடைய *தேஜஸுகளின் அம்சங்கள்சேர்ந்ததும், பீஷ்மர் உத்பத்தியானதும், அவர் ராஜ்யத்தைவிட்டு நித்தியபிரமசரிய விரதத்தில் இருந்ததும், பிரதிஜ்ஞையை நிறைவேற்றினதும், சித்தி ராங்கதனைக் காப்பாற்றியதும், சித்திராங்கதன் இறந்துபோனபிறகு இளையஸஹோதரனாகிய விசித்திரவீரியனை ரக்ஷித்ததும், அவனை ராஜ் யத்தில் ஸ்தாபித்ததும், ஆணிமாண்டவ்யரிஷியின்சாபத்தினால் தர்ம தேவதை மனுஷ்யலோகத்தில் விதுரராகப்பிறந்ததும், கிருஷ்ண த்வைபாயனரால் திருதராஷ்டிரனும் பாண்டுவும்ஜனித்ததும், துர்வாஸ முனிவருடைய வரதானத்தினால் பாண்டவர்கள்பிறந்ததும், பாண்ட வர்கள் வாரணவதம் போவதைப்பற்றித் துரியோதனன் மந்திரா லோசனைசெய்ததும், அவன் பாண்டவர்களை வஞ்சகம்செய்யப் புரோ சனனை அனுப்பியதும், அந்தச்சமயத்தில் புத்திசாலியாகிய தர்மராஜா வுக்கு மிலேச்சபாஷையில் மார்க்கத்தில் விதுரர்செய்த ஹிதோப தேசமும், விதுரர்சொன்னதனால் சுரங்கமாகிய வழிசெய்யப்பட்டதும், அரக்குமாளிகையில் ஐந்து பிள்ளைகளோடு தூங்கிக்கொண்டிருந்த வேடச்சியையும், புரோசனனென்னும் துரியோதனன்மந்திரியையும் எரித்ததும், பயங்கரமான வனத்திற் பாண்டவர்கள் ஹிடிம்பையைக் கண்டதும், மஹாபலசாலியான பீமசேனன் ஹிடிம்பனை வதஞ்செய்த தும், கடோத்கசனுடைய பிறப்பும், அளவற்ற மஹிமைபொருந்திய வியாஸரிஷியைக்கண்டதும், அவருடையஆஜ்ஞையால் ஏகசக்கரா புரியில் ஒருபிராமணனுடைய கிருஹத்திற் [redacted]ருக்குத்தெரியாதபடி பாண்டவர்கள் வாஸஞ்செய்ததும், பகாஸுரனைக்கொன்றதும், பட்ட ணத்துஜனங்கள் ஆச்சரியமடைந்ததும், திரௌபதி திருஷ்டத்யும் னன் இவர்களுடையபிறப்பும் சொல்லப்பட்டிருக்கின்றன.

பாண்டவர்கள் ஒருபிராமணனிடத்திலிருந்து திரௌபதியின் சுயம்வரத்தைக்கேள்வியுற்று வியாஸர்சொல்லினாலும் தூண்டப்பட்ட

* சக்திகள்.

வர்களாய், திரௌபதியை அடையவிரும்பி ஸ்வயம்வரம்பார்ப்பதற்கு ஆசையுடன் குதூஹலமாகப் பாஞ்சாலதேசத்தை நோக்கிச்சென்றார் களென்பதும், அப்போது, அர்ச்சுனன் கங்கைக்கரையில் அங்கார பர்ணனென்று சொல்லப்பட்ட சித்திரரதனென்னும் கந்தர்வனை ஜயித்து, பிறகு அவனோடு ஸ்நேஹஞ்செய்துகொண்டு அவனிடத்திலிருந்தே உத்தமங்களாகிய தபதி உபாக்யானத்தையும், வஸிஷ்டோபாக்யானத்தையும், ஔர்வோபாக்யானத்தையும் கேட்டானென்பதும், எல்லாஸைஹாதரர்களுடனுஞ்சேர்ந்து பாஞ்சாலதேசத்தை நோக்கிச் சென்றனென்பதும், பாஞ்சாலநகரத்தில் அர்ச்சுனன் லக்ஷ்யத்தை யறுத்து எல்லா அரசர்களுக்கும் நடுவில் திரௌபதியையடைந்தானென்பதும், அங்கே பீமசேனனும அர்ச்சுனனும், சண்டைக்குவந்த ராஜாக்களையும் சல்லியனையும் கர்ணனையும் பெரியயுத்தத்தில் தங்கள் பராக்கிரமத்தால் ஜயித்தனரென்பதும், அளவிடக்கூடாததும் மனுஷ்யர்களுக்கெட்டாததுமாகிய அவ்விருவருடைய அந்தப்பராக்கிரமத்தைக்கண்டு, மகாபுத்திமான்களாகிய பலராமகிருஷ்ணபகவானும் அவர்களைப் பாண்டவர்களென்று ஊஹித்து அவர்களுடன் ஸந்திப்பதற்காகக் குயவன்வீட்டில் அவர்கள் தங்கினஇடத்திற்குச் சென்றனரென்பதும் சொல்லப்பட்டிருக்கின்றன.

ஒருத்தி ஐவருக்குமனைவியாயிருப்பதைப்பற்றித் துருபதன்விசாரப்படுவதும், ஆச்சரியமான பஞ்சேந்திரோபாக்கியானமும், திரௌபதியின் விவாஹம் தேவர்களால் விதிக்கபபட்டதேயல்லது மானிடர்களுடையதன்றென்பதும், துரியோதனன் விதுரரைப் பாண்டவர்களிடம் அனுப்பினதும், விதுரர் போய்ச்சேர்ந்ததும், கிருஷ்ணனைக் கண்டதும், பாண்டவர்கள் காண்டவப்ரஸ்தத்தில் வஸித்ததும், பாதி ராஜ்யம் கொடுத்ததும், நாரதருடைய ஆஜ்ஞையினால் திரௌபதியைப் பற்றிப் பாண்டவர்கள் வ்யவஸ்தை செய்துகொண்டதும், அந்தவிஷயத்தில் ஸுந்தோபஸுந்தர்களென்னும் அசுரர்களின் சரித்திரமும் சொல்லப்பட்டன.

பிறகு யுதிஷ்டிரர் திரௌபதியுடன் உட்கார்ந்திருக்கும்போது வீரனானஅர்ச்சுனன் ஒருபிராமணனுக்காக உள்ளேபிரவேசித்து, ஆயுதத்தையெடுத்துக்கொண்டு பிராமணனுடைய *கோதனத்தை விடுவித்து வீடுசென்றபின் நியமத்தைக்காபபாற்றுவதற்காக வனம்சென்றதும், அவன் வனவாஸத்துக்குப்போகையில் வழியில் உலூபியென்னும் நாககன்னிகையோடு சேர்ந்ததும், புண்ணியதீர்த்தங்களுக்குப்

* பசுக்கூட்டம்.

போனதும், பப்ருவாகனனென்னும் குமாரன்ஜனித்ததும், அவ்விடத்திலேயே அர்ஜுனன், ஒருபிரம்மரிஷியின் சாபத்தால் முதலை ஜன்மமடைந்த அழகான ஊர்வு அப்ஸரஸ்களுக்குச் சாபவிமோசனம்செய்ததும், ப்ரபாஸதீர்த்தத்தில் கிருஷ்ணன் அருச்சுனனோடு சேர்ந்ததும், அர்ச்சுனன் துவாரகாநகரத்தில் தன்மீதுகாதல்கொண்ட ஸுபத்திரையின்மேல் தானும் காதல்கொண்டு கிருஷ்ணனுடைய அனுமதியினால் அவளையடைந்ததும், பெண்ணுக்குக்கொடுக்கும் சிறப்புக்களை எடுத்துக்கொண்டு தேவகியின்புத்திரராகிய கிருஷ்ணன் வந்திருந்தபோது ஸுபத்திரைக்கு உயர்ந்தசக்தியுள்ள அபிமன்யு பிறந்ததும், திரௌபதிக்குப் பிள்ளைகள் பிறந்ததும் சொல்லப்பட்டிருக்கின்றன.

கிருஷ்ணனும் அர்ச்சுனனும் வேடிக்கையாக யமுனையினருகிற் சென்றபோது கிருஷ்ணனுக்குச் சக்கரமும் அர்ச்சுனனுக்குத் தனுஸும் கிடைத்ததும், காண்டவவனத்தைத் தகனம்செய்வித்ததும், அக்கினியிலிருந்து மயனும் தக்ஷகன்புத்திரனுகிய அசுவசேனனென்னும் நாகனும் விடுபட்டதும், மந்தபால மஹரிஷிக்குச் சார்ங்கியென்னும் பக்ஷியினிடத்திற் புத்திரோத்பத்தியும் ஆகியஇவை வெகுவிரிவாகச்சொல்லப்பட்டுள்ளன. (இவைகள் அடங்கிய) இது முதன்மையான ஆதிபர்வமென்று சொல்லப்படுகின்றது.

உயர்ந்த தேஜஸ்ஸுள்ள மஹாத்மாவாகிய வியாஸமஹரிஷியினால் இருநூற்றிருபத்தேழு அத்தியாயங்களும், அவற்றில் எண்ணுயிரத்தெண்ணூற்றெண்பத்துநான்கு சுலோகங்களும் சொல்லப்பட்டன.

இரண்டாவது, அநேகவிஷயங்களடங்கிய ஸபாபர்வம்: பாண்டவர்களுடைய ஸபாநிர்மாணமும், கிங்கரர்களென்று சொல்லப்பட்ட யக்ஷர்களையும் ராக்ஷஸர்களையும் மயன்கண்டதும், தேவர்களையறிந்த நாரதர் திக்குப்பாலகர்களுடைய ஸபைகளைப்பற்றிச்சொன்னதும், ராஜஸூயயாகத்தின் ஆரம்பமும், ஜராஸந்தவதமும், ஜராஸந்தனுடைய தூர்க்கமாகிய கிரிவிரஜமென்னுமிடத்தில் சிறையில் வைக்கப்பட்டிருந்தராஜாக்களைக் கிருஷ்ணபகவான் விடுவித்ததும், பாண்டவர்களுடைய திக்குவிஜயமும் இதிற் சொல்லப்பட்டிருக்கின்றன.

ராஜஸூயமென்னும் மகாயாகத்திற்கு அரசர்கள் காணிக்கைகளோடு வருதலும், அப்படியே பரியாதையைப்பற்றினசண்டையிற் சிசுபாலவதமும், யஜ்ஞத்திலுள்ள அந்தச்செல்வத்தைக்கண்டு துக்கமும் கோபமும்கொண்ட துரியோதனனை ஸபையிற் பீமசேனன் பரிகசித்ததும், அதனால் அவனுக்குக்கோபமுண்டானதும், அதனைத்

சூதாடும்படிசெய்வித்ததும், அந்தஆட்டத்தில் தர்மபுத்ரரைச் சூதில் தோற்ந்த சகுனிவென்றதும், அந்தச்சூதாட்டமென்னும் கடலில்மூழ்கிப் பெருந்துயரம் அடைந்த மருமகளாகிய திரௌபதியை மகாபுத்திமானுகிய திருதராஷ்டிரன் கப்பல்போலிருந்து அந்தஸமுத்திரத்தினின்றும் கரையேற்றினதும், அவர்கள் கரையேறினதுதெரிந்து ராஜாவாகியதுரியோதனன் திரும்பவும் பாண்டவர்களைச் சூதாட்டத்திற்கு அழைத்ததும், பிறகு அவன் அவர்களைஜயித்து வனவாஸத்துக்கு அனுப்பினதுமாகிய இவையெல்லாம் ஸபாபர்வமாக மகாத்துமாவாகிய வியாஸரால் சொல்லப்பட்டன. அத்தியாயக்கணக்கு எழுபத்தெட்டு; பிராமணசிரேஷ்டர்களே! இந்தப்பர்வத்தில் இரண்டாயிரத்தைந்நூற்றுப்பதினைரு சுலோகங்கள் உள்ளன.

இதற்குப்பிறகு மூன்றாவதாகிய *அரண்யபர்வம்: அது பெரிது; மகாத்மாக்களாகிய பாண்டவர்கள் வனவாஸம்போனபோது புத்திமானுகிய தர்மபுத்திரரை நகரத்துஜனங்கள் பின்தொடர்ந்ததும்,மகாத்மாவாகிய தர்மராஜா பிராமணர்களைக்காப்பாற்றுவதற்குரிய அன்னத்திற்காகவும் காய்கறிக்காகவும் தௌம்யமுனியின் உபதேசத்தினுற் சூரியனை ஆராதனஞ்செய்ததும், சூரியனுடைய அனுக்கிரகத்தினுல் அன்னம்கிடைத்ததும், ஹிதம்சொல்லுகிற விதுரரைத் திருதராஷ்டிரன் விட்டுவிட்டதும், திருதராஷ்டிரன்விட்டபிறகு, விதுரர் பாண்டவர்களிடம்சென்றதும், மறுபடியும் திருதராஷ்டிரன் கட்டளையினுல் அவர் திரும்பிச்சென்றதும், கர்ணனுடைய தூண்டுதலினுல் துர்ப்புத்தியுள்ள திருதராஷ்டிரபுத்திரனுகிய துரியோதனன் வனத்திலிருந்த பாண்டவர்களைக் கொல்ல ஆலோசித்ததும், அவனுடைய கெட்ட அபிப்பிராயத்தையறிந்து வியாஸர் விரைந்துவந்ததும், பிரயாணத்தைத்தடுத்ததும், ஸுரபியின் உபாக்கியானஞ்சொன்னதும், மைத்திரேயர்வந்ததும், திருதராஷ்டிரமகாராஜாவுக்குப புத்திசொன்னதும், அவரே ராஜாவாகிய துரியோதனனுக்குச சாபங்கொடுத்ததும், பீமசேனன் யுத்தத்தில் கிர்மீரனைக்கொன்றதும், சகுனியினுல் சூதாட்டத்தில் மோசமாக அவர்கள் ஜயிக்கப்பட்டதைக்கேட்டு யாதவர்களும் பாஞ்சாலர்களுமாகிய யாவரும்வந்ததும், கோபித்துக்கொண்ட கிருஷ்ணனை அர்ச்சுனன் சமாதானஞ்செய்ததும், கிருஷ்ணனிடத்தில் திரௌபதி புலம்பினதும், துக்கத்தினுல் வருந்தின அவளைக் கிருஷ்ணன் தேற்றினதும், ஸௌபவதசரித்திரமும் மகரிஷியினுல் இங்கே சொல்லப்பட்டுள்ளன.

* காட்டில்நடந்தது.

சுபத்திரையைப் புத்திரனுடன் துவாரகாநகரத்திற்குக் கிருஷ்ணன் அழைத்துக்கொண்டுபோனதும், திரௌபதியின்புத்திரர்களைத் திருஷ்டத்யும்னன் அழைத்துக்கொண்டுபோனதும், பிறகு பாண்டவர்கள் ரம்யமானத்வைதவனத்திற்பிரவேசித்ததும், தர்மராஜாவுக்குத் திரௌபதியோடும் பீமசேனனோடும் ஸம்வாதம்நடந்ததும், வியாஸர் பாண்டவர்களிடம் வந்ததும், பிறகு, வியாஸமகரிஷி பிரதிஜ்ஞை செய்து தர்மராஜாவுக்கு வித்தையைக்கொடுத்ததும், வியாஸர்திரும்பிச்சென்றபிறகு காம்யகவனம்போனதும், அளவற்றசக்தியுள்ள அர்ச்சுனன் பாசுபதாஸ்திரத்திற்காகப் பிரிந்துபோனதும், அவன் வேடவேஷம்பூண்ட ஈசுவரனோடு யுத்தஞ்செய்ததும், திக்குப்பாலகர்களைக் கண்டதும், அவனுக்கு அஸ்திரம்கிடைத்ததும், அஸ்திரத்திற்காக அவன் இந்திரலோகம்போனதும், அதனால் திருதராஷ்டிரனுக்கு மிகப் பெரிய கவலையுண்டானதும், ஆத்மஜ்ஞானியாகிய பிருஹதச்வமகரிஷியை யுதிஷ்டிரர் கண்டதும், துயரம்தாங்காமல் அவர் புலம்பினதும், அந்தஇடத்தில் தமயந்தியின் நியமமும் நளனுடையசரித்திரமுஞ் சேர்ந்த சிறந்த தருமமுள்ளதும் கருணைமிகுந்ததுமாகிய நளோபாக்யானமும், பிருஹதச்வ மஹரிஷியிடமிருந்து தர்மராஜா அக்ஷஹ்ருதயமென்னும் சூதாட்டத்தின் ரஹஸ்யத்தை அறிந்துகொண்டதும், சுவர்க்கத்திலிருந்து பாண்டவர்களிடம் லோமசமகரிஷி வந்ததும், வனவாசம்செய்துகொண்டிருந்த மஹாத்துமாக்களாகிய பாண்டவர்களுக்கு அர்ச்சுனன் சுவர்க்கத்திலிருக்கும்சமாசாரத்தை லோமசர்சொன்னதும், அர்ச்சுனனுடைய சமாசாரம் தெரிந்தபிறகு யுதிஷ்டிரர்செய்த தீர்த்தயாத்திரையின் ஆரம்பமும், நாரதமகரிஷி தீர்த்தங்களின் பரிசுத்தத்தையும் பலன்களையும் புலஸ்தியருடைய தீர்த்தயாத்திரையையும் சொல்வதும், மகாத்மாக்களாகிய பாண்டவர்களின் தீர்த்தயாத்திரையும், கயனென்னும் ராஜரிஷியுடையயஜ்ஞத்தின் சிறப்பும் இதிற் சொல்லப்பட்டுள்ளன.

அகஸ்தியமகரிஷி வாதாபியைப்பக்ஷித்ததும் அவர் ஸந்ததிக்காக லோபாமுத்திரையை ரணஞ்செய்துகொண்டதுமாகிய அகஸ்திய உபாக்யானமும், சிறுபிராயத்திலேயே ஜிதேந்திரியராக இருந்த ரிச்ய சிருங்கருடைய சரித்திரமும், ஜமதக்கினியின் புத்திரரும் மகாசக்திமானுமாகிய பரசுராமருடைய சரித்திரமும், அதில் கார்த்தவீரியார்ச்சுனனையும் ஹைஹயமேதசத்து மற்ற ஆசர்களையும் பரசுராமர்வதஞ் செய்ததும் வர்ணிக்கப்படுகின்றன.

பிரபாஸ தீர்த்தத்திற் பாண்டவர்களும் யாதவர்களும் சந்தித்த

தும், பிருகுபுத்திரராகிய ச்யவனமுனி சர்யாதிமுனிவருடைய யாகத்தில் அசுவினிதேவர்களுக்கு ஸோமபானம் செய்வித்ததையும் அசுவினிதேவர்கள் இந்தச்சியவனமுனிக்கு யௌவனம் கொடுத்ததையும் பற்றிய ஸுகன்னியின் உபாக்கியானமும், மாந்தாதாவென்னும் ராஜாவின் உபாக்கியானமும் இதிற்சொல்லப்பட்டிருக்கின்றன.

ஸோமகன் புத்ரவரம்வேண்டி ஜந்துவென்னும் தன்புத்திரனைப் பசுவாகச்செய்து யாகஞ்செய்ததனால் நூறுபுத்திரர்களை யடைந்ததைப்பற்றிய ஜந்து உபாக்கியானமும், அதன்மேல் இந்திரனும் அக்கினியும் தர்மதேவதையும் சிபிசக்கரவர்த்தியைப் பரீட்சைசெய்த சேனகபோதீயமென்னும் சிறந்த உபாக்கியானமும், மகாத்மாவாகிய அஷ்டாவக்ரரென்னும் பிரம்மரிஷி ஜனகருடைய யாகத்தில் தார்க்கிகரிற் சிறந்தவரும் வருணபுத்திரருமாகிய வந்தியென்பவருடன் விவாதஞ்செய்து அவரைத் தம் வாதத்தன்மையினால் வென்று, வந்தியினால் ஸமுத்திரத்தில் அமிழ்த்தப்பட்டிருந்த தம் பிதாவை ஜயத்தினால் திரும்பப் பெற்றுக்கொண்டுவந்ததுமாகிய அஷ்டாவக்ரோபாக்கியானமும், யவக்ரீதோபாக்கியானமும், மஹாத்மாவாகிய ரைப்பியருடைய உபாக்கியானமும், பாண்டவர்கள் கந்தமாதனமலைக்கு யாத்திரைசெய்ததும், நாராயணரிஷியின் ஆச்ரமத்தில் வஸித்ததும், பலசாலியான பீமஸேனன் திரௌபதியினால் ப்ரேரிக்கப்பட்டுக் கந்தமாதன பர்வதத்திற்போகும்போது வழியில் வாழைத்தோட்டத்தின் நடுவிலிருந்த மகாபலசாலியும் வாயுபுத்ரருமான ஹனுமானைக்கண்டதும், அந்தக் கந்தமாதனத்தில் செங்கழுநீர்ப் புஷ்பத்திற்காகப் பீமஸேனன் அந்தத் தடாகத்தைக் கலக்கினதும், அங்கே பீமஸேனனுக்கு மணிமான் முதலிய மிகுந்த பராக்கிரமமுள்ள ராக்ஷஸர்களோடும் யக்ஷர்களோடும் மிகப்பெரிய யுத்தம்நடந்ததும், ஜடாஸுரனென்னும் ராக்ஷஸனைப் பீமஸேனன் வதஞ்செய்ததும், பிறகு விருஷபர்வாவென்னும் ராஜரிஷியைச் சந்தித்ததும், இவர்கள் ஆர்ஷ்டிஷேணரிஷியின் ஆச்ரமத்திற்குச்சென்றதும், அங்கே வஸித்ததும், மகாத்மாவாகிய பீமஸேனனைத் திரௌபதி புஷ்பத்துக்காக அனுப்பினதும், அவன் கைலாஸமேறினதும், அவன் பலத்தினால்கர்வித்த மணிமான்முதலிய யக்ஷர்களோடு மிகப்பயங்கரமான யுத்தஞ்செய்ததும், பாண்டவர்கள் குபேரனைச்சந்தித்ததும், அங்கே அர்ச்சுனன் தேவாஸ்திரங்களை அடைந்து தன் ஸஹோதரர்களோடுசேர்ந்ததும், இந்திரனுக்குக் குருதக்ஷிணையாக ஹிரண்யபுரத்தில் வசிப்பவர்களும் பயங்கரர்களும் தனுவின்புத்திரர்களும் தேவர்களுக்குச் சத்துருக்களுமாகிய நிவாதகவசர்களோடும்

தைம்பது சுலோகங்கள் இந்தப்பருவத்தில் வியாஸமகரிஷியினால் சொல்லப்பட்டன.

இதன்பின், ஐந்தாவதாகிய உத்தியோகபர்வம் அறியத்தக்கது. அதைக்கேளும்; *உபப்பிலாவியமென்னும் ஸ்தலத்தில் பாண்டவர்கள் ஜயிக்கவேண்டுமென்கிறவிருப்பத்துடன் தங்கியிருக்கையில், துரியோதனனும் அர்ச்சுனனும் வாஸுதேவரிடம் வந்தனரென்பதும், அதில், "எங்களிருவருக்கும் இந்தயுத்தத்தில் நீர் உதவிசெய்தற்குரியவர்" என்றவாக்கியத்தை அவர்கள் சொல்லியபோது, பேரறிவாளராகிய கிருஷ்ணபகவான், "புருஷசிரேஷ்டர்களே! சண்டைசெய்யாமற் புத்திசொல்லிக்கொண்டுமாத்திரமிருக்கிறநான் ஓருபக்கமும், என்னுடைய ஓர் அக்ஷௌஹிணி சேனை மற்றொருபக்கமுமாக இருத்தல்கூடும்; நான் யாருக்கு எதைக்கொடுக்கட்டும்" என்று கேட்டனரென்பதும், புத்திகுறைந்தவனும் புத்திகெட்டவனுமாகிய துரியோதனன் சேனையை அபேக்ஷித்தனனென்பதும், தனஞ்சயன் சண்டைசெய்யாமற் புத்திசொல்லுமா கிருஷ்ணரையே விரும்பினனென்பதும், மத்திராஜனாகிய சல்லியன் பாண்டவர்களுக்குரித்து வருகையில் துரியோதனன் வழியிலேயே உபசாரங்களைச்செய்து வஞ்சித்து, வரங்கொடுக்க ஆரம்பித்த அந்தச்சல்லியனிடம் யுத்தத்தில் தனக்கு உதவிசெய்யவேண்டுமென்ற வரத்தைக்கேட்டதும், சல்லியன் அவனுக்கு வாக்குத்தத்தம் செய்துவிட்டுப் பாண்டவர்களை நோக்கிச் சென்று அவர்களைச் சமாதானஞ்செய்து இந்திரன் விருத்திராசுரனை ஜயித்தகதையைச்சொன்னதும், பாண்டவர்கள் கௌரவர்களிடம் தூருபதராஜாவின் புரோகிதரை அனுப்பியதும், திருதராஷ்டிரனுடைய சொல்லியும் அர்ச்சுனன் இந்திரனை ஜயித்ததைப்பற்றிப் பீஷ்மர் சொன்னகுறிப்பையும் கேகித்துக்கொண்டு புரோகிதர் திரும்பிப் போனதும், பரக்கிரமசாலியாகிய திருதராஷ்டிரமகாராஜா ஸமாதானத்துக்காகப பாண்டவர்களிடம் ஸஞ்சயனைத் தூதனுப்பினதும், பாண்டவர்களுக்குக் கிருஷ்ணபகவான் முன்னிற்பதைக்கேட்டுக் கவலையினால் திருதராஷ்டிரனுக்கு நித்திரையில்லாமலிருந்ததும், அந்தக்காலத்தில் விதுரர் அற்புதமும் ஹிதமுமான வசனங்களைப் புத்திசாலியான திருதராஷ்டிரமகாராஜாவுக்குச் சொன்னதும், மனஸ்தாபங்கொண்டு துக்கத்தினால் தளர்ந்த ராஜாவுக்கு ஸனத்ஸுஜாதர் மிகச்சிறந்த ஆத்மஞானத்தைச் சொன்னதும், ஸஞ்சயன் விபுயற்காலையில் ராஜஸபையில் பிரபுவான வாஸுதேவருக்கும் அருச்சுனனுக்குமுள்ள

* விராடராஜனுக்கு உரியதோர்நகரம்.

ஒருமையை உரைத்ததும், பேரறிவாளராகிய கிருஷ்ணபகவான் தயை கூர்ந்து ஸந்தியை விரும்பினவராகி விரோதசமனம்செய்வதற்குத் தாமே ஹஸ்தினபுரம் சென்றதும், இரண்டுபக்கங்களுக்கும் ஹிதமான ஸமாதானத்தைப்பற்றிக் கேட்டுக்கொண்ட கிருஷ்ணனைத் துரியோதனன் நிராகரித்ததும், தம்போத்பவனுடைய கதையும் இங்கே சொல்லப்பட்டன.

மகாத்மாவாகிய மாதலி பெண்ணுக்கு வரன்தேடினதும், காலவமகரிஷியினுடைய சரித்திரமும், விதுலையென்பவள் தன்புத்திரனுக்குப் புத்திசொன்னதும், கர்ணன் துரியோதனன்முதலான ராஜாக்களுடைய கெட்டஎண்ணத்தைபரிந்து கிருஷ்ணபகவான் தாம் பரமேசுவரனென்பதை விச்வரூபத்தாற் காட்டியதும், அவர் கர்ணனைத் தம் தேரிலேற்றிக்கொண்டு உபாயங்களினால் மித்ரபேதஞ் செய்ததும், அவன் கர்வத்தினால் அதைத்தள்ளிவிட்டதும், எதிரிகளை அடக்குகிறவராகிய கிருஷ்ணபகவான் ஹஸ்தினபுரத்திலிருந்து உபப்லாவ்யத்துக்கு வந்து பாண்டவர்களுக்கு எல்லாவற்றையும் நடந்தபடி சொன்னதும், அந்தவீரர்கள் அவர்சொல்லைக்கேட்டு ஹிதத்தை ஆலோசித்துப் பிறகு யுத்தத்துக்கு வேண்டியவற்றையெல்லாம் ஆயத்தஞ் செய்ததும், பிறகு பதாகைகளும் குதிரைகளும் ரதங்களும் யானைகளும் ஹஸ்தினபுரத்திலிருந்து யுத்தத்திற்குப் புறப்பட்டதும், சைனியங்களைக் கணக்கிட்டதும், ராஜாவான துரியோதனன் பெரிய யுத்தம் நாளைத்தினம் நடப்பதாயிருக்கையிற் பாண்டவர்களிடம் உலூகனைத் தூதனாக அனுப்பினதும், பீஷ்மர் இரண்டுசேனைகளிலுமுள்ள ரதர்களையும் அதிரதர்களையும் கணக்கிட்டதும், அம்போபாக்கியானமும் ஆகிய இந்த அநேகவிஷயங்களடங்கியதும் ஸந்திவிக்ரஹங்கள் சேர்ந்ததுமான பாரதத்தின் ஐந்தாவதுபர்வம் உத்யோகபர்வமென்று சொல்லப்பட்டது. மகரிஷியினால் நூற்றெண்பத்தாறு அத்தியாயங்கள் சொல்லப்பட்டன. முனிவர்களே! மகாத்மாவும் உத்கிருஷ்டபுத்தியுள்ளவருமாகிய வியாஸரால் ஆருயிரத்தறுநூற்றுத் தொண்ணூற்றெட்டுச் சுலோகங்கள் இந்தப்பர்வத்திற் சொல்லப்பட்டன.

இதன்பின், அத்புதமானவிஷயம் அடங்கிய பீஷ்மபர்வம்: இதில் ஜம்பூத்வீபத்தின் நிர்மாணம் ஸஞ்சயனால் உரைக்கப்பட்டது. யுதிஷ்டிரருடையசேனை பெருந்துயரமடைந்ததும், பத்துத்தினங்கள் பயங்கரமான கடும்போர்நடந்ததும், மகாஞானியாகிய வாஸுதேவன் அர்ச்சுனனுக்குத் தத்துவஞானமில்லாமையினால் உண்டான தர்மாதர்மப்ரமத்தை, மோக்ஷஸ்வரூபத்தை யறிவிக்கின்ற நியாயங்களினாலே

நிவர்த்திசெய்ததும், யுதிஷ்டிரருடைய நன்மையில் ஊக்கமுள்ள வரும் புலன்களுக்கெட்டாதவரும் உயர்ந்தஞானமுள்ளவருமாகிய கிருஷ்ணமூர்த்தி பீஷ்மரைப்பார்த்து உடனே தேரிலிருந்து வேக மாகத்தாண்டிப் பயமற்றவராகச் சாட்டையுங்கையுமாய்த் தாமே அவ ரைக்கொல்ல விரைந்து ஓடினதும், காண்டீவமென்னும் சிறந்த தனு ஸைவகித்தவனும் எல்லா ஆயுததாரிகளுக்குள்ளேயும் சிறந்தவனு மாகிய அர்ச்சுனன் யுத்தத்திற் கிருஷ்ணனுடைய சொல்லினுற் சாட் டையடிபட்டவன்போற் சிகண்டியை முன்னிட்டுக்கொண்டு கூர்மை யையுடைய பாணங்களினுல் அடித்துப் பீஷ்மரைத்தரிணின்றும் தள்ளினதும், பீஷ்மர் சரதல்பத்திற் படுத்தவராக இருந்ததும் விரி வாகஅடங்கிய இது பாரதத்தில் விஸ்தாரமான ஆறுவது பருவமென்று சொல்லப்பட்டது. இந்தப்பீஷ்மபர்வத்தில் நூற்றுப்பதினேழ் அத் தியாயங்கள் என்றும், ஐயாயிரத் தெண்ணூற் றெண்பத்து நான்கு சுலோகங்கள் என்றும் வேதவித்வாணுகிய வியாஸமகரிஷியினுற் கணக் கிடப்பட்டன.

அதன்பின் அநேகவிஷயங்கள் அடங்கினதும், விசித்திரமுமாகிய துரோணபர்வம் சொல்லப்படுகின்றது. அதில், பீஷ்மருக்குப்பின் பராக்கிரமசாலியாகிய துரோணசாரியர் ஸேனுதிபதியாகப் பட்டாபி ஷேகம் செய்யப்பட்டதும், சிறந்த அஸ்திரங்களை அறிந்த துரோணர் துரியோதனனை உத்ஸாகப்படுத்தும்பொருட்டுப் புத்திமானுகிய தர்ம ராஜாவைப் பிடிப்பதாக வாக்குத்தத்தம் செய்ததும், ஸம்சப்தகர்கள் அர்ச்சுனனை யுத்தகளத்தினின்றும் தூரத்திற்கொண்டுபோனதும், யுத்தத்தில் இந்திரனுக்குச்சமானமாகிய பகதத்தமகாராஜா ஸுப்ரதீக மென்னும் யானையோடுகூட அர்ச்சுனனுற் கொல்லப்பட்டதும், யௌ வனத்தையடையாத பாலனும் சூரனுமாகிய, அபிமன்யு ஒருவனை ஜயத்ரதன்முதலிய மகாரதர் அநேகர்கள்சேர்ந்து கொன்றதும், அபி மன்யுவதத்தினுற் கோபங்கொண்ட அர்ச்சுனன் யுத்தத்தில் ஏழ் அக்ஷௌஹிணிகளைக்கொன்று ஜயத்ரதராஜாவைக்கொன்றதும், சிற ந்த கைகளுள்ள பீமனும் பெருந்தேராளியாகிய ஸாத்யகியும் தர்ம ராஜாவின் ஆஜ்ஞையினுல் அர்ச்சுனனைத்தேடிவதற்காகத் தேவர்க ளாலும் கலக்கமுடியாத கௌரவசேனையில் ப்ரவேசித்ததும், ஸம்சப் தகர்களில் மிஞ்சியவர்களையும் யுத்தத்தில் மிச்சமில்லாமற் செய்ததும் சொல்லப்பட்டன; அர்ச்சுனன் சேனையைவிட்டு வெளியேபோய் மகாத்மாக்களும் வீரர்களுமாகிய ஒன்பதுகோடி ஸம்சப்தகர்களை யமன்வீட்டுக்கு அனுப்பினதும், கற்களினுற் சண்டைசெய்கிற திருத

சாஷ்டிராபுத்திரர்களும், யுத்தத்தில் விசித்திரமாகச் சண்டைசெய்யும் நாராயணர்களென்று சொல்லப்பட்ட கோபாலர்களும், அலம்புஷனும், சுருதாயுஸும், வீரனுகிய ஜலஸந்தனும், ஸௌமதத்தியும், விராடனும், மகாரதனுகிய துருபதனும், கடோத்கசன்முதலான மற்றவர்களும் கொல்லப்பட்டார்களென்பதும் துரோணபர்வத்தில் சொல்லப்பட்டன; துரோணர் யுத்தத்திற் கொல்லப்பட்டபோது, அசுவத்தாமாவும் கோபங்கொண்டவராய் உக்கிரமான நாராயணஸ்த்ரத்தைப் பிரயோகித்ததும், ஆக்கினேயமென்பதாகிய உத்தமமான ருத்திரமாகாத்மியம் சொல்வதும், வியாஸருடைய வரவும், கிருஷ்ணர்ச்சுனர்களின் மகிமையும் சொல்லப்பட்டன; இது மஹாபாரதத்தில் சிறந்ததாகிய ஏழாவதுபருவமென்று சொல்லப்படுகிறது. இந்தத் துரோணபர்வத்திற் சூரர்களும் புருஷசிரேஷ்டர்களுமாகப் பெயர்பெற்ற ராஜாக்கள் பெரும்பான்மையும் மரணமடைந்தனர். இந்தத் துரோணபருவத்தில் நூற்றெழுபது அத்தியாயங்களென்றும் எண்ணூயிரத்துத்தொள்ளாயிரத்தொன்பது சுலோகங்களென்றும் தத்வஜ்ஞானியாகிய வியாஸமகரிஷியினுல் நன்முகநிணைத்துக் கணக்கிடப்பட்டன.

இதன்மேல் மிக அத்புதமான கர்ணபர்வம் சொல்லப்பட்டது. இதில் புத்திசாலியான சல்லியனை ஸாரதியாக நியமித்ததும், புராதனசரித்திரமாயுள்ள திரிபுரஸம்ஹாரமும், யுத்தப்பிரயாணத்தில் கர்ணனுக்கும் சல்லியனுக்கும் நடந்த குரூரமான ஸம்வாதமும், தூஷணமடங்கிய *ஹம்ஸகாகீயம் என்னும் கதையும், பாண்டியன், தண்டஸேனன், தண்டன் இம்மூவரையும் மகாத்மாவான அசுவத்தாமா வதஞ்செய்ததும், தர்மராஜாவாகிய யுதிஷ்டிரரும் கர்ணனும் இரண்டு தேராளிகளாகச் சண்டைசெய்தபோது வில்லாளிகள் யாவரும் பார்த்திருக்கையில் கர்ணனுல் யுதிஷ்டிரருக்குப் பிராணஸங்கடமுண்டாக்கப்பட்டதும், யுதிஷ்டிரருக்கும் அர்ச்சுனனுக்கும் பரஸ்பரம் கோபமுண்டானதும், அந்தச்சமயத்திற் கிருஷ்ணன் அர்ச்சுனனை ஸமாதானப்படுத்தியதும், பீமஸேனன் பிரதிஜ்ஞைசெய்து துச்சாஸனன் மார்பைப்பிளந்து யுத்தத்தில் ரக்தத்தைக்குடித்ததும், கர்ணனும் அர்ச்சுனனும் இரண்டுதேராளிகளாகச் செய்தசண்டையில் மகாரதனுகிய கர்ணனை அர்ச்சுனன் கொன்றதும் சொல்லப்பட்டன. பாரதம் தெரிந்தவர்கள் இதை எட்டாவதுபர்வமென்பர். இந்தப்பர்வத்தில் அத்தியாயங்கள் அறுபத்தொன்பதென்றும், சுலோகங்கள் நாலாயிரத்துத்தொள்ளாயிரத்தறுபத்துநான்கென்றும் சொல்லப்பட்டன.

* அன்னங்களுக்கும் காக்கைகளுக்கும் நடந்தது.

இதன்பின் விசித்திரமானவிஷயம் அடங்கிய சல்லியபர்வம் சொல்லப்பட்டது. இதில் ஸேனையில் தலைவர்கள் எல்லாரும் இறந்தபோது சல்லியன் சேனபதியானதும், கௌரவகுமாரர்களுடைய விருத்தாந்தமும், சல்லியனுக்கு அபிஷேகம்செய்ததும், பிறகு பாகம் பாகமாகப் பிரிந்துசெய்த யுத்தங்களும், கௌரவர்களுள் முக்கியமானவர்களுடைய நாசமும், மகாத்துமாவாகிய தர்மராஜா சல்லியனை வதஞ்செய்ததும், ஸஹதேவன் யுத்தத்திற் சகுனியை வதஞ்செய்ததும், ஸைனியம் பெரும்பாலும் அடிபட்டுக் கொஞ்சமாக மிஞ்சியிருக்கையில் துரியோதனன் மடுவிற்புகுந்து ஜலத்தை ஸ்தம்பனஞ் செய்து அங்கேயிருந்ததும், அவனுடைய விருத்தாந்தத்தை வேடர்கள் பீமனுக்குச்சொல்ல, அதனாலே புத்திமானாகிய தர்மராஜா தூஷித்துச்சொன்ன சொற்களினால் ரோஷங்கொண்டு திருதராஷ்டிரபுத்திரன் மடுவிலிருந்து எழுந்துவந்து பீமனோடு கதாயுத்தம் செய்ததும், யுத்தஸமயத்தில் பலராமருடைய வரவும், ஸர்வதீர்த்தமுதலிய தீர்த்தங்களுடைய புண்ணியத்தன்மையைச் சொன்னதும், கடுமையான கதாயுத்தமும், யுத்தத்திற் பீமஸேனன் பயங்கரமான வேகமுள்ள கதையினால் பலாத்காரமாக ராஜாவாகிய துரியோதனனுடைய தொடைகளை முறித்ததும் சொல்லப்பட்டன. ஆச்சரியமும் அநேக விஷயங்களடங்கியதுமாகிய இம்மூன்று ஒன்பதாவதுபர்வமாகக் குறிக்கப பட்டது. இந்தப்பர்வத்தில் அநேகவிருத்தாந்தங்கள் அடங்கிய ஐம்பத்தொன்பது அத்தியாயங்கள் எண்ணப்பட்டன. இவற்றிலுள்ள சுலோகங்களின் ஸங்கியைபைச்சொல்லுகிறேன்; கௌரவர்களின் கீர்த்தியை விருத்திசெய்கிற மகரிஷியினால் மூவாயிரத்திருநூற்றிருபது சுலோகங்கள் செய்யப்பட்டன.

இதன்பின், கொடுமையான ஸௌப்திகபர்வம் சொல்லப்போகிறேன்: தொடைமுறிந்துபோய் ரத்தத்தினால் நனைக்கப்பட்டு யுத்தகளத்தின் முன்னிடத்தில் விழுந்த, அபிமானத்தைத்தாங்காத துரியோதனராஜனைப் பாண்டவர்கள் விட்டுப்போனபிறகு, ஸாயங்காலத்தில் கிருதவர்மா, கிருபர், அசுவத்தாமா இம்மூன்று ரதிகர்களும் வந்து கண்டனரென்பதும், அவர்களுள் உறுதியான கோபமுள்ள மகாரதராகிய அசுவத்தாமா, "திருஷ்டத்யும்னன்முதலான பாஞ்சாலராஜர்கள் யாவரையும் பாண்டவர்களையும் அவர்களின் மந்திரிகளையும் கொல்லாமற் கவசத்தைக் கழற்றேன்" என்று பிரதிஜ்ஞை செய்து அதனை ராஜாவுக்குச்சொல்லி அம்மூன்று ரதிகர்களும்போய், சூரியாஸ்தமனகாலத்தில் ஒரு பெரியவனத்தை யடைந்தனரென்ப

தும், பிறகு அங்கே ஒருபெரிய ஆலமரத்தின்கீழே இருந்தனரென் ப்தும், பிறகு இராத்திரியில் ஒரு கோட்டானாற் பலகாக்கைகள் ஹிம் ஸிக்கப்பட்டதைக்கண்டு அசுவத்தாமா தம் பிதாவினுடைய வதத்தை நினைத்துக் கோபத்தினால் ஆவேசங்கொண்டு, பாஞ்சாலர்கள் நித் திரைசெய்யும்போது வதஞ்செய்ய நிச்சயித்தாரென்பதும், கூடாரத் தின்வாயிலிற் சென்று அங்கே பார்க்கக்கூடாத பயங்கரஉருவத்தோடு ஆகாயத்தை மறைத்துநிற்கின்ற ராக்ஷஸனை அவர் கண்டாரென்பதும், அவனால் தம்முடைய அஸ்திரங்கள் தடுக்கப்பட்டதைக்கண்டு, அசுவத் தாமா, துரிதமாக முக்கண்ணராகிய ருத்திரரை ஆராதனஞ்செய்து கிருதவர்மாவோடும் கிருபாசார்யரோடும்சேர்ந்து, இராத்திரியிற் கவலையில் லாமல் தூங்கிக்கொண்டிருந்த திருஷ்டத்யும்னன்முதலிய பாஞ்சாலர் களையும், திரௌபதியின் புத்திரர்களெல்லாரையும், பரிஜனங்களையும் கொன்றாரென்பதும், அந்தப்பாண்டவர்கள் ஐவரும் பெரியவில்லாளி யான ஸாத்யகியும் கிருஷ்ணனுடையபலத்தை ஆச்ரயித்ததினால் விடு பட்டனரென்பதும், மற்றவர்கள் மரணமடைந்தனரென்பதும், அசு வத்தாமா தூங்கிக்கொண்டிருந்த பாஞ்சாலர்களைக்கொன்றதைத் திரு ஷ்டத்யும்னனுடைய ஸாரதி பாண்டவர்களுக்குத்தெரிவித்தானென்ப தும், திரௌபதியானவள் புத்திரசோகத்தாலும், பிதா ஸோதரன் இவர்களுடைய வதத்தினாலும், துக்கமுற்றவளாகிச் சாப்பிடுவதில்லை யென்று நிச்சயஞ்செய்துகொண்டு தன்பர்த்தாக்கள் சமீபத்தில் *உட் கார்ந்தாளென்பதும், பயங்கரமான பராக்கிரமமுள்ள பீமன், திரௌ பதியின் சொல்லைக்கேட்டு அவளுக்குப் பிரியத்தைச் செய்யக்கருதி, கதாயுதத்தையெடுத்துக்கொண்டு மிக்ககோபத்துடன் தன்குருபுத்தி ராகிய அசுவத்தாமாவைத் துரத்தினனென்பதும், பீமசேனனிடம் பயந்த அசுவத்தாமா விதியினால் மதிகொடுக்கப்பட்டு, கோபத்தினால், †"அபாண்டவாய" என்றுசொல்லி, அஸ்த்ரத்தை விடுத்தாரென் பதும், கிருஷ்ணபகவான் அவருடைய அந்தச்சொல்லைத் தடுத்து, "இப்படியாவதில்லை" என்று சொன்னாரென்பதும், அர்ச்சுனன், அந்த அஸ்திரத்தைத் தன் அஸ்திரத்தினால அடக்கினனென்பதும், அப்போது பாபசித்தமுள்ள அசுவத்தாமாவினுடைய துரோகபுத்தி யைக்கண்டு, அவருக்கு வியாஸர்முதலியவர்களால் சாபங்கள்கொடுக் கப்பட்டனவென்பதும், மகாதாரகியாகிய அசுவத்தாமாவினுடைய தலை யிலுள்ள ரத்தினத்தைக்கவர்ந்து ஜயத்தினால் பிரகாசிக்கின்ற பாண்ட

---

* 'தன் பர்த்தாக்களை நிர்ப்பந்தித்தாள்' என்பது பழையஉரை.

† பாண்டுவம்சத்தார் இல்லாமற்போவதற்காக.

வர்கள் மகிழ்ச்சியுடன் திரௌபதிக்குக்கொடுத்தனரென்பதுமாகிய விஷயங்களடங்கிய இது, பத்தாவது ஸௌப்திகபர்வமென்று சொல்லப்படுகிறது. இந்தப்பர்வத்தில் மகாத்மாவும் பிரம்மநிஷ்டருமான வியாஸராற் பதினெட்டுஅத்தியாயங்களும் எண்ணூற்றெழுபதுசுலோகங்களும் சொல்லப்பட்டன. சிறந்த பிரபாவத்தைத் தெரிவிக்கின்ற ஸௌப்திகம், ஐஷீகம் இவ்விரண்டுபர்வங்களும் ஒன்றுசேர்ந்தவை.

இதற்குமேல் சோகம் உண்டாவதைப்பற்றிய ஸ்திரீபர்வம்: அதில் புத்திரசோகத்தினால் மிகுந்த தாபங்கொண்டவனும் அறிவே கண்ணாகவுடையவனுமான அந்தத் திருதராஷ்டிரமகாராஜன், கிருஷ்ணனாற் கொண்டுவரப்பட்ட திடமான இருப்புப்பதுமையைப் பீமசேனனைக் கொல்லுகிற எண்ணத்துடன் முறித்துவிட்டதும், புத்திமானுகிய திருதராஷ்டிரன் வியஸனத்தினால் அவ்வாறு கொதிப்புற்ற போது, விதுரர் மோக்ஷஞானத்திற்குக் காரணமாகிய நியாயங்களினால் புத்தியினாலே ஸம்ஸாரத்தை ஒழித்துவிடுவதையே ஸமாதானமாகச் சொன்னதும், வ்யஸனத்தினால் வருத்தமுற்ற திருதராஷ்டிரன் அந்தப்புரஸ்திரீகளுடன் கௌரவர்களுடைய போர்க்களத்துக்குப் போனதும், வீரபத்தினிகள் மிகுந்தவ்யஸனத்துடன் புலம்பினதும், காந்தாரிக்கும் திருதராஷ்டிரனுக்கும் கோபாவேசம் வந்ததும், அவர்கள் மூர்ச்சித்ததும், சூரர்களும் யுத்தத்திற் புறங்காட்டாதவர்களுமாகிய புத்திரர்களும் ஸஹோதரர்களும் தந்தைகளும் போரில் அடிபட்டிருந்ததை க்ஷத்திரியஸ்திரீகள் கண்டதும், புத்திரர்களும், பௌத்திரர்களும் வதம்பண்ணப்பட்டதனால் துயரமடைந்த காந்தாரிக்குக் கிருஷ்ணபகவான் கோபத்தைச் சமனம் செய்ததும், தர்மிஷ்டர்கள் எல்லாரிலும் சிறந்தவரும் சிறந்த புத்திமானுமாகிய தர்மராஜா ராஜாக்களுடைய அந்தச் சரீரங்களைச் சாஸ்திரப்படி தகனஞ்செய்வித்ததும், ராஜாக்களுக்கு ஜலதர்ப்பணஞ்செய்ய ஆரம்பித்தபோது குந்தி தனக்கு ரஹஸ்யமாகப் பிறந்த புத்திரனை கர்ணனுக்கும் ஜலதர்ப்பணஞ் செய்யச் சொன்னதும் இந்தப் பர்வத்தில் வியாஸமகரிஷியினால் சொல்லப்பட்டன. இது பதினோராவதுபர்வம்; வியஸனத்துக்கும் தளர்ச்சிக்கும் காரணமானது; ஸாதுஜனங்களுக்கு மனத்தளர்ச்சியும் கண்ணீரும் உண்டாகும்படி செய்யப்பட்டிருக்கிறது; இந்தப் பர்வத்தில் இருபத்தேழுத்தியாயங்கள் சொல்லப்பட்டன; எழுநூற் றெழுபத்தைந்து சுலோகங்களென்று எண்ணப்பட்டன. இவ்வாறு பாரதகதையானது சிறந்த ஞானமுள்ள வியாஸராற் சொல்லப்பட்டது.

இதன்பின்பு புத்தியை விருத்திசெய்யத்தக்க சாந்திபர்வம்: அதில் பிதுர்க்களையும் ஸகோதரர்களையும் புத்திரர்களையும் உறவினர்களையும் மாதுலர்களையும கொல்வித்து, தருமராஜாவாகிய யுதிஷ்டிரர் வெறுப்புற்றதும், பீஷ்மர் சரதல்பத்திலிருந்து சொன்ன தர்மங்களும், நல்ல ஞானம்பெற விரும்புகின்ற ராஜாக்கள் அறியவேண்டியதர்மங்களும், காலத்தினுலும் நிமித்தங்களினுலும் ஏற்படும் ஆபத்தர்மங்களும் சொல்லப்பட்டன. அவற்றைச் செவ்வையாக அறிந்தபின் ஒரு புருஷன் தெளிவாக எல்லாவற்றையும் அறிந்தவனுவான்; அற்புதமான மோக்ஷதருமங்களும் மிகவிரிவாகச் சொல்லப்பட்டன. ஞானவான்களாகிய ஜனங்களுக்குப் பிரியமாயுள்ள இந்தச் சாந்திபர்வம் பன்னிரண்டாவது பர்வமாகச் சொல்லப்பட்டது. தபோதனர்களே! இதில் அத்தியாயங்கள் முந்நூற் றிருபத்தொன்பதும் சுலோகங்கள் பதினுலாயிரத்தெழுநூற்று முப்பத்திரண்டும் உள்ளன.

இதற்குமேல் உத்தமமாகிய அனுசாஸனபர்வம்: கௌரவராஜாவான யுதிஷ்டிரர் கங்காபுத்திராகிய பீஷ்மரிடம் தர்மத்தின் நிச்சயத்தைக் கேட்டபின், கவலைநீங்கி ஸ்வஸ்தராஞரென்பதும், தருமத்தையும் அர்த்தத்தையும் பற்றிய கடைகளியாவும், பலவகையான தானங்களின் பலன்களும், தானம் வாங்குவதற்குரிய சிறந்த பாத்திரங்களும், தானம் செய்வதற்கு முக்கியமான முறையும், ஆசாரவிதிகளும், ஸத்தியத்தின் முக்கியமான பிரயோஜனமும், பசுக்கள் பிராமணர்கள் இவர்களுடைய பெரியமகிமையும், தேசகாலங்களுக்குத் தக்க தர்மஸூக்ஷ்மமும் இதிற் சொல்லப்பட்டிருக்கின்றன. இந்த அனுசாஸனபர்வம் வெகு அதிகமான விஷயங்களடங்கியது; உத்தமமானது; பீஷ்மர் ஸ்வர்க்கமடைந்ததும் இதிலேயே சொல்லப்பட்டது; இது பதின்மூன்றவது பர்வம்; தர்மத்தினுடைய நிச்சயத்தைத் தெரிவிப்பது; இதில் நூற்றுநாற்பத்தாறு அத்தியாயங்கள் உள்ளன; சுலோகங்கள் எண்ணுயிரம் என்று கணக்கிட்டுச் சொல்லப்பட்டன.

அதன்பின் ஆசுவமேதிகம் என்னும் பதினன்காவது பர்வம்: மிகச்சிறந்த *ஸம்வர்த்த மருத்தியமென்னும் உபாக்கியானமும், ஸ்வர்ணநிதியைத் தர்மராஜர் அடைந்ததும், பரிக்ஷித்தினுடைய ஜனமும், அசுவத்தாமா பிரயோகித்த அபாண்டவாஸ்திரத்தின் ஜ்வாலையினல் தகிக்கப்பட்ட பரிக்ஷித்துக் கிருஷ்ணனுல் திரும்பவும் பிழைத்ததும், ஸஞ்சாரத்திற்காக விடப்பட்ட குதிரையைப் பின்தொடருகின்ற

* ஸம்வர்த்த ரிஷியையும் மருத்தராஜாவையும் பற்றியது.

அர்ச்சுனன் அங்கங்கே பொருமையுள்ள ராஜகுமாரர்களோடுயுத்தஞ் செய்ததும், தனஞ்சயன் தனக்குச் சித்திராங்கதையிடம் பிறந்த புத்திரனை பப்ருவாகனனால் யுத்தத்தில் பிராண ஸந்தேகமடைந்ததும், *சுதர்சனமென்கிற சரித்திரமும், விஷ்ணுதர்மமும், அசுவமேதமென்னும் மகாயஜ்ஞத்திற் கீரிப்பிள்ளையின் கதையும் சொல்லப்பட்டன. இவ்விதமாக இந்த ஆசுவமேதிகமென்னும் பர்வம் பெரிய அத்புதமானது; இதில் அத்யாயங்கள் நாற்றுமூன்று; சுலோகங்கள் மூவாயிரத்து முந்நூற்றிருபது.

அதன்பின் ஆச்ரமவாஸமென்ற பதினாறாவது பர்வம் சொல்லப்பட்டது. காந்தாரியுடன் திருதராஷ்டிர ராஜனும் விதுரரும் இராச்சியத்தைவிட்டுத் தபோவனமடைந்ததும், திருதராஷ்டிரன் புறப்பட்டதைக்கண்டு பாண்டவபுரியான குந்தியும் புத்திரராஜ்யத்தை விட்டுப் பெரியவர்களுக்குப் பணிவிடை செய்வதற்காகப் பின்சென்றதும், யுத்தத்தில் அடிபட்டுப்போய்ச் சொர்க்கமடைந்த வீரர்களாகிய புத்திரர்களும் பௌத்திரர்களுமற்ற அபரர்களைத் திரும்பிவருதலை வியாஸமஹரிஷியினுடைய அனுக்கிரகத்தினால் திருதராஷ்டிரன் பார்த்ததும். அந்தச் சிறந்த ஆச்சரியதரிசனத்தைக் கண்டபிறகு துக்கத்தைவிட்டு மனவியுடன் மேலான தவபலத்தை அடைந்ததும், விதுரர் தவஞ்செய்து சுற்கதியடைந்ததும், பித்ருவனும் ஜ்யேஷ்டபுத்திரியனுமாகிய கவல்கண புத்திரனை ஸஞ்சயனும் பாண்டிகளுடன் நல்லகதியடைந்ததும், தர்மராஜராகிய யுதிஷ்டிரர் நாரதரைக் கண்டதும், நாரதரிடத்திலிருந்து யாதவர்களுக்குப் பெரிய நாசம்வருவதைக் கேட்டதும் சொல்லப்பட்டிருக்கின்றன; இஃது ஆச்ரமவாஸமென்று பெயருள்ள பெரிய ஆச்சரியமான பர்வம்; இந்தப் பர்வத்திலுள்ள அத்தியாயங்கள் நாற்பத்திரண்டு; சுலோகங்கள் ஆயிரத்தைந்நூற்றாறு.

இதன்பிறகு, கோடாரமான மௌஸலபர்வமென்று அறியும். அந்தப் புருஷ சிரேஷ்டர்களான யாதவர்கள் ஆயுதங்களினால் யுத்தத்தில் அடிபட்டதும், அவர்கள் பிராம்மண சாபத்தினால் அழிக்கப்பட்டு பதுபானத்தால் மயக்கங்கொண்டு விதியினால் தூண்டப்பட்டவர்களாய்க் கடற்கரையிற் சவட்டைக்கோரை உருவங்கொண்ட வச்சிராயுதங்களினால் ஒருவரை ஒருவர் கொன்றதும், எல்லாரையும் அழித்தபிறகு அந்த ராமகிருஷ்ணர்கள் இருவரும் எல்லாவற்றையும் அழிப்பதும் தாண்டக்கூடாததுமாகிய காலம் தங்களுக்கும் நேர்ந்

* சிருததர்சனமென்று சில புஸ்தகங்களிலும், மணிதர்சனமென்று சில புஸ்தகங்களிலும் பாடம்.

தைத் தப்பித்துக்கொள்ளாமலிருந்ததும், புருஷசிரேஷ்டனை அர்ச்சுனன் யாதவர்களில்லாமற்போன துவாரகைக்குப்போய்ப் பார்த்து வ்யஸனத்தையும் மிகுந்த சோர்வையும் அடைந்ததும், அவன் புருஷசிரேஷ்டரும் தன் மாதுலருமான வஸுதேவருக்குப் பிரேதகாரியம் செய்தபிறகு பானஞ்செய்த இடத்தில் யாதவவீரர்களுடைய பெரிய அழிவைக் கண்டதும், மகாத்துமாக்களாகிய ராமகிருஷ்ணர்களுக்கும் முக்கியமானவர்தொடங்கி வரிசையாக மற்ற யாதவர்களுக்கும் தேகஸம்ஸ்காரம் செய்ததும், பிறகு துவாரகையிலிருந்து கிழவர்களும் குழந்தைகளுமாகிய ஜனங்களை அழைத்துக்கொண்டுபோகையில், கஷ்டமான ஆபத்து நேர்ந்தபோது காண்டீவம் தோல்வியடைந்ததையும் உபர்ந்த அஸ்திரங்களெல்லாம் தோன்றுமற்போனதையும் யாதவஸ்திரீகள் கவரப்பட்டதையும் பராக்கிரமம் நிலையில்லாமற் போனதையும் கண்டு வருத்தமடைந்து, வியாஸர் உபதேசத்தினால் தெளிவிக்கப்பட்டு, தர்மராஜரிடம் போய் இராச்சியத்தியாகம் செய்யும்படி சொன்னதும் இந்தப் பர்வத்திற் சொல்லப்பட்டன. இவ்வாறு மௌஸலமென்னும் பதினாறுவது பர்வம் சொல்லப்பட்டது. இதில் அத்தியாயங்கள் எட்டு; சுலோகங்கள் முந்நூற்றிருபது.

அதற்குமேல் பதினேழாவது மகாப்பிரஸ்தானிகபர்வம்: புருஷசிரேஷ்டர்களான பாண்டவர்கள் இராச்சியத்தைவிட்டுத் திரௌபதிதேவியுடன் மகாப்பிரஸ்தானம் போனதும், அப்போது அவர்கள், லவணஹ்ருத்யமென்னும் செங்கடலையடைந்து அக்கினியைக் கண்டதும், அவ்விடத்தில் அக்னியினால் ஆஜ்ஞாபிக்கப்பட்ட அர்ச்சுனன் மகாத்துமாவாகிய அந்த * அக்கினியைப பூஜித்துத் தேவலோகத்துள்ளதும் உத்தமமுமாகிய அந்தக்காண்டீவமென்னும்வில்லைக் கொடுத்துவிட்டதும், யுதிஷ்டிரர் ஸஹோதரர்களும் திரௌபதியும் கீழே விழுந்ததைத் திரிந்துகொண்டு அவர்கள் யாரையும் திரும்பிப்பாராமல் விட்டுச்சென்றதும் இதிற் சொல்லப்பட்டன. இது பதினேழாவதாகிய மகாப்பிரஸ்தானிகபர்வமென்று சொல்லப்பட்டது. இதில் அத்தியாயங்கள் மூன்று; சுலோகங்கள் †முந்நூற்றிருபது.

அதன்மேல் ஸ்வர்க்கபர்வம்: அது தேவலோகஸம்பந்தமானது; மனுஷ்யர்களுக்கு உரியதன்று; மிகவும் அதிகமான பிரஜ்ஞையுள்ள தர்மராஜாவானவர் தயையினால் தம்முடன்வந்தநாயின்றி ஸ்வர்க்கத்தி

---

* அக்கினியின் சொல்லினால், வருணன் வில்லாகிய காண்டீவத்தை ஜலத்திற் போட்டுவிட்டான் என்பது கதை.

† நூற்றிருபத்துமூன்று சுலோகங்களென்பது பழையவுரை.

லிருந்துவந்த தேவரதத்தின்மேல் ஏறவிரும்பவில்லையென்பதும், மகாத்மாவான தர்மராஜா அவ்வாறு சலிக்காமல் தர்மத்தில் நின்றதைக் கண்டு தர்மதேவதை நாயுருவத்தைவிட்டு, தர்மராஜாவை ஸ்வர்க்கத்துக்கு அழைத்துக்கொண்டுபோனதும், அவருக்குத் தேவதூதன் ஒருவியாஜத்தை முன்னிட்டு நரகத்தையும் அதிற் பிராணிகள்படும் பெருந்துயரங்களையும் காண்பித்ததும், தம்சொல்லிற் கட்டுப்பட்டிருந்த தம் சகோதரர்கள் அந்த நரகத்திலிருந்து கூவுகின்ற அழுகுரல்களை அந்தத் தர்மாத்துமாவான யுதிஷ்டிரர்கேட்டதும், தர்மதேவதையும் இந்திரனும் தெரிவித்தபடி தர்மபுத்திரர் ஆகாசகங்கையில் ஸ்நானஞ்செய்து மனுஷ்யதேகத்தைவிட்டுத் தம் தருமத்தினுற்கிடைத்த ஸ்வர்க்கவாஸத்தையடைந்து இந்திராதிகளான, ஸமஸ்ததேவக்கூட்டங்களினுலும் பூஜிக்கப்பட்டு அவர்களுடன் ஆனந்தமாக இருந்ததும் அடங்கியது. இந்தப்பர்வம் சிறந்த ஞானமுள்ள வியாஸமகரிஷியினுல் பதினெட்டாவது பர்வமாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. தபோதனர்களே! இந்தப்பர்வத்தில், ஐந்து அத்தியாயங்கள் உள்ளன; சுலோகங்கள் இருநூற்றொன்பது. இப்படி இவையெல்லாம் சேர்ந்து பதினெட்டுப் பர்வங்களாகின்றன.

கிலங்களில் ஹரிவம்சமும் பவிஷ்யபர்வமும் சொல்லப்பட்டன. கிலங்களுக்குள் ஹரிவம்சத்திற் பன்னீராயிரம் சுலோகங்கள் மகரிஷியினுற் கணக்கிடப்பட்டன.

இவ்வாறு பாரதத்திலுள்ள பர்வங்களின் ஸங்கிரகமுழுதும் சொல்லப்பட்டது; பதினெட்டு அக்ஷௌஹிணிகள் சண்டைக்காகச் சேர்ந்தன. மிகவும் பயங்கரமான அந்தயுத்தம், பதினெட்டுத்தினங்கள்நடந்தது. எந்தப்பிராமணன் *அங்கங்களும் உபநிஷத்துக்களும் சேர்ந்த நான்குவேதங்களையும் அறிந்திருந்தும் இந்த இதிஹாஸத்தைமட்டும் அறியாமல் இருப்பானேனு அவன் நல்ல வித்துவானுகமாட்டான். இது ராஜரிஷிசாஸ்திரமாகவும், உயர்ந்த தர்மசாஸ்திரமாகவும், காமசாஸ்திரமாகவும் அளவற்றஞானம்நிரம்பிய வியாஸரால் சொல்லப்பட்டது; ஆண்குயில் கூவுதலைக்கேட்டபிறகு கடுமையான காக்கைக்குரல் எப்படி. வேண்டியிராதோ அப்படியே இந்த இதிஹாஸத்தைக்கேட்டபிறகு மற்றொன்றும் கேட்கப் பிரியப்படாது. உலகங்

* வேதாங்கங்கள் ஆறு; அவையாவன :—1. உச்சரிப்பின் இலக்கணமாகிய சிக்ஷையும், 2. பதஇலக்கணமாகிய வியாகரணமும், 3. வ்ருத்தஇலக்கணமாகிய சந்தஸும், 4. பதங்களின் பகுதிவிகுதியைத்தெரிவிப்பதாகிய நிருக்தமும், 5. க்ரஹநக்ஷத்ர சாஸ்திரமாகிய ஜோதிஷமும், 6. கர்மங்களை விதிக்கிற சாஸ்த்ரமாகிய கல்பமுமாம்.

களின் *மூன்றுபிரிவுகளும் பஞ்சபூதங்களிலிருந்து உண்டாவது போற் கவிகளுக்குக் கற்பனைகள் இந்த உத்தமமான இதிஹாஸத்திலிருந்து உண்டாகின்றன. அந்தணரே! †நான்குவிதமான பிராணிகளும் ஆகாயத்தினிடம் இருப்பதுபோலப் புராணங்களெல்லாம் இந்த இதிஹாஸம் சொல்லும்விஷயங்களிலேதான் பிரவர்த்திக்கவேணடும். இந்திரியங்களெல்லாவற்றிற்கும் வெவ்வேறு விருத்திகளுள்ள மனம் எப்படிக்காரணமோ அப்படியே தொழில்களின்சிறப்புக்களெல்லாவற்றிற்கும் இந்த இதிஹாஸம் ஆதாரமானது. ஆகாரம் இல்லாமல் எப்படித் தேகம்நிற்பதில்லையோ அப்படியே இவ்விதிஹாஸத்திற் சேராமல் கதை பூமியிலில்லை. அபிவிருத்தியை அடையவிரும்புகின்ற வேலைக்காரர்களால் நல்லகுலத்திற்பிறந்தபிரபு அடுக்கப்படுவதுபோல இந்த இதிஹாஸம் எல்லாக்கவிசிரேஷ்டர்களாலும் ஆச்சரயிக்கப்படுகின்றது. யோக்கியனுகிய க்ருஹஸ்தனுக்கு மற்ற மூன்றுஆச்ரமத்தவரும் எப்படி மேற்படமாட்டார்களோ அப்படியே கவிகள் இக்காவியத்திற்கு மேற்போவதில் ஸமர்த்தராகமாட்டார்கள். நீங்களெல்லாரும் விடாமுயற்சியுள்ளவர்களாகவும் தர்மத்தில் எண்ணமுள்ளவர்களாகவும் இருக்கக்கடவீர்கள்; தர்மம் ஒன்றுதான் பரலோகம் போகிறவனுக்குப் பந்துவாகிறது; பொருள்களும் பெண்களும் திறமையுள்ளவர்களால் வசப்படுத்தப்பட்டிருந்தபோதிலும் ஒற்றுமையையும் நிலைமையையும் அடைவதில்லை. த்வைபாயனரிஷி திருவாய்மலர்ந்தருளியதும், அளவிடக்கூடாததும், தர்மத்தைக்கொடுப்பதும், மனத்தைச்சுத்தப்படுத்துவதும், பாபத்தைப்போக்குவதும், ச்ரேயஸைக்கொடுப்பதுமாகிய பாரதத்தை எவன் படிக்கிறானோ அவனுக்குப் ‡புண்ணியதீர்த்த ஸ்நானங்கள்செய்வதினால் என்னபயன்? ப்ராமணன் இந்திரியங்கள்வழியாகப் பிரவர்த்தித்து ஒரு பகலிற்செய்யும்பாபத்தைச் சாயங்காலம் மஹாபாரதம்படிப்பதனல் விட்டுவிடுகிறான். தேகத்தினலும், மனத்தினலும், வாக்கினலும் இராத்திரியிற்செய்யும்பாபத்தைக் காலையில் மஹாபாரதம்படிப்பத

---

* ஆத்யாத்மிகம், ஆதிதைவிகம், ஆதிபௌதிகம் என்பது பழைய உரை; ஸ்வர்க்கம், மர்த்யம், பாதாளம் என்றும் கொள்ளலாம்.

† 1. ஜராயுஜம் - கர்ப்பாசயத்திற்பிறக்கும் மனிதப்பிறப்பு முதலியவை; 2. அண்டஜம் - முட்டையினின்றுபிறக்கும் பறவைமுதலியவை; 3. ஸ்வேதஜம் - உஷ்ணத்தினுண்டாகும் தேள்முதலியவை; 4. உத்பிஜ்ஜம் - பூமியைப்பிளந்து கிளம்பும் புல் பூண்டுமுதலியவை.

‡ 'புஷ்கராஜலே:' என்றுபாடம்; யானைத் தும்பிக்கைகளினுல்செய்யும் பட்டாபிஷேகம்என்பது பழைய உரை; புஷ்கரமென்று ஒரு புண்ணியதீர்த்தமும் உண்

னல் விட்டுவிடுகிறான். வேதங்களும் மிகுதியான சாஸ்திரங்களும் தெரிந்த பிராமணனுக்குப் பொன்கட்டின கொம்புகளோடுகூடிய நூறுபசுக்களைத் தானஞ்செய்பவனுக்கும் புண்ணியமான பாரதகதையை நித்தியம் கேட்பவனுக்கும் பலன் ஒன்றுதான். மிகச்சிறந்ததும், விசேஷமானவிஷயங்களுள்ளதும், அவசியம் அறியவேண்டியதுமாகிய அந்தப்பெரிய இதிஹாஸத்தை இந்தப் பர்வஸங்கிரகத்தினால் முதலில் தெரிந்துகொள்ளவேண்டும். ஏனென்றால் பெருங்கடல் தெப்பத்தினால் இறங்குவதற்கு எளிதாவதுபோல, இந்த இதிஹாஸமானது பர்வஸங்கிரகத்தினால் மனிதர்களுக்குத்தெரிந்துகொள்ள எளிதாகின்றது.

பர்வஸங்கிரகபர்வம் முற்றிற்று.

மூன்றுவது அத்தியாயம்.

பௌஷ்யபர்வம்.

(உதங்கரிஷி ஜனமேஜயராஜாவை ஸர்ப்பயாகந்செயத்தூண்டியது).

பரிக்ஷித்தின் புத்திரராகிய ஜனமேஜயர் ஸஹோதரர்களுடன் கூடக் குருக்ஷேத்திரத்தில் நீண்டகாலம்செய்யத்தக்க ஸத்திரமென்னும் யாகத்தைச்செய்தார். அவருக்குச் சுருதஸேனன், உக்ரஸேனன், பீமஸேனனென மூன்று ஸஹோதரர்கள் இருந்தார்கள். அவர்கள் அந்த ஸத்திரயாகத்தைச் செய்துகொண்டிருக்கையில் ஸரமையின்பிள்ளையாகிய நாய் (ஸாரமேயன்) வந்தது. அது ஜனமேஜயருடைய ஸஹோதரர்களால் அடிக்கப்பட்டு அதிகமாக ஊளையிட்டுக்கொண்டு தன்தாயின் ஸந்நிதத்திற்குப்போயிற்று. அஃது அதிகமாக ஊளையிடுவதைப்பார்த்து, அதன்தாய், "நீஏன் அழுகிறாய்; யாரால் அடிக்கப்பட்டாய்" என்றுகேட்டது. இவ்வாறுகேட்கப்பட்ட அந்த நாயானது, "ஜனமேஜயனுடைய ஸஹோதரர்களால் அடிக்கப்பட்டேன்" என்று தாய்க்கு மறுமொழிசொல்லிற்று. அதற்குத் தாய்," நீ அடிக்கப்பட்டிருப்பதனால் நிச்சயமாக அங்கே பிழைசெய்திருக்கவேண்டும்" என்று மறுபடியும் சொல்லிற்று. நாய் தாயைநோக்கி, "நான் சிறிதும் பிழைசெய்யவில்லை; ஹோமத்திரவியங்களைப் பார்க்கவுமில்லை; நாவினால் தீண்டவுமில்லை" என்று திரும்பவும்சொல்ல, அதைக்கேட்டு அதன் தாயாகிய ஸரமை பிள்ளையின்துக்கத்தினால்

வருத்தங்கொண்டு ஜனமேஜயர் தம் ஸஹோதரர்களுடன் தீர்க்கஸத்திரஞ்செய்துகொண்டிருந்த இடத்திற்குவந்து கோபத்துடன் ஜனமேஜயரைப்பார்த்து, "இந்த என்பிள்ளை சிறிதும் பிழைசெய்யவில்லை; ஹவிஸ்களைப் பார்க்கவுமில்லை; நாவினால் தீண்டவுமில்லை; எதற்காக அஃது அடிக்கப்பட்டது" என்றுகேட்டது. அவர்கள் ஒன்றும்பேசவில்லை. அந்தஸமயமை, அவர்களைப்பார்த்து, "இந்த என் பிள்ளை பிழைசெய்யாமலிருக்கையில் அதை அடித்ததனால் உங்களுக்குத்தெரியாமலே ஓர் ஆபத்துவரப்போகிறது" என்றுசொல்லிற்று.

தேவலோகத்து நாயாகிய ஸாமையினால் இவ்வாறுசொல்லப்பட்ட ஜனமேஜயர் மிக்க பரபரப்புற்று துக்கமுள்ளவரானர். அவர் அந்த ஸத்திரயாகம்முடிந்தபிறகு ஹஸ்தினாபுரம்போய், "என்னுடைய பாபமென்னும் பேயை ஓட்டத்தகுந்தவர் யார்" என்று தகுந்த புரோஹிதரைத்தேடுவதில் பெருமுயற்சி செய்தார். அந்தப்பரிக்ஷித்தின்புத்திரராகிய ஜனமேஜயர் ஓ நாளில், வேட்டைக்குப்போகையில் தமது தேசத்தைச்சேர்ந்த ஓரிடத்தில் ஆச்சரமத்தைப்பார்த்தார். அதில் சுருதச்ரவஸென்று பெயருள்ள ஓருரிஷி இருந்தார்; அவருக்குத் தவஞ்செய்துகொண்டிருப்பவராகிய ஸோமச்ரவஸ் என்னும புத்திரர் ஓருவர் இருந்தார்; பரிக்ஷித்தின்புத்திரராகிய ஜனமேஜயமகாராஜர், அந்த சுருதச்ரவஸின் புத்திரரிடம்போய் அவரைத் தமக்குப் புரோஹிதராயிருக்கும்படி வேண்டினர். அந்த ஜனமேஜயர் அந்த சுருதச்ரவஸ் என்னும் ரிஷியை நமஸ்கரித்து, "பகவானே! இந்த உமதுபுத்திரர் எனக்குப் புரோஹிதராகவிருக்கவேண்டும்" என்று சொன்னர். இப்படிச்சொல்லப்பட்ட அந்தச்ருதச்ரவஸ் என்னும்ரிஷி ஜனமேஜயரைப்பார்த்து, "ஓ ஜனமேஜயா! இந்த என்புத்திரன் பெண்நாகத்தினிடம்பிறந்தவன்; சிறந்ததபஸ்ஸுள்ளவன்; வேதாத்தியயனம் பூர்ணமாகச்செய்தவன்; என்னுடையதபஸின் சக்தியும் நிரம்பினவன்; என்னுடைய ரேதஸைக்குடித்த அந்தப்பெண்நாகத்தின் கர்ப்பத்திற்பிறந்தவன்; இவன் மகாதேவராகிய பரமசிவனுல் ஏவப்பட்ட பூதத்தைத்தவிர மற்ற உன்னுடைய பாபப்பேய்கள் எல்லாவற்றையும் ஓட்டுவதற்குச் சக்தியுள்ளவன். ஆனுல் இவனுக்கு ரகஸ்யமானஓருவிரதம்உண்டு; அதாவது, இவனிடம் வந்தப்பிராமணனுவது ஓருபிரயோஜனத்தை விரும்புவானுனுல், அவனுக்கு இவன் அதைக்கொடுத்துவிடுவன்; இஃது உனக்கு இஷ்டமானுல் அப்போது இவனை அழைத்துக்கொண்டுபோ" என்று சொன்னர். அவரால் இவ்வாறுசொல்லப்பட்ட ஜனமேஜயர், "பகவானே! அஃது அப்படி

யே ஆகுக" என்று அவருக்கு மறுமொழிகூறி, அந்தப்புரோஹிதரை அழைத்துக்கொண்டு திரும்பிவந்து, "இவர் என்னுல் புரோஹிதராக வரிக்கப்பட்டவர்; இவர் எதைச்சொல்லுவரோ அதை நீங்கள் சங்கிக்காமற் செய்யவேண்டும்" என்று ஸமஹாதரர்களுக்குச்சொன்னர். இவ்வாறு அவராற்சொல்லப்பட்ட அவர்ஸமஹாதரர்களும் அப்படியேசெய்தனர். அவர் அவ்வாறு தம்ஸமஹாதரர்களுக்குக் கட்டளையிட்டுத் தக்ஷசிலாநகரத்தை எதிர்த்துச்சென்று அந்தத்தேசத்தைத் தம் ஸ்வாதீனப்படுத்திக்கொண்டார்.

இந்தச்சமயத்தில் * அயோதரென்றுபெயர்பெற்ற தௌம்ய ரென்னும் ஒருரிஷி இருந்தார்; அவருக்கு உபமன்யு, ஆருணி, பைதன்என்று மூன்றுசிஷ்யர்கள் இருந்தார்கள். அந்தரிஷி பாஞ்சால தேசத்தவனை ஆருணியென்னும் சிஷ்யனைநோக்கி, "போ; கழனியின்மடையைக்கட்டு" என்றுசொல்லி அனுப்பினர். உபாத்தியாயரால் கட்டளையிடப்பட்ட அந்தப்பாஞ்சாலதேசத்தவனுகிய ஆருணி அங்கேபோய் அந்தக்கழனியின் மடையைக்கட்டுவதற்குமுடியாமல் கஷ்டம்டைந்து, "இருக்கட்டும்; இவ்வாறுசெய்வேன்" என்று ஓர் உபாயத்தைக்கண்டறிந்தான்; அவன் அந்தக்கழனியின்மடையில் படுத்துக்கொண்டான்; அவன் அவ்வாறு படுத்தபோது அந்தத்தண்ணீர்போகாமல் நின்றுவிட்டது. பிறகு ஒருகால் உபாத்தியாயராகிய அயோததௌம்யர் மற்றஇரண்டு சிஷ்யர்களையும்நோக்கி, "பாஞ்சால தேசத்தவனை ஆருணி எங்கேபோனன்" என்றுகேட்டார். அவர்கள், "பகவனே! போ; கழனியின்மடையைக்கட்டு" என்றுசொல்லி உம்மாலேயே அனுப்பப்பட்டான்" என்று அவருக்கு மறுமொழி கூறினர். அவர்கள் இவ்வாறுசொன்னபின் அவர் அந்தச்சிஷ்யர்களைப் பார்த்து, "ஆனல் அவன் போனஇடத்திற்கே நாமெல்லாரும்போவோம்" என்றுசொல்லி அவனை அழைப்பதற்காக அங்கேசென்று, "ஓ பாஞ்சாலதேசத்து ஆருணியே! எங்கிருக்கிறாய்; குழந்தாய்! வா;" என்றுகூவினர். அந்த ஆருணி உபாத்தியாயருடைய அந்தச்சொல்லைக்கேட்டு அந்தக் கழனிமடையினின்றும் உடனேயெழுந்து அந்த உபாத்தியாயரிடம்வந்துசேர்ந்து, "நான்இதோ இருக்கிறேன்; இந்தக்கழனிமடையில் வெளியிலேபோகும்ஜலம் கட்டமுடியாமலிருந்ததைக் கட்டுவதற்குப் படுத்திருந்தேன்; பகவானுடையசப்தத்

---

* இரும்புபோன்ற தந்தங்களையுடையவர்; ஆபோதர் என்றும் பாடம். ஆபோதர் = அபோதர்(= ஜலம் சாப்பிடாதவர்) குமாரர்: அயோதர்என்பதே மேல்வருகிறதைதைக்குப் பொருந்துகிறது.

தைக்கேட்டுத்தான் உடனே கழனிமடையைப் பிளந்துகொண்டு உங்களிடம்வந்தேன். ஆதலால், பகவானுகிய உங்களை நமஸ்கரிக் கிறேன். நான் செய்யவேண்டியகாரியத்தை நீங்கள் கட்டளையிட வேண்டும்" என்று உபாத்தியாயரைப்பார்த்துச்சொன்னன். இவ் வாறு சொல்லப்பட்ட அந்த உபாத்தியாயர், "நீ கழனியின்மடையை உடைத்துக்கொண்டு எழுந்ததனல் * உத்தாலகனென்று பெய ருள்ளவனுக ஆவாய்" என்றும், "என்சொல்லை நிறைவேற்றினதனல் நீ ச்ரேயஸை அடைவாய்; எல்லாவேதங்களும் எல்லாத்தர்மசாஸ் திரங்களும் உனக்குப் பிரகாசிக்கும்" என்றும் அனுக்கிரகித்தார். இவ்வாறு உபாத்தியாயராற்சொல்லப்பட்ட அந்த ஆருணி தனக்கு வேண்டியஇடத்திற்குச் சென்றன்.

பிறகு அந்த அயோததௌம்யரென்னும் உபாத்தியாயர் தம் முடைய மற்றொருசிஷ்யனை உபமன்யுவைப்பார்த்து, "குழந்தாய்! உபமன்யுவே! பசுக்களைமேய்" என்று அனுப்பினர், அவன் உபாத் தியாயர் சொல்லியபடி பசுக்களைரக்ஷித்தான். அவன் பகலில் பசுக் களைக்காப்பாற்றிச் சாயங்காலத்தில் குருவின்வீடுவந்து அவர்முன் னின்று நமஸ்காரஞ்செய்துகொண்டிருந்தான். அவன் புஷ்டியா யிருப்பதைக்கண்டு, உபாத்தியாயர் "குழந்தாய்! உபமன்யுவே! எதைக்கொண்டு நீ ஜீவனஞ்செய்கிறாய்? மிகவும புஷ்டியாயிருக் கிறையே" என்றுகேட்க, "ஐயா! பிக்ஷையினல் ஜீவனஞ்செய்கி கிறேன்" என்று அவன் உபாத்தியாயருக்கு மறுமொழிசொன்னன். உபாத்தியாயர் திரும்பவும் அவனைப்பார்த்து, "பிக்ஷையை எனக் குக்காண்பியாமல் உபயோகிக்கவேண்டாம்" என்று கூறினர். அவன், "அப்படியே ஆகுக" என்றுசொல்லிப் பிக்ஷையெடுத்துவந்து அதை உபாத்தியாயருக்குக் காண்பித்தான். அந்த உபாத்தியாயர் அவனிடமிருந்து பிக்ஷைமுழுவதையும்வாங்கிக்கொள்ள, அவன் ஸரி யென்றுசொல்லி மறுபடியும் பசுக்களைமேய்த்துக்கொண்டிருந்தான். பகற்காலத்தில்மேய்த்து ஸாயங்காலத்தில் குருவின்வீட்டுக்குவந்து குருவின்முன்னின்று நமஸ்கரித்துக்கொண்டிருந்தான். உபாத்தி யாயர் அப்படிச்செய்தும் அவன் புஷ்டியாகவே யிருந்ததைக்கண்டு, "குழந்தாய்! உபமன்யு! உன்னுடைய பிக்ஷைமுழுதும் மிச்சமின்றி நான் எடுத்துக்கொள்ளுகிறேன்; எதனல் இப்போது ஜீவனம்செய் கிறாய்?" என்று அவனைக்கேட்டார்; இப்படிக்கேட்கப்பட்ட அவன் "பகவானுகிய உங்களுக்கு முதல்பிக்ஷையைக்கொடுத்துவிட்டு இரண்

* பிளக்கிறவன்.

டாமுறை பிக்ஷையெடுக்கிறேன்; அதனால் ஜீவனஞ்செய்கிறேன்" என்று அவருக்கு மறுமொழிசொன்னான். உபாத்தியாயர் திரும்பவும், "இஃது ஒழுங்கான குருகுலவாஸமன்று; பிக்ஷையெடுத்து ஜீவிக்கிற மற்றவர்களுடைய ஜீவனத்துக்கு விரோதஞ்செய்கிறாய்; இவ்வாறு நடப்பதனால் நீ ஆசைக்காரனாகிறாய்" என்றுசொன்னார். அவன் ஸரியென்றுசொல்லிப் பசுக்களைரக்ஷித்துவந்தான்; திரும்பவும் ரக்ஷித்துக்கொண்டு உபாத்தியாயர் க்ருஹம்வந்து உபாத்தியாயர்முன்னின்று நமஸ்காரஞ்செய்தான். உபாத்தியாயர், அப்படிச்செய்தும் அவன் புஷ்டியாகவேயிருந்ததைக்கண்டு, மறுபடியும், "குழந்தாய்! உபமன்யூ! நான் உன்னுடையபிக்ஷையழுபதையும் எடுத்துக்கொள்ளுகிறேன்; வேறுபிக்ஷையும் நீ எடுக்கிறதில்லை; நீ மிகவும் புஷ்டியாயிருக்கிறாய்; எதனால் ஜீவனஞ்செய்கிறாய்" என்று கேட்டார்; இப்படிக்கேட்கப்பட்ட அவன், உபாத்தியாயரைபபார்த்து, "ஐயா! இந்தப் பசுக்களின்பாலால் ஜீவனஞ்செய்கிறேன்" என்று உத்தரம் சொன்னான். அவனுக்கு உபாத்தியாயர், "இதுஸரியன்று பாலை உபயோகிப்பதற்கு நான் உனக்கு அனுமதிகொடுக்கவில்லை" என்று சொல்ல, அவன், "அப்படியே ஆகட்டும்" என்று ப்ரதிஜ்ஞைசெய்து பசுக்களை ரக்ஷித்து, திரும்பவும் உபாத்தியாயர்வீடுவந்து அவர்முன்னின்று நமஸ்கரித்துவந்தான்; உபாத்தியாயர் அவன் புஷ்டியாகவேயிருப்பதைக்கண்டு, "அபபா! உபமன்யூ! நீ பிக்ஷையும் சாப்பிடுகிறதில்லை; வேறுபிக்ஷையும் எடுக்கிறதில்லை; பாலையும் குடிக்கிறதில்லை; மிகப்புஷ்டியாகவேயிருக்கிறாய்; எதனால் இப்போது ஜீவனஞ்செய்கிறாய்" என்றுகேட்டார்; இவ்வாறு கேட்கப்பட்ட அவன், "ஐயா! இந்தக்கன்றுகள் தாய்களின்முலைகுடித்து வாய்க்குவெளியில் ஒதுக்கின நுரையைக்குடிக்கிறேன்" என்று உபாத்தியாயருக்கு உத்தரம் சொன்னான். உபாத்தியாயர், "இந்தக்கன்றுகள் நல்ல குணமுள்ளவை; உன்னிடத்தில் தயையினால் வெகுமிகுதியான நுரையை ஒதுக்குகின்றன; ஆகையால் இவ்வாறு நடக்கின்ற நீ இந்தக்கன்றுகளின் ஆகாரத்திற்கு இடையூறுசெய்கிறாய்; நுரையைக்கூட நீ குடிக்கலாகாது" என்று அவனுக்கு மறுபடியும்சொன்னார். அவன் "அப்படியே" என்று ப்ரதிஜ்ஞைசெய்து ஆகாரமில்லாமல் மறுபடியும் பசுக்களைமேய்த்தான். அவ்வாறு பறுக்கப்பட்டதனால் அவன் பிக்ஷையும் சாப்பிடவில்லை; பற்றொருபிக்ஷையுமெடுக்கவில்லை; பாலுங்குடிக்கவில்லை; நுரையும் உபயோகிக்கவில்லை. அவன் ஒருகால் பசியினால் பீடிக்கப்பட்டுக் காட்டில் எருக்கிலைகளைத்தின்றான். உப்பும் கைப்பும்

காரமும் முருடும் ஜீரணகாலத்தில் உஷ்ணத்தையுண்டுபண்ணுதலுமுள்ளனவாகிய அந்த எருக்கிலைகளைத் தின்றதனால் கண்கெட்டு அவன் குருடனானன். பிறகு கண்தெரியாதவனாகவே ஸஞ்சரித்துக்கொண்டிருந்ததனால் ஒருகிணற்றில்விழுந்தான். ஸூர்யன் அஸ்தகிரியையடைந்தும் அவன் வீடுவராமலிருக்கக்கண்டு உபாத்தியாயர், "உபமன்யுவரில்லையே" என்று சிஷ்யர்களைக்கேட்க, *அவர்கள்," அவன் பசுக்களைரக்ஷிப்பதற்குவனம்போனான்" என்றுகூறினர்கள். "நான் உபமன்யுவை எல்லாவிஷயங்களிலும் மறுத்துவிட்டேன்; அதனால் அவன் கோபித்துக்கொண்டுதான் வெகுநேரமாகியும் வராமலிருக்கிறான்; ஆதலால், அவனைத்தேடவேண்டும்" என்று உபாத்தியாயர்சொல்லி, அந்தச்சிஷ்யர்களுடன் வனம்சென்று அவனை அழைப்பதற்காக:— "அப்பா! உபமன்யுவே! எங்கேயிருக்கிறாய்; குழந்தாய்! வா" என்று சப்தம்செய்தார். அவன் உபாத்தியாயர் கூப்பிட்டசொல்லைக் கேட்டு, "இதோ நான் இந்தக்கிணற்றில் விழுந்திருக்கிறேன்" என்று உரக்க மறுமொழிசொன்னான். உபாத்தியாயர், "நீ இந்தக் கிணற்றில் எப்படிவிழுந்தாய்" என்று அவனைத் திரும்பவும்கேட்டார்; அவன், "எருக்கிலைகளை உண்டதனால் குருடனானேன்; அதனால் நடக்கும்போது கிணற்றில்விழுந்தேன்" என்று அவருக்கு மறுமொழிகூறினான். உபாத்தியாயர், "நீ அசுவினிதேவர்களைத்துதிசெய்; அவர்கள் தேவவைத்தியர்கள்; உன்னைக் கண்ணுள்ளவனாகச் செய்வார்கள்" என்று அவனுக்கு மறுமொழிசொன்னார். உபாத்தியாயரால் இவ்வாறுசொல்லப்பட்ட அந்த உபமன்யு அச்வினிதேவர்களை †மந்திரரூபங்களான வாக்கியங்களினால் துதிக்கத் தொடங்கினான்.

‡ (உபமன்யு அசுவினிதேவர்களைத்துதித்தல்).

முன்செல்லுகிறவர்களும், முன்பிறந்தவர்களும் பலவர்ணங்களான கிரணங்களுள்ளவர்களும், தவத்தால் அழிவில்லாதவர்களும், தேவலோகத்திலுண்டானவர்களும், சிறந்த § சிறகுகளுள்ளவர்

* உத்தரதேச பாடத்திலுள்ளது.

† அச்வினிதேவர்களைப்பற்றிய ஸ்தோத்திரங்களான "உபா, உ. நூசு" என்பது முதலிய மந்திரங்களின் அர்த்தம் இந்த ச்லோகங்களிலிருப்பது பற்றி மந்திரரூபங்களான வாக்கியம் என்றது. (ரிக்வேதம், அ-வது அஷ்டகம், சு-வது அத்யாயம், முதல்வர்க்கம்).

‡ இது வித்தியாப்பிரகரணமாதலின் அச்வினிதேவர்களை முன்னிட்டுப் பரப்பிரம்மத்தையே துதிக்கின்றது என்பது பழையஉரை.

§ விரைவாகச் செல்லுகிறவர்கள்.

MAHAMAHOPADHYAYA

களும், ரஜோகுணமில்லாதவர்களும், எல்லாஉலகங்களுக்குமேல் தங்கள் விமானங்களைச் செலுத்துகிறவர்களுமாகிய உங்களிருவர்களையும் வாக்கினால் துதிக்கிறேன். பொன்மயமான பறவைகள்போன்றவர்களும், ஆபத்பந்துக்களும், பொய்யாதவர்களும், பார்ப்பதற்கு அழகானவர்களும், அழகான மூக்குள்ளவர்களும், விசேஷஜயமுள்ளவர்களும், *சூரியனுடைய தேஜஸினால் வெளுப்பும்கறுப்புமாகிய பகலையும் இரவையும்நெய்கிற சிறந்த தறிகாரர்களுமான உங்களைத்துதிக்கிறேன். † அச்வினீதேவர்கள் கருடனைப்போன்ற பலமுள்ள ஒரு செந்நாயினுடைய பலத்தினால் பிடிக்கப்பட்ட ‡விச்சுளியென்னும் பறவையைச் சுகமாயிருக்கும்படி விடுவித்தனர். அவ்வளவுநல்ல செய்கையுள்ளவர்களை என்துன்பத்தை நிவர்த்திசெய்ய நமஸ்கரித்தேன்; அவர்கள் சிறிதுமில்லாமலிருந்த சிவந்த சூரியகிரணங்களை உதயமாகச்செய்தார்கள். § முந்நூற்றறுபது கறவைப்பசுக்கள் ஒரு கன்றைஈன்று அதற்குப் பால்கொடுத்துவளர்க்கின்றன; அந்தப் பசுக்கள் ‖ பல கொட்டில்களும் ஒரு கறக்கிறவனும் உள்ளவையாகச் செய்யப்பட்டன; அந்த அச்வினீதேவர்கள் மேற்சொன்ன பசுக்களிடம் சிலாக்கியமான தர்மத்தைக் கறக்கின்றனர். $ எழுநூற்றிருபது ஆரக்கால்கள் வட்டகைகளிற் கோக்கப்பட்டு ஒருகுடத்திற் சேர்ந்திருக்கின்றன. அந்தச்சக்கரமானது சுற்றளவில்லாமலும் ¶ அழிவில்லாமலும் சுற்றுகின்றது; மாயையானது புருஷரூபர்களான அச்வினீதேவர்களை ஆச்ரயித்திருக்கிறது. மற்றொருசக்கரம் **பன்னிரண்டு ஆரக்கால்களுடனும் ஆறு ††நாபிகளுடனும் ஒரேஅச்சுடனும் ‡‡ அமிர்தத்திற்கு ஆதாரமாக நடக்கின்றது. எல்லாத்தேவர்களும் யஜ்ஞத்தைப்பற்றி அதை ஆச்ரயித்திருக்கின்றனர். அந்த அச்வினீதேவர்கள் துன்பப்படுகின்ற என்னை விடுவிக்கக்கடவர்.

---

* அச்வினீதேவர்கள் சூரியனுக்குமுன் செல்லுகிறவர்கள்.

† கருங்குஷ்டத்தைநீக்கித் தேகத்தில் நல்லநிறம் கொடுப்பவர் என்பர் [சிலர்.

‡ இஃது ஒருகிகிலுள்ளகதை.

§ முந்நூற்றறுபதுதினங்கள் ஒருவருஷத்தைச் செய்கின்றன.

‖ பலதேசங்கள் கொட்டில்கள்; சூரியனே கறக்கிறவன்; ஒளி பால்.

$ கூசுo நாள்களில்சேர்ந்த இரவுபகல்கள் எஉo-ம் வருஷமென்கிற ஒரு ஈபியைச்சேர்ந்த ஆரக்கால்களென்று சொல்லப்பட்டன.

¶ காலசக்கரத்திற்கு முடிவில்லையென்பது பொருள்.

** பன்னிரண்டுமாதங்களும் ஆறுருதுக்களும் ஒருவருஷமுமாகிய காலசக்கரமானது பிராணிகளின்உணவுக்குக் காரணமாக நடக்கின்றது என்பது பொருள்.

†† அச்சுக்கோக்கிற துவாரங்கள். [பொருள்.

‡‡ 'ரிதஸ்ய' என்றபாடத்திற்குக் கர்மபலத்திற்கு ஆதாரம் என்பது

அச்வினீதேவர்கள் அமிர்த மயமாகிய சந்திரனே வட்டமாக வியாபிக்கின்றனர்; தாஸர்களைக் காப்பாற்றுகின்றவர்; அச்வினீதேவர்கள் பலத்திற்குக்காரணமாகிய *மழையைக்கொடுக்க மலையைவிட்டுப்புறப்பட்டுப் பூமியில் ஸஞ்சரிக்கின்றவர்கள். அச்வினீதேவர்களே! நீங்கள் எல்லார்முன்னிலையிலும் †பத்துத்திசைகளையும் உண்டாக்குகின்றீர்கள்; அந்தத்திசைகள் தங்கள்தலைமேல் ஸூர்யரதத்தின் ஸஞ்சாரத்தை ஸமமாகஅடைகின்றன; அந்தத்திசைகளிற்செல்லும் ஸூர்யரதத்தை ரிஷிகளும் தேவர்களும் பின்செல்லுகின்றனர்; மனிதர்கள் பூமியில் ஸஞ்சரிக்கின்றனர். நீங்கள் எல்லாவகை வர்ணங்களோடுங்கூடிய கிரணங்களை விரிக்கின்றீர்கள். அவை எல்லாஉலகங்களையும் வியாபிக்கின்றன. அந்தக்கிரணங்களை அனுஸரித்துத் தேவர்களும் ஸஞ்சரிக்கின்றனர். அஸத்தியமில்லாமையால் நாஸத்தியரென்னப்பட்ட அச்வினீதேவர்களாகிய அந்த உங்களையும் நீங்கள் அணிந்த தாமரைமாலையையும் நான் பூஜிக்கிறேன். ‡மோக்ஷத்தைக் கொடுப்பவர்களும், கருமபலன்களை விருத்திசெய்கிறவர்களுமான அந்த அச்வினீதேவதைகளன்றி மற்றத்தேவர்கள் தங்கள் ஸ்தானத்திலிருந்து பலன்களைக் கொடுப்பதில்லை. §ஒரு சிறுவனும் சிறுமியும் முகத்தாலே கர்ப்பத்தைத் தரித்தனர்; ஓர் உயிருமில்லாதவள் இதை நுனிக்காலால் பிரஸவித்தாள்; பிறந்தசிசு உடனே தாயைச் சாப்பிடுகின்றது; அந்த அச்வினீதேவர்களாகியநீங்கள் எல்லாரும் ஜீவிக்கும்படி ஸூர்யகிரணங்களை வியாபிக்கச் செய்கின்றீர்கள். குணங்களைக்கொண்டு உங்களைத் துதிக்க நான் சக்தனல்லேன்; கண்போய் வழிதெரியாமல் இந்த ஆழமானகிணற்றில் நான் விழுந்திருக்கிறேன்; ரக்ஷிக்கத்திறமையுள்ள உங்களை அடைக்கலம்புகுகின்றேன்.” என்று துதித்தான்.

---

* ஸூர்யன் மேருவுக்குக்கீழ்ப்பாகமான தக்ஷிணயனம்வருகையில் மழை பெய்கிறது. [மில்லை.

† ஸூர்யரச்மி இல்லாவிட்டால் திக்குமில்லை; மனுஷ்ய ஸஞ்சாரமுமில்லை.

‡ மோக்ஷத்திற்கும் புண்ணியலோகங்களுக்கும் அவற்றிற்குக்காரணமான யாகம்முதலிய தேவபிதிர்காரியங்களுக்கும் ஸூர்யனேமார்க்கமென்பது பொருள்.

§ ஸூர்யரச்மிதானியினால் பூமியினின்றும் ஜலத்தையிழுத்து ஆகாசம் கர்ப்பமாகிறது; ஆகாசம் உயிரில்லாதது; அதன்கீழாகிய வாயுமண்டலத்திலிருந்து மழைவருகிறபடியால் காலால் பிரஸவிக்கின்றது என்றபடி; கர்ப்பமாகிய மழைஜலமானது பூமியை மூடிவிடுவதனால் தாயைச்சாப்பிடுகிறதென்றது. அச்வினீதேவர்கள் ஸூர்யரச்மியிற் சேர்ந்திருப்பதினால் மழைக்குக் காரணமென்னப் பட்டனர்.

இவ்வாறு அவனால் துதிக்கப்பட்ட அச்வினீதேவர்கள்வந்து அவனைப்பார்த்து, "நாங்கள் உன்மேல் அன்புள்ளவர்களாயிருக்கிறோம்; இதோ உனக்குப்பக்ஷணமிருக்கிறது; இதைச்சாப்பிடு" என்றுசொன்னார்கள். அவர்கள் இவ்வாறுசொல்ல, அவன், "மஹிமைபொருந்திய நீங்கள்சொன்னது வீணுகாது. ஆனால் நான் குருவுக்குத் தெரிவியாமல் இந்தப்பக்ஷணத்தைச் சாப்பிடமாட்டேன்" என்று மறுமொழிசொன்னான். பிறகு அச்வினீதேவர்கள் அவனைப்பார்த்து, "முன்னால் உன் உபாத்தியாயர் இவ்வாறு துதிசெய்தபோது, அவருக்கு நாங்கள் பக்ஷணம்கொடுத்தோம்; அவர் அதைத் தம் குருவுக்குத் தெரிவியாமலே சாப்பிட்டார்; உன் உபாத்தியாயர் செய்ததுபோலவே நீயும்செய்" என்றனர். அச்வினீதேவர்கள் இவ்வாறு சொன்னபிறகு, "இந்தவிஷயத்தில் அச்வினீதேவர்களாகிய உங்களை மறுபடியும் கேட்டுக்கொள்ளுகிறேன்; நான் குருவுக்குத்தெரிவியாமல் பக்ஷணத்தைச் சாப்பிடமாட்டேன்" என்று உபமன்யு மறுமொழி சொன்னான். "இந்த உன் குருபக்தியினால் உன்மேல் அன்புற்றோம்; உன் உபாத்தியாயருடைய தந்தங்கள் * எஃகு ஆகவிருக்கின்றன. உனக்கோ பொன்னைவிருக்கட்டும்; கண்களைப்பெறுவாய்; வித்தையையும் அடைவாய்" என்று அச்வினீதேவர்கள் உபமன்யுவுக்குச் சொன்னார்கள்.

அச்வினீதேவர்கள் இவ்விதம் சொன்னவுடன் உபமன்யு கண்களைப்பெற்று உபாத்தியாயரிடம்வந்து அபிவாதனஞ்செய்து நடந்தவிஷயத்தைச் சொன்னான். உபாத்தியாயர் அவன்மேல் அன்புகூர்ந்து, "அச்வினீதேவர்கள் சொன்னபடி உனக்கு வித்யாபலன் உண்டாகும்; எல்லாவேதங்களும் எல்லாத்தர்மசாஸ்திரங்களும் பிரகாசிக்கும்" என்றுசொன்னார்; அந்த உபமன்யுவுக்கும் இந்தப்பரீக்ஷைநடந்தது.

பிறகு அந்த அயோததௌம்யர், பைதனென்று பெயருள்ளவனை அழைத்து சிஷ்யனே! ஆருணி! நீ இந்தவன்கிருதத்தில் நான்சொல்லுகிறவரையில் சிலகாலம் பணிவிடைசெய்துகொண்டிருக்கவேண்டும். உனக்கு நீவிரும்பினவித்தைப்பயன் உண்டாகும்" என்றுசொன்னார். அந்தப்பைதன் "அப்படியே ஆகுக" என்றுசொல்லி, நீண்டகாலம் சுச்ரூஷைசெய்துகொண்டு குருகுலவாஸஞ்செய்தான். ஆருதுபோலச் சுமைசுமக்கும்படி குருவினால் எப்போதும் நியமிக்கப்பட்டு வெப்பம், பசி, தாகம்

* அயோததௌம்யர் என்கிறபெயர் இங்கே பொருந்துமாறு காண்க.

முதலிய கஷ்டங்களைப் பொறுத்துக்கொண்டு எதற்கும் தடைசொல்லாமலிருந்தான். வெகுகாலத்திற்குப்பிறகு அவனிடம் குருவுக்குச் சந்தோஷமுண்டாயிற்று. குருவின்ஸந்தோஷத்தினுலே பைதன்பல்லீனயடைந்து ஸர்வஜ்ஞனனான். இஃது அந்தப்பைதனுக்குநடந்த பரீக்ஷை; அந்தப்பைதன் உபாத்தியாயராகிய அயோததௌம்யரால் விடைகொடுக்கப்பட்டபின் அந்தக் குருகுலவாஸத்தைமுடித்து ஸமாவர்த்தனம் என்னப்பட்ட பிரமசரியபரித ஸமாப்தியைச் செய்துகொண்டு க்ருஹஸ்தாச்ரமம் அடைந்தான்.

அந்தப்பைதரென்பவர் க்ருஹஸ்தாச்ரமத்திலிருக்கையில் அவருக்கும் மூன்றே சிஷ்யர்கள் இருந்தார்கள். அவர் தம்சிஷ்யர்களைப்பார்த்து வேலைசெய்யென்றுவது குருசுச்ரூஷைசெய்யென்றுவது ஒருவும் சொன்னதில்லை. அவர், குருகுலவாஸத்தின் கஷ்டங்களையறிந்தவராகையால் சிஷ்யர்களைக் கஷ்டப்படுத்தக் கருதவில்லை. பிறகு ஒருகாலத்தில் அந்தப்பைதரென்னும் பிராமணரிடம் ஜனமேஜயன் பௌஷ்யன் என்னும் இரண்டு க்ஷத்திரியர்கள்வந்து அவரை உபாத்தியாயராகவரித்தனர். யாகஞ்செய்விக்கிறகாரியத்திற்காகப்புறப்பட்ட அந்தப்பைதர், உதங்கரென்னும் பெயருள்ள சிஷ்யனைப்பார்த்து, "அப்பா! நம்முடையகிருகத்தில் எதுவேண்டியிருந்தாலும் அதை நீ குறைவில்லாமற் செய்யவிரும்புகின்றேன்" என்று கட்டளையிட்டுத் தூரதேசம் சென்றார்.

பிறகு சுச்ரூஷையிலிருக்கும் உதங்கர் குருவின் நியமனத்தை நடத்திக்கொண்டு குருகுலவாஸம் செய்துகொண்டிருந்தார். அவர் அங்கேவஸிக்கும்போது உபாத்தியாயராயுள்ளவர்களுடைய ஸ்திரீகள்சேர்ந்து அவரை அழைத்து, "உன்னுடைய உபாத்தியாயருடைய பத்னி ருதுஸ்நானஞ் செய்திருக்கிறாள். உபாத்தியாயரும் ஊரில் இல்லை. இவளுடைய இந்த ருதுஸ்நானகாலம் வீண்போகாமலிருக்கும்படி நீ செய்யவேண்டும்; இவள் வ்யஸனப்படுகிறாள்" என்று சொன்னார்கள். இவ்வாறுசொன்ன அந்த ஸ்திரீகளைப்பார்த்து, உதங்கர், "நான் ஸ்திரீகளுடையசொல்லினுலே இந்த அகாரியத்தைச் செய்யேன். உபாத்தியாயர் அகாரியமாயினும் செய்யென்று எனக்குக் கட்டளையிடவில்லை" என்று மறுமொழிசொன்னார். பிறகு வெகுகாலம் சென்றபின் அவருடைய உபாத்தியாயர் அந்தப்பிரயாணத்தைமுடித்து வீடுவந்துசேர்ந்தார். அவர் அவருடைய அந்தரங்கை முழுவதையும் தெரிந்துகொண்டு ஸந்தோஷமடைந்தார். அவரைப்பார்த்து, "குழந்தாய்! உதங்கனே! உனக்கு என்னவிருப்

பத்தை நான் செய்யக்கடவேன்" என்றும், "நீ தர்மத்தைவிடாமல் எனக்குச் சுச்ரூஷைசெய்ததனால் நம்மிருவருக்கும் அந்யோந்யஸ்நேஹம் வருத்தியாயிற்று; ஆதலால் உனக்கு விடைகொடுக்கிறேன்; விரும்பினவற்றையெல்லாம் பெறுவாய்; போகலாம்;" என்றும் சொன்னார்.

இவ்வாறு உபாத்தியாயர்சொல்ல, உதங்கர், "நான் செய்யவேண்டியதென்று நீங்கள் விரும்புவதுயாது? 'ஆசாரியன் ஆசாரியதர்மத்தைவிட்டுச்சொன்னாலும் சிஷ்யன் சிஷ்யதர்மத்தைவிட்டுக்கேட்டாலும் அவ்விருவரில் தன்தர்மத்தைவிட்ட ஒருவன் துர்வஷத்தையும் அடைவான்; இறந்தும்போவான்' என்று சாஸ்த்ரஜ்ஞர் சொல்லுகின்றனரே! ஆதலால், உங்களால் விடைகொடுக்கப்பெற்றநான் குருவேண்டுகிறதனத்தைத் தக்ஷிணைகொடுக்கவிரும்புகின்றேன்" என்று கேட்டார். அவர் இப்படிக்கேட்டதற்கு உபாத்தியாயர், "அப்பா! உதங்கா! நீ இன்னும் சிலகாலமிரு" என்றார். அந்தஉதங்கர் மற்றொருநாள், "உங்களுக்குவேண்டிய குருதக்ஷிணை நான்கொடுக்கவேண்டும்; நீங்கள் கட்டளையிடுங்கள்" என்றுகேட்டார். அவருக்கு உபாத்தியாயர், "அப்பா! உதங்கா! நீ 'குருதக்ஷிணைகொடுக்கிறேன்' என்று பலமுறை என்னைக்கேட்கிறாய்; அப்படியானால் நீ வீட்டுக்குள்ளேபோய் உனது இந்தஉபாத்யாயபத்னியினிடம், 'நான் என்னகொடுக்கவேண்டும்' என்றுகேள்; அவள் என்னசொல்லுகிறாளோ அதைக்கொடு" என்று அவருக்குச்சொன்னார். இவ்வாறு உபாத்தியாயராற்சொல்லப்பட்ட உதங்கர் உபாத்யாயபத்னியிடம் சென்று, "அம்மா! உபாத்தியாயரால் வீட்டுக்குப்போக விடைகொடுக்கப்பட்டிருக்கிறேன்; உமக்குப்பிரியமான குருதக்ஷிணையைக்கொடுத்து என்கடனைத் தீர்த்துக்கொண்டுபோக விரும்புகிறேன்; ஆதலால் நான்கொடுக்கவேண்டிய குருதக்ஷிணை இன்னதென்று நீர் ஆஜ்ஞாபிக்கவேண்டும்" என்றுகேட்டார். இப்படிக்கேட்டபின் அந்த உபாத்யாயபத்னியானவள் அந்த உதங்கருக்கு "நீ பௌஷ்யனென்னும் ராஜாவினிடஞ்சென்று அந்த ராஜாவின்பத்னி அணிந்துகொண்டிருக்கும் குண்டலங்களைக்கேள்; இன்றைக்கு நான்காவதுநாள், ஒருபுண்யதம் வரப்போகிறது; அந்தக்குண்டலங்களை அணிந்துகொண்டு அழகாகப் பிராமணர்களுக்குப் பரிமாறவிரும்புகிறேன்; அதற்குள் அவற்றைச் சம்பாதித்துக்கொண்டுவா; இப்படிச்செய்தால்தான் உன்னித்தை பயன்படும்; இல்லாவிட்டால், நீ நன்மையையடையமாட்டாய்" என்று சொன்னாள்.

இப்படி உபாத்யாயபத்னியினால் உரைக்கப்பட்ட அந்த உதங்கர் புறப்பட்டுப்போகும்போது வழியில் மிகப்பெரியதான ஒரு வ்ருஷபத்தையும் அதன்மேல் ஏறிக்கொண்டிருந்த ஒரு பெரிய புருஷனையும் கண்டார். அந்தப்புருஷன் உதங்கரைப்பார்த்து, "ஓ உதங்கா! இந்த வ்ருஷபத்தின் இந்தக் கோமயத்தைப் பக்ஷணஞ்செய்" என்று சொன்னன்; இவ்விதம் சொன்னதைச்செய்ய உதங்கர் இஷ்டப்படவில்லை. அந்தப்புருஷன் மறுபடியும் உதங்கரைப்பார்த்து, "உதங்கா! சங்கைப்படாமல் பக்ஷிக்கக்கடவாய்; உன்உபாத்தியாயரும் முன்னே இதைப்பக்ஷித்திருக்கிறார்" என்றான். அந்தஉதங்கர் இவ்வாறு சொல்லப்பட்டபிறகு சரியென்றுசொல்லி அப்போது அந்த வ்ருஷபத்தினுடைய மூத்திரத்தையும் கோமயத்தையும் உட்கொண்டு எழுந்தவுடன் *அவசரத்தினால் ஜலத்தை ஆசமனம்பண்ணுமற் புறப்பட்டார். அந்த உதங்கர் பௌஷ்யனென்னும்க்ஷத்திரியன் இருக்குமிடத்திற்குப்போய் அங்கேகீழ்நிருந்த அவனைக்கண்டார். அவனருகிற்சென்று ஆசீர்வாதங்களினால் அவனைப் பெருமைபடுத்தி, "யாசிப்பதற்கு உன்னிடம்வந்திருக்கிறேன்" என்றுசொன்னார். பௌஷ்யன் உதங்கருக்கு வந்தனம்பண்ணி, "பகவானே! நான் பௌஷ்யனல்லவோ உங்களுக்கு நான் செய்யத்தக்கதுயாது" என்றுகேட்க, அவனுக்கு உதங்கர், "உனது பத்தினி அணிந்துகொண்டிருக்கும் குண்டலங்களை என்குருவுக்காக யாசிக்கவந்திருக்கிறேன்; அவற்றை நீ கொடுக்கவேண்டும்" என்றுசொன்னார். பௌஷ்யன், "அந்தப்புரத்துக்குட்போய் அரசியிடம் யாசிக்கக்கடவீர்" என்றுசொல்ல, அவர் அந்தப்புரத்துக்குள்ளே சென்றுபார்த்தபோது ராஜபத்னி அவருக்குக்காணப்படவில்லை. உதங்கர் திரும்பவும் பௌஷ்யனிடம் வந்து "நீஎன்னைப் பொய்யாகஉபசரிப்பது சரியல்ல; அந்தப்புரத்தில் உனதுஅரசி இல்லை; எனக்கு அவள் அகப்படவில்லை" என்றுசொன்னார். இப்படி அவர்சொன்னபின் பௌஷ்யன் சற்றுநேரம் ஆலோசித்து உதங்கரைப்பார்த்து, "நீர் நிச்சயமாக ஆசாரங்குறைவுள்ளவராயிருக்கிறீர்; செம்மையாகநினைத்துப்பாரும்; அந்தஅரசி ஆசாரங்குறைந்தவனுக்கும் அசுத்தனுக்கும் தோற்றமாட்டாள்; கற்புள்ளவளாதலால் அவளைச் சுத்தமில்லாதவன் காண்பதரிது" என்றுசொன்னன். இப்படி அவன்சொன்னதன்மேல் உதங்கர் நினைத்துப்பார்த்து, "உள்

---

* வடதேசசத்துப்பாடத்தால், அவசரத்தினால் நின்றபடி ஆசமனம்செய்து புறப்பட்டாரென்று தெரிகின்றது.

ளதுதான் * நான் சாப்பிட்டபிறகு சிக்கிரம்வந்ததனால் ஆசமனஞ் செய்யவில்லை" என்றுசொன்னர். அவருக்குப் பௌஷ்யன், "எழுந்ததும் சிக்கிரம்வரவேண்டியதற்காக நீர் ஆசமனஞ்செய்யாமற்போனது உமதுதவறு" என்றுசொல்ல, பிறகு உதங்கர் அவனைப்பார்த்து, "ஆம்" என்றுசொல்லிக் கிழக்குமுகமாக உட்கார்ந்து, கை கால் முகங்களைச் செம்மையாகக் கழுவிக்கொண்டு, நுரையில்லாமலும், காய்ச்சப்படாமலுமிருந்ததீர்த்தம் உள்ளேபோவது மார்புவரையில் உணரப்படும்படி சப்தமில்லாமல் மூன்றுமுறை ஆசமனஞ்செய்து இரண்டுமுறை கண், காது, மூக்குமுதலிய இடங்களை ஜலத்தினால் துடைத்துக்கொண்டு அந்தப்புரத்திற்போனர்; பிறகு அந்தராஜபத்னியைக்கண்டார். அவளும் உதங்கரைக்கண்டவுடன் எதிர்கொண்டு சென்று நமஸ்காரஞ்செய்து, "பகவனே! உமதுவரவால் நல்லவரவு; நான்செய்யவேண்டியதைக் கட்டளையிட வேண்டும்" என்றுசொல்ல, உதங்கர், "இந்தக்குண்டலங்களை என்குருவுக்காக யாசிக்கிறேன்; இவற்றை நீகொடுக்கவேண்டும்" என்று அவளைக்கேட்டார். அவள் அவருடைய அந்த நல்ல எண்ணத்தினால் ஸந்தோஷித்து இவர் தானத்துக்குத் தகுந்த பாத்திரமென்றும் விட்டுவிடக்கூடாதவரென்றும் நினைத்து அந்தக்குண்டலங்களைக்கழற்றி அவருக்குக்கொடுத்து, "நாகராஜாவாகிய தக்ஷகன் இந்தக்குண்டலங்களின்மீது பிரியம்விருப்பங்கொண்டிருக்கிறான்; ஜாக்கிரதையுடன் நீர் கொண்டுபோகக்கடவீர்" என்றுசொன்னள். உதங்கர் இவ்வாறு சொன்ன அரசியைப் பார்த்து, "நீ விசாரப்படவேண்டாம்; நாகராஜனாகிய தக்ஷகன்என்னை வெல்லமாட்டான்" என்றுசொன்னர்.

அவர் இவ்வாறு சொல்லி அந்த ராஜபத்னியிடம் விடைபெற்றுக்கொண்டு பௌஷ்யனிடம்வந்து "ஓ பௌஷ்யனே! திருப்தியடைந்தேன்" என்றுசொன்ன உதங்கரைப்பார்த்துப் பௌஷ்யன், "மஹானே! யோக்கியர்கள் கிடைப்பதரிது; நீங்கள் சிறந்தஅதிதியாதலால் சிராத்தஞ்செய்யவிரும்புகிறேன்; அவகாசம் உண்டாக்கிக்கொள்ளவேண்டும்" என்றுசொன்னன். அவனுக்கு உதங்கர், "அவகாசம் செய்துகொண்டவனைவேயிருக்கிறேன்; உன்சக்திக்குத்தக்கபடி நீ சிக்கிரமாக அன்னத்தை ஸித்தஞ்செய்வதை எதிர்பார்க்கிறேன்" என்றுசொன்னர். பௌஷ்யன் "ஆகட்டும்" என்றுசொல்லித் தன்

* வடதேசத்துப்பாடத்தால், 'நான் வருவதற்காக நின்றபடி ஆசமனம் செய்தேன்' என்பது தெரியவருகின்றது.

சக்திக்குத்தகுந்த அன்னத்தைக்கொடுத்து உதங்கருக்குப் போஜனஞ்செய்வித்தான். பிறகு உதங்கர் அன்னம் ஆறிப்போனதையும் அதில் மயிரிருந்ததையும் கண்டு 'இஃது அசுசியாயிருக்கிறது' என்று நினைத்து, "எனக்கு அசுசியான அன்னத்தைக் கொடுத்ததனால் நீ கண்தெரியாதவனவாய்" என்று அந்தப்பௌஷ்யனுக்குச் சாபங்கொடுத்தார். "நீர் குற்றமில்லாத அன்னத்தைத் தூஷித்ததனால் ஸந்ததியில்லாதவராவீர்" என்று பௌஷ்யன் அவருக்குப்பிரதிசாபம்கொடுத்தான். உதங்கர் திரும்பவும், "நீ அசுசியான அன்னத்தையுங்கொடுத்துப் பிரதிசாபமும்கொடுப்பது நியாயமன்று; அன்னத்தைக் கண்ணாலேபார்" என்றுசொல்ல, பௌஷ்யன் அந்த அசுசியான அன்னத்தைப்பார்த்து அஃது அசுத்தமாயிருந்ததை நேரில்தெரிந்துகொண்டான். அந்தஅன்னம் கூந்தலவிழ்ந்த ஸ்திரீயினால் செய்யப்பட்டதென்றும் அஃது ஆறினதும் மயிருள்ளதுமாக இருப்பதினால் அசுசியாயிருக்கிறதென்றும்தெரிந்துகொண்டு அந்த உதங்கரிஷியைப் பார்த்து, "மஹிமைபொருந்தியவரே! தெரியாமல்மயிருள்ளதும் ஆறிப்போனதுமாகிய இந்தஅன்னம் கொடுக்கப்பட்டது; ஆதலால் நான் குருடனாகாமலிருக்கவேண்டும்; கூடிக்கும்படி உங்களைவேண்டுகிறேன்" என்று அந்த உதங்கரிஷியிடம் வேண்டிக்கொண்டான். உதங்கர், "நான்சொல்வது பொய்யாகாது. நீ சிலகாலம் கண்தெரியாமலிருந்து பின் சிக்கிரத்தில் கண்தெரிகிறவனவாய்" என்றும், "எனக்கும் நீகொடுத்தசாபம் தொடராமலிருக்கவேண்டும்" என்றும்சொன்னதற்குப் பௌஷ்யன், "நான் சாபத்தைநிவர்த்திசெய்யமாட்டேன்; எனக்குக் கோபம் இன்னமும் அடங்கவில்லை; பிராமணனுக்கு ஹ்ருதயம் வெண்ணெய்போன்றது; வாக்கில் கூரானமுனையுள்ள கத்தி வைக்கப்பட்டிருக்கிறது; க்ஷத்திரியனுக்கு இவ்விரண்டும் மாறுபட்டிருக்கின்றன. வாக்கு நவனீதம்போன்றதும் உள்ளம் கூர்மையானமுனையுள்ள கத்திபோன்றதுமாக இருக்கின்றன என்பது உமக்குத்தெரியாதா? ஆதலால் என்உள்ளம் கோபியதாதலால் இப்படி நடந்தபின் அந்தச்சாபத்தை நான்மாற்றக்கூடாதவன்; நீர்போகலாம்" என்றுசொல்ல, உதங்கர், "அன்னம் அசுசியாயிருந்ததை நீயேகண்டு பின்பு என்னைவேண்டினாய்; முதலிலும் 'குற்றமில்லாத அன்னத்தைத் தூஷித்தாயாகையால் ஸந்ததியில்லாமற்போவாய்' என்றுதான் சபித்திருக்கிறாய். அன்னத்தில் குற்றமிருந்தபோது இந்தச்சாபம் எனக்கு வராது; போகவேபோகிறேன்" என்றுசொல்லி அந்தக்குண்டலங்களையெடுத்துக்கொண்டு உதங்கர் புறப்பட்டார்.

அவர் வழியில் வஸ்திரமில்லாத ஒரு பௌத்தஸந்யாஸி அடிக்கடி காணப்படுவதும் மறைந்துபோவதுமாகத் தொடர்ந்துவருவதைக் கண்டார். பிறகு உதங்கர் அந்தக்குண்டலங்களைப் பூமியில்வைத்து விட்டு ஜலத்திற்காகப்போனர். இந்தஸமயத்தில் அந்தஸந்யாஸி விரைவாகக் கிட்டவந்து அந்தக்குண்டலங்களையெடுத்துக்கொண்டு ஓடினன். உதங்கர் அவனைப்பார்த்து ஜலத்தின்காரியங்களை முடித்துக்கொண்டு, சுசியாகவும் நியமமுள்ளவராகவும் தேவர்களுக்கும் குருவுக்கும் நமஸ்காரஞ்செய்து மிக்கவேகத்தோடு ஸந்யாஸியைப் பின்தொடர்ந்தார்; அதிகஸமீபமானபோது ஸந்யாஸிரூபங்கொண்ட அந்தத்தக்ஷகனை உதங்கர்பிடித்தார். அவன் பிடிபட்டவுடன் அந்த ஸந்யாஸிரூபத்தைவிட்டுத் தக்ஷகரூபத்தையெடுத்துக்கொண்டு பூமியில்தெரிகிற ஒரு பெரியபளைக்குள் விரைவாகப்புகுந்தான்; வளைபில்புகுந்து நாகலோகத்துக்குட்சென்று தன்வீடுசேர்ந்தான். பிறகு உதங்கர் அந்தராஜபத்னிசொன்னதைநினைத்து அந்தத்தக்ஷகன் பின்னை ஓடி அவன்நுழைந்தவளையைத் தடிபிளுல்தோண்டினர்; அவரால் தோண்டமுடியவில்லை. அவர் கஷ்டப்படுவதை இந்திரன் கண்டு தன்வஜ்ராயுதத்தை, "நீபோய் இந்தப்பிராமணனுக்கு உதவி செய்" என்று அனுப்பினன். பிறகு வஜ்ராயுதமானது தடிக்குள்ளே பிரவேசித்து அந்தவளையைப் பிளந்துவிட்டது. உதங்கர் அந்தவளை வழியாகவே தக்ஷகனுடன்பிரவேசித்து முடிவில்லாததும், பற்பல விதங்களான ராஜகிருகங்களும் தனிகர்கிருகங்களும் மேல்மாளிகைகளும்கொடிங்கைகளும் தூற்றுக்கணக்குக்களாக நிரம்பினதும், விளையாட்டிற்குரிய ஆச்சரியமான இடங்கள் கணக்கில்லாமல் இருப்பதுமாகிய அந்த நாகலோகத்தைக்கண்டார். அவர் அந்த நாகங்களை அடியில்வரும் சுலோகங்களினால் துதித்தார்.

அவையாவன:—"ஐராவதமென்னும் நாகனை ராஜாவாகவுடையவரும், யுத்தங்களில் பிரகாசிக்கின்றவரும், காற்றினோடும் மின்னலோடுஞ்சேர்ந்து மழைபொழியும் மேகங்களைப்போல் சமமாகிபொழிகின்றவரும், அழகான பற்பலரூபங்களுள்ளவரும், விசித்திரமான குண்டலங்களைத்தரித்தவருமாகிய ஐராவதநாகத்தின் குலத்திலுண்டான நாகர்கள், ஸ்வர்க்கத்தில் தேவர்கள்பிரகாசிப்பதுபோல்பிரகாசிக்கின்றனர். கங்கையின்வடகரையில் நாகர்களுடைய ஸ்தானங்கள் அநேகமுண்டு. அங்குள்ள மகாநாகர்களையும் நான்துதிக்கிறேன். ஐராவதநாகனேத்தவிர வேறெவனும் சூரியகிரணங்களாகியசேனையில் ஸஞ்சரிக்கநினைப்பான். திருதராஷ்டிரநாகம் போகும்போது இருபத்தினாலு

யிரத்தெண்ணூறு *நாகங்கள் (சூரியன் தேர்க்குதிரைகளுக்குக்) கடிவாளங்களாகச் சமீபமாகவும் தூரமாகவும்போகின்றன. நான் ஜராவதநாகத்தின் மூத்தமைத்துனரார்களுக்கும் நமஸ்காரஞ்செய்கிறேன். முன்னே குருக்ஷேத்திரத்திலும் காண்டவவனத்திலும் வாஸஞ்செய்த தக்ஷகனென்றநாகராஜாவைக் குண்டலத்திற்காகத் துதிக்கிறேன். தக்ஷகனும் அச்வஸேனனுமாகிய இருவரும் எப்போதும் கூடவேயிருந்துகொண்டு குருக்ஷேத்திரத்திலும் இக்ஷுமதிநதிக்கரையிலும் வாஸஞ்செய்கின்றனர். நாகர்களுக்கு ராஜாவாகவிருத்தலிலிருந்தும் மஹத்யுமா என்னும் நீர்த்தத்தில்வஸித்த தக்ஷகனுடைய கடைசிப்புத்திரனுகிய சுருதஸேனனென்னும் மஹாத்மாவுக்கு நான் எப்போதும் நமஸ்காரஞ்செய்கிறேன்" என்று ஸ்தோத்திரஞ்செய்தார். இவ்விதமாக அந்த உதங்கரென்னும் பிராமரிஷி நாகஸ்ரேஷ்டர்களைத்துதித்தும் அந்தக்குண்டலங்களைப் பெறுததனைக் கவலையுற்றார். இவ்வாறு நாகங்களைத்துதித்தும் குண்டலங்கள் கிடைக்காமலிருந்தபோது நெய்கிறபந்திரத்தில் வஸ்திரத்தைபேற்றி நெய்தலுக்குரியமேகாலால் நெய்கின்ற இரண்டு ஸ்திரீகளைக்கண்டார். அந்தவஸ்திரத்தில் கறுப்புவெளுப்புமான நூல்களிருந்தன. † ஆறுகுமாரர்களாற் சுற்றப்படுவதும் பன்னிரண்டு ஆரக்கால்களுள்ளதுமாகிய ஒரு ‡ சக்கரத்தையும் ஒருபுருஷனையும் ஓர் அழகானகுதிரையையும் கண்டார். அவர் அவர்களெல்லாரையும் மந்திரார்த்தங்களடங்கிய அடியில்வரும் சுலோகங்களினால் ஸ்துதிசெய்தார். "§ இருபத்துநான்கு கணுக்களுள்ளதும் எப்போதுந்தடப்பதுமாகிய இந்த அழிவில்லாத சக்கரத்தின்நடுவில் || மூன்நூற்றறுபது ஆரக்கால்கள் போடப்பட்டிருக்கின்றன. அந்தச்சக்கரத்தை ஆறுகுமாரர்கள் சுற்றுகின்றனர். உலகெங்கும் வியாபித்தஉருவமுள்ள ¶ இரண்டு சிறுபெண்கள்** கறுப்பும் வெளுப்புமான நூல்களை எப்போதும் திருப்பிக்கொண்டும் பிராணிகளையும் உலகங்களையும் எப்போதும் மாற்றிக்கொண்டும் இவ்†† வஸ்திரத்தை நெய்கின்றனர். வஜ்ராயுதத்தை வஹிக்கிறவனும், உலகத்தை

---

* சூரியகதி ஏற்றத்தாழ்வில்லாமல் எப்போதுமிருப்பதற்குக்காரணமாயுள்ள சக்திகளையே கடிவாளங்களான நாகர்களென்று சொன்னது.

† ஆறுகுமாரர்கள் - ஆறுருதுக்கள்.

‡ சக்கரம் என்பது வருஷம்.

§ இருபத்துநான்கு கணுக்களாவன, அமாவாஸ்யையும் பௌர்ணமியும்.

|| மூன்நூற்றறுபது ஆரக்கால்கள் தினங்கள்.

¶ இரண்டுசிறுபெண்கள் தாதா விதாதா என்னும் தேவதைகள்.

** கறுப்பு வெளுப்பு நூல்கள் இரவும் பகலும்.

†† வஸ்திரம்என்பது காலம்.

ரக்ஷிக்கிறவனும், விருத்திரன் கழுத்தியென்னும் அசுரர்களைக்கொன்ற வனும், *இரண்டுகறுப்புவஸ்திரங்களைத் தரித்துக்கொண்டவனும், மஹாத்மாவும், உலகத்தில் உண்மையும்பொய்யுமாகியஆத்மா அநாத் மாஇரண்டையும் பகுத்தறிவிப்பவனும், ஜலத்தினுடையபுத்திரனும் புராதனனுமான அக்னியைக் குதிரையாக அடைந்திருப்பவனும், உலகங்களை நடத்துகிறவனும், மூன்றுலோகங்களுக்கும் நாதனுமா கிய அந்த இந்திரனைநமஸ்கரிக்கிறேன்" என்று துதிசெய்தார்.

பிறகு அந்தக் குதிரைமேலிருந்தபுருஷன் உதங்கரைப்பார்த்து, "நான் இந்தஸ்தோத்திரத்தினால் உன்னிடம் அன்புள்ளவனானேன்; உனக்கு நான்செய்யவேண்டிய பிரியோஜனம்என்ன?" என்றுகேட்க, உதங்கர் அந்தப்புருஷனுக்கு, "நாகங்கள் எனக்கு வசப்படவேண் டும்" என்று மறுமொழிசொன்னார். பிறகு அந்தப்புருஷன் உதங்க ரைப்பார்த்து, "நீ இந்தக்குதிரையின் அபானத்தில் ஊது" என்று சொன்னதன்பிறகு உதங்கர் குதிரையின் அபானத்தில் ஊதினார். ஊதப்பட்ட அந்தக்குதிரையின் எல்லாரோமத்துவாரங்களினின்றும் புகையுடன் அக்னிஜ்வாலைகள் வெளிப்பட்டன; அவற்றால் நாக லோகத்தில் வெப்பம்உண்டாயிற்று. தக்ஷகன் அக்னிஜ்வாலையின் பயத்தினால் துயரமுற்று, பரபரப்புடன் குண்டலங்களை எடுத்துக் கொண்டு, விரைவாக வீட்டைவிட்டு வெளியேவந்து, உதங்கரைப்பார் த்து, "இந்தக்குண்டலங்களை நீங்கள் பெற்றுக்கொள்ளுங்கள்" என்று சொன்னன். உதங்கர் அந்தக்குண்டலங்களைவாங்கிக்கொண்டு, "உபா த்யாயபத்னியினுடைய அந்தவிரதம் இன்றைத்தினம்தான்; நாளை நெடுந்தூரம் வந்துவிட்டேன்; எவ்வாறு குண்டலங்களை உபயோகப் படுத்துவேன்" என்று சிந்தித்தார். அவ்வாறு சிந்தித்துக்கொண் டிருந்தஉதங்கரைப்பார்த்து, "உதங்கா! இந்தக்குதிரையின்மேலேயே ஏறிக்கொள்; இம்மாது ஒருநொடியில் உன்னை உபாத்தியாயர்வீட்டிற் கொண்டுபோய்ச்சேர்க்கும்" என்று அந்தக்குதிரைமேலிருந்தபுரு ஷன் சொன்னன். உதங்கர் அதற்கு, "அப்படியே ஆகட்டும்" என்று சொல்லி அந்தக்குதிரையின்மேலேறிக்கொண்டு உபாத்தியாயர் கிரு கத்திற்கு வந்துசேர்ந்தார். அப்போது ஸ்நானஞ்செய்து தலைமயிரை ஆற்றிக்கொண்டு உட்கார்ந்திருந்த உபாத்யாயபத்னி, "உதங்கன் வர வில்லையே" என்று அவரைச்சபிக்க எண்ணங்கொண்டிருந்தாள். அந்தசமயத்தில் உதங்கர் உபாத்தியாயருடைய கிருகத்திற்குள்ளே

* நீருண்டமேகங்களை மேல்வஸ்திரமும் நீர்வஸ்திரமுமாகிய இரண்டு கறுப்புவஸ்திரங்கள்.

போய் உபாத்யாயபத்னிக்கு நமஸ்காரஞ்செய்து அந்தக்குண்டலங்களை அவளிடம்கொடுத்தார். அந்தஉபாத்யாயபத்னி அவரைப்பார்த்து, "உதங்கா! நீ சரியான தேசகாலத்தில்வந்தாய்; குழந்தாய்! இப்போது உனக்கு நல்வரவு; இப்போது நீ வராமலிருப்பாயானால் நான் கோபத்தால் * சபித்திருப்பேன்; உனக்கு நன்மை சிக்கிரத்தில் உண்டாகும்; காரியஸித்தியையடைவாயாக" என்று சொன்னாள். பிறகு உதங்கர் உபாத்தியாயருக்கு வந்தனஞ்செய்தார். உபாத்தியாயர் அவரை, "குழந்தாய்! உதங்கா! உனக்கு நல்வரவு என்காலவிளம்பம்செய்தாய்?" என்றுகேட்க, உதங்கர், "ஐயா! என்னுடைய இந்தக்காரியத்துக்கு நாகராஜனுடைய தருஷகன் இடையூறுசெய்தான்; அதனால் பாதாளலோகம்போனேன்; அவ்விடத்தில் தூரியில்லாதற்றி வஸ்திரம்நெய்துகொண்டிருந்த இரண்டுஸ்திரீகளைக்கண்டேன்; அந்தவஸ்திரத்தில் கறுப்புநூல்களும் வெளுப்புநூல்களும் இருந்தன; அவைஎன்ன? மேலும் அங்கே பன்னிரண்டு ஆரக்கால்களுள்ள ஒருசக்கரத்தை நான்பார்த்தேன்; ஆறுகுமாரர்கள் அதைச் சுற்றிக்கொண்டிருந்தார்கள்; அந்தச்சக்கரம் யாது? ஒருபுருஷனையும் கண்டேன்; அவன்யார்? ஒரு பெரியகுதிரையையும்பார்த்தேன்; அதுயாது? வழியிற்போகும்போது நான் ஒருவ்ருஷபத்தைப்பார்த்தேன்; அதன்மேல் ஒருபுருஷன் ஏறிக்கொண்டிருந்தான்; அவன் மரியாதையுடன், 'உதங்கா. இந்த வ்ருஷபத்தின்கோமயத்தைப்பக்ஷணம்செய்; உன்உபாத்தியாயரும் இதைப்பக்ஷித்திருக்கிறார்' என்று அன்புடன்எனக்குச்சொன்னான்; அவனுடைய அந்தச்சொல்லால் அந்தவ்ருஷபத்தின் கோமயத்தை நான் உட்கொண்டேன்; அவன் யாவன்? இவையெல்லாம் இன்னவையென்று நீங்கள் உபதேசிக்க விரும்புகின்றேன்" என்று உபாத்தியாயரை உதங்கர் கேட்டார். அவரால் இவ்வாறு கேட்கப்பட்ட உபாத்தியாயர், "நீபார்த்த இரண்டுஸ்திரீகள் † தாதாவும் ‡ விதாதாவுமாகிய இரண்டுதேவதைகள்; கறுப்பும்வெளுப்புமாகிய நூல்கள் இரவும்பகலும்; பன்னிரண்டு ஆரக்கால்களுள்ள சக்கரத்தைச்சுற்றிக்கொண்டிருந்த ஆறுகுமாரர்கள் ஆறுருதுக்கள்; பன்னிரண்டுஆரங்கள் பன்னிரண்டுமாதங்கள்; சக்கரம் வருஷம்; அந்தப்புருஷன் பர்ஜன்யனென்றுசொல்லப்பட்ட மேகதேவதை; அந்தக்குதிரைதான் அக்னி; நீ வழியிற்போகும்போதுகண்ட வ்ருஷபம்

* பிழையில்லாமையால் என்சாபத்தினின்றும் தப்பினயென்பது வேறு பாடம்.
† உண்டாக்குவது.
‡ பலமாறுதல்களைக் கொடுப்பது.

ஜீரோவதமென்னும் சிறந்தயானை ; அதன்மேல்ஏறியிருந்தபுருஷன் இந்திரன்; நீசாப்பிட்டவ்ருஷபத்தின்கோமயம் அமிர்தம்; அதனாலேதான் நீ அந்தஸர்ப்பலோகத்தில் அழியாமலிருந்தாய் ; அந்தப்பகவானாகிய இந்திரன் எனக்குஸ்நேஹிதன் ; உன்னிடத்தில் தயைபிறந்து இந்த அனுக்கிரகத்தைச்செய்தான் ; அதனாலேதான் நீ மறுபடியும் குண்டலங்களைப்பெற்றுக்கொண்டுவந்தாய் ; ஸௌமுகனே! இனிபோகலாம்; உனக்கு அனுமதிகொடுக்கிறேன் ; நீமோன்மையை அடைவாய்" என்றுசொன்னார். உபாத்தியாயரால் விடைகொடுக்கப்பட்ட அந்த மஹிமைபெற்ற உதங்கரிஷி தக்ஷகன்மீதுகோபங்கொண்டு அவனுக்குப் பிரதிசெய்யஎண்ணமுள்ளவராய் ஹஸ்திநாபுரத்திற்குப்புறப்பட்டார். அந்தப்பிராமணசிரேஷ்டராகிய உதங்கர் விரைவாக ஹஸ்திநாபுரம் சென்று ஜனமேஜயராஜாவைச்சந்தித்தார். தக்ஷகிலாகரத்தில் முன்னேயிருந்தவரும் வைராக்கியமுள்ளவரும் தீதால்லியடையாதவரும் நல்லஜயசாலியுமான ஜனமேஜபமஹாராஜர் மந்திரிகளாற்சூழ்ந்திலும் சூழப்பட்டிருப்பதைக்கண்டு அவருக்கு முதலில் முறைப்படி ஜயஆசீர்வாதங்களைச்சொல்லி, அவருடையஸந்தோஷகாலத்தில் அழகானபதங்களோடுகூடிய வாக்கியல், "ராஜசிரேஷ்டனே ! நீசெய்யவேண்டியகாரியம்வேறிருக்க பற்பிரான்றைச்செய்வது சிறுபிள்ளைத்தனம் போலிருக்கிறது" என்றுசொன்னார். அந்தப்பிராமணர் இவ்வாறுசொல்ல, ஜனமேஜயராஜா பிராமணோத்தமருக்குக் கூறமட்டபடி பூஜைசெய்து,"இந்தப்பிரஜைகளைப்பரிபாலனம்செய்வதனால் என்னுடையக்ஷத்திரியதர்மத்தைக் காப்பாற்றிவருகிறேன் ; நான் இப்போது செய்யவேண்டியதென்ன ; நீர் என்னகாரியம்பற்றி வந்திருக்கிறீர் ; அதைச்சொல்லும்" என்றார். அந்தராஜசிரேஷ்டர் இவ்வாறு சொன்னபிறகு, புண்ணியஞ்செய்தவர்களிற் சிறந்தவரான அந்தப்பிராமணோத்தமர் தாழ்வில்லாதஸ்வபாவமுள்ள ராஜாவைப்பார்த்து, "ராஜாவே! உனது சௌந்தக்காரியத்தையே செய்துகொள் ; அரசர்களுக்கெல்லாம் அரசனே! உன்பிதாவைக்கொன்ற துராத்மாவான தக்ஷகனென்னும் ஸர்ப்பத்திற்குப் பிரதிசெய்யவேண்டும் ; சாஸ்திரோக்தமான கிரியைசெய்ய இதுஸமயமென்றுகான்கிணைக்கிறேன் ; ராஜாவே! ஆதலால், மஹாத்மாவாகிய உனது அந்தத்தந்தைக்கு மரியாதைசெய் ; ஏனென்றால் உன்பிதாவாகியராஜா அபராதமொன்றுமில்லாமலே கெட்டஎண்ணமுள்ள அந்தத்தக்ஷகனற் கடிக்கப்பட்டு இடியினால்வீழ்த்தப்பட்டமரம்போல் மரணமடைந்தார். இழிவானஸர்ப்பமாகிய தக்ஷகனென்னும்பாபி பலமும்கர்வமும்மிகுந்து செய்யத்தகாததைச்செய்தான் ;

அவன் ராஜரிஷிவம்சத்தைரக்ஷிக்கிறவரும் தேவதைக்குஒப்பான அரசருமாகிய உன்பிதாவைக்கடித்தான்; அந்தப்பாபிஷ்டன் உன்பிதாவினிடம்போகவிரும்பிய காரியபரையும் தடுத்தான்; மஹாராஜாவே! அந்தப்பாபியை ஸர்ப்பயாகத்தில் ஜ்வலிக்கிறஅக்கினியில் ஹோமஞ் செய்யவேண்டும்; அந்தஸர்ப்பயாகம் சீக்கிரமாகச் செய்யத்தக்கது; ராஜாவே! இப்படி செசெய்தால் உன்பிதாவுக்கும் மரியாதைசெலுத்தினவனுவாய்; எனக்கும் மிகபெரிய பிரியமானகாரியத்தைச்செய்ததாகும்; பூமிக்குரக்ஷகனே! மஹாராஜாவே! குற்றமற்றவனே! அந்தத்துராத்மா குருதக்ஷிணைக்காகப்போன என்னுடையகாரியத்திற்கும் விரோதம்செய்தான்" என்றுசொன்னார்.

இதுகேட்டஅரசர் உதங்கர்சொல்லாகிறநெய்யினால் அக்னியைப்போல் ஜ்வலித்துகோபங்கொண்டு தக்ஷகன்மீது கோபமடைந்தார். பிறகு அவ்வரசர் மிகுந்த துக்கத்துடன் தம்பாதரிகளோடுபரீக்ஷித்து உதங்கர் முன்னிலையிலேயே தம்பிதாஸ்வர்க்கம்போய்விட்டதைபற்றிக் கேட்டார். அந்தராஜரிஷிசிரேஷ்டரான ஜனமேஜயர் பிதாபரலோகமடைந்ததைஉதங்கரிடம் கேட்டபோது துக்கத்தினால்பட்ட கண்ணீரினால் நனைக்கப்பட்டவராஞர்.

பௌஷ்யபர்வம் முற்றிற்று.

நான்காவது அத்தியாயம்.

பௌலோமபர்வம்.

(ரிஷிகளும் தேவனகரும் ஸூதரும் ஸபையிற்சேர்ந்தது).

பிரமஹரிஷிகளுடையபுத்திரரும், ஸூதகுலத்தவரும், புராணங்களைதெரிந்தவருமாகிய உக்ரசிரவஸென்பவர், நைமிசாரண்யத்தில் சௌனகரென்னும் குலபதியினுடைய பன்னிரண்டுவருஷம்செய்யத்தக்க ஸத்ரயாகத்தில் வந்திருந்த ரிஷிகளிடம்சென்றார்.

புராணங்கள் தெரிந்தவரும் புராணங்களிலேயே எப்போதும் உழைப்புள்ளவருமாகிய அவர், அந்தரிஷிகளுக்குக் கைகூப்பிக்கொண்டு, "ஜனமேஜயருடைய ஸர்ப்பயாகத்திற்குக் காரணமாக உதங்கருடைய சரித்திரமுற்றும் நான்உங்களுக்குச் சொன்னேன்; அந்தயாகத்திற்கு மற்றொருகாரணமும் இருக்கிறது; நீங்கள் கேட்கவிரும்புகின்றீர்களா? நான் சொல்லட்டுமா?" என்றுகேட்க, ரிஷிகள், "ரோம

ஹர்ஷணபுத்திரரே! நாங்கள் உம்மிடத்தில் முக்கியமாகச் சொல்லுவதாவது:—'கதைகளின்தொகையைக் கேட்கவிரும்புகின்ற எங்களுக்குக் கதையின்விஷயமான வசனம் சொல்லவேண்டும்' என்பதே. மஹிமைபொருந்தியவரும் எங்கள்குலபதியுமான சௌனகர் அங்கே அக்னிஹோத்திரசாலையில் இருக்கிறார்; நீண்டகாலம்செய்யத்தக்க ஸத்திரயாகமாகையால் எல்லாக்கதைகளையுங்கேட்பதற்கு அவகாசமிருக்கிறது. ஸூதபுத்திரரே! தேவர்கள், அஸுரர்கள், மனுஷ்யர்கள், நாகர்கள், கந்தர்வர்கள் ஆகியஇவரெல்லாரையும்பற்றிய அருமையான கதைகளையறிந்தவரும், வித்வானும், காரியங்களில்ஸமர்த்தரும், கூர்மையானபுத்தியுள்ளவரும், சாஸ்திரங்களிலும் ஆரண்யகமென்னும் வேதபாகத்திலும் குருவும், ஸத்தியவாதியும், சாந்தியுள்ளவரும், சிறந்த தவமுள்ளவரும், உறுதியானநியமமுள்ளவரும், எங்களுக்கெல்லாம் பூஜ்யருமான, குலபதியுமாகிய அந்தப் பிராமணர் இந்தயஜ்ஞத்தில் தீக்ஷைவஹித்திருக்கிறார்; அவருக்காகச் சற்றுநேரம் நாம் காத்திருக்கவேண்டும்; அந்த நமது ஆசாரியர் மிகவும் மேன்மையான ஆஸனத்தில் வீற்றிருந்தபிறகு பிராமணர்களாகிய அவர் மேகம் போல் நீர்சொல்வீராக" என்றுசொன்னார்கள். ஸௌதி "அவ்வாறே ஆகட்டும்; மஹாத்மாவாகிய அந்தஆசாரியர் உட்கார்ந்து அவர் ப்ரச்னஞ்செய்ததன்மேல் அதிகவிஷயமான புண்ணியகதைகளைச் சொல்வேன்" என்றுசொன்னார்.

பிறகு அந்தப் பிராமணசிரேஷ்டரான சௌனகர், செய்யவேண்டியவற்றையெல்லாம் சாஸ்திரப்படி செய்து, மந்திரங்களைச்சொல்லித் தேவர்களுக்கும் பித்ருக்களுக்கும் ஜலதர்ப்பணம்செய்து, தவத்தில் ஸித்திபெற்றவர்களும் விரதம்தவறாதவர்களுமாகிய அந்தரிஷிகளை ஸூதபுத்திரரை முன்னிட்டுக்கொண்டு ஸுகமாகஉட்கார்ந்திருந்த யஜ்ஞசாலையின் ஸபாமண்டபமான இடத்திற்கு வந்துசேர்ந்தார். அப்போது ரித்விக்குக்களும் கோஷ்டியைச்சேர்ந்தவர்களும் உட்கார்ந்தபிறகு குலபதியானசௌனகரும் வந்துஉட்கார்ந்து பின்வருமாறு சொல்லலானார்.

ஐந்தாவது அத்தியாயம்.

பௌலோமபர்வம். (தொடர்ச்சி).

(பிருகுவம்சத்தின் வரிசையும், பிருகுபத்னியைப்பற்றிய *புலோமாவென்னும் அஸுரனுக்கும் அக்நிக்கும் நடந்த ஸம்வாதமும்).

சௌனகர் "ஐயா! முன்னே உர்முஜபகந்தை புராணங்களெல்லாம் ஓதினீர்; †சோமஹர்ஷணபுத்திரரே! உமக்கும் அவையெல்லாம் தெரியுமா? புராணங்களிற் சொல்லப்படும் சிறந்தகதைகளையும் அநிலிற்சிறந்தவர்களுடைய புராதன வம்சரித்திரங்களையும் முன்னே ராம உமதுபிதாவினிடம் கேட்டிருக்கிறார்; அவற்றுள், ப்ருகுவம்சத்தை நான் முதலிற்கேட்க விரும்புகிறேன்; அந்தக் கதையைச் சொல்லும்; நாங்கள் உம்மிடம் கேட்பதற்கு ஸித்தமாக விருக்கிறோம்" என்றுசொல்ல, ஸௌதி சொல்லத்தொடங்கினர்.

"முன்னே வைசம்பாயனரென்னும் பிராமணர்முதலான மஹாத்மாக்களாகிய பிராமணரிஷிகள் நன்முகஓதிப் பிறருக்குச்சொன்னவையும், என்பிதாவும் அவருக்குப்பின் நானும் செம்மையாக ஓதியவையுமாகிய விஷயங்களெல்லாவற்றையும் கேளுங்கள்; ப்ருகுபுத்திரரே! முனிசிரேஷ்டரே! இந்திரன்முதலிய தேவர்களாலும் ரிஷிகளாலும் மநுக்களென்னப்பட்ட தேவஜாதிகளாலும் பூஜிக்கப்பட்ட இந்தச்சிறந்த ப்ருகுவம்சத்தையே ஒழுங்காகப் புராதனகதைகளுடன் உங்களுக்குச் சொல்லுகிறேன். பலிமைபொருந்திய ப்ருகுமகரிஷி ‡ஸ்வயம்புவாகிய பிரம்மாவினுல் வருணனுடையயாகத்தில் அக்கினியிலிருந்து உண்டாக்கப்பட்டானென்று நமக்குக் கேள்வி; ச்யவனரென்பவர் ப்ருகுவுக்கு மிக்க அன்புள்ள புத்திரர். தர்மத்தைச்செய்கிறவராகிய பிரமதியென்பவர் ச்யவனருடையபுத்திரர். பிரமதிக்குக் கிருதாசியென்னும் அப்ஸரஸினிடத்தில் குருவென்னும் புத்திரர் உண்டானர். குருவுக்குப் பிரமத்வரையென் பவளிடத்தில் வேதங்களின்கரைகண்டவரும், தர்மத்திலேயே மனமுள்ளவரும், சிறந்ததவமுள்ளவரும், கீர்த்திபெற்றவரும், கேள்வியிற்சிறந்தவரும், உயர்ந்தபிரம்மஜ்ஞானியும், தர்மத்தையே அனுஷ்டிக்கிறவரும், ஸத்தியவாதியும், நியமந்தவறாதவரும், போஜனரியம

* இவன் அஸுரனென்றும் ராக்ஷஸனென்றும் சொல்லப்பட்டிருக்கிறான்; ஆகையால் அஸுரஜாதியிற்பிறந்தவனென்றும் ராக்ஷஸச்செய்கையுடையவனென்றும் கொள்ளவேண்டும்.

† இங்கேஒருவரி பொருந்தாமையால் விடப்பட்டது. ‡ தாமேஉதித்தவர்.

முன்பவருமாகிய உமதுகூடன்தரான சுனகரென்னும்புத்திரர் பிறந்தார்" என்று ஸௌதபுத்திரர் சொல்ல, சௌனகர், "ஸௌதபுத்திரரே! மஹாத்மாவாகிய அந்தப்பிருகுவின்புத்திரருக்கு ச்யவனரென்ற பெயர் எவ்வாறு வந்தென்பதைக் கேட்கிறேன்; அதை எனக்குச் சொல்லவேண்டும்" என்றுகேட்க, ஸௌதபுத்திரர் சொல்லுகிறார்:—

பருகுவுக்குப் புலோமையென்று புகழ்பெற்ற மிகப்பிரியமான ஒருபாரினள் இருந்தாள்; அவளுக்கு பருகுவின்வீரியத்தினல் கர்ப்பமுண்டாயிற்று. பிருகுதலசிரேஷ்டரே! பிறகு புகழ்பெற்ற பிருகு மஹரிஷிக்கு ஒத்த ஒழுக்கமுள்ள தர்மபத்தினியாகிய புலோமையினிடம் அந்தக்கர்ப்பம் உண்டாயிருந்தகாலத்தில் தர்மாத்மாவகிக் கிறவர்களுக்கெல்லாம் சிறந்தவராகிய பிருகு ஸ்நானத்திற்காகப்போயிருக்கையில், அவருடைய ஆச்ரமத்திற்குப் புலோமாவென்னும் ராக்ஷஸன் வந்தான். அவன் அந்த ஆச்ரமத்திற்புகுந்து சிறந்த அழகுள்ள பிருகுபத்னியைக்கண்டு காமபாவசனப்பட்டிருந்தான். அழகிய ரூபமுள்ள புலோமை, அதிதியாகவந்த அந்தராக்ஷஸனுக்குக் கால்புலம்பள கால்கழுவுதல் முதலியவற்றை ஆகாரமாகக் கொடுத்தாள். பிராம்மணரிகளே! அப்போது அந்தராக்ஷஸன் அவளைப்பார்த்துக் காமத்தினல் பீடிக்கப்பட்டு, சிறந்த அழகுள்ள அந்தப்புலோமையைக் கொண்டுபோவதற்கு எண்ணங்கொண்டு ஸந்தோஷமடைந்தான். அந்த அழகுள்ளவளைக் கொண்டுபோகவிரும்பி, "காரியபாகிவிட்டது" என்று ஸந்தோஷபாகச்சொன்னான். அழகான புன்னகையுள்ள அந்தப்புலோமையை அந்தப்புலோமா என்னும்ராக்ஷஸன் *முன்னேயிருப்பியிருந்தான். பிறகு அவளுடைய பிதா அவளைச் சாஸ்திரப்பிரகாரமாகப் பிருகுவுக்குவிவாஹஞ்செய்துகொடுத்தார். பார்க்கவரே! அப்போது முதல் அந்த அழகரர் அந்த ராக்ஷஸன்மனத்தில் எப்போதும் மறக்காமலிருந்தது. அவன் அப்போது இதுஸமயமென்றுநினைத்து அவளைக்கொண்டுபோக எண்ணங்கொண்டான். பிறகு அக்னிஹோத்ரக்ருஹத்தில் ஜ்வலிக்கும் அக்னியைக் கண்டான். ராக்ஷஸன் ஜ்வலித்துக்கொண்டிருந்த அக்னியைப்பார்த்து, "அக்னிதேவ! உன்னை ஸத்தியமாகக்கேட்கிறேன்; இவள் யாருடையபாரியை? எனக்குச்சொல்; தேவர்களுக்கு முகமாயிருக்கிறாய்; எல்லாவற்றையும் பரிசுத்தஞ்செய்கிறவனே! நான்

* குழந்தையாயிருக்கையில் அழுதபோது பயப்படுத்துவதற்காக 'ராக்ஷஸா! இவளைப்பிடித்துக்கொள்' என்று அவள்பிதாசொன்னதை அங்குமறைந்திருந்த புலோமா என்பவன் கேட்டு அவளைத் தன்பாரியையாக நினைத்தான்.

கேட்பதற்குச் சொல்; நான்காமே இந்தச்சிறந்தபெண்ணே முதலில் பாரியையாக வரித்தவன்; பிறகு பொய்யனுகிய இவள்பிதா இவளைப் பிருகுவுக்குக் கொடுத்தான்; இப்போது தனிமையிலிருக்கும் இந்தப்பெண் பிருகுவின்பாரியையாகவிருந்தால்நீஸத்தியமாகச்சொல்; நான் இவளை ஆச்சமத்திலிருந்து கொண்டுபோக விரும்புகிறேன்; முதலில் எனக்குப்பாரியையான இந்த அழகியஇடையுள்ளவளைப் பிருகு அடைந்தவிஷயத்தில் எனக்குண்டானகோபம் என்னெஞ்சைச் சுடுவதுபோலிருக்கிறது; இப்படிப பிருகு அடைந்ததை நான்ஒப்பவில்லை; இவளை ஆச்சமத்திலிருந்து கொண்டுபோவேன்" என்றுசொன்னன். அந்த ராக்ஷஸன் ஜ்வலித்துக்கொண்டிருக்கும் அக்னியை இவ்வாறு (தன்கருத்துக்கிணங்கும்படி)கேட்டுப் பிருகுவின்பாரியையென்று சங்கித்து, "பரந்தஞானமுள்ள அக்னியே! நீ எல்லாப்பிராணிகளுக்குள்ளேயும் எப்போதும் புண்ணியபாபங்களுக்குச் சாக்ஷியைப்போற் சஞ்சரிக்கிறாய்; ஸத்தியமானவார்த்தையைச்சொல்லு; முதலில் என் மனைவியாயிருந்த இவளைப் பிருகு பொய்யாக அபகரித்துக்கொண்டுபோனன்; இவள் உண்மையாக என்னுடையபாரியையாயிருந்தால் நீ சொல்லவேண்டும்; உன்னிடத்திற்கேட்டு நீ பார்த்துக்கொண்டிருக்கையில் இந்தப்பிருகுவின்பாரியையை ஆச்சமத்திலிருந்துகொண்டுபோவேன்; எனக்கு ஸத்தியவசனம்சொல்" என்று பலமுறைகேட்டான். இப்படி அவன்சொன்னதைக்கேட்டு அக்னி துக்கத்துடன், "நான் ஸத்தியம்சொல்வேனாயின் எனக்குச் சிறந்தபிரம்மஜ்ஞானியான பிருகுவின் சாபம்வரும்; பொய்சொல்வேனாயின் நிச்சயமாக நரகத்தில் விழுவேன்" என்று பொய்க்கும், பிருகுவின்சாபத்திற்கும் பயந்து மெல்ல, "அஸுரசிரேஷ்டனே! இந்தப் புலோமை முதலில் உன்னல்வரிக்கப்பட்டவள்தான்; ஆனல் இவளைச் சாஸ்திரப்பிரகாரம் மந்திரத்தோடு நீ முதலில் வரிக்கவில்லை; அதனல் கீர்த்திபெற்ற இந்தப்புலோமையை அவள்தந்தை பிருகுவுக்குக் கொடுத்தார். மிகுந்த க்பாதிமானுகிய இவளுடைபபிதா நல்லவரனுக்கு ஆசைப்பட்டதனல், இவளை உனக்குக்கொடுக்கவில்லை. அஸுரனே! பிறகு பிருகுமஹரிஷி என்னைச் சாக்ஷியாகவைத்துக்கொண்டு முறைப்படி. வேதோக்தகர்மங்களைச்செய்து இவளை விவாகஞ்செய்துகொண்டார். இவள் இவ்வாறு அவர்பாரியையென்று அறிகிறேன்; நான் பொய்சொல்லவிரும்பேன்; அஸுரசிரேஷ்டனே! உலகத்தில் பொய் ஒருபோதும் ஆதரிக்கப்படுவதில்லை" என்றுஅக்னிசொன்னன்.

ஆருவது அத்தியாயம்.

பௌலோமபர்வம். (தொடர்ச்சி).

(சியவனருடைய ஜனனமும் அக்னிக்கு ப்ருதுசாபமும்).

பிராமணரே! அக்னிசொன்னதைக் கேட்டபிற்கு அந்த ராக்ஷஸன் மனஸுக்கும் காற்றுக்கும் ஸமானமான வேகமுள்ள பன்றி வடிவத்தோடு அவளைத் தூக்கிக்கொண்டுபோனான். ப்ருகுவம்சத்திற்சிறந்தவரே! பிறகு புலோமையின்கர்ப்பத்திலிருந்த அந்தச்சிசு, கோபத்தினால் தாயாரின் வயிற்றிலிருந்து நழுவிவிட்டது; அதனால் அவருக்கு*ச்யவனனென்று பெயர்வந்தது. தாயார்வயிற்றினின்றும் நழுவின சூரியனைப்போன்றகாந்தியுள்ள அந்தச்சிசுவைக்கண்டு அந்தராக்ஷஸன் அவளைவிட்டுவிட்டு நீருள்புகுந்தான். அழகான திதம்பமுள்ள அந்தப்புலோமையானவள், ப்ருகுவை ஆனந்தப்படுத்துகிறவரும் அவர்புத்திரருமான அந்த ச்யவனரை எடுத்துக்கொண்டு துக்கம்அதிகரித்தவளாய்ச்சென்றாள். நீர்நிறைந்தகண்களுடன் அழுதுகொண்டிருக்கும் அந்த அழகான ப்ருகுபத்தினியை ஸ்வயம்பூலோகத்துக்கும் ஸ்ருஷ்டிகர்த்தாவாகிய ப்ரம்மதேவர்தாமேபார்த்தார்; பகவானுடைய ப்ரம்மா தம் மருமகளாகிய புலோமையைத் தேற்றினார்; அந்தப் ப்ருகுமஹரிஷியின்பத்தினியினுடையகண்ணீர்த்துளிகளால் உண்டான பெரியநதி அவள்மார்க்கத்தை அனுஸரித்துக்கொண்டு பெருகிற்று; அவளுடைய மார்க்கத்தை அனுஸரித்த அந்த நதியைக்கண்டு லோககர்த்தாவாகிய ப்ரம்மதேவர் ச்யவனாச்ரமத்துக்கு அருகேபோகின்ற அந்தநதிக்கு †வதூஸரையென்று பெயரிட்டார். ப்ருகுபுத்திரரான மிகுந்தமஹிமையுள்ள அந்த ச்யவனர் இவ்வாறு ஜனித்தார்.

பிதாவானப்ருகு அங்கே அந்த ச்யவனரைக்கண்டார். பிறகு தம்பாரியையான அந்தப் புலோமையென்பவளைப்பார்த்துக் கோபத்துடன் கேட்டார்; "அழகியபுன்சிரிப்புள்ள என்பாரியையாகிய உன்னை அந்தராக்ஷஸன் அறியானே; உன்னைச் சொன்னவர்யார்? உண்மையைச் சொல்லு; அப்படிச்சொன்னவனை இப்போது கோபத்தினால் நான் சபிக்கக்கருதுகிறேன்; என்சாபத்துக்கு அஞ்சாதவன் யார்? இது யாருடைய பிழை" என்றார். புலோமை, "பகவானே!

* ச்யவனம் - நழுவுதல். † பெண்ணுடன்சென்றது.

அந்தராக்ஷஸனுக்கு என்னை அக்னி தெரிவித்தான்; அதனால் அந்த ராக்ஷஸன் பெண்அன்றிலைப்போலே கதறிக்கொண்டிருந்த என்னைத் தூக்கிக்கொண்டுபோனான்; அப்படிக் கொண்டுபோகப்பட்டநான் இந்த உமதுபுத்திரனுடைய சக்தியினால் விடுவிக்கப்பட்டேன்; அந்த ராக்ஷஸன் என்னைவிட்டுவிட்டு நீருகிலிழுந்தான்" என்று புலோமை சொன்னதைக்கேட்டு மிகுந்தகோபமுள்ள பிருகு அதிககோபமுடையவராய், நீ "எல்லாவற்றையும் பக்ஷிப்பவனாகக்கடவாய்" என்று அக்னியைச் சபித்தார்.

ஏழாவது அத்தியாயம்.

பௌலோமபர்வம். (தொடர்ச்சி).

அக்னி, பிருகுவினால் சபிக்கப்பட்டபிறகு கோபங்கொண்டு, "பிராமணரே! என்ன என்விஷயத்தில் இப்படி ஆராய்ந்துபாராமற் செய்தீர்? தர்மத்தைவிடாதவனும் ஸத்தியவாதியுமான நான், ஒருவன் கேட்டபிறகு பக்ஷபாதமின்றி ஸத்தியத்தைச்சொன்னதில் என்பிழை என்ன? தான்கண்டவிஷயத்தைக்கேட்கும்போது எந்தஸாக்ஷிதெரிந்திருந்தும் மாறுகச்சொல்வதினால் அவன் தன்குலத்தில் முன்னேழு பேர்களையும் பின்னேழுபேர்களையும் கெடுத்துவிடுவான்; செய்யவேண்டிய விஷயங்களின் உண்மைதெரிந்தவன் தெரிந்திருந்தும் ஒன்றும் பேசாமலிருப்பானையின் அவனுக்கும் அந்தப்பாபம் தொடரும்; இதில் ஸந்தேகமில்லை; எனக்கும் உம்மைச்சபிக்கச் சக்தியுண்டு; ஆனால் பிராமணர்களை நாம் பூஜித்தல்வேண்டும்; பிராமணரே! நீர் தெரிந்தவராயிருந்தபோதிலும் உமக்கு ஒருவிஷயம் நான் சொல்லப்போகிறேன்; அதைத்தெரிந்துகொள்ளும்; நான் என்னுடைய தவவன்மையால் என்னைப் பலவு நூல்களாகப் பிரித்துக்கொண்டு அக்நிஹோத்ரங்களிலும், ஸத்ரியாகங்களிலும், விவாகாதி கிருஷ்ணகாரியங்களிலும், மற்றயாகங்களிலும் இருக்கிறேன்; வேதத்திற்சொல்லப்பட்ட விதிப்படி என்னிடத்தில் ஹோமஞ்செய்யப்பட்ட ஹவிஸ்ஸினால் தேவர்களும் பிதிர்க்களும் திருப்தியடைகின்றனர்; எல்லாத்தேவக்கூட்டங்களும் பிதிர்க்கூட்டங்களும் நெய், பால், ஸோமரஸம்முதலிய ஜலத்தின்பரிணமத்தினால் உண்டாகிறவர்கள்; * தர்சபௌர்ணமா

* தர்சம் பிதிர்க்களுக்கும் பௌர்ணமாஸம் தேவர்களுக்கும்.

ஸ்யாகங்கள், பிதிர்க்களுக்கும் தேவர்களுக்கும் சேர்ந்தே செய்யப் படுகின்றன; ஆதலால், தேவர்களே பிதிர்க்கள்; பிதிர்க்களே தேவர் கள்; புண்ணியகாலங்களில் இவர்கள் ஒன்றுகவும் வேறுகவும் காணப் படுகின்றனர்; தேவர்களும் பிதிர்க்களும் என்னிடத்தில் ஹோமஞ் செய்யப்பட்டவற்றையே புசிக்கின்றனர்; தேவர்களுக்கும் பிதிர்க்க ளுக்கும் என்னை வாயென்று சொல்லுகின்றனர்; அமாவாஸ்யையில் பிதிர்க்களுக்கும் பௌர்ணமாஸியில் தேவர்களுக்கும் என்னிடத் திலேதான் ஹோமஞ்செய்கின்றனர்; அந்தஹோமஞ்செய்த ஹவிஸை என்னைவாயாகக்கொண்டுதான் தேவர்களும் பிதிர்க்களும் புசிக்கின்ற னர்; இவர்களுக்குவாயாகிய நான் எல்லாவற்றையும் பக்ஷிப்பவனுவது எப்படி?" என்றுசொல்லி, ஆலோசனைசெய்து பிராமணர்களுடைய அக் னிஹோத்திரங்களிலும் யாகங்களிலும் ஸத்திரயாகங்களிலும் சடங் குகளிலும் இல்லாமல் அக்னி தன்னை ஒளித்துக்கொண்டான். பிறகு அக்னியில்லாமல் பிரஜைகள் அனைவரும், *ஓங்காரம் †வஷட்காரம் ‡ஸ்வதா §ஸ்வாஹா ஆகிய இவையொன்றுமில்லாமல் விட்டுப்போய் மிகுந்தவருத்தமடைந்தார்கள். பிறகு ரிஷிகள் மிகவருத்தமுற்றவர் களாய்த் தேவர்களிடம்சென்று, "குற்றமற்றவர்களே! அக்னியில் லாமல் யாகமுதலியகிரியைகள் தவறிப்போனதனால் மூன்றுலகங்க ளும் திடீரென்றுபோயின. இந்தவிஷயத்தில்என்னசெய்யவேண்டுமோ அதைக் காலதாமதமின்றிச் செய்யுங்கள்" என்றனர். பிறகு ரிஷிக ளும் தேவர்களுடன் பிரம்மாவினிடம்சென்று அக்னிக்கு நேர்ந்தசாபத் தையும் கருமங்களில்லாமற்போனதையும் தெரிவித்து, "மிக்கபெரு மைதங்கினவரே! பிருகு ஏதோ ஒருகாரணத்திற்காக அக்னியைச் சபித்தார்; தேவர்களுக்கு முகமாக இருந்து எல்லா உலகங்களிலும் யாகங்களிலுள்ள தேவபாகங்களை முதலிற்புசிக்கிறவனுகிய அக்னி எல்லாவற்றையும்பக்ஷிப்பவனுக எப்படி ஆகலாம்?" என்றுகேட்டனர். உலகங்களைப்படைப்பவராகிய பிரம்மதேவர் அவர்கள் சொன்னதைக் கேட்டு எல்லாப்பொருள்களுக்கும் காரணமும் அழிவில்லாதவனு மாகிய அக்னியையழைத்து, நயமானவசனத்தைச்சொன்னர்.

அதாவது:—"எல்லாவுலகங்களுக்கும் நீயே ஆதியும் அந்தமு மாக இருக்கிறாய்; நீ கிரியைகளை நடத்தி மூன்றுலோகங்களையும் தாங் குகிறாய்; உலகங்களுக்கெல்லாம் ஈசுவரனே! கிரியைகள் லோபிக்கா மலிருக்கும்படிசெய்; அக்னியே! நீ சக்தியுள்ளவனுக இருந்தும்

* வேதம்ஓதுவது. † யாகம்செய்வது.
‡ சொத்தம்செய்வது. § ஹோமம்செய்வது.

என் இவ்வாறு சிறிதும் அறியாமலிருக்கிறாய்; உலகத்தில் எப்போதும் நீதான் பரிசுத்தஞ்செய்பவன்; எல்லாப்பிராணிகளுக்கும் நீதான் ஆதாரம்; நீ உன்சரீரத்தின் எல்லாப்பாகங்களாலும் எல்லாவற்றையும் பக்ஷிப்பவனுவதில்லை; அக்னியே! உனதுபின்புறத்திலுள்ள *ஜ்வாலைகள் தாம் எல்லாவற்றையும் பக்ஷிக்கும்; மாம்ஸம் சாப்பிடுகிற †உன்சரீரம்எதுவோ அஃது எல்லாவற்றையும் பக்ஷிப்பதாகும்; எப்படி ஸூர்ய கிரணங்கள்பட்டதெல்லாம் சுத்தமாகக்காணப்படுகின்றதோ அப்படியே உன்ஜ்வாலைகளினால் தகிக்கப்பட்டதெல்லாம் சுத்தமாகும்; அக்னியே! நீ உன்சொந்தச்சக்தியினால் பிரகாசிக்கின்ற சிறந்ததேஜஸாயிருக்கிறாய்; ஸாமர்த்தியமுள்ளவனே! உன்சக்தியினாலேயே ரிஷியின் அந்தச்சாபத்தை ஸத்தியமாகச் செய்வாயாக; உன்வாயில் ஹோமஞ்செய்யப்பட்ட தேவர்பாகத்தையும் உன்பாகத்தையும் வாங்கிக்கொள்" என்பது.

அக்னியும் "அப்படியே ஆகட்டும்" என்று பிரம்மாவுக்குச் சொல்லி எல்லாருக்கும்மேற்பட்டவரான அந்தப்பிரமதேவருடைய கட்டளைப்படி செய்வதற்குச்சென்றான். பிறகு தேவர்களும் ரிஷிகளும் ஸந்தோஷமடைந்து வந்தபடியே சென்றனர். ரிஷிகளும் முன்போலவே எல்லாக்கிரியைகளையும் விசேஷித்துச்செய்தனர். ஸ்வர்க்கத்தில் தேவர்களும் பூலோகத்தில் எல்லாப்பிராணிகளும் ஸந்தோஷமாயிருந்தனர். அக்னியும் ஜ்வரம்நீங்கி மிகுந்ததிருப்தியடைந்தான். இப்படி அக்னிபகவான் முன்னே பிருகுவின்சாபத்தையடைந்தான். இந்த அக்னிசாபத்தைப்பற்றிய சரித்திரமும் புலோமாவென்னும் அசுரனுடைய நாசமும் ச்யவனருடையஜனனமும் இவ்வாறுமுன்னே நடந்தன.

எட்டாவது அத்தியாயம்.

புலோமபர்வம். (தொடர்ச்சி).

பிராமணரே! பிருகுபுத்திரராகிய அந்த ச்யவனரும் ஸுகன்னியென்பவளிடத்தில் ஜ்வலிக்கிறதேஜஸுள்ள மகாத்மாவாகிய பிரமதியென்னும் புத்திரரைப் பெற்றார். பிரமதி கிருதாசியினிடம் குரு என்

---

* அழுக்குக்களைப் போக்குகின்றது.

† மாம்ஸம்சாப்பிடுகிற பிராணிகளின்வயிற்றில் ஜீர்ணம்செய்யும் அக்னி, பக்ஷிக்கத்தகாததைப் பக்ஷிப்பதாக இங்கேசொல்லப்பட்டது.

பவரைப் பெற்றார். குரு பிரமத்வரையினிடம் சுனகரைப் பெற்றார். உயர்ந்தஸத்வகுணமுள்ள சுனகர் பிருகுவம்சத்தாரையெல்லாம் ஸந்தோஷிக்கச்செய்து உக்கிரமானதவத்திலிருந்து பிறகு அழிவில்லாத கீர்த்தியை அடைந்தார். அந்தணரே! மிகுந்தமஹிமையுள்ள அந்த குருவின் சரித்திரம்முழுவதையும் விரிவாகச்சொல்வேன்; அதையெல்லாம் நீங்கள் கேளுங்கள்.

முற்காலத்தில் தவமும் வித்தையுமுடையவரும், எல்லாப்பிராணிகளின்நன்மையிலும் கருத்துள்ளவருமாகிய ஸ்தூலகேசரென்று பெயர்பெற்ற ஒருமஹரிஷி இருந்தார். பிரம்மரிஷிகளே! அந்தக்காலத்தில் விசுவாவஸுவென்றுசொல்லப்பட்ட ஒருகந்தர்வராஜன் மேனகை பிடம் கர்ப்பதானம்செய்தான். பிருகுவம்சபுத்திரரே! அப்ஸரஸாகிய மேனகை கந்தர்வனுக்குண்டான அந்தக்கர்ப்பத்தைப் பிரஸவகாலத்தில் ஸ்தூலகேசரிஷியின் ஆச்ரமத்துக்குச் சமீபத்தில்சென்றாள். பிராமணரே! அந்தஅப்ஸரஸாகிய மேனகை, அந்தக்குழந்தையைத் தயையில்லாமலும் லஜ்ஜையில்லாமலும் நதியின்கரையிற்போட்டுவிட்டுச் சென்றாள். காந்தியுள் ஜ்வலிப்பவள்போன்றவளும் தேவகன்னிகையைப்போன்றவளும் பரிசுத்தஸந்தாரமில்லாத நதிக்கரையிற்பந்துக்களில்லாமல் விடப்பட்டவளுமாகிய அந்தக்கன்னிகையைச் சிறந்ததேஜஸுள்ள அந்தஸ்தூலகேசபகவரிஷி கண்டார்; அந்தக்கன்னிகையைக்கண்டு சிறந்தபிராமணராகிய அந்தஸ்தூலகேசரென்ற முனிசிரேஷ்டர் கிருபையோடு எடுத்துவளர்த்தார். அந்த உயர்ந்தபெண் அவருடையஅழகான ஆச்ரமத்தில்வளர்ந்தாள். சிறந்தமஹிமையுள்ள ஸ்தூலகேசமஹரிஷி அவளுக்குஜாதகர்மமுதலானகிரியைகளை முறையே சாஸ்திரப்படிசெய்தார். அவள் நல்லஸ்வபாவமும்அழகும்குணங்களுமுள்ளவளாய்ப் பெண்களெல்லாரினும்சிறந்தவளாயிருந்ததனால், மஹரிஷியானவர் அவளுக்குப் *பிரமத்வரையென்றுபெயரிட்டார். அந்தஸ்தூலகேசருடைய ஆச்ரமத்தில் அந்தப்பிரமத்வரையைக்கண்டு தர்மத்தில் மனமுள்ள ருரு காமத்தால் பிடிக்கப்பட்டவரானார். அவர் பிறகு தம்ஸ்நேகிதர்களைக்கொண்டு தமது பிதாவாகிய பிரமதிக்குத்தெரிவிக்க, பிரமதியும் பெயர்பெற்றவராகிய ஸ்தூலகேசரிடம் பிரமத்வரையையாசித்தார். பிறகு அவள்பிதாவான ஸ்தூலகேசர் அந்தப்பிரமத்வரையென்னும் கன்னிகையை ருருவுக்குக் கன்னிகாதானம் செய்வதாக வாக்குத்தத்தஞ்செய்து, அடுத்துவரும் ஏறஸ்தாகூத்திரத்தில் விவாஹம் செய்வதாக நிச்சயஞ்செய்தார். சிலநாள்களுக்குப்பின் விவாஹகாலம்

* பிரமதா - பெண்கள், வரா - சிறந்தவள்.

ஸமீபித்தபோது, பெண்களிற்சிறந்தவளாகிய அந்தக்கன்னிகை ஸகிகளோடு கூடவிளையாடுகையில் குறுக்கே நீண்டுபடுத்திருந்த ஸர்ப்பத்தை, மரணம்நெருங்கிவிட்டதனல் காலத்தினுல்ஏவப்பட்டு, பாராமல் காலால்மிதித்தாள். அந்தஸர்ப்பம் விதியினுல்ஏவப்பட்டு, பாராமலிருந்த பிரமத்வரையினுடைய தேகத்தில் விஷமுள்ளபற்களை நன்முகப் பதித்தது. அவள் அந்தச்சர்ப்பம்கடித்தவுடன் நிறம்மாறி ஒளிகுன்றிப்பிரஜ்ஞைதப்பி ஆபரணங்கள்நழுவிவிழ, திடீரென்று பூமியில்விழுந்தாள். பார்க்கிறதற்கு மிகவும்பிரியமாயிருந்த அந்தப்பிரமத்வரை, தலைமயிரவிழ்ந்து உயிர்போய் அந்தபயந்தக்களுக்குத் துக்கமுண்டாகும்படி பார்க்கவழங்காதவளானுள். ஸர்ப்பத்தின்விஷத்தினுற் கொல்லப்பட்ட மெல்லியஇடையையுடைய அவள், பூமியில் தூங்கினவள்போல அந்தநிலைமையிலும் அதிக அழகாகவேயிருந்தாள். பதுமம்போன்ற நிறமுள்ள அவள், பூமியில்விழுந்து துடிக்குமபோது அவளுடைய பிதாவும் மற்ற ரிஷிகளும் பார்த்தனர். பிறகு ஸ்வஸ்தியாத்ரேயர், மஹாஜானு, குசிகர், சங்கமேகலர், உத்தாலகர், கடர், பெருங்கீர்த்தியுள்ள சுவேதர், பரத்வாஜர், கௌணகுத்ஸ்யர், ஆர்ஷ்டிஷேணர், கௌதமர், பிரமதி, அவர்புத்திரராகிய ருரு ஆகியஇவர்களும் அந்தவனத்தில்வஸிக்கின்றமற்றபிராமணரிஷிகளியாவரும் இரக்கத்தோடு வந்துசேர்ந்தனர். பாம்பின்விஷத்தினுற் பீடிக்கப்பட்டு உயிர்போன அந்தப்பெண்ணைக்கண்டு, அவர்கள் திருவையினுற்பரவசமாகிக் கண்ணீர்விட்டழுதனர். ருருமட்டும் துக்கப்படாதிக்கொண்டு வெளியிற்சென்றார். அந்தப்பிராமணரிஷிகளனைவரும் அங்கேயே உட்கார்ந்திருந்தனர்.

ஒன்பதாவது அத்தியாயம்.

பௌலோமபர்வம். (தொடர்ச்சி).

(ருரு தம் பிராயத்திற்பாதியைக்கொடுத்துப் பிரமத்வரையைப் பிழைபபித்தது).

அந்தமஹாத்மாக்களாகிய பிராமணர்கள் அங்கே உட்கார்ந்திருக்கையில் ருரு மிகுந்த துக்கத்துடன் யாருமில்லாத காட்டுக்குட் சென்று கதறினர். அவர் வ்யஸனம்தாங்காமல் மிகவும் தீனமாக அழுது தம் பிரியையான பிரமத்வரையை நினைத்துக் கண்ணீர்விட்டுக் கொண்டு, "மெல்லிய அங்கமுள்ள பிரமத்வரை என்னுடைய சோக

க்தை விருத்திசெய்துகொண்டு, என்பிராணனே அபகரிப்பவள்போற் பூமியிற் படுத்திருக்கிறாள். பூர்ணசந்திரனைப்போன்றமுகமும், பருத்து விசாலமாகிய நிதம்பமும், காமதையிதழ்போன்ற நேத்திரங்களு முடைய அந்தப்பிரமத்வரை இறந்தாலும் என்உயிரையும் உடனே எடுத்துக்கொண்டேபோவாள்; ஸந்ததியில்லாமையால் மாதாபிதாக்கள் ஞாதிகள் இவர்களின் பிண்டத்தை விட்டுவிட்ட எனக்கும் மற்ற அவள்சுற்றத்தாருக்கும் இதற்குமேற்பட்டதுக்கம் என்னஇருக்கிறது? நான் தானங்கொடுத்தும் தவஞ்செய்து குருக்களைச் சுச்ரூஷையினல் செம்மையாகத் திருப்திசெய்தவனுயிருந்தால் அவற்றினல் என்னுடைய பிரியை ஜீவிக்கட்டும்; நான் பிறந்ததுமுதல் மனத்தைஜயித்து உறுதியான தவமுள்ளவனுக இருந்தால், இந்த உயர்ந்தபெண்ணுகிய பிரமத்வரை இப்போது எழுந்திருக்கட்டும்; * எங்கும்நிறைந்தவரும், ஜம்புலன்களையும் ஆளுகிறவரும், லோகநாயகரும், ஆஸுரசக்தியுருவமாகிய ஸ்ரீகிருஷ்ணபகவானிடத்து எனக்கு உறுதியான பக்தியிருக்குமானல், என்னுடைய பிரியையான பிரமத்வரை ஜீவிக்கட்டும்" என்று குரு புலம்பிக்கொண்டிருக்கையில், தேவர்களெல்லாம் பூமிதேவியைக்கூட்டிக்கொண்டு ப்ரஹ்மதேவரிடத்தைப்போய்ச்சொல்லும்படி ஒருதூதனை அனுப்பினர்கள்.

தேவர்களுடையபிரியத்தைச் செய்பவனும் சுத்தனுமிருக்கும் அந்தத்தூதன் விரைவாகவந்து நமஸ்கரிக்கப்பட்டுக்கொண்டிருக்கிற குருவையழைத்து, "பிராம்மணோத்தமரே! உமக்கு அனுகூலர்களான தேவர்களெல்லாரும் உமக்கு ஹிதத்தைச்சொல்லும்படி என்னை உம்மிடம் அனுப்பியிருக்கின்றனர்; அதை உமக்குச்சொல்லுகிறேன்; கேளும்; குருவே! நீர் நமஸ்கரிக்கப்பட்டு உமதுவாக்கினற் சொல்வது பொய்யன்று; தர்மத்தில் சித்தமுள்ளவரே! முனுஷ்யன் ஆயுள்போனபிறகு ஜீவிப்பதில்லை; கந்தர்வனுக்கும் அப்ஸரஸுக்கும் புத்திரியாகிய இந்தப்பாக்கியமில்லாத பிரமத்வரைக்கு ஆயுஸ் போய்விட்டது; ஆகையால், ஐயா! நீர் எவ்வகையிலும் வ்யஸனப்படவேண்டாம்; இவள்பிழைப்பதற்குரிய உபாயம் முன்னமே சிறந்த மஹிமையுள்ள தேவர்களால் விதிக்கப்பட்டிருக்கிறது; உமக்கு அதைச்செய்ய இஷ்டமிருந்தால் இந்த உலகத்தில் பிரமத்வரையை நீர் அடையலாம்" என்றுசொன்னன்.

அதைக்கேட்டு குரு, "தேவனே! தேவர்கள்விதித்த உபாயம் யாது? சரியாகச்சொல்; கேட்டபின் நான் அப்படியே செய்வேன்;

* இங்கு ஒருசுலோகம் விடப்பட்டது.

நீ என்னைக் காப்பாற்றவேண்டும்" என்றுசொல்ல, தேவதூதன், "பிருகுவம்சபுத்திரரான ருருவே! அந்தக்கன்னிகைக்கு உமது ஆயுளில் ஒருபாதிகொடுத்தால் உமதுபாரியையாகிய அவள் எழுந்திருப்பாள்" என்றுகூற, ருரு, "தேவசிரேஷ்டனே! அந்தக்கன்னிகைக்கு என்ஆயுளிற் பாதியைக்கொடுக்கிறேன்; அழகான உருவமும் ஆபரணங்களுமுடைய என்பிரியமுள்ள அந்தக்கன்னிகை எழுந்திருக்கட்டும்" என்றுசொன்னார். பிறகு மிக்கசிரேஷ்டர்களான பிரமத்வரையின்பிதாவாகிய கந்தர்வராஜனும் அந்தத்தேவதூதனுமாகிய இருவரும் யமனிடத்திற்குப்போய், "தர்மராஜாவே! உனக்கிஷ்டமிருந்தால் இவ்வாறு இறந்துபோன பிரமத்வரையென்னும் ருருவின் அழகானபாரியை ருருவின் ஆயுளின் ஒருபாதியைக்கொண்டு எழுந்திருக்கட்டும்" என்றுசொன்னார்கள்.

தர்மராஜன், "தேவதூதனே! வேண்டுமானால் ருருவின்பாரியையாகிய பிரமத்வரை ருருவின்ஆயுளின் ஒருபாதியைக்கொண்டு எழுந்திருக்கட்டும்" என்றுசொன்னன்.! இவ்வாறு சொன்னபிறகு அந்தக்கன்னிகையான பிரமத்வரையென்னும் உயர்ந்தபெண் அந்த ருருவின் ஆயுளில் ஒருபாதியைக்கொண்டு துங்கினவள்போல் எழுந்தாள். அதிகமாக விருத்தியடைந்திருக்கும் ஆயுளில் ஒருபாதியை மனிஷிக்காகக்கொடுப்பதானது, ருரு சிறந்தமஹிமையுடையவராதலால், அவசியம் நேரிடவேண்டியதினால் * அவருக்குநேர்ந்ததென்று அறியப்பட்டது.

பிறகு குறிப்பிட்டதினத்தில் பிரமத்வரை ருரு இவ்விருவருடையபிதாக்களும் ஸந்தோஷத்துடன் அவர்களுக்கு விவாஹத்தைச்செய்வித்தனர். அவர்களிருவரும் ஒருவர்க்கொருவர் ஹிதத்தையே விரும்புகிறவர்களாக விளையாடிக்கொண்டிருந்தனர். உறுதியானதவமுள்ள ருருவானவர், காமரைத்தாதுவைப்போல் அழகானநிறமுள்ளவளும் கிடைப்பதற்கு அருமையானவளுமாகிய பாரியைகிடைத்தபின், ஸர்ப்பங்களையழிப்பதாக நியமஞ்செய்துகொண்டார். அவர் எப்போதும் எந்தஸர்ப்பங்களைப்பார்த்தாலும் கடுங்கோபங்கொண்டவராய் ஆயுதமெடுத்துக்கொண்டு இயன்றவரையில் அடித்துவந்தார். அந்த ருருவென்னும்பிராமணர் ஒருகாலத்தில் ஒரு பெருங்காட்டுக்குப்போய் அங்கே ஒருவயதுசென்ற தண்ணீர்ப்பாம்பு படுத்திருந்ததைக் கண்டார்; பிறகு அந்தப்பிராமணர் கோபங்கொண்டு யமனுடைய தண்டாயுதத்துக்குஒப்பான தடியை ஓங்கி அதைக்கொல்லப்

* மற்றவர்களுக்கு இதுமுடியாதென்பது.

போனபொழுது, அந்தநீர்ப்பாம்பு அவரைப்பார்த்து, "தபோதனரே! நான் இப்போது உமக்குச் சிறிதும்தீங்குசெய்யவில்லையே; என் என்மீதுகோபித்து அவசரமாக என்னைக் கொல்லவருகிறீர்?" என்று கேட்டது.

பத்தாவது அத்தியாயம்.

பௌலோமபர்வம். (தொடர்ச்சி).

(ருருவுக்கும் தண்ணீர்ப்பாம்புக்கும் ஸம்வாதம்).

ருரு, "என்னுடைய உயிருக்குச்சமானமான மனைவியை ஒரு ஸர்ப்பம் கடித்துவிட்டது; பாம்பே! அதற்காக நான் எந்தஸர்ப்பத்தை எப்போதுகண்டாலும் கொல்லவேண்டுமென்று ஒருகோடியஸங்கல்பத்தை எனக்குள்ளேயே செய்துகொண்டேன்; அதனால் நான் உன்னைக் கொல்லப்போகிறேன்; இப்போது உன்னுயிர் பிரிந்துபோகப் போகிறது" என்றுசொன்னார். நீர்ப்பாம்பு, "பிராமணரே! இந்த உலகத்தில் மனிதர்களைக்கடிக்கிற ஸர்ப்பங்கள்வேறு; நீர்ப்பாம்புகள் ஸர்ப்பத்தைப்போலிருப்பதனாலேயே நீர் அவற்றைக்கொல்வது சரியன்று; நீர்ப்பாம்புகளுக்கும் ஸர்ப்பங்களுக்கும் ஸ்வபாவம் வெவ்வேறு; ஸௌக்கியம் வெவ்வேறு; பிறசால்வரும் உபத்திரவமும் துயரமுமாத்திரம் ஒன்றுபோலிருக்கின்றன. நீர் தர்மந்தெரிந்தவராக இருந்தும் நீர்ப்பாம்புகளைக்கொல்வது உமக்குத்தகாது" என்று சொல்லிற்று.

அந்தத் தண்ணீர்ப்பாம்புசொன்ன இந்தச் சொல்லைக்கேட்டபோது, அந்த ருரு பயத்தினால் ஒடுங்கியிருந்த தண்ணீர்ப்பாம்பை ரிஷியென்று அறிந்து அதைக்கொல்லவில்லை. எல்லாம்தெரிந்தவரான ருரு அந்தத்தண்ணீர்ப்பாம்பைச் சமாதானம்செய்வதற்காக, "பாம்பே! நீ யார்? எதனால் இந்தப் பாம்புஜன்மத்தை அடைந்திருக்கிறாய்" என்றுகேட்க நீர்ப்பாம்பு "ருருவே! நான் முன்னே ஸஹஸ்ரபாத்என்று பெயருள்ள ரிஷியாக இருந்தேன்; அப்படியிருந்த நான் ஒருபிராமணருடைய சாபத்தினாற்பாம்புஜன்மத்தை அடைந்தேன்" என்றுசொல்லிற்று. ருரு "உத்தம ஸர்ப்பமே! என் உன்னைப் பிராமணன் கோபத்தினாற் சபித்தான்; எவ்வளவுகாலம்வரையில் உனக்கு இந்தஜன்மம் இருக்கும்" என்றுகேட்டனர்.

பதினேராவது அத்தியாயம்.

பௌலோமபர்வம். (தொடர்ச்சி).

(நீர்ப்பாம்பின் சரித்திரம்).

நீர்ப்பாம்பு, "ஐயா! தவவலிமையுடையவரும் மிக்ககடுஞ்சினம் உள்ளவருமாகிய ககமரென்றுபெயருள்ள ஒருபிராமணர் முன்னே எனக்கு ஸ்நேஹிதராயிருந்தார்; நான் பால்யத்தில் விளையாடிக்கொண்டிருக்கும்பொழுது, புல்லினால்ஒருஸர்ப்பத்தைச்செய்து அக்னிஹோத்திரத்தில் ஞாபகம்வைத்திருந்த அவரைப் பயமுறுத்தினேன்; (அதனால்) அவர்மூர்ச்சித்தார்; ஸத்தியவாக்குஞ் சுகுமாரமான தவமுள்ள அந்தத்தபோதனர் படுபடியும் பிரஜ்ஞைவந்தபின் கோபத்தினால் என்னைத் தகிப்பவர்போல் 'எனக்குப் பயமுண்டாக்குவதற்கு எவ்விதமான சக்தியுள்ள ஸர்ப்பத்தை நீ செய்தாயோ அவ்விதமான சக்தியுள்ள ஸர்ப்பமாக நீ என்சாபத்தாலாவாய்' என்றுசொன்னர். தபோதனரே! அவருடைய தவத்தின்சக்தியைஅறிந்த நான் அப்போது மிகவும் மனத்தில் நடுக்கமுற்றேன். பரபரப்புடன் அவரை நமஸ்காரஞ்செய்து கைகூப்பி அவருக்குஎதிரில் நின்று, 'ஸ்நேஹிதரென்று பரிஹாஸம்செய்வதற்கு விளையாட்டாக நான் உமக்கு இதைச்செய்தேன்; பிராமண! என்விஷயத்தில் பொறுக்கவேண்டும்; இந்தச்சாபத்தை நிவர்த்திசெய்யவேண்டும்' என்று அவரை வேண்டினேன். பிறகு அதிகமாக மனத்தில் துயரமுற்ற என்னை அந்தத்தபோதனர் பார்த்து மிகவும் பச்சாத்தாபமுள்ளவராய் அடிக்கடி உஷ்ணமாகப் பெருமூச்சுவிட்டு, 'நான் சொன்னது எவ்வகையிலும் பொய்யாகாது; தபோதனனே! நான்சொல்வதைக்கேள்; குற்றமற்றவனே! கேட்டபின் இந்தச்சொல் எப்போதும் உன்மனவிலேயேஇருக்கட்டும்; பிராமணிக்கு குருவென்னும் சுத்தரான புத்திரர்உண்டாவார்; சீக்கிரமாகவே அவரைப்பார்த்தவுடன் உனக்குச் சாபவிமோசனமுண்டாகும்' என்றுசொன்னர்; இப்படி அவர்சொல்லலும் நான் ஸர்ப்பரூபமடைந்தேன்; நீர்தாம் அந்த குருவென்றுகியாதிபெற்ற பிராமணியின்புத்திரர்; இப்போது நான் என்முன்னுருவத்தையடைந்து உமக்குஹிதஞ்சொல்லப்போகிறேன்" என்றுசொல்லி மிகுந்தபுகழ்பெற்ற அந்தப் பிராமணசிரேஷ்டர் அப்போதே நீர்ப்பாம்பின்வடிவத்தைவிட்டுத்திரும்பவும் பிராம்மதேஜஸோடுகூடிய தம்ரூபத்தையடைந்து ஒப்பற்றமஹிமையுள்ள

குருவைப்பார்த்து, "சிறந்தவரே! எல்லாப்பிராணிகளையும்ஹிம்ஸிக் காமலிருப்பது முதன்மையானதர்மம்; ஆதலால் பிராமணன் எவ்வி டத்திலும் எந்தப்பிராணிகளையும் ஹிம்ஸித்தல்கூடாது; இவ்வுலகத் தில் பிராமணன் சாந்தன்தான்என்பது பெரியபிரஸித்தியாக இருக் கிறது; வேதவேதாங்கங்களையறிந்தவன் எல்லாப்பிராணிகளுக்கும் அபயம்கொடுப்பவனல்லவா? கொல்லாமையும், பொய்யாமையும், பொ றுமையும், வேதங்களைமறவாமையும் பிராமணருக்கு முக்கியமான தர்மமென்று நிச்சயிக்கப்பட்டுள்ளன. க்ஷத்திரியதர்மத்தை நீர் இப் போது விரும்பத்தகாது. தண்டிப்பதும் கடுமையாயிருப்பதும் பிர ஜைகளைக்காப்பதுமாகிய இவையெல்லாம் க்ஷத்திரியதர்மமாக ஏற் பட்டவை. குருவே! நான்சொல்லுகிறேன்; கேளும், பிராமணோத்த மரே! முன்னே ஜனமேஜயருடைய யஜ்ஞத்தில் ஸர்ப்பங்களைக்கொன் றதையும், தபஸ்ஸும் ஸமாத்தியும் பிறவுபலமுமுள்ளவரும் வேதங் களிலும் வேதாங்கங்களிலும் கரைகண்டவருமான பிராமணர்களுக்குள் ளே சிறந்தவருமான ஆஸ்திகரென்னும் பிராமணர் அந்தஸர்ப்பயாகத் தில் பயமடைந்தஸர்ப்பங்களைக் காப்பாற்றினதையும் நான் சொல்லு கிறேன்; கேளும்" என்று அந்தப்பிராமணர் சொன்னார்.

பன்னிரண்டாவது அத்தியாயம்.

பௌலோமபர்வம். (தொடர்ச்சி).

(ஜனமேஜயருடைய ஸர்ப்பயாகப்பிரஸ்தாவம்).

குரு "பிராமணசிரேஷ்டரே! ஜனமேஜயராஜா அந்தயாகத்தில் ஸர்ப்பங்களை எவ்வாறுகொன்றார்? அவைகளை எதற்காகக் கொன்றார்? அந்தச் சிறந்தஞான முள்ள ஆஸ்திகரால் ஸர்ப்பங்கள் ஏன் விடுவிக் கப்பட்டன? பிராமணசிரேஷ்டரே! முழுதும் கேட்கவிரும்புகிறேன்" என்று சொல்ல, ரிஷி, "குருவே! பெரிதான ஆஸ்திகசரித்திரம் முழு மையும் பிராமணர்கள் சொல்ல நீர் கேட்பீராக; நான் சீக்கிரம் செல்ல வேண்டியவனாக விருக்கிறேன்" என்றுசொன்னார்.

இவ்வாறுசொல்லி ஸமாத்தராகிய அந்தரிஷிசிரேஷ்டர் யோக சக்தியால் மறைய, குரு மனத்தில் பரபரப்புக்கொண்டு அதை ஆச் சரியமாகநினைத்தார். மறைந்துபோன அந்தரிஷியைத்தேடிக்கொ ண்டு முழுபலத்தோடும் எங்குப்பார்த்தும் பூமியில்விழுந்து மிகுந்தமூர்ச்சையையடைந்து பிரஜ்ஞைதப்பிப்போனார். பிரஜ்ஞை

வந்தபிறகு, ருரு உண்மையான அந்தரிஷியின்பேச்சை அடிக்கடி நினைத்துக்கொண்டுவந்து, தம் பிதாவுக்குச் சொன்னார். நீர்ப்பாம்பு சொன்னதையும் ஆஸ்தீகரைப்பற்றி அந்தநீர்ப்பாம்பு சொன்னகதையையும் பிதாவுக்குச் சொல்லி, "பகவானே! அந்தக்கதையை நீங்கள் எனக்குச் சொல்லவேண்டும்; நான் நடந்தபடி கேட்கவிரும்புகிறேன்" என்றுபிதாவைக்கேட்க, அவருடையபிதாவும் அவருக்கு அந்தக்கதைமுழுவதையும் சொன்னார்.

பௌலோமபர்வம் முற்றிற்று.

பதின்மூன்றும் அத்தியாயம்.

ஆஸ்தீக பர்வம்.

ஆஸ்தீகர் சரித்திரம் ஜரத்காருசரித்திரம்.

(ஜரத்காருவுக்கும் அவர்பிதிர்க்களுக்கும் நடந்தசம்பாஷணை).

சௌனகராஜனார் ஸௌதியைபார்த்து, "ஸூதபுத்ரரே! ராஜரிஷ்டராகிய அந்தஜனமேஜயராஜாவானவர் எதற்காக ஸர்ப்பயாகத்திலுள் ஸர்ப்பங்களை நாசஞ்செய்தார்; அதையெல்லாம்பூரணமாக நடந்தபடி எனக்குச் சொல்லும்; ஜபஞ்செய்கிறவர்களிற் சிறந்தவராகிய ஆஸ்தீகரென்னும் பிராமணரிஷ்டர் ஜ்வலித்த அக்னியிலிருந்து ஸர்ப்பங்களை எதற்காகவிடுவித்தார்? ஸர்ப்பஸத்திரஞ்செய்த அந்த ராஜா யாருடைய புத்திரர்? அந்தப்பிராமணரிஷ்டராகிய ஆஸ்தீகர் யாருடையபுத்திரர்? அவற்றை எனக்குச்சொல்லும்" என்றுகேட்க, ஸௌதி, "பிராமணரே! ஆஸ்தீகசரித்திரம் பெரியசரித்திரம்; பேசுகிறவர்களுடைசிறந்தவரே! அது பெரியோர்களால் எப்படிச்சொல்லப்பட்டுவருகிறதோ அந்தப்பிரகாரமே நான் முழுவதும் சொல்லுகிறேன்; நீங்கள்கவனிடம்கேளுங்கள்" என்றுசொன்னார்.

சௌனகர், "கீர்த்திபெற்ற புராதனரிஷியாகிய ஆஸ்தீகரென்னும் பிராமணருடைய இந்தஅழகான கதையை முழுவதும் கேட்கவிரும்புகிறேன்" என்றுசொல்ல, ஸௌதி சொல்லுகிறார்:—இந்தஇதிஹாஸத்தை*புராதனமென்றுபிராமணர்கள் சொல்லுகின்றனர். முன்னே ஸமிசாரண்யத்திலிருந்தபிராமணர்கள், வியாஸசிஷ்யரும் சிறந்தஞானமுள்ளவரும் என்பிதாவுமாகிய பிராமஹர்ஷணரைக்கேட்க, அவர் அவர்களுக்குக் கிருஷ்ணத்வைபாயனராற்சொல்லப்பட்ட இந்தச்சரித்திரத்தைச்சொன்னார்; நான் அவரிடம்கேட்டதைக் கேட்டபடிசொல்

* பூர்வகல்பத்திலுமுள்ளது.

வேன். செவனகரே! எல்லாப்பாபங்களையும் போக்கத்தக்க இந்த ஆஸ்திகசரித்திரத்தை இப்போது கேட்கின்ற உமக்கு முழுதும்சொல் வேன்.

ஆஸ்திகரின் பிதா ஜரத்காருவென்று கியாதிபெற்றவராயிருந் தார்; அவர் பிரம்மசாவைப்போன்றவர்; சுதந்திரமானவர்; அவர் பிரம சாரியாகவே உணவைவிட்டு எப்போதும் உக்கிரமான தவத்திலேயே ஊக்கமுள்ளவராயிருந்தார்; அவர் இரியமகிழ்நோக்காதவர்; பெருந் தவமுள்ளவர்; இராமத்துக்கு ஓர் இராத்திரியாகத் தங்குகிறவர்களிற் சிறந்தவர்; தர்மந்தெரிந்தவர்; உறுதியான நியமமுள்ளவர். ஒருஸமை யம், தவவலிமைவாய்ந்த மஹாஞானவானாகிய அந்தஜரத்காருமுனி சூரி யன் அஸ்தமித்தவிடத்தில் தங்கிக்கொண்டு பூமியெல்லாம் திரிந்தார். சிறந்தமஹிமையுள்ள அப் முனிவர் எல்லாப்புண்ணியதீர்த்தங்களிலும் ஸ்நானஞ்செய்துகொண்டும் பனந்தை ஜயிக்காதவர்கள் செய்யமுடி யாத நிஷ்டையை அனுஷ்டித்துக்கொண்டும் ஆகாரமில்லாமல் காற் றையே புசித்துக்கொண்டும் உலர்ந்து, கண்மூடாமல் எங்குந் திரிந்து கொண்டிருந்தார்; ஜ்வலிக்கின்ற அக்கினிக்கொப்பான தேஜ ஸுள்ள அந்தரிஷி இங்குமங்கும் அலைந்துதிரிந்துகொண்டிருக்கும் போது ஓர்காலத்தில் பொய்யபள்ளத்தில் கால்மேலும் தலைகீழாகத் தொங்கிக்கொண்டிருந்த தபஸிதிர்க்களைக் கண்டார். அந்த ஜரத் காரு அந்தப்பிதிர்க்களைக்கண்டதும், "இந்தவளையில் எப்போதும் ஒளிந்து வஸித்துக்கொண்டிருக்கும் எலியினால் சுற்றிலும் கடிக்கப் பட்ட விலாமிசசை வைக்கோலையும்பற்றிக்கொண்டு இந்தபள்ளத்தில் தலைகீழாகத் தொங்குகின்றீர்களே; நீங்கள் யார்?" என்றுகேட்டார். "நாங்கள் * யாயாவரர்களென்றுபெயருள்ள உக்கிரமான தவமுள்ள ரிஷிகள்; பிராமணரே! ஸந்ததிகுறைந்துபோன தினால் பூமிக்குக்கீழே போய்க்கொண்டிருக்கிறோம்; அதிர்ஷ்டமில்லாத எங்களுக்கு அதிர் ஷ்டஹீனனான ஜரத்காருவென்னப்பட்ட ஓர்வன்தான் ஸந்ததிபா யிருக்கிறான்; அந்தமூடன் தவம் ஒன்றையேபற்றியிருப்பதனால் புத்தி ரர்களைப்பெறுவதற்குக் காரணமான விவாஹத்தைச் செய்துகொள்ள விரும்பாமலிருக்கிறான்; அவனுக்குச் சந்ததியில்லாமற் போனதனால் எங்களுக்கு நாதனுக அவன்இருந்தும், நாங்கள் பாபஞ்செய்தவர் களைப்போல் நாதனற்று இந்தப்பள்ளத்தில் தொங்குகிறோம்; மனுஷ் யலோகத்தில் எவர்களுக்குச் சுகந்தரத்தக்க ஸந்ததியில்லாமலிருக் கிறதோ அவர்கள் புண்ணியம் செய்தவர்களாயினும் அவர்களுக்கு

* ரோமத்துக்கு ஓர் இராத்திரியாகத் தங்குகின்றவர்கள்.

ஸ்வர்க்கத்தில் ஸ்தானமில்லை; மிகச்சிறந்தவனே! நீ யார்? பந்துவைப் போல் எங்களைப்பற்றி வ்யஸனப்படுகிறாயே; பிராமணனே! இங்கிருக்கிற நீ எங்களுக்கு என்னமுறையென்பதையும் பரிதாபப்படத்தக்க எங்களைப்பற்றி நீ எதற்காக வ்யஸனப்படுகிறாயென்பதையும் நாங்கள் தெரிந்துகொள்ள விரும்புகிறோம்" என்று பிதிர்க்கள்கேட்டதற்கு ஜரத்காரு சொல்லுகிறார்.

"நீங்கள் என்னுடையமுன்னோராகிய பிதிர்க்களும் பிதாமஹர்களுமானவர்கள்; நானே ஜரத்காரு; இப்போது உங்களுக்கு நான் செய்யவேண்டியதென்ன? சொல்லுங்கள்" என்றார். பிதிர்க்கள், "ஸ்வதந்திரனே! நம் முடையகுலத்திற்குப் புத்திரஸந்ததி வேண்டுமென்றாவது உன் ஆத்மார்த்தமாகவாவது எங்களுக்காகவாவது தர்மமென்றேயாவது நிணைத்து விவாஹஞ்செய்துகொள்ளச்சித்தையுடன் முயல்வாயாக; புத்திரவான்கள் அடையும் கதியைபடைவது பூர்வஜன்மத்துப் புண்ணியங்களின் பலன்களிலுமில்லை; இப்போது நம்பாதிக்கின்ற தவங்களிலுமில்லை; புத்திரனே! ஆதலால், நீ எங்கள் ஆஜ்ஞையின்படி விவாஹஞ்செய்துகொள்வதில் முயற்சியையும் ஸந்ததியில் [illegible]ருப்பத்தையும் செய்; எங்களுக்கு இதுதான் பெரியநன்மை" என்றுசொன்னார்கள்.

ஜரத்காரு. "நான் ஸ்திரியையும் ஜீவனத்துக்காகத் தனத்தையும் தேடமாட்டேன்; ஆனாலும் உங்களுடையநன்மைக்காக விவாஹஞ் செய்துகொள்வேன்; நான் ஒருநியமத்தை ஏற்படுத்தப்போகிறேன்; அந்த நியமப்படி எனக்குப் பெண்கிடைத்தால் நான்விவாஹஞ்செய்துகொள்வேன்; இல்லாவிட்டாலில்லை; என்பெயருள்ள கன்னிகையாக இருக்கவேண்டும்; அந்தக்கன்னிகையை அவள்பந்துக்கள் தாமே எனக்குக்கொடுக்க முயலவேண்டும்; அப்போது அவளைநான் பிக்ஷையைப்போல் வாங்கிக்கொண்டு சாஸ்திரப்படி விவாஹஞ்செய்துகொள்வேன்; ஏழையான எனக்குப் பாரியையை எவன் தேடிக்கொடுப்பான்? அப்படி ஒருவன்கொடுப்பாஞகில் பிக்ஷையைப்போற்பெற்றுக்கொள்வேன்; பிதிர்க்களே! இந்தநியமப்படி விவாஹத்திற்காகப் பலமுறை முயற்சிசெய்வேன்; இதற்குமாறுகச் செய்யேன்; அவளிடம் உங்களைக்கரையேற்ற ஒருஸந்ததி உண்டாகும்; என்னுடைய பிதிர்க்கள் ஸ்திரமானஸ்தானத்தையடைந்து ஸந்தோஷமாக இருக்கக்கடவர்" என்றுசொன்னார்.

பதினன்காவது அத்தியாயம்.

ஆஸ்தீகபர்வம். (தொடர்ச்சி).

(ஜரத்காருரிஷிவாஸுகியின் ஸஹோதரியான ஜரத்காருவை மணம்புரிதல்).

பிறகு உறுதியான நியமமுள்ள அந்தப்பிராமணர், விவாஹத்திற் காகப் பாரியையைத்தேடிக்கொண்டு பூமிமுழுதும்ஸஞ்சரித்தும் பாரி யையை அடையவில்லை; அந்தப்பிராமணர் ஒருநாள் பிதிர்க்கள் சொன்னதைநினைத்துக்கொண்டு வனஞ்சென்றுகன்னிகையைக்கொடு வென்று பிக்ஷைகேட்பதுபோல் மூன்றுமுறை மெதுவாகக்கேட் டார். அப்போது வாஸுகி தன்ஸஹோதரியைக்கொடுக்க ஸித்த மாகவைத்துக்கொண்டு அவரைஅழைத்தான். அவர் அவளைத் தம் பெயருள்ளவள்அல்லவென்றுநினைத்து அவளை வாங்கிக்கொள்ள வில்லை. தம்பெயருள்ளபெண்ணை ஒருவன் முன்னமே அவருக்கென்று நிச்சயமாகவைத்திருந்து கொடுப்பானாயின் வாங்கிக்கொள்ளலா மென்று அந்தமஹாத்மாவான ஜரத்காருவின் மனத்தில் நிச்சயமிருந் தது. சிறந்தபுத்தியுள்ளவரும் தவத்திற்சிறந்தவருமாகிய ஜரத் காரு, "ஓ நாகனே! இந்தஉன்ஸஹோதரி என்னபெயருள்ளவள்; உண்மை யைச்சொல்" என்றுகேட்க, வாஸுகி, "ஜரத்காருவே! இந்த என் தங்கையும் ஜரத்காரு என்றுபெயருடையவள்; அழகியஇடையுள்ள இவளை உமக்குப் பாரியையாக நான் கொடுக்கிறேன்; வாங்கிக்கொள் ளும்; பிராமணசிரேஷ்டரே! இவள் உமக்காக முன்னமே காப் பாற்றிவைக்கப்பட்டிருப்பதனால் இவளை நீர் அங்கீகரிக்கவேண்டும்" என்றுசொன்னன்.

இவ்விதமாகச்சொல்லி, பிறகு அந்த ச்லாக்கியமான பெண்ணை அவருக்குப் பாரியையாகக்கொடுத்தான். அவரும் சாஸ்திரோக்த மான கிரியைகளைச்செய்து அவளைப் பாணிக்கிரஹணஞ்செய்தார்.

பதினைந்தாவது அத்தியாயம்.

ஆஸ்தீகபர்வம். (தொடர்ச்சி).

(ஜரத்காருவுக்கு ஆஸ்தீகர்பிறந்து ஸர்ப்பங்களுக்குச் சாபவிமோசனம் செய்வித்தது).

"பிரம்மஞானிகளுக்கெல்லாம் சிறந்தவரே! முன்னே ஸர்ப்பங் களின்தாயாராகிய கத்ரு ஸர்ப்பங்களைப்பார்த்து, "ஜனமேஜயருடைய

யஜ்ஞத்தில் உங்களை அக்னி தஹிக்கப்போகிறான்" என்று சபித்திருந்தாள். அந்தச்சாபத்தைச் சமனம்செய்வதற்காக நாகச்ரேஷ்டனவாஸுகி தன் ஸோதரியைச் சிறந்த தவமுள்ள அம்மஹாத்மாவாகிய ரிஷிக்குக் கொடுத்தான். அவர் அவளைச் சாஸ்திரப்பிரகாரம் கிரியைகளைச்செய்து பாணிக்ரஹணம் செய்துகொண்டார். அவருக்கு அவளிடம் ஆஸ்திகனென்னும் பெயருள்ள புத்திரர் பிறந்தார். அவர் உயர்ந்தமனமுள்ளவர்; தபஸ்வீ; மஹாத்மா; வேதங்களிலும் வேதாங்கங்களிலும் கரைகண்டவர்; மல்லாஜனங்களிடத்தும் பக்ஷபாதமின்றி ஸமமாகஇருப்பவர்; பிதாவுக்கும் மாதாவுக்கும் பயத்தைநீக்குகிறவர்.

இப்படியிருக்கையில், நெடுங்காலத்துக்குப்பிறகு பாண்டவவம்சத்திற்பிறந்த ஜனமேஜயராஜா ஸர்ப்பஸத்ரமென்று பெயருள்ள மஹாயாகத்தைச் செய்தாரென்று நமக்குக்கேள்வி. ஸர்ப்பங்களின் நாசத்திற்காக அந்தயாகம் நடந்தபோது, மிகச்சிறந்த தபஸ்ஸுள்ள அந்த ஆஸ்திகர் தமது ஸோதரர்களும் மாதுலர்களும் மற்றவர்களுமாகிய அந்தஸர்ப்பங்களைச் சாபத்திலிருந்து விடுவித்தார்; அப்படியே [redacted]தியைவிருத்திசெய்து பிதிர்க்களைக்கரையேற்றினார்; பிராமணரே! தபஸினாலும் பலவிதமான யஜ்ஞநிகேஷுகளாலும் தேவர்களின்கடனையும் வேதாத்தியயனங்களினால் ரிஷிகளின்கடனையும் தீர்த்தார்; ரோம்பின ஹவிர்ப்பாகமேளாடுகூடிய யாகங்களினால் தேவர்களையும், ப்ரம்மசரிய நியமத்துடன் வேதபோதனைகளால் * ரிஷிகளையும், புத்திரஸந்ததியினால் பிதிர்க்களையும் த்ருப்திசெய்வித்தார்.

உக்ரமான தவமுள்ள ஜரத்காரு பிதிர்க்களின்கடனுகிற பெரிய பாரத்தையிறக்கித் தம் பிதிர்க்களோடுகூட வேதாரம்ப ஸ்வர்க்கத்துக்குப்போனார்; ஜரத்காருவென்னுமரிஷி வெகுகாலத்துக்குப்பின்பு ஆஸ்திகனென்னும் புத்திரனையடைந்து சிறந்த தவத்தையுஞ்செய்து ஸ்வர்க்கம்சென்றார். இந்த ஆஸ்திகசரித்திரத்தை நடந்தபடி நான் சொன்னேன். பருகுச்ரேஷ்டரே! உங்களுக்கு இன்னும் நான்சொல்லவேண்டியதென்ன? சொல்லுங்கள்" என்று மௌனதி கேட்டனர்.

---

* வேதங்களோடு.

பதினைந்தாவது அத்தியாயம்.

ஆஸ்தீகபர்வம். (தொடர்ச்சி).

(கத்ரு வினதை இருவருக்கும் புத்ரஜனனம்).

சௌனகர், "ஸூதகுலத்திரரே! பரந்தஞானமுள்ளவரும் பரோபகாரியுமான ஆஸ்தீகருடைய இந்தக்கதையைத் திரும்பவும் விரிவாக நீர் சொல்லக்கடவீர்; எங்களுக்குக் கேட்கவிருப்பம் அதிகமாயிருக்கிறது. மலர்ந்தமுகத்தையுடையவரே! நீர் நயமான எழுத்துக்களோடுகூடிய சொற்களை இனிமையாகச்சொல்லுகிறீர். ஐயா! மிகவும் த்ருப்தியடைகிறோம். உபத்யாயரான ரோமஹர்ஷணர் போலவே நீர் இதைச்சொல்லுகிறீர். உம்முடைய உபாத்யாயரும் எங்களுக்குச் சொல்வதற்கு எப்போதும் ஆசையுள்ளவராயிருப்பார். இந்த ஆஸ்தீகசரித்திரத்தை உபத்யாயர் சொன்னதுபோலவே நீரும் சொல்லும்" என்றுகேட்க, ஸௌதி சொல்லுகிறார்:—

"நீர்க்காயுஷ்மானே! என்பிதா சொல்ல நான் கேட்டபடி இந்த ஆஸ்தீகசரித்திரத்தை உங்களுக்குச் சொல்லுகிறேன். பிராம்மணரே! குற்றமற்றவரே! முந்திய தேவயுகத்தில் தக்ஷப்பிரஜாபதியின் சிறந்த பெண்களாகிய இரண்டுஸஹோதரிகள் ஆச்சரியப்படத்தக்க ரூபமுள்ளவர்களாக இருந்தனர். கத்ருவென்றும் வினதையென்றும் பெயருள்ள அவ்விருவரும் கசியபருக்குப் பார்யைகளாக இருந்தனர். ப்ரம்மாவுக்கு ஒப்பான அவர்களுடைய பர்த்தாவாகிய கசியபர் அந்தத்தர்மபத்னிகளின்மீது மிகுந்தஸந்தோஷமடைந்து அவர்களுக்கு அன்புடன் வரங்கொடுப்பதாகச் சொன்னார். இவ்வாறு கசியபர் சிறந்த வரங்கொடுப்பதைக்கேட்டு அந்தச் சிறந்தபெண்களிருவரும் உள்ளமகிழ்ந்து ஒப்பற்ற ஸந்தோஷத்தையடைந்தனர். கத்ருவென்பவள் ஒரேரூபமுள்ள ஆயிரம்நாகர்களைப் பிள்ளைகளாக வரம்கேட்டனள். வினதை வலிமையில் கத்ருவின்புத்ரர்களுக்கு மேற்பட்ட இரண்டுபுத்ரர்களை வரித்தாள். அவ்விரண்டுபுத்ரரும் ஒளியிலும் உருவத்திலும் பராக்கிரமத்திலும் மேற்பட்டவர்களாக இருப்பதையும் விரும்பினாள். அவளுக்குப்பர்த்தாவான கசியபர், "நீ கேட்டபடியான புத்ரர்கள் உனக்கு உண்டாவார்கள்" என்று வரம்அளித்தார். அப்போது வினதையும் கசியபரைப்பார்த்து, "அப்படியே உண்டாக வேண்டும்" என்று சொன்னாள். வினதை அப்போது தான் விரும்பினவரத்தை விரும்பியபடியடைந்ததனால் ஸந்தோஷமடைந்தாள்.

வினதைக்கு அதிகசக்தியுள்ள இரண்டுபுத்ரர்கள் கிடைத்ததனாலும், கத்ருவுக்கு ஒருரூபமான ஆயிரம்புத்ரர்கள் கிடைத்ததனாலும் இருவருக்கும் மனோரதங்கள் நிறைவேறின. சிறந்ததபஸ்ஸுள்ள அந்தக்கசியபர் வரங்களினால் ஸந்தோஷமடைந்த பாரியைகளைப்பார்த்து, "இருவரும் அவரவர்கர்ப்பத்தை ஜாக்கிரதையாக வைத்துக்கொள்ளுங்கள்" என்றுசொல்லி வனத்திற்குச் சென்றார்.

பிராமணசிரேஷ்டரே! நீண்டகாலத்துக்குப்பின், கத்ரு ஆயிரம் முட்டைகளையும் வினதை இரண்டுமுட்டைகளையும் பெற்றனர். அவ்விருவர்களுடைய முட்டைகளையும் வேலைக்காரிகள் ஸந்தோஷத்துடன் அவற்றிற்குவேண்டிய அளவான உஷ்ணமுள்ள பாத்திரங்களில் ஐந்நூறுவருஷகாலம் வைத்திருந்தனர். பிறகு ஐந்நூறுவது வருஷத்தில் கத்ருவின்புத்ரர்கள் முட்டைகளைவிட்டு வெளிவந்தனர். வினதையினுடைய இரண்டு முட்டைகளிலிருந்துமட்டும் இரண்டுபுத்ரர்களும் காணப்படவில்லை.

பிறகு புத்ரர்களிலிருந்பின வினதாதேவி பரிதாபப்படத்தக்கவளாக வெட்கிப்போய் ஒருமுட்டையை உடைத்தாள்; அதில் சரீரத்தின் மேற்பாகம் பூர்ணமடைந்தும் மற்றப்பாகம் தெரியாமலுமிருந்த ஒருபுத்ரனைக்கண்டாள். அந்தப்புத்ரன் கோபாவேசங்கொண்டு "அம்மா! நீ அதிகஆசைகொண்டு என்னை இப்படிச் சரீரம் பூர்ணமாகாமற்செய்ததனால், நீ ஐந்நூறுவருஷங்களாக எவளிடம் பொறாமையுற்றிருக்கிறாயோ அவளுக்கு அடிமையாவாய்" என்றுசபித்து, பிறகு, "மாதாவே! இந்த வ்யஸனப்படத்தக்க இரண்டாவது பிள்ளையையும் நீ முட்டையையுடைத்து என்னைப்போல் அங்கங்குறைந்தவனாகவாவது அங்கமில்லாதவனாகவாவது செய்யாமலிருக்கவேண்டும். அப்படியிருந்தால் இந்தப்பிள்ளை உன்னை அடிமைத்தனத்திலிருந்து விடுவிப்பான். எல்லாநக்குமும் மேற்பட்டபலமுள்ள புத்ரனைவிரும்புகிற நீ மனவுறுதியுடன் ஐந்நூறுவருஷத்திற்கு மேற்பட்டு இவனுடைய ஜனனகாலத்திற்குக் காத்திருக்கவேண்டும்" என்று சொன்னன். பிராமணரே! இப்படி வினதையைச் சபித்தபிறகு, அந்தப்புத்ரன் ஆகாசத்தையடைந்து காலைவேளையாகிய அப்போது சேர்ந்திருள்ளவனைக்காணப்பட்டான். பிறகு தேஜஸ்ஸுகளுக்குராஜாவான சூரியன் இருளைப்போக்கிக்கொண்டு உதயமாகும்போது, அவன், தேஜஸினால் ஜ்வலிப்பவனும் தனக்கொப்பான பிரகாசமுள்ளவனுமாகிய அந்த அருணனைக்கண்டு அன்புடன் அவனை ஸாரதியாகவைத்துக்கொண்டான். அந்தஅருணனும், மிகுந்ததேஜஸ்ஸுள்ளவனும் லோகங்

களுக்கெல்லாம் தீபம்போன்றவனுமாகிய சூரியனுடைய அந்த ரதத்தின்மேலேறித் தேவதையானான்.

ஸர்ப்பங்களோப்புசிக்கிறவனுகிய கருடனும் குறித்தகாலத்தில் ஜனித்தான். பிருகுவம்சசிரேஷ்டரே! பக்ஷிகளுக்குராஜாவாகிய அந்தக்கருடன் பிறந்தவுடன் பசித்துத் தான்புசிக்கத்தக்கதாகப் பிரம்மா தனக்கு விதித்திருக்கும் அன்னத்தைச் சம்பாதிப்பதற்காக வினதையைவிட்டுவிட்டு ஆகாயத்திற்போனான்.

பதினேழாவது அத்தியாயம்.

ஆஸ்தீகபர்வம். (தொடர்ச்சி).

(அமிர்தம்கடைவதைப்பற்றித் தேவர்கள் ஆலோசிப்பது).

"தபோதனரே! அதிதகாலத்தில் அந்தஸமீஹாதரிகளாகிற கத்ரு வினதைஇருவரும், தேவக்கூட்டங்களெல்லாவற்றிலும் மிகுந்த ஆனந்தத்துடன் பூஜிக்கப்பெற்றதும் அமிர்தம்கடைந்தகாலத்தில் உண்டானதும் மிகச்சிறந்ததும் தெய்வீயடையாதபலமுள்ளதும்குதிரைகளுக்குள்ளேசிறந்ததும் வேகமுள்ளவற்றிற்சிறந்ததும் அழகுள்ளதும் ஜரையில்லாததும் லக்ஷணங்களெல்லாம் பொருந்தியதுமாகிய உச்சைச்சரவம் என்னும் ரத்னம்போன்ற தேவலோகத்துக்குதிரையைப்பற்றில் வருவதைக்கண்டனர்" என்று ஸௌதிசொன்னர்.

இவ்வாறுஸூதபுத்திரர்சொல்ல, சௌனகர், "சிறந்த ஒளியுள்ளதும் மிகுந்தசக்தியுள்ளதுமாகிய அந்தஉச்சைச்சரவம்என்னும் அசுவராஜா உண்டானதற்குக் காரணமான அமிர்தமதனத்தைத் தேவர்கள் எங்கே எப்படிச்செய்தனர்? எனக்குச் சொல்லும்; இந்த அமிர்தமதனத்திற்குக் காரணத்தையும் அமிர்தத்திற்குப்பிறகு உண்டானதையும் எனக்குச்சொல்லும்" என்றுகேட்க, ஸூதபுத்திரர்சொல்லுகிறார்:

சிறந்த பராக்கிரமமுள்ளவரும் தவமும்திரமமும் முள்ளவருமான தேவர்களெல்லாரும், தேஜஸுகளெல்லாஞ்சேர்ந்து உருக்கொண்டதுபோல் ஜ்வலிப்பதும், மிகவுயர்ந்ததும், தங்கத்தினும் பிரகாசிக்கின்றகொடுமுடிகளினுல் ஸூர்யனுடையகாந்தியோடு மாறுகொண்டுவிளங்குவதும், தங்கத்தையே ஆபரணமாகவுடையதும், அநேகவர்ணங்களுடையதும், தேவர்களாலும் கந்தர்வர்களாலும் ஆச்சரியிக்கப்பட்டதும், அளவிடமுடியாததும், பாபம்மிகுந்தஜனங்கள் அடையக்கூடாததும், பயங்கரமானஸர்ப்பங்களினுற்சூழப்பட்டதும், இராத்திரியில்

பிரகாசிக்கிற *ஜ்யோதிர்லதைமுதலான திவ்ய ஔஷதிகளால் பிரகாசிப்பதும், உயரத்தினால் ஸ்வர்க்கத்தைமறைத்துகொண்டு நிற்பதும், சாதாரணமனிதர்கள் மனத்தாலும்செல்லமுடியாததும், நதிகளும் வ்ருக்ஷங்களும்நிறைந்ததும், மிகஅழகானபலபக்ஷிக்கூட்டங்கள் சப்திப்பதுமாகிய மேருபர்வதத்தை அடைந்து, பலரத்னங்களால் நிறைந்ததும் அழகானதும் முடிவில்லையென்று சொல்லக்கூடியதும் ஒப்பில்லாததுமாகிய அதன்கொடுமுடியிலேறி அதில் ஒன்றுகச்சேர்ந்து உட்கார்ந்துகொண்டு, அமிர்தத்திற்காக ஆலோசிக்கத்தொடங்கினர். அங்கே தேவர்களெல்லாரும் இவ்வாறுஅமிர்தத்தைக்குறித்துச் சிந்தித்துக்கொண்டு அதற்குரியஉபாயத்தை ஆலோசித்துக்கொண்டிருக்கையில், பகவானானநாராயணன் பிரம்மாவைப்பார்த்து, "தேவர்களும், அஸுரக்கூட்டங்களும், திருப்பாற்கடலைக் கடையட்டும்; அந்தப்பெருங்கடல் கடையப்பட்டபோது அமிர்தமுண்டாகும்" என்று சொல்லி, பிறகு, "தேவர்களே! எல்லாஔஷதிகளையும் எல்லாரத்னங்களையும்போட்டுச் சமுத்திரத்தைக் கடையுங்கள்; பிறகு அமிர்தத்தையடைவீர்கள்" என்றுசொன்னார்.

பதினெட்டாவது அத்தியாயம்.

ஆஸ்தீகபர்வம். (தொடர்ச்சி).

(விஷ்ணு மோஹினிரூபமெடுத்துத் தேவர்களுக்கு அமிர்தபானஞ் செயவித்தது).

பிறகு, மேகங்களின்சிகரங்களைப்போன்ற கொடுமுடிகளினால் அலங்கரிக்கப்பட்டதும், கொடிகள் நிரம்பஅடர்ந்ததும், பலவித பக்ஷிகள் சப்திப்பதும், சிகரப்பகுதிகளுள்ள பலபிராணிகள்நிரம்பினதும், கின்னரர்களும் அப்ஸரஸுகளும் தேவர்களும் எப்போதுமிருப்பதும், பதினேராயிரம்யோசனை உயர்ந்ததும், பூமியின்கீழே பதினேராயிரம்யோசனைபரவி சென்றதுமாகிய அந்த மந்தரமென்னுஞ் சிறந்தபர்வதத்தை பெயர்க்கமுடியாமல் தேவக்கூட்டங்களெல்லாம் விஷ்ணுவும் பிரம்மாவும் வீற்றிருக்குமிடஞ்சென்று, "நீங்களிருவரும் இந்த மந்தரத்தையெடுக்கும்விஷயத்திற் பயனத்தரத்தக்க சிறந்தயோசனையைச் செய்யக்கடவீர்; எங்களுடைய நன்மைக்காக முயற்சிசெய்யவேண்டும்" என்று கேட்டுக்கொண்டனர். பிறகு

* இரவிற்பிரகாசிக்கிற ஒருவகைக்கொடி.

வம்சபுத்திரரே! செந்தாமரைமலர்போன்ற கண்களையுடையவரும் அழியக்கூடாத ஸ்வரூபமுள்ளவருமாகிய திருமால், பிரம்மாவுடன் கூட, "அப்படியேயாகட்டும்" என்று அங்கிகரித்து ஆதிசேஷனே யெனினர். பிறகு சிறந்தசக்தியுள்ள ஆதிசேஷன் எழுந்து அந்த மந்தரபர்வதத்தைத் தூக்குகிறவேலையில் பிரம்மாவினாலும் விஷ்ணுவினாலும் நியமிக்கப்பட்டான்.

பிராமணரே! அதன்பின் பலராபலசாலியாகிய ஆதிசேஷன் அந்த மந்தரமென்னும் பெரியமலையைத் தன் பலத்தினால் வனங்களுடனும் வனவாசிகளுடனும் தூக்கினான். பிறகு தேவர்கள் அவனுடன் கூடச் சமுத்திரத்திற்குச்சென்று அதைப்பார்த்து, "அமிர்தத்திற் காக உன்ஜலத்தைக் கடையப்போகிறோம்" என்றுசொல்ல, "எனக் கும் அந்தஅமிர்தத்திற் பாகமிருக்குமானால் அப்போது மந்தரம்சுழலு வதினாலுண்டாகும் மிகுந்தஉபத்திரவத்தை நான் பொறுப்பேன்" என்று சமுத்திரம்சொல்லிற்று. தேவர்களும் அசுரர்களும் சமுத்திரத்திலிருக்கும் பெரியஆமையைபார்த்து, "நீ இம்மலைக்கு ஆதாரமாகஇருக்கவேண்டும்" என்று கேட்டுக்கொண்டனர். அந்தஆமையும், "அப்படியேஆகட்டும்" என்றுசொல்லி மந்தரமலைக்கு முதுகு கொடுத்தது. அந்தக்கூர்மத்தின் முதுகிலிருந்த அந்தமலையை இந்திரன் வச்சிராயுதத்தினால் மேன்மேல அமுக்கினான். பிராமணரே! மந்தரத்தை மத்தாகவும் வாஸுகியைக் கயிறாகவுஞ்செய்து தேவர்களும் அஸுரர்களும் அமிர்தத்திற்காக ஜலங்களுக்கெல்லாம் ஆதாரமாகிய சமுத்திரத்தைக் கடையத்தொடங்கினர். நாகராஜாவான வாஸுகியின் ஒருமேகாடியாகிய முகத்தை அசுரகிரேஷ்டர்கள் பிடித்துக் கொண்டனர். முடிவில்லாதவரும் பகவானுமாகிய நாராயணன் எங்கே இருந்தாரோ அந்தவாலின்பக்கத்தில் தேவர்களெல்லோரும் சேர்ந்துநின்றனர். அசுரகிரேஷ்டர்கள் நாகராஜாவாகிய வாஸுகியின் முகத்தைப்பிடித்துக்கொண்டனர். நாகத்தினுடைய தலையை அடிக்கடி தூக்கிப்போட்டனர். அசுரர்கள் வேகமாகப்போட்டபடியால் வாஸுகியென்னும் நாகத்தினுடைய முகத்திலிருந்து அடிக்கடி புகையோடும் ஜ்வாலையோடுங்கூடப் பெருமூச்சுக்கள் கிளம்பின.

பிருகுவம்சபுத்திரரே! பிடிக்கப்பட்ட வாஸுகி கக்கின விஷத் தோடு அந்தஜலம் சேர்ந்துபோயிற்று. பின்பு தேவர்களும் அசுரர் களும் கையின்வலிமையினால் மந்தரத்தைக்கொண்டு கடைந்தபோது ஹாலாஹலமென்று பெயர்பெற்ற கொடியவிஷம் உண்டாயிற்று. தேவர்களும் அசுரர்களும் விஷத்தால் தடுக்கப்பட்டுப்பயந்து வ்யஸன

மடைந்து அவ்விடம்விட்டோடினர். தேவர்களும் ரிஷிசிரேஷ்டர்களும் சேர்ந்து பிரம்மாவினிடம்போய், "அமிர்தங்கடையும்போது பிரளயகாலாக்னிக்கு ஒப்பான விஷம் உண்டாயிருக்கிறது; அதனலேயே உலகங்கள் தகிக்கப்படுகின்றன; அதற்கு நீங்கள் பரிஹாரஞ் செய்யவேண்டும்" என்றனர்.

அவர்கள் இவ்வாறுசொன்னபொழுது, பிரம்மா, லோகேசுவரரும், * ஹரனும், மூன்றுநேத்திரங்களுடையவரும், திரிசூலந்தரித்தவரும், தேவர்களுக்குந்தேவரும், பார்வதீபதியுமாகிய ருத்ரமூர்த்தியைத் தியானஞ்செய்தார். அவராற்சிந்திக்கப்பட்ட ஈசுவரன் அவர்சிந்தித்ததையறிந்து சீக்கிரம்வந்தனர். பிறகு பிரம்மதேவர் அதையெல்லாம் அந்தஈசுவரனுக்குச்சொல்ல, அதைக்கேட்டுத் தேவர்களுக்குந் தேவரும், ஈசுவரருமாகிய ருத்ரமூர்த்தி உலகங்களுக்கு ஹிதஞ் செய்யக்கருதிப் பிரளயகாலாக்னிக்கொப்பான தேஜஸோடு கூடிய அந்தவிஷத்தைப் பானஞ்செய்தார். ஈசுவரர், லோகஹிதத்திற்காக அந்தவிஷத்தைத் தம் கழுத்துக்குள் நிறுத்தினர். அதனல் கழுத்திற்கருமையுண்டானதுபற்றி நீலகண்டரென்று சொல்லப்படுகிறார். அளவற்ற தேஜஸ்ஸுள்ள ருத்ரராலே விஷம்குடிக்கப்பட்டமாத்திரத்தில் தேவர்கள் ஸந்தோஷமடைந்து திரும்பவும் சமுத்திரத்தைப் பழையபடி கடைந்தனர். தேவாசுரர்கள் அமிர்தத்திற்காக மறுபடியும் கடலைக்கடைந்தபோது, அசுரர்கள் திடீரென்றுபோடுவதனல் வாஸுகிநாகத்தின் முகத்திலிருந்து புகையுடனும் ஜ்வாலையுடனும் மூச்சுக்காற்றுக்கள் அடிக்கடி வெளிப்பட்டன. அந்த அதிகப்புகைகள்சேர்ந்து மின்னலோடுகூடிய மேகங்களாக ஆகி, சிரமத்தினலும் உஷ்ணத்தினலும் பீடிக்கப்பட்ட தேவக்கூட்டங்களின்மேல் மழையைப் பொழிந்தன. அந்த மந்தரபர்வதத்தின் சிகரத்தின்மேலிருந்து புஷ்பவர்ஷங்கள், தேவாசுரக்கூட்டங்களெல்லாவற்றின்மேலும் நாலு பக்கங்களிலும் விழுந்தன.

தேவாசுரர்கள் மந்தரத்தினல் ஸமுத்திரத்தைக்கடையும்போது, அதில் மஹாமேகசர்ச்சனரென்ற ஒருபெரியகோஷமுண்டாயிற்று; அந்தச்சமுத்திரத்திலுள்ள பலஜலஜந்துக்களும் அந்தப்பெரியமலையினல் நசுக்கப்பட்டு மூர்ச்சிக்கணக்காக நாசமடைந்தன; மலையானது பாதாளத்துக்குள்வஸிக்கும் வருணனைச்சேர்ந்த பற்பலபிராணிகளை நாசஞ்செய்தது; அந்தமலையைச்சுழற்றும்போது பெரியமரங்கள் ஒன்றோடொன்று உரைந்துகொண்டு பறவைகளுடன்கூடப் பர்வதத்தின்

* ஹரன் = கஷ்டங்களைப்போக்குகிறவர்.

மேற்பாகத்தினின்றும் விழுந்தன; அவற்றின் உரைதலினுலுண்டான அக்னி அடிக்கடி பெரியஜ்வாலைகளுடன் எரிந்துகொண்டு * மின்ன லோடுகூடிய நீலமேகம்போல் மந்தராசலத்தின்மேல் வியாபித்து அங்கி ருந்துவெளிப்படுகின்ற யானைகளையும் சிம்மங்களையும் தகித்தது; பலவகைகளான பிராணிகளனைத்தும் இறந்துபோயின; தேவகிரே ஷ்டனுகிய இந்திரன் இங்குமங்குப் தகிக்கின்ற அந்த அக்னியை மேகங்களிலுண்டான ஜலத்தினுல் முழுவதும் சமனஞ்செய்தான்; பின்பு அந்தஸமுத்ராஜலத்தில் அநேகவகைகளான பெரியமரங்களின் பால்களும் அநேகஔஷதிகளுடைய ரஸங்களும் பெருகிவிழுந்தன; அமிர்தத்தைப்போன்ற சக்தியுள்ள அந்தரஸங்களினுலுண்டான பாலி னுலும் தங்கம்உருகிஜலமாகப் பெருகுவதனுலும் தேவர்கள் † அப. ரத்வத்தையடைந்தனர். பிறகு அந்தஸமுத்ரத்தினுடைய ஜலம் அந் தச் சிறந்தரஸங்களோடுசேர்ந்ததனுற் பாலாயிற்று; அப்பாலினின் றும் வெண்ணெய் உண்டாயிற்று.

பிறகு தேவர்கள் வரங்கொடுக்கிறவராக வீற்றிருக்கும் பிரம்மா வைப்பார்த்து, "பிரம்மாவே! தேவர்களுக் அசுரர்களுமாகிய எல் லாரும் மிகவும் சிரமப்பட்டிருக்கிறோம்; தேவனுகிய நாராயணனில் லாமல் அமிர்தமுண்டாவதில்லை. சமுத்திரங்கடைய ஆரம்பித்து வெகு காலமாயிற்று. எங்களுக்குச் சோர்வுண்டாயிற்று. அமிர்தம் இதில் உண்டாகவில்லை" என்று சொன்னர்கள். தேவர்களுடைய சொல் லைக்கேட்டபிறகு, உலககர்த்தாவாகிய பிரம்மா பகவானுகிய நாரா யணனைப்பார்த்து, "விஷ்ணுவே! இந்தத்தேவர்களுக்குப் பலத்தை யுண்டுபண்ணும்; நீர்தாம் இதற்கு முதன்மையான ஆதாரம்" என்று சொன்னர். நாராயணன், "இந்தக்காரியத்தை எடுத்துக்கொண் டவரெல்லாருக்கும் பலங்கொடுக்கிறேன்; எல்லாரும் மந்தரத்தைச் சுழற்றிப் பாலைக்கலக்கட்டும்" என்றர். நாராயணன் சொன்னதைக் கேட்டு அந்தத்தேவாஸுரர்கள் பலமுள்ளவர்களாகி ஒன்றுசேர்ந்து மறுபடியும் அந்தப்பாலை மிகவும் கலங்கச்செய்தனர். அதில் முதலில் உண்டான அந்தவிஷத்தைப் பிரம்மாசொன்னதனுல் லோகத்தை ரக்ஷி ப்பதற்காகச் சிவன்விழுங்கினபிறகு கறுத்த உருவத்துடன் எல்லா ஆபரணங்களையும் அணிந்துகொண்டு ஜ்யேஷ்டாதேவி உண்டானுள்.

பிறகு ஸமுத்திரத்தைக்கடையும்போது குளிர்ந்த நூறுயிரம் கி ரணங்களுடன் சோகாசித்துக்கொண்டு நிர்மலரூபமாகச் சந்திரன்உண்

* மாங்கள் மேகத்தைப்போலவும் ஜ்வாலை மின்னலைப்போலவும் இருந்
† மரணமில்லாமை. [தன.

டானனன். பிறகு வெண்ணெயினின்றும் வெளுப்புவஸ்திரம்தரித்த லக்ஷ்மியும் *ஸுராதேவியும் வெள்ளைக்குதிரையும் உண்டாயினர். விரிவானகிரணங்களுடையதும் நாராயணன் மார்பிலிருப்பதுமாகிய அழகுள்ள சிறந்த கௌஸ்துபமென்னும் ரத்னமும் அந்தவெண்ணெயினின்றும் உண்டாயிற்று. மஹரிஷியே! பிராமணரே! அபேக்ஷித்த எல்லாப்பலங்களையும் கொடுக்கத்தக்க பாரிஜாதமரமும் காமதேனுவும் அதிலுண்டாயின. பிறகு பெரியசரீரமுள்ளதும் நான்கு தந்தங்களுள்ளதுமாகிய ஸ்ரோவதமென்னும் மஹாகஜமுமுண்டாயிற்று. காமதேனுவும், கல்பகவ்ருக்ஷமும், கௌஸ்துபமும், அப்ஸரஸுக்களும் சூரியனுடையமார்க்கமான ஆகாசத்தின்வழியாகத் தேவர்களிருக்கிறவிடம் சேர்ந்தன.

பிறகு அழகானதேகமுள்ள தன்வந்தரியென்னும் தேவதை அமிர்தத்துடன்கூடின வெள்ளைக்குடத்தை எடுத்துக்கொண்டு கிளம்பினர். அந்த மிகுந்தஆச்சரியத்தைக்கண்டு அஸுரர்கள் இஃது எங்களுக்குத்தான் என்று சொல்லிக்கொண்டு அமிர்தத்திற்காகப் பேரிரைச்சலிட்டனர். பிறகு நாராயணன் எல்லாரையும் மயக்குகின்ற தம் மாயையினால் ஆச்சரியமான ஒருபெண்ணுருவம் எடுத்துக்கொண்டு அஸுரர்களின் முன்நின்றார். அந்த அஸுரர்கள் அவ்வளவும் அந்தப் பெண்ணிடம் மனம்சென்று மதிமயங்கி, அந்தஅமிர்தத்தை அந்தப் பெண்ணினிடம் கொடுத்தனர். நாராயணனுடைய மாயையாகிய அந்தப்பெண் அமிர்தகுடத்தை யெடுத்துக்கொண்டு திதிபுத்திரர்களையும் தனுபுத்திரர்களையும் வரிசையாக உட்காரவைக்கையிலேயே தேவர்களை அமிர்தபானஞ்செய்வித்தாள். அஸுரர்களைக் குடிப்பிக்கவில்லை. அந்தஅஸுரர்கள் கூக்குரலிட்டனர்.

பத்தொன்பதாவது அத்தியாயம்.

ஆஸ்தீகபர்வம். (தொடர்ச்சி).

(தேவாஸுரயுத்தத்தில் தேவர்களுக்கு ஜயமுண்டானது).

அதன்பின், அஸுரர்களெல்லாரும் ஒன்றுசேர்ந்து சிறந்தகவசங்களைத்தரித்து அநேக ஆயுதங்களையெடுத்துக்கொண்டு தேவர்களை எதிர்த்தார்கள்; பிறகு சக்தியுள்ளவரும் பிரபுவுமாகிய பகவானனை விஷ்ணு நரனுடன்சேர்ந்து அந்தஅமிர்தத்தைஅஸுரச்ரேஷ்டர்களிட

* கள்.

மிருந்து கவர்ந்தார். பிறகு பெருங்கலகம்நடக்கும்போது, தேவர்கள் அனைவரும் விஷ்ணுவினிடமிருந்து அந்தஅமிர்தத்தைவாங்கி அப் போது பானஞ்செய்தனர். நாராயணன் தேவர்களுக்கு அமிர்த பானஞ்செய்விக்கையில் ஸ்வரனென்பவர் தம் புஜபலத்தினால் வில்லெ டுத்து வில்லாளிகளைத் தூரத்தித் தகைந்தார். எவரெவர் அமிர்தம் குடித்தனரோ அவரவரெல்லாம் அஸுரர்களோடு யுத்தஞ்செய்தனர்.

தேவர்கள் அமிர்தத்தை விருப்பத்துடன் பானஞ்செய்யுங்காலத் தில் அங்கே ராகுவென்னும் அஸுரன் தேவவேஷத்துடன் பானஞ் செய்தான். அந்தஅமிர்தம் அந்தஅஸுரன் நெஞ்சிற்சேரும்போது தேவர்களின் ஹிதத்திற்காகச் சந்திரசூரியர்கள் அதைச்சொன்னர் கள். பிறகு சக்கராயுதராகிய பகவான், அமிர்தபானஞ்செய்த அந்த அஸுரனுடைய அலங்கரிக்கப்பட்ட தலையைத் தேஜஸ்ஸுள்ள தம்சக் கரத்தினால் அறுத்தார். மலையின்கொடுமுடி போலப் பெரிதான அந்த அஸுரன்தலை *[சக்கரத்தினால் வெட்டப்பட்டுப் பூகம்பத்தை உண்டு பண்ணிக்கொண்டுவிழுந்தது] சக்கரத்தினால்வெட்டப்பட்டு, ஆகாசத் திற்கிளம்பி மிகப்பயங்கரமாகச் சப்தஞ்செய்தது; அஸுரனுடைய அந்தத்தலையில்லா உடல் துடித்துக்கொண்டு பூமியில்விழுந்தது.அந்த அஸுரனுடையதலை மலைகள் வனங்கள் தீவுகளுடன்கூடிய பூமியைப் பதின்மூவாயிரம் யோசனைதூரம் சச்சதூரமாக எங்கும் அசையச் செய்தது. பிறகு அந்த ராகுவினுடையமுகம் சந்திரசூரியர்களுடன் தீராப்பகையை உறுதியாகக்கொண்டது. அதனால் இன்னமும் அஃது அவர்களை விழுங்குகின்றது.

பகவானுகியவிஷ்ணு அந்த ஒப்பற்ற பெண்ணுருவத்தைவிட்டு விட்டுப் பயங்கரங்களாகிய அநேகஆயுதங்களோடு அஸுரர்களோடுங் கச்செய்தார். பிறகு, சமுத்திரத்தினருகில் தேவர்களுக்கும் அஸுரர் களுக்கும் எல்லாவற்றையுங்காட்டிலும் அதிகஉக்கிரமான பெரியயுத் தம் நடந்தது. கூர்மையும் பயங்கரமுமாகிய பெரியஈட்டிகளும் தோம ரங்களும் பலவிதஆயுதங்களும் ஆயிரக்கணக்காகவிழுந்தன. பிறகு, அஸுரர்கள் சக்கரத்தினால்வெட்டப்பட்டும், கத்திகளாலும் வேலா யுதங்களாலும் கதாயுதங்களாலும் அடிக்கப்பட்டும், ரத்தத்தைமிகுதி யாகக் கக்கிக்கொண்டு பூமியில்விழுந்தனர். கொடியபட்டிசமென் னும் ஆயுதங்களாலும் யுத்தத்தில் வெட்டப்பட்டதலைகள் சிறந்தகுங்க மாலைகளுடன் அப்போது இடைவிடாமல் விழுந்தன. அடிக்கப்பட்ட அஸுரச்ரேஷ்டர்கள் ரத்தம்பூசின சரீரங்களுடன் காலிக்கற்களி

* இது அதிகபாடம்.

றைசிவந்த பர்வதசிகரங்கள்போற் படித்திருந்தனர். *சூரியன் சிவந்திருக்கையில் ஆயுதங்களினால் ஒருவரையொருவர் ஆயிரக்கணக்காக வெட்டும்போது அங்கங்கே ஹாஹாகாரம் உண்டாயிற்று. ஸமீபித்தபோது, கூர்மையான இருப்புத்தடிகளாலும் கைக்குத்துக்களாலும் யுத்தத்தில் ஒருவரையொருவர் அடிப்பவருடையசப்தம் ஆகாசமெல்லாம் வியாபித்தது. "வெட்டு, பிள, ஓடு, தள்ளு, எதிர்த்துப்போ" என்ற பிக்கோரமானசப்தங்கள் அந்தயுத்தத்தில் எங்கும் கேட்கப்பட்டன.

இவ்வாறு, மிகவும் பயங்கரமான கடுஞ்சண்டைநடந்துகொண்டிருக்கையில் தேவர்களாகிய நரநாராயணர்கள் போர்க்களத்துக்குவந்தனர். அங்கே நரனுடைய உயர்ந்ததனுஸ்ஸைப்பார்த்து, பகவானாகிய விஷ்ணுவும் அஸுரர்களைக்கொல்லுவதாகிய தம் சக்கரத்தை நினைத்தார். பிறகு, மிகுந்த பிரகாசமுள்ளதும், சத்துருக்களுக்குத் தாபத்தையுண்டாக்குவதும், சூரியனுக்கு ஒப்பானதும், முனைமழுங்காத சுற்றுப்பக்கத்தையுடையதும், யுத்தத்திற்பார்க்கிறதற்குப் பயங்கரமுமாகிய ஸுதர்சனமென்னுஞ்சக்கரம் நினைத்தமாத்திரத்தில் ஆகாசத்திலிருந்துவந்தது. ஜ்வலிக்கிற அக்னியைப்போல மிக்க ஒளியுள்ளதாகவும், சுற்றிலுமுள்ள கிரிகளின் சிகரங்களைப்பிளப்பதாகவும், பயங்கரமாகவும் வந்துசேர்ந்த அந்தச்சக்கரத்தை யானைத்துதிக்கைபோன்ற கைகளையுடைய விஷ்ணு கடியவேகமுள்ளவராக மிகுந்தபலத்துடன் பிரயோகித்தார். பிரளயகாலாக்கினிக்கொப்பான தேஜஸுடைய அந்தச்சக்கரம் புருஷோத்தமரான விஷ்ணுவின்கையினால் யுத்தத்திற்பிரயோகிக்கப்பட்டு அஸுரர்களை ஆயிரக்கணக்காகப் பிளந்துகொண்டு வேகத்துடன் சத்துருக்களின்மேல் அடிக்கடி விழுந்தது. அக்கினியைப்போலச் சிலவிடங்களில் எரித்துக்கொண்டும், இன்னும் சிலவிடங்களில் ஜ்வாலைகளாற் பக்கத்திலிருப்பவற்றையும் வளைத்துக்கொண்டும் பலாத்காரமாக அந்தஅஸுரக்கூட்டங்களை வெட்டியது. அடிக்கடி மேலும்கீழும் பிரயோகிக்கப்பட்ட அந்தச்சக்கரம் பிசாசுபோல் யுத்தத்தில் ரத்தத்தைக்குடித்தது. மிகுந்தபலசாலிகளும் வர்ஷிக்கிற மேகங்களைப்போன்றவர்களுமாகிய அஸுரர்களும் மனத்தில் உத்ஸாஹத்துடன் ஆயிரக்கணக்காக ஆகாசத்திற்கிளம்பி அப்போது தேவக்கூட்டங்களை மலைகளினால் அடிக்கடி பீடித்தனர். பிறகு, பயத்தை உண்டாக்குகிறவைகளும் மாங்களோடுகூடியவைகளும் மேகங்களைப்போற் பலவித உருவங்கொண்டவைகளுமாகிய பெரியமலைகள், ஒன்

* சூரியாஸ்தமனகாலத்தில்.

ரேடொன்று பலமாகஅடித்ததனால், சிகரங்களும் பக்கங்களும் சரிந்து சப்தஞ்செய்துகொண்டு ஆகாசத்தினின்றும் விழுந்தன. பிறகு அதிகமாகச் சண்டைநடக்கும்போது, போர்க்களத்தில் ஒருவரையொருவர் எதிர்த்து, அடிக்கடி பெரியகர்ச்சனைசெய்து எறிந்த பெரியமலைகள் விழுந்ததனால் காடுகளுடன் பூமி எங்கும் அதிர்ந்தது.

அதன்பின் அதிகபயங்கரமான அந்த அஸுரக்கூட்டத்தின் யுத்தத்தில் நரனென்பவர் சிறந்த பொன்னே மேலலங்காரமாகவுடைய வையும் சிறகுகளோடுகூடியவையுமான பெரியபாணங்களினால், மலைகளின்சிகரங்களைப்பிளந்து, ஆகாசமார்க்கத்தை மூடிவிட்டார். பிறகு தேவர்களால் அடிக்கப்பட்ட அந்த அஸுரச்ரேஷ்டர்கள் ஜ்வலிக்கிற அக்னிபோற் பிரகாசித்துக்கொண்டு ஆகாசத்தில்நின்றுகோபித்த ஸுதர்சனத்தைக்கண்டு பூமிக்குள்ளும் லவணஜலமுள்ள சமுத்திரத்துக்குள்ளும் புகுந்தனர். பிறகு ஜயமடைந்த தேவர்களால் மந்தரம் மிகவும் கொளுவிக்கப்பட்டு முன்னிருந்தஇடத்திற் சேர்க்கப்பட்டது.

அதன்பின் அமிர்தத்தைப் பெற்றுக்கொண்ட தேவர்களெல்லாரும் ஆகாசத்தில் ஜயகோஷஞ்செய்துகொண்டு வந்தபடி ஸ்வர்க்கஞ் சென்றனர். ஸ்வர்க்கத்துக்குப்போனபிறகு, தேவர்கள் மேலான ஸந்தோஷத்தைப் பூர்ணமாகஅடைந்து அந்தஅமிர்தத்தைப் பத்திரமாக வைத்தனர். இந்திரன் தேவர்களுடன்கூட அந்த அமிர்தபாத்திரத்தை ரக்ஷிக்கும்படி நரனிடம் கொடுத்தான்.

இருபதாவது அத்தியாயம்.

ஆஸ்தீகபர்வம். (தொடர்ச்சி).

(உச்சைச்சிரவத்தைப்பற்றி வினதைக்கும் கத்ருவுக்கும்பந்தயமும் ஸர்பபங்களுக்குக் கத்ருவின்சாபமும்).

அழகுள்ளதும் ஒப்பற்றசக்தியுள்ளதுமாகிய அந்த உச்சைச்சிரவம் உண்டாவதற்குக் காரணமான அமிர்தமதனம் நடந்தபடி முழுவதையும் இப்போது உமக்குச் சொன்னேன். அப்போது அந்தஉச்சைச்சிரவமென்னும் குதிரையைப் பார்த்தவுடன் கத்ரு வினதையைப் பார்த்து, "பிரியமானவளே உச்சைச்சிரவம் என்னவர்ணம்; உடனே சொல்" என்றுகேட்டாள். வினதை, "அழகானவளே! அச்வராஜாவான உச்சைச்சிரவம் வெண்மையானதுதான்; நீ தான் என்ன நினைக்கிறாய்; நீயும் அதனுடைய வர்ணத்தைச் சொல்; பிறகு இது

விஷயத்திற் பந்தயம்போடுவோம்" என்றுசொன்னாள். "வெண்மை யான புன்னகையுடையவளே நான் அந்தக் குதிரைக்கு வால் கறுப் பென்று நினைக்கிறேன்; பெண்ணரசி! நம்மில் தோற்றவள் ஜயித்த வளுக்கு அடிமையாவதாகப் பந்தயம்போடுவோம்" என்று கத்ரு சொன்னாள். இப்படி அவர்களிருவரும் ஒருவர்க்கொருவர் அடிமை யாயிருப்பதாகப் பந்தயம்போட்டுக்கொண்டு, "நாளைத்தினம் அந்தக் குதிரையைப் பார்ப்போம்" என்று தம்தம் வீட்டுக்குப் போயினர். பிறகு, கத்ரு வஞ்சகஞ்செய்ய நினைத்துத் தன் ஆயிரம்பிள்ளைகளையும் பார்த்து, "நீங்கள் மைபோன்ற நிறமுள்ள வால்மயிர்களாகி நான் அடிமையாகாமலிருக்கும்படி அந்தக் குதிரையைச் சீக்கிரம்அடையுங் கள்" என்று ஆஜ்ஞாபித்தாள்; அவள், தான் சொன்னதை ஏற்றுக் கொள்ளாத ஸர்ப்பங்களைப்பார்த்து, "புத்திமானுகிய ஜனமேஜய னென்னும் பாண்டவவம்சத்து ராஜரிஷியின் ஸர்ப்பயாகம்நடக்கும் போது, அக்னி உங்களைத் தகிப்பான்" என்றுசபித்தாள்.

இவ்வாறு விதிவசமாகக் கத்ரு அதிகக்கொடிய சாபங்கொடுத் ததைப் பிரம்மதேவரே நேரிற்கேட்டு ஸர்ப்பங்கள் அதிகமாயிருப் பதைக்கண்டு ஜனங்களின் நன்மைக்காகக் கத்ரு சொன்னதைத் தேவக்கூட்டங்க ளெல்லாரோடும் ஆமோதித்து, "இந்தஸர்ப்பங்கள் கொடியவிஷமுள்ளவைகள்; மிக்கபலமுள்ளவைகள்; கொடிய விஷத் தினல் பிறரைப்பீடிப்பதற்காகவே ஸஞ்சரிக்கின்ற அந்த ஸர்ப்பங் களுக்குத் தாயார்செய்தது ஜனங்களுடைய க்ஷேமத்திற்குத் தகுதி யானது. எப்போதுப் பிறரைக்கெடுப்பதேகாரியமான மற்றப்பிரா ணிகளுக்கும் பிராணநாசபரியந்தமானதண்டனை தெய்வத்தினுலே யே விதிக்கப்படுகின்றது" என்றும்சொன்னர். பிரம்மதேவர் இவ் வாறுசொல்லி, அந்தக்கத்ருவைச் சிலாகித்து, அப்போது, கசிய பரையழைத்து, "குற்றமற்றவளே! கடுவிஷமும் பெரியஉடல்களு முள்ள இந்தக் கடிக்கின்ற ஸர்ப்பங்களை நீ உண்டாக்கினுய்; வீர னே! அவற்றை அவற்றின் மாதா சபித்தாள்; அப்பா! நீ அந்த விஷயத்தில் எவ்வகையிலும் கோபிக்கத்தகாது; ஸர்ப்பயாகத்தில் ஸர்ப்பங்கள் அழிந்துபோவது * முன்னமே கண்டவிஷயம்" என்று சொன்னர். ஸ்ருஷ்டிகர்த்தாவாகிய பிரம்மதேவர் இவ்வாறுசொல்லி அந்தக் கசியபரைச் சமாதானப்படுத்தி, மஹாத்துமாவாகிய அந்தக் கசியபருக்கு விஷநிவர்த்திசெய்யும்வித்தையையும் கற்பித்தார்.

பிராமணசிரேஷ்டரே! இவ்வாறு நாகங்கள் கத்ருவினுல் சபிக்

* பூர்வகல்பத்தில்.

கப்பட்டபோது, அவள்சாபத்துக்குப்பயந்து நாகசிரேஷ்டனை கர்க்கோடகன் மிகுந்த அன்புடன் மாதாவாகியகத்ருவைப்பார்த்து, "நான் மைநிறமான வால்மாயிராகி உயர்ந்தகுதிரையாகிய உச்சைச்சிரவத்தையடைந்து அதனிடம் என்நிறத்தைக் காண்பிக்கப்போகிறேன்; நீ சிறிதும் கவலையில்லாமலிரு" என்றுசொல்ல, கீர்த்திபெற்றகத்ரு "அப்படியேஆகட்டும்" என்று கன்புத்ரனுக்குமறுமொழிசொன்னாள்.

இருபத்தோராவது அத்தியாயம்.

ஆஸ்தீகபர்வம். (தொடர்ச்சி).

(உச்சைச்சிரவஸைப பார்ப்பதற்கு வினதையும்கத்ருவும் செல்வது).

தபோதனரே! இரவுமுடிந்து பொழுதுவிடிந்து சூரியோதயமானபின், அடிமையாயிருப்பதாகப் பந்தயஞ்செய்துகொண்ட அந்த ஸோஹாதரிகளாகிய கத்ரு வினதை இருவரும், பொறுமையுடனும் கோபத்துடனும் உச்சைச்சிரவமென்னுட் குதிரையைச் சமீபத்திற் பார்ப்பதற்காகக் கரைகளிலுள்ளகாடுகளினால் அலங்கரிக்கப்பட்ட சமுத்திரத்தின் அக்கரைக்குச் சென்றனர்.

பிறகு அவர்கள் ஜலங்களுக்குப் பெரியஆதாரமும், ஆழமும், கலங்கிக்கொண்டு பேரிரைச்சலிடுவதும், பயங்கரமானவைகளும் விகாரமான ரூபமுள்ளவைகளும் க்ரூரஸ்வபாவமுள்ளவைகளும் கோபமுள்ளவைகளுமாகிய அனேகமாயிரக் கணக்கான திமிங்கிலங்கள், சிறுமீன்கள், ஆமைகள், முதலைகள், இன்னும் பலரூபங்களான ஜந்துக்கள் நிரம்பினதும், ஒருபொழுதும்வற்றாததும், அணுகமுடியாததும், எல்லாவகைரத்னங்களுமுண்டாகுமிடமும், வருணனுக்கு இருப்பிடமும், ஸர்ப்பங்களுக்கு வாஸஸ்தானமும், மிகரமணீயமும், நதிகளுக்குப் பர்த்தாவும், வடவாக்கினிக்கு இருப்பிடமும், அஸுரர்களுக்கு ஆதாரமும், பிராணிகளுக்குப் பயத்தையுண்டாக்கத்தக்கதும், ஜலத்தின்மிகுதியினால் சுககரமும், லோகவிலக்ஷணமும், தேவர்களுடைய அமிர்தத்துக்கு முக்கியமானஇடமும், அளவிடவும் சிந்திக்கவும்முடியாததும், பாவங்களோப்போக்குவதும், ஆச்சரியப்படத்தக்கதும், கம்பீரமும், ஜலஜந்துக்களின் சப்தத்தினால் பயங்கரசப்தமுள்ளதும், ஆழமான சுழல்களினால் கஷ்டமுள்ளதும், எந்தப்பிராணிகளுக்கும் பயத்தைஉண்டுபண்ணுவதும்,

காற்றினால் ஜலம் ஊஞ்சல்போல்அலைவதும், கலங்கிவேகமாக மேலே கிளம்புவதும், அலைகள் நாலுபக்கங்களிலும் கைகளைப்போல் அசைவதனால் கூத்தாடுவதுபோல்வதும், சந்திரனுடைய உதயாஸ்தமனங்களை அனுசரித்து அலைகள் மாறுவதும், பாஞ்சஜன்யமென்னும் சங்கத்தின் உத்பத்திஸ்தானமும், உயர்ந்தவஸ்துக்களுக்கு முக்கியமான இருப்பிடமும், அளவில்லாத தேஜஸையுடைய பகவானாகிய விஷ்ணு வராஹரூபமெடுத்துப் பூமியைத் தூக்கினபோது அவரால் உள்ளே புகுந்து கலக்கப்பட்ட ஜலமுள்ளதும், அதிரியென்னும் பிரம்மரிஷி நூறுவருஷகாலம் தவஞ்செய்தும் ஆழமறியப்படாததும், பாதாளத்தின் இருப்பிடமும், மாறுதலும், கரைகடந்த தேஜஸுள்ள பத்மநாபனென்னப்பட்ட விஷ்ணு ஸ்ருஷ்டிக்கு முந்தினகாலத்தில் ஆத்மஸாக்ஷாத்காரமாகிற் யோகநித்திரைசெய்தபோது அவருக்குச் சயனமும், இந்திரனுடைய வஜ்ராயுதப்பிரயோகத்துக்குப்பயந்த மைநாக பர்வதத்துக்கு அபயங்கொடுத்ததும், யுத்தத்தில் அடிபட்டுப் பயத்தினால் முறையிட்ட அஸுரர்களுக்குச் சிறந்த சரணமானஇடமும், வடவையின் முகத்திலிருக்கிற அக்னிக்கு ஜலமென்னும்ஹவிஸைக் கொடுப்பதும், சுபகரமும், கரைகடந்து விரிந்திருப்பதும், ஆயிரக்கணக்கான அநேகமஹாநதிகள் ஒன்றுக்கொன்று பொருமைகொண்டவைபோல் ஆவலுடன் எப்போதும் பிரவேசிப்பதும் நிரப்புவதுமாகச் சேருமிடமுமாகிய பெருங்கடலைக்கண்டனர்.

அலைகளினால் நர்த்தனம்செய்வதுபோன்றதும், பிரவேசிக்கமுடியாததும், மீன்களும் முதலைகளும் நிரம்பிப் பயங்கரமானதும், ஜலஜந்துக்களின் கடுங்கூச்சல்களினால் கர்ச்சிப்பதுபோல்வதும், ஆகாசம்போல் விசாலமானதும், ஆழமும், முடிவில்லாததுமாகிய பெரியசமுத்திரத்தை அவர் இருவரும் கண்டனர்.

இருபத்திரண்டாவது அத்தியாயம்.

ஆஸ்தீகபர்வம். (தொடர்ச்சி).

(நாகங்கள் உச்சைச்சிரவத்தின் வாலிலமயிர்களாகஆவதும், கத்ருவும் வினதையும் கடலைத்தாண்டுவதும்).

நாகங்கள், "நமதுதாய், தன்அபிஷ்டம் நிறைவேறுமற்போனால், அன்புவையாமல் நம்மைத் தகித்துவிடுவள்; அவளுக்குத் தலைவந்தால் இந்தச்சாபத்திலிருந்து நம்மைவிடுவிப்பள்; அதனால் அவள்

சொன்னதை நாம்செய்யவேண்டும்; உச்சைச்சரவத்தின்வாலைக் கறுப்பாகச்செய்யவேண்டும்; இதுஸந்தேகமில்லை" என்று நிச்சயஞ் செய்து அந்தக்குதிரைக்குக் கருமையான வால்கள்போலிருந்தன. அப்போதும், அந்தஸபத்நிகள் இருவரும் பந்தயஞ்செய்துகொண்டனர். பிராமணசிரேஷ்டரே! பந்தயம்போட்டுக்கொண்டிருந்த அந்தஸபத்நிகள் இருவர்களும் மறுபடியும் பந்தயத்தை நிச்சயித்துக்கொண்டு மிகுந்த ஸந்தோஷத்துடன் ஸமுத்திரத்தின் அக்கரைக்குச் சென்றனர்.

கலக்கமுடியாததும், ஜலங்களுக்கெல்லாமிருப்பிடமும், காற்றினால் அதிகவேகமாகக் கலக்கப்படுவதும், பெரியகோஷமுடையதும், திமிங்கிலமத்ஸ்யங்களும் முதலைகளும் அநேகமாயிரக்கணக்கான பலவகைப் பயங்கரமானஜந்துக்களும் நிரம்பினதும், அணுகமுடியாத ஆழமுள்ளதும், அதிகபயத்தைத்தரத்தக்கதும், ரத்னங்களுக்கெல்லாமிருப்பிடமும், வருணனுடையகிருகமும், நாகங்களுக்கு வாஸஸ்தானமும், நதிகளுக்கு மிகவும் இனியகணவனும், வடவாக்னிக்கு வாஸஸ்தலமும், அஸுரர்களுக்கும் பயங்கரமானபிராணிகட்கும் இருப்பிடமும், வற்றாதஜலமுள்ளதும், பிரகாசமான நிறமுள்ளதும், ஒப்பற்றதும், தேவாமிர்தத்திற்கு முக்கியமானஇடமும், அளவிடவும் சிந்திக்கவும் முடியாததும், பாபத்தைப்போக்குவதும், அங்கங்கே ஆயிரக்கணக்காக அநேகமஹாநதிகளால் மேன்மேலும் நிரப்பப்படுவதும், அலைகளினால் கூத்தாடுவதுபோல்வதுமாகிய சமுத்திரத்தைப் பார்த்துக்கொண்டு, தக்ஷபுத்திரிகளான கத்ருவும்வினதையும், ஆகாசமார்க்கமாகச் சென்றனர். இவ்வாறுக, மிகவும்அசைகின்ற அலைகளினால் கலங்குவதும், அகாதமும், அகன்றதும், ஆகாசநிறமுள்ளதும், வடவாக்கினியின் ஜ்வாலையினால் தகிக்கப்படுவதும், கர்ச்சிக்கின்றதுமாகிய அத்தச்சமுத்திரத்தை அவ்விருவரும் விரைவாகத் தாண்டினர்.

இருபத்துமூன்றுவது அத்தியாயம்.

ஆஸ்தீகபர்வம். (தொடர்ச்சி).

(கருடஜனனமும் தேவர்துதித்தலால் அவர் தேஜஸைக்குறுக்கினதும்).

கத்ரு வினதையுடன்கூட விரைவாகச்சென்று, அந்தஸமுத்ரத்தைக் கடந்து, உடனேஅந்தக் குதிரையினருகிற்போய்ச் சேர்ந்தாள். பிறகு, அவர்களிருவரும் சந்திரகிரணம்போல் வெண்மையானதும்,

கறுத்த வாலுள்ளதும், மிகுந்தவேகமுள்ளதுமாகிய அந்த உயர்ந்த குதிரையைக்கண்டனர்; வாலிலச்சேர்ந்தமயிர்கள் மிகவும் கறுப்பாயிருப்பதைக்கண்டு, துக்கக்குறிப்போடுகூடிய வினதையைக் கத்ரு வானவள் அடிமையாக நியமித்தாள். பிறகு, அந்தவினதை அந்த விஷயத்தில் பந்தயத்தைத்தோற்று, துக்கத்தினால் வருத்தமடைந்து அடிமைத்தன்மையை வஹித்தாள்.

அப்படியிருக்கிற ஸமயத்தில், குறித்தகாலம்வந்தபோது, சிறந்த தேஜஸையுடைய கருடனும், தாயாரில்லாமலே, முட்டையையுடைத்துக்கொண்டு பிறந்தார். சிறந்தஉத்ஸாஹமும் பலமுமுள்ளவரும், தம்ஒளியினால் எல்லாத்திசைகளையும் பிரகாசிக்கச் செய்பவரும், நினைத்தபடி ரூபமெடுப்பவரும், நினைத்தபடி போகிறவரும், நினைத்தபடி சக்தி எடுத்துக்கொள்ளுகிறவரும், ஜ்வலிக்கின்ற பெருநெருப்புப்போற் பயங்கரமாகப் பிரகாசிக்கின்றவரும், மின்னல்போற் பிரகாசிக்கும் சிவந்த கண்களையுடையவரும், பிரளயகாலாக்னிக்கொப்பானவருமாகப் பெரியசரீரத்துடன் வருத்தியடைந்த அந்தப் பக்ஷியாகிய கருடன், பயங்கரமாகவும் பயங்கரசப்தத்துடனும் இரண்டாவது வடவாமுகாக்கினிபோல் உக்ரமாகவும் ஆகாயத்திற்சென்றார். அவரைப்பார்த்துத் தேவர்களனைவரும் அக்னியைச்சரணமடைந்தனர். விச்வரூபியாக வீற்றிருக்கும் அக்னியை வந்தனஞ்செய்து, "அக்னியே! நீ அதிக வருத்தியையடையாதே; எங்களைத் தஹிக்க விரும்பாமலிருக்கிறாயா? உன்னுடைய மிகப்பெரிய உருவம் ஜ்வலித்துக்கொண்டு பரவுகிறதே" என்றுகேட்டனர். அதற்கு அக்னி, "அஸுரசத்ருக்களே! இந்தப் பெரியஉருவம் நீங்கள்நினைக்கிறபடி என்னுடையதன்று; இவன் சிறந்தபலமுள்ள கருடன்; தேஜஸினால் எனக்கொப்பானவன்; பிறக்கும்போதே மிகச்சிறந்த தேஜஸுள்ளவனுகப் பிறந்தவன்; வினதைக்கு ஆனந்தத்தை வருத்திசெய்கிறவன்; இந்தஒளியின் மிகுதியைக்கண்டு உங்களுக்குப் பிரமம்உண்டாயிருக்கிறது; இவன் நாகங்களுக்கு நாசத்தையுண்டாக்குகிறவன்; கச்யபரது புத்ரன்; மஹாபலசாலி; தேவர்களுக்கு நன்மைசெய்வதிலேயே ப்ரவர்த்திக்கவன்; அஸுரர்களுக்கும் ராக்ஷஸர்களுக்கும்மட்டும் விரோதி; இவன்விஷயத்தில் எவ்விதத்திலும் நீங்கள் பயப்படவேண்டாம்; என்னுடன்சேர்ந்து பாருங்கள்" என்றுசொன்னன்.

அக்னியினால் இவ்வாறு சொல்லப்பட்ட அந்தத்தேவர்கள் ரிஷிக்கூட்டங்களுடன் கருடனிடஞ்சென்று தூரத்தில்நின்றுகொண்டு அந்தக்கருடனை அடியில்வரும் வாக்கியங்களினால் துதித்தனர்:

"நீ *ரிஷி; நீ மஹாமஹிமையுள்ளவன்; நீ தேவனுகிய பக்ஷிராஜன்; நீ ப்ரபு; சத்துருக்களுக்குத் தாபம்உண்டுபண்ணுபவன்; நீ †ஸூர்யன்; நீ உயர்ந்தஸ்தானத்திலிருப்பவன்; நீ ப்ரஜைகளைக்காப்பவன்; ‡ நீ இந்த்ரன்; நீ ஹயக்ரீவனென்னும் விஷ்ணுவின் அவதாரம்; § நீயேசிவன்; நீ உலகத்துக்கெல்லாம்ஈச்வரன்; நீ ப்ரபஞ்சத்துக்கு முகம்போல முதன்மையான ப்ரம்மா; நீ பிராமணன்; நீயே அக்னி; நீயேவாயு; நீதான் ||தாதாவும்விதாதாவுமாகிய இரண்டுதேவர்களும்; ¶ நீ தேவச்ரேஷ்டனுகிய விஷ்ணு; நீ மஹான்; நீ எப்போதும் சத்துருக்களைத் தோற்கச்செய்பவன்; ** நீ அமிர்தம்; நீ பெரிய கீர்த்தி; நீபேரொளி; நீ யாவருக்கும் ப்ரியமானவஸ்து; நீயே எங்களெல்லோருக்கும் சிறந்தகாப்பு; நீதான் எப்போதும் எங்களுக்குக்கதி; உன்னல்எங்களுக்குப் பயம்வருவதேது; அழியாதகீர்த்தியுள்ளவனே! நீ பலமென்னும் அலைகிறைந்த கடல்; எதையும்சாதிக்கவல்லவன்; தாமாதஸ்வபாவமுள்ளவன்; எல்லாம்கிறைந்தவன்; நீ எதிரிகளால் தாங்கக்கூடாதவன்; வருவதும்சென்றதுமாகிய அனைத்தும் உன்னிடமிருந்து உண்டாயின; நீ மேலானவன்; ஸூர்யனைப்போல் கிரணங்களினல் இந்தஜங்கமஸ்தாவரமனைத்தையும் ப்ரகாசிக்கச்செய்கிறாய்; ஸூர்யனுடைய ஒளியை மறைத்துவிடுகிறாய்; நீயே அடிக்கடி முடிவைச்செய்கிறவன்; இந்த நித்யாநித்யங்கள்யாவும் நீயே. அக்னியைப்போன்ற ப்ரகாசமுள்ளவனே! ஸூர்யன் கோபித்துக்கொண்டால் ப்ரஜைகளை எவ்வாறு தஹிப்பனோ, அவ்வாறு தஹிக்கிறாய்; யுகங்கள்திரும்புவதைமுடிப்பதற்கும் எல்லாவற்றையுமழிப்பதற்கும் ஜ்வலிக்கிற ப்ரளயகாலாக்னிபோற் பயங்கரனாயிருக்கிறாய்; மஹத்தானசக்தியுள்ளவனும், அக்கினியைப்போன்ற ப்ரகாசமுள்ளவனும், மேகத்திலில்லாமற் ப்ரகாசிக்கின்ற மின்னலைப்போன்றவனும், இருளையொழிப்பவனும், †† எல்லாவற்றிற்கும் மேற்பட்டவனும், ஓரத்தைகொடுப்பவனும், ஜயிக்கமுடியாத பராக்ரமமுடையவனும், மிகுந்தபலமுள்ளவனும், ஆகாசத்தில் ஸஞ்சரிப்பவனுமாகிய பக்ஷிராஜாவான

* சிறந்தஞானமுள்ளவன்.

† செம்மையாக லோகத்தைப் ப்ரவர்த்திக்கச்செய்பவன்.

‡ மிகுந்தஐச்வர்ய முள்ளவன்.

§ இங்கேசான் என்றுபாடம்வைத்துத் திரிபுரஸம்ஹாரத்தில் பாணரூபியாயிருந்த விஷ்ணுஎன்பது பழையஉரை.

|| தாதா=ஞானசக்தி; விதாதா=மாயியென்பது பழையஉரை.

¶ இங்கே; நீ தேவச்ரேஷ்டன் வியாபிப்பவன் என்பது பழையஉரை.

** ஆனந்தரூபன். †† காரணகாரியரூபனும் என்பது பழையஉரை.

கருடனுகிய உன்னிடம்வந்து நாங்கள் சரணுகதிசெய்கிறோம். ஜகத்துக்கெல்லாம் ப்ரபுவே! மாற்றுயர்ந்த பொன்னிறமான உன்ஒளியினால், உலகமெல்லாம் மிகவும் தாபமுண்டாக்கப்பட்டது. நீ மஹாத்மாக்களாகிய தேவர்களெல்லாரையும் காப்பாயாக. விமானங்களிலேறிச் சஞ்சரிக்கிற தேவர்கள் தோல்வியடைந்தவர்களாய்ப் பயத்துடன் ஆகாயத்தில் வழியைவிட்டு விலகிப்போகின்றனர். ஸமர்த்தனே! பக்ஷிராஜனே! நீ தயையுள்ளவரும் மஹாத்மாவுமாகிய கச்யபரிஷியின் புத்திரன்; ஆதலால் நீ கோபிக்கலாகாது; உலகத்தின்மீது மிகுந்ததயை பண்ணு; நீ ஸமர்த்தன்; தேஜஸையடக்கிக்கொள்; எங்களைக் காப்பாற்று; பக்ஷியே! பெரிய இடியின்முழக்கத்துக்குச் சமானமாகிய உன்சப்தத்தினால் திசைகளும் ஆகாசமும் ஸ்வர்க்கமும் இந்தப்பூமியும் எங்கள்மனஸுகளும் இடைவிடாமல் நடுங்குகின்றன. அக்னியைப்போன்ற இந்தரூபத்தை அடக்கவேண்டும்; கோபித்த யமனுக்கு ஒப்பான உன்தேஜஸைக்கண்டு எங்கள்மனம் நிலைதப்பி அலைகின்றது. பக்ஷிராஜனே! வேண்டுகின்ற எங்கள்விஷயத்தில் அனுக்ரஹஞ்செய்; பகவானே! எங்களுக்குச் சுகத்தைச்செய்து அனுகூலனாக இருக்கக்கடவாய்" என்றார்கள். தேவர்களாலும் ரிஷிக்கூட்டங்களாலும் இவ்வாறு துதிக்கப்பட்ட அந்தக்கருடன் உடனே தன்தேஜஸை அடக்கிக்கொண்டார்.

இருபத்துநான்காவது அத்தியாயம்.

ஆஸ்தீகபர்வம். (தொடர்ச்சி).

(ராஹு க்ராஹணத்தினால் ஸூர்யனுக்குக் கோபமுண்டானதும், அருணன் ஸூர்யனைமறைத்ததும்).

அந்தக்கருடன், தேவர்கள்சொன்னதைக்கேட்டுத் தாமும் தம் தேஹத்தைப்பார்த்துத் தம்தேஹத்தை யடக்கிக்கொள்ள ஆரம்பித்தார். "பயங்கரமான ரூபத்தோடுகூடிய என் தேஹத்தைக்கண்டு எல்லாப்பிராணிகளும் பயப்படாமலிருக்கட்டும்; பயங்கரமானரூபத்தினால் இவர்கள் பயந்திருக்கிறார்கள்; ஆதலால் ஒளியைக் குறைக்கிறேன்" என்றுசொன்னார். பிறகு, தாம் நிர்ணத்தபடி போகத்தக்கவரும் நிர்ணத்தசக்தியெடுத்துக்கொள்ளத்தக்கவருமாகிய அந்தக் கருடன் அருணனையும் தம் முதுகின்மேலேற்றிக்கொண்டு பிதாவின் க்ருஹத்தினின்றும் ஆகாசமார்க்கமாகப் புறப்பட்டு மஹாஸமுத்திரத்

இன் எதிர்க்கரையிலுள்ள மாதாவினிடம்போய்ச் சேர்ந்தார். சூரியன் மிகஉக்கிரமான தேஜஸுகளால் உலகங்களை எப்போது தஹிக்க நினைத்தானோ அப்போது சிறந்ததேஜஸுள்ள ஸூர்யனுடையமுன்னிலையில் அருணனையும் கருடன் வைத்தார்" என்று ஸூதர்சொன்னார்.

சௌனகர், "பகவானுகியஸூர்யன் அப்போது எதற்காக உலகங்களைத் தஹிக்க நினைத்தான்; அவனுடைய எந்தப்பொருளைத் தேவர்கள் அபகரிக்கஅதனால் அவனுக்குக் கோபமுண்டது" என்று *கேட்க, ஸூதர்சொல்லுகிறார்: குற்றமற்றவரே! அமிர்தம்குடித்தராஹுவைச் சந்திரசூரியர்கள் காண்பித்துக்கொடுத்ததுமுதல், அவன் சந்திரசூரியர்களின்மேல் மிக்கபகைகொண்டான். பிறகு ராஹுக்ரஹணத்தினுல் ஸூர்யன் பிடிக்கப்பட்டபோது ஸூர்யன் கோபங்கொண்டு, "தேவகாரியத்திற்காகத்தானே ராஹுவுக்கு என்மீது கோபம்உண்டானது; அதிகக்கொடுதியையுண்டாக்குகிற பாபத்திற்கு காரணமுள்ளவன்தானே பாத்திரம்? எல்லாரும் தங்கள்காரியங்களில்மட்டும் உதவியைத்தேடுகின்றனர். உதவிசெய்தவனுக்குக் கஷ்டம்வந்தபோது அவனைக்கவனிப்பதில்லை. தேவர்கள், ராஹுவின்னளிமுங்குவதைதடார்த்துப் ஸூஹித்திருக்கின்றனர். ஆதலால், உலகங்களைஅழிப்பதற்கு ஆரம்பிக்கப்போகிறேன்; இதில்ஸந்தேஹமில்லை" என்றுநிச்சயஞ்செய்து ஸூர்யன் அஸ்தமனமானன். அங்கிருந்து உலகமழியும்படி பெருந்தாபத்தையுண்டுபண்ணினன். பிறகு மஹரிஷிகள் தேவர்களிடஞ்சென்று, "இந்த நிசாரத்திரியில் எல்லாஜனங்களுக்கும் பயத்தைக்கொடுப்பதும், மூன்றுலோகங்களுக்கும் நாசத்தையுண்டாக்குவதுமாகிய, ஒரு பெரியதாபம் உண்டாகப்போகிறது" என்றுசொன்னார்கள். உடனே தேவர்கள் ரிஷிகளுடன் பிரம்மாவிடம்சென்று, "இப்போது தஹிப்பதனலுண்டான பெரியபயத்திற்கு என்னகாரணம்? இன்னும் ஸூர்யன் தெரியவேயில்லை; இப்போதே ப்ரளயம்போலத் தோற்றுகிறது; பகவானே! ஸூர்யன்உதயமானபின் இம்மி எவ்வாறுகுமோ?" என்றுகேட்டனர். பிரபுதேவர், அதைக்கேட்டு, "இந்த ஸூர்யன் உலகங்களைஅழிப்பதற்காகவே உதயமாகஆரம்பித்திருக்கிறான்; அவன் காணப்படும்போதே உலகங்களை நீற்றுக்குவியலாகச் செய்யப்போகிறான்; அதற்குப்பரிஹாரமும் முன்னமேவற்படுத்தப்பட்டிருக்கிறது. கச்யபருடைபுத்ரன் அருண னென்றுபெயர்பெற்ற சிறந்தஞான முள்ள ஒருவன்இருக்கிறான்; பெரியசரீரமும் மிகுந்தஒளியுமுள்ள

* ருருகேட்பதும் பிரமதிசொல்வதுமாகச் சிலபுஸ்தகங்களிலிருக்கிறது.

அவன்ஸூர்யனுக்குமுன்னே இருக்கப்போகிறான்; ஸூர்யனுக்குஸாரதியாகஇருந்து ஸூர்யனுடையப்ரகாசத்தையும் இழுக்கப்போகிறான்; அப்போது உலகங்களுக்கும் ரிஷிகளுக்கும் தேவர்களுக்கும் க்ஷேமமுண்டாகும்" என்றுசொன்னர். பின்பு, பிரம்மாவின்ஆஜ்ஞையினல் அருணன் அப்போது அவர்சொன்னதையெல்லாஞ் செய்தான். ஸூர்யன் உதயமானவுடன்அருணனுல் மறைக்கப்பட்டான். ஸூர்யனுக்குக் கோபம்வந்ததும் ஸமாதானஅருணன் இவனுக்கு ஸாரதியஞ்செய்ததுமாகிய இவையெல்லாம் உமக்குச் சொன்னேன். முன் சொல்லப்பட்டிருந்த கருடன்விஷயத்தையும் மறுபடியும் சொல்லுகிறேன்; கேளும்.

இருப்த்தைந்தாவது அத்தியாயம்.

ஆஸ்தீக பர்வம். (தொடர்ச்சி).

(வினதை கத்ருவையும் கருடன்ஸர்பங்களையும் சுமந்ததும், கத்ரு இந்திரனைத் துதித்ததும்).

அதன்பின்பு இச்சைப்படி ஸஞ்சரிப்பவரும் மிகுந்தபராக்கிரமத்தையும் மிகுந்த பலத்தையுமுடையவருமாகிய கருடன், சமுத்திரத்தின் எதிர்க்கரையில் பந்தயத்தில்தோற்று அடிமைத்தன்மையையடைந்து மிகுந்ததுக்கத்தினுல் வருத்தமடைந்துகொண்டிருந்த தம் தாயாராகிய வினதையிருந்த இடத்திற்குப்போனர். அதன்பின் ஒருகாலத்தில் கத்ருவானவள் வினதையைஅழைத்து வணங்கிநின்ற அவளைப்பார்த்து அவளுடையபுத்திரர் முன்னிலையில், "பிரியமான வினதையே! ஸமுத்திரத்தின்நடுவில் ஒருபிரதேசத்தில் மிகச்சிறந்ததும் பார்க்கிறதற்கு இனியதுமாக நாகங்களுக்கு ஓரிடமிருக்கின்றது; என்னை அங்கே தூக்கிக்கொண்டுபோ" என்றுசொன்னள். பிறகு கருடனுடையமாதா அந்தஸர்ப்பங்களின் மாதாவையெடுத்துக்கொண்டுபோனள். கருடனும் மாதாவினுடைய வாக்கியத்தினுல் ஏவப்பட்டவராகி ஸர்ப்பங்களைத் தூக்கிக்கொண்டுபோனர். வினதையின் புத்திரராகியகருடன் ஸூர்யன்ஸமீபத்திற்போகையில் ஸூர்யகிரணங்களால் தபிக்கப்பட்டு ஸர்ப்பங்கள் மூர்ச்சையடைந்தன. கத்ரு அந்த நிலைமையிலிருந்த தன் பிள்ளைகளைக்கண்டவுடன் பின்வருமாறு இந்திரனைத்துதிக்கலானள்:—

"எல்லாத்தேவர்களுக்கும் ஈசனே! உனக்குநமஸ்காரம்; பலாசுரனை ஸம்ஹரித்தவனே உனக்கு நமஸ்காரம்; நமுசியைக்கொன்ற

வனே! ஆயிரங்கண்களுடையவனே! இந்திராணியின்கணவனே! உனக்கு நமஸ்காரம்; ஸூர்யனுல்கபிக்கப்பட்ட ஸர்ப்பங்களே நீ ஜலத்தினுல் நீங்கக்கடவாய். தேவசிரேஷ்டனே! எங்களுக்கு நீதான் உயர்ந்தகாப்பு; புரந்தரனே! நீதானே அளவற்றஜலத்தை வர்ஷிக்கிறதற்குச் சக்தியுள்ளவன்; நீதான் மேகம்; நீ வாயு; நீ அக்னி; நீ மின்னல்; நீ ஆகாயத்தில் மேகக்கூட்டங்களைப் பரவச்செய்பவன்; உன்னையே மஹாமேகமென்று சொல்லுகின்றனர்; ஒப்பில்லாத உக்கிரமான வஜ்ராயுதமும் நீயே; முழக்கமுள்ளமேகமும் நீ; நீதான் லோகங்களுக்கு ஸ்ருஷ்டிகர்த்தாவும் ஸம்ஹாரகர்த்தாவுமாக இருக்கிறாய்; நீ தோல்வியடையாதவன்; நீ ஸர்வப்பிராணிகளுக்குள்ளும் தேஜஸ்என்று சொல்லப்பட்ட சக்தியாகஇருக்கிறாய்; ப்ரகாசத்தைத் தனமாகவுடைய ஸூர்யனும் நீயே; நீ அத்புதமானபெரியபிரம்மம்; நீ ராஜா; நீ தேவச்ரேஷ்டன்; நீ விஷ்ணு; நீ ஆயிரங்கண்ணுள்ளவன்; நீ ஈச்வரன்; நீ மேலான ஆதாரம்; எல்லாம் நீ; அமிர்தம் நீ; தேவனே! மிகவும் பூஜிக்கப்பட்ட சந்த்ரனும் நீ; முகூர்த்தமும் நீயே; திதியும் நீயே; லவமென்னப்பட்ட கூஷணத்திற்குஞ்சிறியகாலமும் கூஷணமும நீயே; சுக்லபக்ஷமும் நீயே; க்ருஷ்ணபக்ஷமும்நீயே; இமைத்தலும் நீயே; பதினேட்டு இமைக்கொட்டுக்கள்சேர்ந்த காஷ்டையும் நீயே; முப்பது காஷ்டைகளாகியகலையும் நீயே; வருஷங்களும் ருதுக்களும் மாஸங்களும் இரவுகளும் பகல்களும் நீயே; மலைகளும் காடுகளுமடங்கிய உத்தமமானபூமியும் நீயே; ஸூர்யனேடு கூடிய இருளற்றஆகாசமும் நீயே; * திமிகளும் திமிங்கிலங்களும் சிறுமீன்களும் முதலைகளும் வெகுவாயுள்ளதும் பெரியஅலைகளோடு கூடியதுமான மஹாஸமுத்ரமும் நீயே; ஞானவான்களாகிய மஹரிஷிகளாலே நீ உயர்ந்தகீர்த்தியுள்ளவனென்று எப்போதும் பூஜிக்கப்படுகிறாய்; துதிக்கப்பட்டு ஸந்தோஷமுள்ளமனத்தோடு யஜ்ஞங்களில் ஸோமரஸத்தையும் ஹோமஞ்செய்யப்பெற்ற ஹவிஸ்ஸுகளையும் யஜ்ஞம் பயன்படுவதற்காக நீ பானம்பண்ணுகிறாய்; ஒப்பற்ற பெருஞ்சேனைகளுள்ளவனே! பிராமணர் எப்போதும் ப்ரயோஜனத்திற்காக இவ்வுலகத்தில் யாகங்களினுல் உன்னை ஆராதிக்கின்றனர்; மந்த்ரங்களினுல் ஸ்துதிக்கின்றனர்; யாகத்தை முக்யமாக அவலம்பித்த பிராமணச்ரேஷ்டர்கள் உனக்காகத்தான் எல்லாமுயற்சிகளுஞ் செய்து வேதங்களையும் வேதாங்கங்களையும் ஓதுகின்றனர்" என்றுள்.

---

* ஒருவகைமீன்.

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY.
TIRUVANMIYUR :: MADRAS-41

இருபத்தாறுவது அத்தியாயம்.

ஆஸ்தீகபர்வம். (தொடர்ச்சி).

(இந்திரன் வருஷித்ததும் நாகங்கள் ராமணீயகத்தீவை அடைந்ததும்).

இவ்வாறு கத்ருவினால்துதிக்கப்பட்ட பகவானுகிய இந்திரன், அப்போது கறுத்தமேகங்களின் கூட்டங்களினால் ஆகாசமுழுவதையும் மறையச்செய்து, அந்தமேகங்களைப்பார்த்து, "ஸுகமானஜலத்தைப் பொழியுங்கள்" என்று கட்டளையிட்டான். அப்படிக்கட்டளையிடப்பட்ட மேகங்கள், மின்னலாற்பிரகாசித்துக்கொண்டும் ஆகாயத்தில் ஒன்றையொன்று மிஞ்சுவதுபோல் இடைவிடாமல் கர்ச்சனை செய்துகொண்டும் மிகுந்தஜலத்தை வர்ஷித்தன; மிகவும் ஆச்சரியமான அந்தமேகங்கள் மிகப்பெரிய கர்ச்சனையோடு இடைவிடாமல் அபரிமிதமானஜலத்தை வர்ஷித்ததனால், ஆகாசத்திற் பிரளயகாலம் வந்ததுபோலிருந்தது. மழைத்தாரைகள் அலைகள்போல் மிகுதியாக இருப்பதனாலும் மேகங்களின் அதிககர்ச்சனைகளாலும் மின்னலுடன் கூடக்காற்றடிப்பதனாலும் ஆகாசம் நர்த்தனஞ்செய்வதுபோலிருந்தது. இடைவிடாத நீர்த்தாரைகளை யொழுமற்பொழிகின்ற அந்தமேகங்களினால், ஆகாசத்தில் சந்த்ரஸூர்யர்களின் கிரணங்கள் மறைந்துபோயின. அவ்வாறு இந்திரன் வர்ஷிக்கையில் நாகங்களுக்கு மிகுந்த ஸந்தோஷமுண்டாயிற்று. பூமியெங்கும் ஜலத்தினால் நிரப்பப்பட்டது. நிர்மலமான குளிர்ந்தஜலம் பாதாளம்வரையிற் சென்றது. அப்போது, பூமி பெரும்பாலும் ஜலங்களின் அலைகளால் மூடப்பட்டிருந்தது ஸர்ப்பங்கள் தங்கள்தாயாருடன் ராமணீயகமென்னும் தீவுக்குச் சென்றன.

இருபத்தேழாவது அத்தியாயம்.

ஆஸ்தீகபர்வம். (தொடர்ச்சி).

(அமிர்தம்கொண்டுவந்தால் வினதையை அடிமைத்தனத்தினின்றும் விடுவிப்பதாகக் கருடனுக்கு ஸர்ப்பங்கள் சொன்னது).

அப்போது மேகங்கள் வர்ஷித்ததனால் ஸந்தோஷமடைந்த அந்தநாகங்கள், கருடன் தூக்கிக்கொண்டுபோனதனால் சீக்கிரமாக

அந்த ராமணீயகத்வீபத்தைச் சேர்ந்தன. * முதலில், அந்தத் தீவுக்குவந்து அந்தஸர்ப்பங்கள், அவ்விடத்தில் முதலிலுள்ளவர்களுக்கு இடமாகப் பிரம்மாவினால் ஸ்ருஷ்டிக்கப்பட்ட பயங்கரமான லவணஸமுத்ரத்தைக்கண்டன. ஸமுத்ராஜலத்தினால் சுற்றிக்கொள்ளப்பட்டதும், பக்ஷிக்கூட்டங்களின் சப்தமுள்ளதும், புதியபுதிய பழங்கள் புஷ்பங்களுள்ள வனங்களின் வாசைகளினால் மறைக்கப்பட்டதும், அழகான வீடுகள் நிறைந்ததும், தெளிந்தஜலமுள்ள தாமரைக்குளங்களாலும் உயர்ந்தமடுக்களாலும் அலங்கரிக்கப்பட்டதும், உயர்ந்தவாஸனையைக் கொண்டுவரும் பரிசுத்தமான காற்றுவீசுவதும், காற்றுஅசைப்பதனால் பூமரி பொழிகின்றவையும் ஆகாயத்தின்மேல் எழும்புகின்றவைபோல் உயர்ந்தவையும் அங்குள்ள நாகங்களைப் பூமாரிகளினால் பூஜிப்பவைபோன்றவையுமாகிய சந்தனவ்ருக்ஷங்களாலும் காற்றினால் இறைக்கப்பட்ட புஷ்பங்களையுடைய வேறுமரங்களாலும் சோபிக்கின்றதும், மனஸுக்கு ஸந்தோஷத்தைக்கொடுப்பதும், பூலோகத்தில் அமையாததும், கந்தர்வர்களுக்கும் அப்ஸரஸுக்களுக்கும் ப்ரியமானதும், வண்டுகள்மதித்துச் சப்திப்பதும், பார்ப்பதற்குப் பிரியமானதுமுள்ளதும், ஜனங்களின்மனத்தை இழுக்கத்தக்க எல்லாவற்றாலும் அழகியதும், ஸுகமும், பரிசுத்தமும், கத்ருவின்புத்திரர்களுக்குச் சந்தோஷகரமுமாகிய வனத்தை ஸர்ப்பங்கள் கருடனுடன் பார்த்தன. அப்போது அந்தஸர்ப்பங்கள் அந்தவனத்தையடைந்து விளையாடின. சிறந்த பராக்கிரமமுள்ள பக்ஷிராஜாவாகிய கருடனைப் பார்த்து, "எங்களை இதைவிட அழகாயும், தெளிந்தஜலமுள்ளதாயுமிருக்கிற மற்றொருதீவுக்குக் கொண்டுபோ; பக்ஷியே! போகும்போது நீயும் அழகான பலதேசங்களைப் பார்க்கிறாயன்றோ" என்று சொல்லின.

அப்போது அந்தக்கருடன் ஆராய்ந்துபார்த்துத் தம் மாதாவாகிய வினதையைநோக்கி, "தாயே! ஸர்ப்பங்கள்சொல்வதை நான் செய்வதற்கு என்னகாரணம்?" என்றுகேட்டார். வினதை, "பக்ஷிராஜனே! என் மாற்றாள் பந்தயம்போட்டு ஸர்ப்பங்களைக்கொண்டு கெட்டஉபாயத்தினால் மோசஞ்செய்து அந்தப் பந்தயத்தைப் பொய்யாகச் செய்ததனால், நான் அவளுக்கு அடிமையாயிருக்கிறேன்" என்று சொன்னாள். தாயார் அந்தக்காரணத்தைச் சொன்னவுடன், கருடன் அவளுடைய துக்கத்தினால் தாமும் வருத்தமுற்று ஸர்ப்பங்களைநோக்கி, "ஓடுகின்றபாம்புகளே! எதைக்கொணர்ந்து, அல்

* பிறகு வேறுதீவுகளுக்குப் போவதனால் முதலிலென்னப்பட்டது.

லது எதைத்தெரிந்துகொண்டு, அல்லது எவ்விதமானமுயற்சியை இங்கேசெய்து, உங்களுக்குச்செய்யும் அடிமைத்தனத்திலிருந்து விடுபடுவேன்; உண்மையைச்சொல்லுங்கள்" என்று சொன்னர்.

அதைக்கேட்டு ஸர்ப்பங்கள், "பக்ஷியே! பராக்கிரமத்தினால் அமிர்தம்கொண்டுவா; அதன்பின் உனக்கு அடிமைத்தனத்திலிருந்து, விமோசனம் உண்டாகும்" என்று கருடனுக்குச் சொல்லின.

இருபத்தேட்டாவது அத்தியாயம்.

ஆஸ்தீகபர்வம். (தொடர்ச்சி).

(கருடன் வேடச்சேரியை விழுங்கினது).

ஸர்ப்பங்களினால் இவ்வாறுசொல்லப்பெற்ற கருடன், பின்பு தாயாரைநோக்கி, "நான் அமிர்தம் கொண்டுவரப்போகிறேன்; எனக்கு என்னஆகாரமென்று தெரிந்துகொள்ளவிரும்புகிறேன்" என்று கேட்க, வினதை, "ஸமுத்திரத்தின் நடுவிலுள்ளதீவின் ஒருபாகத்தில், ஒரு பெரிய வேடச்சேரியிருக்கிறது. பக்ஷிராஜனே! அவ்விடத்தில் பாபிகளும், இஹபரமாகிய இரண்டுலோகங்களுமில்லாதவர்களும், தயையற்றவர்களும், துஷ்டர்களுமாகிய வேடர்களுடைய வீடுகளிருக்கின்றன. அநேகமாயிரம் வேடர்கள் இருக்கின்றனர். அவர்களைப் புசித்துவிட்டு அமிர்தத்தைக்கொண்டுவா; பிராமணனை மட்டும், எந்தக்காரியத்திற்காகவும், நீ கொல்லலாகாதே; பிராமணன் அக்னிக்கொப்பானவன்; எந்தப்பிராணிகளும் அவனைவதஞ் செய்தல்தகாது. கோபம்மூட்டப்பட்ட பிராமணன், அக்னிபோலவும் ஸூர்யன்போலவும் விஷம்போலவும் ஆயுதம்போலவுமாகிறான். பிராமணன் எல்லாப்பிராணிகளுக்கும் பெரியவன்என்று சொல்லுகின்றனர். மேற்சொன்னவகையாகிய ஸபாபாவங்களாலேதான் பிராமணன் பெரியோர்களால் கௌரவிக்கப்படுகிறான். குழந்தாய்! அப்படிப்பட்ட பிராமணனை எவ்வளவுகோபமிருந்தாலும் நீ கொல்லாதே. எந்தக்காரணத்தாலும் பிராமணர்களுக்குத் துரோகஞ்செய்வது தகாது. குற்றமற்றவனே! கடுந்தவமுள்ள ஒருபிராமணன் சீறினால் எவ்வாறு பஸ்மமாகச்செய்வானோ அவ்வாறு அக்னியும்செய்யாது; ஸூர்யனும்செய்யான்; ஆதலால் நான்சொன்ன அநேக அடையாளங்களைக்கொண்டு நீ வருணங்களில் உயர்ந்தவனை பிராமணனைத் தெரிந்துகொள். பிராமணன் பிராணிகளுக்குமுதலில் உண்டானவன்;

வருணங்கள் நான்கிலும் சிறந்தவன்; தந்தையைப்போலவும் குரு வைப்போலவுமிருப்பவன்" என்று சொன்னாள். அதற்குக்கருடன், "அம்மா! பிராமணன் எவ்விதமானவன்? அவன் ஸ்வபாவம் என்ன? சக்தியென்ன? அவன் பார்ப்பதற்கு அக்னியைப்போலிருப்பானு? அல்லது சந்திரனைப்போல இனிமையாயிருப்பானு? அம்மா! நான் ப்ரயோஜனத்திற்காகக் கேட்பதனால் பிராமணனை நான்தெரிந்து கொள்ளக்கூடிய அவனுடைய மேன்மையான அடையாளங்களை நீ எனக்குச்சொல்லவேண்டும்" என்றுகேட்க, வினதைசொல்லுகிறாள்.

"புத்திரனே! எவனை நீ விழுங்கும்போது தொண்டையில் தூண்டில்முள் போவதுபோலிருக்குமோ, தணலைப்போற்சுடுமோ அவனை உயர்ந்தவனை பிராமணனென்று அறி; கோபம்வந்தபோதிலும், எக்காலத்திலும் நீ பிராமணனைக் கொல்லாதே" என்று சொல்லி, மறுபடியும் புத்ரப்ரேமையினால், "உன் வயிற்றிற்போனபின் எவன் ஜரிக்காமலிருப்பானை அவனைப் பிராமணனைத்தமனென்றறி" என்றும் சொன்னாள். பிறகு, வினதை கருடனுடைய ஒப்பற்றசக்தியையறிந்திருந்தும் நாகங்கள்செய்த தீங்கினால் மிகுந்த துக்கங்கொண்டு புத்ரவாத்ஸல்யத்தினால் ஆசீர்வாதம் செய்யத்தொடங்கினாள். "உன்சிறகுகளை வாயுபகவான் காக்கக்கடவர்; மூதுகைச் சந்திரசூரியர்கள் காக்கக்கடவர்; உன்சிரஸை அக்னிபகவான் காக்கக்கடவர்; உன்சரீரத்தைச் சுற்றிலும் அஷ்டவஸுக்கள் காக்கக்கடவர்; எங்கும் வியாபித்த விஷ்ணு உன்அங்கங்களெல்லாவற்றையும் காக்கக்கடவர். புத்திரனே! நானும் எக்காலத்திலும் உனக்குத் தீங்குகளில்லாமையையும் க்ஷேமமுண்டாவதையும் பிரார்த்தித்துக்கொண்டு இங்கே உட்கார்ந்து எப்போதும் மங்களகார்யங்களைச் செய்துகொண்டிருப்பேன். புத்திரனே! ஆரம்பித்தகார்யம் நல்லமுடிவுபெறும்படி வழியில் தீங்கில்லாமற் செல்வாயாக" என்றாள்.

அந்தக்கருடன், தாயார் சொன்னதைக்கேட்டபிறகு சிறகுகளை விரித்துக்கொண்டு ஆகாயத்திற்கிளம்பினார்; பின்பு பலவானுகிய கருடன் பசியுடன் வேடர்களிருக்குமிடத்திற்கு உலகத்தையழிக்கிற இரண்டாவதுயமன்போலப் போய்ச்சேர்ந்தார்; அப்போது அந்தக் கருடன் அந்தவேடர்களை ஸம்ஹரிப்பதற்காக ஆகாசத்தையளாவிய பெருந்தூளியை எழுப்பி ஸமுத்திரத்தின் நடுவிலுள்ள ஜலத்தைவற்றச்செய்து, அருகிலுள்ள * பர்வதங்களை அசையச்செய்து, வேடர்க

* கிருஷ்ணசாரியர்பாடத்திற்குப் பர்வதங்களிலுள்ள மரங்களையென்று கொண்டது.

ருடைய வழியைத்தடுத்துக்கொண்டு வாயைப்பெரிதாகத்திறந்தார். பிறகு வேடர்கள் பயத்தால் பரபரப்படைந்து அந்தக்கருடன் வாயை நோக்கியே ஓடினர். பெருங்காற்றினால் மரங்கள் ஆடுகின்ற வனத்தி லுள்ள பக்ஷிகள் மண்ணைத்தூடிய காற்றினால் திசைதெரியாமல் ஆகாயத்துக்குள் ஓடுவதுபோல், அந்தவேடர்கள் மிகப்பெரிதாகத் திறக்கப்பட்ட அந்தக்கருடனுடைய வாயினுள் ஆயிரக்கணக்காக ஓடினர். பிறகு சத்ருக்களை ஸம்ஹரிக்கிறவரும், மிகுந்தபலமுள்ள வரும், பக்ஷிகளுக்கெல்லாம் ராஜாவும் பலித்தவருமாகிய கருடன் மீன்களினால் ஜீவிப்பவர்கள் பலவகையாரையும் விழுங்கிக் கொல்வதற் காகச் சீக்கிரத்தில் வாயைமூடினர்.

இருபத்தோன்பதாவது அத்தியாயம்.

ஆஸ்தீகபர்வம். (தொடர்ச்சி).

(கருடன் பிராமணனைவிழுங்காமல்விட்டதும், யானையையும் ஆமையையும் தூக்கிக்கொண்டு சென்றதும்).

ஒருபிராமணன் தன்பாரியையுடன் கருடனுடையநெஞ்சிற் போகும்போது எரிகின்ற தணல்போற்சுட்டான். அவனைப்பார்த்துப் பக்ஷிராஜா "பிராமணசிரேஷ்டனே! வாயைத்திறக்கிறேன்; நீசீக்கிரம் வெளியிற்போ; எப்போதும் பாவச்செய்கைகளிலேயே இருப்பவ னை பிராமணனையும் நான்கொல்லேன்" என்றுசொன்னர்.

இவ்வாறுசொல்லுகின்ற கருடனைப்பார்த்து, அந்தப்பிராமணன், "என்பாரியையாகிய இந்தவேடச்சியும் என்னுடன்கூட வெளிப்பட வேண்டும்" என்றுகேட்டான். கருடன், "இந்தவேடச்சியையும் அழைத்துக்கொண்டு விரைவாக நீவெளியிற்செல்; என்ஜாடராக்னி யினால் நீ ஜீரணமாவதற்குமுன் சீக்கிரமாக உன்னை நீகாப்பாற்றிக் கொள்" என்றார். பின்பு அந்தப்பிராமணன் வேடச்சியுடன் வெளிப் பட்டுக் கருடனுக்குஆசீர்வாதஞ்செய்து, நினைத்தஇடத்திற்குச்சென் றான். அந்தப்பிராமணன் பாரியையுடன்வெளிப்பட்டபின் அந்தப்பக்ஷி ராஜா பக்ஷங்களைவிரித்துக்கொண்டு மனோவேகமாக ஆகாசத்தில் எழும்பினர்; பிறகு அறியக்கூடாதமஹிமையுள்ளகருடன் தம்பிதா வான கசியபரைக்கண்டு அவர்கேட்டதற்கு முறைப்படி தம்வரலாற் றைத் தெரிவித்தார். பின்பு கசியபமஹரிஷி அவரைநோக்கி, "புத்தி ரனே! உனக்கும் உன்தமையனுக்கும் உன்தாயாருக்கும் போஜனத்

தில் மிகுந்தஸௌக்கியம்எப்போதுமிருக்கிறதா? முக்கியமாகஉனக்கு வேண்டிய மிகுதியானஆகாரம் மனுஷ்யலோகத்தில்கிடைக்கின்றதா? அதிவேகமாக நீஎங்கேபோகிறாய்; எனக்கு நீசொல்லக்கடவாய்" என்றுகேட்டதற்குக் கருடன் சொல்லலானார்.

"பிதாவே! என்தாயாருக்கும் என்பிராதாவுக்கும் போஜனத்தில் எப்போதும்ஸௌக்கியந்தான்; எனக்கு, மிகுதியானபோஜனம் வேண்டியிருப்பதனால், அவர்களைப்போல் ஸுகமில்லை. எல்லாவற்றி லுஞ்சிறந்த அமிர்தத்தைக் கொண்டுவரும்படி என்னை ஸர்ப்பங்கள் ஏவியிருக்கின்றன. என்தாயாரின் அடிமைத்தனத்தை விடுவிப்பதற் காக இப்போது நான்அதைக் கொண்டுவரப்போகிறேன். உணவுக் காக வேடர்களைச் சாப்பிடும்படி என்மாதாசொன்னாள். ஆயிரக் கணக்கானவேடர்களைஉண்டும் எனக்குத் திருப்தியுண்டாகவில்லை. பகவானே! பிரபுவே! ஆதலால் நான் எதைஉண்டால் அமிர்தத்தைக் கொண்டுவரச்சக்தியுள்ளவனாயிருப்பேனோ, அப்படிப்பட்ட வேறொரு உணவை நீங்கள்எனக்குச் சொல்லுங்கள்; என்பசியும்தாகமும் நிவர்த் தியாகும்படியான ஆகாரத்தை எனக்கு நீங்கள்சொல்லவேண்டும்" என்றார்.

கசியபர் "இந்தஏரி மிகப்புண்ணியமென்று தேவலோகத்திலும் பிரஸித்திபெற்றது. இதில்ஒருயானை பழம்பிறப்பில் தன்ஜ்யேஷ்டனை ஆமையை எப்போதும் தூஷணைசெய்துகொண்டிழுக்கின்றது. அவ்வி ரண்டிற்கும் முந்தியஜன்மத்தில் விரோதமுண்டானதையும் அவ்வி ரண்டினுடைய அளவையும்பற்றி நான் பூர்ணமாகவும் ஸரியாகவும் சொல்லுகிறேன்; கேள். குழந்தாய்! பக்ஷியே! முன்னே அவ்விரண்டுக் கும் மாதாபிதாக்களின் பொருள்களைப பிரித்துக்கொள்ளுகிறவிஷ யத்தில் உண்டான விரோதத்தைப்பற்றிய கதையொன்று உனக்குச் சொல்லுகிறேன். அது ஸம்ஸாரத்தில் ஒழிவை விரும்திசெய்யத்தக் கது. நீகேள்; உனக்குக்ஷேமமுண்டாகட்டும்" என்று சொல்லத்தொ டங்கினார்.

விபாவஸுவென்று பெயருள்ள ஒருமஹரிஷியிருந்தார். அவர் அதிகோபமுள்ளவர்; அவருக்கு ஸுப்ரதீகனென்னும் பெயருள்ள தம்பி ஒருவரிருந்தார். அவர் சிறந்ததவமுள்ளவர்; அந்தஸுப்ரதீக மஹரிஷி, தமையனுக்கும் தமக்கும் சொத்துப்பிரியாமலிருப்பதில் இஷ்டமடையவில்லை; ஸுப்ரதீகர் எப்போதும் சொத்தின்விபாகத்தை ப்பற்றியே பேசுவதுவழக்கம். அந்தஸுப்ரதீகரைப்பார்த்து, ஸோஹா தரானவிபாவஸு, "பெருந்தவமுள்ளவனே! விபாகத்தில் அநே

கம் பிழைகள்நேரிடும். பலர், அறிவின்மையால் எப்போதும்விபாகத்தையே செய்யவிரும்புகின்றனர். பிரித்துக்கொண்ட பிறகு திரவியத்தினால் மோஹங்கொண்டு ஒருவரையொருவர் ஆதரிப்பதில்லை. பிறகு ஸ்வகார்யபரர்களும் தங்கள் தனங்களை வைத்துக்கொண்டு தனித்தனி யிருப்பவருமான இந்தமூடர்களைத் தெரிந்துகொண்டு விரோதிகள் மித்திரர்களைப்போற்சேர்ந்து, இவர்களைக் கலக்கின்றனர். மற்றும்சிலர், இவர்கள்கலந்துபோனதை அறிந்து இடையிலே பிரவேசிக்கின்றனர். விரோதமுள்ளவர்களுக்கு உடனே சீக்கிரத்தில் பெரிய நஷ்டம்வருகின்றது. ஆதலால், * பெரியோர்சொல்லிற் கட்டுப்பட்டவர்களும் ஒருவருக்கொருவர் ஸந்தேஹப்படாதவர்களுமான ஸஹோதரர்கள் பிரித்துக்கொள்வதை யோக்கியர்கள் சிலாகிப்பதில்லை" என்று சொன்னர். இப்படிச் சொல்லப்பட்டும் ஸுப்ரதீகர் எப்போதும் பாகத்தையே சொல்லிக்கொண்டிருந்தார். இவ்வாறு நிர்ப்பந்தம் செய்ததனால் அந்த ஸுப்ரதீகரை, விபாவஸு "ஸுப்ரதீகனே! பிரித்துக்கொண்டு தனத்தைவிரும்புகிற நீ, தடுக்கமுடியாமலிருப்பதனால், யானைஜன்மத்தை அடைவாயாக" என்றுசபித்தார். இப்படிச்சபிக்கப்பட்ட ஸுப்ரதீகர் விபாவஸுவைநோக்கி, "நீயும் ஜலத்துக்குள்ஸஞ்சரிக்கிற ஆமையாவாய்" என்றுசபித்தார். இப்படி ஸுப்ரதீகரும் விபாவஸுவும் திரவியத்தைப்பற்றிப் புத்திமயங்கி ஒருவரையொருவர் சபித்துக்கொண்டு முறையே யானையும் ஆமையுமானார்கள். கோபமென்னும்தோஷம் தொடர்ந்துவந்ததனால், அவர்கள் திர்யக்ஜன்மமெடுத்தும் உருவத்தின்பெரிய அளவினாலும் பலத்தினாலும் மிகுந்த கர்வங்கொண்டு, ஒருவர்மேலொருவர் த்வேஷத்தைவிடவில்லை. பெரியஉருவமுள்ள அவ்விரண்டும் பழையவிரோதத்தைவிடாமல் இந்தத்தடாகத்திலிருக்கின்றன. அவ்விரண்டனுள் ஒன்றுகிய அழகுள்ள பெரிய யானைவருகிறது. அதன் சப்தத்தைக்கேட்டு ஜலத்துக்குள்ளிருந்த பெரியசரீரமுள்ள ஆமையும், தடாகமுழுவதையும் கலக்கிக்கொண்டு இதோ கிளம்பியது. வீரியமுள்ள இந்தயானை, அந்த ஆமையைக்கண்டு, துதிக்கையைச் சுழற்றிக்கொண்டு அநேக மத்ஸ்யங்கள்நிறைந்த இந்தத்தடாகத்தைத் தந்தங்களாலும் துதிக்கை நுனியினாலும் வாலினாலும் கால்களின் வேகத்தினாலும் கலக்கிக்கொண்டு ஜலத்தில்இறங்குகின்றது. வீரியமுள்ள ஆமையும், தலை

---

* கிருஷ்ணசாரியர் பதிப்பில் ஸஹோதரர்கள் பெரியோர்சொல்லிற் கட்டுப்படாமலும் ஒருவருக்கொருவர் ஸந்தேஹித்துக்கொண்டும் விபாகம் செய்துகொள்வதை யோக்கியர் சிலாகிப்பதில்லை யென்றிருக்கின்றது.

யைத்தூக்கிக்கொண்டு யுத்தத்துக்காக எதிர்த்துவருகின்றது. யானை ஆறுயோசனை உயரமும் அதற்கிரண்டத்தனை சுற்றளவுள்ளதுமாக இருக்கின்றது; ஆமை மூன்றுயோசனைஉயரமும் பத்துயோசனைசுற்றளவுள்ளதுமாக இருக்கின்றது. இவ்விரண்டும் சண்டையில்கொழுத்தவை; ஒன்றையொன்றுகொல்ல விரும்புகின்றவை; இவற்றைப் புசித்துவிட்டு நீ நினைத்தகாரியத்தைச் சிக்கிரமாகமுடிப்பாய். திரண்ட பெரிய மேகம்போன்ற அந்த ஆமையையும் பெரியமலைபோல் உக்கிரமானரூபத்தோடுகூடிய அந்த யானையையும் புசித்துப் பிறகு அமிர்தத்தைக்கொண்டுவா" என்றுசொன்னார்.

கசியபர் இவ்வாறுசொல்லி, பிறகு கருடனைபார்த்து, "பக்ஷியே! நீ தேவர்களோடு யுத்தஞ்செய்கையில் உனக்கு மங்களம் உண்டாகக்கடவது; பூர்ணகும்பமும் பிராமணஸ்ரீர்வாதமும் கோக்களும் இன்னும் வேறு உயர்ந்த சூக்ஷமகரமான மங்களங்களும் உனக்குத்தரிடக்கடவன; சிறந்த பலமுள்ளவனே! பக்ஷிச்ரேஷ்டனே! நீ தேவர்களுடன் யுத்தஞ்செய்யும்போது, ரிக்யஜுஸ்ஸாமவேதங்களும் பாபத்தைப்போக்குகின்ற மஹாமத்திரவியங்களும் எல்லா ஞானசாஸ்திரங்களும் (மற்ற) எல்லாவேதங்களும், (மந்திரங்களும்) உனக்குப் பலத்தை விருத்திசெய்யக்கடவன" *என்று கருடனுக்கு மங்கள ஆசீர்வாதஞ்செய்தார்.

இவ்விதம் பிதாசொன்னபிறகு, கருடன் அந்த மடுவினருகே சென்று, பலவகைப் பறவைகள்நிறைந்த தெளிவான ஜலத்தைப் பார்த்தார். கொடியவேகமுள்ள அந்தக்கருடன் பிதாசொன்னதை நினைத்து, யானையை ஒருநகத்தாலும் ஆமையை மற்றொருநகத்தாலும் இடுக்கிக்கொண்டு பிறகு ஆகாயத்தில் உயரக்கிளம்பினார். அவர் †லம்பதீர்த்தம்சென்று அங்கே தேவலோகத்து வ்ருக்ஷங்களாகிய கற்பகவிருக்ஷங்களிடம் சென்றார். அவருடைய சிறைக்காற்றினல்அடிக்கப்பட்ட அந்ததேவலோகத்து ஸ்வர்ணமயமான வ்ருக்ஷங்கள் நம்மை முறிக்காமலிருக்கவேண்டுமேயென்று பயந்து நடுங்கின. நினைத்தபலனைத்தரும் அம்மரங்கள் நடுங்கினதைக்கண்டு கருடன், பொன்னும் வெள்ளியுமான பழங்களினாலும் வைடூர்யமயமான இலைகளினாலும் பிரகாசிக்கின்றவையும், ஸமுத்ரஜலத்தினல் சூழப்பட்டவையும், ஒப்பில்லாத ரூபமுள்ளவையுமான வேறு பெரிய மரங்

---

* இங்கே ஒருவரி அதிகபாடமாகஉள்ளது விடப்பட்டது.

† ஸோலம்பம்என்று பாடம்கொண்டு ஆதாரமில்லாமல் ஆகாசமார்க்கமாகப் புண்ணியமான மேருகிரத்துக்குப் போய் என்பது பழையஉரை.

களிடம்போனார். அவைகளின்நடுவில் வெகுஅழகாயும் ஆயிரம்யோசனை உயரமுள்ளதாயும் அநேகம் கிளைகளுள்ளதாயும் பக்ஷிகளுக்கு இருப்பிடமாயுமுள்ள தேவலோகத்திய பெரிய * ஆலமரமொன்று இருந்தது. அதனுடைய நிழலையடைந்தவன் உடனே ஸௌக்ய மடைவான். அங்கே அதிகவளர்ச்சியுள்ள அந்தப்பெரிய ஆலமரம் மஹாவேகமாகவருகின்ற அந்தப் பக்ஷிராஜாவைப்பார்த்து, "நூறு யோசனைநீளமுள்ள எனது இந்தப்பெரிய கிளையிருக்கின்றதே இதில் உட்கார்ந்துகொண்டு நீ இந்தயானையையும் ஆமையையும் சாப்பிடு" என்று சொல்லிற்று. பிறகு, மலைக்குச்சமானமான சரீரமுள்ளவரும் சிறந்த வேகமுள்ளவருமாகிய பக்ஷிராஜா ஆயிரம்பக்ஷிகள் அடைந்திருக்கும் அம்மரம் நடுங்கும்படி விரைவாகவந்து இறங்கினதனால், நெருங்கின இலைகளோடுகூடிய அந்தக்கிளை முறிந்தது.

முப்பதாவது அத்தியாயம்.

ஆஸ்தீக பர்வம். (தொடர்ச்சி).

(கருடன் தாம் உட்கார்ந்ததனால் முறிந்தஆலங்கிளையில் வாலகில்யரிஷிகள் தொங்கிக்கொண்டிருந்ததனால் அதை முக்கியமல்கோத்தித் தூக்கிக்கொண்டு போய் இமயமலையிலிருந்து ஆமையையும் யானையையும் புஜித்தது).

அதிகபலவானான கருடன் கால்களால்தொட்டமாத்திரத்தில் அந்தமரக்கிளை முறிந்தது. முறிந்துபோன அந்த ஒருகிளையை விழாமல் காலாற்பிடித்துக்கொண்டார். முறித்தபிறகு அவர் அந்தப் பெருங்கிளையைப் புன்னகையுடன் பார்க்கும்போது, அதில் வாலகில்யரென்னும் ரிஷிகள் தலைகீழாகத் தொங்குவதைக்கண்டார். தவத்தில் ஊக்கமுள்ள அந்தப்பிரமரிஷிகள் அதில் தொங்குவதைக்கண்டு, "இந்த ரிஷிகள் தொங்குகின்றார்களே; நான் இவர்களைக் கொல்லாமலிருக்கவேண்டுமே; இந்தக்கிளைவிழுந்தால் இவர்களைக்கொன்றுவிடுமே" என்றுநினைத்து அந்தவீரராகிய கருடன் யானையையும் ஆமையையும் நகங்களினால் மிகவும்கெட்டியாகப் பிடித்துக்கொண்டு அந்த

---

* மூலத்தில், 'ரௌஹிணம்' என்றிருக்கிறது. இது, பாரதம் நீலகண்டவ்யாக்யானத்தாலும், வால்மீகிராமாயணம் ஆரண்யகாண்டம், நூற்றுவது அத்யாயம், உசுவதுமுதலிய சுலோகங்களாலும், "விண்ணளாவுமோர் வடதருச் சினைமிசைமேவி" என்னும் பாரதச்செய்யுளாலும், ஆலமரமென்றேவிளங்குகின்றது; இராமாயணத்தாலேயே அது ஸுபத்ரம்என்னும் பெயருடையது என்பதும் தெரிகிறது; இதற்குச் சந்தனவிருக்ஷமென்றும் பொருளுண்டு.

ரிஷிகளுடைய ரோசத்திற்குப்பயந்து அவர்களைக்காப்பாற்றுவதற்காகவே வேகமாகஓடி வாயினுல் அந்தக்கிளையைக் கௌவிக்கொண்டார். தேவர்களுக்கும் முடியாத அந்தச்செய்கையை அவரிடங் கண்டு அம்மஹரிஷிகள் மனத்தில் ஆச்சரியமேலிட்டு அந்தப்பறவை கட்கரசரான கருடனைப்பார்த்து, "ஸர்ப்பங்களைப்புசிப்பவனுகிய இந்தப் பக்ஷிராஜா பெரியபாரத்தையும் தூக்கிக்கொண்டு ஆகாயத்திற் பறப்பதனுல் இவனுக்கு 'கருடன்' என்று பெயர்இருக்கட்டும்" என்றனர். அதன்பிறகு, சிறகின்வேகத்தால் மலைகள் அசையும்படி பறந்து கொண்டு யானையையும் ஆமையையும் இடுக்கிக்கொண்டே வாலகில்யர்களுடைய தபைக்காகக் கிரமமாக அமோகமேதசங்களைத் தாண்டினர்; ஓரிடத்திலும் தங்கவில்லை. அவர் நேராகக் கந்தமாதனமென்னும் சிறந்த பர்வதத்திற்குப்போய் அவ்விடத்தில் தவஞ்செய்துகொண்டிருக்கும் தம்பிதாவாகிய கசியபரைக்கண்டார். அந்தக்கசியபரும், உயர்ந்தரூபமுள்ளவரும், ஒளியும் பராக்கிரமமும் பலமுமுள்ளவரும், மனத்துக்கும் காற்றுக்கும் ஒப்பானவேகமுள்ளவரும், மலைச்சிகரம்போன்றவரும், மேலேதூக்கப்பட்ட பிரமதண்டம்போன்றவரும், சிந்திப்பதற்கும் தியானஞ்செய்வதற்கும் முடியாதவரும், ஸர்வப்பிராணிகளுக்கும் பயத்தைச்செய்கிறவரும், மஹாசக்தியுள்ளவரும், ஜ்வலிக்கின்ற அக்கினியைப்போல் உக்கிரமானவரும், தேவர்களாலும் அசுரர்களாலும் ராக்ஷஸர்களாலும் எதிர்க்கவும் ஜயிக்கவும் முடியாதவரும், மலைகளின் சிகரங்களைப்பிளப்பவரும், ஸமுத்ர ஜலங்களை வற்றச்செய்பவரும், லோகங்களை ஆட்டுகிறவரும், பார்ப்பதற்கு யமனைப்போற் பயங்கரருமான அந்தக்கருடனைக்கண்டார். அப்போது பகவானுன கசியபரும் அவர்வந்ததைப்பார்த்து வாலகில்யர்களைப்பற்றிய அவருடைய அபிப்பிராயத்தையுமறிந்து, "புத்திரனே! ஸாஹஸகார்யஞ்செய்யாதே; உடனே துன்பத்தையடையாதே; ஸூர்யகிரணங்களைப் பானஞ்செய்கிற வாலகில்யமஹரிஷிகள் கோபித்து உன்னை நீறுகச்செய்யாமலிருக்கவேண்டும்" என்று புத்திரனைப்பார்த்துச் சொல்லி, பிறகு கசியபர் தபஸினுல் கல்மஷங்களைப்போக்கின மஹாமஹிமையுள்ள வாலகில்யமஹரிஷிகளைப்பார்த்து, "தபோதனர்களே! கருடனுடையஆரம்பம் ஜனங்களின் நன்மைக்காக; அவன் பெரியகாரியத்தைச்செய்ய ஆரம்பித்திருக்கிறுன்; அதற்கு நீங்கள் அனுமதிகொடுக்கக்கடவீர்கள்" என்று, வேண்டிக்கொண்டார். பகவானுனகசியபரால் இவ்வாறுசொல்லப்பட்ட அந்த வாலகில்யமஹரிஷிகள் அந்தக்கிளையைவிட்டுநீங்கித் தவத்திற்காகப் புண்யமான இமய

மலைக்குச் சென்றனர். அந்தரிஷிகள் போனபிறகு, கருடன் கிளையினால் தடுக்கப்பட்டவாயுடன் பிதாவான கசியபரைப்பார்த்து, "பகவானே! இந்தமரக்கிளையை நான் எங்கேபோடலாம்; மனிதர்கள் இல்லாதஇடத்தை நீங்கள் எனக்குச்சொல்லவேண்டும்" என்று கேட்க, அதற்கு அந்தக்கசியபர், மனிதர்களில்லாததும், குகைகளெல்லாம் பனியினால்மூடப்பட்டதும், மற்றவர்கள் மனத்தினாலும் போகக்கூடாததுமாகிய ஒருபர்வதத்தைக் கருடனுக்குக்காண்பித்தார். அந்தப்பக்ஷிராஜா * விசாலமான கடும்பிரதேசத்தையுடைய அந்தப்பர்வதத்தைநோக்கி, கிளை, யானை, ஆமை இவைகளுடன் வேகமாகச்சென்றார். கருடன் தூக்கிக்கொண்டுபோன அந்தப்பருத்த நீண்டகிளையைச்சுற்ற, † அநேகம் தேவர்களாற்செய்யப்பட்டவாகூடப்போதாது; அதன்பின் அதிககாலதாமமில்லாமலே பக்ஷிராஜாவாகிய அந்தக்கருடன், கசியபரிடத்திலிருந்து நூறுயோசனைதூரம்போனார். பிதாவின் சொல்லைக்கேட்டு வெகுசீக்கிரமாக அம்மலைக்குச்சென்று அந்தப்பெருங்கிளையைச் சப்தமுண்டாகும்படி அங்கேவிட்டுவிட்டார். அந்தப்பெரியமலை, இவருடையபக்ஷங்களின் காற்றினால் அடிக்கப்பட்டு அசைந்து மரங்கள்பெயர்ந்து புஷ்பவர்ஷத்தையும் வர்ஷித்தது. ரத்தினங்களினாலும் பொன்னினாலும் சித்திரங்களும் அந்தமலைக்கு அழகைஉண்டாக்குகின்றவையுமான அதன்சிகரங்கள் நாலுபக்கமும் சரிந்துவீழ்ந்தன. அந்தக்கிளையினாலடிபட்ட அநேகமரங்களும் தங்கமயமான புஷ்பங்களோடு,மின்னலோடுகூடிய மேகங்களைப்போல் விளங்கின. பொன்னிறமாகப் பிரகாசிக்கின்ற அந்தமரங்கள் பூமியில் விழுந்து, அம்மலையிலுள்ள பொன்னிறமானமண்களுடன் சேர்ந்து, சூரியகிரணங்களும்படுவதினால் பிரகாசமாக விளங்கின.

பிறகு, அந்தப்பக்ஷிராஜாவாகிய கருடன், அம்மலையின் கொடுமுடியிலுட்கார்ந்து, அந்தயானை ஆமை இரண்டையும் பக்ஷித்தார். அவர் அவ்விரண்டையும் பக்ஷித்தபின் அந்தப்பர்வதசிகரத்தினின்றியிலிருந்து மிகுந்தவேகத்துடன் உயரப்பறந்தார். அப்போது, தேவர்களுக்குப் பயத்தைத்தெரிவிக்கின்ற அபசகுனங்களுண்டாயின. இந்திரனுடைய பிரியமான வஜ்ராயுதமானது பயத்தினால் ஜ்வலித்தது. ஆகாசத்திலிருந்து பகலில் புகையோடும் ஜ்வாலையோடும் எரிகொள்ளி விழுந்தது. வஸுக்கள், ருத்ரர்கள், ஆதித்யர்கள்,

---

* அந்தப்பர்வதத்தின் விசாலமான மத்தியத்தைநோக்கி என்பது மற்றொருபாடம்.

† நூறுமாடுகளின் தோலினாற் செய்யப்பட்டவார்என்பது பழையஉரை.

ஸாத்தியர்கள், ஸப்தமருத்துக்கள், மற்றுமுள்ள தேவக்கூட்டங்களாகிய எல்லாருடைய ஆயுதங்களும், ஒன்றையொன்று பீடித்தன. தேவாஸுரயுத்தம் நடந்தபோதும், இந்தஅபசகுனம் உண்டான தில்லை. காற்று இடியுடன்அடித்தது. எரிகொள்ளிகள் ஆயிரக்கணக்காகவிழுந்தன. மேகமில்லாமலே ஆகாசத்தில் பெருமுழக்கமுண்டாயிற்று. தேவர்களுக்குத்தேவதையாகிய இந்திரன் ரக்தத்தை வர்ஷித்தான்; அவர்களுடைய புஷ்பமாலைகள்வாடின; ஒளிகள் மாறின; பயங்கரமுள்ளவைகளாகிய ப்ரளயகாலமேகங்கள் அதிகரக்தத்தை வருஷித்தன. தேவர்களுடைய உயர்ந்தகிரீடங்களைத் தூளிகள்கிளம்பிமூடின. பிறகு, இந்திரன் தேவர்களுடன்கூடப் பயங்கரங்களான அபசகுனங்களைக்கண்டு பயந்து, ப்ருஹஸ்பதியைப்பார்த்து, "பகவானே! பயங்கரமான அபசகுனங்கள் காரணமில்லாமல் உண்டாயிருப்பதென்ன? நம்மை யுத்தத்தில் ஜயிக்கக்கூடிய சத்துரு யாரும் இருப்பதாக எனக்குத்தெரியவில்லை" என்றுகேட்க, ப்ருஹஸ்பதி "தேவேந்த்ரனே! மஹாத்மாக்களான வாலகில்யமஹரிஷிகளின்தபஸினல் கசியபமுனிக்கு வினதையினிடம்பிறந்த புத்ரனும் நினைத்தரூபமெடுப்பவனும் மிகுந்தபலவானுமாகிய கருடன் உன்னுடையகுற்றத்தினலும் அஜாக்ரதையினலும் அமிர்தத்தைக் கொண்டுபோகவந்திருக்கிறான்; பலவான்களுக்கெல்லாம் சிறந்தவனுகிய பக்ஷிராஜன் அமிர்தத்தைக் கொண்டுபோவதற்கு ஸாமர்த்தியமுள்ளவன்; அவனிடத்தில் எதையும்எதிர்பார்க்கிறேன்; அவன் சாதிக்கக்கூடாததையும் சாதிப்பான்" என்றுசொன்னர். இந்திரன் இந்தச்சொல்லைக் கேட்டு, அமிர்தம் காப்பவர்களைப்பார்த்து, "மிகுந்தபராக்ரமமும் வன்மையுமுள்ள பக்ஷிராஜன் இங்குள்ள அமிர்தத்தைக் கொண்டுபோக ஆரம்பித்திருக்கிறான்; இதோ உங்களுக்குத் தெரிவிக்கிறேன்; தேவவீரர்களே! கவசங்களைத் தரித்துக்கொண்டும் ஆயுதங்களையெடுத்துக்கொண்டும் நீங்களெல்லாரும் என் ஆஜ்ஞைப்படி அமிர்தத்தைச் சுற்றிக்கொண்டு அவன் பலாத்காரமாகக் கொண்டுபோகாவண்ணம் காப்பாற்றுங்கள். அவனுடையபலத்துக்கு ஒப்பில்லையென்று ப்ருஹஸ்பதி சொல்லியிருக்கிறார்" என்றுசொன்னன். அவ்வாறு இந்திரன் சொன்னதைக்கேட்டு, தேவர்கள்வியப்புற்று முயற்சியுடன் அமிர்தத்தைச் சுற்றிநின்றனர். வீரனுகிய இந்திரனும் வஜ்ராயுதமெடுத்து நின்றான். உத்ஸாஹமுள்ள தேவச்ரேஷ்டர்களனைவரும் சிறந்தஆபரணங்களை அணிந்து பிரகாசித்துக்கொண்டு, பொன்மயமானவையும் வைடூர்யமழைத்தவையும் மிகுந்த விலைபெற்றவையு

மான விசித்திரகவசங்களையும், பிரகாசமுள்ளவைகளும் கெட்டியு மான கேடகங்களையும், பார்ப்பதற்குஉக்கிரமும் கூர்மையுமான பற் பலஆயுதங்களையும், நெருப்புப்பொறிகளும் ஜ்வாலைகளும் புகைகளும் உண்டாகின்ற சக்கரங்களையும், இருப்புக்கட்டுத்தடிகளையும், திரிசூலங் களையும், கோடாலிகளையும், நீக்ஷ்ணங்களான அநேகவித சக்தி ஆயு தங்களையும், பளபளப்பான கத்திகளையும், பார்ப்பதற்குப் பயங்கர மான கதாயுதங்களையும், தங்கள் தேகங்களுக்குவற்றபடி எடுத்துக் கொண்டு,பிரகாசிக்கின்ற அந்தஆயுதங்களோடு அச்சமின்றிநின்றனர். ஒப்பற்றபலமும் பராக்கிரமும் ஒளியுமுள்ளவர்களும், அமிர்தத்தைக் காப்பதில் உறுதியான மனமுள்ளவர்களும், ஜ்வலிக்கிற அக்னியைப் போல் பிரகாசிக்கின்ற சரீரமுள்ளவர்களும், அஸுரருடைய நகரங்க ளைப் பிளப்பவர்களுமாகிய அந்தத்தேவர்கள், அநேகலக்ஷம் பரிகாயு தங்கள்நிறைந்த அந்தப்பெரியயுத்தத்தில் இவ்வாறு நின்றனர். அப் போது, *ஸுர்யகிரணங்களினூற் பிரகாசிக்கின்ற ஆகாசத்தின்மத்தி யம் நழுவிவிழுந்ததுபோல் தோன்றிற்று.

முப்பத்தோராவது அத்தியாயம்.

ஆஸ்தீகபர்வம். (தொடர்ச்சி).

(வாலகில்யர்தபஸினூல் கருடன் உண்டானது).

சௌனகர், "ஸௌதியே! தேவேந்திரனிடத்தில் என்னகுற் றமும், என்னஅஜாக்ரதையும்இருந்தன? வாலகில்யர்களுடைய தவத் தினால் கருடனுண்டானது எப்படி? பிராமணரான கசியபருக்குப் பக்ஷிராஜா பிள்ளையானது எப்படி? அந்தப்பக்ஷிராஜா எல்லாப் பிராணிகளாலும் எதிர்க்கமுடியாமலும் வதஞ்செய்யமுடியாமலும் ஆனது எவ்வாறு? அந்தப்பக்ஷிராஜா நினைத்தபடி ஸஞ்சரிப்பவரும் நினைத்தபடி சக்தியுள்ளவருமாக இருந்ததுஎப்படி? இவை பூர்வ சரித்திரத்திற்சொல்லப்பட்டிருந்தால் நான்கேட்க விரும்புகிறேன்" என்றுகேட்க, ஸௌதிசொல்லலானார்.

"நீங்கள் என்னைக்கேட்டது புராணத்திலுள்ள விஷயந்தான்; பிராமணரே! இவற்றை நான்சுருக்கமாகச்சொல்லுகிறேன்; கேளும்.

---

* ஆபரணம்முதலியவை ஸுர்யகிரணம்போலவும் இருப்பாயுதங்கள் ஆகாசம்போலவும் இருந்தனவென்பது கருத்து.

ப்ரஜாஸ்ருஷ்டிகர்த்தாவாகிய கசியபர், புத்திரணவிரும்பி யாகஞ் செய்யும்போது, ரிஷிகளும் தேவர்களும் கந்தர்வர்களும் உதவிசெய் தனர். அதில் இந்திரனும் வாலகில்யரிஷிகளும் மற்றுமுள்ளதேவக் கூட்டங்களும் ஸமித்துக்கள்கொண்டுவருதற்குக் கசியபரால் நியமிக் கப்பட்டனர். இந்திரன் சக்தியுள்ளவனுதலால் மலேபோன்ற ஸமித்துக் கட்டைத் தன் சக்திக்குத்தக்கபடி எடுத்துக்கொண்டு அதிகச்ரமமில் லாமல் வந்தான். அப்போது கட்டைவிரல் நடுரேகையளவான குறிய சரீரமுள்ளவர்களும், ஓறறைப்பலாசக்கழியை அநேகர்சேர்ந்து சுமப் பவர்களும், அதன்பாரத்தினுல் தங்கள் அங்கங்கள் குன்றியிருப்ப வர்கள்போன்றவர்களும், ஜலம்நிறைந்த ஒருமாட்டுக்குளப்படியில் கஷ்டப்படுகிறவர்களும், சக்தியற்றவர்களும், ஆகாரமில்லாதவர்களு மான ரிஷிகளை வழியிற்கண்டான். பராக்கிரமத்தினுற் கர்வமடைந்த இந்திரன், ஆச்சரியத்துடன் அவர்களெல்லாரையும்பார்த்துச் சிரி த்து அவமதித்துத் தாண்டிக்கொண்டு வேகமாகச்சென்றான். பிறகு அவர்கள் கோபத்தோடும் மனத்தில்மிகுந்த துக்கத்தோடும் இந்திர னுக்குப் பயத்தைத்தரத்தக்க பெரிய செய்கையைச்செய்ய ஆரம்பித் தனர். அந்தஉயர்ந்ததபஸ்ஸுள்ள பிராமணர்கள், எந்தப்பிரயோஜனத் திற்காக அநேகமந்திரங்களினுல் சாஸ்திரப்படி அக்னியில் ஹோமஞ் செய்தார்களென்பதைச் சொல்லுகிறேன்; கேளும். விரும்பும் சக்தி யுள்ளவனும், நினைத்தபடிஸஞ்சரிப்பவனும், இந்திரனுக்குப்பயத்தைக் கொடுப்பவனுமாக மற்றோர்இந்திரன் எல்லாத்தேவர்களுக்கும் இருக் கவேண்டுமென்றும், சௌர்யவீர்யங்களில் இந்திரனைக்காட்டிலும் நூறுமடங்கு அதிகமுள்ளவனாகவும், மனோவேகமுள்ளவனாகவும், பயங்கரனாகவும், நம்முடையதபஸின்பலனாக இப்போது உண்டாக வேண்டுமென்றும் கிரியைசெய்தனர்; அதையறிந்து தேவராஜாவாகிய இந்திரன் மிகவருத்தமுள்ளவனாகி உக்கிரமானதவமுள்ள கசியபரைச் சரணமடைந்தான். இந்திரன்சொன்னதைக்கேட்டு, பிரஜைகளுக்குப் பிரபுவாகிய கசியபர், வாலகில்யர்களிடம்சென்று, "நீங்கள்என்ன பலனவிரும்பி இந்த ஹோமகாரியத்தை ஆரம்பித்தீர்கள்; எனக்குச் சரியாகச்சொல்லுங்கள்; நான்கேட்கவிரும்புகிறேன்" என்று வால கில்யர்களின் கிரியையின் முடிவைப்பற்றிக்கேட்ட கசியபருக்கு ஸத் யவாதிகளான வாலகில்யர்கள், "ஐச்வர்யகர்வத்தினுல் ஒன்றும் தெரியாத மூடனான தேவேந்த்ரன் புத்தியில் தேர்ச்சியில்லாமல் சிஷ்டர்களுடைய ஆசாரங்களைநிந்தித்து எங்களை அவமதித்தான்; கசி யபரே! அவனுடைய அந்தக்கர்வத்தைக் கெடுப்பதற்காக நாங்கள்

சாஸ்திரப்படி இந்தக்கிரியையை ஆரம்பித்திருக்கிறோம்" என்றும், "இப்படித்தான் ஆகவேண்டும்"என்றும் மறுமொழிகூறினர். கசியபர் நல்லவார்த்தையுடன் அவர்களைப்பார்த்து, "இவன் பிரம்மாவினுடைய கட்டளையினால் மூன்றுலோகங்களுக்கும் இந்திரனாக ஏற்பட்டிருக்கிறான்; தபோதனர்களே! நீங்களும் இந்திரனுக்காகத்தான் முயற்சி செய்கிறீர்கள்; சிறந்தஸாதுக்களே! பிரம்மாவின் சொல்லை நீங்கள் பொய்யாகச் செய்தல்தகாது; உங்களுடைய இந்தஎண்ணத்தையும் நான்பொய்யாக்க நினைக்கவில்லை; மிகுந்தபலமும் தைர்யமுமுள்ளவனாகிய, உங்கள்கிரியையினாலுண்டான புருஷன் பக்ஷிகளுக்கு இந்திரனாகஇருக்கட்டும்; வேண்டிக்கொள்ளுகிற இந்த இந்திரன்விஷயத்தில் நீங்கள் அனுக்ரஹஞ்செய்யவேண்டும்" என்று நல்லவார்த்தையாகச் சொன்னர்.

இப்படிக் கசியபரால்சொல்லப்பட்ட வாலகில்யமஹரிஷிகள்,ரிஷிச்ரேஷ்டராகிய கசியபரைநோக்கி மரியாதைசெய்து, "ஸ்ருஷ்டிகர்த்தாவே! இந்திரனுக்காகவும் உமக்குப் புத்திரஸந்தானத்துக்காகவும் நாங்களெல்லாரும் இதைச்செய்ய ஆரம்பித்தோம்; இந்தக்கிரியையைப் பலனுடன் உமக்குக்கொடுத்துவிடுகிறோம்; நீர் வாங்கிக்கொண்டு எப்படி இருக்குமானால் நன்மையென்று தோன்றுகிறதோ அப்படியே செய்துகொள்ளும்" என்று சொன்னர். அந்தச்சமயத்தில், அழகும் குணமுமுள்ளவளும் புகழ்பெற்றவளுமான வினதையென்று பெயருள்ள தக்ஷபுத்திரியாகிய கசியபர்பத்னி, புத்திரனைவேண்டித் தவஞ் செய்து நியமத்துடன் ஸ்நானஞ்செய்து நோன்புநோற்றுத் தனக்குப் பிள்ளைபிறக்கவேண்டுமென்று பரிசுத்தமாகத் தன் பர்த்தாவினிடஞ் சென்றாள். பிறகு கசியபர் அவளைப்பார்த்து, "தேவியே! நீ விரும்பினகாரியம் நிறைவேறப்போகிறது; வீரர்களும் மூன்றுலோகங்களுக்கும் ஈச்வரர்களுமாகிய இரண்டுபுத்திரர்களைப் பெறுவாய்; வாலகில்யருடைய தவத்தினாலும், என்னுடைய ஸங்கல்பத்தினாலும் மூன்றுலோகங்களும் கொண்டாடத்தக்க சிறந்த மஹிமையுள்ள இரண்டுபுத்திரர்களுண்டாவார்கள்" என்றுசொல்லி, திரும்பவும் பகவானை கசியபர் அவளைப்பார்த்து, "மிகப்பெரிய மேன்மையைத்தரத்தக்க இந்தக்கர்ப்பத்தைத் தவறுதலில்லாமல் வைத்துக்கொள்; ஒரு புத்திரன் உலகங்களினால் பூஜிக்கப்பட்டவனும் நினைத்தபடி ரூபமெடுத்துக்கொள்ளுகிறவனும் வீரனுமான பக்ஷியாகப்பிறந்து எல்லாப்பக்ஷிகளுக்கும் இந்திரனாக இருக்கப்போகிறான்" என்று சொன்னர். பிறகு கசியபர் அன்புடன் இந்திரனைப்பார்த்து, "மஹாபாக

மசாலிகளான இருவரும் உனக்குப் *பிராதாக்களும் உனக்கு ஸஹாயர்களுமாக ஆவார்கள்; புரந்தரனே! அவர்களிடமிருந்து உனக்குத் தீங்குவராது; இந்திரா! உன் துயரம்மிலகக்கடவது; நீதான் இந்திரனுகஇருப்பாய்; இனி இவ்விதமாகப் பிரம்மதிஷ்டர்களே நீ அவமதியாதே; சொல்லேயே வஜ்ராயுதமாகவுடையவர்களும் பலமான கோபமுள்ளவர்களுமாகிய பெரியோர்களைக் கர்வத்தினுல் அவமானஞ்செய்வது தகாது" என்றுசொன்னர்.

அவர் இவ்வாறுசொன்னபின், இந்திரன் அச்சத்தைவிட்டு ஸ்வர்க்கம் சென்றான். வினதையும், தன் காரியம் நிறைவேறியதனுல் த்ருப்தியடைந்தாள்; அப்படியே அருணனும் கருடனுமாகிய இரண்டு புத்திரரைப்பெற்றுள். அவர்களுள் அங்கங்குறைந்த அருணன் ஸூர்யனுக்கு ஸாரதியானன். (தேவர்கள்) கருடனைப் பக்ஷிகளுக்கு இந்திரனுகப் பட்டாபிஷேகஞ்செய்தனர். பிருகுபுத்திரரே! அவர் செய்த இந்தப்பெரியகாரியத்தைக் கேளும்.

முப்பத்திரண்டாவது அத்தியாயம்.

ஆஸ்தீகபர்வம். (தொடர்ச்சி).

(தேவர்கள் கருடனிடத்தில் யுத்தம்செய்து தோற்றது).

அதன்பிறகு மஹாபலசாலியாகிய கருடன் அந்தச்சிறந்த மலையினின்றும் கிளம்பி விரைவாகத் தேவர்களிடம் சென்றார். மிகுந்த பலமுள்ள அந்தக்கருடனைக்கண்டு தேவர்கள் நடுங்கினதனுல் ஆயுதங்களைக்கூட, ஒருவர்மீது ஒருவர் போட்டுக்கொண்டனர். அவர்களுள் மின்னலுக்கும் அக்னிக்கும் ஸமானமான ஒளியுள்ளவனும், மிகச் சிறந்தபராக்ரமமுள்ளவனும், அளவிடக்கூடாத தன்மையுள்ளவனுமாகிய பௌமனனென்பவன் அமிர்தத்துக்குக் காவலாகஇருந்தான். அவன் சற்றுநேரம் ஒப்பற்றயுத்தம் செய்தபிறகு, அவனை அந்தக்கருடன் சிறகுகளினுலும் மூக்கினுலும் நகங்களினுலும்குத்தியடித்தார். பக்ஷிராஜா பக்ஷங்களின் காற்றினுல் மண்ணை மிகுதியாகக்கிளப்பி உலகங்களைப் பிரகாசமில்லாமற்செய்து அந்த மண்ணைத் தேவர்களின்மேல் இறைத்தார். அந்தத் தூளியினுல் மறைக்கப்பட்ட தேவர்கள் திசைமயங்கிநின்றனர். இப்படித் தூளியினுல் மூடப்பட்ட அமிர்தரக்ஷகர்களுக்குக் கண்தெரியவில்லை. இவ்வகையாகக் கருடன் ஸ்வர்

* அன்புள்ள ஸஹோதரர்களைப்போன்றவர்கள்.

க்கத்தைக்கலக்கினர்; பக்ஷங்களினலும் மூக்கினலும் தேவர்களை யடித்துக் கிழித்தார். பிறகு தேவேந்திரன் வாயுவைப்பார்த்து, "இந்த மண்மாரியைச்சீக்கிரம் விலக்கு; மாருதனே! இஃது உன் வேலை" என்று ஏவினன்; அதன்பின், பலவானகியவாயு தன் வன்மை யினல் அந்தத்தூளியை ஓடுக்கினன்; பின்பு இருள் நீங்கினபோது தேவர்கள் அந்தப்பக்ஷியை அடித்தனர். பலவானகிய அந்தக்கருடன், தேவர்களால் அடிக்கப்பட்டபோது எல்லாப்பிராணிகளும் நடுங்கும் படி, ஆகாசத்திற் பெரியமேகம்போல் மிகக்கர்ச்சித்தார். சிறந்த பராக்ரமசாலியும் எதிரிகளான வீரர்களைக் கொல்லுபவருமாகிய பக்ஷிராஜா மேலேகிளம்பினர். தேவர்களுக்குமேல் ஆகாசத்திற் கிளம்பியிருந்த அந்தக்கருடன்மேல் கவசங்கள்தரித்த இந்திராதி தேவர்களெல்லாரும் பட்டிசமென்னும் சுத்திகள், பரிகமென்னும் ஆயுதங்கள், சூலங்கள், கதைகள் முதலிய அநேகவித ஆயுதங்களைப் பிரயோகித்தார்கள். ஜ்வலிக்கின்ற அர்த்தசந்த்ரபாணங்கள், ஸூர் யனைப்போற் பிரகாசிக்கின்ற சக்கரங்கள்முதலிய அநேகஆயுதங்களைப் பிரயோகித்துத் தேவர்களால் நான்குபக்கங்களிலிருந்து அடிக்கப் பட்டும் பயங்கரமானயுத்தம் செய்துகொண்டிருந்த கருடன் அசைய வில்லை. வைனதேயர் தம்முடைய பராக்கிரமத்தினல் எல்லாரையும் தஹிக்கிறவர்போல் ஆகாசத்தில்நின்று சிறகுகளாலும் மார்பினலும் தேவர்களை நாற்புறமும் தள்ளினர். கருடனல்அடிக்கப்பட்டுத் தள் ளப்பட்ட அந்தத்தேவர்கள், நகங்களினலும் மூக்கினலும் குத்தப் பட்டு ரக்தத்தை மிகுதியாகப் பெருக்கிக்கொண்டு ஓடினர்; மிகுந்த பராக்ரமசாலிகளான தேவர்கள், கருடனல் பீடிக்கப்பட்டு, ஸாத்தி யர்களும் கந்தர்வர்களும் கிழக்கிலும், வஸுக்களும் ருத்ரர்களும் தெற்கிலும், ஆதித்யர்கள் மேற்கிலும், அசுவினீதேவர்கள் வடக்கி லுமாக, யுத்தஞ்செய்கிற கருடனைத் திரும்பித்திரும்பிப் பார்த்துக் கொண்டு, கூட்டமாக ஓடினர்கள். பக்ஷிராஜாவானவர், வீரனான அசு வக்கிரந்தனேடும், ரேணுகனேடும், க்ரதனனேடும், சூரனனதபன னேடும், உலூகனேடும், சுவஸனனேடும், நிமேஷனேடும், ப்ரருஜ னேடும், புலினனேடும், யுத்தஞ்செய்தார்; பிரளயகாலத்திற் கோ பித்தசிவனைப்போல் * சத்ருக்களை ஸம்ஹரிப்பவராகிய கருடன் பக்ஷி ங்களாலும், நகங்கள் மூக்குஇவற்றின்தூனிகளாலும், அந்தத்தேவர் களைப்பிளந்தார். மிகுந்த பலமும் உத்ஸாஹமுமுள்ள அந்தத்தேவ

* இங்கு, பரந்தபா என்றபாடங்கொண்டால் சௌனகரைவிளித்தலாம்; அது பொருந்தாமையால் பரந்தபः என்னும்பாடம் கொள்ளப்பட்டது.

ர்கள் அந்தக்கருடனுல் அநேகவிதமாக அடிக்கப்பட்டு ரக்தப்பிரவாஹங்களைப் பொழிந்துகொண்டு பெரிய ரக்தமேகங்களைப்போல் விளங்கினர்; கருடன் அவர்களெல்லாரையுங் கொன்று, அமிர்தத்தையெடுப்பதற்காக அவர்களைத்தாண்டி, நான்குபுறங்களிலும் பெரியஜ்வாலையுள்ளதும், ஜ்வாலைகளினுல் ஆகாசத்தை எங்கும் தஹிப்பதுபோன்ற உக்ரமான கிரணங்களுள்ளதும், கடுங்காற்றினுல் தூண்டப்பட்டதுமாக நாற்புறமும் சுற்றிக்கொண்டிருந்த * அக்னியைக் கண்டார். பிறகு வேகசாலியும், மஹாத்மாவும், சத்ருக்களைப் பீடிப்பவருமாகிய பக்ஷிராஜாவான கருடன் எண்ணுயிரத்துநூறு வாய்களை யெடுத்துக்கொண்டு அந்த வாய்களினுல் நதிகளைக்குடித்து மறுபடியும் வேகத்துடன் சீக்கிரமாகவந்து அந்தஜ்வலிக்கிற அக்னியை அந்த நதிகளின் ஜலங்களினுல் சமனத்தார். அக்னியை அவித்த பிறகு உள்ளே பிரவேசிப்பதற்காக வேறுசிறிய உருவம்எடுத்துக்கொண்டார்.

முப்பத்துமூன்றுவது அத்தியாயம்.

ஆஸ்தீகபர்வம். (தொடர்ச்சி).

(கருடன் அமிர்தமெடுப்பது).

அந்தப்பக்ஷிராஜா மிகுந்த கிரணங்களினுற் பிரகாசிக்கின்ற பொன்மயமான உருவத்தோடு வேகமானஜலம் சமுத்திரத்துக்குள்ளே புகுவதுபோலப் பலத்தினுல் பிரவேசித்தார். அமிர்தத்தின் ஸமீபத்தில் விடாமற் சுழன்றுகொண்டிருப்பதும், கூர்மையான முனையுள்ளதும், அக்னியைப்போலவும் ஸூர்யனைப்போலவும் தேஜஸ்ஸுள்ளதும், உக்கிரமும், அமிர்தத்தையெடுப்பவர்களைச் சேதிப்பதும், சுற்றிலும் கத்திமுனையுள்ளதுமாகிய இருப்புச்சக்கரத்தை அவர் கண்டார்; மிகவும்பயங்கரமான ரூபமுள்ள அந்தயந்திரத்தைத் தேவர்கள் செய்துவைத்திருந்தனர். அந்தப்பக்ஷிராஜாவானவர் அதில் நுழைவதற்கு இடைவெளியைப் பார்த்துக்கொண்டு, தாம் சுற்றினர்; ஒருநொடியில் சரீரத்தைக்குறுக்கிக்கொண்டு அதன் ஆரக்கால்களின் சந்தினுல் நுழைந்தார். அந்தச்சக்கரத்தின்கீழேயும் ஜ்வலிக்கிற அக்னிக்கொப்பான ஒளியுள்ளவையும், மின்னலைப்போன்ற காவுள்ளவையும், ஜ்வலிக்கிறவாயையும் ஜ்வலிக்கிறகண்களையுமுடையவையும்,

* இங்குள்ள அதிகபாடம் விடப்பட்டது.

மிகுந்த சக்தியுள்ளவையும், கண்களில் விஷமுள்ளவையும், மிகவும் பயங்கரமானவையும், எப்போதும் கோபமுள்ளவையும், பலமுள்ளவையும், அமிர்தத்தைக் காப்பதற்காக எப்போதும் சிவந்தகண்களுடன் இமைகொட்டாமலிருக்கின்றவையுமான இரண்டு மஹாஸர்ப்பங்களைக் கண்டார். அவ்விரண்டிலும் எஃது ஒருவனைப்பார்த்தாலும் அவன் உடனே நீருகிவிடுவான். அவற்றைக்கண்டு கருடன் உடனே வருத்தத்துடன், "மிகுந்தசக்தியுள்ள இந்த ஸர்ப்பங்களை எவ்வாறு ஜயிக்கலாம்" என்றுநினைத்து, அவ்விரண்டையும் விலக்குவதற்காக உடனே அவற்றின்கண்களில் நிரம்பமண்ணைத்தூவி, தம்மைஅவை பார்க்கமுடியாமற்செய்து அவற்றை எல்லாவிடத்திலும் அடித்தார். அந்தக்கருடன் மேலே பறந்துகொண்டு, அவ்விரண்டுஸர்ப்பங்களின் உடல்களையும்பிடித்து, விரைவாக நடுவில்துணித்து, பிறகு அமிர்தத்தினிடம்போனார். உடனே பலவானும் பராக்கிரமசாலியுமான கருடன் அங்கிருந்து அமிர்தத்தைத் தூக்கிக்கொண்டு யந்திரத்தைமுறித்து விரைவாக வெளியில்வந்தார். குடிக்காமலே அமிர்தத்தையெடுத்துக் கொண்டு சீக்கிரம் வெளியேபுறப்பட்டு ஸூரியனுடைய ஒளியையும் மறைக்கின்ற தேஜஸோடு களைப்பில்லாமல் அங்கிருந்துசென்றார்.

அப்போது அந்த வைனதேயர் ஆகாயத்தில் விஷ்ணுவைச்சந்தித்தார். அமிர்தபானத்தில் ஆசைவையாத அந்தக்கருடனுடைய செய்கையினல் அழிவில்லாத தேவதையாகிய விஷ்ணுவானவர் ஸந்தோஷமடைந்து, அந்தப் பக்ஷிராஜாவைப்பார்த்து, "உனக்கு நான்வரங் கொடுக்கிறேன்" என்றுசொல்ல, அவர் "உமக்குமேலே நானிருக்க வேண்டும்" என்றும், "நான்அமிர்தம் உண்ணுமலே ஜரையும் மரணமும் இல்லாமலிருக்கவேண்டும்" என்றும் இரண்டுவரங்கள் விஷ்ணுவினிடம் கேட்டார். விஷ்ணு, அந்தக்கருடனைப்பார்த்து, "அப்படியேஆகட்டும்," என்று வரங்கொடுத்தார். அவ்விரண்டுவரங்களையும்பெற்றுக்கொண்டு, கருடன் விஷ்ணுவைநோக்கி, "உமக்கும் நான் வரம்கொடுப்பேன்; பகவானுகியநீங்களும் என்னைக்கேட்கவேண்டும்" என்று சொல்ல, விஷ்ணு, அந்தமஹாபலசாலியாகிய கருடனைத் தமக்கு வாஹனமாயிருக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டார். பகவானுனவர் மேலேயிருப்பாயென்று சொன்னதற்காகக் கருடனைக் கொடியாகவும் செய்துகொண்டார். மிகுந்தவேகசாலியான அந்தக் கருடன், "அவ்வாறேஆகட்டும்" என்று பகவானுன விஷ்ணுவுக்குச் சொல்லிவிட்டு வேகத்தினல் வாயுவைத் தோல்வியடையச்செய்பவராய் விரைவாகச்சென்றார். அமிர்தத்தை எடுத்துக்கொண்டுபோகின்ற

அந்தப்பக்ஷிச்ரேஷ்டரைக் கோபத்துடன் இந்திரன் வச்சிராயுதத்தினால் அடித்தான். பக்ஷிச்ரேஷ்டராகியகருடன் அந்தக்கடுமையான யுத்தத்தில் அப்படி வஜ்ராயுதத்தால் அடிக்கப்பட்டும், சிரித்துக் கொண்டு அந்த இந்திரனைப்பார்த்து, "ஓஇந்திரனே! இந்தவஜ்ராயுதம் யாருடைய உடம்பின் எலும்பிலிருந்துஉண்டானதோ அந்தரிஷிக்கும் இந்தவஜ்ராயுதத்திற்கும் உனக்கும் மரியாதைசெய்வதற்காக ஒற்றை யிறகை இதோவிடுகிறேன்; இதன் மற்றொருகோடியை நீபார்க்கமாட்டாய்; வஜ்ராயுதம் விழுந்ததனால் எனக்குச்சிறிதும் உபத்திரவ மில்லை" என்று நயமானசொல்லாகச் சொன்னர்.

இவ்வாறுசொல்லி, உடனேஅந்தப்பக்ஷிராஜா ஒருசிறகையுதிர்த்தார். கருடனால்உதிர்க்கப்பட்ட அந்த மிகச்சிறந்த சிறகைக்கண்டு அதன் அழகானரூபத்தைப்பார்த்து எல்லாத்தேவர்களும் "இவர் * ஸுபர்ணர்" என்று கருடனுக்குப் பெயரிட்டனர். அந்தப்பெரிய ஆச்சரியத்தைக்கண்டு ஆயிரங்கண்களுள்ள இந்திரன் இந்தப்பக்ஷி மஹாபூதமென்று நினைத்து, அவரைநோக்கி, "பக்ஷிராஜரே! எல்லாவற்றிலும் சிறந்த உம்வலிமையைப்பார்க்க விரும்புகிறேன்; உம்முடன் அழிவில்லாத ஸ்நேஹத்துக்கும் அபேக்ஷிக்கிறேன்" என்றான்.

மூப்பத்துநான்காவது அத்தியாயம்.

ஆஸ்தீகபர்வம். (தொடர்ச்சி).

(இந்திரன் கருடனோடு ஸ்நேஹஞ்செய்ததும், வினதையின் அடிமைத்தனம் நீங்கியதும்).

இப்படிச்சொன்ன இந்திரனுக்கு, கருடன், "தேவனே! புரந்தரனே! நீ விரும்புகிறபடி எனக்கும் உனக்கும் ஸ்நேஹமிருக்கட்டும்; என்னுடையபலம் பெரிதென்றும் தாங்கக்கூடாதென்றும் நீ அறிய வேண்டும். தேவச்ரேஷ்டனே! மோக்கியர்கள் தங்கள்பலத்தைக் குறித்துத் தாங்கள் சிலாகிப்பதேயில்லை. ஆனால் காரணமில்லாமல் ஸ்துதிசெய்பவன், தான் உடனேதூஷணைக்கிடமாகிறான். ஸ்வர்க்கத்துக்குஈசுவரனே! பிறர்கேட்டபின் தன் குணங்களைப்பற்றியும் சொல்லலாம். தானேசொல்வது தகாது. ஸ்நேஹிதனே! நீ கேட்டதனால் நீ ஸ்நேஹிதனென்றுநினைத்து நான்உனக்குச் சொல்லுகிறேன். நிஷ்

---

* அழகான சிறகுள்ளவர்.

காரணமாக ஒருவன்தன்னைத்தானே சிலாகித்துக்கொள்ளல்கூடாதது. இந்திரனே! மலைகள், காடுகள், கடல்களடங்கிய இந்தப்பூமியையும், இதில் இருக்கின்றஉன்னையும் ஒருசிறகினால் தூக்குவேன்; அல்லது ஜங்கமங்களும் ஸ்தாவரங்களும் அடங்கியஉலகங்கள் எல்லாவற்றையும் ஒன்றுகச்சேர்த்து, சிரமமில்லாமல்எடுப்பேன். இஃது என்னுடையபெரியபலமென்று அறி" என்றுசொன்னார்.

சௌனகரே! இவ்வாறுசொன்னபின் அந்தவீரனைகருடனைப் பார்த்து, சிறந்தஸ்வரியமுள்ளவனும், எல்லாலோகங்களுக்கும் நன்மைசெய்கிறவனும், பிரபுவும், கிரீடதாரியுமாகிய தேவேந்திரன், "நீர் சொல்வதுசரி; உம்மிடத்தில் எல்லாம் இருக்கக்கூடியதே; இப்போது என்னுடன் நீர் மிகமேலான ஸ்நேஹத்தை வைத்துக்கொள்வீராக. அமிர்தத்தினால் உமக்கு உபயோகமில்லாமலிருந்தால் அதை எனக்குக்கொடும்; எனெனின், நீர் இந்தஅமிர்தத்தை யாருக்குக்கொடுப்பீரோ அவர்கள் எங்களைப்பீடிப்பார்கள்" என்றுசொன்னான். அதற்குக் கருடன், "ஒரு பிரயோஜனத்தைக்குறித்து நான் இந்தஅமிர்தத்தைக் கொண்டுபோகிறேன். நான் இந்தஅமிர்தத்தை யாருக்கும் உண்பதற்குக்கொடேன். ஸஹஸ்ராக்ஷனே! ஸ்வர்க்கலோகத்துக்கும் ஈசுவரனே! நான் இதை எங்கேவைக்கிறேனோ அங்கேநீவந்து உடனே இதையெடுத்துக்கொண்டுபோகலாம்" என்றுசொன்னார். இந்திரன், "பக்ஷிச்ரேஷ்டரே! உம்முடைய இந்தச்சொல்லினால் நான் ஸந்தோஷமடைந்தேன். உமக்குவேண்டியவரத்தை என்னிடம்பெற்றுக்கொள்ளும்" என்றான். இப்படி இந்திரன்சொன்னபின், கருடன், கத்ருவின்புத்திரர்களையும் அவர்கள் மோசமாகத் தம்தாயாரை அடிமையாகச்செய்தகாரணத்தையும்நினைத்து, "இந்திரனே! நான் எல்லாவற்றிற்கும் பிரபுவாக இருந்தாலும் உன்னிடத்தில் வரம்யாசிக்கிறேன். மிகுந்தவலிமையுள்ள ஸர்ப்பங்கள் எனக்கு ஆகாரமாகக்கடவன" என்றுசொன்னார். பிறகு இந்திரன், "அப்படியேயாகட்டும்" என்றுசொல்லி, தேவதேவனும், யோகேசுவரனும், மஹாத்மாவுமாகிய விஷ்ணுவினிடம்சென்றான். அவரும் கருடன்சொன்னபிரகாரமே அந்த அமிர்தம் எடுத்துக்கொள்ளும்விஷயத்தை ஒப்புக்கொண்டார். அதன்பின் பெருமைபொருந்திய தேவேந்திரன் அந்தக் கருடனை அழைத்து, "அமிர்தத்தை நீர்வைத்தபின் எடுத்துக்கொள்ளுகிறேன்" என்று மறுபடியும்சொன்னான்.

அதன்பின் கருடன் வேகமாகத் தாயாரிடம்வந்து விநயத்தோடு நமஸ்காரம்செய்து, "அம்மா! சிறந்ததவமுள்ளவளே! தேவ

லோகத்திலிருந்து, இந்தஅமிர்தத்தை இப்போது நான் கொண்டு வந்திருக்கிறேன். இதன்மேல் நான் என்னசெய்யவேண்டும்? கட்டளையிடவேண்டும்" என்றுசொன்னார். வினதை, "புத்திரனே! உன்னுடைய இந்தச்செய்கையினாலே நான் ஸந்தோஷமடைந்தேன்; நீ மூப்பும் இறப்புமில்லாமல் தேவர்களுக்கு மிக்க அன்பனாயிருக்கக்கடவாய்" என்றுசொன்னாள். பிறகு, கருடன் மிக்கமகிழ்ச்சியடைந்து, ஸர்ப்பங்களையெல்லாம்நோக்கி, "ஓ! ஸர்ப்பங்களே! இதோ அமிர்தம்கொண்டுவந்திருக்கிறேன்; உங்களுக்காகத் தர்ப்பைகளில் வைக்கிறேன்; நீங்கள்ஸ்நானம்பண்ணி மங்களங்களானகாரியங்களைச்செய்து, பிறகு இதை உண்ணுங்கள்; நீங்கள் இங்கே உட்கார்ந்து அப்போது சொன்னசொல்லின்படி என்மாதா இந்நிமிஷம்முதல் அடிமையில்லாதவளாகவேண்டும்; உங்களுடையசொல்லின்படி நான் இதைக்கொடுத்துவிட்டேன்" என்றுசொன்னார். உடனே ஸர்ப்பங்கள், "அப்படியே ஆகட்டும்" என்று கருடனுக்கு மறுமொழிசொல்லிவிட்டு, ஸ்நானம் செய்யப்போயின. இந்திரனும் அமிர்தத்தையெடுத்துக்கொண்டு திரும்பவும் ஸ்வர்க்கம்சென்றான்.

அதன்பின், ஸர்ப்பங்கள் ஸ்நானமும் ஜபமும் மங்களாசாரங்களுஞ்செய்துவிட்டு ஸந்தோஷத்துடன் அமிர்தத்திற்காக அவ்விடம் வந்தன. அமிர்தம் சாப்பிடுகிறவிஷயத்தில், "நான்முன்னே, நான் முன்னே" என்றுசொல்லிக்கொண்டு ஒன்றுக்கொன்று முந்திமுந்தி அமிர்தம்வைத்திருந்த தர்ப்பைப்பரப்பினிடம் ஓடிவந்தன. அமிர்தம் அபஹரிக்கப்பட்டதைக்கண்டு ஸர்ப்பங்கள் தாங்கள் செய்த மோசத்துக்காகப் பிரதிமோசம்செய்யப்பட்டதென்று தெரிந்துகொண்டு "இஃது அமிர்தமிருந்தஇடம்" என்று தர்ப்பங்களை அப்போதுநக்கின. அவ்வாறு தர்ப்பத்தை நக்கினதினால் ஸர்ப்பங்களின் நாக்குக்கள் இரண்டாகப் பிளக்கப்பட்டன. அமிர்தப்பட்டதனால் அந்தத்தர்ப்பங்கள் பரிசுத்தமாய்விட்டன. ஸமர்த்தரே! நாகங்கள், வினதையின் அடிமைத்தன்மையைநீக்கி ஏமாந்து கருடனுடையபலத்தை நிஜத்தில் தாங்கக்கூடாத வ்யஸனத்தையடைந்தன. அந்தமஹாத்மாவாகிய கருடனால் இவ்வாறுஅமிர்தமும் தேவலோகத்திலிருந்து அபஹரித்துக்கொண்டுவரப்பட்டது. ஸர்ப்பங்களும் இரட்டைநாவுள்ளவைகளாகச் செய்யப்பட்டன. பிறகு கருடன் மிகுந்தமகிழ்ச்சியுடன் ஸர்ப்பங்களைப்பக்ஷித்துக்கொண்டும் தாயாருடன்கூட அந்தக்காட்டில் ஸஞ்சரித்துக்கொண்டும் பக்ஷிகளால் விசேஷமாகப் பூஜிக்கப்பட்டவராய் விருத்தியடைந்த கீர்த்தியினால் வினதையைமகிழ்வித்தார். பிரா

மணிசிரேஷ்டர்களுடைய ஸபையில் எப்போதும் இந்தக்கதையைக் கேட்பவனும் படிப்பவனுமாகிய புண்ணியசாலியானமனிதன் மஹாத்மாவான கருடனுடைய ஸங்கீர்த்தனத்தினால் நிச்சயமாக ஸ்வர்க்கமடைவான்.

முப்பத்தைந்தாவது அத்தியாயம்.

ஆஸ்தீகபர்வம். (தொடர்ச்சி).

(சௌனகருக்கு ஸூதபுத்திரர் ஸர்ப்பங்களின்பெயர்களை உரைப்பது).

சௌனகர், "ஸூதபுத்திரரே! ஸர்ப்பங்களைத் தாயார் சபித்ததற்கும், வினதையைப் புத்திரனுகிய அருணன்சபித்ததற்கும் காரணம் சொன்னீர். அப்படியே கத்ருவுக்கும் வினதைக்கும் பர்த்தா வரம் கொடுத்ததும், வினதையின்புத்திரர்களாகிய *அருணன் கருடன் என்னும் இரண்டுபக்ஷிகளின் பெயர்களும் சொல்லப்பட்டன. ஸர்ப்பங்களினுடைய பெயர்களைமட்டும் நீர் சொல்லவில்லை. முக்கியமானபெயர்களைமட்டுமாவது, (சொல்லவேண்டும்). நாம் கேட்கவிரும்புகின்றோம்" என்றுகேட்க, ஸூதபுத்திரர் சொல்லலானார்.

"தபோதனரே! ஸர்ப்பங்கள் அதிகமாகையால் எல்லாவற்றினுடைய பெயர்களையும் நான் சொல்லமுடியாது. முக்கியமானபெயர்களைமட்டும் நான் சொல்லுகிறேன்; கேளும். சேஷன் முதலிற்பிறந்தவர்; அவருக்குப்பின் வாஸுகி, ஐராவதன், தக்ஷகன், கார்க்கோடகன், தனஞ்சயன், காளிபன், மணிநாகன், ஆபூரணன், பிங்சரகன், ஏலாபத்ரன், வாமனன், நீலன், அநீலன், கல்மாஷன், சபலன், ஆர்யகன், உக்ரகன், கலசபோதகன், ஸுமனஸ், கதிமுகன், விமலபிண்டகன், ஆப்தன், கோடரகன், சங்கன், வாலிசிகன், நிஷ்டானகன், ஹேமகுஹன், நஹுஷன், பிங்கலன், பாஹ்யகர்ணன், ஹஸ்திபதன், முத்கரபிண்டகன், கம்பலன், அசுவதரன், காலீயகன், வ்ருத்தன், ஸம்வர்த்தகன், பத்மர்களென்று பெயருள்ளவரிருவர், சங்கமுகன், கூச்மாண்டகன், க்ஷேமகன், பிண்டாரகன், கரவீரன், புஷ்பதம்ஷ்ட்ரன், பில்வகன், பில்வபாண்டுரன், மூஷிகாதன், சங்கசிரஸ், பூர்ணபத்ரன், ஹரித்ரகன், அபராஜிதன், ஜ்யோதிகன், ஸ்ரீவஹன், கௌரவ்யன், திருதராஷ்டிரன், மிகுந்தசக்தியுள்ள சங்கபிண்டன், விரஜஸ், ஸுபாகு, மிகுந்தசக்தியுள்ள சாலிபிண்டன், ஹஸ்திபிண்டன், பிடரகன், ஸுமுகன், கௌணபாசனன், குடரன், குஞ்சரன், பிரபா

* சூரியனுடன் ஆகாசத்தில் பறப்பதினால் அருணனைப் பக்ஷி என்பர்.

கரன், குமுதன், குமுதாக்ஷன், தித்திரி, ஹலிகன, கர்த்தமன், பகு மூலகன், கர்க்கரன், அகர்க்கரன், குண்டோதரன், மகோதரன் ஆகிய இந்தப் பிரதானமாயுள்ள நாகங்களின் பெயர்களேச்சொன்னேன். பிராமணசிரேஷ்டரே! மிகுதியாயிருப்பதினல் மற்றவற்றின்பெயர்க ளேச்சொல்லவில்லே. தபோதனரே! இவற்றின் ஸந்ததிகளும் ஸந்ததி களின் ஸந்ததிகளும் எண்ணமுடியாதவையென்று நினேத்து, அவற் றை நான் சொல்லவில்லே. இந்தஸர்ப்பவம்சங்களில், அநேகமாயிரங் களும், பத்துலக்ஷங்களும், பத்துக்கோடிகளுமிருக்கின்றன. தபோ தனரே! அவற்றைக்கணக்கிட முடியாது" என்றார்.

முப்பத்தாருவது அத்தியாயம்.

ஆஸ்தீகபர்வம். (தொடர்ச்சி).

(ஆதிசேஷன் பூமியைத்தரித்தது).

சௌனகர், ஸூதகுமாரரைப்பார்த்து "ஐயா! சிறந்தசக்தி யுள்ளவையும் வெல்லக்கூடாதவையுமான நாகங்களேக்கூறினீர். அவை அந்தச்சாபத்தையறிந்தபிறகு மேலேன்னசெய்தன" என்றுகேட்க, ஸூதர் சொல்வாராயினர்.

அந்தநாகங்களுக்குள் பெருங்கீர்த்திபெற்ற சேஷபகவான், கத் ருவைவிட்டுநீங்கிக் காற்றைப் புசித்துக்கொண்டு உறுதியான நியமத் தோடு உக்கிரமானதவஞ்செய்தார். கந்தமாதனபர்வதத்திற்கும், பதரி காச்ரமத்திற்கும், கோகர்ணக்ஷேத்திரத்திற்கும், புஷ்கரக்ஷேத்திர மென்கிற அரண்யத்திற்கும், இமயமலேயின்சாரிவுக்கும், இன்னும் பற்பல புண்ணியதீர்த்தங்களுக்கும், க்ஷேத்திரங்களுக்கும்போய்த் தனிமையாயிருந்துகொண்டு, நியமத்தைவிடாமற் புலன்களேயடக்கித் தவஞ்செய்தார். உக்கிரமானதவஞ்செய்கிறவரும், மாம்ஸம் தோல் நரம்பு எல்லாமுலர்ந்தவரும், ஜடையும் மாவுரியும்தரித்தவருமாகிய அந்தரிக்ஷியான ஆதிசேஷனேப் பிரம்மாகண்டார். உறுதியைவிடாமல் தவஞ்செய்த அந்தஆதிசேஷனேப்பார்த்துப் பிரம்மாவானவர், "சேஷ னே, குற்றமற்றவனே! நீ என்னசெய்கிறாய்? பிரஜைகளுக்குக்ஷேம த்தைச்செய்; நீ கடோரமானதவத்தினல் பிரஜைகளேப்பீடிக்கிறாய்; சேஷனே! உன்மனத்திலிருக்கிற விருப்பத்தை எனக்குச்சொல்" என்றுகேட்டார். அதற்குச்சேஷன், "என்னுடைய சொந்தஸஹோ

தார்களெல்லாரும் புத்திகுறைவானவர்கள்; அவர்களுடன் கூடிவஸிப் பதற்கு நான்விரும்பவில்லை; அதற்குத் தாங்கள் உத்தரவுகொடுக்க வேண்டும்; அவர்கள் ஒருவரையொருவர் சத்துருவாகநிணைத்து எப் போதும் பொறுமைப்படுகின்றனர்; அதனால், அவர்களைப் பார்க்காம லிருக்கவேண்டுமென்றே நான்தவஞ்செய்கிறேன்; அவர்கள் வினதை யிடத்தும் அவள்பிள்ளையிடத்தும் பொறுமைப்படுகிறார்கள்; மேலும் எங்களுடைய மற்றொருபிராதாவாகிய கருடன் ஆகாசத்திற் சஞ்சரிப் பவன்; அவனைஎப்போதும் துவேஷிக்கின்றனர்; அவனுக்கு மஹாத் மாவும்எங்கள்பிதாவுமாகியகசியபர் வரங்கொடுத்திருப்பதனால், அவன் மிகுந்த பலமுள்ளவனாயிருக்கிறான்; அதனால் நான் தவஞ்செய்து மற்றொருஜன்மத்திலும் எனக்கு அவர்களுடன் ஸம்பந்தமில்லாம லிருக்கும்படி இந்தத்தேகத்தை விட்டுவிடப்போகிறேன்" என்றார்.

இப்படிச்சொல்லுகின்ற சேஷனைப்பார்த்து, பிரம்மா, "சேஷ னே! உன்பிராதாக்கள் எல்லாருடைய நடைகளும் தாயார்விஷயத் தில் அபராதஞ்செய்ததனால், அவர்களுக்குப் பெரியபயம் நேர்ந்திருப் பதும் எனக்குத்தெரியும்; நாகனே! இதற்குப்பரிஹாரமும் முன்னமே செய்யப்பட்டிருக்கின்றது. உன்ஸஹோதரரெல்லாரையும் குறித்து நீ வ்யஸனப்படவேண்டாம். சேஷனே! நீ விரும்புகிற வரத்தை என்னி டம்கேட்டுக்கொள். உன்னிடத்தில் எனக்கும் மிகுந்த பிரீதியிருப் பதனால் வரங்கொடுப்பேன். ஸர்ப்பச்ரேஷ்டனே! நல்லவேளையாக உன்னுடையபுத்தி தர்மத்தில் பிரவர்த்தித்திருக்கிறது; மேன்மேலும் உன்புத்தி தர்மத்திலேயே மிகவும்உறுதியாக இருக்கக்கடவது" என் றார். பிரம்மா இப்படிச்சொல்ல, சேஷன், "பிதாமஹரே! தேவரே! இந்தவரம்தான் நான்வேண்டினது. ஈச்வரரே! என்புத்தி தர்மத்தி லும் சாந்தியிலும் தவத்திலுமே உத்ஸாஹப்படக்கடவது" என்று சொன்னார்.

அதைக்கேட்டு, பிரம்மதேவர், "சேஷனே! உன்னுடைய இந்த இந்த்ரியஜயத்தினாலும் மனோஜயத்தினாலும் திருப்தியடைந்திருக்கி றேன். பிரஜைகளுக்குஹிதமானதொன்றை நான்சொல்லுகிறேன்; அதை என்சொற்படி நீ செய்யவேண்டும். சேஷனே! மலைகளும் வனங்களும் ஸமுத்திரங்களும் நிராமங்களும் தோட்டங்களும் நகரங் களும் நிரம்பியிருப்பதினால் அசைகின்ற இந்தப்பூமியை, அசையாம லிருக்கும்படி நீ செவ்வையாதத்தாங்கிக்கொண்டிரு" என்றுசொல்ல, அதுகேட்ட சேஷன், "வரங்கொடுப்பவரும் பூமிக்கும் பிராணிகளுக் கும்உலகங்களுக்கும் பதியுமாகிய பிரம்மதேவரான நீங்கள் எப்படிச்

சொல்லுகிறீர்களோ அப்படியே பூமியை அசையாமல்தாங்குகிறேன்; பிரம்மதேவரே! எனக்கு அந்தப்பூமி மார்க்கம் கொடுக்கட்டும்"என்று கேட்டார். அதற்குப்பிரம்மா "நாகராஜாவே! நீ பூமியின் கீழேபோ; பூமி தானுகவே உனக்கு மார்க்கத்தைக்கொடுக்கும்; சேஷனே! நீ இந்தப்பூமியைத் தாங்குவதனால் எனக்குப் பெரியபிரியமானகாரியம் செய்யப்பட்டதாகும்" என்றார். நாகராஜாக்களுக்குள் ஜ்யேஷ்டரும் மஹாத்தருமாகிய ஆதிசேஷன் அப்படியே மார்க்கத்தை உண்டுபண்ணிக்கொண்டு பூமியின்கீழேபிரவேசித்து நின்றுகொண்டு ஸமுத்ரங்களாற்சூழப்பட்டஇந்தப்பூமிதேவியை நாற்புறமும்பிடித்துக்கொண்டு சிரஸினால்வஹிக்கிறார். பிரம்மா, "நாகச்ரேஷ்டனே! நீ ஸஹாயமில்லாமல் இந்தப்பூமிமுழுவதையும் அநேகம்சிரஸுகளினால் அசையாமல் வஹித்துக்கொண்டு, என்னைப்போலவும் இந்திரனைப்போலவும் காப்பாற்றுவதனால், நீ சேஷனுகவும் தர்மதேவதையாகவும் இருக்கிறாய்" என்று சொன்னார்.

இவ்விதமாகச் சக்திமானுகிய ஆதிசேஷனென்னும் நாகர், பிரபுவாகிய பிரம்மாவினுடைய ஆஜ்ஞையினால் ஸஹாயமில்லாமல் பூமியை வஹித்துக்கொண்டு பூமியின்கீழிருக்கிறார். அப்போதுதேவச்ரேஷ்டராகிய பகவானை பிரம்மா, வினதையின் புத்திரராகிய கருடனையும் ஆதிசேஷனுக்கு ஸ்நேஹிதராகக் கொடுத்தார். ஆதிசேஷன் போன பிறகு, மிகுந்த பலமுள்ள வாஸுகி, தேவர்களினால் இந்திரன் பட்டாபிஷேகஞ் செய்யப்படுவதுபோல் நாகங்களினால் அபிஷேகம் செய்யப்பட்டான்.

முப்பத்தேழாவது அத்தியாயம்.

ஆஸ்தீகபர்வம். (தொடர்ச்சி).

(நாகர்கள் சாபவிமோசனத்திற்கு உபாயம் ஆலோசிப்பது).

வர்ப்பராஜனைவாஸுகி, தாயாரிடமிருந்துவந்தஅந்தச்சாபத்தைக்கேட்டு, இந்தச்சாபம் எப்படிப்பலிக்காமலிருக்குமென்று சிந்தித்தான். பிறகு, அந்தவாஸுகி, தர்மத்தையே முக்கியமாகக்கொண்ட ஜராவதன்முதலிய ஸஹோதரர்களெல்லாருடனுங்கூட ஆலோசனைசெய்யும்போது, "குற்றமில்லாதவர்களே! இந்தச்சாபம் எவ்விதமாகச்சொல்லப்பட்டதோ அஃது உங்களுக்குத்தெரியும். நாம் ஆலோசித்து அந்தச்சாபத்தை விடுவிக்கமுயல்வோம். எல்லாச்சாபங்

களுக்கும் நிவர்த்தியுண்டு. தாயார்சாபத்துக்கு விடுதலே எங்குமில்லே. அழிவில்லாதவரும் அளவிடக்கூடாதவருமாகிய பிரம்மதேவர்முன்பாக நாம் சபிக்கப்பட்டோ மென்பதைக்கேட்டுத்தான் என்மனத்தில் நடுக்கமுண்டாகிறது. இது நம்மெல்லாருக்கும் நாசமாக வந்திருக்கிறதென்பது நிச்சயம். குணமில்லாத தாயாரால் மிகக்கடுமையானசாபம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த அழிவில்லாத பிரம்மதேவர் இவள் சபிப்பதைத் தடுக்காமற்போனர். ஆகையால், இப்போது ஸர்ப்பங்களுக்கெல்லாம் க்ஷேமம் எப்படியுண்டாகுமென்பதைக்குறித்து ஆலோசணைசெய்வோம். இந்தக்கெட்டகாலம் நம்மை ஆக்கிரமிக்காமலிருக்கவேண்டும். நமக்குள் எல்லாரும் புத்திசாலிகள்; பேசத்தெரிந்தவர்கள். முன்பு தேவர்கள் குகைக்குள்மறைந்து காணுமற்போன அக்னியைக் கண்டுபிடித்ததுபோல் நாமும் ஸர்ப்பங்களின் நாசத்திற்குக் காரணமாக ஜனமேஜயன்செய்யும் ஸர்ப்பயாகம் நடவாதபடியும் நமக்குத் தீங்குநேரிடாதபடியும் நம்மைச் சாபத்திலிருந்து விடுவித்துக் கொள்வதற்கு உபாயத்தை ஆலோசித்துத் தெரிந்துகொள்வோம்" என்றுசொன்னன்.

உடனே மந்திராலோசணையில்ஸாமர்த்தியமுள்ள கத்ருவின் புத்திரர்களெல்லாரும் ஒன்றுசேர்ந்து, "அப்படியே ஆகட்டும்" என்றுசொல்லி, அங்கே அவரவர்களுக்குள் நிச்சயஞ்செய்து கொண்டனர். அவர்களிற் சிலநாகர்கள், "நாம் பிராமணசிரேஷ்டர்களாக ரூபமெடுத்துக்கொண்டு, ஜனமேஜயனிடம் யஜ்ஞம் நடவாமலிருக்கவேண்டுமென்று பிக்ஷைகேட்போம்" என்றனர். மற்றும்சில நாகர்கள், தங்களேச்சிறந்த அறிவுள்ளவர்களாக நினேத்து, "நாமெல்லாரும் ஜனமேஜயராஜாவுக்கு நிரம்பநம்பிக்கையான மந்திரிகளாயிருப்போம்; அவன் எல்லாக்காரியங்களிலும் பிரயோஜனம் நிச்சயிப்பதைப்பற்றி நம்மைக்கேட்பான், அப்போது, யஜ்ஞம் நடவாதபடி புத்திசொல்லுவோம்; புத்திமான்களுக்குட் சிறந்தவனுகிய அந்தராஜா புத்திமான்களாகத் தன்னுல் மதிக்கப்பெற்ற நம்மை யஜ்ஞத்தைகுறித்து நிச்சயமாகக்கேட்பான். நாம் அதுகூடாதென்று இம்மையிலும் மறுமையிலும் அநேகங்கொடியபாபங்களேக் காண்பித்து அநேகயுக்திகளாலும் காரணங்களாலும் அந்தயஜ்ஞம் நடவாதபடி சொல்லுவோம். அல்லது, ஸர்ப்பயாகஞ்செய்யும் முறைதெரிந்தவனும் ராஜகாரியத்தில் நன்மையைக்கருதுகிறவனுமாகிய எந்தப்புரோஹிதன், அந்தயஜ்ஞத்திற்கு ஏற்படுவனேனு அவனே ஒருஸர்ப்பம் கடிக்கட்டும்; அவன் இறந்துபோவான்; யஜ்ஞஞ்செய்கிறவன்

இறந்துபோனால் அந்தயஜ்ஞமும் நடவாது. இன்னும் ஸர்ப்பயாகம் தெரிந்தவர்களாக வேறு ரித்விக்குக்கள் யாவந்தபோதிலும் அவர்க ளெல்லாரையும் கடித்துவிடுவோம். இவ்வாறு காரியங்கள் ஸித்தியாய் விடும்" என்றனர். தர்மத்திற்சித்தமுள்ளவர்களும் தயையுள்ளவர் களுமாகிய மற்றும்சிலநாகர்கள், "நீங்கள்சொன்ன இந்தப்புத்தி சரி யல்ல; பிரம்மஹத்திசெய்வது நல்லதாகாது. வ்யஸனம் வந்தபோது செம்மையாக நல்லதர்மத்தைக்கொண்டு சரியானபரிஹாரம்செய்வது சிறந்தது. அதர்மம் அதிகரித்திருப்பதானது உலகத்தையெல்லாமழி த்துவிடும்" என்றனர். இன்னும்சிலநாகர்கள், "நாம் மின்னலுள்ள மேகங்களாகஆகி ஜ்வலிக்கின்ற அக்னியை மழையிலால் அணைத்து விடுவோம்" என்றும், வேறுசில நாகச்ரேஷ்டர்கள், "ராத்திரியில் அங்கிருப்பவர்கள் அயர்ந்திருக்கையிற்போய், யஜ்ஞபாத்திரங்களைச் சீக்கிரத்தில் எடுத்துக்கொண்டு வந்துவிடட்டும். இப்படிச்செய்தால் அதற்கு விக்னம் வந்துவிடும். அல்லது அந்தயஜ்ஞத்தில் ஸர்ப்பங்க ளெல்லாம் நூற்றுக்கணக்காகவும் ஆயிரக்கணக்காகவும் ஜனங்களைக் கடிக்கட்டும். இப்படிச் செய்தால் நமக்குப்பாபமுண்டாகாது. அல்லது ஸர்ப்பங்கள் எல்லாஆகாரங்களையும் கெடுக்கத்தக்க தங்கள்மூத்திரத்தி னாலும் விஷ்டையினாலும், ஸித்தஞ்செய்யப்பட்ட போஜனத்தைக் கெடுத்துவிடட்டும்" என்றனர். அங்கே இன்னும்சிலநாகர்கள், "நாமே அந்தராஜாவுக்கு ரித்விக்குக்களாக இருப்போம். தக்ஷிணை கொடுக்கவேண்டுமென்றுசொல்லியாகத்துக்கு விக்னஞ்செய்வோம். நமக்குட்பட்ட அந்தஅரசன் நாம்கேட்டதையெல்லாம் செய்வான்" என்றனர். அவர்களுள் மற்றும் சிலநாகர்கள், "ராஜா ஜலக்கிரீடை செய்யும்போது, நம்மிடமாகிய பாதாளத்துக்குக் கொண்டுவந்து கட்டி விடுவோம். அப்போது அந்தயஜ்ஞம் நடவாது" என்றனர். தங்க ளைத் தெரிந்தவர்களாகநினைத்த இன்னுஞ் சிலநாகர்கள், "அந்தராஜா வைப்பிடித்துக்கொண்டு உடனேகடித்துவிடுவோம். இப்படியானால் காரியமாய்விடும். அந்தராஜா இறந்துபோனால், அவர்த்தங்களின்வேர் வெட்டப்பட்டதாகும். வாஸுகியே! எங்களெல்லாருடைய முடிவான ஆலோசனைகளும் இவைதாம். ராஜாவே! இதன்மேல் உனக்குள்ளது ஸம்மதமோ அதைச்சீக்கிரம்செய்யவேண்டும்" என்றனர்.

இவ்வாறு சொல்லிவிட்டு, நாகர்கள் ஸர்ப்பராஜாவாகிய வாஸுகி (சொல்வதை) எதிர்பார்த்துக்கொண்டிருந்தனர். வாஸுகியும் தான் செவ்வையாக ஆராய்ந்து அந்த நாகர்களைப்பார்த்து, "நாகர்களே! நீங்கள்செய்யவேண்டுமென்று நினைத்த இந்தஆலோசனை நன்மையைத்

தரத்தக்கதன்று. எல்லாநாகர்கள் சொன்ன ஆலோசனையும் எனக்குப் பிடிக்கவில்லை. மேற்சொன்ன ஆலோசனையில், உங்களுக்கு ஹித மாகச் செய்யத்தக்கது என்ன இருக்கிறது? நாகர்களே! மஹாத்மா வான கசியபரை ஸ்நேஹத்துடன் வேண்டிக்கொள்வதுதான் எனக் கும் என்னைச்சேர்ந்த உங்களுக்கும் நன்மையென்று நினைக்கிறேன். என்புத்தி நீங்கள்சொன்னவற்றில் ஒன்றையும் செய்யலாமென்று நினைக்கவில்லை. உங்களுக்கு எதுநன்மையாகஇருக்குமோ அதை நான் தானே செய்யவேண்டும். இதனால் நான் மிகவும்கஷ்டப்படுகிறேன். நன்மையும்தீமையும் என்னைப்பொறுத்தவை'' என்றுசொன்னான்.

முப்பத்தெட்டாவது அத்தியாயம்.

ஆஸ்தீகபர்வம். (தொடர்ச்சி).

(ஏலாபத்ரன் ஆஸ்தீகரால் சாபநிவர்த்தியைபபற்றி நாகர்களுக்குச் சொல்வது.)

ஸர்ப்பங்களெல்லாம் இப்படியென்றும் அப்படியென்றும் பல வகையாகச்சொன்னதையும் வாஸுகிசொன்னதையும் கேட்டு, ஏலா பத்ரனென்னும் நாகன் அடியில்வருமாறு சொல்லத்தொடங்கினான்.

'' நாகஶ்ரேஷ்டர்களே! நாகராஜாவானவாஸுகியே! இதுவிஷ யத்தில் என்னுடைய ஆலோசனையை நான் முன்னமே தெரிவித்திருக் கிறேன். உங்களெல்லாருக்கும் இதை ஏற்றுக்கொள்ளக்கூடாதென்ற எண்ணமிருந்தால் அப்படி யேயிருக்கட்டும். இப்பொழுதும் அந்தஅபி ப்பிராயமே என்னுபகத்தில் வந்திருக்கிறது. நாகர்களே! அதைத் தெளிவாகச் சொல்லுகிறேன்; கேளுங்கள்; ''அந்தஸர்ப்பயாகம் நட வாமலிராது. யாரிடத்திலிருந்து நமக்குப் பெரியபயம் இருக்கிறதோ அந்தப்பாண்டவவம்சத்து ஜனமேஜயராஜா * அப்படிப்பட்டவனல் லன். ராஜாவே! இவ்வுலகில் எந்தப்புருஷன் தெய்வத்தினாற்கெடுக்கப் பட்டவனோ அவன் தெய்வத்தையே அடையவேண்டும். அவனுக்கு வேறு ஆதாரமில்லை. நாகச்ரேஷ்டர்களே! நமக்கு இப்போது வந்திரு ப்பது அந்தத்தெய்வபயம். இதற்காகத் தெய்வத்தையே அடைவோம். நான் சொல்வதைக் கேளுங்கள். நாகச்ரேஷ்டர்களே! பிரபுவான வாஸுகியே! சாபங்கொடுத்தவுடனே பயத்தினால் தாயார்மடியிலேறி க்கொண்டிருந்த நான், 'ச்ரேஷ்டங்களானஸர்ப்பங்கள் கொடியவை,

---

* நீங்கள் மேற்சொன்ன ஏவ்வகையாலும் யாகஞ்செய்யாமல்நிவர்த்திக்கக் கூடியவனல்லனென்பது கருத்து.

கொடியவை' என்று தேவர்கள்சொன்னதைக் கேட்டிருந்தேன். சாபத்தினலுண்டான துக்கமென்னும் அக்னியினல் தஹிக்கப்பட்ட நாகங்களின் க்ஷேமத்தைவிரும்பி மிகுந்த கிருபைகூர்ந்து தேவர்கள் பிரம்மாவினிடம்சென்று, 'தேவரே! பிதாமஹரே! மிகக்கொடியவளான கத்ருவைத்தவிர, வேறு எவள் அன்புள்ள பிள்ளைகளைப்பெற்று அவர்களை உமதுமுன்னிலையில் இப்படிச்சபிப்பள். நீரும் அவள்வார்த்தையைச் 'சரி' என்றுசொன்னீர். நீர் அவளைத் தடுக்காமலிருந்ததற்குக்காரணத்தை நாங்கள் தெரிந்துகொள்ளவிரும்புகிறோம்' என்றனர். பிரம்மா, 'கொடியவையும் பார்க்கப்பயங்கரமானவையும் உக்ரமான விஷமுள்ளவையுமாகிய ஸர்ப்பங்கள் மிகுதியாக இருக்கின்றன. பிரஜைகளின் நன்மையைக்கருதி, அவள்சபித்தபோது நான்தடுக்கவில்லை. அல்பஸ்வபாவமும் பாவச்செய்கையும் கொடியவிஷமுமுள்ளவையும், தர்மத்தைச்செய்யாதவையுமான ஸர்ப்பங்களுக்கு அவசியம் நாசம் வரப்போகிறது. அந்தஸர்ப்பங்களுக்கு அந்தநாசகாலம்வந்தபோது, என்னகாரணத்தினல் பெரும்பயத்திலிருந்து நிவர்த்திஉண்டாகப் போகிறதோ அதையும் கேளுங்கள்: *யாயாவர்குலத்தில் பெரியதபஸ்ஸுள்ளவராயும் ஜிதேந்திரியராயும், புத்திமானுயுமுள்ள ஜரத்காரு வென்று பெயர்பெற்ற மஹரிஷிஒருவர் உண்டாகப்போகிறார். அந்த ஜரத்காருவுக்குத் தபோதனராகிய ஆஸ்தீகரென்னும் புத்திரர் உண்டாகப்போகிறார். அவர் ஸர்ப்பங்களின் நாசகாலத்தில், அந்த ஸர்ப்பயாகத்தைத் தடுக்கப்போகிறார். அந்தக்காலத்தில், தர்மிஷ்டர்களான நாகர்கள்மட்டும் விடுபடப்போகின்றனர்' என்றார். அதற்குத்தேவர்கள் 'பிரம்மாவே! பெருந்தவமுள்ளவரும் சிறந்த சக்தியுள்ளவருமாகிய அந்த ஜரத்காருமஹரிஷி மஹாத்மாவான புத்திரரை எவளிடம் உண்டுபண்ணப்போகிறார்' என்றுகேட்க, பிரம்மா, 'வாஸுகியின் ஸஹோதரியாகிய வெகு அழகான ஒருகன்னிகை பிறந்திருக்கிறாள். அந்தக்கன்னிகையை நாகராஜாவான வாஸுகி ஜரத்காருவுக்குக் கொடுக்கப்போகிறான். அந்தப் பிராமணசிரேஷ்டர், தம்பெயருள்ள ஜரத்காருவென்ற அந்தக் கன்னிகையினிடத்தில் வேதங்களிலும் வேதாங்கங்களிலும் கரைகண்டவனை புத்திரரை உண்டாக்கப் போகிறார்' என்றார். அதற்குத் தேவர்கள், 'அப்படியே ஆகவேண்டும்' என்று பிரம்மாவினிடம் சொன்னர்கள். தேவர்களைப்பார்த்து இவ்வாறு சொல்லி, பிரம்மதேவர் தம்முலகஞ் சென்றார். வாஸுகியே! ஆதலால், ஜரத்காருவென்று பெயர்பெற்ற உன் ஸஹோதரி

* ஓரிடத்திலும் தங்காமல் ஸஞ்சரித்துக்கொண்டிருக்கும் ரிஷிகள்.

யிருக்கிறாளே, அவளைச் சிறந்ததவமுள்ள அந்த ஜரத்காருவென்னும் ரிஷி கேட்கும்போது, நாகர்களின்பயம் நிவர்த்தியாவதற்காக நீ பிக்ஷையைப்போல அவருக்குக் கொடு. இதுதான் நான் கேள்விப் பட்ட விமோசனம். இஃது என் ஆலோசனை" என்றான்.

முப்பத்தோன்பதாவது அத்தியாயம்.

ஆஸ்தீகபர்வம். (தொடர்ச்சி).

(வாஸுகி, தன்ஸஹோதரியை ஜரத்காருமஹரிஷிக்குக் கன்னிகா தானஞ்செய்ய நிச்சயித்தது).

பிராமணசிரேஷ்டரே! அந்த நாகர்களெல்லாரும் ஏலாபத்ரன் சொன்னதைக்கேட்டு மனமகிழ்ந்து, "சரி, சரி," என்றுகொண்டாடினர். அதுமுதல் வாஸுகி தன்ஸஹோதரியாகிய ஜரத்காருவென்னும் அந்தக்கன்னிகையை மிகுந்த ஸந்தோஷத்துடன் காப்பாற்றி வைத்தான்.

அதன்பிறகு சிலகாலங்கடந்தபின் தேவாஸுரர்களெல்லாரும் ஸமுத்ரத்தைக் கடைந்தனர். அதில் பலசாலிகளுக்கெல்லாஞ் சிறந்தவனாகிய வாஸுகியென்னும் நாகன் கயிறாகவிருந்தான். அந்தவேலையை முடித்துவிட்டு வாஸுகியுடன்கூடத் தேவர்கள் பிரம்மாவினிடம்சென்று, "பகவானே! இந்தவாஸுகி, சாபத்தினால்பயந்து மிகவருந்துகிறான்; ஞாதிகளுக்கு நன்மையைவிரும்புகின்ற இவனது மனத்தில் தாயார் சாபத்தினாலுண்டான சல்லியத்தை நீர்தாம் எடுக்கவேண்டும்; இந்தநாகராஜன் நமக்குவேண்டியவன்; எப்போதும் நமக்குப்பிரியமே செய்கிறவன். தேவச்ரேஷ்டரே! தயைசெய்து இவன்மனஸிலுள்ள தாபத்தை நிவர்த்திசெய்யும்" என்றுவேண்டினர். அதற்குப் பிரம்மா, "அமரர்களே! ஏலாபத்ரனென்னும்நாகன் முன்னால் இவனுக்கு என்னசொன்னானோ அது நானே மனப்பூர்வமாகச் சொன்னவாக்கியந்தான். நான்சொன்னதை இந்தநாகராஜனை வாஸுகி காலம்வந்தபோது தானேசெய்யக்கடவன். பாபிஷ்டர்கள்மட்டும் அழிவார். தர்மிஷ்டர்கள் அழியார். அந்தஜரத்காருவென்னும் பிராமணர் ஜனித்து உக்ரமானதபஸிலேயே விருப்பமுள்ளவராயிருக்கிறார். இவன் தன் ஸஹோதரியான ஜரத்காருவை அவர்கேட்குங்காலத்தில் அவருக்குக் கொடுக்கக்கடவன். தேவர்களே! ஏலாபத்ரன் என்னும் நாகன் ஸர்ப்

பங்களுக்கு ஹிதமாகச்சொன்னசொல் சரியே. அது பிழையன்று" என்றுசொன்னர். சாபத்தினால் பிரமைகொண்டிருந்த அந்தநாகராஜ னைவாஸுகி, இப்படிப் பிரம்மாசொன்னதைக்கேட்டு, ஜரத்காருஎன் னும் ரிஷிக்காகத் தன்ஸஹோதரியை ஸித்தமாக வைத்துக்கொண்டு ஸர்ப்பங்களையெல்லாம் அழைத்து, "யாருக்கும் உட்படாதவராகிய ஜரத்காரு எப்போது பாரிபையை வரிக்கநினைப்பரோ அப்போது உட னேவந்து எனக்குச் சொல்லவேண்டும். அப்படிச் சொன்னால்தான் நமக்கெல்லாம் க்ஷேமமுண்டாகும்" என்றுசொல்லி அந்தஜரத்கா ருவை எப்போதும் கவனித்து எதிர்பார்த்திருக்கும்படி அநேகநாகர் களை அந்தஜரத்காருவினிடம் நியமித்தான்.

நாற்பதாவது அத்தியாயம்.

ஆஸ்தீகபர்வம். (தொடர்ச்சி).

(பரிக்ஷித்து வேடையாடும்போது சமீகரிஷியின் தோளில் இறந்துபோன பாம்பைபபோட்டது.)

சௌனகர், "ஸூதபுத்திரரே! நீர் ஜரத்காருவென்று சொன் னீரே; அந்த மஹாத்மாவாகிய ஜரத்காருரிஷிக்கு அந்தப்பெயர் பூமி யில் ப்ரஸித்தமானதற்கு என்னகாரணம்? ஜரத்காருவென்றபெயர் வந் த வரலாற்றை நான் கேட்கவிரும்புகிறேன். நீர் விவரமாகச்சொல்லக் கடவீர்" என்றுகேட்க, ஸூதபுத்திரர் சொல்லுகிறார்.

"பிராமணரே! கெடுவதை ஜரையென்று சொல்லுகின்றனர். தன்பத்தைச் செய்வதற்குக் காருவென்றுபெயர். அவருக்கு வைராக் கியத்தினால் சரீரம் காருவாக இருந்தது. சிறந்தஞானமுள்ள அவர் காலக்கிரமமாக உக்கிரமானதவத்தினால் சரீரத்தைக் குறைத்தார். இந்தக்காரணத்தினால், ஜரத்காருவென்று சொல்லப்படுகிறார். வாஸு கியின்ஸஹோதரியும், தவத்தினாலேயே ஜரத்காரு என்று பெயர் பெற்றுள்" என்றுசொன்னர். இப்படிச்சொன்னவுடன் தர்மாத்மா வாகிய சௌனகர் அப்போது உக்கிரசிரவஸ்ஸென்னும் ஸூதபுத்தி ரரை அழைத்து, "சரி" என்றுசொல்லி, நகைத்து, பிறகு, "எல்லா வற்றையும் நடந்தபடி சொன்னீர். நானும்கேட்டேன். ஆஸ்தீகர் எவ்வாறு ஜனித்தாரென்பதைக் கேட்கவிரும்புகிறேன்" என்று கேட்க, ஸூதபுத்திரர் புராணத்திலுள்ளபடி சொல்லத்தொடங்கினர்.

வாஸுகி நாகர்களுக்கெல்லாங் கட்டளையிட்டபின், ஸஹோதரியை ஜரத்காருரிஷிக்காக ஸித்தமாகவைத்துக்கொண்டு மிகுந்தஜாக்கிரதையுடனிருந்தான். பின்பு உக்கிரமான விரதமுள்ளவரும் சிறந்த ஞானமுள்ளவருமாகிய அந்த ஜரத்காருமுனி வெகுகாலம்வரையில் தவத்திலேயே கருத்தைவைத்து விவாஹத்தை விரும்பாமலிருந்தார். இந்திரியங்களைஜயித்தவரும், தவத்தில் பிரவர்த்தித்தவரும், வேதாத்தியயனம் உள்ளவரும், பாபமற்றவரும், சுத்தமான மனமுள்ளவருமாகிய அந்த ஜரத்காருவென்னும் மஹாத்மா பூமிமுழுதும் திரிந்தார்; பத்தினியை மனத்தாலும் நினைக்கவில்லை.

பிராமணரே! அதன்பின் மற்றொருகாலம் நேர்ந்தபோது, குருவம்சத்திற்பிறந்த பரிக்ஷித்தென்னும் ஒருராஜா இருந்தார். சிறந்தகைகளுள்ளவரும் யுத்தத்திற்சிறந்த வில்லாளியும் அவர் பிரபிதாமஹருமாகியபாண்டு முன்னே இருந்ததுபோலவே அவரும் வேட்டையையே பழகிக்கொண்டிருந்தார். அபிமன்யுபுத்திரராகிய பரிக்ஷித்து அவருடைய பிரபிதாமஹராகிய பாண்டுவைப்போலவே உலகத்தில் பெயர் பெற்றிருந்தார். அந்தராஜா, மான்களையும் பன்றிகளையும் புலிகளையும் எருமைகளையும் இன்னும் பற்பல காட்டு மிருகங்களையும் அடித்துக்கொண்டு ஸஞ்சரித்தார். பகவானாகிய ருத்திரன், தேவலோகத்தில் * மான்வடிவங்கொண்ட யஜ்ஞபுருஷனை அடித்ததுபோல, அந்தராஜா ஒருநாள் பதிவானகணுக்களுள்ள பாணத்தினால் ஒருமானையடித்து, அந்த அடர்ந்தகாட்டில் அதைத்தேடிவதற்காக அதன்பின்னே வில்லுங்கையுமாக இங்குமங்கும்போனார். அவராலடிக்கப்பட்ட மானுனது ஜீவித்து அந்தவனத்திற் போய்க்கொண்டிருக்கவில்லை. அந்த அடிபட்டமிருகம் காணுமற்போனதே அந்தப் பரிக்ஷித்துமஹாராஜா சீக்கிரத்தில் ஸ்வர்க்கம்போவதைத் தெரிவிக்கிற முன்னறிகுறியாக இருந்தது. அந்தமிருகத்தினால் வெகுதூரம்இழுக்கப்பட்ட அந்தராஜாகளைத்துத் காகத்தினால்வருந்தி, வனத்தில், ஊட்டினகன்றுகளின் வாயிலிருந்து வெளிப்பட்ட மிகுந்தபால்நுரையைப் புசித்துக்கொண்டு மாட்டுக்கொட்டில்களில் உட்கார்ந்திருக்கும் ஒருரிஷியைச்சந்தித்தார். பசியோடும் சிரமத்தோடுங்கூடிய அந்தராஜா வில்லையெடுத்தபடி கடுமையானதவமுள்ள அந்தரிஷியிடம் விரைவாகச்சென்று, "ஓஓ, பிராமணரே! நான் அபிமன்யுபுத்திரனுகிய பரிக்ஷித்தென்னும்ராஜா; என்னால் அடிக்கபபட்ட மான்ஒன்று காணப்படவில்லை. அதைக்கண்டீரோ?" என்றுகேட்டார். மௌனவிரதத்திலிருந்த அந்தமுனி அந்த

* இது தக்ஷயாகத்தில் நடந்தது.

ராஜாவுக்கு விடைஒன்றும் சொல்லவில்லை. ராஜாவானவர் கோபித்து, இறந்துபோன ஸர்ப்பத்தை அந்தரிஷியின்கழுத்தில் வில்லின்நுனியால் எடுத்து மாட்டினார். அவர் அந்த ராஜா செய்தபிழையைக் கவனிக்காமல் விட்டுவிட்டார். அவர் அந்தராஜாவைப்பார்த்து நல்லதோ கெட்டதோ எதுவும் சொல்லவில்லை. அந்தராஜா, அவர் அவ்வாறு இருந்ததைக்கண்டு கோபத்தைவிட்டு, துக்கத்துடன் நகரஞ் சென்றார். அந்தரிஷியோ அப்படியே இருந்தார். பொறுமையே ஸ்வபாவமாகவுள்ள அந்தமஹரிஷி, தாம்அவமதிக்கப்பட்டிருந்தும், இராஜதர்மத்தை விடாதவராகிய அந்தராஜச்ரேஷ்டரைச் சபிக்கவில்லை. பரதச்ரேஷ்டராகிய அந்தப்பரிக்ஷித்துமஹாராஜா தர்மத்தைக் கைவிடாத அந்தமஹரிஷியைத் தெரிந்துகொள்ளாமைபால், அவரை அப்படி அவமானஞ்செய்தார்.

அந்தரிஷிக்குக் கடுமையானதேஜஸ்ஸுள்ளவரும், சிறந்த தவமுள்ளவரும், மிகுந்தகோபமுள்ளவரும், சமனம் செய்விக்கமுடியாதவரும், நியமந்தவறாதவரும், இளமைப்பருவமுள்ளவருமாகிய சிருங்கியென்று பெயருள்ள புத்திரர் ஒருவரிருந்தார். அவர், எல்லாப்பிராணிகளுக்கும் நன்மைசெய்ய எண்ணமுள்ளவரும் உயர்ந்த ஸ்தானத்திலிருப்பவருமாகிய பிரம்மதேவரை ஒவ்வொருகாலத்திலும் மிகுந்த நியமத்துடன் உபாஸித்துவந்தார். பிராமணச்ரேஷ்டரே! அந்தச்சிருங்கி அந்தப்பிரம்மாவினால் விடைகொடுக்கப்பெற்று வீட்டுக்குவரும்போது, அதிககோபஸ்வபாவமுள்ளவரும் விஷம்போன்றவருமாகிய அம்முனிபுத்திரரைநோக்கி, அங்கேவிளையாடிக்கொண்டிருக்கும் அவர் ஸ்நேஹிதனுகிய கிருசன்என்னும்ரிஷிபுத்திரன் சிரித்துக்கொண்டு, "ஓ சிருங்கியே! சிறந்ததேஜஸ்ஸும் தவமுமுள்ள உன் பிதா சவத்தைத் தோளிற்சுமக்கிறார்; கர்வப்படாதே; தவத்தில் தேர்ச்சியடைந்தவர்களும் பிரம்மஜ்ஞானிகளும் சிறந்ததவமுள்ளவர்களுமாகிய எம்மைப்போன்ற ரிஷிகுமாரர்கள் பேசும்போது, நீ ஒருபேச்சும் பேசாதே. எந்தநீ பிணஞ்சுமக்கின்றபிதாவைப் பார்க்கப்போகிறாயோ அந்தஉனக்கு ஆண்பிள்ளையென்கிற அபிமானம்ஏது? அதற்குத் தக்க கர்வப்பேச்சுக்கள் எங்கிருந்துவரும்? முனிச்ரேஷ்டனே! உன் னுடையபிதா தமக்குத்தகாதகாரியத்தைச் செய்துகொண்டார். அதனால் நான் மிகவும்வ்யஸனப்படுகிறேன்" என்று அவன் பிதாவைக் குறித்துக்கேட்டவுடன் கோபமுண்டாகும்படி பரபரப்புடன்சொன்னான்.

நாற்பத்தோராவது அத்தியாயம்

ஆஸ்தீகபர்வம். (தொடர்ச்சி).

(சமீகர்புத்ராராகிய சிருங்கி பரிக்ஷித்துக்குச் சாபம்கொடுத்தது).

இவ்வாறு அவன்சொன்னவுடன் தேஜஸுள்ளவரும் கோபமுள்ளவருமாகிய அந்தச்சிருங்கி தம் பிதா பிணத்தைச்சுமப்பதாகக் கேட்டு, கோபத்தினுற் கொதிப்புற்றார். அவர் அந்தக்கிருசனென்பவனைப்பார்த்து, உண்மையும் பிரியமுமான சொல்லைச்சொல்லி, "எல்லாப் பிராணிகளுக்கும் நன்மையையிரும்புகிறவரும், எப்போதும் வேறு சித்தமில்லாமல் தேவனுகிய விஷ்ணுவைப் பூஜிப்பவரும், மனத்தினுள்ளஆகாரத்தைப் புசிப்பவரும், எப்போதும் மௌனவிரதத்தை விடாதவருமாகிய சிறந்ததேஜஸுள்ள ரிஷியான அந்த என்பிதா இப்பொழுது பிணஞ்சுமப்பவரானதெப்படி?" என்றுகேட்டார். கிருசன், "அன்பனே! பரிக்ஷித்தென்னும் ராஜா வேட்டைக்காகத் திரியும்போது உன்பிதாவின்தோளில் இறந்துபோன ஸர்ப்பத்தை இப்போது மாட்டினுன்" என்றுன். சிருங்கி, "அந்தத் துராத்மாவாகிய ராஜாவுக்கு என்பிதாசெய்ததீங்கு என்ன? கிருசனே! அதை உண்மையாகச் சொல்லு; என்னுடைய தவத்தின்வன்மையைப்பார்" என்றுசொல்ல, கிருசன், "அபிமன்யுவின்புத்திரனுகிய அந்தப் பரிக்ஷித்தென்னும் ராஜா வேட்டையாடிக்கொண்டு தனியாகப்போகையில் விரைவாகஓடுகின்ற ஒருமானைப் பாணத்தால்அடித்துப் பின்தொடர்ந்தான்; அந்த ராஜா அந்தப்பெரியவனத்தில் அலைந்தும் மானைக் காணவில்லை; பசியினுலும் தாகத்தினுலும் சிரமத்தினுலும் பீடிக்கப்பட்ட அவ்வரசன், பேசாமற் கட்டையைப்போல்நிற்பவராகிய உன்பிதாவைப்பார்த்து, காணுமற்போன மானைக்குறித்து அடிக்கடி கேட்டான். மௌனவிரதம்வஹித்தஅவர் அவனுக்கு உத்தரஞ்சொல்லவில்லை. ராஜா வில்லின்முனையினுல் ஸர்ப்பத்தையெடுத்து அவர்தோளில் மாட்டினுன். சிருங்கியே! தவத்தைவிடாத உன்பிதா அப்படியேயிருக்கிறார். அந்தராஜா ஹஸ்தினுபுரமென்று பெயருள்ள தன் நகரத்துக்குப்போய்விட்டான்" என்றுன்.

இவ்வாறு சவம் தோளில் இருப்பதைக்கேட்டுச் சிறந்த மஹிமையுள்ள அந்தரிஷிபுத்திரர், கோபத்தினுற் கண்கள்சிவந்து ஜ்வலிப்பவன்போலக் கோபாவேசங்கொண்டு அப்போதே ஆசமனஞ்செய்து

கோபத்தின்வேகத்தினால் மெய்ம்மறந்து, "எந்தராஜாவென்னும் பாபி, விருத்தரும் கஷ்டப்படுகிறவருமாகிய என்பிதாவின்தோளில் இறந்துபோனஸர்ப்பத்தைப் போட்டானே அந்தப்பாபியும், பிராமணர்களேயவமதிப்பவனும், குருவம்சத்து ராஜாக்களுக்கு அபகீர்த்தியை விளைவிப்பவனுமாகிய அயோக்கியனை,பல்லில்விஷமுள்ளவனும் கொடியசக்தியுள்ளவனுமாகிய தக்ஷகனென்னும் ஸர்ப்பராஜன் என் சொல்லின்வன்மையால் தூண்டப்பட்டு மிகுந்தகோபத்துடன் இன்று முதல் ஏழுஇராத்திரிகளுக்குள்ளாக யமனுடையகிருகத்துக்கு அனுப்பப்போகிறான்" என்றுசபித்தார்.

இப்படி, சிருங்கி அதிகோபத்துடன் சபித்துவிட்டு, இறந்து போனபாம்பைச் சுமந்துகொண்டு மாட்டுக்கொட்டிலில் உட்கார்ந்திருக்கிற பிதாவினிடஞ்சென்றார். அந்தச் சிருங்கி, தோளிலிருக்கும் இறந்தபாம்புடனிருக்கின்ற அந்தப் பிதாவைக்கண்டு, இன்னும் கோபத்தினால்கலக்கமுற்று, துக்கத்தினால் கண்ணீர்விட்டுக்கொண்டு, பிதாவைப்பார்த்து, "பிதாவே! அந்தத் துராத்மாவாகிய பரிக்ஷித்து என்னும் ராஜா உமக்குச்செய்த இந்த அவமானத்தைக்கேட்டு நான் கோபத்தினால் குருவம்சத்திற்கே இழிவாகிய அவனுக்குத் தகுந்த உக்கிரமானசாபத்தைக் கொடுத்தேன்; ஸர்ப்பச்ரேஷ்டனாகிய தக்ஷகன் அந்தப்பாவியை இன்றைக்கு ஏழாவதுநாள் மிகப்பயங்கரமான யமனுடையவீட்டுக்கு அனுப்பப்போகிறான்" என்றுசொன்னார்.

பிராமணரே! அப்படிக்கோபங்கொண்ட அந்தச் சிருங்கியைப் பார்த்து, அவர் பிதாவாகிய சமீகர், "குழந்தாய்! நீ செய்தது எனக்குப் பிரியமாக இல்லை; தவஞ்செய்கிறவர்களுக்கு இது தர்மமன்று; நாம் அந்தராஜாவினுடைய தேசத்தில் வஸிக்கிறோம்; அவனால் நியாயமாக ரக்ஷிக்கப்படுகிறோம்; அவனுக்குத் தீங்குசெய்வது எனக்குப் பிரியமன்று; புத்திரனே! ராஜா எவ்வாறுகடந்தாலும் அதைப் பொறுப்பது நம்மைப்போன்றவர்களுக்குக் கடமை; தர்மத்தைக் கெடுத்தால் அது நம்மைக்கெடுத்துவிடும்; ஸந்தேஹமில்லை; புத்திரா! ராஜா ரக்ஷிக்காமற்போவானானால் நமக்குப் பெருங்கஷ்டம் வரும்; லௌகீகியமாகத் தர்மஞ்செய்ய நமக்குமுடியாது; பிரியமானவனே! தர்மத்தில் ஊக்கமுள்ள ராஜாக்களினால் நாம் காப்பாற்றப்பட்டுப் பெரியதர்மத்தைச் செய்கிறோம்; தர்மத்தில் அவர்களுக்கும் பாகமுண்டு; ராஜா எவ்விதமாக நடந்தாலும் க்ஷமிப்பதுதான் நமக்குக் கடமை; பரிக்ஷித்தோ, அவனுடைய பிரபிதாமஹராகிய பாண்டு எப்படியோ அப்படியே விசேஷமாக நம்மைக் காப்பாற்றுகிறான்; ஸமர்த்

தனே! பிரஜைகளைரக்ஷிப்பதுதான் ராஜாவின்கடமை; ராஜாஇல்லாத தேசத்தில் எப்போதும் தோஷங்களுண்டாகின்றன; நிலைகலங்கிய உலகத்தை ராஜா தண்டத்தினலல்லவோ எப்போதும் ஆளுகின்றன்; தண்டத்தினல் பயமுண்டானபிறகு சமனமுண்டாகிறது; கலங்கினவன் தர்மஞ்செய்யமாட்டான்; கலங்கினவன் வேலிலைசெய்யமாட்டான்; ராஜாவினல் தர்மம் நிலைநிறுத்தப்படுகிறது; தர்மத்தினல் ஸ்வர்க்கம் நிலைநிறுத்தப்படுகிறது; யஜ்ஞகாரியங்களெல்லாம் ராஜாவினல் ஸ்தாபிக்கப்படுகின்றன; யஜ்ஞத்தால் தேவர்கள்ஸ்தாபிக்கப்படுகின்றனர்; தேவர்களால் மழையுண்டாகின்றது; மழையினல் பயிர்கள்உண்டாகின்றன; ராஜா பயிர்களினல் மனுஷ்யர்களைக் காப்பாற்றி எப்போதும் அவர்களுக்கு நன்மையைச்செய்து ராஜ்யபரிபாலனமும் செய்கிறன். ஒருராஜா பத்துச் * சுரோத்தியர்களுக்கு ஸமானமென்றுமனு சொல்லியிருக்கிறர். அந்தராஜா பசியோடு மானைத்தேடிக் காளைத்து இங்குவந்து என்னுடைய இந்த விரதத்தையறியாமல் இதைச்செய்து விட்டானென்று நினைக்கிறேன். நீ ஏன் ஆலோசிக்காமல் சிறுபிள்ளைத்தனமாக இந்தக் கெட்டகாரியஞ்செய்தாய்? புத்திரனே! எவ்வகையிலும் ராஜா நம்மிடமிருந்து சாபத்தையடையத்தகுந்தவனுகான்" என்றுசொன்னர்.

நாற்பத்திரண்டாவது அத்தியாயம்.

ஆஸ்தீகபர்வம். (தொடர்ச்சி).

(சமீகர், கௌரமுகர்என்னும் சிஷ்யரால் தம்புத்திரன் சபித்ததைப் பரிக்ஷித்துக்குத்தெரிவித்தது).

சிருங்கி, "பிதாவே! இந்த ஆலோசிக்காமற் செய்ததாயிருந்தாலும், பாவஞ்செய்ததாயிருந்தாலும், உங்களுக்குப் பிரியமாயிருந்தாலும், அப்பிரியமாயிருந்தாலும், நான் சொன்னசொல் பொய்யாதல் கூடாது; இது மாறுகாது. பிதாவே! இதோ நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; நான் விளையாட்டுக்கும் பொய்சொல்வதில்லை; நான் சபிப்பது பொய்யாவதேது?" என்றுசொல்ல, சமீகர், "குழந்தாய்! நீ உக்ரமான சக்தியுள்ளவனென்றும் அப்படியே ஸத்யம்பேசுகிறவனென்றும் நான் அறிவேன்; ஒருபோதும் நீ பொய்சொன்னதில்லை;

* வேதாத்தியயனஞ்செய்த பிராமணர்கள்.

இதுவும் பொய்யாகாது. ஆனால், புத்திரன் வயஸுவந்தவனுயிருந்த போதிலும், எப்படி குணமுள்ளவனுவனே, எப்படி பெரியகீர்த்தியடைவனே, அப்படி பிதா எப்போதும் அவனுக்குச் சொல்லவேண்டியதுதான். நீயோ பாலனுகவேயிருக்கிறுய்; எப்போதும் தவத்தினுற் பரிபாகமடைந்திருக்கிறுய்; உனக்குச் சொல்வதைப்பற்றி ஸந்தேஹமென்ன? சக்தியுள்ள மஹாத்மாக்களுக்குக் கோபம்மிகுதியாகவிருத்தியாகுமானுல் இந்தலோகங்கள் அழிந்துவிடும். பொறுப்பதுதான் கோபத்துக்குப் பரிஹாரம். தர்மமுள்ளவர்களுட் சிறந்தவனே! நீ புத்திரனுயிருப்பதையும் சிறுவனுயிருப்பதையும் அவஸரக்காரனுயிருப்பதையுங்கண்டு உனக்குச்சொல்வது அவசியமென்றே நான்நினைக்கிறேன்; நீ இந்தக்கோபத்தைவிட்டுவிட்டு, சாந்தியைக்கைப்பிடித்தவனுகி, வனத்திலுள்ள ஆகாரத்தைப் புசித்துக்கொண்டிரு. இப்படிச் செய்தலால் உனக்குத் தர்மம் தவருமலிருக்கும். யதிகளாயிருந்து கஷ்டப்பட்டுச்சம்பாதித்த புண்ணியபத்தையும் குரோதம் அழித்துவிடுகிறதல்லவா? புண்ணியமில்லாதவர்களுக்கு நல்லகதியில்லை. பொறுமையுள்ள யதிகளுக்குத்தான் இந்திரியஜயம் ஸித்தியைச்செய்கின்றது; இந்தலோகமும் பொறுமையுள்ளவர்களுக்கேயுள்ளது; பரலோகமும் பொறுமையுள்ளவர்களுக்கே. ஆதலால், எப்போதும் பொறுமையைவிடாமல் இந்திரியங்களே வசப்படுத்தி நடக்கக்கடவாய்; பொறுமையினுல் பிரம்மாவுக்கு ஸமீபமாயுள்ள லோகங்களே படைவாய். நான் பொறுமையுடன் இனி என்னசெய்யமுடியுமோ அதைச் செய்யப்போகிறேன். குழந்தாய்! அந்தராஜாவுக்கு, 'ராஜாவே என்னுடையபுத்திரன் சிறுவன்; புத்தித்தேர்ச்சி அடையாதவன்; அவன், உன்னுல் எனக்குநேரிட்ட இந்த அவமானத்தைக்கண்டு, தாங்காமல் உன்னைச் சபித்துவிட்டான்'என்று ஸமாசாரம் அனுப்பப்போகிறேன்" என்று இவ்வாறுசொல்லி, மிகவுறுதியும் சிறந்ததபஸுமுள்ள அந்தச்சமீகரிஷி தயைகூர்ந்து பரிக்ஷித்தென்னும் ராஜாவினிடம் குசலப்பிரச்னஞ்செய்து நடந்தகாரியத்தைத் தெரிவிக்கும்படி சொல்லி, நல்லொழுக்கமுள்ளவரும் பொறுமையுள்ளவருமாகிய கௌரமுகரென்று பெயருள்ள சிஷ்யரை அனுப்பினர்.

அந்தச்சிஷ்யர், உடனே விரைவாகப் பரிக்ஷித்துமஹாராஜாவினிடஞ்சென்று, காவற்காரர்களைக்கொண்டு முன்னர்த்தெரிவித்து, ராஜகருஹத்துக்குள் பிரவேசித்தார். களைப்படைந்த கௌரமுகரென்னும் பிராமணர் ராஜாவினுற் பூஜிக்கப்பட்டு, சமீகர்சொல்லியனுப்பின அந்தப் பயங்கரமான செய்திமுழுவதையும் அவர் சொன்னபடி மந்திரிக

ளின்முன்னிலையில் ராஜாவுக்குச்சொன்னார்: "ஓ, ராஜராஜரே! கேளும்; சிறந்த தர்மிஷ்டரும் ஐம்புலன்களையும் மனஸையும் அடக்கினவருமாகிய பெருந்தவமுள்ள சமீகரென்னும் ரிஷி உங்களுடையதேசத்தில் இருக்கிறார். புருஷச்ரேஷ்டரே! மௌனத்தையனுஷ்டிக்கிற அவருடையதோளில் உங்களால் உயிர்போன ஒருஸர்ப்பம் வில்லின்நுனியினால் எடுத்துமாட்டப்பட்டது; அந்த உமதுசெய்கையை அந்தரிஷி பொறுத்திருந்தார்; அவர்குமாரர் பொறுக்கவில்லை. ராஜச்ரேஷ்டரே! அந்தப்புத்திரர் 'ஏழுராத்திரிக்குள்ளாகத் தக்ஷகன் உமக்கு யமனுகப் போகிறன்' என்று தம் பிதாவுக்குத்தெரியாமற் சபித்திருக்கிறார்; அதுவிஷயத்தில் ரக்ஷணஞ்செய்துகொள்ளுமென்று உமக்குச்சொல்லும்படி சமீகர் பலமுறை சொல்லியிருக்கிறார். அந்தச்சாபம் யாராலும் மாற்றமுடியாது. கோபமுற்ற புத்திரரை அவராலும் அடக்கமுடியவில்லை. ராஜாவே! அதனால் உமது க்ஷேமத்தைவிரும்புகின்ற அந்தச்சமீகர் என்னை உம்மிடம் அனுப்பினார்" என்றார்.

இப்படிக்கௌரமுகர்சொன்ன கொடியசொல்லைக்கேட்டு, பெருந்தவமுள்ள பரிக்ஷித்துமஹாராஜா, அந்தப்பாவஞ் செய்ததைப்பற்றி மிகத் துன்பமுற்றார். வனத்திலிருந்த அந்தமுனிச்ரேஷ்டரை மௌனவிரதமுள்ளவரென்றுகேட்டபின், ராஜா அதிகதுக்கத்தினால் மனத்திற்கொதிப்புள்ளவராகி, அந்தச்சமீகருடைய தயையுள்ள ஸ்வபாவத்தைத் தெரிந்துகொண்டபிறகு, அப்படிப்பட்ட ரிஷிவிஷயத்தில் தாம் தீங்குசெய்ததற்காக இன்னும் அதிகபரிதாபமுற்றார். தேவதைக்கு ஸமானமானகீர்த்தியுள்ள அந்தராஜா அந்தப்பாபகாரியத்தைத் தாம் செய்ததற்காக எப்படிப் பரிதபித்தாரோ அப்படித்தமக்கு நேர்ந்திருக்கும் மரணத்தைக்கேட்டும் பரிதபிக்கவில்லை. உடனே ராஜா, "பகவானுகிய சமீகர் இந்தக்குற்றத்திற்காக என்னிடத்தில் இனிமேலும் க்ஷமிக்கவேண்டும்" என்றுசொல்லிக் கௌரமுகரை அனுப்பினார். அப்போது கௌரமுகமுனிவர் ராஜா சொன்னதைக்கேட்டு, அவரிடம்விடைபெற்றுக்கொண்டு, விரைவாகத் தம் குருவின்ஆச்ரமத்திற்குச்சென்றார்.

அந்தக்கௌரமுகர்போனதும் ராஜா மனத்தில் அச்சமுற்று மந்திரிகளுடன்கூட ஆலோசனைசெய்தார். ஆலோசனையின் வகைதெரிந்த அந்த ராஜாவானவர்அவ்வாறு மந்திரிகளுடன் ஆலோசித்தபிறகு, ஒற்றைத்தூணுடைகூடிய மிகவும் பத்திரமுள்ள மாளிகையைக்கட்டுவித்து, அதில் காவலும் ஏற்படுத்தி, வைத்தியர்களையும் ஔஷதங்களையும் மந்திரஸித்தியுள்ளபிராமணர்களையும் எங்கும் நியமித்தார். தர்மம்

தெரிந்தவராகிய அவர் எல்லாப்பக்கங்களிலும் காப்பாற்றப்பட்டவராக அதில் இருந்துகொண்டு, மந்திரிகளுடன்கூட ராஜகாரியங்களெல்லாவற்றையும் செய்தார். மாளிகையிலேறின ராஜச்ரேஷ்டரிடம் யாருடனும் அணுகமுடியவில்லை. வெளியில்வந்த காற்றுக்கூட உள்ளேபுகும்போது நடுக்கப்பட்டது. அந்தப்பூர்வதினம் வந்தபோது வித்துவானகிய காசியபரென்னும் பிராமணச்ரேஷ்டர் அந்தராஜாவுக்குச் சிகித்ஸைசெய்வதற்காக வந்தார்; எனெனில், நாகச்ரேஷ்டனகியதக்ஷகன் அந்த ராஜச்ரேஷ்டனை யமனிடம் அனுப்பப்போகிறானென்பதை அவர்கேட்டிருந்தார்; 'ஸர்ப்பராஜனால் கடிக்கப்பட்ட அவரை நான்விஷோபத்திரவமில்லாதவராகச் செய்வேன்; அதில், எனக்கு பொருளும் அறமும் கிடைக்கும்' என்று நினைத்தார். அந்த நாகராஜாவாகிய தக்ஷகன், வயதுசென்ற பிராமணரை ரூபமெடுத்துக்கொண்டு, ராஜாவினிடத்தில் ஓரேஞ்சாடகமாகச் செல்லுகின்ற அந்தக்காசியபரை வழியிற்கண்டான். நாகராஜாவானவன் முனிச்ரேஷ்டரான அந்தக் காசியபரைப் பார்த்து, "நீங்கள் எங்கே விரைவாகப் போகிறீர்கள்? என்ன காரியஞ்செய்ய விரும்புகிறீர்கள்?" என்றுகேட்டான். அதற்குக் காசியபர், "குருவம்சத்தில் பிறந்தவரும் எதிரிகளை அடக்குகிறவருமாகிய பரிக்ஷித்தென்னும் ராஜாவைத் தக்ஷகனென்னும் ஸர்ப்பராஜன் தன்விஷபலத்தினல் இன்றைக்கு எரித்துவிடப் போகிறான்; ஸௌம்யரே! அக்னிக்கொப்பானபராக்கிரமமுள்ளவரும் பாண்டவர்களின் வம்சவிருத்திசெய்பவரும் அளவற்றசக்தியுள்ளவருமாகிய அந்தராஜாவை அந்தநாகராஜன் கடித்தவுடன் உபத்திரவமில்லாமற்செய்வதற்கு நான் விரைவாகப்போகின்றேன்; நான் விஷவைத்தியத்தெரிந்தவனாக லோகத்தாராற் பூஜிக்கப்பட்ட பிராமணன்; நமது குருவின் கடாக்ஷத்தினல் விஷத்தைப்போக்குவதில் நான் ஸாமர்த்தியமுள்ளவன்" என்றுசொன்னார். அதைக்கேட்ட தக்ஷகன், "பிராமணரே! நான்தான் அந்ததக்ஷகன்; அந்தராஜாவைத் தகிக்கப்போகிறேன்; என்னற் கடிக்கப்பட்டவனுக்குச் சிகித்ஸைசெய்வது உம்மால் முடியாது; திரும்பிப்போம்" என்றான். அதற்குக் காசியபர், "உன்னற்கடிக்கப்பட்ட அந்தராஜாவை நான் போய் உபத்திரவமில்லாதவனாகச் செய்வேனென்பது என்னுடைய வித்தையின் வல்லமையினலுண்டான நிச்சயம்" என்றார்.

நாற்பத்துமூன்றுவது அத்தியாயம்.

ஆஸ்தீகபர்வம். (தொடர்ச்சி).

(தக்ஷகன்கடித்த ஆலமரத்தைக் காசியபர் பிழைப்பித்தது).

தக்ஷகன், "காசியபரே! நான்கடித்த எதற்காவது சிகித்ஸை செய்ய உமக்குச் சக்தியிருக்குமானால், இந்தமரத்தைக் கடிக்கிறேன்; அதைப்பிழைப்பியும். உமதுமந்திரத்தின் மேலானவலிமை எதுவோ அதைக்காட்டமுயற்சிசெய்யும்.பிராமணோத்தமரே!இந்தஆலமரத்தை நீர்பார்க்கும்போதே எரித்துவிடுகிறேன்" என்றான். காசியபர், "நாகராஜாவே! உனக்கு இந்தக்கர்வமிருக்குமானால் நீ இந்தமரத்தைக்கடி; நீகடித்த இந்தமரத்தை நான் பிழைப்புமூட்டுகிறேன்; இப்போது என்மந்திரபலத்தைப்பார். நாகனே! ஆலமரத்தைக்கடி" என்றார். மஹாத்மாவாகிய காசியபரால் இவ்வாறுசொல்லப்பட்ட ஸர்ப்பராஜாவானதக்ஷகன் ஆலமரத்தினிடஞ்சென்று அதைக்கடித்தான். அந்தமரத்தை அந்த மிகுந்தசக்தியுள்ளதக்ஷகன்கடித்தவுடன் அவனுடைய பல்லின்விஷம் வியாபித்தமையால் அம்மரமெங்கும் எரிந்தது. அந்தநாகன் அந்தமரத்தையெரித்துவிட்டு மறுபடியும் காசியபரைநோக்கி, "பிராமணசிரேஷ்டரே! முயற்சியைச்செய்யும்; இந்தமரத்தைப்பிழைபபியும்" என்றான். அதன்பின், ஸர்ப்பராஜாவின் விஷாக்கினியினால், நீறுப்பபோன மரத்தின்சாம்பலையெல்லாம் குவித்துக் காசியபர், "நாகச்ரேஷ்டனே! என்னுடையவித்தையின்பலத்தை இந்தமரத்தினிடம் பார்; ஸர்ப்பமே! நீபார்க்கும்போதே இதை நான்பிழைப்பிக்கிறேன்" என்றுசொன்னார்.

பிறகு, சிறந்தமஹிமையுள்ளவரும் வித்தையுள்ளவருமாகிய அந்தக்காசியபரென்னும் பிராமணசிரேஷ்டர், சாம்பர்க்குவியலாகச் செய்யப்பட்டவ்ருக்ஷத்தை வித்தையினற் பிழைப்பித்தார். அதில் முளையை உண்டாக்கினார். பிறகு இரண்டுஇலைகள் உண்டாகச்செய்தார். இலைகள் விருத்தியாகவும் கிளைகள்கிளைக்கவும் பின்னர் மரமாகவும் செய்தார். மஹாத்மாவாகிய காசியபரால் அம்மரம் பிழைப்பிக்கப்பட்டதைக்கண்டு தக்ஷகன், "பிராமணசிரேஷ்டரே! என்னுடையவும் என்னைப்போன்றவருடையதுமாகிய விஷங்களையெல்லாம் நீர்க்கிவிடுவீரென்பது உம்மிடத்தில் அதிகஆச்சரியமன்று. தபோனரே! என்னபிரயோஜனத்தைக்கருதி நீர் அங்கேபோகிறீர்?; அந்தஜச்ரேஷ்டரிடமிருந்து எதைஅடையலாமென்று விரும்புகின்றீரோ

அந்தப்பிரயோஜனம் கிடைக்க அரிதாயிருந்தபோதிலும், அதை நானே உமக்குக்கொடுப்பேன். பிராமணரே! பிராமணசாபம்மூடிக் கொண்டமையால் ஆயுஸ்குறைந்த ராஜாவிஷயத்தில் நீர் பிரவர்த்தித்தால் உமதுகாரியஸித்தி ஸந்தேஹமாயிருக்கும். அதனால், மூன்று லோகங்களிலும் பிரகாசிக்கின்ற உமதுகீர்த்தி ஒளிகுறைந்த சூரியனைப்போல் இந்தவிஷயத்தில் அஸ்தமனமாய்விடும்" என்றுசொன்னன்.

காசியபர், "நாகனே! நான் தனத்துக்காக அங்கேபோகிறேன்; அதை நீ எனக்குக்கொடு; தனங்கிடைத்தபோதே நான் திரும்பிவிடுவேன்" என்றார். தக்ஷகன், "பிராமணசிரேஷ்டரே? அந்தராஜாவினிடத்திலிருந்து எவ்வளவுதனத்தை எதிர்பார்க்கிறீரோ அதைவிட அதிகதனத்தை நானேகொடுப்பேன்; திரும்பிவிடும்" என்றுசொல்லக்கேட்டு, மிகப்பெரிய ஸாமர்த்தியமுள்ளவரும் சிறந்தபுத்தியுள்ளவருமாகிய அந்தக்காசியபரென்னும் பிராமணசிரேஷ்டர் ராஜாவைக்குறித்துச் சிந்தித்தார். திவ்யஜ்ஞானமுள்ளவரும் மிகுந்தபிரம்மதேஜஸுள்ளவருமாகிய அந்தக்காசியபரென்னும் ரிஷிச்ரேஷ்டர் அப்போது பாண்டவவம்சத்தினராகிய அந்தராஜாவுக்கு ஆயுள்குறைந்ததென்று தெரிந்துகொண்டு, தனக்குவேண்டியவளவு தனத்தைத் தக்ஷகனிடம்பெற்றுக்கொண்டு திரும்பிவிட்டார். அந்தமஹாத்மாவரகிய காசியபர், பணம்பெற்றுக்கொண்டு திரும்பிப்போனபிறகு, தக்ஷகன் துரிதமாக ஹஸ்தினபுரம் சென்றான்.

பிறகு, அந்தத்தக்ஷகன் போகும்போது, ராஜா விஷங்களைப் போக்கும்உயர்ந்தமந்திரங்களினால், பிரயத்தனத்துடன் காப்பாற்றப்படுவதைக் கேள்வியுற்று, அப்போது அவன், "இந்த ராஜாவை ஒருகபடப்பிரயோகத்தினால், நான் மோசம்செய்யவேண்டும்; என்ன உபாயம் பொருந்தும்"? என்று சிந்தித்தான். பின்பு அந்தத்தக்ஷகன் அநேக ஸர்ப்பங்களை ரிஷிவேஷத்துடன் பழங்களையும் இலைகளையும் ஜலத்தையுமெடுத்துக்கொண்டு போகும்படி ராஜாவினிடம் அனுப்பினன்; "நாகர்களே! காரியமிருப்பதனால், நீங்கள் பழங்களையும் இலைகளையும் ஜலத்தையும் ராஜாவுக்குக் கொடுப்பதற்குப் பயப்படாதவர்களாய்ச்செல்லுங்கள்" என்று, தக்ஷகன் நாகர்களுக்குக் கட்டளையிட்டான். தக்ஷகனால் கட்டளையிடப்பட்ட அந்தநாகர்கள் அவ்வாறே செய்தனர். ராஜாவுக்குத் தர்ப்பைகளையும், ஜலத்தையும், பழங்களையும் கொண்டுபோய்க்கொடுத்தனர். சூரராகிய அந்தராஜசிரேஷ்டர், அவைகளெல்லாவற்றையும் வாங்கிக்கொண்டு அவர்களுடையகாரியங்களையும் நிறைவேற்றி அவர்களைப்போகலாமென்றும் கூறினர்.

ரிஷிகளாக மாறுவேஷங்கொண்ட அந்தநாகர்கள்சென்றபின், அந்தராஜா, மந்திரிகளையும் ஸ்நேஹிதர்களையும்நோக்கி, "ரிஷிகளாற் கொண்டுவரப்பட்ட மதுரமான இந்தப்பழங்களையெல்லாம் நீங்கள் என்னுடன் புசியுங்கள்" என்றுசொல்லி, பிறகு அவர் மந்திரிகளுடன் பழங்களை எடுத்துக்கொள்ள ஆரம்பித்தார். அந்த ரிஷிசாபத்தினுண்டானவிதியினால் தூண்டப்பட்டராஜா எந்தப்பழத்தில் தக்ஷக நாகன் இருந்தானோ அதைத்தான் புசித்தார். சௌனகரே! அவர் சாப்பிட்டுக்கொண்டிருக்கையில், அந்தப்பழத்தினின்றும் நீளமில்லாததும் கறுத்தகண்களையுடையதும் சிவந்தவர்ணமுள்ளதுமாகிய ஒரு சிறியபுழு வெளிப்பட்டது. அந்தராஜச்ரேஷ்டரும் அந்தப்புழுவையெடுத்து மந்திரிகளைநோக்கி, "ஸூர்யன் அஸ்தமனமாகிறான்; இனி விஷத்தினபயம் எனக்கில்லை; அந்த முனியின்வாக்குப் பொய்யாகாமலிருக்கட்டும்; இந்தப்புழு தக்ஷகனென்று பெயருள்ளதாகஇருந்து என்னைக் கடித்திடுக; அப்படியானால் பரிஹாரமாய்விடும்" என்று சொன்னார். அந்த மந்திரிகளும் காலத்தினால் தூண்டப்பட்டவர்களாய் ராஜாசொன்னதை அங்கீகரித்தனர். அந்த ராஜச்ரேஷ்டர் இவ்வாறுசொல்லி, மரணம் ஸமீபித்திருபபதனால் புத்திகெட்டு அந்தச்சிறிய புழுவைக்கழுத்தில் வைத்துக்கொண்டு உடனே சிரித்தார். சிரிக்கும்போதே தக்ஷகனுடைய உடலினால் சுற்றபபட்டார். எந்தப் பழம் ராஜாவுக்குக் கொடுக்கப்பட்டதோ அந்தப்பழத்திலிருந்து வெளிப்பட்ட தக்ஷகனென்னும் நாகராஜன் தன் உடலினால் ராஜாவைச்சுற்றிக்கொண்டும் பெரியஇரைச்சல் இரைந்துகொண்டும் ராஜாவைக்கடித்தான்.

நாற்பத்துநான்காவது அத்தியாயம்.

ஆஸ்தீகபர்வம். (தொடர்ச்சி).

(தக்ஷகன்கடித்ததினால் பரிக்ஷித்து முறந்தபிறகு ஜனமேஜயருக்குப் பட்டாபிஷேகம்).

அப்படிப் பாம்பின் உடலினால் அந்தராஜா சுற்றப்பட்டதைப் பார்த்து, மந்திரிகள்யாவரும் குனிந்தமுகங்களோடு மிகத்துயரமுற்றுக் கண்ணீர்விட்டனர். பின்பு அந்த நாகத்தைக்கண்டு அந்தமந்திரிகள் ஓடிப்போயினர். அதன்பின், மிகுந்த துக்கத்தையடைந்த

மந்திரிகள், தாமரைப்பூநிறமுள்ளவனும் ஆகாயத்தை வகிர்ந்தது போற் செல்லுகிறவனுமாகிய தக்ஷகனென்னும் ஆச்சரியமான ஸர்ப்பச்ரேஷ்டனைக் கண்டனர். உடனே அவர்கள் ஸர்ப்பத்தின் விஷத்தினாலுண்டான அக்னியினாற் சூழப்பட்டு எரிகின்ற அந்தக்கிருகத்தை விட்டுவிட்டுப் பயத்தினால் திசைகளில் ஓடினர். அந்தவீடும் இடியினாலடிபட்டதுபோல் விழுந்தது. பிறகு, தக்ஷகனுடையவிஷத்தினாற் கொல்லப்பட்ட ராஜாவுக்குப் பரலோகத்துக்கு வேண்டிய நல்ல கிரியைகளெல்லாவற்றையும் செய்து, ராஜாவின் புரோஹிதராகிய பரிசுத்தரான பிராமணரும், மந்திரிகளும், நகரத்தில்வசிக்கும் எல்லா ஜனங்களும், ஒன்றுகூடி அந்தராஜாவின் புத்திரனை குழந்தையை ராஜாவாகப் பட்டாபிஷேகஞ் செய்தனர்.

அந்தராஜாவை, சத்துருக்களைத் தொலைப்பவனும் குருவம்சத்துக்கு வீரனுமாகிய ஜனமேஜயரென்று ஜனங்கள் வழங்குகின்றனர். அவர் குழந்தையாயிருக்கும்போதே, சிறந்தபுத்தியுடன் அரசர்களுக்கெல்லாம் சிறந்தவராக அந்தமந்திரிகளோடும் புரோஹிதரோடுங் கூடவே குருச்ரேஷ்டராகிய பாண்டவர்களுக்குள் ஜ்யேஷ்டரும், தம்முடையபிரபிதாமஹரும், வீரருமாகிய தர்மராஜா எப்படி ராஜ்யபரிபாலனம்செய்தாரோ அப்படியே அப்போது ராஜ்யபரிபாலனஞ் செய்தார். அதன்பின், அந்தராஜா எதிரிகள்கண்டு நடுங்கும்படியான பராக்கிரமசாலியாயிருப்பதைக்கண்டு, அந்த ராஜாவினுடைய மந்திரிகள் காசிதேசத்துராஜாவாகிய ஸ்வர்ணவர்மா என்பவனிடம் சென்று, வபுஷ்டமை என்றஅவன் பெண்ணை ராஜாவுக்காகக் கேட்டனர். பிறகு, அந்தஸ்வர்ணவர்மாவென்னும்ராஜா தர்மத்தில் பரீக்ஷைசெய்து குருவீரராகிய ஜனமேஜயருக்கு வபுஷ்டமையைக் கன்னிகாதானமாகக்கொடுத்தான். ஜனமேஜயரும் வபுஷ்டமையை விவாஹஞ்செய்துகொண்டு மிகுந்தஸந்தோஷமடைந்து வேறுஸ்திரீகளியாரிடத்திலும் மனம்வைக்காமலிருந்தார். பராக்கிரமசாலியாகிய அந்தராஜச்ரேஷ்டர், முன்பு புரூரவனென்னுமரசன் ஊர்வசியையடைந்து எப்படிவிளையாடினானோ, அப்படியே மனமகிழ்ச்சியுடன், புஷ்பித்தவனங்களிலும் தடாகங்களிலும் விளையாடினர். பெயர்பெற்ற அழகுள்ளவளும் பதிவிரதையுமாகிய வபுஷ்டமையும் ஜனமேஜயராஜாவைப் பர்த்தாவாகஅடைந்து அந்தப்புரஸ்திரீயாகி மகிழ்வுற்று ரமிக்கிறகாலங்களில் அன்புடன் அவரைமகிழ்வித்தனள்.

ஆதிபர்வம்.

நாற்பத்தைந்தாவது அத்தியாயம்.

ஆஸ்தீகபர்வம். (தொடர்ச்சி).

(ஜரத்காருமுனிவருக்கும் அவர் பிதிர்க்களுக்கும் நடந்த ஸம்பாஷணை).

இதேஸமயத்தில், சிறந்த தவமுள்ளவரும் அஸ்தமித்தஇடமே வீடாகவுடையவருமாகிய ஜரத்காருமுனிவர் பூமிமுழுதும் ஸஞ்சரித்தார். மிகுந்தமேதஜஸுள்ள அம்முனிவர், மனத்தையடக்காதவர்கள் செய்தற்கரியவிரதத்தைச் செய்துகொண்டும், புண்ணியதீர்த்தங்களில் ஸ்நானஞ்செய்துகொண்டும், வாயுபக்ஷணஞ் செய்துகொண்டும், வேறு ஆகாரமில்லாமல் நாளுக்குநாள் உலர்ந்துகொண்டும் திரிந்தார். அவர் ஒருபள்ளத்தில் தலைகீழாகத் தொங்கிக்கொண்டு ஒற்றை அலகுமட்டும் மிச்சமாயுள்ள விலாமிச்சம்புல்லொன்றைப் பிடித்துக்கொண்டிருந்த பிதிர்க்களையும் அந்த விலாமிச்சையின் ஒற்றை அலகை அந்த வளையிலிருந்து ஒரெலி சிறிதுசிறிதாகக் கடித்திழுப்பதையும் கண்டார். அவர், ஆகாரமில்லாமல் இளைத்து ஒய்ந்து துக்கத்துடன் அந்தப்பள்ளத்தில் தங்களுக்கு ரக்ஷணத்தை இச்சிக்கின்ற அந்தப் பிதிர்க்களருகே சென்று, தாமும் மிகுந்த துக்கமுற்றுப் பேசத் தொடங்கினர்.

"வளையிலிருக்கின்ற எலியினால் வேர்அரிக்கப்பட்டுப் பலமில்லாமற்போன விலாமிச்சம் வைக்கோலைப் பிடித்துக்கொண்டு தொங்குகின்றீர்களே, நீங்கள் யார்? இங்கே விலாமிச்சைக்கு ஒற்றைவேர் மிச்சமாகநிற்கிறது; அதையும் இந்த எலி கூர்மையான பற்களினால் கொஞ்சங்கொஞ்சமாக இழுக்கிறது. இந்தவேரில் சிறிதுபாகமே மிச்சமிருப்பதனால் இதுவும் சீக்கிரத்தில் அறுந்துபோய்விடும்; அப்போது நிச்சயமாக இந்தப்பள்ளத்தில் தலைகீழாய் விழுவீர்கள்; இவ்விடத்தில் தலைகீழாகத் தொங்கிக்கொண்டு கஷ்டமான ஆபத்தையடைந்த உங்களைக்கண்டு எனக்குத் துக்கமுண்டாயிருக்கிறது; உங்களுக்கு நான் செய்யக்கூடிய பிரியமானகாரியம்யாது? இந்த என்தபஸினுடைய நான்கிலொருபாகத்தினாலாவது, மூன்றிலொரு பாகத்தினாலாவது, பாதியினாலாவது இந்தஆபத்தைத் தாண்டுவதற்கு இஷ்டமிருந்தாற் சொல்லுங்கள்; தாமஸம் வேண்டாம்; அல்லது, என்னுடைய தபஸு முழுமையினாலுங்கூட நீங்களெல்லாரும் கரையேறுவதாயிருந்தால் அவசியம் அப்படியே செய்யலாம்" என்றார்.

பிதிர்க்கள், "நீ பிரம்மசாரி; நீ எங்களைக்காப்பாற்றநினைப்பது எவ்வாறு? பிராமணசிரேஷ்டனே! தவத்தினால் இதை நிவிருத்திசெய்வது முடியாது; பேசுகிறவரிற் சிறந்தவனே! அப்பா! எங்களுக்கும் தவத்தின்பலன் இருக்கிறது; பிராமணனே! ஸந்ததியில்லாமையால் அசுசியானநரகத்தில் விழுகிறோம்; ஸந்ததியுண்டாக்குவது முக்கியமானதர்மமென்று பிரம்மாவேசொல்லுகிறார்; அன்பனே! இங்கே தொங்குகின்ற எங்களுக்குப் புத்தி தெளிவாகஇல்லை; அதனால் உலகத்தில் பிரஸித்தமான தவவன்மையுள்ளஉன்னை நாங்கள் கண்டுபிடிக்க முடியவில்லை; பிறர் பரிதாபப்படத்தக்கவரும் மிகுந்ததபோமுற்றவருமாகியஎங்களிடம்கருணையோடுவ்யஸனப்படுகிறசிறந்தமஹிமையுள்ள நீ வயதுமுதிர்ந்தவனுபிருக்கிறாய்; பிராமணனே! நாங்கள்யார்என்பதைக்கேள்; நாங்கள் கடோரமானதவமுள்ள 'யாயாவரர்கள்' என்னும் ரிஷிகள்; ரிஷியே! ஸந்ததியில்லாமற்போனதனால் புண்ணியலோகத்திலிருந்து இங்கேநழுவுகின்றோம்; எங்களுக்கு ஸந்ததியாகியதந்து இல்லாமையால் எங்களுடைய கூர்மையான தவம்போய்விட்டது; அத்ருஷ்டஹீனர்களான எங்களுக்கு அத்ருஷ்டஹீனனான ஒருவன் ஸந்ததிக்குத் தந்துவாக இருக்கிறான்; அவன், இருந்தும் இல்லாதவன்போலவே தவம்ஒன்றையே பிடித்துக்கொண்டிருக்கிறான்; அவன் 'ஜரத்காரு' என்றுபெயருள்ளவன்; வேதங்களிலும் வேதாங்கங்களிலும் கரைகண்டவன்; மனத்தை அடக்கினவன்; மஹாத்மா; உறுதியானநியமமுள்ளவன்; மிகச்சிறந்ததவமுள்ளவன்; அவன் தவத்தில்ஆசைவைத்து எங்களை இந்தக்கஷ்டத்திற் கொண்டுவந்துவிட்டான். அவனுக்குப் பாரியையுமில்லை; புத்திரனுமில்லை; எந்தப்பந்துவுமில்லை; அதனாலே நாங்கள் புத்திமயங்கி அநாதைகளைப்போற் பள்ளத்தில் தொங்குகின்றோம்; அப்பா! எங்களுக்கு அவன் நாதனாகஇருப்பதனால் நீ அவனைக்கண்டால், 'உன்பித்ருக்கள் கதியற்றவர்களாய்ப் பள்ளத்தில் தலைகீழாகத் தொங்குகின்றனர்; விவாஹஞ்செய்துகொள்; ஸந்ததியையும் உண்டுபண்ணு; அதுதான் நல்லது' என்று அவனுக்குச்சொல்லு; தபோதனனே! எங்கள் குலத்துக்கு அந்த ஒற்றைத்தந்துதான்மிச்சம்; எந்த ஒற்றைவிலாமிச்சம் வைக்கோலை எங்களுக்குப்பிடிப்பாக நீ பார்க்கிறாயோ இதுதான் எங்களுடைய குலத்திற்கு ஒரேஆதாரவும் தன்குலத்தை விருத்திசெய்ய வேண்டியவனுமாகிய அந்தஜரத்காரு; பிராமணனே! இந்தக்கோரையின் வேர்களைப்பார்க்கிறாயே,இவை எங்களுடைய ஸந்ததிகள்; காலத்தினால்பக்ஷிக்கப்பட்டன; பிராமணனே! நீ பாதிசாப்பிடப்பட்ட எந்த

வேரைப்பார்க்கிறுயோ, நாங்கள்எதைப்பிடித்துக்கொண்டு பள்ளத்தில் தொங்குகிறேமோ, அது தவத்தையேபிடித்துக்கொண்டிருக்கும் ஜரத்காரு ஒருவனுகும்; பிராமணனே! நீ பார்க்கிற எலிதான் மிகுந்தவலிமையுள்ளகாலம்; அந்தக்காலம் தபஸில் இருப்பவனும் இனிமேலும் தபஸில்ஆசைவைப்பவனும் அசக்தனும் அறிவில்லாதவனும் நல்லஎண்ணமில்லாதவனுமாகிய அந்தஜரத்காருவைக் கொஞ்சங்கொஞ்சமாகக் கடித்தழிக்கிறது; சிறந்தஸாதுவே! அவனுடைய அந்தத்தவம்எங்களைக்கரையேற்றுது; வேரற்றுநழுவிப்போய்க் காலத்தாற் புத்திகெட்டுப் பாபிஷ்டர்களைப்போலவே கீழேபோகின்ற எங்களைப்பார்; நாங்கள் எல்லாப்பந்துக்களோடும் இங்கேவிழுந்தோமானுல், காலத்தினுல் அவனும் அறுபட்டு இந்தநரகத்துக்குத்தான் போகவேண்டியவனுவான்; ஐயா! தவமாகட்டும், யஜ்ஞமாகட்டும், இன்னும் தூய்மையைத்தரத்தக்க எந்தப்பெரிய காரியமாகட்டும், அவையெல்லாம், ஸந்ததிக்கு ஸமானமல்லவென்று பெரியோர்கள் நினைக்கின்றனர்; ஐயா! தபோதனனே! ஆதலால், நீ அந்த ஜரத்காருவைக்கண்டு சொல்லு; இங்கேகண்ட எல்லாவற்றையும் நீ அவனுக்குச்சொல்லவேண்டும்; பிராமணனே! அவனே எங்களுக்கு நாதனுயிருப்பதனுல், அவன் எப்படிச்சொன்னுல்விவாஹஞ்செய்துகொண்டு புத்திரர்களை உண்டுபண்ணுவனே அப்படிப் பந்துக்களாகிய எங்களுடைய நன்மைக்காக உன்னுடைய குலத்தைப்போல் நினைத்து நீ அவனுக்குச்சொல்லவேண்டும்; சிறந்தஸாதுவே! பந்துவுக்கு வருத்தமடைபவன்போல் எங்களைக்குறித்து வருத்தமடைகிற நீயார்? இங்கே நிற்கிற நீ எங்களெல்லாருக்கும் என்னஆகவேண்டும்; கேட்கவிரும்புகின்றேம்" என்றுசொன்னர்கள்.

நாற்பத்தாருவது அத்தியாயம்.

ஆஸ்தீகபர்வம். (தொடர்ச்சி)

(ஜரத்காரு விவாகத்தைப்பற்றிக் கன்னிகைதேடுவது).

இதைக்கேட்டஜரத்காரு, மிகவும் வ்யஸனமடைந்துகொண்டு துக்கத்தாலுண்டானகண்ணீரினுல் தழுதழுத்தவாக்கோடுஅந்தப்பித்ருக்களைநோக்கி, "நீங்கள் எனதுமுன்னேர்களாகிய பித்ருக்களும்பிதாமஹர்களுமாயிருக்கிறீர்கள்; உங்களை ஸந்தோஷமடைவித்தற்காக நான்என்னசெய்யவேண்டும்; சொல்லுங்கள். நான்தான் உங்களுக்கு

அபராதியான ஜரத்காருவென்னும்புத்திரன்; அறிவில்லாதவனும்பாப முள்ளவனுமாகிய எனக்கு நீங்கள் தண்டனைவிதியுங்கள்" என்று சொல்ல, அவர்கள், "புத்திரனே! தற்செயலாக நீ இவ்விடம்வந்து சேர்ந்தது ஸந்தோஷம்; பிராமணனே! எதற்காக நீ விவாஹஞ்செய்து கொள்ளவில்லை" என்றுகேட்டனர். ஜரத்காரு, "பித்ருக்களே! நான் இந்திரியத்தைச் சோஷிக்கச்செய்து இந்தத்தேகத்தை மேலுலகத் துக்குக் கொண்டுபோகவேண்டுமென்ற இந்தஒருவிஷயம், எப்போ தும் என் ஹ்ருதயத்திற் சுற்றிக்கொண்டேயிருக்கிறது. விவாஹஞ் செய்து கொள்வதில்லையென்று என்மனம் ஸ்திரப்படுத்தப்பட்டது. பிதாமஹர்களே! நீங்கள் பக்ஷிகளைப்போல் இவ்வாறு தொங்குவ தைக்கண்டுமட்டும் பிரம்மசரியத்திலிருந்த எண்ணத்தை நான்மாற்று கிறேன்; நீங்கள்விரும்பின காரியத்தைச்செய்யப்போகிறேன்; ஸந் தேஹமின்றி விவாஹஞ்செய்துகொள்ளப்போகிறேன்; என்பெயருள் ளவரும் பிக்ஷையைப்போல் எனக்காக ஸித்தமாகவைத்துக் கொடுக் கப்படுபவருமாகிய ஒருகன்னிகை எப்போது எனக்குக்கிடைத்தா லும் அவளை நான் விவாஹஞ்செய்துகொள்வேன்; ஆனால், நான் அவ ளைக்காப்பாற்றமாட்டேன்; இவ்விதமானவிவாஹம் கிடைக்குமானால் நான் செய்துகொள்வேன்; இல்லாவிட்டாற் செய்துகொள்ளமாட் டேன்; பிதாமஹர்களே! இதுநிஜம்; அவளிடம் உங்களைக்சரையேற் றுவதற்கு ஒருஸந்ததியுண்டாகும்; என்னுடையபித்ருக்கள் நீண்ட காலம் அழிவில்லாமல் இருக்கக்கடவர்" என்றுசொன்னார்.

இவ்வாறு பித்ருக்களைநோக்கிச் சொல்லிவிட்டு, அம்முனி பூமி யெல்லாம் திரிந்தார். சௌனகரே! இவர் வயஸுசென்றவரென்ற காரணத்தினால், இவருக்குப் பாரியை கிடைக்கவில்லை. பிதிர்க்களால் அவ்வாறு கட்டளையிடப்பட்ட அந்தஜரத்காரு அப்போது வெறுப் புற்று, காட்டுக்குச்சென்று மிகுந்தவ்யஸனத்துடன் உரக்கக்கூவினார். சிறந்தஅறிவுள்ள அந்தஜரத்காரு, தம்பித்ருக்களுக்கு நன்மைசெய் வதற்காகக் காட்டுக்குட்சென்று, "நான் கன்னிகையை யாசிக்கி றேன்" என்றசொல்லை மூன்றுதரம் நிறுத்திச்சொன்னார். திரும்ப வும்" இங்குள்ள ஸ்தாவரஜங்கமங்களும் இன்னும் கண்ணுக்குப்புலப் படாத தெய்வங்களுமாகியஎல்லாம் நான் சொல்வதைக்கேட்கக்கட வன; துன்பப்படுகின்றஎன்பித்ருக்கள் கடுந்தவத்திலிருக்கின்ற என்னை ஸந்ததியுண்டாக்குவதற்காக விவாகஞ்செய்துகொள்ளும்படி கட்டளை யிடுகின்றனர்; விவாஹத்திற்காகக் கன்னிகை யென்னும்பிக்ஷையை உத்தேசித்துப் பூமியெல்லாம் திரிகின்றேன்; நான்தரித்திரன்; கஷ்ட

ப்படுவதே இயற்கையாகவுடையவன்; பித்ருக்களினால் ஆஜ்ஞாபிக்கப் பட்டிருக்கிறேன்; நான் இப்போதுகுறிப்பிட்டவர்களுள் எவ்வகை யாருக்குக் கன்னிகையிருந்தபோதிலும் எல்லாத்திசைகளும் அலைந்த எனக்கு அவர்கள் அக்கன்னிகையைக் கொடுக்கக்கடவர்; என்பெய ருள்ளவளாகவும் பிக்ஷையைப்போல் வலுவிற்கொடுக்கப்படுபவளாக வும் நான் காப்பாற்றவேண்டாதவளாகவுமிருக்கிற கன்னிகையை எனக்குக்கொடுங்கள்" என்றுசொன்னார்.

பிறகு, முன்னமே ஜரத்காருவின் ஸமயத்தைக் கவனிக்கும்படி வாஸுகியினால் கட்டளையிடப்பட்ட அந்தநாகங்கள், அந்தச் சமாசார த்தைக்கொண்டுபோய் வாஸுகிக்குத் தெரிவித்தன. அவற்றின் சொ ல்லைக்கேட்டு, அந்தநாகராஜன், அலங்கரிக்கப்பட்ட அந்த ஜரத்காரு வென்னும் கன்னிகையையெடுத்துக்கொண்டு காட்டில் அந்தஜரத்கா ருரிஷியினிடம் சென்றான். பிராமணரே! அவ்விடத்தில், வாஸுகி யென்னும் நாகராஜன் அந்தக்கன்னிகையை அம்மஹாத்மாவுக்குப் பிக்ஷையைப்போற் கொடுத்தான். மோக்ஷத்தைப்பற்றிய அபிப்பிரா யத்தில் உறுதியுள்ளவரும் விவாஹத்தில் விருப்பங்குறைந்தவருமான அந்த ஜரத்காரு அவளுக்குப் பெயர்வேறுயிருக்குமென்று நினைத்த தனாலும் காப்பாற்றுவதைப்பற்றினஎற்பாடு செய்துகொள்ளாமையா லும் அவளை வாங்கிக்கொள்ளவில்லை. பிருகுபுத்திரரே! பிறகு அவர் வாஸுகியினிடம் அந்தக்கன்னிகையின் பெயரைக்கேட்டு, "நான் அவளைக்காப்பாற்றமாட்டேன்" என்றுசொன்னார்.

நாற்பத்தேழாவது அத்தியாயம்.

ஆஸ்தீகபர்வம். (தொடர்ச்சி).

(ஜரத்காரு விவாஹஞ்செய்துகொண்டு பாரியையை விட்டுப்போனது).

அப்போது வாஸுகி ஜரத்காருரிஷியைப் பார்த்து, "இந்தக் கன்னிகை உம்முடையபெயருள்ளவள்; என்ஸஹோதரி; தவத்தோடு கூடியவள்; உமதுபாரியையை நான்போஷிப்பேன்; பிராமணேந்த மரே! இவளைக் கிரஹித்துக்கொள்ளும்; தபோதனரே! என்னால் எவ்வ ளவுகூடுமோ அவ்வளவும் இவளைக்காப்பாற்றுவேன்; முனிச்ரேஷ்டர் களுக்குட்சிறந்தவரே! இவள் உமக்காகவே காப்பாற்றிவைக்கப்பட்டி ருக்கிறாள்" என்றுசொன்னான். ஜரத்காரு, "நான் இவளைப்போஷித்த

மாட்டேன்; எனக்குவிருப்பமில்லாததை இவள்செய்தல்தகாது; செய்தால், இவளைவிட்டுவிடுவேன்; இது நான்செய்திருக்கிறநியமம்" என்றார். அதைக்கேட்டு, "ஸஹோதரியைப் போஷிக்கிறேன்" என்று நாகராஜன் பிரதிஜ்ஞைசெய்தபின் ஜரத்காருரிஷி நாகராஜன்வீட்டுக்குப்போய் அங்கே மந்திரம் தெரிந்தவர்களுக்கெல்லாம் சிறந்தவரும், தவத்திற்பெரியவரும், உறுதியானநியமமுள்ளவரும், தர்மத்திலேயே சித்தமுள்ளவருமாகிய ஜரத்காரு, சாஸ்திரோக்தமாக மந்திரத்துடன் அந்தக்கன்னிகையைப் பாணிக்கிரகணஞ்செய்துகொண்டார்.

அதன்பின் பாரியையை அழைத்துக்கொண்டு, மஹரிஷிகளினால் துதிக்கப்பட்டவராய், அழகியதும் தம்மனஸுக்குஇனியதுமான வாஸுகியின்கிருகத்துக்குப்போனார். அந்தச் சயனகிருகத்தில் விலையுயர்ந்தமெத்தைபரப்பினகட்டிலில் படுக்கைஅமைக்கப்பட்டிருந்தது. அதில் ஜரத்காரு மனைவியுடன் இருந்தார். அங்கே சிறந்தஸாதுவாகிய ஜரத்காரு தம் பாரியையைப்பார்த்து, "நீ எனக்குவேண்டாததை எக்காலமும் செய்பவும் சொல்லவும்கூடாது. அப்பிரியஞ்செய்தபோது, உன்னையும் உன்வீட்டில்வஸிப்பதையும் விட்டுவிடுவேன். நான்சொன்ன இந்தச்சொல்லைக்கிரஹித்துக்கொள்" என்றுநியமனம் செய்தார். அதன்பின்வாஸுகியின்ஸஹோதரி அதிகபயமுற்றவளாய் மிகுந்தகத்துடன்அவரைநோக்கி, "அப்படியேஆகட்டும்" என்று சொன்னாள். சிறந்தகீர்த்தியுள்ள அந்த ஜரத்காரு கஷ்டத்தை இயல்பாகஉடையவரானபர்த்தாவுக்குப் பிரியத்தையேகருதி * வெள்ளைக்காக்கைபோல் புதிதும் விநோதமுமான உபாயங்களினால் உபசாரஞ் செய்தாள்.

பின்பு ஒருகாலத்தில் அந்தவாஸுகியின் ஸஹோதரி ருதுஸ்நானஞ் செய்தபிறகு, தன் பர்த்தாவாகிய முனிச்ரேஷ்டருடன் கிரமப்படி சேர்ந்தாள். அப்போது அவளுக்கு அக்கினிக்கொப்பான கர்ப்பமுண்டாயிற்று. அக்கினியைப்போல் மிகுதியான தேஜஸுள்ள அந்தக்கர்ப்பம் சுக்கிலபக்ஷ சந்திரனைப்போல் விருத்தியடைந்தது. பிறகு சிலதினங்களுக்குப்பின், பெருங்கீர்த்தியுள்ள ஜரத்காருவானவர் கனிப்புற்றவராக அந்தப் பாரியையின்மடியில் தலைவைத்துக்

* சுவேதகாகீயம் என்பதுமூலம்: சுவேதகாகம் என்பதில் சுவ=நாய் ஏத=மான், காக=காக்கை என்றுபிரித்து நாயைப்போல் எப்போதும் ஜாக்கிரதையாகவும் மானைப்போல்பயந்தும் காக்கையைப்போல் ஜாடையறிந்தும் உபசரித்தாள் என்பர்சிலர்; சுவேதகாகம் என்பது, கொக்கு என்றும் மழைக்காலத்தில் கூட்டுக்குள்ளிருக்கும் ஆண்கொக்கைப் பெண்கொக்குக்காப்பாற்றுவதுபோல உபசரித்தாள் என்றும்சொல்லுவர் வேறுசிலர்.

கொண்டு நித்திரைசெய்தார். பிராமணரே! அந்தப் பிராமணரிஷி டர்தூங்கினபோது பகலின்முடிவில் ஸூர்யன் அஸ்தமனமானான். அப் போது நல்லமனமுள்ள அந்தவாஸுகியின் ஸஹோதரி, தர்மம் கெடு மேயென்று பயந்து, "நான் பர்த்தாவைபிழைப்புவது தர்மமாகுமோ ஆகாதோ; இவர் கஷ்டத்தை இயல்பாகவுடையவர்; தர்மத்திலே சித்தமுடையவர். நான் என்னசெய்தால் இவருக்கு அபராதஞ்செய் தவளாக ஆகாமலிருப்பேன்" என்று நினைத்தாள். "தர்மத்தை இயல்பாகவுடைய இவருடையகோபம், தர்மலோபம் என்னும் இரண் டனுள் கோபத்தைக்காட்டிலும் தர்மலோபமே பெரிது" என்று நினைத்து, "இவரை எழுப்புவேனானால் நிச்சயமாகக் கோபிப்பார்; நான் எழுப்பாமல் ஸந்த்யாகாலம் கடந்துபோனால் இவருக்குத் தர்ம லோபம் வருவதுநிச்சயம்" என்று எண்ணினாள். இனிமையாகப் பேசுகிறவளும் நாககன்னிகையுமாகிய ஜரத்காருவானவள் இவ்வாறு மனத்தில் நிச்சயஞ்செய்துகொண்டு, ஜ்வலிக்கின்ற தவமுள்ளவரும் அக்கினிக்கொப்பானவருமான படித்திருந்த அந்த ஜரத்காருரிஷியை நோக்கி, "பெரிய மஹிமையுள்ளவரே! ஸூர்யன் அஸ்தமனமாகிறான்; எழுந்திரும்;பகவானே! ஸ்நானஞ்செய்து நியமத்துடன் ஸந்தியை உபா ஸனைசெய்யும்; அக்னிஹோத்திரம் ஸித்தமாக இருக்கிறது; இந்தக் காலம் அழகாயும் பயங்கரமாயுமிருக்கிறது. பிரபுவே! மேற்றிசையில் இதோ செவ்வானம் தெரிகின்றது" என்று நயமாகச்சொன்னாள்.

சிறந்த தவமுள்ளவரும் மஹிமைபொருந்தினவருமான அந்த ஜரத்காரு, இவ்வாறு உரைத்த பார்யையைநோக்கி, உதடுதுடிக்க, "நாககன்னிகையே! நீ எனக்கு இந்த அவமானத்தைச் செய்தாய்; உன் ஸமீபத்திலிருக்கமாட்டேன்; நான் வந்தவழியே திரும்பிப் போவேன்; அழகிய தொடையுள்ளவளே! நான் தூங்கும்போது, காலந்தவறுமல் ஸூர்யன் அஸ்தமனமாவது முடியாதென்பது என் மனத்திலிருக்கின்றது; அவமானம் அடைந்தபிறகு, அந்தவிடத்தில் வஸிப்பதில் யாருக்குத்தான் விருப்பமிருக்கும்; தர்மத்தை இயல்பாக வுடைய மனக்குமனிதனைப் போன்றவனுக்கும் சொல்லவேண்டுமா" என்றுசொன்னார். அந்த வாஸுகியின் கிருஹத்தில் வாஸுகியின் ஸஹோதரியாகிய ஜரத்காரு தன்னுடையபர்த்தா இவ்வாறு மனம்நடு ங்கும்படி சொன்னபோது, "பிராமணரே! நான் உங்களை அவமானஞ் செய்து எழுப்பினவளல்லேன்; பிராமணரே! உங்களுக்குத் தர்ம லோபம்வரக்கூடாதென்று நான் இப்படிச்செய்தேன்" என்றுசொன் னாள். மஹாதபஸ்ஸுள்ள ஜரத்காருரிஷி இவ்வாறுசொன்ன பார்யை

யாகிய நாககன்னிகையைவிட்டுவிடநிர்ணைத்து, கோபாவேசங்கொண்டு, "நாகப்பெண்ணே! என்வாக்குப் பொய்சொல்லுவதில்லை; நான்போவேன்; நான் முன்னமே உனக்கு ரஹஸ்யத்தில் இந்தநியமம் செய்திருக்கிறேன்; பிரியமானவளே! நான் ஸுகமாகவஸித்திருந்தேன்; சுபமானவளே! பயந்தவளே! நான் இதை விட்டுப்போனபிறகு, 'அந்தப் பகவான் சென்றுவிட்டார்' என்று உன்ஸஹோதரனுன வாஸுகிக்குச்சொல்; நீயும் நான்போனதைப்பற்றி வ்யஸனப்படாதே" என்றார்.

சிலாக்கியமான சரீரமுள்ளவளும் அழகான நிதம்பமும்தொடைகளுமுள்ளவளுமாகிய அந்த ஜரத்காருவானவள் அவர் இவ்வாறுசொன்னபிறகு, சிந்தையிலும் சோகத்திலும் ஆழ்ந்து, அப்போது அந்த ஜரத்காருமுனியைநோக்கி, கண்ணீரினுல் தழுதழுத்தசொல்லோடும் உலர்ந்தமுகத்தோடும் கண்ணுங்கண்ணீருமாய்க் கைகூப்பிக்கொண்டு நடுங்குகிற மனத்தோடு தைரியஞ்செய்துகொண்டு, "தர்மம்தெரிந்தவரே! தர்மத்தில்இருப்பவளும் எப்போதும் உமதுபிரியத்தையும் ஹிதத்தையும் நாடுகிறவளுமாகிய என்னைத் தர்மநிஷ்டராகிய நீர் குற்றமில்லாமலிருக்கையில் விடுவது தகாது. பிராமணசிரேஷ்டரே! என்னை உமக்குக்கொடுத்ததற்கு என்னபிரயோஜனமோ அதையடையாமலிருக்கின்ற பேதையாகிஎன்னை வாஸுகி என்னசொல்லுவன். சிறந்தஸாதுவே! தாயின் சாபத்தினுற் கெடுக்கப்பட்ட என்ஞாதிகளுக்கு உம்மிடத்திலிருந்துண்டான ஸந்ததி வேண்டியது. அதை இன்னுங்காணவில்லை. உம்மால் ஸந்ததிகிடைத்தால்தான் என் சுற்றத்தாருக்கு க்ஷேமமுண்டாகும். பிராமணரே! எனக்கும் உம்முடைய இந்தச்சேர்க்கையானது வீணுகாமலிருக்கவேண்டும். பகவானே! ஞாதிகளுடைய நன்மையைவிரும்பி உம்மைவேண்டுகிறேன். ஸாதுச்ரேஷ்டரே! எனக்கு நிச்சயப்படாத இந்தக்கர்ப்பத்தைவைத்து, குற்றமில்லாத என்னை விட்டுவிட்டு மஹாத்மாவாகிய நீர் போகநினைப்பது எப்படி?" என்றுகேட்டாள். இவ்வாறு சொல்லக்கேட்டு, தவமே தனமாகபடுபற்ற அந்தரிஷி, தம்முடையபாரியையாகிய ஜரத்காருவை நோக்கி, ஸமயத்துக்குத்தக்கபடி அவளுக்குத்தகுதியாக, "அழகானவளே! அக்கினிக்கு ஒப்பானவனும் தர்மத்தில் மிகுந்தசித்தமுள்ளவனும் வேதங்களிலும் வேதாங்கங்களிலும் கரைகண்டவனுமாகிய இந்தரிஷி உன்கர்ப்பத்தில் இருக்கிறான்" என்றார். இவ்வாறு சொல்லிவிட்டு அந்தத் தர்மாத்மாவாகிய ஜரத்காருமஹரிஷி திரும்பவும் உக்கிரமான தவஞ்செய்ய நிச்சயஞ்செய்துகொண்டு சென்றார்.

நாற்பத்தேட்டாவது அத்தியாயம்.

ஆஸ்தீகபர்வம். (தொடர்ச்சி).

(ஆஸ்தீகர் ஜனனம்).

தபோதனரே! ஜரத்காருவானவள் பர்த்தாசென்றவுடனே பிராதாவினிடம்வந்து நடந்தவிஷயத்தைத் தெரிவித்தாள். அதன்பின் அந்த நாகச்ரேஷ்டன் மிகப்பெரிய அஸந்துஷ்டியானசெய்தியைக் கேட்டு, வருத்தமடைகின்ற தன் ஸஹோதரியைப்பார்த்து, தானும் மிகத்துன்பமுற்று, "பிரியமானவளே! உன்னைக் கொடுத்ததற்குக் காரணமும் பிரயோஜனமும் உனக்குத்தெரியுமா? நாகர்களுடைய நன்மைக்காகச்செய்தது; அவரால் உனக்குச் சிறந்தசக்தியுள்ள புத்திரன் உண்டாவனேயாயின், அவன் நம்மை ஸர்ப்பயாகத்தினின்றும் விடுவிப்பானென்பதுதான். இப்படி முன்பு பிரம்மதேவர் தேவர்களுடன்சேர்ந்து சொல்லியிருக்கின்றார். ஸுந்தரியே! அந்த முனிச்ரேஷ்டரால் உனக்குக் கர்ப்பம்கிடைத்திருக்கிறதா? அந்த ஞானவானுடைய விவாஹம் பயன்படாமற்போவது எனக்கிஷ்டமில்லை. இப்படிப்பட்ட காரியத்தைப்பற்றி நான் உன்னைக்கேட்பது நியாயமன்றுதான். காரியம் பெரிதாயிருப்பதனால் அதைப்பற்றி நான் உன்னைக் கேட்டேன். மிகுந்ததவமுள்ள உனதுபர்த்தா தடுக்கமுடியாதவரென்பது தெரிந்தநான் அவரைப் பின்தொடரமாட்டேன்; ஒருக்கால் அவர் என்னைச்சபித்தாலும் சபிப்பர். குழந்தாய்! உன்பர்த்தா உன்னிடத்தில் நடந்துகொண்டவரலாறு முழுவதையும் எனக்குச் சொல்; என்ஹ்ருதயத்தில் வெகுநாளாக நாட்டப்பட்ட கொடிய சல்லியத்தை எடுக்கக்கடவாய்" என்றுசொன்னன்.

இவ்வாறு சொல்லப்பட்ட ஜரத்காருவானவள் பரிதபித்துக்கொண்டிருக்கும் ஸர்ப்பராஜாவான வாஸுகியை உடனே ஸமாதானப்படுத்துகிறவளாக மறுமொழி சொல்லத்தொடங்கினள்:—"ராஜாவே! ஸஹோதரனே! பெருந்தவமுள்ள அம்மஹாத்மாவினிடம் ஸந்ததியைக்குறித்து நான்கேட்டேன். எனக்கு ஸந்ததி இருக்கிறதென்று உத்தரஞ்சொல்லிவிட்டு அவர்போய்விட்டார். பரிஹாஸங்களிலும் அவர் பொய்ஒன்றும் சொன்னதாக எனக்கு நினைவில்லை. அவர் ஆபத்துக்காலத்தில் பொய்சொல்லுவதேது? 'நாககன்னிகையே! காரியத்தைப்பற்றி நீ ஸங்கடமடையவேண்டாம். அக்னிக்கும் ஸூர்யனுக்கும்

ஸமானமான தேஜஸ்ஸுள்ளபுத்திரன் உனக்குப் பிறக்கப்போகிறான்' என்று எனக்குச்சொல்லிவிட்டு அந்தத்தபோதனராகிய என்பர்த்தா சென்றார். ஆதலால், உன்மனத்திலிருக்கின்ற இந்தப்பெருந்துயரமானது விலகிப்போகட்டும்" என்றாள்.

அதைக்கேட்டு ஸர்ப்பராஜனுகிய அந்தவாஸுகி, 'அப்படியே ஆகவேண்டும்' என்றுசொல்லித் தன்ஸஹோதரிசொன்ன வாக்கியத்தை மிகுந்தஸந்தோஷத்துடன் அங்கீகரித்தான். அந்தநாகச்ரேஷ்டன் நல்லவார்த்தைகளாலும் வெகுமானஞ்செய்வதனாலும் தனங்களைக்கொடுப்பதனாலும் மனத்துக்கு மிகப்பிரியமான பூஜையினாலும் தன்ஸஹோதரியைச் சிறப்பாகநடத்தினான். பிராமணசிரேஷ்டரே! அதன்பின் பெரியசக்தியும் பெரியஒளியுமுள்ள அவளுடைய கர்ப்பமானது சுக்லபக்ஷத்தில் உதயமானசந்திரன் ஆகாசத்தில் விருத்தியடைவதுபோல் விருத்தியடைந்தது. பிராமணரே! அதன்பின் பிரஸவகாலத்தில் அந்தநாகஸஹோதரி பிதாவுக்கும் மாதாவுக்கும் பயத்தை நிவர்த்திசெய்யத்தக்கவரும் தேவகுமாரனைப்போன்றவருமாகிய ஒருகுமாரனைப்பெற்றாள்.

அவர் அந்தவாஸுகியின் கிருஹத்திலேயேவளர்ந்து பிருகுபுத்திரராகிய ச்யவனருடைய புத்திரரிடத்திலிருந்து வேதங்களையும் வேதாங்கங்களையும் அத்தியயனஞ் செய்தார். அவர் சிறுபிராயத்திலேயே புத்தியும் சாந்தியும் குணங்களுமுடையவராகப் பிரம்மசாரிவ்ரதத்தை நிறைவேற்றினார்; ஆஸ்தீகரென்பதாக அவருடையபெயரும் லோகங்களில் பிரஸித்தமாயிருந்தது. அவர் கர்ப்பத்திலிருக்கும்போதே அவருடையபிதா அஸ்தி (இருக்கிறான்) என்றுசொல்லிவிட்டு வனம்போனதனால் அவருக்கு ஆஸ்தீகரென்னும் இந்தப்பெயர் உண்டாயிற்று. அவர் பாலராக இருக்கையிலேயே அளவில்லாத ஞானமுள்ளவராக அந்த வாஸுகியின் கிருஹத்தில்இருந்துகொண்டு ஸஞ்சரிக்கையில் அவரை வாஸுகி மிகுந்தஜாக்கிரதையோடு காப்பாற்றினான். தேவச்ரேஷ்டராகிய பகவானான சிவபிரானப்போலே ஸ்வர்ணநிறமாக விருத்தியடைந்துகொண்டு அந்த ஆஸ்தீகர் அந்த நாகர்களெல்லாரையும் ஸந்தோஷப்படுத்தினார்.

———

நாற்பத்தோன்பதாவது அத்தியாயம்.

ஆஸ்தீகபர்வம். (தொடர்ச்சி).

(சௌனகர் கேட்டதன்மேல் பரிக்ஷித்தின்மரணத்தை விரிவாக ஸௌதிசொல்வது).

சௌனகர், "அபமேபாது ஜனமேஜயராஜா, தம்பிதா ஸ்வர்க்கம்போனதைப்பற்றி மந்திரிகளை என்னகேட்டாரோ அதை எனக்கு மறுபடியும் விரிவாகச்சொல்லவேண்டும்" என்றுகேட்க, ஸௌதபுத்திரர் சொல்லத்தொடங்கினர்:—பிராமணரே! அப்போது ராஜா மந்திரிகளைக்கேட்டதையும் அதற்கு அவர்கள் பரிக்ஷித்தின் மரணத்தைப்பற்றிச் சொன்னதையும் சொல்லுகிறேன்; கேளுங்கள். ஜனமேஜயர் மந்திரிகளைப்பார்த்து, "நீங்கள் என்னுடைய பிதாவின் விருத்தாந்தத்தையும் பெரியகீர்த்தியுள்ள அவர் அந்தக்காலத்தில் எப்படி மரணமடைந்தாரென்பதையும் அறிவீர்களல்லவா! உங்களிடமிருந்து என்பிதாவின் வரலாறுகளெல்லாவற்றையும் கேட்டபிறகு நியாயமாயிருந்தால் பரிஹாரம்செய்வேன்; இல்லாவிட்டால் ஒருகாலத்தும் செய்யமாட்டேன்" என்றுசொன்னர்.

அந்தமஹாத்துமாவான ஜனமேஜயர்கேட்டவுடன் தர்மந்தெரிந்தவர்களும் சிறந்தபுத்தியுள்ளவர்களுமாகிய மந்திரிகளானவரும் ஜனமேஜயராஜாவைநோக்கிச் சொல்லலாயினர்:—"ராஜாவே! மஹாத்மாவும் அரசர்க்கரசருமாகிய உமதுபிதாவினுடைய சரித்திரத்தையும் அவர் எவ்வாறு மரணமடைந்தாரென்பதையும் நீர்விஞ்ஞபியதற்குச் சொல்லுகிறோம்; கேளும்; தர்மத்திற்சித்தமுள்ளவராகவும் சிறந்த ஸ்வபாவமுள்ளவராகவும் பிரஜைகளைப்பரிபாலித்த உமதுபிதா இந்த லோகத்தில் எவ்வாறுனஒழுக்கத்தோடிருந்தார் என்பதை நீர் கேட்கவேண்டும். அவர் நாலுவருணங்களையும் தம்தம் தர்மங்களிலிருக்கும்படிசெய்து காப்பாற்றினர். தர்மமே உருவங்கொண்டதுபோன்றவரும் தர்மந்தெரிந்தவரும் ஐசுவரியமுள்ளவரும் ஒப்பில்லாத பராக்கிரமமுள்ளவருமாகிய அந்தராஜா தர்மமாகவே பூமிதேவியை ரக்ஷித்தார். அவரை விரோதிப்பவர் யாருமில்லை. அவரும் யாரையும் விரோதிப்பதில்லை. பிரம்மாவைப்போல் எல்லாப்பிராணிகளிடத்தும் வேறுபாடின்றி இருந்தார். ராஜாவே! அந்தராஜாவினுற் செவ்வையாக ஆளப்பட்டுப் பிராமணர்களும் க்ஷத்திரியர்களும் வைசியர்களும் சூத்திரர்களும் ஒற்றுமையுள்ளமனத்தோடு தம்தம்தொழில்களிலிருந்தனர்.

அவர், கணவனிறந்தஸ்திரீகளையும் கதியற்றவர்களையும் அவயவக் குறையுள்ளவர்களையும் தரித்திரர்களையும் காப்பாற்றினர். இரண்டாவதுசந்திரனைப்போலவே எல்லாஜனங்களுக்கும் பார்ப்பதற்கு இனிமையாக இருந்தார். அவருடையஜனங்கள் த்ருப்தியும் ஸம்பத்தும் உள்ளவர்களாக இருந்தார்கள். மிகுந்தஸம்பத்துள்ளவரும் ஸத்திய வாக்கியமுள்ளவரும் ஜயிக்கமுடியாத பராக்கிரமத்தையுடையவருமாகிய அந்தராஜா, வில்வித்தையில் கிருபாசாரியருடைய சிஷ்யராயிருந்தார். ஜனமேஜயரே! மிகுந்தகீர்த்தியுள்ள உமதுபிதா கிருஷ்ணனிடத்துப் பக்தியுள்ளவராகவும் எல்லாஜனங்களிடத்தும் அன்புள்ளவராகவுமிருந்தார். பலசாலியாகிய அந்த அபிமன்யுபுத்திரர் கௌரவர்களெல்லாரும் 'பரிக்ஷயம்' என்னப்பட்ட நாசத்தை அடைந்த பிறகு, உத்தரையினிடத்திற்பிறந்ததனால், பரிக்ஷித்து என்ற பெயருடையவரானர். அவர் ராஜதர்மங்களிலும் தனலாபங்களிலும் ஸமர்த்தர்; ஜாக்கிரதையுள்ளவர்; எல்லாக்குணங்களும் நிரம்பினவர்; இந்திரியங்களை ஜயித்தவர்; மனத்தையடக்கியவர்; சிறந்தபுத்தியுள்ளவர்; தர்மத்தை அனுஷ்டிப்பவர்; காமம், குரோதம, லோபம், மோஹம், மதம், மாத்ஸர்யம்என்ற ஆறுபட்பகைவரையும்ஜயித்தவர்; மேலான அபிப்பிராயமுள்ளவர்; நீதிசாஸ்திரம் அறிந்தவர்களுக்கெல்லாம் சிறந்தவர்; இந்தப்பிரஜைகளை உமதுபிதா அறுபதுவருஷகாலம் பரிபாலனஞ்செய்தார். அதன்பின், எல்லாருக்கும் துக்கத்தை விளைவித்துக்கொண்டு மரணமடைந்தார். புருஷச்ரேஷ்டரே! அவருக்குப்பின் நீர் பால்யமாயிருக்கும்போதே பட்டாபிஷேகம் செய்யப்பெற்றுத் தர்மமாக எல்லாஜனங்களையும் காப்பாற்றிக்கொண்டு குருவம்சக்கிரமமாகவந்த இந்தராச்சியத்தை அநேகமாயிரவருஷங்கள் ஆளும்படி அடைந்திருக்கிறீர்" என்றனர்.

அதற்கு ஜனமேஜயர், "பிரஜைகளுக்கு விருப்பத்தைச் செய்யாதவனும் பிரஜைகளால்விரும்பப்படாதவனுமாகிய ராஜா இந்தக்குலத்தில் ஒருபொழுதுமுண்டானதில்லை. நடையையே முக்கியமாகக்கொண்ட தம் பிதாமஹர்களான பாண்டவர்களுடைய மேலானநடையைப் பார்த்தபிறகும் சொல்லவேண்டுமோ? அப்படிப்பட்டவராகியஎன்பிதா எவ்வாறு மரணமடைந்தார்? நடந்தபடி எனக்குச்சொல்லுங்கள். தெளிவாகக்கேட்கவிரும்புகின்றேன்" என்றுகேட்டார்.

இவ்வாறு ராஜாவினால் கேட்கப்பட்ட அம்மந்திரிகளெல்லாரும் ராஜாவின்பிரியத்தையும் ஹிதத்தையும்விரும்புகிறவர்களாக, நடந்தபடி ராஜாவுக்குச்சொல்லலானார்கள். அதாவது, "ராஜாவே! யுத்தத்

தில் வில்லாளிகளுக்குட் சிறந்தவரும் சிறந்தவன்மையுள்ளவருமாகிய பாண்டுமஹாராஜா எப்படியோ அப்படியே ஆயுதம்பிடித்தவரெல்லாரிலுஞ்சிறந்தவரான உமதுபிதாவாகிய பரிக்ஷித்துமகாராஜாவும் ராஜ்யகாரியங்களேயெல்லாம் எங்களிடம் ஒப்பித்துவிட்டு, எப்போதும் வேட்டையாடுவதேகாரியமாகஇருந்தார். அவர் ஒருகாலத்தில் வனத்துக்குப்போய்ப் பாணத்தினால் ஒருமானையடித்தார்; அடித்தவுடன் கத்திகட்டிக்கொண்டும் வில்லேவளைத்துக்கொண்டும் அந்தப்பெருங்காட்டில் அந்தமானைப் பின்தொடர்ந்து கால்நடையாக விரைந்து சென்றார். காட்டிற் காணுமற்போனமான் உமது பிதாவுக்கு அகப்படவில்லை. அறுபதுபிராயம் நிரம்பி மூப்பையடைந்த அந்தராஜா பசித்துக் களைப்படைந்து அந்தமஹாவனத்தில் ஒரு முனிச்ரேஷ்டரைக்கண்டார். அந்தராஜச்ரேஷ்டர் மௌனவிரதத்திலிருந்தஅம்முனிவரை, "மானைக்கண்டீரோ?" என்றுகேட்டனர். அவர்கேட்டும், அம்முனிவர் அப்போது யாதொன்றும் சொல்லவில்லை. அதன்பின், ராஜா பசியினாலும் சிரமத்தினாலும் பீடிக்கப்படடவராய், மரக்கட்டையைப்போலிருந்து மௌனவிரதம் வஹித்துக்கொண்டிருந்த சாந்தரான அம்முனிவர்மேல் உடனே கோபங்கொண்டார். அம்முனிவர் மௌனவிரதம் அனுஷ்டித்திருப்பதை ராஜாஅறியவில்லை. அந்த உமதுபிதா குரோதத்தினால் ஆவேசங்கொண்டு அவரை அவமானஞ் செய்தார். பரதவம்சசிரேஷ்டரே! இறந்துபோனஸர்ப்பத்தை வில்லின் நுனியினால் பூமியிலிருந்து தூக்கிப் பரிசுத்தமானமனமுள்ள அந்தரிஷியின் தோளிற்போட்டார். அதன்பின், அந்தஞானியானரிஷி அவரைப்பற்றி நல்லதாவது கெட்டதாவது எதுவும்சொல்லவில்லை. கோபியாமல் அப்படியே தோளில் ஸர்ப்பத்தை வைத்துக்கொண்டேயிருந்தார்.

ஐம்பதாவது அத்தியாயம்.

ஆஸ்தீகபர்வம். (தொடர்ச்சி).

(தக்ஷகனுக்கும் காசியபருக்கும் நடந்தவிருத்தாந்தம் தெரிந்தவரலாறு).

ராஜச்ரேஷ்டரே! பசியினாற்களைத்த அந்தராஜா அம்முனிவருடையதோளில் பாம்பைமாட்டி விட்டபிறகு தம்பட்டணத்துக்குத் திரும்பிச்சென்றார். அந்தரிஷிக்குப் பசுவினிடம் பிறந்தவரும் பெருங்கீர்த்திபெற்றவரும் மிகுந்த பிரம்மதேஜஸுள்ளவரும் உக்கிரமான

சக்தியுள்ளவரும் மிகுந்தகோபமுடையவருமாகிய சிருங்கியென்ற புத்திரர் இருந்தார். அந்தச் சிருங்கியென்ற முனிவர் *பிரம்மாவினிடம் போய் அவரைப்பூஜைசெய்தார். ராஜசிரேஷ்டரே! அங்கிருந்து விடைபெற்றுக்கொண்டுவருகையில், அந்தச்சிருங்கி கட்டைபோல் அசைவற்றிருந்த தமதுபிதா யாருக்கும் தீங்குசெய்யாமலிருக்க, அவர்மேல் உமதுபிதா இறந்துபோன பாம்பையெடுத்துமாட்டி அவமானஞ்செய்ததையும் அவர்அதைத் தோளிற்சுமந்திருப்பதையும் தம் ஸ்நேகிதனிடம்கேள்விப்பட்டார். ராஜாவே! அந்தரிஷிச்ரேஷ்டரான சமீகர் மிகச் சிறந்ததவமுள்ளவர்; ஐம்புலன்களையுமடக்கினவர்; பரிசுத்தர்; தமது கருமம்தவறாதவர்; ஆச்சரியமான மஹிமையுள்ளவர்; தவத்தினால் ஆத்மாவை நிர்மலமாக்கிக்கொண்டவர்; தம்முடையு அவயவங்களிலும் மனம்வையாதவர்; இனியசெய்கையும் இனியசொல்லுமுடையவர்; தம்நிலை தவறாதவர்; ஆசையற்றவர்; மஹான்; பொறுமையில்லாதவர்; வயஸு முதிர்ந்தவர். எல்லாப்பிராணிகளையும் ரக்ஷிக்கத்தக்கவரான அவர் மௌனவிரதத்தை வஹித்திருக்கையில் உமதுபிதா அவருக்குத் தீங்குசெய்தார்.

அதன்மேல் மிகுந்த பிரம்மதேஜஸுள்ள சிருங்கி கோபத்துடன் உமதுபிதாவைச் சபித்தார். சிறுபிராயமாக இருந்தபோதிலும் தமது பெரியமஹிமையினால் பெரியவரைப்போல்பிரகாசிக்கின்ற அந்தரிஷிபுத்திரரான சிருங்கி உடனே ஆசமனஞ்செய்து பிரம்மதேஜஸினால் ஜ்வலிப்பவர்போற் கோபத்துடன் உமதுபிதாவை உத்தேசித்து, "அபாதமில்லாத என்பிதாவின்மேல் இறந்தஸர்ப்பத்தை எவன் போட்டானோ அந்தபாவியைக் குரூரமான விஷாக்கினியைப்போலுகூடிய தக்ஷகனாகன், என்சொல்வன்மையினால் தூண்டப்பட்டு, கோபங்கொண்டு இன்றுமுதல் ஏழுநாள்களுக்குள்ளாகத் தன் விஷஜ்வாலையினால் எரித்துவிடுவான். என்தபோபலத்தைப்பார்" என்றுசொன்னார்.

அவர் இவ்வாறு சொல்லித் தம் பிதா இருந்தஇடஞ்சென்று பிதாவைக்கண்டு தாம்கொடுத்த சாபத்தை அவருக்குத்தெரிவித்தார். அவருடைய பிதாவாகிய முனிசிரேஷ்டர் நல்லொழுக்கமுள்ளவரும் குணவானுமாகிய கௌரமுகர் என்றுபெயருள்ள தம்சிஷ்யரை உமது பிதாவினிடம் அனுப்பினர். அந்தக்கௌரமுகரும்வந்து கிரமபரிகாரம் செய்துகொண்டு ராஜாவைப்பார்த்து, "ராஜாவே! என்புத்திரனால்

* பிரம்மா என்பதற்கு ஆசாரியர்என்று பொருள்கொண்டு ஆசாரியரிடம்போய் அவருக்குப் பூஜைசெய்து அவரிடம் விடைபெற்றுக்கொண்டு வீட்டுக்குவந்தார் என்பது பழைய உரை.

சபிக்கப்பட்டிருக்கிறீர். மஹாராஜாவே! தக்ஷகன் உம்மை விஷத்தினால் தஹிக்கப்போகிறான்; ஜாக்கிரதையோடிரும்" என்று குரு சொன்ன எல்லாவற்றையும் சொன்னர். ஜனமேஜயரே! உமதுபிதா அந்தக்கொடிய சொல்லைக்கேட்டு, ஸர்ப்பச்ரேஷ்டனை தக்ஷகனுக் குப்பயந்து தக்கமுயற்சியுடன் இருந்தார்.

அதன்பின், அந்த ஏழாவதுநாள் வந்தபோது காசியபர் என் னும் பிரம்மரிஷி ராஜாவினிடம் போய்க்கொண்டிருந்தார். அப்போது அந்தக்காசியபரைத் தக்ஷகனென்னும் நாகராஜன்கண்டான். அவன் வேகமாகப்போகின்ற அந்தக்காசியபரென்னும் பிராமணரைநோக்கி, "நீர் எங்கே விரைவாகச் செல்லுகிறீர்? என்னகாரியஞ்செய்ய நினைத் திருக்கின்றீர்?" என்றுகேட்க, காசியபர், "ஓ! பிராம்மணா, கௌரவ ச்ரேஷ்டராகிய பரிக்ஷித்தென்னும் ராஜாவினிடம் போகின்றேன்; அவரை இன்றைத்தினம் தக்ஷகனென்னும் நாகன் எரிக்கப்போகி றானும்; அவரைக்கடித்தவுடன் அந்த விஷவேகத்தை நிவிருத்திசெய் வதற்கு நான் வேகமாகப்போகின்றேன்; நான் காப்பாற்றுவதற்கு ஏற்பட்டிருக்கிற ராஜாவை அந்தஸர்ப்பம் அழிக்கமுடியாது" என் றார். அதுகேட்ட தக்ஷகன், "பிராமணரே! நான்தான் அந்தத்தக்ஷ கன்; நான்கடித்தராஜாவை நீர் ஏன் பிழைப்பிக்கவிரும்புகிறீர்? என் னற்கடிக்கப்பட்ட அவ்வரசனைப் பிழைப்பித்தற்கு உம்மாலாகாது; என்னுடைய ஆச்சரியசக்தியைப் பாரும்" என்றுசொல்லி அந்தத் தக்ஷகன் அங்கேயுள்ள ஒருமரத்தைக் கடித்தான். அவன் கடித்த வுடன் அந்தமரம் நீறுகிவிட்டது. ராஜாவே! உடனே காசியபரும் அம்மரத்தைப் பிழைப்பித்தார். பிறகு அவரைத் தக்ஷகன், "உமக்கு வேண்டியதைச்சொல்லும்" என்று ஆசைமூட்ட, அந்தக்காசியபர் இப்படிக்கேட்ட அந்தத்தக்ஷகனைநோக்கி, "நான் திரவியம்கிடைக் குமென்று அவ்விடம் போகிறேன்" என்றுசொன்னர்.

அவரால் இவ்வாறுசொல்லப்பட்ட தக்ஷகன், மஹாத்துமாவான காசியபரைநோக்கி, "ஓ! குற்றமில்லாதவரே! நீர் அரசனிடம்எவ்வளவு தனம் அடையவிரும்புகிறீரோ அதற்கு அதிகமாக என்னிடம்பெற் றுக்கொண்டு திரும்பிப்போம்" என்று நயவசனமாகப்பேசினன். அந்தநாகன் இவ்வாறு சொன்னபின், மனிதர்களுட்சிறந்தவராகிய அந்தக்காசியபர் தக்ஷகனிடமிருந்து தமக்குவேண்டிய அளவு பொ ருளைப்பெற்றுக்கொண்டு திரும்பிப்போனர். அந்தப்பிராமணர் திரும் பிப்போனபின், தக்ஷகன் மாறுவேஷமாகவந்து, தர்மிஷ்டரும் ராஜச் ரேஷ்டருமான உமதுபிதா மாளிகையின்மேல் ஜாக்கிரதையாகவிருந்

தும், அவரைவிஷாக்னியினுல் எரித்துவிட்டான். "புருஷச்ரேஷ்டரே! அதன்பின் நீர் லோகத்தைவசப்படுத்துவதற்காகப் பட்டாபிஷேகஞ் செய்யப்பட்டீர். அரசருட்சிறந்தவரே! உள்ளபடி நாங்கள்கண்டதும் கேட்டதும் இதுதான். இந்த மிகக்கொடியஸமாசாரமெல்லாவற்றையும் நாங்கள் உமக்குவிடாமற்சொன்னேம். புருஷச்ரேஷ்டரே! ராஜாவுக்கும் இந்த உதங்கரிஷிக்கும்நேர்ந்த அவமானத்தைக் கேட்ட பிறகு அதன்மேற் செய்யத்தக்கதைச்செய்யும்" என்று மந்திரிகள் ஜனமேஜயருக்குச் சொன்னர்கள்.

சத்துருக்களையடக்குகிறவராகிய அந்த ஜனமேஜயராஜா, அதே காலத்தில் மந்திரிகளெல்லாரையும்பார்த்து, "மந்திரிகளே! அந்தமரத்தின்விஷயமாக நடந்த வ்ருத்தாந்தம் உங்களுக்கு யாராற்சொல்லப்பட்டது? தக்ஷகனுல் சாம்பற்குவியலாகச்செய்யப்பட்டமரத்தைக் காசியபர் அப்போதேபிழைப்பித்தாரென்பது லோகத்துக்கே ஆச்சரியமானவிஷயம்; காசியபருடையமந்திரங்களினுல் விஷம்போக்கப்பட்டவன் இறக்கமாட்டானென்பது நிச்சயம்; அந்தக் கெடுநினைவுள்ள நாகங்களுக்குள் இழிவானவன், 'என்னுற்கடிக்கபபட்டராஜாவை இந்தப்பிராமணன் பிழைப்பிப்பானுனுல் தக்ஷகனுக்கு விஷம்போய்விட்டதென்று உலகத்துக்குப் பரிஹாஸமாகும்' என்றுமனத்தில்நினைத்துத்தான் அந்தப்பிராமணனைத் திருப்திசெய்வித்திருக்கவேண்டும்; இனி ஓர் உபாயத்தினுல் அவனுக்குத் துன்பத்தைக்கொடுக்கபோகின்றேன்; ஆனுல் அவனுடைய நடையைப்பற்றி ஒன்றுமட்டும்கேட்க விரும்புகின்றேன். மனிதரில்லாதகாட்டில் தக்ஷகனுக்கும் காசியபருக்கும்நடந்த அந்த ஸம்பாஷணையைக்கேட்டதும் அவர்களைப்பார்த்ததும் யார்? அந்தஸமாசாரம் உங்களுக்கு எப்படிவந்தது? இதைக் கேட்டபிறகு அவனுக்காக ஸர்ப்பங்களையே ஒழிக்கின்ற ஆலோசனையைச்செய்வேன்" என்றார்.

மந்திரிமார்கள், "ராஜாவே! பிராமணச்ரேஷ்டரான காசியபரும் தக்ஷகனும் வழியில் ஸந்தித்தவிஷயததை எங்களுக்கு இன்னர் இவ்வாறுசொன்னர் என்பதைச் சொல்லுகிறோம்; கேளும்; ராஜாவே! ஒரு மனிதன் விறகுக்காக அம்மரத்திலுள்ள உலர்ந்தகிளைகளைத் தேடிக்கொண்டு முன்னமே அம்மரத்தில் ஏறியிருந்தான். அவன்மரத்திலிருந்தது தக்ஷகன்காசியபர் இருவருக்கும்தெரியாது. ராஜாவே! அவன் அந்தமரத்தோடுகூடவே நீறுப்பிட்டான். ராஜச்ரேஷ்டரே! காசியபருடைய பிரபாவத்தினுல் அவன் அம்மரத்தோடுகூடவே பிழைத்தான். ஒருபிராமணனுடைய வேலைக்காரனுகிய அவன் திரும்பிவந்து

தக்ஷகன் காசியபர் அவ்விருவருக்கும் நடந்ததை நடந்தபடி எங்களுக்குத்தெரிவித்தான். ராஜாவே! இந்தவிஷயம் எப்படிக்காணப்பட்டது; எப்படிக் கேட்கப்பட்டதென்பதை நாங்கள் உமக்குச்சொன்னேம்; ராஜச்ரேஷ்டரே! இதைக்கேட்டபிறகு மேல்நடக்கவேண்டியதைச்செய்யும்" என்றனர்.

இவ்வாறு மந்திரிகள் சொன்னதைக்கேட்டு அந்தஜனமேஜயராஜா கையாற் கையைப்பிசைந்துகொண்டு துக்கத்தினால் மிகவும் பரிதபித்தார்; தாமரைக்கண்ணினராகிய ராஜா அடிக்கடி உஷ்ணமான பெருமூச்சுவிட்டுக்கொண்டு கண்ணால் நீர்த்துளிகளைச் சொரிந்து அழுதார்; அவமானத்தால் மனஸ்தாபமும் பிதா இறந்துபோனதனால் வ்யஸனமுமுற்ற அந்த ஜனமேஜயராஜா நிறுத்தமுடியாத கண்ணீரை விட்டபிறகு சாஸ்திரப்பிரகாரம் ஜலத்தினால் முகத்தைக்கழுவி ஆசமனஞ்செய்து சற்றுநேரம் கோபத்துடன் மனத்தில் ஆலோசனை செய்து ஒரு நிச்சயஞ்செய்துகொண்டு, மந்திரிகள் எல்லாரையும் நோக்கி அடியில்வருமாறு சொல்லலானார்:—

"எனதுபிதா ஸ்வர்க்கம்போனதைப்பற்றி நீங்கள்சொன்னதைக் கேட்டபிறகு, எனக்குண்டான உறுதியான அபிப்பிராயத்தை நீங்கள் கேளுங்கள்; துராத்துமாவானதக்ஷகனுக்குப் பிரதித் தீங்குசெய்வதுதான் அடுத்துச்செய்யத்தக்ககாரியமென்று நான் நினைக்கிறேன்; அவன் சிருங்கியென்னுமரிஷியைக் காரணமாகமாத்திரம் வைத்துக்கொண்டு ராஜாவாகியஎன்பிதாவை எரித்துக்கொன்றவன்; காசியபரைத்திருப்பினதும் அவனுடையதுஷ்டத்தனம்; அந்தப்பிராமணர் வந்திருப்பாரானால் என்பிதா ஜீவித்திருப்பரே; காசியபருடைய அனுக்கிரகத்தினாலும் காசியபருக்கு மந்திரிகள் உபசரிப்பதனாலும் அந்த ராஜா ஜீவித்திருந்தால், அந்தத்தக்ஷகனுக்கு என்னகுறைந்துபோம். யாவரிடத்திலும் தோல்வியடையாத ராஜாவைப் பிழைபபுமூட்டவந்த பிராமணச்ரேஷ்டராகிய காசியபரை அவன் கர்வத்தினால் தடுத்தானல்லவா? ராஜாவைப் பிழைப்புமூட்டாமலிருக்கவேண்டுமென்று அந்தப்பிராமணருக்குத் திரவியங்கொடுத்ததும் துராத்துமாவான தக்ஷகன்செய்த பெரிய அநியாயமல்லவா? உதங்கருக்கும் எனக்கும் உங்களெல்லாருக்கும் மிகுந்த பிரியமானகாரியத்தைச்செய்து என் பிதாவிஷயத்தில் பகைதீர்ப்பதாகிய மரியாதையைச் செய்யப்போகிறேன்" என்றார்.

ஐம்பத்தோராவது அத்தியாயம்.

ஆ ஸ் தீ க பர் வ ம். (தொடர்ச்சி).

(ஜனமேஜயர் ஸர்ப்பயாகம்செய்தது).

ஸ்ரீமானுகிய ராஜா இவ்வாறுசொல்லி, மந்திரிகள் அங்கீகரித்த பிறகு, ஸர்ப்பஸத்ரத்துக்காகப் பிரதிஜ்ஞைசெய்தார். பிராமணரே! பேசுகிறவரிற்சிறந்தவரும் பரதச்ரேஷ்டரும் பரிக்ஷித்தின்புத்திரருமாகிய ஜனமேஜயராஜா புரோஹிதரையும் ரித்விக்குக்களையும் அழைத்து, தாம் நினைத்தகாரியம் நிறைவேறுவதற்குத் தகுந்தசொல்லைச் சொல்லத்தொடங்கினார்:

"எனதுபிதாவை ஹிம்ஸித்த துராத்துமாவான தக்ஷகனுக்கு நான் எவ்விதமான பிரதிசெய்யலாமென்பதை நீங்கள் எனக்குச் சொல்லுங்கள்; அந்தத் தக்ஷகனென்னும் நாகனைப் பந்துக்களுடன் ஜ்வலிக்கிற அக்னியில் எந்தக்கிரியையினால் போடுவேனோ அந்தக் கிரியை உங்களுக்குத் தெரியுமா? அவன் என்பிதாவை விஷாக்னியினால் எவ்வாறு தஹித்தானோ அவ்வாறே அந்தப்பாபியான ஸர்ப்பத்தைத் தஹிக்கவிரும்புகிறேன்" என்றுராஜாசொல்ல, ரித்விக்குக்கள், "ராஜாவே! தேவர்களால் ஏற்படுத்தப்பட்டதும் ஸர்ப்பஸத்ரமென்று பெயர்பெற்றதும் *புராணங்களிற் சொல்லப்பட்டதுமாகிய ஒரு பெரியயாகம் உம்முடைய காரியத்திற்கு ஸாதகமாக இருக்கிறது. ராஜாவே! அந்த ஸத்ரயாகஞ்செய்யத்தக்கவர் உம்மைவிட வேறு யாருமில்லையென்றும் பௌராணிகர்கள் சொல்லுகின்றனர். அந்தயாகம் நமக்கு ஸாதகமாயிருக்கின்றது" என்றனர்.

ஸாதுச்ரேஷ்டரே! இப்படி அவர்களால் தெரிவிக்கப்பட்ட அந்தராஜரிஷியானவர், தக்ஷகன் ஜ்வலிக்கிற அக்னிக்குள் விழுந்து எரிக்கப்பட்டுப்போனதாகவே நினைத்தார். பிறகு, ராஜா, மந்திரங்கள்தெரிந்த அந்தப்பிராமணர்களைநோக்கி, "அந்தஸத்ரயாகத்தை நான் செய்யப்போகிறேன்; சேர்க்கவேண்டிய ஸாமக்ரிகளைச் சேர்க்கவேண்டும்" என்றுசொன்னார். பிராமணச்ரேஷ்டரே! பிறகு அந்த ரித்விக்குக்கள் யாகசாலைகட்டுவதற்காக அதற்குவேண்டிய இடத்தைச் சாஸ்திரப்பிரகாரம் அளக்கச்செய்தனர். அவர்களெல்லாரும்

* ஜனமேஜயர்என்ற பெயருள்ளவர் ஸர்ப்பயாகம் செய்ததாகப் பூர்வ கல்பசரித்திரங்களில் கேட்டபடி உமக்குப்பெயரும் ஸர்ப்பயாகத்திற்குக் காரணமும் அமைந்திருக்கின்றன என்பது.

வேதங்களைச் சரியாக அறிந்தவர்கள்; புத்தியிற்சிறந்தவர்கள்; அவர்கள் மிகச்சிறப்புள்ளதும் ராஜாவுக்குப்பிரியமும் அநேகபிராமணர் சேர்ந்ததும் தனங்களும் தானியங்களும் மிகுதியாகநிறைந்ததும் ரித்விக்குக்கள் ஸுகமாகஇருக்கத்தக்கதுமாகியஅழகான யஜ்ஞசாலையைச் சாஸ்திரப்பிரகாரம் கட்டுவித்து, பிறகு ராஜாவுக்கு ஸர்ப்பயாகஞ்செய்யத் தீக்ஷைசெய்வித்தனர். அந்த யஜ்ஞசாலை கட்டும்போது சிறந்த புத்தியுள்ளவனும் வீடுகட்டுகிறவித்தையில் நிபுணனுமாகிய ஒரு ஸ்தபதி, "இந்த ஒருபெரிய நிமித்தம் உண்டாயிருக்கிறது; இது வரப்போகிற ஸர்ப்பயாகத்துக்கு விக்னம் நேரிடுவதை முன்னமே தெரிவிக்கின்றது" என்றுசொன்னன். வேலைக்கு நூல்பிடிக்கிற தலைவனும் புராணங்கள் தெரிந்தவனும் ஸூதஜாதியிற்பிறந்தவனுமாகிய அந்த சில்பி நிலஅளவுநடந்த இடத்தையும் காலத்தையும்பார்த்துச் சொன்னதாவது, "ஒருபிராமணன் காரணமாக இந்தயாகம் முடிவுபெறுமற்போகும்" என்பது. அந்தராஜா இதைக்கேட்டு, தீக்ஷை செய்வதற்குமுன்னேயே துவாரபாலகனைநோக்கி, "எனக்குத்தெரியாமல் யாரும்உள்ளேபிரவேசிக்கக்கூடாது" என்றுகட்டளையிட்டார்.

ஐம்பத்திரண்டாவது அத்தியாயம்.

ஆஸ்தீகபர்வம். (தொடர்ச்சி).

(ஸர்ப்பங்கள அக்னியில்விழுந்தது).

பிறகு ஸர்ப்பயாகம்செய்வதற்குவேண்டிய கிரியை ஆரம்பிக்கப்பட்டது. யாகஞ்செய்விக்கிறவர்கள் சாஸ்திரப்படி தம்தம்வேலைகளில் பிரவர்த்தித்தனர். கறுப்புவஸ்திரங்களைப் போர்த்துக்கொண்டு, புகையினுற்கிவத்தகண்களுடன், ஜ்வலிக்கும் அக்னியில் மந்திரபூர்வகமாக ஹோமஞ்செய்தனர். அப்போது ஸர்ப்பங்களெல்லாவற்றையும் அவற்றின்மனம் நடுங்கும்படி அக்னியின்முன்னிலையில் அழைத்தனர். பின்பு ஸர்ப்பங்கள், ஜ்வலிக்கிற அக்னியில் வந்து விழுந்தன. துடித்துக்கொண்டும் தீனஸ்வரமாக ஒன்றையொன்று கூப்பிட்டுக்கொண்டும் படமெடுத்துச் சீறிக்கொண்டும் தலைகளினுலும் வால்களினுலும் ஒன்றையொன்று கெட்டியாகச்சுற்றிக்கொண்டும் அக்னியில்விழுந்தன. வெளுப்புநிறமும் கறுப்புநிறமும் நீலநிறமுமான ஸர்ப்பங்கள், கிழங்களும் குட்டிகளுமாகப் பலவிதமாக இரைச்சலிட்டுக்கொண்டு ஜ்வலிக்கும் அக்னியில் விழுந்தன. அக்னி

மஹாத்மாக்களிற்சிறந்த சௌனகரே! பசுவின்காதைப்போல் அடிசிறுத்து நடுப்பருத்து நுனிசிறுத்த வடிவமுள்ள, ஒருகுரோசதீளமும் ஒருயோசனைநீளமுமான நாகங்கள் இடைவிடாமல் வேகமாக அக்னியில் விழுந்துகொண்டிருந்தன. இவ்வாறு லக்ஷக்கணக்காகவும் பத்துலக்ஷக்கணக்காகவும் பத்துக்கோடிக்கணக்காகவும் ஸர்ப்பங்கள் அந்த யாகத்தில் தங்கள் ஸ்வாதீனம்தப்பி அழிந்தன; குதிரைகள் போலச் சிலவும் யானைத்துதிக்கைகள்போலச் சிலவும் மதயானைகள் போல் பெரியஉடலுள்ளவைசிலவுமாக, மிகுந்த பலமுள்ளவையும் ஈட்டிகளைப்போலப் பயத்தைச்செய்வனவும் கொடியவிஷமுள்ளவையுமானபலநிறமுள்ள ஸர்ப்பங்கள் தாபார்சாபமென்னும் தடியினலடிக்கப்பட்டுக் கணக்கில்லாமல் அக்னியில்விழுந்தன.

ஐம்பத்துமூன்றுவது அத்தியாயம்.

ஆஸ்தீகபர்வம். (தொடர்ச்சி).

(வாஸுகி தன்ஸஹோதரியான ஜரத்காருவினிடம் முறையிடுவது).

சௌனகர், "அன்பராகிய ஸூதபுத்திரரே! பாண்டவவம்சத்திற்பிறந்தவரும் சிறந்தபுத்திமானுமாகிய ஜனமேஜயராஜாவின் அந்த ஸர்ப்பயாகத்தில் ரித்துவிக்குக்களாகஇருந்த பெரியரிஷிகள் யார்? ஸர்ப்பங்களுக்கு மிகுந்தபயத்தையும் துன்பத்தையும் விளைவிக்கும் அந்த மிக்கபெரிய ஸர்ப்பயாகத்தில் ஸபையிலிருந்தவர் யார்? ஸர்ப்பயாகஞ்செய்கிற ராஜரிஷிகளாக நாம் அறியத்தக்கவர் யார்? எல்லாவற்றையும் விரிவாக நீர் சொல்லக்கடவீர்" என்றுகேட்க, ஸூதபுத்திரர் சொல்லத்தொடங்கினர்:—

"நன்று நன்று; அப்போது ஜனமேஜயராஜாவின் ரித்துவிக்குக்களும் ஸதஸ்யர்களுமான ஞானவான்களின் பெயர்களை உமக்குச்சொல்வேன். அந்தயாகத்தில் சியவனர்வம்சத்திற் பிறந்தவரும் வேதந்தெரிந்தவர்களுக்கெல்லாம் சிறந்தவருமான சண்டபார்க்கவரென்று கியாதிபெற்ற பிராமணர் மஹாதாவாகவும், வருத்தரும் வித்வானும் குத்ஸவம்சத்திற் பிறந்தவருமான ஜைமினியென்னும் பிராமணர் உத்காதாவாகவும், சார்ங்கரவர் பிரம்மாவாகவும், பிங்களர் அத்வர்யுவாகவும் இருந்தார்கள். புத்திரனோடும் சிஷ்யர்களோடும்கூடின வியாஸர், உத்தாலகர், பிரமதகர், சுவேதகேது, பிங்களர், அஸிதர், தேவலர், நாரதர், பர்வதர், ஆத்ரேயர், குண்டர், ஜடார், காலகடரென்னும் பிரா

மணர், வத்ஸகோத்திரத்தாரும் வ்ருத்தரும் ஜபமும் வேதாத்தியயன மும் நல்லொழுக்கமுமுள்ளவருமாகிய ச்ருதசிரவஸ் என்பவர், கோஹலர், தேவசர்மா, மௌத்கல்யர், ஸமஸௌரபர் ஆகியஇவர்களும், வேதங்களிற்கரைகண்ட இன்னும் அநேகபிராமணர்களும் ஜனமேஜயருடைய அந்தயாகத்தில் ஸபையிற்சேர்ந்தவர்களாக இருந்தார்கள்.

அந்தஸர்ப்ப ஸத்ரமென்னும் பெரியயாகத்தில் ரித்துவிக்குக்கள் ஹோமஞ்செய்கையில் எல்லாப்பிராணிகளுக்கும் பயத்தையுண்டுபண்ணும் கொடியஸர்ப்பங்கள் அதில்வந்து விழுந்தன. ஸர்ப்பங்களுடைய ஊன்ஜலத்தையும் கொழுப்புக்களையும்அடித்துவருகிற வாய்க்கால்கள் ஓடின. அப்போது இடைவிடாமல் எரிக்கப்படுகின்ற நாகங்களின் நாற்றம் மிகுதியாக வீசியது. விழுந்துகொண்டும் ஆகாசத்தில் நின்றுகொண்டும் அக்னியிலில் மிகுதியாக எரிக்கப்படுகின்ற நாகங்களின் சப்தம் இடைவிடாமற்கேட்கப்பட்டது. அந்த ஜனமேஜயராஜா தீக்ஷைசெய்துகொண்டதைக்கேட்டதும், அந்த நாகராஜாவான தக்ஷகன் இந்திரனுடைய க்ருஹத்துக்குச்சென்றான். தான் குற்றஞ்செய்ததனாற் பயந்திருந்த தக்ஷகன் நடந்ததையெல்லாம் நடந்தபடி இந்திரனுக்குச் சொல்லி அப்போது அவனிடத்தில் சரணாகதிசெய்தான். இந்திரன் மிக்கஅன்புடன் அவனைநோக்கி, "நாகராஜாவே! தக்ஷகா! அந்தஸர்ப்பயாகத்தில் உனக்கு ஒருபொழுதும் பயமில்லை; உனக்காக முன்னமே பிரம்மதேவரை வேண்டிக்கொண்டிருக்கிறேன்; ஆதலால் உனக்குப் பயமில்லை; உன்மனத்தின்தாபம்நீங்கட்டும்" என்று சொன்னான்.

இப்படி இந்திரனால் தேற்றப்பட்ட அந்த ஸர்ப்பராஜன் ஸந்தோஷத்துடன் அந்த இந்திரக்ருஹத்தில் ஸுகமாகஇருந்தான். நாகங்கள் அக்னியில் இடைவிடாமல் விழுந்துகொண்டிருக்கும்போது, தன் பரிஜனங்களில் சிலர்மட்டும் மிகுந்திருப்பதைக்கண்டு மிகுந்த துக்கத்துடன் வாஸுகி பரிதபித்தான். நாகராஜனுவாஸுகிக்குக் கஷ்டமானமூர்ச்சை உண்டாயிற்று. நடுங்கினமனத்துடன் தன் ஸஹோதரியைப்பார்த்து அடியில்வருமாறு சொல்லத்தொடங்கினான்:—

"பிரியமானவளே! என்அங்கமெல்லாம் எரிகின்றது; எனக்குத் திசைதெரியவில்லை; மூர்ச்சையினால் விழுந்தவன்போலிருக்கிறேன், என்மனம் நிலையற்றிருக்கிறது; என்கண் மிகவும் சுழலுகின்றது; மனம் வெடிப்பதுபோலிருக்கின்றது. இப்போது நான் ஸ்வாதீனம் தப்பி அந்த நெருப்பில் விழப்போகிறேன்; ஜனமேஜயனுடைய இந்தயாகம் எங்களைக் கொல்வதற்காகவே நடக்கின்றது; நிச்சயமாக நான் யமன்வீட்டுக்குப்போகவேண்டும். என்ஸஹோதரியே! எதற்

காக உன்னை ஜரத்காருவுக்குக்கொடுத்தேனே அதற்குக் காலம் இதோநேர்ந்திருக்கிறது. நம்மையும் நம்பந்துக்களையும் நீ காப்பாற்றுவாயாக. நாககன்னிகைகளுட்சிறந்தவளே! அந்தயாகம் நடக்கும் போது ஆஸ்தீகன்தான் நிறுத்தப்போகிறானென்று பிரம்மா முன்னே நேரில் எனக்குச் சொல்லியிருக்கிறார். குழந்தாய்! ஆதலால், சிறு வனுயிருந்தாலும் வருத்தனைப்போல் கௌரவிக்கப்பட்ட சிறந்தவேத வித்தாகிய உன்புத்திரனிடம் என்னையும் என்பரிஜனங்களையும் விடுவிக்கும்படி சொல்லக்கடவாய்" என்றுசொன்னன்.

ஐம்பத்துநான்காவது அத்தியாயம்.

ஆஸ்தீகபர்வம். (தோற்சீ).

(ஆஸ்தீகர் ஜனமேஜயருடைய யாகசாலைக்குச்சென்றது).

நாகராஜாவாகிய வாஸுகியின் அந்தச்சொல்லைக்கேட்டு நாக கன்னிகையாகிய ஜரத்காருவானவள் தன்புத்திரனையழைத்து, "புத்திரனே! என்னுடைய பிராதா ஒருகாரணம்பற்றி என்னை உன்பிதாவுக்குக் கன்னிகாதானஞ்செய்தான். அதற்குக்காலம் இப்போதுதேர்ந்திருக்கிறது. நீ அந்தக்காரியத்தை எப்படிச் செய்யவேண்டியதோ அப்படிச்செய்வாயாக" என்றுசொன்னாள். அதற்கு ஆஸ்தீகர், "என் மாதுலன் என்பிதாவுக்கு உன்னைக் கன்னிகாதானஞ்செய்ததற்குக் காரணம்யாது? அதைத்தெளிவாக எனக்குச்சொல்; கேட்டபின் அதை அப்படியே செய்வேன்," என்றுகேட்க, வாஸுகியின் ஸோதரியான அந்தஜரத்காரு, தன்பந்துக்களுக்கு நன்மையைவிரும்புகின்றவளாய், நம்பிக்கையுடன் தன்புத்திரனுக்கு அந்தவிஷயத்தைச் சொல்லத்தொடங்கினாள்.

"எல்லாநாகர்களுக்கும் தாயானவள் ஜத்ருவென்று பெயர் பெற்றவள்; அவள் சகோதரிகளைச்சபித்ததற்குக் காரணத்தைச் சொல்லுகிறேன்; கேள். 'புத்திரர்களே! நான் வினதைக்கு அடிமையாகும்படி பந்தயஞ்செய்திருக்க, அந்த உச்சைச்சரவமென்னும் அச்வராஜாவுக்குப் பொய்ரூபத்தை நீங்கள் செய்யாமையினால் ஜனமேஜயர்செய்யப்போகிற யாகத்தில் உங்களை அக்னிஎரித்துவிடும்; அதில் மரணமடைந்து யமலோகப்போவீர்கள்' என்றுசபித்தாள். அவள்சபித்ததை உலகத்துக்கெல்லாம் ஸ்ருஷ்டிகர்த்தா

வாகியபிரம்மதேவர், 'அப்படியேஆகட்டும்' என்று தாமும்சொல்லி, அவள்சொன்னதை அங்கீகரித்தார். குழந்தாய்! அப்போது பிரம்மா சொன்னதைக்கேட்ட வாஸுகியும் அமிர்தங்கடைந்தபின் தேவர் களைச் சரணமடைந்தான். எல்லாவற்றிலும் உயர்ந்ததாகிய அமிர்தம் கிடைத்தபின், கிருதார்த்தர்களாயிருந்த தேவர்களனைவரும் என் ஸஹோதரனைமுன்னிட்டுக்கொண்டு பிரம்மதேவரிடம் சென்றனர். அந்தத்தேவர்களெல்லாரும் ஸர்ப்பராஜாவாகிய வாஸுகியோடுகூடப் பிரம்மாவைப்பார்த்து, 'பகவானே! இந்த நாகராஜாவான வாஸுகி, தன் உறவினர்களைக்குறித்துத் துன்பமடைகிறான்; தாயார்கொடுத்த அந்தச்சாபம்வராமலிருக்கவேண்டும்; அதற்குஉபாயம் என்ன?'என்று வேண்டிக்கேட்டனர். அதற்குப் பிரம்மதேவர், 'ஜரத்காருவென்ப வர் ஜரத்காருவென்பவளை மனைவியாக அடையப்போகிறார்; அவர்க ளுக்குப்பிறக்கும் புத்ரனாகிய பிராமணன் ஸர்ப்பங்களைச் சாபத்தினின் றும் விடுவிக்கப்போகிறான்' என்றார். தேவதையைப்போன்றவனே! இப்படிப் பிரம்மாசொன்னதைக்கேட்டு, நாகராஜாவான வாஸுகி அக் காலம் வருவதற்குமுன்னே மஹாத்மாவான உன்பிதாவுக்கு என்னைக் கன்னிகாதானஞ்செய்தான். அவருக்கு என்னிடத்தில் நீ பிறந் தாய். அந்தக்காலம் இப்போது வந்திருக்கிறது. நீ பயத்திலிருந்து எங்களைக் காப்பாற்றவேண்டும். என்ஸஹோதரனையும் அந்த அக்னி யிலிருந்து ரக்ஷிப்பாயாக. என்ஸஹோதரன் தன்னை விடுவிப்பதற் காகச் சிறந்தஞானமுள்ளவராகிய உன்பிதாவுக்கு என்னைக்கொடுத் தது வீணாகாமலிருக்கும்படி நீ செய்யவேண்டும். புத்திரனே! நீதான் என்னநினைக்கிறாய்?" என்றாள்.

இவ்வாறு அவள்சொல்ல, அந்தஆஸ்தீகர், "அப்படியே ஆகட் டும்" என்று தம் மாதாவுக்குச்சொல்லி, அப்போதே துக்கத்தினால் பரிதபித்துக்கொண்டிருக்கும் வாஸுகியைநோக்கிப் பிழைப்பிக்கிற வர்போற் பேசினார்: "நாகராஜாவாகிய வாஸுகியே! சிறந்தபல வானே! நான் உன்னை அந்தச் சாபத்திலிருந்து விடுவிப்பேன்; இதை ஸத்யமாக உனக்குச்சொல்லுகிறேன்; நாகனே! நீ மனக் கலக்கம் அடையாதே; உனக்குப்பயமில்லை; ராஜாவே! எவ்விதமாக நன்மையுண்டாகுமோ, அவ்விதமாகவே முயல்வேன்; என்வாக்கு விளையாட்டுக்களிலும் பொய்சொன்னதில்லை; மற்றப்பொழுது சொல் வதேது; மாதுலனே! ஸர்ப்பச்ரேஷ்டனே! இப்போது யஜ்ஞ தீக்ஷைசெய்துகொண்டிருக்கும் ராஜச்ரேஷ்டனாகிய அந்தஜனமே ஜயனிடஞ் சென்று, எப்படியானால் அந்த ராஜாவின்யாகம் நின்று

போய்விடுமோ, அப்படியாக மங்களவாக்கியங்களினால் த்ருப்தியடைவிக்கப்போகிறேன்; நாகராஜாவே! சிறந்தபுத்தியுள்ளவனே! நீ என்னிடத்தில் எதையும் எதிர்பார்க்கலாம்; என்னிடத்தில் நீ வைத்த நம்பிக்கை ஒருபொழுதும் பொய்யாகாது" என்றார். அதற்கு வாஸுகி, "ஆஸ்தீகனே! நடுங்குகிறேன்; என்ஹ்ருதயம் வெடிக்கின்றது; பிரம்மாவின்தண்டனையாகிய சாபத்தினற் பீடிக்கப்பட்டுத் திசைதெரியாமலிருக்கிறேன்" என்றுசொல்ல, ஆஸ்தீகர், "நாகச்ரேஷ்டனே! நீ எவ்வகையிலும் பரிதாபப்படவேண்டாம்; ஜ்வலிக்கிற அக்னியினால் உனக்குண்டானபயத்தை நான்ஒழித்துவிடுவேன்; ப்ரளயகாலாக்னிக்கொப்பான சக்தியுள்ள பிக்கபயங்கரமான *பிரம்மாவின் தண்டனையைபழிப்பேன்; நீ எவ்வகையிலும் இந்தவிஷயத்தில் அச்சமடையவேண்டாம்" என்றுசொன்னார்.

பிறகு,பிராமணசிரேஷ்டராகிய ஆஸ்தீகர் வாஸுகியினுடைய தாங்கக்கூடாதமனஸ்தாபத்தைநீக்கி, அதைத் தன்அங்கங்களிலேற்றுக்கொண்டு, நாகச்ரேஷ்டர்களைவிடுவிப்பதற்காக எல்லாச்சிறப்புக்களும் நிரம்பின அந்தஜனமேஜயயாகத்திற்கு மிகவிரைவாகப்போயினர். அந்தஆஸ்தீகர்சென்று ஸூர்யனுக்கும் அக்னிக்கும்ஒப்பான தேஜஸுள்ள அநேகர்கள் ஸபையிற்சேர்ந்திருந்த அந்தஉயர்ந்தயஜ்ஞசாலையைக்கண்டார். விரோதிகளுக்குத் துன்பமுண்டாக்கத்தக்க அந்தபிராமணசிரேஷ்டர் அங்கே பிரவேசிக்கும்போது துவாரபாலர்கள் தடுக்க,தாம் உள்ளேபோவதற்காக அந்தயஜ்ஞத்தைக்குறித்து ஸ்துதிசெய்தனர். புண்யகர்மஞ்செய்பவர்களுக்கெல்லாம் சிறந்தவராகிய அந்தப் பிராமணோத்தமர் மிகச்சிறந்ததாகிய யாகசாலையையடைந்து, அளவற்றகீர்த்தியுள்ள ராஜாவையும் ரித்விக்குக்களையும் ஸபையோர்களையும் அக்னியையும் ஸ்துதித்தார்.

ஐம்பத்தைந்தாவது அத்தியாயம்.

ஆ ஸ் தீ க ப ர் வ ம். (தொடர்ச்சி).

(ஜனமேஜயரைப்பற்றி ஆஸ்தீகர் செயதஸ்தோத்திரம்).

"பிரயாகையில் சந்திரனுடையயாகமும் வருணனுடையயாகமும் பிரம்மாவினுடைய யாகமும் நடந்தன. † பரிக்ஷித்தின்புத்ரரே!

* பிரம்மா சொன்னவாக்கு.

† இப்படிப்பலமுறை விளித்துக்கூறியது, அரசன் மனத்தில் இரக்கமுண்டாவதற்காகவென்று தோன்றுகிறது.

பரதகுலச்ரேஷ்டரே! உமது இந்தயாகம் அப்படியேயிருக்கின்றது. * நம்அன்பர்களுக்கு க்ஷேமமுண்டாகக்கடவது. இந்திரனுடையயாக ங்கள் நூற்றுக்கணக்காகச் சொல்லப்பட்டிருக்கின்றன. அந்த நூற் றுக்கணக்கை மற்றொரு நூறுஸங்கியையாக்கினால் கூடிய பதினாயிரம் யாகங்களுக்கு ஸமானமாக உமதுயாகம் இருக்கிறது. பரதகுலச்ரே ஷ்டரே! பரிக்ஷித்தின்புத்ரரே! நம்அன்பர்களுக்கு க்ஷேமமுண்டாகக் கடவது. யமனுடையயாகமும் ஹரியினிடத்தில் பக்தியுள்ளவனுகிய ரந்திதேவனென்னும் ராஜாவின்யாகமும் எப்படியிருந்தனவோ அப் படியே இந்த உம்முடையயாகமும் இருக்கிறது. பரதகுலச்ரேஷ்டரே! பரிக்ஷித்தின்புத்ரரே! நம்அன்பர்களுக்கு க்ஷேமமுண்டாகக்கட வது. கயன், சசபிந்து என்றராஜாக்களினுடைய யாகங்களும் யக்ஷ ராஜாவான குபேரனுடையயாகமும் எப்படியோ அப்படியே இந்த உமதுயாகமும் இருக்கிறது. பரதகுலச்ரேஷ்டரே! பரிக்ஷித்தின்புத் ரரே! நம்அன்பர்களுக்கு க்ஷேமமுண்டாகக்கடவது. நிருகனென்னும் ராஜாவினுடையயாகமும் அஜமீடராஜாவின்யாகமும் தசரதபுத்ரரா கிய ராமருடைய யாகமும் எப்படியிருந்தனவோ அப்படி யே இந்த உமதுயாகமும் இருக்கின்றது. பரதகுலச்ரேஷ்டரே! பரிக்ஷித்தின்புத் ரரே! நம்அன்பர்களுக்கு க்ஷேமமுண்டாகக்கடவது. தர்மதேவதை யின் புத்ரரும் அஜமீட வம்சத்தினருமாகிய யுதிஷ்டிரராஜாவின்யாகம் தேவலோகத்திற் பெயர்பெற்றது; இந்த உம்முடையயாகமும் அப் படியேயிருக்கிறது. பரதகுலச்ரேஷ்டரே! பரிக்ஷித்தின் புத்ரரே! நம்அன்பர்களுக்கு க்ஷேமமுண்டாகக்கடவது. ஸத்யவதியின்புத்ரரா கிய கிருஷ்ணரென்று சொல்லப்பட்ட வியாஸருடையயாகம் நடந்தது; அதில் அவரே கிரியைகளைச்செய்தார்; உமது இந்தயாகமும் அதைப் போலவேயிருக்கிறது. பரதகுலச்ரேஷ்டரே! பரிக்ஷித்தின்புத்ரரே! நம் அன்பர்களுக்கு க்ஷேமமுண்டாகக்கடவது. ஸூர்யனுக்கொப் பான தேஜஸ்ஸுள்ள இந்தரித்விக்குக்கள் இந்திரயாகத்தில்இருந்தவர் கள்போலிருக்கின்றனர்; இவர்களுக்கு இணிஅறியவேண்டியதுஒன்று மில்லை; இவர்களுக்குச்செய்யும்தானம் என்றும் அழியாது. த்வைபா யனருக்கு ஒப்பான ரித்துவிக்கு எந்தலோகத்திலும் யாருமில்லையென் பது எனக்குநன்றாகத்தெரியும். தம்தம்காரியங்களில்ஸமர்த்தர்களாகப் பூமியெங்கும் ஸஞ்சரிக்கின்ற எல்லா ரித்விக்குக்களும் அவருடைய சிஷ்யர்கள் தாம். ஒளியையே தனமாகவுடையவரும் பலவர்ணமான

* நம்அன்பர்களுக்கு என்பதற்கு ராஜாரித்விக்குகள்முதலியவர்களுக்கு என்றும் நாகர்களுக்கென்றும் இரண்டுபொருள்தோன்றும்.

கிரணங்களையுடையவரும் மஹாத்மாவும் பொன்னை வீரியமாகவுடையவரும் ஹோமஞ்செய்ததைப்புசிப்பவருமாகிய அக்னிபகவான் பிரதக்ஷிணமாகத்திரும்புகின்றஜ்வாலையுடன் ஜ்வலித்துக்கொண்டு உமது இந்தஹவிஸைஆசையுடன்வாங்கிக்கொள்ளுகிறார். இந்தமனுஷ்யலோகத்தில் பிரஜைகளைப் பரிபாலனஞ்செய்யத்தக்காஜா உம்மைப்போல் வேறொருவருமில்லை. உம்முடைய தைரியத்தைப்பற்றி நான் எப்போதும் மனத்தில் ஸந்தோஷமடைகிறேன். நீரும் வருணனும் யமனுந்தாம் தர்மத்துக்குராஜாக்கள். மனுஷ்யர்களுக்கெல்லாம் இந்திரனே! வச்சிராயுதத்தைக் கையில்தரித்துக்கொண்டிருக்கிற தேவேந்திரன் நேரே வந்ததுபோல் நீர் இந்தலோகத்தில் பிரஜைகளைக்காப்பாற்றுகிறீரென்று நினைக்கிறோம். இந்தஉலகத்தில் உம்மைத்தவிர வேறு ராஜா இப்போதுமில்லை; முன்னுமில்லை. கட்வாங்கனுக்கும் நாபாகனுக்கும் திலீபனுக்கும் ஒப்பானவரே! யயாதிக்கும் மாந்தாதாவுக்கும் ஸமானமான சக்தியுள்ளவரே! ஸூர்யனுடைய பிரகாசம்போன்ற பிரகாசமுடைய நீர் பீஷ்மரைப்போல் உறுதியானவிரதமுள்ளவராக விளங்குகின்றீர். உம்முடையசக்தியானது வால்மீகியின் சக்தியைப்போல் ஆழ்ந்திருக்கிறது. உமதுகோபம் வஸிஷ்டருடையகோபம்போல் அடக்கப்பட்டிருக்கிறது. உம்முடைய பிரபுத்துவம் இந்திரபதத்துக்கு ஸமானமென்று நான் நினைக்கிறேன். உமதுமஹிமை நாராயணனுடையமஹிமையைப்போல் விளங்குகின்றது. தருமத்தின் நிச்சயத்தைஅறிவதில் யமனைப்போலவும், எல்லாக்குணங்களும் நிரம்பினவராகவும் லக்ஷ்மிக்கு இருப்பிடமாகவுமிருப்பதில் விஷ்ணுவைப்போலவும் இருக்கிறீர். நீர் ஸம்பத்துக்களுக்கு நிதியாக இருப்பதுபோலவே யாகங்களுக்கும்நிதியாகஇருக்கிறீர். பலத்தில் தம்போத்பவனென்னும் ராஜாவுக்கு ஸமானமாயிருக்கிறீர். ராமனைப்போல் அஸ்திரங்களும் சஸ்திரங்களும் தெரிந்தவராயிருக்கிறீர். ஔர்வர், திரிதர்என்னும் ரிஷிகளுக்கும் பகீரதனுக்கும் ஒப்பானமஹிமையுள்ளவராகவும் எதிரிகள் கண்ணெடுத்துப் பார்க்கமுடியாதவராகவுமிருக்கிறீர்" என்று ஆஸ்தீகர் இவ்வாறு ஸ்தோத்திரஞ்செய்ய, ராஜாவும் ஸபையிற்சேர்ந்தவர்களும் ரித்துவிக்குக்களும் அக்னியுமாகிய யாவரும் ஸந்தோஷமடைந்தனர். அவர்களுடைய அபிப்பிராயங்களையும் ஜாடைகளையுங்கண்டு, பிறகு, ஜனமேஜயராஜா சொல்லலானார்.

ஐம்பத்தாறுவது அத்தியாயம்.

ஆஸ்தீகபர்வம். (தொடர்ச்சி).

(ஸ்துதியினால் ஸந்தோஷமடைந்த ஜனமேஜயராஜாவினிடம் ஆஸ்தீகர் யஜ்ஞத்தைநிறுத்துவதாகிய வரங்கேடபது.)

ஜனமேஜயமஹாராஜா, "இவன் பாலனாயிருந்தும் முதிர்ந்தவனைப்போற் பேசுகின்றான்; இவன் பாலனல்லன்; முதிர்ந்தவனேயென்று நான் நினைக்கிறேன். நான் இவனுக்கு வரங்கொடுக்க விரும்புகிறேன். பிராமணர்களே! இதில் நீங்கள் எனக்கு முழுதும் ஒத்திருப்பீர்களாக" என்றுசொல்ல, ஸபையிலிருந்தவர்கள், "* வித்வானானபிராமணன் இளையவனாயிருந்தபோதிலும் அவனை ராஜாக்கள் முறைப்படி பூஜிக்கவேண்டும்; ராஜாவே! உம்முடைய எல்லா அபீஷ்டங்களும் நிறைவேறுவதற்காக இந்தப்பிராமணசிரேஷ்டரைச் சீக்கிரமாக ஸந்தோஷிக்கச் செய்யும்; இப்போது உம்மிடமிருந்து அவன் எல்லா அபீஷ்டங்களையும் பெறத்தக்கவன்; அதனால் நம்மிடத்துத் தக்ஷகன் சீக்கிரம்வருவன்" என்றுசொன்னார்கள்.

விரும்பினதைக்கொடுப்பவராகிய ராஜா அந்தப்பிராமணரைநோக்கி, "வேண்டியவரத்தைக்கேளும்" என்றுசொல்வதற்கு நினைக்கும்போது, மஹாதாவானவர் மனத்தில் உத்ஸாஹங்குறைந்தவராய், "இந்தக்கிரியையில் தக்ஷகன் இன்னும் வரவில்லையே" என்றவாக்கியத்தைச் சொன்னார். அதற்கு ஜனமேஜயர், "நீங்களெல்லாரும் இந்தக்கிரியை சீக்கிரத்தில் முடிவுபெறும்படியும் தக்ஷகன் உடனேவந்து சேரும்படியும் உங்களுடைய பூர்ணசக்தியைக்கொண்டு முயலுங்கள்; தக்ஷகன்தானே எனக்கு விரோதி" என்றுசொல்ல, ரித்விக்குக்கள், "ராஜாவே! 'தக்ஷகன் பயத்தினால் உபத்திரவிக்கப்பட்டு இந்திரனுடைய வீட்டில் இருக்கிறான்' என்று † சஸ்திரமந்திரதேவதைகளும் அக்னிபகவானும் எங்களுக்குச்சொல்லுகின்றனர். பூர்வகல்பங்களுடைய சரித்திரங்களையறிந்த மஹாத்மாவாகிய ‡ லோஹிதாக்ஷரென்னும் ஸூதர் அவ்வாறு முன்னமேதெரிவித்திருக்கிறார்" என்றுசொன்னார்கள்.

---

* கிருஷ்ணசாரியர்பாடப்படி, அவித்வானாயிருந்தாலும் வித்வானாயிருந்தாலும் பூஜிக்கவேவேண்டும் என்பதுபொருள்.

† சாஸ்திரங்களுமென்னும் பாடத்திற்கு முன்கல்பத்துநடந்ததைச்சொல்லுகின்றபுராணங்களென்று பொருள்கொள்க.

‡ செந்தகண்ணுள்ளவர்.

அப்போது ராஜா அந்தலோஹிதாக்ஷரென்னும் ஸூதரைக் கேட்க, அவர் ராஜாவைப்பார்த்து, "ராஜாவே! பிராமணர்கள் எப்படிச்சொல்லுகிறார்களோ, அப்படியே இது நடந்திருக்கிறது; பூர்வகல்பத்துச் சரித்திரத்தையறிந்து அதைக்கொண்டு நான்சொல்லுகிறேன்; ராஜாவே! இந்திரன், தக்ஷகனுக்கு 'நீ இங்கே எவ்வளவும் பயமில்லாமல் என்னிடத்திலிரு; அக்னி உன்னைத் தஹிக்காது' என்று வரங்கொடுத்திருக்கிறான்" என்று சொன்னர். இதைக்கேட்டு, தீக்ஷை செய்துகொண்டிருந்த ராஜா, 'யாகம்நடக்குங்காலத்தில் வருத்தத்துடன் இந்திரனுடைனுகூடத் தக்ஷகனை அக்னியில்தள்ளுங்கள். அந்த நாகனைவிடக்கூடாது' என்று ஹோதாவைத் தூண்டிக்கொண்டிருந்தார். ஹோதாவும் மனத்தில் உறுதியுடன் அவனை மந்திரங்களினால் அழைத்தார். உடனே இந்திரனே ஓடிவந்தான்; "இந்திரனும் தக்ஷகனுடனுகூட வரக்கடவன்; சீக்கிரமாக நாகராஜனுடன்கூட வே, ஜம்பாஸுரனைக்கொன்றவனுகிய இந்திரன் அக்னியில்விழக்கடவன்" என்று சொல்லி, ஹோதா ஹோமஞ்செய்தார்.

அப்போது தக்ஷகநாகனுக்கு அபயங்கொடுத்த மஹிமையுள்ள தேவேந்திரன் விமானத்திலேறி வல்லாத்தேவர்களாலும் ஸ்துதிசெய்யப்பட்டும், மேகங்களாலும் அப்ஸரஸுகளாலும் வித்தியாதரர்களாலும் கூட்டங்கூட்டமாகப் பின்தொடரப்பட்டும், தக்ஷகனுக்கும் தனக்கும் நாசம்வரப்போகிறதென்று நினைத்துக்கொண்டே வந்துசேர்ந்தான். அந்தத்தக்ஷகனை இந்திரன் தன் உத்தரீயத்தில்மறைத்து வைத்திருந்தும், பயத்தினால்நடுங்கினதக்ஷகனுக்கு ஸுகமுண்டாகவில்லை. பிறகு தக்ஷகனுடைய நாசத்தைவிரும்புகின்ற ராஜா கோபத்துடன் திரும்பவும் மந்திரம் அறிந்தவர்களைப்பார்த்து, "பிராமணர்களே! அந்தத்தக்ஷகனென்னும் நாகன் இந்திரனுடைய க்ருஹத்தில் இருந்தால் இந்திரனுடனுகூடவே அவனை அக்னியில் வீழ்ந்துங்கள்" என்று சொன்னர். தக்ஷகனைப்பற்றி ஜனமேஜயராஜாவினால் ஏவப்பட்ட ஹோதாவானவர், இந்திரலோகத்திலிருந்த தக்ஷகநாகனை அங்கிருந்தபடியே ஹோமஞ்செய்தார். அப்படி ஹோமஞ்செய்யும்போது ஒரு நிமிஷத்துக்கெல்லாம் யாகசாலைக்குமேல் ஆகாசத்தில் துக்கித்த தக்ஷகன் இந்திரனுடன்கூடக்காணப்பட்டான். இந்திரன், அந்தயஜ்ஞத்தைக்கண்டு மிகுந்த பயத்தையடைந்தான்; பயத்தினால் தக்ஷகனை விட்டுவிட்டுத் தன் க்ருஹத்துக்கே திரும்பிச்சென்றான்.

இந்திரன்சென்றபிறகு தக்ஷகனென்னும் நாகேந்திரன் ராஜச்ரேஷ்டரான ஜனமேஜயரிடம் பயத்தினால்பிரமைகொண்டு மந்திரத்

தின்சக்தியினால் ஸ்வாதீனம்தப்பி, அக்னிஜ்வாலையின் ஸமீபத்தில் வந்தான். அவனைக்கண்டு அங்குள்ள ரித்துவிக்குக்கள், "ராஜாவே! அந்தத்தக்ஷகன் இதோ விரைவாக உமது ஸ்வாதீனத்திற்குவருகிறான். பயங்கரமாகக்கத்துகின்ற அவனுடைய பெரியஇரைச்சல் கேட்கிறது. நிச்சயமாக அந்தநாகன் இந்திரனால் விடப்பட்டிருக்கவேண்டும். அந்த நாகன் ஸ்வர்க்கத்தைவிட்டுத் தவறி மந்திரத்தினால் உடம்புநடுங்கித் துடித்துக்கொண்டு பிரஜ்ஞைதப்பி உஷ்ணமான பெருமூச்சுவிட்டுக் கொண்டு ஆகாசத்தில்வருகிறான். ராஜச்ரேஷ்டரே! பிரபுவே! உமது இந்தக்கிரியை சாஸ்திரப்படி நடந்துகொண்டிருக்கிறது. ஆனால் இந்தப் பிராமணசிரேஷ்டருக்கு நீர் வரங்கொடுக்கக்கடவீர்" என்றனர். அதைக்கேட்டு ஜனமேஜயர் ஆஸ்தீகரைப்பார்த்து, "அளவற்ற மஹிமையுள்ளவரே! இளமையிலேயே வித்துவானாகிய உமக்குத் தகுதியான வரத்தைக்கொடுக்கிறேன்; உம்முடைய ஹ்ருதயத்திலிருக்கிற மனோரதத்தைக் கேளும். அது கொடுக்கக்கூடாததாயிருந்தாலும் கொடுப்பேன்" என்றுசொன்னர்.

தக்ஷகனென்னும் நாகராஜன் அக்னியில் விழப்போகையில், "இதுதான்ஸமயம்" என்றுநினைத்து அப்போது ஆஸ்தீகர் சொல்லலானர்: "ஜனமேஜயமஹாராஜரே! எனக்கு நீங்கள் வரங்கொடுக்கிறதாயிருந்தால் கேட்கிறேன்; உங்களுடைய இந்தயாகம் நிற்கவேண்டும். இதில் ஸர்ப்பங்கள் விழாமலிருக்கவேண்டும்" என்றார்.

சௌனகரே! அந்த ஆஸ்தீகர் அவ்வாறு கேட்டபோது, ஜனமேஜயர், மனத்தில் அதிகஸந்தோஷமில்லாமல் ஆஸ்தீகரைநோக்கி, "ஸமர்த்தரே! பிராமணரே! பொன்னையும் வெள்ளியையும் பசுக்களையும் இன்னும் என்னஎன்ன விரும்புகிறீரோ அவற்றையெல்லாம் உமக்கு வரங்களாகக்கொடுப்பேன்; என்யாகம் நின்றுபோகக்கூடாது" என்றுசொல்ல, அதற்கு ஆஸ்தீகர், "ராஜாவே! பொன்னையும் வெள்ளியையும் கோக்களையும் உம்மிடம் நான் கேட்கவில்லை. உமது இந்தயாகம் நிற்கவேண்டும். எங்கள் மாதாவின்வம்சத்திற்கு க்ஷேமமுண்டாகவேண்டும்" என்றார்.

இவ்வாறு ஆஸ்தீகர்சொன்னபிறகு, பேசத்தெரிந்தவர்களிற் சிறந்தவராகிய ஜனமேஜயமஹாராஜா, ஆஸ்தீகரைநோக்கி, "பிராமணசிரேஷ்டர்களுக்கெல்லாம் சிறந்தவரே! நீர் தயைசெய்து வேறுவரங் கேளும்" என்று பலமுறைசொன்னர். ப்ருகுபுத்ரரே! அவர் வேறு வரம் வேண்டவில்லை. ஐயா! அதன்பின் வேதந்தெரிந்தவர்களாகிய

அந்தராஜாவின் ஸபையோர்கள் யாவரும் ஒருமித்து, அந்தராஜாவை நோக்கி, "பிராமணர் வரத்தைப் பெறுக" என்றார்கள்.

ஐம்பத்தேழாவது அத்தியாயம்.

ஆஸ்தீகபர்வம். (தொடர்ச்சி).

(ஸர்பயாகத்தில் எரிக்கப்பட்ட நாகங்களுள முக்கியமான வற்றின் பெயர்கள்).

ஸௌனகர், "ஸூதபுத்திரரே! அந்த ஸர்ப்பயாகத்தில் அக்னியில்விழுந்த ஸர்ப்பங்களெல்லாவற்றினுடைய பெயர்களையும் கேட்க விரும்புகிறேன்" என்றுசொல்ல, ஸூதபுத்திரர் சொல்லத்தொடங்கினர்.

பிராமணசிரேஷ்டரே! ஸர்ப்பங்கள் ஆயிரக்கணக்காகவும் பத்து லக்ஷக்கணக்காகவும் பத்துக்கோடிக்கணக்காகவும் அந்தயாகத்தில் விழுந்தன. பலவாயிருப்பதனால் அவற்றை எண்ணமுடியாது. என் ஞாபகத்திலுள்ளவரையில் அக்கினியில் ஹோமஞ்செய்யப்பட்ட முக்கியமான நாகங்களின் நாமதேயங்களை நான் சொல்லுகிறேன்; கேளும். வாஸுகியின் வம்சத்திற்பிறந்தவையும் பயங்கரங்களும் பெரிய உடல்களுள்ளவையும் உக்கிரமான விஷமுள்ளவையுமான, கறுப்பும் சிவப்பும் வெண்மையுமான ஸர்ப்பங்கள் தாயின்சாபமென்னும் தடியினால் அடிபட்டு ஸ்வாதீனந்தப்பித் துக்கமுற்று ஹோமம்பண்ணப்பட்டவற்றில் முக்கியமான நாகங்களைச்சொல்லுகிறேன்; கேளும். கோடிசன், மானஸன், பூர்ணன், சலன், பாலன், ஹலீமகன், பிச்சலன், கௌணபன், சக்ரன், காலவேகன், பிரகாலனன், ஹிரண்ய பாஹு, சரணன், கக்ஷகன், காலதந்தகன் ஆகிய இந்த வாஸுகிவம்சத்திற்பிறந்த நாகங்கள் அக்னியில்விழுந்தன. பிராமணரே! எல்லாம் பயங்கரரூபமும் மிகுந்தபலமுள்ளவையுமான அந்தக்குலத்திற் பிறந்த இன்னும் அநேக ஸர்ப்பங்கள் ஜ்வலித்துக்கொண்டிருந்த அக்னியில் ஹோமஞ்செய்யப்பட்டன. தக்ஷகன்குலத்திற் பிறந்தவர்களைச் சொல்லுகிறேன்; கேளும். புச்சாண்டகன், மண்டலகன், பிண்டஸேக்தா, ரமேணகன், உச்சிகன், சரபன், பங்கன், பில்வதேஜஸ், விரோஹணன், சிலி, சலகரன், மூகன், ஸுகுமாரன், பிரவேபனன், முத்கரன், சிசுரோமா, ஸுரோமா, மஹாஹனு ஆகிய இந்தத் தக்ஷக

வம்சத்திற்பிறந்த நாகங்கள் அக்னியில்விழுந்தன. பாராவதன், பாரியாத்ரன், பாண்டரன், ஹரிணன், கிருசன், விஹங்கன், சரபன், மோதன், பிரமோதன், ஸம்ஹ்ருதாபனன் ஆகிய இந்த ஐராவத குலத்துநாகங்கள் அக்னியில் பிரவேசித்தன. பிராமணசிரேஷ்டரே! கௌரவ்யநாகன் குலத்திற்பிறந்த நாகர்களைச் சொல்லுகிறேன்; கேளும். ஏரகன், குண்டலன், வேணி, வேணீஸ்கந்தன், குமாரகன், பாகுகன், சிருங்கபேரன், துர்த்தகன், பிராதன், ராதகன் ஆகிய இந்தக் கௌரவ்யகுலநாகங்கள் அக்னியில்வீழ்ந்தன. பிராமணரே! காற்றுக்கொப்பான வேகமுள்ளவையும் கொடியவிஷமுள்ளவையுமான திருதராஷ்டிரகுலத்திற் பிறந்த நாகங்களை நான் வரிசையாகச் சொல்லுகிறேன்; கேளும். சங்குகர்ணன், பிடரகன், குடாரமுகன், ஸைகன், பூர்ணாங்கதன், பூர்ணமுகன், பிரஹாஸன், சகுனி, தரி, அமாஹடன், காமடகன், ஸுஷேணன், மானஸன், அவ்யயன், அஷ்டாவக்ரன், கோமலகன், சுவஸனன், மௌனவேபகன், பைரவன், முண்டவேதாங்கன், பிசங்கன், உதபாரகன், ரிஷபன், வேகவான், பிண்டாரகன், மஹாஹனு, ரக்தாங்கன், ஸர்வஸாரங்கன், ஸம்ருத்தன், படவாஸகன், வராஹகன், வீரணகன், சுசித்ரன், சித்ரவேகிகன், பராசரன், தருணகன், * மணி, ஸ்கந்தன், ஆருணிஆகியவை திருதராஷ்டிரகுலத்திற்பிறந்த நாகங்கள்.

பிராமணரே! இவ்வாறு மிகுந்தகீர்த்தியுள்ள பிரதானமான நாகங்களின்பெயர்களை நான் சொன்னேன். மிகுதியாயிருத்தலால் எல்லாவற்றையும் சொல்லவில்லை. இவற்றின் ஸந்ததிகளும் ஸந்ததிகளின் ஸந்ததிகளும் ஜ்வலித்த அக்னியில் விழுந்தனவற்றைக் கணக்கிடமுடியாது. இரண்டுதலைகளும், மூன்றுதலைகளும், ஏழுதலைகளும், பத்துத்தலைகளும், நூறுதலைகளும், எண்ணில்லாத தலைகளுமுள்ளவையும் ப்ரளயகாலாக்னிக்கொப்பான விஷமுள்ளவையுமான கொடிய ஸர்ப்பங்கள் லக்ஷக்கணக்காக ஹோமஞ்செய்யப்பட்டன. பெரிய உடல்களுள்ளவைகளும் கடியமேகமுள்ளவைகளும் மலையின் கொடுமுடிபோல் உயரமுள்ளவைகளும் ஒருயோசனை இரண்டுயோசனை நீளமுள்ளவையும் நினைத்த ரூபமெடுப்பவையும் நினைத்தபலம் அடைகின்றவையும் ஜ்வலிக்கின்ற அக்னியைப்போன்றகொடிய விஷமுள்ளவையுமான நாகங்கள் பிரம்மாவின்சொல்லாகிற தண்டனையினால் பிடிக்கப்பட்டு அந்தப் பெரியயாகத்தில் எரிக்கப்பட்டன.

---

* மணிஸ்கந்தன் என்று ஒருபெயராகக்கொள்வது தக்ஷிணதேசபாடம்.

ஐம்பத்தேட்டாவது அத்தியாயம்.

ஆஸ்தீகபர்வம். (தொடர்ச்சி).

(ஜனமேஜயர் யாகத்தைநிறுத்தினபிறதுநாகலோகத்துக்குவந்த ஆஸ்தீகரை நாகர்கள வரம்கொடுத்துக் கௌரவிப்பது).

"ஆஸ்தீகரிடத்தில் இந்த மற்றொரு பெரிய ஆச்சரியத்தையும் கேட்டிருக்கிறோம்; அதாவது:— ஜனமேஜயராஜா அவருக்கு வரங்களைக் கொடுக்கிறதாக அப்படி அன்புடன்சொல்லும்போது, இந்திரன் கையைவிட்டுத் தப்பிப்போன தக்ஷகன் ஆகாசத்திலேயேநின்றான்; அதன்பின் ஜனமேஜயராஜா மிகுந்த சிந்தையுடனிருந்தார்; சாஸ்திரப்படி ஹோமஞ்செய்யப்பட்டு அதிகமாக ஜ்வலிக்கும் அக்னியில் பயத்தினால்குன்றின அந்தத்தக்ஷகன் விழாமலிருந்தானென்பது" (என்றனர்.)

சௌனகர், "ஸூதரே! ஞானவான்களாகிய அந்தப்பிராமணர்களுக்கு மந்திரங்கள் அப்போது புத்திக்குத் தோன்றுமற்போயினவா? எதனால் அந்தத்தக்ஷகன் அக்னியில் விழவில்லை?" என்றுகேட்க, ஸூதபுத்திரர் சொல்லத்தொடங்கினர்.

இந்திரன்கையைவிட்டுநீங்கிப்பிரஜ்ஞைதப்பின அந்தநாகராஜனை ஆஸ்தீகர்,'நில்நில்'லென்றுமூன்றுமுறைசொன்னர். அவன்வருத்தமுற்றமனத்துடன் ஆகாசத்துக்கும் பூமிக்குமிடையில் ஒருமனிதன்நேரே நிற்பதுபோல் நின்றுவிட்டான். பிறகு ஸபையிலுள்ளவர்களால் அதிகமாகக் கேட்டுக்கொள்ளப்பட்ட ஜனமேஜயராஜா, "ஆஸ்தீகர்கேட்டது அவர் இஷ்டம்போல் நடக்கட்டும்; இந்தக்கருமத்தை நிறுத்துங்கள்; நாகங்கள் உபத்திரவமில்லாமலிருக்கட்டும்; ஆஸ்தீகரும் ஸந்தோஷமடையட்டும்; அந்த லோஹிதாக்ஷனென்னும் ஸூதர்சொன்னதும் ஸத்யமாகட்டும்" என்றுசொன்னர். ஆஸ்தீகருக்கு அந்தவரத்தை அளித்தபிறகு அந்தஸபையில் ஸந்தோஷத்தினால் "ஹலஹலா" என்னும்சப்தம் உண்டாயிற்று. பரிக்ஷித்தின்புத்திரராகிய ஜனமேஜயருடைய அந்தயாகமும் அவ்வளவிலேயேநின்றது. பரதவம்சத்து ராஜாவாகிய ஜனமேஜயரும் த்ருப்தியடைந்து, ரித்துவிக்குக்களுக்கும் ஸபையிற் சேர்ந்தவர்களுக்கும் அங்கேவந்திருந்த மற்றவர்களுக்கும் நூற்றுக்கணக்காகவும் ஆயிரக்கணக்காகவும் திரவியங்களைக் கொடுத்தார். பிரபுவாகிய ஜனமேஜயராஜா லோஹிதாக்ஷனென்னும் ஸூத

ருக்கும் ஒரு பிராமணன்காரணமாக அந்த ஸர்ப்பயாகம் நின்றுபோ மென்று முதலிலேயே தமக்குச்சொன்ன ஸ்தபதிக்கும் மிகுதியான திரவியங்களைக்கொடுத்தார். அளவிடக்கூடாத பராக்கிரமத்தையுடைய ராஜா தகுந்தபடி போஜனவஸ்திரங்களோடுகூடத் திரவியத்தையும் ஸந்தோஷமாக அந்தஸ்தபதிக்குக்கொடுத்து, பிறகு சாஸ்திரோக்த மான கிரியையோடு அவபிருதமென்று சொல்லப்பட்ட யாகஸமாப்தி ஸ்நானம் செய்தார். ராஜா, மனத்தில் த்ருப்தியடைந்தவராகித் தம் காரியம் நிறைவேறினதினால் த்ருப்தியடைந்த வித்வானை ஆஸ்தீ கரை மிகுந்தமரியாதையுடன் அவர் க்ருஹத்துக்கு விடைகொடுத்து, அவரைநோக்கி, "என்னுடையஅச்வமேதமென்னும் மஹாயாகத்தி ற்கு ஸதஸ்யராயிருக்கவேண்டும்; அதற்காகத் திரும்பவும் நீங்கள் வர வேண்டும்" என்று சொல்லியனுப்பினர். அப்போது ஆஸ்தீகரும் "அப்படியே ஆகட்டும்" என்றுசொல்லித் தம்முடைய பெரியகாரி யத்தையும் முடித்துக்கொண்டு ராஜாவையும் த்ருப்திசெய்வித்து ஸந்தோஷத்துடன் விரைவாகத் திரும்பிப்போனர். அவர் சென்று மிகுந்தமகிழ்ச்சியுடன் மாதுலனையும் அந்த மாதாவையும் ஸந்தித்து நமஸ்காரஞ்செய்து நடந்தவிஷயத்தைத் தெரிவித்தார்.

அதைக்கேட்டு அவ்விடத்திலிருந்த நாகர்களெல்லாரும் பயம் தீர்ந்து ஸந்தோஷத்துடன் கூட்டமாகச்சேர்ந்து ஆஸ்தீகரிடத்தில் மிகுந்த அன்புள்ளவராகி, "உனக்கு இஷ்டமானவரத்தைக்கேள்; வித்வானே! நாங்கள் இப்போது உனக்கு என்னபிரியம் செய்யக் கடவோம்; நாங்களெல்லாரும் விடுவிக்கப்பட்டு ஸந்தோஷமுள்ள வர்களாயிருக்கிறோம்; குழந்தாய்! உனக்கு என்னஅபீஷ்டத்தைச் செய்யக்கடவோம்" என்று பலமுறை அவரைக்கேட்டனர்.

அதற்கு ஆஸ்தீகர், "இந்தலோகத்தில் பிராமணர்களாகட்டும், மற்ற மனிதர்களாகட்டும், தெளிந்தும் சிறந்தும் இருக்கும் மனத் தோடு இந்த என் தர்மகதையைக் காலையும்மாலையும் படிப்பாராயின், அவர்களுக்கு உங்களிடமிருந்து ஒருபயமும் இல்லாமலிருக்கக்கட வது" என்றார். ஸந்தோஷமடைந்த நாகர்கள், வாஸுகியின் மருக ராகிய ஆஸ்தீகரைப்பார்த்து, "ஓ மருமகரே! உம்முடைய இந்தவரம் மிகவும் ஸத்யமாகட்டும். பிரீதியோடுகூட நாங்களெல்லாரும் நீர் கேட்டதை ஜாக்கிரதையாக நிறைவேற்றுவோம். அஸிதனையும் ஆர் த்திமானையும் ஸுனீதனையும் எவன்நினைப்பனோ அவனுக்குப் பகலி லாகட்டும் இரவிலாகட்டும் ஸர்ப்பபயம்கேரிடாது" என்றும், "மஹா னுபாவர்களான நாகர்களே! ஜரத்காருரிஷியினல் ஜரத்காருவென்

பலனிடத்திற் பிறந்த பெரியகீர்த்தியுள்ள எந்தஆஸ்தீகர் நாகர்களாகிய உங்களை ஸர்ப்பஸத்ரத்திற் காப்பாற்றினரோ, அவரை நான் ஸ்மரிக்கிறேன்; என்னை நீங்கள் ஹிம்ஸிக்காமல் இருக்கக்கடவீர்கள். ஸர்ப்பமே! தயைசெய்து ஓடிப்போ; மஹாவிஷமுள்ள ஸர்ப்பமே! போ; ஜனமேஜயர் யாகத்தின்முடிவில் ஆஸ்தீகர் சொன்னசொல்லை நினை" என்று உம்மைப்பற்றிச் சொல்வதாகிய இம்மந்திரங்களைக் கேட்டபிறகு எந்தஸர்ப்பம்நிவிருத்தியாகவில்லையோ அதன்தலை சிம்சவ்ருக்ஷத்தின் பழம்போல் நூறுதுண்டாக வெடித்துப்போம்" என்றும் சொல்லினர்.

இவ்வாறு முக்கியமான ஸர்ப்பச்ரேஷ்டர்கள் சேர்ந்துசொன்னபோது, அந்த மஹாத்மாவாகிய பிராமணசிரேஷ்டர் மிகுந்த த்ருப்தியடைந்து, பிறகு தாம் அந்தஇடத்தைவிட்டுப் போவதற்கு நிச்சயஞ் செய்தார். நாகராஜாவாகிய வாஸுகியும் நாகர்களுடையமத்தியிலிருந்து இவ்வாறு சொல்லி, அந்த ஸர்ப்பங்களுடன்கூடவே தன்க்ருஹம் சென்றான். தர்மாத்மாவாகிய பிராமணசிரேஷ்டர், நாகர்களை ஸர்ப்பயாகத்திலிருந்து விடுவித்து, புத்ர பௌத்ரர்களோடு வாழ்ந்த பிறகு, ஒருகாலத்தில் உலகவாழ்க்கையைத் துறந்தார். இந்த ஆஸ்தீகசரித்திரத்தை நடந்தபடி உமக்கு நான் சொன்னேன்; இதைச் சொன்னால், ஸர்ப்பபயம் எங்குமிராது. ப்ருகுவம்சச்ரேஷ்டரே! பிராமணரே! ஞானவானுகிய ஆஸ்தீகருடைய அழகுள்ள சரித்திரத்தை நீர் கேட்டபோது உமதுகூடஸ்தராகிய பிரமதி அவருக்கு அன்புடன்சொன்னதைக் கேட்டிருந்த நான் அவர் சொன்னபடியே முதலிலிருந்து உமக்குச் சொன்னேன். பிராமணரே! தண்ணீர்ப்பாம்பு சொன்னதாக நான் சொல்லக்கேட்டு, நீர் என்னை வினவியகதை இது. இந்திரியங்களை ஜயித்தவராகிய பிராமணரே! உம்முடைய பெரிய ஆவல்தீரட்டும். சிறந்த தர்மமுள்ளதும் புண்ணியத்தை விருத்திசெய்வதுமாகிய ஆஸ்தீகசரித்திரத்தைக் கேட்பவன் எல்லாப்பாவங்களிலின்றும் விடுபட்டுத் தீர்க்காயுளை அடைவன்.

ஆஸ்தீகபர்வம் முற்றிற்று.

ஐம்பத்தோன்பதாவது அத்தியாயம்.

அம்சாவதரணபர்வம்.

(ஸர்ப்பயாகத்தில் ஜனமேஜயருக்கு வைசம்பாயனர் சொன்னபடி மஹாபாரதகதையைச் சொல்லும்படி சௌனகர் கேட்டதன்மேல் ஸூதர்சொல்ல ஆரம்பிப்பது).

சௌனகர், "ஐயா! ஸூதபுத்திரரே! பிருகுவம்சம்முதலாகவே பெரியசரித்திரமுழுதும் உம்மாற்சொல்லப்பட்டது. அதனுல் உம்மிடத்தில் த்ருப்தியடைந்தேன். ஸூதநந்தனரே! இன்னும் உம்மைத் தக்கபடி அநேகம்கேட்பேன். வியாஸரிடமிருந்துவந்தகதைகளை இன்னும் எனக்குச்சொல்லும். நிறைவேற்றுவதற்கு மிகவும் கடினமான அந்தஸர்ப்பயாகத்தில் மஹாத்மாக்களாகிய ஸபையோர்கள் யாகத்தின்கிரியைகளின் மத்தியகாலங்களில் எந்தஎந்தவிஷயங்களில் எவ்வாறெவ்வாறு என்னஎன்னவிசித்திரமான ஸம்பாஷணைகளை நடத்தினரோ, அவற்றையெல்லாம் நாங்கள் உம்மிடம்கேட்கவிரும்புகின்றோம். ஸூதபுத்திரரே! நீர் எங்களுக்குச்சொல்லவேண்டும்" என்றுகேட்க, ஸூதபுத்திரர், "கிரியைகளின் மத்தியகாலங்களில், பிராமணர்கள் வேதவிஷயங்களைப்பற்றின பிரஸங்கங்களைப் பேசினர். வியாஸர்மாத்திரம் விசித்திரமான பாரதமென்னும் பெரியசரித்திரத்தைச் சொன்னர்" என்றுசொன்னர்.

அதற்குச்சௌனகர், "ஸர்ப்பயாகாலத்தில் சாஸ்திரப்பிரகாரம் நடந்தகிரியைகளின்மத்தியில் ஜனமேஜயர்கேட்கும்போது, கிருஷ்ணத்வைபாயனர் பாண்டவர்களுடையபுகழை விருத்திசெய்யத்தக்க மஹாபாரதமென்கிற சரித்திரத்தைச் சொன்னரல்லவா? அந்தப் புண்ணியகதையை நான் ஒழுங்காகக்கேட்கவிரும்புகிறேன். ஸாதுச்ரேஷ்டரே! யோகத்தால் பரிசுத்தமானபுத்தியுள்ள வியாஸமஹரிஷியின்மனமென்னும் ஸமுத்திரத்தினின்றும் உண்டானதும் ரத்னங்களைப்போன்ற விஷயங்களெல்லாம் பொருந்தினதுமாகிய அந்தக்கதையைச் சொல்லும்" என்றுகேட்க, ஸூதபுத்திரர் சொல்லத்தொடங்கினர்: "ஆகட்டும்; கிருஷ்ணத்வைபாயனரால் சொல்லப்பட்ட உத்தமமான மஹாபாரதமென்னும் இதிஹாஸத்தை ஆதிமுதல் உமக்குச் சொல்லுகிறேன்; பிராமணரே! நான்விடாமல் முழுதும்சொல்லுகிறேன்; கேளும். இந்தஇடத்தில் எனக்கும் அதைச்சொல்வதற்குப் பெரிய உத்ஸாஹமுண்டாயிருக்கிறது" என்றர்.

அறுபதாவது அத்தியாயம்.

அம்சாவதரணபர்வம். (தொடர்ச்சி).

(வியாஸர் ஸர்ப்பயாகத்துக்குவந்து ஜனமேஜயர்கேட்ட பாரதகதையைச் சொல்லும்படி வைசம்பாயனருக்குக் கடளையிடுவது).

'காளி' என்றுசொல்லப்பட்ட ஸத்யவதியானவள், விவாஹமாகாமலிருக்கும்போதே சக்திமுனிவரின்புத்திரராகிய பராசரமஹரிஷிக்குப் பாண்டவர்களின்பிதாமஹராகிய எவரை யமுனையின்தீவில் பெற்றாளோ, பெருங்கீர்த்தியுள்ள எவர் பிறந்தமாத்திரத்தில் இச்சையினல் உடனே தம் தேஹத்தை வளரச்செய்து வேதங்களையும்வேதாங்கங்களையும் இதிஹாஸங்களையும் அறிந்தாரோ, தவத்தினலும்வேதாத்தியயனத்தினலும் விரதத்தினலும் உபவாஸத்தினலும்பிறப்பினலும் யாகத்தினலும் எவருக்குமேல் யாருமில்லையோ (அவரும்),வேதமறிந்தவர்களிற்சிறந்தவரும், மேலானவற்றையும் கீழானவற்றையும் அறிந்தவரும், கவியும், ஸத்யத்தையே விரதமாகக்கொண்டவரும், பரிசுத்தமான எவர் ஒருவேதத்தை நான்காகவகுத்தாரோ (அவரும்),நிர்மலமானபெரும்புகழுள்ளவரும், சந்தனுவின்ஸந்ததியை விருத்திசெய்வதற்காகப் பாண்டுவையும் திருதராஷ்டிரனையும் விதுரரையும் உண்டுபண்ணினவருமாகிய அந்தக்கிருஷ்ணத்வைபாயனரென்னும்மஹரிஷி, ஜனமேஜயர் ஸர்ப்பயாகத்துக்காகத் தீக்ஷைசெய்துகொண்டதைக் கேட்டு அவரிடம்சென்றார்; அந்தமஹாத்மாவானவர் வேதங்களிலும் வேதாங்கங்களிலும் கரைகண்டவர்களாகிய தம்சிஷ்யர்களுடன் ஜனமேஜயரென்னும்ராஜரிஷியின் யாகஸபையிற்பிரவேசித்தார். அந்த ஸதஸில் தேவர்களாற்சூழப்பட்ட இந்திரனைப்போல் அநேகம்ஸபையோர்களாலும், பட்டாபிஷேகஞ்செய்துகொண்ட பூர்பலதேசாதிபதிகளாலும், யஜ்ஞகாரியத்தில் ஸமர்த்தர்களாகிய பிரம்மாவுக்குஒப்பானரித்விக்குக்களாலும் சூழப்பட்ட ஜனமேஜயராஜாவைப் பார்த்தார்.

பாதச்ரேஷ்டராகிய அந்தஜனமேஜயரென்னும்ராஜரிஷி அந்தரிஷிவந்ததைக்கண்டு ஸந்தோஷத்துடன் கூட்டங்களோடு விவேகாகளதிர்கொண்டழைத்தார். அந்தராஜா ஸபையோர்களால்அனுமதிகொடுக்கப்பெற்று, அந்தமஹரிஷிக்கு, ப்ருஹஸ்பதிக்கு இந்திரன் செய்வதுபோல், பொன்மயமான ஆஸனம்அளித்தார். தேவர்கள்,ரிஷிகள் இவர்களுடைய கூட்டங்களினும் பூஜிக்கப்பட்டவரும் வரங்கொடுப்பவருமாகிய அம்மஹரிஷி ஆஸனத்தில் வீற்றிருந்தபின்,ஜனமேஜயர் சாஸ்

திரோக்தமானகிரியையால் அவரைப் பூஜித்தார். ஜனமேஜயர் தமது கூடஸ்தரும் பூஜைக்குரியவருமான வியாஸருக்குச்சாஸ்திரப்பிரகாரம் அர்க்கியபாத்தியாசமனீயங்களையும் கொடுத்துக் கோதானமுஞ்செய்தார். வியாஸர், பாண்டுவம்சத்தவராகிய ஜனமேஜயரிடத்தில் அந்தப் பூஜையைப்பெற்றுக்கொண்டு கோவைமட்டும் அனுப்பிவிட்டு ஸந்தோஷமுள்ளவரானர். ராஜா தமக்குக் கூடஸ்தராகிய அவரை அவ்வாறு அன்புடன் பூஜைசெய்து மனமகிழ்ந்து ஸமீபத்தில்உட்கார்ந்து குசலப்பிரச்னஞ்செய்தார். வியாஸபகவானும் அவரை நோக்கித் தம்கேஷேமத்தைத்தெரிவித்து ஸதஸ்யர்களெல்லாராலும் பூஜிக்கப்பட்டு அந்த ஸதஸ்யர்களுக்கும் பிரதிமரியாதைசெய்தார் பிறகு ஜனமேஜயர் ஸதஸ்யர்கள் எல்லாருடனும்கூடக் கைகூப்பிக்கொண்டு பிராமண சிரேஷ்டரான வியாஸரைப்பார்த்து அடியில்வருமாறு கேட்டனர்:—

"கௌரவர்களைப்பற்றியும் பாண்டவர்களைப் பற்றியும் நீர் நேரில் அறிவீர். பிராமணரே! அவர்களுடைய சரித்திரத்தை நீங்கள் சொல்லவேண்டுகிறேன். சிலாக்கியமான செய்கைகளையுடைய அவர்களுக்கு விரோதம் எப்படி உண்டாயிற்று? என் பிதாமஹர்கள் எல்லாருக்கும் தெய்வத்தினால் புத்தியில் ஆக்கிரகம்உண்டாகிப் பிராணிகளுக்கெல்லாம் நாசத்தைச்செய்யும் அந்தப் பெரிய யுத்தமானது எவ்வாறு நடந்தது? பிராமணசிரேஷ்டரே! அதைமுழுதும் நடந்தபடி எனக்குச் சொல்லக்கடவீர். பகவானே! நீர்தெரிந்தவராதலால் உமிடத்தில் சரியாகக்கேட்கவிரும்புகிறேன்" என்றார்.

கிருஷ்ணத்வைபாயனர் அப்போது அவர்சொன்னதைக்கேட்டு, தம் ஸமீபத்தில் உட்கார்ந்திருந்த வைசம்பாயனரென்னும் சிஷ்யரைப் பார்த்து, "கௌரவர்களுக்கும் பாண்டவர்களுக்கும் முன்னேவிரோதம் எவ்வாறுண்டானதோ, அதுமுழுவதையும் நீ என்னிடத்திற் கேட்டபடி ஜனமேஜயனுக்குச்சொல்" என்று கட்டளையிட்டார். அப்போது பிராமணசிரேஷ்டரான வைசம்பாயனர், தம் குருசொன்னதை ஏற்றுக்கொண்டு, முன்காலத்தில் கௌரவர்களுக்கும் பாண்டவர்களுக்குமுண்டான விரோதத்தையும் அதனால் எல்லாருக்கும்நாசமுண்டானதையும்பற்றிய புராதனமான இதிஹாஸம்முழுவதையும் அந்த ஜனமேஜயராஜாவுக்கும் அவர் ஸபையிற்சேர்ந்தவர்களுக்கும் அங்குள்ளராஜாக்களெல்லோருக்கும் சொல்லத்தொடங்கினர்.

அறுபத்தோராவது அத்தியாயம்.

அம்சாவதரணபர்வம். (தொடர்ச்சி).

(பாரதகதையைவைசம்பாயனர் சுருக்கமாகச்சொல்வது).

வைசம்பாயனர், "ராஜாவே! ஸஹோதரர்களும்வீரர்களுமாகிய பாண்டவர்கள் ஐவருக்கும் கெட்ட எண்ணமுள்ள திருதராஷ்டிரபுத்திரர்களோடுவிரோதம்வந்தவகையைக்கேளும். முதலில் அன்பையும் அறிவையும் தியானத்தையும் குருவினிடம் செலுத்திக் குருவுக்கு நமஸ்காரஞ்செய்து பிராமணர்களும் மற்றவர்களுமான வித்துவான்களெல்லாரையும் பூஜித்து, எல்லாலோகங்களிலும் பிரஸித்திபெற்றவரும் சிறந்த புத்தியுள்ளவரும் அளவற்ற மஹிமையுள்ளவருமாகிய வியாஸமஹரிஷியின் அபிப்பிராயத்தைமுழுவதும் இங்கேசொல்லப்போகிறேன். ராஜாவே! நீர் இதைக்கேட்பதற்கு உரியவர். *இந்தப் பரதவம்சத்தின்கதையை எடுத்துக்கொண்டு என்குருவின் நா அசைந்தது என்மனஸை உத்ஸாகப்படுத்துகிறது. ராஜாவே, பரதகுலச்ரேஷ்டரே! ராஜ்யத்திற்காகக் கௌரவர்களுக்கும் பாண்டவர்களுக்கும் விரோதம் எவ்வாறு உண்டானதென்பதையும் சூதாடினதால் வனவாஸம்சேர்ந்ததையும் பூமியில் ஜனங்களுக்கு அழிவையுண்டாக்குகின்றயுத்தம் எவ்வாறு நடந்ததென்பதையும் விளுவுகின்றஉமக்குச் சொல்லப்போகிறேன்; கேளும்.

பிதா இறந்துபோனபின் அந்தவீரர்களான பாண்டவர்கள் வனத்திலிருந்து தங்கள் க்ருஹம்வந்து வெகுசீக்கிரத்தில் வேதத்திலும் வில்வித்தையிலும்தேர்ந்தவராயினர். அவ்வாறு பலமும்பராக்கிரமமும் முயற்சியும் நிரம்பப்பெற்றவர்களும் நகரஜனங்களிலுல் நன்குமதிக்கப்பட்டவர்களுமாகிய அந்தப் பாண்டவர்கள், ராஜ்யாதிபத்தியத்தையும் கீர்த்திபையும் அடைந்திருப்பதைக் கண்டு கௌரவர்கள் பொறுமையுற்றனர். அதன்பின் கொடியவனுகிய துரியோதனனும் கர்ணனும் சகுனியும் அவர்களுக்குப் பலவகையாகத் தீங்குகளையும் ஊசைவிட்டு ஓட்டுவதையும் செய்யத்தொடங்கினர். பிறகு கொடியவனன துரியோதனன்†குலிங்கபக்ஷியைப்போன்றசகுனியினுடைய அபிப்பிராயத்தை

* குருபாரதம்சொன்னது என்பதற்கு வைசம்பாயனரைப் பாரதம்சொல்லக்கட்டளையிட்டதென்பது பழையஉரை.

† வஞ்சகமாகவிம்மத்தின் தொண்டையிலுள்ள மாம்ஸத்தையெடுக்கும் குலிங்கபக்ஷியைப்போன்றமையால் சகுனியைக் குலிங்கனென்றது; கு - கெட்ட, லிங்கம் - லக்ஷணம்; கெட்டலக்ஷணமுடையவனென்றுமாகும்.

அனுஸரித்து ராஜ்பத்திற்காகப் பாண்டவர்களைப் பற்பல வழிகளால் துன்புறுத்தினன். அப்போது பாபிஷ்டனாகிய திருதராஷ்டிரபுத்திரன் பின்பு பீமனுக்கு விஷத்தைக்கொடுத்தான். வீரனாகிய பீமன் அந்த விஷத்தை அன்னத்துடன்கூட ஜீர்ணம் செய்துகொண்டான். மறு படியும் பிரமாணகோடி என்னும் கங்கைக்கரையிலுள்ள இடத்தில் தூங்கிக்கொண்டிருந்த பீமனைக்கட்டித் கங்காஜலத்தில் போட்டுவிட்டு நகரம் வந்து சேர்ந்தான். சிறந்த புஜபலமுள்ள குந்திபுத்திரனாகிய பீமசேனன் கண்விழித்தவுடனே கட்டை யறுத்துக் கொண்டு நோயில்லாமல் எழுந்துவந்தான். அவன் தூங்கினபோது பல்லில் விஷமுள்ள கருநாகங்களைக்கொண்டு துர்யோதனன் அவனை எல்லா அங்கங்களிலும் கடிப்பித்தான். ஏற்றுக்கொண்டோ மாறிப்பிறவனாகிய பீமசேனன் இறக்கவில்லை. சிறந்த புத்திபுள்ள விதுரர் அவர்களைத் துர்யோதனன்செய்த பலவகைகளான தீங்குகளிலிருந்து விடுவிப்பதிலும் அவற்றிற்குப் பிரதிசெய்வதிலும் கவனமுள்ளவராக இருந்தார். இந்திரன் ஸ்வர்க்கத்திலிருந்துகொண்டு மனுஷ்யலோகத்துக்கு ஸுகத்தைச்செய்வதுபோலவே விதுரரும் எப்போதும் பாண்டவர்களுக்கு ஸுகத்தைச் செய்பவராயிருந்தார். தெய்வத்தினால் அவசியம் நேரிடத்தக்க காரியத்திற்காகக் காப்பாற்றப்பட்ட பாண்டவர்களை ரஹஸ்யங்களும் வெளிப்படை களுமான அநேக உபாயங்களைச்செய்தும் அவன் கொல்லமுடியாமற்போனபோது, கர்ணன் துச்சாஸனன் முதலிய மந்திரிகளோடுகூட ஆலோசனைசெய்து திருதராஷ்டிரனை ஸம்மதிக்கச் செய்து அரக்கினால் கிருஹத்தைக் கட்டும்படி கட்டளையிட்டான். அடங்காத பராக்கிரமமுள்ள அந்தப்பாண்டவர்களை அதில் வஸிக்கச் செய்தான். அம்பிகாபுத்திரனாகிய திருதராஷ்டிரமஹாராஜன் பிள்ளையின் விருப்பத்தைச் செய்யக்கருதி, ராஜ்யஸுகத்தைத் தன்பிள்ளைகள் அனுபவிக்கவேண்டுமென்கிற எண்ணத்தினால் அந்தப்பாண்டவர்களை ஹஸ்தினபுரத்திலிருந்து வெளிப்படுத்தினன். அவர்கள் சேர்ந்து ஹஸ்தினபுரத்திலிருந்து புறப்பட்டனர். புறப்படும்போது மஹாத்துமாக்களான பாண்டவர்களுக்கு விதுரர் புத்திசொன்னார். அதனால் நடுராத்திரியில் அரக்குமாளிகையிலிருந்து தப்பித்துக்கொண்டு வனத்திற்கு ஓடிப்போயினர். மஹாத்மாக்களும் எதிரிகளைத் துன்பப்படுத்துகிறவர்களுமாகிய குந்தியின் புத்திரர்கள் தாயாருடன்கூட ஹஸ்தினபுரத்திலிருந்து வாரணவதநகரம்போய் வாஸஞ்செய்தனர். துர்யோதனன் மந்திரியாகிய புரோசனனிடத்திலிருந்து தங்களைப் பாதுகாத்துக்கொண்டு ஒருவருஷகாலம் ஜாக்ரதை

யோடு அரக்குமாளிகையில் திருதராஷ்டிரன் கட்டளைப்படி வாளுஞ் செய்தனர். அந்தவீரர்கள் விதுரர் தெரிவித்தபடி சுரங்கம் செய்வித் துக்கொண்டு அரக்குமாளிகையைக் கொளுத்திப் புரோசனனை எரித் துவிட்டுப் பயத்தினால் துரிதமுள்ளவர்களாகித் தாயாருடன் ஓடினர் * பயங்கரமான காட்டில் மிகுந்தபலமும் பராக்கிரமமுமுள்ள ஹிடிம்ப னென்னும் கொடியராக்ஷஸனைக் கண்டனர். அந்தராக்ஷஸ ச்ரேஷ் டனைக் கொன்றபின், தங்களைப்பிறர் தெரிந்துகொள்வாரென்று பய ந்து, துர்யோதனபயத்தினாற் பீடிக்கப்பட்ட பாண்டவர்கள் இரவி லேயே ஓடினர். பீமசேனன் ஹிடிம்பையை அடைந்தான். அவளி டத்தில் கடோத்கசன் பிறந்தான். பிறகு பாண்டவர்கள் ஏகசக் ராபுரிசென்று அங்கே உறுதியான நியமத்தோடு வேதாத்யயனஞ் செய்துகொண்டு பிரம்மசாரிகளாக இருந்தனர். அந்தப் புருஷச்ரேஷ் டர்கள் நியமமுள்ளவர்களாகத் தாயாருடன் அந்த ஏகசக்ரா நகரத் தில் ஒருபிராமணனுடைய க்ருஹத்தில் சிலகாலம் வஸித்தனர். அங்கே சிறந்தபுஜபலமுள்ள பீமசேனன் மிகுந்த பலமுள்ளவனும் பசித்தவ னும் மனிதர்களைப் புசிப்பவனுமாகிய பகனென்னும் ராக்ஷஸனிடம் போனன். புருஷச்ரேஷ்டனும் வீரனுமாகிய பீமசேனன் அந்தப்பக னைத் தன் புஜபராக்கிரமத்தினால் விரைவிற்கொன்றுவிட்டு நகரஜனங் களுக்குப் பயத்தைப்போக்கினன். பிறகு அந்தப்பாண்டவர்கள் பாஞ் சாலதேசத்தில் திரௌபதீ ஸ்வயம்வரம் நடப்பதைக் கேள்வியுற்றனர். கேட்டதும், சென்று, அவளை அடைந்தனர். அந்தப்பாண்டவர்கள் திரௌபதியையடைந்து எதிர்களை ஜயித்து ஒருவருஷகாலம் அங்கே வஸித்தபிறகு அறியப்பட்டவர்களாக ஹஸ்தினபுரத்திற்குத் திரும்பி வந்தனர்.

திருதராஷ்டிர மஹாராஜாவும் பீஷ்மாசாரியரும் அவர்களைப் பார்த்து, "அப்பா! உங்களுக்குப் பிராதாக்களுடன் கூடத் துவேஷம் உண்டாகாமலிருக்கவேண்டுமென்று நினைத்து, நாங்கள் காண்டவப்ரஸ் தம் என்கிறவிடத்தில் நீங்கள் வஸிக்கலாமென்று நிச்சயித்தோம்; ஆத லால், நீங்கள் விரோதத்தைவிட்டுக் கிராமங்களோடு கூடினதும் ராஜ வீதிகள் செம்மையாக வகுக்கப்பட்டதுமாகிய காண்டவப்ரஸ்த நக ரத்தில் வஸிப்பதற்குச் செல்லுங்கள்" என்றனர். திருதராஷ்டிரன் பீஷ்மர் இருவருடைய சொல்லையுங்கேட்டு அந்தப் பாண்டவர்கள்

* மலையருவியில் ஹிடிம்பனென்னும் கொடியராக்ஷஸனைக் கண்டனர் என்பது திருவ்ஞ்ஞசாரியர்பாடம்; ஆனால் அருவியின் சமீபத்தில் என்று வரு வீப்பது பழையஉரை. பின்வருங்கதையில் அருவியில் கண்டதாக இல்லை.

வேண்டியவர்களெல்லாருடனும் உயர்ந்த பொருள்களெல்லாவற்றையும் எடுத்துக்கொண்டு காண்டவப்பிரஸ்தமென்னும் நகரத்துக்குச் சென்றனர். அந்தப்பாண்டவர்கள் அஸ்திரசக்தியினால் மற்றராஜாக்களை உட்படுத்திக்கொண்டு அநேகவருஷகாலங்கள் அங்கேவாஸஞ் செய்தனர். இவ்வாறு அவர்கள் தர்மத்தையே கடைப்பிடித்து, ஸத்யத்தையே விரதமாகக்கொண்டு, ஊக்கத்தோடும் முயற்சியோடும் பொறுமையோடும் பகையரசர்களையெல்லாம் பயப்படச்செய்துகொண்டிருந்தனர். சிறந்தகீர்த்தியுள்ள பீமஸேனன் கீழ்த்திசையையும் வீரனாகிய அர்ஜுனன் வடதிசையையும் நகுலன் மேற்றிசையையும் எதிரிகளான வீரர்களைக்கொல்லுகிறவனாகிய ஸஹதேவன் தென்றிசையையும் ஜயித்தனர். இவ்வாறு எல்லாரும் இந்தப்பூமிமுழுவதையும் வசப்படுத்திக்கொண்டனர். ஸூர்யனைப்போன்றவரும் தவருதபராக்கிரமமுள்ளவருமாகிய பாண்டவர் ஐவரும் ஸூர்யனும் பிரகாசிப்பதனால் பூமியானது ஆறு ஸூர்யர்களையுடையதுபோலாயிற்று.

அதன்பின், ஏதோ ஒருகாரணத்திற்காகச் சக்தியுள்ளவரும் ஸத்யத்திலுறுதியுள்ளவருமாகிய தர்மராஜாவான யுதிஷ்டிரர், புருஷச்ரேஷ்டனும் உறுதியான மனஸுள்ளவனும் குணங்கள் பொருந்தினவனும் தமக்கு உயிரைப்பார்க்கிலும் அதிக அன்பனும் இரண்டு கைகளாலும் பாணம் பிரயோகிக்கத்தக்கவனும் ஸஹோதரனுமாகிய அர்ஜுனனை வனத்துக்கு அனுப்பினர். அவன் ஒருவருஷமுழுதும் மேலே ஒருமாஸமும் வனத்தில்வஸித்து, தீர்த்தயாத்திரையும் செய்து, நாககன்னிகையையும் பாண்டியன் பெண்ணையும் அடைந்து அவர்களுடன்கூட அங்கே வாஸஞ்செய்தான். பிறகு, ஒருகாலத்தில் அர்ஜுனன் துவாரகாபுரியில் கிருஷ்ணனிடம்போனன். அங்கே தாமரைமலர்போன்ற கண்களையுடையவளும் அழகாகப் பேசுகிறவளும் கிருஷ்ணனுக்குத் தங்கையுமாகிய ஸுபத்ரையைப் பாரியையாக அடைந்தான். அந்தஸுபத்ரை இந்திராணி இந்திரனோடு சேர்ந்ததுபோலவும் லக்ஷ்மி கிருஷ்ணனோடு சேர்ந்ததுபோலவும் பாண்டவனாகிய அர்ஜுனனுடன் அன்போடு சேர்ந்தாள். ராஜச்ரேஷ்டரே! குந்திபுத்திரனாகிய அர்ஜுனன் கிருஷ்ணனுடன் சேர்ந்து காண்டவவனத்தில் அக்னியைத் திருப்திசெய்வித்தான். தன்னங்கல்பமே ஸஹாயமாகக்கொண்ட விஷ்ணுவுக்கு அஸுரர்களைவதஞ் செய்வதில் அதிகச்ரமம் இல்லாததுபோலவே, கிருஷ்ணனோடுசேர்ந்த அர்ஜுனனுக்கு எதிரிகளைக்கொல்வதில் அதிக ச்ரமம் இல்லாமலிருந்தது. அக்னிஅர்ஜுனனுக்குக் காண்டீவமென்னும் உயர்ந்த தனுஸை

யும் பாணங்கள்குறைபாத இரண்டுதூணிகளையும் ஹநுமக்கொடி யுள்ள ரதத்தையுங்கொடுத்தான். அந்தக்காண்டவதஹனகாலத்தில் அர்ஜுனன் மயனென்னும் அஸுரச்ரேஷ்டனை விடுவித்தான். அந்த மயன் எல்லாவிதமான ரத்னங்களுஞ்சேர்ந்த உயர்ந்தஸபையை நிர்மா ணஞ்செய்தான். புத்தியில்லாதவனும் மிகக்கெட்ட எண்ணமுள்ள வனுமாகிய துர்யோதனன் அந்தஸபாபத்தில் ஆசைவைத்தான். அவன் பிறகு சகுனியைக்கொண்டு சூதாடித் தர்மராஜாவை மோசஞ்செய்து பன்னிரண்டு வருஷகாலம் வனத்துக்கு அனுப்பினன். அதற்குமேல் பதின்மூன்றுவதுவருஷமாகிய ஒருவருஷகாலம் யாருக்குந்தெரியா மல் ஒருதேசத்தில் வஸிக்கும்படி விதித்தான். அதற்குப்பிறகு, பதினான்காவதுவருஷத்தில் தங்கள் தனத்தைப் பாண்டவர்கள் தேட் டும் திரும்ப அடையாமற்போனார்கள்.

மஹாராஜாவே! அதன்பின், யுத்தம்நடந்தது. பிறகு அந்தப் பாண்டவர்கள் க்ஷத்திரியர்களையழித்து ராஜாவாகிய துர்யோதனனை ஸம்ஹரித்து பெரும்பான்மையும் ஜனங்கள் அடிபட்டுப்போன பாஞ்சாலத்தைத் திரும்பப்பெற்றுக்கொண்டனர். அச்வமேதம் முதலான பலவிதங்களான அதிகயாகங்களைச் செய்தனர். திருதராஷ்டிரனும் ஸ்வர்க்கம்போக விதுரரும் தேகத்தைவிட்டபிறகு, மிகுந்தமஹிமை யுள்ள ராஜாக்களுக்கு ஸ்வர்க்கத்துக்கு யோக்கியமான கிரியைகளை நடத்திவைத்து, கிருஷ்ணபகவான் தம் உலகத்தை அடைந்தபோது கிருஷ்ணனுடைய ஸ்திரீகளைக்காப்பாற்றி பரீக்ஷித்தான்செய்து பாண்டவர்கள் மேன்மையான ஸ்வர்க்கத்தையடைந்தனர். ஜயசாலி களுட்சிறந்தவீர! சிலாக்கியமான செய்கைகளையுடைய அந்தப் பாண்டவர்களுக்குக் கௌரவ விரோதம்வந்ததும் ராஜ்யம்போனதும் ஜயம்வந்ததும் இவ்வாறுக முன்னே நடந்தவை" என்றனர்.

அறுபத்திரண்டாவது அத்தியாயம்.

அம்சாவதரணபர்வம் (தொடர்ச்சி).

(பாரதத்தின் மஹிமை).

ஜனமேஜயமஹாராஜா, "பிராமணச்ரேஷ்டரே! கௌரவர்களின் பெருஞ்சரித்திரமாகிய மஹாபாரதமென்னும் இதிஹாஸம்முழுவதும் உம்மால் சுருக்கமாகச் சொல்லப்பட்டது. தர்மாத்மரே! நிர்மலரே! விசித்திரமான விஷயங்களடங்கிய இந்தக்கதையைச் சொல்லும்; விரி

வாகக்கேட்பதில் எனக்கு மிகுந்த ஆசையுண்டாயிருக்கிறது; ஆதலால் நீங்கள் இதைமறுபடியும் விரிவாகச் சொல்லக்கடவீர். முன்னோர்களுடைய பெரிய சரித்திரத்தைக்கேட்டு எனக்குத் திருப்தியுண்டாகவில்லை. தர்மந்தெரிந்த பாண்டவர்கள் கொல்லத்தகாதவர்களையெல்லாம் கொன்றும், மனிதர்களால் புகழப்படுகின்றனரென்பது சிறிய காரணத்தினுலாது. அந்தப் புருஷச்ரேஷ்டர்கள் திறமையுள்ளவர்களாகவும் குற்றமற்றவர்களாகவுமிருந்தும், துராத்மாக்கள் செய்த உபத்திரவங்களை எதற்காகப் பொறுத்தனர். பிராமணோத்தமரே! பதினாயிரம்யானை பலமுள்ளவனும் சிறந்த புஜபலமுள்ளவனுமாகிய பீமசேனன் பிடிக்கப்பட்டும் கோபத்தை எவ்வாறு அடக்கினன்? த்ருபதபுத்ரியாகிய க்ருஷ்ணையானவள் துராத்மாக்களான கௌரவர்களால் பீடிக்கப்படும்போது, சக்தியுள்ளவளாயிருந்தும் திருதராஷ்டிரபுத்திரர்களைக் கோபப்பார்வையினால் எரிக்காமலிருந்ததேன். குந்திபுத்திரர்களும் மாத்ரி புத்திரர்களுமாகிய அந்தப்புருஷச்ரேஷ்டர்கள், கெட்டவர்களாகிய கௌரவர்களால் பீடிக்கப்பட்டவர்களாகச் சூதாட்டத்தில் ஆசைவைத்த தர்மராஜாவை எவ்வாறு ஒத்துப்போயினர். தர்மத்தைக் காப்பவர்களுக்கெல்லாம் சிறந்தவரும் தர்மந்தெரிந்தவருமாகிய தர்மபுத்ரரான யுதிஷ்டிரர் கஷ்டத்தை அடையக் கூடாதவராயிருந்தும் அந்தப் பெருங்கஷ்டத்தை எப்படி ஸஹித்தார். அர்ஜுனன் கிருஷ்ணரென்ற ஸாரதியுடன் ஒருவனைகப்பாணப் பிரயோகஞ்செய்து, மிகுதியானசேனைகள் எல்லாவற்றையும் எவ்வாறு யமலோகத்துக்கு அனுப்பினன்? தபோதனரே! இதையும், அம்மஹாரதர்கள் அந்தஸமயங்களில் இன்னும் என்ன என்ன செய்தார்களோ அவையெல்லாவற்றையும், நடந்தபடி சொல்லும்" என்று கேட்டதற்கு, வைசம்பாயனர் சொல்லத் தொடங்கினர்:

"மஹாராஜாவே அவகாசம் செய்துகொள்ளும்; இந்தப்புண்ணியமான சரித்ரத்தைப்பற்றிக் கிருஷ்ணத்வைபாயனர் சொன்னதாகிய கதைத்தொடர்ச்சி, நான் சொல்லப்போவது; பெரிது. எல்லாலோகங்களிலும் பூஜிக்கப்பட்டவரும் அளவற்ற மஹிமையுள்ளவரும் மஹாத்மாவாகிய வியாஸமஹரிஷியின் அபிப்பிராயத்தை முழுவதும்சொல்லப்போகிறேன். மிகுந்த சக்தியுள்ள வியாஸர் இந்தக் கிரந்தத்தில் புண்ணியகர்மம் செய்தவரைப்பற்றிய சுலோகங்கள் நாறுபிரம் சொல்லியிருக்கிறார். உத்தமமாகிய பாரதம் உபாக்கியானங்களுடன் கூடக் கேட்கவும் அறியவும் தக்கது. ராஜாவே! ஆனல் இதையெல்லாம் சுருக்கமாகச்சொல்லப்போகிறேன். இரண்டாயிரம் அத்தியாயங்களும்

* நூறுபர்வங்களும் நூறுயிரம் சுலோகங்களும் இதில் உள்ளன. அந்த நூறுபர்வங்களை மஹரிஷி பதினெட்டுப் பர்வங்களாக வகுத்தனர். இதைச் சொல்லுகிற வித்வானும் கேட்கிறமனிதர்களும் பிர்ம்ம லோகஞ்சென்று பிரம்மாவுக்கு ஒப்பாயிருப்பார்கள். இந்தப்புராணம் வேதங்களுக்கொப்பானது; புண்ணியமானவற்றுள் உத்தமமானது; கேட்கத் தக்கவைகளுக்குள் சிறந்தது; ரிஷிகளாலும் புகழப்பட்டது. இந்த மஹாபுண்ணியமான இதிஹாஸத்தில் பொருளும் இன்பமும் மோக்ஷத்தைப்பற்றிய ஞானமும் பூர்ணமாக உபதேசிக்கப்படுகின்றன. வித்வானாக இருப்பவன், கிருஷ்ணத்வைபாயனராம் சொல்லப்பட்ட வேதமாகிய இந்தப்பாரதத்தைப் பெருந்தன்மையுள்ளவர்களும் கொடுப்பவர்களும் ஸத்யம் தவறுதவர்களும் நாஸ்திகரல்லாதவர்களுமான மனிதர்களுக்குச் சொல்லிப் பொருளை ஸம்பாதிக்கிறான். மிகக்கொடியவனான மனிதனும் இந்த இதிஹாஸத்தைக் கேட்பதனால் கர்ப்பத்தைக் கொல்லுவதனாலுண்டான பாபத்தையும் நிவர்த்தித்துவிடுவனென்பது நிச்சயம். இதைக்கேட்பவன், சந்திரன் ராகுவினால் விடப்படுவதுபோல் எல்லாப்பாபங்களாலும் விடப்படுவான். இந்த இதிஹாஸம் ஜயமென்று சொல்லப்பட்டது. ஜயிக்க விரும்புகிறவன் இதைக்கேட்கவேண்டும்; ராஜாவாயிருப்பவன் எதிரிகளை ஜயித்துப் பூமியைவசப்படுத்திக்கொள்வன். இஃது ஒருவனுக்குப் புருஷஸந்தானம் உண்டாவதற்குச் சிறந்த காரணம்; மங்களங்களுக்குப் பெரிய ஆதாரம்; அரசிகளும் இளவரசர்களும் பலமுறை கேட்பதற்குரியது; அரசியானவள் வீரனை புத்திரனாவது இராஜ்யத்தையடையக்கூடிய பெண்ணாவது பெறுவள். அளவற்ற ஞானமுள்ள வியாஸரால் சொல்லப்பட்ட இந்தமஹாபாரதம் புண்ணியத்தைக் கொடுக்கும் தர்மசாஸ்திரமாகவும் சிறந்த ராஜநீதி சாஸ்திரமாகவும் மோக்ஷசாஸ்திரமாகவும் இருக்கிறது. பரதச்ரேஷ்டரே! தர்மார்த்த காமமோக்ஷங்களைப்பற்றி இதில் என்ன இருக்கிறதோ அதுதான் மற்றவற்றிலுமிருக்கிறது; இதில் இல்லாதது எதிலுமில்லை. இந்த லோகத்தில் இந்த இதிஹாஸம் பிராமணர்களால் பிராமணர்களுக்குச் சொல்லப்பட்டுவருகிறது. இதை இப்போதும் சொல்லிக்கொண்டிருக்கின்றனர். அப்படியே பின்னிட்டவரும் கேட்கப்போகின்றனர். இதைக்கேட்பதனால் புத்திரர்கள் பிதிர் சுச்ரூஷை செய்பவராகவும் வேலைக்காரர்கள் எஜமானன் விரும்பினதைச் செய்பவராகவும் ஆவார்கள். பரதவம்சத்தாருடைய மேலான ஜனனத்தை வெறுக்காமற்

* சிறுகுறிப்பு: பர்வஸங்கிரஹத்தில் பார்க்க.

கேட்பவருக்கு வியாதிபயமேயில்லை. அவர்களுக்குப் பரலோகத்தைப்பற்றிய பயமில்லையென்பது சொல்லவும் வேண்டுமா? இதைக் கேட்கிறமனிதன் சரீரத்தினாலும் வாக்கினாலும் மனத்தினாலுஞ் செய்த பாபமெல்லாவற்றையும் உடனே விட்டுவிடுகிறான். தனத்தையும்புகழையும் தீர்க்காயுளையும் புண்ணியத்தையும் ஸ்வர்க்கத்தையும் தருவதாகிய இந்த இதிஹாஸம், அதிக தனமும் பராக்கிரமமுள்ளவரும் லோகத்தில் பெயர்பெற்ற செய்கைகளையுடையவரும் எல்லாவித்தைகளிலும் தெளிவுள்ளவருமான மஹாராஜாக்களாகிய பாண்டவர்கள் மற்றுமுள்ள க்ஷத்ரியர்கள் ஆகிய இவர்களுடைய கீர்த்தியை உலகத்தில் பிரகாசப்படுத்தி, புண்ணியத்தை விருத்திசெய்ய விருப்பமுள்ள கிருஷ்ணத்வைபாயனரால் செய்யப்பட்டது. லோகத்தில் எந்தமனிதன் மிகுந்தபுண்ணியத்தைத் தருவதான இந்த இதிஹாஸத்தைப் புண்ணியத்தைவிரும்பிப் பரிசுத்தர்களான பிராமணர்களுக்குச்சொல்வானோ, அவனுக்கு அழியாத புண்ணியமுண்டாகும். சிலாக்கியமான கௌரவர்களின் வம்சத்தை எப்போதும் பரிசுத்தஞ்பிருந்து சொல்லுகிறவன் பெரியவம்சவிருத்தியடைவான். உலகத்திலும் மிகக்கொண்டாடத்தக்கவனுவான். எந்தப்பிராமணன் நியமம் தவறாமல் புண்ணியமான பாரதத்தை வருஷாகாலமான நாலுமாதங்களிலும் படிப்பானோ, அவன் எல்லாப்பாபங்களாலும் விடப்படுவான். பாரதத்தைப்படிப்பவன் எவனோ, அவனே வேதங்களின் கரைகண்டவனை அறியலாம். இதில் பாபங்களைப்போக்கிப் புண்ணியம்கிரம்பினவர்களாகிய தேவர்களும் ராஜரிஷிகளும் பிரம்மரிஷிகளும் சொல்லப்படுகின்றனர். அவ்வாறே தேவர்களுக்கெல்லாம் ஈச்வரனுகிய பகவானை விஷ்ணுவும் சொல்லப்படுகிறார். *தேவியும் சொல்லப்படுகிறாள். இதில் † அநேகர்களால் ஜனனமுள்ள குமாரருடைய உற்பத்தியும் சொல்லப்படுகின்றது. இதில் பிராமணர்களுடைய மஹிமையும் பசுக்களுடைய மஹிமையும் சொல்லப்படுகின்றன. எல்லாவேதங்களினுடைய தொகையுமாகிய இதைத் தர்மத்தில் எண்ணமுள்ளவர்கள் கேட்கவேண்டும். எந்தவித்வான் இதைப் புண்ணியகாலங்களில் பிராமணர்களுக்குச்சொல்வானோ, அவன் பாபங்களை உதறி ஸ்வர்க்கத்தைஜயித்துச்சாச்வதமான பிரம்மத்தையடைவான். சராத்தத்தில்

---

* விஷ்ணுவிற்குப்பின் இருப்பதனால் லக்ஷ்மியென்றும், பிறகு சுப்பிரமணியரைச் சொல்வதனால் பார்வதியென்றுங் கொள்ளலாம்.

† ஆறுகிருத்திகைகளுக்கும் பார்வதிக்கும் அக்னிக்கும் காணற்காட்டுக்கும் புத்திரராகஇருந்ததுபற்றி இப்படிக்கூறப்பட்டனர்.

இதன் ஒருசுலோகத்தின் ஓர் அடியையாவது பிராமணர்களில் ஒருவன் கேட்பித்தால் அவன்செய்கிற அந்தச்சாத்தம் அழியாப்பாபமனுள்ள காகப் பிதிர்க்களிடம் சேரும். ஒருமனிதன் இந்திரியங்களினாலாவது மனத்தினாலாவது தெரிந்தும் தெரியாமலும் ஒருதினம் செய்கிறபாபம் மஹாபாரதமென்கிற இதிஹாசத்தைக்கேட்டவுடன் அழிந்துபோகின்றது. பரதவம்சத்தாருடைய மஹத்தான ஜன்மம்தான் மஹாபாரதமென்று சொல்லப்படுகிறது. இப்பெயரின் இந்தக்காரணத்தை அறிகிறவனே எல்லாப்பாபங்களும் விட்டுவிடுகின்றன. பரதர்களுடைய இந்த இதிஹாஸம் பல அத்புதமானதனால், அது, செவ்வாய்பட்டமரத்திரத்தில் மணிதர்களைப் பெரியபாடத்தினின்றும் விடுவிக்கும். சிறந்த மஹிமையுள்ளவரும் ஸாரத்தியமுள்ளவருமாகிய கிருஷ்ணத்வைபாயனர் மூன்றுவருஷகாலம் ஸ்ரீமபாதும்நோக்காமல் பரிசுத்தராயிருந்துகொண்டு மஹாபாரதத்தைஆதிமுதல் சொன்னார். தவத்துக்குரிய நியமங்களைவஹித்து வியாஸமஹரிஷி இம்மஹாபாரதத்தைச்செய்தார். ஆதலால், இதைப் பிராமணர்கள் நியமத்துடன் கேட்கவேண்டும். வியாஸரால் சொல்லப்பட்டதும் புண்ணியமும் உத்தாரமுமாகிய இந்தபாரதகதையைப் பிறருக்குச்சொல்லுகின்ற பிராமணர்களும் கேட்கிறவர்களும் எவ்வகையாக மடந்தாலும் *செய்கலவ்றையும் செய்யாதவற்றையும்பற்றி விபரனைப்பாவேண்டியவரல்லர். தர்மத்தில் விருப்பமுள்ளவனின் இந்த இதிஹாஸத்தை முழுவதும் விடாமற் கேட்கவேண்டும். அதனால் அவனுக்குரிஷிகளதுவரங்களும். இவ்வாறு மிகுந்தபுண்ணியமாகிய இந்த இதிஹாஸத்தைக்கேட்டு ஒருபுருஷன் எந்த ஸம்பூர்ணத்தைபடைக்கிறானோ, அந்த ஸம்பூர்ணத்தை ஸ்வர்க்கத்திற்குப்போயும் அடைகிறதில்லை. அத்புதமான இந்த இதிஹாஸத்தைச் சிரத்தையுடன் கேட்கிறவனும் கேட்பிக்கிறவனுமாகிய புண்யாத்மாவானவனின் ராஜஸூயம், அச்வமேதம் என்னும் யாகங்களுடைய பலனையடைவான். மஹிமைதங்கிய ஸமுத்ரமும் மஹாமேருவென்னும் பர்வதம் ரத்னங்களுக்கு நிதிகளென்று சொல்லப்படுகின்றனவோ, அவ்வாறே மஹாபாரதமும் † ரத்னங்களுக்கு நிதியென்றுசொல்லப்படுகின்றது. இது தேவதைகளெல்லாவற்றிற்கும் ஸமமும் பாபங்களைப்போக்குவனவற்றுட் சிறந்ததும் செவிக்கினியதும் மனத்தைப் பரிசுத்தஞ்செய்வதும் நல்லொழுக்கத்தை விருத்திசெய்வதுமானது. ஆதலால், இதை யாவரும் அவச்யங்

* பாபஞ்செய்தலுக்கும் புண்ணியஞ்செய்யாதலுக்கும்.

† உயர்ந்தவஸ்துக்கள்.

கேட்கவேண்டும். ராஜாவே! எவன் இந்தப்பாரதபுஸ்தகத்தை, வாசிப்பவனுக்குத தானஞ்செய்கிறானோ, அவன் கடல்சூழ்ந்தபுவனியெல்லாம் தானஞ்செய்தவனுவான். பரிக்ஷித்தின்புதல்வரே! என்னுற் சொல்லப்படும் இந்தஸ்தோஷகரமான உயர்ந்தகதையைப் புண்ணியத்திற்காகவும் ஜயத்திற்காகவும் முழுதுங்கேளும். கிருஷ்ணத்வைபாயனமஹரிஷி மூன்றுவருஷகாலம் ஏகமேபாதும் தூங்காமல் இந்த அற்புதமான மஹாபாரதமென்னும் இதிஹாஸத்தைச் செய்தார். அந்தப்புராதனமான இதிஹாஸத்தை நான் சொல்லக்கேளும்.

அறுபத்துமூன்றுவது அத்தியாயம்.

அம்சாவதரணபர்வம் (தொடர்ச்சி).

(பூருவம்சம்).

மிகுந்த பராக்கிரமமுள்ள உபரி கூடஸ்தர்களாகிய ராஜாக்களின்வம்சமாகிய பாக்கியம்பெற்ற பூருவம்சத்தை நான் சொல்லப்போகிறேன்; அவர்களுடைய பெயர்களைக்கேளும். 'அவ்யக்தம்' என்றுசொல்லப்பட்ட ஆதிபக்ஷமாக பிரம்மத்தினிடமிருந்து மன்னும அழியாதவர் நான்குற்றங்களில்லாதவராகிய பிரம்மதேவர் உண்டானார். அவரிடமிருந்து மரீசி, தக்ஷர் என்னும இரண்டுஸ்ருஷ்டிகர்த்தர்கள் உண்டானார்கள். பிரம்மதேவர் கட்டைவிரலிலிருந்து தக்ஷரையும் கண்களிலிருந்து மரீசியையும் ஸ்ருஷ்டித்தார். மரீசியின் புத்திரர் கசியபரென்பவர். தக்ஷருடையபெண் அதிதியென்பவள். கசியபருக்கு அதிதியினிடம் பிறந்தவன் ஸூர்யன். ஸூர்யபுத்திரன்மனு. வைவஸ்வதமனுவின் பெண் இளையென்பவள். இளையின் புத்திரன் புரூரவஸ். புரூரவஸின்புத்திரன் ஆயு. ஆயுவின்புத்திரன் நகுஷன். நகுஷன்புத்திரன் யயாதி. யயாதிசுக்ரனுடைய பெண் தேவயானியென்பவளும் விருஷபர்வாவின் பெண்ணாகிய சர்மிஷ்டையென்பவளுமாகிய இரண்டு பாரியைகளிருந்தனர். அவர்களின் பின்வம்சம் அடியில்வருமாறு சொல்லப்பட்டிருக்கிறது.

அதாவது:—"தேவயானியானவள் யதுவையும் துர்வஸுவையும்பெற்றாள். விருஷபர்வாவின் பெண்ணாகிய சர்மிஷ்டை, த்ருஹ்யுவையும் அனுவையும் பூருவையும் பெற்றாள்" என்பது.

அவர்களில், யதுவின்வம்சத்தவர் யாதவர்கள். பூருவின்வம்சத்தவர் பௌரவர்கள். பூருவுக்குக் கௌஸல்யையென்னும் பாரியையிருந்தாள். அவனுக்கு அவளிடம் ஜனமேஜயன் ஜனித்தான். அவன் மூன்று அசுவமேதங்கள் செய்தான்; விசுவஜித்துவென்னும் யாகத்தையுஞ்செய்து வனத்துக்குச்சென்றான். ஜனமேஜயன் மகததேசத்து ராஜாவின் பெண்ணுகிய ஸுநந்தையென்பவளை விவாஹஞ்செய்துகொண்டான். அவனுக்கு அவளிடத்தில் பிராசின்வான் என்பவன் பிறந்தான். அவன் ஸூர்யன் உதயமாகின்ற இடம்வரையில் கிழக்குத்திக்கையடித்தான். அதனால், அவனுக்குப் பிராசின்வான் என்று பெயர்வந்தது. பிராசின்வானென்பவன் யதுவம்சத்திற் பிறந்தவளாகிய ஆச்மகியென்பவளை விவாஹஞ்செய்துகொண்டான். அவனுக்கு அவளிடத்தில் * சையாதிபிறந்தான். சையாதி திரிசங்குவின் பெண்ணை வராங்கியென்பவளை மணம்புரிந்தான். அவனுக்கு அவளிடம் அஹம்யாதி பிறந்தான். அஹம்யாதி கிருதவீரியன்பெண்ணை பானுமதியென்பவளை விவாஹஞ்செய்தான். அவனுக்கு அவளிடம் ஸார்வபௌமன் பிறந்தான். ஸார்வபௌமன் கேகயதேசத்தரசன் பெண்ணை ஸுநந்தையென்பவளை ஜயித்துக்கொண்டுவந்து மணஞ்செய்துகொண்டான். அவனுக்கு அவளிடம் ஜயத்ஸேனன்பிறந்தான். ஜயத்ஸேனன் விதர்ப்பராஜாவின் பெண்ணுகிய ஸுச்ரவையென்பவளை விவாஹஞ்செய்தான். அவளிடம அவனுக்கு அபராசினன்பிறந்தான். அபராசினன் மற்றொரு விதர்ப்பராஜனுடைய புத்திரிபாகிய மஹாபாதையென்பவளை மணம்புரிந்தான். அவளிடம் அவனுக்கு அரிஹனன் பிறந்தான். அரிஹன் அங்கதேசத்து அரசன் பெண்ணை விவாஹஞ்செய்தான். அவளிடம் அவனுக்கு மஹாபௌமன் பிறந்தான். மஹாபௌமன் பிரஸேனஜித்தின் பெண்ணுகிய ஸுயஜ்ஞை யென்பவளை விவாஹஞ்செய்தான். அவளிடம் அவனுக்கு அயுதாநாயியென்பவன் பிறந்தான். அவன் புருஷமேதம் என்னப்பட்ட நராயாகத்தில் பதினாயிரம் மனிதர்களைக்கொண்டு வந்தான்; அதனால், அவனுக்கு † அயுதாநாயி என்றுபெயர்வந்தது. அயுதாநாயியென்பவன் ப்ருதுசரவஸின் பெண்ணுகிய பாஸையென்பவளை விவாஹஞ்செய்தான். அவளிடம் அவனுக்கு அக்குரோதனன் பிறந்தான். அக்குரோதனன் களிங்கராஜன் பெண்ணுகிய 'கண்டி' என்பவளை மணம்புரிந்தான். அவளிடம் அவனுக்குத் தேவாதிதிபிறந்தான். தேவாதிதி விதர்ப்பராஜாவின் பெண்

---

* சர்யாதி என்பது உத்தரதேசத்துப்பாடம்.

† அயுதாநாயி - பதினாயிரம்பெயரைக் கொண்டுவந்தவன்; அயுதம் பதினாயிரம், ஆநாயி=கொண்டுவந்தவன்.

ணுகிய மரியாதையென்பவளை விவாஹஞ் செய்தான். அவளிடம் அவனுக்கு ரிசன்பிறந்தான். ரிசன் அங்கராஜன் பெண்ணுகிய வாமதேவியென்பவளிடத்தில் ரிக்ஷனென்னும் புத்திரனைப்பெற்றான். ரிக்ஷன் தக்ஷகன் பெண்ணுகிய ஜ்வலந்தியென்பவளை விவாஹஞ்செய்தான். அவளிடம் அந்தியகாரன் என்பவனை யுண்டாக்கினான். அந்தியகாரன் ஸரஸ்வதி நதிக்கரையில் பன்னிரண்டுவருஷம் செய்யத்தக்க ஸத்ரயாகத்தைச்செய்தான். அவனை யாகஸமாப்தி காலத்தில் ஸரஸ்வதியே நேரில் வந்து பர்த்தாவாக வரித்தாள். அவளிடத்தில் திரஸ்நுவென்னும் புத்திரனை உண்டுபண்ணினான். இதில் பின் வம்சத்தைப் பற்றி அடியில்வருமாறு சொல்லப்பட்டிருக்கிறது.

அது; "ஸரஸ்வதி அந்திய நாரனுக்குத் திரஸ்நுவென்னும் புத்திரனைப்பெற்றாள். திரஸ்நு காளிந்தியென்பவளிடத்தில் இலிலனென்னும் புத்திரனையுண்டாக்கினான்" என்பது.

இலிலன் ரதந்தரியென்பவளிடம் துஷ்யந்தன் முதலிய ஐந்து புத்திரர்களை உண்டுபண்ணினான். துஷ்யந்தன் பரீதவி பெண்ணுகிய லாக்ஷி யென்பவளை மணம்புரிந்தான். அவளிடம் அவனுக்கு ஜனமேஜயன் பிறந்தான். அந்தத் துஷ்யந்தனை விசுவாமித்திரர்பெண்ணை சகுந்தலையென்பவளை விவாஹஞ்செய்தான். அவளிடம் அவனுக்குப் பரதன் பிறந்தான். அந்தப்பரதன் விஷயத்தில் இரண்டு சுலோகங்களிருக்கின்றன. அவற்றின்பொருள் பின்வருமாறு:—

அவையாவன:—" தாயார் தோற்பையைபோன்றவள்; புத்திரன் பிதாவுக்குச்சொந்தம்; எவனுக்கு எவன் பிறந்தானோ, அவன்அவனை தான். துஷ்யந்தனுக்குப் பிறந்தபுத்திரனை எடுத்துக்கொள். சகுந்தலை நிஜம்சொல்லுகிறாள். ராஜாவே! புத்திரன் தன் உற்பத்திக்காகக் கர்ப்பாதானஞ் செய்தவனை நரகத்திலிருந்து கரையேற்றுகிறான். நீ இந்தப் புத்திரனுக்குக் கர்ப்பாதானம்செய்தவன். சகுந்தலை ஸத்யம் பேசுகிறாள்" என்பவை.

"நீ இவனைப் பரிக்கமேவண்டும்" என்று அசரீரவாணி துஷ்யந்தனுக்குச் சொன்னதனால், அந்தப் புத்திரனுக்குப் பரதனென்று பெயர் வந்தது. பரதன் காசிராஜாவாகிய ஸர்வஸேனன்பெண்ணை ஸுநந்தையென்பவளை மணம்புரிந்தான். அவளிடம் அவனுக்குப் புமன்யு என்பவன் ஜனித்தான். புமன்யுவென்பவன் யதுவம்சத்துப் புத்திரியாகிய ஸுவர்ணையென்பவளை விவாஹஞ் செய்தான். அவளிடம் அவனுக்கு ஸுஹோத்ரனென்பவன் ஜனித்தான். ஸுஹோத்ரன் இக்ஷ்வாகுவம்சத்துப் புத்ரியாகிய ஜயந்தி யென்பவளைக்கல்யாணஞ்செய்து

கொண்டான். அவனிடம் அவனுக்கு ஹஸ்தியென்பவன் பிறந்தான். அந்த ஹஸ்தியென்பவன் இந்த நகரத்தை நிர்மாணஞ்செய்தான். அதனாலே தான் * ஹஸ்தினபுரம் என்னப்படுகிறது. ஹஸ்தியென்பவன் திரிகர்த்த தேசத்தரசன் பெண்ணாகிய யசோதையென்பவளைக் கல்யாணம் செய்தான். அவனுக்கு அவளிடத்தில் விகுண்டனனென்பவன் பிறந்தான். விகுண்டனன் யதுவம்சத்துப் புத்திரியாகிய ஸுதரை யென்பவளை மணம்புரிந்தான். அவளிடம் அவனுக்கு அஜமீடனென்பவன் பிறந்தான். அஜமீடனுக்கு கைகேயி, நாகை, காந்தாரி, விசாலி, நிஷதியென்னும் ஐந்துபாரியைகளிடத்தில் இரண்டாயிரத்து நானூறுபிள்ளைகள் பிறந்தார்கள். அவ்வபராக்கள் தனித்தனியாக வம்சங்களை உண்டுபண்ணினார்கள். அந்தப்புத்திரர்களுக்குள் ஸம்வரணனென்பவன் அஜமீடனுக்கு நிஷதியினிடம் பிறந்தவன். அவன் வம்சத்தை விருத்திசெய்தவன். ஸம்வரணன் ஸூர்யன் புத்திரியான தபதியென்பவளை விவாஹஞ்செய்துகொண்டான். அவளிடம் அவனுக்குக் குருவென்பவன் ஜனித்தான். குருவென்பவன் யதுவம்சத்துப் புத்திரியாகிய சுபாங்கியென்பவளை மணம்புரிந்தான். அவளிடம் அவனுக்கு விதுரதன்பிறந்தான். விதுரதன் மகதராஜன்பெண்ணாகிய ஸம்பரிணையென்பவளைக் கல்யாணஞ்செய்துகொண்டான். அவளிடம் அவனுக்கு அனச்வானென்பவன் பிறந்தான். அனச்வான் மகதராஜன் பெண்ணாகிய அமிர்தை யென்பவளை விவாஹம் பண்ணிக்கொண்டான். அவளிடம் அவனுக்குப் பரிக்ஷித்தென்பவன் பிறந்தான். பரிக்ஷித்து பாகுகன் பெண்ணாகிய ஸுவேலையென்பவளைக் கல்யாணம் பண்ணிக்கொண்டான். அவளிடம் அவனுக்குப் பீமசேனனென்பவன் பிறந்தான். பீமசேனன் கேகயராஜன் புத்திரியான ஸுகுமாரி என்பவளைக் கல்யாணஞ்செய்துகொண்டான். அவளிடம் அவனுக்குப் பரிசிரவஸ் என்பவன் பிறந்தான். அந்தப் பரிசிரவஸைப்பற்றி நான் சொல்லப்போகிறேன். பிரதீபன் சிபிச்சக்ரவர்த்தியின்பெண்ணாகிய ஸுநந்தியென்பவளை விவாஹஞ்செய்துகொண்டான். அவளிடத்தில் அவனுக்குத் தேவாபி, சந்தனு, பாஹ்லீகன் என்ற மூன்றுபுத்திரர்கள் பிறந்தார்கள். தேவாபியென்பவன் சிறுபிராயத்திலேயே வனஞ்சென்றான். சந்தனு ராஜாவாக இருந்தான். அவன் விஷயத்தில் ஒரு சுலோகமிருக்கிறது.

அதன்பொருளாவது:—"பூப்புள்ள வெவ்வேவனைச் சந்தனுகைகளினால் தொடுகிறானோ அவர்களெல்லாம் ஸுகமடைந்து மறுபடியும்

* ஹாஸ்தினபுரம் என்றும் வழங்கப்படுகின்றது.

யெளவனத்தை யடைகின்றனர்; ஆதலால், அவனை * சந்தனு என்று நினைக்கின்றனர்" என்பது.

இவ்வாறு இவனுக்குச் சந்தனுவென்று பெயர்வந்தது. சந்தனு பகீரதன்புத்திரியான கங்காதேவியை விவாஹஞ்செய்துகொண்டான். அவளிடம் அவனுக்குத் தேவவ்ருதனென்பவர் ஜனித்தார். அவரைப் பீஷ்மரென்றுஞ்சொல்லுவர். பீஷ்மர் பிதாவின் பிரியத்தைச செய்யக் கருதி ஸத்யவதியென்பவளைத் தமக்கு மாதாவாகக்கொண்டுவந்தார். அவளைக் காளியென்றுஞ்சொல்லுவர். முதலில் கன்னிகையாயிருக்கும் போதே அவளிடத்தில் பராசரருக்குப் பிறந்தவர் க்ருஷ்ணதுவைபாயனர். அவளிடத்திலேயே சந்தனுவுக்குச் சித்ராங்கதன், விசித்ரவீர்யன் என்னும் இரண்டுபுத்திரர்கள் பிறந்தார்கள். சித்ராங்கதன் ராஜ்யத்திற்கு வந்தபின் ஒருகந்தர்வனால் கொல்லப்பட்டான். பிறகு விசித்ரவீர்யன் ராஜாவானான். விசித்ரவீர்யன் காசிராஜன் பெண்களாகிய அம்பிகை, அம்பாலிகை என்பவர்களை விவாஹஞ்செய்தான். விசித்ரவீர்யன் ஸந்ததியுண்டாகாதிருக்கும்போதே தேகவியோகமடைந்தான். பிறகு ஸத்யவதியானவள் எவ்வாறு சந்தனுவின் †பிண்டம் விச்சேதமாகாமலிருக்குமென்று சிந்தித்தாள். அதன் பிறகு, அவள் க்ருஷ்ணதுவைபாயனரை நினைத்தாள். அவர்வந்து நான் செய்யவேண்டியதென்னவென்றுகேட்டு முன்னே நின்றார். ஸத்யவதி அவரைநோக்கி, "உன்பிராதா ஸந்ததியில்லாமல் ஸ்வர்க்கம்போனான். அவனுக்காக நீ ஸந்ததியையுண்டாக்கக்கடவாய்" என்றாள்.

அவர் ஸரியென்றுசொல்லி, அந்தஸந்தர்ப்பத்தில் திருதராஷ்டிரன், பாண்டு, விதுரர்என்ற மூன்றுபுத்திரர்களை உண்டுபண்ணினார். வியாஸருடைய வரப்பிரஸாதத்தினால் காந்தாரியினிடம் திருதராஷ்டிரனுக்கு நூறுபிள்ளைகள் பிறந்தனர். அந்தநூறு புத்திரர்களுள் துர்யோதனன், துச்சாதனன், விகர்ணன், சித்ரஸேனன் என்ற நால்வரும் முக்யமானவர்கள். பாண்டுவுக்குக் குந்தியென்றும், மாத்ரியென்றும் ரத்னங்கள்போன்ற இரண்டுஸ்த்ரீகள் இருந்தார்கள். அந்தப்பாண்டு வேட்டையாடுகையில்ஒருரிஷி மிருகரூபத்தோடுபெண்மானிடம் புணர்ச்சி செய்துகொண்டிருந்தகாலத்தில் அவரைப் பாணத்தால் அடித்தார். பாணத்தாலடிபட்ட அவர் பாண்டுவைப்பார்த்துச் சொன்ன சுலோகம் இருக்கிறது. அதன்பொருள் வருமாறு:—

"குரூரனே! மிருகரூபமெடுத்துக்கொண்டஎன்னைப் புணர்ச்சியின் ஆசை நிறைவேறுமுன்னிருக்கையிலேயே பாணத்தாலடித்தா

* சம=சுகத்தை, தனு=செய்கிறவன். † தேகஸம்பந்தம்.

யாதலின், உனக்கும் இவ்விதமானநிலைமை துரிதமாகவேநேரிடும்" என்பது.

இவ்வாறு மிருகரூபமாகத் திரிந்துகொண்டிருந்தரிஷியினால் சபிக்கப்பட்டு மிகுந்தகுக்கமுற்ற அந்தப்பாண்டு அந்தச்சாபத்தை விலக்குவதற்காகப் பாரியைகளைச் சேராமலிருந்தார். ஒருகாலத்தில்அவர் தமது பாரியையான குந்தியைப்பார்த்து, "என்யோசனைக்குறைவினால் எனக்கு இந்தச்சாபம்நேர்ந்தது. ஸந்ததியில்லாதவனுக்குப் புண்ணியலோகங்களில்லையென்று புராணங்களில் சொல்லியிருப்பதை நான்கேட்டிருக்கிறேன்; ஆதலால் நீ எனக்காகப் புத்திரர்களையுண்டாக்கிக்கொள்" என்றுசொன்னார். அந்தக்குந்தியானவள் தர்ம தேவதையினிடம் யுதிஷ்டரையும் வாயுவினிடம் பீமசேனனையும் இந்திரனிடம் அர்ஜுனனையும் பெற்றுக்கொண்டாள். அந்தப்பாண்டு மிகுந்த ஸந்தோஷத்துடன், "இந்த உன்மாற்றாளாகிய மாத்திரியோக்கியமானவள்; இவள் ஸந்ததியில்லாமையால் வெட்கமடைகிறாள்; இவளுக்கு ஸந்ததியுண்டாக்கவேண்டும்" என்று குந்தியை நோக்கிச்சொல்ல, அந்தக்குந்தியும் ஆகட்டுமென்று சொல்லி, அந்த மாத்திரிக்கும் விரதத்தை உபதேசித்தாள். பிறகு அவளுக்கு அச்வினிதேவர்களால், நகுலனும் ஸஹாதேவனும் இரட்டைப்பிள்ளைகளாகப்பிறந்தனர். பாண்டு செவ்வையாக அலங்காரஞ்செய்துகொண்டிருந்த மாத்திரியைப்பார்த்து விருப்பமுற்றார். அவளைச் சேர்ந்தவுடனே அவர் தேகவியோகமடைந்தார். பிறகு மாத்திரி கணவருடன் கூடச் சிதையேறினாள். அப்போது மாத்திரி குந்தியைநோக்கி "பெரியவளான நீ நகுல ஸஹாதேவர்களைப்பற்றியும் கவனமுள்ளவளாக இருக்கவேண்டும்" என்று சொன்னாள்.

அதன்பின், பாண்டவர்கள்ஐவரையும் குந்தியுடன்கூட ரிஷிகள் ஹஸ்தினபுரத்துக்கு அழைத்துக்கொண்டு போய்விட்டு, பீஷ்மருக்கும் திருதராஷ்டிரனுக்கும் விதுரருக்கும் பாண்டு ஸ்வர்க்கம்போனதைப்பற்றி நடந்தபடிதெரிவித்தனர். பாண்டவர்களைக் குந்தியுடன் கூட அரக்குமாளிகையில் எரிப்பதற்குத் திருதராஷ்டிரபுத்திரன் ஆரம்பித்தான். அவர்களை விதுரர் விடுவித்தார். பிறகு பீமசேனன் ஹிடிம்பனைக்கொன்று ஹிடிம்பையினிடம் கடோத்கசனென்றபுத்திரனை உத்பத்திசெய்தான். பின்பு [பாண்டவர்] க்ஷேமமாக ஏகசக்ரா நகரம் சேர்ந்தனர். அதன்பின்பு பாஞ்சாலதேசஞ்சென்று ஸ்வயம்வரத்தில் திரௌபதியையடைந்து பாதிராஜ்யம் பெற்றுக்கொண்டு இந்திரப்பிரஸ்தத்தில் வாஸஞ்செய்தபோது அந்தத் திரௌபதியிடம்

புத்திரர்களைப்பெற்றனர். யுதிஷ்டிரருடைய புத்திரன் பிரதிவிந்தியன், பீமன்புத்திரன் ஸுதஸோமன், அர்ஜுனன்புத்திரன் சுருதகீர்த்தி, நகுலன்புத்திரன் சதானீகன், ஸஹதேவனுடைய புத்திரன் சுருதஸேனன். யுதிஷ்டிரர் சைப்யனுடைய புத்திரியாகிய தேவகியென்பவளை விவாஹஞ் செய்துகொண்டார். அவளிடம் யௌதேயனென்னும் புத்திரனைப்பெற்றார். பீமஸேனன், காசியில் காசிராஜன் பெண்ணாகிய ஜலந்தரையை ஸ்வயம்வரத்தில் விவாஹஞ்செய்துகொண்டான். அவளிடம் அவனுக்குச் சர்வத்திராதனென்னும் புத்திரன் பிறந்தான். அர்ஜுனன் துவாரகைக்குப்போய்க் கிருஷ்ணபகவானுடைய ஸஹோதரியான ஸுபத்ரையென்னும் கன்னிகையை விவாஹஞ்செய்து கொண்டு, அவளிடம் அபிமன்யுவென்னும் புத்திரனை உத்பத்திசெய்தான். நகுலன் சேதிராஜாவின் பெண்ணாகிய ரேணுவதியென்பவளை விவாஹஞ்செய்து அவளிடம் நிரமித்ரனென்னும் புத்திரனை உத்பத்திசெய்தான். ஸஹதேவன் மத்ரதேசத்துராஜாவின் பெண்ணாகிய விஜயையென்பவளை ஸ்வயம்வரத்தில் பாரியையாக மணம்புரிந்து அவளிடம் ஸுஹோத்ரனென்னும் புத்திரனைப்பெற்றான். பீமஸேனன் முன்னமே ஹிடிம்பையென்னும் ராக்ஷஸியினிடத்தில் கடோத்கசனென்னும் புத்திரனை உதபத்தி செய்திருந்தான். அர்ஜுனனைவெனில், நாககன்னிகையாகிய உலூபியினிடம் இராவானென்னும் பெயருள்ள புத்திரனைப் பெற்றான். அதன்பின் * மணலூர்புரத்தரசன் பெண்ணாகிய சித்ராங்கதையினிடம் பப்ருவாஹனனென்று பெயருள்ள புத்திரனைப்பெற்றான். இந்தப் பாண்டவர்களின் புத்திரர்கள் பதின்மூவர். விராடன் புத்திரியாகிய உத்தரையென்பவளை அபிமன்யு விவாஹஞ் செய்துகொண்டான். அவளிடம் அபிமன்யுவுக்கு உண்டானகர்ப்பம் இறந்ததாகப்பிறந்தது. அந்தக்கர்ப்பத்தைப் புருஷோத்தமரான கிருஷ்ணபகவானுடைய கட்டளையினால் குந்தி தன்மடியில் ஏந்திக்கொண்டாள். "ஆறுமாஸத்தியகர்ப்பத்தை நான் காலால்தொட்டுப்பிழைப்பு மூட்டுகிறேன்" என்றும், "அளவற்ற பராக்கிரமமுள்ளகுமாரனை நான் பிழைப்பிக்கிறேன்; இந்தக்குழந்தை அபிமன்யுவுக்கே ஜனித்தவன் என்ற ஸத்தியத்தினால் இந்தப்பூமி இவனைத் தாங்கட்டும்" என்றும் வாஸுதேவன் சொன்னபிறகு, அவர் பாதம் பட்டதனால் அந்தச் சிசுவுக்கு உயிர் உண்டாயிற்று. "குலமெல்லாம் † பரிக்ஷீணமானபின் கீர்த்திமானான அபிமன்யுவுக்கு உத்தரையினிடம் இவன் பிறந்ததனால் இந்தவீரனு

* மணிபுரம் என்பது வடதேசத்துப்பாடம். † அழிவு.

க்குப் 'பரிக்ஷித்து' என்பது பெயர்" என்று ஸுபத்ரை அங்கக்குழந்தை க்குப் பெயரிட்டாள். பரிக்ஷித்து பத்ரவதியென்பவளை விவாஹஞ் செய்துகொண்டார். அவளிடம் ஜனமேஜயராகிய நீங்கள் பிறந்தீர் கள். ஜனமேஜயராகிய உங்களுக்கு வபுஷ்டை என்பவளிடத்தில் சதாநீகன், சங்குகர்ணன் என்ற இரண்டுபுத்திரர்கள் உண்டாயிருக் கின்றனர். சதாநீகன் விதேஹராஜாவின்பெண்ணை விவாஹஞ் செய்து கொண்டான். அவளிடம் அவனுக்கு அச்வமேததத்தன் என்னும் புத்திரன் பிறந்திருக்கிறான். இவ்வாறு இந்தப்பூரு, பாண்டு இவர்க ளுடைய வம்சம்சொல்லப்பட்டது. இந்தப்பூரு வம்சத்தைக்கேட்பவ னுக்கு எல்லாப்பாபங்களும் விலகிப்போகின்றன.

அறுபத்து நான்காவது அத்தியாயம்.

அம்சாவதரணபர்வம் (தொடர்ச்சி).

உபரிசரவஸுவின் சரித்திரமும், வ்யாஸர், பீஷ்மர், சித்ராங்கதன், விசித்ர வீரியன், த்ருதராஷ்டிரன், பாண்டு, விதுரர், பாண்டவர்கள், கௌரவர்கள், பாண்டவர்களின் புத்ரர்கள் முதலான த்ருவம்சத்தவரின் ஜனனமும்.

எப்போதும் தர்மத்தை விடாதவனும் வேதாத்தியயனமுள்ள வனும் பரிசுத்தனுமாகிய உபரிசரனென்னும் ராஜா ஒருவன் இருந் தான். அவன் எப்போதும் வேட்டையாடிக்கொண்டே யிருந்தான். பூருவம்சத்தவரை விருத்திசெய்கிறவனுகிய அந்த உபரிசரவஸுவென் னும் ராஜாவானவன், இந்திரன் சொன்னதனால் அழகான சேதி தேசத்தைப்பிடித்தான். ஆயுதங்களை விட்டுவிட்டு ஆச்ரமத்தில் வஸித் துக்கொண்டு சிறந்த தவஞ்செய்துகொண்டிருந்த அந்த ராஜாவினி டம், இந்திரன் முதலான தேவர்கள், "இந்தராஜா தன் தபஸினால் இந் திரபதத்திற்குரியவனு யிருக்கிறான்" என்று நினைத்துஅவர்கள் நேரே வந்து அந்தராஜாவை நல்லவார்த்தைகளினால் தவத்திலிருந்து நிவ் ருத்திக்கச் செய்தனர்.

தேவர்கள் அவனைப்பார்த்து, "ராஜாவே! பூமியில் இந்தத்தர் மம் வ்யவஸ்தை தப்பாமலிருக்கவேண்டும்; நீ தர்மத்தை நிலைநிறுத்து வதனாலேதான் அந்தத்தர்மம் உலகத்தையெல்லாம் தாங்கிக்கொண் டிருக்கிறது" என்றுசொன்னார்கள். இந்திரன் நான் தேவர்களை

ரக்ஷிக்கிறேன்; நீ மனிதர்களை ரக்ஷி; நீ எப்போதும் முயற்சி செய்துகொண்டு ஊக்கத்துடன் உலகத்தில் தர்மத்தைக்காப்பாற்று; தர்மத்தில் பிரவர்த்தித்தவனுக்குப் பிற்காலத்தில் அழிவில்லாத புண்ணிய லோகங்களையடைவாய்; ஸ்வர்க்கத்திலிருக்கின்ற எனக்குப் பூமியிலுள்ள நீ அன்புள்ள தோழனாக ஆனாய்; ராஜாவே! பூமியென்னும் பசுவுக்கு மடியைப்போன்ற தேசமெதுவோ, அதில் நீ வாஸஞ்செய்; இந்தத்தேசம் பசுக்களுக்கு அனுகூலமானது; புண்ணிய க்ஷேத்திரம்; தனங்களும் தான்யங்களும் மிகுதியாக உள்ளது; * ஸுகமாக ரக்ஷிக்கக்கூடியது; † சாந்தமானது; ஸுகமான பூஸாரமுள்ளது; இந்தத்தேசம் ஸம்பத்துள்ளது; இதில் தனங்களும் ரத்தினங்கள் முதலியவையும் எப்போதும் இருக்கின்றன. சேதிராஜாவே! இந்தப் பூமியில் எல்லாஸம்பத்துக்களும் நிறைந்திருக்கின்றன. ஆதலால், நீ சேதிதேசத்தில் வாஸஞ்செய். கிராமங்களிலுள்ள ஜனங்கள் தர்மந்தவறுதவர்களும் எளிதில் த்ருப்தியடைகிறவர்களும் யோக்யர்களுமாக இருக்கின்றனர். இந்தத் தேசத்தில் விலையாட்டாகவும் பொய்சொல்வதில்லை; மற்றப்படி சொல்வதேது? புத்திரர்கள் பிதாவுடன் பாகஞ்செய்து கொள்வதில்லை; பெரியோர்களுக்கு நன்மை செய்வதிலேயே விருப்பமுள்ளவர்கள். இவ்விடத்து வ்ருக்ஷபங்களை நகத்தடியிற் பூட்டுகிறதில்லை; அவற்றைப் புஷ்டி செய்விக்கின்றனர். கௌரவத்தைக் கொடுக்கிறவனே! சேதிதேசத்தில் எல்லாவருணத்தாரும் எப்போதும் தங்கள் தர்மங்களில் இருக்கின்றனர். மூன்றுலோகங்களிலும் உனக்குத் தெரியாதது ஒன்றுமில்லை. தேவர்கள் மாத்திரம் அணுபவிக்கத்தக்கதும் தேவலோகத்திலுள்ளதும் ஆகாயத்தில் ஸஞ்சரிப்பதுமாகிய பெரிய ஸ்படிகமயமான விமானத்தை நீ ஆகாயத்தில் ஸஞ்சரிப்பதற்காக உனக்கு நான் கொடுக்கிறேன். அஃது உன்னிடம் வரும். மனுஷ்யரெல்லாருள்ளும் நீ ஒருவன்தான் தேவர்களைப்போறுகிற உயர்ந்தவிமானமேறி மனித உருவங்கொண்ட தேவனைப்போல் ஆகாசத்தில் ஸஞ்சரிப்பாய். வாடாத தாமரைப்புஷ்பங்களையுடைய வைஜயந்தியென்னும் ஜயத்தைத்தரத்தக்க மாலையை உனக்குக்கொடுக்கிறேன். அது யுத்தங்களில் ஆயுதங்களால் காயங்கள் படாமல் உன்னைக்காப்பாற்றும். ராஜாவே! இந்திரமாலையென்று கியாதிபெற்றதும் பாக்கியத்தைக் கொடுப்பதும் நிகரற்றதுமான இந்தமாலையே இந்த லோகத்தில் உனக்குச் சிறந்த அடையாளமாக இருக்கும்”

* ஸ்வர்க்கம் போன்றதாதலால் ரக்ஷிக்கத்தக்கது என்பது பழையஉரை.

† கொடிய ஜந்துக்களில்லாதது என்பது கருத்து.

என்று சொன்னன். இந்திரன் அவனுக்குத் தான் அன்புடன் ஒன்று கொடுக்கக்கருதி, சிஷ்டர்களைக் காப்பாற்றற்குரிய ஒரு மூங்கிற்கோலையும் அவனுக்குக் கொடுத்தான். இவ்வாறு இந்திரன் ராஜாவைச் சந்தோஷப்படுத்தித் தவத்திலிருந்து நிவிர்த்திக்கச்செய்தான். அந்தத் தேவகாரியத்தை நிறைவேற்றித் தேவர்களுடன் சென்றான்.

அதன்பின், சேதிதேசத்தரசன் இந்திரன் கொடுத்த ஆபரணமாகிய வைஜயந்திமாலையை அணிந்துகொண்டும், அவனுற்கொடுக்கப்பட்ட அந்தவிமானத்தில் ஏறிக்கொண்டும் நகரத்துக்குப் போனன். அப்போது பூமியில் இந்திரனைப் பூஜிப்பதற்காக அந்த ராஜா அந்தக் கோலுக்கு எல்லாஉத்ஸவங்களிலும் சிறந்த நகரப்பிரவேசம் என்கிற உத்ஸவத்தைச்செய்வித்தான். மஹாராஜாவே! அதுமுதல் இன்னமும் அந்தராஜா நடத்தினபடி எல்லாராஜரிஷிகளும் மாசிகழிமாதம் சுக்கிலபக்ஷத்தில் கோலுக்கு நகரப்பிரவேசத்தைப் பெரிய யாகமாகச் செய்கின்றனர். அதற்குமுதினம்அந்தக்கோலைப் பொற்கிங்கிணிகளாலும் சந்தனங்களாலும் புஷ்பமாலைகளாலும் ஆபரணங்களாலும் அலங்காரஞ்செய்து, ராஜாக்கள்எடுத்துநாட்டுகின்றனர். புஷ்பமாலைகளாற் சுற்றப்பட்டதும் முப்பத்திரண்டுசாண் அளவுள்ளதுமாகிய அந்தக் கோலைத்தூக்கி ஸுவர்ணமயமானவஸ்திரங்களை அந்தக் * கோலுக்குச்சுற்றி, வஸ்திரங்களிலுமும் அன்னபானங்களிலுமும் பிராமணசிரேஷ்டர்களைத் திருப்திசெய்வித்து அவர்களால் புண்ணியாஹவாசனஞ்செய்வித்து ஆறுகஜம் உயரமிருக்கும்படி பள்ளத்தில் அந்தத்துவஜத்தை நாட்டுகின்றனர். அந்தக்காலத்தில் சங்கங்களும் பேரிகளும் மிருதங்கங்களும் வாசிக்கப்படும். மஹாத்துமாவான உபரிசரவஸு வினிடம் அன்பினுல் தானே கோல்வடிவமெடுத்துக்கொண்டுவந்த பகவானுகிய இந்திரன் அந்தக்கோலில் பூஜிக்கப்படுகிறன். பாணிபத்திரன் முதலிய யக்ஷர்களும் தேவர்களுடன்கூடப் பூஜிக்கப்படுகின்றனர். வேண்டுகிறவர்களுக்கு அனேகவிதமானதானங்களைக் கொடுத்து இஷ்டமித்திரர்களுடன் புஷ்பமாலைகளாலும் பலவிதஆடைகளாலும் அலங்காரஞ்செய்துகொண்டு ராஜாவின் ஆஜ்ஞையினுல் ஜலம்நிரம்பிய அழகம்தால் துருத்திகளைக்கொண்டு விளையாடி, ராஜாவைக்கண்டு வேடிக்கையான பேச்சுகளைப்பேசி, நகரத்து ஜனங்களும் கிராமத்து ஜனங்களும் விளையாடுகின்றனர். ஸூதர்களென்னப்பட்ட பௌராணிகர்களும், ராஜாவைப்பற்றிய ஸ்தோத்திரங்களைப்பாடுகிற மாகதர்களும், நாடகம் ஆடுகிறவர்களும், நர்த்தனஞ்செய்கிறவர்களும் ஸந்தோஷிக்

* இஃது இந்துரதவஜமெனவும் வழங்கும்.

கின்றனர். ராஜச்ரேஷ்டரே! அந்த உபரிசரராஜாகாலத்தில் எல்லாரும் ஸந்தோஷமாகப் பிரியஉத்ஸவத்தைச்செய்தனர். அப்போது தேசதி தேசத்தரசனை உபரிசரவஸு அந்தப்புரஸ்திரீகளாகிய மஹிஷிக ளோடும் எல்லாஆபரணங்களோயும அணிந்துகொண்டும், ஸுவர்ணமய மான பிகாம்பரங்களை உடுத்துக்கொண்டும், உயர்ந்தசாதிலிங்கம் பூசிக் கொண்டும் ஸந்தோஷமாகஇருந்தான். சேதிராஜாவான வஸுவான வன் எப்படி ஸந்தோஷமாக இந்திரனுடைய உத்ஸவம் செய்தானோ அப்படியே தேசத்திலுள்ளவர் அனைவரும் இந்திரோத்ஸவத்தைக் கொண்டாடினர்கள். வஸுவினால்செய்யப்பட்ட இந்தசிறந்தபூஜை யைக்கண்டு தேவேந்திரனும் ஹரிகள்என்றுபெயருள்ள குதிரைகள் பூட்டின ஆகாசத்திற்போகின்ற தன் ரதத்தில் இந்திராணியுடன் ஏறிக் கொண்டு அப்ஸரஸ்ஸுகளுடைய கூட்டங்களினால்சூழப்பட்டவனாக வந்து, ராஜச்ரேஷ்டனை உபரிசரவஸுவைநோக்கிச்சொன்னான், "ஜனங்களால் கட்டுப்பட்டு, ராஜாக்களாகப்பட்டு, சேதிராஜாவைப்போல ஸந்தோஷமாக என்னுடைய உத்ஸவத்தைச்செய்து கொண்டிருப்பாயின், அவர்க ளுக்கும் அவர்களுடைய புத்திரர்களுக்கும் பரம்பரையாக ஜயமுண்டாகும்; அப்படியே தேசமும் செழுமையாகவும் ஸந்தோஷமாகவும் இருக்கும். அதிகவிதமானபயிர்கள் கெடுதியில்லாமல் உண்டாகும். ராக்ஷஸர் களும், பிசாசர்களும் அவற்றை எவ்வகையிலும் கெடுக்கமாட்டார் கள்" என்றுசொன்னான்.

ராஜாவே! இவ்வாறு அநுக்ரஹத்தைஆகிய தேவேந்திரனால் வஸுமஹாராஜன் பிரீதியுடன் கௌரவிக்கப்பட்டான். இவ்வாறு கௌரவித்துத் தேவேந்திரன் தன்னிடஞ்சென்றான். எந்நமனிதர் பூமிகள் இரத்தினங்கள் முதலியவற்றைத் தானஞ்செய்து இந்திரோத் ஸவஞ்செய்கின்றனரோ அவர்உபரிசரவஸுவைப்போலவே பூஜிக்கப் படுவர். இந்திரனால் கொண்டாடப்பட்ட வஸுஎன்னும் சேதிராஜன், கேட்டவற்றைக் கொடுத்துக்கொண்டும் மஹாயாகங்களையும் இந்தி ரோத்ஸவத்தையுஞ் செய்துகொண்டும் சேதிதேசத்திலிருந்தே இந் தப்பூமியையெல்லாம் தர்மமாகப் பரிபாலனஞ்செய்தான். சேதிராஜா வான உபரிசரவஸு இந்திரனிடத்தில் பக்திமீயோடு இந்திரோத்ஸவத் தைச் செய்தான்.

அவனுக்கு அளவற்ற மஹிமையுள்ளவர்களும் மிகுந்த பராக்கிர மமுள்ளவர்களுமாகிய ஐந்துபுத்திரர்களிருந்தார்கள். சக்கரவர்த்தி யாகிய அந்தராஜா புத்திரர்களை அநேகராஜ்யங்களில் பட்டாபிஷேகம் செய்வித்தான். ராஜாவே! மகததேசத்து ராஜாக்களில் பிரஸித்தி

பெற்றமஹாரதனுகியபிருஹத்ரதனும் பிரத்தியக்ரதனும் மணிவாஹன னென்று வழங்கப்பட்ட குசாம்பனும் மத்ஸில்லனும் தோல்வியடை யாத யதுவென்னும் ராஜாவுமாகிய இவர்கள் மிகுந்தமஹிமையுள்ள அந்த வஸுவென்னும் ராஜரிஷியின் புத்திரர்கள். இந்தப்புத்திரர்கள் தங்கள்பெயர்களிலேயே தேசங்களையும் நகரங்களையும் ஏற்படுத்தி னர். உபரிசரவஸுவின் புத்திரர்களாகிய ஐந்துராஜாக்களும் தனித் தனி வம்சங்களோடு நெடுங்காலம்இருந்தார்கள். இந்திரக்ருஹத்தி லும் ஆகாசத்திலும் ஸ்படிகமயமான விமானத்திலுமிருக்கும்போது, அந்த மஹாத்மாவான வஸுவென்னும் ராஜாவைக்கந்தர்வர்களும் அப்ஸரஸுகளும் சேவித்தனர். அதன்பிறகுதான், அந்த ராஜாவுக்கு * உபரிசரன் என்றபெயர் பிரஸித்தமாயிற்று.

அவனுடைய பட்டணத்துக்குச் சமீபத்தில் வெள்ளம்பெருகி யோடுகின்ற சுக்திமதியென்னும் நதியைக் கோலாஹலமென்னும் பர்வதம் புருஷரூபமாகக் காமங்கொண்டுதடுத்தது. அந்தக்கோலா ஹலமலையை உபரிசரவஸு காலால் உதைத்தான். அந்த உதையினு லுண்டான துவாரத்தினுல் அந்தநதி வெளியிற்போயிற்று. அந்த நதியினிடம் கோலாஹலபர்வதத்திற்கு ஆணும்பெண்ணுமாகிய இர ண்டுகுழந்தைகள் பிறந்தன. ராஜா கோலாஹலமலையின் தடையி லிருந்து விடுவித்ததனுல் ஸந்தோஷமடைந்த சுக்திமதிநதி ராஜாவி னிடம்சென்று, "இந்தப்பெண் உனக்கு அரசியாகவும் இந்த ஆண் உனக்குச் சேனாதிபதியாகவும் இருக்கவேண்டும்" என்று தெரிவித் தது. சுக்திமதிநதி சொன்னதைக்கேட்டு, அவ்விரண்டு குழந்தை களையும்பார்த்து, ராஜரிஷிகளில் சிரேஷ்டனுகவும் ஸம்பத்தைக்கொடு ப்பவனுகவுமிருக்கிற வீரனான வஸு அந்தப்பிள்ளையைச் சேனாதிப தியாகவும் கிரிகையென்னும் பெயருள்ள அந்தப்பெண்ணைத் தனக்குப் பத்தியாகவுஞ் செய்துகொண்டான்.

வஸுவின்மஹிஷியான கிரிகை ருதுகாலத்துக்குப்பின் ஸ்நா னஞ்செய்து பரிசுத்தையாக இருந்துகொண்டு, ஸந்ததிக்காகத் தன க்குவிருப்பம் இருப்பதைத் தெரிவித்தாள். அதேதினத்தில் பித்ரு க்கள் அன்புடன் அந்த ராஜச்ரேஷ்டனிடம்வந்து 'மிருகங்களைக் கொல்' என்று சொன்னார்கள். புத்தியான்களில் சிறந்தவனுகிய அந்தராஜா அப்போது பித்ருக்களின்கட்டளையினுல் அந்தக்கிரிகை யை விட்டுவிட்டு அவள்மேல் காமத்துடன், இரண்டாம் லக்ஷ் மியை நேரே வந்தாற்போன்ற மிகுந்த அழகுள்ள அவளையே தினமு

* மேலே சஞ்சரிப்பவன்.

துக்கொண்டு வேட்டையாடினன். அசோகங்கள் சண்பகங்கள் மாமரங்கள் திணிசமரங்கள் புன்னைமரங்கள் கொன்றைமரங்கள் மகிழமரங்கள் உயர்ந்தபாதிரிமரங்கள் பலாமரங்கள் தென்னைமரங்கள் சந்தனமரங்கள் மருதமரங்களாகிய இனியகனிகளோடுகூடியவையும் அழகும் பரிசுத்தங்களுமான இந்தப் பெரிய மரங்களோடுகூடியதும், குயில்கள்நிரம்பச் சப்திக்கப்பெற்றதும், மதமுள்ளவண்டுகள் ரீங்காரங்கள் செய்யப்பெற்றதும், சைத்ரரதமென்னும் குபேரனுடைய தோட்டத்துக்கு ஒப்பானதுமாகிய அந்தவனத்தை வஸந்தகாலத்திற்பார்த்து மன்மததாபமுற்ற மனத்திடன் கிரிகையைக்காணுமல் காமத்தாற் கொதிப்படைந்து ஸஞ்சரிக்கையில், தற்செயலாகப் புஷ்பங்களால் கிளைகளின் துனிகள் மறைக்கப்பட்டதும் தளிர்களினுல் சோபிக்கின்றதும் அழகானதும் பூங்கொத்துக்களால் மறைக்கப்பட்டதுமாகிய ஓர் அசோகமரத்தைக் கண்டான். அதன்கீழ் நிழலில் ஸுகமாக வீற்றிருந்தராஜா காற்றினுல் கொண்டுவரப்பட்டதும் * தேன்மணமுள்ளதுமாகிய அந்தஇனிய புஷ்பவாஸனையைமோந்து ஸந்தோஷமடைந்தான். பாரியையை நினைக்கும்போது அந்தராஜாவுக்குக் காமமென்னும் அக்னிவிருத்தியாயிற்று. அவன் இருண்டகாட்டில் ஸஞ்சரிக்கும்போது அவனுடையவீரியம் வெளிப்பட்டது. வெளிப்பட்டமாத்திரத்தில் அந்தஅரசன், "என்னுடையவீரியம் வீணுகவிழுக்கூடாது" என்று நினைத்து, உடனே அதை இலையில்வந்தினன். ராஜா அந்தவீரியத்தில் தன்மோதிரத்தினுல் முத்திரை வைத்துச் சிவந்த அசோக புஷ்பங்களாலும் தளிர்களாலும் மூடிக்கட்டினன். "இந்த என்வீரியம்வீணுக விழுந்ததாகாமலும், அந்த என்பத்தினியின் ருதுகாலம் வீணுகாமலும் எவ்வாறிருக்கும்" என்று அறம், பொருள் இவைகளின் நுட்பமானஉண்மையை அறிந்திருந்த அந்த ஸமர்த்தனுகிய ராஜ்ரேஷ்டன் சிந்தித்துப் பலமுறை ஆராய்ந்துபார்த்து, தன்வீரியம் வீணுவதில்லையென்பதை நிச்சயித்து, அதைத் தன்பத்தினிக்கு அனுப்புவதற்கு 'இதுகாலம்' என்று நினைத்து, அதற்குக் கர்ப்பாதான மந்திரத்தைஜபித்து, அருகேநிற்பதும் விரைவாகச் செல்லத்தக்கதுமாகிய ஒருபருந்தினிடம் சென்று, "பிரியமான வனே! என்விருப்பத்தைச் செய்வதற்காக இந்த என்வீரியத்தை வன்கிருகத்திற்குக் கொண்டுபோய் உடனே கிரிகைக்குக்கொடு; இப்போது அவளுக்கு ருதுகாலம்" என்றுசொன்னன்.

* இங்கே கிருஷ்ணசார்யர் பாடத்தைத் தழுவவில்லை.

மிகுந்தவேகமுள்ள பக்ஷியாகியபருந்து அப்போது அதை யெடுத்துக்கொண்டு உடனேகிளம்பி மிகுந்தவேகத்துடன் ஓடிற்று. அந்தப்பருந்து வருவதைப்பார்த்து, மற்றொருபருந்து மாம்ஸத்தை யெடுத்துக்கொண்டு போவதாக நினைத்து உடனே அதைதாக்கி த்தது. பிறகு ஆகாசத்தில் அவ்விரண்டும் மூக்கினால் சண்டைசெய்தன. அவை சண்டைபோடும்போது அந்தவீர்யம் யமுனைஜலத்தில் விழுந்தது. அங்கே அத்திரிகையென்று பெயர்பெற்ற ஒருசிறந்த அப்ஸரஸ் பிரம்மாவின்சாபத்தினால் மீன்ஜன்மமெடுத்து யமுனையில் ஸஞ்சரித்துக்கொண்டிருந்தாள். அந்த மத்ஸ்யரூபத்தோடுகூடிய அத்திரிகையானவள் பருந்தின்கால்களிலிருந்து தவறிவிழுந்த அந்தவஸுவினுடைய வீர்யத்தை விரைவாக ஓடிவந்து, எடுத்துக்கொண்டாள். பரதச்ரேஷ்டரே! அதற்குப்பிறகு, பத்தாவதுமாஸம் வந்தபோது, ஒருநாள் அந்தமீனைச் செம்படவர்கள் பிடித்தார்கள். அதன்வயிற்றிலிருந்து மனுஷ்யர்களாகிய ஒருஸ்த்ரீயையும் ஒருபுருஷனையும் எடுத்தார்கள். உடனே ராஜாவினிடஞ்சென்று, "ராஜாவே! மீனின் சரீரத்தில் இந்த இரண்டுமனுஷ்யர் உண்டாயிருந்தனர்" என்று அந்த ஆச்சர்யத்தைத் தெரிவித்தனர். அப்போது ராஜாவாகிய உபரிசரவஸு அந்தக்குழந்தைகளுள் ஆண்குழந்தையை வாங்கிக் கொண்டான். அந்த ஆண்குழந்தை தர்மசீலனும் ஸத்யசந்தனுமாகிய மத்ஸ்யனென்னும் ராஜாவானான். அந்தமீன் உடனே சாபம்நீங்கி அப்ஸரஸாக ஆய்விட்டது. அந்தஅழகான அப்ஸரஸுக்கு முன்னே பகவானுகிய பிரம்மா, "நீ தர்மியக்குஜாதியிலிருந்து இரண்டு மனுஷ்யர்களைப்பெற்றுப் பிறகு சாபவிமோசனம் அடைவாய்" என்று சொல்லியிருந்தார். அதனால், அந்தச்சிறந்த அப்ஸரஸ் அவ்விரண்டு குழந்தைகளையும்பெற்றுச் செம்படவர்களால் கொல்லப்பட்டு மீன்வடிவத்தை விட்டுத் தேவரூபத்தையடைந்து, உடனே ஸித்தர்களும் ரிஷிகளும் சாரணர்களும் ஸஞ்சரிக்கும் மார்க்கத்தில் சென்றாள்.

மீனின்பெண்ணாகிய அந்தக்கன்னிகை மீன்தாற்றம் உள்ளவளாயிருந்ததினால் அவளை உபரிசரவஸு, "இவள்உனக்குப் பெண்ணாக விருக்கட்டும்" என்று ஒருசெம்படவனுக்குக் கொடுத்தான். அழகும் நியமமுமுள்ளவளும் குணங்களெல்லாம் நிரம்பினவளும் மத்ஸ்யாஸமுகமுள்ளவளுமான ஸத்யவதியென்று பெயருள்ள அவள் மீன்பிடிப்பவனிடம் இருந்ததனால் சிலகாலம்வரையில் மத்ஸ்யகந்தியென்ற பெயரோடேயேயிருந்தாள். தன்தகப்பனுக்குப் பணிவிடை செய்வதற்காக ஜலத்தில் ஓடத்தை நடத்திக்கொண்டிருக்கும் அவ

னைத் தீர்த்தயாத்திரையாக ஸஞ்சரித்துக்கொண்டுவந்த பராசர் கண்டார். மிகவும் அழகு நிரம்பினவளும் தேவர்களும் விரும்பத்தக்கவளும் புன்னகையோடுகூடிய முகமுள்ளவளுமாகிய அந்தப் பெண்ணைக்கண்டவுடன் சிறந்தஞானியான அந்தப்பராசரரிஷி காமமுற்றார். வாழைமரம்போன்ற தொடைகளையுடையவளும் தேவதையைப்போன்றவளுமாகிய அந்த வஸுபுத்திரியான கன்னிகையைப்பார்த்து, அவளுடைய பிறப்பைப்பற்றிக் கிந்தித்துத் தெரிந்துகொண்டு, சக்தியின் புத்திராகிய பராசரரென்னும் முனிச்ரேஷ்டர், "உயர்ந்தபெண்ணே! இந்த ஓடத்தைநடத்துகிற ஓடக்காரன்எங்கே? சொல்" என்று அவளைக்கேட்க, மத்ஸ்யகந்தை, "பிராமணரே! நான் ஸந்ததியில்லாத செம்படவனுக்குப்பெண்; அவன் பிரியத்தைச் செய்யக்கருதி ஆயிரம் ஜனங்கள் நிரம்பிய இந்த ஓடத்தை நான் நடத்துகிறேன்" என்று சொன்னாள். பராசரமஹரிஷி, "நல்லது, வஸுவின்புத்திரியே! அழகானவளே! என்காமத்திற்குரியாய்; ஓடத்தைநடத்து, ஆயிரத்தில்பாதி ஐந்நூறுஜங்கியையுள்ள பொன் உனக்கு வரப்போகிறது. நான் ஒருவன் இருப்பேன். சீக்கிரம்ஓட்டுவாய்" என்றுசொல்ல, மத்ஸ்யகந்தையானவள் ஆகட்டுமென்றுசொல்லி ஜலத்தில் ஓடத்தைநடத்தும்போது, தன்னைப்பார்க்கின்ற பராசரமுனியை நோக்கி, "என்னைச் செம்படவன்மிடுக்கிய மத்ஸ்யகந்தையென்று ஜனங்கள் சொல்லுகின்றனர். இக்கத்துக்நத்திலில் வருத்தப்பட்டுக்கொண்டிருக்கிற * நான்ஜனித்த வரலாற்றை நீர் எவ்வாறு அறிவீர், சொல்லவேண்டும்" என்றுகேட்க, பராசர் சொல்லத்தொடங்கினர்.

"வஸுபுத்திரியே! உன் தேகத்தைப் பார்த்தமாத்திரத்தில் உன்னுடைய ஸ்னேஹம் பெறுவதைப் பிரயோஜனமாகக்கருதி, என்னுடைய திவ்யஜ்ஞானத்தினால் நான்கண்டதை உனக்குச் சொல்லப்போகிறேன்; அதை நீ கேள். பர்ஹிஷத்துக்கள் என்றுசொல்லப்பட்ட பித்ருத்தேவதைகள் இருக்கின்றனர்; அவர்கள் அமிர்தபானஞ்செய்தவர்கள். நீ அவர்களுக்கு, மனத்தினால் உண்டாக்கப்பட்ட பெண். † அச்சோதம் என்பதாகத் தேவலோகத்தில் தடாகம் ஒன்றிருக்கின்றது; அதிலிருந்து நீ உண்டானதனால் உனக்கு அச்சோதையென்று பெயர் உண்டாயிற்று. நீ உன்பித்ருக்களை ஒருகாலத்துங்கண்டதில்லை. அவர்களின் மனத்தினால் நீ உண்டானவளாதலால், உன்பித்ருக்களை நீ

* வஸுபுத்திரியே! என்று தன்னை அவர் விளித்தது பற்றிச்சொல்லியது.

† தெளிந்த ஜலமுள்ளது.

அறியாய்; அதனால், உன்பிதிர்க்களைத்தாண்டி நீ, அத்திரிகையென்னும் அப்ஸரஸுடன்சேர்ந்து ஆகாசத்தில் தேவவிமானமேறி அங்கேயே ஸஞ்சரித்துக்கொண்டிருந்த வஸுவென்றுபெயர்பெற்ற மனுபுத்திரனை உனக்குப்பிதாவாக விரும்பினாய். வேறுபிதாவைப் பிரார்த்தித்ததனாலுண்டான மனத்தின்மாறுபாட்டினால் நினைத்தபடி ஸஞ்சரித்துக்கொண்டிருந்த நீ யோகசக்தியை இழந்து கீழேவிழுந்தாய். அப்படி நீ விழுந்துகொண்டிருந்தபோது ஸமீபத்தில் மூன்றுவிமானங்களைக் கண்டாய். பலகணிவழியாகவிழுகின்ற ஸூர்யகிரணத்தில் புகைபோற்காணப்படும் த்ரஸரேணு என்னப்பட்ட சிறிய அணுவளவாக உற்றுப்பார்க்கக்கூடியவர்களும் அவயங்களில்பிரிவுகள் தோன்றுதவர்களும் அவயங்களுள் மறைந்தவைபோன்ற தேகங்களுள்ளவர்களுமான உன்பிதிர்க்கள் அந்தவிமானங்களில் இருப்பதைக்கண்டு, தலைகீழாகவிழுந்துகொண்டே துக்கத்துடன் அவர்களைநோக்கி, "தந்தைகளே" என்றாய். அவர்கள், "பயப்படாதே" என்று சொன்னதனால் ஆகாசத்திலேயே நின்றாய். அதன்பின், தினஸ்வரத்தோடு உன்பிதாக்களுக்கு ஸமாதானம்செய்தாய்.

பிழைசெய்ததனால் யோகமஹிமை தப்பிப்போன அந்தக்கன்னிகையான உன்னைநோக்கி அந்தப்பிதிர்க்கள், "புன்னகையுள்ளவளே! உனதுகுற்றத்தினால் யோகசக்தியற்று நீ விழுகிறாய்; இந்தலோகத்தில் தேவர்கள் எந்தச்சரீரங்களால் கருமங்களைச் செய்கின்றனரோ அவற்றிலேயே அக்கருமங்களின் பலனை அனுபவிக்கின்றார்கள். மனுஷ்யர்களோவெனில், தங்கள் நல்வினை தீவினைப்பயன்களை மற்றொரு தேகமெடுத்து அனுபவிக்கிறார்களென்பது நிச்சயம். தேவர்களாயிருக்கையிற் செய்தகருமங்கள் அப்போதேபலிக்கும்; மனிதராயிருக்கையிற் செய்தகருமங்கள் வேறு ஜன்மத்திற்பலிக்கும். பெண்ணே! ஆதலால், நீ விழுகிறாய்; அடுத்தஜன்மத்தில் இதன்பலனை அனுபவிப்பாய். நீ பிதாஇல்லாதபெண்ணைவும் வஸுவின் புத்திரியாகவும் இருக்கநினைத்தாய். அத்திரிகையென்பவள் கங்கையமுனைகளின் ஸங்கமத்தில் மத்ஸ்யரூபமாகப் பிறந்திருக்கிறாள். மத்ஸ்யமாயிருக்கின்ற அவளுடைய கர்ப்பத்தில் ராஜாவுக்குப்பிறந்த பெண்ணைஆகப்போகிறாய். நீ பராசரருக்கு ஒரு புத்திரனைப் பெறப்போகிறாய். அந்தப்பிரம்மரிஷியாகிய புத்திரன் ஒன்றுகவிருக்கிற வேதத்தை நான்காக வகுக்கப்போகிறான். மஹாபிஷக்என்னும் ராஜாவின் புத்திரனிய சந்தனுவின்கீர்த்தியை விரும்திசெய்கிறவர்களும் வீரர்களும்

கியாதிபெற்றவர்களுமாகிய மூத்தவனை சித்ராங்கதனையும் பிறகு விசித்ரவீர்யனையும் பெறப்போகிறாய். இந்த ஸத்புத்ரர்களைப்பெற்ற பிறகு, திரும்பவும் உன் உலகத்துக்குப்போவாய். பிதிர்க்களின் அயராதத்தினல் இழிவான ஜன்மத்தை யடைவாய். இந்த ராஜாவுக்கே அத்திரிகையினிடம் நீ பெண்ணாகப் பிறக்கப்போகிறாய். இருபத்தெட்டாவது சதுர்யுகத்தைச்சேர்ந்த துவாபரயுகத்தில் நீ மத்ஸ்ய யோனியில் ஜன்மத்தையடைவாய்" என்று சொன்னர்கள்.

அவர்களால் முன் ஜன்மத்தில் இவ்வாறுசொல்லப்பட்டநீ அழகானஸத்தியவதியாகஇப்போதுபிறந்திருக்கிறாய்;அத்திரிகையென்ற பெயர்பெற்றசிறந்தஅப்ஸரஸ்ஸ்பிரம்மாவின் சாபத்தினல் மீன்ஜன்மமடைந்து உன்னைப்பெற்றபிறகு ஸ்வர்க்கஞ்சென்றாள். அந்த அச்சோதையென்னும்பெண்ணாகியநீ வஸுவென்னும்ராஜாவின் வீரியத்திற்கு, மீன்ஜன்மமெடுத்த அந்த அப்ஸரஸினிடம் பிறந்திருக்கிறாய். ஆதலால், இவ்வாறு வஸுவின்புத்ரியாக இருப்பவளே! உனக்குச் சுபமுண்டாகக்கடவது. வம்சவ்ருத்திகரணாகிய புத்ரனை வேண்டுகிறேன். அழகானவளே! என்னுடன் ஸங்கமஞ்செய்" என்று நயமாகப்பேசினர்.

அவள் பூர்வஜன்மத்தின் ஞாபகத்தையடைந்து ஆச்சர்யத்தினல் அங்கமெல்லாம் பூரித்தவளாகி, "பகவானே! அக்கரையில் ரிஷிகளிருப்பதைப்பாரும்; அவர்கள் பார்க்கையில் நாமிருவரும் எவ்வாறு சேரலாம்" என்றுகேட்டனள். அப்படி அவள் சொன்னவுடன் எல்லாந்தெரிந்தவரும் ஸமர்த்தருமான பராசரமஹரிஷி பனியை உண்டுபண்ணினர். அந்தப்பனியினல் அந்தத் தேசமெல்லாம் இருளடைந்ததுபோலாயிற்று. அந்தமஹரிஷியினல் ஸ்ருஷ்டிசெய்யப்பட்ட அந்தப்பனியைக்கண்டு அந்தக்கன்னிகை வியப்புற்றவளாகி வெட்கத்தோடும் * விருப்பத்தோடும் அம்முனிவரைநோக்கிச்சொல்லலானள். "பகவானே! நான் எப்போதும் தந்தைக்குட்பட்டிருக்கிற கன்னிகையென்றறியும். குற்றமில்லாதவரே! உங்களுடைய சேர்க்கையினல் என்னுடைய கன்னிகாதர்மம் கெட்டுப்போம். பிராமணச்ரேஷ்டரே! ரிஷியே! சிறந்த ஞானமுள்ளவரே! கன்னிகாதர்மம் கெட்டுப்போனல் நான் எப்படி வீடுபோகமுடியும். ஆதலால் நீர் சொன்னபடி இருக்கநான் விரும்பவில்லை. பகவானே! நீங்கள் இதை கன்றாக ஆராய்ந்து அதன்பின் செய்யவேண்டியதைச்செய்யுங்கள்" என்றாள்.

---

* தபஸ்விநீ என்பது கிருஷ்ணசாரியர்பாடம்; தந்தையின்சொற்படியிருப்பதாகிய நியமமுள்ள கன்னிகை என்பது பொருள்.

ಇವ್ವಾಱುಸೊನ್ನ ಅವಳೊಡಗೊಂಡು ಅಂತರಿಷಿಶ್ರೇಷ್ಟರ್ ಮಿಗುತ್ತ ಅನ್ಬುಡನ್, "ಬಯಮುಳ್ಳವಳೇ! ಉಯರ್ತಪೆಣ್ಣೇ! ಎನ್ನಿರುಪ್ಪತ್ತೈ ನಿಱೈವೇಱ್ಱಿನಪಿನ್ ನೀ ಕಣ್ಣಿಗೆಯಾಗವೇ ಆಯ್ವಿಡುವಾಯ್; ಉನಕ್ಕು ವೇಂಡಿಯ ವರತ್ತೈಯುಂ ಕೇಳ್; ಅಳಗಿಯಪುನ್ನಗೆಯುಳ್ಳವಳೇ! ಎನ್ನುಡೆಯ ಅನುಕ್ರಹಂ ಎಪ್ಪೋದುಂ ವಿಣ್ಣಗಿಲ್ಲೈ" ಎನ್ಱುಸೊನ್ನರ್. ಇವ್ವಾಱು ಅವರ್ ಸೊನ್ನಪಿನ್, ಅವಳ್ ತನ್ ಸರೀರತ್ತಿಲ್ ಮೇಲಾನನಲ್ಲ ಮಣಮಿರುಪ್ಪತೈಯೇ ವರಮಾಗಕ್ಕೇಟ್ಟಾಳ್. ಅಂತ ಸಮರ್ತತಾನಪರಾಸರ ಪಗವಾನುಂ ಅವಳ್ಮನಸುಕ್ಕಿಷ್ಟಮಾನವರತ್ತೈ ಅವಳುಕ್ಕುಕ್ಕೊಡುತ್ತಾರ್. ಪಿಱಗು ವರತ್ತೈಪ್ಪೆಱ್ಱುಕ್ಕೊಂಡು ಸಂತೋಷಮಡೈಂದ ಅವಳ್, ಸ್ತ್ರೀಗಳುಕ್ಕುರಿಯ ಸಿಱಂದ ವಿರುಪ್ಪಕ್ ಕುಱಿಪ್ಪುಕ್ಕಳಿನುಳ್ ಅಲಂಗರಿಕ್ಕಪ್ಪಟ್ಟವಳಾಗಿ, ಆಚ್ಚರ್ಯಮಾನ ಸೆಯ್ಗೈಯುಳ್ಳ ರಿಷಿಯುಡನ್ ಸೇರ್ತ್ತೈಯೈ ಯಡೈನ್ದಾಳ್. ಅಂತ ವರತ್ತಿನುಳ್ ಇವಳುಕ್ಕುಕ್ಕನ್ನವತಿಯೆನ್ನುಂಪೆಯರ್ ಪೂಮಿಯಿಲ್ ಪಿರವಿತ್ತಮಾಯಿಱ್ಱು. ಪೂಮಿಯಿಲ್ ಮನಿತರ್ಕಳ್ ಒರು ಯೋಜನೈತೂರತ್ತಿಲಿರುನ್ದು ಅವಳುಡೈಯ ಕನ್ನತ್ತೈಮೋನ್ದು ಅಱಿನ್ದನರ್. ಅತನುಳ್, ಅವಳುಕ್ಕು ಯೋಜನಗನ್ನೈಯೆನ್ಱು ಮಱ್ಱೊರುಪೆಯರುಂ ಸೊಲ್ಲಪ್ಪಟ್ಟನ. ಇವ್ವಾಱು ಮೇಲಾನವರತ್ತೈಯಡೈನ್ದು ಮನಮಗಿೞ್ಚ್ಚಿಯುಳ್ಳ ಸತ್ಯವತಿಯಾನವಳ್ ಪರಾಸರರುಡನ್ ಪುಣರ್ನ್ದು ಉಡನೇ ಕರ್ಪ್ಪತ್ತೈಪ್ ಪಿರಸವಿತ್ತಾಳ್. ಸಿಱನ್ದ ಮಹಿಮೈಯುಳ್ಳ ಅನ್ತಪ್ಪರಾಸರಪುತ್ತಿರರ್ಯಮೂನಿಯಿನ್ ನೀವಿಱ್ಪಿಱನ್ದಾರ್. ಅವರ್ ತಾಯಾರಿಡಂ ವಿಡೈ ಪೆಱ್ಱುಕ್ಕೊಂಡು ತವತ್ತಿಲೇಯ ಮನತ್ತೈಚ್ ಸೆಲುತ್ತಿನರ್. ಅವರ್, "ಉನಕ್ಕು ಕಾರಿಯ ಮಾಗವೇಂಡಿಯಪೋತು ನಿನೈನ್ ನೀ ನಿನೈತ್ತಾಲ್ ನಾನೇ ಎನ್ ರೂಪತ್ತೈ ಉನಕ್ಕುಕ್ ಕಾಣ್ಬಿಪ್ಪೇನ್" ಎನ್ಱು ತಾಯಾರುಕ್ಕುಚ್ಚೊಲ್ಲಿನರ್.

ಇವ್ವಾಱು ಪರಾಸರರುಕ್ಕು ಸತ್ಯವತಿಯಿನಿಡಂ ದ್ವೈಪಾಯನರ್ ಪಿಱನ್ದಾರ್. ಅವರ್ ಸಿಱುವಯಿರುಕ್ಕುಮ್ಪೋತು, ದ್ವೀಪತ್ತಿಲ್ ವಿಡಪ್ಪಟ್ಟತನುಳ್ * ದ್ವೈಪಾಯನರ್ ಎನ್ಱು ಅವರುಕ್ಕುಪ್ಪೆಯರ್ವನ್ತತು. ಎಲ್ಲಾಮ್ತೆರಿನ್ತ ಅನ್ತತ್ತೈಪಾಯನರ್ ತರ್ಮಂಗಳ್ವೊರುಯುಕತ್ತುಕ್ಕುಂ ಕಾರ್ಪಂಗುವಿಲಕ್ಕಿಪ್ಪೋವತೈಯುಂ ಮನಿತರ್ಕಳಿನ್ ಆಯುಸುಂ ಸಕ್ತಿಯುಂ ಯುಗಂಗಳುಕ್ಕುತ್ತಕ್ಕ ಪಡಿಯಿರುಪ್ಪತೈಯುಂ ಪಾರ್ತ್ತು, ವೇತತ್ತೈಯುಂ, ಪಿರಾಮಣರ್ಕಳೈಯುಂ ಅಱುಕ್ರಹಿಕ್ಕಕ್ಕರುಗಿ, ವೇತಙ್ಕಳೈವಗುತ್ತತನುಳ್, ಅವರುಕ್ಕು 'ವಿಯಾಸರ್' ಎನ್ಱು ಪೆಯರ್ವನ್ತತು. ಸಮರ್ತ್ತರುಂ ಮಿಕಚ್ಚಿಱನ್ತವರುಂ ವೇಂಡಿನ ವರತ್ತೈಕ್ ಕೊಡುಪ್ಪವರುಮಾಗಿಯ ಅನ್ತವಿಯಾಸರ್, ಸುಮನ್ತುವುಕ್ಕುಂ ಜೈ

---

* ದ್ವೀಪತ್ತಿಲ್ ಇರುನ್ತತನುಳ್ ದ್ವೀಪ್ ಎನ್ಬತು ಪರಾಸರರೈಚ್ ಸೊಲ್ಲುಗಿನ್ಱತು; ಅವರುಡೈಯಪುತ್ತ್ರರ್ ಎನ್ಬತುಪತ್ತಿ ದ್ವೈಪಾಯನರ್ ಎನ್ಱಪೆಯರ್ ವನ್ತತೆನ್ಱು ವ್ಯಾಕರಣತ್ತಿಲ್ ಸೊಲ್ಲಪ್ಪಟ್ಟಿರುಕ್ಕಿನ್ಱತು. ದ್ವೀಪಮಾಗಿನ್ಱ ಅಯನಂ - ಇಡಂ; ಅತಿಲ್ ಉಣ್ಡಾನತನುಳ್ ದ್ವೈಪಾಯನರ್ ಎನ್ಱು ಪೊರುಳ್ಕೂಱುವತು ಪೞೈಯ ಉರೈ.

[* அதன்பின் பராசரயோகி, அழகானவனப்ரதேசத்தில், சிறந்த விரிப்பில் † வீராஸனம் போட்டுக்கொண்டு தியானத்திலிருந்தார். வெண்பட்டினால் செய்யப்பட்ட அழகானவீட்டில்மேலே, துப்பட்டி போர்த்த படுக்கையில் தம்யோகசக்தியினால் பிரகாசித்துக்கொண்டு, மௌனமாக இருந்த அந்தக் கன்னிகையைக்கண்டு, தம்சித்தத்தை யடக்கிப் பலமுறைஆராய்ந்து எதுசெய்தால் ஸரியாகச்செய்ததாகும் என்பதைப்பற்றிச் சிந்தித்தார். "சிஷ்டர்கள் தொன்றுதொட்டுச் செய்துவரும் ஆசாரத்தைச் சிஷ்டாசாரமென்று சொல்லுகின்றனர். வேதங்களையும் தர்மசாஸ்திரங்களையும் தர்மஸூக்ஷ்மங்களையும் அறிந்த பிராமணர்கள் ஞானிகளென்னப் படுகின்றனர். தர்மந்தெரிந்த பிராமணர்களால் ச்ரௌதமென்றும் ஸ்மார்த்தமென்றும் இருவகைத் தர்மங்கள் விதிக்கப்பட்டுள்ளன. தானம் அக்நிஹோத்ரம் யாகம் இவை ச்ரௌததர்மத்தின்பிரிவுகள். (அஹிம்ஸை, பொய்யாமை, திருடாமை, பிரம்மசரியம், பற்றில்லாமை ஆகிய) நியமங்களோடும் (தூய்மை அல்லது சௌசம், உள்ளதில் திருப்தியடைவது, தவஞ் செய்வது, வேதமோதுவது, ஈசுவரத்யானம் பண்ணுவது ஆகிய) விரதங்களோடுங்கூடிய வர்ணாச்ரம தர்மானுஷ்டானம், ஸ்மார்த்த மென்னப்படுகிறது. தர்மமென்னும் பதத்தின் பகுதிக்கு, 'தரிப்பது' அதாவது, 'எல்லாவற்றிற்கும் ஆதாரமாக இருப்பது' என்றும் 'விடாமல் கூட இருப்பது' என்றும் பொருள்கள் கூறப்பட்டிருக்கின்றன. இனியபலனைப் பெறுவிப்பது தர்மமென்று ஆசாரியர்களால் உபதேசிக்கப்படுகிறது இன்னதபலனைப் பெறுவிப்பது அதர்மமென்றும் அவர்களாற் சொல்லப்பட்டுள்ளது. ஆதலால், இனியபயனைப் பெறுவதற்குத் தர்மத்தையே பற்றவேண்டும். பிராம்மம், தைவம், ஆர்ஷம், பிராஜாபத்யம் என்னும் விவாஹங்கள் மட்டும் பிராமணர்களுக்குத் தர்மமானவை. காந்தர்வ விவாஹம் ஒருபொழுதும் தர்மமாகாது. பிரம்மக்ஷத்ரிய வைசியர்களென்னும் மூன்று வருணங்களிற் சேராதவர்களுக்குக் காந்தர்வம் ஆஸுரம் ராக்ஷஸமென்னும் விவாஹங்கள் தர்மமானவை. பைசாச விவாஹம் யாரும் செய்யத்தகாதது. பைசாசமென்னும் எட்டாவது விவாஹம் இழிவானது. கோபத்தை இயல்பாகவுடையவள், அங்கஹீனமுடையவள், தன் மாதுருவம்சத்திற்பிறந்தவள், வயஸில்முதிர்ந்தவள், வைராக்யமுள்ளவள், மலட்டுலக்ஷணமுள்ளவள், பெரும்பாதகமுள்ளவள், ராஜஸ்வலையாயிருப்பவள், ‡ அபஸ்மாரரோகமுள்ள குலத்திற்பிறந்தவள், கூந்தலும் விழிகளும் செந்நிறமாயிருப்பவள், குஷ்டரோகமுள்ளவள், மேக

* சத்தியவதியின் விவாகத்தைப்பற்றிய இந்த அதிகபாடம், முதற்பதிப்பில் இவ்விடத்திற் சேர்க்கப்படவில்லை. சில நண்பர்களுடைய விருப்பத்தின்படி இஃது இப்பொழுது சேர்க்கப்பட்டது.

† இடக்காலை வலமுழங்கால்மேலும் வலக்காலை இடமுழங்கால் மேலும் போட்டுக்கொண்டும் கைகளிரண்டையும் சேர்த்து நிமிர்த்து மடியில் வைத்துக் கொண்டும் உட்காருவது. ‡ காக்கை வலிப்பு.

விரணமுள்ளவள், ருதுஸ்நானமாகாதவள் ஆகிய கன்னிகைகளைச் சேரத்தகாது என்பது தர்மசாஸ்திரம். தந்தை, பாட்டன், உடன் பிறந்தான், தாய், அம்மான், *உபாத்தியாயர்கள், புரோகிதர்களாகிய இவர்கள் கன்னிகையைத்தானம்செய்வதற்கு அதிகாரமுள்ளவர்கள். இவர்களால் கொடுக்கப்பெற்றேதான் கன்னிகையை அடையவேண்டும். கொடுக்கப்படாதவளைக் கிரகித்துக்கொள்ளலாகாது என்பதைத் தர்மந்தெரிந்தவர்களிற் சிறந்தவர்களான ரிஷிகள் விவாஹவிஷயத்திற் கூறுகின்றனர். இவளுக்குத் தந்தை, உடன்பிறந்தான், தாய், அம்மான்யாருமில்லை. காந்தர்வவிவாஹத்தினுல்என் இச்சையாகநான் தொடேன். வைதிகக்கிரியைகளில்லாத காந்தர்வவிவாஹத்தைஆபத்காலத்தில்தவிரச் செய்வதுதகாது. இவளிடத்தில் பிறக்கும் புதல்வன் வேத†வ்யாஸனை ரிஷியாவான். வைதிகக்கிரியையில்லாத பிராமணன் மேலான அறிவுள்ள ரிஷியாக ஆவதுஎவ்வாறு?" என்றுஇப்படித் தூய்மையான மனமுள்ள அம்மஹரிஷி சிந்தித்துக் கொண்டிருக்க, அவர்கருத்தையறிந்து பரிஹாஸதர்கள் என்னும் பிதிர்க்கள் வந்தனர். அந்தநிமிஷத்தில் பிரம்மபுத்ரரானவஸிஷ்டரும்வந்துசேர்ந்தார். வஸிஷ்டர் அவர்களைக்கண்டு முதலில் "நல்வரவு" என்றுசொல்லிப் பேசிக்கொண்டிருக்க, பிதிர்க்கள் அவரைநோக்கி, "எங்களுடைய மானஸபுத்திரியும் எங்கள் சாபத்தினுல் வஸுவின் புத்திரியாயிருப்பவளுமான இக்கன்னிகையைஉமதுபௌத்ரனுக்காக விரும்புகிறீராயின் உடனே பெற்றுக்கொள்ளும்" என்றனர். பிதிர்க்களுடைய சொல்லைக்கேட்டு வஸிஷ்டர், "மஹரிஷிகளின்வாக்குப் பொய்யாகாது என்று புராணங்களிலும் நான்கேட்டிருக்கிறேன். பராசரன் பிரம்மசாரியாகவும் ஸத்தியை விரும்புகிறவனாகவும் என்வம்சத்துக்கு ஆதாரமாகவுமிருக்கிறான்" என்று மறுமொழிசொன்னர். இவ்வாறு வஸிஸ்டர் பிதிர்க்களுடன் ஸம்பாஷணை செய்துகொண்டிருக்கையில், நைமிசாரண்யத்தில் வஸிப்பவர்களான ரிஷிகள்சிறந்தஞானியும் சக்தியின்புத்ரருமான பராசரருடைய விவாஹத்தைக் காணவிரும்பி அங்கே வந்தனர். பெயர்பெற்ற மஹானுபாவையான அருந்ததியும் அதிர்ச்யந்தியென்னும் பெயருள்ளபராசரர் தாயாருடன்கூட அங்கே வந்தனள். அந்த அருந்ததி விச்வகர்மாவினுல் நிர்மாணம் செய்யப்பட்ட சிறந்தபர்ணசாலைக்குள் சென்று விவாஹத்திற்குரிய ஸாமக்ரிகளை முறைப்படி சேகரித்து மருமகளாகிய ஸத்தியவதியைக் கையினுற் பிடித்துக்கொண்டு, மங்களமான ஆஸனத்தில் உட்கார வைத்து, இந்திராணியை ஆவாஹனம்செய்தாள். சுக்லபக்ஷத்தில் சந்திரனுடையதான விசாக நக்ஷத்திரத்தில் திரயோதசிதிதியில் சுபமான கிரஹங்களோடுசேர்ந்த மைத்ரமென்னும் முகூர்த்தம் வந்தபோது, வஸிஷ்டர்விவாஹதத்துக்கு இதுகாலமென்று சொல்லி ரிஷிகளுடன்கூட யமுனையின் தீவைச்சேர்ந்து தம்சிஷ்யர்களோடும்முனிவர் குழாங்களோடும் ஸ்தண்டிலமென்று சொல்லப்பட்ட சச்சதுர

* வித்தை கற்பிக்கிறவர்கள். † வேதங்களை வகுப்பவன்.

மான மேடையைக் கோமயத்தினுல்மெழுகி அக்ஷதைகளினுலும்கனி களினுலும் மலர்களினுலும் மோதகங்களினுலும் மாந்தளிர்களினுலும் ஜலம்நிரப்பினபூர்ணகும்பங்களினுலும் நாற்புறங்களிலும் சோபிக்க ச்செய்துஅந்த ஸ்தண்டிலத்தின் நடுவில் தர்ப்பாஸனத்தில்முனிவரில் சிலவரான பராசரரை உட்காரவைத்தார். வெண்கடுகு, யவதானியம் இவற்றின் குழம்புகளாலும், எல்லா ஔஷதிகளின் ரஸங்களினுலும் ஸ்நானம் செய்வித்து வெண்மையான ஆடைகளை அம்மஹாமுனி வருக்கு உடுத்தி, புண்யாகவாசனம் செய்வித்து, அக்ஷதைகளினுல் ஆசீர்வதித்தனர். பிறகு அந்தப் பராசரமுனிவர் சந்தனம் பூசிக் கொண்டு புஷ்பமாலைகளைத் தரித்துக் கையில் சவுக்குப்பிடித்துக்கால் நடையாகச் செல்லாமல் (ரதமேறி) அங்கிருந்து (பெண்ணின்வீட்டுக் குச்) சென்று பெண்ணின் சுற்றத்தாராற் பூஜிக்கப்பெற்று, மங்கள ஸ்நானஞ்செய்தவளும் கோடி உடுத்தினவளும் சாந்தணிந்து, மலர் மாலைகளினுற்பிரகாசிப்பவளும் மங்களங்களான பஞ்சள் குங்கு மம் முதலியவற்றுடன் கூடினவளும் கையில் அம்புதரித்திருப்ப வளுமாகிய மணமகளைக்கண்டு, காலந்தெரிந்தவரும் எல்லாத்தர் மங்களையும் அறிந்தவருமான அவர் அந்தக்காலத்தில், "வாங்கு வது கொடுப்பவனுடைய அதீனம் என்று முன்னமே நான் கேட் டிருக்கிறேன். பிதிர் தேவதைகள் எவ்வாறு நியமிப்பார்களோ அவ்வாறு நாம்செய்வோம்" என்றுசொன்னர். ஸத்தியவதியான பராசரர் மிக்க தர்மமுள்ளதும் புகழைத்தருவதுமாகச் சொன்ன சொல்லைக் கேட்டுப் பற்றையும் அபிமானத்தையும் விட்டவர்களான பிதிர்க்களனைவரும் தர்மிஷ்டர்களிற் சிறந்தவனை உபரிசரவஸுவை வருவித்து, "ஐயா, உமக்கு மத்ஸ்யயோனியில் ஜனித்த பெண்ணை இவளைப் பராசரமுனிவருக்கு விசேஷமான தர்மத்துடன் நீர் கொடுக்கத் தகுதியுள்ளவராயிருக்கிறீர்" என்றுசொன்னர்கள். அத ற்கு வஸு, "நிஜம்; அவள் என்னுடைய புத்திரிதான். செம்படவ ராஜனால் வளர்க்கப்பட்டவள். பிரஜைகளைப்பாலனஞ்செய்யும்அரச னகிய நான் என்பிரஜைகளைக் கேட்டவர்களுக்குக் கொடுக்க ஸ்வதந் திரமுள்ளவன்" ஏன்றார். பிதிர்க்களெல்லாரும், "நாங்களெல்லாரும் பலனை விரும்பாதவர்கள்; விருப்பும் வெறுப்புமில்லாதவர்கள்; என றென்ற பற்றையொழித்தவர்கள். கன்னிகாதானம் செய்வதனுலுண் டாகும் ஸம்பந்தத்தைத் * தக்ஷிணைபந்தம் என்றுசொல்லுகின்றனர். மனுஷ்யலோகம் கருமங்கள் செய்தற்குரிய இடம். ஸ்வர்க்கலோகம் ஸுகத்தை அனுபவிக்கும் இடம். இந்த மனுஷ்யலோகத்தில் புண்ய கருமங்கள் செய்தவர்கள் ஸ்வர்க்கலோகம் அடைகிறார்கள் என்பது திண்ணம். இவ்வுலகத்தில் பாபம்செய்த கொடியவர்கள் நரகம்புகு கின்றனர். புண்ணிய பாவங்களிரண்டும் தக்ஷிணைபந்தமென்று சொல் லப்பட்டிருக்கின்றன. யோகிகள் தக்ஷிணைபந்தத்தைஅடைவாராயின், அவர்கள் கீழேவிழுகின்றனர். அரசனே! ஆதலால், யோகத்தி

* தாக்ஷிண்யத்தினுல் உண்டாகும்பற்று.

னின்றும் வழுவி உனக்குப் பெண்ணைப்பிறந்தவளும் எங்கள் மானஸ புத்ரியும் ஸாத்வியுமான இந்தக்கன்னிகையைப்பராசருக்குப்பிக்ஷை யாகக் கொடும்" என்றுசொல்லி அப்போதே ஒருநொடியில் அந் தர்த்தானமாயினர். உடனே யாஜ்ஞவல்க்ய முனிவரை விவாஹம் செய்விக்கும் ஆசாரியராகவரித்து உபரிசரவஸுவையும் அழைத்துக் கொண்டு முனிவர்களுடன்கூடச் சாஸ்த்ரோக்தகிரியைகளைச்செய்து வஸிஷ்டர் விவாஹத்தைச் செய்வித்தார். "பராசரரே! மஹாஜ் ஞானியே! நான் எனதுபெண்ணை உமக்குக் கொடுக்கப்போகிறேன். இவளை வாங்கிக்கொள்ளும். உமக்குஸுகமுண்டாகக்கடவது. உமது கையினல் இவளைப் பாணிக்ரஹணஞ் செய்துகொள்ளும்" என்றஉப ரிசரவஸுவின் சொல்லைக்கேட்டு, யாஜ்ஞவல்க்யர் சொன்னதையும் அனுஸரித்துக் கங்கணதாரணமுதலிய மங்களகாரியங்களைச்செய்து, (பராசரர்) தமதுகையினல் அவள்கையைப்பிடித்தார். நெய்மிகுதியாக வுள்ள * ஹவிஸை மந்த்ரங்களோடு அக்நியில் ஹோமஞ்செய்து, அக்நியை மூன்றுமுறை வலம்வந்து பூஜித்து, யாஜ்ஞவல்க்யர் முத லிய மஹரிஷிகளுக்குத் தக்ஷிணைகள்கொடுத்துத் திருப்திசெய்வித்து, உடனே அவர்களிடம் விடைபெற்றுக்கொண்டு அவர்களை நமஸ்கரித் துப் பிரதக்ஷிணஞ்செய்தார். பராசரர் விவாஹஞ்செய்துகொண்ட வுடனே, தேவர்கள் ரிஷிக்கூட்டங்களுடன்கூடி மகிழ்ந்து ஒருநொடி யில் வேதவ்யாஸர் பிறப்பாரென்று சொல்லிச்சென்றனர். இவ்வா று ஸத்யவதி கௌரவத்தையடைந்து மனங்களித்து விரும்பினபடி பரா சரருடன் சேர்ந்து, உண்டானகர்ப்பத்தை உடனே பிரஸவித்தாள். மஹிமைபொருந்திய அந்தப் பராசரபுத்ரர் யமுனையின்திட்டில் பிறந் தார். பிறந்தவுடனே அவர் வளர்ந்து அப்போதே ஏழுவருஷத்திற் குமாரரானர். அந்தவ்யாஸர் ஸ்நானஞ்செய்து பிதாவுக்கு வந்தனஞ் செய்து அடக்கத்துடன் நின்றார். "தேஹமம்" என்ற சொல்லையும் சொல்லி, ஓர்உயர்ந்தகுடத்தையும் கொடுத்தார். பராசரர் கலசத்தை வாங்கிக்கொண்டிருந்தபோது, வ்யாஸர் பலஸுவுடன் நின்றார். பரா சரபத்நியான ஸத்யவதி செம்படவனுக்கு அஞ்சி அந்தக்குடத்து ஜலத்தினல் ஸ்நானஞ்செய்தவுடன் கன்னிகையாகிவிட்டாள். அவள் பராசரமுனிவருடைய பாதங்களைப்பிடித்து வந்தனஞ்செய்து கையி னல் தன்புத்திரரைப் பிடித்துக்கொண்டாள். அந்தப்புத்ரர் அவள் தொட்ட மாத்திரத்தில் அவளை அதட்டி, "அம்மா! என்தந்தை தொட்டதனல் நீ சுத்தமாக இருந்தாய்; இப்போது கன்னிகையாய் விட்டாய்; நீ செம்படவப்பெண். குற்றமற்றவளே! என்னைத் தொடா தே" என்றுசொன்னர். வியாஸர் சொன்னதைக் கேட்டபோதே அந்தப்பெண், மானிடத்தன்மையினல்கண்ணீர்நிரம்பினமுகத்துடன் பராசரமுனிவருடைய பாதங்களில்வீழ்ந்தாள். தர்மந்தெரிந்தவரான பராசரபகவான் அவளிடம் பெருங்கருணையுடன் தமது முத்திரைப் பார்த்துச் சொல்லலானர்.

* அன்னத்தை.

"நீ இப்படிச் செய்யலாகாது. இது தர்மத்துக்குரியதென்று நாம் நினைக்கவில்லை. முதலில் பேருதவி செய்தவர்களான தாய்தந்தையர்களைத் தூஷிக்கத்தகாது. கர்ப்பத்தில் தரித்ததனாலும் சஷ்டங்களைப் பொறுத்ததனாலும், பெற்றோர்களிருவருள் தாயிகச்சிறந்தவள். உலகத்துப்பயிர் வித்தும் நிலமும் சேர்ந்தபோதுதான் முளைக்கிறது. அவ்வாறே புருஷனும் ஸ்திரீயும் சேர்ந்துதான புத்திரன் உண்டாகிறான். மான்களிடத்தும் பறவைகளிடத்தும் அப்ஸரஸுகளிடத்தும் சூத்திரஜாதிப் பெண்களினிடத்தும் வேதங்களிற்கரைகண்ட ரிஷிகள் உத்பத்தியாகின்றனர். ரிசியச்ருங்கர் மானின்புத்ரர். அவ்வாறே கண்ணுவர் மயிலின்புத்ரர். அகஸ்தியரும் வஸிஷ்டரும் ஊர்வசிக்குப் பிறந்தவர்கள். ஸோமச்ரவஸ் என்பவர் பெண்ணாகத்தினிடம் பிறந்தவர். அச்வினீதேவர்கள் குதிரையினிடம் ஜனித்தவர்கள். ஸ்கந்தர் முற்காலத்தில் நாணற்காட்டிற்சிதறின ஈசுவரனுடைய வீரியத்துகருப் பிறந்தவர். தேவர்கள், ரிஷிகள் இவர்களின் உத்பத்தி இவ்வகையாகவேதான் இருக்கிறது. உலகநடைகளையும் சாஸ்திரவிதிகளையும் பற்றிப் புத்திசாலிகள் ஒருபோதும் யுக்திவிசாரிக்கத்தகாது. நீ புராணத்திலேயே வேதவ்யாஸனென்று பிரம்மாவினால் சொல்லப்பட்டவன். மஹரிஷிகளுக்கும் மானிடர்களுக்கும் தர்மோபதேசம் செய்கிறவன் நீயே. புத்ரனே! ஆதலால், யோகத்தை ஆசரிப்பவனுகிய நீ இந்த வஸுபுத்ரியை இகழத்தகாது. சிறந்த பிரஜ்ஞையுள்ளவனே! என் விருப்பத்திற்காகவும் நீ அன்பு வைத்துப் பேசவேண்டும். தபோதனனே! பிரஜைகளின் நன்மைக்காக ஸ்ரீவிஷ்ணுவின் அம்சத்தால் மஹரிஷி வடிவமாக அவதரிப்பவித்திருக்கிறாய். ஆதலால், நீ உன் தாயினிடம அன்போடுபேசக்கடவாய்" என்று இவ்வாறு தமதுதந்தை சொன்னதைக்கேட்டு, அப்போதே வியாஸர் அன்புள்ளவரானர். உலகநடையை நினைத்துத் தாயார் மடியை அடைந்தார். புத்ரனைத் தொடுவதைப்பார்க்கிலும் வேறு சிறந்தஸுகம் எவ்வுலகிலுமில்லையன்றோ! அவள்தாமரை இதழ்போன்ற கண்களையுடைய வியாஸரைத் தழுவி மூலைப்பாலின் பெருக்கினால் நனைத்துத் தன் புத்திரனை உச்சியில் மோந்து கண்ணீர் சொரிந்து, வ்யாஸரைநோக்கி, "ஸந்ததியை விரும்புகிறவர்களுக்குப் புத்ரலாபத்திற்கு மேலானலாபம் இவ்வுலகத்தில் ஒன்றுமில்லை. பெறுவதற்கரிய பெருந்தவத்தை நான் பெற்றதாக நினைக்கிறேன். ஓ மஹாஜ்ஞானியே! பெருந்தவத்தினாலும் பெரிய யோகமகிமையினாலும் தேவர்களுக்கு அமிர்தம் கிடைத்ததுபோல் எனக்கு நீ கிடைத்திருக்கிறாய். ரிஷிபுத்ரனே! ஆதலால், இப்போது நீ என்னை விடத்தகாது" என்றுசொன்னள். அவள் இவ்வாறுசொன்னபின், வியாஸரும்தாயாரைப்பார்த்து அன்புடன், "ராஜபுத்ரியே! நான் உன்னால் தொடப்பட்டேன்; தழுவப்பட்டேன்; பலமுறைஉச்சிமோக்கவும்பெற்றேன். இவ்வளவு மாத்திரத்தினாலேயே நான் திருப்தியுள்ளவனாக இருக்கிறேன். இனி, காரியங்கள்நேரும்போது நீ நினைத்தால் என் உருவத்தை

உனக்குக் காண்பிப்பேன்" என்று சொன்னார். அவர் தாயாரிடம் விடைபெற்றுக்கொண்டு தவத்திலேயே மனத்தைச் செலுத்தினர். அதன்பிறகு, பராசரபகவான் மறுபடியும் கன்னிகையாகவே யிருக்கும்படி ஸத்யவதிக்குச்சொல்லி அவளிடம் விடைபெற்றுக்கொண்டு தம்புத்திரருடன் சென்றார். பராசரர், பரிசுத்தமானதமது ஆச்ரமத்திற்குச்சென்று அத்ருச்யந்தியென்னும் தம்தாயாரைக்கொண்டு தம் புத்திரருக்கு நியாயப்படி ஜாதகர்மம்முதலிய ஸம்ஸ்காரங்களைச்செய்வித்தார். பாரதரே! வியாஸர், யாஜ்ஞவல்க்யமுனிவரால் உபநயனஞ் செய்யப்பட்டு, மூன்றுமாத்திரைகளோடு ஓங்காரத்தை உச்சரித்து வேதவேதாங்கங்களை ஓதினர். குருதக்ஷிணைதந்தபின் தவஞ்செய்யத் தொடங்கினர்; இவ்வாறு பராசரருக்கு ஸத்யவதியினிடம்த்வைபாயனர் ஜனித்தார். அவர் குழந்தையாயிருக்கும்போதே யமுனைத்தீவில் விடப்பட்டதனால் 'த்வைபாயனர்' என்று பேரருள்ளவரானார். எல்லாம்தெரிந்த அந்தப்பிரம்மரிஷி தர்மம் ஒவ்வொருயுகத்திலும் நாலிலொருபாகம் விகிப்போயிருப்பதையும் மனிதர்களின் ஆயுளும்சக்தியும் யுகத்துக்குயுகம் பின்வாங்குவதையுங்கண்டு, பிராமணர்களை அனுக்ரஹிக்கக்கருதி, வேதங்களைவகுத்தார். அதனால், வேதவியாஸரென்று பெயர்பெற்றார். வித்வானும் மகிமை பெற்றவரும் மிகச்சிறந்தவரும் வரங்கொடுப்பவருமாகிய அம்மஹரிஷி ஸுமந்து, ஜைமினி, பைலர், தம்புத்திரரான சுகர், வைசம்பாயனர் ஆகியஐந்துசிஷ்யர்களையும் அழைத்து நியமத்துடன் ரிக், யஜுஸ், ஸாமம், அதர்வணமென்னும் நான்குவேதங்களையும் ஐந்தாம்வேதமான மஹாபாரதத்தையும் ஓதுவித்தார். அந்தச்சிஷ்யர்களால் வேத ஸம்ஹிதைகளும் பாரதஸம்ஹிதையும் தனித்தனியாகச் சொல்லப்பட்டன.

பிறகு ஸத்யவதி மகிழ்வுற்றுத் தன்மோக்குச்சென்றாள். அவளுடைய தேகமணத்தைப் பூமியிலுள்ள மனிதர்கள் யோசனைதூரத்திலிருந்து மோந்தனர். செம்படவராஜன் அவள்மணத்தை மோந்து மனக்களிப்புற்று, "பெண்ணே! உன்னை மத்ஸ்யகந்தையென்று சொல்லுகிறார்களே! இந்தஸுகந்தம் ஏது? மத்ஸ்யகந்தத்தைவிலக்கி இந்தஸுகந்தத்தைத் தந்தவர் யார்?" என்றுகேட்க, ஸத்யவதி, "சக்தியின் புத்திரரும் பராசரரென்று பெயர்பெற்றவருமான ஒருமஹாஜ்ஞானி ஓடத்தைநடத்தின என்னுடைய கைத்தோச்சியைக் கண்டு என்மத்ஸ்யகந்தத்தை நீக்கி யோசனைகந்தம் தந்தார். ரிஷியின் அனுக்ரஹத்தைக் கண்டு ஜனங்களும் சக்தோஷமடைந்தனர். நான் நல்லமணத்தை இவ்வாறு அடைந்தேன். நீர் கோபம்செய்யலாகாது" என்றுசொன்னாள். செம்படவர்களுக்கு அரசனும் அவள் சொன்னதைச் சிலாகித்து மகிழ்ந்தான். பரிசுத்தியைச் செய்வதும் புண்ணியலோகத்தைத் தருவதுமாகிய வியாஸஜனனமென்னும் இந்தச்சிறந்த சரித்திரத்தைக் கேட்பவர்களும் சிலாக்யமான சந்ததியுள்ளவர்களாகின்றனர்.]

———

மினிக்கும் பைலருக்கும் தம் புத்ரராகிய சுகருக்கும் வைசம்பாயன ருக்கும் நான்குவேதங்களையும் ஐந்தாவதுவேதமாகிய மஹாபாரதத் தையும் ஓதுவித்தார். அந்தச்சிஷ்யர்கள் மஹாபாரதத்திற்குமூலங் களாயுள்ள வேதங்களைத் தனித்தனியே வெளிப்படுத்தினர்கள். அப்படியே அளவற்ற பராக்கிரமமுள்ளவரும் மிகுந்த பலமுள்ள வரும் பெரும்புகழ்பெற்றவருமான ரிஷ்மர் வஸுக்களின் ஸாராம் சத்தினால் சந்தனுவுக்குக கங்காதேவியினிடம் பிறந்தார்.

வேதார்த்தமறிந்தவரும் பெருங்கீர்த்தியுள்ளவரும் சிறந்தமஹி மையுள்ளவருமாகிய ஒருபழமையான பிரம்மரிஷி திருடாமலிருக்கை யில், அவரைத்திருடனென்று நினைத்து, ராஜா கழுமரத்தில் ஏற்றி னன். ஆணிமாண்டவ்யரென்று சொல்லப்பட்ட அந்தப்பெரிய புகழ் படைத்தமஹரிஷி,முன்னே தர்மதேவதையையழைத்து, "தர்மனே! நான்பால்யத்தில் ஒருபக்ஷியை எவ்விதத்திலாவது துன்புறுத்தியிருக்கிறேன்; அந்தப் பாபம்தான் எனக்கு ஞாபகமிருக்கிறது; வேறுபாபம் தெரியவில்லை; அந்தப்பாபத்தை அதற்கு ஆயிரம்மடங்குகொண்டதும் அல்லது அளவற்றதுமாகிய எனது இந்தத்தபஸை எப்படிஜயிக்காமற்போயி ற்று; எந்தப்பிராணிகளைக் கொலை அவதியும்பிராமணவதஞ்செய்வது மிகப்பெரிதாதலின் இந்தப்பாபத்தினால் நீ சூத்திரயோனியில் பிறப் பாய்" என்றுசொன்னர். அந்தச்சாபத்தினால் தர்மதேவதையும் அந்த அபராதத்திற்காக விதுரரூபமாக வித்துவானாகவும் தர்மிஷ்டை யாகவும் சூத்திரயோனியில் ஜனித்தான்.

ரிஷிக்கொப்பான ஸஞ்சயனென்னும் ஸூதன் கவல்கணனுக் குப் பிறந்தான். மஹாபலசாலியான கர்ணன் பிறக்கும்போதே கவ சத்தைத் தரித்துக்கொண்டு குண்டலங்களினால் அலங்கரிக்கப்பட்ட முகத்தோடு குந்திபோஜன் பெண்ணாகிய குந்தியினிடத்தில் ஸூர்ய னுக்குப்பிறந்தான்.

உலகங்களால் நமஸ்கரிக்கப்பட்டவரும் பெருங்கீர்த்திபெற்றவ ரும் ஆதியும்அந்தமுமில்லாதவரும் உலகங்களைப படைத்தவரும் எல்லாவற்றிற்கும் ஈச்வரரும் ஸ்வயம்பு பிரகாசிக்கின்றவருமான திரு மால் லோகங்களை அனுக்கிரஹிப்பதற்காக வஸுதேவருக்குப் புத்ர ராகத் தேவகியினிடம அவதரித்தார். எவரை அறியக்கூடாததும்

---

* இந்தஇடத்தில் அ - சுலோகங்களின்கதை மஹாபாரதத்தின் முன் டின் ஸந்தர்ப்பங்களுக்குப பொருந்தாமையால், அந்தப்பாடம் விடப்பட்டது. கிருஷ்ணசாரியரும் அந்தச்லோகங்களுக்குத் தனிஎண் கொடுத்திருத்தல் காண்க.

அழிவில்லாததுமான பிரம்மமென்றும் *மூன்றுகுணங்களும் சேர்ந்த மூலப்ரக்ருதியென்றும்தோஷமில்லாத ஆத்மாவென்றும் காரியப்ரக்ருதிபாகியமஹத்தென்றும் அஹங்காரம்முதலிய ஜடங்களுக்கு ஈசுவரனென்றும்அந்தர்யாமியென்றும் உலகமெல்லாம் அவர்செயலாயிருப்பதனாலும்நல்வினை தீவினைகளாகியகருமங்களுக்கெல்லாம் பயன்களைக் கொடுப்பதனாலும் விச்வகர்மாவென்றும் † ஸத்வகுணமுள்ளவரென்றும் நித்யமான அக்ஷரமாகிய ப்ரணவரூபியென்றும் தேசத்தாலும் காலத்தாலும்ஸ்வரூபத்தாலும் அளவிடப்படாதவரென்றும் அசைவற்றவரென்றும் ப்ரகாச ஞானரூபியென்றும்‡ ஹம்ஸரென்றும் ஜீவன்களுக்கெல்லாம் தஞ்சமாயிருப்பதனாலும் ஜீவாத்மாக்களுக்கு ஆத்மாவாயிருப்பதனாலும் நாராயணனென்றும்தமக்குமேல் ஈச்வரனில்லாதவரென்றும் எல்லாவற்றையும்தாங்குகிறவரென்றும் ஜனனமில்லாதவரென்றும் ஸூக்ஷ்மங்களுக்கும்மேலானஸூக்ஷ்மமென்றும் ஸ்வரூபம் மாறாதவரென்றும் ஒன்றிலும் பற்றில்லாத கைவல்யரென்றும் நிர்க்குணரென்றும் தாமே எல்லாமுமாயிருப்பவரென்றும் அநாதியென்றும்தாமேப்ரம்மரூபமாயிருப்பவரென்றும் ஒரேதன்மையாயிருப்பவரென்றும் யாரைச்சொல்லுகின்றனரோ அந்தப்பரமபுருஷரும் ஸ்ருஷ்டிகர்த்தாவும் எல்லாப் ப்ராணிகளுக்கும் மூலபுருஷருமாகிய அந்த விஷ்ணுபகவான் தர்மத்தைநிலைநிறுத்துவதற்காக அந்தகர் யாதவர்களுக்குள் அவதரித்தார். அஸ்திரங்கள் தெரிந்தவர்களும் மிகுந்த பராக்கிமமுள்ளவர்களும் எல்லாச்சாஸ்திரங்களிலும் § பாண்டித்யமுள்ளவர்களும் அஸ்திரங்களைப் ப்ரயோகிக்கவல்லவர்களும் கிருஷ்ணனே அனுஸரித்தவர்களுமாகிய ஸாத்யகியும் கிருதவர்மாவும்முறையே ஸத்தியகனிடத்தும் ஹிருதிகனிடத்தும்ஜனித்தனர். உக்ரமானதவமுள்ள பரத்வாஜமஹரிஷியினுடையவிழுந்துபோனவீர்யம் ¶த்ரோணியென்னும் பாத்திரத்தில்விருத்தியடைந்தது. அதிலிருந்து த்ரோணர்பிறந்தார். கௌதமகோத்ரத்தில்பிறந்த சரத்வானென்பவருக்குநாணல்தண்டில் அசுவத்தாமாவின் தாயாரும் மஹாபலசாலி

---

* ஸத்வம், ரஜஸ், தமஸ்.

† ஸத்வகுணத்திலுள்ளுண்டான ஆத்மத்யானத்திலுல் அடையத்தக்கவரென்பது பழையஉரை.

‡ ஸன்னியாஸஆச்ரமரூபமாக இருப்பவர் என்பது பழையஉரை. ஹம்ஸாவதாரம் எடுத்துப் ப்ரம்மாவுக்கு வேதோபதேசம் செய்ததுலுல் ஹம்ஸரென்பது.

§ ஆகிய சாமகிருஷ்ணர்கள் ஜனித்தனர் என்பது பழையஉரை.

¶ த்ரோணியென்பது மலையின்குகை என்பது பழையஉரை.

யானகிருபாசாரியரும் இரட்டையராகப்பிறந்தனர். அந்தத்துரோண ருக்கு முஹாபலசாலியான அசுவத்தாமா பிறந்தார். அப்படியே அக் னியே நேரேவந்ததுபோலப் பிரகாசிக்கின்ற வீரனை திருஷ்டத்யும் னனும் துரோணரை யழிப்பதற்காக யஜ்ஞம் நடந்துகொண்டிருக் கும்போது தனுஸையேந்திக்கொண்டு அக்னியிலிருந்து பிறந்தான். சிறந்த ஒளியுள்ளவளும் நல்ல லக்ஷணங்களுள்ளவளும் மேன்மை யான அழகுள்ளவளாகச் சரீரத்தால் பிரகாசிக்கின்றவளுமான கிருஷ் ணையும் யாகவேதிகையிற் பிறந்தாள். பிரஹ்லாதாசிஷ்யன் நகன ஜித் என்பவன்; அவனுக்கு ஸுபலன்பிறந்தான். அவனுடைய ஸந் ததி தேவதையின் கோபத்தினால் தர்மத்தைக்கெடுப்பதற்கு உண்டா யிற்று. அதனால் * ராஜ்யகாரியங்களில் நிபுணர்களாகிய † சகுனி யும் துரியோதனன்தாயாரும் காந்தாரராஜாவாகிய ஸுபலனுக்குப் பிறந்தனர். ‡கிருஷ்ணத்வைபாயனரால் விசித்திரவீரியனுடைய பாரி யைகளிடத்தில் திருதராஷ்டிரராஜாவும் மஹாபலசாலியான பாண்டு வும் ஜனித்தனர். தர்மசாஸ்திரத்திலும் ராஜநீதியிலும் நிபுணரும் பிரம்மஜ்ஞானமுள்ளவரும் கூர்மையான புத்தியுள்ளவரும்பாபங்களை விலக்கியவருமாகிய விதுரர் கிருஷ்ணத்வைபாயனருக்குச் சூத்திர ஜாதிஸ்திரீயின் கர்ப்பத்தில் ஜனித்தார். பாண்டுவுக்கு இரண்டுஸ்தி ரீகளிடம் ஐந்துபுத்திரர்கள் ஒவ்வொருவரும் தேவர்களுக்குச் சமான மாகப் பிறந்தனர். அவர்களுக்குள் யுதிஷ்டிரர் குணங்களிற் சிறந்த வராயிருந்தார். தர்மதேவதையினிடமிருந்து யுதிஷ்டிரரும் வாயுவி னிடமிருந்து பீமஸேனனும் இந்திரனிடமிருந்து அழகுள்ளவனும் ஆயுதம்பிடித்தவர்களிற் சிறந்தவனுமாகிய தனஞ்சயனும் பிறந்தனர். பெரியவர்களுக்குப பணிவிடைசெய்வதில் சிரத்தையுள்ளவர்களும் அழகிற் சிறந்தவர்களுமாகிய நகுலஸஹதேவர்கள் அசுவினிதேவர் களால் இரட்டையாகப்பிறந்தனர். அவ்வாறே சிறந்தஅறிவுள்ள திரு தராஷ்டிரனுக்கும் துரியோதனன் முதலான நூறுபுத்திரர்கள் ஜனித் தார்கள். பாரதரே! அவர்களுள் யுயுத்ஸுவென்று சொல்லப்பட்ட கரணன், துச்சாஸனன், துஸ்ஸஹன், துர்மர்ஷணன், விகர்ணன், சித் ரஸேனன், விவிம்சதி, ஜயன், ஸத்தியவிரதன், புருமித்ரன் ஆகிய ‡ பதினொருவரும் மஹாரதர்கள். வைசியஜாதிப் பெண்ணிடம் பிற

* காந்தாரிக்கே ராஜ்யத்தில் விருப்பமிருப்பதாக இதனால் குறிப்பிக்கப் பட்டது.

† சகுனியும் காந்தாரியின் புத்திரர்களும் தர்மத்தைக்கெடுத்தவர்.

‡ துரியோதனனோடு பதினொருவர்.

ந்ததினால், யுயுத்ஸுவுக்கு * காரணன்என்பதுபெயர். ஸுபத்ரையினிடம் அர்ஜுனனுக்கு அபிமன்யு பிறந்தான். அவன் கிருஷ்ணனுடைய மருமகன்; மஹாத்துமாவாகிய பாண்டுவின் பௌத்திரன். பாண்டவர்களுக்குத் திரௌபதியினிடம் ரூபமுள்ளவர்களும் ஸர்வசாஸ்திரங்களிலும் பாண்டித்யமுள்ளவர்களுமாகிய ஐந்துகுமாரர்கள் பிறந்தார்கள். யுதிஷ்டிரருக்குப் பிரதிவிந்தியனும், பீமஸேனனுக்கு ஸுதஸோமனும், அர்ஜுனனுக்குச் சுருதகீர்த்தியும், நகுலனுக்குச் சதானீகனும், ஸஹதேவனுக்குப் பராக்ரமசாலியான சுருதஸேனனும் பிறந்தனர். பீமனுக்கு வனத்தில் ஹிடிம்பையினிடம் கடோத்கசன் பிறந்தான். துருபதனுக்குச் சிகண்டி பிறந்தான் அவன் முதலில் பெண்ணுகவிருந்து பிறகு ஆணனன். அவனை ஸ்தூணன்என்னும் யக்ஷன் துருபதராஜாவுக்குப் பிரியஞ்செய்வதற்காகப் புருஷனகச்செய்தான். அந்தக் கௌரவர்களுடைய பெரியயுத்தத்தில் சண்டைபோடுவதற்காக அநேகலக்ஷம் ராஜாக்கள் வந்துசேர்ந்தார்கள். அளவிடக் கூடாதவர்களான அவர்களுடைய நாமதேயங்கள் பதினாயிரவருஷங்களானாலும் முழுதும் சொல்லமுடியாது. எவர்களால் இந்தப் பாரதசரித்திரம் விரிவாயிருக்கிறதோ அந்த முக்கியமாயுள்ளவர்களைப்பற்றிமட்டும் சொன்னேன்" என்று வைசம்பாயனர் சொன்னர்.

அறுபத்தைந்தாவது அத்தியாயம்.

அம்சாவதரணபர்வம். (தொடர்ச்சி).

ஜனமேஜயர், "பிராமணரே! எவர்கள் இப்போது சொல்லப்பட்டவர்களோ இன்னும்எவர்கள் சொல்லப்படாதவர்களோ அந்த ஆயிரக்கணக்கான ராஜாக்களும், மற்றவர்களுமாகிய அவர்கள் எல்லாரையும்பற்றிக் கேட்கவிரும்புகின்றேன். மஹாநுபாவரே! தேவர்களுக்குச்சமானமாகிய மஹாரதர்கள் இந்தப்பூமியில்எதற்காக ஜனித்தார்களென்பதையும் எனக்குத்தெளிவாகச் சொல்லவேண்டும்" என்றுகேட்க, வைசம்பாயனர் சொல்லலானர்.

"ராஜாவே! இதுதேவர்களுடைய ரஹஸ்யமென்று நாம்கேட்டிருக்கிறோம்; ஆகிலும், பிரம்மாவுக்கு நமஸ்காரஞ்செய்துநான் அதனை

---

* க்ஷத்திரியனுக்கு வைசியஜாதிப் பெண்ணினிடம் பிறந்தவன் என்பது பொருள். சபை-ம் பக்கத்திலுள்ள குறிப்பைப்பார்க்க.

உமக்குச்சொல்லுவேன். முன்னேஜமதக்கினியின்புத்திரரானபரசுராமர் இருபத்தொருமுறை பூமியில் க்ஷத்திரியர்களில்லாமற் செய்துவிட்டு மஹேந்திரமென்னும் சிறந்தபர்வதத்தில் தவஞ்செய்தார். ராஜாவே! உலகத்திலேயே க்ஷத்திரியர்களில்லாமல் பரசுராமரால் செய்யப்பட்ட பொழுது க்ஷத்திரியஸ்திரீகள் புத்திரர்களைவிரும்பி, பிராமணர்களிடம் சேர்ந்தனர். புருஷச்ரேஷ்டரே! பிராமணர்கள் உக்கிரமானநியமத்தோடேயே ஒவ்வொரு ருதுகாலத்திலும் அவர்களிடம்சேர்ந்தனர்; காமத்தாற் சேரவில்லை; * ருதுகாலமில்லாதபோதும் சேரவில்லை. அந்தப்பிராமணர்களால் அந்த ஆயிரக்கணக்கான க்ஷத்திரியஸ்திரீகள் கர்ப்பந்தரித்தனர். ராஜாவே! அதன்பின், முன்னிலும் அதிகபராக்கிரமசாலிகளாகிய க்ஷத்திரியர்களைப் பெற்றனர். மறுபடியும் க்ஷத்திரியர்கள் விருத்தியடையும்படி புத்திரர்களையும் புத்திரிகளையும் பெற்றனர். இப்படிச் சிறந்ததவமுள்ள பிராமணர்களினால் க்ஷத்திரிய ஸ்திரீகளிடத்திலுண்டாகி விருத்தியடைந்த க்ஷத்திரியர்கள் தருமமும் தீர்க்காயுளும் பொருந்தியிருந்தனர். அப்போது நான்குவருணத்தார்களும் பிராமணர்களையேமேன்மையாகக்கொண்டிருந்தார்கள். (மனிதர்கள்) ருதுகாலத்திலேதான் ஸ்திரீகளைச்சேர்ந்தனர்; காமத்தாலும்சேரவில்லை; ருதுவில்லாதகாலத்திலும் சேரவில்லை. திர்யக்ஜாதியிலுள்ள மற்றப்பிராணிகளும் ருதுகாலத்திலேதான் பெண்களிடம் சேருகின்றன. பரதச்ரேஷ்டரே! அதுதான் ஸரி. ராஜாவே! அந்தத்தர்மத்தினால் அந்தஸந்ததிகள் தர்மத்தினுடையநியமங்கள் தவறாமல் அநேகநூற்றாண்டளவும் ஜீவித்திருந்தனர். மனுஷ்யர்களனைவரும் வ்யஸனமற்றும் நோயற்றுமிருந்தனர்.

சிறந்தயாணையைப்போன்றநடையுள்ளவரே! அதன்பின், ஸமுத்திரத்தைஎல்லையாகவுடைய மலைகள், வனங்கள், நகரங்களுள்பட இந்தப்பூமிமுழுதையும் திரும்பவும் க்ஷத்திரியர்கள் ஆண்டனர். மறுபடியும் க்ஷத்திரியர்கள் இந்தப்பூமியைத் தருமமாகஆளும்போது, பிராமணர்முதலிய வருணத்தார்கள் மிகுந்தஸந்தோஷத்தை அடைந்தார்கள். அரசர்கள்ஸ்னேஹத்தினாலும் கோபத்தினாலுமுண்டாகக்கூடியதோஷங்களைவிலக்கித்தண்டிக்கத்தக்கவர்களுக்குநியாயமாகத்தண்டனைவிதித்துக்கொண்டுராஜ்யபரிபாலனஞ்செய்தனர். க்ஷத்திரியர்கள் அவ்வாறு தருமத்தைக் கடைப்பிடித்தபோது, நூறுயாகங்கள் செய்தவனுகியதேவேந்திரன் ஸரியான இடத்திலும் ஸரியானகாலத்திலும் ஜனங்கள் திருப்திப்படும்படி இனியமழையைப் பெய்தனன். ராஜா

* ருதுகாலத்திலும் காமத்தாற் சேரவில்லையென்பது கருத்து.

வே! அப்போது யாரும்சிறுபிராயத்தில் இறக்கவில்லை. பௌவன வயஸுவராத ஸ்திரீயை யாரும்சேர்ந்ததில்லை. பரதச்ரேஷ்டரே! இவ்வாறு இந்தக்கடல்சூழ்ந்தபூமி ஆயுள்வளர்ந்திருந்த ஜனங்களால் நிறைந்திருந்தது. அப்போது க்ஷத்திரியர்கள் மிகுந்ததக்ஷிணைகளுள்ள மஹாயாகங்களைச் செய்தார்கள். பிராமணர்கள் வேதங்களை அங்கங்களோடும்உபநிஷத்துக்களோடும்அத்தியயனஞ்செய்தார்கள். ராஜாவே! அக்காலத்தில் பிராமணர்கள் வேதத்தைவிக்கிரயஞ்செய்யவில்லை. சூத்திரர்கள்ஸமீபத்தில் வேதத்தை உச்சரித்ததும் இல்லை. இந்தப்பூமியில்வைசியர்களும் விருஷபங்களைக்கொண்டுஉழும்போது இளைத்தவிருஷபங்களை நுகத்திற்கட்டவில்லை; அவற்றைப்போஷித்தனர். மனுஷ்யர்கள், கன்றுகள் பாலையேகுடிக்கும் நிலைமையிலிருக்கையில் மாடுகளைக்கறக்கவில்லை. வர்த்தகர்கள் விற்கவேண்டியவற்றை மோசஅளவுகளால் விற்கவில்லை. புருஷச்ரேஷ்டரே! மனிதர்கள் தர்மமே ஆதாரமென்றுநினைத்துத் தர்மத்தையேகவனித்துத் தர்மானகார்யங்களையே செய்தனர். ராஜாவே! எல்லாவருணத்தாரும் தம்தமகருமங்களை விடாமலிருந்தனர். புருஷச்ரேஷ்டரே! அப்போது இவ்வாறு தருமம் ஸ்திரமாயிருந்தது. பரதச்ரேஷ்டரே! பசுக்களும் ஸ்திரீகளும் காலத்தில்பிரஸவித்தனர். விருக்ஷங்களுக்கு அந்தஅந்தருதுக்களில் பூக்களும் காய்களும்உண்டாயின. ராஜாவே! இவ்வாறு அப்போது கிருதயுகம் செவ்வையாகநடந்ததனால்பூமிமுழுதும் அநேகப்பிராணிகளால்அதிகமாகநிரப்பப்பட்டது. பரதச்ரேஷ்டரே! மனிதர்கள்சே! இவ்வாறு மனுஷ்யலோகம் செவ்வையாகவிருத்தியடைந்திருக்கையில் ராஜஸ்திரீகளிடம் அஸுரர்கள்ஜனித்தனர். தேவாஸுரயுத்தத்தில் தேவர்களால் அநேகந்தடவைஜயிக்கப்பட்டு ஐசுவரியத்திலிருந்து நீக்கப்பட்ட அஸுரர்கள் அப்போது ஸ்வர்க்கத்தைவிட்டு இந்தப்பூமியில் பிறந்தனர். ராஜச்ரேஷ்டரே! பிரபுவே! பரிதபிக்கத்தக்க அஸுரர்கள்இந்தப்பூமியில் ராஜாக்களாக இருக்கவிரும்பி மனுஷ்யர்களிடத்திலும் கோக்கள், அச்வங்கள், கழுதைகள், ஒட்டகங்கள், எருமைகள், மாம்ஸந்தின்கிற பிராணிகள், யானைகள்,மான்கள் முதலிய அநேகப்பிராணிகளிடத்திலும்பிறந்தனர். ராஜாவே! எல்லாவற்றிற்கும் ஆதாரமான பூமியானது அந்தஅஸுரர்கள் தன்னிடத்தில்முன்னமே ஜனித்தும் இன்னும்ஜனித்துக்கொண்டிருப்பதனால் தன்னைத்தானாக நிலைநிறுத்திக்கொள்ள முடியாமற்போயிற்று. ஸ்வர்க்கலோகத்திலிருந்துவீழ்ந்த திதிபுத்திரர்களும் தனுபுத்திரர்களுமாகிய அஸுரர்கள் உடனே இந்தப்பூமியில் மிகுந்தகர்வ

முள்ள சில அரசர்களாகப் பிறந்தனர். மிகுந்த பராக்ரமமுள்ளவர்களும் கர்வமுள்ளவர்களும் சத்ருக்களைப்பீடிப்பவர்களுமாகிய அவர்கள் பலரூபங்களையெடுத்துக்கொண்டு ஸமுத்ரஞ்சூழ்ந்த இந்தப்பூமியெல்லாம் வியாபித்தனர். பலத்தினால் பிராமணர்களையும் க்ஷத்ரியர்களையும் வைச்யர்களையும் சூத்ரர்களையும் மற்றப் பிராணிகளையும் பீடித்தனர். ராஜாவே! பராக்ரமத்தினால் கர்வங்கொண்ட அந்த அஸுரர்கள் கொழுப்பினாலும் பலத்தினாலும் எல்லாப்பிராணிக்கூட்டங்களையும் பயமுறுத்திக்கொண்டும், வதஞ்செய்துகொண்டும், ஆங்காங்கு ஆச்ரமங்களிலிருந்த மஹரிஷிகளை உபத்ரவித்துக்கொண்டும், பிராமணர்களுக்கு விரோதிகளாக லக்ஷக்கணக்காகப் பூமியெங்கும் ஸஞ்சரித்தனர்.

ராஜாவே! இவ்வாறு பராக்ரமத்தினாலும் பலத்தினாலும் கர்வங்கொண்ட அந்த அஸுரச்ரேஷ்டர்களாற் பீடிக்கப்பட்ட இந்தப் பூமிதேவியானவள் பிரம்மாவினிடம் போனாள். பஞ்சபூதங்களின் சக்திகளாகிய திக்கஜங்களும் ஆதிசேஷன்முதலிய அஷ்டநாகங்களும்*மேலபர்வதங்களும அஸுராகளின் பலத்தினால் பீடிக்கப்பட்ட இந்தப்பூமியைத் தாங்குவதற்குச்சக்தியில்லாமற்போயின. ராஜாவே! அதனால் பூமிதேவியானவள் பாரம் தாங்கமுடியாமல் மிகுந்தபயத்துடன் எல்லாப்பிராணிகளுக்கும ஸ்ருஷ்டிகர்த்தாவாகிய பிரம்மதேவரைச்சரணமடைந்தாள். சிறந்த மஹிமையுள்ள தேவர்களாலும்பிராமணாகளாலும் மஹரிஷிகளாலும் சூழப்பட்டவரும் † வந்திகளின் செய்கையை பேற்கொண்டிருக்கும கந்தர்வர்களாலும் அப்ஸரஸுகளாலும் ஸந்தோஷத்துடன் ஸேவிக்கப்பட்டவருமான லோககர்த்தாவாகிய பிரம்மாவை அந்தப்பூமிதேவிகண்டு, அவர் ஸமீபத்திற்போய் நமஸ்காரஞ்செய்தாள். பாரதரே! பிறகு அந்தபூமி தனக்கு ரக்ஷணத்தை விரும்பிக்கொண்டு எல்லாத்திக்குப்பாலகர்களுடைய முன்னிலையிலும் பிரம்மதேவரிடம் தன் காரியததை விஜ்ஞாபனஞ்செய்தாள். ராஜாவே! பூமியினுடைய அந்தககாரியமானது உயர்ந்தஸ்தானத்திலிருப்பவருமு முதற்கர்த்தாவுமாகிய பிரம்மாவுக்கு முன்னமே தெரிந்திருந்தது. பாரதரே! ஜகத்தையெ ஸ்ருஷ்டிசெய்தவர், தேவர்கள் அஸுரர்கள் முதலிய பிராணிகளின் மனத்திலுள்ளவற்றையெல்லாம் அறியாமலிருப்பரோ? மஹாராஜாவே! பூமிக்குதாரும் சக்தி

* 'ஸகாம்' என்ற பாடத்தைவிட்டு 'ஸகா:' என்றபாடம் கொள்ளப்பட்டது.

† வந்திகள் - ஸ்துதிபாடுவோர்.

யுள்ளவரும் எல்லாவற்றிற்கும ஆதிகாரணரும எல்லாவற்றையும நட
த்துகிறவரும ஸுகதாதாவுமாகிய பிரமமாவானவர ஆந்தப
பூமியைநோக்கி, "பூமியே! நீ எந்தகாரியத்திற்காக எண்ணிடம வந
தாயோ அந்தகாரியத்தைக குறித்த தாஸ்லாதேவதாகளையும அனுப
பப்போகிறேன்; எழுந்திரு; உன்னிடமசெல்" என்றுசொல்ல, அந
தப்பூமிதேவியும சென்றுவி

ராஜரிஷி! ஸ்ருஷ்டிகாதாவாகிய பிதாமஹரிடமிருந்த இவ்வாறு
சொல்லிப் பூமியைஅனுபபிவிட்டு, எல்லாதேவதாகளையும நோக்கிபபார
த்து, "இந்தப பூமியிலபாரதத்தை நிவிருத்திசெயவதற்காக நீங்கள
தேவரூபத்தை மறைத்து உங்கள ஆசரயாம்சங்களோடுகூடி தனித்தனி
யாக இந்தபபூமியிலேயே ஜனியுங்கள" என்று ஆஜ்ஞாபித்தார. அப
படியேகந்தர்வகாடடங்களையுமரஸாடடங்களையும அழை
த்து ஆவாசனைசெயரையும பார்த்து, "நீங்கள உங்கள இஷ்டபபடி
உங்கள அம்சங்களைகொண்டு மானிடாஸ்திரீகளிடபிறவி
சொல்லி, செயபவேண்டிய காரியத்தைக காட்டினார். அதன
பின், அந்த இரண்டு தேவதாகளைநோக்கி யதார்த்தமான காரிய
முள்ளதாம ஹிதமுமாகிய ஆநந்தகரமான ஸ்ரேஷ்டரானபிரபாவைசொன்
ன சொல்லிக்காட்டி, அதைகாட்டின அவர்களிருவரையும பிரதி அவர்
களெல்லாரும நன்றாக ஆசரயங்களினால பூஜைசெய்த தாம்பாக நிச
யஞ்செய்தசெய்து, சந்தருகாளை பாஸறிபபவரும யைகுண்ட
வாலியுமான நாராயணனிடமசென்றார்கள. சகரரத்தையும கதாயுதத்
தையும கையிலெடுத்தவரும பிதாபரமதத்தரித்தவரும் ஸ்ரீயதி ந
மனியுள்ளவரும நாபியிற சமலபலரையுடையவரும அஸுரர்களை
தொல்லுபவரும அகலமும அழகும விசாலமுமான கண்களையுடைய
வரும பிரமமாவுக்குதாதாவும தேவாகளுக்குபபிரபுவும சிறந்தசக்தி
யாலவரும ஸ்ரீவத்ஸமென்னும மறுவை அடையாளமாகவுடைய
ஐம்புனல்களையும ஆஸ்ரயிப்பவரும எல்லாத தேவாகளாலும்
ஸ்தோத்ரம்பெற்றவருமாகஇருபபவரெவரோ அந்தபபுருஷோத்தமரை
நோக்கி, இந்திரன், "பூமியைசுகத்திசெய்வதற்காகத தேவரீர் அம்
சத்தோடு அவதரிக்கவேண்டும்" என்று பிராத்தித்தார். ஹரியும
அப்படியே ஆகட்டும் என்று அவனுக்கு விடையளித்தனர்.

அம்சாவதரணபர்வம் முற்றிற்று.

அறுபத்தாருவது அத்தியாயம்.

ஸம்பவபர்வம்.

பிறகு இருதிரண மகாராஜாவுடன் கூட மஹர்ஷிகளெல்லாரும் ருது பூமியிலுள்ள ஆசிரமங்களைக் காணும் ஜனமேஜய மகாராஜாவினிடத்தில் திஜனுடைய புத்திரனான இருதிரவகாரன மஹாராஜாவுக்குப் பிறந்த டனுடைய மஹாபராக்கிரமமுள்ள காரணமாயிருந்த அந்தக் காரணத்தை ண்டு தேவேந்திரனுடைய அருமை பிரியமுள்ள அப்சரஸ்திரீகளை படாதபடிக்கும் ஸகல மஹரிஷிகளுக்கும் தாம் நமஸ்காரம் செய்வதற்கும் ஸ்வாகதத்தினிடமாக பூமியில் ஸஞ்சரிப்பதாக இருந்தனர். ரீ ஸுப்ரஹ்மண்யரே! பிறகு நீங்களாகவே தேவர்களுடைய பிரமாணிஷிகளின் மஹாசங்கங்களிலும் ராஜரிஷிகளின் மஹாசங்கங்களிலும் ஜனங்களை. அவர்களாலேயும் ராஜரிஷிகளாலேயும் கர்மாக்களாலேயும் தபஸாலேயும் இன்னும் ரணிதங்களாலேயும் தியாகத்தினாலேயும் அதிசயமாயிராணிகளாலேயும் கொண்டனர். பரதஸ்ரேஷ்டரே! "அந்தக் கர்மாவான பிறகு முழுதும் பலசாலிகளா இருந்தகாலை குழந்தையாயிருக்கும்போதுகூட அஸுரர்களும் ராக்ஷஸாகளும் கந்தர்வர்களும் நாகங்களும் ஆவர்களைக் கொல்லுவதில் வில்லே" என்று வைசம்பாயனர் சொல்லினர்.

ஜனமேஜயர், "தபஸ்வாமிரதமான மஹாத்மாக்கள் ஆயிரக்கணக்கான ரஸுகளை பரிதாபங்களை பாசிஷ்யர்களை இவர்களையல்லாமலுள்ள உதபத்தியையும் ஆதிரமுழுதும் தெளிவாகக் கேட்டிருக்கிறேன். எல்லாப்பிராணிகளுடைய ஜனனத்தைப்பற்றியும் சொல்லவேண்டும்" என்று கேட்டார். வைசம்பாயனர் சொல்லத்தொடங்கினார்

"அப்படியே ஆகட்டும், ப்ரஹ்மாவுக்கு நமஸ்காரஞ்செய்து தேவர்களையும் நான் ஒரு பாடத்தைப் பிறப்பதற்கு முன்னாலுள்ள காரணத்தைத் தெளிவாகச் சொல்லப்போகிறேன். பரீசி, அத்ரி, புலஸ்த்யர், புலஹர், க்ரது, ஆகிய இந்த ஆறு மஹரிஷிகளை தேவர் மனதினால் ஸ்ருஷ்டிக்கப்போகிறதாகவும் பிரஹ்மதேவரின் ஹ்ருதயத்திலுடைய புதராகிய பிருகுமஹரிஷியையுள்ள தர்மபத்தினியான பெண்கள் பதின்மூவர். தக்ஷபராலை அடியிலவதாகவுமுள்ள தர்மபத்தினிகளை பண்ணினர். புருஷஸ்ரேஷ்டரே! பாரதஸ்ரீ அதிதி, திதி, தனு, காலகை, வினதை, ஸிம்ஹிகை, க்ரோதை, ப்ராதை, விச்வை, விஸ்வதை, கபிலை, முனி, [illegible] புத்திரிகள், இவர்களுக்குப் பாரத்

இரமகாலிகளான பிள்ளைகளும் பேரர்களும் எண்ணில்லாதவர்களுண்டானார்கள்.

அதிதியினிடம் லோகங்களுக்கெல்லாம் ஈச்வரர்களாகிய பன்னிரண்டு ஆதித்யர்கள் பிறந்தார்கள். பாரதரே! அவர்களைப் பெயர்களோடு உமக்குச்சொல்லுவேன். அவர்கள் தாதா, மித்ரன், அர்யமா, சக்ரன், வருணன், அமசன், பகன், விவஸ்வான், பூஷா, ஸவிதா, த்வஷ்டா, விஷ்ணு என்று பன்னிரண்டுபேர்கள். எல்லா ஆதித்யர்களிலும் கடைசியவனாகிய விஷ்ணு குணங்களிற் சிறந்தவன்.

ஹிரண்யசகிபு ஒருவன்தான் திதியின் புதல்வனென்று சொல்லப்பட்டவன். சிரேஷ்டனாகிய அந்தஹிரண்யகசிபுவுக்குப் பிரஹ்லாதன் முதலான பெயருள்ள புதல்வர்கள் ஆடியிலைவரும் ஐவர்கள். அவர்களுள், பிரஹ்லாதன் ஜ்யேஷ்டன்; அடுத்தவன் ஸம்ஹ்லாதன்; மூன்றாமவன் அனுஹ்லாதன்; அனுஹ்லாதனுக்குப்பின், சிபி, பாஷ்கலனென்னும் இருவரும் ஆவர். பாரதரே! விரோசனன், கும்பன், நிகும்பனென்று பிரஹ்லாதனுக்கு மூன்று புதல்வர்கள். அவர்களில் நிகும்ப பிரஹ்லாதனுக்கு மூன்று புதல்வர்கள். சிறந்த பராக்ரமமுள்ள பலி ஒருவன்தான் விரோசனனுடைய புத்ரன். பாணனென்னும் அஸுரசிரேஷ்டன் பலியின் புதல்வனென்று பிரஸித்தன். அவன் மிகுந்த ஸம்பத்துள்ளவன். அவன் மஹாகாலனென்று சொல்லப்பட்ட நந்திருடையதாஸன்.

பாரதரே! தனுவுக்கு நூறு புத்ரர்கள். அவர்கள் எங்கும் பெயர்பெற்றவர்கள். அவர்களுக்குள் ஜ்யேஷ்டனும் புகழ்பெற்றவனுமாகிய விப்ரசித்தியென்பவன் ராஜாவாயிருந்தான். சம்பரன், நமுசி, பெயர்பெற்ற புலோமன், அஸிலோமன், கேசி, துர்ஜயன், அயசிரன், அச்வசிரன், சூரனாகிய அச்வசங்கு, தனமூர்த்தா, வேகவான், கேதுமான், ஸ்வர்பானு, அசுவன், அச்வபதி, வருஷபர்வா, அஜகன், அச்வக்ரீவன், ஸூக்ஷ்மன், மிகுந்த பலமுள்ள துஹுண்டன், † இஷுபாத், ஏகசக்ரன், விரூபாக்ஷன், ‡ ஹரன், அஹரன், நிசந்த்ரன், நிகும்பன், குபடன், கபடன், சரபன், சலபன், ஸூர்யன், சந்த்ரமஸ் இவர்கள் தாம தனுவின்வம்சத்தில் § பெயர்பெற்ற தான

---

* 'சதபாரிம்சத்' என்ற இடத்தில் 'சதுஸ்திரிம்சத' என்றுபாடமிருக்கவேண்டும். வேறுசிலரும் இப்படியே அபிப்பிராயப்படுகின்றனர்.

† ஏகபாத் என்றுபாடம்.

‡ மஹாஹரன் என்பது வடதேசபாடம். 68-வது அத்யாயத்தில் ஹரன் அஹரன் என்பவர்களுக்கு ஸந்ததி சொல்லியிருக்கிறது. மஹாஹரனுக்கு ஸந்ததி சொல்லவில்லை.

§ மற்றவர்களின் பெயர் பிரசித்தமாக இல்லை.

வர்களென்று சொல்லப்பட்டவர்கள். தேவர்களுக்குள் ஸூர்யசந்திரர்கள் வேறு, அஸுரச்ரேஷ்டர்களுக்குள் ஸூர்யசந்திரர்கள் வேறு என்று சொல்லப்பட்டனர். மஹாராஜாவே! தானவர்களின் வம்சத்திற்குக் காரணமாகிய தனுபுத்ரர்கள் ஏகாக்ஷன், விரூபிய ம்ருதபன், ப்ரலம்பன், நரஹந்ன், வாதாபி, சத்ருதபனன், அஸுரச்ரேஷ்டனுகிய சடன், கவிஷ்டன், அனயு, தீர்க்கஜிஹ்வன் என்று பதின்மரும் தானவர்களின் வம்சத்துக்குச் காரணமாகிய தனுவின் புத்ரர்களே பாரதரே! அவர்களுடைய புத்ரர்களையும் பௌத்ரர்களையும் எண்ணுதல் முடியாது. விம்ஹிகையென்பவள், ராகு, சந்த்ரார்க்கமர்த்தனன், ஸுசந்த்ரன், சந்த்ரஹர்த்தா, சந்த்ரப்ரமர்த்தனன் என்ற புத்ரர்களைப்பெற்றாள்.

சூரரையான குரோதையினுடைய குரூரமான ஸ்வபாவமுள்ள புத்ரர்களும்பௌத்ரர்களும் எண்ணில்லாதவர்கள். அவர்கள்கொடிய செய்கையுள்ளவர்களும் சத்ருக்களை அழிக்கிறவர்களுமாகிய குரோதவசர்கள் என்றுபெயருள்ள ஒரு கூட்டமாயிருந்தார்கள். விக்ஷோபன், பலன், வீரன், வருத்ராஸுரன் என்ற நான்கு அஸுரச்ரேஷ்டர்கள் தனுவுடைய புத்ரர்கள்.

யமனைப்போன்றவர்களும் ஹிம்ஸிக்கிறவர்களும் அஸுரர்களுக்குள் பெரியவீரர்களென்று பெயர்பெற்றவர்களும் எதிரிகளைத் துன்பப்படுத்துகிறவர்களுமாகிய விநாசனன், குரோதன், குரோதஹந்தா, குரோதசத்ரு இவர்களும் காலகேயர்களென்று பெயர்பெற்று இன்னும் சிலரும் காலியினுடைய கர்பத்திற்பெற்ற புத்ரர்கள். பிருகு மஹரிஷிபுத்ரரான சுக்ராசாரியார் அஸுரர்களுக்குப் புரோஹிதராக இருந்தார். தேஜஸில் ஸூர்யனைப்போன்றவர்களும் ப்ரம்மலோகத்துக்குப்போகத்தக்கவர்களுமாகிய த்வஷ்டாவும், அவனுக்குப்பின் அத்ரியும், மற்று இருவர்களான ரௌத்ரனும், காமியுமாகிய இந்தநாலு புரோஹிதர்களும் சுக்ராசாரியரின் புத்ரர்களென்று பிரஸித்தர்கள்.

இவ்வாறு ப்ராக்ரமசாலிகளான தேவாஸுரர்களின் வம்சோத்பத்தியை நான் புராணத்திற் கேட்டிருந்தபடி உமக்குச்சொன்னேன். ராஜாவே! இவர்களுடைய ஸந்ததியை முழுதும் எண்ணமுடியாது. அதைச்சேர்ந்த உட்பிரிவும் அளவில்லாதது. தார்க்ஷ்யன், அரிஷ்டநேமி, கருடன், அருணன், ஆருணி, வாருணி இவர்கள் வினதையின் புத்ரர்களாகச் சொல்லப்பட்டிருக்கின்றனர். சேஷன், அனந்தன், வாஸுகி, தக்ஷகன், கூர்மன், குலிகன், இவர்கள் கத்ருவின் புத்ரர்களென்று சொல்லப்பட்டவர்கள். ராஜாவே! பீமஸேனன்,

உக்ரசேனனை, ஸுபர்ணன், வருணன், கோபதி, திருதராஷ்டிரன், ஸூர்யவர்ச்சஸ், ஸத்யவாக்கு, அர்க்கபர்ணன், பெயர்பெற்ற பிரயுதன், பீமன், பிரவிர்த்தனும் எல்லாந்தெரிந்தவனும் ஜிதேந்திரியனுமாகிய சித்ரரதன், சாலிசிரஸ், பர்ஜன்யன், கலி, நாரதன் என்ற இந்த தேவகந்தர்வர்கள் முனியென்பவளுக்குப் பிள்ளைகளாகச் சொல்லப்பட்டனர். பரதரே! இதன்மேல், இன்னுமோர் கதம்பங்களை உமக்குச் சொல்லுவேன் அனவத்யை, மனு, வாமை, அஸுரை, மார்க்கண்டிசி, அநகை, சுபகை, பாவி, இந்தப்பெண்களைப் பிரசேதஸென்பவன் பெற்றான். விஸ்தன், பூர்ணன், பர்ஹிஸ், பெரியரித்தியுள்ள பூர்ணாயுஸ், பிரமதர், ரதிகுமரன், ஸுபாவனன், விபாவஸு, பானு, அதிதேவர்கள், இந்த * தேவகந்தர்வர்கள் பராசரரின் புத்திரர்களென்று சொல்லப்பட்டிருக்கின்றனர்.

கல்லாலந்தாங்கிய மஹாபுருஷரைச் சொல்லப்போகிற அப்ஸரஸ்களின் வம்சத்தைச் சுபாலனம் செய்தவரான தேவர்களின் முனிவனிடத்தில் அவர்களைக் கேட்டு, விதிப்படியினால் தேவகதகை, அநிந்தை, ரங்கிணி, தம்பை, மனோரமை, சுகேசினி, சுபாலதை, மனோவதி, ஸுபர்ணை இந்த அப்ஸரஸ்கள் உண்டானார்கள். அதிபாவு, பெயர்பெற்ற ஹாஹா, ஹூஹூ, அம்பரீஷ, இந்த நான்கும் தேவர்களுடைய கந்தர்வர்களுக்கும் ஸுபகையின்புத்திரர்கள். அவர்களுக்கு பிரியமனைவிகளான, பத்மினி, கந்தர்வர்கள், அப்ஸரஸ்கள் கபிலையின்புத்திரர்களென்று முன்னமே சொல்லப்பட்டிருக்கிறதில் சொல்லப்பட்டிருக்கிறது. இவ்விதமாக எல்லாப்பிராணிகளின் ஜனனத்தைப்பற்றியும் உமக்கு நான் சொல்லிவிட்டேன். கந்தர்வர்கள், அப்ஸரஸ்கள், நாகர்கள், கருடர்கள், ரிதுக்கள், தேவர்கள், கோகர்கள், சிரார்த்தமுதலானவைகளுக்கு அதிபதிகளான பிதிர்களும் சிரத்தையினால் நிர்ணயித்துச் சொன்னேன். இம்மேல் ஆயுளையும் புண்ணியத்தையும் பாக்கியத்தையும் சொல்லப்போகிறது; கேட்பதற்கு ஸுகமாயும், அஸூயையின்றி எப்போதும் கேட்கவும் சொல்லவும் வேண்டியதாயும். இந்த மஹாத்மாக்களுடைய வம்சத்தைப் பிராமணனானாலும் தேவராஜனானாலும் கிராமத்துடன் எவனொருவன் இதைப்படிப்பானோ அவன் பூர்ணமான ஸந்தோஷத்தையும் சிரத்தையையும் இந்த ரிதுக்களின் மேலான லோகத்தையும் அடைவான்.

---

* தேவஜாதியைச் சேர்ந்த கந்தர்வர்கள்.

அறுபத்தேழாவது அத்தியாயம்.

ஸம்பவபர்வம். (தொடர்ச்சி).

பிரம்மாவின் மனத்திலிருந்து பிறந்த புத்திரர்களாகிய ஆறு மஹரிஷிகளையும் தெரியுமே. மிகுந்த தேஜஸ்ஸுள்ள ருத்திரருடைய புத்திரர் பதினொருவரென்று சொல்லப்பட்டிருக்கின்றனர். மிருகவ்யாதர், ஸர்ப்பர், பெரியகீர்த்தியுள்ள நிருருதி, அஜைகபாத், அஹிர்ப்புத்னியர், விரூபாக்ஷர், ரைவதர், சுரேசுவரர், பெரியதேஜஸ்ஸுள்ள கபாலி, ஸ்தாணு, மஹிமையுள்ளவராகிய பகன் ஆகிய இவர்கள் பதினொருருத்திரர்களென்று சொல்லப்பட்டிருக்கின்றனர். மிகுந்தமஹிமையுள்ள மரீசி, அங்கிரஸ், அத்ரி, புலஸ்த்யர், புலஹர், க்ரது வென்னும் இந்த ஆறுபரிஷிகளும் பிரமமாவின புத்திரர்கள். உறுதியான தபஸ்ஸுள்ளவர்களும், எல்லாலோகத்திலும் பெயர்பெற்றவர்களுமாகிய ப்ருஹஸ்பதி, உதத்யர், ஸம்வர்த்தர் என்றமூவருமஅங்கிரஸின் புத்திரர்கள். ராஜாவே! அத்திரியினுடையபுத்திரர்கள் ஆறுகர்மங்களென்று சொல்லப்படுகின்றனர். அவர்களெல்லாரும் வேதவித்துக்களும் தவத்தில் ஸித்திபெற்றவர்களுமாயுடங்கின மனமுள்ளவர்களுமாயே மஹரிஷிகள். மனுஷ்யச்ரேஷ்டரே! ராக்ஷஸர்களும் வானரர்களும்*கின்னரர்களும் யக்ஷர்களும் சிறந்தஞானமுள்ள அருட்புலஸ்த்யருடைய புத்திரர்கள். ராஜாவே! சரபங்களும், ஸிம்ஹங்களும் †சிப்பிருவாகளும் புலிகளும் கரடிகளும் ஓநாய்களும் புலஹருடைய ஸந்ததிகளாகச் சொல்லப்படுகின்றன. க்ரது என்பவருக்கு ஸன்னதியினுடன் கூட ஸஞ்சரிக்கிறவர்களும் ஸத்யத்தையும் தவத்தையும் முக்கியமாகக் கொண்டவர்களுமென்று மூவுலகத்திலும் பெயர்பெற்ற ஆவரைப்போன்ற வாலகில்யர்களென்னும் புத்திரர்கள் உண்டாயினர்.

ராஜாவே! சாந்தமான மனமுள்ளவரும் மிகச்சிறந்த தவமுள்ளவருமாகிய தக்ஷரென்னும் மஹிமைபொருந்திய ரிஷி பிரம்மாவின் வலக்கைக் கட்டைவிரலினின்றும்பிறந்தார். மஹாத்மாவான தக்ஷருடையபாரியை பிரமமாவின் இடக்கைக் கட்டைவிரலினின்றும் பிறந்தாள். அவளிடம் அந்தத்தக்ஷரென்னும் ரிஷி ஐம்பதுபெண்களைப் பெற்றார். அழகான தேகமுள்ளவர்களும் கமலம்போன்ற கண்களை

---

*தேவதைமுகமும் மனித உடம்பும் உடையவர்கள்.

† மன்ஷ்யமுகமும குதிரை உடம்பும் உடையவர்கள்.

யுடையவர்களுமாகிய அந்தப்பெண்கள் அனைவரையும் தக்ஷரென்னும் பிரஜாபதியானவர் புத்ரனில்லாமையால் * புத்திரிகைகளாக வைத்துக்கொண்டார். ராஜாவே! அவர் தர்மதேவதைக்குப் பத்துப் பெண்களையும் சந்திரனுக்கு இருபத்தேழுபெண்களையும் கசியபருக்குப் பதின்மூன்றுபெண்களையும் தேவதாவிவாஹக் கிரமமாகக் கன்னிகாதானஞ்செய்தார். தர்மதேவதையின் பத்தினிகளுடைய பெயர்களைச்சொல்லுகிறேன்; கேளும். கீர்த்தி, லக்ஷ்மி, † திருதி, ‡மேதை § புஷ்டி, ‖ சிரத்தை, ¶ கிரியை, ⁂ புததி, ** லஜ்ஜை. †† மதி இந்தக்குணங்களின் அதிஷ்டான தேவதைகளாகிய பத்துக்கன்னிகைகளும் தர்மதேவதையின் பத்தினிகளானார்கள். இவர்களையே தர்மத்திக்கு மார்க்கமென்று பிரம்மா ஏற்படுத்தியிருக்கிறார். சந்திரனுடையபத்தினிகள் இருபத்தேழுபேர்களும்உலகத்தில் பிரஸித்தமானவர்கள். காலத்தைத தெரிவிப்பதற்குப் பிரவர்த்தித்தவர்களும் பிரஸித்தமான தபஸுள்ளவர்களுமாகிய சந்திரன்மனைவியரெல்லாரும் உலகநடைகளை நடத்துவதனால் ‡‡ நக்ஷத்திரங்களென்ற பெயர் பெற்றவர்கள். ரிஷியாகிய தர்மதேவதை பிரம்மாவினுடைய புத்திரர். தக்ஷப்பிரஜாபதியும் பிரம்மாவினுடைய புத்திரரே. அஷ்டவஸுக்களும் தர்மதேவதையின் புத்திரர்கள். அவர்களின் விவரத்தைப்பற்றிச் சொல்லுவேன். தரன், த்ருவன், ஸோமன், அஹஸ், அநலன் அநிலன், ப்ரத்யூஷன், ப்ரபாஸன் ஆகிய இவர்கள் அஷ்டவஸுக்களென்று சொல்லப்படுகின்றனர். தரன், தாம்ரையினுடையபுத்திரன் த்ருவன் ● பிரம்மவித்தியினுடைய புத்திரன். ஸோமன்மனஸ்வினி [illegible]புத்திரன். அநலன் சுவாஸையின்புத்திரன். அஹஸ்என்பவன் [illegible]ன்புத்திரன். அநிலன் சாண்டில்யியின்புத்திரன். ப்ரத்யூஷனும் ப்ரபாஸனும் ப்ரபாதையின் புத்திரர்களென்று சொல்லப்படுகின்றனர்.

த்ரவிணனும் ஹுதஹவ்யவஹனும் சரனுடைய புத்திரர்கள். வைதண்டியன், சிரமன், சாந்தன், முனி இவர்கள் ஆபனுடைய புத்திரர்கள். உலகங்களை நடத்துகின்ற பகவானுகிய காலபுருஷன் த்ருவனுடைய புத்திரன். ஸோமனுடைய புத்திரன் வர்ச்சஸ்என்பவன்

* எந்தப் பெண்ணின் ஜ்யேஷ்டபுத்திரனைத் தான் எடுத்துக்கொள்வதாகப் பிதா கல்யாணம்செய்யும்போதே ஏற்படுத்திக்கொள்ளுகிறதோ அவளுக்கு புத்ரிகை என்று பெயர் † திருப்தி. ‡ ஸ்திரபுத்தி. § தேகபலம் நம்பிக்கை ¶ செய்கை. ⁂ நிச்சயம். ** வெட்கம். †† விவேகம். ‡‡ அழிவில்லாதவை ● தக்ஷிணதேசபாடம்.

அவனுலேதான் எல்லாரும் தேஜஸ்ஸுள்ளவர்களாவது. சிரேஷ்ட பிராணன், ரமணன் இவர்கள் மனுஹரையின் புத்ரர்கள். ஜ்யோதி, சமன், சாந்தன், முனி இவர்கள் அஹவிஸின்புத்ரர்கள். சரவணத்தில் பிறந்த ஸ்ரீமானுகிய குமாரக்கடவுள் அக்னியென்று சொல்லப்பட்ட அநலனுடையபுத்ரர். சாகன், விசாகன், நைகமேயன் இவர்கள் அவருக்குப்பின் பிறந்தவர்கள். க்ருத்திகாதேவியெடுத்து வளர்த்ததனுல் அவர் கார்த்திகேயரென்றும் சொல்லப்படுகிறார். சிவையென்பவள் அநிலனுடைய பார்யை; அவளிடம் அவனுக்கு மனோஜவனும் அவஜ்ஞாதகதியுமாகிய இரண்டுபுத்ரர்கள் பிறந்தார்கள். தேவலர் என்று பெயருள்ளரிஷியைப் ப்ரத்யூஷனுடைய புத்ரரென்று அறிகின்றனர். தேவலருக்குப் பொறுமையுள்ளவர்களும் ஞானவான்களுமாகிய இரண்டுபுத்ரர்கள் இருந்தார்கள். ப்ருஹஸ்பதியின் ஸஹோதரியும் ப்ரம்மஜ்ஞானமுள்ளவளுமாகிய யோகஸித்தையென்னும் சிறந்தபெண் உலகமெங்கும் தடையின்றிச் சஞ்சரித்தாள். அவள் வஸுக்களில் எட்டாமவனுகிய ப்ரபாஸனுடைபபார்யை; சிற்பவிஷயத்தில் ப்ரம்மாவும் அனேகஆயிரம்கைத்தொழில்களைச்செய்கிறவனும் தேவர்களுக்குத் தச்சனும் எல்லாப்பூஷணங்களையும்செய்பவனும் சிற்பிகளுக்கெல்லாம் ராஜாவுமாகிய சிறந்த மஹிமையுள்ள விச்வகர்மா அவளிடம் ஜனித்தான். அவன் தேவர்களுக்கு ஆகாயத்திற்செல்லும்விமானங்களைச்செய்தான். அம்மஹாத்மாவின்சில்பத்தை மனிதர்களும் அனுஸரிக்கின்றனர். அழிவில்லாத அந்த விச்வகர்மாவை எப்போதும் பூஜையுஞ்செய்கின்றனர்.

எல்லாலோகங்களுக்கும் ஸுகத்தைச்செய்கிற பகவானுன தர்மதேவதை மனுஷ்யசரீரத்துடன்ப்ரம்மாவின் வலஸ்தனத்தைப்[illegible]துகொண்டு வெளிப்பட்டார். அவருக்கு எல்லாப்ப்ராணிகளுடைய மனஸையும்கவருகின்றவரும், தேஜஸினுல் உலகங்களைத்தாங்குகின்றவருமாகிய சமன், காமன், ஹர்ஷன் என்ற மூன்று சிறந்தபுத்ரர்கள் பிறந்தார்கள். காவனுடையபார்யை * ரதி; சமனுடையபார்யை† ப்ராப்தி; ஹர்ஷனுடையபார்யை ‡ நந்தை. அவர்களைப்பற்றியே உலகங்கள் நிலைபெறுகின்றன. ராஜச்ரேஷ்டரே! மரீசியின்புத்ரர் கச்யபர். கச்யபருக்குத் தேவர்களும் அஸுரர்களும் பிறந்தார்கள். அவர்தாம் லோகங்களுக்கே உற்பத்திக்காரணம். விச்வகர்மாவின்பெண் ஸம்ஜ்ஞையுடைய பார்யையானுள். அந்தமஹானுபாவை,பெண்குதிரைவடிவமெடுத்துக்கொண்டுஆகாசத்தில் அச்வினிதேவர்களிருவரையும்பெற்

* ரதி=சுகம். † ப்ராப்தி=கிடைத்தல். ‡ நந்தா=குறைவின்மை.

முள். ராஜாவே! அதிதியின்புத்ரர்கள் சக்ரன்முதலான பன்னிரண்டுபேர்கள்தாம். அவர்களுள் கடைசியிற் பிறந்தவர் விஷ்ணு. அவர் லோகங்களுக்கு ஆதாரமாக இருக்கிறார். இப்படி * தேவர்களின்வகை முப்பத்துமூன்று. அவர்களுடையவம்சங்களையும், பகுதிகளையும், குலங்களையும், கணங்களையும்நான் உமக்குச்சொல்வேன். ருத்ரர்களுக்கும் வஸுக்களுக்கும் மருத்துக்களுக்கும் கிருஷ்ணபக்ஷம். சுக்லபக்ஷமும் விச்வேதேவர்களையும் வஸுக்களைச்சேர்ந்தவர்களாக அறியவேண்டும். வினதையின் புத்ரர்களும், சிறந்த பல முனிவர்களுமாகிய அருணன் கருடனிருவரும், ப்ருஹஸ்பதிபகவானும் ஆதித்யர்களிலடங்கியதாகச் சிலர் எண்ணப்படுகின்றனர். அச்வினீதேவர்களையும் ஔஷதிகளெல்லாவற்றையும் † பசுக்களையும் யக்ஷகணமென்று அறியும். ராஜாவே! இந்தத் தேவகணங்களை விரிவையாக உமக்குச்சொன்னேன். மனிதன் இவர்களைச்சொல்வதினால் எல்லாப் பாபங்களிலிருந்தும் விடுபடுகிறான்.

பகவானுடைய பிருகுமஹரிஷி, பிரம்மாவின் ஹ்ருதயத்தைப்பிளந்துகொண்டு வெளிப்பட்டனர். கவியும் ‡ கவியின்புத்ரரும் நமக்ரஹங்களில் ஒருவருமாகிய சுக்ரர் பிருகுவின்புத்ரர். அவர் மூன்று லோகங்களும் ஜீவிப்பதற்காக மழை மழையின்மை பயம் பயமின்மை இவைகளைச்செய்யும்படி பிரம்மாவினால் ஏற்படுத்தப்பட்டு உலகத்தைச்சுற்றுகிறார். வேதத்தில் ஆசாரியரும் சிறந்தஞானமுள்ளவரும் கூர்மையான புத்தியுள்ளவரும் இந்திரியங்களை ஜயித்தவரும் § ஹிரண்யநாதமுனிவரிடமாயோகசாஸ்த்ரத்தையும் அஸுரர்களுக்கும் தேவர்களுக்கும் குருவாயிருக்கிறார். அந்தப் பிருகுபுத்ரனைக்கூர் பிரம்மாவினால் உலகத்தின்க்ஷேமத்திற்குமாக நியமிக்கப்பட்டவர். ப்ருகு, ஜ்வலிக்கிற தபஸ்ஸுள்ளவரும் தர்மத்திலேயே சித்தமுள்ளவரும் புகழ்பெற்றவருமாகிய த்யவனரென்ற பெயருள்ள மற்றொருபுத்ரரை உண்டுபண்ணினர். பரதவம்சத்தில் பிறந்த பரமேர! அவர்தம்தாயாரைப் புலோமாவென்னும் ராக்ஷஸனிடமிருந்து விடுவிப்பதற்காகத் தேகபேதத்தினால் கர்ப்பத்திலிருந்து வெளிவந்தவர். ஔர்வரென்றபெயருள்ளமஹரிஷியின்பெண், சிறந்தஞானமுள்ள அந்த த்யவனருடைய பத்னி. அவளிடத்தில் பெரும்புகழுள்ளவரும் மிகு

---

* வஸுக்கள் 8. ருத்ரர்கள் 11. ஆதித்யர்கள் 12. பிரஜாபதி, வஷட்கார என்பன 2. ஆக 33.

† காலுகாலுள்ளவை.

‡ பரந்தஞானமிருந்ததனால் பிருகுவுக்கும் கவியென்றுபெயர்.

§ ப்ருஹஸ்பதி புத்ரனாகிய கசனுக்கு வித்யோபதேசஞ் செய்ததனால் அவ்வாறுரைத்தார்.

நத தேஜஸ்ஸுள்ளவரும் மிகுந்தசக்தியுள்ளவரும் சிறுபிராயத்திலே
யே சூரர்களை நிராகரியவராகிய ஒளரவா துடையைப்பிளந்து
கொண்டு பிறந்தார். ஒளரவருடைய புதரா ரிசிகா. ரிசிகருக்கு
ஜமதக்கினி பிறந்தார். மஹாதாபாவாகிய ஜமதக்கினிக்கு நான்கு புதல்
ரா இருந்தனர். இராமர் அனைவருக்கெல்லாம் கடைசியாகவும் மூத
ன்மையான குணங்களுள்ளவராகவும் இருந்தார். அவர் எல்லா அஸ்தி
ரங்களிலும் நிபுணர்; க்ஷத்திரியாகளை அழிக்கவர்; ஜமதக்நியின்
ஒளரவரும் கூமக்கழிமுதலான நாலுபுதல்களும் இந்நகர்கள். அவர்
களுக்கு யவீனம ஆயிரம் புதல்களை உண்டாக்கினர்கள் அவர்கள் பூமி
யில் மிகுதியாக ஆனார்கள்

பிரமமாவுக்கு வேறிரண்டு புதல்களிருக்கின்றனர். அவர்களிடத்
தில் சுவாயம்புவனென்பவர் இந்த பிரஜைகளை உலகத்தில் தாதா
விதாதாவென்னுமிரு செயல்களிலமர்த்தினார்; மனுவினிடன் இருப்பவர்
கள் தாமரைமலையிலிருப்பிடமாகவுடைய மஹாலக்ஷ்மி
தேவி அவதரித்த அம்மேருபர்வதம் ஆகாசத்தில் சஞ்சரிக்கின்ற
‡ தேவரிஷிகளை அந்தவழிமியிலுடையபரமரிஷிகளுண்டான ஸப்தரிஷிகள்.
§ வருணனுடைய பார்யையாகிய ஜ்யேஷ்டாதேவியானவள் சுக்ரனிட
த்திலிருந்து ஜனிக்கவே பலனை அவளுடைய புதரனாகவும் தேவர்
களை மதிர்விடாமல் மனதையை அவளுடையபுதரியாகவும் அறியும.
ஜனங்களை பசிக்கவும் ஒருவனையிலிருந்து பதினாலுவித்தில் அந்தஸ்ஸா
யினிடத்தில் வைவஸ்வதமனுவிலிருந்து பிறந்தவர்களாகிய அதாமனென்
னும பிரஜாபதிகளை அந்த அதாமனுக்கு நான்கு பார்யை. அவ
னுக்கு பிருக்கதியில் ராக்ஷஸர்களுக்கு வாகனமாகவும் என்றும்
யா. அந்த நிருதிக்கு கொடியவர்களும் பாபிஷ்டர்களும் பாபஞ்செய்
வதில்லம் எண்ணமுடையவர்களுமாகிய பயம, மஹாபயன், எ
லாபபிராணிகளையும் அழிக்கும மருத்து ஆகிய மனைவி புத்ரர்களி
களை மாத்திரம் பலவான்களையும் அழிக்கிறவனாதலால் அவனுக்கு
பார்யையுமில்லை; புதரனுமில்லை.

---

* லக்ஷ்மியின் இயல்பு

† வஸ்துக்களில் மனஸ்ஸுக்கு ஸந்தோஷத்தைக் கொடுக்கிற லக்ஷ்மி என்
னப்படுவது

‡ ஆகாயத்தில் பிரகாசிக்கின்ற ஸப்தரிஷிமண்டலம் முதலியவற்றைக் குதி
ரைகளென்றது லக்ஷ்மியென்பதற்குப் பிரமமா என்றும குதிரை என்பதற்குப்
பிரகாசிக்கிற முதலானவர் என்றும பழையவுரை கூறுகிறது.

§ வருணனுடைய பார்யையான ஜ்யேஷ்டாதேவியானவள் அவனுடைய
வீரியத்திலுல் பலனென்னும புதனையும ஸுரையென்னும பெண்ணையும்
பெற்றாள் என்பது பழையவுரை.

தாம்ராதேவியானவள் காகி, சேனி, பாஷி, த்ருதராஷ்டரி, சுகி ஆகிய லோக ப்ரஸித்தமான இந்தப்பெண்களையும் பெற்றாள். ராஜாவே! காகியென்பவள் கோட்டான்களையும், சேனி பருந்துகளையும், பாஷியென்பவள் கள்ளிக்காக்கைகளையும் கழுகுகளையும், சுபமான த்ருதராஷ்ட்ரியென்பவள் எல்லாஹம்ஸங்களையும்*கலஹம்ஸங்களை யும் சக்ரவாகங்களையும் உண்டாக்கினாள். கீர்த்தியுள்ளவளும் நல்ல குணங்கள் நல்ல லக்ஷணங்கள் ப்ரபாவனவளுமாகிய சுகியென்பவள் இவைகளையே பெற்றனள்.

அதன்பின், குபேராதவசையென்பவள் † கைலாஸபர்வதவாஸியினிட மிருந்து ம்ருகி, ம்ருகமந்தா, ஹரி, பத்ரமனஸ், மாதங்கி, சார்த் தூலி, ச்வேதா, ஸுரபி, எல்லாலக்ஷணங்களுமபொருந்தியஸுரஸை ஆகிய ஒன்பது பெண்களைப்பெற்றாள் ராஜசார்தூலரே! மிருகங்களெ ல்லாம் இவர்களின் ஸந்ததிகள். கரடிகளும் பெரிய கவரிமான்களும் மிருகமயின் ஸந்ததிகள் ‡பத்ரமனஸ்ஸென்பவள் ஐராவதமென் னும் யானையை ஸந்ததிபாகப்பெற்றாள் தேவர்களின் யானையாகிய ஐராவதமென்னும் மஹாகஜம் இவளுடைய ஸந்ததி. பலசாலிகளாகிய குர ங்குகளும் கருங்குரங்குகளும் கோலாங்கூலங்களும் ஹரியின் ஸந் ததிகளென்று சொல்லுகின்றனர். சார்தூலியென்பவள் அநேகங்க ளான ஸிம்மங்களையும் புலிகளையும் வேங்கைகளையும் இன்னும்மிகு ந்த பலமுள்ளவையான ஸகலவிதமிருகங்களையும் பெற்றாள். இதில் ஸந்தே கமில்லை. ராஜாவே! மாதங்கியென்பவள் யானைகளை ஸந்ததிகளாகப் பெற்றாள். ச்வேதையென்பவள் வேகமாகச் செல்லுதற்காக சதேவ மென்று பெயருள்ள திக்கஜத்தைப் பெற்றாள்.

பாரதரே! ராஜாவே! உமக்கு ஸுரபிமுண்டாகட்டும். ஸுரபியின் புத்ரர் ரோஹிணி, கீர்த்திபெற்ற கந்தர்வி, ஸுமுகி, அநலையென்கிற பெண் களைப்பெற்றாள். ரோஹிணியிடம் பசுக்கள் பிறந்தன; குதிரைகள் கந் தர்வியின் ஸந்ததிகள். இரண்டுபெண்களுக்குத் தாமரைப்புஷ்பம்போ ன்ற கண்களையுடைய மூன்றுகன்னிகைகள் பிறந்தார்கள். அவர்களி டமிருந்து § பூவாமற்காய்க்கிறமரங்களும் பற்பல மரங்களும் கொடி களும்பிறந்தன. லதையென்றும் ருஷையென்றும் இரண்டுபேர்களாம் பிரஸித்தமாகச்சொல்லப்பட்டிருக்கின்றனர். அவர்கள் மூவரும்மேற்

---

* காரண்டங்கள்.

† 'பிரம்மாவினிடமிருந்து' என்பது ஹரிவம்ஸத்தில் உள்ளது.

‡ பத்ரமனஸ் என்பது மனஸில் எப்போதும் ஜலமுள்ள தேவதைக்குப் பெயராதலின் ஐராவதம் அவள்ஸந்ததி யெனப்பட்டது.

§ இதற்குத் தமிழில் கோளியென்று பெயர்.

சொன்ன கொடி சேடிவர்க்கங்களுக்கெல்லாம் உரியவர்கள். புஷ்பங்களில்லாமலே காய்க்குமரங்களெல்லாம் லதையென்பவளுடைய ஸந்ததிகளென்று அறியத்தக்கவை. அவற்றைத்தாம்வனஸ்பதிகளென்று சொல்லுகின்றனர். புஷ்பித்துப்பலிக்கின்றவிருக்ஷங்களோஷதியென்பவளுடைய ஸந்ததியென்று அறிகின்றனர். புதர்களும் மரங்களும் தோலில் பலமுள்ள மூங்கில்முதலிய புல்ஜாதிகளும் கொடிகளும் ருஹையினுடையஸந்ததிகள். * அவர்களிருவரோடும்வம்சம்முடிந்து போகின்றது. அரிஷ்டையென்பவள் பிண்டபலன்களென்று சொல்லப்பட்ட உருண்டைவடிவான பழங்களுள்ள எழுவ்ருக்ஷங்களைப்பெற்றாள். † சுகியென்பவள் அருணியின்பெண். ஸுரஸையின் புத்ரன்கள். அருணனுடைய பார்யையாகிய சேனி பராக்ரமசாலிகளான ஏழுவர்களும்மிகுந்த பலமுள்ளவர்களுமாகிய ஸம்பாதியையும் ரவியையும் பெற்றாள். ஸுரஸை நாகங்களையும் கத்ரு ‡ பன்னகங்களையும் ஸந்ததிகளாகப்பெற்றனர். வினதைகருக கருடன் அருணனென்று இரண்டு புதர்கள் பிரவிதத்திபொறறவாகள். ராஜாவே! புத்திமான்களிற் சிறந்தவரே! இவ்வாறு எல்லா முக்யப்பொருள்களுடைய உத்பத்தியையும் நான்தெளிவாகசசொன்னேன். இதைக்கேட்டபுருஷன்பாபத்தினின்று முழுதும் நீங்குவான். § ஸர்வஜ்ஞனாவான், மேலான ஸுகத்தையும் பெறுவான்.'' என்று வைசம்பாயனர் சொல்லினர்.

அறுபத்தேடாவது அத்தியாயம்.

ஸம்பவபர்வம். (தொடர்ச்சி.)

ஜனமேஜயா, ''பகவானே! தேவர்கள், அஸுரர்கள், கந்தர்வர்கள், நாகர்கள், ராக்ஷஸர்கள், விலமங்கள், புலிகள், மிருகங்கள், பன்னகங்கள், பக்ஷிகள், மற்றுமுள்ள பிராணிகள், மனிதர்களில் மஹாத்மாக்களானவர்கள் ஆகிய இவர்களுடைய ஜனனத்தை நான் விவரமாகக் கேட்கவிரும்புகிறேன். இந்தப் பிராணிகளின் பிறப்பை

---

* மூன்றுகன்னிகைகள என்று சொல்லப்பட்டவர்களில் மூன்றாமவளுக்குத் தனித்து ஸந்ததியில்லாமையால் பெயர்கூறவில்லை.

† இவள் வேறுயிருக்கவேண்டும்.

‡ ஸர்ப்பங்களின் ஜாதிபேதம்.

§ இதில் ஸூக்ஷ்மகாரணங்களைச் சொன்னதனால் ஸ்தூலகாரணங்கள் வேறு சொல்லப்பட்டாலும் விரோதமில்லை.

[illegible]

[illegible] தேவர்களிலும் அஸுரர்களிலும் எவர்கள் மனுஷ்
யரிடம் முதலில்ஜனித்தனர்களோ, அவர்களையெல்லாம்உமக்குச்
சொல்வேன். விப்ரசித்தியென்று பெயர்பெற்ற அஸுரச்ரேஷ்டனி
ருந்தானல்லவா, அவன் ஜராஸந்தனென்று பெயர்பெற்ற ராஜாவா
னான். ராஜவே! திதியின் புத்ரன் ஹிரண்யகசிபு வென்று சொன்னே
னே, அவன் மானிடலோகத்தில் சிசுபாலனென்ற ராஜாவாகப்பிறந்
தான். ஹ்லாதனுக்குத் தம்பியாகிய ஸம்ஹ்லாதனென்பவன் சல்
லனென்ற பெயருள்ள வாஹீக அரசனைப்பிறந்தான். ப்ரஹ்லாத
புத்ரனாகிய விரோசனனுக்குத் தம்பியாகிய பராக்ரமமுள்ள அநுஹ்லாதனென்று
சொல்லப்பட்டவன் த்ருஷ்டகேதுவென்று பெயர்பெற்ற ராஜாவாகப்
பிறந்தான். ராஜாவே! சிபியென்ற திதியின் புத்ரனைச் சொன்
னேனே, அவன் பூமியில் த்ருமனென்று பெயருள்ள ராஜாவானான்.
அந்த த்ருமனுக்குள் பெயர்பெற்ற பாஷ்கலனென்பவன் பகதத்தனென
வும் பெயர்பெற்ற ராஜாவானான். ராஜாவே! அயசிரனும், அச்வ
சிரனும் பராக்ரமசாலியான அயசங்குவும், ககனமூர்த்தாவும், வேக
வீர்யர்களான இவ்வைந்து அஸுரச்ரேஷ்டர்களும்கேகய
தேசத்தில் மஹாத்மாக்களாகியராஜச்ரேஷ்டர்களாகப்பிறந்தார்கள்.
அவர்களைத்தவிர வேறுசில பராக்ரமசாலியானகேதுமானென்ப
வன், அமித்ரஜித்ஸஹஸ்ரனென்று பெயர்பெற்ற கொடியசெய்கையுள்ள ராஜா
வாக ஜனித்தான். ஸ்வர்பானுவென்று சொல்லப்பட்ட மிகுந்த ஐச்
வர்யமுள்ள அஸுரச்ரேஷ்டன் உக்ரசேனனென்று பெயர்பெற்ற
உக்ரமான செய்கையுள்ள ராஜாவாகப்பிறந்தான். அச்வனென்று
சொல்லப்பட்ட மிகுந்த ஐசுவர்யமுள்ள அஸுரச்ரேஷ்டனிருந்தா
னல்லவே, அவன் பெரியவீர்யமுள்ளதிதிபுத்ரியிடையாதி அசோகனெ
ன்னும் ராஜாவாகப் பிறந்தான். ராஜாவே! அவனுக்குத்தம்பி அச்வ
பதியென்று சொல்லினனல்லவே, அந்த அஸுரன் புருஷச்ரேஷ்ட
னென்ற ஹார்த்திக்யனென்னும் ராஜாவாக ஜனித்தான். விருஷபர்வா
வென்று சொல்லப்பட்ட ஐசுவர்யமுள்ள அஸுரராஜன் பூமியில்
சேகிதனென்று சொல்லப்பட்ட அரசனைப்பிறந்தான். ராஜா
திதிதேவியின்தம்பியாகிய அஜகனென்பவன் சால்வனென்று
சொல்லப்பட்ட ராஜாவாகப் பூமியிற்பிறந்தான். அச்வக்ரீவனென்று
சொல்லப்பட்டவனாகிய அஸுரச்ரேஷ்டன் பூமியில் ரோசமானனெ
ன்று சொல்லப்பட்ட ராஜாவாகப்பிறந்தான். ராஜாவே! மதிப்புள்ள



த்தான். மயூரனென்றுசொல்லப்பட்டஸ்ரீமானனஅஸுரச்ரேஷ்டன் ஜீச்வனென்றுபெயர்பெற்ற ராஜாவாகப்பிறந்தான். ஸுபர்ணனென்றுசொல்லப்பட்டவனுகிய அவன்தம்பி, காலகீர்த்தியென்றுசொலலப்பட்ட அரசனுகப பூமியிற்பிறந்தான். சந்திரஹந்தாவென்றுசொல்லப்பட்ட ச்ரேஷ்டனுன பெரியஅஸுரன் ராஜரிஷியாகிய சுனகனென்னும் ராஜாவாகபிறந்தான் சந்த்ரப்ரமாதனனென்று சொல்லப்பட்ட அஸுரராஜன் ஜானகியென்றுபெபருள்ள ராஜாவாகப் பிறந்தான்.

குருவம்சத்தவரே! ராஜாவே! நீக்கஜிஹ்வனென்று சொல்லபபட்ட அஸுரச்ரேஷ்டன்தான் பூமியிலகாசிராஜனென்றுபெயாபெற்றிருக்கிறான். விமலஹிரண்யதநுராகமாதனனுகியவனுதராஜவைபபெற்றாளோ, அவன் கராதனென்றுபெயாபெற்ற ராஜாவாகபபிறந்தான். தனுயுவின்புதராகளாலவரில முதலவனுப பராக்ரமசாலியுமாகியவிக்ஷுரனெனனும அஸுரன வஸுமிதரனெனறராஜாவென்று நினைக்கப்படுகிறான். ராஜாவே! விக்ஷுரனுககு அடுத்தவனுகிய அஸுரச்ரேஷ்டன் பாண்டியதேசாதிபதியான ராஜாவென்று புகழ்பெற்றிருக்கிறான். வீரனென்று பெயருள்ள பலவானுகிய அஸுரோத்தமன் பௌண்ட்ரமாதஸ்யகனென்ற ராஜாவாக ஜனித்தான். ராஜாவே! வ்ருதரனென்றபெயாபெற்ற பஹாஸுரன்தான் ராஜரிஷியாகிய மணிமானென்னும் ராஜாவாகபபிறந்தான். வ்ருத்ரன்தம்பியாகிய க்ரோதஹந்தா என்னுட அஸுரன் பூமியில கண்டனென்று பெயர்பெற்ற ராஜாவாகபபிறந்தான கோதவாதனன் என்னப பட்ட மற்றொருஅஸுரன் கண்டகாரனென்றுபரவிதனனை ராஜாவாக ஜனித்தான் ராஜச்ரேஷ்டரே! காலேயர்களின் புதரர்களில் எட்டுப்பெயர்கள் புலிகுஸமானமான பராக்ரமமுள்ள ராஜாக்களாகப்பிறந்தனர். அந்தக்காலேயபுதராகள்எட்டுபெயர்களுகுள்ஜயேஷ்டனுன அஸுரச்ரேஷ்டன் மகாதேசதிலஜயதேமனனென்னும ராஜாவாக ஜனித்தான்

அவர்களில் இரண்டாமவன் ஸ்ரீமானுகவும் இகிரணுக்கொப்பாகவுமிருக்கிற அபராஜிதனென்னும ராஜாவாகபபிறந்தான். சிறந்த பராக்ரமம் மேலானமாயையுமுடைய மூன்றுவது அஸுரச்ரேஷ்டன் பிருதைதத்தரதக்கபராகரமத்தையுடைய*நிஷாதராஜாவாகப் பூமியில் ஜனித்தான். அவர்களில் நாலாமவனுகச்சொல்லப்பட்டவன் பூமியிலச்ரேணிமானென்றுசொல்லப்பட்டராஜரிஷிச்ரேஷ்டனுனன்.

---

* வேடர்கள்.

அவர்களில் ஐந்தர்மவனுகிய சிறந்த அஸுரச்ரேஷ்டன் இந்தலோகத்தில் மஹோஜஸ்ஸென்று சொல்லப்பட்ட வீரனுகப்பிறந்தான். அவர்களில் ஆறுமவனுகிய புத்திசாலியான அஸுரச்ரேஷ்டன் புவியில் அபிரூவென்றுபெயர்பெற்ற சிறந்த ராஜரிஷியாக ஆனன். ஸமுத்ரம்சூழ்ந்தபூமியில் பெயர்பெற்றவனும் அதம்பொருள்களைச் சரியாகத்தெரிந்துகொண்டவனுமாகிய ஸமுத்ரஸேனனென்னும் ராஜா அந்தக்காலேயர்களின் கூட்டத்திலிருந்துஉண்டானவன்தான். ராஜாவே! அந்தக்காலேயர்களில் எட்டாமவனுகிய ப்ரஹத்என்பவன் எல்லாப்பிராணிகளின்நன்மையிலும் ஊக்கமுள்ளதர்மாத்மாவாகிய ராஜாவாகப்பிறந்தான். ராஜாவே! தானவர்களுள் மிகுந்த பலவானுகிய குகுவியென்றுபெயர்பெற்ற அஸுரன், பொன்மலிபோன்றவனுனபார்வதியனென்று பெயர்பெற்ற அரசனுகப்பிறந்தான். மிகுந்த பராக்ரமமுள்ளவனும் ஸ்ரீமானும்ராஜாவுமாகிய க்ரதனனென்னும் அஸுரச்ரேஷ்டன்தான்பூமியில் ஸூர்யாக்ஷனென்று பெயர்பெற்ற ராஜாவாகஜனித்தான். அஸுரர்களுக்குள் ஸூர்யனென்று சொல்லப்பட்ட ஸ்ரீமானுகிய அஸுரச்ரேஷ்டன், எல்லாராஜாக்களுக்கும்சிறந்த தரதனென்னும்பெயருள்ள பாஹ்லீகராஜனுக ஆனன். ராஜாவே! க்ரோதவசர்களென்கிறதாக ஒருகூட்டம்சொன்னேனல்லவா? அவர்களிடமிருந்து வீரர்களாகியஅரசர்கள் இந்தப்பூமியிற்பிறந்திருந்தார்கள். குருவம்சத்தவரே! மத்ரகன், கர்ணவேஷ்டன், ஸித்தார்த்தன், கீடகன், ஸுவீரன், ஸுபாஹு, மஹாவீரன், பாஹ்லீகன், கிரதன், ஸிசித்ரன், ஸுரதன், ஸ்ரீமானுகிய நீலனென்னுமரசன், சீரவாஸஸ், பூமிபாலனென்னும் அரசன், தந்தவக்த்ரன் என்னுமரசன், தூர்ஜயனென்பவன், ருக்மியென்னும் ராஜச்ரேஷ்டன், ஜனமேஜயராஜன், ஆஷாடன், வாயுவேகன், பூரிதேஜஸ், ஏகலவ்யன், ஸுமித்ரன், வாடதானன்; கோமுகன், கரூஷதேசத்தரசர்கள், க்ஷேமதூர்த்தி, க்ருதாயுஸ், உத்வ்ருத்தன், ப்ருஹத்ஸேனன், க்ஷேமன், அக்ரதீர்த்தன், கலிங்கதேசத்து அரசனுகிய குஹரன், மதிமானென்னுமரசன், ருக்மரனென்றுபெயருள்ளவன் ஆகிய இந்தராஜாக்களின்கூட்டம்,க்ரோதவசர்களென்னும்அஸுரக்கூட்டத்தினின்றும்பூமியில்உண்டானது.

பெரிய பாக்யசாலியும் பெரிய கீர்த்தியுள்ளவனும் மிகுந்தபலமுள்ளவனும் அஸுரர்களுக்குட் பெரியவீரனுமாகிய காலநேமியென்று பெயர்பெற்றவன் முன்னிருந்தானன்றே? அவன்தான் உக்ரஸேனன் புத்ரனுகிய பலவானன கம்ஸனென்று க்யாதிபெற்றிருந்தான். இந்திரனுக்கொப்பான தேஜஸுடைய தேவகனென்னும்

அரசனிருந்தானல்லவா? அவன், கீழ்மையாகிய கந்தர்வராஜாவே அரசனுகப் பூமியிற் பிறந்தவன். பாரதரே! பெரிய தேவரிஷிகாகிய ப்ருஹஸ்பதியினுடைய அம்சத்திலிருந்து பரத்வாஜருக்குத் துரோணர் கர்ப்பாசயத்திலிருந்து ஜனிக்காமல் பிறந்தாரென்று அறியும். ராஜச்ரேஷ்டரே! அவர் வில்லாளிகளுக்குள் மேலானவரும் அஸ்திரங்களெல்லாம்தெரிந்தவரும் பெரும்புகழும் பெரும்பராக்ரமமுமுள்ளவருமாக ஜனித்தார். வேதமறிந்தவர்கள் அந்தத் துரோணரைத் தனுர் வேதத்திலும் வேதத்திலும் மிகச்சிறந்தவராகவும் அருமையான செய்கையுள்ளவராகவும் தமது குலத்தை வ்ருத்திசெய்பவராகவும் அறிகின்றனர். பரதவம்சத்தவரே! எதிரிகளைப் பிடிப்பவரும் சிறந்த பராக்ரமமுள்ளவரும், சத்ருபக்ஷங்களுக்குப் பயத்தையுண்டுபண்ணுகிறவரும், தாமரையிதழ்போன்ற கண்களையுடையவரும், சூரருமாகிய அச்வத்தாமாவானவர், சிவன் யமன் இவர்கள் ஒன்றுசேர்ந்து காமத்திலிருந்தும் கோபத்திலிருந்தும் உண்டுபண்ணப்பட்டு, மனிதர்களிற் சிறந்தவராகப் பூமியிலிருந்தார். அஷ்டவஸுக்கள் வலிஷ்டருடைய சாபத்தாலும் இந்திரனுடைய கட்டளையினாலும் சந்தனுராஜாவுக்குக் கங்காதேவியினிடம் புத்ரர்களாக ஜனித்தனர். கௌரவர்களுக்கு அபயம்கொடுத்தவரும், சிறந்தபுத்தியுள்ளவரும், வேதங்களையறிந்தவரும், நல்ல வாக்குள்ளவரும், சத்ருபக்ஷங்களைபொழிப்பவருமாகிய பீஷ்மாசாரியர் அந்தச் சந்தனு புத்ரர்களுள்ள கடைசிப்பிள்ளை; அஸ்திரம் தெரிந்தவர்களெல்லாருள்ளும் சிறந்தவரும், மஹாபராக்ரமசாலியுமான அவர் மஹாத்மாவாகிய பரசுராமருடன் யுத்தஞ்செய்தார். ராஜாவே! கருப்பாள்ன்று பெயருள்ள ப்ரம்மரிஷி, பூமியிலிருந்தாரன்றே? மிகுந்தசக்தியுள்ள அவர் ருத்ரர்களுடைய கூட்டத்திலிருந்து உண்டானவரென்று அறியும். இந்தலோகத்தில் மஹாரதனை சகுனியென்னும் ராஜா இருந்தானே, எதிரிகளைப் பிடிப்பவனுகிற அவனைத் துவாபரயுகமே வந்துபிறந்ததாக அறியும். ஸத்யஸந்தனும் வ்ருஷ்ணிகுலச்ரேஷ்டனும் எதிரிகளையழிப்பவனுமாகிய சாத்யகி, தேவர்களாகிய ஸப்த மருத்துக்களின் பக்ஷத்திலிருந்து ஜனித்தவன். ராஜாவே! இந்த மனுஷ்யலோகத்தில் ஆயுதம்பிடித்தவர்களெல்லாரிலும் ச்ரேஷ்டனை த்ருபதனென்னும் ராஜரிஷி, அந்த மருத்துக்களின் கூட்டத்திலிருந்தே பிறந்தவன். ராஜாவே! நிகரில்லாத செய்கையையுடையவனும் க்ஷத்ரிய ச்ரேஷ்டர்களுக்கெல்லாம் சிறந்தவனுமாகிய த்ருதவர்மாவென்னும் ராஜாவையும் அந்தக்கூட்டத்திலிருந்து வந்தவனுக அறியும். சத்ருக்களையழிப்பவனும்

எதிரிகளின் தேசங்களுக்குத் தர்பத்தையுண்டாக்குகின்றவனுமாகிய விராடனென்னும் ராஜாவையும் ஸப்தமருத்துக்களின் கூட்டத்திலிருந்து உண்டானவனுகவே அறியும். அரிஷ்டையென்பவளின் புத்ரனுகிய ஹம்ஸன் என்று பெயர்பெற்ற கந்தர்வராஜன், க்ருஷ்ணத்வைபாயனருடைய புத்ரனுகிய திருதராஷ்ட்ரனென்றுபெயர்பெற்ற கௌரவராஜனைப் பிறந்தான். நீண்டகைகளும் சிறந்த பராக்கிரமமுமுள்ளவனும் அறிவே கண்ணுகவுடையவனுமாகிய திருதராஷ்ட்ர ராஜா தன்தாபாரிச்செய்த குற்றத்தினுலுண்டான ரிஷியின்கோபத்தினுல் குருடனுகவே பிறந்தான். சஸ்திரம்பிடித்தவரெல்லாரிலும் சிறந்தவனும் சிறந்தகைகளையுடையவனும் உன்பிதாவுக்குப் பாட்டனும் அந்தத்திருதராஷ்டரனுக்குத்தம்பியும் மிகுந்தசைரியமும் பலமுமுள்ளவனுமாகிய பாண்டுவென்னும் வீரன் ஸப்தமருத்துக்களின் கூட்டத்திலிருந்துஜனித்தவன். மிகச்சிறந்த பாக்கியமுள்ளவரும்*புத்ரவான்களுக்குட் சிறந்தவரும் புத்திமான்களுக்குட் சிரேஷ்டருமாகிய அந்தவிதுரர் தர்மதேவதையின் அம்சத்திலிருந்துபூலோகத்தில் ஜனித்த வ்யாஸபுத்திரரென்று அறியும். கலியினுடைய அம்சமானது, அறிவில்லாதவனும் கெட்டஎண்ணமுள்ளவனும் கௌரவர்களுக்கு அபகீர்த்தியை உண்டாக்குகிறவனுமாகிய துர்யோதனனென்னும் ராஜாவாகப்பூமியில் ஜனித்தது. ராஜாவே! எல்லாஉலகமும் விரோதிக்கத்தக்க கலிபுருஷனுகிய துர்யோதனன் பூமிமுழுவதையும் ஹதஞ்செய்தான். அவனல்லாப்பிராணிகளுக்கும்நாசத்தையுண்டாக்கும் பெரியவிரோதம் தூண்டிவிடப்பட்டது. புலஸ்த்ய புத்ரர்களாகிய ராக்ஷஸர்கள் இந்த மனுஷ்யலோகத்தில் துர்யோதனன் ஸஹோதரர்களும் எல்லாரும் கொடியசெய்கையுள்ளவர்களுமான துச்சாஸனன்முதலிய நூறுபேர்களாகப் பிறந்தனர். பரதச்ரேஷ்டரே! துர்முகனும் துல்ஸஹனும், இன்னும்நான் பெயர்குறிக்காத துர்யோதனனுக்கு ஸஹாயமாயிருந்தவர்களும் ராக்ஷஸர்களே. திருதராஷ்ட்ரனுக்கு வைச்யஜாதிப்பெண்ணிடம் பிறந்த நூற்றோராவது புத்ரனுகிய யுயுத்ஸுவும் ராக்ஷஸனே" என்று வைசம்பாயனர் சொல்ல, ஜனமேஜயர், "ஸமர்த்தரே! இந்தத் திருதராஷ்டிரபுத்ரர்களில் மூத்தவர் இளையவர் வரிசையையும் அவர்களுடையபெயர்களையும் வரிசையாகச் சொல்லக்கடவீர்" என்றுகேட்க, வைசம்பாயனர் சொல்லத்தொடங்கினர்.

"ராஜாவே! துர்யோதனன், யுயுத்ஸு, துச்சாஸனன், துல்ஸஹன்,

*இதனுல் விதுரருக்கு நல்லபிள்ளைகளிருந்தாரென்று தெரிகிறது.

துச்சலன், *துர்முகன், விவிம்சதி, விகர்ணன், ஜலஸந்தன், ஸுலோசனன், விந்தன், அநுவிந்தன், துர்தர்ஷன், ஸுபாஹு, துஷ்ப்ரதர்ஷணன், துர்மர்ஷணன், துர்முகன், துஷ்கர்ணன், கர்ணன், சித்ரன், உபசித்ரன், சித்ராக்ஷன், சாரு சித்ராங்கதன், துர்மதன், துஷ்ப்ரஹர்ஷணன், விவித்ஸு, விகடன், ஸமன், ஊர்ணநாபன், பத்மநாபன், நந்தன், உபநந்தன், சேனாபதி, ஸுஷேணன், சுஷேணோதரன், மஹோதரன், சித்ரபாஹு, சித்ரவர்மா, ஸுவர்மா, துர்விரோசனன், அயோபாஹு, † மஹாபாஹு, சித்ரசாபன், ஸுகுண்டலன், பீமவேகன், பீமபலன், பலாகி, பீமவிக்ரமன், உக்ராயுதன், பீமசரன், கனகாயு, த்ருடாயுதன், த்ருடவர்மா, த்ருடக்ஷத்ரன், ஸோமகீர்த்தி, அனூதரன், ஜராஸந்தன், த்ருடஸந்தன், ஸத்தியஸந்தன், ஸுரஸ்ரவஸ், உக்ரச்ரவஸ், உக்ரஸேனன், சேநானீபதி, ஆபராஜிதன், பண்டிதகன், விசாலாக்ஷன், துராதனன், சுராதஸ்தன், ஸுஹஸ்தன், வாதவேகன், ஸுவர்ச்சஸ், ஆதித்யகேது, பஹ்வாசி, நாகதந்தன், அநுயாயீ, கவசீ, நிஷங்கீ, தண்டீ, தண்டதாரன், தநுர்க்ரஹன், உக்ரன், பீமரதன், வீரன், வீரபாஹு, அலோலுபன், அபயன், ரௌத்ரகர்மா, த்ருடரதன், அநாத்ருஷ்யன், குண்டபேதி, விராவி, தீர்க்கலோசனன், தீர்க்கபாஹு, மஹாபாஹு, வ்யூடோரு, கனகாங்கதன், குண்டஜன், சித்ரகன். இவர்கள் த்ருதராஷ்ட்ரபுத்ரர்கள்! அச்சலையென்பெண் நூற்றோராமவள்; த்ருதராஷ்ட்ரனுடையவைச்யஸ்திரீபுத்ரனாகிய யுயுத்ஸுவும் நூற்றுக்குமேற்பட்டவன். ராஜாவே! இந்தநூற்றொரு புத்ரர்களும், ஒருகன்னிகையும் சொல்லப்பட்டனர். குறித்தபோவரிசைப்படி ஜ்யேஷ்டர் கனிஷ்டர் என்பதை அறிகின்றனர். ராஜாவே! எல்லாரும் அதிரதர்களான சூரர்கள்; எல்லாரும் யுத்தத்தில் பாண்டித்யமுள்ளவர்கள்; எல்லாரும் வேதம்தெரிந்தவர்கள்; எல்லாரும்சாஸ்திரத்தின்கரைகண்டவர்கள்; எல்லாரும் யுத்தத்தைச்சேர்ந்த வித்தைகளில் தேர்ந்தவர்கள்; கல்வியினாலும் குலத்தினாலும் சோபிக்கின்றவர்கள்; ராஜாவே! எல்லோருக்கும் தகுதியான பார்யைகள் கல்யாணஞ்செய்யப்பட்டனர். ராஜாவே குருவம்சத்தவராகிய த்ருதராஷ்ட்ரமஹாராஜா துச்சலியென்னும்பெண்ணிவாஹத்துக்குரியபருவத்தில் காந்தாரியின் அபிப்பிராயப்படி ஸிந்துதேசத்தரசனாகிய ஜயத்ரதனுக்குக்கன்னிகாதானஞ்செய்தான்.

---

* இந்த இரண்டுமுறை வந்திருக்கிறது.

† இந்த இரண்டுமுறை வருகிறது.

ராஜாவே! ராஜாவானயுதிஷ்டிரரைத் தர்மதேவதையின் அம்சமாகவும், பீமஸேனனே வாயுவின் அம்சமாகவும், அர்ஜுனனே இந்திரனுடைய அம்சமாகவும், எல்லாப்பிராணிகளுடையமனத்தையும்கவருகிறவர்களும் அழகில் நிகரற்றவர்களுமாகிய நகுல ஸஹதேவர்களோப பூமியில்வந்த அச்வினீதேவர்களுடைய அம்சங்களாகவும் அறிவீர்.

வர்ச்சஸ் என்று பெயர்பெற்ற பராக்ரமசாலியான சந்திரபுத்ரன் தான் பெரியகீர்த்தியுள்ள அபிமன்யுவென்னும் அர்ஜுனபுத்ரனைப் பிறக்தான். ராஜாவே! அவன் அவதரிக்கும்போது தேவர்களோநாக்கிச்சந்திரன்சொன்னதாவது:—"எனக்குப்பிராணனிலும்அதிகப்பிரியமான புத்ரனை நான்கொடுக்கமாட்டேன். நான் சொல்லப்போகிற நியமத்தைச் செய்துகொள்ளவேண்டும்; அதைத்தாண்டக்கூடாது. பூமியில் அஸுரர்களைக்கொல்வதாகிய தேவர்களுடையகாரியம்நமது காரியம்தான்; இந்தவர்ச்சஸ் அங்கே போகப்போகிறான்; ஆனால் அதிககாலம் நிற்கமாட்டான். நாராயணனுக்குஸகாவான நரன், இந்திரபுத்ரனாகிய அர்ஜுனனென்றுபெயர்பெற்ற பராக்ரமசாலியான பாண்டுபுத்ரனைப் பிறக்கப்போகிறான்; இவன் அவனுடைய புத்ரனைப்பிறக்கப்போகிறான்; இவன் பாலனாகஇருக்கையிலேயே பூமியில் மஹாரதனாவான் தேவச்ரேஷ்டர்களே! பதினாறுவருஷகாலம்அங்கே இருப்பான்; இவனுடைய பதினாறாம்வயதில் உங்களுடைய அம்சங்களெல்லாம்வீரர்களைக்கொல்லும்செய்கையைநடத்துகிறஅந்தயுத்தம் நடக்கப்போகிறது. தேவர்களே! நாராயணர்கள் அந்தச்சண்டையில்லாமலிருக்கிறபோது அஸுரர்கள் சக்ரவ்யூஹத்தைச் செய்துகொண்டு உங்களோடு யுத்தஞ்செய்யப் போகின்றனர். சிறுவனாகிய என்னுடையபுத்ரன் கலைக்கமுடியாத வ்யூஹத்துக்குள்ப்ரவேசித்துஸஞ்சரிக்கபோகிறான்; சத்துருக்களெல்லாரையும் முகங்காட்டாமல் ஓடச்செய்யப்போகிறான்; மஹாரதர்களான வீரர்களை வதஞ்செய்யப் போகிறான்; சிறந்தகைகளுள்ள அந்த என்புத்ரன், ஒருதினத்தின் ஒருபாதிக்குள் சத்துருக்களுடைய காலிலொருபாகத்தை யமபட்டணத்துக்கு அனுப்பப்போகிறான். மஹாரதர்களாகிய அநேகவீரர்களோடு யுத்தத்தில் ஸந்தித்து ஸாயங்காலத்தில் அந்தவீரன்மறுபடியும் என்னிடம் சேரப்போகிறான்; வம்சவ்ருத்தியைச்செய்யும்வீரனை ஒருபுத்ரனைப்பெறப்போகிறான். அந்தப்புத்ரன் அழிந்துபோன பாரத வம்சத்தை மறுபடியும் நிலைநிறுத்தப்போகிறான்" என்றது. இந்தச்சந்திரனுடைய சொல்லைக்கேட்டுத் தேவர்களெல்லாரும்சேர்ந்து, "அவ்வாறு ஆகக்கடவது" என்றுசொல்லிச் சந்திரனைக்கௌரவித்தனர்

ராஜாவே! இவ்வாறு உன்பிதாவின் பிதாவாகிய அபிமன்யுவின் ஜனனத்தை நான்சொன்னேன். பஹாரதனுகிய த்ருஷ்டத்யும்னனே அக்னியின்அம்சமென்று நீர் அறியும்;ராஜாவே! முதலில் ஸ்திரீயாயிருந்த சிகண்டியை ராக்ஷஸனாக அறியும். பரதச்ரேஷ்டரே! பிரதிவிந்தியன், ஸுதஸோமன், ச்ருதகீர்த்தி, நகுலன்புத்ரனான சதானீகன், பராக்ரமசாலியான ச்ருதஸேனனென்ற திரௌபதி புத்ரர்கள் ஐவர் இருந்தனரே, அவர்களை விசுவதேவர்களென்னும் தேவக்கூட்டங்களாஜனித்தனவாக அறியும். வஸுதேவரின்பிதாவான சூரனென்னும்பராக்ரமச்ரேஷ்டன் ஒருவன் இருந்தான். பூமியில் அழகில் நிகரற்ற ப்ருதையென்பவள் அவனுக்குப்பெண் பராக்ரமசாலியாகிய அந்தச்சூரன், பிள்ளையில்லாமலிருந்த தன் அத்தையின்புத்ரனுடையபுத்ரனுகியகுந்திபோஜனென்பவனுக்குத் தன்னந்தியில் முதன்மையானதைக் கொடுப்பதாகப் பிரதிஜ்ஞைசெய்தபடி, அந்தபெண்முதலிற்பிறந்தவளாதலால், அந்தக்குந்திபோஜனை வ்ருத்தி செய்வதற்காக, அவளை அவனுக்குப் பெண்ணாகக்கொடுத்தான் தன்பிதாவின் க்ருஹத்தில் பிராமணர்களையும் அதிதிகளையும் பூஜிப்பதற்குநியமிக்கப்பட்டிருந்த அவள்கடுமையானவரும் பயங்கரமானவரும் சகிந்தவழுல்லவரும் தர்மத்தில் த்ருடமான உறுதியுள்ளவருமாகிய துர்வாஸரென்றசொல்லப்பட்ட பிராமணருக்குப் பணிவிடைசெய்தாள். சிலாக்யமான மனஸுள்ள அந்த உக்ரரான ரிஷியைஎல்லாவகையானமுயற்சிகளாலும்ஸந்தோஷப்படித்தினாள். அவர் த்ருப்தியடைந்தவராகி மந்த்ரமுள்ளகிரியையை முறைப்படி உபதேசித்தார். சிறந்தமஹிமையுள்ள அந்தத்துர்வாஸர் அவளைப்பார்த்து, "ப்ரியமானவளே! உன்னிடத்தில் த்ருப்தியுள்ளவனாக இருக்கிறேன். தேவியே! நீ இந்தமந்த்ரத்தினால் எந்த எந்தத் தேவதையை ஆவாஹனஞ்செய்வாயோ, அந்தஅந்தத் தேவதைகளின் அனுக்ரஹத்தினால் புத்ரர்களைப்பெறுவாய்" என்றுசொன்னார்.

இவ்வாறுசொல்லப்பட்ட கீர்த்தியுள்ள அந்தச்சிறுமி பரீக்ஷை பார்க்கவேண்டுமென்கிற ஆசையுடன் கன்னிகையாயிருக்கும்போதே ஸூர்யபகவானை யழைத்தாள். பிரகாசத்தையுண்டுபண்ணுகிறஸூர்யபகவான் அப்போது அவளிடத்தில் கர்ப்பாதானஞ்செய்தார். ஆயுதம்பிடிப்பவர்களெல்லாரிலும் ச்ரேஷ்டனும் குண்டலகவசங்களுள்ளவனும் அழகுள்ளவனும் ஒளியினால் ஸூர்யனுக்கு ஒப்பானவனும் எல்லா அங்கங்களிலும் ஆபரணங்களை அழகாக அணிந்தவனுமாகிய தேவபுத்ரனை பிள்ளையை அவளிடத்தில் உண்டுபண்ணினன். அப்போது குந்தி பந்துவர்க்கத்தின் பயத்தினால்பிறந்ததை மறைப்பதற்

காகப்புகழ்பெற்ற அந்தக்குமாரனை ஜலத்தில் விட்டுவிட்டாள். ஜலத்தில்விடப்பட்ட அந்தக்குழந்தையை ராதையின்கணவனும் மிகுந்த கீர்த்தியுள்ளவனுமாகிய ஒரு * ஸூதன் தன் மனைவியாகிய ராதையின்புத்ரனைச்செய்தான். அந்தத்தம்பதிகளிருவரும் அந்தக் குழந்தைக்கு எல்லாத்தேசங்களிலும் ப்ரஸித்தமான வஸுஷேணனென்கிற நாமதேயத்தைச்செய்தனர். பலவானுகிய அவன் வளர்ந்து எல்லாஅஸ்திரங்களிலும் மேலானவனனான். ஜபஞ்செய்பவருட்சிறந்தவனுகிய அவன் வேதாங்கங்களெல்லாவற்றையும் ஜபஞ்செய்தான்.உறுதியான பராக்ரமமுள்ளவனும் புத்திமானுமாகிய மஹாத்மா ஜபஞ்செய்துகொண்டிருக்குங்காலத்தில்பிராமணர்களுக்குக்கொடுக்கத்தகாதது அவனுக்கு ஒன்றும் இருந்ததில்லை. பிராணிகளை வ்ருத்திசெய்கிற இந்திரன் தன் புத்ரனுக்காகப் பிராமணரூபமெடுத்துக்கொண்டு அந்தவீரனிடத்தில் அவன்சரீரத்திற்கூடவேபிறந்த கவசகுண்டலங்களை யாசித்தான். அப்படியே கர்ணன் கவசகுண்டலங்களையறுத்து எடுத்துக்கொடுத்தான். இந்திரன் அவனுக்கு ஆச்சர்யத்துடன் சக்தியென்னும் ஆயுதத்தைக்கொடுத்து, "ஜயிக்கமுடியாதவனே! தேவர்கள், அஸுரர்கள், மனுஷ்யர்கள், கந்தர்வர்கள், நாகர்கள், ராக்ஷஸர்கள் இவர்களுக்குள் † எவன்மீது இதைப்பிரயோகிப்பாயோ அந்த ஒருவன் இருக்கமாட்டான்" என்றுசொன்னன். முதலில் அவனுக்குப் பூமியில் வஸுஷேணனென்ற பெயர் மாத்திரம் இருந்தது. பிறகு அந்தஸூர்யபுத்ரன் அந்தச்செய்கையினல்(கவசத்தையறுத்ததினல்) ‡ கர்ணனென்று பெயர்பெற்றான்.

கவசத்தைத் தரித்துக்கொண்டபடி பிறந்த பெரும்புகழ்பெற்ற அந்தவீரன்தான் கர்ணனென்றுபெயர்பெற்றகுந்தியின் ஜ்யேஷ்டபுத்ரன். ராஜச்ரேஷ்டனே! அந்தவீரன் ஸூதன்வீட்டில் வளர்ந்தான். ராஜாவே! ராஜச்ரேஷ்டனும் ஆயுதம் பிடித்தவர்களுக்கெல்லாம் சிறந்தவனும் துரியோதனனுடைய மந்திரியும் ஸ்நேஹிதனும் சத்ருக்களையழிப்பவனுமாகிய அந்தக்கர்ணனை ஸூர்யனுடைய சிறந்தஅம்சமென்றறியும். தேவர்களுக்குந்தேவரும் சாச்வதருமாகிய நாராயணனுடைய அம்சந்தான் மனுஷ்யர்களுள் பராக்ரமசாலியான வஸுதேவபுத்ரனுகிய கிருஷ்ணனாக அவதரித்தது. மஹாபலசாலியாகிய பலராமன் ஆதிசேஷனென்னும் நாகனுடைய அம்சம். ராஜாவே மிகுந்ததேஜஸுள்ள ப்ரத்யும்னனானஸனத்குமாரரென்றுஅறியும். இப்

* தேரோட்டுகிறவன். † ஒருவனைமட்டும் கொல்லும் என்பது கருத்து.
‡ கர்ணன்(சேதிப்பது) என்ற பகுதியிலிருந்துவந்தது.

படி இன்னும் அனேகராஜாக்கள் தேவர்களுடைய அம்சங்களாக வஸுதேவருடைய வம்சத்தில் வம்சவருத்தி செய்துகொண்டு பிறந்தனர். ராஜாவே! அப்ஸரஸுகளுடையகூட்டம் நான்சொன்னேனே; அவர்களுடைய பாகங்கள் இந்திரனுடைய கட்டளையினால் பூமியில் பிறந்தன. ராஜாவே! இவர்கள்தாம் மனுஷ்யலோகத்தில் க்ருஷ்ணனில்விவாஹஞ்செய்யப்பட்ட பதினாயிரம்ஸ்திரீகளாக இருந்தனர். லக்ஷ்மியினுடைய அம்சம் கிருஷ்ணனுடைய ப்ரீதிக்காகப் பூமியில் பீஷ்மகராஜாவின் வம்சத்தில் ருக்மணியென்ற பெயருள்ள பதிவ்ரதையாக ஜனித்தது. ச்லாக்கியமான த்ரௌபதியென்பவள் இந்த்ராணியின் பாகத்திலிருந்து உண்டானாள்; த்ருபதன்வீட்டில் யஜ்ஞமேடையின்நடுவில் உண்டானவள்; குற்றமில்லாதவள்; அதிகக் குட்டையுமல்லள்; அதிகநெட்டையுமல்லள்; நீலோத்பலபுஷ்பம்போன்ற நல்லமணமுள்ளவள்; தாமரைப்புஷ்பங்கள் போன்ற நீண்ட கண்களையுடையவள்; அழகான நிதம்பமுள்ளவள்; மிகக்கறுத்தும் சுருண்டுமிருக்கிற கூந்தலையுடையவள்; எல்லாலக்ஷணங்களுநிரம்பினவள்; வைடூர்யக்கல் நிறமானவள்; ரஹஸ்யத்தில் புருஷச்ரேஷ்டர்களாகிய ஐவர்களுக்கும் மனஸைக் கவர்ந்திருக்கிறவள் * ஜயித்தியென்றும் †க்ருதியென்றும் சொல்லப்பட்ட தேவஸ்திரீகளே த்ருதியென்றும் மாத்ரியென்றும் சொல்லப்பட்ட ஐவரின் தாய்மார்களாகப்பிறந்தனர் ‡மதியென்னும் தேவதைதான் காந்தாரியாகப் பிறந்தது. ராஜாவே! இவ்வாறு தேவர்கள், அஸுரர்கள், கந்தர்வர்கள், அப்ஸரஸுகள், ராக்ஷஸர்கள் இவர்களுடைய அம்சங்கள் பூமியில் அவதரித்ததைப் பற்றி உமக்கு நான் சொன்னேன். யுத்தத்தில் அடங்காத மதமுள்ள அந்த மஹாத்மாக்களான ராஜாக்கள் விரிவான யதுவம்சத்திற்பிறந்து பூமியிற்பிரகாசித்தனர். ப்ராமணர்களையும் க்ஷத்ரியர்களையும் வைசியர்களையும்பற்றி உமக்குச்சொன்னேன். தனுத்தையும் ரிக்தியையும் புந்ரணியும் ஆயுஸையும் ஜயத்தையும் தொடர்ந்தத்தக்க இந்த அம்சாவதாரமானது வெறுப்பில்லாமற் கேட்கத்தக்கது. தேவ தநர்வ ராக்ஷஸர்களுடைய அம்சாவதாரணத்தைக்கேட்டு ஜனனமரணங்களையறிந்த புத்திமான் கஷ்டங்களில் சோர்வையடையான்" என்று வைசம்பாயனர் கூறினர்.

---

* ஜயம். † ஸந்தோஷம். ‡ விவேகம்.

அறுபத்தோன்பதாவது அத்தியாயம்.

ஸம்பவபர்வம் (தொடர்ச்சி).

ஜனமேஜயர், "பிராமணரே! தேவர்கள், அஸுரர்கள், ராக்ஷஸர்கள், கந்தர்வர்கள், அப்ஸரஸுகளாகிய இவர்களுடைய அம்சங்கள் பூமியில அவதரித்தவிதத்தைச் செம்மையாக உம்மிடமிருந்து கேட்டேன். பிராமணரே! பிரம்மரிஷிகளின் கூட்டத்தின்முன்னிலையில் இந்தக்குருக்களுடைய வம்சத்தைமுதலிலிருந்து நீங்கள் மறுபடியும் சொல்லவிரும்புகிறேன்" என்றுகேட்க, வைசம்பாயனர் சொல்லத் தொடங்கினர்.

தர்மார்த்தகாமங்களோடு கூடியதும் பாபங்களைப் போக்குவதுமாகிய சிறந்தஞானமுள்ள ராஜரிஷிகளின்சரித்திரத்தை நான் இப்போது சொல்லுகிறேன்; கேளும். குற்றமற்றவரே! தக்ஷரென்பவர், வைவஸ்வதமனு, பரதன், குரு, அஜமீடவம்சத்தவனாகிய பூரு, யாதவர்கள், கௌரவர்கள், பரதவம்சத்தவர்கள் இவர்களெல்லாருடையதும், புண்ணியமும், மங்களத்தையும் ஸம்பத்தையும் கீர்த்தியையும் ஆயுளையும் மிகுதியாகத்தருவதுமாகிய வம்சத்தை உமக்குச் சொல்லப்போகிறேன். எல்லாருமேதேஜஸுகளினால் பிரகாசிப்பவரும் மஹரிஷிகளுக்கொப்பான தேஜஸையுடையவர்களுமாகிய ப்ராசீனபர்ஹியின்புத்ரர்கள் பதின்மர், ராஜர்களாகவும் புண்ணியஸ்வபாவமுள்ளவனங்களாகவும்சொல்லப்பட்டிருக்கின்றனர். அவர்களுடைய முகத்திலிருந்த அக்னியினால் மிகுந்தசெழுமையுள்ள விருக்ஷங்களும் ஓஷதிகளும் எரிக்கப்பட்டன. அவர்களிடமிருந்து ப்ராசீனபர்ஹியின் வம்சத்தில்பிறந்ததனால் ப்ராசேதஸர்என்று சொல்லப்பட்ட தக்ஷர்பிறந்தார். புருஷச்ரேஷ்டரே! தக்ஷரிடமிருந்து இந்தப்ரஜைகள் உண்டாயின. அதனால், அவர் லோகத்திற்குப் பிதாமஹராகஆனார். ப்ரஜாபதியின் புத்திரரும் ரிஷியுமாகிய தக்ஷர் *வீரணி என்பவளோடுசேர்ந்து கூர்மையானதவமுள்ள ஐம்பைப்போன்ற புத்ரர்கள் ஆயிரம்பேரை உண்டுபண்ணினர். ஆயிரக்கணக்கான தக்ஷபுத்ரர்கள் சேர்ந்திருக்கையில் நாரதர் அவர்களுக்கு மோக்ஷத்திற்குக் காரணமாகிய சிறந்தஞானத்தைக் கற்பித்தார்; அவர்கள்காரணமற்போவதற்காகவே, திக்குக்களின்முடிவுகளைத்தெரிந்துகொள்வதாகிய வியாபாரத்தில் (அவர்) அவர்களை நியமித்தார்.

---

* வீரணன் புத்திரி.

ஜனமேஜயரே! பிறகு பிரஜைகளை ஸ்ருஷ்டிக்கவிரும்பின தக்ஷ ரென்பவர், ஐம்பதுபெண்களைப் புத்திரிகைகளாக நிச்சயஞ்செய்து கொண்டார். அவர் தர்மதேவதைக்குப் பத்துப்பெண்களையும், கச்ய பருக்குப்பதின்மூன்று பெண்களையும், சந்திரனுக்குக்காலத்தைத்தெ ரிவிப்பதற்காக ஏற்பட்ட இருபத்தேழுபெண்களையும் கன்னிகாதான ஞ்செய்தார். மரீசியின்புத்ரராகிய கச்யபர் பதின்மூன்றுமனைவிகளுக் குள்முதன்மையான அதிதியென்னும் தக்ஷபுத்ரியினிடம்மிகுந்தபரா க்கிரமமுள்ள இந்திராதிதேவர்களையும் ஸூர்யனையும் உண்டாக்கினர். வைவஸ்வதன் என்றுசொல்லப்பட்ட ஸமர்த்தனுகிய யமன் ஸூர்யனு டைய புத்ரனுகப்பிறந்தான். ராஜாவே * யமி என்னும்பெண்ணும் ஸூர்யனுக்குப்பிறந்தாள். சிறந்தஞானமுள்ளவரும் ஸமர்த்தருமாகிய மனுவும் ஸூர்யனுடையபுத்திரராகப்பிறந்தார். அந்தப்புத்திமானுகிய மனுதர்மத்திலேயே சித்தமுள்ளவர்; அவரிடத்தில் வம்சம்நிலைபெற் றது. மனுஷ்யர்களுடைய இந்தப்பிரஸித்தமானவம்சம் அந்தமனுவி னிடத்திலிருந்து உண்டாயிற்று. பிரம்மக்ஷத்ரியர் முதலானவர்கள் அந்தமனுவினிடமிருந்து உண்டானதனுல் மானவர்களானுர்கள். மஹாராஜாவே! அதனுல் பிராமணர்கள் க்ஷத்ரியர்களுடன் சேர்ந்தி ருந்தனர். மனுபுத்ரர்களாகிய பிராமணர்கள் அந்தக்ஷத்ரியர்களுக்கு வேதங்களை அங்கங்களுடன் கற்பித்தனர். வேனன், த்ருஷ்ணு, நரி ஷ்யந்தன், நாபாகன், இக்ஷ்வாகு, காருஷன், சர்யாதி, எட்டாவது இளை பென்னும்பெண், ஒன்பதாவது க்ஷத்ரியதர்மத்தைக் கடைப்பிடித்த ப்ருஷத்ரன், பத்தாவது † அரிஷ்டன், இவர்களை மனுபுத்ரர்களென் றுசொல்லுகின்றனர். அப்படியே மனுவுக்கு வேறு ஐம்பதுபுத்ர் கள் பூமியில் இருந்தனரென்றும், பரஸ்பரவிரோதத்தினுல் அவர்க ளெல்லோரும் அழிந்துபோயினரென்றும் நமக்குக்கேள்வி.

அதன்பிறகு, விக்வானுகிய புரூரவஸ்என்பவன் இளையினிடம் பிறந்தான். அந்தஇளை அவனுக்குப்புத்ராவாகவும் பிதாவாகவும் இரு ந்தாளென்று நாம்கேட்டிருக்கிறோம். பதின்மூன்று ஸமுத்ரத்வீபங் களை வசப்படுத்தின பெரிய யசஸ்ஸுள்ள புரூரவன், தான் மனுஷ்ய ணுகஇருந்து மனுஷ்யரல்லாத ‡ பிராணிகளினுல் ஸஹாயமாகவேண் டப்பட்டான். பராக்ரமத்தினுல் கர்வங்கொண்ட அந்தப்புரூரவன் பிராமணர்களுடன் சண்டைசெய்தான். அவன் பிராமணர்கள்கதறி

---

* யமுனை.

† 'நாபாகாரிஷ்ட' என்று மூலத்தில் இருப்பதனுல் அரிஷ்டனுக்கும் நாபாகனென்ற பெயர் உண்டென்று தெரிகிறது.

‡ தேவர்கள்.

யும் அவர்களுடைய ரத்னங்களையெல்லாம் அபஹரித்தான். ராஜாவே! ஸநத்குமாரர் பிரம்மலோகத்திலிருந்துவந்து அவனுக்குச்சாஸ்திரத்தைப் போதித்தார். அவன் அதையும் அங்கீகரிக்கவில்லை. பிறகு பொருளாசைகொண்டவனும் பலத்தினால்வித்தினால்விவேகம்தப்பினவனுமாகிய அவ்வரசன தோபித்த மஹரிஷிகளினால் சபிக்கப்பட்டு உடனேயழிந்துபோனன். அந்தச்சக்ரவர்த்தியானவன் ஊர்வசியுடன்சேர்ந்து, கந்தர்வலோகத்திலிருந்த * மூன்றுவிதமாகப் பிரிக்கப்பட்ட அக்னிகளைச் சாஸ்திரப்படி யஜ்ஞம்செய்வதற்காகக் கொண்டுவந்தான். அந்த இளையின் புத்ரனுகிய புரூரவனுக்கு ஊர்வசியினிடம் ஆயுஸ், தீமான், அமாவஸு, த்ரடாயுஸ், வனயுஸ், சதாயுஸ் ஆகிய ஆறுகுமாரர்கள் பிறந்தார்கள். நகுஷன், விருத்தசர்மா, ரஜி, கயன், அநேநஸ் இவர்கள் ஆயுவுக்கு ஸ்வர்பானவி என்பவளிடம்பிறந்த புத்ரர்களாகச் சொல்லுகின்றனர். ராஜாவே! புத்திமானும் ஸ்திரமான பராக்ரமமுள்ளவனுய் ஆயுவின்புத்ரனுமான நகுஷனென்பவன், மிகப்பெரியராஜ்யத்தைத் தர்மமாகப்பரிபாலித்தான். நகுஷன் பிதுர்க்களையும், தேவர்களையும், ரிஷிகளையும், பிராமணர்களையும், கந்தர்வர்களையும், நாகர்களையும், ராக்ஷஸர்களையும், பிரம்மஜ்ஞத்திரிய வைச்யவர்ணங்களையும் பரிபாலித்தான். அவன் கொள்ளைக்காரர்களின் கூட்டங்களைக்கொன்று ரிஷிகளைக் கப்பங்கொடுக்கச் செய்தான். பராக்ரமசாலியான அவன் அவர்களைப் பசுக்களைப்போல் முதுகில் தண்ணீர் தூக்கச்செய்தான். தேவர்களைக்கீழ்ப்படுத்தி இந்திராதிகாரத்தைச் செலுத்தினன்; நகுஷன் சபிக்கப்பட்டு ஒளி, தவம், சக்தி, உத்ஸாஹம் இவையெல்லாம்நீங்கி உடனே மலைப்பாம்பாக ஆனன்; யதி, யயாதி, ஸம்யாதி, ஆயாதி, அயதி, த்ருவன் என்னும் இன்சொல்லாகப் பேசுகின்ற ஆறுபுத்ரர்களைப் பெற்றன். யதியென்பவன் யோகஞ்செய்து ரிஷியாகிப் பிரம்மமாய்விட்டான் ஸ்திரமானபராக்ரமமுள்ள யயாதியென்னும் நகுஷபுத்ரன் சக்ரவர்த்தியாக இருந்து பூமியைப் பரிபாலனஞ்செய்தான்; அநேகயாகங்களும் செய்தான். தேவர்களையடையாத யயாதி எப்போதும் நியமமுள்ளவனைப் பிதிர்க்களையும் தேவர்களையும் மிகுந்த பக்தியுடன் ஆராதனஞ்செய்துகொண்டு எல்லாஜனங்களுக்கும் நன்மைசெய்தான் மஹாராஜாவே! மேலானவில்லாளிகளும் குணங்களெல்லாம் நிரம்பினவர்களுமாகிய புத்ரர்கள் அவனுக்குத் தேவயானியிடமும் சர்மிஷ்டையிடமும் பிறந்தனர். யதுவும்துர்வஸுவும்

* 1. கார்ஹபத்யம், 2. ஆஹவனீயம், 3. தக்ஷிணம்.

தேவயானியினிடம் பிறந்தனர். த்ருஹ்யுவும், அநுவும், பூருவும், சர்மிஷ்டையினிடம் பிறந்தனர். ராஜாவே! அந்த நகுஷபுத்ரன் அநேக வருஷகாலங்கள் தர்மமாகப் பிரஜைகளைப்பரிபாலித்துவந்து ரூபத்தையழிப்பதும் மிக்க துன்பத்தைத்தருவதுமாகிய மூப்பையடைந்தான். பாரதரே! ஜரையினால்பிடிக்கப்பட்ட அந்தராஜா யதி, பூரு, துர்வஸு, த்ருஹ்யு, அநு என்னும் புத்ரர்களைநோக்கி, "புத்ரர்களே! நான் யௌவனவயஸோடு போகங்களை யநுபவித்துக்கொண்டு யுவதிகளுடன் யதாவாக விளையாட விரும்புகிறேன். உதவி செய்யுங்கள்" என்று சொன்னன். அவனைப்பார்த்து தேவயானியின் முதல்புத்ரன், "எங்கள் யௌவனத்தினால் உமக்கு ஆகவேண்டிய ப்ரயோஜனம்யாது" என்றுகேட்டான். யயாதி அவனைநோக்கி, "என் ஜரையை நீ பெற்றுக்கொள்; உன் யௌவனத்தினால் நான் போகங்களையனுபவிக்கக் கடவேன்; நீண்டகாலம் செய்யத்தக்கஸத்ரயாகத்தைச் செய்ததனாலும் நிஷ்பாப சுக்ரருடையசாபத்தினாலும் இந்தக் காமபுருஷார்த்தம் எனக்கு இல்லாமற்போகிறது; அதனால் வருத்தமடைகிறேன். புத்ரர்களே! உங்களில் ஒருவன் என் (மூப்புள்ள) சரீரத்தைக்கொண்டு ராஜ்யத்தை ஆளக்கடவன். நான் புதிய சரீரத்துடன் யதாவாகஇருந்துகாமஸுகத்தை யடையக்கடவேன்" என்றான். அந்த யதுமுதலிய புத்ரர்கள், அவனுடைய ஜரையை வாங்கிக்கொள்ளவில்லை. அப்போது ஸ்திரமான பராக்கிரமமுள்ள கனிஷ்டனாகிய பூரு யயாதியைநோக்கி, "ராஜாவே! யௌவனத்தைப்பெற்றுக்கொண்டு புதிதசரீரத்துடன் விஷயங்களை அனுபவியும். நான் உமது ஆஜ்ஞைப்படி மூப்பைவாங்கிக்கொண்டு ராஜ்யத்திலிருப்பேன்" என்றுசொன்னன்.

இவ்வாறு சொல்லப்பட்ட அந்தராஜரிஷி, தவத்தில்வலிமையாகிய ஆதாரத்தைக்கொண்டு அப்போது அந்தமஹாத்மாவான புத்ரனிடம் தன்ஜரையைப் போகச்செய்தான். பிறகு ராஜா பூருவின்வயஸைக்கொண்டு யௌவனமடைந்தான். பூருவும் யயாதியின்வயஸுடன் ராஜ்யபரிபாலனஞ்செய்தான். அதன்பின், புலிக்கு ஸமானமான பராக்ரமமுள்ள அந்த யயாதியென்னும் ராஜச்ரேஷ்டன் அதிகமாயிரவருஷம் தேவர்களியைபாகவிருந்தான். யயாதிஇரண்டு பத்னிகளுடனும் நீண்டகாலம் ரமித்துத் திரும்பவும் விச்வாசியென்னும் அப்ஸரஸுடன்சேர்ந்து சைத்ரதமென்னும் குபேரனுடைய உத்யானவனத்தில் ரமித்தான். அப்போது அந்தப் பெரும்புகழ் பெற்றவன் போகங்களின்விஷயத்தில் த்ருப்தியடையவில்லை. ராஜா

வே! அப்போது மனத்தினால் நிச்சயஞ்செய்து இந்தக்கதைகளை (ச்லோகங்களைச்)சொன்னன். அவற்றின் பொருளாவது:—

"காமம், விரும்பினவற்றை அனுபவித்ததனால் தீருவது ஒரு பொழுதும் இல்லை; நெய்யினால் அக்னிஜ்வலிப்பதுபோல் இன்னும் அதிகமாகவே விருத்தியாகிறது. பூமியில் நெல், யவதான்யம், பொன், பசுக்கள், பெண்கள் முதலிய எவையெவைஉண்டோ, அவையெல்லாம் ஒருவனுக்குப் போதாவென்று தெரிந்து ஒழிவையடைய வேண்டும். எப்போது ஒருவன் செய்கையினலாவது மனத்தினலாவது வாக்கினலாவது எந்தக்காலத்திலும் எந்தப்பிராணிகளுக்கும் தீங்கு செய்யாமலிருக்கிறானோ, அப்போது அவன் பிரம்மமாகிறான்; எப்போது இவன் பயமற்றிருக்கிறானோ, எப்போது இவனிடத்து மற்றவர் பயமற்றிருக்கின்றனரோ, எப்போது விருப்பும்வெறுப்பும் இல்லாமலிருக்கிறானோ, அப்போது பிரம்மமாகிறான்" என்பது.

ராஜாவே! அந்தச் சிறந்தஞானமுள்ள யயாதி காமஸுகங்கள் இழிவானவை யென்பதை இவ்வாறு ஆராய்ந்து, அறிவினல் மனத்தை நிறுத்திக்கொண்டு பிள்ளையினிடமிருந்து மூப்பைத் திரும்பவாங்கிக் கொண்டான். தோல்வியடையாத யயாதி அநேகமாயிரம் வருஷங்களுக்குப்பின் யௌவனத்தைப் பூருவுக்குக்கொடுத்துப் பூருவை ராஜ்யத்தில்பட்டாபிஷேகஞ்செய்துகாமஸுகங்களில் திருப்தியடையாதவனகவே பூருவென்னும் புத்திரனேநோக்கி, "உன்னலேதான் நான் புத்திரவானயிருக்கிறேன். நீதான் என்வம்சவருத்திசெய்யும் புத்ரன். உன்னல் இந்தவம்சம் பெரவவப்சமென்று லோகத்தில் க்யாதி பெறும்" என்றன.

ராஜச்ரேஷ்டரே! பிறகு அந்தயயாதி பூருவுக்கு ராத்யாபிஷேகஞ்செய்வித்துப் பிறகு ப்ருதுங்கமென்னும் மலையில் மிகுந்ததவஞ் செய்து, புண்யத்தீர்த்த ஸம்பாதித்து நின்டகாலத்துக்குப்பின் தேகவியோகமடைந்தான். உபவாஸத்தைச்செய்துபார்யையுடன் ஸ்வர்க்கம் சேர்ந்தான்." என்று வைசம்பாயனர் சொல்லினர்.

எழுபதாவது அத்தியாயம்.

ஸம்பவபர்வம் (தொடர்ச்சி).

ஜனமேஜயர், "தக்ஷரென்பவருடைய பத்தாவது கலிமுறையும் எங்களுக்குக் கூடஸ்தருமான அந்த யயாதி, தமக்குக் கிடைப்ப

தற்கு மிகவும் * அரிய சுக்ராத்மியை எவ்வாறு அடைந்தார்? தபோதனரே! நான் இதை விரிவாகக்கேட்க விரும்புகிறேன். தனித்தனி வம்சங்களுக்கு மூலபுருஷர்களான ராஜாக்களையும் எனக்கு வரிசையாகச்சொல்லும்'' என்றுகேட்க, வைசம்பாயனர் சொல்லத்தொடங்கினர்.

"ஜனமேஜயரே! யயாதியென்கிற ராஜா இந்திரனுக்குஒப்பான சக்தியுள்ளவனாக இருந்தான். அந்தராஜாவைச் சுக்ராசாரியரும் விருஷபர்வா என்கிற அஸுரனும் முன்னே எவ்வாறு வேண்டினார்களென்பதையும் தேவயானிக்கும் நஹுஷபுத்ரனுக்கிய யயாதிக்கும் உண்டான ஸம்பந்தத்தையும்பற்றிக் கேட்கின்றீர்களாக்கில் வேன் ஜங்கமங்களும் ஸ்தாவரங்களுமாகிய மூன்றுலோகங்களையும் ஆளுகையைப்பற்றித் தேவர்களுக்கும் அஸுரர்களுக்கும் ஒருவருக்கொருவர் விரோதமுண்டாயிற்று. அப்போது தேவர்கள் தாங்கள் ஜயிக்கவேண்டுமென்ற எண்ணத்தினால் ரிஷிபாகிய பிருஹஸ்பதியைத் தங்களுக்கு யஜ்ஞங்கள் செய்விக்கிற புரோஹிதராக வரித்தனர். எதிரிகளான அஸுரர்கள் † கவியின் புத்ரராகிய சுக்ரரை வரித்தனர். அந்தப் பிராமணர்களிருவரும் எப்போதும் ஒருவர்க்கொருவர் மிஞ்சுவதற்குத் திடமான எண்ணமுள்ளவராயிருந்தார்கள். அந்தத்தேவாஸுரர்களுக்குள் யுத்தத்தில் ஸந்தித்தவந்த அஸுரர்களைத் தேவர்கள் கொன்றார்களோ அவர்களைச் சுக்ராசாரியர் வித்தையின் பலத்தைஆதாரமாகக்கொண்டு மறுபடியும்பிழைப்பித்தனர். அதனால் அவர்கள் திரும்பவும் எழுந்து தேவர்களுடன் போர் செய்தனர். போர்முனையில் அஸுரர்கள் வந்தத்தேவர்களைக்கொன்றனரோ, அவர்களைச் சிறந்தபுத்தியுள்ள பிருஹஸ்பதி பிழைப்பிக்கவில்லை. ஏனெனில், மிகுந்த சக்தியுள்ள சுக்ராசாரியருக்குத் தெரிந்த, 'ஸஞ்ஜீவினி' என்னும்வித்தை பிருஹஸ்பதிக்குத்தெரியாது. அதனால் தேவர்கள் மிகுந்த துயரமடைந்தனர். அப்போது கவிபுத்ரராகிய சுக்ரரிடமுள்ள பயத்தால் நடுங்கினர். அந்தத்தேவர்கள் பிருஹஸ்பதியின் ஜ்யேஷ்டபுத்ரனாகிய கசனென்பவனிடம் சென்றுபணிவுடன் வருமாறு சொல்லத்தொடங்கினர்:

"உன்னை அடுக்கின்ற எங்களை நீ அங்கீகரிக்கக்கடவாய்; எங்களுக்கு உத்தமமான ஓர் உபகாரத்தைச் செய்யக்கடவாய். அளவற்ற சக்தியுள்ள சுக்ரரென்னும் பிராமணரிடத்தில் வந்தவித்தை

* பிராமணப்பெண்ணை க்ஷத்ரியன் மணஞ்செய்தல் தகுதியன்று.

† ஞானத்தின் மிகுதியால் ப்ருகுவைக் கவியென்பர்.

இருக்கிறதே! நான் அதைத் துரிதமாகச் சம்பாதித்துக்கொண்டிவா. எங்களுடன் நீயும்யஜ்ஞபாகத்துக்குஉரியவனுவாய். அந்தப்பிராமணனே வ்ருஷபர்வாவின் ஸமீபத்தில்தான் காணமுடியும். அவர் அங்கிருந்து அஸுரர்களைக் காப்பாற்றுகிறார்; அஸுரரல்லாதவரைக் காப்பாற்றுவதில்லை. முந்திய வயஸாயிருப்பவனுதலால் அந்தக்கவியை நீ சுச்ரூஷையினல் ஸந்தோஷிக்கச்செய்யத் திறமையுள்ளவன். அந்த மஹாத்மாவின் அன்புள்ள குமாரியாகிய தேவயானியையும் நல்லொழுக்கம், மனம்போல் நடத்தல், பிரியமாகப்பேசுதல், செய்கை, அடக்கம் இவற்றினல் ஸந்தோஷப்படுத்துவதற்குச் சக்தியுள்ளவன் நீதான்; வேறுயாருமில்லை. தேவயானி ஸந்தோஷமடைந்தபோது நீ அந்தவித்தையைப்பெறுவது நிண்ணம்" என்றனர்.

பிறகு ப்ருஹஸ்பதியின் புத்ரனுகிய கசன், "அப்படியே" என்றுசொல்லித் தேவர்களால் மரியாதைசெய்யப்பட்டு, அப்போதே வ்ருஷபர்வாவின் ஸமீபம்சென்றான்; ராஜாவே! தேவர்களால் அனுப்பப்பட்ட அந்தக்கசன் விரைவாகச்சென்று அஸுரருக்கு அரசனுகிய வ்ருஷபர்வாவின்நகரத்தில் சுக்ரரைக்கண்டு, "அங்கிரஸ் என்னும் ரிஷியின் பேரனும், ப்ருஹஸ்பதியின் ஔரஸபுத்ரனும் கச னென்றபெயரினல் ப்ரஸித்தியுள்ளவனுமாகிய என்னை நீங்கள் சிஷ்யனுக ஏற்றுக்கொள்ளக்கடவீர். குருவாகியஉங்களிடம் நான் பூர்ண மான *ப்ரம்மசர்யத்தை ஆயிரவருஷகாலம் செய்யப்போகிறேன். பிரமாணரே! எனக்கனுமதிகொடுக்கக்கடவீர்" என்றுகேட்க, சுக்ரர், "கசனே! உனக்கு மிக்கநல்வரவு உண்டாகக்கடவது; உன்சொல்லை நான் ஏற்றுக்கொள்ளுகிறேன்; கௌரவிக்கத்தகுந்த உன்னை நான் கௌரவிப்பேன்; அதனல்ப் ப்ருஹஸ்பதி கௌரவிக்கப்பட்டவராவர்" என்று மறுமொழிசொன்னர்.

கசனும், அவரைநோக்கி ஸரியென்றுசொல்லி, கவிபுத்ரராகிய உசனஸ்என்று சொல்லப்பட்ட சுக்ராசார்யராலேயேகட்டளையிடப்பட்டஅந்தப்ரம்மசர்யவ்ரதத்தைமேற்கொண்டான். பாரதரே! புவாவாகிய அந்தக்கசனென்னும்முனி உபாத்தியாயரைச் சுச்ரூஷைசெய்வதற்கும் யௌவனத்திலிருக்கும் அந்தத்தேவயானியைஎப்போதும் ஸந்தோஷப்படுத்துவதற்கும் யுக்தமானவ்ரதகாலத்தை அவர்சொல்லின்படி அங்கீகரித்தான். பாடியும், ஆடியும், வாத்தியம்வாசித்தும், தேவயானியை ஸந்தோஷிக்கச்செய்தான். பாரதரே! யௌவனம் வந்தகண்ணிகையாகிய தேவயானியை அவன் ஸ்நேஹஞ்செய்துகொ

* குருசுச்ரூஷை.

ண்டு, புஷ்பங்களாலும், பழங்களாலும், ஏவல்செய்வதனாலும் ஸந்தோஷப்படுத்தினள் தேவயானியும், தவத்தையும் பிரம்மசர்யவிரதத்தையும் வஹித்தவனாகிய அந்தப்பிராமணனே ரஹஸ்யத்தில் பாடியும், விளையாடியும், அவனைப்போலவே உபசரித்தாள். பாடுகிறவனும், கிரஹிபத்தைத் கொடுப்பவனும், இனிமையாகப்பேசுகிறவனும், அழகுள்ளவனும், புஷ்பமாலை சூட்டிக்கொண்டவனுமாகிய புருஷனைப் பெண்கள் விரும்புவர். இவ்வாறாகசன் பிரம்மசர்யவிரதம் கடைபிடிக்கொண்டுவருகையில், அவ்விடத்தில் ஐந்நூறுவருஷங்கள்சென்றன. பிறகு அஸுரர்கள் அந்தக்கசனைத்தெரிந்துகொண்டு அப்போது ஜனமில்லாதவனத்தில் அவனை ஏகாகியாகப் பசுமேய்க்கக் கண்டு, ப்ருஹஸ்பதியினிடமுள்ள தேவஷத்தினாலும், சுக்ரருடைய வித்தை கசனிடம்போகாமல் காப்பாற்றுவதற்காகவும், பொறாமையுடன் (அவனைக்) கொன்றனர். அவனைக்கொன்று துண்டுதுண்டாகச்செய்து நாய்களுக்குப் போட்டனர். பிறகு அந்தப்பசுக்கள் மேய்ப்பவனில்லாமல் தங்கள் கொட்டிலுக்குத் திரும்பிவந்தன. பாரதரே! கசனில்லாமல் வனத்திலிருந்து திரும்பிவந்த பசுக்களைக்கண்டு அந்தத்தேவயானி அப்பொழுது அடியில்வரும்சொல்லைச் சொன்னாள்:

"பிதாவே! ஸமித்தரானவரே தந்தையே! உமது அக்னிஹோத்ரமும் ஆய்விட்டது; ஸூர்யனும் அஸ்தமனமானான்; பசுக்கள் மேய்ப்பவனில்லாமல் வந்திருக்கின்றன; கசனைநாணப்படவில்லை. பிதாவே! கசன் கொல்லப்பட்டான், இதற்குப்போயா இருக்கவேண்டும்; ஸந்தேஹமில்லை. அவனைவிட்டு நான் ஜீவிக்கமாட்டேனென்பதை உமக்கு உண்மையாகச்சொல்லுகிறேன்" என்றாள். அதற்குச் சுக்ரர், "நான் இறந்துபோனவனை வாவென்று அழைத்து நிஜப்போதிபைப்பிறப்பேன்" என்றுசொல்லி, உடனே ஸஞ்ஜீவினிவித்தையைப் பிரயோகித்துக் கசனைக் கூப்பிட்டார். வித்தையினால் கூப்பிடப்பட்ட அந்தக்கசன் நாய்களுடைய சரீரங்களைப்பிளந்துகொண்டு வெளிப்பட்டு ஸந்தோஷமுள்ளவனாக எதிர்வந்துநின்றான். "ஏன் விளம்பஞ்செய்தாய்?" என்று தேவயானியால் கேட்கப்பட்ட கசன், சுக்ரபுத்ரியாகிய அவளுக்கு மறுமொழிசொல்லத் தொடங்கினான்.

"பெண்ணரசி! நான் ஸமித்துக்களையும், கர்ப்பம்முதலியவற்றையும், விறகுசமையையும் எடுத்துக்கொண்டுபோய் தூரத்தினால் கனிபுற்று ஓர் ஆலமரத்தையடைந்தேன். மாடுகளும் எல்லாமாஞ்சோர்ந்து மரத்தடிநிழலையடைந்தன. அஸுரர்கள் அப்போது என்னைக்கண்டு, 'நீயார்' என்றுகேட்டனர். 'நான் ப்ருஹஸ்பதியின்புத்ரன்;

கசனென்றுபெயர்பெற்றவன்' என்றுசொன்னமாத்திரத்தில், அஸுரர்கள் எண்ணிக்கொன்று அரைத்து நாய்களுக்குப்போட்டுவிட்டுஸந் தோஷமாகத்தங்கள் இடஞ்சென்றனர். அன்புள்ளவளே! மஹாத்மாவாகிய சுக்ராசாரியாரால் வித்தையைக்கொண்டு கூப்பிடப்பட்டுஎப்படியோ சிரமப்பட்டு உயிருள்ளவனாகி உன்ஸமீபம்வந்துசேர்ந்தேன்" என்றும், "நான் இறந்தவனேதான்" என்றும் அந்தப்பிராமணப் பெண்கேட்க (அவன் மறுமொழி) சொன்னன். மற்றொருநாள் தேவயானியினால், "பிராமண! எனக்குப் புஷ்பம்கொண்டுவா" என்று கட்டளையிடப்பட்ட அந்தக் கசனென்னும்பிராமணன் வனஞ்சென்றான். அஸுரர்களும் அவனைக்கண்டனர். மறுபடியும் அவனை அரைத்துஸமுத்ரஜலத்திற்கரைத்தனர். மறுபடியும் அந்தக்கன்னிகை அவன்போய் வெகுதூரமானதைத் தந்தைக்குத்தெரிவித்தாள். மறுபடியும் அந்தப்பிராமணரான சுக்கிரரால் வித்தையைக்கொண்டு அழைக்கப்பட்ட அந்தப்பிருஹஸ்பதிபுத்திரன் திரும்பிவந்து அந்தச் செய்தியைகடந்தவாறு தெரிவித்தான். பிறகு மூன்றுவதுதரம் அவனைக்கொன்று கொளுத்தி மாவாய்ப்பொடிசெய்து, மதுவிற்சேர்த்து அஸுரர்கள் அந்தப்பிராமணரான சுக்ரருக்கே கொடுத்தனர். சுக்கிரர் கசனுடையசாம்பலை மதுவுடன்கூடவே குடித்தனர். அந்தத் தேவயானி, ஸாயங்காலத்தில் மேய்ப்பவனின்றி வந்தபசுக்களைக் கண்டு ஐயமுற்றவளாய்ப் பிதாவைநோக்கி, "பிதாவே! புஷ்பங்கள் தொண்டுவரப்போன என்னுயிரைச்செய்கிற்ற கசன் காணப்படவில்லை! தந்தையே! கொல்லப்பட்டவனைவேனும் இறந்தவனைவேனும் கசன்போயிருக்கவேண்டும். இதுநிச்சயம்; அந்தக்கசனைவிட்டுநான் ஜீவித்திரேன்; உமக்கு இதை உண்மையாகச்சொல்லுகிறேன்" என்றுசொன்னள்.

ராஜாவே! தன்பெண்ணின்சொல்லைக்கேட்டுச் சுக்ராசாரியர், கசன் தம்வயிற்றுக்குள்ளிருப்பதையறியாமல் வெளியிலிருப்பதாகநினைத்து மந்திரத்தைச்சொல்லி, கசனைக்கூப்பிட்டார். பிறகுஅவர், "பெண்ணே! ப்ருஹஸ்பதி புத்ரனாகிய கசன் இறந்துபோனான். நமதுவித்தையினற் பிழைப்பிக்கப்பட்டபோதிலும் இவ்வாறு கொல்லப்படுகிறான். நாம் என்செய்வோம். தேவயானி! வேதமும் பிராமணர்களும் இந்திராதிதேவர்களும் ஆஷ்டவஸுக்களும் அச்வினிதேவர்களும் அஸுரர்களும் ஜகமனைத்தும் உன்ஸமீபத்தில் வரும்போது உனதுமஹிமைபற்றி வணங்குகின்றனர். அப்படிப்பட்டநீ வ்யஸனப்படாதே; அழாதே; உன்னைப்போன்றவள் மரண

மடைபவனைப்பற்றித் துக்கப்படுவது ஸரியன்று; இந்தப்பிராமணனைப் பிழைப்பிக்கமுடியாது; பிழைப்பித்தால் மறுபடியும் கொல்லப்படுகிறான்" என்று தேவயானிக்குச்சொன்னர். அதற்குத் தேவயானி, "எவனுக்குப் பெரியவராகிய அங்கிரஸ்என்பவர் பிதாமஹரோ, தபஸுக்கெல்லாம் நிதியாகிய ப்ருஹஸ்பதியும் பிதாவோ, அப்படிப்பட்ட ரிஷியின்பௌத்ரனும், ரிஷியின்புத்ரனுமாகியஅந்தக்கசனைப்பற்றி நான் எப்படித் துக்கிக்காமலிருப்பேன்; எப்படி அழாமலிருப்பேன்; அவன் ப்ரம்மசாரி; தபஸைத் தனமாகவுடையவன்; எப்போதும் முயற்சியுள்ளவன்; வேலைகளில் நிபுணன்; பிதாவே! கசன் சென்றமார்க்கத்தை நானும் அடையப்போகிறேன்; உன்னை வணங்குகிறேன்; அந்த அழகான கசனிடத்தில் நான் அன்புள்ளவள்" என்று சொன்னாள்.

அதற்குச் சுக்ரர், "நிரபராதியான என்சிஷ்யனைக்கொல்லுகிற இந்த அஸுரர்கள் நிச்சயமாக எனக்கு விரோதம்செய்கின்றனர். அடிக்கடி எல்லைமீறுகின்ற இந்தக்கெடிய அஸுரர்கள் தங்களுக்குப் ப்ராமணஸஹாயமில்லாமல் செய்துகொள்ள விரும்புகின்றனர். இந்தப்பாபத்திற்கு இவ்வுலகத்தில் நிவிருத்தியுண்டோ. ப்ரம்மஹத்தி இந்திரனையிருந்தபோதிலும் எவனைத் தஹிக்காமல்விடும்" என்றார். மறுபடியும் தேவயானியினால் தூண்டப்பட்ட மறுநிஷியாகிய சுக்ரர் அஸுரர்கள்மீது கோபத்துடனெழுந்து ப்ருஹஸ்பதிபுத்ரனை கசனை அழைத்தார். ராஜாவே! விக்தையினால் அழைக்கப்பட்டவித்தையின்பலத்தினால் ப்ரஜ்ஞையைபடைத்த சிறந்தமஹிமையுள்ளவனும் மேலான ஸ்வபாவமுள்ளவனுமாகிய அந்தக்கசன்குருவினிடம் பயந்துகொண்டு, அவர்வயிற்றிலிருந்துமெல்ல அடியில்லாமல் சொல்லச் சொன்னான்:

"பகவானே! என்னது அநுக்ரஹஞ்செய்யக்கடவீர். கசனாகிய நான் வந்தனஞ்செய்கிறேன். பத்ரனை ஆபிமானிப்பதுபோல் என்னை நீங்கள் நினைக்கவேண்டும்" என்றான். அவனைப்பார்த்துச் சுக்ராசார்யர், "ப்ராமணனே! நீ என்வயிற்றிலிருக்கிறாய்; எல்லாவித்யைகளும் கொண்டுவிடப்பட்டாய்! சொல்; ப்ராமணனே! இந்தநிமிஷத்தில் அஸுரர்களையழித்துவிட்டு உடனே நான் தேவர்களிடம்போகிறேன்" என்றுசொன்னர். அதற்குக்கசன், "உங்கள் அநுக்ரஹத்தினால்ஞானம் என்னைவிடவில்லை. எல்லாம் எப்படி நடந்தோ அப்படியெல்லாம்எனக்கு நினைவிருக்கிறது. என்தபஸை இவ்வளவினால் அழியாமல் நிறுத்தவேண்டும். அதற்காக இந்தக்கடினமான கஷ்டத்தைப் பொறுத்தி

றேன். கவிபுத்திரே! அஸுரர்களால் கொல்லப்பட்டும், எரிக்கப்பட்டும், அரைக்கப்பட்டும் மதுவிற்கலந்து உங்களுக்குக் கொடுக்கப்பட்டேன்; பிராமணரே! நீர் இருக்கும்போது, பிராமணர்களுடைய மாயையிலும் அஸுரர்களுடைய மாயையிலும் தேவர்களுடைய மாயையிலும் எவ்வாறு ஒருவன்மேலாவான்" என்றான். சுக்ரர், "பெண்ணே! இப்போது உனக்கு என்னபிரியத்தைச் செய்வேன். நான் இறந்தால்தான் கசனுக்குப் பிழைப்புண்டாகும். தேவயானி! எனக்குள்ளிருக்கிற கசன் என்வயிற்றைப் பிளந்தாலல்லது தோன்றமாட்டான்" என்றுசொல்ல, தேவயானி, "கசனுக்கு நாசம்வந்தாலும்சரி; உமக்கபாயம்நேர்ந்தாலும்சரி; இரண்டுதலைக்கங்களும் நெருப்பைப்போல் என்னைத்தஹிக்கும். கசனிறந்தால் எனக்குஸுகமில்லை. நீர் போய்விட்டால் நான் பிழைப்பதற்கேமுடியாது" என்றாள்.

அதுகேட்ட சுக்ரர், "ப்ருஹஸ்பதியின் புத்ரா! உனக்குக்காரியமளித்தி செய்யையாகஆயிற்று; ஏனெனில், நீயும்தேவயானியிடம்பற்றுவைத்தாய். தேவயானியும் உன்னிடம் பற்றுள்ளவளாயிருக்கிறாள். நீ கசனுடைய வேஷத்தோடுவந்த இந்திரனைஇராமலிருந்தால், இந்த ஸஞ்ஜீவினியென்னும் வித்தையைப் பெற்றுக்கொள். பிராமணன் ஒருவனைத்தவிரமற்றயாரும் ஜீவித்து என்வயிற்றிலிருந்து திரும்பிவெளிவரமாட்டார். ஆதலால், வித்தையைப்பெற்றுக்கொள். குழந்தாய்! நீ என்னால் பிழைப்பிக்கப்பெற்று நம் சரீரத்திலிருந்து வெளிவந்து புத்ரனைஆகி என்னைப் பிழைப்பிக்கக்கடவாய். குருவினிடமிருந்து வித்தையைப் பெற்றுக்கொண்டு வித்தையுள்ளவனுகிய நீ தர்ம மூல்லபுத்தியை ஆலோசிப்பாயாக" என்றார். பிராமணனும் வித்வானுமாகிய கசன் பிராமணரும் தன்குருவுமாகிய சுக்ராசாரியரிடமிருந்து வித்தையைப் பெற்றுக்கொண்டு அந்தக்ஷணத்திலேயே அவர் குக்ஷியைப்பிளந்துகொண்டு சுக்லபக்ஷத்தின் கடைசியான பௌர்ணமாஸியில் சந்திரன் புறப்படுவதுபோல் வெளிவந்தான். வேதமே உருவங்கொண்ட அந்தச்சுக்ர விழுந்திறந்ததைக்கண்டு கசனும் அவரை வித்தையினால் எழுப்பினான். பலித்துப்போன அந்த வித்தையைப் பெற்றுக்கொண்டு அந்தக்குருவை வந்தனஞ்செய்து, பிறகு கசன் அவரிடம்வருமாறு சொன்னான்: "வித்தையில்லாதவனுக்கு வித்தையென்னும் அமிர்தத்தை உம்மைப்போல்வல்லவராகிய ஆசாரியர் காதுகளிற் பிரிக்கிலாரோ, அவரைத்தான் பிதாவாகவும் மாதாவாகவும் நான் நினைக்கின்றேன். அவருடைய உபகாரத்தைப்பிரதிபண்ணுபவன் அவருக்குத் தீங்குசெய்யான். எல்லாவற்றிலும் சிறந்த

ஸத்யமானவித்தையைக் கொடுத்தவரும், நிதிகளேப்போன்ற வித்தைகளுக்கு நிதியும் பூஜிக்கத்தக்கவருமான குருவை, வித்தையைப்பெற்றுக்கொண்டு எவர்கள் பூஜிக்காமலிருக்கின்றனரோ அவர்கள் புகழ் அழிந்து * பாபலோகங்களுக்கும் செல்லுவார்கள்" என்றான். அப்போது வித்வானும் மஹானுபாவரும் கவிபுத்ரருமான சுக்ராசார்யர், மதுபானத்தினல் ஏமாறுதலேயும் மிகவும் பயங்கரமான பிரஜ்ஞாபங்கத்தையுமடைந்து தெரியாமையால் அவ்வளவு பிரியமான கசனைக் கூட மதுவுடன் தாம்குடித்ததை நினைத்துக் கோபத்துடன்எழுந்து பிராமணர்களுக்குஹிதத்தைச்செய்யவிரும்பிமத்யபானத்தைப்பற்றி வெறுப்புற்றவராக அடியில்வரும் வாக்கியத்தைச்சொன்னர்.

"இன்றுமுதல் எந்தப்பிராமணன் அறிவின்மையால் மத்யபானம் செய்வானே அவன் மதிகெட்டுத் தர்மம்விட்டுப் ப்ரம்மஹத்தி செய்தவனுகி இந்தலோகத்திலும் பரலோகத்திலும் இகழப்படுபவனுவான். என்னல் எல்லாலோகங்களிலும் வரம்பாக நிலைநிறுத்தப்பட்ட இத்தப்பிராமண தர்மத்தைப்பற்றிய முடிவானசொல்லைக் குருக்களிடம் சாஸ்திரங்களைக்கேட்ட ஸாதுக்களான பிராமணர்களும் தேவர்களும் எல்லாஜனங்களும்கேட்கக்கடவர்" என்றார். பஹானுபாவரும் தவங்களென்னும் புதையல்களுக்கு இருப்பிடமானவரும் அளவிடக்கூடாத மஹிமையுள்ளவருமான அந்தச்சுக்ரர் இந்தச்சொல்லை இவ்வாறு சொல்லிவிட்டுத் தெய்வத்தினல் மதிமயங்கின அந்த அஸுரர்களேயழைத்து அடியில்வரும் சொல்லைச்சொல்லலானர்.

"அஸுரர்களே! உங்களுக்குச்சொல்லுகிறேன்; மூடர்களாயிருக்கிறீர்கள். கசன் காரியஸித்தியையடைந்தான். மஹாத்மாவும்எனக்கு நடான ப்ரபாவமுள்ளவனுமாகிய அந்தப்பிராமணன் ஸஞ்ஜீவினிவித்தையையடைந்து † ப்ரம்மாவைப்போலாகிஎன்ஸரீரத்தில்வஹிக்கப்போகிறன். தேவர்களுக்காக யாருக்கும் செய்தற்கரிய காரியத்தைக் கசன்செய்தான். அவனுடையகீர்த்தி அழியாது. யஜ்ஞபாகத்துக்கு உரியவனுகவும் அவன் ஆவான்" என்று இவ்வளவு சொல்லிச்சொல்லி, அந்தச்சுக்ரர் நின்றார். அஸுரர்கள் வியப்புற்றவர்களாகத் தங்கள் க்ருஹஞ்சென்றனர். அந்தக்கசன் ஆயிரவருஷகாலம் குருவினிடம் வஸித்து, பிறகு அவரால் விடைகொடுக்கப்பெற்று ஸ்வர்க்கம் செல்ல விரும்பினன்.

---

* நரகங்கள்.

† இறந்தவனைப் பிழைப்புமூட்டுவதனல் ப்ரம்மாவை யொத்தவன்.

எழுபத்தோராவது அத்தியாயம்.

ஸம்பவபர்வம்.(தொடர்ச்சி.)

பிரம்மசர்யவ்ரதம் முடிந்து ஸ்நானமானபிறகு குருவினால் விடைகொடுக்கப்பட்டுத் தேவலோகத்துக்குப் புறப்படுகையில், தேவயானி கசனைநோக்கி அடியில்வருமாறு சொல்லலானாள்:

"அங்கிரஸ் என்னும்ரிஷியின்பௌத்திரனே! ஒழுக்கத்தினாலும் குலத்தினாலும் கல்வியினாலும் தவத்தினாலும் இந்திரியங்களையடக்கியிருப்பதனாலும் நீ சோபிக்கிறாய்;பெரியகீர்த்தியுள்ள அங்கிரஸ்என்னும்ரிஷி எப்படி என் பிதாவுக்குக் கௌரவிக்கத்தக்கவரோ அப்படியும், இன்னும் அதிகமாகவும் ப்ருஹஸ்பதி எனக்குக் கௌரவிக்கத்தக்கவர்; பூஜிப்பதற்குரியவர்; நீயோ தனனே! நான் தெரிந்துகொண்டே இவ்வாறு சொல்லுகிறேனென்பதை நீ தெரிந்துகொள். நீ பிரம்மசர்யவ்ரதத்திலிருந்துகொண்டு நியமந்தவறாதிருக்கையில், நான் எப்படி நடந்துகொண்டேனோ அப்படியே வித்தைநிறைவேறின நீ அன்புள்ள என்னிடம் அன்புவைக்கத்தகுதியுள்ளவனாயிருக்கிறாய்; மந்திரங்களைச்சொல்லிச் சாஸ்திரமுறைப்படி என்னைப்பாணிக்ரஹணஞ்செய்வாயாக" என்றாள். அதைக்கேட்டுக் கசன், "குற்றமற்ற அழகுள்ளவளே! பகவானுடைய உனது பிதா எனக்குள்ளபடிப் பூஜிப்பதற்குமட்கௌரவிப்பதற்குமுரியவரோ, அப்படியேதான் நீயும்; இன்னும் அதிகமாகவும்நீ எனக்குப்பூஜைக்குரியவள். மஹாத்மாவாகிய சுக்ராசாரியருக்கு யிரைவிட நீ அதிகப்பிரியமானவள். அப்புள்ளவளே! குருபுத்திரியாகிய நீ தர்மத்தினால்எனக்குஎப்போதும் பூஜிக்கத்தக்கவள். தேவயானி! என்குருவும் உன்பிதாவுமாகிய சுக்ராசார்யப்படியெனக்கெப்போதும்கௌரவிக்கத்தகுந்தவரோ அப்படியேதான் நீயும்; என்னை நீ இவ்வாறு சொல்லத்தகாது" என்றுசொன்னான். திரும்பவும் தேவயானி, "நீ என் பிதாவுக்குப் பூஜ்யரானஅங்கிரஸின் புத்திரராகியப்ருஹஸ்பதியின், புத்திரனேயல்லதுஎன்பிதாவின் புத்திரனல்லை. ப்ராம்மணோத்தமனே! ஆதலால் எனக்கும் நீ பூஜிக்கத்தக்கவனும் கௌரவிக்கத்தக்கவனுமாக இருக்கிறாய். கசனே! நீ அஸுரர்களால் பலமுறை வதஞ்செய்யப்பட்ட காலத்தில் ஆதிதொடங்கி உன்னிடத்தில் நான்வைத்தஅன்பையும்நீ இப்போது நினைக்கவேண்டும். ஸ்நேஹத்தினாலும் காமத்தினாலும் நான் செய்த உபசாரத்தை அன்பை நீ அறிவாய். தர்மந்தெரிந்தவனே! பற்றுள்ளவனும் குற்றமில்லாதவனுமாகிய என்னை நீ விடத்தகாது." என்றாள்.

கசன், "தேவயானியே! ஏவத்தகாதவேகியில் என்னை நீ ஏவுவது தகுதியன்று; அழகானபுருவங்களையுடையவளே! நீ என்விஷயத்தில் தயைசெய்யக்கடவாய். சுபமானவளே! எனக்கு நீ குருவுக்கும் மேலானகுரு; விசாலமானநேத்திரங்களுடையவளே! சந்திரனைப்போன்ற முகமுள்ளவளே! இனியவளே! தோஷமுள்ளவளே! சுக்ரருடைய சந்தவயிற்றில் நீ வஸித்தாயோ அதே வயிற்றுக்குள்ளானும் வஸித்திருக்கிறேன். அழகான இடையுடையவளே! தர்மப்படி நீ எனக்கு ஸஹோதரி; இவ்வாறு சொல்லாதே; அன்புள்ளவளே! ஸுகமாக வஸித்தேன்; எனக்குக்கோபமில்லை. உன்னிடம் நான் விடைபெற்றுக்கொள்ளுகிறேன்; செல்லவல். எனக்கு வழியில் சுபத்தைஏவுண்டக்கடவாய். தர்மத்துக்கு விரோதமின்றிப் பிரஸ்தாபங்களில் நடுவில் நானும் நினைக்கத்தக்கவன்; தவறுதலின்றிச் சோம்பலில்லாமல் என்ஆசார்யரானசுக்ரருக்குப்போதும்சுச்ரூஷைசெய்யக்கடவாய்" என்று சொன்னான். அதுகேட்டதேவயானி, "கசனே! தர்மத்தோடு கூடிய காமமென்னும் பிரயோஜனத்திற்காக என்னால் வேண்டப்பட்ட நீ என்னைவிட்டுவிடுவாயானால், அப்போது இந்த வித்தைஉனக்குப் பயன்பெறாது" என்றாள். கசன், "நான் குருபுத்திரியென்று நினைத்து உன்னைவிடுகிறேன்; உன்குற்றத்தினால் அன்று; குருவுமெனக்கு இவ்வாறு அனுமதி கொடுக்கவில்லை. நீ இஷ்டப்படி இன்னமும்என்னைச்சபி. தேவயானி! நிஷ்களாற்செல்லப்பட்ட தர்மத்தைச்சொல்லுகிற நான் சாபத்திற்குத் தகாதவனையிருந்தும், தர்மத்தாலின்றிக் காமத்தினால் இப்போது உன்னால்சபிக்கப்பட்டேனாதலால், உன்னுடையகாமம் ஸபலமாகநினைவேறப்போகிறதில்லை; ரிஷிபுத்ரன் எவனும் உன்னைப் பாணிக்ரஹணஞ் செய்யப்போகிறதில்லை. நீ என்னைப் பார்த்து, 'உனக்கு வித்தை பயன்பெறாது' என்றுசொன்னது அப்படியே யிருக்கட்டும். நான் யாருக்குக்கற்பிக்கிறேனோ அவனுக்கு வித்தைபலித்துவிடும்" என்றுசுக்ராசார்யரைச் சேவித்துவிட்டுதேவயானியை நோக்கிச் சொல்லி, அப்போதே விரைவாக ஸ்வர்க்கத்துக்குச்சென்றான். அவன் வருதலைக்கண்டு இந்திரன் முதலான தேவர்கள் ப்ருஹஸ்பதியைக் கொளவித்து, கசனை நோக்கி, "எங்களுக்கு நன்மையான பெரிய ஆச்சர்யமான காரியத்தைச்செய்தாயினால் உன்கீர்த்தியழியாது; நீ யஜ்ஞபாகத்திற்கும் உரியவனாவாய்" என்று சொன்னார்கள்.

கசனைப் புத்திரனாகப் பெற்றதற்காகக் கொளவித்தது.

எழுபத்திரண்டாவது அத்தியாயம்

ஸம்பவபர்வம் (தொடர்ச்சி).

பரதச்ரேஷ்டரே! விதத்தையை ஸாதித்துக்கொண்டுகசன்வந்த பிறகு, தேவர்கள் மிக்கமகிழ்ச்சியுடன் கசனிடமிருந்து அந்தவித்தை யைக் கற்றுக்கொண்டு கார்யஸித்தியை அடைந்தனர். பிறகு எல்லா ரும்சேர்ந்து இந்திரனைநோக்கி, "புரந்தரனே! இனி உமக்குப் பராக் ரமஞ்செய்யத் தருணம், சத்துருக்களைக்கொல்" என்றனர். இவ்வாறு தேவர்களால் ஒன்றுசேர்ந்து சொல்லப்பட்ட இந்திரன் அப்போது "அப்படியே ஆகட்டும்" என்றுசொல்லிப் புறப்பட்டான். அவன் ஒருவனத்தில் பெண்களைக்கண்டான். சைத்ரரதம் என்றுபெயருள்ள குபேரனது உத்தியானத்துக்கருகாப்பாகியவனத்தில் ஜலக்ரீடைசெய் யும் கன்னிகைகளின் ஆடைகளைலலாவற்றையும் காற்றுரூபமாகிக் கலந்தான். பிறகு அக்கன்னிகைகள் சேர்ந்து ஜலத்திலிருந்து கரையேறி, தமக்குஸரீரமாயுள்ள அந்தவஸ்திரங்களை அனேகமாக எடுத்துக்கொண்டனர். அப்போது, ப்ருஷபர்வாவின் பெண்ணாகிய சர்மிஷ்டை, கலந்துபோன தெரியாமல் அங்கேதன்வஸ்த்ரஇடத் திலுள்ள தேவயானியின் ஆடையை உடுத்திக்கொண்டனள். ராஜ சார்தூலரே! அந்த வஸ்த்ரவிஷயமாகத் தேவயானிக்கும் சர்மிஷ் டைக்கும் அங்கேகோர விவாதம்உண்டாயிற்று; "அஸுரப்பெண்ணே! நீ என் சிஷ்யையாயிருந்தும் என்வஸ்த்ரத்தை எப்படியுடுக்கிறாய்? மரியாதையைவிட்ட உனக்கு நன்மையுண்டாகாது" என்று தேவ யானிசர்மிஷ்டையைநோக்கிச் சொன்னாள். ராஜாவே! அதற்குச சர்மிஷ்டை, "உன்தந்தை,உட்கார்ந்தும்போதும்படுக்கும்போதும்,அடங் கினவரைபோல்நின்றுகொண்டு வந்தனைபண்போல் எப் போதும் என்தகப்பனைவந்து துதிக்கிறாரே. நீ பாதித்துக்கொண்டுமே துங்கத்துக்கொண்டும் வாங்கிக்கொண்டுமிருப்பவருடையபெண். நான் துதிக்கப்படுகிறவனும் கொடுப்பவனும் தானம் வாங்காதவருமாக இருப்பவருடைபெண். பாகிப்பவனே! மனவருத்தத்தை உண்டு பண்ணு; உபத்திரவஞ்செய்; நிந்தைசெய்; கோபித்துக்கொள்; பிச் சைக்காரி. ஆயுதமில்லாத ஏழைபாகிய நீ ஆயுதமுள்ளவனிடத்தில் கலங்குகிறாய். உனக்குச் சரியான சண்டைக்காரி கிடைப்பாள். அடி யாசகி! இதுமுதல் விதேரதமகாப்பேசவாபாகில் நான்உன்னைமதிப்பா தில்லை" என்றுசொல்லி, பிறகு அவள் கோபம்மிகுந்து,வஸ்த்ரத்

தைப் பிடித்துக்கொண்டிருந்த தேவயானியைக் கிணற்றில் தள்ளி விட்டுத் தன்பட்டணம் சேர்ந்தாள். கெட்ட எண்ணமுள்ள சர்மிஷ்டையிருந்த கோபத்தையடைந்தவளாய், இவள் இறந்தாளென்று நினைத்துத் திரும்பிப்பாராமல் வீடுசென்றாள். அஸுரர்களின் தன்மையையடைந்து வீடுசென்றும் கலங்காமலிருந்தாள். அதன்பின் நகுஷன் புத்திரனாகிய யயாதி, தேர்க்குதிரைகளும் ஏறுகுதிரையும் களைக்க, மானைத்தேடிக்கொண்டு தாகத்துடன் அந்தஇடம் வந்து சேர்ந்தான். அந்தநகுஷபுத்திரனாகிய ராஜா அந்தஜலமில்லாதகிணற்றைப்பார்க்கையில், அதில் அக்னிஜ்வாலையைப்போன்ற அந்தக்கன்னிகையைக் கண்டான். கண்டவுடன் தேவஸ்தையைப்போன்றருபமுள்ள அந்தக்கன்னிகையை அந்தராஜச்ரேஷ்டன் மிகவும் அழகான இன்சொல்லினால் தேற்றி வினவினன். "சிவந்தநகங்களுடையவளும் பிரகாசமானரத்னகுண்டலங்களைத் தரித்தவளுமாகிய யுவதியானீயார்! என்னிண்டஆலோசனை செய்கிறாய்? என்துக்கத்தினால் பெருமூச்சுவிடுகிறாய்? கொடிகளும் புற்களும்மரமுடனை இந்தக்கிணற்றில் எப்படி விழுந்தாய்? நீயார்பெண்? அழகான இடையுள்ளவளே! உள்ளதைச்சொல்" என்றுகேட்க, தேவயானிமறுமொழிசொல்லலானாள்.

"எவர் தேவர்களாற்கொல்லப்பட்ட அஸுரர்களை விதைகளினால் பிழைப்பிக்கின்றாரோ, அந்தச் சுக்ராசார்யனுடையபெண்நான்; என்னை அவர் அறிவாமல் இருக்கிறார். ராஜாவே! சிவந்தநகங்களும் விரல்களுமுள்ள என்வலக்கையை நீதா; பிடித்து என்னைத்தூக்கிவிடு; நல்லகுலத்திற் பிறந்தவனென்று உன்னை நான்நினைக்கிறேன். உன்னைச் சாந்தியுள்ளவனென்றும் சக்தியுள்ளவனென்றும் நான்தியுள்ளவனென்றும் அறிகிறேன். ஆதலால், விழுந்தஎன்னை இந்தக்கிணற்றிலிருந்து தூக்கிவிடுவதற்கு நீ தகுதியுள்ளவன்" என்று தேவயானி சொல்ல, பிறகு நகுஷபுத்திரனாகிய யயாதி அந்தக்கன்னிகையைப் பிராமணப்பெண்ணென்று தெரிந்துகொண்டு வலதுகையைப்பிடித்து அந்தக்கிணற்றிலிருந்து தூக்கினான். ராஜா தன்சக்தியினால் அந்தக்கிணற்றிலிருந்து ஆவலோடுத்தூக்கிவிட்டு, 'சுபாநனவளே! இவ்விடம் பிரகாரமற்றசெல்: உனக்குப் பயமில்லை" என்றான். இவ்வாறுசொல்லப்பட்ட தேவயானி ராஜாவை நோக்கி, "நீஎன்னையழைத்துக்கொண்டு விரைவாகப்போ. எனகு நீஅன்பன். உன்னால் நான் கைபிடிக்கப்பட்டேன். ஆதலால், நீ எனக்குப் பதியுமாவாய்" என்றுமறுமொழி சொன்னாள். இவ்வாறுசொல்லக்கேட்ட அரசன் "அன்புள்ளவளே! நான்க்ஷத்திரியகுலத்திற் பிறந்தவன்; நீ பிராமணப்பெண், ஆதலால்,

என்னுடன் விவாஹம் உனக்குத்தகாது. அழகானவளே! சுக்ராசார்யர் எல்லாலோகங்களுக்கும் ஆசார்யர். நீ அவர்பெண். அதனாலேயும் எனக்கு இப்போது பயமிருக்கிறது. ஆதலால், மங்களமானவளே! நீ எனக்குரியவள் அல்லை" என்றுசொன்னான். அதற்குத் தேவயானி, "ராஜாவே! இப்போது என்பேச்சைக்கொண்டு என்னை நீ அங்கீகரிக்க விரும்பாமலிருந்தால் என்தந்தையின் மூலமாகவே உன்னைவரிக்கிறேன். அவரிடத்திலிருந்து நீ என்னை அடையப்போகிறாய்; செல்" என்று சொன்னாள். யயாதி அழகான நிதம்பமுள்ள தேவயானியிடம் விடைபெற்றுக்கொண்டு தனது நகரஞ்சென்றான்.

அந்த நகுஷபுத்ரன் சென்றபிறகு சிறந்தபெண்ணாகிய தேவயானியும் ஓரிடம்சென்று, அழுதுகொண்டு ஒருமரத்தை அடுத்துநின்றாள். பிறகு சுக்ராசார்யர் பெண்வரத் தாமதித்தபோது அவளிடத்திலுள்ள ப்ரேமையினால் தளர்ச்சியுற்றுப் பெண்ணை நினைத்து அவளுடைய தாதியைப்பார்த்து, "தாதியே! அழகிய இடையுள்ள தேவயானியை நீ சீக்கிரம் அழைத்துவா" என்றார். இவ்வாறுசொன்னவுடன் அத்தாதி அவளை அழைத்துவருவதற்காக அவள் தன் தோழிமார்களோடு கூட விளையாடுகிற இடங்களுக்கெல்லாம் துரிதமாகச்சென்று அவளிருக்குமிடத்தைத் தேடினாள். அவள், அப்படிக்கனைப்புற்றுத்துக்கத்துடன் அழுதுகொண்டு நின்ற தேவயானியைக் கண்டாள். (கண்டு,) "பரியமானவளே! இஃது என்ன விருத்தாந்தம், உடனேசொல்; பிதா அழைக்கிறார்" என்றாள். இப்படிச் சொல்லப்பட்ட தேவயானி, அபமானத்தினால் மிகநிந்திப்புற்றவளாய் ஸமாசாரம் கொண்டுவருகிற தேவலிங்காரியாகிய தாதியை முன்னேநோக்கி, சர்மிஷ்டைசெய்த பிழையைத்தெரிவித்து, "தாதியே! விரைவாகச்செல்; நான் இனி வ்ருஷபர்வாவின் நகரத்திற்குள் நுழையமாட்டேனென்பதை என்தந்தைக்கு உடனேசொல்" என்றுசொன்னாள். மஹாராஜாவான ஜனமேஜயரே! அந்த தேவலிங்காரி உடனே அந்த அஸுரக்ருஹத்திற்குச் சென்று சிறந்தயோகமுள்ள சுக்ராசார்யரைக்கண்டு பிரதக்ஷிணம்பண்ணிக்கொண்டு, தேவயானி, வனத்தில் வ்ருஷபர்வாவின் பெண்ணான சர்மிஷ்டையினால் அபசாரத்தைத்தெரிவித்தாள்.

சுக்ராசார்யர் அந்தவனத்தில் தம்பெண் சர்மிஷ்டையினால் அடிபட்டதைக்கேட்டு துக்கங்கொண்டு வனத்தில் பெண்ணைத்தேடுவதற்கு விரைவாகப்புறப்பட்டார். பிறகு, வனத்தில்பெண்ணாகிய தேவயானியைக்கண்டு, சுக்ராசார்யர் துக்கத்துடன் இரண்டுகைகளாலும் கழுவிக்கொண்டு, "எல்லாஜனங்களுமே கஷ்டத்தையடைவதும் செள

க்கியத்தையடைவதும், தங்களுக்குற்றங்களாலும் குணங்களாலுந்தான். உன்னிடத்தில் பிழையிருக்கிறது. இஃது அதற்குச் செய்யப்பட்ட பரிஹாரத்தினென்று நிஜைக்கிறேன்" என்றுசொன்னர். (அப்படிச்சொன்னவுடன்) தேவயானி, "எனது தப்புக்குச்சிக்ஷையிருக்கட்டும்; அல்லது இல்லாமலிருக்கட்டும்; விருஷபர்வாவின்பெண் சர்மிஷ்டை என்னைச்சொன்னசொல்லைக் கவனித்து என்னிடம்மீகரும். நீர் அஸுரர்களிடம் ஸ்தோத்திரங்களைப் பாடுகிறவரென்று அவள் சொல்லுகிறது நிஜமா? விருஷபர்வாவின்பெண் சர்மிஷ்டை மிகவும் கோபத்தினாற் சிவந்தகண்களுடன், 'நீ துதிப்பவரும் யாசிப்பவரும் கைமாற்றுகிறவராய் இருப்பவருடையபெண். நாமனை துதிக்கப்படுபவரும் கொடுப்பவரும் கைமாற்றாதவராய் இருப்பவருடையபெண்' என்று கூடிய கடுமையுடனான பேச்சை என்னைப்பார்த்துச்சொல்லுகிறாள். விருஷபர்வாவின் பெண்ணான சர்மிஷ்டை மிகபத்தினாற் சிவந்தகண்களுடன் மிக்க கர்வங்கொண்டு பலமுறை இந்தாதிபேச்சை என்னைப்பார்த்துச் சொன்னாள். பிதாவே! நான்துதிப்பவருடன் கைமாற்றுகிறவராய் இருப்பவருடையபெண்ணாயிருந்தால் தயைசெய்யும்படி நான் உம்மைக்கேட்டுக்கொள்வேனென்று எகியான சர்மிஷ்டையைநோக்கிச் சொன்னேன். இவ்வளவு சொல்லியும் என்னை அவள் மிகவும் இகழ்ந்து ஜனமில்லாதகூபத்தில் கிணற்றில் தள்ளிவிட்டாள். தள்ளிவிட்டு விட்டுச்சென்றாள்" என்று சொன்னாள்.

அதுகேட்டு, சுக்ராசார்யர், "நிஷ்டூரத்தைச் செய்பவனுக்கும் யாசிப்பவனுக்கும் கைமாற்றுபவனுக்குப் பெண்ணல்லை. தேவயானி! துதியால் பிறரால் துதிசெய்யப்படுகிறவனுடைய பெண்ணைநீயே; அது விருஷபர்வாவுக்கேதெரியும்; இந்திரனுக்குந் தெரியும்; நகுஷனுடைபுத்ரனாகிய யயாதியென்னும் ராஜனுக்குந் தெரியும். சிக்கிரமாகப்புத்ரனைப்பெறுவதும் ஒப்பற்றதும் ஸ்வர்லோகத்தைக்கொடுத்தலாகிய பத்ரம்போன்றதுமான் மன்னுயிர்களுக்கு ஹிதமென்னும் விருத்தாந்தத்தை நீ தெளிவாக அறிந்திருக்கிறாய். காளைப்பிஞ்சம்போன்ற கண்களையுடையவளே! அந்தவிருத்தாந்தமானது நீ பேசினபிரகாரம் பிழைப்பிக்கப்படுகிறது. ஆனால் லோபமானவன் தன்குணங்களைப்பற்றிய ச்லாகையைத் தானேசெய்துகொண்டு வருந்தப்படுகிறான். அதனால் நான் சொல்லிக்கொள்ளமுடியவில்லை. மன்னுடையபலம் உதவாவிட்டாலும் உனக்குத்தெரியும்; அதனால் வருந்திரு; குலத்தைச் சிறப்பிக்கிறபெண்ணே! விசாலமான கண்ணை

யுடையவளே! பொறுமையை அடைந்து வீடு செல்வோம். ஸத்புருஷர்களுக்கு க்ஷமைதான்பலம். பூமியிலும் ஸ்வர்க்கத்திலும் மற்ற எல்லா இடங்களிலு முள்ளவற்றிற்கெல்லாம் நான் எப்போதும் ப்ரபு என்று பிரம்மா ஸத்தியாஷத்துடன் என்னைச் சொல்லியிருக்கிறார். நான் ஜனங்களுடைய நன்மையை விரும்பி ஜலத்தை வர்ஷிக்கிறேன். எல்லா ஓஷதிகளையும் வ்ருத்திசெய்கிறேன். இஃது உண்மையாக உனக்குச் சொல்லுகிறேன்" என்று சொன்னர். துக்கமுற்றும் கோபத்தினால் பீடிக்கப்பட்டும் இருக்கும் அவளை இவ்வாறு இனிமையும் சாந்தமுமான சொற்களினால் பிதாவான சுக்ர் தேற்றினர்.

எழுபத்துமூன்றுவது அத்தியாயம்.

ஸம்பவபர்வம் (தொடர்ச்சி).

சுக்ராசார்யர் தேவயானியைப் பார்த்துச் சொல்லுகிறர்:— "தேவயானீ! ப்ருஹஸ்பதியின் பிள்ளை எப்போதும் அபலர் சொல்லும் நிந்தனையான சொற்களை அதிகமாகப் பொறுக்கிறானே அவனால் இந்த உலகமெல்லாம் ஜயிக்கப்பட்டதென்று அறி; உண்டான கோபத்தை, குதிரையை அடக்குவதுபோல், எவன் அடக்குகிறானே அவன்தான் ஸாரதியென்று தெரிந்தவர்களால் சொல்லப்படுகிறன். கடிவாளத்தைப் பிடிப்பவன் ஸாரதியென்று சொல்லப்படுவதில்லை. தேவயானீ! முளைத்தெழுகிற கோபத்தை அடக்குவதினால் விலக்குகிறவன் எவனோ, அவனால் உலகமெல்லாம் ஜயிக்கப்பட்டதென்றறி. பாம்பு பழைய சட்டையை உரிப்பதுபோல் எவன் உண்டான கோபத்தை சக்தியினால் நீக்கிவிடுகிறானே, அவன்தான் ஆன்மபிள்ளை யென்று சொல்லப்படுவன். எவன் கோபத்தை அடக்குகிறானே, எவன் நிந்தனைகளைப் பொறுக்கிறானே, எவன் பிறர் வருத்தியும் வருந்தாமலிருக்கிறானே, அவன் நிச்சயமாகக் காயஸித்திக்குப் பாத்ரமாகிறன். நூறுவருஷகாலம் ஒவ்வொருநாளுமும் சோமயாகம் செய்பவனை நிந்தனையும் வதத்தும் கோபிக்காதவனைருவனுமாகிய அவ்விருவருள் கோபிக்காதவனே மேலானவன்; ஆதலால், கோபிக்காதவனை எல்லாரிலும் சிறந்தவன். காமமும் கோபமும் இழிவானவை. கோபிப்பவனுடைய தானமும் யாகமும் தவமும் பயன்பெறுதலை. அன்புள்ளவளே! ஆதலால், கோபமில்லாதவனிடத்தில் யஜ்ஞம், தவம், தானம் இவற்றின் பயன் மிகுதியாக உண்டாகும்; கோபிப்பவ

னி-த்தில் ஒருபொழுதும் உண்டாகாது. இது நிச்சயம். எவன் கோப த்துக்கு உட்படினனை அவன் யதியுமாகான் ; ரிஷியுமாகான் ; யாகஞ் செய்பவனுமாகான் ; தர்மத்தையுமடையான் ; அவனுக்கு (இம்மை மறுமை) இரண்டுலோகங்களுமில்லை. கோபிக்கிற ஸ்வபாவமுள்ளவ னுக்குப் புத்ரன், வேலைக்காரன், ஸ்னேகிதன், ஸஹாதரன், பார்யை, தர்மம், ஸத்யம் இவையெல்லாம் நிச்சயமாக விலகிப்போம். சிறுவர் களும் சிறுகளும் புத்தியில்லாமல் விரோதஞ்செய்வதை ஞானமுள் ளவன் அனுஸரிக்கத்தகாது. ஏனெனில், அவர்கள் கோபம், பொறு மை, இவற்றின் லாபங்களை அறியார்" என்றார்.

அப்படிச் சொல்லலாகேட்டு, தேவயானி, "பிதாவே! நான் சிறு பெண்ணையிருந்தாலும் தர்மங்களின் ஸூக்ஷ்மத்தை இப்போது அறி ந்திருக்கிறேன். பொறுமைக்கும் நிந்தனைக்கும் உள்ள பலாபலங்களை யும் நான் அறிவேன். ஆனால், தான் செய்யவேண்டியதைச் செய்யா மல் உண்மையில் தர்மத்தை விட்டு விட்டு, சிஷ்யன் முறைமையை விட்டுவிட்ட சிஷ்யன் விஷயத்தில் பொறுப்பது அறிவுநுத்தியை விரும்புகிறவனுக்குத் தகாது. எவக்கூடியவனுகிய சிஷ்யன் தன் கடமையைவிட்டுப் * பயன்படாற் போயிருக்கிறான். ஆகலால், ஒழுக் கந் தப்பினவர்களிடம் வலியபது எனக்குப் பிரியமில்லை. எந்த ப்ராஹ்மணர்கள், கடமையபயற்றியும் குலத்தைப் பற்றியும் பிறரை நிந்தி கின்றனரோ, அந்தக்கெட்ட புத்தியுள்ளவர்களிடம் ப்ரியமாயை விரும் பும் அறிஞன் வஸிக்கக்கூடாது. ஒழுக்கத்தாலும் குலத்தினுலும் யார் எவனை ஸாமான்யமாக நிந்திக்கின்றனரோ, அந்த மூடர்களிடம் அவன் வஸிப்பது தகும். அந்தவாஸம் நிகழ்கிறதற்குமுன்னமே சொல்லப் படுகிறது. ப்ராஹ்மணர்கள் தனமில்லாமலிருந்தபோதிலும் கோபை அடக் கிக்கொள்வதில் எப்போதும் ஊக்கமுள்ளவர்களாயிருந்தால் சிறந்தவ ராவார்கள். ஒழுக்கங்கெட்டவராய் பாபங்களிலிறங்கினவரும் தனவான் களாயிருந்தாலும் சண்டாளர்களாம்; ஜன்மத்தினல்மாத்ரம் சண்டா ளர்களாவதில்லை. தபசுக்கு விரோதமாயிருக்கிற தர்மத்தனம், குலம், வித்தை, இவைகளில் ஆசையுள்ளவர்கள் ஸ்ரேஷ்டமனுஷ்யரென்று சொல் லப்பட்டாலும் அவர்கள் காரணமில்லாமல் தீமைகளைச் செய்கிறவர்களாம்; அவர்கள் காரணமில்லாமல் தீமைவஸ்து செய்வார்கள்; துஷ்டஜனங்களையும் சொல்லுவார்கள். அவர்களிடம் வாஸம் வஸித்தல் தகாது; ப்ராஹ்மணன் வஸித்தால் ப்ராஹ்மணன். நல்லமீனை அல்லது தீமையான மீனில் எந்தமனிதன் பழகுகிறானை அதில் அவனுக்குப் பற்றுதல் நிச்சயமாக உண்டாய்விடும். ஆகலால்

* தன் கடமையை விட்டுப் போயிருக்கிறனென்பது வேறுபாடம்.

த்வேஷத்தை விரும்பத்தகாது; வ்ருஷபர்வாவின் பெண்சொன்ன மிகக்கொடிய கெட்டசொல், அக்னியை வேண்டுகிறவன் அரணிக்கட்டையைக் கடைவதுபோல் என்மனத்தைக் கடைகிறது. ஔசுவரியமில்லாத ஒருவன் எதிரியினிடம் விளங்கிக்கொண்டிருக்கிற ஔசுவரியத்தினிடம் காத்திருப்பதைவிடச் செய்யத்தகாதகாரியம் மூன்று லோகங்களிலும் வேறுஇருப்பதாக நான்நினைக்கவில்லை. அப்படிப்பட்டவனுக்கு மரணமே நல்லதென்று தெரிந்தவர்கள் அறிகின்றனர். நீசர்களின் சேர்க்கையினால் ஒருவன் காலக்கிரமத்தில் அவமானத்தை அடைவான்; வாய்களினின்றும் வரம்புகடந்தசொற்கள் புறப்படுகின்றன. அவைகளால் அடிபட்டவன் இரவும்பகலும் துக்கப்படுகிறான். அவை எதிரியின்மர்மஸ்தானங்களிலேதான் விழுகின்றன. ஆதலால் தெரிந்தவன் அவற்றை அயலாரிடம் ப்ரயோகிக்கமாட்டான். ஆயுதங்களினால் வெட்டப்பட்டதும்ஆறும்; தீயினால் சுடப்பட்டதும்ஆறும்; சொல்லினால் உண்டான புண் பிராணிகளுக்குத் தேகமுள்ளவரையிலும்ஆறாது. பாணங்களினால் அடிபட்டதும் கோடாரியினால்வெட்டப்பட்டதுமாகிய வனம் மறுபடியும் வளருகின்றது. வாக்கினால் கெட்டசொற்களைச் சொல்வதனாலுண்டான அருவருப்பான சொற்புண் ஆறாது" என்றாள்.

எழுபத்துநான்காவது அத்தியாயம்.

ஸம்பவபர்வம். (தொடர்ச்சி).

பிறகு ப்ருகுவம்சத்திற்சிறந்தவராகிய சுக்ராசாரியார், விற்றிருக்கும் வ்ருஷபர்வாவினருகேசென்று கோபத்துடன் ஆலோசிக்காமல் அடியில்வருமாறு சொன்னார்.

"ராஜாவே! ஒருவனுக்குத் தான்செய்தபாபம் பசுவைப்போல் உடனே பலனைத் தருவதில்லை. ஆனால், *தொடர்ச்சியாகச் செய்யப்பட்டபோது காலக்ரமத்தினால் செய்பவனுடைய † வேர்களையறுக்கும். புத்ரர்களிடத்தும் பேரன்மார்களிடத்தும் தன்னிடத்துமுள்ள பாபத்தை ஒருவன் கவனிக்காதிருப்பானால், அத்தப்பாபமானது மிகுதியாக உண்ணப்பட்டது வயிற்றில் எப்படியோ அப்படியே நிச்சயமாகத் தன் பயனைக்காட்டும். ராஜாவே! படிக்கிறவனும் பொறு

---

* அதற்குக் காலக்கிரமத்தினால் பரிபாகமடைந்து செய்பவனுடைய வேர்களையறுக்கும் என்பது வேறுபாடம்.

† பூர்வபுண்ணியங்களை.

மையுள்ளவனும் இந்திரியங்களை ஜயித்தவனும் பாபத்தைச் செய்யாதவனும் தர்மத்தையறிந்தவனும் என்னிடத்தில் அன்புடன் எனக்குச் சுச்ரூஷைசெய்தவனும் ப்ருஹஸ்பதிபுத்ரனுமான அந்தக்கசனென்னும் பிராமணனை முன்னேகொல்வித்தாய். ப்ரபுவே! மானமுள்ளவளாகிய தேவயானி, சர்மிஷ்டையினால் மிகக் க்ரூரமாகச் சொல்லப்பட்டு, விரோதஞ்செய்து கோபத்தினால் கிணற்றிலுந்தள்ளப்பட்டாள். அவள், இங்கேவஸிப்பதற்கு முயற்சியுள்ளவளாயிருக்கிறாள். அவளில்லாமல் நான் இங்கே எப்படிவஸிப்பேன். ராஜாவே! ஆதலால், உன் தேசத்தை விட்டுவிடுகிறேன். வ்ருஷபர்வாவே! கொல்லத்தகாதவனாகிய அந்தக்கசனைக்கொன்றதனாலும், என்பெண்ணைக் கொல்ல ஆரம்பித்ததனாலும், உன்னையும் உன்பந்துக்களையும் விடப்போகிறேன். இதைதீரமி. ராஜாவே! உன் தேசத்தில் உன்னுடன் நான் இருக்கமுடியாது. ராஜாவே! வ்ருஷபர்வாவே! நீ விஷாதமடையாதே; தைர்யமுஞ்செய்யாதே. ராஜாவே! தேவயானியைவிட்டு உன் தேசத்தில்வஸிக்க என்னால்முடியாது. இவளுடைய இடந்தான் எனக்கும் இடம்; இவளுடையவீ நுப்பந்தான் எனக்குமினுப்பம்" என்றாள்.

(இப்படிச் சொல்லக்கேட்ட) வ்ருஷபர்வா, "பிராமணரே! நான் சர்மிஷ்டையைக்கொண்டு தேவயானியை அடிக்கச்செய்தாயென்று துஷிக்கச்செய்தாயென்று அதனால் நீனதந்தியை அடைகிறேன்" என்றான். சுக்ரர், "ஓ அஸுரரே! என்னைப் பொய்யேபேசுகிறவனாக நினைக்கிறாய். ஆச்சர்யம்! அதனாலேதான் இந்தத்தன்குற்றத்தை அடக்காமல் உபேக்ஷைசெய்கிறாய்" என்றுசொன்னார். வ்ருஷபர்வா, "ப்ரஹ்மபுத்ரரே! அதர்மத்தைபயமாவது பொய்சொல்வதைபயமாவது உங்களிடத்திலிருப்பதாக நான் நினைக்கவில்லை. தர்மமும் ஸத்யமும் உங்களிடத்திலிருக்கின்றன. ஆதலால், நீங்கள் எங்களிவிஷயத்திலே அநுக்ரஹம் பண்ணவேண்டும். ப்ரஹ்மபுத்ரரே; நீங்கள் எங்களிவிடத்திலிருந்து போவீர்களாகில், முன்னதாகவே நானும் என்பந்துக்களும் ஸமுத்ரத்திலாவது பாதாளத்திலாவது அக்னியிலாவது ப்ரவேசிப்போம். வேறு ஆதரவில்லை. க்ருஹங்களுக்கு ராஜாவே! நீ என்னையும் விடுத்தீர்களாகில் மூன்று போய்ச் சேருவோம், அப்போது நான் எல்லாவற்றையும் த்யாகஞ்செய்தது. அக்னியில் ப்ரவேசிப்பேன்" என்றான். சுக்ராசார்யர், "அஸுரராக்களே! ஸமுத்ரத்திலேதான் விழுங்கள்; திசைகளெங்குந்தான் ஓடுங்கள்; என்பெண்ணிலுண்டான பாதகத்தை நான் காக்கமுடியாதவன். எனக்கு ஆபத்தில் ப்ரியமானவள்.

தேவயானியை நீ ஸமாதானப்படுத்தவேண்டும். என்னுயிர் அவளிடத்திலிருக்கிறது. நான் இந்திரனுக்கு ப்ருஹஸ்பதியைப்போல் உனக்கு லாபத்தையும் க்ஷேமத்தையும் செய்பவன்" என்றார். விருஷபர்வா, "ப்ருகுபுத்ரரே! அஸுராராஜாக்களின் தனமாகட்டும், யாஜகள், பசுக்கள், குதிரைகளாகட்டும், பூமியில் என்னென்ன உண்டோ அவற்றிற்கு நீங்களேப்ரபு. எனக்கு நீங்களேதாம் ப்ரபு" என்று சொன்னன். அதைக்கேட்டுச் சுக்ரர், "அஸுராராஜனே! அஸுராராஜாக்களின் திரவியமெல்லாவற்றிற்கும் நான் ப்ரபுவாயிருப்பேனுயின் இந்தத்தேவயானியை நீ ஸமாதானப்படுத்தவேண்டும்" என்றார். இப்படிச்சொல்லப்பட்ட விருஷபர்வா அப்படியேயென்று சிறந்த கலியாகிய சுக்ராசார்யருக்குச் சொன்னன். சுக்ராசார்யரும் தேவயானியிடஞ்சென்று அவன்சொன்ன விஷயத்தைச்சொன்னர்.

"பிதாவே! ப்ருகுபுத்ரரே! ராஜாவின் திரவியத்துக்கு நீர் ப்ரபுவாயிருந்தால் அந்தவிஷயம் எனக்குத்தெரியாமையால் அதை ராஜாவே சொல்லட்டும்" என்று தேவயானிசொன்னள். சுக்ரர் தேவயானியின்சொல்லைத் தெரிவிக்கக்கேட்டு, விருஷபர்வா தன்சுற்றத்தாருடன் தேவயானியிடஞ்சென்று, "தேவயானியே! தயைசெய்" என்று பூமியில் அவள் பாதங்களில்விழுந்து, "அழகானவளே! உன்தந்தை எப்போதும் என்னல் ஸ்துதிக்கப்பட்டும் வந்தனஞ்செய்யப்பட்டுமிருப்பவர். சிரித்தமுகமுள்ள தேவயானியே! நீ எதைவிரும்பினுலும், அது பெறக்கூடாததாயிருந்தாலும், அதை உனக்கு நான் கொடுப்பேன்" என்றுசொன்னன். அதற்குத் தேவயானி, "ஆயிரம் கன்னிகைகளுடன் சர்மிஷ்டையை என்வேலைக்காரியாயிருக்க நான் விரும்புகிறன். என்னை என்பிதா எந்தஇடத்தில் கொடுப்பாரோ அங்கும் அவள் என்பின்னே செல்லவேண்டும்" என்றுசொல்ல, விருஷபர்வா, "ஓதாதி! நீ எழுந்திரு. சர்மிஷ்டையை உடனேயழைத்துவா. தேவயானி எந்தஇஷ்டத்தை விரும்புகிறளோ, அதை அவள் செய்யக்கடவள். ஒரு குலத்திற்காக ஒருவனைவிடவேண்டும்; ஒருக்ராமத்திற்காக ஒருகுலத்தை விடவேண்டும்; ஒருதேசத்திற்காக ஒருக்ராமத்தை விடவேண்டும்; * தனக்காகப் பூமியையே விடவேண்டும்" என்றன். உடனே தாதி சர்மிஷ்டையிடஞ்சென்று, "அம்மா! சர்மிஷ்டையே! எழுந்திரு. உன்பகைக்குநிலைக்களத்தைச் செய். தேவயானியினுல் அவமானப்பட்டோர் பிராணனைச் சிஷ்யர்

* ஒன் ஆத்மா முக்திபெறுவதற்கு விஷயங்களில் பற்றுதலைவிடவேண்டுமென்பது கருத்து.

கனே விட்டுவிடுகிறார். குற்றமில்லாதவளே! அவள் எதைவிரும்பு கிறாளோ, அதை இப்போது நீசெய்யவேண்டும்" என்றுசொன்னாள். சர்மிஷ்டை, "இப்படித் தேவயானிக்காகச் சுக்ரர் என்னை அழைப் பாரானால் அவள் எதை விரும்புகிறாளோ அதை இப்போதே நான் செய்வேன். என்பிழையினால் சுக்ரர் போகவேண்டாம்; தேவயானி யும் எனக்காகப் போகவேண்டாம்" என்றாள்.

பிறகு, அவள் ஆயிரம் கன்னிகைகளினால் சூழப்பட்டவளாகப் பல்லக்கிலேறிப் பிதாவின் ஆஜ்ஞைப்படி அந்தப்புரத்திலிருந்து விரை வாக வெளிப்பட்டாள். "நான் ஆயிரம் வேலைக்காரிகளுடன் உனக்குப் பணிவிடைசெய்யும் தாஸியாக ஆகிறேன். உன்னை உன்பிதா எந்த இடத்தில் கொடுப்பாரோ, அங்கேயும் உன்னைப் பின்செல்வேன்" என்று தேவயானியைநோக்கிச் சர்மிஷ்டை சொன்னாள். அதற்குத் தேவயானி, "நான் உனக்குத் துதிப்பவன், யாசிப்பவன், வாங்குகிற வன் பெண்ணல்லவா? துதிக்கப்படுகிறவன் பெண்ணாகிய நீ எனக்கு எப்படித் தாஸியாகலாம்?" என்றாள். அதைக்கேட்டு, சர்மிஷ்டை, "துக்கப்படுகிற பந்துக்களுக்கு எவ்வகையாலும் சௌக்யத்தைச் செய்யவேண்டும். ஆதலால், உன்பிதா உன்னைக் கொடுக்குமிடத் துக்கு உன்னைப் பின்தொடர்ந்துசெல்வேன்" என்றாள்.

ராஜச்ரேஷ்டரே! விருஷபர்வாவின்பெண் தேவலோக்காரியாயிரு க்க வாக்குத்தத்தஞ்செய்தபிறகு, தேவயானி தன்பிதாவைநோக்கி, "தந்தையே! பிராமணச்ரேஷ்டரே? நான் திருப்தியானேன். இனி, பட்டணத்துக்குள் வருகிறேன். உம்முடையஞானமும் உபதேசித் தையின் பலமும்வீணில்ல" என்றுசொன்னாள். அந்தப்பெருங்கீர்த் தியுள்ள பிராமணச்ரேஷ்டர், இவ்வாறு தம்பெண்ணினால் சொல்லப் பட்டபிறகு எல்லா அஸுரர்களாலும் பூஜிக்கப்பட்டு ஸந்தோஷத்து டன் விருஷபர்வாவின்பட்டணத்தில் ப்ரவேசித்தார்.

எழுபத்தைந்தாவது அத்தியாயம்.

ஸம்பவபர்வம் (தொடர்ச்சி).

ராஜச்ரேஷ்டரே! பிறகு நீண்டகாலத்துக்குப்பின், பெண்களுட் சிறந்தவளாகிய தேவயானி, அந்த ஆயிரம் வேலைக்காரிகளோடு கூடிய சர்மிஷ்டையுடன் விளையாடுவதற்காக முன்புபோன அந்தவன த்திற்கே போனாள். அந்த இடத்தையடைந்து அந்தஎல்லா ஸகிக

னோடும் மிக மகிழ்ந்தவளாக விருப்பம்போல ஸஞ்சரித்தாள். அவை வரும் விளையாடிக்கொண்டும், புஷ்ப மதுவைக்குடித்துக்கொண்டும், பலவகையான பதார்த்தங்களைப் புசித்துகொண்டும், பழங்களைக் கடித்துக்கொண்டும், ஸந்தோஷமாக இருந்தனர். திரும்பவும் நகுஷ புத்ரனுகிய யயாதிமஹாராஜா மிருகத்தைத் தேடிக்கொண்டு சிரமத்தினால் இளைத்து ஜலத்தையிரும்பி தற்செயலாக அதே இடம்வந்து சேர்ந்தான். அவன் குடித்துக்கொண்டும் விளையாடிக்கொண்டும் உயர்ந்த ஆபரணங்களை அணிந்துகொண்டுமிருந்த தேவயானியையும் சர்மிஷ்டையையும் அந்த மற்றப்பெண்களையும் கண்டான். அந்தஸ்திரீகளின்நடுவில், எல்லாரதனங்களினாலும் அலங்கரிக்கப்பட்ட தேவதாயோக்யமான சிறந்த ஆஸனத்தில் அழகிய புன்னகையோடு உட்கார்ந்திருந்தவளும் அழகில் நிகரற்றவளும் சிறந்தபெண்ணுமாகிய தேவயானியைக்கண்டான். அந்தத்தேவயானியின் ஆஸனத்திற்குக் கொஞ்சந் தாழ்வாக உட்கார்ந்திருப்பவளும் பொன்னபரணங்களை அணிந்தவளும் அழகியகைமுகமுள்ளவளும் பிராமணப்பெண்ணுகிய தேவயானியின் பாதங்களைப்பிடித்துக்கொண்டிருப்பவளும் ஸ்லாக்யமான ரூபமுள்ளவளுமான அஸுரராஜாவின் பெண்ணையும்கண்டான். பாரதவீர! அப்போது பாடிக்கொண்டும், ஆடிக்கொண்டும், வாத்யம் வாசித்துக்கொண்டுமிருந்த அந்தப் பெண்கள் ஒப்பில்லாத ரூபமுள்ள யயாதியைக்கண்டு நாணத்தினால் தலைகுனிந்து நின்றனர்.

யயாதி, (தேவயானியைப்பார்த்து,) "அழகானவளே! நீங்கள் இரண்டுகன்னிகைகள் இரண்டாயிரம் கன்னிகைகளினுற் சூழப்பட்டிருக்கின்றீர்கள். உங்களிருவருடைய குலங்களையும் பெயர்களையும் நான்தெரிந்துகொள்ள விரும்புகிறேன்" என்றுகேட்க, தேவயானி, "ராஜாவே! நான் சொல்லப்போகிறேன். என்சொல்லை நீர் ஏற்றுக்கொள்ளும். சுக்ரரென்னும் அஸுரகுருவிருக்கிறார். என்னை அவர் பெண்ணென்று அறியும்; இவள் அஸுரராஜாவாகிய வ்ருஷபர்வாவின்பெண்; சர்மிஷ்டையென்பவள்; என்தோழியும் என்தாதியுமானவள்; நான் எங்கேபோனாலும் அங்கேபோகிறவள்" என்றாள்.

யயாதி, "அஸுரராஜன்பெண்ணும், அழகிய புருவங்களையுடையவளும், உத்தமஸ்திரீயுமாகிய இந்தக்கன்னிகை உனக்குஸகியாகவும் தாதியாகவும் இருப்பதுஎவ்வாறு? இதைத்தெரிந்துகொள்ள எனக்கு விருப்பம் அதிகமாக இருக்கிறது. இவ்விதமான ரூபமுள்ளபெண் தேவஸ்திரீகளிலும் கந்தர்வஸ்திரீகளிலும் யக்ஷஸ்திரீகளிலும்கின்னரஸ்திரீகளிலும் பூமியிலுள்ள ஸ்திரீகளிலும் இதற்குமுன்நான் கண்ட

தில்லை. லக்ஷ்மியைப்போன்றவளும், நீண்டனவும் தாமரைப்புஷ்பங்களை போன்றவையுமாகிய கண்களோடும் எல்லாலக்ஷணங்களும்பொருந்தினவளும், எல்லா அலங்காரங்களும் சேர்பிக்கிறவளுமாகிய அஸுராஜாவின் பெண்ணை கன்னிகை அவளுடைய தூர்ப்பாக்கியத்தினாற் கெடுக்கப்பட்டாளா? அல்லது உன் தவத்தினாற் கெடுக்கப்பட்டாளா? இவ்வாறன்றிக் குற்றமற்ற ரூபமுள்ள இவள் இங்கே அடிமையாவது கேராது. உன்னுடையரூபம் இவளுடைய ரூபத்துக்கு எவ்வளவும் நிகரல்ல. பூர்வஜன்மத்திற்செய்த பாபத்தினால் இவள் உனக்கு அடிமையாயிருக்கிறாள்; ஐயோ" என்றான். அதற்குத் தேவயானி, "புருஷச்ரேஷ்டரே! யாவரும் விதியைத் தாண்டுவதில்லை விதியினாற்செய்யப்பட்டதென்றறிஞர்கூறுகிறார்கள், புதுமையான பேச்சுக்களோப் பேசலாகாது. உம்முடையரூபமும் வீரஷ்மும் ராஜாவைப்போல் இருக்கின்றன. பிராமணவாக்கை வஞ்சிக்கிறீர் (பொய்சொல்கிறீர்) நீர் யார்? எங்கிருந்துவருகிறீர்? யாருடையபுத்திரர் எனக்குச்சொல்லும்" என்றுகேட்க, யயாதி "நான் பிரம்மசர்ய விரதமிருந்ததனால் வேதம்முழுவதும் என்னிலிருந்து வந்திருக்கிறது. நான் ராஜா; ராஜாவின்புத்ரன்; யயாதியென்று பிரஸித்தியுள்ளவன்" என்றுசொன்னான். "ராஜாவே! என்ன காரியத்திற்காக இந்த இடம் வந்தீர்? ஜலத்திலுண்டான தாமரைப்புஷ்பம் முதலியவற்றைப் பறிக்கவா? அல்லது மீன்பிடிக்கவா?" என்று தேவயானிகேட்டாள். யயாதி "ப்ரியமானவளே! ஸந்தர்ப்பத்தைக்குறிக்கொண்டுவந்த நான் ஜலத்திற்காக இங்குவந்தேன். பலவகையாலும் என்னை ப்ரச்னஞ்செய்தாய்விட்டது. ஆதலால், எனக்கு நீவிடைகொடுக்கலாம்" என்று சொன்னான். தேவயானி "ரிஷிபுத்ரியின் கன்னிகையோடும் தாஸியான சர்மிஷ்டையோடும் உம்மைநானாக இருக்கிறேன். எனக்கு ஸ்தேஹநிராகவும், பர்த்தாவாகவும் அகக்கடவீர். உமக்கு ஸுகமுண்டாகக்கடவது" என்று சொல்லினாள். யயாதி, அஸுராஜாவின் பெண்ணைப்பார்த்து அவளிடம் பற்றுள்ளமனமேயாடு, அவள் தனக்கு மஹிஷியாகவேண்டுமென்று நினைத்து, தேவயானியைப் பார்த்து ஒருவசனம்சொன்னான்.

"சுக்ராபுத்ரியே! உயர்ந்த பெண்ணே! நான் உனக்குத்தகுந்தவனல்லேன் என்பதையறி. உனக்குஸுகமுண்டாகுக! தேவயானி! உன்பிதாவுக்கு அரசர் விவாஹஸம்பந்தத்துக்கு உரியவரல்லர். அயலானுடைய பார்யையும் க்ஷத்ரியரும் வைஸ்யஜாதியிற் பிறந்தவரும் ஒரேகோத்ரமுள்ளவரும் பாதிரையும் மருமகனும் இழிவானவனும் பிச்சைக்காரியும் ஸ்மாதியுள்ளவரும் சேரக்

கூடாதவர்களென்று தெரிந்தவர்களால் சொல்லப்பட்டிருக்கின்றனர்" என்றான். அவன் அப்படிச் சொல்லலும், தேவயானி, "க்ஷத்ரியஜாதியோடு பிராமணஜாதியும் பிராமண ஜாதியோடு க்ஷத்ரிய ஜாதியும் சேர்ந்தே இருக்கின்றன. அதிக ஸூக்ஷ்மமாகப் பார்த்தால் அவ்விரண்டு ஜாதிகளுக்கும் வேற்றுமையில்லை. ஓ, நகுஷபுத்ரரே! நீர் ரிஷியாகவும் ரிஷிபுத்ரராகவும் இருக்கிறீர். என்னை விவாஹஞ்செய்துகொள்ளும்" என்று சொன்னாள். யயாதி. "சிறந்தபெண்ணே! நான்கு வருணங்களும் ஒருதேகத்தில் உண்டானவை. ஆனால், அவற்றிற்குத் தர்மங்களும் ஆசாரங்களும் வெவ்வேறு. அவற்றுள் பிராமணவருணம் மேலானது" என்று சொன்னான். தேவயானி "நகுஷபுத்ரரே! இந்தப் பாணிக்ரஹணமென்னும் தர்மமானது இதற்குமுன் எந்தப் புருஷர்களாலும் எனக்குச் செய்யப்படவில்லை. எனது அந்தக்கையை நீர் முன்னே பிடித்திருக்கிறீர். ஆதலால், நான் உம்மை வரிக்கிறேன். ரிஷிபுத்ரரும் தாமே ரிஷியுமாகிய உம்மாற் பிடிக்கப்பட்டதாகிய உறுதியான மனமுள்ள எனது கையை வேறு புருஷன் எவ்வாறு தொடலாம்?" என்று சொன்னாள்.

யயாதி, அந்தவசனத்தைக்கேட்டு, "பல்லில்விஷமுள்ள சிறிய ஸர்ப்பத்தைக்காட்டிலும், எல்லாப்பக்கத்திலும், வியாபிக்கின்றதீயைக் காட்டிலும், பிராமணன் மிகவும் கொடுங்கமுடியாதவனென்று அறிவுள்ள மனுஷ்யன் தெரிந்துகொள்ளவேண்டும்" என்றான். தேவயானி, "புருஷச்ரேஷ்டரே! பிராமணன் பல்லில்விஷமுள்ள ஸர்ப்பத்தைக் காட்டிலும், எல்லாவியாபிக்கின்ற தீயைக்காட்டிலும், அணுகமுடியாதவனென்று என் சொல்லுகிறீர்" என்று கேட்க, யயாதி, "ஸர்ப்பம் ஒருவனைக் கொல்லுகிறது. ஆயுதத்தினால் ஒருவன் கொல்லப்படுகிறான். கோபம் மூட்டப்பட்ட பிராமணன் அநேகதேசங்களையும், நகரங்களையுமேல்லாம் கொல்லுகிறான். பயமுள்ளவளே! அதனால் பிராமணன் மிகவும் அணுகக்கூடாதவனென்று நான் நினைக்கிறேன். அன்புள்ளவளே! இதனால் உன்பிதா கன்னிகாதானஞ் செய்யாமல் உன்னைநான் விவாஹம் செய்வேன்" என்றான். தேவயானி, "ராஜாவே அப்படியானால் என்னால் புருஷராக வரிக்கப்பட்ட நீர் என்பிதா கொடுத்தபின் என்னை மணஞ்செய்து கொள்ளும்; நான்கேட்காமலே பிறராற் கொடுக்கப்பட்டவளைப் பெற்றுக் கொள்பவனுக்குப் பாபமில்லையே. ராஜாவே! சற்றுநேரமிரும்; நான்பிதாவுக்குச்சொல்லி அனுப்புகிறேன்" என்று யயாதிக்குச்சொல்லி, தன் தாதியைப்பார்த்து, "தாதீ! நீ சீக்கிரம்போய் பிரம்மாவுக்கொப்பான என்பிதாவை இங்

கே அழைத்துவா. ருகுஷபுத்திரரை நான் ஸ்வயம்வரமாக வரித்திருப் பதையும் சிக்கிரம் அவருக்குத் தெரிவி" என்று சொன்னாள். அப் போது தேவயானியினால் தன் பிதாவுக்குச் சொல்லியனுப்பப்பட்ட செய்தி முழுமையும் உடனே தாதி அவருக்கு நடந்தபடி தெரிவித் தாள். கேட்டவுடன், அந்தச் சுக்ராசார்யர் ராஜாவின் முன்னே வந்துநின்றார். வந்த சுக்ராசார்யரைப் பார்த்ததும், ராஜாவாகிய யயாதி பிராமணராகிய சுக்ரரை வந்தனஞ்செய்து கைகூப்பி வணங்கி நின்றான். தேவயானியானவள், "பிதாவே! ருகுஷனுடைய புத்ர ராகிய இந்தராஜா ஆபத்துக் காலத்தில் முன்னே யாரும் பிடித்திராத என்கையைப் பிடித்தார். அதனால் நான் ஆபத்து நீங்கினவளாகச் செய்யப்பட்டேன். உங்களுக்கு நமஸ்காரம். என்னை இவருக்குக் கொடுங்கள். இந்தலோகத்தில் நான் வேறுபதியை வரிப்பதில்லை" என்று சொன்னாள். சுக்ரர், "தர்மம்வேறு; விருப்பம்வேறு. முன் னேயே கசனுடைய சாபம் நேர்ந்ததினால் நீ ருகுஷபுத்ரனை உனக்குப் பதியாக வரித்தாய். அது விதியாஸமாகத் தகாது. ஓ வீரனே! ருகுஷபுத்ரனே! எனது ப்ரியமான பெண்ணாகிய இவள் உன்னைப் பதியாக வரித்திருக்கிறாள். பிராமணப் பெண்ணைத் தானாக ஒருவன் க்ரஹித்துக்கொண்டால், வருணங்கள் கலந்துபோவதினால் பெரிய குற்றந்தான். ஆனால், என்னால் கொடுக்கப்பட்ட இவளை உன் மஹி ஷியாக நீ அங்கீகரிக்கக்கடவாய்" என்று சொன்னார்.

யயாதி, "ப்ருகுபுத்ரரே! பிராமணரே! இது விஷயத்தில் வரு ணங்கள் கலப்பதினாலுண்டான பெரிய அதர்மம் என்னைத் தொடராம லிருக்கவேண்டுமென்று நான் உங்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்" என்றான். சுக்ரர், "உன்னைப் பாபத்திலிருந்து நீக்கிவிடுகிறேன். உனக்கு வேண்டியவரத்தை நீகேள். இந்த விவாஹத்தில் வருத்தப் படாதே. நான் உன்பாபத்தை விலக்குகிறேன். அழகான இடையுள்ள தேவயானியைத் தர்மமாகவே பார்யையாக விவாஹஞ்செய்துகொள். இவளுடன் ஒப்பில்லாத ஸ்நேஹத்தையடை. ராஜாவே! இந்த ராஜ குமாரியாகிய வ்ருஷபர்வாவின் பெண் சர்மிஷ்டையுங்கூட உன் னால் எப்போதும் கௌரவிக்கத்தக்கவள். ஆனால் இவளைச் சயனத் தில் மட்டும் அழைக்காதே; இவளை ஏகாந்தத்தில் அழைத்துப் பேசாதே; தொடவுந்தொடாதே; தேவயானியைப் பார்யையாக விவாஹஞ் செய்துகொள். உனக்கு க்ரேயஸ் உண்டாகக்கூடவது, நீ னைத்ததையெல்லாம் அடைவாய்" என்றார்.

இப்படிச் சொல்லப்பட்ட யயாதியென்னும் அரசன் சுக்ரனைப் பிரதக்ஷிணஞ்செய்து சாஸ்திரத்திற்சொன்ன முறையின்படி சுபமான விவாஹத்தைச் செய்துகொண்டான். சுக்ரரிடமிருந்து நிரம்பின தனத்தையும், இரண்டாயிரம் கன்னிகைகளுடனும் சர்மிஷ்டையுடனும் உத்தமஸ்திரீயான தேவயானியையும் அடைந்து, சுக்கிரராலும் அஸுரர்களாலும் பூஜிக்கப்பட்ட அந்த ராஜச்ரேஷ்டன் மஹாத்மாவாகிய சுக்ரரால் விடைகொடுக்கப்பெற்று ஸந்தோஷத்துடன் தன் நகரஞ்சென்றான்.

எழுபத்தாறுவது அத்தியாயம்.

ஸம்பவபர்வம் (தொடர்ச்சி).

யயாதி, தேவேந்திரநகரத்துக்கொப்பான தன் நகரத்தையடைந்து அந்தப்புரத்துக்குட்சென்று அதில்தேவயானியை இருக்கச்செய்தான். தேவயானியின் அனுமதியின்படி அந்த வ்ருஷபர்வாவின் பெண்ணே அசோகவனிகையென்னும் தோட்டத்தின் ஸமீபத்தில் க்ருஹமமைத்து அதிலிருக்கச்செய்தான். ஆயிரம்வேலைக்காரிகளாற் சூழப்பட்ட வ்ருஷபர்வாவின் பெண்ணாகிய சர்மிஷ்டையை வஸ்திரங்களையும் அன்னபானங்களையும் கொடுத்துச் செவ்வையாகக்கௌரவித்து, நகுஷபுத்ரனை அந்தஅரசன் தேவயானியுடன்சேர்ந்து மிகுந்த ஸ்நேஹமுள்ளவனாக அனேகவருஷகாலம் மகிழ்ந்திருந்தான். தேவயானி பரிசுத்தமாயும் மனஸுக்கினிமையாயுமுள்ள அசோகவனத்தின் மத்தியில் சர்மிஷ்டையுடன்சேர்ந்து விஹாரமாடிவிட்டு அங்கேயே அவளையனுப்பி ராஜாவுடன் க்ருஹத்துக்குட்சென்றாள். இப்படியே அந்தராஜா ஸ்நேஹத்துடன் ஸந்தோஷமாகஇருந்து தேவதையைப் போல் மனமகிழ்ந்து ஸுகமடைந்து அனேகவருஷகாலம் நீடித்து விஹாரமாடினான். உயர்ந்தபெண்ணாகிய தேவயானி ருதுகாலம் வந்த போது முதலாவது கர்ப்பத்தைத்தரித்தாள்; குமாரனையும்பெற்றாள். அநேகவருஷகாலங்கள் கடந்தபின் பெரனனமடைந்த வ்ருஷபர்வாவின் பெண்ணாகிய சர்மிஷ்டையும் தனக்கு ருதுகாலம்வந்ததைப்பார்த்துச் சிந்தையுற்றாள். ஸ்நானம்செய்து நிர்மலமாகஇருந்த சர்மிஷ்டை, எல்லா அலங்காரங்களினாலும் சோபித்துக்கொண்டு அழகிய பூங்கொத்துக்களிறைந்த அசோகமரத்தின் கிளையைப்பிடித்துக்கொண்டு கண்ணாடியில் முகம்பார்த்துப் பர்த்தாவைப்பார்க்க ஆவலுள்ளவளாகச் சோகத்தினாலும் மோகத்தினாலும் ஆவேசங்கொண்டு அடியில்வரும் சொல்லைச்சொன்னாள்.

"அசோகமே! சோகத்தினால் அடிபட்ட மனமுள்ளவர்களுக்கெல்லாம் சோகத்தை விலக்குவாய்! என்கணவனைக்காட்டி என்னையும் *உன்பேருள்ளவளாக இப்போது செய்யக்கடவாய்" என்றாள். (இப்படிச்) சொல்லிவிட்டு அந்தச்சர்மிஷ்டை, மறுபடியும், "எனக்கு ருதுகாலம்சேர்ந்திருக்கிறது. நான் ஒருபதியையும் வரித்திருக்கவில்லை; எனது உசிதம்; என்னசெய்யலாம்; எதைச்செய்தால் ஸுகமுண்டாகும்; இந்ததேவயானி பிள்ளையைப்பெற்றிருக்கிறாள்; எனக்கு வந்த பெளவனம் வீண்; அவள் எப்படிப் பார்த்தாலை வரித்தாளோ, அப்படியே நானும் அவளைவரிக்கிறேன்; எனக்குப் புத்ரபாத்ரத்தை ராஜாதான் கொடுக்கவேண்டியவனென்பது என்னுடைய உறுதியானஎண்ணம்; அந்தத்தர்மாத்மாவான ராஜா யகாதியில் இப்போது எனக்குப் பார்க்கக்கிடைப்பானோ? எனக்குப்பர்த்தாவாகிய ராஜாவைக் † கூந்தலினாற்கட்டியாகிலும்பின்; தேவயானியின் புத்திரனை அடிக்கடி பார்த்துக்கொண்டு அவளுடைய அந்தப்புரத்தில் விளையாடிக்கொண்டிருக்கும் அரசன் எப்போதாவது ஒழிவைபெற்று இந்தஇடத்தை விரும்புவானோ?" என்று சொல்லிக்கொண்டிருந்தாள். அந்தக்காலத்தில் அந்தஅரசன் தற்செயலாகவெளிப்பட்டு அசோகவனிகையின் ஸமீபத்தில்நின்றான். சர்மிஷ்டையை ஸந்தித்தான். யகாதியில் ஒருவனைஇருந்த ராஜாவைக்கண்டு சர்மிஷ்டை அழகிய மந்தஹாஸமுகத்துடன் எதிர்கொண்டுபோய்க் கைகளைக் கூப்பிக்கொண்டு ராஜாவைநோக்கி அடியில்வருமாறு சொல்லலானாள்:

"ருஷபுத்ரரே! சந்திரன், இந்திரன், விஷ்ணு, யமன், வருணன் இவர்கள்வீட்டினுள் உம்மைவிட்டுளிருக்கும் ஸ்திரீகளை எவன் பார்க்கக்கூடும்? ராஜாவே! ரூபத்தினாலும், குலத்தினாலும், ஒழுக்கத்தினாலும் என்னை எப்போதும் நீர் அறிந்தவர்; அதைதான் இப்போது உம்மைப்பிரார்த்திக்கிறபடியாகிறேன். ராஜாவே! எனக்கு ருதுகாலத்தின் ப்ரயோஜனத்தைத் தொடர்ந்தருளவேண்டும்" என்றாள். யயாதி அந்தவசனத்தைக்கேட்டு, "அஸுரராஜன் பெண்ணாகிய உன்னை நல்லிலையுக்கம் ப்ரம்மனைவினால்லும் உயர்ந்த ரூபமுள்ளவளென்றும் நான்அறிவேன். உன்ரூபத்தில் ஊசிமுனையளவும் குற்றத்தை நான் பார்க்கவில்லை. உயர்ந்தவளே! உன்னைநான் பார்த்தமுதல் உன்நினைவாகவேயிருக்கிறேன். நான் எப்போதும் தேவயானியைக் கல்யாணஞ்செய்திருந்தாலும் அப்போதும் கவிபுத்ரராகிய சுக்ராசார்யர், "இந்த ஷ்ருஷபர்வாவின் பெண்ணை நீ எவனத்தில் கூப்பிடக்

* அசோகை - சோகமில்லாதவள். † தலையால் வணங்கி.

தகாது. தேவயானியின் ப்ரியத்தைச்செய்து சர்மிஷ்டையையும் காப்பாற்று" என்றுசொல்லியிருக்கிறாய்" என்றுசொன்னாள். சர்மிஷ்டை "ராஜாவே! பரிஹாசத்துக்காகவும், ஸ்திரீகளிடத்தும், விவாஹகாலத்திலும், ப்ராணபாயகாலத்திலும், எல்லாச்சொத்தும் பறிக்கப்படுங்காலத்திலும் சொல்லப்படும் பொய் தீங்குசெய்யாது. இந்தஐந்து பொய்களையும் பாபமல்லாதவையென்று சொல்லுகின்றனர். ராஜாவே ஸாக்ஷ்யத்தில் கேட்கப்பட்டவன் வித்தியாஸமாகப் பொய் பேசினால் அவனைப்பதிகனென்று சொல்லுகின்றனர். ஒருகார்யத்தை நிச்சயிக்கும்போது பொய்சொல்லுகிறவனை அந்தப்பொய் கெடுக்கும். ஸ்திரீகளிடத்தும், பரிஹாஸத்திலும், விவாஹத்திலும், தன் உயிரும்பொருளும் நஷ்டமாகும்போதும் சொல்லப்படும்பொய் பொய்யன்று; அதுவே சிறப்பையடையும்"! என்று சொன்னாள்.

யயாதி, "ராஜாதான் ஜனங்களுக்கு உதாஹரணம்; அவன்பொய் சொன்னால் கெடுவன். ராஜ்யகார்யத்தில் ஸங்கடம் வந்தபோதிலும் நான் பொய்சொல்ல விரும்பேன்" என்றான். அதற்குச்சர்மிஷ்டை, "ராஜாவே! தன் பதியும், ஸகியின்பதியும், ஒன்றாகவே கிணக்கப்படுகின்றனர். ஒருவனாயாக இருபத்தைத்தானே விவாஹமென்று சொல்லுகின்றனர். எல்லாம் உம்மைப்பற்றியாக வரித்தேயிருக்கிறாள். சிறுகுழந்தையுள்ள சக்ராசார்யரால் தேவயானியுடன்கூடவே நானும் பூஜிக்கத்தக்கவளென்றும் போஷிக்கத்தக்கவளென்றும் சொல்லிக்கொடுக்கப்பட்டிருக்கிறேன். அதைநீர் பொய்யாகச்செய்யத்தகாது. பொன், மணி, முத்து, வஸ்த்ரம், ஆபரணம், பசு, பூமிமுதலிய எல்லாவற்றையும் நீர் யாசிப்பவருக்குக்கொடுக்கிறீர்; அவையெல்லாம் வெளிப்படையாகச் சொல்லப்பட்டனவையன்றி சரீரத்தைச்சேர்ந்தவையல்ல. ராஜாவே! புத்ரனுக்கொடுப்பதும் தன்னைக்கொடுப்பதும் செயற்கரியதானதல்ல. ஐயா! சரீரத்தைக்கொடுப்பதினால் மற்றவையெல்லாம் கொடுக்கப்பட்டவையாகும். ராஜாவே! 'எனைவனுக்கு எவ்வளவினால் நற்பயன் அவனவனுக்கு அவற்றையெல்லாம் நான் கொடுக்கிறேன்' என்றுசொல்லி உம் நகரத்தில் தேரோடுன்று நாம் பறையடித்து நிற்கிறீர். ராஜாவே! உமதுசொல்லுக்கு விரோதமாக விளம்பரமும் பொய்யாயிற்று. ராஜச்ரேஷ்டரே! குடிபாரணம்போன்ற நீர் அதை ஸத்யமாகப்பண்ணுவீர்" என்றாள். யயாதி, "யாசிப்பவருக்குக் கொடுக்கவேண்டுமென்பதை நான் விரதமாகவைத்திருக்கிறேன். நீ என்னையாசிக்கிறாய். உனக்கு என்ன விருப்பத்தை நான் செய்யவேண்டும். அழகான புன்சிரிப்புடையவளே! உனக்குப்பொரு

னேக்கொடுக்கட்டுமா? ராஜ்யத்தைத் தொகொகுடுமா? சொல்" என்றான், சர்மிஷ்டை, "ராஜாவே! பாபம்வராமல் என்னைக்காப்பாற்றும்; தர்மத்தைக்கொடும். புத்திரனை விரும்புகிறாய்! வேறு யாருஷனிடமிருப்பதில்லை. புத்திரனைக்காட்டிலும் சிறந்ததொன்றுமில்லை. உம்மிடத்திலிருந்து புத்திரனையடைந்து லோகத்தில் உயர்ந்ததர்மத்தைச் செய்யக்கடவேன். ராஜாவே! பார்யை, அடிமை, புத்திரன்இம்மூவருமதனம் வேறுகத் தங்களுக்குத் தனமில்லாதவர்கள். இவர்கள் அடைவதெல்லாம் இவர்கள் யாரைச்சேர்ந்தவர்களோ அவருடையதனந்தான். புத்திரனைப்பெறுவதற்கும், பார்த்தானவப்போஷிப்பதற்குந்தான்பிரமதேவர்நிர்மானம்பண்ணியிருக்கிறார். கன்னிகைகள் பதியில்லாமலும்புத்திரனில்லாமலுமிருப்பார்களாயின், இந்தலோகத்தில் அவர்களுடையஜன்மம் வீண், பரலோகமும் அவர்களுக்கில்லை. நான்தேவயானிக்கு வேலைக்காரியாயிருக்கிறேன். அந்தத்தேவயானி உமக்குவசப்பட்டவளாயிருக்கிறாள். ராஜாவே! அவளையும், என்னையும் நீர்தான் அனுபவத்தக்கவர். என்னை அங்கீகரிக்கக்கடவீர்" என்று சொல்லினாள்.

இவ்வாறுசொல்லப்பட்ட அந்தஅரசன் ஸரிதென்றறிந்து சர்மிஷ்டையைக் கொண்டாடினான். தர்மத்தையுங்கோரித்தான். அவன் சர்மிஷ்டையைச்சேர்ந்து ஸுகமாகஇருந்தபிறகு, அவர்களிருவரும் ஒருவரையொருவர் மரியாதைசெய்து வந்தபடியே சென்றனர். ஆந்தச்சேர்க்கையில், ஆழகானபுருவங்களையுமருமையான சிரிப்புள்ளவளுமாகிய சர்மிஷ்டை அந்தராஜரிஷியினிடத்திலிருந்து முதல் கர்ப்பத்தைத்தரித்தாள். ஜனமேஜயராஜாவே! தாமரைப்புஷ்பம்போன்ற கண்களையுடைய சர்மிஷ்டை, பிறந்தபிரஜைகளில் தாமரைக்கண்ணனும் தேஜஸுள்ளவனுமாகிய புத்திரனைப்பெற்றாள்

எழுபத்தேழாவது அத்தியாயம்.

ஸம்பவபர்வம். (தொடர்ச்சி).

சுக்லபக்ஷத்தில் பாரதகையைச்சேர்ந்த சந்திரனுடன் கூடிய நக்ஷத்ரம் பொருந்திய அந்தத்தினத்தில் அந்த பிரஜாபத்தியாகிய ராஜா, அந்தச்சர்மிஷ்டையோடு கூடியிருந்தான். அந்தராஜா, "ஜனங்களுக்கு ஸுபத்து ஸுபீபிப்படுதலால் எனக்குச் சர்மிஷ்டை மனைவியானாள். எனக்குத் தேவயானி ஸுப்பயர்பிரஜைப் பயங்கரமுட

முள்ளவளாக ஆய்விட்டாள். விருஷபர்வாவின் புத்திரியாகிய சர்மிஷ்டை எனக்குப் பயிர்களுக்கு மேகம்போலவும் தேவர்களுக்கு அமிர்தம்போலவுமிருக்கிறாள்" என்று மனத்தில் நினைத்து, தேவயானியை விட்டுவிட்டான். பாரதரே! இனிய சிரிப்புள்ள தேவயானியானவள் குமாரன் பிறந்ததைக் கேள்வியுற்றுத்துக்கமுள்ளவளாகச் சர்மிஷ்டையைப்பற்றி ஆலோசித்தாள். பின் சர்மிஷ்டையிடஞ்சென்று, "அழகான புருவங்களையுடையவளே! காமஸுகத்துக்கு ஆசைப்பட்டு என்ன இந்தப் பாவஞ்செய்துவிட்டாய்" என்ற சொல்லைச் சொன்னாள். சர்மிஷ்டை "அழகிய சிரிப்புள்ளவளே! தர்மமே உருவங்கொண்டவரும் வேதங்களில் கரைகண்டவருமான ஒருரிஷி வந்தார். வரங்கொடுக்கவந்த அவரை நான் தர்மத்துடன்சேர்ந்த காமத்தை யாசித்தேன். நான் புத்ரலாபத்தைப்பற்றி அவரைக் கேட்டுக்கொண்டேன். சுத்தமான புன்னகையுள்ளவளே! நான் அநியாயமாகக் காமஸுகத்தை அடையேன். அந்த ரிஷியினிடமிருந்து எனக்குப் புத்திரனுண்டானான் என்பதை உனக்கு உண்மையாகச் சொல்லுகிறேன்" என்று சொன்னாள். அதற்குத் தேவயானி, "பயந்தவளே! ஆனால் நீ. * த்விஜருடைய கோத்ரமும் இருப்பிடமும் உனக்குத்தெரியுமா? நானும் அந்தத் துவிஜரைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்" என்றுகேட்க, சர்மிஷ்டை, "சுத்தமான புன்னகையுள்ளவளே! தவத்தினாலும் ஒளியினாலும் ஸூர்யனைப்போல் ஜ்வலித்துக்கொண்டிருந்த அவரைப்பார்த்துக் கேட்க எனக்குச் சக்தியில்லாமற் போயிற்று" என்றாள். தேவயானி "சர்மிஷ்டையே! இஃது இப்படியாக இருந்தால் பெரியவரும் சிறந்தவருமாகிய பிரா மணரிடம் உனக்கு ஸந்ததிலாபத்தினால் உண்மைல் எனக்குச் சோகமில்லை" என்று சொன்னாள். அவ்விருவர்களும் இவ்வாறு ஒருவரோடொருவர் ரஹஸ்யமாகப் பேசிக்கொண்டும் சிரித்துக் கொண்டுமிருந்தபிறகு, சுக்ரபுத்ரியான தேவயானி அதை நிஜமென்றே நம்பிக்கொண்டு அந்தப்புரம் சென்றாள். யயாதிராஜன், இரண்டாவது இந்திரனையும் விஷ்ணுவையும் ஒத்த யது துர்வஸுவென்னும் இரண்டு புத்திரர்களைத் தேவயானியிடம் பெற்றான்.

அந்தக்காலத்தில் ராஜரிஷியாகிய யயாதிராஜன் தேன்சுவையுடன் சேர்க்கப்பட்டதும் மதத்தை விருத்திசெய்வதும் சிவப்பும் மஞ்சளும் கலந்தவர்ணமுள்ளதுமான மதுவைச் சுக்கிராம்பெண்ணை தேவயானியைக் குடிக்கும்படி செய்தான். அந்தமதுவைக் குடித்துக்

* த்விஜன்-பிராமணன், க்ஷத்ரியன், வைசியன்.

குடித்து அந்தத்தேவயானி மயக்கங்கொண்டாள். அடிக்கடி அழுது கொண்டும் பாடிக்கொண்டும் ஆடிக்கொண்டும் மிகுதியாகப் பிதற்றிக்கொண்டுமிருந்த அந்தத்தேவயானி ராஜாவைநோக்கி, "ஓ பிராமணச்ரேஷ்டனே! உன்உருவமும் அலங்காரமும் ராஜாவுக்கிருப்பதுபோலிருக்கின்றன. எதற்காக நீ இங்கேவந்தாய்? ஜனங்களில்லாத கடினமானகாட்டுக்கு என்னகாரியத்திற்காக வந்தாய்? யயாதியென்னும் ராஜச்ரேஷ்டன் கொடிய பார்வையுள்ளவன். ஆதலால், பிராமணனே! நன்மையை விரும்பினையானால் இவ்விடம் விட்டு ஓடிப்போ" என்று இவ்வாறு பிதற்றிக்கொண்டிருந்த தகாதவளும் பாபத்தைவிரும்பிச்செய்கிறவளுமான அந்தத்தேவயானியை யயாதிவசனங்களினால் பயமுறுத்தினான். பிறகு அவளையும் ஊமையரையும் அங்கப்பிழையுள்ளவர்களையும் கிழவர்களையும் மூடவர்களையும் தேவயானியைப் பாதுகாக்கவும் போஷிக்கவும் கட்டளையிட்டான். சிறந்த புத்தியுள்ள சுகுஷபுத்திரனை அந்தராஜா பிறகு சர்மிஷ்டையைச் சேர்ந்து வெகுகாலம் அவளுடன்கூடி ரமித்தான். விருஷபர்வாவின் பெண்ணாகிய சர்மிஷ்டை, அதிக்ராதத்திற்கு த்ருஹ்யு, அநு, பூரு என்னும் மூன்று குமாரர்களைப் பெற்றாள்.

ஜனமேஜயராஜாவே! அதன்பின் ஒருவருடகாலத்தில் தேவயானி சுகையுள்ள தேவயானி, யயாதியுடன்சேர்ந்து ஏகாந்தமில்லாத தேசத்திற்குச் சென்றாள். அப்போது அவள், அவனைத்தன் தேவசந்நிதிக்கொப்பானஒருத்தனுடன் அச்சரியமாய் விளையாடுகின்ற குமாரர்களைக் கண்டு வியப்புற்றவளாகி, "ராஜாவே! தேவகுமாரர்களுக்கொப்பான இந்த அழகிய குமாரர்கள் யாருடையவர்? ஒளியிலுமழகிலும் உன்னைப்போல் இருக்கிறார்களென்று நான் நினைக்கிறேன்" என்று ராஜாவைக்கேட்டாள். இப்படி ராஜாவைக்கேட்டபின் குழந்தைகளையும் விசாரித்தாள். அந்தக்காலத்தில் அதைத்தேவ அந்தக் குழந்தைகளின்தாதி, "குமாரர்களே! நமது பிராமணர்சிரேஷ்டருக்கு உங்களுக்குப் பிதாவென்பதை நீங்கள் என்சொல்லவில்லை" என்று குமாரர்களை நோக்கிச் சொன்னாள். குமாரர்கள், "நிஷ்பாபியும் வேதாத்தியயனம் செய்தவருமான ஒரு ரிஷிதான் எங்களுக்குத் தகாது. சர்மிஷ்டை பொய்சொல்வதில்லை; தேவயானி, எங்களை பள்ளிக்கூடவாய்" என்றனர்கள். அதற்குத்தேவயானி, "புத்ரர்களே! உங்கள் பிதாவாகிய பிராமணருக்குப் பெயரும் கோத்ரமுமென்ன? அவரைப்போல் எங்கிருக்கிறார்? உண்மையாக உடனேசொல்லுங்கள். அவரைப்பற்றி நான் கேட்கவிரும்புகிறேன். எனக்கு நிஜத்தைச் சொல்லுங்கள்"

என்றுகேட்டாள். அழகிய இடையையுடைய தேவயானியால் இவ்வாறு கேட்கப்பட்ட அந்தக்குமாரர்கள் சுட்டுவிரலால் அந்தராஜச் சேஷ்டணையே காட்டினர். சர்மிஷ்டை தாயாரென்பதையும் அந்தக் குமாரர்களே சொன்னார்கள். இவ்வாறுசொல்லிவிட்டு அந்தக்குழந்தைகளெல்லாரும் ராஜாவினருகில் சென்றார்கள். தேவயானியின் ஸமீபத்தில் அவர்களை ராஜாஅழைக்கவில்லை. அதன்மேல் அந்தக் குழந்தைகள் அழுதுகொண்டு சர்மிஷ்டையிடம் போனார்கள். அழகானகண்களையுடைய சர்மிஷ்டை ராஜாவைப்பற்றி ஒன்றும்சொல்லாமலே ராஜாவுக்குச் சிறிதுதூரத்தில் தலைகுனிந்துநின்றாள். அந்தக் குழந்தைகள் சொன்னதைக்கேட்டு ராஜா வெட்கப்பட்டுநின்றான். மறுமொழிசொல்ல முடியாமல் ராஜா மௌனமாக இருந்தான்.

ராஜாவினிடத்தில் அந்தக்குழந்தைகளின் ஸ்நேஹத்தைக்கண்டு தேவயானி உண்மையைஅறிந்துகொண்டு சர்மிஷ்டையைநோக்கி, "பெண்ணே! ஒரு ரிஷி என்னிடம் வருகிறானென்று சொன்னையே! இப்படி நீ யயாதிராஜாவை மறைத்தாயல்லவா? நீ பிழைசெய்திருக்கிறாயென்று நான் முன்னமேசொன்னேன். எனக்கு உட்பட்டவளாக இருந்து எனக்கே விரோதத்தை ஏன்செய்தாய்? இன்னும் அதே அஸுரத்தன்மையைவஹித்து நீஎன்னிடம் பயப்படாமலிருக்கிறாய்" என்று சொன்னாள். அதற்குச்சர்மிஷ்டை, "அழகான கிரிப்புழகுழல்களையுடையவளே! நிஜமென்றுதானே நான்சொன்னேன். அது நிஜம். நியாயமாகவும் தர்மத்தைவிடாமலும் நடக்கிற நான் உனக்குப்பயப்படவில்லை. நீ பர்த்தாவை எப்போது வரித்தாயோ அப்போதே நானும் வரித்தாய்விட்டது. அழகானவளே! தர்மப்படி ஸகியின் பர்த்தா தனக்கும் பர்த்தாவாகலாம்; நீ எனக்குப் பூஜிக்கத்தக்கவள்; கௌரவிக்கத்தக்கவள்; எனெனில், வயதில் பெரியவளாகவும், பிராமணப்பிள்ளைகளை பெற்றிருக்கிறாய்; உன்னைப்பார்க்கிலும் ராஜரிஷி எனக்கு அதிகமாகப் பூஜ்யர்; உனக்குத்தெரியாதா? அழகானவளே! என்தகப்பனாகிய உன் பிதாவினால் நாமிருவரும் கொடுக்கப்பட்டோம்; ஆகலால், பர்த்தாவாகவும் பூஜ்யராகவுமிருக்கிற இவர் இங்கேயேபோஷிக்கவேண்டியவளாகிய என்னைப் போஷிக்கிறார்" என்றுசொன்னாள். அவள்சொல்லைக் கேட்டபிறகு, தேவயானி, "ராஜாவே! சர்மிஷ்டையாகிய பாரியையுடன் உன் இஷ்டப்படி ரமித்துக்கொண்டிரு. நீ எனக்குப்பண்ணாதகாரியம் செய்திருக்கிறாய். இனி நான் இங்கிரேன்" என்றுசொன்னாள். இவ்வாறுசொல்லிக் கருமையான விழிகளையுடைய தேவயானி, வெட்கத்தினாலடிருக்கும் சர்மிஷ்டையை

எரிப்பவள்போற்பார்த்து எல்லாப்பூஷணங்களையும் கழற்றியெறிந்து விட்டு நிருத்தகோபத்தினால் ஜ்வலிப்பவள் போலானாள். உடனே எழுந்து கண்ணும்கண்ணீருமாகச் சுக்கிராசாரியரிடம் விரைவாகப் போகத்தொடங்கிய யுவதியான தேவயானியைப்பார்த்து, ராஜா வருத்தமுற்றவனைப் பரபரப்புடன் நல்வார்த்தைசொல்லிக்கொண்டு பின்தொடர்ந்தான். கோபத்தினால் சிவந்தகண்களையுடைய தேவயானி, திரும்பவேயில்லை. அவள் ராஜாவுக்கு ஒன்றும்சொல்லாமல் கண்ணும்கண்ணீருமாக விரைவில் கவிபுத்ரராகிய சுக்ரர் ஸமீபம் சேர்ந்தாள். அவள் தன்பிதாவைக்கண்டவுடன் நாள்காரஞ்செய்து அவர்முன்நின்றாள். பிறகு யயாதியும் சுக்ராசார்யரைப்பூஜித்தான். தேவயானி, "தந்தையே! அதர்மத்தினால் தர்மம் வெல்லப்பட்டது. கீழ்மேலாக நடந்துபோயிற்று. விருஷபர்வாவின்பெண் சர்மிஷ்டை என்னைமிஞ்சிவிட்டாள். இந்தராஜாவாகிய யயாதி அவளிடம் மூன்று புத்திரர்களை உண்டுபண்ணினான். அதிர்ஷ்டமில்லாத எனக்கு இரு வீர புத்திரர்கள். தந்தையே! உமக்குச்சொல்லுகிறேன். ப்ருகு குலச்ரேஷ்டரே! இந்தராஜா தர்மந்தெரிந்தவனென்று பெயர்பெற் றவன். இவன் வ்யவஸ்தை தவறினவனுமிருக்கிறான். கவிபுத்ரரே! இதை உமக்குச்சொல்லுகிறேன்" என்றுசொன்னாள். சுக்ரர், யயாதி யைப்பார்த்து, "மஹாராஜாவே! நீ தர்மந்தெரிந்தவனுமிருந்தும் அத தர்மத்தை விருப்பத்துடன் செய்ததினால் உன்னால் ஜயிக்கமுடியாத மூப்பு உன்னை விரைவில் மூடிக்கொள்ளும்" என்றுசொன்னார்.

யயாதி, "பகவானே! அஸுராராஜன்பெண் ருதுகாலத்தின் பயனை வேண்டினதற்காக நான் தர்மத்தையனுஸரித்துவேறுவிதமானவண்ண மில்லாமல் இதைச்செய்தேன். பிராமணரே! ருதுவின்பயனாயிக் கிறஸ்திரீக்கு அதைக்கொடாமலிருக்கிற புருஷன், கர்ப்பஹத்திசெய் தவனென்று இவ்வுலகத்தில் வேதம்தெரிந்தவர்களால் சொல்லப்படு கிறான். விரும்பினவரும் சேரத்தகுதியுள்ளவருமாகிய ஸ்திரீ, ரஹஸ் யத்தில் வேண்டினபோது, அவளையடையாதவன் கர்ப்பஹத்தி செய் தவனென்று தர்மசாஸ்திரம் தெரிந்தவர்கள் சொல்லுகின்றனர். என் னை எவன் என்னநேட்கிறானோ அதையெல்லாம் அவனுக்குக் கொடுக் கவேண்டுமென்பது என்னுடைய விரதம். அவளும் உம்மாலேயே எனக்குக்கொடுக்கப்பட்டாள். அவள் இவ்வுலகத்தில் வேறொருகண வனைவிரும்பவில்லை. ப்ருகுகுலச்ரேஷ்டரே! இவ்வாறு இந்தக்காரண ங்களை ஆராய்ந்து நான் பாபம்வருமென்றபயத்தினால் கலக்கமுற்றுச் சர்மிஷ்டையிடம் சேர்ந்தேன். பிராமணரே! நான் செய்ததைத்தர்ம

மென்றுநினைத்து என் விஷயத்தில் க்ஷமைசெய்யவேண்டும்" என்று சொன்னன்.

சுக்ராசார்யர், "ஓ நகுஷபுத்ரனே! ராஜாவே! நீ என்னை எதிர் பார்த்திருக்கவேண்டும்; எனக்கு உட்பட்டவனாயிருக்கிறாய்; தர்மங் களில் பொய்யான ஆசாரமுள்ளவன் திருடனாகிறான்" என்று சொன் னர். கோபங்கொண்ட சுக்கிரரால் சபிக்கப்பட்ட நகுஷ புத்ரனாகிய யயாதி உடனே இளமைப்பருவத்தைவிட்டு மூப்பை அடைந்தான். அப்போது யயாதி, "ப்ருகுகுலச்ரேஷ்டரே! என் யௌவனவயஸை னுடைய த்ருப்தியைத் தேவயானியிடம் நான் அடையவில்லை. பிரா மணரே! எனக்கு அனுக்ரஹஞ்செய்யக்கடவீர். இந்தமூப்பு என் னை அடையாமலிருக்கவேண்டும்" என்று கேட்க, சுக்கிரர், "ராஜா வே! நான் பொய்சொல்வதில்லை. நீ இதோ ஜரையை யடைந்திருக் கிறாய். ஆனால் உனக்கு விருப்பமிருந்தால் இந்தஜரையை வேறொரு வனிடம் மாற்றிக்கொள்ளலாம்" என்று சொன்னர். யயாதி, "பிரா மணரே! என்னுடைய புத்திரர்களில் எவன்தன்வயஸை எனக்குக்கொ டுப்பானோ அவன்தான் ராஜ்யத்துக்குரியவனாகவும் புண்ணியமுள்ள வனாகவும் புகழுள்ளவனாகவுமிருப்பன். அதற்கு நீங்கள் அனுமதிகொ டுக்கவேண்டும்" என்றான். சுக்ரர், "நகுஷபுத்ரனே! மனமிஞ்சி என் னோடு தியானஞ்செய்து ஜரையை உன் இஷ்டப்படி மாற்றலாம். உனக் குப் பாபம் வராது. எந்தப்புத்திரன் உனக்கு இளமையைத் தரு வானோ அவனே ராஜாவாகவும் தீர்க்காயுஸுள்ளவனாகவும் புகழ்பெற் றவனாகவும் அதிக சந்ததியுள்ளவனாகவும்இருப்பான்" என்று சொன் னர்.

எழுபத்தேட்டாவது அத்தியாயம்.

யயாதி பர்வம். (தொடர்ச்சி.)

யயாதி ஜரையையடைந்து தன் நகரஞ்சேர்ந்து சிறந்தவனும் ஜ்யேஷ்டனுமான யதுவென்னும் புத்ரனைநோக்கி, "குழந்தாய்! மூப் பும் மடிப்புக்களும் நரைகளும், கவிபுத்ரரான சுக்கிராசார்யருடைய சாபத்தினால் என்னைச் சூழ்ந்திருக்கின்றன. யௌவனத்தினால் திரு ப்தியை நான் அடையவில்லை. யதுவே! மூப்புடன்கூடத் தின் பத்தை நீ வாங்கிக்கொள். உன்னுடைய யௌவனத்தினால் நான் போகங்களை அனுபவிப்பேன். ஆயிரம்வருஷங்கள்நிறைந்தபின் நான்

உன்யௌவனத்தை உனக்குக் கொடுத்துவிடுவேன்; துன்பத்தையும் மூப்புடன்கூடப் பெற்றுக்கொள்வேன்" என்றுசொல்ல, யதுவென்னும் புத்திரன் மறுமொழிசொல்லத் தொடங்கினன்.

"ராஜாவே! மூப்பில் பானம்பண்ணுதலாலும் உண்பதனாலும் செய்யப்பட்ட குற்றங்கள் அனேகமுண்டு. ஆதலால், உம்முடைய ஜரையை நான் வாங்கிக்கொள்ளமாட்டேன்; இஃதுஎன்அபிப்பிராயம். மனிதன் ஜரையினால் மீசைநரைத்து உத்ஸாஹம் குறைந்து தளர்ச்சியடைந்து உடம்பெல்லாம் மடிப்புண்டாகிப் பார்க்கவழகுகாமல் பலம் குன்றி இனிதுத்துக் காரியங்களைச்செய்யச் சக்தியில்லாமல் சிறுபெண்களுடைய கூட்டங்களாலும் சேவகக்காரர்களாலும் அவமதிக்கப்படுகிறான். ஆதலால், நான் ஜரையை விரும்பவில்லை. ராஜாவே! உமக்கு என்னிலும் அதிகப்பிரியமான புத்திரர்கள் இருக்கின்றனர். தர்மந்தெரிந்தவரே! ஆதலால், வேறொருவனை ஜரையை வாங்கிக்கொள்ளவேண்டிக்கொள்ளும்" என்றான். இப்படி யதுவினால் நிராகரிக்கப்பட்ட யயாதி மஹாராஜன், "குழந்தாய்! எனது ஹ்ருதயத்திலிருந்து பிறந்த நீ உன்வயஸை எனக்குக் கொடாமையால் உன்னுடைய ராஜ்யத்தை யடையாமலே போகும்" என்றுசொல்லி, துர்வஸுவை நோக்கி, "துர்வஸுவே! புத்திரனே! ஜரையுடன் கூடத் துன்பத்தைவாங்கிக்கொள். உனது யௌவனத்திலே போகங்களை அனுபவிப்பேன். ஆயிரம் வருஷங்கள் நிரம்பினபின் உன் யௌவனத்தைத் திருப்பிக் கொடுத்துவிட்டு ஜரையுடன் துன்பத்தை வாங்கிக் கொள்வேன்" என்று சொன்னன். அதற்குத் துர்வஸு, "தந்தையே! காமஸுகத்தைக் கெடுப்பதும், பலத்தையும் ரூபத்தையும் அழிப்பதும், ஆயுவையும் உயிரையும் கெடுப்பதுமாகிய ஜரையை நான் விரும்பவில்லை" என்று சொன்னதன்மேல் யயாதி "துர்வஸுவே! என் ஹ்ருதயத்திலிருந்து பிறந்த நீ உன்வயஸை எனக்குக்கொடாமையால் உன்னுடைய ராஜ்யத்தையடையும். மூடனே! ஆசாரங்களிலும் தர்மங்களிலும் வ்யவஸ்தை தப்பினவர்களும் சாஸ்திரத்துக்கு மாறானதையுள்ளவர்களும் பாபங்களைத் தின்பவர்களும் எல்லாவித ஸ்திரீகளுக்கும் தாழ்ந்தவர்களும் குருபத்னிகளிடம் சேருகிறவர்களும் திர்யக்ஜாதியின் ஸ்திரீயுள்ளவர்களும் மிருகத்தன்மையுள்ளவர்களும் பாபிஷ்டர்களுமாகிய மிலேச்சர்களுக்கு நீ ராஜாவாவாய்" என்று சபித்தான். அந்த யயாதி தன்புத்திரனாகிய துர்வஸுவை இவ்வாறு சபித்து, சர்மிஷ்டையின் புத்திரனாகிய த்ருஹ்யுவைநோக்கி, அடியில்வருமாறு சொல்லிச்சொன்னான்.

"த்ருஹ்யுவே! நிறத்தையும் அழகையும் கெடுக்கின்ற என் ஜரையை ஆயிரவருஷகாலம் நீ எடுத்துக்கொள்; உன் இளமையைனக்குக் கொடு. ஆயிரவருஷமானபிறகு, யௌவனத்தைத் திருப்பிக்கொடுப்பேன். ஜரையுடன் துன்பத்தை நான் திருப்ப வாங்கிக்கொள்வேன்" என்றுசொல்ல, த்ருஹ்யுவானவன், "ஜரையுள்ளவன் யானையையும் தேரையும் குதிரையையும் ஸ்திரீயையும் அனுபவிக்க மாட்டான். சொல் தவறாதலும் அவனுக்கு உண்டாய்விடுகிறது. அந்தஜரையை நான் விரும்பவில்லை" என்றான். யயாதி "த்ருஹ்யுவே! என் ஹ்ருதயத்திலிருந்து பிறந்த நீ உன்வயஸை எனக்குக் கொடாமைமால் நீ விரும்புகிற இன்பம் உனக்கு எங்கும் நிறைவேறாது. குதிரைகள் கட்டின சிறந்ததேர்களும், குதிரைகளும், யானைகளும், தள்ளுகிற வண்டுகளும், கழுதைகளும், ஒட்டகங்களும், மாடுகளும், பல்லக்குகளும் போகக்கூடாததும், எப்போதும் ஓடத்தாலேயே தாண்டவேண்டியதுமான இடத்தில் ராஜ்யமில்லாமல் உன்னைத்தியோடி போஜன் என்ற பெயரைஅடைந்து இருக்கப்போகிறாய்" என்றான்.

பிறகு யயாதி, (அனுவைனப்பார்த்து), "அனுவே! நீ ஆயிரம்வருஷகாலம் ஜரையுடன்துன்பத்தை வாங்கிக்கொள்; உன் யௌவனத்தினால் நான் போகங்களை அனுபவிப்பேன்" என்றுசொல்ல, அவன், "கிழவன், குழந்தையைப்போல் சுத்தியில்லாமலே பசித்தபோது உணவையுண்ணுகிறான்; காலத்தில் அக்நிஹோத்ரம் செய்யான். அப்படிப்பட்ட மூப்பை நான் விரும்பவில்லை" என்றுசொன்னான். யயாதி, "என் ஹ்ருதயத்திலிருந்து பிறந்த நீ உன்வயஸைக் கொடாமையாலே மூப்புக்குக் குற்றமும் சொன்னபடியால், அந்தக் குற்றத்தை நீ அடைவாய். அனுவே! உன்னுடைய ஸந்ததிகளும் யௌவனவயஸை வந்தவுடன் இறந்துபோம். நீயும், அக்நிஹோத்ரத்தை விட்டவனாவாய்" என்றுசொன்னான்.

புதல்வர் நால்வராலும் நிராகரிக்கப்பட்டயயாதி, யதுமுதலிய அந்நால்வரையும் சபித்துப் பூருவைத் தன்சொல் தவறாதவனென்று நினைத்து அவனிடஞ்சென்று, "பூருவே! நீ எனக்கு அன்பனான புதல்வன். நீ மிகச்சிறந்தவனாவாய்; குழந்தாய்! மூப்பும் படிப்புக்களும் சுக்காசாரியர் சாபத்தினால் என்னைச் சூழ்ந்தன. யௌவனவயஸ்ஸுத்தில் எனக்குத் திருப்தியாகவில்லை. பூருவே! ஜரையுடன் துன்பத்தை நீ வாங்கிக்கொள். சிலகாலம் உன்வயஸினால் போகங்களை அனுபவிக்கக்கடவேன். ஆயிரம்வருஷம் நிரம்பினதும்,

உன் யௌவனத்தைத் திருப்பிக் கொடுத்துவிட்டுத் துன்பத்தை ஜரை யுடன் வாங்கிக்கொள்வேன்" என்றுசொன்னன்.

இவ்வாறு சொல்லப்பட்ட பூருவானவன் மனத்தில் கபடமின் றித் தன் தந்தையைநோக்கி, "மஹாராஜாவே! நீர் எதைச்சொல்லுகி றீரோ அதைச்செய்வேன். குருவின்வாக்கியம் மனிதர்களுக்குப் புண் ணியத்தையும் சுவர்க்கத்தையும் நீர்க்காயுஸையும் செய்யத்தக்கது. இந்தான் குருவின் அனுக்கிரகத்தினால் மூன்று லோகங்களுக்கும் ஆதிபத்தியத்தை அடைந்தான். குருவினுடைய அங்கீகாரம் கிடைத் தால் எல்லாவிருப்பங்களையும் ஒருவன் அடைவான். நீர் எதுவரை யில் விரும்புகிறீரோ, அதுவரையில் உமதுஜரையை வஹிப்பேன். ராஜாவே! ஜரையுடன் துன்பத்தையும் வாங்கிக்கொள்வேன். என் னிடமிருந்து யௌவனத்தைப் பெற்றுக்கொள்ளுங்; விருப்பியலோக களை அனுபவியும். நான் யௌவனத்தை உமக்குக் கொடுத்துவிட்டு, ஜரையினால் மூடப்பட்டு, உமது வயஸையும் ஏற்றுக்கொண்டு போய்விடுவேன்" என்றுசொன்னன். "குழந் தாய்! பூருவே! உன்னிடம் ஸந்தோஷமடைகிறேன். ஸந்தோஷத் துடன் இதை (ஜரையை) உனக்குக்கொடுக்கிறேன். உனது ராஜ்யத் தில் பிரஜைகள் எல்லாமனிதர்களும் பிரீதியிருப்பார்கள்" என்று சிறந்த தபஸ்வியாகிய யயாதி சுக்ரனைத்தியானித்து அப்போது மஹா வாகிய பூருவினிடம் ஜரையைமாற்றினன்.

எழுபத்தொன்பதாவது அத்தியாயம்.

ஸம்பவபர்வம். (தொடர்ச்சி.)

பிறகு ராஜரிஷ்டனும் ருகுஷபுத்திரனுமான யயாதி, பூரு வின் வயஸையடைந்து, ஸுபமும் யௌவனமும் பிரம்மனகுமாரனு ஸந்தோஷத்துடன் நான்விருப்பினலோகங்களை அனுபவித்தான். விரு ப்பத்துக்கும் உத்ஸாஹத்துக்கும் தக்கபடி அந்தஅந்தக் காலங்களில் தர்மத்துக்கு விரோதமில்லாமலிருக்கும்படி அந்த ராஜரிஷ்டன் லோகத்தை அனுபவித்தான். யஜ்ஞங்களினால் தேவர்களையும், சிரா த்தங்களினால் பிதிர்க்களையும் திருப்திசெய்தான். அன்புடன்கூடிய உபகாரங்களினால் மனுஷ்யர்களையும், அபீஷ்டபூரணம் செய்வதனால் ப்ரா ம்மணர்களையும், அன்னங்களினாலும் தானங்களினாலும் விருந் தினர்களையும், தனரக்ஷணஞ்செய்வதனால் வைசியர்களையும், தயை

யினல் சூத்திரர்களையும், நியாயமான தண்டனையினல் திருடர்களையும், தர்மத்தினல் எல்லாஜனங்களையும் ரஞ்சனம் செய்து கொண்டு இரண்டாவது இந்திரனே கேரில்வந்ததுபோல யயாதி ராஜ் யபரிபாலனஞ்செய்தான். சிங்கம்போன்ற பராக்கிரமமுள்ள அந்த ராஜா, இளமைப்பிராயத்தோடு போகங்களை அடைந்து தர்மத்துக்கு விரோதமில்லாமல் மேலானஸுகத்தை அனுபவித்தான். மனிதர்க ளைக் காப்பாற்றுகிற அவ்வரசன் இனியபோகங்களை அடைந்து ஸுகி தது ஆயிரம்வருஷம் முடியுங்காலத்தை வருத்தத்துடன் நினைத்தான். வீரனும் காலத்தையறிந்தவனுமாகிய அந்தராஜரிஷி, யௌவனத்தை யடைந்தபின் ஆயிரம்வருஷகாலங்களை நிமிஷங்களாகவும் நொடி களாகவும் கணக்கிட்டு விச்வாசிஎன்னும் அப்ஸரஸுடன் கூடி நந்த னவனத்திலும் அளகாபுரியிலும் மேருவின் டைகொடுமுடியிலும் அந் தக்காலமெல்லாம் ரமித்துக்கொண்டு ஆனந்தித்தான். அப்போது அந் தத் தர்மாத்துமாவாகிய அரசன் காலத்தை ஆராய்ந்து குறித்தகாலம் பூர்த்தியானதை நினைந்து, புத்திரனகிய பூருவைப்பார்த்துச் சொன்ன தாவது:—

"உதிரிகளை யடக்குகின்றவனே! புத்திரனே! நான், உனதுயௌ வனத்தைக்கொண்டு விருப்பத்திற்கும் மனஉத்ஸாஹத்துக்கும் தக்க படி குறிப்பிட்ட காலம்வரையில் விஷயஸுகங்களை அனுபவித்தேன். விருப்பமானது விரும்பினவற்றை யனுபவிப்பதனல் அடங்குவது ஒரு காலத்திலுமில்லை; நெய்விடுவதனல் அக்னிஎப்படியோ அப்படியே இன்னுமதிகமாகத்தான் விருத்தியாகிறது. இந்தப் பூமியிலுள்ளநெல், யவம் முதலான தானியங்களும், பொன்னும்,பசுக்களும்,பெண்களும் ஒருவனுக்கும் திருப்தியாகா; ஆகலால், ஆசையைவிடவேண்டும். ஏது நல்லநிலில்லாதவர்களுக்கு விடமுடியாதோ! எதுமனிதன் தளர்ச்சிய டைக்காமல் தான் தளர்ச்சியடையாதோ! மரணமுதலியவரையிலு முள்ள நோகளோ! அப்படிப்பட்டதாகிய ஆசையை விடுகிறவனுக்குத் தான் ஸுகம்; தான் காமஸுகங்களில் மனத்தைச் செலுத்தினபின் ஆயிரம்வருஷங்கள் நிறைந்தன. ஆயினும், எனக்கு இந்தஸுகங்களில் ஆசை ஒவ்வொருநாளும் புதிதாக உண்டாகிறது. ஆகலால், இதை நான்விட்டுப் பிரம்மத்தினிடம் மனத்தைவைத்து, * இரண்டைவிட்டு, மனதைப்புறமெயழித்து, மிருகங்களுடன் ஸஞ்சரிக்கப் போகி றேன். பூருவே! உன்னிடம் ஸந்தோஷமடைந்திருக்கிறேன். உனக் குச் சிரேயஸ் உண்டாகக்கடவது. இந்த உனதுயௌவனத்தை நீவாங்

* சீதோஷ்ணம்; சுகதுக்கம்; லாபநஷ்டம்; ஜயாபஜயம்.

கிக்கொள். இந்த ராஜ்யத்தையும் நீயேபெற்றுக்கொள். நீ எது வரையில் யௌவனம் விரும்புகிறாயோ அதுவரையில் தீர்க்காயுஸுடன் அதை அனுபவிக்கக்கடவாய். நீதானே என்பிரியத்தைச் செய்த புத்திரன்" என்பது.

அப்போதே நகுஷபுத்ரனுகிய யயாதிராஜன் ஜரையை யடைந்தான். சிறந்தமனமுள்ள பூருவும் திரும்பவும் தன் யௌவனத்தை யடைந்தான். கனிஷ்டபுத்ரனுகிய பூருவுக்கு ராஜ்யாபிஷேகம்செய்யக் கருதின அரசனே நோக்கி, பிராம்மணர் முதலிய நான்குவருணத்தார் களும், "பிரபுவே! சுக்கிராசாரியருடைய பேரனும், தேவயானியின் புத்திரனும், ஜ்யேஷ்டனுமாகிய யதுவைத்தாண்டிப் பூருவுக்கு ராஜ்யத்தை எவ்வாறு கொடுக்கிறாய்! யது, உன்னுடைய முதற்பிள்ளை, அவனுக்குப் பின்பிறந்தவன் துர்வஸு. சர்மிஷ்டையின்புத்ரன் த்ருஹ்யு; அவன்பின் அனு; பிறகு பூரு. மூத்தவர்களைத் தாண்டிக் கடைசியவன் ராஜ்யத்திற்கு எவ்வாறு உரியவன்? இதை உனக்குத் தெரிவிக்கிறோம். நீ தர்மத்தைக்காப்பாற்று" என்றுகூறினர்.

யயாதி, "பிராமணர்கள் முதலியஎல்லாவருணத்தாரும்ஜ்யேஷ்டனுக்கு ராஜ்யம் எவ்வகையிலும் கொடுக்கத்தகாதென்பதைப் பற்றி நான் சொல்வதைக் கேட்கக்கடவர். ஜ்யேஷ்டனுகிய யது, என் கட்டளையை அனுஸரிக்கவில்லை. பிதாவுக்கு விரோதமாக நடப்பவன் எவனை அவனைப் புத்திரனென்று பெரியோர்கள் நினைக்கவில்லை. தாய்தந்தைபர்கள் சொல்லைச்செய்பவனும், அவர்களுக்கு வேண்டியவனும் நெறிதவறுதவனும், தாய்தந்தைகளிடம் புத்திரன் நடக்கவேண்டியபடி நடந்துகொள்பவனும் எவனோ அவன்தான் புத்திரன். புத்தென்பது நரகத்தின்பெயர். துக்கத்தை நரகமென்றறிகின்றனர். இம்மையிலும் மறுமையிலும் அந்த நரகமென்னப்பட்ட துக்கத்திலிருந்து காப்பாற்றுவதனால் எல்லாரும் புத்திரனை விரும்புகின்றனர். பிதிர்க்களையும், தேவர்களையும், ரிஷிகளையும் பூஜிப்பதில் நன்னடத்திருப்பவனும் அவர்களுக்கு நன்மைசெய்பவனுமாகிய புத்திரன் எவனை அவனைத்தான் ஜ்யேஷ்டபுத்திரன் என்பர். ஊமையும், குருடனும், செவிடனும், வெண்குஷ்டமுள்ளவனும், தன்தர்மத்தைச் செய்யாதவனும், திருடனும், பாபியும் முதலிற் பிறந்தஇனால்ஜ்யேஷ்டபுத்திரனென்று சொல்லப்படுவதில்லை. இவ்வுலகத்தும் அவ்வுலகத்தும் நன்மையைச்செய்கின்ற குணமுள்ள சிறந்த புத்திரன்தான் ஜ்யேஷ்டபாகம் பெற்றுக்கொள்ளத் தகுதியுள்ளவன். அவன்தான் புத்திரன். மற்றவன் புத்திரன் அல்லன்; ஹீனனவன். தர்மந் தெரிந்தவர்கள், பிதிர்க்க

ளுக்குப் புண்ணியம் புத்திரனுலுண்டாகிறதென்று கூறுகின்றனர். என்னுடைய ஹ்ருதயத்திலிருந்து இவன் பிறந்தவனென்று புத்திர ஜனனத்தைப்பற்றி வேதம் சொல்லுகிறது. இந்தப்பிதாவின் தேக ஸம்பந்தமானவையெல்லாம் புத்ரனுக்கும் உண்டாயிருக்கின்றன. அதனுல்தானே புத்திரன்என்று சுருதி சொல்லுகிறது. யதுவினுல் நான் அவமதிக்கப்பட்டேன். அப்படியே துர்வஸுவினுலும் த்ருஹ்யுவினுலும் அனுவினுலும் என்விஷயத்தில் மிகவும் அவமதி செய்யப்பட்டது. பூருமட்டும் என்சொல்லைச் செய்தான். என்னை விசேஷமாகக் கௌரவித்தான். என்ஜரையை வாங்கிக்கொண்ட கடையவன்தான் என்சொத்தை வாங்கிக்கொள்வதற்குரிய புத்திரன். பூருதான் எனக்கு மித்திரனுக இருந்து என்விருப்பத்தை நிறைவேற்றினன். கவிபுத்திரராகிய சுக்ராசாரியரும், 'உனக்கு ஒத்திருக்கும் புத்திரன் எவனை அவன்தான் ராஜா ; பூமிக்கு அதிபன்' என்றவரத்தைத் தாமேகொடுத்தார். புத்திரர்களுக்குள் எவன் பிதாவுக்கு இணங்கி நடப்பனை அந்தப் புத்திரன்தான் தாயபாகத்திற்கு உரியவன். இவ்வாறு உங்களைவேண்டுகிறேன். பூருவுக்கு ராஜ்யாபிஷேகஞ் செய்ய வேண்டும்" என்றான்.

"எந்தப்புத்திரன் குணங்கள் நிரம்பினவனும் எப்போதும் தாய்தந்தையர்களுக்கு வேண்டியவனுமாக இருக்கிறனை அவன் எல்லா நன்மைகளுக்குமுரியவன். சிறியவனுயிருந்தாலும் அவன் பெரியவனென்று வேதத்திலும் தர்மசாஸ்திரங்களிலும் முன்னே ரிஷிகளால் சொல்லப்பட்டிருக்கிறது. 'உனக்குப் பிரியஞ்செய்த புத்திரனுகியபூரு இந்த ராஜ்யபாகத்திற்குத் தகுதியுள்ளவன்' என்று சுக்கிரரும் வரம்கொடுத்திருப்பதனுல் இதை மறுத்துச்சொல்ல முடியாது" என்று நகரத்துஜனங்களும், தேசத்துஜனங்களும் திருப்தியுடன் சொன்னபின், அப்போது யயாதிதன்னுடையபுத்திரனுகிய பூருவுக்கு ராஜ்யாபிஷேகம் செய்வித்தான். யது, துர்வஸு, த்ருஹ்யு, அவன் தம்பியாகிய அனு ஆகிய தன்புத்திரர்களை ராஜ்யபாகத்தின் எல்லைக்கோடிகளில் நியமித்து, பூருவுக்கு ராஜ்யத்தைக்கொடுத்து, வனவாஸத்துக்குத் தீக்ஷைசெய்துகொண்டு அந்தராஜ பிரம்மரிஷிகளுடன் நகரம் விட்டுப் புறப்பட்டான். பரதரே! அந்தராஜா தேவயானி, சர்மிஷ்டை என்னும் பாரிமைகளுடன்சேர்ந்து வனத்தில் உத்தமமான தவஞ்செய்தான். யதுவினிடமிருந்து யாதவர்கள் பிறந்தார்கள். துர்வஸுவினிடமிருந்து பிறந்தவர்கள் யவனர்கள் என்னப்படுகிறவர்கள். த்ருஹ்யுவின் புத்திரர்கள் போஜர்கள். அனுவின்புத்திரர்கள் மிலேச்ச

ஜாதியார்கள். ராஜாதேவ! பூருவினிடமிருந்து வந்தது பௌரவ வம்சம். ஜீவிதகாங்ஷியாகிய நீர் இந்தராஜ்யத்தை ஆயிரம்வருஷகாலம் ஆளுவதற்கு அந்தவம்சத்தில் பிறந்திருக்கிறீர்." என்று கூறினர்.

எண்பதாவது அத்தியாயம்.

ஸம்பவபர்வம் (தொடர்ச்சி).

யயாதி சரித்திரத்தின் பிற்பாதி).

வைசம்பாயனர், "இவ்வாறு ருகுஷபுத்திரனிடம் அந்தயயாதி மஹாராஜன், தன் பிரியமானபுத்திரனை ராஜ்யபத்தில் அபிஷேகஞ் செய்வித்துத் திருப்தியடைந்தவனாக வானப்ரஸ்தாச்ரமம் ஏற்றுக் கொண்டு சென்றான். அரிந்தமன் முதலானவர்களைக் கிழக்கு திசையும் புஜித்துக்கொண்டு புலன்களையடக்கிப் பிராமணர்களுடன் வனத்தில் வாஸஞ்செய்து, அதன்பிறகு இவ்வுலகத்தைவிட்டுச் சுவர்க்கம்போனான். பிறகு ஸுதர்சனமகாபும் ஸுகபமகாபும் சுவர்க்க வாஸத்தை அனுபவிக்கையில் அவன் மிக நீண்டகாலமாகிய காலத்தில் ஒரு நாளன்று இந்திரனைக் கண்டான். ஸுதர்சனன் தேவர்களை கிழக்குதிசையின் ஈசுவரர்களாக அறிந்தான். "பிராணனைதர! சுவர்க்கம்போய்ச் சேர்வதற்கு ஏதுவாகிய தர்மத்தில் எவரிடத்தில் அதிகநிஷ்டையுள்ளவர்? என்னிடத்தைவிட்டு எழுவினிடமும் பூரியினிடம் சென்றால் ஆகாயத்தில் அவன் அறிவோம் நீ நின்றவன் பூர்வாசனைகளால் வளர்ந்தவன், அஷ்டகன், பிரதர்த்தனன், சிபியென்ற ராஜர்களோ அல்லாயில் எவர்களிடத்தில் அந்த ஆகாயத்தினின்றும் அவர்களிடம் நீ நின்றவன் பூர்வாசனைகளால் என்னை அறிகிறாய்? பிராமணரே! இவர்களைப்பார்க்கிலும் புண்யம் பண்ணிய இந்தப் பிராமணர்களின் கூட்டத்தில் புண்ணியலோகத்தில் சேர்ந்தவர்களை நான் பார்க்கிறேன். குருவாயிருந்தது விருத்திரிபாவும் அக்னிஷ்டோமயாஜி நிஜஸோமபானமுமாகிய யயாதியும் அவர்கள் இந்திரனுக்கு ஸமானமாகவல்லோ இருந்தார்கள். விசாலமான புகழ் பெற்றவனும் உன்னையான புகழ்வாய்ந்தவனுமாகிய அரிஷ்டநேமியின் குமாரனே இங்குள்ள ஸ்வர்க்கத்தில் நடந்தாயினும் சரித்திரமுழு

வதையும் நான் கேட்க விரும்புகிறேன்" என்றுசொல்ல, வைசம்பாயனர் சொல்லத் தொடங்கினர்.

"ஆ!! ஆ!! நன்று! புண்ணியமான விஷயமடங்கியதும் எல்லாப் பாவங்களையும் ஒழிப்பதுமாகிய, சுவர்க்கலோகத்திலும் இவ்வுலகத்திலும் நடந்ததாகிய யயாதியின் பிற்பட்டகதையை உமக்குச்சொல்லுவேன். நகுஷபுத்திரனுகிய யயாதிராஜா கடைசிப்புத்திரனுகிய பூருவுக்கு ராஜ்யத்தில் அபிஷேகஞ்செய்வித்து மகிழ்ச்சியோடு வனஞ்சென்றான். அப்போது அவ்வரசன் யதுமுதலானபுத்திரர்களைத் தேசங்களின்கோடிகளில் நியமித்துவிட்டு வனத்தில் காய்கிழங்குகளைப் புஜித்துக்கொண்டு நீண்டகாலம் வஸித்தான். பரிசுத்தமான மனசோடு கோபத்தை யடக்கி, பிதிர்க்களையும் தேவர்களையும் திருப்தி செய்வித்துக்கொண்டு, வானப்பிரஸ்தர்களின் ஆசாரத்தை அனுஸரித்து சாஸ்திரப்படி அக்னிஹோத்திரஞ் செய்துகொண்டு, அந்தப்பிரபு சிதறினதானியங்களையும் கொய்களையும் ஜீவனமாகவுத்துக்கொண்டு, காட்டிலுள்ள அன்னத்தினல் அதிதிகளைத் திருப்தி செய்வித்து, சேஷமாகிய அன்னத்தினல் தான் ஆகாரஞ் செய்துகொண்டிருந்தான். ஆயிரம்வருஷகாலம் பூர்ணமாக அந்த அரசன் இவ்விதமான ஆகாரத்தோடிருந்தான். முப்பதுவருஷகாலம் ஜலத்தைமாத்திரம் உணவாகக்கொண்டு வாக்கையும் மனத்தையும் கட்டியிருந்தான். அதன்பின் ஒரு வருஷகாலம் வாயுபக்ஷணஞ்செய்துகொண்டு நிராஹாரமாயிருந்தான். அவ்வாறு * ஐந்து அக்னிகளின் மத்தியில் ஒரு வருஷம் அவன் தவஞ்செய்தான். ஆயுமாதகாலம் காற்றைமாத்ரம் பக்ஷித்துக்கொண்டு, ஒற்றைக்காலால் நின்றுகொண்டிருந்தான். பரிசுத்தமான கீர்த்திபெற்ற அவன் ஆகாசம் பூமி இரண்டையும், (கீர்த்தியினல்) வியாபித்துச் சுவர்க்கஞ் சென்றனன்.

எண்பத்தோராவது அத்தியாயம்.

ஸம்பவபர்வம். (தொடர்ச்சி.)

ஸ்வர்க்கம் போய்த் தேவர்களாலும் ஸாத்தியர்களாலும் ஸப்தரிருத்துக்களாலும் அஷ்டவஸுக்களாலும் பூஜிக்கப்பட்டு, தேவர்களுடைய க்ருஹங்களில் வாஸஞ் செய்துகொண்டிருந்த புண்ணியஞ் செய்தவனும் இந்திரியங்களை ஜயித்தவனுமாகிய அந்தஅரசர்களுக்குள்

---

* காலுபக்கமும் காலு அக்னிகளும் மேலேசூரியனும்.

அரசனையயாதியென்னுமராஜா தேவலோகத்திற்கும் பிரம்மலோகத்திற்கும் போய்வந்துகொண்டு நெடுங்காலமிருந்தானென்று கேள்வி. அந்த ராஜரிஷ்டனுகிய யயாதி ஒருகாலத்தில் இந்திரனிடம் போனன். அங்கே பேச்சுக்களின்முடிவில், இந்திரன் அவ்வரசனைப் பார்த்து, "எப்போது நீரு உன் ரூபத்தையும் ஜரையையும் வாங்கிக் கொண்டு பூமியில் ஸஞ்சரித்தாயோ அப்போது ராஜ்யத்தைக்கொடுத்து அவனுக்கு நீ என்னசொன்னாய்? இதில் உண்மையைச் சொல்" என்று கேட்டான்.

அதற்கு யயாதி, "கங்கைக்கும் யமுனைக்கும் நடுவிலுள்ள தேசம்முழுதும் உன்னுடையது. பூமியின் மத்திக்கு நராஜா. கோடிகளுக்கு உன்னைவிஹரதர்கள் அதிபர்கள். மனிதன் எழுநூறுத்தனத்தையும் மோசஞ்செய்வதையும் கோபிப்பதையும் கபடத்தையும் பொறுமையையும் த்வேஷத்தையும் செய்யலாகாது. எங்கும் இவற்றைச் செய்வித்தலுமாகாது. ராஜச்ரேஷ்டனே! புத்தியுள்ளவர்கள் மாதாவையும் பிதாவையும் ஜ்யேஷ்டனையும் விந்துவானையும் நிஷ்டையையும் பொறுத்தவனையும் அவமதித்தலாகாது. சத்தியுள்ளவன் எப்போதும்பொறுப்பான். சத்தியில்லாத மனிதன் கோபிப்பான். துஷ்டன் ஸாதுவையும், பலமில்லாதவன் பிருந்த பலமுள்ளவனையும், ரூபமில்லாதவன் ரூபமுள்ளவனையும், குணமில்லாதவன் குணமுள்ளவனையும்; கருமம் விட்டவன் கருமஞ்செய்பவனையும், அதர்மிஷ்டன் தர்மிஷ்டனையும், குணமில்லாதவன் குணமுள்ளவனையும் பரிபவப்படுக்கும். புத்திரனே! இது கலியுகத்தின் லக்ஷணம். ராஜேந்திரனே! இவற்றிற்கு விபரீதமாயனவை க்ருதயுகத்தின்லக்ஷணங்கள். பிராம்மணன், க்ஷத்ரியன், வைசியன், சூத்திரன் யாராகிலும் நல்லவிஷயங்களிற் பிரவர்த்திக்கால் கீர்த்திபெற்றவர்களாகப் புகழப்படுகின்றனர். ஆதலால் ராஜேந்திரனே! மனிதன்சிலகர்மாயான காரியத்தில் மனம்வைத்தவனை இருக்கவேண்டும். உன்னைவிஹரதர்கள் உலகாரியமாதவர்கள்; புகழப்படாதவர்கள்; பரிதிகட்டவர்கள்; பிதாவின்யாபத்தினியில் எல்லாரும் தேசத்தின்கோடிகளுக்கு அதிபராயிருந்தவர் என்றுசொன்னேன்" என்றான். இந்திரன், "ராஜாவே! நீ தர்மாநுஷ்டானமுடையவனாயிருக்கிறாய். மேலானதர்மத்தை ஸ்துதிக்கிறாய். ராஜரிஷியாகிய உனக்கிஷ்டமான மேலான வரத்தைத் தருகிறேன்" என்றுசொல்ல, யயாதி சொல்லத் தொடங்குவான்.

"தேகரோகமடைந்தும் தேகரோகமாதவன் சிறந்தவன்; பிறரால் தையல்லாதவனிலும், பொறுமையுள்ளவன் சிறந்தவன்; பலிதரல்

லாதவற்றைப் பார்க்கிலும் மனிதர்சிறந்தவர்; அனித்துவானிலும் விந்துவாண்சிறந்தவன். ஒருவன் திட்டப்பட்டாலும் அதற்குப் பிரதியாகத் திட்டக்கூடாது. பொறுக்கிறவனுடைய வருத்தமே திட்டுகிறவனை எரித்துவிடும். திட்டுகிறவனுடைய புண்ணியத்தையும் திட்டப்படுகிறவன் அடைவான். யாருக்கும் புண்ணீக்குத்துகிறது போன்ற மிக்கதுன்பத்தைச் செய்கிறவனுகவும் ஹிம்ஸையான சொல்லைச் சொல்லுகிறவனுகவுமிருத்தல் தகாது. குறைந்தவனிடமிருந்து அதிகத்தை வாங்கத்தகாது. இவனுடையஎந்தச்சொல்லினால் அயலான்துன்பம் அடைவதினை அந்த அமங்களமும் பாபலோகத்துக்கு ஹேதுவுமாகியசொல்லைச் சொல்லலாகாது. புண்ணீக் குத்துகிறது போன்ற மிக்கதுன்பத்தைச்செய்கிறவனும் கொடியவனும்கடுஞ்சொல்லுடையவனும் முள்ளைப்போன்ற சொற்களினால் மனிதர்களைக்குத்துகிறவனும், ஜனங்களுக்குள் பிரிந்த அமங்களமுள்ளவனென்றும் வாயில் நிருதியென்னும் தேவதையை வஹிக்கின்றவனென்றும் அறியத்தக்கவன். யோக்கியமான கடையுள்ளவன் யோக்கியர்களை அணுகிநின்று கடக்கவேண்டும். முன்னும் ஸாதுக்களினால் பூஜித்த மார்க்கம்படவேண்டும். *பின்னும் ஸாதுக்களினால்காப்பாற்றப்படவேண்டும். அயோக்கியர்களுடைய வரைகடந்தபேச்சுக்களை எப்போதும் பொறுத்தல்வேண்டும். தானும் நல்ல கடைபையுடையவனுகி ஸாதுக்களுடைய கடையையும் கிரஹித்துக்கொள்ளவேண்டும். சொற்களின்வாய் அம்புகள் வாயினின்றும் புறப்படுகின்றன. அவற்றால் அடிக்கப்பட்டவன் இரவும்பகலும் அழுகிறான். அவை பிறருடைய மர்மஸ்தானங்களிலுதான் விழுகின்றன. தெரிந்தவன் அவற்றைப்பிறரிடம் பிரயோகிக்கமாட்டான். பிராணிகளிடத்துக் கருணையுள்ள சத்புருஷன் கொடியும் இன்சொல்லும்போல வசப்படுத்தும் வகை முள்ளிலைக்களிலும் கேளில்லை. ஆதலால், இனியசொல்லே சொல்லத்தக்கது. துர்ச்சொல் எங்கும் சொல்லத்தகாதது. பூஜைக்குரியவர்களை ப்ரயத்னமாகப் பூஜிக்கவேண்டும்; கொடுக்கவேண்டும்; ஒருக்காலும் யாசிக்கக்கூடாது" என்றான்.

---

*யோக்கியர்களால் திருத்தப்படவேண்டும்.

எண்பத்திரண்டாவது அத்தியாயம்.

ஸம்பவபர்வம் (தொடர்ச்சி).

இந்திரன், "ராஜாதிவ! எல்லாக்கர்மங்களையும் பூர்த்திசெய்து இல்லறத்தைவிட்டு வனஞ்சென்றாய்; ஓ சுகுஷபுத்திரனே! யயாதிபிய! அதனால் உன்னைக்கேட்கிறேன். தவத்தில் நீ யாருக்கு ஒப்பானவன்?" என்றுகேட்க, யயாதி, "இந்திரனே! தேவர்களிலும் மனிதர்களிலும் கந்தர்வர்களிலும் ரிஷிகளிலும் தவத்தில் எனக்கு ஒப்பானவன் ஒருவனையும் நான்காணவில்லை" என்று மறுமொழிசொன்னான். "ராஜாதிவ! ஸமானமானவர்களையும் மேலானவர்களையும் தாழ்வானவர்களையும் அவர்களின் மஹிமையையறியாமல் நீ அவமதித்தாயாதலின் உனக்கு இந்தலோகங்கள் முழுவுமில்லையாம். புண்ணியம் அழிந்து இப்போதே விழுவாய்" என்று இந்திரன் சொன்னான்.

யயாதி, "இந்திரனே! தேவர்களையும் ரிஷிகளையும் கந்தர்வர்களையும் மனிதர்களையும் அவமதித்ததினால் எனக்கு லோகங்கள் அழிந்தனவாயின், தேவராஜாதிவ! நான் தேவலோகத்தை விட்டுவிழும்போது, ஸாதுக்களின்நடுவே விழுவதற்குவிருப்பங்கொண்டேன்" என்றான். "ராஜாதிவ! ஸாதுக்களின் மத்தியில்தானே விழுவாய்; அவருடன் பூர்த்தால் திரும்பவும் இந்த ஸ்தானத்தையடைவாய். யயாதிபிய! இதை அறிந்துகொண்டு இனி ஸமானர்களையும் மேலானவர்களையும் தாழ்ந்தவர்களையும் நீ அவமதியாதே" என்று இந்திரன் சொன்னான்.

பிறகு, தேவராஜாவினால் ஆளப்பட்டு புண்ணிய லோகங்களைவிட்டு விழுகின்ற யயாதியைப்பார்த்து, பாஜனிகளுக்குச் சிறந்தவனும் ஸாதுக்களுடைய தர்மானுஷ்டானத்தைத் தர்மஜ்ஞனுமாகிய அஷ்டகனென்பவன் சொன்னதாவது:—

"இந்திரனுக்கொப்பான ரூபமுள்ளவனும் தன் ஒளியினால் அக்னியைப்போல் பிரகாசிப்பவனும் யுவாவாக இருக்கிறீர், இருளைப்போல் எழும்புகின்ற மேகங்களிலிருந்து ஆகாயத்தினின்றும், சிரகங்களுக்குட் சிறந்தவனைய சூரியனைப்போல் விழுகிறீர்; நீயார்? அக்கினிக்கும் சூரியனுக்கும் ஒப்பான ஒளியுள்ளவனும் அளவிடக்கூடாதவனுமாகிய நீ சூரியமண்டலமாகிய தர்மக்களத்திலிருந்து விழுவதைக்கண்டு, இஃது என்னவிழுகின்றதென்று ஊகித்துக்கொண்டு எல்லாரும் பிரமித்துப்போயிருக்கிறோம். தேவர்களின் மார்க்கத்தில் நிற்பவனும் இந்திரனுக்கும் சூரியனுக்கும் விஷ்ணுவுக்கும்

ஒப்பானமஹிமையுள்ளவனுமான உன்னைக்கண்டு நாங்களெல்லாரும் இப்போது நீவிழுவதற்குரிய காரணத்தை அறியவிரும்பி உன்னை எதிர்கொண்டழைக்கிறோம். உன்னை முதலிற்கேட்கவும் நாங்கள் தைரியப்படவில்லை. நீயும் நாங்கள் யாரென்பதைப்பற்றி எங்களை விசாரிக்கவில்லை. ஆயினும், உன்னைக்கேட்கிறேன். ஆசைப்படத் தக்க ரூபமுள்ளவனே! நீ யாரைச்சேர்ந்தவன்? என்னகாரணத்தி னால் இங்குவந்தாய்? இந்திரனுக்கொப்பான பிரபாவமுள்ளவனே! உனதுபயம் நீங்கட்டும். துக்கத்தையும் மயக்கத்தையும் சீக்கிரம் விட்டுவிடு. மாதுக்களிடமிருக்கின்ற உன்னைப் பலாத்காரஞ்செய் வதற்கு, பலாசுரனைக்கொன்ற இந்திரனும் சமர்த்தனல்லன். தேவேந் திரனுக்கொப்பானவனே! லோகத்திலிருந்துதவறின மாதுக்களுக்கு எப்போதும் மாதுக்கள்தாமே ஆதாரம். ஸ்தாவரங்களுக்கும் ஜங்க மங்களுக்கும் பிரபுக்களாகிய அந்த மாதுக்கள் சேர்ந்திருக்கின்றனர். நீ உன்னைப்போன்ற மாதுக்களிடம் நிலைபெற்றிருக்கிறாய்; தஹிப்ப தில் அக்னி * பிரபு; விதைவிதைப்பதில் பூமி பிரபு; பிரகாசம் உண்டு பண்ணுவதில் சூரியன் பிரபு; மாதுக்களுக்குத் தம்மிடம் தேடிவந்த வனை அதிகி பிரபு" என்பது.

எண்பத்துமூன்றுவது அத்தியாயம்.

ஸம்பவபர்வம். (தொடர்ச்சி.)

யயாதி: "நான், நகுஷனுடைய புத்திரனும், பூருவின் பிதாவு மாகியயயாதியென்பவன். எல்லாப்பிராணிகளையும் அவமதித்ததனால் தேவர்களும் ரிஷித்களும் நிஷிக்களுமிருக்கும் லோகத்தைவிட்டு விலக்கப்பட்டுப் புண்ணியம் குறைந்து நழுவிவிழுகிறேன். நான் உப் களிலும் வயலில் மூத்தவனுதலால் உங்களுக்கு நான் அபிவாதனம் செய்யவில்லை. வித்தையினாலாவது தவத்தினாலாவது ஜன்மத்தினு லாவது எவன்பெரியவனோ அவன்தான் † க்ஷத்ரியர்களில் பூஜ்யனாகி றான்" என்றான். அஷ்டகன் "ராஜாவே! நீ இவ்வாறுசொன்னாய்; ஆகிலும், எவன் வயஸுமிருந்தவனோ அவன் பெரியவனாகச் சொல் லப்படுகிறதில்லை. க்ஷத்ரியர்களுக்குள் எவன் வித்தையினாலும் தவ த்தினாலும் மேம்பட்டவனோ, அவன்தான் பூஜ்யனாகிறான்" என்றான்.

---

* ஸமர்த்தன்.

† இருபிறப்பாளர். அவர் பிராமணரும் க்ஷத்திரியரும் வைசியருமாவர்.

யயாதி, "நல்லகர்மங்களுக்குப் பாபம் விரோதியென்றுசொல்லுகின்றனர். இழிவானலோகத்திற்குக்காரணமாகிய அந்தப்பாபம்பணிவில்லாதவனிடம் இருக்கின்றது. அயோக்கியர்களுடைய இந்தப்பாபத்தை ஸாதுக்கள் ஒத்துக்கொள்வதில்லை. ஸாதுக்கள் எப்படி இந்த நல்லகருமங்களுக்கு ஸாதகர்களாகலாமோ அப்படி நடந்தனர். 'எனக்கு மிகுந்த தனமிருந்தது; அதுபோய்விட்டது; நான் முயற்சிசெய்தும் அதை அடைவதில்லை' என்று தெரிந்துகொண்டு ஆத்மாவினுடைய ஹிதத்திலேயே ஊக்கத்துடனிருப்பவன் எவனோ அந்தப் புத்திசாலிதான் தெரிந்தவன். மிகுந்த தனமுள்ள எவன் நல்ல யஜ்ஞங்களைச் செய்கிறவனுகவும்எல்லாக்கல்விகளிலும் தேர்ச்சியடைந்தவனுகவுமிருக்கிறானோ, புத்திமானுகிய அந்தப்புருஷன் வேதங்களை ஓதித் தேகத்தைத் தவத்துடன்கூட்டி அஜ்ஞானம்நீங்கிச் சுவர்க்கத்திற்குச் செல்வன். பெரிய செல்வத்தினால் ஒருபோதும் ஸந்தோஷமடையக்கூடாது. வேதங்களை ஓதவேண்டும். அஹங்காரத்தைவிடவேண்டும். இவ்வுலகத்தில் வெவ்வேறு தன்மையுள்ள அனேகர்கள் தெய்வத்துக்குட்பட்டவராகச் செய்கையும் ஸாமர்த்தியமும்அழிந்துபோயிருக்கின்றனர். தைரியமுள்ளவன் தன்புத்தியினால் தெய்வம் அதிகபலமுள்ளதென்று நினைத்திருப்பதனால் அவன் ஸுகத்துக்காகவும்பாது அவற்றினால் * கெடுக்கப்படான். விதிவசமாக நேர்ந்த இன்பத்தையும் துன்பத்தையும் அனுபவிக்கிறன். தன் சக்தியினால்ஆவதொன்றுமில்லை. அதனால்தெய்வம்பெரிதென்றுநினைப்பவன் எவ்வகையிலும் வ்யஸனமும் ஸந்தாஷமும்படான். ஞானமுள்ளவன் துக்ககாரணங்களினால் துக்கப்படலாகாது. ஸுககாரணங்களினால் ஸந்தாஷப்படவுங்கூடாது. எந்தக்காலத்திலும் ஒரேவிதமாக இருத்தல்வேண்டும். விதி அதிகவன்மையுள்ளதென்றுநினைத்து எவ்வகையாலும் வ்யஸனத்தையும் ஸந்தாஷத்தையும் அடையத்தகாது. அஷ்டகனே! பிரம்மா, என்னை உலகத்தில் எவ்விதமாக ஸ்ருஷ்டித்திருக்கிறாரோ, அவ்விதமாகவோ நான் நிச்சயமாக இருக்கவேண்டியவன் என்றுநினைத்து அதனால் நான் பயம்நேரும்போது ஒருபொழுதும் கலங்குவதில்லை. என்மனவில் வ்யஸனம் சிறிதும் இல்லை. † ஸ்வேதஜங்களும், அண்டஜங்களும், உத்பிஜ்ஜங்களும், ஸர்ப்பங்களும், புழுக்களுப, ஜலத்திலுள்ள மீன்களும், கற்களும், புற்களும், கட்டைகளுமாகிய யாவும் தம்தம்விதி முடிந்தபின் அவற்

* கர்வத்தையும் சோர்வையும் அடையான்.

† 236-ஆம்பக்கத்தில் இந்த அடையாளமுள்ளகுறிப்பைப் பார்க்க.

றின் * இயற்கையை அடைகின்றன. அஷ்டகனே! ஸுகமும் துக்கமும் நிலையற்றவையென்பதையறிந்தபின் நான் எதனால் துன்பமடைவேன்; என்னசெய்வேன்; எதைச்செய்துதான் துன்பப்படாமலிருப்பேன்; ஆதலால் விவேகத்தைக்கொண்டு துக்கத்தைவிலக்குகிறேன்" என்றுசொன்னன்.

பிறகுஅஷ்டகன், தனக்குமாதாமஹனும்குணங்களெல்லாம்நிரம்பினவனுமான யயாதிமஹாராஜா ஸ்வர்க்கத்திலிருப்பதுபோலவே ஆகாசத்திலிருந்து இவ்வாறு பேசும்போது திரும்பவும் அவனைக் கேட்கலானன்.

"ராஜச்ரேஷ்டனே! எந்தஎந்தச் சிறந்தலோகங்களை எவ்வளவுகாலம் எவ்வாறு நீ அனுபவித்தாய்? ராஜாவே! அவற்றையெல்லாம் தெளிவாகச்சொல். தத்துவஞானியைப்போல் நீ தர்மங்களைச்சொல்லுகிறாய்" என்றுகேட்க, யயாதி சொன்னதாவது:—"நான் இந்தப் பூமியில் சக்கரவர்த்தியான ராஜாவாக இருந்தேன். அதன்பின் சிறந்தலோகங்களையும் வசப்படுத்தினேன். அவற்றில் ஆயிரவருஷகாலம் வஸித்தேன். அங்கிருந்து வேறுலோகத்திற்குச்சென்றேன். அங்கே ஆயிரம் வாயில்களுள்ளதும் நூறுயோசனை தூரம் நீண்டதுமாகிய அழகான இந்திரனுடையநகரத்தில் ஆயிரவருஷகாலம்வஸித்தேன். அங்கிருந்து வேறுலோகம் போனேன். அப்போது மேலானதும் அழிவில்லாததும் யாருக்கும் கிடைக்காததுமாகிய லோகநாதரான பிரம்மாவினுடையலோகத்தையடைந்து அதில் ஆயிரம்வருஷம்வரையில் வஸித்தேன். அங்கிருந்தேவேறுலோகம்போனேன். அப்போது நான் நினைத்தபடி ஆனேகலோகங்களில் ஸஞ்சரித்துக்கொண்டு எல்லாத்தேவர்களாலும் பூஜிக்கப்பட்டுத் தேவச்ரேஷ்டர்களுக்கொப்பான மஹிமையையும் ஒளியையும் அடைந்து தேவர்களுக்குந்தேவரான பிரம்மாவின் ஸந்நிதானத்தில் வஸித்தேன். அப்ஸரஸ்ஸுகளுடன் கூடிவிளையாடிக்கொண்டும் அழகானமணமும் ரூபமுமுள்ளபுஷ்பித்தமரங்களைப்பார்த்துக்கொண்டும் பத்துலக்ஷவருஷகாலம்நந்தனவனத்தில் வஸித்தேன். அதன்பின் வெகுகாலம்கடந்தபிறகு அந்தநந்தனவனத்திலிருந்துகொண்டு தேவர்களுடைய ஸுகங்களில் அதிகமாகப்பற்றுவைக்கை இருந்த என்னைப்பார்த்து உக்கிரமானரூபமுள்ள தேவதூதனொருவன் மூன்று மாத்திரைகளுள்ள ஸ்வரத்துடன் உரத்தகுரலாக, "அழிந்துபோ" என்று மூன்றுமுறை சொன்னன். ராஜரிஷிம்மமே! இவ்வளவுதான் எனக்குத்தெரியும். உடனே

* அந்தஜன்மத்தின் முடிவு.

புண்ணியமழிந்து நந்தனவனத்திலிருந்து நான் தவறிவிழும்போது, "ஐயோ! கஷ்டம்!! புண்ணியஞ்செய்து நல்ல புகழ்பெற்ற யயாதி, புண்ணியம் அழிந்து இதோவிழுகிறான்!" என்று ஆகாயத்தில் என்னைப்பற்றித் தயையுடன் நிற்கப்பட்டிருக்கின்றதேவர்கள் சொன்ன சொற்களைக் கேட்டேன். பிறகு விழுகின்ற நான் அவர்களைநோக்கி, "நான் எப்படி ஸாதுக்களின்மத்தியில விழுவேன்?" என்றுகேட்க, அவர்களால் நீங்கள்யாகஞ்செய்யுமிடம்தெரிவிக்கப்பட்டது. இதைப் பார்த்துயாகபூமியின் இடத்துக்குரிய தேஹமத்ரவ்யத்தின் வாஸனை புகையினால் கொண்டுவரப்பட்டதை போநதுநெண்டுஸந்தோஷத்துடன் வேகமாகவந்தேன்" என்றான்.

எண்பத்துநான்காவது அத்தியாயம்.

ஸம்பவபர்வம். (தொடர்ச்சி).

ஸ்வாதந்திரியமாய் புண்ணியம் அநுபவிப்பவர் யாவரும்
ஔபயாதையும் பிறகு அஷ்டகனும் யயாதி சொல்வது.

அஷ்டகன், "கிருதயுகத்து ராஜாக்களில் முக்கியமானவனே! நீ நேத்தபடி ஸுபமெடுப்பவனைபபார்த்து நல்லஸ்வர்கலோகத்து நந்தனவனத்தில்வஸித்தவன் அதைவிட்டுப்பூமிக்குவருவதற்குஎன்னகாரணம்" என்றுகேட்க, யயாதி "இருதரிதத்தில் பணமில்லாதவனைப் பார்வையிருந்தாலும் ஸ்ரோத்ரியனுக்குஇருந்தாலும் தன்மனைவியிருந்தாலும் அவனைமனிதர்கள் எப்படிவிடுவிக்கிறார்களோ, அப்படியே அந்தலோகத்தில் புண்ணியபரிக்ஷயமானவுடனே இந்திராதிதேவர்களனைவரும் உடனே விட்டுவிடுகிறார்கள்" என்றுசொன்னான்.

அஷ்டகன், "அந்தலோகத்தில் புண்ணியம் க்ஷயிக்கவாகவாவது * எப்படிஎன்றுஎனக்குத்தில்லாணஸாமிகவும் பார்க்கிறது. என்ன சிறப்புள்ளவர்கள் மாநுடரை மேலாகத்துக்குப் போவார்கள். அவற்றையெல்லாம்சொல்; உன்னைத்தத்துவந்தெரிந்தவனைநான் நினைக்கிறேன்" என்றுகேட்டனன். யயாதி, "ராஜாவே! அவர்களெல்லாரும் அழுதுகொண்டு இந்தப்பூமியிலுள்ள நரகத்தில் விழுகின்றனர். புண்ணியம்போனபிறகு அவர்கள் கழுகுகள், நரிகள் இவற்றினுடம்புகளுக்கு உணவாக ஆகிறார்கள். பல ஜன்மங்களெடுக்கின்றனர். ராஜாவே! ஆதலால், உலகத்தில் கெட்டகாம் இகழத்தக்க நாமகிய

* புண்ணியலோகத்தில் புண்ணியம் கெடாதென்பது கேள்வியின் கருத்து.

கருமத்தை விடவேண்டும். ராஜாவே! உனக்கு நான் * எல்லாம் சொல்லியிருக்கிறேன். மறுபடியும் உனக்கு இப்போது என்ன சொல்லக் கடவேன்; சொல்'' என்றுசொன்னன்.

அஷ்டகன் ''அந்தப் பிராணிகளைக் கழுகுகளும் மயில்களும் மற்றப்பக்ஷிகளும் துண்டித்துவிடுகின்றனவே! பிறகு அவைஎவ்வாறு உண்டாகின்றன? எவ்வாறு வளர்கின்றன? பூமியிலுள்ள நரகமென்று நான் வேறு கேள்விப்படவில்லை'' என்றுகேட்க, யயாதி, ''தேகம் போனபிறகு கருமம் விருத்தியடைவதினால், ஸ்தூலசரீரமடைந்து பிராணிகள் பூமியில் ஜநிக்கின்றன. அவைதாம் இந்தப்பூமியிலுள்ள நரகத்தில் விழுகின்றனவை. அவை அனேகவருஷங்கள் கடந்துபோவதை அறியாமலிருக்கின்றன. அறுபதினாயிரம் வருஷங்களும் எண்பதினாயிரம் வருஷங்களும் ஸ்வர்க்கத்தில் வஸித்து ஆகாயத்தில் பறக்கின்றன. அவைகள் பூமியில்விழும்போது பூமியிலுள்ள பயங்கரமான † ராக்ஷஸர்கள் கூர்மையான பற்களைக்கொண்டு அவற்றைக் கடிக்கின்றனர்'' என்றுசொன்னன்.

அஷ்டகன், ''பாபத்தினால்விழுகின்ற அவைகளைப் பூமியிலுள்ள பயங்கரமான ராக்ஷஸர்கள் கூர்மையானபற்களினால் கடிக்கின்றனரே; அவைகள் மறுபடி எவ்வாறு பிறக்கின்றன? எவ்வாறு வளர்கின்றன? எவ்விதமாகக் கர்ப்பத்திலுண்டாகின்றன?'' என்றுகேட்க, யயாதி, ''புஷ்பங்களையும் பலங்களையும் புஜிப்பதனாலுண்டான ரக்தமானது புருஷனிடமாகாமாறுகிறது. அது புருஷனால்விடப்பட்டு ஸ்த்ரீயின்சோணிதத்தைச் சேருகின்றது. அஃது அவ்விடத்தில் கர்ப்பமாகப் பரிணமிக்கிறது. தேவர்கள் ஆகாயத்தையும் ‡ வாயுவையும் ஜலத்தையும் பூமியையும் மரங்களையும் பூண்டுகளையும் அடைந்துபிறகு நான்குகால்களுள்ளவைகளுமிரண்டுகால்களுள்ளவைகளுமானபிராணிகளெல்லாவற்றையுமடைந்துகர்ப்பங்களில்சேருகின்றனர்'' என்றுசொன்னன்.

''இவ்வுலகத்தில் இந்த மானிடயோனிக்குப் போகிறஜீவன் வேறு சரீரத்தை அடைந்துகொண்டு கர்ப்பத்தில் சேருகிறானா? அல்லது தன்ஸ்வரூபத்தோடு மாத்திரம் போகிறானா? ஸம்சயத்தினால்

* கருமம் அநித்யமாதலின் புண்ணியம் அநித்தியமானது. புண்ணியமழிந்தால் விழுவதும் மறுபடியும் பிறப்பதும் விடமுடியாதவை: ஆதலால், கருமத்தைவிட்டு மோக்ஷத்திற்குக் காரணமான ஞானத்தையே பெறவேண்டுமென்பது கருத்து.

† பிண்டபிழுலியவையும காமக்குரோதம் முதலியவையும் ராக்ஷஸர்கள் என்னப்பட்டன. பிண்டமனவி முதலியவை என்பது பழையவுரை.

‡ இங்கே வாயுவின்பின் தேஜஸைச் சேர்த்துக்கொள்வது வேதத்திற் கொத்தது.

கேட்கிறேன்; எனக்குச்சொல். சரீரத்தின் பருமனையும் உயரத்தை யும் கண் காதுகளையும் புத்தியையும் எதனாலே அடைகிறான்? இதன் உண்மையைக் கேட்கிறேன்; முழுதும் சொல்லு; ஐயா, நாங்களெல் லாரும் உன்னை ஞானியென்று கினைக்கிறோம்" என்று அஷ்டகன் கேட்க, யயாதி, * "பூக்களிலிருந்தும் காய்களிலிருந்தும் வந்த வீரி யத்தை ஸ்திரீயின் ருதுகாலத்தில் கர்ப்பவாயு, கர்ப்பாசயத்தில் கொண்டுவந்து விடுகிறது. அந்தக்கர்ப்பத்தில் அந்தவாயு அந்தவீரி யத்தின் ஸூக்ஷ்மஅவயவங்களில் பிரவேசித்து நாளடைவில் கர்ப் பத்தை விருத்தியாகச்செய்கிறது. அவயவங்கள் பிரிக்கப்பட்டு விரு த்தியடைகிற கர்ப்பம் புத்தியையடைந்து மனுஷ்யனாகி இவ்வுலகத் தில் காதினால் சப்தத்தைக் கேட்கின்றது; கண்ணினால் ரூபத்தைப் பார்க்கின்றது; மூக்கினால் கந்தத்தையும் நாவினால் ரஸத்தையும் த்வக் கினால் ஸ்பரிசத்தையும் மனத்தினால் அபிப்பிராயத்தையும் அறிகின் றது. அஷ்டகா! மஹாத்மாவான ஆத்மாவுக்குச் சரீரத்தில் இந்திரி யங்கள் இவ்வாறு ஸம்பந்தப்பட்டன வென்று அறி" என்று சொன்னான்.

அஷ்டகன், "இறந்துபோன மனிதன் கொஞ்சத்தாவது புதை க்கவாவது இழுத்துவிடவாவது செய்யப்படுகிறான். இறந்து இல்லா மல்போனவன் பிறகு † தன்னையறிவது எப்படி?" என்றுகேட்க, யயாதி, "ராஜலிம்மமே! உயிர்போனபிறகு அவன் தூங்கினவனைப் போல் சப்தம்செய்துகொண்டு, தன்புண்ணியத்தையோ பாபத்தை யோ முன்னிட்டுக்கொண்டு சுவாசத்தின் முனையை அனுஸரித்து இந்தத்தேகத்தைவிட்டு வேறு கர்ப்பத்துக்குப் போகிறான் புண்ணி யஞ்செய்தவர்கள் புண்ணியஜன்மமடைகின்றனர். பாபஞ்செய்தவர் கள் பாபஜன்மமடைகின்றனர். பாபமுள்ளவர்கள் புழுக்களும் பற வைகளுமாகின்றனர். மஹாநுபாவனே! நான் சொல்லவேண்டிய தொன்றுமில்லை. அப்படிப் புண்ணியபாபங்களைச்செய்த பிராணிகள் நான்கு கால்களுள்ளனவும் இரண்டு கால்களுள்ளனவும் ஆறு கால்க ளுள்ளனவுமான கர்ப்பங்களாக ஆகின்றன. இவற்றையெல்லாம் முற் றும் சொன்னேன். ராஜலிம்மமே! இன்னும் என்ன கேட்கிறாய்?" என்று சொன்னான்.

---

* இங்கு "புஷ்பரஸாஞ்ஜிருக்தம்" என்ற பாடத்தைக்கொண்டு புஷ்ப மென்று சொல்லப்பட்ட கருமத்தின் ரஸமாகிய அதிர்ஷ்டத்துடன் சேர்ந்த புருஷவீரியத்தை என்பது பழையஉரை.

† ஞானம் வந்தது எவ்வாறு என்பது கருத்து.

இப்படிச் சொல்லியதைக்கேட்ட அஷ்டகன், "ஐயா! மனிதன் எதைச்செய்தால் சுவர்க்கத்தினாலும் இந்திரயினாலும் மேலான லோகங்களை அடைகிறான்? அந்த மேலானலோகங்களை எந்தக்கிரமத்தினால் அடைகிறான் என்பதை நான்கேட்கிறேன்; எல்லாம் சரியாகச் சொல்" என்றுகேட்க, யயாதி, "தவம், தானம், இந்திரியங்களை யடக்குதல், மனத்தைஜயித்தல், நாணம், உள்ளும்புறமும் ஒத்திருத்தல், எல்லாப் பிராணிகளிடத்தும்தயை ஆகிய இவ்வேழினையே மனிதர்களுக்குச் சுவர்க்கலோகத்தின் பெரியவாயில்களென்று சொல்லுகின்றனர். தமோகுணமிகுந்த மனிதர்கள் எப்போதும் அகங்காரப்படுவதனால் அழிகின்றனர் என்று பெரியோர் சொல்லுகின்றனர். (வேதம்) ஓதித் தன்னைப்பண்டிதனென்று நினைத்துக்கொண்டு தன் கல்வியினால் பிறர்புகழை அழிப்பவனுக்கு நல்லலோகங்கள் அழிவுள்ளவையாகின்றன. அந்தப் பரப்பிரம்மமும்அவனுக்குப்பலனைத்தருவதில்லை. அக்னிஹோத்ரம், * மௌனம், வேதமோதுதல், யாகம் செய்தல் ஆகிய நான்குகருமங்கள் பாபபயத்தைப் போக்குகின்றவை. அந்நான்கு கருமங்களும் பெருமைக்காகச் செய்யப்பட்டவையாயின், பயத்தைக்கொடுக்கின்றன. வெகுமானத்தினால்கௌரவிக்கப்பட்டவன் ஸந்தோஷத்தை அடைதல்தகாது. அவமானத்திற்காகத்துன்பத்தையும் அடையக்கூடாது. இந்தலோகத்தில் ஸாதிக்கள் ஸாதுக்களைப் பூஜிக்கின்றனர். அஸாதுக்கள் ஸாதுக்களுடைய புத்தியை அடைவதில்லை. 'இதற்காகத் தானஞ்செய்வேன்; இதற்காக யாகஞ்செய்வேன்; இதற்காக வேதமோதுவேன்; இதற்காகத் தவஞ் செய்வேன்' என்ற இவை பயங்கரங்களென்று சொல்லுகின்றனர். அவற்றை முழுதும்விடவேண்டும். மனத்தை வசப்படுத்தின எவர்கள், மனம்செல்வதனால் அடையப்பட்ட புராதன ஆதாரமான பிரம்மத்தை யறிகின்றனரோ, அவர்கள் இந்தலோகத்தில் மேலானசாந்தியையும், சரீரத்தைவிட்டபிறகு அந்தப் பிரம்மத்துடன் சேர்ந்து மோக்ஷஸுகத்தையும் அடைவர்" என்றான்.

---

* இந்திரிய நிக்கிரஹம்.

எண்பத்தைந்தாவது அத்தியாயம்.

ஸம்பவபர்வம். (தொடர்ச்சி.)

(பிரம்மசரியம் முதலிய ஆச்ரமங்களைப்பற்றி அஷ்டகன் கேட்க, யயாதி சொல்லுவது.)

அஷ்டகன், யயாதியைப்பார்த்து, "ஆசாரியசுச்ரூஷைசெய்கிற பிரம்மசாரியும், கிருஹஸ்தனும், வானப்பிரஸ்தனும், ஸன்னியாஸியும் ஸரியான மார்க்கத்திலிருந்து தர்மங்களை எப்படிச்செய்யவேண்டும்? இவர்களுக்கு அதேகதர்மங்களை நிஷ்கள் தெரிவிக்கின்றனர்" என்று கேட்க, யயாதி சொல்லுகிறான்.

"உபாத்தியாயர் அழைத்தபின் அத்தியயனஞ் செய்கிறவனும், குருவின் கார்யங்களை வாமஞ் செய்பவனும், முன்வைத்திருப்பவனும், பின்படிப்பவனும், பணிவுள்ளவனும், இந்திரியங்களையடக்கியவனும், திருப்தியுள்ளவனும், ஊக்கமுள்ளவனும், ஓதிவதை விடாதவனுமாகிய பிரம்மசாரி பயன்படுகிறான். குருஹஸ்தன் தர்மத்தினால் கிடைத்த தனத்தைப் பெற்றுக்கொண்டு எப்போதும் யாகமும் தானமும் செய்யக்கடவன்; விருத்தினர்களைப் புசிப்பிக்கக்கடவன்; பிறர் கொடாததை எடுத்துக்கொள்ளாமலிருக்கக்கடவன். இது குருஹஸ்தனைப்பற்றிய பழைமையாகிய ரஹஸ்யமான சாஸ்திரம். தன்சக்தியினால் ஜீவிப்பவனும், பரோபகாரியத்தைநிஷ்டை நிகழ்பவனும், பிறருக்குக் கொடுப்பவனும், பிறரைப் பீடிக்காதவனும், ஆஹாரத்தையும் மைதுனகாரத்தையும் அடக்கினவனுமாகிய வனத்தில்வஸிக்கும் முனியென்று சொல்லப்பட்ட வானப்ரஸ்தன் மேலான ஸித்தியையடைகிறான். தொழிலால் ஜீவிக்காதவனும், குணங்கள் நிரம்பினவனும், எப்போதும் இந்திரியங்களை ஜயித்தவனும், எல்லாவற்றையும்விட்டவனும், வீட்டில் படுக்காதவனும், ஸகாயில் ஒன்றுமில்லாதவனும், செய்கைகளை குறைத்தவனும் தனியாகத் தேசங்களில் ஸஞ்சரிப்பவனுமாக இருப்பவன் ஸந்யாஸியாவன். விருப்பத்தினால் ஸம்பாதிக்கப்பட்ட ஸுகமான புண்ணியலோகங்கள் கர்மாக்களினால் விருப்பமில்லாமல் விடப்பட்டவையாகின்றனவோ அந்தராத்மாவே மனத்தை யடக்கிய அந்தணனுக்கு காட்டிலிருப்பவனுக்கு ஆவதற்கு முயல வேண்டும். காட்டிலிருப்பவன் தன்சரீரத்தின் காரணங்களாகிய ரக்த மாம்ஸ முதலியவற்றைக் காட்டிலேயே விட்டுவிட்டு, (அதனால்) தனக்கு முன் பதின்மரும் தனக்குப் பின் பதின்மருமாகியதன்குலத்தோ

ரையும் இருபத்தோராமவனுகிய தன்னையும் புண்ணியத்தில் நிலைநிறுத்துகிறுன்'' என்று யயாதிசொன்னன்.

அஷ்டகன், "முனிவர்கள் எத்தனைவகைப்படுவார்கள்? * மௌனங்களும் எத்தனை வகையாகின்றன? என்பதைச்சொல்; நாம் கேட்கவிரும்புகிறோம்" என்று கேட்க, யயாதி, "ராஜாவே! எவனுக்கு வனத்தில் வஸிக்கையில் கிராமமும் கிராமத்தில் வஸிக்கையில் வனமும் பின்னிடுகின்றனவோ அவன் முனிஆவான்" என்றுசொன்னன்.

அஷ்டகன், "வனத்தில் வஸிப்பவனுக்குக் கிராமம் பின்னிடுவதும் கிராமத்தில் வஸிப்பவனுக்கு வனம் பின்னிடுவதும் எப்படி?" என்றுகேட்டான். யயாதி, "வனத்தில் வஸிக்கின்றமுனி கிராமத்திலுள்ளவற்றுள் ஒன்றையும் உபயோகம் செய்யக்கூடாது. அவ்வாறு வனத்தில் வஸிப்பவனுக்குக் கிராமம் பின்னிடுகிறது. முனியானவன் அக்கினியில்லாதவனும்வீடில்லாதவனும் பிறந்தகுலமும்மித்தியாவசமுமில்லாதவனுமாகி மறைக்கத்தக்கஅங்கத்தைமறைக்குமளவுவஸ்திரத்தையும் உயிர்தரிக்குமளவு ஆகாரத்தையும் விரும்பக்கடவன். அப்படி கிராமத்தில் வஸிக்கிறவனுக்கு † வனம் பின்னிடுகிறது. எவன் விருப்பங்களையும் கருமங்களையும்விட்டுப் புலன்களையடக்கி ‡மௌனத்தையடைவானே அந்தமுனி இவ்வுலகத்தில்வித்துபெறுவன்.(ஆகாரசுத்தத்திற்காகப்) பற்கள்சுத்தமடைந்தும், (ஹிம்ஸையைவிட்டதற்காக) நகங்கள் அறுக்கப்பட்டும் (மனத்தூய்மைக்காக) எப்போதும் ஸ்நானம்செய்தும், (சாந்திமுதலிய நற்குணங்கள்பொருந்தி) அலங்கரிக்கப்பட்டும், பற்றினல்கட்டப்படாமலுமிருக்கிறஅந்தச்சுத்தமான கருமமுள்ளவனே யார்தாம் பூஜிக்கமாட்டார்கள்? அவன் தவத்தினல் ஒடுக்கப்பட்டு இளைத்து மாம்ஸமும் எலும்பும்நரம்புமாகச் சோஷித்தவனுகி, இவ்வுலகத்தையும் ஜயித்துப் பரலோகத்தையும் ஜயிக்கின்றுன் முனியானவன் மௌனத்தை வஹித்துக்கொண்டு எப்போது §இரண்டைவிட்டவனுகிறுனே அப்போது இந்தலோகத்தையும் ஜயித்துப் பரலோகத்தையும் ஜயிக்கிறுன். முனியானவன் எப்போது பசுவைப்போல் ¶ வாயினல் ஆகாரத்தைத் தேடுகிறுனே

---

* விரதங்கள்.

† கிராமத்திலிருப்பதொன்றையும் கிரஹிக்காமல் வனத்திலிருப்பவன் கிராமத்தை விட்டவன். கிராமத்திலிருந்தும் வனத்திலிருப்பவன்போல் ஒன்றையும் விரும்பாதவனுக்கு வனம்போவதனல் விசேஷமில்லை.

‡ ஒழிவு.

§ சீதம் உஷ்ணம்; ஸுகம் துக்கம்; லாபம் நஷ்டம்; ஜயம் அபஜயம்.

¶ வாயில் வந்து நேர்ந்ததைத் தவிரக் கையினல் ஸம்பாதிக்க முயலாதிருத்தல்.

அப்போது இவ்வுலகமெல்லாம் அவனுடையது. அவன் முக்திக்கும் அருகனுகிறான். கோபமும் ஆசையும் பிறருக்குத் தீங்குசெய்தலும் பொறுமையும் எல்லாருக்கும்பொதுவானதன்மை. விரோதத்தையும் வஞ்சகத்தையும் கர்வத்தையும் கபடத்தையும் கோள்சொல்லுவதையும் கோபத்தையும் ஆசையையும் விட்டுவிட்டவனுக்கு எனதென்பது இல்லையோ அவன்தான் தர்மந்தெரிந்தவன்" என்று சொன்னன்.

அஷ்டகன், "பிரம்மசாரி, கிருஹஸ்தன், வானப்பிரஸ்தன், ஸந்யாஸி இவர்கள் நித்தியமாக உண்ணுகிறவராயிருந்தும் உண்ணுவதனல் பாபத்தை அடையாதிருப்பதெப்படியென்று இப்போது கேட்கிறேன்; எனக்குச் சொல்லவேண்டும்" என்றுகேட்க, யயாதி, "ஸந்யாஸிக்கு எட்டே கவளங்கள் விதிக்கப்பட்டிருக்கின்றன. வானப்பிரஸ்தனுக்குப் பதினறு கவளங்களும் கிருஹஸ்தனுக்கு முப்பத்திரண்டு கவளங்களும் சொல்லப்பட்டன. பிரம்மசாரிக்கு ஸங்கியையில்லை. அஷ்டகா! இவ்வாறு இந்தக் காரணங்களைக்கொண்டு நல்லதும் தீயதும் அறியத்தக்கது" * என்றுசொன்னன்.

எண்பத்தாறுவது அத்தியாயம்.

ஸம்பவபர்வம். (தொடர்ச்சி.)

(அஷ்டகனும் பிரதர்த்தனனும் தங்கட்குப் புண்ணியங்களைக் கொடுப்பதாகச்சொல்ல, யயாதி மறுப்பது.)

அஷ்டகன், "ராஜாவே! சூரியனையும் சந்திரனையும்போல் ஒடுகின்ற முன்சொல்லப்பட்ட (கிராமத்தில் வஸிப்பவனும் வனத்தில் வஸிப்பவனுமாகிய) † இவ்விருவருள் எவன்முதலில் ‡ தேவர்களோடு ஒப்புமையடைகிறான்?" என்றுகேட்க, யயாதி, "கிருஹஸ்தர்களுக்குமேலில் வாஸஞ்செய்யாதவனுகவும் விருப்பத்தின் பிரவர்த்திகளை அடக்கினவனுகவும் கிராமத்திலேயே வஸிக்கும் யதி அவரிருவர்களுள்முதலில் தேவஸாம்யத்தை அடைகிறவன். ¶ எவன் நீண்ட வாழ்நாளை

---

* நியமத்துடன் புஜிப்பதனல் பாபம் வாதென்பது கருத்து.

† யோகியும் ஞானியும் என்பது பழையவுரை. ‡ முத்தியை.

§ வைராக்கியமுற்றவன்.

¶ தவஞ்செய்துகொண்டிருக்கையில் மனஸ் விஷயத்தைப் பற்றியதனல் தவம்கெட்டபிறகு தன்பிழையைப்பற்றி அநுதாபமிருந்தால் வேறுதவம் செய்வதற்கு அந்த அநுதாபமே ஸாதகமாம். பிறகு தவஞ்செய்யப் போதுமான ஆயுள் இராவிட்டால் மறுஜன்மத்திலாவது ஸித்திபெறுவதற்குப் பின்செய்யும் அந்தத் தவம் உதவியாகுமென்பது கருத்து.

அடையாமல் மனத்தின்விகாரத்தை அடைந்துதிரிவதேனை அவன்அவ்வாறு செய்ததனால் அனுதாபப்படுவனேயாயின் பிறகு வேறுதவம் செய்யக்கடவன். *எந்தமனிதன் எப்போதும் பாபகாரியங்களுக்குப் பயந்திருப்பனேனை அவன் எப்போதும் தன் ஸுகத்தைச் செய்துகொண்டிருந்தாலும் மேலான † ஸுகத்தை அடைகிறான். எதுஹிம்ஸையை உண்டுபண்ணுவதோ அதைத்தான் அஸத்தியமென்றுசொல்லுகின்றனர். ராஜாவே! ஒருவன் ஒன்றைத் தன்சொத்தென்றும் அதற்குத்தான் ஸ்வாமியென்றும் நினையாமலும் பலனைக்கருதாமலும் தர்மத்தைச் செய்வானேயின் அதுதான்நேர்மை; அதுதான் நிஷ்டை; அதுதான் யோக்கியம்'' என்றுசொன்னன்.

அஷ்டகன், ''ராஜாவே! இளம்பிராயமுள்ளவனும் புஷ்பமாலைகளை அணிந்தவனும் அழகுள்ளவனும் ஒளியுள்ளவனுமாகிய நீ யாரால் அழைக்கப்பட்டிருக்கிறாய்? யாரால் அனுப்பப்பட்டிருக்கிறாய்? எங்கிருந்துவந்தாய்? எத்திசைநோக்கிவந்தாய்? உனக்குப் பூமியில் வேறு இடம் ஏதாவது இருக்கிறதா?'' என்று கேட்க, யயாதி, ''இவ்வாறு அறிந்தவனும் கூர்மையான புத்தியுள்ளவனும் யோக்கியமான எண்ணமுள்ளவனுமாகிய நான் புண்ணியம்கெட்டு இந்தப்பூமியிலுள்ள நரகத்தில் பிரவேசிக்கிறதற்காக மேலுலகத்திலிருந்து நீக்கப்பட்டுப் பூமிக்குவந்தேன். எனக்கு மேலுலகத்துக்குரிய கருமமெல்லாம் இருந்தது. உங்களுக்கு மறுமொழி சொல்லிவிட்டு உடனே நான் பூமியில் விழப்போகிறேன். பிரம்மாவினால் நியமிக்கப்பட்ட லோகபாலகர்கள் என்னைத் தரிசிக்கவந்திருக்கின்றனர். நல்லவர்களிடம் விழுவதை நான் கேட்டுக்கொண்டேன். எல்லாரும் குணமுள்ளவர்களாக நீங்கள் சேர்ந்திருக்கின்றீர்கள். ராஜாவே! நான் பூமியில் விழப்போகையில் இந்திரனிடத்திலிருந்து இந்தவரம் எனக்குக் கிடைத்தது'' என்று மறுமொழி சொன்னன்.

அஷ்டகன், ''உன்னைக்கேட்கிறேன்; அதுவரையில் நீவிழாதே. ராஜாவே! ஆகாயத்திலாவது சுவர்க்கத்திலாவது உள்ளலோகங்கள்

---

* இங்கு 'பியாத்' என்பதற்கு 'பிப்ருயாத்' என்று பாடங்கொண்டு எந்தமனிதன் ஸுகமென்று சொல்லப்பட்ட பிரம்மத்தை எப்போதும் தியானத்திலுல் தன்மனத்தில் தரித்திருப்பனேனை அவன் பாபகர்மங்களைச் செய்தாலும் நித்யஸுகம் பெறுவானென்பதும், முன்சொன்னவன் யோகியென்றும் இவன் ஞானியென்றும் சொல்வதும் பழையவுரை. ஆனால் நேர்ந்த பிழையில் அநுதாபமும் வரும்பிழையில் பயமும் இருப்பதே ஒருவனுக்கு முக்திபெறுவதற்கு முக்கியமான ஸாதனம் என்பது மூலத்தின் கருத்து.

† மோக்ஷத்தை.

னைக்குண்டா? நீ அதற்குக்காரணமான புண்ணியத்தின் தத்துவ மறிந்தவனென்று நான் நினைக்கிறேன்" என்றுகேட்டான். யயாதி, "இந்தப்பூமியில் சேகரக்குலும் ஆகவங்களும் காடுகளிலும் மலைகளிலு மூளள மிருகங்களும் எத்தக்காலம் வரையில் ஸ்ருஷ்டியிலிருக்குமோ அந்தக்காலம் வரையில் உனக்கு மேலுலகங்கள் இருக்கின்றன. ராஜ ரிஷிமேமே! நீ அவ்வாறு தெரிந்தவனாகின்" என்றான்.

அஷ்டகன், "ராஜரிஷிகளே! மேலுலகத்தில் எனக்குள்ள மேலுலகங்கள் எல்லாவற்றையும் உனக்குத் தானஞ்செய்கிறேன்; நீ விழாதே; ஆகாயத்தில் நின்றாலும்சரி எத்தில் நின்றாலும் அவற்றை நீ அச்சமின்றிச் சீக்கிரமாக அடையலாம்" என்றுசொல்ல, "ராஜ ரிஷிகளே! பிரபாவ நாசியில் பிறவாதபடியால் தபோபலத்தால் பிரபாவமற்ற ஞான புண்ணியனுக்கு லோகபதி விருத்தியில்லை; வினைன்றன். உம்போலும் பிரபாவத்தைநாம் கொண்டாடவேண்டும். ராஜரிஷி அப்படியே நான் முன்னே தெரிந்திருக்கிறேன். பிரபாவமற்ற இவ்வாறுவயதுபிரபாவஜாதிப்பெண்ணைநீ எவ்வாறு அந்தணரு டைய பத்தினியுடன் ஒருக்காலும் யோசித்து ஜீவித்தல் கூடாது. ஆகவால், நான் முன்சொன்ன தானத்தைச் சொல்லவேண்டாம். அந்தஜாதியில் யோக்கியமானவளோ?" என்று யயாதிசொன்னான்.

அந்தக பிரதர்த்தனனென்பவன், "ஓ! நரபதிகளுக்கு ஸ்ரேஷ்டனே! நான் பிரதர்த்தனன். உன்னைக் கேட்கிறேன் ஆகாயத்திலி லாது ஆதற்கு மேலுலகத்திலாவது எனக்கு லோகங்கள் இருக்கின்ற னவா? அதற்குக்காரணமான புண்ணியத்தின் தத்துவம் உனக்குத் தெரியுமென்று நான் நினைக்கிறேன்" என்றான். யயாதி,* "பிரியமும் ஹிதமுமான சொல்லையும், செய்யுள் வடிவையும் தோஷமற்றவையாயான அனேகலோ கங்கள் உனக்கு இருக்கின்றன ஓம்மிவான்மாரையும், எல்லாவுலகங்களி லுள்ளவர்களையும் பிரபாவத்தால் அனுபவித்தாலும் புருஷன் பிறருதவை. அவை உன்னை வந்தடைகின்றன" என்றுசொன்னான். பிரதர்த்தனன், "அவற்றையுனக்குநான் கொடுக்கிறேன்! விழாதே; என்னுடையலோகங்கள் எவையோ அவை ஆகாயத்திலிருந்தாலும் அதற்குமேலிருந்தாலும் உன்னுடை யவையாகட்டும். அச்சமின்றிச் சீக்கிரமாக அவற்றை யடையலாம்" என்றுசொல்ல, யயாதி, "ராஜரிஷே! உனக்குச்சரியான சக்தி யுள்ள ராஜாவாக இருப்பவன் தன் லாபத்திற்காகவும் ஸுகத் திற்காகவும் பிறர் புண்ணியத்தைவிரும்பான். தெரிந்தவனாகிய ராஜா தெய்வத்தின் கட்டளையினால் ஆபத்தையடைந்தாலும் இழிவானகாரி

* பிரியமும் ஹிதமுமானவை என்பது கருத்து.

யத்தை ஒருபொழுதும்செய்யத்தகாது. அரசன் தர்மத்தைப்பார்த்து முயற்சியுடன் புண்ணியத்தையும் புகழையும்தரத்தக்க உபாயத்தையே செய்யவேண்டும். தர்மத்தில் எண்ணமுள்ள என்னைப்போன்றவன் அறிந்திருந்தும் நீசொல்லும் இந்தயாசகவிருத்தியைச் செய்யலாகாது. ஆயலார்செய்யாததை ஒருவன் பிதாதாகச்செய்யலாமா? செய்யவிரும்பினால் அதில் என்னநன்மை? எவன் புண்ணியபாபங்களைச் சரியாகத்தெரிந்துகொண்டு செய்யத்தக்கவற்றிலும் செய்யத்தகாதவற்றிலும் தவறுதலின்றிச் செம்மையாகநடப்பானோ அவன்தான் ஞானமுள்ளவன்; சத்தியமுள்ளவன்; மனதூய்மையுள்ளவன்; தன்பதவிமையினால் உலகங்களையெல்லாம் ரக்ஷிக்கிற ராஜாவாவன்; தர்மம்செய்யும்போது (பிரதியாஜனத்தைப்பற்றிய) ஸங்கீதகம் வந்தாலும் பொருளின்பமும் செல்வையாகக் கிடைக்கக்கூடியவையாயிருந்தாலும் அந்தவிஷயத்தில் தர்மகாரியத்தையே முதலில்செய்யவேண்டும். பொருளையும் இன்பத்தையும் கெடுக்காலிருப்பதுதான் தர்மம்" என்றுசொன்னன். இவ்வாறுசொல்லும் அந்தயயாதி ராஜரிஷிதேவகி, வஸுமானென்னும் ராஜச்ரேஷ்டன் சொல்லுகிறான்.

எண்பத்தேழாவது அத்தியாயம்.

ஸம்பவபர்வம் (தொடர்ச்சி).

வஸுமான், சிபி, அஷ்டகன் இவர்களுடன் யயாதி ஸம்பாஷணை செயதபிறகு, அவர்களுக்குத்தாயும் யயாதியின் பெண்ணுமாகிய மாதவியை யாசகன் வந்துசேர்ந்து, யயாதி அவளைஅந்தச் சுயம்வரத்தில்தேடியெடுத்தார்கொன்று தோற்றுசோர்ந்து பிறகு அவர்களுடன் ஸ்வர்க்கலோகஞ்சேர்வது)

வஸுமான் என்பவன், "ராஜாவே! உலகத்தச்வன்புத்திரனுகிய வஸுமானென்று சொல்லப்பட்டநான்உன்னைக்கேட்கிறேன். மஹாத்மாவே! ஆகாயத்திலாவது அதற்குமேலாவது எனக்கு நல்லலோகமிருக்கிறதா? அந்தப் புண்ணியத்தின் உண்மை உனக்குத்தெரியுமென்று நான் நினைக்கிறேன்" என்றுகேட்க, யயாதி, "சூரியன்தன் ஒளியினால் பிரகாசஞ்செய்கின்ற ஆகாயமும் பூமியும் திசைகளும் எவ்வளவுள்ளனவோ அவ்வளவுலோகங்கள் உனக்குமேலே இருக்கின்றன. அவை முடிவில்லாதவை; உனக்குக் காத்திருக்கின்றன" என்றுசொன்னன். வஸுமான், "ராஜாவே! அவற்றை உனக்குக்கொடுப்பேன்; விழாதே; என்னுடைய லோகங்களெல்லாம்

உன்னுடையவையாகட்டும். ஞானமுள்ளவனே! தானம்வாங்குவது உனக்குத் தோஷமாகஇருந்தால் ஒரு துரும்பையாவது கொடுத்து இதைக் கிரயத்துக்கு வாங்கிக்கொள்" என்றுசொன்னன். யயாதி *"அதர்மத்தில்பயமுள்ளநான் குழந்தைப்பருவம்முதல் பொய்யாக விற்கப்பட்டதைப் பொய்யாக வாங்கிக்கொண்டதாக எனக்கு நினைவில்லை. மற்றவர்கள் இதற்குமுன் செய்யாததை நான்செய்யவே செய்யேன்; செய்ய நினைத்தால் அந்தவிஷயத்தில் நான் மோக்கியனாவேனே" என்றுசொல்ல, வஸுமான், "ராஜாவே! உனக்குக் கிரயத்தில் விருப்பமில்லாவிட்டால் என்னால் தானஞ்செய்யப்படும் அந்த லோகங்களை நீ பெற்றுக்கொள்; நான் அந்தலோகங்களுக்குப் போவதில்லை. அந்த லோகங்களெல்லாம் உனக்கேயிருக்கட்டும்" என்று சொன்னன்.

அங்கே சிபியென்பவன், "ஐயா! உசீநரன்புத்திரனாகிய சிபியென்னும் நான் கேட்கிறேன். ஆகாயத்திலாவது அதற்குமேலாகவாவது உள்ளலோகங்கள் எனக்கு இப்போது இருக்கின்றனவா? நீ அந்தத்தர்மத்தின் ஸூக்ஷ்மம் தெரிந்தவனென்று நான் நினைக்கிறேன்" என்றுசொல்ல, யயாதி, "ராஜாவே! உன்னிடம் எதாவது அடைய விரும்பினஞானத்தை நீ மனத்தினாலும் வாக்கினாலும் இகழ்ந்தாயில்லை. அதனால், உனக்கு மேலே அளவற்ற லோகங்களிருக்கின்றன. அவை மின்னலைப்போலப் பிரகாசித்துக்கொண்டு இனியஸங்கீதவாத்திய முழக்கத்துடன் சிறப்புற்றிருக்கின்றன" என்றுசொன்னன். சிபி, "ராஜாவே! உனக்குக் கிரயத்தில் விருப்பமில்லாவிடில், என்னால் தானஞ்செய்யப்பட்ட அந்தலோகங்களை நீபெற்றுக்கொள். கொடுத்தபின் அவற்றை நான் எடுத்துக்கொள்ளமாட்டேன். சிறந்த ஞானமுள்ளவர்கள் அங்கேபோய்த் துயரப்படாமலிருக்கின்றனர்" என்றுசொல்ல, யயாதி, "ராஜாவே! நீ எப்படி இந்திரனுக்கொப்பான மஹிமையுள்ளவனைவும் அளவற்ற புண்ணியலோகங்களுள்ளவனைவும் மிருக்கிறீயோ அப்படியே நானுமிருந்தவன். பிறர் கொடுத்த லோகத்தில் எனக்கு ஸுகமிராது. சிபியே! ஆதலால், நீ கொடுத்ததை நான் அங்கீகரிக்கவில்லை" என்றுசொன்னன்.

பிறகு அஷ்டகன் "ராஜாவே! நாங்கள் தனித்தனியே கொடுத்தலோகங்களை நீ அங்கீகரியாவிட்டால், நாங்களெல்லாரும்உனக்குக்

---

* சிம்சுமார சக்கரம் என்று சொல்லப்பட்ட காலசக்கரத்துக்குப் பயந்த நான் என்பர் சிலர்; குழந்தையினிடம் வாங்குவதில் பயந்த நான் என்பர் மற்றும் சிலர்.

கொடுத்ததனால் * நரகம்போவோம்" என்றான். "ஸத்தியந்தவறுத ஸத்புருஷர்களே! நான் எதற்குத் தகுதியுள்ளவனோ அதைச்செய்ய முயலுங்கள். நான் இதற்குமுன் செய்யாதகாரியத்தை இப்போது அங்கீகரிக்கவில்லை" என்று யயாதிசொன்னான். அஷ்டகன், "அழியாத லோகங்களுக்குச் செல்ல விரும்புகின்றமனிதன் ஏறத்தக்க ஐந்து பொன்மயமான ரதங்கள் காணப்படுகின்றவே ; இவையெல்லாம் யாருடையவை?" என்றுகேட்க, யயாதி "அக்னிஜ்வாலைபோல் ஜ்வலித்துக்கொண்டு மேலேநின்றுபிரகாசிக்கின்ற இவ்வைந்துபொன் மயமான ரதங்களும் உங்களுக்கு வாஹனங்களாகப்போகின்றன" என்று சொன்னான்.

பாரதவீர! பிரம்மதேவரால் முற்காலத்தில் விதிக்கப்பட்ட அசுவமேதமென்னும் மஹாயாகத்தை அஷ்டகன் முதலானவர்கள் செய்துவந்தபோது குதிரையின் எந்த அவயவங்களைவெட்டிக் கிரமமாக ஹோதா, அத்வர்யு, உத்காதா, பிரம்மா இவர்களும் மற்றப்பதினாறு ரித்விக்குகளும் சாஸ்திரப்படி அக்னியில் ஹோமஞ்செய்தனரோ அவற்றின் புகைவாஸனையை ஆக்ராணஞ்செய்து பூமியில் மிகுந்த பாபஞ்செய்த மனிதர்கள் உடனே பாபம்நீங்கப்பரிசுத்தர்களாயினர். அந்தச்சமயத்தில் மான்தோலை உடுத்துக்கொண்டும், மான்தோலைப் போர்த்துக்கொண்டும், மிருகத்தின் ஆகாரத்தையும் செய்கையையும் செய்துகொண்டும், மிருகங்களுடன் ஸஞ்சரிப்பவளும் தபஸையே தனமாகஉடையவளுமாகியபார்கவியென்பவள் மான்கூட்டங்களுடன் அந்த யஜ்ஞசாலைக்குட்புகுந்து, புகைவாசனையை ஆக்ராணஞ் செய்து, மிகுந்த ஆச்சரியத்துடன் மிருகங்களுடனேயே திரிந்தாள். அந்தமாதரசி யஜ்ஞசாலைக்குள் திரிந்துகொண்டிருக்கையில், தோல் விபடையாதவர்களான தன் புத்திரர்களையும் யஜ்ஞத்தின் பெருமையையுங்கண்டு ஸந்தோஷமடைந்தாள். அப்போது ஆகாயத்திலிருந்து கொண்டு பூமியைத்தொடாமல் அங்கேவந்த நகுஷபுத்திரனை யயாதியைத் தன்பிதாவென்று தெரிந்து வந்தனஞ்செய்தாள்.

அப்போது வஸுமான், சிறந்த தவமுள்ளவளாகிய தன்மாதாவைநோக்கி, "நீ இவருடைய பாதங்களுக்கு வந்தனஞ்செய்தாயே? தேவதைக்கொப்பான இந்தராஜா யார்? வந்தனஞ்செய்கிற நீ யார்? எனக்குசொல்" என்றுகேட்டான். அதற்கு மாதவி, "என்புத்திரர்களே! நீங்கள் சேர்ந்துகேளுங்கள். இந்த நகுஷபுத்திரரான

* கொடுத்ததை வாங்கிக்கொள்ளாவிட்டால் தத்தாபஹாரதோஷம்வரும் என்பது கருத்து.

யயாதி, என் தந்தை ; என் புத்திரர்களாகிய உங்களுக்கு மாதாமஹ ரென்று எனக்குத்தெரிகிறது. என் ஸஹோதரனுகிய பூருவை ராஜ் யத்தில் பட்டாபிஷேகஞ் செய்துவிட்டுஸ்வர்க்கம் சென்றார். பெரிய கீர்த்தியுள்ள இவர் என்னகாரணத்தினால் இங்கேவந்தார்?" என் றுள்.

இவளுடைய அந்தச்சொல்லைக்கேட்டு, வஸுமான், "சுவர்க் கத்தைவிட்டுத் தவறிப்போனார்" என்று சொன்னன். அந்த மாதவி தன்புத்திரன் சொல்லியதைக்கேட்டு, மனத்தில் பரபரப்புக்கொண்ட வளாகித் தெளஹித்திரர்களாற் சூழப்பட்ட தன் பிதாவைநோக்கி, "தவத்தால்ஜயிக்கப்பட்ட எனது லோகங்களைப்பெற்றுக்கொள்ளும். தர்மத்தினால் ஸம்பாதிக்கப்பட்டதனம்*புத்திரர்களுடையதுளப்படி யேயாஅப்படியேஅவர்களின் புத்திரர்களுடையதுகிதனதுதனமேயென் றும் இந்தலோகத்தில் தர்மோபதேசஞ்செய்யும் ரிஷிகள் சொல்லு கின்றனர். ஆதலால், நாங்கள்செய்த தானங்களையும் தவங்களையும் கொண்டு சுவர்க்கம்செல்லும்" என்றுசொன்னன். யயாதி, "உனது தவத்தின்பலம் எனக்கு நன்மையாக இருக்குமானால் அப்போது, நான் பெண்ணினாலும் மஹாத்மாக்களாகிய தெளஹித்திரர்களாலும் கரையேற்றப்பட்டவனாகிறேன். ஆதலால், இதுமுதல் பிதிர்க்கருமத் தில் பெண்ணந்தி புண்ணியபலனைத் தருவதாகும். தெளஹித்திரன், குதபகாலம், எள்ளு இம்மூன்றும், சிராத்தத்தில் புண்ணியமானவை. சுசியாயிருத்தல், தோபத்தைவிடுதல் அவசரமில்லாமை இம்மூன் றையும் சிராத்தத்தில் சிலாக்கியமாகச் சொல்லுகின்றனர். புஜிக்கி றவர்களும், பரிமாறுகிறவர்களும், வேதம்சொல்லுகிறவர்களும் பரி சுத்தம் செய்கிறவர்கள். ஆதலின் எட்டாவது முகூர்த்தத்தில் சூரி யன் உஷ்ணம் குறைந்திருக்கும்போது இருக்கிறதாலும்குதபமென்று சொல்லப்பட்டது. அதில் பிதிர்க்களுக்குக் கொடுத்தது † அக்ஷ யமாகும். எள்ளு பிசாசத்தினின்றும் காப்பாற்றுகின்றது; தர்ப்பம் ராக்ஷஸர்களிடத்தினின்றும் காப்பாற்றுகின்றது; வேதம்ஓதின பிரா மணர்கள் தாங்களிருக்கும் பங்தியையே காப்பாற்றுகின்றனர். யதிகள் புஜிப்பது அக்ஷயமாகிறது ; அழியாததலனுள்ளது. ஞான மூள்ளவனும் வேதமோதினவனும் தனமுள்ளவனும் சுகியுள்ளவனு மாகிய நல்லபாத்திரன் கிடைத்தால், அதுதான்காலம். அந்தக்காலத் திலேதான் கொடுத்தல்வேண்டும். காலம் இதைவிட வேறுகணிக்கப் படவில்லை" என்றுசொல்லி, புத்திமானுகிய யயாதி, "நீங்களெல்லா

* பண்மை மகனையும் மகளையும் குறிக்கும். † அழியாதது.

ரும் யஜ்ஞஸோப்திஸ்நானஞ்செய்தவர்கள் ; காரியம் முக்கியமானதனால் சீக்கிரம் புறப்படுங்கள்'' என்று அவர்களுக்கு மறுபடியும் சொன்னன்.

அஷ்டகன், ''ராஜாவே! நீ உன் ரதத்தின்மேலிறி ஆகாயம்போ; எங்களுக்கு எப்போது காலம்வருமோ அப்போது நாங்களும் பின்னேவருவோம்'' என்றுசொன்னன். ''நாமெல்லாரும் இப்போதே போகவேண்டும். நாம் ஒன்றுசேர்ந்து ஸ்வர்க்கத்தை ஜயித்திருக்கிறோம். இதோ நமக்கு ரதஜாகுணம்விலகிய தேவலோகத்தின் மார்க்கம் தெரிகிறது'' என்று யயாதிசொன்னன்.

பிறகு அஷ்டகனும் சிபியும் காசிராஜாவாகிய பிரதர்த்தனனும் இக்ஷ்வாகுவம்ச ராஜாவாகிய * வஸுமனஸும் இந்த ஸாதுக்களாகியநான்குராஜாக்களும் அப்போது அவரிருதமென்கிறபாகனமாப்திஸ்நானஞ்செய்து தேர்ந்தேத கவர்க்கம்சென்றார்கள். அந்தராஜரிஷிச்ரேஷ்டர்களெல்லாரும் ரதங்களிலிறி ஒளிதனிலை ஆகாயத்தைநிரப்பிக்கொண்டு தங்கள் புண்ணியத்திலே ஆகாயபூமி இரண்டையும்விளியாபித்தச்செய்து சென்றனர்.

அப்போது அஷ்டகன், ''நாலைருவன்தான் முன்னேபோகிறவனை நிர்ணத்தேன். மறுதாத்மாவாகிய இந்திரன் எல்லாவகையிலும் எனக்குச்சினேகிதன். இப்படியிருக்க, உசினரன்புத்திரனுகிய இந்தச் சிபியென்னும் ஒருவன் பற்றி இரதங்களை முழுவேகத்தினால் எவ்வாறுதாண்டினன்?'' என்றுகேட்க, யயாதி, ''உசினரன் புத்திரனுகிய இந்தச்சிபி எவ்வளவுதனம் சம்பாதித்தானே அவ்வளவையும் யாசகர்களுக்குக் கொடுத்தான். ஆதலால், இவன் உங்களுக்குள் மிகச்சிறந்தவன். ராஜாவே! கொடையும் தவமும் ஸத்தியமும் † தர்மமும் (செய்யத்தகாததைச் செய்வதில்) நாணமும் ஒளியும் பொறுமையும் அன்பும் செய்யுங்கருமத்தில் உத்ஸாஹமுமாகிய இவையெல்லாம் புத்தியில் ஒப்பில்லாத சிபியென்னும் ராஜாவினிடத்தில் அளவிடக்கூடாதவையாயிருக்கின்றன. இவ்வளவு கடையுடன்காவைத்தை விடாமலிருப்பதனால், சிபியானவன் ரதத்தினால் உன்னைக் கடந்தபோனன்'' என்றுசொன்னன்.

பிறகு அஷ்டகன், இந்திரனுக்கோப்பான மாதாமஹரை நோக்கி, தெரிந்துகொள்ளவிரும்பி, ''ராஜாவே! உன்னை நான் கேட்கிறேன். நிஜத்தைச்சொல்; நீ எங்கிருந்துவருகிறாய்? நீயார்? யாருடைய புத்

* இவனே வஸுமான் என்றும் சொல்லப்படுவன்.

† கடமையை விடாமை.

திரன்? ஏனெனில், நீசெய்தகாரியத்தை இவ்வுலகத்தில் உன்னைவிட வேறு க்ஷத்திரியனிலும் பிராமணனிலும் செய்பவன்இல்லை" என்று மறுபடியும்கேட்க, யயாதி, "நான்யயாதி; நகுஷனுடைய புத்திரன்; பூருவின்பிதா. இந்தப்பூமியில் சக்கரவர்த்தியாக இருந்தேன். இன்னும் ரஹஸ்யமான விஷயத்தையும் என்னைச்சேர்ந்த உங்களுக்குவெளிப்படையாகச் சொல்லுகிறேன். நான் உங்களுக்கு மாதாமஹன். இந்தப் பூமிமுழுவதையும் ஜயித்து அதையும் அழகியநிறமுள்ள உயர்ந்தலக்ஷணமுள்ள நூற்றொரு குதிரைகளையும் பிராமணர்களுக்குக் கொடுத்துவிட்டு வானப்பிரஸ்தராகப் போகிறவர்கள் புண்ணியபலனை அடைந்து தேவர்களாகின்றனர். நான் குதிரைகளும் பசுக்களும் பொன்னும் உயர்ந்ததனங்களும் நிறைந்த இந்தப்பூமி முழுவதையும் பிராமணர்களுக்குத் தானஞ்செய்தேன். ஆயிரம்கோடி பசுக்களை நான் அப்போது கொடுத்தேன். என்னுடையஸத்தியத்தினால்ஆகாயமும் பூமியும் வியாபிக்கப்பட்டிருந்தன. மனுஷ்யர்களுக்குள் * அக்னியும் ஜ்வலித்தது; என்சொல் பொய்யாகப் போனதேயில்லை. ஸத்தியத்தைத்தான பெரியோர்கள் கௌரவிக்கின்றனர். அஷ்டகனே! உனக்கும் உஷதச்வ வம்சத்தவனாகிய பிரதர்த்தனனுக்கும் நான் ஸத்தியமாகச் சொல்லுகிறேன். எல்லாஜனங்களும் ரிஷிகளும் தேவர்களும் ஸத்தியத்தினாலேதான் பூஜிக்கத்தக்கவராகிறார்களென்பது என்மனத்தில் உள்ளது. எவனொருவன் சுவர்க்கத்தை ஜயித்தவர்களாகிய நம்மெல்லாரையும்பற்றிநடந்தபடிபொருளையின்றிப்பிராமணஸ்ரேஷ்டர்களுக்குத் தெரிவிப்பானோ அவன் நமது லோகாத்தை அடைவான்" என்று யயாதி சொன்னான்.

சத்துருக்களை அடக்குகிறவனும் மிகச்சிறந்த காரியமுள்ளவனுமாகிய அந்தச் சிறந்தமஹாத்மாவாகிய ராஜா இவ்வாறு தன் தௌஹித்திரர்களினால் கரையேற்றப்பெற்று, தன்புண்ணியகருமங்களினால் பூமியைரக்ஷித்துப் பூமியைவிட்டுவிட்டு ஸ்வர்க்கம்சென்றான்."

---

* விசேஷமான பிரபாவம் இருந்தது என்பது கருத்து.

எண்பத்தெட்டாவது அத்தியாயம்.

ஸம்பவபர்வம் (தொடர்ச்சி.)

(பூருவம்சத்தைப்பற்றிச் சொல்லியது.)

ஜனமேஜயமஹாராஜா, "தர்மபரிபாலனஞ் செய்கிறவரிற் சிறந்தவனும் யயாதியின் புத்ரனுமாகிய பூருவையும் அந்தப் பூருவின் வம்சத்தைவிருத்திசெய்த மற்றவர்களையும்பற்றி விரிசையாகச்சொல்லும். பிராமணரிரேஷ்டரே! துஷ்யந்தன் புத்திரனை ஜனமேஜயனென்பவனிவிட்டுப் பரதன் எவ்வாறு ராஜாவானனென்பதை மறுபடியும் விரிவாகச்சொல்லும்" என்று கேட்க, வைசம்பாயனர் சொல்லுகிறார்:—

"ராஜாவே! ராஜரிரேஷ்டனாகிய பூரு அவன்பிதாவான யயாதியைப்போலவே தர்மத்தை விடாதவனாகவும் இந்திரனுக்கு ஒப்பான பராக்கிரமமுள்ளவனாகவும், ராஜ்யாதிபத்தியம் செய்துகொண்டிருந்தான். பூருவுக்குப் பௌஷ்டியென்பவளிடம் ப்ரவீரன், ஈச்வரன், ரௌத்ராச்வனென்று மஹாரதர்களான மூன்று புத்திரர்கள் பிறந்தார்கள். பூருவுக்குப்பிறகு ப்ரவீரன் வம்சத்தை விருத்திசெய்தான். ப்ரவீரனுக்குச் சூரஸேனியென்பவளிடம், நான்குகடல்களையும்எல்லையாகவுடைய பூமியைக்காப்பவனும் காமரைப்புஷ்பத்துக்கு நிகரான கண்களையுடையவனுமஸமர்த்தனுமாகிய மனஸ்யுவென்னும்புத்திரன் பிறந்தான். சக்தன், ஸம்ஹனனன், வாக்மியென்று மூன்றுபுத்திரர்கள் மனஸ்யுவுக்கு *ஸௌவீரியென்பவளிடம் பிறந்தனர். எல்லாரும் சூரர்கள்; எல்லாரும் மஹாரதர்கள். சிறந்தமனஸுள்ள ரௌத்ராச்வனுக்கு மிச்ரகேசியென்னும் அப்ஸரஸினிடம் சிறந்த வில்லாளிகளான அன்வக்ஷ்ணு முதலிய புத்திரர்கள் பதின்மர்பிறந்தனர். எல்லாரும் சாஸ்திரப்படி யஜ்ஞஞ்செய்தவர்களாகவும் சூரர்களாகவும் ஸந்ததிகளுள்ளவர்களாகவும் மிகுந்த கல்விகேள்வியுள்ளவர்களாகவும் எல்லாஅஸ்திரங்களும் தெரிந்தவர்களாகவும் தர்மத்தைமுக்கியமாகக் கொண்டவர்களாகவு மிருந்தனர். அவர்கள் ரிசேயு, கக்ஷேயு வீரனுகிய க்ரமணியு, ஸ்தண்டிலேயு, வநேயு, சிறந்தகீர்த்தியுள்ள ஜலேயு, பலவானுகியதேஜேயு, புத்திமானும் சந்திரனைப்போன்றபராக்ரமமுள்ளவனுமாகிய ஸத்தேயு, தர்மேயு, தேவர்களுக்கொப்பான பராக்கிரமமுள்ள ஸன்னதேயு என்றவர்கள் பதின்மர். அவர்களுக்

* ஸௌவீர-தேசத்தரசன் பெண்.

குள், அனுதிருஷ்டியென்று சொல்லப்பட்ட நிசேயுவென்பவன் தேவர்களுக்குள் இந்திரன்போல் பூமியில் ஒரேராஜாவாகவும் வித்துவானைவும் பராக்கிரமசாலியாகவுமிருந்தான். அனுதிருஷ்டியின் புத்திரன் ராஜஸூயயாகமும் அசுவமேதயாகமுஞ்செய்த உயர்ந்த தர்மிஷ்டனுகிய பதினான் என்று பெயர்பெற்ற ராஜாவாக இருந்தான்.

ஜனமேஜயராஜாவே! தம்ஸு, மஹான், அதிரதன், ஈடில்லாத சக்தியுடைய த்ருஹ்யு, அளவற்ற பராக்ரமமுள்ள இந்நால்வரும் பதினான் புத்திரர்கள். அவர்களுக்குள், சிறந்த பராக்ரமமுள்ள தம்ஸு வென்பவன் பூருவின் வம்சத்தைச் சிறப்பித்துக்கொண்டு பிரகாசமான கீர்த்தியைச் சம்பாதித்தான்; பூமியை ஜயித்தான். பராக்ரமசாலியாகிய தம்ஸு, * இலிலனென்னும் புத்திரனைப்பெற்றான். ஜயிப்பவர்களில் சிறந்த அந்த இலிலனும் இப்புவனிமுழுவதையும் ஜயித்தான். இலிலன் ரதந்தரி யென்பவளிடம் துஷ்யந்தன், சூரன், பீமன், ப்ரவஸு, வஸு ஆகிய பஞ்சபூதங்களுக் கொப்பாகிய ஐந்து புத்திரர்களைப்பெற்றான். அவர்களுள் பெரியவனும் யுத்தத்தில் பிறரால் ஜயிக்கமுடியாதவனுமாகிய துஷ்யந்தன் ராஜாவாகவிருந்தான். துஷ்யந்தனுக்கு லக்ஷ்மணையென்பவளிடம் ஜனமேஜயன் பிறந்தான். சகுந்தலையினிடம் பரதனென்னும் புத்திரன் பிறந்தான். அவனிடமிருந்துதான் பாதவம்சத்திற்குப் பெருங்கீர்த்தி ஆரம்பித்தது" என்று கூறினர்.

எண்பத்தோன்பதாவது அத்தியாயம்.

ஸைப வை பா வம் (தொடர்ச்சி)

(சகுந்தலை உபாக்கியானத்தின் ஆரம்பம்; துஷ்யந்தன் ராஜ்யபாரம்.)

ஜனமேஜயர், "பகவானே! மஹாத்மாவாகிய பரதனுடைய ஜனனத்தையும் செய்கையையும் நேட்களின் நாட்புதிய எனக்கு இங்கே அதை விரிவாகச் சொல்லக்கடவீர்" என்றார்கட்க, வைசம்பாயனர் சொல்லத்தொடங்கினர்.

"பரதச்ரேஷ்டரே! பௌரவர்களுடைய வம்சவிருத்தியைச் செய்த துஷ்யந்தனென்னும் வீரன நாலுஸமுத்திரமும் சூழ்ந்த பூமிக்கு ராஜாகனைத இருந்தான். யுத்தங்களில் ஜயம்பொருதிறவனும் எதிரிகளை அழிக்கிறவனுமாகிய அந்தத்துஷ்யந்தராஜா சமுத்திரங்களால் சூழப்பட்ட தீவுகளாகியதேசங்களையும் ரத்னங்கள்நிரம்பினஸமுத்தி

---

* ஸுலினனென்றும் இவனுக்குப்பெயர் வழங்குகிறது.

ரங்களாற் சூழப்பட்டவையும் காலுவருணத்து ஜனங்களும்நிரம்பின வையும் மிலேச்சதேசம் வரையிலுள்ளவையும் *காலுபாகங்களாகப் பிரிக்கப்பட்டவையுமான தேசங்களெல்லாவற்றையும் ஆண்டான். அந்தராஜா ஆளும்போது வருணங்களின் வியவஸ்தைகளை மீறுகிறவனும், † உழுவதையும் சுரங்கமெடுப்பதையும் செய்பவனும், பாபம் செய்பவனும் யாரும் இருக்கவில்லை. புருஷச்ரேஷ்டரே! அந்தத் துஷ்யந்தன் தேசங்களுக்குராஜாவாகஇருந்தகாலத்தில்அப்போதுள்ள மனுஷ்யர்கள் தர்மத்திலேயே ஆசைவைத்தவர்களாகிஅறம்பொருளிரண்டையும் சம்பாதித்தனர். ஐயா! அவன் தேசத்தையாளும் போது திருடர்பயமும், பகைரின்பயமும், வியாதியின்பயமும் சிறிதும் இல்லை. எல்லாவருணத்தாரும் அந்த ராஜாவை ஆச்ரயித்துத் தெய்வச்செய்கையைத்தியாகம்தந்தம்தர்மங்களிலேயேதிருப்தியாயிருந்தனர். யாரிடத்திலும் பயமில்லாமலிருந்தனர். மேகமும் காலத்தில் வருஷித்தது; பயிர்கள் ஸாரமுள்ளவையாயிருந்தன. பூமியில் எல்லாத்தனங்களும் பசுக்களும் நிரம்பஇருந்தன. ப்ராமணர்கள் தங்கள் கருமங்களில் ஊக்கமுள்ளவர்களாயிருந்தனர். அவர்களிடத்தில் அஸத்தியம் இருக்கவில்லை. அந்த ராஜா வியக்கத்தக்கபெரிய பராக்ரமமுள்ளவன்; வஜ்ராயுதம்போல்உறுதியானசரீரமுள்ளவன்; யௌவனமுள்ளவன்; மந்த்ரமலையைச் செடிகள் மரங்களுடன் கைகளால் தூக்கியெடுப்பான். காலுவகையான கதாயுத்தத்திலும் எல்லா ஆயுதங்களிலும் யானையேற்றம் குதிரையேற்றங்களிலும் தேர்ந்தவனாக இருந்தான். பலத்தில் விஷ்ணுவுக்கு ஒப்பாகவும், தேஜஸில் சூரியனுக்கொப்பாகவும், கலக்கக்கூடாமையில்கடலுக்குஒப்பாகவும் பொறுமையில் பூமிக்கு ஒப்பாகவுமிருந்தான். எல்லாருக்கும் பிரியமானவனும், பட்டணத்தையும் தேசத்தையும் ஸந்தோஷிக்கச்செய்பவனுமாகிய அவ்வரசன் மேன்மேலும் தர்மத்தையே முக்கியமாகக் கொண்ட செய்கைகளினால் ஸந்தோஷமாயிருக்கும்படி ஜனங்களை ரக்ஷித்தான்" என்றார்.

---

* குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்பது தமிழ்நூல் வழக்கு.

† உழாமலே பயிர்விருத்தியும் இயற்கையாகவே தனஸம்ருத்தியும் இருந்தன.

தொண்ணூறுவது அத்தியாயம்.

ஸம்பவபர்வம் (தொடர்ச்சி).

(துஷ்யந்தர் வேட்டைக்குச் சென்றது.)

ஜனமேஜயர், "பகவானே! தத்துவஜ்ஞானியே! புத்திமான்களில் சிறந்தவரே! லோக்கியமானபுத்தியுள்ள பரதனுடைய பிறப்பையும் சரித்திரத்தையும் சகுந்தலையின் பிறப்பையும் நான்விவரமாகக் கேட்கவிரும்புகிறேன். வீரனும் புருஷசிரேஷ்டனுமான துஷ்யந்தனால் சகுந்தலை அடையப்பட்ட விவரத்தையும் நான்கேட்க விரும்புகிறேன்" என்றுகேட்க, வைசம்பாயனர் சொல்லத்தொடங்கினர்.

"சிறந்த புஜபலமுள்ளவனும், ஸைனியங்களும் வாகனங்களும் மிகுதியாக உள்ளவனுமாகிய அந்தத்துஷ்யந்தன் ஒருகால் அனேக நூற்றுக்கணக்கான குதிரைகளோடும், யானைகளோடும், கத்திகளையும், வேல்களையும், கதாயுதங்களையும், உலக்கைகளையும்ப்ராஸமென்னும் ஆயுதங்களையும், ஈட்டிகளையும், கைகளில்தரித்துக்கொண்ட அனேகம் போர்வீரர்களோடும்கூட மிகவும் அழகான சதுரங்க ஸைனியத்தினால் சூழப்பட்டவனாக அடர்ந்தகாட்டுக்குச்சென்றான். அந்தராஜா பலவித ஆயுதங்களையும் பற்பலவேஷங்களையும் தரித்துக்கொண்ட சேனைவீரர்களுடன் போகையில், போர்வீரர்களின் கர்ச்சனைகளினாலும், சங்கவாத்தியங்கள் துந்துபிவாத்தியங்கள் இவற்றின் முழக்கங்களினாலும், ரதசக்கரங்கள் ஓடும்ஓசைகளினாலும், சிறந்த யானைகளின்சப்தங்களினாலும், குதிரைகளின்சப்தங்களாலும், தோள் தட்டுகிற சப்தங்களாலும் கலகலவென்ற சப்தமுண்டாயிற்று. சூரனும் தனக்குப் புகழைச்சம்பாதிக்கிறவனும் சிறந்த ராஜலக்ஷணம் பொருந்தியவனுமாகிய அவ்வரசன் அந்தாகரத்திலுள்ள ஸ்திரீகள் உயர்ந்த மாளிகைகளின்மேலே நின்றுபார்த்தனர். 'இந்திரனுக்கொப்பானவனும் எதிரிகளை யழிப்பவனும் எதிரிஸைனியத்தின் யானைகளைத் தடுப்பவனுமாகிய அவனை அங்கேபார்த்த பெண்களின்கூட்டங்கள் இந்திரனென்றேநினைத்தனர். "இவன்தான் யுத்தத்தில் வஸுவென்னும் தேவஜாதியைப்போலப் பராக்கிரமமுள்ள அந்தப் புருஷச்ரேஷ்டன் இவனுடைய கைபலத்தின்முன் அணுகிய எதிரிகளுடைய கூட்டங்கள் நிற்பதில்லை" என்றசொற்களைச் சொல்லிக்கொண்டு அந்தஸ்திரீகள் அன்புடன் அந்தராஜாவை ஸ்துதிசெய்து அவன்சிரஸில் புஷ்பவர்ஷங்களையும் வர்ஷித்தனர். ஆங்காங்குப்பிரா

மணச்ரேஷ்டர்களாலும் நாற்புறமும் ஸ்துதிசெய்யப்பட்டு, மிக்க மகிழ்ச்சியுடன் வேட்டையாடுவதற்கு வனத்திற்குப் புறப்பட்டான். இந்திரனுக்கொப்பான அவ்வரசன் மதயானையின்மேலேறிப் புறப் படும்போது, பிராமணர்களும், க்ஷத்திரியர்களும், வைசியர்களும் சூத்திரர்களும் அவனைப் பின்சென்றனர். நகரத்தாரும் தேசத்தாரு மாகிய அவர்கள் மங்கள ஆசீர்வாதங்களாலும் ஜயஜயவென்ற சப்தத் தாலும் அந்தராஜாவைச்சிறப்பித்துக்கொண்டு வெகுதூரம்பின்சென் றனர். அதன்பின்ராஜாவினல் விடைகொடுக்கப்பெற்றுத்திரும்பினர்.

பிறகு அவ்வரசன் கருடனுக்கொப்பான வேகமுள்ள ரதத்தி லேறி அதனுடைய கோஷத்தினல் பூமியையும் ஸ்வர்க்கத்தையும் நிரப்பினன். சிறந்தபுத்தியுள்ள அவ்வரசன்சென்று நந்தனவனத்துக் கொப்பானதும், பில்வங்களும் எருக்குக்களும் கருங்காலிமரங்களும் விளாமரங்களும் வெள்வேலமரங்களும் நிறைந்ததும், மலைகளினின் றும் சரிந்தகற்களால்நிரம்பி மேடுபள்ளமாக இருப்பதும், மனிதரில்லாத தும், ஜலமில்லாததும், அனேகயோசனை தூரம் நீண்டதும், மான் களும் ஸிம்மங்கள் முதலிய மற்றப் பயங்கரமான வனமிருகங்களும் நிறைந்ததும், நந்தனவனத்தைப் போன்றதுமான வனத்தைக்கண் டான்.

புருஷச்ரேஷ்டனான துஷ்பந்தன் வேலைக்காரர்களோடும் சேனை யோடும் வாகனங்களோடும் பற்பல மிருகங்களைக்கொன்று அந்தவன த்தைக் கலக்கினன். அவ்விடத்தில் துஷ்யந்தன் பாணத்தின் எதிரி லகப்பட்ட அனேகம் புலிக்கூட்டங்களைப் பாணங்களினல் பிளந்து கீழேதள்ளினன். அவ்வரசன் தூரத்திலிருந்த சிலவற்றைப் பாணங் களினல் பிளந்தான்; அருகில்வந்த சிலவற்றைக் கத்தியினல் வெட்டி னன். ஸமர்த்தர்களிற் சிறந்தவனாகிய அவன்சில மான்களைச் சக்கியா யுதத்தினல் அடித்தான். கதாயுதத்தைச் சுழற்றுவதின் ரஹஸ்யங் களை அறிந்தவனும் அளவற்ற பராக்கிரமமுள்ளவனுமாகிய அவன் தோமரங்களாலும், கத்திகளாலும், கதாயுதங்களையும் உலக்கைகளை யும் சுழற்றுவதனலும், அந்தக்காட்டிலுள்ள மிருகங்களையும் பக்ஷி களையும் கொன்றுகொண்டு சஞ்சரித்தான். வியக்கத்தக்க பராக்கி ரமமுள்ள அரசனலும் சண்டையில் விருப்பமுள்ள போர்வீரராலும் கலக்கப்பட்டஅந்தப்பெருங்காட்டைவிட்டு ஸிம்மங்கள்ஓடின. பிறகு அவ்விடத்தில் கூட்டங்கள் கலைந்தோடியும் கூட்டத்துக்கு முக்கிய மானவைகள் அடிபட்டும் இருந்த மான்மந்தைகள் ஆவலினல் ஆங் காங்குச் சப்தஞ்செய்தன. ஓடித்திரிந்து மார்பு படபடவென்று அடி

த்தகிலர் ஜலமில்லாத நதிகளையடைந்து ஜலத்தில் ஆசையைவிட்டு வருத்தமடைந்து பசியினாலும் தாகத்தினாலும் பீடிக்கப்பட்டுக் கலைத்துப் பிரஜ்ஞைதப்பிப் பூமியில்விழுந்தனர். அங்கே பசியுள்ள புருஷச்ரேஷ்டர்களால் சிலமிருகங்கள் பக்ஷிக்கப்பட்டன. அகதவனத்தில் புஞ்சரிக்கும் மற்றும் சிலர் நெருப்பைமூட்டி மாம்ஸங்களைப் பாகஞ்செய்து ஓழுங்காக அரைத்துப் புஜித்தனர். அங்கே பலமுள்ள சில மதயானைகள் ஆயுதங்களினால் அடிக்கப்பட்டுப் பயந்து துதிக்கைநுனிகளைச் சுருக்கிக்கொண்டும், இதந்திபைப் போட்டிக்கொண்டும், மூத்திரம் விட்டுக்கொண்டும், நிதுரியமாக ரக்தத்தைப் பெருக்கிக்கொண்டும் விரைந்தோடின. அவ்விடத்திலுள்ள பெருங்காட்டானைகள் அவனை பனிதர்களைத் துரைகதனை. அத்தவனத்திலுள்ள ஸிம்மங்கள் ராஜாவினால் கொல்லப்பட்ட பாதுமிருகங்களைநோக்கி அத்தவனம் அம்புதனென்னும் மலைதகரைகளைப் பொழிகின்ற மேகமென்னும் மேகத்தினால் மறைதகப்பட்டதாக விளங்கிற்று.

தொண்ணூற்றோராவது அத்தியாயம்.

ஸம்பவபர்வம் (தொடர்ச்சி).

(துஷ்யந்தன் கண்ணுவாச்ரமம் போவது).

அதன்பின், அந்தமாயிரம் மிருகங்களைக் கொன்றுவிட்டு, சேனை வாகனங்களுடன் அங்கே பட்டணத்துக்கு இரண்டியோசனை தூரத்தில் ஸித்தர்களும் சாரணர்களும் வணிப்பதும், திரண்டிருநூறு கினை பேகம்பேன்றதுமாகிய வனத்தைக்கண்டான். காட்டுமிருகங்களைத் துரத்தின களைப்பினால் சோர்ந்த ராஜா மிருகங்களைத் தொடர்ந்துகொண்டே வேகமாகக் குதிரைகளை ஓட்டினான்.

பிறகு அந்த அரசன் ஓரு பாணத்தைதொடர்ந்துகொண்டு வேறு வனம்புகுந்தான். உயர்ந்த பலமுள்ளராஜா தனியாகவே பசி தாகம் சிரமங்களுள்ளவனாக அவ்வனத்தின் அருகேசென்று ஓரு பெரிய பாழான இடத்தையடைந்தான். அவ்விரான் அதையுற்றாண்டி உயர்ந்த ஆச்ரமங்களுடையதும், மனத்தை மகிழ்விப்பதும், பார்ப்பதற்கு ரிக இனியதும், குளிர்ந்த காற்றுள்ளதும், புஷ்பங்களுள்ள மரங்கள் நிறைந்ததும், வெகு ஸுகமானபுல் பிரதேசமுடையதும், விசாலமானதும், இனிமையான குரலுள்ள பறவைகளும் குயில்களும் கூவிக்கொண்டிருப்பதும், சுவர்க்கோழிகள் கத்தப்பெற்றதும், வளர்ந்

கிளைகளுள்ளவையும் ஸுகமான நிழலுள்ளவையுமான மரங்களினால் மூடப்பட்டதும், பூமியெல்லாம் வண்டுகள் மொய்த்துக்கொண்டிருப்பதும், மிக்க அழகுள்ளதுமாகிய வேறொரு பெரிய வனத்திற்குச் சென்றான்.

அந்தவனத்தில் பூவாமலும் காய்க்காமலும் ஒருமரமுமில்லை; முள்ளுள்ளமரமுமில்லை; வண்டுகிரம்பாத மரமுமில்லை; பக்ஷிகள் ஆரவாரிக்கப்பெற்றதும், புஷ்பங்களினால்மிக்க அலங்காரமுள்ளதும், எல்லாக்காலங்களிலும் புஷ்பமுள்ளவையும் சுகமான நிழலுள்ளவையுமான மரங்களினால் மறைக்கப்பட்டதும், மனத்தைக் கவர்கின்றதுமான அந்தச் சிறந்தவனத்தில் சிறந்த வில்லாளியாகிய அரசன் பிரவேசித்தான். அவ்வனத்தில் புஷ்பித்த கிளைகளோடுகூடிய அம்மரங்கள் காற்றினால் அசைக்கப்பட்டு அநேகவர்ணமுள்ள பூமாரியை அடிக்கடி பொழிந்தன. ஆகாயத்தை அளாவியவையும் இனியகுரலுள்ள பக்ஷிகள் கூவுகின்றவையுமாகிய அந்தக்காட்டிலுள்ள மரங்கள் பலநிறங்களான புஷ்பங்களால் வஸ்திரங்களை அணிந்துகொண்டவைபோலச் சோபித்தன. அங்கே புஷ்பங்களின் மிகுதியினால் சாய்ந்திருக்கும் அம்மரங்களின் தளிர்களில் மதுவில் ஆசைகொண்ட வண்டுகள் இனிய சப்தங்களைச் செய்துகொண்டிருந்தன. அவ்விடத்தில் புஷ்பங்கள்சிதறிக்கிடந்ததனால் அலங்கரிக்கப்பட்டவையும் கொடிப்பந்தல்களினால் மறைக்கப்பட்டவையும் மனஸுக்கு விருப்பத்தை விருத்தி செய்கின்றவையுமான அநேக இடங்களைப்பார்த்து, மிகுந்த பராக்கிரமசாலியான அவ்வரசன் சந்தோஷமடைந்தான். ஒன்றுக்கொன்று கிளைகள் உரைந்துகொண்டு புஷ்பங்கள் நிறைந்து இந்திரனுடைய தேவஜாத்துக்குப்பாயிருந்த மரங்களினால் அவ்வனம் அழகாயிருந்தது. அந்தவனம் சித்தர்கள் சாரணர்கள் கந்தர்வர்கள் அப்ஸரஸுகள் மதமுள்ள வானரர்கள் கின்னரர்கள் இவர்களின் கூட்டங்களினால் நிரம்ப வியாபிக்கப்பட்டிருந்தது. ஸுகமான குளிர்ச்சியுள்ளதும் இனிய மணமுள்ளதுமான புஷ்பங்களின் மதுக்களை வஹித்துக்கொண்டுவருங்காற்று அந்தவனத்தில் ஸஞ்சரிக்கும்போது விளையாடுவதற்காக மரங்களைத் தாவுவதுபோலிருந்தது. இவ்வகையான குணங்கள் நிறைந்ததும் நதியின் பக்கத்திலுள்ள ஊற்றுகளிலுண்டாயிருப்பதும் தேவஜஸ்தம்பம் அலங்கரித்ததுபோல் அழகியதுமாகிய வனத்தை அவ்வரசன் பார்த்தான்.

மிகக் கலகலப்பான பக்ஷிகளோடுகூடிய அவ்வனத்தைப் பார்த்துக்கொண்டிருக்கையில், அழகியதும் மனத்துக்கு இனியதும் அநேக

விருக்ஷங்கள் நிரம்பியதும், அக்னிஹோத்ராக்னிகள் ஜ்வலித்துக்கொண்டிருப்பதுமாகிய சிறந்த ஆச்ரமம் ஒன்றைக்கண்டான். ராஜலக்ஷ்மியையுடைய அவ்வாசன், யதிகளும் பிறப்புமுதல்பிரம்மசாரிகளான வைகிக்யர்களென்னும் ரிஷிகளும் பல நிஷித்கூட்டங்களுமுள்ளதும் ஆகேக அக்னிஹோத்ர சாலைகளுள்ளதும் புஷ்பங்கள் மெத்தைகளாப்போற் பரவப்பெற்றிருப்பதும், அகேகம் பெரிய திட்டுக்களினால் விசேஷமாகச் சோபிக்கின்றதுமாகிய அந்தநிகரற்ற ஆச்ரமத்தை அப்போது கௌரவித்தான். ஜனமேஜயராஜாவே! அருகில் பரிசுத்தமாயும் ஆரோக்கியமான ஜலமுள்ளதாயும் அகேக பக்ஷிக்கூட்டங்கள் நிரம்பினதாயும் ஆச்சரமத்திற்கு அழகையுண்டாக்குவதாயும் மிருக்கிறமாலினிநதியையும் அதன் அருகிலுள்ள தபஸ்விமிருகங்களுடன் சாந்தமாக இருப்பதையும் கண்டு ஆயன் சந்தோஷமடைந்தான். விரிக்களில் தனக்கொப்பாரில்லாதவனும்பல ஆந்தரீமான், தேவலோகத்துக்குச் சொப்பானதும் லப்பக்கங்களினும் மிக்கரமணியமுள்ளதுமான அந்த ஆச்ரமத்திற்குப்போனான். ஆச்ரமத்தின் அருகேதூரத்தில் புண்ணிய தீர்த்தமுள்ளதும் அங்குள்ள பிராணிகளெல்லாவற்றிற்கும் தாயைப்போல்நிற்பதும், மணல்களில் சக்கரவாக பக்ஷிகளிருக்கப்பெற்றதும், கரையிலுள்ள மரங்களின் புஷ்பங்களையும் தூரைகளையும் அடித்துக்கொண்டுபோவதும், சின்னாசுகூட்டங்களால் வசிக்குமிடங்களுள்ளதும் (குரங்குகளும்) சொண்டைமுதலைகளும் நிரம்பினதும், பரிசுத்தமான வேதாத்தியயன சப்தமுள்ளதும், மணற்பரன்றுகளினால் அழகாயிருப்பதும், பதயாணகளும் புலிகளும் மற்றமிருகங்களும் நிரம்பினதுமாகிய ஆந்தரதியையும் கண்டான். அந்த நதியின்கரையில் அழகியதும் மற்றவிருக்ஷக்கூட்டங்களினால் ஆச்சரியத்தப்பட்டதுமாகிய, புஷ்காலமுமறிந்த மஹாத்மாவான கண்ணுவரிஷியின் சிறந்த ஆச்ரமத்தையும் கண்டான். ஆச்ரமத்திற்குச்சேர்ந்த நதியையும் ஆச்ரமமிருக்கும் இடத்தையும் கண்டு அவ்வாசன் அப்போதே உள்ளேபோவதற்கு விருப்பங்கொண்டான். திட்டுக்களாலும் கடையும் அழகானகரையுள்ளதுமாகிய மாலினிநதியினால் அலங்கரிக்கப்பட்டதனால், கங்கையினால் சோபிக்கின்ற நரநாராயணாச்ரமம் போன்றதும் பறவைகள் சப்தத்துடன் சப்திப்பதுமான அந்தப்பெரிய வனத்தில் பிரவேசித்தான். அந்தப்புருஷச்ரேஷ்டன் சைத்ரரதமென்னும் குபேரனது உத்தியானவனத்துக்கொப்பாயிருக்கிற அந்தவனத்துக்குட் சென்று எல்லாக் குணங்களும் மிகுந்ரப்பிரபாவருடன் பிரம்மதேஜஸினால் கண்ணைமூடித்துப்பார்க்கக்கூடாதவனும் தபஸ்ஸையே தனமாகவுடையவருமாகிய கசியப

கோத்திரத்திற் பிறந்த கண்ணுவமஹரிஷியைக் காண்பதற்காக, குதிரைகளும் யானைகளும் காலாட்களும் தேரோட்களும் தொடர்ந்தும், கொடிகள் பிரகாசிக்கின்றதுபோன்ற தன்சேனையை வனத்திற்கு வெளியிலேயேநிறுத்தி, "நான் ராஜாக்களுக்குள்ளவரும் சுவர்க்கத்தைப்போன்ற தனமாகவுடையவருமாகிய கண்ணுவமஹரிஷியைக் காண்பதற்குப் போகப்போகிறேன். நான்வருமளவும் இங்கே நிற்கவேண்டும்" என்று கட்டளையிட்டான். மனிதர்களுக்கு சுகவரனாகிய அவ்வரசன் நந்தனவனம்போல் விளங்குகின்ற அந்தவனத்தையடைந்தும் பரிதாபங்களைவிட்டான். பூர்ணமான ஆனந்தத்தையும் அடைந்தான்.

பிறகு அவ்வரசன், சுவர்மேலுலவுங்கொண்டவரும் தோஷமில்லாதவருமாயிருக்கிற அந்த ரிஷியைத்தரிசிக்கக்கருதி, வில் கிரீடம்முதலிய ராஜசின்னங்களைநீக்கிவிட்டுப் புரோஹிதர்களுடனும் மந்திரிகளுடனும் அந்தச் சுபமான ஆச்ரமத்தைஅடைந்தான். வண்டுகளினுணர்ச்சி கிறுகிறுப்புறுஞ் சப்தமுள்ளதும், அதிகவிகசிக்கப்பெற்ற கூட்டங்களின் பரிமளமும், பிரம்மலோகத்துக்கு ஒப்பானதுமாகிய அந்த ஆச்ரமத்தைக்கண்டு, அந்தராஜா ஆச்சரியத்தினால் மலர்ந்தகண்களுடன் மகிழ்வுற்றான். அங்கே யாகங்கள் செய்யப்படும்போது ரிக்வேதிகளுடனிருந்தவர்களால் பதங்களோடும் க்ரமங்களோடும் உச்சரிக்கப்பட்ட ரிக்வேதமந்திரங்களை அந்தப் புருஷச்ரேஷ்டன்கேட்டான். யஜுர்வித்தையின் அங்கங்களாகிய கல்பனூத்திர முதலியவற்றை அறிந்தவர்களும், யஜுர்வேதமந்திரங்களையுணர்ந்தவர்களும், மதுரமான ஸாமகானஞ்செய்கிறவர்களும், 'ஸாமகண்டம்' என்னும் ஸாமகானத்தினுட் கூறுகளாகிய ஸ்தோபங்களையும் வேதாபதேசத்தினும் கிறந்தவர்களும், உபநிஷதமென்னுஞ் சாஸ்திரங்களையும் ஜனகத்தையும் இந்திரியங்களையும் அடக்கினவர்களுமாகிய ரிஷிகளினால் அந்தஆச்ரமம் அலங்கரிக்கப்பட்டது. அதாவதுவேதத்தில் தேர்ந்தவரும் 'பூகயஜ்ஞர்' என்னும் ஒருவிதமானயாகத்தைப்பண்ணுகிறவர்களும் ஆகிய அந்த ரிஷிகள் பதத்தோடும் க்ரமத்தோடும் ஸம்ஹிதையென்னும் வேதபாகத்தைச் சொல்லிக்கொண்டிருந்தனர். சொற்களின் ஸ்வரவர்ணசுத்தியுடன் ஓதுகின்ற இன்னும் அதிகப்பிராமணர்களினால் வேதகோஷம்செய்யப்பட்ட அந்த ஆச்ரமம் இரண்டாவது பிரம்மலோகம்போல அழகுள்ளதாக இருந்தது. யஜுஸ்சாகிலே தர்ப்பையைப்பரப்புவது முதலான செய்கைகளையறிந்தவர்களும், * க்ரமம், † சிக்ஷையிவற்றில்

* வேதபதங்களைச் சேர்த்துச்சொல்வது.

† ஸ்வரம் எழுத்து முதலியவற்றின் லக்ஷணம்.

நிபுணர்களும், * நியாயசாஸ்திரத்தில் ஸரியானஞானமும் ஆத்ம ஞானமும் நிரம்பினவர்களும், வேதத்தின் கரைகண்டவர்களும், மீமாம்ஸைதெரிந்தவர்களும், அநேகவிதமானவாக்கியங்களின் தொகு திகளிலும் அன்வயங்களிலும் நிபுணர்களும், வைசேஷிகசாஸ்திரத் தின் விஷயம்தெரிந்தவர்களும், மோக்ஷதர்மத்தை அவலம்பித்தவர் களும், ஒருபக்ஷத்தை ஸ்தாபிப்பதையும் இதரபக்ஷத்தை ஆக்ஷேபிப் பதையும் தனக்குவந்த ஆக்ஷேபத்தைவிலக்கி ஸித்தாந்தம் செய்வ தையும் உண்மையான விஷயங்களையும் தெரிந்தவர்களும், சொல்லி லக்கணம் யாப்பிலக்கணம் சொற்கள்வந்தகாரணங்கள் இவை தெரிந் தவர்களும், †காலமறிவதில் நிபுணர்களும், பொருள்களும் அவற் றின்செய்கைகளும் குணங்களும் தெரிந்தவர்களும், ஒவ்வொன்றுக் கும் காரியத்தையும் காரணத்தையும் அறிந்தவர்களும், பறவைகள் வானரங்கள் இவைகளுடைய சப்தங்களை அறிந்தவர்களும், விரி வான கிரந்தங்களை ஆதாரமாகக் கொண்டவர்களும் லோகாய தம் அறிந்தவர்களில் சிறந்தவர்களுமாகிய ரிஷிகளால் எங்கும் எதி ரொலியுண்டாகும்படி உச்சரிக்கப்படும் வித்தியாகோஷத்தைச் செவி யுற்றான்.

எதிரிகளான வீரர்களைச் சங்கரிப்பவனுகிய அவ்வரசன் அந்த அந்த இடங்களிலும் நியமமுள்ளவர்களும், உறுதியான தவமுள்ள வர்களும், ஜபஹோமங்களைச் செய்பவர்களுமாகிய பிராமணர்களைக் கண்டான். அவர்கள் பிரயாஸப்பட்டுச் செய்த அழகும் விசித்திரமு மான ஆஸனங்களைக்கண்டு அரசன் வியப்புற்றான். பிராமணர்களாற் செய்யப்பட்ட தேவாலயபூஜையைக்கண்டு அந்த ராஜச்ரேஷ்டன் தன்னைப் பிரம்மலோகத்திலிருப்பவனுக நினைத்தான். காசியபரு டைய தவத்தினால் காப்பாற்றப்பட்டதும் தேவனுக்குரிய குணங்கள் நிரம்பினதும் சூக்ஷ்மகாரமான அந்தச் சிறந்த ஆச்ரமத் தைப் பார்ப்பதில் அவனுக்கு ஆசைநிரம்பவில்லை. அந்தவீரன் மந் திரிபுரோகிதர்களுடன் கூடினவனுகி உறுதியான நியாமமுள்ளவர்க ளும் தபஸ்மிதனமாக உடையவர்களுமாகிய ரிஷிகளால் நாலுபக்க மும் சூழப்பட்டதும், ஏகாந்தமானதும், மனஸைமிகவும் கவர்கின்ற தும், புண்ணியமுமாகிய கண்ணுவருடைய பர்ணசாலையில் பிரவே சித்தான்.

---

* தர்க்கசாஸ்திரத்தில் கௌதமராற்சொல்லப்பட்டது நியாயம்; கணா தர் சொல்லப்பட்டது வைசேஷிகம்.

† சோதிடம்.

தொண்ணூற்றிரண்டாவது அத்தியாயம்.

ஸம்பவபர்வம் (தொடர்ச்சி).

(கண்ணுவராச்ரமத்தில் சதந்தலுக்கும் துஷ்யந்தனுக்கும் ஸ்டாஷணை).

பிறகு, சிறந்தபுஜபலமுள்ள அவ்வரசன், அந்தமந்திரிகளையும் நிறுத்திவிட்டுத் தனிமையாகப்போனான். அந்த ஆச்ரமத்தில் கடுமையான தவமுள்ள அந்த ரிஷியைக்காணவில்லை. அவன் அந்தரிஷியைக் காணுமையால், ஆச்ரமத்தில் யாருமில்லாமலிருப்பதைக்கண்டு, வனமுழுதும் எதிரொலிபுண்டாகச் செய்கிறவன்போல் 'யார் இங்கே' என்று உரக்கக்கூப்பிட்டான். அவனுடைய அந்த ஒலியைக்கேட்டு, லக்ஷ்மியே உருவங்கொண்டு வந்தாற்போன்றவளும் ரிஷிவேஷந்தரித்தவளுமாகிய ஒருகன்னிகை அவ்வாச்ரமத்தினின்றும் வெளிப்பட்டாள். ஜனமேஜயரே! கறுத்தகண்களையுடைய அந்தப்பெண், பூஜிக்கத்தக்கவனும் எல்லாரையும் ஆளுகிறவனுமாகிய அந்தத் துஷ்யந்தமகாராஜா அதிதிபாக வந்திருப்பதைக்கண்டு மிகுந்தசந்தோஷமடைந்தாள். அழகும் பருவமும் நிரம்பினவளும், சிறந்த ஒழுக்கமும் ஆசாரமுமுள்ளவளும், மங்களமான லக்ஷணங்கள் சேர்ந்தவளுமாகிய அந்தப்பெண் தாமரைப்புஷ்பம்போல் விசாலமான கண்களும் அகன்றமார்பும் சிறந்தபுஜமும் லிம்மம்போன்ற தோள்களும் நீண்டகைகளுமுடையவனும் எல்லா நல்லலக்ஷணங்களும் பொருந்தினவனுமாகிய அவ்வரசனைநோக்கி இனியசொற்களினால் தெளிவாகப் பேசினாள். "உனக்கு நல்வரவு" என்று சீக்கிரமாகச் சொன்னாள். ஜனமேஜயரே! ஆசனம்கொடுத்து மரியாதைசெய்து அர்க்கியபாத்தியங்களினால் பூஜித்து ராஜாவை க்ஷேமத்தையும் ஆரோக்கியத்தையும் விசாரித்தாள். நியாயப்படி பூஜித்துக் குசலப்பிரச்னம்செய்தபிறகு மலர்ந்தமுகத்துடன், "என்னகாரியம்செய்யவேண்டும்" என்றும், "நீர் என்னகாரியம் செய்யக்கருதி ஆச்ரமத்திற்கு வந்திருக்கிறீர்? இப்போது மஹரிஷியின் இந்தப்புண்ணியாச்சிரமத்திற்கு வந்த நீர் யாவர்?" என்றும் கேட்டான்.

பிறகு சாஸ்திரப்பிரகாரம் பூஜிக்கப்பெற்ற அவ்வரசன், எந்த அவயவங்களிலும் குற்றமில்லாதவளும், இனிமையாகப் பேசுகிறவளுமாகிய அந்தப் பெண்ணைப்பார்த்து, "தாமரைப்புஷ்பம்போன்ற கண்களையுடையவளே! நான் இலிலன்என்னும் பிரசித்திபெற்ற மஹாத்

மாவான ராஜரிஷியின்புத்திரன். துஷ்யந்தன்என்பது என்பெயர். இது நிஜம். மஹானுபாவராகிய கண்ணுவமஹரிஷியை உபாஸிப்பதற்கு நான் வந்திருக்கிறேன். அன்புள்ளவளே! அழகானவளே! அந்தப் பகவான் எங்கேபோயிருக்கிறார்? அதை எனக்குச்சொல்" என்று கேட்க, சகுந்தலை, "பகவானுகிய என்பிதா பழங்கள்கொண்டுவருவதற்காக ஆச்ரமத்தை விட்டுப்போயிருக்கிறார். சற்றுநேரம் இரும்; அவர்வந்தபின் பார்க்கலாம்" என்று சொன்னாள். அந்தச்சகுந்தலை அவ்வாறு சொல்லியதைக்கேட்ட அந்த அரசன், அந்த ரிஷியைக் காணுமையால், அழகுள்ளவளும், மனோஹரமான சிரிப்புள்ளவளும் சரீரத்தினாலும் தபஸினாலும் அடக்கத்தினாலும் சோபிக்கிறவளும், அழகும் பரிசுத்த நிரம்பினவளுமாகிய அந்த உத்தமமான பெண்ணைப்பார்த்து, "அழகான நிதம்பமுள்ளவளே! நீயார்? யாருடைய பெண்? எதற்காக வனத்தில்வந்தாய்? அழகானவளே! இப்படி அழகுள்ளமுழுமுள்ள நீவங்கிருந்து வந்திருக்கிறாய்? அழகானவளே! உன்னைப் பார்த்தபாத்திரத்தில் நீ என்மனதை அபகரித்துவிட்டாய். உன்னை நான் தெரிந்துகொள்ளவிரும்புகிறேன். ஆகலால், அழகியே! எனக்குச்சொல். அவ்வாறு சொல்லக்கூடாமலிருக்கிறாயே! காத்திருக்கிறேன்; ஒன்றுசொல்லவும் நினைக்கிறேன். யாரைத் தெரிந்கைபோன்ற நடைகளையுடையவளே! பெண்ணாகியே! என்சொல்லுக்கேள். நான் ராஜரிஷிவம்சத்தில் பிறந்தவன். அதிலும் விசேஷமான பூருவம்சத்திற்பிறந்தவன். நான் துஷ்யந்தனென்பவன். பெண்ணாகியே! இப்போது உன்னை நான்வரிக்கிறேன். எனக்கு சுகத்தை நியாயமென்னுஞ்சுவிர வேறு ரிஷிபுத்திரிகளிடத்திலும், காந்தர்வ பெண்களிடத்திலும் உயர்ந்தபெண்களிடத்திலும் மனம் ஒருபோதும்செல்வதில்லை. இனிமதாகப் பேசுகிறவளே! ஆகலால், என்னைக் கட்டுப்பட்ட மனமுள்ளவனென்று அறி. எனக்கு உன்னிடம் அபிப்பிராயம் உண்டானதனால் நீகூடத்திற்பிறந்தவளாக இருக்கவேண்டும். நீயார்? சொல்; பயந்தவளே! என்மனம் பிராமணப்பெண்ணிடம் செல்வதற்கு யுக்தமல்லாதது. நீண்ட கண்களையுடையவளே! உன்னை நான் விரும்புகிறேன். விருப்பமுள்ள என்னை நீயும் விருப்பக்கடவாயாக; விசாலமான கண்களையுடையவளே! ராஜ்யத்தை அனுபவி. வேறுவிதமாக எண்ணாதே" என்று சொன்னான். அச்சமயத்தில் அந்த ராஜாவினால் இவ்வாறு சொல்லப்பட்ட அந்தக்கன்னிகை, சிரித்துக்கொண்டு அவரைநோக்கி, மிக இனிமையானசொற்களுள்ள பின்வரும் வாக்கியத்தைச் சொன்னாள்:

"துஷ்யந்தராஜாவே! உயர்ந்த தவமுள்ளவரும் த்ருடமான சித்தமுள்ளவரும் தர்மந்தெரிந்தவரும் மஹாத்மாவுமாகிய பகவானை கண்ணுவர் என்னைப் பெண்ணாக நினைத்திருக்கிறார். ராஜச்ரேஷ்டரே! எனக்கு என்விஷயத்தில் ஸ்வதந்த்ரமில்லை. கண்ணுவர் எனக்கு எஜமானனும் பிதாவுமாக இருப்பவர். உம் காரியத்தைப்பற்றி அவரையே கேளும். தகாததைச்செய்வது ஸரியன்று" என்றாள். "பெரியபாக்கியமுள்ளவளே! உலகமெல்லாம் பூஜிக்கத்தக்க பகவானாகிய கண்ணுவர் ஊர்த்வரேதஸ்; தர்மதேவதையை ஓழுக்கத்தை விட்டு விலகினாலும்விலகுவர்; அந்தக்கடமையான நியமமுள்ள கண்ணுவர் விலகார். பெண்ணரசியாகிய நீ அவருக்குப் பிறந்த பெண்ணென்பது எவ்வாறு? இந்தவிஷயத்தில் எனக்குப் பெரியஸம்சயம் இருக்கிறது. அதை எனக்கு நீ தெளிவித்துச்செய்யவேண்டும்" என்று துஷ்யந்தன் சொன்னான். சகுந்தலை, "ராஜாவே! நான் கண்ணுவரிடமிருந்து பெண்ணாக இருக்கின்றவிஷயம் முன்னால் எவ்வாறு நடந்ததென்பதைப் பற்றி எனக்குத்தெரிந்தவகையை விவரமாகச்சொல்லுகிறேன்; கேளும். எவன் தான் ஓருவனைஇருக்க வேறுருவனைப் பெரியோர்களிடம் சொல்லுகிறானோ அவன் பாபத்தினால் மூடப்பட்டவனும் மூடனும் தன்னை அபகரித்த திருடனுமாவான். ஓருரிஷி, என் பிதாவினிடம்வந்து என் ஜனனத்தைப்பற்றி, 'நீர் ஊர்த்வரேதஸாக இருக்கிறீர். இந்தச்சகுந்தலை உமக்குப்புத்ரியாவது எவ்வாறு? உமக்கு ஸ்த்ரீயல் எவ்வாறு ஜனித்தாள்? உண்மையை எனக்குச் சொல்லும்' என்று கேட்டார். ராஜாவே! அவருக்குக் கண்ணுவபகவான் என்ன உத்தரம்சொன்னாரோ அதைக்கேளும். 'முற்காலத்தில் விசுவாமித்ரர் கடுந்தவம்செய்து தேவக்கூட்டங்களுக்கெல்லாம் பிரபுவாகிய இந்த்ரனுக்கு மிக்கபயத்தை உண்டுபண்ணினார். 'தவத்தினால் ஜயிக்கின்ற சக்தியுள்ள இவர் என்னை இந்த்ரபதத்திலிருந்து தள்ளிவிடுவார்' என்று விசுவாமித்ரருக்கு அஞ்சின இந்த்ரன் மேனகையைநோக்கி, 'மேனகையே! நீ அருமையான குணங்களினால் அப்ஸரஸ்ஸுகளுக்கெல்லாம் மேலாகஇருக்கிறாய். அழகானவளே! எனக்கொரு நன்மைசெய். நான் சொல்லுவதைக் கேள். சூரியனைப்போல் பிரகாசித்துக்கொண்டிருக்கிற இந்தப் பெருந்தவமுள்ள விசுவாமித்ரர் கடுந்தவஞ்செய்து என்உலகத்தை நடுங்கச்செய்கிறார். அழகிய இடையுள்ள மேனகையே! இந்த விசுவாமித்ரர் உத்தமமான மனத்தோடு யாராலும் கலக்கமுடியாதவராக உக்கிரமான தவத்திலிருக்கிறார்; அவர் என்னை ராஜ்யத்தைவிட்டுத் தள்

ளாமலிருக்கும்படி, நீபோய் அவரை மயங்கச்செய். அவர் தவத்துக்கு இடையூறுசெய்து என்னுடைய முடிவான விருப்பத்தை நிறைவேற்று. அழகானவளே! ரூபத்தினாலும் யௌவனத்தினாலும் இனிமையினாலும் செய்கையினாலும் புன்னகையினாலும் சொற்களினாலும் மயக்கி, அவரைத் தவத்திலிருந்து விலக்கிவிடு; இஃதுஉன்னுடையபொறுப்பு' என்றுசொன்னன். அதற்குமேனகை, "அந்தப் பகவான் மிகுந்தமகிமையும் கடுந்தவமும் உள்ளவர்; கோபக்காரர்; அவர் அப்படிப்பட்டவரென்பதை நீங்களும் அறிவீர்கள். அந்த மஹாத்மாவின் சக்திக்கும் தவத்திற்கும் கோபத்திற்கும் நீங்களும் பயப்படுகிறீர்கள். நான் எவ்வாறு நடுங்காமலிருப்பேன்? மிகுந்த பிரபாவமுள்ள வஸிஷ்டரைப் பிரியமான புத்திரர்களைவிட்டு அவர் பிரித்தவர்; முதலில் க்ஷத்திரியஜாதியிற்பிறந்து தமது வன்மையினால் பிராமணரானவர்; தமக்கு ஸ்நானத்திற்காக நிரம்பின ஜலத்தினால் இறங்கிச்செல்லமுடியாத நதியையுண்டுபண்ணினவர். அதைத்தான் இவ்வுலகத்தில் மிகுந்தபுண்ணியமுள்ள கௌசிகி நதியென்று ஜனங்கள் அறிகின்றனர். முன்னே பஞ்சகாலத்தில் இந்தமஹாத்மாவினுடைய பாரியையை வேடனுகப்போன * மதங்கனென்னும் தர்மிஷ்டனை ராஜரிஷி காப்பாற்றினன். அந்தப் பஞ்சகாலம் கடந்தபின் திரும்பவும் ஆச்ரமத்திற்குவந்து ஸமர்த்தராகிய அந்தமஹரிஷி † பாரையென்று அந்தநதிக்குப் பெயரிட்டார். மனமகிழ்ந்து தாமே அவ்விடத்தில் சண்டாளனுக்கு யாகம்செய்வித்தார். தேவேந்திரரே! அவரிடம்பயந்து அந்தச்சண்டாளனுடைய யஜ்ஞத்தில் ஸோமரஸம் பானஞ்செய்கிறதற்கு நீங்களும் போனீர்கள். அவர் கோபங்கொண்டு நக்ஷத்திரங்கள்நிறைந்த வேறுலோகத்தையும் ஸ்ருஷ்டித்தார். ‡ ப்ரதிச்ரவணம்முதலிய நக்ஷத்திரங்கள் அவர் செய்தவை.

---

* திரிசங்கு. † கிரம்பினது.

‡ ப்ரதிச்ரவணம் என்பது ச்ரவணத்துக்கெதிராக விசுவாமித்ரர்படைத்த நக்ஷத்திரமாக இருத்தல்வேண்டும்.

அனுஷம் கேட்டை மூலம் பூராடம் உத்தராடம் இவ்வைந்து நக்ஷத்திரங்களும் ஒருகொத்தாகத் தெற்கிலும், மற்ற இருபத்திரண்டு நக்ஷத்திரங்களும் தனித்து வடக்கிலுமிருப்பதுபற்றி அதிக எண்ணுள்ள நக்ஷத்திரங்களை முதலிற்கூறுவதற்காக ச்ரவணத்தை முதலாகக்கூறினதாகக்கொள்க.

வால்மீகிராமாயணம், பாலகாண்டம், சுஂ - வது ஸர்க்கம், உ0 - வது ச்லோகம்முதல் ஊ - வது ச்லோகம்வரையில், விச்வாமித்ரர் கோபம்மூண்டு, ஸப்தரிஷிகளையும் நக்ஷத்திரவம்சத்தையும் தக்ஷிணமார்க்கத்தில் வேறுகப் படைத்து, மறுபடியும் கோபத்துடன், ''வேறுஇந்திரனையாவது படைப்பேன்; அல்லது இந்திரன் இல்லாமலேயாவது லோகம் இருக்கட்டும்'' என்று

குருவாகிய வஸிஷ்டருடைய சாபத்தால் கெடுக்கப்பட்ட திரிசங்குவுக்கு அபயம்கொடுத்தார்.

ராஜரிஷியாகிய கௌகிகர் பிரம்மரிஷியின் சாபத்தை எவ்வாறு நிவிர்த்திப்பது என்று அவமதித்து, தேவர்கள் அந்த யஜ்ஞத்தின் கருவிகளை அழித்தனர். பெருஞ்சக்தியுள்ளவரும் ஸ்வதந்திரருமான அந்த விசுவாமித்திரர் வேறு யாகக்கருவிகளைப் படைத்தார். மிகுந்ததவமுள்ள அவர் த்ரிசங்குவை அப்போதே சுவர்க்கத்துக்கு அனுப்பினர். அவருடைய செய்கைகள் இப்படிப்பட்டவை. அவரிடத்தில் நான் மிகவும்நடுங்குகிறேன். பிரபுவே! அவர் கோபித்து என்னை எரிக்காமலிருக்கும்வண்ணம் எனக்குக் கட்டளையிடுங்கள். அவர் மகிமையினால் உலகங்களை எரித்துவிடுவர். காலால் பூமியை நடுங்கச்செய்வர். மஹாமேருவை எறிந்துவிடுவர். வேகமாகத் திசைகளைச் சுழற்றிவிடுவர். அவ்விதமான தவமுள்ளவரும் எரிகிற கெருப்பைப்போன்றவருமாகிய அந்த ஜிதேந்திரியரான விசுவாமித்திரரை எங்களைப்போன்ற ஒருபெண் எவ்வாறு தொடுவாள்? தேவேந்திரரே! அக்கினியையே முகமாகவும் சூரியசந்திரர்களைக் கண்களாகவும் யமனைநாவாகவும்கொண்டு ஜ்வலிக்கின்றவரை எங்களைப்போன்றவள் அணுகுவது எப்படி? யமனும் சந்திரனும் மஹரிஷிகளும் ஸாத்

நினைத்து, தேவர்களையும் கோபத்தினால் ஸ்ருஷ்டிக்கத்தொடங்கினர் என்பது சொல்லப்பட்டிருக்கிறது.

அதற்கு, கோவிந்தராஜீயவ்யாக்யானத்தில் "வடக்கில் த்ருவன் சலிக்காமலிருப்பதுபோல் தெற்கில் திரிசங்குஇருக்கட்டும்; த்ருவனைச்சுற்றி ஸப்தரிஷிகளிருப்பதுபோலவே திரிசங்குவைச்சுற்றியும் ஸப்தரிஷிகளு மிருக்கட்டும்; அங்கே இருபத்தேழுநக்ஷத்திரங்களிருப்பதுபோலவே இங்கும் இருபத்தேழு நக்ஷத்திரங்களிருக்கட்டும்; இதரநக்ஷத்திரக்கூட்டமும் அங்கிருப்பதுபோலவே இங்குமிருக்கட்டும் என்று ஸங்கற்பித்துக்கொண்டு இந்தலோகத்; திற்கு இந்த இந்திரனைத்தள்ளி வேறு இந்திரனையாவது ஸ்ருஷ்டிப்பேன்; லோகத்தில் இந்திரனே இல்லாமற்செய்தாலும் செய்வேன்; இந்திரனில்லாத மற்றொருலோகத்தைப் படைத்தாலும்படைப்பேன்" என்று ஆரம்பித்தார் என்றிருக்கிறது.

உக, நக, நக, நஉ - வது ச்லோகங்களில் விசுவாமித்ரர் தாம்படைத்த நக்ஷத்திரங்கள் முதலியவையும் உலகமுள்ளவரையில் அழியாமலிருக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ள, பிரம்மாதிதேவர்கள் "அவ்வாறே இப்போதுள்ள நக்ஷத்திரஸஞ்சாரமார்க்கத்திற்கு வெளிப்பட்டு அவை சாச்வதங்களாக இருக்கட்டும்; அவற்றின்நடுவில் திரிசங்குமட்டும் தலைகீழாகத் தேவதையைப்போற் பிரகாசித்துக்கொண்டு நக்ஷத்திரரூபமாக இருக்கட்டும்" என்று சொன்னதாகவும் சொல்லியிருக்கிறது.

இங்கு பாரதத்திலும் நக்ஷத்திரங்களிறைந்த மற்றொரு லோகத்தைப் படைத்தார் என்றதனால், முன்னிருந்த நக்ஷத்திரங்களுக்கெதிராக எல்லாநக்ஷத்திரங்களையும் விசுவாமித்ரர் படைத்ததாக ஏற்படுகிறது.

திபர்களென்னும் தேவர்களனைவரும் வாலகில்யர்களெல்லாரும் எவருடைய மஹிமைக்கு நமஸ்குகின்றனரோ அவரிடம் என்னைப்போன்றவன் எவ்வாறு பயப்படாமலிருப்பன்? தேவராஜாவே! நீங்கள் இவ்வாறு சொன்னபின் அந்தரிஷியின் சரீரத்திற்குள் நான் எப்படிச்சென்றாமலிருப்பேன்? தேவராஜாவே! என்னைக் காப்பாற்றுவதைப் பற்றியும் ஆலோசிக்கவேண்டும். நான் காப்பாற்றப்பட்டு உமதுகாரியத்தை முடிக்கக்கடவேன். தேவரே! நான் அந்த இடத்தில் வினையாடிக்கொண்டிருக்கையில் என்னுள்திரத்தை வாயு இவ்விடப்படி விலக்கிவிடவேண்டும். உங்கள் அனுக்கிரகத்தினால் அந்தக்காரியத்தில் எனக்குமன்மதன் உதவியாக இருக்கவேண்டும். நான் அந்தரிஷியை வஞ்சிக்கும்போது அந்தக்காலத்தில் காட்டுமிருந்து வாயுவுள்ளகாற்று வீசவேண்டும்" என்று சொன்னான். "அப்படியேயாகட்டும்" என்றுசொல்லி இந்திரனால் அனுப்பப்பட்டபின், மேனகை விசுவாமித்திருடைய ஆச்ரமம் சென்றாள்.

தொண்ணூற்றுமூன்றுவது அத்தியாயம்.

ஸம்பவபர்வம் (தொடர்ச்சி).

(சகுந்தலோபாக்யானம்).

மேனகை இவ்வாறு சொல்லிக்கொள்ள, இந்திரன் வாயுவை அனுப்பினான். அந்தக்காலத்தில் வாயுவுடன்கூட மேனகை புறப்பட்டாள். பிறகு பெண்களுட்சிறந்தவளாகிய மேனகை பயமுள்ளவளாகி, பாபங்களெல்லாம் நீங்கும்படி தவம்செய்துகொண்டிருந்த விசுவாமித்திரரை ஆச்ரமத்திற் கண்டாள். பிறகு அவள் அவரை வந்தனஞ்செய்துவிட்டு மன்மதனின் அருகே வினையாடினாள். வாயு அவளுடைய வஸ்திரமுக்காப்பான ஆடையை விலக்கினான். உயர்ந்த பெண்ணுகிய மேனகை அக்கினிக்கொளுந்தான தேஜஸ்ஸையுடைய அந்த ராஜரிஷியான விசுவாமித்திரர் பார்க்கையில் வெட்கமுற்றுக் காற்றைநிந்தித்து, அந்த ஆடையையெடுப்பதற்காகத் தரிதமாகப் பூமியில் இறங்கினாள். அப்போது மிகுந்தேஜஸ்டரான விசுவாமித்ர மாசற்ற ரூபமுள்ளவளும் வயஸினும் அழகினும் குறைபடக்கூடாத வளுமான அந்தமேனகை வஸ்திரமில்லாமல்லங்கடப்பட்டுக்கொண்டு ஆடையில் ஆசையைவைத்துப் பரபரப்புடனிருப்பதைக் கண்டார். அப்போது அந்தப்பிராமண சிரேஷ்டர் அவளுடைய அழகையும் குணங்

களையுங்கண்டு காமத்துக்குட்பட்டு அவளோடு சேர நண்ணுங்கொண்டார். அவளை அழைக்கவும் அழைத்தார். அந்தச்சிறந்தபெண்ணும் ஸம்மதித்தாள். அவர்களிருவரும் அங்கே அப்போது வெகுநீண்டகாலம் ஒருதினம்போல் இஷ்டப்பிரகாரம் ரமித்துக்கொண்டிருந்தனர். எப்போதும் தவத்திலிருந்த ரிஷியானவர் இவ்வாறு காமக்குரோதங்களை அடக்காதவராகி, அநேக ஆயிரவருஷங்கள் கடந்துபோனதை கிஞ்சுக்காமற்போனர். அந்தரிஷி வெகுகாலமாகச் சம்பாதித்த தவத்துக்கு அழிவைச் செய்துகொண்டார். தவமழிந்ததனாலேயும் அம்முனிவர் மோகத்தையடைந்தார். கோபமே இயல்பாகவுடையவரும் காய்கிழங்குகளைப் புசிப்பவருமாகிய முனிவர் பெண்மயக்கத்திலகப்பட்டுக்கொண்டு காலங்கழிவதனால் ஜலத்தில் சம்தர்ஸனஞ் செய்துவிட்டு நதியின் உள்திட்டிலுள்ள ஆச்ரமத்திற்குச் சென்றார். தானும் (அவரை)விட்டு நீங்குவதற்கு விருப்பமே மோனை ஜலத்தில் சம்தர்ஸனஞ்செய்தாள். 'தபஸினுல்லுவளித்த மகிமையுள்ள இவர்போவதும் வருவதும் ஆகாசமார்க்கத்தாலேதான். இப்போது இவர் தவம்குறைந்துபோனதினுடைய அடையாளத்தை நான்அறிகிறேன். இப்போது நாம்போவது லாபமன்று' என்றறிதலினால் மோனை ருதுஸ்நானஞ் செய்து, காமத்தின் விருப்பத்தில் அகப்பட்டவராகிய அம்முனிவரின் அருகிற்சென்றாள். அந்தரிஷி மாலினிநதியின்ஸம்பத்தில் அழகான இரண்டிலைவின் சாரணிமரத்தில் மோனையினிடம் ஒருகுழந்தையை உண்டாக்கினார். தெய்வப்பெண்ணுக்கு ஒப்பானவரும் எல்லா ஆபரணங்களும் அணிந்துகொண்டு அழகிய சயனத்தில்படுத்திருப்பவருமான அந்தப்பெண்ணைப்பார்த்து, மோனை, 'பெண்மானிகியே! நீ உக்கிரமான தவமுள்ள மஹரிஷியின் மனைவியாகஇருக்கிறாய். *ஆதலால், நீதவகாரியத்திற்காகவந்த நான் ஸ்வர்க்கம்செல்லவேண்டும்' என்று சொன்னாள். பிறகுதவத்தில் அந்தக் கர்ப்பத்தை மாலினிநதியினருகில்விட்டுவிட்டு, தான்வந்த காரியத்தை நிறைவேற்றிக்கொண்ட மோனை உடனே விரைவாக இந்திரசபைக்குச் சென்றாள். சிங்கங்களும் புலிகளும் நிறைந்த ஜனமில்லாத காட்டில் படுத்திருக்கும் அந்தக் குழந்தையைப்பார்த்துப் பக்ஷிகள் சுற்றிலும் சூழ்ந்துகொண்டன. 'குரூரமான மிருகங்கள் நம்மைத்தின்ன ஆசைவைத்து இந்தப் பெண்குழந்தையைக் கொல்லக்கூடாது' என்றுபக்ஷிகள் அங்கே அந்த மோனையின் பெண்ணைக் காத்தன. ஸ்நானத்திற்காகப்போன நான்

* மானிடப்பெண்ணை ஸ்வர்க்கத்தில் எடுத்துக்கொண்டு போகக்கூடாது என்பது கருத்து.

ஜனமில்லாத அழகானகாட்டில் பக்ஷிகளினால் சூழப்பட்டுப் படுத்திருந்த இவளைக்கண்டேன். அழகாகக் கூவுகின்ற பக்ஷிகளெல்லாம் என்னைப்பார்த்துக் கிட்டவந்து என்கால்களில் விழுந்து, 'பிராமணரே! இந்தவிசுவாமித்திரருடைய பெண்ணை அடைக்கலம்போல்வைத்துக் காப்பாற்றக்கடவீர். உமதுசிநேகிதர் காமக்குரோதங்களை அடக்காமல் கௌசிகநதிக்குச்சென்றார். ஆதலால், தயையோடுஅவருடைய பெண்ணை வளர்க்கக்கடவீர்' என்று இனிமையாகவும் தெளிவில்லாமலும் சொல்லின. பிராணிகளின் பாஷைகளையெல்லாம் தெரிந்தவனும் எல்லாப்பிராணிகளிடத்தும் தயையுள்ளவனுமாகியநான் உடனே அவளைக் கொண்டுவந்து பெண்ணாக வைத்துக்கொண்டேன். சரீரத்தை உண்டுபண்ணுகிறவன், உயிரைக்கொடுப்பவன், எவனுடைய அன்னத்தைப் புசிக்கிறார்களோ அவன் ஆகிய இம்மூவரும் முறையாகத் தந்தைகளென்று தர்மசாஸ்திரத்தில் சொல்லப்படுகின்றனர். ஜனமில்லாத வனத்தில் பறவைகளினால் சூழப்பட்டதனால் நான் இவளுக்குச் * சகுந்தலை என்று பெயரிட்டேன். பிராமணரே! சகுந்தலை இவ்விதமாக எனது பெண்ணென்றறியும். உபர்ந்த பெண்ணாகிய சகுந்தலையும் என்னையே பிதாவென்று நினைக்கிறாள்" என்று, என்னைப் பற்றிக்கேட்டபோது, என்பிதாவை அந்தமஹரிஷிக்கு என்பிதா சொன்னார். ராஜாவே! இவ்வாறு நான் கண்ணுவருடைய பெண்ணென்று நீர்அறியும். பெற்றதகப்பனை அறியாதவளாகிய நான் கண்ணுவரையே பிதாவாக நினைத்திருக்கிறேன். ராஜாவே! இவ்வாறு நான் கேட்ட என்வரலாற்றைச் சொன்னேன்" என்றாள்.

தொண்ணூற்றுநான்காவது அத்தியாயம்.

ஸம்பவபர்வம். (தொடர்ச்சி.)

(துஷ்யந்தன் சகுந்தலையைக் காந்தர்வ விவாகஞ்செய்து நகரத்திற்குச் சென்றபிறகு, கண்ணுவர் வந்து சகுந்தலைக்கு வரமளித்தது.)

துஷ்யந்தன், "கல்லியாணியே! நீ சொல்லுகிறபடி நீ ராஜபுத்திரியென்பது தெளிவாகிறது. அழகிய நிதம்பமுள்ளவளே! நீ எனக்கு மனைவியாகக்கடவாய். உனக்கு நான் என்னசெய்யவேண்டும்? சொல். பொன்மாலையையும், வஸ்திரங்களையும், பொன்மயமான குண்

---

* சகுந்த - பறவைகளினால், லா - கிருஹிக்கப்பட்டவள்.

டலங்களையும், ஒளியுள்ளவையும் மங்களகரங்களுமாகிய அனேகவித நகரங்களிலுண்டான முத்துக்களையும், ரத்னங்களையும், பொன்காசு முதலியவற்றையும், தோல்களையும் இப்போது உனக்கு நான் கொடுக்கிறேன். ராஜ்யமெல்லாம் இப்போதே உனதாக ஆகட்டும். அழகான வளே! எனக்கு நீ பார்யையாகக்கடவாய். சுந்தரியே! அச்சமுள்ள வளே! காந்தர்வமென்னும் விவாகத்திலுல் நீ என்னிடம்சேர். வாழைமரம்போன்ற துடையையுடையவளே! விவாகங்களுக்குள் காந்தர்வவிவாகம் சிறந்ததாகச் சொல்லப்படுகிறது" என்றுசொன்னன். அதைக்கேட்ட சகுந்தலை, "ராஜாவே! எனதுபிதா பழங்கள் கொண்டு வருவதற்காக இந்த ஆச்ரமத்தைவிட்டுப் போயிருக்கிறார். சற்று நேரம் இரும். அவர் என்னை உமக்குக்கொடுப்பார். எனக்குப்பிதாவே அதிகாரி. அவர் எனக்கு முக்கியமான தேவதை. பிதா என்னை யாருக்குக்கொடுப்பாரோ அவரே எனக்குப் பர்த்தாவாவர். இளமையில் பிதா காப்பாற்றுகிறார். பருவகாலத்தில் கொழுநன் காப்பாற்றுகிறன். முதிர்ந்த பிராயத்தில் புத்திரன் காப்பாற்றுகிறன். ஸ்திரீ ஸ்வதந்திரமாய் இருக்கத்தக்கவள் அல்லள் ராஜச்ரேஷ்டரே! தர்மிஷ்டரே! சிறந்ததவமுள்ள என்பிதாவை மதிக்காமல் அதர்மமாக வரணை நான் எப்படி அடையலாம்?" என்றுசொன்னள். துஷ்யந்தன், "ஸுந்தரியே! தவமே உருக்கொண்டவரும், சாந்தியை இயல்பாக உடையவருமான கண்ணுவரைப்பற்றி நீ இவ்வாறு சொல்வது, தகாது தகாது" என்று சொல்ல, கேட்ட சகுந்தலை, "பிராமணர்களுக்குக் கோபமே ஆயுதம்; பிராமணர்கள் கையில் ஆயுதம்பிடிப்பவரல்லர்; இந்திரன் வஜ்ராயுதத்திலுல் அஸுரர்களைக் கொல்வதுபோல் பிராமணர்கள் கோபத்திலுல் சத்துருக்களைக் கொல்லுகின்றனர். அக்னி ஜ்வாலைகளிலுல் தகிக்கிறது; சூரியன் கிரணங்களிலுல் தகிக்கிறன்; ராஜா தண்டனையிலுல் தகிக்கிறன்; பிராமணன் கோபத்திலுல் தகிக்கிறன். கோபம் மூட்டப்பட்ட பிராமணன், கோபத்திலுலேயே இந்திரன் அஸுரர்களைக் கொன்றதுபோலவே கொல்லுகிறன்" என்றுசொன்னள். அதற்குத் துஷ்யந்தன், "பிரியமானவளே! அந்தக் கண்ணுவமஹரிஷியை நான் அறிவேன். அவருக்குக் கோபமில்லை. அழகான நிதம்பமுள்ளவளே! சிலாக்கியமானவளே! நீ என்னை அடைவதை நான் விரும்புகிறேன்; உனக்காகவே நான் இங்கு இருப்பதாக அறி; என்மனம் உன்னிடம் இருக்கிறது. தானே தனக்கு உறவு; தானே தனக்கு உதவி; தர்மப்படி நீயே உன்னைத் தானம்செய்யத் தகுதியுள்ளவளாயிருக்கிறாய்.

*பிராம்மம், தைவம், ஆர்ஷம், பிராஜாபத்யம், ஆஸுரம், காந்தர்வம், ராக்ஷஸம், பைசாசம் ஆகிய இந்த எட்டுவிவாகங்கள் தாம் விவாகங்க ளென்று தர்மசாஸ்திரங்களிற் சொல்லப்பட்டிருக்கின்றன. அவற்றி னுள், தர்மமான விவாஹங்களைப்பற்றி முன்னமே விவரமாகவு மெல்லாறு சொல்லியிருக்கிறதென்பதைச் சொல்லுகிறேன். சிலாக் கியபாலனமே! பிராமணனுக்கு முதல் நான்கு விவாஹங்களும் சிலாக்கியங்களென்றறி. க்ஷத்திரியனுக்கு முதலிலிருந்து ஆறுவிவா ஹங்கள் தர்மமுள்ளவையென்றறி; ராஜாக்களுக்கு ராக்ஷஸவிவாஹ முஞ் சொல்லப்பட்டிருக்கிறது. ஆஸுரமென்னுங் விவாஹமும் வைசி யர்களுக்கும் சூத்திரர்களுக்கும் சொல்லப்பட்டது. †இந்த விவா ஹங்களுக்குள் ‡மூன்று தர்மமுள்ளவை. (ஆஸுரம், பைசாசம் ஆகிய) இரண்டும் தர்மமில்லாதவையென்று சொல்லப்பட்டிருக்கின் றன. பைசாசமும் ஆஸுரமும் ஒருபோதும் செய்யத்தகாதவை. இந்தவிதப்படி விவாஹம் செய்யத்தக்கது. இது தர்மத்தின் மார்க்க மென்று தர்மசாஸ்திரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. காந்தர்வமும் ராக்ஷஸமும் க்ஷத்திரியனுக்குத் தர்மமானவை. அவற்றைப்பற்றி நீ சந்தேகிக்கலாகாது. அவ்விரண்டையும் விவேகமுமாகவும் செய்யலாம்; சேர்த்தும் செய்யலாம். இதில் ஸம்சயமில்லை. உத்தமமான பெண்ணே! விருப்பமுள்ள நீ விருப்பமுள்ள எனக்குக் காந்தர்வ விவாகத்தினால் பாணியையாவதற்கு உரியவளாயிருக்கிறாய்" என்றுசொன்னேன்.

சகுந்தலை, "பெரியவரேஷ்டரே! ராஜாவே! நீர் சொல்வது தர்மமாய்க்கபாக இருக்கு நானே என்னைக்கொடுத்துக்கொள்ள ஸ்வ தந்திரமுள்ளவளானது ஒரு நிச்சயத்தை நீர் கேளும். நான் இரகசி யத்தில் சொல்லப்போவதை நீர் ஸத்தியமாகவாக்குத்தத்தம் செய்யக் கடவீர். எனக்குப் பிறக்கிறபுத்திரன் உமக்குக்கீழ்த்த இளவரசனை

* அவர்களுக்கு கன்னிகாதானம் பிராம்மவிவாகம்; யாகத்தின்முடிவில் ரித்விக்குகளுக்கு தக்ஷிணையாகக் கன்னிகாதானஞ்செய்வது தைவவிவாகம்; இருவருஞ்சேர்ந்து தர்மம் செய்யட்டுமென்று மனஸிலே தானஞ்செய்து விட்டுவிடுவது பிராஜாபத்யம்; வரனிடமிருந்து இரண்டு கோக்களோ வாங்கிக் கொண்டு கன்னிகாதானஞ்செய்வது ஆர்ஷவிவாஹம்; மிகுந்தத்ரவியம் வாங் கிக்கொண்டு கன்னிகாதானஞ்செய்வது ஆஸுரவிவாஹம்; கன்னிகையும் வர னும் மனமொப்பிக் கலந்துகொள்வது காந்தர்வவிவாஹம்; தூக்கத்திலும் குடி மயக்கத்திலும் கன்னிகையைத் தூக்கிக்கொண்டுபோவது பைசாசவிவாஹம் சண்டைபோட்டுப் பலாத்காரமாகக் கன்னிகையைக் கொண்டுபோவது ராக்ஷஸவிவாஹம்.

† நான்காவதுமுதல் எட்டாவது வரையிலுள்ளவை. மனுஸ்மிருதி, ௩-வது அத்தியாயம் உ-ம் ச்லோகம்; குல்லூகபட்டர் வ்யாக்யானம்.

‡ பிராஜாபத்யம் காந்தர்வம் ராக்ஷஸம்.

வேண்டும். மஹாராஜாவே! இதனை உமக்கு உண்மையாகச்சொல்லுகிறேன். துஷ்யந்தரே! இஃது இவ்வாறுநடக்குமானால் எனக்கு உம்முடன் விவாஹம் நடக்கலாம்" என்றாள். *[அவள் சொன்ன எல்லாவற்றையும் சொன்னபடி பிரதிஜ்ஞைசெய்து அந்தராஜாவாகிய துஷ்யந்தன், "இன்னும் என்னென்ன விரும்புகிறீரோ அவற்றையெல்லாம் கேள்" என்று மறுபடியும் சொன்னன். சகுந்தலை, "சாஸ்திரீய விவாஹமென்னும் லோகவியவஹாரம் பிரசித்தமாயிருக்கிறது. பெரியோர்கள் விவாஹமென்ற கிரியையைச் சந்ததிக்கு நன்மையென்று சிலாகிக்கின்றனர். உலகத்தாரின்பழிப்பு நிவிருத்தியாகும்படி. சாஸ்திரப்பிரகாரம் விவாஹம் செய்யும்; இங்கே யாகத்திற்குரிய பாத்திரங்களும், கர்ப்பங்களும், புஷ்பங்களும், அக்ஷதைகளுமிருக்கின்றன. விவாஹம் எப்படி. போக்கியமாயிருக்குமோ அப்படி ஸந்ததியும் போக்கியமாயிருக்கும்; ஆதலால், மஹாராஜாவே! தேஹாபரிபண்ணத்தக்க நெய்யும், அன்னமும், பொரிகளும், மணலும், பிராமணர்களும், விவாஹத்திற்குரிய மற்றுங்கருவிகளும் உமக்கு இங்கேசேர்ந்திருக்கின்றன. ராஜச்ரேஷ்டரே! தர்மத்திற்காக நான் தடுத்துச்சொன்னதையும் நீர் பொறுக்கவேண்டும்" என்று சொன்னாள்.]

ராஜா, சங்கிக்காமல் அவளை நோக்கி, "அப்படியே ஆகட்டும்" என்ன மறுமொழிசொல்லி மறுபடியும், "அழகிய புன்னகையுள்ளவளே! அழகிய நிதம்பமுள்ளவளே! உன்னை நான் உன்தகுதிக்கு ஏற்றபடி என்னகரத்திற்கு அழைத்துக்கொண்டு போவேன் என்பதை உனக்குச் சொல்லுகிறேன். உனக்கு விருப்பமா?" என்று அழகாக நடக்கின்ற அவளைப்பார்த்து இவ்வாறு சொல்லி, அந்த ராஜரிஷி *[பிரஹ்மதரை அழைத்து ஸமயோசிதமானசொல்லைச் சொன்னன். "ராஜகுமாரியான சகுந்தலை சொன்னதை விபரீதமாக்குவதற்கு நான் கருதவில்லை. சிறந்தகீர்த்தியுள்ள எனதுபுத்திரன் ஸர்வ்வதமனுக்கு ஆதாரமாகுக. ஆதலால், சாஸ்திரவிதிப்படி விவாஹத்தைநடத்துவர்; காலவிளம்பம் செய்யவேண்டாம்," என்றனர். ராஜாவினால் இவ்வாறு சொல்லப்பட்டபிராமணர், "அரசர்க்கரசே! நியாயம்" என்றுசொல்லிச் சிறந்த நியாயமுள்ளவராகச் சாஸ்திரப்படி விவாஹத்தைச் செய்தார். அந்தப் பிராமணர்ச்ரேஷ்டர் சொற்படி மங்களகங்கணம் கட்டிக்கொண்டு சாஸ்திரப்படி சகுந்தலையைப் பாணிக்கிரஹணஞ் செய்துகொண்டு] அவளுடன்கூட இருந்தான். அவன் அவளை ஸாதானப்படுத்திப் பிரயாணப்படுத்தியபோது, "உனக்

[*] இவற்றுக்குட்பட்டவை உத்தரதேச பாடத்தில் இல்லை. காந்தர்வ விவாகவிதிக்கும் விரோதமானவை.

காகச் சதுரங்கஸேனையை அனுப்புவேன்" என்று பலமுறையும் சொன்னான். "அழகிய புன்னகையுள்ளவளே! மூன்றுவேதங்களையும் அறிந்த பெரியோர்களோடும் அனேக ராஜரிஷிகளோடும் அனேகமாயிரம் பல்லக்குகளோடும்கூட என்பந்துக்கள் வருவார்கள். ஊமையர்களும் வேடர்களும் கூனர்களும் குள்ளர்களும் அலிகளும் புராணம் சொல்லுகிறவர்களும் ஸ்துதிபாடுகிறவர்களும்சேர்ந்தசேனா சங்கதுந்துபி வாத்தியங்களின் முழக்கங்களுடன் வனத்திற்கு வரப் போகிறது. அவ்வாறுக உன்னை என்நகரத்திற்கு வருவிப்பேன். அவ்வாறு மங்களங்களான எல்லா ஆசாரங்களாலும் கௌரவம்செய்யாமல் சாதாரணமாக உன்னை என் அரண்மனைக்கு அழைக்கமாட்டேன். அழகிய புருவமுள்ளவளே! உனக்கு ஸத்தியஞ்செய்கிறேன்" என்றுசொன்னான். அழகாக நடக்கின்ற அந்தச் சகுந்தலைக்கு அந்தராஜரிஷி இவ்வாறு சொல்லி, அவளை இரண்டுகைகளினாலும் தழுவிக்கொண்டு, மலர்ந்தமுகத்துடன் பார்த்து, தான் சொன்னதை அவள் ஒப்புக்கொண்டதன்பின், மறுபடியும் அவளைத்தழுவிக்கொண்டான். அழகியமுகமுள்ள அந்தச் சகுந்தலை ராஜாவின் பாதங்களில் விழுந்தாள். ஜனமேஜயராஜரே! தன்மனைவியான அந்தச் சகுந்தலையை மறுபடியும் தழுவியெடுத்து, "ராஜகுமாரியே! நீ விசனப்படாதே; நான் அழைத்துக்கொண்டுபோவேன்; என்தர்மத்தின்மேல் ஆணை" என்று பலமுறை அவளுக்கு உறுதிமொழி சொல்லி, அவ்வரசன் கண்ணுவரைப்பற்றி மனத்தில் சிந்தித்துக் கொண்டே சென்றான். சிறந்ததவமுள்ளவரும் கசியபகுலத்தவருமான பகவான் கண்ணுவர்கேட்டு என்னசெய்வாரோ? அந்தப்பிராமணச்ரேஷ்டரைத் தரையைத்தொட்டு நமஸ்காரம்செய்யுமென்று மன்னிப்புக் கேட்டுக்கொள்ளாமல் நான் வந்துவிட்டேனென்று நினைத்துக்கொண்டே தனது நகரத்தில் பிரவேசித்தான்.

அவன்போனபின் சற்றுநேரத்திற்கெல்லாம் கண்ணுவர் ஆச்ரமம் வந்துசேர்ந்தார். சகுந்தலை நாணத்தினால் தன்தந்தையினிடம் போகவில்லை. அவள் அஞ்சினவளாகக் கண்ணுவரிஷியினிடம் மெல்லச்சென்றாள். பிறகு அந்த மஹாத்மாவான கண்ணுவர் கொண்டுவந்த சுமையைவாங்கிக்கொண்டு அவருக்கு ஆசனமிட்டு அவர்பாதங்களை அலம்பினாள். லஜ்ஜையினால் சகுந்தலைக்கு அவரைக்கண்ணெடுத்துப் பார்க்கமுடியவில்லை. நாணமுற்ற சகுந்தலை அந்தரிஷியினிடம் பேசவுமில்லை. பரதச்ரேஷ்டரே! ஜிதேந்திரியையாயிருந்த அவள் ஸ்வதந்திரமெடுத்துக்கொண்டு அந்த ஸ்வதர்மத்திலிருந்து தவறி

னவளாகத் தன் பிழையைத் தெரிந்துகொண்டவளாகையால் பயமுற்றிருந்தாள். அப்போது கண்ணுவரிஷி, நாணமுற்ற சகுந்தலையைப் பார்த்து, "நிண்டஆயுளுள்ளவளே! வாழைமரம்போன்ற துடைகளுள்ளவளே! நீ வெட்கப்பட்டுக்கொண்டேயிருக்கிறாய்; முன்போலவுமில்லை; நடந்ததைச்சொல்; அச்சப்படாதே" என்றார். பிறகு சிறந்த லக்ஷணங்களுடையவளும், பூருவம்சத்தவருக்குள் முதன்மையான துஷ்யந்தனை யடைந்ததனால் சிறந்தசோபையுள்ளவளும், நுண்ணிய இடையுள்ளவளும், அழகான புன்னகையுள்ளவளுமான சகுந்தலை, ரிஷியின்பாதங்களை அலம்பி, சிரமபரிகாரமானபின், அவருக்கு வேண்டியகாய்களையும் கிழங்குகளையும்கொண்டுவந்துவைத்து, அவர் புஜித்தபிறகு, கால்களைப்பிடித்துப் பின்பு வெட்கத்துடன் பிரயத்தனப்பட்டுத் தழுதழுத்து அடியில்வருமாறு அவரைப்பார்த்துச் சொல்லத்தொடங்கினாள்:

"பிதாவே! இலிலன் புத்திரரான துஷ்யந்தன்என்னும் ராஜா இங்கேவந்தார்; அதிர்ஷ்டவசமாக இவ்விடத்திற்குவந்த அந்தராஜாவை நான் எனக்குப்பதியாக வரித்தேன். பதியான அவர் மிக்க விரிவான புகழுள்ளவர். தந்தையே! அவர்விஷயத்தில் அனுக்கிரகஞ் செய்யக்கடவீர். இதற்குமேல் நடந்தவையெல்லாம் திவ்யஜ்ஞானத்தினால் நீரே அறிவீர். அந்த க்ஷத்திரியவம்சத்திற்குப் பயமில்லாமலிருக்கும்படி அனுக்கிரகம் செய்யக்கடவீர்" என்றாள். சிறந்த மகிமையுள்ளவரும், மிகச்சிறந்த தவமுள்ளவருமாகிய அந்தக்கண்ணுவ மஹரிஷி அந்தராஜாவின்மனம் தர்மத்தினின்றும் தவறவில்லையென்பதையும், அவன் வீர்த்தாந்தங்களையும் ஞானக்கண்ணினாலறிந்து, அந்த ராஜா தர்மிஷ்டன்என்பதையும் நினைத்துச்சந்தோஷத்துடன் சொல்லலானார்.

"இதை நடந்தபடி ஞானக்கண்ணினால் தெரிந்துகொண்டேன். ராஜவம்சத்திற்பிறந்த நீ இப்போது என்னைக்கேளாமல்புருஷனுடன்சேர்ந்தது தர்மத்துக்கு விரோதமன்று. அன்புள்ளவளே! உனக்குப் பயமில்லை. நீ விசனப்படாதே. நீசெய்தது தர்மமே. காந்தர்வமென்னும் விவாஹம் க்ஷத்திரியனுக்கு மிகச்சிறந்ததாகச்சொல்லப்படுகிறது. விருப்பமுள்ள புருஷனுக்கும் விருப்பமுள்ளபெண்ணுக்கும் நடக்கும் விவாஹம் மிகவும் சிலாக்கியமாய்ச் சொல்லப்படுகிறது. சாஸ்திரப்படி விவாஹம் செய்துகொண்டபிறகு குறைவென்ன இருக்கிறது? நல்ல ஸந்ததியைப்பெறுவாய். சகுந்தலையே! துஷ்யந்தன் தர்மத்தில் சித்தமுள்ளவன்; மஹாத்மா; புருஷர்களுள்

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY
TIRUVANMIYUR

உத்தமன்; அவன் தன்னிஷ்டவிரும்பின உனக்குப் பதியாக ஆனன். உலகத்திற் பெரும்புகழ் உள்ளவனும் மஹாத்மாவுமாகிய புத்திரன் உனக்குப் பிறக்கப்போகிறான். அவன் கடல்சூழ்ந்த பூமிமுழுமையும் ஆளுவான். அந்த மஹாத்மாவும் சக்கரவர்த்தியுமான உன் புத்ரன் எதிரிகளை எதிர்த்துச்செல்லும்போது அவன்சேனை ஒரு போதும் தடைப்படாமலிருக்கும். சிறந்தபெண்ணே! உனக்காக அவன்விஷயத்தில் நான் அனுக்கிரகமுள்ளவனுயிருக்கிறேன். அழகான சிரிப்புள்ளவளே! உன்னுடைய அனேக ருதுகாலங்கள் வீணுகப்போயின. இப்போதுதான் அந்த ருதுகாலம் பயன்பெற்றது. குற்றமில்லாதவளே! உனக்குப் பாபமில்லை. அதனால் நீ விரும்பின வரத்தை என்னிடம்பெற்றுக்கொள்" என்றார். அப்படிச் சொல்லியதைக்கேட்டுச் சிறந்தமனமுள்ள சகுந்தலை, "புருஷர்களில் உத்தமரான துஷ்யந்தஅரசர் என்னைப் பதியாகவரிக்கப்பட்டுத் தேவர்கள் முன்னிலையில் விவாஹஞ் செய்துகொள்ளப் பெற்றிருக்கிறார். அவருக்கும் அவர் மந்திரிகளுக்கும் நீர் அனுக்கிரஹஞ் செய்யக்கடவீர்" என்றுசொல்லி, மனத்தினால் சிந்தித்துப்பார்த்துத் துஷ்யந்தனுக்கு ஹிதம்செய்வதற்காக அவன் தர்மிஷ்டனுயிருப்பதையும் அவனுக்கு ராஜ்யம் தவறுமலிருப்பதையும் கண்ணுவரிடம் வரங்களாகக் கேட்டுக்கொண்டாள். தர்மத்தைக் காப்பவர்களுட் சிறந்தவராகியகண்ணுவர் பௌரவ வம்சத்தைச் சேர்ந்த துஷ்யந்தனுடைய நன்மையைக் கருதி அவ்வாறே ஆகட்டுமென்று அந்தச்சகுந்தலைக்கு உத்தரஞ் சொன்னர். லக்ஷ்மியே பிரத்தியக்ஷமாக வந்ததுபோலிருக்கிற தம் பெண்ணை இருகரங்களாலும் தடவிக்கொடுத்து, "மஹாத்மாவான துஷ்யந்தனுடைய மஹிஷியாகிய நீ இதுமுதல் பதிவ்ரதைகளின் நடையை அனுஸரிப்பாயாக" என்றுசொன்னர். இப்படிச்சொல்லித் தர்மாத்மாவான கண்ணுவர் சுத்திக்காக அவஸ்பரிசித்தார். அவரால் சரீரம் தொடப்பட்டமாத்திரத்தில் அவள் மிகுந்த ஆனந்தமடைந்தாள்.

தொண்ணூற்றைந்தாவது அத்தியாயம்.

ஸம்பவபர்வம். (தொடர்ச்சி.)

(சகுந்தலைக்குப் புத்திரன் ஜனித்தது.)

துஷ்யந்தன் உறுதிமொழிகூறித் திரும்பிப்போனபின், அந்த ராஜகுமாரியாகிய சகுந்தலையினிடம் மஹாத்மாவான துஷ்யந்த

ணுக்கு உண்டானகர்ப்பம் காளுக்குகாள் அபிவிருத்தியாயிற்று. சகுந்தலே ராஜாவையே நினைத்துக்கொண்டு தன் * காரியம் பெரிதாக இருந்ததனால் இரவும்பகலும் நித்திரையின்றி ஸ்நாநபோஜனங்களே விட்டு ராஜாவின் தூதர்களாகிய பிராமணர்கள் சதுரங்கசேனையோடு இன்றைக்கோ நாளைக்கோ அடுத்தநாளோ வருவார்களென்று நிச்சயமாயிருந்தாள். பாரதமே ! நாட்களும், பக்ஷங்களும், மாதங்களும், ருதுக்களும், அயனங்களும், வருஷங்களும் எண்ணப்பட்டுப் பூர்ணமாக மூன்றுவருஷங்கள் கடந்தன. மூன்றுவருஷங்கள் நிரம்பின பின் கண்ணுவரிஷிசொன்னசொல்லிற் கௌரவத்தினால் அனேகரிஷிபத்னிகள் நியாயமுள்ளசொல்லே உரைக்கலாயினர்.

"அன்புள்ளவளே ! உலகத்திலுள்ள நடைகளேக்கேள் ; கேட்டபின்னர் உனக்கு எதுநன்மையென்று தோன்றுகிறதோ அதைச்செய். அரசியே! பிதாவின்சொல்லைக் கௌரவிக்காமலிருத்தல்தகாது. தேவர்களுக்குத் தேவதை விஷ்ணு ; பிராமணர்களுக்குத் தேவதை அக்நியும் வேதமும்; பெண்களுக்குத் தேவதை கொழுநன் ; ஜனங்களுக்குத் தேவதை பிராமணன்; பகவானுகிய உன்பிதா பிரஸவகாலத்தில் பிரஸவித்துவிடுவாயாக என்று சொல்லியிருக்கிறார். பிதிருவாக்யத்தை நான் செய்வேனென்று ஸங்கல்பித்து நீ செய்யவேண்டும். அப்போதுதான் உனக்குப் புண்ணியமுண்டாகும்" என்றனர். அவ்வாறு ரிஷிபத்தினிகள் சொன்னதைக்கேட்டுச் சகுந்தலே நன்றுநன்று என்றுநினைத்தாள். அழகான துடைகளுள்ள சகுந்தலே கர்ப்பத்திலிருந்த அளவற்ற சக்தியுள்ள குமாரனைப்பெற்றாள். ஜனமேஜயரே ! மூன்றுவருஷங்கள் நிரம்பினபின் சகுந்தலே அழகும் கம்பீரமும் குணங்களும்சேர்ந்த துஷ்யந்தனுடையபுத்திரனைப்பெற்றாள். அந்தப் புத்திரன் பிறந்தபோது ஆகாயத்திலிருந்து பூமாரிபெய்தது. தேவதுந்துபிகள் முழங்கின. அப்ஸரஸ்ஸுகள் கூட்டங்களாக நர்த்தனஞ் செய்தனர். இனிமையாகப் பாடுகிற தேவர்களுடன்கூட இந்திரன் அங்கேவந்து, "சகுந்தலேயே ! உன்புத்திரன் சக்கரவர்த்தியாகப் போகிறன். இவனுடைய தேகவன்மையும் பராக்கிரமமும் அழகும் பூமியிலுள்ள யாருக்கும் ஒப்பில்லாதவை. இந்தப் பூருவம்சத்துப் புத்திரன் தன்னுடைய தனத்தைப் பிராமணர்களுக்கு வழங்கி அளவற்ற தக்ஷிணைகொடுத்து நூறு அசுவமேதயாகங்களேயும் ராஜஸூயம் முதலான அனேகமாயிரம் யாகங்களேயும் செய்யப்போகிறன்" என்றுசொன்னன். தேவர்களுடைய சொல்லைக்கேட்டுக் கண்ணுவ

* தன் புத்திரனுக்கு ராஜ்யம் கிடைக்கவேண்டுமென்பது.

ருடைய ஆச்ரமத்தில் வஸிக்கும் மஹரிஷிகள் அனைவரும் கண்ணுவர்பெண்ணுகிய சகுந்தலையைப் பூஜித்தனர். அந்தச் சகுந்தலையும் அதைக்கேட்டு மிகமகிழ்வுற்றாள். புண்ணியவான்களுட் சிறந்தவரும் மிக்க புகழுடையவருமாகிய கண்ணுவ மஹரிஷி பிராம்மணர்களையும் ரிஷிகளையுமழைத்து அவர்களுக்கு மரியாதைசெய்துவிரைவில் வளர்ந்துகொண்டிருக்கும் அந்தக் குழந்தைக்கு ஜாதகர்மம்முதலான ஸம்ஸ்காரங்களைச் செய்வித்தனர். எல்லாக்கிரியைகளையும் சாஸ்த்ரப்படியே கூத்தியிய முறைப்பிரகாரம் செய்வித்தனர். அந்தக் குமாரன் வெளியனவும் அழகியமுனையுள்ளவைகளுமாகிய பற்களோடு கூடியவனும் ஸிம்மத்தக்கொப்பான வடிவமைப்புள்ளவனுமாயிருந்தமையால் கையில் சக்கர அடையாளம் இருந்ததனையும்*லக்ஷ்மிபொருந்தியிருந்ததனையும் இரண்டாவது விஷ்ணுவைப் போலிருந்தான். நாலுமுழ உயரமுள்ளவனும், மிகுந்த பராக்கிரமமுள்ளவனும், பொறுமையுள்ளவனும், மிகுந்தபலமுள்ளவனும், தேவகுமாரனைப் போன்றவனுமாகிய அந்தக்குமாரன் அந்தவனத்தில் சீக்கிரமாக வளர்ந்தான்.

அவ்வாறுதினமெனில் நினைவிருந்தும் ரிஷியினிடத்தில் பயத்தினால் உண்மைசகுந்தலையை அழைத்தகதியில்லை. நெடுங்காலமான பிறகு ரிஷிபுத்திரியாகிய அவளை நினைக்கவேயில்லை. பிறகுதபோ ஆறாவருஷங்களானபோது துஷ்யந்தபுத்திரனுகிய அந்தச்சிறுவன் கண்ணுவருடைய ஆச்ரமத்தினருகிலிருந்து ஆச்ரமத்துக்கு உபத்திரவஞ் செய்துகொண்டிருந்த கொடியமிருகங்களாகிய புலிகளையும் வியிம்மங்களையும் பன்றிகளையும் செந்நாய்களையும் எருமைகளையும் கொண்டைமுகிறுகளையும் காக்களினால் உதைத்தான். அவைகளைப் பலபலத்தால் பிடித்து அடக்கி ஆச்ரமத்துக்குச் சுற்றிலுமுள்ள மரங்களிற்கட்டி மரங்களின்மேலேறி விளையாடிக்கொண்டே ஓடினான். வியிம்மக் கூட்டங்களினாலும் புலிக்கூட்டங்களினாலும் நிறைந்த அவ்வனத்தையே கலக்கினான். பிறகு சத்துருக்களாகிய எல்லா ராக்ஷஸர்களையும்,பிசாசங்களையும்,யுத்தத்தில்குத்துச்சண்டையிற்கொன்று ரிஷிகளுக்குச் சந்தோஷத்தைவிளைவித்தான். பெரியபலமுள்ள ஓர் அஸுரனும்,அஸுரர்கள் அவனால் கொல்லப்படுவதைச்சகிக்காமல்அவனைக்கொல்வதற்காக எதிர்த்தான். எதிர்த்துவந்த அவனைச் சிரித்துக்கொண்டே கைகளினால் தழுவிக் கெட்டியாகக்கட்டிக் கைகளாலேயே இறக்கினான். கசக்கப்பட்ட அவ்வஸுரன் இந்தக்குமாரன் அதிகபலவானதை இருந்ததனால்இவனிடமிருந்து தப்பித்துக்கொள்ள

* ஐசுவரியம்.

மாட்டாமற் பயங்கரமாகக் கதறினன். அவனுடைய வாய் மூக்கு முதலிய துவாரங்களினின்றும் இரத்தம் வெளிப்பட்டது. அவனுடைய சப்தத்தினால் மான்கள் ஸிம்மங்கள் முதலியவை மருண்டு மல ஜலங்களைவிட்டன. ஆச்ரமத்திலிருப்பவர்கள் விரைந்து ஓடினர்கள். அந்த அஸுரனை முழங்காலடிகளினால் உயிரை மாய்த்துவிட்டான் அந்த அஸுரன் விழுந்தான். அந்தக் குழந்தையின் அந்தச் செய்கையைக்கண்டு எல்லாரும் வியப்புற்றனர். அஸுரர்களும் ராக்ஷஸர்களும் எப்போதும் அடிக்கப்பட்டு அந்தக்குமாரனிடமுள்ள அச்சத்தினாலேயே அந்த ஆச்ரமத்துக்குப் போகவில்லை. பிறகு கண்ணுவருடைய ஆச்ரமத்தில் வஸிக்கின்றவரனைவரும் மனிதருக்கெட்டாத அவன் செய்கையைக்கண்டு கண்ணுவருடன் சேர்ந்து, "இவன் எல்லாவற்றையும் அடக்குவதனால் ஸர்வதமனனென்ற பெயருள்ளவனாக இருக்கக்கடவன்" என்று அவனுக்குப் பெயரிட்டனர். ஸர்வதமனன் என்னும் பெயருள்ள அந்தக்குமாரன் பராக்கிரமத்தோடும் உத்ஸாஹத்தோடும் பலத்தோடும் கூடினவனாக இருந்தான். துஷ்யந்தன் தன் மஹிஷியையும் புத்திரனையும் அழைக்காமலிருந்தபோது வெண்ணிறம்படர்ந்த தேகமுள்ளவளும், கவலையில் மூழ்கினவளும் முன்னுச்சிமயிர்கள் தொங்க விசனப்பட்டுக்கொண்டு இளைத்து அழுக்கடைந்த ஆடையுடுத்தியவளுமாகிய சகுந்தலையைப்பார்த்து அம் மஹரிஷி சிந்தையுற்றார். அப்போது பன்னிரண்டுவயதான அந்தக் குமாரனுக்கு அஸ்திரவித்தையும் எல்லாவேதங்களும் கற்பிக்கப்பட்டிருந்தன.

தொண்ணூற்றுரண்டாவது அத்தியாயம்.

ஸம்பவபர்வம். (தொடர்ச்சி.)

(சகுந்தலையைக் கண்ணுவர் ரிஷிகளுடன் துஷ்யந்தனிடம் அனுப்புவது).

அந்தப் பிரம்மரிஷியாகிய கண்ணுவர் அந்தக்குமாரனையும் மனிதர்கள் செய்யமுடியாத அவன் செய்கையையுங்கண்டு இவன் யுவராஜாவாவதற்கு இது தருணமென்று நினைத்துச் சகுந்தலையை யழைத்துப் பின்வருமாறு சொல்லத்தொடங்கினர் :—

"எனது இனியபெண்ணே! அழகான சிரிப்புள்ளவளே! நான் சொல்வதைக் கேள். பதிவ்ரதையான பெண்களுக்கு* மனத்தாலும்†வாக்காலும் செய்கையாலும் பதிக்குச்சுச்ரூஷைசெய்வது முத

---

* அன்பினாலும். † இனியசொல்லினாலும்

ன்மையான சிறப்பென்று சொல்லப்படுகிறது. நான் முன்னமே உன் விவாஹத்தை அங்கீகரித்திருக்கிறேன். உன்னுடைய பதிவ்ரதாதர் மத்தைக் கொண்டாடவேண்டும். இந்த ஒழுக்கத்தினாலேயே நீ புண்ணியலோகங்களை அடைந்து அதன்முடிவில் மனுஷ்யலோகத்திற் சிறந்த ஐசுவரியத்தையடைவாய். பிரியமானவளே! ஆதலால், இப்போது பௌரவராஜாவின் சமீபத்துக்குச் செல்லவேண்டும். அழகான முகமலர்ச்சியுள்ளவளே! உனக்குக் குறித்தகாலம் கடந்ததாக நினைத்து அந்தராஜா தானுகவராமலிருக்கிறான். நீ உன்னுடைய நன்மையின்பொருட்டு நீயேபோய் ராஜாவான துஷ்யந்தனைச் சந்தோஷப்படுத்து. துஷ்யந்தனுடைய புத்திரன் யுவராஜாவாக இருப்பதைக்கண்டு மகிழ்ச்சியடைவாய். தேவதைகளிடத்தும்பெரியோர்களிடத்தும் ராஜாக்களிடத்தும் கணவர்களிடத்தும் தாமேசெல்வது மிகநன்மையாகும். பெண்ணே! ஆதலால், என்விருப்பத்தைச்செய்வதற்காகக் குமாரனைநீகூட நீ போகவேண்டும். எனக்கு மாறான விடைகொடாதே. என் பாதங்களின்மீது ஆணைவைக்கப்பட்டிருக்கிறாய்" என்றார். கண்ணுவர் தம் பெண்ணைப்பார்த்து இவ்வாறுசொல்லி, அங்கே பூருவம்சத்தவனாகிய தம் * பரிஜனத்தையும்அழைத்துக்கைகளினால் ஆலிங்கனஞ்செய்து உச்சிமோந்து, "துஷ்யந்தனென்று பெயர்பெற சந்திரவம்சத்திற்பிறந்த ராஜாவொருவன் இருக்கிறான். பரிசுத்தமான விரதமுள்ள இந்த உன்தாயார் அவனுடையபட்டபஹிஷி அழகான இடையுள்ள இவள் உன்னுடன் கணவனிடம்போக விரும்புகிறாள். நீ சென்று ராஜாவை வந்தனஞ்செய்து யௌவராஜ்யத்தைஅடையப்போகிறாய். அரசர்க்கரசன் உன்தந்தை. நீ அவனுக்கு உட்பட்டிரு. உன்தந்தை பாட்டன்வழியாகவந்த ராஜ்யத்தை இயற்கையாகவே நீ அடைவாய். பூருவம்சத்துப் புத்திரனே! நீ உன்ராஜ்யத்திலிருந்து கொண்டு அந்தக்காலத்தில் என்னை நினை" என்றுசொல்லினர். பூருவம்சத்திற் பிறந்தவனாகிய அந்தக்குமாரன் ரிஷியின்பாதங்களில்வந்தனஞ்செய்து அடியில்வருமாறு சொல்லிச்சொன்னான்.

"ஓ பிரம்மரிஷியே! எனக்குத்தந்தையும் நீர்; தாயும்நீர்; ரக்ஷகரும் நீர்; பெருந்தவமுள்ளவரே! உம்மைத்தவிர வேறுபிதா இருப்பதாக நான் நினைக்கவில்லை. உமக்குச் சுச்ரூஷைசெய்வதுதான் இந்தலோகத்தினும் அந்தலோகத்திலும் புண்ணியம். கணவனிடம் அன்புவைத்த சகுந்தலைமட்டும் அவள்விருப்பத்தின்படிசெல்லட்டும். நான் உங்கள் பாதத்தினடியிற் பணிவிடை செய்துகொண்டு வஸிக்கிறேன்.

* புத்ரியின் புத்ரனென்னும் அர்த்தத்தில் பௌத்ரம் என்றிருக்கிறது

மூன்போல நான் துஷ்டமிருகங்களுடன்கூட விளையாடமாட்டேன். உங்கள் கட்டளையிலடங்கி எப்போதும் வேதாத்தியயனம் செய்கிறேன்" என்றான். இவ்வாறுசொல்லிக் கண்ணுவருடைய பாதங்களைப் பிடித்துக்கொண்டுநிற்கிற அந்தக்குமாரனுடைய அந்தச்சொல்லைக்கேட்டுச் சகுந்தலை கண்ணீர்விட்டாள். பிதாவினிடத்திலும் புத்திரனிடத்திலுமுள்ள ஸ்நேகத்தினல் * சந்தோஷமும் வியஸனமும் அடைந்தாள். துக்கத்துடன் கண்ணீரைவிடுகிறஅவளைநோக்கி துஷ்யந்தபுத்திரனை ஸர்வதமனன், "சகுந்தலையே! பகவானைனகண்ணுவருடைய சொல்லைக்கேட்ட பிறகு ஏனழுகிறாய்? உனக்குச் கணவனிடம் அன்பிருக்குமானுற் காலையிலெழுந்து போகவேண்டும்" என்று சொன்னன். சகுந்தலை, "ஒருவன் பாபம்செய்கிறான். அதன் பலனை மஹாஜனங்கள் அனுபவிக்கின்றனர். நித்தியம்நான்தடுத்தும் நீ என்சொற்படி செய்கிறதில்லை. குழந்தாய்! பூருவம்சபுத்திரனே! வெளிபில்வந்தயானைகளை நித்தியம் கைகளால் கசக்கியும், ஸிம்மங்களும் புலிக்கூட்டங்களும் நிறைந்தவனத்தை எப்போதும் கலக்கியும், இவ்வகையான இன்னுமனைகள் செயல்களைச்செய்தும் எல்லாம் தெரிந்தரிஷிக்கு நீ கோபமுண்டாக்கினாய். அதனல், நாம் அனுப்பப்படுகிறோம். நான் துஷ்பந்தராஜாவினிடம்செல்லேன். நான் புத்திரனுடையு நன்மையை விரும்புகிறவளல்லேன். ஆத்மஜ்ஞானிபான மஹரிஷியின் பாதத்தினடியில் வஸிப்பேன்" என்று சொல்லி அழுதுகொண்டு ரிஷியின்கால்களில் விழுந்தாள். இப்படி அழுகின்ற அவளைப் பகவானுகியகண்ணுவர் பலவியாயங்களால்ஸமாதானஞ்செய்து மறுபடியும் தயையினல் அவளுக்கு நன்மையான சொல்லைச் சொல்லலாயினர்.

"சகுந்தலையே! பெண்மணியே! உனக்கு நன்மையும் நியாயமுமாக நான் சொல்வதைக்கேள். பதிவ்ரதையாக இருப்பதற்குரிய குணங்களைவிட்டு நீ செய்யத்தக்கதொன்றுமில்லை. பதிவ்ரதைகளுக்குத் தேவர்களும் மகிழ்ந்து எல்லாவரங்களையும் கொடுப்பர்; அனுக்கிரகமும் செய்வர்; கஷ்டங்களையும் விலக்குவர். பதிவ்ரதைகள் பதியின் அனுக்கிரகத்தினுற் புண்ணியத்தைப் பெறுவர். பாபத்தையடையார். மலர்ந்த முகமுள்ளவளே! ஆதலால், நீசென்று ராஜாவுக்குப் பணிவிடைசெய்" என்றார். அவ்வாறுசகுந்தலைக்குச்சொல்லி, பிறகு அவளுடைய புத்திரனைநோக்கிச் சொல்லத்தொடங்கினர்.

* பர்த்தாவினிடம் செல்வதனல் சந்தோஷம், பிதாவையும் புத்ரனையும் பிரிவதனல் விசனம்.

"நீ எனது * தௌஹித்ரன்; மஹாத்மாவான இலிலனுடைய † பௌத்ரன். குற்றமற்றவனே! உனக்கு உண்மைசொல்லுகிறேன். நான் சொல்வதைக்கேள். மனவினால் கணவனை விரும்பிக்கொண்டு வாக்கினால் மாத்திரம் வேறுகப்பேசி இந்த அழகியசகுந்தலை போக விரும்பாமலிருக்கிறாள். ஆதலால், குழந்தாய்! இவளை அழைத்துக் கொண்டுபோ. பௌரவனே! ரிஷிகளுடன்கூடப் போவதற்கு நீ சக்தியுள்ளவன்" என்று ஸர்வதமனனைநோக்கிச் சொல்லிவிட்டு, பிறகு கண்ணுவர் சிஷ்யர்களைப்பார்த்து, "உயர்ந்த லக்ஷணங்களெல்லாம் பொருந்திய இந்தச் சகுந்தலையைப் புத்திரனுடன்கூடச்சீக்கிரத்தில் இந்த ஆச்ரமத்திலிருந்து பர்த்தாவின் க்ருஹத்திற்கொண்டு போய்விடுங்கள். பெண்கள் தம்மைச்சேர்ந்த உறவினர்களிடம் வெகு காலம் வஸிப்பது புகழையும்ஒழுக்கத்தையும் தர்மத்தையும்கெடுக்கும். அதில் எனக்கு இஷ்டமில்லை. ஆதலால், சீக்கிரம் கொண்டு போய்விடுங்கள்" என்றார். கசியபகுலத்தில் பிறந்த கண்ணுவரால் முறைப்படி கௌரவிக்கப்பட்ட தன் புத்திரனைக்கண்டு சகுந்தலை கண்ணுவரிடம் விடைபெற்றுக்கொண்டு சக்ரவர்த்திமடைந்தாள். கண்ணுவர் கணவனிடம் செல்லென்று பலமுறை சொன்னதைக்கேட்டு அந்தப் பூருவம்சத்துக் குமாரன் அப்படியே ஆகட்டுமென்று கண்ணுவருக்குச் சொல்லித் தன்தாயாரைப்பார்த்து, "அம்மா! நீ ஏன் தாமதிக்கிறாய்? ராஜாவின் வீட்டுக்குப்போவோம்" என்றுசொன்னான். மஹாத்மாவாகிய துஷ்யந்தனுடைய மனைவியான அந்தச்சகுந்தலையைப்பார்த்துஇவ்வாறு சொல்லிக்கண்ணுவரிஷியின் பாதங்களில் வந்தனஞ்செய்து அந்தக்குமாரன் போவதற்கு விரும்பினான்; சகுந்தலையும் பிதாவுக்கு வந்தனஞ்செய்து கைகூப்பிப் பிரதக்ஷிணம் செய்து, "நான் எனது பிதாவென்பதனால்தெரியாமல்விபரீதமாகச் சொல்லியிருந்தாலும், பொய் சொல்லியிருந்தாலும், செய்யத்தகாததையும் உமக்குப் பிரியமாயிராததையும் செய்திருந்தாலும், அதை நீங்கள் க்ஷமிக்கவேண்டும்" என்று அவருக்குச்சொன்னாள். இவ்வாறு சொல்லப்பட்ட ரிஷி ஒன்றும் சொல்லாமல் தலைதுனிந்து நின்றார். கண்ணுவர் ரிஷியாயிருந்தும் மானிடத்தன்மையினால் கண்ணீர் சொரிந்தார். கண்ணுவமுனிவர், ஜலபக்ஷணஞ் செய்கிறவர்களும் வாயுபக்ஷணம் செய்கிறவர்களும் சருகுபக்ஷணஞ் செய்கிறவர்களும் காய்கிழங்குகளைப் புசிக்கிறவர்களுமாகிய ஜிதேந்திரியர்களும், இளைத்தவர்களும், நரம்புக்கூடுகளாக இருப்பவர்களும், சிறந்ததவமுள்ள

* பெண்ணின் புத்ரன். † புத்ரனுடைய புத்ரன்.

வர்களும், மரவுரிகள் தோல்கள் தரித்தவர்களும், சிலர் ஜடைதரித்தவர்களும், சிலர் சிரோமுண்டனம் செய்துகொண்டவர்களுமான ரிஷிகளை அழைத்துச் சகுந்தலையினிடத்துள்ள அன்பினால் பின்வருமாறு சொல்லலானார்:

"புகழ்பெற்ற இந்தப்பெண்ணென்னால் எப்போதும் லாலனை செய்யப்பட்டவள்; வனத்திற் பிறந்தவள்; வனத்தில் வளர்ந்தவள்; இவள் ஒன்றுமறியாள். நீங்களெல்லாரும் ஆச்ரமத்திலிருந்து இவளையழைத்துக்கொண்டு கூடத்திரியன் வீட்டுக்கு வழியேயாவே போக வேண்டும். பிராமணர்களே! இதற்கு இரண்டு * யோஜனை தூரத்தில் பிரதிஷ்டானமென்னும் நகரமிருக்கின்றது. பிரதிஷ்டான நகரத்தில் சகுந்தலையின் புத்திரனுக்குக் கூடஸ்தனுகிய புரூரவஸ்ஸென்னும் ராஜாவுர் வசியுடன் சேர்ந்து முன்னே வெகுகாலமிருந்தான். ஜலக்கரைகளும் காடுகளுமுள்ளதும், தன தான்யங்கள் நிரம்பினதுமாகிய அந்த உயர்ந்தநகரம் கங்கையமுனைகளின் ஸங்கமத்தில் இருக்கின்றது. தபோதனர்களே! ஸங்கமத்திற்சென்று அதில் ஸ்நானஞ் செய்து அக்நிஹோத்ரஞ் செய்துவிட்டு, கிரைகளையும் கிழங்குகளையும் காய்களையும் புஜித்துத் திரும்பிவாருங்கள். பிராமணர்களே! புசிக்காவிட்டால் வழிநடப்பதினால் சிரமமுண்டாகும்" என்றார். சிறந்த மகிமையுள்ள அந்தரிஷிகளெல்லாரும் அப்படியே என்று சொல்லிச் சகுந்தலையை முன்னிட்டுக்கொண்டு துஷ்பந்தனுடைய நகரத்திற்குப் புறப்பட்டனர். தாமரைப் புஷ்பங்களைப்போன்றகண்களையுடையவனும் தேவதைக்கொப்பானவனுமாகிய அந்தச் சகுந்தலாபுத்திரனையும் சகுந்தலையையும் அழைத்துக்கொண்டு தர்மத்தில்அன்புள்ளரிஷிகள் வனத்திலிருந்து துஷ்யந்தன் வஸிக்கும் அழகான பட்டணத்துக்குப் போயினர். அவர்கள், வனங்களையும் நதிகளையும் குன்றுகளையும் மலையருவிகளையும் சுனைகளையும் மலைச்சரிவுகளையும் தேசங்களையும் நகரங்களையும் பரிசுத்தமான ரிஷியாச்ரமங்களையும் கடந்து, களைப்பில்லாமல் மெல்ல மத்தியான்னவேளையில் பிரதிஷ்டான நகரஞ் சேர்ந்தனர். இளையின் புத்திரனுகிய புதனுக்காக இந்திரனால் நிர்மாணஞ்செய்யப்பட்டதும், அகழிகளாலும் ஆயுதகம உதவிக்கட்டிடங்களோடு கூடிய பிரதானமான பிரகாரங்களாலும் பிரங்கிகளாலும் சக்கரயந்திரங்களாலும் காக்கப்பட்டதும், எதிரிகளால்அணுகமுடியாததும், தனவான்கள் வீடுகளும் ராஜ கிருஹங்களும் நெருங்கியதும், பலவகையான வியாபாரப்பொருள்களினால் அலங்கரிக்கப்

* யோஜனை எட்டுமையில்.

சகு

பட்டதும், அழகிய மண்டபங்களும் ஸபைகளும்தண்ணீர்ப்பந்தல்களும் நிரப்பினதும், நேராக வகுக்கப்பட்ட பெரியவிசாலமான ராஜமார்க்கத்தினும் சோபிப்பதும், கைலாஸமலையின் சிகரம்போன்ற கோபுரங்களினல் அலங்கரிக்கப்பட்டதும், மங்களாலங்காரங்களோடுகூடிய வாயில்களாலும் மேல்வீடுகளாலும் அவற்றின் ஸ்தம்பங்களாலும் விளங்குவதும், பூந்தோட்டங்களும் மாஞ்சோலைகளும் உடையதும், மேகமலைபோன்ற பிராகாரத்தையுடையதும், அனேகம் தாமரைத்தடாகங்களாலும் தோட்டங்களாலும் சூழப்பட்டதும் எல்லாவருணத்தாரும் ஆச்ரமத்தாரும் தங்கள் தங்கள் கடமைகளிலிருந்துகொண்டு நித்யோத்ஸவத்துடன் சந்தோஷமாக இருக்கப்பெற்றதும், தனதானியங்களும் சிறந்த ரத்னங்களும் மிகுதியாக இருப்பதினல் ஸந்தோஷமடைந்த ஜனங்களையுடையதும், எப்போதும் யஜ்ஞமும் அக்நிஹோத்ரமுஞ் செய்துகொண்டு அகார்யம் செய்வதை விலக்கினவரும்கொடுப்பதை இயல்பாக உடையவரும் தயையுள்ளவரும்பாவத்துக்கு அஞ்சினவரும் ஸ்வர்க்கலோகத்தை ஜயிக்க விரும்பினவருமான அநேக வித்வான்களையுடையதுமாகிய இரண்டாவது இந்திரலோகம் போன்ற அந்தப் பிரதிஷ்டான நகரியைச் சேர்ந்தனர்.

திரவியக் குவியல்கள் நிறைந்ததும் இந்திரனுடைய க்ருஹத்துக்கொப்பானதுமான ராஜாவின் அரண்மனை அந்த நகரத்தின் நடுவிலிருந்தது. அந்தஅரண்மனையின் நடுவிலே பலவகை ரத்னங்களினல் அலங்கரிக்கப்பட்ட ஓர் உயர்ந்த ஸபையிருந்தது. அந்தஸபையில் எல்லா ஆபரணங்களையும்அணிந்துகொண்டு, பிராமணர்களாலும் க்ஷத்திரியர்களாலும் மந்திரிகளாலும் சூழப்பட்டு, * ஸூதர்களாலும் † மாகதர்களாலும் ‡ வந்திகளாலும் ஸ்துதிசெய்யப்பட்ட அந்தஅரசர்க்கரசனை ராஜரிஷி இருந்தான். வியவஹாரத்திற்காகவந்த வாதிப்பிரதிவாதிகள்அப்போதுவந்துவியவஹாரத்தைமுடித்துக்கொண்டுபோனபிறகு அந்தராஜா ஸுகமாகவீற்றிருந்தான். அந்தக்காலத்தில் நிமித்தம்தெரிந்த அம்மஹரிஷிகள், பக்ஷிகள் கூவினதைக் கேட்டு "சகுந்தலையே! நமக்கு நல்ல நிமித்தங்களாகின்றன. இவை நம்முடைய காரியம் ஸித்திப்பதைத் தெரிவிக்கின்றன. நிச்சயமாகநீ ராஜபத்நியாகப் போகிறாய். உன் புத்திரன் இன்றைத்தினமேயுவராஜாவாகப்போகிறான்" என்றனர். வாத்தியங்களின் முழக்கங்களினல்ஒலி நிரப்பின தலைமையான அரண்மனைவாயிலில் சகுந்தலையை முன்னிட்

* பௌராணிகர்கள் † ராஜவம்சகிரமத்தைப் பாடுகிறவர்கள்.
‡ கட்டியம் கூறுகிறவர்கள்.

டுக்கொண்டு அம்மஹரிஷிகள் பிரவேசித்தனர். பார்ப்பவர்கள், பிரவேசிக்கின்ற ராஜபுத்திரனைச் சிலாகித்தனர். அந்தப்பூருவம்சகுமாரன் தலைக்கோட்டைவாயிலில் புகும்போதே மகிழ்ச்சியுடன் தன்னை இந்திரலோகத்திலிருப்பவனுகநினைத்தான். பாரதரே! பட்டணத்துஜனங்களனைவரும் ராஜகுமாரனைப்பார்ப்பதற்காகஒருவரைஒருவர் அழைத்துக்கொண்டு அங்கே வந்து சேர்ந்தனர். "இவள் இந்தஜனங்களின் முன் தேவதையாகிய ஸ்ரீதேவியே வந்ததுபோலவும், ஜயந்தனென்னும் புத்திரனுடன் இந்திரலோகத்திலிருந்து இந்திராணியேவந்ததுபோலவும் சோபிக்கிறுள்" என்றுசொல்லி, அந்தஜனங்களெல்லாரும் சேர்ந்து தேவதைகளைப்போன்ற ரூபமுள்ள அம்மஹரிஷிகளைவந்தனஞ்செய்து, " இப்போது எமது ஜன்மம்ஸபலமாயிற்று. சூரியனைப்போன்ற தேஜஸையுடைய இம்மஹரிஷிகளைக்கண்டு நாம் க்ருதார்த்தராஞேம்" என்றனர் இவ்வாறு சொல்லி, சிலர் ஒன்றுகச்சேர்ந்து பார்வதி புத்திரராகியகுமாரக்கடவுளைப்போன்றஅந்தத்தாமரைக்கண்ணனுகிய ராஜகுமாரனை அநுஸரித்துச் சென்றனர். சகுந்தலையின் குமாரனைப் பார்ப்பதற்காக வந்தவர்களில் சில மூடர்கள் கிருஷ்ணஜினம் போர்த்துக்கொண்டிருந்த ரிஷிகளைப்பார்க்க விரும்பாமல், "விகார ரூபமுள்ள இவர்கள் நாகரீகர்களுக்குப் பிசாசுகளைப்போலக் காணப்படுகின்றனர். ஸந்தியாகாலம் வராமலிருக்கும்போதே பிசாசங்கள் இந்த உயர்ந்த நகரத்திற்பிரவேசிக்கின்றனவே !" என்றுசொன்னர்கள். பசியினலும் தாகத்தினலும் பீடிக்கப்பட்டவர்களும், களைத்தவர்களும், மரவுரியையும், தோலையும் தரித்தவர்களும், தோலும் எலும்புமாக இருப்பவர்களும், மாம்ஸமில்லாதவர்களும், நரம்புக்கோவைகளாக இருப்பவர்களும், சிவந்த கண்களும் செம்பட்டை நிறமான ஜடைகளும் நீண்ட பற்களுமுடையவர்களும், வயிறுஒட்டினவர்களும், தலையில்வஸ்திரமில்லாதவர்களும், கைகளைத்தூக்கினவர்களுமாகிய அவர்களைக்கண்டு பட்டணத்துஜனங்கள் பரிஹாஸம் செய்தனர். இவ்வாறு சொல்லிக்கொண்டிருந்த அந்தஜனங்களின் சொல்லைக்கேட்டு அந்த மஹரிஷிகள் ஒருவரை ஒருவர் அழைத்துப்பின் வருமாறு சொல்லாயினர்:

"ஸத்யவாதியான பகவானுகிய கண்ணுவர் சொன்னசொற்படி நாம் செய்யாமற்போஞேம். இந்த நகரப்பிரவேசம் செய்யத்தகாதென்பது அவருடையகட்டளை. துர்ஜனர்கள் மிகுதியாயுள்ள நகரத்தில் நாம் ஏன் பிரவேசிக்கவேண்டும்? பற்றுக்களை ஒழித்த ரிஷிகளுக்கு நகரத்தில் என்னகாரியம்? ஆதலால், கங்கையும்யமுனையும்

சேருகிற இடமாகிய வனத்துக்குப்போவோம்" என்றுசொல்லி அந்தரிஷிக்கூட்டங்கள் வந்தவழியே திரும்பிப்போயின.

தொண்ணூற்றேழாவது அத்தியாயம்.

ஸம்பவபர்வம். (தொடர்ச்சி.)

(வந்த சகுந்தலையைத் துஷ்யந்தன் நிராகரிப்பது.)

அந்தச்சகுந்தலை, ரிஷிக்கூட்டங்கள் திரும்பிப்போவதைக் கண்டு சையினல் புத்திரனைப்பிடித்துக்கொண்டுதாய்தந்தைகளைவிட்டுவிட்ட குழந்தைகள் எப்படி அழுமோ அப்படி அழுதுகொண்டிருந்தாள். அந்தப்பிராமணர்கள் மறைந்துபோனபின் தயரப்பட்டுக்கொண்டிருந்த சகுந்தலை தைரியத்தை அடைந்து புத்திரனையே துணையாக அழைத்துக்கொண்டு ராஜமார்க்கத்தினல் மெல்லமெல்லச் சென்றாள். ராஜமார்க்கமாகச் செல்லும் அந்தக்குமாரன், முன்பார்க்காத தனிகர்வீடுகளையும் ராஜக்ருஹங்களையும் தேவாலயங்களையும் விசித்திரமான உயர்ந்த ஸபைகளையும் விருப்பத்துடன் பார்த்து வியப்புற்றான்.

நடையினல் அன்னத்தையும், குரலால் குயிலையும், முகத்தால் சந்திரனையும், ஒளியால் லக்ஷ்மியையும், புன்னகையினல் குருக்கத்தி மலரையும் ஒத்திருப்பவளும், மலர்மகளோ கையிலேந்திய தாமரைப் புஷ்பமாகிய அடையாளத்தை நீக்கிவந்தவள்போன்றவளும், தாமரை இதழ்போன்ற அகன்ற கண்களையுடையவளும், தாமரைப்பூவினுள்ள காயும் உருக்கினதங்கமும்போன்றநிறமுள்ளவளுமாகிய அந்தச்சகுந்தலையைக்கண்டு எல்லா ஜனங்களும், "இவள் கைக்குள்ளடங்கும் இடையுள்ளவளும், அழகியகூந்தலுள்ளவளும், நெருங்கியஸ்தனங்களுள்ளவளுமாக இருக்கிறாள். இவளுடைய நிதம்பம் மிகவிசாலமாயிருக்கிறது. துடைகள் யானைத்துதிக்கைக்கொப்பானவை. கால்கள் உயர்ந்தும் உள்ளங்கால் சிவந்தும்பூமியில் நன்றாகப்பதிந்தும்இருக்கின்றன. இப்படிப்பட்ட ரூபமுள்ள இவள் ஸ்வர்க்கலோகத்திலிருந்து வந்தவள்போலிருக்கிறாள்" என்று சொன்னார்கள். துஷ்யந்தநகரத்திலுள்ள ஜனங்களனைவரும் இவ்வாறுகவே நினைத்தனர். "இவன் ஸிம்மம்போன்ற பார்வையுடையவன்; ஸிம்மம்போன்றபற்களுடையவன்; ஸிம்மம்போன்ற தோள்களையுடையவன்; ஸிம்மம்

போன்ற மார்பையுடையவன்; ஸிம்மத்துக்கொப்பான பலமுள்ளவன்; ஸிம்மம்போல் தீரமாகநடப்பவன்; பருத்ததோள்களை யுடையவன்; நீண்ட கைகளையுடையவன்; விசாலமான மார்பையுடையவன்; * குடைவடிவமான தலையுள்ளவன்; வளர்ச்சியுள்ளவன்; உள்ளங்கை உள்ளங்கால்கள் சிவந்தவன்; சிவந்தவாயுள்ளவன்; துந்துபி வாத்தியத்துக் கொப்பான த்வனியுள்ளவன்; ராஜலக்ஷணங்களுள்ளவன்; ராஜலக்ஷ்மி இவனிடத்தில் காணப்படுகிறாள். தோற்றத்தினாலும், அழகினாலும், சரீரத்தினாலும், ஸௌமார்த்தியத்தினாலும் துஷ்யந்தனுக்கு ஸமானமாக இருக்கிறான். இவன் யாருடைய புத்திரனாக இருக்கலாம்" என்று சகுந்தலையின் புத்திரனுடைய குணங்களைப்பற்றியும் அந்தஜனங்கள் அடிக்கடிபேசினர். இவ்வாறு சொல்லிக்கொண்டு அவர்களெல்லாரும் ஆயிரக்கணக்காகச் சிலாகித்தனர். ஆண்பெண்களெவரும் ஊகித்துப் பேசிக்கொண்டனர். பந்துக்களைப்போல் அன்புடன் சகுந்தலையின்பின் சென்றனர். நகரத்து ஜனங்களினுடைய அந்தச்சொல்லைக் கேட்டுக்கொண்டு அந்த ராஜகுமாரியான சகுந்தலை ஒன்றும்பேசாமல் ராஜமாளிகையின் வாயிலையடைந்து தன்காரியம் பெரிதாயிருப்பதுபற்றி உடனே மனம்சோர்ந்து சிந்தையுற்றாள். ஜனமேஜயராஜாவே! வெட்கத்தினால் உடம்புகுன்றி, "என் காரியத்திற்காக வெட்கமில்லாமல் ராஜாவின் எதிர்நின்று என்ன சொல்வேன்?" என்று சிந்தையுடன் சொல்லிக்கொண்டு வருத்தமுற்றவளான அந்தச்சகுந்தலை, ராஜாவினிடம்சென்று தெரிவித்தபிறகு உள்ளே அனுப்பப்பட்டாள். பாலசூரியனுக்கொப்பான ஒளியுள்ள அந்தக் குமாரனுடன் சகுந்தலை ஸிம்மாஸனத்திலிருக்கும் இந்திரனுக்கொப்பான சக்தியுள்ள ராஜாவைப்பார்த்துத் தலைவணங்கி மிகுந்த சந்தோஷத்தையடைந்து நியாயப்பிரகாரம் ராஜாவுக்கு மரியாதை செய்து தன் புத்திரனைப்பார்த்து, "நியமம்தவறுத உன் பிதாவாகிய ராஜாவுக்கு வந்தனஞ்செய்" என்றுசொன்னாள். அவள் இவ்வாறு புத்திரனுக்குச் சொல்லி நாணத்தினால் தலைகுனிந்து, அங்கேயே தூணைக்கட்டிக்கொண்டு நின்று ராஜாவைப்பார்த்து, "தயைசெய்யுங்கள்" என்றுசொன்னாள். சகுந்தலையின்புத்திரனும் ராஜாவைநமஸ்கரித்துக் கைகூப்பிக்கொண்டு ஆனந்தத்தினால் மலர்ந்தகண்களுடன் ராஜாவையே நோக்கிநின்றான். அந்தத் துஷ்யந்தன் தர்மமான புத்தியினால் சிந்தித்துக்கொண்டு, "உத்தமஸ்திரீயே! நீ வந்த காரியமென்ன? சொல்; சந்தேகமில்லாமற் செய்வேன். புத்திரனுள்ளவள்

* நவ்வெயர்ந்து பக்கங்கள் தாழ்ந்திருப்பதென்பது கருத்து.

விஷயத்தில் சொல்லவேண்டுமா" என்று சொன்னன். அதைக்கேட்டுச் சகுந்தலை சொல்லலானாள்: "மகாராஜாவே! புருஷர்களில் உத்தமரே! நான்சொல்லப்போவதைத் தயைசெய்து கேளும். ராஜாவே! வீரரே! இவன் என்னிடம் உமக்குப்பிறந்த புத்திரன். ஆதலால், ராஜாவே! உமதுபுத்திரனை நீர் யௌவராஜ்ய பட்டாபிஷேகம் செய்யக்கடவீர். உத்தமபுருஷரே! அந்த ஆச்ரமத்தில் நீர் சொன்னபடி நடந்துகொள்ளும். வீரரே! முன்னே கண்ணுவருடைய ஆச்ரமத்தில் நீர் என்னுடன் சேர்ந்தபோது செய்தபிரதிஜ்ஞையை நினைத்துப்பாரும்" என்று சொன்னாள்.

ஜனமேஜயரே! வேறு ஸ்திரீகளுடைய போகத்தில் அகப்பட்டுக்கொண்ட அந்தத் துஷ்யந்தனுக்குச் சகுந்தலையும் அவள் புத்திரனும் * மனத்தினுள்ளே மறைந்துபோயினர். அவன் அப்போது புத்திரனுடன் வந்த அந்தப் புன்னகையுள்ள சகுந்தலையை மனத்துக்குள்வைத்து உள்ளன்புடன் நெடுநேரம் சந்தோஷமடைந்திருந்தான். அந்தராஜா அவள்சொல்லைக் கேட்டபின், அவளுடைய நினைவையடைந்தும், "அன்புள்ளவளே! உன்னுடைய சேர்க்கையைப்பற்றி எனக்கு நினைவில்லை. (நான் விவாகம் செய்துகொள்ளாமல்) வீணாகஸ்திரீசங்கமம் செய்யமாட்டேனென்பது என்னுடைய நிச்சயம். அழகியவளே! உன்னுடன் சேர்க்கையைப்பற்றி எனக்கு நினைவில்லை. அறம்பொருளின்பம் மூன்றிலும் எனக்கு உன்னுடன் சம்பந்தமிருப்பதாக நான் நினைக்கவில்லை. சென்றாலும் செல்; நின்றாலும் நில்; வேறென்ன விரும்புகிறாயோ அதையும் நீ செய்யலாம். உன் இஷ்டம்" என்றான்.

தொண்ணூற்றெட்டாவது அத்தியாயம்.

ஸம்பவபர்வம். (தொடர்ச்சி.)

(சகுந்தலைக்கும் துஷ்யந்தனுக்கும் நடந்தவிவாதம்).

உயர்ந்தமனமுள்ள சகுந்தலை அவனால் இவ்வாறுசொல்லப்பட்டு, வெட்கமுற்று, துக்கத்தினால் பிரஜ்ஞைதப்பினவள்போலாகித் தூண்போல் அசைவற்றுநின்றாள். படபடப்பினாலும் கோபத்தினாலும் கண்கள்சிவந்து உதடுகளிரண்டும் துடித்துக்கொண்டு பார்வையினால் எரிக்கின்றவள்போல ராஜாவைக் குறுக்காக நோக்கினாள். கோபத்

---

* அவன் அவர்களைமறந்தான்.

திரௌபதி தூண்டப்பட்ட அபிப்பிராயத்தை மறைத்துத்தபஸ்விஜனங்களுக்கு ப்ரியம் பாதிக்கப்பட்ட மகிமையை அப்போது அடக்கிக்கொண்டாள். சற்று நேரம் சிந்தித்து விசனமும் கோபமும்கொண்டு பர்த்தாவை நோக்கி நியாயத்தைவிடாமல் பின்வருமாறு சொல்லத்தொடங்கினாள்:—

"மஹாராஜாவே! நீர் அறிந்திருந்தும் ஸாதாரணமான அற்ப மனிதனைப்போல் அறியேனென்று ஏன் இப்படி அஞ்சாமற்பேசுகிறீர்? நீர் சொல்வது சத்தியமென்பதும் பொய்யென்பதும் உமதுமனதுக்கே தெரியும். நற்சாக்ஷியான உமது மனத்தை நீரே அவமானம்செய்கிறீர். ஐயோ! எவனொருவன் ஒருவகையாக இருக்கிற மனத்தினை அதற்கு மாறுனவகையில் காண்பிக்கிறானோ(அவன்) தன்னைத்திருடிக்கொண்ட அந்தத்திருடன் செய்யாதபாவம் என்ன இருக்கிறது? 'நான் ஒருவனுயிருக்கிறேன்' என்று நீர் நினைத்துக்கொண்டிருக்கிறீர். உமது மனதுக்குள் மறைந்திருக்கும் ஆதிபுருஷனுகிய கடவுளை நீர் அறியவில்லை. எவன் பாபகாரியத்தைப் பார்த்துக்கொண்டிருக்கிறானோ அவனருகில் நீர்பாபத்தைச் செய்கிறீர். எப்போதும் பொய்யைவிட்டவர்களாகிய ஸத்புருஷர்களிவர்க்கும்நன்மைக்குக்காரணமானதும் துன்பத்தைச்செய்யாமலிருப்பதும் தர்மமொன்றுதான். ஒருவன் பாபத்தைச்செய்து தன்னையாரும் அறியவில்லையென்று நினைக்கிறான். தேவர்களும் அந்தர்யாமியானபரமாத்மாவும் அவனைப் பார்த்திருக்கின்றனர். சூரியனும் சந்திரனும் வாயுவும் அக்நியும் ஆகாயமும் பூமியும் ஜலமும் தன்மனஸும் யமனும் பகலும் இரவும் இரண்டு ஸந்திகளும் தர்மதேவதையும்மனிதனுடையசெயலை அறிகின்றனர். செய்யுங்கருமங்களைப் பார்த்துக்கொண்டிருக்கும் தன் ஹிருதயத்திலுள்ள ஜீவாத்மா எவனுக்குத் திருப்தியாகிறானோ அவனுடைய பாபத்தைச் சூரிய புத்ரனுகிய யமன்விலக்கிவிடுகிறான். துராத்மாவாகிய எந்தமனிதனுக்குத் தன் ஆத்மா திருப்தியாகவில்லையோ அந்தப்பாபகாரியம்செய்கிறதிர்ப்பாக்கியனியமன்பயமுறுத்துகிறான். எவன் தானுக ஆத்மாவை அவமதித்து மனத்தை வேறுகக்காண்பிக்கிறானோ அவனுக்குத்தேவர்கள் நன்மை செய்வதில்லை. அவனுக்குத் தன் ஆத்மாவே உதவவில்லையே. பதிவ்ரதையாகிய என்னைத் தானுக வந்தாளென்று இவ்வாறு அவமதிக்கவேண்டாம். மரியாதைக்குரிய பாரியையாகிய நான் ஸ்வயமாகவே வந்திருக்கையில் நீர்மரியாதை செய்யாமலிருக்கிறீர். எதற்காக நீர் நாடோடியைப்போல் ஸபையில் என்னை அனுதரவுசெய்கிறீர்! நான் இப்போது யாருமில்லாத இடத்தில் முறையிடவில்லை. நான் சொல்வதுஉமக்குச் செவியிற்பட

வில்லையா? துஷ்யந்தரே! வேண்டுகின்றவன்னுடையசொல்லைநீர்செய்யாவிட்டால் உமதுதலை இப்போதே நூறுதுணுக்குக்களாக வெடித்துப்போம். புருஷன் கன்மணியின் கர்ப்பத்திற் புகுந்து அவளிடத்தில் அவன் மறுபடியும் ஜனிக்கிறான். அப்படி ஜனிப்பதாலேதான் புராணங்கள் தெரிந்தகவிகளும்ரிஷிகளும்அவளை ஜாயையென்றுஅறிந்திருக்கின்றனர். சாஸ்திரோக்தகருமங்களைச்செய்கிற புருஷனுக்கு எந்த ஸந்ததி உண்டாகிறதோ அந்தஸந்ததி, அவனுடையமுன்னிறந்தபோன பிதாமஹர்களை (தன்னையும்)தன் சந்ததியினையும் கரையேற்றுகின்றது. புத்ரன் பிதாவை, 'புத்' என்னும் நரகத்திலிருந்து காப்பாற்றுவதனால் புத்ரனென்று பெயருள்ளவனைமுன்னமேபிரம்மதேவரால் கூறப்பட்டிருக்கிறான். புத்திரனால் புண்ணியலோகங்களை ஒருவன் வசப்படுத்துகிறான். புத்திரனுடைப் புத்திரனால் அழிவில்லாமையை அடைகிறான். அதன்பின் பௌத்திரனுடையபுத்திரனால் இவன் முன்னோர்கள் ஆனந்திக்கின்றனர். எவள் வீட்டுவேலையில் தேர்ந்தவளோ அவள் பாரியை; எவள் ஸந்ததியுள்ளவளோ அவள் பாரியை; எவன் கணவனை உயிராக நினைப்பவளோ அவள் பாரியை; எவள் கற்புடையவளோ அவள்பாரியை; பாரியை யென்பவள்புருஷனுடைய ஒருபாதியாவாள். பாரியை மிகச்சிறந்த *ஸகா; பாரியை அறம்பொருளின்பமாகிய மூன்று புருஷார்த்தங்களுக்கும் காரணம் பாரியையுள்ளவனே சுற்றங்களுள்ளவன்; பாரியையுள்ளவர்களே †கிரியைகளுள்ளவர்கள்; பாரியையுள்ளவர்களே க்ருஹஸ்தர்கள்; பாரியையுள்ளவர்களே ஸுகமுள்ளவர்கள்; பாரியையுள்ளவர்களே ஸம்பத்துள்ளவர்கள். இன்சொற் சொல்லுகின்ற பாரியைகள் ரகஸ்யகாலத்தில் சிநேகிதர்களாகவும், தர்மகாரியங்களில் ‡ தந்தைகளாகவும், கஷ்டப்படும்போது தாய்களாகவும், வழிநடக்கும்போது காடுகளிலேயும் ஆறுதலாகவும் இருக்கின்றனர். எவன் பாரியையுள்ளவனை அவனே நம்பிக்கைக்குரியவன். ஆதலால், பாரியை முக்கியமான ஆதரவு. ஜீவித்திருக்கும்போதும் இறந்துபோனபோதும் கஷ்டங்களில் ஸகாயமின்றிஅகப்பட்டபோதும்பதிவ்ரதையானபாரியை ஒருத்திமட்டுமே பர்த்தாவைவிடாமல்அநுஸரிக்கிறாள். முதலில்இறந்துபோன மனைவி தன் கணவனுக்குப் பரலோகத்தில் காத்திருக்கிறாள். முன்னிறந்த கணவனைக் கற்புடையமனைவி பின்னேயும் அநுஸரிக்கிறாள். ராஜாவே! இந்தலோகத்திலும்பரலோகத்திலும்பாரியை

---

* துணை. † யஜ்ஞாதிகாரியங்கள் செய்யத்தக்கவர்.

‡ ஹிதம் சொல்லுகிறவர்கள்.

யைக்கணவன் அடைகிறான். இந்தலோகத்தில் பாரியை தேகத்தை வளர்ப்பதற்குரியவள்;ஸ்வர்க்கலோகம் செல்லுகிறவனுக்குக் கட்டுஸ்தம் போன்றவள். இந்தக்காரணத்திலேதான் பாணிக்கிரகணம் சாஸ்திரத்தில் விதிக்கப்பட்டிருக்கிறது. தானே தன்னுல் ஜனித்துப் புத்திரனுகிறானென்று தெரிந்தவர் சொல்லுகின்றனர். ஆதலால் கணவன் புத்திரனுக்குத்தாயாகியதன்பாரியையைத் தாயைப்போல்பார்க்கவேண்டும். எல்லாருக்கும்புத்திரனென்பவன்தன்னுடையஆத்மாவேதான் என்று சொல்லுகின்றனர். நடையும் உருவமும் செய்கையும் சுழிகளும் லக்ஷணங்களும் பிதாக்களிடம் எவ்வாறுகக் காணப்படுகின்றனவோ அப்படியே புத்திரர்களிடமும் இருக்கின்றன. புத்திரர்களுக்குப் பிதாவின் சம்பந்தத்தினுலேதான் நல்லவையும்கெட்டவையுமானஒழுக்கங்களும் குணங்களும் செய்கைகளும் உண்டாகின்றன. பிதாவானவன் தன்பாரியையினிடத்தில் உண்டாக்கப்பட்ட தன்புத்திரனைத் தன் முகத்தைக் கண்ணுடியிற் பார்ப்பதுபோல் பார்த்து, புண்ணியஞ் செய்தவன் ஸ்வர்க்கலோகம் சென்று ஆனந்தமடைவதுபோல் ஆனந்தமடைகிறான். பதிவ்ரதைகளைப்போல் வேஷதாரிகளான ஸ்திரீகள் அன்னியபுருஷனுடைய கர்ப்பத்தை வாங்கிக்கொள்வதனுல் தங்கள் பர்த்தாக்களின் குலங்களையுமழித்துத் தாங்களும் கொடிய நரகம் புகுகின்றனர். தம் பாரியையிடம் அவள் நியோகித்தபடி பரபுருஷர்களால் உண்டாக்கப்பட்ட புத்திரர்களைத் தமது புத்திரர்களென்று ஜனங்கள் நியோகிக்கின்றனர். அவர்கள் புத்திரர்களாயிருந்தும் சத்துருக்களேயாவார். அவர்கள் த்வேஷம் செய்வார்கள்; சொன்னதைச் செய்யார்; மாறுகச் செய்வார்; பிதாவும் அவர்களை வெறுப்பான். ராஜாவே! தனக்குப் பிறந்தவன் விஷயத்தில் அவ்வாறில்லை. புத்திரன் தன்னை உத்பத்தி செய்த பிதாவைப் பகைக்கமாட்டான். அவ்வாறே உத்பத்திசெய்த பிதாவும் புத்திரனைப் பகைக்கமாட்டான். ஆதலால், தானே புத்திரனுக இருப்பன். மனத்துயரங்களாலும் மிகுதியான நோய்களாலும் வருந்திக்கொண்டிருக்கும் ஜனங்கள், கோடைக்காலத்தில் தாபமடைந்தவர் தண்ணீரில் ஆறுவதுபோல், தங்கள் மனைவிகளிடம் ஆறுகின்றனர். தூரதேசம்போய் இளைத்துப் பலஹீனர்களாய் அழுக்கடைந்த வஸ்திரங்களோடுகூடிய மனிதர்களும் தங்கள் மனைவிகளைக்கண்டு, தரித்திரர்கள் தனலாபமடைந்து மகிழ்வதுபோல், மகிழ்கின்றனர். அறிவுள்ளவன் தன் ஸுகமும் சந்தோஷமும் தர்மமும் தன் பாரியைகளிடமிருப்பதை ஆராய்ந்து, அவர்கள் தனக்குப் பிரியமில்லாத சொற்சொன்னலும்

அவர்களுக்குப் பிரியமில்லாத சொல்லைச் சொல்லலாகாது. ஸ்திரீ தன்னில் பாதியென்பது வேதவாக்கியம். அவள் இவனுடைய தனத்தையும் ஸந்ததிகளையும் தேகத்தையும் உலகவாழ்க்கையையும் தர்மத்தையும் ஸ்வர்க்கத்தையும் ரிஷிகளையும் பித்ரிக்களையும் காப்பாற்றுகிறாள். பரிசுத்தமான ஸ்திரீகள் தாம் உத்பத்தியாகும்நிலமாக இருக்கின்றனர்; எப்போதும் விடாதவர்கள். ஸ்திரீகளின்றிச் சந்ததியை உண்டுபண்ணுவதற்கு ரிஷிகளாலேயும் எப்படி முடியும். தேவர்களுக்கும் தங்களை உத்பத்தி செய்விப்பதற்கு ஸாமர்த்தியமேது?உலகங்களில் எல்லாமறிந்தவனுக்கும் ஸ்ருஷ்டிசெய்வது ஸ்திரீகளிடம் ஏற்பட்டிருக்கிறது. சண்டாள ஸ்திரீகளிடத்திலும்கூட ரிஷிகளுக்குப் பிறந்த சிலர் ரிஷிகளாக இருந்திருக்கின்றனர். புதல்வன் புரண்டு தரையிலுள்ளமண் உடம்பில் படிந்தபடி தந்தையின் அங்கத்தைத் தழுவிக்கொள்வானுனல் அதைக்காட்டிலும் சிறந்தது என்ன இருக்கிறது? அப்படிப்பட்ட பிதாவாகிய நீர், விருப்பத்துடன் கிட்டவந்து கடைக்கண்ணினல் பார்க்கின்ற இந்தமானியான புத்திரனை எதற்காக அனுதாபஞ செய்கிறீர்? எறும்புகளும் தங்கள் முட்டைகளை எடுத்துக்கொண்டு போகின்றன; விட்டுவிடுவதில்லை நீர்மட்டும் இவ்விதமான புத்திரனை எல்லாவகையிலும் ஆதரிக்காமலிருப்பது ஏன்? என்னிடத்தில் பிறந்த உமது புத்திரனை நீர் எப்படி எடுக்காமலிருக்கலாம். காக்கைகளும் குயில்களின் முட்டைகளைத் தம்முட்டைகளென்று நினைத்து வளர்க்கின்றன. எல்லாம் தெரிந்த நீர் இப்படிப்பட்ட புத்திரனை ஏன் மதிக்காமலிருக்கிறீர். பொதியமலையிலுண்டான சந்தனம் மிகக்குளிர்ச்சியென்று சொல்லுகின்றனரே ! அந்தச்சந்தனத்தைக்காட்டிலும் தன்குழந்தையைத் தழுவுவது மேற்பட்டதாகும். தன் பிள்ளை குழந்தைப்பருவத்தில் கட்டிக்கொள்ளும்போது அவனைத் தொடுவது எவ்வாறு இனிமையாக இருக்குமோ அவ்வாறு நல்ல வஸ்திரங்களுடுப்பதும் ஸ்திரீகளைத் தழுவுவதும் ஜலத்தில் ஸ்நானஞ்செய்வதும் ஸுகமாகவிரா. புத்திரன்மேலே தொடுவதைப் பார்க்கிலும் அதிக இனியஸ்பர்சம் உலகத்தில் இல்லை. பார்வைக்கினியவனுகிய இந்தப் புத்திரன் உம்மைக்கட்டிக்கொண்டு தொடட்டும். மனிதர்களுக்குள் பிராமணன் சிறந்தவன். நாலுகால்களுள்ளவற்றுள் கோ சிறந்தது. பூஜிக்கத்தக்கவர்களுக்குள் ஆசாரியர் சிறந்தவர். தொடுவதற்கு இனியவற்றுள் புத்திரன் சிறந்தவன். வீரனே! ராஜச்ரேஷ்டனே ! மூன்றுவருஷம் நிறைந்தபின் இந்த வீரனுகியகுமாரன் உமது துக்கத்தைப் போக்குவதற்காக என்னிடத்தில் பிறந்

திருக்கிறான். இப்போது நான் கட்டளையிட்டதன்மேல் நீர் அழைப்பதை எதிர்பார்க்கிறான்.—"பூருவம்சத்துக்குமாரனுகிய இவன் நூறு அசுவமேதங்கள் செய்யப்போகிறான்; அளவற்ற தக்ஷிணைகளுள்ள ராஜஸூயம் முதலான வேறுயாகங்களையும் செய்யப்போகிறான்"—என்று முன்னே என்னுடைய பிரஸவகாலத்தில் ஆகாசவாணி எனக்குச்சொல்லிற்று. ஆ! ஆ! வேறு ஊருக்குப்போன மனிதர்களும் திரும்பிவந்து புத்திரர்களை அன்புடன் தங்கள் மடியில்வைத்து உச்சிமோந்து ஆனந்திக்கிறார்களல்லவா? பிராமணர்கள் புத்திரர்களுடைய ஜாதகர்மத்தில் வேதங்களிலுள்ள மந்திரக்கோவையைப் பின்வருமாறு படிக்கின்றனர். உமக்கும் அது நன்றாகத் தெரிந்ததுதான். அவையாவன:—"என் மூவ்வொரு அங்கத்திலிருந்தும் நீ ஜனித்திருக்கிறாய். என் ஹ்ருதயத்திலிருந்தும் அதிகமாக உண்டாயிருக்கிறாய். புதரனென்ற பெயருள்ள நானுகவே நீ இருக்கிறாய். அந்த நீ நூறுவருஷகாலம் ஜீவித்திருக்கக்கடவாய் என்னுடைய உயிர் உன்னில் இருப்பது. என்னுடைய ஸந்ததி உன்னில் குன்றாமல் இருக்கவேண்டும். ஆதலால், எனது புத்திரனே! அப்படிப்பட்ட நீ நூறுவருஷகாலம் ஸுகமாக ஜீவித்திருக்கக்கடவாய்" என்னும் இந்த மந்திரங்களினால் தந்தைகள் புத்திரர்களை உச்சியில் மோக்கின்றனர். முதலில் ஒருவனுக இருந்து பிறகு இரண்டாக ஆயிருக்கிறயென்று உலகச்சொல் இருக்கிறது. இவன் உம்முடைய அவயவங்களிலிருந்து பிறந்தவன். புருஷனிடமிருந்து வந்த மற்றொருபுருஷன். தெளிவான தடாகத்தில் தனது இரண்டாவது உருவைப் பார்ப்பதுபோல் உமது புத்திரனைப்பாரும். தெளிவான தடாகத்தில் சந்திரனைப்பார்ப்பதுபோல் உம்மை என்னிடம் பாரும். ஆகவனீயம் என்னும் அக்னி கார்ஹபத்யமென்னும் அக்னியிலிருந்து எப்படி எடுக்கப்படுகின்றதோ அப்படியே இவன் உம்மிடமிருந்து எடுக்கப்பட்டவன். நீர் ஒருவராக இருந்து இப்போது இருவராகச் செய்யப்பட்டிருக்கிறீர். ராஜாவே! வேட்டை யாடிக்கொண்டிருந்த நீர் ஒரு மானினால் இழுக்கப்பட்டபோது என் பிதாவின் ஆச்ரமத்தில் கன்னிகையாக இருந்த என்னை அடைந்தீர். ஊர்வசி, பூர்வசித்தி, ஸஹஜன்யை, மேனகை, விச்வாசி, க்ருதாசி இவ்வுவர்தாம் அப்ஸரஸுக்களுள்ளே சிறந்தவர்கள். அவர்களில், பிரம்மாவினிடமிருந்து பிறந்த சிறந்த அப்ஸரஸான மேனகையென்பவள் ஸ்வர்க்கத்திலிருந்து பூமிக்குவந்து விசுவாமித்திரருக்கு என்னைப்பெற்றாள். ஐசுவர்யமுள்ளவரும் தர்மத்தைக் கடைப்பிடித்தவரும் இரண்டாவது அக்னியைப்

போன்றவரும், பிரம்மாவின் புத்திரரும் விசுவாமித்திரருக்குக் கூடஸ் தருமாகிய குசரென்னும் ராஜரிஷி ஒருவர் இருந்தார். பலவானும் தர்மம் செய்பவருமாகிய குசனுபரென்பவர் குசருடைய புத்ரர். ராஜாவே! குசநாபருடைய புத்ரர் காதி. காதியின் புத்திரர் விசுவாமித்ரர். என்பிதா இப்படிப்பட்டவர். என்னுடைய தாயாராகிய மேனகை சிறந்தவள். அந்த மேனகையென்னும் அப்ஸரஸ் இமயமலையின் சாரலில் என்னைப்பெற்றாள். அந்தத் துஷ்டை ஊரார் பிள்ளையைப்போலவே என்னை யெறிந்துவிட்டுச் சென்றாள். அந்தப் புண்ணியமூல்ள பக்ஷிகள் என் பாக்கியத்தினால் வந்துசேர்ந்து சிறகுகளினால் என்னைக் காத்தன. அதனால் நான் சகுந்தலையென்ற பெயர்பெற்றேன். அதன் பின், மஹாத்மாவாகிய கண்ணுவமஹரிஷியினால் பார்க்கப்பட்டேன். அக்நிஹோத்ரம் செய்வதற்கு ஜலத்திற்காகப் போன அம்மஹரிஷியைப் பக்ஷிகள் கண்டு தயாவானுகிய அவருக்கு என்னை, அடைக்கலம் வைக்கப்பட்ட லாபத்தைப்போல் கொடுத்தன. கண்ணுவமஹரிஷி என்னைப்பார்த்து, "திரோதாகினிகள் சந்தோஷப்படுகின்றன" என்று என்மீது அன்புவைத்து அரணிபைப்போல் என்னை யெடுத்துக்கொண்டு தமது ஆச்ரமம்சென்றார். ராஜாவே! அந்தமஹரிஷி தாமாகவே கிருபைசெய்து சிறந்தபெண்ணுகிய என்னைத் தம் பெண்ணைப்போல் நடத்தினார். ராஜாவே! நான் விசுவாமித்ரர் பெண்; கண்ணுவமஹரிஷியினால் வளர்க்கப்பட்டவள். ராஜாவே! யௌவனப்பருவத்திலிருக்குபோது ஜனமில்லாத ஆச்ரமத்தில் பர்ணசாலையில் கன்னிகையாயிருந்த என்னை நீர் கண்டீர். யாருமில்லாத ஆச்ரமத்தில் பிதாஇல்லாமல் தெய்வத்தினால் புத்திகொடுக்கப்பட்ட என்னைரஹஸ்யத்தில் உண்மையும் பிரியமுமான பேச்சுக்களினால் நீர் ஸந்ததிக்காகக் கேட்டுக்கொண்டீர். அறம், பொருள், இன்பம் மூன்றையும் வேண்டி நீர் ஆச்ரமத்தில் வாஸம் செய்தீர். காந்தர்வமென்னும் சாஸ்திரோக்த விவாஹத்தினால் என்னைப்பாணிக்ரஹணம் செய்தீர். அந்த நான் எனது குலத்தையும் ஒழுக்கத்தையும் பொய்யாமையையும் தர்மத்தையும் முன்னிட்டுக்கொண்டு உம்மை இப்போது சரணமடைந்திருக்கிறேன். ஆதலால், ஆகட்டுமென்று பிரதிஜ்ஞைசெய்து அந்தச் சொல்லைப் பொய்யாக்குவது உமக்குத் தகாது. லோகநாதராகிய நீர் உம்து தர்மத்தைப் பின்னேதள்ளி, உம்மையே கணவராக உடையவளும் பிழையில்லாதவளுமாகிய நான் வந்திருக்க என்னை நீர் விடத்தகாது. ராஜாவே! நான் முன்ஜன்மத்தில் என்ன பாபகர்மஞ் செய்தேனே; இனனில், குழந்தைப்பருவத்தில் பெற்றோரால் விடப்பட்

டேன் ; இப்போது உம்மால் விடப்பட்டேன். விடப்பட்ட நான் ஆச்ரமத்துக்குப் போகவே போவேன். உமதுபுத்திரனுகிய இந்தக் குழந்தையைமட்டும் நீர் விட்டுவிடாதீர்" என்றுள்.

இப்படிச் சொல்லக்கேட்ட துஷ்யந்தன், "சகுந்தலையே! உன்னிடத்தில் புத்திரன் பிறந்ததைப்பற்றி எனக்குத் தெரியவில்லை. பெண்கள் பொய்சொல்வர். உன்சொல்லை எவன் நம்புவன். முக்கியமாக என்னிடத்தில் இந்த நம்பத்தகாதசொல்லைச் சொல்லுகிற நீ வெட்கப்படவில்லை. கெட்ட ரிஷிப்பெண்ணே! செல்லலாம். தவத்தில் தீவ்ரமுள்ள விசுவாமித்ரமஹரிஷி எங்கே! அந்த மேனகையென்னும் அப்ஸரஸ் எங்கே! இப்படிக்கதியில்லாமல் ரிஷிவேஷம்கொண்ட நீ எங்கே! இந்த உன்னுடைய புத்திரன் சிறுவனுகஇருந்தும் பெரிய தேகமுள்ளவனுகவும் மிகுந்த பலமுள்ளவனுகவுமிருக்கிறன். எப்படி மரத்தினடிபோல் கொஞ்சகாலத்தில் கிளம்பிவிட்டான். உனது பிறப்பு வெகுதாழ்வானது. உன்னை வியபிசாரியென்று நினைக்கிறன். மேனகைக்கு இஷ்டமிபோல் காமம்வைத்த சினேகத்தினுல் பிறந்தவளாக அல்லவோ இருக்கிறுய். ரிஷிகன்னிகையே! நீ சொல்வது ஒன்றும் எனக்குத் தெரிந்ததாயில்லை. உலகத்தில் பெண்களனைவரும் கொடியவர்கள் ; காமத்தை முக்கியமாகக் கொண்டவர்கள். எல்லாப் பெண்களும் அயலாருக்குட்படுகிறவர்கள். எல்லாரும் கோபத்தை மேற்கொண்டவர்கள். பெண்களெல்லாரும் பொய்சொல்லுகிறவர்கள். கண்ணுவரைப்பற்றி நீ பேசத்தகாது. உன் தாயாராகிய மேனகை தயையற்றவள் ; வியபிசாரி ; அவள் உன்னை இமயமலைச் சரிவில் * நிர்மாலியத்தைப்போல் எறிந்து விட்டாளல்லவா ? அந்த க்ஷத்திரியஜாதியில் பிறந்த உன் பிதாவாகிய விச்வாமித்ரரும் தயையில்லாதவர். பிராம்மணராக ஆவதற்கு ஆசைகொண்டவர் ; காமத்துக்குட்பட்டவர் ; தேவஸ்திரீ விசவாமித்ரருக்குத் தன் இஷ்டப்படியே பெற்றுளென்று சொல்லுகிறுய். வியபிசாரியே! ஆ! ஆ! உன்னுடைய பிறப்பே ஜனங்களால் இகழப்பட்டதென்று நான் நினைக்கிறன். மேனகை அப்ஸரஸ்களுள் சிறந்தவள். உன்பிதாவோ மஹரிஷி. அவரிருவருக்கும் பெண்ணுகிய நீ என் வியபிசாரியைப்போல் பேசுகின்றுய் ? உன்ஜாதியும் இழிவானது. நல்ல குலத்திற் பிறந்தவளென்று நீ சொல்லிக்கொள்ளுகிறுய். பெற்று விடப்பட்ட நீ குயில்போல் பிறரால் வளர்க்கப்பட்டிருக்கிறுய். பாபங்களினல் கெட்டபுத்தி வளர்க்கப்படுவதுபோல் நீ வளர்க்கப்பட்டாய். கண்

* தேவதைக்கு நிவேதனம் பண்ணின சேஷம்.

ணுவர் உனக்கு வளர்த்ததகப்பனுசா ? ரிஷிப்பெண்ணே ! நீ பிதற்று கிற இந்தச்சொல் நம்பத்தகாதது. அதை ராஜாவினிடத்திற் சொல் லுகிறாய். விரும்பின இடத்திற்குச் செல்லலாம். ரிஷிப்பெண்ணே ! பொன், ரத்னம், முத்து, ஆடை, ஆபரணங்கள் இவற்றில் எதை நீ அனுபவிக்க விரும்புகிறாயோ அதைவாங்கிக்கொள். நான் உன் னைப்பார்க்க விரும்பவில்லை. இதைவிட்டு உன் இஷ்டப்படி போக லாம்" என்றான்.

தொண்ணூற்றொன்பதாவது அத்தியாயம்.

ஸம்பவபர்வம். (தொடர்ச்சி).

(துஷ்யந்தனைக் கோபித்துச் சகுந்தலை புத்திரனுடன் திரும்புவது.)

சகுந்தலை சொல்லுகிறாள் :—"ராஜாவே ! பிறருடைய தோஷங் கள் * கடுகளவாயிருப்பினும் அவறறை நீர் பார்க்கிறீர். உம்முடைய வை † வில்வப்பழ அளவாயிருப்பினும் அவற்றைப்பார்த்தும் பார்க் காமலிருக்கிறீர். மேனகை தேவர்களிலேயே இருப்பவள். தேவ ரும் மேனகையை அனுஸரிப்பவர். துஷ்யந்தராஜாவே ! உமது பிறப் பைப்பார்க்கிலும் என்பிறப்புத்தான் மேலானது. ராஜாவே ! நீர் பூமி யில் சஞ்சரிக்கிறீர். நான் வானத்தில் சஞ்சரிக்கிறேன். மஹா மேருவுக்கும் கடுகுக்குமிருப்பதுபோல் நம்மிருவருக்கும வித்தியா சம் இருக்கிறது ; பாரும் ராஜாவே ! நான் தேவேந்திரன், குபேரன், யமன், வருணன் இவர்களின் இருப்பிடங்களுக்குச் செல்வேன். என் பிரபாவத்தைப் பாரும். மஹாராஜாவே ! முன்னர் உமது கூடஸ்த ரான ஆயுவென்னும் ராஜா, ஊர்வசியென்னும் அப்ஸரஸினிடத்தில் உண் டாக்கப்பட்ட புத்திரர். அநேக மகரிஷிகளும் வீரர்களான க்ஷத்திரி யர்களும் அப்ஸரஸுகளிடம் உண்டாக்கப்பட்டவர்கள். ரிஷிகளுக் குத் தாயைப்பற்றிய தோஷமில்லை. ராஜாவே ! நான் சொல்லப் போகிற ஜனவாக்கியம்கூட உண்மையாகவே இருக்கிறது. உமக்கு அதை உதாரணம் காட்டுவதற்காகச் சொல்லப்போகிறேன். தேவ க்ஷத்ரானன்று ; அதைக்கேட்டு நீர் மன்னிக்கக்கடவீர். குரூபியாயுள் ளவன் கண்ணுடியில் தன்முகத்தைப் பார்க்காதவரையில் தன்னை மற் றவரைவிட மிகுந்த அழகுள்ளவனாக நினைக்கிறான். எப்போது விகார

---

* கடுகு நுழையுமளவு. † பில்வப்பழம் நுழையுமளவு.

மான தன்ரூபத்தை அவனே கண்ணுடியிற் பார்க்கிறானே அப்போது வெட்கமுற்றுத் தனக்கும் * பிறருக்குமுள்ள வேற்றுமையை அறிந்து கொள்வான். மிக்க அழகுபொருந்தினவன் யாரையும் இகழ்வதில்லை. மிகுதியாகக் கெட்டசொற்களைச் சொல்பவன் இவ்வுலகத்தில் † விதூஷகனாகிறான். மதம்பிடித்த யானைகள் தலைமீது புழுதிகளைப் போட்டுக்கொள்வதனால் எப்படி மகிழ்கின்றனவோ அப்படியே துஷ்டபுத்தியுள்ளவன் ‡ அன்னியர்களைத் தூஷித்துச் சந்தோஷமடைகிறான். உண்மையையும் தர்மத்தையும் விட்டுத்தவறின மனிதனைக் கண்டால் மிகுந்த நாஸ்திகனை மனிதனும் சிறியபாம்பைக் கண்டது போல் அஞ்சுகிறான். ஆஸ்திகனைப்பற்றிச் சொல்லவேண்டுமா! தான் தன்னைப்போன்ற புத்திரனை உத்பத்தி செய்து அவனையே நிந்திக்கிற வனுக்கு க்ஷேமத்தைத் தேவர்களே அழித்துவிடுகின்றனர். அந்த நிமித்தத்தில் இவனைக் § கலி ஆக்ரமிக்கிறது. பிறருக்கு நன்மைசெய்யாதவனிடத்தும் பொய்யனிடத்தும் சுத்தமில்லாதவனிடத்தும் நாஸ்திகனிடத்தும் துராசாரனிடத்தும் ஆசாரம் தப்பினவனிடத்தும் உடனே கலி வருகின்றது. தர்மஞ்செய்பவரிடம் கலிவருவதில்லை. மூடன், பேசுகிற மனிதர்களுடைய நல்லவையும் கெட்டவையுமான சொற்களைக் கேட்டபிறகு விஷ்டையைப் பன்றி எடுப்பதுபோல் கெட்டசொல்லை மாத்திரம் எடுத்துக்கொள்ளுகிறான். அறிவுள்ளவனுவெனின், பேசுகிறமனிதர்களின் நல்லவையும் கெட்டவையுமான சொற்களைக் கேட்டபிறகு ஹம்ஸம் ஜலத்திற் கலந்தபாலை எடுப்பதுபோல் குணமுள்ள சொல்லைமாத்திரம் எடுத்துக்கொள்ளுகிறான். தெளிவில்லாத புத்தியுள்ளவன் தான் கெட்ட எண்ணமுள்ளவனாயிருப்பதையறிந்து பிறரிடத்தும் தன் குணங்களுக்கொப்பான குணங்களையே கிரஹிக்கிறான். அதமர்கள் தங்களால் தாங்கமுடியாத பிறர் புகழென்னும் தீயினால் சுடப்பட்டு அவர்களின் வழியை அனுசரிக்கமுடியாமல் அவர்கள்மீது தூஷணங்களை மிகுதியாகச்செய்கின்றனர். யோக்கியன் பிறரைத் தூஷிப்பதினால் எப்படி வருத்தப்படுகிறானோ அப்படியே அயோக்கியன் அயலாரைத் தூஷிப்பதனால் ஆநந்தமடைகிறான். மூர்க்கர்கள் பிறரை நிந்திப்பதிலேயே முக்கியமாகக் கவனமுள்ளவர்களாக விருக்கின்றனர். ஸாதுக்கள் பிறரைநிந்

---

* இங்கு வேறுபாடம் கொள்ளப்பட்டது.

† இங்கு வேறுபாடம் கொள்ளப்பட்டது.

‡ பிறரைத்தூஷிப்பது தனக்கே பாபமாதலின் அது தன்மேல்புழுதியைப் போட்டுக்கொள்வது போலானது. § பாபம்.

தியாமலிருப்பதில் முக்கியமாகக் கவனமுள்ளவர்களாக இருக்கின்றனர். ஸத்புருஷன் பெரியோர்களை வந்தனஞ்செய்து எவ்வாறு திருப்தியை அடைகிறானோ அவ்வாறே மூர்க்கன் யோக்கியர்களைத் தூஷித்துத் திருப்தியடைகிறான். மூர்க்கர் பிறர் குற்றங்களையே கவனித்துக்கொண்டு தங்கள் குற்றங்களையறியாமல் சுகமாக ஜீவிக்கின்றனர். அதனாலேதான் தாங்கள் பிறர் நிந்திப்பதற்குரியவர்களாக விருக்கப் பிறரை அவ்வகையாகச் சொல்லுகின்றனர். தாங்கள் துர்ஜனர்களாயிருப்பவர் யோக்கியனைத் துர்ச்சனனென்று சொல்லுவாராயின்லோகத்தில் இதற்குமேற்பட்ட பரிஹாஸம் வேறொன்றுமில்லை. ஜனங்களுக்குக் கொடுமையான மனவருத்த முண்டாக்குவதனால் ஒருவன் துயரமடைவதுதிண்ணம். *பிதிர்க்கள் புத்திரனைக் குலத்தின் ஸந்ததிவிருத்திக்கு ஆதாரமென்று சொல்லுகின்றனர். ஆதலால், எல்லாத் † தர்மங்களுக்கும் மேற்பட்டவனாகிய புத்திரனை எவனும் விட்டுவிடுதல் தகாது. தன்தர்மபத்னிக்குப் பிறந்தவர்களையும் நாதனில்லாமல்அகப்பட்டவர்களையும் ‡ ஸ்வீகாரம் செய்யப்பட்டவர்களையும்அபிமானித்து வளர்க்கப்பட்டவர்களையும் கிரயத்துக்கு வாங்கப்பட்டவர்களையும் விவாகமில்லாத கன்னிகைகளிடம் பிறந்தவர்களையும்புத்திரர்களென்று மனு சொல்லியிருக்கிறார். § அந்த அறுவரும் தாயபாகம்பெறத்தக்க பந்துக்கள். (மற்ற) அறுவர்தாயபாகம் பெறத்தகாத பந்துக்கள். மனிதர்களுக்குத் தர்மத்தையும் கீர்த்தியையும்உண்டுபண்ணுகிறவர்களும் மனமகிழ்ச்சியை விருத்திசெய்கிறவர்களும் புண்ணியக் கப்பல்களுமான புத்திரர்கள் பிறந்து பிதிர்க்களை நரகத்திலிருந்து காப்பாற்றுகின்றனர். ராஜசிரேஷ்டரே! ஆதலால், நீர் உமது புத்திரனை விடத்தகாது. அரசரே ஆதலால் புத்திரனையும் சத்தியத்தையும் காப்பாற்றும். இவ்விரண்டையுமே காப்பாற்றும்; பொய்சொல்லவேண்டாம். ராஜாவே! உம்முடைய ‖ ஆத்மாவையும்ஸத்தியத்தையும் ¶ தர்மத்தையும் காப்பாற்றக்கடவீர். ராஜஸிம்மமே! நீர்கபடத்தை வஹிக்கத்தகாது. o ஒருகுளம் நூறுகிணறுகளைப் பார்க்கிலும் சிறந்தது. ஒரு யாகம் நூறு குளங்களைப் பார்க்கிலும் சிறந்தது. ஒரு புத்திரன் நூறு

---

* கூடஸ்தர்கள்.

† நரகத்திலிருந்து காப்பாற்றுவதினால் புத்திரனைத் தருமமென்றது.

‡ தன்னால் உபநயனம்முதலான ஸம்ஸ்காரம் செய்யப்பட்டவரையும் என்பது பழைய உரை.

§ சசுக - வது பக்கத்துக் குறிப்பைப் பார்க்க

‖ புத்ரனையும்.

¶ தான் கலியாணஞ்செய்த மனைவியைவிடாமலிருப்பது தர்மம்.

o கிணறுகட்டுவது குளம் வெட்டுவது யாகஞ் செய்வது ஸத்யம்சொல்வது புத்திரோத்பத்தி ஆகிய தர்மங்களின் சிறப்பைச் சொன்னது.

யாகங்களிலும் சிறந்தவன். ஸத்யமானது நூறுபுத்திரர்களைவிடச் சிறந்தது. ஆயிரம்அச்வமேதங்களையும் ஒருஸத்தியத்தையும் தராசில் நிறுத்தால் ஆயிரம் அசுவமேதங்களைப்பார்க்கிலும் ஸத்தியமே மிகுந் திருக்கும். ராஜேந்திரரே! எல்லாவேதங்களையும் ஓதுவதும் எல்லாப் புண்ணியதீர்த்தங்களிலும் ஸ்நானஞ்செய்வதும் ஸத்யத்தின் பதினு றில் ஒருபாகத்திற்கு ஈடாகாது. ஸத்யத்துக்கொப்பான தர்மமில்லை. ஸத்யத்துக்கு மேற்பட்டதொன்றுமில்லை. அஸத்யத்திற்கு மேற் பட்ட கொடியபாபம் இவ்வுலகத்திலில்லை. ராஜாவே ! ஸத்யம் உயர் நததர்மம். வாக்குத்தத்தம் ஸத்யத்துக்கும் மேற்பட்டது. ராஜாவே! வாக்குத்ததத்தத்தை விட்டுவிடாதீர். உம்முடைய சிநேகம் * ஸத்ய மாகஇருக்கட்டும். ராஜாவே! எந்தப்பாபியானவன் ஒருகாரியத்தைச் செய்து அதை மறந்துபோகிறானோ அவன் பொய்யனவதனால் அந்த மறப்பதைப்போன்ற பாபம் இவ்வுலகத்தில் ஒன்றும் இல்லை. சத்தி யத்தைப்பற்றியும் அஸத்தியதத்தைப்பற்றியும் உமதுஉள்ளமே அறிந்தி ருக்கிறது. ஆதலால் தர்மத்தினால் உமது நன்மையைப்பற்றிய ஆலோ சனையை நீர் செய்யக் கடவீர். எவன் சத்துருவையும் மித்ரனையும் காமக்ரோதங்களினாலும் த்வேஷத்தினாலும் மோசம் செய்யாமலிருக் கிறானோ அவன் மட்டுமே உத்தமபுருஷன். நீர் என்னிடத்தில் சேர்ந் தது பொய்யாயிருந்தால், நான்சொல்வதை நீர் நம்பாமலிருந்தால், நான் ஆசிரமத்திற்கே போக விரும்புகிறேன். உம்மைப்போன்றவ னிடத்தில் சினேகமில்லை. இவன்உமதுபுத்ரன் என்பதைப்பற்றி ஸம் சயமிருந்தால் நீரே புத்தியினாலாராய்ந்து நிச்சயம் செய்யலாம். எவ னுடைய நடையும் குரலும் ஞாபகசக்தியும் பொய்யாமையும் ஒழுக்க மும் கல்வியும் பராக்கிரமமும் அஞ்சாதஸ்வபாவமும் அபிப்பிராயமும் சுழிகளும் மயிர்வரிசைகளும் எவனுடைய நடைமுதலியவற்றிற்கு ஒப்பாக இருக்கின்றனவோ அவன் அவனுடைய புத்திரனென்பதில் ஐயமில்லை. ராஜாவே ! உமக்கும் இவனுக்குமிருக்கிற ஒப்புமையினால் இவன் உம்முடைய தேகத்திலிருந்து எடுக்கப்பட்ட பிரதிபிம்பமாக இருக்கிறான். ராஜாவே! 'பிதாவே' என்றழைக்கிறகுழந்தையை வீண் கவிடாதேயும். †கழுதைப்பாலில்லாமலும் என்பிள்ளைபால்குடிப்பன். மேலும் துஷ்யந்தா! மஹாமேருவைக் கிரீடமாகத்தரித்த இந்த நாலு கடல்களும்சூழ்ந்த புவனியை என்புத்ரன் நீர் இல்லாமலே ஆளப் போகிறான். 'சகுந்தலையே! உன்பிள்ளை சக்கிரவர்த்தியாகப் போகி

---

* ஸபலமாக.

† ராஜ்யஸுகம் கழுதைப்பால், யோகஸுகம் பசுவின்பால்.

ருன்' என்று தேவேந்திரனேசொல்லியிருக்கிறான். அது வீணுகாது. தேவதூதர்கள் முதலான அநேகரை நான் சாக்ஷியாகஇருக்கச்சொல்லியிருக்கிறேன். அவர்கள் நிஜம் அல்லது பொய்யென்பதைப்பற்றி ஒன்றும்சொல்லவில்லே. அதிர்ஷ்டமில்லாத நான் சாக்ஷிகளில்லாமல் வந்தவழியே செல்லப்போகிறேன்." என்கிற இவ்வளவு சொல்லேச் சொல்லி, சகுந்தலே புறப்பட்டாள். கோபத்தினுல் உண்டான அக்நி புகையுடன் அவள்தலேயில் காணப்பட்டது. பிறகு தன்னுள் உண்டான கோபமென்னும் தீயைத் தன் அங்கங்களிலேயே அடக்கிக் கொண்டு அழகான அங்கமுள்ள சகுந்தலே புத்ரனுடன் வனத்திற்கே புறப்பட்டாள்.

நூறுவது அத்தியாயம்.

ஸம்பவபர்வம் (தொடர்ச்சி).

(அசரீரிவாக்குச் சொன்னதன்பேல் ராஜா சகுந்தலேயை அங்கீகரித்துப் பரதனுக்குப் பட்டாபிஷேகஞ் செய்வது).

பிறகு ரித்விக்குக்களாலும் புரோகிதர்களாலும் ஆசாரியர்களாலும் மந்திரிகளாலும் சூழப்பட்ட துஷ்யந்தனேநோக்கி ஆகாயத்தில் ஓர் அசரீரிவாணி சொன்னதாவது: "தாய் தோற்பைபோன்றவள்; புத்ரன் பிதாவைச் சேர்ந்தவன். எவன் எவனுக்குப் பிறந்தானே அவன் அவனேதான்; இந்தத்துஷ்யந்தபுத்ரனே எடுத்துக்கொள். சகுந்தலே ஸத்தியமாகவே சொல்லுகிறாள். ஒவ்வோர் அங்கத்திலிருந்தும் ஒவ்வோர் அங்கத்தைப்பெற்றுப் பிதாவினிடத்திலிருந்து நேரே புத்ரன் உண்டாகிறான். பூருவம்சத்தவனே! ஆதலால் உன்னுடைய ஆத்மாவே (சரீரமே) புத்திரனென்ற பெயரோடிருக்கிறது. தான் கர்ப்பாதனம்செய்து மறுபடி தானே பிறந்தவனுகிய இந்தப்புத்ரனே நீ காப்பாற்று. பதிவ்ரதையான சகுந்தலேயை நீ பூஜிக்கவேண்டும்; அவமதிக்கலாகாது. பெண்கள் ஒப்பில்லாத பரிசுத்தவஸ்து. துஷ்யந்தனே! இது தர்மசாஸ்திரத்தை அனுஸரித்தது. எனெனில் ஒவ்வொரு மாதத்திலும் ருதுகாலம் இவர்களுடைய பாபங்களேப்போக்கிவிடுகிறது" என்பது. அவ்வாறு சொன்னபின் நாலுபக்கத்திலும் முள்ள தேவர்களெல்லோரும் துஷ்யந்தனேப்பார்த்து, "இந்தப்புத்திரன் உன் சரீரத்திலிருந்து கர்ப்பாதானம் செய்யப்பட்டவன. சகுந்தலேயை நிராகரிக்காதே.ராஜாவே! புத்திரன் தனக்குவித்துப்போட்டவனே நரகத்திலிருந்து தூக்கிவிடுகிறான். நீ இந்தப்புத்திரனுக்குக்கர்ப்

பாதானம் செய்தவன். சகுந்தலை ஸத்யமாகச் சொல்லுகிறாள். கண்வனே மனிஷியின் கர்ப்பத்தில் பிரவேசிக்கிறான். அவனே அவளிடம் மறுபடியும் ஜனிக்கிறான். இவ்வாறு இவர்கள் ஒருவர்க்கொருவர் காரணமாக இருக்கின்றனர். சகுந்தலையை நிராகரிக்காதே. தன் சரீரத்தை இரண்டாகச்செய்து பிரிக்கப்பட்ட புத்திரனைத்தான் மனிஷி பெறுகிறாள். துஷ்யந்தராஜாவே! ஆதலால் சகுந்தலையின் புத்திரனை எடுத்துக்கொள். இதுசிறந்த ஐசுவரியம். விடத்தகாதது. தன் உயிரானபுத்திரனைக் காப்பாற்று. துஷ்யந்தனே! மஹாத்மாவும் பூருவம்சத்தவனுமாகிய சகுந்தலையின் புத்திரனை எடுத்துக்கொள். இவனை நீயாகவும் எங்கள் சொல்லுக்காகவும் தாங்கிக்கொள்ளவேண்டியிருப்பதனால் இந்த உன் புத்திரனுக்குப் பரதனென்று பெயர் இருக்கட்டும். பரதனுண்டானபுகழ் பாரதி என்னப்படும். இவனால் இந்தக் குலத்திற்கே பாரதமென்ற பெயர்வரும். இவனுக்குப் பிந்தினவரும் முந்தினவரும் பாரதர்களேயாவார்" என்று சொன்னர்கள். இவ்வாறு பதிவ்ரதையென்று சொல்லித் தேவர்களும் தவத்தையே தனமாகவுடைய ரிஷிகளும் சந்தோஷத்துடன் பூமாரி பெய்தனர். துஷ்யந்தன் அந்தத் தேவர்களுடைய சொல்லைக்கேட்டு ஹிம்மாஸனத்திலிருந்தெழுந்து தேவர்களுக்கு நமஸ்காரம்செய்து, சந்தோஷத்துடன் புரோகிதர்களையும் மந்திரிகளையும் நோக்கி, "நீங்களும் இந்தத் தேவதூதன் சொல்லைக்கேளுங்கள். தேவர்களும், மஹரிஷிகளும் சொல்லுவதையும் கேளுங்கள். நானும் இவர்கள் சொன்னபடி இவனை எனக்குப்பிறந்த புத்திரனென்றே அறிகிறேன். இவளுடைய பேச்சினால்மட்டும் நான் இவனை எனது புத்திரனாகக் கிரஹிப்பேனாயின் ஜனங்களுக்கு ஸந்தேகமுண்டாகும். அப்படிக் கிரஹிப்பதனால் இவன் நிச்சயிக்கப்படான்" என்று சொன்னன். அப்போது, ராஜா அவனைத் தேவர்கள் மஹரிஷிகள் சொல்லினால் தெளிவாக நிச்சயம்செய்துகொண்டு திருப்தியோடும் மகிழ்ச்சியோடும் அந்தப்புத்திரனை அழைத்தான். அதன் பிறகு ராஜா அந்தப்புத்திரனுக்கு மகிழ்ச்சியுடனும் ஸ்நேகத்துடனும் பிதா செய்யவேண்டிய ஜாதகர்மம்முதலிய கர்மங்களையெல்லாம் செய்தான். அவனை உச்சியில்மோந்து சினேகத்துடன் தழுவிக்கொண்டான். பிராம்மணர்களால் பூஜிக்கப்பட்டும் வந்திகளால் துதிக்கப்பட்டும் அவ்வரசன் புத்ரனைத் தொடுவதனாலுண்டான மிகுந்த ஆனந்தத்தையடைந்தான். தர்மம்தெரிந்த ராஜா தனது பாரியையாகிய சகுந்தலையையும் தர்மப்படி கௌரவித்தான்.

பிறகு ராஜா அவளை (நோக்கி,) இனியதொசொற்களை முன்னிட்டுச் சொன்னதாவது; "நம்மிருவருடைய சம்பந்தம் முன்னேஜனங்களுக்குத் தெரியாமலிருந்தது. மறுபடியும் இப்போது ஜனங்களுக்குத் தெரியும்படி ஸம்பந்தம்செய்யப்பட்டது. ஆதலால்நம்முடையசம்பந்தத்திற்கு முன் நடந்த நிமித்தத்தைப்பற்றி இவ்வாறு பேசினேன். நீ ஸ்திரீயாயிருப்பதனால் நான் விவாகம் செய்துகொண்டதைப்பற்றி இந்தலோகம் ஸந்தேகிக்கவும்கூடும். ஆதலால், உன்னிடத்தில் அந்த ஸந்தேகம் தெளிவதற்காக நான் இந்த விசாரணை செய்தேன். தேவியே! வெவ்வேறு பிரிவுகளாகவுள்ள பிராம்மணர்களும், க்ஷத்திரியர்களும், வைசியர்களும், சூத்ரர்களும், பதிவிரதையென்றுதெளிவாகத் தெரிந்த உன்னைக் கௌரவிப்பர். இந்தப் புத்திரனும் ராஜ்யத்திற்காக வரிக்கப்பட்டிருக்கிறன். நீ முதல்மஹிஷியாக இரு. பிரியமானவளே! நீ மிகுந்த கோபத்துடன் என்னை அப்பிரியமான வார்த்தை சொன்னாயே. விசாலமான கண்களையுடையவளே! அழகானவளே! நீ அன்புள்ளவளாதலால் அதை நான் பொறுத்தேன். விசாலமானகண்களையுடையவளே! பொய்யாயிருந்தாலும் இன்னுதாயிருந்தாலும் சொல்லத்தகாததாயிருந்தாலும் மிகுந்த பாபமாயிருந்தாலும் நான்சொன்ன கெட்டசொல்லை நீயும் இவ்வாறே பொறுக்கவேண்டும். புருஷன்செய்த பிழையைப் பொறுப்பதனால் ஸ்திரீகள் பதிவ்ரதாதர்மத்தை அடைகின்றனர்" என்று சொன்னன்.

பாரதரே! அந்த ராஜரிஷியாகிய துஷ்யந்தன் இவ்வாறுசொல்லி அழகாக நடக்கின்றவளும் தனக்குப்பிரியமானவளுமான அந்தப்பட்டமஹிஷியை அந்தப்புரத்திற்கு அழைத்துக்கொண்டுபோய் ஆடைகளாலும் அன்னபானங்களாலும் சிறப்பித்து ரதந்தரியையென்னும் தன்தாயிடம்போய், புகழ்பெற்றவளே! இவன் எனக்குவனத்திற்பிறந்த புத்திரன்; உன் வ்யஸனத்தைப் போக்குகிறவன். உன்னுடைய பேரனால் நான் இப்போது * கடனிலிருந்து விடுபட்டேன். இவள் விசுவாமித்திரருக்குப் பெண்; கண்ணுவரால் வளர்க்கப்பட்டவள்; உன்மருமகள். சிறந்த பாக்கியமுள்ளவளே! சகுந்தலையினிடம் தயைசெய்" என்றுசொன்னன். அந்த ரதந்தரியை, தன்புத்ரனை துஷ்யந்தன் சொன்னதைக்கேட்டுப் பேரனைத்தழுவிக்கொண்டாள். கால்களில்விழுந்த சகுந்தலையைக் கைகளாலணைத்து ரதந்தரியையென்பவள் ஆனந்தக் கண்ணீர் சொரிந்தாள்.

---

* பிதிரர்கடன்.

ரதந்தரியை சகுந்தலையைப்பார்த்து, "நீ சொன்னது சத்தியம். துஷ்யந்தனுடைய லக்ஷணங்களே இந்தக் குழந்தையினிடம்நான்பார்க்கிறேன். விசாலமான கண்களையுடையவளே! உன்புத்ரன் சக்ரவர்த்தியாகப்போகிறன். விசாலாக்ஷி! உன்கணவன் மூன்றுலோகங்களையும் ஜயிப்பவனுவான். பெண்ரைசிரேயே! நீ உயர்ந்தபோகங்களை அனுபவிப்பாயாக" என்றுள். இப்படி ரதந்தரியையினுற் சொல்லப்பட்ட சகுந்தலை மிகுந்த ஆனந்தமடைந்தாள். அப்போதுராஜா, சாஸ்திரத்திற்சொல்லப்பட்ட கர்மங்களைச்செய்து எல்லா ஆபரணங்களாலும் அலங்கரிக்கப்பட்ட சகுந்தலையை முதல் மஹிஷியாகப்பட்டாபிஷேகம்செய்து பிராம்மணர்களுக்கும் சேனைத்தலைவர்களுக்கும் தனங்களைக்கொடுத்துச் சகுந்தலையின் புத்ரனுகிய தன்மைந்தனுக்குப் பரதனென்று பெயரிட்டு அவனுக்கு யௌவராஜ்யபட்டாபிஷேகம் செய்வித்தான். பரதனிடத்தில் ராஜ்யபாரத்தை ஒப்பித்து ராஜா க்ருதார்த்தனுன். பிறகு துஷ்யந்தமஹாராஜா மூவருஷங்கள் நிரம்ப ராஜ்யபரிபாலனஞ்செய்து அப்பால் வனத்திற்குச்சென்று ஸ்வர்க்கலோகம் அடைந்தான்.

நூற்றேராவது அத்தியாயம்.

ஸம்பவபர்வம் (தொடர்ச்சி).

(பரதனுடைய வம்சம்.)

அந்தப்பரதன் துஷ்யந்தனிடமிருந்து ராஜ்யத்தைக் கிரமப்படி அடைந்தான். மஹாத்மாவாகிய அந்தப்பரதனுடைய பரிசுத்தமான அந்தராஜ்யவியாபாரம் தேவர்க்குரியதும் தோல்வியடையாததும் ஜனங்களால் மிகச் சிலாகிக்கப்பட்டதுமாகப் பிரகாசித்துக் கொண்டுநடந்தது. அவன் அரசர்களை ஜயித்துத்தனக்குக்கீழ்ப்பட்டவர்களாகச் செய்தான். ஸாதுக்களுடைய தர்மத்தை அனுஷ்டித்த பராக்கிரமசாலியான அந்தராஜா எல்லாவற்றிற்கும் மேலானபுகழையடைந்து பூமி முழுமைக்கும் ஈசுவரனுகிய சக்கரவர்த்தியாயிருந்தான். தேவர்களுக்கு ராஜாவாகிய இந்திரனைப்போலவே அனேகயாகங்களைச்செய்தான். தக்ஷருக்கொப்பான கண்ணுவமஹரிஷி மிகுந்த தக்ஷிணைகளுடன் அவனுக்கு யாகம்செய்வித்தார். அவன் * கோவித்தம் என்று சொல்லப்பட்ட சிறப்புள்ள அச்வமேதயாகத்

* கோக்களே மிகுதியாகவுடையது.

தைச்செய்தான். பரதன் அந்தயாகத்தில் கண்ணுவமஹரிஷிக்கு * ஆயிரம்பத்மங்கள் பொன்னைக்கொடுத்தான். அவன் யமுனைக் கரையிலிருந்துகொண்டு அங்கேஅநேகநூறு அச்வமேதயாகங்களைச் செய்தான். ஸரஸ்வதிக்கரையில் முந்நூறு அச்வமேதங்களைச் செய்தான்; கங்கைக்கரையில் நானூறு அச்வமேதங்களைச் செய்தான். துஷ்யந்தனுக்கும் சகுந்தலைக்கும் புத்ரனுகியபரதனென்னும்அரசன் இவ்வாறு யஜ்ஞங்களைச்செய்தான். பரதவம்சத்திற்கு அவன்காலம் முதலாகப்பெரும்புகழ்பாரியது. பரதனுக்குஉயர்ந்தஸ்திரீகளிடமிருந்து தனித்தனியே புத்திரர்கள் பிறந்தனர். அப்போதுராஜா அந்தப் புத்திரர்கள் தனக்குத் தகுந்தவர்களல்லரென்று நினைத்து அவர்களை ஆதரிக்கவில்லை. பிறகு அந்தப்புத்திரர்களைத், தாய்மார்கள் கோபத்துடன் யமனிடத்திற்கனுப்பினர். அதனால், அந்தராஜாவுக்கு அந்தப்பிள்ளைகள் பிறந்தது வீணாகிவிட்டது. பாரதவீர! அதன்பின் பரதன்பெரியயாகங்களைச்செய்து அப்போதுபரத்வாஜமஹரிஷியின் அனுக்ரஹத்தினால் புமன்யுவென்னும் புத்திரனையடைந்தான். பரதசிரேஷ்டரே! பூருவம்சத்தவரைச் சந்தோஷிக்கச்செய்கின்ற பரதன் அந்தப்புத்திரன் பிறந்தபிறகுதான் தன்னைப் புத்திரவானென்று நினைத்து அந்தப் புமன்யுவுக்கு யௌவராஜ்ய பட்டாபிஷேகம் செய்வித்தான். அதன்பின் புமன்யுவுக்குத் திவிரதன்என்னும் குமாரன் பிறந்தான். புமன்யுவுக்குப் புஷ்கரணியென்பவளிடம் ஸுஹோத்ரன் ஸுஹோதா, ஸுஹவிஸ், ஸுயஜுஸ், ரிசிகன்என்னும் புத்திரர்கள் பிறந்தார்கள். அவர்களுள் ஜ்யேஷ்டனுகிய ஸுஹோத்ரன்பூர்வராஜாக்களுடைய ராஜ்யத்தை அடைந்தான். அவன் ராஜஸூயம், அச்வமேதம் முதலிய அநேகயாகங்களைச் செய்தான். ஸுஹோத்ரன் யானைகளும் பசுக்களும் குதிரைகளும் பலவகையான ரத்னங்களும் நிரம்பினதும் கடலே ஆடையாகவுடையதுமான பூமிமுழுவதையும் ஆண்டான். யானைகளும் குதிரைகளும் தேர்களும் நிறைந்ததும் மனிதர்கள் மிகுதியாக நிரம்பினதுமாகிய அவனுடைய பூமி மிகுந்த பாரத்தினால் பீடிக்கப்பட்டு அமிழ்ந்ததுபோலிருந்தது. அந்த ஸுஹோத்ரனென்னும் ராஜா தர்மமாகப் பிரஜைகளையாளும்போது பூமி லக்ஷக்கணக்காகத் தேவாலயங்களினாலும் யூபஸ்தம்பங்களினாலும் அடையாளஞ்செய்யப்பட்டதாக இருந்தது. எப்போதும்ஜனங்களும் பயிர்களும் விருத்தியடையப்பெற்றுச் சிறப்புற்றிருந்தது. பாரதவீர! இக்ஷ்வாகுவின் புத்திரியானவள் ஸுஹோத்ரராஜாவுக்கு அஜமீட

---

* ஆயிரம்கோடி.

ணியும், ஸுமீடனையும், புருமீடனையும் பெற்றாள். அவர்களுள் அஜமீடன் சிறந்தவன். அவனே ஸந்ததிக்கு ஆதாரமாக இருந்தான். மூன்று ஸ்திரீகளிடம் ஆறுபுத்திரர்களைப் பெற்றான். தூமினியென்பவள் ரிக்ஷனையும், நீலியென்பவள் துஷ்யந்தனையும் பரமேஷ்டியையும், கேசினியென்பவள் ஜன்ஹுவையும் * ஜனனியும் ரூஷ்ணனையும் பெற்றனர். வீரனுகிய ஸம்வர்ணன் ரதந்திரனுடைய பெண்ணினிடம் ரிக்ஷனுக்குப் பிறந்த புத்திரனென்று அறிகின்றனர். ராஜாவே! அப்படியே இந்தப்பாஞ்சால தேசத்து ராஜாக்களனைவரும் துஷ்யந்தன் பரமேஷ்டி இவர்களுடைய சந்ததிகள். குகிகர்கள் அளவற்ற தேஜஸையுடைய ஜன்ஹுவின்சந்ததிகள். ரிக்ஷனென்னும் ராஜாவை ஜனனுக்கும் ரூஷ்ணனுக்கும் மூத்தவனென்று கூறுகின்றனர். ராஜாவே! உம் வம்சத்துக்குக் கூடஸ்தனுகிய ஸம்வர்ணன் ரிக்ஷனிடமிருந்து உண்டானவன். ராஜாவே! ரிக்ஷபுத்திரனுகிய ஸம்வர்ணன் பூமியையாளும்போது பிரஜைகளுக்குப் பெரிய நாசமுண்டான தென்று நமக்குக்கேள்வி. அப்போது பசி, மரணம், மழையில்லாமை, பிணி ஆகிய பலவகைகளான கெடுதிகளினுற் பீடிக்கப்பட்டுத் தேசம் சிதறிப்போயிற்று. பரதவம்சத்தாரை எதிரிகளின் சேனைகள் அடித்தன. பாஞ்சாலதேசத்தரசன் தன்பராக்கிரமத்தினுல் பூமியையடித்துச்சதுரங்கசேனையினுல் இந்தஉலகத்தை நடுங்கும்படிசெய்துகொண்டுபத்து அக்ஷௌஹிணிகளுடன் அந்தஸம்வரணனை எதிர்த்து ஜயித்தான். பிறகு ஸம்வரணராஜா மிகுந்தபயத்தினுல் பார்யை, மந்திரிகள், புத்திரிகள், சினேகிதர்களுடன் அந்தத் தேசம்விட்டோடிப்போனன். அப்போது அந்தப் பரதவம்சத்தவர் தோல்வியடைந்து மேற்றிசை சென்று விந்து என்னும் பெரிய†நதத்தின் கரையினுள்ள புதர்களில் வஸித்தனர். பாரதர்கள் அங்கே பர்வதத்தினருகினுள்ள ஸிந்துநதியைச்சேர்ந்த கேசத்தின்கோடியில் ‡ மலைத்துர்க்கத்தையடைந்து வெகுகாலம் வஸித்தனர். அவர்கள் ஆயிரவருஷகாலம் அங்கேவஸித்த பிறகு பகவானுகிய வஸிஷ்டரிஷி அந்தப் பரதவம்சத்தார்களிடம்வந்தார். அந்தப்பாரதர்களனைவரும் அப்போது வந்தவஸிஷ்டரை ஆதரவுடன் எதிர்கொண்டுபோய் வந்தனம்செய்து அவருக்கு அர்க்கியம் கொண்டுவந்தனர். சிறந்த பிரம்மதேஜஸுள்ள வஸிஷ்ட மஹரிஷிக்கு ஸத்காரஞ்செய்து எல்லாப்பொருளையும் கொடுத்து, அவர் ஆஸனத்தில் வீற்றிருந்தபிறகு ஸம்வரணராஜா, "நாங்கள் ராஜ்யத்

* வ்ரஜனனையும் ரூபியையும் என்பது வடதேசத்துப்பாடம்.

† மேற்கு முகமாக ஓடுகிறஆறு. ‡ மலையரண்.

திற்காக முயலவேண்டும்; நீங்கள் எங்களுக்குப் புரோகிதராக இருக்கவேண்டும்" என்று தானுக அவரை வரித்தான். வஸிஷ்டரும், "ஆகட்டும்" என்று பாரதர்களுக்கு மறுமொழி சொன்னர். அதன் பின், பூருவம்சத்தவனுகிய ஸம்வரணனைப் பூமிமுழுமைக்கும் சிகரம் போலிருக்கும்படி எல்லா க்ஷத்திரியர்களுக்கும் சக்கரவர்த்தியாகப் பட்டாபிஷேகஞ் செய்தாரென்று நாம் கேட்டிருக்கிறோம். முன்பு பரதன் வளித்த உத்தமமான ஹஸ்தினுபுரத்தில் அவன் வாஸஞ் செய்தான். பூமிபடியும் எல்லா அரசர்களையும் கப்பம் கட்டுகிறவர்களாகச் செய்தான். பிறகு சிறந்தபராக்கிரமமுள்ள அந்த அஜமீட பௌத்ரனுகிய ஸம்வரணன் ராஜ்யத்தை யடைந்து மறுபடியும் மிகுந்ததக்ஷிணைகளோடுகூடிய அநேகம் மஹாயாகங்களைச் செய்தான். அந்தஸம்வரணனுக்குச் சூரியன் புத்திரியாகிய தபதியென்பவள் குருவென்பவனைப் பெற்றாள். பிரஜைகளனைவரும் அந்தக்குருவைத் தர்மந்தெரிந்தவனென்று நினைத்து ராஜாவாக இருக்கும்படி வரித்தனர். அவன் மகிமையினல் குருவம்சத்தவர் மிகுந்த கீர்த்தியையடைந்தனர். அவன் பேரினல் குருஜாங்கலமென்னும் தேசம் பூமியில் பெயர் பெற்றது. சிறந்ததவமுள்ள அவ்வரசன் தன்தவத்தினல் குருக்ஷேத்திரத்தைப் புண்ணியக்ஷேத்திரமாகச் செய்தான். அச்வவான், அபிஷ்யந்தன், சைத்ரரதன், முனி, ஜனமேஜயன் என்று பெயர்பெற்ற அந்தக்குருவின் புத்திரர்களைக் கேட்டிருக்கிறோம். சிறந்த மனஸ்வினியாகிய வாஹ்னியென்பவள் இவ்வைந்து புத்திரர்களையும் பெற்றாள். அவிக்ஷித்து என்று பெயருள்ள அச்வவானுக்குப் பரிக்ஷித்து, வீரனுகிய சபலாச்வன், ஆதிராஜன், விராஜன், சிறந்தபலமுள்ள சால்மலி, உச்சைச்ரவஸ், பங்கதாசன், ஜிதாரி ஆகிய இந்த எட்டுப்புத்திரர்கள் இருந்தனர். இவர்களுடைய வம்சத்தில் ஜனமேஜயன் முதலான எழுவரும் மற்றுமுள்ள மஹாரதர்களும் தங்கள் பராக்கிரமத்தினுலுண்டான சிறப்பைப்பற்றிக் கியாதிபெற்றிருந்தனர். கக்ஷஸேனன், உக்ரஸேனன், வீரனுகிய சித்ரஸேனன், இந்திரஸேனன், ஸுஷேணன், பீமஸேனன் என்ற பெயருள்ள பரிக்ஷித்தின் புத்திரர்களனைவரும் தர்மசாஸ்திரத்திலும் ராஜநீதி சாஸ்திரத்திலும் நிபுணர்களாயிருந்தனர். ஜனமேஜயனுடைய புத்திரர்கள் பூமியில் மிகுந்த பலமுள்ளவர்களாகக் கியாதி பெற்றிருந்தனர். ஜ்யேஷ்டன், திருதராஷ்டிரன்; பிறகு பாண்டுவும், பாஹ்லிகனும், மிகுந்தபராக்கிரமமுள்ள நிஷதனும், பலவானுகிய ஜாம்பூநதனும், குண்டோதரனும், பதாதியும், வஸாதியும் ஆக எண்மர் சொல்லப்பட்டிருக்கின்ற

னர். அவர்களெல்லாரும் தர்மசாஸ்திரத்திலும் ராஜநீதி சாஸ்திரத்திலும் நிபுணர்கள். எவ்வாப்பிராணிகளுக்கும் நன்மை செய்வதில் ஊக்கமுள்ளவர்கள். பிறகு திருதராஷ்டிரன் ராஜாவாக இருந்தான். அவனுடைய புத்திரர்கள் குண்டிகன், ஹஸ்தி, விதர்க்கன், க்ராதன், குண்டினன், ஹவிச்ரவஸ், இந்திராபன், தோல்வியடையாதவனுகிய புமன்யு ஆகிய இவர்கள் எண்மர். பாரதரே! திருதராஷ்டிரன் புத்திரர்களில் ப்ரதீபன், தர்மநேத்ரன், ஸுநேத்ரன் இந்தமூவரும் பூமியில் கியாதி பெற்றவர்கள். அந்த மூவருள்ளும் ப்ரதீபன் பூமியில் ஒப்பற்றவனென்று புகழ்பெற்றிருந்தான். பரதச்ரேஷ்டரே! ப்ரதீபனுக்குத் தேவாபி, சந்தனு, மஹாரதனுன பாஹ்லீகன் ஆகிய மூன்று புத்திரர்கள் பிறந்தனர். அவர்களுள் தேவாபி தர்மத்தினுலுண்டாகும் ஹிதததைவிரும்பிக் காட்டுக்குச்சென்றான். மஹாரதர்களாகிய சந்தனுவும் பாஹ்லீகனும் ராஜ்யத்தை அடைந்தனர். இந்தப் பரதவம்சத்திற்பிறந்த அநேக ராஜச்ரேஷ்டர்கள் மஹாரதர்களாகவும் தேவர்களைப்போன்றவராகவும் பிரம்மதேவருக்கொப்பானவராகவும் இருந்தனர். மஹாராஜாவே! தேவர்களைப்போன்றவடிவமுள்ளவரும், எதிரிகளைத் தொலைப்பவரும், புரூரவஸின் வம்சத்தை விருத்திசெய்கின்றவருமான இப்படிப்பட்ட மஹானுபாவர்கள் உமது வம்சத்திற் பிறந்தனர். ஜனமேஜயரே! பெரும்புகழ்பெற்றசகுந்தலையின் புத்ரனை பரதனென்னும் ராஜா கங்கைக்கரைசேர்ந்து தீக்ஷை செய்துகொண்டு அநேகமாயிரம்அச்வமேதங்களையும் அநேக நூறுவாஜபேய யாகங்களையும் செய்தான். மறுபடியும் அக்நிஷ்டோமம், அதிராத்ரம், உக்தம், வாஜபேபயாகம், இஷ்டிகள், ஸத்ரயாகம் என்னும் அநேகமாயிரம் மஹாயாகங்களை மிகுந்த சிறப்புடன் தக்ஷிணைகள் நிரம்பக்கொடுத்து ஸோமபானஞ்செய்து பிராம்மணர்களைத் தனங்களினுல் திருப்திசெய்வித்து நிறைவேற்றினன். மறுபடியும்ஆயிரம் பத்மக்கணக்குள்ள பொன்நாணயங்களையும் உயர்ந்த தங்கங்களையும் கண்ணுவருக்குக்கொடுத்தான். நூறுபாகம் பருமனுள்ளவைகளும் ஆயிரம்பாகம் உயரமுள்ளவைகளுமான அழகாகிய எல்லாவகை ரத்னங்களாலும் அலங்கரிக்கப்பட்டுப்பிரகாசித்தபரதனுடையபொன் யூபஸ்தம்பங்கள் இந்திராதி தேவர்களால்நாட்டப்பட்டன. பொன்னையும் யானைகளையும் குதிரைகளையும் எருமைகளையும் ஒட்டகங்களையும் செம்மறியாடுகளையும் வெள்ளாடுகளையும் வேலைக்காரிகளையும்வேலைக்காரர்களையும் தனத்தையும் தானியத்தையும் கன்றுகளுடன் நற்குணமுள்ள பசுக்களையும் ஆயிரம் யூபஸ்தம்பங்களை அடையாளமாக

வுடைய இந்தப்பூமியையும் கண்ணுவருக்குச் சிறந்ததக்ஷிணையாகக் கொடுத்தான். பிரம்மாவுக்கொப்பான அநேகம் பிராமணர்களுக்குத் தனத்தையும் கிராமங்களையும் வெண்மையான கிருஹங்களையும்கோடி கோடியாகக் கொடுத்து அநேகம் யாகங்களைச்செய்தான். பரதனிடத்திலிருந்து பரதவம்சத்தாருக்குக் கீர்த்தியுண்டாயிற்று. அவனால், இந்தக்குலம் பாரதமென்று பெயர்பெற்றது. பரதனுடைய வம்சத்திற் பிறந்தமஹாரதர்களாகிய அநேக ராஜச்ரேஷ்டர்கள் தேவர்களைப் போலவும் பிரம்மதேவரைப்போலவும் இருந்தனர். அவர்களுடைய பெயர்கள் எண்ணமுடியாமல் இருக்கின்றன. பாரதரே! அந்த அவர்களுடையவம்சத்தில்தேவர்களைப்போன்றவர்களும், ஸத்தியத்தையும் மனம் வாக்குக் காயங்கள் ஒத்திருப்பதையும் கடைப்பிடித்தவர்களுமான முக்கியமான மஹானுபாவர்களைமட்டும் உமக்குச் சொல்லப் போகிறேன்.

நூற்றிரண்டாவது அத்தியாயம்.

ஸம்பவபர்வம். (தொடர்ச்சி.)

(மஹாபிஷக் என்னும் ராஜாவின் சரித்திரம். வஸுக்கள் கங்கையினிடம் முறையிட்டுக்கொண்டது.)

ஸத்தியவாக்குள்ளவனும் தோல்வியடையாத பராக்கிரமமுள்ளவனுமாகிய *மஹாபிஷக் என்று பெயர்பெற்ற இக்ஷ்வாகுவம்சத்து அரசன் பூமியைப் பரிபாலித்துக்கொண்டிருந்தான். அவன் ஆயிரம் அச்வமேதயாகங்களாலும் நூறுராஜஸூயங்களாலும் தேவேந்திரனைத் திருப்திசெய்வித்தான். பிறகு அந்த ராஜா ஸ்வர்க்கத்தைபடைந்தான். பிறகு ஒருகாலத்தில் தேவர்கள் பிரம்மதேவரை ஸேவித்துக் கொண்டிருந்தனர். அங்கே ராஜரிஷிகளும் இருந்தனர். அந்தமஹாபிஷக் என்னும் ராஜாவும் இருந்தான். அப்போது நதிகளுக்குட் சிறந்த கங்காதேவியானவள் பிரம்மாவினிடம் வந்தாள். சந்திரனைப் போன்ற நிறமுள்ளதான அவளுடைய ஆடை காற்றினால் விலக்கப் பட்டது. அப்போது தேவக்கூட்டங்கள் உடனே தலைகுனிந்து நின்றன. மஹாபிஷக் என்னும் ராஜரிஷியோவெனில், கூச்சமின்றி அவளைப் பார்த்தான். அந்த மஹாபிஷக் பகவானாகிய பிரம்மதேவரால் இகழப்பட்டான். பிரம்மதேவர், "நீமனிதர்களிற் பிறந்து பிறகுதான்

---

* மஹாபிஷன் என்பது வடதேசத்துப்பாடம்.

நல்லலோகங்களையடைவாய். அறிவுகெட்டவனே! எந்தக்கங்கையி னால் உன்மனஸு இழுக்கப்பட்டதோ அந்தக்கங்காதேவி மனுஷ்ய லோகத்தில் உனக்கு வேண்டாதவற்றைச் செய்யப்போகிறாள். அத னால் உனக்குக்கோபம் எப்போதுவருமோ அப்போதுதான் நீ சாபத் திலிருந்து விடுபடுவாய்" என்றுசொன்னார். அந்தராஜா மற்றராஜாக் களையும் ரிஷிகளையும் நிந்தித்துப்பார்த்து மிகுந்த மஹிமையுள்ள ப்ர தீபனையே தனக்குப்பிதாவாக விரும்பினன். நதிகளுக்குட்சிறந்த கங்காதேவி மஹாபிஷக் என்னும்ராஜா மனோஜ்ஞமில்லாமற்போன தைக்கண்டு அவனையேமனத்தில் நினைத்துக்கொண்டு திரும்பிச்சென் றாள். ஜனமேஜயராஜாவே! அவள் போகும்போது ஸ்வர்க்கத்தில் வஸிக்கின்ற தேவர்களாகிய வஸுக்கள் தேஜஸ்ஸின் ஒளிகுன்றி அறி வுகலங்கி வழியில் இருக்கக்கண்டாள். அவ்வாறிருந்த அவர்களைக் கண்டு நதிகளிற்சிறந்த கங்கை, "எனிப்படி நிறமாறிப்போயிருக் கின்றீர்கள்? தேவர்களுக்கு மேஷமந்தானு?" என்றுவினவினாள். தேவர்களாகிய வஸுக்கள் அவளைநோக்கி, "மஹாநதியே! நாங் கள் மஹாத்மாவாகிய வஸிஷ்டரால் சிரியபிழைக்காகக் கோபித்துச சபிக்கப்பட்டிருக்கிறோம். முன்னர் நாங்கள் எல்லோரும் அறியாமல், (தமதுமஹிமையை வெளிக்காட்டாமல்) ஸந்தியாவந்தனஞ் செய்து கொண்டிருந்த ரிஷிச்ரேஷ்டரான அந்தவஸிஷ்டரை உல்லங்கனஞ் செய்தோம். அவர் கோபத்தினால், 'மானிடகர்ப்பத்தில் பிறக்கக்கட வீர்' என்றுஎங்களைச்சபித்தார். வேதவாக்குள்ள அவர் எதுசொன்னு ரோ அது மாற்றுவதற்கு முடியாதது. நீ மானிடப்பெண்ணுகப்பூமியி லிருந்து வஸுக்களாகிய எங்களைப் புத்திரர்களாகப் பெறக்கடவாய். சிறந்தவளே! மனுஷ்யஸ்திரீகளுடைய வயிற்றில் நாங்கள் புகோம்" என்றனர். அந்த வஸுக்களினால் இவ்வாறு கேட்டுக்கொள்ளப்பட்ட கங்காதேவியானவள், "அப்படியே ஆகட்டும்" என்று அங்கீகரித்து, "மனிதர்களில் எந்தப்புருஷச்ரேஷ்டன் உங்களை உத்பத்திசெய்யக் கூடியவனுவான்?" என்றுகேட்டாள். அதற்கு வஸுக்கள், "ப்ரதீப னுடைய புத்திரனுகிய சந்தனுவென்னும் ராஜா லோகத்தில் கியாதி பெற்றிருக்கப் போகிறான். மனுஷ்யலோகத்தில் அவன்தான் எங் களை உத்பத்திசெய்பவனுகலாம்" என்றனர். "தேவர்களே! குற்ற மில்லாதவர்களே! நீங்கள் என்னிடம் என்னசொல்லுகிறீர்களோ அஃது எனக்கும் ஸம்மதம். அந்தராஜாவுக்கும் உங்களுக்கும் விருப்ப மான இந்தக்காரியத்தை நான்செய்வேன்" என்று கங்கைசொன் னாள். உடனே வஸுக்கள், "மூன்றுலோகங்களும் செல்லுகிறவளே!

நீண்டகாலம் எங்களுக்கு இந்தச்சாபதண்டனை இல்லாமலிருக்கும் படி உன்குமாரர்களைப் பிறந்தவுடனே ஜலத்திற் போட்டுவிடவேண் டும். புத்தியில்லாத நாங்கள் எல்லோரும் வஸிஷ்டருடைய பசுவைப் பிடிக்கவிரும்பி அந்தப் பிரமரிஷியினால் சபிக்கப்பட்டோம். அப்படிச் சபிக்கப்பட்ட எங்களை நீ விரைவில் விடுவிக்கக்கடவாய்" என்றனர். கங்கை, "அப்படியே இந்தக்காரியத்தைச் செய்வேன். ஆனால் அந் தச் சந்தனுராஜாவுக்கு ஒருபுத்திரனை நிறுத்தவேண்டும். புத்திர னுக்காக அவன் என்னுடன்சேருவது வீணாகாமலிருக்கவேண்டும்" என்றுசொல்ல, "நாங்கள் ஒவ்வொருவரும் எங்கள்சக்தியில் நாலி லொரு பாகத்தைக்கொடுப்போம. அந்தச்சக்தியுடன் உனக்கும் அந்த ராஜாவுக்கும் பிரியமானபுத்திரன் உண்டாவான். ஆனால், மனுஷ்ய லோகத்தில் அவனுக்கு ஸந்ததியிராது. ஆதலால், உன்னுடையவீர னாகிய புத்திரனுக்குப் புத்திரன் உண்டாகமாட்டான்" என்றுசொன் னார்கள். இவ்வாறு அந்தவஸுக்கள் கங்காதேவியோடு ஏற்பாடு செய்துகொண்டு மனமகிழ்ச்சியுடன் உடனே இஷ்டப்படி சென்றனர்.

நூற்றுமூன்றுவது அத்தியாயம்.

ஸம்பவபர்வம் (தொடர்ச்சி.).

(சந்தனுபிறந்து பெண்ணுருவமான கங்காதேவியைப் பார்த்தது)

பிறகு எப்போதும் எல்லாப்பிராணிகளுக்கும் நன்மைசெய்து கொண்டிருந்த ப்ரதீபன் என்னும்ராஜா ஒருவன்இருந்தான். அவன் கங் காத்வத்திக்குப்போய் அநேகவருஷகாலம் ஜபஞ்செய்துகொண்டு உட்கார்ந்திருந்தான். அந்தராஜரிஷி வேதம் சொல்லிக்கொண்டிரு க்கையில், அழகிய முகமுள்ளவளும் தேவகாரியபமுள்ளவளும் அழ குஞ் குணங்களும் பொருந்தினவளும் மிகவும் ஆசைப்படத்தக்க தேகத்தோடு கூடிய பெண்ணுருவத்தைத் தரித்துக்கொண்டவளு மான கங்காதேவி அந்த ஜலத்தினின்றும் கரையேறி, வேதாத்திய யனஞ் செய்துகொண்டிருந்த அந்த ராஜரிஷியினது ஆச்ரமம் போன்ற வலத்துடையை அடைந்தாள்.

பேசத்தெரிந்தவர்களுக்குட் சிறந்தவனும் தர்மத்தின் முடிவை நிச்சயமாக அறிந்தவனுமாகிய அந்தப் பிரதீபனென்னும்ராஜா மிகுந்த இச்சையுள்ள அந்தக் கங்காதேவியை நோக்கி, "அழகியவளே! உன

க்கு என்ன பிரியத்தை நான் செய்யக்கடவேன்? நீ விரும்புவது யாது?" என்றுகேட்க, கங்கையானவள், "ராஜாவே! நான் உன்மீது காதல்கொண்டிருக்கிறேன். உன்னையடைகின்ற என்னை நீயும் அடையக்கடவாய்; காதல் வைத்த பெண்களை விட்டுவிடுவதை ஸாதுக்கள் நிந்திக்கின்றனர்" என்று சொன்னாள். ப்ரதீபன், "இனிய பெண்ணரசியே! நான் பிறர் மனைவியையும் வேறுவருணத்திற்பிறந்த பெண்ணையும் விருப்பத்தினால் அடையமாட்டேன். இது தர்மத்துடன் கூடிய எனது நியமம். எவன் தன் மனைவியை விட்டுப் பிறர்மனைவியை அடைகிறானோ அவன் பிரளயகாலம் வரையில் நரகத்திலிருந்து விடுபடான்" என்று சொன்னான். "ராஜாவே! நான் இழிவானவளல்லேன்; சேரத்தகாதவளல்லேன்; ஒரு காலத்திலும் நிந்திக்கத்தக்கவளுமல்லேன்; தேவகன்னிகையும் பெண்ணிற் சிறந்தவளுமாகிய நான் உன்னையடையும்போது நீயும் என்னை அடைவாயாக" என்று கங்காதேவி சொன்னாள். ப்ரதீபன், "நீ எந்த விருப்பத்தைப்பற்றி என்னைத் தூண்டுகிறாயோ அஃது உன்னாலேயே நிவிருத்தி செய்யப்பட்டது. நான் அதற்கு விரோதமாகச்செய்தால் தர்மத்தவறுதலானது என்னை அழித்துவிடும். சிறந்தபெண்ணே! நீ எனது வலத்துடையில் உட்கார்ந்து என்னைத் தழுவினாய். அச்சமுள்ளவளே! இது தன் ஸந்ததிகளுக்கும் மருமகளுக்கும் உட்காருமிடமென்று அறி. காதலி அனுபவிக்கத் தக்கது இடத்துடை. நீ அதை விட்டுவிட்டாய். பெண்ணரசியே! ஆதலால், நான் உன்னிடத்தில் விருப்பத்தைச் செய்யேன். அழகிய நிதம்பமுள்ளவளே! நீ எனக்கு மருமகளாகக் கடவாய். என் புத்ரனுக்காக உன்னை நான் வரிக்கிறேன். அழகிய துடையையுடையவளே! நீ வந்து மருமகளுடைய பாகமாகிய வலத்துடையை அடைந்தாய்" என்றான். அதைக்கேட்ட அந்தப்பெண், "தர்மந்தெரிந்தவனே! இவ்வாறுமாகலாம்; உன் புத்திரனைநான் சேரக்கடவேன். உன்னிடமுள்ள அன்பினால் பெயர்பெற்ற பாரதவம்சத்தை நான் அடையப்போகிறேன். இந்தப் பூமியிலுள்ள அரசர்களெல்லாருக்கும் நீங்களே ஆதாரமானவர்கள். உங்களுடைய குணங்கள் நூற்றுக்கணக்கான வருஷங்கள் சொன்னாலும் என்னால் சொல்லிமுடியா. உங்கள் குலத்திற் பெயர் பெற்றவர் எவரோ அவருடைய யோக்கியதை மேலானது. தர்மந்தெரிந்த பிரபுவே! இப்போது நான் செய்யும் உடன்படிக்கையின்படி எதைச்செய்வேனோ அதையெல்லாம் உமது புத்திரன் ஒருபோதும் விசாரிக்காமலிருக்கவேண்டும். இவ்வாறு உமதுபுத்திரனிடமிருந்துகொண்டு நான் அவனுக்கு ஸுகத்தை விருத்திசெய்

வேன். உமது புத்திரன் பிரியமான புண்ணியகுமாரர்களுடன் ஸ்வர்க்கமடைவான்" என்று சொன்னாள். ஜனமேஜயராஜாவே! அவள், 'அப்படியே யாகட்டு' மென்றுஅந்தராஜாவினுற்சொல்லப்பட்டவளாக அந்தர்த்தானமாயினாள். அந்த ராஜச்ரேஷ்டன் பார்த்துக்கொண்டிருக்கும்போதே அவள் அவன் கண்ணுக்குப் புலப்படாதவளானாள். அந்த ராஜா புத்திரன்பிறப்பதையெதிர்பார்த்து அதை மனஸில்வைத்துக்கொண்டிருந்தான். குருவம்சபுத்திரரே! அதேகாலத்தில் ராஜச்ரேஷ்டனான ப்ரதீபன் புத்திரணப்பெற விரும்பிப் பாரியையுடன் கூடத் தவஞ்செய்தான். ப்ரதீபனுடைய பாரியையினிடம் அழகுள்ள கர்ப்பம், மிகுந்தசோபையோடு சரத்காலத்து வளர்பிறைச் சந்திரன் போல் வளர்ந்தது. பிறகு பத்தாவதுமாதத்தில்ப்ரதீபனுடைய மஹிஷி சூரியனுக்கொப்பான ஒளியுள்ளவனும் தேவ குமாரனைப்போன்றவனுமான குமாரனைப்பெற்றாள். அந்த மஹாபிஷக் வியாதிகர்களான அச்வினிருவருக்கும் புத்ரனைப்பிறந்தான். உரியபிராயம் கடந்தபின் அந்தஸந்தானம் உண்டானதினால் அந்தப்புத்திரன் * சந்தனுவென்று சொல்லப்பட்டான். அந்தப்புத்திரன் பிறந்தபிறகு ப்ரதீபராஜா ஜாதகர்மம் முதலான ஸம்ஸ்காரங்களைப் பிராமணர்களைக்கொண்டு வேதத்திற்சொல்லிய விதிப்படி செய்வித்தான். ஜனமேஜயராஜாவே! பிராமணர்கள் சந்தனுவுக்கு வேதோக்தமான கிரியைகளோடு நாமகரணத்தை மிகச் சிறப்பாகச்செய்தனர். பிறகு தக்க பருவமுள்ளவனாக வளர்ந்தசந்தனுராஜன் உலகத்துக்கெல்லாம் தர்மிஷ்டனானான். அவன் பெருங்கீர்த்தியை யடைந்து தர்மத்தைக் காப்பவர்களுள் சிறந்தவனாக தனுர்வேதத்திலும் வேதத்திலும் மேலான ஞானத்தையடைந்தான். பேசுகிறவர்களிற் சிறந்தவனாகிய அந்தக்குமாரன் யெவனத்தையுமடைந்தான். தன்னுடைய நல்ல கருமத்தினால் ஜயிக்கப்பட்ட அழிவில்லாத லோகங்களை அறிந்திருந்தும் குருவம்சத்திற் சிறந்தவனாகிய சந்தனு புண்ணியகருமங்களைச் செய்துகொண்டேதானிருந்தான். பிறகு ப்ரதீபன் யெவனம்வேண்டின தனது புத்ரனான சந்தனுவைநோக்கி, "சந்தனுவே! உனது ச்ரேயஸுக்காக முன்னே ஒருபெண் என்னிடம் வந்தாள். புத்திரனே! அழகு நிரம்பிய தேவலோகத்துப்பெண்ணாகிய அந்தப்பெண்ணைநீ புத்திரனே விரும்பிக் காதலுற்றுரகஸ்யத்தில் உன்னிடம் வருவாளாயின் அவளை நீ, "பெண்ணே! நீயார்? யாருடையபெண்?"என்றுகேட்காதே. குற்றமற்றவனே! அவள்

* சம் = சாந்தமானபோது ; தனு : = உண்டாக்கப்பட்டவன். சாந்தனு என்ற மூலத்திலிருக்கிறது.

எந்தக்காரியம் செய்தாலும் அதைப்பற்றி அவளைக்கேட்கவேண்டாம். உன்னையடைகின்ற அவளை நீ என்கட்டளையினால் அங்கீகரிக்கக்கடவாய்" என்றுகட்டளையிட்டான். ப்ரதீபராஜாஇவ்வாறு,தனது புத்திரனாகிய சந்தனுவுக்குக்கட்டளையிட்டுத் தனதுராஜ்யத்தில் அவனுக்குப் பட்டாபிஷேகஞ்செய்வித்து வனத்திற்புகுந்தான். சிறந்தபுத்தியுள்ளவனும் தேவேந்திரனுக்கொப்பானபராக்கிரமமுள்ளவனுமாகிய அந்தச்சந்தனுமஹாராஜன் ஸத்தியவாதியென்று எல்லாலோகங்களிலும் கியாதிபெற்றிருந்தான். பரந்தமேகாள்களும் நீண்டகைகளும் உடையவனும், மதயானைபோல் நடப்பவனும்,நிறைவற்றசெல்வங்களோடும் ராஜாவுக்குரிய எல்லாலக்ஷணங்களோடும்கூடியவனும், சிறப்புற்ற மந்திரிகளோடு கூடியவனும், க்ஷத்திரியதர்மங்களின் விசேஷங்களையறிந்தவனுமான அந்தச்சந்தனுமஹாராஜன் தான்ஒருவீரனாகாஜாக்களை ஜயித்து இந்தப்பூமியைத் தன்ஸ்வாதீனமாக்கிக்கொண்டான். வேதங்களெல்லாவற்றையும் ராஜதர்மங்களனைத்தையும் தெரிந்துகொண்டான். பரிசுத்தியானதக்ஷிணைகளோடுகூடிய அநேக ஸத்ரயாகங்களையும் யாகங்களையுஞ்செய்தான். வேதாத்யயனத்தில் தேர்ந்த பிராமணர்களை அளவற்ற ரத்நங்களாலும், பசுக்களாலும், கிராமங்களாலும், அசுவங்களாலும் தனங்களாலும், திருப்திசெய்வித்தான். வயஸும்ரூபமும் முயற்சியும் தேகவன்மையும் பிரபுத்வமும் உத்ஸாகமும் பராக்ரமமும் தனமும் நிரம்பினவனுகவும், ஸத்தியமாக நடப்பவனுகவும், எல்லாத் தர்மங்களும் தெரிந்தவனுகவும் இருந்தான். அரசர்கள் அந்தராஜாவை அரசர்களுக்கரசனுகச்செய்தனர். பரதச்ரேஷ்டரே! அரசர்கள் விசனமும்பயமும்பிறருடைய உபத்ரவமுமில்லாமல் ஸுகமாகத் தூங்கியெழுந்துகொண்டு ஐசுவரியத்தை அடைந்திருந்தனர். அணுவ்ரதனங்களினால் பிராமணவருணம் எல்லாவருணங்களினும்மேலாக இருந்தது க்ஷத்திரியர்கள் பிராமணர்களுக்கு அணுகூலர்களாகவும், வைசியர்கள் க்ஷத்திரியர்களுக்கு அணுகூலர்களாகவும் இருந்தனர். பிராமணர்களுக்கும் க்ஷத்திரியர்களுக்கும் ஒற்றுமையாகஇருந்த வைசியர்களுக்குச் சூத்திரர்கள் பணிவிடைசெய்தனர். இவ்வாறு சந்தனு ராஜ்யத்திலிருக்கும்போது ஆடுமாடுகளுக்கும் பன்றிகளுக்கும் மான்களுக்கும் பக்ஷிகளுக்கும் வீணை ஹிம்ஸை நடக்கவில்லை. ஸுகபற்றவையும் நாதனற்றவையுமான திர்யக்ஜாதிகளிற்பிறந்தபிராணிகளெல்லாவற்றிற்கும்கூட அந்தராஜா பிதாவைப்போலிருந்தான். ஹஸ்தியென்னும் பெயருள்ளநகரத்தில் விளையாடிக்கொண்டிருந்த அந்தத்தர்மாத்மாவான குருவம்சத்தரசன் பராக்கிரமத்தில் சூரியனுக்

கொப்பாகவும் பலத்தில்வாயுவுக்கொப்பாகவும், கோபத்தில்யமனுக் கொப்பாகவும் பொறுமையில் பூமிக்கொப்பாகவுமிருந்தான். உறுதி யான பராக்கிரமமுள்ள அந்தராஜா தன் பிரஜைகளிடத்தில் நல்ல அன்புள்ளவனாக இருந்தான். அந்தச்சந்தனு வேட்டையேபழகிக் கொண்டு காட்டிற்சென்று அழகானவனங்களிலும் மலைபருவிகளி லும் திரிந்துகொண்டிருந்தான். அந்தராஜச்ரேஷ்டன் ஸித்தர்களும் சாரணர்களும் வஸிக்கின்ற கங்கைக்கரையோரமாக மான்களையும் எருமைகளையும் அடித்துக்கொண்டு தனியைபாக ஸஞ்சரித்தான். மஹாராஜாவே! அவன், ஒருகாலத்தில், ஜ்வலிப்பதுபோல பிரகாசிக் கிற தேகமுள்ளவளும் இரண்டாவது லக்ஷ்மியே நேரேவந்தாற் போல்பவளும், அங்கமுழுவதும் தோஷமில்லாதவளும், அழகிய பற் களையுடையவளும், சிறந்த ஆபரணங்களையணிந்தவளும், மெல்லிய ஆடையைதரித்தவளும், தாமரைப்புஷ்பத்தினுள்ளேயிருக்கிற காய்க்குஒப்பான நிறமுள்ளவளும், தனித்திருந்தவளுமாகிய ஓர் உத்தம ஸ்திரீயைக் கண்டான். ஸ்நானஞ்செய்து சுத்தமான சரீரமுள்ளவ ளும், தூயஆடைதரித்தவளும், கூந்தலையவிழ்த்து இருகரங்களாலும் ஆற்றுகிறவளும், அழகினாலும் வயஸினாலும் ஒளியினாலும் அவய வங்களினாலும் முகமலர்ச்சியினாலும் அன்பினாலும் விளையாட்டுக்க ளாலும் கடைக்கண் ஓட்டங்களாலும் பெரியநிதம்பத்தினாலும் இடையினாலும் ஸ்தனங்களாலும் மார்பினாலும் பார்வையினாலும் குழற்கற்றையினாலும் கால்களாலும் இங்கிதத்தினாலும் புன்னகை யினாலும் குயில்கூவுதலைபோன்ற ஸல்லாபங்களினாலும் ஸரஸ்வதி யையும் பார்வதியையும் லக்ஷ்மியையும் மற்றஸ்திரீகளையும் தேவ ஸ்திரீகளையும் கீழ்ப்படுத்துகின்றவளுமாகிய கங்காதேவியைக் கண் டான். குறைவை நிவிருத்திசெய்பவளாகிய அவள் சந்தனுவினிடம் வந்தாள். சந்தனு அவளைக்கண்டு அழகினுடைய நிறையினால் வியப் புற்று மயிர்க்கூச்சமுள்ளவனானன். அவ்வரசன் கண்களால் அவ ளைக் குடிப்பவன்போல் பார்த்ததைத் திருப்தியடையவில்லை. அந்தப் பெண்ணும், சிறந்த பராக்கிரமமுள்ளவனைச் சஞ்சரிக்கின்ற அந்த ராஜாவைக்கண்டவுடன், விருப்பத்தினால்ஸ்நேஹத்தையடைந்து, பார் ப்பதில் சலிப்பில்லாதவளாக இருந்தாள். கின்னரப்பெண்போலவும் அப்ஸரஸைப் போலவுமிருக்கின்ற அந்தக் கங்கையென்னும் பெண் விருப்பத்தோடு ராஜாவைப்பார்த்துக்கொண்டு அவன் முன்னிலை யில் ஸஞ்சரித்தாள். ரூபத்தினால் எல்லா ராஜஸ்திரீகளுக்கும் மேற்ப ட்டிருக்கின்ற அவளைக்கண்டு, சந்தனு அவளைப் பார்ப்பதினாலேயே

மிருந்த ஆனந்தமுள்ளவனாக இருந்தான். பிறகு ராஜா இன்சொல் லினால் அவளைத் தைரியப்படுத்திச் சொல்லலானான்: "அழகான இடையுடையவளே! நீ தேவப்பெண்ணா? அஸுரப்பெண்ணா? கந்தர்வப் பெண்ணா? அப்ஸரஸா? யக்ஷப்பெண்ணா? நாககன்னிகையா? மனுஷ்யப்பெண்ணா? தேவதைபோன்றவளே! குற்றமில்லாதவளே! நீ யாராயிருந்தாலும் எனக்குப் பாரியையாகக் கடவாய்; என்னுடைய உயிரும் எனக்குள்ள தனம்யாவும் உன்னைச்சேர்ந்தவை. தேவப் பெண்ணைப் போன்றவளே! உன்னிடத்தில் நான் யாசிக்கிறேன். அழகுள்ளவளே! நீ எனக்கு மனைவியாகக் கடவாய்" என்று சொன்னான்.

நூற்று நான்காவது அத்தியாயம்.

ஸம்பவபர்வம். (தொடர்ச்சி.)

(கங்கை சந்தனுவுக்கு மனைவியானது.)

அந்தராஜா புன்சிரிப்புடன் மிருதுவாகவும் அழகாகவும் சொன்ன இந்தச் சொல்லைக்கேட்டு, புகழ்பெற்ற அந்தப்பெண், சந்தனுவின் நன்மைக்காக அவனிடம்வந்தாள். சிலாக்கியமான ரூபமுள்ள அவள், தான்வஸுக்களுக்கு வாக்குத்தத்தம்செய்ததையும்ப்ரதீபன் சொன்னதையும் நினைத்துஸந்ததியைவிரும்பி ராஜபுத்திரனும்ராஜாவுமான சந்தனுவிடம் தானாக வந்துசேர்ந்தாள். வஸுக்களின் சாபத்தினால் தூண்டப்பட்ட அவள் இதுதருணமென்று நினைத்துப்பேச்சினால் ராஜாவின்மனஸை மகிழ்வித்துக்கொண்டு, "ராஜாவே! நான் உன் ஸ்வாதீனமான மஹிஷியாவேன். நீயாவது மற்றவனாவது என்னைப்பற்றி எவ்வகையிலும் தெரிந்துகொள்ள விரும்பக்கூடாது. ராஜாவே! நல்லதோ கெட்டதோ நான் என்னசெய்வேனோ அதில் என்னைத்தடுக்காமலிருக்கவேண்டும். அப்படியே எனக்கு விருப்பமில்லாததைச் சொல்லாமலிருத்தல் வேண்டும். ராஜாவே! இவ்வாறு நடந்துகொள்ளும்வரையில் நான்உன்னிடம்வஹிப்பேன்; என்னைத்தடுத்தாலும் விருப்பமில்லாததைச் சொன்னாலும்உன்னைஸந்தேஹமின்றிவிட்டுவிடுவேன். ராஜாவே! இஃது என்னுடையநியமம். உன் இஷ்டப்படி நீ என்னை அடையலாம். உன் பிதாவினால் நான் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறேன். பிரபுவே! நீ என்பர்த்தாவாகக்கடவாய்" என்று சொன்னாள். பரதச்ரேஷ்டராகிய ஜனமேஜயரே! அப்படியே ஆகட்டு

மென்று ராஜா சொன்னபோது அந்த ராஜச்ரேஷ்டனையடைந்து அவள் மிகுந்த ஆனந்தமடைந்தாள். அவள் கேட்டதற்கு அப்படியே ஆகட்டுமென்றுவாக்குத் தத்தஞ்செய்து அந்தக்கங்காதேவியைத்தேரின்மேலேற்றிக்கொண்டு சந்தனுமஹாராஜன் அவளுடன்சென்றான். அவள், பிரத்தியக்ஷமாகவந்த இரண்டாவது லக்ஷ்மியைப்போல்சந்தனுவையடைந்தாள். ஜிதேந்திரியனாகிய சந்தனுவும் அவளையடைந்து காமஸுகமனுபவித்தான். கேட்பது அயுக்தமென்று நினைத்து அவன் அவளை ஒன்றும்கேட்கவில்லை. அவளுடைய விநயத்தாலும் ஒழுக்கத்தாலும் அழகினாலும் உயர்ந்ததன்மையாலும் குணங்களினாலும் ரஹஸ்யதந்த்ரோபசாரத்தினாலும்அந்த அரசன் திருப்தியடைந்தான். உயர்ந்த ஸ்திரீயினால் உபசரிக்கப்பட்டஅந்த அரசன் மிகவும் மகிழ்வுற்றான். தேவதாரூபமுள்ளவளும் * மூன்றுமார்க்கங்களுக்கும் செல்லுகிறவளுமாகிய அந்தபெண்ணரசியான கங்காதேவி, அழகுள்ள மனிதப்பெண்ணுருவம் எடுத்துக்கொண்டு, அதிர்ஷ்டத்தினால் மேன்மைதரும் நிறைவேறினவனும் இந்திரனுக்கோபபான மஹிமையுள்ளவனுமாகிய சந்தனுவென்னும் ராஜச்ரேஷ்டனுக்குப் பாரியையாகவந்து சேர்ந்தாள். புணர்ச்சியினாலும் ஸ்நேகத்தினாலும் சாதுர்யத்தினாலும் முகமலர்ச்சியினாலும் அழகியவிளையாட்டுக்களாலும்அந்தப்பிரபு ப்ரியப்படும்படி அவ்வண்ண சமீதாஷ்டிகர செய்தாள். அந்த உத்தமஸ்திரீயின் குணங்களினால் இழுக்கப்பட்டு அவ்வரசன்போகத்திலேயே அழுந்தியிருந்தான்.

நூற்றைந்தாவது அத்தியாயம்.

ஸம்பவபர்வம். (தொடர்ச்சி.)

(ஏழுபுத்திரர்கள் பிறந்தவுடன் கங்கை அவர்களைக்கொன்றதைப்பார்த்து, சந்தனு எட்டாவது புத்ரனைக்கொல்லாமலிருக்கும்படிகேட்க, அவன் மறுமொழி சொன்னது.)

அவளுடன்கூடி விரும்பினபடியெல்லாம் ரமித்துக்கொண்டிருந்த அரசன் அநேகவருஷங்களும் ருதுக்களும் மாதங்களும் கடந்துபோனதை அறியவில்லை. அவ்வரசன்தேவலோகத்திலுள்ளவையும் மனுஷ்யலோகத்திலுள்ளவையுமாகிய போகங்களையெல்லாம் அனுபவித்தான். ராஜலக்ஷ்மிபோலிருந்த சந்தனு அந்தப்பெண்ணரசியை

---

* சுவர்க்கம், பூமி, பாதாளம்.

யடைந்து மகிழ்ந்தான். அந்தக் கங்காதேவி ருதுஸ்நானமானகாலத்தில் தேவகுமாரனைக் கர்ப்பத்தில் தரித்தாள். தேவதைக்கொப்பான சந்தனுவுக்கு எட்டுக்குமாரர்களைப் பெற்றாள். பாரதரே! ஒவ்வொருபுத்திரரையும் பிறக்கப்பிறக்கஜலத்திற்போட்டுவிட்டாள். அந்தப்புத்திரர்களைப்பிரஸவித்தபோதே கழுத்தைப்பிடித்துயமலோகம் அனுப்பினாள். "உன்னை நான் சந்தோஷப்படுத்துவேன்" என்று ராஜாவுக்குச்சொல்லிவிட்டுப் புத்திரர்களைக் கங்காப்ரவாகத்தில் அமிழ்த்தினாள். அப்போது அந்தச்சந்தனுமஹாராஜனுக்கு அவள்செய்தது பிரியமாயிருக்கவில்லை. நீங்கிவிடுவாளென்று பயந்து அரசன் அவளை ஒன்றுமசொல்லவில்லை. அவள்செய்கைக்குக் காரணத்தையும் அவள வந்தகாரணத்தையும் கேட்கததகாதென்று தன்பிதா சொன்னசொல்லை நினைத்துக்கொண்டு, சந்தனு, புத்திரர்கள்விஷயத்தில் அவள்செய்த தீங்கைப்பற்றிக் கேட்காமலேஇருந்தான். அந்தஸ்திரீ சிறந்த ஏழுகுமாரர்களைப் பிறக்கப்பிறக்கக் கொன்றுகொண்டிருந்தாள். சந்தனு * தர்மம்கெடுமென்று அவளை வெகு பிரயாஸத்தோடு ஒன்றும் சொல்லாமலிருந்தான். எட்டாவது புத்திரனை அவள் கொல்லவிரும்பும்போது சந்தனுவின் மனவுறுதி கலங்கியது. எட்டாவது புத்திரன் பிறந்தபின் சிரித்துக்கொண்டிருந்த அந்தக் கங்காதேவியைநோக்கித் துக்கத்தினால் வருந்தித் தன்புத்திரனைக் காப்பாற்றுவதற்கு விரும்பிய ராஜாகேட்டனன். புத்திரனைக் கொல்லுகின்ற அவளைக்கண்டு அப்போது மிகுந்தபயமுற்ற சிரேஷ்டனுகிய கௌரவராஜன், "கொல்லாதே; நீ யாரைச்சேர்ந்தவள்? நீ யார்?" என்றும், "பிள்ளைகளை என்கொல்லுகிறாய்?" என்றும் "புத்திரனைக்கொல்லுகிறவளே! உனக்குமிக இழிவான பெரும்பாவம்நேர்க்திருக்கிறது" என்றும் சொன்னன். கங்கை, "புத்திரனிடத்தில் விருப்பமுள்ளவனே! புத்திரரைப்பெற்றவருட்சிறந்தவனே! உன்புத்திரனை நான் கொல்லுகிறதில்லை. நாம்செய்த எற்பாட்டின்படி நான் இங்கே வஸிப்பது முடிந்தது. நான் ஜன்ஹுமஹரிஷியின் புத்திரியும் மஹரிஷிகளுடைய கூட்டங்களினால் ஆச்சரயிக்கப்பட்டவளுமாகிய கங்கை. தேவர்களுக்குச செய்யவேண்டியபிரயோஜனத்தை நிறைவேற்றுவதற்காக நான் உன்னுடனிருந்தேன். இவர்கள் தேவர்களும் மிகுந்த புண்ணியமுள்ளவர்களும் மிகுந்தசக்தியுள்ளவர்களுமாகியஎட்டு வஸுக்கள்; வஸிஷ்டருடைய சாபமென்னும் தோஷத்தினால் மானிடத்தன்மையை அடைந்தனர். அவர்களுக்குப் பிதாவாகத்தக்கவன்

* தான்செய்த பிரதிஜ்ஞை.

உன்னைக்காட்டிலும் வேறேயாரும் பூமியிலில்லை. என்னைப்போன்ற தாயாகவும் இவ்வுலகத்தில் மனுஷ்யஸ்திரீ யாருமில்லை. ஆதலால், அவர்களுக்குத் தாயாயிருப்பதற்காகமானிடதேகமெடுத்தேன். எட்டு வஸுக்களையும் புத்திரராகப்பெற்று அழியாதலோகங்களை ஜயித்தாய். தேவர்களாகியவஸுக்களுக்கு 'நான்உங்களைப்பிறந்தவுடன்பிறந்தவுடன் மானிடஜன்மத்தினின்று விடுவிப்பேன்' என்றஉறுதியான வாக்குத்தத்தம்செய்தேன். ஆதலால், அவர்கள்மஹாதமாவானஆபவர் என்று சொல்லப்பட்ட வஸிஷ்டருடைய சாபத்தினின்றுவிடப்பட்டனர். உனக்கு மங்களமுண்டாகட்டும். நான்செல்வேன். மிகுந்த விரதமுள்ளவளுகிய இந்தப்புத்திரனை நீகாப்பாற்று. குலத்தைச்சிறப்பிக்கின்ற இந்தஉன்புத்திரன் அந்த எட்டுவஸுக்களின் சக்திகளும் சேர்ந்து உண்டாயிருக்கிறான். மனிதராலாகாதகாரியத்தைச்செய்யப் போகிறான். நிச்சயம். வஸுக்கள் என்னிடத்தில் இப்படிமாறுரூபத்தோடு வாஸம்செய்தனர். என்னிடம்பிறந்த இந்தப்புத்திரனைக் *கங்காதத்தன் என்றறி" என்றாள்.

நூற்றுருவது அத்தியாயம்.

ஸம்பவபர்வம். (தொடர்ச்சி.)

(வஸுக்கள் வஸிஷ்டசாபத்தினால் புத்திரர்களாகவந்ததைச் சந்தநுவுக்குக் கங்காதேவியுரைத்தது.)

சந்தனு, "மங்களமூர்த்தியே! அழகிய நேரக்குழலாளே! எவருடைய சாபத்தினால் அந்த வஸுக்களெல்லாரும் மனுஷ்யகர்ப்பத்துக்கு வந்தனரோ? அந்த ஆபவரென்பவர்யார்? அவர்சபித்ததற்குக் காரணமாகிய வஸுக்களின் அபராதமியாது? உன்னால் எனக்குக்கொடுக்கப்பட்ட இந்தக்குமாரன் மாத்திரம் மனுஷ்யலோகத்தில் வஸிக்கவேண்டியதாக இருக்கும்படி நேர்ந்த இவன்செய்கையாது? எல்லாஉலகத்துக்கும்சுவரர்களாகிய அந்தவஸுக்கள் எவ்வாறு மனுஷ்யர்களிடம்பிறந்தனர்? ஜன்ஹுபுத்ரியே! அவற்றையெல்லாம் எனக்குச்சொல்" என்றுகேட்டான். புருஷச்ரேஷ்டராகிய ஜனமேஜயரே! இவ்வாறு சொல்லியதைக்கேட்டு ஜன்ஹுபுத்ரியாகியகங்காதேவி, அப்போது சந்தனுமஹாராஜாவை நோக்கிப் பின்வருமாறு சொல்லலானாள்:—

---

* கங்கையினால் கொடுக்கப்பட்டவன்.

"பரதச்ரேஷ்டனுகிய சந்தனுமஹாராஜனே! முன்பு வருணன் எவரைப்புத்திரராகஅடைந்தானேஅந்தவஸிஷ்டரென்றுபெயருள்ள முனிவர் * ஆபவரென்றும் பிரஸித்திபெற்றவர். புண்ணியமான தும், மிருகங்களும் பக்ஷிகளும் நிரம்பியிருப்பதும், எல்லாக்காலங்களின் புஷ்பங்களும் பூர்ணமாக இருப்பதுமாகிய வஸிஷ்டாஸ்ரமத்தின் ரம்மியம் மேருவென்னும் சிறந்தபர்வதத்தின் சரிவிலிருக்கிறது. பரதவம்சச்ரேஷ்டனே! புண்ணியனுசெய்பவருக்குட் சிறந்தவரும் வருணபுத்திரருமான அந்தவஸிஷ்டர் மதுரமான கிழங்குகளும் காய்களும் ஜலமுமுள்ள அந்தமேருவின் சரிவிலிருக்கிற அவ்வனத்தில் தவஞ் செய்துகொண்டிருந்தார். பரதரேறே! ஸுரபியென்று சொல்லப்பட்ட தக்ஷபுத்திரிவேளா அந்ததேவி, நினைத்ததையெல்லாம் கறக்கின்ற சிறந்தபசுவை லோகானுக்ரஹஞ் செய்வதற்காகக் கசியபருக்குப் பெற்றாள். தர்மாத்மாவாகிய அந்தவஸிஷ்டர் அந்தப்பசுவைத் தமது ஹோமதேனுவாக க்ரஹித்துக்கொண்டார். அந்ததேனுவானது, ரிஷிகளினால் அடையப்பட்டதும் புண்ணியமும் ரமணீயமுமான அந்தத் தபோவனத்திலிருந்துகொண்டு, பயமில்லாமல் ஸஞ்சரித்தது. பரதச்ரேஷ்டரே! பிறகு ஒருகாலத்தில், ப்ருதிமுதலான தேவர்களாகிய வஸுக்களெல்லாரும் தேவரிஷிகளால் அடையப்பட்ட அந்தவனத்துக்கு வந்தனர். அவர்கள் தங்கள்மனைவிகளுடன் அழகான குன்றுகளிலும் வனங்களிலும் விளையாடிக்கொண்டு அந்த வனமெங்கும் ஸஞ்சரித்தனர். இந்திரனுக்கொப்பான பராக்கிரமமுடையவனே! ராஜச்ரேஷ்டனே! அந்தவஸுக்களிலொருவனுடைய பாரிபையாகிய அழகான இடையையுடையபெண் அவ்வனத்தில் ஸஞ்சரிக்கையில் எல்லாக் காமதேனுக்களிலும் சிறந்த அந்த நந்தினியென்னும் பசுவைக்கண்டாள். சிறந்த விருஷபத்துக்கொப்பான கண்களையுடையவனே! அவள் அந்தப்பசுவின் குணமாகிய தனத்தின்சிறப்பினால் வியப்புற்றவளாகி நல்லபுஷ்டியுள்ளதும், செம்மையாகக் கறப்பதும், அழகானவாலும் குளம்புகளுமுள்ளதும், மங்களகரமானதும், எல்லாச்சிறப்புக்களும்நிரம்பியதும், மிகச்சிறந்த ஸாதுத்தன்மையுள்ளதுமாகிய அந்ததேனுவை † த்யோவென்னும் வஸுவுக்குக் காண்பித்தாள். பூருவம்சத்துப் புத்திரனுகிய ராஜேந்திரனே! சிறந்த யஜ்ஞக்கொப்பான நடையுடையவனே! முன்னே

* ஆபம்=ஜலங்களின் வர்க்கம். அவற்றிற்கு யஜமானனுயிருப்பதினால் வருணன் ஆபவன் என்னப்படுகிறான். அவனுடைய புத்திரராகிய வஸிஷ்டருக்கும் அந்தப்பெயர் சொல்லப்பட்டது. † த்யோ=ப்ரபாஸர். பக்கம்-உசஎ.

வஸுவின்பாரியை இவ்வகையான குணங்கள்நிரம்பின அந்தத்தேனு வை வஸுவுக்குக் காண்பித்தாள். ராஜாவே! த்யோவானவன் அப் போது அந்தக்கோவைக்கண்டு தன்மனைவிக்கு அதினழகையும் குண ங்களையும் தெரிவித்துச் சொல்லலானன்:

"* கருமையான கண்களையுடையவளே! சிறந்த நிதம்பமுள்ள வளே! இந்த உத்தமதேவதையாகிய தேனு இந்த உயர்ந்த தபோ வனத்திற்குடையவராகிய வஸிஷ்டமஹரிஷியுடையது. அழகான இடையுடையவளே! இதனுடைய சுவையுள்ள பாலைக்குடிக்கும் மனி தன் யௌவனமழியாமல் பதினாயிரவருஷகாலம் ஜீவித்திருப்பன்" என்றான்.ராஜச்ரேஷ்டனே! அழகான இடையையுடையவளும்சிலாக் கியமான அங்கமுடையவளுமாகிய அந்த வஸுபத்னி இதைக்கேட்டு மிகுந்த ஔியுள்ள தன் கணவனைநோக்கிப் பின்வருமாறு சொல்லலா னாள்:

"மனுஷ்யலோகத்தில் அழகினாலும் யௌவனத்தினாலும் சோபி க்கின்ற ஜிதவதியென்று பெயருள்ள ராஜபுத்திரி எனக்குத்தோழி யாக இருக்கிறாள். ஸத்தியஸந்தனும் சிறந்த புத்தியுள்ளவனுமாகிய உசீனரனென்னும் ராஜரிஷியின் புதல்வியான அவள் மானிடலோகத் துக்குள் அழகின்சிறப்பினால் பெயர்பெற்றவள். மிகுந்த மஹிமை யுள்ளவனே! தேவர்களிற் சிறந்தவனே! புண்ணியத்தை விருத்தி செய்பவனே! அவளுக்காக நான் விரும்புகின்ற இந்தக்கோவைக் கன்றோடுகூடத் தரிதமாகக் கொண்டுவா. கௌரவத்தைக் கொடுப் பவனே! என்னுடைய அந்தஸகி ஒருத்தி இந்த ஆவின்பாலைக்குடித்து மனிதர்களுக்குள் மூப்பும்பிணியும் இல்லாதவளாக இருக்கக்கடவள். சிறந்த மஹிமையுள்ளவனே! குற்றமில்லாதவனே! நீ எனக்கு இதை ச்செய்யக்கடவாய். இந்தப்பிரியத்தைவிட வேறு மேலானபிரியம்எனக்கு எவ்வகையிலுமில்லை" என்றாள். அவளுடைய இந்தச்சொல்லைக் கேட்டுத் தன்மனைவியின் விருப்பத்தைச் செய்யக்கருதி த்யோவான வன் ப்ருதுமுதலிய ஸஹோதரர்களுடன்கூட அந்தப்பசுவை அப் போது கொண்டுபோனன். ராஜாவே! தாமரையிதழ்போன்ற கண்களை யுடைய அந்தமனைவியினால்ஏவப்பட்ட த்யோவென்பவன்அப்போது அந்த ரிஷியின் உக்கிரமான தபஸைக் கவனிக்கமாட்டாமற்போனன். அப்போது அவன் அந்தப்பசுவைக் கொண்டுபோனன். அதனால்வரு ம்தீங்கை நினைக்கவில்லை. பிறகு பழங்களை யெடுத்துக்கொண்டு வஸி

* அவிதேக்ஷ்ணை என்பதைவிட்டு அவிதேக்ஷணே என்ற பாடம் கொள் ளப்பட்டது.

ஷ்டர் ஆச்ரமம்வந்தார். அந்தச்சிறந்த வனத்தில் அந்தப்பசுவைக் கன்றுடன் காணவில்லை. பிறகுஅந்தத்தபோதனர் அந்தவனத்தில் அதைத்தேடினர். உயர்ந்த புத்தியுள்ள அம்முனிவர் தேடியும் அந்தப்பசுவைக்காணவில்லை. திவ்யஜ்ஞானமுள்ள அவர் அந்தப்பசு வஸுக்களால் அவ்வாறுகொண்டுபோகப்பட்டதையறிந்து உடனே கோபத்துக்கு வசப்பட்டு வஸுக்களை அப்போதே சபித்தார்: "அழுகிய வாலுள்ள என் கறவைப்பசுவை வஸுக்கள் கொண்டுபோனதனால் அவர்கள்யாவரும் மனிதர்களில் ஜனிக்கப்போகின்றனர்; சந்தேகமில்லை" என்று அந்த வஸிஷ்டபகவான் அந்த வஸுக்களைச் சபித்தார். பரதச்ரேஷ்டரே! சிறந்த மஹிமையுள்ள ஆபவனென்னும் முனிச்ரேஷ்டர் கோபம் மேற்கொண்டு அந்த வஸுக்களை இவ்வாறு சபித்தபின் தவத்திலேயே மனத்தைச் செலுத்தினர். ராஜாவே! மிகுந்த மஹிமையுள்ளவரும் தபஸைத் தனமாகக் கொண்டவருமாகிய அந்தப் பிரமரிஷி இந்தக்காரணத்தினால் கோபங்கொண்டு தேவர்களாகிய வஸுக்கள் எண்மரையும் சபித்தார். மிகச்சிறந்தவனே! த்யோவின் குற்றத்தினால் எட்டுவஸுக்களும் வஸிஷ்ட மஹரிஷியினால் இவ்வாறு சபிக்கப்பட்டனர். ராஜச்ரேஷ்டனே! அதன்பின் அந்த வஸுக்கள் சபிக்கப்பட்டோமென்று தெரிந்துமறுபடியும்அம்மஹாத்மாவின் ஆச்ரமம்வந்து அந்தரிஷிக்கு அனுக்ரஹம்வரும்படி செய்வதற்காக அம்முனிவரிடஞ்சென்றனர். புருஷச்ரேஷ்டனே எல்லாத்தர்மங்களும் தெரிந்தவராகிய அந்த வஸிஷ்டமஹரிஷியின் அநுக்ரகத்தை அவர்கள் பெறவில்லை. அந்தத் தர்மாத்மாவான வஸிஷ்டர், "என்னால் சபிக்கப்பட்ட தரன் முதலிய நீங்கள் எல்லோரும் ஒருவருஷத்துக்குப்பின் சாபத்திலிருந்துவிடுபடுவீர்கள். யாருக்காக நீங்கள் என்னாற் சபிக்கப்பட்டிருக்கின்றீர்களோ, அந்த த்யோவென்னும் வஸுமட்டும் தான்செய்ததற்காக நீண்டகாலம்மனுஷ்யலோகத்தில் வஸிப்பான். நான் உங்களைக் கோபித்துச் சொன்னசொல்லைப் பொய்யாக்க விரும்பவில்லை. சிறந்த மனஸுள்ள இவன் மனுஷ்யர்களில் ஸந்ததியை உண்டு பண்ணமாட்டான். இவன் தர்மாத்துமாவாகவும் எல்லாச் சாஸ்திரங்களிலும் வல்லவனாகவும் தன்பிதாவின் விருப்பத்தையும் நன்மையையும் செய்வதில் ஊக்கமுடையவனாகவும் இருப்பான். ஸ்திரீ போகங்களை விட்டுவிடுவான்" என்றார்.

இவ்வாறு வஸுக்களெல்லாரையும் நோக்கிச் சொல்லிவிட்டு அந்த மஹரிஷி சென்றார். அதன்பின் அந்த வஸுக்களெல்லாரும் சேர்ந்து என்னிடம் வந்தனர். ராஜாவே! அவர்கள், "கங்கையே!

எங்களைப் பிறக்கப்பிறக்க நீ நேரே ஜலத்தில் போட்டுவிடு" என்று என்னை வரங்கேட்டனர். நானும் அதனை அப்படியே செய்தேன். ராஜச்ரேஷ்டனே! பாரதனே! இவ்வாறு நான் சபிக்கப்பட்ட வஸுக்களை மனுஷ்யலோகத்திலிருந்து விடுவிப்பதற்காக நியாயமாகவும் செம்மையாகவுஞ்செய்தேன். ராஜச்ரேஷ்டனே! த்யௌவென்னும் வஸுவாகிய இந்தக்குமாரன் ஒருவன்மாத்திரம்அந்தரிக்ஷியின்சாபத்தினால் மனுஷ்யலோகத்தில் வெகு காலமிருப்பன். உன்புத்திரனாகிய இந்தக்குமாரன் பெரியவனைபிறகு மறுபடியும்உன்னிடம்வருவான். ராஜனே! நானும் நீ அழைக்கும்போதுஉன்னிடம் வருவேன்"என்று கங்காதேவி சொன்னாள். இதைச்சொன்னபின் அந்தக்கங்காதேவி அங்கேயே அந்தர்த்தானமாயினாள். அந்தக் குமாரனையுமழைத்துக் கொண்டு அவன் தன் இஷ்டப்படி சென்றாள்.அந்தக்குமாரன் தேவவ்ரதனென்றும் காங்கேயனென்றும் பெயர் பெற்றிருந்தான்.சந்தனுவின் புத்திரனாகிய த்யௌவென்னும் வஸு;குணங்களில்சந்தனுவுக்கு மேலாக இருந்தான். சந்தனு சோகத்தினால் பீடிக்கப்பட்டவனாகி வனத்திலிருந்து தன் நகரம் சென்றான். அந்தப்பரதவம்சத்தவனும் மஹாத்மாவுமான சந்தனுராஜாவின் மிகுதியான குணங்களையும் மஹிமையையும்பற்றி நான் சொல்லப்போகிறேன். அவனுடைய அழகுள்ள சரித்திரம் மஹாபாரதமென்று சொல்லப்படுகின்றது.

நூற்றேழாவது அத்தியாயம்.

ஸம்பவபர்வம். (தொடர்ச்சி.)

(கங்காதேவி பீஷ்மரை வயஸுவந்தபிறகு சந்தனுவுக்குக்கொடுக்க, சந்தனு அவரை யுவராஜாவாகப் பட்டாபிஷேகம் செயததும், பீஷ்மர் ஸத்யவதியைத் தம் பிதாவுக்குக் கொண்டுவந்து கொடுத்ததும்.)

அந்தச் சந்தனுமஹாராஜன் சிறந்த ஞானமுள்ளவன்; தேவர்களாலும் ராஜாக்களாலும் ரிஷிகளாலும் கௌரவிக்கப்பெற்றவன்; தர்மத்திலேயே சித்தமுள்ளவன்; ஸத்யவாக்கென்று எல்லாலோகங்களிலும் பெயர்பெற்றவன். சந்தனுவின் குணங்களெல்லாவற்றையும் நான் சொல்லப்போகிறேன். இந்திரிய ஜயம், கொடை, பொறுமை, புத்தி, (அகாரியங்களில்) லஜ்ஜை, தைரியம், உயர்

ந்தபராக்கிரமம் ஆகிய இவை உயர்ந்த சுபாவமுள்ள புருஷசிரேஷ்டனை சந்தனுவினிடத்தில் நிலைபெற்றிருந்தன. இவ்வகையான குணங்கள்நிரம்பினவனும் தர்மத்திலும் ராஜநீதியிலும் ஸமர்த்தனுமாகிய அவ்வரசன் பரதவம்சத்தையும் எல்லாப்பிரஜைகளையும் காப்பவனாக இருந்தான்; * சங்குபோன்ற கழுத்துள்ளவனும் பருத்ததோள்களையுடையவனும் மதயானைபோன்ற நடையுள்ளவனும் பரிபூரணமான பயன்களையுடைய ராஜலக்ஷணங்களெல்லாம் நிரம்பினவனுமாயிருந்தான். புகழ்பெற்ற அவ்வரசனுடைய ஒழுக்கத்தைக் கண்டு மனிதர்கள் எப்போதும் இன்பத்தையும் பொருளையும் காட்டிலும் அறமே சிறந்ததென்று உறுதியுள்ளவராயிருந்தனர். பரதசிரேஷ்டராகிய ஜனமேஜயரே! சந்தனு இவ்வாறு மேலான ஸ்வபாவமுள்ளவனாகி இருந்தான். தர்மத்தில் அவனுக்கு ஈடான அரசன் ஒருவனும் இருக்கவில்லை. தர்மங்களிலேயேயிருந்துகொண்டு தர்மத்தைக் காப்பாற்றுகிறவர்களெல்லாரிலும் சிறந்த அந்தராஜாவை ராஜராஜாவாக மற்ற அரசர்கள் பட்டாபிஷேகஞ் செய்வித்தனர். பரதவம்சத்திற்கு ரக்ஷகனாகிய அந்தச்சந்தனுவைத் தங்களுக்கு நாதனாகப்பெற்ற அரசர்கள் துன்பமும் பயமும் பிறரால் உபத்திரவமும் நீங்கினவர்களாகவும் ஸுகமான நித்திரையும் விழிப்புமுள்ளவர்களாகவு மிருந்தனர். புகழ்பெற்றவனும் இந்திரனுக்கொப்பான பராக்கிரமமுடையவனுமாகிய சந்தனுவினால் ஆளப்பட்ட அரசர்கள் யாகம்தானம்முதலியகாரியங்களைச் செய்துகொண்டிருந்தனர். சந்தனுவைத்தலைவனாகவுடைய அரசர்களினால் உலகம் ரக்ஷிக்கப்படும்போது எல்லாவருணங்களிலும் வியவஸ்தையுடன் தம்தம் தர்மமே மேலாக இருந்தது. க்ஷத்திரியன் பிராமணனுக்குச் சுச்ரூஷைசெய்தான். வைசியர்கள் க்ஷத்திரியர்களை அநுஸரித்திருந்தனர். சூத்திரர்கள் பிராமணர்களிடத்திலும் க்ஷத்திரியர்களிடத்திலும் அன்புவைத்து வைசியர்களையும் ஸேவித்தனர். அவன் (சந்தனு) கௌரவர்களின் ராஜதானியாகிய அழகான ஹஸ்தினபுரத்தில் வஸித்துக்கொண்டு கடல்சூழ்ந்த பூமியை ஆண்டான். இந்திரனுக்கு ஒப்பானவனும் தர்மம்தெரிந்தவனும் ஸத்தியம்தவறாதவனும் உள்ளும்புறமும் ஒத்திருப்பவனுமாகிய அவன், தானம் தர்மம் தவம் இவை சேர்ந்திருந்ததனால் சிறந்தசெல்வம் அடைந்தான். விருப்பும் வெறுப்புமில்லாதவனாகவும், சந்திரனைப்போல்இனிய காட்சியுள்ளவனாகவும், † தேஜஸினால் சூரியனுக்கொப்பானவனாகவும்,

* மூன்றுரேகைகளோடு கூடிய கழுத்து.

† எல்லாவற்றையும் அடக்கும் சக்தி.

வேகத்தில் வாயுவுக்கு ஒப்பானவனுகவும், கோபத்தில் யமனுக்கு ஒப்பானவனுகவும், பொறுமையில் பூமிக்கு ஒப்பானவனுகவுமிருந்தான். ஜனமேஜயமஹாராஜாவே! சந்தனுமஹாராஜா பூமியை ஆண்டுகொண்டிருக்கையில் ஆடுமாடுகளும் பன்றிகளும் காட்டுமிருகங்களும் பக்ஷிகளும் ஹிம்ஸிக்கப்படவில்லை. பிராமணதர்மமே அதிகரித்திருந்த ராஜ்யத்தில் அடக்கமுள்ள மனத்தையுடைய சந்தனு இந்திரியஸுகங்களில் ஆசையைவிட்டுப் பிராணிகளைப் பக்ஷபாதமின்றி ஆண்டனன். சகோரம்போலக் கண்களுடையவனும் சிவந்தவாயுள்ளவனும் ஸிம்மத்துக்கும் விருஷபத்துக்கும் ஒப்பான நடையுள்ளவனும் பூர்ணசந்திரனுக்கு ஒப்பான முகமுள்ளவனுமான சந்தனு, யௌவனவயஸிலிருக்கும்போதே தன்னை அடுப்பதற்குக் காரணங்களாகிய குணங்களையெல்லாம் ஒப்பில்லாமல் வஹித்தவனும் ஆழ்ந்த கருத்துள்ளவனும் தைரியமுள்ளவனுமாயிருந்தான். அக்காலத்தில் தேவர்கள் ரிஷிகள் பிதிர்க்கள் இவர்களின் * யாகங்களுக்காகக் காரியங்கள் செய்யப்பட்டன. அதர்மமாக எந்தப்பிராணிகளும் கொல்லப்படவில்லை. ஆதரவில்லாதவையும் ஸௌக்கியமில்லாதவையுமான திர்யக் ஜாதியிற்பிறந்த பிராணிகளெல்லாவற்றிற்கும் அந்தராஜாவே பிதாவாகஇருந்தான். குருவம்சத்தலைவர்களுட் சிறந்தவனுகிய அந்தச் சந்தனுமஹாராஜன் அரசர்க்கரசனுக ஆண்டுவருகையில், சொற்களெல்லாம் ஸத்தியம் தவறுமலிருந்தன; உள்ளங்களெல்லாம் தானத்திலும் தர்மத்திலும் பற்றியிருந்தன; பசுக்கள் யாகத்திற்காகவே ஸ்ருஷ்டிக்கப்பட்டிருந்தன; ஆண் பெண்புணர்வது சந்ததிக்காகவேயிருந்தது. அவன் † பதினைறு, எட்டு, நாலு, எட்டு ஆகியவருஷங்கள் ஸ்திரீஸுகத்தை அனுபவிக்காமல் காட்டிலேயே திரிந்துகொண்டிருந்தான். அவனுக்குக் கங்கையினிடம் பிறந்த புத்திரனும் வஸுக்களின் அம்சமுமாகிய தேவவ்ரதனென்பவன் ரூபத்திலும் செய்கையிலும் ஒழுக்கத்திலும் கல்வியிலும் அவனைப்போலவே இருந்தான். சிறந்த வன்மையும் சிறந்த தீரமும் சிறந்தபராக்கிரமமுமுள்ள அந்த மஹாரதனை தேவவ்ரதன் பூமியிலுள்ளவையும் ‡ இல்லாதவையுமானஎல்லா அஸ்திரங்களிலும் தேர்ச்சியுள்ளவனுகியிருந்தான். அந்தச் சந்தனுமஹாராஜன் ஒருகாலத்தில்மான்களை வேட்டையாடிக்கொண்டு கங்காநதிக்கரையில்ஸஞ்

---

* தேவயாகம்=அக்நிஹோத்ரம் முதலியவை; ரிஷியாகம்=வேதமோதுவது; பிதிர்யாகம்=ச்ராத்தம் முதலியவை.

† முப்பத்தாறு வருஷங்கள். ‡ தேவலோகத்திலுள்ளவை.

சரிக்கையில் கங்கை ஜலம்குறைவாயிருப்பதைக் கண்டான். அதைக் கண்டு புருஷச்ரேஷ்டனுகிய சந்தனு, "இந்தமஹாநதி இப்போது முன்போல் ஏன்பெருகவில்லை?" என்று சிந்தித்தான். பிறகு அதன் காரணத்தைப்பற்றித் தேடிக்கொண்டு போகும்போது அந்தஉயர்ந்த மனமுள்ள சந்தனு, அழகு நிரம்பினவனும் வளர்ச்சியுள்ளவனும் அழகான பார்வையுள்ளவனும் தேவேந்திரனைப்போல் தேவலோகத்துஅஸ்திரத்தைப்பிரயோகிப்பவனுமாகிய ஒருசிறுவன்கூர்மையான அம்புகளால் கங்கைமுழுவதையும்தடுத்துக்கொண்டுநின்றதைக்கண்டான். அந்தச் சிறுவனுடைய ஸமீபத்தில் அந்தக்கங்காநதி அம்புகளினுல் தடுக்கப்பட்டிருந்ததைக்கண்டு மனிதர்க்குமுடியாத அவன் செய்கையையறிந்து ராஜா வியப்புற்றவனுனன். முன்னே பிறந்தவுடன் பார்த்திருந்த அந்தத்தன்புத்திரனைசிறந்தபுத்தியுள்ளசந்தனு தன்புத்திரனென்று அப்போது அடையாளம் கண்டுகொள்ளமுடியாமற்போனுன். அந்தப்புத்திரனும் தன்பிதாவைப்பார்த்துமாயையையுண்டுபண்ணிப்பிரமிக்கசெய்தான். அவனைமயக்கினபின்உடனே அவன் அங்கேயே மறைந்துவிட்டான். அவ்விடத்தில் அந்த ஆச்சரியத்தைக்கண்ட சந்தனுமஹாராஜன் உடனேதன்புத்திரனென்று ஸம்சயித்துக் கங்கையைப் பிரத்தியக்ஷமாகும்படி கேட்டுக்கொண்டான். கங்கை உத்தமமான ரூபத்தையெடுத்துக்கொண்டு அலங்கரிக்கப்பட்ட அந்தக்குமாரனை வலக்கையிற்பிடித்துக்கொண்டுராஜாவுக்கு எதிரேதோன்றினள். ஆபரணங்களினுல் அலங்கரிக்கப்பெற்று நிர்மலமான ஆடையுடுத்துக்கொண்டுவந்த அந்தக்கங்காதேவியை முன்னேபார்த்திருந்தும் அவளை அந்தச்சந்தனு அப்போதுதெரிந்து கொள்ளவில்லை. அப்போது கங்காதேவி, "ராஜாவே! முன்னே எந்தஎட்டாவது புத்திரனை நீ என்னிடத்தில் அடைந்தாயோஅவன் தான் இவன். புருஷச்ரேஷ்டனே! எல்லா அஸ்திரங்களும் தெரிந்தவன்! இவனுக்கு மேற்பட்டவன் யாருமில்லை. மஹாராஜாவே! என்னுல் வளர்க்கப்பட்ட இந்தப்புத்திரனை வாங்கிக்கொள். பிரபுவே! புருஷச்ரேஷ்டனே! இவனை உன்வீட்டுக்கு அழைத்துக்கொண்டுபோ. இந்தவீரன் வஸிஷ்டரிடமிருந்தே வேதங்களையும் வேதாங்கங்களையும் ஒதினன்; அஸ்திரங்களில் தேர்ந்தவன்; முதன்மையான வில்லாளி; யுத்தத்தில் இந்திரனுக்கொப்பானவன்; பரதவம்சத்தவனே! தேவர்களாலும் அஸுரர்களாலும் எப்போதும் மதிக்கப்பெற்றவன். சுக்ராசாரியருக்கு எந்தச் சாஸ்திரம்தெரியுமோ அஃதெல்லாம்இவனுக்கும்தெரியும். சிறந்தகைகளையுடையவனும்மஹாத்

மாவுமாகிய இந்த உன்புத்திரனிடத்தில், தேவர்களாலும் அஸுரர்களாலும் நமஸ்கரிக்கப்பட்ட அங்கிரஸின் புத்திரராகியப்ருஹஸ்பதியறிந்த சாஸ்திரமெல்லாம் ஸாங்கோபாங்கமாக நிலைபெற்றிருக்கின்றன. ரிஷியும் எதிரிகளால் ஜயிக்கமுடியாத பராக்கிரமமுள்ளவருமான பரசுராமருக்கு என்னஅஸ்திரம்தெரியுமோ அஃதுஇவனிடம் நிலைபெற்றிருக்கிறது. ராஜாவே! பெரியவில்லாளியும் ராஜதர்மத்திலும் ராஜநீதியிலும் தேர்ந்தவனுமாகிய இந்தஉன்புத்திரனை நான் உனக்குக்கொடுக்கிறேன். வீரனே! நீ இந்தவீரனை உன்வீட்டுக்கு அழைத்துக்கொண்டுபோ" என்று சொன்னாள்.

இவ்வாறு சொல்லி அந்தமஹானுபாவையானகங்கைஅங்கேயே மறைந்தாள். அந்தக்கங்கையினால் இவ்வாறு விடைகொடுக்கப்பெற்ற சந்தனுமஹாராஜன் சூரியனைப்போல் பிரகாசிக்கின்ற புத்திரரை யழைத்துக்கொண்டு தன் நகரத்துக்குச்சென்றான். அந்தப்பூருவம் சத்திற்பிறந்தவனை சந்தனு இந்திரபுரிக்குஒப்பான தன்பட்டணம் சேர்ந்துதான்விரும்பினவையெல்லாம் நிறைவேறினவாகத்தன்மனத்தில்நினைத்தான். அதன்பின் ராஜ்யம் பூருவம்சத்தாரிடம் நிலைபெறுவதற்காக, பிரஜைகளுக்கு அபயம்கொடுப்பவரும் சிறந்தகுணங்களுள்ளவருமான மஹாத்மாவுமாகிய தன்புத்திரருக்கு யௌவராஜ்யபட்டாபிஷேகம் செய்வித்தான். பரதச்ரேஷ்டராகிய ஜனமேஜயரே! பெருங்கீர்த்திபெற்றவராகிய அந்தச்சந்தனுவின்புத்ரர் தம் ஒழுக்கத்தினால் பூருவம்சத்தவரையும் தம் பிதாவையும் தேசத்தையும் மகிழ்வித்தார். அளவற்றசக்தியுள்ள அந்தச் சந்தனுமஹாராஜன் தன்புத்திரனுடன்கூட அவ்வாறுமகிழ்ந்துகொண்டு நானுவருஷங்களைக் கடத்தினான். அவ்வரசன் ஒருகால் வனஞ்சென்றுயமுனையாற்றங்கரையில் ஒப்பிடமுடியாத ஒரு சிறந்தவாசனையை நுகர்ந்தான். அதுவந்தகாரணத்தைத் தேடிக்கொண்டு எங்கும் திரிந்தான். அப்போது அவன் தேவதையைப்போன்ற ரூபமுள்ள ஒரு செம்படவப் பெண்ணைக்கண்டான். கருத்தகண்களையுடைய அந்தக்கன்னிகையைக்கண்டவுடன், "அச்சமுடையவளே! நீயார்? யாருடையபெண் என்னசெய்துகொண்டிருக்கிறாய்?" என்றுகேட்டான். அதற்குஅவள், "நான்செம்படவப்பெண். செம்படவர்க்கரசனும் மஹாத்மாவுமாகிய என்தந்தையின்கட்டளையினால் புண்ணியத்திற்காக ஓடத்தைநடத்துகிறேன். *உனக்கு க்ஷேமம் உண்டாகட்டும்" என்று சொன்னாள். அந்தராஜாவாகிய சந்தனு அழகும் சொல்லினிமையும்மணமும் நிரம்

* இது தக்க மனிதரிடம் பேசும்போது சொல்லும் மரியாதைச்சொல்.

பினவளரும் தேவதாரூபமுள்ளவளுமாகிய அந்தச்செம்படவப் பெண் ணைக்கண்டு விருப்பங் கொண்டு அவள் தந்தையினிடம்சென்றுதனக் காக அவளைவேண்டி அவனைக்கேட்டான். அந்தச்செம்படவ அரசன் அந்த ராஜாவைநோக்கி, "பிரஜைகளுக்கு ஈசுவரனே! அவள்பெண் ணைப் பிறந்தமாத்திரத்திலேயே நான்அவளை ஒருவரனுக்குக்கொடுக் கவேண்டியதுதான். ஆனல் விருப்பம் ஒன்று என் மனத்திலிருக்கி றது. அதைத் தெரிந்துகொள். குற்றமற்றவனே! நீ இவனை உனக்குத் தர்மபத்னியாகும்படி என்னிடம் கேட்பையாயின், சொல்தவறுதலு கிய நீ ஸத்தியத்தை முன்னிட்டு எனக்கு ஓர் உடன்படிக்கைசெய்து கொடு; ராஜாவே! இந்தக் கன்னிகையை அந்த ஏற்பாட்டின்படி உனக்குநான் கொடுப்பேன். எனக்கு உன்னைப்போன்ற ஒரு வரன் ஒருகாலத்திலும் நேரமாட்டான்" என்று மறுமொழி சொன்னன். அதைக்கேட்டு, " * தாசனே! நீ கேட்கிற வரத்தை நான் தெரிந்து கொண்டு உன் விஷயத்தில் நிச்சயிப்பேன். கொடுக்கக்கூடியதாயிருந் தால் அதைக்கொடுப்பேன் கொடுக்கக்கூடாததை எவ்வகையிலும் கொடேன்" என்றுசொல்ல, தாசன் "பூமியையாளும்அரசனே! இவ ளிடத்தில் பிறக்கும் புத்திரன் எவனை அவனை உனக்குப்பின் ராஜா வாகப் பட்டாபிஷேகம் செய்யவேண்டும்; மற்றயாரையும் செய்யக் கூடாது" என்றன். பாரதரே! சந்தனு தாங்கக் கூடாத மன்மத தாபத்தினல் தங்கிக்கப்பட்டிருந்தும் அந்தச் செம்படவன் கேட்ட வரத்தை அவனுக்குக்கொடுக்க விரும்பவில்லை. அப்போது அவ் வரசன் அந்தச் செம்படவப்பெண்ணைச் சிந்தித்துக்கொண்டே மன் மதனுல் பீடிக்கப்பட்ட மனத்துடன் ஹஸ்தினபுரத்திற்குத் திரும்பிச் சென்றன். அதன் பிறகு ஒருகால் வ்யஸனப்பட்டுக்கொண்டும்கவலை யுற்றுமிருந்த தன் பிதாவினிடம் சந்தனு புத்திரராகியதேவவ்ரதர் சென்று, ராஜாவே! உமக்கு எல்லாம் க்ஷேமமாக இருக்கின்றன. எல்லா ராஜாக்களும் அடங்கியிருக்கின்றனர். அப்படி யிருக்க இப் போது எதற்காக இடைவிடாமல் துக்கப்பட்டுக் கண்ணீர்விடுகிறீர். கவலைப்படுகிறவர்போலவே யிருந்துகொண்டு என்னிடம் நீர் ஒன் றும்பேசவில்லை. குதிரையின்மேமேலறி வெளியிற் போவதுமில்லை. வர்ணமாறி வெளுத்தும் இளைத்து மிருக்கிறீர். உமதுநோயைத் தெரி ந்துகொள்ள விரும்புகிறேன். அதனுல் நான் அதைப்பரிகரிப் பேன்" என்ற சொல்லைச்சொன்னர். அவருடைய பிதாவாகியசந்தனு அந்தச் செம்படவப்பெண் விஷயமாக இவ்வகையான தன்விருப்பம்

* செம்படவன்.

சொல்லத்தகாததனால் அதைத் தன்புத்திரரிடம் வெளியிடமுடியாமல்இருந்தான். தன் புத்திரரால் இவ்வாறு கேட்கப்பட்ட அந்தச்சந்தனு, "குழந்தாய்! நீசொன்னபடி நான் கவலையுற்றவனுகவேயிருப்பது நிண்ணம். அஃது எதனலென்பதைச் சொல்லுகிறேன்; கேள். பாரதனே! நமது பெரியகுலத்தில் நீ ஒருபுத்திரன்தான் இருக்கிறாய். எப்போதும் அஸ்திரப்பழக்கம் விடாதவனும் பராக்கிரமமுள்ளவனுமாயிருக்கிறாய். புத்திரனே! உலகவாழ்க்கை நிலையில்லாமையைப் பற்றி நான் துயரப்படுகிறேன். கங்காபுத்திரனே! எவ்வகையிலாவது உனக்கு அபாயம்வந்தால் நமதுகுலமே இல்லாமற்போய்விடும். நீ ஒருவனே நூறுபுத்திரர்களுக்காட்டிலும் சிறந்த புத்திரனென்பதில் ஸந்தேகமில்லை. நான் மீண்டும் மறுபடியும் விவாஹஞ்செய்துகொள்ளவும் பிரியப்படவில்லை. ஸந்ததி கெடாமலிருப்பதற்காகமாத்திரம் ஆசைப்படுகிறேன். * உனக்கு க்ஷேமம் உண்டாகட்டும். தர்மசாஸ்திரோபதேசம் செய்கிறவர்கள் ஒருபுத்திரன் இருப்பதும் புத்திரன் இல்லாமலேயிருப்பதும் ஒன்றுதானென்று சொல்லுகின்றனர். பாரதனே! ஒற்றைக்கண்ணிருப்பதும் ஒரு புத்திரனிருப்பதும் இல்லாமையே. கண்ணிழந்தால் சரீரத்திற்கழிவு. புத்திரனழிந்தால் குலத்துக்கழிவு. அக்நிஹோத்ரமும் மூன்றுவேதங்கள் ஓதுவதும் நிரம்பின தக்ஷிணையோடு பலயாகங்கள் செய்வதுமாகிய இவையெல்லாம் ஸந்தானத்தின்பதினறில் ஒருபாகத்துக்கும் ஈடாகா. மிகத்தெரிந்தவனே! மனிதர்களுள், இஃது இவ்வாறுதான். எல்லாப்பிராணிகளுக்கும் ஸந்ததியென்பதுதான் எல்லாமாக இருக்கிறது. அதில் எனக்கு ஸந்தேகமில்லை. லோகத்தில் புத்திர ஸந்தானத்தினலேதான் ஒருவன் பிதிர்க்களின் கடனைத்தீர்க்கிறனென்பது நிச்சயம். இது பூர்வீகர்களான ரிஷிகளுக்கும் தேவர்களுக்கும் சாச்வதமான வேதம். பாரதனே! புத்திரனும் நல்லகருமங்களும் ஞானமுமாகிய மூன்றும் ஒளிகளுள்ளன. பாரதனே! நீயோ சூரன்; எப்போதும் அவமானம் தாங்காதவன்; ஆயுதப்பயிற்சியை விடாதவன்; ஆதலால் யுத்தத்தை விட்டு வேறு எவ்வகையிலும் உனக்கு அபாயமில்லை. ஆகையால் உனக்குக் கெடுதிநேர்ந்தால் எப்படியாகுமோ என்ற ஸந்தேகத்தை நான் அடைந்திருக்கிறேன். குழந்தாய்! இதுதான் எனது துக்கத்திற்குக்காரணம்; இதை உனக்கு முற்றிலும் சொன்னேன்" என்று மறு மொழி சொன்னன். பிறகு ராஜாவின் அந்தக்கரணத்தையெல்லாம் பூர்ணமாகத் தெரிந்துகொண்டு, சிறந்தஞானமுள்ள பீஷ்மர்

* நீ வருத்தப்படாதே என்பது கருத்து.

தமது புத்தியினல் ஆராய்ந்தார்; ஸந்தானமென்னும் பிரயோஜனத் தோடுகூடிய அந்தத்தந்தையின் சொல்லைக்கேட்டு மறுபடியும்வருத் தத்துடன் தமதுபிதாவின் ஸாரதியை வருவித்தார். அவருடைய கட்டளையினல் குருச்ரேஷ்டனுகிய சந்தனுவின்ஸாரதி வந்தான். உயர்ந்தபுத்தியுள்ள பீஷ்மர் தமது பிதாவின் அந்த ஸாரதியைநோக்கி, "ஸாரதியே! நீ என்பிதாவிற்குத் தேரின்முனனே நிற்கும் நினைகிதனுக இருக்கிறுய். ராஜாவினுடைய விருப்பம் எந்தப்பெண்ணினிடம் இருக்கிறது? உனக்குத்தெரியுமா? நான் உன்னைக்கேட்கிறேன். நீ அதைச்சொல். நான் அதைச்செய்வேன்; மாறுகச்செய்யேன்" என்றுசொல்ல, ஸாரதி, "குருச்ரேஷ்டரே! ஒருசெம்படவப்பெண் இருக்கிறுள். உமதுபிதாவின் விருப்பம் அவளிடம்சென்றிருக்கிறது. ராஜா பெண்ணைக்கேட்டதற்கு அந்தச்செம்படவன், 'இவளுக்குப் பிறந்தஆண்பிள்ளைஉனக்குப்பின்அரசனுகவேண்டும்'என்றசொல்லைச் சொன்னன். அப்போது உமதுபிதா அவன் கேட்டதைக்கொடுக்க விரும்பவில்லை. அப்படியில்லாமல் பெண்ணைக் கொடுப்பதில்லையென் பது அந்தச்செம்படவனுடைய நிச்சயம். இதை உமக்குச்சொன் னேன். மேலே செய்வதைச்செய்யும்" என்றுசொன்னன். பிறகு அந்தப்புத்திரராகிய பீஷ்மர் தமதுபிதா நினைத்ததைத் தெரிந்து கொண்டு நன்றுக ஆராய்ந்து தந்தையின் * உட்கருத்தையுமறிந்து யமுனையை நோக்கிச்-சென்றார். தர்மாத்மாவான பீஷ்மர் தர்மிஷ்டர் களான க்ஷத்திரியவிருத்தர்களுடன்சிறந்த கீர்த்தியுள்ள அந்தச்செம் படவனிடம்சென்று தமது பிதாவுக்குக் கன்னிகையைத்தாமேகேட் டார். அந்தச்செம்படவன் அவரைமுறைப்படி பூஜைசெய்து அழைத் தான். பாரதரே! ராஜசபையில்உட்கார்ந்திருக்கும் பீஷ்மரைநோக்கி அந்தச்செம்படவன் சொல்லலானன்.

" கேட்பவர்களிற் சிரேஷ்டரானவரே! இந்தக்கன்னிகை ராஜ்ய மென்னும் பரிசத்திற்குக் கொடுக்கத்தக்கவள். இவளுக்குப்பிறக்கும் புத்திரன் உமது தந்தைக்குப்பிற்காலம் ராஜாவாக இருத்தல்வேண் டும். சிறந்த கைகளையுடையவரே! இப்போது ஆயுதம்பிடித்தவர்க ளிற்சிறந்தவராகிய நீரே சந்தனுவின் வம்சவிருத்தியைச் செய்கிற புத்திரராக இருக்கிறீர். உமக்கு நான் என்னசொல்லைச்சொல்வேன். பாரதரே! பெண்ணுக்குக் கொடுக்கவேண்டிய சுல்கத்திற்காக ஒரு விஷயம் கேட்கப்போகிறேன். எல்லோராலும் சிலாகிக்கத்தகுந்த தும் விரும்பப்பட்டதுமாகிய இப்படிப்பட்டவிவாஹஸம்பந்தத்தைத்

* பெண்ணின்மேலுள்ள விருப்பம்.

தவறவிடுவதனால் ஸாகூஷாத் தேவேந்திரனுகஇருந்தபோதிலும்எவரின் பரிதபிக்கமாட்டான். இவள் குணங்களில் உங்களுக்கொப்பான பெரியுவருடைய (உபரிசரவஸுவினுடைய) பெண். இந்தப்பெண்ணரசியாகிய ஸத்தியவதி எவருடைய வீரியத்துக்குப் பிறந்தவளோ அந்தஉபரிசரவஸு, உமது பிதாவைப்பற்றி எனக்குப் பலமுறை, 'அந்தத்தர்மம்தெரிந்த அரசன் ஸத்தியவதியை விவாகஞ்செய்து கொள்ளத்தக்கவன்' என்று சொல்லியிருக்கிறார். இந்த * ஸத்தியவதியென்னும் பெண் உமதுபிதாவைநோக்கி அவ்வாறே (ராஜ்யசுல்கம் வேண்டுமென்றே) சொன்னாள். அவள் கேட்டதனாலேதான் ராஜரிஷியான உமதுபிதாவை முன்னமே நான்மறுத்துவிட்டேன். ராஜாவே! ஆனால் நான் பெண்ணுக்குத்தகப்பனையிருப்பதுபற்றி உம்மிடம் ஒன்று சொல்லப்போகிறேன். இந்தவிவாஹத்தில் பலவானுகிய எதிரியிருப்பதைமாத்திரம்தான் நான் குற்றமாகநினைக்கிறேன். தோல்வியடையாதவரே! உமதுவிஷயத்தில் அந்தக்குற்றத்தை மிகப்பெரிதாக நினைக்கிறேன். எதிரிகளைப் பீடிப்பவரே! நீர் எவனுக்கு எதிரியாயிருப்பீரோ அவன் கந்தர்வனுயிருந்தாலும் அஸுரனுயிருந்தாலும் நீர்கோபித்தபிறகு நீண்டகாலம்ஜீவிப்பது ஒருபோதுமில்லை. ராஜாவே! இதிலுள்ளதோஷம் இவ்வளவுதான்; வேறொன்றுமில்லை. வீரரே! கொடுக்கவேண்டிய கன்னிகையைக் கொடுக்காமலிருக்கும் விஷயத்தில் இந்தக்காரணத்தை நீர் அறிந்துகொள்ளும். உமக்கு ஸுகமுண்டாகக்கடவது" என்றான். பரதவம்சத்தவரே! அவனால் இவ்வாறுசொல்லப்பட்ட பீஷ்மர் அரசர்கள்கேட்கத் தமதுபிதாவின் பிரயோஜனத்திற்காக அவனுக்குத் தகுதியாகிய மறுமொழி சொல்லத்தொடங்கினர்.

"இந்த என்சொல்லை நீ ஏற்றுக்கொள். இந்தச் சொல்லைச் சொல்லுகிறவன் என்னைப்போல் மற்றொருவன் பிறந்ததுமில்லை;பிறக்கப்போவதுமில்லை; இப்போதிருக்கவுமில்லை; நீகேட்பதை நீசொல்லுகிறபடியே நான்செய்யப்போகிறேன். இவளுக்குப்பிறக்கப்போகிற புத்திரன்எவனோ அவனே எங்களில் ராஜாவாக இருப்பான்" என்றார். இவ்வாறு அவர்சொல்ல, அந்தச்செம்படவன் திரும்பவும் அவரைநோக்கி, "பரதச்ரேஷ்டரே! ராஜ்யவிஷயத்தில் யாரும் செய்யாதகாரியத்தை நீர் செய்யவிரும்புகிறீர். அளவற்ற சக்தியுள்ளவரே!

---

* ரிஷ்ச்ரேஷ்டராகிய அஸிதர்என்னும் தேவரிஷியும் முன்னே ஸத்தியவதியிடம் விருப்பமுள்ளவராக இருந்தார். அவரையும் நான் முன்னே மறுத்துவிட்டேன் என்பது உத்தரதேசபாடம்.

நீர்தாம் சந்தனுவுக்கு நாதனுகவந்திருக்கிறீர். தர்மத்தில் சித்தமுள் ளவரே! இந்தக்கன்னிகைக்கும் நீரே பிரபு. இவளைக்கொடுப்பதற் கும் நீரேஅதிகாரி. ஸுமுகரே! ஆனல் இந்த என்சொல்லியும் என்காரியத்தையும் நீர் அறிந்துகொள்ளும். எதிரிகளையடக்குகிற வரே! பெண்ணைச்சேர்ந்தவர்களின் இயற்கையினுல் நான் ஒன்று சொல்லப்போகிறேன். ஸத்தியத்தையும் தர்மத்தையும் கடைப் பிடித்தவரே! நீர் ஸத்தியவதிக்காக ராஜாக்களின்நடுவே வாக்குத்தத் தம் செய்தது உமக்கேதகும். சிறந்தகைகளையுடையவரே! அது மாறுது. இந்தவிஷயத்தில் எனக்கு ஸந்தேகமொன்றுமில்லை. ஆனல் உமக்குண்டாகும் ஸந்தேஹவிஷயத்தில் எனக்குப்பெரிய ஸந்தேகமிருக் கிறது" என்றுன். ராஜாவே! அவனுடைய இந்த அபிப்பிராயத்தை யறிந்துகொண்டு ஸத்தியத்தையும் தர்மத்தையும் முக்கியமாகக் கொண்ட பீஷ்மர் தமது தந்தையின் விருப்பத்தைச்செய்யக் கருதிய தனல் அப்போது வாக்குத்தத்தஞ் செய்தார்: "மேலான புகழுள்ள வனே! ஜனங்களின் ஸபையில் நான்செய்யும் பிரதிஜ்ஞையைத் தெரிந்துகொள். இங்குள்ள ரிஷிகளும் தேவர்களும் கண்ணுக்குத் தெரியாமலிருக்கிற பூதங்களனைத்தும் கேட்கட்டும். இந்தச்சொல் லைச் சொல்லுபவன் யாருமில்லை. செம்படவர்க்கரசனே! அரசருட் சிறந்தவனே! அரசர்கள்கேட்க என்பிதாவுக்காக நான்சொல்லும் இந்தச்சொல்லை நீ தெரிந்துகொள். அரசர்களே! ராஜ்யம்முழுதும் முன்னமே என்னுல்விடப்பட்டது. ஸந்ததிக்காகவும் இப்போது பிரதிஜ்ஞை செய்யப்போகிறேன். செம்படவனே! இன்றுமுதல் எனக்குப்பிரம்மசாரிவிரதமே இருக்கும். எனக்குப் புத்திரனில்லாம லிருந்தபோதிலும் அழிவற்றபுண்ணிய லோகங்கள் மேலேயிருக்கும். நான் பிறந்ததுமுதல் இவ்வுலகில் ஒருபொய்யும் சொன்னதில்லை. என்னுயிர் என்தேஹத்தை ஒட்டியிருக்கும்வரையில் நான் புத்ரோத் பத்திசெய்யேன். உன்கன்னிகையை என்பிதாவுக்குக்கொடு. நான் ராஜ்யத்தையும் பெண்கலவியையும் முற்றிலும்விடுகிறேன். வீரி யத்தைவிடாதவனுக இருக்கப்போகிறேன். செம்படவனே! உனக்கு ஸத்தியமாகச்சொல்லுகிறேன்" என்றார். அந்தத் தர்மாத்மாவான தாசன் பீஷ்மருடைய அந்தச்சொல்லைக்கேட்டு மயிர்சிலிர்த்தவனுகி, "கொடுப்பேன்" என்றே அவருக்கு மறுமொழிசொன்னன். செய் தற்கருமையான அந்தச்செய்கையைப் பார்த்து அரசர்கள் புகழ்ந் தார்கள். பிறகு ஆகாயத்தில் அப்ஸரஸுகளும் தேவர்களும் ரிஷிக் கூட்டங்களும் பீஷ்மர்மீது புஷ்பவருஷம் வருஷித்தனர்; "இவர்

*பீஷ்மர்" என்றும் கூறினர். அதன்பிறகு பீஷ்மர், தமது பிதாவுக்காக அந்தப் புகழ்பெற்ற ஸத்தியவதியை நோக்கி, "தாயே! தேரிலேறு. நம்மணிக்குப்போவோம்" என்றுசொன்னர். பீஷ்மர் இவ்வாறு சொல்லி அந்தப்பெண்மணியை ரதத்தின்மேலேற்றிக்கொண்டு ஹஸ்தினபுரம்வந்து சந்தனுவுக்குத் தெரிவித்தார். அவருடைய அந்தச் செயற்கரியசெய்கையை அரசர்கள் சேர்ந்தும் தனித்தும் புகழ்ந்தனர்; 'இவர் பீஷ்மர்' என்றும் கூறினர். பாரதரே! பீஷ்மரால்செய்யப்பட்ட அந்தச்செயற்கரியசெய்கையைக் கேள்வியுற்று, சந்தனுமஹாராஜா வெகுநாள் துயரமுற்றிருந்தான். அந்தராஜா தன்பிள்ளையினுடைய அந்தச்செய்கையினால் திருப்தியடைந்து அன்புடன் அம்மஹாத்மாவுக்கு அவர்கருதியபோது மரணம் நேரிடுவதை வரமாகக் கொடுத்தான்; "குற்றமற்றவனே! நீ எதுவரையில் ஜீவித்திருக்க விரும்புகிறாயோ அதுவரையில் உன்விஷயத்தில் யமனுக்கு அதிகாரமிராது. உன்னுடையஅனுமதி பெற்றபிறகுதான் யமன் அதிகாரியாவான்" என்றான்.

நூற்றெட்டாவது அத்தியாயம்.

ஸம்பவபர்வம். (தொடர்ச்சி).*

(சந்தனுவுக்கு ஸத்தியவதியினிடம் இரண்டுபுத்திரர்கள் பிறந்ததும், சந்தனு காலம்சென்றபிறகு சித்ராங்கதனுக்குப் பீஷ்மர் ராஜ்யாபிஷேகம் செய்வித்ததும், அவன் கந்தர்வனால் யுத்தத்திலடிபட்ட பிறகு அவனுக்கு இளையவனான விசித்ரவீரியனுக்குப் பட்டாபிஷேகம் செய்வித்ததும்).

அந்த ஸத்தியவதியைச் சேதிராஜாவாகிய உபரிசரவஸுவின் புத்திரியென்றும் செம்படவர்க்காசனால் வளர்க்கப்பட்டவளென்றுமறிந்து ராஜா சாஸ்திரோக்தமான கிரியையைச்செய்து விவாகஞ்செய்தான். அந்தவிவாஹம் நடந்தபிறகு அந்தராஜாவாகிய சந்தனு அழகுநிரம்பிய அந்தப்பெண்மணித் தன் அந்தப்புரத்தில் வைத்துக்கொண்டான். பிறகு சந்தனுவுக்கு ஸத்தியவதியினிடம் சிறந்த புத்தியுள்ளவனும் புருஷச்ரேஷ்டனும் வீரனுமாகிய சித்ராங்கதனென்னும் புத்திரன் பிறந்தான். பிறகு வீரனாகிய சந்தனுமஹாராஜா சிறந்த வில்லாளியான ராஜாவாகிய விசித்திரவீரியனென்னும் இரண்டாவது புத்திரனை ஸத்தியவதியினிடம் உண்டுபண்ணினான். புருஷச்ரே

* யாரும்பயப்படத்தக்கவர்.

ஷ்டனுகிய அந்த விசித்ரவீரியனுக்கு யௌவனம்வருவதற்கு முன் னமே புத்திமானுகிய அந்தச் சந்தனுமஹாராஜாவின் காலம் முடிந் தது. சந்தனு ஸ்வர்க்கம்போனபின் பீஷ்மர் ஸத்தியவதியின் அபிப் ராயத்தை அனுஸரித்து வீரனுகிய சித்ராங்கதனை ராஜ்யத்தில் பட் டாபிஷேகஞ்செய்வித்தார். அந்தச் சித்ராங்கதன் சௌர்யத்தினுல் எல்லா அரசர்களையும் கீழ்ப்படுத்தினுன். மனுஷ்யன் ஒருவனையும் தனக்குஒப்பாக அவன் நினைக்கவில்லை. தேவர்களையும் மனிதர்களை யும் அஸுரர்களையும் தோற்கச்செய்கிற அவனை அதிபயபராக்ரமத் தையுள்ள மிகுந்த பலசாலியான கந்தர்வராஜன் எதிர்த்துச்சென்று, அப்போது, "ராஜகுமாரனே! நீ என்பெயருள்ளவனுயிருக்கிறுய்; எனக்கு யுத் தத்தைக்கொடு; யுத்தம் கொடுக்கமாட்டாயாயின் வேறு பெயரையா வது வைத்துக்கொள்; உன்னுடன் யுத்தத்தை நான் விரும்புகிறேன்; என்பெயர் உனக்கிருப்பதனுல் உன்னிடத்திற்கு வந்திருக்கிறேன்; என் பெயரைச்சொல்லி உன்னையழைப்பதனுல் என்பெயர் வீணுகத்தகாது" என்றுசொன்னன். இவ்வாறுசொன்னபின், அவ்விருவரும் கர்ச்சித் துக்கொண்டு ஹிரண்வதிநதிக்கரைக்குச்சென்றனர். சித்ராங்கதனுக்கு அந்தக்கந்தர்வனுடு குருக்ஷேத்திரத்தில் பெரும்போர் நடந்தது. பலசாலிகளாகிய கந்தர்வராஜனும் குருராஜனுமாகிய இருவருக்கும் அந்த ஹிரண்வதிநதிக்கரையில் மூன்றுவருஷகாலம் சண்டைநடந் தது. இடைவிடாமல் ஆயுதங்களை வருஷிப்பதனுல் பயங்கரமான அந்தப் பெருஞ்சண்டையில் மாயையில் மிகுந்தவனுகிய கந்தர்வன் குருச்ரேஷ்டனுகிய சித்ராங்கதனென்னும் வீரனைக் கொன்றுன். அந் தக்கந்தர்வன் எதிரிகளையடக்குகிற ராஜாவான சித்ராங்கதனை அடி த்து முடியும்படிசெய்து பிறகு ஸ்வர்க்கம்சென்றுன். மிகுந்தசக்தி யுள்ள அந்தப்புருஷஸிம்மமாகிய சித்ராங்கதன் கொல்லப்பட்டபின் சந்தனுபுத்ரரான பீஷ்மர் தாமே ராஜாவாகஇருந்து அவனுடைய பிரேதகாரியங்களைச் செய்வித்தார். அப்போது சிறந்த புஜபலத்தை யுடைய பீஷ்மர் பருவம்வராத சிறுவனை விசித்ரவீரியனை அவனுக்கு அடுத்தவனுகக் கௌரவராஜ்ய பட்டாபிஷேகம் செய்வித்தார். ஜன மேஜயமஹாராஜாவே! அப்போது அந்த விசித்ரவீர்யன் பீஷ்மர் சொல்லுகிறபடியே தன்தகப்பன் பாட்டன் வழியாகவந்த ராஜ்யத்தை ஆண்டான். அவ்வரசன் தர்மசாஸ்திரத்தில் தேர்ந்தவராகிய சந்தனு புத்ரரான பீஷ்மரை முறைப்படி பூஜித்தான். அவரும் விசித்ரவீர்ய னைப் பரிபாலித்தார்.

நூற்றொன்பதாவது அத்தியாயம்.

ஸம்பவபர்வம். (தொடர்ச்சி).

(பீஷ்மர் தமது ஸஹோதரனை விசித்ரவீர்யனுக்காகக் கொண்டுவந்த அம்பை அம்பாலிகை அம்பிகையென்னும் மூன்றுபெண்களில், அம்பையென்பவள், தான் சால்வனைவிரும்பினதாகச்சொல்ல, அவளை விட்டுவிடுதலும், மற்றொருபுருஷனிடமிருந்து வந்ததனால் சால்வனும் அவளை அங்கீகரிக்காமலிருந்ததும், அதன்மேல் அவள் பீஷ்மரைக் கொல்வதற்குத் தவம்செய்ததுபோது குமாரக்கடவுள் அவளுக்கு மாலைகொடுத்து அனுக்கிரகம்செய்ததும்).

குருவம்சத்தவரே! சித்ராங்கதன் இறந்தபின் தம்ஸஹோதரனை விசித்ரவீர்யன் சிறுவனாயிருந்தபோது பீஷ்மர் ஸத்தியவதியின் அபிப்பிராயத்தையனுஸரித்து அந்தராஜ்யத்தைப் பரிபாலனஞ்செய்தார். புத்திமான்களுட்சிறந்தவரான பீஷ்மர் அவ்வாறு ஒப்பற்ற ஸௌக்கியத்திலிருந்துகொண்டிருந்த விசித்ரவீர்யனுக்கு யௌவனம் வந்ததைக்கண்டு அவனுடையவிவாஹத்தைப்பற்றி ஆலோசனை செய்தார். பிறகு பீஷ்மர் அப்ஸரஸுகளுக்கொப்பாகிய காசிராஜாவின் கன்னிகைகள் மூன்றுபெயர் சேர்ந்து ஸ்வயம்வரம் செய்வதைக் கேள்வியுற்றார். பிறகு தேசாளிகளிற் சிறந்தவரும் சத்துருக்களை ஜயிப்பவரும் ஸமர்த்தருமான அந்தப் பீஷ்மர் தமது தாயாரிடம் அனுமதிபெற்றுக்கொண்டு ஒற்றைத்தேரோடு காசிக்குச்சென்றார். அவ்விடத்தில் சந்தனுபுத்ரரான பீஷ்மர் எல்லாத்தேசங்களினின்றும் வந்து கூடியிருக்கின்ற ராஜாக்களையும் அந்தப்பெண்களையும் கண்டார். அந்தப்பெண்கள்மீது ஆசையோடு கர்வித்துக் காசிதேசத்தவரும் கோசலதேசத்தவரும் வங்கதேசத்தவரும் புண்டரதேசத்தவரும் கலிங்கதேசத்தவருமாகிய அரசர்கள் கூட்டமாக அந்தநகரத்திற்குப் போயினர். எல்லாராஜாக்களின் பெயர்களும் சொல்லப்படும்போது சந்தனுபுத்ரரும் வயதில் முதிர்ந்தவருமாகிய பீஷ்மர் தனித்திருக்கக்கண்டு மிக்கஅழகான அந்தக்கன்னிகைகள் அவரும் கிழவரென்ற எண்ணத்தினால் பயந்தவர்கள்போல் விலகிப்போயினர். பாரதரே! அங்கிருந்த அற்பர்களான அரசர்கள், "முதிர்ந்தவரும் மிக்கதர்மாத்மாவும் மடிப்பையும் நரையையும் தரித்தவருமாகிய பரதச்ரேஷ்டரான பீஷ்மர் லஜ்ஜையைவிட்டு இங்கு ஏன்வந்திருக்கிறார்? இந்தப்பாதர் பிரதிஜ்ஞையைப்பொய்யாகச் செய்து

விட்டு ஜனங்களுக்கு என்னசொல்லுவார்? பீஷ்மர் பிரம்மசாரியென்று பூமியில் வீண்புகழ்பெற்றார்" என்று பேசிக்கொண்டு சிரித்தனர். ஜனமேஜயராஜரே! அந்த அரசர்களின் சொல்லைக்கேட்டுப் பீஷ்மர் கோபித்தார். ஸமர்த்தரான பீஷ்மர் அப்போது அந்தக்கன்னிகைகளைத் தாமாகவே வரித்தார். ஜனமேஜயராஜாவே! அந்தப்பெண்களைத் தமதுதேரின்மேல் ஏற்றிக்கொண்டு போர்செய்கிறவரிற்சிறந்த பீஷ்மர் மேககர்ச்சனத்திற்கொப்பான குரலுடன் அவ்வரசர்களை நோக்கிச் சொல்லலானார்.

* "குணமுள்ளவர்களையழைத்து இயன்றஅளவு பொருள் கொடுத்துப் பெண்களுக்கு அலங்காரஞ்செய்து அந்தப்பெண்களை அவர்களுக்குக்கொடுப்பது ரிஷிகளினால் தர்மசாஸ்திரங்களில் விதிக்கப்பட்டிருக்கிறது. †இன்னும்சிலர் இரண்டுபசுக்களை வாங்கிக்கொண்டும் கன்னிகையைக்கொடுக்கின்றனர். ‡பணம்பேசிக்கொண்டு சிலர் கொடுக்கின்றனர். §இன்னும்சிலர் ஸாமர்த்தியத்தினால் கன்னிகையைச் சம்மதிக்கச்செய்து விவாஹம்செய்கின்றனர். $இன்னும் சிலர் தூக்கமயக்கம் முதலியவற்றிலிருக்கின்ற கன்னிகையை அபஹரித்து விவாஹம்செய்கின்றனர். ||மற்றும்சிலர் பெற்றோர் அனுமதியின்மேல் தாங்களே கன்னிகைகளை விவாஹஞ்செய்கின்றனர். ¶இன்னும் சிலர் வேதோக்தமான யஜ்ஞவிதியைமுன்னிட்டு விவாஹஞ்செய்துகொள்ளுகின்றனர். எட்டாவதான ராக்ஷஸவிவாஹமே புத்திசாலிகளால் விரும்பப்பட்டதென்றறியுங்கள். மேலும் ராஜபுத்திரர்கள் ஸ்வயம்வரத்தைச் சிலாகிக்கவும் சிலாகிக்கின்றனர்; செய்யவும் செய்கின்றனர். ஆனால், தர்மசாஸ்திரம் சொல்லுகின்றவர்கள் பலாத்காரமாகக் கொண்டுபோகப்பட்டவளே சிறந்தவளென்று சொல்லுகின்றனர். அரசர்களே! ஆதலால், இந்தப்பெண்களை, இங்கிருந்து பலாத்காரமாகக் கொண்டுபோகக் கருதுகிறேன். நீங்கள் உங்கள் சக்தியளவு ஜயிக்கவோ தோற்கவோ ஆரம்பஞ்செய்யுங்கள். அரசர்களே! நான் யுத்தத்திற்காக நிச்சயம்செய்துகொண்டு நிற்கிறேன்" என்றார்.

வீரரான அந்தப்பீஷ்மர் அரசர்களையும் காசிராஜாவையும்நோக்கி இவ்வாறுசொல்லி அந்தக்கன்னிகைகளைத் தமது ரதத்தின்மேலேற்றி அந்தராஜாக்களிடம் விடைபெற்றுக்கொண்டு அந்தக்கன்னிகைகளை

---

* பிராம்மவிவாஹம். † ஆர்ஷவிவாஹம். ‡ ஆஸுரவிவாஹம்.
§ காந்தர்வவிவாஹம். $ பைசாசவிவாஹம். || ப்ராஜாபத்யம்.
¶ தைவவிவாஹம்.

டன் விரைவாகச்சென்றார். பிறகு அவ்வரசர்களனைவரும் கோப முற்றுத் தங்கள் தோள்களைத் தட்டிக்கொண்டும், உதடுகளைக் கடித் துக்கொண்டும் கிளம்பினர். வெகுஅவஸரமாக அவர்கள் ஆபரணங் களையும் கவசங்களையும் அணிந்துகொள்ளும்போது மிகுந்த கலக்க முண்டாயிற்று. ஜனமேஜயரே! எல்லாஆபரணங்களும் எல்லாக்கவ சங்களும் சேர்ந்து நக்ஷத்திரங்கள் சேர்ந்ததுபோலிருந்தன. அந்த வீரர்களெல்லாரும், ஸாரதிகளால் உத்தமமான குதிரைகளைப் பூட்டிக் கொண்டு வரப்பட்ட அழகிய தேர்களில் எல்லாஆயுதங்களோடும் ஏறி, கவசங்களும் ஆபரணங்களும் இங்குமங்கும் சிதறக் கோபத் தினாலும்பொருமையினாலும் புருவங்களைநெரித்துக் கண்கள்சிவந்து, முன்னே போகின்றபீஷ்மரை ஆயுதங்களை ஓங்கிக்கொண்டு பின் தொடர்ந்தனர். பிறகு அவ்வரசர்கள் அநேகருக்கும் பீஷ்மர் ஒருவ ருக்கும் பயங்கரமும் மயிர்க்கூச்சமுண்டாக்குவதுமாகிய யுத்தம் நேர்ந்தது. அவர்கள் பதினாயிரம்பாணங்களைப் பீஷ்மர்மீது ஒரே காலத்தில் எய்தனர். அந்தப்பீஷ்மர் இடைவிடாமல் ஓடுகின்ற பெரிய சரமாரியினால் அவர்கள் எய்தபாணங்களெல்லாம் தம்மிடம்வராமலே விரைவாக இடையில் அறுத்துத்தள்ளினர். பிறகு அவ்வரசர்களனை வரும் பீஷ்மரைச்சுற்றிலும் வளைத்துக்கொண்டு மேகங்கள் மலையின் மீதுவருஷிப்பதுபோல்சரமாரிபொழிந்தனர். பீஷ்மர்நான்குபுறங்களி லும்வந்த அந்தப் பாணவருஷங்களைப் பாணங்களினால் தடுத்துப் பிறகு எல்லாஅரசர்களையும் மும்மூன்று பாணங்களினால் அடித்தார். ஜனமேஜயராஜாவே! அவ்வரசர்களில் ஒவ்வொருவரும் ஐந்து ஐந்து பாணங்களினால் பீஷ்மரை அடித்தார்கள். அவரும் பராக்ரமத்தைக் காண்பித்து இரண்டிரண்டு பாணங்களினால் அவர்களை மறுபடி அடித் தார். அம்புகளும் சக்தியாயுதங்களும் மிகுதியாகவுள்ள அந்தக் கடும்போரானது பார்க்கின்ற உலகத்திலுள்ள வீரர்களுக்கெல்லாம் தேவாஸுரயுத்தம்போல் பயங்கரமாகஇருந்தது. பீஷ்மர் அந்தயுத் தத்தில் தனுஸ்களையும் கொடிகளின் நுனிகளையும் கவசங்களையும் தலைகளையும் நூற்றுக்கணக்காகவும் ஆயிரக்கணக்காகவும் துணித் தார். யுத்தத்தில் பீஷ்மர் ரதமேறிச் சஞ்சரித்துச் செய்ததான மனி தர் செய்யமுடியாத செய்கையையும் அவருடைய ஹஸ்தலாகவத் தையும் தம்மை அவர் காப்பாற்றிக்கொள்வதையும் எதிரிகளும் சிலா கித்தனர். நிஜப்பதற்கரிய பராக்ரமமுள்ள அந்தக்கங்காபுத்ரரான பீஷ்மர் தாம் அடிபடாமல் எதிரிகளையழித்துக் காசிராஜாவின் பெண் களைக்கொண்டுவந்தார். ஆயுதம்பிடித்தவர்களிற் சிறந்தவரும் பரத

குலத்தவருமாகிய அந்தப்பீஷ்மர் யுத்தத்தில் அவர்களைஜயித்துக் கன்னிகைகளுடன்கூடப் பரதநாட்டிற்குச்சென்றார்.

ஜனமேஜயராஜாவே! மஹாரதனும் அறியக்கூடாத மன முடையவனுமாகிய சால்வராஜன் அந்தச்சந்தனுபுத்ரராகிய பீஷ்மரை யுத்தத்தில் பின்தொடர்ந்தான். பலமுள்ளவற்றிற் சிறந்த யானைக்கூட்டத்து அரசயானையானது பெண்யானையைத் தொடரும்போது மற்றோர் ஆண்யானையைத் தந்தங்களினால் இடிப்பதுபோல் பீஷ்மரைப் பின்னலடித்துக்கொண்டு சிறந்தகைகளையுடைய அந்தச்சால்வராஜன் பெண்களின்மேல் விருப்பங்கொண்டு பொறுமையினால் தூண்டப் பட்டவனைப் பீஷ்மரைநோக்கி, "நில் நில்" என்றுசொன்னன். பிறகு எதிரிகளுடைய சைன்யத்தையழிப்பவரும் மஹாரதரும் புருஷச்ரேஷ்டருமான பீஷ்மர் அவன்சொல்லினால் கலங்கச்செய்யப் பட்டுக் கோபத்தினால் புகையொழிந்த அக்னிபோல் ஜ்வலித்துக் கொண்டு தொடுத்த அம்போடுகூடிய வில்லைக் கையிலேந்தி நெறித்த நெற்றியோடு க்ஷத்ரியதர்மத்தை முன்னிட்டுப் பயமும் பரபரப்பும் அற்றவராகச் சால்வனையெதிர்த்து ரதத்தைத் திருப்பினர். அவர் திரும்பிவருவதைக்கண்டு அங்குள்ள எல்லா அரசர்களும், பீஷ்மரும் சால்வனும் சந்திப்பதைப் பார்ப்பவர்களாயினர். பலத்தினாலும் பரா க்ரமத்தினாலும் சோபிக்கின்ற அவர்கள் ஒருபசுமாட்டிற்காக இரண்டு பலமுள்ள விருஷபங்கள் கர்ச்சிப்பதுபோலக் கர்ச்சித்துக்கொண்டு ஒருவரையொருவர் எதிர்த்துசென்றனர். பிறகு சந்தனுபுத்ரராகிய பீஷ்மர்மீது புருஷச்ரேஷ்டனாகிய சால்வராஜன் விரைவாகச் செல்லு கின்ற பாணங்களை லக்ஷ்யக்கணக்காக வருஷித்தான். முதலில் சால்வ னால் பீஷ்மர் அடிக்கப்பட்டதைக்கண்டு அவ்வரசர்கள வியப்புற்று, "நல்லது நல்லது" என்றுகூறினர். அவ்வரசர்களனைவரும் யுத்தத் தில் சால்வனுடைய ஹஸ்தலாகவத்தைக்கண்டு சந்தோஷமடைந்து அவனை ஸ்தோத்திரங்களினால் சிறப்பித்தனர். பிறகு க்ஷத்ரியர்களின் ஸ்தோத்திரங்களைக்கேட்டுச் சத்துருக்களின் நகரங்களை ஜயிப்பவரும் சந்தனுபுத்திரருமாகிய பீஷ்மர் கோபித்துச் சால்வராஜனை, "நில் நில்" என்றுசொன்னர். கோபித்துக்கொண்டு ஸாரதியைநோக்கி, "அந்தராஜா இருக்கிறவிடம்செல்; பாம்பைக் கருடன்கொல்வது போல் இப்போது அவனைக்கொல்லப்போகிறேன்" என்றுசொன்னர். பிறகு அந்தக்களைவர் வாருணஸ்திரத்தைச் செம்மையாகத்தொடுத் தார். ஜனமேஜயராஜாவே! அதனால் சால்வராஜன் குதிரைகள் நான் கையும் கொன்றார். ராஜச்ரேஷ்டரே! களைவராகிய பீஷ்மர் சால்வ

ராஜாவின் அஸ்திரங்களை அஸ்திரங்களால் தடுத்து அவன் ஸாரதியைக்கொன்று அதன்பிறகு ஐந்திராஸ்திரத்தினால் அவனுடைய உத்தமமான குதிரைகளையும்கொன்றார். புருஷச்ரேஷ்டரே! சந்தனுபுத்திரராகிய பீஷ்மர் பெண்களுக்காக அப்போது ராஜச்ரேஷ்டனாகிய சால்வனை ஜயித்து உயிரோடுவிட்டுவிட்டார். பரதசிரேஷ்டரே! பிறகு சால்வராஜன் தன் நகரம்சென்று க்ஷத்ரியதர்மப்படி ராஜ்யபரிபாலனம் செய்துகொண்டிருந்தான். அவ்விடத்தில் ஸ்வயம்வரம் பார்க்கவிரும்பி அங்கேவந்திருந்த வீரர்களான அரசர்களும் தங்கள் தங்கள் தேசங்களுக்கே சென்றனர்.

இவ்வாறு யுத்தம்செய்கிறவர்களுள் சிறந்தவராகிய பீஷ்மர் அந்தக் கன்னிகைகளை ஜயித்துக் குருவம்சத்து ராஜாவாகிய விசித்ரவீரியனிருப்பிடமான ஹஸ்தினபுரத்திற்குச் சென்றார். தர்மாத்மாவான விசித்ரவீரியன் தன்பிதாவும் குருவம்சத்து ராஜச்ரேஷ்டனுமாகிய சந்தனுவைப்போலவே இந்தப்பூமியை ஆண்டுகொண்டிருந்தான். ராஜாவே! நினைத்தற்கரிய பராக்கிரமமுள்ள அந்தக் கங்காபுத்திரராகிய பீஷ்மர் பிதாவில் தாம்அடிபடாமல் எதிரிகளையழித்துச் சீக்கிரத்தில் நதிகளையும் மலைகளையும் பலவகைமரங்கள் மிகுந்த வனங்களையும்தாண்டிக் காசிராஜாவின் பெண்களைக்கொண்டுவந்தார். தர்மாத்மாவாகிய அந்தப்பீஷ்மர் மருமகளைப்போலவும் உடன்பிறந்த சகோதரிகளைப்போலவும் பெண்களைப்போலவுமதித்துக்கொண்டு குருக்ஷேத்திரம்போனார். சிறந்தகைகளையுடைய பீஷ்மர் தம் ஸஹோதரனுடைய விருப்பத்தை நிறைவேற்றக்கருதி அவர்களைக் கொண்டுவந்தார். எல்லாக்குணங்களும் நிரம்பின அந்தப்பெண்களைத் தம்பராக்ரமத்தினற்கொண்டுவந்து தமது இளையஸஹோதரனை விசித்ரவீரியனுக்கு அவன் ஸஹோதரரான பீஷ்மர் கொடுத்தார். தர்மம்தெரிந்த. வரும் சுத்தமான மனஸுள்ளவருமாகிய பீஷ்மர், இப்படித் தர்மத்தோடு, மனிதருக்கு முடியாதசெய்கையைச செய்து ஸத்தியவதியோடுகூட ரஹஸ்யமாக ஆலோசனைசெய்து தம்ஸஹோதரனை விசித்ரவீர்யனுக்கு விவாஹம்செய்யத்தொடங்கினர்.

அப்போது அவர்களுக்குள் மூத்தவளாகிய காசிராஜாவின் பெண், விவாஹம்செய்விக்கத்தொடங்கின பீஷ்மரைநோக்கி நகைத்து அடியில்வருமாறுசொல்லலானாள்: "நான் சௌபலதேசத்தரசனை சால்வனைப் புருஷனாக முன்னமே என்மனத்தால் வரித்துவிட்டேன். அவனும் முன்னமே என்னை வரித்திருக்கிறான். என்தகப்பனுடைய அபிப்பிராயமும் இதுதான். அந்த ஸ்வயம்வரத்தில் நான் சால்

வனை வரிப்பதற்கிருந்தேன். தர்மந்தெரிந்தவரே! இதையறிந்தபின் நீர் ஸரியானதர்மத்தை நடத்துவீராக" என்றாள். பிராம்மணஸபையில் அந்தக்கன்னிகை இவ்வாறுசொன்னபின் வீரரானபீஷ்மர் அந்த விவாஹகாரியத்தைப் பற்றிய ஆலோசனையைச் செய்தார்: "என்னால் ஜயிக்கப்பட்ட மூத்தபெண்ணுகிய இந்த அம்பையென்னும் கன்னிகை வேறு புருஷன்மேல் ஆசைவைத்தவளாகவிருக்கிறாள். வாக்காலே கொடுக்கப்பட்டவளும் மனத்தாலே கொடுக்கப்பட்டவளும் விவாஹத்தைச்சேர்ந்த மந்திரங்கள் சொல்லப்பட்டவளும் அபலானுக்காகக் குறிப்பிடப்பட்டவளும் அயற்புருஷனிடத்தில் ஆசைவைத்தவளும் விடத்தக்கவர்கள்" என்றுசொல்லித் தம்சொற்படி நடக்கின்ற தம் சகோதரனுடைய அனுமதியின்மேல் வேதங்களின் கரை கண்ட பிராம்மணர்களுடன் ஆலோசனைசெய்து தர்மந்தெரிந்த பீஷ்மர் அப்போதே சாசிராஜாவின் ஜ்யேஷ்டபுத்திரியாகிய அம்பையை அனுப்பினர். தம் கனிஷ்டசகோதரனுகிய விசித்ரவீரியனுக்குச் சாஸ்திரோக்த கிரியையைச்செய்து அம்பிகை அம்பாலிகை என்னும் இருவரையும் பாரியைகளாகப் பீஷ்மர் கன்னிகாதானஞ்செய்தார். அழகினாலும் யௌவனத்தினாலும் கர்வங்கொண்ட தர்மாத்மாவாகிய விசித்ரவீரியன் அவ்விருவர்களையும் பாணிக்ரஹணஞ் செய்துகொண்டபின் அம்பையை எவ்வகையிலும் விரும்பவில்லை. பார்ப்பதற்கு அழகான அம்பை மற்றொரு புருஷனைப்பற்றிச் சொன்னதற்காக விசித்ரவீரியன், "ஆரியரே! அயோக்கியமும் பிரயோஜனமில்லாததுமாகிய இந்தக்காமம் பாபத்தின் பயன்தான். பரபுருஷனை விரும்பினவளை அனுபவிப்பதற்கு என்னை நீங்கள் கட்டளையிடாமலிருக்கவேண்டும்" என்றுசொன்னான். பீஷ்மர், "குழந்தாய், தர்மாத்மாவே! காமத்திற்குட்படாத நடையுள்ள உன்னை ஸந்ததியாகப்பெற்ற சந்தனுவம்சம் புகழ்பெற்றது. உன்அபிப்ராயம் நியாயமென்று நான் நினைக்கிறேன்" என்று விசித்ரவீர்யனுக்குச் சொல்லி, அம்பையைநோக்கி அடியில்வருமாறு சொல்லத்தொடங்கினர்: "சுற்றமற்றவளே! உனக்கு விடைகொடுக்கிறேன்; நீ விருப்பம்போலே செல்லலாம்; என் அன்பனை ஸஹோதரனை எவத்தகாத காரியத்தில் எவுவதற்கு நான் ஸமர்த்தனல்லேன். வேறுபுருஷனிடம் மனம்வைத்த பெண்ணை எவன் வீட்டில் வைத்துக்கொள்ளுவன்? ஆதலால், உன்னை நான் வைத்துக்கொள்ளமாட்டேன்; நீவேறொருவனை விரும்பியிருக்கிறாய்; போகலாம்; நான்நிதேந்திரியன்; விவாஹத்தில் விருப்பமற்றவன்; நம்மிருவருக்கும் ஸம்பந்தம் எவ்வகையிலும் நேராது" என்றார்.

ஜனமேஜயராஜாவே! சால்வராஜனைக் குறிப்பிட்டவளான அம்பை அவ்விடத்தில் பீஷ்மரால் இவ்வாறு சொல்லப்பட்டபின், தன் ஸகிகளுடன்கூடிச் சால்வராஜனுடைய பட்டணத்துக்கு மெல்லமெல்லச்சென்றாள். பிறகு அந்தஅம்பை சால்வனிடம்சென்று அவனைக் கௌரவித்து, "அழகான முகமுள்ளவனே! நீ முன்னேயே மனஸினல் குறிப்பிட்டபடியால் பரதச்ரேஷ்டராகிய பீஷ்மரையும் அவர்தம்பியையும் விட்டுவிட்டு உன்னிடம்வந்திருக்கிறேன். வலுவில்வந்திருக்கிற என்னைச் சாஸ்திரப்படி விவாஹம்செய்துகொள். உனக்கு ஸுகமுண்டாகட்டும்" என்று சொன்னாள். அவளால் இவ்வாறு சொல்லப்பட்ட சால்வனும் சிரித்துக்கொண்டு அவளைப்பார்த்து, "பீஷ்மர் ராஜாக்கள்நடுவில் என்னைஜயித்து உன்னைவசப்படுத்திக்கொண்டார். அழகியவளே! வேறொருவனால் வசப்படுத்தப்பட்டு அவனால் தன் வீட்டிலிருந்து அனுப்பப்பட்டவளை நான் அங்கிகரிக்கமாட்டேன். பெண்ணரசியே! நீ அங்கேயேபோகலாம்" என்று சொன்னான். அவனால் இவ்வாறுசொல்லப்பட்ட அந்த அம்பை சிறப்புள்ள குருராஜ்யத்திற்கு வந்து அங்கே பீஷ்மரைநோக்கி, "நீ என்னைப் பலாத்காரமாகக் கொண்டுவந்தாய்; க்ஷத்திரிய தர்மத்தை ஆய்ந்துபார்; நியாயமாக நீதான் எனக்குக் கணவன். எவன் தன்பராக்கிரமத்தின் சிறப்பினால் ஸ்வயம்வரத்தில் எல்லாராஜாக்களையும் ஜயித்து ஒருகன்னிகையை ஸ்வாதீனப்படுத்துகிறானோ அவன் அவளை நிச்சயமாக விவாஹம்செய்துகொள்ளவேண்டும். நீ என்னை ஜயத்தினால் அடைந்தவனதலால் எனக்கு நீதான் கணவன். பீஷ்மனே! ஆதலால் ஸபையில் உன்னால் ஜயித்து வசப்படுத்தப்பட்ட என்னை நீயே விவாஹம்செய்துகொள்" என்று சொன்னாள். பீஷ்மர், "நான் ஜிதேந்திரியன்" என்று பலமுறை மறுத்தார். அந்த அம்பையும், "நீ எவ்வாறு ஜயித்தாயோ அவ்வாறே செய்" என்று பீஷ்மருக்குச்சொன்னாள். தாமரைப் புஷ்பம்போன்ற கண்களையுடைய அம்பை ஆறுவருஷம் இவ்வாறு அனுஸரித்தாள். பீஷ்மர், "அழகியவளே! நான் ஜிதேந்திரியன். விவாஹத்தை விரும்பாதவனாகிவிட்டேன். நீ முதலிலேயே மனஸினல்வரித்த சால்வனிடத்திற்கே செல்லலாம். நீ வேறொருவனிடத்தில் ஆசைவைத்ததாக உன்னைப்பற்றி முன்னேஎன் சொன்னாய்? வேறொருவனிடத்தில் ஆசைவைத்த வயதுவந்த கன்னிகையைத் தன் வீட்டில் யாரும் வைத்துக்கொள்ளமாட்டார். அழகியவளே! நான் என் இளையஸஹோதரனை விசித்ரவீர்யனுக்கும் உன்னை மணம்செய்விக்கமாட்டேன். உன்விருப்பம்போலப் போகலாம்" என்று சொன்

னுர். அம்பை மறுபடியும் சால்வனிடம்போய், "ராஜாவே! என்னைக் கிரஹித்துக்கொள்" என்று சொன்னுள். "மற்றொருவன் ஜயித்தவளை நான் அங்கீகரிக்கமாட்டேன்" என்று சால்வன்விட்டு விட்டான். நான், "ஜிதேந்திரியன்" என்றுசொல்லிப் பீஷ்மரும் விட்டுவிட்டார். ஜனமேஜயராஜாவே! பருத்தும் உயர்ந்துமிருக்கின்ற இரண்டு ஸ்தனங்களும் அகன்ற சகனமும் கண்களுமுடைய வளும், நிதம்பங்களின் பாரத்தினுல் மேன்மையான நடையையுடைய வளும், பூர்ணசந்திரனுக்கொப்பான முகமுடையவளும், பொழிகின்ற மேகக்கூட்டத்தின்மேல் பிரகாசிக்கின்ற மின்னலைப்போன்றவளுமாகிய உயர்ந்த மனஸுள்ள அந்தஅம்பை கண்ணீரினுல் பூமிநனையும்படி வ்யஸனப்பட்டுக்கொண்டு பீஷ்மரைவிட்டுச் சால்வனிடமும் சால்வனிடமிருந்துப் பீஷ்மரிடமுமாக இவ்வாறு பலமுறை போக்குவரவுகளினுல் ஆறுவருஷகாலம் கழித்தாள். அவள் அதற்குப்பின் பன்னிரண்டு வருஷகாலம் இமயமலையின் அழகானசரிவில் பாஹுதா நதிக்கரையில் கடுந்தவம் புரிந்தாள். அவ்விடத்தில் ஐம்புலன்களையுமடக்கி மிக்கமனவுறுதியுடன் தவம்செய்துகொண்டு காற்கட்டைவிரலால் நின்றுள். அதனுல் தேவர்கள் நடுங்கினர். அழியாதசேனையுடையவரும் வரம்கொடுப்பவரும் ஸர்வசக்தியுள்ளவருமாகிய ஷண்முகக்கடவுள் தேவர்களுக்கும் பயத்தையுண்டாக்கத்தக்க அவளுடைய அந்தத்தவத்தைக்கண்டு ஆச்சரியமும் ஸந்தோஷமும் அடைந்து அவளுக்கு அனுக்ரஹிக்க எண்ணங்கொண்டு அந்தராஜபுத்ரியைக் கௌரவிப்பதற்காக அவளுக்கு அழகான மாலையை அளித்தார்; "அம்பையே! அழகிய தாமரைப்புஷ்பங்களையுடைய இந்தத் தேவலோகத்து மாலை உனக்குத்தக்கபடி வந்திருக்கிறது. இது பூமியில் உன்வ்யஸனத்தை நிவிர்த்திசெய்வதாகும். நான்கொடுத்த இந்தமாலையைத் தரிப்பவன் எவனே அவன் பீஷ்மருடைய மரணத்துக்குக் காரணமாவான்" என்றும் சொல்லினர்.

நூற்றுப்பத்தாவது அத்தியாயம்.

ஸம்பவபர்வம். (தொடர்ச்சி).

(அம்பை பாஞ்சாலதேசத்தில் துருபதராஜன் அரண்மனை வாயிலில் மாலையை மாட்டிவந்ததும், ராஜபுத்ரியானசிகண்டினி அதைத்தரித்துத் தந்தையினுல் கோபித்து விடப்படுக் கங்கோத்பத்திக்குச்சென்று கந்தர்வனைக்கண்டு ஆணுருவமடைந்து திரும்பிவந்ததும்).

அம்பை, "மூடனானசால்வன் நான் வேறொருபுருஷனை அடைந்தவளென்று நினைத்து என்னை அங்கீகரிக்கவில்லை. அதனுல் பகி

யில்லாமல் தர்மத்தையும் விட்டுத் துக்கத்தைப்பொறுத்துக்கொண்டு எல்லாப் பக்கங்களிலுமுள்ள க்ஷத்ரியர்களாகிய உங்களனைவரையும் அழைக்கிறேன். க்ஷத்ரியர்களே! பீஷ்மனைக் கொல்வதற்குக் காரணமான இந்தமாலையை நீங்கள் வாங்கிக்கொள்ளுங்கள். எவன் பீஷ்மனைக் கொல்வானோ அவனுக்கு நான் பாரியையாவேன்" என்றுசொன்னாள். அவள் இவ்வாறு அலைந்துகொண்டிருக்கப் பின்னும் ஐந்து வருஷங்கள் சென்றன. பீஷ்மரிடம் பயந்திருந்ததனால் க்ஷத்ரியன் ஒருவனும் அவளுக்குத் தஞ்சமாகவில்லை. அந்தஅம்பை புகழ்பெற்றவனும் பிரதிஜ்ஞை தவறுதவனும் சிறந்தவில்லாளியும் பொய்யாமையையும் தர்மத்தையும் முக்கியமாகக்கொண்டவனுமான ஸோமகனென்னும் பாஞ்சாலதேசத்தரசனிடம் சென்றாள். அழகான கைகளையுடைய அந்தஅம்பை பாஞ்சாலதேசத்தரசால் காக்கப்பட்ட சபையின் வாயிலையடைந்து இருகரங்களையும் தூக்கிக்கொண்டு பாஞ்சாலதேசத்தரசனைநோக்கி, "யஜ்ஞஸேனனே! பீஷ்மனால்கொல்லப்படுகிறவளும் மடியில் முழுகுகிறவள் போன்றவளுமாகிய என்னை நீ இங்கே ஒடிவந்து கையைப்பிடித்துத் தூக்கிவிடு. அந்தப்பீஷ்மனால் என்னுடைய எல்லாத் தர்மங்களும் எல்லாக் காமஸுகங்களும் இம்மை மறுமையாகிய இரண்டுலோகங்களும் புகழும் * வேரோடும் † பலனோடும் அழிக்கப்பட்டன. நான் இவ்வாறுகதறியும் எங்கும் ஒரு ராஜபுத்ரனும் எனக்கு அடைக்கலமாகக் கிடைக்கவில்லை. இந்த லோகத்தில் திக்கற்றுத் துயரமுறும்படியாக க்ஷத்ரியர்கள் இல்லாமற் போயினரா? ராஜச்ரேஷ்டர்களே! எல்லாராஜாக்களும் சேர்ந்திருக்கும்போது நான் சொல்லுகிறேன். இக்ஷ்வாகு வம்சத்தவரிற் பெரியவரும் பாஞ்சால தேசத்தவரிற்சிறந்தவருமாகிய யோக்கியர்களான ராஜாக்களனைவரும் நான் சொல்வதைக் கேட்கக்கடவர். ஸோமகனாகிய யஜ்ஞஸேனனே! இந்த விவாஹவிஷயத்தில் தர்மம் என்னைக் கெடுத்துவிடாமலிருக்கவேண்டும். தயைசெய்து இப்போது நீ எனக்கு அடைக்கலமாக இருக்கக்கடவாய்" என்று கூவினாள்.

அதைக்கேட்டு யஜ்ஞஸேனன், "ராஜபுத்ரியே! உன்னை நான் அறிந்திருக்கிறேன். முக்கியமாக உனக்கொன்று தெரிவிக்கிறேன். என்சக்திக்கும் க்ஷத்ரியதர்மத்திற்கும்தக்கபடி நான் ஸேனையைவைத்துக்கொண்டிருக்கிறேன். ராஜகுமாரியே! உனக்கு மற்றராஜாக்களிடம் என்னபயம் இருந்தாலும் அதைப் போக்குவதற்குத் தகுந்த உபாயத்தைச்செய்ய என்னால் முடியும். சிறந்த அஸ்திரபலமுள்ள

* வீர்யாதிகம். † புத்ரோத்பத்தி.

பீஷ்மர் யுத்தஞ்செய்யும்போது பயத்தைப்போக்க நான் சக்தனல்லேன். க்ஷத்ரியதர்மமாகிய யுத்தம் பலத்துக்குத்தக்கபடிதான் இருக்கிறது. அழகியவளே! ஆதலால், நல்லது, செல்; பீஷ்மர் தமதுவன்மையினால் என்னை எரித்துவிடாமலிருக்கவேண்டும். மற்ற அரசர்களெல்லாம் என்னகாரணத்தினால் உன்சொல்லை அங்கீகரிக்கவில்லையோ அதை நானறியேன். பீஷ்மரையழித்து உன் தர்மத்தைக் காப்பாற்றுவதற்கு என்னால் எவ்வகையிலும் முடியாது" என்றுசொன்னான்.

இவ்வாறு சொல்லப்பட்ட அம்பை ராஜாவின்வாசலில் அந்த மாலையை மாட்டிவிட்டு ஓடிப்போனாள். எல்லாஜனங்களாலும் விடப்பட்டவளும் உக்கிரமான தவமுள்ளவளுமாகிய அந்தஅம்பையைத் துருபதன், "ஸுந்தரியே! மாலையையெடுத்துக்கொள்; எங்களுக்கு விரோதத்தைக் கொண்டுவந்து விடாதே" என்று பலமுறை நல்வார்த்தை சொல்லிக்கொண்டு பின்தொடர்ந்தான். அம்பை, "நான் சொன்னபடியேதான் நீ செய்யவேண்டும். விதி இவ்வாறிருக்கிறது; இது மானிடச்செயலன்று; விதியை மாற்றமுடியாது; எவன் இந்த மாலையையெடுத்துத் தானே கழுத்தில் போட்டுக்கொள்ளுகிறானோ அவன் என் தர்மத்தைக்கெடுத்த பீஷ்மனை யுத்தத்திற்கொல்லப்போகிறான்" என்றுசொன்னாள். அந்தத் துருபதராஜன் சிலகாலம்வரையில் அந்தமாலையை யாரும் எடுக்காமற் காப்பாற்றிவந்தான். அதன்பின் யாரும் எடுக்கமாட்டார்களென்ற நம்பிக்கையுடன் அதைக் கவனிக்காமல் விட்டுவிட்டான். சிகண்டினியென்னும் சிறுபெண் தந்தைசொன்னதைக் கவனிக்காமல் அந்தமாலையைப் போட்டுக்கொண்டாள். பீஷ்மர்விஷயத்தில் அபராதமென்று பயந்து உடனே அந்தப்பெண்ணைத் தகப்பன் விட்டுவிட்டான். அந்தப்பெண் பயந்து கங்கோத்பத்தியில் தவஞ்செய்துகொண்டிருந்த இஷீகரென்னும் பிரம்மரிஷியை ஆராதிப்பதற்காகத் தானும் தவவேஷந் தரித்துக்கொண்டு அவரிடம் சென்றாள். அந்த ரிஷிச்ரேஷ்டர் அவளுடைய சுச்ரூஷையினால் ஸந்தோஷமடைந்து அவளைநோக்கி, "கங்கையின் உத்பத்தியில் சீக்கிரகாலத்தில் விபஜனம் என்னும் உத்ஸவம் வரப்போகிறது. அதில் பார்ப்பதற்கினிய தும்புருவென்னும் கந்தர்வராஜனைச் சந்தோஷப்படுத்த யத்தனஞ்செய். அவனுக்குச் செம்மையாகப் பணிவிடைசெய். அழகானவளே! நானும் இந்தவிஷயத்தில் உனக்கு உதவிசெய்வேன். அந்தக் கந்தர்வராஜனுக்கு நான் சொன்னதைச் செய்; உனக்கு க்ஷேமம் உண்டாகும்; அவன் உனக்கு நன்மையைச்

செய்வன்" என்றுசொன்னார். பிறகு அந்தஇடத்தில் விபஜனமென்னும் கந்தர்வர்களுடைய உத்ஸவம் நடந்தது. மிகுந்த தேஜஸுள்ள கந்தர்வர் இருவர் அங்கே தங்கிநின்றனர். அவர்களில் ஒருவன் ஸ்திரீயாவதற்கு விரும்பி அந்தச் சிகண்டினியைநோக்கி, "இந்த என் புருஷரூபத்தை வாங்கிக்கொள்; நான் உன்ஸ்திரீரூபத்தை விரும்புகிறேன்" என்றுசொன்னான். கந்தர்வன், சிகண்டினி இருவரும் முறையே பெண்ணாகவும் ஆணாகவும்மாற உடன்பாடு செய்துகொண்டனர். சிகண்டினி வீரர்களாகிய சத்துருக்களை ஸம்ஹரிக்கத்தக்க சிகண்டியென்னும் ஆண்பிள்ளையாய் விட்டாள். அந்தக் கந்தர்வன் பெண்ணாகி ஆனந்தமுற்றவனாகச் சென்றான். துருபதபுத்ரனும் மிகுந்த புகழ்பெற்றவனுமாகிய சிகண்டி மிகமகிழ்வுற்று, பிறகு புத்புதகம் என்னுமிடத்திற்குச் சென்று பலமுறை அஸ்திராப்பியாசஞ்செய்தான். குருபுத்ரரே! அவன் அங்கே தேவலோகத்து அஸ்திரங்களை அப்பியஸித்து மிகச்சிறந்த பராக்ரமத்துடன் ஸ்வதேசமாகிய பாஞ்சாலதேசத்திற்கு வந்துசேர்ந்தான். சிறந்த வில்லாளியாகிய அவன், பிதாவின் பாதங்களை வந்தனஞ்செய்து கைகூப்பிக்கொண்டு, "நீங்கள் பீஷ்மரிடம் எவ்வகையிலும் அச்சமடையவேண்டாம்" என்றுசொன்னான்.

நூற்றுப்பதினேராவது அத்தியாயம்.

ஸம்பவபர்வம். (தொடர்ச்சி).

(விசித்திரவீரியனுடைய விவாஹமும் மரணமும்).

அப்போது அம்பை வெளியிற்போனபின் சந்தனுபுத்ரராகிய பீஷ்மர் ராஜாவாகிய விசித்ரவீரியனுக்கு விவாஹகாரியத்தை முறைப்படி செய்வித்தார். அம்பிகை அம்பாலிகை இருவரையும் அக்னியின் முன்னிலையில் விவாஹஞ்செய்துகொண்டு தர்மத்தில் மனமுள்ள குருவம்சத்தவனாகிய விசித்ரவீரியன் அவ்விருவர்களையும் பாணிக்கிரகணஞ் செய்துகொண்டபிறகு தன் ரூபத்தைப்பற்றி இறுமாப்புடையவனாகிக் காமஸுகத்திலேயே விருப்பமுள்ளவனானான். வளர்ச்சியும் நடுயௌவனமுமுள்ளவர்களும், கறுத்துச்சுருண்ட கூந்தலுடையவர்களும், சிவந்தும் உயர்ந்துமிருக்கிற நகங்களுள்ளவர்களும், பருத்த நிதம்பங்களும் ஸ்தனங்களும் முடையவர்களும், நல்ல லக்ஷணங்களும் அழகும் பொருந்தியவர்களுமாகிய அந்த அம்பிகை

அம்பாலிகைகளிருவரும் விசித்ரவீரியனைத் தங்களுக்குத் தகுதியான புருஷனாகக் கிடைத்தானென்று நிச்சயித்து அவனைப் பூஜித்தனர். ஒருத்தியை ஒருத்தி நேசித்துக்கொண்டு ஒருமனமுள்ளவர்கள் போலிருந்தனர். அழகில் அசுவினீதேவர்களுக்கொப்பானவனும் பராக்கிரமத்தில் தேவர்களுக்கொப்பானவனும் தனிமையிற் காணும் பெண்கள் எல்லாருடைய சித்தத்தையும் கலங்கச்செய்பவனுமாகிய யௌவனவயஸிலிருக்கும் அந்த விசித்ரவீரியனும் அந்தமனைவிகள் இருவரோடும்கூடி ஏழுவருஷகாலம் ரமித்து க்ஷயரோகத்தினால் ஆக்ரமிக்கப்பட்டான். அன்புள்ளவர்கள் நம்பிக்கையான வைத்தியர்களுடன் சேர்ந்து சிகித்ஸைசெய்தும் அந்தக்குருவம்சத்தரசன் சூரியன் அஸ்தமனமாவதுபோல், யமனுலகுசென்றான். தர்மாத்மாவும் கங்காபுத்ரருமான அந்தப்பீஷ்மர் கவலையும் வ்யஸனமுமடைந்து ரித்விக்குகள் கௌரவஶ்ரேஷ்டர்கள் எல்லாருடனும் சேர்ந்து ஸத்யவதியின் அபிப்பிராயத்தை அனுஸரித்து அந்த விசித்ரவீரிய ராஜாவின் ப்ரேதகாரியங்களனைத்தையும் செம்மையாகச் செய்வித்தார்.

நூற்றுப்பன்னிரண்டாவது அத்தியாயம்.

ஸம்பவபர்வம். (தொடர்ச்சி).

(விசித்ர வீரியனுடைய பாரியைகளிடம் புத்ரோத்பத்தி செய்யும்படி ஸத்யவதி கட்டளையிட, பீஷ்மர் தம் பிரதிஜ்ஞையை நிறைவேற்றுவதற்காக ஒப்புக்கொள்ளாமை).

ஜனமேஜயரே! பிறகு பிள்ளையினிடம் அன்புள்ள ஸத்யவதி தேவி துயரத்தினால் பீடிக்கப்பட்டவளாய்த் துக்கக்கடலில் மூழ்கித் தைரியமற்று ஓய்ந்து மருமக்களுடன்கூடப் புத்ரனுடைய ப்ரேதகாரியங்களைச் செய்து பார்த்தாஇறந்த துக்கத்தினற்பீடிக்கப்பட்ட அந்த மருமக்களிருவரையும் தேற்றிக் குலதர்மத்தையும் தன் புத்ரனுடைய மாதா பிதாக்களின் விருத்தியையும் ஆராய்ந்துபார்த்துப் பீஷ்மரை நோக்கிச் சொல்லத்தொடங்கினாள்:

"தர்மத்தை விடாதவரும் சிறந்த கீர்த்தியுள்ளவருமாகிய குருவம்சத்தரசரான சந்தனுவுக்குப் பிண்டதானமும் புகழும் சந்ததியும் உன்னைப் பற்றியதாக இருக்கின்றன. சகோதரனான விசித்ரவீரியன் பிராணிகளடையும் முடிவையடைந்தான். ஒருவன் நல்ல கருமஞ்

செய்வதனால் ஸ்வர்க்கம் அடைவது எப்படி நிச்சயமோ, ஸத்தியம் சொல்லுவதனால் தீர்க்காயுவாயிருப்பது எப்படி நிச்சயமோ, அப்படியே தர்மம் உன்னிடத்தில் நிச்சயமாயுள்ளது. தர்மம்தெரிந்தவனே! நீ தர்மங்களைத் தொகுத்தும் வெவ்வேறுகவும் அறிந்திருக்கிறாய். பலவகையான வேதங்களையும் வேதாங்கங்களையும் முற்றும் அறிந்திருக்கிறாய். தர்மத்தில் உன்னுடைய உறுதியையும், குலாசாரத்தையும், சுக்கிரரையும் பிருகஸ்பதியையும்போலக் காரிய சங்கடங்களில் புத்தி நிச்சயத்தையும் நான் உன்னிடம் காணுகிறேன். தர்மத்தைக் காப்பவர்களிற் சிறந்தவனே! ஆதலால், உன்னிடம் மிகவுறுதியான நம்பிக்கைவைத்து உன்னை ஒருகாரியத்தில் நியமிக்கப்போகிறேன். நீ கேட்டு அதைச்செய்யவேண்டும். புருஷசிரேஷ்டனே! என் புத்ரனும் சிறந்த பராக்கிரமமுள்ளவனுமாகிய உனது மிக்க அன்பனை சகோதரன் இளமையிலேயே சந்ததியில்லாமல் ஸ்வர்க்கம்போனான். பாரதனே! உன் சகோதரனுடைய பாரியைகளாகிய இந்த அழகான காசிராஜன்பெண்களிருவரும் ரூபமும் யௌவனமும் நிரம்பினவரும் புத்ரன் வேண்டுமென்ற விருப்பமுள்ளவருமாயிருக்கின்றனர். நமது குலவிருத்திக்காக நீ அவர்களுக்குப் புத்திரசந்ததியை உண்டாக்கக்கடவாய். மஹாவீரனே! நான் சொல்வதற்காக நீ இந்தத் தர்மத்தைச் செய்யத்தகுவாய். ராஜ்யத்திலும் நீ பட்டாபிஷேகஞ்செய்துகொண்டு பரதவேதசத்தை ஆளக்கடவாய். தர்மப்படி விவாஹமும் செய்துகொள். பிதிர்க்களை அமிழ்த்தாமற் கரையேற்று" என்று சொன்னாள்.

எதிரிகளைத் துன்பப்படுத்துகிறவரும் தர்மத்தில் சித்தமுள்ளவருமாகிய அந்தப்பீஷ்மர் தம் தாயாரும் சுற்றத்தாரும் இவ்வாறு சொன்னபின் தர்மத்தினின்றும் வழுவாத மறுமொழியைப் பின்வருமாறு சொல்லலானார்: "தாயே! நீசொன்னது மேலான தர்மமென்பதில் ஸம்சயமில்லை. ஸந்தானத்தைப்பற்றி நான்செய்த முடிவான உறுதிமொழியையும் நீ அறிந்திருக்கிறாய். உன்னைப்பற்றிக் கன்னியாசுல்கத்துக்காக நடந்ததும் உனக்குத்தெரியும். ஸத்தியவதியே! ஆதலால் மறுபடியும் நான் உன்னிடத்தில் ஸத்தியமாகப் பிரதிஜ்ஞை செய்கிறேன். நான் மூன்றுலோகங்களையும் விடுவேன். தேவராஜ்யத்தையும் விட்டாலும் விடுவேன். இவ்விரண்டினும் மேற்பட்டது எதுவோ அதையும்விடுவேன். ஸத்தியத்தைமட்டும் எவ்வகையிலும் விடேன். பூமியும் தன் மணத்தை இழக்கும்; அப்புவும் தன்ரஸத்தை இழக்கும்; தேயுவும் தன் ரூபத்தையிழக்கும்; வாயுவும் தன் ஸ்பர்ச

குணத்தையிழக்கும்; சூரியன் தன் ஒளியையும், அக்னி உஷ்ணத்தை யும், ஆகாயம் சத்தத்தையும், சந்திரன் தன் கிரணங்களின் குளிர்ச்சி யையும், இந்திரன் தன் சக்தியையும், தர்மதேவதை தர்மத்தையும் விட்டாலும்விடுவர்; நான்மட்டும் ஏவ்வகையிலும் ஸத்தியத்தைவிடக் கருதேன். லோகங்களுக்கெல்லாம் பிரளயம் வந்தபோதிலும் நான் தேவதையாக ஆவதற்காகவும் மூன்றுலோகங்களுக்காகவும் தனத் துக்காகவும் நான்சொன்னதை மாற்றமாட்டேன்" என்றார்.

இவ்வாறு மிகுந்த சக்தியையும் உத்ஸாஹத்தையுமுடைய புத்தி ராற்சொல்லப்பட்ட மாதாவான ஸத்யவதி அதன்பின் பீஷ்மரை நோக்கிச் சொல்லத்தொடங்கினள்: "அழியாத பராக்ரமமுள்ளவ னே! ஸத்தியத்தில் உனது முடிவான உறுதியை நான் அறிவேன். நீ நினைத்தால் உன்சக்தியினல் வேறுமூன்றுலோகங்களைச் சிருஷ்டி செய்வாய். நீ என்விஷயமாகச் சொன்னதுஎதுவோ அதைத் தவற மாட்டாயென்றும் நான் அறிவேன்; குழந்தாய்! பாரதனே! ஆனல் ஆபத்காலதர்மத்தை ஆராய்ந்து நீ கூடஸ்தர்களின் காரியபாரத்தை வகிக்கக்கடவாய். வீரனே! உன்னுடைய குலத்தின் தொடர்ச்சியும் தர்மமும் கெடாமலிருக்கும்படியும் உன்சுற்றத்தார் சந்தோஷிக்கும் படியும் உனக்கு நன்மையாகவும் எனக்குப் பிரியமாகவுமுள்ள காரி யத்தை நீ செய்யவேண்டும்" என்றாள். புத்திரனிடமுள்ள அன் பினல் இவ்வாறு அடிக்கடி புலம்புகிறவளும் தர்மத்திலிருந்து விலகிப் பேசுகின்றவளுமாகிய அந்தத் துர்மதியை நோக்கிப் பீஷ்மர் மறு படியும் பின்வருமாறு சொல்லலானர்: "அரசியே! தர்மங்களைப்பார். நம்மையெல்லாம் அழித்துவிடாதே. க்ஷத்ரியன் ஸத்தியம் தவறு வது தர்மசாஸ்திரங்களில் அங்கீகரிக்கப்படவில்லை. அரசியே! சந் தனுவின் சந்ததியும் பூமியில் அழிந்துபோகாமலிருக்கும்படி புராதன மான க்ஷத்ரியதர்மத்தை உனக்குச் சொல்லப்போகிறேன். ஞான முள்ளவர்களும், ஆபத்தர்மத்திலும் ராஜநீதியிலும் தேர்ந்தவர்களு மாகிய புரோகிதர்களுடன் அதை நீகேட்டு உலகநீதியையும்ஆராய்ந்து உத்தரம்சொல்" என்றார்.

———

நூற்றுப்பதின்மூன்றுவது அத்தியாயம்.

ஸம்பவபர்வம். (தொடர்ச்சி).

(புத்ரோத்பத்திக்கு உபாயம்தெரிவிப்பதற்காக, பீஷ்மர் தீர்க்கதமஸ் என்னும் ரிஷியின் உபாக்யானம் சொல்லியது).

"முன்னே ஹைஹயவம்சத்தரசனன கார்த்தவீர்யார்ச்சுனன் பரசுராமருடைய பிதாவை வதஞ்செய்ததனாற் கோபமுற்று அவர் அவ்வரசனைக் கோடாலியினாற் கொன்றார். கார்த்தவீர்யார்ச்சுனனுடைய ஆயிரம்கைகள் அவரால் அறுக்கப்பட்டன. அவர் ஜனங்களுக்காக மிகவும்செய்தற்கரிய தவத்தைச்செய்தார். அவர் மறுபடியும் தனுவை யெடுத்துக்கொண்டு பூமியையெல்லாம் ஜயிப்பதற்காக ஒற்றைத்தேரா ளியாகி க்ஷத்திரியர்களைப் பலமுறை எரித்தார். இவ்வாறு முன்னே மஹாத்மாவாகிய பரசுராமர் எண்ணமுடியாத அஸ்திரங்களினால் இரு பத்தொருமுறை பூமியில் க்ஷத்ரியர்களில்லாமற் செய்தார். இவ்வாறு அந்த மஹரிஷியினால் பூமியில் க்ஷத்ரியர்களேயில்லாமற்செய்யப் பட்டபொழுது எல்லாத்தேசங்களிலுமுள்ள க்ஷத்ரியஸ்திரீகள் அனை வரும் வேதங்களிற் கரைகண்ட பிராமணர்களுடன் சேர்ந்து புத்தி ரோத்பத்தி செய்துகொண்டனர். பாணிக்ரஹணம் செய்தவனுக் குத்தான் புத்ரனென்பது வேதங்களில் நிச்சயிக்கப்பட்டது. அந்த க்ஷத்திரிய ஸ்திரீகள் மனத்தில் கர்மத்தை நிலையாகவைத்துக் கொண்டு பிராமணர்களைச்சேர்ந்தனர். க்ஷத்ரியர்களுடைய இவ்வகை யான உற்பத்தியானது உலகத்தில்* (பலராலும்) அனுஷ்டிக்கப்பட்டி ருப்பதைக்கண்டிருக்கிறோம். அதன்பின் க்ஷத்ரியஜாதி மறுபடியும் அபிவிருத்தியாயிற்று. இதுவிஷயத்தில் பின்வரும் பழமையான இதி ஹாசத்தையும் உனக்குச் சொல்லப்போகிறேன். முற்காலத்தில் உசத்யரென்று க்யாதிபெற்றவரும் சிறந்த ஞானமுள்ளவருமான ஒருரிஷியிருந்தார். அவருக்கு மிகப் பிரியமுள்ளவளாகிய மமதை யென்னும் பாரியை இருந்தாள். உசத்யருடைய கனிஷ்ட ஸஹோ தரரும் தேவபுரோஹிதருமாகிய பெரிய மஹிமையுள்ள ப்ருஹஸ்பதி மமதையென்பவளை அடைந்தார். அந்த மமதையென்பவள் பேசுகிற வரிற் சிறந்தவரான அந்தத் தன் மைத்துனரைநோக்கி, "நான் உமது ஜ்யேஷ்ட ஸஹோதரருடைய கர்ப்பத்தைத் தரித்திருக்கிறேன். நீர்

* கல்மாஷபாதனுடைய பாரியையான மதயந்திக்கு வஸிஷ்டரால் புத்ரர்கள் பிறந்ததைக்காண்க.

ஆசையை ஒழிக்கவேண்டும். பெரியமஹிமையுள்ள ப்ருஹஸ்பதியே! இந்த உசத்யருடைய புத்திரன் என்வயிற்றுக்குளிருந்தே ஆறுஅங்கங்களுடனுங்கூடிய வேதத்தை அத்தியயனஞ் செய்திருக்கிறான். உம்முடைய வீர்யமும் வீணாகாது. இந்தக் கர்ப்பத்தில் இருவருக்கு இடமில்லை; ஆதலால், இப்படியிருக்கும்போது நீர் இந்தச்சமயம் நிவர்த்தியடையவேண்டும்" என்று சொன்னாள். இப்படி அவளால் செம்மையாகச் சொல்லப்பட்டிருந்தும் சிறந்தபுத்தியுள்ள ப்ருகஸ்பதி காமத்தினிழிந்த தம்மனத்தைக் கட்டமுடியாமற் போயினர். பிறகு காமமுற்ற ப்ருஹஸ்பதி விருப்பமில்லாதிருந்த அந்த மமதையுடன் புணர்ந்தார். அவர் வீர்யத்தை விடும்போது கர்ப்பத்திலிருந்த குழந்தை, "ஓ! பிதாவே! புணர்ச்சி செய்யவேண்டாம். இங்குஇருவருக்கு இடமில்லை. பகவானே! இடம் சிறிது. நான் முன்னமே இங்கு வந்திருக்கிறேன். உம்முடைய வீர்யம் வீணாகாது. நீர் எனக்கு உபத்திரவம் செய்தல்தகாது" என்றுசொல்லிற்று. ப்ருஹஸ்பதி கர்ப்பத்திலிருந்த அந்தச்சிசுவின் சொல்லைக் கேளாமலே அழகான கண்களையுடைய மமதையைப் புணருவதற்கே ஆரம்பித்தார். பிறகு அவளுடைய கர்ப்பத்திலிருந்த ரிஷி வீர்யத்தைவிடும் சமயமறிந்து ப்ருஹஸ்பதியின் வீர்யம் வருகிற மார்க்கத்தைக் கால்களினால் தடுத்தார். பிறகு அந்தவீர்யம் கர்ப்பஸ்தானம் சேராமலே திருப்பப்பட்டு உடனே பூமியில்விழுந்தது. அதனால் ப்ருஹஸ்பதிக்குக் கோபமுண்டாயிற்று. விழுந்த வீர்யத்தைக்கண்டு கோபமடைந்த அந்தப்பகவானுகிய ரிஷி கர்ப்பத்திலிருந்த உசத்தியருடைய புத்திரரைப் பயமுறுத்தி, "எல்லாப்பிராணிகளும் விரும்பத்தக்க இப்படிப்பட்ட சமயத்தில் என்னைப்பார்த்து நீ இவ்வகையான சொல்லைச்சொன்னதினால் நீண்ட * இருளையடைவாய்" என்று சபித்தார். ப்ருஹஸ்பதிக்கொப்பான ப்ரபாவமுள்ளவரும் வேதங்களையறிந்தவரும் புத்தியிற்சிறந்தவருமான அந்தரிஷி பெருங்கீர்த்தியுள்ள ப்ருஹஸ்பதியின் சாபத்தினால் பிறவிக்குருடராகித் தீர்க்கதமஸ் என்று பெயருள்ளவராயிருந்தார். அவர் தம் கல்வியினால், யௌவனமும் அழகும் நிரம்பிய ப்ரத்வேஷியென்னும் பெயருள்ள பிராமணப்பெண்ணைத் தமக்கு மனைவியாக அடைந்தார். அப்போது பெரும்புகழுள்ள அந்தத் தீர்க்கதமஸ் என்னும் ரிஷி, உசத்யரிஷியின் குலம் சந்ததியால் விருத்தியடைவதற்காகக் கௌதமர்முதலிய புத்திரர்களைப்பெற்றார். தர்மாத்மாவும்

* கண்தெரியாமை.

மஹாத்மாவும் வேதங்களிலும் வேதாங்கங்களிலும் கரைகண்டவரு மாகிய அந்தரிஷி காமதேனுவின் புத்திரனிடமிருந்து பசுக்களின் தர்மத்தை முழுதும் கற்றுக்கொண்டு கூச்சமில்லாமல் அதைச் செய்வதற்குச் சித்தையுடன் ஆரம்பித்தார். அந்தத் தீர்க்கதமஸ் என்னும் முனிவர் வரைகடந்து போனதைக்கண்டபிறகு அந்த ஆச்ர மத்தில் வஸித்திருந்த ரிஷிச்ரேஷ்டர்களனைவரும் அவர் செய்தது பாபமென்று பிரமித்து, "ஆ! ஆ! இவர் வரைகடந்தவர்; ஆச்ரமத் தில் வஸிக்கத்தகாதவர்; ஆதலால் பாபசித்தமுள்ள இவரை நாமெல் லோரும் விட்டுவிடுவோம்" என்று ஒருவர்க்கொருவர் பேசிக் கொண்டு கோபித்தனர். அந்தப்பத்தினியும் புத்ரர்கள் கிடைத்தது னால் அப்போது தன்கணவனை விரும்பவில்லை. பகைக்கின்ற தன் மனைவியை நோக்கி அந்தரிஷி, "என்னை ஏன்பகைக்கிறாய்?" என்று கேட்டதற்கு அவள், "பாரியையைப் போஷிப்பதனால் பர்த்தாவென் றும் பாதுகாப்பதனால் பதியென்றும் சொல்லுகின்றனர்; நான் உம் மைப் போஷிப்பதற்கு முடியாதவள். சிறந்த தபஸ்ஸுள்ளவரே! எந் தக்காலமும் கஷ்டத்தினால் வருந்திக்கொண்டு பிறவிக்குருடனையும் பிள்ளைகளையும் நான் போஷிக்கமாட்டேன்" என்றாள். அந்தரிஷி தமது மனைவிசொன்ன அந்தச் சொல்லைக்கேட்டுக் கோபத்துடன் புத்திரர்களோடுகூடிய பரத்வேஷியென்னும் பத்தினியை நோக்கி, "என்னை ராஜகருஹத்திற்குக் கொண்டுபோ; உனக்குத்தனலாபமும் நேரிடும்" என்று மறுமொழிசொன்னார். பரத்வேஷியென்பவள், "பிராமண! நீர்கொடுக்கும்தனம் துன்பத்திற்குக் காரணம்; அதை நான் விரும்பேன். பிராமணச்ரேஷ்டரே! உம்இஷ்டம்போலே செய் யும். முன்போல் நான் உம்மைப்போஷிக்கமாட்டேன்" என்றாள். அப்படிச்சொல்ல அந்தத் தீர்க்கதமஸ் என்னும்ரிஷி, "இன்றுமுதல் உலகத்தில் நான் ஒரு விபவஸ்தையை ஸ்தாபிக்கிறேன். ஒரு பெண் ணுக்கு அவள் உயிராயுள்ளவரையிலும் ஒரேகணவன்தான் கதி. அவ னிறந்தாலும் உயிரோடிருந்தாலும் அவள் வேறொருபுருஷனை அடை யத்தகாள். வேறொருபுருஷனையடைந்தால் அந்தஸ்த்ரீ பதிதையா வாள்; ஸந்தேகமில்லை. இதுமுதல் ஸ்த்ரீகள் புருஷனைவிட்டிருந் தால் அவர்களுக்கு எல்லாச்செல்வமுமிருந்தாலும் பாபந்தான். அவர் களின் புணர்ச்சி பயன்படாமற்போகக்கடவது. அபகீர்த்தியும் தூஷ ணைகளும் அவர்களுக்கு எப்போதும் உண்டாகக்கடவன" என்று சபித்தார். அப்படி அவர் சொன்னதைக்கேட்டு அந்தப் பிராமண ஸ்த்ரீ மிகக்கோபமுற்றவளாகி, "புத்திரர்களே! இவரைக் கங்கை

யில் தள்ளுங்கள்" என்றாள். லோபித்தனத்தாலும் அறிவின்மையாலும் மூடப்பட்ட அந்தக்கௌதமர்முதலிய புத்திரர்கள் அவரைக் கட்டி ஓடத்திற்போட்டுக் கங்கையில் விட்டுவிட்டனர். "குருடனும் கிழவனுமாகிய இவனை எதற்காகக் காப்பாற்றவேண்டும்" என்று நினைத்துக் கொடியவர்களான அந்தப்புத்திரர்கள் பிறகு அங்கிருந்து வீட்டுக்குத் திரும்பிப்போயினர். பொட்டையரான தீர்க்கதமஸ் என்னும்ரிஷி அந்த ஓடத்துடனே பிரவாகத்தின்வழியே மிதந்து கொண்டு தற்செயலாக அநேக தேசங்களுக்குச்சென்றார். தர்மந் தெரிந்தவரெல்லாரிலும் சிறந்தவனாகிய பலியென்னும் ராஜா நேராடப்போனபோது பிரவாகத்தின்வழியே தன் அருகில்வந்த அந்த ரிஷியைக்கண்டான். தர்மஜ்ஞத்துள்ளவனும் அழியாதபராக்கிரமமுள்ளவனுமாகிய அந்தப் பலியென்னும் அரசன் அந்தரிஷியை யெடுத்தான். அந்த ராஜா அவருடைய வரலாற்றையறிந்து தனக்குப் புத்ரனுண்டாவதற்காக அவரைப் பிரார்த்தித்தான். அந்தராஜரிஷி அம்முனிவரைப் பூஜித்து அவர் இசைப்பாரினபின், "மிகுந்த மஹிமையுள்ளவரே! கௌரவத்தைக்கொடுப்பவரே! என் ஸந்ததிக்காக என் பாரியைகளிடம் தர்மசாஸ்திரத்திலும் ராஜநீதியிலும் வல்லவர்களான புத்திரர்களையுண்டாக்கக்கடவீர்" என்று சொன்னான். அந்தச் சிறந்த மஹிமையுள்ளரிஷி, இவ்வாறுசொன்ன அவ்வரசனுக்கு, "அப்படியேயாகட்டும்" என்று மறுமொழிசொன்னார். அப்போது அவ்வரசன் ஸுதேஷ்ணையென்றுபெயருள்ள தன்மனைவியை அந்தரிஷியினிடம் அனுப்பினான். அவர் குருடரென்றும் கிழவரென்றும் நினைத்து அவ்வரசி அவருடன்சேரவில்லை. அப்போது அவள் தன்தாதியின்மகளை அந்தக்கிழவரிடம் அனுப்பினாள். தர்மாத்மாவாகிய அந்தரிஷி அந்தச் சூத்ரஸ்திரீயின் கர்ப்பத்தில் கக்ஷீவான்முதலிய பதினொருபுத்திரர்களை உண்டுபண்ணினார். கக்ஷீவான்முதலிய அந்தப் புத்திரர்களனைவரும் வேததோஷமுள்ளவனைக்கண்டு பலியென்னுமரசன் அந்தரிஷியைநோக்கி, "இவர்கள் என்புத்திரர்கள்" என்றுசொன்னான். "உனது மனைவியாகிய புத்தியில்லாத ஸுதேஷ்ணை பொட்டையனும் வயதுசென்றவனுமான என்னைக்கண்டு அவமதித்துத் தன்தாதியின் மகளாகிய சூத்ரப்பெண்ணை எனக்கு அனுப்பினதன்மேல் கக்ஷீவான்முதலிய இந்தப்புத்திரர்கள் அந்தச் சூத்ரஸ்திரீயின் கர்ப்பத்தில் எனக்கு ஜனித்ததனால் என்புத்திரர்களேயாவர்; உன்புத்ரர்களல்லர்" என்று அம்மஹரிஷி அந்த ராஜாவுக்குச் சொன்னார். அப்போது பலியென்னும் அரசன் அந்த ரிஷிச்ரேஷ்டரைப் பலமுறை வேண்டிக்

கொண்டு மறுபடியும் தன்பாரியையாகிய ஸுதேஷ்ணையை அவரிடம் அனுப்பினான். அந்தத் தீர்க்கதமஸ்என்னும் ரிஷி அந்த அரசியை அங்கங்களில்தொட்டு, "உனக்குத் தேஜஸில் சூரியனுக்கொப்பாகிய அங்கன், வங்கன், களிங்கன், புண்டரன், ஸுஹ்மன்என்ற புத்திரர் கள் உண்டாவர். அவர்கள்பெயர்களினால் புவியில்கியாதிபெற்றதேசங் கள் இருக்கப்போகின்றன" என்றுசொன்னார். அங்கனுடையதேசம் அங்கமென்றும், வங்கனுடையதேசம் வங்கமென்றும், களிங்கனு டையதேசம் களிங்கமென்றும், புண்டரனுடையதேசம் புண்டர மென்றும், ஸுஹ்மனுடையதேசம் ஸுஹ்மமென்றும் கியாதிபெற்ற வையாயின. இவ்வாறு முன்னே பலியினுடையவம்சம் மஹரிஷியி னால் உண்டானதாகப் பிரஸித்தமாயிருக்கிறது. சிறந்தவில்லாளிகளும் மேலானதர்மந்தெரிந்தவர்களும் வீரர்களும் மிகுந்தபலமுள்ளவர்களு மாகிய இன்னுமனேகக்ஷத்திரியர்களும் பூமியில் இவ்வாறே பிரா மணர்களால் உண்டாயிருக்கின்றனர். அம்மா! இதைக்கேட்டபின் நீயும் இந்தவிஷயத்தில் விருப்பம்போலச் செய்யலாம்" (என்றனர்.)

நூற்றுப்பதினொன்காவது அத்தியாயம்.

ஸம்பவபர்வம். (தொடர்ச்சி).

(ஸத்யவதி தான் கன்னிகையாயிருந்தபோது வியாஸர் பிறந்ததை; பீஷ்மருக்கு உரைத்தது; பீஷ்மர் அனுமதியினால் வியாஸரை வருவித்து அவரைப் புத்ரோத்பத்திக்காக நியமித்தல்).

"மறுபடியும் பரதவம்சத்தின் சந்ததி அபிவிருத்தியாவதற்குச் சரியான காரணம் சொல்லப்போகிறேன். நான் சொல்லும் அந்தக் காரணத்தைக் கேள். விசித்ரவீரியனுடைய பாரிபைகளிடம் புத்ரர் களை உத்பத்திபண்ணுவதற்குக் குணங்கள் நிரம்பின ஒரு பிராமண னைத் தனம்கொடுத்துப் பிரார்த்திக்கவேண்டும்" என்று பீஷ்மர் சொன்னார். தர்மமும் காரணமும் காரியமும் அடங்கியதான பீஷ்ம மருடைய சொல்லைக்கேட்டு அவர் தாயாரான ஸத்யவதி, மறுபடியும் அவருக்குச் சொல்லத்தொடங்கினாள்:

"உசத்யருடைய புத்ரரான தீர்க்கதமஸ் என்பவரைப்பற்றியும் அவர் புத்ரனான அங்கனென்பவனைப்பற்றியும் நீ சொன்னது புரா ணத்திலுள்ள கதையாதலால் நீ இந்தக்காலத்துக்குத் தக்கதைச் செய்யவேண்டும். பரதகுலத்தோனே! மைந்தா! நீ இந்தக்குலத்

திற்குப் பெரியவனும் சிறந்தவனுமாயிருக்கிறாய். பாபமற்றவனே! பிதாவின்சொல்லை நிறைவேற்றுவதுபோல் என்சொல்லையும் நீ நிறைவேற்ற வேண்டியதுதான். பரதசிரேஷ்டனே! உனது இளையசகோதரனும் உனக்கு மிக்க நண்பனும் பரதகுலத்தோனுமாகிய என்மைந்தன் இளமையிலேயே ஸ்வர்க்கஞ்சென்றான். பாரதனே! அவனுடைய அரசிகளும் அழகும் யௌவனமும் நிரம்பினவர்களுமான இந்தக்காசிராஜன் புதல்விகளிருவரும் இங்கே புத்ரனை விரும்பிக்கொண்டிருக்கின்றனர். இது பெரிய தர்மகாரியமென்றறிந்து நமது குலத்திற்குச் சந்ததியையும் உத்தேசித்து என்கட்டளையினால் இவ்விரண்டு பெண்களுடனும் சேர்ந்து தர்மத்தை நிறைவேற்றுவதற்கு உரியவனாகிறாய்" என்றாள். பீஷ்மர், "தாயே! நீ சொன்னது சிறந்த தர்மமென்பதில் ஸம்சயமில்லை. நான் வைத்திருக்கும் இந்தப் பிரதிஜ்ஞையைப்பற்றி நீயுமறிவாய். நான் உயிரைவிட்டாலும் விடுவேன். நான் தேவத்துவத்திற்காகவும் திரிலோகாதிபத்தியத்திற்காகவுங்கூட எவ்வகையிலும் பிரதிஜ்ஞையை விடேன்" என்றுசொன்னார். ஸத்யவதி, "தர்மந்தெரிந்தவனே! தவறாத பராக்கிரமமுள்ளவனே! எதிரிகளையடக்குகிறவனே! உன்னிடத்தில் ஸத்தியமிருப்பதை நான் அறிவேன். நீ விரும்பினால் இப்போதே வேறு மூவுலகங்களைப்படைப்பாய். ஆனால், நமதுகுலமும் குலதர்மமும் கெடாமலிருக்கும்படியும் நமக்கு வேண்டியவர்கள் மகிழ்ந்திருக்கும்படியும் நீ செய்யவேண்டும்" என்றாள். அதைக்கேட்டுப் பீஷ்மர், "நீதான் நமதுகுலத்திற் பெரியவளாயிருக்கிறாய். உன்னிடத்திற் பெருந்தன்மை விசேஷமாக இருக்கிறது. ஆதலால், நம்முடைய குலத்திற்குச் சந்ததியுண்டாவதற்குச் சிறந்த உபாயத்தை நீசொல்லத்தகுதியுள்ளவள். ஸ்திரீகள் எப்போதும் குலத்தில் முக்கியமான ரஹஸ்யத்தை வைத்திருப்பார்கள். பலவகையான வஞ்சகங்களினால் புருஷர்களை வசப்படுத்துவார்கள். ஆதலால், ஸத்தியமே முக்கியமாகவுடைய ஸத்தியவதியே! நான் ஸத்தியத்தைவிடாமலும் நமதுகுலம் கெடாமலுமிருக்கும்படி நீ தர்மத்தை ஆராய்ந்து பார்க்கக்கடவாய்" என்றுசொன்னார். அதன்பிறகு ஸத்தியவதி தழுதழுத்த குரலோடு நகைமுகமாக நாணமுற்றுப் பீஷ்மரைநோக்கி அடியில்வரும் வசனத்தைச் சொல்லத்தொடங்கினாள்:

"சிறந்த கைகளையுடையவனே! பாரதனே! நீசொல்வது நிஜம். நம்முடைய குலத்திற்குப் புத்திரசந்தானத்திற்காக உன்னிடத்தில் நம்பிக்கையினால் ஒருவிஷயம் வெளியிடப்போகிறேன். அப்படிப்

பட்ட ஆபத்காலத்தின் தர்மத்தை உனக்கு நான் சொல்லாமலிருக்க முடியாது; நமதுகுலத்திற்கு நீதான் தர்மம்; நீதான் ஸத்யம்; நீ தான் முக்கியமான ஆதாரம். நீ எதைச்சொல்வாயோ அதை நாம் செய்யவேண்டியதென்பது என்நிச்சயம். ஆதலால், நான் சொல் லும் உண்மையைக் கேட்டுப் பின் செய்யவேண்டியதைச் செய்வா யாக. பீஷ்மா! அறம்பொருளடங்கியதும் நன்மையுமாகிய என்சொல் லைக்கேள். நான் நம்பிச்சொல்லுகிறதை நீ வெளியிடத்தகாது. பர தச்ரேஷ்டனே! முற்காலத்தில் வஸுவென்னும் ராஜா ஒருவரிருந்தா ரென்று நீ கேட்டிருக்கலாம். அவருடைய வீரியத்தினால் ஒருமீனு னது என்னைக் கர்ப்பமாகத் தரித்தது. தர்மந்தெரிந்தவர்களிற் சிறந் தவனுகிய ஒருசெம்படவன் என்தாயான மத்ஸ்யத்தை ஜலத்திலிரு ந்து எடுத்து என்னைத் தன்வீட்டுக்குக் கொண்டுவந்து பெண்ணாக வைத்துக்கொண்டான். தர்மிஷ்டனான அந்தச்செம்படவன் பிறகு தர்மப்படி எனக்குப் பிதாவானான். தர்மமுள்ள என்பிதாவினிடம் தர்மத்திற்காகவே ஓர் ஓடமிருந்தது. யௌவனப்பிராயம் ஆரம்பமா யிருந்த நான் ஒருநாள் அந்த ஓடத்தினிடம் போயிருந்தேன். அப் போது தர்மந்தெரிந்தவர்களுட் சிறந்தவரும் சிறந்தஞானமுள்ள வருமாகிய பராசரரென்னும் மஹரிஷி, யமுனாநதியைத் தாண்டுவதற் காக ஓடத்தினிடம் வந்தார். அவரை நான் யமுனையைத் தாண்டு விக்கும்போது அந்த ரிஷிச்ரேஷ்டர் காமமோயுற்றவராய் என் னிடம்வந்து, என்னைத் தைரியப்படுத்தி, என்ஜன்மத்தையும் என் குலத்தையும் எனக்குச்சொல்லி, "நீ செம்படவன்மகள் அல்லை" என்று இனியசொல்லாற் சொன்னார். பாரதனே! அவர் சாபத்துக் கும் என்பிதாவின்கோபத்திற்கும் பயந்திருந்தநான் பெறுவதற்கரிய வரங்களை எனக்கு அவர்கொடுத்தபிறகு அவரை நான் நிராகரிக்க முடியவில்லை; "யமுனையின் அக்கரையிலும், இக்கரையிலும்நின்ற மஹானுபாவர்களான ரிஷிகளைப்பாரும்; ஜ்வலிக்கின்ற அக்கினி போல் எதிரிலும் இளஞ்சூரியன்பிரகாசிக்கின்றான். அதனால் இந்த ஆகாயம் சிவந்தஆடை உடுத்ததுபோலப் பிரகாசிக்கின்றது" என்று சொன்னேன். இவ்வாறு நான்சொன்னமாத்திரத்தில் த்ருடமான தைரியத்தையுடையவரும் ஸமர்த்தருமான பராசரர் அந்தயமுனை யின்திட்டிலும் ஜலத்திலும் பனியைஉண்டுபண்ணினார். பாரதனே! அவர் தம்மஹிமையினால் உலகத்தை இருள்மூடச்செய்து சிறுமியா கியஎன்னை ஓடத்திலிருந்தபடியே ஆக்கிரமித்து வசப்படுத்திக்கொண் டார். முன்னே அருவருக்கத்தக்க மீன்நாற்றம் என்னிடம் மிகுதி

யாயிருந்தது. அந்தமஹரிஷி அதைப்போக்கி இந்தஇனியமணத்தை எனக்குக்கொடுத்தார். "இந்தநதியின்திட்டிலேயே என்கர்ப்பத்தைப் பிரஸவித்தபின் நீ கன்னிகையாகவே ஆய்விடுவாய்" என்று பிறகு அம்முனி எனக்குச்சொன்னார். வித்வானுகிய அம்மஹரிஷி என்னிடம் அன்புவைத்து மறுபடியும் கன்னிகைப்பருவத்தையும் கொடுத்தார். அந்தமஹாத்மாவின்மஹிமை அவ்வாறுசிறந்திருந்ததைக்கண்டு நான் வியப்பும் தளர்ச்சியுமுற்று, என்சரீரத்தையே கொடுத்தேன். பாரதனே! அந்தக்காலத்தில் அந்தமஹாத்மாவாகிய பராசரர் கன்னிகையாகிய என்னிடம் சந்தோஷத்துடன் அந்தத்தீவிலேயே புத்ரனை உண்டாக்கினார். அந்தப்பராசரபுத்ரன் மஹாயோகசக்தியுள்ள மஹரிஷியானன். நான் முன்னே கன்னிகையாயிருந்தபோது பிறந்த அந்தப்புத்ரன் தீவிற்பிறந்ததினால் த்வைபாயனன் என்று சொல்லப்படுகிறன். சிறந்த மகிமையுள்ள அந்தரிஷி தன் தவத்தினால் வேதங்களை நாலாகவகுத்து உலகத்தில் வியாஸர்என்றுபெயர் பெற்றார். கறுத்த நிறத்தினால் கிருஷ்ணனென்றும் சொல்லப்பட்டான். ஸத்தியவாதியும் சாந்தியைக்கடைப்பிடித்தவனும் சிறந்த தவமுள்ளவனும் பாபங்களை நீக்கினவனுமாகிய அந்தமஹான் பிறந்தமாத்திரத்தில் தந்தையுடன் கூடி ஆங்கேசென்றார். நானும்நீயும் கட்டளையிட்டால் ஒப்பில்லாத மஹிமையுள்ள அந்தப்புத்ரன் தன்னைமஹாதாரன்பாரியைகளிடத்தில் உயர்ந்தபுத்ரனை உண்டாக்குவது நிச்சயம். "உன்கஷ்டகாலங்களில் நீ என்னைநினை" என்று அவன் அங்கேயே எனக்குச்சொன்னான். மஹாபுஜனபீஷ்மனே! நீஒப்புக்கொண்டால் அவனை நான் நினைப்பேன். பீஷ்மா! உன்ஸம்மதத்தின்மேல் சிறந்ததவமுள்ள அந்தவன்புத்ரன் விசித்ரவீர்யன் பத்தினிகளிடம் நிச்சயமாகப்புத்திரர்களையுண்டாக்குவன்" என்றாள்.

அந்தஸியாஸரிஷியின் பெயரெடுத்தபோது பீஷ்மர் கைகூப்பிக்கொண்டுசொல்லலானார்: "இடமும் காலமும் உனக்குத்தெரியும். காரியம்நிறைவேறுவதற்காக நீசொன்னது செய்யத்தகும். தர்மார்த்தகாமங்களாகியமூன்றுபுருஷார்த்தங்களையும், பின்னேபொருள்தொடரத்தக்க பொருளீட்டத்தையும் தர்மம் தொடரத்தக்க தர்மானுஷ்டானத்தையும் காமஸுகம் தொடரத்தக்க காமபுருஷார்த்தத்தையும் இவற்றிற்கு மாறானவற்றையும் தனித்தனியே புத்தியினால்ஆராய்ந்து செய்யத்தக்க தைரியசாலி எவனை அவன்தான் புத்திசாலி. ஆதலால் தர்மமுள்ளதும் நமது குலத்துக்கு நன்மையும் சிலாக்கியமுமாக நீசொன்னது எனக்கு மிகவும் பிரியமாயிருக்கிறது"

என்றார். குருவம்சபுத்ரராகியஜனமேஜயரே! பீஷ்மர் அதை அங்கீ கரித்தபிறகு ஸத்தியவதி கிருஷ்ணத்வைபாயனமுனியை நினைத்தாள். குருவம்சபுத்திரரே! வேதங்களை வகுத்துச்சொல்லிக்கொண்டிருந்த அந்தச்சிறந்தபுத்திமான் தமதுதாயார் நினைத்ததையறிந்து கூஷ்ணத் துக்குள்ளே யாருக்குந்தெரியாமல் எதிரேதோன்றினார். பிறகு ஸத்தி யவதி,புத்திரானவியாஸருக்குச் சாஸ்திரோக்தப்பிரகாரமாகப் பூஜை யைச்செய்து அவரைக் கைகளினால் தழுவிக்கொண்டு பாற்சுரப்பி னால் நினைத்தனள். செம்படவப்பெண்ணாகிய ஸத்தியவதி வெகுகாலத் திற்குப்பின் தன்மைந்தனைக்கண்டு கண்ணீர் சொரிந்தாள். ஸத்திய வதியின் ஜ்யேஷ்டபுத்ரராகிய வியாஸமஹரிஷி வ்யஸனப்பட்டதம்தா யாரின்மேல் ஜலத்தைத்தெளித்து வந்தனம்செய்து பின்வருமாறு சொல்லலானார்:

"உனக்கு எதுவிருப்பமோ அதைச்செய்வதற்கு நான் வந்திருக் கிறேன். தர்மத்தின்ஸ்வரூபத்தையறிந்தவளே! எனக்குக்கட்டளை யிடு. உன்விருப்பத்தைச்செய்வேன்" என்றார். பிறகு புரோகிதர் அம் மஹரிஷிக்குப் பூஜைசெய்தார். அவரும் சாஸ்திரோக்தமாக மந்தி ரத்தைச்சொல்லி அந்தபபூஜையைப்பெற்றுக்கொண்டார். மந்திரத் தைமுன்னிட்டுச் சாஸ்திரவிதிப்படிபூஜிக்கப்பட்டதனால் வியாஸமஹ ரிஷி ஸந்தோஷமடைந்தார். அவர் ஆஸனத்திலிருந்தபின் அவர்தா யாரான ஸத்தியவதி க்ஷேமத்தையும் ஆரோக்யத்தையும் விசாரித்து அவரைப்பார்த்து அடுத்துச்சொல்லவேண்டியசொல்லைச் சொல்லலா னாள். "கவியே! புத்திரர்கள் தாய்க்கும் தந்தைக்கும் பொதுவாகப் பிறக்கின்றனர். அந்தப்புத்ரர்கள்விஷயத்தில் தந்தைக்கிருப்பதுபோ லவே தாய்க்கும் அதிகாரமுண்டென்பதில் ஸந்தேகமில்லை. பிரம்ம ரிஷியே! நீ எனக்கு முதற்புதல்வனாக விசித்ரவீர்யன் எனதுகனிஷ்டபுத்ரன். பிதா வைப்பற்றிப் பீஷ்மன்எப்படியோ அப்படியேயாதாவைப்பற்றி நீயும் ஸோதரன். புத்ரனே! நீதான் என்னநினைக்கிறாய்? தவறுதலாக்ரம முள்ளசந்தனுபுத்ரனாகிய பீஷ்மன் தன்ஸத்யத்தைக் காப்பாற்றுவதற் காகச் சந்ததியிலும் ராஜ்யபரிபாலனத்திலும் எண்ணம்வைக்காதவ னாகஇருக்கிறான். ஆதலால், குற்றமற்றவனே! நீ உன்ஸோதரனுக் காகவும் வம்சத்தின் ஸந்ததிவிருத்திக்காகவும் பீஷ்மனும் நானும் சொல்வதனால் எண்ணம்வைக்கக்கடவாய். எல்லாப்பிரஜைகளையும் ரக்ஷிப்பதற்காக அன்பினாலும் கருணையினாலும் நான்என்ன சொல்லு கிறேனோ அதைக்கேட்டு நீசெய்யவேண்டும். உன்இளையஸோதர

னுடைய பாரியைகளிருவர் தேவகன்னிகைகளுக்கு ஒப்பானவர். அழகும் பெளவனமும் கிரம்பினவர். தர்மத்துடன் புத்திரனிரும்புகின்றவர். புத்திரனே! அவர்களுக்கு ஸந்தானத்தையுண்டுபண்ணு. இந்தக் குலத்திற்குத்தகுந்த ஸந்ததியையுண்டுபண்ணுவதற்கு நீயேமர்த்தனாக இருக்கிறாய்" என்றாள். வியாஸர், "சிறந்தபிரஜ்ஞையுள்ள ஸத்திய வதியே! முக்கியமும் அமுக்ய முமாயுள்ள தர்மங்களெல்லாம் உனக்குத்தெரியும். அதனால் உன்னுடையபுத்தி தர்மத்திலேயே நிறுத்தப்பட்டிருக்கிறது. ஆதலால், நான் உன்னுடைய கட்டளைப்படி தர்மத்தையே காரணமாக நினைத்து நீ விரும்பினதைச் செய்யப்போகிறேன். இந்தப் புத்ரோத்பத்திமார்க்கம் சாசுவதமாகச் சாஸ்திரங்களிற் சொல்லப்பட்டிருக்கிறது. சூரியனுக்கும் வருணனுக்கும் ஒப்பான புத்திரர்களை என்னிஷ்டதாரனுக்குக் கொடுக்கப்போகிறேன். அந்த இரண்டு அரசிகளும் ஒருவருஷகாலம் நான் சொல்லுகிற விரதத்தை முறைப்படி அனுஷ்டிக்கக்கடவர். பிறகு சுத்தர்களாவர். எந்தப் பெண்ணும் விரதம்செய்யாமல் என்னைச் சேரத்தகாது" என்றார். அதற்கு ஸத்யவதி, "ராஜஸ்திரிகள் கர்ப்பத்தை உடனேதரிக்கும்வழியைச்செய். ராஜாவில்லாத ராஜ்யத்தில் பிரஜைகள் காப்பவனில்லாமல் அழிந்துபோகின்றனர். எல்லாக்கர்மானுஷ்டானங்களும் கெட்டுப்போகின்றன. பழையில்லை. தேவதையில்லை. ஸமர்த்தனே! ராஜா இல்லாத ராஜ்யத்தை எவ்வாறு நிறுத்தமுடியும்; ஆதலால், கர்ப்பத்தையுண்டுபண்ணு; அதைப் பீஷ்மன் வளர்ப்பன்" என்றாள்.

வியாஸர், "என்னிஷ்டதாரனுக்கு அகாலத்தில்நான் புத்திரனைக் கொடுக்கவேண்டுமானால் எனது விகாரரூபத்தை அவர்கள் (அம்பிகை, அம்பாலிகை) சகிக்கக்கடவர்கள். அவர்களுக்கு இதுவே பெரியவிரதம். என்னுடைய கந்தத்தையும் நிறத்தையும் வேஷத்தையும் சரீரத்தையும் சகிப்பளானால் இப்போதே * கௌஸல்யை உயர்ந்த கர்ப்பத்தைத்தரிக்கலாம். அந்தப்புத்திரனுக்கும் குருவம்சத்தைக் காப்பவர்களும் உன்னுடைய சோகத்தையொழிப்பவர்களுமாகிய நூறுபுத்திரர்கள் பிறப்பார்கள்; ஸந்தேகமில்லை" என்றார். மிகுந்த தேஜஸ்ஸுள்ள அந்த வியாஸமுனி இவ்வாறு சொன்னபிறகு, "கௌஸல்யையென்னும் அம்பிகை வெண்மையான ஆடைமுதலியவற்றினால் அலங்காரஞ் செய்துகொண்டு படுக்கையிலிருந்துகொண்டு என்வரவை எதிர்பார்க்கவேண்டும்" என்றும் சொல்லி, அப்போதே அந்தர்த்தானமாயினர். பிறகு ஸத்யவதிதேவிசென்று தனிமையில் தன்னுடன் ஸந்தித்த தன்

* அம்பிகை.

மருமகளோநோக்கி, தர்மமும் அர்த்தமுமுள்ள நன்மையானசொல்லைச் சொல்லத்தொடங்கினள்: "கௌஸல்யையே! தர்மத்தை முக்கியமாகக்கொண்டு உனக்கு நான் சொல்லப்போவதை நீ தெரிந்துகொள். என்னுடைய அதிர்ஷ்டக் குறைவினால் பரதவம்சத்துக்கு அழிவுவந்திருப்பது தெரிந்தவிஷயம். நான் வ்யஸனப்பட்டிருப்பதையும் தனது பிதிர்வம்சத்திற்குக் கெடுதல்வந்திருப்பதையும் பீஷ்மன்பார்த்து இந்தக்குலம் அபிவிருத்தியாகத்தக்க புத்திமதியை எனக்குச்சொன்னன். அந்தப்புத்திமதி உன்னுடைய ஸ்வாதீனமாயிருக்கிறது. பெண்ணே! என்னை அவ்வாறு நடத்தினை; அழிந்துபோன பரதவம்சத்தை மறுபடியும் கைதூக்கிவிடு. அழகிய நிதம்பமுள்ளவளே! இந்திரனுக்கொப்பான தேஜஸோடுகூடிய புத்திரனைப்பெறு. அவன்தான் நமது குலத்தைச்சேர்ந்த பெரியராஜ்யபாரத்தை வகிக்கவேண்டும்" என்றாள். இவ்வாறு அந்த ஸத்தியவதிதேவி தன்மருமகளுக்குச் சொல்லித் தர்மந்தவறுதலாகிய அந்தக் கௌஸல்யாதேவியைத் தர்மத்தைக்கொண்டே பிரயாஸத்தினால் இணங்கச்செய்து, உடனே பிராமணர்களையும் தேவர்களையும் ரிஷிகளையும் அதிதிகளையும் புஜிப்பித்தாள்.

நூற்றுப்பதினைந்தாவது அத்தியாயம்.

ஸம்பவபர்வம். (தொடர்ச்சி).

(திருதராஷ்டிரன் பாண்டு விதுரர் இவர்களின் ஜனனம்).

பிறகு ஸத்யவதி ருதுகாலத்தில் ருதுஸ்நானஞ்செய்த தன்மருமகளைச் சயனத்திற் படுக்கவைத்து அப்போது மெல்ல, "கௌஸல்யையே! உனக்கு மைத்துனர் இருக்கிறார். அவர் இன்றைத்தினம் உன்னிடம் சேரப்போகிறார். பாதிராத்திரியில் வருவர். அஜாக்கிரதையைவிட்டு அவரை எதிர்பார்த்திரு" என்ற சொல்லைச்சொன்னாள். தனது மாமியாருடைய அந்தச் சொல்லைக்கேட்டு அந்தக் கௌஸல்யை அழகானபடுக்கையிற் படுத்துக்கொண்டு அந்தக்காலத்தில் பீஷ்மரையும் மற்றுமுள்ள கௌரவவம்சத்து வீரர்களையும் கருதினாள். பிறகு பெரும்பாலும் ஜனங்கள் தூங்கிப்போயிருக்கும் பாதிராத்திரிவேளையில் தீபங்கள் பிரகாசித்துக்கொண்டிருக்கையில் பகவானை வியாஸமஹரிஷி திருஹத்தில் பிரவேசித்தார். சொல் தவ

ருதவரும் பெருந்தவத்தி லிருப்பவருமாகிய அந்த வியாஸமஹரிஷி அம்பிகையினிடம் முதலிற் கட்டளையிடப்பட்டிருந்ததனல் அப்போது அவள்சயனத்தினிடம் போனர். பார்க்க வழங்காமலிருந்த அவரைக்கண்டு, அவ்வாறு பார்த்து வழக்கப்படாத கௌஸல்யை, விகாரரூபமாயிருக்கிறரென்று பயந்து கூச்சத்துடன் கண்களை மூடிக்கொண்டாள். அவர் விகாரமான உருவமுள்ளவராகவும் ஜடையுள்ளவராகவும் விகாரமான நிறமுள்ளவராகவும் முருடாகவும் இளைத்தவராகவும் கெட்டவாஸனையுள்ளவராகவும் எல்லாவகையாலும் அணுகமுடியாதவராகவுமிருந்தார். கறுத்தநிறமுள்ள அந்த வியாஸரின் செம்பட்டைநிறமான ஜடையையும் ஜ்வலிக்கின்ற கண்களையும் செம்பட்டைநிறமானதாடிகளையுங்கண்டு அவ்வரசி கண்களை மூடிக்கொண்டாள். வியாஸர் தமதுதாயாரின் விருப்பத்தைச் செய்யவேண்டுமென்ற எண்ணத்தினல் அவளுடன் கலந்தார். காசிராஜன் பெண் பயத்தினல் அவரைப்பார்க்க முடியாமற்போனள். அங்கிருந்து வெளியில்வந்த தன்புத்திரனைத் தாயாரான ஸத்யவதி சந்தித்து, "புத்ரனே! இவளுக்குக் குணவானான ராஜபுத்ரன் பிறப்பானு?" என்றுகேட்டாள். இந்திரியங்களுக்கெட்டாத விஷயங்களையுமறிந்த ஸத்யவதிபுத்ரரான வியாஸர் முறைப்படி தாயாராற் கேட்கப்பட்டபின், "பதினயிரம் யானைகளின் பலமுள்ளவனும் எல்லாந்தெரிந்தவனும் சிறந்தபாக்கியமுள்ளவனும் சிறந்த பராக்ரமமுள்ளவனும் சிறந்தபுத்தியுள்ளவனும் ச்ரேஷ்டனுமான ஒருராஜரிஷி உண்டாவான். அந்தமஹாத்மாவுக்கு நூறுபுத்திரர்கள் பிறப்பார்கள். ஆனல், தாய்செய்த தவறுதலினல் அவன் பொட்டையனுகத்தான் பிறப்பன்" என்றுசொன்னர். அவருடைய அந்தச்சொல்லைக்கேட்டு அவர் தாயாராகிய ஸத்யவதி தன் புத்திரரைநோக்கி, "தபோதனனே! குருவம்சத்தார்க்குப் பொட்டையன் தகுதியானராஜாவன்றே! சுற்றத்தாரின் வம்சங்களைக் காப்பாற்றுகிறவனும், தன் பிதிர்வம்சத்தை அபிவிருத்தி செய்பவனும், என்றுயரத்தையொழிப்பவனும், ராஜாவாகக்கூடியவனுமாகிய மற்றொரு புத்திரனை மற்றொருத்தியினிடம் அவனுக்கினியவனுக உண்டாக்கக்கடவாய். இவளும் உன்ஸஹோதரனுடைய இளையமனைவி; அழகினலும் யௌவனத்தினலும் சோபிக்கிறவள். என்சொல்லுக்காக இவளிடத்தில் குணங்கள்மிகுந்தஸந்ததியை உண்டாக்கக்கடவாய். குருவம்சத்துக்கு ராஜாவாகத்தக்க இரண்டாவது புத்ரனைக்கொடுக்கக்கடவாய்" என்றுசொன்னள். பெரும்புகழுள்ள அந்த வியாஸர் ஆகட்டுமென்றுவாக்குத்தத்தம்செய்து வெளியிற்சென்றர். அந்தக்கௌஸல்யையும்

காளடைவில் அவர்சொன்னபடி கண்தெரியாத பிள்ளையைப்பெற்றாள். வீரரே! மறுபடியும் அந்தஸத்யவதீதேவி மருமகளுக்குத் தெளிவாகச்சொல்லிவைத்துப் பிறகு முன்போலவே வியாஸமஹரிஷியை வருவித்தாள். மறுபடியும்ஸத்தியவதி, குலத்தின் ஸந்ததிக்காக அம்பாலிகையையழைத்து அவளிடம் தன்புத்திரரான வியாஸரை மறுபடியும் நியமித்தாள். பதிவ்ரதையான அம்பாலிகை உயர்ந்தபடுக்கையில் வ்யஸனத்துடன் உட்கார்ந்துகொண்டு யார்வரப்போகிறாரோவென்று சிந்தித்துக்கொண்டு ஜாக்ரதையாக எதிர்பார்த்திருந்தாள். பிறகுமுன்போலவே வியாஸமஹரிஷி அந்த அம்பாலிகையினிடம் வந்துசேர்ந்தார். பாரதரே! அவளும் அந்த ரிஷியைப்பார்த்ததும் நிறம்மாறி வெண்ணிறமாக ஆனாள். பாரதரே! பயந்தவளும் வெண்ணிறமுள்ளவளும் வ்யஸனமுற்றவளுமான அம்பாலிகையைநோக்கி ஸத்யவதியின் புத்ரராகிய வியாஸர், "நான்விகாரரூபமாயிருப்பதைக் கண்டு நீ வெண்மைநிறம் அடைந்ததனால் உன்னுடையபுத்ரன் (பாண்டு) வெண்மையாகவே பிறப்பன். அழகான முகமுள்ளவளே! அவனுக்குப் பாண்டுவென்பதே பெயராக இருக்கும்" என்றுசொன்னார். இவ்வாறு சொல்லிவிட்டு அந்தப் பகவானுகிய ரிஷிச்ரேஷ்டர் வெளியில்வந்தார். அங்கிருந்து வெளியில்வந்த அந்தப் புத்திரைநோக்கண்டு ஸத்யவதி, "புத்ரனே! இவளிடத்தில் நல்ல ராஜகுமாரன் உண்டாவனோ? எனக்குச் சொல்" என்றுகேட்டாள். "அந்தக்குழந்தை வெண்மையாக இருப்பன்" என்று தம்தாயாருக்கு வியாஸர்சொன்னார். "மிகுந்த பராக்ரமமுள்ளவனும் எல்லாத்திசைகளிலும் புகழ்பெற்றவனுமாகிய குமாரன் பிறக்கப்போகிறான். ஆனால் தாயினுடைய பிழையினால் அவனுடையநிறம் வெளுப்பாகஇருக்கும். அவனுக்குச் சிறந்த வில்லாளிகளாகிய ஐந்துபுத்ரர்கள் உண்டாவார்கள்" என்றும்சொல்லி, அங்கேயே தாயாருக்கு வந்தனஞ்செய்து, வியாஸமஹரிஷி சென்றார். அந்தத்தாயார் மறுபடியும் மற்றொருபுத்திரன் வேண்டுமென்று அவரிடம் வேண்டிக்கொண்டாள். வியாஸமஹரிஷியும் தமது தாயாருக்கு "அப்படியே ஆகட்டும்" என்று மறுமொழிசொன்னார். பிறகு பிரஸவகாலம் வந்தபோது அம்பாலிகாதேவி ராஜலக்ஷணங்கள் நிரம்பினவனும் ஒளியினால் ஜ்வலிப்பவன்போன்றவனுமாகிய வெண்ணிறமானகுமாரனைப் பெற்றாள். அவனுக்குச் சிறந்த வில்லாளிகளாகிய பஞ்சபாண்டவர்களென்னும் புத்ரர்கள் பிறந்தனர். பீஷ்மர் அவ்விரண்டு புத்ரர்களுக்கும் முறையே வேதங்களின் கரைகண்டவர்களாகிய பிராமணர்களைக்கொண்டு ஜாதகர்மம் முதலான கிரியைகளைனத்தை

யும் சாஸ்திரப்படி க்ரமமாகச் செய்வித்தார். அம்பிகைக்குப்பிறந்த புத்திரன் குருடனாயிருந்ததைக்கண்டு ஸத்யவதியானவள் தன் புத்ர ராகிய வியாஸரையழைத்து, "இவன் பொட்டையன்; அம்பிகைக்கு மற்றொரு நல்லபிள்ளையை நான் விரும்புகிறேன்" என்றுசொல்லி அம்பிகைக்காக மற்றொருபுத்திரனை வேண்டினாள். இவ்வாறுவேண் டப்பட்ட வியாஸமஹரிஷி தமது மாதாவைநோக்கி, "அழகான கௌஸல்யை மற்றொரு முறை ஸரியாக இருப்பாளாயின், அவளுக் குத் தர்மசாஸ்திரமும் ராஜநீதிசாஸ்திரமும் தெரிந்த குமாரன் உண் டாவான்" என்றுசொன்னார். ஸத்யவதியானவள் மறுபடியும் தன் மூத்தமருமகளாகிய அம்பிகையைத் தைரியப்படுத்தி ருதுகாலத்தில் அவளை வியாஸரிடம் அனுப்பினாள். தேவகன்னிகைக்கு ஒப்பான அந்த அம்பிகை அம்மஹரிஷியினது பழைய உருவத்தையும் மனத் தையும் நினைத்துப் பயத்தினால் ஸத்யவதிசொன்னதைச் செய்யவில்லை. பிறகு அந்தக் காசிராஜனுடைய பெண் அப்ஸரஸுக்கொப்பான தன் தாஸியைத் தன் ஆபரணங்களினால் அலங்காரஞ்செய்து வியாஸருக்கு அனுப்பினாள். அந்த வேலைக்காரியோவெனில் அம்மஹரிஷிவந்த போது எதிர்கொண்டழைத்து நமஸ்காரஞ்செய்து அவர் அனுமதி கொடுத்தபின் படுத்தாள்; அவரைக்கௌரவித்து உபசாரம்செய்தாள். ரஹஸ்யத்தில்இன்சொல்லையும் இஷ்டத்தையும்கொடுத்துத்தேகத்தை நன்றாக ஆலிங்கனஞ்செய்து காமஸுகத்தைக் கொடுத்ததனால் வியாஸ மஹரிஷி அவளிடம் திருப்தியடைந்தார். ராஜாவே! தீவ்ரமான தபஸுள்ள அந்தமஹரிஷி அவளுடன்கூடச் சயனித்திருந்தார். எழு ந்திருக்கும்போது அவளைப்பார்த்து, "நீ அடிமைத்தன்மை நீங்கின வளாவாய்; அழகியவளே! துக்கிலாக்கியமான இந்தக்கர்ப்பம் உன் வயிற்றில் வந்திருக்கிறது. இந்தப்புத்ரன் தர்மாத்மாவாகவும் உல கத்திலுள்ள புத்திமான்கள் எல்லாரிலும் சிறந்தவனாகவுமிருப்பான்" என்றுசொன்னார். கிருஷ்ணத்வைபாயனருடைய அந்தப்புத்ரன்விது ரனென்னும் பெயருடையவனாகத் திருதராஷ்டிரனுக்கும் மஹாத்மா வாகிய பாண்டுவுக்கும் ஸஹோதரனாகப் பிறந்தான். நீதி சாஸ்திரங்க ளின் நுட்பம்தெரிந்தவனும் காமக்ரோதங்களற்றவனுமாகிய தர்ம தேவதை அந்த மஹாத்மாவான ஆணிமாண்டவ்யரிஷியின் சாபத் தினால் விதுரனாகப்பிறந்தான். வியாஸபகவானும் கௌஸல்யை கன்னை யமாற்றினதையும் சூத்ரப்பெண்ணுக்குப் புத்ரன் பிறப்பதை யும்பற்றி ஸத்யவதிக்குத் தெரிவித்தார். அவர் தமதுதர்மத்தின் கட னைத் தீர்த்தவராகி மறுபடியும் தாயாரைச் சந்தித்துக் கர்ப்பத்தைப்

பற்றி அவளுக்குத் தெரிவித்தபிறகு அங்கேயே அந்தர்த்தானமாயினர். குருவம்சத்தை விருத்திசெய்கின்றவரும் தேவகுமாரருக்கொப்பானவருமான இந்தப்புத்ரர்கள் விசித்ரவீர்யனுடைய மனைவிகளினிடம் த்வைபாயனமஹரிஷிக்குப் பிறந்தார்கள்.

நூற்றுப்பதினொருவது அத்தியாயம்.

ஸம்பவபர்வம். (தொடர்ச்சி).

(ராஜா, அறியாமல் மாண்டவ்யரைக் கழுவேற்றியது).

ஜனமேஜயர், "தர்மதேவதை தான் சாபமடைந்ததற்குக் காரணமான கர்மம் என்னசெய்தான்? எந்தப் பிரமரிஷியின் சாபத்தினால் அவன் சூத்ரயோனியிற் பிறந்தான்?" என்றுகேட்க, வைசம்பாயனர் சொல்லுகிறார்:—

"மனஉறுதியுள்ளவரும் எல்லாத்தர்மங்களையுமறிந்தவரும் ஸத்யத்திலும் தவத்திலும் நிலைபெற்றவருமாகிய மாண்டவ்யர் என்றுபெயர்பெற்ற ஒரு பிராமணர் இருந்தார். அவர் தீர்த்தயாத்திரைக்காகக் கிராமங்களின் சமீபங்களிலுள்ள தீர்த்தங்கள் எல்லாவற்றிலும் தம் இஷ்டப்படி ஸஞ்சரித்துவந்தார். அம்மஹரிஷி அவ்விடத்தில் ஓர் ஆச்ரமம்கூட்டிக்கொண்டு வாஸஞ்செய்தார். சிறந்ததவமுள்ள அம்மஹாயோகி தம் ஆச்ரமத்தின்வாயிலில் மரத்தினடியில் கைகளைத் தூக்கிக்கொண்டு மௌனவ்ரதத்தை வஹித்துநின்றார். பாரதரே! அவர் தவத்திலிருக்கும்போது நீண்டகாலத்துக்குப் பின் திரவியத்தைத் திருடிக்கொண்டுபோகும் கொள்ளைக்காரர்கள், காவலாளிகள் அனேகர் பின்தொடர்ந்துவர அந்த ஆச்ரமத்துக்கு வந்துசேர்ந்தனர். அவர்கள் உறுதியான தவமுள்ள அந்தமுனி எந்தவிடத்திலிருந்தாரோ அதேஇடத்திற்குக் கிராமத்திலிருந்து திருடிக்கொண்டுவந்த திரவியத்தோடுவந்தனர். குருச்ரேஷ்டரே! அந்தக் கொள்ளைக்காரர்கள் திருடின திரவியத்தைப் பயத்தினால் சேனைவருவதற்குமுன்னே அவ்வாச்ரமத்தில் வைத்து, அங்கேயே ஒளிந்திருந்தனர். அவர்கள் ஒளிந்தபின், அந்தக்காவலாளிகளுடைய சேனை வெகுசீக்கிரத்தில் அவ்விடம்வந்து சேர்ந்தது. திருடரைத் தொடர்ந்துவந்த காவலாளிகள் அங்கே அந்தரிவியைக்கண்டனர். ராஜாவே! பிறகு அவர்கள் அவ்வாறு மௌனவ்ரதத்திலிருந்த அம்முனிவரைநோக்கி, "பிராம

ணேத்தமரே! திருடர்கள் எந்தவழியாகச் சென்றனர்? பிராம்மண ரே! நாங்களும் இன்னும்விரைவாக அந்தவழியே செல்லவேண்டும்" என்றுகேட்டனர். ராஜாவே! அவ்வாறு அந்தக்காவலாளிகள் கேட்குப்போது அந்தரிஷி நல்லதோ கெட்டதோ ஒரு சொல்லையும்சொல்லவில்லை. பிறகு அந்தக் காவலாளிகள் அந்த ஆச்ரமமுழுதும்தேடி அங்கே ஒளித்திருந்த அந்தத் திருடர்களையும் அவர்கள்திருடின திரவியத்தையும் கண்டனர். பிறகு அந்தக்காவலாளர்களுக்கு அந்த ரிஷியின்மேல் ஸந்தேகம் உண்டாயிற்று. பிறகு அவரையும் அந்தத் திருடர்களையும்கட்டி ராஜாவினிடம் ஒப்பித்தனர். ராஜா திருடர்களுடன்கூடவே அவரையும் வதஞ்செய்யக் கட்டளையிட்டான். சிறந்த தபஸ்ஸுள்ள அந்தரிஷி அந்தக் காவலாளிகளின் அறிவின்மையினால் சூலத்தில் ஏற்றப்பட்டார். அந்தக் காவலாளர்கள் அந்தரிஷியைச் சூலத்திலேற்றிவிட்டு அப்போதே அந்தத்தனங்களையெடுத்துக்கொண்டு ராஜாவினிடம் சென்றனர். சூலத்திலிருந்த தர்மாத்மாவான அந்தப்பிரமரிஷி வெகுகாலம்வரையில் ஆகாரமில்லாமலிருந்தும் மரணமடையவில்லை. உயிரைநிறுத்திக்கொண்டு ரிஷிகளையும் வருவித்தார். அந்தமஹாத்மா சூலத்தின்முனையிலும் செய்துகொண்டிருந்த தவத்தால் தவமுள்ள முனிவர்கள் கொதிப்பையடைந்தனர். பாரதரே! அந்தமுனிவர்கள் இராத்திரியில் பக்ஷியுருவ மெடுத்துக்கொண்டு சேர்ந்து பறந்துவந்து, அந்தப் பிராமணச்ரேஷ்டரைக்கண்டு, "பிராமணரே! நீர் இந்தச்சூலத்தில் பயங்கரமான துயரடைதற்குக் காரணமாக என்னபாபஞ் செய்திருக்கிறீர்? அதைக்கேட்க விரும்புகிறோம்" என்று தம்தம் சக்திக்கேற்ப வினவினர்.

நூற்றுப்பதினேழாவது அத்தியாயம்.

ஸம்பவபர்வம். (தொடர்ச்சி).

(ஆணிமாண்டவ்யர் தர்மதேவதையினிடம் சென்று தம்மைத்தண்டித்ததற்குக் காரணங்கேட்டுத் தர்மதேவதைக்குச் சாபங்கொடுத்தது).

பிறகு அந்த ரிஷிச்ரேஷ்டர், "நான் யாரிடத்தில் குற்றம்நிகழ்ப்பேன்? வேறொருவன் எனக்குத் தீங்குசெய்யவில்லை" என்று அந்த ரிஷிகளுக்கு மறுமொழிகூறினர். ஜனமேஜயராஜாவே! வெகுகாலத்திற்குப்பின் ஒருநாள் காவலாளிகள் அந்தக்கழுவில் அவ்வாறிருந்த

அந்த ரிஷியைக்கண்டு நடந்ததை நடந்தபடி ராஜாவுக்குத் தெரிவித்தனர். ராஜாவும் அவரை ரிஷியென்றுகேட்டு அப்போதே மந்திரிகளுடன்கூட வெளிப்புறப்பட்டு வந்து சூலத்திலிருக்கும் அந்த ரிஷிச்ரேஷ்டரைப்பார்த்து, "ரிஷிச்ரேஷ்டரே! அறியாமையினால் பிரமித்து நான்செய்த அபசாரத்தை மன்னிக்கும்படி உங்களை வேண்டுகிறேன். அந்தவிஷயத்தில் நீங்கள் என்மேல் கோபிக்காமலிருக்கவேண்டும்" என்று பிரார்த்தித்தான். ராஜாவினால் இவ்வாறு கேட்டுக்கொள்ளப்பட்ட மாண்டவ்யரிஷி மன்னிப்பைச்செய்தார். மன்னித்தவராகிய அவரை ராஜா அந்தச் சூலத்திலிருந்து இறக்கிவைத்தான். சூலத்தின் முனையினின்று இறக்கினபின் அந்தச்சூலத்தை இழுத்தான். அந்தச்சூலத்தை இழுக்கமுடியாமையால் அதை அடியில் வெட்டிவிட்டான். உள்ளே நின்றுமேபான சூலத்துண்டுடன்கூடவே அந்த முனிவர் திரிந்துகொண்டிருந்தார். கழுத்திற்கும் விலாப்புறங்களுக்கும் இடையிலிருந்த ஆணியுடன் ஸஞ்சரித்துக்கொண்டு அந்தரிஷி அதில் புஷ்பக்குடலையை மாட்டிக்கொள்ளலாமென்று நினைத்தார். அவர் மிகுந்ததவத்தினால் பிறருக்குத் துர்லபங்களான லோகங்களை ஜயித்தார். அந்தச் சூலமிருந்ததனால் அவர் ஆணிமாண்டவ்யர்என்று உலகங்களிற் சொல்லப்படுகிறார். பிரபஞ்ஞானியான அந்தப்பிராமணர் தர்மதேவதையின் வீடுசென்று அங்கே ஆஸனத்தில் வீற்றிருக்கும் பிரபுவான தர்மதேவதையைக்கண்டு, "இப்படிப்பட்ட இந்தப் பலனை நானடையும்படியாக நான் அறியாமற்செய்த தீவினை யாது? அதை நீ உடனே எனக்குச்சொல்; என்தவத்தின் வன்மையைப் பார்" என்று ஆக்ஷேபித்தார். அதற்குத் தர்மதேவதை, "தபோதனரே! உம்மால் பக்ஷிகளின் வாற்புறங்களில் எஃகு கோக்கப்பட்டது. அந்தக் கர்மத்திற்காக இந்தப்பலனை நீர் அனுபவிக்கிறீர். பிரம்மரிஷியே! தானமானது ஸ்வல்பமாகக் கொடுக்கப்பட்டாலும் அனேகமடங்காக விருத்தியாகிறதுபோலவே பாவமும் அதிக துக்கமாகிய பயனைக்கொடுக்கும்" என்றான். ஆணிமாண்டவ்யர், "எந்தக்காலத்தில் அந்தப்பாவம் என்னாற்செய்யப்பட்டதென்பதை ஸரியாகச் சொல்" என்றுகேட்க, "நீர் குழந்தைப்பருவத்திற் செய்தது" என்று தர்மதேவதை மறுமொழிசொன்னான். ஆணிமாண்டவ்யர், "பிறந்ததுமுதல் பன்னிரண்டுவருஷம் வரையில் ஒருவனிபன் எதைச்செய்தாலும் அதனால் பாபம்வராது. ஏனெனில், அவன் அந்தக்காலத்தில் சாஸ்திர உபதேசங்களை அறியான். சிறியகுற்றத்திற்குப் பெரியதண்டனை உன்னால் என்விஷயத்தில் விதிக்கப்பட்டது. எந்தப்பிராணிக

ளையும் ஹிம்ஸிப்பதைப்பார்க்கிலும் பிராம்மணவதம் மிகப்பெரியது. தர்மனே! ஆதலால், நீ மனுஷ்யனுகச் சூத்திரயோனியிற் பிறப்பாய். இதுமுதல் உலகத்தில் விணைப்பயனுண்டாவதற்கு ஒருவரம்பு ஏற்படுத்துகிறேன்; அதாவது பதினுலாவது பிராயம்வரையில் பாபம்சேராது; அதற்குமேல் பாவம் செய்கிறவர்களுக்குமட்டும் குற்றம் அவசியம் உண்டாகும்" என்றுசொன்னர். தர்மதேவதை இந்த அபராதம் செய்ததனுல் அம்மஹாத்மாவின் சாபத்தையடைந்து விதுரர்வடிவமாகச் சூத்ரயோனியிற் பிறந்தான். அந்தவிதுரர் தர்மசாஸ்திரத்திலும் ராஜநீதிசாஸ்திரத்திலும் தேர்ந்தவர்; ஆசையும் கோபமும் அற்றவர்; தீர்க்கமாக ஆராய்கிறவர்; சாந்தியையே முக்கியமாகக் கொண்டவர்; கௌரவர்களின் நன்மையில் கருத்துள்ளவர்.

நூற்றுப்பதினேட்டாவது அத்தியாயம்.

ஸம்பவபர்வம். (தொடர்ச்சி).

(பாண்டுவுக்கு ராஜ்யாபிஷேகமும் ராஜகுமாரர்களின் விவாகத்தைப்பற்றிப் பீஷ்மர் நினைப்பதும்).

திருதராஷ்டிரனும் பாண்டுவும் மஹாத்மாவாகிய விதுரருமாகிய இம்மூன்று குமாரர்களும் பிறந்தபின் குருஜாங்கலமென்னும் இடமும் குருதேசமும் குருக்ஷேத்ரமென்ற ஊருமாகிய இம்மூன்றும் அபிவிருத்தியையடைந்தன. பூமி வளர்ந்தபயிர்களுள்ளதாகவும், பயிர்கள் மிகுந்தபலன்களுள்ளவையாகவும், மேகங்கள் காலத்தில் வருஷிப்பனவாகவும், மரங்கள் பூக்களும் காய்களும் நிரம்பினவைகளாகவும், யானைகுதிரைகள் முதலிய வாஹனங்கள் உத்ஸாஹமுள்ளவைகளாகவும், மிருகங்களும் பக்ஷிகளும் மகிழ்ச்சியுள்ளவையாகவும், மலர்கள் மிகுந்த மணமுள்ளவையாகவும், பழங்கள் மிக்க சுவையுள்ளவையாகவுமிருந்தன. நகரங்கள் வர்த்தகர்களாலும் தொழிலாளிகளாலும் நிரம்பப் பெற்றிருந்தன. சூரர்களும் கல்வியில் தேர்ந்தவர்களும் ஸாதுக்களும் ஸுகமாக இருந்தனர். அந்தத்தேசங்களின் எந்தப்பாகங்களிலும் எந்தஜனங்களும் திருடர்களாகவும் பாபத்தில் விருப்பமுள்ளவர்களாகவும் இருக்கவில்லை; கிருதயுகமாக நடந்தது. அப்போது பிரஜைகள் தம்தம் தர்மங்களைச் செய்கிறவர்களாகவும் யாகங்களை விடாதவர்களாகவும் ஸத்யத்தை விரதமாகக் கடைப்பிடித்தவர்களாகவும் ஒருவர்க்கொருவர் நேசமுள்ளவர்களாகவும் மேன்மை

யுற்றனர். மனிதர்கள் அகங்காரமும் கோபமும் பொருளாசையுமில்லாதவர்களாகி ஒருவர்மீது ஒருவர் அன்புடனிருந்தனர். தர்மமே மேலாக இருந்தது. கருங்கடல்போல் நிரம்பின அந்த அஸ்தினாபுரம் மேகக்கூட்டம்போன்ற கோபுரங்களோடும் மாடப்புரைகளோடும் இருபுறமும் ஸ்தம்பங்களோடும் கூடி அனேகம் அரண்மனைகள் நெருங்கியிருந்ததனால் தேவேந்திர நகரத்துக்கொப்பாக விளங்கிற்று. ஜனங்கள் நதிகளிலும், அடர்ந்தகாடுகளிலும், வாவிகளிலும், தடாகங்களிலும், மலைச்சாரல்களிலும், அழகான தோட்டங்களிலும், மகிழ்ந்து விளையாடினர். உத்தரகுரு தேசத்தவரும், தக்ஷிணகுருதேசத்தவரும், தேவர்களோடும், ரிஷிகளோடும், சாரணர்களோடும், தாம் மேற்படவேண்டுமென்கிற எண்ணத்துடன் * திரிந்தனர். கௌரவர்களிஞற்சிறப்பாகச் செய்யப்பட்ட அந்த அழகானதேசத்தில் ஒருவனும் ஏழையாக இருக்கவில்லை. ஸ்திரீகள் விதவைகளாகவில்லை. ராஜாவே! பீஷ்மரால் எல்லாவிடங்களிலும் தர்மத்துடன் காப்பாற்றப்பட்ட அந்தராஜ்யத்தில் கிணறுகளும், தோட்டங்களும், ஸபைகளும், வாவிகளுமிருந்தன. அவ்வாறே பிராமணர்களுடைய க்ருஹங்கள் எல்லாச்செல்வங்களும் நிரம்பி நித்யோத்ஸவமுள்ளவைகளாயிருந்தன. பகைவரின் ராஜ்யங்களைத் † தொலைத்து, அந்தக்குருதேசம், பீஷ்மரால் பெருகச் செய்யப்பட்டு நூற்றுக்கணக்கான தேவாலயங்களும் யூபஸ்தம்பங்களுமாகிய அடையாளங்களினால் அழகாக இருந்தது. அந்தராஜ்யத்தில் பீஷ்மரால் ஏற்படுத்தப்பட்ட தர்மமென்னும் சக்கரம் சுழன்றுகொண்டே இருந்தது. மஹாத்மாக்களான ராஜகுமாரர்களுக்கு ஜாதகர்மமுதலான ஸம்ஸ்காரங்கள் செய்யப்படும் போது நகரத்திலும் தேசத்திலுமுள்ள ஜனங்களனைவரும் மிக்க ஆனந்தமுள்ளவராக இருந்தனர். ஜனமேஜயராஜாவே! கௌரவராஜர்களுடைய க்ருஹங்களிலும் நகரத்தாருடைய வீடுகளிலும், "கொடு, உண்," என்னும் சொற்களே எங்கும் கேட்கப்பட்டன. திருதராஷ்டிரனும் பாண்டுவும் சிறந்தபுத்தியுள்ள விதுரரும் பிறந்தது முதல் பீஷ்மரால் தமது புத்திரர்களைப்போலப் பரிபாலிக்கப்பட்டனர்.

அவர்கள் ஜாதகர்மம் முதலான ஸம்ஸ்காரங்கள் செய்யப்பெற்று, பிரம்மசாரிகளாக அத்தியயனஞ்செய்து, சாஸ்திரபரிசயத்திலும் சரீரப்பயிற்சியிலும் தேர்ச்சியுள்ளவராகி யௌவனமடைந்தனர். தனுர்வேதத்திலும்(வேதத்திலும்)கதாயுத்தத்திலும் கத்திகேடகங்களிலும் யாணைப்பழக்கத்திலும் ராஜநீதிசாஸ்திரங்களிலும் கரைகண்டவராயி

* அவ்வளவு ஆனந்தமாக இருந்தனர். † தனக்களைப் பிடுங்கிக்கொண்டு.

னர். இதிஹாசங்களிலும் புராணங்களிலும் அநேகஸ்வாலகூஷணங்களிலும் கற்பிக்கப்பட்டவர்களாயும் வேதங்களிலும் வேதாங்கங்களிலும் யதார்த்தஜ்ஞானமுள்ளவர்களாயும்எல்லாவிஷயங்களிலும்ஞானமுள்ளவர்களானார்கள். வேதாத்யயனத்தில் ஊக்கமுள்ளவனும் ராஜநீதிசாஸ்திரங்களில் கரைகண்டவனுமாகிய கௌரவனை திருதராஷ்டிரனே ராஜாவாகப் பீஷ்மர் பட்டாபிஷேகம்செய்தார். தனுர்வேதத்திலும் குதிரையேறுவதிலும் கதாயுத்தத்திலும் கத்திகேடகங்களிலும் பாணப்பழக்கத்திலும் பலவகையான அஸ்திரங்களிலும் பற்பல வகையான அர்த்தசாஸ்திரங்களிலும் தர்மசாஸ்திரங்களிலும் பாண்டு கரைகண்டவனைபிறகு அவனைப் பீஷ்மர் சேனபதியாகச் செய்தார். பராக்ரமசாலியான பாண்டு வில்வித்தையில் மனிதருக்குள் மேலானவனாகஇருந்தான். ராஜாவாகிய திருதராஷ்டிரன் மற்றவர்களிலும் பலம் மிகுந்தவனாக இருந்தான். விதுரர் பால்யராயிருக்கும்போதே புகழ் பெற்ற அரசனாகிய திருதராஷ்டிரனுக்கு எல்லாத்தர்மங்களையும் உபதேசிக்கிற மந்திரியாகப் பீஷ்மரால் ஏற்படுத்தப்பட்டார். எல்லாச் சாஸ்திர விஷயங்களிலும் நுட்பமறிந்தவரும் க்ருஹிப்பதிலும் ஊகிப்பதிலும் ஸமர்த்தருமாகிய விதுரர் இளமைப் பருவத்திலிருக்கும்போதே சாஸ்திரத்தில் கட்டுப்பட்ட மனத்தினால் உலகத்தையெல்லாமறிந்தார். ராஜாவே! விதுரருக்கொப்பான தர்மநிஷ்டனும் அவரைப்போலச் சிறந்த தர்மத்தையறிந்தவனும் மூவுலகங்களிலும் யாருமிருந்ததில்லை. அழிந்துபோன சந்தனுவின் வம்சம் மறுபடியும் தூக்கிவிடப்பட்டதைக் கண்டபிறகு இவ்வுலகத்திலுள்ள எல்லாத் தேசங்களிலும், "வீரர்களான புத்ரர்களைப்பெற்றவர்களுக்குள் காசிராஜன் பெண்களிருவரும், தேசங்களுக்குள் குருஜாங்கலதேசமும், தர்மந்தெரிந்தவர்கள் எல்லாருள்ளும் பீஷ்மரும், நகரங்களில் அஸ்தினபுரமும் சிறந்தவை" என்று புகழ்பரவியது. ஆனால், கண்ணில்லாமையால் திருதராஷ்டிரனும் தாஸிக்குப்பிறந்ததனால் விதுரரும் ராஜ்யமடைவதற்கு உரியவராகவில்லை. அதனால் பாண்டு ராஜாவானான். பிறகு பீஷ்மர் அழகும் யௌவனமும் நிரம்பின ஒருபெண் குந்திபோஜராஜனுக்கிருப்பதாகவும், காந்தாரதேசத்து அரசனுகிய ஸுபலனுக்குச் சிறந்தபெண் ஒருத்தியிருப்பதாகவும்,மத்ரதேசத்தரசனுக்கு அழகில் பூமியில் ஒப்பில்லாத ஒருபெண் இருப்பதாகவும் பிராமணர்களால் கேள்வியுற்றார். பிறகு ஒருகாலத்தில் நீதிமான்கள் எல்லாரிலும் சிறந்தவரான பீஷ்மர் தர்மரஹஸ்யம் தெரிந்தவராகிய விதுரரை நோக்கி அந்தக்காலத்துக்குத் தகுதியானசொல்லைச் சொல்லலானார்.

நூற்றுப்பத்தோன்பதாவது அத்தியாயம்.

ஸம்பவபர்வம். (தொடர்ச்சி).

(திருதராஷ்டிரனுடைய கல்யாணத்தைப்பற்றிப் பீஷ்மரும் விதுரரும் பேசிக்கொள்வதும் திருதராஷ்டிரனுக்கும் காந்தாரிக்கும் விவாஹமும்).

"எல்லாக்குணங்களும் செம்மையாகச்சேர்ந்த இந்த நம் முடைய பெயர்பெற்ற குலமானது, பூமியில் எல்லா அரசர்களுக்கும் மேற்பட்டு, ராஜ்யத்தின் பெருமையை அடைந்திருக்கிறது. தர்மம் தெரிந்த மஹாத்மாக்களான ராஜாக்களால் முன்காப்பாற்றப்பட்டு வந்த இந்த நமதுகுலம் இவ்வுலகத்தில் ஒருகாலமும் கெடுதலேயடைய வில்லை; என்னுலும் ஸத்தியவதியாலும் மஹாத்மாவாகிய வியாஸரா லும் குலத்துக்குச் சரடுபோல நீங்கள் உண்டானபோது மறுபடியும் நிலைநிறுத்தப்பட்டது. அப்படியாகிய இந்தக்குலம் எவ்வாறு மேன் மேலும் கடல்போலப் பெருகுமோ அவ்வாறு நானும் நீயுமாகச் செய்யவேண்டுமென்பது நிச்சயம். யதுவம்சத்தில் பெண்ணிருப்ப தாகக் கேள்விப்படுகிறேன். அவள் நமது குலத்துக்கு மிகத்தகுதி யுள்ளவள். ஸுபலனுடைய பெண்ணும் மத்ரதேசத்தரசன் பெண் ணும் அப்படியே தகுதியுள்ளவர்கள்தாம். புத்ரனே! அந்தக் கன் னிகைகளெல்லாரும் நல்லகுலத்திற்பிறந்தவர்கள்; அழகுள்ளவர்கள். அந்தக்ஷத்ரியச்ரேஷ்டர்களும் நாம்ஸம்பந்தஞ்செய்யத் தகுதியுள்ள வர்கள். புத்திமான்களிற் சிறந்தவனே! இந்தக்குலத்தின் ஸந்தான விருத்திக்காக இந்தப்பெண்களை நாம் வரிக்கவேண்டுமென்று நான் நினைக்கிறேன். விதுரா! நீ என்ன நினைக்கிறாய்?" என்று பீஷ்மர் கேட்க, விதுரர், "எங்களுக்குத் தந்தையும் நீங்கள்; தாயும் நீங்கள்; முக்யமான ஆசாரியரும் நீங்கள். ஆதலால், இந்தக்குலத்திற்கு எது நன்மையோ அதை நீங்களே ஆராய்ந்து செய்யவேண்டும்" என்று மறுமொழிசொன்னர். பிறகு பீஷ்மர் ஸுபலன் பெண்ணகிய காந் தாரியென்பவளைப்பற்றிப் பிராமணர்களிடம் கேட்டார். வரம்கொடுப் பவரும் *பகன்என்னும் தேவதையின் நேத்ரத்தைப் பிடுங்கினவரு மாகிய தேவரான ஈசுவரனை ஆராதனஞ்செய்து புண்ணியவதியான காந்தாரி நூறுபுத்திரர்களைப் பெறும்படி வரம்பெற்றாளென்றும், குரு வம்சத்துப் பெரியவராகிய பீஷ்மர் உண்மையாகக் கேள்வியுற்றார்.

* ஆதித்தியர் பன்னிருவரில் ஒருவர்.

பாரதரே! பிறகு காந்தாரதேசத்து அரசனுக்குத் தூது அனுப்பினர். அங்கே திருதராஷ்டிரன் கண்ணில்லாதவனென்பதனால் ஸுபல னுக்கு ஆக்ஷேபமிருந்தது. ஆயினும், அந்த ஸுபலன், தன்புத்தியி னால் குலத்தையும் க்யாதியையும் ஒழுக்கத்தையும் ஆராய்ந்துபார்த் தத் திருதராஷ்டிரனுக்குப் பதிவ்ரதாதர்மத்தை விடாதவளாகிய அந் தக் காந்தாரியைக்கொடுத்தான். பாரதரே! காந்தாரி பிறகு திருத ராஷ்டிரனுக்குக் கண்ணில்லையென்றும் அவனுக்குத் தன்னைக்கொடுக் கத் தாயுந்தந்தையும் நினைத்திருக்கிறார்களென்றும் கேள்வியுற்றாள். ராஜாவே! பதிவ்ரதாதர்மத்தைப் பெரிதாகக்கொண்ட அந்தக் காந் தாரி, "நான் கணவனை இகழாமலிருக்கவேண்டும்" என்று நிச்சயஞ் செய்துகொண்டு ஒரு வஸ்திரத்தையெடுத்துப் பலமடிப்பாக மடித் துத் தன்நேத்திரங்களிரண்டையும் கட்டிக்கொண்டாள். அதன்பின் காந்தாரதேசத்தரசன் புத்ரனுகிய சகுனி தன்ஸஹோதரியை மிகுந்த ஸம்பத்துடன்கூட அழைத்துக்கொண்டு கௌரவர்களிடம் வந்தான். அப்போது சிறந்த அலங்காரங்களோடுகூடிய அவளைத் திருதராஷ்டிர னுக்குக் கொடுத்தான்; பீஷ்மர் ஒப்புக்கொண்டதன்மேல் விவாஹத் தைச் செய்வித்தான். அந்தவீரன் தன்ஸஹோதரியையும் தன் தகு திக்குத்தக்க சிறப்புகளையும் கொடுத்துப் பீஷ்மரால் எதிர்மரியாதை செய்யப்பட்டவண்ணம் திரும்பவும் தன்நகரம்சென்றான். பாரதரே! சிறந்தபெண்ணுகிய காந்தாரியும் வணக்கத்தினாலும் ஒழுக்கத்தினா லும் செய்கையினாலும் கௌரவர் எல்லாருக்கும் திருப்தியையுண்டு பண்ணினாள். அந்தக்காந்தாரி தனக்கு ஈசுவரனானபதி அறிவையே கண்ணாகப்பெற்றிருப்பதைக்கண்டு பர்த்தாவைவிட்டு மாறுகூடப் பதில் மிகநடுக்கமுற்றவளாய்ச் சிந்தையுற்றாள். அவள் பார்வையை மறைத்துக்கொண்டதனால் தன்புருஷனைப்போலானாள். அப்போது அவள் பர்த்தாவைவிட்டுச் சிறிதும் தவறுதலாயிருக்கவில்லை. கண வனையே முக்கியமாகக்கொண்டவளும் பதிவ்ரதையுமான காந்தாரி தன்ஒழுக்கத்தினால் அந்தப்பெரியோர்களெல்லாரையும் திருப்திசெய் வித்து வாக்கினாலும் வேறுபுருஷர்களை எடுத்துச்சொல்லாமலிருந் தாள். காந்தாரராஜனுகிய ஸுபலன் பீஷ்மரால் அப்போதே வரிக்கப் பட்டு அந்தக்காந்தாரியின் ஸஹோதரிகளாகிய பத்துக்கன்னிகை களைப் பின்னும் திருதராஷ்டிரனுக்குக்கொடுத்தான்; ஸத்யவ்ரதை, ஸத்யஸேனை, ஸுதேவ்ஷணை, ஸம்ஹிதை, தேஜச்சரவை, ஸுச்சரவை, நிக்ருதி, சுபை, சம்படை, தசார்ணை என்று பெயர்பெற்ற காந்தார ராஜாவின் பெண்கள் பதின்மரையும் ஒரேதினத்தில் திருதராஷ்டிரன்

பாணிக்ரஹணஞ் செய்துகொண்டான். அதன்பின் சிறந்த வில் லாளியும் சந்தனுபுத்திரருமான பீஷ்மர் ஆங்காங்கிருந்து நூற்றுக்கு மேற்பட்ட. ராஜபுத்திரிகளைத் தருவித்துத் திருதராஷ்டிரனுக்குக் கொடுப்பித்தார்.

நூற்றிருபதாவது அத்தியாயம்.

ஸம்பவபர்வம். (தொடர்ச்சி).

(குந்தி துர்வாஸரிஷியினிடம் மந்திரம்பெற்று அதைப் பரீக்ஷிப்பதற்காக ஸூர்யனையழைக்கக் கர்ணன்பிறந்ததும், அவனை ஜலத்திலிட ஸுதன் எடுத்துவளர்த்ததும், அவனுக்கு இந்திரனிடம் சக்தி யாயுதம் கிடைத்ததும்).

வஸுதேவருக்குப் பிதாவாகிய சூரனென்னும் பெயரையுடைய யாதவச்ரேஷ்டன் ஒருவன் இருந்தான். அவனுடையபெண் ப்ருதை யென்பவள். அவளுக்கு ஒப்பானபெண் உலகத்திலில்லை. பாரதரே! ஸத்யவாக்கான அந்தச்சூரனென்பவன் ஸந்ததியில்லாதவனும் தனது உபகாரத்தை விரும்புகிறவனும் தன் ஸ்நேகிதனுமான குந்திபோஜனென்னும் தன் அத்தைமகனுக்குத் தன்னுடைய முதற்குழந்தையைக்கொடுப்பதாகப் பிறக்கிறதற்குமுன்னமே பிரதிஜ்ஞைசெய்து, பிறகு ஸத்யவாக்கான அந்தச் சூரனென்பவன் முதலிற்பிறந்தவளாகிய அந்தப்பெண்ணை அம்மஹாத்மாவுக்குத் தத்தாகக்கொடுத்தான். அவள், பிராமணர்களான அதிதிகளைப் பூஜிப்பதில் நியமிக்கப்பட்டுத் தன்பிதாவின் க்ருஹத்திலிருக்கும்போது உக்ரமான தவமுள்ளவரும் தர்மத்தைப் பரீக்ஷிப்பதில் தம் அபிப்பிராயத்தை வெளிவிடாதவருமான துர்வாஸஸ் என்று க்யாதிபெற்ற கொடியபிராமணருக்கு அங்கே பணிவிடைசெய்தாள். கொடியவரும் சுத்தமான மனஸுள்ளவருமாகிய அவரை எல்லாவகையான பிரயாஸங்களாலும் திருப்தி செய்வித்தாள். மிகச்சிறந்த நற்குணமுள்ள குந்தி ஒவ்வொருநாளும் தவறாமல் அந்த யோகீச்வரருக்குத் தயிர் நெய் முதலிய வ்யஞ்சன வகைகளை ஆபிரக்கணக்காகக் கொடுத்து உபசாரம்செய்தாள். அந்தத் துர்வாஸஸ் என்னும்ரிஷி ஒருவருஷத்தின்முடிவில் சிறந்தபுகழுள்ள அந்தப்பிருதைக்கு நேரும் ஆபத்தர்மத்தை ஆலோசித்துப்பார்த்து அப்போது வசப்படுத்துகிற கிரியையோடுகூட ஒரு மேலானமந்திரத்தைக்கொடுத்து அவளைப்பார்த்து, "நீ இந்த மந்திரத்தினால் எந்தஎந்தத் தேவதையை ஆவாஹனஞ்செய்வாயோ அந்தஅந்தத்

தேவதையின் மஹிமையோடுகூடிய புத்ரன் உனக்குப்பிறப்பன்" என்றுசொன்னர்.

புகழ்பெற்ற குந்தி அந்தப்பிராமணரால் அவ்வாறு சொல்லப் பட்டு அதைப் பரீக்ஷிக்க எண்ணங்கொண்டு கன்னிகையாயிருக்கும் போதே சூரியபகவானை அழைத்தாள். பிறகு அந்தஸூர்யன் தன் னுடைய மார்க்கத்தை மேகங்களால் மறைக்கப்பட்டதாகச் செய்து கொண்டு, விசாலமான கண்களையுடைய கன்னிகையான அந்த ப்ரு தையினிடம் வந்துசேர்ந்தான். அழகான அங்கமுள்ள அந்தப்ருதை லோகங்களைப் பிரகாசப்படுத்தும் அந்தஸூர்யன் வருவதான அந்தப் பெரிய அற்புதத்தைக் கண்டதனால் திகைத்து நின்றாள். "பக வானே! என்முன்னே தோன்றின நீர் யார்?" என்று அவள்கேட்க, ஸூர்யன், "பிரியமானவளே! வெண்மையான புன்னகையுள்ளவளே! ரிஷியின் மந்திரத்தினால் ஏவப்பட்டு நீ அழைத்ததனால் உனக்குப் புத்திரலாபம்கொடுக்க வந்திருக்கும் ஸூர்யனென்னும் தேவதை யென்று என்னையறி. அழகான முகமுள்ளவளே! அழகான புருவ முள்ளவளே! கேள். என்னைப்போன்ற புதல்வன் உனக்கு ஸ்ருஷ்டி செய்யப்பட்டிருக்கிறான். அழகான புன்னகையுள்ளவளே! என்னு டைய குண்டலங்களையும் என்னுடைய கவசத்தையும் அணிந்தவனு கப் பாணங்களாலும் அஸ்திரங்களாலும் பேதிக்கமுடியாத புத்ரன் பிறப்பன். பிராமணர்களுக்கு அவன் கொடுக்கத்தகாதது ஒன்று மிராது. நான் தடுத்தாலும் அவன் அதை ஸரியாகநினைக்கமாட் டான். பிராமணர்களுக்குக் கொடுத்தேதீருவான். மானமுள்ளவனாக இருப்பான்" என்று சொன்னான். இவ்வாறு சொல்லப்பட்ட குந்தி சூரியனைப்பார்த்து, "நான் பிதாவுக்குட்பட்ட கன்னிகை; எனக்கு இதில் புருஷார்த்தமொன்றுமில்லை. சத்ருக்களை ஸம்ஹரிக்கிறவரே! எனக்கு ஒரு பிராமணர் ஒரு வித்தையையும்கொடுத்து வரத்தையும் அளித்தார். பிரபுவே! அதைப்பரீக்ஷிக்க நினைத்ததனால் உம்மையழை த்தேன். இந்தக்குற்றத்திற்காக உம்மை நான் தலையால்வணங்கி மன் னிப்புக் கேட்டுக்கொள்ளுகிறேன். பிழையிருந்தபோதிலும் பெண் களை எப்போதும் காப்பாற்றவேண்டுமல்லவா?" என்று மதுமொழி சொன்னாள். "துர்வாஸர் உனக்குவரம்கொடுத்த விஷயமெல்லாம் எனக்குத்தெரியும். நீ பயத்தைவிட்டு என்னிடம் சேருவதுதான் நியாயம். அழகானவளே! என்னை நீ பார்த்தது வீண்போகலாகாது; நீ என்னையழைத்திருக்கிறாய்; பயப்படுகிறவளே! வீணாக அழைப்பதி லும் உனக்குப் பாவம்வரும்; அதில் ஸந்தேகமில்லை; பயப்படுகிற

வளே! இப்படி நீ நினைத்தால் சூரியனே நீ என்அழைக்கிறாய்? என்னை நீ அவமதித்தால் யாரிடத்தில் மந்திரம்பெற்றுக்கொண்டு நீ கர்வத்தினால் மதிக்காமலிருக்கிறாயோ அந்தரிஷியே இருக்கமாட்டார். கோபத்தால் ஜ்வலிக்கின்ற கண்ணால் உன்குலத்தையும் இப்போதே எரித்துவிடுவேன்" என்று சூரியன் சொன்னான். பாரதரே! சூரியனால் இவ்வாறு பலவகையான அன்புபாராட்டிச் சொல்லப்பட்டும் அந்தப் புகழ்பெற்ற உத்தமஸ்திரீயாகிய குந்தி தன்பர்துக்களுடைய வர்க்கத்தினிடமுள்ள பயத்தினாலும் வெட்கத்தினாலும் கலக்கமுள்ளவளாகி, "நான் கன்னிகை" என்றுசொல்லி ஸூர்யபகவான் சொன்னதை விரும்பவில்லை. பரதச்ரேஷ்டரே! மறுபடியும் ஸூர்யபகவான் அவளை நோக்கி, "ராஜகுமாரியே! என் அனுக்ரஹத்தினால் உனக்கு ஒரு குற்றமும்வராது" என்று சொன்னான். குந்தி, "பகவானே! என் மீது தயைபண்ணுங்கள். எனக்குக் கர்வமில்லை; கன்னிகையின் தர்மத்தைக் கெடுப்பது நீங்களே விடத்தக்கவிஷயம்" என்றுசொல்ல, ஸூர்யன், "உன்பயம் இப்போது விலகட்டும். குமாரனைப் பார்ப்பாய். நீ என்னிடம் அனுமதிபெற்றுக்கொண்டபிறகு மறுபடியும் கன்னிகையாய்விடுவாய்" என்று கூறினான். இவ்வாறு ஸூர்யன் சொல்ல, அழகான புருவங்களையுடையகுந்தி மயிர்க்கூச்சம் எடுத்தவளாய் மஹாத்மாவான ஆதித்யனுடன் சேர்ந்தாள். ப்ரகாசத்தைச் செய்பவனாகிய ஸூர்யன் கன்னிகைப் பருவத்திலேயே குந்திக்குக் கர்ப்பத்தைக்கொடுத்தான். அந்தக்கர்ப்பத்திலிருந்து வீரனும், ஆயுதம்தரிப்பவர் எல்லாரிலும் சிறந்தவனும், அழகும் ஒளியும் பொருந்தினவனும், உடன்பிறந்த கவசத்தைவஹித்துக் குண்டலங்களினால் விளங்கச் செய்யப்பட்ட முகமுள்ளவனும், எல்லாலோகங்களிலும் பெயர் பெற்றவனும், தேவகுமாரனுமான கர்ணனென்னும் புதல்வன் பிறந்தான். மிகுந்தப்ரகாசமுள்ள அந்த ஸூர்யன் குந்திக்கு மறுபடியும் கன்னிகைப்பருவத்தைக் கொடுத்தான். கொடுத்தவுடன், ப்ரகாசிப்பவரிற் சிறந்தவனான ஸூர்யன் அங்கிருந்து ஆகாயத்திற் கிளம்பிச் சென்றான். அந்த யதுவம்சத்துப்புத்திரியாகிய குந்தி பிறந்தகுமாரனைக்கண்டு உள்ளம்வருந்தி, "என்னசெய்தால் செவ்வையாக முடிவுபெறும்?" என்று ஒருநிலையாகச் சிந்தையுற்றாள். அப்போது அவள், சுற்றத்தாரிடத்திற்பயந்து தன்குற்றத்தைமறைப்பதற்காக ஒருபெட்டியில் ரத்னங்களைநிரப்பி, அப்பெட்டியில் அந்தக் குழந்தையையும்விட்டு, மிகுந்த பலமுள்ள அந்தக்குமாரனைப் பெட்டியுடன் ஜலத்தில்விட்டுவிட்டாள்.

ஜலத்தில்விடப்பட்டிருந்த அந்தக்குழந்தையைச் சிறந்த புகழ் பெற்றவனும் ஸூதபுத்திரனும் ராதையென்பவளின் கணவனுமான வன், தன்பாரியையுடன் தன்பிள்ளையாகவைத்துக்கொண்டான். அவர் களிருவரும், "இவன் தனத்துடன்கூடப் பிறந்திருப்பதினால், *வஸு ஷேணனுக இருக்கட்டும்" என்று அந்தக்குழந்தைக்குப் பெயரிட்ட னர். சிறந்தபலமுள்ள அவன் வளர்ந்து எல்லா அஸ்திரங்களிலும் பயிற்சியுள்ளவனுனன். அந்தவீரன் †முதுகுசுடுகிறவரையில் ஸூர்ய தேவ உபாஸித்திருந்தான். ஜபம்செய்துகொண்டிருந்த அந்தப் புத்தி மானனவீரனுக்கு அந்தக்காலத்தில் பிராமணர்கள்விஷயத்தில் கொடு க்கத்தகாததபொருள் ஒன்றும் இப்புவியில் இருந்ததில்லை. பிறகு ஒரு காலத்தில் கனவில் அவனிடம் சூரியன் பிராமணரூபமாகவந்து, "வீரனே! என்சொல்லைக்கேள். இந்தராத்திரிவிடிந்தவுடனே இந் திரன் உன்னிடம்வருவன். அவன் பிராமணவடிவத்தோடு இருப்பன். அவனுக்கு நீ பிக்ஷைகொடாமலிருக்கவேண்டும். உன்கவசத்தையும் குண்டலங்களையும் வாங்கிக்கொண்டுபோக அவன் நிச்சயித்திருக்கி றன். அதனால் இப்போது நான் உனக்குத் தெரிவிக்கிறேன். என் சொல்லை நீ நினைப்பாயாக" என்று சொன்னன். அதற்குக் கர்ணன், "ஓ பிராமணரே! இந்திரன் பிராமணரூபத்தோடு என்னிடம்வந்துஇரந் தால் அவனுக்கு நீங்கள் தெரிவித்தபடி எப்படி நான் கொடாமலிருப் பேன். தேவர்களும் தமது நன்மையைவிரும்பிப் பிராமணர்களைப்பூஜி ப்பதற்குக் கடமைப்பட்டவர்களல்லவா? அவனைத் தேவர்களுக்கும் தேவனென்று நான்அறிந்தபின் நான் நிராகரிக்கச் சக்தனல்லேன்" என்றன். ஸூர்யன், "வீரனே! இவ்வாறுனால் நான் சொல்வதைக் கேள். அந்த இந்திரனும் உனக்கு ஒருவரம் கொடுப்பான்; அதற்கு நீயும் சத்துருக்களெல்லாரையும் வதைக்கத்தக்க சக்தியாயுதத்தைக் கேள்" என்று சொன்னன். இவ்வாறு சொன்னபின் அந்தப் பிரா மணரூபனன ஸூர்யன் அந்த ஸ்வப்னத்திலேயே மறைந்தான். கர் ணன் கண்விழித்துக்கொண்டபின் அந்தக்கனவைப்பற்றியே நினைத் துக்கொண்டிருந்தான். அப்போது உலகங்களைக் காப்பவனுகிய மிகு ந்த தேஜஸ்ஸுள்ள இந்திரன் தன்புத்திரனுகிய அர்ஜுனனுக்காகப் பிராமணரூபமெடுத்துக்கொண்டு கர்ணனிடம் குண்டலங்களையும் கவ சத்தையும் விரும்பிக்கேட்டான். அவன், மனஸில் துன்பப்படாமல்

---

* வஸு = த்ரவ்யத்துடன், ஸேனன் = ஸம்பந்தப்பட்டவன்; நல்லரத் நங்களோடும் கவசகுண்டலங்களோடும் கிடைத்தவனென்பது.

† ஸூர்யன் பின்சாயும்வரையில்.

தன்காதுகளையும் விலாப்புறங்களையும்சேதித்துத் தன்உடம்பிலிருந்து ரக்தம்பெருகும்படி கவசத்தையெடுத்துக் கைகூப்பிக்கொண்டு கொடுத்தான். தேவராஜாவான இந்திரன் அதை வாங்கிக்கொண்டு அவன் செய்த அந்தச் செய்கையினல் திருப்தியடைந்து மனத்தோடு சிரித்துக்கொண்டு, "ஆ! ஆ! அரியசெய்கை" என்று சொல்லி, "தேவர்கள், அஸுரர்கள், யக்ஷர்கள், கந்தர்வர்கள், நாகர்கள், ராக்ஷஸர்கள், முதலியயாரிலும் இந்தக்காரியம் செய்பவன் இருப்பானென்று நான் நினைக்கவில்லை. இந்தச்செய்கையினல் திருப்தியடைந்தேன், நீ விரும்புகிறவரம் என்ன? சொல்" என்று அவனைக்கேட்டான். அதற்குக் கர்ணன், "சத்துருக்களை ஸம்ஹரிக்கத்தக்க சக்தியாயுதமொன்றை நீங்கள் கொடுக்கவேண்டுமென்று விரும்புகிறேன்" என்றான். இந்திரன் ஆச்சரியத்தோடு அவனுக்குச் சக்தியாயுதத்தைக்கொடுத்து, "தேவர்கள், அஸுரர்கள், யக்ஷர்கள், கந்தர்வர்கள், நாகர்கள், ராக்ஷஸர்கள் இவர்களில் யார்மேல் நீ கோபித்து இதை ப்ரயோகிப்பாயோ அவன் இதனுலேயே இல்லாமற்போவான். யுத்தத்தில் யாராவது ஒரு சத்துருவைக்கொன்று பின் இந்தச்சக்தி என்னிடம்வந்துவிடும்" என்று சொல்லி, அவனுக்கு இந்தவரம் கொடுத்தவுடன் இந்திரன் அந்தர்த்தானமாயினன். கர்ணனுக்கு வஸுஷேணனென்ற பெயர் முன்னே சொல்லப்பட்டது. கவசகுண்டலங்களை யறுத்ததனுல் *கர்ணன் என்றும் வைகர்த்தனனென்றும் அவன் பெயர் பெற்றான்.

நூற்றிருபத்தோராவது அத்தியாயம்.

ஸம்பவபர்வம். (தொடர்ச்சி).

(பாண்டுவுக்கும் குந்திக்கும் விவாஹம்).

விசாலமானகண்களையுடைய குந்திபோஜன்புதல்வியாகிய ப்ருதை, தைரியமும் அழகும் குணங்களுமுள்ளவளாகவும், தர்மத்தில் நிற்பவளாகவும், உறுதியான நியமமுள்ளவளாகவும் மிருந்தாள். அழகினலும் யௌவனத்தினலும் சோபிக்கின்றவளும் பெண்களுக்குரிய குணங்கள் மிகப்பொருந்தினவளுமாகிய அந்த ஒளியுள்ள

* க்ருணு, க்ருதீஎன்கிற இரண்டுபகுதிகளும் சேர்ந்ததென்றபொருளுள்ளவை. அவற்றிலிருந்து, கர்ணன், வைகர்த்தனன் என்றபெயர்கள் முறையே வந்தன.

கன்னிகையைச் சில அரசர்கள் வேண்டினர். ராஜச்ரேஷ்டரே! பிறகு அவள் பிதாவாகிய குந்திபோஜனென்னும் ராஜா அரசர்களை வருவித்து அந்தப்பெண்ணை ஸ்வயம்வரத்திற்கொடுக்க நிச்சயித்தான். அப்போது உறுதியானமனமுள்ள குந்தி அந்த ராஜாக்களுக்குள் ஸிம்மத்தைப்போல் கர்வமுள்ளவனும், அகன்ற மார்புடையவனும் விருஷபம்போன்ற பார்வையுடையவனும், சிறந்த பலமுடையவனும், சூரியனைப்போல் அந்த ராஜஸபையில் எல்லா அரசர்களின் ஒளிகளையும் மறைத்துக்கொண்டு இருப்பவனுமாகிய பரதச்ரேஷ்டனை பாண்டுவென்னும் ராஜஸிம்மத்தைக்கண்டாள். சிலாக்கியமான அங்கமுடையவளும் நல்ல லக்ஷணங்கள்பொருந்தினவளுமாகிய அந்தக் குந்திபோஜன்மகள் ஸ்வயம்வரமண்டபத்திலுள்ள ராஜஸபையில் இரண்டாவது இந்திரனைப்போலிருக்கும் அந்தப் பாண்டுமஹாராஜனைக்கண்டு மனத்தில் கலக்கமுற்றாள். காமத்தினால் அங்கம்வாடி ஒருமுறை மனம்கலங்கினவளாக நாணிக்கொண்டே குந்தி அந்த ராஜாவின்கழுத்தில் மாலையை அணிந்தாள். அந்தப் பாண்டுவைக் குந்தி வரித்ததைக்கண்டு அரசர்களெல்லாரும் யானைகளிலும் குதிரைகளிலும் ரதங்களிலுமேறிக்கொண்டு வந்தவழியே திரும்பிச்சென்றனர். ஜனமேஜயரே! அதன்பின் பிதாவாகிய குந்திபோஜராஜன் அவளுக்கு விவாஹத்தை நடத்தினான். அளவற்ற அழகுள்ள அந்தக் கௌரவராஜனை பாண்டு அந்தக் குந்திபோஜன் பெண்ணுடன் இந்திராணியுடன் இந்திரன் சேருவதுபோல் சேர்ந்தான். அரசர்க்கரசே! குருச்ரேஷ்டனே! குந்திபோஜனென்னும்ராஜா குந்திக்கும் பாண்டுவுக்கும் விவாஹத்தைச் செய்வித்து அப்போதே அந்தப் பாண்டுவுக்குப் பலவகையான தனங்களினால் மரியாதைசெய்து அவனை அவன் நகரத்துக்கனுப்பினான். பிறகு பலவகைகளான கொடிமரங்களும் கொடிகளுமுள்ள பெருஞ்சேனையுடன் பிராமணர்களாலும் மஹரிஷிகளாலும் ஆசீர்வாதங்கள்சொல்லித் துதிக்கப்பட்டவனாகிக் கௌரவபுத்ரனை அந்தப் பாண்டுமஹாராஜன் அஸ்தினபுரம் சென்று தன் பாரியையான குந்தியைத் தனதுகிருகத்தில் பிரவேசிக்கச்செய்து அவளைத் தன் கிருகத்தில் பட்டத்தரசியாகச் செய்தான்.

நூற்றிருபத்திரண்டாவது அத்தியாயம்.

ஸம்பவபர்வம். (தொடர்ச்சி).

(பாண்டு மாத்ரியை விவாஹம்பண்ணிக் கொண்டதும் திக்விஜயம் செய்ததும்).

அதன்பிறகு சிறந்தபுத்தியுள்ளவரும் சந்தனுபுத்ரருமான பீஷ்மர் புகழ்பெற்ற அரசனுகிய பாண்டுவுக்கு மற்றொரு விவாஹ நிமித்தமாக ஆலோசணைசெய்தார். அவர் வயதுமுதிர்ந்த மந்திரிகளோடும் பிராமணர்களோடும் மஹரிஷிகளோடும் சதுரங்கசேணைகளோடும்கூட மத்ராஜனுடைய நகரம் சென்றார். * வாகீகர்களிற் சிறந்தவனுகிய மத்ராஜன் அந்தப்பீஷ்மர்வந்ததைக்கேட்டு எதிர்கொண்டழைத்துப் பூஜித்து அவருக்கு நகரப்பிரவேசம் செய்வித்தான். மத்ராஜன் அவருக்கு நிர்மலமான ஆஸனத்தையும் அர்க்கியபாத்யங்களையும் † மதுபர்க்கத்தையும் கொடுத்து அவர் வந்த காரியத்தைக் கேட்டான். குருச்ரேஷ்டராகிய பீஷ்மர் அந்த மத்ராஜனைநோக்கி, "எதிரிகளையடக்குகிறவனே! நான் கன்னிகையை விரும்பி வந்தவனென்று நீ அறி. உன் ஸஹோதரியாகிய மாத்ரியைக் கற்புள்ளவளாகவும் புகழுள்ளவளாகவும் கேள்விப்படுகிறேன். அந்த க்யாதிபெற்ற பெண்ணை நான் பாண்டுவுக்காகக் கேட்பேன். ராஜாவே! நமக்கு நீயும் உனக்கு நாங்களும் ஸம்பந்தவிஷயத்தில் மிகத் தகுதியுள்ளவர்கள். மத்ரதேசாதிபதியே! இதை ஆராய்ந்து எங்களை முறைப்படி அங்கீகரித்துக்கொள்" என்றுசொன்னர். இவ்வாறு சொல்லும் பீஷ்மரைநோக்கி மத்ரதேசாதிபதியாகிய சல்யன், "உம்மைவிட மேலான ஸம்பந்தி எனக்கு வேறு யாருமில்லையென்பது எனது நிச்சயம். ஆனல் இந்தக்குலத்தில் முன்னோர்களான ராஜச்ரேஷ்டர்களால் நடத்தப்பட்டது ‡ ஒன்றுண்டு. ஸரியோ பிழையோ அதை நான் உல்லங்கனம் செய்ய விரும்பவில்லை. உமக்கும் அது தெளிவாகத் தெரிந்தவிஷயமென்பதிலும் ஸந்தேகமில்லை. மிகச்சிறந்தவரே! நீர் கொடுமென்று சொல்வதும் அவ்வளவு ஸரியன்று. வீரரே! அஃது எங்கள் குலதர்மம். எங்களுக்கு அது முக்யமான பிரமாணம். சத்ருக்களை யொழிப்பவரே! அதனல் இந்த விவா

---

* ஒருகுலத்தோர்.

† சிலமாறவும் பலமுண்டாகவும் விதித்துஞ்செய்யப்பட்டமதுரபதார்த்தம்.

‡ பணம் வாங்கிக்கொண்டு பெண்கொடுப்பது.

ஹத்தைப்பற்றி நிச்சயமான சொல்லே உமக்கு நான் சொல்லாமலிருக்கிறேன்" என்றான். "ராஜாவே! இந்தத்தர்மம் *முக்யமானதென்று பிரம்மாவினால் நேரவே சொல்லப்பட்டிருக்கிறது. இந்த நியமம் உன் பெரியோர்களாற் செய்யப்பட்டிருப்பதனால் இதில் ஒருகுற்றமுமில்லை. சல்லியனே! இந்த நியமம் சாதுக்கள் ஒப்புக்கொண்டதென்பதும் உனக்குத் தெரிந்தவிஷயம்" என்று ராஜாவான பீஷ்மர் அந்த மத்ர ராஜனுக்கு மறுமொழிகூறினார். மிகுந்த தேஜஸ்ஸுள்ள பீஷ்மர் இப் படிச்சொல்லி நாணயங்களும் கட்டிகளுமான பொன்களையும் விசித் ரங்களான ரத்நங்களையும் ஆயிரக்கணக்காகச் சல்லியனுக்குக்கொடுத் தார். யானைகளையும், குதிரைகளையும், ரதங்களையும், வஸ்த்ரங்களை யும், ஆபரணங்களையும், உயர்ந்த மணிகளையும், முத்துக்களையும், பவழங்களையும் கங்காபுத்ரரான பீஷ்மர் சல்லியனுக்குச் சுபமாகக் கொடுத்தார். சல்லியன் அந்தத்தனம் எல்லாவற்றையும் வாங்கிக் கொண்டு மிகமகிழ்வுற்றமனத்துடன் அந்தத் தன் ஸோதரியைச் செவ்வையாக அலங்கரித்து அந்தக் கௌரவச்ரேஷ்டரான பீஷ்ம ரிடம் கொடுத்தான். கங்காபுத்ரரும் சிறந்த புத்தியுள்ளவருமாகிய அந்தப் பீஷ்மர் அந்த மாத்ரியைப் பெற்றுக்கொண்டு திரும்பிவந்து அஸ்தினபுரத்தில் ப்ரவேசித்தார். அதன்பின், பெரியோர்களால் ஒப் புக்கொள்ளப்பட்டதும் தம்மனஸுக்கிசைந்ததுமான நல்லநாளும் நல்ல முகூர்த்தமும் நேர்ந்தபோது பீஷ்மர் மஹாத்மாவான பாண்டு வுக்கு விவாஹத்தைச் செய்வித்தார். பாண்டுமஹாராஜன் சாஸ்த்ரப் படி மாத்ரியைப் பாணிக்ரஹணஞ் செய்தான். அந்தவிவாஹம் நடந்த பின் குருவம்சபுத்ரனாகிய அந்தப் பாண்டுமஹாராஜன் உத்தமஸ்த்ரீ யான அந்த மனிவியைச் சிறந்த கிருஹத்தில் வாஸஞ்செய்வித்தான். ராஜாக்களுக்குட் சிறந்தவனாகிய அந்தப் பாண்டுமஹாராஜா குந்தி மாத்ரி என்னும் அவ்விரண்டு மனிவிகளுடனும்கூடத் தன் விருப்பத் திற்குத் தக்கபடி ஸுகமாக இருந்தான். பிரபுவாகிய ஜனமேஜயரே! அந்தக் குருவம்சத்தரசனாகிய பாண்டு முப்பதுராத்திரிகள் ஸுகமாக இருந்து பிறகு பூமியை ஜயிக்கக்கருதி நகரத்திலிருந்து புறப்பட் டான். அவன் பீஷ்மர் முதலான பெரியவர்களையும் கௌரவனாகிய திருதராஷ்டிரனையும் மற்றுமுள்ள கௌரவவம்சத்துப் பெரியோரை யும் நமஸ்காரஞ்செய்து வணக்கத்துடன் அவர்களிடம் விடைபெற்றுக்

---

* ஆர்ஷம் என்னும் விவாஹத்தில் இரண்டுகோக்களை வாங்கிக்கொண்டு கன்னிகாதானம் செய்யலாமென்று விதித்திருப்பதுபற்றி இது வேதோக்தந் தான் என்பது கருத்து.

கொண்டு அவர்கள் மங்களகாரியங்களைச்செய்து ஆசீர்வாதங்களைச் சொல்லி விடைகொடுத்த பிறகு யானைகளும் குதிரைகளும் தேர்களும் நிரம்பிய பெருஞ்சேனையுடன் சென்றான். தேவகுமாரனுக்கொப்பான அந்தப்பாண்டுமஹாராஜன் பூமியை ஜயிக்கக்கருதி மகிழ்ச்சியுள்ளவையும் நிரம்பினவையுமான சேனைகளுடன் பகைவர்களனைகர்களை எதிர்த்துச்சென்றான். கௌரவராஜர்களின் புகழை விருத்திசெய்கிற புருஷஸிம்மமாகிய பாண்டு முதலிற்சென்று தீங்குசெய்தவர்களாகிய தசார்ண தேசத்தரசர்களை யுத்தத்தில் ஜயித்தான். பிறகு பாண்டு பல வகைக் கொடிகளோடு கூடியதும் யானைகளும் குதிரைகளும் மிகுதியானதும் காலாட்களும் தேர்களும் நிரம்பினதுமான தன் சேனையை யழைத்துகொண்டு சென்றான். ராஜகிருஹம் என்னும் நகரத்தில் பலத்தினால் கர்வங்கொண்டு அனேக அரசர்களுக்குத் தீங்குசெய்தவனாகிய தீர்க்கன்என்னும் மகததேசத்தரசன் பாண்டுவினால் கொல்லப்பட்டான். பாண்டு அங்கிருந்து தனத்தையும் வாகனங்களையும் மிகுதியாக எடுத்துக்கொண்டு மிதிலாபுரிக்குச்சென்று விதேகராஜர்களைப் போரில் வென்றான். புருஷச்ரேஷ்டரே! அவ்வாறே காசிதேசத்திலும் ஸுஹ்மதேசத்திலும் தன் கைவன்மையினாலுண்டான பராக்கிரமத்தினால் கௌரவர்களுக்குப் புகழைப்புண்டுபண்ணினான். அம்புக்கூட்டமென்னும் பெருஞ்சுவாலையையும் அஸ்திரங்களென்னும் கிரணங்களையுமுடைய பாண்டுவென்னும் எதிரிகளையழிக்கும் தீயையடைந்த மற்ற அரசர்கள் எரிந்துபோயினர். சேனைகளுடன்கூடிய அவ்வரசர்கள், சேனைகளுடன்கூடிய பாண்டுவினால் தங்கள் சேனைகள் அழிக்கப்பட்டு அவனுக்கு வசப்பட்டவர்களாய்க் கௌரவர்களின் வேலைகளிலேயே நியமிக்கப்பட்டார்கள். பூமியிலுள்ள அவ்வரசர்களெல்லாரும் பாண்டுவினால் ஜயிக்கப்பட்டவர்களாகி அவனைத் தேவர்களில் தேவேந்திரனைப்போல் ஒப்பற்ற வீரனென்று நினைத்தனர். எல்லா அரசர்களும் மணிகளையும், முத்துக்களையும், பவழங்களையும், மிகுதியான பொன் வெள்ளிகளையும், பசுக்களிலும் குதிரைகளிலும் தேர்களிலும் யானைகளிலும் சிறந்தவற்றையும், கோவேறுகழுதைகளையும், ஒட்டகங்களையும், எருமைகளையும், செம்மறியாடுகளையும், வெள்ளாடுகளையும், உயர்ந்த கம்பளங்களையும், தோல்களையும், ரத்நகம்பள விரிப்புக்களையும், இன்னும் பல உயர்ந்த பொருள்களையும், தனங்களையும் எடுத்துக்கொண்டு கைகூப்பி நமஸ்காரம்செய்து பாண்டுவினிடம் வந்துசேர்ந்தனர். அஸ்தினபுரத்தரசனை பாண்டுமஹாராஜன் அதையெல்லாம் வாங்கி எடுத்துக்கொண்டு உற்சாகமுள்ள யானை குதிரை

முதலிய வாகனங்களோடு தன் தேசத்தாரை மகிழ்விப்பதற்காக அஸ்தினபுரம் சென்றான். "ராஜஸிம்மமானசந்தனு, சிறந்த புத்திமானான பரதசக்ரவர்த்தி இவர்களின் புகழினுமுண்டான பெயர் அழிந்துபோயிருந்தது; பாண்டுவினால் மறுபடியும் கொண்டுவரப்பட்டது. கௌரவர்களின் தேசங்களையும் தனங்களையும்முன்னே எவர்கள் அபஹரித்தனரோ அவர்கள் அஸ்தினபுரத்து ஸிம்மமான பாண்டுவினால் கப்பம் கொடுப்பவராகச் செய்யப்பட்டனர்" என்று இவ்வாறு ராஜாக்களும் ராஜமந்திரிகளும் பட்டணத்து ஜனங்களும் தேசத்து ஜனங்களும் சேர்ந்து மிகச் சந்தோஷமுள்ளவர்களாகப் பாண்டுவினிடம் அன்பு கூர்ந்து பேசினர். பீஷ்மர்முதலான அஸ்தினபுரத்துள்ளவர்களனைவரும் வந்தபாண்டுவைக் கொஞ்சதூரம் வழியிற்சென்று எதிர்கொண்டழைத்தனர். அனேகங் குதிரைகளினால்கொண்டுவரப்பட்ட பலவித தனங்களாலும் அளவற்ற ரத்தினங்களாலும் உயர்ந்த யானை குதிரை தேர்களாலும் பசுக்களாலும் ஒட்டகங்களாலும் ஆடுகளாலும் லோகமே வியாபிக்கப்பட்டிருப்பதைக் கௌரவர்கள் பீஷ்மருடன் சென்று மகிழ்ச்சியோடு கண்டனர். அவற்றிற்கு முடிவைக் காணவில்லை. கௌஸல்யையின் ஆனந்தத்தை விருத்திசெய்பவனாகிய பாண்டு தன் தந்தையான பீஷ்மருடைய பாதங்களில் வந்தனம்செய்து, நகரத்து ஜனங்களையும் தேசத்துஜனங்களையும் அவரவர்தகுதிக்கேற்பக் கௌரவித்தான். பீஷ்மர், எதிரிகளின் தேசங்களையழித்து வெற்றியுடன் திரும்பிவந்த தன்புத்திரனைத் தழுவிக்கொண்டு ஆனந்தக்கண்ணீர் சொரிந்தார். அந்தப்பாண்டு தூரியவாத்யங்கள், சங்கங்கள், பேரிகைகள் இவற்றின் பெரிய முழக்கங்களினால் நகரத்துஜனங்கள் அனைவரையும் மகிழ்வித்துக்கொண்டு அஸ்தினபுரம் பிரவேசித்தான்.

நூற்றிருபத்துமூன்றுவது அத்தியாயம்.

ஸம்பவபர்வம். (தொடர்ச்சி).

(பாண்டு வேடையாடக் காட்டுக்குப் போனபோது மான் உருவம்கொண்ட கிந்தமமுனிவர் அவனுக்குச் சாபம் கொடுத்தது).

அந்தப்பாண்டு த்ருதராஷ்டிரனால் அனுமதிகொடுக்கப்பெற்று, தன் புஜபலத்தினால் ஜயித்துக்கொண்டுவந்த தனத்தைப் பீஷ்மருக்கும் ஸத்யவதிக்கும் தன்தாயாருக்கும் காணிக்கையாகக் கொடுத்தான்.

தர்மாத்மாவான பாண்டு அந்தத் தனத்தை விதுரருக்கும் அனுப்பி னான். பாரதரே! பிறகு பாண்டு தான்ஜயித்துச் சம்பாதித்த உயர்ந்த வஸ்துக்களால் ஸத்யவதியையும் பீஷ்மரையும் புகழ்பெற்ற அம்பாலி கையையும் சந்தோஷிக்கச்செய்தான். ஒப்பற்ற பராக்ரமமுள்ள அந் தப் புருஷச்ரேஷ்டனுகிய பாண்டுவைத் தழுவிக்கொண்டு தாயான கௌஸல்யை ஜயந்தனைத்தழுவிய இந்திராணியைப்போல் களிப்புற் ருள். அந்த வீரனுகிய பாண்டுவின் பராக்ரமபலத்தினல் திருதராஷ் டிரன் லக்ஷணக்கணக்கான தக்ஷிணைகளுடன் அச்வமேதத்துக்கொப் பான அனேகம் பெரியயாகங்களைச் செய்தான். பரதச்ரேஷ்டரே! அப்போது பாண்டு சோர்வையிட்டுக் குந்தியோடும் மாத்ரியோடும் சேர்ந்து காட்டில் ஸஞ்சரிப்பவனுனன். அரண்மனையில் வாஸத்தையும் ஸுகமான படுக்கைகளையும் விட்டுவிட்டு எப்போதும் வேட்டையே காரியமாகக் காட்டிலேயே வாஸஞ்செய்துகொண்டிருந்தான். அவன் இமயமலையின் அழகான தென்பக்கத்தில் ஸஞ்சரித்துக்கொண்டு குன்றுகளின் சிகரங்களிலும் பெருமரங்களடர்ந்த காடுகளிலும் வஸி த்தான். குந்தியோடும் மாத்ரியோடுங்கூடி வனத்தில் ஸஞ்சரிக்கும் போது பாண்டு இரண்டு பெண்யாணைகளின் நடுவிலிருக்கும் அழ குள்ள ஐராவதம்போல் சோபித்தான். விசித்ரமான கவசத்தை யணிந்து கத்தியையும் அம்புகளையும் வில்லையும் தரித்துப் பாரியைக ளுடன்கூடி ஸஞ்சரிக்கும் வீரனும் மேலான அஸ்திரங்கள் தெரி ந்தவனுமாகிய பரதவம்சத்தரசனை பாண்டுவைப்பார்த்து அவ்வன த்திலிருப்பவர் இவன் தேவதையென்று நினைத்தனர். அவனுடைய விருப்பங்களையும் ராஜபோகத்துக்குரிய பொருள்களையும் திருதராஷ் டிரனல் அனுப்பப்பட்ட மனிதர்கள் காட்டுப்பிரதேசங்களிலும் ஒவ் வொருநாளும் சோம்பலின்றிக் கொண்டுவந்தனர். மான்களாலும் துஷ்டமிருகங்களாலும் அடையப்பட்ட அப்பெருங்காட்டையடை ந்து அதில் புணர்ச்சியிலிருந்த ஒரு மான்கூட்டத்தின் அரசைக்கண் டான். பிறகு பாண்டு அந்த ஆண்மானையும் பெண்மானையும் தங்கப் பிடிகளோடும் அழகான சிறகுகளோடும் கூடிய, விஷமாகச்செல் லும் ஐந்துகூர்மையான அம்புகளினல் அடித்தான். ராஜாவே! சிற ந்த மஹிமையுள்ளவரும் தவத்தையே தனமாகவுடையவருமான ஓர் அழகான ரிஷிபுத்திரர் அந்த மான்வடிவத்தோடு தம் பத்னியுடன் சேர்ந்திருந்தார். பெண்மானுக இருந்த அந்தத் தம்பத்னியுடன் சேர்ந்திருந்த அந்தமானுருவமான ரிஷிபுத்திரர் கோடியில் தரையில் விழுந்து மானிடவாக்கைச் சொல்லித் துக்கத்துடன் புலம்பினர்:

"காமக்குரோதங்களுக்குஉட்பட்டவர்களும் விபரீதபுத்தியுள்ளவர்களும் பாபகாரியங்களிலேயே ப்ரவர்த்திப்பவர்களுமான மனிதர்களுங் கூட மிகக்கொடிய செய்கைகளை விடுகின்றனர். மதி விதியைவெல்லுகிறதில்லை. விதிமட்டும் மதியை வெல்லுகிறது. விதிவசமாக வரும்பயன்களை மதியுள்ளவனும் அனுபவிக்கிறான். பரதவம்சத்தவனே! எப்போதும் தர்மமே இயற்கையாக உடையவர்களின் சிறந்த வம்சத்திற் பிறந்த உனக்குக் காமவிருப்பத்தால் மூடப்பட்டு மதிபோனதேன்?" என்று அந்த மான்வடிவமான முனிவர்சொன்னர். பாண்டு, "மானே! ராஜாக்களுக்குச் சத்ருவதத்தில் என்னசெய்கையோ அதேசெய்கை தான் மிருகவதத்திலும் விதிக்கப்பட்டுள்ளது. நீ தெரியாமையால் என்னைத் தூஷிப்பது தகுதியன்று. மோசமில்லாமலும் ஒளிவில்லாமலும் மிருகங்களைக் கொல்வது சாஸ்திரவிஹிதம். அதுதான் ராஜாக்களுக்குத் தர்மம். அதை நீ நிந்திப்பதெவ்வாறு? அகஸ்தியமஹரிஷி, பெருங்காட்டில் ஸத்ரயாகஞ் செய்யும்போது எல்லாத் தேவதைகளையும் உத்தேசித்துக் காட்டிலுள்ள மிருகங்களையெல்லாம் ஜலத்தைத் தெளித்து * வேட்டையாடினர். † பிரபாணங்களிற் காணப்பட்ட தர்மத்திலிருக்கும் எம்மை நீ எவ்வாறு இகழ்கிறாய்? அகஸ்தியருடைய மந்திரப்ரயோகத்தினாலேயே உங்களைக்கொல்வது சாஸ்திரவிஹிதமாகின்றது. வீரர்கள் பகைவர்களைக் குறிப்பிட்டே பாணப்ரயோகம் செய்வதென்பதில்லை. ஏமாந்தபோது வதம்செய்வது முக்கியமாக வீரர்களுக்குச் சிறப்பித்துச் சொல்லப்படுகிறது. அஜாக்ரதையாயிருந்தாலும் ஜாக்ரதையாயிருந்தாலும் மறைவில்லாமலிருப்பவனைச் சக்தியினால் அநேக நூட்பமான உபாயங்களைக்கொண்டு கொல்லுகின்றனர். மானே! என் தூஷிக்கிறாய்?" என்றான். அதற்கு அந்த மானுருவங்கொண்ட முனிவர் மறுமொழிகூறலானர்: "ராஜாவே! மிருகங்களைக் கொல்லுகிறவனைப்பற்றி நான் தூஷிக்கவில்லை. எனக்காகவும் நான் தூஷிக்கவில்லை. இப்போது இந்த விஷயத்தில் கொடியவனென்று பெயரெடாமலிருக்கும்பொருட்டுப் புணருங் காலம்வரையில் நீ காத்திருக்கவேண்டும். எல்லாப் பிராணிகளுக்கும் லுகமும் எல்லாப்பிராணிகளும் விரும்புவதுமான ஸமயத்தில் காட்டில்புணர்ச்சி செய்துகொண்டிருக்கும் மிருகத்தைத் தெரிந்தவன் எவன் கொல்லுவான்? ராஜச்ரேஷ்டனே! காமமென்னும் புருஷார்த்தத்தின் பயனுகிய ஸந்ததியை உண்டுபண்ணுவதற்கு இந்தப் பெண்மானிடம் உத்ஸாகத்துடன் புணர்ச்சிசெய்துகொண்டிருந்தேன். அஃது உன்னால்

* கொன்றார். † சாஸ்திரங்களிலும் ஸிஷ்டாசாரங்களிலும்.

வீணுக்கப்பட்டது. மஹாராஜாவே! கௌரவனே! உயர்ந்தசெய்கை யுள்ளவர்களாகிய அந்தப் பௌரவர்களின் வம்சத்திற்பிறந்த உனக்கு இது தகாது; இது மிகவும்கொடியகாரியம்; எல்லாலோகத்தாராலும் நிந்திக்கப்பட்டது; ஸ்வர்க்கத்துக்கும் புகழுக்கும் விரோதமானது; பாபத்திற்கும் காரணமானது. தேவதையைப் போன்றவனே! ஸ்திரீ ஸம்போகங்களின் மேன்மையை யறிந்தவனும் சாஸ்திரங்களையும் தர்ம ங்களையும் ராஜரீதிகளையும் செவ்வையாக அறிந்தவனுமாகிய நீ ஸ்வர்க் கத்துக்கு விலக்கான இப்படிப்பட்ட காரியத்தைச் செய்யத்தகாது. ராஜச்ரேஷ்டனே! ஹிம்ஸைசெய்கிறவர்களும் பாவம்செய்கிறவர்க ளும் அறம் பொருள் இன்பம் என்னும் மூன்று புருஷார்த்தங்களையும் இழந்தவர்களுமான மனிதர்களே நீ தண்டிக்கவேண்டியவன். புரு ஷச்ரேஷ்டனே! அரசனே! எப்போதும் சாந்தியையே முக்கியமாகக் கருதிக் காய்கிழங்குகளைப் புசித்துக்கொண்டு மான்வேஷத்துடன் காட்டில் வஸித்துக்கொண்டிருக்கும் நிரபராதியான ரிஷிபாகிய என் னைக்கொன்றதில் உனக்கு என்னகிடைத்தது? நீ என்னை ஹிம் ஸித்ததனால், பிழைசெய்யாத எங்களிருவருக்கும் ஹிம்ஸைசெய்த உனக்கும் நீ அறியாமலே புணருங்காலத்தில் ஸுகத்தில் மயங்கி யிருக்கும்போது உயிர்வாழ்வு முடிவாகும் நிலைமை வரும். நான் தவ த்தினால் தூய்மைபெற்ற கிந்தமனென்னும் முனி. மனிதர்களிடம் வெட்கமுற்று மானுருவவஹித்துப் பெண்மானுடன் புணர்ச்சிசெய் துகொண்டு மான்களுடன்கூடவே அடர்ந்தகாட்டில் திரிந்துகொண் டிருந்தேன். காமஸுகத்தில் விருப்பத்தினால் மானுருவம்தரித்த என்னை இவ்வாறுதெரியாமற் கொன்றதனால் உனக்கு இது பிரம்ம ஹத்தி ஆகாது. மூடனே! ஆனால் இதற்கு இவ்வகையான பலனை மட்டும் நீ அடையப்போகிறாய். நீயும் உன்மனைவியுடன்கூடச் சயனத் திற்சேர்ந்து கலவியில் மயங்கியிருக்கும்போது ஞானிருந்த நிலைமையி லேயே யமலோகம் செல்வாய். புத்திசாலிகளுக்குட் சிறந்தவனே! முடிவுகாலத்தில் எந்த மனைவியுடன்கூடச் சயனத்தையடைவாயோ அவள்தான் எந்தப்பிராணிகளும் தப்பித்துக்கொள்ளக்கூடாத யம புரத்துக்குப் போகும் உன்னை அன்புடன் பின் செல்வாள். நான் எவ் வாறு ஸுகத்திலிருக்கையில் உன்னால் துக்கமடைவிக்கப்பட்டேனோ அவ்வாறே ஸுகத்தை அடைந்திருக்கும் உன்னையும் துக்கம்வந்து சேரும்" என்றுசொன்னார். மிகுந்ததுக்கத்தினாற் பீடிக்கப்பட்டு அந்த மான்வடிவமான கிந்தமமுனிவர் இவ்வாறு சொன்னவுடன் உயிரைவிட்டார். பாண்டவும் உடனே துன்பமுற்றவனானன்.

நூற்றிருபத்துநான்காவது அத்தியாயம்.

ஸம்பவபர்வம். (தொடர்ச்சி).

(பாண்டு சாபத்தினால்வருந்தி மனைவிகளுடன் தவம்செய்துகொண்டு சதசிருங்கமென்னும் மலையையடைவது).

பாண்டுமஹாராஜா, இறந்துபோன அம்முனியைத் தன் பந்து வைப்போல் ஸம்ஸ்காரஞ்செய்து பாரியைகளுடன் அவரிறந்த துக்கத் தினாலும் சாபத்தினாலுண்டான வருத்தத்தினாலும் தாபங்கொண்டு தளர்ந்து புலம்பினான். "சான்றோர்குலத்திற் பிறந்தவர்களும் மனஸை அடக்காமல் மன்மதன்வலையில் மயங்கித் தங்கள் செய்கையினாலேயே கெட்ட முடிவையடைகின்றனர். ஐயோ! எப்போதும் தர்மத்திற் சித்தம்வைத்த சந்தனுமஹாராஜாவுக்குப் பிறந்தவரான என்தந்தை யும் சிற்றின்பத்தில் மனம்வைத்துத்தான் சிறுபிராயத்திலேயே உயிர் வாழ்வின் முடிவையடைந்தாரென்று எமக்குக்கேள்வி. காமஸுகத் தில் எண்ண முள்ளவராயிருந்த அந்தராஜாவின் மனைவியினிடம் மௌனவ்ரதம் வஹித்தவரும் சிறந்தமஹிமைபொருந்தினவருமான வியாஸமஹரிஷியே நேரே என்னை உண்டுபண்ணினார். இப்போது தர்மத்தைவிட்டு வேட்டைக்குத்திரிகின்ற அந்தஎனக்குத் தேவர்கள் கைவிட்டதனால் துன்பத்தைத் தரத்தக்ககாரியத்தில் இந்தஇழிவான எண்ணம் உண்டாயிற்று. நான் மோக்ஷத்தையே விரும்புகிறேன். பற்றுத்தான் பெருந்துன்பம். என்பிதாவான வியாஸருடைய சுற்ற மற்ற நல்ல * செய்கையை நான் அனுஸரிக்கப்போகிறேன். என்மனத் தைத் தவத்தில் மிகுதியாக வைக்கப்போகிறேன். இது நிச்சயம். ஆதலால், ஒவ்வொருநாளைக்கு ஒவ்வொருமரத்தினிடம் கனியைப் பிக்ஷையாகவாங்கிக்கொண்டும் தலையை முண்டனஞ்செய்துகொண்டும் ரிஷியாக இந்த ஆச்ரமங்களில் திரியப்போகிறேன். தூளிகள்படிந்த உடம்புடன் பாழ்வீடுகளிலாவது மரத்தடிகளிலாவது வாஸஞ்செய்து கொண்டும், விருப்புவெறுப்புக்கள் எல்லாவற்றையும் விட்டுத் துன்ப மும் இன்பமுமில்லாமல் இகழ்ச்சியையும் புகழ்ச்சியையும் ஸமமாக நினைத்தும், ஆசீர்வாதம் நமஸ்காரம் இரண்டையும்விலக்கியும், சிநேஹ ங்களைவிட்டுப் பற்றறுத்து ஒருவனையும் பரிஹாஸம் செய்யாமலும், யாரிடத்தும் புருவத்தை நெரிக்காமலும், எப்போதும் மலர்ந்தமுகத்து டன்எல்லாப்பிராணிகளுக்கும் நன்மைகளிலே மனம்வைத்தும், ஐங்க

* தபஸ்.

மங்களநம்ஸ்தாவங்களுமாகிய*நான்குவகைப் பொருள்களில் ஒன்றை யும்ஹிம்ஸைசெய்யாமலும், தன் குழந்தைகளிடத்திலிருப்பதுபோல் எல்லாப்பிராணிகளிடத்தும் எந்தக்காலத்திலும் வேற்றுமையில்லாம லும்,ஒரேவேளை பத்து அல்லது ஐந்து வீடுகளில் பிக்ஷையெடுத்துக் கொண்டும், பிக்ஷைகிடைக்காதபோது உபவாஸங்களைச் செய்துகொண் டும், ஒவ்வொருவேளை அல்பஆகாரம் புசித்துக்கொண்டும், முதல் பிக்ஷைகிடைக்காதபோது ஆசைப்பட்டு வேறு இடங்களில் ஒருஸம யமும் பிக்ஷையெடுக்காமலும், ஒன்றும் கிடைக்காதபோது ஏழுகிரு ஹங்களோடு திருப்தியடைந்துகொண்டும், கிடைத்தாலும் கிடைக் காவிட்டாலும் மனவேறுபாடில்லாமல் பெருந்தவம் செய்துகொண் டும், வாய்ச்சியினுல் ஒருகையை வெட்டுகிறவனும் சந்தனத்தினுல் மற்றொருகையை நீக்கிறவனுமாகிய அவ்விருவருக்கும் முறையே தீமையையும் நன்மையையும் கருதாமலும், ஜீவிக்க ஆசைப்பட்ட வன்போலவும் இறந்துபோகக் கருதினவன் போலவும் எதையும் செய்யாமலும், வாழ்வதையும் இறந்துபோவதையும் பற்றி விருப்பும் வெறுப்புமில்லாமலும், ஜீவித்திருப்பவன் தன் நன்மைக்காகச் செய் யக்கூடிய செய்கைகள் எல்லாவற்றையும் விட்டும், இமையைக்கொ ட்டுவது முதலியவற்றில் மாத்திரம் நின்றுகொண்டும், அநித்யங்களா யுள்ள அந்தச் செய்கைகளில் இந்திரியங்களின் பிரவர்த்திகள் எல்லா வற்றையுமே ஒழித்தும், தர்மார்த்தங்களை விலக்கியும், மனத்தினுக் குக்களைச் செம்மையாகக்களைவியும், பாபங்கள் எல்லாவற்றினின்றும் நீங்கியும், எல்லா வலைகளையும் கடந்தும், யாருக்கும் உட்படாமலும் காற்றுக்கொப்பாகவுமிருந்துகொண்டும், இவ்வகையான செய்கையுட னே எப்போதும் நடந்துகொண்டு (ஸம்ஸார) பயமற்ற மோக்ஷமார்க் கத்தையடைந்து தேகத்தை முடிக்கப்போகிறேன். தனது புத்தோத் பத்திசக்தியானது குறைந்து போவதனுல் விசனப்படத்தக்கதும் தன் கிருஹஸ்தாச்ரமதர்மத்துக்கு முற்றிலும் விலக்குமாகிய மிகத் தாழ்வான வழியில் அசக்தனுக நான் திரியமாட்டேன். எவன் உலக ஸுகங்களில் விருப்பம்வைத்து, நன்கு மதிக்கப்பட்டாலும் அவம திக்கப்பட்டாலும் தீனமானபார்வையுடன் இழிவான ஜீவனத்தை அணுஸரிக்கிறானே அவன் நாய்களின் வழியிலிருப்பவன்" என்று அவ்வரசன் இவ்வாறுசொல்லி மிகத்துயரமுற்று அதிகமாகப் பெரு மூச்செறிந்துகொண்டு குந்தியையும் மாத்ரியையும் பார்த்துச் சொல் லத் தொடங்கினன்:

* ஜராயுஜம் முதலியவை.

"கௌஸல்யை, க்ஷத்தாவென்று சொல்லப்பட்ட விதுரர், ராஜாவாகிய த்ருதராஷ்டிரன், பந்துக்கள், பெரியவளாகிய ஸத்யவதியம்மை, பீஷ்மர், ஸோமபானஞ் செய்தவர்களும் உறுதியான நியமமுள்ளவர்களும் மஹாத்மாக்களும் ராஜபுரோகிதர்களுமான அங்குள்ள பிராமணர்கள், நம்மை ஆச்ரயித்து அங்கே வஸிக்கின்ற நகரத்துப் பெரியோர்கள் ஆகிய இவர்களெல்லோரையும் நமஸ்காரஞ்செய்து பாண்டு காட்டில் துறவியாஞனென்று சொல்லவேண்டும்" என்றான். ஸந்யாஸதருமத்தில் மனம்வைத்த கணவனுடைய சொல்லைக்கேட்டு அவனுக்குத் தகுதியான மறுமொழியைக் குந்தியும் மாத்ரியும் உரைத்தனர்: "பரதச்ரேஷ்டரே! எங்களுடன்கூடத் தர்மத்தைச்செய்து கொண்டு வஸிப்பதற்குரிய வேறு ஆச்ரமங்களும் இருக்கின்றன. தர்மபத்னிகளாகிய எங்களுடன்கூடப் பெருந்தவஞ் செய்வதற்கும் சிறந்தபலனுள்ள மோக்ஷதர்மத்தை அடைந்து சரீரத்தை விடுவதற்கும் ஆலோசிக்கவேண்டும். ஸ்வர்க்கத்திலும் நீரே பர்த்தாவாகப் போகிறீர்; ஐயமில்லை. நாங்களும் பர்த்தாபோகும் லோகத்தையே கருதிப் புலன்களையெல்லாம் அடக்கி விருப்பத்தையும் சௌக்கியத்தையும் விட்டுப் பெருந்தவம் செய்வோம். சிறந்தஞானியே! மனிதருக்குஅதிபதியே! நீர் எங்களை விட்டுவிடுவீராயின் இப்போதே நாங்கள் உயிரை இழந்துவிடுவோம். இதில் ஸந்தேகமில்லை" என்றனர். அவர்கள் அப்படிச்சொல்ல, பாண்டு, "உங்களிருவருக்கும்கூடத் தர்மத்துடன்சேர்ந்த இந்தநிச்சயமிருந்தால் என் பிதாவாகிய வியாஸருடைய அந்தக்குற்றமற்ற கடைசியே நானும் அனுஷ்டிப்பேன். அற்பஸுகங்களின் அனுபவத்தைவிட்டு, உயர்ந்த தவத்தைச் செய்துகொண்டும் மாவுரிதரித்துக் காய்கிழங்குகளைப் புசித்துக்கொண்டும் இந்த மஹாவனத்தில் நிரியப்போகிறேன். காலை மாலை இரண்டுகாலங்களிலும் ஸ்நானமும் அக்நிஹோத்ரமும் செய்துகொண்டு, ஆகாரம் குறைந்து இளைத்து, மாவுரியையும் தோலையும் உடுத்து, ஜடையையும் தரித்து, குளிரையும் காற்றையும் வெயிலையும் தாங்கி, பசிதாகங்களைக் கவனிக்காமல் செயற்கரிய தவத்தினால் இந்தச் சரீரத்தை வற்றச் செய்து, தனிமையிலிருந்து தியானம் செய்துகொண்டு, சமைத்ததையோ சமைக்காததையோ இரண்டையும்தின்றுகொண்டு, பிதிர்க்களையும் தேவர்களையும் காட்டிலுள்ள ஆகாரங்களை நிவேதனஞ் செய்வதனாலும் மந்த்ர ஜபங்களினாலும் ஜலதர்ப்பணத்தினாலும் திருப்தி செய்வேன். குடும்பத்துடன் வஸிக்கின்ற வானப்ரஸ்தர்களைக் கூடப் பார்க்கமாட்டேன்; அவர்களுக்குவேண்டாதனவற்றையும்செய்வேன்;

ராமங்களி லிருப்பவரைப்பற்றிச் சொல்லவேண்டுமா? இவ்வாறு கொடியதும் கொடியதினும் கொடியதுமாகிய வானப்ரஸ்தசாஸ்திரங்களிற் சொன்னவிதிகளை இந்தத்தேகத்தை விடுகிறவரையில் விருப்பத்துடன் நான் எடுத்துக்கொள்ளப்போகிறேன்" என்றான்.

கௌரவவம்சத்துப் புத்திரனாகிய பாண்டுமஹாராஜன் அந்தப் பாரியைகளைநோக்கி இவ்வாறுசொல்லி, உடனே தலையிலுள்ள ரத்நத்தையும், கழுத்திலுள்ள பொன்மாலையையும், தோள்வளைகளையும், குண்டலங்களையும், விலைபெற்ற வஸ்திரங்களையும், ஸ்திரீகளுக்குரிய ஆபரணங்களையும், சிறந்த வாஹனங்களையும், ஆயுதங்களையும், கவசங்களையும், பொன்மயமான குதிரைகளின் ஆபரணங்களையும், சிறந்த கட்டில்களையும், மெத்தைகளையும், பலவகையான விலையுயர்ந்த முத்துக்களையும், பவழங்களையும், பலவகை ரத்நங்களையும், பிராமணர்களுக்கு முழுதும்கொடுத்துத் தன் வேலைக்காரர்களைநோக்கி, "கௌரவபுத்ரனை பாண்டு பொருள் விருப்பம் இன்பம் சிறந்தபுத்ரனைக் கொடுக்கத்தக்க ஸ்திரீஸம்போகம் முதலிய எல்லாவற்றையும் முற்றிலும் விட்டுவிட்டுப் பாரியைகளுடன்கூடி வனத்தில் துறவியாகச் சென்றானென்று அஸ்தினபுரம் சென்று நீங்கள் சொல்லவேண்டும்" என்றுசொன்னான். பிறகு அவன்பின் சென்ற அந்த வேலைக்காரர்கள் பரதவம்சத்து ஸிம்மமாகிய பாண்டுவின் அனேகவிதமான துக்கவசனங்களைக் கேட்டுப் பயங்கரமாக அழுது, 'ஹா ஹா!' வென்று கூவினர். உஷ்ணமான கண்ணீரைச் சொரிந்துகொண்டு அந்த ராஜாவை விட்டுவிட்டு அவனுடைய தனமெல்லாவற்றையு மெடுத்துக்கொண்டு விரைவாக அஸ்தினாகரம் சென்றனர். அவர்கள் நகரம் சென்று மஹாத்மாவாகிய அந்தராஜாவின் நிலைமையை நடந்தவாறு த்ருதராஷ்டிரமஹாராஜாவுக்குச் சொன்னார்கள். அந்த அனேகவிதமான தனத்தையும் கொடுத்தனர். பிறகு மஹாவனத்தில் நடந்ததையெல்லாம் நடந்தபடி அவர்களிடம்கேட்டு ராஜாவாகிய த்ருதராஷ்டிரன் பாண்டுவைப்பற்றியே விசனமுற்றான். சோகத்தினால் மூடப்பட்டு அதேவிஷயத்தை நினைத்துக்கொண்டு படுப்பதிலும் உட்காருவதிலும் மற்றுமுள்ள ஸுகங்களிலும் ஒருபோதும் விருப்பத்தை அடையாமலிருந்தான். ஜனமேஜயரே! ராஜபுத்ரனை பாண்டுவோ வெனின், கிழங்குகளையும் காய்களையும் உணவாகக்கொண்டு பத்தினிகளுடன்கூடி அங்கிருந்து நாகசதமென்னும் மலைக்குச் சென்றான். அவன் சைத்ரரதமென்னும் குபேரனுடைய உத்யானவனத்தையடைந்து காலகூடமென்னும் இடத்தைத்தாண்டி இமயமலையைக்கடந்து

கந்தமாதன மலைக்குப்போனன். ஜனமேஜயமஹாராஜாவே! பெரிய பூதங்களாலும் ஸித்தர்களாலும் மஹரிஷிகளாலும் காப்பாற்றப்பட்டவனுக அவன் ஸமபூமிகளிலும் மேடுபள்ளமான இடங்களிலும் வாஸஞ்செய்தான். மஹாராஜாவே! இந்திரத்யும்னமென்னும் தடாகத்தைச்சேர்ந்து ஹம்ஸகூடமென்னும் இடத்தைக்கடந்து சதச்ருங்கமென்னும் மலையில் ரிஷியாயிருந்து தவஞ்செய்தான்.

நூற்றிருபத்தைந்தாவது அத்தியாயம்.

ஸம்பவபர்வம். (தொடர்ச்சி).

(ரிஷிகளுடன்கூடப் பிரம்மலோகம்போகப் புறப்பட்ட பாண்டுவை ரிஷிகள் நிறுத்துவது).

பாரதரே! அங்கும் அந்தவீரன் சிறந்த தவத்திலிருந்துகொண்டு ஸித்தசாரணர்களின் கூட்டங்களுக்குப் பார்ப்பதற்கு இனியவனுக இருந்தான். பெரியோருக்குப் பணிவுசெய்துகொண்டும் அகங்காரம் பேசாமலும் மனஸையடக்கியும் புலன்களைவென்றும் தன் சக்தியினல் ஸ்வர்க்கம்போவதற்கு உத்ஸாஹத்துடனிருந்தான். சில ரிஷிகளுக்கு ஸஹாத்ரனுகவும் மற்றும் சிலரிஷிகளுக்குச் சினேகிதனுகவுமிருந்தான். இன்னும் சில ரிஷிகள் இவனைப் புத்ரனைப்போற் காப்பாற்றினர். பரதச்ரேஷ்டரே! அந்தப் பாண்டு, நீண்டகாலத்திற்குப்பின் மாசற்ற தவத்தையடைந்து, பிரம்மரிஷிக்கு ஒப்பாக ஆனன். ஒரு அமாவாஸ்யைத்தினத்தில் உக்ரமான தவத்தினையுடைய அம்மஹரிஷிகள் சேர்ந்து பிரம்மாவைக் காண்பதற்கு விரும்பிப் புறப்பட்டனர். புறப்பட்ட ரிஷிகளைக்கண்டு, "நீங்கள் எங்கே போகப்போகின்றீர்கள்? பேசத்தெரிந்தவர்களிற் சிறந்தவர்களே! அதை எனக்குச் சொல்லுங்கள்" என்று பாண்டு கேட்டான். ரிஷிகள், "மஹாத்மாக்களாகிய தேவர்கள், ரிஷிகள், பித்ருக்கள் இவர்களுடைய பெரியஸபை பிரம்மலோகத்தில் இன்றைத்தினம் நடக்கிறது. நாங்கள் பிரம்மாவைக் காண விரும்பினவர்களாக அங்கேபோகின்றோம்" என்று மறுமொழி கூறினர். மஹரிஷிகளுடன் போவதற்கு விரும்பிய அந்தப்பாண்டு விரைவாக எழுந்து ஸ்வர்க்கத்தின் எல்லையைத் தாண்டவிரும்பினவனைப் பத்னிகளுடன்கூடச் சதச்ருங்கமலையிலிருந்து வடக்குநோக்கிப் புறப்பட்டான். அந்தரிஷிகள் அவனுக்குப் பின்வருமாறு சொல்லத்தொடங்கினர்:

"நாங்கள் இந்தச்சிறந்தமலையிலிருந்து வடக்குநோக்கி மேலே மேலே போகும்போது அழகானமலையில் யாரும் போகக்கூடாத அனேக இடங்களையும், நூற்றுக்கணக்கான தேவர்களுடைய விமானங்கள் நெருங்கியதும் ஸங்கீதசப்தத்தினால் நிரம்பினதுமாகிய தேவர்களும் கந்தர்வர்களும் அப்ஸரஸுகளும் விளையாடுமிடங்களையும், ஸமபூமியும் மேடுபள்ளமுமாயுள்ள குபேரனுடைய தோட்டங்களையும், பெரிய நதிகளின் கரைகளையும், செல்லமுடியாத மலைகளின் குகைகளையும் கண்டிருக்கிறோம். விடாதபனியுள்ளவைகளும் செடிகளும் மிருகங்களும் பக்ஷிகளும் இல்லாதவைகளுமான தேசங்களிருக்கின்றன. சில இடங்களில் செல்லமுடியாதவைகளும் கிட்டநெருங்க முடியாதவைகளுமான சில பெரிய குகைகளிருக்கின்றன. அந்த இடங்களைப் பக்ஷிகள்கூடத் தாண்டமாட்டா; மிருகங்கள்முதலிய மற்றவை தாண்டுவதென்பது எப்படி? இந்த இடங்களில் வாயு ஒன்றுதான் ஸஞ்சரிக்கும். தவத்தில்ஸித்திபெற்ற மஹரிஷிகள் செல்வர். கஷ்டத்தில்வழக்கப்படாத இந்தராஜகுமாரிகள் இந்த மஹாபர்வதத்தின்மேல் போகும்போது எவ்வாறு சௌக்கியமிருப்பர்? பரதச்ரேஷ்டனே! நீ போகாதே" என்றனர். பாண்டு, "மஹானுபாவர்களான ரிஷிகள் ஸந்ததியில்லாதவனுக்கு ஸ்வர்க்கமார்க்கத்தைச் சொல்லவில்லை. அதனால் ஸந்ததியில்லாத நான் பரிதாபமுற்று உங்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். அப்படிப்பட்ட நான் ஸந்ததியில்லாதவனாயினும் மனிஷிகளுடன் கூடுந்தவஞ்செய்து உயிரை விட்டபிறகு தீவ்ரமான என் நல்லகருமத்தினால் ஸ்வர்க்கத்தை அடையக்கடவேன்" என்றுசொன்னான். "தர்மாத்மாவே! ராஜாவே! தேவதைக்கொப்பானதும் அழியதும் தீங்கில்லாததுமாகிய புத்ரஸந்தானம் உனக்கு இருக்கிறது. நாங்கள் ஞானதிருஷ்டியினால் அறிகிறோம். புருஷச்ரேஷ்டனே! விதியினாலேற்படுவதை உன்கருமத்தினால் நீ இங்கே ஸம்பாதித்துக்கொள். புத்தியுள்ள மனிதன் வியாகுலப்படாமல் எளிதாகப் பலனையடைவான். ராஜாவே! உனக்கிருப்பதாக நாங்கள் கண்ட அந்தப்பலனுக்காக நீ முயற்சிசெய்தற்கு உரியவனுயிருக்கிறாய். குணங்கள் நிரம்பினதும் ஸுகத்தைத்தருவதுமாகிய ஸந்ததியை நீ அடையப்போகிறாய்" என்றுரிஷிகள் மறுமொழிகூறினர். அந்த ரிஷிகளின் சொல்லைக்கேட்டு மானுகஇருந்த ரிஷியின் சாபத்தினால் தனக்கு ஸந்ததியின் உபாயம் கெடுக்கப்பட்டிருப்பதையறிந்து பாண்டு சிந்தைமிகுந்திருந்தான்.

நூற்றிருபத்தாறுவது அத்தியாயம்.

ஸம்பவபர்வம். (தொடர்ச்சி).

(விதுரர்விவாஹமும், அவருக்குப் புத்ரர்கள் பிறந்ததும், காந்தாரிக்குக் கர்ப்பம்உண்டானதும், பாண்டுவுக்குப் புத்ரனில்லாமையால் அவன் தந்தியினிடம் விசாரப்படுவதும்).

"அதன்பிறகு பீஷ்மாசாரியர் தேவகனென்னும் ராஜாவின்வைப் பாட்டியின்பெண் அழகும் யௌவனமும் நிரம்பியிருப்பதைச் செவியுற்றார். பிறகு பரதச்ரேஷ்டராகிய பீஷ்மர் அவளைவரித்து அழைத்துவந்து சிறந்தபுத்தியுள்ள விதுரருக்கு விவாஹஞ்செய்வித்தார். கௌரவபுத்திரரே! அவளிடத்தில் விதுரர் விஷயம்பொருந்தினவர்களும் குணங்களில் தமக்கொப்பானவர்களுமாகிய புதல்வர்களை உண்டுபண்ணினர். ஜனமேஜயரே! பிறகு த்ருதராஷ்டிரனுக்குக் காந்தாரியிடம் நூறுபுத்ரர்கள் பிறந்தனர். வைசியஜாதிப்பெண்ணிடம் நூற்றுக்கு மேற்பட்டவனுகிய ஒருபுத்திரன் பிறந்தான். பாண்டுவுக்குக் குந்தியிடமும் மாத்ரியிடமும் மஹாரதர்களான ஐந்துபுத்திரர்கள் குலத்தின் அபிவிருத்திக்காகத் தேவர்களிடமிருந்து உண்டாயினர்" என்று வைசம்பாயனர்சொல்ல, ஜனமேஜயர், "பிராமணச்ரேஷ்டரே! காந்தாரிக்கு நூறுபுத்திரர்கள் எவ்வாறு உண்டாயினர்? எவ்வளவு காலத்தால் பிறந்தனர்? அவர்களுடைய பூர்ணமானஆயுள் என்ன? த்ருதராஷ்டிரனுக்கு ஒருபுத்திரன் வைச்யப்பெண்ணினிடம் எவ்வாறு பிறந்தான்? தர்மத்தையனுஷ்டிப்பவளும் ஒற்றுமையாக நடப்பவளும் தனக்குத்தகுதியான மனைவியுமான காந்தாரியை த்ருதராஷ்டிரராஜா எவ்வாறு அதிக்ரமித்திருந்தான்? அந்தமஹாத்மாவாகிய ஜ்ஞானியால் சபிக்கப்பட்டிருந்த பாண்டுவுக்கு மஹாரதர்களாகிய ஐந்துபுத்ரர்கள் தேவர்களால் உண்டானதெப்படி? வித்வானே! தபோதனரே! இதை நடந்தபடி விரிவாகச் சொல்லக்கடவீர். என் பந்துக்களைப்பற்றிச் சொல்வதைக் கேட்பதில் எனக்குள்ளவிருப்பம் தணியவில்லை" என்று கேட்டார். அதைக்கேட்டு வைசம்பாயனர் சொல்லத்தொடங்கினர்:

"பசித்தும் களைத்தும்வந்த த்வைபாயனமுனிவரைக் காந்தாரி ஆராதித்தாள். அவளுக்கு வியாஸர் வரம்கொடுத்தார். அவள் தன் பர்த்தாவைப்போன்ற நூறுபுத்ரர்கள் தனக்கு வேண்டுமென்று கேட்டாள். பிறகு காலக்ரமத்தில் அவள் த்ருதராஷ்டிர ராஜனுக்குக் கர்ப்பத்தையடைந்தாள். வீரரே! காந்தாரி கர்ப்பம் தரித்தபோது

அம்பாலிகையின் புத்ரனுகிய பாண்டு தனக்கு ஸந்ததியைப்பற்றிப் பெருந்துயரமடைந்தான். காந்தாரி கர்ப்பம்தரித்தபின் மாணுயிருந்த முனியின் சாபத்தினுல் சந்ததியின்உபாயம் அற்றுப்போய்ப் பெருந் துயரமுற்ற பாண்டு தன்னே வெறுத்துக்கொண்டிருந்தான். பூமியில் விசுவாமித்ரரைப்போல் தவத்தினுல் ஸித்தியையடைந்து தேகத்தை விடுவதற்கு நிச்சயஞ்செய்துகொண்டிருந்த அந்தப்பாண்டு, பின்வரும் சொல்லேச் சொல்லலானுன்: "பெண்ணே! பிதிர்க்கள், தேவர்கள், மனி தர்கள், ரிஷிகள்ஆகிய நால்வர் விஷயத்திலும் கடன்பட்டவனுகவே மனிதன் பூமியிற்பிறக்கிறுன். எவன் தர்மத்தையறிந்து அந்த அந்தக் காலங்களில் இந்தக்கடன்களிலிருந்து தன்னே விடுவித்துக்கொள்ளாம லிருப்பனே அவனுக்கு நல்லலோகங்களில்லேயென்று லோகங்களே யறிந்தவர் நினேக்கின்றனர். தேவர்களே யஜ்ஞங்களினுலும், ரிஷிகளே வேதாத்தியயனம் செய்வதனுலும் தவம்செய்வதனுலும், பிதிர்க்களேப் புத்ரஸந்தானத்தை உண்டுபண்ணுவதனுலும் சிராத்தம் செய்வதனு லும், மனிதர்களே அன்பினுலும் (மனிதன்) ஆராதிக்கவேண்டும். நான் என்தர்மத்தைச்செய்து ரிஷிகள், தேவர்கள், மனிதர்கள் இவர் களுடைய கடன்களிலிருந்து என்னேவிடுவித்துக்கொண்டேன். பிதி ர்க்களின் கடனிலிருந்துமாத்திரம் விடுவித்துக்கொள்ளவில்லே. அந் தக்கடன் மற்றவற்றைவிடப் பெரிது. எனதுதேகம் போகும்போது பிதிர்க்களுக்கே நாசம்வருமென்பது நிச்சயம். மற்றமூன்றுக்கும் கெடுதல்வரும்போது தான்மட்டும்கெடுவன். ஆதலால், இந்தலோகத் தில் புத்திரஸந்தானம் கிடைப்பதற்காக உத்தமர்களான பிராமணர்கள் பிரவர்த்திக்கின்றனர். என்னுடையபிதாவின் பாரியையினிடம் அந்த மஹாத்மாவாகிய வ்யாஸரால் நான் எப்படி உண்டாக்கப்பட்டேனே அப்படியே இந்த என்பாரியையினிடம் ஸந்ததி உண்டாக்கப்பட லாமா" என்றுசொன்னுன். அந்தப்பரதச்ரேஷ்டன் குந்தியையும் மாத்ரியையும் அழைத்து, புத்திரலாபத்தைப் பூர்த்திசெய்வதே எல் லாவற்றினும் மேலானகடமையென்பதை உரைக்கலானுன்: "*ஆபத் காலங்களில் தாழ்ந்தகுலத்தோர் மேற்குலத்துப்புருஷனுல் புத்ரோத் பத்தியை விரும்புகின்றனர். உயர்குலத்தோனுல் உண்டாகும் சந்ததி தர்மபலனேக் கொடுக்குமென்று சான்ரோர் கொள்கின்றனர்" என்று சொல்லி, மஹாப்பிராமணர்களின் ஸபையில் அந்தக் குந்திமாத்ரி இரு வரையும் செம்மையாக மனம் ஒப்பச்செய்து தர்மந்தெரிந்த பாண்டு சிறந்த குணங்களேயுடைய ஒருபிராமணனேப்பற்றிச் சிந்தித்தான்.

* புத்ரன் கிடைக்கக்கூடாத காலங்களில்.

அவன் ரஹஸ்யத்தில் தனது தர்மபத்நியும் புகழ்பெற்றவளுமான குந்தியைநோக்கி, "ஆபத்காலத்தில் புத்ரனை உண்டுபண்ணிக்கொள்ளும் விஷயத்தில் உபாயத்தை நீ ஆலோசிக்கவேண்டும். குந்தியே! லோகத்தில் ஸந்தானம்என்பது தர்மத்திற்கு ஆதாரமென்று தர்மத்தைப் பற்றிச் சொல்லுகின்ற அறிஞர்கள் நெடுங்காலமாக அறிந்திருக்கின்றனர். ஸந்தானம் இல்லாதவனுக்கு யாகமும் தானமும் தான்செய்ததவமும் ஒழுங்காக அனுஷ்டித்தவிரதங்களும் ஒன்றும் பாவத்தைப்போக்குகின்றவையாக இவ்வுலகத்தில் சொல்லப்படுவதில்லை. அழகியபுன்சிரிப்புள்ளவளே! நான் இவ்வகையை அறிந்துதான் புத்ரனில்லாமல் நல்லலோகங்களையடையமாட்டேனென்று நினைத்து இவ்வாறு ஆலோசிக்கிறேன். பிள்ளையில்லாமல் நான் மரணத்தையும் விரும்பவில்லை. உயிர்வாழ்க்கையையும் விரும்பவில்லை. யாருமில்லாதவனத்தில் என்னுடைய கொடுஞ்செய்கையினால்மாத்திரம் எல்லாநன்மையையும் கெடுக்கத்தக்க மானஇருந்த ரிஷியின் சாபம்வந்தது உனக்குத்தெரியுமே. தர்மசாஸ்திரத்தில் * ஆறுபுத்ரர்கள் தாயபாகத்திற்குரிய சுற்றத்தவரென்றும் மற்ற † ஆறுபுத்ரர்கள் தாயபாகத்திற்குரியரல்லாத சுற்றத்தவர் என்றும் சொல்லப்பட்டனர். குந்தியே! அவர்களைப்பற்றி நான்சொல்லுகிறேன் கேள். தன்தர்மபத்நியிடம் தனக்குப்பிறந்த ஔரஸன், அவளிடத்திலேயே தன்அனுமதியினால் உயர்குலத்தோனுக்குப்பிறந்த க்ஷேத்ரஜன், தாய்தந்தைகளால் விடப்பட்ட ‡அபவித்தன், ஒருபெண்ணினிடம் இரண்டாவது விவாகம்செய்துகொண்ட புருஷனுக்குப்பிறந்த பௌனர்ப்பவன், விவாகம்செய்துகொள்ளாமல் கன்னிகையாயிருக்கும்போது பிறந்த‡கானீனன், இன்னானுக்கென்று தெரியாமல் பரபுருஷனுக்குப்பிறந்த கூடோத்பன்னன், தத்துப்புத்திரன், தாய்தகப்பனர்களுக்குக் கிரயம்கொடுத்து வாங்கப்பட்டக்ரீத புத்ரன், புத்திரன்போல் அபிமானிக்கப்பட்ட க்ரித்ரிமபுத்திரன், தானே உனக்குப்புத்ரனாக இருக்கிறேனென்றுவந்த ஸ்வயம்தத்தனென்பவன், கர்ப்பிணியாகவே விவாகம்செய்யப்பட்டவளுக்குப் பிற

---

* 1. ஔரஸன், 2. க்ஷேத்ரஜன், 3. தத்தன், 4. க்ரித்ரிமன், 5. கூடோத்பன்னன், 6. அபவித்தன்.

† 1. கானீனன், 2. ஸகோடன், 3. க்ரீதன், 4. பௌனர்ப்பவன், 5. ஸ்வயம்தத்தன், 6. பாரசவன்.

‡ அபவித்தன் என்பவன் ஒருவனுக்குப் பணம்கொடுத்து அவனைக்கொண்டு தன்மனைவியினிடம் உண்டாக்கிக் கொள்ளப்பட்டவன் என்பதும், கானீனன்என்பவன் விவாஹத்துக்குமுன் இவளுக்குப்பிறக்கும் புத்திரன் எனக்குவேண்டுமென்று உடன்படிக்கை செய்துகொண்ட அவள் பிதாவினால் தத்தெடுத்துக் கொள்ளப்பட்டவன் என்பதும் பழையவுரை.

ந்த ஸகோடன்என்னும் புத்ரன், * ஜ்ஞாதிபுத்ரன், சூத்ரஜாதி ஸ்த்ரீ யினிடம் தனக்குப்பிறந்தவனுகிய பாரசவன் இவர்கள் பன்னிரண்டு புத்ரர்கள். இவர்களில் முன்சொன்ன புத்ரர்கள் இல்லாமையைப்பார் த்துப் பின்சொன்ன புத்ரர்களே அடையவிரும்பவேண்டும். ஆபத்கால த்தில் மேல்ஜாதியான புருஷனிடமிருந்தும் மைத்துனனிடமிருந்தும் ஸ்த்ரீகள் புத்ரனைவிரும்பலாம். குந்தியே! மனிதர்கள் தம்வீர்யத் துக்குப் பிறந்தவனைவிட ஜாதியில் சிறந்தவனுக்குப்பிறந்த புத்ரனே அடைவது தர்மபலனைக் கொடுக்குமென்று ஸ்வாயம்புவமனு சொல்லி யிருக்கிறார். ஆதலால், நானுக ஸந்ததியுண்டுபண்ணுவதற் கில்லாம லிருக்கிற நான் இப்போது உனக்கு அனுமதிகொடுக்கிறேன். புகழ் பெற்றவளே! நமது ஸமானகுலமான ஜ்ஞாதியினிடத்திலிருந்தாவது உத்தமகுலமான பிராமணனிடத்திலிருந்தாவது நீ ஸந்ததியையடை யக்கடவாய். குந்தியே! சாரதண்டாயனி என்பவனைப்பற்றி நான் சொல்லும் கதையைக்கேள். "கற்புள்ளவளும் புகழுள்ளவளுமான சுருதஸேனையென்னும் பெயருள்ள உன்ஸஹோதரியை உயர்ந்தவனு கிய சாரதண்டாயனியென்னும் கேகயதேசத்தரசன் விவாஹம்செய்து கொண்டான். குந்தியே! வீரபத்னியாகிய அவள் தன்குருவினுல் (பர்த்தாவினுல்) புத்ரோத்பத்திசெய்துகொள்ளும்படி கட்டளையிடப் பட்டு ருதுஸ்நானஞ்செய்து நியமத்துடனிருந்து ராத்ரியில் நாலு சந்து கூடுமிடத்திலிருந்த ஒருதவஸித்திபெற்ற பிராமணனைவரித்து †பும்ஸவனம்என்னும் கிரியையில் அக்நியில் ஹோமஞ்செய்து அந்தக் கிரியைமுடிந்தபின் அந்தபிராமணருடன்கூடவே சேர்ந்திருந்தாள். அதனுல் அவள் துர்ஜயன்முதலான மூன்றுமஹாரதர்களைப்பெற்றாள். அழகானவளே! அப்படியே நீயும் தவத்திற்சிறந்த பிராமணனைக் கொண்டு புத்ரனை உண்டாக்கிக்கொள்வதற்கு என்கட்டளையின்மேல் சீக்கிரம் ப்ரயத்னஞ்செய்" என்றான்.

நூற்றிருபத்தேழாவது அத்தியாயம்.

ஸம்பவபர்வம். (தொடர்ச்சி).

(பாண்டுவுக்கு குந்தீ, வ்யுஷிதாச்வன் கதையைச் சொல்வது).

"ஜனமேஜயமஹாராஜாவே! இவ்வாறு சொல்லப்பட்ட குந்தி கௌரவச்ரேஷ்டனும் வீரனும் பூமிக்கும் தனக்கும் பதியுமாகிய

* இவன் புத்ரனுக இனைக்கப்படவில்லை.
† ஆண்பிள்ளை பிறப்பதற்குச்செய்வது.

பாண்டுவைப்பார்த்துப் பேசத்தொடங்கினள். "தர்மந்தெரிந்தவரே! தாமரைக் கண்ணராகிய உம்மிடத்திலேயே பற்றுள்ள தர்மபத்நியாகிய என்னைப்பார்த்து எந்தக் காரணத்தாலும் நீர் இவ்வாறு சொல்லத்தகாது. சிறந்த கைகளையுடையவரே! பாரதரே! வீரரே! நீரே என்னிடத்தில் தர்மப்படி பராக்ரமமுள்ள புத்ரர்களை உண்டுபண்ணப் போகிறீர். மனுஷ்யச்ரேஷ்டரே! உம்மோடுசேர்ந்து ஸ்வர்க்கம்போவேன். கௌரவபுத்ரரே! ஸந்ததிக்காகவும் நீரே என்னைச் சேரக்கடவீர். உம்மைத்தவிர வேறொருபுருஷனை மனஸாலும் நான் அடையேன். உமக்கு மேலானமனிதர் வேறுயார் பூமியில் இருக்கிறார்? தர்மத்தில் சித்தமுடையவரே! விசாலமான கண்களையுடையவரே! நான் கேட்டிருந்த ஒரு பூர்வகதையை உமக்கு இப்போது சொல்லப் போகிறேன். அதை நீர் இப்போது கேட்பீராக.

முன்னாளில் மிகுந்த தர்மிஷ்டனும் பூருவின் வம்சத்தை விருத்தி செய்பவனுமாகிய வ்யுஷிதாச்வனென்று கியாதிபெற்ற ஓராசன் இருந்தான். தர்மசித்தமுள்ளவனும் சிறந்த புஜபலமுள்ளவனுமாகிய அவ்வராசன் யாகம் செய்துகொண்டிருக்கையில் இந்த்ராதி தேவர்களும் தேவரிஷிகளும் அவனிடம்வந்து சேர்ந்தனர். ஸோமபானத்தினால் இந்த்ரனும் தக்ஷிணைகளினால் பிராமணர்களும் திருப்தியடைந்தனர். அப்போது மஹாத்மாவாகிய வ்யுஷிதாச்வன் என்னும் ராஜரிஷியின் அந்த யாகத்தில் தேவர்களும் ப்ரம்மரிஷிகளும் தாங்களே வேலை செய்தனர். ராஜாவே! அதனால் வ்யுஷிதாச்வன் மனிதர்களை மிஞ்சினவனாக, வஸந்தகாலத்து ஸூர்யனைப்போல் எல்லா ஜனங்களுக்கும் ப்ரகாசித்தான். அந்தச் சிறந்த பராக்ரமமுள்ள வ்யுஷிதாச்வன் என்னும் ராஜச்ரேஷ்டன் அச்வமேதமென்னும் மஹாயாகம் நடக்கும்போது கிழக்கிலும், வடக்கிலும், மேற்கிலும், தெற்கிலுமுள்ள அரசர்களை ஜயித்துப் பிடித்துத் தராத்தினான். அரசர்க்குமராஜனை வ்யுஷிதாச்வன் பத்தியாளைகளின் பலமுடையவனாக இருந்தான். கௌரவர்களிற் சிறந்தவரே! கீர்த்திபெற்ற பெரியவனான அந்த வ்யுஷிதாச்வராஜாவிஷயத்தில் பூர்வசரித்ரம்தெரிந்த ஜனங்கள் பின்வரும் காதையைப்பாடுகின்றனர்: அது, "வ்யுஷிதாச்வன் சமுத்ரத்தை எல்லையாகவுடைய இந்தப்பூமியை ஜயித்து எல்லாவருணங்களையும் தன் வயிற்றிற்பிறந்த புத்ரர்களைப் பிதா காப்பாற்றுவதுபோல் காப்பாற்றினான்" என்பதுதான். அவன் பெரிய யாகங்களைச்செய்து பிராமணர்களுக்குத் தனம் கொடுத்தான். அளவற்ற ரத்னங்களைச் சம்பாதித்துப் *பெரிய யாகங்களைச் செய்தான். அனே

---

* இக்கு அக்நிஷ்டோமம் அத்யக்நிஷ்டோமம் முதலிய ஏழுயாகங்களைச் செய்தான் என்பது பழைய வுரை.

கந்தரம் ஸோமரஸம் பிழிந்தான். ஸோமலதை உண்டாகும் இடங் களை விருத்திசெய்தான். ராஜாவே! அவனுக்கு மிக்க பிரியமான வளும் அழகில் பூமியில் ஒப்பில்லாதவளும் கசூவீவானுடைய புத்ரியு மாகிய பத்ரையென்பவள் அவனுக்கு மஹிஷியாக இருந்தாள். அவர் களிருவரும் ஒருவர்மேலே ஒருவர் விருப்பமுற்றிருந்தனரென்று எனக்குக் கேள்வி. அவள்மேல் விருப்பங்கொண்ட அவ்வரசன் கூர்ய ரோகத்தை யடைந்தான். அதனால் வெகுசீக்கிரத்தில் ஸூர்யன் அஸ்தமனமாவதுபோல் முடிவையடைந்தான். அவ்வரசன் இறந்து போனபின் அவன்மஹிஷி மிகத்துயரமுற்றாள். புருஷச்ரேஷ்டரே! பத்ரையென்பவள் புத்ரனில்லாமல் மிகுந்த துக்கத்தினால் வருந்தின வளாகப் புலம்பினளென்று நமக்குக் கேள்வி. ராஜாவே! அவள் புலம்பலைச் சொல்லுகிறேன் கேளுர். "தர்மந் தெரிந்தவர்களிற் சிறந் தவரே! புருஷனில்லாத பெண் எவளாகட்டும் புருஷனைப்பிரிந்தபின் ஜீவித்திருப்பாளாயின் துக்கமுற்றவள் ஜீவித்திருப்பவள் ஆகாள். க்ஷத்ரியர்களிற் சிறந்தவரே! கணவனில்லாத பெண்ணுக்கு இறப்பே சிறப்பு. உம்வழியிற்செல்ல விரும்புகிறேன். தயவுடன் என்னை யழைத்துக்கொண்டுபோம். உம்மைவிட்டு ஒரு நிமிஷமும் நான் ஜீவிக்கமாட்டேன். ராஜாவே! என்மேல் அனுக்ரஹம் செய்யும். என்னை இங்கிருந்து விரைவாகஅழைத்துக்கொண்டுபோம். ராஜச் ரேஷ்டரே! திரும்பிவராமலிருக்கும்படி செல்லுகின்ற உம்மை நான் சமபூமிகளிலும் கரடுமுரடுகளிலும் பின்தொடர்ந்து வருவேன். ராஜா வே! ஆண்சிங்கமே! எப்போதும் உம்விருப்பத்தையும் உமது நன்மையையும்நாடி உமக்கடங்கி நிழலைப்போல் எப்போதும் விட்டுப் பிரியாமலிருக்கப்போகிறேன். அரசரே! காமரைக்கண்ணரே! இது முதல் நீர் இல்லாமையால் நெஞ்சை வற்றஅடிக்கின்ற தாங்கக்கூடாத மனநோய்கள் என்னை மூடிக்கொள்ளும். அதிர்ஷ்டமில்லாத நான் கூடியிருந்த ஆண்பெண்களைப் பூர்வஜன்மத்தில் பிரித்திருக்கவேண் டும். அதனாலேதான் இந்த உம்பிரிவு எனக்குநேர்ந்தது. அரசரே! பதியைவிட்டுப் பிரிந்தபின் எவள் சற்றுநேரமாவது ஜீவித்திருக்கி றாளோ அந்தப்பாவி நரகத்திலிருப்பவள்போல் துக்கத்துடன்ஜீவிக் கிறாள். நான் முன்ஜன்மத்தில் சேர்ந்திருந்த ஸ்திரீபுருஷர்களைப் பிரித் திருக்கவேண்டும். ராஜாவே! பூர்வஜன்மங்களிற் செய்ததீவினைகளி னால் ஸம்பாதிக்கப்பட்ட அந்தத்துயரம் இப்போது உம்பிரிவினால் என க்குவந்து சேர்ந்தது. ராஜாவே! துயரம்மேலிட்ட நான் இதுமுதல் உம்மைப்பார்ப்பதையே பயனாகக்கருதித் தர்ப்பசயனத்தில் படுத்திரு

க்கப்போகிறேன். மனிதரிற் சிறந்தவரே! மனிதர்க்கரசே! துயர முற்று அழுதுபுலம்பிக்கொண்டிருக்கும் ஏழைக்குக் காட்சிகொடுத்துக் கட்டளையிடும்" என்றாள். இவ்வாறு அவள் அந்தப்பிரேதத்தைத் தழுவிக்கொண்டு இடைவிடாமல் பலவகையாகப் புலம்பிக்கொண்டிருக்கையில் ஓர் அசரீரவாக்கு, "ஓபத்ரையே! நீ எழுந்துசெல். உனக்கு இப்போது ஒருவரம் கொடுப்பேன். அழகிய நகைமுகமுள்ளவளே! நானே உன்னிடத்தில் புத்ரர்களை உண்டாக்கப்போகிறேன். சிறந்தபெண்ணே! ருதுஸ்நானமானபின் உன்படுக்கையில் சதுர்த்தசி தினமும் அஷ்டமிதினமும் என்னுடன் சயனம்செய்வாய்" என்று சொல்லிற்று. அசரீரவாக்கினால் இவ்வாறுசொல்லப்பட்ட அந்தப் பதிவ்ரதையான பத்ராதேவி புத்ரனைவிரும்பி அந்தக்காலங்களில் அசரீரவாக்குச் சொன்னதைச் சொன்னபடியே செய்தாள். பரதரேறே! பரதகுலத்திற் சிலாக்யரே! அந்த இறந்துபோன பர்த்தாவினால் அந்த ராஜஸ்திரீ ஸால்வதேசத்தரசர் மூவரையும் மத்ரதேசத்தரசர் நால்வரையும் புத்ரர்களாகப்பெற்றாள். பரதச்ரேஷ்டரே! அவ்வாறே தவம் போகம் இவற்றின் வன்மையுள்ளநீரும் உமது ஸங்கல்பத்தினாலேயே எனக்குப் புத்திரர்களை உண்டுபண்ணுவதற்கு ஸாமர்த்தியமுள்ளவர்" என்று குந்திசொன்னாள்.

நூற்றிருபத்தேட்டாவது அத்தியாயம்.

ஸம்பவபர்வம். (தொடர்ச்சி).

(உத்தாலகர் கதை).

தர்மந்தெரிந்த பாண்டுமஹாராஜன் குந்தியினால் இவ்வாறு சொல்லப்பட்டபின் அந்தக் குந்திதேவியைநோக்கி மறுபடியும் தர்மமுள்ளதும் உயர்ந்ததுமான அடியில்வரும் சொல்லைச்சொன்னான்: "குந்தியே! அழகுள்ளவளே! நீ சொன்னபடிதான் இந்தக் காரியத்தை முன்னே வியுஷிதாச்வன் செய்தானும். அவனோ தேவதையைப் போன்றவனாக இருந்தான். ஆனாலும் தர்மந்தெரிந்த மஹாத்மாக்களாகிய ரிஷிகளால்கண்டறியப்பட்ட இந்தப் பழமையாயுள்ள தர்மரஹஸ்யத்தை நான் சொல்லப்போகிறேன். நீ அறிந்துகொள். சிறந்த முகமும் அழகியபுன்சிரிப்புமுள்ளவளே! முற்காலத்தில் பெண்கள் கட்டில்லாதவர்களாகவும் விரும்பினபடி நடந்துகொண்டிருப்ப

வர்களாகவும் ஸ்வதந்திரர்களாகவும் இருந்தனர். அழகானவளே! பெண்ணரசியே! அதுவே முற்காலத்திய தர்மாயிருந்ததனால் அவர்கள் யௌவனத்தினால் தங்கள்புருஷர்களைமீறி விபசரித்தும் அவர்களுக்குப் பாபமுண்டாகவில்லை. அந்தப் பழையதர்மத்தைத்தான் திரியக்ஜாதியிற்பிறந்த பிராணிகள் காமக்குரோதங்கள் இல்லாமலே இன்னும் அனுஸரித்துவருக்கின்றன. இது ப்ரத்யக்ஷமாகப் பார்க்கப்பட்டதர்மம். மஹரிஷிகளாலும் அம்மது அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. வாழைமரம்போன்ற தொடைகளையுடையவளே! உத்தர குருதேசங்களில் இன்னமும் அந்தத்தர்மம் கொண்டாடப்படுகிறது. அது ஸ்திரீகளுக்கு நன்மையைச்செய்கிற சாச்வதமானதர்மம். அக்கினிக்கு விறகுகளும் சமுத்திரத்துக்கு நதிகளும் யமனுக்கு ஸர்வப்ராணிகளும் பெண்களுக்குப் புருஷர்களும் போதுவதில்லை. அதனாலே தான் ஸ்திரீகளுக்கு ஒவ்வொரு புருஷன்மேலும் ஆசையிருக்கிறது. அழகிய நகைப்புள்ளவளே! சேரத்தகாதவரிடம் சேராமலிருப்பதென்பது பெண்களுக்கு ஒருபோதுமில்லை. சிலபெண்களுக்குப் புத்ரனுயிருந்தாலும் பௌத்ரனுயிருந்தாலும் ஸோதரனுயிருந்தாலும் ரஹஸ்யத்தில் புருஷனைக்கண்டபின் * (மனவேறுபாடு) உண்டாகின்றது. அழகியவளே! இது பெண்களுக்கு இயற்கையிலுண்டானது. காரணத்தினால் வந்ததன்று. அழகானசிரிப்புள்ளவளே! இந்த லோகத்தில் இந்த வியவஸ்தை சிலகாலாகத்தான் நிலைநிறுத்தப்பட்டது. அதை யார் எந்தக்காரணத்திற்காகச் செய்தார்களென்பதை விரிவாகச் சொல்லுகிறேன்கேள்: உத்காலகரென்று பெயர்பெற்ற ஒரு மஹரிஷி இருந்தாரென்று நடக்குக்கேள்வி. அவருக்கு ச்வேதகேதுவென்று கியாதிபெற்ற புத்ரராகிய ஒரு ரிஷியிருந்தார். தாமரையிதழ்போன்ற கண்களையுடையவளே! அந்த ச்வேதகேதுவினால் கோபத்தினால் தர்மத்தைபற்றி இந்த நியமம செய்யப்பட்டது. அம்மது எதற்காகவென்பதை இப்போது சொல்லுகிறேன்கேள்:

தவத்திற்சிறந்தவராகிய ச்வேதகேதுவின்பிதா முதுவேனிற் காலத்தில் பஞ்சாக்கினிமத்தியிலிருந்துகொண்டும் மழைக்காலத்தில் திறந்த வெளியிலிருந்துகொண்டும் பனிக்காலத்தில் ஜலத்தில் நின்றுகொண்டும் பாரியையுடன்கூட உக்கிரமான தவத்தைச்செய்துகொண்டிருந்தார். தவம்செய்பவரும் நியமத்தினால் த்யானத்திலிருப்பவருமாகியஉத்தாலகருக்கு அவர்புத்ரான ச்வேதகேது பணிவிடைசெய்துகொண்டிருந்தார். மடிப்புக்களும் நரையும் நிரம்பின ஒரு பிராமணர்

* மூலத்தில் வேறுமாதிரியாக இருக்கிறது.

அவரிடம்வந்தார். (பாரதமே!) அவரைக்கண்டமாத்திரத்தில் அம்முனிவர் அன்புகூர்ந்து நல்வரவுகேட்பதினும் பாத்யம்கொடுப்பதினும் இன்சொற்களினும் சாஸ்திரப்படி பூஜைசெய்தார். காட்டிலுள்ள கீரைகளாலும் கனிகள் கிழங்குகளாலும் காட்டிலுண்டாகிற மற்றவைகளாலும் பூஜித்தார். பசியினும் தாகத்தினும் உண்டான களைப்பினால் சோர்வுற்ற பிராமணர் அம்மஹரிஷியினால் பூஜிக்கப்பட்டுக் களைப்புத்தீர்ந்தபின் ரிஷியிடம்சென்று, "உத்தாலக மஹரிஷியே! நீர் எனக்கு உண்மையைச் சொல்லும்; பொய்சொல்லாதேயும். பால்யனான இந்த ரிஷிகுமாரன் பார்ப்பதற்கு மிகப்பிரியமாயிருக்கிறான். இவனை உமதுபுத்திரனென்று நினைக்கிறேன். பாக்கியசாலியாயிருக்கிறீர். அதைச்சொல்லும்" என்றுவினவினர். "சிறந்த பிரஜ்ஞையுள்ளவரே! எனது மனைவி குசிகருடையபெண். எனக்கன்புள்ளவள். எனக்கு ஒத்திருக்கும்பாரியை. எந்தக்காலமும் என்னைவிட்டுப் பிரியாதவள். பதிவிரதைகளில் அருந்ததியைப்போன்றவள். தவத்தினால் ஸ்தனங்கள் சுருங்கிப்போனவள். சிறந்த தவமுள்ள ச்வேதகேது எனக்கு இவளிடத்திற்பிறந்தபுதல்வன். பிராமணரே! இவன் வேதவேதாந்தங்கள் தெரிந்தவன். என்சொல்தவறுதவன். உலகந்தெரிந்தவன். எல்லாலோகங்களிலும் பெயர்பெற்றவன். பொய்யாமொழியன். தயைபுள்ளவன்" என்று உத்தாலகர்சொன்னார். பிராமணர், "எனக்குப் புத்திரனில்லை; பாரியைவேண்டுமளவு நான் வயதில்முதிர்ந்தவன். கண்பார்வை குறைந்தவன். பிதிர்க்களின் கடனிலிருந்து விடுபடாமலிருக்கிறேன். முன்னமேயே விவாஹஞ்செய்துகொள்ளாமற்போனேன். ஸந்ததிக்கு அணியைப்போன்றவளும் சிறந்தகுலமும் ஒழுக்கமும உள்ளவளுமாகிய உமது பாரியை கோத்திரத்தில் எனக்கு ஒத்தவளாயிருக்கிறாள். இவளையழைத்துக்கொண்டுபோகிறேன். நீர் என்னை மன்னிக்கவேண்டும்" என்று சொல்ல, மான்குட்டியின் கண்களைப்போல் அலையுங்கண்களையுடையவளும் மாவுரியையும் கிருஷ்ணஜினத்தையும் ஆடையாகவுடையவளும் தன்வேலையைச் செய்யவே சக்தியில்லாதவளும் அவரிடத்தில் விருப்பமில்லாதவளுமாகிய ச்வேதகேதுவின்தாயாரை உடம்புதளர்ந்து தடியையே ஆதரவாகப் பிடித்தவரும் கண்ணொளியும் புத்தியும் குறைந்தவருமாகிய அந்தப் பிராமணர் ச்வேதகேதுவின் பிதாவின் கண்முன்னாலேயே கையிற்பிடித்துக்கொண்டு, "நாமிருவரும் செல்வோம்" என்றும் சொன்னார். அப்போது அந்த ரிஷிபுத்திரர் தாயாரை அவ்வாறு பலாத்காரமாகக் கொண்டுபோவதைக்கண்டு கோபங்கொண்டார்,

தவத்தினால் ஜ்வலிக்கும் சக்தியோடுகூடிய ச்வேதகேது அதைப் பொறுக்கவில்லை. ச்வேதகேது தம் தாயாரைக் கையிற்பிடித்துக் கொண்டு, "துஷ்டப்பிராமணரே! பதிவிரதையான என்தாயாரை நீர் விட்டுவிடும். என்பிதா இயற்கையில் பொறுமையுள்ளவரும் பிரம்மஜ் ஞானிகளிற் சிறந்தவருமான பிரம்மரிஷி. சாபம்செய்யவும் அனுக்ர ஹம் செய்யவும் சக்தியுள்ளவர். சிறந்த தவமுள்ளவராயிருப்பதனால் பேசாமலிருக்கிறார். இவள் அவருடையபத்தினி. இந்திரியங்களை ஜயித்தவள். மேலும் என்னுடைய தாயார். பிராமணரே! கற்புள்ள வளும் தவத்தாற் பெரியவளும் நல்லொழுக்கங்களே அணிகலங்களாக வுடையவளும் உமக்கே தாயைப்போன்றவளுமாகிய இவளைத் தவறு செய்யாமல் விட்டுவிடும்" என்று சொன்னர். இவ்வாறுசொல்லி, "விடும்" என்று அடிக்கடிவேண்டுகிற ச்வேதகேதுவை நோக்கி, [ராஜாவே!] அந்தப் பிராமணர் கெஞ்சிக்கேட்டுக்கொண்டு பின்வரும் தைரியமில்லாதசொல்லைச் சொல்லத்தொடங்கினர்: "ச்வேதகேது வே! வயது முதிர்ந்தவனும் கண்ணொளிகுறைந்தவனுமான நான் புத் திரஸந்தானத்தில் விருப்பமுள்ளவனாக இருக்கிறேன். கஸியபகோத் திரத்தவனே! நீ புத்ரனாகப் பிறந்ததனால் உன்பிதா பிதிர்க்களின் கடனிலிருந்து விடுபட்டவரானர். நான் கடனிலிருந்து விடுபடா தவனாக இருக்கிறேன்; வயது முதிர்ந்தவன்; விஷயங்களில் விருப்ப மில்லாதவன். எனக்கு யௌவனம்வந்தபெண்ணை எவன் கன்னிகா தானம் செய்வன்? சிறந்த தபஸ்ஸுள்ளவனே! நீ இவளை ஸந்ததிக்கு அரணியாகிய பத்நியாக எனக்குவிடு. ஒருஸந்தானத்தினால் திருப்தி யடைந்து உன் தாயாரை உன்னிடம் ஒப்பிவித்துவிடுகிறேன்" என் றார். இவ்வாறுசொல்லப்பட்ட ச்வேதகேது வெட்கத்துடன் கோப த்தையடைந்தார். அவர்கோபித்ததைக்கண்டு அவருடையபிதா ச்வேதகேதுவை நோக்கி, "குழந்தாய்! நீ கோபிக்காதே. இது புராத னமான தர்மந்தான். பூமியில் எந்தவருணங்களிலும் ஸ்திரீகளுக்குக் கட்டுஇல்லை. புத்திரனே! மனிதர்கள், பசுக்கள் இருப்பதுபோலவே தம்தம் வருணங்களிலிருக்கின்றனர். அவ்வாறிருந்தும் குடும்பங்க ளில் அவர்கள் தவறிநடக்கவில்லை. ருதுகாலம் வந்தபோது அவர்கள் புருஷனை விடாமலிருந்தனர்" என்றார். பிறகு ரிஷிபுத்திரராகியச்வே தகேது அந்தத்தர்மத்தை ஸஹிக்கவில்லை. மிகுந்த பாக்கியமுள்ள வனே! அப்போது அந்த ச்வேதகேது மனிதர்களுக்குமட்டும் ஆண் பெண்களுக்கு அடியில்வரும் நியமத்தைச் செய்தார். மற்ற ஜந்துக் களில் செய்யவில்லை. அதுமுதல்தான் இந்தவரம்பு நின்றதென்று நாம்

கேட்டது. "இதுமுதல் பதியைவிட்டு விபசரிக்கும் பெண்ணுக்குக் கர்ப்பத்தைக்கொன்றதற்கு ஸமானமும் துன்பத்தைத் தருவதுமாகிய பெரியபாபம் உண்டாகும். புகழ்பெற்றவளே! இன்னமும் உத்தரகுருதேசங்களில் காமக்குரோதங்களைவிட்டு அனுஸரிக்கின்றனர். புராணத்தில் கண்டதர்மம் இது; மஹரிஷிகளால் பூஜிக்கப்படுகிறது. அவ்வாறே பால்யம்முதல் நியமந்தவறுத கற்புள்ளமனையைவிட்டு விபசரிக்கும் புருஷனுக்கும் பூமியில் இதேபாபம் உண்டாகும்.' புத்திரஸந்தானத்திற்காகக் கணவனுலேயே கட்டளையிடப்பட்ட மனைவி அதை அவ்வாறு செய்யாளாயின் அவள்மிகப் பெரியபாபத்தையடைவாள்." பயமுள்ளவளே! இவ்வகையான தர்மத்திற்குரிய நியமமானது உத்தாலகபுத்திரரான ச்வேதகேதுவினால் முன்னே பலமாக ஏற்படுத்தப்பட்டது. வாழைமரம்போன்ற தொடைகளையுடையவளே! ஸௌதாஸன் என்னும் ராஜாவினால் புத்திரோத்பத்திக்காக நியமிக்கப்பட்ட மதயந்தியென்பவள் வஸிஷ்டமஹரிஷியைச சேர்ந்தாளென்று நமக்குக்கேள்வி. அந்த உத்தமஸ்திரீ அந்த வஸிஷ்டரால் அச்மகன் என்று பெயருள்ள புத்திரனை அடைந்தாள். அவளும் பர்த்தாவின் விருப்பத்தைச் செய்வதற்காகத்தான் இவ்வாறு செய்தாள். தாமரைக்கண்ணியே! அச்சப்படுகிறவளே! கௌரவர்களின்வம்சம் விருத்தியாவதற்காகக் கிருஷ்ணத்வைபாயனரால் நாங்கள் ஜனித்ததும் உனக்குத் தெரிந்ததுதான். குற்றமற்றவளே! ஆதலால் இந்த நியாயங்களெல்லாவற்றையும் ஆராய்ந்து தர்மமுள்ள இந்த என்சொல்லை நீ செய்வதற்கு உரியவளாயிருக்கிறாய். ராஜபுத்திரியே! பதிவ்ரதையே! ஒவ்வொரு ருதுகாலங்களில்மட்டும் ஸ்திரீ கணவனைமீறிநடக்கக்கூடாதென்பதே தர்மமென்றும் மற்றக் காலங்கள் எல்லாவற்றிலும் பெண் தன் இஷ்டப்படி நடப்பதற்குரியவளென்றும் தர்மந்தெரிந்தவர்கள் அறிகின்றனர். ஸாது ஜனங்கள் இவ்வாறுகவே பழையகாலத்துத் தர்மமிருப்பதாக நிச்சயித்திருக்கின்றனர். ராஜபுத்திரியே! தர்மமோ அதர்மமோ எதைப் பாரியைக்குப் பர்த்தா சொல்வனோ அதை அவள் செய்யவேண்டுமென்று வேதம் தெரிந்தவர்கள் நிச்சயிக்கின்றனர். சிலாக்யமான அழகுள்ளவளே! புத்திரனை விரும்புகிறவனும் தானுக ஸந்ததியை உண்டாக்குவதற்கு வகையற்றவனுமாகிய நான் புத்திரனைப்பார்க்கவேண்டுமென்ற ஆசையுடன்சொல்வதை நீ செய்வது முக்கியம். அழகியவளே! அழகியநிதம்பங்களையுடையவளே! சிவந்த நகங்களையுடைய விரல்களுள்ளது தாமரையிதழ்போன்றதுமாகிய இந்த அஞ்சலி உன்னைவேண்டிக்கொள்

வதற்காகச் சிரமேல் எடுக்கப்பட்டது. அழகிய கூந்தலின் நுனிகளை யுடையவளே! என் கட்டளையினல் தவத்திற்சிறந்த பிராமணனிக்கொ ண்டு குணங்கள் நிரம்பின புத்திரர்களை உண்டாக்கிக்கொள்வதற்கு உரியவளாகிறாய். பருத்தநிதம்பங்களையுடையவளே! நான் உன்னல் புத்திரவான்களுடைய லோகத்துக்குச் செல்லக்கடவேன்" என்று பாண்டுசொன்னன். கணவனுடைய விருப்பத்திலும் நன்மையிலும் எண்ணமுள்ள உத்தபஸ்திரீயான குந்தி இவ்வாறுசொல்லப்பட்ட பிறகு பகைவரின் பட்டணங்களை ஜயிப்பவனுகிய பாண்டுவுக்கு மறு மொழி சொல்லலானுள்:

"பரதவம்சத்திற் சிறந்தவரே! க்ஷத்திரியரேறே! பாரியையான வள் வேண்டிக்கொள்வதற்குரியவனுகிய கணவன், பாரியையைவேண் டிக்கொள்வதென்பது பெண்களுக்குப் பெரியபாவம். சிறந்தகைகளை யுடையவரே! ஸந்தோஷகரமாக நான்சொல்லும் என்னுடைய சொல் லிக்கீகளும். நான் சிறுபெண்ணுயிருக்கையில் என்பிதாவின் கிரு ஹத்தில் வரும் அதிதிகளைப் பூஜிப்பதற்கு நியமிக்கப்பட்டிருந்தேன். அங்கே கொடியவரும் கடுந்தவமுள்ளவரும் தர்மத்தில் யாருக்குந் தெரியாத நிச்சயமுள்ளவருமாகிய துர்வாஸஸ் என்று பெயர்பெற்ற பிராமணருக்குப் பணிவிடைசெய்தேன். உக்கிரமானமனமுள்ள அவ ரைநான் எல்லாமுயற்சிகளையும் செய்து திருப்திசெய்வித்தேன். சிறந் தமஹிமைபொருந்திய அவர் வசிகரண சக்தியோடு ஒரு சிறந்த மந் திரத்தை எனக்கு வரமாகக்கொடுத்து என்னைப்பார்த்து, "ராஜபுத் திரியே! நீ இந்த மந்திரத்தினல் எந்தத் தேவதையை ஆவாஹனம் செய்வாயோ அந்தத் தேவதை விருப்பமிருந்தாலும் இல்லாவிட்டா லும் உனக்கு வசப்படுவான். அந்தத் தேவதையின் அனுக்ரஹத்தி னல் உனக்குப் புத்திரனுண்டாவான்" என்று சொன்னர். பாரதரே! என்பிதாவின் கிருஹத்தில் அந்தப் பிராமணரால் நான் இவ்வாறு சொல்லப்பட்டிருக்கிறேன். பிராமணர்சொல் தவருது. அதற்கிது காலம் நேர்ந்திருக்கிறது. ராஜாவே! உம் அனுமதியின்மேலே நான் தேவதையை வருவிப்பேன். மஹாராஜாவே! பெரும்புகழ்பெற்ற அந்தரிஷி எந்தவித்தையை எனக்குக் கொடுத்தாரோ அந்த வித்தை யினல் அழைக்கப்பட்டதேவதை தேவதைக்கொப்பான புத்திரனைக் கொடுப்பான். வீரரே! அந்தப் புத்திரன் சந்ததியில்லாமையினல் உமக்குண்டான வ்யஸனத்தை விலக்குவான்.

———

நூற்றிருபத்தோன்பதாவது அத்தியாயம்.

ஸம்பவபர்வம். (தொடர்ச்சி).

—→**←—

(தர்மதேவதையினிடம் தந்திக்ர யுதிஷ்டார் பிறந்ததும், அதனல் துக்கிக்த காந்தாரி வயிற்றிலிடித்துக்கொண்டு மாம்ஸபிண்டத்தைப் பெற்ற தும், வியாஸரால் அப்பிண்டம் நூற்றேரு கூறுக்கப்பட்டுத் தனித்தனி குண்டங்களில் வைத்து ரகூஷிக்கபடபட்டதும், குந்தியினிடத்தில் வாயு தேவதையின் அம்சத்திறல் பீமன் பிறந்ததும், ஒரு மாதத்தில் திருதராஷ்டிரனுக்குத் துரியோதனன்முதலிய நூறுபிள்ளை களும் துச்சலையென்னும் பெண்ணும் பிறந்ததும்).

எனக்குப் புத்திரன் வேண்டுமென்ற புத்திரனப்பற்றிய உமது விருப்பம் இவ்வாறுக நிறைவேறலாம். அப்படியில்லாவிட்டால் குணங் கள் நிரம்பினவனும் எல்லாப்பிராணிகளின் நன்மையிலும் நோக்க முள்ளவனுமாகிய ஒரு பிராமணனுக்காவது அனுமதிகொடும். உமக் குச் சுகமுண்டாகக்கடவது. பதிதாமே ஸ்திரீகளுக்குத் தேவதை. தர்மந்தெரிந்தவரே! சிறந்தகைகளையுடைய வீரரே! தேவதையையோ பிராமணனையோ யாரைப்பற்றி நீர் நியமிப்பீரோ அவரிடம் நீர்சொன் னபடி அந்தக் காரியத்தைச் செய்வேன். ஆனல், தேவதையினிடம் புத்திரனென்னும் பிரயோஜனம் உடனேவரும். பிராமணனிடத்தில் காலாந்தரத்தில்வரும். பரதச்ரேஷ்டரே! எப்போது எந்தத் தேவதை யை வருவிக்கலாம்? இந்த இஷ்டகாரியத்தில் உமது ஆஜ்ஞையை தீர் பார்ப்பவளென்று நீர் என்னை அறியும்" என்று குந்தி சொன்னுள். பாண்டு, "நான் இருதார்த்தனுனேன். தெய்வாநுக்ரஹம் பெற்றவனு னேன். நமது குலத்திற்கு நீ தாய். உனக்குவரம்கொடுத்த அந்தமஹ ரிஷிக்கு நமஸ்காரம். தர்மந்தெரிந்தவளே! தர்மமின்றிப் பிரஜைகளைப் பரிபாலனம்செய்வது முடியாது. பெண்ணே! ஆதலால், உனக்குப் புத் ரலாபத்திற்காகவும் என்னுந்தி விருத்திக்காகவும் எல்லாத்தேவர்களி லும் சிறந்த தர்மதேவதையை ஆவாஹனம் செய்" என்முன். ஜன மேஜயமஹாராஜாவே! பரதவம்சத்தானுகிய புகழ்பெற்ற பாண்டுவி னல் அனுமதிகொடுக்கப்பெற்றபோது குந்தி தர்மதேவதையை ஆவாஹனம்செய்ய எண்ணங்கொண்டாள். பாண்டு, "பெண்ணர சியே! நீ இப்போதே முறைப்படி ஆரம்பம்செய். குருவம்சத்தாருக் குத் தர்மிஷ்டனை புத்திரன் உண்டாவனென்பதில் ஸந்தேஹமில்லை.

தர்மதேவதையினால் கொடுக்கப்படும் அந்தப்புத்திரனுடைய மனம் அதர்மத்தை விரும்பாது. தர்மந்தெரிந்தவளே! தர்மத்தையே ஆதியும் அந்தமும் நடுவுமாகவுடைய ஸந்ததிதான் விரும்பப்படுவது. அஃது உலகங்களில் புகழையும் கௌரவத்தையும் விருத்திசெய்வது. அழகிய புன்னகையுள்ளவளே! ஆதலால், நீ நியமத்தோடும் அலங்காரமான ரூபத்தோடும் நல்ல ஆசாரத்தோடுங்கூடத் தர்மத்தை முன்னிட்டுத் தர்மதேவதையை நேராகவே பக்தியுடன் ஆராதனஞ்செய்” என்றுசொன்னன். தனது பர்த்தாவாகிய அந்தப்பாண்டுவினால் அவ்வாறு சொல்லப்பட்ட அந்த உத்தமஸ்திரீயாகிய குந்தி, “ஆகுக” என்றுசொல்லிப் பர்த்தாவை நமஸ்கரித்து, விடைகொடுக்கப்பெற்றுப் பிறகு பிரதக்ஷிணம்செய்தாள். ஜனமேஜயரே! காந்தாரியின் கர்ப்பம் ஒருவருஷம் தரித்திருந்தபின் குந்தி தன் கர்ப்பத்திற்காகத் தவறாமல் பயன்கொடுக்கும் தர்மதேவதையை அழைத்தாள். அந்தக் குந்திதேவி சிரத்தையுடன் தர்மதேவதைக்குப் பூஜைக்குரிய திரவியங்களை அர்ப்பணம் செய்தாள். துர்வாஸரினால் முன்னே கொடுக்கப்பட்டிருந்த மந்திரத்தையும் முறைப்படி ஜபம்செய்தாள். தர்மத்தையே முக்கியமாகஅறிந்து தர்மதேவதையை வசியம் செய்யத்தொடங்கினாள். பிறகு எல்லாப்பிராணிகளாலும் நமஸ்கரிக்கப்பட்ட தர்மதேவதை குந்தியினால் நியமத்துடன் மந்திரபலத்தால்அழைக்கப்பட்டு உடனே குந்திதேவியினிடம் வந்தான். பகவானான தர்மதேவதை சூரியனைப்போலப் பிரகாசிக்கின்றவிமானத்திலேறிக்கொண்டு பாண்டுவுக்கு ஸந்ததிகொடுப்பதற்காக, குந்தி ஜபஞ்செய்துகொண்டிருந்த இடத்தில் தோன்றினான். பிறகு அவளைநோக்கிச் சிரித்து, “குந்தி! உனக்கு நான் என்ன கொடுக்கவேண்டும்? சொல்” என்றான். தன்னைப்பார்த்துச் சிரித்துக்கொண்டு கேட்கும்போதும் அந்தக்குந்தி, “எனக்குப் புத்திரனைக்கொடும்” என்பதைமட்டும் சொன்னாள். மிகுந்த கற்புள்ள குந்தி சதசிருங்கமென்னும் உயர்ந்தமலையில் அனேக மிருகங்களுள்ள அந்தவனத்தில் பாண்டுவின் பிரயோஜனத்திற்காகத் தர்மதேவதையை அடைந்தாள். புகழ்பெற்றவளும் அழகிய நிதம்பங்களையுடையவளும் பதிவ்ரதையுமான குந்தி ருதுகாலம் வந்தபோது ஸ்நானஞ்செய்து பரிசுத்தமாகிய வெள்ளைவஸ்திரம் தரித்துத் தர்மதேவதையுடன்கூடச் சயனத்தையடைந்தாள். அவள், யோகசக்தியினால் சரீரமெடுத்துக்கொண்ட தர்மதேவதையுடன் சேர்ந்து, சிறந்த கைகளையுடையவனும் பனிதர்கள் எல்லாரிலும் உயர்ந்தவனுமாகிய புத்திரனைப்பெற்றாள். குந்தி ஸூர்யன் துலாராசியிலிருக்கும்போது

நல்ல லக்ஷணங்களோடு கூடிய பூர்ணதிதியாகிய பஞ்சமியில் இந்திர னைத் தேவதையாகவுடைய கேட்டை நக்ஷத்திரம் சந்திரனோடு சேர்ந் திருக்கையில் அபிஜித் என்று சொல்லப்பட்ட எட்டாவது முகூர்த் தத்தில் நிறைந்தபுகழுள்ள சிறந்தபுத்திரனைப் பெற்றாள். அந்தப்புத் திரன் பிறந்தவுடனே ஓர் அசரீரிவாக்கு, "இவன் தர்மிஷ்டர்களுக்குள் சிறந்த புருஷச்ரேஷ்டனாக இருப்பான்; பராக்ரமமுள்ளவனும் ஸத்ய வாக்குள்ளவனுமாகிய ராஜாவாகப் பூமியில் இருக்கப்போகிறான். பாண்டுவின் முதற்புதல்வனாகிய இவன் * யுதிஷ்டிரன் என்று க்யாதி பெற்று மூன்றுலோகங்களிலும் பெயர்போன சிறந்தராஜாவாகவும் புகழும் பிரதாபமும் ஒழுக்கமும் பொருந்தினவனாகவும் இருக்கப் போகிறான்" என்றுசொல்லியது. காந்தாரிக்கு இரண்டாவதுவரு ஷம் வந்தபோது வயிறு பெரிதாயிற்று. அப்போது ஒன்றும் பிறக்க வில்லை. அதனால் அவளுக்குத் துயரம் உண்டாயிற்று. ஸுபலன்புத்தி யான காந்தாரி, குந்திக்குப் பாலஸூர்யனுக்கொப்பான தேஜ ஸுள்ள புத்திரன் பிறந்ததைக்கேட்டும் தன்வயிறு உறுதியாயிருப்ப தைக்கண்டும் அதிகத் துயரமுற்றவளாகி, திருதராஷ்டிரனுக்குத் தெ ரியாமல், தானே மிக ஒங்கி வயிற்றை இடித்துக்கொண்டாள். அதி லிருந்து இருப்புக் குண்டுபோல் கெட்டியான ஒருமாம்ஸபிண்டம் வெளிப்பட்டது. வயிற்றில் இரண்டுவருஷங்களாக வளர்ந்த அந்தப் பிண்டத்தை அவள் எறிந்துவிட ஆரம்பித்தாள். பிறகு வியாஸர் அதையறிந்துகொண்டு உடனே வந்துசேர்ந்தார். அந்த ரிஷிச்ரேஷ் டர் அந்த மாம்ஸபிண்டத்தைக் கண்டார். பிறகு அவர் அந்தக் காந்தாரியைநோக்கி, "நீ செய்யக்கருதின இந்தக்காரியம் என்ன?" என்றுகேட்டார். அவளும் தான் நினைத்ததையெல்லாம் அம்மஹா ரிஷிக்குச் சொல்லத்தொடங்கினாள். "குந்திக்கு ஸூர்யனுக்கு ஒப் பான ஒளியுள்ள மூத்தகுமாரன் பிறந்ததைக்கேட்டு மிகுந்ததுயரத்தி னால் நான் இந்தவயிற்றை இடித்துக்கொண்டேன். முன்னே எனக்கு நீர் நூறுபுத்திரர்களைப்பெற வரம்கொடுத்தீரல்லவா? நூறுபுத்திரர் களுக்குப் பிரதியாக இந்த மாம்ஸஉருண்டை எனக்குப் பிறந்தது" என்றாள். வியாஸர், "ஸுபலன்பெண்ணே! நான் சொன்னது ஸரிதான். அஃது ஒருபோதும் மாறாது. நான் விளையாட்டிலும் பொய்சொன்னதில்லை. மற்றப்போது கேட்பானேன். நூறுகுடங் களைச் சீக்கிரத்தில் நெய்யினால் நிரப்பவேண்டும்; மிகவும் பத்திர மாள்ள இடங்களில் அவற்றை ரக்ஷணஞ்செய்யவேண்டும். இந்தப்பிண்

* யுத்தத்தில் ஓடாமல் நிற்பவன்.

டத்தைக் குளிர்ந்தஜலத்தினுல் நனைக்கவும் வேண்டும்" என்று சொன்னர். நனைக்கப்பட்ட அந்தமாம்ஸ பிண்டம் அப்போது நூறு பிரிவாக ஆயிற்று. ஜனமேஜயராஜாவே! அந்த நிமிஷத்தில் கட்டைவிரற்கணு ளவுள்ள அதனதன் அங்கங்கள் பூர்ணமான நூற் றொருபிண்டங்கள் இருந்தன. ராஜாவே! பிறகு வியாஸமஹரிஷி, நூறுகுடங்களை அங்கே வருவித்து, முதிருங்காலம் வருகிறவரையில், மாம்ஸபிண்டத்திலிருந்து அந்தச் சிசுக்களையெல்லாம் அந்தக் குடங்களில் வரிசையாகவைத்தார். அதிக பத்திரமான இடங்களில் அவற்றை ரக்ஷிக்கும்படி செய்வித்தார். அவ்வாறுகவே சிசுக்களைப் பாதுகாத்து வரும்படியாகவும், வ்யாஸர் கட்டளையிட்டார். வியாஸபகவான் காந்தாரியைப்பார்த்து, "புண்ணியவதியே! மறுபடியும் இவ்வளவு காலமானபிறகு குடங்கள் வெடிக்கும்போது புத்திரர்கள் பிறந்ததாகஅறி" என்றும், "(அப்போது) இந்தக்குடங்கள் திறக்கத்தக்கவை" என்றும் சொன்னர். சிறந்த ஞானமுள்ள வ்யாஸபகவான் அவ்வாறு ஏற்பாடுசெய்து காந்தாரிக்கும் இந்தச்சொல்லைச் சொல்லிவிட்டு இமயமலைக்குத் தவஞ்செய்யச் சென்றார். ஒவ்வொரு தினம் பிந்தினவர்களாக அந்தக் குமாரர்கள் குடங்களிலிருந்து பிறந்தார்கள். அந்த முறையாலேதான் அவர்கள் ஜ்யேஷ்டகனிஷ்டர்களானது. பிறப்பினலும் உருவத்தினலும் குந்தியின்புத்ரன் பெரியவனுக இருந்தான். தர்மிஷ்டனன புத்ரனைப்பார்த்து, பாண்டு குந்தியினிடம், "க்ஷத்ரியன் பலத்தினுல் பெரியவனென்று சொல்லுகின்றனர்; நீ பலத்திற்சிறந்த புத்ரனை வேண்டு" என்று சொன்னன். ஜனமேஜயரே! பிறகு பாண்டு குந்தியினிடம்சென்று, "நீ வாயுவை ஆவாஹனஞ்செய். அவன் மிகுந்தபலமுள்ள தேவதை. யாகங்களிற் சிறந்தது அச்வமேதம்; தேஜஸுகளிற் சிறந்தவன் ஸூர்யன்; மனிதர்களிற் சிறந்தவன் பிராமணன்; தேவர்களிற் சிறந்தவன் வாயு. பெண்ணரசியே! தேவர்களிற் சிறந்தவனும் எல்லாப்பிராணிகளாலும் துதிக்கப்பட்டவனுமாயிருக்கிற வாயுவை நமக்குப் புத்ரனுக்காக நியமத்துடன் ஆவாஹனஞ்செய். அழகிய நிதம்பங்களையுடையவளே! அந்த வாயு நமக்கு எந்தக்குமாரனைத்தருவனே அவன் மனிதர்களுக்குள் மிகுந்தவன்மையும் பராக்கிரமமுமுள்ளவனுயிருப்பன். அரசர்கள் பலத்தினலேதான் பெரியோர்களாகிறர்கள்" என்று அதிகமாக வற்புறுத்திச் சொன்னன். அவன் அவ்வாறு சொன்னபிறகு அந்தக்குந்தி அந்தத் துர்வாஸஸ் சொன்னவிதிப்படி மறுபடியும் ருதுகாலத்தில் இரண்டாவது பூஜையோடு வாயுபகவானை அழைத்தாள்.

முன்னிருந்த நியமங்களோடேயேயிருந்து மந்திரக்கோவையை ஜபித்தாள். பிறகு வாயுபகவான் வந்து, "நான் என்ன செய்யவேண்டும்?" என்றுகேட்டான். பிறகு குந்தி ஈணமுற்று மிகுந்தபலமுள்ள புத்ரனை வேண்டினாள். வாயுபகவான் அவ்வாறே ஆகட்டுமென்றுசொல்லி அவளைத் தழுவிக்கொண்டு தேவலோகம் சென்றான்.

அவளிடம் மிக்கசூரனும் (பிறர்) அச்சப்படத்தக்க பராக்ரமமுடையவனுமாகிய *பீமன்பிறந்தான். பாரதரே! மிகுந்த பலமுள்ள அவன் பிறந்ததைப்பற்றியும் அசரீரிவாக்கு, "இவன் பலசாலிகளெல்லாரிலும் சிறந்தவனைப் பிறந்திருக்கிறான்" என்று சொல்லியது. அந்தக் குமாரன் பிறந்தவுடன் எல்லாத்தேசத்தரசர்களும் மூத்திரம்விட்டுக் கொண்டனர். எல்லாரும் துயரத்தையுமடைந்தனர். வாகனங்கள் சிதறின. கண்ணீர்த்துளிகள் விழுந்தன. மிகுதியாக விருத்தியான காற்று எப்படியோ அப்படியே பயப்படத்தக்க பராக்ரமமுள்ளவனும் புஷ்டியான அங்கமுள்ளவனுமாகிய பீமனும் பூமியை அசையச் செய்வதில் ஸமர்த்தனாயிருந்தான். †வ்ருகோதரன் பிறந்தமாத்ரத்தில் மற்றோர் அதிக ஆச்சரியமுண்டாயிற்று: அதாவது, அவன் தாயாரிடுப்பிலிருந்து விழுந்து தன் அங்கம்பட்டதினால் கருங்கல்லைப் பொடியாகச்செய்தான். யதுபுத்திரியாகிய குந்தியோ பத்தாவதுநாள் புத்ரனுடன்கூட மிக்கஅழகான தடாகத்தில்போய் ஸ்நானஞ்செய்து பிள்ளையையெடுத்துக்கொண்டு, தேவதாபூஜை செய்வதற்காக ஆச்ரமத்திலிருந்து புறப்பட்டாள். பரதச்ரேஷ்டரே! அப்போது அவள் மலையிலேறமாகப் போகையில் ஒரு பெரும்புலி அவளைக்கொல்ல எண்ணங்கொண்டு மலையின் குகையிலிருந்து புறப்பட்டது. தேவதைக்கொப்பான பராக்ரமமுள்ள பாண்டு உயர்ந்தவில்லை வளைத்து மூன்றுபாணங்களினால் ஓடிவரும் அந்தப்புலியைப் பிளந்தான். பேரிரைச்சலினால் அம்மலைக்குகையை நிரப்புகின்ற அந்தப் புலியைக்கண்டு பயத்தினால் குந்தி மலைமேலேற ஆரம்பித்தாள். பரதச்ரேஷ்டரே! அப்போது அவள் பயந்ததனால் அவள் இடுப்பிலிருந்து குழந்தைவிழுந்தது. அவள் பருவதத்தின் மேலிருக்கையில் குழந்தை கீழேவிழுந்தது. அந்தச்சிசு இந்திரனால்விடப்பட்ட வஜ்ராயுதம் போலக் கல்லைத் தூளாக்கிற்று. பிறகு பாண்டு,புத்ரனிடமுள்ள நேசத்தினால் மலையின்சரிவுக்கு ஓடினான். விழுந்த அந்தக்குழந்தையின் அங்கம்பட்டு அந்தப்பாறை நூறுசுக்காகப் பொடிக்கப்பட்டிருந்தது. பொடியாகச் செய்யப்பட்ட சிலையைக்கண்டு பாண்டு மிக்க வியப்படை

* எல்லாரும் பயப்படத்தக்கவன். † பீமன்.

ந்தான். புலிக்கொப்பான பராக்ரமமுள்ள பாண்டு, பீமன் பிறந்தபோது மலைமேலிருந்து பெருங்கத்தல்களினை ஒருபுலியைக் கண்டான். கௌரவபுத்ரனாகிய பாண்டு தன்மனைவியைக் காப்பதற்காகவும் மைந்தனைக் காப்பதற்காகவும் எப்போதும் கையில் அம்பும் வில்லுமாக இருந்தான். ஸிம்மத்தில் குருவும், துலாத்தில் ஸூர்யனும், மகாநக்ஷத்ரத்தில் சந்ரனும் சேர்ந்தபோது சுபமான திதியோகஸிதியில் பிதிர்க்களின் முகூர்த்தத்தில் அந்தக்குந்தி உறுதியான பராக்ரமமுள்ள பீமனைப்பெற்றாள். பரதச்ரேஷ்டரே! ராஜாவே! * எந்தத் தினத்தில் பீமன் பிறந்தானோ அதேதினத்தில் துரியோதனனும் பிறந்தான். ராஜாவே! அந்தத் திருதராஷ்டிரபுத்ரன் பிறந்த உடனேயே கழுதைகளைத்துவதுபோல் அழுதான். இரையவும் இரைந்தான். கழுதைகளும் கழுகுகளும் காக்கைகளும் மாம்ஸம்தின்னும் குரூரமான மிருகபக்ஷிகளும் அமங்களமான சப்தத்தோடு கூடிய நரிகளும் அவனுக்கு எதிராகக் கத்தின. அப்போது பெருங்காற்றடித்தது. திசைகளில் தீப்பற்றிக்கொண்டது. ராஜாவே! பிறகு திருதராஷ்டிர ராஜா பயமுற்று அநேகம் பிராமணர்களையும் பீஷ்மரையும் விதுரரையும் மற்றும் வேண்டியவர்களையும் குருவம்சத்தைச் சேர்ந்தவர் அனைவரையும் வரவழைத்து அடியில்வரும் சொல்லைச் சொன்னான்: "யுதிஷ்டிரன் நமது குலத்தை விருத்திசெய்யும் முதற்ராஜகுமாரன். அவன் குணங்களினால் ராஜ்யத்துக்கு யோக்கியனாயிருக்கிறான். அவன் விஷயத்தில் நாம் சொல்லவேண்டியது ஒன்றுமில்லை. இவன் அவனுக்குப் பிறகு ராஜாவாவனா? இதுவிஷயத்தில் எது நிச்சயமாக நேரிடுமோ அதை ஸரியாக எனக்குச் சொல்லுங்கள். இவன் பிறந்தபோது உண்டான சகுனங்கள் இங்கே பெரிய அமங்களத்தைத் தெரிவிக்கின்றன. உடனே பயம் எனக்கு உட்புகுந்தது. விதுரனே! அதனால் சொல்லுகிறேன்" என்றுசொன்னான். ஜனமேஜயரே! இந்தத் திருதராஷ்டிரன் சொல் முடிந்தபோது, எல்லாத்திசைகளிலும் ஹிம்ஸிக்கிற கொடியபிராணிகளும் அமங்களமான த்வனியுள்ள நரிகளும் கத்தின. ராஜாவே! அந்த நிமித்தங்களெல்லாம் பயங்கரமாகஇருப்பதைக் கண்டு அந்தப்பிராமணர்களும் சிறந்தபுத்தியுள்ள விதுரரும் சொல்லலாயினர்:

"திருதராஷ்டிர மஹாராஜாவே! புருஷச்ரேஷ்டரே! உமக்கு ஜ்யேஷ்டபுத்ரன் பிறந்தபோது இந்தப் பயங்கரமான நிமித்தங்கள் உண்டா

---

* எந்தப்பகலில் பயப்படத்தக்க பராக்ரமமுள்ள பீமன் பிறந்தானோ அதன் மூன்றாம்நாளில் துரியோதனன் பிறந்தான்.

யிருப்பதனால் இந்த உமதுபுத்திரன் நிச்சயமாகக் குலத்துக்கு க்ஷயத்தைச் செய்பவனாக இருப்பான். புத்திரனை விடுவதனாலேதான் அதற்குப் பரிகாரம். புத்திரனைக் காப்பாற்றுவதில் பெருந்தீங்குவரும். இந்தத் துரியோதனராஜன் தேன்போலச் சிவந்த கண்களோடிருக்கிறான். இவன் குலத்துக்கு மாத்திரமேயல்ல; க்ஷத்திரியர்களுக்கே நாசத்தைச்செய்வான். ராஜாவே! உமக்கு ஒன்றுகுறைய நூறுபுத்திரர்களிருந்தாலும் இருக்கட்டும். பாரதரே! குலத்துக்குச் சௌக்கியத்தை விரும்பினீரானால் இவனொருவனை விட்டுவிடும். ஒருவனால் குலத்துக்கும் உலகத்துக்கும் க்ஷேமத்தைச்செய்யும். ஒருகுலத்திற்காக ஒருவனை விடவேண்டும்; ஒரு கிராமத்திற்காக ஒருகுலத்தை விடவேண்டும்; ஒருதேசத்திற்காக ஒருகிராமத்தை விடவேண்டும்; தனக்காகப் பூமியையே விடவேண்டும்" என்றனர். விதுரராலும் அந்தப் பிராமணோத்தமர்களாலுமிவ்வாறு சொல்லப்பட்ட ராஜா புத்ரஸ்நேஹம்கொண்டு அவ்வாறு செய்யவில்லை. ராஜாவே! நூற்றினங்களில் நூறுபுத்திரர்கள் த்ருதராஷ்டிரனுக்குப்பிறந்தனர். நூற்றுக்குமேல் ஒருபெண்ணும் பிறந்தாள். வயிறுபெருத்துக் காந்தாரி கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கையில் கன்னிகையான ஒருவைசியப்பெண் திருதராஷ்டிரனுக்குச் சுச்ரூஷை செய்துகொண்டிருந்தாள். திருதராஷ்டிர மஹாராஜன் தற்செயலாக அவளுடன் சேர்ந்தான். ராஜாவே! அந்தவருஷத்தில் திருதராஷ்டிரனுக்குப் பெரும்புகழுள்ளவனும் சிறந்தபுத்தியுள்ளவனும் *கரணனுமாகிய யுயுத்ஸுவென்பவன் அந்த வைச்யப்பெண்ணினிடம் பிறந்தான். இவ்வாறு சிறந்த புத்தியுள்ள திருதராஷ்டிரனுக்கு மஹாரதர்களும் வீரர்களுமாகிய நூறுபுத்திரர்களும் நூற்றுக்குமேல் ஒருபெண்ணும், மிகுந்த ஒளியுள்ளவனும் சிறந்த பாக்கியமுள்ளவனும் வைசியப்பெண்ணின்மகனுமான யுயுத்ஸுவும் பிறந்தனர்" என்று வைசம்பாயனர்சொன்னர்.

நூற்றுமுப்பதாவது அத்தியாயம்.

ஸம்பவபர்வம். (தொடர்ச்சி).

(துச்சலையின் வரலாறு).

ஜனமேஜயர், "வியாஸமஹரிஷியின் அனுக்கிரஹத்தினால் திருதராஷ்டிரனுக்கு நூறுபுத்திரர்கள் உண்டானது ஆதிதொடங்கி

*வைசியனுக்குச் சூத்திரப்பெண்ணினிடம்பிறந்தவனுக்குப் பெயரொன்று நிகண்டு கூறுகின்றது. உயர்ந்தஜாதிபுருஷனுக்குத் தாழ்ந்தஜாதிப்பெண்ணிடம்பிறந்தவனென்கிறஒப்புமைபற்றி இவனையும் 'கரணன்' என்று கூறியிருக்கவேண்டும்.

உம்மாற்சொல்லப்பட்டது. கன்னிகையோ சொல்லப்படவில்லை. வைசியப்பெண்ணுடையபுத்ரன் யுயுத்ஸுஎன்றும் நூற்றுராமவள் பெண்ணெருத்தியுண்டென்றும் சொன்னீர். குற்றமற்றவரே! அளவற்ற மஹிமையுள்ள அந்த வியாஸமஹரிஷியினால் காந்தாரிக்கு நூறுபுத்ரர்கள்தாம் சொல்லப்பட்டனர். பகவானே! அந்த வ்யாஸமஹரிஷியினால் மாம்ஸபிண்டம் நூறுபாகங்களாகச்செய்யப்பட்டிருந்தால் இப்போது கன்னிகையைப்பற்றி நீர் எனக்குச்சொல்வது எவ்வாறு? காந்தாரி பிறகு எவ்வகையிலும் பிரஸவிக்காமலிருந்தால் துச்சலையென்னும் கன்னிகை பிறந்ததெப்படி? பிரம்மரிஷியே! இதுவிஷயத்தில் நடந்ததுநடந்தபடி எனக்குச் சொல்லும். எனக்கு இதில் விருப்பம் மிகுதியாக இருக்கிறது" என்றுகேட்க, வைசம்பாயனர் சொல்லலானார்.

"பாண்டவவம்சபுத்ரரே! நீர் இந்தப்பிரச்னம் ஸரியாகக்கேட்டீர். நான் உமக்குச்சொல்லுகிறேன். சிறந்ததபஸ்ஸுள்ள வியாஸபகவான் தாமே அந்த மாம்ஸபிண்டத்தைக் குளிர்ந்தஜலத்தினால் நனைத்து, பாகம்பாகமாகப் பிரித்தார். ராஜாவே! எந்தஎந்தப் பாகம் எவ்வாறுபிரிக்கப்பட்டதோ அந்தஅந்தப்பாகத்தை அவ்வாறுகவே தாதியைக்கொண்டு நெய்நிரப்பினகுடங்களில் ஒவ்வொன்றுகப் போடுவித்தார். இந்தச்சமயத்தில் கற்புள்ளவளும் உறுதியான நியமமுள்ளவளும் புகழ்பெற்றவளும் உத்தமஸ்திரீயுமான காந்தாரிதேவி பெண்ணினிடத்துண்டான ஆசைமிகுதியைநினைத்து ரிஷியினிடத்துள்ள கௌரவத்தினால் அந்தரிஷியைநோக்கி ஒன்றும்பேசாமல் மனத்தில் மட்டும், 'எனக்கு இந்த நூறுபுத்திரர்கள் உண்டாகப்போகிறார்கள். சந்தேகமில்லை. ரிஷிசொல்வது மாறுது. எனக்கு ஒருபெண் பிறப்பாளானால் அதுதான் மிகுந்தஸந்தோஷம். எல்லாருக்கும் இளையவளாகிய நூற்றுராவது பெண்குழந்தை பிறக்கவேண்டும். அதனால் இந்தஎன்கணவர் தெளஹித்திரனால் வசத்தக்க லோகங்களுக்கு உரியவராவர். ஸ்திரீகளுக்கு மருமகனால்உண்டாகும் ஸந்தோஷம் அதிகமாயிருக்கும். நூற்றுக்குமேற்பட்டு எனக்கும் ஒருபெண்பிறப்பாளாயின் புத்ரர்களாலும் தெளஹித்ரர்களாலும் சூழப்பட்டுக் கிருதார்த்தையாவேன். நான் தவம்செய்ததும் தானம்செய்ததும் ஹோமம்செய்ததும் பெரியோர்களை ஆராதித்ததும் நிஜமாயிருக்குமாயின், அதனால் எனக்குப் பெண்உண்டாகவேண்டும்' என்றுநினைத்தாள். அதேகாலத்தில் பகவானும் ரிஷிச்ரேஷ்டருமாயிருக்கிற கிருஷ்ணத்வைபாயனர் அந்தப்பிண்டத்தைத் தாமேவகுத்தார். குடங்கள் எண்

ணப்படும்போது அந்தமஹாத்மாவினுல் நூறுகுடங்கள் நிரப்பப் பட்டபின் அவருடைய இடக்கரத்தில் மற்றொருதுண்டு மிகுந்திருந் தது. நூறுபாகங்கள் நிறைந்துபோனதைக் கணக்கிட்டபிறகு, வ்யா ஸர் காந்தாரியைப்பார்த்து, 'இந்த நூறுபுத்திரர்கள் நிறைந்தனர். நான்சொன்னவாக்குப் பொய்யாகவில்லை. தெய்வச்செயலாக நூற் றுக்குமேல் ஒருபாகம் மிஞ்சியிருக்கிறது. இது நீவிரும்பினபடி பாக்யசாலியான பெண்ணைப் பிறக்கப்போகிறது' என்றுசொன்னர். சிறந்ததவமுள்ள வியாஸமஹரிஷி மற்றொருநெய்க்குடத்தை வரு வித்து, அந்தப்பெண்பாகத்தையும் போட்டார். (சில)காலங்கழித்து எல்லாருக்கும் இளையபெண் பிறந்தாள். பரதவம்சத்துராஜாவே! இதுதான் துச்சலையின் ஜனனம்; உமக்குச்சொன்னேன். அரசர்க் கரசே! குற்றமற்றவரே! உமக்கு இன்னும் நான் என்னசொல்ல வேண்டும்? சொல்லும்" என்றார்.

நூற்றுமுப்பத்தோராவது அத்தியாயம்.

ஸம்பவபர்வம். (தொடர்ச்சி).

(துரியோதனாதிகளின்பெயரும் துச்சலையின் விவாஹமும்).

ஜனமேஜயர், "அந்த த்ருதராஷ்டிரபுத்திரர்களின் ஜ்யேஷ்ட கனிஷ்ட முறையையும் தனித்தனியே பெயர்களையும எனக்குத் தொடர்ச்சியாகச் சொல்லும்" என்றுகேட்க, வைசம்பாயனர் சொல் லலானார்.

(துர்யோதனாதியர்களின் பெயர்வரிசை).

ராஜாவே! *துரியோதனன், யுயுத்ஸு, துச்சாஸனன், துஸ்ஸ ஹன், துச்சலன், துர்முகன், விவிம்சதி, விகர்ணன், ஜலஸந்தன்,

* இது, கிருஷ்ணசாரியர் பதிப்பு சுஅ - வது அத்தியாயம், கூக - வது சுலோகமுதல் கஅநி - வது சுலோகம்வரையிலுள்ளபடி மாற்றியும், இரட்டித்து வந்த பெயர்களைவிட்டும், இந்தஅத்தியாயத்திலுள்ள அதிகப்பெயர்களில் சில வற்றைக்கூட்டியும், நூறுக்கக் கணக்கிடப்பட்டது. சுஅ - வது அத்தியாயத் திப்பாடமும் தக்ஷிணதேசபாடமும் அநேகமாக ஒத்திருத்தலால், அதன்படி பெயர்களின்வரிசை எடுத்துக்கொள்ளப்பட்டது. சுஅ - வது அத்தியாய பாடத்திலுள்ள கூஅ பெயர்களில் இரண்டுபெயர்கள் இரட்டித்துவந்திருத் தலால், அவைகளைநீக்கி, கிருஷ்ணசாரியர்பதிப்புப்படி இந்தஅத்தியாயத்தி லுள்ள கஅசு பெயர்களில் நான்குபெயர்கள் எடுத்துக்கொள்ளப்பட்டன.

ஸுலோசனன், விந்தன், அநுவிந்தன், துர்தர்ஷன், ஸுபாஹு, துஷ்ப்ரதர்ஷணன், துர்மர்ஷணன், ப்ரமாதி, துஷ்கர்ணன், கர்ணன், சித்ரன், உபசித்ரன், சித்ராக்ஷன், சாருசித்ராங்கதன், துர்மதன், துஷ்ப்ரஹர்ஷன், விவித்ஸு, விகடன், ஸமன், ஊர்ணநாபன், பத்மநாபன், நந்தன், உபநந்தன், ஸேநாபதி, ஸுஷேணன், குண்டோதரன், மஹோதரன், சித்ரபாஹு, சித்ரவர்மா, ஸுவர்மா, துர்விமோசனன், அயோபாஹு, மஹாபாஹு, சித்ரசாபன், ஸுகுண்டலன், பீமவேகன், பீமபலன், பலாகி, பிமவிக்ரமன், உக்ராயுதன், பீமசரன், கனகாயு, த்ருடாயுதன், த்ருடவர்மா, த்ருடக்ஷத்ரன், ஸோமகீர்த்தி, அணூதரன், ஜராஸந்தன், த்ருடஸந்தன், ஸத்யஸந்தன், ஸஹஸ்ரவாக், உக்ரச்ரவஸ், உக்ரஸேனன், க்ஷேமமூர்த்தி, அபராஜிதன், பண்டிதகன், விசாலாக்ஷன், துராதனன், த்ருடஹஸ்தன், ஸுஹஸ்தன், வாதவேகன், ஸுவர்ச்சஸ், ஆதித்யகேது, பஹ்வாசி, நாகதத்தன், அனுயாயி, தண்டி, நிஷங்கி, கவசி, தண்டதாரன், தனுர்க்ரஹன், உக்ரன், பீமரதன், வீரன், வீரபாஹு, அலோலுபன், அபயன், ரௌத்ரகர்மா, த்ருடரதன், அனாத்ருஷ்யன், குண்டபேதி, விராவி, தீர்க்கலோசனன், தீர்க்கபாஹு, தீர்க்கரோமன், வ்யூடோரு, கனகாங்கதன், குண்டஜன், சித்ரகன், ப்ரமதன், துஷ்பராஜயன். துச்சலை நூற்றோராமவள்.

ராஜாவே! இவர்கள் நூறுபுத்ரர்கள். நூற்றோராமவள் பெண். இவர்களின்பெயரைச்சொன்னவரிசைப்படி பிறப்பின் க்ரமத்தையும் அறிந்துகொள்ளுட். எல்லாரும் அதிரதர்களான சூரர்கள்; எல்லாரும் யுத்தத்தில் ஸமர்த்தர்கள்; எல்லாரும் வேதந்தெரிந்தவர்கள்; எல்லாரும் எல்லா அஸ்த்ரங்களிலும் பண்டிதர்கள். ராஜாவே! அவர்களுக்கு விவாகம்செய்யத்தக்க காலத்தில் த்ருதராஷ்டிரமஹாராஜா பரீக்ஷைசெய்து எல்லாருக்கும் தகுதியானபெண்களைச் சாஸ்த்ரப்படி கலியாணஞ்செய்வித்தான். ராஜாவே! இவ்வாறு புத்ரர்கள் நூறு பேர்கள். யுயுத்ஸுவும் துச்சலை என்னும்பெண்ணும் நூற்றுக்கு மேற்பட்டவர்கள். இதை நடந்தபடி உமக்குச் சொன்னேன்.

பரதச்ரேஷ்டரே! த்ருதராஷ்டிரமஹாராஜா, துச்சலையையும் விவாஹத்துக்குரியகாலத்தில், சாஸ்த்ரப்படி ஜயத்ரதனுக்குக் கன்னிகாதானஞ்செய்தான்.

மேலேகாட்டியபடி,

துரியோதனன்முதலியநூற்றுவரின் பெயராகராதி.

அபயன்.
அபராஜிதன்.
அயோபாஹு.
அலோலுபன்.
அனுத்ருஷ்யன்.
அனுயாயி.
அனுவிந்தன்.
அனூதரன்.
ஆதித்யகேது.
உக்ரச்ரவஸ்.
உக்ரன்.
உக்ரசேனன்.
உக்ராயுதன்.
உபசித்ரன்.
உபநந்தன்.
ஊர்ணநாபன்.
கர்ணன்.
கவசி.
கனகாங்கதன்.
கனகாயு.
குண்டபேதி.
குண்டஜன்.
குண்டோதரன்
சாருசித்ராங்கதன்.
சித்தகன்.
சித்ரசாபன்.
சித்ரபாஹு.
சித்ரவர்மா.
சித்ரன்.
சித்ராக்ஷன்.
த்ருடரதன்.
த்ருடவர்மா.
த்ருடஸந்தன்.
த்ருடஹஸ்தன்.
த்ருடக்ஷத்ரன்.
த்ருடாயுதன்.
தண்டதாரன்.
தண்டி.
தனுர்க்ரஹன்.
தீர்க்கபாஹு.
தீர்க்கரோமன்.
தீர்க்கலோசனன்.
துச்சலன்
துச்சாஸனன்.
துர்த்தர்ஷன்.
துர்மதன்.
துர்மர்ஷணன்.
துர்முகன்.
துர்விஷாதனன்.
துர்விமோசனன்.
துராதனன்.
துஷ்கர்ணன்.
துஷ்ப்ரதர்ஷணன்.
துஷ்ப்ரஹர்ஷன்.
துஷ்பராஜயன்.
துஸ்ஸஹன்.
நந்தன்.
நாகதத்தன்.
நிஷங்கி.
ப்ரமதன்.
ப்ரமாதி.
பண்டிதகன்.
பத்மநாபன்.
பலாகி.
பாலாகி.
பீமசரன்.
பீமபலன்.
பீமரதன்.
பீமவிக்ரமன்.
பீமவேகன்.
மஹாபாஹு.
மஹோதரன்.
யுயுத்ஸு.
ரௌத்ரகர்மா.
வ்யூடோரு.
வாதவேகன்.
விகடன்.
விகர்ணன்.
விசாலாக்ஷன்.
விந்தன்.
விராவி
விவித்ஸு.
விவிம்சதி.
வீரபாஹு.
வீரன்.
ஜராஸந்தன்.
ஜலஸந்தன்.
ஸத்யஸந்தன்.
ஸமன்.
ஸஹஸ்ரவாக்.
ஸுகுண்டலன்.
ஸுபாஹு
ஸுசித்ரசனன்.
ஸுவர்ச்சஸ
ஸுவர்மா.
ஸுக்ஷத்ரணன்.
ஸுஹஸ்தன்.
ஸேனாபதி.
ஸோமகீர்த்தி.
ஹேமாங்கதூர்த்தி.

கூஅ - வது அத்தியாயத்திலுள்ளபடி,
கூஅ பெயர்களின் அகராதி.

அபயன்.
அபராஜிதன்.
அயோபாஹு-ன.
அலோலுபன்.
அஜுத்ருஷ்யன்.
அணுயாயி.
அணுவிந்தன்.
அணூதரன்.
ஆதித்யகேது.
க0 உக்ரச்ரவஸ்.
உக்ரன்.
உக்ரஸேனன்.
உக்ராயுதன்.
உபசித்ரன்.
உபநந்தன்.
ஊர்ணநாபன்.
கர்ணன்.
கவசி.
கனகாங்கதன்.
உ0 கனகாயு.
குண்டபேதி.
குண்டஜன்.
குண்டோதரன்.
சாருசித்ராங்கதன்.
சித்ரகன்.
சித்ரசாபன்.
சித்ரபாஹு-ன.
சித்ரவர்மா.
சித்ரன்.
ங0 சித்ராக்ஷன்.
த்ருடரதன்.
த்ருடவர்மா.
த்ருடஸந்தன்.
த்ருடஹஸ்தன்.
த்ருடக்ஷத்ரன்.
த்ருடாயுதன்.
தண்டதாரன்.
தண்டீ.
தனுர்க்ரஹன்.
கூ0 தீர்க்கபாஹு-ன.
தீர்க்கலோசனன்.
துச்சலன்.
துச்சாஸனன்.
துர்த்தர்ஷன்.
துர்மதன்.
துர்மர்ஷணன்.
*துர்முகன்.
துர்முகன்.
துர்யோதனன்.
ஙO. துர்விரோசனன்.
துராதனன்.
துஷ்கர்ணன்.
துஷ்ப்ரதர்ஷணன்.
துஷ்ப்ரஹர்ஷன்.
துஸ்ஸஹன்.
நந்தன்.
நாகதத்தன்.
நிஷங்கி.
பண்டிதகன்.
கூ0 பத்மநாபன்.
பலாகி.
பஷ்வாசி.
பீமசரன்.
பீமபலன.
பீமரதன்.
பீமவிக்ரமன்.
பீமவேகன்.
*மஹாபாஹு-ன.
மஹாபாஹு-ன.
எ0 மஹோதரன்.
யுயுத்ஸு-ன.
ரௌத்ரகர்மா.
வ்யூடோரு.
வாதவேகன்.
விகடன்.
விகர்ணன்.
விசாலாக்ஷன்.
விந்தன்.
விராவி.
அ0 விவித்ஸு-ன.
விவிம்சதி.
வீரபாஹு-ன.
ஷீரன்.
ஜராஸந்தன்.
ஜலஸந்தன்.
ஸத்யஸந்தன்.
ஸமன்.
ஸஹஸ்ரவாக்.
ஸு-குண்டலன்.
கூ0 ஸு-பாஹு-ன.
ஸு-லோசனன்.
ஸு-வர்ச்சஸ்.
ஸு-வர்மா.
ஸு-வேஷணன்.
ஸு-ஹஸ்தன்.
ஸேனபதி.
ஸோமகீர்த்தி.
ஹேமமூர்த்தி.

இதிலும் அந்த அகராதியிலும் இந்த * அடையாளமுள்ள பெயர்கள் இரட்டித்துவந்துள்ளன.

கிருஷ்ணசாரியர் பதிப்புப்படி,

கஉக - வது அத்தியாயத்திலுள்ள க0சூ பெயர்களின் அகராதி.

அக்ரயாயி.
அபயன்.
அபராஜிதன்.
அயோபாஹு.
அலோலுபன்.
அஜாதசத்ரு.
அனுவிந்தன்.
அனாதரன்.
ஆதித்யகேது.

க0 உக்ரச்ரவஸ்.
உக்ரன்.
உக்ரசேனன்.
உக்ராயுதன்.
உபசித்ரன்.
உபநந்தகன்.
ஊர்ணநாபன்.
க்ரதனன்;
கர்ணன்.
கவசி.

உ0 கனகத்வஜன்.
குண்டசாயி.
குண்டாசி.
குண்டி.
குண்டதரன்.
குண்டதாரன்.
குண்டபேதி.
சராசனன்.
சலன்.
சாருசித்ரன்.

ங0*சித்ரகுண்டலன்.
சித்ரகுண்டலன்.
சித்ரபாணன்.
சித்ரவர்மா.
சித்ரன்.
சித்ராங்கன்.
சித்ராயுதன்.
சித்ராக்ஷன்.
சித்ரதாச்ரயன்.
சித்ரவர்மா.

ச0 சித்ரஸந்தன்.
சித்ரஹஸ்தன்.
சித்ரகுத்ரன்.
தனுர்த்தரன்.
தீர்க்கபாஹு.
தீர்க்கரோமன்.
துச்சலன்.
துச்சாஸனன்.
துராத்தர்ஷன்.
துர்மதன்.

ஞ0 துர்மர்ஷணன்.
துர்முகன்.
துர்யோதனன்.
துர்விகாஹன்.
துர்விமோசனன்.
துராதரன்.
துஷ்கர்ணன்.
துஷ்ப்ரதர்ஷணன்.
துஷ்பராஜயன்.
துஸ்ஸஹன்.

சூ0 நந்தன்.
நாகதத்தன்.
நிஷங்கி.
ப்ரமதன்.
ப்ரமாதி.
ப்ருந்தாரகன்.
பலவர்த்தனன்.
பலாகி.
பஷ்வாசி.
பாசி.

எ0 பீமபலன்.
பீமரதன்.
பீமவேகன்.
*மஹாபாஹு.
மஹாபாஹு.
மஹோதரன்.
யுயுத்ஸு.
ரௌத்ரகர்மா.
வ்யூடோரன்.
வாதவேகன்.

அ0 விகடாननன்.
விகர்ணன்.
விசாலாக்ஷன்.
விந்தன்.
விராஜன்.
விராவி.
விவித்ஸு.
விவிம்சதி.
வீரபாஹு.
வீரன்.

சு0 ஜராஸந்தன்.
ஜலஸந்தன்.
ஸத்யஸந்தன்.
ஸத்வன்.
ஸதன்.
ஸமன்.
ஸஹன்.
ஸுநாபன்.
ஸுபாஹு.
ஸுலோசனன்.

க00 ஸுவர்ச்சஸ்.
ஸுவர்மா.
ஸுவாக்.
ஸுவேஷணன்.
ஸுஹஸ்தன்.
ஸேநானி.
ஸோமகீர்த்தி.

கூஅ - வது அத்தியாயத்திலுள்ளனவும்,
கஙக - வது அத்தியாயத்தில் இல்லாதனவுமான பெயர்கள்.

அனுயாயி.
கனகாங்கதன்.
கனகாயு.
குண்டஜன்.
குண்டோதரன்.
சாருசித்ராங்கதன்.
சித்ரகன்.
சித்ரசாபன்.
சித்ரபாஹு.
க() த்ருடரதன்.
த்ருடாயுதன்.
தண்டதாரன்.
தண்டீ.
தனுர்க்ரஹன்.
தீர்க்கலோசனன்
துர்விமோசனன்.
துராதனன்.
துஷ்ப்ரஹர்ஷன்.
பண்டிதகன்.
உ() பத்மநாபன்.
பீமசரன்.
பீமவிக்ரமன்.
வ்யூடோரு.
விகடன்.
ஸஹஸ்ரவாக்.
ஸுகுண்டலன்.
ஸேனுபதி.
ஹேமமூர்த்தி.

கஙக - வது அத்தியாயத்திலுள்ளனவும்,
கூஅ - வது அத்தியாயத்தில் இல்லாதனவுமான பெயர்கள்.

அக்ரயாயி.
க்ரதனன்.
கனகத்வஜன்.
குண்டசாயி.
குண்டாசி.
குண்டீ.
குண்டதரன்.
குண்டசாரன்.
சராஸனன்.
க() சலன்.
சாருசித்ரன்.
சித்ரகுண்டலன்.
சித்ரபாணன்.
சித்ராங்கன்.
சித்ராயுதன்.
த்ருடதாச்ரயன்.
தனுர்த்தரன்.
தீர்க்கரோமன்.
துர்விகாஹனன்.
உ() துர்விமோசனன்.
துராதரன்.
துஷ்பராஜயன்.
ப்ரமதன்.
ப்ரமாதி.
ப்ருந்தாரகன்.
பலவர்த்தனன்.
பாசி.
வ்யூடோரன்.
விகடானனன்.
ரு() விராஜன்.
ஸத்வன்.
ஸுதன்.
ஸுஹன்.
ஸுஹாபன்
ஸுவாக்.
ஸேனானி.

நூற்றுமுப்பத்திரண்டாவது அத்தியாயம்.

ஸம்பவபர்வம். (தொடர்ச்சி).

(அர்ஜுனன் ஜனனம்).

பலவான்களிற்சிறந்த பீமஸேனன் பிறந்தபிறகு, பாண்டு, "உலகத்திலுள்ள மிகச்சிலாக்கியனை மற்றொருபுத்ரன் எனக்குஎவ்வாறு உண்டாவான்" என்று சிந்தித்தான். பிறகு பாண்டுமஹாராஜன் "இந்தஉலகம் தெய்வச்செயலையும் மனுஷ்ய யத்னத்தையும் ஆதாரமா

கக்கொண்டிருக்கிறது. அவற்றுள் தேவன்செயல் காலத்திற்குரிய கருமம் செய்வதனால் கிடைக்கிறது. இந்திரன் ராஜாவென்றும் தேவர்களில் முதன்மையானவனென்றும் நாம் கேட்டிருக்கிறோம். அவன் அளவிடக்கூடாதசக்தியையும் *உத்ஸாஹத்தையும் உடையவன்; சிறந்த †பராக்ரமமுள்ளவன்; அளவற்ற மஹிமையுள்ளவன்; அவனைத் தவத்தினால் ஆராதித்து மிகுந்தசக்தியுள்ள புத்திரனை அடையப் போகிறேன். அவன் எனக்கு எந்தப்புத்திரனைக்கொடுப்பானோ அந்தப் புத்திரன் மிகச்சிறந்தவனாயிருப்பன். அவன், போரில் மனிதர்களையும் மனிதரல்லாத தேவாஸுரர் முதலியவரையும் கொல்வான். ஆதலால், சரீரத்தாலும் மனத்தாலும் வாக்காலும் பெருந்தவம் செய்வேன்" என்று, மஹரிஷிகளுடன்கூட ஆலோசனைசெய்து, ஒருவருஷம்வரையில் உயர்ந்த நியமத்தைச் செய்யும்படி குந்திக்குக் கட்டளையிட்டான். அந்தவீரனாகியபாண்டு தானும் உக்ரமானதவத்தை மேற்கொண்டு சிறந்ததியானத்துடன் ஒற்றைக்காலால் நின்றுகொண்டிருந்தான். பாரதமீர! தர்மாத்மாவான அந்தப்பாண்டு தேவர்களுக்கு ஈசுவரனாகிய அந்தஇந்திரனை ஆராதிக்கக்கருதி ஸூர்யனுடன் கூடவே (உதயம் முதல் அஸ்தமனம்வரையில்) தாபத்தைத் தாங்கியிருந்தான். வெகுகாலத்திற்குப்பின் இந்திரன் அவனிடம்வந்து, "மூன்றுலோகங்களிலும் பெயர்பெற்ற புத்திரனை உனக்குக் கொடுக்கப்போகிறேன். பிராமணர்களுக்கும் பசுக்களுக்கும் தன்நண்பர்களுக்கும் காரியங்களைச் சாதிப்பவனும், பகைவர்க்குத் துயரத்தை உண்டுபண்ணுகிறவனும், சுற்றத்தாரெல்லாரையும் மகிழ்விப்பவனும், எதிரிகளெல்லாரையும் அழிப்பவனுமாகிய ஒருசிறந்தபுத்திரனை உனக்குக் கொடுக்கப்போகிறேன்" என்று சொன்னான்.

மஹாத்மாவான இந்திரனால் இவ்வாறு சொல்லப்பட்ட தர்மாத்மாவான பாண்டுமஹாராஜன், இந்திரன்சொல்லை நினைத்துக்கொண்டு குந்தியைநோக்கி, "பாக்யவதியே! உனக்கு நல்லபலன் வரப்போகிறது. தேவக்கூட்டங்களுக்கெல்லாம் ஈசுவரனாகிய இந்திரன் அனுக்ரஹம்செய்து நீ விரும்பினபடியான புத்திரனை உனக்குத் தரக்கருதுகிறான். அழகான நிதம்பங்களையுடையவளே! மனிதர்க்கெட்டாத செய்கையுடையவனும் சிறந்த புகழுள்ளவனும் பகைவரையடக்குகிறவனும் நீதியுள்ளவனும் மஹாத்மாவும் சூரியனுக்குநிகரான, பிராதாபமுள்ளவனும் ஜயிக்கமுடியாதவனும் ஸத்கருமமுள்ளவனும் பார்ப்பதற்கு மிக்க ஆச்சரியமானவனும் க்ஷத்ரிய சக்திகளுக்கெல்லாம்

* சோர்வில்லாமை. † மற்றவரை யடக்குந்திறமை.

இருப்பிடமானவனுமாகிய புத்திரனைப் பெறக்கடவாய். தேவேந்திரனிடத்திலிருந்து அனுக்ரஹம் கிடைத்திருக்கிறது. அழகிய புன்சிரிப்புள்ளவளே! தேவேந்திரனை அழை" என்றுசொன்னன். இவ்வாறு சொல்லப்பட்டவுடனே, புகழ்பெற்ற குந்தியானவள் இந்திரனை அழைத்தாள். பிறகு தேவேந்திரன்வந்து அர்ச்சுனனை உண்டுபண்ணினன். * பூர்வபல்குனியும் † உத்தரபல்குனியுஞ் சேர்ந்த பகலில் ‡ பால்குன மாஸத்திற் பிறந்ததனால், அவன் பால்குனன் அல்லது பல்குனன்என்று பெயர்பெற்றான். அந்தக்குமாரன் பிறந்தவுடன் பிரஸவஅறையிலிருக்கும் குந்தியைநோக்கி எல்லாப்பிராணிகளையும் மகிழ்விக்கும் ஓர் அசரீரிவாக்கு மிக்க கம்பீரமான ஒலியினால் ஆகாயத்தைச் சப்திக்கச்செய்துகொண்டு எல்லாப்பிராணிகளும் அந்த ஆச்ரமத்திலிருப்பவர்களும் கேட்கும்படி, தூயகையுள்ள குந்தியைக் கூப்பிட்டுப்பின்வரும்சொல்லைத் தெளிவாகச் சொல்லத்தொடங்கிற்று.

"குந்தியே! கார்த்தவீர்யனுக்கு ஒப்பானவனும் சிவனுக்கு ஈடான பராக்ரமமுடையவனும் தேவேந்திரனைப்போல் ஜயிக்கமுடியாதவனுமாகிய இந்தப்புத்திரன் உன்புகழைப் பரவச்செய்யப்போகிறன். அதிதியென்பவளுக்கு விஷ்ணு எவ்வாறு ஆனந்தத்தை அபிவிருத்திசெய்தாரோ அவ்வாறே விஷ்ணுவுக்கொப்பான அர்ச்சுனன் உனக்கு மகிழ்ச்சியை அபிவிருத்திசெய்வான். இவன் மத்ரதேசத்தவரையும் கௌரவர்களையும் சோமகர்களையும் சேதிதேசத்தவரையும் காசிதேசத்தவரையும் கரூசதேசத்தவரையும் ஜயித்துக் கௌரவர்களின் ராஜ்யலக்ஷ்மியை வஹிக்கப்போகிறன். இவன் கைவன்மையினால், காண்டவவனத்தில் அக்கினிபகவான் எல்லாப்பிராணிகளின் கொழுப்பினாலும் மிகுந்ததிருப்தியை அடையப்போகிறன். சிறந்த பலமுள்ள இந்தவீரன் தலைமையாகநின்று அரசர்களை ஜயித்து ஸோமதரர்களுடன் சேர்ந்து மூன்று அசுவமேதங்களை நடத்தப்போகிறன். குந்தியே! இவன் பரசுராமனுக்கு ஒப்பானவனாகவும், விஷ்ணுவுக்கொப்பான பராக்ரமமுடையவனாகவும், வீரர்களிற் சிறந்தவனாகவும், மிகுந்த புகழ்பெற்றவனாகவுமிருக்கப்போகிறன். இவன், சிறந்த தேவதையான சங்கரரை யுத்தத்தில் சந்தோஷிக்கச் செய்யப்போகிறன். சந்தோஷமடைந்த அவரிடமிருந்து பாசுபதமென்னும் அஸ்திரத்தை அடையப்போகிறன். § நிவாதகவசர்களென்னும் அஸு

* பூரஷாத்திரம். † உத்தரஷாத்திரம். ‡ பங்குனி.
§ பலமானகவசங்களையுடையவர்.

ர்கள் தேவர்களுக்கு விரோதிகள். சிறந்தபுஜங்களுள்ள உன்புத்ரன் இந்திரன்கட்டளையினால் அவர்களை வதம்செய்யப்போகிறான். தேவலோகத்திலிருந்தே தேவர்களுக்குரிய அஸ்திரங்களெல்லாவற்றையும் அடையப்போகிறான். இந்தப்புருஷச்ரேஷ்டன் அழிந்துபோன ராஜ்யலக்ஷ்மியையும் கொண்டுவரப்போகிறான்" என்றது. குந்தி பிரஸவித்தபோது இந்த அதிக ஆச்சரியகரமான வாக்கைக் கேட்டாள். உரக்க உச்சரிக்கப்பட்ட அந்த அசரீரிவாக்கைக்கேட்டுச் சதச்ருங்கமலையில் வஸிக்கும் ரிஷிகளுக்கும் தேவரிஷிகளுக்கும் இந்திராதி தேவர்களுக்கும் அதிக ஆனந்தமுண்டாயிற்று. ஆகாயத்தில் துந்துபிவாத்தியங்களின் பெருமுழக்கம் உண்டானது. பூமாரிகள் நிரம்பின. பேரொலி கிளம்பிற்று. தேவர்களின் கூட்டங்கள்சேர்ந்து ஆர்ச்சுனனைக் கொண்டாடின. கத்ருவின்புத்திரர்களாகிய நாகர்களும் வினதையின் புத்திரர்களாகிய கருடன் முதலியவர்களும் கந்தர்வர்களும் அப்ஸரஸ்ஸுகளும் பரத்வாஜர், கசியபர், கௌதமர், விச்வாமித்திரர், ஜமதக்னி, வஸிஷ்டர், ஸூர்யன் நாசமடைந்தபோது தாமே உதயமாகிப் பிரகாசித்துப் பெயர்பெற்ற அத்ரிபகவான் ஆகிய பிரஜாஸ்ருஷ்டிகர்த்தர்களும் மஹான்களுமான ஸப்தரிஷிகளும், மரீசி, அங்கிரஸ், புலஸ்த்யர், புலஹர், க்ரது, தக்ஷர் ஆகிய இவர்களும்வந்தனர். கந்தர்வர்களும் அப்ஸரஸ்ஸுகளும் தேவலோகத்துப் புஷ்பமாலைகளைத்தரித்து, தேவலோகத்து வஸ்த்ரங்களை உடுத்து, எல்லா அலங்காரங்களையும் அணிந்து, அர்ச்சுனனைப்பற்றிக் கானம் செய்தனர். அப்ஸரஸ்ஸுகளின் கூட்டத்தார் நர்த்தனம்செய்தனர். அவ்வாறே மஹரிஷிகளும் அங்கே சுற்றிலும் வேதமந்த்ரங்களை ஜபித்தனர். அழகுள்ள நம்புருவும் கந்தர்வர்களுடன்சேர்ந்து கானஞ்செய்தார். ராஜாவே! பீமஸேனன், உக்ரஸேனன், ஊர்ணயு, அனகன், கோபதி, த்ருதராஷ்ட்ரன், ஸூர்யவர்ச்சஸ், யுகபன், த்ரணபன், கார்ஷ்ணி, நந்தி, சித்ரரதன், சாலிசிரஸ், பர்ஜன்யன், கலி, நாரதர், ருத்வான், ப்ரஹத்வான், ப்ரஹகன், பெரியமனஸ்ஸுள்ள கராளன், பிரம்மசாரி, பஹுகுணன், ஸுவர்ணனென்று பெயர்பெற்றவன், விச்வாவஸு, புமன்யு, ஸுசந்த்ரன், சரு, மிகவும் மதுரமாகப்பாடுதலிற் பெயர்பெற்ற ஹாஹா ஹூஹூ என்னும் இருவர்ஆகிய இந்தத் *தேவ கந்தர்வர்களும் அங்கேசென்றனர். அவ்வாறே மிகுந்த பாக்கியமுள்ளவர்களும் நீண்ட கண்களுடையவர்களுமாகிய அப்ஸரஸ்ஸுகள்

* தேவஜாதியில் ஸங்கீதம்பாடுவதைத் தொழிலாக உடையவர்; மனுஷ்ய கந்தர்வர் முதலிய வகுப்பும் உண்டு.

எல்லாப்பூஷணங்களையுமணிந்துகொண்டு உத்ஸாஹத்துடன்ஆடினர்; பாடினர். அநூசானை, அநவத்யை, குணமுக்யை, குணவரை, அத்ரிகை, ஸோமை, மிச்ரகேசி, அலம்புஷை, மரீசி, ஸுரிகை, வித்யுத்பர்ணை, திலோத்தமை, அம்பிகை, லக்ஷ்மணை, கேஷமை, தேவி, ரம்பை, மனோரமை, அஸிதை, ஸுபாஹு, ஸுப்ரியை, வபுஸ், புண்டரீகை, ஸுகந்தை, ஸுரஸை, பிரமாதினி, காம்யை, சாரத்வதி முதலியவர்கள் கூட்டங்கூட்டமாக அங்கே நர்த்தனம்செய்தனர். நீண்டகண்களையுடையவர்களாகிய மேனகை, ஸஹஜன்யை, கர்ணிகை, புஞ்சிகஸ்தலை, ருதுஸ்தலை, க்ருதாசி, விச்வாசி, பூர்வசித்தி, உம்லோசை என்றும் ப்ரம்லோசையென்றும் பெயர்பெற்றவர்கள், ஊர்வசி, ஆகிய பதினொரு அப்ஸரஸுகளும் பாடினர். வீரரே! ராஜாவே! தாதா, அர்யமா, மித்ரன், வருணன், அம்சன், பகன், இந்திரன், விவஸ்வான், பூஷா, பர்ஜன்யன், த்வஷ்டா, ஜன்மத்தில் கடைசியானவனும் குணத்தில் முதலானவனுமான விஷ்ணு, ஆகிய ஸூர்யனுக்குரிய ப்ரகாசத்தினால் ஜ்வலிக்கின்ற இந்தப்பன்னிரண்டு ஸூர்யர்களும், ப்ருகுவ்யாதன், ஸர்ப்பன், மிகுந்த புகழ்பெற்ற கிருது, அஜைபிகபாத், அஹிர்ப்புத்னியன், பினாகி, தஹனன், ஈசுவரன், கபாலி, ஸ்தாணு, பகவானுகிய பகன் ஆகிய பதினொருருத்ரர்களும் அங்கே வந்திருந்தனர். அசுவினிதேவர்களும் அஷ்டவஸுக்களும் மிகுந்தபலமுள்ள ஸப்தமருத்துக்களும் விசுவேதேவர்களும் ஸாத்யர்களும் அங்கே சுற்றிலும் நின்றுகொண்டிருந்தனர். தவமுள்ளவர்களும் மிகுந்த கோபமுள்ளவர்களும் சிறந்த பலவான்களுமாகிய கர்க்கோடகன், வாஸுகியென்னும் நாகன், கச்சபன், குண்டன், தக்ஷகன்என்னும் மஹாநாகன் ஆகியஇவர்களும் இன்னும் அநேகநாகர்களும் அங்கேவந்திருந்தனர். தார்க்ஷ்யன், அரிஷ்டநேமி, கருடன், அஸிதத்வஜன், அருணன், ஆருணிஆகிய விநதையின்புத்ரர்களும் இருந்தனர். விமானங்களிலும் மலைச்சிகரங்களிலுமிருந்த அந்ததேவக்கூட்டங்களையெல்லாம் தவத்தில் ஸித்திபெற்ற மஹரிஷிகள்மட்டும் கண்டனர்; மற்ற ஜனங்கள் காணவில்லை. அந்தப் பெரிய புதுமையைக்கண்டு வியப்புற்ற ரிஷிச்ரேஷ்டர்கள் அதன்பிறகு அர்ச்சுனனிடத்தில் விசேஷமான மரியாதையைச்செய்தனர்.

பாண்டு, பகிழ்ச்சியுள்ள மனத்துடன் தேவர் முதலானவர்களைப் பூஜித்தான். பாண்டுவினால் பூஜிக்கப்பட்ட தேவர்கள், புருஷச்ரேஷ்டனான பாண்டுவைநோக்கி, "தேவர்களின் அனுக்ரஹத்தினால் தர்மதேவதையே இந்த முதற்புத்திரனாகப்பிறந்திருக்கிறான். வாயுவே

பலசாலியும் பகைவரையழிப்பவனுமாகிய இந்தப்பீமனுகப் பிறந் திருக்கிறான். இந்திரன் அனுக்ரஹஞ்செய்து தானே நேர இந்த அர்ச்சுனனுகப் பிறந்திருக்கிறான். நீ தேவர்களுக்குப் பிதாவாயிருப் பதனுல் உனக்குமேலான புண்யபுருஷனில்லை. பிதிர்க்களின் கடனி லிருந்து விடுபட்டுப் புண்ணியத்தைக்கொண்டு ஸ்வர்க்கமடைவாய்" என்றனர். இவ்வாறு சொன்னபின், தேவர்களனைவரும் வந்தவாறே திரும்பிச்சென்றனர். மிகுந்த கீர்த்தியுள்ள பாண்டுவோவெனில் புத்திரன்மேலுள்ள ஆசையினுல் அழகானபிள்ளையை விரும்பித் திரு ம்பவும் குந்திக்குக் கட்டளையிட்டான். அவனுக்கு, குந்தி, "இதற்கு மேல் நான்காம்புத்திரனை எந்தஆபத்திலும் விதிக்கவில்லை. இதற்கு மேல் ஆசைப்படும்பெண் கற்பில்லாதவளாவாள். ஐந்தாம்புத்திரனை விரும்பினுல் வேசைஆவாள். எல்லாந்தெரிந்தவரே! நீர் இந்தத் தர் மத்தை அறிந்திருந்தும் புத்திரனுக்காக வதைதப்பி என்னைப்பார்த் துப் புத்திதவறினதுபோல் பேசுவதேன்" என்றுசொன்னுள்.

நூற்றுமுப்பத்துமூன்றுவது அத்தியாயம்.

ஸம்பவபர்வம். (தொடர்ச்சி).

(நகுலஸஹதேவர்கள் ஜனனமும், பாண்டவர்களுக்கு நாமகரணமும், வஸுதேவர் அனுபவின புரோஹிதர் பாண்டவர்களுக்கு உபநயனாதி ஸம் ஸ்காரங்களைச் செயததும், அவர்கள் சுகரிடத்தில் தனுர்வேதாபியாஸம் செயததும்).

குந்தியின்புத்ரர்களும் த்ருதராஷ்டிரன் புத்ரர்களும் பிறந்த பின்னர், மாத்ரி, ரஹஸ்யத்தில் பாண்டுவினிடம், "வீரரே! நீர் என க்கு அனுகூலமில்லாமலிருப்பதிலும் எனக்குத் துன்பமில்லை. குற்ற மற்றவரே! பெருமைக்குத் தகுதியுள்ள குந்திக்குத் தாழ்மையாக எப்போதும் நான் இருந்ததனுலும் எனக்குவருத்தமில்லை. ராஜாவே! குருவம்சத்தை விருத்திசெய்கிறவரே! அவ்வாறே காந்தாரிக்கு நூறுபுத்ரர்கள் பிறந்ததைக்கேட்டும் எனக்கு அவ்வளவுதுக்கம் உண் டாகவில்லை. நான் குந்திக்கு ஸமமாயிருக்கும்போது எனக்குமட் டும் புத்திரனில்லாமலிருப்பதுதான் எனக்குப் பெருந்துயரம். இப் போது குந்தியினிடத்திலாவது என்பர்த்தாவின் ஸந்ததிஉண்டா னது எனக்குச் சந்தோஷம். குந்திராஜன்பெண் எனக்கும் புத்

ஸந்தானத்தை உண்டுபண்ணுவாளாயின், எனக்கும் அவள் அனுக்ரஹம் செய்ததாகும்; உமக்கும் நன்மையாகும். குந்தி எனக்கு மாற்றாளாயிருப்பதனால் அவளிடத்தில் நான் சொல்வதற்கு எனக்கு மானமாயிருக்கிறது. உமக்கு என்னிடத்தில் தயவிருந்தால் நீரே அவளை ஆஜ்ஞாபிக்கவேண்டும்" என்று சொன்னாள். அதற்குப் பாண்டு, "மாத்ரியே! என் உள்ளத்திலும் இந்தவிஷயம் எப்போதும் சுழன்றுகொண்டிருக்கிறது. உனக்கு விருப்பமிருப்பதும் இல்லாததும் தெரிந்துகொள்ள வேண்டுமென்பதனால் நான் உன்னிடம் வலியச் சொல்லவில்லை. இந்த உன்எண்ணம் தெரிந்தபிறகு முயற்சிசெய்வேன். நான்சொன்னால் அவசியம் என்சொல்லைக் குந்தி அங்கீகரிப்பாளென்று நினைக்கிறேன்" என்றுசொன்னான். பிறகு பாண்டு, குந்தியைநோக்கி ரஹஸ்யத்தில் பின்வருமாறுசொல்லலானான்:

"குணவதியே! மாத்ரிக்குப் அனுக்ரஹம்செய். என்குலத்திற்கு ஸந்தானத்தையும் லோகத்திற்குப் பிரியத்தையும்செய். குணமுள்ளவளே! எனக்குப் மஹாத்மாக்களாகிய என்முன்னோர்களுக்கும் *பிண்டநாசமில்லாமைக்காகவும் என்விருப்பத்திற்காகவும் ஒரு மேலானசுபத்தைச்செய். உனது புகழுக்காகவுங்கூட மற்றவர்கள் செயற்கரியகாரியத்தை நீசெய்யக்கடவாய். இந்திரன் தேவராஜ்யத்தையடைந்தபின் கீர்த்தியைவிரும்பி அனேகயாகங்கள் செய்தான். பெண்ணரசியே! அவ்வாறே மந்திரங்களையறிகின்ற பிராமணர்கள் மிகக்கடினமானதவத்தைச்செய்து புகழுக்காகப் பெரியோர்களிடம் படிந்திருக்கின்றனர். ராஜரிஷிகளும் தவத்தையேபொருளாகவுடைய பிராமணர்களும் எல்லாரும் கீர்த்திக்காகவே அளவற்ற செயற்கரிய கருமங்களைச் செய்திருக்கின்றனர். குற்றமற்றவளே! அவர்களைப்போன்றநீயும் இந்தமாத்ரியை ஓடத்தினால் தாண்டுவிப்பதுபோல் தாண்டுவிக்கக்கடவாய். அவளுக்குச் சந்ததியைக்கொடுப்பதனால் சிறந்தகீர்த்தியைப்பெறுவாயாக" என்றான். அதைக்கேட்டுக் குந்தி, "கௌரவபுத்திரரே! தர்மசாஸ்த்ரத்திற்சொல்லப்பட்ட நர்மத்தைப் பற்றி நீர்சொல்வது ஸரிதான். ஆதலால், பாத்ரிக்கும் உபகாரத்தைச் செய்வேன்" என்றுசொன்னாள். குந்தி, பாண்டுவுக்கு இவ்வாறு சொல்லி மாத்ரியைப்பார்த்து, "நீ ஒருதரம் தேவதையைத் தியானிப்பாயாக. அதனால் உனக்குத் தகுதியான ஸந்ததி நிச்சயமாகஉண்

* 'சராத்தத்தில் பிதிர்பிண்டம் விட்டுப்போகாமைக்காகவும்' என்றும், 'சரீரஸம்பந்ததொடர்ச்சி விட்டுப்போகாமைக்காகவும்' என்றும் கொள்ளலாம்.

டாகும்" என்றுசொன்னாள். பிறகு சாஸ்திரோக்தமான அனுஷ்டானத்துடன் அந்தமந்திரம் உபதேசிக்கப்பட்டபின் அந்தராஜபுத்திரியான மாத்ரி ஸ்நானஞ்செய்து சயனத்திற்படுத்தாள். பிறகு மாத்ரி தான் தனிமையாகத் தன்புத்தியில் ஆராய்ந்து அச்வினிதேவர்களை மனத்தினால் நினைத்தாள். அவர்கள் இருவரும்வந்து பூமியில் அழகில்நிகரற்றவர்களாகிய நகுலன்ஸஹதேவனென்னும் இரட்டைப் பிள்ளைகளை அவளிடம் உண்டுபண்ணினர். முன்போலவே அசரீரி வாக்கு அவ்விரட்டைப்பிள்ளைகளைப்பற்றியும், "இவர்கள் அசுவினிதேவர்களுக்குமேல் தர்மமும் பக்தியும் ஒழுக்கமும் கல்வியும் பலமும் அழகும் குணங்களும் பொருந்தினவர்களாக இருக்கின்றனர். அழகென்னும் தனத்தினுடைய நிறைவினாலும ஒளியினாலும் அதிகமாகப் பிரகாசிக்கின்றனர்" என்று சொல்லிற்று. ராஜாவே! சதச்ருங்கமலையில் வஸிக்குரிஷிகள் *பக்தியோடும் சாஸ்திரோக்தகருமங்களோடும் †ஆசீர்வாதங்களோடுங்கூடப் பஞ்சபாண்டவர்களுக்கு நாமகரணங்கள்செய்தனர். குந்தியின்புத்ரர்களில், ஜ்யேஷ்டனை ‡யுதிஷ்டிரனென்றும் §வ்ருகோதரனைப் ¶பீமஸேனனென்றும் மூன்றாமவனை ¶அர்ச்சுனனென்றும் பெயரைத்தனர். மாத்ரியின்புத்ரர்களில் முதலாமவனை ||நகுலனென்றும் இரண்டாமவனை **ஸஹதேவனென்றும் அந்தப்பிராமணர்கள் மனமகிழ்ந்து சொன்னார்கள். அந்தக் கௌரவவம்சத்திரேஷ்டர்களாகிய பாண்டுபுத்ரர்கள் ஒவ்வொருவரும் ஷத்திற்குப்பின் பிறந்தவராயினும் எல்லாரும் சிறந்தசுபாவமுள்ளவர்களும் மிகுந்தசக்தியுள்ளவர்களும் சிறந்தபலமும் பராக்ரமமும் முடையவர்களுமாக ஐந்துவருஷங்களானவர்கள்போல் விளங்கினர். தேவர்களைப்போன்ற ரூபமுள்ளவர்களும் மிகுந்தபராக்கிரமசாலிகளுமாகிய அந்தப்புத்திரர்களைக்கண்டு பாண்டுமஹாராஜன் மிகுந்தஉத்ஸாஹத்தையும் திருப்தியையும் அடைந்தான். அந்தப்புத்திரர்கள் சதச்ருங்கமலையில்வஸிக்கும் ரிஷிகளனைவர்க்கும் அவர்கள்பத்தினிகளுக்கும் பிரியமாகஇருந்தனர். பாண்டு திரும்பவும் மாத்ரிவிஷய

* இவர்கள் தேவதாம்சங்கள்என்கிற பக்தி.
† எல்லாநன்மையும் உண்டாகவேண்டும் என்கிற பிரார்த்தனை.
‡ யுத்தத்தில் புறங்காட்டிஓடாமல் ஸ்திரமாய்நிற்பவன்.
§ எல்லாரும்பயப்படத்தக்கசேனையுடையவன்.
¶ சுத்தன் = குற்றமில்லாதவன். [வன்.
|| ஸர்ப்பங்களுக்குக் கீரியைப்போல் பகைவர்களுக்குப் பயங்கரமான
** தாயாரைப்பற்றிய வேற்றுமையின்றி மற்றஸஹோதரர்களுடன் ஒத்திருப்பவன்.

மாகக் குந்திக்குக் கட்டளையிட்டான். ராஜாவே! ரஹஸ்யத்தில் கட்டளையிடப்பட்ட ஸாத்வியான குந்தி, பாண்டுவைப்பார்த்து, "நான் உபதேசித்ததில் இவள் ஒருதடவையில் இரண்டுபுத்ரர்களையடைந்தாள். அதனால் நான் மோசம்செய்யப்பட்டேன். இவளிடம் தோற்பேன்என்று பயப்படுகிறேன். கெட்டபெண்களின்நடை இப்படிப்பட்டது. இரட்டையானதேவர்களையழைப்பதில் இரண்டுபலன்களிருப்பதை மூடையானநான் அறியாமற்போனேன். ஆதலால், கட்டளையிடவேண்டாம். இஃது எனக்கு நீர்கொடுத்த வரமாகஇருக்கட்டும்" என்றாள். இவ்வாறு பாண்டுவுக்கு மிகுந்தபலமுள்ள ஐந்துபுத்திரர்கள் தேவர்களால் கொடுக்கப்பட்டனர். புகழ்பெற்றவர்களும் கௌரவவம்சத்துக்கு மேன்மைசெய்கிறவர்களும் நல்ல லக்ஷணங்கள்நிரம்பினவர்களும் சந்திரனைப்போல்பார்ப்பதற்கு இனியவர்களும் ஸிம்மம்போல் கர்வமுள்ளவர்களும் சிறந்தவில்லாளிகளும் ஸிம்மம்போலப் பாய்ந்துநடப்பவர்களும் ஸிம்மத்தின்கழுத்துக்கொப்பான கழுத்துள்ளவர்களும் தேவர்களுக்கொப்பான பராக்கிரமமுள்ளவர்களுமாக அந்தராஜகுமாரர்கள் வளர்ந்தார்கள். புண்ணியபூமியான அந்த இம்யமலையைச்சார்ந்தகுன்றில் அவர்கள் வளர்ந்துகொண்டிருக்கும்போது அங்கேசேர்ந்திருந்த மஹரிஷிகளுக்கு வியப்பையுண்டாக்கினர். சதச்ருங்கத்தில்வஸிக்கும்ரிஷிகள் பாண்டுபுத்திரர்களைப் பிறந்தமாத்ரத்திலெடுத்துக்கொண்டு தங்கள் பிள்ளைகளைப்போல நினைத்தனர். பிறகு பாண்டு சாபத்தினால்பயந்து சதச்ருங்கம்போய் அங்கே தவஞ்செய்துகொண்டிருக்கும் ரிஷிகளுடன்கூடவே தானும் ரிஷியாய்விட்டான். "பாண்டுமஹாராஜன் இலைகளையும் கிழங்குகளையும் கனிகளையும் புஜித்துக்கொண்டும் தவம்செய்துகொண்டும் ஐம்புலன்களையும்கட்டித் தியானநிஷ்டையிலிருப்பவனானன்" என்று பேசுகிறவர்கள் பலர்பேசினதைக்கேட்டு வஸுதேவர்முதலானயாதவர்களனைவரும் வ்யஸனத்தினால் வருந்தினர். அந்தயாதவர்களனைவரும் தங்கள்பந்துக்களுடன்சேர்ந்து, "பாண்டு அன்புடன்பேசுகிறஸம்பாஷணைகளை நாம் எப்போதுகேட்போம்" என்று சொல்லிக்கொண்டிருக்கும்போது பாண்டுவுக்குப் புத்திரலாபம்சேர்ந்ததைக்கேட்டு ஸந்தோஷமடைந்தனர். அவர்கள் ஒருவரோடொருவர் சேர்ந்து வஸுதேவரிடம், "மிகுந்தபலசாலிகளாகிய பாண்டுபுத்திரர்கள் ஜாதகர்மம்முதலிய ஸம்ஸ்காரங்களில்லாமல் போகத்தகாது. பாண்டுவின்னிருப்பத்தையும் நன்மையையும்தேடுகிற நீர் உமது புரோஹிதரையனுப்பும்" என்று அன்புடன்சொன்னார்கள். வஸுதேவர்

ஆகட்டுமென்றுசொல்லித் தம்புரோகிதரை அனுப்பினர். பாரதரே! பாண்டுகுமாரர்களுக்குத்தகுதியான அனேகம் உயர்ந்தவஸ்துக்களையும், குந்திக்கும் மாத்ரிக்கும் வாய்ஸமாசாரத்துடன் வேலைக்காரிகளையும், வேலைக்காரர்களையும், அவர்களுக்கு வேண்டியபதார்த்தங்களையும், பசுக்களையும், பொன்வெள்ளிகளையும் அனுப்பினர். அவையெல்லாவற்றையுங்கொண்டு அந்தப்புரோகிதர் சென்றார். கஸியபகோத்திரத்தவரும் பிராமணஸ்ரேஷ்டருமான அந்த வந்தபுரோகிதரைப் பகைவரின்ருகரங்களைஜயிப்பவனுகியபாண்டு கிரமப்படிபூஜித்தான். குந்தியும் மாத்ரியும் மிகமகிழ்ந்து வஸுதேவரைச் சிலாகித்தனர். பிறகு பாண்டு தன்புத்திரர்களுக்கு எல்லாஸம்ஸ்காரங்களையும் செய்வித்தான். பாரதரே! கர்ப்பாதானம்முதலாகச் சௌளம், உபநயனம், உபாகர்மம் ஆகிய எல்லாஸம்ஸ்காரங்களையும் அந்தக்காஸியபர் செய்தார். விருஷபம்போற்கண்களுடையவர்களும் புகழ்பெற்றவர்களுமாகிய குமாரர்களனைவரும் சௌளமும் உபநயனமுமானபிறகு வேதாத்தியயனத்தில் கரைகண்டவராஞர்கள். சர்யாதியின் ஜ்யேஷ்டகுமாரனும் பகைவரைவருத்துகிறவனுமான சுகனென்னும் ஒருவன் இருந்தான். அவன் கடல்சூழ்ந்தபூமியை வில்லினல்ஜயித்தவன்; சிறந்த புத்தியுள்ளவனும் மஹாத்மாவுமாகிய அந்தச்சுகன் நூறுஅச்வமேதமஹாயாகங்களைச்செய்து, தேவர்களனைவரையும் பிரீதிர்க்களையும் திருப்திசெய்வித்து, இலை கிழங்கு கனிகளைப்புசித்துக்கொண்டு, சதச்ருங்கமென்னும்மலையில் தவஞ்செய்துகொண்டிருந்தான். அவனல்,சிறந்த ஆயுதங்களைக்கொடுத்தும் பயிற்சிசெய்வித்தும் அபிவிருத்திசெய்யப்பெற்ற பாண்டவர்கள் அவனுடைய அன்பினல் வில்வித்தையில் கரைகண்டவராயினர். பீமஸேனன் கதாயுத்தத்தில் தேர்ந்தவனுனன். யுதிஷ்டிரர் ஈட்டிச்சண்டையில் ஸமர்த்தராஞர். பலவான்களிற்சிறந்தவர்களாகிய நகுலஸஹதேவர்கள் கத்திகேடகங்களில் தேர்ந்தவர்களாஞர்கள். பகைவரைத்துயரப்படுத்துகிற ஸவ்யஸாசியாகிய அர்ச்சுனன் தனுர்வேதத்தில் கரைகண்டவனுனன். பிரபுவே! அர்ச்சுனன், சுகனல் இவன் எனக்குச் சமானமானவனென்று சொல்லி விடைகொடுக்கப்பெற்றான். கொடுப்பவர்களிற் சிறந்தவனுகிய அந்த ராஜா, அர்ச்சுனனுக்கு விடைகொடுத்துச் சக்தியாயுதத்தையும், கத்தியையும், அம்புகளையும், பீமரஅளவுள்ளதும் மிகுந்த ஒளியுள்ளதுமாகிய வில்லையும், கழுகிறகுகளினல் அலங்கரிக்கப்பட்டவையும் மஹாஸர்ப்பங்களுக்கொப்பான பிரகாசமுள்ளவையுமான விபாடம், கூர்ஸரம், நாராசம்என்னும் பாணங்களையும் அவனுக்கு லக்ஷதோஷத்

தூடன் கொடுத்தான். எல்லா ஆயுதங்களையுமடைந்து மகிழ்வுற்ற இந்திரபுத்திரனை அர்ச்சுனன் ஆசார்கள் அனைவரையும் தன்சக்திக்குப் போதாதவர்களாக நினைத்தான். இவ்வாறு ஒருவர்க்கொருவர் ஒரு வருஷம் வித்தியாசமுள்ளவர்களும் சூரர்களுமான குந்தி புத்ரர்களும் மாத்ரி புத்ரர்களும் ஒருவரையொருவர் ஒத்திருந்தனர். குருவம்சத்தை விருத்திசெய்பவராகிய இவ்வைவரும் திருதராஷ்டிரபுத்திரர்கள் நூறுபெயருமான எல்லாரும் நிறைந்தஜலத்தில் தாமரைப்புஷ்பங்கள் வளர்வதுபோல் கொஞ்சகாலத்திற்குள் வளர்ந்தனர்.

நூற்று முப்பத்து நான்காவது அத்தியாயம்.

ஸம்பவபர்வம். (தொடர்ச்சி).

(பாண்டவர்கள் ஆயுஸும், பாண்டுமரணமும், மாதரியின் அனுமரணமும், பாண்டுவின் தேகஸம்ஸ்காரமும்).

ஜனமேஜயர், "தேவர்களால் கிடைத்த பாண்டுபுத்ரர்கள் எந்தவயதில் ஹஸ்தினபுரம் சேர்ந்தனர்? அவர்களின் பூர்ணமான ஆயுள் எவ்வளவு?" என்றுகேட்க, வைசம்பாயனர் சொல்லத்தொடங்கினர்.

"ஜனமேஜயரே! இப்போது பாண்டவர்களின் ஆயுளைச் சொல்லுகிறேன்; கேளும். அஸ்தினபுரம் போனபோது யுதிஷ்டிரருக்குப் பிராயம் பதினாறு; பீமஸேனனுக்குப் பதினைந்து; அருச்சுனனுக்குப் பதினான்கு; நகுலஸஹதேவர்க்குப் பதின்மூன்று. அந்த அஸ்தினபுரத்தில் பதின்மூன்றுவருஷகாலம் திருதராஷ்டிரபுத்ரர்களோடு வஸித்தனர். அரக்குமாளிகையிலிருந்து விடப்பட்டு ஆறுமாஸமிருந்தனர். அப்போது கமடாத்மகசன் பிராமணன். மகசக்ராகரியில் ஆறுமாஸமிருந்தனர். பாஞ்சாலராசன் நிருஹத்தில் ஒருவருஷம் வஸித்தனர். பாரதரே! திருதராஷ்டிரபுத்ரர்களுடன்கூட பாண்டவர் ஐந்துவருஷம் வாஸஞ்செய்தது, பிறகு இந்திரப்பிரஸ்தத்தில் இருபத்துமூன்றுவருஷம் வஸித்தனர். பிறகு சூதாட்டத்தில் தோல்வியடைந்து பதின்மூன்றுவருஷம் இருந்தனர். ராஜாவே! கிருஷ்ணனையே ஆதாரமாகவுடைய அம்மஹாத்மாக்களனைவரும் கடல்சூழ்ந்தபூமியை முப்பத்தாறுவருஷம் ஆண்டு, அதன்பின் ஆறுமாஸங்களுக்குப்பிறகு பரிக்ஷித்துக்கு ராஜ்யபட்டாபிஷேகஞ்செய்து, தெய்வகதியையடைந்

தனர். இவ்வாறு யுதிஷ்டிரருக்கு நூற்றிறட்டுவருஷம் ஆயுளிருந்தது. சிறந்த மஹிமையுள்ள கிருஷ்ணபகவான் அர்ச்சுனனுக்கு மூன்றுமாதம் பெரியவர். மஹாபலசாலியான பலராமர் கிருஷ்ணனுக்கு மூன்றுமாதம் பெரியவர். அப்போது மிகுந்த பராக்ரமசாலியான பாண்டு சதச்ருங்கமலையில் காகியபரென்னும் புரோஹிதரோடும் தன்தேவிமார்களோடுங்கூட அவ்வைந்துபுத்ரர்களையும் பார்த்துக்கொண்டு மிகவும் மகிழ்வுற்றிருந்தான். வனங்களில் புஷ்பங்கள் மிகுதியாகவுள்ள சித்திரை வைகாசிமாதங்களாகிய வஸந்தகாலத்தின் ஆரம்பத்தில், புத்திசாலியாகிய அர்ச்சுனனுக்குப் பதினொன்காவது பிராயம் நிரம்பி அவன்பிறந்த உத்தரபல்குனிநக்ஷத்ரம் வந்தினத்தில் ஸ்வஸ்திவாசனம் நடத்துவதிலும் பிராமணபோஜனம் செய்விப்பதிலும் பிரவர்த்தித்திருந்த குந்தியானவள், பாண்டுமஹாராஜாவைக் காப்பாற்றுகிற விஷயத்தில் மறந்திருந்தாள். புரோகிதருக்கும் மற்றும்பிராமணர்களுக்கும் போஜனம் பரிபாலிக்கொண்டிருந்தாள். பிறகு கன்னைவன்மையைச் சகாயமாகவுடைய பாண்டு, வனங்கள் செவ்வையாகப் புஷ்பித்து எல்லாப்பிராணிகளையும் மயங்கச்செய்வதாகிய சித்திரை வைகாசிமாதங்களாகிய வஸந்தகாலத்தில் பெருங்காடடர்ந்த அழகான சதசருங்கமலையில் பார்ப்பதற்கினிய தன்புத்ரர்களான அந்தவீரரையும் பார்த்துக்கொண்டே பாரியையுடன் வனத்தில் திரிந்தான். பலாசமரங்களும், மாமரங்களும், சண்பகமரங்களும், பாரிஜாதமரங்களும், பழங்களும் புஷ்பங்களும் நிரம்பின இன்னும் அனேகவிருக்ஷங்களும், பற்பலதடாகங்களும், ரமணீயமானகளும் விளங்கப்பெற்றதான அவ்வனத்தைப்பார்த்த பாண்டுவின் மனத்தில் காமமுண்டாயிற்று. மகிழ்வுற்ற மனத்துடன் தேவதையைப்போல் அந்தவனத்தில் ஸஞ்சரிக்கும் பாண்டுவை மாத்ரி அழகான ஆடையுடுத்துக்கொண்டு தனிக்குப் பின்சென்றாள். இளமைப்பருவத்திலிருபடவனும் மெல்லியஆடையைத் தரித்தவளுமாகிய அவளைக் கண்டதோது காட்டில் அக்கி உண்டாவதுபோல், அவனுக்கு விருப்பம் விளம்பிற்று. தாபரைப்புஷ்பம்போன்ற கண்களையுடையமாத்ரியையாருமில்லாதஇடத்தில் தனித்துப பார்த்தகனால் மன்மதனால் ஜயிக்கப்பட்ட அரசன் அந்தவிருப்பத்தை அடக்கமுடியாமற்போனன். பிறகு, பதினெட்டாவதுவருஷத்தில், வஸந்தகாலத்தில், அலங்காரஞ் செய்துகொண்டவளும் புகழ்பெற்றவளுமாகிய மாத்ரியை (ப்பார்த்ததனால்) பாண்டு புத்திமோஹினவனாக அவளையழைத்தான். பிறகு பாண்டு மஹாராஜா துடித்துக்கொண்டிருக்கும் மாத்ரிதேவியினால் தன்னால்

கூடியவரையில் தடுக்கப்பட்டும் தனித்திருந்த அவளைப் பலாத்காரமாகப் பிடித்துக்கொண்டான். காமத்தினால் புத்திமாறின அந்தப்பாண்டு அந்தச்சாபத்தை நினைக்கவில்லை. ஜனமேஜயரே! அவன் விதியினால் ஏவப்பட்டு, சாபத்தினாலுண்டான பயத்தைவிட்டுத் தன் உயிர்முடிவதற்காக மன்மதனுக்கு வசப்பட்டவனாகி மாத்ரியினிடம் பலாத்காரமாகப் புணர்ச்சிசெய்தான். காமஸுகத்தில் விருப்பம்வைத்த அந்த ராஜாவின் அறிவானது, வலுத்தகால ரூபமாகப் பிரத்தியக்ஷமாய் வந்த காலனாலேயே மயக்கப்பட்டு ஐம்புலன்களையும் கலக்கி மனத்தோடு கூட அழிந்துபோயிற்று. கௌரவர்களைச் சிறப்பிக்கிறவனும் உயர்ந்த தர்மாத்துமாவுமாகிய அந்தப்பாண்டு அந்தமனவியோடு சேர்ந்த வுடன் காலதர்மமென்று சொல்லப்பட்ட மரணத்தோடு சேர்ந்தான். மாத்ரி, உடனே உயிர்போன ராஜாவைக் கட்டிக்கொண்டு துக்கத்தினால் பலமுறை உரக்கக் கூச்சலிட்டாள். பிறகு குந்தியும் அவள்புத்ரர்களும் மாத்ரியின் புத்ரர்களுமாகிய பாண்டவர்களும்சேர்ந்து, ராஜா அப்படிப்பட்ட நிலைமையடைந்திருந்த இடத்திற்கு வந்தனர். ஜனமேஜயராஜாவே! அப்போது அழுதுகொண்டு குந்தியைநோக்கி, "மேட்டிம் தனித்து இங்கேகவா; சிறுவர்கள் அங்கேயே நிற்கட்டும்" என்று சொன்னாள். அவளுடைய அந்தச் சொல்லைக்கேட்டு, குந்தி பிள்ளைகளை அங்கேயே நிறுத்தி, "நான் கேட்டேன்" என்று கதறிக்கொண்டு விரைவாக ஓடிவந்தாள். மாத்ரியும் பாண்டுவும் தரையில் படுத்திருப்பதைக்கண்டு வ்யஸனத்தினால் பரிதபித்த அங்கத்தோடு கூடிய குந்தி மிகுந்த துயரத்தினால் புலம்பினாள். "எப்போதும் புத்திமானாகிய இந்தவீரன் என்னால் எத்தனைகாலமும் காப்பாற்றப்பட்டிருந்தும் மானின்சாபத்தை அறிந்திருந்தும் உன்னை எவ்வாறு அதிக்கிரமஞ்செய்தான். மாத்ரியே! ராஜாவை நீயாகாமனே காப்பாற்றியிருக்கவேண்டும். அப்படிப்பட்ட மனிதரில்லாதஇடத்தில் ராஜாவை எவ்வாறு விருப்புறச்செய்தாய்? எப்போதும் அந்தச்சாபத்தையே நினைத்துத் துன்பத்தோடிருந்தவருக்குத் தனியாயிருந்த உன்னைப் பார்த்தபிறகு எப்படி மகிழ்ச்சியுண்டாயிற்று? பாஹ்லீகன் பெண்ணே! நீ பாக்கியமுள்ளவள்; என்னிலும் சிறந்த பாக்யவதி; சந்தோஷமுற்ற மஹாராஜாவின்முகத்தை நீயல்லவோ கண்டாய்" என்றாள். மாத்ரி, "தேவியே! நான் அழுதுகொண்டு பலமுறை தடுத்தும் அவர் விதியை ஸத்யமாகச்செய்ய விருப்பித தம்மனத்தை அடக்காமற்போனார்" என்றுசொன்னாள். அவளுடைய அந்தச்சொல்லைக் கேட்டுத் துக்கமென்னும் அக்கினியினால் தகிக்கப்பட்ட குந்தி வோ

றுக்கப்பட்ட மரம்போல் உடனே பூமியில்விழுந்தாள். மூர்ச்சையோடு பூமியில்விழுந்து செயலற்றகுந்தி அசையவேயில்லை. ஜனமேஜயரே! அந்த நிமிஷத்துக்குள் மாத்ரி பாண்டுவுக்கு ஸ்நானஞ்செய்வித்துப் புதுவஸ்திரம்போர்த்து அலங்காரங்கள்செய்து நல்லபடுக்கையில் படுக்கவைத்த பிறகு, மூர்ச்சையினால் பிரஜ்ஞை தப்பியிருந்த குந்தியை எழுப்பி "அம்மா வா" என்றழைத்து அவளுக்குக் காண்பித்தாள். குந்தி, பாதங்களில் விழுந்து மறுபடியெழுந்து செஞ்சந்தனம்பூசின உடம்போடும் குஸும்பாச்சாய வஸ்திரத்தோடும் சிரித்த முகத்தோடும் பேசுகிறவன்போலிருந்த பாண்டுமஹாராஜாவைக் கட்டிக்கொண்டு பிரமைகொண்டு ஐம்பொறிகளும் கலங்கிப் புலம்பினாள். அந்த மாத்ரியும் ராஜாவைக்கட்டிக்கொண்டு புலம்பினாள். அவ்வாறு சயனித்துக்கொண்டிருந்த ராஜாவினிடம் புத்ரர்களும் ரிஷிகளும் *சாரணர்களுமாகிய எல்லோரும் சேர்ந்துவந்து வ்யஸனத்தினால் கண்ணீர்விட்டார்கள். ஸுர்யன் அஸ்தமனமானதுபோலவும், கடல் வற்றினதுபோலவுமிருக்கும் புருஷச்ரேஷ்டனை பாண்டுவைக்கண்டு மஹரிஷிகள் துக்கித்தனர். ரிஷிகளும் பாண்டவர்களும் ஓரேதுக்க முள்ளவர்களாயிருந்தனர். சிறந்த ஸ்திரீகளாகிய அந்தக்குந்தியும் மாத்ரியுமாகிய இருவரும் பிராமணர்களால் தேற்றப்பட்டவர்களாகப் புலம்பினர்.

குந்தி, "ஆ! ராஜாவே! எங்களை யாரிடம்விட்டுவிட்டுத் தேவலோகத்துக்குச் செல்லுகிறீர். ஆ! ராஜாவே! நான் புத்தியில்லாமலிருக்கையில் என் நீர் மாத்ரியுடன்சேர்ந்து மரணமடைந்தீர்! ராஜாவே! என்பாக்கியக்குறைவினாலேதான் நீர் மரணமடைந்தீர். ராஜாவே! யுதிஷ்டிரன், பீமஸேனன், அர்ச்சுனன், நகுல ஸஹதேவரிருவர்ஆகிய உம்முடைய அன்புள்ளபுதல்வர்களை யாரிடம்விட்டுப் பிரயாணம்போயிருக்கிறீர். பாரதரே! உம்பைப்பார்த்துத் தேவர்களெல்லாரும் பரிதபிக்கின்றனரென்பது நிச்சயம். எனெனில், நீர் பிராமணர்களின்கூட்டத்தில் கலந்தவஞ்செய்திருக்கிறீரல்லவா? ராஜாவே! ஸுகமான ஸ்வர்க்கத்துக்கு எங்களிருவருடனும் சேர்ந்துபோகக் கடவீர். அஜமீடவம்சத்தவரே! கௌரவர்களிற்சிறந்தவரே! புண்ணியகர்மங்களைச்செய்த அஜமீடவம்சத்தார் அடைந்த நல்லகதிக்கு எங்களிருவரோடுங்கூடவே நீர்போவதாக நான் வனத்திற்குக்கூட வரும்போது பிரதிஜ்ஞைசெய்திருக்கிறீரல்லவா? ராஜாவே! அதனால் எங்களுடன்கூடத்தான் நீர் போகவேண்டும். ராஜாவே! சற்றுநேரம்

* ஒருவகைத் தேவஜாதியார்.

பொறுத்திரும். *நானும் உமதுமுகத்தைக்காண்பேன்" என்றாள். அவ்விருவரும் அதிகமாகப்புலம்பி, வேடர்களால் ஆண்மான் அடிக்கப்பட்டபோது காட்டிலுள்ள பெண்மான்கள் விழுவதுபோல், பிரஜ்ஞைதப்பிப் பூமியில்விழுந்தனர். வேதங்களில் கரைகண்டிருந்த யுதிஷ்டிரர்முதலிய அந்தப்பாண்டவர்களனைவரும் பிதாவினடியில்வந்து ஞாபகம்தப்பித் தரையில்விழுந்தனர். பாண்டவர்கள் பாண்டுவின் பாதங்களைக் கட்டிக்கொண்டு, "ஆ! பிதாவே! கெட்டோம்" என்று அழுதனர். "ஆ! நாதனில்லாமற்போனோம். மஹாராப்பிராஜ்ஞரே! சிறுவர்களானநாங்கள் நீங்களில்லாமல் எப்படிப்பிழைப்போம். மஹாராஜாவே! லோகநாதனுடைய புத்ரர்களாயிருந்தும் ஒருகொடியில் நாதனில்லாதவரானோம். ஆ! ஆ! உலகம் என்னவிசித்ரம்; பாரதரே! ராஜபுத்ரர்களாயிருந்து எங்களைப்போல் பாக்யஹீனர்களானவர்கள் யாருமில்லை. அரசர்க்கரசே! நீங்கள் இறந்ததனாலும் நாங்கள் ராஜ்யத்திலில்லாமையாலும் பாண்டவர்களாகிய நாங்களெல்லாரும் மிக்கவ்யஸனத்தையடைந்திருக்கிறோம். ராஜாவே! நாங்களென்ன செய்வோம்; செய்யத்தக்கதை அநுக்ரஹித்து எங்களைக் கட்டளையிடக்கடவீர்" என்று யுதிஷ்டிரர் புலம்பினர். பீமஸேனனும், "அரசர்க்கரசே! ராஜ்யத்தையும் போகங்களையும்விட்டுச் சதச்ருங்கமலையில்வாஸஞ்செய்துகொண்டு தபஸ்தபஞ்செய்து நீர் எங்களையடைந்தீர். கௌரவத்தைவிட்டுக் காட்டிற்குச்சென்று தாமே உணவைத்தேடிக் காட்டிலுள்ளஇலை வேர் காய்களைக்கொண்டு எங்களைக் காப்பாற்றினீர். அறம்பொருள் இன்பமென்னும் த்ரிவர்க்கபுருஷார்த்தங்களைவிரும்புகிற பிதாக்கள் பஹுத்பாக்களானபுத்ரர்களைப்பெற்று என்னபலனையடையவிரும்புகின்றனரோ அதை அடைவதற்கு இதுதான் காலம்வந்திருக்கிறது. பாரதராஜாவே! அந்தபலனை அநுபவிக்காமல் நீர்போகத்தகாது" என்று பிதாவைப்பார்த்துச்சொல்லி அழுதான். அர்ச்சுனனும், "சென்றகாரியத்தைச்செய்யவேண்டும்" என்று சொல்லிப்போனபரதவம்சர் பாண்டுவினுடைய உத்தரக்ரியைசெய்யப்பட்டது. அந்தப்பாண்டு மனமேபோனபோது ராஜா இல்லாமல் ராஜ்யம் அழிந்துபோயிற்று. பாண்டுபுத்ரர்கள் ஔரஸரும் க்ஷத்ரியசக்திவெளிப்படுத்தப்பட்டது" என்றுசொல்லக்கேட்டு ஸந்தோஷித்தபிறகு நீர்போகத்தகாது" என்று பிதாவைப்பார்த்துச்சொல்லியழுதான். சுருஸ்ரவரும் சுகவர்களும், "பரதச்ரேஷ்டரே! கடினமானதவஞ்செய்து எங்களையடைந்தபிறகு எல்லாலாபங்களிலும்பெரிதான

* அனுமரணம்செய்யேன் என்பது கருத்து.

புத்ரலாபத்தின்பயனைச் சுச்ரூஷைமுதலியவற்றுள் ஒன்றையும்பெற்றுக்கொள்ளாமல், முன்காலத்தில் தசரதர்எப்படியோ அப்படியே நீரும்போனீர்" என்றுசொல்லித் தாங்கமாட்டாமல்அழுதனர். குந்தி, "ஓ மாத்ரியே! நான் முதலாவதுதர்மபத்நி; தர்மத்தின்பலன் முதலில் என்னுடையதுதான். அவசியம் நேரிடத்தக்கவிஷயத்தில் நீ என்னைத்தடுக்காதே. இறந்துபோனபர்த்தாவை நான் இப்போது பின்செல்லுகிறேன். நீ இவரைவிட்டு எழுந்திரு. இந்தப்பிள்ளைகளைக் காப்பாற்று. பயன்பெற்றபுத்ரர்களையடைந்தும் வீரபத்நியாவதையே நான் விரும்புகிறேன்" என்றுசொன்னாள். மத்ராராஜன்பெண்ணான வள் குந்தியைநோக்கி, "என்னை மோசம்செய்த பர்த்தாவை நானே தான் பின்செல்வேன். காமபோகத்திலும் நான் திருப்தியடையாத வளாயிருக்கிறேன். வயதில்மூத்தவளாகியநீ எனக்கு அனுமதிகொடுக்கவேண்டும். இந்தப்பரதச்ரேஷ்டர் என்னிடம்ஆசைவைத்து என்னைச்சேர்ந்திறந்தார். அந்தவிருப்பம் அவர் யமன்வீட்டிலிருக்கும் போது கெடும்படி நான்செய்யலாமா? ராஜரிஷிகளிற்சிறந்த இந்த ராஜா என்னிமித்தமாகத்தானே ஸ்வர்க்கம்சென்றார். அவருடைய புத்தி அப்படிப்பட்டதல்லவே! எனக்கு அவரைப்போன்ற பந்துக்களுமில்லை; பர்த்தாவைவிட்டுப்பிரிந்து உயிரைவைத்துக்கொள்ளவும் என்னால்முடியாது; ஆதலால், யான்வீட்டுக்குச்செல்லும் அந்தக் கணவர்பின்னேயே பானும்போவேன். மேலும், நான் என்பிள்ளைகளிடத்தில்நடப்பதுபோல் உன்பிள்ளைகளிடத்தில் ஒருபோதும் நடக்கமாட்டேன். அவ்வாறு ஹித்தியாஸமாகநடக்கின்றஎனக்குப் பெரும்பாவம்வரும். ஆதலால், தேவியே! நீ உன்புத்திரர்களிடமிருப்பது போல் என்புத்திரர்களிடமும் இருக்கவேண்டும். யமனிடம்போகின்றபதியை நான் பின்தொடரப்போகிறேன். என்னைநோக்கித்தான் இவ்வரசன் உயிர்விழுந்தான். ராஜாவின்சரீரத்தோடுகூட இந்த என்சரீரமும் செம்மையாகமறைக்கப்பட்டுத் தகனஞ்செய்யத்தக்கது. அம்மா! இந்தஎன்னிருப்பத்தைச் செய்யக்கடவாய். என்னால்கேட்டுக்கொள்ளப்பட்டநீ குழந்தைகள்விஷயத்தில் தவறுமலேயிருப்பாய். அதனால் உனக்கு நான் ஹிதம்சொல்லவேண்டியது ஒன்றுமெனக்குத்தெரியவில்லை" என்றுசொன்னாள். சிறந்த தபஸ்ஸுள்ளரிஷிகள் தவறுத பராக்ரமமுள்ள அந்தப்பாண்டவர்களைச் சமாதானம்செய்த பின், குந்தியையும் மாத்ரியையும் சமாதானம்செய்து, பின்வருமாறு சொல்லலானார்:

"பாக்யசாலியே! நீ பாலபுத்திரர்களையுடையவள்; எவ்வகையி

லும் மரணமடைய்த்தகாது. வீரர்களானபாண்டவர்களையும் குருராஜ்யத்திற்கு அழைத்துக்கொண்டுபோவோம். திருதராஷ்டிரனும் தர்மமல்லாத திரவியலாபங்களில் ஆசையுள்ளவன். அவன் பாண்டவர்கள்விஷயத்தில் கிரமப்படிநடவாமலுமிருப்பன். குந்திக்கு யாதவர்களும் குந்திபோஜனும் நாதர்களாக இருக்கின்றனர். மாத்ரிக்கும் பலவான்களிற்சிறந்த மஹாரதனான சல்லியன் ஸஹாதரனுயிருக்கிறான். பர்த்தாவுடன்கூட மரணமடைவது பலனுள்ளதுதான். அதில் ஸந்தேகமில்லை. உங்களுக்குமட்டும் இது செய்யக்கூடாததென்று பிராமணச்ரேஷ்டர்கள்சொல்லுகின்றனர். கற்புள்ளபெண் கணவனிறந்தபின் பிரம்மசரியமென்னுமிவிரதத்தையெடுத்துக்கொண்டு மனம் வாக்குக்காயங்களையடக்குவதினாலும் அனுஷ்டானியமங்களினாலும் பரிசுத்தமடைந்து நல்லவளாகப் பர்த்தாவையே நினைத்துக்கொண்டிருந்து தன்பர்த்தாவைக்கரையேற்றுவாள். அப்படிப்பட்டவளால் அவளுடையஆத்மாவுங் கணவனும் புத்ரனும் கரையேற்றப்படுவார்கள். ஆதலால், உங்களிருவருக்கும் இந்தஉயிர்வாழ்க்கையே நன்மையென்று நாங்கள் நினைக்கிறோம்" என்றுகூறினர். அதற்குக் குந்தி, "பிராம்மணஸமூதாயத்தின் ஆஜ்ஞையைப் பாண்டுவின்ஆஜ்ஞையைப்போலவே சிரஸில்வைத்துக்கொண்டேன். அதை அவ்வாறே நிறைவேற்றவும்போகிறேன். மஹான்கள்சொல்வதெதுவோ அதையே என்பர்த்தாவுக்கும் புத்ரர்களுக்கும் எனக்கும் மிகுந்த நன்மையென்று உறுதிபோகநினைக்கிறேன்" என்றுசொன்னாள். மாத்ரி, "புத்ரர்களுடையயோகக்ஷேமத்தைநடத்துவதில் குந்தி ஸமர்த்தியமுள்ளவள். அருந்ததியும் புத்தியில் இவளுக்கீடாகஇருக்கமாட்டாள். யாதவர்களும் குந்திபோஜனும் குந்திக்கு ஆதரவாகஇருக்கின்றனர். குந்தியே! உன்னைப்போல் புத்ரர்களைக்காப்பதில் நான் திறமையுள்ளவளல்லேன். அப்படிப்பட்டநான் பர்த்தாவுடன் செல்வேன். காமஸுகத்திலும் நான் திருப்தியாகவில்லை. மூத்ததேவியே! பர்த்தாவின்லோகத்திற்குப்போக எனக்கு விடைகொடுக்கவேண்டும். தர்மந்தெரிந்தவரும் நன்றிமறவாதவரும் ஸத்யந்தவறுதவரும் சிறந்தபுத்தியுள்ளவருமாகிய பர்த்தாவின்பாதங்களுக்குப் பணிவிடைசெய்யப்போகிறேன். பூஜிக்கத்தக்கநீ அப்படியேசெய்ய இப்போதே எனக்கு அனுமதிகொடுக்கவேண்டும்" என்றுசொன்னாள். ஜன்மேஜயராஜாவே! சிறந்தவளான மத்ராஜன்பெண் இவ்வாறு சொல்லித் தலையினல்வணங்கிக் குந்தியிடம் அப்போதே நகுலஸஹதேவர்களை ஒப்புவித்தாள். அந்தமாத்ரி மஹரிஷிகளைவந்தனஞ்

செய்து குந்தியின்புத்ரர்களும் தன்புத்ரர்களுமாகிய் பாண்டவர்களை அணைத்துக்கொண்டு பலமுறைஉச்சிமோந்து யுதிஷ்டிரரைக் கையில் பிடித்துக்கொண்டு, "உங்களுக்குக் குந்தி தாயார்; நான் உபமாதா; பிதா இறந்துபோனார். நான்குபெயருக்கும் ஜ்யேஷ்டனாகிய யுதிஷ்டிரன் தர்மப்படி எப்போதும் உங்களுக்குப பிதா. பெரியோர்முதலியவர்களைப்பணிவதில் உலக்த்தற்றவர்களும் ஸத்தியத்தையும் தர்மத்தையும் கைவிடாதவர்களுமாகிய யுதிஷ்டிரனைப்போன்றவர்கள் அழியார்கள்; தோல்வியடையார்கள். ஆதலால், நீங்களனைவரும் சோம்பலைவிட்டுப பிதாவினிடம் நடக்கவேண்டியகடமையை யுதிஷ்டிரனிடம்செய்யுங்கள்" என்றாள். ரிஷிகளுக்கும் குந்திக்கும் பலமுறை காயஸ்காரம்செய்து, துக்கத்தினால் சோர்வுற்றமாத்ரி அப்போது குந்தியைநோக்கி மறுபடியும் சொல்லத்தொடங்கினாள்: "ஸ்வர்க்கத்தைக்காண விருப்பமுள்ளநான் இந்தரிஷிகளமுன்னிலையில் சொன்னவாக்கு இப்போது பொய்யாகப்போகக்கூடாது. யதுபுத்ரியே! நீ பாக்யவதி. உனக்குநிகரானஸ்திரீ இல்லை. குந்தியே! அளவற்றசக்தியுள்ளவர்களும் புகழ்பெற்றவர்களுமாகிய ஐந்துபுத்ரர்களுடையபலத்தையும் பராக்ரமத்தையும் தவவன்மையையும் மஹிமையையும் நீ பார்க்கப்போகிறாயல்லவா? தேவியே! நீ நல்லொழுக்கமுள்ளவள். நான் நமஸ்கரிபாதற்கும் பூஜிபபதற்கும் நீ உரியவள்; எல்லாவகையாலும் பெரியவள்; மிகசசிறந்தவள். உன்னுடைய நற்குணங்களாலேயே நீ அலங்கரிகபபட்டவள். யாதவகுமாரியே! நீவிடைகொடுப்பதை விரும்புகிறேன். புண்யத்தையும் ஸ்வர்க்கத்தையும் புகழையும் நீ காரணமாக நான் எவ்வாறுஅடைவேனோ அவ்வாறு நீ இப்போதுசெய்யக்கடவாய்; சிந்திக்காதே" என்றாள். புகழ்பெற்றகுந்தி கண்ணீரினால் தெளிவில்லாதவாக்குடன், "பாக்யவதியே! அனுமதிகொடுத்திருக்கிறேன். விசாலமானகண்களையுடையவளே! சிறந்தபெண்ணே! இப்போதே ஸ்வர்க்கத்தில் உனக்குப் பர்த்தாவுடன்கூடச் சேர்க்கை சீக்கிரமாக உண்டாகக்கடவது. ஸ்வர்க்கலோகத்தில் நீடூழிகாலம் சேர்ந்து ரமிக்கக்கடவாய்" என்றுசொன்னாள்.

பிறகு பிரேதகாரியங்களில் தேர்ந்தவரான கஸியபரென்னும் புரோஹிதர் ஸ்நானஞ்செய்து ரிஷிகளைக்கொண்டு தங்கத்துண்டுகளையும் நெய்யையும் எள்ளையும் தர்பையும் அரிசியையும் தண்ணீர்க்குடங்களையும் கோடாலியையும் வருவித்து அசுவமேதாக்னியைக் கொண்டுவந்து இறந்துபோன பாண்டுவின் அந்த உத்தரக்ரியையைக் க்ரமப்படி பூர்ணமாகச் செய்வித்தார். பாண்டுபுத்ரரான

யுதிஷ்டிரர் புரோஹிதர்சொன்னபடி அந்த அக்கினியிஞல் பாண்டு வைத் தஹனஞ்செய்தார். கிரியைகளைச் செய்தபின் யுதிஷ்டிரர் சோகத்தினல் தபிக்கப்பட்டு அழுதுகொண்டு பூமியில்விழுந்தார். தர்மபத்நியும் புகழ்பெற்றவளும் ராஜகுமாரியுமாகிய மாத்ரி, ரிஷி களையும் புத்ரர்களையும் குந்தியையும் விட்டுவிட்டுச் சிதையின் அக் கினியிலிருக்கும் புருஷச்ரேஷ்டனை பர்த்தாவை நடஸ்காரஞ்செய்து உடனே தானும் சிதையிலேறினுள். குற்றமற்றவரான தர்மராஜர் ஸஹாதர்களுடன்கூடப் புதிபவஸ்திரம் தரித்துக்கொண்டு புரோ ஹிதர்சொல்லிக் கட்டுபபட்டு அவ்விடத்தில் ஜலதர்பணஞ்செய்தார். தகுதியுள்ள அந்தப்பாண்டுவின் உத்தரக்கிரியைகளைச் சதச்ருங்கமலை யில் வஸிக்கும் தபஸ்ஸுள்ள சாரணர்கள் ரிஷிகளுடன்கூட முறைப் படி செய்தனர்.

நூற்றுமுப்பத்தைந்தாவது அத்தியாயம்.

ஸம்பவபர்வம். (தொடர்ச்சி).

(ரிஷிகள், பாண்டவர்களை அஸ்தினாபுரத்துக்கு அழைத்துவந்தது, பாண்டுவின் ஸமாசாரத்தைச் சொல்லி, பீஷ்மரிடம் அவர்களை ஒப்புவித்துத் திரும்பிச்சென்றது).

மந்திரங்களையறிந்தவர்களும் தேவர்களுக்குச் சரியானவர்களு மான மஹரிஷிகளனைவரும் பாண்டு முடிவுபெற்றதைப் பார்த்து, பிறகு ஒருவரோடொருவர் ஆலோசனைசெய்தனர். "பெரும்புகழுள் ளவனும் அந்த மஹாத்மாவுமாகிய பாண்டுமஹாராஜன் ராஜாதிகாரத் தையும் தேசத்தையும்விட்டு இந்தஇடத்தில் தவஞ்செய்து தவசிக ளோடே சரணமாக அடைந்திருந்தான். அந்தராஜாவாகிய பாண்டு, பிறந்தது மாத்திரமாய் (விவாஹம அபிஷேகம் எதுவும் செய்விக்கப படாமல்) இருக்கிறபுத்திரர்களையும் பத்னியையும் இங்கே உங்களிடம் அடைக்கலமாக ஒப்பித்து இங்கிருந்தே ஸ்வர்க்கம்போனன். அந்த மஹாத்மாவின் இந்தப்புத்திரர்களையும் * தேசத்தையும் பத்னியை யும் அவர்கள் தேசத்திற்கு அழைத்துக்கொண்டுபோவோம். இதைத் தர்மமாக நாம்நினைக்கிறோம்" என்றுசொல்லி, தேவர்களைபோன்றவர் களும் உயர்ந்த மனஸ்ஸுள்ளவரும் ஸித்திபெற்றவர்களுமாகிய அந்த

* தனஞ்செய்தும் கலையாத எலும்புக்கோவை.

மஹரிஷிகள், ஒருவரையொருவர் அழைத்துக்கொண்டு, பாண்டவர்களை முன்னிட்டுக்கொண்டு அஸ்தினாபுரம்சென்று பீஷ்மரிடமும் திருதராஷ்டிரனிடமும் பாண்டவர்களை ஒப்பிப்பதற்கு நிச்சயம்செய்தனர். அந்தநிமிஷத்திலேயே அந்தரிஷிகளனைவரும் பாண்டுவின் பத்னியாகியகுந்தியையும் புத்ரர்களையும் பாண்டுவும் மாத்ரியுமாகிய இருவரின் அந்தச் சரீரங்களையும் எடுத்துக்கொண்டுபுறப்பட்டனர். முன்னர் எப்போதும் ஸௌக்கியமுள்ளவளாயிருந்து அப்போது நீண்டவழியை நடந்தகுந்தி புத்திரர்களிடமுள்ள அன்பினால் அந்தவழியைக் குறுகினதாக நினைத்தாள். புகழுள்ள குந்தி ஸ்வல்பகாலத்தில் குருஜாங்கலமென்ற தேசத்தையடைந்து நகரத்தின்முன்கோட்டைவாயிலை அணுகினாள். ரிஷிகள் வாயில்காப்பவனிடம், "ராஜாவுக்குத்தெரிவி" என்று சொன்னார்கள். அப்போது வாயில்காப்பவர்கள் ஒருகொடியில் ஸபைக்குச்சென்று அனேகமாயிரம் சாரணர்களும் ரிஷிகளும் வந்திருப்பதைத் தெரிவித்தனர்

அதைக்கேட்டு அஸ்தினபுரத்திலிருக்கும் மனிதர்களுக்கு ஆச்சரியமுண்டாயிற்று. ஸமுத்ரயன உத்ஸவமாகி ஒரு முகூர்த்தமானபின் அஸ்தினபுரத்திலிருப்பவரனைவரும் ரிஷிகளைப்பார்ப்பதற்குக் குழந்தைகளோடும் பத்னிகளோடுங்கூட வெளியிற்புறப்பட்டனர். க்ஷத்ரியர்களும் க்ஷத்ரியஸ்திரீகளும் பிராமணர்களும் பிராமணஸ்திரீகளும் கூட்டங்கூட்டங்களாக அநேகவாஹனங்களிலேறிக்கொண்டு புறப்பட்டனர். அவ்வாறே வைச்யசூத்ரர்களின் கூட்டமும் மிகுதியாக இருந்தது. ஒருவனும் * பொறுமைப்படவில்லை. எல்லாரும் தர்மசிந்தையோடிருந்தனர். அவ்வாறே சந்தனுபுத்ரரான பீஷ்மரும், பாஹ்லீகனான ஸோமதத்தனும், ராஜரிஷியான திருதராஷ்டிரனும், க்ஷத்தாவென்ற பெயருள்ள விதுரரும், ஸத்யவதீதேவியும், புகழ்பெற்ற அம்பாலிகையும், ராஜஸ்திரீகளால் சூழப்பட்ட காந்தாரியும், தாங்களாகவே புறப்பட்டனர். குரிபோதனன் முதலான திருதராஷ்டிரபுத்திரர்கள் நூற்றுவரும் விசித்ரங்களான ஆபரணங்களையணிந்துகொண்டு புறப்பட்டனர். கௌரவர்களனைவரும் புரோஹிதர்களுடன் கூட அந்தரிஷிக்கூட்டங்களைக்கண்டு தலைகளால்வணங்கி அவர்கள் ஸமீபத்தில் உட்கார்ந்தனர். பட்டணத்திலும் தேசத்திலுமுள்ள ஜனங்களனைவரும் அப்படியே தலைவணங்கி வந்தனஞ்செய்து அவர்களுக்குப்பின் பூமியில் உட்கார்ந்தனர். ராஜாவே! பீஷ்மர் அந்த ஜனக்கூட்டம் முழுதும் சப்தமில்லாமலிருந்ததைத் தெரிந்துகொ

* ரிஷிகள் அழைத்துவந்தஜனம் பொறுமையில்லை.

ண்டு அந்தரிஷிகளுக்கு அர்க்கியபாத்யங்களைக்கொடுத்துக் கிரமப்படி பூஜைசெய்து ராஜ்யாதிபத்யத்தையும தேசத்தையும் மஹரிஷிக ளுக்கு அர்ப்பணம் செய்தார். பிறகு அவர்களுள் மிகமுதிர்ந்தவ ரும் ஜடைகளையும் கிருஷ்ணஜினத்தையும தரித்தவருமாகிய ஒரு மஹரிஷி ப்ரத்யுத்தானஞசெய்து மறறரிஷிகளின் அபிப்பிராயத்தை யெடுத்துக்கொண்டு பின்வருமாறு சொல்லதொடங்கினார்:

"கௌரவவம்சத்துப் புத்திரனுகிய பாண்டுவென்னும் பெயர் பெற்றஅரசன் காமஸுகங்களைவிட்டுநீங்கி இங்கிருந்து சதசருங்க மலைக்குச்சென்று ராஜஸுகங்களைத துறந்து தபஸ்வியாகிவிட்டா னல்லவா? அந்தத் தர்மாத்மா சிலகாலம இலைகளையும கிழங்குகளையும கனிகளையும புஜித்துக்கொண்டு பத்னிகளுடன்கூட சாஸ்திரப்பிர காரம் ஒப்பில்லாமல் தவஞ்செய்தான். அவன் அந்தச் சதசருங்கமலை யில் வாஸஞ்செய்யும் சிறந்ததவமுள்ள முனிவர்களைத் தன் ஒழுக்கத் தினுல்ப செய்கைகளினுலும் தவத்தினுல்ப சுகதேதாஷிக்கச்செய் தான். பத்னிகளுடன்கூட ஸ்வர்க்கலோகம்போகவிரும்பிக் கிளம் பின அந்தராஜாவைப பிரம்மரிஷிகள்நடத்தி, "ராஜாவே! ஸுகதி யில்லாதஉனக்குப புண்ணியலோகங்களில்ல. ராஜச்ரேஷ்டனே! ஆத லால், பத்னிகளுடன் கூடத் தபோவனம், வாயு, இந்திரன், அசுவினிதேவ ர்கள் ஆகிய இந்ததேவர்களை ஆராதனஞசெய். "அவர்கள் அனுக் கிரஹஞ்செய்து புத்திரர்களைக்கொடுப்பார்கள். பித்ருக்கடனிலிருந்து விடுபட்டவனுவாய். உனக்கு அவர்வாயுபுத்திரர்களைப் பார்வர்களின் பதை நாங்கள், தவத்தினுல் நமக்கு ப்ரீணபடுத்தியிருப்பதலால், காண் கிறோம்" என்றுசொன்னார்கள். எங்களுக்குசொல்லக்கூடாது அப்படிப்பட்ட தேவர்களை ஆராதனஞசெய்தான் பிரபாசாரண்யத்தில்இருந்தபாண்டு வுக்கு அதிஷ்டானகாரணமாக தேவதர்மதவனத்திலிருந்து யுதிஷ்டிரனென்னும இந்தபபுத்திரன் சதசருங்கமலையில் பிறந்தான். அவ்வாறே மஹாத்மாவான அந்தராஜாவுக்கு வாயுபகவான், பலவான் களிற்சிறந்தவனும் பெருவயிறாகபமுள்ளவனுமாகிய இந்தபபீமனென் னுமபுத்திரனைக் கொடுத்தான்.

இந்திரனுல் ஸத்தியபராக்ரமனென இந்தபபுத்திரன் குந்திக்குப பிறந்தான். சிறந்ததவில்லாளியாகிய இவன்பிறந்ததும இந்திரன் குந் தியைநோக்கி, "குந்தியே! என் அனுகூலதபஸுனுல் ஸ்திரமானபரா க்ரமமுள்ளஇவன் பிறந்திருக்கிறான். ஜயிக்கமுடியாத தேவர்களை முதலிபல திரிகளையும் இவன் ஜயிக்கபோகிறான். ஸந்தேகமில்லை" என்றுசொன்னான். இவனுடையகீர்த்தி சிறந்ததவில்லாளிகளெல்லாரை

யும்மறைத்துவிடப்போகிறது. யுதிஷ்டிரன் இந்தஸ்ஹோதரனுடைய பராக்கிரமத்தினால் ராஜஸூயயாகத்தை நிறைவேற்றப்போகிறான். இவன் ஸமஸ்தமானமனிதர்களையும் கந்தர்வர்களையும் ராக்ஷஸர்களையும் ஜயிக்கபோகிறான். இவன் துர்யோதனன்முதலான கௌரவர்களையும்ஜயிக்கப்போகிறான். தர்மதேவதையின்புத்திரனும் எப்போதும் தர்மத்திலேயே லக்கமுள்ளவனுமாகிய யுதிஷ்டிரன் இந்த வீரனுடைய பராக்கிரமத்தினால் ராஜஸூயம்முதலான யாகங்களைச்செய்யப்போகிறான். சிறந்தவில்லாளிகளும் புருஷச்ரேஷ்டர்களும் புலிகள் போன்றசூரர்களுமாகிய இந்தமாத்ரீபுத்ரர்களிருவரும் அசுவினிதேவர்களால் உண்டானவர்கள். அவர்களும் இதோ இருக்கின்றனர். நகுலன், ஸஹதேவனென்றுபெயருள்ள அவ்விருவரும் அளவற்றசக்தியுள்ளவர்கள். புகழ்பெற்றபாண்டு வனவாஸஞ்செய்து தவத்தைவிடாமலிருந்து தன்முன்னோர்களின் ஐந்தவம்சத்தை மறுபடியும் தலையெடுக்கச்செய்தான். பாண்டுபுத்ரர்களுடையபிறப்பையும் வளர்ப்பையும் வேதாத்யயனத்தையும் எப்போதும்பார்த்து மிகுந்தமகிழ்ச்சியையடைவீர்கள். பாண்டு ஸாதுக்களின்ஸஹவாஸத்திலிருந்து புத்ரலாபத்தையும்அடைந்தான். இன்றைக்குப பதினேழாவதுநாள் பிதிர்லோகத்துக்குப போய்ந்தான். சிதையையடைந்து அக்நிமுகத்தில் ஹோமஞ்செய்யப்பட்ட அந்தப பாண்டுவைக்கண்டு மாத்ரி தன்னுயிரை வெறுத்துவிட்டு அக்நிப்ரவேசஞ்செய்தாள். அனுகமனம்செய்தஅவள் அவனோடுகூடவே பதிலோகத்தையடைந்தாள். அவளுக்கும் அந்தப் பாண்டுவுக்குப இதற்குமேல் செய்யவேண்டியகாரியத்தை நீங்கள் செய்யலாம. உங்கள் வீடுவா துசேர்ந்த குந்தியையும் புகழ்பெற்ற பாண்டவர்களையும் நியாயப்படி அங்கீகரிக்கக்கடவீர்கள். இதுதான் சாச்வதமான தாமம. இவையிரண்டும் அந்தமாத்ரி பாண்டு இருவருடைய*சரீரங்கள். இவர்களும் அவ்விருவர்களின் சிறந்தபுத்ரர்கள். இந்தவீரர்களையும் அவருடையதாயையும செய்கைகளிலால் காப்பாற்றக்கடவீர்கள். தஹனமுதலியபிரேதகாரியமானபின் மிகுந்த புகழ்பெறுவனும மஹாத்மர்களுள்ளும் அறிந்தவனும் குருவம்சத்தைத்தாங்குகிறவனுமாகிய பாண்டு பிதிர்மேதமென்னப்பட்ட ச்ராத்தத்தையடையக்கடவன்" என்றார். கௌரவர்களிவர்களையும் பார்த்து இவ்வாறுசொன்னபின் அந்தக்கௌரவர்கள் பார்த்திருக்கும் போதே, ரிஷிகளும் சாரணர்களுமாகிய எல்லாரும் மொடியில்மறைந்தனர். ரிஷிகள் சாரணர்களாகிய இவர்களின்கூட்டம் இந்த்ரஜாலத்திற்காணும் கந்தர்வநகரம்போல் தெரிந்தஇடத்திலேயே திரும்பவும் மறைந்துபோனதைக்கண்டு ஜனக்கவியப்புற்றனர்.

* எழும்புக்கூடு.

நூற்றுமுப்பத்தாருவது அத்தியாயம்.

ஸம்பவபர்வம். (தொடர்ச்சி).

(பாண்டுவின் ஹஸ்திஸம்ஸ்காரமும் பிரேதக்கிரியைகளும்).

திருதராஷ்டிரன், "விதுரனே! ராஜஸிம்மமாகிய பாண்டுவுக்கும் மாத்ரிக்கும் பிரேதகாரியங்களெல்லாவற்றையும் ராஜாவுக்குத்தக்க படி சிறப்பாகச் செய்விக்கக்கடவாய். பாண்டுவுக்காகவும் மாத்ரிக்காகவும் பசுக்களையும் பலவகை வஸ்திரங்களையும் ரத்தினங்களையும் தனங்களையும் கேட்பவர்களுக்கு வேண்டிய அளவுகொடு. செவ்வையாகமூடப்பட்ட அந்தமாத்ரியைக் காற்றும் சூரியனும் கூடக் காணுமலிருக்கும்படிசெய்து அவளுக்குக் குந்தி செய்யவேண்டிய மரியாதை எவ்வகையோ அதைச்செய்யவேண்டும். தேவர்களுக்கொப்பானவர்களும் வீரர்களுமான ஐந்துபுத்ரர்களையும்பெற்ற குற்ற மற்ற பாண்டுமஹாராஜனைப்பற்றி நாம் வருத்தப்படவேண்டியதில்லை. சலாகித்தல் வேண்டும்" என்றுசொன்னன். பாரதரே! விதுரர் திருதராஷ்டிரனுக்கு, "அப்படியே" என்றுசொல்லி, பீஷ்மருடன்கூடி மிக சலாக்கியமான இடத்தில் பாண்டுவுக்கு ஸம்ஸ்காரங்களைச் செய்வித்தார். ராஜாவே! அப்போது புரோஹிதர்களால் நகரத்திலிருந்து நெய்மணம் முன்வீசுகின்ற, ஜ்வலிக்கின்ற அக்நிகளை விதிவாகக்கொணர்ந்தனர். அதன்பின் அந்தக்காலத்திலுள்ள பலவகைப்பட்ட உயர்ந்தபுஷ்பங்களாலும் சந்தனம்முதலிய வாஸனைத்ரவியங்களாலும் பல்லக்கை அலங்காரஞ்செய்து அதை வஸ்திரத்தினால் முழுதும்மூடி அப்படியே புஷ்பங்களாலும் விலையுயர்ந்த வஸ்திரங்களினாலும் சோபிக்கின்ற பல்லக்கில், பாண்டுவை மந்திரிகளும் உறவினர்களும் ஸ்நேகிதர்களும் ஏற்றினர். புருஷஸிம்மமான பாண்டுவை மாத்ரியுடன் கூடச் செவ்வையாகபாதைத்துச் சிறந்த அலங்காரமுள்ளதும் மனிதரெடுப்பதுமாகிய அந்த உயர்ந்தவாஹனத்தினால் எடுப்பித்தனர். அப்போது வெண்குடையினாலும் சாமரங்களாலும் எல்லா வாத்யசப்தங்களாலும் சிறப்பித்தனர். நூற்றுக்கணக்கான மனிதர்கள் மிகுதியான ரத்னங்களையெடுத்துக்கொண்டுவந்து அந்தப்பாண்டுவின் ஸம்ஸ்காரகாலத்தில் விநயம்பினவர்களுக்குக் கொடுத்தனர். பிறகு வெண்குடைகளையும் பெரிய சாமரங்களையும் அழகிய வஸ்திரங்களையும் பாண்டுவுக்காகக் கொண்டுவந்தனர். வெள்ளைவஸ்திரம் தரித்

துக்கொண்ட புரோகிதர்களால் மஹாமம்பண்ணப்பட்டு ஜ்வலிக்கின்ற அக்நிகள், கந்தபுஷ்பம் முதலிய அலங்காரங்களோடு பாண்டுவின் முன்னே சென்றன. பிராமணர்களும் க்ஷத்ரியர்களும் வைசியர்களும் சூத்ரர்களும் ஆயிரக்கணக்காக வ்யஸனத்தினால் கொதிப்படைந்து கண்ணீர்விட்டுக்கொண்டு ராஜாவைப் பின்சென்றனர். பாண்டவர்களனைவரும் பீஷ்மரும் விதுரரும் பாஹ்லீகனான ஸோமதத்தனும் பூரிச்ரவஸ் என்னுமரசனும் இன்னுமனேகரும், "இந்தராஜா, நம்மைப்பிரிந்து நீண்டதூரத்தில் அமிழ்த்தி நாதனில்லாதவர்களாகவும் செய்து எங்கே போகப்போகிறான்" என்று கதறிக்கொண்டும் ஒருவரையொருவர் கட்டிக்கொண்டும் பின்சென்றனர். ஸத்யவாதிகளான பீஷ்மர் முதலியவர்கள் கங்கைக்கரையிலுள்ள அழகான வனப்பிரதேசத்தில் புண்ணியமான ஸமபூமியில் அந்தப்பல்லக்கை வைக்கச் செய்தனர். பிறகு புருஷஸிம்மமும் உயர்ந்தகாரியங்களைச் செய்பவனுமாகிய பாண்டுவின் சரீரத்திலும் அவன்பாரியையான மாத்ரியின்சரீரத்திலும் எல்லா வாஸனைகளையும்சேர்த்து நல்ல அகிற்சேறும் உயர்ந்த சந்தனக்குழம்பும் பூசிப் பொற்குடங்களினால் சுற்றிலும் ஜலம் கொட்டி, வெண்சந்தனத்தையும் காரகிலோடுகூடிய புன்னாஸத்தையும் எங்கும் பூசினர். பிறகு பலதேசங்களிலுண்டான வெளுப்புவஸ்திரங்களை அவனுக்குப் போர்த்தனர். உயர்ந்தசயனத்தில் படுப்பதற்குத்தகுதியுள்ள புருஷச்ரேஷ்டனான பாண்டுமஹாராஜன் வஸ்திரங்களினால் போர்க்கப்பட்டபின் ஜீவித்திருப்பவன்போல விளங்கினன்.

ஸகலமான ரித்விக்குக்களும் புரோஹிதர்களும் அச்வமேதாக்நியைக்கொண்டு வேதோக்தவிதிகளைச்செய்து மந்த்ரங்களோடு ஸம்ஸ்காரஞ்செய்தனர். ரித்விக்குக்களின் அனுமதிப்படி பிரேதகாரியம் நடந்தபின் ராஜாவையும் மாத்ரியையும் நெய்பூசி அலங்காரங்களைச் செய்து புன்னை, பத்மகமென்னும் வாஸனமரம், நல்ல வாஸனையுள்ள சந்தனமரம், ஸாலமரம், தேவதாருமரம், குங்கிலியமரம், கொம்பரக்கு, செஞ்சந்தனமரம், அலரிச்செடி, வெட்டிவேர் இவைகளாலும் இன்னும் பலவகை வாஸனைக்கட்டைகளினாலும் சாஸ்த்ரப்பிரகாரம் தஹனஞ்செய்வித்தனர். அவர்களுடைய இரண்டு சரீரங்களையுங் கண்டு அம்பாலிகை, "ஹா! ஹா! புத்ரனே!" என்றுசொல்லி, மூர்ச்சையடைந்து, உடனே பூமியில்விழுந்தாள். துக்கத்துடன்விழுந்த அவளைக்கண்டு நகரத்திலும் தேசத்திலுமுள்ள ஜனங்கள் ராஜபக்தியினால் அன்புகூர்ந்து துயரத்தினால் தாபமுற்று அழுதனர். குந்தியின் அழுகைக்குரலினால் மனிதர்களுடன்கூடப் பசுபக்ஷிகள் முத

விய திர்யக்ஜாதியிலுள்ள பிராணிகளெல்லாம் கதறின. அப்படியே சந்தனுபுத்ரராகிய பீஷ்மரும் சிறந்தஞானமுள்ள விதுரரும் கௌரவர்களனைவரும் மிகத்துயரமுற்றுக் கதறினர். பிறகு பீஷ்மரும் விதுரரும் த்ருதராஷ்டிரமஹாராஜாவும் கௌரவஸ்த்ரீகளனைவரும் பாண்டவர்களுடன்கூடப் பாண்டுவுக்கு ஜலதர்ப்பணஞ்செய்தனர். பாண்டவர்களனைவரும் சந்தனுபுத்ரரான பீஷ்மரும் விதுரரும் ஞாதிகளும் அழுதுகொண்டே ஜலதர்ப்பணஞ்செய்தனர். ராஜாவே! ஜலதர்ப்பணஞ் செய்தபின் வ்யஸனத்தினால் பீடிக்கப்பட்ட அந்தப்பாண்டவர்களை மந்த்ரிகளனைவரும் எடுத்துக்கொண்டு அழுதுகொண்டே ஸமாதானப்படுத்தினர். ராஜாவே! பாண்டவர்களும் அவர்கள்பந்துக்களும் எவ்வாறு தரையிற் படுத்தனரோ அவ்வாறே பிராம்மணர்முதலிய நகரத்துஜனங்களும் தரையிற்படுத்தனர். குழந்தைகள்முதல் அந்தநகரத்தின் எல்லாஇடங்களும் பாண்டவர்களுடன்கூடப் பன்னிரண்டுராத்ரிகள் ஸந்தோஷமில்லாமலும் மனஸில் ஆறுதலில்லாமலும் உத்ஸாஹமில்லாமலு மிருந்தன.

நூற்றுமுப்பத்தேழாவது அத்யாயம்.

ஸம்பவபர்வம். (தொடர்ச்சி).

(பாண்டுவுக்கு சிராத்தம்செய்ததும், குழந்தைகள் விளையாடிக்கொண்டிருக்கும்போது வீமனுக்கும் துர்யோதநாதிகளுக்கும் விரோதமுண்டானதும், ப்ரமாணகோடி யென்னுமிடத்தில் வீமனைக் கங்கையில் தள்ளினதும், பாம்புகளைக்கொண்டு கடிபடச்செய்ததும்).

பிறகு விதுரரும் பீஷ்மரும் வ்யாஸரும் த்ருதராஷ்டிரமஹாராஜாவும் பந்துக்களுடன்கூட மகிழ்ச்சியுடன்சேர்ந்து அன்னதானம் மஹாமஹம் செய்து பாண்டுவுக்குச் சிராத்தம்செய்தனர். அவர்கள் புரோஹிதர்களின் உதவியினால் சாஸ்த்ரப்ரகாரம் செய்தனர்; கௌரவர்களையும் ஆயிரக்கணக்கான ப்ராமணச்ரேஷ்டர்களையும் புசிப்பித்து, அந்தப் ப்ராமணச்ரேஷ்டர்களுக்கு ரத்நங்களையும் சிறந்த வஸ்த்ரங்களையும் தானஞ்செய்து ஸ்நானஞ்செய்தபிறகு பரதச்ரேஷ்டர்களான அந்தப்பாண்டவர்களையழைத்துக்கொண்டு எல்லாரும் அஸ்தினாபுரத்தில் ப்ரவேசித்தனர். பட்டணத்திலிருப்பவரும் தேசத்திலிருப்பவருமாகிய யாவரும் தமதுபந்து இறந்ததைப்பற்றி வ்யஸனப்படுவதுபோல் அந்தப் பரதச்ரேஷ்டனான பாண்டுவைப்பற்றி எப்போ

தும் வ்யஸனப்பட்டுக்கொண்டிருந்தனர். அந்தச்சிராத்தம் முடிந்த பின் துக்கப்பட்டுக்கொண்டிருந்த அந்தஜனங்களைக்கண்டு ஒன்றும் தெரியாமல் தாங்கக்கூடாத துக்கமடைந்த தம்தாயாரான ஸத்ய வதிக்கு வியாஸர் பின்வருமாறு சொல்லலானார்:

"கடந்துபோனகாலம் ஸுகமாகவும் வருங்காலம் கடினமாகவு மிருக்கின்றது. தினங்கள், முந்தியவற்றைப் பார்க்கிலும் பிந்தியவை அதிகக் கெடுதல்களாக இருக்கின்றன. பூமிக்கு யௌவனம்போய் விட்டது. அதிக வஞ்சகங்கள் வ்யாபித்ததும், பலவகையான பாபங் களினால் கலக்கமுள்ளதும், வர்ணச்சாரம் முதலிய தர்மங்களும் நல்ல காரியங்களும் நல்லொழுக்கங்களும் அழிந்துபோனதுமாகிய கொடிய காலம் வரப்போகிறது. கௌரவர்களின் அரசியினாலேயும் பூமி நிலைக்கப்போகிறதில்லை. நீ யோகாப்பியாஸஞ்செய்துகொண்டு ஸ்திர மானமனஸுடன் தபோவனத்தில் வாஸஞ்செய்வதற்குச் செல். உன் னுடைய இந்தக்குலத்துக்கு நேரப்போகின்ற கஷ்டமானநாசத்தை நீபாராதே" என்றார். அந்த ஸத்யவதி, "அப்படியே ஆகட்டும்" என்று அங்கீகரித்து உள்ளேபோய் மருமகளைப்பார்த்து, "அம்பிகை யே! உன்பிரானை தரிமியாதனனுடைய அரசியினால் சுற்றங்க ளுடன்கூடப் பரதவம்சத்தவரும் நகரத்துஜனங்களும் அழிந்துபோ வார்களென்று நாம்கேட்டோம். ஆதலால், விருப்பமிருந்தால் புத்ர சோகத்தினால் வாதிக்கப்பட்டுத் துயரமுற்ற இந்த அம்பாலிகையை யும் அழைத்துக்கொண்டு நாமிருவரும் வனத்திற்குப்போவோம்; உனக்குச்சுகமுண்டாகும்" என்றுசொன்னாள். பரதரே! அம்பிகை, "ஆகட்டும்" என்று ஸம்மதித்தபின் ஸத்யவதி பீஷ்மரைக்கேட் டுக்கொண்டு இரண்டுமருமக்களுடன்கூடச் சிறந்ததியமமுள்ளவளாக வனம்சென்றாள். பரதச்ரேஷ்டரே! மஹாராஜாவே! அப்போது அந்தராஜஸ்திரிகள் மிக்கதபஸ்செய்து தேகத்தைவிட்டுத் தாங் கள் விரும்பினலோகம்சென்றனர்.

அதன்பின் பாண்டவர்கள் வேதத்திற்சொல்லப்பட்ட சௌளம் உபநயனம்முதலிய ஸம்ஸ்காரங்களையடைந்து போகங்களையனுபவித் துக்கொண்டு பிதாஇருந்தவீட்டில்வளர்ந்தனர். த்ருதராஷ்டிரபுத்ரர்க ளுடன்சேர்ந்து ஸுகமாக உத்ஸாஹத்துடன் விளையாடிக்கொண்டிரு ந்த அவர்கள் சிறுவர்கள்விளையாட்டுக்கள் எல்லாவற்றிலும் தங்கள் சக்தியினால் சிறந்தவராயினர். அந்தப் பீமஸேனன் வேகத்திலும் குறித்ததைஎடுப்பதிலும் போஜனத்திலும் புழுதியிலிழுப்பதிலும் த்ருதராஷ்டிரபுத்ரர்களெல்லாரையும் பீடித்தான். ராஜாவே! ஸர்

தோஷமாக விளையாடிக்கொண்டிருக்கும் திருதராஷ்டிரபுத்ரர்களைப் பிடித்துக்கொண்டு ஓலிந்தான். அவர்களைத் தலைகளில்பிடித்துப் பாண்டவர்களுடன்முட்டினன். மிகுந்தபராக்ரமமுள்ள அந்தக்குமாரர்கள் நூற்றிருவரையும் பீமஸேனன் ஒருவனுகவே அதிகச்ரமப்படாமல் அடக்கிவிட்டான். பலவானை பீமஸேனன் பலத்தினல் அவர்கள் கதறும்படி தலைமயிர்களிற்பிடித்து அடித்து முழங்கால்களும் தலைகளும் தோள்களும்தேயத் தரையில்இழுத்தான். ஜலத்தில்விளையாடும்போது அவன் பத்துபிள்ளைகளைக் கைகளிற்பிடித்துக்கொண்டு முழுகியிருந்தான். இறந்தவர்கள்போலானபின் அவர்களைவிட்டான். மரத்தின்மேலேறி அவர்கள் பழங்களைபறித்துக்கொண்டிருக்கையில் பீமஸேனன் மரங்களைக் காலால்உதைத்து அசைத்தான். அப்போது உதையின்வேகத்தினல் அதிர்ந்தமரங்கள் அலைந்ததனல் பழங்களுடன்கூட மரங்களினின்றும் பிள்ளைகளும்விழுந்தனர். துரியோதனன்முதலிய ஸோதரர்களனைவருமே பீமஸேனன்கையினற் பிடிக்கப்பட்டுச் சிலருக்குத் தலைகளும் மார்புகளும், சிலருக்கு இடைகளும் முகங்களும் அடிபட்டன; அவர் விழுந்தனர். கைச்சண்டையிலும் ஓட்டத்திலும் தேகபயிற்சியிலும் அந்தக்குமாரர்கள் பீமஸேனனைமிஞ்ச ஆரம்பித்தும் ஒருபோதும் அவனுக்கு மேலானகாரியங்களைச்செய்யவில்லை. இவ்வாறு அந்தப்பீமஸேனன் கெட்டஎண்ணமில்லாமலே பால்யசேஷ்டையினல் திருதராஷ்டிரபுத்ரர்களை ஆக்கிரமித்து அவர்களுக்கு மிக்கவிரோதத்திற்கு இடமாகஇருந்தான்.

அதன்பிறகு மிகுந்தபராக்ரமமுள்ள துரியோதனன் பீமஸேனனுடைய அந்தவலிமை மிகப்பிரஸித்திபெற்றதைக்கண்டு தன்கெட்ட எண்ணத்தைக்காண்பிக்க ஆரம்பித்தான். தர்மத்தைவிட்டுவிலகினவனும் பாவங்களையேபார்ப்பவனுமாகிய அந்தத் துரியோதனனுக்கு அறிவின்மையாலும் ஐச்வரியத்திலுள்ள ஆசையாலும் கெடுமதியுண்டாயிற்று. "இந்தக்குந்தியின்புத்ரனை *வ்ருகோதரன் பலவான்களுள் மிகச்சிறந்தவன்; குந்தியின்புத்ரர்களில் நடுவாமிவனே மோசத்தினல்ஜயிக்கவேண்டும். இவன்பலசாலி; அதிக சக்தியுள்ளவன்; மிகுந்த சூரத்தன்மையுள்ளவன். பீமனொருவனை நம்மனைவரையும் விரோதிக்கிறான். அவனை நகரத்தின்தோட்டத்தில்தூங்கும்போது கங்கையில் தள்ளிவிடுவோம். அதன்பிறகு இவன்தம்பியாகிய அர்ச்சுனனையும் அதன்பிறகு அவன்தமையனை யுதிஷ்டிரனையும்பிடித்துச் சிறையிற்போட்டு நான் பூமியையாள்வேன்" என்றுநிச்சயம்செய்து

* பீமன்.

கொண்டு அந்தப்பாவியான துரியோதனன், அப்போது எந்த யும் மஹாத்மாவானபீமனுக்காக ஸமயம்பார்த்துக்கொண்டிருந்தான்.

பாரதரே! அதன்பின், ஜலக்கிரீடைக்காக விசித்ரங்களும் பெரி யவையுமான வஸ்திரகூடாரங்களையும் சால்வைக்கூடாரங்களையுஞ் செய்வித்தான். அவ்விடத்தில் வேண்டியவைபெல்லாம்நிரம்பினவை யும் கொடிகள்எடுத்துக்கட்டப்பட்டவையும் பலவகைப்பட்டவையு மான ஆசனகவிகைகளைச் செய்வித்தான். பாரதரே! பிரமாணகோடி யென்னுமிடத்தில் ஓரருஸ்தலத்தைஅடைந்து அந்தஇடத்தை உதகக் கிரீடனமென்றுபெயரிட்டான். விளையாட்டின்முடிவில் அவர்களிடை வரும் சுத்தவஸ்திரம்தரித்து நன்முகஅலங்கரித்துக்கொண்டு எல்லா ரஸங்களும்நிரம்பின அந்தஅன்னத்தை மெல்லமெல்லப் புசித்தனர். வீரர்களாகியகௌரவச்ரேஷ்டர்கள் விளையாடிக் களைப்புற்றுச் சாயங் காலவேளையில் விளையாட்டுக்காகஏற்பட்டகூடாரங்களிலேயே வஸிக்க நினைத்தனர். பலவானும் ஸமர்த்தருமான பீமஸேனன் ஜலக்கிரீ டைக்குவந்த அந்தக்குமாரர்களைத்தூக்கி அதிகவேகஞ்செய்ததனால் களைத்துப் பிரமாணகோடியில் வஸிப்பதற்காக ஏற்பட்டஸ்தலத்தில் மேலேயேநிப்படுத்தனன். மத்தியபானத்தினால்மயக்கமுற்ற அந்தப் பாண்டவன் குளிர்ந்திருக்குமாஸஸ்தலத்தைபடைந்து ஓய்வுடன் அசைவற்று இறந்தவன்போலத் தரையில்தூங்கினான். பிறகு துரி யோதனன் கயிறுகளைப்போன்றகொடிகளினால் பிரமாணகோடியில் தூங்கினபீமஸேனனை மெல்லக்கட்டிக் கங்கையின் ஜலத்தில்போட் டான். யுத்தவீரரிற்சிறந்தபீமன் உடனே கண்விழித்துக்கொண்டு தன்பலத்தினால் கட்டுக்களெல்லாவற்றையும்அறுத்து மறுபடியும்எழு ந்தான். சிறந்தபலமுள்ள அவன் கட்டிலிருந்துவிடுபட்டபின் அது துரியோதனன்செய்ததென்றறியவில்லை, அந்தப்பலவான் மறுபடியும் நித்திரையினால்பாவசஞ்சி அந்தஇடத்திலேயே தூங்கினான். பா ராத்திரியானபின் கௌரவர்களும் பாண்டவர்களும் எழுந்தனர். துரி யோதனன் பீமஸேனனைக்கண்டு துன்பமடைந்தான். தூங்கினவனை மறுபடியும் கூர்மையானபற்களுள்ளவையும் கொடியவிஷமுள்ளவை யுமான சீறுகின்றஸர்ப்பங்களைவிட்டு அங்கங்களின் ஸந்திகளெல்லா வற்றிலும் கடிக்கச்செய்தான். ஸர்ப்பங்களின் பற்கள் உயிர்ஸ்தானங் களில் பதிப்பிக்கப்பட்டும் பெரிபமார்பையுடைய பீமஸேனனுடைய வன்மையானதேகத்தில் குத்தவில்லை. பீமஸேனன் விழித்துக்கொண்டு அந்த ஸர்ப்பங்களெல்லாவற்றையும் தள்ளிவிட்டான். துரியோதன னுக்குப் பிரியனானஸாரதியையும் புறங்கையினால்கொன்றான். ராஜா

வே! அவ்வாறே மிக்கபொறுமைகொண்டதுரியோதனன் கொல்ல எண்ணங்கொண்டு சகுனியின் அபிப்பிராயத்தைக்கேட்டு, வலனனென்னும்சமையற்காரனுடன் ஆலோசித்துப் பிறகு அவனைக்கொண்டு பீமஸேனனுடையஆஹாரத்தில் விஷத்தைப்போடுவித்தான். கொடியதும் மயிர்க்கூச்சமெடுக்கச்செய்வதுமாகிய காளகூடவிஷமும்சேர்க்கப்பட்டது. பீமஸேனன் அதையும்புஜித்து ஓர்உபாதியுமில்லாமல் ஜரிப்பித்துக்கொண்டான். அந்தவிஷம் கொடியதாயிருந்தும் அவனுக்கு உபத்திரவத்தையுண்டாக்கவில்லை. பீமன் பயப்படத்தக்க தேகவன்மையையுடையவனுகலால் விஷத்தை ஜரிபபித்துக்கொண்டான். ராஜாவே! மற்றொருநாள் துரியோதனன் பீமஸேனனைக் கொல்லக்கருதி மந்திரியாகியசகுனியுடன் ஆலோசனைசெய்தான். இரவும்பகலும் ஓயாமல்சிந்தித்துக்கொண்டு தூங்காமலிருந்தான். இவ்வாறு துரியோதனனும் கர்ணனும் ஸுபலன்புத்திரனை சகுனியும் அனேகஉபாயங்களினால் அந்தபாண்டவர்களைக் கொல்லக்கருதினர். வைசியப்பெண்ணின்புத்திரனுகிய யுயுத்ஸுவும் பாண்டவர்களின்நன்மையிலுள்ளவிருபபத்தினால் அதைப பாண்டவர்களுக்குச் சொன்னான். எதிரிகளையடக்கத்தக்கபாண்டவர்களும் விதுரர் அபிபபிராயத்திலேயேநின்றுகொண்டு வெளிக்காட்டாமல் அதையெல்லாம அறிந்துகொண்டார்கள்.

நூற்றுமுப்பத்தேட்டாவது அத்தியாயம்.

ஸம்பவபர்வம். (தொடர்ச்சி)

(பீமனுக்கு விஷம்கலந்த பக்ஷியங்களைக்கொடுத்ததும், பிரமாணகோடியென்னுமிடத்திலே கங்கைபிலவசிபபிடினைடத்திலே அவனைத்தள்ளினதும், அவன் பாதாளலோகம்சென்று வாஸுகி கொடுத்த ரஸத்தைப பானம்செயததும்).

பிறகு அந்தத்துரியோதனன்முதலானவர்கள், "பீமஸேனன் பலமுள்ளவன்; ஸாமர்த்தியமுள்ளவன்; மிகுந்தசூரத்தன்மையுள்ளவன். இந்த வ்ருகோதரன் நம்மை எப்போதுப் விரோதிக்கிறான். இவனை நகரத்தின்தோட்டத்தில்தூங்கும்போது ஜலத்தில்நாட்டபபட்ட சூலத்தின்மேல் போடுவோம்" என்று நிச்சயம்செய்தனர். பாரதவீர! பிரமாணகோடியென்னுமிடத்தில்போய் ஜலக்ரீடைக்காக ஒருஸ்தலம்செய்வித்தனர். அவ்விடத்தில் சமையல்வேலையில்தேர்ந்த மனிதர்களினால் பக்ஷணமுதலிய உணவும் குடிக்கத்தக்கவையும்

உறிஞ்சத்தக்கவையும் நக்கிச்சாப்பிடத்தக்கவையும் ஸித்தம்செய்யப் பட்டன. அப்போது வேலைக்காரர்கள் துரியோதனனுக்கு அதைத் தெரிவித்தனர். பிறகு தூர்ப்புத்தியுள்ள துரியோதனன் அங்கே பாண்டவர்களைப்பார்த்து, "தோட்டங்களிலும்சோபிக்கின்ற கங்கைக்குச் செல்வோம். ஸஹோதரர்களாகிய நாமனைவரும்சேர்ந்து ஜலக்கிரீடைசெய்வோம்" என்றுசொன்னன். யுதிஷ்டிரரும், "அப்படியே யாகட்டும்" என்று அவனுக்கு மறுமொழிகூறினர். சூரர்களான அந்தக்கௌரவபாண்டவர்கள் நகரங்களைப்போன்றதேர்களிலும் அந்தத் தேசங்களிலுண்டான சிறந்தயானைகளிலும் ஏறிக்கொண்டு நகரத்தை விட்டுப்புறப்பட்டனர். உத்யானவனம்சேர்ந்தவுடன் ஜனக்கூட்டத்தையனுப்பிவிட்டு வீரர்களாகிய அந்தச்சகோதரர்களனைவரும் வெண்மையானகாரியசாலைகளாலும், நடுவேயுயர்ந்து இருபுறமும் சரிவாயுள்ள கூரைகளோடுகூடிய தூண்கள்நிறுத்தின சாலைகளாலும், பல கணிகளாலும், துவாரங்களாலும், ஜலயந்திரங்களாலும், நடப்பதற்குரியபாதைகளாலும் சோபிப்பதும் கொத்தர்களால் மெழுகப்பட்டதும் சித்திரக்காரர்களால் சித்திரமெழுதப்பட்டதுமான உத்யானத்தைப்பார்த்துக்கொண்டே ஸிம்மங்கள் மலைக்குகைகளிற்பிரவேசிப்பதுபோல் அதிற்பிரவேசித்தனர். ஜலம்நிரப்பப்பட்ட வாவிகளிலும் தாமரையோடைக்களிலுமுள்ள ஜலம், மலர்ந்த தாமரைப்புஷ்பங்களினால் மூடப்பட்டு அழகாயிருந்தது. அப்படியே காலத்துக்குரியபுஷ்பங்களினால் பூமிமறைக்கப்பட்டிருந்தது. அந்தப்பாண்டவகௌரவர்களனைவரும் அங்கேஉட்கார்ந்து, ஆங்காங்கிருந்துகொண்டுவரப்பட்டனவும் தாங்கள்விரும்பினவுமான உணவுகளைப் புஜித்தனர். அந்தச் சிறந்தஉத்யானத்தில் விளையாடிக்கொண்டிருந்த அவர்கள் அந்த அந்தப்பக்ஷணங்களையும் ஒருவர்க்கொருவர் வாய்களிற்கொடுத்தனர்.

அப்போது பாவியான துரியோதனன், பீமனைனைக்கொல்லக் கருதி அந்தப்பக்ஷணத்தில் காளகூடவிஷத்தைப் போடும்படிசெய்தான். அப்போது உள்ளத்தில் கத்தியைப்போன்றவனும் பேச்சில் அமிர்தத்துக்கொப்பானவனுமாகிய அந்தப்பாவியான துரியோதனன் தானேயெழுந்து ஸஹோதரனைப்போலவும் ஸ்நேஹிதனைப்போலவும் பீமனுக்கு மிகுதியாகப் பக்ஷணத்தையூட்டினன். அந்தமோசத்தை யறியாமல் பீமஸேனன் செம்மையாகப்பக்ஷித்தான். பிறகு மனிதர்களுக்குள் அதமனான துரியோதனன், அந்தப்பீமனைப்பற்றி மனஸுக்குள்சிரித்துக்கொண்டு தான் கிருதார்த்தனைபோலநினைத்தான். பிறகு அந்தப்பாண்டவர்களும் திருதராஷ்டிரபுத்திரர்களும்

எல்லோரும்சேர்ந்து களிப்புற்றமனத்துடன் ஜலக்கிரீடைசெய்தனர். விளையாட்டுக்காகவுற்பட்ட கூடாரங்களிலேயே அந்தவீரர்கள் வஸிக்கவிரும்பினர். பலவானுகியபீமன், பிரமாணகோடியில் ஜலக்கிரீடைக்காகவந்த அந்தக்குமாரர்களைநடத்தி ஜலத்தில்விளையாடின ச்ரமத்தினுல், அதிகமாகப் போஜனம்செய்து தங்குமிடந்தேடி அந்த இடத்தையடைந்தான். களைப்புற்றும் குடிமயக்கத்தினுல்மயங்கியும், விஷம்தேகத்தில் வ்யாபித்துமிருந்ததனுல் குளிர்ந்தகாற்றையடைந்தவுடன் அசைவற்றுத்துங்கினுன். பிறகு துரியோதனன் தானே கயிறுகளைப்போன்றகொடிகளால் பீமனைக்கட்டி, சூலங்களை ஒட்டையளவு இடைவிட்டு ஜலத்தில்நாட்டி, கயிறுகளாகச்செய்யப்பட்ட கொடிகளினுல் கெட்டியாகக்கட்டப்பட்ட அந்தப்பீமனை உடனே கரையிலிருந்து ஜலத்தில்தள்ளிவிட்டான். அந்தப்பீமனுக்கு வாழ்நாள் மிச்சமிருந்ததனுல் ஜலத்தில் சூலங்கள்நடப்பட்டஇடத்தில் விழவில்லை. அவன்விழுந்தஇடத்தில் தற்செயலாகச் சூலமிருக்கவில்லை. அந்தப்பீமனைன் பிரஜ்ஞையில்லாமல் நாகலோகத்திலுள்ள நாககுமாரர்களைப்பீடித்துக்கொண்டு கவிழ்ந்து ஜலத்துக்குள்மூழ்கினுன். பிறகு கொடியவிஷமுள்ளவையும் பெருங் கோரப்பற்களுள்ளவையுமான அனேகநாகங்கள்சேர்ந்து அதிகமாக விஷத்தைக்கொட்டிப் பீமனை மிகக்கடித்தன. அவன்கடிக்கப்படும்போது ஸ்தாவரவிஷமாகியகாளகூடம் ஜங்கமமானஸர்ப்பவிஷத்தாலேயே அடிக்கப்பட்டது. கூர்மையானபற்களையுடைய அந்தஸர்ப்பங்களின்பற்கள் பெரியமார்பையுடைய அந்தப்பீமனுடைய நுட்பஸ்தானங்களில் பாய்ச்சப்பட்டும் வன்மையினுல் அவன்தோலை (பல்லழுந்தும்படி) கொத்தாமற்போயின. பிறகு பீமனைன் விழித்துக்கொண்டு கட்டுக்களையெல்லாமறுத்து அந்தஸர்ப்பங்களை நசுக்கினுன். சிலஸர்ப்பங்கள் பயந்துஓடின. பீமனுல் அடிபட்டவற்றில் மிஞ்சினநாகங்களெல்லாம், ஸர்ப்பராஜாவும் இந்திரனைப்போன்றவனுமான வாஸுகியினிடம் சென்று, "நாகராஜாவே! இம்மனிதன் ஜலத்தில்கட்டித் தள்ளப்பட்டான். இவன் விஷப்குடித்திருக்கவேண்டுமென்று நாங்கள்நினைக்கிறோம். (அவன்) அசைவற்றவனுக எங்களிடம்வந்தான்; கடிக்கப்பட்டவுடன் விழித்துக்கொண்டான். பிரஜ்ஞையடைந்தவுடன் கட்டையறுத்துக்கொண்டு எங்களைநசுக்குகின்ற அந்தமஹாவீரனை நீ தெரிந்துகொள்ளவேண்டும்" என்றன.

பிறகு வாஸுகி, நாகங்கள்பின்தொடர்ந்துவர (சென்று) பயப்படத்தக்க பராக்ரமமுள்ள சிறந்தகைக்காரனுகிய பீமனைப்பார்த்தான்.

குந்திக்குக்கூடஸ்தனை *ஆர்யகனென்னும்நாகத்தினிலும் அவன் பார்க்கப்பட்டான். அப்பொழுது தன்பேரனுக்குப்பேரனை பீமனை ஆர்யகன் இறுகக்கட்டிக்கொண்டான். பெருங்கீர்த்தியுள்ளவாஸுகி பீமனிடத்தில் அன்புடன், "இவனுக்கு என்னவிருப்பத்தை நாம் செய்யலாம். பணக்குவியலையும் ரத்தினக்குவியலையும் இவனுக்கு வெகுமானமாகக்கொடுப்பாயாக" என்று தன்னுடனிருந்த நாகனுக்குக்கட்டளையிட்டான். இவ்வாறுசொல்லப்பட்ட அந்த ஆர்யகன், வாஸுகியைநோக்கி, "நாகராஜாவே! உனக்கு விருப்பமிருந்தால் இவனுக்குத்தனக்குவியலால் என்னஉபயோகம்; உன்பிரீதியிருக்கும் போது மஹாபலசாலியான இந்தக்குமாரன் ரஸத்தைக்குடிக்கட்டும். ஆயிரம்யானைபலமுள்ள ரஸம் ஒருகுடத்தில்வைக்கப்பட்டிருக்கிறது. இந்தக்குமாரன் எவ்வளவுகுடிப்பனை அவ்வளவு இவனுக்குக்கொடுக்கலாம்" என்று மறுமொழிசொன்னன். "அப்படியேஆகட்டும்" என்று அந்தநாகனுக்கு வாஸுகி சொன்னன். பிறகு பீமஸேனன் நாகர்களினால் மங்களாசீர்வாதம்செய்யப்பெற்றுப் பரிசுத்தனைக் கிழக்குமுகமாயுட்கார்ந்து ரஸத்தைப்பானஞ்செய்தான். மஹாபலமுள்ள பீமஸேனன் ஒருமூச்சில் ஒருகுடம்குடித்தான். இவ்வாறு அந்தப் பாண்டுபுத்ரன் எட்டுக்குடங்களைக்குடித்தான். அதன்பின் சிறந்த புஜங்களுள்ளவனும் எதிரிகளையொழிப்பவனுமாகிய பீமஸேனன் ஸுகமாக நாகர்கள்கொடுத்த உயர்ந்தசயனத்தில் நித்திரைசெய்தான்.

நூற்றுமுப்பத்தொன்பதாவது அத்தியாயம்.

ஸம்பவபர்வம். (தொடர்ச்சி).

(பீமன்வராதனைப்பற்றிக் தந்தைக்கும் விதுரருக்கும் நடந்த ஸம்பாஷணையும், பதினாயிரம்யானைபலத்துடன் பீமன்திரும்பி அஸ்தினாபுரம் வந்ததும், பீஷ்மர் தமாரர்கள் எல்லாரையும் தனுர்வேத சிக்ஷைக்காகக் கிருபாசாரியரிடம் ஒப்பித்ததும்).

பாபசிந்தையுள்ள துரியோதனன் பீமஸேனனை ஸர்ப்பங்களுள்ள மடுவில்தள்ளிவிட்டு அப்போதே தன்னைக்கிருதார்த்தனெனநினைத்தான். இரவுகழிந்ததும், "பீமஸேனன் நமக்குமுன்னமேயே போய்விட்டான்" என்றுசொல்லிக்கொண்டு அவ்விடமிருந்து நகரம்

---

* ஆர்யகனுடைய பெண்வயிற்றுப்பிள்ளை சூரன்; அவன் பெண்குந்தி; குந்தியின்குமாரன் பீமன்.

போனுன். தரம் பாபம்செய்தறியாத தர்மாத்மாவான யுதிஷ்டிரர் தம்மைப்போலவே பிறரையும் யோக்கியராக நினைத்திருந்தார். பிரா தாவினிடம் அன்புள்ள அந்தத்தர்மபுத்திரர் தாயாராகிய குந்தியிடம் வந்து நமஸ்காரஞ்செய்து, "அம்மா! பீமன் இங்கேவந்தானு? அம் மா! இங்கே அவனைக்காணவில்லையே? எங்கேபோயிருப்பான்? தோ ட்டங்களிலும் காடுகளிலும் எல்லாம் அவனைத் தேடினேம். நாங்கள் அந்தவீரனை பீமனைக் காணவில்லை. மஹானுபாவையே! அதன் பிறகு நமக்குமுன்னமே அவன்போய்விட்டானென்றுநினைத்து எல் லோரும் கலங்கினமனத்துடன் வந்திருக்கிறோம். இங்கேவந்து எங் கேயாவது போனுனு? அல்லது நீ எங்கேயாவது அனுப்பினையா? புக முள்ளவளே! சிறந்தகைகளையுடைய பீமனைனைப்பற்றிச் சொல்லு. சிறந்தவளே! அந்தவீரனைப்பற்றி என்மனம்தெளிவாயில்லை. ஏனென் றால், நான் பீமன் தூங்கினதாகநினைத்தேன். அவன் இல்லையென் பதனால் அவன் கொல்லப்பட்டவன்தான்" என்றார். சிறந்த புத்தி யுள்ள தர்மராஜாவினால் இவ்வாறுசொல்லப்பட்டகுந்தி உடனே பதை பதைத்து ஹாஹாகாரஞ்செய்து யுதிஷ்டிரரைப்பார்த்து, "புத்திர னே! பீமனைனை நான்பார்க்கவில்லையே! அவன் என்னிடம் வர வில்லையே! நீ தம்பிகளுடன்கூட அவனைத்தேடுவதில் முயற்சிசெய்" என்று சொன்னுள். பாண்டவர்கள் விரைவாக நகரத்தின் தோட்டத் திற்குச்சென்று தேடினர். பாண்டவர்கள் வாயினால், "பீமா, பீமா" என்று உரக்கக்கூவினர். அவர்கள் எல்லோரும்தேடியும் ஸஹோ தரனைக்காணவில்லை. அப்போது மறுபடியும் தங்கள்வீட்டுக்குவந்து குந்தியைப்பார்த்து, "அம்மா! மஹாபாகுவானபீமனை வனத்திலும் தோட்டங்களிலும் தேடினேம்; நதிகளிலெல்லாம்தேடினேம்; காண வில்லை" என்றுகூறினர். பிறகு அந்தக்குந்தி விதுரரைத் தன்வீட் டுக்குவருவித்து, "விதுரரே! பலசாலியான பீமனைனைக் காண வில்லையே! ஸஹோதரர்களானபாண்டவர்கள் ஸஹோதரர்களான கௌரவர்களோடுகூடத் தோட்டத்திலிருந்துவந்தனர். அவர்களில் மஹாபாகுவானபீமன் ஒருவன்மட்டும் இங்கே என்னிடம்வந்துசேர வில்லை. அவன் துரியோதனனுடையகண்ணுக்கு ஒருபொழுதும் பிரியமாயிருக்கவில்லை. துரியோதனன் கொடியவன்; கெட்டநினை வுள்ளவன்; அற்பன்; ராஜ்யத்தில் ஆசைவைத்தவன்; வெட்கமில்லா தவன். துரியோதனன் கோபம்வைத்து அந்தவீரனைக் கொன்றுமிரு ப்பான். அதனால், என்மனம் கலங்குகின்றது. என்னுள்ளம் எரிவது போலிருக்கிறது" என்றுள். விதுரர், "குணமுள்ளவளே! இந்த

விஷயத்தைச் சொல்லாதே. புத்திரர்களைக் காப்பாற்று. துஷ்டஸ்வபாவமுள்ள துரியோதனனை நிந்தித்தால் உன்னுடைய மற்றப்புத்திரர்களையும் கொன்றுவிடுவான். (வியாஸ) மஹரிஷிசொன்னபடி உன்னுடையபுத்திரர்கள் தீர்க்காயுஸுள்ளவர்களே. உன்புத்திரன்வந்து உனக்கு ஸந்தோஷத்தையும் உண்டுபண்ணுவன்" என்றுசொன்னர். வித்வானுகியவிதுரர் இவ்வாறுசொல்லித் தமதுமனைக்குச்சென்றார். குந்திபுத்திரர்களுடன்கூடக் கவலையுற்றவளாக வீட்டுக்குள்இருந்தாள்.

அதன்பின் எட்டாவதுநாள் பீமஸேனன் விழித்துக்கொண்டான். அப்போது அந்தரஸம் ஜரித்தபின் பலவானுனஅவன் அளவிடக்கூடாத பலமுள்ளவனுனன். தூங்கியெழுந்த அந்தப்பீமனைப்பார்த்து அந்தநாகர்கள், மெல்லச் சமாதானப்படுத்தி, "மஹாபாகுவே! சக்திநிரம்பின இந்தரஸத்தை நீகுடித்ததனுல் பதினுயிரம் யானைகளின்பலத்தோடு போரில் வெல்லமுடியாதவனுவாய். இப்போது நீ இந்தத்தேவலோகத்துள்ள ஜலத்தினுல் ஸ்நானஞ்செய்து உன்வீடுசெல். குருச்ரேஷ்டனே! உன்னைவிட்டு உன்ஸஹோதரர்கள் துன்பப்படுகின்றனர்" என்றசொல்லியும் சொன்னர்கள். சிறந்தகைகளையுடையவனும் மஹாபலசாலியும் வீரனுமாகியபீமன் உடனே ஸ்நானஞ்செய்து பரிசுத்தமும் வெண்மையுமான வஸ்திரங்களையும் புஷ்பங்களையும்தரித்து நாகனுடையகிருஹத்தில் விஷங்களைப்போக்குகின்றவைகளும் நல்ல மணமுள்ளவைகளுமாகிய மூலிகைகளினுல் விசேஷமாக மங்களகங்கணங்கள்கட்டப்பட்டு, நாகர்களால்கொடுக்கப்பட்ட பரமான்னத்தைப்புஜித்து நாகர்களுடைய பூஜைகளையும் ஆசீர்வாதங்களையும்பெற்றுத் தேவலோகத்துள்ள ஆபரணங்கள்நிறைந்தவனுக நாகர்களிடம் விடைபெற்றுக்கொண்டு மனமகிழ்ச்சியோடு நாகலோகத்திலிருந்து மேலேஏறினுன். தாமரைக்கண்ணனுகியபீமஸேனன் நாகர்களால் ஜலத்திலிருந்து தூக்கிக்கொண்டுவந்து முன்னிருந்த வனப்பிரதேசத்திலேயே விடப்பட்டான். பீமஸேனன்பார்த்திருக்கும்போதே அந்தநாகர்கள் மறைந்தார்கள்.

மஹாபலசாலியும் சிறந்தகைகளையுடையவனும் குந்திபுத்திரனுமாகிய பீமஸேனன் உடனேயெழுந்து விரைவாகத் தாயாரிடம்வந்தான். பிறகு பகைவரையழிப்பவனுகிய பீமன் தாயாரையும் ஜ்யேஷ்டஸஹோதரரான தர்மபுத்திரரையும் வந்தனஞ்செய்து தம்பிகளை உச்சிமோந்து, புருஷசிரேஷ்டர்களான அந்தச்சகோதரர்களாலும் தாயாராலும் தழுவிக்கொள்ளப்பட்டான். ஒருவர்மேலொருவர்நேசமுற்றஅவர்கள், "நற்காலம்! நற்காலம்!" என்றுசொல்லிக்கொண்ட

னர். மிகுந்தபலத்தையும் பராக்கிரமங்களையுமுடையபீமசேனனும் துரியோதனன்செய்தவையெல்லாவற்றையும் தன்சகோதரர்களுக்குச் சொன்னன். பீமசேனன் நாகலோகத்தில் என்னநடந்தனவோ அந்தநன்மைதீமைகளெல்லாவற்றையும் பூரணமாகச்சொன்னன். பிறகு ராஜாவானயுதிஷ்டிரர் பீமசேனனைப்பார்த்து உட்கருத்தமைந்த சொல்லைச்சொல்லலானார்: "நீபேசாமலிரு. இந்தக்காரியம் எவ்வகையிலும் சொல்லத்தக்கதன்று. இதுமுதல் நீங்களெல்லாரும் ஒருவர்க்கொருவர் ஜாக்கிரதையுடன் பீமனைக்காப்பாற்றுங்கள்" என்றார். சிறந்தகைகளையுடைய தர்மராஜாவானயுதிஷ்டிரர் இவ்வாறுசொல்லி அப்போதுமுதல் சகோதரர்கள் எல்லாருடனுங்கூடி ஜாக்கிரதையாக இருந்தார். பாண்டவர்கள் பிரமன்விஷயத்தில் (நடந்த) அந்தச் செய்கையைத்தெரிந்துகொண்டபோது, ரஹஸ்யத்தை ரக்ஷிப்பதில் ஜாக்கிரதையுடன், (அதை) வெளிப்படுத்தாமலேயிருந்தார்கள். தர்மாத்மாவும் புத்திமானுமாகிய விதுரர் அவர்களுக்கு ஆசீர்வசனம் சொன்னார். துரியோதனனும் அந்தப்பீமன் திரும்பிவந்ததைக்கண்டு ஒவ்வொருநாளும் இதையேநினைத்துப் பெருமூச்சுவிட்டுக்கொண்டு தாபமடைந்தான். திருதராஷ்டிரமஹாராஜா மிகுந்த பலகர்வத்தோடு விளையாடிக்கொண்டிருக்கும் அந்தக்குமாரர்களைக்கண்டு அவர்களுக்கு (அஸ்திரவித்தையைக்) கற்பிக்கிறதற்காக நாணல்கட்டையிற்பிறந்தவரும் வேதங்களிலும் சாஸ்திரவிஷயங்களிலும்கரைகண்டவருமாகியகிருபாசாரியரைக் குருவாகத்தேடி அவர்களை அவரிடம் ஒப்புவித்தான். ராஜாவினால் அவரிடம்ஒப்பிக்கப்பட்ட அந்தக்கௌரவர்களனைவரும் அவரிடம் குருகுலவாஸஞ்செய்து தனுர்வேதத்தைக் கற்றனர்" என்று வைசம்பாயனர் சொன்னார்.

நூற்றுநாற்பதாவது அத்தியாயம்.

ஸம்பவபர்வம். (தொடர்ச்சி).

(கிருபர், துரோணர், அச்வத்தாமா இவர்களுடைய உத்பத்தியும், துரோணர் பரசுராமரிடம் அஸ்திரலாபம் பெற்றதும்).

அதுகேட்ட ஜனமேஜயர், "பிராமணரே! கிருபருடைய ஜனனத்தைப்பற்றியும் எனக்குச் சொல்லக்கடவீர். அவர் நாணற்றண்டிலிருந்து எவ்வாறு உண்டானார்? எவ்வாறு அஸ்திரங்களையடைந்தார்?" என்றுகேட்க, வைசம்பாயனர் சொல்லலானார்.

"மஹாராஜாவே! பிரபுவே! கௌதமமஹரிஷிக்குச் சரத்வானென்றும் *கௌதமரென்றும்சொல்லப்பட்ட புத்திரர் பாணங்களுடன்பிறந்தார். சூரரே? அந்தச் சரத்வானுக்குப் புத்தி தனுர்வேதத்தில் எவ்வாறுபிரவிர்த்தித்ததோ அவ்வாறு வேதாத்தியயனத்தில் பிரவிர்த்திக்கவில்லை. பிரம்மசாரிகள் வேதங்களைத் தவத்தினால் எவ்வாறு கிரகித்தனரோ அவ்வாறு அவர் தவத்துடன்கூடி எல்லா அஸ்திரங்களையுமடைந்தார். அந்தக் கௌதமபுத்திரரான சரத்வான் தனுர்வேதத்தில் ஊக்கமுடையவராயிருந்ததினால் பெருந்தவஞ்செய்து இந்திரனுக்குப்பெருந்துயரத்தையுண்டுபண்ணினார். கௌரவரே! அதன் பிறகு தேவராஜன் அவர் தவத்திற்கு இடையூறுசெய்யென்று சொல்லி ஜாலவதியென்னும் தேவகன்னிகையை அனுப்பினான். அந்தச்சிறுமி சரத்வானுடைய அழகான ஆச்ரமத்திற்குச்சென்று தனுஸையும் பாணத்தையும் தரித்திருக்கும் சரத்வானை மயங்கச்செய்தாள். கௌதமர் உலகத்தில் ஒப்பில்லாத வடிவுள்ளவளும் ஒற்றை வஸ்திரம் தரித்தவளுமாகிய அந்த அப்ஸரஸை வனத்திற்கண்டு மலர்ந்தகண்களுடையவரானார். அவருடைய இருகரங்களினின்றும் வில்லும் அம்புகளும் பூமியில்விழுந்தன. உடனே அவருடைய சரீரத்திலும் நடுக்கமுண்டாயிற்று. ஆனல் மிகுந்தஞானமுள்ள அந்தக்கௌதமர் ஞானத்தின் சிறப்பினலும் தபோபலத்தினலும் மிக்க உறுதியுட்னிருந்தார். ராஜாவே! அவருக்கு அவளைப்பார்த்தவுடனே உண்டான மனவேறுபாட்டினல் வீரியம் நழுவிற்று. அவர் அதனை அறியவில்லை. அந்தமுனி வில்லையும், அம்புகளையும், கிருஷ்ணஜினங்களையும், அந்த ஆச்ரமத்தையும், அந்த அப்ஸரஸையும் விட்டுச்சென்றார். அவருடைய அந்தவீரியம் நாணற்றண்டில் விழுந்தது. ராஜாவே! நாணற்றண்டில் விழுந்த அந்தவீரியம் இரண்டுபாகமாகப் பிரிந்தது. பிறகு அந்தக் கௌதமராகிய சரத்வானுக்கு ஆணும்பெண்ணுமாகிய ஓர் இரட்டை பிறந்தது. அந்தக் கௌதமமஹரிஷியின் ஆச்ரமலமீபத்தில் சந்தனுமஹாராஜா வேட்டையாடிக்கொண்டிருக்கையில் சைனியத்தைச்சேர்ந்த ஒருவன் தற்செயலாகக் காட்டில் அந்த ஆணும்பெண்ணுமாகிய குழந்தைகளைக் கண்டனன். வில்லையும் அம்புகளையும் கிருஷ்ணஜினங்களையும் கண்டு தனுர்வேதத்திற்கரைகண்ட பிராமணர்களுடைய குழந்தைகளென்றறிந்து அவன் அந்த இரண்டு குழந்தைகளையும் அம்புகளோடுகூடிய வில்லையும் சந்தனுமஹாராஜாவுக்குக் காண்பித்தான். அந்தராஜா கிருபைகூர்ந்து அவ்விரண்டுகுழந்

* கோதமர்குலத்தில் பிறந்தவர்.

தைகளையும் எடுத்துக்கொண்டு "எனதுபெண், எனதுபிள்ளை" என்றுசொல்லித் தன்வீட்டிற்குச் சென்றான்.

பிறகு பிரதீபபுத்திரனுகிய அவ்வரசன் கௌதமருடைய அவ்விரண்டுகுழந்தைகளையும் வளர்த்து ஜாதகர்மம்முதலான ஸம்ஸ்காரங்களையுஞ் செய்வித்தான். இருதக்குழந்தைகள் தன்னுல் க்ருபையோடுவளர்க்கப்பட்டதனுல் அவ்வரசன் அவர்களுக்கு அதேபெயரை இட்டான். அதனுல் புத்திரன், கிருபனென்றும் அந்தப்பெண் கிருபி என்றும்சொல்லப்பட்டார்கள். அவர்களுடையபிதாவாகிய கௌதமரும் தவத்தினுல் அவர்கள் அங்கிருப்பதையறிந்து அப்போது தாம் வந்து அந்தபபுத்திரனுக்குக் கோத்திரமுதலிய எல்லாவற்றையும் சொன்னர். ராஜாவே! கிருபரும் அபபோதுமுதல் தனுர்வேதத்திலேயே பற்றுள்ளவராகஇருந்தார். *நான்குவகையான தனுர்வேதத்தையும் அனேகசாஸ்திரங்களையும் நுட்பமானவிஷயங்களெல்லாவற்றையும் கிருபருக்கு அவர்பிதா பூர்ணமாகக்கற்பித்தார். அந்தக்கிருபர் ஸ்வல்பகாலத்தில் சிறந்தஆசாரியரானர். பீஷ்மாசாரியர் கிருபரையழைத்து, "இவர்கள் உமதுசிஷ்யர்கள்" என்றுசொல்லித் தம்பேரன்மார்களைக்கொண்டுவந்துவிட்டுக் கிருபாசாரியரை உபசரித்தார். பிறகு மஹாரதர்களாகிய அந்தத்ருதராஷ்டிரபுத்திரர்களும பாண்டுபுத்திரர்களுமாகிய யாவரும் யாதவர்களுடன்சேர்ந்து தனுர்வேதத்தை அத்யயனஞ்செய்தனர். யாதவர்களும் பற்பலதேசங்களினின்றும்வந்த மற்றஅரசர்களும கிருபரை ஆசாரியராகஅடைந்து சிறந்தஅஸ்திரங்கள் தெரிந்தவர்களாயினர். ராஜாவே! அதன்பிறகு பீஷ்மர், தம்பௌத்திரர்களுக்கு இன்னும் அதிகமானசிறப்பைவிரும்பி, கற்பிப்பதற்காகப் பாணங்களிலும அஸ்திரங்களிலும் நிபுணர்களும பராக்கிரமத்தில் பெயர்பெற்றவர்களுமாகிய ஆசாரியர்களைபபற்றிவிசாரித்தார். ராஜாவே! மஹாபலசாலிகளான கௌரவர்களுக்கு அஸ்திரங்கள்

* நான்குவகையானதனுர்வேதமாவன :—ப்ரயோகம் = விடுப்பது, ஸம்ஹாரம் = திரும்பியெடுப்பது, கல்பம் = மந்திரசித்திக்குரிய புரச்சரணமுதலிய விதம், ரஹஸ்யம் = அவ்வவற்றின் ஸ்வரூபஜ்ஞானம் என்பனவாம். முக்தம் = விட்டுவிடத்தக்கபாணம், அமுக்தம் = விடாமல் உபயோகிக்கத்தக்கத்திமுதலியவை, முக்தாமுக்தம் = விட்டுத் திரும்பியெடுக்கத்தக்க அஸ்திரங்கள், மந்திரமுக்தம் = எடுக்கமுடியாமல் மந்திரத்தினுல் பிரயோகிக்கப்படும் அஸ்திரங்கள் என்றும்; சஸ்திரம் = வெறுஆயுதம், அஸ்திரம் = மந்திரத்தோடு கூடியது, ப்ரத்யஸ்திரம் = அஸ்திரத்தைத்தடுக்கும்அஸ்திரம், பரமாஸ்திரம் = எதிர்அஸ்திரமில்லாதஅஸ்திரம் என்றும்; ஆதானம் = எடுப்பது, ஸந்தானம் = தொடுப்பது, விமோகம் = விடுப்பது, ஸம்ஹாரம் = திருப்புவது என்றும் நான்குவகைஎன்பது பழைய உரை.

கற்பிக்க அற்பபுத்தியுள்ளவனும் பெரியமஹிமையில்லாதவனும் அஸ்த்ரங்களில் நிபுணனில்லாதவனும் தெய்வத்தன்மையில்லாதவனும் தகான்" என்றுநிணைத்துப் பரதச்ரேஷ்டராகியபீஷ்மர், அப்போதே வேதங்களையறிந்தவரும் சிறந்தபுத்தியுள்ளவருமான பரத்வாஜபுத்திரராகிய துரோணரிடம் பாண்டுபுத்திரர்களையும் திருதராஷ்டிரபுத்திரர்களையும் சிஷ்யர்களாகஒப்பித்தார்.

"பெரியமஹிமையுள்ளவரும் அஸ்த்ரவித்வான்களுட்சிறந்தவரும் பெரும்புகழ்பெற்றவருமாகிய துரோணர், அந்தமஹாத்மாவான பீஷ்மரால் சாஸ்திரப்ரகாரம் செம்மையாகப் பூஜைசெய்யப்பெற்று, திருப்தியடைந்து அவர்களனைவரையும் சிஷ்யர்களாக அங்கீகரித்தார். துரோணர், அவர்களுக்குத் தனுர்வேதத்தை முழுதும்கற்பித்தார், ராஜாவே! அளவற்றபராக்ரமமுள்ள அந்தக்கௌரவர்களும் பாண்டவர்களும் ஸ்வல்பகாலத்தில் எல்லாஆயுதங்களிலும் தேர்ந்தவர்களாயினர்" என்றுசொல்ல, ஜனமேஜயர், "பிராமணரே! துரோணர் எப்படிப்பிறந்தார்? எவ்வாறு அஸ்த்ரங்களையடைந்தார்? கௌரவர்களிடம் எவ்வாறுவந்தார்? அந்தவீரர் யாருடையபுத்ரர்? அஸ்த்ரம் தெரிந்தவர்களிற்சிறந்தவரும் அவருடையபுத்ரருமான அந்தஅசுவத்தாமா எவ்வாறுபிறந்தார்? இதை நான்கேட்க விரும்புகிறேன்; விரிவாகச்சொல்லுங்கள்" என்றுகேட்க, வைசம்பாயனர்சொல்லத் தொடங்கினர்.

"முற்காலத்தில் கங்கையின்உத்பத்திக்குஸமீபத்தில், மஹிமை பெற்றவரும் எபபோதும் கடுமையானதவமுள்ளவருமாகிய பரத்வாஜ சென்றுபெயர்பெற்ற ஒருமஹரிஷியிருந்தார். அந்தபரத்வாஜர் ஸ்நானத்திற்காகக் கங்கைக்குச்சென்றார். அந்தப் பரத்வாஜரிஷி மஹரிஷிகளுடன்கூட ஹவிர்த்தானமென்னுமிடத்தில் ஸஞ்சரிக்கும்போது அழகும்யௌவனமும்சேர்ந்தினவளும் மதமுள்ளவளும் யௌவனமதத்தினால் மெல்லநடபபவளுமாகிய க்ருதாசியென்னும அபஸரஸ் முன்னமேவந்து ஸ்நானஞ்செய்துகொண்டிருப்பதைப் பிரத்யக்ஷமாகப் பார்த்தார். அந்தநதிக்கரையில் அவளுடையஆடையைக் காற்றுவிலக்கிற்று. வஸ்த்ரம்விலகிப்போன அவளைக்கண்டு ரிஷி அபபோதே விருப்பமுற்றார். சிறந்த ஞானமுள்ள பரத்வாஜரிஷி அவளிடம் மனம்பற்றி ஆனந்தமடைந்தபோது அவருடையவீரியம் நழுவிற்று. அந்தரிஷி அதைத் துரோணமென்னும்பாத்ரத்தில் வைத்தினர். அதனால் அந்த ஞானமுள்ள பரத்வாஜரிஷிக்குத் துரோணர் குடத்தில்பிறந்தார். அவர் வேதங்களையும் வேதாங்கங்களையும் முற்றிலும் அத்யயநஞ்

செய்தார். காசியபரிஷி அக்கினியினிடமிருந்து அஸ்திரம்பெற்றுக் கொண்டு எதைத்தெரிந்துகொண்டிருந்தாரோ அந்த அஸ்திரவித்தை யைத் தேவகாரியத்திற்காகப் பரத்வாஜர் காச்யபரிடமிருந்து அடை ந்தார். பராக்ரமசாலியும் அஸ்திரம்தெரிந்தவர்களிற்சிறந்தவருமாகிய பரத்வாஜர் மிகுந்தமஹிமையுள்ள அக்நிவேச்யருக்கு அந்த ஆக்நே யாஸ்திரத்தைக் கொடுத்தார். பரதச்ரேஷ்டரே! அந்த அக்நிவேச்ய முனிவர் பரத்வாஜபுத்ரரும் தமக்குஸஹோதரருமாயிருக்கும் துரோ ணருக்குத் தமக்குப் பரத்வாஜரிடமிருந்துகிடைத்த அந்த ஆக்நேய மென்னும் மஹாஸ்திரத்தைக் கொடுத்தார். பரத்வாஜருக்குஸ்நே ஹிதனுகிய ப்ருஷதனென்றுபெயருள்ள ஓரரசன்இருந்தான். அவ னுக்கு த்ருபதன் என்னும்புத்திரன்உண்டானன். அந்தக்ஷத்ரிய ச்ரேஷ்டனுகிய த்ருபதராஜன் ஒவ்வொருநாளும் ஆச்ரமத்திற்குச் சென்று துரோணருடன்கூட விளையாடிக்கொண்டும் அத்யயனஞ் செய்துகொண்டுமிருந்தான்.

பிறகு ப்ருஷதன் காலஞ்சென்றபின் வீரனும் புருஷச்ரேஷ்டனு மாகிய த்ருபதன் வடபாஞ்சாலதேசத்தில் அரசாட்சிசெய்தான். அப்போது மஹிமைபொருந்திய பரத்வாஜமஹரிஷியும் ஸ்வர்க்கஞ் சென்றார். பிறந்ததவமுள்ள துரோணர் அங்கேயேவஸித்துத் தவம் செய்துகொண்டிருந்தார். வேதங்களையும் வேதாங்கங்களையும்அறிந் தவரும் தபஸினால் பாபங்களைப் பஸ்மஞ்செய்தவருமாகிய பெருங் கீர்த்திபெற்ற அந்தத் துரோணர் தம்பிதாவினுடையஆஜ்ஞையில் மன ம்வைத்துப் புத்திரனைவிரும்பி அக்நிஹோத்ரத்திலும் தம்தர்மத்தி லும் இந்த்ரியஜயத்திலும் எப்போதும் ஊக்கமுள்ளவளாகிய சரத்வா னுடைய புத்திரியான கிருபியைப் பாரியையாகஅடைந்தார். *கௌ தமி, அசுவத்தாமாஎன்னும்புத்திரனைப் பெற்றாள். அந்தப்புத்திரன் பிறந்தவுடன் உச்சைச்ரவஸ்என்னும் குதிரையைப்போல் கணைத்தான். அதைக்கேட்டு ஆகாசத்திலிருந்து கண்ணுக்குத்தெரியாத ஒருபூதம் "இவனுடையஊரத்தசப்தம் குதிரையின்சத்தம்போல் திக்குகளில் வியாபித்ததனால் இந்தக்குழந்தை †அசுவத்தாமா என்ற பெயரோ டிருப்பன்" என்றுசொல்லிற்று. பிறகு அந்தப்புத்திரனால் துரோ ணாசாரியர் மிகுந்த ஸந்தோஷமடைந்தார். அந்தப்புத்திரனுகிய துரோணர் அங்கேயே வஸித்துக்கொண்டு தனுர்வேதத்திலேயே ஞாபகத்தோடிருந்தார்.

ராஜாவே! அப்போது மஹாத்மாவும் எல்லாவித்தைகளும்தெரி

*கிருபி. †அசுவம்=குதிரையைப்போன்ற; ஸ்தாமா=சப்தமுடையவன்.

ந்தவரும் ஆயுதம்பிடித்தவரெல்லாரிலும் மேலானவரும் பகைவரைத் துயரப்படுத்துகிறவருமாகிய பரசுராமரென்னும்பிராமணர், தம்பொரு ளையெல்லாம் பிராமணர்களுக்குக் கொடுக்கவிரும்பினதை அந்தத் துரோணர் கேள்விப்பட்டார். பரசுராமருடையதனுர்வேதத்தையும் திவ்யாஸ்திரங்களையும்கேள்வியுற்று அவற்றிலும் ராஜரீதிசாஸ்திரத் திலும் ஆசைவைத்தார். பிறகு அந்தச்சிறந்ததபஸ்ஸுள்ளவரும் ச்ரே ஷ்டமானபாகுபலமுடையவருமாகிய அந்தத்துரோணர், தவமும்பிர ம்மசாரிவ்ரதமுமுள்ளசிஷ்யர்களால் சூழப்பட்டவராய்ப் பர்வதங்களி ற்சிறந்த மஹேந்திரத்துக்குப்போகப் புறப்பட்டார். பிறகு மஹா தபஸ்வியான துரோணர் மஹேந்திரம்சேர்ந்து க்ஷத்ரியர்களைக்கொல் லுகிறவரும் விரோதிகளைக்கொல்லுகிறவருமாகிய அந்தப்பரசுராம ரைக் கண்டார். பிறகு துரோணர் சிஷ்யர்களுடன்கூட ப்ருகுச்ரே ஷ்டரான பரசுராமரையடைந்து தம்பெயரையும் அங்கிரஸ்ஸின்குலத் தில் தம்ஜனனத்தையும் தெரிவித்தார்; தெரிவித்தபின் பூமியில் தலை படும்படி அவர்பாதங்களில்வந்தனஞ்செய்தார். பிறகு எல்லாவற்றை யும்கொடுத்துவிட்டு அப்போதே வனம்போகக்கருதின மஹாத்மா வான பரசுராமரைநோக்கித் துரோணர், "பிராம்மணோத்தமரே! பரத் வாஜருக்குப்பிறந்தவனும் அயோநிஜனுமாகிய துரோணனென்று பெயருள்ள நான் திரவியத்தைவிரும்பி வந்திருப்பவனென்று நீர் அறி யக்கடவீர்" என்றுசொன்னர். க்ஷத்ரியர்களெல்லாரையும் அழித் தவராகிய அந்தமஹாத்மா துரோணரைநோக்கி, "பிராமணச்ரேஷ் டரே! உனக்கு நல்வரவு; நான்னவிரும்புகிறாய்? எனக்குச்சொல்" என்று சொன்னர். இவ்வாறு பரசுராமரால் கேட்கப்பட்ட துரோ ணர் யுத்தவீர்களிற்சிறந்தவரும் அனேகதனங்களைக் கொடுக்கப் போகிறவருமாகிய பரசுராமரைநோக்கி, "சிறந்ததவமுள்ளவரே! நான் அளவற்றதனத்தை வேண்டுகிறேன்" என்று சொன்னர். அதற் குப் பரசுராமர், "தபோதனரே! இங்குள்ளபொன்னும் மற்றஎன்ன என்னபொருளிருக்கிறதோ அவையனைத்தும் என்னல் பிராமணர் களுக்குக்கொடுக்கப்பட்டது. அவ்வாறே அனேகநகரங்களை மாலை போல்அணிந்த இந்தக்கடல்சூழ்ந்த பூமிதேவியை முழுவதும் கசிய பருக்கு நான் கொடுத்துவிட்டேன். இப்போது இந்தச்சரீரமாத்திர மும் அனேகவிதங்களான உயர்ந்தஅஸ்திரசஸ்திரங்களும் எனக்கு மிச்சமாயுள்ளன. பிராமணரே! சரீரத்தையாகட்டும், அஸ்திரங் களையாகட்டும், சஸ்திரங்களையாகட்டும் நீ கேள். துரோணரே! உன க்கு நான் என்னகொடுக்கவேண்டும்? அதை உடனேசொல்" என்னர்

துரோணர்; "பார்க்கவரே! அஸ்திரங்களெல்லாவற்றையும் *பிரயோகம், †ஸம்ஹாரம், ‡ரகஸ்யம் இவற்றுடன்எனக்குப் பூர்ணமாகக் கொடுக்கக்கடவீர். பிராம்மணோத்தமரே! இதுதான் தனங்களுக்கெல்லாம் தனம்" என்றார். பரசுராமர், "ஆகட்டும்" என்றுசொல்லி, உடனே அவருக்கு ரகஸ்யமென்றுசொல்லப்பட்ட ஸ்வரூபஜ்ஞானத்தோடும் §புரச்சரணவிரதத்தோடும் தனுர்வேதத்தையும் அஸ்திரங்களையும் பூர்ணமாகக்கொடுத்தார். அவையெல்லாவற்றையும் பெற்றுக்கொண்டு அஸ்திரங்களில்தேர்ந்த பிராமண ச்ரேஷ்டரான துரோணர் மிகுந்தஸந்தோஷத்துடன் தம்அன்புள்ளஸ்நேகிதனுகிய துருபதனிடம் சென்றார்.

நூற்றுநாற்பத்தோராவது அத்தியாயம்.

ஸம்பவபர்வம். (தொடர்ச்சி).

(துரோணர் துருபதனிடம்சென்று பழையஸ்நேகத்தைப பாராடிப் பேசினபோது துருபதனால் அவமதிக்கபபட்டதும், அதனால், கோபத்துடன் அஸ்தினாநகரம்வந்ததும், ராஜகுமாரர்களுக்கு வீளையாடிடல் கிணற்றில்விழுந்தபந்தையும் மோதிரத்தையும் எடுத்துக்கொடுத்ததும், அந்தஸமாசாரத்தைக்கேட்டுப் பீஷ்மர், அவரை எதிர்கொண்டழைத்ததும்).

பிறகு பராக்ரமசாலியான துரோணர் துருபதராஜாவினிடம் சென்று, "ராஜாவே! இங்குவந்திருக்கும்என்னை ஸ்நேகிதனுகஅறி" என்றுசொன்னார். ஸ்நேஹிதராகியதுரோணரால் அன்புடன் இவ்வாறுசொல்லப்பட்ட பாஞ்சாலதேசத்தரசன் இவருடைய அந்தச் சொல்லைப் பொறுக்கவில்லை. ஐச்வரியத்தினுடையகர்வம்நிரம்பின அந்தத்துருபதராஜன் கோபத்தாலும் பொருமையாலும் புருவங்களை நெறித்துச் சிவந்தகண்களோடு துரோணரைப்பார்த்து அடியில்வருமாறு சொல்லலானான்: "பிராம்மணரே! உம்முடைய இந்தப் புத்தி திருந்தவில்லை; நல்லபொருத்தமுள்ளதாயில்லை. பிராம்மணரே! அதனால் என்னைப்பார்த்து உமக்கு நான் ஸ்நேகிதனென்று தணிந்து பேசுகிறீர். புத்திக்குறைவுள்ளவரே! அபிவிருத்தியிலிருக்கிற ராஜா

---

* விடுவது, † திருப்பியெடுத்துக்கொள்வது, ‡ ஸ்வரூபஜ்ஞானம்.
§ முன்னதாக அனுஷ்டிக்கவேண்டியவை.

க்களுக்கு அதிர்ஷ்டமும் பொருளுமில்லாத (உம்மைப்போன்ற) இவ் வகையானமனிதர்களோடு ஸ்நேகமிருப்பது எங்குமில்லை. உள்ள ஸ்நேகங்களும் மனிதன்முதிரும்போது நாளடைவில் தளர்ந்துபோ கின்றன. எனக்கு உம்முடன் ஸ்நேகம் உம்முடையஸாமர்த்தியத் தைப்பற்றி முன்னேஉண்டாயிற்று. இவ்வுலகத்தில் யாருடையமன த்திலும் ஸ்நேகம்அழியாமல்நிற்பதில்லை. ஸ்நேகத்தைப் பெண்ணு சையும் அழித்துவிடும்; கோபமும் அழித்துவிடும். இவ்வாறு ஒரு காரணம்பற்றியுண்டான பழமையாகப்போன ஸ்நேகத்தை நீர் ஆதர வாகப்பற்றுதேயும். பிராம்மணச்ரேஷ்டரே! எனக்கு உம்முடன் ஸ்நேகம் காரியத்தைப்பற்றியுண்டாயிருந்தது. தரித்திரன் தனவா னுக்கும், மூர்க்கன் வித்வானுக்கும், பேடனானவன் சூரனுக்கும், ஸ்நேகனுவதில்லை. ஸ்நேகிதனென்பதைமுன்னிட்டு ஏன் என்னை விரும்புகின்றீர். எந்தஇருவருக்கும் ஐச்வரியம்ஸமமாகஇருக்குமோ, எந்தஇருவருக்கும் கல்விகேள்விகள் ஸமமாகஇருக்குமோ, அவ்விரு வருக்குந்தான் விவாகமும் ஸ்நேகமும் பொருந்தும். வலுத்தவனுக் கும் இளைத்தவனுக்கும் பொருந்தாது. வேதமோதாதவன் வேத மோதினவனுக்கு ஸ்நேகனுகான். ரதமுள்ளவன் ரதமில்லாதவனுக்கு நேசனுகான். ராஜ்யமில்லாதவன் ராஜாவுக்கு ஸ்நேகனுகான். ஸ்நேக னென்பதைமுன்னிட்டு ஏன் என்னைவிரும்புகிறீர்" என்றான். பரத் வாஜபுத்ரரான துரோணர் துருபதனால் இவ்வாறுசொல்லப்பட்டபின் சற்றுநேரம் கலக்கமுற்றுக் கோபம்மிகுந்தவராயினர். அந்தப்பெரு மைபொருந்திய புத்திமான், துருபதனைப்பற்றி மனத்தில் ஒருநிச்சய ஞ்செய்துகொண்டு தார் ஸ்வல்பகாலத்தில்நிறைவேற்றக்கூடிய ஒரு பிரதிஜ்ஞையைச்செய்து சிஷ்யர்களால் சூழப்பட்டவராய்ப் புத்திர னுடன் கௌரவராஜர்களின்நகரமாகிய அஸ்தினபுரம்சேர்ந்தார்.

அந்தப்பிராம்மணச்ரேஷ்டரான துரோணர்அஸ்தினபுரம்வந்து அங்கே க்ருபருடைய கிருகத்தில் மறைவாகத் தம்மை யாருக்கும் தெரியாமல்வஸித்தார். பிறகு ஸமர்த்தராகிய அவருடையபுத்ரர், கிருபர்சொல்லிவைத்தபிறகு பாண்டவர்களுக்கு அஸ்திரங்களைக் கற் பித்தார். அவரையும் ஜனங்களறியவில்லை. இவ்வாறு அவர் பிற ருக்குத்தெரியாமலே அங்கே சிலகாலம் வஸித்தார். பிறகு வீரர்க ளாகிய ராஜகுமாரர்கள் சேர்ந்து அஸ்தினபுரத்திலிருந்து வெளியே போய் அவ்விடத்தில் பந்துவிளையாடிக்கொண்டு உத்ஸாஹத்துடன் திரிந்துகொண்டிருந்தனர். அவர்கள் விளையாடும்போது தர்மபுத் திரருடையமோதிரம் கிணற்றில்விழுந்தது; பந்தும் அதிலேயேவிழு

ந்தது. கிணற்றுஜலத்தினுல்மூடப்பட்டு ஆகாயத்தில் நக்ஷத்திரத் தின்உருவம்போல் காணப்படும் அந்தமோதிரத்தைக்கண்டு அந்தக் குமாரர்கள் முயற்சியுடன் அந்தக்கிணற்றைச்சுற்றிக்கொண்டனர். பிறகு அவர்கள் ஊக்கமுடன் பந்தையெடுக்க முயற்சிசெய்தனர். ஆனல் பந்துகிடைக்கத்தக்கஉபாயத்தை அவர்கள் கண்டுபிடிக்க வில்லை. அதனுல் வெட்கித் தலைகுனிந்தவர்களாக ஒருவரையொரு வர் பார்த்தனர். உபாயத்தையறியாதவர்களாகவும் அந்தப்பந்தின் மேல் விருப்பங்கொண்டவர்களாகவுமிருந்தனர். அவர்களின்ஸமீபத் தில் அக்னிஹோத்ரம்செய்துகொண்டிருப்பவரும், கறுத்தும் வறு மையுற்றும் நரைத்தும் இளைத்துமிருப்பவரும், பிரயோஜனத்தைவிரு ம்புகிறவருமாகிய ஒரு பிராமணரைக்கண்டனர். காரியத்திலேயே மனம்வைத்த அந்தக்குமாரர்கள் உத்ஸாஹம்குன்றி அம்மஹாத்மா வான பிராமணரைக்கண்டு அவரிடம்சென்று அவரைச்சூழ்ந்துகொண் டனர். பிறகு சக்தியுள்ளவரும் தம்காரியத்தைமுக்கியமாகக்கொண் டவருமாகிய துரோணர் அந்தக்குமாரர்களைக்கண்டு மெல்லச் சிரித்து நயமாகப்பேசத்தொடங்கினர். "ஆ! உங்கள்க்ஷத்ரியபலம்என்ன! உங்களுக்குஇதென்ன அஸ்திராப்யாஸம்? பரதவம்சத்திற்பிறந்தவர் கள் பந்தைஎடுக்காமலிருக்கின்றீர்களே! நான் இந்தப்பந்து மோதி ரம் இரண்டையும் *சிவீர்க்குக்களினுல் எடுத்துவிடுவேன். எனக்குப் போஜனம்கொடுங்கள்" என்றார். உடனே, அவர்களுள் சூர்திபுத்ர ரானயுதிஷ்டிரர் துரோணரைநோக்கி, "பிராம்மணரே! நிருபருடைய அனுமதியின்மேல் சாச்வதமானபோஜனத்தை நீர் அடையலாம்" என்றுசொன்னர். இவ்வாறுசொல்லப்பட்ட துரோணர், சிரித்துக் கொண்டு பரதகுமாரர்களைப்பார்த்து, "இந்தப் பிடிஈர்க்குக்களை நான் அஸ்திரமந்திரத்தினுல் மந்திரித்திருக்கிறேன்; இவற்றின்சக்தியைப் பாருங்கள். இந்தச்சக்தி மற்றவர்களிடமிராது. ஓர்ஈர்க்கினுல் பந் தைக்குத்துவேன். அந்தஈர்க்கை மற்றொன்றினுலும் அதையும்வே றொன்றினுலும் சேர்க்கும்போது பந்தை நான்எடுத்துவிடுவேன்" என்றுசொன்னர். பிறகு துரோணர் தாம்சொன்னதையெல்லாம் சொன்னபடியே சீக்கிரத்தில் செய்தார். அதைக்கண்டு அந்தக்குமா ரர்கள் வியப்பினுல் மலர்ந்தகண்களோடு இது மிக்கஆச்சரியமென்று நினைத்து, "பிரம்மரிஷியே! இந்தமோதிரத்தையும் சீக்கிரமாக எடுக் கக்கடவீர்" என்றுசொன்னர்கள். பிறகு ஸமர்த்தரும் பெரும் புகழ்பெற்றவருமாகிய துரோணர் அம்பையும் வில்லையும் எடுத்துக்

* ஒருவகைப்புல்.

கொண்டு அம்பினால் மோதிரத்தைக்குத்தி அதை மேலேற்றினார். அவர் அம்புடன் மோதிரத்தைக் கிணற்றிலிருந்து எடுத்து ஆச்சரியத்துடன்நிற்கும் குமாரர்களுக்குத் தாம் கர்வப்படாமல் கொடுத்தார். மோதிரம்எடுக்கப்பட்டதைக்கண்டு அந்தக்குமாரர்கள், "பிராமணரே! நமஸ்காரஞ்செய்கிறோம். இந்தலாகவித்தியம் மற்றவரிடமில்லை. நீர் யாவர்? யாருடையவர்? உமக்கு நாங்கள் என்னசெய்யக்கடவோம்? நாங்கள் தெரிந்துகொள்ளவேண்டும்" என்று அவரைக் கேட்டனர். இவ்வாறுசொல்லப்பட்ட துரோணர் பிறகு ராஜபுத்திரர்களைப்பார்த்து, "என்உருவத்தையும் குணங்களையுஞ்சொல்லிப் பீஷ்மருக்கு என்னைத்தெரிவியுங்கள். மிகச்சிறந்தபராக்கிரமமுள்ள அந்தப்பீஷ்மரே அறிந்துகொள்வார்" என்றுசொன்னார். குமாரர்கள் 'அப்படியே' என்றுசொல்லி, பீஷ்மரிடம்சென்று அந்தப்பிராமணர்சொன்னதையும் அவருடைய அவ்விதமானசெய்கையையும் முற்றிலும் உரைத்தனர். பீஷ்மர் குமாரர்களிடம்கேட்டு அவரைத் துரோணரென்று தெரிந்துகொண்டார். அப்போது ஆயுதம்பிடித்தவர்களிற் சிறந்தவரான பீஷ்மர் அவர்தாம் மிகத்தகுதியுள்ள ஆசாரியரென்று நினைத்து உடனே துரோணரைத் தாமே விசேஷமரியாதையோடு அழைத்துவந்து அவருடையவரவுக்குக் காரணத்தைத் தெளிவாக விசாரித்தார். துரோணரும் அதையெல்லாம் தெரிவிக்கத்தொடங்கினர்.

"தவறுதலில்லாதவரே! நான் முன்னே தனுர்வேதத்தைப்பெறவேண்டுமென்கிறவிருப்பத்தினாலும் அஸ்திரங்களுக்காகவும் அக்னிவேச்யமஹரிஷியிடம் போனேன். அடங்கினமனமோடு ஜடைகளைத்தரித்துக் குருசுச்ரூஷையில்ஊக்கத்துடன் பிரம்மசாரியாக அனேகவருஷகாலம் அவரிடம் தீர்க்கவாஸஞ்செய்தேன். பாஞ்சாலதேசத்தவனும் மஹாபலசாலியும் பிரபுவுமான யஜ்ஞசேனனென்னும் ராஜகுமாரனும் அஸ்திரங்களுக்காக அவரிடத்திலேயே குருகுலவாஸஞ் செய்தான். அங்கே அவன் எனக்குச் சினேகிதனாகவும் உதவிசெய்பவனாகவும் அன்புள்ளவனாகவுமிருந்தான். கௌரவவம்சத்துப்பிரபுவே! பீஷ்மரே! நான் சிறுபிராயமுதல் அவனோடுசேர்ந்து வெகுகாலம் கூடவேஅத்தியயனஞ்செய்துகொண்டிருக்கும்போது எனக்குப்பிரியமாகப்பேசுகிறவனும் என்பிரியத்தையேசெய்கிறவனுமாகிய அந்த எனதுசினேகிதன் என்னைப்பார்த்து, "துரோணரே! மஹாராஜாவாகிய என்தந்தைக்கு நான் மிகஅன்புள்ளபுதல்வன். அந்தப் பாஞ்சாலராஜா எப்போது எனக்கு ராஜ்யபட்டாபிஷேகம் செய்யப்

போகிறபோ அப்போது அதில் பாதிராஜ்யம் நீர் அனுபவிக்கத்தக்கது; என்ஸத்தியத்தின்மேல் ஆணையிடுகிறேன்; என்னுடையபோகங்களும் தனமும் ஸுகமும் உம்முடையஸ்வாதீனம்" என்று எனக்கு ஸந்தோஷத்தைவிருத்திசெய்கிறசொல்லைச் சொன்னன். இவ்வாறு சொல்லி அஸ்திரங்களைக்கற்றுக்கொண்டபிறகு என்னல்கௌரவிக்கப்பட்டுச் சென்றான். அப்படி அவனல் சொல்லப்பட்ட நான் அப்போதுமுதல் அந்தச்சொல்லை எப்பொழுதும் மனத்தில் நினைத்துக்கொண்டு பிதாவின்கட்டளைப்படி புத்திரலாபத்திற்காகப் புகழ்பெற்றவளும், சிறந்தபுத்தியுள்ளவளும், மஹாபதிவ்ரதையும், அக்நிஹோத்ரத்திலும் வேள்வியிலும் இந்திரியஜயத்திலும் எப்போதும்ஊக்கமுள்ளவளுமாகிய சரத்வானுடையபுத்திரியான க்ருபியை விவாஹம் செய்துகொண்டேன். அந்தக்கௌதமியாகிய க்ருபி பயப்படத்தக்க ஸாமர்த்தியத்தையும் செய்கையையுமுடையவனும் சூரியனுக்கொப்பான ப்ரதாபமுள்ளவனுமாகிய அச்வத்தாமாவென்னும் ஔரஸபுத்திரனைப் பெற்றாள். என்னல் ப்ரத்வாஜர் எப்படியோ அப்படியே நான் அந்தப்புத்ரனல் ஸந்தோஷமுற்றேன். அங்குள்ள தனிகர்களுடைய பிள்ளைகள் பசுவின்பால்குடிக்கக்கண்டு குழந்தையான அசுவத்தாமா அழுதான். அது என்னைத் திசைமயங்கச்செய்தது. பீஷ்மரே! ஸ்வதர்மத்திலிருக்கும்*ஸ்நாதகன் கஷ்டப்படக்கூடாது என்று மனஸில்நிச்சயம்செய்துகொண்டு சுத்தமானதனத்தைத் தர்மமாகஸம்பாதிக்கநினைத்து அந்ததேசமெல்லாம் இந்தக்கோடிக்கு அந்தக்கோடி அனேகம்தரம் சுற்றித்திரிந்தும் ஒருகறக்கிறபசு எனக்குக் கிடைக்காமற்போயிற்று. இந்தக்குமாரனை யவஅரிசியின்பாக்கரைத்தஜலத்தைக்கொடுத்து ஏமாற்றினேன். கௌரவரே! இக்குழந்தை மாக்கரைத்தஜலத்தைக்குடித்து இளமையினல் தெரியாமல் நானுப்பால் குடித்தேனென்றுமகிழ்ந்து எழுந்து கூத்தாடினன். கூத்தாடிக்கொண்டு குழந்தைகளால்சுற்றிக்கொள்ளப்பட்டுப் பரிகாசம்செய்யத்தக்கநிலைமையையடைந்த அந்தப்புத்திரனைக்கண்டு அதனல் எனக்கு வருத்தமுண்டாயிற்று. "எழையான ப்ராஹ்மணனல் என்னை தவி. அவனுக்குத் தனம்கிடைக்கிறதில்லை. அவன்பிள்ளை பாலின்மேல் ஆசையினல் கரைத்தமாவைக்குடித்து ஆனந்தம்கொண்டு நானும் பால்குடித்தேனென்று கூத்தாடுகிறான்" என்று பேசிக்கொள்ளும் ஜனங்களின்சொல்லைக்கேட்டபிறகு என்னறிவு விழுந்தது. நான் எனக்குள்ளே மௌனமே நிற்கத்துக்கொண்டு, "நான் ப்ராமணர்களால் விட

* வித்தையிலும்தபஸ்ஸிலும்தேர்ந்தவன்.

ப்பட்டு இகழப்பட்டவனுக வஸித்தாலும் வஸிப்பேன். பொருளா சைப்பட்டுப் பிறரிடம் மிக்கஇழிவானசேவையைச் செய்யேன்" என்று மனத்தில்நினைத்தேன். பீஷ்மரே! இவ்வாறுநினைத்து, பிறகு நான் என்பத்தியுடன்கூட என்பிரியமானபுத்திரனை அழைத்துக்கொ ண்டு பழைய ஸ்னேகத்தையனுஸரித்துத் துருபதனிடம்சென்றேன். அவனுக்குப் பட்டாபிஷேகமானதைக்கேட்டதும், துருபதனுடைய ஸ்னேகத்தையும் அந்தவாக்கையும் நினைத்து நான் க்ருதார்த்தனென் று எண்ணி ராஜ்யாதிபத்யத்திலிருக்கும் சினேகிதனிடம் மிகுந்த ஸந்தோஷத்தோடுபோனேன். பிரபுவே! துருபதனிடம்சென்ற போது, ஸ்னேகிதன்என்பதை முன்னிட்டு, "புருஷச்ரேஷ்டனே, என்னைஸ்நேகிதனுக அறி" என்றுசொன்னேன்; துருபதனிடம் சினேகிதனைப்போலவே நெருங்கி ஸந்தித்தேன். அவன் என்னை முன்அறியாதவன்போல் சிரித்துக்கொண்டு பின்வருமாறுசொல்லலா னான்: "பிராமணரே! உம்முடைய இந்தப்புத்தி திருந்தவில்லை. நல் லபொருத்தமுள்ளதாகஇல்லை. பிராமணரே! அதனால் என்னைப்பார் த்து உமக்கு நான் ஸ்நேகிதனென்றுதுணிந்து பேசுகிறீர். இவ்வுல கத்தில் சினேகங்கள் மனிதன்முதிரும்போது நாளடைவில் தளர்ந்து போகின்றன. எனக்கு உம்முடன்ஸ்நேகம் உம்முடையஸாமர்த்திய த்தைப்பற்றி முன்னேயுண்டாயிற்று. வேதம்தெரியாதவன் வேதம் தெரிந்தவனுக்கும், ரதமில்லாதவன் ரதமுள்ளவனுக்கும், ஸ்னேகித னுகான்; ஒற்றுமையினால் ஸ்நேகமுண்டாகிறது. வேற்றுமையினால் இல்லாமற்போகிறது. உலகத்தில் ஸ்னேகம் அழியாமலிருப்பதுஎக் காலத்திலும் யாருக்கும் இல்லை. ஸ்நேகத்தைப் பெண்ணுசையும் அழித்துவிடும்; கோபமும்அழித்துவிடும். இவ்வாறு ஒருகாரணம் பற்றி உண்டாகிப் பிறகு பழமையாகப்போனஸ்னேகத்தை நீர் ஆதர வாகப்பற்றுதேயும். பிராம்மணச்ரேஷ்டரே! எனக்கு உம்முடன் ஸ்னேகம்காரியத்தைப்பற்றி உண்டாயிருந்தது. தரித்திரன் தனவா னுக்கும், மூர்க்கன் வித்வானுக்கும், கையாலாகாதவன் சூரனுக்கும் ஸ்நேகனுவஇல்லை. ஸ்னேகிதனென்பதைமுன்னிட்டு ஏன் என்னை விரும்புகிறீர்? புத்திக்குறைவுள்ளவரே! அபிவிருத்தியிலிருக்கிறரா ஜாக்களுக்கு அதிர்ஷ்டமும் பொருளுமில்லாத இவ்வகையானமனி தர்களோடு ஸ்நேகமிருப்பது எங்குமில்லை. வேதமோதாதவன் வே தமோதினவனுக்கும், ரதமில்லாதவன் ரதமுள்ளவனுக்கும், ராஜ்ய மில்லாதவன் ராஜாவுக்கும்ஸ்னேகனுகான். ஸ்னேகிதனென்பதை முன்னிட்டு ஏன் என்னை விரும்புகிறீர். நான் ராஜ்யத்தைப்பற்றி

உமக்குப் பிரதிஜ்ஞைசெய்திருப்பதாக எனக்குத் தெரியவில்லை. பிராம்மணரே! ஒருராத்திரிமட்டும் நீர்விரும்பினபோஜனத்தைக்கொடுப்பேன்" என்றான். இவ்வாறு அவனால் உரைக்கப்பட்ட நான் ஸ்வல்பகாலத்தில் நிறைவேற்றக்கூடிய ஒருபிரதிஜ்ஞையைச்செய்து அப்போதே என்மனைவியுடன் புறப்பட்டேன். பீஷ்மரே! இவ்வாறு துருபதனால்சொல்லப்பட்டநான் கோபம்நிரம்பிக் குணமுள்ளசிஷ்யர்களைவேண்டிக் கௌரவர்களிடம் வந்தேன். அதனால் உம்முடைய மனோரதத்தைப் பூர்த்திசெய்வதற்காக நான்அங்கிருந்து இந்தஅழகான அஸ்தினபுரத்திற்கு வந்திருக்கிறேன். உமக்கு என்னசெய்யக்கடவேன்? சொல்லும்" என்றுதுரோணர் சொன்னார். இவ்வாறு சொல்லப்பட்ட பீஷ்மர் துரோணரைப்பார்த்து அப்போதே, "வில்லில் ஏறிடப்பட்டநாணைத் தளர்த்தலாம். நல்லஅஸ்திரவித்தையைக் கொடும். கௌரவர்களின்கருத்தில் விசேஷமாகக்களங்கமிக்கப்பட்டு ஸந்தோஷத்துடன் ஸௌக்கியங்களையனுபவியும். கௌரவர்களுக்குள்ளதனர் ராஜ்யாதிபத்யம் தேசங்கள் ஆகிய எல்லாவற்றிற்கும் நீரேமுதன்மையான ராஜா. எல்லாரும் உமக்கு வசவல்செய்கிறவர்கள். பிராம்மணரே! நீர் வேண்டினதுஎதுவோ அதுசெய்யப்பட்டதென்று நினைக்கவேண்டும். பிரம்மரிஷியே! நீர்வந்தது ஸந்தோஷம். என்னிடத்தில் பெரியஅனுக்கிரஹம்செய்திருக்கிறீர்" என்றுசொன்னார்.

நூற்றுநாற்பத்திரண்டாவது அத்தியாயம்.

ஸம்பவபர்வம். (தொடர்ச்சி).

(துரோணர், கௌரவபாண்டவர்களைச் சிஷ்யர்களாக அங்கீகரித்ததும், அர்ச்சுனனுக்கு ரஹஸ்யங்களை விசேஷமாகச்சொன்னதும், துரோணாசாரியாதுப்ரதிமையை ஆராதித்து ஏகலவ்யன் தனுர்வித்தையில் தேர்ச்சியடைந்ததும், வேடைடைக்காகப்போன பாண்டவர்கள் அதைக்கண்டபிறகு அர்ச்சுனனுக்காகத் துரோணர் ஏகலவ்யனிடம்சென்று அவன்வலக்கைக்கட்டைவிரலைத் தக்ஷிணையாகவாங்கினதும், துரோணர் சிஷ்யர்களைப் பரீக்ஷைசெய்ததும்).

பீஷ்மர் அந்தத்துரோணரைக்குருவாக அங்கீகரித்தார். ராஜாவே! பீஷ்மர், பாண்டவர்களுடன்கூட அந்தப்பேரன்மார்களனைவரையும் அழைத்துக்கொண்டு இவர்கள் உமதுசிஷ்யர்களென்றுசொல்லிப் பலவகையானதனங்களோடு சாஸ்திரப்பிரகாரம்துரோணருக்கு அர்ப்

பணம்செய்தார். அப்போது துரோணர் புத்திமான்களுட்சிறந்தவராகிய பீஷ்மரைநோக்கி, "ஆயுதங்கள்தெரிந்தவரும் சிறந்தபிரஜ்ஞையுள்ளவரென்று எல்லாராலும்மதிக்கப்பெற்றவருமாகிய கிருபாசாரியருமிருக்கிறார்; ராஜாவே! நான்இருப்பதில் அந்தப்பிராம்மணர் மனவருத்தத்தை அடைவாராயின் நான் உங்களிடம் கொஞ்சம்தனத்தையாசித்துப்பெற்றுக்கொண்டு ஸந்தோஷமடைந்து வந்தபடியே என்ஆச்சிரமத்திற்குச் செல்வேன்" என்றசொல்லைச்சொன்னார். இவ்வாறுசொன்னவுடன், யுத்தவீரரிற்சிறந்தவரானபீஷ்மர், பிராம்மணச்ரேஷ்டரும் ஆசாரியர்களில்முதன்மையானவரும் ஆயுதம்தெரிந்தவர்களுக்குள்மேலானவருமாகிய துரோணரைநோக்கி, "கிருபரிருக்கட்டும். அவர், நான் எப்போதும் பூஜிப்பதற்கும் போஷிப்பதற்குமுரியவர். நீர் என்னுடையபேரன்மார்களுக்குக் குருவாகஇரும். உம்மைத்தான் ஆசாரியராக நான்நினைக்கிறேன். இந்தக்குமாரர்களை அங்கீகரித்துக்கொள்ளும். இவர்களை எப்போதுவேண்டுமானாலும் அஸ்திரங்கள்தெரிந்தவர்களாகச்செய்யக்கடவீர்" என்றுசொன்னார். மணிதர்களிற்சிறந்தவரும் மஹாபராக்ரமசாலியுமான துரோணர் பீஷ்மரால் கௌரவிக்கப்பட்டபிறகு கௌரவர்களின்கிருஹத்தில் அர்க்கியபாத்யம்முதலிய ஸத்காரமடைந்து களைப்பாறினார். அந்தக்குருவானவர் களைப்பாறினபின், பீஷ்மர், தம்பேரன்மார்களாகிய குருவம்சபுத்திரர்களையழைத்துக்கொண்டு பலவகைப்பொருள்களுடன் சிஷ்யர்களாகக்கொடுத்தார். பிரபுவாகியபீஷ்மர், வேண்டியபண்டங்களினால் செம்மையாகநிரப்பப்பட்டதும் தனதானியங்கள் நிரம்பினதுமாகிய வீட்டை மிகுந்தஸந்தோஷத்துடன் துரோணருக்குக்கொடுத்தார். அந்தச்சிறந்தவில்லாளியான துரோணர் மனமகிழ்ந்து பாண்டுபுத்ரர்களும் த்ருதராஷ்டிரபுத்ரர்களுமாகிய அந்தக்கௌரவர்களைக் சிஷ்யர்களாகவுற்றுக்கொண்டார். துரோணர் ஸந்தோஷமடைந்து அவர்களெல்லாரையும் அங்கீகரித்து யாருமில்லாமல் தாம்மட்டும்தனித்திருக்கையில் பாதங்களில்வந்தனஞ்செய்த அவர்களைநோக்கி, "குற்றமற்றவர்களே! நான்விரும்பியகாரியம் ஒன்று என்னுள்ளத்தில் இடைவிடாமலிருக்கிறது. நீங்கள் அஸ்திரங்களில்தேர்ந்தபின் எனக்கு அதைநிறைவேற்றவேண்டும். அதைப்பற்றிச் சொல்லுங்கள்" என்றுசொன்னார். ஜனமேஜயராஜாவே! அதைக்கேட்டு அந்தக் கௌரவர்கள் ஒன்றும்பேசாமலிருந்தனர். வீரரே! அர்ச்சுனன்மட்டும் அவர்கேட்டதையெல்லாம் வாக்குத்தத்தம்செய்தான். அதனால், துரோணர் அப்போதே அர்ச்சுனனைப் பலமுறை உச்சிமோந்து அன்

புடன்தழுவிக்கொண்டு உடனே ஆனந்தக்கண்ணீர் சொரிந்தார். துரோணர் அசுவத்தாமாவை அழைத்து, "அர்ச்சுனனே உனக்குச் சினேகிதனுக அறி. என்னுல்கொடுக்கப்பட்ட இவனே நீ வாங்கிக் கொள்" என்றுசொன்னர். பாண்டுபுத்திரனுகிய அர்ச்சுனன், "நல்லது, நல்லது" என்றுசொல்லி அசுவத்தாமாவைக்கட்டிக்கொண்டு, (துரோணரைபபார்த்து,) பிராம்மணச்ரேஷ்டரே! இன்றுமுதல் நியாயப்படி உமக்கு உட்பட்டவனுகஇருக்கிறேன். நான் சிஷ்யன். பிராம்மணோத்தமரே! உமதுஅருளினுல்ஜீவிக்கிறேன்" என்றுசொல்லி அப்போதே (அவர்) பாதங்களைபபிடித்துக்கொண்டான். பிறகு வீரான துரோணர் பாண்டவர்களுக்குத் தேவசம்பந்தமும் மனுஷ்யசம்பந்தமுமாகிய அனேகவித்தங்களான அஸ்திரங்களைக் கற்பித்தார். பரதச்ரேஷ்டரே! யாதவர்களும் அந்தகவிருஷ்ணிவம்சத்தவரும் இன்னும்பலதேசத்தவருமாகிய அனேகராஜகுமாரர்களும் ராஜாக்களும் வந்துசேர்ந்து அஸ்திரவித்தைக்காகப பிராமணச்ரேஷ்டரான துரோணரைஅடைந்தார்கள். அப்போது தேரோட்டுகிறவனுக்கும் ராதையென்பவளுக்கும் புத்திரனுகிய கர்ணன் துரோணரைக் குருவாகஅடைந்தான். மிகவுமபெருமைக்காரனுகிய அந்தஸாரத்தியின்புத்திரன் அர்ச்சுனன் மீது பொறுமையுற்றுத் துரியோதனனிடம்சேர்ந்துகொண்டு பாண்டவர்களை அவமதித்தான். அதனுல், அவன் தனுர்வேதம்கற்கவேண்டுமென்கிறஆசையோடு துரோணரைஅடைந்தான். பாண்டுபுத்திரனுகிய அர்ச்சுனன் அபயாஸத்தினுலும் புஜபலத்தினுலும் விடாமுயற்சியினுலும் அஸ்திரவித்தையிலுள்ள ஆசையினுலும்அவர்களெல்லாரிலும் சிறப்புற்றவனுனன். அர்ச்சுனன், அஸ்திரப்பிரயோகம் ஒன்றுயிருந்தும் லாகவமாகச்செய்வதிலும் செய்கைக்குத்தக்கபடி அங்கங்களை அமைத்துக்கொள்வதிலும் எல்லாச்சிஷ்யர்களிலும் மேலாக இருந்தான். துரோணர் உபதேசிக்குங்காலங்களில் இந்திரபுத்திரனுகிய அர்ச்சுனனே ஒபபற்றவனென்று நினைத்தார். இவ்வாறு எல்லாக்குமாரர்களுக்கும் பாணங்களையும் அஸ்திரங்களையும் கற்பித்தார். துரோணர் காலதாமதமாக வரவேண்டுமென்பதை உத்தேசித்தே எல்லாக்குமாரர்களுக்கும் * கமண்டலுவைக் கொடுத்தார். சீக்கிரம்வருவதை உத்தேசித்துத் தமதுபுத்திரரிடம் குடத்தைக்கொடுத்தார். அந்தக்குமாரர்கள் வருவதற்குள்ளாகவே தம் புத்திரருக்கு ரகஸ்யமானசெய்கையை உபதேசித்தார். அந்தச்செய்கையை அர்ச்சுனன் ஊகித்துத் தெரிந்துகொண்டான். பிறகு அந்த

* குறுகிய வாயையுடையதாதலால் விரைவில் ஜலம் நிரம்பாதது.

அர்ச்சுனன் வாருணஸ்திரத்தினால் கமண்டலுவைநிரப்பிக்கொண்டு ஆசாரியபுத்திரருடன்கூடவே ஆசாரியரிடம் வந்தான். சிறந்தபுத்தியுள்ளவனும் அஸ்திரங்கள் தெரிந்தவர்களில் மேலானவனுமாகிய அந்தஅர்ச்சுனன், விசேஷங்களைத் தெரிந்துகொள்ளும் தருணங்களில் அந்த ஆசாரியபுத்திரரைவிட்டுத் தனித்துப் பிரியவில்லை. அர்ச்சுனன் குருவைப்பூஜிப்பதில் மிகுந்த முயற்சியை எடுத்துக்கொண்டான்; அஸ்திரங்களிலும் அதிக ஊக்கம்வைத்தான்; துரோணருக்குப் பிரியமாகவுமிருந்தான். அர்ச்சுனன் பாணங்களைப்பற்றியும் அஸ்திரங்களைப்பற்றியும் எப்போதும் முயற்சியோடிருப்பதைக்கண்டு, துரோணர் சமையற்காரனை அழைத்து ரகஸ்யமாக, "நீ ஒருபோதும் அர்ச்சுனனுக்கு இருட்டானஇடத்தில் அன்னம்போடவேண்டாம். இப்படி நான்சொன்னதை நீ அருச்சுனனிடத்தில் சொல்லக்கூடாது" என்றுசொன்னர். பிறகு ஒருகாலத்தில் அர்ச்சுனன் புசித்துக்கொண்டிருக்கையில் காற்று மிகுதியாக அடித்தது. அதனால் அங்கே எரிந்துகொண்டிருந்த அந்தத்தீபம் அணைக்கப்பட்டது. அர்ச்சுனன் சாப்பிட்டுக்கொண்டே தானிருக்கிறான். அந்தத்தேஜஸ்வியான அர்ச்சுனனுடையகை வாயைத்தப்பி வேறிடம்செல்லவில்லை. சிறந்தகைகளையுடைய அந்தப் பாண்டுபுத்திரனுகிய அர்ச்சுனன் அது அப்யாஸத்தால் உண்டானதென்று நினைத்து அப்யாஸத்தைச் செய்யக்கருதி ராத்திரியிலும் வில்பயிற்சி செய்துகொண்டிருந்தான். பாரதரே! அவனுடையவில்லின்நாண் உள்ளங்கையில் உரைந்ததனாலுண்டான சப்தத்தைக்கேட்டுத் துரோணர் எழுந்துவந்து அவனைத் தழுவிக்கொண்டு, "இந்தஉலகத்தில் உன்னைப்போன்ற வில்லாளி வேறொருவன் இல்லாமலிருக்கும்படி பயிற்சிசெய்விக்கப்போகிறேன். இதனை உனக்கு உண்மையாகச் சொல்லுகிறேன்" என்றுசொன்னர்.

பிறகு துரோணர் அர்ச்சுனனை மறுபடியும் குதிரைச்சண்டையிலும் யானைச்சண்டையிலும் தேர்ச்சண்டையிலும் கால்நடையுத்தத்திலும் பழக்கினர். துரோணர் கௌரவர்களுக்குக் கதாயுத்தத்திலும் கத்திச்சிலம்பத்திலும் தோமரங்கள் ஈட்டிகள் சக்தியாயுதங்கள்ஆகிய இவற்றின்சிலம்பத்திலும் பலஆயுதங்கள்கலந்தசண்டையிலும் கற்பித்தார். துரோணருடைய அந்தஸாமர்த்தியத்தைக்கேள்வியுற்றுத் தனுர்வேதத்தைக்கற்கஆவலுடன் ராஜாக்களும் ராஜகுமாரர்களும் ஆயிரக்கணக்காக வந்துசேர்ந்தனர். ஆயுததாரிகளிற்சிறந்தவரான துரோணர் அவர்களெல்லாருக்கும் சிக்ஷைசொல்லிவைத்தார். மஹாராஜாவே! அதன்பின் வேடர்களுக்குஅரசனுகிய ஹிர

ண்யதனுஸ் என்பவனுடைய மகனை ஏகலவ்யனென்பவன் துரோ
ணரிடம் வந்துசேர்ந்தான். தர்மந்தெரிந்த துரோணர் கௌரவர்க
ளிடமுள்ளதாக்ஷிணியத்தினால் சிந்தித்து அவன்வேடன்மகனென்று
சொல்லி அவனை வில்வித்தையில் சிஷ்யனாக அங்கீகரிக்காமலிருந்தார்.
அவனைப்பார்த்து, "ஓ நிஷாதபுத்திரனே! நீ எப்போதும் பாணப்
பிரயோகத்தில் மிகுந்தபலமுள்ளவனாய்; என்சிஷ்யன்தான்; உன்
வீட்டுக்குத்திரும்பிச்செல்; உனக்கு அனுமதிகொடுத்தேன்" என்று
சொன்னார். வீரனாகிய அந்தஏகலவ்யனானவனின், துரோணருடைய
பாதங்களைச் சிரஸினால்வந்தனஞ்செய்து காட்டுக்குச்சென்று மண்
ணால் துரோணரைப்போல் (ஒருபதுமை)செய்து அதனிடத்தில் உயர்
ந்த ஆசாரியனிடத்தில் செய்யவேண்டியவழிபாடுகளைச்செய்துகொ
ண்டு சிறந்தநியமத்துடன் அப்போதுமுதல் பாணங்களிலும் அஸ்தி
ரங்களிலும் பயிற்சிசெய்யத்தொடங்கினன். அவன் மிகுந்தசிரத்தை
யோடும் சிறந்தஅப்பியாஸத்தோடும் பாணத்தைஎடுப்பதிலும் தொடுப்
பதிலும் விடுப்பதிலும் மிகுந்தலாகவத்தையடைந்தான்; லாகவத்தை
யும் அஸ்திராப்பியாஸத்தையும் சீக்கிரமாகத் தெரிந்துகொண்டான்.
பிறகு ஒருகாலத்தில் பகைவர்களை அழிப்பவர்களாகிய கௌரவர்க
ளும் பாண்டவர்களுமாகிய அனைவரும் துரோணரால் அனுமதிகொடுக்
கப்பெற்றுத் தேர்களிலேறி வேட்டைக்குப்புறப்பட்டனர். ராஜாவே!
அப்போது ஒருமனிதன் ஆயுதங்களையெடுத்துக்கொண்டும் ஒரு
நாயைஅழைத்துக்கொண்டும் தனியாகப் பாண்டவர்களின்பின்சென்
றான். அவர்கள் பற்பலஆயுதக்கிரியைகளைச்செய்யக்கருதி அந்தவனத்
தில் ஸஞ்சரிக்கையில் வழியோடுவனையாடிக்கொண்டுஸஞ்சரித்த அந்
தநாய் வேடச்சிறுவனிடம் சென்றது. அந்தநாய் கறுத்தவனும் உடம்
பில் அழுக்கைப்பூசிக்கொண்டவனும் மான்தோலையும் ஜடையையும்
தரித்தவனுமாகிய வேடச்சிறுவனைக்கண்டு குரைத்துக்கொண்டு அவ
னருகில்நின்றது. அவன் அப்போது அஸ்திரப்பிரயோகத்தில் தன்னு
டைய லாகவத்தைக்காண்பித்து அந்தக் குரைக்கின்றநாயின்வாயில்
ஏழுபாணங்களை ஒருகொத்தாகவிடுவதுபோல்விடுத்தான். அந்தநாய்
பாணங்களினால் நிரப்பப்பட்டவாயுடன் பாண்டவர்களிடம்வந்தது.
வீரர்களானபாண்டவர்கள் அதைக்கண்டு மிகுந்தஆச்சரியம்கொண்
டனர். அவனுடைய உயர்ந்தலாகவத்தையும் சத்தத்தினால்குறியை
அடிப்பதையும்கண்டு அவர்களனைவரும் நாணமுற்றனர். அவனைச்
சிலாகிக்கவும்சிலாகித்தனர். ராஜாவே! அப்போது அந்தப்பாண்ட
வர்கள் வனத்தில்மீதடி இடைவிடாமல் சரங்களைவிடுத்துக்கொண்

டிருக்கும் அந்தவேடனைக்கண்டனர். பார்வைக்கு விகாரமாயிருக்கும் அவனை அவர்கள் இன்னனென்றறியவில்லை. அதனால், "நீயார்" என்றும், "யாருடையவன்" என்றும்கேட்டனர். அவன், "வீரர்களே! வேடர்க்கரசனாகிய ஹிரண்யதனுஸ்என்பவனுடையபுத்திரனென்றும், தனுர்வேதத்தில் அப்பியாஸம்செய்துகொண்டிருக்கும் துரோணசிஷ்யனென்றும் என்னையறியுங்கள்" என்றுசொன்னான். அந்தப்பாண்டவர்கள் அவனைச்சரியாகத்தெரிந்துகொண்டு திரும்பிவந்து வனத்தில்நடந்தஆச்சரியமெல்லாவற்றையும் நடந்தபடி துரோணருக்கு உரைத்தனர். ராஜாவே! குந்திபுத்திரனாகிய அர்ச்சுனன் மட்டும் ஏகலவ்யனையெதிர்த்துக்கொண்டு ஏகாந்தத்தில் துரோணரிடம்சென்று ஸ்நேகத்துடன், "ஐயா! நீங்கள் என்னொருவனை அன்புடன்தழுவிக்கொண்டு 'உனக்குமேற்பட்டசிஷ்யன் எனக்கில்லை' என்றசொல்லைச்சொன்னீர்கள். அப்படியிருக்க நிஷாதராஜன்புத்ரன் என்னைவிடவும் லோகத்தைவிடவும் சிறந்தபராக்கிரமமுள்ள வேறொருசிஷ்யனாக உங்களுக்கிருப்பது எவ்வாறு?" என்றுகேட்டான். துரோணர் அந்தவிஷயத்தைப்பற்றிச் சற்றுநேரம்சிந்தித்துப்பார்த்து அர்ச்சுனனையழைத்துக்கொண்டு நிஷாதபுத்ரனிடம்சென்றார். சரீரமெல்லாம் அழுக்குப்படிந்து ஜடைகரித்து மரவுரியுடுத்து வில்லும்கையுமாக இடைவிடாமல்சரங்களைவிடுத்துக்கொண்டிருக்கும் ஏகலவ்யனைக்கண்டார். ஏகலவ்யன் அருகில்வரும் துரோணரைக்கண்டு எதிர்கொண்டுபோய்ப் பாதங்களைப்பிடித்துக்கொண்டு பூமியில் தலைபடவந்தனஞ்செய்தான். பிறகு அந்தநிஷாதபுத்ரன் துரோணரைக் கிரமப்படிபூஜித்துத் தன்னைச் சிஷ்யனென்றுதெரிவித்துக் கைகூப்பிஅவர்முன்நின்றான். ராஜாவே! பிறகு துரோணர் ஏகலவ்யனைநோக்கி, "வீரனே! நீ என்சிஷ்யனாயின் எனக்குக் குருதக்ஷிணைகொடுக்கவேண்டும்" என்றுசொன்னார். ஏகலவ்யன் அதைக்கேட்டுச் சந்தோஷத்துடன், "பகவானே! நான் என்னகொடுக்கவேண்டும்? குரு எனக்குக்கட்டளையிடவேண்டும். சிறந்தபிரம்மஜ்ஞானியே! குருவுக்குக் கொடுக்கத்தகாதது எனக்கொன்றுமில்லை" என்றுசொன்னான். துரோணர், அவனை, "நீ வலக்கைக்கட்டைவிரலைக் கொடுக்கவேண்டும்" என்றுசொன்னார். எப்போதும் ஸத்தியந்தவறாதவனாகிய ஏகலவ்யன் துரோணருடைய அந்தக்கொடுஞ்சொல்லைக்கேட்டுத் தன்சொல்லைக் காப்பாற்றுவதற்காக முன்போலவே மலர்ந்தமுகத்தோடும் முன்போலவேஉற்சாகமுள்ளமனத்தோடும் ஒன்றும்சிந்திக்காமல் தனது அந்த வலக்கைக்கட்டைவிரலை வெட்டித் துரோணருக்குக் கொடுத்தான்.

அதன்பின் அந்தவேடன் பாணத்தை மற்றைவிரல்களால் இழுத்து விட்டான். ராஜாவே! முன்னிருந்ததுபோல் விரைவாகஇருக்கவில்லை. பிறகு அர்ச்சுனன் மனமகிழ்ந்து ஜ்வரம்விட்டவனைனன். துரோணரும் சொல்தவறுதவரானர். மற்றொருவன் அர்ச்சுனனைவெல்லப்போவதில்லை. எப்போதும் சிறினமனமுள்ள துரியோதனனும் பீமனும் அப்போது துரோணருக்குக் கதைப்பயிற்சியுள்ள சிஷ்யர்களாயிருந்தனர். அசுவத்தாமா * ரகஸ்யங்களெல்லாவற்றிலும் மேலாகஇருந்தார். அப்படியே இரட்டையராகிய நகுலஸஹதேவர்களிருவரும் மற்றவீரர்களைக்காட்டிலும் மேலான சிலம்பக்காரர்களாகஇருந்தனர். யுதிஷ்டிரர் தேர்ச்சண்டையில் சிறந்தவரானர். அர்ச்சுனன் எல்லாவற்றிலும்புகழ்பெற்றுக் கடல்சூழ்ந்தஉலகத்தில் தேசாளிகளின் அதிபதிகளுக்கும்அதிபதியாகியும், புத்தியிலும் யோகசக்தியிலும் பலத்திலும் உற்சாகத்திலும் எல்லாஅஸ்திரங்களிலும் தேர்ச்சியடைந்தவனாகியும் அஸ்திரவித்தையிலும் குருபக்தியிலும் எல்லாரிலும்மேலாக இருந்தான். அஸ்த்ரோபதேசம் எல்லாருக்கும் ஒன்றாகஇருந்தும் அந்தவீரனாகிய அர்ச்சுனன் ஒருவன் அவயவங்களின் அமைப்பினால் எல்லாக்குமாரர்களிலும் மேலானவீரனாகஇருந்தான். பலத்தில்அதிகரித்தபீமஸேனன்மேலும் வித்தையில்தேர்ந்த அர்ச்சுனன்மேலும் துராத்மாக்களாகிய திருதராஷ்டிரபுத்திரர்கள் ஒன்றுசேர்ந்து பொறுமையுற்றனர். எல்லாவித்தைகளிலும் அஸ்திரங்களிலும் கற்றுணர்ந்த அவர்களெல்லாரையும்கூட்டிப் புருஷச்ரேஷ்டராகியதுரோணர் லக்ஷ்யத்தைஅடிக்கும்விஷயத்தில் பரீக்ஷைசெய்யக்கருதி, குமாரர்களுக்குத்தெரியாமல் சிற்பிகளாற்செய்யப்பட்ட ஒரு†பாஸபக்ஷியைப்போன்றபதுமையை மரத்தின்நுனியிலேற்றி அதை அவர்களுக்குக் குறியாகக்காண்பித்தார். "நீங்களனைவரும் சீக்கிரமாக வில்லுகளெல்லாவற்றையும் எடுத்துக்கொண்டு அம்புகளைத்தொடுத்து இந்தப்பாஸம் என்னும்பக்ஷியைக் குறியிட்டுநில்லுங்கள். என்சொல்புறப்படுங்காலத்தில் இதன்சிரஸைத் தள்ளிவிடவேண்டும். ஒவ்வொருவனுக்குக் கட்டளையிடுவேன். புத்திரர்களே! அவ்வாறு செய்யுங்கள்" என்று துரோணர் சொன்னர்.

பிறகு அங்கிரஸ்வம்சத்தாரில்சிறந்தவராகிய துரோணர் முதலில் யுதிஷ்டிரரைநோக்கி, "ஜயிக்கக்கூடாதவீரனே! பாணத்தைத்தொடு; என்சொல்லின்முடிவில் அதைவிடு" என்றார். குருவின்வாக்கியத்தினால்தூண்டப்பட்ட வீரரான யுதிஷ்டிரர் உடனேமுதலில் வில்லையெடு

* மந்திரத்தியானமுதலியவை. † கள்ளிக்காகதை.

DR. U.V. SWAMINATHAN :: MADRAS
TIRUVANMIYUR

த்துப் பாஸபக்ஷியைக்குறிவைத்து நின்றார். பரதச்ரேஷ்டரே! பிறகு துரோணர், வில்லிலவனைத்துக்கொண்டிருக்கும் அந்தக்கௌரவபுத்திரராகியயுதிஷ்டிரரைநோக்கிச் சற்றுநேரம்பொறுத்து, "ராஜகுமாரனே! மரத்தின்தூனியிலிருக்கும் பாஸபக்ஷியை நீ பார்க்கிறாயா?" என்று கேட்டார். யுதிஷ்டிரர், "பார்க்கிறேன்" என்று ஆசாரியருக்கு மறுமொழிசொன்னார். மறுபடியும் சற்றுநேரம்பொறுத்துத் துரோணர், "இந்தமரத்தையும் என்னையும் உன்சகோதரர்களையும் பார்க்கிறாயா?" என்று யுதிஷ்டிரரைக்கேட்டார். அதற்கும் அந்தயுதிஷ்டிரர், "இந்தமரத்தையும் உங்களையும் என்னஸஹாதரர்களையும் பாஸபக்ஷியையும் பார்க்கிறேன்" என்று பலமுறைசொன்னார். துரோணர் மனத்தில்அதிருப்தியுடன், "இந்தலக்ஷ்யம் உன்னால் அடிக்கமுடியாது" என்றிகழ்ந்து, அவரைப்போகும்படிசொன்னார். பெரும்புகழ்பெற்ற துரோணர் பிறகு மற்றச்சிஷ்யர்களாகிய துரியோதனன்முதலான க்ருதராஷ்டிரபுத்திரர்களையும், பீமன்முதலியவர்களையும் அன்னியதேசத்துஅரசர்களையும் பரீக்ஷிப்பதற்கு யுதிஷ்டிரரைக்கேட்டமுறையாகவேமேகேட்டார். எல்லாரும் எல்லாவற்றையும் பார்க்கிறோமென்று சொன்னபோது, அவர்கள் அவரால்நிந்திக்கப்பட்டார்கள்.

நூறறுநாற்பத்துமூன்றுவது அத்தியாயம்.

ஸம்பவபர்வம். (தொடர்ச்சி.)

(குறிவைத்த பாஸபக்ஷியை அர்ச்சுனன் சேதித்ததும், அவன் முதலையைக்கொன்று துரோணரை விடுவித்ததும், துரோணர் அவனுக்குப்ரம்மசிரஸ் என்னும் அஸ்திரத்தைக் கொடுத்ததும்.)

பிறகு துரோணர் சிரித்துக்கொண்டு அர்ச்சுனனைப்பார்த்து, "நீ இப்போது அடிக்கவேண்டியது; இந்த லக்ஷியத்தைப்பார்; நான் சொல்லுகிறகாலத்தில் பாணம் விடவேண்டியதாயிருக்கும், புத்திரனே! தனுஸை வளைத்துக்கொண்டு சற்றுநேரம் ஸரியாகநில்" என்றுசொன்னார். இவ்வாறுசொல்லப்பட்ட ஸவ்யஸாசி வில்லைமண்டலமாக வளைத்துக்கொண்டு குருவின்சொல்லினால் தூண்டப்பட்டுப் பாஸபக்ஷியைக் குறிவைத்து நின்றான். சற்றுநேரம் பொறுத்துத் துரோணர் அவனையும் முன்போலவே, "அர்ச்சுன! இங்கிருக்கும் இந்தப் பாஸபக்ஷியையும் மரத்தையும் என்னையும் பார்க்கிறாயா" என்றுகேட்டார். பாரதரே! "பாஸம் ஒன்றைமட்டும் பார்க்கிறேன்;

மரத்தையும் பார்க்கவில்லை; உங்களையும் பார்க்கவில்லை" என்று துரோணரைப்பார்த்து மறுமொழிகூறினன். பிறகு ஜயிக்கமுடியாத தவராகிய துரோணர் மனத்தில் திருப்தியடைந்து சற்றுநேரம் பொறுத்துத் திரும்பவும் பாண்டவர்களுக்குள் மஹாரதனுகிய அந்த அர்ச்சுனனைநோக்கி, "நீ இந்தப்பாஸபக்ஷியைப் பார்க்கிறாயாயின் அந்தச்சொல்லை மறுபடியும் சொல்" என்றுகேட்டார். அவன், "பாஸத்தின் சிரஸைப்பார்க்கிறேன். உடலைப் பார்க்கவில்லை" என்று மறுமொழிகூறினன். அர்ச்சுனனுல் இவ்வாறு சொல்லப்பட்டதும் துரோணர் மயிர்க்கூச்சலெடுத்தவராகி அர்ச்சுனனைநோக்கி, "விடு" என்றுசொன்னர். அவன் உடனே விட்டுவிட்டான். அப்போது அந்தப்பாண்டவன் மரத்திலிருக்கும் அந்தப் பாஸபக்ஷியின்தலையைக் கூர்மையான அர்த்தசந்திரபாணத்தினுல் அறுத்து வேகமாகக் கீழே தள்ளினன். அந்தச்செய்கை நிறைவேறினவுடன் துரோணர், அர்ச்சுனனைக் கட்டிக்கொண்டார். யுத்தத்தில் துருபதனை ஸைனியோடு கூடத் தோற்கச்செய்யத் தக்கவனுக நினைத்தார்.

பரதச்ரேஷ்டரே! அதன்பிறகு சிலகாலத்திற்கெல்லாம் அங்கிரஸ்வம்சத்தவரிற் சிறந்த துரோணர் சிஷ்யர்களுடன்கூட ஸ்நானம் செய்யக் கங்கையைநோக்கிச் சென்றார். பிறகு ஜலத்தில் அமிழ்ந்த துரோணாசாரியரை ஜலத்தில்ஸஞ்சரிக்கும் பலமுள்ள ஒருமுதலை காலத்தினுல்ஏவப்பட்டுக் கணைக்காலில் பிடித்தது. அவர் விடுவித்துக்கொள்ள வல்லவராயிருந்தும், "முதலையைக்கொன்று என்னைச் சீக்கிரம் விடுவியுங்கள்" என்று சிஷ்யர்களெல்லாரையும் துரிதப்படுத்தி ஏவினர். அவர் சொல் புறப்படுங்காலத்திலேயே அர்ச்சுனன் தடுக்கமுடியாத கூர்மையான ஐந்து அம்புகளினுல் நீருக்குள் மூழ்கியிருந்த முதலையை அடித்தான். அப்போது மற்றவர்கள் ஒன்றுந் தோன்றுமல் அங்குமிங்கும் ஓடினர். கிரியையுள்ள அந்த அருச்சுனனைக்கண்டு துரோணர் எல்லாச்சிஷ்யர்களிலும் சிறந்தவனென்று நினைத்து அப்போது மிகுந்த திருப்தியுள்ளவரானர். அர்ச்சுனன் பாணங்களினுல் அனேகம்துண்டுகளாகச்செய்யப்பட்ட அந்தமுதலை மஹாத்மாவான துரோணருடைய கணைக்காலைவிட்டுவிட்டு மரணமடைந்தது. எல்லாச்செய்கைகளையும் தெரிவிப்பதற்காகச் சிஷ்யர் களைவரவழைத்தார். சிறந்தபராக்கிரமமுள்ள துரோணர் துரியோதனனையும் சித்திரஸேனனையும் துச்சாஸனனையும் விவிம்சதியையும் அர்ச்சுனனையும் அசுவத்தாமாவையும்அழைத்து மண்ணுல் ஒருகுழந்தைசெய்வித்துச் சிஷ்யர்கள் பார்த்திருக்கையில் கங்கையில் போட்

டார். கண்களைத் துணியினால்கட்டிவிட்டு வில்லைக்கொடுத்தார். "கண் கட்டினபடியே ஜலத்திலிருக்கிற இந்தக்குழந்தையை அடியுங்கள்" என்றார். உடனே ஸமர்த்தனனை அர்ச்சுனன், ஜலத்தில்மூழ்கியிருந்த சிசுப்பதுமையைப் பதினைந்துபாணங்களினால் அடித்தான். அந்தக் கிரியைகளெல்லாவற்றையும்பார்த்துத் துரோணர் எல்லாச்சிஷ்யர்களி லும் அர்ச்சுனனைச் சிறந்தவனாகநினைத்தார். அப்போது மிகுந்த ஸந் தோஷமடைந்தார். பிறகு துரோணர், மஹாரதனும் மஹாத்மாவு மாகிய அர்ச்சுனனைநோக்கி, "சிறந்தகைகளையுடையவனே! சிறப் புள்ளதும் தாங்குவதற்கு மிகஅஸாத்தியமுமாகிய இந்த 'ப்ரம்ம சிரஸ்' என்னும் அஸ்த்ரத்தைப் ப்ரயோகஸம்ஹாரங்களோடும் பெற் றுக்கொள். நீ இதை எவ்வகையிலும் மனிதர்களின்மேல் ப்ரயோகிக் காதே; அற்பசக்தியுள்ளவன்மேல் ப்ரயோகித்தால் இம்மூ உலகத்தை எரித்துவிடும். குழந்தாய்! இந்தலோகங்களில் இந்தஅஸ்த்ரம் நிக ரற்றதென்று சொல்லப்படுகின்றது. அதை நியமத்துடன் தரித்துக் கொள். நான் இனிச்சொல்லப்போகிறசொல்லையும் கேள்; வீரனே! யுத்தத்தில் மனிதரல்லாத தேவர்முதலிய சத்துருக்கள் எவராயினும் உன்னைவருத்துவாராயின் அப்போது அவரை வதஞ்செய்வதற்கு இந்தஅஸ்திரத்தைப் ப்ரயோகஞ்செய்" என்றுசொன்னார். அந்த அர்ச்சுனன் அப்படியேயென்று ப்ரதிஜ்ஞைசெய்து கைகூப்பி அந்த மேலான அஸ்திரத்தைப்பெற்றுக்கொண்டான். குரு மறுபடியும் அவ னைநோக்கி, "உலகத்தில் உன்னைப்போன்றவில்லாளி மற்றொருபுரு ஷன் இரான்" என்றுசொன்னார்.

நூற்றுநாற்பத்துநான்காவது அத்தியாயம்.

ஸம்பவபர்வம். (தொடர்ச்சி).

(துரோணருடைய சிஷ்யர்களைப் பரீக்ஷிப்பதற்காக ஒரு சிலம்பக்கூடஞ் செயது அதைச்சேர்ந்த காடசிமண்டபத்தில் பீஷ்மர் முதலியவர்கள் ப்ரவேசித்ததும், சிஷ்யபரீக்ஷையும், பீமனையும் துரியோ தனனையும் கதாயுத்தத்தில் பரீக்ஷித்ததும்).

பாரதரே! ராஜாவே! துரோணர், திருதராஷ்டிரபுத்திரர்களும் பாண்டுபுத்திரர்களும் அஸ்த்ராப்யாஸத்தில் தேர்ந்திருப்பதையறிந்து கிருபர், ஸோமதத்தன், புத்திமானான பாஹ்லீகன், பீஷ்மர், வியா ஸர், விதுரர் இவர்களுடைய முன்னிலையில் திருதராஷ்டிர மஹாராஜா

வைப்பார்த்து, "ராஜாவே! குருச்ரேஷ்டனே! உனதுகுமாரர்களுக்கு வித்தைவந்திருக்கிறது. ராஜாவே! உன் அனுமதியின்மேல் அவர்கள் தங்கள் கல்வியைக் காண்பிக்கக்கடவர்" என்றுசொன்னர். பிறகு திருதராஷ்டிரமஹாராஜன் மனமகிழ்ந்து, "பாரத்வாஜபுத்ரரே! பிராமணச்ரேஷ்டரே! நீர் பெரியகாரியம் செய்திருக்கிறீர். நீர் எந்தக்காலத்தையும் எந்த இடத்தையும் என்னஎன்ன வகையான செய்கையையும் நினைக்கிறீர்களோ அதையெல்லாம் அவ்வாறுகச்செய்யும்படி நீங்களே எனக்குக் கட்டளையிடுங்கள். இப்போது எனக்குள்ளதுக்கத்தினல், அஸ்த்ரவிஷயத்தில் பராக்ரமத்தைச்செய்யும் என்புத்திரர்களை யவர்கள்காண்பார்களோ அந்தக்கண்ணைப் பெற்றமனிதர்கள்மேல் நான் ஆசையுள்ளவனகவிருக்கிறேன். விதுரனே! பெரியவராகியஆசாரியர் எதைச்சொல்லுகிறாரோ அதை அப்படியேசெய். தர்மத்தில்லிருப்பமுள்ளவனே! இவ்வகையானபிரியம் இனிவருமென்று நான்நினைக்கவில்லை" என்றுசொன்னன். பிறகு சிறந்தபுத்திமானுகிய துரோணாசாரியர் திருதராஷ்டிரமஹாராஜாவினிடத்திலும் விதுரரிடத்திலும் அனுமதிபெற்றுக்கொண்டு மேடுபள்ளமில்லாமலும் மரங்களில்லாமலும் புதர்களில்லாமலும் வடக்கேதாழ்ந்துமிருக்கிற அழகான ஓரிடத்தை அளக்கச்செய்தார். நல்லநக்ஷத்திரத்தோடுகூடியதிதியில் அந்தப்பூமியில் பலியைச்செய்தார். பரதச்ரேஷ்டரே! அந்தப்பலிக்காகப் பட்டனைமுழுதும் பறையடிக்கப்பட்டது. பெயர்பெற்றசில்பிகள் சிலம்பார்செய்யுமிடத்தில் மிக்கவிசாலமும் சாஸ்திரத்தில்சொன்னபடி ஸரியாக வகுக்கப்பட்டதுமான காட்சிச்சாலையைத் துரோணாசாரியர்கட்டளைப்படி செய்தனர். ராஜாவே! தேசத்திலுள்ளஜனங்கள், அவ்விடத்தில் ஸ்திரீகளுக்காக எல்லாஆயுதங்களோடுகூடியகாவல்களையும், அகலமும்உயரமுமுள்ள மஞ்சங்களையும் மிகுந்தவிலைபெற்றபல்லக்குக்களையும் செய்வித்தனர். பிறகு அந்தக்குறிப்பிட்டதினம் வந்தபோது திருதராஷ்டிரமஹாராஜா, வியாஸரிடம் அனுமதிபெற்று, ஸபையாரோடும் அந்தப்புரஸ்திரீகளோடும் மந்திரிகளோடும் பீஷ்மரையும் ஆசாரியர்களிற்சிறந்தகிருபரையும்முன்னிட்டுக்கொண்டும் பாஹ்லீகனையும் ஸோமதத்தனையும் பூரிச்ரவஸ்ஸையும் மற்றக்கௌரவர்களையும் ஸஹாயமாகஅழைத்துக்கொண்டும் பிராமணர்களுடன்கூட நகரத்திற்குவெளியில் சிலம்பஞ்செய்யுமிடம்சேர்ந்து, சுற்றிலும் முத்துச்சரங்கள்தொங்கவிடப்பட்டதும் வைடூரியங்களினலும் ரத்நங்களினலும் பிரகாசிப்பதும் பொன்மயமும் அற்புதமுமான காட்சிச்சாலையை அடைந்தான்.

ஜயிக்கிறவர்களிற் சிறந்தவரே! மிகுந்த பாக்கியமுள்ள காந்தாரியும் குந்தியும் மற்றுமுள்ள ராஜஸ்திரீகளனைவரும், தாதிகளோடும் விருதுகளோடும் தேவஸ்திரீகள் மேருவின்மேல் ஏறுவதுபோல், ஸந்தோஷத்தோடு மஞ்சங்களின்மேல் ஏறினர். பிராமணர்கள், க்ஷத்திரியர்கள் முதலிய நான்குவருணத்தார்களும் ராஜகுமாரர்களுடைய ஆயுதப்பயிற்சியைப் பார்க்கக்கருதிப் பட்டணத்திலிருந்து விரைவாக வந்தனர். பார்க்கவிரும்பின ஜனங்கள் ஒருகொடியில் அங்கே ஓரிடத்திற் சேர்ந்தனர். அப்போது அந்த ஸபையானது செவ்வையாக வாசிக்கப்பட்ட வாத்தியங்களாலும் ஜனங்களின் உத்ஸாகத்தினாலும் பெருங்கடல் கலங்கினதுபோலிருந்தது. பிறகு வெண்மையான ஆடையையுடுத்தினவரும் வெளுப்பான யஜ்ஞோபவீதம் தரித்தவரும் வெளுத்தசலமயிரோடு வெளுப்பான மீசைதாடிகளையுடையவரும் வெளுத்த புஷ்பசந்தனங்களே அணிந்தவருமாகிய அந்தத் துரோணாசாரியர், மேகங்களால் விடுபட்ட ஆகாயத்தில் அங்காரகனுடன் சந்திரன் பிரவேசிப்பதுபோற் சிலம்பக்கூடத்தின் நடுவில் தம்புத்திரனுடன்கூடப் பிரவேசித்தார். பலவான்களிற் சிறந்ததுரோணர் வ்யாஸருடைய அனுமதியைப் பெற்றுக்கொண்டு சிலம்பக்கூடத்திற்குப் பூஜைசெய்தார். மந்திரங்களைச் செவ்வையாக அறிந்த பிராமணர்களைக்கொண்டு மங்களகாரியங்களைச் செய்வித்தார். த்ருதராஷ்டிரமஹாராஜா துரோணருக்கும் கிருபருக்கும் பொன்னையும் ரத்தினங்களையும் முத்துக்களையும் பலவகை வஸ்திரங்களையும் தக்ஷிணையாகக் கொடுத்தான். ஸுகத்தைத் தரத்தக்கதும் புண்ணியமுமான புண்ணியாஹவாசனத்தைச் செய்தபிறகு, வேலைக்காரர்கள் பலவகைகளான ஆயுதக்கருவிகளை எடுத்துக்கொண்டு வந்தனர். அதன் பிறகு மஹாரதர்களும் பாதச்ரேஷ்டர்களுமாகிய ராஜகுமாரர்கள், * வில்களில் கவசங்களை அணிந்து கச்சைகளையும் தூணிகளையும் கட்டிக்கொண்டு வில்லுகளையெடுத்துக்கொண்டு பிரவேசித்தனர். அந்தப் புருஷச்ரேஷ்டர்கள் அரங்கத்தின்நடுவிலிருந்து துரோணருக்குஅபிவாதனஞ்செய்து, துரோணாசாரியருக்கும் கிருபாசாரியருக்கும் முறைப்படி மரியாதைசெய்தனர். அவர்களால்செய்யப்பட்ட ஆசீர்வாதங்களினால் கௌரவர்களெல்லாரும் மனத்தில்ஸந்தோஷமடைந்து திரும்பவும் வந்தனஞ்செய்து முன்னமேபூஜைசெய்யப்பட்டிருந்தஅஸ்திரங்களை செஞ்சந்தனத்தினாலும் பூஜைக்குரியபுஷ்பங்களாலும் தாங்களும் பூஜித்தனர். செஞ்சந்தனம்பூசிக்கொண்டவர்களும்

* உடும்புத்தோலினால் செய்யப்பட்ட விரலுறை.

சிவந்தமாலைகள் தரித்தவர்களும் சிவந்தகொடிகள் பிடித்தவர்களும் சிவந்தகடைக்கண்களுடையவர்களும் மாற்றுயர்ந்த பொன்னுபரணங்களணிந்துகொண்டவர்களும் பற்பலரூபங்களோடுகூடியவர்களுமாகிய அந்தக்கௌரவவீரர்களனைவரும் துரோணரால் அனுமதிகொடுக்கப்பெற்று ஆயுதங்களையெடுத்துக்கொண்டனர். முதலில் விற்களையெடுத்துநாணேறிட்டு அம்புகளைத்தொடுத்து நாண்சப்தத்தையும் உள்ளங்கைச்சப்தத்தையுஞ்செய்து, அதனால் ஜனங்களை மூர்ச்சிக்கச்செய்தனர். யுதிஷ்டிரர்முதலிய சிறந்தபராக்ரமமுள்ள அந்தராஜகுமாரர்கள் அங்கே துரியோதனன்முதலாக வரிசைப்படி மிகவியக்கத்தக்க ஆயுதப்பயிற்சியைச்செய்தனர். ராஜாவே! அந்தஸபையில் சிலருடையபூமாலைகளில் அம்புகள் விழுந்தன. சிலர் தலையிற்சூட்டிக்கொண்ட புஷ்பங்களில் பாணங்கள்விழுந்தன; சிலர் தங்கள்பெயரடையாளமுள்ள பலவகைப்பாணங்களை லாகவமாகவிட்டுப் பெரியவையும்சிறியவையுமானகுறிகளை அடித்தனர். சிலமனிதர்கள் பாணம்விழுமென்ற பயத்தினால் தலைகுனிந்தனர். இன்னும்சிலமனிதர்கள் பயமற்று ஆச்சரியத்துடன்பார்த்திருந்தனர். அந்தக்குமாரர்கள் குதிரைகளிலேறிக்கொண்டு தங்கள்பெயர்அடையாளங்களிலுள்விளங்குகின்ற பலவகைப்பாணங்களை லாகவமாகவிட்டு லக்ஷியங்களை விரைவில்அடித்தனர். பாணங்களையும் வில்லுகளையும் தரித்துக்கொண்டிருக்கும் அந்தக்குமாரர்களின்கூட்டம் கந்தர்வநகரம்போலிருந்ததைக்கண்டு அங்குள்ளஜனங்கள் திகைத்திருந்தனர். பாரதரே! அங்கே லக்ஷ்யக்கணக்கானமற்றஜனங்கள் ஆச்சரியத்தினால் மலர்ந்தகண்களோடு நல்லது நல்லதென்று விரைவாகக்கூவினர். மிகுந்தபலமுள்ள அந்தராஜகுமாரர்கள் தேர்கள்மேலும் யானைகள்மேலும் குதிரைகள்மேலும்ஏறி வில்யுத்தத்திலும் கைச்சண்டையிலும் பலவழிகளைச்செய்துகாண்பித்து மறுபடியும் கத்திகேடகங்களைப்பிடித்து யுத்தஞ்செய்து கத்திச்சிலம்பத்தின்வழிகளையுஞ்செய்து உபதேசப்படி எல்லாஇடங்களிலும் ஸஞ்சரித்தனர். அந்தக்குமாரர்களெல்லோருக்கும் கத்திகேடகங்களிலுள்ள லாகவத்தையும் அங்கஅமைப்பையும் திருத்தத்தையும் நின்றநிலைதவறுமையையும் பிடித்தபிடிவிடாமையையும் ஸமயத்தில்ப்ரயோகிப்பதையும் அங்குள்ளஜனங்கள்பார்த்தனர். பிறகு எப்போதும் உற்சாகமுள்ளதுரியோதனனும் பீமஸேனனும் கைகளில்கதைகளை யெடுத்துக்கொண்டு ஒற்றைக்கொடுமுடியுள்ள இரண்டுமலைகள்போல் பிரவேசித்தனர். சிறந்தகைகளையுடையவர்களும் பராக்கிரமம்தவறுதவர்களுமாகிய அவ்விருவர்களும் கச்சைகட்டிக்கொண்டு ஒரு பெண்

யானைக்காக மதங்கொண்டஇரண்டு பெரியயானைகள்போவதுபோலப் போயினர். மஹாபலசாலிகளான அவ்விருவரும் மண்டலஸஞ்சாரத் தையாரம்பித்து மதமுள்ளஇரண்டுயானைகளைப்போல் வலமும்இடமு மாக அனேகமண்டலங்கள்சுற்றினர். திருதராஷ்டிரனுக்கு விதுரரும், காந்தாரிக்குக் குந்தியும் குமாரர்களின் அந்தச்செய்கையையெல் லாம் தெரிவித்தனர்.

நூற்றுநாற்பத்தைந்தாவது அத்தியாயம்.

ஸம்பவபர்வம். (தொடர்ச்சி).

(அர்ஜுனனைப் பரீக்ஷித்தபோது சிலம்பக்கூடத்தில் கர்ணன் பிரவேசித்தது).

குருராஜனுகிய துரியோதனனும் பலவான்களிற்சிறந்த பீம சேனனும் களத்திலிருக்கும்போது அவர்களிடம் பக்ஷபாதத்தினால் சினேகம்வைத்த ஜனங்கள் இரண்டுகையாகப் பிரிந்தனர். "குரு ராஜாவே! ஜயம்பெறு" என்றும், "பீமனே! ஜயம்பெறு" என் றும் மனிதர்களுடைய பெருங்கூச்சல்கள் உடனே எழுந்தன. பிறகு சிறந்தபுத்தியுள்ள துரோணர் கலங்கின கடலைப்போலிருந்த ஸபை யைக்கண்டு தமது அன்புள்ளபுத்திரராகிய அசுவத்தாமாவைநோக்கி, "இந்த இரண்டு மஹாவீரர்களையும் அடக்கு; இருவரும் பயிற்சியில் தேர்ந்தவர். பீமனுக்காகவும் துரியோதனனுக்காகவும் அரங்கத் திற்கு இந்தக்கலகம் உண்டாகக்கூடாது" என்றுசொன்னர். பிறகு அசுவத்தாமா விரைவாகஎழுந்து, "பீமா! குருவின் ஆஜ்ஞை" என் றும், "துரியோதனு! குருவின்கட்டளை" என்றும்சொல்லி "உங்க ளுக்குக் குருவின் உபதேசத்தினால் உண்டானவேக்த்தையும் ஸாக ஸத்தையும் காண்பித்ததுபோதும்" என்று தடுத்தார். பிறகு ஓங் கினகதைகளோடுகூடிய அவ்விருவரும் பிரளயகாலத்துக்காற்றினால் கொந்தளிக்கின்ற இரண்டுகடல்கள் பெருங்கரைகளுக்கடங்குவது போல், குருபுத்ராகிய அசுவத்தாமாவினால் அடக்கப்பட்டனர்.

அதன்பின் துரோணர் ஸபையின்முன்னின்று பெரியமேகமுழ க்கத்துக்கொப்பான வாத்தியசப்தத்தையடக்கி, "என்புத்திரனேவிட எனக்கு மிக்கநண்பனும் எல்லாஆயுதங்களிலும் நிபுணனும் உபேந் திரனுகிய விஷ்ணுவுக்கொப்பானவனுமாகிய இந்தஇந்திரபுத்திரனை

பார்த்தனைப் பாருங்கள்" என்றுசொன்னார். உடனே ஆசாரியர்வாக்கினால் ஆசீர்வாதம்செய்யப்பட்ட பெலவனத்தையுடையவனான அர்ச்சுனன் விரலில் உறையணிந்து தூணிகளில் பாணங்களைநிரப்பிக்கொண்டு வில்லைப்பிடித்துப் பொன்மயமானகவசத்தைத்தரித்து, ஸூர்ய னைப்போலும் இந்திரதனுஸ்ஸோடும் மின்னலோடுங்கூடிய ஸந்தியாகாலத்துச் சிவப்புமேகம்போல் எதிரில்காணப்பட்டான். பிறகு ஸபை முழுமைக்குமே ஒருமலர்ச்சிஉண்டாயிற்று. வாத்தியங்களும் சங்கங்களும் எங்கும் முழக்கப்பட்டன. பார்ப்பவர்கள், "இவன் குந்திபுத்திரன்; இவன் அழகுள்ளவன்; இவன் பாண்டவர்களில் நடுவாமவன்; இவன் தேவேந்திரனுடையபுத்ரன்; இவன் கௌரவர்களைக்காப்பாற்றுகிறவன்; இவன் அஸ்த்ரம்தெரிந்தவர்களிற்சிறந்தவன்; இவன் கர்மிஷ்டர்களிற்சிறந்தவன்; இவன் சீலமுள்ளவர்எல்லாரிலும்சிறந்தவன்; நல்லொழுக்கத்திற்கும் ஞானத்திற்கும் நிதியானவன்" என்று உரக்கச் சொன்னவார்த்தைகளை எல்லாரும்கேட்டனர். குந்தியின் மார்பு பால்சுரந்து ஆனந்தக்கண்ணீரால்நனைக்கப்பட்டிருந்தது. அந்தப்பெரிய ஜனத்திரளிலிருந்துண்டாகிய சப்தத்தினால்நிரப்பப்பட்ட காதுகளையுடையதிருதராஷ்டிரமஹாராஜன் மனமகிழ்ந்து விதுரரை நோக்கி, "விதுரனே! கலங்கினஸமுத்ரத்தின்கோஷத்துக்கொப்பான இந்தமிகப்பெரியசப்தம் எது? ஆகாசத்தைக்கிழிப்பதுபோல் ஸபையில் திடீரென்றுஉண்டாயிருக்கிறதே" என்றுகேட்டான். அதற்கு விதுரர், "மஹாராஜாவே! குந்திபுத்திரனும் பாண்டுபுத்திரனுமாகிய இந்தப்பல்குனன் கவசத்துடன் ரங்கத்தில்இறங்கியிருக்கிறான். அதற்காக இந்தப்பெருங்கோஷமுண்டாயிற்று" என்றுசொன்னார். திருதராஷ்டிரன், "நிறைந்தபுத்தியுள்ளவனே! பாக்கியம்பெற்றேன்; குந்தியென்னும்அரணியிலுண்டான மூன்றுபாண்டவர்களென்னும் திரேதாக்னிகளால் சிறப்பிக்கப்பட்டேன்; ரக்ஷிக்கப்பட்டேன்" என்றுசொன்னான். அந்தஸபையிலுள்ளஜனங்கள் பிரயாஸப்பட்டுவந்து ஸந்தோஷமாகஇருக்கும்போது அர்ச்சுனன் தன்அஸ்திரசாதுரியத்தை ஆசாரியர்க்குக்காண்பித்தான். ஆக்நேயாஸ்த்ரத்தினால் தீயையும், வாருணாஸ்த்ரத்தினால் ஜலத்தையும், வாயுஅஸ்த்ரத்தினால் காற்றையும், மேகாஸ்த்ரத்தினால் மேகங்களையும், பூமியாஸ்த்ரத்தினால் பூமியையும், பர்வதாஸ்த்ரத்தினால் மலைகளையும் உண்டுபண்ணினான். அந்தர்த்தானமென்னும்அஸ்த்ரத்தினால் தானே மறைந்தான். ஒருக்ஷணம்ம யாரும் பார்க்ஷணம்குள்ளாகவும் கூணைத் துக்கெல்லாம் தேர்த்தட்டிலும் மறுக்ஷணம் தேர்நடுவிலும் அடுத்தக்ஷணம்பூமியி

லும் இருப்பவனுகக்காணப்பட்டான். ஆசாரியருக்கு அன்பனுகிய அந்த அர்ச்சுனன் ஸௌஷ்டவமென்றுசொல்லப்பட்ட அங்கங்களின் அமைப்புடன்கூடிப் பலவகைகளானபாணங்களினுல் மெதுவும் பெரிதும் சிறிதுமான லக்ஷியங்களேயடித்தான். சுழன்றுகொண்டிருக்கும் இரும்புப்பன்றியின்வாயில் ஒரேகாலத்தில் ஐந்துபாணங்களே ஒரு பாணம்போல் தடையில்லாமல்விடுத்தான். சிறந்தபராக்ரமமுள்ள அர்ச்சுனன், கயிற்றில்தொங்கிஆடிக்கொண்டிருக்கும் கூர்மையானமாட்டுக்கொம்பில் இருபத்தொருபாணங்களேநாட்டினுன். குற்றமற்றவரே! ஆயுதங்களில்ஸமர்த்தனுகிய அர்ச்சுனன் கத்தியிலும் தனுஸிலும் இப்படிப்பட்டமிகப்பெருங்காரியங்களேச்செய்து, கதையிலும் மண்டல ஸஞ்சாரங்களேக் காண்பித்தான்.

பாரதரே! அப்போது அந்தவேலே அனேகமாகமுடிந்து ஸபையும் வாத்தியகோஷமும் ஓய்ந்திருக்கையில் வஜ்ராயுதத்தின் அடிக்குஒப்பானதும் மஹிமைபையும் வன்மையையும் அறிவிப்பதுமாகிய தோள்தட்டினசப்தம் வாயிற்பக்கத்திலிருந்து கிளம்புவதாகக் கேட்கப்பட்டது. ராஜாவே! 'மலேகள்பிளக்கப்படுகின்றனவா? பூமிவெடிக்கின்றதா? நீர்த்தாரைகள்நிரம்பினமேகங்களினுல் ஆகாயம் நிரப்பப்படுகின்றதா?' என்றஎண்ணம் ஒருக்ஷணம் ஸபையிலுள்ளவர்களுக்கு உண்டாயிற்று. அப்போது பார்ப்பவர்களனேவரும் வாயிலேநோக்கினர். ஸமஹாதரர்களாகிய பஞ்சபாண்டவர்களால்சூழப்பட்ட துரோணர், ஹஸ்தகக்ஷத்திரம்பீங்தோடுகூடிய சந்திரனேப்போல விளங்கினர். சத்துருக்களேக் கொல்லுகிறவனுகிய துரியோதனன் எழுந்திருக்க, அசுவத்தாமாவுடன்கூடப் பலமுள்ள நூறுஸமஹாதரர்களும் அவனேச் சூழ்ந்துகொண்டனர். ஆயுதங்களேத்தூக்கிக்கொண்டு உறுதியாகநிற்கின்ற அந்தஸமஹாதரர்களால்சூழப்பட்டுக் கதையை நுனிக்கையில்பிடித்திருந்த அந்தத்துரியோதனன், முற்காலத்தில் அஸுரஸம்ஹாரஞ்செய்தபோது தேவக்கூட்டங்களினுற்சூழப்பட்ட இந்திரனேப்போல்விளங்கினன்.

நூற்றுநாற்பத்தாருவது அத்தியாயம்.

ஸம்பவபர்வம். (தொடர்ச்சி.)

(கர்ணனுடையபரீக்ஷையில் அவனுக்கும் அர்ச்சுனனுக்கும் நடந்தவாக்குவாதத்தில் கிருபாசாரியர் கர்ணனைஇகழ்ந்ததற்காகத் துரியோதனன் கர்ணனுக்கு ராஜ்யாபிஷேகம்செய்வது.)

அதேகாலத்தில் அந்தஜனக்கூட்டத்தில் மணிகள் வழிவிட்டு விலக, பகைவரின்கரங்களைஜயிப்பவனும் உடன்பிறந்தகவசத்தைத் தரிப்பவனும் குண்டலங்களினால்சோபிக்கும் முகமுள்ளவனும் குரீக்குக் கண்ணிப்பருவத்திற்பிறந்தவனும் உக்கிரமான்கிரணங்களுடைய சூரியனுடையஅம்சமானவனும் பெரியகண்களையுடையவனும் சத்ருசைனியத்தையழிப்பவனுமாகிய கர்ணன் உற்சாகத்தினால் மலர்ந்தகண்களுடன் கத்தியைக்கட்டிக்கொண்டு விஸ்தீர்ணத்தில் பார்வதம் காலால்நடப்பதுபோல் விசாலமான அரங்கத்தில் பிரவேசித்தான். பலத்தில்யானைக்கும் சூரத்தனத்தில் விருஷபத்திற்கும் எல்லாவற்றையும் அடக்குந்திறமையில் ஸிம்மத்துக்குமொப்பானவனும், ஒளியில் சூரியனுக்கும் தண்மையில்சந்திரனுக்குமே ஜ்வலிப்பதில்அக்கினிக்குமொப்பானவனும், பொற்பிணைமரம்போல் உயரமானவனும், ஸிம்மம் போன்ற சரீரக்கட்டுடையவனும், யௌவனவயஸ்ஸிலிருப்பவனும், எண்ணிமுடியாதகுணங்களுடையவனும், அழகுள்ளவனும், சிறந்த கைகளுள்ளவனும் அந்தஸூர்யபுத்ரனுமாகியகர்ணன் வட்டமான ஸபையைச் சுற்றிலும்பார்த்து அதிகமாகபரியாதவன்போல் துரோணருக்கும் கிருபருக்கும் நமஸ்காரஞ்செய்தான். அந்தச்சபையிலுள்ளஜனங்களனைவரும் அசைவற்றுக் கண்கொட்டாமல் இவன்யாரென்று கலக்கமுண்டாகிப் பார்க்கஆரம்பித்தார்கள். அசைவற்றகண்களுடன் அசைவற்றுநின்றனர். பேசுகிறவர்களிற்சிறந்தவனும் ஸூர்யபுத்ரனும் அர்ச்சுனனுடையஸ்நேஹாதரனுமாகிய கர்ணன், இந்திரபுத்ரனும் தனக்குத்தெரியாத தன்ஸ்நேஹாதரனுமாகிய அர்ச்சுனனைநோக்கி மேககர்ச்சனம்போல் கம்பீரமானகுரலுடன் பேசலுற்றான்.

"அர்ச்சுன! நீ என்னகாரியம்செய்தாயோ அதற்குமேற்பட்ட செய்கையைப் பார்த்திருக்கும்மனிதர்முன்னிலையில் நான் செய்யப் போகிறேன். தன்னைப்பற்றியே நீகர்வப்படாதே" என்றான். பேசுகிறவரிற்சிறந்த ஜனமேஜயரே! அவனுடையபேச்சு முடியாமலிருக்

கையிலேயே அங்கிருந்தஜனங்கள் யந்திரத்தினால்தூக்கப்பட்டவர்கள் போல் எல்லாப்புறங்களிலிருந்தும் ஒரேகாலத்தில்எழுந்தனர். புருஷச்ரேஷ்டரே! துரியோதனனிடம் ஸந்தோஷம் குடிகொண்டது. உடனே அர்ச்சுனனுக்கு வெட்கமும்கோபமும் உண்டாயின. மிகுந்த பலமுள்ளவனும் எப்போதும் யுத்தத்தில்விருப்பமுள்ளவனுமாகிய கர்ணன் துரோணரால் அனுமதிகொடுக்கப்பட்டபிறகு, அங்கேஅர்ச்சுனன்செய்தவற்றையெல்லாம் செய்தான். பாரதரே! பிறகு துரியோதனன் தன்ஸஹோதரர்களுடன்கூட அங்கே கர்ணனை ஸந்தோஷத்துடன் தழுவிக்கொண்டு, பின்பு, "மஹாபாஹுவே! உன்வரவு நல்வரவு. எனக்குக் கௌரவத்தைக்கொடுப்பவனே! நீவந்தது என் பாக்கியம். என்னையும் கௌரவர்களுடையராஜ்யத்தையும் உன்னிஷ்டப்படி உபயோகித்துக்கொள்ளலாம்" என்றுசொன்னான். கர்ணன், "எனக்கு எல்லாம் நீ செய்தானதாக நினைக்கிறேன். உன்னுடன் சினேகத்தைவேண்டுகிறேன். பிரபுவே! நான் அர்ச்சுனனுடன் தொந்தயுத்தம்செய்ய விரும்புகிறேன்" என்றான். ராஜாவே! இவ்வாறு கர்ணனால்சொல்லப்பட்ட துரியோதனன் அப்போது நீண்டும் பருத்தும்முள்ள கைகளையுடைய கர்ணனைக் கட்டிக்கொண்டு, "பகைவரைஅடக்குகிறவனே! என்னோடுகூட்டப் போகங்களை அனுபவி; என் உறவினர்களுக்குச் சந்தோஷத்தைச்செய்துகொண்டிரு; என்பகைவர்கள் எல்லாருடையதலைமேலும் உன்காலை வை" என்றுசொன்னான். பிறகு அர்ச்சுனன் தான்இகழப்பட்டதாகநினைத்துத் தன் ஸஹோதரர்களாகிய துரியோதனன்முதலியோர்நடுவில் மலைபோல் நின்ற கர்ணனைநோக்கி, "கர்ணா! நீ என்னாலடிக்கப்பட்டு, அழைக்கப்படாமல்வந்தவர்களும் கேட்கப்படாமல்பேசுகிறவர்களும் எந்தலோகங்களையடைவார்களோ அந்தலோகங்களை அடையப்போகிறாய்" என்றுசொன்னான். அதைக்கேட்டுக் கர்ணன், "பல்குனா! இந்தஸபை எல்லாருக்கும்பொது; இதில் உனக்கென்னவிசேஷம். ராஜாக்கள் பராக்கிரமத்தினால்பெரியவர்கள். ராஜதர்மம் பலத்தை அனுஸரித்திருக்கிறது. பாரதனே! நிந்தையும் பலஹீனர்கள்படும்கஷ்டங்களும் உனக்கேன்? பாணங்களினால் பேசு. இப்போது குருவின் கண்ணெதிரே உன்தலையை அம்புகளினால் எடுத்துவிடப்போகிறேன்" என்றுசொன்னான். பிறகு சத்துருக்களின்நகரங்களை ஜயிப்பவனுகிய பார்த்தன், துரோணரால் அனுமதிகொடுக்கப்பெற்றும் தன்ஸஹோதரர்களால் பரபரப்போடுஆலிங்கனஞ்செய்யப்பட்டும் யுத்தம்செய்யக் கர்ணனைச் சந்தித்தான். பிறகு கர்ணனும், துரியோதனனும் அவன்

ஸஹோதரர்களர்லும் தழுவிக்கொள்ளப்பட்டு, வில்லையும் அம்புகளையும் எடுத்துக்கொண்டு யுத்தத்திற்கு ஆயத்தமாகநின்றான். உடனே ஆகாயம் மின்னலும்கர்ச்சனையுமுள்ளவையும், இந்திரதனுஸைமுன்வைத்துக்கொண்டவையும், நாசைகளின்மாலைகளாகிய பல்வரிசைகளினல் அட்டகாசம்செய்கின்றவைபோன்றவுமான மேகங்களினல் மறைக்கப்பட்டது. பிறகு இந்திரன் புத்ரஸ்னேகத்தினல் அங்கைப்பார்ப்பதாகக்கண்டு, ஸூர்யனும் தன்னருகில்வந்த மேகங்களை நாசஞ் செய்தான். அப்போது அர்ச்சுனன் மேகங்களின்நிழலினல் வியாபிக்கப்பட்டவனைக் காணப்பட்டான். கர்ணன் ஸூர்யகிரணங்களினல் வியாபிக்கப்பட்டவனைக் காணப்பட்டான். த்ருதராஷ்டிரபுத்ரர்கள் கர்ணனிருந்தபக்கத்தில் இருந்தனர். த்ரோணரும் கிருபரும் பீஷ்மரும் அர்ச்சுனனிருந்தபக்கத்தில் இருந்தனர். ஸைன்யமே இரண்டுபிரிவாக ஆயிற்று. ஸ்த்ரீகளினும் இரண்டுபிரிவுகள் உண்டாயின. *விஷயம்தெரிந்தவளாகியகுந்தி மூர்ச்சையடைந்தாள். அவ்வாறு மூர்ச்சையடைந்த அந்தக்குந்தியை ஸர்வதர்மங்களும்தெரிந்த விதுரர் வேலைக்காரிகளைக்கொண்டு சந்தனக்குழம்புகளினல் தேற்றினர். பிறகு மூர்ச்சைவந்தகுந்தி, யுத்தஸன்னத்துடன் கவசமணிந்திருந்த அவ்விரண்டுபுத்ரர்களையும்கண்டு மிகுந்தவ்யஸனத்தினளாகி ஒன்றுந்தோன்றுமலிருந்தாள். தொந்தயுத்தத்தின் மர்யாதைதெரிந்தவரும் ஸர்வதர்மங்களும்தெரிந்தவருமாகிய சாரத்வதரென்றுசொல்லப்பட்ட கிருபாசார்யர் சிறந்தவனுஸுகளையெடுத்துக்கொண்ட அக்கர்ணனைநோக்கிச் சொல்லலானார்.

"குந்தியின் இளையபுத்ரனும் பாண்டுபுத்ரனும் கௌரவனுமாகிய இந்தஅர்ச்சுனன் உன்னுடன் தொந்தயுத்தஞ் செய்யப்போகிறான். சிறந்தகைகளையுடையவனே! நீயார் இவ்வாறு உன்தாயையும்தந்தையையும் நீ எந்தராஜாக்களின் குலத்திற்குப் பூஷணமாகஇருக்கிறாயோ அந்தராஜவம்சத்தையும்சொல். உன்னைத்தெரிந்துகொண்டபிறகு அர்ச்சுனன் உனக்கெதிர்நின்று யுத்தஞ்செய்வானேஎன்பதைப்பார்ப்போம்; குலமும் குலாசாரமும் இல்லாதவர்களோடு ராஜகுமாரர்கள் ஸமயுத்தம் செய்யார்" என்றார். இவ்வாறு அவரால்உரைக்கப்பட்ட கர்ணனுடையமுகம் வெட்கத்தினல்குனிந்து மழைஜலத்தினல்நனைந்து தலைவணங்கிய தாமரைமலர்போல் விளங்கிற்று. அப்போது துரியோதனன் கிருபரைப்பார்த்து, "ஆசார்யரே! சாஸ்த்ரங்களில் நிச்சயித்தபடி ராஜாக்களின்ஜாதிகள் மூன்றுவகை. நல்லகுலத்திற்பிறந்

* கர்ணனேயும் தன்புத்ரனென்றறிந்தது.

தவன் ஒருவன்; சூரன் ஒருவன்; லோகத்தை நடத்துகிறவன் மற்றொருவன். ஜலத்திலிருந்து அக்நியும் பிராமணஜாதியிலிருந்து க்ஷத்திரியஜாதியும் கல்லிலிருந்து லோஹமும் உண்டாயின. அவற்றினுடையசக்தி எங்கும் வியாபிக்கிறது; தங்கள் காரணங்களில் அடங்குகிறது. இந்தஆச்சரியனன் ராஜனல்லாதவனேனும் யுத்தம்செய்ய விரும்பாஞயின் அந்தக்காரணம்பற்றியே நான் இந்தக்கர்ணனை அங்கதேசத்தின் ராஜாவாகப் பட்டாபிஷேகஞ்செய்கிறேன்" என்று சொன்னான். பிறகு ராஜாவான த்ருதராஷ்டிரனையும் பிதாமகராகிய பீஷ்மரையும் அனுமதிகேட்டுக்கொண்டு, அபிஷேகத்துக்குவேண்டிய சாமக்கிரிகளைப் பிராமணர்களைக்கொண்டு சேகரித்து ஸத்கர்மங்களைச்செய்யும் பிராமணர்களுக்கு ஆயிரம்பதினாயிரக்கணக்காகக் தானங்களைச்செய்து, "இவன் அங்கதேசராஜ்யாதிபத்தியத்திற்குத் தகுதியானவன்" என்று பிராமணர்களால் சொல்வித்தபிறகு மஹாரதனும் மஹாபலசாலியுமான கர்ணன் அரைநிமிஷத்தில் மந்திரம்தெரிந்தபிராமணர்களால் தங்கச்சிங்காசனத்தில் உட்காரவைக்கப்பெற்று நெற்பொரிகளும் புஷ்பங்களும்நிரப்பின பொற்குடங்களினால் அங்கராஜ்யபட்டாபிஷேகம் செய்யப்பட்டான். கிரீடத்தாலும் ஹாரத்தாலும் தோள்வளைகளாலும் கைக்கடகங்களாலும் அரசர்களுக்குரிய மற்றுமுள்ள அழகிய ஆபரணங்களாலும் அலங்கரிக்கப்பட்டு, குடைசாமரங்களோடும் ஜயசப்தத்தோடுங்கூட ராஜ்யலக்ஷ்மியை அடைந்தான். அப்படிப்பட்டசிறப்புடைய கர்ணன் அப்போதே துரியோதனனைப்பார்த்து, "ராஜச்ரேஷ்டனே! நீ இந்தராஜ்யம்கொடுத்ததற்கீடாக உனக்கு நான்எதைக்கொடுப்பேன்? சொல். ராஜாவே! உன் சொற்படி யேசெய்வேன்" என்று சொன்னான். அந்தத்துரியோதனன் அவனைநோக்கி, "அதிகஸ்நேகத்தை விரும்புகிறேன்" என்றான். இவ்வாறுசொல்லப்பட்ட கர்ணன் அப்படியேஆகட்டுமென்று உடனே அவனுக்கு மறுமொழிசொன்னான். இருவரும் உற்சாகத்தோடு கட்டிக்கொண்டு மிகுந்தஸந்தோஷத்தையடைந்தனர்.

நூற்றுநாற்பத்தேழாவது அத்தியாயம்.

ஸம்பவபர்வம். (தொடர்ச்சி.)

(கர்ணனுடைய பிதாவாகிய தேரோட்டியாகன் சிலம்பக்கூடத்துக்கு வந்தபோது பீமன் கர்ணனை நிந்தித்ததும், மல்லாடும் அரங்கத்திலிருந்து புறப்பட்டுப்போனதும்.)

பிறகு தேரோட்டுகிறவன், மேல்வஸ்திரமாகிய மேலாடையை நடுக்கமுற்றுத் தடியை ஆதாரமாகப்பிடித்துக் கர்ணனை அழைப்பவன் போல் அரங்கத்தில் பிரவேசித்தான். அவனைப்பார்த்ததும் அபிஷேகத்தினால் ஈரமான தலையையுடைய கர்ணன் பிதாவினிடமுள்ள மரியாதைக்குக் கட்டுப்பட்டுத் தனுஸ்ஸைவிட்டுத் தன் தலையினால் அவனுக்கு வந்தனஞ்செய்தான். உடனே அந்தஸாரதி பரபரப்புற்று வஸ்திரத்தின் தலைப்பினால் பாதங்களை மூடிக்கொண்டு "புத்ரனே!" என்று நிரம்பினபொருளுள்ளசொல்லைச் சொன்னான். பிறகு புதஸ்நேகத்தினால் தளர்ந்து அவனைக்கட்டிக்கொண்டு அங்கராஜ்யபட்டாபிஷேகத்தினால் நனைந்திருக்கும் அவன்தலையை மறுபடியும் கண்ணீரினால் நனைத்தான். பாண்டுபுத்ரனை பீமஸேனன் அந்தஸாரதியைப்பார்த்தபிறகு இவன்ஸூதபுத்ரனென்று கர்ணனைநிந்தித்துச் சிரித்துக்கொண்டே பின்வருமாசொல்லைச் சொல்லத்தொடங்கினன்.

"ஸூதபுத்ரனே! நீ அர்ச்சுனனால் யுத்தத்தில் வதஞ்செய்யபடத்தகுந்தவனல்லை. உன்குலத்துக்குத நருநியான சவுக்கை நீ உடனேஎடுத்துக்கொள்ளலாம்; புருஷர்களில் இழிவானவனே! யஜ்ஞத்தில் அக்நியின்ஸமீபத்திலிருக்கும ஹவிஸ்ஸைச் சாப்பிடுவதற்கு நாய் எப்படி தகுதியில்லையோ அப்படி அங்கராஜ்யத்தை அனுபவிப்பதற்கு நீ உரியவனல்லை" என்றான். இவ்வாறுசொல்லப்பட்ட கர்ணன் உடனே கொஞ்சமும் தடுமாறாமல் பெருமூச்சுவிட்டு ஆகாயத்திலிருக்கும் சூரியனைப்பார்த்தான். பிறகு மஹாபலசாலியான துரியோதனன் கோபத்துடன் தன்னுடைய அந்த ஸஹோதரர்கூட்டத்திலிருந்து, மதங்கொண்டயானை தாமரைக்குளத்திலிருந்து கிளம்புவதுபோலக் கிளம்பினான். அவன், பயப்படத்தக்க செய்கையையுடைய வஜ்ரகரிற்கும் பீமஸேனனைநோக்கி, "வ்ருகோதரனே! இவ்வாறான சொல்லைச்சொல்வது உனக்குத்தகாது. க்ஷத்ரியர்களுக்குப் பலம் பெரிது. க்ஷத்ரியவம்சத்தவன் யுத்தம்செய்யவேண்டும். சூரர்களை

க்கும் நதிகளுக்கும் மூலம்கவனிக்கத்தகாது. ஜங்கம்மங்களிலும் ஸ்தாவரங்களிலும் வியாபித்திருக்கும் அக்னி ஜலத்திலிருந்துஉண்டானது. அஸுரர்களைக்கொல்லும்வஜ்ராயுதம் ததீசியுடையஎலும்பினால் செய்யப்பட்டது. பகவானுயும் தேவராயும் ஸர்வகல்யங்களுக்கும்நிதியாயுமுள்ளஸுப்ரமண்யரை அக்நிபுத்ரரென்றும் க்ருத்திகாபுத்ரரென்றும் ருத்ரபுத்ரரென்றும் கங்காபுத்ரரென்றும் கேள்விப்படுகிறோம். க்ஷத்ரியர்களிடமிருந்துவந்த ப்ராமணர்களைப்பற்றியும் நீகேட்டிருக்கலாம். விசுவாமித்ரர்முதலானவர்கள் அழியாத ப்ராம்மணத்தன்மையை அடைந்தனர். ஆசாரியரும் சஸ்த்ரப்ரயோகத்தவர்களிற்சிறந்தவருமாகிய துரோணர் குடத்திலிருந்து பிறந்தவர். க்ருபர் கௌதம ருடையவம்சத்தில் நாணற்கட்டையிற்பிறந்தவர். உங்களுடையபிறப்பையும் நான் தெரிந்துகொண்டிருக்கிறேன். குண்டலங்களோடும் கவசத்தோடும்கூடியவனும் ராஜலக்ஷணங்களெல்லாம் பொருந்தினவனும் ஸூர்யனுக்கு ஔரஸபுத்ரனுமாகிய இந்தப் புலிபோன்றவீரன் எவ்வாறுபெறும். இந்தப் புருஷச்ரேஷ்டன் அங்கதேச ராஜாவாயிருப்பதற்கு மாத்ரம் உரியவனல்லன்; அவனுடைய பாகுபலத்தினாலும் நான் அவனுடைய ஆஜ்ஞைக்கு உட்பட்டிருப்பதனாலும் பூமி முழுமைக்குமே ராஜாவாயிருப்பதற்குரியவன். அல்லது எந்த மனிதனுக்கு நான்செய்த இந்தக்காரியம் ஸஹிக்கவில்லையோ அவன் தன்கால்களினால் எதையேனும் வில்லைவளைக்கட்டும்" என்றுசொன்னான். பிறகு அந்தஸபைமுழுமைக்கும் ஸரியென்றசொல்லுடன் சேர்ந்த பெரிய ஹாஹாகாரம் உண்டாயிற்று. ஸூர்யனும் அஸ்தமனமானான். பிறகு ராஜாவான துர்யோதனன் கர்ணனை நுனிக்கையிற்பிடித்துக்கொண்டு வீரக்கூக்களினால்வெளிச்சமுண்டாக்கி அந்தஸபையினின்றும் புறப்பட்டான். ராஜாவே! பாண்டவரனைவரும் துரோணரோடும் க்ருபரோடும் பீஷ்மரோடுங்கூடத் தம்தம்கிருஹங்களுக்குச் சென்றனர். பாரதரே! அப்போது அர்ச்சுனனென்று சிலஜனங்களும் கர்ணனென்றுசிலஜனங்களும் துரியோதனனென்றுசிலஜனங்களும் சொல்லிக்கொண்டிருந்தார்கள். குந்தி, கர்ணனை உயர்ந்தராஜலக்ஷணங்களினால் தன்புத்ரனென்று தெரிந்து, (அவன்) அங்கதேசாதிபதியானதைக்கண்டு புத்ரஸ்நேகத்தினால் மனத்தில் ஸந்தோஷமடைந்தாள். ராஜாவே! அப்போது துரியோதனனுக்கும் கர்ணனையடைந்தவுடனே அர்ச்சுனனிடத்திலுண்டானபயம் மறைந்துபோயிற்று. ஆயுதங்களில் தேர்ச்சியடைந்த அந்தவீரனுடைய கர்ணனும் மிக்க அன்புடன் துரியோதனனிடம்போசினான். அப்போது யுதிஷ்டிரருக்கும் கர்ணனுக்குஒப்பாக வில்பிடித்தவன் பூமியிலில்லையென்று எண்ணமுண்டாயிற்று.

நூற்றுநாற்பத்தெட்டாவது அத்தியாயம்.

ஸம்பவபர்வம். (தொடர்ச்சி.)

(துரோணருக்குத் குருதக்ஷிணைகொடுப்பதற்காகத் துருபராஜனை உயிரோடுபிடித்துக்கொண்டுவாகி கௌரவர்கள்போனதும், அவர்கள் அவனிடம்தோற்றுவந்தபிறகு பாண்டவர்கள்போனதும், அவர்களில் அர்ச்சுனன் அவனை உயிருடன்பிடித்துவந்ததும், துருபதனுடைய பாதிராஜ்யத்தைத் துரோணர் வாங்கிக்கொண்டதும், பின்பு துருபதன்புத்ரோத்பத்திக்காக முயற்சிசெயததும்.)

பாண்டுபுத்ரர்களும் த்ருதராஷ்ட்ரபுத்ரர்களும் அஸ்த்ரங்களில் தேர்ந்ததைக்கண்டு, அந்தக்குருவான துரோணர் ஸரியானகாலத்தில் குருதக்ஷிணையைப்பற்றி நினைத்தார். அஸ்த்ரங்களில்தேர்ச்சியைப் பற்றி எல்லாராலும் அங்கீகரிக்கப்பட்டு அரங்கின்வாயிலுக்கு வந்து சேர்ந்தபிறகு அவர்களெல்லாரையும்நோக்கித் துரோணாசாரியர், "நீங்களெல்லாரும்சேர்ந்து எனக்கு ஓர்உயர்ந்ததக்ஷிணையைக் கொடுக்க விரும்புகிறேன்" என்றுசொன்னர். இவ்வாறுசொல்லப்பட்ட சிஷ்யர்களனைவரும் அங்கே உடனே துரோணரைப்பார்த்து, "பகவானே! நாங்கள் என்னகொடுக்கக்கடவோம்? குருவுங்களுக்குக் கட்டனையிடவேண்டும்" என்று கேட்டனர். ராஜாவே! அதன்பிறகு துரோணாசாரியர் சிஷ்யர்களனைவரையுமழைத்து, "நீங்கள் பாஞ்சால ராஜாவாகிய துருபதனைப் போர்முனையில் பிடித்துக்கொண்டு வாருங்கள். உங்களுக்கு ஸுகமுண்டாகக்கடவது. அதுதான் உயர்ந்த தக்ஷிணையாகும்" என்று தக்ஷிணைக்குரிய பொருளைக் கட்டளையிட்டார். அவர்களெல்லாரும் அப்படியேயாகட்டும் என்றுசொல்லிக் குருதக்ஷிணை கொடுப்பதற்காகத் துரோணருடன்சேர்ந்து இரதங்களிலேறி யுத்தஞ்செய்ய விசைவாகப் புறப்பட்டனர். பிறகு அந்தப் புருஷச்ரேஷ்டர்கள் பாஞ்சாலதேசத்தைத் துன்பப்படுத்திக்கொண்டேசேர்ந்தனர். துர்யோதனன், கர்ணன், மிகுந்தபலமுள்ள யுயுத்ஸு, துச்சாஸனன், விகர்ணன், ஜலஸந்தன், ஸுசோசனன், இவர்களும் மிகுந்தபராக்ரமமுள்ள இன்னும்அனேகம் ராஜகுமாரர்களும் ராஜாக்களும் நான்முன்னே நான்முன்னேயென்று மஹாபராக்ரமசாலியான அந்தத் துருபதனுடையநகரத்தை அழித்தனர். பிறகு உயர்ந்தரதங்களில்வரின குமாரர்களனைவரும் சாரதிகளுடன் நகரத்தில்பிரவேசித்து ராஜமார்க்கத்தைச்சேர்ந்தனர். ராஜாவே! அந்தக்காலத்தில்

பாஞ்சாலதேசத்தரசனுகிய துருபதன் பெரியஸைனியத்தைப்பற்றிக் கேட்டும் பார்த்தும் தன்ஸஹோதரர்களுடன்கூடத் தன்வீட்டிலிருந்து துரிதமாகப் புறப்பட்டான். அப்போது துருபதனுடைய அந்தச்சகோதரர்களனைவரும் கவசமுதலியவற்றைத் தரித்துக்கொண்டு சரமாரிகளைப்பொழிந்து கர்ச்சனம்செய்தனர். பிறகு யாருக்கும்வெல்லமுடியாத துருபதன் வெண்மையானரதத்திலேறி யுத்தத்தில் கௌரவர்களை ஸந்தித்து உக்கிரமான பாணங்களை வருஷித்தான். அர்ச்சுனன் முன்னமே ராஜகுமாரர்களுடைய அதிகாரவத்தைப்பற்றி ஆராய்ந்து பிராமணோத்தமமான துரோணாசாரியரிடம், "இவர்கள் பராக்ரமம்முடிந்தபின் நாம் பராக்கிரமத்தைக்காண்பிப்போம்; பாஞ்சாலராஜனைப்போர்த்தலையிற்பிடிக்க இவர்களால்முடியாது" என்று சொன்னனன். குற்றமற்ற அந்தஅர்ச்சுனன் இவ்வாறுசொல்லத் தன் ஸஹோதரர்களுடன்கூட நகரத்துக்குவெளியில் அரைக்குரோசதூரத்திலேயே நின்றான். துருபதன் கௌரவர்களைப்பார்த்துப் பெரிய பாணவர்ஷத்தினால் அவர்களுடையஸைனியை மயங்கச்செய்து சுற்றிலும்ஓட்டினன். ரதத்திலேறி யுத்தத்திற்குஆரம்பித்தவனும் யுத்தச்செய்கைகளை விசைவாகச்செய்கின்றவனுமாகிய அந்தத்துருபதன் ஒருவனைப்பார்த்து அங்கிருந்த கௌரவர்கள் பயத்தினால் அனேகர்களிருப்பதைப்போல நினைத்தனர். துருபதனுடைய உக்கிரங்களான பாணங்கள் எல்லாத்திசைகளிலும் சஞ்சரித்தன. மஹாராஜாவே! அப்போது பாஞ்சாலர்களுடையவீடுகளில் சங்கங்களும் பேரிகைகளும் மிருதங்கங்களும் ஆயிரக்கணக்காகவாசிக்கப்பட்டன. மஹாரத்மாக்களாகிய பாஞ்சாலர்களுடைய ஸிம்மநாதமும் வில்லின்நாண்கள் கைத்தலத்தில் உரைபடுவதனலுண்டான பெரியசப்தமும் ஆகாயத்தையியாபித்துக் கிளம்பின. துரியோதனன், விகர்ணன், ஸுபாஹு, சித்ரக்கலோசனன், துச்சாஸனன், இவர்கள் கோபித்துச் சரமாரிகள்பொழிந்தனர். பாரதரே! யுத்தத்தில் யாருக்கும் ஜயிக்கமுடியாத சிறந்தவில்லாளியான அந்தத்துருபதன் அதிகமாக அடிக்கப்பட்டு, (பின்பு) அந்தச்சேனைகளை அந்தநிமிஷத்திலேயே ஊதிவிட்டான். அந்தத் துருபதன் சுற்றப்பட்ட எரிகொள்ளியைப்போல் சேனையைச்சுற்றி ஸஞ்சரித்துக்கொண்டு துரியோதனனையும் விகர்ணனையும் மஹாபலசாலியானகர்ணனையும் வீரர்களான அனேகராஜகுமாரர்களையும் பலவிதமானசேனைகளெல்லாவற்றையும் பாணங்களினல்நிரப்பினன். பிறகு நகரத்துஜனங்களனைவரும் மேகங்கள்மழை பொழிவதுபோல் கௌரவர்களின்மேல் உலக்கைகளையும் தடிகளையும்

பொழிந்தனர். பாரதரே! காம்பில்யநகரத்தவர், பெரியயுத்தம்நடப்பதைக்கேட்டு உடனே கௌரவர்களிடையே எதிர்த்துச்சென்றனர். கௌரவர்கள் கதறினர்; ஓடினர். பாண்டவர்களைக்கூவிக்கொண்டு கதறின அவர்களுடைய மயிர்க்கூச்சமெடுக்கச்செய்யும் குரலைக்கேட்டவுடனே பாண்டவர்கள், துரோணரை அபிவாதனஞ்செய்து ரதங்களில்ஏறினர். அப்போது அர்ச்சுனன் பாண்டுபுத்திரரான யுதிஷ்டிரரை, "நீர் யுத்தஞ்செய்யவேண்டாம்" என்றுநிறுத்தி, உடனே மாத்ரியின்புத்ரர்களைத் தேரின்சக்ரரக்ஷகர்களாகச்செய்தான். அப்போது பீமஸேனன் கதையுடன்கூட ஸேனைக்குமுன்போகிறவனானான். அப்போது குற்றமற்ற அர்ச்சுனன் சத்துருக்களின்சப்தத்தைக்கேட்டுத் தன்தேரினுல்திசைகளில் சப்தமுண்டாக்கிக்கொண்டு தன்னைமோதரர்களுடன்கூட விரைவாகச்சென்றான்.

பிறகு கொந்தளித்தகடலைப்போல் ஒலிக்கின்ற பாஞ்சாலர்களின் மஹாஸேனையில், தண்டாயுதத்தைக்கையில்தரித்தயமனுக்கொப்பான சிறந்தகைகளையுடைய பீமஸேனன் ஸமுத்திரத்தில் முதலைபிரவேசிப்பதுபோல் பிரவேசித்தான். பிறகு சதுரங்கஸைனியமும்நிறைந்த அத்தயுத்தமென்னும்உற்சவத்தில் கதையைத்தரித்தபீமன் ஸ்வயமாகவே யானைச்சேனையைதிர்த்தான். யுத்தத்தில்நிபுணனும் பாகுபராக்ரமத்தில்ஒப்பற்றவனும் யமனைப்போன்றஉருவத்தைத் தரித்தவனுமாகிய பீமன் கதையினுல் யானைச்சேனையையடித்தான். மலைகளைப்போன்ற அந்தயானைகள் பீமஸேனனுடையகதையினுல் உண்டைவடிவங்களான மஸ்தகங்கள் பெயர்க்கப்பட்டு மிகுதியாகிய இரத்தத்தைப் பெருக்கிக்கொண்டு, வஜ்ராயுதத்தினுல் அடிபட்டமலைகளைப்போல் பூமியில்விழுந்தன. அர்ஜுனனுக்குஜ்யேஷ்டனானபீமன் யானைகளையும் குதிரைகளையும் தேர்களையும் வீழ்த்தினான்; இடையன் வனத்தில் பசுக்களைத் தடியினுல்அடிப்பதுபோல் காலாட்களையும் தேராளிகளையும் அடித்தான். பீமஸேனன் தேர்களையும் யானைகளையும் ஓட்டிக்கொண்டுசென்றான். ராஜாவே! துரோணாசாரியருடைய விருப்பத்தைச்செய்யஆரம்பித்த அந்தப்பாண்டவனாகிய அர்ச்சுனன் அப்போது பாணவருஷங்களைவருஷித்துக் குதிரைகளையும் தேர்களையும் யானைகளையும் கூட்டங்கூட்டங்களாக காலுபக்கங்களிலும் வீழ்த்தி யுத்தத்தில் பிரளயகாலாக்னியைப்போல் ஜ்வலித்துக்கொண்டு துரு பதனிடம்வந்தான். அப்போது அடிக்கப்பட்ட அந்தப்பாஞ்சாலதேசத்தாரும் ஸ்ருஞ்சயதேசத்தாருமாகிய அனேகரும் பலவகையம்புகளினுல் அர்ச்சுனனை விரைவாகமறைத்து வாய்களினுல்ஸிம்மநாதங்களைச்

செய்து அர்ச்சுனனுடன் யுத்தம்செய்தனர். அந்தயுத்தம் பயங்கரமாகவும் பார்ப்பதற்கு மிக்கஆச்சரியமாகவுமிருந்தது. ஸிம்மநாதத்தைக்கேட்டு இந்திரபுத்ரனனஅர்ச்சுனன் கோபமுற்றான். பிறகு அர்ச்சுனன் வேகமாகப் பாஞ்சாலர்களைஅதிகமான பாணவருஷத்தினல்மறைத்துத் திசைமயங்கச்செய்து தூரத்தினன். புகழ்பெற்ற அர்ச்சுனன் பாணங்களை இடைவிடாமல்விடுத்துக்கொண்டும் தொடுத்துக்கொண்டுமிருக்கும்போது இவ்விரண்டிற்கும் இடையிட்டகாலம் காணக்கூடாமலிருந்தது. மஹாராஜாவே! அப்போது அந்தச்சண்டையில் திசைகளும் ஆகாயமும் பூமியும் ஒன்றும்காணப்படவில்லை. காண்டீவமென்னும்வில்லைத்தரித்துப் பலவானனஅர்ச்சுனன் பாணங்களினல் இருளைஉண்டாக்கினபோது பாஞ்சாலர்களும் கௌரவர்களும் நல்லதுகல்லதென்றுகூவினசப்தமும் பேரிகைகளின்முழக்கமும் சங்கங்களின்பெருமுழக்கமும் சிலாகிக்கும்சப்தத்தைத்தாடுகூடிய துருபதனுடையஸிம்மநாதமும் அங்கேஉண்டானபிறகு, தேவேந்திரனச்சம்பரனைத்தித்ததுபோல் ஸத்யஜித்தன்பவனுடன்கூடத் துருபதன் அர்ச்சுனனைவிரைவாகஎதிர்த்தான். அர்ச்சுனன் பெருஞ்சரமாரியால் பாஞ்சாலராஜனை மூடிவிட்டான். அப்போது மஹாஸிம்மமானது *யூதபதியானயானையைப் பிடிக்கப்போகையில் மற்றயானைகளிடமுண்டாகும்சப்தம்போல் பாஞ்சாலர்சேனையில் ஹாஹாகாரம்பிறந்தது. அப்போது தனஞ்ஜயன்வருவதைக்கண்டு உறுதியானபராக்ரமமுள்ள ஸத்யஜித்தன்பவன் துருபதனைக்காப்பாற்றுவதற்காக அவனையெதிர்த்துப்போனன். அப்போது அந்தஅர்ச்சுனனும் துருபதனும், இந்திரனும் மஹாபலியும்போல் யுத்தஞ்செய்வதற்காகச் சந்தித்துச் சேனைகளைக்கலங்கச்செய்தனர். அப்போது பார்த்தன் ஸத்யஜித்தை மர்மங்களைப்பேதிக்கின்ற பத்துப்பாணங்களைஆழப்பாய்ச்சிப் பலமாகஅடித்தான். அது ஆச்சரியமாகஇருந்தது. பிறகு ஸத்யஜித்நூற்றுக்கணக்கானபாணங்களினல் அர்ச்சுனனை விரைவாகப்பீடித்தான். மஹாரதனும் மிகுந்தவேகமுள்ளவனுமாகிய அர்ச்சுனன் பாணவருஷத்தினல் மூடப்பட்டபோது தனுஸின்நாணைஉருவி வேகத்தைச் செய்தான். உடனே ஸத்யஜித்தினுடையவில்லை அறுத்துவிட்டுத் துருபதராஜாவையெதிர்த்துச்சென்றான். அதன்பின் ஸத்யஜித் மிகவும்விரைவாக மற்றொருவில்லையெடுத்துக்கொண்டு அர்ச்சுனனத்தேர்க்குதிரைகளோடும் ஸாரதியோடும் தேரோடும்கூட விரைவாகஅடித்தான். யுத்தத்தில் ஸத்யஜித்தினல்அடிக்கப்பட்ட அர்ச்

* யூதம் - யானைக்கூட்டம்.

சுனன் அதைப்போறுக்கவில்லை. பிறகு அவனையொழிப்பதற்காகப் பாணங்களைவிட்டான். குதிரைகளையும் கொடியையும் விற்பிடியையும் பின்காப்பவனும்ஸாரதியுமாகியஇருவரையும் அடித்தான். அவ்வாறு திரும்பத்திரும்ப விற்கள்பிளக்கப்பட்டும்குதிரைகள் துணிக்கப்பட்டும் போனபோது அந்தஸத்யஜித் யுத்தத்தைவிட்டுத் திரும்பிப் போனான். ராஜாவே! அவ்வாறு யுத்தத்தில் ஸத்யஜித் திரும்பிப் போனதைக்கண்டு அர்ச்சுனன் துருபதனை மிகுந்தவேகத்துடன் எதிர்த்துப்போனான். அப்போது ஜயிப்பவர்களுக்கெல்லாம்மேலான அர்ச்சுனன் பெரியயுத்தஞ்செய்தான். பார்த்தன், துருபதனுடைய வில்லைவெட்டிக் கொடியையும் தரையில்வீழ்த்தினான். ஐந்துபாணங்களினால் அவனுடையகுதிரைகளையும் ஸாரதியையும் அடித்தான். அர்ச்சுனன் உடனே அந்தவில்லைவைத்துவிட்டுக் கேடகப்பிடித்துக் கத்தியையுருவிக்கொண்டு ஸிம்மநாதத்தைச்செய்தான். உடனேஎழும்பித் துருபதன் தேரின்மர்க்காலில்குதித்தான். தனஞ்ஜயன் பயமில்லாமல் துருபதனுடையதேரையடைந்து கருடன் கடலிலக்கலக்கிநாகத்தைப்பிடிப்பதுபோல் அவனைப்பிடித்தான். பிறகு பாஞ்சாலதேசத்தாரனைவரும் பத்துத்திசைகளிலும் ஓடினர். அந்தத்தனஞ்ஜயன் எல்லாச்சேனைகளுக்கும் தன்கைவன்மையைக்காண்பித்து ஸிம்மகர்ச்சனைபோன்றகர்ச்சனையைச்செய்து வெளிப்புறப்பட்டான். அர்ச்சுனன்வருவதைக்கண்டு கௌரவகுமாரர்கள்சேர்ந்து மஹாத்மாவான அந்தத்துருபதனுடையராஜ்யத்தை அபஹரிக்கத்தொடங்கினர். அப்போது அர்ச்சுனன், "பீமனே! ராஜச்ரேஷ்டனுடைய துருபதன் கௌரவவீரர்களுக்கு சினேகிதன். அவனுடையஸைனியைக் கொல்லாதே; குருதக்ஷிணைதானே கொடுக்கவேண்டும்" என்றான். மிகுந்தபலமுள்ளபீமஸேனன் அர்ச்சுனனால்தடுக்கப்பட்டபோது யுத்தம்செய்ததில் திருப்தியில்லாமலே திரும்பினான். பரதச்ரேஷ்டரே! அவர்கள் போர்முனையில் யஜ்ஞஸேனனென்றுசொல்லப்பட்ட துருபதனை மந்திரியுடன்பிடித்துத் துரோணரிடம்கொண்டுவந்தனர். கர்வபங்கம்செய்யப்பட்டும் தனத்தைப்போக்கப்பட்டும் அவ்வாறுபிடிக்கப்பட்ட அந்தத்துருபதனைப்பார்த்துத் துரோணர் த்வேஷத்தை மனஸில்வைத்துப் பேசலானார்.

"என்னால் உன்னுடையதேசம் துடைக்கப்பட்டது, உன்நகரமும் பிடிக்கப்பட்டது. உயிரோடு எதிரியின் வசத்திலகப்பட்ட பிறகு சினேகிதனென்பதை முன்னிட்டு என்னைவிரும்பலாமா?" என்றுசொல்லி, மறுபடியும் கொஞ்சம்சிரித்துக்கொண்டு அவனைப்

பார்த்துச் சொல்லத்தொடங்கினர். "வீரனே! உயிருக்கு அபாயம் வருமென்று பயப்படாதே. நாங்கள் பொறுமையுள்ள பிராமணர்கள். க்ஷத்ரியச்ரேஷ்டனே! பால்யத்தில் என்னுடகூட ஆச்ரமத்தில் விளையாடினதினால் சினேகமும் அன்பும் விருத்திசெய்யப்பட்டன. ராஜாவே! மறுபடியும் உன்னுடன் ஸ்நேகத்தையேவேண்டுகிறேன். ராஜாவே! உனக்கு ஒருவரம்தருகிறேன். அதாவது, ராஜ்யத்தில் பாதியையடை. யஜ்ஞஸேனா! ராஜாவாக இராதவன் ராஜாவுக்குஸ்நேகிதனாக இருக்கத்தகாதவனல்லவா? அதனாலேதான் உன்னுடைய ராஜ்யத்தைப்பற்றிப் பிரயத்னஞ்செய்தேன். கங்கையின்தென்கரையில் உன்ராஜ்யம்; வடகரையில் என்ராஜ்யம். பாஞ்சாலராஜனே! விருப்பமிருந்தால் என்னை ஸ்நேகிதனென்று நீயறியலாம்" என்றார். துருபதன், "பிராமணரே! பராக்ரமமுள்ள மஹாத்மாக்களிடம் இம்மாதிரி ஆச்சரியமன்று. நான் உம்மிடத்தில் பிரீதிவைக்கிறேன். உம்முடைய தீர்க்கமான பிரீதியையும் விரும்புகிறேன்" என்றான். பாரதரே! அவனால் இவ்வாறுசொல்லப்பட்டபோது துரோணர் அந்தத்துருபதனை விடுவித்தார். அவனுக்கு மரியாதையையும்செய்து மனத்தில் அன்புடன் ராஜ்யத்திற்பாதியையும் கொடுத்தார். பிறகு அந்தத் துருபதன் மனத்தளர்ச்சியடைந்து கங்கைக்கரையில் அனேகதேசங்களோடுகூடிய மாகந்தியென்னும் பட்டணத்தையும் காம்பில்யமென்னும் சிறந்தபட்டணத்தையும் சர்மண்வதிவரையிலுள்ள தக்ஷிண பாஞ்சாலதேசத்தையும் ராஜ்யமாகச்செய்தான். இவ்வாறு துரோணரால் அவமதிக்கப்பட்டுப் பிறகு காப்பாற்றப்பட்ட துருபதன் தனது க்ஷத்ரியபலத்தினால் அவர் தோல்வியடைவதை நினைக்கவில்லை. துருபதன் பிரம்மதேஜஸ் என்னும்பலம் தனக்கில்லாமையைத் தெரிந்துகொண்டு, புத்ரன்ஜனிக்க உபாயம்தேடிப் பூமியெல்லாம்ஸஞ்சரித்தான். துரோணர் அஹிச்சத்ரம் என்னும் தேசத்தையெடுத்துக் கொண்டார். ராஜாவே! அனேகதேசங்களடங்கிய அஹிச்சத்ராபுரி இவ்வாறு அர்ச்சுனனால்யுத்தத்தில் ஜயிக்கப்பட்டுத் துரோணருக்குக் கொடுக்கப்பட்டது.

நூற்றுநாற்பத்தோன்பதாவது அத்தியாயம்.

ஸம்பவபர்வம். (தொடர்ச்சி.)

(துருபதன் துரோணரைக்கொல்லத்தக்க புத்ரன் உண்டாவதற்காக யாஜோபயாஜர்களைக்கொண்டு யாகஞ்செயவித்ததும், ஹவிஸைக் கொடுப்பதற்காகத் துருபதபத்னியையழைக்க அவள் கர்வங் கொண்டு வாமலிருந்ததனால் அக்னியிலிஹோமம்செயததும், அக்கினியிலிருந்தே திருஷ்டத்யும்னனும் திரௌபதியும்பிறந்ததும், திருஷ்டத்யும்னனுக்குத் துரோணரை அஸ்த்ரவித்தையைக்கற்பித்ததும்,)

துருபதன் துரோணரிடம் துவேஷத்தைநினைத்துக்கொண்டு அதுமுதல்தூங்கவில்லை. க்ஷத்ரியபலத்தினால் அவரைஜயிப்பதையும் எதிர்பார்க்கவில்லை. அவன் பிரம்மதேஜாபலம் தனக்கில்லாமையை யறிந்து பொறுமையுடன் கர்மங்களில்ஸித்திபெற்ற பிராம்மணர்களைத் தேடிக்கொண்டு அனேகம் பிராமணஅக்ரஹாரங்களில்திரிந்தான். அவன் துரோணருக்குப பிரதியுபகாரஞ்செய்யக்கருதி, "எனக்குச்சிறந்தபுத்திரனுமில்லை; பந்துக்களுமஉதவியற்றவர்; மித்திரர்களுமில்லை; உலகத்திலேயே சக்தியுள்ளவன்யாருமில்லை" என்று சொல்லிக்கொண்டு நெட்டுயிர்பபெறிவதே காரியமாயிருந்தான்; தனக்குப் புத்திரோத்பத்தியையடையவிரும்பி இப்பூமியெல்லாந் திரிந்தான். அவன் முயற்சிசெய்தும், தன்பராக்ரமத்தினலும் யுத்தப்பயிற்சியினலும் ஆயுதத்தேர்ச்சியினலும் அஸ்த்ரங்களின்வன்மையினலும் துரோணரைவெல்ல அசக்தனாயிருந்தான். பிறகு அவ்வரசன்திரிந்துகொண்டிருக்கையில் கங்காதீரத்தில் கல்மாஷியென்னும் நகரத்திற்கருகில் ஒருபரிசுத்தமான பிராமணக்கிராமத்தையடைந்தான். அங்கே * ஸ்நாதகன் அல்லாதவனும் தபஸில்லாதவனுமாகிய பிராம்மணன் ஒருவனுமிருக்கவில்லை. துருபதன் அவ்வாறுகவே மிகுந்தமஹிமையுள்ளவர்களும் சிறந்ததவமுள்ளவர்களுமாகிய யாஜர் உபயாஜரென்றுபெயர்பெற்ற இரண்டுசகோதரர்களான பிரம்மரிஷிகளைக் கண்டான். அவன் வேதாத்யயனத்தில் ஊக்கமுள்ளவர்களும் காசியபகோத்திரத்தினர்களும் காட்டிலிருக்க மிகத்தகுதியுள்ளவர்களும் ரிஷிச்ரேஷ்டர்களுமாகிய அந்த இரண்டுபிராம்மணர்களையும், விரும்பினவற்றையெல்லாம் கொடுப்பதாகச்சொல்லி, உற்சாகத்துடன் புரோஹிதர்களாகவரித்தான். அவர்களுள் இளையவரும் உறுதி

* ஸ்நாதகன் = வித்தையிலும் தபஸிலும் பூர்த்திபெற்றவன்.

யாணதவமுள்ளவருமாகிய உபயாஜருடையதவவன்மையையும் புத்தியையும்கண்டு அவர்விரும்பினவற்றைக்கொடுப்பதாக அவருக்குச்சந்தோஷத்தையுண்டாக்கி ரஹஸ்யத்தில் அவரைச்சரணமடைந்தான். குருசுச்ரூஷைசெய்வதில் ஊக்கமுள்ளவரும் எல்லாருக்கும்பிரியத்தைச்செய்பவருமாகிய அந்தஉபயாஜர் விரும்பினவற்றையெல்லாம் கொடுப்பவனுகிய அந்தத்துருபதனுக்கு அர்க்கியபாத்தியங்கள்கொடுத்து ஆஸனம்போட்டுக் கணிகளோத்தந்து முறைப்படிமரியாதைசெய்து, பிறகு, "எந்தமுக்கியமானகாரியத்திற்காக நீர் நம்மைவிரும்பி இந்தமுயற்சிசெய்திருக்கிறீர்? நீர் அதைச்சொல்லக்கடவீர்" என்றுகேட்டார். அப்போது அந்தத்துருபதன் அந்தரிஷிச்ரேஷ்டர் அன்புற்றிருப்பதாகஅறிந்து விரும்பத்தக்கவற்றைக்கொடுப்பதாக ஆசையுண்டாக்கி அந்தரிஷியைநோக்கி, "பிராம்மணரே! உபயாஜரே! எந்தக்கருமம்செய்வதனால் துரோணரைக்கொல்லத்தக்க புத்திரன் எனக்கு உண்டாவனேன அந்தக்கருமத்தை நீர்செய்யக்கடவீர். உமக்குத்தனம் கொடுப்பேன்" என்றுசொன்னன். அதற்குஉபயாஜர், "துருபதனே! நான் பிரயோஜனத்தைவிரும்புகிறவனல்லேன். யார் விரும்புகிறவரோ அவரிடம்போகலாம்" என்றார். அந்தத்துருபதன் ஸாதுக்களின்முன்னிலையில் அவரால் இவ்வாறுமறுக்கப்பட்டபோது அவருக்குத் தன்னிடம் அன்பையுண்டாக்குவதற்காகப் பணிவிடைசெய்துகொண்டிருந்தான். அதன்பிறகு ஒருவருஷம்முடிந்தபோது ஒருகால் பிராம்மணோத்தமராகிய உபயாஜர் துருபதரைநோக்கிப் பின்வருமாறு இனியசொல்லாகச் சொல்லத்தொடங்கினார்.

"எனது மூத்தஸஹோதரர் ஜனங்களில்லாதகாட்டில் ஸஞ்சரிக்கையில் சுத்தமென்று நிச்சயிக்கப்படாத பூமியில் விழுந்த பழத்தை எடுத்துக்கொண்டார். பின்சென்றுகொண்டிருந்தான் என்ஸஹோதரருடைய அந்தத்தகாத செய்கையைக்கண்டேன். அவர் பிரயோஜனத்தை அடையும்விஷயத்தில் எவ்வகையிலும் விசாரணை செய்யார். அவர்பழத்தைக்கண்டபிறகு அதைத்தொடர்ந்துவரக்கூடிய குற்றங்களை நினைக்கவில்லை. சுத்தத்தை விரும்பி அதைப்பற்றி ஆராய்ந்துபார்க்கவில்லை. அவர் மற்றவிஷயத்திலும் அவ்வாறிருப்பார். ராஜரிஷியே! வேதஸம்ஹிதையை அத்யயனம் செய்தபிறகு * பஞ்சமஹாயஜ்ஞங்களைச்செய்து பூமியில் இறைந்து பொறுக்கப்பட்டவற்றுடன்சேர்த்துப் பிக்ஷான்னத்தை அப்போதைக்கப்போதுபுஜித்துக்கொண்டிருக்கையில் உணவின்சுவையைப்பற்றி அடிக்கடி பேசிக்

* தேவயஜ்ஞம், பிதிர்யஜ்ஞம், பிரம்மயஜ்ஞம், பூதயஜ்ஞம், மனுஷ்யயஜ்ஞம்.

கொண்டிருப்பார். வனத்தில் குருகுலவாஸஞ்செய்து வேதாத்யயனம்செய்யும்போது மற்றவர்கள் எறிந்துவிட்டபிக்ஷையை எப்போதும்புஜித்துக்கொண்டிருந்தார். பிறகு அன்னங்களின்குணங்களைச் சொல்லி அடிக்கடி மகிழ்வார். ராஜாவே! இவ்வாறு அவர் பிரயோஜனத்தைவிரும்புகிறவராதலால், உனக்கு அவர் யாகம்செய்விப்பாரென்று ஊகமென்னும்கண்ணினால் அறிகிறேன். நீ இப்போது அவரிடமேசெல்" என்றார். துருபதராஜன் உபயாஜருடையசொல்லைக் கேட்டு அதை மனஸில்நிஜைத்து அருவருப்புடன் யாஜருடையஆச்ரமத்திற்குப் போனான். பூஜிப்பதற்குரிய யாஜனென்னும்ரிஷியைச் செவ்வையாகப்பூஜித்து, "யாஜரே! சக்தியுள்ளவரே! உமக்கு எண்ணூறுபசுக்களைக் கொடுப்பேன். பிராம்மணஜாதியினிடமிருக்கும் க்ஷத்ரியபலத்தை க்ஷத்ரியன்ஜயிக்கமுடியாது. பிராமணரே! ஆதலால் இப்போது துரோணருடையவிரோதத்தில்அகப்பட்டுக் கொதிப்புற்று விசனத்துடன் சரணகதிசெய்த எனக்கு யாகம் செய்வியும். எந்தக் கருமம் செய்வதினால் துரோணர்மரணத்துக்குக்காரணமானபுத்திரனும் அர்ச்சுனனுக்கு மனோவியாகத்தக்கபுத்திரியும் எனக்கு உண்டாவார்களோ அதைச்செய்வித்துத் துரோணர் பயத்தினின்றும் என்னைக்காப்பாற்றவேண்டும். அந்தத் துரோணர் பிரம்மஜ்ஞானிகளிற் சிறந்தவர். பிரம்மதேஜஸிலும் க்ஷத்ரியசக்தியிலும் அவருக்கு மேற்பட்டவரில்லை. அதனால் துரோணர், ஸ்நேகிதர்களுக்குண்டான சண்டைகாரணமாக என்னைஜயித்துவிட்டார். அவருக்கு ஸமானமாக முதன்மையான க்ஷத்ரியன் ஒருவனும் இப்புவியிலில்லை. பரதவம்சத்தாருக்கு முதன்மையான ஆசாரியரும் பரத்வாஜபுத்திரரும் சிறந்த புத்திமானுமாகிய துரோணருடைய அம்புகளின் வரிசைகள், சத்ருக்களின்வரிசைகளையும் சத்ருசைந்யங்களின் தேகங்களையும் பிளப்பவை; அவருடையவில் ஆறுமுழமுள்ளது; அவருடையகத்தியும் ஒப்பற்றது; சிறந்தவில்லாளியும் மிகுந்த வன்மையுள்ளவருமாகிய அந்தத்துரோணர் பிராமணவடிவத்தைத்தாடிருந்துகொண்டு க்ஷத்ரியர் வலிமையை நிச்சயமாகத்தடுத்துவிடுகிறார். அவர், யுத்தத்தில்கார்த்தவீர்யனுக்கும் கட்வாங்கனுக்கும் ஒப்பானவர்; பரசுராமரைப்போலவே க்ஷத்ரியர்களையழிப்பதற்காக உண்டாக்கப்பட்டிருக்கிறார்; க்ஷத்ரியதேஜஸ்ஸும் பிராம்மணதேஜஸ்ஸும் சேர்ந்தவரான துரோணர் கீர்த்திபெற்றிருப்பது தகுமென்று நான் இப்போது நிஜைக்கிறேன்; அம்புகளும் கட்டிகளும் கத்திகளும் அவருக்குத்தீங்குசெய்யா; அவருடையபெரிய பிரம்மதேஜஸ் மந்திரங்களோடுகூடியஆகுதிகளினால் ஜ்வலிக்கின்ற

அக்கினியைப்போன்றது; அவருடையஅஸ்த்ரபலமும் பயங்கரத்தக்கதும் பூமியிலுள்ளஎதிரிகளால் தாங்கக்கூடாததுமாயிருக்கிறது; பிரம்மதேஜஸைமுன்னிட்டுக்கொண்டிருக்கிற க்ஷத்ரியதேஜஸ் சத்துருக்களைச் சந்தித்தவுடன் ஜயித்துவிடுகிறது; பிரம்மதேஜஸும் க்ஷத்ரியதேஜஸும் ஸந்திக்கும்போது பிரம்மதேஜஸே மேலாகிறது; ஆதலால், க்ஷத்ரியபலம் பிந்தித் தோல்வியுற்றதான் பிரம்மதேஜஸைச்சரணமடைந்திருக்கிறேன். துரோணருக்குமேற்பட்ட சிறந்தபிரம்மஜ்ஞானியாகிய உங்களையடைந்தபின் துரோணர் மரணத்திற்குக்காரணமும் யுத்தத்தில்வெல்லமுடியாதவனுமான புத்திரனை நான்அடையக்கடவேன். யாஜரே! துரோணமரணத்திற்குக்காரணமான வீரனுகியபுத்ரன் எந்தக்கர்மஞ்செய்வதனால் எனக்குண்டாவனை அந்தக்கருமத்தை எனக்குச்செய்யக்கடவீர். உமக்குப் பத்துக்கோடிபசுக்களைக் கொடுப்பேன்" என்றான். யாஜர் அவனுக்கு அப்படியேயாகட்டுமென்று சொல்லி யாகத்துக்காக ஆரம்பஞ்செய்து விருப்பமில்லாத உபயாஜரையும் *குருவின்காரியம் என்றுஎவினர். துருபதமஹாராஜனை நோக்கி, "நீ பயப்படாதே; என்கிரியையினால் உனக்குப்புத்திரனைக்கொடுப்பேன்; சீக்கிரம் எழுந்திரு; கவலையில்லாமல் வேண்டியஸாமக்கிரிகளைச் சேகரம்செய்" என்றுசொன்னர். இவ்வாறு ஆஜ்ஞாபித்து வாக்குத்தத்தஞ்செய்து யாஜமுனி அவனுடைய காரியத்தைமேற்கொண்டார். பிராமணரும் மனிதர்களிற்சிறந்தவருமாகிய யாஜர் அவ்வரசனுக்குத் துரோணர்மரணத்தைப்பற்றிச் சாஸ்திரப்படியும் க்ரமப்படியும் யாகம்செய்வித்தார். பிறகு சிறந்ததவமுள்ள உபயாஜரும் தபதகுருவான யாஜருடைய பிரயோஜனத்திற்காக அவர்ஸமீபத்திலிருந்து அந்தராஜாவுடையகாரியத்தைநடத்தினர். அவ்வாறு புத்ரபலனுக்குக்காரணமான அந்தயாககாரியத்தைப்பற்றி, "ராஜாவே! இந்தயாகத்தில் நீஎவ்வகையானபுத்திரனைவிரும்புகிறையோ அவ்வகையான சிறந்தபராக்ரமமும் சிறந்தஒளியும் மிக்கபலமுமுள்ள புத்திரன் உண்டாகப்போகிறான்" என்றுசொன்னர். ராஜாவே! அப்போது அந்தத் துருபதராஜன் துரோணரைக்கொல்லத்தக்கவனைப்பற்றி நினைத்துக்கொண்டு ஸித்தியாவதைஉத்தேசித்து அந்தக்கருமத்தைச்செய்தான். மனிதரிற்சிறந்த அந்தப்பிராம்மணரும் சாஸ்திரப்படி ஹோமஞ்செய்தார். புத்திரனைவிரும்பின அந்தத் துருபதனுக்கு ஸௌத்ராமணியென்னும் அந்தயாகத்தில் பத்தினியாயிருந்த கௌஸல்யியென்பவளிடம் பூர்ணகுதிகாலத்தில் அந்தயாஜர்

* ஜ்யேஷ்டராகியயாஜர்.

சென்றார். அந்தயாகத்தின்முடிவில் யாஜர், "ராஜபத்னியானபருஷதியே! என்னிடம் இந்தஹவிஸைப்புஜிக்க வருக. உனக்குத் தங்கள்பிதாவின்வம்சத்தைவிருத்திசெய்யத்தக்க ஒருகுமாரனும் ஒருகுமாரியுமாகிய இருவர் சீக்கிரத்திலுண்டாகப்போகின்றனர்" என்று சொன்னார். "*நான் முகத்தில்மஞ்சள்பூசிக்கொள்ளவில்லை. இனியகந்தங்களைத் தரித்துக்கொண்டிருக்கிறேன். புத்ரோத்பத்திக்குரிய உம்முடையஇந்தயஜ்ஞத்தில் நான் பத்தினியாவதற்கில்லை. யாஜரே! என் விருப்பத்தின்படி, நீர் இருக்கக்கடவீர்" என்று ப்ருஷதிசொன்னாள். "யாஜரால்பாகம்செய்யப்பட்டு உபயாஜரால்மந்திரிக்கப்பட்ட ஹவிஸ் எவ்வாறுஇஷ்டபலனைச்சேர்ப்பிக்காமலிருக்கும்? ப்ருஷதியே! வந்தாலும்வா! நின்றாலும்நில்" என்று யாஜர்சொன்னார். இவ்வாறுசொல்லி யாஜர் மந்த்ரசுத்தமான ஹவிஸை ஹோமஞ்செய்தபோது அந்தஅக்கினியிலிருந்து ஜ்வாலைநிறமுள்ளவனும் பயப்படத்தக்கஉருவமுள்ளவனும் கிரீடம், கவசம், கத்தி, வில், அம்பு இவைகளைத்தரித்தவனும் தேவகுமாரனுமான ஒருகுமாரன் அடிக்கடிகர்ச்சித்துக்கொண்டு அக்கினியிலிருந்து எழுந்தான். அவன் சிறந்ததேரிலேறி ஆகாஸல் ஸஞ்சரித்தான். அந்தக்குமாரன் ஜனித்தமாத்ரத்தில் ஓர் அசரீரிவாக்கு, "இவன் துரோணருக்குச்சிஷ்யனாகவும் யமனாகவும் பிறந்திருக்கிறான். இந்தராஜபுத்ரன் பாஞ்சாலர்களுக்குப் பயத்தைப்போக்கிப் புகழையுண்டுபண்ணுகிறவன். இவன் துரோணவதம்செய்து துருபதராஜாவின்துயரத்தைஒழிப்பதற்குப் பிறந்தவன்" என்றுசொல்லிற்று. ஆகாயத்தில்ஸஞ்சரிப்பதும் கண்ணுக்குத்தெரியாததுமான ஒருபெரியதெய்வம் இவ்வாறு சொன்னவுடனே பாஞ்சாலர்கள்மகிழ்ந்து 'நல்லது, நல்லது' என்று சப்தஞ்செய்தனர். இரண்டாவதுஹோமகாலத்தில் மந்த்ரம்சொல்லி ஹவிஸை அக்கினியில்ஹோமம்செய்தபோது பாஞ்சாலியாகியகுமாரியும் யாகவேதிகையின்மத்தியிலிருந்தெழுந்தாள். பரதச்ரேஷ்டரே! ப்ருஷதியாகியமகாஸஸி புரோகிதரானயாஜரைமறுத்ததனால் மறுபடியும் அழகானபாஞ்சாலியென்னும்குமாரியும் யாகவேதிகையின்மத்தியிலிருந்தேஉண்டானாள். மனத்தைமிகவும்கவருகின்றவளும், கறுத்தநிறமும் தாமரையிதழ்போன்றகண்களும் கறுத்துச்சுருண்டஅழகங்களுமுடையவளுமான அந்தக்கன்னிகை ஸ்ரீதேவியே வேறுநிறத்தோற்றி மானிடவடிவமெடுத்துவந்ததுபோல் வேதிகைக்குள்ளிருந்து உண்டானாள். சிவந்தும்உயர்ந்தும்இருக்கும் நகங்களோடும் அழகிய

* ஸ்நானம்செய்யவில்லை என்பதுகருத்து.

புருவங்களோடும் அழகிய பெருத்தஸ்தனங்களோடும்கூடினவளாக இருந்தாள். கருநெய்தல்மலர்மணத்துக்கொப்பான அவளுடையதேக மணம் ஒருகுரோசம்வரையில் வீசிற்று. அவளுடைய அழகு எல்லா வற்றிற்கும் மேலானது. பூமியில் அவளுக்குஉவமையில்லை. அவள் தேவர்களும் அஸுரர்களும் யக்ஷர்களும் விரும்பத்தக்க சிறந்த பெண். அழகியநிதம்பங்களையுடைய அவள் பிறந்தபிறகும், "எல்லாப் பெண்களிலும்சிறந்தவளான கிருஷ்ணை க்ஷத்ரியர்களுக்கு நாசத்தை யுண்டாக்கப்போகிறாள். அழகிய இடையுள்ள இவள் காலம்வரும் போது * தேவகாரியத்தை நிறைவேற்றப்போகிறாள். இவள்காரண மாக க்ஷத்ரியர்களுக்குப் பெரியபயம்உண்டாகப்போகின்றது" என்று அசரீரிவாணிசொல்லிற்று. அதைக்கேட்டுப் பாஞ்சாலர்கள் அதிக வரும் லிம்மக்கூட்டம்போல் கர்ச்சித்தனர். ஸந்தோஷம்நிரம்பின அவர்களை இந்தப்பூமிதாங்காமற்போயிற்று. மஹாத்மாவாகிய துரு பதனுக்கு இனியவர்களும் மானிதர்களிற்சிறந்தவர்களும் ராஜலக்ஷ்மி மிகப்பொருந்தினவர்களும் க்ஷத்ரியர்க்குரியசரீர அமைப்புள்ளவர்க ளுமாகிய குமாரகுமாரிகளிருவரும் அவ்வாறுபிறந்தனர். அவர்களைக் கண்டபிறகு அந்தப்பிருஷதி சந்ததியைவிரும்பி, "இவர்களிருவரும் என்னைத்தவிர வேறொருத்தியைத் தாயாராகஅறியாமலிருக்கவேண் டும்" என்று யாஜரைச் சரணமடைந்தாள். யாஜர் ராஜாவின்விருப் பத்தைச்செய்யக்கருதி அவளுக்கு அப்படியேஆகட்டுமென்றுசொன் னார். பயப்படாமல், †திருஷ்டனுயிருப்பதனாலும், த்யும்னம்என்னப் பட்டபொன்மயமான கவசகுண்டலமுதலானவற்றோடு பிறந்ததனா லும், இந்தத்துருபதனுடையகுமாரன் திருஷ்டத்யும்னன்என்றபெய ரோடிருக்கட்டும்" என்றும், "இந்தக்கன்னிகை நிறம்கருமையாயிரு ப்பதனால் கிருஷ்ணையென்றபெயருள்ளவளாயிருக்கட்டும்" என்றும் பிராம்மணர்கள் ஸந்தோஷம்நிரம்பினமனத்தோடு அவர்களிருவருக் கும் பெயர்களிட்டனர். அவ்வாறு அவ்விருவரும் துருபதனுக்கு மஹாயாகத்தில் பிறந்தனர். அதன்பின் திருஷ்டத்யும்னன் வேதாத் யயனத்தில் பாரங்கதனானான். பராக்ரமசாலியாகிய துரோணர் துரு பதபுத்திரனாகிய திருஷ்டத்யும்னனைத் தம்வீட்டிற்கழைத்துவந்து அஸ்த்ரவித்தை சொல்லிவைப்பதற்காக உபாகர்மமென்றுசொல்லப் பட்ட வித்தியாரம்பத்தைச்செய்தார். சிறந்தஞானமுள்ள துரோ ணர் அவசியம்நேரிடத்தக்கவிதியை விலக்கமுடியாதென்றுணர்ந்து தம்முடைகீர்த்தியைக்காப்பாற்றிக்கொள்வதற்காக அதனை அவ்

* பூபாரத்தையொழிப்பது. † திருஷ்டன் = ஜயிக்கமுடியாதவன்.

வாறுசெய்தார். அவனும் உயர்ந்தபுத்தியினால் எல்லா அஸ்த்ரங்களையும் சிக்கிரத்தில்கிருஹித்துக்கொண்டான்.

நூற்றைம்பதாவது அத்தியாயம்.

ஸம்பவபர்வம். (தொடர்ச்சி.)

(துருபதனுடைய ஜனனம்.)

ஜனமேஜயர், "பிரம்மரிஷியே! துருபதனுடைய ஜனனத்தையும் கேட்க விரும்புகிறேன். அவன் எவ்வாறுபிறந்தான்? எவ்வாறு அஸ்த்ரங்களையடைந்தான்? பகவானே! பிராம்மணோத்தமரே! இதனை உங்களிடம் செவ்வையாகக்கேட்க விரும்புகிறேன்; அவர்களுடைய பிறப்பைச்சொல்லும்போது கேட்கக்கேட்க எனக்கு மிகுதியாக விருப்பமிகுகின்றது" என்றுசொல்ல, வைசம்பாயனர் சொல்லுகிறார்:

"பாஞ்சாலதேசத்தரசன் புத்திரனைவிரும்புகிறவனாக இருந்தான். அந்தமஹாராஜா புத்திரனுக்காக வனஞ்சென்று கடுமையான தவமுள்ளமஹரிஷிகளுக்கு முயற்சியோடு சுச்ரூஷைசெய்துகொண்டு மிக்க கடுந்தவத்தைச்செய்தான். ராஜாவே! மான்கூட்டங்களோடு கூடியவனத்தில் புத்திரனுக்காக அவன் தவஞ்செய்துகொண்டிருக்கும்போது வெகுகாலமாயிற்று. மிகுந்தேஜஸ்ஸுள்ள அந்தஅரசன் சிலகாலம் காற்றைப்புஜித்துக்கொண்டும் சிலகாலம்ஆகாரமில்லாமலும் கடுந்தவம்புரிந்தான். ராஜச்ரேஷ்டரான பரதவம்சத்து மஹாராஜாவே! அந்த மஹாவீரன் அவ்வாறிருக்கையில் நெடுங்காலஞ் சென்றது. பரதச்ரேஷ்டரே! பிறகு சிலகாலத்தில் காமத்தை விருத்திசெய்யத்தகுந்த வஸந்தகாலத்தில் பிராணிகளின்மனங்களை மிகவும்கவருவதான புஷ்பித்தஅசோகவனத்தில் தாமரைமலர்போன்றகண்ணையுடையவனான அவ்வரசன் கங்காநதிக்கரைக்குச்சென்று அங்கே தவத்திலிருந்துகொண்டிருந்தான். ராஜாவே! பிறகு சிலகாலத்துக்கெல்லாம் அந்தவனத்திற்கு மேனகையென்றுபெயர்பெற்ற அப்ஸரஸ்வந்து அங்கே புஷ்பித்தமரங்களில் மறைந்துகொண்டுவருகையில் ராஜாவின்பார்வைக்கு எதிர்ப்பட்டாள். ராஜாவே! அவ்விடத்தில் ஆஸனத்திலிருந்தஅரசனை அவள்பார்க்கவில்லை. ராஜாவுக்கு மட்டும் அந்தஅப்ஸரஸைப்பார்த்ததனால் வீர்யம் பூமியில்விழுந்தது. ராஜச்ரேஷ்டரே! தீர்க்காயுஸ் உள்ளவரே! மனிதர்களுக்குப் பிரபுவாகிய அவ்வரசன் வெட்கத்துடன் கால்களினால் அதனைமறைத்தான்.

அதிலிருந்து துருபதன் உண்டானான். பாரதரே! அப்போது பரிசுத்தமானமனத்தையுடைய அந்த ராஜரிஷியின்தவவன்மையினால் கால்வைத்தவுடன் புத்திரன் உண்டானதனால் தபோதனர்களும் வித்வான்களுமான ரிஷிகளெல்லோரும்சேர்ந்து அவனுக்குத் *துரு பதன் என்று பெயர்வைத்தனர். ராஜாக்களுக்கெல்லாம் உத்தம ரானராஜாவே! பாரதரே! அவன் அந்தப்பரத்வாஜருடைய ஆச்ர மத்திலேயே வீருமபினவற்றையெல்லாம் அடைந்து மிகவும்ஸுகமாக வளர்ந்தான். ராஜேந்திரரே! பிரபுவாகிய பாஞ்சாலதேசத்தரசனும் அந்தப்புத்திரனே வித்தியாப்யாஸத்திற்காக மஹாத்மாவான பரத் வாஜரிடம் ஒப்புவித்துத் தனது ராஜ்யத்திற்குச்சென்றான். ராஜாவே! பாரதரே! பிறகு அந்தக்குமாரன் துரோணருடன்சேர்ந்து அந்தக் காட்டில் வேதங்களையும் வேதாங்கங்களையும் தனுர்வேதங்களையும் அப்யஸித்தான். அவன் அந்தவனத்தில் மிகுந்தலந்தோஷமுற்று ஸுகமாகத்திரிந்தான். ராஜாவே! அவன் இவ்வாறு அந்தக்காட்டி லுள்ளவர்களோடுகூடியிருக்கையில் வெகுகாலத்திற்குப்பிறகு அவ னுடையதந்தை ஸ்வர்க்கமடைந்தான். அப்போது பாஞ்சாலர்கள் சேர்ந்து அவனைப் பாஞ்சாலதேசாதிபதியாகப் பட்டாபிஷேகஞ்செய் தனர். அரசர்க்கரசே! அவன்ராஜ்யத்தையடைந்தபின் நண்பர்களு க்குஸந்தோஷத்தைவிருத்திசெய்துகொண்டு இந்திரன் ஸ்வர்க்கத்தை ரக்ஷிப்பதுபோல் கிரமமாக ராஜ்யபரிபாலனஞ்செய்தான். ராஜச்ரேஷ் டரே! இந்தத்துருபதனென்னும் ராஜரிஷியின்பிறப்பும் திருஷ்டத்யும் னனுடையபிறப்பும் நடந்தபடி என்னால் உமக்குச் சொல்லப்பட்டன.

நூற்றைம்பத்தோராவது அத்தியாயம்.

ஸம்பவபர்வம். (தொடர்ச்சி.)

(தர்மராஜாவுக்கு யௌவராஜ்யபட்டாபிஷேகமும், பலராமரிடம் பீம ஸேனன் கதாயுத்தம்கற்றுக்கொண்டதும், துரோணர் அர்ச்சுன னுக்குப் ப்ரம்மசிரஸ்ஸென்னும்அஸ்திரத்தைபயற்றியவிதிகளை விதித்ததும், பீமார்ச்சுனர்கள் திக்குவிஜயஞ்செய்ததும்.)

"ராஜேந்திரரே! கௌரவபுத்ரராகிய யுதிஷ்டிரர் ராஜ்யத்தை ரக்ஷிப்பதில் ஸமர்த்தரென்றறிந்து அவருக்கு யுவராஜ்யபட்டாபிஷே கஞ்செய்வதற்காக த்ருதராஷ்டிரன் மந்திரிகளுடன்ஆலோசனைசெய்

* துரு = மரத்தடியில், பதன் = கால்வைத்ததனாலுண்டானவன்.

தான். அப்போது, அந்தத்ருதராஷ்டிரனுடையபுத்ரர்கள் தெரிந்து கொண்டு வருத்தப்பட்டனர். ராஜாவே! பிறகு ஒருவருஷத்தின் முடிவில் பாண்டுபுத்ரராகிய யுதிஷ்டிரர் த்ருதராஷ்டிரனால் யௌவ ராஜ்யபட்டாபிஷேகம் செய்யப்பெற்றார். பிறகு கொஞ்சகாலத்தில் குந்தியின்புத்ரராகிய யுதிஷ்டிரர் வினயத்தினாலும் ஒழுக்கத்தினாலும் சாந்தகுணத்தினாலும் தகப்பனுருடைய கீர்த்தியை மறைத்துவிட்டார். பாண்டுபுத்ரனாகியபீமஸேனன் கதாயுத்தத்திலும் ரதயுத்தத்திலும் எப்போதும் பலராமரிடம் சிக்ஷை சொல்லிக்கொண்டான். சிக்ஷைமுடிந்தபின் பீமன் பலத்தில் த்யுமத் ஸேனனுக்கு ஒப்பாகஇருந்தான். பராக்ரமம்தைர்யம்தினவனுகஇருந் தும் தன்னைவிஹாதரர்களுக்கு உட்பட்டிருந்தான். அர்ச்சுனன் சூரும் வலிவும் அகலமுமான கத்திபோல் இருபக்கங்களிலும் கூர்மை யுள்ளபாணங்கள், ஊசிபோன்றநாராசபாணங்கள், *பல்லங்களென் னப்பட்டபாணங்கள், அர்த்தசந்திரபாணங்கள் இவைகளை நழுவாமல் கெட்டியாகப்பிடிப்பதிலும் தூரிதமாகவிடுவதிலும் குறிதவறாமலடிப் பதிலும் ரஹஸ்யம்தெரிந்து பிரயோகிபபவனுகஇருந்தான். வேகத் திலும் அங்கங்களின் அமைபபிலும் அர்ஜுனனுக்கொப்பானவன் உலகத்தில் மற்றொருவனுமில்லையென்று துரோணர் நிச்சயஞ்செய் தார். பிறகு துரோணர் கௌரவர்களின்ஸபையில் அர்ஜுனனைப் பார்த்துப் பின்வருமாறுசொல்லலானார் :

"பாரதனே! அக்னிவேச்யர்என்று க்யாதிபெற்ற என்குரு வானவர் முன்னே தனுர்வேதத்தில் அகஸ்தியருடையசிஷ்யராகஇரு ந்தார். நான் அந்த அக்னிவேச்யருடைய சிஷ்யன். நான் இந்த வித்தையை ஒரு நல்லபாத்ரத்திலிருந்து மற்றொரு நல்லபாத்ரத் தில்சேர்க்க ஆரம்பித்தவன். நான் தவத்தினால்அடைந்ததும் வீண் போகாததும் வஜ்ராயுதம்போன்றதுமாகிய ப்ரமசிரஸ்என்னும்பெய ருள்ள ஓர்அஸ்த்ரம் இருக்கிறது. அது பூமிமுழுமையும்தகித்து விடும். என்குரு எனக்குக்கொடுக்கும்போது, 'பாரத்வாஜபுத்ர னே! நீ இந்தஅஸ்த்ரத்தை யுத்தத்தில் மனிதர்கள்மீது ப்ரயோகிக் கத்தகாது. அவர்கள் சக்தியில்குறைந்தவர்கள்' என்று சொல்லி யிருக்கிறார். மிகுந்தபராக்ரமமுள்ளவனே! உன்னுடன் மறைந்து யுத்தம்செய்யத்தக்க தேவாஸுரர்முதலிய பூதம் எதுவாயிருந்தா லும்' அதை யுத்தத்தில் இந்தஅஸ்த்ரத்தினால் நீகொன்றுவிடலாம். வீரனே! உனக்குக்கிடைத்த இந்தஅஸ்த்ரம் தேவலோகத்தது.

* முன்னும்பின்னும்முள்ளுள்ளபாணங்கள்.

உன்னைவிட வேறொருவன் இதற்குத்தகுதியுள்ளவனல்லன். ராஜாவே! அக்னிவேச்யமுனியினால் எனக்குவித்திக்கப்பட்ட *வியவஸ்தையை நீகாப்பாற்றவேண்டும். உன்உறவினர்முன்பாக எனக்கு நீ குருதக்ஷிணைகொடு" என்றார். அர்ஜுனன், "கொடுக்கிறேன்" என்று பிரதிஜ்ஞைசெய்தபின் குருவான துரோணர், "குற்றமற்றவனே! யுத்தகாலத்தில் நான் யுத்தம்செய்யும்போது நீ எனக்கு எதிர்யுத்தம் செய்யவேண்டும்" என்றுகேட்டார். கௌரவர்களிற்சிறந்த அர்ஜுனன் "அப்படியே ஆகட்டும்" என்று துரோணருக்கு வாக்குத்தத்தஞ்செய்து அவர்பாதங்களைத்தொட்டு வந்தனஞ்செய்து வணக்கமாகச் சமீபத்திலிருந்தான். துரோணர் அர்ஜுனனைத்தழுவிக்கொண்டு, "பார்த்தனே! இவ்வுலகத்தில் எல்லாஆயுதங்களாலும் யுத்தஞ்செய்வதிலும் உனக்குஈடாக எந்தமனிதனையும் நான்ஒருகாலும்செய்வதில்லையென்று முன்னமே நான் உனக்குச்சொல்லியிருந்ததைச் செவ்வையாகநிறைவேற்றிவிட்டேன். உனக்கு ஈடானவனில்லை. தேவர்களாகட்டும் தைத்தியர்களாகட்டும் தானவர்களாகட்டும் யுத்தத்தில் உன்னையெதிர்க்க வல்லவரல்லர். நானே யுத்தத்தில் உன்னைவிடச் சிறந்தவனல்லன். மற்றமனிதர்களைப்பற்றிச் சொல்லவேண்டுமா? யாதவகுலத்திற்பிறந்தவரும் கம்ஸனையும் காளியனையும் வதஞ்செய்தவரும் தாமரைமலர்போன்ற கண்களையுடையவருமான பகவான் ஒருவர்தாம் இவ்வுலகத்தில் உனக்குமேற்பட்டவர். அவர் எல்லாலோகங்களையும் ஜயிப்பவர்; எல்லாஆயுதங்களையும் தரிப்பவர். அர்ஜுனா! இதனால் இப்போது நான் உனக்குப்பொய்சொன்னவனாகேன். உலகமெல்லாம் அவரால் காக்கப்படுகிறது. அவரிடம் லயமாகப்போகிறது. அவரிடமிருந்துதான் உண்டானது. அவருடையஸ்வரூபத்தைப் பிரம்மா ஈசானன்முதலியவரும்அறியார். அவருடையகாபியினாலுண்டானபிரம்மா ஸர்வப்பிராணிகளையும் படைத்தவர். உலகத்தின் ஸ்ருஷ்டிஸ்திதிலயம்ஹாரங்களுக்குக் கர்த்தாவும் உலகமனைத்துமாக இருப்பவரும் அந்தக்கிருஷ்ணபகவானே. இறந்ததும் நிகழ்வதும் வருவதுமாகிய பிரபஞ்சமும் அவரே. அவர் பரமபுருஷர்; நித்தியர்; எங்கும் வியாபித்தவர்; விகாரமற்றவர்; அசைவற்றவர்; எப்போதும் ஒரேவிதமாகஇருப்பவர்; யோகமேமூர்த்தீகரித்த அந்தக்கிருஷ்ணமூர்த்தி உலகத்தைக்காப்பாற்றுவதற்கு லீலையாக அவதாரஞ் செய்திருக்கிறார். அவருக்கொப்பானவர் பிறக்கவுமில்லை; பிறந்ததுமில்லை; பிறக்கப்போவதுமில்லை. ஜங்கமங்களுக்கும் ஸ்தாவரங்களுக்

* மனிதர்களிடம்பிரயோகிக்காமலிருப்பது.

கும் பிதாவும் பூஜ்யருமாகிய அவர் உனக்கு மாதுல புத்ராயிருக்கிறார். தனது நன்மையை யறிந்த எந்தமனிதன் அவரைஜயிக்கவிரும்புவன். அவர் உனக்குமைத்துனரும் ஸ்நேஹிதருமாவார். அவருக்கும் நீயிர்போன்ற அன்பனுவாய். அவருக்கு உன்னிடத்தில் சினேகம் அதிகமாகவும் உனக்கும் அவரிடத்தில்நேசம் உறுதியாகவுமிருக்கும். அதனுல் உனக்கு அவருடன்விளையாட்டாகவும் யுத்தம் நேராது. மேலும் முன்னே கிருஷ்ணன் நந்தகோபருடையகோகுலத்தில் வளர்ந்துகொண்டிருந்தபோது இந்திரன் அவரிடம் உன்விஷயமாக, "என்னுடைய அம்சமானவனும் பூலோகத்தில் புருஷர்களில் உத்தமனும் குந்திபுத்ரர்களில் கனிஷ்டனும் சிறந்தவீரனும் பாண்டுபுத்ரனுமாகிய அர்ஜுனனென்பவன் பூபாரத்தையொழிப்பதில் உமக்குஉதவிசெய்யப்போகிறன். பிரபுவே! அவனுக்காக அபயம்கொடும். நம்மைப்பற்றி அவனைக்காப்பாற்றும்" என்றுகேட்டுக்கொண்டான். அர்ச்சுனு! சங்கசக்கரகதாதரும் லக்ஷ்மீபதியுமான செந்தாமரைக்கண்ணர் இவ்வாறு இந்திரனுல் கேட்டுக்கொள்ளப்பட்டபோது அவனைப்பார்த்து, "பாண்டுவம்சத்திற்பிறந்தவனும் மிகுந்ததர்மிஷ்டனும் அஸ்த்ரப்பிடித்தவர்களெல்லாரிலும் சிறந்தவனும் என் அத்தைமகனுமாகிய அர்ச்சுனனை நான் அறிவேன். எல்லாலோகங்களிலும் மஹாவீரனும் உன் அம்சமுமாகிய அவனை நான் காப்பாற்றுவேன். எங்களிருவருடைய ஸ்நேஹத்தைப்போன்றஸ்நேஹம் உலகத்தில்இருக்கப்போகிறதில்லை. அவனிடம்பக்தியுள்ளவனெவனோ அவன் என்னிடத்திலும்பக்தியுள்ளவன். அவனைவிரோதிப்பவனெவனோ அவன் என்னையும்விரோதிப்பவன். என்னுடையதனமெல்லாம் அவனுடையது. அவனில்லாமல் நான் ஜீவிக்கமாட்டேன்" என்றார். அர்ச்சுனு! சர்வேச்வரனுகிருஷ்ணன் இந்திரனுக்கு முன்னே இவ்வாறுசொல்லியிருக்கிறார். ஆகலால், உனக்குஒப்பானவனும் அதிகமானவனுமாகியபுருஷன் அவனைவிடவேறொருவனும் இவ்வுலகத்தில் உண்டாகப்போவதில்லை. நீ அவனையே சரணடை. தேவர்க்குந்தேவராகிய ஜனார்த்தனர் எல்லாப்பிராணிகளையும் காப்பதற்குரியவர்" என்றார். அர்ச்சுனன் ஸரியென்று தர்மராஜனிடம்ஒப்புக்கொண்டு அவருடையபாதவந்தனஞ்செய்தபிறகு தர்மராஜாவுக்குக் கீழ்ப்படிந்தவனுகஇருந்தான். உலகத்தில் "அர்ச்சுனனைப்போன்றவீரனில்லாளி ஒருவனுமில்லை" என்றபெயர் கடல்சூழ்ந்தபூமியெல்லாம்தானுகவே பரவியது. பாண்டவனனைதனஞ்சயன் கதாயுத்தத்திலும் கத்திச்சண்டையிலும் தேர்ச்சண்டையிலும் வில்யுத்தத்திலும் பாரங்கதனுக

இருந்தான். நீதிதவறுத ஸஹதேவனும் நீதிசாஸ்திரஜ்ஞானம் எல்லாவற்றையும் தேவேந்திரனிடமிருந்து அடைந்து அஸ்த்ரசஸ்த்ரங்களிலும் சாஸ்திரங்களிலும் தேர் யானை குதிரைகளின்பழக்கத்திலும் பாண்டித்தியத்தையடைந்து ஸஹோதரர்களுக்குட்பட்டிருந்தான். இவ்வாறே துரோணராற்கற்பிக்கப்பட்டவனும் சகோதரர்களுக்கு அன்பனுமாயுள்ள நகுலன் சித்திரயுத்தம்செய்பவனுகவும் அதிரதர்களிற்சிறந்தவனுகவும் பெயர்பெற்றிருந்தான். கந்தர்வர்களின்விரோதமிருந்தும் மூன்றுவருஷங்கள் தடையின்றி யஜ்ஞஞ்செய்துமுடித்தவனுகிய ஸௌவீரனென்னும்அரசன் அர்ச்சுனன்முதலியபாண்டவர்களால் போரில்கொல்லப்பட்டான். வீரனுகியபாண்டவும் எவனையடக்கவில்லையோ அந்த யவனதேசத்தரசியாகியஸௌவீரராஜன் அர்ச்சுனனுல்ஜயிக்கப்பட்டான். மிக்க பலம்நிரம்பினவனும் கௌரவர்களைப்பற்றி எப்போதும் கோபமுள்ளவனுமாகிய விபுலனென்னும்பெயருள்ள அந்தஸௌவீரதேசத்தரசன் சிறந்தபுத்திமானுகிய அர்ச்சுனனுல் கொல்லப்பட்டான். யுத்தத்தில் ஜயிக்கநிச்சயத்தோடுகூடியவனும் தத்தாமித்ரனென்று மற்றொருபெயருள்ளவனுமாகிய ஸுமித்ரனென்னும் ஸௌவீரஅரசனையும் அர்ச்சுனன் பாணங்களால்ஜயித்தான். பீமஸேனனைச் சகாயமாகக்கொண்ட அந்த அர்ச்சுனன் கிழக்குத்தேசத்தவர்களான பதினுயிரம் மஹாரதர்களைத் தான் ஒற்றைத்தேராளியாகவேயிருந்து ஜயித்தான். அப்படியே ஓரேராத்திரியினுல் சென்று தென்திசையையஜயித்தான். தனஞ்ஜயன் தனக்குவியலைக்குறுதேசத்திற்கொண்டுவந்துசேர்த்தான். அவன் பதினேந்தாவது பிராயத்தில் இதையெல்லாம்செய்ததனுல் அவனைக்கண்டு த்ருதராஷ்டிரபுத்ரர்களுக்குப் பயமுண்டாயிற்று. சிறந்தகைகளையுடையவனும் பலவான்களிற்சிறந்தவனுமாகிய எந்தப்பீமஸேனன் த்ருதராஷ்டிரபுத்ரர்களெல்லாருக்கும் தன்பலத்தினுல் அபகாரஞ்செய்தாலேனு அந்தக் கெட்டஎண்ணமில்லாத பீமஸேனனைக் குற்றத்தையேநாடும் த்ருதராஷ்டிரபுத்ரர்களேனுலரும் அவனுடையசெய்கையினுலுண்டான பயத்தினுல் குற்றமுள்ளவனுகநினைத்தனர். அவனுடையசெய்கைகளைக் கண்டும், பாண்டவர்களெல்லாரும் புகழ்பெற்றுப் பலத்தினுல் அனேக மடங்குஅதிகரித்திருப்பதைக்கண்டும், த்ருதராஷ்டிரபுத்ரர்கள் தங்களுக்குத்தீங்குவருவதைநினைத்து அவர்களிடம் பயந்தனர். இவ்வாறு புருஷச்ரேஷ்டர்களும் மஹாத்மாக்களுமாகிய பாண்டவர்களனேவரும் முன்னே அயல்தேசங்களைஜயித்துத் தங்கள்தேசத்தைவிருத்திசெய்தனர். பிறகு வலியவில்லாளிகளாகிய பாண்டவர்களின்பலம்

மிகப்புகழ்பெற்றிருப்பதைத்தெரிந்துகொண்ட த்ருதராஷ்டிரனுக்குப் பாண்டவர்களிடமிருந்தஎண்ணம் உடனேகெட்டுப்போயிற்று. அதிக மாகக் கவலையடைந்திருந்த அவ்வரசனுக்கு ராத்திரியில் நித்திரை வரவில்லை.

நூற்றைம்பத்திரண்டாவது அத்தியாயம்.

ஸம்பவபர்வம். (தொடர்ச்சி.)

(யுதிஷ்டிரருக்கு ராஜ்யாபிஷேகஞ்செயயும்படி நகரத்துஜனங்கள் சொன் னதைக்கேட்டுத் துயரமுற்றுத் துரியோதனன் தந்தையிடம்பேசுவது.)

பலத்திற்சிறந்த பீமஸேனனையும் வித்தையிற்சிறந்தஅர்ச்சுன னையும்கண்டு துரியோதனன் துக்கத்தினல்பரிதபித்தான். பிறகு சூரியபுத்திரனனகர்ணன், ஸுபலன்புத்திரனசகுனிமுதலானோர் கள் அனேகஉபாயங்களால் பாண்டவர்களைக் கொல்லக்கருதினர். பாண்டவர்களும் விதுரருடையபுத்திமதியையனுஸரித்து வெளிக்கா ட்டாமல் அவையெல்லாவற்றிற்கும் கூடியவரையிற் பரிகாரஞ்செய்த னர். பாரதரே! அந்தக்காலத்தில் நகரத்துஜனங்கள், பாண்டுபுத்ரர்கள் குணங்களெல்லாம்சேர்ந்திருப்பதைக்கண்டு அவர்களின்குணங்களைப் பற்றி ஸபைகளில்பேசினர். அப்போது நாற்சந்திகளிலும் ஸபை களிலும் ஜனங்கள்கூடி ராஜ்யலாபம்பெற்ற பாண்டுபுத்திரர்களில் ஜ்யேஷ்டரான யுதிஷ்டிரரைப்பற்றிப் பேசினர். "அறிவேகண்ணுக வுடைய த்ருதராஷ்டிரராஜன் கண்ணில்லாமையால் முன்னமேராஜ்யம் அடைந்திருக்கவில்லை. அவன் இப்போது ராஜாவாவதெப்படி? ஸத்ய ஸந்தரும் சிறந்தநியமமுள்ளவருமாகிய சந்தனுபுத்ரரான பீஷ்மர் முன்னே ராஜ்யத்தை மறுத்துவிட்டு இப்போது ஒருகாலும் அங்கி கரிக்கமாட்டார்; ஆதலால், நாம் இளையவனும் முதிர்ந்தகுணமுள்ள வனும் ஸத்யமும்தயையுமுள்ளவனுமாகிய பாண்டுபுத்ரர்களில்ஜ்யேஷ் டனே இப்போது ராஜ்யாபிஷேகஞ்செய்யவேண்டும். அதுதான் ஸரி. தர்மந்தெரிந்த அந்தயுதிஷ்டிரர் சந்தனுபுத்ரரான பீஷ்மரையும் த்ருத ராஷ்டிரனையும் த்ருதராஷ்டிரபுத்ரர்களையும் மேன்மைப்படுத்திப் பல வகையான ராஜபோகங்களையுமளிப்பார்" என்றனர். கெட்டபுத்தி யுள்ள துரியோதனன் யுதிஷ்டிரரிடத்தில்நேசம்வைத்துப்பேசுகின்ற அந்தஜனங்களுடைய அந்தவசனங்களைக்கேட்டுத் துயரமுற்றான்.

கெட்டசித்தமுள்ளதுரியோதனன் மனக்கொதிப்புற்றவனுகி அவர் கள்பேசுவதைப்பொறுக்கவில்லை; பொருமையினுல் அதிகதாபத்தை யடைந்து திருதராஷ்டிரனிடம் சென்றான்; அப்போது அவன் பிதா வைத் தனிமையில்கண்டு மரியாதைசெய்து, பிறகு நகரத்துஜனங்கள் யுதிஷ்டிரரிடம்வைத்திருக்கும் அன்பினுலுண்டான துயரத்துடன் பின்வருமாறுசொல்லத்தொடங்கினன்:

"பிதாவே! பிதற்றுகின்ற நகரத்துஜனங்களுடைய அயோக் கியமானபேச்சுக்களை நான்கேட்டேன்; உம்மையும் பீஷ்மரையும் அவ மதித்து, பாண்டுபுத்ரன் ராஜாவாயிருப்பதை விரும்புகின்றனர். பீஷ் மர் ராஜ்யபரிபாலனத்தை விரும்புகிறதில்லை. இஃது அவருடைய உறுதி. பட்டணத்திலுள்ளஜனங்கள் நமக்குத்தான் துயரத்தையுண் டாக்கவிரும்புகின்றனர். பாண்டு முன்னே தன்னுடையகுணங்களி னுல் தந்தையினிடமிருந்து ராஜ்யத்தைப்பெற்றான். உமக்குக்கண் தெரியாமையென்னுங்குற்றமிருந்ததனுல் உமக்குரியராஜ்யத்தை நீர் அடையாமல்போனீர். இந்தப்பாண்டவன் பாண்டுவின்தாயபாகமாக ராஜ்யத்தையடைந்தால், அவன்புத்திரன் நிச்சயமாக ராஜ்யத்தை யடைந்தவனே. அவன்புத்திரனும் அவனுக்குப்புத்திரனும் அவ் வாறுதான். ராஜாவே! ஆதலால் நாங்கள் எங்கள்ஸந்ததிகளுடன் கூட ராஜவம்சமில்லாமல் உலகத்தில் அவமதிக்கப்பட்டிருப்போம். ராஜாவே! எப்படிச்செய்தால் நாங்கள் எப்போதும் பிறர்அன்னத் திற்குக்காத்திருந்து நரகம்போன்ற துக்கத்தைஅனுபவிக்காமலிருப் போமோ அப்படிப்பட்டநீதியை நீங்கள் செய்யவேண்டும். ராஜாவே! இந்தராஜ்யத்தை முன்னமே நீரடைந்திருப்பீராயின் ஜனங்களுக்கு விருப்பமில்லாமலிருந்தபோதிலும் நாங்கள் நிச்சயமாக ராஜ்யத்தை அடைவோம்" என்றான்.

தன்புத்திரன் இவ்வாறுசொன்னதைக்கேட்டு, திருதராஷ்டிரன் சற்றுநேரம் சிந்தித்து, பிறகு துரியோதனனைநோக்கி, "கௌரவ குலியபாண்டு தர்மந்தவறுதவன்; என்னிடத்திலும் என்னைச்சார்ந்த ஞாதிகளெல்லாரிடத்திலும் விசேஷமாக அன்புவைத்திருந்தவன். சிறந்ததர்மிஷ்டனுகிய பாண்டு இந்தஉலகத்தில் போஜனமுதல் ஒன் றையும் தனக்குவேண்டுமென்று நினைப்பதில்லை. அவற்றையெல்லாம் என்னிடம்தெரிவிப்பான். பாண்டுவைப்போலவே அவன்புத்திரனும் எப்போதும் தர்மத்தைவிடாதவன்; குணங்கள்நிரம்பினவன்; உலகத் தில் பிரக்யாதிபெற்றவன்; நகரத்திலும் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறான். மனிதரிற்சிறந்தவனுகிய அவன் நம்மால் எவ்வாறுகுறைக்கக்கூடிய

வன். நமதுராஜ்யத்தை அவன் அடைந்தேயிருக்கிறன். ஸஹாயர்களும் அவனுக்குவிசேஷமாக இருக்கின்றனர். பாண்டுவினல் மந்திரிகள் எப்போதும் ஆதரிக்கப்பட்டிருந்தனர். ஸைனிகளும் மதிக்கப்பெற்றிருந்தன. அவர்களின்புத்திரர்களும் பௌத்திரர்களும் விசேஷமாக ஆதரிக்கப்பட்டனர். குழந்தாய்! பாண்டுவோடு அவ்வாறுபழகினதேசத்திலுள்ள அந்தமனிதர்கள் யுதிஷ்டிரனுக்காக நம்மையும் நம்மைச்சேர்ந்தவர்களையும் எவ்வாறுகொல்லாமலிருப்பார்கள்? இந்த ஜனங்கள் நாம்தர்மத்தைவிட்டால் முக்கியமாக நம்தேசத்திலேயே இருக்கவிரும்பார். குழந்தாய்! அப்படிப்பட்ட நாம் மஹாத்மாக்களாகியஇந்தக்கௌரவராஜர்களுக்கும் உலகத்துக்கும் எவ்வாறு பழிக்கத்தகாதவர்களாவோம்?" என்றுசொன்னன். அதைக்கேட்ட துரியோதனன், "பீஷ்மர் எப்போதும் ஒருபக்ஷத்திலும்சேராதவர். துரோணருடைய புத்திரர் என்பக்ஷத்திலிருக்கிறர். புத்திரரிருக்கிறபக்ஷத்தில் துரோணரிருப்பார். இதில் ஸந்தேகமில்லை. சாரத்வதராகியகிருபரும் நமதுபக்ஷத்திலேயேயிருப்பார். ஏனெனில், அவர்மருகராகிய அசுவத்தாமாவை எவ்வகையிலும்விடார். விதுரர் நமக்கும் பந்து. ஆனல் எதிரிகளிடம் வெளிப்படாமல் மறைவாக அன்பு வைத்திருக்கிறர். நம்மைத்திரப்பதற்குச் சமர்த்தரல்லர். நம்மிடத்தில் சங்கைப்படாத பாண்டவர்களை அவர்கள் தாயாருடன்கூட இப்போதே வாரணவதத்திற்கு அனுப்பிவிடும். இதில் குற்றமுண்டாகாது. உள்ளத்தில் ஆணிஅடித்ததுபோல் பொறுக்கமுடியாததும் தூக்கத்தைக்கெடுப்பதுமாகக் கிளம்பியிருக்கிற வ்யஸனமென்னும் தீயை இந்தச்செய்கையினல் அணைக்கக்கடவீர்" என்றுசொன்னன்.

நூற்றைம்பத்துமூன்றுவது அத்தியாயம்.

ஸம்பவபர்வம். (தொடர்ச்சி.)

(கணிகர் த்ருதராஷ்டிரனுக்குக் கெட்டநீதி உபதேசிப்பதும், ஜம்புகோபாக்யானமும்.)

பாண்டுபுத்ரர்கள் வீரர்களாகவும் அதிகபலமும் அதிகபராக்ரமமுமுள்ளவர்களாகவுமிருப்பதைக் கேள்வியுற்று த்ருதராஷ்டிரமஹாராஜா வ்யஸனத்தினல் சிந்தையுற்றன். பிறகு ராஜ்யஆலோசனைதெரிந்

தவரும் ராஜநீதிசாஸ்திரத்தின் ரஹஸ்யத்தைச் சேவ்வையாக அறிந்த வருமாகிய கணிகரென்னும் மந்திரிச்ரேஷ்டரையழைத்து த்ருதராஷ்டிரன், "பிராம்மணச்ரேஷ்டரே! பாண்டவர்கள் எப்போதுமே கர்வமுள்ளவர்களாயிருக்கின்றனர். அவர்களை நான்வெறுக்கிறேன். கணிகரே! அவர்கள்விஷயத்தில் சந்திவிக்ரஹங்களைச்செய்வதற்கு மிக்க நிச்சயமானஉபாயத்தை நீர் எனக்குச்சொல்லும். நீர்சொல்வதைச் செய்வேன்" என்றுசொன்னன். பரதச்ரேஷ்டரே! பிறகு துரியோதனன், சகுனி, கர்ணன், துச்சாஸனன் இவர்கள் சகுனியின்மந்திரியாகிய கணிகரைவந்தனஞ்செய்து பாண்டவர்களைப்பற்றிப் பலவகையாகக்கேட்டனர். "பாண்டவர்கள் எப்போதும் ஜாக்கிரதையோடிருக்கின்றனர். அவர்களிடத்தில் நாங்கள்பயப்படுகிறோம். பாரத்வாஜரே! நம்மைச்சேர்ந்தவர் எல்லாருக்கும் குறைவின்றி க்ஷேமத்தையுண்டாக்குவது எது? நாம்எவ்வகையாகக் காரியங்களைச்செய்யவேண்டுமென்பதைச்சொல்லுங்கள்" என்றனர். த்ருதராஷ்டிரனுல் கேட்கப்பட்ட அந்தப்பிராமணஸ்ரேஷ்டர் தெளிந்தமனஸோடு ராஜசாஸ்திரத்தின்ரஹஸ்யத்துக்கு நிதர்சனமான ஒருகொடியசொல்லைச்சொல்லலானர். "ராஜாவே! குற்றமற்றவரே! அந்தவிஷயத்தில் நான்சொல்லப்போவதைக்கேளும். கௌரவச்ரேஷ்டரே! நான்சொன்னதைக் கேட்டபிறகு என்மேல் கோபம்செய்யத்தகாது. ராஜாவானவன் எப்போதும் தண்டிப்பதற்கு முயற்சியுள்ளவனுகஇருக்கவேண்டும். பராக்கிரமத்தை வெளிப்படுத்திக்கொண்டு தன்னிடத்தில் பிறர்பிரவேசிக்க மார்க்கமில்லாமல் பிறரிடம் தான்பிரவேசிக்கமார்க்கத்தைக் கண்டு அதில்பிரவேசிப்பவனுகவும் எப்போதுமிருக்கவேண்டும். எப்போதும் தண்டிப்பதற்குமுயற்சியுள்ளவனுகஇருபபவனிடத்தில் ஜனங்கள் பிகஅச்சபடுவர். ஆதலால், எல்லாக்காரியங்களையும் தண்டத்தினுலேயே ஸ்தாபிக்கவேண்டும். தன்னுடையகுற்றத்தைப் பிறரறியாதபடி செய்யவேண்டும். பிறரைத் தவறும்தருணத்தில் எதிர்க்கவேண்டும். ஆமை தன் அங்கங்களை வைத்துக்கொள்வதுபோல் ராஜாங்கங்களை ரஹஸ்யமாக வைத்துக்கொள்ளவேண்டும். தனக்குக் குறைவுவராமல் காத்துக்கொள்ளல்வேண்டும். தன்நன்மையைவிரும்புகிறஅரசன் பிராமணர்களை எப்போதும் பூஜித்தல்வேண்டும். பிராம்மணர்களைக்காக்கவும் துஷ்டர்களையடக்கவுந்தான் அரசன்படைக்கப்பட்டிருக்கிறன். துஷ்டநிக்ரஹமும் சிஷ்டபரிபாலனமுமாகியஇரண்டினுலும் தர்மம்விருத்தியாகின்றது. தர்மம் விருத்தியாவதனுல் இம்மைமறுமையாகிய இரண்டுலோகங்களும் ஜயிக்கப்படுகின்றன.

ஆதலால் தர்மத்தைச்செய்யவேண்டும். எந்தஅரசன் ஒருமனிதன் குற்றவாளியாயிருப்பதைக்கண்டு மன்னித்துவிடுகிறானோ அவன் அதனால் இந்தலோகத்தில் அவமானத்தையும் பரலோகத்தில் நரகத் தையும் அடைகிறான். எவன் ராஜாவினிடத்திலிருந்து உயர்ந்தசெல் வத்தையடைந்து அவனுக்குத் தீங்குசெய்கிறானோ அந்தஅதமனைப் பிடித்துக்கொன்று அவன்பொருளை ஏழைகளுக்குக் கொடுக்கவேண் டும். காரியத்தை நிர்வஹிக்க நியமிக்கபபட்டவர்கள் ராஜாவுக்குவசப் படாமற்போவாராயின், அவர்கள்ஸ்தானத்தில் தர்மசாஸ்திரத்திலும் அர்த்தசாஸ்திரத்திலும நிபுணர்களான பொய்யுரையாத மனிதர்களை ராஜா நியமித்தல்வேண்டும. அவ்வாறு நியமிக்கப்பட்டவரெவரோ அவர்கள் ஜனங்களுக்கு ஆதாரமானதேசத்தையாவது நகரத்தையா வது கிராமத்தையாவது பீடிக்கிறார்களா இல்லையாவென்று பரீக்ஷிப்ப தற்காக, மாறுவேஷமுள்ள தன்னைச்சேர்ந்த வேலைக்காரர்களையனு ப்பவேண்டும். பரீக்ஷைசெய்தபிறகு துஷ்டனை அவனுடையபொருள் களையெல்லாம் எடுத்துக்கொண்டு விட்டுவிடவேண்டும். ஒருகாரி யத்தையாரம்பித்தபிறகு அதைச்செய்வையாக நிறைவேற்றாமல் ஒரு காலத்தும் இருக்கத்தகாது. தைத்தமுள்ளும்கூடப பிசகாகவடுக் கப்பட்டால் வெகுகாலம் புண்ணையுண்டாக்கும். தீங்குசெய்யும் பகை வர்களைக் கொல்வதுதான் சிலாக்கியமென்று சொல்லுகின்றனர். ஆப த்துவருங்காலத்திலெல்லாம் நல்லடாக்டருள்ளவனும் செவ்வையாக யுத்தஞ்செய்யத்தக்கவனுமாகிய மந்திரியை நன்றுகப்பிளந்து ஓட்டி விடவேண்டும். அதைப்பற்றி ஆலோசிக்கத்தகாது. ஐயா! சத்ரு, பலஹீனனாகஇருந்தபோதிலும் எவ்வகையிலும் அவனை அலக்ஷியஞ் செய்யத்தகாது. சிறியநெருப்பும் பெரியஆதாரத்தைப்பற்றி வனம் முற்றிலும் எரித்துவிடுகிறது. பொட்டையனாகஇருக்கவேண்டியகால த்தில் பொட்டையனாகஇருக்கவேண்டும்; செவிடனாகஇருக்கவேண் டியகாலத்தில் செவிடனாகவுமிருக்க வேண்டும். வில்லைப் புல்லைப் போல் செய்யவேண்டும். பாம்போல் (எச்சரிக்கையாக) படுக்க வேண்டும். ஸாமம்முதலிய உபாயங்களினால் வசப்பட்டுப்போன சத் துருவைக் கொன்றுவிடவேண்டும். சரணமடைந்தவனென்று அவ னிடத்தில் தயைசெய்யத்தகாது. அபபடிச்செய்தால்தான் பயமற்றி ருக்கலாம். கொல்லபபட்டவனிடம் பயமில்லை. சத்துருவாயிருப் பவனையும் முன்அபகாரஞ்செய்தவனையும் *தானத்தினால் கொன்று

* அவனால் நம்பப்பட்ட சமையற்காரன் முதலியவர்களுக்கு லஞ்சம் கொடுத்து அவர்களைக்கொண்டு கொல்லவேண்டும்.

விடவேண்டும். * மூன்றும்ஐந்தும் ஏழுமாக எதிரிபக்ஷத்திலுள் ளவரெல்லாரையும் கொல்லவேண்டும். எப்போதும் எதிர்ப்பக்கத் தின்வேராகிய ராஜாவைமட்டுமாவது முதலில் அறுக்கவேண்டும். அதன்பின் அவனுக்குச் சகாயமாயிருப்பவர்களையும் அதற்குப்பிறகு அவர்கள் பக்ஷத்தைச் சேர்ந்தவர்களனைவரையும் கொல்லவேண்டும். ராஜ்யத்தின் வேர் அறுந்தால் அதைப்பற்றி ஜீவிக்கின்றயாவரும் அழி ந்தவரே; வேரறுத்தமரத்தின்கிளைகள் நிற்பதெவ்வாறு? எப்போதும் ஓரேஊக்கத்துடன் தன்ரஹஸ்யத்தைவெளிப்படுத்தாமலும் எதிரி யின்ரஹஸ்யத்தை யறிந்துகொண்டுமிருக்கவேண்டும். ராஜாவே! எப் போதும் விரோதிகளாயிருப்பவர்களிடத்தில் நாள்தோறும் பயத் தோடேயேநடக்கவேண்டும். அக்நிஹோத்ரத்தினாலும் யாகத்தினா லும் காஷாயவஸ்த்ரத்தினாலும் ஜடைதரிப்பதினாலும் தோலுடுப்ப தினாலும் ஜனங்களை முதலில்நம்பவைத்துத்தான் பிறகு செந்நாயைப் போல அழிக்கவேண்டும். கருதியபாபன்களையடைவதற்கு அக்னி ஹோத்ரமுதலிய ஆசாரங்கள் தூண்டிலோன்றவை; (அவைகளால்) பழங்கள் நிரம்பினகிளையைவளைத்துக்கொண்டு பழுக்கப்பழுக்கக் கனி களையுதிர்க்கவேண்டும். உலகத்தில் புத்திமான்களானபுருஷர்கள் விரும்பினபலனைப்பற்றிச்செய்யும்உபாயம் இதுதான். தன்அனுகூல காலம் திரும்பிவருகிறவரையில் சத்ருவைத் தோளினற்சுமந்துகொ ண்டிருக்கவேண்டும்; தன்காலம் மறுபடியும்வந்தவுடன் குடத்தைக் கல்லிற்போட்டுடைப்பதுபோல் உடைத்துவிடவேண்டும். மிகஇர க்கமானசொல்லைச்சொன்னபோதிலும் பகைவனைவிடலாகாது. அவ ன்விஷயத்தில் தயவுசெய்யத்தகாது. தீங்குசெய்தவனைக் கொல்ல வேண்டும். விரோதியை நல்வார்த்தையினாலாவது கொடுப்பதனாலா வது கொல்லவேண்டும். விரோதியைச் சாமத்தினாலாவது தானத்தி னாலாவது பிரிச்சேதத்தினாலாவது யுத்தத்தினாலாவது எல்லாஉபா யங்களையுஞ்செய்தாவது ஒழித்துவிடவேண்டும்" என்றார். திருத ராஷ்டிரன், "சாமதானபேததண்டங்களினால் சத்ருவை எவ்வாறு கொல்லக்கூடும். அதை எனக்குத் தெளிவாகச்சொல்லும்" என்று கேட்க, கணிகர்சொல்லத்தொடங்கினர்.

*மூன்று: பிரபுசக்தி, மந்த்ரசக்தி, உற்சாகசக்தி; ஐந்து: மந்த்ரி, தேசம், அகழ், பொக்கிஷம், ஸைன்ய; ஏழு: ராஜா, மந்த்ரி, ஸ்நேகன், பொக்கிஷம், தேசம், அகழ், சைன்யமென்பவை பழையவுரை.

மூன்று: ராஜா, மந்த்ரி, மித்ரன்; ஐந்து: முன்சொன்னமூன்றோடு கோசா திபதியும், ஸைன்யாதிபதியும்; ஏழு: முன்சொன்னஐந்துடன் தேசரக்ஷகரும் துர்க்கரக்ஷகரும். எழுவரையும்கொல்லமுடியாவிட்டால் ஐவரையாவது, அதுவும் முடியாவிடத்து மூவரையாவது கொல்லவேண்டும். இதனால் எல்லாம்ஒழியும்.

"மஹாராஜாவே! முன்னே தர்மசாஸ்திரத்தின் ஸூக்ஷ்மங்களையறிந்த ஒருநரி காட்டில்வஸித்துக்கொண்டிருந்து செய்தசெய்கையைச் சொல்லுகிறேன்; கேளும். தேர்ந்தபுத்தியுள்ளதும் ஸ்வகாரியத்தைச்சாதித்துக்கொள்வதில் மிக்கசாமர்த்தியமுள்ளதுமான ஒருநரி தன்கிளைகிதர்களாகிய புலி, எலி, செந்நாய், கீரிப்பிள்ளை இவைகளுடன்கூட வாஸஞ்செய்துகொண்டிருந்தது. அந்தநரியும் அதன்கிளைகிதர்களும் அந்தக்காட்டில் மிகுந்தவலிமையுள்ள ஒரு மான்கூட்டத்தரசைக்கண்டன; அதைப்பிடிக்கத் திறமையில்லாமல் அங்கே ஆலோசனைசெய்தன. அப்போது, நரி, "புலியே! இந்தவனத்தில் இதைக்கொல்வதற்குப் பலமுறை நீ ஆரம்பித்திருக்கிறாயல்லவா? இஃது இளம்பிராயமுள்ளது; மிகுந்தவேகமுள்ளது; புத்தியுள்ளது. ஆதலால் உன்னால்முடியவில்லை. இதுபடுத்திருக்கையில் கால்களை இந்தஎலி தின்றுவிடட்டும். பிறகு கால்கடிக்கப்பட்டஇதைப்புலிபிடித்துக்கொள்ளட்டும். அதன்பிறகு எல்லோரும்மனமகிழ்ந்து தின்போம்" என்றுசொல்லிற்று. நரிசொன்னவாறே எல்லாம் ஒருமனத்தோடுசெய்தன. எலியினால் கால்கள் தின்னப்பட்ட அந்தமானை அப்போதே புலிகொன்றது. பூமியில் அசைவற்றுக்கிடந்தமானின் தேகத்தைக்கண்டவுடன் நரி, "நீங்கள்ஸ்நானம்செய்துவாருங்கள். உங்களுக்கு ஸுகமுண்டு. இதை நான் காத்துக்கொண்டிருக்கிறேன்" என்றுசொன்னதன்மேல், அவையெல்லாம் அங்கிருந்து ஆற்றுக்குச்சென்றன. அந்தநரி மிகுந்தசிந்தையுடன் அங்கேயேயிருந்தது. பிறகு மஹாபலசாலியானபுலி முதலில்ஸ்நானஞ்செய்துவிட்டுவந்து கிந்தையினால்மனக்கலக்கமுற்றநரியைக்கண்டு, "மிகுந்தபுத்தியுள்ளவனே! ஏன்வ்யஸனப்படுகிறாய்? நாம்முன் நீதானே சிறந்தபுத்திசாலி. இப்போது நாம் மார்ஸத்தைப்புஜித்து விளையாடுவோம்" என்றுசொல்லிற்று. நரி, "மஹாவீரனே! வெகுசொன்னசொல்லை நான்சொல்லுகிறேன்; கேள். 'மிருகராஜாவானபுலியின்பலம்இழிவானது. இந்தமான் இப்போது என்னால்கொல்லப்பட்டது. புலி என்புஜபலத்தை ஆதாரமாகக்கொண்டு இப்போது பசிதீர்த்துக்கொள்ளப்போகிறது' என்று எலிசொல்லிற்று. இவ்வாறு அதுவீரவாதஞ்செய்ததைக்கேட்டபின் நான் இந்தஉணவைவிரும்பவில்லை" என்றுசொல்லிற்று. புலி, அதைக்கேட்டு, "அஃது இவ்வாறுசொல்லுகிறதா? எனக்குச் சரியானகாலத்தில்தெரிவித்தாயே! நான் என்கைவன்மையைக்கொண்டே காட்டிலிருக்கும்மிருகங்களைக்கொன்று அவற்றின்மாமஸங்களைப்புஜிக்கப்போகிறேன்" என்றுசொல்லிவிட்டுக் காட்

டுக்குப்போயிற்று. அதுபோனஸமயத்தில் எலியும் வந்துசேர்ந்தது. அதுவந்ததைக்கண்டு நரி, "எலியே! உனக்குச்சுகமுண்டாகட்டும். கீரிப்பிள்ளை 'நான் மான்மாம்ஸத்தையுண்ணேன். இதுவிஷம்; எனக்குப்பிடிக்கவில்லை. எலியைப் பக்ஷிக்கப்போகிறேன். அப்படிச்செய்வதற்கு, நீ அனுமதிகொடுக்கவேண்டும்' என்று என்னிடம் சொல்லிற்று" என்றது. நரியின்சொல்லைக்கேட்டு, எலி பயந்து வளைக்குள் போய்விட்டது. ராஜாவே! பிறகு அந்தச்செந்நாயும் ஸ்நானஞ் செய்து அங்கேவந்தது. அதுவந்ததைப்பார்த்து அப்போது நரி, "புலி உன்மீது கோபித்துக்கொண்டிருக்கிறது. உனக்கு நன்மையுண்டாகாது. அது தன்மனைவியுடன் இவ்விடம் வரப்போகிறது. மேலே செய்யவேண்டியதைச் செய்துகொள்" என்றுசொல்லிற்று. மாம்ஸம்புஜிக்கவந்த அந்தச்செந்நாய் அந்தநரியினால் இவ்வாறு அறிவிக்கப்பட்டவுடன் உடம்பைச்சுருக்கிக்கொண்டு ஓடிவிட்டது. அப்போது கீரிப்பிள்ளையும் வந்தது. மஹாராஜாவே! வனத்தில் நரி அந்தக்கீரிப்பிள்ளையைநோக்கி, "என்புஜபலத்தைக்கொண்டு என்னால்வெல்லப்பட்ட அவர்களெல்லாம் வேறிடங்களுக்குச் சென்றனர். நீயும் எனக்குக் கைச்சண்டையைக்கொடுத்தபிறகு வேண்டியவரையில் மாம்ஸத்தைப்புஜிக்கலாம்" என்றுசொல்லிற்று. "மிருகராஜாவானபுலியும் செந்நாயும் புத்திமானான எலியுமாகிய இந்தவீரர்களை நீஜயித்ததனால் நீ அவர்களினும் மேலானவீரன். உன்னோடு யுத்தஞ்செய்ய என்னால்முடியாது" என்றுசொல்லி அதுவும் போய்விட்டது. நல்ல ஆலோசனையின் நிச்சயத்தினால் நரி மனமகிழ்ச்சியுடன் தான் தனியாக அந்தமாம்ஸத்தைச் சாப்பிட்டது. இவ்வாறு செய்துகொண்டிருக்கும் அரசன் எப்போதும் ஸுகமாக விருத்தியாவான். பயமுள்ளவர்களைப் பயத்தைக்காட்டிக் கலக்கவேண்டும். சூரனைக்கும் பிடிவதனால் மாற்றவேண்டும். பொருளாசையுள்ளவனையும் ஒத்தபலமுள்ளவனுடனிருப்பவனையும் பொருள்கொடுப்பதனாலும் குறைந்தவனைப் பராக்கிரமத்தினாலும் ஒடுக்கவேண்டும். ராஜாவே! இந்தவிஷயம் உமக்குச்சொல்லியாயிற்று. அவ்வாறே மற்றொன்றும் சொல்லுகிறேன்; கேளும். புத்திரனுடனும் மித்திரனுடனும் ஸஹோதரனுடனும் தந்தையாயினும் ஆசாரியனுடனும் பகைமையிலிருப்பார்களாயின் நன்மையைவிரும்புகிறவனால், (அவர்கள்) கொல்லப்படவேண்டியவர்களாயிருக்கிறார்கள். காப்பாற்றுவதாக ஸத்யஞ்செய்தாவது பொருள்கொடுத்தாவது விஷம்அல்லது வஞ்சகத்தினாலாவது கொன்றுவிடவேண்டும். எவ்வகையிலும் விடக்கூடாது. இருவரும் ஜயிப்

பதில் ஸந்தேகமுள்ளவராயின் அவர்களுள் ஜாக்கிரதையுள்ளவன் ஜயிப்பான். காரியாகாரியம்தெரியாமல் கர்வத்தோடு துர்மார்க்கத்தில் போனவன் குருவாயிருப்பினும் அவனைத் தண்டிப்பது நியாயமாகும். கோபமுற்றவனுயிருந்தாலும் கோபிக்காதவன்போல் காண்பித்துக்கொண்டு புன்னகையுடன் ஸம்பாஷணைசெய்துகொண்டிருக்கவேண்டும். இவனுக்குக் கோபமிருப்பதை யாரும் எவ்வகையினலும் அறியாமலிருக்கவேண்டும். கோபமுள்ளவன் ஒருபொழுதும் எதிரியை இகழ்ந்துபேசத்தகாது. பாரதரே! போகும்போதும் அடிக்கும்போதும் இன்சொல்லையேசொல்லவேண்டும். அடித்தபிறகும் வ்யஸனப்படுகிறவன்போலவும் அழுகிறவன்போலவும் இன்சொல்லையே சொல்லவேண்டும். எதிரியைக்கூட, சாமத்தினலும் அறம்பொருள் களைப்பற்றிய ஒழுக்கங்களாலும் நம்பவைக்கவேண்டும். வழிதப்பியிருந்த அந்தஎதிரியைப் பிறகு சமயம்நேர்ந்தபோது அடித்துவிடவும் வேண்டும். பெருங்குற்றம்செய்தவனும் தர்மத்தைக்கைவிடாமலிருந்தால் அவனுடைய அந்தப்பெருங்குற்றமும் இருண்டமேகங்களினுல் குன்று மறைக்கப்படுவதுபோல் மறைக்கப்படுகின்றது. கொல்லத்தகுந்தவனுடைய வீட்டில் தீவைக்கவேண்டும். பொருளில்லாதவர்களையும் நாஸ்திகர்களையும் கள்ளர்களையும் விஷங்கொடுக்கும் வேலையில் நியமிக்கவேண்டும். எதிர்சென்று ஆஸனங்கொடுப்பதுமுதலிய உபசாரங்களாலும் சிறந்த வெகுமதிகொடுப்பதனுலும் மிகவும் நம்பினவனைக் கூரானபற்களையுடைய பாம்புமுதலியவை தலைவணங்கிக்கடிப்பதுபோல் கொன்றுவிடவேண்டும். தன்னிடம் சங்கையுற்றவர் சங்கையில்லாதவர்முதலிய யாரைப்பற்றியும் தான் சங்கையுற்றவனுகவே இருத்தல்வேண்டும். தான்சங்கைப்படாமல் நம்பினவனுலுண்டாகும்பயம் வேரையும்அறுத்துவிடும். தன்னைநம்பாதவனிடம் தான் நம்பிக்கைவைக்கலாகாது. நம்பினவனிடத்தும் அதிகநம்பிக்கைவைக்கத்தகாது. நம்புவதனுல்உண்டாகும்பயம் வேர்களையும் அறுத்துவிடும். தன்தேசத்திலும் அன்னியதேசத்திலும் செல்வையாகப்பரீக்ஷிக்கப்பட்ட சாரனை நியமிக்கவேண்டும். * பாஷண்டர்களையும் ரிஷிகள்முதலானவர்களையும் அயல்தேசங்களில் தூதர்களாகநியமிக்கவேண்டும். தோட்டங்களிலும் பௌத்தாலயங்களிலும் தேவாலயங்களிலும் பாணசாலைகளிலும் வீதிகளிலும் †புண்ணியதீர்த்தங்களெல்லா

---

* பாஷண்டர் = நாஸ்திகர்.

† புண்ணியதீர்த்தம் : க. மந்திரி, உ. புரோஹிதன், ங. யுவராஜன், ச. ஸேனபதி, ஞ. த்வாரபாலகன், சு. அந்தப்புராதிகாரி, எ. சிறைச்சாலையதிகாரி,

வற்றிலும் நாற்சந்திகளிலும் கிணற்றங்கரைகளிலும் மலைகளிலும் காடுகளிலும் ஜனசபைகளெல்லாவற்றிலும் நதிகளிலும் நடப்பதை விசாரிக்கவேண்டும். நயமாகவும் கருத்தில் கத்திபோலவுமிருக்க வேண்டும். கொடுமையானசெய்கையைச்செய்ய நிச்சயத்தோடிருக்கும்போது புன்சிரிப்புடன் அனுகூலமாகப்பேசுகிறவனுகஇருத்தல் வேண்டும். கும்பிடுவது, ஸத்தியம்செய்வது, இன்சொற்சொல்லுவது, தலைவணங்கிப்பாதவந்தனஞ்செய்வது, வேண்டியவற்றைக்கொடுப்பது, ஆசைகாட்டுவதுமுதலியவற்றை ஐசுவரியத்தைவிரும்புகிறவன்செய்யவேண்டும். நல்ல*புஷ்பங்களைப்பூத்தும் † பழங்களில்லாமலிருக்கவேண்டும். பழங்களிருந்தாலும் ‡ ஏறக்கூடாமலிருக்கவேண்டும். பழுத்ததாகத்தோன்றிக்கொண்டு பழுக்காமலேயிருக்கவேண்டும். ஒருபோதும் § ஜரித்துப்போகத்தகாது. அறம்பொருள் இன்பமென்னும் த்ரிவர்க்கத்தில் கஷ்டங்களும் பலன்களும் மூன்று வகை. அவற்றில் பலன்களை அனுகூலமாகத்தெரிந்துகொண்டு கஷ்டங்களைவிலக்கிவிடவேண்டும். தர்மத்தையதிகமாகச்செய்பவனுக்கு அஃது அர்த்தகாமங்களைக்கெடுப்பதனால் துயரமுண்டாகிறது. பொருளில்ஆசைகொண்டு பொருளையதிகமாகத்தேடுபவனுக்கும் தர்மம் காமமிரண்டும்கெடுவதனால் துன்பமுண்டாகிறது. காமத்தில் அதிகமாகப்பிரவர்த்திப்பவனுக்கும் அறம்பொருளிரண்டும் கெடுவதனால் துன்பமுண்டாகிறது. மனத்தில்கர்வப்படாமல் ஜாக்கிரதையுள்ளவனுகவும் இன்சொற்சொல்லுகிறவனுகவும் கோபமில்லாதவனுகவும், பிரயோஜனங்களைக்கவனிப்பவனுகவுமிருந்து சுத்தமானபுத்தியுடன் பிராம்மணர்களோடுகூட மந்திராலோசனை செய்யவேண்டும். குறைந்துபோன தன்மை மென்மை அல்லது கடுமையான எந்தச்செய்கையினாலாவது தூக்கிவிட்டுக்கொள்ளவேண்டும். சக்திவந்தபின் தர்மத்தைச்செய்யவேண்டும். ஒருமனிதன் பிராணஸந்தேகத்தையடையாமல் ஐச்வரியத்தைக்காண்பதில்லை. பிராணஸந்தேகத்தையடைந்தபின் ஜீவித்திருந்தால் ஐசுவரியத்தைக்காண்பான். எவ

அ. திரவியத்தை வாங்கிவைப்பவன், கூ. திரவியத்தைச் செலவழிப்பவன், கo. ஆஜ்ஞையை நடத்துகிறவன், கக. நகராதிகாரி, கஉ. காரியங்களைவிதிப்பவன், கங. தர்மாதிகாரி, கச. சபாத்தியக்ஷர், கஙி. தண்டபாலன், கஞ. துர்க்கபாலன், கட. ராஷ்டிராந்தபாலகனென்னும் எல்லைக்காவலாளி, கஅ. அடவிபாலகனென்னும் காட்டதிகாரி என்று நீதிசாஸ்திரங்களில் கணக்கிடப்பட்ட பதினெட்டுத்தீர்த்தங்களிலும் என்பது பழையஉரை.

* புஷ்பம் = இன்சொல்; † பழம் = காரியம்; ‡ ஏறக்கூடாமை = ஸமயத்தில்பெறக்கூடாமை; § ஜரித்துப்போதல் = வசப்பட்டுப்போதல்,

துடையபுத்தி வ்யஸனத்திலுல் சோர்வடையுமோ அவனே முன்நட
ந்த ராமர்முதலியோருடைய சரித்திரங்களைச்சொல்லித் தேற்றவே
ண்டும். நம்பிக்கையில்லாதவனைப் பின்வருகிற நன்மைகளைக்காட்டித்
தேற்றவேண்டும். எல்லாம் தெரிந்தவனைத் தக்காலத்தில் உதவி
செய்து தேற்றவேண்டும். எவன் எதிரியோடு ஸ்நேஹமாயிருந்து
கொண்டு க்ருதார்த்தனைப்போலத் தூங்குவனே அவன் நூனிமரத்தில்
தூங்கினவனைப்போல் விழுந்தபின் விழித்துக்கொள்வன். எப்போ
தும் கோபிக்காமல் தான்செய்த மந்த்ராலோசனையை மறைப்பதில்
முயற்சிசெய்யவேண்டும். சாரன் கவனித்திருக்கும்போதும் தன்
கருத்தை வெளிக்காட்டாமலிருக்கவேண்டும். தெரிந்தவன் இராத்
திரியில் ஆலோசனைசெய்யக்கூடாது. யாராவது கவனிக்கும்படியும்
ஆலோசனை செய்யக்கூடாது. மேல்மாடியிலும் குன்றின்மேலும்
ஜனங்களில்லாத விலாசமான இடத்திலும் அதைச்சுற்றி நம்பிக்கை
யானவர்கள் காவலாகப் பார்த்திருக்கும்படி வைத்து ஆலோசனை
செய்யவேண்டும். அந்தமந்த்ராலோசனை ஸ்தானத்தில்நாணத்தான்
குருவியையும் ஆண்பெண்கிளிகளையும் சிறுவர்களையும் மூடர்களையும்
பித்தர்களையும் வைக்கத்தகாது. உள்ளேயிருந்தவர்களையும் வெளிப்
படுத்தித் தர்மிஷ்டர்களும் ராஜநீதிதெரிந்தவர்களும் தர்க்கசாஸ்தி
ரம்தெரிந்தவர்களும் இதிஹாஸங்களில் நன்றுகத்தேர்ந்தவர்களுமா
கிய பிராமணர்களுடன் ஆலோசிக்க வேண்டும். ஆலோசனையின்
முடிவில் செய்தஆலோசனை பொசிந்துவெளிப்படாமல் காக்கப்படு
வதைப்பற்றித் தானேநிச்சயம்செய்யவேண்டும். முன்புவீரர்களால்
அபிப்பிராயம் சொல்லப்பட்ட ஆலோசனையையனுசரித்துப் பிறகு
தர்மார்த்தங்களைப்பற்றித் தான் ஒருவனுகவேயாவது அல்லது சரி
யானபுத்திசாலியென்று தனக்குத்தெரிந்த ஒருபிராமணனேடுகூட
வாவது யோசித்துக் காரியநிச்சயஞ் செய்யவேண்டும். மூன்றுவ
தான மற்றெருருமனிதனுடன் புத்திமான்நிச்சயத்தைச்செய்யத்தகாது.
ஆறு காதுகளுக்குப்போன மந்திரம் உடைபட்டுப்போமென்று நீதி
சாஸ்திரங்களிற் படிக்கப்படுகிறது. வெளிப்பட்டமந்திரம் கைக்கு
வந்த லக்ஷ்மியையும் கெடுத்துவிடும். ஞானமுள்ளவன் தன்அபிப்
பிராயத்தையும் பிறர்அபிப்பிராயத்தையும் பலமுறைஆராய்ந்து குண
முள்ளசொல்லை எடுத்துக்கொள்ளவேண்டும். போதுமென்று திரு
ப்தியடையத்தகாது. அயலானுடைய ரஹஸ்யங்களை வெளிப்படுத்தா
மலும் கொடியகாரியத்தைச் செய்யாமலும் மீன்பிடிப்பவனைப்போல்
ஹிம்ஸிக்காமலும் ஒருவன் பெரியஜீசுவரியத்தை அடைவதில்லை.

இளைத்ததும் நோய்பிடித்ததும் நலிந்ததும் தண்ணீர்குடிக்காததும் ஆகாரமில்லாததும் நம்பிக்கையிழல் சுறுசுறுப்பற்றதுமாகிய எதிரி சைனியத்தை அடிக்கவேண்டும். பொருளுள்ளவன் பொருளுள்ள வனிடம்போவதில்லை. காரியமானவனிடத்தில் சினேகமிராது. ஆதலால், எல்லாக்காரியங்களையும் பூர்த்திசெய்யாமல் மிச்சமானவை யாகவே செய்யவேண்டும். ஐசுவரியத்தைவிரும்புகிறவன் கோபத் தைவிட்டு மித்திரர்களைச்சேர்ப்பதிலும் பகைவரைப்பகைப்பதிலும் வெறுப்பில்லாமல் முயற்சிசெய்துகொண்டிருக்கவேண்டும். முயற்சி யிழல் உத்ஸாஹத்தை விருத்திசெய்யவேண்டும். இவன்செய்யப்போ கிறகாரியங்களை மித்திரர்களும் சத்துருக்களும் அறியாமலிருக்க வேண்டும். ஆரம்பித்துச் செவ்வையாகமுடிந்தவற்றைத்தான் யாரும் அறியவேண்டும். பயம்வருவதற்குமுன் பயந்தவனைப்போல் உபாயங் களைச்செய்யவேண்டும். பயம்வந்ததைக்கண்டபிறகு பயமில்லாத வனைப்போல் யுத்தம்செய்யவேண்டும். தெய்வத்தினழல் கெடுக்கப் பட சத்ருவுக்கு எவன் உபகாரம்செய்கிறானோ அவன் கோவேறு கழுதை கர்ப்பம்தரிப்பதுபோல் தனக்கு ம்ருத்யுவை ஸம்பாதிக்கி றான். நேரிடாதகாரியத்தையும் ஸமீபத்தில் நேரிடப்போகிறகாரியத் தையும் முன்னறியவேண்டும். அறிவின்மையிழல் ஒருபிரயோச னத்தையும் தவறவிடாமலிருக்கவேண்டும். ஐசுவரியத்தைவிரும்பு கிறவன் தேசகாலங்களையும் தெய்வபலத்தையும் தர்மார்த்தகாமங் களையும் பருத்தறிந்து பிரயத்தினம்செய்து உத்ஸாஹத்தை விருத்தி செய்துகொள்ளவேண்டும். தேசகாலங்கள் காரியஸித்திக்கு முக் கியமானவையாக அறியத்தக்கவை. இது நிச்சயம். முன்னுக்கும் சத் துருவைக் கவனிக்காமலிருந்தால் பின்னைப்போல்வேரூன்றுகிறான். காட் டில்விடப்பட்ட அக்கினியைப்போல் விரைவில் அஸாத்தியனாகிறான். எந்தமனிதன் சிறுநெருப்பைப்போல் தன்னைதானேவிருத்திசெய்து கொள்ளுகிறானோ அவன் விருத்தியடைந்தபின் பெருங்கூட்டத்தை யும் பக்ஷித்துவிடுகிறான். ஆரம்பத்திலேயே வேண்டியதைக்கொடுப் பதாகப் பொருளில்லாத இன்சொல்லைச் சொல்லவேண்டும். ஆசை யைக் காலம் நீடிக்கவிடவேண்டும். காரியகாலங்களில் இடையூறு களைக் காண்பிக்கவேண்டும். அந்தஇடையூற்றுக்குக் காரணம்சொல்ல வேண்டும். அந்தக்காரணத்தைச் சரியான நியாயமுள்ளதாகத்தெரி விக்கவேண்டும். எஃகினழல் செய்யப்பட்டதும் மயிர்பிடிக்கூடாத்தக்க கூர்மையுள்ளதுமாகிய கத்தி உறையில் மறைந்திருந்து சமயத்தில் பகைவர்களையறுப்பதுபோல் மனிதன் காலஸகாயத்தை வைத்துக்

கொண்டு தன்கருத்து வெளிப்படாமல் நுண்ணியவிஷயங்களையும் கிரஹித்துக் கூர்மையாகஇருந்து எதிரிகளைத்தொலைத்து அவர்களு டைய உயிரையெடுத்துவிடவேண்டும். கௌரவராஜாவே! பாண்ட வர்களிடத்தும் மற்றவர்களிடத்தும் நும்புத்திரர்களிடத்தும் நியாயப் படி நடக்கும்போது நீர் முழுகிப்போகாமலிருக்கும்படி செய்வன வற்றை நன்முகச்செய்யும். ராஜாவே! எல்லாச்செல்வங்களும் நிரம்பி னவன்தான் சிறந்தவனென்பதுநிச்சயம். ஆதலால், பாண்டுபுத்திரர்க ளிடமிருந்து உம்மைக்காத்துக்கொள்ளும். ராஜாவே! பாண்டவர்கள் உமக்குச்சகோதர புத்திரர்கள். அவர்கள் மிகுந்தபலமுள்ளவர்கள். பின்னிட்டு வருத்தமுண்டாகாம லிருப்பதெவ்வாறே அவ்வாறு உபா யத்தைச்செய்யவேண்டும்" என்று கணிகர் இவ்வாறுசொல்லிவிட் டுத் தம்விடுதிக்குச்சென்றார். கௌரவனுகிய த்ருதராஷ்டிரனும் வ்யஸனத்திலுல் பீடிக்கப்பட்டவனுனன்.

ஸபபவபர்வம் முற்றிற்று.

நூற்றைம்பத்துநான்காவது அத்தியாயம்.

ஜ து க் ரு ஹ ப ர் வ ம்.

(வைசம்பாயனர், அரக்குமாளிகை கொளுத்தியகதையைச் சுருக்க மாகச் சொன்னபிறகு ஜனமேஜயர் கேட்டதன்மேல், விரி வாகச்சொல்லத்தொடங்கியதும், துரியோதனனுக் கும் த்ருதராஷ்டிரனுக்கும் நடந்தஸம்வாதமும்.)

"ப்ரதச்ரேஷ்டரான ஜனமேஜயரே! துரியோதனனும் கர்ண னும் ஸுபலன்புத்திரனை சகுனியும் துச்சாஸனனுமாகிய அந்த நால்வரும் கணிகருடைய அபிப்பிராயம் முழுதும்கேட்ட பிறகு ஒரு கால் ஆலோசனைசெய்தனர். அவர்கள் கௌரவனுகிய த்ருதராஷ் டிரமஹாராஜாவின் ஸம்மதம்பெற்றுக்கொண்டு குந்தியையும் அவள் புத்திரர்களையும் எரித்துவிடவேண்டுமென்று நிச்சயஞ்செய்துகொண் டனர். இங்கிதத்தையும் கருத்தையுமறிந்து உண்மையைக் கண்டு பிடிக்கிறவராகிய விதுரர் கெடுநினைவுள்ள அந்நால்வருடைய அந்த ஆலோசனையையும் அவர்களின்நடை அல்லது நோக்கத்திலுலேயே தெரிந்துகொண்டார். பிறகு அறியவேண்டியவற்றைப் புத்தியில் அறிந்துகொண்டவரும் பாண்டவர்களின்நன்மையில் ஊக்கம்வைத்த

வருமாகிய குற்றமற்றவிதுரர், குந்தியோடும் அவள்புத்திரர்களோடும் கூட ஓடிப்போவதைப்பற்றி ஆலோசனைசெய்து, உடனே யந்திரங்களோடுகூடியதும், காற்றுக்கும் ஆலைகளுக்கும் அசையாததும், கொடிகள்கட்டியதுமாகிய திடமானகப்பலைச் செய்வித்துக் குந்தியை நோக்கி, "இந்தத்திருதராஷ்டிரன் இந்தக்குலத்தின் கீர்த்தியையும் ஸந்தான அபிவிருத்தியையுமழிப்பதற்கு விபரீதபுத்தியோடு பிறந்திருக்கிறான். அழியாப்பயனுள்ள தர்மத்தை இவன் விட்டுவிடுகிறான். இந்தக்கப்பல் ஆலைகளுக்கும் காற்றுக்கும் தாங்கக்கூடியதாக ஜலமார்க்கத்தில் விடப்பட்டிருக்கிறது. மேன்மையுள்ளவளே! இதனாலேதான் நீயும் உன்புத்திரர்களும் காலபாசத்திலிருந்து விடுவிக்கப்படுவீர்கள்" என்றுசொன்னார். பரதச்ரேஷ்டரே! புகழ்பெற்ற குந்தி அதைக்கேட்டுத் துயரமுற்றவளாகத் தன்புத்திரர்களுடன் கூட அந்தக்கப்பலிலேறிக் கங்கையிற்சென்றாள். பிறகு விதுரர் சொற்படி பாண்டவர்கள் கப்பலைவிட்டுவிட்டுக் கௌரவர்கள்கொடுத்த தனத்தையெடுத்துக்கொண்டு தங்களுக்கு க்ஷேமமானவனத்திற் பிரவேசித்தனர். ஏதோ காரணம்பற்றிவந்தவளும் ஐந்துபுத்திரர்களையுடையவளும் நிரபராதையுமான ஒருவேடச்சி தன்புத்திரர்களுடன் அந்தஅரக்குமாளிகையில் கொளுத்தப்பட்டாள். அந்த இழிந்தமிலேச்சனான புரோசனனென்னும்பாபிஷ்டனும் அந்த அரக்குமாளிகையில் எரிக்கப்பட்டான். கெடுநினைவுள்ள திருதராஷ்டிரபுத்ரர்களும் அவரைச்சேர்ந்தவர்களும் மோசம்போயினர். விதுரருடைய அவ்வகையான ஆலோசனையினால் மஹாத்மாக்களாகிய குந்திபுத்திரர்கள் ஜனங்களுக்குத்தெரியாமலே தாயாருடன்கூட அபாயமில்லாமல் விடுபட்டனர். பிறகு வாரணவதமென்று பெயர் பெற்ற அந்தநகரத்திலுள்ள ஜனங்கள் அரக்குமாளிகை எரிந்ததைக்கண்டு துக்கத்துடன் அழுதனர். அவர்கள் திருதராஷ்டிர மஹாராஜாவுக்கு, 'கௌரவராஜரே! உன்பெருவிருப்பம் நிறைவேறியது; பாண்டவர்களை எரித்துவிட்டாய்; பூர்ணமனோரதனாக இருந்து உன்புத்திரர்களுடன் ராஜ்யத்தையனுபவிக்கலாம்' என்று சொல்லி ஹஸ்தினபுரத்திற்கு நடந்ததைநடந்தபடிதெரிவிப்பதற்கு மனிதர்களையனுப்பினர். திருதராஷ்டிரன் தன்புத்திரனை துரியோதனனுடன்கூட அதைக்கேட்டு வ்யஸனப்பட்டுக்கொண்டு பந்துக்களுடன்கூடப் பாண்டவர்களுக்குப் பிரேதகாரியங்களைச்செய்தான். விதுரரும் குருச்ரேஷ்டரானபீஷ்மரும் அவ்வாறேசெய்தனர்" என்று வைசம்பாயனர்சொல்ல, அவரைப்பார்த்து, ஜனமேஜயர், "பிராம்ம

ணேத்தமரே! இந்த மிக்கமொடியமெய்கை அந்தத் திருதராஷ்டிர புத்ரர்களுக்குக் கொடியவரானகணிகரால் உபதேசிக்கப்பட்டது. அரக்குமாளிகைகொளுத்தினதையும் பாண்டவர்கள் விடுபட்டதையும்பற்றியே மறுபடியும் விரிவாகக் கேட்கவிரும்புகிறேன். அதை நடந்தவாறுசொல்லும். எனக்கு மிக்கவிருப்பம்இருக்கிறது" என்று கேட்க, வைசம்பாயனர் சொல்லத்தொடங்கினர்.

"ராஜாவே! வீரரே! அரக்குமாளிகை எரிந்துபோனதையும் பாண்டவர்கள் விடுபட்டதையும்பற்றி நான் விரிவாகச்சொல்லுகிறேன்; கேளும். கணிகர்போனபிறகு ராஜாவாகியதுரியோதனன் திருதராஷ்டிரனைப்பார்த்து, "பாண்டவர்களால் நமக்குப் பயமுண்டாகும். அவர்களைத் தக்கஉபாயத்தினால் நீர் வாரணவதநகரம்செல்லும்படி அனுப்பிவிடும்" என்றுசொன்னன். திருதராஷ்டிரன் தன் மகன் சொன்னசொல்லைக்கேட்டுச் சற்றுநேரம்ஆராய்ந்து உடனே துரியோதனனைப்பார்த்துப் பின்வருமாறு சொல்லத்தொடங்கினன்: "பாண்டு எப்போதும் தர்மந்தவறுதலையும் தன்சுற்றத்தார்எல்லார் விஷயத்திலும் நியாயப்பிரகாரமேநடப்பவனாகவும் என்விஷயத்தில் விசேஷமாகத் தர்மத்தைஅனுசரித்தவனாகவுமிருந்தான். போஜனம் முதலியவற்றில் ஒன்றையும் தனக்குவேண்டியதாக அவன்அறிந்ததில்லை. அவன் தர்மத்தின்நியமத்தைவகித்து எப்போதும் ராஜ்ய விஷயத்தை எனக்குத்திரிப்பான். அவனுடையபுத்திரனும் பாண்டு எவ்வாறோ அவ்வாறே தர்மத்தையே பெரிதாகக்கொண்டவன்; குணங்கள்நிரம்பினவன்; உலகத்தில் கீர்த்திபெற்றவன்; பூருவம்சத்தாராலும் நன்றாக அங்கீகரிக்கப்பட்டிருக்கிறான். அவனுக்குப் பிதிர் பிதாமஹர்பரம்பரையாகவந்த இந்தராஜ்யத்தைவிட்டுப் பலவந்தமாக விலக்குவதற்கு நம்மால் எவ்வாறுமுடியும். அவனுக்கு ஸகாயர்களும் விசேஷமாகஇருக்கின்றனர். எனெனில், மந்திரிகள் பாண்டுவினால் ஆதரிக்கப்பெற்றவர்கள்; சேனையும் எந்தக்காலத்திலும் போஷிக்கப்பட்டது. அவர்களின்புத்திரர்களும் பௌத்திரர்களும்கூட விசேஷமாகப் போஷிக்கப்பட்டவர்கள். குழந்தாய்! பாண்டுவினால் முன்னே ஆதரிக்கப்பட்ட அந்தநகரத்துஜனங்கள் யுதிஷ்டிரனுக்காக நம்மையும் நம்மைச்சேர்ந்தவர்களையும் என்கொல்லார்கள்" என்றான்.

அதற்குத் துரியோதனன், "தந்தையே! நீங்கள்சொன்னது சரி. நம்மிடத்தில்ஏற்பட்ட குறைவைக்கண்டுதான் மந்திரிகளெல்லாரையும் திரவியங்களினாலும் வெகுமதிகளினாலும் நான் சிறப்பித்திருக்கிறேன். அவர்கள் நமக்கு முக்கியமானஸகாயர்களாயிருப்ப

ரென்பது நிச்சயம். ராஜாவே! எல்லாப்பொருள்களும் மந்திரிகளும் இப்போது என்ஸ்வாதீனத்திலிருக்கின்றனர். ஆதலால், நீர் பாண்டவர்களை நயமானஉபாயத்தினல் உடனே வாரணவதநகரத்துக்குப் பிரயாணப்படுத்தவேண்டும். பாரதராஜாவே! இராச்சியம் எப்போது என்னிடத்தில் நிலைத்திருக்குமோ அப்போது குந்தியும் தன்புத்திரர்களுடன் மறுபடிவரலாம்" என்றுசொன்னன். த்ருதராஷ்டிரன், "துரியோதனு! இந்தஆலோசனை என்னுள்ளத்திலும் விடாமலிருந்துகொண்டிருக்கிறது. ஆனல் இந்தஎண்ணம்கெடுதலாதலின் நான் வெளிப்படுத்தாமலிருக்கிறேன். குந்தீபுத்ரர்களை ஊரைவிட்டுப் புறப்படுத்துவதைப் பீஷ்மர், துரோணர், விதுரர், கிருபர்முதலியயாரும் ஒருபோதும் ஸம்மதிக்கமாட்டார்கள். புத்ரனே! குருவம்சத்தைச் சேர்ந்தவர்களுக்குப் பாண்டவர்களும் நாமும் ஸமம்தானே! தர்மமுள்ளவர்களும் நல்லமனஸுள்ளவர்களுமாகிய இவர்கள் விதியாஸம் நிஜைக்கமாட்டார்கள். குழந்தாய்! அப்படிச்செய்கிறநம்மை இந்த மஹாத்துமாக்களான கௌரவர்களும் மற்றஉலகத்தாரும் எவ்வாறு கொல்லாமல்விடுவார்கள்" என்றுகேட்க, துரியோதனன், "பீஷ்மர் எப்போதும் எந்தப்பக்கமும்சாராமல் நடுநிலையில்நிற்பவர். துரோணபுத்திரர் என்பக்ஷத்திலிருப்பவர். புத்திரரிருக்கும்பக்ஷத்தில் துரோணரிருப்பரென்பதில் ஸந்தேஹமில்லை. ஏதத்வானுடைய புத்திரராகிய கிருபரும், துரோணரும் துரோணபுத்திரரும்சேர்ந்திருக்குமிடத்திலேதான் சேருவர். அவர் துரோணரையும் தம்மருமகனையும் ஒருபோதும் விட்டிரார். விதுரர் திரவியஸம்பந்தத்தினல் நமக்குக்கட்டுப்பட்டவர்; இரகஸியமாக எதிரிகளுக்குவசப்பட்டிருக்கிறார். அவர் ஒருவர்மட்டும் பாண்டவர்களுக்காக நம்மையெதிர்த்துப் பிடிக்கவல்லவரல்லர். நீர் நிருந்தநுனிவுடன் பாண்டவர்களைத் தாயாருடன் புறப்படுத்தலாம். அவர்கள் இப்போதே வாரணவதம்போவதற்கு என்னஉபாயமோ அதைச்செய்யும். உறக்கமில்லாமற்செய்வதும் நெஞ்சில்ஆணிஅடிக்கப்பட்டதுபோல் பொறுக்கக்கூடாததுமாக விருத்தியடைந்திருக்கும் சோகமென்னும அக்கினியை இந்தச் செய்கையினல் அணைத்துவிடும்" என்றுசொன்னன்.

நூற்றைம்பத்தைந்தாவது அத்தியாயம்.

ஜதுக்ருஹபர்வம். (தொடர்ச்சி.)

(துரியோதனன் ராஜ்யத்தின்அங்கத்தினரைத் தன்வசப்படுத்திக் கொண்டபிறகு வாரணவதத்திற்குப்போகும்படி பாண்டவர் களுக்குத் திருதராஷ்டிரன் அனுமதிகொடுத்தது.)

பிறகு ராஜாவாகியதுரியோதனன் தன்ஸஹோதரனுகிய யுயுத்ஸுவென்னும் த்ருதராஷ்டிரபுத்திரன் ஒருவன்தவிர மற்றத்தம்பிகளுடன்கூட மந்திரிகளெல்லாரையும் திரவியத்தையும் கௌரவத்தையும்கொடுப்பதனல் காலக்கிரமத்தில் வசப்படுத்திக்கொண்டான். நிபுணர்களாகியசிலமந்திரிகள் த்ருதராஷ்டிரனுல் ஏவப்பட்டு வாரணவதநகரம் அழகாயிருப்பதைப்பற்றிச் சொல்லலாயினர். "எல்லாரத்னங்களும்நிரம்பினதும் புண்ணியபலேஷத்ரமும் மனத்திற்கினியதுமாகிய வாரணவதநகரத்தில் சிவபெருமானுக்குமிகப்பெரிய ஓர்உத்ஸவம் இப்பூமிக்குள் மிகஅழகாக நடக்கப்போகிறது" என்று த்ருதராஷ்டிரன்சொல்லின்மேல் பிரஸ்தாவங்கள்செய்தனர். ராஜாவே! அழகான வாரணவதநகரத்தைப்பற்றி அவ்வாறுசொன்னபோது பாண்டவர்களுக்கு அங்கேபோவதில் எண்ணமுண்டாயிற்று. அவர்களுக்கு விருப்பமுண்டாயிருக்கிறதென்று தெரிந்தபோதே அம்பிகாபுத்திரனை த்ருதராஷ்டிரமஹாராஜன் பாண்டவர்களிடம்வந்து, "நீங்கள் இவ்விடத்தில் சாஸ்திரங்களைப் பூர்ணமாகக்கற்றுணர்ந்தும், துரோணரிடமிருந்தும் சரத்வானுடையபுத்ரராகிய கிருபரிடமிருந்தும் அஸ்த்ரவித்தையையப்பியஸித்தும், எல்லாவித்தைகளிலும் நிபுணர்களாய்க் கிருதார்த்தர்களானீர்கள். குழந்தைகாள்! இவ்வாறுநடந்தபின் எப்போதும் ராஜ்யலக்ஷ்மியைத்தையும் விபவஸாரம்பார்ப்பதையும் ஜனங்களுக்கு நன்மைசெய்வதையுப்பற்றி நானே பூர்ணமாகக் கவனித்துக்கொள்ளுகிறேன். இந்தஜனங்கள் உலகத்தில் வாரணவதநகரம் மிக்கஅழகியதென்று எனக்குப் பிரதிதினமும் பலமுறைசொல்லுகிறார்கள். குழந்தைகளே! இப்படிக் கிருதார்த்தர்களான நீங்கள் வாரணவதத்தில்நடக்கும் உத்ஸவத்தைப்(பார்க்க) விரும்புவீர்களாயின் சேஷகளோடும் பந்துக்களோடும் (சென்று) தேவர்களைப்போல் அங்கே விளையாடிக்கொண்டிருங்கள். தேவர்களைப்போல் அழகான ரூபமுள்ளநீங்கள் பிராம்மணர்கள் பாடகர்கள் அனைவருக்கும் ரத்னங்களை யதேஷ்டமாகக்கொடுங்கள். இவ்வாறு கொஞ்சகாலம் விளைத

மாகஇருந்து மிகுந்தசந்தோஷத்தையனுபவித்து மறுபடியும் ஸுகமாக இந்த அஸ்தினபுரத்துக்குவரலாம். ராஜ்யலக்ஷணத்தைக் கவனித்து அங்கேயே வாஸஞ்செய்யுங்கள். வீரர்களே! உங்களுக்கு அங்கே வேறுபாடு ஒன்றுமிராது" என்றுசொன்னான். யுதிஷ்டிரர் திருதராஷ்டிரனுடைய அந்தக்கருத்தையும் தமக்கு ஸஹாயம்யாருமில்லாமலிருப்பதையும் தெரிந்துகொண்டு அப்படியேஆகட்டுமென்று அவனுக்கு மறுமொழிசொன்னர். பிறகு யுதிஷ்டிரர் சந்தனுபுத்திரரான பீஷ்மரையும் சிறந்தபுத்திமானான விதுரரையும் துரோணரையும் பாஹ்லீகனையும் கௌரவனான ஸோமதத்தனையும் கிருபரையும் ஆசாரியபுத்திரரான அசுவத்தாமாவையும் பூரிச்ரவஸையும் கௌரவிக்கத்தக்கவர்களான மற்றமந்திரிகளையும் தபோதனர்களான பிராமணர்களையும் புரோகிதர்களையும் நகரத்துஜனங்களையும் புகழ்பெற்ற காந்தாரியையும் தாய்மாரனைவரையும் விதுரருடையஸ்திரீகளையும் மரியாதைசெய்து துக்கத்துடன் மெல்லமெல்லப் பின்வரும்சொல்லைச் சொல்லலானார்:

"திருதராஷ்டிரர்கட்டளையினால் நாங்கள் இனத்தாருடன்கூட அழகியதும் ஜனங்கள்திரம்பினதுமாகிய அந்தவாரணவதநகரத்திற்குப்போகிறோம். நீங்களெல்லோரும் உள்ளமகிழ்ந்து எங்களுக்கு நல்ல சொற்களைச்சொல்லுங்கள். உங்கள் ஆசீர்வாதங்களினால் காப்பாற்றப்பட்டஎங்களைத் துன்பம்பிடிக்காது" என்றார். பாண்டுபுத்திரரான யுதிஷ்டிரரால் இவ்வாறுசொல்லப்பட்ட அந்தக் கௌரவர்களனைவரும் மலர்ந்தமுகமுள்ளவர்களாகி, "பாண்டுபுத்திரர்களே! நீங்கள் வழியிற்போகும்போதும் மற்றஎல்லாக்காலங்களிலும் எல்லாத்தெய்வங்களாலும் க்ஷேமமாயிருக்கக்கடவீர்கள். எவ்வகையிலும் ஒருதீங்கும் வராமலிருக்கக்கடவது" என்றுபாண்டவர்களை ஆசீர்வதித்தனர். ராஜ்யம் திரும்பவும்கிடைக்கும்படி ஆசீர்வாதஞ்செய்யப்பட்ட பாண்டவர்கள் உடனே எல்லாக்காரியங்களையும் முடித்துக்கொண்டு வாரணவதத்திற்குப்புறப்பட்டனர்.

நூற்றைம்பத்தாறுவது அத்தியாயம்.

ஜதுக்ருஹபர்வம். (தொடர்ச்சி.)

(துரியோதனன்கட்டளையினால் புரோசனன் வாரணவதத்தில் அரக்குமாளிகைகட்டியது.)

பாரதரே! திருதராஷ்டிரனால் பாண்டவர்கள் ஆஜ்ஞாபிக்கப்பட்டபோது, துராத்மாவான துரியோதனன் மிகுந்தஆனந்தமடைந்

தான். பிறகு சகுனியும் கர்ணனும் துரியோதனனும் குந்தியையும் அவள்புத்திரர்களையும் எரித்துவிடஆலோசனைசெய்தனர். பரதச் ரேஷ்டரே! அந்தத்துராத்மாவாகிய த்ருதராஷ்டிரபுத்திரன் அவர்களு டன்ஆலோசனைசெய்து புரோசனனென்னும் மந்திரியை ஏகாந்தமாக அழைத்து அவன் வலக்கையைப்பிடித்துகொண்டு பின்வருமாறு சொல்லலானான்:

"அன்பனான புரோசனா! தனம்நிரம்பின இந்தப்பூமி என்னு டையதாகஆகும்படி நீ கவனிக்கவேண்டும். நான் உன்னுடன்கலந்து மந்திராலோசனைசெய்வதுபோலச் செய்யத்தக்க அதிகநம்பிக்கையுள் ளசினேகிதன் உன்னைவிட எனக்குவேறொருவனுமில்லை. நண்பனே! என் இரகசியத்தையும்காப்பாற்று; என்எதிரிகளையும் நல்ல உபாயத் தினால்களைந்துவிடு; நான்சொல்வதைச்சரியாகச்செய்; பாண்டவர்கள் த்ருதராஷ்டிராஜாவினால் வாரணவதத்திற்கு அனுப்பப்பட்டிருக் கின்றனர். த்ருதராஷ்டிரருடையகட்டளைப்படி உத்ஸவத்தில் மகிழ் ந்துகொண்டிருப்பர். கோவேறுகழுதைகள்கட்டி விரைவாகச்செல் லத்தக்க தேரிலேறி இப்போதே நீ வாரணவதம்சேரும்படி முயற்சி செய்யக்கடவாய். நீபோய் வாரணவதநகரத்தின்ஸமீபத்தைப்பிடித் துக்கொண்டு அங்கே ஒன்றுக்கொன்று எதிராக நாலுசதாமண்டபங் களமைந்த சதுச்சாலமென்னும் பெருவீடுபெற்றகிருகத்தைச் சிறந்த பிராகாரத்தினால் சூழப்பட்டதாகச் செய்விக்கக்கடவாய். சணல் குங் கிலியமுதலான நீப்பிடிக்கத்தக்கசரக்குகள் இவ்வுலகத்தில் என்ன என்னஉண்டோ அவற்றையெல்லாம் அதில் சேர்ப்பிக்கக்கடவாய். விழல், மெழுகு, நெய், எண்ணெய், கொழுப்பு, மிகுதியான அரக்கு இவைகளோடு மண்ணைக்கலந்து சுவர்களில்பூசும்படிசெய்வி. சணல், எண்ணெய், நெய், அரக்கு, மரங்கள் இவற்றையெல்லாம் அந்தக்கட்டி டத்தில் எல்லாப்புறங்களினும் சேர்ப்பிக்கக்கடவாய். அரக்கு சணல் தேன் மெழுகு மண் இவைகளால்பூசப்பட்ட(உத்தரம்முதலிய)பெரு மரச்சாமான்களைப்பாண்டவர்களும் மற்றமனிதர்களும் பரிசோதித்து ப்பார்த்தபோதிலும் அஃது அக்கினிக்காகச்செய்ததாகியமென்று கண்டுபிடிக்காமலிருக்கும்படி அந்தக்கட்டிடத்தில் சீக்கிரம்சேர்ப்பிக் கக்கடவாய். இவ்வாறு கட்டப்பட்ட அந்தவீட்டில் அந்தப்பாண்டவர் களையும் குந்தியையும் அவர்களுக்குவேண்டியவர்களையும் மிகுந்தமரி யாதைசெய்து வஸிக்கும்படிசெய்வாயாக. என்தகப்பனுருக்குச் சந் தோஷமுண்டாகும்படியாகப் பாண்டவர்களுக்கு மேலான ஆஸனங்க ளையும் வாகனங்களையும் சயனங்களையும் ஏற்படுத்தவேண்டும். வார

ணவதநகரத்திலுள்ளவர்கள் அதைத்தெரிந்துகொள்ளாமலிருக்கும் படியும் அந்தவாரணவதநகரத்தில் பாண்டவர்கள் சங்கையின்றிவிளை யாடிக்கொண்டிருக்கும்படியும், குறித்தகாலம்வருகிறவரையில் எல் லாம்செய்யவேண்டும். அவர்கள் மிகவும் சங்கையற்று எங்கும் பய மின்றிப்படுத்திருப்பதையறிந்து அப்போதே நீ அந்தவீட்டின்வாயி லில் தீயைவைத்துவிடவேண்டும். இவ்வாறு அவர்கள் தகிக்கப்பட்ட போது பாண்டவர்கள் தங்கள் வீட்டிலேயே எரிக்கப்பட்டனரென்று நினைத்துப் பாண்டவர்களுக்காக ஜனங்கள் நம்மை ஒருபோதும்நிந் திக்கமாட்டார்கள்" என்றான். அந்தப்புரோசனன் அவ்வாறேஆக ட்டுமென்றுதுரியோதனனுக்கு உறுதியாகச்சொல்லிக் கோவேறுகழு தைகள்கட்டிய விரைவாகச்செல்லத்தக்கதேரின்மேலேறிப் புறப்பட் டான். ராஜாவே! துரியோதனனுடைய அபிப்பிராயத்தில் நின்ற அந் தப்புரோசனன் துரிதமாகச்சென்று ராஜபுத்திரனுதுரியோதனன் சொன்னபடி எல்லாவற்றையும்செய்தான். அந்தப்பாண்டவர்களுக் குக் கொடியவீட்டைக் கட்டுவித்தான்.

நூற்றைம்பத்தேழாவது அத்தியாயம்.

ஜதுக்ருஹபர்வம். (தொடர்ச்சி.)

(யுதிஷ்டிரர் வாரணவதத்திற்குப்போகும்போது கூடவந்தநகரத்து ஜனங்களைத் திருப்பியனுப்பியதும், விதுரர் யுதிஷ்டிரருக்கு மிலேச்சபாஷையிற்சொன்ன உபதேசமும்.)

பாண்டவர்கள் காற்றைப்போல் வேகமான சிறந்தகுதிரைகள் பூட்டின தேர்களிலேறும்போது, துக்கத்துடன் பீஷ்மர், ராஜா வாகிய த்ருதராஷ்டிரன், மஹாத்மாவாகிய துரோணர், கிருபர், விது ரர் இவர்களின்பாதங்களையும் இன்னும் அனேகம்பெரியோர்களுடைய பாதங்களையும் வந்தனஞ்செய்தனர். விரதம்தவறுதவர்களாகிய பாண் டவர்கள் இவ்வாறு பெரியோர்களான கௌரவர்களனைவரையும் நமஸ்காரஞ்செய்தும், தங்களுக்குச் சரிவயதாயிருப்பவர்களைத் தழு விக்கொண்டும், சிறுவர்களால் வந்தனஞ்செய்யப்பட்டும், தாய்மாரனை வரையும் பிரதக்ஷிணஞ்செய்து அவர்களிடம் விடைபெற்றுக்கொண் டும், ஜனங்களெல்லாருக்கும் சொல்லிக்கொண்டும் வாரணவதத்திற் குப் புறப்பட்டனர். சிறந்தபுத்தியுள்ள விதுரரும் மற்றக்குருவம்சத் தர்களிலுள்ளவரும் நகரத்துஜனங்களும் வ்யஸனத்தினால்பீடிக்கப்பட்டுப்

புருஷஸிம்மங்களான பாண்டவர்களைப் பின்சென்றனர். அப்போது அவர்களில் சிலபிராமணர்கள், பாண்டவர்கள் மிகவும்வ்யஸனப்பட்டதைக்கண்டு தாங்களும் மிகத்துயரமுற்றவர்களாகப், பயத்தைவிட்டு, "கௌரவவம்சத்தராஜாவாகிய த்ருதராஷ்டிரமஹாராஜா வித்தியாஸமாகப் பார்க்கிறான். அவன் எல்லாவகையிலும் மிகமந்தபுத்தியுள்ளவன். அவன் தர்மத்தைப்பார்க்கிறதில்லை. பரிசுத்தமானமனமுள்ள பாண்டுபுத்திரரான யுதிஷ்டிரரும் பலவான்களிற்சிறந்தபீமனும் தனஞ்சயனுமாகிய இந்தக்குந்திபுத்திரர்கள் யாருக்கும் தீங்கைக்கருதார். மஹாத்துமாக்களும் மாத்ரிபுத்திரர்களுமாகிய நகுலஸஹதேவர்கள் தீங்குசெய்வதேது? அவர்கள் தந்தையின்ராஜ்யத்தையடைந்திருப்பதை த்ருதராஷ்டிரன் பொறுக்கவில்லை. மிகப்பாபமான இந்தச்செய்கையைப் பீஷ்மர் எவ்வாறு ஒப்புக்கொள்ளுகிறார்? அவர்களை நிஷ்காரணமாக நகரத்தைவிட்டு வெளிப்படுத்துவதை அவர் அங்கீகரிக்கிறாரே. சந்தனுவின்புத்திரனுகிய விசித்திரவீரியனும் ராஜரிஷியானபாண்டுவுமாகிய கௌரவச்ரேஷ்டர்கள் முன்னே நமக்குப் பிதாவைப்போலிருந்தனர். புருஷஸிம்மமாகிய அந்தப்பாண்டு தேவத்தன்மையையடைந்தபிறகு பாலர்களான இந்தராஜபுத்திரர்கள் மேல் த்ருதராஷ்டிரன் பொறுமைகொண்டிருக்கிறான். இதனை விரும்பாத நாம்அனைவரும் வீடுகளைவிட்டு இந்தச்சிறந்தநகரத்திலிருந்து யுதிஷ்டிரர்போகுமிடத்திற்குப் போவோம்" என்றுசொன்னார்கள். அவ்வாறுபேசித் துக்கமுற்றிருந்த அந்தநகரஜனங்களைப்பார்த்துத் தர்மராஜாவான யுதிஷ்டிரர் தாமும் துக்கத்தினால்பீடிக்கப்பட்டவராய் மனத்திற்கிசைந்தையுற்றுச் சொல்லலானார்: "பிதாவும் பூஜிக்கத்தக்கவரும் பெரியவரும் சிறந்தவருமாகிய ராஜா என்னசொல்லுகிறாரோ அதை நாங்கள் சங்கிக்காமற்செய்யவேண்டுமென்பது எங்களுடையவ்ரதம். நீங்கள் எங்களுக்குவேண்டியவர்கள். நீங்கள் செல்லுங்கள். ப்ரதக்ஷிணஞ்செய்து எங்களுக்கு ஆசீர்வாதங்களினால் அனுக்ரஹஞ்செய்து தம்தம்வீடுகளுக்குப்போகத் திரும்புங்கள். உங்களால் எங்களுக்கு ஆகவேண்டியகாரியம் நேரிடும்போது எங்கள் விருப்பங்களையும் நன்மைகளையும் செய்யக்கடவீர்" என்றார். இவ்வாறுசொல்லப்பட்ட பட்டணத்துஜனங்கள் அப்போதே ப்ரதக்ஷிணஞ்செய்து ஆசீர்வாதங்களினால் அவர்களுக்கு அனுக்ரஹஞ்செய்து நகரத்துக்கேதிரும்பிச்சென்றனர். பட்டணத்துஜனங்கள் திரும்பிப்போனபின் எல்லாத்தர்மங்களையும் அறிந்தவரும் சிறந்தபுத்தியுள்ளவரும் பேசத்தெரிந்தவருமாகிய விதுரர், பேச்சையறிந்தவரும் சிறந்த

புத்தியுள்ளவரும் பாண்டவச்ரேஷ்டருமான யுதிஷ்டிரரைப்பார்த்துப் பின்வரும் சொல்லைச்சொல்லலானார்:

"ராஜநீதிசாஸ்திரத்தையேதொடர்ந்துகொண்டிருக்கும் எதிரியின்புத்தியை எவனறிகிறானோ அவன் (அதனை)அறிந்தபின் இங்கே ஆபத்தைத்தாண்டத்தக்க உபாயத்தைச்செய்யவேண்டும். லோஹத்தினால் செய்யப்படாமலே தேகத்தைச்சேதிக்கத்தக்க கூர்மையான ஆயுதத்தை எவன் அறிந்து அதைத்தடுக்கும் உபாயத்தையும் அறிந்திருக்கிறானோ அவனைப் பகைவர்கொல்லார். காடுகளையழிப்பதும் குளிரைப்போக்குவதுமாகிய (நெருப்பாகிய) ஒன்று, பெருங்காட்டில் வளர்க்குள்வலிக்கும் எலிமுதலியவற்றைத்தகிக்காது, என்றறிந்து தன்னை எவன்காப்பாற்றிக்கொள்ளுகிறானோ அவன் ஜீவித்திருப்பான். கண்ணில்லாதவன் வழியையறியான். கண்ணில்லாதவன் திசைகளையறியான். தைரியமில்லாதவன் ஜயலக்ஷ்மியைப்பெறான். நான் இவ்வாறுஅறிவித்ததைக்கொண்டு நீ தெரிந்துகொள். உலோகத்தினால் செய்யப்படாததும் பகைவர்பிரயோகிப்பதுமாகிய ஆயுதத்தையே மனிதன் * வாங்கிக்கொள்ளுகிறான். முள்ளம்பன்றி சுரங்கத்தில் புகுந்துகொண்டு நீயிலிருந்து தன்னைவிடுவித்துக்கொள்ளும். நடப்பவன் மார்க்கங்களையறிகிறான். நக்ஷத்திரங்களினால் திசைகளையறிகிறான். மனத்தினால் தன்னுடையஐம்புலன்களையும் அடக்குபவன் யாராலும் பீடிக்கப்படான்" என்றார். பாண்டுபுத்திரரும் தர்மராஜாவுமான யுதிஷ்டிரர் இவ்வாறுசொல்லப்பட்டபோது வித்வான்களிற்சிறந்தவராகிய விதுரரைநோக்கி, "தெரிந்தது" என்றே மறுமொழிசொன்னார். அந்தப்பாண்டவர்களுக்கு உபதேசஞ்செய்து அவர்களைப்பிரதக்ஷிணமாகவந்து விடைகொடுத்து விதுரர் தம் கிருஹத்திற்குச்சென்றார். விதுரரும் பீஷ்மரும் நகரஜனங்களும் திரும்பிப்போனபிறகு குந்தி தர்மராஜாவினிடஞ்சென்று, "விதுரர் ஜனங்களின்நடுவில் சொல்லாதவர்போல் ஒருசொல்லைச்சொன்னார். அவருக்கு நீயும் அப்படியேயென்று அங்கீகரித்து மறுமொழிசொன்னாய். எங்களுக்கு அதுதெரியவில்லை. நாங்கள் அதைத்தெரிந்துகொள்ளக்கூடுமானால், அப்படித்தெரிந்துகொள்வதனால் குற்றம்நேரிடாதிருக்குமாயின், உனக்கும் அவருக்கும் நடந்த சம்பாஷணை முழுமையையும் நான் கேட்கவிரும்புகிறேன்" என்றுசொன்னாள். யுதிஷ்டிரர், "விஷத்திலிருந்தும் நீயிலிருந்தும் காத்துக்கொள்ளவேண்டுமென்றும், வழிகளைத்தெரிந்துகொண்டு நக்ஷத்திரங்களால்

* தான் வாங்கித்திருப்பிப்போடுகிறான்.

திசைகளை அறிந்துகொள்ளவேண்டுமென்றும், சுவர்களையும்பார்த்து வைத்துக்கொள்ளவேண்டும். அப்போது சுத்தியுண்டு. என்றும், ஜீதேந்திரியனுயிருப்பவன் ராஜ்யத்தையடைவானென்றும் விதுரர் எனக்குச்சொன்னர். அதெல்லாம்தெரிந்ததென்று நான் விதுரருக்கு மறுமொழிசொன்னேன்" என்றுசொன்னர். அந்தப்பாண்டவர்கள் பங்குனிமாதம் எட்டாவதுநாள் ரோகிணிநக்ஷத்திரத்தில்புறப்பட்டு வாரணவதம்போய் நகரத்துஜனங்களைக் கண்டனர்.

நூற்றைம்பத்தெட்டாவது அத்தியாயம்.

ஜதுக்ருஹபர்வம். (தொடர்ச்சி.)

(பாண்டவர்கள் வாரணவதத்திற்பிரவேசித்தது.)

பிறகு புருஷச்ரேஷ்டர்களான பாண்டவர்கள்வருகிறதை நகரத்துஜனங்களெல்லாரும்கேட்டு உடனே மிகுந்தஸந்தோஷத்துடன் ஸமஸ்தமானபங்களப்பொருள்களோடுகூட ஆயிரக்கணக்கான பலவகைவாகனங்களேறிச் சுருசுருப்புடன் வாரணவதநகரத்திலிருந்து அவர்களையெதிர்கொண்டுசென்றனர். அந்த வாரணவதத்துஜனங்களனைவரும் அந்தப்பாண்டவர்களுடையவந்து ஜயஜயவென்று ஆசீர்வாதங்களைச்செய்து அவர்களைச்சுற்றிக்கொண்டுநின்றனர். புருஷச்ரேஷ்டரும் தேவதையைப்போல்பிரகாசிப்பவருமாகிய தர்மராஜாவான யுதிஷ்டிரர் அந்தஜனங்களிலுள்ளமூப்பட்டருக்குமேலான தேவர்களால் சூழப்பட்டஇந்திரன்போல் விளங்கினர். குற்றமற்றஜனமேஜயரே! பட்டணத்துஜனங்களால் மரியாதைசெய்யப்பட்ட பாண்டவர்கள், தாங்களும் அவர்களுக்குமரியாதைசெய்து, அலங்கரிக்கப்பட்டதும் ஜனங்கள்நிறைந்ததுமாகிய வாரணவதத்தில்பிரவேசித்தனர். அந்த வீரர்கள் பட்டணத்தில்பிரவேசித்து அங்கே கிருகத்தில்பிரவேசஞ் செய்தனர். ராஜாவே! தேசாளிகளிற்கிறந்தவர்களும் புருஷச்ரேஷ்டர்களுமானபாண்டவர்கள் தங்கள்கர்மானுஷ்டானங்களில் ஊக்கமுள்ள பிராமணர்கள்கிருகங்களுக்கும் க்ஷத்ரியர்களின்கிருகங்களுக்கும் வைச்யசூத்ரர்களின்கிருகங்களுக்கும் சென்றனர். பரதச்ரேஷ்டரே! பாண்டவர்கள் நகரத்துஜனங்களிலுள் பூஜிக்கப்பெற்றபிறகு, புரோசனனைமுன்னிட்டுக்கொண்டு தங்கள்கிருகத்திற்குச் சென்றனர். அந்தப்புரோசனன் அவர்களுக்குப் பக்ஷியங்களையும் பானங்களையும் ஸுகமானபடுக்கைகளையும் சிறந்தஆஸனங்களையும் கொடுத்

தான். அவனுல் மிக்கஉயர்ந்தபொருள்களைக்கொடுத்து உபசரிக்கப் பெற்றபாண்டவர்கள் நகரத்தில்வஸிக்கும்ஜனங்களினுல் ஸேவிக்கப் பெற்றவர்களாக அந்தக்கிருகத்தில்வாஸஞ்செய்தனர். அவர்கள் அந் தக்கிருகத்தில் பத்துராத்திரிகள்வாஸஞ்செய்தபின், புரோசனன் மங் களமென்றபெயரையுடைய ஓர்அமங்களமானவீட்டை அவர்களுக் குக் காண்பித்தான். அந்தப் புருஷச்ரேஷ்டர்களானபாண்டவர்கள் புரோசனன்சொல்லினுல் தங்கள் ஸாமக்ரிகளுடன் கைலாஸத்தில் யக்ஷர்கள்பிரவேசிப்பதுபோல் அந்தக்கிருகத்தில் பிரவேசித்தனர். தர்மிஷ்டர்களெல்லாரிலுமிகுந்தவரான யுதிஷ்டிரர் அந்தவீட்டைப் பார்த்து நெய் அரக்குகளோடுசேர்ந்த கொழுப்பின்காற்றத்தை மோ ந்து இது நெருப்பினுக்காகச்செய்யப்பட்டதென்பதைப்பற்றிப் பீம ஸேனனுக்குச் சொல்லலானர்.

"பகைவர்களுக்குப்பரிதாபமுண்டுபண்ணுகிறவனே! இந்தவீடு தீப்பிடிப்பதற்கு எளிதாகச்செய்யப்பட்டிருக்கிறதென்பது தெளிவாக இருக்கிறது. சணல், குங்கிலியம், முஞ்சம்புல், விழல், மூங்கில்முத லான பொருள்களையெல்லாம் நெய்யில்நனைத்து, இந்தவீடுகட்டும் போது நிச்சயமாகச்சேர்த்திருக்கின்றனர். அப்படியே இந்தவீட் டைச்சுற்றிலுங்கூடத் தீப்பிடிக்கத்தக்கவையானபுல், விழல், பருத்தி, மூங்கில், மரம், நாய் இவைகளும்போடப்பட்டிருக்கின்றன. வீடு கட்டுகிறவேலையில் தேர்ந்தவர்களும் நம்பிக்கையுள்ளவர்களுமான வேலைக்காரர்கள் இதைச்செவ்வையாகக்கட்டியிருக்கின்றனர். இந்தப் பாபியானபுரோசனன் நம்பினஎன்னைக் கொளுத்தஎண்ணங்கொண் டிருக்கிறன். இந்தப்புத்தியற்றவன் துரியோதனனுக்குவசப்பட்டு அவன்சொற்படியேநடக்கிறன். சிறந்தபுத்தியுள்ளவிதுரர் இந்த ஆப த்தை அப்போதே அறிந்திருக்கிறர். பீமனே! அதனுலேதான் முன் னமே எனக்கு அவர் குறிப்பித்தார். புத்தியுள்ளவர்களாகியநாம், எப்போதும் நமதுநன்மையைவிரும்புகிறவரும் நம்துக்கியதகப்பனு ருமாகிய விதுரரால், இந்தஅமங்களமானகிருகம் துரியோதனன்சொ ல்லே அனுசரிக்கும்அயோக்கியர்களால் நமக்குத்தெரியாமல் உறுதி யாகக் கட்டப்பட்டிருக்கிறதென்று அறிவிக்கப்பட்டிருக்கிறும்" என்றுசொன்னர். அதைக்கேட்டபீமஸேனன் சொல்லலானுன்.

"இந்தக்கிருஹம் தீக்குரியதாகச்செய்யப்பட்டதென்று ரீர்நிணை த்தால் நாம் முன்வஸித்திருந்தஇடத்திற்கேசெல்வது நலம். *நாம்

* இந்த அதிகபாடம் அஸ்தினபுரத்தைவிட்டுப்புறப்படும்போதே சொல் லப்பட்டிருக்கவேண்டும்.

இதை அறிந்திருந்தும் தனியாகப்போவது ஸரியானகாரியமன்றென்று நான் நினைக்கிறேன். நன்மைநேர்ந்தாலும் தீமைநேர்ந்தாலும் அவர்களுடன்கூடவே நாமும் வஸிக்கவேண்டும். நாம்வெளிப்படுவோமாயின் பயத்தினால்ஒய்ந்திருக்கும் த்ருதராஷ்டிரபுத்திரன் இதுமுதல் ராஜ்யத்தில் ராஜாவாக வேரூன்றிப்போவான். ராஜ்யமே அவனுடையதாகிவிடும். இந்தஜனங்களும் அவன்பக்ஷமாவார். ஆதலால், நாம் கழுத்தில்அடிவைத்துக்கொண்டு கூடவேவஸிப்போம். நமக்குக்காலம் அனுகூலமாகவரும்போது சத்ருவினிடத்திலிருந்து ராஜ்யத்தைப்பிடுங்கிக்கொண்டு நம துபிதாவினுடையஸம்பத்தையும் சுபத்தையும் நீடிழிகாலம் அனுபவிப்போம். த்ருதராஷ்டிரன்சொல்லை நாம் எதற்காகஅனுஸரிக்கவேண்டும்? ராஜாவே! அவர்களிடமிருந்து பிரிந்து வேரறுகப்போவதாகியபலஹீனம் உமக்கு வந்ததேன்? ஆபத்துக்களில் நம்மைக்காப்பாற்றுகிற சிறந்தபுத்திமானை விதுரர் இருக்கிறார். பீஷ்மர் ராஜ்யஸ்நேகத்தைவிரும்பாமையால் ஒருபக்கமும்சேராதவரன்றோ! பாஹ்லீகன் முதலானபெரியவர்கள் எப்போதும் மத்தியஸ்தர்களே. த்ரோணர் அர்ச்சுனனிடத்தில் பிரீதிபுள்ளவராதலின் நம்பக்ஷமாகவேஇருப்பர். ராஜாவே! ஆதலால் கூடவேவஸிக்கவேண்டும். எவ்வகையிலும் பிரிந்துபோகலாகாது. ராஜாவே! அல்லது பராக்கிரமத்தில்வல்லச்சக்திபற்றவர்களும் அற்பர்களும் கபடமுள்ளவர்களும் வஞ்சகஞ்செய்பவர்களுமாகிய அந்த த்ருதராஷ்டிரபுத்திரர்கள் நாம்ஜாக்ருதையாயிருக்குப்போது என்னசெய்யவல்லராவார். அவர்கள் எதைச்செய்யார். முன்னே எனக்கு அவர்கள் மஹாவிஷத்தைக்கொடுக்கவில்லையா? பல்லில்விஷமுள்ள மிகக்கொடிய ஸர்ப்பங்களினால் என்னைக்கடிக்கச்செய்யவில்லையா? ராஜாவே! ப்ரமாணகோடியில் தூக்கத்தினால் நான் சேதகம்தெரியாமலிருந்தபோது த்ருஷ்டியில்விஷமுள்ள கொடியஸர்ப்பங்களைவிட்டுக் கடிக்கச்செய்து கங்கையில்வரிசையாகக்காட்டினசூலங்களில் அவர்கள் என்னைத் தள்ளிவிடவில்லையா? அப்போது நான் இறந்துபோனேனோ? ராஜச்ரேஷ்டரே! அந்தப்பாவிகளால் கெட்டஎண்ணத்தோடுசெய்யப்பட்ட அந்தக்கொடியஆபத்துக்களில் எந்தஸுவரர் நம்மைரக்ஷித்தாரோ, சராசரமாகியஉலகமனைத்தும் எவருடையஸ்வாதீனமாகஇருக்கிறதோ, அவர் இப்போது எங்கேபோய்விட்டார். நாம் எதுவரையில் ஸஹிக்கலாமோ அதுவரையில் ஜாக்ரதையோடு பொறுத்திருப்போம். எப்போது நமக்குப்பொறுக்கமுடியவில்லையோ அப்போது நம்முடையஹிதத்தைத் தேடுவோம். இப்போது நாம் அவஸரமா

கப் பலத்தினால் யுத்தஞ்செய்துபார்க்கவேண்டியது என்னவிருக்கிறது? ஸாமத்தினாலும் தானத்தினாலும் பேதத்தினாலும் பாதி ராஜ்யத்தைஅடைவதற்கு முயல்வோம். அதற்குமேற்பட்டுத்தான் யுத்தம் சிலாக்கியமாகும். ஆதலால், அவர்களுள்ளத்தில்அடிக்கப் பட்ட ஆணியைப்போல் அவர்களுடன்கூடவே வாஸஞ்செய்தல்வேண்டும். மிகப்பயந்தவனைப்போலக்காண்பித்து எங்கும் வேறுபட்டுப் போகலாகாது" என்று பீமஸேனன் சொன்னன். அதைக்கேட்டு, யுதிஷ்டிரர் மறுமொழிசொல்லலானார்.

"நாம் அபாச்சியில்லாமல் நம்மனத்துக்குஇனியதும் அபாயமில்லாததுமாகியமார்க்கத்தை இங்கிருந்தேதேடிக்கொண்டு நம்மெண்ணம்வெளிப்படாமல் ஜாக்ரதையோடு இந்தஇடத்திலேயேவஸித்திருப்பது நலமென்று நான் நினைக்கிறேன். அந்தப்புரோசனனுக்கு நம் முடையகுறிப்பு வெளிப்படுமானால் அப்போது அவன் சீக்கிரம்செய்யத்தொடங்கி உடனே பலாத்காரமாகவும் தஹித்துவிடுவான். இந்தப்புரோசனன் உலகநிர்த்தணக்காவது பாவத்திற்காவது பயப்படுகிறவனல்லன். அதனாலேதான் புத்தியற்றஇவன் துரியோதனனுக்கு உட்பட்டிருக்கிறான். மேலும் நாம் தகிக்கப்பட்டுப்போனபிறகு நமது பிதாமஹராகிய பீஷ்மர் என்னகோபிப்பார்? அவர் கௌரவர்களைத்தான் ஏன் கோபமூட்டுவார்? அல்லது நாம் இங்கே தஹிக்கப்பட்டபின் நமதுபிதாமஹரான பீஷ்மரும் மற்றக்கௌரவச்ரேஷ்டர்களும் தர்மமென்பதைப்பற்றியே கோபிக்கவும்கோபிக்கலாம். அதனால் என்ன உபயோகம்? நாம்எரிக்கப்பட்டபின் நம்முடைய சிறந்தவம்சத்தினால்சொல்லப்பட்ட மற்றத்தர்மத்தைநிந்த கௌரவச்ரேஷ்டர்களும் கோபித்தால் அது நியாயந்தான். ஆனால் நாம் கொளுத்தப்படுவதற்குப்பயந்து ஓடுவோமாயின் ராஜ்யத்திற்காசைப்பட்ட துரியோதனன் சாரர்களைக்கொண்டு நம்மெல்லாரையும் கொன்றுவிடுவான். நாம் ராஜ்யத்திலிராதவர். அவன் ராஜ்யத்திலிருப்பவன். நாம் ஸஹாயமில்லாதவர். அவன் ஸஹாயமுள்ளவன். நமக்குப்பொக்கிஷமில்லை. அவனுக்குப்பெரியபொக்கிஷமிருக்கிறது. அவசியம் உபாயங்களினால் கொன்றுவிடுவான். வீரனே! ஆதலால், நாம் இந்தப்பாபியையும் அந்தத்துரியோதனனென்னும்பாபியையும் ஏமாற்றுவதற்காகக் கருத்து வெளிப்படாமல் பற்பலஇடங்களில்வஸித்தல்வேண்டும். அதன்பொருட்டு நாம் வேட்டையேகாரியமாக இந்தப்பூமியில் திரிவோம். அதனால் நாம் ஓடுவதற்கு வழிகள்தெரிந்துபோம். இப்போதே பூமிக்குள் மிக்கரஹஸ்யமாக ஒருசுரங்கம்செய்வோம். அதில் நாம் மறைந்து புற

ப்பட்டுப்போகும்போது நம்மை அக்கினிதகிக்காது. நாம் இந்தவழியில் ஓடுவதைப் புரோசனனும் பட்டணத்திலுள்ளஜனங்களில்ஒருவரும் அறியாமலிருக்கும்படி, நாம் ஜாக்கிரதையாகச்செய்யவேண்டும்" என்றுசொன்னார்.

நூற்றைம்பத்தோன்பதாவது அத்தியாயம்.

ஜதுக்ருஹபர்வம். (தொடர்ச்சி.)

(கனகன் சுரங்கஞ்செய்தது.)

ராஜாவே! விதுரருக்குஆப்தனும் சமர்த்தனுமாகிய ஒரு*கனகன் ஏகாந்தமானஓர்இடத்தில் பாண்டவர்களைநோக்கிப் பின்வரும் சொல்லைச்சொல்லலானான்: "நான் திறமையுள்ள சுரங்கவேலைக்காரன். 'பாண்டவர்களின்பிரியத்தை நீசெய்யவேண்டும்' என்றுசொல்லி விதுரரால் அனுப்பப்பட்டிருக்கிறேன். உங்களுக்கு நான் என்னசெய்யக்கடவேன்? உம்முடையநன்மையைப்பற்றி மறைவாகமிலேச்சபாஷையில் விதுரர்உமக்குச்சொன்னதும் நீர்அதற்கு ஆகுகவென்றுமறுமொழிசொன்னதும்தான் என்னைநம்புவதற்குக் காரணம். கிருஷ்ணபக்ஷம்சதுர்த்தசிராத்திரி உமதுக்ருஹத்தின் இந்தவாயிலில் புரோசனன் தீவைக்கப்போகிறான். புருஷச்ரேஷ்டர்களான பாண்டவர்களை அவர்கள்தாயாருடன்கூடக் கொளுத்திவிடவேண்டுமென்பது துர்ப்புத்தியுள்ள அந்தத்துரியோதனனுடைய நிச்சயம்" என்றான். உறுதியான தைரியமுள்ளவரும் குந்திபுத்திரருமான யுதிஷ்டிரர் அவனுக்கு மறுமொழிசொல்லத்தொடங்கினார்.

"அன்பனே! நீ விதுரருக்குவேண்டியவனென்றும் சுத்தனென்றும் நம்பத்தக்கவனென்றும் அன்பனென்றும் எப்போதும் உறுதியானபக்தியுள்ளவனென்றும் நான் அறிவேன். †கவியாகியவிதுரருக்குத்தெரியாதகாரியம் ஒன்றுமில்லை. நீ அவருக்கெவ்வாறோ அவ்வாறே நமக்கும்வேண்டியவன். உன்னிடம் எமக்குவேற்றுமையில்லை. நாம் விதுரருக்கெப்படியோ அப்படியேதான் உனக்கும்வேண்டியவராயிருக்கிறோம். எங்களைக் கவியாகியவிதுரர் காப்பாற்றுவதுபோலவே நீயும் காப்பாற்று. இந்தவீடு தீப்பிடிக்க எளிதானது. துரியோதனன்கட்டளையினால் புரோசனன் எனக்காகக் கட்டிவைத்ததை

* சுரங்கமெடுப்பவன். † பரீயஞானமுள்ளவர்.

ன்று எனக்குத்தெரியும். துஷ்டபுத்தியுள்ளவனும் பாபியுமாகிய அந்தத்துரியோதனனுக்குப் பொக்கிஷமும் மனுஷ்யஸஹாயமுமிருக்கின்றன. அந்தப்பாபசிந்தையுள்ளவன் எந்தக்காலமும் எங்களைப்பீடிக்கிறான். ஆதலால், நீ தகுந்த யத்னஞ்செய்து இந்தஅக்கினியிலிருந்து எங்களைவிடுவிக்கவேண்டும். நாங்கள் இந்தஇடத்தில் எரிந்து போனால் துரியோதனன்விருப்பம் நிறைவேறிப்போம். அந்தத்துராத்மாவான துரியோதனனுடைய இந்தஆயுதசாலை ஆயுதங்களால் நிரம்பி இருக்கிறது. மதில்சூழ்ந்ததும் பரிஹாரத்திற்கு உபாயமில்லாததுமான இந்தஇடத்தைக்கண்டுபிடித்து இந்தப்பெரியவீடு கட்டப்பட்டிருக்கிறது. அவன்செய்யக்கருதிய இந்தக்கெட்டசெய்கையை விதுரர் முன்னமே நிச்சயமாகஅறிந்திருக்கிறார். அதனால் எங்களுக்குத் தெரிவித்தார். விதுரர் முன்னமேகண்டறிந்த அந்தஆபத்து இதோ சமீபித்திருக்கிறது. புரோசனனுக்குத்தெரியாமல் எங்களை நீவிடுவிக்கக்கடவாய்" என்றார். அந்தக்கனகன் அவ்வாறேயாகட்டுமென்று வாக்குத்தத்தஞ்செய்து முயற்சியுடன் அகழியையிறைப்பவன்போல் பெருஞ்சுரங்கத்தையுண்டுபண்ணினான். பாரதமே! அந்தவீட்டின் நடுவில் அதிகப்பெரிதாயிராததும் கதவுள்ளதும் பூமிக்குஸமமாயிருப்பதனால் யாருக்கும்தெரியக்கூடாததுமான துவாரத்தையுண்டுபண்ணினான். புரோசனனிடமுள்ளபயத்தினால், அந்தத்துவாரத்தை மறைவாகவேசெய்தான். கெட்டஎண்ணமுள்ள அந்தப்புரோசனன் எப்போதும் அந்தவீட்டின்வாயிலிலேயே வஸித்துக்கொண்டிருந்தான். ராஜாவே! அந்தப்பாண்டவர்களனைவரும் இரவுமுழுதும் ஆயுதபாணிகளாகவே அங்கேவஸித்தனர். பாண்டவர்கள் பகலில் வேட்டையாடிக்கொண்டு காட்டுக்குக்காடு திரிந்தனர். ராஜாவே! அவர்கள் புரோசனனைநம்பாமலிருந்தும் நம்பினவர்கள்போலவும் மனத்தில் ஸந்தோஷமில்லாமலிருந்தும் ஸந்தோஷமுள்ளவர்கள்போலவும் நினைக்கச்செய்துவருமாற்றிக்கொண்டு மிகுந்தஆச்சரியத்துடன் வாஸஞ்செய்தனர். விதுரருடையமந்திரியாகிய அந்தச்சிறந்தகனகனைத்தவிர அந்தநகரத்தில் வஸிக்கும்ஜனங்கள்யாரும் இவர்கள்கருத்தை அறியவில்லை.

நூற்றறுபதாவது அத்தியாயம்.

ஜதுக்ருஹபர்வம். (தொடர்ச்சி.)

(ராத்திரியில் குந்தி பிராமணபோஜனஞ்செய்தபின் பீமன் அரக்க மாளிகையைக்கொளுத்திக் குந்தியையும் ஸஹோதரர்களையும் அழைத்துக்கொண்டு சுரங்கவழியாக வெளிப்பட்டது.)

ஒருவருஷத்துக்குமேல் ஒற்றுமையானமனத்துடன் வஸித்திருந்த பாண்டவர்களைப் புரோசனன்கண்டு (அவர்கள்) தன்னை நம்பினவர்களென்றறிந்து களிப்புற்றான். அவன்மனத்தில் ஸந்தோஷத்துடன், "பாண்டவர்களையழிப்பதற்கு இது யுக்தமானகாலமென்று நினைக்கிறேன்" என்று ஆலோசனைசெய்தான். கௌரவச்ரேஷ்டரும் சிறந்தபுத்திசாலியும் தர்மபுத்திரருமான யுதிஷ்டிரர் அவனுடைய அந்தஎண்ணத்தையறிந்து கவலையுற்றார். புரோசனன் அவ்வாறு களிப்புற்றிருக்கையில் தர்மந்தெரிந்தவரும் குந்தீபுத்ரருமாகிய யுதிஷ்டிரர், பீமஸேனனையும் அர்ச்சுனனையும் நகுலஸஹதேவர்களிருவரையும்பார்த்து, "இந்தப்பாபிஷ்டனுடைய புரோசனன் நாம் நிரம்பநம்பியிருப்பதாக நினைக்கிறான். கொடியசினமுள்ள இவன் உமாந்திருக்கிறான். ஓடுவதற்கு இதுகாலமென்று நினைக்கிறேன். ஆயுதசாலையில்தீமூட்டிப் புரோசனனையும்எரித்து இங்கே ஆறுமனிதர்களைவைத்துவிட்டு யாருக்குந்தெரியாமல் ஓடிப்போவோம்" என்றுசொன்னார். மஹாராஜாவே! பிறகு குந்தி அன்னதானஞ்செய்வதை வியாஜமாகக்கொண்டு இரவில் பிராம்மணபோஜனஞ்செய்வித்தாள். ஸ்திரீகளும் அங்கேவந்தனர். பாரதரே! அந்தஸ்திரீகள் இஷ்டப்படிவினோயாடிப் போஜனமும்பானமுஞ்செய்து குந்தியிடம் விடைபெற்றுக்கொண்டு இரவிலேயே தம்தம்வீடுகளுக்குச் சென்றனர். புரோசனனால் தூது விடப்பட்ட ஒருவேடச்சி கெட்டஎண்ணத்துடன் எப்போதும் ஸமயம்பார்த்துக்கொண்டு குந்தியையே அடுத்திருந்தாள். அந்தவேடச்சிக்கும் ஐந்துபுத்திரர்களிருந்தார்கள். முன்னமேயுள்ள பழக்கத்தினால் குந்தியினிடம் ஸ்நேஹஞ்செய்துகொண்டு அவளுக்கு ஸகியாயிருந்த அந்தவேடச்சி, பலவகையானதேன்களையும் கிழங்குகளையும் கனிகளையுமெடுத்துக்கொண்டு அன்னத்தைவிரும்பிக் காலத்தினால் தூண்டப்பட்டவளாகப் புத்திரர்களுடன் வந்துசேர்ந்தாள். மிக்க கொடியவளும் ஐந்துபுத்திரர்களுள்ளவளுமான அந்தவேடச்சி குந்

திக்கு மனமொத்தவகியாயிருந்தாள். அவள் புத்திரர்களுடன் மது பானஞ்செய்து மயக்கமுற்று அதனால் அயர்ந்திருந்தாள். ராஜாவே! புருஷச்ரேஷ்டரே! அவள் தன்பிள்ளைகளெல்லாரோடும்கூடப் பிரஜ் ஞைதப்பி இறந்தவள்போல் அதேவீட்டில் தூங்கினாள். பிறகு அதிக மாகக்காற்றடிக்கையில் ஜனங்களெல்லாம்தூங்கினபாதிராத்திரியில் பீமன் அந்தவீட்டைப் புரோசனன் எங்கேகடத்திருந்தானோ அந்த இடத்தில் கொளுத்தினான். அங்கேபீமன் அரக்குமாளிகையின்வாயி லில் தீமூட்டிப் பிறகு அந்தவீட்டைச் சுற்றிலும் அக்னிப்ரதானஞ் செய்தான். சிறந்தபுத்தியுள்ள பீமசேனன் முன்னதாகவே வீட்டை யொழித்துக் குந்தியைப் பாண்டவர்களுடன் அந்தச்சுரங்கத்தில் அனுப்பியிருந்தான். நல்லபுத்திசாலியானபீமன் அந்தவீட்டைச் சுற்றிலும் தீயைவைத்து உடனே வீட்டிலிருந்த பொருளையெடுத்துக் கொண்டு அந்தச்சுரங்கவழியாக வெளிப்பட்டான். அந்தவீடுமுற்றி லும் பற்றிக்கொண்டதையறிந்தபிறகு பகைவர்களையடக்குகின்ற பாண்டவர்கள் தாயாருடன்கூடச் சுரங்கத்துக்குள் விரைவாகப்புகுந் தனர். அதன்பிறகு தீயினுடைய மிகவும்அதிகமானஎரிச்சலும் சத்த மும்உண்டாயின. அதனால் அப்போது அந்தஜனக்கூட்டம் விழித் தக்கொண்டது. அந்தவீடு எரிவதைக்கண்டு அந்த வாரணவத நகரத்துஜனங்கள் முகம்வாடினவர்களாய், " துரியோதனனால் அனு ப்பப்பட்ட புத்திஹீனனான பாபியினால் தான்கெடுவதற்காகவே வீடு கட்டுவிக்கப்பட்டது. அஃது எரிக்கவும்பட்டது. ஆ! ஆ! சீச்சீ! திருதராஷ்டிரனுடையபுத்தி அவ்வளவுசெவ்வையாயில்லை. அவன் பரிசுத்தர்களான பாண்டுபுத்திரர்களைத் தீவெஷிகளைப்போல் எரி த்துவிட்டானே! கெடுதிஹீனவள்ளபுரோசனன் கொளுத்தினபிறகு நல்லமேனியாய்த் தானும்இப்போது எரிந்தான். அவன் குற்றமில் லாமல் செவ்வையாக நம்பினவர்களான உத்தமபுருஷர்களைக் கொளு த்தினானே!" என்று புலம்பிக்கொண்டு இரவில் அந்தவீட்டை காலு பக்கமும் சுற்றிக்கொண்டுநின்றனர். அந்தப்பாண்டவர்களனைவரும் தாயாருடன்கூட மிகத்துயரமுற்றவர்களாகி அந்தச்சுரங்கத்தின்வழி யாக வெளிப்பட்டு யாருக்குந்தெரியாமல் விரைவாகச்சென்றனர். அவ்வாறு தூக்கமில்லாததனாலும் பயத்தினாலும் அந்தவீரர்களான பாண்டவர்கள் தாயாருடன்கூடச் சீக்கிரம்நடப்பதற்குச் சக்தியில் லாதவர்களாயிருந்தனர். அரசர்க்கரசே! அச்சப்படத்தக்க வேக பராக்ரமங்களையுடைய பீமசேனன்ஒருவனே தன்ஸஹோதரர்களனை வரையும் தாயாரையும் எடுத்துக்கொண்டு சென்றான். மிகச்சிறந்த

தேகபலமும் பராக்ரமமுமுள்ள வீரனான அந்தப்பீமஸேனன் தாயாரைத்தோளிலும் நகுலஸஹதேவர்களை இடுப்பிலும் எடுத்துக்கொண்டும் யுதிஷ்டிரரையும் அர்ச்சுனனையும் இரண்டுகைகளால் பிடித்துக்கொண்டும் மரங்களைமார்பினால் முறித்துக்கொண்டும் பூமியைக்கால்களினால் நிரவிக்கொண்டும் வாயுவேகமாக விரைவிற்சென்றான்.

நூற்றறுபத்தோராவது அத்தியாயம்.

ஜதுக்ருஹபர்வம். (தொடர்ச்சி.)

(பாண்டவர்கள், விதுரர்அனுபபின தூதன் கொணர்ந்த கப்பலிலேறிக் கங்கையைத்தாண்டினது.)

அதேகாலத்தில் கவியாகியவிதுரர் முன்செய்தஸங்கேதப்படி கங்கையைத்தாண்டுவிப்பதற்காக நல்லநடத்தையுடையவனும் தனக்கும் பாண்டவர்களுக்கும் முன்னமேமிதரிந்தவனும் நம்பத்தகுந்தவனும் அடையாளத்தையும் வாய்ச்சமாசாரத்தையும் தெரிந்துகொண்டவனுமாகிய ஒருமனிதனை அந்தவனத்துக்கு அனுப்பினார். அவன் அவ்வனத்தில் குறித்தஇடஞ்சென்று பாண்டவர்களைக்கண்டான். கௌரவர்களாகிய அவர்களைத் தாயாருடன்கூடக் கங்கைக்கரைக்குஅழைத்துக்கொண்டுபோனான். பிறகு கிறந்தபுத்தியுள்ளவரும் மஹாத்மாவுமாகிய விதுரர் பாவநிலையுள்ள அந்தப்புரோசனனுடைய அந்தச்செய்கையையும் சாரனால் தெரிந்துகொண்டார். அதனால் விதுராரால் அப்போதே ஒருதெரிந்தமனிதன் அனுப்பப்பட்டான். அவன் தீங்கில்லாதகங்கைக்கரையில் நம்பிக்கையுள்ளமனிதர்களாற்செய்யப்பட்டதும் மனஸையும்காற்றையும்போல வேகமாகச்செல்லத்தக்கதும் எந்தக்காற்றையும்தாங்குவதும் யந்திரம்பூட்டப்பட்டதும் கொடிகட்டியதுமாகிய ஒருகப்பலைப் பாண்டவர்களுக்குக் காண்பித்தான். அதைக்காண்பித்தபிறகு முன்பு விதுரர்சொல்லியதை அடையாளமாகச்சொல்லலானான்.

"யுதிஷ்டிரரே! அடையாளத்திற்காகக் கவியானவிதுரருடைய இந்தவசனத்தை நான் சொல்லக்கேளும். அதாவது, 'காட்டையழிப்பதும் குளிரைப்போக்குவதுமாகிய ஒன்று பெருங்காட்டில் வஸியிலிருப்பனவற்றைக் கொல்வதில்லை என்றறிந்து அவ்வகையாகத் தன்னை எவன்காத்துக்கொள்ளுகிறானோ அவன் ஜீவிப்பனென்றது

பிழையும் திருத்தமும்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
ச0சு	சு	சேர்ந்தது	சேர்ந்தன
சகக	எ	வளரும்,	வளரும்
,,	,,	மேன்மையான	மென்மையான
சசச	உசு	மிருந்தாள்	இருந்தாள்
சசஞ	ஞ	மார்புடையவனும்	மார்புடையவனும்,
சசுஅ	உங	ஒப்பிவித்துவிடுகிறேன்.	ஒப்புவித்துவிடுகிறேன்
சசுக	ஙச	விரல்களுள்ளது	விரல்களுள்ளதும்
சளள	உச	புத்திரர்களும்	புத்திரர்களும்,
சஅச	எ	தீர்க்கலோசனன்	தீர்க்கலோசனன்.

தெரிந்துகொள்ளவேண்டும்' என்று விதுரர் எந்தச்சொல்லைச்சொன்னாரோ அது இப்போது அப்படியேயாயிற்று. இந்தஅடையாளத்துடன் அவரால் அனுப்பப்பட்டவனும் நம்பிக்கையுள்ளவனுமாக என்னை அறியும். எல்லாவிஷயங்களிலும் உண்மையறிந்தவரும் உயர்ந்தபுத்தியுள்ளவருமாகிய கூஷ்தாவானவிதுரர் துரியோதனனையும் அவன்ஸஹோதரர்களையுமிகழ்ந்து என்னிடம மற்றொருசொல்லையும் சொன்னார். அதாவது, குந்திபுத்திரரே! கர்ணனையும் தம்பிமார்களுடன்கூடிய துரியோதனனையும் சகுனியையும் ஜயமின்றிச் சண்டையில்வெல்லப்போகிறீர் என்பதுதான்" என்றான்.

பிறகு அந்தப்பாண்டவர்களும் சிறப்புள்ளகங்காதீரத்திற்குச் சென்றனர். (அங்கே) செம்படவர்க்குஅரசனும் வீரனும் மிகுந்ததர்மிஷ்டனும் பரபரப்புள்ளவனும் மாலுமியுமாகியஒருசெம்படவன் விளக்குவெளிச்சத்திலுல், பாண்டவர்களைத்தேடிக்கொண்டுவந்தான். அவனை அந்தப்பாண்டவர்கள்கண்டனர். அந்தச்செம்படவன் சிறந்தபுத்தியுள்ளவிதுரர் மிலேச்சபாஷையிலுல்பேசினதுமுதலிய அடையாளங்களென்னவோ அவற்றைப் பாண்டவர்களுக்கு அப்போது தெரிவிக்கத்தொடங்கினன். "விதுரர் எனக்குச் சிறந்தநிரவியங்களை மிகுதியாகக்கொடுத்து 'நீ கங்கைக்கரையில்வலித்துக்கொண்டிருந்து பாண்டவர்களைக் கரையேற்றக்கடவாய்' என்று கட்டளையிட்டிருக்கிறார். அவ்வாறு கட்டளையிடப்பட்டநான் சதுர்த்தசியாகிய இன்றைத்தினம் கங்கையின்ஸமீபத்தில் மான்கூட்டங்களோடுகூடிய இந்தவனத்தில் தூதர்களையனுப்பித் தேடிக்கொண்டிருக்கிறேன். பிரபுக்களே! உங்களுக்கு ஸுகமுண்டாகக்கடவது. இப்போதுநீங்கள் துடுப்புக்களோடும்கொடிகளோடும்கூடியதும்ஓட்டையில்லாததும் வீட்டுக்கொப்பானதுமாகிய கப்பலில் ஏறிச்செல்லலாம். இந்தக்கப்பல் ஜலமார்க்கத்தில் சேர்க்கப்பட்டிருக்கிறது. ஜலத்தில் நன்றாகப்போகத்தக்கது. உங்களெல்லாரையும் இந்தஇடத்திலிருந்துகொண்டுபோய்விடும். ஸந்தேஹமில்லை" என்றான். பிறகு அந்தப்புருஷச்ரேஷ்டர்களைத் தாயாருடன்கூடக் கப்பலிலேற்றிக்கொண்டு, கங்கையில்போகும்போது அவர்கள் துக்கப்பட்டிருப்பதைக்கண்டு, அந்தச்செம்படவன், "விதுரர் உங்களை உச்சிமோந்து தழுவிக்கொண்டு 'நீங்கள் வியாகூலப்படாமல் க்ஷேமமானமார்க்கத்தில்செல்லுங்கள்' என்று பலமுறைசொன்னார்" என்று திரும்பவுஞ்சொன்னான். "ராஜேந்திரரே! விதுரரால்அனுப்பப்பட்ட அந்தமனிதன் புருஷச்ரேஷ்டர்களான அந்தவீரர்களுக்கு இவ்வாறுசொல்லிக் கப்பலால் கங்

கையைத்தாண்டுவித்தான். கங்கையைத்தாண்டுவித்தபின் அக்கரை சேர்ந்தஅவர்களெல்லாரையும்நோக்கி, "ஜய" என்ற ஆசீர்வாதத்தைச்சொல்லிப் பிறகு அவன் தான்வந்தவாறேசென்றான். மஹாத்மாக்களாகிய பாண்டவர்களும் கங்கையைத்தாண்டினபின் கவியாகிய விதுரருக்கு ஸமாசாரம்சொல்லியனுப்பி யாருக்குந்தெரியாமல் மறைந்துகொண்டு விரைவாகச்சென்றனர். அந்தவீரர்கள் அவ்விடத்தில் அலைகள்எழும்புகிறகங்கையைத்தாண்டினபிறகு தென்திசையைநோக்கி வேகமாகப்புறப்பட்டனர். ராஜாவே! இரவில் நக்ஷத்திரங்களினால் மார்க்கத்தைத்தெரிந்துகொண்டு தெற்குமுகமாக ஒருகாட்டிலிருந்து மற்றொருஅடர்ந்தகாட்டுக்குச் சென்றனர். பிறகு கனீத்துப் பசிதாகங்களினால்வருத்தமுற்றவர்களாய்ப் பயத்தினால்நடுங்கிக்கொண்டு மிகுந்தபராக்ரமமுள்ள பீமஸேனனைநோக்கிப் பலமுறை பின்வரும்சொல்லைச் சொல்லலானார்கள். "நாம் இந்தஅடர்ந்தகாட்டில் திசையும்அறியோம்; நடக்கவும் முடியாமலிருக்கிறோம்; இதற்குமேலானகஷ்டம் என்னவிருக்கிறது. அந்தப்பாபியான புரோசனன் எரிந்துபோனானென்னவோ நாம்அறியோம். நாம் யார் கண்ணிலும் அகப்படாமல் இந்தப்பயத்திலிருந்து எவ்வாறுவிடுபடுவோம். பாரதனே! எங்களையெடுத்துக்கொண்டு முன்போலவே துரிதமாகச்செல். நம்முள் நீயொருவன்தானே கார்முகைப்போன்றபலமுள்ளவன்" என்றனர். இவ்வாறு தர்மராஜாவினால்சொல்லப்பட்ட மஹாபலசாலியும் வாயுபுத்திரனுமான அந்தப்பீமஸேனன் குந்தியையும் ஸஹோதரர்களையுமெடுத்துக்கொண்டு விரைவாகச்சென்றான்.

நூற்றுபத்திரண்டாவது அத்தியாயம்.

ஜதுக்ருஹபர்வம். (தொடர்ச்சி.)

(வாரணவதத்துஜனங்கள் காலையில் அரக்குமாளிகையெரிந்ததைக்கண்டு புரோசனனும் பாண்டவர்களும் எரிந்துபோனதாகநினைத்து அதனைத் திருதராஷ்டிரனுக்குத் தெரிவிக்கும்படி தூதனைஅனுப்பினதும், திருதராஷ்டிரன் தாயாதிகளுடன் அவர்களுக்குத் தர்ப்பணஞ் செயததும், பீஷ்மரும் விதுரரும் பேசிக்கொண்டதும்.)

பிறகு இரவுநீங்கினவுடன் நகரத்துஜனங்களனைவரும் பாண்டவர்களைப்பார்க்கவிரும்பித் துரிதமாக அவ்விடம்வந்தனர். அந்தஜனங்கள் நெருப்பையணைத்து அவ்விடத்தில் எரிந்துபோனஅரக்குவீட்

டையும் புரோசனனென்னும்மந்திரியையும் கண்டனர். "பாவச் செய்கையுள்ள துரியோதனனுல் பாண்டவர்களையழிப்பதற்காக இந்த வீடு கட்டப்பட்டது திண்ணம்" என்று அந்தஜனங்கள் கூவினர். "திருதராஷ்டிரன்மகன் திருதராஷ்டிரனுக்குத்தெரிந்தே பாண்டு புத்திரர்களையெரித்திருக்கிறன். ஸந்தேஹமில்லை. திருதராஷ்டிரன் இதைத்தடுத்தவனல்லன். இவர்கள்விஷயத்தில் பீஷ்மரும் துரோணரும் விதுரரும் கிருபரும் மற்றக்குருவம்சத்தவரும் தர்மத்தையனுஸரிக்கவில்லை; நிச்சயம். ஆ ஆ! தர்மசிந்தையுள்ளவர்களும் தர்மம் கெட்டுப்போனதை விதியினுல்பாராமலிருக்கின்றனர். கல்விகேள்வியுள்ளவர்களும் பணக்காரர்களுக்கு உட்பட்டிருக்கின்றனர். ஆ ஆ! பெரியவர்களுங்கூட, தர்மிஷ்டர்களும் ஸத்யத்தையும் தவத்தையும் கடைப்பிடித்தவர்களும் கதியற்றவர்களுமாகிய ஸத்புருஷர்களைப் பார்க்கவில்லையே. அவர்களுக்குத் தெய்வந்தான் ஆதாரம். இந்த நாம் துராத்மாவான திருதராஷ்டிரனுக்கு, 'உன்னுடைய முக்கியமான விருப்பம் நிறைவேறியது. பாண்டவர்களை எரித்துவிட்டாய்' என்று செய்தியனுப்புவோம்" என்றுகூறினர். பிறகு அவர்கள் பாண்டவர்களைத்தேடுவதற்காகத் தீயைலக்கி ஐந்துபுத்திரர்களோடு எரிக்கப்பட்ட ஒருநிரபராதையான வேடச்சியைக் கண்டனர். "இதோ பாருங்கள்! யதுவம்சத்தவளாகிய இந்தக்குந்தி, புத்திரர்களோடு எரிக்கப்பட்டுப் பரிதாபப்படத்தக்கவளாகக்கிடக்கிறுள். ஐயோ!" என்று நகரத்துஜனங்கள் பேசினர். அந்தவீட்டைப் பரிசோதிக்கும்போது அந்தச்சுரங்கமேவலிசெய்தவனுலேயே சுரங்கத்தின்வழி மண்போட்டு மூடப்பட்டது. அந்தச்சுரங்கவழி அந்தமனிதர்களால் காணப்படவில்லை. அப்போது அந்தநகரத்துஜனங்கள் பாண்டவர்களும் மந்திரியானபுரோசனனும் அக்கினியினுல் சுடப்பட்டதைத் திருதராஷ்டிரனுக்குச் சொல்லியனுப்பினர். ராஜாவாகிய திருதராஷ்டிரன் மிகப்பெரியதுக்கமான பாண்டுபுத்ரர்களுடைய அந்தமரணத்தைக்கேட்டு மிகத்துயரமுற்றமுதான். ஆழமானமடு கோடைகாலத்தில் அடியில் குளிர்ச்சியும் மேலேஉஷ்ணமுமாயிருப்பதுபோல் அவன் உள்ளத்தில் மகிழ்ச்சியும் வெளியில்துக்கமுமுள்ளவனுகி இருந்தான். "அந்தவீரர்கள் தாயாருடனும்கூடஎரிந்துபோனதினுல் மிகுந்தகீர்த்திபெற்ற என்ஸோதரனை பாண்டுமஹாராஜா இப்போதுதான் முடிவாக இறந்துபோனுன். வாரணாவதநகரத்துக்குச் சீக்கிரமாக மனிதர்கள் செல்லவேண்டும். அந்தவீரர்களையும் ராஜபுத்திரியாகிய குந்தியையும் சிறப்பிக்கவேண்டும். இன்னும் அங்கே அவர்களுக்குவேண்டியவர்

கள் எவர்கள் இறந்துபோயினரோ அவர்களுக்கும் குலத்துக்குத்தக்க படி பரிசுத்தமாகவும் சிறப்பாகவும் கிரியைகளைச்செய்யவேண்டும். என்வம்சத்தின்ஸந்ததியை அபிவிருத்திசெய்கிறவர்களான மஹாத்மாக்கள் எரிந்துபோயினர். இவ்வாறுஆனபின் பாண்டவர்களுக்கும் குந்திக்கும் என்னஎன்னநல்லகாரியம் என்னுற்செய்யக்கூடியதோ அவற்றையெல்லாம் நான் தனங்களினுல்செய்யவேண்டும்" என்று திருதராஷ்டிரன் சொன்னன். பிறகு பீஷ்மருடன்கூடச்சேர்ந்த கௌரவர்களனைவரும் திருதராஷ்டிரனும் அவனுடையபுத்திரர்களும் ஒற்றையாடையுடுத்துச் சந்தோஷமில்லாமல் ஆபரணங்களையும் தலைப்பாகைகளையும்நீக்கி மஹாத்மாக்களான பாண்டவர்களுக்கு ஜலதர்ப்பணஞ்செய்யக்கருதிக் கங்கையைநோக்கிச் சென்றனர். அம்பிகையின்புத்திரனுகிய திருதராஷ்டிரன் இவ்வாறு சுற்றத்தாரால்சூழப்பட்டவனுகச்சென்று பாண்டுபுத்திரர்களுக்கு ஜலதர்ப்பணஞ்செய்தான். எல்லாரும்சேர்ந்து மிகுந்தவ்யஸனத்தையடைந்துபுலம்பினர். அந்த ஜனங்களில், "ஆ! கௌரவவம்சத்தவனுகியயுதிஷ்டிரா!" என்றுசில ரும், "ஆ! பீமா!" என்று மற்றும்சிலரும், "ஆ! பல்குனு!" என்று இன்னும்சிலரும், "ஆ! இரட்டையரே!" என்று வேறுசிலரும், குந்தியைப்பற்றிச் சிலஜனங்களும் அழுதுகொண்டு ஜலதர்ப்பணஞ்செய்தனர். இவ்வாறே நகரத்திலுள்ள மற்றஜனங்களும் பாண்டவர்களைப்பற்றி வ்யஸனப்பட்டனர். விதுரர்மாத்திரம் கொஞ்சமாகவ்யஸனப்பட்டார். அவர் *உண்மையறிந்தவரல்லவா? விதுரருக்குத் திருதராஷ்டிரனுடைய ஹ்ருதயத்திலுள்ளதெல்லாம் தெரியும். அதனல் வித்வான்களிற்சிறந்த விதுரர், "இவன் பிரமதேவனுலேயே கெடுநினைவுள்ளவனுகவும் வஞ்சகஎண்ணமுள்ளவனுகவும் படைக்கப்பட்டிருக்கிறன்" என்றுநினைத்துத் துக்கமுற்றஉறவினரோடுகூட ஜனங்களுக்குத் துக்கத்தைக்காண்பித்துக்கொண்டு மனத்தில் பாண்டவர்கள் எவ்வளவுதூரம்போயிருப்பார்களென்று சிந்தையுற்றிருந்தார். பாண்டவர்களனைவரும் தமதுபுத்திரனென்றுநினைத்துக்கொண்டிருந்தார்.

பிறகு பீஷ்மர் பாண்டுராஜன்புத்திரர்கள் தாயாருடன்கூட இறந்துபோயினரென்பதைக்கேட்டு மிகத்துயரமுற்றுக் கண்ணீர்விட்டுப் புலம்பினர். "ஆ! யுதிஷ்டிரா! ஆ! பீமா! ஆ! தனஞ்சயா! ஆ! இரட்டையரே! ஆ! குந்தியே! நீ புத்ரர்களுடன்கூட ஓரிரவில் ஸ்வர்க்கஞ் சென்றீயோ? தாயாருடன்கூட அந்தக்குமாரர்களனைவரும் அங்கே

* எல்லாம் அறிந்தயமென்பதையறிந்தவரென்பதும் நடந்தவிஷயம்தெரிந்தவரென்பதும் இருவகைக்கருத்து.

யே முடிந்தனர். அந்தப்பீமனும் தனஞ்சயனும் மனத்தில்வேக முண்டானபோது பலத்தினல்மந்தரமலையையும் உடைக்கத் திறமை யில்லாமற்போகமாட்டாரே! குந்தியும் பாண்டவர்களும் இறந்து போவார்களென்று நான் நினைக்கவில்லை. அவர்கள் மரணமடைந் திருப்பாராயின் அஃது எவ்வகையிலும் மாறுனது. அந்தத்தர்மராஜன் * யுதிஷ்டிரனென்று பிராமணர்களால் சொல்லப்பட்டவன். அந்தத் தனஞ்சயனும் பூமியிலுள்ள தேராளிகளுக்குள் மிகச்சிறந்தவனு வான். உறுதியானநியமமுள்ளவனும் தர்மதேவதையினல் கொடுக் கப்பட்டவனும் பொய்யாமொழியனும் மங்களகரமானலக்ஷணங்கள் அமைந்தவனும் பாண்டுபுத்திரனுமான யுதிஷ்டிரன் காலன்வசத்தில் எவ்வாறு அகப்பட்டான்? தன்னையே உவமையாகக்கொண்டு பிறர் விஷயத்தில் நடப்பவனெவனே னு அந்தக்கிளரவனுன யுதிஷ்டிரன் தாயாருடன்கூடவே காலன்வசத்தில் அகப்பட்டதெவ்வாறு? வெகு நாள் காப்பாற்றப்பட்டமரம் காய்க்குங்காலத்தில் காற்றின்வேகத்தி னல் முறிக்கப்பட்டாலெப்படியோ அப்படியே ராஜாவானயுதிஷ்டி ரன் ஆயினன். எவன் தனதுதந்தையினுடைய யௌவராஜ்யத்தில் பட்டாபிஷேகஞ்செய்யப்பட்டபின் ஸத்தியத்தோடும் தர்மத்தோடுங் கூடிய நடத்தைகளினல் தனக்கும் தன்பிதாவுக்கும் புகழைக்கொண்டு வந்தானே னு அந்தப்பிராம்மணப்பிரியனும் ஆய்ந்துபார்ப்பவனுமாகிய யுதிஷ்டிரன், என்னுள்ளத்தில் துயரத்தைநிறுத்திவிட்டுக் காலத்து டன்கூட முழுகிப்போனன். சீ! தெய்வம் பயனற்றது. அவனு டையதாயாராகிய அந்தக்குந்தி வனவாஸத்தினல் துக்கத்தையடைந் திருந்தும் புத்திரர்களிடத்துள்ள மிக்கவிருப்பத்தினல் கணவனுடன் அனுமரணஞ்செய்யாமலிருந்தாள். நல்லகுலத்திற் பிறந்தவளாகிய எவள் பதியினுலுண்டானசந்தோஷத்தை ஸ்வல்பகாலந்தானடைந் தாளோ அந்தக்குந்தி தனதுவிருப்பம் நிறைவேறுமலே புத்திரர்க ளுடன் இப்போது எரிந்துபோனள். பீமன் இறந்துபோனனென் பதைக்கேட்டு என்னுள்ளம் நம்பவில்லையே. இதைநினைக்கும்போது என்மனம் பலவகையில் துன்பப்படுகிறது. எனதுஹ்ருதயம் என் தேகத்தைவிட்டு வெடித்துப்போகிறது. பருத்ததோள்களும் அழ கியகைகளுமுடையவனும் மேருமலையின் சிகரத்துக்கொப்பானவ னும் யௌவனவயதிலிருப்பவனுமாகிய பீமன் இறந்துபோனனென் பதைக்கேட்டு என்உள்ளம் நம்பவில்லை. பெருங்கொடையாளியும், யுத்தவீரனும், வேகமானகைகளையுடையவனும், ஆயுதப்பிடிவிடாதவ

* யுத்தத்தில் அசையாதவன்.

னும், நிச்சயமுள்ளவனும், குறிதப்பாதவனும், ரதம்நடத்துவதில் நிபுணனும், தூரத்திலிருந்தடிப்பவனும், அச்சப்படாதவனும், மஹா பராக்ரமசாலியும், சிறந்தஅஸ்திரபலமுள்ளவனும், மனம்சோராதவனும், சிறந்தஆண்பிள்ளையும், வில்லாளிகளிலெவரிலும் சிறந்தவனும், கீழத்தேசத்தாரையும் ஸௌவீரதேசத்தாரையும் தக்ஷிணதேசத்தாரையும் ஜயித்தவனும், மூன்றுலோகங்களிலும் தன்பராக்கிரமத்தைக் கியாதிபெறச்செய்தவனும், தான்பிறந்தபோதே குந்திக்கும் வீரனை பாண்டுவுக்கும் மனத்துயரத்தைவிலக்கினவனும், இந்திரனுக் கொப்பானவனுமான அர்ச்சுனன் காலனுக்குவசப்பட்டதெவ்வாறு? *விருஷபத்தின் திமில்போன்ற தோள்களையுடையவர்களும் ஸிம்மத்துக்கொப்பான பராக்கிரமமும் நடையுமுள்ளவர்களும் பகைவர்களை யடக்குகின்றவர்களுமாகிய இரட்டையர்கள் மரணத்தையடைந்ததெவ்வாறு? ஆ! என்மருமகளே! யதுபுத்ரியே! குழந்தைகள் என்னுள்ளத்தில் துன்பத்தைவைத்துவிட்டுக் கிழவனும் மிகத்துன்பமுற்றவனுமாகிய என்னைவிட்டுவிட்டு எங்கேபோயினர். வாரணவதத்திற்குப் பிரயாணம்போகும்போது வழியில் என்னசகுனங்களாயிருக்குமோ. குந்தியின்புத்ரர்காள்! உலகத்தில் இவ்வாறு அல்பாயுஸுகளாவீர்களென்று நீங்கள் எவர்களால் சபிக்கப்பட்டீர்கள். குந்தி! எனக்குக் குழந்தைகளைக்காண்பி. என்னை நாதனுடையபாண்டவர்கள் எனக்கு நாதர்களும் எனக்குநேத்ரங்களுமாயிருந்தனர். ஆ! என்பாண்டவர்களே! ஆ! என்குழந்தைகளே! ஆ! எனதுசிங்கக்குட்டிகளே! ஆ! எனதுயர்ந்தபாணிகளே! ஆ! எனது ஆனந்தத்தைவிருத்திசெய்பவர்களே! உங்களால் விடப்பட்ட எனக்கு எல்லாலோகங்களும் இருள்மூடிப்போயின. பாலஸூர்யர்களைப்போன்ற ஒளியுள்ள குந்திபுத்ரர்களை நான் எப்போதுகாண்பேன். என்புத்ரர்களைப்போல் சந்தோஷமுண்டுபண்ணுகிறவர்களே! சிறந்தகைகளையுடைய உங்களைக்காணுமல் எனக்கு என்னவழி. நானெங்கேபோவேன். என்குழந்தைகளை எவ்வாறுகாண்பேன். ஆ! யுதிஷ்டிரா! ஆ! பீமா! ஆ! ஆ! பல்குனா! ஆ! இரட்டையரே! போகாதேயுங்கள்; திரும்புங்கள்; என்மேலுள்ள கோபத்தைவிடுங்கள்" என்றார். எல்லும்ஜலமும் விட்டுக்கொண்டிருக்கும் அந்தப்பீஷ்மருடைய அந்தஅழுகையைக்கேட்டு விதுரர் இடத்தையும் ஸமயத்தையும்பார்த்துச் சொல்லத்தொடங்கினர்.

"புருஷச்ரேஷ்டரே! நீர் வ்யஸனப்படாதேயும். மிகுந்ததைரிய

* எருத்தின் கழுத்திலுள்ள கொண்டை.

முள்ளவரே! துயரத்தை ஒழித்துவிடும். அவர்களுக்கு மரணமில்லை. காலத்திற்செய்யவேண்டியது என்னுல்செய்யப்பட்டது. பாரதரே! அவர்களுக்காக இந்தஜலத்தை நீர்விடாதேயும்" என்ற இந்தச்சொல் லைக் கௌரவர்கள்காதில் படாமலிருக்கும்படி விதுரர் பீஷ்மருக்குச் சொன்னர். ஜனமேஜயராஜாவே! அந்தக்கூட்டத்தில் பீஷ்மர், விது ரர்அருகிற்சென்று கண்ணீர்மிகுதியால் தடைப்பட்டகுரலோடு அவ ரைப்பார்த்து மெல்லமெல்லப் பின்வருமாறு சொல்லலானர். "அன் பனே! மஹாபலசாலிகளான அந்தப்பாண்டுபுத்திரர்கள் எவ்வாறு ஜீவிக்கின்றனர்? பாண்டுவின்வர்க்கம் நமக்காக அழிக்கப்டாமலிரு ந்ததெவ்வாறு? என்னைத்தலைமையாகக்கொண்ட அந்தக்கௌரவர்கள், கருடனுல் அவர்தாயார்விடுவிக்கப்பட்டதுபோல், பெரும்பயத்திலிரு ந்து விடுவிக்கப்பட்டுக் கைதூக்கிவிடப்பட்டதெவ்வாறு?" என்றார். ஜனமேஜயரே! இவ்வாறுசொல்லப்பட்ட அந்தத் தர்மாத்மாவான விதுரர் கௌரவர்கள் கேட்காமலிருக்கும்படி ஆச்சரியமானசெய்கை யையுடைய பீஷ்மருக்குச் சொல்லத்தொடங்கினர். "த்ருதராஷ்டி ரன், சகுனி, ராஜாவாகிய துரியோதனன் இவர்களால் பாண்டுபுத்ரர் களை யழித்துவிடுவதற்காகப் புத்தியில் நிச்சயஞ்செய்யப்பட்டது. அப்போது நானும் அந்தப்பாபியான புரோசனனுடைய எண்ணத் தைத்தெரிந்துகொண்டு அவனைக்கொல்லக் கருதினவனுக அவர்க ளோடு ஒத்திருந்தேன. பிறகு த்ருதராஷ்டிரபுத்திரனுகிய துரியோ தனனுடைய கட்டளையினுல் அரக்குமாளிகைக்குப்போய்க் குந்தி யைப் புத்திரர்களுடன் அதில் கொளுத்துவதற்குப் புரோசனன் நிய மிக்கப்பட்டிருந்தபோது, கனகனைவரவழைத்து அங்கே சுரங்கத்தை யும் அதன்வாயிலையும் வெகுமறைவாகச்செய்வித்து, அந்தப்பாண்டு புத்திரர்கள் குந்தியுடன்கூட அந்தக்காலத்தில் எரிவதற்குமுன்னமே என்னுல் வெளிப்படுத்தப்பட்டனர். நீங்கள் வ்யஸனத்தில் மனத் தைச்செலுத்தவேண்டாம். அதன்பிறகு நான் குந்தியைப் புத்ரர்க ளுடன்கூடக் கப்பலில்ஏற்றிவைத்துக் குந்திக்கும் அவள்புத்திரர்க ளுக்கும் அபயம்கொடுத்து அரக்குமாளிகையைக் கொளுத்தச்செய் தேன். ஆதலால், உங்களுக்குத் துயரம்வேண்டாம். பாண்டவர் கள் தீங்கிலிருந்து விடுபட்டனர். ராஜாவே! வீரர்களான பாண்ட வர்கள் தாயாருடன்கூட நான்செய்த அந்தஉபாயத்தினுல் மிகக் கொடிய அக்னிதகனத்தினின்றும் வெளிப்பட்டுப்போயினர். • இந்த வ்யஸனம் நீங்கள் அடையவேண்டாம். பாண்டவர்கள் ஜீவித்தேயிரு க்கின்றனர். காலம் திரும்பிவருகிறவரையில் மறைந்தே சஞ்சரிக்கப்

போகின்றனர். அந்தக்காலம்வந்தபிறகு கிருஷ்ணபக்ஷம் முடிந்தபின் உதயமாகிய நிர்மலமானசந்திரனை உலகம்பார்ப்பதுபோல் யுதிஷ்டிரனைப் பூமியிலுள்ளமனிதர்கள் பார்ப்பார்கள். எவனுக்குத் தனஞ்சயனும் வெல்லமுடியாதபீமஸேனனும் மாத்ரியின்புத்ரர்களாகிய அந்த இரட்டையர்களும் ஸஹாதரர்களோ அவனுக்கு அழிவை நான் நினைக்கவில்லை" என்றார்.

பிறகு பீஷ்மர் உடம்பெல்லாம் மயிர்க்கூச்சமடைந்து ஸந்தோஷத்துடன் சிறந்தபுத்தியுள்ள விதுரரைக் கொண்டாடி, "நல்லவேளை! நல்லவேளை!" என்றுசொல்லி, "அன்பனே! யுக்தியாகவும் தகுதியாகவும் சிறந்தகாரியம் உன்னல்செய்யப்பட்டிருக்கிறது. நாமும் துக்கத்திலிருந்து விடுவிக்கப்பட்டோம். பாண்டுவின்வர்க்கமும் அழிக்கப்படாமலிருக்கிறது" என்றுசொன்னார். ராஜாவே! இவ்வாறுசொல்லிவிட்டுக் கௌரவர்களோடும் நகரத்துஜனங்களோடும் சேர்ந்து பீஷ்மர் அனேகஜனங்கள் நெருங்கியிருக்கும் நகரத்திற் பிரவேசித்தார். பிறகு அம்பிகாபுத்ரனை திருதராஷ்டிரன், பாண்டவர்கள் அழிந்துபோனதை உண்மையாகநினைத்து மந்திரிகளோடும் கர்ணனோடும் சகுனியோடும் புத்திரர்களோடும்கூட மகிழ்ந்திருந்தான். ராஜாவே! வெல்லக்கூடாதபீஷ்மரும் மேன்மையானபுத்தியுள்ள விதுரருமாகிய அவ்விருவரும் அரக்குவீட்டுத்தீயிலிருந்து பாண்டவர்கள் விடுபட்டதைநினைத்து மகிழ்ந்தனர். துரோணர் முதலானவர்களும் அந்தப்பாண்டவர்களுடைய ஸத்தியத்தினாலும் அடக்கத்தினாலும் குணங்களினாலும் ஒழுக்கத்தினாலும் தேசத்துஜனங்களுக்கு அவர்களிடமுள்ள அன்பினாலும் அவர்களுடையதர்மங்களாலும் அவர்கள் விடுபட்டிருப்பதாகவே நினைத்தனர். அவ்வாறே நகரத்துஜனங்களும் தேசத்துஜனங்களும், சூரத்தன்மையினாலும் தேககாந்தியினாலும் மகிமையினாலும் வடிவங்களினாலும் தேகபலத்தினாலும் மனோபலத்தினாலும் பாண்டவர்கள் சௌக்கியமாகத்தானிருப்பார்களென்று நினைத்தனர். மற்றச்சாதாரணஜனங்களும் அனேகமான ஸ்திரீகளும் ஸந்தோஷப்பட்டுக்கொண்டு "ஜீவித்திருக்கிறார்களோ அப்படியின்றித் தஹிக்கப்பட்டார்களோ" என்று கூறினர்.

———

நூற்றறுபத்துமூன்றுவது அத்தியாயம்.

ஐதுக்ருஹபர்வம். (தொடர்ச்சி.)

(தாயாரையும் ஸஹோதரர்களையும் ஆலமரத்தினடியில்விடுவிட்டு நெடுந்தூரம்போய ஜலங்கொண்டுவந்தபீமன், தரையில்தூங்கின அவர்களைக்கண்டு வியஸனத்தில்ஸ் புலம்பினது.)

அந்தப்பீமன் நடக்கும்போது துடைகளின்வேகக்காற்றினால் அசைக்கப்பட்டகாட்டுமரங்கள் கிளைகளுடன்கூடப் பயத்தினால் நடுங்கினவைபோலாயின. அவன்கணுக்கால்காற்று ஆனிஆடிமாசத்தில் காற்றடிப்பதுபோலடித்தது. மிகுந்தபலமுள்ளகாற்று வழியிலுள்ளகொடிகளையும் செடிகளையுஞ்சாய்த்துவிட்டது. அந்தப்பீமஸேனன் அந்தமார்க்கத்தின் ஸமீபத்தில்முளைத்துப் பூத்தும்காய்த்துமிருக்கும் மரங்களையும் புதர்களையும் முறித்துக்கொண்டும், கோபமூட்டப்பட்ட மும்மதமும்பெருகுகின்ற பராக்கிரமமுள்ள அறுபதுவருஷத்திய உத்தமயானையைப்போல் கோபித்து வனத்திலுள்ள பெருமரங்களை முறித்துக்கொண்டும், முறித்துக்கொண்டும் சென்றான். கருடனுக்கும் காற்றுக்குமொப்பான வேகமுள்ள அந்தப்பீமஸேனன் செல்லுகின்றவேகத்தினால் பாண்டவர்களுக்கு மூர்ச்சையுண்டானதுபோலாயிற்று. தூரமாகத்தாண்டவேண்டிய ஆறுகுளங்களுள்ள இடத்தைக் கைகளாகிறதெப்பங்களினால் அடிக்கடி தாண்டித் திருதராஷ்டிரபுத்திரனிடமுள்ள பயத்தினால் வழியில் மறைவாகச்சென்றனர். ஆற்றங்கரைகளிலும் மேடுபள்ளங்களிலும் அந்தப்பீமன் மெல்லியவளும் புகழ்பெற்றவளுமாகிய தன்தாயாரைக் கஷ்டப்பட்டு முதுகிற் சுமந்தான். பரதச்ரேஷ்டரே! கிழங்குகளும் காய்களும் ஜலமும் குறைவானதும், குரூரமானபக்ஷிகளும் மிருகங்களுமுள்ளதும், பயங்கரமுமான ஒருவனப்பிரதேசத்தைச் சாயங்காலத்தில் அடைந்தான். பயங்கரமான மாலைக்காலம்வந்தது. குரூரமானபக்ஷிகளும் மிருகங்களும் ஸஞ்சரித்தன. ராஜாவே! அக்காலத்தில் திடீரென்றுஉண்டான காற்றுக்களினால் இலைகளும் காய்களும் உதிர்ந்தும், மிகுதியாக முறிக்கப்பட்டும் சாய்க்கப்பட்டும் பலமரங்களோடு பின்னிக்கொண்டு மிருக்கின்ற அனேகம்புதர்களாலும்,சிறுகிளைகளாலும்,மரங்களாலும் திசைகளெல்லாம் மறைக்கப்பட்டிருந்தன. அந்தப்பாண்டவர்கள் களைப்பினாலும் தாகத்தினாலும் மிகுந்தநித்திரையினாலும் பீடிக்கப்பட்டவர்களாய் அப்போது நடக்கச்சக்தியற்றவராயினர். அவர்க

ளனைவரும் ஸௌக்கியமில்லாத பெருங்காட்டில் உட்கார்ந்தனர். இரவிலேயே இருபத்துநான்கு யோசனைதூரம் விரைவாகச்சென்றனர். பிறகு தாகத்தினால்வாடின குந்தி, "பஞ்சபாண்டவர்களின் நடுவிலிருக்கும் தாயாராகியநான் நாதனற்றவள்போல் இந்தமஹாவனத்தில் தாகத்தினால் கஷ்டப்படுகிறேன். இனிமேல் ஓரடியிலிருந்து ஓரடிகூடநடக்க என்னால்முடியாது. இந்தமரத்தினடியிற் படுப்பேன். திருதராஷ்டிரபுத்திரர்கள் என்னைத்தூக்கிக்கொண்டுபோகட்டும். பீமா! என்சொல்லைக்கேள். கௌரவர்கள் உன்பாஹுபலத்திற்கும் முன்நிற்கச்சக்தரல்லர். குந்தியின்புத்திரா! ஏன்அஞ்சுகிறாய்? இந்தப்பூமியில் என்பீமசேனனைவிட வேறுமகாரதனில்லை. திருதராஷ்டிரபுத்திரனிடம் வீணகப்பயந்துகொண்டு நான் இங்கே தூங்குவதை விரும்பாமலிருக்கிறாய்" என்றுசொன்னாள். அவள் பீமன் முதுகிலிருந்துகொண்டே துன்பப்பட்டமனத்தோடு வழியில் இவ்வாறு அழுதுகொண்டு இரவில் நித்திரையினால் பரவசமடைந்தாள். அந்தச்சொல்லைக்கேட்டுப் பீமசேனனுடையமனம், தாயினிடத்துள்ள அன்பினாலும் இரக்கத்தினாலும் கொதிப்புற்றது. அவன் நடக்கவேதொடங்கினான். பிறகு பீமன் பயங்கரமும் ஜனமில்லாததுமாகிய பெருங்காட்டிற்புகுந்து பரந்தநிழலுள்ளதும் ரமணீயமுமான ஓர்ஆலமரத்தைக் கண்டான். பரதவம்சத்தோனான பீமன் அவர்களெல்லாரையும் அங்கேவிட்டு, "நான்இங்கே ஜலத்தைத்தேடுகிறேன். அதுவரையில் இங்கேகளைப்பாறுங்கள். இந்தஸாரஸங்களென்னும் நீர்ப்பறவைகள் இனிமையாகக்கூவுகின்றன. இவ்விடத்தில் பெரியஜலாசயம் இருக்கவேண்டுமென்று எனக்குத்தோற்றுகிறது" என்றுசொன்னான்.

ஜனமேஜயரே! ஜ்யேஷ்டஸஹோதராரான யுதிஷ்டிரரால்செல்லென்றுவிடைகொடுக்கப்பெற்ற அந்தப்பீமன் ஸாரஸங்களென்னும் நீர்ப்பறவைகளிருக்குமிடம்சென்றான். அவன் தாமரைவனத்தினால் அலங்கரிக்கப்பட்ட ஒருபெருந்தடாகத்தைக்கண்டான். பரதச்ரேஷ்டரே! அதில் தீர்த்தபானஞ்செய்து ஸ்நானமுஞ்செய்து ஸஹோதரர்களிடம் அன்புள்ள அந்தப்பீமன் அந்தஸஹோதரர்களுக்காக ஜலமெடுத்தான். பாரதரே! உத்தரீயத்தினால் ஜலத்தைக்கொண்டுவந்தான். அநேகம்தாமரைஇலைகளாலும் தனித்தனியே ஜலத்தைஎடுத்துக்கொண்டுவந்தான். இரண்டுகுரோசங்களிலிருந்து விரைவாகத் தாயாரிடம்வந்து துயரத்தினாலும் களைப்பினாலும் மனத்தில்கஷ்டங்கொண்டு ஸர்ப்பம்போல் பெருமூச்சுவிட்டான். ராஜாவே! அந்தப்

பீமன் மிக்கபயங்கரமான இருண்டகாட்டில் மிகக்குளிர்ச்சியானமரத் தினடியில் தூங்கிக்கொண்டிருந்த தாயாரையும், அம்மரத்தில் எப் போதும்வஸிக்கும் பிசாசராக்ஷஸர்களின்பயந்தெரியாமல் தரையில் விரிக்கப்பட்ட கைகால்களையுடையவர்களும் நீண்ட குறட்டையோடு அண்ணாந்த வாய்களையுடையவர்களும் பெருஞ்சரீரங்களுள்ளவர்க ளும் தூக்கத்தினால் தங்கள்சக்திவிலகினவர்களும் ஐந்துஇந்திரர்களை ப்போல மஹாபலசாலிகளுமான ஸஹோதரர்களையும்கண்டு மிகுந்த துயரத்தினால்பீடிக்கப்பட்டுப் புலம்பத்தொடங்கினன். "*மிகுந்த பாக்கியக்குறைவுள்ளநான் பூமியில்படுத்திருக்கும ஸஹோதரர்களை இப்போதுபார்க்கிறேனே இதைவிடஅதிககஷ்டம் பார்க்கக்கூடிய தென்னவிருக்கிறது. எவர்கள் முன்னே வாரணவதநகரத்தில் உயர்ந்த சயனங்களில் நித்திரையையடையாமலிருந்தார்களோ அவர்கள் இப் போது தரையில்தூங்குகின்றார்களே! சத்துருக்களுடையகூட்டத்தை மிதிப்பவராகிய வஸுதேவருடையஸஹோதரியும், குந்திராஜன்புத்ரி யும், எல்லாநல்லலக்ஷணங்களும் பொருந்தினவளும், விசித்ரவீரிய னுடையமருமகளும், மஹாத்மாவானபாண்டுவின்மனைவியும், எங்கள் தாயாரும், தாமரைப்புஷ்பத்தினுள்ளிருக்கிற காய்போன்ற நிறமுள்ள வளும், மிக்கமெல்லியவளும், மிகுந்தவிலேபெற்றசயனத்தில் வழக்கப் பட்டவளுமாகிய இந்தக்குந்தி தனக்குத்தகாத இந்தத்தரையில் அவ் வாறேபடுத்திருக்கக்காண்கிறேனே! தர்மனிடமிருந்தும் இந்திரனிட மிருந்தும் வாயுவினிடமிருந்தும் எவள் இந்தப்புத்திரர்களைப்பெற்றா ளோ அரண்மனையில்படுப்பவளாகியஅவள் இதோ தரையில்கனைத் துத் தூங்குகிறாள். இப்போது இந்தப்புருஷஸிம்மங்கள் தரையிற் படுத்திருப்பதைப்பார்க்கிறேனே! இதைவிட வேறு அதிகதுக்கம் என்னால் காணக்கூடியதென்னவிருக்கிறது. தர்மந்தவறுதவராகிய எந்தராஜா திரிலோகாதிபத்தியத்திற்குத் தகுதியுள்ளவரோ அவர் இதோ கனப்புற்றுச் சாதாரணமனிதனைப்போல் பூமியில்படுத்திருக் கிறார். இதென்ன! இருண்டமேகம்போலக்கறுத்தவனும் மனிதருள் நிகரற்றவனுமாகிய இந்தஅர்ச்சுனன் சாமான்யனைப்போல் படுத்திரு க்கிறானே! இதற்குமேலான துயரம் எது? ரூபத்தின்மேன்மையினால் தேவர்களில் அசுவினிதேவர்கள் எவ்வாறோ அவ்வாறுகிய இந்தகுல ஸஹதேவர்கள் பிராகிருதமனிதரைப்போல் இப்போது பூமியில்உறங் குகின்றனர். எவனுக்கு விரோதிகளும் குலத்தைக்கெடுப்பவருமாகிய ஞாதிகளில்லாமலிருப்பதோ அவன் கிராமத்தில் தனித்துமுனித்திரு

* இங்கு ஒருவரிவிடப்பட்டது.

க்கும் மரம்போல் இவ்வுலகத்தில் ஸுகமாகஜீவிப்பன். எந்தஒற்றை மரம் கிராமத்தில் ஒன்றுயிருக்குமோ அஃது, இலைகாய்கள்நிரம்பினதாகவும் ஞாதிகளில்லாததாகவும் வழிப்போக்கரால்பூஜிக்கப்பட்டதாகவும் *சைத்யமென்றபெயர்பெற்றிருக்கிறது. எவர்களுக்குச் சூரர்களும் தர்மத்தைப்பற்றினவர்களுமாகிய அனேகதாயாதிகளிருக்கின்றனரோ அவர்களும் உலகத்தில் ஸுகமாகஜீவிக்கின்றனர்; தீங்கில்லாமலுமிருக்கின்றனர். பலவான்களும் ஸம்பத்துநிரம்பினவர்களும் மித்திரர்களையும் சுற்றத்தாரையும் மகிழ்விப்பவர்களுமானஜனங்கள் காட்டிலுண்டானமரங்களைப்போல் ஒருவரையொருவர்சார்ந்து ஜீவிக்கின்றனர். நாமோ, கெட்டபுத்திரனேனுங்கூடியவனும் கெட்டமனமுள்ளவனும் ராஜ்யத்திலாசைவைத்தவனும் மூர்க்கனும் துர்மந்திரிகளோடுசேர்ந்தவனும் கெட்டவனும் பாபச்செய்கையுள்ளவனும் தன்லாபம்ஒன்றிலேயேஎண்ணம்வைத்தவனுமான த்ருதராஷ்டிரனால் ஓட்டப்பட்டோம். விதுரருடையபுத்தியின்சக்தியினால் எரிக்கப்படாமலிருந்தோம். அந்தத்தியிலிருந்துவிடுபட்டு நாம் இந்தமரத்தையடைந்திருக்கிறோம்; எந்தத்திசைக்குச்செல்வோம். எல்லாவற்றிற்கும் மேலானகஷ்டத்தையடைந்தோம். கெட்டபுத்தியுள்ளவனே! சிற்றறிவாளனே! த்ருதராஷ்டிரன்மைந்தனே! எண்ணம்கூடிவந்தவனுகவாழ். உனக்குத் தெய்வத்தின்அனுக்கிரஹமிருப்பது நிச்சயம். அதனால் யுதிஷ்டிரர் உன்னைக்கொல்ல எனக்கு அனுமதிகொடாமலிருக்கிறார். மதிகெட்டவனே! அதனால் நீஜீவித்திருக்கிறாய். அடா! இப்போதே கோபத்தினால்ஆவேசம்கொண்டநான்சென்று, புத்திரர்கள், மந்திரிகள், கர்ணன், தம்பிகள், சகுனி இவர்களுடன்கூட உன்னை யமன்வீட்டுக்கு அனுப்பிவிடுவேன். பாபச்செயலுள்ளவனே! தர்மாத்மாவும் பாண்டவர்களில் ச்ரேஷ்டருமாயிருக்கிற ராஜாவான யுதிஷ்டிரர் கோபிக்கவில்லையே! நான் என்னசெய்யமுடியும்?" என்று புலம்பினான்.

இவ்வாறுசொல்லிச் சிறந்தகைகளையுடையபீமஸேனன், கோபத்தால் ஜ்வலிக்கின்றமனத்தோடு கையினால்கையைப்பிசைந்து பெருமூச்சுவிட்டு மனத்தில் துயரத்துடன் சுவாலைதணிந்தஅக்கினியைப்போல் பின்னும் மனத்தளர்ச்சியுள்ளவனாகி, சாதாரணஜனங்களைப்போல் அசைவற்றுத் தரையில்படுத்துத் தூங்கிக்கொண்டிருந்த சகோதரர்களைப்பார்த்தான். "இந்தவனத்திற்குக் கொஞ்சதூரத்தில் நகரமிருப்பதாக அறிகிறேன். விழித்துக்கொண்டிருக்கவேண்டியஇடத்

* வீதியில்மூலத்தகுறிப்புள்ளமரம்; அஃது உத்தேசவிருக்ஷமென்னப்படும்.

தில் இவர்கள் தூங்குகின்றனர். ஐயோ! நான்மட்டும் விழித்திருக்கிறேன். இவர்கள் சிரமந்தீர்ந்து விழித்துக்கொண்டபிறகு ஜலத்தைப்பார்ப்பர்" என்று பீமன் நிச்சயஞ்செய்துகொண்டே தான்மட்டும் அப்போது கண்விழித்துக்கொண்டிருந்தான்.

ஜதுக்ருஹபர்வம் முற்றிற்று.

நூற்றுநாற்பத்துநான்காவது அத்தியாயம்.

ஹிடிம்பவதபர்வம்.

(ஹிடிம்பனால் பாண்டவர்களிடம் அனுப்பப்பட்ட ஹிடிம்பை பீமனைக் கண்டு அவன்மீதுமோகித்து அவனோடு ஸம்பாஷணைசெய்வது.)

அங்கே அவர்கள் படுத்திருக்கும்போது அந்தவனத்திற்குச் சமீபத்தில் ஓர் ஆச்சாமரத்திலேறியிருந்த கொடியவனும், மனிதர்களின்மாம்ஸத்தைத் தின்பவனும், மிகுந்தபலமும் பராக்கிரமமுமுள்ளவனும், கார்காலத்துமேகம்போல இருண்டவனும், சிவந்தகண்களுடையவனும், அச்சப்படத்தக்க உருவமுள்ளவனும், கோரப்பற்களுடன் திறந்தவாயுள்ளவனும், பெரியஉருவமுள்ளவனும், பார்ப்பதற்குப் பயங்கரமாயிருப்பவனும், நிதம்பங்களும் வயிறும்தொங்குகிறவனும், சிவந்தமீசைகளும் தலைமயிர்களுமுள்ளவனும், பெரியமரம்போன்ற கழுத்தையும் தோள்களையுமுடையவனும், ஆணிகளைப்போன்ற காதுகளையுடையவனும், மிக்க பயத்தையுண்டுபண்ணுபவனுமாகிய ஹிடிம்பனென்னுமராக்ஷஸன் மஹாரதர்களான அந்தப்பாண்டவர்களைத் தற்செயலாகப்பார்த்தான். விகாரமானரூபத்தையுடையவனும் சிவந்தகண்களையுடையவனும் பயங்கரமானவனும் கொடியபார்வையுடையவனும் பெரியதேகமுள்ளவனும் மிகுந்தபலமுள்ளவனுமாகிய அவன் பசியினால்பீடிக்கப்பட்டு மாம்ஸத்தைவிரும்பித் தற்செயலாக வாசனையைமுகந்துபார்த்து விரல்களைமேல்தூக்கித் தலையைச்சொறிந்து கட்டையான தலைமயிர்களைத்தட்டிப் பெரியவாயுடன் கோட்டுவாய்விட்டு அடிக்கடி பார்த்து மனிதர்மாம்ஸத்தில் சந்தோஷமுற்று மனிதர்வாசனையை மோந்துபார்த்துத் தன்சகோதரியைநோக்கிப் பின்வருமாறு சொல்லத்தொடங்கினான்:

"வெகுகாலத்திற்குப்பின் இப்போதுதான் என்மனத்திற்கினிய உணவுகிடைத்திருக்கிறது. மோந்துபார்க்கும்போதே எனதுநா விருப்பத்தினால் தண்ணீர்ஊறி வாய்க்குவெளியில்வருகிறது. மிகக்கூர்மையான முனைகளையுடையவைகளும் படும்போதுதாங்கக்கூடாத

வைகளுமான எனது எட்டுக்கோரப்பற்களையும் அழகாயும் மாம்ஸ மயங்களாயுமிருக்கிற தேகங்களில் வெகுகாலத்திற்குப்பின் பதிப்பிக் கப்போகிறேன். மனிதர்களின் கழுத்தைப்பிடித்து, நரம்பைக்கடி த்து, சுடுகையுள்ளதும் நுரையுள்ளதுமாகிய புதியரக்தத்தை மிகுதி யாகக்குடிக்கப்போகிறேன்; செல்; யார்இவர்கள்; இந்தக்காட்டை யடைந்து தூங்குகின்றனர்; அறி. மனிதர்நாற்றம் மிக்கவலிமையாக என்மூக்குக்குத் திருப்திசெய்விக்கிறது. இந்தமனிதரெல்லாரையும் கொன்று என்னிடம்கொண்டுவா. நம்தேசத்தில்தூங்குகின்ற இவர் களிடம் உனக்குஅச்சமில்லை. இந்தமனிதர்களுடைய மாம்ஸங்களை யறுத்தெடுத்து நாமிருவரும்சேர்ந்து இஷ்டப்படி தின்போம். என் சொல்லை நிறைவேறும்படிசெய். மனிதரின்மாம்ஸங்களை வேண்டிய அளவு உண்டு நாமிருவரும்சேர்ந்து பலவகையாகத்தாளம்போட் டுக் கூத்தாடுவோம்" என்றான். பெருங்காட்டில் இவ்வாறு ஹிடிம் பனால் கட்டளையிடப்பட்ட ஹிடிம்பையென்னும் ராக்ஷஸி, ஸஹோ தரன் சொல்லைக்கேட்டு மரங்களைத் தாண்டித்தாண்டி விரைவாகப் பாண்டவர்களிடம்சென்றாள். வனத்தில் பாண்டவர்கள்படுத்திருக் கும்இடத்திற்குச் சென்றாள். அவள் அவ்விடம்சென்று குந்தியுடன் தூங்குகிறபாண்டவர்களையும் விழித்துக்கொண்டிருக்கும் தேவ்வி யடையாத பீமஸேனனையுங்கண்டாள். பீமனால்காக்கப்பட்டவர்க ளும் அழகினாலும் யௌவனவயஸினாலும் சோபிக்கின்றவர்களும் மிருதுசரீரமுள்ளவர்களும் தேகப்பயிற்சியினால் இளைத்திருப்பவர்க ளும் துக்கமுள்ளவர்களும் ஒருவருக்கொருவர் ஜ்யேஷ்டகனிஷ்டர்க ளும் பகைவர்களை ஸம்ஹரிப்பவர்களுமாகிய பாண்டவர்களையும் பார் க்கஅழகான பீமஸேனனையும் கொடியவளாகிய அவ்வரக்கிபார்த் தாள். ஆச்சாமரத்தினடிபோல் வளர்ந்திருக்கின்றவனும் பூமிக்குள் அழுவ்ந்திகரற்றவனுமாகிய பீமஸேனனைக்கண்டவுடன் அந்தஅரக்கி காமமுற்றாள். "கருநிறமும் நீண்டகைகளும் ஸிம்மம்போன்றதேர்வி களும் சங்குபோன்றகழுத்தும் தாமரைமலர்போன்ற கண்களுமுடைய இந்தப் பெருந்தேஜஸ்ஸுள்ளவன் எனக்குப்பர்த்தாவாகத் தகுதியுள்ள வன். கொடியதும் தகாததுமாகிய என்சகோதரன்சொல்லை நான் ஒருபோதும்செய்யேன். கணவனிடமுள்ள அன்பு எல்லாவற்றிலும் வலியது. சகோதரன்நேசம் அவ்வாறன்று. மேலும் இவர்களைக் கொல்வதனால் எனக்கும் என்ஸஹோதரனுக்கும் சற்றுநேரம் வயிறு நிரம்பியிருக்கும். கொல்லாமலிருந்தால் பலவருஷகாலம் நான் ஆனந் தப்படுவேன்" என்று அவ்வரக்கி மனதுக்குள் சிந்தித்தாள். அந்த

ஹிடிம்பை பெருங்கைகளையுடைய பீமசேனப்பார்த்து இவ்வாறு நிச்சயஞ்செய்து ராக்ஷஸஉருவத்தைவிட்டு மானிடஉருவமெடுத்துக்கொண்டாள். நிஜத்தரூபம் எடுப்பவளான அந்தச்சிறந்தபெண் காமனால் மயலுற்று (தனக்கு) அழகை உண்டுபண்ணிக்கொண்டு மஹாத்மாவான பீமசேனனிடம் சென்றாள். ஜாடைகளையும் கருத்துகளையும் அறிந்தவளாகிய அவள் மெள்ளமெள்ளக் கிட்டப்போனாள். உயர்ந்த ஆபரணங்களையணிந்துகொண்டு கொடிபோல்வளைந்து கொஞ்சங் கொஞ்சமாகச் சமீபத்திற்குவருகிறவளும் மகிழ்வுற்றவளும் மெல்லியவளும் பருத்தகொங்கைகளுள்ளவளும் சந்திரன்போன்ற முகமுள்ளவளும் தாமரைப்பூப்போன்ற கண்களையுடையவளும் கறுத்தும் சுருண்டுமிருக்கிற கூந்தலையுடையவளும் கறுத்தநிறமுள்ளவளும் வெண்மையானபற்களும் கோவைப்பழம்போன்றஇதழ்களுமுள்ளவளும் பார்ப்பதற்குஅழகாயிருப்பவளுமான அவளைப் பீமன்கண்டான்.

சிறந்தரூபமுள்ளவளும் சிரிப்புடன்கூடிய மனத்தைக்கவருகிற அழகியகுணங்களோடுகூடியவளுமாகிய அவளைக்கண்டு பீமன் வியப்புற்றான். பிறகு சிறந்தமுகமுள்ள அந்தப்பெண்ணரசி பீமன்ஸமீபஞ்சென்று பேசக்கூடியஸமயத்தில் அவனைப்பார்த்துப் பேசலுற்றாள். எல்லாஆபரணங்களினாலும் அலங்கரிக்கப்பட்ட அந்தப்பெண்ணாணத்தினால்தலைகுனிந்து புன்சிரிப்புடன் பின்வருமாறு பேசத்தொடங்கினாள். "புருஷச்ரேஷ்டரே! நீர்யார்! எங்கிருந்துவந்திருக்கிறீர்? இவ்விடத்தில்படுத்திருக்கின்ற இந்ததேவதாரூபமான புருஷர்கள்யாவர்? மாசற்றவரே! பெரியஉருவமுள்ளவளும் நடுயௌவனத்திலிருப்பவளும் மெல்லியவளுமான இவள் இந்தவனத்தையடைந்தும் தன்வீட்டிலிருப்பதுபோல் அச்சமற்றுத்தூங்குகிறாள். இவள்உமக்கு என்னஉறவினள்? இந்த ராக்ஷஸர்கள்வாஸஞ்செய்யும் கடுமையானகாடென்று நீங்கள்அறியீர்களா? இதில்பாவசித்தமுள்ள ஹிடிம்பனென்னும்அரக்கன் வஸிக்கிறானே! தேவர்களைப்போன்றவரே! என்னைகோதரனான அந்தராக்ஷஸனால் உங்கள்மாம்ஸத்தைத்தின்னவிரும்பிக் கெட்டஎண்ணத்துடன் நான்அனுப்பப்பட்டிருக்கிறேன். அப்படிவந்தநான் தேவகுமாரனுக்குஒப்பான ஒளியுள்ள உம்மைப்பார்த்தபிறகு வேறுகணவனினைவிரும்பவில்லை. இதனை உண்மையாக உமக்குச்சொல்லுகிறேன். தர்மந்தெரிந்தவரே! இதைத்தெரிந்துகொண்டு என்னிடத்தில் நியாயமாகநடந்துகொள்ளும். மதனனால்பீடிக்கப்பட்ட மனமுள்ளவளாய்வந்திருக்கிற என்னை நீர்அங்கீகரிக்கக்கடவீர்; சிறந்தகைகளுடையவரே! மனிதர்களைத்தின்பவனு

கியராக்ஷஸனிடமிருந்து உம்மைக்காப்பாற்றுவேன். நாமிருவரும் யாரும்போகக்கூடாதமலைகளில் வஸிப்போம். மாசற்றவரே! எனக்குக் கணவராகஇரும்; வீரரே! உம்மைவிரும்புகிறேன். உமக்குச்சுகம் உண்டாகட்டும். என்உயிரைப்போக்காதேயும். சத்துருக்களையடக்குகிறவரே! உம்மால் நான்விடப்பட்டேனுனல் பிழைக்கமாட்டேன். நான் ஆகாசத்தில்ஸஞ்சரிப்பவளல்லவா? விரும்பினபடி ஸஞ்சரிப்பேன். என்னுடன்கூடப் பலவிடங்களில் (சென்று) ஒப்பில்லாத ஆனந்தத்தையடைவீராக" என்றாள்.

அதனைக்கேட்ட பீமன், "நான் பூஜிக்கத்தக்கவரும் எனக்கு முக்கியமான ஆசாரியருமாகிய இந்தவன் ஜ்யேஷ்டஸஹோதரர் விவாஹஞ்செய்துகொள்ளவில்லை. ஆதலால, நான் எவ்வகையிலும் மூத்தவரைமிஞ்சி விவாஹஞ்செய்துகொள்வேன். ராக்ஷஸியே! சக்தியுள்ளவன் எவன் தாயாரையும் ஜ்யேஷ்டஸஹோதரனையும் மற்ற இளைய தம்பிமார்களையும் இப்போது இந்தஇடத்தில் விட்டுவிடுவான். என்னைப்போன்றமனிதன் எவன்தான் துரங்கிக்கொண்டிருக்கும் இந்த ஸஹோதரர்களையும் தாயையும் ராக்ஷஸர்களுக்கு இரையாகக்கொடுத்துவிட்டுக் காமுகனைப்போல் செல்வான்" என்றுசொல்ல, ராக்ஷஸி, "வீரரே! உம்முடன்வருவதைத் தாயாருடன்கூடத் தப்புவிப்பேன். இந்தச் சகோதரர்களைவிட்டுவிடும். நீர் என்னிடுப்பில் ஏறிக்கொள்ளும்" என்றுசொன்னாள். பீமன், "ராக்ஷஸியே! என்ஸஹோதரர்களைவிட்டு நான்ஜீவிக்கவிருப்பமில்லை. எனக்குப் பிரியமில்லாததைப் பேசுகிறாய். உன்விருப்பம்போல் தனித்துச்செல்" என்றுசொன்னான். அதற்கு, ஹிடிம்பை, "உம்விருப்பம்எதுவோ அதைச்செய்வேன். வேண்டுமானால் இவர்களெல்லாரையும் மனிதர்களைத்தின்பவனுகிய ராக்ஷஸனிடத்தினின்றும் விடுவிப்பேன். இவர்களையழைப்பும்" என்றுசொன்னாள். பீமஸேனன், "ராக்ஷஸியே! காட்டில் ஸுகமாகத்தூங்குகின்ற ஸஹோதரர்களையும் என்தாயாரையும் துராத்மாவான உன் ஸஹோதரனிடத்தில்பயந்து நான்எழுப்பேன். பயப்படுகிறவளே! அழகானகண்களையுடையவளே! ராக்ஷஸர்களும் மனிதர்களும் கந்தர்வர்களும் யக்ஷர்களும் என்பராக்கிரமத்தைத்தாங்கவல்லவல்லர். சென்றுலும்செல்; நின்றுலும்நில். பிரியமானவளே! அல்லது எதனை விரும்புகிறையோ அதைச்செய். மெல்லியசரீரமுடையவளே? மனிதர்களைத்தின்பவனுகிய அந்தஉன்ஸஹோதரனை அனுப்பினுலும் அனுப்பு" என்று சொன்னான்.

நூற்றறுபத்தைந்தாவது அத்தியாயம்.

ஹிடிம்பவதபர்வம். (தொடர்ச்சி.)

(ஹிடிம்பைதிரும்பிவரத் தாமதித்ததனால் தானேவந்துஹிடிம்ப னுக்கும் பீமனுக்கும் யுத்தம்நடந்தது.)

அவள்போய் வெகுநேரமானதாகத் தெரிந்துகொண்டு ராக்ஷஸர்க்கரசனை ஹிடிம்பன் அந்தமரத்திலிருந்து இறங்கிப் பாண்டவர்களிடம் விரைவாகவந்தான். சிவந்தகண்களும் நீண்டகைகளும் நெறித்ததலைமயிர்களும் பெரியவாயும் மேகமண்டலம்போன்ற சரீரமும் கூர்மையானகோரப்பற்களுமுடையவனும் பயங்கரனும் சுழலுகின்ற கண்களையுடையவனுமாகிய ஹிடிம்பன், கோபித்து உள்ளங்கையை உள்ளங்கையினால்அறைந்து அடிக்கடி கைகளையுதறிப் பற்களைப்பற்களாற்கடித்து, "எந்தஅறிவுகெட்டவன் புசிக்கவிரும்புகின்றனக்கு இப்போது இடையூறுசெய்கிறான். ஹிடிம்பையும் பயப்படவில்லை; அனுப்பப்பட்டவள் என்வசமில்லை" என்றுசொன்னான். அவ்வாறு விகாரமானபார்வையுடன் ஓடிவருகின்ற அவளைக் கண்டதும் ஹிடிம்பை பயந்து பீமனைநோக்கிப் பின்வருமாறு சொல்லத்தொடங்கினாள்.

"துஷ்டஸ்வபாவமுள்ள ராக்ஷஸன் கோபத்துடன் இதோவருகிறான். ஆதலால், நான் எதைச்சொல்லுகிறேனோ அதைச் சகோதரர்களுடன்கூட அப்படியேசெய். வீரனே! நான்நினைத்தபடிபோகிறவள்; ராக்ஷஸபலமுள்ளவள். இந்தஎன்இடுப்பில் ஏறு. உன்னை ஆகாசமார்க்கமாகக் கொண்டுபோவேன். பகைவரைவருத்துகிறவனே! தூங்குகின்ற இந்தச்சகோதரர்களையும் தாயாரையும் எழுப்பு. உங்களெல்லாரையும், எடுத்துக்கொண்டு ஆகாயமார்க்கமாகப்போவேன்" என்றாள். பீமன், "பெரியனவும் அழகியனவுமாகிய நிதம்பங்களையுடையவளே! நீ அஞ்சாதே. நானிருக்கையில் இவன்ஒன்றும் செய்யான். அழகியஇடையுள்ளவளே! நீபார்க்கும்போதே இவனை நான்கொல்லுவேன். பயந்தவளே! இந்தராக்ஷஸாதமன் யுத்தத்தில் எனதுசெய்கையைத்தாங்கி எதிர்நிற்கமாட்டான். இவனன்றியும் எல்லாராக்ஷஸர்களும்கூட எதிர்நிற்கமாட்டார்கள். யானைத்துதிக்கைகளுக்குஒப்பான மிகவும் திரண்டிருண்ட இந்தஎன் இரண்டுகைகளையும், கதவுக்குறுக்குமரம்போன்ற இந்த என்துடைகளையும், திடமும் பெரிதுமான என்மார்பையும்பார். அழகானவளே! இந்திரனுடைய

பராக்கிரமத்தைப்போன்ற என்னுடையபராக்கிரமத்தை நீயே இப் போது காணப்போகின்றாய். பெரிய நிதம்பங்களையுடையவளே! என்னை மனிதனுகநினைத்து இப்போது குறைவாகப்பேசாதே" என் றுசொல்ல, ஹிடிம்பை, "புருஷஸிம்மமே! தேவதையைப்போல் உரு வமுள்ளஉன்னை நான் குறைவாகப்பேசவில்லை. அந்தராக்ஷஸனுடைய வன்மையை மனிதர்களிடத்திலேதான் நான்கண்டிருக்கிறேன்" என் றுசொன்னாள்.

ஜனமேஜயரே! அவ்வாறு ஸம்பாஷணைசெய்துகொண்டிருக்கும் அந்தப்பீமஸேனனுடைய அந்தச்சொற்களைக்கேட்டும் அந்தஹிடிம் பையினுடைய மனுஷ்யரூபத்தைக்கண்டும் மனிதரைத்தின்பவனுகிய ஹிடிம்பனென்னுமராக்ஷஸன் கோபித்தான். புஷ்பமாலைகளால் நிரப் பப்பட்டகூந்தலுடையவளும், பூர்ணசந்திரனைப்போன்ற முகமுள்ள வளும், அழகியபுருவங்களும் மூக்கும் கண்களும் மயிர்நுனிகளு முடையவளும், மெல்லியநகங்களும் தோளுமுள்ளவளும், ஸர்வா பரணங்களையும்பூட்டிக்கொண்டவளும், மிக்கஇலேசான வஸ்திரத் தைத் தரித்துக்கொண்டவளும், அவ்வாறு அழகான மனிதப்பெண் ணுருவத்தை எடுத்துக்கொண்டவளுமான அவளைப் புருஷனைவிரு ம்புகிறவளாகநினைத்து ராக்ஷஸன் கோபித்தான். கௌரவச்ரேஷ் டரே! பிறகு சகோதரியின்மீது கோபமுற்ற ராக்ஷஸன் பெரியகண் களைநெறித்து அவளைநோக்கி, "ஹிடிம்பையே! எந்தமதிகெட்ட வன் புசிக்கவிரும்புகின்ற எனக்குத் தடைசெய்கிறான். காமமோகம் கொண்டு என்கோபத்திற்கு நீபயப்படாமலிருக்கிறாய். என்ன? கெட் டவளே! புருஷன்மேல் ஆசையுள்ளவளே! எனக்குவேண்டாததைச் செய்கிறவளே! நமதுமுன்னோர்களாகிய ராக்ஷஸராஜர்களனைவர்க் கும் இகழ்ச்சியைச்செய்கிறவளே! நீ கெட்டாய். எவர்களையடை ந்து எனக்கு மிகப்பெரிய அனிஷ்டத்தைச்செய்தாயோ அப்படிப் பட்ட இவர்களனைவரையும் உன்னையுங்கூட நான் இப்போதே கொல் லப்போகிறேன்" என்றுசொன்னான். இவ்வாறு ஹிடிம்பையைப் பார்த்துச்சொல்லி, சிவந்தகண்களையுடைய அந்தஹிடிம்பன் பற்க ளால் பற்களைக்கடித்துக்கொண்டு பாண்டவர்களைக்கொல்வதற்காக ஓடிவந்தான். பகைவர்களானவீரர்களை வதைசெய்பவனுகிய பீமஸே னன் ஜனமில்லாதகாட்டில் இவ்வாறுகர்ச்சனைசெய்கின்ற ஹிடிம்ப னைப்பார்த்துத் தன்ஸஹோதரர்களும் தாயாரும் விழித்துக்கொள் ளாமல் காத்திருந்தான். யுத்தஞ்செய்கிறவர்களிற்சிறந்தவனும் மிகு ந்தபராக்கிரமசாலியுமாகிய பீமஸேனன் அவன்வரும்போதேபார்த்து

அவனைப்பயமுறுத்தி, "நில்; நில்" என்றுசொன்னன். சகோதரியின்மேல்கோபித்த அந்தராக்ஷஸனைப்பார்த்துப் பீமஸேனன் சிரித்துக்கொண்டு பின்வருமாறு சொல்லலானன்.

"ஹிடிம்பா! ஸுகமாகத்தூங்குகின்ற இவர்களையெழுப்புவதனால் உனக்கு ஆவதென்ன? புத்திகெட்டவனே! மனிதரைத்தின்பவனே! நீ பலத்தினால் என்னிடம்வா; என்னையேயடிக்கவருவாய். ஸ்திரீயைக்கொல்வது உனக்குத்தகாது. அதிலும், அவள் உனக்குத் தீங்குசெய்யாமல் வேறொருவன் தீங்குசெய்திருக்கையில் அவளைக்கொல்வது தகாது. இப்போது இந்தச்சிறுமி தன்புத்திபூர்வகமாக என்மேல் அன்புவைக்கவில்லை. சரீரத்துக்குள் ஸஞ்சரிப்பவனாகிய அனங்கனாலல்லவோ இவள் எவப்பட்டிருக்கிறாள். கெட்ட நடத்தையுள்ளவனே! ராக்ஷஸர்களுடையபுகழைக் கெடுப்பவனே! உன்கட்டளையினாலேயேவந்த இந்தப் பயந்தவளாகிய உன்ஸஹோதரி இப்போது என்ரூபத்தைப்பார்த்து என்மேல்ஆசைப்படுகிறாள். உன்னிடத்தில் இவள் அபராதப்பட்டவில்லையே? மன்மதனால்செய்யப்பட்ட குற்றத்திற்காக நீ இவளை இகழத்தகாது. துஷ்டஸ்வபாவமுள்ளவனே! நானிருக்கையில் நீ பெண்வதைசெய்யத்தகாது. மனிதரைத்தின்பவனே! நீயொருவன் என்னொருவனோடு சண்டைக்குவா. நான் ஒருவனுக உன்னைஇப்போதே யமன்வீட்டுக்கனுப்புவேன். ராக்ஷஸனே! இப்போது என்பலத்தால்பீடிக்கப்பட்ட உன்தலை மிகுந்த பலமுள்ள யானையின்காலால் மிதிக்கப்பட்டதுபோல் பிளந்துபோகட்டும். இப்போது யுத்தத்தில் என்னால்கொல்லப்பட்ட உன்உறுப்புக்களைக் கழுகுகளும் பருந்துகளும் நரிகளும் மகிழ்ந்து தரையில் இழுக்கட்டும். மனிதர்களைப்புசிக்கின்ற உன்னுல் முன்னர் எப்போதும் கெடுக்கப்பட்டிருந்த இவ்வனத்தை நான் இப்போது ஒருநொடியில் ராக்ஷஸர்அற்றதாகச்செய்வேன். ராக்ஷஸனே! இப்போது உன்ஸஹோதரி, மலையைப்போன்றஉன்னை ஸிம்மம் மஹாகஜத்தை இழுப்பதுபோலப் பலமுறை நான்இழுப்பதைப் பார்க்கப்போகிறாள். ராக்ஷஸர்களில் பாவியே! நீ என்னால்கொல்லப்பட்டபின் வனத்தில்ஸஞ்சரிக்கும் மனிதர்கள் இந்தவனத்தில் உபத்திரவமில்லாமல் ஸஞ்சரிப்பார்கள்" என்றுசொல்ல, ஹிடிம்பன், "மானிடனே! உன்னுடைய வீண்இரைச்சலாலும் தற்புகழ்ச்சியினாலும் என்னபயன்? இதையெல்லாம் செய்கையாற்செய்து புகழ்ந்துகொள்வாயாக. தாமதம் செய்யாதே. உன்னைப் பலமுள்ளவனுகவும் பராக்கிரமமுள்ளவனுகவும் நினைக்கிறயல்லவா. இப்போது என்னுடன் எதிர்த்தபிறகு நீ அதிக

பலமுள்ளவனுயிருப்பதை அறியப்போகிறாய். நான் இப்போது இவர் களைக்கொல்லப்போகிறதில்லை. இவர்கள் ஸுகமாகத்தூங்கட்டும். கெட்டபுத்தியுள்ளவனே! இந்தநான் அப்பிரியமாகப்பேசுகின்ற உன் னைத்தான் இப்போது கொல்லுகிறேன். உன்சரீரத்தினின்றும்வரும் ரத்தத்தைக்குடித்துவிட்டு அதன்பிறகு இவர்களையும் கொல்வேன். எனக்குப்பிரியமில்லாததைச்செய்த இவர்களையும் அதன்பிறகு கொல் வேன்" என்று சொன்னன்.

இவ்வாறுசொல்லி, பிறகு ராக்ஷஸன், கோபத்துடன் கையை ஓங்கிக்கொண்டு எதிரிகளையடக்குகிறவனுகிய பீமஸேனனை எதிர்த் தோடினன். பயப்படத்தக்க பராக்ரமமுள்ளபீமன், எதிர்த்து ஓடி வரும் அவனுல் வேகமாகஓங்கப்பட்டகையைச் சிரித்துக்கொண்டே தூரிதமாகப் பிடித்தான். பீமன் அவனைப்பலாத்காரமாகப்பிடித்து, துள்ளுகின்றஅவனை ஸிம்மம் அற்பமிருகத்தையிழுப்பதுபோல் எட்டு விற்கிடைத்தூரம் இழுத்தான். பாண்டவனுல் பலாத்காரமாகப் பிடிக் கப்பட்ட அவ்வரக்கன் உடனே கோபித்துப் பீமஸேனனைக்கட்டிக் கொண்டு பயங்கரமான சப்தத்தைச்செய்தான். மிகுந்தபலமுள்ள பீமன், ஸுகமாகத்தூங்குகின்ற தன்ஸஹோதரர்களுக்குச் சப்தம் உண்டாக்கக்கூடாதென்றுநினைத்து மறுபடியும் அவனைப் பலாத் காரமாகஇழுத்தான். அந்தராக்ஷஸனைக் கையிற்பிடித்துக்கொண்டு கருடன் ஸர்ப்பத்தை மூக்கினுல் வாலில்பிடித்துக்கொண்டுபோவ துபோல் வெகுதூரம் வேறிடத்திற்குக்கொண்டுபோனன். அந்த ஹிடிம்பனும் பீமஸேனனுமாகியஇருவரும் பலத்தினுல் ஒருவரை யொருவர் பிடித்துஇழுத்தனர்; சிறந்தபராக்கிரமத்தைவெளியிட்ட னர். கோபங்கொண்ட இரண்டுமதம்பிடித்த அறுபதுவருஷத்து யானைகளைப்போல் அவர்கள் அப்போது மரங்களைமுறித்தனர்; கொ டிகளையிழுத்தனர். வேகமும் பலமுமுள்ள அவ்விருவரும் தூடை களின்வேகக்காற்றினுல் மரங்களைப்பெயர்த்தும் தூடைகளினுல்கொடி ப்பந்தல்களையெல்லாம்அறுத்தும் சப்தங்களினுல் எங்குமுள்ளவிலங்கு களையும் பறவைகளையும்பயப்படுத்தியும் பலத்தினுல் கர்வித்து ஒரு வரையொருவர்வதஞ்செய்யக்கருதினவர்களாயிருந்தனர். அப்போது பீமனுக்கும் ராக்ஷஸனுக்கும், முன்னேதேவாஸுரயுத்தத்தில் வருத் ராஸுரனுக்கும் இந்திரனுக்கும் நடந்ததுபோல், கொடியசண்டை நடந்தது. பெருங்கிளைகளுள்ளமரங்களைமுறித்துக் கோபத்தினுல் அடித்துக்கொண்டனர். ஆச்சாமரங்களையும் பனைமரங்களையும் பச் சிலைமரங்களையும் மாமரங்களையும் ஆலமரங்களையும் மருதமரங்களையும்

தான்றிமரங்களையும் *ந்யக்ரோதமரங்களையும் புளியமரங்களையும் பே
ரீச்சமரங்களையும் பலாமரங்களையும் இன்னும்எல்லா மஹாவிருக்ஷங்
களையும் பிடுங்கியும், கற்களையும் முட்களையும்எடுத்தும், ஒருவர்மேல்
ஒருவர் கோபத்தினால் யுத்தத்தில்அடித்தனர். மரங்கள்நிறைந்த அவ்
வனமெல்லாம், மரங்களில்லாமற்போனபோது, கற்களையும் புதர்களை
யும் முட்செடிகளையும் மலைகளின்சிகரங்களையும் ஆகாயத்தையளாவு
கின்றமலைகளையும் கற்குவியல்களையும் பாறைகளையும் பெயர்த்தெடுத்
துப் பகையுடன் ஒருவரையொருவர் ஜயிக்கவிரும்பி யுத்தத்தில்
மேமேலெறிந்தனர். அவ்வனத்தைச்சுற்றி ஐந்துயோசனைதூரம் கொடி
கள் புதர்கள் கற்களில்லாமலும் மிருகங்களில்லாமலும் முற்றிலுஞ்
செய்தனர். ராஜச்ரேஷ்டரே! அந்தப்பீமராக்ஷஸர்களுடையயுத்தத்
தினால் அந்தஅழிவில்லாதவனம் சற்றுநேரத்தில் ஆமைமுதுகுபோல்
தலக்கமாகஆய்விட்டது. துடைகளையும் கைகளையும்வருத்தி ஒரு
வரையொருவர் இழுத்தும் மேமேலதூக்கியும் கீழேஇழுத்தும் பின்
னல்இழுத்தும் வாய்ப்பேச்சில்லாமலே ஒருவர்க்கொருவர்கர்ச்சனை
செய்துகொண்டும் ஒருவரையொருவர்கட்டியிழுத்துக்கொண்டும் கற்
களையொன்றோடொன்றுமோதுவதுபோன்றஅடிகளினால் ஒருவரை
யொருவர் அடித்தனர். யுத்தத்திலுள்ளஆவேசத்தினால், 'ஹூ! ஹூ!'
என்றசப்தம்வெளிப்பட்ட பயங்கரமான கைச்சண்டை பலிசக்கர
வர்த்திக்கும் இந்திரனுக்கும் நடந்ததுபோல்நடந்தது. அவர்களு
டைய பெருஞ்சப்தத்தினால்விழித்துக்கொண்ட அந்தப்புருஷச்ரேஷ்
டர்களாகியபாண்டவர்களும் அவர்கள்தாயாரானகுந்தியும் முன்னே
நின்ற ஹிடிம்பையைக் கண்டனர்.

நூற்றுபத்தாறுவது அத்தியாயம்.

ஹிடிம்பவதபர்வம். (தொடர்ச்சி.)

(பிறகு தந்தியும் அவள்புத்திரர்களும் கண்விழித்துக்கொண்டு ஹிடிம்ப
னைப் பீமன்யுத்தஞ்செய்வதை ஹிடிம்பைமுகமாகத்தெரிந்து,
அவ்விடம்சென்றபோது ஹிடிம்பனைப் பீமன்கொன்றது.)

அந்தப்புருஷச்ரேஷ்டர்கள் குந்தியுடன்கூடக் கண்விழித்துக்
கொண்டு மானிடர்க்கரிதான ஹிடிம்பையின்அழகைக்கண்டு ஸ்மய
புற்றவராயினர். பிறகு குந்தி அவளுடையமிகுதியானஅழகைக்

* ஆலில் ஒருவகை.

கண்டு திகைத்து நயமாகவும் மெல்லவும் பின்வருமாறு இனியசொற் களைச்சொல்லத்தொடங்கினாள்.

"தெய்வப்பெண்ணைப்போன்றவளே! பெண்ணரசே! நீ யாருடையவள்? நீ யாவள்? என்னகாரியமாகவந்தாய்? எங்கிருந்துவருகிறாய்? நீ இந்தவனத்திற்கே தேவதையா? அல்லது அப்ஸரஸா? எதற்காக இங்கேநிற்கிறாய்? அதையெல்லாம் எனக்குச்சொல்" என்றாள். அதற்கு ஹிடிம்பை, "இதோ நீபார்க்கின்ற இருண்டமேகத்துக்கொப்பான இந்தப்பெரியவனம் ஹிடிம்பனென்னுமராக்ஷஸனுக்கும் எனக்கும் இருப்பிடம். அம்மா! பெண்களிற்சிறந்தவளே! என்னை அந்த ராக்ஷஸராஜனுடைய உடன்பிறந்தவளென்றும் உன்னையும் உன்புத்திரர்களையும் கொல்லவிரும்புகின்றஅவனால் அனுப்பப்பட்டவளென்றும் அறி. கொடியஎண்ணமுள்ள அவனுடையசொல்லினாலேதான் நான் இங்கேவந்தேன். மெருகிட்டபொன்போன்றஒளியுள்ளவனும் மிகுந்தபலசாலியுமான உன்மகனைக் கண்டேன். மேலானவளே! அதன்பின் எல்லாப்பிராணிகளின்உள்ளங்களிலும்சஞ்சரிக்கும் மன்மதனால் உன்புத்திரனைக்குறித்து ஏவப்பட்டு அவன்வசப்பட்டிருக்கிறேன். அதனால், மஹாபலசாலியான உன்புத்திரன் என்கணவனாக என்னால்வரிக்கப்பட்டான். அவனை இவ்விடம்விட்டுக் கொண்டு போவதற்கும் ஆரம்பித்தேன். ஆனால், என்னால்முடியவில்லை. பிறகு நான் தாமதிப்பதைக்கண்டு அந்தராக்ஷஸன் தானே இந்தஉன்புத்திரர்களனைவரையும் கொல்வதற்குவந்தான். புத்திசாலியும் மஹாத்மாவும் எனதுநேசனுமாகிய உன்புதல்வனால் அவன் பலாத்காரமாக இங்கிருந்து கசக்கிக் கொண்டுபோகப்பட்டான். இவ்வாறு யுத்தத்தில் பராக்கிரமத்தைக்காண்பிக்கின்றவர்களும் மிகுந்தவேகமுள்ளவர்களும் ஒருவரையொருவர் இழுப்பவர்களும் கர்ச்சிப்பவர்களுமான இந்தநரராக்ஷஸர்களைப்பார்" என்றுசொன்னாள்.

அவள்சொல்லைக்கேட்டதும் வீரர்களாகிய யுதிஷ்டிரரும் அர்ச்சுனனும் நகுலனும் ஸஹதேவனும் எழுந்தனர். அவர்கள், ஒருவரையொருவர்கட்டிக்கொண்டு இழுக்கிறவரும் ஜயத்தைவிரும்புகிறவரும் இரண்டுஸிம்மங்களைப்போல் மிகுந்த வலிமையுள்ளவருமாகிய அவ்விருவரையும் கண்டார்கள். அப்போது ஒருவரையொருவர்கட்டிக்கொண்டு பலமுறை இழுத்துக் காட்டுத்தீயின்புகைக்கொப்பான பூமியின்தூளியைக் கிளப்பினர். தலையின்தூசியினால்மூடப்பட்டவர்களும் மலைபோன்றவர்களுமாகிய அவர்கள் பனியினால்மூடப்பட்ட இரண்டுகுன்றுகளைப்போல் காணப்பட்டனர். அப்போது ராக்ஷஸ

னால் பீமன் பீடிக்கப்படுவதைக்கண்டு அர்ச்சுனன் மேல்ல நகைத்துக் கொண்டு, "பீமா! சிறந்தகைகளுள்ளவனே! அஞ்சாதே. சிரமத்தினால் கூடித்துப்போனநாங்கள் பயங்கரமானஉருவமுள்ள ராக்ஷஸனோடு நீ எதிர்த்ததைஅறியாமற்போனோம். குந்திபுத்ரனே! உனக்கு உதவிசெய்வதற்கு நானிருக்கிறேன். ராக்ஷஸனைத் தள்ளிவிடுவேன். நகுலனும் ஸஹதேவனும் தாயாரைக்காப்பாற்றுவர்" என்று சொல்ல, பீமஸேனன், "சும்மாபார்த்துக்கொண்டிரு; நீ அவசரப்படவேண்டாம். என்கைக்குளகப்பட்டஇவன் மறுபடி ஜீவிப்பது எக்காலுமில்லை. 'பீமஸேனன்கைக்குளகப்பட்ட ராக்ஷஸன்இறந்துபோகாமல் அர்ச்சுனன்பராக்கிரமத்தினால் இறந்தான்' என்றசொல் வரத்தகாது. அர்ச்சுனா! இந்தராக்ஷஸன் நம்மை ஒருபோதும்கொல்லமுடியாது. உயிருடன் இவனைவிடமாட்டேன். பரதச்ரேஷ்டனே! பயப்படாதே" என்றுசொல்ல, அர்ச்சுனன், "பீமனே! கொடிய ராக்ஷஸனோடு இரவின்முன்பாகத்திலேயே சேர்ந்திருக்கிறாய். ராத்திரிமுடிந்தது; இன்னமும்பெருஞ்சண்டைமுடிவாகவில்லை. பீமனே! இந்தப்பாவியானராக்ஷஸன் வெகுநேரம்ஜீவித்திருப்பானேன்? சத்துருக்களைபழிப்பவனே! போகவேண்டியதாயிருக்கையில் இங்கே அதிகநேரம்நிற்கமுடியாது. கிழக்குச்சிவக்கப்போகிறது. காலைச்சந்தி வரப்போகிறது. ருத்திரனுடையகாலமாகிய ஸந்தியாகாலத்தில் ராக்ஷஸர்கள் இன்னும்அதிகபலவான்களாவார். பீமனே! தரிதப்படு; விளையாடாதே. பயங்கரமானராக்ஷஸனைக் கொல்; மாயையை மிகுதியாகச்செய்வான். கைகளின்வலிமையை உபயோகப்படுத்து. உன்னுடையமஹிமை உனக்குத்தெரியும். முன்னே மிகுந்தபலமுள்ள விருத்திராஸுரனை இந்திரன்கொன்றதுபோல் மனிதர்களுடையநன்மைக்காக ராக்ஷஸனைக்கொல். அவ்வாறன்றி யுத்தத்தில் இந்தராக்ஷஸனை நீ கஷ்டமாகநினைக்கிறாயாயின் உனக்கு நான்உதவி செய்கிறேன். விரைவாகமட்டும் இவன்கொல்லப்படவேண்டும். வ்ருகோதரனே! அல்லது நானே இவனைக்கொன்றுவிடுவேன். வேலை செய்து களைப்புற்றநீ இப்போது நிற்பதுநலம்" என்று சொன்னன்.

அர்ச்சுனனால் இவ்வாறுசொல்லப்பட்ட பீமன் கோபத்தினால் ஜ்வலிப்பவன்போலாகி, ப்ரளயகாலத்திலுள்ள வாயுவைப்போன்ற பலத்தை எடுத்துக்கொண்டான். பிறகு பீமன் கோபங்கொண்டு மேகம்போன்ற அவ்வரக்கனுடையதேகத்தைத் தூக்கி வேகமாக நூறுமுறை சுழற்றினன். சிறந்தகைகளையுடைய பீமஸேனன் கோபித்து ராக்ஷஸனுடையசரீரத்தைச் சுழற்றிக்கொண்டும் அடிக்கடி கர்ச்

சித்துக்கொண்டும் பின்வருமாறு சொல்லவும்சொன்னான். "நீ மணி தர்களுடையமாம்ஸங்களினால் வீணைகப்பருத்திருக்கிறாய்; வீணைக வளர்ந்திருக்கிறாய்; வீண்ணெண்ணைமுள்ளவன்; ஆதலால், நீ * வீண் மரணத்துக்குத் தகுதியுள்ளவன். இப்போது சும்மாஇரு. இந்த வனத்தை உபத்திரவமானசத்துருவில்லாமல் சுகமாகச்செய்துவிடு வேன். ராக்ஷஸா! மறுபடியும் மனிதரைக்கொன்று தின்னமாட் டாய்" என்று பீமன்சொல்லித் தரையில்தீபத்துக் கைகளினால்கச க்கி ஆட்டைக்கொல்வதுபோலச் சீக்கிரமாகக்கொன்றான். அவன் பீமனால்கொல்லப்படும்போது ஜலத்தினால்நனைக்கப்பட்ட பேரிகை யைப்போல் அவ்வனத்தையெல்லாம் நிரப்பிக்கொண்டு பேரிசைச்சல் இரைந்தான். பலசாலியானபீமன் அவனைக் கைகளினால்அமுக்கியெடு த்து அவனுடைய அந்தத்தலையைத்திருகிக் கழுத்துடன் அதை யெடுத்துவிட்டான். அவன் தலையைப்பெயர்த்தபிறகு அதைக்கழுத் துடன் மேலேஎறிந்தான். பீமனால்எறியப்பட்ட அந்தராக்ஷஸ னுடைய தலையானது காதுகளும் கண்களும்போனதும் நாவில்லாத தும் பற்களில்லாததும் ரக்தத்தினால்நனைக்கப்பட்டதுமாகக் காணப் பட்டது. அங்கே ராக்ஷஸன் கைகளைநீட்டியிழுக்கப்பட்டும் மாம்ஸ மும் தோலும் உட்புறங்களும் கிழிக்கப்பட்டும் வஜ்ராயுதத்தினால் அடிபட்டவன்போலத் தலையில்லாத உடலாகஇருந்தான். ஹிடிம்பன் கொல்லப்பட்டதைக்கண்டு அந்தப்பலசாலிகளானபாண்டவர்கள் மகி ழ்ந்தனர். அந்தராக்ஷஸன் யுத்தத்தில் கொல்லப்பட்டதைக்கண்டு அந்தஹிடிம்பையும், கண்ணுக்குத்தெரியாதவர்களாக ஸ்வர்க்கத்திற் சேர்ந்திருந்த ரிஷிகள்சாரணர்கள் முதலியவர்களும் ஸந்தோஷமடை ந்து, 'நல்லதுநல்லது' என்று அந்தப்பீமனைக்கொண்டாடினர். யுதிஷ் டிரர்முதலான ஸஹோதரர்களும் சந்தோஷமடைந்து சத்ருஸம்ஹா ரஞ்செய்த புருஷஸிம்மமானபீமஸேனனைக் கௌரவப்படுத்தினர். அர்ஜுனன், படிப்படித்தக்க பராக்ரமமுள்ள மஹாத்மாவான பீம ஸேனனைப்பூஜித்து மறுபடியும் அவனைநோக்கி, "பிரபுவே! இந்த வனத்திற்குஅருகில் நகரமிருப்பதாக நான் நினைக்கிறேன். துரித மாகச்செல்வோம். உனக்கு ஸுகமுண்டாகட்டும். துரியோதனன் நம்மையறியாமலிருக்கவேண்டும்" என்றுசொன்னான். பிறகு மஹா ரதர்களாகிய அந்தப்புருஷச்ரேஷ்டர்களனைவரும், "அப்படியே" என்றுசொல்லித் தாயாருடன்கூடப் புறப்பட்டனர். ராக்ஷஸியான ஹிடிம்பையும் புறப்பட்டாள்.

* ஸ்வர்க்கம் முதலியது இல்லாதமாணம்.

நூற்றுறுபத்தேழாவது அத்தியாயம்.

ஹிடிம்பவதபர்வம். (தொடர்ச்சி.)

(பீமன் ஹிடிம்பையைக்கொல்ல ஆரம்பித்ததைத் தர்மராஜா தடுத்ததும், அவள் தான் ராக்ஷஸத்தன்மையில்லாதவளென்றும் வருங்கால உணர்ச்சியுடையவளென்றும் தெரிவித்ததும், பிறகு அவளை அங்கீகரிக்கும்படி பீமனுக்குத் தர்மதி கட்டளையிட்டதும்.)

அந்தராக்ஷஸனுடைய ஸஹோதரியாகிய ஹிடிம்பையென்னும் அந்தராக்ஷஸி பேசாமல் அந்தப்பாண்டவர்களைநோக்கியேசென்றாள். பிறகு குந்தியையும் பாண்டுபுத்ரரான தர்மராஜாவையும் வணங்கி அனைவரையும் கௌரவித்தபிறகு பீமஸேனனைப்பார்த்து "நான் உன்னைப்பார்த்தமாத்திரத்திலேயே மன்மதனுக்கு வசப்பட்டேன். அதனால் என்சகோதரனுடைய கொடியசொல்லை விட்டுவிட்டு உன்னையே அனுஸரித்திருக்கிறேன். மிக்கபயங்கரனான ராக்ஷஸன்விஷயத்தில் உன்செய்கையைக்கண்டேன். நான் பணிவிடைசெய்துகொண்டு உன்சரீரத்தையனுபவிக்க விரும்புகிறேன்" என்றாள். பீமன், அதைக்கேட்டு, "ராக்ஷஸர்கள் பிறரைமயங்கச்செய்கின்ற வஞ்சகத்தைக்கைக்கொண்டு பகைமையை மனத்திலேயேவைத்திருப்பர். ஹிடிம்பையே! நீ உன்ஸஹோதரன்போன இந்தவழியே செல்" என்று சொன்னான். யுதிஷ்டிரர், "ஆண்சிங்கமே! பீமனே! நீ கோபித்திருந்தபோதிலும் பெண்வதைசெய்யாதே. பாண்டவனே! உன்சரீரத்தைக் காத்துக்கொள்வதினும் அதிகமாகத் தர்மத்தைக்காப்பாற்று. கொல்லுகிற எண்ணத்தோடுவந்த மஹாபலசாலியானராக்ஷஸனையே கொன்றாய். அந்தராக்ஷஸனுடைய சகோதரி கோபித்து நம்மை என்னசெய்யலாம்" என்றுசொன்னார். பிறகு ஹிடிம்பை குந்தியையும் குந்திபுத்திரானயுதிஷ்டிரரையும் வந்தனஞ்செய்து கைகூப்பிப் பின்வருமாறுசொல்லத்தொடங்கினாள்.

"அம்மா! இவ்வுலகத்தில் பெண்களுக்கு மன்மதனுண்டான துயரத்தைப்பற்றி நீ அறிவாயே! சிறந்தவளே! அஃது இப்போது பீமஸேனன்விஷயமாக எனக்குவந்திருக்கிறது. அந்தப்பெருந்துக்கமானது காலத்தையெதிர்பார்த்து என்னுள்பொறுக்கப்பட்டிருந்தது. அந்தக்காலம் இதோவந்திருக்கிறது. எனக்கு ஸௌக்கியலாபம் வரப்போகிறது. மேலானவளே! வேண்டியவர்களையும் ஸ்வதர்மத்தையும் உறவினரையும்விட்டு, புருஷச்ரேஷ்டனை உன்னுடைய இந்

தப்புத்திரன் கண்வனுக என்னுல்வரிக்கப்பட்டான். புகழ்பெற்ற நான் இந்தவீரனுலும் உன்னுலும் நிராகரிக்கப்பட்டால் பிழைத் திரேன். இதனை உண்மையாக உனக்குச்சொல்லுகிறேன். உத்தம ஸ்திரீயே! அதனுல் நீ என்னைத்தெரியாதவளென்றுவது அன்புள் ளவளென்றுவது அனுஸரித்தவளென்றுவது நினைத்து என்மீது தய வுசெய்யத் தகுதியுள்ளவளாயிருக்கிறாய். மிகுந்தபாக்கியமுள்ளவ ளே! என்கணவனுகிய இந்த உன்புத்திரனோடு என்னைச்சேர்த்து வை. தேவதாரூபமுள்ள அவனை எடுத்துக்கொண்டு என் இஷ்டப் படி செல்வேன். மறுபடியும் கொண்டுவந்துவிடுவேன். சிறந்தவளே! என்னிடத்தில் நம்பிக்கைவை. என்சகோதரன் என்னை அனுப்பின ஸமயத்தில் முதலிலேயே நான் இவனை அடைந்திருப்பேன். என் சகோதரன் ராத்திரியில் பீமஸேனனைக் கொல்லக்கருதினதினுல் உட னேவந்துவிட்டான். எவ்வளவுக்கெவ்வளவு பாக்கிரமஞ்செய்தாலோ எவ்வளவுக்கெவ்வளவு எதிரியைஆக்கிரமித்தாலோ அவ்வளவுக்கவ் வளவு பாண்டவனைப்பற்றி மன்மதனுல் மோகமடைந்தேன். அம்மா! அரசியே; நான் ராக்ஷஸியல்லேன். நான் இரவில்சஞ்சரிப்பவளல் லேன். நான் ஸாலகடங்கடி என்னும் ஈசுவரி. ராக்ஷஸனுக்குச் சகோ தரியாயிருப்பதுமாத்திரமே. சிறுபெண்ணும் தேவதையைப்போன்ற ரூபமுள்ளவளுமாகிய நான் உன்புத்திரனுடன்கூடச்சேர்ந்து அவனை முன்னிட்டு உங்கள்எல்லாருக்கும் பணிவிடைசெய்யப்போகிறேன். புருஷஸிம்மங்களே! நீங்கள் அஜாக்கிரதையாயிருக்கும்போது ஜாக் கிரதையோடு கவனித்துக்கொண்டும் அடிமையைப்போல எப்போ தும் பணிவிடைசெய்துகொண்டும் ஆபத்காலத்தில் உங்களுக்கசை யேற்றிவைப்பேன். புண்ணியஞ்செய்தவர்களைத் தேவவிமானம்வஹி ப்பதுபோல் உங்களை என்முதுகினுல் எடுத்துச்செல்வேன். நீங் கள் அனுக்கிரகஞ்செய்யுங்கள். பீமஸேனன், என்னையடையக்கட வன். நான் இவ்வாறுசொல்லியும் என்காரியத்தைப்பற்றி முன் போலவே நிராகரிக்கப்படுவேனுயின் இப்பூமியிலுள்ள பாபலோ கங்களுக்குப் போவேனென்பதில் ஸந்தேஹமில்லை. நான் மனத்தி னுல்நினைத்து எக்காலத்திலுமுள்ள எல்லாவற்றினையுமறிவேன்..இந்த ஆபத்தைத் தாண்டுவித்தால்மட்டும் நான் உயிரைவைத்திருப்பேன். மற்றொன்றினுலும் வைத்திரேன். தர்மந்தெரிந்தவன் எல்லாவற்றை யும் அங்கீகரித்து நடத்தவேண்டும். ஆபத்தில் உயிரைக்காப்பவ னெவனோ அவன்தான் தர்மமறிந்தவரிற்சிறந்தவன். தர்மத்திலிருப் பவர்களுக்கு வரும்ஆபத்துத் தர்மத்திற்கே அபாயமென்று சொல்

லப்படுகிறது. புண்ணியத்தினாலேதான் மனிதன் ஒருயிரைக்காப் பாற்றுகிறான். உயிரைக்காப்பதும் புண்ணியந்தான். எந்தவகையி னாலாவது தர்மத்தையேசெய்தல்வேண்டும். அதில் இகழ்ச்சியில்லை. இந்தஸமயத்தில் எல்லாவற்றினும்பெரிதான காமத்தினால்பீடிக்கப் பட்ட பெண்ணுகியஎன்னையும் காப்பாற்று. ஸாதுக்கள் தர்மார்த்த காமமோக்ஷங்களாகிய நான்குபுருஷார்த்தங்களுக்குமே தயைசெய் வார்கள். தர்மத்தினிடம் அன்புள்ளரிஷிகள் அப்படிச்செய்வதைத் தர்மமென்றுசொல்லுகின்றனர். நான் திவ்யஞானத்தினால் நடந்த வற்றையும் இனிநடப்பனவற்றையும் அறிகிறேன். ஆதலால், உங்க ளுக்கு நன்மையைச்சொல்லப்போகிறேன். ஒருசிறந்ததடாகம் ஸமீ பத்திலிருக்கிறது. இப்போது அந்தத்தடாகத்துக்குச்சென்று ஸ்நா னஞ்செய்து மரத்தின்கீழ்ப்படுத்திருந்து நாளைக்காலையில் ஜகத்பிரபு வும் தாமரையிதழ்போன்ற கண்களையுடையவரும் * மஹாத்மாவு மாகிய வ்யாஸபகவான் எதிர்வந்துதோன்றக்கண்டு துயரத்தைநீக்கப் போகிறீர்கள். துரியோதனனால் ஊரைவிட்டுப்போனதும் வாரணவ தத்தில் கொளுத்தப்பட்டதும் விதுரரால் நீங்கள்காப்பாற்றப்பட்ட தும் அவருக்கு ஞானக்கண்ணினால்தெரிந்திருக்கிறது. அவர் உங்க ளுக்குச் சாலிஹோத்ரரிஷியின் ஆச்ரமத்தில் வாஸத்தை விதிக்கப் போகிறார். இந்தப்புண்ணியவிருக்ஷம் மழை காற்று வெயில்களைக் காக்கக்கூடியது. இந்தஜலத்தைக் குடித்தவுடன் பசிதாகங்கள்போய் விடும். இந்தத்தடாகமும் இந்தமரமும் சாலிஹோத்ர மஹரிஷி தவத்தினால் உண்டாக்கப்பட்டவை. காரன்னங்களும், ஸாரைகளும், ராஜஹம்ஸங்களும், ஆண்பெண்அன்றில்களும் கந்தர்வர்களின் குர லோடொத்த இனியகீதங்களைப் பாடுகின்றன" என்றாள்.

அவளுடைய அந்தவாக்கியத்தைக்கேட்டு, குந்தி, சிறந்தப்ரஜ் ஞையுள்ளவரும் எல்லாத்தர்மங்களிலும் நிபுணருமான யுதிஷ்டிரரைப் பார்த்து, "பாரதனே! தர்மவான்களிற்சிறந்த நீ நான்சொல்வதைக் கேள். இந்தராக்ஷஸியானவள் தன்வசத்தினால் தர்மத்தைச் செவ்வை யாகச் சொல்லுகிறாள். கருத்தில் கெட்டவளாயிருந்தால் ராக்ஷஸி பீமனின் என்னசெய்யலாம்? நீ அங்கீகரிக்கும்பக்ஷத்தில் இவள் புத்தி ரோத்பத்தியைப்பற்றி வீரனான பீமனையடையட்டும்" என்றுசொன் னாள். பிறகு யுதிஷ்டிரர், "ஹிடிம்பையே! நீசொல்வது ஸரிதான். இந்தவிஷயத்தில் ஸம்சயமில்லை. அழகியஇடையுள்ளவளே! ஆனால் நான் எவ்வாறுசொல்வேனோ அவ்வாறு நீதர்மத்திலிருக்கவேண்டும்.

* 'மகத்பூதம்' என்பது மூலம்.

பிரியமானவளே! நீ ஒவ்வொருநாளும் கடமைகளைமுடித்துக்கொண்டு ஸ்நானஞ்செய்து பரிசுத்தையாகி இனியரூபத்தோடிருந்து, பீமஸேன னும் ஸ்நானஞ்செய்து கடமைகளைமுடித்து உத்ஸாஹத்திற்குரிய மங் களங்களைச் செய்துகொண்டபின் இவனைத் தினந்தோறும் அடையக் கடவாய். மனைவேகமுள்ள நீ பகற்காலங்களில் இஷ்டப்படி இவ னுடன்ஸஞ்சரி. ஆனால், ஒவ்வொருராத்திரியிலும் இந்தப்பீமஸேனனை நீ கொண்டுவந்து விடவேண்டும். ஸந்தியாகாலத்துக்குமுன்னமே இவன் விடவேண்டியவன். எப்போதும் காப்பாற்றவேண்டியவன். நீ கர்ப்பம்தரிக்கிறவரையில் இப்படியேபீமனோடு ரமித்துக்கொண் டிரு. பிரியமானவளே! உனக்கு இதுநியமம். எந்தக்காலமும் அனு கூலையாயிருந்து அஜாக்ருதையைவிட்டுப் பணிவிடைசெய்யவேண்டும். நன்மையையே செய்யவேண்டும்" என்றுசொன்னர்.

நூற்றுபத்தெட்டாவது அத்தியாயம்.

ஹிடிம்பவதபர்வம். (தொடர்ச்சி.)

(பாண்டவர்கள் ஹிடிம்பையோடு சாலிஹோத்ர ஸரஸுக்குப்போய் அவர் செய்த ஆதித்யத்தைப்பெற்றுக்கொண்டதும், வியவஸ்தைசெய்து கொண்டு பீமன் ஹிடிம்பையை விவாஹஞ்செய்துகொண்டு அவளோடு அநேகஇடங்களில்சென்றுவந்ததும், வியாஸர் வந்து தந்தியை ஸமாதானஞ்செய்துபோனதும்.)

யுதிஷ்டிரர்சொல்லக்கேட்டுப் பீமனையடைந்த அந்தஹிடிம் பை குந்தியைத் தன்சரீரத்தில்வஹித்திக்கொண்டு பீமார்ச்சுனர்களுக்கு இடையிற்செல்லுகிறவளும், நகுலஸஹதேவர்களுக்கு முன்செல்லு கின்றவளும் யுதிஷ்டிரரைத் தனக்குமுன்னிட்டுக்கொண்டவளுமாக ஜலத்தைத்தேடி ரமணீயமான சாலிஹோத்ரஸரஸை அடைந்தாள். மரத்தினடிக்குச்சென்று அதை வீட்டைப்போல்விளக்கிப் பாண்டவர் களுக்கு இலைகளினல்வஸிக்குமிடம்கட்டித் தனக்கும்குந்திக்கும் ஒரு புறத்தில் இடஞ்செய்தாள். பிறகு பசிதாகத்தினற்பீடிக்கப்பட்ட பாண்டவர்கள் ஸ்நானஞ்செய்து பரிசுத்தர்களாகி ஸந்தியாவந்தனஞ் செய்து தாகத்திற்காக ஜலத்தைமாத்திரம் உட்கொண்டனர். அப் போது சாலிஹோத்ரமஹரிஷி அங்கே பாண்டவர்கள்பசித்திருப் பதையறிந்து மிகுதியான அன்னபானங்களை மனத்தினல்நினைத்தார். அப்போது அந்தப்பாண்டவர்களனைவரும் குந்தியுடன் சயனம்பண்

ணிக்கொண்டு அரக்குமாளிகையில்நடந்ததையும் ராக்ஷஸன்செய்த தையும் இன்னும் பலவிதமானகதைகளையும் சொல்லிப் பேச்சுமுடிந்த போது ராஜபுத்திரியான குந்தி பாண்டுபுத்திரனை பீமஸேனனை நோக்கிச் சொல்லலானாள்.

"உனக்குப் பாண்டுமஹாராஜா எப்படியோ அப்படியே ஜ்யேஷ்டஸஹோதரனை யுதிஷ்டிரனும் பூஜிக்கத்தக்கவன். நான் தர்மந்தெரிந்த இந்தயுதிஷ்டிரனுக்கும் பூஜ்யை. ஆதலால் உனக்கு மிகவும்பூஜ்யை. புருவராஜாவே! அதனால், பாண்டுவின்பிரீதிக்காக என்விருப்பத்தைச்செய். வ்ருகோதரனே! பாவியும் புத்திதேர்ச்சியில்லாதவனுமாகிய துரியோதனனால் அபகாரஞ்செய்யப்பட்டநான் அந்தஅபகாரத்திற்குப் பரிஹாரத்தைக் காணுமளிருக்கிறேன். சில தினங்களில் யோகக்ஷேமம் உண்டாகும். ஆதலால், பயமில்லாததும் பிறர்வசக்கூடாததுமாகிய இந்தஇடத்தில் நாம் சுகமமாகவஸிப்போம். வ்ருகோதரனே! இது மற்றெருபெருந்துயரமும் தர்மசங்கடமுமாயிருக்கிறது; சிறந்தபிரஜ்ஞையுள்ளவனே! உன்னைப்பார்த்தவுடன் மன்மதனால்தூண்டப்பட்ட இந்தப்பெண் தர்மத்தைமுன்னிட்டு யுதிஷ்டிரனிடமும் என்னிடமும் வேண்டிக்கொண்டிருக்கிறாள். தர்மத்திற்காக நீ இவளுக்குப் புத்திரனைக்கொடு. அந்தப்புத்திரன் நமக்கு நன்மையைச்செய்வான். மறுமொழியை நான்விரும்பவில்லை. நாங்களிருவரும்சொல்வதைச் செய்" என்றாள்.

பீமஸேனன், அதைக்கேட்டு ஆகட்டுமென்று பிரதிஜ்ஞைசெய்து, "உன் ஆஜ்ஞையை வேதவிதியென்றேநினைத்துச் செய்வேன்" என்று சொன்னான். ஸஹோதரர்கள்நடுவில் அந்தராக்ஷஸியைப்பார்த்து நேராகவும் சொல்லத்தொடங்கினான். "ராக்ஷஸியே! நான்உனக்கு ஸத்தியத்தைதாடுகூடிய ஒருவ்யவஸ்தையைச்சொல்லுகிறேன்; கேள். சிறந்தவளே! அழகியஇடையுள்ளவளே! எவ்வளவுகாலத்தில்உனக்குப் புத்திரோத்பத்திநேரிடுமோ அவ்வளவுகாலம்வரையில் உன்னுடன்கூடச் சஞ்சரிப்பேன். முக்கியமாக உன்னுடைய அற்பத்தனத்தை என்னிடத்தில்வெளிப்படுத்தாதே. பெண்ணரசி! உத்தமஜாதிப்பெண்களுடைய குணங்களே பொருந்தினவளாக என்னை அடையக்கடவாய்" என்றான். அந்தஹிடிம்பையென்னும் ராக்ஷஸி அப்படியேஆகட்டுமென்று பிரதிஜ்ஞைசெய்து பகலில் தன்வீடுசென்று ராஜாக்களுக்குரிய உணவுகளைக்கொண்டுவந்தாள். அந்தஹிடிம்பை அழகியரூபத்துடன் பீமசேனனைத்தூக்கிக்கொண்டு விளையாடுவதற்காக மேலேசென்றாள். உயர்ந்தரூபத்தையெடுத்து எல்லாஆபரணங்களையுமணிந்துகொண்டு மிரு

கங்களும் பக்ஷிகளும் சப்திக்கின்ற அழகானமலைச்சிகரங்களிலும் ரம
ணீயமான தேவாலயங்களிலும் மிக்கஇனிமையாக ஸம்பாஷணைசெ
ய்து எந்தக்காலமும் பீமஸேனனை ஸந்தோஷப்படுத்திக்கொண்டிருந்
தாள். அவ்வாறுகமல பாகமுடியாதகாடுகளிலும், மலைகளிலும், மரங்
களிலும், மலைச்சரிவுகளிலும், தாமரைப்புஷ்பங்களும் நீலோத்பலங்க
ளும் அடர்ந்த அழகானதடாகங்களிலும், வைடூரியக்கல்மயமான மண
ல்களையுடைய ஆற்றுத்தீவுகளிலும், அழகானதேவதாவனங்களிலும்,
மலைச்சிகரங்களிலும், அழகானதுறைகளும் காடுகளும் ஜலங்களு
முடைய காட்டாறுகளிலும், மணிகளும் பொன்னும்நிரம்பிய நகரப்
பிரதேசங்களிலும், யக்ஷர்களுடையஇடங்களிலும், குலபர்வதங்களின்
சிகரங்களிலும், எல்லாக்காலங்களிலும் காய்த்தமரங்களோடுகூடிய
மானஸஸரோவரத்தின்காடுகளிலும் மிக்கஅழகுள்ளரூபத்தைத்தரித்
துப் பீமனை ஸுகிக்கச்செய்தாள். புண்ணியஞ்செய்தவன் அப்ஸர
ஸுடன்கூட ஸ்வர்க்கத்தில் எவ்வாறு மிக்கசந்தோஷத்துடனிருப்
பானோ அவ்வாறே சிறந்ததேஜஸ்ஸுள்ள பீமஸேனன் மிக்கஅதிகமான
ஸந்தோஷத்தையடைந்து அவளுடன்கூடி ரமித்தான். அழகாயும்,
பொன்னும் ரத்னமும்சேர்ந்த மேகலையுள்ளதாயுமிருக்கிற அவளு
டையநிதம்பத்தை அடிக்கடி மர்த்தனஞ்செய்து பீமன் திருப்தியடைய
வில்லை. மானினைவேகமுள்ள அவள் அவ்வாறு ஆங்காங்கு பீமனைச்சந்
தோஷப்படுத்திக்கொண்டு அவனால் தானும் அடிக்கடி சந்தோஷ
மடைந்து உத்ஸாஹத்துடன் ரமித்தாள். அவள் பகற்காலங்களில் பீம
ஸேனனுடன்ரமித்து இராக்காலங்களில் அவன்வீட்டில்கொண்டு
வந்து அவன்தாயாரிடம் காண்பித்தாள். அவ்வாறுபீமஸேனன் ஒவ்
வொருநாளும் ஸஹாதரர்களுடன் தூங்கிக்கொண்டிருந்தான். அவ
ளும் குந்திக்குப்பணிவிடைசெய்துகொண்டு அவள்பக்கத்திலேயே
இரவுமுழுதும் இருந்தாள். சாப்பாட்டையும் வாய்க்குத்தாம்பூலம்
வாசனைமுதலானபோகப்பொருள்களையும் கொண்டுவருவாள்.

அந்தராத்திரிநீங்கியவுடன் த்ருடமானநியமமுள்ளவரும் சிறந்த
பிரஜ்ஞையுள்ளவரும் திவ்யஜ்ஞானமுள்ளவரும் சிறந்ததவமுள்ளவரு
மாகிய வ்யாஸர்வந்தார். மஹாத்மாவும் நன்மையைச்செய்பவருமா
கிய க்ருஷ்ணத்வைபாயனரை நமஸ்காரஞ்செய்து அந்தப்பாண்டவர்க
ளும் குந்தியும் அவள்மருமகளான ஹிடிம்பையுமாகிய அனைவரும்
கைகூப்பிநின்றனர். "பரதச்ரேஷ்டர்களே! த்ருதராஷ்டிரபுத்திரர்
கள் தாங்கள் நன்றுகவாழ்ந்துகொண்டு உங்களை அதர்மமாக ஊரை
விட்டுஓட்டினரென்பது எனக்கு முன்னமேமனஸில்தெரிந்தவிஷயம்.

அதையறிந்துதான் உங்கள்விஷயத்தில் உயர்ந்தநன்மையைச்செய்யக் கருதி வந்திருக்கிறேன். நீங்கள் வ்யஸனப்படவேண்டாம். இவை யெல்லாம் உங்களுடையஸுகத்திற்கேயாகும். வீரர்களே! நண்பர் களைப்பிரிக்கும்செய்கையை நீங்கள் பூர்வஜன்மத்தில் செய்திருக்கி றீர்கள். அதன்பயனாக இதுசேர்ந்திருக்கிறது. பகைவரைப் பரித பிக்கச்செய்பவர்களே! நீங்கள் வ்யஸனப்படவேண்டாம். தீவினைப் பயன்முடிந்தபிறகு நீங்கள் பழையசிலைமையுள்ளவர்களாகவே உற வினருடன் சேர்ந்தராஜ்யத்தில் விளையாடிக்கொண்டிருப்பீர்கள். ஐய மில்லை. வேண்டியவர்கள் தாழ்ந்தவர்களிடத்திலும் குழந்தைகளிடத் திலும் நேசம்வைக்கின்றனர். ஆதலால், இப்போது எனக்கு உங்களி டத்தில் ஸ்நேஹமதிகமாயிருக்கிறது. நான் ஸ்நேஹத்தைமுன்னிட்டு எந்தநன்மையைச் செய்யக்கருதுகிறேனோ அதைச்சொல்லுகிறேன்; கேளுங்கள். என்வரவையெதிர்பார்த்து இங்கேயே மறைவாகவாஸஞ் செய்யுங்கள். இது சாலிஹோத்ரரிவியின்தபஸினால் ஸ்ருஷ்டிக்கப் பட்ட தடாகம். இந்தஜலம் அமுதான து. பசி தாகம் களைப்புக்களைப் போக்குவது. காரியத்தைநாடி ஆறுமாதம்வரையில் சௌக்கியமாக இங்கே சஞ்சரியுங்கள்" என்று அந்தஸ்யாஸர் வீரர்களான அந்தப் பாண்டவர்களைத்தேற்றி அன்புடன்தழுவிக்கொண்டு, பின்பு, அந்தப் பிரபு, குந்தியையும், "மருமகளே! அழாதே! அழாதே!" என்ற சொல்லைச்சொல்லித் தேற்றத்தொடங்கினர். "ஜீவிக்கிறபுத்திரர்களை யுடையவளே! தர்மந்தவறுதவனும் தர்மராஜாவும் உனதுபுத்ரனுமான இந்தயுதிஷ்டிரன் பூமியிலுள்ளஅரசர்களனைவரையும் ஆளப்போகி றான். இவன் பூமிமுழுமையும் தர்மத்தினால்ஜயித்துத் தர்மத்தைச் செய்து புலன்களைஅடக்கி மலைகளும் காடுகளுமடங்கிய சிறந்தபூமி முழுமையையும் பிராம்மணர்களுடையபலத்தினால் தன்வசத்தில்வை த்துக்கொண்டு ஆளப்போகிறான். இது திண்ணம். உனக்கும் மாத் ரிக்கும் புத்ரர்களும் லோகப்பிரஸித்தர்களுமான இவ்வைவரும் உல கத்தில் புகழ்பெற்று அப்போது தங்கள்தேசத்தில் ஸந்தோஷமான மனத்தோடு ஸுகமாக விளையாடப்போகின்றனர். இந்தப்புருஷ ச்ரேஷ்டர்கள் இப்பூமியையஜயித்து நிரம்பினதக்ஷிணையுள்ள ராஜ ஸூயம் அச்வமேதமுதலிய யாகங்களைச்செய்யப்போகின்றனர். உன் புத்திரர்கள் தனத்தாலும் சௌக்கியத்தாலும் வேண்டியவர்களைச்சிற ப்பித்துப் பித்ருபிதாமஹபரம்பரையாகவந்த ராஜ்யத்தை அடையப் போகின்றனர். தாமரைஇதழ்போன்றகண்களையுடைய உன்மருமகள் கமலபாலிகையென்றுபெயருள்ளவள். இவள், பீமன்வசத்திலிருந்து

கொண்டு ஒருபுத்திரனைப்பெறப்போகிறாள். அந்தப்புத்திரனால் கஷ்டகாலங்களில் நீங்கள் கரையேற்றப்படுவீர்கள். ஒருமாசம் இங்கே காத்திருங்கள். நான் திரும்பவும்வருவேன். இவ்வாறு தேசகாலங்களையறிந்துகொண்டு மிகுந்தஸந்தோஷத்தையடைவீர்கள்" என்று சொன்னார். ஜனமேஜயராஜாவே! அவர்களெல்லாரையும் கைகூப்பிக்கொண்டு அவ்வாறேயாகட்டுமென்றுசொல்லப்பட்டு, பிரபுவும் ரிஷியுமான வ்யாஸபகவான் வந்தவாறே சென்றார்.

நூற்றறுபத்தோன்பதாவது அத்தியாயம்.

ஹிடிம்பவதபர்வம். (தொடர்ச்சி.)

(கடோத்கசஜனனமும், பிறகு நினைத்தபோது வருவதாகச்சொல்லி ஹிடிம்பையும் கடோத்கசனும் சென்றதும்.)

வ்யாஸபகவான்சென்றபிறகு, பாண்டவர்கள் துக்கத்தைவிட்டு அந்தஆலமத்தண்டை ஆறுமாகாலம் ஸுகமாகவஸித்தனர். இலைகளையும் கிழங்குகளையும் கனிகளையும் ஆகாரமாகக்கொண்டு பாண்டவர்கள் தவஞ்செய்துகொண்டிருந்தனர். ஜனமேஜயமஹாராஜாவே! பிறகு அனுமதிகொடுக்கப்பெற்ற கமலபாலிகை மானிடர்க்கரிய ஆபரணங்களையும் ஆடைகளையும் மலர்மாலைகளையும் சாந்துகளையும்அணிந்துகொண்டு மனோவேகமாக ஆங்காங்கு பீமஸேனனை எப்போதும் மகிழ்வித்துக்கொண்டிருந்தாள். நினைத்தரூபமெடுக்கின்ற ஹிடிம்பையென்னும்ராக்ஷஸி பீமஸேனனுக்காகச் சகோதரரான பாண்டவர்களை ஏழுமாஸகாலம் இவ்வாறு வனத்தில்வஸிக்கச்செய்தாள். அந்தப் பீமன் ஸுகமாகவிளையாடிக்கொண்டு அந்தக்காலத்தைக்கழித்தான். காமரூபமெடுக்கின்ற அந்தராக்ஷஸி பீமஸேனனோடு ஏழுமாகம்சேர்ந்துவஸித்தபிறகும் ஸம்போகதிருப்திபெறாமலே கர்ப்பம்தரித்தாள். அந்தஅரக்கி மிகுந்தபலமுள்ள பீமஸேனனிடமிருந்து, விகாரமான கண்களும் பெரியவாயும் முனைகளைப்போன்ற காதுகளுமுடையவனும், மிக்கபயங்கரனும், பயங்கரமானநிறமுள்ளவனும், மிகச்சிவந்த கண்களும் கூர்மையானகோரப்பற்களுமுடையவனும், மஹாரதனும், பெரியவில்லாளியும் மஹாபராக்கிரமசாலியும், மஹாபலவானும்,மஹாவேகமுள்ளவனும், பெரியதேகமுள்ளவனும், மிகக்கறுத்தவனும், பெருங்கழுத்தும் பெருங்கைகளுமுடையவனும், மனுஷ்யனுக்குப் பிறந்தும் மனுஷ்யத்தன்மையில்லாதவனும், அஞ்சத்தக்கவேகமுள்

ளவனும், முருட்டுத்தன முள்ளவனும், பகைவரை அடக்குகிறவனு மாகிய புத்திரனைப் பெற்றாள். அவன் பிசாசங்களையும் மனி தர்களையும் மற்றப் பிராணிகளையும் அதிக்கிரமித்திருந்தான். ரா ஜாவே! அவன் பாலனாயிருக்கும்போதே மனிதர்களில் அதிக சக்தி யைபடைந்திருந்தான். எல்லா அஸ்திரங்களிலும் சிறந்தவீரனாகவும் மிகபலசாலியாகவுமிருந்தான். ராக்ஷஸப்பெண்கள் கர்ப்பத்தைத் தரித்து உடனே பிரஸவிக்கின்றனர். நினைத்தரூபம தரிப்பவரும் அ திக ஆபங்களைவிடுப்பவருமாயிருக்கின்றனர். சிறந்தவில்லாளியும் விரி ந்ததலைமயிருள்ளவனுமாகிய அந்தப்புத்திரன் அப்போது தாய் தக ப்பன்மார்களை வந்தனஞ்செய்து அவர்களின் பாதங்களைப் பிடித்துக் கொண்டான். அவர்கள் அவனுக்குப் பெயரிடத்தொடங்கினர். "இ வனுடைய தடம் என்று சொல்லப்பட்ட தலை நெறித்த மயிருள்ள தாயிருக்கிறது" என்று அவன் தாய் அவனைப்பற்றிச் சொன்னாள். அதனால் அவனுக்குக் கடோத்கசன் என்ற பெயர்உண்டாயிற்று. அந் தக்கடோத்கசன் அந்தப்பாண்டவர்மேல் அன்புள்ளவனாக இருந் தான். அவர்களுக்கும் அவன் எப்போதும் அவர்கள் மனத்தைவிட் டுப்பிரியாத அன்பனாயிருந்தான். பெரியதேகமுள்ள கடோத்கசன் குந்தியையும் பாண்டவர்களையும் வரிசையாக நமஸ்காரஞ்செய்து, அவர்களையழைத்து, "குற்றமற்றவர்களே! பெரியோர்களானஉங்களு க்கு நானென்ன செய்யக்கடவேன்; கூச்சமில்லாமற் சொல்லுங்கள்" என்று சொன்னன். அவ்வாறு சொல்லுகின்ற அந்தப் பீமசேனன் புத்திரனைப்பார்த்துக் குந்தி, "நீ கௌரவர்கள் வம்சத்திற் பிறந்த வன்; பீமசேனனைப்போன்ற பலவானாகவே யிருக்கிறாய். ஹிடும்பனுக் கும் நீ மூத்த குமாரன். புத்திரனே! ஸஹாயம் செய்" என்று சொ ல்ல, குந்தியினால் இவ்வாறு சொல்லப்பட்டபிறகு, கடோத்கசன் தந் தைமார்களை நமஸ்காரஞ்செய்து, "இவ்வுலகத்தில் ராவணனும் இந் திரஜித்தும் எவ்வாறு மஹாபலவான்களாயிருந்தனரோ அவ்வாறே தேகப்பிரமாணத்தாலும் பராக்கிரமத்தாலும் அவர்களுக்கு ஒப்பா னவனாகவும் உலகத்திலுள்ள மனிதர்களுக்கு மேற்பட்டவனாகவுமிருக் கிறேன். காரியம் வரும்போது உங்களிடம் வந்து சேருவேன்" என் று சொன்னன். அந்தராக்ஷஸத்தலைவன் அவர்களிடம் விடைபெற் றுக்கொண்டு வடதிசையைநோக்கிச்சென்றான். மஹாரதனாகிய அந் தக்கடோத்கசன் நிகரற்றபராக்ரமமுள்ள கர்ணனுடைய சக்தியாயுத த்தினால் மித்தமாகப் பிரயுக்தம் செய்கிறவனாக மஹாத்மாவான் பகவா

னல் ஸ்ருஷ்டி செய்யப்பட்டவன். அப்போது பீமன் அந்த ஹிடிம்பை யைப்பார்த்து, "கமலபாலினையே! எனக்கு உசிதவாசம் முடிந்தது. மறுபடியும் ராஜ்யத்திலிருக்கும்போது நீ எங்களைப் பார்ப்பாய்" என்று சொன்னன். அந்த ஹிடிம்பை, "நாதனே! பிரபுவே! பாரதனே! எப்போது ரகஸ்யத்தில் ரமிக்கவிரும்பி என்னை நினைப்பாயோ அப்போது உடனே மறுபடியும் உன்னிடம் வருவேன்" என்று சொல்லி உடனே சென்றுள். ஹிடிம்பை பீமஸேனனிடம் காதல் வைத்தும் தான் செய்துகொண்ட வியவஸ்தையை நினைத்துத் தன்னிடத்திற்குத் திரும்பிச் சென்றுள்.

நூற்றெழுபதாவது அத்தியாயம்.

ஹிடிம்பவதபர்வம். (தொடர்ச்சி.)

(ட்யாஸர் பாண்டவர்களை வனத்தில் ஸந்தித்து ஏகசக்ரநகரியில் பிராமணக்ருகத்தில் குடிவைத்தது.)

பிறகு அந்தப் பாண்டவர்களனைவரும் சாலிஹோத்ரமஹரிஷியின் ஆச்ரமத்தில் அந்த ரிஷியினுல் காட்டியுள்ள வற்றைக்கொண்டு பூஜிக்கப்பெற்றனர். அப்போது அந்த மஹாத்மாக்களெல்லாரும் குந்தியுடன்கூட அம்மஹரிஷியினிடம் விடை பெற்றுக்கொண்டு தாங்கள் ஜடைகளைத்தரித்துமரஉரிகளையும்தோல் களையும் உடுத்து ரிஷிவேஷம் தரித்துப்பிராமணர்க்குரிய ரூபத்தோடு வேதங்களையும் வேதாங்கங்களையும் முற்றிலும் அத்தியயனஞ்செய்து கொண்டிருந்தனர். ராஜாவே! தர்மந்தெரிந்தவர்களும் மஹாரதர்களுமான அந்தப்பாண்டவர்கள் சாலிஹோத்ரமஹரிஷியின் அனுக்ரஹத்தினுல் ராஜநீதிசாஸ்திரஜ்ஞானத்தையும், தர்க்கசாஸ்திரஜ்ஞானத்தையும் அடைந்து ஸந்தோஷமுற்று ஒரு வனத்தின் வழியாக மற்றொருவனம் சென்று அநேக மிருகக்கூட்டங்களைக் கொன்று மத்ஸ்யதேசங்களுக்கும் த்ருகர்த்த தேசங்களுக்கும் பாஞ்சால தேசங்களுக்கும் கீசகதேசங்களுக்கும் இடையிலுள்ள அழகான காட்டுப் பிரதேசங்களையும் தடாகங்களையும் பார்த்துக்கொண்டுவிரைவாக வனத்தைத்தாண்டிச்சென்றனர். அம்மஹாத்மாக்கள் சில விடங்களில் தாயாரைத் தூக்கிக்கொண்டு விரைந்து சென்றனர். சில விடங்களில் களைத்து நின்றனர். சில காடுகளில் ஸந்தோஷமடை

ந்துநின்றனர். அவர்கள் சிலவிடங்களில் இஷ்டப்படிதடந்து அடிக்கடி. பந்தயத்துடன்சென்றனர். அவர்களெல்லாரும் வழியில் தங்கள்பிதா மஹாராகியவியாஸரைக்கண்டனர். அந்தவீரர்களனைவரும் அப்போது அம்மஹாத்மாவான கிருஷ்ணத்வைபாயனரை அபிவாதனஞ் செய்து தாயாருடன்கூடக் கைகூப்பிநின்றனர். வியாஸர் "புருஷச்ரேஷ்டர்க ளே! நீங்கள் அந்த ஆச்ரமத்தைவிட்டுப் புறப்பட்டது எனக்குத் தெரிந்தது. கடோத்கசன் பிறந்தது தெரிந்ததனாலும் எனக்கு ஸந் தோஷ மதிகமாயிற்று. இதோ ஸமீபத்தில் அழகியதும் தீங்கில்லா ததுமாகிய நகரமிருக்கிறது. இங்கு என்வரவை யெதிர்பார்த்து மறை ந்து வாஸஞ் செய்யுங்கள்" என்று கூறினர். அந்தப்பிரபுவான வியா ஸர் வீரர்களான அந்தப்பாண்டவர்களை இவ்வாறு தைரியப்படுத்தி, ஏகசக்ரநகரத்துக்குப் புறப்பட்ட குந்திக்கு ஸமாதானஞ்சொல்லலா னர். "எந்தமனிதனும் தர்மத்தைமாத்திரமும் செய்யான். அவ்வாறே பாபத்தை மாத்திரமும் செய்யான். புண்ணியபாபங்கள் இரண்டை யும் செய்யாதவன் உலகத்தில் எவனுமில்லை. செய்பவன் புண்ணிய பாபங்களின் பலனை அடைந்தேதீருவான். பாபத்தின் பயனைப் பெருந்துயரம் நேர்ந்தது யதுபுத்ரியே! கௌரவிக்கத்தக்கவளே! அதனால் விசனத்தில் மனத்தைச் செலுத்தாதே" என்றுசொல்லி அவர்களை ஒரு பிராமணன் வீட்டில் குடிவைத்து ரிஷியும் பிரபு மாகிய வ்யாஸபகவான் தம்மிஷ்டப்படி சென்றார்" என்றனர்.

ஹிடிம்பவத பர்வம் முற்றிற்று.

நூற்றெழுபத்தோராவது அத்தியாயம்.

(பகவத பர்வம்.)

(பாண்டவர்கள் ஏகசக்ரநகரத்தில் வஸித்ததும், அந்தவீட்டுப்பிராமணன் மனைவியுடன் துக்கித்ததைக்கண்டு குந்தி அங்குசென்றதும், அவன் குந்தியிடம் புலம்பியதும்.)

ஜனமேஜயர், "பிராமணச்ரேஷ்டரே! மஹாரதர்களும் அந்தக் குந்தி புத்திரர்களுமான பாண்டவர்கள் ஏகசக்ரநகரம் சென்று அத ற்குமேல் என்னசெய்தனர்?" என்று கேட்க, வைசம்பாயனர் சொல் லுகிறார்.

"ரமணீயமான பலவகை வனங்களையும் பூமியிலுள்ள தேசங் யும் நதிகளையும் தடாகங்களையும் பார்த்துக்கொண்டு ஏகசக்ரநகரம்

பிச்சென்று அந்தமஹாமுனிவர்களாகிய குந்திபுத்ரர்கள் ஒரு பிராமண கிருகத்தில் வஸித்தனர். ராஜாவே! அவரனைவரும் அப்போது பிக்ஷை யெடுத்தனர். யுதிஷ்டிரரையும் குந்தியையும் நிணைத்துகொண்டே பிக்ஷையெடுத்தனர். ஜடையோடுகூடிய பிரம்மசாரிகளாகப் பிக்ஷை யெடுத்துக்கொண்டிருக்கும்போது, குணங்களினால் நகரத்து ஜனங் களுக்குப் பார்ப்பதற் கினியவர்களாயிருந்தனர். நகரத்து ஜனங்கள் "பார்ப்பதற்கினியவரும் பரிசுத்தரும் தேவகுமாரரைபோன்றவரும் யோக்கியரும் மென்மையான சரீரமுள்ளவரு நாகிய இந்த தவமுள்ள பிராமணர்கள் பிக்ஷையெடுக்கத்தகாதவர்கள்; ராஜ்யத்துக்குத் தகுதி யுள்ளவர்" என்றும், "இந்த மிருதுவான சரீரமுள்ள ரிஷிகள் உண் மையில் பிராமணரல்லர். ஏதோ காரணத்தினால் இந்தப்பூமியில் மாறுவேஷமாகச் சஞ்சரிக்கின்றனர்; எல்லாலக்ஷணங்களும் அமைந்த இவர்கள் ஒவ்வொருகாலும் பிக்ஷையெடுப்பதற்குத் தகுதியுள்ளவர்க ளல்லர்; காரியத்தைக்கருதித் திரிகின்றனர்" என்றும் உள்ளதுள்ளபடி சொல்லிக்கொண்டனர். தங்களுக்குப்பந்துக்கள் வந்ததாக நிணைத்து நகரத்துஜனங்கள் ஒவ்வொருகாலும் உபசாரங்களோடுபிக்ஷாபாத்தி ரங்களைப் பக்ஷணங்களினாலும் போஜனங்களினாலும் நிரம்பச்செய்த னர். பாண்டவர்கள் மௌனவிரதமெடுத்துக்கொண்டு பிக்ஷைகளை வாங்கினர். அந்தப்பாண்டவர்கள்போய் நேரமானதை நிணைத்துத் தாயார் அவர்களைப்பற்றி விசனப்பட்டுக்கொண்டு துக்கத்தினால் நீர் நிரம்பின கண்களோடு தரையைக் கீறிக்கொண்டிருந்தாள். பிராமண கிருஹங்களில் தாயாரை நிணைத்துக்கொண்டே பிக்ஷையெடுத்துத் தாயாரிடத்திலுள்ள மரியாதையினால் கட்டுப்பட்டவர்களாக விரை வில் திரும்பிவந்தனர். இரவும் பகலும் எதிர்பார்த்துவந்த தாயா ராகிய குந்தியிடம் ஒப்புவித்தனர். முன்று சேர்ந்த பிக்ஷான்னமெல் லாவற்றையும் தாயார் தனித்தனியே பகுத்துக்கொடுத்தபிறகுதம்தம் பாகங்களை அவர்கள் இஷ்டப்படி தனித்தனியே புஜித்தனர். வீரர் களாகிய பாண்டவர்கள் ஐவரும் தாயாருடன்கூட முழுப்பிக்ஷான்னத தில் ஒருபாதியைப் புஜித்தனர். மஹாபலசாலியான பீமன் மாத்தி ரம் ஒருபாதியைப் புஜித்தான். முன்னே சிறந்த அன்னத்தைப புஜித்தவனை அந்தப்பீமன் நிரம்பின போஜனஞ்செய்தவனாக இரு க்கவில்லை. போஜனத்ருப்தியில்லாமையினாலுண்டான சிறுமை மாறு தலையும் இளைப்பையும் அடைந்தான். ராஜாவே! ஜ்வலிக்கின்ற பெ ருந்தீயில் ஒருநெய்த்துளி எவ்வாறிருக்குமோ அவ்வாறே பிக்ஷைச்

சோற்றின் அரைப்பாகம் அவனுக்கிருந்தது. ராஜாவே! பரதச் சேஷ்டரே! அந்த மஹாத்மாக்கள் அவ்வாறே அவ்விடத்தில் வஸிக் கும்போது நீண்டகாலமாயிற்று. பீமனும் பிராம்மண ஸ்னேகிதர்க ளோடு விளையாடினபிறகு, ஒரு குயவனுடைய கிணைகத்தினுல் மிகப் பெரிய பாண்டத்தை அடைந்தான். அத்தப்பீமனுடைய செய் கையினுல் வியப்புற்ற குயவன் சிரித்துக்கொண்டு அளவுக்கு மிஞ் சின பெரிய பாண்டத்தைச் செய்து பீமனுக்குக் கொடுத்தான். அவன் வியக்கத்தக்க காரியம் செய்வதற்காக, பீமன் பெரிய மண் சுமையைபெடுத்தான். நாழியரிசி மண்சுமைகளினுல் குயவனைச் சந்தோஷப் படுத்தினன். பிக்ஷையை விடாமல் எடுத்துக்கொண்டே மண்பாண்டங்களை அடிக்கடி செய்தான். அந்த மண்பாத்திரத்தை பெடுத்துக்கொண்டுவந்த பீமனைக்கண்டு ஜனங்கள் ஸகைத்துப் பரி காசம் செய்தனர். பலவகையான பக்ஷணங்களையும் போஜனங்களை யும் கொணர்ந்து போட்டனர். இவ்வாறுகளே எப்போதும் புஜித்த பிறகு தாயாரிடம் ஸகாந்தத்தில், "அம்மா! முன்னை சிறந்த அன் னத்தினுல் வளர்க்கப்பட்ட நான் வயிறு நிரம்பாமலே யிருக்கிறேன்" என்று சொன்னன். பிறகு ஒருகால் அந்தப் புருஷச்ரேஷடர்கள் பிக்ஷைக்குப்போயினர். பீமஸேனன்மட்டும் குந்தியுடன் சேர்ந்து அங்கே இருந்தான். பாரத வீர! அப்போது பிராமணன் வஸிக்கு மிடத்தில் தாக்ஷண்யமினுண்டான மிகப்பயங்கரமான பேரிரைச்சல் கிளம்பினதைக் குந்தி கேள்வியுற்றாள். ராஜாவே! அதிகமாகக் கதறிப் புலம்புகிற அவர்களைக்கண்டு அந்தக்குந்தி தயையினுலும் நல்ல ஸ்வபாவத்தினுலும் தாங்கவில்லை. நல்லவளான குந்தி மனத்தினுண் டான துக்கத்தினுல் கலக்கப்பட்டவள்போல் தயையுடன் பீமனை நோக்கிப் பின்வருமாறு சொல்லலானுள்: "புத்திரனே! பிராமணன் வீட்டில் திருதராஷ்டிரன் பிள்ளைக்குத் தெரியாமலும் கௌரவிக்கப் பெற்றும் வியஸனத்தைவிட்டும் மிகச்சுகமாக வஸிக்கிறோம். புத்தி ரனே! அதனுல் நான் இந்தப் பிராமணனுக்கு ஸுகமாக வஸித்த வர்கள் எந்த இஷ்டத்தைச் செய்வதோ அவ்வகையான அந்த இஷ் டத்தை எப்போது செய்வேனென்று ஸதாகாலமும் நினைத்துக்கொ ண்டிருக்கிறேன். குழந்தாய்! எவனிடத்தில் செய்ந்நன்றி கெடாம லிருக்கிறதோ அவன்மாத்திரந்தான் மனிதன். மற்றொருவன் இவ னுக்கு எவ்வளவு செய்வனோ அதைவிட மிகுதியாக அவனுக்கு இவன் செய்யக்கடவன். ஆதலால் இந்தப்பிராமணனுக்கு இந்தத்துய

ரம் நிச்சயமாக வந்து விட்டது. இந்தச் சமயத்தில் உதவிசெய்தோ மானால் புண்ணியமுண்டாகும்" என்றாள். பீமன் (அதைக்கேட்டு), இவனுக்கு என்னதன்பம் யாரால் உண்டாயிற் றென்று தெரிந்து கொள். தெரிந்தகொண்டபிறகு மிக்க அசாத்தியமாயினும் அதைச் செய்வேன் என்று சொன்னான்.

ராஜாவே! அவர்கள் இவ்வாறு பேசிக்கொண்டிருக்கும்போது மறுபடியும் அந்தப் பிராமணனும் அவன் மனைவியும்அழுதவனலுண்டான கூச்சலைச் செவியுற்றனர். பிறகு குந்தி, கட்டப்பட்ட கன்றையுடையபசுவைப்போல் அந்தமஹாத்மாவானபிராமணனுடைய அந்தப் புரத்தில் துரிதமாக நுழைந்தாள். அப்போது அங்கே மனைவியோடும் பிள்ளையோடும் பெண்ணோடுங்கூட முகம்வெளுபட்டிருந்த அந்தப் பிராமணன்பேசுகிறான். "ரசமில்லாததும் பயனற்றதும் துன்பத்திற்குக்காரணமும் பிறர்க்குப்பட்டதும் மிக்கவெறுப்புக்கு இடமுமாகிய இவ்வுலகவாழ்க்கை எதற்கு? பிழைத்திருப்பதில் துயரமதிகம். பிழைத்திருப்பதில் தாபமதிகம். உயிர்வாழ்க்கையிலிருப்பவனுக்கு (இரட்டைகள்) அதாவது : ஸுகதுக்கம், லாபநஷ்டம், ஜயாபஜயம், சீதோஷ்ணம் முதலியவைகள் வருவதுதவறாது. ஆக்மாஒன்றுதான் தர்மார்த்தகாமங்களை யனுபவிக்கின்றது. இவைகளில் பிரிவும் முடிவில்லாப்பெருந்துயரம். சிலர்வீட்டைச்சிலாக்கியமாகச்சொல்லுகின்றனர் * அஃது எவவகையிலுமில்லை அர்த்தத்தையடைந்தால் எல்லா † நரகங்களும் வருகின்றன. பொருளீட்டமுயல்வது பெருந்துயரம். பொருள் கிடைத்தபின் அதற்குமேலான துயரம். பொருளில்ஆசைஉண்டானவனுக்கு அதுவிலகினபோதுமிகப்பெருந்துயரம் உண்டாகிறது. எவனுக்குத் தான்விரும்பினதிரவியலாபங்கள் எவ்வளவு உண்டாகின்றனவோ அவ்வளவு வ்யஸனமென்னும் ஆணிகள் அவன் உள்ளத்தில் நாட்டப்படுகின்றன. கொஞ்சகாலமிருக்கத்தக்கதும் மஹாபயமுள்ளதுமாகிய அவ்விதமான இந்தஉயிர்வாழ்க்கையையடைந்துபாரியையோடுஞ்சேர்ந்தஎனக்குவைராக்யம்கிடைக்கவில்லை. இந்த ஆபத்திலிருந்து எதனல்விடுபடுவேனோ அந்த உபாயம் எனக்குத்தெரியவில்லை. பிள்ளைபெண்சாதிகளுடன்கூட உபத்திரவமில்லாத இடத்திற்கு ஓடிப்போவேன். பிராமணப்பெண்ணே! எங்கேகூடும

---

* துர்லபமானது என்பது.

† துன்பங்களும்.

மோ அங்கே போவதற்கு நான் முன்னே முயற்சிசெய்தேன். அஃது உனக்குத்தெரியும். ஆனால்நீஎன்சொல்லைக்கேட்கவில்லை. அறிவுகெட்ட வளே! என்னால் பலமுறை வேண்டப்பட்டும், "இங்கு பிறந்தேன்; இங்கு வளர்ந்தேன்; இங்கு என்தந்தையும் தாயுமிருக்கின்றனர்"என்று சொன்னயல்லவா? கிழவனாகிய உன்பிதாவெகுநாளைக்குமுன்னேஸ்வர்க்கம் சென்றான். உன்தாயும்அப்படியேயானாள். உறவினர்களும்முன்னேயிருந்தனர். அந்தஇடத்தில்வலிப்பதில்என்னஆசை? எங்கேபோனாலும்துக்குத் தடையிராதே எங்கேஸ்திரீயின்பிறந்தவீடுகட்டுப்படுத்தாதே அந்தத்தேசம் மிகதூரத்திலிருந்தபோதிலும் மனிதன் கருடனைப்போலவும் ஹம்ஸத்தைப் போலவும் செல்லவேண்டும். பந்துக்களிலிரும்பி, நான் சொன்னதை நீ கேட்காமலிருந்ததனால், எனக்கு மிகதுயரத்தை யுண்டாக்குகின்ற அநதப் புத்திரனென்னும் பந்துவின்மரணம் இதோ நேர்ந்திருக்கின்றது. அல்லது நிஃதி என் மரணமேதான். ஏனெனில், நான் ஜீவித்திருந்து என் உறவாகிய எவனையும் கொடியவனைப்போல் விடச்சக்தியற்றவன். எப்போதும் என்னுடன் கூடவே தர்மத்தைச் செய்பவளும், ஐம்புலன்களையும்ஜயித்தவளும், எனக்குத் தாய்போன்றவளும், எனக்குச் சினேகிதையும், தேவர்களால் முக்கியமாக விதிக்கப்பட்ட சிறந்ததான ஆசரமும், என் தாய்தந்தையரால் ஏற்படுத்தப்பட்டவளும், எப்போதும் கிருஹஸ்தாச்ரமத்தில் பாகமுள்ளவளும், நல்லகுலத்திற்பிறந்தவளும், நல்லொழுக்கமுள்ளவளும், புத்ரஸந்தானமுள்ளவளும், கற்புள்ளவளும், இன்னுதனசெய்யாதவளும், எப்போதும் ஒதகிருப்பவளுமான பார்யையாகிய உன்னை முறைப்படி வரித்து மந்திரபூர்வகமாக விவாஹம் செய்துகொண்டு என் உயிருக்காக விடுவதற்கு நான் ஸமர்த்தனல்லேன். பருவம் வராதசிறுமியும் பின் லக்ஷணங்கள் சரீரத்தில் உண்டாகாதவளும் மஹாத்மாவாகிய பிரம்மதேவனால் கணவனுடையஉபயோகத்திற்காக நிதியைப்போல் நம்மிடம் வைக்கப்பட்டவளுமான எனது புதல்வியை நானேவிட்டுவிட என்னால் எவ்வாறு முடியும். எவளால் நானும் என்பிதிர்க்களும் தெளஹித்ரனால் வரத்தக்கலோகங்களை எதிர்பார்க்கிறோமோ அந்தப்பெண்ணை நானே உண்டுபண்ணி எவ்வாறு விடத்துணிவேன். சில மனிதர்கள் தந்தைக்குப் புத்திரனிடம் ஸ்நேகம் அதிகமென்று நினைக்கின்றனர். மற்றும் சிலர் பெண்ணினிடம் அதிகமென்று நினைக்கின்றனர். எனக்கு இருவரும் ஸமமென்றே அபிப்பிராயம். எவளிடத்தில் புண்ணியலோகங்களும் சந்ததி

யும் சந்தோஷமும் எப்போதும் இருக்கின்றனவோ குற்றமில்லாமலிருக்கிற அந்தப்பெண்குழந்தையை நானெவ்வாறு விடத்துணிவேன். என்புத்திரனே விடுவதேது. எவனைப்பற்றி மிகுந்த ஸௌக்கியத்தையும் ஸ்வர்க்கத்திலுள்ள பலன்களையும் நான் எதிர்பார்க்கலாமோ, ஜனித்தவுடன் எவனுடைய முகத்தைக்கண்டு பிதிர்க்கள் ஸ்வர்க்கம்சென்றனரோ, பிறந்தவுடன் எவனுடைய மஹிமையினால் நான் பிதிர்க்களின் கடனிலிருந்து விடுபட்டேனோ அந்த எனக்குப் பிரியனும்குலத்தைக் கரையேற்றுகிறவனும் எனக்கு ஜீவனானவனுமாகிய என் மூத்தகுமாரனை குழந்தையை நான் எப்படி விடமாட்டேன். எனக்குப் பிண்டதர்ப்பணங்கள்கொடுக்கும் நிதியாகிய அருமைப்புதல்வனை எவ்வாறு விடுவேன். என்னையாவது என்புத்திரனையாவது என்னையாவது உன் பெண்ணையாவது விடுவது இதே கேர்த்திருக்கிறது, அது நாம் இங்கே வஸித்ததின்பலன். பெண்ணே! என்சொல்லை நீ கேட்கவில்லை. அதன்பலனை அனுபவி அல்லது நானே சாவதற்கும் என் ஒரு புத்திரனையாவது உன்னையாவது பெண்ணையாவது விடுவதற்கும் சக்தியுள்ளவனல்லன். நான் ஜீவித்திருக்கவும், நான் தப்பித்துக்கொள்வதற்காகக் கொடியவனைப்போல் ஒரு பந்துவையும் விடச்சக்தியுள்ளவனல்லன். நான் என் சரீரத்தைவிட்டு யமலோகம் சென்றால் என்னுயிரும் உன்னுயிரும் விடப்பட்ட இவர்கள் இவ்விடத்தில் ஜீவித்திருக்க முடியாதவர்கள். இவர்களில் யாரையிடுவதும் கொடியசெயலே; அறிஞரால் இகழப்பட்டது. நான் ஆத்மத்யாகஞ்செய்தாலும் இவர்கள் நானில்லாமல் இறந்துபோவர். அதனால் நான் சங்கடமான ஆபத்தை அடைந்திருக்கிறேன். இதைத் தாண்டமுடியவில்லை. ஐயோ! ஈ! நான் என்பந்துக்களுடன்கூட எந்தவழிச்செல்வேன். எல்லாருடனும் கூட இறந்துபோவதுசிலாக்கியம். நான் வித்திருப்பது தகுதியன்று" என்றான்.

நூற்றெழுபத்திரண்டாவது அத்தியாயம்.

பகவதபர்வம். (தொடர்ச்சி.)

(பிராமணனைப்பார்த்து அவன்பத்னி சொல்வது.)

பிராமணன்மனைவி சொல்லுகிறாள்:—"நீர் ஸாமான்யமனிதனைப்போல் பரிதாபப்படுவது ஒருபோதும் தகாது. வித்வானாகிய உமக்கு

இது பரிதாடகாலமாக இருக்கவில்லை. இவ்வுலகத்திலுள்ள மனித ரனைவரும் அவசியம் மரணமடைய வேண்டியவர்தாம். அவசியம் வரத்தக்க இந்த விஷயத்தில் வருத்தமில்லை. மனைவியும் மைந்தனும் மகளும் அனைத்தும், தனக்காகவென்று நினைக்கப்படுகிறது. நீர் நல்லறிவினால் துன்பத்தைவிடும். நானே அங்கே போகிறேன். தன் உயிரையும்விட்டு தன் கணவனுக்கு நன்மைசெய்வதுதான் இவ்வுலகத்தில் பெண்களுக்குப் பழமையான முக்கிய தர்மம். அப்படிச் செய்வது பரலோகத்திற்கும் செய்யவேண்டியகர்மம் செய்ததாகிறது. உமக்கும் இப்போது ஸௌக்கியத்தைச் செய்வதாகிறது. பரலோகத்திலும் அழியாத பயனுள்ளதாயிருக்கிறது. இவ்வுலகத்திலும் புகழையுண்டுபண்ணுகிறது. நான் உமக்குச் சொல்லப்போவதும் ஒரு பெரியதர்மந்தான். இதில் உமக்கு அர்த்தமும் தர்மமும் மிகுதியாகக் காணப்படுகின்றன. பாரியை எதற்காக விரும்பப்படுகிறாளோ அந்தப்பிரியோஜனமாகிய ஒருபுத்திரியையும் புத்ரனையும் நீர் என்னிடம் அடைந்திருக்கிறீர். உம்மால் நான் கடனில்லாதவளாகச் செய்யப்பட்டேன். பெண்ணையும் பிள்ளையையும் வளர்ப்பதற்கும் காப்பதற்கும் நீர் எவ்வாறு சக்தியுள்ளவரோ அவ்வாறு போஷணாகரணங்கள் செய்ய நான் திறமையுள்ளவளல்லேன். என்னுடைய பிராணன் தனம் எல்லாவற்றிற்குமே சுகவீர! நீங்களில்லாமல் புத்திரியும் புத்திரனும் எனக்கு எவ்வாறு உண்டாவர். நான் எவ்வாறு குழந்தைகளைக்காப்பேன். நீங்களில்லாமல் கணவனில்லாத அநாதையும் இளங்குழந்தைக்காரியுமாகிய நான், உங்களைவிட்டு எவ்வாறு போக்கியர்கள் சென்ற மார்க்கத்திலிருந்துகொண்டு இவ்விருகுழந்தைகளையும் வளர்ப்பேன். உம்முடைய ஸம்பந்தத்திற்குத்தகாத * கர்மமுள்ளவர்களால் கேட்கப்பட்ட இந்தப்பெண்ணைக் காப்பாற்றுவதற்கு என்னால் எவ்வாறு முடியும். தரையிற் போடப்பட்ட மாம்ஸத்தைப் பறவைகள் எவ்வாறு விரும்புகின்றனவோ அவ்வாறே புருஷனில்லாத ஸ்திரீயை எல்லா ஜனங்களும் விரும்புகின்றனர் பிராமணோத்தமரே! புருஷனில்லாமல் கெட்டவர்களால் விரும்பப்பட்டு மனம் திடமாறும்படி செய்யப்பட்ட நான் மாதர் ஜனங்கள் ஒப்பனைமார்க்கத்தில் நிற்கச் சக்தியுள்ளவளாகமாட்டேன். நாதரே! துஷ்டஜனங்கள் மிகுந்த இவ்வுலகத்தில் பெண் ஜன்மம்இழிவானது கன்னிகையாயிருக்கும்போது தாய் தந்தையர் வசத்திலும், விவாக

* குல ஒழுக்கமில்லாதவர்கள்.

மானபின் பர்த்தாவின் வசத்திலும், இவர்களில்லாதபோது புத்திரன் வசத்திலும் இருக்கவேண்டும். ஸ்வதந்தரையான ஸ்திரீ இகழப் பட்டவள். நெய்யில் நனைக்கப்பட்ட வஸ்திரத்துண்டு நாய்களால் எப்படியிழுக்கப்படுகிறதோ, அப்படிப் பெண்களுக்கு நாதனில்லாம விருப்பது துஷ்டர்களுக்கு வாயில் திறந்துவிட்டது போலல்லவா? உமது குலத்திற்கு ஏகபுத்திரனை குற்றமில்லாத இந்தக் குழந்தை யைத் தந்தைபாட்டன் சென்றவழியில் நடத்துவதற்கு என்னால் எவ்வாறு முடியும்? நாதனற்று எல்லாம்போய்விட்ட இந்தக்குழந் தைக்கு நாம் விரும்பின கல்விமுதலிய குணங்களைத்தர்மந்தெரிந்தநீர் செய்வதுபோல நான் எவ்வாறு கற்பிக்கத் திறமையுள்ளவளாவேன்? நாதனில்லாத உமது இந்தப் பெண் குழந்தையையும் சூத்ரர்கள் வேதாத்யயனத்தை விரும்புவதுபோல் தகாதவர்கள் என்னை நிரா கரித்து விரும்புவார். அப்படி விரும்பப்பட்டவளை நான் கொடுக்க விரும்பாமலிருப்பேனையின் நற்குணங்கள் நிரம்பின இவளை அவர்கள் யஜ்ஞத்திலிருந்த ஹவிஸைக் காக்கைகள் எடுப்பதுபோல பலாத் காரமாகக் கொண்டுபோவார். பிராம்மணரே! உமது இந்தப் புத்திரி அயோக்கியர் களிடம் அகப்பட்டு நமக்குத் தகா திருப்பதைப் பார்த்தும் உலகத்திலுள்ள சாஸ்த்ரமனிதர்களால் அவமதிக்கப்பெற் றும் என்னையறியாமலே நான் இறந்துபோவேன்; நிச்சயம். என்னை லும் தங்களாலும் விடப்பட்ட இந்த நமது ஸந்ததிகளாகிய இருகுழ ந்தைகளும், ஜலம்வற்றின தினால் மத்ஸ்யங்கள் எவ்வாறோ அவ்வாறு அழிந்துபோவர்; ஸந்தேகமில்லை. நீங்கள் விட்டுவிட்டால் இவ்வாறு அவசியம் மூவர் அழிவார்களென்பதில் ஸந்தேகமில்லை, ஆதலால் நீர் என்னை (ராகூஸனுக்கு இரையாக) விட்டுவிடுவது உசிதம். ஓ! பிராமணரே! கணவனுக்குமுன் பரலோகமடைவது புத்ரனுள்ள ஸ்திரீகளுக்குப் பெரும்பாக்கியமென்று தர்மசாஸ்திரஜ்ஞர்கள் அறிகி ன்றனர். இவ்வுலகத்தில் புத்திரர்களிடத்தில் தரிவது அஸௌக்கியம். எவள் மஞ்சள், மை, புஷ்பமுதலிய ஸுமங்கலி லக்ஷணங் களோடு கூடியவளாயிருந்து பர்த்தாவின் பாதங்களில் மனம்வைத்து அவன்கொடுத்த தர்ப்பணஜலத்தைப் பானஞ்செய்பவளாகக்கணவன் முன்னிலையில் மரணமடைகிறாளோ அவள் பார்வதீலோகத்தையடை கிறாள். பார்வதிக்குத்தோழியாயிருந்து அந்தப் பர்வதராஜகன்னிகை யுடன்கூட மகிழ்ந்திருக்கிறாள். தந்தையும் ஸ்வல்பம் கொடுக்கிறான்; தாயும்ஸ்வல்பம் கொடுக்கிறாள்; புதல்வனும் ஸ்வல்பம்கொடுக்கிறான்.

அளவற்றதைக்கொடுப்பவனுகிய கணவனை எவள் பூஜிக்கமாடாள்? சிலாக்கியனை பதியின்றி ஆச்ரமங்களும் அக்னிஹோத்ரங்களும் யஜங்களும் ஹோமங்களும் விரதங்களும் ஸ்திரீகள் செய்யத்தகாதவை. பொறுமையும் தூய்மையும் உபவாஸமுமாகிய இவ்வளவுதாம் பெண்களுக்கு விதிக்கப்பட்டுள்ளன. இந்தப்புதிரனும் இந்தப் புத்திரியும் என் உறவினரும் என்னால் விடப்பட்டனர். என்னுயிரும் உமக்காகத்தானிருக்கிறது. பலவகையான யாகம், தவம், நியமம், கொடை இவையெல்லாவற்றையும்காட்டிலும் கணவனது விருப்பத்தையும் நன்மையையும் விடாமலிருப்பதுதான் பெண்ணுக்குச் சிறப்பானது. ஆதலால், மிகவும் சாஸ்திரசம்மதமான இந்தத்தர்மத்தை நான் செய்யவிரும்புகிறேன். இது உமக்கும் குலத்துக்கும் பிரியமும் அனுகூலமுமானது. புத்திரர்களும் திரவியங்களும் அன்புள்ள ஸ்நேகிதர்களும் பாரியையும் ஆபத்தர்மத்தில் விடுவதற்காக விரும்பப்படுகிறவர்களென்பது ஸாதுக்களுடைய ஸம்மதம். ஆபத்காலத்திற்காகத் தனத்தைக்காப்பாற்றிவைக்கவேண்டும். தனத்தினால் மனைவியைக்காப்பாற்றவேண்டும். தனத்தினாலும் மனைவியினாலும் தன்னை எப்போதும் காப்பாற்றிக் கொள்ளவேண்டும். பாரியை புத்திரன் தனம் கிருகம் இவையெல்லாம் திருஷ்டபலனுக்காகவும் அதிர்ஷ்டபலனுக்காகவும் ஸம்பாதிக்கவேண்டியவையென்பது வித்வான்களுடைய நிச்சயம். குலமனைத்தும் ஒருதட்டு; குலத்தைவிருத்திசெய்யும் தான் ஒருதட்டு; வித்வானே! இவ்விரண்டில் எது அதிகம். குலத்தைவிடத் தானே அதிகம். தானிருப்பதினால் தனக்குப்பதினாலு லோகங்களுமிருக்கின்றன. பிராமணச்ரேஷ்டரே! ஆதலால், நீர் உம்மைக் காப்பாற்றிக்கொள்ளவேண்டும். தானில்லாதபோது அவனுக்கு இல்லுலகத்தில் எதுவுமில்லை. ஆதலால், இந்தஜகமனைத்தும் தனக்கொப்பாவதில்லை. ஆதலால், நீர் என்னால் காரியத்தைச்செய்து கொள்ளும். உம்மால் உம்மைக்கரையேற்றும். பூஜ்யரே! எனக்கு விடைகொடும். என்குழந்தைகளைக் காப்பாற்றும். தர்மந்தெரிந்தவர்கள் ஸ்திரீகளைக்கொல்லக்கூடாதென்று தாமசாஸ்திரங்களிற் சொல்லுகின்றனர். ராக்ஷஸர்களுக்கும் தர்மந்தெரியுமென்று சொல்லுகின்றனர். அவன் என்னைக் கொல்லாமலுமிருக்கலாம். புருஷர்களை வதஞ்செய்வதில் ஸந்தேகமில்லை. ஸ்திரீகளைக் கொல்வது ஸந்தேகம். தர்மந்தெரிந்தவரே! ஆதலால் என்னையே நீரனுப்பத்தகும். போகங்களை யனுபவித்தேன்; விரும்பினவற்றையடைந்தேன்; தர்மானுஷ்டானஞ்

செய்தேன். உமக்குச் சுச்ரூஷை செய்ததனால் எனக்குண்டான கீர்த்தியும் ஒப்பற்றது. உம்மால் பிரியமான ஸந்ததியையும் பெற்றேன். மரணம் என்னை வருத்தாது. புத்திரர்களுண்டானவளும் முதிர்ந்தவளும் எப்போதும் உம்முடைய விருப்பத்தையே விரும்புகிறவளுமாயிருக்கிறேன். இதை யெல்லாம் ஆராய்ந்து நான் இந்த விஷயத்தில் ஆரம்பத்தைச் செய்கிறேன் பூஜ்யரே! என்னைவிட்டபிறகும் நீர் வேறொரு ஸ்திரீயையடைந்தாலும் அடைவீர். அதனால் உமது தர்மம் மறுபடியும் நிலைபெற்றதாகும். பிரியரே! புருஷர்களுக்கு அனேகம் பத்தினிகளிருப்பது அதர்மமுமாகாது. பெண்களுக்குமட்டில் முதல் புருஷனை அதிக்கிரமிப்பதில் மிகப்பெரிய பாவமிருக்கிறது. இவைகளெல்லாவற்றையும் பிராணத்தியாகம் நிஷித்தமென்பதையும் ஆராய்ந்து, நீர் இப்போது உம்மையும் உமது குலத்தையும் இந்தக்குழந்தைகளையும் விரைவில் காப்பாற்றக்கடவீர்" என்றாள். பாரதரே! அவளால் இவ்வாறு சொல்லப்பட்ட பர்த்தா அவளைத் தழுவி அவளுடன் கூடவே மிகத்துயரமடைந்து மெல்லிய குரலோடு கண்ணீர் விட்டழுதான். "அன்புள்ளவளே! அழகான இடையுள்ளவளே! நீ இவ்வாறு பேசாதே; இங்கேயேயிரு. ஞானமுள்ளவன் ஸ்திரியையும் புதல்வர்களையும் ஒருபோதும் விடத்தகாது. புத்தியுள்ளபுருஷன் இவ்வுலகத்தில் ஸ்திரியை முக்கியமாக ரக்ஷிக்கவேண்டும். எந்தக்காலத்திலும் விடத்தகாதவர்களாகிய இவர்களைவிட்டுப் புருஷன் ஜீவிப்பானேயின் அவன் தர்மார்த்தகாமமோக்ஷங்களுள் ஒன்றையும் சரியாக அறியான்" என்று பிராமணன் சொன்னான்.

நூற்றெழுபத்துமூன்றுவது அத்தியாயம்.

பகவதபர்வம். (தொடர்ச்சி.)

(பிராமணனைப்பார்த்துப் பெண் சொன்னதும், சிறுபிராணியாகியஅவர்களுடைய புதல்வன் வசனத்தைக்கேட்டுக் கோஷம் ஸந்தோஷமடைந்த ஸமயத்தில் சுந்தி அவர்களிடம் சென்றதும்.)

அளவுக்கு மிஞ்சித் துக்கப்படுகின்ற அவ்விருவர்களுடையசொல்லையும் கேட்டு உடனே துக்கத்தினால் மாறுபட்டஅங்கத்தோடுகூடிய அவர்களுடையபெண், அவ்விருவரையும் நோக்கிப் பேசத்தொடங்கினாள். "ஏன் இவ்வாறு அதிக துக்கத்தினால் பீடிக்கப்பட்டவர்களாக

அநாதைகளைப்போல் அழுகிறீர்கள் ? என்சொல்லும் கேட்கப்பட வேண்டும். கேட்டபின் யுக்தத்தைச் செய்யலாம். தர்மப்பிரகாரம் என்னை நீங்கள் விடவேண்டும். இதில் சந்தேகமில்லை. விடத்தக்கவளான என்னை விட்டுவிட்டு என் ஒருத்தியால் எல்லாவற்றையும் காப்பாற்றிக் கொள்ளுங்கள். தன்னை ஆபத்திலிருந்து தாண்டுவிக்குமென்பதற்காகத்தான் ஸந்ததி விரும்பப்படுகிறது. இந்தக்காலம் சேர்ந்தபோது தெப்பத்தினால் தாண்டுவதுபோல் என்னால் ஆபத்தைத்தாண்டுங்கள். பிராமணரே ! இவ்விடத்திலாவது துக்கத்திலிருந்து தாண்டுவிக்கவேண்டும். பரலோகத்திலாவது தாண்டுவிக்கவேண்டும். எவ்வகையிலும் தாண்டுவிக்கிற புத்திரன்தான் புத்திரனென்று தெரிந்தவர்கள் * சொல்லுகிறார்கள். * கடஸ்திரீகள் எல்லிடத்தில் † தௌஹித்திரர்களை எப்போதும் விரும்புகின்றனர். ஆதலால் நானை பிதாவின் உயிர்போகாமல் காப்பாற்றுவேன். எனது சமீகதரன் குழந்தை. நீர் பரலோகம் சென்றால் சிக்கிரகாலத்திலேயே இறந்துபோவானென்பது நிச்சயம். தந்தையும் ஸ்வர்க்கம் சென்று என் தம்பியும் நாசமடைந்தால் நம்முடைய பிதிர்க்களுக்குப் பிண்டம் விட்டுப்போம். அஃது அவர்களுக்கு வெறுப்புண்டாக்கும். துக்கப்பட்டு வழுக்கற்றல்லாத நான்தாயாலும் தந்தையாலும் ஸஹோதரனாலும் விடப்பட்டவளாகத் துக்கத்துக்குமேல் பெருந்துக்கத்தையடைந்து இறப்பேனென்பது நிச்சயம். நீர் மனைவியாதியில்லாமல் விடுபட்டீராயின் தாயாரும் குழந்தையான என்னை ஸஹோதரனும் குலத்தின் புத்ரஸந்தானமும் பிதிர்க்களின் பிண்டமும் நிச்சயமாக நிலைத்து நிற்கும். 'தானே புத்திரன் ; மனைவி தனக்குத்தானே; பெண்ணென்பது துயரம்' என்பர். ஆதலால், நீர் உம்மைத் துக்கத்திலிருந்து விடுவித்துக்கொள்ளும். என்னையும் தர்மத்திற் பிரவர்த்திக்கச் செய்யும். தந்தையே! அசக்தையும் சிறுபெண்ணுமாகிய நான் நீரில்லாமல் அனாதையாய் எங்கேயோ ஓரிடத்திற்குச்சென்று எப்போதும்விசனமுள்ளவளாயிருப்பேன். அப்படியில்லாமல் இந்தக் குலத்துக்கு விசேஷசனம் செய்வேனுயின் செயற்கரிய கருமம் செய்ததனால் பயன் பெற்றவளாவேன். பிராம்மணரே ! அவ்வாறன்றி எனையைவிட்டு நீர் அங்கே போவீராயின், நான் பிடிக்கப்பட்டவளாவேன். ஆதலால்

---

* பிதிர்க்கள்.

† பெண்வயிற்றுப்பிள்ளைகள்.

ன்னையும் கவனியும். சிறந்தஸாதுவே! ஆதலால் எங்களுக்காகவும் தர்மத்திற்காகவும் ஸந்ததிக்காகவும்உம்மைக்காப்பாறறிக்கொள்ளும். விடத்தக்க என்னைவிட்டுவிடும். அவசியம் செய்யவேண்டிய காரியத்தில் உமக்கு இந்தக்காலம் தாண்டிப்போகலாகாது. நீர் ஸ்வர்க்கம் போய்விட்டால் அயலாரிடம் சோற்றை யாசித்துக்கொண்டு நாயைப் போல ஓடுவோம். அதற்குமேற்பட்ட துயரம்யாது? நீர் தீங்கில்லாமல் பந்துக்களுடன் இந்தக்கஷ்டத்திலிருந்து விடுபட்டால் இறக்காதவள் போலவே பரலோகத்தில் சுகமாக வசித்துக்கொண்டிருப்பேன். * இவ்வுலகத்தில்கொடுப்பாதிலேதான் தேவர்களும்பித்ருக்களும்இருக்கிறார்களென்று நமக்குக்கேள்வி. உம்மால்கொடுக்கப்பட்ட ஜலதர்ப்பணத்தினால் எனக்கு ஸுகமேஉண்டாகும். பிதாவே! இவ்வாறு†இவ்விரண்டையும்பார்த்து உமக்கும்அன்னைக்கும்உமதுபுத்திரனுக்கும்எதுஹிதமோ அதைச்செய்யும். தாய்க்குந்தகப்பனுக்கும் குணமுள்ளபுத்திரர்கள் பிறப்பர். புத்ரனுக்குமட்டும் பெற்றவர்கள் மறுபடியும் ஒருபோதும் கிடைக்கமாட்டார்கள்" என்றாள். இவ்வாறு அந்தப்பெண்ணின் அதிகவிதமான புலம்பலைக்கேட்டு, தந்தைதாய் அந்தப்பெண் இம்மூவரும் அழுதனர். அப்போது அவர்களெல்லாரும் அழுவதைக்கண்டு உடனே அந்தச் சிறுபுதல்வன் மலர்ந்தகண்களுடன் மதுரமான மழலைச்சொல்லினால், "அப்பா! அழாதே, அம்மா! அழாதே, அக்காள்; அழாதே" என்று சொல்லி அவர்களெல்லாரையும்பார்த்துச் சிரித்துக்கொண்டு ஒவ்வொருவர் மீதிலும் போனான். பிறகு அந்தக் குழந்தை சந்தோஷத்துடன் ஒருதரும்பையெடுத்து மனிதனைத்தின்கிற ராக்ஷஸனை நான் இதனால், கொல்வேன்" என்று மறுபடியும் சொல்லினான். தக்கத்தினால் அவ்வாறு பீடிக்கப்பட்டிருந்தும் குழந்தையின் அந்தமழலைச்சொல்லைக்கேட்டபிறகு அவர்களுக்குப் பெரிய ஸந்தோஷமுண்டாயிற்று. குந்தி இதுஸமயமென்றறிந்து அவர்கள் ஸமீபம்சென்று இறந்துபோனவரை அமிர்தத்தால் பிழைப்பு மூட்டுவதுபோல் அவர்களைப் பிழைப்பு மூட்டுகிறவளாகப் பின்வருமாறு சொல்லத்தொடங்கினாள்.

---

* ஹோமம் தர்ப்பணம் முதலியவற்றை நம்பியிருப்பவர்.

† நம்மிருவரைக்கொடுப்பதில் உள்ள குணதோஷங்களை.

நூற்றெழுபத்துநான்காவது அத்தியாயம்.

பகவதபர்வம் (தொடர்ச்சி.)

(குந்தி, அவர்களை, அழுவதற்குக் காரணம்கேட்க, பிராமணன்பகாஸுரன் வருத்தாந்தம் சொல்வது.)

"இந்தத்துக்கம் என்னகாரணத்தினுண்டானது. ஸரியாகத் தெரிந்து கொள்ளவிரும்புகிறேன். தெரிந்துகொண்டபிறகு நிவர்த்தி செய்ய முடியுமானால் நிவர்த்திசெய்யவும் செய்வேன்" என்று குந்தி சொன்னாள். அதன்மேல் பிராமணர் சொல்லுகிறார்:—

"தபோதனையே! நீ சொல்லுவது ஸாதுக்களுக்குப் பொருந்தியதுதான். ஆனால், இந்தத்துயரத்தைவிலக்க மனிதரால் முடியாதாகிலும், இந்தத்துக்கத்தில் உற்பத்தியைச் சரியாகச் சொல்லுகிறேன். அன்புள்ளவளே! முடியுமானாலும் முடியாமற்போமானாலும் உள்ளவிஷயத்தைக் கேள். இந்த நகரத்தின் ஸமீபத்தில் பகன் என்னும் ராக்ஷஸன் வஸிக்கிறான். இதற்கு இரண்டு குரோசம் தூரத்தில் யமுனையின் உற்பத்தியில் ஒரு குகையிருக்கிறது அதில்கொடியவனும் கொல்லுவதில் விருப்பமுள்ளவனும் மனிதர்களைத்தின்பவனும் ராக்ஷஸகுல நீசனுமாகிய பகன் என்றுபெயருள்ள அந்தத்துஷ்டன் வஸிக்கிறான். மிகுந்தபலமுள்ள அவன் இந்தத்தேசத்திற்கும் நகரத்திற்கும் தலைவனாயிருக்கிறான். தூர்ப்புத்தியுள்ள அந்த ராக்ஷஸன் மனிதர்மாமிசத்தினாலேயே வளர்ந்தவன். அந்தராக்ஷஸன் வியாபகமுள்ளவன்; நினைத்த ரூபமெடுப்பவன்; மஹாபலசாலி. அவனால் இந்த நகரம்பீடிக்கப்பட்டு இது பதின்மூன்றுவதுவருஷம். அவனைப் பற்றி வேறுராஜாக்களுடைய சேனையினாலும் புலிகரடி முதலிய பிராணிகளாலும் எங்களுக்குப் பயம் உண்டாகவில்லை. மனிதரைத்தின்னும் அந்தக்கொடியபாபியினால் பக்ஷிக்கப்பட்ட இந்த நாதனற்ற நகரம், ரக்ஷிக்கின்ற பிரபுவை அடையாமலிருக்கிறது. அந்தத்துஷ்டன் அந்தக்குகையில் வஸித்துக்கொண்டு ஸ்திரீகள் பாலர்கள் விருத்தர்கள் யுவாக்கள் முதலிய எல்லாஜனங்களையும் எப்போதும் வருத்திவருகிறான். இங்கே பிராமணச்ரேஷ்டர்களினால் அந்தத் துராத்மாவான ராக்ஷஸன் மந்திரங்களினாலும் ஹோமங்களினாலும் போஜனங்களினாலும் துதிக்கவும் பூஜிக்கவும் பெற்றான். அந்த ராக்ஷஸன் எப்போது எல்லாரையும் இவ்வாறு கொன்றுகொண்டிருந்தானோ அப்

போது பிராமணர்களனைவரும் ஒரு நியமம் செய்யும்படி அவனைக் கேட்டுக்கொண்டனர். "ராக்ஷஸனே! நீ நினைத்தபடி கொல்லாதே. பிரபுவே! நாங்கள் உனக்கு வேண்டிய மாம்ஸங்களையும் அன்னங்களையும் எப்போதும் முறையாகக்கொடுத்துவருவோம். மாம்ஸத்தோடும் எள்ளுப்பொடியோடும் நெய்யோடும் தயிரோடும் கூடிய அன்னத்தையும், எள்ளுச்சேர்ந்த மூன்றுவகையான பருப்பு உருண்டைகளையும், பொரிகளையும், அப்பங்களையும், கள், சாராயங்களையும், காய்ச்சினவையும் காய்ச்சாதவையுமான பானங்கள் நிரம்பினகுடங்களையும், பக்குவமும் அபக்குவமுமாயுள்ள பெரிய மாம்ஸங்களையும், சமைத்தவையும் சமைக்காதவையுமான காட்டிலுள்ள எருமை பன்றிகரடிகளின் மாமஸங்களையும், பல நெய்க் குடங்களையும், பல தயிர்க்குடங்களையும், புதிதாகச் சமைக்கப்பட்டு எள்ளுப்பொடி கலந்த சித்ரான்னங்களையும், வீட்டிற்கொரு மனிதனையும், இரண்டு கறுப்புக்காளைமாடுகளையும் ராக்ஷஸபாகமாக நாங்கள் ஏற்படுத்துவதை நீ கோபிக்காமல் பெறுவாயாக. எங்களுடைய இந்தஉடன்படிக்கையில் நீநிற்கவேண்டும்." என்று பிராம்மணர்கள் அவனிடம்வேண்டினர். அந்தராக்ஷஸன் அவர்கள் சொன்னதை ஆகட்டுமென்றுஅங்கீகரித்தான். அவனுக்கு அந்தப்பாகத்தைக் குறிப்பிட்டபிறகு அந்தப் பலவானான ராக்ஷஸன் உடன்படிக்கையில் நின்றுகொண்டு, மற்றச் சனியங்களிடத்திலிருந்தும் காட்டுமிருகங்களிடத்திலிருந்தும் (எங்களை) ரக்ஷணஞ்செய்கிறான். ஒவ்வொருமனிதனை அவனுக்குச் சம்பளமாகக் கொடுக்கின்றனர். ஜனங்கள் செய்வதற்குமுடியாத அந்தவாரம் அநேக வருஷங்களாக நடக்கிறது. அதை விடுவிப்பதற்கு வந்தமனிதர்களாகிலும் எங்கேயாகிலும் ஆரம்பஞ்செய்வாராயின் அவர்களை அந்த ராக்ஷஸன் பிள்ளைபெண்களுள்படக் கொன்றுதின்றுவிடுகிறான். வேத்திரகீயக்ருகம் என்ற நகரத்திலுள்ள இந்த ராஜாவும் இந்த விஷயத்தில் மார்க்கஞ்செய்யவில்லை. மந்தபுத்தியான அவன் இந்தக்காலத்தில் இந்த ஜனங்களுக்கு எதனால் பீடித்த ஸுகம் உண்டாகுமோ அந்த உபாயத்தைப் பிரயாஸப்பட்டாவது செய்கிறதில்லை. துர்ப்பலனான ராஜாவின் தேசத்தில் நித்யமாக வஸிப்பவரும் இழிவான ராஜாவை ஆச்ரயித்தவருமாகிய நாங்கள் இதற்குத்தான் தகுந்தவர்களாக வஸிக்கிறோமென்பது நிச்சயம். பிராம்மணர்கள் யாருக்கு ஏவத்தக்கவர்கள்? யாருடையவிருப்பத்தை அனுஸரிப்பவர்கள்? இவர்கள் இயற்கையான குணங்களால் பக்ஷிகளைப்போல் யதேச்சையாகச்

சஞ்சரிப்பவர்கள் முதலில் ராஜாவை அடையவேண்டும். அதன் பிறகு மனைவியையும் அதன் பிறகு தனத்தையும் அடையவேண்டும். இவ்வுலகத்தில் ராஜா இல்லாதபோது மனைவியேது? தனமேது? இம் மூன்றையும் சம்பாதிப்பதனால் சுற்றத்தாரையும் புத்திரர்களையும் காப்பாற்றவேண்டும். நான் இம்மூன்றையும் முழுதும் விரோதமாகச் சம்பாதித்திருக்கிறேன். அதனால், இந்த ஆபத்தையடைந்து நாங்கள் நிரம்பத் தபிக்கிறோம். குலத்தையழிப்பதாகிய அந்தவரம் இதோ எங்களுக்கு வந்திருக்கிறது. போஜனத்தையும் ஒருமனிதனையும் சம்பளமாக நான் கொடுக்கவேண்டும். எங்கேயாவது ஒரு மனிதனை விலைக்கு வாங்குவதற்கு எனக்குப் பொருளில்லை. வேண்டியவர்களைக் கொடுக்க ஒருபோதும் என்னால் முடியாது. அந்த ராக்ஷஸனிடமிருந்து விடுவித்துக்கொள்ள வேறு மார்க்கம் எனக்குத் தெரியவில்லை. அப்படிப்பட்ட நான் மிகவும் அஸாத்யமான துயரக்கடலில் மூழ்கியிருக்கிறேன். இப்போது இந்த உறவினரோடு கூடவே அந்த ராக்ஷஸனிடம் செல்வேன். அப்போது எங்களெல்லாரையுமே சேர்த்து அந்தப்பாவி உண்டைடும். அம்மா! குற்றமில்லாதவளே! இந்தத் துயரத்தின் காரணத்தை நீ கேட்டதனால் உனக்குச் சொன்னேன்" என்றார்.

நூற்றெழுபத்தைந்தாவது அத்தியாயம்.

பகவதபர்வம் (தொடர்ச்சி.)

(குந்தி பகாஸுரனிடத்துத் தன்புத்திரனை அனுப்புவதாகச் சொல்வது.)

குந்தி, "இந்தப்பயத்திற்காக நீர் எவ்வகையிலும் துன்பப்படவேண்டாம். இப்போது அந்த ராக்ஷஸனிடத்திலிருந்து நீர் தப்பிக்கொள்வதற்கு உபாயத்தை நான் கண்டிருக்கிறேன். நீரும் உமது ஸந்ததிகளும் அவனிடம் போவதை நான் விரும்பவில்லை. உமக்கு ஒரேபுத்திரன்; அவனும் குழந்தை; பெண்ணும் ஒருத்தி; அவள் பரிதாபப்படத்தக்கவள். இவர்களும் உமது மனைவியும் நீரும் போவதற்கு நான் ஸம்மதிக்கவில்லை பிராம்மணரே! எனக்கு ஐந்து குமாரர்களிருக்கின்றனர். அவர்களில் ஒருவன் அந்தக்கொடிய ராக்ஷஸனுக்கு இரையை எடுத்துக்கொண்டு உமக்காகச் செல்வன்" என்று

சொன்னாள் பிராமணர், "நான் என் உயிரைவிரும்பிச் சொந்தப்பிர யோஜனத்திற்காக எனக்கு அதிகியான பிராமணனுடைய உயிரைப் போக்குகிற இந்தக்காரியத்தை எவ்வகையிலும் செய்யேன். ஆனால் ஒரு பிராமணனுக்காகத் தன்னையாவது தன் புத்திரனையாவது விடுவ தென்பது, உயர்ந்தகுலத்திற் பிறவாமலும் தர்மிஷ்டராயில்லாமலு மிருக்கிற ஸ்திரீகளிடம் இருப்பதில்லை. ஒருவன் தான் கொலையுண்டி போவது மேலாக அறியத்தக்கதென்று எனக்குத் தோன்றுகிறது. பிராம்மணனை வதஞ்செய்வதும் தற்கொலை செய்வதுமாகிய இரண்ட னுள் தற்கொலை செய்வது மேலானதென்பது என்கருத்து. பிரமஹ த்தி அதிகபாபம். அதற்குப் பிராயச்சித்தமில்லை அறியாமற் செய் தாலுங்கூடப் பாபமுண்டன்றோ? சிறந்தவளே! சுபமானவளே! நான் ஸ்வதந்திரமாகத் தற்கொலை செய்துகொள்ள விரும்பவில்லையே; அய லார் என்னை வதஞ்செய்வதால் எனக்கு ஒருபாபமுமில்லை. பிராம்மண வதஞ்செய்யும்படி நான் எண்ணம்வைத்தேனாயின் அதற்குப் பிரா யசசித்தம் எனக்குத் தெரியவில்லை. அது கொடியது; இழிவானது; வீட்டிக்கு வந்தவனையும் அடைக்கலம் வேண்டுபவனையும் யாசிப்பவ னையும் கொல்வது கொடியது; அறிஞரால் இகழப்பட்டது. இகழப் பட்ட கொடிய செய்கையை எவ்வகையிலும் செய்யலாகாதென்று ஆபத்தால தர்மமறிந்த முன்னோரான மஹாத்மாகதள் அறிந்திருக் கின்றனர். இப்போது என் மனைவியுடன்கூட நானே இறப்பது எனக்கு மிகச்சிலாக்கியமாகும். ஒருபோதும் பிராம்மணவதத்துக்குநான் இணங்கேன்" என்றுசொல்லினர். குந்தி, "பிராம்மணரே! பிராம்மணர் கள் காப்பாற்றப்பட வேண்டியவர்களென்னும் இந்த எண்ணம் எனக்கும் உறுதியாயுள்ளது. நூறு புத்திரர்களிருப்பினும் எனக்குப்புத் திரன் விரும்பப்படாதவனல்லன். ஆனால், அந்த ராக்ஷஸன் என்புத் திரனைக்கொல்வதற்கு வல்லவனல்லன். என்புதல்வன் சூரன்; மந்திர வித்தியைபெற்றவன்; மஹிமையுள்ளவன். அந்த இரையை முற்றிலும் ராக்ஷஸனுக்குக் கொண்டுபோவான். தன்னையும் விடுவித்துக்கொள் வான் என்பது எனது திண்ணமான எண்ணம். பலசாலிகளும் மகத் தான தேகங்களுள்ளவர்களுமாகிய அனேக ராக்ஷஸர்கள் இந்த வீர னைத் துஸ்தித்துக் கொல்லப்பட்டிருப்பதைக் கண்டிருக்கிறேன். பிரா மணரே! ஆனால், இது யாரிடத்திலும் எவ்வகையிலும் சொல்லத்த காது. ஏனெனில், இந்த வித்தையை வேண்டுபவர்கள் ஆசையினால் என் புத்திரர்களை வருத்தப்படுத்துவார்கள். என்னுடைய எந்தப்புத்

திரன் குருவின் அனுமதிபெறுமல் பிறருக்கு வித்தையைச் சொல்வ னே அவன் அந்த வித்தையினல் முன்போலக் காரியம் செய்யமாட் டான் என்பது பெரியோர்கள் அபிப்பிராயம்" என்று சொன்னுள். குந்தியினல் இவ்வாறு சொல்லப்பட்ட அந்தப் பிராமணன் மனைவியு டன்கூட மகிழ்ந்து அமிர்தத்துக்கொப்பான அவளுடைய சொல்லைக் கொண்டாடினன். பிறகு குந்தியும் பிராமணனும் சேர்ந்து அந்தப் பீமனைப்பார்த்து, 'செய்' என்று சொன்னர்கள். அவனும் 'அவ்வாறே ஆகட்டும்' என்று சொன்னன்.

நூற்றெழுபத்தாருவது அத்தியாயம்.

பகவதபர்வம். (தொடர்ச்சி.)

(பிக்ஷைக்குப்போன யுதிஷ்டிரர் முதலியவர்கள் வந்து பீமன் பகாஸுரனிடம் சென்லப்போவதைக் கேட்டு மிகத் துய ரப்படுவதும், குந்தி பீடஸேனன் பிரபாவத்தைச் சொல்லி அவர்களைத் தேற்றுவதும்.)

பாரதரே! பீமஸேனன் செய்வேனென்று பிரதிஜ்ஞை செய்த பிறகு அந்தப் பாண்டவர்களனைவரும் பிக்ஷைகளை வாங்கிக்கொண்டு அவ்விடம் வந்து சேர்ந்தனர். பிறகு அவ்வாறு மலர்ந்த முகமுள்ள பீமஸேனனைக்கண்டு தர்மபுத்திரர் எடுத்த காரியத்தை முடிப்பவனு கிய அவன் ஸந்தோஷமாயிருக்கிருனென்றறிந்தார். ராஜாவே! பெரிய வரான அந்த யுதிஷ்டிரர் பீமன் யுத்தம்செய்யக் கருதியிருப்பதாக அறிந்து, அவன் ஸந்தோஷத்திற்குக் காரணம் யாதென்று மனத்தில் ஆராய்ந்தார். பாண்டு புத்ரரான யுதிஷ்டிரர் முகக்குறிப்பினலேயே அ தனை யறிந்துகொண்டு தான்தனித்து உட்கார்ந்துகொண்டு ரகஸ்யத் தில்உடனேதாயாரைநோக்கி,பயப்படத்தக்கபராக்கிரமமுள்ள இந்தப் பீமன் என்னசெய்தை செய்யக்கருதுகிருன். உன் அனுமதியின்மேல் செய்யக்கருதுகிருனு? அல்லதுதானுகவேசெய்யக்கருதுகிருனு?" என் றுவினவினர். குந்தி,"இந்தவீரன் என்சொல்லினலேதான்பிராமணனு க்காகவும்இந்தநகரத்திற்கேவிமோசனத்திற்காகவும்பெரியகாரியம் செ ய்யப்போகிருன். மைந்தனே! தர்மபுத்திரனே!பகனுக்காகஉழர்ந்ததாக வித்தஞ்செய்யப்பட்டமிகுதியானஇரையை ஒருநாளாவதுபூர்ணமாகப்

பீமன் புஜிக்கட்டும்." என்று சொன்னாள். யுதிஷ்டிரர் "இதென்ன! செய்தற்கரியகொடிய ஸாஹஸத்தை நீ செய்திருக்கிறாய். பிள்ளையைவிட்டுவிடுவதைப் பெரியோர்கள் சிலாக்கியமாகச் சொல்லவில்லையே. பிறர் பிள்ளைக்காக உன் பிள்ளையை எவ்வாறு விடக்கருதுகிறாய். புத்திரனை விடுவதனால் நீ உலகத்திற்கும் சாஸ்திரத்திற்கும் மாறான காரியத்தைச் செய்தவளாகிறாய். எவனுடைய புயவலிமையை ஆதாரமாகக் கொண்டு நாமெல்லாரும் ஸுகமாகத் தூங்குகிறோமோ, ஈனர்களால் எடுத்துக்கொள்ளப்பட்ட ராஜ்யத்தைத் திரும்பவும் எவனுற்பெறுவதற்குள தீர்பார்க்கிறோமோ, அளவற்ற சக்தியுள்ள எவனுடைய பராக்ரமத்தைநினைத்துத் துரியோதனன் துயரத்தினால் இரவுகளெல்லாம் சகுனியுடன்கூடத் தூங்காமலிருக்கிறானோ, எந்த வீரனுடைய பராக்ரமத்தினால் நாம் அரக்குமாளிகையிலிருந்தும் இன்னுமனேகம் தீங்குகளிலிருந்தும் விடுபட்டுப் புரோசனனும் கொல்லப்பட்டானோ, எவனுடைய சக்தியைநம்பித் திருதராஷ்டிரபுத்திரர்களைக் கொன்று தனம்நிறைந்த இப்புவனியை நாம் அடைந்ததாக நினைக்கிறோமோ, அவனை விடுவதற்கு என்ன ஆலோசனைசெய்து, நீ ஆரம்பித்தாய்? துயரங்களினால் மனம் நொந்து உன்புத்தி அழிந்துபோகாமலிருக்கிறதா?" என்று சொல்ல,குந்தி, "யுதிஷ்டிரா! வ்ருகோதரனுக்காக நீ பரிதாபப் படவேண்டாம். நான் புத்திக்குறைவினால் இந்த ஆரம்பம் செய்திருக்கவில்லை. சோகப்பட்டு மனம்குன்றினதினால் என் புத்தி கெட்டிருக்கவில்லை. புத்திரனே! இந்தப் பிராம்மணக்ருஹத்தில் திருதராஷ்டிரபுத்திரர்களுக்குத் தெரியாமல் துக்கத்தைவிட்டு மரியாதையோடு ஸுகமாக வஸித்துக்கொண்டிருக்கிறோம். புத்திரனே! அதற்கு இந்தப்பிரதியுபகாரம் என்னால் கண்டறியப்பட்டது. செய்ந்நன்றி யாரிடத்தில்குன்றுதோ அவன்மாத்திரமே மனிதன்; பிறர் இவனுக்கு எவ்வளவு செய்வரோ அதற்குப் பலமடங்கு அதிகமாக இவன் பிறருக்குச் செய்யவேண்டும். பிராம்மணனுக்காகச் செய்யும் தருமம் பெரிது. பீமஸேனனிடத்திலும் இந்த ஸாமர்த்தியமிருப்பதை நான் அறிந்திருக்கிறேன். அப்போது அரக்குமாளிகையிலும் ஹிடிம்பவதத்திலும் பீமனுடைய மிகுந்த பராக்கிரமத்தைக் கண்ட பிறகு எனக்கு அவனிடத்தில் நம்பிக்கையுண்டாயிற்று. யானையைப் போன்ற நீங்கள் வாரணாவதத்திலிருந்து எவனால் தூக்கிக்கொண்டு வரப்பட்டீர்களோ அந்தப் பீமனுடைய கைவன்மை பெரிது; பதினாயிரம் யானைக்கொப்பானது. பலத்தில் வ்ருகோதரனுக்கு ஈடானவன்

மற்றொருவனில்லை. எல்லாரிலும் சிறந்த வஜ்ராயுதனியாகிய இந்திரனையும் பீமன் யுத்தத்தில் தானேவென்றுவிடுவன். முன்னமே இவன் பிறந்தவுடன் என் இடுப்பிலிருந்து மலையில் வீழ்ந்தான். இவன் தேகத்தின் பாரத்தினால் இவனுடைய அவயவங்கள்பட்ட கல் பொடியாகச் செய்யப்பட்டது. பாண்டவனே! பீமனுடைய அந்தப் பலத்தை நான் புத்தியினாலறிந்து, பிராமணருக்குப் பிரியமும் செய்யவேண்டியதிருப்பதால் அதற்காக இந்த ஆலோசனையைச் செய்தேன். இது பொருளை விரும்பியாவது புத்திக்குறைவினாலாவது மரியாதையறிந்துகொள்ளாமலாவது என்னால் நிச்சயிக்கப்படவில்லை. விவேகத்தைமுன்னிட்டே தர்மத்திற்காக இந்த ஆரம்பம் என்னால் செய்யப்பட்டது. யுதிஷ்டிரா! நாம் குடியிருந்ததற்குப் பிரதியுபகாரம் செய்வதும் பெரிய* தர்மத்தைச்செய்வதுமாகிய இரண்டு பிரயோஜனங்கள் நிறைவேறினவையாகும். எந்த க்ஷத்திரியன் பிராம்மணகாரியங்களில் எப்போதாவது உதவிசெய்வனோ அவன் சிறந்தலோகங்களையடைவானென்பது என்கருத்து. ஒருக்ஷத்திரியன் மற்றொருக்ஷத்திரியனையே மரணத்திலிருந்துரட்சித்தால் இந்தலோகத்திலும் பரலோகத்திலும் பரந்த புகழையடைவான். பூமியில் வைச்யனுக்கு உதவிசெய்யும் க்ஷத்திரியனும் நிச்சயமாகஎல்லாலோகங்களிலும் புகழ்ள பிரஜைகளின் அன்புக்குரியவனாவன். அடைக்கலம் த்விம்பி வந்த சூத்திரனை ராஜாவிலிப்பாஞ்சியின் இந்தலோகத்தில் கல்லஸம் பத்தோடு கூடியதும் ராஜாக்களால் பூஜிக்கத்தக்கதுமாகிய குலத்தில்ஜனனமடைவன். பௌரவர்களை மகிழ்விப்பவனே! அருமைபான ஞானமுள்ள வியாஸபகவான் முன்னமேமனக்குஇவ்வாறுசொல்லியிருக்கிறார். அதனால் இவ்வாறு செய்யத்தூண்டினேன்" என்றாள்.

நூற்றெழுபத்தேழாவது அத்தியாயம்.

பகவதபர்வம் (தொடர்ச்சி)

(பீமன், மறுநாட்காலையில் பிராமணர்கொடுத்த அன்னத்தை வண்டியிலேற்றிக்கொண்டு பகாஸுரன் வஸிக்கும் வனம்சென்று வண்டியிலுள்ள அன்னத்தைப் புஜித்துக்கொண்டிருப்பதைக்கண்ட பகாஸுரன் பீமனிடம் யுத்தத்துக்குவந்ததும், அவனைப் பீமன்கொன்றதும்.)

யுதிஷ்டிரர், "தாயே! நீ விவேகத்தை முன்னிட்டுத் துன்பமுற்ற பிராமணவிஷயத்தில் தயையினால் இவ்வாறு செய்தது நியாய

---

*பிராமணர்களைக் காப்பது.

மானது. நீ பிராமண விஷயத்தில் தயையுள்ளவளாக இருப்பதனால் இந்தப்பீமன் எவ்வகையிலும் அந்த ராக்ஷஸனைக் கொன்று திரும்பி வருவது திண்ணம். ஆனால், இதை நகரத்தில் வஸிக்கும் மனிதர்கள் இவ்வாறு அறியாமலிருக்கவேண்டுமென்று இந்தப்பிராமணருக்குச் சொல்லவேண்டும். ஜாக்கிரதையோடு பிராம்மணரை நம்முடைய சொல்லுக்கு உடன்படுத்த வேண்டும்'' என்று சொன்னர். வீரரே! ஜனமேஜயரே! யுதிஷ்டிரரோடு ஆலோசனை செய்தபிறகு குந்தி உள்ளேசென்று புத்திரர்களெல்லாரிடமும் பிராமண காரியத்தைப் பற்றி ஆலோசித்தாள். பிறகு இரவு விடிந்தபோது மஹாபலவானான பீமஸேனன் பிராமணரிடம் சென்று, ''பிராம்மணரே! எனது அன்பராகிய உம்மை உமது ஸந்ததியுடன்கூட ஆபத்திலிருந்து விடுவிப்பேன். அந்த ராக்ஷஸனுக்கு அஞ்சவேண்டாம். நீர் என்னைப் பலியாகக்கொடும். இந்த வீட்டில் நான் ஒருதரம் திருப்தியாகச் சாப்பிடும்படி செய்யப் பிரயத்தனப்படும். பிறகு அந்தப் பயங்கரமான ராக்ஷஸனுக்கு நான் என்னைக் கொடுப்பேன். துரிதப்படுங்கள்; ஏன் தாமதிக்கின்றீர்கள். குற்றமற்றவர்களே! தாமதம் செய்யாதீர்கள். இப்போது என் உயிரைக்கொடுத்து உங்களை ரக்ஷிப்பதற்காக இப்போதே மனத்தில் நிச்சயம் செய்கிறேன்'' என்றசொல்லிச்சொன்னான். பரதச்ரேஷ்டரே! பிமனுல் இவ்வாறு உரைக்கப்பட்ட அந்தப் பிராமணர் தம்பந்துக்களுக்கு அந்த விஷயத்தைச் சொல்லிச் செவ்வையாகச் சேகரிக்கப்பட்ட போஜனத்தைக் கொடுத்தார். பிறகு அந்நகரவாஸிகள் நெய்யோடும் காய்கறிகளோடும் பலவகைப் பருப்புக்களோடும்கூட மாம்ஸத்தோடுசேர்ந்த அன்னத்தைப் பீமனுக்குக் கொணர்ந்தனர். அப்போது பீமஸேனன் பலவகையான மாமிசங்களையும் உயிர்ந்த பக்ஷணங்களையும் பலவகைச் சித்ரான்னங்களையும் உண்டபிறகு பசக்குப் பிடிக்கும்படியான அனேகம் தயிர்க்குடங்களைக்குடித்தான். அவன் உண்டபோது நகரத்து ஜனங்கள் நிரம்பின மனத்தோடு செம்மையாகச் சேகரித்த பதார்த்தங்களில் தத்தம் பாகங்களைப் பூர்ணமாகக் கொண்டுவந்தனர். பிறகு அந்த விருகோதரன் நகரத்து ஜனங்களினால் சூழப்பட்டவனாக அந்தக்காலிலேவண்டியில் காய்கறிகளும் தயிருங்கலந்த அன்னம் நிரம்பிய வண்டியின்மேலேறி வாத்திய முழக்கங்களோடு புறப்பட்டான். ''சிறுபிள்ளையும் அழகில் ஒப்பற்றவனும் பலசாலியுமாகிய இவன் தன் வயிற்றுக்காகத் தானே இரையாகத் தன்னை ராக்ஷஸனுக்குக் கொடுக்கப்போகிறான்.''

என்று இவ்வாறான சொற்களால் துதி செய்யப்பட்ட அந்தப்பீமன் உடம்பெல்லாம் கறுப்பான இரண்டு வண்டி எருதுகளை ஓட்டினான். பிறகு நாற்புறமும் மனிதர்களினாற் சூழப்பட்டவனாக மிகச்சந்தோஷமுற்று வாத்தியங்களின் முழக்கத்தோடு அவ்வரக்கனை நோக்கிச் சென்றான். அந்த இடம் சேர்ந்தபிறகு அவன் தனித்துக் கிட்டப் போனான். ஜனக்கூட்டம் ராக்ஷஸபயத்தினால் அஞ்சி, அங்கேயே நின்றது. அவன் தென்திசையைநோக்கித் தூரவழிசென்று அந்த இடத்தில் முன்னமே குறிப்பிடப்பட்ட பெரிய மரத்தைக்கண்டான். அந்தமரம் மயிர்களும், மச்சைநீர்களும், எலும்புகளும், கொழுப்பு களும், ரக்தமுள்ளவையும்ரக்தம்வற்றினவையுமான கைகளும், துடை களும் தோல்களும் சுற்றிலும் வியாபிக்கப்பட்டிருந்தது. கழுகுகள் பருந்துகள் இவைகளின் கூட்டங்களினால் மறைக்கப்பட்டதும், நரிக் கூட்டங்களால் காக்கப்பட்டதும் கடுமையான நாற்றமுள்ளதும், பார்க்க வழங்காததும், ஸ்மசானம்போல் கொடியதுமாகிய அந்தப் பெரிய மரத்தினிடம் சென்று அந்தவீரன் சிந்திக்கலானான். "பல வகை உணவுகளாலும் பெரிய அன்னக் குவியலாலும் நிரப்பப்பட் டதும், பருப்புக்கள் நிரம்பினதுமாகிய இந்த வண்டியைப் பலத்தில் மிகுந்த பகனென்னும் பெயருள்ள அரக்கன் எதற்குள் பார்ப்பனை, அதற்குள்ளே இவ்விடத்திலேயே நான் புஜித்து விடுவேன். மறுபடி இஃது எனக்குக்கிடைப்பது அரிது. நான் ராக்ஷஸனோடு யுத்தஞ் செய்யும் போது எல்லாம் இறைந்துபோய்விடும். பகனைக்கொன்ற பிறகு பிணம் தொட்டதனால் உண்ணத் தகாததாய்விடும்" என்று பயங்கரமான செய்கையுள்ளவனும் உயர்ந்த வீரனுமான பீமசேன் இவ்வாறு ஆராய்ந்து ஜனமில்லாத இடத்தில் உட்கார்ந்து அந்த உயர்ந்த உணவையுண்டான். அப்போது நகரத்தார் நாலுபுறங்களி லும் மரங்களிலேறி அவனைப் பார்த்தனர். "ராக்ஷஸனல்லாதவன் இந்தப்பெரிய பலியை இவ்வாறு உண்ணமாட்டான். பகனே இந்தப் பிராமண உருவத்தோடு புஜிக்கிறான்" என்று ஜனங்கள் பேசிக் கொண்டனர். மிகுந்த பலமுள்ள பீமன் அந்த அன்னத்தை உட கொண்டபிறகு பகனைப் பரிகாசம் செய்தான். பிறகு பலசாலியாகிய பாண்டவன் அந்த ராக்ஷஸனிருக்கும் வனத்தைச் சேர்ந்து அந்த அன்னத்தைக் காண்பித்து, அவனைப் பெயரிட்டழைத்தான். அப் போது அந்தப்பீமனுடைய பேச்சினால் கோபமுற்ற அவ்வரக்கன் மிகுந்த ஆக்கிரகத்தோடு பீமனிருந்த இடத்திற்கு வந்தான்.

பெரியதேகமுள்ளவனும், சிவந்த கண்களுடையவனும், விகாரரூபமுள்ளவனும், மீசைதாடிகளும் தலைமயிர்களும் சிவந்தவனும், காதுவரையில் திறக்கப்பட்டவாயுள்ளவனும், முளைகள்போன்ற காதுகளையுடையவனும், மிகப்பயங்கரனுமான அந்தராக்ஷஸன் மிக்கவேகத்தினால் பூமியைப் பிளப்பவன்போல் புருவங்களை மூன்று நெறிப்பாக நெறித்துக்கொண்டும் உதட்டைக்கடித்துக்கொண்டும், அன்னத்தைப் புஜிக்கும் அந்தப் பீமனைக்கண்டு கோபித்துக் கண்களையுருட்டி, "எனக்காகச் சேகரிக்கப்பட்ட இந்த அன்னத்தை என்கண்முன்னே புஜிக்கிறானே! யமன்வீட்டுக்குப் போகக்கருதிய இம்மதிகெட்டவன் யார்?" என்று சொன்னான். பாரதரே! பிறகு பீமஸேனன் அதைக் கேட்டுச் சிரித்துக்கொண்டே அந்த ராக்ஷஸனைக் கவனிக்காமல் பின்னேதிருப்பிக்கொண்டு புஜித்துக்கொண்டேயிருந்தான். அந்த ராக்ஷஸன் கடுமையான இரைச்சலிட்டு இரண்டு கைகளையும் ஓங்கிப் பீமஸேனனைக்கொல்ல ஓடிவந்தான். அப்படியிருந்தும்வ திகளானவீரர்களைக் கொல்லுகிறவனும் பாண்டிபுத்திரனுமான விருகோதரன் அந்த ராக்ஷஸனை அமைதியுடன் பார்த்துக்கொண்டு அன்னத்தைப்புஜித்துக்கொண்டேதான் இருந்தான். அந்தராக்ஷஸன் கோபம் நிரம்பினவனைப் பின்னே நின்று இரண்டுகைகளாலும் குந்திபுத்திரனை விருகோதரனை முதுகில் அறைந்தான். அவ்வாறு பலவானை ராக்ஷஸனால் இரண்டுகைகளாலும் உலைய அடிக்கப்பட்ட அந்தப்பீமன் ராக்ஷஸனைத் திரும்பிப்பார்க்கவேயில்லை. புசித்துக்கொண்டே தானிருந்தான். அதன்பிறகு பலவானை அந்தராக்ஷஸன் இன்னும் அதிககோபங்கொண்டு மரத்தையெடுத்துப் பீமஸேனனையடிக்க மறுபடியும் எதிர்த்தோடிவந்தான். வீரனைபீமன் கோபத்தோடு ராக்ஷஸனால் எறியப்பட்ட அம்மரத்தை இடக்கையினால் தடுத்து வலக்கையினால்புஜித்துக்கொண்டே இருந்தான். பீமஸேனன் வண்டியிலுள்ள அன்னத்தைப்புஜித்தபிறகு மலைபோன்ற அந்தமுழுமரத்தையும் ராக்ஷஸனுடைய கையுடன்கூடப்பிடித்துச் சிரித்துக்கொண்டேபுஜித்து ராக்ஷஸனைவிட்டுவிட்டு நூற்றுக்கணக்கான தயிர்நிரம்பின குடங்களையும் நெய்க்குடங்களையும் குடித்துவிட்டுக் கையலம்பிக்கொண்டு உற்சாகத்துடன் இரண்டாவது மலைபோல் நின்றான். பெரியமரத்தைச் சுழற்றிக்கொண்டுவருகிற பயங்கரமான ராக்ஷஸனைக் கண்டு வீரனான பீமஸேனன் யுத்தத்திற்காக எழுந்து விம்மகர்ச்சனஞ்செய்தான். பிறகு கைகளுடைய வேகத்தையும் தோள்தட்டுதலை

யும் கர்ச்சனையின் மஹாசப்தத்தையும்செய்து மிகுந்தகோபத்துடன் பீமஸேனன் ராக்ஷஸனை அழைத்தான். இடிமுழக்கம்போன்ற குரலினால் ராக்ஷஸனைப் பயமுறுத்துகிறவன்போலப் பேசலுற்றான். "இராக்ஷஸர்களில் இழிவானவனே! இரண்டுகால்களும்நாலுகால்களுமுள்ளவற்றின்மாம்ஸங்களாலும் மிகுந்த அன்னங்களினாலும் அதிகநாளாக உன்சரீரம் வளர்க்கப்பட்டிருக்கிறது. என்கை பலத்தினிடம்வந்தபின் மறுபடிநீ இரையெடுக்கப்போகிறதில்லை. இப்போது என்கைகளினால் பிசையப்பட்டவனாக யமன்வீடு செல்வாய். இந்தநகரத்திற்கு முன்னாப்போன்ற உன்னை யெடுத்துவிட்டபிறகு இன்றுமுதல்வேத்திரகீய நகரத்தில்வஸிப்பவர்கள் அச்சமற்றுத் தூங்குவர். இப்போது யுத்தத்தில்என்னால்கொல்லப்பட்ட உன்பந்துக்களைக்கழுகுகளும் நரிகளும் காக்கைகளுந்தின்னட்டும்: தரையில்அக்ஷதவுருவாகஇழுக்கட்டும்." என்றான். இவ்வாறு சொல்லி மிகுந்தகோபத்துடன் பகனைக்கொல்வதற்கு முற்பட்டான். ராஜேந்த்ரரே! பெரியஉடலும்கிவர்தநிறமும் சிவந்தகண்களுமுடைய அந்தப்பகனும் மிகுந்த வேகத்தினால் பூமியைப் பிளப்பவன்போலப் பீமஸேனனை எதிர்த்தோடினான். அந்தப்பலவானை ராக்ஷஸனின்னுமதிகபராக்ரமம் பொருந்தியவனாக முன்றுநெறிப்பாக நெறித்து உதட்டைக்கடித்து மரத்தைபெடுத்துப் பீமஸேனபடிப்பதற்காக விரைவாகஓடிவந்தான். பாரதரே! கோபித்துக்கொண்டராக்ஷஸனால் எறியப்பட்ட மரத்தைப் பீமஸேனன் சிரித்துக்கொண்டு இடக்கையினால் லீலையாகப் பிடித்தான். பிறகு அந்தப்பலவானும் யுத்தத்தில் மயலுடையும் பலவகைமரங்களையெடுத்துப் பீமஸேனன்மேல்போட்டான். எல்லாமரங்களையும் பீமஸேனன் தன்கை வீரலினால் தள்ளிவிட்டான். ராஜேந்த்ரரே! மரங்களின் சோலைகளையழிப்பதாகிய அந்த விருக்ஷயுத்தம் பகனுக்கும் பீமனுக்கும் அப்போது மிகக்கோடியதாகவும் பெரியதாகவும் நடந்தது. அந்தப்பகனென்னும் ராக்ஷஸன் தன் பெயரைப் புகழ்ந்துசொல்லிக் கடுமையான வேகத்தோடு பீமஸேனனை யெதிர்த்து யுத்தம்செய்தான். அவர்களுடைய மிகுந்த வேகத்தினால் பூமி நடுங்கிற்று. மிகுந்த ஆனஸல்ல மரங்களை கொடியில் பொடியாகச் செய்தனர். பகன் விரைவாக ஓடிவந்து கைகளினால் பீமனை யெடுத்து எறிந்தான். எறியப்பட்ட பீமஸேனனும் சிரித்துக்கொண்டே மறுபடியும் எழுந்தான். பீமஸேனன் பகனைத் தழுவித் தரையில் அடித்தான். பீமன் அந்த விழுந்த பகனை விட்டுவிட்டு, "ரா

க்ஷஸா! கலைப்பாறு" என்றுசொல்லி மறுபடியும் தோள்தட்டி, "எழுந்திரு," என்றுசொன்னான். பிறகு விகாரரூபமுள்ள பகன் கோபத்துடன் எழுந்து மிகப்பெரிய உருவமெடுத்துக்கொண்டு உடனே விருகோதரனை பயமுறுத்திக்கொண்டு நின்றான். பீமசேனனும் பார்க்கப் பயங்கரமான ராக்ஷஸனைப் பார்த்து நகைத்தான். பீமன் பின்னின்று கைகளினால் ராக்ஷஸனைப்பிடித்து முழங்கால்களினால் அமுக்கிப்பிறகு கீழே வீழ்த்தினன். திரும்பவும் கோபமுற்றபீமன் கோபத்தையே உயிராகவுள்ள அவ்வரக்கனைவிட்டுத் தன் இடுப்பைக்கொஞ்சம்தூக்கி அந்த ராக்ஷஸனுடைய புஜங்களைப்பிடித்தான். பலவானான பீமசேனன் விரைவாக அவன் இரண்டு புஜங்களையும் பிடித்துத்தூக்கி உதறி அவனைக்கீழே தள்ளினன். அச்சப்படத்தக்க பராக்கிரமமுள்ள பீமன் கோபித்துக் கீழேவிழுந்த அவனை மார்பில் இடதுகாலால் உதைத்தான். வாயைத்திறந்துகொண்டிரக்குத்தொங்கிக்கொண்டும் பயங்கரமாயிருந்த அந்தக்கொடியராக்ஷஸன் எதிர்த்துவந்து பீமனைத்தலையில் அடித்தான். பயங்கரமான பராக்கிரமமுள்ள அந்தப்பீமன் மிகுந்த பலவானான ராக்ஷஸனால் இவ்வாறு அடிக்கப்பட்டு மிகுந்த கோபாவேசங்கொண்டான். பலவானான பீமன் ராக்ஷஸனை இடுப்பைப் பிடித்துத் தூக்கிநிறுத்தினன். அந்த ராக்ஷஸனும் பீமனும் மதம் பிடித்த பெரிய யானைகளைப்போல் ஒருவரையொருவர் பிடித்து ஒருவரைஒருவர்இழுத்தனர். அப்போது பீமன்ராக்ஷஸன் இவர்களுடைய கையடியின் சப்தங்களினால் வேதரகிய நகரமுற்றும் நடுக்கமுற்றது. அவ்விருவருடைய பெரிய வேகத்தினாலும் அங்கே பூகம்பம் உண்டாயிற்று, வேகத்தினால் மரங்களையும் கொடிகளையும் பொடியாகச் செய்தனர் ஒருவரையொருவர் வதஞ்செய்யக்கருதிச் சந்தித்த அந்த வீரர்கள் மலைகளாலும் கொடுமுடிகளாலும் மலைகளினின்றும் சரிந்தபாறைகளாலும் ஒருவரை யொருவர் அடித்து அவற்றைச் சூர்ணமாகச் செய்தனர். யுத்தத்தில் மிகுந்த மதங்கொண்ட அவ்விருவரும் பூமியை நீளத்திலும் அகலத்திலும் இரண்டு யோசனைத்தூரம் எங்கும் மரங்களும் கற்களும் புற்களும் புதர்களும் கொடிகளுமில்லாமல்ஆமை முதுகைப்போன்றதாகச் செய்தனர் ராக்ஷஸனும் கௌரவராஜனும் இவ்வாறு சற்றுநேரம் யுத்தஞ்செய்தபிறகு கௌரவராஜன் ராக்ஷஸனை ஒழிப்பதற்காக எண்ணங்கொண்டு பற்களால் கடகடவென்றுசப்தஞ் செய்து உதட்டைக்கடித்துக் கண்களை விசாலமாகத்திறந்து உருட்டி விழித்து ராக்ஷஸனைக்குறுக்காகப் பார்த்தான். பிறகு மிகுந்தபல

முள்ள பீமசேனன் அந்த ராக்ஷஸனை ஆட்டித் தழுவிப்பிடித்தான். அவனைக் கைகளாற்கட்டி முழங்கால்களினல் விலாப்புறங்களிலும் வயிற்றிலும் முதுகிலும் மார்பிலும் உதைத்தான். பகன் தடைகளும் கைகளும் மார்பும் பிளந்து தேகக்கட்டுவிட்டு அதிக வியர்வையும் பெருமூச்சுமுற்று உயிரும்கண்களும் வெளிக்கிளம்பிப் பிரம்மாண்டம் வெடித்துப்போகச்செய்யும்படி கத்தி மூச்சுக்குறைந்து தரையில் விழுந்து தடியினல் அடிபட்ட பாம்புபோலத் துடித்துக்கொண்டிருந்தான். துடிக்கின்ற பெரிய சரீரமுள்ள பகனைப் பீமன் சுற்றிலும் இழுத்தான். அதிக பலமுள்ள பாண்டவனல் வேகமாக இழுக்கப்பட்ட ராக்ஷஸன் மிகுந்த சிரமத்தை யடைந்தான். புருஷசிரேஷ்டனை பீமசேனன் ராக்ஷஸனுக்குப் பலம்குறைவதைக்கண்டு பூமியில் தேய்த்து முழங்கால்களினல் இடித்தான். பிறகு பீமன் அவனுடைய முதுகை முழங்காலினல் பலமாக அமுக்கிக்கொண்டு தன் வலக்கையினல் கழுத்தைப்பிடித்தான். இடக்கையினல் இடுப்பு வஸ்திரத்தைப் பிடித்துக்கொண்டு அவனுடைய முதுகை முழங்காலில் ஏற்றிப் பேரொலியுண்டாகும்படி முறித்தான். ராஜாவே! அப்போது பீமனல் முறிக்கப்பட்ட அந்தக்கொடிய ராக்ஷஸனுடைய வாயிலிருந்து இரத்தம் பெருகிற்று.

தூற்றெழுபத்தேட்டாவதுஅத்தியாயம்.

பகவதபர்வம் (தொடர்ச்சி.)

(பகனை வதஞ்செய்தபிறகு அங்குவந்த பகனுடைய பரிவாரங்கள் பீமனுடன் உடன்படிக்கைசெயிதுகொண்டதும், பீமன் நகரத்தின்வாயிலில் பகனுடைய சரீரத்தைப்போட்டுவிட்டுப் பிராமணர்வீடுவந்து குந்திமுதலானவர்களுக்குப் பகனுடைய விருத்தாந்தத்தைச்சொன்னதும், மரணமடைந்த பகனைப்பார்ப்பதற்குப் பட்டணத்து ஜனங்கள் சென்றதும், திருவிழாக்கொண்டாடினதும், பகவதஞ்செய்த பீமனை எல்லோரும் துதிசெய்ததும்.)

பிறகு பெரிய மலைபோன்ற அந்தப்பகன் விலாப்புறங்களும் உடலும் முறிந்து, பயங்கரமான சத்தம் செய்து உயிர்போய் விழுந்தான். ராஜாவே! அந்த ராக்ஷஸனுடைய அந்தச் சப்தத்தினல் ஜனங்கள் பயந்து வேலைக்காரர்களுடன்கூடவே வீட்டிலிருந்து வெளிப்பட்டனர். ராஜாவே! அப்போது பகனுடையதம்பி பீமனைச் சரணமடைந்தான். பிறகு மிகுந்த பலமுள்ள ராக்ஷஸராஜனை பகன் கொல்லப்

பட்டதைக்கண்டு ராக்ஷஸர்கள் மிகப்பயமுற்றுப் பீமனிடச்சரணமடைந்தனர். யுத்தஞ்செய்கிறவரிற் சிறந்தவனும் பலவானுமான பீமனிடமுள்ள பயத்தினால் அறிவுதப்பியிருந்த அந்த ராக்ஷஸர்களைச் சமாதானஞ்செய்து, "நீங்கள் மறுபடி ஒருபோதும் மனிதர்களைத் துன்பம் செய்யக்கூடாது" என்றும், "துன்பஞ் செய்பவர்களுக்குச்சிக்கிரம் இவ்வாறே வதம்நேரிடும்" என்றும் சொல்லி நியமத்தில் நிற்கச்செய்தான். பாரதவீர! அந்தப்பீமனுடைய அந்தச்சொல்லைக்கேட்டு அவ்வரக்கர்கள் அவனிடம், 'அவ்வாறேஆகட்டும்' என்று சொல்லி அந்த உடன்படிக்கையை அங்கீகரித்தனர். அப்போது பகனுடைய ஸஹோதரன் தன் இனத்தாருடன் பீமனை வந்தனஞ்செய்தான். பாரதவீர! அந்த நகரத்தில் அது முதல் ராக்ஷஸர்கள் 'சாந்தர்களாகவே நகரத்திலுள்ள ஜனங்களினால் காணப்பட்டனர். பிறகு பீமனால் கழுத்து முறிக்கப்பட்டுக் காதுபோய்க் கண்கள்போய் நாக்கு வெளிப்பட்டுப் பிரஜைகளுற்று இறந்துபோன அந்த ராக்ஷஸன் பலவிதமான லீலையாட்டுச்செய்கையுடன் நகரத்தின் கோபுரவாயிலில் இழுத்துவிடப்பட்டான். வாயிலில் போட்டுவிட்டு அந்தப் பீமன் நகரத்துக்குள் வந்தான். பாலர்களும் விருத்தர்களுமாகிய மனிதர்கள் அந்தராக்ஷஸனை நிச்சயமாக மறுபடியும் நமது நகரத்திற்குள் வருகிறானென்று பயந்து ஓடினர். பகனைக்கொன்றபிறகு பீமன் அங்கே அந்தப் பிராமணகிருஹத்துக்குச் சென்று, இரண்டுகாளைமாடுகளையும் வண்டியையும் பிராமணரிடம் ஒப்புவித்தான். 'போசாமல் வீட்டிற்குள்போம்,' என்று அந்தப் பிராமணனைத் தமரைப் பார்த்துச் சொல்லிவிட்டு இரவில் தாயார் ஸஹோதரர்கள் முன்னிலையில் பதிக்கைநகருக்குப்போய் யுத்தம் எவ்வாறு நடந்ததோ அதையெல்லாம் சொன்னான். விடியற்காலத்தில் அந்த நகரத்திலிருந்து வெளியிற்போன மனிதர்கள், அடிக்கப்பட்டு ரத்தத்திலுருண்டிருக்கிற ராக்ஷஸனைத் தரையிற் கண்டனர். மலையின் கொடுமுடிபோல் விழுந்திருக்கும் பயங்கரமான அந்த ராக்ஷஸனைக் கண்டு அந்த நகரத்து ஜனங்கள் மயிர்க்கூச்சமெடுத்தவராயினர். உடனே ஏகசக்கரநகரத்துக்குட் சென்று நகரத்துக்குள்ளிருப்பவர்களுக்குச் சமாசாரம் தெரிவித்தனர். ராஜாவே! பிறகு நகரத்திலுள்ள ஜனங்கள் ஆயிரக்கணக்காகப் பெண்டுகளும் குழவர்களும் குழந்தைகளும் பகனைப்பார்க்க அங்கே வந்தனர். பிறகு மனிதர் செய்யமுடியாத

அந்தச் செய்கையைக்கண்டு அவரனைவரும் வியப்புற்றனர். முன்னே பயத்தினால் தாங்கள் வேண்டிக்கொண்டிருந்த தேவதைகளுக்குப் பூஜைகள் செய்தனர். அதன்பிறகு இன்றைத்தினம் பகனுடைய இரைக்கு யாருடைய முறையென்று எண்ணிப்பார்த்தனர். தெரிந்த பிறகு அவர்களனைவரும் அந்தப் பிராமணரிடம் வந்து கேட்டனர். இவ்வாறு பலவிதமாகக் கேட்கப்பட்டபின் அந்தப் பிராமணச்ரேஷ்டர், அப்போது பாண்டவர்களை வெளியிடாமல் நகரத்து ஜனங்களனைவருக்கும் பின்வருமாறு சொல்லலானார்:—

"பகனுடைய இரைக்காக நியமிக்கப்பட்டுச் சுற்றத்தாருடன் அழுதுகொண்டிருந்த என்னை மந்திரவித்தை பெற்றவரும் உயர்ந்த மனஸுள்ளவருமாகிய ஒரு பிராமணர் கண்டார். அந்தப்பிராமணச்ரேஷ்டர் முதலில் இந்த நகரத்தின்துயரத்தைப்பற்றி என்னைக்கேட்டு என்னை நம்பச்செய்து சிரித்துக்கொண்டு, "அந்தத்துராத்மாவுக்கு இந்த அன்னத்தை நான் கொண்டுபோய்ச் சேர்ப்பேன். எனக்காகப் பயப்படவேண்டாம்." என்று சொன்னார். அவர் அந்த அன்னத்தையெடுத்துக்கொண்டு பகனுடைய வனத்தைநோக்கிச் சென்றார். உலகங்களுக்கு அனுகூலமான இந்தக்காரியம் அவரால் செய்யப்பட்டிருக்க வேண்டுமென்பது நிச்சயம்" என்றுசொன்னார். பிறகு அந்தப் பிராமணர்கள் க்ஷத்திரியர்கள் வைசியர்கள் சூத்திரர்களனைவரும் மிகுந்த ஆச்சரியமும் ஸந்தோஷமுமுற்றவர்களாகி, அப்போதே பிராமணபூஜை செய்தனர். பிறகு கிராமங்களிலுள்ளவர்களனைவரும் அந்த மிகுந்த ஆச்சரியத்தைப்பார்ப்பதற்கு அந்தநகரத்திற்கு வந்தனர். பாண்டவர்களும் அங்கேயே வஸித்தனர். வேத்திரகீய கிருஹம் என்னும் ஊரிலுள்ளவர்கள் அனைவருமே ஆச்சரியத்துடன்பயங்கரமான பராக்கிரமமுள்ள பீமனைச்சூழ்ந்துகொண்டு அவனிடம் வந்து சேர்ந்தனர். "மஹாத்மாக்களான பிராமணர்களிடத்தில் ஒன்றும் பொருந்தாமல் போகாது." என்று சொல்லிப் பீமனைமரியாதைசெய்து பட்டணத்து ஜனங்கள் சுற்றிலும் சூழ்ந்துகொண்டனர். "இவர் பிதாவைப்போல் உண்மையாகக் கஷ்டங்களிலிருந்து நம்மைக் காப்பாற்றினவர். இவருடைய அடிபணிந்து நின்று காத்திருப்போம்" என்றனர். அந்தப்பகன் கொல்லப்பட்டபின் அந்த மனிதர்கள் பயந்து அவனை நினைத்துக்கொண்டு பீமனுக்கு மாம்சங்களும் தயிருமுள்ள அன்னத்தை முறையாகக் கொண்டுவந்தனர். வீரர்களான பாண்டவர்கள் தாயாருடன் கூட அங்கிருந்து வேக

மாகப்போயினர் உக்கிரமான தவமுள்ள அந்தப் பாண்டவர்கள் ஏக சக்கிரநகரஞ் சென்று உறுதியான தவமுள்ளவர்களாகவும் வேதாத்ய யனத்தில் ஊக்கமுள்ளவர்களாகவும் ஜடைகள் தரித்த பிரம்மசாரிக ளாகவும் அந்தப் பிராமணகிருகத்தில் வாஸஞ் செய்தனர். அவர்கள் நீண்டகாலம் தாயாருடன் கூட ஏகசக்ராநகரத்தில ஒன்று சேர்ந்தி ருந்தனர்.

பகவதபர்வம் முற்றிற்று.

நூற்றெழுபத்தோன்பதாவது அத்தியாயம்.

சைத்ரரதபர்வம்.

(பிராமணன் வீட்டுக்கு வந்த ஓர் அக்நி த்ரௌபதி ஸ்வயம்வரத்தையும் த்ருஷ்டத்யும்நன் த்ரௌபதி இவர்களுடைய பிறப்பையும் பாண்டவர்களுக்குச் சொல்லியது.)

ஜனமேஜயர், "பிராமணரே! அவ்வாறு பகனென்னும் ராக்ஷஸ னைக்கொன்றபிறகு அந்தப் புருஷச்ரேஷ்டர்களாகிய பாண்டவர்கள் அங்கே என்ன செய்தனர்?" என்று கேட்க, வைசம்பாயனர் சொல் லுகிறார்.

ராஜாவே! பகனென்னும் ராக்ஷஸனைக்கொன்றபிறகு வேதத்தை யே அத்யயனஞ்செய்துகொண்டு அங்கேயே பிராமணன் வீட்டில் வாஸஞ்செய்தனர். பிறகு சிலநாளுக்குப்பின் கடுமையான தவமுள்ள ஒரு பிராமணன் இருப்பிடம் வேண்டி அந்தப்பிராமணனுடைய வீட்டிற்கு வந்தான். அப்பொழுது எப்போதும் எந்த அதிதி யையும் ஆதரிப்பதை விரதமாகக்கொண்ட அந்தப் பிராமணகிரேஷ் டன் வந்தவனுகிய அந்தப் பிராமணனை நன்றாகப்பூஜித்து அவனுக்கு இடங்கொடுத்தான். பிறகு புருஷச்ரேஷ்டராகிய அந் தப்பாண்டவரனைவரும் குந்தியுடன்கூட அழகிய கதைகளைச் சொல் லும் அந்தப்பிராமணனை அடுத்திருந்தனர். அவன்புண்ணியகூஷத்தி ரங்களையும்புண்ணியதீர்த்தங்களையும்நதிகளையும்அரசர்களையும்ஆச்சரி யமான பற்பலதேசங்களையும்நகரங்களையும்பற்றிக்கதைசொல்லினன். ஜனமேஜயரே! அந்தப்பிராமணன் அங்கே கதைமுடிவில் பாஞ்சால தேசத்தில் ஆச்சரியமான வடிவத்தையுடைய த்ரௌபதியின் ஸ்வ

யம்வரத்தையும் த்ருஷ்டத்யும்னன் பிறந்ததையும் சிகண்டி பிறந்ததையும் திரௌபதி கர்ப்பத்திலிருந்து பிறவாமல் துருபதனுடைய பெரியயாகத்தில்பிறந்ததையும் சொல்லினன். அந்தமஹாத்மாவான பிராமணனுடைய உலகதத்தில் மிக்க ஆச்சரியமான அந்தச் சொல் லைக்கேட்டுப் புருஷசிரேஷ்டர்களான பாண்டவர்கள் கதையை விரிவாகக் கேட்க விரும்பி, துருபதன் புத்திரனாகிய த்ருஷ்டத்யும்னன் அக்னியிலிருந்தும், த்ரௌபதி யஜ்ஞவேதி நடுவிலிருந்தும் பிறந்த ஆச்சரியம் எவ்வாறு? சிறந்த வில்லாளியும் துரோணருக்கு மரணத் தைக் கொடுப்பவனுமாகிய த்ருஷ்டத்யும்னன் சிறந்த வில்லாளியான துரோணரிடத்தில் அஸ்திரங்க ளெல்லாவற்றையும் கற்றுக்கொண்ட தும் எவ்வாறு? பிராமணரே! துரோணரும் துருபதனுமாகிய இருவ ரும் எவ்வாறு ஸ்நேகிதர்களாயினர். யாருடைய செய்கையினால் வேறு பட்டனர், என்று கேட்டனர். ராஜாவே! புருஷச்ரேஷ்டர்க ளான பாண்டவர்களால் இவ்வாறு கேட்கப்பட்ட அந்தப்பிராமணன் அப்போது அவையெல்லாவற்றையும் திரௌபதியின் ஜனனத்தை யும் சொல்லலானன்.

நூற்றெண்பதாவது அத்தியாயம்.

சைத்ரரதபர்வம். (தொடர்ச்சி.)

(துரோண துருபதர்களுடைய உற்பத்தியும் வரலாறும்)

"கங்கையின் உத்பத்தியில் சிறந்த தபஸ்ஸுள்ளவரும் சிறந்த ஞானமுள்ளவரும் எப்போதும் உறுதியான ஸ்ரதமுள்ளவருமாகிய பரத்வாஜரென்னும் மஹரிஷி இருந்தார். ஸ்நானஞ்செய்வதற்காகக் கங்கைக்குப்போன ரிஷி, முன்னேயேவந்து ஸ்நானஞ்செய்துகொண் டிருந்த க்ருதாசி யென்னும் அப்ஸரஸை அங்கேகண்டார். அப் போது நதிக்கரைக்காற்று அவளுடைய வஸ்திரத்தை அடித்துக் கொண்டுபோயிற்று. அப்போது பரத்வாஜரிஷி வஸ்திரம் விலகின அவளைக்கண்டு காமங்கொண்டார். பருவத்திலிருக்கும் பிரம்மசாரி க்கு வெகுகாலத்திற்குப்பின் அவளிடம் மனம்பற்றினதினால் வீ யம் நழுவிற்று. பரத்வாஜரிஷி அதைத் துரோணமென்னும் பாத்தி ரத்தில் வந்தினர். சிறந்த ஞானவானான பரத்வாஜருக்கு அதி லிருந்து துரோணரென்னும் குமாரர் பிறந்தார். அவர் வேதங்களை

யும் வேதாங்கங்களையும் முழுதும் ஓதினர். பரத்வாஜருக்கு ஸ்நேக னை ப்ருஷதனென்னும் ஓர் அரசன் இருந்தான். அவனுக்கு அப் போது துருபதனென்னும் புத்திரன் பிறந்தான். ப்ருஷதன்புத்தி ரனும்க்ஷத்திரியச்ரேஷடனுமான அந்தத் துருபதன் ஒவ்வொரு நாளும் ஆச்ரமத்துக்குச்சென்று துரோணருடன்கூட விளையாடினன்; வேதாத்யயனத்தையுஞ் செய்தான். பிறகு ப்ருஷதன் காலஞ்சென்ற போது அந்தத்துருபதன் ராஜாவானன். பரசுராமர் தமது தனத்தை முழுதும் கொடுக்கக் கருதியிருப்பதாகத் துரோணர் கேள்வியுற்றார். வனத்திற்குப் புறப்பட்ட பரசுராமரை நோக்கிப் பரத்வாஜபுத்திர ரான துரோணர், "ப்ராம்மணோத்தமரே! நான் துரோணன்: திரவி யத்தில் ஆசையோடு வந்திருக்கிறேனென்றறியும்." என்று சொன் னர். அதைக்கேட்ட பரசுராமர், "இப்போது என்னுல் தேகம் ஒன்று மட்டுமே மிகுக்கப்பட்டிருக்கிறது. ப்ராம்மணனே! வேண்டு அஸ்திரவித்தை, தேகம், இந்த இரண்டனுள் எதாவதொன்றை என்று" சொன்னர். துரோணர், "அஸ்திரங்க ளெல்லாவற்றையும் அவையெல்லாவற்றிற்கும் ப்ரயோக ஸம்ஹாரங்களையும் எனக்கு நீங்கள் கொடுக்கக் கடவீர்கள்" என்று கேட்டனர். ப்ருகு நந்தனரானபரசுராமர் அவ்வாறேயாகட்டுமென்று சொல்லி உடனே அவருக்கு அஸ்திரங்களைக் கொடுத்தார். அப்போது துரோணர் அவற்றைப் பெற்றுக்கொண்டு க்ருதார்த்தரானர். துரோணர் பரசுராமரிடமிருந்து மிக்க சிறப்புள்ள ப்ரம்மாஸ் திரத் தைப் பெற்றுக்கொண்டு மனமகிழ்ந்து மனிதர்களுக்குள் மேற்பட் டவரானர். அதன்பின் பராக்ரமசாலியும் புருஷ விஸ்மமுமாகிய துரோணர் துருபதனைச் சந்தித்து, "நீனெகிதனென என்னைத் தெரி ந்துகொள்" என்று சொன்னர். துருபதன், "வேதமோதாதவன் வேத மோதினவனுக்கும் ரதயுத்தம் தெரியாதவன் ரதயுத்தம் தெரிந்த வனுக்கும் ராஜ்யமில்லாதவன் ராஜ்யமுள்ளவனுக்கும் தோழனவ தில்லை. தோழனென்பதை முன்னிட்டு எதை விரும்பலாம்" என்று சொன்னன். புத்திமானகிய அந்தத்துரோணர் பாஞ்சாலராஜனைப் பற்றிக் கும் மனத்துள் ஒரு நிச்சயஞ் செய்துகொண்டு கௌரவச் ரேஷ்டர்களுடைய நகரமாகிய அஸ்தின புரத்திற்குச் சென்றர். பீஷ்மர், வந்துசேர்ந்த அந்தச்சிறந்த புத்திமானனத்ரோணருக்குப் பலவகைத் தனங்களைக்கொணர்ந்து கொடுத்துத் தம்முடைய பேரன் மார்களைத் அவரிடம் சிஷ்யர்களாக ஒப்புவித்தார். பிறகு துரோணர்

தமது அந்தச் சிஷ்யர்களையெல்லாம் வருவித்துத் துருபதனைத் தன் பப்படித்துவதற்காகப் பாண்டவர்களாகிய சிஷ்யர்களைப் பார்த்து, "குற்றமற்றவர்களே! குருதக்ஷிணையொன்று என்னுள்ளத்திலிருக் கிறது. நீங்கள் அஸ்திரவித்தையில் தேர்ந்தபிறகு அது கொடுக்கத் தக்கதாகும். உண்மைசொல்லுங்கள்" என்று சொன்னர். அப்போது அந்த ஆசாரியர் அர்ச்சுனன்முதலியவர்களால் அவ்வாறுகட்டுமை என்றுசொல்லப்பட்டார். பாண்டவர்களனைவரும் அஸ்திரங்களையப்பிய ஸித்துக்குருதக்ஷிணைகொடுக்கநிச்சயத்தீர்மானித்திருந்தபோது, துரோணர் மறுபடியும், "பிருஷதனுடைய புத்திரனை துருபதன் சத்ரவதி நக ரத்தில் ராஜாவாயிருக்கிறான். அவனிடமிருந்து அந்த ராஜ்யத்தைப் பறித்து உடனே எனக்குக்குருதக்ஷிணை விஷயமாகக் கொடுக்கவேண் டும்" என்றுசொல்லச்சொன்னர். அந்தத்திருதராஷ்டிர புத்திரர்கள் பாஞ்சாலதேசத்தரசனிடம் பயந்தனர். மறுபடியும் பாண்டவர்கள் முதலியவர்கள் திருதராஷ்டிர புத்ரர்களுடன் சேர்ந்து துரோணரால் அனுப்பப்பட்டார்கள். கர்ணன் துரியோதனன் முதலிய அந்த க்ஷத்திரியச்ரேஷ்டர்கள் துருபதனைச் சந்தித்துத் தோல்வியடை ந்து திரும்பினர். பிறகு பாண்டுபுத்திரர்கள் ஐவரும் துருபதனை அவன் மந்திரிகளுடன் யுத்தத்தில் ஜயித்துக்கட்டித்துரோணருக்குக் காண்பித்தனர். யாராலும் ஜயிக்கமுடியாத தேவேந்திரனைப் போன்ற தேவேந்திர புத்திரனை அர்ச்சுனன், தேவேந்திரன் தானவனை ஜயிப் பதுபோல் பாஞ்சால ராஜனை துருபதனை அப்போது ஜயித்தான். மஹா பராக்ரம சாலியான அந்த அர்ச்சுனனுடைய அந்தச்சிறந்த சக்தியைக் கண்டு யஜ்ஞஸேனனைச் சேர்ந்த ஜனங்களனைவரும் வியப்புற்று, "சூரத்தன்மையில் அர்ச்சுனனுக் கொப்பான ராஜபுத் திரன் இல்லை" என்று கூறினர். துரோணர், "ராஜாவே! மறுபடியும் உன்னுடன் ஸ்நேகத்தை விரும்புகிறேன். ராஜாவாக இல்லாதவன் ராஜாவுக்குத் தோழனாக இருக்கத் தகுதியில்லையே! யஜ்ஞஸேன! அதனல் ராஜ்யத்திற்காக உன்னுடன் யுத்தத்துக்கு ஆரம்பஞ் செய் தேன். கங்கையின் தென்கரைக்கு நீ அரசன். வடகரைக்கு நான்" என்று சொன்னர். சிறந்த புத்தியுள்ள துரோணரால் இவ்வாறு சொல்லப்பட்ட பாஞ்சாலராஜன், அஸ்திரங்களை யறிந்தவர்களிற் சிறந்த பிராம்மணோத்தமராகிய துரோணரை நோக்கி, "பரத்வாஜ புத்திரரே! சிறந்த புத்தியுள்ளவரே! இவ்வாறே ஆகட்டும். உமக்கு ஸுகமுண்டாகட்டும். நீர் எதை விரும்புகிறீரோ அந்தநேசம் சாச்

வதமாயிருக்கட்டும்" என்று சொன்னான். வீரர்களாகிய அந்தத் துரோண பாஞ்சாலரிருவரும் இவ்வாறு ஒருவரோடொருவர் பேசிக் கொண்டும் மிகுந்த ஸ்நேகஞ்செய்துகொண்டும் தம்தம்இடம் சென்றனர். ஆனால், அந்தப் பெரிய அவமரியாதை சற்றுநேரமாயிருந்தாலும் அவ்வரசனுடைய மனத்திலிருந்து விலகவேயில்லை. அவன் துயரப்பட்டுச் சரீரம் மெலிவுற்றனன்.

நூற்றெண்பத்தோராவது அத்தியாயம்.

சைத்ரரத பர்வம். (தொடர்ச்சி.)

(துருபதரை துரோணரைத் தோல்வியடையச்செய்த புத்திரனை அடையவேண்டியே யாகஞ்செயப்பயனைத் தேடிச்சென்றவைகளில் உபயாஜரிடம் சென்று அவர்வார்த்தையிலே யாருடையஸஹாயம்கேன்றது, புத்ரனுக்காக யாகம் நடத்தபொழுது அக்நிகுண்டத்திலிருந்து த்ருஷ்டத்யும்நனும் யாஜ்ஞஸேநியும் பிறந்ததும், அவர்களுக்குப் பயிட்டது, த்ருஷ்டத்யும்நனுக்குத் துரோணர் அஸ்த்ரசாஸ்த்ரத்தை கற்பித்ததும்.)

கோபமுண்ட துருபதராஜன் கிரியைகளில் விதித்திபெற்ற பிராமணச்ரேஷ்டர்களைத் தேடிக்கொண்டு துன்பத்தினால் கெடிக்கப்பட்ட மனமுள்ளவனாய் புத்திரோத்பத்தியைப்பெற விரும்பி அநேகம் ப்ராம்மண அக்ரஹாரங்களில் திரிந்தான். துரோணரால் செய்யப்பட்ட அவமதிக்கை நினைத்துத் துருபதன் எப்போதும் உறங்காமலேயிருந்தான் "எவனுக்குச் சிறந்த ஸந்ததியில்லையோ" என்று எக்காலமும் சிந்தித்துக்கொண்டிருந்தான். அவன், பிறந்திருந்த புத்திரர்களையும் சுற்றத்தாரையும் வெறுப்பினால் ஒன்றும் இகழ்ந்தான். துரோணருக்குப் பிரதி செய்யவேண்டுமென்கிற விருப்பத்தினால் பெருமூச்சுவிடுகையில் மாத்ரியாயிருந்தான். அவ்வரசர்க்கரசனை துருபதன் துரோணரின் மஹிமைப்பையும் கல்வியையும் ஆயுதப்பயிற்சியையும் செய்கைகளையும் நினைத்து முழுப்சிசெய்ததும் சக்தியபத்தினால் அவருக்குப் பிரதி செய்வதை அறியவில்லை. பிறகு அவ்வரசன் யமுனையினருகில் கங்கைக்கரையிலுள்ள திரிந்துகொண்டிருக்கையில் பரிசுத்தமான ஒரு ப்ராம்மண அக்ரஹாரத்தை அடைந்தான். அவ்விடத்தில் *ஸ்நாதகனல்லாதவனும் தபஸில்லாதவனுமான ப்ராமணன் ஒவனுமில்லை.

---

* ப்ரம்மசரிய வ்ரதத்தை ஒழுங்காக முடித்தவன்.

அவன் வேதம் ஓதுகிறவர்களும் மிகுந்த மஹிமையுள்ளவர்களும் சிறந்த தவமுள்ளவர்களும் சாந்தியுடையவர்களும் மேன்மை பெற்றவர்களுமாகிய யாஜர் உபயாஜர் என்னும் இரண்டுபிரம்மரிஷிகளைக் கண்டான். வேதாத்யயனத்தில்ஊக்கமுள்ளவர்களும் காசியபகோத்திரத்தவர்களும்ரிஷிச்ரேஷ்டர்களுமாகிய அந்தப்பிராம்மணர்களிருவரும் துயரத்தைத்தாண்டுவிப்பதில் *மிகத்தகுதியுள்ளவர்கள். விருப்பினவற்றை யெல்லாம் கொடுக்கப் பின்வாங்காதவனை ஆந்தத் துருபதன் அவர்களுடைய தவமின்மையையறிந்து அவ்விருவரையும் அழைத்தான். அவர்களுள் தீவ்ரதாளை தவமுள்ளவரும் இளையவருமான உபயாஜரென்பவரை விரும்பினபொருள்களைக் கொடுப்பதாகச் சொல்லிச் சரணமடைந்தான். அவன் அவருடைய பாதத்தில் பணிவதில் ஊக்கத்துடன், வேண்டியவற்றையெல்லாம் தொடுப்பதாக இன்சொற்சொல்லிமுறைப்படி அவரைப்பூஜித்து, "பிராம்மணரே!உபயாஜரே! துரோணர் மரணத்துக்குக்காரணமான ஒரு புத்திரனும் அர்ச்சுனனுக்குப்பாரியையாகத்தக்க ஒருகிறந்தபெண்ணும்எனக்கிரியையினை யுண்டாவதற்கு அதற்குரிய உங்களால் செய்யப்பட்டதானால் உங்களுக்குப் பத்துக்கோடி பசுக்களைக் கொடுப்பேன். பிராம்மணரிஷ்டரே! அல்லது உமதுமனத்திறகு மிக்கபிரியமானது வேறு என்னஇருக்குமாஞலும் அவற்றையெல்லாம்தான்கொடுப்பேனென்பதில்ஸந்தேகமில்லை" என்று சொன்னான். இவ்வாறு சொல்லப்பட்டரிஷி, "நான் அப்படிச் செய்கிறவனல்லேன்" என்ற அவனுக்குமறுமொழி சொன்னார். அந்தத்துருபதன் அவர்மனம் திருப்திப்படும்படி செய்யக்கருதி மறுபடியும் அவருக்குப் பணிவிடை செய்துகொண்டிருந்தான். பிறகு ஒருவருஷத்தின்முடிவில் பிராம்மணோத்தமரான அந்த உபயாஜர் ஒருசமயத்தில் துருபதனைநோக்கி இனிய சொல்லாகச்சொல்லலானார்.

"ராஜாவே! என்ஜ்யேஷ்டஸஹோதரர்ஜனமில்லாதவனத்தில்நடந்துகொண்டிருக்கையில் சுத்தமென்று பரிசோதிக்கப்படாத பூமியில் விழுந்திருந்த கனியை எடுத்தார். பின்னேசென்றதான் என் தமையனுடைய அந்தத்தகாத செய்கையைக்கண்டேன். அவர் சோதிக்காததொருளைப் பெறும்விஷயத்தில் ஒருபோதும் பயப்படார். கனி

* இங்கே, யாஜ உபயாஜர்களைக் கன்னிக்குப்பிறந்தவர்களென்றும் ஸூர்ய பக்தர்களென்றும் பழைய உரை கூறுகிறது.

யைப்பார்த்தபின் பாபத்தைக்கொடுக்கும் அதன்குற்றங்களை இவர் ஆராய்ந்துபார்க்கவில்லை. எவர் அதன் சுத்தத்தைநப்பகுத்தறியவில் லையோ அவர் மற்றவற்றிலும் எவ்வாறிருப்பர். எவர் வேதாத்யயனஞ் செய்துகொண்டு குருகுலவாஸஞ்செய்கையில் மற்றவர்கள் எறிந்து விட்டபிக்ஷாந்னத்தை எப்போதும் புஜித்துக்கொண்டும் லஜ்ஜையைவிட்டு அன்னத்தின் சிறப்பைப் பலமுறைசொல்லிக்கொண்டு மிருந்தாரோ அந்த என்ஸஹோதரரைப் பிரயோஜனத்தைமட்டுப் கருதுகிறவரென்று என்னுகமென்னும் கண்ணினால் நான் அறிகிறேன். ராஜாவே! அவரிடம்செல். அவர் உனக்குச் செல்வையாக யாகம்செய்வித்பார்" என்றுசொன்னார். ராஜாவும் உபாத்யாயர்சொல்லைக்கேட்டு அதை மனத்துள்நினைத்து அருவருப்புடன் யாஜருடைய ஆச்ரமம்சென்றான். பிறகு பூஜைக்குரிய யாஜரைச் செம்மையாகப்பூஜைசெய்து "ஸமர்த்தரே! எனக்கு யஜ்ஞம் செய்வியும். உமக்கு எண்பதினாயிரம் பசுக்கள் கொடுப்பேன். துரோணருடையவிரோதத்தினால் கொதிப்புற்ற என்னை மகிழ்விக்கத் தகுதியுள்ளவராயிருக்கிறீர். அந்தத்து, ரோணர் பிரம்மஞானிகளிற் சிறந்தவர். பிரப்மாஸ்த்ரத்திலும் தமக்கு மேல் உயர்ந்தவரில்லாதவர். அதனால் அந்தத்துரோணர் ஸ்ருஞ்சகலக விஷயமாக என்னைச்சண்டையில் தோற்கச் செய்தார். தெவர்களுக்குச் சிறந்த ஆசாரியரும் சிறந்த புத்தியுள்ளவருமாகிய அந்தத்துரோணருக்கு முன் நிற்கும் க்ஷத்ரியன் இந்தப்புவனியில் ஒருவனுமில்லை. துரோணருடைய பாணவரிசைகள் ப்ராணிகளின் தேகங்களை யொழிக்கின்றவை. ஆறுமுழமுள்ள அவருடையவில்லும் மிகப்பெரிதாகக் காணப்படுகிறது. சிறந்தவில்லாளியாயிருக்குந்தன்தையருள்ளவருமாகிய அந்தத்துரோணர் ப்ராம்மணவடிவத்தோடு க்ஷத்ரியபலத்தைஐயமின்றித்தடித் துவிடுகிறார். பரசுராமரைப்போல் க்ஷத்ரியர்களுடைய நாசத்திற்காக உண்டாக்கப்பட்டவராயிருக்கிறார். அவருடைய அஸ்த்ரபலம் பெரிது. புவியிலுள்ள மனிதர்களால் அவரை வெல்லமுடியாது. ஆஜ்யாகுதி செய்யப்பட்ட அக்னியைப் போல் ப்ரம்ம தேஜஸைவகிக்கும் அந்தத்துரோணர் க்ஷத்ரிய தர்மத்தை முன்னிட்டு யுத்தத்தில் வந்து சேர்ந்து எரித்துவிடுகிறார். ப்ரம்மதேஜஸ் க்ஷத்ரிய தேஜஸ் இரண்டும் ஸ்ருஷ்டிக்கப்பட்டிருக்கின்றன. அவற்றில், ப்ரம்மதேஜஸ் சிறந்தது. ஆகலால், நான் க்ஷத்ரிய பலத்தினால் குறைவுபட்டநவனாகப்ரம்மதேஜஸை அடைக்கலமாகப் பற்றியிருக்கிறேன். துரோணரிற் சிறந்த உயர்ந்த ப்ரம்மஞானியாகிய

உங்களையடைந்தபிறகு துரோணரையழிப்பவனும் போரில் வெல்லக் கூடாதவனுமான புத்திரனைப் பெறக்கடவீர்கள். யாஜரே! அந்தக்கிரியையை எனக்காகச்செய்யும்; பத்துக்கோடிபசுக்கள் கொடுக்கிறேன்" என்று சொன்னான். யாஜர் அவனுக்கு அப்படியே ஆகட்டுமென்றுசொல்லி யாகஞ்செய்வதற்குரியவற்றையெடுத்துஞ்செய்தார். அவர் விருப்பமில்லாத உபயாஜரையும் குருவின் காரியமென்று எண்ணினர். அப்படியாக அந்த யாஜர் துரோணரை யழிப்பதற்குப் பிரதிஜ்ஞை செய்தார். பிறகு பெருந்தவமுள்ள உபயாஜர் அவ்வரசனுக்குப் புத்திர லாபத்திற்காக யாகம் செய்யும்படி அப்போது அவனுக்குச் சொல்லி, "ராஜாவே! எவ்விதமான பிள்ளையை நீ விரும்புகிறாயோ அவ்விதமாக நிகரற்ற சக்தியுள்ளவனும் சிறந்த ஒளியுள்ளவனும் மற்றா பலசாலியுமான புத்திரன் உனக்கு உண்டாவான்" என்றார். அந்தத் துருபதராஜன் துரோணரைக்கொல்லுகிற புத்திரனைக்கருதி யாககாரியம் நிறைவேறுவதற்காக வேண்டிய வற்றையெல்லாம் அவர் சொன்னபடியே செகரித்தான். யாஜர்மஹாபத்தின் முடிவில் ராஜமஹிஷியை, (கோக்கி,) "பிருஷதியே! வஸுபீபத்திற்கு வா. ஆணும்பெண்ணுமாகிய இரண்டு குழந்தைகள் உனக்கு உண்டாகப் போகின்றன" என்று கட்டளையிட்டார். அரசி, "பிராம்மணரே! எனது வாய் சுத்தஞ்செய்யப்படவில்லை. தேகசுத்தியில் உயர்ந்த வாஸனைகளையும் கரித்திருக்கிறேன். புத்திரோத்பத்திக்காகான் ஒன்றையும் தொடக்கூடியவளாயில்லை. யாஜரே! என் விருப்பமான புத்திரோத்பத்திக்காக (ருதுஸ்நானம்வரை)காத்திரும்" என்று சொல்ல, யாஜர், "யாஜரால் பாகஞ்செய்யப்பட்டும் உபயாஜரால் பங்திரம் ஜபிக்கப்பட்டுமுள்ள ஹவிஸ் எவ்வாறு விரும்பினதைக் கொடாமலிருக்கும்! ஆதலால், நீ இப்போது வந்தாலும் வா; பின்னாலும் நில்" என்று சொன்னார். இவ்வாறு சொன்னபிறகு சுருக்கமான ஹவிஸ் யாஜரால் ஹோமஞ் செய்யப்பட்டபோது ஜ்வாலைபோல் நிறமுள்ளவனும் உக்கிரருபமுள்ளவனுமாகிய தேவகுமாரனைப் போன்ற குமாரன் கிரீடத்தையும் உயர்ந்த கவசத்தையும் தரித்துக் கத்தியும் வில்லுகமேளாடு, அடிக்கடி கர்ச்சனைசெய்துகொண்டு அந்தத் தீயிலிருந்து எழுந்தான். அவன் அப்போதே உயர்ந்த தேரிலேறிச் சென்றான். அப்போது பாஞ்சாலர்கள் மகிழ்ந்து, "நல்லதுநல்லது" என்று கூவினர். அப்போது ஸந்தோஷத்தால் ஆவேசங்கொண்ட அவர்களை இந்தப் பூமி தாங்கவில்லை. "பாஞ்சாலர்களுக்குப் பயத்தைப்போக்குகி

றவனும் புகழையுண்டுபண்ணுபவனும் துருபதராஜாவின் துயரத்தைக் கெடுப்பவனுமாகிய இந்த ராஜபுத்திரன் துரோணவதத்திற்காகப் பிற ந்திருக்கிறான்'' என்று ஆகாசத்தில் ஸஞ்சரிப்பதும் கண்ணுக்குத்தெ ரியாததுமான ஒருபெரிய பூதம் கூறிற்று. சுபலக்ஷணங்கள் பொருந் தினவனும், பார்க்கத்தக்க அங்கங்களோடுகூடியவனும், மிகக்கறுத் தும் மீண்டும் தாமரையிதழ்கள் போன்றுமிருக்கிற கண்களையுடைய வனும், கறுத்தநிறமுள்ளவனும், கறுத்தும்சுருண்டுமிருக்கின்ற கூந்த லையுடையவனும், சிவந்தும் உயர்ந்துமிருக்கும் நகங்களையுடையவ னும், அழகியபுருவங்களையுடையவனும், அழகிய பெருத்தஸ்தனங் களையுடையவனுமாகிய பாஞ்சாலியென்னும் ராஜகுமாரியும் தேவப் பெண்ணே நேரில் மானிட உருவமெடுத்ததுபோலாகவேதியைகையின் நடுவினிருந்து எழுந்தாள். கருநெய்தல்மலரின் மணத்துக்காப்பான அவள்மணம் ஒருகுரோசம் வியாபித்தது. அவள் சிறந்த அழகுள்ள வள். பூமியில் அவளுக்கு நிகரில்லை. தேவர்களும் தானவர் களும் யக்ஷர்களும் விரும்பத்தக்க அதுதத் தேவதை ரூபமுள்ள குமாரியைபோற்று ராஜபத்தியுள்ள ஜனங்கள் மனங்களித்துப்பாண் டுபுத்திரனும் பாரத வம்சத்தில் பிறந்தவனுமாகிய அர்ச்சுனனுக்குத் தகுதியுள்ளவளென்று உரைத்தனர். அழகான நிறம்பங்களையுடைய அவள் பிறந்ததைப் பற்றியும் அசரீரிவாக்குச் சொல்லினதாவது:— ''எல்லாப்பெண்களினும் சிறந்தவளான கிருஷ்ணை க்ஷத்திரியர்களை நாசஞ்செய்யக கருதுகிறவள். அழகான இடையாள் இவள் ஸபை யத்தில் தேவகாரியத்தை நிறைவேற்றப் போகிறாள். இவள் காரண மாகக் கௌரவர்களுக்குப் பெரும்பயம் உண்டாகப்போகிறது'' என் பது. அதைக்கேட்டுப் பாஞ்சாலர்களனைவரும் சிங்கக் கூட்டங் களைப்போலக் கர்ச்சித்தனர். சந்தோஷம் நிறைந்த இவர்களை இந்தப் பூமி தாங்கவில்லை. ப்ருஷதராஜனுடைய துருபதன் அவளைப்பார்த்து ஆனந்தக்கண்ணீர் சொரிந்தான். அந்தக்கிருஷ்ணியென்னும் பாஞ் சாலியைத் தூஷிக்கிறவர்கள் பாண்டுபுத்திரர்களின் பராக்கிரமத்தை சொல்லி படியில் தேய்த்துவைத்துக்கொண்டும் அவளைப்பார்த்து சந்தோஷமடைந்தான். துருபதன் மனைவி, அவ்விருகுழந்தைகளையும் கண்டு, ''இவரிருவரும் என்னவிட வேறு ஒருத்தியைத் தாயாராக அறியாமலிருக்க வேண்டு மே'' என்று யாஜரைச் சரணமடைந்தாள். யாஜரும் ராஜாவின் விரு ப்பத்தைச் செய்யக் கருதினதினால் அப்படியே யாகட்டுமென்று அவளுக்குச் சொல்லி. பிராம்மணர்கள், ஸந்தோஷம் நிலைநின்ற

மனத்தோடு கர்வமுள்ளவனைவும் அதிகசோர்ய முள்ளவனைவும் இருப்பதனால் க்ருஷ்டன்னென்றும், பராக்ரமமென்னும் தனமிருப்பதனாலும்கிரீடகுண்டலங்கள் முதலியதனங்களுடன்பிறந்திருப்பதனாலும் த்யும்னன்னென்றும், இந்தத் துருபதகுமாரன்த்ருஷ்டத்யும்னனென்றுபெயருள்ளவனைஇருக்கட்டும்" என்றனர். பிறகு கறுப்பாயிருந்ததனால் அந்தக்குமாரிக்குக்ருஷ்ணையென்றுபெயரிட்டனர். அவ்வாறு அந்தஆண் பெண் இரண்டுகுழந்தைகளும் துருபதனுடைய மஹாயஜ்ஞத்தில்பிறந்தனர். த்ருஷ்டத்யும்னன் த்ரோணாசார்யனைத்தில் தரைகண்டவனென்ன். பராக்ரமராலியான துரோணர் துருபதபுத்ரனைத்ருஷ்டத்யும்னனைத் தம் வீட்டிற்கழைத்து அஸ்த்ரவித்தைகளைக் கற்பிக்கிறதற்காக* வித்தியாரம்பஞ்செய்தார். சிறந்தபுத்தியுள்ள துரோணர் வித்தியை விதிவிதிக்குமுயலாமல் அயோக்யர் தேர்ந்தெடுத்தவர்களுக்கு இவ்வித்தையைக்கற்பிப்பதற்காக அதனை அவ்வாறு செய்தனர்.

நூற்றெண்பத்திரண்டாவது அத்தியாயம்.

சைத்ரரதபர்வம் (தொடர்ச்சி.)

(துரியோதனன் பாண்டவர்களை அக்குமாளிகையில் வரித்ததை ஜனமேஜயன் சொல்லக்கேட்ட தாகுதன் தன் புரோஹிதர் சொல்லாஸ்பாண்டவர்கள் அழியவில்லையென்பதைத் தெரிந்துகொண்டிருந்தும், அந்தவிதத்தால் தன் புத்திரியின் விவாஹத்தைத்தடுத்து ஸ்வயம்வரப் ப்ரதிஜ்ஞையிருப்பதைக் கருதிக்கு ஒரு பிராம்மணனை சொல்வதும். பிராம்மணனுடன் பாண்டவர்கள் பாஞ்சாலநகரம் செல்வதும்.)

உறுதியான அனுஷ்டானங்களுள்ள பிராமணர்கள் அரக்குமாளிகையில் படுத்தவைக் தீவைத்துப்பற்றவைத்த பாஞ்சால ராஜனை துருபதனிடம் பின் வருமாறு சொல்லத் தொடங்கினர்:— "த்ருதராஷ்ட்ர புத்ரர்களின் பந்திகளுடன் கூடி இரகலியமாக ஆலோசனை செய்து பாண்டவர்களையழிப்பதற்காக மிகக் கொடிய நிச்சயத்தைச் செய்தனர். மஹாராஜரே! மிக்க கெட்ட புத்தியுள்ள புரோசனனென்னும் மந்த்ரி துரியோதனனால் ஏவப்பட்டு வாரணவதம் சென்று பெரிய அரக்குமாளிகை கட்டி அந்தமாளிகையில் குந்தியுடன் மிகவும் அச்சமற்

நிருந்த பாண்டவர்களோ நடுநிசியில் எரித்து விட்டான். அந்தத் தமையற்ற அற்பன், தானும் அந்த அக்கினியினால் எரிக்கப்பட்டான் இதைக்கேட்டபோதே திருதராஷ்டிரன் பரதருக்களுடன் மிகுந்த ஸந்தாஷமுற்றுச் சிறிது விபரனமும் உள்ளத்தில் மகிழ்ச்சியுமாக விதுரரை நோக்கி, "மிகத்தெரிந்தவனே! பாண்டவர்களுக்குப்பிண்டதானத்தையும் ஜலதர்ப்பணத்தையும் செய்" என்று கட்டளையிட்டு "ஆ! ஆ! அவர்கள் விதிவசமாக யமன் வீடு போயினரே" என்று சொல்லித் தன் உறவினருடன் அங்கே அழுதான். விதுரர் பீஷ்மருடன் கேட்டுப் பிரேத காரியங்களைச் செய்தனர்; பாண்டவர்களை யழிப்பதற்காகத் துராத்மாவான துரியோதனனால் இந்தக்காரியம் செய்யப்பட்டது; இந்தக் காரியம் செய்தவனை முன்னம்நாம்கண்டதுமில்லை; கேட்டதுமில்லை; மிகுந்த பாக்கியமுள்ளவனே! பாண்டவர்களைப்பற்றிய இந்தச் செய்தி நாங்கள் கேள்வியுற்றோம்" என்றனர். அவர்கள் சொன்னதைக் கேட்டுச்சிறந்தபுத்தியுள்ள ராஜாவான யஜ்ஞஸேனன் தன்வயிற்றில் பிறந்தபிள்ளை இறந்துபோனதைப்போலவே அவ்வாறு பாண்டவர்களின் நாசத்தைப்பற்றிப் பரிதாபமுற்றான். அப்போது துருபதன் வ்யஸனத்துடன் நகரத்துஜனங்களெல்லாரையும் மந்திரிகளையும் அழைத்துப் பின்வருமாறு சொல்லலானான்.

"அன்பர்களே! என்ன அழகு! என்னதைரியம்! என்ன சூரத்தனம்! என்னபலம்! அச்சுனனுடைய இரவும்பகலுமாக நினைத்துக் கொண்டிருக்கிறேன். அவன் உடன்பிறந்தவர்களோடும்தாயாரோடும் கூடத் தீயில்எரிக்கப்பட்டானே! உலகத்தில் இதைக்காட்டிலும் புதுமையென்னவிருக்கிறது! காலம்யார்க்கும் தண்டமுடியாதது. பிரதிஜ்ஞைசெய்தது பொய்யானதால் உள்ளத்திலுள்ள துபரத்தினால் இரவும்பகலும் தகிக்கப்படுகின்ற நான் இப்போது இவ்வுலகத்தில்என்னசெய்வேன். குற்றமில்லாதவர்களான அந்த யாஜ்ஞாபயாஜர்களிருவரையும் நான் சுச்ரூஷைசெய்து துரோணரைக்கொல்லுகிற புத்திரனையும் அச்சுனனுக்கு மனைவியாகிற பெண்ணையும் வேண்டினேன். அப்படியே யாஜர் எனக்குவாக்குத் தத்தஞ்செய்ததும் உலகத்துக்குத் தெரியும். யாஜர் புத்திரகாமேஷ்டி யென்னும் மஹாமத்தைச் செய்து பிறகுஎனக்குஸந்தாஷத்தையுண்டுபண்ணுகிறஇந்தத் திருஷ்டத்யும்னனும்கிருஷ்ணையுமாகிய இருவரும்பிறந்தனர். அந்தப்பாண்டவர்கள்

குந்தியுடன் இறந்தனர். நான் என்ன செய்வேன்" என்று இவ்வாறு சொல்லித் துருபதன் மிகத் தாங்காதவனாக அழுதான். இப்படி அதிகமாக வியஸனப்படுகின்ற துருபதனைக் கண்டு ஸத்துவகுணமுள்ளவரும் வித்தையின் நுட்பத்தைச் செவ்வையாக அறிந்தவருமாகிய புரோஹிதர், "பாண்டவர்கள், பெரியோர்கள் உபதேசத்தில் ஊக்கமுள்ளவர்கள்; தர்மானுஷ்டானம் செய்பவர்கள்; அப்படிப்பட்டவர்கள் அழியவுமாட்டார்கள்; தேஜஸ்வியுமடையார்கள். இதனை நிச்சயமாக நான் கண்டிருக்கிறேன். ராஜாவே! நீ கேள்; பிராம்மணர்களால் சொல்லப்பட்டதும் வேதங்களில் நான் தேட்டதும் நிச்சயந்தான். முன்னே இந்திரன் காணுமற்போய், இந்திராணி பிருஹஸ்பதியின் அபிப்பிராயத்தை அநுஸரித்து உடனே * உபசருதி கேட்க, அந்த உபசுருதியினால் தாமஸைக் கிழங்கின் கணுவில் அகப்பட்டானல்லவா? மஹாராஜாவே! பாண்டவர்களைப் பற்றியும் நான் உபசுருதி கேட்டேன். அந்தப் பாண்டவர்கள் ஏதோ ஓரிடத்தில் ஜீவித்திருக்கின்றனர். ஸந்தேஹமில்லை. நான் நினைத்தபடியே கண்டேன். பாண்டவர்கள் இங்கேயே வருவார்கள். ராஜாவே! எந்தக் காரணம்பற்றி இங்கே வருவீரோ அதைக் கேள். யஜ்ஞஸேநியர்கள் கன்னிகாதானஞ் செய்வதற்கு ஸ்வயம்வரம் விதிக்கப்பட்டுள்ளது. ராஜச்ரேஷ்டனே! நகரத்தில் ஸ்வயம்வரத்தைப்பற்றிப்பிரஸித்தஞ் செய்யவேண்டும். ராஜாவே! அந்தப் பாண்டவர்கள் தூரத்திலிருந்தாலும் ஸமீபத்திலிருந்தாலும் ஸ்வர்க்கத்திலிருந்தாலும் இன்னும் எங்கிருந்தாலும் ஸ்வயம்வரத்தைக்கேட்டுக்குருபுத்திரியுடன்கூட வந்துசேருவார்கள்; ஸந்தேஹமில்லை. ராஜாவே! ஆதலால், ஸ்வயம்வரத்தைப் பிரகடனஞ்செய்யவேண்டும். காலதாமதம் செய்யவேண்டாம்" என்றார். புரோஹிதர்சொல்லைக் கேட்டு ஸந்தோஷமடைந்த துருபதன் அப்போதே நகரத்தில் பிரஸித்தஞ் செய்வித்தான். "ஏழுபுத்திரர்களுக்குப்பின் தைமாதம் சுக்லபக்ஷம் ரோகிணி நக்ஷத்திரம் கூடிய சுபதினத்தில் திரௌபதிக்கு ஸ்வயம்வரம் நிச்சயமாக நடக்கப்போகிறது" என்று நகரத்தில் பறை யறைவித்தான். தேசவாஸிகளும் கர்நாடகர்களும் யக்ஷர்களும் தவமஹத்தனமாகயுடைய ரிஷிகளும் ஸ்வயம்வரத்தைப்பார்க்க விரும்பிப் போய்க்கொண்டேயிருக்கின்றனர். சந்தேகமில்லை. பிராம்மணியே! உன் புதல்வர்கள் மஹாத்மாக்கள். மிக்க அழகுடையவர்கள். அந்தத் திரௌபதி தற்செயலாக இவர்களிலொருவனைக்கணவ

* உபசுருதி—வாய்ச்சொல்.

ணுக அடையலாம்; உலகத்தில் பிரம்மாவினுடைய நல்லகருத்தை யவன் அறிவான். ஆதலால், விருப்பமிருந்தால் புத்திரர்களுடன் கூட நீ செல்லலாம் திரௌபதியே! அந்தப்பாஞ்சால தேசம்வந்தக்காலத்திலும் செழுமையானது. அந்த யஜ்ஞசேனனென்னும் ராஜாவும் பிராம்மணர்களுக்குஉபகாரி; சொன்னசொல் தவறாதவன்பட்டணத்து ஜனங்களனைவரும் பிராம்மணர்களிடம் அன்புடையவர்; எந்தக்காலமும் நாம் வேண்டாமலே அழைத்துக்கொடுப்பவர். நானும் இந்தஎன் சிஷ்யர்களுடன் கூட அங்கேபோகிறேன். பிராம்மணியாகிய உனக்கு இஷ்டமிருந்தால் ஒருகூட்டமாகச்சேர்ந்து போவோம்" என்றார். இவ்வளவு சொல்லிச் சொல்லி அந்தப்பிராமணர் நிறுத்தினார்.

நூற்றெண்பத்துமூன்றுவது அத்தியாயம்.

சைத்ரரதபர்வம். (தொடர்ச்சி.)

(பாண்டவர்கள் பாஞ்சாலதேசத்துக்குப் புறப்படுவது.)

பரதச்ரேஷ்டரான ஜனமேஜயரே! இதைக்கேட்டபின்னர், பாண்டவர்களனைவரும் மன்மதபாணங்களினால் துளைக்கப்பட்டு மனத்தினால் திரௌபதியையடைந்தனர். ஜனமேஜயராஜரே! அதன் பின் மஹாபலசாலிகளான அந்தப் பாண்டவர்களனைவரும் அவ்விரவு முழுதும் அம்புதைத்தவர்கள் போல உள்ளத்தில் நோயுற்றவராயினர். அப்போது ஸத்தியம் பேசுகிறவனாகிய குந்தி தன்புதல்வர்களெல்லாரும் அந்தத்திரௌபதியினிடம் பணஞ்சென்றவர்களாயிருப்பதைக்கண்டு யுதிஷ்டிரரை நோக்கிப்பின்வருமாறு சொல்லலானாள்.

"நாம் இந்த அழகானநகரத்தில் பிக்ஷை நிரம்பக்கிடைத்தஞ்ஞல் மகிழ்ச்சியுற்று மஹாத்மாவான பிராமணருடைய இந்தக்ருஹத்தில் பலநாள் வாஸஞ்செய்தோம். வீரனே! இங்கு இவ்விடத்திலுள்ள அழகான காடுகளும் தோட்டங்களும் எவையோ அவையனைத்தையும் பலமுறை கண்டோம். பின்னும் அவைகளை யாரேனும் பார்க்கப்பட்டால் இப்போது முன்போல நமக்குச் சந்தோஷத்தையுண்டாக்கவில்லை. வீரனே! கௌரவனே! பிக்ஷைகளும் முன்போலக் கிடைக்கவில்லை. ஆதலால், உனக்கிஷ்டமிருந்தால் நாம் பாஞ்சாலதேசத்திற்குப் போவோம். வீரனே! புதியஇடங்களைக்காண்பது இனிமையாயிருக்கும்

சத்துருக்களைத் தொலைப்பவனே! பாஞ்சாலதேசம் செழுமையான தென்றும் கேள்விப்படுகிறோம். அந்த யஜ்ஞஸேன ராஜா பிராம்மண ப்பிரியனென்றும் கேட்டிருக்கிறோம். ஓரிடத்தில்நெடுங்காலம் வஸிப் பது தகாது. எனக்கும் அதில் விருப்பமில்லை. புத்திரனே! ஆதலால், உனக்கு விருப்பமிருந்தால் அங்கே போவதுநலம்" என்றாள். யுதிஷ் டிரர், "உனக்கு இஷ்டமானகாரியம் எதுவோ அதுதான்எங்களுக்குச் சிறந்த நன்மை. ஆனால், என் தம்பிகள் போவார்களோமாட்டார் களோ நான் அறியேன்" என்று சொல்ல, பிறகு குந்தி பீமஸேன னுக்கும் அர்ச்சுனனுக்கும் நகுலஸஹதேவர்களுக்கும் அங்கேபோகி றதைப்பற்றிச் சொன்னாள். அப்போதே அவர்களும் அப்படியே ஆக லாமென்றனர். பிறகு குந்தி ராஜபுத்திரர்களாகிய பாண்டவர்களுடன் கூட அந்தப்பிராமணரை விடைகேட்டுக்கொண்டு மஹாத்மாவான் திருபதனுடைய அழகான நகரத்துக்குப் புறப்பட்டாள்.

நூற்றெண்பத்துநான்காவது அத்தியாயம்.

சைத்ரரத பர்வம். (தொடர்ச்சி.)

(பாஞ்சாலதேசத்தில் வியாஸபகவான்வந்து பாண்டவர்களுக்குத் திரௌபதி கிடைக்கப்போகிறதென்பதைச்சொல்லித் திரும்பிச்செல்வது.)

அப்போது அந்த மஹாத்மாக்களான பாண்டவர்கள் மாறுவே ஷத்தோடு வஸிக்கையில் ஸத்தியவதிபுத்திரரான வியாஸர் அவர்க ளைப் பார்ப்பதற்காக வந்தனர். வீரர்களாகிய பாண்டவர்கள் அவர் வந்ததைக்கண்டவுடன் எதிர்கொண்டு சென்று நமஸ்கரித்து அபிவா தனஞ்செய்து கைகூப்பி நின்றனர். பாண்டவர்களால் ப்ரஹஸ்யத்தில் பூஜிக்கப்பெற்ற வியாஸர் அவர்களெல்லாருக்கும் உட்கார அனுமதி கொடுத்து அவர்கள் உட்கார்ந்தபின், "ஓ! வீரர்களே! சாஸ்திரத் தையும் தர்மத்தையும் அநுஸரித்து நடக்கிறீர்களா? பூஜிப்பதற்கு அருகர்களாகிய பிராமணர்விஷயத்தில் உங்களுடைய பூஜை தவறாம லிருக்கிறதா?" என்று கேட்டனர். பிறகு தர்மமும் ராஜநீதியுமடங்கிய வார்த்தையைச் சொல்லி, அந்த வியாஸபகவான் பற்பல புராணகதை களைக்கூறி மறுபடியும் பின்வருமாறு சொல்லத் தொடங்கினர்.

"ஒரு தபோவனத்தில் நுண்ணிய இடையையுடையவளும் அழகிய நிதம்பமும் அழகியபுருவங்களும் உடையவளும் எல்லாக் குணங்களும் நிரம்பினவளுமாகிய ஒரு மஹாத்மாவான ரிஷியின் கன்னிகை இருந்தனள். ஆனல் அவள், தான் செய்த விணைகளினல் பாக்கியஹீனையாயிருந்தாள். அவள் அழகுள்ள கன்னிகையாயிருந்தும் அவளுக்குக் கணவன் கிடைக்கவில்லே. பிறகு அதனல் துயர முற்றுக் கணவனே வேண்டித் தவஞ் செய்யத் தொடங்கினள். அவள் கடுந்தவஞ்செய்து சங்கரரை ஆராதித்தாள். அந்தக்கன்னிகை விஷயத்தில் சந்தோஷமடைந்த பகவானன சங்கரர் சிறந்த புகழுள்ள அவளே நோக்கி, "வரம்கேள். உனக்கு ஸுகமுண்டாகட்டும். வரம் கொடுப்பவனகை இருக்கிறேன்" எல்லுபென்னர். பிறகு அவள் ஈசுவரனிடம், "எல்லாக்குணங்களும் நிரம்பினகணவனே விரும்புகிறேன்" என்று தன் விருப்பத்தைப் பலமுறை சொன்னள். பாரதர்களே! பிறகு பேசுகிறவரிற் சிறந்தவரான ஈசுவரன் அவளே நோக்கி, "அவ் புள்ளவனே! உனக்கு ஐந்து புருஷர்கள் வருவர்" என்று மறுமொழி சொன்னர். இவ்வாறு சொல்லப்பட்ட கன்னிகை பிறகு வரம்கொடுத்த ஈசுவரனே நோக்கி, "நிதவரே! பிரபுவே! நமது அருளினல் நான் ஒருகணவனே விரும்புவேன்" என்று சொன்னள். மறுபடியும் ஈசுவரன், "நீ என்னிடம் 'பதியைக்கொடும்' என்று ஐந்துதரம்சொல்லியிருக்கிருய். ஆனல், நீ முற்பிறப்பில் நிதானமில்லாதபோது நான் சொன்னவாறு அந்த விஷயம் நடக்கும்" என்ற மறுமாறன சொல்லைச் சொன்னர். நிதவனேயைப்போல் அழகுள்ள அந்தக்கன்னிகை துருபதன் குலத்திற் பிறந்திருக்கிருள். துருபத புத்திரியாகிய சிலாக்கியமான கிருஷ்ணை உங்களுக்கு மனைவியாக நியமிக்கப்பட்டிருக்கிருள். மஹாபலசாலிகளே! அதனல் பாஞ்சால நகரத்தில் வாஸஞ்செய்யுங்கள். அவளேயடைந்த பிறகு ஸௌக்கியமுள்ளவர்களாவீர்கள்; நிச்சயம்" என்று சொல்லி, மிகுந்தமஹிமையுள்ளவரும் மிக்கதவமுள்ளவரும் பாண்டவர்களுக்குப் பிதாமகருமான வ்யாஸர் பாண்டவர்களிடமும் குந்தியினிடமும் விடைபெற்றுக்கொண்டு புறப்பட்டார்.

நூற்றெண்பத்தைந்தாவது அத்தியாயம்.

சைத்ரரதபர்வம். (தொடர்ச்சி.)

(பாஞ்சாலநகரத்துக்குப்போகிற பாண்டவர்கள் வழியில் பிராம்மணர்களோடு ஸம்பாஷணை செய்வதும்.)

பகவானுகிய வியாஸர் சென்றபின் அந்தப்புருஷரிஷ்டர்களும் வீரர்களுமான பாண்டவர்கள் மனங்களிப்புற்றுத் தாயாருடன் புறப்பட்டனர். இனத்தார்களுடன் பாஞ்சாலதேசத்துக்குச் செல்லும் பிராம்மணர்களை வழியில்கண்டனர். பிறகு அந்தப்பிராம்மணர்கள் பிரம்மராசிகளான பாண்டவர்களை நோக்கி, "நீங்கள் எவ்விடத்திற்குப் போகின்றீர்கள்? எங்கிருந்துவருகின்றீர்கள்?" என்றனர். யுதிஷ்டிரர் "நாங்கள் ஏகசக்ரநகரத்திலிருந்து புறப்பட்டோம்; ஸோஹாதரர்கள்; தேவதாசனஞ் செய்யும் உத்தேசமுள்ள பிரம்மசாரிகள்; பாஞ்சாலதேசத்தில் துருபநகரத்திற்கு நாங்களெல்லோரும் செல்லுகிறோமென்று நீங்கள் தெரிந்து கொள்ளுங்கள். நாங்கள் உங்களைப் பற்றித் தெரிந்துகொள்ள விரும்புகிறோம். எங்களுக்கு மிகுந்த விருப்பமிருக்கிறது" என்று சொன்னர். அதைக்கேட்ட பிராம்மணர்கள் "இதோ நாங்கள் கூடவே புறப்பட்டிருக்கிறோம். நாங்களும் அங்கே செல்லுகிறவர்கள். அங்கே ஆச்சரியமாக விளங்கும் மஹோத்ஸவம் நடக்கப்போகிறது. அந்தஊரில் மஹாத்மாவாகிய யஜ்ஞஸேனனென்று சொல்லப்பட்ட துருபதனுக்குக் கர்ப்பத்தில் ஜனிக்காத பெண்ணிருக்கிறாள், அவள் ஸ்வயம்வரத்தில் நிற்கப்போகிறாள். அவள் அழகுள்ளவள்; அங்கங்களிற்குற்றமில்லாதவள்; மெல்லியவள்; புகழ்பெற்றவள்; துரோணருக்குச் சத்துருவும் பராக்கிரமசாலியுமான த்ருஷ்டத்யும்னனுடைய ஸோதரி; சூரனும் மஹாத்மாவும் மேலாமகர்களுக்குள் மஹாத்துமாகிய அந்த த்ருஷ்டத்யும்னன் வில்லம்புகளோடு தேஹாமஞ்செய்து ஜ்வலிக்கிற அக்கினியிலிருந்து பிறந்தவன். அவன் பிறக்கும்போது, "இதோ இவன் துரோணருக்கு யமனும் சிஷ்யனுமாகப் பிறக்கிறான்" என்று அசரீரிவாக்குச் சொல்லிற்று. பெண்களுக்குள் இடுத்தினமும் கறுத்தகண்களுடையவளும் கருநெய்தல்மலர்போல் கறுத்ததிறமுள்ளவளும் அவன் ஸோஹாதரியுமாகிய அவள் அந்தப் பெருவேள்வியில் யாகவேதியிலிருந்து பிறந்தவள். யஜ்ஞஸேனன்குமாரியாகிய அந்தத் திரௌபதி

யென்னும் சிறந்தபெண்ணையும் அவளுடைய அந்த ஸ்வயம்வரத்தையும் பார்ப்பதற்கு அங்கேபோகிறோம். ராஜாக்களும், ராஜபுத்திரர்களும், மிகுந்த தக்ஷிணைகள் கொடுத்து முறைப்படி யாகங்கள் செய்தவர்களும், வேதாத்யயனஞ்செய்தபரிசுத்தர்களும்மஹாத்மாக்களான தபஸ்விகளும், அழகும் பலமுமுள்ளவர்களும்அண்டமுடியாதவர்களும் மஹாரதர்களும் அஸ்திரங்கள் கற்றவர்களுமாகிய இளவரசர்களும் அங்கேசேரப்போகின்றனர். அங்கே அந்த அரசர்கள் தம் தம் காரிய ஸித்திக்காகத் தனங்களையும் கோக்களையும் பக்ஷியபோஜ்யங்களையும் பலவகைத் தானங்களையும் எல்லாருக்குங்கொடுப்பார்கள். ஸ்வயம்வரத்திலிருக்கும் த்ருஷ்ணையையும் அந்த ராஜபுத்திரி அந்தஸபையில் எந்த க்ஷத்ரியனை வரிக்கப்போகிறாளோ அவனையும் பார்த்து அந்தத் தானங்களையும் பெறுவோம். அப்போது மிகுந்த மாமத்தியமுள்ள * வைதாளிகர்களும், † நர்த்தகர்களும், ‡ பூ—தர்களும், § மாகதர்களும், (நித்திரையினின்றும்) எழுப்புகிறவர்களும், பலதேசங்களிலிருந்துவந்து சேர்வார்கள். இந்த விதிஷ்டிரத்தை அவ்விடத்திற்கண்டு தானத்தையும்பெற்றுக்கொண்டு மஹாத்மாக்களாகிய நீங்களும்உங்கள் தாயாருடன் எங்களுடன்கூட ஸுகமாகவஸிக்கலாம். அந்தணர்களும் ஸ்ரேஷ்டமானஸுபலக்ஷணமுள்ளவர்களுமாகியநீங்களெல்லாருங்கிருஷ்ணையைக்கண்டு கிருஷ்ண ப்ரீதியும்பெற்று உங்களில் ஸ்ரேஷ்டனைக்கலைவரிக்கலாம். அழகானவனும் சிறந்த ஸுகந்தருடையவனுமான உங்களுடைய இந்த ஓரு || ஸஹோதரன் ஏந்திதத்துக் கைச்சண்டைசெய்தால் பெருந்தவத்தை ஜயித்துவிடுவான்" என்று சொன்னார்கள். யுதிஷ்டிரர், "ஐயா! நிரம்ப ஸரியானது. யஜ்ஞஸேனனுக்குப் பெண்ணை திரௌபதியையும் அவளுடையஸ்வயம்வர மஹோத்ஸவத்தையும் பார்ப்பதற்கு அங்கே செல்வோம்" என்று சொன்னார்.

* தாளமின்றிப்பாடுபவர்கள். † நட்டுவர்கள். ‡ புராணங்களை சொல்லுகிறவர். § வீரருகளைப் பாடுபவர்கள். || ஸஹோதரன்.

நூற்றெண்பத்தாறுவது அத்தியாயம்.

சைத்ரரதபர்வம். (தொடர்ச்சி.)

(பாதியாத்திரியிலா பாண்டவர்கள் கங்கைகைகரைசெலறதும். அங்க ஸ்திரீகளுடன் ஜலகரீனை செயதுகொ ணடிருந்த சித்ராதன் என்னும் கந்தர்வனுடன் அர்ச்சுனன் யுத்தம் செயததும், அர்ச்சுனன் ஆகனேயாஸ்திரத்தால அவனையெர்த்துபபிடித்ததும், கந்தர்வனுடையமனை வி ஸ்வாவசுவோஸ்ரீயும் யுதிஷ்டிரருடைய உத்தரவுபடியும் மறபடி அவனை விடுவித்ததும், கந்தர்வன் ஆக்னேயாஸ்திரத்தைப்பெற்றுக்கொணடு அர்ச்சுனனுக்குக் காந்தர்வாஸ்திரத்தைக் கொடுத்ததும், அவனை ரோஷித்தைச் சம்பாதித்துக்கொளளும்படி பாண்டவர்களுக்குச் சொனனதும்.)

ஜனமேஜயரே! புருஷச் ரேஷ்டர்களான அந்தப்பாண்டவர்கள் வடக்கேபோகின்ற மேடுபள்ளமில்லாத வழிகளினால் தாயாரை முன்னிட்டுக்கொண்டு குறிப்பிட்டபடிசென்றனர். பாஞ்சாலராஜபுத்திரனைக் குறித்து இரவுபாகலும் கடந்து தேவலோக நதியாகிய கங்கையை நோக்கிச் சென்றனர். புருஷச் ரேஷ்டர்களான பாண்டவர்கள் சந்தி ராஸ்தமன காலமாகிய சதுர்தசியின் ஸந்தியில் ஜலத்தில்ஸ்நானஞ்செய் வதற்காகச் சங்கரருடைய வாஸஸ்தானமாகிய கபலைத் தீர்த்தமடைந் தனர். மஹாரதனாகிய தனஞ்சயன் வெளிரசதத்திற்காகவும் பகைவர்க்காகவும் பரிகொள்ளியை எடுத்துக்கொண்டு யுத்தீக அவர்க ளுக்கு முன்னேசென்றான். ஏகாந்தமும் ராணியுமான அந்தக்கங்கா ஜலத்தில் ஸ்திரீகளை விளையாடச்செய்து ஜலக்ரீடைசெய்துகொண் டிருந்த கந்தர்வராஜன் நதிக்குவருகின்ற அவர்களுடையசப்தத்தைப் பொறுமையுடன் கேட்டான். பலவானான அந்தக் கந்தர்வராஜன் அந்தஜலி காதில் தழைந்தவுடன் கோபங்கொண்டான். அவன் அந்த வீரர்களான பாண்டவர்கள் தாயாருடன் இருக்கக்கண்டு உக்கிர மான வில்லை நாணேற்றிக்கொண்டு பின்வருமாறுசொல்லத்தொடங்கி னான்.

"ராத்திரிகளின் முன்பாகங்களில் ஸந்தியை சிவந்து பயங்கரமா யிருக்கின்றதல்லவா. அதில் எண்பது விஞ்சு கள் கோபமிச்சமுள்ள காலம் காமசாரிகளான யக்ஷகந்தர்வ ராக்ஷஸர்களுக்காக ஏற்பட்ட தென்று சொல்லுகின்றனர். இந்தவேர மற்றக்காலந்தான் மனிதர்கள்

தங்கள் மேலிலைகளில் பிரவர்த்திப்பதற்குரியதென்று நிணைக்கப்பட்டிருக்கிறது. அந்த* வேளைகளிலுள்ள ஆசையினால் ஸஞ்சரிக்கின்ற மூடர்களான மனிதர்களை நாங்கள் ராக்ஷஸர்களுடன் சேர்ந்து உபாயங்களைச்செய்து அடக்கிவிடுவோம். இதனாலேதான் பிரம்மஜ்ஞானிகளான ஜனங்கள் தேவர்களோடுகூடிய அரசர்களுள்பட எல்லாமனிதர்களும் இரவில் ஜலத்தினிடம் வருவதை மறுக்கின்றனர். தூரத்தில் நில்லுங்கள்; எங்கள் அருகில் அணுகவேண்டாம்; நான் கங்காஜலத்திற்கு வந்திருப்பதை நீங்கள் என் அறியவில்லை. நான் உரிமையான சக்தியை ஆதாரமாகக்கொண்ட அங்காரபர்ணனென்னும் கந்தர்வனென்று அறியுங்கள். நான் கௌரவமுள்ளவன்; பொறுமைக்காரன்; குபேரனுக்கு அன்புள்ள ஸ்நேகிதன். இதுவும் அங்காரபர்ணம் என்று பெயர்பெற்ற என்வனம்; கங்கைக்கரையில் காமஸுகங்களை யனுபவித்துக்கொண்டு பிதிதுபுதிதாக நான் ரமிக்குமிடம். ராக்ஷஸர்களும் ஆபிசாரமார்க்கத்தை யனுஸரித்தவர்களும் தேவர்களும் மனிதர்களும் இங்கு அணுகமாட்டார்கள். குபேரனுக்குக் கிரீடம் போன்ற என்னிடம் எவ்வாறு நெருங்குகின்றீகள்" என்றான். அர்ச்சுனன், "தார்புத்தியுள்ளவனே! சமுத்திரத்திலும் இமயமலையினருகிலும் இந்தக் கங்காநதியிலும் இரவிலும் பகலிலும் ஸந்திவேளையிலும் யாருக்குப் பாத்தியம் ஏற்பட்டிருக்கிறது? கந்தர்வனே! மேலும் நாங்கள் பூர்ணசக்தியுள்ளவர்கள். அகாலத்தில் உன்னை ஆக்ரமித்தோம். கொடியவனே! யுத்தத்தில் சக்தியில்லாத மனிதர்களல்லவா உங்களைப் பூஜிக்கின்றனர். இமயமலையின் பிறங்கொடுமுடியிலிருந்து புறப்பட்ட இந்தக் கங்கை † ஏழுபிரிவுகளாகச் சென்று சமுத்திரஜலத்தைச் சேர்ந்தது. நந்தை, யமுனை, பல்கூஜாதை, ஸரஸ்வதி, ரதஸ்தை, ஸரயு, கோமதி, கண்டகி இவற்றின் தீர்த்தத்தையும் அப்படியே (முன் சொன்ன) பழுங்கிகளின் தீர்த்தத்தையும் பருகுவர்களிடம் பாபங்கள் தங்குவதில்லை. கந்தர்வனே! இந்தக்கங்கை ‡ ஒருகரையுள்ளதாகவும் அழுக்கற்றதாகவும் ஸ்வர்க்கலோகத்தில் பிரவகித்துத் தேவர்களில் அலகநந்தை யென்ற கியாதியை யடைந்திருக்கிறது. கங்கையே $ பிதிர்க்களையடைந்து தீவினைசெய்தவர்

---

* ஸந்தியா காலம் முதல் நடுஇரவு வரை.

† 1. வஸ்வோகஸாரா, 2. நளினீ, 3. பாவனீ, 4. ஸீதா, 5. சக்ஷுஸ், 6. ஸிந்து, 7. அலகநந்தை.

‡. ஆகாயமொன்றையே கரையாகவுடையது.

$. பிதிர்க்களென்றது, பிதிர்லோகத்தை.

கள் தாண்டக்கூடாத வைதரணீ நதியாக ஆகிறதென்று ஸ்ரீ வ்யாஸ பகவான் சொல்லியிருக்கிறார். அந்தத் தேவநதியானது எந்தக்காலத்திலும் தடையில்லாதது; ஸ்வர்க்கத்தைக் கொடுப்பது; புண்ணியமானது; அதனை எவ்வாறு தடுக்க விரும்புகிறாய். இது சாச்வதமான தர்மமன்று. தடுக்கமுடியாததும் எக்காலமும் தடையில்லாததுமாகிய புண்ணியமுள்ள கங்காஜலத்தை உன்பேச்சினால் நாங்கள் விரும்பின படி ஏன் தொடாமலிருப்போம்" என்று சொன்னான்.

அங்காரபர்ணன் அதைக்கேட்டுக் கோபித்து வில்லிலம்பூத்துப் பல்லில்விஷமுள்ள ஸர்ப்பங்களைப்போன்ற கூர்மையான அம்புகளைவிடுத்தான். பாண்டுபுத்திரனை தனஞ்சயன் எரிகொள்ளியையும் உத்தரீயமாயிருந்த தோலையும் வேகமாகச் சுழற்றி அவனுடைய அம்புகளெல்லாவற்றையும் விலக்கினான். அர்ச்சுனன், "கந்தர்வனே! பயப்படுத்துவது அஸ்திரம் தெரிந்தவர்களிடத்தில் பிரயோகிக்கப்படுவதில்லை அஸ்திரம் தெரிந்தவர்களிடத்தில் பிரயோகிக்கப்பட்டால் அது நுரைபோல் அழிந்துவிடும். கந்தர்வனே! கந்தர்வர்களெல்லாரையும் மனிதருக்கு மேற்பட்டவர்களென்று நான் அறிவேன். ஆதலால், திவ்யாஸ்திரத்தினால் நான் யுத்தம்செய்வேன்; கபட யுத்தம்செய்யேன். கந்தர்வா! முன்னர் இந்த ஆக்நேயாஸ்திரத்தை இந்திரனுக்குப்பூஜ்யருமான ஆசாரியருமான பிருஹஸ்பதி பரத்வாஜமுனிவருக்குக்கொடுத்தனராம். பரத்வாஜரிடமிருந்து அக்னிவேச்யரும் அக்னிவேச்யரிடமிருந்து மன்குருவும் இதனை அடைந்தனர். பிராமணச்ரேஷ்டராகிய துரோணர் எனக்கு இதனைச் செம்மையாகக்கொடுத்தார்" என்று கோபத்துடன்சொல்லி, ஜ்வலிக்கின்ற ஆக்நேயாஸ்த்ரத்தைக் கந்தர்வன் மேல் பிரயோகித்தான். அந்த அஸ்திரம் அந்தக்கந்தர்வனுடைரதத்தை எரித்தது. அஸ்திரத்தின் தாபத்தினால் மூர்ச்சையடைந்து ரதத்தை விட்டுக் கீழே குதித்துத் தலைகவிழ்ந்து விழுகின்ற அந்தக்கந்தர்வனை மஹாபலசாலியான அந்தத் தனஞ்சயன் புஷ்பமாலையைபோலே மயிர்களிற் பிடித்தான்.

பிறகு அஸ்திரம் விழுந்ததனால் பிரஜ்ஞைதப்பின கந்தர்வனைத் தன்ஸஹோதரர்களருகில் இழுத்துவந்தான். சும்பினவலி என்று பெயருள்ள அந்தக் கந்தர்வபத்தினி தன்பதியைக்காப்பாற்ற விருப்பமுள்ளவளாகி யுதிஷ்டிரரைச் சரணமடைந்தாள். அவள், "மஹாநுபாவரே! என்னைக்காப்பாற்றும். இந்த என்கணவனைவிட்டுவிடும். பிரபுவே! சும்பினஸி யென்னும் பெயருள்ள கந்தர்வப் பெண்ணாகிய நான்

சரணாகதி செய்கிறேன்" என்று சொன்னாள். யுதிஷ்டிரர் அர்ச்சுனனைப்பார்த்து, "அன்பனே! சத்துருக்களை ஸம்ஹரிப்பவனே! யுத்தத்தில் தோல்வியடைந்தவனும் புகழற்றவனும் பெண்ணை கதியாகவுடையவனும் பராக்கிரமம் கெட்டவனுமான பகைவனை எவன் கொல்வன்? இவனை விட்டுவிடு" என்றார். அர்ச்சுனன், "கந்தர்வா! உயிரைப் பெற்றுக்கொள்; செல்; விசனப்படாதே. கௌரவராஜாவான யுதிஷ்டிரர் உனக்கு இப்போது அபயங்கொடுக்கிறார்" என்றான். கந்தர்வன் உன்னால் ஜயிக்கப்பட்ட நான் அங்காரபர்ணனென்னும் முன்பெயரை விட்டுவிடுகிறேன். தனதுபெயர் புகழ்போனபிறகு ஜனஸபையில் சிலாக்கியமாகாது. நான் இந்த லாபத்தை நன்றாகப்பெற்றேன். திவ்யாஸ்திரங்களையுடையவனான அர்ச்சுனனுக்குக்கந்தர்வர்களின் மாயையைச்சேர்ப்பிக்க விரும்புகிறேன். விசித்திரமான இந்த எனது உத்தம ரதம் அஸ்திராக்னியினால் எரிக்கப்பட்டது. ஆதலால் சித்ரரதன் என்ற பெயரோடிருந்த நான் இப்போது எரிக்கப்பட்ட ரதனானேன். முன்னே தவஞ் செய்துசம்பாதித்த இந்தவித்தை இருக்கிறது. இதனை என் உயிரைக்கொடுத்த மஹாத்மாவுக்கு இப்போது சொல்லப்போகிறேன். தன் பராக்ரமத்தினால் வெல்லப்பட்டு அசையாமலிருக்கச் செய்யப்பட்ட எதிரி சரணாகதனுகும்போது அவனுக்கு உயிரைக் கொடுப்பவனைவிஞை அவன் எந்த நன்மைக்குத்தான் உரியவனல்லன்? இந்த வித்தை * சாக்ஷுஷியென்ற பெயருள்ளது. இதை மனு சந்திரனுக்குக்கொடுத்தார். சந்திரன் விச்வாவஸு என்னும் கந்தர்வனுக்குக்கொடுத்தான். விச்வாவஸு எனக்குக் கொடுத்தான். குருபரம்பரையாகக் கொடுக்கப்பட்ட அந்தவித்தை அற்பமனிதரையடைந்து அழிந்துவிடுகிறது. இதுவந்தவழியை நான்சொன்னேன். இதன்மஹிமையைப் பற்றி நான் சொல்லக்கேள். இம்மூன்றுலோகங்களிலும் எந்த ஒன்றை எவன்கண்ணால்காண விரும்புவனை எத்தகையதாகப் பார்க்கவிரும்புவனை அவன் அதனை அத்தகையதாகப் பார்க்கத் தகுந்தவனுவன். ஆறுமாதகாலம் ஒற்றைக்காலால் நின்று தவஞ்செய்து இந்த வித்தையைப்பெறவேண்டும். விரதானுஷ்டானஞ் செய்தபின் அந்தவித்தையை உன்னிடம் வரும்படி நானேசெய்வேன். ராஜாவே! இந்தவித்தையினால் நாங்கள் மனிதரைப்பார்க்கிலும் சிறப்புற்றோம். மகிமையைக்காண்பித்துத்தேவர்களுக்குஒப்பாயிருக்கிறோம். புருஷச்ரேஷ்டனே! நான் உனக்கும் உன்னைஹராதரர்களுக்கும் கந்தர்வலோகத்திற்பிறந்த

* கண்ணைச் சேர்ந்தது.

குதிரைகளில் தனித்தனியே ஆறு நூறு கொடுக்கிறேன். உயர்ந்த நிறமும் மனோவேகமுமுள்ள தேவகந்தர்வர்களின் வாஹனங்களான அந்தக்குதிரைகள் இனிதாகவும் பலக்குறைவில்லாமலிருக்கும். வேகத்திலும் மற்றெவற்றிலும் பின்வாங்கா. முன்னே தேவேந்திரனுக்காக விருத்ராஸுரனை கொல்வதாகிய வஜ்ராயுதம் விசுவகர்மாவினால் செய்யப்பட்டது. அது விருத்ரன் தலையிற்பட்டுப் * பத்துத்துண்டாகவும் நூறுதுண்டாகவும் சிதறிப்போயிற்று. அவற்றில், தேவர்களால் பிரித்தெடுத்துக்கொள்ளப்பட்ட வஜ்ராயுதத்தின் துண்டுகள் பூஜிக்கப்படுகின்றன. உலகத்தில்புகழ்பெற்றனவாகவுள்ள யவையெல்லாம் அந்த வஜ்ராயுதத்தின் ஸுபமென்றே சொல்லப்படுகின்றன. பிராம்மணனுக்குக் கை வஜ்ரம்; க்ஷத்திரியனுக்குரதாவஜ்ரம்; வைசியர்களுக்குக் குடை வஜ்ரம்; தாழ்ந்தவர்களுக்குத் தொழில்வஜ்ரம்; க்ஷத்திரியர்களின் வஜ்ரமாகிய ரதத்தின் ஒரு பாகமாயிருத்தலினால் குதிரைகள் முக்கியமானவையென்று சொல்லப்படுகின்றன. பெண்குதிரை தேரின் † அங்கத்தைப்பெறுகிறது. குதிரைகளில் தேர்ச்சியுள்ளவர்கள் தாமே சூரர்கள். கந்தர்வலோகத்திற்பிறந்த என்குதிரைகள் நிஜத்தவர்ணமும் நிஜத்தவேகமுமெடுத்து நிஜத்தபோதுவந்துநின்றுநிஜத்தகாரியத்தை நிறைவேற்றுவ'' என்றான்.

அர்ச்சுனன், ''கந்தர்வனே! நீ என்னிடம் அன்புவைத்துக்கொடுத்தாலும் பிராணனைங்கடம்பற்றிக்கொடுத்தாலும் அந்தவித்தையையாவது பொருளையாவது ஞானத்தையாவது நான் விரும்பவில்லை'' என்றான். கந்தர்வன், ''மஹான்களின் சேர்க்கையே ஸந்தோஷத்தைக் கொடுப்பதாகக் காணப்படுகின்றது. நீ எனக்கு உயிரைக் கொடுத்ததனால் ஸந்தோஷமடைந்தநான் உனக்கு வித்தையைக் கொடுக்கிறேன். பரதச்ரேஷ்டனே! அர்ச்சுன! உன்னிடமிருந்தும் உத்தமமான ஆக்நேயாஸ்திரத்தை வாங்கிக்கொள்வேன். அப்படிச் செய்தால் நியாயமாகும். காலதாமதம் வேண்டாம்'' என்றான். அர்ச்சுனன், ''ஸ்நேகிதனே! கந்தர்வனே! அஸ்திரம்கொடுப்பதனால் உன்னிடமிருந்து குதிரைகளைப்பெற விரும்புகிறேன் நம்மிருவருடைய ஸ்நேகமும் நீடித்திருக்கட்டும். எதனால் உன்னிடமிருந்து மனிதருக்குப் பயமுண்டாகுமோ அதைச்சொல். கந்தர்வனே! வேதத்தெரிந்தவர்களும் ஸாதுக்களும் சத்துருக்களைசிக்ஷிப்பவர்களுமாகிய நாங்

* பெருகுதுண்டு பத்து, சிறுதுண்டு நூறு. † குட்டிபோடுகிறது.

களெல்லாரும் இரவில் செல்லுப்போது உன்னால் எத்தக்காரணம் பற்றி எதிர்க்கப்பட்டோமோ அத்தக்காரணம்யாது? சொல்" என்று கேட்க, கந்தர்வன் "பாண்டுபுத்திரர்களே! உங்களுக்கு அக்னியுமில்லை; மஹாமுமில்லை; நீங்கள்பிராம்மணர்களை முன்னிட்டுக்கொள்ளவுமில்லை. ஆதலால், என்னால், எதிர்க்கப்பட்டீர்கள். புருஷச்ரேஷ்டனே! யக்ஷர்களும் ராக்ஷஸர்களும் கந்தர்வர்களும் பிசாசங்களும் பக்ஷிகளும் நாகங்களும் பிராம்மணரை முன்னிட்டுக்கொண்டு போகின்றவரை எதிர்ப்பதில்லை. * அக்னிவான்களில் சிறந்தவனே! ஆதலால், உங்களுடைய பராக்கிரமத்தையும் குலத்தையுமறிந்திருந்தும் உங்களுடைய இந்தயாத்திரையை நான் முதலில் தடுத்தேன். பரதச்ரேஷ்டனே! மூன்றுலோகங்களிலும் உங்களோடுபிறந்தவன் யார்? சிறந்தமஹிமையுள்ள உங்கள் குணங்களினாலுண்டானதும் சிறந்ததும் அழகுள்ளதுமாகிய புகழ் எங்கும்பரவியிருக்கிறது. ஞானமுள்ளவர்களாகிய யக்ஷர்களும் ராக்ஷஸர்களும் கந்தர்வர்களும் பிசாசர்களும் நாகர்களும் அசுரர்களும் குருவம்சத்தின் வரலாற்றைச் சொல்லுகின்றனர். வீரனே! சிறந்தபுத்தியுள்ள உன்முன்னோர்களின் குணங்களை நாரதர் முதலிய தேவரிஷிகள் சொல்ல யான் கேட்டிருக்கிறேன். கடல்சூழ்ந்த இத்தப்பூமியெல்லாமளந்தரித்தான் உன்உயர்ந்தகுலத்தின்பெருமையை நேராகவும் கண்டிருக்கிறேன். அர்ச்சுன! வேதத்திலும் வில்வித்தையிலும் உனக்கு ஆசாரியரும் மூன்றுலோகங்களிலும் வ்யாபித்தபுகழுள்ளவருமாகிய துரோணரை நான் அறிவேன். வேதந்தெரிந்தவரெல்லாரிலும்சிறந்தவரும், ஆயுததாரிகளுக்கெல்லாம்மேலானவரும், பாணப்பிரயோகங்களிலும் அஸ்திரப்பிரயோகங்களிலும்வில்லெடுப்பதிலும் நிபுணரும், பிரஹஸ்பதிபகவானுடைய சிஷ்யர்களிற் சிறந்தவருமான துரோணரை அறிவேன். கௌரவச்ரேஷ்டனே! தர்மதேவதை, வாயு, இந்திரன், அசுவினிதேவர்கள், பாண்டு இவ்வாறுவரும் கௌரவவம்சத்தை விருத்தி செய்தவர்களென்று நானறிந்திருக்கிறேன். குந்திபுத்திரனே! தேவர்களிலும் மனிதர்களிலும் உத்தமர்களாகிய இவர்கள்உன் தந்தையர்களென்று நானறிவேன். ஸோஹாதரர்களாகிய நீங்களனைவரும் தெய்வத்தன்மையுள்ளவர்கள்; மஹாத்மாக்கள்; ஆயுததாரிகளெல்லாரிலும் சிறந்தவர்கள்; சூரர்கள்; வீரதங்களை நன்றாக அனுஷ்டானஞ் செய்தவர்கள். அர்ச்சுன! பரிசுத்தாத்மாக்களாகிய உங்களுடைய சிறந்த உள்ளத்தையும் அறிவையும் அறிந்தும்

* ஆக்நேயாஸ்திரமிருப்பதுபற்றி இங்ஙனம் அழைத்தது.

இங்கே உங்களுக்குத் தடைசெய்தேன். கௌரவனே! மேலும் கை வன்மையாகிற தனத்தையடைந்த ஆண்பிள்ளை பெண்களினருகில் தனக்குஅவமதிப்பு வருவதைப்பொறுக்கமாட்டான். கௌரவனே! இரவில் எங்களுக்குப்பலம் இன்னுமதிகமாகும். ஆதலால், மனுஷிகளுடனிருந்த எனக்குக் கோபம்வந்தது. தர்மதியின்வம்சத்தை விருத்திசெய்பவனே! அப்படிப்பட்ட நான் இந்தச்சண்டையில் எந்தக் கிரியையினால் உன்னால், ஜயிக்கப்பட்டேனென்று அதை நான் சொல்லக் கேள். அர்ச்சுனன் பிரம்மசரியம் திறந்தர்மம். அம்மாதிரி உன்னிடத்தில் தவறுமலிருக்கிறது. அதனால் யுத்தத்தில் நான் உன்னால் ஜயிக்கப்பட்டேன். பகைவரைத்தியரப் படுத்துகிறவனே! எந்த க்ஷத்திரியன் காமத்தையடக்காமலிருப்பானென்று அவன் இரவில்யுத்தத்திற்கு வருவானென்று எவ்வகையிலும் பிழைத்திரான். அர்ச்சுன! பலன்களையடக்காதவனுயிருந்தாலும் எவனொருவன் பிராம்மணர்களை முன்னிட்டுக்கொண்டிருப்பானென்று புரோகிதரை முன் வைத்துக்கொண்ட அவன் ராத்திரியில் சஞ்சரிக்கும் பூதங்களையெல்லாம் வெல்வன். தபதி வம்சத்திற்பிறந்தவனே! ஆதலால் மனிதர்களுக்கு இவ்வுலகில் எந்த நன்மை விரும்பப்படுவதாயிருந்தாலும் அந்தக்காரியத்தில் சித்தத்தை அடக்கின புரோஹிதர்களை ஏற்படுத்திக்கொள்ளவேண்டும். ஆறு அங்கங்களுள்ள வேதத்தில் ஊக்கமுள்ளவரும் சுத்தரும் பொய்யாதவரும் தர்மசிந்தனையுள்ளவரும் தேர்ந்தஅறிவுள்ளவருமாகிய புரோகிதர் அரசர்களுக்கு இருக்கவேண்டும். எவனுக்குத் தர்மந்தெரிந்தவரும் சிறந்தவாக்குள்ளவரும் நல்லொழுக்கமுள்ளவரும் சுத்தருமாகிய புரோஹிதர் இருப்பாரோ அந்த ராஜாவுக்கு ஜயம் நிச்சயம். அதன்பிறகு ஸ்வர்க்கமும் நிச்சயம். ராஜாவானவன் கிடைத்தற்கரிய லாபத்தைப்பெறுவதற்கும் கிடைத்ததைக் காப்பதற்கும் குணங்கள் நிரம்பின புரோஹிதரை முன்வைத்துக் கொள்ளக்கடவன். எவன் செல்வத்தையும்கடலில் ஆடையாக உடுத்த பூமிமுழுமையையும் தான் அடையவிரும்புவானென்று அவன் புரோஹிதர்கருத்தில் நிற்கவேண்டும். காபத்யனே! பிராமணனை வைத்துக்கொள்ளாத ஓர் அரசன் வெறுமையான சூரத்தனத்தாலும் குலத்தாலும் பூமியை ஜயிப்பது எங்குமில்லை. கௌரவர்களின்வம்சவிருத்திசெய்கிறவனே! ஆதலால், பிராம்மணனை முன்வைத்துத் தான் ராஜ்யத்தை நீடிகாலம் ஆளக்கூடுமென்று அறி" என்றான்.

நூற்றெண்பத்தேழாவது அத்தியாயம்.

சைத்ரரதபர்வம் (தொடர்ச்சி.)

(ஸ்ரீர்யஸ் பெண்ணை தபதியின் சரித்திரமும், ஸ்ரீர்யஸ் தம்பதிகளை ஸம்வரணனுக்குத் தன்பெண்ணைக்கோடுக்க நிச்சயஞ்செய்ததும், வேட்டையாடப்போன ஸம்வரணன் மலையில் தபதியைக்கண்டு காமமுற்றதும், அவன் அவளுடன் ஸம்பாஷணைஞ்செய்ய ஆரம்பித்ததும், அவன் மறைந்ததும்.)

அர்ஜுனன், "இங்கு எல்லோர்பார்த்து தாபத்யனென்ற சொல்லைச் சொன்னயல்லவா? அந்தத் தாபத்யனென்பதன் பொருளைத் தெளிவாகத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். எவ்விஷயத்தில் நாங்கள் தாபத்யர்களாயிருக்கிறோமோ அந்தத் தபதியென்பவள் யார்? ஸாதுவே! ஸத்புருஷனே! நாங்கள் தௌம்யரின் தாயர்களல்லவா? உண்மையை அறிய விரும்புகிறேன்" என்றான். இவ்வாறு சொல்லப்பட்ட அந்தக் கந்தர்வன் பாண்டவர்களிலும் பாஞ்சாலிபுத்திரனாகிய தனஞ்சயனுக்குக் கதை சொல்லத் தொடங்கினான்.

"புத்திமான்கள் எல்லாரிலும் சிறந்த பார்த்தனே! ஆநட்டும்; இந்த விசேஷமான கதையை நடந்தபடி முழுவதும் உனக்குச் சொல்லுவேன். தாபத்யனென்ற சொல்லை உனக்கு யாதனால் சொன்னேனென்ற அந்தக்காரணத்தை உனக்குச் சொல்லப்போகிறேன். மன ஒருக்கத்துடன் கேள். பிரபுவே! ஆகாயத்தில் வாஸஞ்செய்துகொண்டு தன் ஒளியினால் ஸ்வர்க்கத்தையும் வியாபிக்கின்றனை, இந்தத் தேவனாகிய ஸூர்யனுக்குத் தகுதியான பெண்ணும் ஸாவித்ரிக்கு இளையவளுமான தபதியென்பவள் ஒருகாலத்தில் இருந்தாள். தவத்துடன் கூடிய தபதி மூவுலகிலும் பெயர்பெற்றவள். தேவர்பெண்களிலும், அஸுரப்பெண்களிலும், யக்ஷப்பெண்களிலும், ராக்ஷஸப்பெண்களிலும், அப்ஸரஸ்களிலும், கந்தர்வப்பெண்களிலும், எவளும் ரூபத்தில் அவளுக்கொப்பாக இருந்ததில்லை. அந்தப்பெண் அழகான புருவங்களையுடையவையும் குற்றமற்றவையுமான அங்கங்களோடு கூடியவளும் மிகக் கறுத்தும் நீண்டுமுள்ள கண்களையுடையவளும் நல்லொழுக்கமுள்ளவளும் கற்புள்ளவளுமாயிருந்தாள். பாரதனே! ரூபத்தினால் சோபிக்கின்ற அந்தப்பதுமினி பதினைது வருஷங்களாகி, பருவமடைந்து, விவாஹத்திற்குரிய பெண்ணாயிருந்ததைக் கண்டு, சூரியன் அழகிலும் ஒழுக்கத்திலும் குணத்திலும் கல்வியிலும் அவளுக்கீடான

கணவனெருவனும் மூன்றுலோகங்களிலும் இருப்பதாக நினைக்கவில்லை. ஸூர்யன் கன்னிகாதானத்தைப்பற்றி நினைத்து அந்த விஷயத்தில் நிச்சயம் பெறவில்லை. கௌரவ்தேயனே! அப்போது ரிக்ஷ்னுடைய புத்திரனும் கௌரவர்களிற் சிறந்தவனும் பலசாலியுமான ஸம்வரணராஜன் நியமத்தோடு சுத்தனாகஇருந்து அர்க்கியம், கந்தம், புஷ்பம் இவை முதலியவற்றினாலும், புலன்களையடக்குவதனாலும், உபவாஸத்தினாலும், தியானத்தினாலும், பலவகைகளாக ஸூர்யனை ஆராதனஞ்செய்தான். பௌரவபுத்திரனே! அவன் அகங்காரத்தை விட்டுப் பரிசுத்தனாகச் சுக்ரூஷை செய்துகொண்டு ஸூர்யன் உதயமாகும்போது பக்தியுடன் பூஜைசெய்தனன். பிறகு நன்றியறிந்தவனும் தர்மந் தெரிந்தவனும் பூமியில் அழகில் நிகரற்றவனுமாகிய ஸம்வரணனைத் தபதிக்குச் சரியான கணவனென்று ஸூர்யன் நினைத்தான். கௌரவனே! பிறகு பெயர்பெற்ற குலத்திலானும் அரசர்களிற் சிறந்தவனுமான அந்த ஸம்வரணனுக்கு ஸூர்யன் அந்தக்கன்னிகையைக்கொடுக்கக்கருதினன். ஆகாயத்தில் ஜ்வலிக்கும் கிரணங்களோடு கூடிய ஸூர்யன் தன் ஒளியினால் எவ்வாறு எல்லாவற்றையும் பிரகாசிக்கச் செய்கிறானோ அவ்வாறே பூமியில் ஸம்வரணராஜன தன் பிரகாசத்தினால் பிரகாசிக்கச் செய்துகொண்டிருந்தான். பார்த்தனே! பிரம்மஷிஷ்டர்கள் உதயமாகிற ஸூர்யனை எவ்வாறு பூஜிக்கின்றனரோ அவ்வாறே பிராம்மண வருணத்திற்குத் தாழ்ந்தவருணத்து ஜனங்கள் ஸம்வரணனைப் பூஜித்தனர். அந்த ஸ்ரீமானாகிய ஸம்வரணராஜன், மிகவும் விரும்பப்படுவதனாலும் அன்பர்களுக்கு இனியனாயிருத்தலாலும் சந்திரனையும், மிக்கதேஜஸையுடைமையாலும் பகைவர்களுக்குத்துன்பஞ்செய்வதினாலும் ஸூர்யனையும் மிஞ்சியிருந்தான். கௌரவனே! இவ்வகையான குணங்களும் அனுஷ்டானங்களும் உள்ள அந்த ஸம்வரணராஜனுக்குத் தபதியென்னும் கன்னிகையைக் கொடுக்கவேண்டுமென்று சூரியன் தானுகவே மனங்கொண்டான், பார்த்தனே! பிறகு ஒருநாள் அளவற்ற பராக்கிரமமுள்ள ஸ்ரீமானான அவ்வரசன் மலையைச்சார்ந்தவனத்தில வேட்டையாடித் திரிந்துகொண்டிருந்தான். கௌரவ்தேயனே! வேட்டையில் திரிந்த அவ்வரசனது நிகரற்ற குதிரைப்சியும் தாகமுமடைந்து மலையில்இறந்தது. பார்த்தனே! அவ்வரசனவன் குதிரையிறந்ததனால் கால்களாலேயே மலைமேல் ஸஞ்சரிக்கையில் உலகத்தில் நிகரற்றவளும் நீண்டகண்களையுடையவளுமான ஒருகன்னிகையைக்கண்டான். எதிர்ப்படைகளை வருத்தத்தக்கவ

ஞகிய அவ்வரசவம்சம் தனித்திருந்த அந்தக்கன்னிகையைச் சந்தித்துக் கண்கள் அசையாமல் பார்த்திருந்தான். அவ்வரசன் அவளை அழகினால் ஸ்ரீ தேவியென்றே நினைத்தான். திரும்பவும் அழகினாலும் ஒளியினாலும் ஆதித்யனுடைய ஒளியே தவறிவிழுந்ததென்றும் அக்னி ஜ்வாலையென்றும் ஊகித்தான். மாசற்றிருப்பதனாலும் மனத்தைக்கவருவதனாலும் களங்கமற்ற சந்திரகலையென்றும் நினைத்தான். மிகக் கறுத்தகண்களையுடைய அவள் மலையின்மேல் எந்தவிடத்தில் நின்றாளோ அந்தவிடத்தில் பொற்பிரதிமைபோல் பளபளப்புடன் சோபித்தாள். அவளுடைய விசேஷமான ரூபத்தினாலும் அலங்காரத்தினாலும் அம்மலையிலுள்ள மரங்கள் சிறுகிளைகள் கொடிகளுடன் பொன்மயம்போலிருந்தன. அவ்வரசன் அவளைக்கண்டு எல்லாலோகங்களிலுமுள்ள பெண்களையும் அவமதித்தான். தான் கண்படைத்ததற்குப் பயன் கிடைத்ததாகவும் நினைத்தான். அவ்வரசன் தான்பிறந்தது முதல் வந்தவந்த ரூபபந்தைக்கண்டாலேனு அஃதொன்றும் அவருக்கு நிகரல்லவென்று நினைத்தான். அவ்வாறு சுணைகளென்னும் கயிறுகளினாற் கட்டப்பட்ட மனத்தையும் கண்களையுமுடையவனாகி அந்த இடத்தைவிட்டுச் சலிக்கவில்லை. ஒன்றையும் உரைக்கவில்லை. விசாலமான கண்களையுடைய இவளுடைய ரூபமானது பிரமதேவரால் தேவர்கள், அஸுரர்கள், மனிதர்களடங்கிய இவ்வுலகத்தைக் கடைந்தெடுத்து வியத்தமாகச் சிருஷ்டிக்கப்பட்டது'' என்று அவனுழைகின்றான் தனத்தின் நிறைவினால் ஊகித்தான். சிறந்த குலத்திலுதித்த ஸம்வரணராஜன் அப்போது உலகத்தில் சிகரற்ற அந்த அழகான கன்னிகையைக் கண்டவுடன் மன்மதபாணத்தினால் பிடிக்கப்பட்டு உள்ளத்தில் கவலையுற்றான். தாங்கக்கூடாத காமாக்னியினால் தபிக்கப்பட்ட அவ்வரசன் வெட்கப்படுகின்ற அந்த அழகிய கன்னிகையைப் பார்த்துத் தைரியமாக அப்போது பேசத்தொடங்கினான்.

''வாழைமரம்போன்றதுடைகளையுடையவளே! நீயாவள்? யாருடைய பெண்? எதற்காக இங்கிருக்கிறாய்? தெளிவானபுனலையுள்ளவளே! ஏன் மனிதரில்லாக் கானகத்தில் தனியாகச் சஞ்சரிக்கிறாய்? எல்லா அங்கங்களிலும் பிழையில்லாதவளும் எல்லா ஆபரணங்களும் அணிந்துகொண்டவளுமாகிய நீ இந்த ஆபரணங்களோ விரும்பத்தக்க ஆபரணம்போலிருக்கிறாய். உன்னைத் தேவப்பெண்ணாகவும், அஸுரப்பெண்ணாகவும், யக்ஷகன்னிகையாகவும், ராக்ஷஸ கன்னிகையாகவும், நாககன்னிகையாகவும், கந்தர்வகன்னிகையாகவும், மானிடப்பெண்

ணுகவும் நான் நினைக்கவில்லை. பெண்ணரசியே! வந்த உயர்ந்த பெண்களை நான்கண்டும் கேட்டுமிருக்கிறேனே அவர்களையெல்லாம் உனக்கொப்பாக நான் நினைக்கவில்லை. அழகிய முகமுள்ளவளே! சந்திரனைப் பார்க்கிலும் மிக்க இனியதும் தாமரையிதழ்போன்ற கண்களையுடையதுமாகிய உன்முகத்தைக் கண்டபடன் மன்மதம் என்னைக் கலக்குகிறதே" என்று அவ்வரசன் அவளைப்பார்த்துச்சொன்னன். அப்போது அவள் ஜனமில்லாதகாட்டில் காமபீடிதனை அரசனுக்கு யாதொரு மறுமொழியும் சொல்லவில்லை. பிறகு அரசன் அடிக்கடி பிதற்றிக்கொண்டிருக்கும்போதே, நீண்ட கண்களையுடைய அவள் மோகங்களில் மின்னல் மறைவதுபோல் அங்கேயே மறைந்தாள். தாமரையிதழ்போன்ற கண்களையுடைய அவளைத்தேடுவதற்கு அவ்வரசன் பித்தங்கொண்டவன்போல் பிரமைகொண்டு வனமெங்கும் திரிந்தான். அந்த ராஜரிஷியின் அவளைக்காணலில் அங்கே அதிகமாகப படர்ந்பிச சுறறுத்தாபம் ஆசைவற்றி நநதான்.

நாற்றெண்பத்தெட்டாவது அத்தியாயம்.

சைத்ரரதபர்வம் (தொடர்ச்சி)

(பூமியில் வந்த ராஜரிஷி மீடு அவளிடம் தபதி வருவதும், அவர்கடாஸம்பாஷிப்பதும்.)

பிறகு அவள் காணக்கூடாதபடி போனதும் மதனனால் மயலுற்ற அரசன் பகைவர் கூட்டங்களை வீழ்த்துகிறவனுமான தரையின்மீது வீழ்ந்தான். அவன் பூமியில் வீழ்ந்தபிறகு அழகிய நகையுள்ளவளும் பருத்தும் அகன்றும் நிறுத்திற திதிர்ப்பங்களையுடையவளுமாகிய அந்தப்பெண் மறுபடியும் அவ்வரசனுக்குப் புலப்பட்டாள். பிறகு அந்த அழகுள்ள தபதியென்பவள் கௌரவர்களின் வம்சத்தை விருத்தி பெய்பவனும் காமனால் பீடிக்கப்பட்ட மனமுள்ளவனுமாகிய அவ்வரசனை இனிய சொல்லினால் அழைத்துச் சிரித்துக்கொண்டே, "பகைவரையடக்குகிறவனே! ராஜவிம்மமே! எழுந்திரு, எழுந்திரு; உனக்கு ஸுகமுண்டாகட்டும். பூமியில் நீ வெளிப்படையாக மயங்கிக் கிடக்கத்தகாது" என்ற மதுரமான சொல்லைச் சொல்லினள். இவ்வாறு அழகிய சொல்லினால் அழைக்கப்பட்ட அவ்வரசன் அப்போதே பருத்த நிதம்பத்துடன் அவளை தன்

அள

முன் நிற்கக்கண்டான். உடனே அவ்வரசன்மன்மதாக்கினியினல்கொ திப்புற்ற மனமுள்ளவனுகி, எழுத்துக்கள் தெளிவில்லாத சொல்லி னல் கறுத்தகண்களையுடைய அவளை அழைத்துப்பேசினன். "கறுத்த கண்களையுடையவளே! நல்லது. பெண்ணரசியே! மதனனல் வருத்தப் பட்டுஉன்னிடத்து பற்றுள்ள என்னை நீ அடைவாயாக; என்னுயிர்என்னை விட்டுவிடுகின்றது. விசாலமானகண்களையுடையவளே! தாமரைமல ரின் உட்காய்போன்ற நிறமுள்ளவளே! உன்னைப்பற்றி இந்தமன்மதன் கூரம்புகளினல் என்னை ஓயாமல் துளைக்கிறன். அழகியவளே! சிறந்த முகமுள்ளவளே! இவ்வாறுகக் கெள்வியில்லாத இடத்தில் மன்மத னென்னும் பெரியவர்ப்பத்தினல் கடிக்கப்பட்ட என்னைப் பருத்தும் விசாலமுமான நிதம்பத்தையுடைய நீ அடைவாயாக. கின்னர கீதம் போலப் பேசுகிறவளே! என்னுயிர் உன்ஸ்வாதீனம். முழுதும் குற் றமற்ற அழகான அங்கமுடையவளே! பதுமத்திற்கும் சந்திரனுக் கும் ஒப்பான முகமுள்ளவளே! அச்சமுள்ளவளே! உன்னை விட்டு நான் பிழைத்திருக்கமுடியாதவன். தாமரையிதழ் போன்ற கண்க ளையுடையவளே! இந்த மன்மதன் என்னைத்துளைக்கிறன். விசாலமா னகண்களையுடையவளே! பெண்ணரசியே! ஆதலால், என் விஷயத் தில் தயைசெய். கறுத்தகண்களையுடையவளே! பற்றுள்ள என்னை நீ விடத்தகாது. பெண்ணரசியே! நீ அன்புவைத்து என்னைக்காப்பாற் றுதற்குரியவளாகிறுய். உன்னைப்பார்த்தகணமே மிகஅன்பைவைத்த என் மனம் மிகக்கலங்குகிறது. அழகியே! உன்னைப்பார்த்தபின் மற் றொருத்தியைப் பார்க்க எனக்கு விருப்பமில்லை. பெண்ணரசியே! தயைசெய். நான் உன்ஸ்வாதீனம். பற்றுள்ள என்மேல் அன்புவை. சிறந்த நிதம்பமுடையவளே! விசாலமானகண்களையுடையவளே! உன் னைப்பார்த்தவுடன் மன்மதன் உள்ளே மறைந்து அம்புகளினல் அடி த்துவிட்டான். தாமரைக்கண்ணியே! மதனனென்னும் தீயினல் எனக் குண்டான தாபத்தை அன்புவைப்பதென்னும் பெயருள்ள ஜலத்தி னல்தணிக்கக்கடனுய். இனியவளே! பெண்ணரசியே! உன்னைக்கண்ட தனலுண்டாகித் தாங்கமுடியாத அம்புகளினல் அடிப்பவனும் ஜயிக்க முடியாதவனும் உக்ரங்களாகிய அம்பும்வில்லுமுடையவனுமான மத னனை நீ உன்னைக்கொடுப்பதனல் சமனஞ்செய்வாயாக. மங்கையரி ற்சிறந்தவளே! காந்தர்வமென்னும்விவாகத்தினல் என்னைச்சேர். வா ழைமரம்போன்ற துடைகளுடையவளே! விவாகங்களுள் காந்தர்வ விவாகம் சிறந்ததென்று சொல்லப்படுகின்றது" என்றன்,

தபதி, "ராஜாவே! நான் தந்தைக்கடங்கிய கன்னிகை. என் விஷயத்தில் நான் ஸ்வதந்திரையல்லள். என்னிடத்தில் உனக்கு விருப்பமிருந்தால் என் தந்தையைக்கேள். ராஜாவே! நீ என்னைப்பார்த்தமாத்திரத்தில் உன்னுயிர்என்னால் எவ்வாறு அபகரிக்கப்பட்டதோ அவ்வாறுகவும் அதற்கதிகமாகவும் நீ என்னுயிரை அபகரித்துவிட்டாய். ராஜச்ரேஷ்டனே! ஆனால், என்தேகத்துக்கு நான் அதிகாரியன்று. அதனால், உன்னிடம் வரவில்லை. பெண்கள் ஸ்வதந்திரைகளல்லர். எல்லாஉலகங்களிலும் பிதாதிபெற்ற குலமுடையவனும் அடித்தவர்களிடம் அன்புள்ளவனுமாகிய பிரபுவை எந்தக்கன்னிகை கணவனைகளிருப்பாள்? ஆகலால், இவ்விதமானகாலத்தில் என் தந்தையான ஆதித்யனை நாஸ்காரத்தினாலும் தவத்தினாலும் விரதத்தினாலும் ஆராதித்து வேண்டிக்கொள். பகைவரைமாய்ப்பவனே! ராஜாவே! அவர் என்னை உனக்குக் கொடுக்கவிரும்புவாராயின், நான் உனக்கு எப்போதும் வசப்பட்டிருப்பவளாக இப்போதே ஆகிவிடுவேன். க்ஷத்திரியச்ரேஷ்டனே! நான் தபதியென்று பெயருள்ளவள். உலகத்துக்கெல்லாம் தீபமாகிய இந்தஸவிதாவினுடைய பெண்ணைஎன்று திரிக்கு இளையவள்" என்றாள்.

நாற்றெண்பத்தோன்பதாவது அத்தியாயம்.

சைத்ரரதபர்வம். (தொடர்ச்சி.)

(டறுபடி தபதிபைறந்ததும், மயக்கங்கொண்ட ஸம்வரணனிடம் ... டந்திரிவந்துதேறுதல்செயததும், ராஜா ஸூர்யனை உபாஸிக்கும்காலத்தில் வஸிஷ்டர்வந்ததும், வஸிஷ்டர் ஸூர்யனிடம்சென்று ஸூர்யனைத்துதிக்க அதனால் ஸந்தோஷமடைந்த ஸூர்யன் ஸம்வரணனுக்காகத் தன்பெண்ணை வஸிஷ்டரிடம் கொடுத்ததும். அந்த டலியிலேயே தபதியும் ஸம்வரணனும் விவாகஞ்செய்துகொண்டு அங்கேயே கிரீடை செய்துகொண்டிருக்கையில் அவன் ராஜ்யத்தில் துவாதசவருஷகூஷ்காமம் வந்ததும், அதனை வஸிஷ்டர் நிவர்த்தி செய்ததும்.)

சிறந்தவளான தபதி இவ்விதம் சொன்னபிறகு விரைவாக மேலுலகம்சென்றாள். அரசன்மனமோயுற்றவனாக, 'தபதி, தபதி' என்றே புலம்பினான். அவ்வரசன் பலமுறை தடுக்கிவிழுந்தான். மறுபடியும் எழுந்து ஓடினான். ஓடியும் தபதியைக்காணாமலே அவ்வரசன் அந்தப்பூமியிலேயே திருப்பியும் விழுந்தான். படையுடனும் வேலைக்காரர்

களுடனும்கூட ராஜாவைத்தேடிவந்த அமைச்சன் உத்ஸவகாலத்தில் நாட்டப்பட்ட இந்திரத்வஜம் வீழ்ந்ததுபோலப் பெரியவனத்தில் தரையில் வீழ்ந்திருந்தும் அரசர்களிற் சிறந்த அந்த ஸம்வரணனைக் கண்டான். அப்படிப்பட்ட சிறந்தவில்லாளி யாவராலும் விடப்பட்டுத் தரையில் விழுந்திருப்பதைக்கண்டு அவனுடைய அந்த மந்திரி தீயினால் கொளுத்தப்பட்டவன்போல் ஆனான். அவன் விரைவாக அருகில் வந்து சினேகத்தினால் பரபரப்புற்றுப் பெண்மீது மோகங்கொண்டு மூர்ச்சித்து விழுந்திருந்த அந்த அரசர்க்காசனை ஸம்வரணராஜனைப் புத்திரனைப் பிதா எடுப்பதுபோல் பூமியிலிருந்து தூக்கியெடுத்தான். புத்தியிலும் பிராயத்தினாலும் புகழினும் நீதிசாஸ்திரஜ்ஞானப்பயிற்சியிலும் முதிர்ந்தவனாகிய அந்தமந்திரி அந்த ராஜாவைத் தூக்கியெடுத்தபின் துயரம் நீங்கினவனானான். எழுந்திருந்த அவ்வரசனைநோக்கி, இனிமையும் நன்மையுமுள்ள சொல்லினால், "மானிடப்புலியே! பயப்படாதே. குற்றமற்றவனே! உனக்கு ஸுகமுண்டாகுக!" என்றுசொன்னான். போரில் சத்துருக்களைவீழ்த்துபவனான அவ்வரசன் தான்பசியினாலும் தாகத்தினாலும்களைத்துத் தரையில்வீழ்ந்ததாக ஊகித்தான். தாமரைமலரின் வாசனையைவீசுகிற குளிர்ந்த ஜலத்தினால் அவ்வரசன்தலையை நனைத்துக் கிரீடத்தைத் திருத்திவைத்தான். பிறகு பலசாலியான அவ்வரசன் மூர்ச்சைதெளிந்து அவ்வமைச்சன் ஒருவனைத்தவிரமற்றச்சேனையெல்லாவற்றையும் அனுப்பிவிட்டான். அப்போது அவ்வரசனுடைய கட்டளையினால் பெருஞ்சேனை புறப்பட்டது. அவ்வரசன்மாத்திரம் பறுபடியும் அப்பர்வதசாரியில்ஏறினான். பிறகு அவன் அந்தச்சிறந்தமலையில் விமானமுதலியவற்றினால் பரிசுத்தஞ்செய்யனை ஆராதிக்கக் கருதிக் கைகூப்பிக்கொண்டு மேலேறுகிய முகத்துடன் பூமியில்நின்றான். அப்போது ஸம்வரணராஜன் காமக்குரோதங்களாகிய சத்துருக்களையழித்த புராதனரான வஸிஷ்டரென்னும் ரிஷிச்ரேஷ்டரை மனத்தில் தியானித்தான். அவ்வாறு அவ்வரசன் இரவும் பகலும் ஓரிடத்தில் நின்றுகொண்டிருந்தபோது பன்னிரண்டாவது தினத்தில் பிரம்மரிஷியான வஸிஷ்டர்வந்தார். ஆத்மஜ்ஞானமுள்ளவரும் ரிஷிச்ரேஷ்டரும் தர்மாத்மாவுமாகிய வஸிஷ்டமாமுனிவர் அவ்வாறு தவத்தில் மனம்வைத்திருந்த அவ்வரசனைக் கண்டவுடன் தபதியினால் அவன்மனம் அபகரிக்கப்பட்டிருப்பதைத் திவ்யஜ்ஞானத்தினாலறிந்து, அவன் விரும்பினதை நிறைவேற்றக்கருதி அவனிடம் பேசினார். ஸூர்யனுக்கொப்பான தேஜஸுள்ள அந்த

வஸிஷ்டபகவான் அவ்வரசன்பார்த்திருக்கையிலேயே ஆயிரம் கிரணங்களுள்ள ஆதித்யனைக்காண்பதற்கு மேலேசென்றார்.

தபோதனரான அந்தப் பிரமரிஷி லக்ஷம் யோசனைதூரம் ஒருநொடியில் சென்று அங்கே பக்தியுடன்கைகூப்பிநின்று, "நான் வஸிஷ்டன்" என்று தம்மைத்தெரிவித்தார். சிறந்தஒளியுள்ள ஸூர்யன் அம்முனிச்ரேஷ்டரைநோக்கி, "மஹரிஷியே! உமக்கு நல்வரவு; நீர் விரும்பினதைச் சொல்லும். மஹாபுத்திமானே! சிறந்தவாக்குள்ளவரே! என்னிடத்தில் எதைவிரும்புகிறீரோ அந்த உமதுஅபேக்ஷிதம் மிக்கதுர்லபமாயிருப்பினும் அதனை உமக்கு நான்கொடுப்பேன்." என்றுசொன்னான். ஸூர்யனால் இவ்வாறு சொல்லப்பட்ட அந்த வஸிஷ்டமாமுனிவர், பிரகாசமான கிரணங்களைஉடைய ஸூர்யனை நமஸ்கரித்துவாக்கினால் துதிசெய்துகொண்டு எவன் ஒவ்வொருநாளும் ஒருநிமிஷத்திற்குமுந்நூற்றுபத்துதான்கு*யோஜனைதூரம் குதிரைகளால்செல்லுகிறானை அந்தச் சூரியன்பக்கத்தில் நின்றுகொண்டு பின்வருமாறு சொல்லத்தொடங்கினார். "ஜனனமில்லாதவரும்மூன்றுலோகங்களையும் சுத்தஞ்செய்கிறவரும் பிராணிகளுக்கு ஆத்மாவும் கிரகங்களுக்கு அதிபதியும் வருஷிப்பவரும் சிருஷ்டிப் பிரளயங்களுக்கிருப்பிடமும் உத்தமமான மஹாதேயாளுவுமாகிய ஸூர்யனை நமஸ்கரிக்கிறேன். ஞானத்திற்குநிதியும் எல்லாப்பிராணிகளுக்கும் அந்தராத்மாவும்உலகத்திற்குப் பெருவிளக்கும் உலகங்களின் நன்மையைவிரும்புகிறவரும்தாமேயுண்டானவரும் ஜ்வலிக்கின்ற ஆயிரம்கிரணங்களோடு கூடியவரும் தேவச்ரேஷ்டரும் விரிவானஒளியுள்ளவருமாகிய † விவஸ்வானை நமஸ்கரிக்கிறேன். உலகங்களுக்குக்கொருகண்ணும் லோகங்களின் பிறப்புக்கும் இருப்புக்கும் இறப்புக்கும் காரணமும் ‡ மூன்று வேதரூபியும் $ முக்குணங்களாலாகிய சரீரங்களைதரிப்பவருமாபிரம்ம விஷ்ணுமஹேச்வரஸ்வரூபியுமாகிய ¶ ஸவித்ருவை நமஸ்கரிக்கிறேன்" என்று செய்தார். ஸூர்யபகவான், சிறந்ததவமுள்ளவரே உம்மால்க்கப்பட்ட நான் இப்போது வரம்கொடுப்பவனாக இருக்கிறேன். உம்மாற்சொல்லப்பட்ட துதி என்னிடம் பக்தியுள்ளவர்கள் ஜபஞ்செய்வதற்குரியது. நான் அவர்களுக்கும் வரம்கொடுப்பேன்" என்று சொல்ல, வஸிஷ்டர், "ஸூர்யபகவானே ஸாவித்ரிக்கு இளையவளான இந்

---

* எட்டு மைல். † ஸூர்யன். ‡ ரிக், யஜுஸ், ஸாமம்.

$ ஸத்வரஜஸ்தமோகுணங்கள். ¶ ஸூர்யன்.

தத்தபதியென்னும் உமதுகுமாரி இருக்கிறாளே, இவளை ஸம்வரணனுக்காக உம்மிடம்வரிக்கிறேன். அவ்வரசன்பெரியகீர்த்தியுள்ளவன்; தர்மார்த்தங்களை அறிந்தவன்; உயர்ந்தபுத்தியுள்ளவன். ஆகாயத்தில் ஸஞ்சரிப்பவரே! உமது பெண்ணுக்கு ஸம்வரணன் தகுதியான கணவன்" என்றார். இவ்வாறு வஸிஷ்டரால் சொல்லப்பட்ட அந்தஸூர்யபகவான், அந்தப்பிராம்மணர் சொன்னதை அங்கீகரித்துக்கொடுக்கலாமென்றே நிச்சயஞ்செய்துகொண்டு "ரிஷிசிரேப! ராஜாக்களில் ஸம்வரணன் சிறந்தவன். நீர் ரிஷிகளிற் சிறந்தவர். தபதிபெண்களிற் சிறந்தவள். கொடுப்பதைத்தவிர வேறென்ன இருக்கிறது" என்று மறுமொழிசொன்னன். பிறகுஎல்லா க்ஷணத்திலுமான அந்தங்களையுடைய தபதியைத் † தபனன் தானுகவே ஸம்வரணனுக்காக மஹாத்மாவான வஸிஷ்டரிடம் கொடுத்தான்.

வஸிஷ்டமஹரிஷி அந்தத் தபதியென்னுங்கன்னிகையைப்பெற்றுக்கொண்டபிறகு விடைபெற்றுக்கொண்டு அப்போதே புகழ்பெற்ற கௌரவச்ரேஷ்டனான ஸம்வரணனிருக்குமிடத்திற்குத் திரும்பிவந்தனர். அந்தத் தபதியினிடம் சென்ற மனத்துடன் மன்மதாவேசங்கொண்டிருந்த அவ்வரசன், அழகிய நகையுள்ள அந்தத்தபதியென்னும் தேவகன்னிகை வஸிஷ்டருடன் கூட வரக்கண்டு மிக்க மகிழ்ச்சியுற்றவனாக விளங்கினன். அழகிய புருவங்களுள்ள அந்தத்தபதி ஆகாசத்திலிருந்து வருங்காலை மேகத்திலிருந்துவிழுந்த மின்னலைப்போல் ஒளியினால் திசைகளை விளக்கிக்கொண்டு அதிகமாகப் பிரகாசித்தாள். அவ்வரசனுக்குக் கஷ்டத்துடன் பன்னிரண்டு இரவு ஸமாதியிற் சென்றபிறகு பரிசுத்தாத்மாவானரிஷியாகிய வஸிஷ்டபகவான் வந்தார். ஸம்வரணன், வாங்கொடுப்பவரும்கிரகங்களுக்குஅதிபதியும் ஈசவரனுமாகிய ஸூர்யபகவானைத்தவத்தினால் ஆராதனஞ் செய்தபிறகு வஸிஷ்டருடைய மஹிமையினாலே தனது பாரியையையடைந்தான். அதன்பிறகுதேவகந்தர்வர்களால் ஆசிரயிக்கப்பட்ட அந்தச் சிறந்த பருவதத்தில் அவ்வரசன் சாஸ்திரப்படி தபதியைப் பாணிக்கிரஹணஞ் செய்தான். அந்த ராஜரிஷி வஸிஷ்டரால் அனுமதி கொடுக்கப்பெற்று அந்தப் பர்வதத்திலேயே மனைவியுடன் கூடி விளையாடக்கருதினன். அப்போது அரசன் அங்கிருந்துகொண்டுநகரத்தையும் தேசத்தையும் காடுகளையும் தோட்டங்களையும் ஆளும்படி அந்தஅமைச்சனிடமே நியமித்தான். ராஜாவினிடம் விடைபெற்றுக்கொண்டு வஸி

† சூரியன்

வ்டர் உடனே சென்றார். பிறகு அவ்வரசன் அக்மலையில் தேவதை யைப்போல் விளையாடினான். அது முதல் பன்னிரண்டு வருஷகாலம் அரசன் அந்த மனைவியுடன்கூடவே அம்மலையிலுள்ள காகெளிலும் தடாகங்களிலும் ரமித்தான். சிறந்த ஸாதுவே! பாரதனே! அவ்வர சனுடைய அந்த நகரத்திலும் தேசத்திலும் பன்னிரண்டு வருஷ கா லம் இந்திரன் மழை பொழியவில்லை. பகைவரையடக்குகிறவனே! அ ங்கே அந்த † அனாவிருஷ்டி நேர்ந்தபோது ஸ்தாவரங்களும் ஜங்கமங் களுமாகிய எல்லாப் பிரஜைகளும் நாசமடைந்தன. அப்படிப்பட்ட பிரக்க கொடியகாலம் நேர்ந்தபோது பூமியில் பனியும்விழவில்லை. அத னல் பயிர்கள் முளைக்கவில்லை. அப்போதுபசியின் பயத்தினல் பீடிக் கப்பட்ட ஜனங்கள் மனங்கலங்கி வீடுகளிலிருந்து திசைகளிலும் மூலை களிலும் திரிந்தனர். பிறகு அந்த நகரத்திலும் தேசத்திலும் பசியி னல் வருந்தின ஜனங்கள் மனையிலிருந்தும் அபிமானத்தை விட்டு வரைகடந்து ஒருவரையொருவர் கொன்றனர். அவ்வாறு பசியினல் வருந்தினவரும் மகிழ்வற்றவரும் பிணங்கள் போன்றவருமான மனி தர்களினல் அந்தநகரம் பிரேதங்களினல் சூழப்பட்ட யமபுரம்போ லாயிற்று. பிறகு அவ்வாறிருந்த அந்த நகரத்தைக்கண்டு தர்மாத்மா வும் ரிஷிச்ரேஷ்டருமாகிய அந்த வஸிஷ்டபகவானே ராஜாவினிடம் ஓடிவந்தனர். அர்ச்சுன! பன்னிரண்டாவது வருஷம்கடந்தபின் அந்த ராஜச்ரேஷ்டனுக்க தபதியுடன்கூட அந்தநகரத்துக்கு அழைத்துவந் தார். உடனே இந்திரன் அங்கே முன்போலவே நல்லமழைபெய்தான். அந்த ராஜச்ரேஷ்டன் மறுபடியும் நகரத்துள் பிரவேசித்தபோது பிர புவாகிய இந்திரன் முன்போலப் பயிர்களை விருத்திசெய்வதற்காக நல் லமழை பொழிந்தான். அதனல் பரிசுத்தமான மனஸுள்ள அந்த ரா ஜச்ரேஷ்டனல் பரிபாலனஞ் செய்யப்பட்ட அந்தநகரமும் தேசமும் மிகமகிழ்ந்து அபிவிருத்தியாயிற்று. பிறகு ஸம்வரணராஜன் மறுபடி யும் தன்பத்னியாகிய தபதியுடனே சேர்ந்து இந்திராணியுடன்சேர்ந்த இந்திரன்போல் பன்னிரண்டுவருஷம்பாகஞ்செய்தான். பார்த்தனே! உனது கூடன்பிறையான தபதியென்னும் மஹா பாக்கியவதியான ஸூர்யபுத்திரி இவ்வாறிருந்தாள். அவளால்நீ தாபத்யனென்றுசொல் லப்படுகிறாய். பராக்கிரமசாலிகளிற் சிறந்தவனே! அர்ச்சுன! அந்தத் தபதியினிடம் ஸம்வரணராஜன் குருவென்பதனப்பெற்றான். ஆதலால், நீ தாபத்யனுகிறாய்'' என்றான்.

† மழையில்லாமை.

நூற்றுத்தொண்ணூறுவது அத்தியாயம்.

சைத்ரரதபர்வம். (தொடர்ச்சி.)

(கந்தர்வன் வஸிஷ்டருடைய மஹாத்மியத்தைச் சொல்வது.)

பரதச்ரேஷ்டரான ஜனமேஜயரே! அந்த அர்ச்சுனன் கந்தர்வன் சொன்ன அந்தவசனத்தைக்கேட்டு அப்போதே சிறந்த பக்தியுடன் பூர்ணசந்திரன்போலப் பிரகாசித்தான். சிறந்தவில்லாளியான அர்ச்சுனன் வஸிஷ்டருடைய தவவன்மையைப்பற்றி மிக்க வியப்படைந்து கந்தர்வனைப்பார்த்து, "கந்தர்வராஜரே? எவர் எங்களுடைய முன்னோர்களுக்குப் புரோஹிதராயிருந்தாரோ அந்தமஹரிஷிக்கு வஸிஷ்டரென்ற பெயர் உன்னால்சொல்லப்பட்டது. அவர் எவ்வாறு வந்த தென்பதையும் அந்தப் பகவானை ரிஷி எப்படிப்பட்டவரென்பதையும்நான்கேட்க விரும்புகிறேன். அதனைஎனக்குச்சொல்" என்றுகேட்டான். கந்தர்வன், "* வஸிஷ்டர்பிரம்மாவுக்குத்மானஸபுத்திரர். அருந்ததிக்குப் பர்த்தாவாகியவர். தேவர்களாலும் வெல்லமுடியாத காமக்குரோதங்களிரண்டும் அவருடைய தவத்தினால் ஜயிக்கப்பட்டு அவருக்குக் ‡ கால்பிடித்துக்கொண்டிருந்தன. இந்திரியங்களைவசப்படுத்தினதனால் வஸிஷ்டரென்றுசொல்லப்படுகிறார். மனிதர்களால் வெல்லக்கூடாத காமக்குரோதங்கள் அவரால் எவ்வாறு ஜயிக்கப்பட்டனவோ அவ்வாறே எதிரிகளும் ஜயிக்கப்பட்டனர். லோகங்களும் ஜயிக்கப்பட்டன. லோகங்களுக்குப்போகிற வழிகளும் திசைகளும் ஜயிக்கப்பட்டன. சிறந்த ஞானமுள்ள வஸிஷ்டர், விசுவாமித்திரர் செய்த பிழையினால் உண்டான மிகுந்த கோபத்தை யடக்கிக்கொண்டு குஸிகவம்சத்தவரை அழிக்காமலிருந்தார். புத்திரசோகத்தினால் கொதிப்புற்றபோது வல்லமையுள்ளவராயிருந்தும் வல்லமையில்லாதவன்போல் விசுவாமித்திரரை யழிக்கத்தக்க கொடியகருமம் செய்யாமலிருந்தார். இறந்துபோன புத்திரர்களையும் யமன் வீட்டிலிருந்து திருப்பிக் கொண்டுவர வல்லமையுள்ளவராயிருந்தும் கருங்கடல் கரையை மீறுமலிருப்பதுபோலத் தெய்வத்தை அதிக்ரமிக்காமலிருந்தார்.

---

* காமக்குரோதங்களை ஜயித்து இந்திரியங்களை வசப்படுத்தியவர்.

† வருணனுடைய வீரியத்திலிருந்து பிரம்மாவினுடைய அனுக்ரகத்தினால் ஜனித்தவர்.

‡ உருவத்தோடு அவர்கால் பிடிக்கும் வேலைக்காரர்களாக இருந்தனபோலும்.

மனிதர்களிற்சிறந்தவர்களாகிய இக்ஷ்வாகுவம்சத்தவர்கள், மனத்தை ஜயித்தவராகிய அம்மஹாத்மாவைச்சேர்ந்தபிறகுதான் இப்புவனியை யடைந்தனர். கௌரவ புத்திரனே! அவ்வரசர்கள் ரிஷிச்ரேஷ்டராகி அந்தவஸிஷ்டரைப் புரோகிதராகப் பெற்று அனேகயாகங்கள் செய்தனர். பாண்டவச்ரேஷ்டனே! அந்தப்பிரமரிஷி அந்தராஜச்ரேஷ்டரெல்லாருக்கும் தேவர்களுக்கு ப்ருஹஸ்பதிபோல் யாகங்களைச்செய்வித்தார். ஆதலால்தர்மத்தையே பிரதானமாக உள்ளத்திற்கருதினவரும் வேதமும்தர்மசாஸ்திரமும் தெரிந்தவரும் மனத்திற்கினியவரும் குணவானுமாகிய ஒருபிராமணரைப்புரோகிதரை (நீங்கள்) தேடவேண்டும். பார்த்தனே! பூமியைஜயிக்கவிரும்புகின்றகல்லகுலத்திற்பிறந்தசூத்திரியன் சாஸ்த்ரத்தின் அபிவிருத்திக்காக முதலில் புரோகிதனை ஏற்படுத்திக்கொள்ளவேண்டும். பூமியைஜயிக்க விரும்புகின்றராஜா பிராமணனைமுன்னிட்டுக்கொள்ளவேண்டும். ஆதலால், குணவானும் ஜிதேந்திரியரும் வித்துவானும் அறம்பொருளின்பங்களின் உண்மையையறிந்தவருமாகிய ஒரு பிராம்மணபுரோஹிதர் உங்களுக்கிருக்கவேண்டும்" என்றான்.

நூற்றுத்தொண்ணூற்றேராவது அத்தியாயம்.

சைத்ரரதபர்வம். (தொடர்ச்சி.)

வஸிஷ்ட உபாத்யாயனத்தில் விசுவாமித்திரர் வஸிஷ்டருடைய ஆச்ரமம் சென்றதும், வஸிஷ்டரால்விசுவாமித்திரருக்கு ஆதித்யஸ்தோத்ரமும், விசுவாமித்திரர் வஸிஷ்டருடையபசுவையாசித்ததும், கோபத்தால் பசுவைபலாத்காரமாக அபகரித்ததும், கோபமடைந்த விசுவாமித்திரரைத் தோற்கச்செய்ததும் விசுவாமித்திரர் தவஞ்செய்து பிராம்மணரானதும்.)

அர்ச்சுனன் "சிறந்தஆச்ரமத்தில் வாஸஞ்செய்துகொண்டிருந்த வஸிஷ்டவிசுவாமித்திரர்களுக்கு யாதுகாரணம்பற்றி விரோதம் உண்டாயிற்று? அதனை முழுதும் எங்களுக்குச்சொல்' என்று கேட்க, கந்தர்வன் சொல்லுகிறான்:—

"அர்ச்சுன! இந்தவஸிஷ்டருடையசரித்திரத்தை எல்லாலோகங்களிலும் புராணமென்று சொல்லுகின்றனர். அதனை உள்ளபடி என்னிடத்தில்கேள். பரதச்ரேஷ்டனே! கான்யகுப்ஜதேசத்தில் குசிகரின்

புத்திரரான காதியென்று உலகத்திற் கியாதிபெற்ற ஒருமஹாராஜா இருந்தார். அந்தத்தர்மாத்மாவின் புத்ரராகிய விசுவாமித்திரரென்று பெயர்பெற்றராஜா சேனைகளும் வாஹனங்களும் மிகுதியாகஅடைந்து பகைவரையழிப்பவராயிருந்தார். அவர்சேனைகளுடன்மஹாவனத்தில் வேட்டையாடித்திரிந்தார். புருஷச்ரேஷ்டனே! அழகானமலைகளிலும் பாலிவனங்களிலும் மான்களையும் பன்றிகளையும் அடித்துச் சிரமத்தினால் களைப்புற்ற அவர் மானைத்தேடிக்கொண்டு தண்ணீரை விரும்பி வஸிஷ்டருடைய ஆசிரமம் நோக்கிவந்தார். ச்ரேஷ்டர்களைப்பூஜிப்பவராகிய வஸிஷ்டமகரிஷி புருஷச்ரேஷ்டரான அந்த விசுவாமித்திரர் வந்ததைக்கண்டு அவரை மரியாதையுடன் அழைத்தார். பாரதனே! அர்க்கியபாத்ய ஆசமனீயங்கள்கொடுத்து நல்வரவு சொல்லிவனத்திலுள்ள அன்னத்தையுமளித்துஅவரை அப்போது ஆதரித்தார். பிறகு அந்தமஹாத்மாவான வஸிஷ்டருடையகாமதேனுவேண்டியவற்றைக் கொடுஎன்றுஅவரால் கட்டளையிடப்பட்டவுடனேவிரும்பினவற்றைக் கறந்தது. அர்ச்சுனனே! ஆவியோடுகூடியபருவதம்போன்ற அன்னக்குவியல்களையும், மோர் ரஸம் தயிர்வெண்ணெய்முதலியவற்றையும், பருப்புக்களையும், தயிர்வாய்க்கால்களையும், நெய்நிரம்பின கிணறுகளையும், சர்க்கரைப்பொங்கல்களையும், கரும்புகளையும், தேன்களையும், பொரிகளையும், * மயிரேயம் என்னும் உயர்ந்தசாராயங்களையும், கிராமங்களிலும் காடுகளிலுமுள்ள ஓஷதிகளையும், பாலையும், ஆறுரஸங்களும்சேர்ந்து அமிர்தத்துக்கொப்பான சிறந்த † ரஸாயனத்தையும், உண்ணத்தக்கவைகுடிக்கத்தக்கவையான பலவகைப் பக்ஷணங்களையும், அமிர்தத்துக்கொப்பான ‡ லேகியங்களையும், ¶ சோஷ்யங்களையும், பலவகைகளான உயர்ந்த விலைபெற்ற ரத்னங்களையும், ஆடைகளையும் மிகுதியாகக் கொடுத்தது. அந்தராஜா மந்திரிகளோடும் சேனைகளோடும்கூட ஒன்றும் குறைவில்லாதஅந்த இனியவஸ்துக்களினால் பூஜைசெய்யப்பெற்று அப்போது மிகவும் திருப்தியடைந்தார்.

§ ஆறு அவயவங்கள் நீண்டதும், அழகான விலாப்புறங்களும் துடைகளுமுடையதும், $ ஐந்து இடங்கள் பருத்திருப்பதும், தவளைக்கண்போன்ற கண்களையுடையதும், அழகிய உருவமுள்ளதும், பருத்த

---

* மிரையென்னும் தேசத்திலுண்டானது. † பலத்தைத்தரும்உணவு.
‡ நக்கிச்சாப்பிடத் தக்கவை. ¶ உறிஞ்சிச் சாப்பிடத்தக்கவை.
§ தலை, கழுத்து, துடைகள், அலைதாடி, வால், முலை.
$ நெற்றி காதுஇரண்டு, கண் இரண்டு.

மடியுள்ளதும், நல்லலக்ஷணங்கள்பொருந்தியதும், அழகானவாலுள்ளதும், முளைகள்போன்றகாதுகளுடையதும், அழகானகொம்புகளுடையதும், மனத்திற்கினியதும், பருத்தும்நெடுமிருக்கும் தலையும் கழுத்துமுடையதுமாயிருக்கிறஅந்தத்தேனுவைக்கண்டு அந்தவசுவாமித்திரர்வியப்புற்றார். காதியின்புத்திரராகிய அந்தராஜா, அந்தகாதினியென்னும்பெயருள்ள பசுவைசிலாகித்து அப்போது அந்தவஸிஷ்ட மஹரிஷியைப்பார்த்து மிகுந்த ஸந்தோஷத்துடன், "பிராம்மணரே! பத்துக்கோடி பசுக்களையாவது அல்லது என்னுடைய ராஜ்யத்தையாவது பெற்றுக்கொண்டு நந்தினியைஎனக்குக்கொடும். மஹாமுனியே! ராஜ்யத்தைஅனுபவியும்" என்று சொன்னார். அதைக்கேட்டு வஸிஷ்டர், "தேவதைகளுக்கும் அதிதிகளுக்கும் பிதிர்க்களுக்குமே எம்மைப் புரோஹிதராகவைத்து யாகஞ்செய்பவருக்குமாக இந்தநாதினியென்னும்பசு இருக்கிறது. குற்றமில்லாதவரே! ராஜ்யத்தைத்தெடுத்தாலும் இந்தஉமக்குக்கொடுக்கத்தகாது" என்றார். விசுவாமித்திரர், "பகவனே! இந்தப்பசு ‡ரத்னம். ரத்னத்தையெடுத்துக்கொள்பவன் அரசன். நான் க்ஷத்ரியன். நீர் தபஸையும் வேதாத்யயனத்தையும் கருவிகளாகவுடையபிராம்மணர்; சாந்தர்களும் மனத்தைஅடக்கினவர்களுமாகியபிராம்மணர்களுக்குப் பராக்கிரமம் எது? பத்துக்கோடி பசுக்களை வாங்கிக்கொண்டு நான் விரும்பினதைநீர் கொடாவிட்டால்நான்என்தர்மத்தைவிட்டுவிடேன். பசுவைப்பலாத்காரமாகக் கொண்டேபோவேன்" என்றார். வஸிஷ்டர், "நீர்சேஷ்யுடனிருப்பவர்; ராஜா; க்ஷத்ரியர்; கைவன்மையுள்ளவர். நீர்எவ்வாறு விரும்புகிறீரோ அவ்வாறு உடனே செய்யும். சங்கைப்படவேண்டாம்" என்றார். அச்சுனு! வஸிஷ்டரால் இவ்வாறு சொல்லப்பட்ட விசுவாமித்திரர் ஹம்ஸத்திற்குஞ்சந்திரனுக்கும் ஒப்பானதேனுவைப் பலவந்தமாக இழுத்தார். பிறகு உத்தம குணமுள்ளதான அந்த வஸிஷ்டருடையநந்தினியென்னும் தேனு விசுவாமித்திருடைய படைச்சேவகர்களால் பலாத்காரமாக இழுக்கப்பட்டுக்கசைகளாலும் தடிகளாலும் இங்குமங்கும் அடித்துத் தரத்தப்பட்டும் "அம்மா" என்று கூவிக்கொண்டு பகவானை வஸிஷ்டருக் கெதிரேவந்து தலைதூக்கிநின்றது. மிகுதியாக அடிக்கப்பட்டும் அந்த ஆசிரமத்தைவிட்டுச் செல்லவில்லை. அதைப்பார்த்தவஸிஸ்டர், "பிரியமுள்ள நந்தினியே! அடிக்கடி கதறுகின்ற உன்ச

‡ உயர்ந்தபொருள்.

ப்தத்தைக் கேட்கிறேன். நீ விசுவாமித்திரரால் பலவந்தவாக இழுக்கப்படுகிறாய். அதற்கு என்னற்செய்யக்கூடியதென்ன? நான் பொறுமையுள்ள பிராம்மணனல்லவா?" என்றுசொன்னர். பரதச்ரேஷ்டனே அர்ச்சுன! அந்தநந்தினி அந்தச் சேனைகளின் பயத்தினாலும் விசுவாமித்திரரிடமுள்ள பயத்தினாலும் வருத்தமுள்ளதாகி வஸிஷ்டரைச் சரணமடைந்து, "பகவானே! கொடியவர்களான விசுவாமித்திரருடைய சேனையாகிய ஜனங்களினால் கசைகளாலும் தடிகளாலும் அடிக்கப்பட்டு அநாதையைப்போலிருக்கிறேன். என்னை என்கவனிக்காமலிருக்கிறீர்" என்று சொல்லிற்று.

அர்ச்சுன! இவ்வாறு அந்தத்தேனு பிடிக்கப்பட்டபோது உறுதியான நியாமமுள்ள வஸிஷ்டமாமுனிவர் கலங்கவுமில்லை. தம் நிலையை விட்டுப் பெயரவுமில்லை. அப்போது வஸிஷ்டர், "க்ஷத்திரியர்களுக்குப்பராக்கிரமம் வன்மை; பிராமணர்களுக்குப் பொறுமை வன்மை. பொறுமை என்னை யடைந்திருக்கிறது. ஆதலால், உனக்கிஷ்டமிருந்தால் செல்" என்றுசொல்ல, நந்தினி,"பகவானே! நான் உம்மால்விடப்பட்டேனு என்ன? ஏன் இவ்வாறுபேசுகிறீர்? பிராம்மணரே! நான் உம்மால் விடப்படாமலிருந்தால் என்னைப்பலாத்காரமாகக் கொண்டு போகமுடியாதே" என்றது. வஸிஷ்டர், அதைக்கேட்டு,"குணமுள்ள நந்தினியே! நான் உன்னைவிடவில்லை; முடியுமானால் நிற்கலாம். கெட்டியான கயிற்றினால்கட்டி இந்த உன்கன்று பலாத்காரமாகக் கொண்டுபோகப்படுகிறது" என்றுசொன்னர். "நிற்கலாம்" என்று வஸிஷ்டர் சொன்னதைக்கேட்ட அந்தக்காமதேனு உயரஎடுக்கப்பட்ட தலையும் கழுத்துமுடையதாகவும் கொடிய பார்வையுள்ளதாகவும் காணப்பட்டது. அந்தத்தேனு, கோபத்தினால் கண்களிலிருந்து 'அம்மா, என்று உரக்கக்கூவிக்கொண்டு, விசுவாமித்ரருடைய அந்தச்சேனையெல்லாவற்றையும் துரத்தித்தற்று. கோபத்தினால் கண்கள் சிவந்த அந்தத்தேனு சாட்டைநுனிகளாலும் தடிகளாலும் அடிக்கப்பட்டு அங்குமிங்கும் துரத்தப்படும்போது இன்னும் அதிக கோபத்தையடைந்தது. வாலிலிருந்து பெரியநெருப்புமழையை அடிக்கடி வருஷித்தது; கோபத்தினால் சரீரமெல்லாம்ஜ்வலித்து மத்தியானகாலத்து ஸூர்யன்போல் பிரகாசித்தது. வாலிலிருந்து பல்ஹவர்என்னும் ஜாதியாரையும், மடியிலிருந்து திராவிடர்களையும் சகர்களையும், பின்பக்கத்திலிருந்து யவனர்களையும், சாணத்திலிருந்து பல சபரர்களையும், மூத்தி

ரத்திலிருந்து வேறு சிலசபரர்களையும், விலாப்பக்கங்களிலிருந்து பௌண்டரர்களையும், கிராதர், யவனர், ஹிம்மலர், பர்பரர், கஸர், சிபுகர், புளிந்தர், சீனர், ஹூணர், கேரளர்இவர்களையும், வாய்நுரையிலிருந்து அனேகவிதமான மிலேச்சர்களையும், அந்தத்தேனுஉண்டுபண்ணிற்று. பலவகைகளானகவசங்களாற் போர்க்கப்பட்டவர்களும் பலவகை ஆயுதங்களைத்தரித்தவர்களும் காமதேனுவினால் ஸ்ருஷ்டிசெய்யப்பட்டவர்களுமாகிய அந்த மிலேச்சக்கூட்டங்களாகிய பெரும் படைகளினால் மிகுந்தகோபத்துடன் விசுவாமித்திரருடைய சேனை அவர் பார்த்திருக்கும்போதே ஆக்ரமிக்கப்பட்டது. அப்போது ஒவ்வொரு போர்வீரனும் ஐந்துபேர்களாலும் ஏழுபேர்களாலும் பிடிக்கப்பட்டான். அப்போது பெருஞ்சரமாரிகளினால் அடிக்கப்பட்ட சேனை பல்லாயிரத்தார் கண்ணெதிரிலேயே தோற்றுப் பயமுற்றது. ரதகஜதுரகபதாதிகளாகிய நால்வகைப்படைகளோடு கூடியதும் மிகவும் தாங்கக்கூடாத உக்ரமுமாகிய அந்த விசுவாமித்திரர் சைனியம் நாற்புறமும் மடிக்கப்பட்டுக் காமதேனுவினால் ஜயிக்கப்பட்டது. பாதகச்ரேஷ்டனே! அந்த விசுவாமித்திரருடைய சேனையிலுள்ள வீரர்களெல்லாரும் கோபங்கொண்ட வஸிஷ்டசேனைகளினால் உயிர்போக்கப்படவில்லை. அந்தத்தேனு அந்தச்சேனையையெல்லாம் தூரத்தூரத்திற்று. மூன்றுயோசனைதூரம் தூரத்தப்பட்ட அந்த விசுவாமித்திரசேனை பயத்தினால் கலங்கிக் கதறிக்காப்பவனை அடையாமற் போயிற்று

பிறகு அந்தவிசுவாமித்திரர் பார்த்துக்கோபத்தினால் ஆவேசங்கொண்டு ஆகாயத்தையும் பூமியையும் நிரப்புகின்ற சரமாரிகளை ரிஷிச்ரேஷ்டரானவஸிஷ்டர்மீது பொழிந்தார். விசுவாமித்திரரால் ப்ரயோகிக்கப்பட்ட கொடிய உருவமுள்ள காரசபாணங்களையும் கத்திகளையும் அர்த்தசந்திர பாலங்களையும் வஸிஷ்டமாமுனிவர் மூங்கிற்றடியினால்ஒதுக்கினர். அப்போது, யுத்தத்தில்வஸிஷ்டர்செய்கையின் ஸாமர்த்தியத்தைக்கண்டு சத்ருக்களையழிப்பவராகிய விசுவாமித்திரர் அதிகம் கோபங்கொண்டு அந்த ரிஷியின்மேல் திவ்யாஸ்திரங்களை மழையாகப்பொழிந்தார். ஆக்நேயாஸ்திரம், வாருணாஸ்திரம், ஐந்த்ராஸ்திரம், யமாஸ்திரம், வாயவ்யாஸ்திரம் முதலியஎல்லாவற்றையும் சிறந்மஹிமையுள்ள ப்ரம்மபுத்திரரான வஸிஷ்டர்மேல் ப்ரயோகித்தார். அந்த அஸ்திரங்கள் ப்ரளயகாலத்தில் உக்ரங்கொண்ட ஸூர்ய

ரச்மிகளைப்போல் எங்கும் ஜ்வாலைகளை இறைத்துக்கொண்டுவந்தன. மிகுந்த பிரபாவமுள்ள வஸிஷ்டரும் தம்முடையபிரம்மதேஜஸின்வன்மையினால், பிரயோகிக்கப்பட்ட அந்த அஸ்திரங்களையெல்லாம்சிரித்துக்கொண்டே தண்டத்தினால் தடுத்துவிட்டார். பிறகு அவையெல்லாம் நிராகிலத்தில்வீழ்ந்தன. வஸிஷ்டர், திவ்பாஸ்திரங்களையுதக்கிவிட்டு "மஹாராஜாதேவ! துராத்மாதேவ! காதிபுத்ரனே! தோற்றீர். இதற்குமேற்பட்ட பராக்கிரமம் உனக்கிருக்குமானால் அதை நானிருக்கையிற்காண்பி" என்றுசொன்னார். ராஜாவாகிய விசுவாமித்திரர்வஸிஷ்டரால் அவ்வாறுசொல்லப்பட்டபோது பெருஞ்சினவெருட்டப்பட்டுவெட்கம்நிரம்பினவராக ஒன்றும் பேசாமலிருந்தார். அப்போது விசுவாமித்திரர் பிரம்மதேஜஸிலுண்டான அந்தப்பெரிய ஆச்சரியத்தைக்கண்டு க்ஷத்திரியாஜன்மத்தில்வெறுப்புற்று, "க்ஷத்திரியனுடைய பராக்கிரமமென்னும் வன்மை நிந்திக்கத்தக்கது. பிரம்மதேஜஸின் வலிமையே வலிமை. பலாபலங்களைத் தூக்கிப்பார்க்கையில் தவவலிமையே சிறந்தது" என்றுசொன்னார். அவர் எல்லாவைபவங்களும் நிரம்பிய ராஜ்யத்தையும் சிறந்த அந்தராஜ்யலக்ஷ்மியையுமிட்டு லோகங்களை அலக்ஷ்யஞ்செய்து தவத்திலேயே மனம்வைத்தார். அவர் தவத்தினால் விருத்தியையடைந்து நான்தேஜஸினால் உலகங்களையெல்லாம்தகைத்து, தாபத்தையுண்டுபண்ணி ஜ்வலித்தெழுந்த தேஜஸுடன் பிரம்மனைத் தன்மையையடைந்தார். பிறகுவிசுவாமித்திரர் இந்திரனுடைசோமபானத்தையும் பானஞ்செய்தார். இவ்விதமான சக்தி [illegible]ரிஷி பிரம்மரிஷியானார்" என்றான்.

நூற்றுத்தொண்ணூற்றிண்டாவது அத்தியாயம்.

சைத்ரரதபர்வம் (தொடர்ச்சி.)

(வஸிஷ்டபுத்ராரான சக்தி* கல்மாஷபாதனுக்குச் சாபங்கொடுத்ததும், ராக்ஷஸாவேசங்கொண்ட கல்மாஷபாதன் வஸிஷ்டபுத்திரர்களைப்பக்ஷித்ததும், வஸிஷ்டர் புத்திரசோகத்தினால் தாபமடைந்து பிராணனை விடுவதற்குப் பலயத்தனங்கள் செய்ததும்.

அர்ச்சுனன், "கந்தர்வராஜாதேவ! (விசுவாமித்திரர் பிரம்மரிஷியான பிறகு) வஸிஷ்டர் விசுவாமித்திரர்இவ்விரண்டு ரிஷிகளுக்கும் எ

---

* இவனுக்கு ஹொதாஸனென்றும் மித்ரசகனென்றும் பெயர்களுண்டு

தைப்பற்றித்துவேஷம் உண்டானதோ அதைமுழுதும் எனக்குச்சொல்; கந்தர்வனே! வஸிஷ்டருடைய பிரம்மதேஜஸின் மஹிமையையும், கூஷ்திரியரும் மஹாத்மாவுமான விசுவாமித்திர் பிராம்மணரானதையும்கேட்டு நான் திருப்தியடையவில்லை. கந்தர்வராஜனே கதையைச்சொல். வஸிஷ்டவிசுவாமித்திர்களுடைய மஹிமையைச் சொல்லுகிறாய். அதனை எனக்குப் பூர்ணமாகச்சொல்' என்றுகேட்க கந்தர்வன் சொல்லுகிறான்.

"பார்த்தனே! இந்தவஸிஷ்டருடைய சரித்திரம் † புராணம் மிகுந்த புண்ணியமானது. எல்லாஉலகங்களிலும் பிரஸித்தி பெற்றது. அதனை என்னிடம் கேள். பார்த்தனே! இவ்வுலகத்தில் இக்ஷ்வாகுவம்சத்தில் கல்மாஷபாதனென்னும் அரசன் ஒருவன் இருந்தான். அவன் இந்தப்பூமியில் ஒப்பற்றபராக்கிரமமுள்ளவன். ஒருகால் அவ்வரசன் வேட்டைக்காக நகரத்திலிருந்துவனஞ்சென்றான். சத்துருக்களைப் பீடிப்பவனுகிய அவ்வரசன் மான்களையும் பன்றிகளையும் அடித்துக்கொண்டு திரிந்தான். மிக்கபயங்கரமான அந்தவனத்தில் காண்டாமிருகங்களையும் மிருதியாகக்கொன்றான். அவ்வரசன் நெடுதூரம் அடித்துக்களைத்துஅங்கிருந்து திரும்பினன். மஹிமைபொருந்திய விசுவாமித்திர் அவனுக்குத் தாம்யாகஞ்செய்விக்க விரும்பினர். யுத்தத்தில் தோல்வியடையாத அவ்வரசன் பசிதாகங்களினல் வருத்தப்பட்டு ஒற்றையடிப்பாதையான வழியிற்போகும்போது தனக்குநேராகவந்தரிஷிச்ரேஷ்டரான வஸிஷ்ட புத்திரரைக்கண்டான். அவன் மஹானுபவரும் வஸிஷ்டவம்சத்தைவிருத்திசெய்கிறவரும் மஹாத்மாவான வஸிஷ்டருடைய நூறுபுத்திரர்களில் மூத்தவருமான அந்த சக்தியென்னும் முனிவரைக்கண்டு, "நம்முடையவழியைவிட்டுவிலகுக" என்றுசொன்னன். ரிஷி அவ்வாறு சொன்ன அரசனை நயமான வசனங்களினல் ஸமாதானஞ்செய்து "மஹாராஜனே! இஃது என் வழி; இதுதான் சாச்வதமானதர்மம். கிழவன், பயந்தவன், அரசன் ஸ்நாதகன், பெண், ரோகிஷ்டன், கலியாணப்பிள்ளை, வண்டிக்காரன் இவர்களுக்கு வழிவிடவேண்டும். அவர்களில் சிலருக்கு ராஜாக்கள் வழிவிடவேண்டும். மற்றும் சிலர் ராஜாக்களுக்கு வழிவிடவேண்டும். ராஜா பிராமணனுக்கு வழிவிடவேண்டுமென்பதுதான். எல்லாத் தர்மங்களிலுமுள்ளது" என்றார். அவர்களிருவரும் வழிக்காக ஒருவர்க்

† பூர்வகல்பங்களிலுள்ளது.

கொருவர் இவ்வாறுபேசினர். 'விலகு விலகு' என்றபேச்சையே,மேன் மேலும் சொன்னார்கள். தர்மப்படி தம்மார்க்கத்தில் நின்ற அந்தரிஷி விலகிப்போகவில்லை. ராஜாவும் கோபத்தினால் ரிஷியின்மார்க்கத்தை விட்டு விலகாமலிருந்தான். அப்போது வழிவிடாமலிருந்த அந்த முனிவரை அந்தராஜச்ரேஷ்டன் அறிவின்மையால்ராக்ஷஸனைப்போல் கசையால் தீண்டினான். கசையால் அடிக்கப்பட்ட அந்த வஸிஷ்டபுத் திரரானமுனிச்ரேஷ்டர்உடனேகோபமிகுந்து, "ராஜாக்களில் இழிவா னவனே! நீராக்ஷஸனைப்போல் ரிஷியையடிக்கிறாய். ஆதலால் இன்று முதல் நீ ராக்ஷஸனுவாய். மனிதர்மாம்ஸத்தில் ஆசைவைத்து இந்தப் பூமியெல்லாம் திரிவாய்" என்று அந்தராஜச்ரேஷ்டனைச் சபித்தார். தவவன்மையையே சக்தியாகவுடையசக்திமுனிவரால், "ராஜா அதம னே !செல்" என்றுஅவன்சொல்லப்பட்டான். அவனுக்குப் புரோஹி தர்களாயிருக்கிற நிமித்தப் விசுவாமித்திரருக்கும் வஸிஷ்டருக்கும் வி ரோதமிருந்தது. அந்தச்சமயத்தில் விசுவாமித்திரர் அவனிடம் வந் தார். பார்த்தனே! (சக்தியும் கல்மாஷபாதனும்) அவர்களிருவரும்இவ் வாறு விவாதப்பட்டுக் கொண்டிருக்கையில் உக்கிரமானதவமுள்ள வரும் பிரபாவமுள்ளவருமாகிய விசுவாமித்திரரிஷி ஸபீபத்தில்வந் தார். அதன்பிறகு அந்தராஜச்ரேஷ்டன் தேஜஸில் வஸிஷ்டருக்கொப் பான அந்தச்சக்திமஹரிஷியை, வஸிஷ்டமஹரிஷியின் புத்திரரென்று அறிந்தான். பாரதனே! பிறகு விசுவாமித்திரரும் தம்மையொளித்துக் கொண்டு தம்விருப்பத்தைச் செய்யக்கருதி அவ்விருவரையும் (மறை ந்து) தாண்டிச்சென்றார். அந்தச்சக்தியென்னும் ரிஷியினால் சபிக்கப் பட்டிருந்த அந்தராஜச்ரேஷ்டன் அப்போது அவருடைய கோபத் தைத் தெளிவிப்பதற்கு அவரைப்பூஜித்துச் சரணமடைந்தான்.

குருச்ரேஷ்டனே ! அந்தவிசுவாமித்திரர் அவ்வரசனுடையஎண் ணத்தையறிந்து உடனே ராஜாவின்மீது ஒரு ராக்ஷஸனை ஏவினர். அந்தப்பிரம்மரிஷியான சக்தியின்சாபத்தினாலும் விசுவாமித்திரருடை ய ஏவலினாலும்கிங்கரனென்னும்ராக்ஷஸன்அப்போதேராஜாவின்மேல் ஆவேசமானான். வீரனே! அவனை ராக்ஷஸனால்பீடிக்கப்பட்டவனென அறிந்துரிஷிச்ரேஷ்டரான விசுவாமித்திரர் அவ்விடத்திலிருந்துவிலகி ப்போனார். பிறகு தெரிந்தவனான அவ்வரசன் உள்ளேயிருக்கும் ரா க்ஷஸனால் பலமாகப் பீடிக்கப்பட்டிருந்த போதிலும் தன்னைத் தன் புத்தியினால் அடக்கிக்கொண்டிருந்தான். முன்னே ராஜாவனத்

திற்குப்புறப்படும்போதேபசியினால்வருந்தினஒருபிராம்மணன்கண்டு மாம்ஸஞ் சேர்ந்த உணவை யாசித்தான். அப்போது மித்திரசஹ ஆதரிப்பவனுகிய அந்த ராஜரிஷி அந்தப்பிராம்மணனைப்பார்த்து, "பிராம்மண! நீ இங்கேயே சற்றுநேரம் காத்திரு; திரும்பிவந்தபிறகு விரும்பினபோஜனத்தை உனக்குத்தருவேன்" என்று சொன்னன். இவ்வாறுசொல்லிவிட்டு ராஜாசென்றன். பிராம்மணச்ரேஷ்டன் அங்கேநின்றன். பார்த்தனே! பிறகுராஜா பெரியமனமுள்ள தன்விருப்பம் போல்ஸுகமாகத்திரிந்து திரும்பிவந்து அந்தப்புரத்திற் பிரவேசித்தான். அந்த அரசன் பிராம்மணன் சொன்னதைக் கேட்டுக்கொண்டு உள்ளேபோய் அந்தப்புரம் சென்றபின் அதனை மறந்துவிட்டான். பிறகு அரசன் நள்ளிரவிலெழுந்து பிராம்மணனுக்குவாக்குத் தத்தஞ் செய்ததை நினைத்து உடனேசமையற்காரனை வருவித்து "போ; இந்தவனத்தின் ஆரம்பத்தில் ஒரு பிராம்மணன் அன்னத்தைவேண்டி எனனை எதிர்பார்த்திருக்கிறன். அவனை மாம்ஸம்சேர்ந்த அன்னத்தினால் நீ திருப்திசெய்விக்கக் கடவாய்" என்றன். இவ்வாறு சொல்லப்பட்டவுடன் அந்தச் சமையற்காரன் எங்கும் மாம்ஸம்கிடைக்காமையால் வருத்தத்துடன் அதை அந்த அரசனுக்குத் தெரிவித்தான். ராக்ஷஸனால் ஆவேசிக்கப்பட்ட அரசன் சமையற்காரனைப் பார்த்து, "மனிதர் மாமிசத்தினாலாவது அவனுக்குப்போஜனம் செய்வி" என்று மனத்தில் வருத்தமில்லாமல் பலமுறை சொன்னன். பிறகு சமையற்காரன் அப்படியே செய்கிறேனென்று சொல்லிக் கொல்லப்படத்தக்கவர்களைக்கொல்லுகிறவர்களிருக்கு மிடத்திற்குச் சென்று அச்சமின்றி நரமாம்ஸத்தைக்கொணர்ந்தான். அதனை உடனே முறைப்படி சமைத்து அன்னத்துடன் சேர்த்துத் தவமுடையவனை அந்தப்பசித்த பிராம்மணனுக்குக் கொடுத்தான். அந்தப் பிராமணச்ரேஷ்டன் தன்யோகதிருஷ்டியினால் அந்த அன்னத்தைத் தெரிந்துகொண்டு கோபத்தினால் கலங்கின கண்களுடனே, "இது புஜிக்கத்தகாது" என்றும் "அந்த அதமனை ராஜா உண்ணத்தகாத உணவை எனக்குக்கொடுத்தனால் முன்னே சக்தி சொன்னபடி மனிதர் மாம்ஸங்களில் விருப்பமுற்றுப் பிராணிகள் அச்சப்படும்படி இந்தப்பூமியெல்லாம் திரிவான்" என்றும் சொன்னன். இரண்டாந்தரம் வற்புறுத்திச் சொல்லப்பட்டபிறகு ராஜாவுக்கு அந்தச்சாபம் உறுதிப்பட்டது. ராக்ஷஸனுடைய பலத்தினால் ஆவேசிக்கப்பட்ட அரசன் அறிவிழந்

தவஞனன் பாரதனே! பிறகு ராக்ஷஸனால் அறிவுபோக்கப்பட்ட அந்த ராஜச்ரேஷ்டன் சிலகாலத்துக்குப்பின் அந்தச்சக்தி முனிவரைக்கண்டு, "இந்தத் தகாத சாபத்தை நீர் என்மேல் பிரயோகித்ததனால் முதலில், உம்மைத தொடங்கித்தான் நான் மனிதர்களைத் தின்ன ஆரம்பிக்கப் போகிறேன்" என்று சொன்னன். இவ்வாறு சொன்னபிறகு உடனே அந்தச்சக்திமுனிவருடையஉயிரைப்போக்கி, புலி பசுவைத் தின்பதுபோல் விருப்பத்துடன் அவரைத்தின்றான். சக்தி யிறந்துபோனதைக் கண்டு பிறகு விசுவாமித்திரர் திரும்பத்திரும்ப வஸிஷ்டர் புத்திரர்களின்மீத அந்த ராக்ஷஸனை ஏவினர். அவ்வரசன் தோபித்துச் சத்திக்கு இளையவர்களும் மஹாதபஸ்விகளுமான வஸிஷ்டரின் புத்திரர்களை ஸிம்மம் அற்பமிருகங்களைப் பக்ஷிப்பது போல் பக்ஷித்தான்.

அந்தப்புத்திரர்கள் விசுவாமித்திரரால் கொல்விக்கப்பட்டதைக் கேட்டு வஸிஷ்டர் அந்தத்துயரத்தைப் பெரியமலை பூமியைத்தாங்குவதுபோலத் தாங்கினர். அந்த ரிஷிச்ரேஷ்டர் தாம் இறப்பதற்கும் எண்ணங்கொண்டார். ஞானமுள்ளவர்களில் சிறந்த அவர் விசுவாமித்திரரையழிப்பதைப்பற்றிமட்டும் நினைக்கவேயில்லை. அந்த வஸிஷ்ட பகவான் மஹாசைலருளின் சிகரத்திலிருந்து தமது சரீரத்தை வீழ்த்தினர். அம்மலையின்பாறையின்மேல் பஞ்சுப்பொதியின் மேல்விழுவதுபோல் விழுந்தார். பாண்டவனே! அந்தப்பகவான் அப்படி வீழ்தலினால் மரணமடையாமற் போனபோது மஹாவனத்தில் ஜ்வலிக்கின்ற அக்னியில் பிரவேசித்தார். அப்போதுசெம்மையாக எரிந்துகொண்டிருந்த அக்னியும் அவரைக் கொளுத்தவில்லை. சத்துருக்களை ஸம்ஹரிப்பவனே! அங்கே ஜ்வலிக்கின்ற அக்னியும் அவருக்குக்குளிர்ச்சியாகவேயிருந்தது. சோகாவேசங்கொண்ட அம்மாமுனி ஸமுத்திரத்தைக்கண்டு உடனே பெரும்பாறையைக் கழுத்தில் கட்டிக்கொண்டு அதன் ஜலத்தில்விழுந்தார். அம்மஹாமுனிவர் கடலின் அலைவேகத்தினால் கரையில் ஒதுக்கப்பட்டனர். கறைமையான தவமுள்ள அந்தப் பிரமரிஷி எவ்வகையிலும் எப்போதுமரணமடையவில்லையோ அப்போது துயரத்துடன் திரும்பவும் ஆச்ரமத்திற்குச்சென்றார்.

நூற்றுத்தொண்ணூற்றுமூன்றுவது அத்தியாயம்.

சைத்ரரதபர்வம். (தொடர்ச்சி.)

(சில உபாயங்களாலும் பிராணனை விடமுயன்றும் அது தொலைந்தபோகவே வஸிஷ்டர் மறுபடி கங்கையிலிழுத்தும் பிராணன்போகாமையால் ஆச்ரமத்துக்குத் திரும்பிவந்ததும், அங்கேவந்த சக்தியின் பார்யையான அதிருச்யந்தி கர்ப்பமாயிருப்பதைத் தெரிந்துகொண்டு தற்கொலைசெய்து கொள்வதை நிறுத்தினதும். அதிருச்யந்தியுடன் கூடப்போதும் வஸிஷ்டரைப் பக்ஷிப்பதற்கு வந்தகல்மாஷபாதனுக்கு அவர் ஸாபவிமோசனஞ் செய்வித்ததும் அவனுடையமனைவி வஸிஷ்டரிடம் புத்ரபிக்ஷையடைந்து அச்மகனைப் பெற்றதும்.

பிறகு, புத்திரர்களில்லாத அந்த ஆச்ரமத்தைக்கண்டு மிகுந்த தயரத்தினால் பிடிக்கப்பட்டஅந்தமுனிவர் அந்த ஆச்ரமத்திலிருந்து மறுபடியும் வெளியிற்சென்றார். பார்த்தனே! அவர், காலகாலத்தில் புதுஜலம் நிரம்பினதும் கரையில்முளைத்த பலவகைமரங்களை மிகுதியாக இழுத்துக்கொண்டு போவதுமாகிய நதியைக்கண்டனர். கௌரவபுத்திரனே! துன்பமுற்ற அவர் அதைக்கண்டவுடனே "இந்நதியின் ஜலத்தில் மூழ்கிவிடுவேன்" என்று மறுபடியும் நினைத்தனர். மிகுந்தபயரமுற்ற அம்முனிவர் பிறகு தம்சரீரத்தைக் காட்டுகளினால்உறுதியாகக் கட்டிக்கொண்டு அம்மஹாநதியின் ஜலத்தில் மூழ்கினர். எதிரிகளின் படைகளையொழிப்பவனே! பிறகு அந்தநதி அவருடைய கட்டுக்களையறுத்து அம்முனிவரைக் கட்டில்லாமல் தரையிலிருக்கும்படி விட்டுவிட்டது. கட்டுக்களினால் விடப்பட்ட அம்மஹரிஷி அந்நதியிலிருந்து கரையேறினர். மஹரிஷி அந்நதிக்கு * விபாசையென்று பெயர்வைத்தனர். பாரதனே! புருஷச்ரேஷ்டனே! சொல்தவறுதலாகிய அந்தரிஷியின் சொல்லினால அந்நதி லோகத்தில் விபாசையென்று கியாதிபெற்றது. ராஜாவே! துக்கமுள்ள வஸிஷ்ட பகவான் அப்போதுகரையேறி உடனே புத்தியைவ்யஸனத்திலேயே செலுத்தினர். ஓரிடத்திலும் நிற்கவில்லை. அவர் மலைகளுக்கும் நதிகளுக்கும் தடாகங்களுக்கும் சென்றார். அவர் அப்போது கொடியமுதலைகளையுடையதும் பயங்கரமுமான இமயமலையின் நதியைக்கண்டு திரும்பவும் அதன்ஜலத்தில் வீழ்ந்தார். அந்தச்சிறந்தஆறும், அந்தப்

பிரமரிஷியை அக்கினிக்கொப்பானவரென்று நினைத்து நூறுபிரிவுகளாகப் பிரிந்தோடிற்று. அதனால் அது † சதத்ரு என்று பெயர்பெற்றது. பிறகு அதிலும் தாம்தரையிலிருக்கக்கண்டு தாமாக மரணமடைவது யாருக்கும்கூடாத காரியமென்று சொல்லிதிரும்பவும் ஆச்ரமத்திற்கே சென்றார். அவர் பலவிதமலைகளும் பலவகைத்தேசங்களும் போனபிறகு ஆச்ரமத்தில் அதிருச்யந்தியென்றுபெயருள்ள மருமகளாற் பின்செல்லப்பட்டார். பிறகு அவள்பின்னே ஸரீரித்து வருததனால், பொருள்நிரம்பினதும் ஆறு அங்கங்களாகியசிக்ஷை, வியாகரணம், சந்தஸ், நிருக்தம், ஜோதிஷம், கல்பம் இவற்றினால் அலங்கரிக்கப்பட்டதுமாக வேதம் ஓதுகிற குரலைச்செவியுற்றார். பிறகு, "யாரிவன்; என்பின் வருகிறான்" என்று அவர்கேட்டனர். மிகுந்தபாக்கியமுள்ளவனே! அவர் இவ்வாறு சொன்னபின் அவர்மருமகளும் சக்தியின்மனைவியும் தவமுள்ளவளுமாகிய அதிருச்யந்தியானவள் அம்முனிவரைநோக்கி, "ராக்ஷஸருத்திதான் உம்முடன்வருகிறான். மற்றொருவருமில்லை" என்று மறுமொழிசொன்னாள். வஸிஷ்டர், "மகளே. வேதவேதாங்கங்களை ஓதுகிற இந்தக்குரல் யாருடையது? முன்ன சக்திஸாங்க வேதாத்யயனஞ்செய்த குரலைப்போல் எனக்குக் கேட்டதே" என்றார். அதிருச்யந்தி, "முனிவரே! உமதுபுத்ரராகிய சக்தியின் கர்ப்பம் என்வயிற்றில் இதோ உண்டாயிருக்கிறது. இந்தவயிற்றிலேயே அந்தக்கர்ப்பம் வேதாத்யயனஞ் செய்யஆரம்பித்து பன்னிரண்டு வருஷங்கள் ஆகின்றன" என்று சொன்னாள்.

அச்சரு! சிறப்புற்றவரான வஸிஷ்டரிஷி அவளால் இவ்வாறு சொல்லக்கேட்டு மகிழ்ந்து 'ஸந்தானம் இருக்கிறது.' என்றுசொல்லி மரணத்திலிருந்து நிவர்த்தியானர். குற்றமற்றவனே! அவர் அங்கிருந்து அம்மருமகளுடன் கூடத்திரும்பிவரும்போது ஜனங்களில்லாத காட்டில் உட்கார்ந்திருந்தகல்மாஷபாதனைக்கண்டார். பாரதனே! உக்கிரமான ராக்ஷஸனால் ஆவேசிக்கப்பட்ட அவ்வரசன் அவரைக்கண்டதும் கோபித்தெழுந்து அப்போதே அம்முனிவரைப் பக்ஷிக்கக்கருதினன். அதிருச்யந்தி கொடியசெய்கையுள்ளஅவனை நேரிற்கண்டு வஸிஷ்டரைப்பார்த்து பயத்தினல்தழதழத்த குரலோடு, "பகவானே! உக்கிரமான தண்டாயுததோடு யமன்வருவதுபோல் கையிற்பிடித்ததடியோடு இந்தக்கொடிய ராக்ஷஸன்இங்கேவருகிறான்

† நூறுக ஒடினது.

மஹாநுபாவரே! வேதங்களெரிந்தவரெல்லாரிலும் சிறந்தவரே! இவ்வுலகத்தடிப்பதற்குத் திறமையுள்ளவன் இப்புவியில் இப்போது உம்மைத் தவிர வேறெருவரும் இல்லை. பகவானே! பார்ப்பதற்குப்பயங்கரமான இந்தப்பாம்பினிடமிருந்து என்னைக் காப்பாற்றும்; நிச்சயமாக இந்த ராக்ஷஸன் இங்கே நம்மிருவரையும்பக்ஷிக்கக்கருதுகிறான்" என்றான். வஸிஷ்டர், "பிண்ணை! அச்சப்படாதே; ராக்ஷஸனுக்கு அஞ்சவேண்டியது எவ்வகையிலுமில்லை. யாரால் பயம்வந்திருப்பதாக நீபார்க்கிறாயோ இவன் அரக்கனல்லன். இவன் பூமியில்புகழ்பெற்றபராக்ரமசாலியானகல்மாஷபாதனென்னும் ராஜா. அவன் இவ்வாறுமிகவும் பயங்கரரூபத்தை இந்தவனப்பிரதேசத்தில் வஹிக்கிறான்" என்றார். பாரதனே! சிறந்தமஹிமையுள்ளவஸிஷ்டபகவான் அவன் ஓடிவரக்கண்டு ஹுங்காரத்தினாலேயே நிறுத்தினார். மறுபடியும் பாக்திரசத்தமானதீர்த்தத்தினால் அவ்வரசனுக்குப் புரோக்ஷணஞ்செய்து தமதுசக்தியாகமஹிமையினால் சாபநிவர்த்தி செய்வித்தார். அவன் பன்னிரண்டுவருஷகாலம் வஹிஷ்டபுத்திரராகிய சக்தியின் பிரபாவத்தினால்அரண்யவாசைக்காலத்தில் ஸௌர்யன், ராகுவேதுக்களாகிய கிரஹத்தினால் பீடிக்கப்படுவதுபோல் பீடிக்கப்பட்டிருந்தான். பிறகு அவ்வரசன் ராக்ஷஸனைவிடப்பட்டுஸந்தியாகாலத்தில் மேகத்தை ஸௌரியன்சிவக்கச்செய்வதுபோல் அந்தப் பெருவனத்தைத் தன்ஒளியினால் சிவந்ததாகச் செய்தான். உடனே அவ்வரசன் பழையஞாபகத்தையடைந்துமுனிச்ரேஷ்டரான வஸிஷ்டரை நமஸ்கரித்துக்கைகூப்பிக்கொண்டு, மஹாநுபாவரே! முனிச்ரேஷ்டரே! நான் ஸுதாஸபுத்திரன். உம்மால்யாகஞ்செய்விக்கப் பெற்றவன். இந்தக்காலத்தில் உமக்கென்னவிருப்பமோ அதைச் சொல்லும். உமக்கு நான் என்னசெய்யக்கடவேன்" என்று அப்பொழுதுகேட்டான். அதைக்கேட்ட வஸிஷ்டர், "எனக்குநேர்ந்ததுக்கமாகிய இது, காலத்தையநுஸரித்து நடந்துபோயிற்று. நீ செல். ராஜ்யத்தையாளு. ராஜாவே! பிராம்மணனைமட்டும் ஒருபோதும் அவமதிக்காதே" என்றுசொன்னார். அதற்கு அரசன், "மஹாநுபாவரே! நான் இனி ஒருபோதும் பிராம்மணச்ரேஷ்டர்களை அவமதிப்பதில்லை. நான்உமதுகட்டளைப்படி பிராம்மணர்களைச்சரணமாகப் பூஜிப்பேன். பிராம்மணோத்தமரே! வேதம்தெரிந்தவர்எல்லாரிலும்சிறந்தவரே! நான் எதனால் இக்ஷ்வாகுவம்சத்துக்கூடஸ்தர்களுக்குக் கடன்தீர்ந்தவனாவேனோஅதை உம்மிடத்திற்பெறவிரும்புகிறேன். இக்ஷ்வாகுகுலத்தின் அபிவிருத்திக்காக என்னால்விரும்பப்படும் புத்திரஸந்தானத்தின்

பொருட்டு ஒழுக்கமும் அழகும்குணமும்நிரம்பின என்மனைவியிடம் சேரக்கடவீர்" என்றுசொன்னன். சொன்னசொல்தவறுத பிராம்மணத்மரான வஸிஷ்டர் சிறந்த வில்லாளியாகிய அவ்வரசனைநோக்கி 'கொடுப்பேன்'என்பதாகவேஅந்தவிஷயத்திற்குமறுமொழிசொன்னர். ராஜாவான அர்ஜுனனே! அந்தக்காலத்தில் வஸிஷ்டர் அவ்வரசனைகூடவே உலகத்திற்பெயர்பெற்ற அயோதியென்னும்நகரத்திற்குச்சென்றார். ஜனங்களெல்லாரும் பரமந்நிவ்தியாள அம்மஹாராஜாவான ராஜாவை இந்திரனைத்தேவர்களழைப்பதுபோல் ஸந்தோஷத்துடன் எதிர்கொண்டழைத்தனர். வெகுகாலத்துக்குபின் அரசன் அந்தவஸிஷ்டமஹரிஷியுடன்சேர்ந்து அழகானலக்ஷணங்களோடுகூடிய அந்நகரத்தில் பிரவேசித்தான். ஸூரியபகவானதுபோல் புரோஹிதருடன்வந்த அந்தஅரசனை அயோத்தியிலிருக்கும் ஜனங்கள் கண்டனர். அழகுளவர்களிற் சிறந்த அவ்வரசன் சரத்காலத்தில்உதயமான சந்திரன் ஆகாயத்தைத்தன்ஒளியினால் ப்ரகாசிப்பசெய்வதுபோல் அவ்வயோத்திநகரத்தைதன் ஒளியினால் நிரப்பினன். நீர்தெளித்து விளக்கப்பட்ட வீதிகளையுடையதும் கொடிகளாலும் கொடிமரங்களாலும் பிரகாசிப்பதுமாகிய அந்தர்பூதநகரம் அவ்வரசனுள்ளத்தை மகிழ்வித்தது. கௌரவபுத்திரனே! அயோத்யாவாஸிகளும்செல்வமும் நிரம்பின ஜனங்களுள்ள அந்நகரம் இந்திரனால் அமராவதி சோபிப்பதுபோல் அவ்வரசனால் சோபித்தது அந்தராஜரிஷி அந்தச்சிறந்தப்பட்டணத்திற்பிரவேசித்த பிறகு அந்தராஜாவின் ஆஜ்ஞையினால் அவனுடையமனைவி வஸிஷ்டரிடம் சென்றாள். சிறப்புற்றவராகியவஸிஷ்டமஹரிஷி பிறகு ருதுகாலம் வந்தபோது * தேவதைகளின் நடையையனுஸரித்து அந்தஅரசியுடன் சேர்ந்தார். உடனே அவளுக்குக்கர்ப்பம்உண்டாக, அம்முனிச்ரேஷ்டர் அவ்வரசனால் வந்தனஞ்செய்யப்படடுத் தமது ஆச்ரமத்திற்குச்சென்றார். புகழ்பெற்ற அந்த அரசர் நீண்டகாலமாகியும் அந்தக்கர்ப்பத்தைப் பிரஸவிக்காமலிருந்தபோது கல்லினால் வயிற்றிலிடித்துக்கொண்டாள். அதனால் பன்னிரண்டாவது வருஷத்தில் அந்தக்கர்ப்பம் புருஷச்ரேஷ்டனாகிய அச்மகன்என்னும் ராஜரிஷியாகப்பிறந்தது. அவன் பௌதன்யம் என்னும் பட்டணத்தை நிர்மாணஞ்செய்தான்.

---

* ஸ்பரிசமாத்திரத்தினால்.

நூற்றுத்தொண்ணூற்று நான்காவது அத்தியாயம்

சைத்ரரத பர்வம் (தொடர்ச்சி.)

(பராசார் பிறந்தது, கல்மாஷபாதர் தமது பிதாவைக் கொன்றதைக்கேட்டு அவர் உலகத்தைநாசஞ்செயயயத்தனித்ததும், வஸிஷ்டர், அவருக்குத்காரத்தவிரயனைச்சேர்ந்த கூஷ்த்திரியர்கடை தனத்துக்காகப்பிருதுவை சத்தவர்களைச்கொன்றதையும் பயந்தோடின ஒருபிராம்மணியின் துடையில் தரித்திருந்தசாபத்தைக் கொல்ல முயலும்போதுதுடையை பிளந்து கோலம் வெளியில் வந்த குழந்தைன்யி தேஜஸ்ஸால் அவரைன் தடுராகப் பிராம்மணியைச் சாணபடைதததையும் சொல்வதும்.)

ராஜாவான அர்ச்சுனை! பிறகு ஆச்சாத்திலிருந்த அதிருச்யந்தி யென்பவள் சக்தியின்குமத்தை விருதபிதண்ணுகிறவனும் இரண்டாவது சக்தியைப்போன்றவனுமான குமாரனைப்பெற்றாள். பரதச்ரேஷ்டனே! அந்தப் பகவானை வஸிஷ்டமாமுனிவர் அந்தப்பேரனுக்குஜாதகர்மம்முதலிய ஸமஸ்காரங்களைத்தாமேசெய்தார். இறந்து போவதற்காக இருந்த அந்தவஸிஷ்டமுனிவர் அந்தக்குழந்தை கர்ப்பத்திலிருந்த மாத்திரத்திலேலே நிலைபெறசெய்யப்பட்ட படியால், அந்தக்குமாரர் பராசரர்என்று உலகதத்திற்பெயர்பெற்றார். தர்மாத்மாவாகிய அந்தப்பராசரமுனி ஜனித்ததுமுதல் தந்தையுடனிருப்பது போல் அந்தவஸிஷ்டருடன் விடாமலிருந்ததனால் அவரையே தந்தையாக நினைத்தார். பகைவரைத்துயரப்படித்துகிறவனுகிய அர்சுனை! அந்தப்பராசரர் தம்தாயான அதிருசயந்தியின் முன்னிலையில் பிரம்மரிஷியான வஸிஷ்டரைநோக்கித்தந்தையேயென்றழைத்தார். அந்தக்குமாரர் 'பிதாவே' என்று நிறைந்த அர்த்தத்தோடுசொன்ன அந்த இன்சொல்லைக்கேட்டு அதிருச்யந்தி நீர்நிரம்பினகண்களோடு அந்தப்பாலனைநோக்கி, "குழந்தாய்! தந்தைக்குத்தந்தையாகிய இவரைப், 'பிதாவே' என்று அழைக்காதே. குழந்தாய், உன்தந்தை நடுக்காட்டில் ராக்ஷஸனால் பக்ஷிக்கப்பட்டார். மாசற்றவனே! யாரைத்தந்தையென்றுநினைக்கிறாயோ இவர் உனக்குத்தந்தையல்ல. இந்தப்பெரியவர் புகழ்பெற்ற அந்த உனது தந்தைக்குத்தந்தை" என்றாள். தவறு மொழியாரும் சிறந்த மனமுள்ளவருமாகிய அந்தப்பராசரம்ஹரிஷி,

தாயாரால் இவ்வாறுசொல்லப்பட்டபின் துயரமுற்று எல்லாலோகங்களையும் அழிப்பதற்கு எண்ணங்கொண்டார்.

அவ்வாறு மனத்துள் நிச்சயஞ்செய்த அந்தப்பராசரரை மஹாத்மாவும் மஹாதபஸ்வியும் பிரம்மஜ்ஞானிகளிற் சிறந்தவரும்மேலான அறிவுள்ளவரும் மைத்ராவருணியென்று சொல்லப்பட்டவருமாகிய அந்தவஸிஷ்டர்என்னகாரணத்தினல்தடுத்தாரோ அதைத்தெரிவிக்கிறேன். வஸிஷ்டர் பராசரருக்குச்சொல்வது:—

"வேதம் தெரிந்தவர்களாகிய பிருகுவம்சத்தவரால் யாகஞ்செய்விக்கப்பெற்றவனும் அரசரிற்சிறந்தவனுமாகிய கிருதவீர்யன் என்னும் பிரதிபெற்ற ராஜா ஒருவன் இவ்வுலகத்தில் பிருக்காண் குழந்தாய்! முதல்பாஜனத்திற்குத்தகுதியுள்ள அந்தப்பார்க்கவர்களோமாமபானமானவுடன் நிரம்பின தனதான்யங்களினல் திருப்திசெய்வித்தான். அந்தராஜச்ரேஷ்டன் ஸ்வர்க்கஞ்சென்றபின் ஒருகாலத்தில் அவன்குலத்தோருக்குத் திரவியத்தின்உபயோகம் கடுமையாக நேர்ந்தது. அவ்வரசர்களோவரும்பார்க்கவர்களிடம் தனமிருப்பதைத்தெரிந்துகொண்டு உடனேயாசிப்பதற்காக அந்தப்பார்க்கவச்ரேஷ்டர்களிடம்சென்றனர். பார்க்கவர்களிற்சிலர் திரவியத்தையழியாமல் பூமிக்குள்புதைத்தனர். சிலர் க்ஷத்திரியர்களால் பயம் நேரிடுவதையறிந்து பிராம்மணர்களுக்குத் தானஞ்செய்தனர். குழந்தாய்! மற்றுஞ்சிலபார்க்கவர்கள் அந்த க்ஷத்திரியர்களுக்குத் திரவியம்வேண்டிய அவகாசத்தைத் தெரிந்துகொண்டு அவர்களுக்குவேண்டியபடி தனத்தைக் கொடுத்தனர். குழந்தாய்! பிறகு ஒருகால்ஒரு க்ஷத்திரியன் தற்செயலாக ஒரு பார்க்கவர்வீட்டில் பூமியைத்தோண்டினதனல் அவனுக்குத் திரவியம் கிடைத்தது. அந்தத்தனத்தை க்ஷத்திரியச்ரேஷ்டர்களோவரும் கூடிப்பார்த்தனர். பிறகு அந்தச் சிறந்த வில்லாளிகள்கோபத்தால் அந்தப்பார்க்கவர்களோ டிராகவித்துச்சரணமடைந்த அவர்களோவரையும் கூர்மையான அம்புகளினல் அடித்தனர். கர்ப்பத்திலிருக்கிற சிசுமுதலாக எல்லாரையும்வெட்டிக்கொண்டு பூமியெல்லாம் திரிந்தனர். இவ்வாறு அவர்கள் பார்க்கவர்களோயழிக்குங்காலத்து அவர்களின்மனைவிகள் பயத்தினல் இமயமலையாகிய தூக்கத்தையடைந்தனர். அவர்களில் அழகிலுதடைகளையுடையவளாகிய ஒருத்தி தன்பர்த்தாவின்குலம் விருத்தியாவதற்காகப்பயத்தால் வெளிப்பட்ட சிறந்த பிரபாவமுள்ள கர்ப்பத்தை லூற்றைத்துடையினல் தாங்கினள். ஒரு பிரா

ம்மணப்பெண் அந்தக் கர்ப்பத்தைக்கண்டு பயத்தினால் கலக்கமுற்று உடனே க்ஷத்திரியர்களிடம்சென்று ரகஸ்யமாகத் தெரிவித்தாள். உடனே அந்தக்ஷத்திரியர்கள் அந்தக் கர்ப்பத்தைக் கொல்லும் யத்னத்துடன் சென்றனர். பிறகு அவர்கள், தன் ஒளியினால் ஜ்வலிக்கின்ற பிராம்மணப்பெண்ணைக் கண்டனர். உடனே அந்தக்கர்ப்பம் அந்தப் பிராம்மணப் பெண்ணின்துடையைப் பிளந்துகொண்டு மத்தியானகாலத்து ஸூர்யனைப்போல் க்ஷத்திரியர்களுடைய திருஷ்டிகளை யபகரித்துக்கொண்டு வெளிப்பட்டது. அதனால் அவர்கள் கண்ணில்லாமல் மூர்ச்சித்துக்கங்களில் தடுமாறினர். அப்போதுஅண்ணாந்துவீணை கப்போன அவ்வரசர்கள் பயத்தினால் கலக்கமுற்றுக் கண்ணை வேண்டி அத்தச்சிறந்த பிராம்மணப்பெண்ணைச் சரணமடைந்தனர். அந்த மதிகெட்ட அரசர்கள் தூயரமுற்று அவிந்தஅக்னியைப்போல ஒளிமழுங்கி மஹாஉபாயவான அந்தப் பிராம்மணியைநோக்கி, "பெருமைபெற்ற அம்மாளுடைய தயையினால் க்ஷத்திரியஜாதி சேஷமத்தையடையவேண்டும். எல்லோரும் பாபச்செய்கையை நிவருத்தி செய்து செல்வோம். சிறந்தவளே! நீ உன் புத்ரனுடன்கூட எங்கள் மீது தயை செய்யக்கடவாய். மறுபடியும் கண்ணைக்கொடுத்துராஜாக்களைக் காப்பாற்றுவாயாக" என்று வேண்டினர்.

நூற்றுத்தோண்ணூற்றைந்தாவது அத்தியாயம்.

சைத்ரரதபர்வம். (தொடர்ச்சி.)

(பிராம்மணியின் சொல்லைக்கேட்டு ஔர்வையை சரணமடைந்த க்ஷத்திரியர் களுக்குக் கண்களைத்தந்தும், உலகத்தை நாசஞ்செய்யத்தவஞ்செய்யும் ஔர்வையை அவர்பிதா அவருடைய தவத்திலிருந்து விலக்கியதும்.)

அதனைக்கேட்டு, அந்தப்பிராம்மணி, "புத்ரர்களே! நான் தேகபங்கொண்டு உங்கள் கண்களைப்பற்றி துக்கமில்லை. பிருகுவம்சத்தவனை இந்த * ஊருஜன் இப்போது உங்கள்மேல் தேகபித்திருக்கிறான். பிள்ளைகளே! அம்மஹாத்மா! தன்பந்துக்கள் கொல்லப்பட்டதை நினைத்துக்கோபத்தினால்உங்கள்கண்களைப்பறித்திருக்கிறான்; சந்தேகமில்லை. புத்திரர்களே! நீங்கள்பிருகுவம்சத்தவரின் கர்ப்பங்களைக்கூட எப்போது கொன்றீர்களோ அப்போது இந்தக்கர்ப்பம்தானுமதா

---

* துடையிற் பிறந்தவன்.

லம் என்னுல் துடையிலடக்கிவைக்கப்பட்டிருந்தது. இவன்கர்ப்பத்தி லிருக்கையிலேயே ஆறுஅங்கங்களோடுகூடிய வேதமெல்லாம் பிருகு வம்சத்துக்கு மேன்மேலும்நன்மையைச் செய்யக்கருதி இவனிடம்பிர வேசித்தன. அப்படிப்பட்ட இவன் பிதிர்வதத்தினுலுண்டானகோப த்தினுல் உங்களைக்கொல்லவிருப்புவதுநிச்சயம். அவனுடைய திவ்ய தேஜஸினுலேதான் உங்கள்கண்கள் பறிக்கப்பட்டன. அந்த ஔர்வ னுகிய எனதுஉத்தமபுத்திரனேயே நீங்கள் வேண்டிக்கொள்ளுங்கள். உங்களுடைய நமஸ்காரத்தினுல்இவன் ஸந்தோஷமடைந்து கண்களை க்கொடுப்பன்" என்றுசொன்னுள். அவளால்இவ்வாறுசொல்லப்பட்ட அவ்வரசர்களனைவரும் உடனே அந்தஉருசுரைப்பார்த்து, 'தயவுசெ ய்யும்'என்று கேட்டுக்கொண்டனர். அப்போது அவர் தயைசெய்தார். அந்தச் சிறந்தபிரம்மரிஷி துடையைக் கிழித்துக்கொண்டு பிறந்தனர். இத்தக்காரணம்பற்றி ஔர்வரென்னும் பெயரினுல் உலகத்தில்ப்ரக் யாதிபெற்றார். அப்போது அரசர்கள் மறுபடியும் அவரைக் கண்களை ப்பெற்றுத் திருப்திச்சென்றனர்.

அந்தப் பார்க்கவரான முனிவர் எல்லாலோகங்களுக்குரும் கெடுதி யைக்கருதினர். அப்பா! அவர் அப்போது எல்லாஉலகங்களையும் அழிப் பதற்காக நினைத்துத் தம்மனம் முழுதையும் அதுவிஷயத்தில் ஏகாக்ர மாகச்செய்தார். மிகுந்ததவத்தினுல் ஜ்வலித்த அந்தப்பிருகுவம்சபுத் திரராகிய ஔர்வமுனிவர் தமது பிதிர்க்களைத் திருப்தி செய்விப்பதற் காகப் பார்க்கவர்களின் பகைதீர்க்க விரும்பி எல்லாலோகங்களும் அழியும்படி தேவாஸுரமனுஷ்ய லோகங்களையெல்லாம் உக்ரமான பெருந்தவத்தினுல் கொதிப்புறச்செய்தார். குழந்தாய்! குலத்துக்கு ஆனந்தகரனை அந்தப்புத்திரன் அவ்வகையாயிருந்ததைக் கண்ட றிந்து, பிதிர்க்களனைவரும் பிதிர்லோகத்திலிருந்துவந்து, பின்வரு மாறு சொல்லலானர். "ஔர்வனே! புத்திரனே! உனது கடுமையான தவத்தின் மஹிமையைக் கண்டோம். லோகங்களிடம் அனுக்ரஹஞ் செய். உன் கோபத்தையடக்கு. குழந்தாய்! முன்னே க்ஷத்திரியர் கள் ஹிம்ஸிக்கையில் பரிசுத்தாத்மாக்களான பார்க்கவர்களனைவரும் சக் தியில்லாமல் தங்கள் வதையைத் தடுக்காமலிருக்களில்லை. குழந்தாய்! நீண்டஆயுளுள்ளப்போது எங்களுக்குத் தயரம்உண்டாயிற்றே அப் போது நாங்களாகவே க்ஷத்திரியர்களால் கொல்லப்படுவதை விரும்பி னேம். முன்னே ஒருவன் பார்க்கவர்களின் கிருகத்தில் தனத்தைப் புதைத்துவைத்தும் க்ஷத்திரியர்களுக்குத் துவேஷத்தையும் கோ

பத்தையும் உண்டாக்குவதற்காகவே தான். பிராம்மணத்தமனே! குரோபனே! நமக்கு மிகுதியான தனத்தைக் கொடுத்து கொடுத்த போதிலும் அந்தத் தனத்தினால் என்னத்தை விரும்புகின்ற நமக்கு ஆகவேண்டியதென்ன? குழந்தாய்! எங்கள் எல்லாரையும் யமன் எடுக்கமுடியாமலிருந்தபோது காலத்தினை எண்ணித்தான் கண்டுபிடிக்கப்பட்ட உபாயம் இது. குழந்தாய்! ஆத்மஹத்தி செய்துகொள்ளும் புருஷன் நல்ல லோகங்களைப்பெறான். அதனால் சொல்லையாக ஆராய்ந்து நாங்கள் ஆத்மவதம் செய்துகொள்ளவில்லை. அப்பா! நீ செய்யக்கருதுகிற இந்தக்காரியம் எங்களுக்குஇஷ்டமன்று. எல்லாலோகங்களையும்அழிப்பதாகிய பாபத்தினால் நீ இந்த மனத்தையடைகு. குழந்தாய்! புத்திரனே! கூத்திரியர்களையும் எழுலோகங்களையும் தெடிக்காதே. தவத்தின் வன்மையைத்தெரிக்கும் தோபத்தைத் தொல்' என்றனர்.

நூற்றுத் தொண்ணூற்றுரூவது அத்தியாயம்.

சைத்ரரதபர்வம். (தொடர்ச்சி.)

(பிரீக்கள்கோப்படி ஔர்வர்கோபத்தை ஸமுத்திரத்திலிலிட்டது.)

ஔர்வர், "பிதிர்க்களே! நான் தோபத்தினால் எல்லா லோகங்களையுமழிப்பதைப்பற்றி முதலிற்செய்த பிரதிஜ்ஞையை விடுகாது. வீண் தோபமும் வீண்பிரதிஜ்ஞையுமுள்ளவனாக நான் ஜீவித்திருக்கமாட்டேன். நிறைவேற்றப்படாததோபம் அக்கினி அணைக்கட்டையை யெரிப்பதுபோல் என்னை எரித்துவிடும். காரணம்பற்றியுண்டான தோபத்தை எவன் பொறுப்பதற்கு யத்னஞ்செய்கிறானோ அத்தகைய தன் தர்மார்த்தகாமங்கள் மூன்றையும்ஸரியாகக்காப்பதற்குவல்லவனாகான். எல்லாவுலகையும் ஜயிக்கவிரும்புகின்ற அரசர்களினால் துஷ்டர்களைச்சிக்ஷிப்பதற்கும் சிஷ்டர்களை ரக்ஷிப்பதற்கும் தோபம் காலங்களில் பிரயோகிக்கப்படுவதாகும்; க்ஷத்திரியர்கள் பிருகுவர்சத்தவரை•வதஞ்செய்தபோது கர்ப்பப்பையில்அடங்கித் தடையிலிருந்த நான் தாய்வர்க்கங்களின் கூச்சலைக்கேட்டேன். ஞானிகளான க்ஷத்திரியர்கள் பிருகுவம்சத்தவரைக் கர்ப்பம்முதல் ஒழித்ததை லோகத்திலுள்ள தேவர்முதலானவர்கள் எப்போதாது பொறுத்தனரோ அப்போதே தோபம் என்னிடம் ஆவேசமாயிற்று. பயத்தினால் விரித்த

கூந்தலோடுகூடிய என் தாய்மார்களும் தந்தைமார்களும் எந்தவுல கங்களிலும் அடைக்கலம் பெறுமற்போனார்கள். அந்தப் பார்க்கவர் களின் மனைவிகளோ யாரும் காப்பாற்றுமபோருந்தபோது மேன்மை யுற்ற இந்த என்தாய் ஒற்றைத்துடையில் என்னைத்தாங்கினாள். பாபத் தைத் தடுப்பவன் உலகங்களில் எப்போதிருப்பானோ அப்போதுதான் எல்லா உலகங்களிலும் பாபஞ்செய்பவன் இரான். எப்போதுபாபியைத் தடுப்பவன் எங்கும் கேரிடாவிருக்கிறானோ அப்போது அனேக ஜன ங்கள் பாபச்செய்கைகளையே செய்துகொண்டிருப்பார்கள். எவன் ஸமர்த்தனாயிருந்தும் தெரிந்திருந்தும் தன் சக்தியினால் பாபத்தைத் தடுக்கவில்லையோ அவனையும் அந்தப்பாபம் சேரும். ராஜாக்களும் தேவர்களும் காப்பாற்றச் சக்தியுள்ளவராயிருந்தார், என் பிதிர்க்கள் இவ்வுலகத்தில் ஜீவித்திருப்பதை இஷ்டமாக நினைத்து, அவர்களை ரக்ஷிப்பதற்கு ஆரம்பிக்காமற்போயினர். அதனால் இந்தலோகங்க ளின்மேல் நான் கோபித்தேன். எனக்குச் சாபமாத்தியமிருக்கிறது. உங்களுடைய நெல்லையும் நான் அதிக்ரமிக்கக்கூடவில்லை. நான் ஸம ர்த்தனாக இருந்தும் உபேக்ஷைசெய்ததால் இவ்வாறே மறுபடியும் உல கங்களுக்குப் பாபத்தினால் பெரிய பயம் உண்டாகும். என் கோபத்தி னாலுண்டான எந்த அக்னி லோகங்களையும் பக்ஷிக்க விரும்புகிறதோ அதனிடத்தினால் அது தன் வம்சமாயினால் எல்லோரையும் எரித்துவி டும். தேவர்களே! நீங்களும் எல்லா உலகங்களுக்கும் நல்லமையையே விரும்புகிறவர்களென்பதை நானறிகிறேன். ஆதலால், உலகங்களுக் கும் எனக்கும் எதிரனமையை அதனைக் காட்டாமலிருங்கள்" என்று சொன்னார்.

பிதிர்க்கள், "உன் கோபத்தினாலுண்டான எந்த அக்னி லோகங் களையும் பற்ற ஆரம்பித்திருக்கிறதோ அவ்வுலகத்தில்விட்டுவிடு; உனக்குஸுகம் உண்டாகும். லோகங்கள் ஜலத்தை ஆதாரமாகக்கொண்டவை. எல் லாரஸங்களும் ஜலமயம். உலகமே ஜலமயம். ப்ரம்மமேஜலத்தினால் ஆதலால், இந்த உன்கோபாக்னியை ஜலத்தில் விட்டுவிடு. ப்ரம்மனே! ஸம்மதமாயிருந்தால் உன்கோபத்தினாலுண்டான இந்த அக்னி ஜலத்தையெரித்துக்கொண்டு ஸமுத்திரத்தில் நிற்கட்டும். உலகங்கள் ஜலமயங்களென்று சொல்லப்படுகின்றன. குற்றமற்றவனே! இவ்வாறு உனது இந்தப் ப்ரதிஜ்ஞையும் ஸத்யமாகிவிடும். இதனை தேவர்களும் உலகத்தோரும் காரமடையார்கள்" என்றனர். குழந்தாய்! பிறகு ஔர்வர் அந்தக்கோபத்தினாலுண்டான அக்னியை

ஸமுத்திரத்தில் விட்டுவிட்டார். அதுதான் வடவாமுகாக்கினியென் னப்பட்ட பெருங்குதிரைத்தலைபாகி ஸமுத்திரத்திலுள்ளஜலங்களைப் பக்ஷிக்கிறதென்று வேதமறிந்தவர்கள் அறிகின்றனர். அஃது அக்னி யை வாயிலிருந்துகக்கி ஸமுத்திரஜலத்தைக் குடிக்கிறது. ஞானிக ளிற் சிறந்தபராசரனே! ஆதலால், நீயும் லோகங்கள் முக்கியமான வையென்றறிந்து அவற்றைக் கெடுக்காமலிருக்கக்கடவாய். உனக்கு ஸுகமுண்டாகட்டும்." என்றுசொன்னார்.

நூற்றுத்தொண்ணூற்றேழாவது அத்தியாயம்.

சைத்ரரதபர்வம். (தொடர்ச்சி)

(பராசரர் வஸிஷ்டருடைய உபதேசத்தினால் உலகத்தை யழிப்பதைவிட்டு ராக்ஷஸரையழிப்பதற்குயாகஞ்செய்ய ஆரம்பித்ததும், புலஸ்தியருடைய பிரார்த்தனையினால் யாகத்தை முடித்ததும்.)

மஹாத்மாவான வஸிஷ்டரால் இவ்வாறுசொல்லப்பட்ட அந்தப் பராசரப் பிரம்மரிஷி தமது கோபத்தை ஸர்வலோகங்களையும் அழிப் பதிலிருந்து நிவர்த்திசெய்தார். சிறந்த பிரம்மதேஜஸ்ஸுள்ளவரும் வே தமறிந்தவரெல்லாரிலும் சிறந்தவருமான சக்தியுடைய அந்தப்பரா சரமுனிவர் ராக்ஷஸஸத்ரமென்னுமியாகஞ்செய்தார். அப்போது அம்ம ஹாமுனி, சக்தியின்வதத்தைநினைத்து முதிர்ந்தவர்களுமான்மியர்களு மானராக்ஷஸர்களைத்தாம்செய்யும்யாகத்தில்எரித்தார். வஸிஷ்டர், "இ வனுடைய இரண்டாவதுபிரஜ்ஞையைப்போன்றதென்கண்டேன்" என்ற நிச்சயத்தினால் அவரை ராக்ஷஸவதத்திலிருந்து நிவர்த்திக்கச் செய்யவில்லை. அந்தயாகத்தில் அந்தப் பராசரமுனிவர் ஜ்வலிக்கின்ற தேஜோராக்ஷிகளின் முன்னிலையில் நான்காவது அக்னியைப்போலிருந் தார். தமது சக்திக்குத்தக்கபடி மஹாமஹ, செய்யப்பட்ட அந்தப் பரிசுத்தமான யாகத்தினால் அந்த ஆகாயம் மேகங்கள் போனபிறகு ஸூர்யனால் பிரகாசிப்பதுபோல் பிரகாசிக்கச் செய்யப்பட்டது. அங் கே தமது பிரம்மதேஜஸினால் பிரகாசிக்கின்ற அந்தப்பராசரரை வஸிஷ்டாதிமுனிவர்களெல்லாரும் இரண்டாவது ஸூர்யனைப்போல் நினைத்தனர். பிறகு உயர்ந்த புத்திமானாகிய அத்ரிமுனிவர் பராசரரை விட வேறொருவரால் ஸாதிப்பதற்கு முற்றும்முடியாத ராக்ஷஸ ஸத்ரத்தை நிறுத்தக் கருதி அவரிடம் வந்தார். சத்துருக்களை

ஸம்ஹரிப்பவனே! அவ்வாறே புலஸ்தியரும் புலகரும் பெருவேள்வி செய்தவராகிய க்ரதுமுனிவரும் ராக்ஷஸர்கள்பிழைப்பதைக் கருதி அங்கேவந்தனர். பரதச்ரேஷ்ட னே! பார்த்த! புலஸ்தியர் அந்த ராக்ஷஸர்களுடைய வதத்தைப்பற்றி எதிர்கூறியழிப்பவராகிய பராசரரைநோக்கிப் பின்வருமாறு சொல்லலானார்.

"அப்பா! உனக்கு இடையூறுகள்ஒன்றுமில்லாமலிருக்கிறதா? புத்திரனே! அறியாதவர்களும் நிரபராதிகளுமான எல்லா ராக்ஷஸர்களையும் வதஞ்செய்வதனால் நீ ஸந்தோஷப்படுகிறாயா? எனக்கு இந்த ஸந்ததி நாசத்தை நீசெய்யத்தகாது. குழந்தாய்! இதுதபஸ்விகளான பிராம்மணர்களுக்குத் தர்மமாகக் காணப்பட்டதல்லவே. சாந்தியன் றோ பேரான தர்மம். பராசரா! அதைச்செய். பராசரா! நீ சந்தோஷத்தை இழந்து பெரிய அதர்மத்தைச் செய்கிறாய். தர்மத்தை நிர்த்த சக்திமுனியையும் நீ அதிக்ரமித்துநடத்தாதே. இவ்வாறு என் ஸந்ததி நாசத்தையும் நீ செய்யத்தகாது. வஸிஷ்டவம்சத்தவனே! சக்தியின் குமாரனாகிய நிஷ்கள்மாஷபாதனுடைய முன்னோர்களிடத்திலுண்டான கோபம்தானது இந்தச்சக்தி இவ்வளவுநாளிலிருந்து ஸ்வர்க்கத்தில் சேர்ப்பிக்கப்பட்டார். ரிஷியே! அவரைப்பலிப்பதற்கு ராக்ஷஸன் காலனும் ஸரிக்நனல்லன். விசுவாமித்திரர் எனிய ராக்ஷஸனால் அந்தவஸிஷ்டபுத்திரர் பக்ஷிக்கப்பட்டார். அப்போது வஸிஷ்டபுத்திரர்கள் பொறுமையுள்ளவர்களாகச் சாபமிடாமலும் தங்களைக்காப்பதற்கு உபாயந்தேடாமலும் வேறுதீர்த்தம் வரட்டுமென்று நினைத்துஅந்தத்தீர்த்தத்தைத்தேடினார்கள். அந்தச் சக்திமுனிவர் தம்மனைவியைத் தாமே தேடிக்கொண்டார். அப்போது அவருக்கு மரணம்வந்தது. பராசரனே! அதில் விசுவாமித்திரர் ம்யாஜமாக இருந்தார். கல்மாஷபாதனென்னும் • ராஜரும் ஸ்வர்க்கம்போய் ஆனந்தப்படுகிறான். மஹாமுனியே! சக்திக்கு இளையவர்களாகிய வஸிஷ்டபுத்திரர்களனைவரும் தேவர்களுடன் சேர்ந்து ஸந்தோஷமுள்ளவர்களாய் விளையாடுகின்றனர். மஹரிஷியே! இதெல்லாம் வஸிஷ்டருக்குத் தெரிந்தவிஷயம். குழந்தாய்! பலதையர்களான ராக்ஷஸர்களுக்கு இந்தநாசம் வந்திருக்கிறது. வஸிஷ்டபௌத்ரனே! இந்தயாகத்திற்கு நீ காரணமாயிருக்கிறாய். இந்தயாகத்தை நீ விட்டுவிடு. உனக்குச் சுகமுண்டாகட்டும். உனது இந்தயாகம் முடிவு பெறட்டும்" என்றார். புலஸ்தியரால் இவ்வாறு சொல்லப்பட்டபோது சிறந்த

ஞானமுள்ள வஸிஷ்டராலும் அப்படியே அங்கீகரிக்கப்பட்டதன் மேல் சக்தியுத்திரரான பராசரமஹாமுனிவர் அந்தஸத்திரத்தைமுடித்துவிட்டார். எல்லாராக்ஷஸர்களையும் ஸம்ஹரிக்கும் யாகத்திற்காக வளர்க்கப்பட்டதியை அப்போதே இமயமலையின்வடபுறத்தில்உள்ள பெருங்காட்டில் விட்டுவிட்டார். அந்தஅக்னி இன்னமும் அவ்விடத்தில் எப்போதும் ராக்ஷஸர்களையும் மரங்களையும் கற்களையும் பக்ஷித்துக்கொண்டு பர்வகாலங்தோறும் காணப்படுகிறது.

நூற்றுத்தொண்ணூற்றேட்டாவது அத்தியாயம்.

ஸௌதாபர்வம் (தொடர்ச்சி.)

(ஸௌதாஸன் மனைவியினிடத்தில் வஸிஷ்டர் புத்திரனுண்டுபண்ணுவதற்குக்காரணங்கேட்ட அரசனுக்கு ஸௌதாஸர்சரித்தையையும் அவரதுபிராயச்சித்தத்தையும் சொல்வது.)

சிறந்த பிரம்மரிஷியும் மிகச்சிறந்த தபஸ்ஸுள்ள சக்திபுத்திரரான பராசரர், விசுவாமித்திரரை வருஞ்செய்யக்கருதி மறுபடியும் உக்கிரமான * நியமவிரதத்தினர். சிறந்தஞானமுள்ள ஸுப்ரம்மண்யரிதவர் விசுவாமித்திரருடைய ஹிதத்தைக்கருதி அக்னிக்கொப்பான தமதுரிதருஷ்டியால் பராசரரால் ஏவப்பட்ட அந்த அக்னியை விழுங்கினார்" என்று கந்தர்வன்சொன்னதைக்கேட்டு, அர்ஜுனன், "கல்மாஷபாதனென்னும் ராஜரிஷி பிரம்மஜ்ஞானிகளிற் சிறந்தவரான தன்குருவினிடம் என்னகாரணம்பற்றித் தன்மனைவி அனுப்பப்பட்டாள்? மஹாத்மாவான அந்தவஸிஷ்டமஹரிஷி முக்கியமான தர்மத்தையறிந்திருந்தும் பிரஜாத்தாதஸ்திரீயை ஏன் சேர்ந்தார்? ஸ்வேஹ்ருதனே! முன்னேனவஸிஷ்டராலும் மிகப்பாபமான செய்கை என் செய்யப்பட்டது? இதைப்பற்றி விளவுகின்ற என்னுடைய சந்தேகமெல்லாம் நீ தீர்த்தக்கடவாய்" என்றான். அதைக்கேட்ட கந்தர்வன், "யாராலும் ஜயிக்கமுடியாத தனஞ்ஜயனே! வஸிஷ்டரையும் மித்ரஸஹன் என்னப்பட்ட கல்மாஷபாதராஜனையும் பற்றி நீ என்னைக்கேட்டதற்கு நான் சொல்வதைத் தெரிந்துகொள். பரதச்ரேஷ்டனே! வஸிஷ்டபுத்ரரும் மஹாத்மாவுமான சக்தியினால் அவ்வரசன் எவ்வாறு சபிக்கப்பட்டானென்பதை முழுதும் உனக்குச் சொன்

---

* யாகம் செய்தார்.

னேன். சாபத்திலகப்பட்டுக்கொண்ட அந்தவீரனுகிய ராஜா கோபத்தினல் கண்கள் கலங்கித் தன்மனேவியுடன் பட்டணத்திலிருந்து வெளியேசென்றன். ஜனமில்லாத காட்டுக்குச்சென்று மனேவியுடன் திரிந்தான். அனேக மான்கூட்டங்களும் இன்னும் பற்பல பிராணிகளும் நிரம்பினதும், பயங்கரமான சப்தமுள்ளதும், அனேகவிதங்களான புதர்களாலும் கொடிகளாலும் மரங்களாலும் மறைக்கப்பட்டதுமான வனத்தில் சாபத்தினல் பீடிக்கப்பட்டுத் திரிந்துகொண்டிருந்த அவ்வரசன் ஒருநாள் பசிமிகுந்து தன் உணவைத் தேடிக்கொண்டு மிகவுங் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கையில் மனிதரில்லாத ஒரு காட்டில் ஒரு பிராம்மணனும் பிராப்மணியும் புணர்வதற்குச் சேர்ந்திருப்பதைக்கண்டான். அவனைக்கண்டதும் அவ்விருவரும் மிகவும் பயந்து விருப்பம் நிறைவேறுமேல் ஓடினர். ஓடுகிற அவ்விருவரில் அந்தப் பிராம்மணனை ராஜா பலவந்தமாகப் பிடித்தான். தன்பர்த்தா பிடிபட்டதைக்கண்டு உடனே அந்தப் பிராம்மணி, "ராஜாவே! நல்ல நியமமுள்ளவனே! உனக்கு நான் சொல்லுகிறதைக்கேள். நீ ஸ்ரேய வம்சத்திற் பிறந்தவன்; லோகத்தில் கியாதிபெற்றவன்; தர்மத்தினின்றும் தவறாதிருப்பவன்; பெரியோருக்குப் பணிவிடைசெய்வதில்லூக்கமுடையவன். சாபத்தாற்கெடுக்கப்பட்டவனே! ஜயிக்கமுடியாதவனே! நீ பாபஞ் செய்யலாகாது. ருதுகாலம் வந்தபிற்கு ஸந்ததிக்காக என் புருஷருடன் சேர்ந்திருந்த நான் விருப்பம் நிறைவேறுமேல் என் கணவரைப்பற்றிய வ்யஸனத்தினல் பீடிக்கப்பட்டவளாவேன். ராஜச்ரேஷ்டனே! தயைசெய்து இந்த என்பர்த்தாவை விட்டுவிடு" என்றாள்.

அவள் இவ்வாறு கதறும்போதே அவன் தயையில்லாமல் புலி தான் விரும்பின மானைத்தின்பதுபோல் அவள் கணவனைத் தின்றான். கோபம்மேற்கொண்ட அவளது கண்ணீர்த்துளிகள் கரையில் விழுந்ததும் ஜ்வலிக்கின்ற அக்னியாகி அந்த இடத்தையே எரித்தன. அப்போது துயரத்தினல் கொதிப்புற்ற அந்தப்பிராம்மணி தன்கணவனுக்கு நேர்ந்த ஆபத்தினல் பீடிக்கப்பட்டுக்கோபத்துடன் கல்மாஷபாதனென்னும் ராஜரிஷியைப் பார்த்து, "அயோக்கியனே! மதிகெட்டவனே! என் விருப்பம் நிறைவேறுதபோது நான் பார்த்திருக்கையில் மிகுந்த புகழுள்ளவரும் என் அன்பருமான கணவரை நீ தயை சிறிதுமில்லாமல் தின்றாயாதலால், நீயும் என்சாபத்தாலடிபட்டு ருது காலத்தில் உன்பாரியையைப் புணர்ந்தவுடன் உயிரைவிடுவாயாக" என்

மு சபித்தாள். பிறகு அந்தராஜாவினால் பிரார்த்திக்கப்பட்ட அந்தப் பிராம்மணி அவனுக்கு அனுக்ரகஞ்செய்தாள். "எந்த வஸிஷ்டமஹரிஷியின் புத்திரர்கள் உன்னலழிக்கப்பட்டனரோ அந்த வஸிஷ்டமஹரிஷியுடன் புணர்ந்து உன்மனைவி புத்திரனைப்பெறுவள். ராஜாக்களில் இழிவானவனே! அந்தப்புத்திரன் தான் உன்வம்சத்திற்காக இருக்கப்போகிறான்" என்றாள். அந்த அழகான அங்கிரஸின்வம்சத்துப்பெண் இவ்வாறு ராஜாவுக்குச்சாபம்கொடுத்து அவன்முன்னிலையிலேயே ஜ்வலிக்கின்றதீயில்மூழ்கினாள். வீரனே! மிகுந்தமஹிமையுள்ள வஸிஷ்டர் தமது சிறந்தயோகஜ்ஞானத்தினால் இதையெல்லாம் பிரத்தியக்ஷமாக உணர்ந்தார். அதற்குப்பின் வெகுகாலம்கடந்து சாபம்தீர்ந்த அந்தராஜரிஷி ருதுகாலத்தில் சேரப்போனபோது மதயந்தியென்னும் அவன்மனைவியால் தடுக்கப்பட்டான். காமத்தினால் மோகங்கொண்டஅவ்வரசனுக்குஅச்சாபம்நினைவில்லை. அப்போது தன்மனைவியின் சொல்லைக்கேட்டு அந்தராஜச்ரேஷ்டன் பரபரப்போடு அந்தச்சாபத்தைநினைத்து மிகவருத்தமுற்றான். புருஷச்ரேஷ்டனே! இந்தக்காரணத்தினால் சாபமாகிய தோஷமடைந்தராஜா வஸிஷ்டரைத்தன்மனைவியிடம் சேர்ப்பித்தான்" என்றான்.

நூற்றுத்தொண்ணூற்றொன்பதாவது அத்தியாயம்.

சைத்ரரதபர்வம் (தொடர்ச்சி.)

(அர்ஜுனன் தந்த ப்ரோக்ஷிதர்யாரென்றுகேட்க, கந்தர்வன் தௌமியரை வரித்ததைச்சொன்னதும். கந்தர்வனுக்கு ஆக்னேயாஸ்திரம் கொடுத்ததும், உத்தோமென்ற தீர்த்தத்தில் பாண்டவர்கள் தௌம்யரைப் ப்ரோக்ஷிதராகவரித்ததும்.)

அர்ஜுனன், "கந்தர்வனே, எங்களுக்குத் தகுந்தபுரோஹிதர் வேதம் தெரிந்தவருள் யாரிருக்கலாம்? அவரைச்சொல். உனக்குஎல்லாந்தெரியுமே" என்றுகேட்க, கந்தர்வன், தேவலமுனியின் இளையஸஹோதரராகியதௌம்யமுனிவர் இத்தோவனத்தில் உத்தோசமென்னும் புண்ணியதீர்த்தத்தில் புண்ணியமேஷத்திரத்தில் தவஞ்செய்கிறார். விருப்பமிருந்தால் அவரை வரித்துக்கொள்ளுங்கள்" என்றான். பிறகு அர்ச்சுனன் அந்த ஆக்னேயாஸ்திரத்தை முறையோடு கந்தர்வனுக்குக்கொடுத்தான். அவனும்அந்தோஷமடைந்து, "ஸ்நேகத்தினே!

சிறந்தகுதிரைகள் என்னிடம்இருக்கின்றன. அவற்றை உனக்குக்கொ
டுப்பேன். உபகாரஞ்செய்த ஸ்நேஹிதனுக்குப் பிரதியுபகாரத்தைச்
செய்கிறேனல் பரதச்ரேஷ்டனே! சாதஸுகியென்னும் மோஹினித்
தையைப் பெற்றுக்கொள்” என்றுசொன்னான். இவ்வாறு சொல்லப்
பட்ட அர்ஜுனன் ஸந்தோஷமடைந்து, “கந்தர்வராஜனே! கு
திரைகள் உன்னிடத்திலேயே இருக்கட்டும். உபயோகப்படுங்காலத்
தில் நாங்கள் பெற்றுக்கொள்வோம். உனக்கு க்ஷேமம் உண்டாகக்
கடவது” என்றுசொன்னான். அந்தக்கந்தர்வனும் பாண்டவர்களுடன்ஒரு
வரையொருவர் மரியாதைபெற்று அழகான கங்காதீரத்திலிருந்து
விருப்பம்போலச் சென்றனர். ஜனமேஜயரே! பிறகு அந்தப்பாண்ட
வர்கள் உத்தேசமாக தீர்த்தத்தில் தௌம்யாச்ரமத்துக்குச் சென்று
தௌம்யரைப் புரோஹிதராகவரித்தனர். மிதமும் திருந்தவர்களில்
லாதிலும் சிறந்தவராகிய தௌம்யர் தாம்புல்ல காய்முதலுங்களைக்
கொடுத்தும் புரோஹிதராக இருப்பதைஅங்கீகரித்தும் அவர்களுக்கு
மரியாதைசெய்தார். அந்தப்பாண்டவர்கள் அந்தப்பிராம்மணரைமுன்
னிட்டுக்கொண்டபிறகு ஸம்பத்தையும் ராஜ்யத்தையும் ஸ்வயம்வரத்
தில் திரௌபதியையும் தாங்கள் அடைந்ததாகவெண்ணினார்கள். ஆசா
ரியரான அந்தப்புரோஹிதருடன் ப்ராம்மணர்களும் ஸ்நேஹி
தருங்களுக்குரதனிருப்பதாக நினைத்தனர். அவர்களுடைய ஆசா
ரியரான அந்தத்தௌம்யரென்னும் ப்ராம்மணரும் வேதங்களை
யும் வேதார்த்தங்களையுமறிந்தவராக அறிந்தவர்; உபநிஷத்துபயும்சிறந்த
வாக்குமுள்ளவர்; அழகுள்ளவர். அந்தத்தௌம்யரும் ப்ரம்மதேஜ
ஸினாலும் புத்தியினாலும் அழகினாலும் பராக்ரமத்தினா
லும் பலவகையான மந்த்ரங்களினாலும் பிருஹஸ்பதிக்குநிகராயிருந்
தார். அந்தப்ப்ரம்மரிஷியும் அவர்களை ஸ்வயம்வரத்தைமே ட பூமியில்
எல்லாரிலும் மேற்பட்டவராக நினைத்தார். தர்மஜ்ஞரும் ஸர்வஜ்ஞரு
மான அந்தத் தௌம்யரியரால் தாமியாகஞ்செய்விக்கத் தகுதியுள்ள
வர்களாக அங்கீகரிக்கப்பெற்ற வீரர்களான பாண்டவர்களனைவரும்
ராஜ்யம் கிடைத்ததாகவே நினைத்தனர். புத்தியும் பராக்ரமமும்
தேஜஸ்வன்மையும் மனவெழுச்சியுள்ளவர்களும் இரண்டாவது தே
வர்களைப்போன்றவர்களும் ராஜாக்களுமாகிய அந்தப்பாண்டவர்கள்
அந்தத் தௌம்யரால் ஆசீர்வதிக்கப்பெற்று அவருடன்சேர்ந்து அந்
தப்பாஞ்சாலியின் ஸ்வயம்வரத்திற்குச் செல்ல நிச்சயித்தனர்.

சைத்ரரதபர்வம் முற்றிற்று.

இருநூறுவது அத்தியாயம்.

(ஸ்வயம்வரபர்வம்)

(நடுவழியில் வந்த வியாஸருடைய கட்டளைப்படி பாண்டவர்கள் துருபதநகரம் சென்று பிக்ஷையெடுத்துப் புஜித்துக்கொண்டு குயவன் வீட்டில் வசித்திருந்ததும், திரௌபதியின் ஸ்வயம்வரத்துக்குக் காரணம்சொல்லுதும், துருபதன் செய்த ஸ்வயம்வரப்பிரகடனத்தைக்கேட்டு கூடியிருந்த கூட்டங்கள் வந்து அவரவர் தங்கள் தங்களருகுத் தரத்த இடத்தில் வீற்றிருக்கையில் பாண்டவர்கள் பிராமணர்களின்பக்கல் உட்கார்ந்ததும், திரௌபதி மங்களஸ்நானஞ்செய்து அலங்காரஞ்செய்துகொண்டு ஸ்வயம்வரமண்டபத்துக்கு வந்ததும், திருஷ்டத்யும்னன் லக்ஷ்யபத்தையடிப்பவர்களுக்குத் திரௌபதி உரியவளாவளென்று சொன்னதும்.)

பிறகு புருஷச்ரேஷ்டர்களும் பிராதாக்களுமான அந்தப் பாண்டவரனைவரும் பாஞ்சாலியின் ஸ்வயம்வரத்தையும் மஹாத்ஸவம் நடக்கின்ற அந்தத்தேசத்தையும் காண்பதற்கு அந்தப் பிராம்மணரான (தௌம்யரை) முன்னிட்டுக்கொண்டு புறப்பட்டனர். அப்போது அந்த வீரர்களான பாண்டவர்கள் மனோக்ஞமும் பரிசுத்தார்த்தமும் குற்றமற்றதுமான கியாதியெற்ற த்வைபாயனரை அந்தமார்க்கத்தில் கண்டனர்; கிரமப்படி அவருக்கு ஸத்காரஞ்செய்து அவராலும் கௌரவிக்கப்பெற்று வார்த்தைசொல்லி முடிந்தபின் அவரால் விடைகொடுத்தப்பெற்றுத் துருபதநிருவுத்துக்குச் சென்றனர். மஹாத்மாக்களான பாண்டவர்கள் அழகான வனங்களையும் தடாகங்களையும் பார்த்துக்கொண்டும் ஆங்காங்கு வாஸஞ்செய்துகொண்டும் மெல்லமெல்லச் சென்றனர். வேதாத்யயனமுள்ளவர்களும் பரிசுத்தர்களும் இனியவர்களும் இன்சொற்சொல்லுகிறவர்களுமான பாண்டவர்கள் க்ரமமாகப் பாஞ்சாலதேசம் சேர்ந்தனர். அப்போது அந்தப் பாண்டவர்கள் அந்த நகரத்தையும் ராஜமாளிகையையும் பார்த்துவிட்டு ஒருகுயவனுடைய வேலைச்சாலையில் வாஸஞ் செய்தனர். பிராம்மணவிருத்தியை அனுஸரித்துப் பிக்ஷைக்கோ அங்கே கொண்டுவந்தனர். அவ்வாறு வந்திருந்த அந்த வீரர்களை யாரும மனிதர்களும் அறியவில்லை. அப்போது பாஞ்சால தேசத்தரசனாகிய யஜ்ஞஸேனன் பீஷ்மரிடத்திலும் துரோணரிடத்திலும் தான் அபராதஞ்செய்தவனாக நினைத்துத் தன்னைக் காப்பாற்றிக்கொள்வதற்குத் தகுதியான காரிய

த்தை ஆரம்பித்தான். அவன் த்ருஷ்டத்யும்னனையடைந்தபிறகு துரோணரைப்பற்றி நினைக்கவில்லை. ஆனால் பழைய விரோதம் மாறாமலிருப்பதனால் த்ரிஷ்டரிடம் பயமிருப்பதை நினைத்தான். கன்னிகையைக்கொடுப்பதனால் அதற்குப் பரிகாரத்தை அவ்வரசன் நினைத்தான். பாண்டவனுகிய கிரீடிக்குக் கிருஷ்ணையைக் கொடுப்பேனென்பதுதான் யஜ்ஞஸேனனுடைய அபிப்பிராயம். ஆனால் அவன் அதை வெளியிடுகிறதில்லை. மருமகனுடைய பலம் சேருவதுதான் தனக்குமிகுந்த வன்மையாக அவன் நினைத்தான். பாரதரே ! ஜனமேஜயரே! பாண்டவர்களைத் தேடிக்கொண்டிருந்த அந்தப் பாஞ்சால ராஜன் ஒருதிடமான வில்லை வளைக்கவேண்டுமென்று ஏற்பாடுசெய்தான். விபாக்ரபதன் புத்திரனுகிய ஸ்ருஞ்சயன் என்பவனுக்குத் தெய்வதைகளினால் கொடுக்கப்பட்டதும் கிந்துரமென்று பிரஸித்திபெற்றதும் கடினமுள்ளதுமான அந்தவில்லை வருவித்தான். அதற்கு மிகுந்தவலிமையுள்ள இருப்புநாண் கட்டப்பட்டிருந்தது. அதன்நாணேயமற்றொருவன் இழுக்கமாட்டான். அந்தவில் மிகச்சிறந்தது. அது மஹாத்மாவான சங்கரபகவான் ஸந்தோஷமடைந்து வரமாகக்கொடுத்தது. (இந்த வில்லைக்கொண்டு), ஒரு லக்ஷியத்தை அடிப்பதாகிய அரியகாரியத்தை நான் ஏற்படுத்தவேண்டுமென்று மனத்தில் நிச்சயஞ்செய்துகொண்டு ஓர் உயர்ந்த லக்ஷியத்தைச் செய்வித்தான். ஆகாயத்தில் ஒரு விசித்ரமான வேலைப்பாடுள்ள * யந்திரத்தைச் செய்வித்தான். ராஜாவே! ஒருபொன்மயமான லக்ஷியத்தையும் அந்த † யந்திரத்துடன் சேர்ந்ததாகச் செய்வித்தான். "இந்தவில்லை நாணேறிட்டுத் தொடுக்கப்பட்ட இந்த அம்புகளினால் ‡ யந்திரத்தைத் தாண்டி லக்ஷியத்தையடிப்பவனெவனே அவன்தான் என்பெண்ணையடையலாம்" என்றும் சொல்லினன். இவ்வாறு அந்தத்துருபதராஜன் ஸ்வயம்வரத்தைப்பற்றிப் பிரஸித்தஞ் செய்வித்தான். பாரதரே ! ராஜாவே! அதைக்கேட்டு ராஜாக்களனைவரும், ஸ்வயம்வரத்தைப் பார்க்க விரும்பின மஹாத்மாக்களான ரிஷிகளும், கர்ணனுடனே கூடின துரியோதனாதிகளான கௌரவர்களும், கிருஷ்ணனுடன் கூடிய யாதவர்களும், அந்தகர்களும், விருஷ்ணிகளும் அங்கே சேர்ந்தனர். பிறகு மஹாத்மாவான துருபதனால் பூஜிக்கப் பெற்ற அனேக அரசர்கள்

---

* சக்கரமாகச் சுழலுவது.

† யந்திரத்தின் நேர் மேலிருப்பதாக.

சுற்றுகிற யந்திரத்தின் துவாரங்களின் வழியாகமேலேஅம்புசென்று லக்ஷ்யத்தை யடித்தல்.

ஸ்வயம்வரம்பார்க்கும் விருப்பத்துடன் மஞ்சங்களில் வரிசையாக உட்கார்ந்தனர். மிகுந்த மஹிமையுள்ள பிராம்மணர்களும் பலதேசங்களிலிருந்து வந்தனர். பாண்டவர்கள் பிராம்மணர்களுடன் சேர்ந்தேஉட்கார்ந்தனர். முப்பத்துமூன்றுகோடி தேவர்களும் விமானங்களோடு ஆகாயத்தில்நின்றனர். பிறகு நகரத்து ஜனங்களெல்லாருடைய கோஷமும் கொந்தளிக்கின்ற ஸமுத்திரம்கோஷிப்பதுபோலிருந்தது. சிம்சுமாரசக்ரம் என்றுசொல்லப்பட்ட முதலையைப்போல் வடிவமுள்ள நக்ஷத்திரக்கூட்டத்தின் தலையாகிய வடகிழக்குத் திசையையடைந்து அவ்வரசர்களுட்கார்ந்தனர். அவ்விடம்,நகரத்துக்குவடகிழக்கில்அழகானஸமதலபூமியில்நான்குபக்கமும் விடுகளாற் சூழப்பட்டதும், மதில் அகழிகளோடு கூடியதும், வாயில்களிலும் தோரணங்களிலும் அலங்கரிக்கப்பட்டதும், விசித்ரமான மேற்கட்டிகளினால் மங்கும் அலங்கரிக்கப் பெற்றதும், பல வகை வாத்திய கோஷங்கள் நிரம்பியதும், உயர்ந்த அகிற்புகையுள்ளதும், சந்தனக்குழம்பு தெளிக்கதும், பூமாலைகளினால் சோபிக்கின்றதுமாயிருந்தது. கைலாஸ சிகரங்களுக் கொப்பானவையும் ஆகாயத்தைக் கிழிக்கின்றவையும் செவ்வையாகச் செய்யப்பட்ட சிகரங்களுள்ளவையும் பொன்மயமான பலகணிகள் நிரம்பினவையும் கல்லிழைத்த தளவரிசைகளினால் அலங்கரிக்கப்பட்டவையும் பார்ப்பதற்கெளிய படிகளுள்ளவையும் உயர்ந்த ஆஸனங்கள் முதலியசாமான்களுள்ளவையும் புஷ்ப மாலைகளினால் மறைக்கப் பட்டவையும் உயர்ந்த அகில்வாஸனையுள்ளவையும் ஹர்ம்யத்தின் நிறத்துக்கொப்பானவையும் ஒருயோஜனதூரம் பரவுகின்ற நல்லவாஸனையுள்ளவையும் விசாலங்களான அனேக வாயில்களுள்ளவையும் படுக்கைகளாலும் ஆஸனங்களாலும் சோபிக்கின்றவையும், பலவர்ணங்களான தாதுப்பொடிகளுடன் சேர்ந்த இமயமலைச்சிகரங்கள் போன்றவையும் நிர்மலங்களுமான ராஜகிருஹங்களினால் எங்கும் சூழப்பெற்று அந்த ஸபாமண்டபம் விளக்கிற்று. அப்போது அவ்வரசர்களனைவரும் நன்றாக அலங்காரஞ்செய்துகொண்டு ஒருவரையொருவர் மிஞ்சுகின்றவர்களாக அந்த ஸபாமண்டபத்தில் அநேகவிதங்களான மண்டபங்களில் உட்கார்ந்தனர். அங்கே ஸாமான்யஜனங்கள், உயர்ந்த அபிப்பிராயமுள்ளவர்களும் மஹாநுபாவர்களும் மிகுந்த கருணையுள்ளவர்களும் பிராம்மணப்பிரியர்களும் தங்கள் தேசங்களைச் செம்மையாகக் காப்பவர்களும் திருந்தச் செய்யப்பட்ட நற்கருமங்களினால் எல்லா ஜனங்களுடைய மனத்தையும் கவருகின்றவர்களுமான ராஜ

ஹிம்மங்கள் காரகிற்கொந்தணிந்து வீற்றிருப்பதைப்பார்த்துக்கொண்டிருந்தனர். நகரத்து ஜனங்களும் தேசத்து ஜனங்களும் கிருஷ்ணையைப்பார்ப்பதற்காக விலைபெற்றமஞ்சங்களில் காற்புறமும் உட்கார்ந்தனர். அந்தப்பாண்டவர்களும் பாஞ்சாலராஜனுடைய சிறந்த ஐச்வரியத்தைப்பார்த்துக்கொண்டு, பிராம்மணர்களுடன் சேர்ந்து உட்கார்ந்தனர். ஜனமேஜய ராஜாவே! அங்கே அந்தஸபை பிருதியான ரத்னதானங்களுடையதும் நாடகங்களுஞ் சுத்தனங்களுஞ் அறிகிறவர்களால் சோபிப்பதுமாக அதினதினங்கள் வரையில் விசேஷமாக விளங்கிற்று. அழகான அந்த மஹாஜனம் நடந்துகொண்டிருக்கையில் பதிணாறவது தினத்தில் மைத்ரம் என்னும் எட்டாவது தாராபலத்தோடுகூடிய முகூர்த்தத்தில் பூமிசரித்திரங்கள் தெரிந்தவர்களுமான தரவதிகளுமானராஜரிஷிகள் உயர்ந்தவஸ்திரங்களோத்தரித்துக்கொண்டு அந்தத்திரௌபதிக்கு அலங்காரஞ்செய்யத் தொடங்கினர். முதலில் வைடூர்யக்கல்லால் செய்யப்பட்ட பலகையில் உட்கார்ந்த திரௌபதியைப் பொற்குடங்களிலுள்ள ஜலங்களினால் வாத்தியமுழக்கங்களுடன்மஞ்சனஞ்செய்வித்தனர். ஸ்நானமானபின் இரண்டுபட்டுக்களின் இடையிலும் மேலிலும் தரித்துக்கொண்ட திரௌபதியைச் சம்மையாக அலங்கரிக்கப்பட்ட தும் ரத்னஸ்தம்பங்களோடு கூடினதுமாகிய மேடைக்கு அழைத்துப்போயினர். மகிழ்ச்சியுற்ற அந்தத்திரௌபதியைக் கிழக்குமுகமாகஉட்காரவைத்துப்பிறகு அலங்காரஞ் செய்யவந்தஸ்திரீகள், "இவளை எந்த அலங்காரத்தால் அலங்கரிப்பது" என்று திகைத்தகண்களோடு ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டனர். கூந்தலின்ஈரத்தை அகிற்புகையின் உஷ்ணத்தினால்போக்கினர். இனியமணமுள்ள புஷ்பமாலைகளினால் அவளுடைய கூந்தலைக்கட்டினர். அறுகம்புல்லும் இருப்பைப்பூக்களும் சேர்த்துத்தொடுத்த மாலையை அவள்கையிற் கொடுத்தனர். காரகிற் சாந்தினால் இரண்டு ஸ்தனங்களிலும் மகரிகாபத்ரம் என்னும் இலை இலையாக இருக்கும் சித்திரத்தையெழுதினர். அவள் * சக்ரவாகங்களை அடையாளங்களாகவுடையதும் பொன்னை மிருதியாகவுடையதுமான சிறந்தகாஞ்சீபால் விளங்கினாள். அவளுடைய மலர்ந்தமுகம் சுருண்ட கூந்தலால் விளங்கிற்று. அது வண்டுகள் மொய்த்துக்கொண்டிருக்கும் தாமரைப்புஷ்பத்தையும் களங்கத்தோடு கூடிய சந்திரமண்டலத்தையும் ஜயித்தது. (கண்கள் இயற்கைக்கறுப்புடையனவாயிருந்தமையால்) அவைகளுக்கு

* ஸ்தனங்கள் சக்ரவாகங்களாகவும் ஆபரணங்கள் பொன்னாகவும் கூறியது.

மையை ஸம்பிரதாயத்திற்காக இட்டனர். ரத்னங்களிழைத்த ஆபரணங்களினல் உசிதப்படி அலங்காரஞ்செய்தனர். அவள் தாயாராகிய ப்ருஷதி அரிதாரத்தையும் மனோசிலையையும் இரண்டுவிரல்களினலெடுத்து முகத்தில் திலகமிட்டாள். அலங்கரிக்கப்பட்ட மணமகளைக் கண்டு அந்த மங்கையர்கள் மகிழ்வுற்றனர். எப்படிப்பட்ட கணவன் கிடைப்பனென்ற நினைவினல் அவளுடைய தாயார் ஸந்தோஷப்படவில்லை. பிறகு குருபதத்துடைய கட்டளையினல் * அலங்காரங்கள் வந்து ஸ்நானங்களோடு அலங்காரமாகவுடைய அந்தத் திரௌபதியைப் பெண்யானையின்மேல் ஏற்றிவைத்தனர். அப்போது வாத்தியங்கள்முழங்கின. மங்களசப்தங்கள் ஆகாயத்தில்பரவின. பாங்கிமார்களும் சிறந்த அரண்மனைப் பெண்யானைகளின்மேலேறி மங்களகானங்களோடுபடிக்கொண்டு இருபக்கங்களிலும் சென்றனர். வாயில்காப்போர் ஜனங்களை விலக்குவதில் பரபரப்புடன் முன்னேசென்றனர். அப்போது அந்தச் சிறந்த நகரத்தில் பெரிய கோலாஹலமுண்டாயிற்று. பாரத! க்ருஷ்ணையுடன் கூடிய திரௌபதி மனமேறிக்கொண்டு முன்சென்றாள். குருபதன் வலியவில்லாளிகளால் காக்கப்பட்டபெரும்படையை வகுத்துவைத்துக்கொண்டு பெருங்கூட்டத்துடன்கூட ஸபாமண்டபத்தில் நின்றான். மங்களஸ்நானஞ் செய்தவரும் நல்ல ஆடையுடுத்து எல்லா ஆபரணங்களாலும் அலங்கரிக்கப்பெற்றவளுமான திரௌபதி நல்ல அலங்காரத்தோடு கூடிய பொன்மயமான மாலையை யெடுத்துக்கொண்டு, அலங்கரிக்கப்பட்ட ஸ்வயம்வர மண்டபத்திற்கு வந்ததை அனைவரும் கண்டனர். உடனே திரௌபதி ஸ்வயம்வரமண்டபத்தில் பிரவேசித்தாள். அவள்காரணமுற்று, மகிழ்ந்திருந்த அரசர்களனைவரையும் கடைக்கண்ணுல்பார்த்து, பார்ப்பவர்களின்மனங்களை மிகவும் கவர்ந்துகொண்டு ஸ்வயம்வரமண்டபத்தில் நின்றாள். அப்போது ஸோமகராஜாக்களுக்குப் புரோஹிதரும் மந்திரங்களறிந்தவரும் பரிசுத்தருமான பிராம்மணர் சாஸ்திரப்பிரகாரம் அக்னியைச்சுற்றித் தர்ப்பங்களைப்பரப்பி அதில் † ஆஜ்யாகுதிசெய்தனர். அக்னிக்குத் திருப்தி செய்வித்தும் பிராம்மணர்களைக்கொண்டு ‡ ஸ்வஸ்திவாசனஞ் செய்வித்தும் மானபிறகு நாற்புறங்களிலும் வாத்தியங்களை யெல்லாம் நிற்கச் செய்தார்கள். ஜனமேஜய ராஜாவே! அந்த ஸ்வயம்வரமண்டபம் சப்த

---

* அலிகள்.

† அக்னியில் நெய்யைவிடுவது.

‡ மங்களமான வேதமந்திரங்களைச் சொல்வது.

மில்லாததாகச்செய்யப்பட்டபோது மேகத்துக்கும் துந்துபிவாத்தியத் துக்கும்ஒப்பானகுரலுள்ளதிருஷ்டத்யும்னன் கிருஷ்ணையைபயமழைத்து க்கொண்டு அந்த ஸ்வயம்வரமண்டபத்தின்மேலிலிவந்து மேகம்போல க்கம்பீரமான குரலோடு நயமாயும் அர்த்தம் நிரம்பினதாயுமிருக்கிற பின்வரும் சிறந்தவசனத்தை வழக்கப்படி உரக்கச்சொல்லலானன்.

"இங்கே சேர்ந்திருக்கிற அரசர்கள் நான் சொல்வதைக் கேட்க க்கடவர் இதுவில். இதுலக்ஷ்யம். இவைஅம்புகள். யந்திரத்தின்துவா ரத்தில்வழியாக ஆகாசத்திற்குப் போகின்ற கூர்மையான ஐந்துசரங் களினால் லக்ஷியத்தை அடியுங்கள். குலமும் ரூபமும் பலமும்பொருந் திய எவன் இந்தமஹா காரியத்தைச் செய்கிறானே அவனுக்கு என் ஸஹோதரியான இந்தக்கிருஷ்ணை இப்போதே பாரியையாவாள். உண் மையாகச் சொல்லுகிறேன்" என்றான். திருபதபுத்திரன் அவர்களைப் பார்த்து இவ்வாறுசொல்லி உடனே தன் ஸஹோதரிக்கு அங்கேசேர் ந்திருக்கும் அரசர்களுடைய பெயர், குலம், சக்தி இவைகளைத்தெரி வித்துச்சொல்லலானன்.

இருநூற்றுரோராவது அத்தியாயம்.

ஸ்வயம்வரபர்வம் (தொடர்ச்சி).

(ஸ்வயம்வரமண்டபத்துள்ள அரசர்களின் பெயர்களைச்சொல்லுது.)

"துரியோதனன், துர்விஷஹன், துர்முகன், துஷ்பிரதர்ஷணன், விவிம்சதி, விகர்ணன், ஸஹன், துர்தர்சனன், யுயுத்ஸு, வாயுவே கன், * பீமவேகரவன் (பீமவேகன்), உக்ராயுதன், பலாகி, கராயு (கனகாயு), விரோசனன் (துர்விரோசனன்), குண்டகன், சித்ரஸேனன் ஸுவர்ச்சஸ், கனகத்வஜன், பாரத்கிரமசாலியான நந்தகன், நந்தன், துருண்டன், விகடன், இவர்களும் இன்னும் பலமஹாபலசாலிகளும் வீரர்களுமான த்ருதராஷ்டிரபுத்திரர்களும் கர்ணனுடன்கூட உனக் காக வந்திருக்கின்றனர். க்ஷத்ரியஜாதியிற் சிறந்தவர்களும் மஹாத் மாக்களுமான அரசர்கள் எண்ணில்லாதவர்கள் இருக்கின்றனர். ஸு பல புத்ரனை சகுனியும், வ்ருஷகனும், ப்ருஹத்பலனுமாகிய இந்தக் காந்தார ராஜபுத்திரர்களெல்லாரும் வந்திருக்கின்றனர். ஆயுததாரி களெல்லாரிலும் சிறந்த மஹாத்மாக்களாகிய அசுவத்தாமாவும், போஜ

---

* நூற்றுமுப்பத்தோராவது அத்தியாயத்திலும், அதன் பின்னுள்ள அகரா திகளிலும் காண்க.

னும் நன்றாக அலங்காரஞ்செய்துகொண்டு உனக்காக வந்துசேர்ந்திருக்கின்றனர். ப்ரஹந்தன், மணிமான், தண்டதாரராஜன், ஸுஹோத்ரன், ஜயத்ஸேனன், மேகஸந்திராஜன், சங்கனும் உத்தரனுமாகிய புத்திரர்களோடுகூடிய விராடராஜன், விருத்தக்ஷேமன் புத்ரனான ஸுசர்மா, ஸைனபிந்துராஜன், ஸுநாமா, ஸுவர்ச்சஸ்ஸென்னும் புத்திரர்களோடுகூடிய ஸுகேது, ஸுசித்ரன், ஸுகுமாரன், விருகன், ஸத்யத்ருதி, ஸூர்யத்வஜன், ரோசமானன், நீலன், சித்ராயுதன், அம்சுமான், சேகிதானன், மஹாபலசாலியானச்ரேணிமான், ஸமுத்ரஸேனன்புத்திரனும் மஹாபராக்ரமசாலியுமான சந்த்ரஸேனன், ஜலஸந்தன் தந்தையும் பூதல்வனுமாகிய விதண்டனும் தண்டனும், பௌண்டரகவாஸுதேவன், வீரனான பகதத்தன், கலிங்கன், தாம்ரலிப்தன், பத்தனாதிபதி, வீரர்களான ருக்மாங்கதன், ருக்மரதன் என்னும்புத்திரர்களுடன்கூட மஹாரதனும் மத்ரராஜனுமான சல்லியன், கௌரவனுகியதீர்மாமதத்தன், மஹாரதனான அவன்புத்ரன், சூரர்களாகிய பூரி, பூரிச்ரவஸ், சலன் ஆகியமூவர், இவர்களும் சேர்ந்திருக்கின்றனர். காம்போஜதேசத்தரசனுகியஸுதக்ஷிணன், பூருவம்சத்தவனான்றோடதன்வா, ப்ரஹத்பலன், ஸுதேஷ்ணன், உசீநரன்புத்திரன் சிபி, திருடர்களை ஒழிப்பவனுகிய காருஷதேசத்தரசன், பலராமன், கிருஷ்ணன், வீரனுகியருக்மிணியின் புத்திரன் பிரத்யும்னன், ஜாம்பவதியின் புத்திரன் ஸாம்பன், சாருதேஷ்ணன், பிரத்யும்னனுடையபுத்திரன்அனிருத்தன், கதன், அக்ரூரன், சாத்யகி, சிறந்தபுத்தியுள்ள உத்தவன், ஹ்ருதிகன் புத்ரனான கிருதவர்மா, ப்ருது, விப்ருது, விதூரதன், கங்கன், சங்கு, கவேஷணன், ஆசாவஹன், அனிருத்தன், ஸபீகன், ஸாரிமேஜயன், வீரனான வாதபதி, ஜ்வலபிண்டாரகன், பராக்ரமசாலியான உசீனரன் ஆகிய இந்த யாதவர்களும் உனக்குச்சொல்லப்பட்டனர். பகீரதன், ப்ரஹத்க்ஷத்ரன், விஸ்துதேசாதிபதியான ஜயத்ரதன், ப்ரஹத்ரதன், பாஹ்லீகன், மஹாரதனான்றுதாயுஷ்மான், ஸுதவராஜன், சித்ராங்கதன், சுபாங்கதன், சிறந்தபுத்தியுள்ள வத்ஸராஜன், கோஸலாதிபதி, பராக்ரமமுள்ள சிசுபாலன், ஜராசந்தன் இவர்களும் பூமியிற் பெயர் பெற்ற பற்பல தேசாதிபதிகளான இன்னும் அனேக க்ஷத்ரியர்களும் அன்புள்ளவளே, உனக்காகவந்திருக்கின்றனர். பராக்ரமசாலிகளான இவர்கள் உனக்காகச்சிறந்த லக்ஷியத்தையழிப்பார்கள். அழகியவளே! இந்தலக்ஷியத்தை எவன் அடிக்கிறானோ அவனே இப்போதே வரிக்கக்கடவாய்” என்று திருஷ்டத்யும்னன் சொன்னன்.

இருநூற்றிரண்டாவது அத்தியாயம்.

ஸ்வயம்வரபர்வம். (தொடர்ச்சி)

பிராம்மணர்களுக்கு நடுவில் பாண்டவர்களிருப்பதாகக் கிருஷ்ணபகவான் அறிந்து பலராமருக்குச் சொன்னதும், வில்லெப்பார்த்வுடன் சிலராஜர்கள் ஆசையோழிய. சிசுபாலன் முதலானவர்கள் வில்லை நாணேற்றுகையில் பங்க மடைந்ததும், அர்ஜுனன் வில்லை நாணேற்ற விரும்பினதும்.)

அலங்காரஞ் செய்துகொண்டவர்களும், குண்டலங்கள் தரித்துக் கொண்டவர்களும், அழகினாலும் பராக்ரமத்தினாலும் குலத்தினாலும் ஒழுக்கத்தினாலும் தனத்தினாலும் இளமைப்பருவத்தினாலும் கர்வம் விருத்தியடைந்தவர்களுமான அந்த யுவராஜாக்களனைவரும் ஒருவரையொருவர் மிஞ்சக்கருதித் தம்தம்மிடமுள்ள அஸ்திரபலத்தையும் தேகவன்மையையும் நினைத்து மததேவகத்தினால் கூட்டத்தினின்றும் வேறுபட்ட இமயமலையிலுள்ள மதயானைகள் போல் ஆயுதபாணிகளாகக் கிளம்பினர். அப்போது அவ்வரசர்கள் ஒருவரையொருவர் பொறுமையுடன் நோக்கிக்கொண்டும் மதனனால் அங்கங்கள் பீடிக்கப்பட்டும் 'திரௌபதி எனக்குத்தான்' என்று சொல்லிக்கொண்டும் ஆஸனங்களினின்றும் எழுந்தனர். அந்தத் திரௌபதியை ஜயித்துக்கொண்டு போகும் விருப்பத்துடன் ஸ்வயம்வரமண்டபத்தில் கூட்டமாகச் சேர்ந்த அவ்வரசர்கள் பர்வதராஜ புத்திரியான பார்வதியை அடையவிரும்பிக்கூடின தேவக்கூட்டங்களைப போல் விளங்கினர். மன்மதபாணங்களால் பீடிக்கப்பட்ட அங்கங்களையுடைய அவ்வரசர்கள் திரௌபதியையடைந்த மனத்தோடு ஸபா மண்டபத்திலிறங்கின பிறகு ஸ்நேகிதர்களாயிருந்தும் திரௌபதியினிமித்தம், பகை செய்துகொண்டனர். தேவக்கூட்டங்கள், ருத்திரர்கள், ஆதித்தியர்கள், வஸுக்கள், அசுவினிதேவர்கள், ஸாத்யர்கள், மருத்துக்கள் இவர்களெல்லாரும் யமனையும் குபேரனையும் முன்னிட்டுக் கொண்டு விமானங்களோடு அங்கே வந்தனர். அஸுரர்களும், கருடர்களும், மஹாநாகர்களும், நாரதர்பர்வதர் முதலிய தேவரிஷிகளும் யக்ஷர்களும், சாரணர்களும், அப்ஸரஸுகளோடு கூட விச்வாவஸு முதலான கந்தர்வச்ரேஷ்டர்களும், விரைவாக அங்கே வந்தனர். பலராமனும், கிருஷ்ணனும் வ்ருஷ்ணிகளும், அந்தகர்களுமாகிய யாதவச்ரேஷ்டர்கள் மேலானவர்களுக்கடங்கிப் பார்த்துக் கொ

ண்டிருந்தனர். மஹான்களாகிய அவர்கள் கிருஷ்ணனுடைய அபிப் பிராயத்தி டங்கியிருந்தனர். மதங்கொண்ட பெரிய யானைகள்போன்ற உருவமுள்ள அந்த * ஐவரும் தாமரைத்தடாகங்களில் சிறந்த ஐந்து யானைகளிருப்பதுபோ லிருக்கக்கண்டி யதுவீரர்களிற் சிறந்தவரான கிருஷ்ணன் அவர்களை நீறுபூத்து மறைந்திருக்கும் பஞ்சாக்னிகளைப்போல நினைத்தார். யுதிஷ்டிரரையும் பீமனையும் அர்ச்சுனனையும் வீரர்களான நகுலஸஹதேவர்களையும் முறையே பலராமருக்குச்சொன்னர். பலராமர் அவர்களைக்கண்டு உள்ளம்மகிழ்ந்து கிருஷ்ணனை நோக்கினர். கிருஷ்ணையையடைந்த பார்வைகளும் மனோவிருத்திகளு முடையவர்களும் முயற்சியுள்ளவர்களும் உதடுகளைக்கடித்துக் கண்கள் சிவந்தவர்களும் வீரர்களுமானமற்ற ராஜபுத்திரர்களும் ராஜபௌத்திரர்களும் அந்தப் பஞ்சபாண்டவர்களைப் பார்க்கவில்லை. அவ்வாறே சிறந்த கைகளையுடைய அந்தக் குந்திபுத்திரர்கள் மஹாபுபாவர்களும் வீரர்களுமாகிய நகுலஸஹதேவர்கள் ஆகிய இவர்களனைவரும் அக்கத் திரௌபதியைக் கண்டபோதே மன்மதபாணங்களால் அடிக்கப்பட்டவராயினர். அப்போது, அந்த ஆகாயம் தேவர்களும் ரிஷிகளும் கந்தர்வர்களும் நிரம்பினதும், கருடர்களும் நாகர்களும் அஸுரர்களும் ஸித்தர்களுமாகிய இவர்களாலடையப்பட்டதும், திவ்யபரிமளம் வீசுவதும், தேவலோகத்திய புஷ்பவருஷங்கள் சொரிவதும், ஸபாமண்டபத்தின்மேல் ஆகாயத்தில் எங்கும் நிறைகின்ற மேககர்ச்சனம் போன்ற தேவர்களுடைய துந்துபிகளின் பெருமுழக்கங்களும் புல்லாங்குழல்கள் வீணைகள் பணவங்களின் நாதங்களும் நிரம்பினதும், நாற்புறங்களிலும் தேவவிமானங்கள் நெருங்கினதாயிருந்தது. பிறகு அந்த ராஜக்கூட்டங்கள் வரிசையாகத் திரௌபதியை உற்றுநோக்கித் தம்பராக்கிரமங்களைக் காண்பிக்கத் தொடங்கினர். கர்ணன், துரியோதனன், ஸால்வன், சல்லியன், அசுவத்தாமா, க்ராதன், நாராசன், வக்ரன் (தந்தவக்கிரன்), களிங்கதேசத்தரசன், வங்கதேசத்தரசன், பாண்டியன், புண்டரதேசத்தரசன், விதேக ராஜன், வனராஜன், தாமரையிதழ்களைப்போன்ற கண்களும் பெருங்கைகளுமுடையவர்களும் கிரீடங்களையும் முத்துமாலைகளையும் தோள்வளைகளையும் மிகுதியாக அங்கங்களில் அணிந்து கொண்டவர்களும் பராக்ரமமும்தைரியமுமுள்ளவர்களுமான இன்னுமனேகம் தேசாதிபதிகளாகிய ராஜபுத்திரர்களும் ராஜபௌத்திரர்களும் தங்கள் தங்கள்

* ஸ்வர்காங்கஸுந்தரங்களாகிய ஐந்து கஜேந்திரங்கள் என்பது பழைய உரை

பராக்கிரமங்களைப்பற்றிக் கர்ஜித்தனர். அந்தஉறுதியானவில்லைநாணே றிடுவதற்கு மனத்தினாலும் முடியவில்லை. அவ்வரசர்கள் தம்சக்தியை க்காண்பிக்கும்போது அந்தப்பாரமானவில் அதிர்வதினால் அலைக்கப் பட்டுத் தடுமாறித் தங்கள்வன்மையினாலும் சிக்ஷையின் திறப்பினாலும் பூமியின்மேல் நிலைத்து நின்றபிறகு உற்சாகம் குறைந்து கிரீட ங்களும் ஹாரங்களும் கழுவப் பெருமூச்சுவிட்டுக்கொண்டு முயற்சி யைவிட்டுவிட்டனர். அப்போது அந்தராஜக் கூட்டங்கள் கடினமான வில்லினால் ஹாரங்களும் தோள்வளைகளும் கழுவ ஹாஹாகாரஞ்செ ய்து திரௌபதியின் மேலுள்ள விருப்பத்தைவிட்டுத் துயரமடைந்தி ருந்தன. இவ்வாறு அவ்வரசர்கள் நாற்புறங்களிலும் திரும்பிப்போன பிறகு, சேதிதேசாதிபதியும் வீரனும்யமனுக்கொப்பான பல்சாலியும் சிறந்த கீர்த்தியுள்ளவனும் புத்திசாலியுமான தமகோஷபுத்ரன் சிசுபா லன் அரசர்களின் முன்னிலையில் தனுவினருகில்வந்து நின்றான். அந்தவில் அவனால் நாணேறிடப்படும்போது நாண் பூட்டுவதற்கு உளந்தளவு மிச்சமிருக்கையில் அவன் அந்த வில்லினால் பிடிக்கப் பட்டு முழங்கால் மடித்துப் பூமியில் விழுந்தான். உடனெழுந்து அவ்வரசன் தன் தேசத்திற்குச்சென்றான். அவனுக்குப்பிறகு பெரிய சூரனும் மிகுந்த பலசாலியும் சங்குபோன்ற கழுத்தும் பருத்தோ ள்களுமுடையவனும் மதயானைபோல் நடப்பவனும் மதயானைபோற் சிவந்த கண்களையுடையவனும் மதயானைபோன்ற வேகமுள்ளவனுமா கிய ஜராஸந்தனென்னுமரசன் மலைபோல் அசையாதவனாக வில்லினருகில் வந்து நின்றான். அவனால் ஏறிடப்படும்போது வில்பூட்டுவதற்கு இன்னும் கடுகளவு இருக்கையில் திரும்பியடித்தது. அவனுக்குப் பின், மஹாவீரனும் மஹாபலசாலியும் மத்ரதேசத்தரசனுமான சல் லியனும் வந்தான். அவனால் ஏறிடப்படும்போது இன்னும் பயற்றள விருக்கையில் திரும்பியடித்தது. உடனே பின் திரும்பிப்பாராமல் தன் ராஜ்யத்திற்குப் புறப்பட்டான். பிறகு, "இந்த உயர்ந்தவில்லை இப்போது எந்த அரசன்தான் நாணேறிடுவான்" என்று மனத்தில் நிச்சயஞ் செய்துகொண்டு மறுபடியும் நின்றான். அவனுக்குப்பிறகு அகங்காரமுள்ளவனும் அஸ்திரங்களில் நிச்சயமான ஞானமுள்ளவ னும் ராஜலக்ஷணங்களெல்லாம் பொருந்தினவனும் மஹா பலசாலி யும் சூரனும் திருதராஷ்டிர புத்திரனுமான துர்யோதனராஜன் அங் கே ஸஹோதரர்கள் நடுவில் விரைவாக எழுந்தான். திரௌபதியைக்

* பணவம்.

கண்டு களிப்புற்று வில்லினருகில்வந்தான். அவன் வில்லை யெடுத்துக் கொண்டபிறகு வில்லைத்தரித்த இந்திரனைப்போல்விளங்கினன். அவன் தனுஸை நாணேறிடத்தொடங்கினன். ஏறிடப்பட்ட அந்தவில் இன்னும் எள்ளளவிருக்கையில் திரும்பியடித்தது. அப்போது துரியோதனராஜன்கை விற்பிடியை விட்டதனால் வன்மையுள்ள அந்தவில்லினால் அடிக்கப்பட்டு அண்ணாந்துவிழுந்தான். வில்லினால் அடிக்கப்பட்ட அந்தஅரசன் வெட்கத்துடன் சென்றான். அவனுக்குப்பிறகு ஸௌர்ய புத்திரனும் ஸௌதபுத்திரனுமாகிய சித்ரஷ்டனை கர்ணன் வில்லினிடம்வந்து அதைத் தூக்கினன். அவனும் ஏறிடப்பட்ட அந்தவில் மாபிரிமுயலளவில் திரும்பியடித்தது. மூன்று லோகங்களையும் ஜயிக்கத்தக்கவனும் பலத்தினால் மூன்று லோகங்களிலும் பெயர்பெற்றவனுமான அந்தக்கர்ணனும் அந்தவில்லினால் தோல்வியடைந்தானென்றதனால் எல்லோரும் அந்தவில்லினிடம் பயமுற்றனர். கர்ணனும் அந்தவில்லினால் இவ்வாறு தோற்கச் செய்யப்பட்டு போகவே ராஜச்ரேஷ்டர்கள் தாமரைமலர்போன்ற முகங்கள் கவிழ்ந்து கண்ணைடித்துப்பார்க்கவில்லை. கர்ணன் தோல்வியுற்றதைப் பார்த்து உலகத்தில் வீரர்களான ராஜச்ரேஷ்டர்கள் வில்லெடுப்பதிலும் திரௌபதியையடைவதிலும் ஆசையற்றவராயினர். அந்த ஸபையில் ஜனங்கள் பரபரப்படைய, அரசர்களுடையவீரவாதம்செய்தமயங்கியபோது வீரனும் குந்திபுத்ரனுமாகிய அர்ஜுனன் அந்த தனுஸை நாணேறிடவும் அம்புதொடுக்கவும் நினைத்தான். பிறகு ஆஸுரர்களுக்கும் தேவர்களுக்கும் மிகமேலானவரும் மிகச்சிறந்த புத்தியுள்ளவரும் யதுவம்சவீரருமானகிருஷ்ணன், திரௌபதி, பாண்டுபுத்ரனை அர்ச்சுனன் கைக்குவந்ததாக நினைத்துப் பலராமருடன் கைபிசைந்து களிப்புற்றார். யதுவீரர்களாகிய ராமகிருஷ்ணர்களும் தெளம்யரும் தர்மபுத்ரரும் அவர்ஸஹோதரர்களும்தவிர அந்த ஜனக்கூட்டத்திலுள்ள ராஜச்ரேஷ்டர்களும் பிராமணச்ரேஷ்டர்களும் அப்போது நிஜரூபமறைந்திருந்த பாண்டவர்களை யறியவில்லை.

ஸ்ரீ மஹாபாரதம்.

இருநூற்றுமூன்றுவது அத்தியாயம்.

ஸ்வயம்வரபர்வம். (தொடர்ச்சி)

(வில்லைநாணேறிடவேழுந்திருந்த அர்ச்சுனனுக்குப் பிராம்மணர்கள் ஆசீர்வாதஞ் செய்ததும், அர்ச்சுனன் வில்லைநாணேறிட்டு லக்ஷியத்தையழித்ததும், திரௌபதி அர்ஜுனனுக்கு மாலையிட்டதும்.)

எப்போது அரசர்கள் தனுஸை நாணேறிடும் செய்கையிலிருந்து நிவர்த்தியாயினரோ அப்போது உயர்ந்த புத்தியுள்ள அர்ச்சுனன் பிராம்மண மத்தியிலிருந்து எழுந்தான். இந்திரத் துவஜம்போன்ற ஒளியையுடைய பார்த்தன் புறப்பட்டதைக்கண்டு பிராம்மணச்ரேஷ்டர்கள் கிருஷ்ணஜினங்களை வீசிக் கூவினர். சிலர் வருத்தமுள்ளவராயினர். சிலர் ஸந்தோஷமுள்ளவராயினர். புத்திமான்களும் காரியத்தைரிந்தவர்களுமான மற்றுஞ்சிலர், "பிராம்மணர்களே! எந்நகரில் உலகத்தில் கியாதிபெற்றவர்களும் பலவான்களும் தனுர் வேதத்தையே முக்கியமாகக் கொண்டவர்களுமாகிய கர்ணன் சல்லியன் முதலான க்ஷத்திரியர்களால் வளைக்கப்படவில்லையோ அந்நகரில்லை ஆஸ்திரப்பயிற்சியில்லாதவனும் தேகவன்மையில் மிக்க குறைந்தவனுமான ஒரு சிறுபையனால் எய்வாறு நாணேறிடமுடியும்? சாபல்யத்தினால் ஆராய்ந்து பாராமற் செய்யும் இக்கார்யம் பயன்படாமற் போனால் எல்லாராஜாக்கள் நடுவிலும் பிராம்மணர்கள் பரிகாசத்துக் குரியவராவார்கள். இவன் கர்வத்தினாலாவது மந்தோஷத்தினாலாவது பிராம்மணர்களுக்குள்ள ரபலத்தினாலாவது வில்லை வளைக்கப் புறப்பட்டிருந்தால் தடுக்கப்படவேண்டும். போகாமலிருப்பது நலம். ராஜாக்களின் ஏளனத்திற்குப் பாத்திரர்களாகாமலிருப்போம்; அவமதிப்பை அடையாமலிருப்போம்; உலகத்தில் இகழப்படாமலிருப்போம்" என்று ஒருவர்க்கொருவர் பேசிக்கொண்டனர். இன்னும் சிலர், "யௌவன வயஸ்ஸிலிருப்பவன்; அழகுள்ளவன்; மதகஜத்தின் துதிக்கைபோன்ற கைகளையுடையவன்; பருத்த தோள்களும் திடைகளும் புஜங்களுமுடையவன்; தைரியத்தில் இமயமலை போன்றவன்; ஸிம்மம்போல் கம்பீரமான நடையுள்ளவன்; மதயானையைப்போல் நடக்கிறவன்; ஒளியுள்ளவன்; இவனிடத்தில் இந்தக் காரியத்தில் திறமை எதிர்பார்க்கக் கூடியதே. அவனுடைய உற்சாகத்தினாலும் ஊகிக்கத்தகுதியிருக்கிறது. இவனுடைய சக்திதான்

பெரிய உற்சாகத்தைத் தருவது. அசக்தன் தானேசெல்லான். மேலும் பிராம்மணர்களுக்கு அஸாத்தியமானகருமம் ஒன்றும் எந்த லோகங்களிலும் சரீரத்தோடு ஸஞ்சரிக்கும் எந்தப் புருஷர்களிடத்திலும் இருப்பதில்லை. ஜலத்தையும் காற்றையும் புஜிப்பவர்களும் காய் கிழங்குகளே ஆகாரமாகக் கொண்டவர்களும் உறுதியான தவமுள்ளவர்களுமான பிராம்மணர்கள் தேகபலம் குறைந்தவர்களாயிருந்தும் தங்கள் தவவன்மையினல் அதிக பலவான்களாகிறார்களன்றே. ஸரியோ தவறே, ஸுகமோ கஷ்டமோ, பெரிதோ சிறிதோ வலிய நேர்ந்தகருமத்தைச் செய்யும் பிராம்மணன் அவமதிக்கத் தகான். ஜமதக்னிபுத்திரரான பரசுராமரால் க்ஷத்திரியர்கள் யுத்தத்தில் அபஜயப்பட்டனர். அகஸ்தியர் தமது பிரம்மதேஜஸினல் அகாதமான கடலைக் குடித்தனர். ஆதலால் இங்குள்ளவரனைவரும், இவன் சிறுவன் என்று சொல்லலாகாது. இவன் சிறந்தவன். சீக்கிரத்தில் வில்லை நாணேறிடட்டும்" என்றனர். மற்றப்பிராமணச்ரேஷ்டர்கள் "அவ்வாறே ஆகட்டும்" என்றனர். இவ்வாறு அந்தப்பிராமணர்கள் பலவகைச்சொற்களைச்சொல்லிக்கொண்டிருக்கையில் அர்ச்சுனன்தனுசின் ஸமீபத்தில் பின்வாங்காமல் மலைபோல நின்றான். பிறகு பாண்டவச் ரேஷ்டனான அர்ச்சுனன் திருஷ்டத்யும்னனை நோக்கி, "இந்தத்தனுஸ் பிராமணர்கள் நாணேறிடக்கூடியதுதானு?" என்றான். அவன்சொன்னதைக்கேட்டுத் திருஷ்டத்யும்னன் "பிராம்மணேந்தமா! பிராம்மணன், க்ஷத்திரியன், வைசியன், சூத்திரன் இவர்களில் யாராயினும் இந்தச்சிறந்த தனுஸைநாணேறிடுவானுயின் அவனுக்கு என்னுடைய சகோதரியைக் கொடுப்பேன். நான்ஸத்தியமாகச் சொன்னேன்" என்று சொன்னான். அதன்பிறகு மஹாபராக்கமசாலியும் போரில் வெல்லமுடியாதவனுமான அந்தஅர்ச்சுனன், அந்தத்தனுஸைச் சுற்றிப்பிரதக்ஷிணஞ்செய்தான். பிறகு அவன் வரத்தைக்கொடுக்கும் தேவதையும் பிரபுவுமாகிய ஈசுவரனுக்குத் தலைவணங்கிக் கிருஷ்ணை மனத்தில் நினைத்து வில்லையெடுத்தான். தனுர்வேதத்தில் சிறந்தவர்களான ருக்மன், ஸுநீதன், வக்ரன், கர்ணன், துரியோதனன், சல்லியன், சால்வன் ஆகிய இவர்களால் முதலில் மிகுந்த முயற்சிசெய்தும் எந்தவில் நாணேறிட முடியாமற்போயிற்றே அந்தவில்லை அப்போது வீரக்ஞர் கர்வமுள்ளவனும் கிருஷ்ணைக்கொப்பான மஹிமையுள்ளவனும் இந்திரபுத்திரனுமான அர்ச்சுனன் ஒருநொடியில் நாணேறிட்டான். ஐந்துபாணங்களையெடுத்து லக்ஷியத்தையும்அடித்தான். செம்

மையாக அடிக்கப்பட்ட அந்தலக்ஷியம் உடனேயந்திரத்துவாரத்தின் வழியாகப் பூமியில் விழுந்தது. பிறகு ஆகாயத்திலும் தேவர்களின் கோஷமுண்டாயிற்று. சபைநடுவிலும் பெரிய ஆரவாரமுண்டாயிற்று. சத்துருக்களை வதஞ்செய்கிறவனுகிய அர்ச்சுனனுடைய தலையில் இந்திரன் தேவமலர்களைப் பொழிந்தான். அங்கிருந்த ஆயிரக்கணக்கான பிராம்மணர்கள் உத்தரீயங்களை வீசினர். எல்லாரும் ஆச்சரிய முற்று ஹாஹாகாரங்களைச் செய்தனர். ஆகாயத்திலிருந்து அந்தஸபையில் நாற்புறங்களிலும் பூமாரிகள் பொழிந்தன. வாத்தியக்காரர்கள் அனேகம் உபவாத்தியங்களுடன் வாத்தியங்களை வாசித்தனர். அங்கே ஸூதமாகதர்களின் கூட்டங்களும் நல்லிசையுடன் துதி செய்தன. சத்துருக்களைக் கொல்லுபவனுகிய துருபதன் அவனைக் கண்டு ஸந்தோஷமடைந்தான். அவன் தன்னைன்யங்களுடன் தான் அர்ச்சுனனுக்கு உதவி செய்ய விரும்பினன். அந்தப் பெரிய ஆரவாரம் விருத்தியடைந்த போது தர்மிஷ்டர்களிற் சிறந்த யுதிஷ்டிரர் புருஷச்ரேஷ்டர்களான நகுல ஸஹதேவர்களுடன் கூட இருப்பிடத்திற்கே சென்றார். அடிக்கப்பட்ட லக்ஷியத்தையும் இந்திரனுக் கொப்பானபார்த்தனையும் பார்த்த கன்னிகையாகிய கிருஷ்ணை எப்போதும் வழக்கமாகப் பார்ப்பவர்களுக்கும் புதியவள் போலிருந்தாள். நகைக்காமலிருக்கும் போதே நகைப்பவள் போலவும் மதுமதமில்லாமலே ச்ருங்காரவிலாஸங்களினால் மயங்கினவள் போலவும் வாக்கினாலில்லாமல் பார்வையினாலேயே பேசுகிறவள் போலவும் வெண்மையான உயர்ந்த புஷ்பமாலையையெடுத்துக்கொண்டு புன்னகையுடன் அர்ச்சுனனிடம் சென்றாள். க்ஷத்திரியவீரர்களின் மத்தியிலிருந்த கிருஷ்ணை அச்சமின்றி அவர்களுக்குப்பின்னே சென்றுபிராம்மணக் கூட்டத்தின் மத்தியிலிருக்கும் அர்ச்சுனன்மார்பில் மாலையை அணிந்து தேவேந்திரனை இந்திராணிபோலவும், அக்கினியை ஸ்வாகாதேவிபோலவும், விஷ்ணுவை லக்ஷ்மிபோலவும், ஸூர்யனை உஷையென்னும்காலைசந்திபோலவும், மன்மதனை ரதிதேவிபோலவும், மஹேச்வரனைப் பார்வதிபோலவும் வரனகவரித்தாள். நினைத்தற்கரிய செய்கையுள்ள அந்த அர்ச்சுனன் ஸபாமண்டபத்தில் ஜயித்து அந்தப்பிராம்மணர்களால் கொண்டாடப் பெற்று அந்தத் தன்மனைவியை அழைத்துக்கொண்டு, அவளால் பின்தொடரப்பெற்று ஸ்வயம்வரமண்டபத்தினின்றும் புறப்பட்டான்.

இருநூற்று நான்காவது அத்தியாயம்.

ஸ்வயம்வர பர்வம். (தொடர்ச்சி.)

(அரசர்கள் கோபம்கொண்டு துருபதனைக் கொல்லவந்தபோது பீமார்ச்சுனர்கள் சண்டைக்கு ஆயத்தமாயிருப்பதைத்தெரிந்து கிருஷ்ணபகவானும் பலராமரும் பேசிக்கொள்வது)

துருபதராஜன் அப்போது தன் பெண்ணை அந்தப்பிராம்மணனுக்குக்கொடுக்கநினைத்தபோது அரசர்கள் ஒருவரையொருவர் ஸமீபித்துப்பார்த்துக்கொண்டு கோபமுற்றனர். அவர்களனைவரும் பரஸ்பரம் ஒற்றுமையான எண்ணத்துடன் சேர்ந்துபேசிக்கொண்டனர். "நாமெல்லோருக்கும் துராத்மாவான துருபதனால் அழைக்கப்பட்டு ஸ்வயம்வரம் பார்க்கிறஆசையினால் சேர்ந்துவந்தோம். இந்தத்துருபதன் நம்மெல்லாரையும் திருப்பாகநினைத்து நம்மைத்தாண்டிப் பெண்களிற் சிறந்த திரௌபதியை ஒருபிராமணனுக்குக் கொடுக்கநினைக்கிறான். செடியைவளர்த்துக் காய்க்கிறகாலத்தில் இவன்வெட்டுகிறான். நம்மை அவமதிக்கின்ற இந்தத்துராத்மாவை நாம்கொன்று விடுவோம். இவன் குணங்களைப்பற்றிக்கௌரவிப்பதற்கும் பெரியவனென்றமரியாதைக்கும் தகுந்தவனுயிருக்கவில்லை. க்ஷத்திரியர்களுக்குப் பகைவனை இந்தத்துராசாரமுள்ளவனையும் இவன்புத்திரனையும் கொல்வோம். இவன் எல்லா அரசர்களையுமழைத்துமரியாதைசெய்து உயர்ந்த அன்னத்தையும் புஜிப்பித்து அதன்பின் அவமதித்திருக்கிறான். தேவஸபை போன்ற இந்தராஜஸபையில் தகுதியான ராஜர்கள் ஒருவரையும் இவன்காணவில்லையா? ஸ்வயம்வர விஷயத்தில் பிராம்மணர்களுக்குத் தகுதியில்லை. ஸ்வயம்வரம் க்ஷத்திரியர்களுக்கென்பது சாஸ்திரப்பிரஸித்தமானது. அரசர்களே! அல்லது இந்தப்பெண்க்ஷத்திரியன் யாரையும் அடைய விரும்பாமலிருப்பாளாயின் இவனை நெருப்பில் போட்டுவிட்டு நம்தேசங்களுக்குச் செல்வோம். பிராம்மணன் அவஸரத்தினாலாவது ஆசையினாலாவது ராஜசிரேஷ்டர்களுக்கு விருப்பமில்லாத இந்தக்காரியத்தைச் செய்திருப்பானாயின் அவனை எவ்வகையிலும் நாம் கொல்லலாகாது. ஏனெனில் நமதுராஜ்யம் வாழ்வு தனம் புத்ரபௌத்ரர்கள் மற்றுமுள்ள நமது ஸம்பத்தெல்லாம் பிராம்மணர்களுக்காகவே இருக்கின்றன. அவமானத்திற்குப்பயந்தும் தங்கள் தர்மத்தைக் காப்பதற்காகவும் மற்ற ஸ்வயம்வரங்களுக்கும் இவ்விதமான முடிவு வராமலிருக்கும்படி செய்யவேண்டும்" என்றுசொல்

லிப் பரிகாயுதங்கள்போன்ற கைகளையுடைய ராஜசிரேஷ்டர்கள் கோபித்துத் துருபதனைக் கொல்வதற்கு ஆயுதங்களுடன் எதிர்த்துப் போயினர். அவர்களிற் பலர் வில்லுகளையெடுத்துக் கோபித்துவருகிறதைக் கண்டுபயந்து துருபதன் பிராம்மணர்களைச் சரணமடைந்தான். துருபதன் பயத்தினாலாவது சக்தியில்லாமையினாலாவது உயிரைக்காப்பாற்றிக்கொள்ளவாவது பிராமணரைச் சரணமடையவில்லை. அரசர்களை ஸம்ஹாரனப்படுத்துவதற்காக அவர்களிடம் போனான். மதம்பிடித்த யானைகள்போலவேகமாகவடிவருகின்ற அவ்வரசர்களைச் சத்துருக்களை வெல்லுகிறவர்களும் சிறந்த வில்லாளிகளும் பாண்டுபுத்திரர்களுமான பீமார்ச்சுனர்கள் எதிர்த்துச் சென்றனர். பிறகு அவ்வரசர்கள்கோபத்தோடு ஆயுதங்களையெடுத்துக்கொண்டும் மணிக்கட்டுக்கும் விரல்களுக்கும் தோளுறைகள் போட்டுக்கொண்டும் குருகுல புத்திரர்களாகிய பீமார்ச்சுனர்களைக் கொல்லக்கருதிக் கிளம்பினர். அப்போது ஆச்சரியமும் பயங்கரமுமான செய்கைகளையுடையவனும் மஹா பலசாலியும் இடிக்கொப்பான வன்மையுள்ளவனும் ஒப்பற்ற வீரனும் மஹாகஜங்கள் போன்றவனுமாகிய பீமன் இரண்டு கைகளினாலும் ஒருமரத்தைப் பிடுங்கி இலைகளையுதிர்த்தான். எதிரிகளையழிப்பவனும் பருத்தும் நீண்டுமுள்ள புஜங்களுள்ளவனுமாகிய பீமன் தண்டாயுதனை யமன் உக்கிரமான தண்டாயுதத்தை யெடுத்துக்கொள்வதுபோல்அம்மரத்தை யெடுத்துக்கொண்டுபுருஷச்ரேஷ்டனை அர்ஜுனனுக்கு ஸமீபத்தில் நின்றான். நிவாரணமுடியாத செய்கையுள்ளவனும் மனிதருக்குமேற்பட்ட புத்தியுள்ளவனும் இந்திரனுக்கொப்பான பராக்கிரமமுள்ளவனுமாகிய அந்தஅர்ஜுனன் தன்சகோதரனை பீமனுடைய அந்தச்செய்கையைக்கண்டு வியப்புற்றான்; பயமின்றி விற்பிடித்து நின்றான்.

மனிதருக்கெட்டாத ஞானமுள்ளவரும் நிவாரணத்தற்கரிய செய்கையுள்ளவருமாகியகிருஷ்ணபகவான் பீமார்ச்சுனர்களுடைய அந்தச்செய்கையைக்கண்டு, பலராமரைநோக்கிப் பின்வருமாறு சொல்லலானார். ''வலிமைமிகுந்தபோலவும் விருஷபம்போலவும் கர்வமாக நடந்து கொண்டு பனைமரமுயரமுள்ள மஹாதனுஸ்ஸை இழுக்கிறானே! இவன் அர்ஜுனன்தான். ஸங்கர்ஷணரே! நான் வஸுதேவபுத்திரனாயிருந்தால் இதில்லஸந்தேகமில்லை. இதோபலத்தினால்விருஷத்தைப்பிடுங்கி ராஜாக்களைவெல்லுவதற்கு ஸாஹஸமாக ஆரம்பித்திருக்கிறானே இவன் வருகோதரன்.

அவனைத்தவிர மற்றொருவன் இந்தப் புவனியில் இப்போது யுத்தத்தில் இவ்விதமான செய்கையைச் செய்யவல்லவனில்லை. தாமரைப் புஷ்பம் போன்ற நீண்டகண்களையுடையவரும் பெரிய தேகமுடையவரும் ஸிம்மம்போன்ற நடையுள்ளவரும் வணக்க முள்ளவரும் பசுமை நிறமுள்ளவரும் நீண்டு பிரகாசிக்கின்ற அழகியமூக்குடையவருமாக இதோ எதிரில் வருகிறாரே அவர் தர்மபுத்திரரே. கிருத்திகாபுத்திரர்களான இரண்டு சுப்பிரமணியர்களைப்போலிருப்பவர் அச்வினிதேவதைகளின் புத்திரர்களான நகுல ஸஹதேவர்களென்பது என்னுடைய ஊகம். பாண்டவர்களும் குந்தியும் அந்த அரக்கு மாளிகை எரித்ததிலிருந்து விடுப்பட்டதை நான் கேள்விப்பட்டேன்." என்றார். ஜலமில்லாத மேகம் போன்ற நிறமுள்ள பலராமர் ஸந்தோஷத்துடன், "நமது அத்தையாகிய குந்தி கௌரவச்ரேஷ்டர்களான புத்திரர்களுடன் கூட விடுபட்டதைக்கண்டு ஸந்தோஷமடைந்தேன்" என்று தமது தம்பியான ஸ்ரீகிருஷ்ணனிடம் சொன்னர்.

இருநூற்றைந்தாவது அத்தியாயம்.

விவாஹபர்வம் (தொடர்ச்சி)

(அர்ஜுனன் கர்ணனைத்தோற்கச்செய்ததும், பீமன் சல்லியனைத் தோற்கச் செய்ததும், யுதிஷ்டிரர்முதலானவர்கள் துரியோதனாதிகளைத் தோற்கச் செய்ததும், முறைப்படி யுத்தத்துக்குஆயத்தமான அரசர்கள் கிருஷ்ணனுடைய வார்த்தையைக்கேட்டு யுத்தமுயற்சியைவிட்டு அவரவர் இருப்பிடம் சென்றதும், திரௌபதியுடன் பீமார்ஜுனர்கள் தாயவன் வீட்டுக்குச் சென்றதும்.)

அங்குள்ள ப்ராம்மணச்ரேஷ்டர்கள் கிருஷ்ணஜினங்களையும் கமண்டலங்களையும் உதறிக்கொண்டு, "நீங்கள் பயப்படவேண்டாம். எதிரிகளுடன் நாங்கள் சண்டைசெய்வோம்" என்றனர். இவ்வாறு சொன்ன அந்தப்ப்ராம்மணர்களைப்பார்த்து அர்ஜுனன் சிரித்துக்கொண்டு, "நீங்கள் பார்ப்பவர்களாக எண்பக்கத்தில் நின்றுகொண்டிருங்கள். நான்கூர்மையான முனைகளுள்ள அம்புகளை தூற்றுக்கணக்காக இறைத்துச் சிறிய ஸர்ப்பங்களை மந்திரங்களினால் தடுப்பது போல் இவர்களைத் தடுத்துவிடுவேன்" என்றான். மஹாபலசாலியான அர்ஜுனன் இவ்வாறுசொல்லிக் கன்னியா சுல்கமாகக் கிடைத்த

அந்தவில்லை வளைத்துக்கொண்டு ஸஹோதரனை பீமஸேனனுடன் கூட மலைபோல் அசையாமல்நின்றான். பிறகு பீமார்ச்சுனர்களிரு வரும் யுத்தத்தில் மிகக்கர்வமுள்ள கர்ணன் முதலான கூத்திரியர்க ளைக்கண்டு பயப்படாமல் இரண்டுயானைகள் எதிரியானைகளைச்சந்திப் பதுபோல் சந்தித்தனர். யுத்தஞ்செய்யஆயத்தரான அவ்வரசர்கள், "பிராமணன் எதிர்த்து யுத்தஞ்செய்யவருவானையின் அவனை யுத்தத் தில் வதஞ்செய்யக் கண்டிருக்கிறோம்" என்ற கடுஞ்சொற்களைச் சொன்னார்கள். இவ்வாறுசொல்லி அரசர்கள் உடனே பிராம்மணர் களைத் துரத்தினர். மஹாபராக்ரமசாலியான கர்ணன் பெண்யானைக் காக ஓராண்பானை எதிரியானையை நோக்கிச் செல்வது போல் அந்த யுத்தத்தில் அர்ஜுனனையெதிர்த்துச் சண்டைக்குச் சென் றான். மத்திரதேசத்தரசனும் பலவானுமான சல்லியன் பீமஸே னனை அந்தயுத்தத்தில் எதிர்த்துச்சென்றான். துரியோதனன் முத லியவரனைவரும் பிராம்மணர்களுடன் சேர்ந்து மெள்ள ஆரம்பித் துப் பிரயாஸமின்றி எதிர்த்துயுத்தஞ்செய்தனர். அப்போது எதிர் த்துவரும் ஸூர்யபுத்திரனை கர்ணனைச் சிறந்தவனை அர்ஜுனன் வன்மையுள்ள வில்லையிழுத்துக் கூர்மையான பாணங்களினால் எதிர்த் தடித்தான். உக்கிரமான சக்தியும் கூர்மையுமுள்ள அந்தச் சரங்க ளின் வேகத்தினால் பிரமிதகர்ணன் பிரயாஸத்துடன் அவனைத் தொடர்ந்தான். பாணம்விடுகிற வேகத்தில் அனவிடமுடியாத அவ் விரண்டு சிறந்த வீரர்களும் ஒருவரையொருவர் ஜயிக்கக்கருதி மிக்க கோபத்துடன் யுத்தஞ்செய்தனர். "நீசெய்ததற்குப் பிரதியாக நான் செய்ததைப்பார்" என்றும் "என் கைவன்மையைப்பார்" என்றும் ஒருவர்க்கொருவர் வீரவாதம்கூறினர். புவியில் நிகரற்றதான அர்ச் சுனனுடைய புஜபராக்ரமத்தைக்கண்டு ஸூர்யபுத்ரனை கர்ணன் உடனே கடுங்கோபத்துடன் யுத்தஞ்செய்தான். அப்போது அர்ச்சுன னால் விடப்பட்ட அந்த வேகமுள்ள பாணங்களைத்தடுத்து உரக்கக்கர் ச்சனை செய்தான். அவன் சேனைகள் அதைக்கொண்டாடின.

அப்போதுகர்ணன், "பிராம்மணச்ரேஷ்டனே! உன்கைகளின் பரா க்கிரமத்திற்காகவும் யுத்தத்தில் நீ சோராமலிருப்பதற்காகவும், பா ணங்களிலும் அஸ்திரங்களிலுமுள்ள இந்த மேன்மைக்காகவும் நான் சந்தோஷப்படுகிறேன். பிராமணோத்தமனே! நீ ருத்ரனுடன் வந்த தனுர்வேதமோ? அல்லது பரசுராமனோ? அல்லதுபரத்யக்ஷமாகவந்த

இந்திரனை? அல்லது ப்ரத்யக்ஷமாகவந்த நித்தியரான விஷ்ணுவோ? நீஉன்னபறைத்துக்கொள்வதற்காக இந்தப்பிராமணரூபத்தையெடுத்துக் கைவலிமையைக்கொண்டு எனக்குள் திர்யுத்தஞ் செய்கிறாயென்று நினைக்கிறேன். யுத்தத்திற்காபமுற்ற என்னுடன் பிரதியுத்தஞ்செய்வதற்கு நேரில்வர இந்திரனையும் பாண்டுபுத்திரனான அர்ச்சுனனையும்தவிர வேறொரு ஆண்பிள்ளை வல்லவன் அல்லன். பாண்டவர்களனைவரும் அர்ச்சுனனுள்பட அப்போதே அரக்கு மாளிகையில் எரிந்துபோயினர். அர்ச்சுனனைத்தவிர மற்றொருவன் யுத்தத்தில் என்னையடிக்கச் சக்தனல்லன்'' என்றுசொன்னான். அவன் இவ்வாறுசொன்னதற்கு அர்ச்சுனன், ''கர்ணா; நான்தனுர்வேதமல்லேன்; பராக்கிரமசாலியான பரசுராமருமல்லேன்; யுத்தஞ்செய்பவரிற் சிறந்தவனும் ஆயுததாரிகளெல்லாரிலும் மேலானவனுமானபிராம்மணன்; குருவினுபதேசத்தினால் பிரம்மாஸ்திரத்திலும் இந்திராஸ்திரத்திலும் தேர்ச்சியுள்ளவன் வீரனே! இப்போது உன்னை யுத்தத்தில்ஜயிப்பதற்கு இருக்கிறேன். நீ அசையாமல் நில். தோற்றேன் என்றுவது சொல். அதன்பிறகு ஸுகமாகச் செல்லலாம்'' என்றுமறுமொழி சொன்னான். அர்ச்சுனன் இவ்வாறுசொல்லி உடனே கர்ணனுடையவில்லைமுறித்தான். உடனே கர்ணன் வேறுவில்லையெடுத்து யுத்தஞ்செய்ய அம்புதொடுத்தான். அர்ச்சுனன்பார்த்து அவனுடைய அந்தவில்லையும் அம்புகளினால் துணித்து ஸூர்யகுமாரனை கர்ணனையும் யுத்தத்திலடித்தான். அப்போது ராதையின் புத்திரனும் மஹாபலசாலியுமான கர்ணன் வில்முறிந்து பாணங்களினால் அங்கங்களிலதிகமாக அடிபட்டு உடனே ஓடினான். மறுபடியும் சற்றுநேரத்துக்குப்பின் கர்ணன் அம்புகளுடன் வில்லையெடுத்துக்கொண்டுவந்தான். அப்போது அர்ச்சுனன்மேல் கூரமாரிகள் பொழிந்தான். அர்ச்சுனன் அந்தச்சரமாரிகளைத் தன் சரங்களினால் அறுத்தான். அப்போது மஹாரதனான கர்ணன் எல்லாப்பாணங்களும் உக்கிரங்களாயிருப்பதைக்கண்டு பிரம்மதேஜஸை ஜயிக்கமுடியாதென்று நினைத்துக்கொண்டு விரைவாக வெளியேஓடினான்.

ஸபையின் மற்றோரிடத்தில் பலபராக்ரமசாலிகளும் கல்வியினாலும் தேகவன்மையினாலும் யுத்தத்திற்சிறந்தவர்களுமாகிய சல்லியன் பீமன் இருவர்களும் மதங்கொண்ட இரண்டு மஹாகஜங்கள் போல் ஒருவரையொருவர் சண்டைக்கழைத்துக் குத்துக்களாலும் முழங்கால்களினாலும் ஒருவரையொருவர் அடித்துப் பின்னும் முன்னும் அருகிலும் தூரத்திலும் ஒருவரையொருவர் இழுத்தனர். குத்துக்களி

னலும் அடித்துக்கொண்டனர். அப்போது அவரிருவரிடத்தும் மிகக் கடுமையான சடசடவென்ற சப்தமுண்டாயிற்று. கற்கள் விழுவதற் கொப்பான அடிகளால் அடித்துக்கொண்டனர். அவர்களிருவரும் அந்தச் சண்டையில் ஒருவரையொருவர் சற்றுநேரம் இழுத்தனர். அந்தயுத்தத்தில் கௌரவச்ரேஷ்டனான பீமன் சல்லியனை இரண்டு கைகளினாலும் தூக்கிக் கீழேபோட்டான். அப்போது பிராம்மணர்கள் நகைத்தனர். அங்கே புருஷச்ரேஷ்டனும் பலசாலியுமான பீமசேனன் பலவானான சல்லியன் பூமியில் தள்ளப்பட்டிருந்தும் அவனைக் கொல்லாமலிருந்ததனால், எல்லோரும் ஆச்சரியத்தையடைந்தனர். பீமசேனனால் சல்லியன் தள்ளப்பட்டும் கர்ணன் பயந்துமிருந்தபோது பார்த்திருந்த மனிதர்களனைவர்க்கும் ஆச்சரியமுண்டாயிற்று. பிறகு ராஜஸூயகம் பார்த்திருக்கையில் பீமன் ஒரு மரத்தைப்பிடுங்கினான். அப்போது தர்மராஜா குறிப்பு(ஜாடை)க்களினால் பீமசேனனைத்தடுத்தார். பீமசேனனும் தன்பிராதாவான தர்மபுத்திரருடைய குறிப்பையறிந்து நிவர்த்தித்தான். கௌரவராகிய ஜனமேஜயரே! தர்மராஜாவும் சபைநடுவில் அரசர்கள் பார்த்திருக்கையில் பொறுமைக்காரனான துரியோதனனுடன் சண்டைசெய்தார். அப்போது துரியோதனன் தான் அதிக பலசாலியாயிருப்பதனால் * யுதிஷ்டிரரை மதிக்காமல் அவருடன் யுத்தஞ்செய்யவில்லை. அந்த ஸமயத்தில், தர்மராஜாவான யுதிஷ்டிரர் தாழ்ந்த கணுக்களோடு கூடிய பாணத்தினால் சத்துருக்களைக் கொல்லுகிறவனான துரியோதனனை அடித்தனர். பிறகு துரியோதனன் தடியினலடிக்கப்பட்ட பாம்பைப்போலக் கோபித்து மிகுந்த ஜாக்ரதையெடுத்துக்கொண்டு தர்மராஜாவுடன் எதிர் யுத்தஞ் செய்தான். தர்மபுத்திரர் யுத்தத்தில் துரியோதனனுடைய வில்லையும் நாண்கயிற்றையும் அறுத்து அவன்மேல் பாணவர்ஷம் வர்ஷித்தார். அவன் யுத்தத்தை விட்டோடினான். ஜனமேஜயராஜாவே! துச்சாஸனன் கோபமுற்று ஸஹதேவனுடன் நெடுநேரம் யுத்தஞ்செய்து அவனல் ஜயிக்கப்பட்டவனாக வில்லைப்போட்டுவிட்டு யுத்தபூமியில் முழங்காலை மடித்துக்கொண்டு விழுந்தான். அவன் எழுந்துவுடன் கத்திகேடகங்களை எடுத்துக்கொண்டு எதிர்த்தோடிவந்தான். கௌரவரான ஜனமேஜயரே! அந்தக்கௌரவனான துச்சாஸனன் பலஹீனனான பிராம்மணனோடு யுத்தம் வேண்டாமென்றுசொல்லி விகர்ணன் சித்ரஸேனன் இவ்விருவராலும் தடுக்கப்பட்டான். துஸ்ஸகன் நகுல

* யுதிஷ்டிரரென்று அறியாமல்.

னிருவரும் யுத்தஞ்செய்யத்தொடங்கினர். மஹா பலசாலிகளான அவ்விருவரையும்பார்த்து, "கௌரவர்களே! நீங்கள் யுத்தத்தைவிட்டுத் திரும்புங்கள். பிராம்மணர்களிடத்தில் குரூரகாரியம் எதற்கு? இந்தப் பிராம்மணர்கள் பலஹீனர்கள். நீங்களோ மஹாபலசாலிகள்; இங்கே இரண்டு பிராம்மணர்கள் கொடியவர்கள்; பலத்தில் வாயுவுக்கும்இந்திரனுக்கும் ஒப்பானவர்கள். அவர்கள்யாராயிருந்தாலும் பிராம்மணர்களுக்குநமஸ்காரம்; நாம் நமது நகரம்செல்வோம்" என்றுகௌரவர்கள்சொன்னார்கள். இவ்வாறு சொல்லிக்கொண்டே அவர்கள் யுத்தத்தைவிட்டுப் போயினர். பிராம்மணர்கள் ஆங்காங்கு கூட்டம் கூட்டமாகச்சேர்ந்து மகிழ்ந்தனர். அப்போது அந்தப்போர் முனையில்நின்றபிராம்மணர்களே அங்குள்ள க்ஷத்திரியர்கள் அனைகர் பார்த்துக்கொண்டு நாற்புறத்தும் நின்றனர். பிராம்மணர்களும் வெற்றியடைந்துகன்னிகையை யழைத்துக்கொண்டு புறப்பட்டனர். பீமஸேனனால் சல்லியன் ஜயிக்கப்பட்டும்கர்ணன் தோற்றும் துரியோதனனும் துச்சாஸனனும் சண்டையிலிருந்து ஓடிபும்போனபோது எல்லா அரசர்களும் பயந்து பீமஸேனனைச் சுற்றிக்கொண்டனர். அவர்கள்.அங்கேசேர்ந்து, "இந்தப் பிராமணச்ரேஷ்டர்கள் இருவரும் எங்கே ஜனித்தவர்கள்; எவ்விடத்தில் வஸிப்பவர்களென்று செம்மையாக அறியவேண்டும். பரசுராமரையும் துரோணரையும் பாண்டவனை கிரீடியையும் தேவகீபுத்திரரானகிருஷ்ணபகவானையும்சாரத்வதரான கிருபாசாரியரையும் தவிர ராதாபுத்திரனை கர்ணனையுத்தத்தில் எதிர்க்கவல்லவனெவன்? துரியோதனனைத்தான் யுத்தத்தில் எதிர்த்துச் சண்டைசெய்யவல்லவன் யாவன்? அவனாலே பலவான்களிற் சிறந்த மத்திரதேசாதிபதியான சல்லியனை யுத்தத்தில் கீழேவீழ்த்துவதற்கு வல்லவன், வீரரான பலராமரையும் பாண்டவனுனபீமனையும் வீரனுன துரியோதனனையும் தவிர வேறு எவன் இருக்கிறான்? பிராம்மணர்கள் நிரம்பின இந்தச்சண்டையிலிருந்து சேஷனைத் திருப்பவேண்டும்.பிராம்மணர்கள்குற்றவாளிகளாயிருப்பினும் எந்தக்காலத்திலும்அவசியம்காப்பாற்றப்படவேண்டியவர்கள்.அதனால்இங்கே இவர்களைத் தெரிந்துகொண்டு பிறகு உற்சாகத்துடன் யுத்தஞ்செய்வோம்" என்று சொன்னார்கள். பீமார்ச்சுனர்கள் யுத்தத்தில் அந்தச்செய்கையைச் செய்தபிறகு அவ்வாறுபேசிக்கொண்டிருந்த அவ்வரசர்களையும் மற்றமனிதர்களையும்பார்த்து ஒன்றும் பேசாமலிருந்தனர். பீமஸேனனுடைய அந்தச்செய்கையைக் கண்டபின் அவ்விருவரை

யும் குந்திபுத்திரர்களென்று நினைத்துக் கண்ணபிரான் அவ்வரசர்களனைவரையும் அழைத்து, "திரௌபதி தர்மமாகவே அடையப்பட்டவள்" என்றுசமாதானஞ்செய்து யுத்தஞ்செய்யாமல் தடுத்தார். யுத்தத்தில்ஸமர்த்தர்களான அந்தராஜச்ரேஷ்டர்களெல்லாரும்இவ்வாறு யுத்தத்தைவிட்டு நீங்கி வியப்புடன் (தம்தம்) இடங்களுக்குச்சென்றனர். அவ்விடத்தில் வந்திருந்தவர்கள் "ஸ்வயம்வரமண்டபத்தில், பிராம்மணர்கள் மேன்மைஅடைந்துவிட்டார்கள். பாஞ்சாலி பிராம்மணர்களால் அடையப்பட்டாள்" என்று சொல்லிக்கொண்டு சென்றனர். மான்தோலுடுத்திய பிராம்மணர்களால் சூழப்பட்ட அந்தப்பீமார்ச்சுனர்கள் பிரயாஸத்தினால் அங்கிருந்து வெளிப்பட்டனர். சத்ருக்களினால் விசேஷமாகப் புண்பட்டவர்களும் கிருஷ்ணையினால் பின்தொடரப்பட்டவர்களுமாகிய அந்த இரண்டு வீரபுருஷர்களும் ஜனக்கூட்டத்திலிருந்து விடுபட்டுப் பூர்ணசந்திரனும் ஸூர்யனும் ஏககாலத்தில் உதயமாகி மேகங்களினால் விடுபட்டதுபோல் விசேஷமாகப்பிரகாசித்தனர். அவர்களின் தாயாரான குந்தி பிக்ஷைக்குக் காலங்கடந்தும் தன்புத்திரர்கள் வராமலிருந்தபோது அவர்களின் நாசத்தைப் பற்றியேபலவகைகளால்சிந்தையுற்றுள்புத்திரவாஞ்சையினால்மதிமயங்கின அவள், "கௌரவச்ரேஷ்டர்களான என்புத்திரர்கள்க்ருராஷ்டிர புத்திரர்களால் றியப்பட்டுக் கொல்லப்பட்டிருப்பரோ? அல்லது மாயாவிகளான மிகக்கொடிய ராக்ஷஸர்களால் பழைய விரோதம்பற்றிக் கொல்லப்பட்டிருப்பரோ? மஹாத்மாவான வியாஸருடைய நிச்சயங்கூட மாறுகிவிட்டதே" என்று இவ்வாறுசிந்தித்தாள். பிறகு மேகங்கள் மூடி ஜனங்கள் தூங்கினதுபோல் வெளிப்படாமல் ஓய்ந்துபோயிருந்த மழைகாலாகிய அந்தத்தினத்தில் ஸாயங்காலவேளையில் மேகங்களால் மூடப்பட்ட ஸூர்யனைப்போல் பிராம்மணர்களால் சூழப்பட்ட அர்ச்சுனன் அந்தக்குயவன் சாலையில் பிரவேசித்தான்.

இருநூற்றுமுப்பத்தியாயம்

ஸ்வயம்வரபர்வம். (தொடர்ச்சி.)

(பீமார்ச்சுனர்கள் திரௌபதியைப் பிட்சையென்று தெரிவித்ததைக்கேட்டு குந்தி "ஐவர்களும் சேர்ந்து புஜியுங்கள்" என்றுசொன்னதும், பிறகு திரௌபதியைக்கண்டு மிகவும் வியாகுலப்படும்போது யுதிஷ்டிரரும் அர்ச்சுனனும் பேசிக்கொண்டதும், கிருஷ்ணத்வைபாயனர் வசனத்தை நினைத்து ஸஹோதரர் எல்லோருக்கும் திரௌபதி மனைவியென்று யுதிஷ்டிரர் நிச்சயித்ததும் குயவன் வீட்டிற்குக் கிருஷ்ணபகவான் வந்ததும்.)

மஹானுபாவர்களும் புருஷச்ரேஷ்டர்களுமான பீமார்ச்சுனர்கள் அந்தக் குயவனுடைய வேலைச்சாலைக்குப்போய்க் குந்தியிடம்

சென்று மிகுந்த ஸந்தோஷத்துடன் அந்தத் திரௌபதியைப்பிக்ஷை யென்று தெரிவித்தனர். குந்தி வீட்டுக்குள்ளிருந்தபடி பார்க்காமலே, "எல்லோரும் சேர்ந்து புஜியுங்கள்" என்று அந்தப் புத்திரரிருவருக்கும் சொல்லினள். பிறகு கிருஷ்ணையைக்கண்ட குந்தி, "நான் தீங்காகச் சொல்லிவிட்டேன்" என்று சொன்னள். பாபத்தில் பயந்தவளாகிய அந்தக்குந்தி சிந்தையுற்று மிகவும் பிரியப்படத்தக்க அந்தத் திரௌபதியைக் கையிற் பிடித்துக்கொண்டு யுதிஷ்டரரிடம் சென்று, பின்வருமாறு சொல்லலானள்.

"புத்திரனே! ராஜாவே! இந்தத்ருபத ராஜபுத்திரி உன்தம்பிகளினால் என்னிடம் ஒப்புவிக்கப்பட்டாள். நானும்பார்க்காமல், 'சேர்ந்து புஜியுங்கள்' என்று வழக்கம்போற் சொல்லிவிட்டேன். கௌரவச்ரேஷ்டனே! இப்போது நான் பொய்சொன்னதாக இல்லாமலிருப்பது எவ்வாறு நேரிடும்? இந்தப்பாஞ்சால ராஜபுத்திரிக்கு அதர்மம் எவ்வாறு வராமலிருக்கும்? இவள் எவ்வாறு தவறுதலில்லாமலிருப்பள்? நீ சொல்" என்றுள். சிறந்த புத்திசாலியும் புருஷச்ரேஷ்டரும் கௌரவவீரருமான தர்மராஜா தாயாரால் இவ்வாறு சொல்லப்பட்டபோது சற்றுநேரம் ஆராய்ந்து குந்தியைச் சமாதானஞ்செய்து, தனஞ்சயனைப்பார்த்து, "பல்குனனே திரௌபதி உன்னாலேதான் பந்தயத்தில் ஜயிக்கப்பட்டாள். இந்த ராஜபுத்திரி உன்னாலேதான் பிரகாசிக்கப்போகிறாள். எதிரிகளை ஜயிப்பவனே! அக்கினி சாக்ஷியாகச் சாஸ்திரப்படி நீ இவளைப் பாணிக்ரஹணஞ்செய்துகொள்" என்றார். அர்ஜுனன், "ராஜாவே! என்னைப் பாவத்துக்குரியவனாகநீர் செய்யத்தகாது. இது தர்மமாகாது. இது பெரியோர்களால் அங்கீகரிக்கப்பட்டதன்று. முதலில் நீரும், உமக்குப்பிறகு சிறந்தகைகளையுடையவனும் நினைத்தற்கரியசெய்கையையுடையவனுமாகிய இந்தப்பீமனும், அவனுக்குப்பிறகு நானும், எனக்குப்பின் நகுலனும், பின்பு பலசாலியான இந்த ஸஹதேவனும் விவாஹஞ் செய்துகொள்ளுதற் குரியவர்கள். ராஜாவே! பீமனும்நானும் நகுலஸஹதேவர்களும் இந்தப்பெண்ணும் உமது கட்டளைக்குட்பட்டவர்கள். இப்படி இவ்வாறிருக்கையில் தர்மத்திற்கும் புகழுக்கும் எது தகுதியோ, பாஞ்சால ராஜனுக்கும் எதுநன்மையோ அதனை ஆராய்ந்து நீர்செய்யவேண்டும். எங்களுக்குக் கட்டளையிடும். நாங்களனைவரும் உமக்குட்பட்டிருக்கிறோம்." என்று சொன்னன். பக்தியோடும் ஸ்நேகத்தோடும் சேர்ந்த அர்ஜுனனுடைய சொல்லைக்கேட்டுப் பாண்டவர்கள் பாஞ்சாலியின்மீது பார்

வையை வைத்தனர். அங்கே உட்கார்ந்து கொண்டிருந்த அவர்களெல்லாரும் பார்த்துக்கொண்டிருக்கும் புகழ்பெற்ற கிருஷ்ணையைக் கண்டு ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டு அவளை உள்ளத்தில் நிறுத்தினர். திரௌபதியைக்கண்டபிறகு அந்த அளவற்ற பிராக்ரமமுள்ள அனைவர்க்கும் ஐம்புலன்களையும் கலக்கிக்கொண்டு மன்மதன் ஆவிர்ப்பவித்தான். பாஞ்சாலியின்ரூபம் ஆசைப்படத்தக்க தாகவே பிரம்மதேவரால் தம்இஷ்டப்படிசிருஷ்டிசெய்யப்பட்டது. அஃதுஎல்லாப்பிராணிகளின் உள்ளங்களையும் கவருவதாகவும் மற்றப்பெண்களின் உருவங்களிலெல்லாம் சிறந்ததாகவுமிருந்தது. புருஷச்ரேஷ்டரும் குந்திபுத்திரருமான யுதிஷ்டிரர் அவர்களின் எண்ணங்களைக் குறிப்புக்களினால் தெரிந்துகொண்டு வியாஸர் சொன்னதை முழுதும் நினைத்தார். அந்தத்தர்மபுத்திரர் ஒருவர்க்கொருவர் விரோதம் வருமென்ற பயத்தினால் ஸஹோதரரெல்லாரையும் பார்த்து, 'சிறப்புள்ள திரௌபதி நம்மெல்லோருக்கும் பாரியையாவாள்' என்றார்" என்று சொன்னர்.

ஜனமேஜயர், "கிருஷ்ணன் சக்தியுள்ளவராகஇருந்தும் அவரால் ஏன் வில் நாணேறிடப்படவில்லை? என்னகாரணம்பற்றி அந்தலக்ஷியம் அவரால்அடிக்கப்படவில்லை? புருஷச்ரேஷ்டரே! அதனைஎனக்குச்சொல்லும்" என்றுகேட்க,வைசம்பாயனர்சொல்லுகிறார்.கிருஷ்ணன் சக்தியுள்ளவராயிருந்தும் பாண்டவர்களைத்தெரிந்து கொள்ள விரும்பினதினால் அந்தவில்லைநாணேறிடவில்லை. கேள்வியினால் மட்டும் பாண்டவர்கள் இவ்வுலகத்தில் ஜீவித்திருக்கின்றனரென்று அவர் நிச்சயித்திருந்தார். உத்தமமானவில்லோடு கூடிய அந்தஸ்வயம் வரத்தில் மற்ற அரசர்கள் அசக்தர்களென்பதைக்கண்டறிந்து,ஒப்பற்றவீரனுகிய தனஞ்ஜயன்தான் அந்தவில்லை நாணேறிவனென்றும் ஊகித்து வஸுதேவபுத்திரராகிய கண்ணபிரான்அனேகஉபாயங்களினால்பாண்டவர்களைத் தெரிந்துகொள்ள விரும்பிப் பார்த்துக்கொண்டு அந்த வில்லைத் தாம் நாணேறிடக்கருதாமலிருந்தார். பார்த்தர்கள் இவருக்குமிகப்பிரியர்களாயிருந்தார்களன்றோ? அப்போது பாண்டவர்களனைவரும் தங்கள் ஜ்யேஷ்டஸஹோதரரான தர்மராஜருடைய சொல்லைக் கேட்டு அதே விஷயத்தைஉள்ளத்தில்நினைத்து உற்சாகங்குறையாமலிருந்தார்கள்.விருஷ்ணிவீரராகிய கிருஷ்ணபகவான் அவர்களைக் கௌரவவீரர்களென்று நினைத்துப் பலராமருடன் கூட அந்தப்புருஷச்ரேஷடர்கள் வஸிக்கும் அந்தக்குயவனுடைய வேலைச் சாலைக்குச் சென்றார். அங்கே வீற்றி

ருந்த பெருத்தும் நீண்டு மிருக்கும் கைகளோடு கூடிய* அஜாதசத் ருவையும் அவரைச்சுற்றி ஸமீபத்திலுட்கார்ந்திருக்கின்ற அக்கினியைப்போலப் பிரகாசிக்கும் அந்தப்பாண்டவர்களையும் பலராமருடன் கூடிய கிருஷ்ணன் கண்டார். பிறகு வாஸுதேவர் தர்மிஷ்டர்களில் மிகச்சிறந்தவரும் குந்திபுத்திரருமான யுதிஷ்டரரிடம் சென்று அஜமீடவம்சத்துராஜாவாகிய அவருடைய பாதங்களில் வந்தனஞ் செய்து, "நான் கிருஷ்ணன்" என்று சொன்னார். அவருக்குப் பின் பலராமரும் அவ்வாறே சொன்னார். அவ்விருவரையும் கௌரவர்கள் மகிழ்ந்து கொண்டாடினர். பரிருஷச்ரேஷ்டரான ஜனமேஜயரே! அந்த யதுவீர்களிருவரும் தமது தந்தையின் ஸஹோதரியான குந்தியையும் பாதவந்தனம் செய்தனர். கௌரவவீரராகிய அஜாதசத்ருவும் கிருஷ்ணைக்கண்டு குசலப்ரச்னஞ்செய்தார். "வாஸுதேவா! இவ்விடத்தில் யாருக்கும் தெரியாமல் மறைந்து வசிக்கும் நாங்களெல்லாரும் உம்மால் எவ்வாறு கண்டறியப்பட்டோம்" என்றுகேட்க, அவரைப்பார்த்துக் கிருஷ்ணன் சிரித்துக்கொண்டு, "ராஜாவே! அக்கினி பரைந்திருந்தாலும் அது வெளியில் அறியமேவபடும். பாண்டவர்களே மிஞ்சி அந்தப்பராக்கிரமஞ் செய்கிறவன் மனிதர்களில் வேறு யாரிருக்கிறார்? சத்துருக்களை ஜயிப்பவராகியபாண்டவர்களே! நல்லகாலம்; நீங்களிவரும் அந்தக்கொடிய தீயிலிருந்து விடுபட்டீர்கள். நல்லகாலத்தினால் பாபிஷ்டனை திருதராஷ்டிரபுத்திரனும் அவன் மந்திரிகளும் எண்ணம் நிறைவேறுமுன் போனார்கள். உங்களுடைய க்ஷேமம் குகைக்குள் வைக்கப்பட்டதுபோல ரகஸ்யமாயிருக்கட்டும். (பிறகு) ஜ்வலிக்கின்ற அக்கினியைப்போல் விருத்தியையடையுங்கள். ராஜாக்கள் யாரும் உங்களை அறியாமலிருக்க வேண்டும். நாங்களிருவரும் விடுதிக்கே திசல்வோம்" என்று சொன்னார். பாண்டுபுத்திரரான தர்மபுத்திரரால் விடைகொடுக்கப்பெற்று நித்தியஸ்ரீயுள்ள கிருஷ்ணபகவான் பலதேவருடன் கூட விரைவாகச்சென்றார்.

---

* தர்ம புத்திரர்.

இருநூற்றேழாவது அத்தியாயம்.

ஸ்வயம்வரபர்வம். (தொடர்ச்சி.)

(பாண்டவர்கள் வஸிக்கும்இடத்தில் திருஷ்டத்யும்னன் ஒளிந்திருந்ததும், பீமன்முதலானவர்கள் கொண்டுவந்த பிக்ஷையைக் குந்தியின் கட்டளையினால் திரௌபதி பரிமாறினதும், பாண்டவர்களுடையசரித்தாந்தங்களைத் தெரிந்து கொண்டு திருஷ்டத்யும்னன் திரும்பிச் சென்றதும்)

கௌரவச்சேரஷ்டர்களான பீமார்ச்சுனர்கள் குயவன்சாலைக்குப் போகும்போதே துருபதபுத்திரனான திருஷ்டத்யும்னனும் அவர்கள் பின்னாலேயே தொடர்ந்து சென்றான். அவன் யாருக்கும் புலப்படாமல் நாலுபக்கமும் மனிதரைக் காவல்வைத்து, தான் குயவன் சாலையில் அவர்களுடைய ஸமீபத்தில் ஒளிந்துகொண்டிருந்தான். சத்துருக்களைக் கொல்லுகிறவனாகிய பீமனும் அர்ச்சுனனும் மஹாணுபாவர்களான நகுலஸஹதேவர்களும் பிக்ஷையெடுத்து மகிழ்ந்த மனமுள்ளவர்களாக யுதிஷ்டிரரிடம் ஒப்புவித்தனர். அந்தக் காலத்தில் உதாரகுணமுள்ளகுந்தி அந்தத்திரௌபதியை நோக்கி, "பிரியமானவளே! அதில் முதல் பாகத்தையெடுத்துப் பலியையும் பிராம்மணபிக்ஷையையும் கொடு. எவர்கள் அன்னத்தை வேண்டுகின்றனரோ அவர்களுக்கும் எந்தமனிதர் நம்மைச்சுற்றி அடுத்திருக்கின்றனரோ அவர்களுக்கும் அன்னத்தைக் கொடு. இனியவளே! அதன்மிச்சத்தை உடனே இரண்டாகப்பகுத்து அதிலொருபாதியை என் நாலுபுத்திரர்களுக்கும் எனக்கும் உனக்குமாகவும் மற்றொருபாதியைப் பீமனுக்காகவும் பிரித்துக்கொடு. மஹாகஜத்துக்கும் விருஷபத்துக்கும் ஒப்பான ரூபமுள்ளவனும் பசுமை நிறமுள்ளவனும் தேகக்கட்டுள்ளவனும் வீரனுமான இந்த யுவா எப்போதும் மிகுதியாகப் புஜிப்பவன்" என்ற சொல்லைச்சொன்னாள். கற்புள்ளவளான அந்த ராஜபுத்திரியும் மிகுந்த ஸந்தோஷத்துடன் சங்கைப்படாமல் அவள்சொன்னதைச் சொன்னபடி ஒழுங்காகச் செய்தாள். அவர்களனைவரும் அந்த அன்னத்தைப் புஜித்தனர். தவத்திற் சிறந்த மாத்ரிபுத்ரனான ஸஹதேவன் பூமியில் தர்ப்பங்களினால் படுக்கையையமைத்தான். பிறகு அந்த வீரர்களனைவரும் தங்கள் கிருஷ்ணாஜினங்களை அதன்மேல் விரித்துத்தரையில் படுத்தனர். அந்தக்குருச்சேரஷ்டர்களின் சிரங்கள் அகஸ்தியருக்குப் பிரியமான தென்திசையை நோக்கியிருந்தன. அவர்கள் சிரங்க

ளுக்குமுன் சுந்தியிருந்தாள். அவளுக்குப்பின் அவர்களின் பாதங்களின் கடையில் கிருஷ்ணையிருந்தாள். அந்தத்திரௌபதி பாண்டவர்களுக்குக் காலணியாகப் போடப்பட்டவள்போல் அவர்களுடன் கூட தரைமேல் தர்ப்பங்களில் படுத்தாள். அந்த விஷயத்தில் அவள்மனத்துக்குள்ளேயும் துன்பமுண்டாகவில்லை. அவள் அந்தக் கௌரவச்ரேஷ்டர்களைக் குறைவாகவும் நிணைக்கவில்லை. அவ்விடத்தில் அந்தச் சூரர்கள் சேணைகளைப்பற்றியும் திவ்வியாஸ்திரங்களைப்பற்றியும், தேர்கள் யாணைகள் கத்திகள் கதைகள் கோடாலிகளைப்பற்றியும், அருமையான ஸம்பாஷணைகளைச் செய்துகொண்டிருந்தனர். அப்போது அவர்கள் பேசின அந்த ஸம்பாஷணைகளைத் துருபதன் புத்திரனை திருஷ்டத்யும்னன் செவியுற்றான். திரௌபதி அவ்வாறு படுத்திருப்பதை அவனும் அவனுடன் வந்த மனிதர்களும் எல்லாரும் பார்த்தனர். ராஜபுத்ரனுகிய திருஷ்டத்யும்னன் ராத்திரியில் அவர்களுடைய நட்சத்திரங்களையும் ஸம்பாஷணைகளையும் முழுதும் விடாமல் த்ருபதராஜாவுக்குத் தெரிவிப்பதற்காக விரைவாகச் சென்றான். மஹாத்மாவான பாஞ்சாலராஜன் அவர்களைப் பாண்டவர்களென்று நியாமல் மிக்க துயரமுற்றவனுகத் திருஷ்டத்யும்னனைப் பார்த்துக் கேட்கத்தொடங்கினன். "அந்தக்கிருஷ்ணை எங்கேபோனுள்? யாராற் கொண்டு போகப்பட்டாள்? ஹீனஜாதியிற் பிறந்த சூத்திரனுலேயும் கப்பங்கட்டுகிற வைசியனுலேயும் அடையப்படாம விருக்கிறளா? சேற்றுக்கால் நம்தலையில் படாமலிருக்கிறதா? புஷ்பமாலைஸ்மசானத்தில் விழாமலிருக்கிறதா? அந்த மனிதன் சிறந்தகூத்திரியவம்சத்தைச் சேர்ந்தவனு? அல்லது மேல்வருணத்தோனுகிய பிராம்மணனேதானு? புத்திரனே! கிருஷ்ணையைத் தொட்டவனுல் எனது தலையில் அவன் இடக்கால் வைக்கப்படாமலிருக்கிறதா? நான் பரிதபிக்காமல், புருஷச்ரேஷ்டனை அர்ச்சுனனுடன் சம்பந்தஞ்செய்து மிகுந்த ஸந்தோஷமுற்றிருப்பேனு? இப்போது என்பெண்ணைப் பந்தயம் ஜயித்தவன் யார்? குருவம்சத்து வீரனும் விசித்திரவீரியன்மைந்தனுமாகிய பாண்டுவின் புத்திரர்கள் பிழைத்திருக்கிறார்களா? குந்தி புத்திரர்களில் இளையவனை அர்ச்சுனனுல் இப்போது வில்லெடுக்கப்பட்டு லக்ஷியம் அடிக்கப்பட்டதா? சிறந்த பிரபாவமுள்ளவனே! உண்மையை உரை" என்றான்.

ஸ்வயம்வரபர்வம் முற்றிற்று.

இருநூற்றெட்டாவது அத்தியாயம்.

வைவாஹிக பர்வம்.

(திருஷ்டத்யும்னனுடைய வார்த்தையைக்கேட்டு த்ருபதன் உண்மையைத் தெரிந்துகொள்ளுநிமித்தம் புரோஹிதரை யனுப்பியது.)

ஸோமகர்களில் முதன்மையான ராஜபுத்திரனுகிய த்ருஷ்டத்யும்னன் பிதாவினுல் அவ்வாறு கேட்கப்பட்டவுடன் மிகுந்த ஸந்தோஷமுற்று அந்தவிஷயம் எவ்வாறு நடந்ததென்பதையும் கிருஷ்ணையை அழைத்துக்கொண்டு போனவன் யாரென்பதையும் தன்தந்தைக்கு உரைக்கலானன். "சிறுபிள்ளையும் நீண்டும் சிவந்துமிருக்கின்ற கண்களையுடையவனும் கிருஷ்ணாஜினம் தரித்தவனும் தேவதைக் கொப்பான ரூபமுள்ளவனுமாகிய எவன் அந்தச்சிறந்தவில்லை நாணேற்றிட்டு அந்த லக்ஷியத்தைப் பூமியில் விழச்செய்தானே அந்தவீரன், ப்ராம்மணச்ரேஷ்டர்களாற்சூழப்பட்டும் கௌரவிக்கப்பட்டும், அசுரர்களை ஜயித்தபோது தேவர்கள் முனிவர்களினவராலும் பூஜிக்கப்பெற்ற * வஜ்ரபாணியைப்போல் உற்சாகத்துடன் சென்றன். கிருஷ்ணை அவனுடைய கிருஷ்ணாஜினத்தைப் பிடித்துக்கொண்டு பெண்யானை ஆண்யானையையனுஸரிப்பதுபோல் மகிழ்ந்து அவன் பின் சென்றுள். கருநிறமுள்ளவனும் சிறுபிள்ளையும் மதயானைபோல் நடப்பவனுமாகிய எவனொருவன் அந்தச் செயற்கரிய பெருங்காரியத்தைச் செய்தபிறகு கர்ணனென்று யுத்தம்செய்தானே தேவேந்திரனுக்கொப்பான சூரத்தன்மையுள்ள அவனை அர்ச்சுனனென்று நினைக்கிறேன். ராஜாக்கள் பொறுமையுற்றுக் கோபத்துடன் அங்கே சேர்ந்தபோது அவனுக்கடுத்திருந்தவன் பெருமரத்தை பிடுங்கி ராஜாக்களின் கூட்டத்தின் நடுவிலிருந்துகொண்டு அம்மரத்தினுல்அரசர்களின் கூட்டங்களை யமன்பிராணிகளைத் தரத்துவதுபோலத் தரத்தினனே அவன் பீமன். ராஜாவே எதிர்த்துப்பார்க்கமுடியாத ரூபமுள்ள அந்தப் புருஷச்ரேஷ்டர்களிருவரும் ராஜாக்கள் பார்த்துக்கொண்டிருக்கையிலேயே அவ்வரசர்களைத் தங்கள் பராக்கிரமத்தினல் கலக்கியும் ஓட்டியும் சந்த்ரஸூர்யர்களைப்போல் பிரகாசிப்பவர்களாகக். கிருஷ்ணையை யழைத்துக்கொண்டு நகரத்துக்கு வெளியிலுள்ள குயவனுடைய வேலைச்சாலையை அடைந்தனர். ஸமீபத்தில்

* இந்திரன்.

உட்கார்ந்தவர்களும் அக்கினிக்கு நிகரானவர்களுமாகிய அவர்களைப் போன்ற மூன்று வீரபுருஷர்களுடன் அக்கினிஜ்வாலைபோல் அங்கே உட்கார்ந்திருந்தவள் அவர்களுடைய தாயாரென்று எனது ஊகம். அவர்களிருவரும் உடனே அவளுக்குப் பாதவந்தனஞ்செய்து கிருஷ்ணையையும் வந்தனஞ்செய்யச்சொல்லிக் கிருஷ்ணையை அவளிடம் ஒப்புவித்து அங்கேயேநின்றனர். பிறகு அந்தப் புருஷச்ரேஷ்டர்கள் பிக்ஷையெடுப்பதற்குச் சென்றனர். அவர்களுடைய பிக்ஷைகளைக் கிருஷ்ணைவாங்கிக்கொண்டு பலிகொடுத்தபிறகு பிராம்மணர்களுக்கும் அன்னம் கொடுத்து அந்தப்பெரியவளுக்கும் அந்த வீரர்களுக்கும் பரிமாறித்தானும் புஜித்தாள். ராஜாவே! அவர்களனைவரும் படுத்த பிறகு கிருஷ்ணையும் அவர்களின் காற்பக்கத்தில் படுத்தாள். அவர்களுடைய படுக்கை பூமியில் தர்ப்பங்களின்மேல் உயர்ந்ததோல் விரிப்புடன் கூடியதாயிருந்தது. அவர்கள் கர்ச்சிக்கின்ற காளமேகங்களைப்போலப் பலவிதமான ஸம்பாஷணைகளைச் செய்தனர். அந்த வீரர்கள் வைசிய சூத்திரர்களுக்குரிய பேச்சுக்களையும் பிராம்மணர்களுக்குரிய பேச்சுக்களையும் பேசவில்லை. ராஜாவே! அவர்கள் யுத்தத்தைப்பற்றிப் பேசினதனால் அவர்கள் க்ஷத்திரியச் ரேஷ்டர்களென்பது திண்ணம். நம்முடைய இந்தவிருப்பம் பூர்த்தியாகிவிட்டது; ஸந்தேஹமில்லை. பாண்டவர்கள் தீப்பற்றிக்கொண்டதிலிருந்து விடுபட்டதைக் கேள்விப்படுகிறோமல்லவா? அவன் தன்பலத்தினால் அந்த வில்லை நாணேற்றினதனாலும், லக்ஷ்யத்தையடித்ததனாலும், அவர்கள் ஒருவருக்கொருவர் ஸம்பாஷணைசெய்யும் வகையினாலும் அவர்கள் மறைந்துதிரிகிற பாண்டவர்களென்பது நிச்சயம்".என்றான். அதன்பிறகு திருபதராஜன் மிகுந்த ஸந்தோஷத்துடன், "நீங்கள் மஹாத்மாக்களாகிய பாண்டவர்களா? உங்களை நாங்கள் தெரிந்துகொள்ளவேண்டும்" என்று தான் கேட்பதாகச்சொல்லும்படி, புரோஹிதரை அவர்களிடம் அனுப்பினான். புரோஹிதர் ராஜாவின்சொல்லைக்கேட்டு அவர்களிடஞ்சென்று அவர்களைத்துதிசெய்து ராஜா சொன்னதையெல்லாம் சொன்னபடி வரிசையாகத் தைரியத்துடன் சொல்லத் தொடங்கினர்.

"வரங்கள்பெறத் தகுதியுள்ளவர்களே! வரங்களைக்கொடுக்கத்தக்க பூமிக்கரசனாகிய பாஞ்சாலராஜன் உங்களைத் தெரிந்துகொள்ள விரும்புகிறான். லக்ஷ்யத்தையடித்த இந்தப் புருஷனைக்கண்ட பிறகு அந்த ராஜா ஆனந்தத்தின் எல்லையைக்காணவில்லை. நீங்கள்பிறந்த

வம்சபரம்பரையைச்சொல்லுங்கள். பகைவர்களின் சிரங்களில் பாதங்களை யூன்றுங்கள். இந்த என் உள்ளத்தையும் சுற்றத்தாருடன் கூடிய பாஞ்சாலராஜன் உள்ளத்தையும் மகிழச்செய்யுங்கள். பாண்டுமஹாராஜா த்ருபதமஹாராஜாவுக்கு உயிருக்கொப்பான அன்புள்ள நண்பராயிருந்தார். அந்தத் துருபதமஹாராஜாவுக்கு, "இந்த எனது புத்திரி இப்போது பாண்டுவுக்கு மருமகளாவள்" என்கிற ஆசையிருக்கிறது. சிலாக்பமானருபமுள்ளவர்களே! 'பருத்தும் நீண்டுமிருக்கிற கைகளையுடைய அர்ச்சுனன் தர்மப்பிரகாரம் எனது இந்தப்பெண்ணை அடைவானு? என்ற இந்தவிருப்பந்தான்துருபதராஜன் உள்ளத்தில் எப்போதுமுள்ளது. அதுவே இப்போது நடத்திருந்தால் இஃது எனது பாக்கியம்; எனக்குப்புகழ்; என்னுடைய புண்ணியம்; எனக்குப்பிரியம்' என்றுத்ருபதராஜன் சொல்லுகிறான்" என்றார். இவ்வாறு த்ருபதன் சொன்னதைச்சொல்லி வணக்கத்துடன் அங்கேநின்ற அந்தப்புரோஹிதரைக்கண்டு தர்மபுத்திரர் ஸமீபத்திலிருந்த பீமனைநோக்கி, "இவருக்கு அர்க்கியபாத்யங்களைக் கொடு. இவர் பூஜ்யரான த்ருபதராஜாவின் புரோஹிதர். இவருக்கு விசேஷமான பூஜைசெய்யவேண்டும்." என்று கட்டளையிட்டார். ஜனமேஜயராஜாவே! உடனே பீமன் பூஜைசெய்தான். அப்போது அந்தப்பூஜையைச் சந்தோஷத்துடன் பெற்றுக்கொண்டு ஸுகமாக உட்கார்ந்த புரோஹிதப்பிராம்மணரை நோக்கி, யுதிஷ்டிரர் பின்வருமாறு சொல்லலானார்.

"பாஞ்சாலராஜனால் தர்மத்தைப்பார்த்துப் பெண் கொடுக்கப்பட்டாள். மனவிருப்பப்படி கொடுக்கப்படவில்லை. அந்த வீரனான துருபதராஜாவினால் அவளுக்குப் பந்தயம் நிச்சயிக்கப்பட்டது. அவள் அதனையே அனுஸரித்தாள். அந்தப்பந்தயத்தில் வருணம் குலம் கோத்திரம் ஒழுக்கங்களைப்பற்றி வ்யவஸ்தை செய்யப்படவில்லை. வில்லைநாணேற்றுவதனாலும் லக்ஷியத்தையடிப்பதனாலும் அந்தக்கன்னிகை கொடுக்கப்படுவதாகச் சொல்லப்பட்டாள். அவ்வாறுகவே இந்தமஹாத்மாவினால் இந்தக்கிருஷ்ணை ராஜக்கூட்டத்தின் நடுவில் ஜயிக்கப்பட்டாள். இவ்வாறு நடந்திருக்க ஸோமகவம்சத்து ராஜா இப்போது தூயரமுண்டாகும்படி பின்மனஸ்தாபம் வைத்துக்கொள்வது ஸரியன்று. பூமிக்குத்தலைவனாகிய துருபதமஹாராஜனுடைய விருப்பம் எதுவோ அதுவும் பூர்த்தியாகும். பிராம்மணரே! இந்தராஜபுத்திரி பிரசஸ்தமாக அங்கீகரிக்கத்தக்கவளாகவே ஆனை

னென்று நான் உறுதியாக நினைக்கிறேன். அந்தவில் குறைந்தசக்தி யுள்ளவனுல் நாணேற்றப்பட இயலாது. அவ்வாறுகவே அஸ்திரத்தேர்ச்சியில்லாதவனுலும் ஈனசாதியிற் பிறந்தவனுலும் அந்தலக்ஷியம் கீழேதள்ளவும் சாத்தியமில்லை. ஆதலால் பாஞ்சாலராஜன் இனிப் பெண்ணைப்பற்றித் துன்பப்படுவதற்குரியவனல்லன். இவ்வாறன்றி ஸாமான்ய மனிதனுல் அந்த லக்ஷியம் இப்பூமியில் தள்ளப்படுவது அஸாத்யம்" என்றார். இவ்வாறு யுதிஷ்டிரர் சொல்லிக்கொண்டிருக்கும்போதே பாஞ்சால ராஜனிடமிருந்து மற்றொரு இரண்டாவது மனிதன் அங்கேயே அன்னம் ஸித்தமாயிருப்பதாகத் தெரிவிப்பதற்கு விரைவாக அங்கேவந்தான்.

இருநூற்றுஞ்சேன்பதாவது அத்தியாயம்.

வைவாஹிகபர்வம் (தொடர்ச்சி.).

(குந்தியுடன் பாண்டவர்கள் த்ருபதன் வீட்டுக்குச்சென்றதும், த்ருபதன் பரீக்ஷிப்பதற்காகப் பலவஸ்துக்களைக் கொண்டுவந்ததும், திரௌபதியுடன் குந்தி அந்தப்புரம் சென்றதும் போஜனமானபின்பு பாண்டவர்கள் யுத்தத்துக்குரிய ஆயுதங்கள் நிரம்பின இடத்தில் பிரவேசித்ததும்.)

த்ருபதராஜனுல் அனுப்பப்பட்டதூதன் "விவாஹகாரியத்தைப் பற்றி வரணைச்சேர்ந்தவர்களுக்குத் த்ருபதமஹாராஜாவினுல் அன்னம் சிறப்பாகச் செய்விக்கப்பட்டிருக்கிறது. நீங்கள் எல்லாக்காரியங்களையும் முடித்துக்கொண்டு அதனை அங்கிகரியுங்கள். க்ருஷ்ணையும் அங்கே வரட்டும். கால விளம்பம் செய்ய வேண்டாம். பொற்றுகரைப் புஷ்பங்களினுல் விசித்திரங்களாகவும் உயர்ந்த குதிரைகள் பூட்டினவையாகவும் இருக்கின்ற, அரசர்களுக்குத் தகுதியான ரதங்கள் இருக்கின்றன. நீங்கள் எல்லோரும் இவற்றின் மேலேறிப் பாஞ்சாலராஜாவின் அரண்மனைக்குச் செல்லுங்கள்" என்று சொன்னன். பிறகு அந்தக் கௌரவச்ரேஷ்டர்களனைவரும் அந்தப்புரோஹிதரையனுப்பிவிட்டு அந்த உயர்ந்ததேர்களில் ஏறிச்சென்றனர். குந்தியும் க்ருஷ்ணையும் ஒருதேரில் ஏறிச்சென்றனர். ஸ்த்ரீகளினுல் நல்லவாஸனைகளையும் வஸ்த்ரங்களையும் புஷ்பமாலைகளையும் கொடுக்கப்பெற்றும், விசித்திரங்களான ஆபரணங்களினுல் அலங்கரிக்கப்பெற்றும் இனியமங்களகானங்களும் வாத்திய கோஷங்

களும் முழங்க, புண்ணியஞ்செய்தவர்களிற் சிறந்த பிராம்மணர்களு டன்கூட ஸந்தோஷமடைந்து ஜ்வலிக்கின்ற மங்களதீபங்களுடன் சென்றனர். யுதிஷ்டிரரால் அவ்வாறு சொல்லப்பட்ட அந்தச் சிரேஷ்ட ரான பாஞ்சாலராஜன் புரோஹிதர் சென்று யுதிஷ்டிரர் சொன்னதை யெல்லாம் சொல்லியபடி ராஜாவுக்குத் தெரிவித்தார். ஜனமேஜயரே! தர்மராஜா சொன்ன சொற்களைப் புரோஹிதர் சொல்லக்கேட்டபி றகு கௌரவச்ரேஷ்டர்களைத் தெரிந்துகொள்வதற்காகவே அநேக வகையான திரவியங்களைத் துருபதராஜா சேர்த்துவைத்தான். ராஜா வே! துருபதராஜா பழங்கள், பூமாலைகள், கவ்முக வேலைசெய்யப் பட்ட கவசங்கள், தோல்கள், ஆஸனங்கள, பசுக்கள், கயிறுகள், விதைகள், இன்னும் கிருஷிக்குரிய மற்றவைகள், சிற்பவேலைக்குரிய ஸாதனங்களானவை, விளையாட்டிற்குரியவையாகிய எல்லாவற்றையும் அங்கே சேர்த்துவைத்தான். பிரகாசமுள்ள கவசங்களும் கேடகங் களும் கத்திகளும் விசித்திரமான சிறந்த குதிரைகளும் தேர்களும் உயர்ந்த தனுஸுகளும் பலவகையம்புகளும் பொன்னலங்கரிக்கப் பட்ட சக்தியாயுதங்களும் கடிகளும் ஈட்டிகளும் முஸுண்டியென்னு மாயுதங்களும் கோடாலிகளும் இன்னும் யுத்தத்திற்கு உரியவை யா வும் உயர்ந்த ஸாமான்களுள்ள படிக்கைகளும் ஆஸனங்களும் அவ் வாறே வெவ்வேறு விதமான வஸ்திரங்களும் அங்கிருந்தன. குந்தி யும் பதிவ்ரதையான கிருஷ்ணையையழைத்துக்கொண்டு துருபதனு டைய அந்தப்புரத்துக்குட் சென்றாள். மங்கையர்கள் மனமகிழ்ச் சியுடன் கௌரவராஜ பத்னீபாகிய அந்தக்குந்தியை எதிர்கொண்ட ழைத்து மரியாதைசெய்தனர். ஜனமேஜயராஜாவே! வலிம்மத்தைப் போன்ற பராக்கிரமமும் நடையுமுள்ளவர்களும் மஹா விருஷபங்க ளைப்போன்ற கண்களையுடையவர்களும் கிருஷ்ணஜினத்தை உத்த ரீயமாகத் தரித்தவர்களும் தோள் எலும்புதெரியாதவர்களும் மஹா ஸர்ப்பத்தின் உடல்கள்போல் நீண்ட கைகளுள்ளவர்களுமாகிய அந் தவீர புருஷர்களைக்கண்டு ராஜாவும் ராஜாவின் மந்திரிகளெல்லோரும் ராஜபுத்திரர்களும் மித்திரர்களும் வேலைக்காரர்களுமாகிய அவ்குள்ள வர்களனைவரும் மிகுந்த ஸந்தோஷத்தை முழுதும் அடைந்தனர். புருஷச்ரேஷ்டர்களாகிய அந்தவீரர்கள் அவ்விடத்தில் பாதபீடங்க ளோடு கூடிய விலைபெற்ற உயர்ந்த ஆஸனங்களில் கூச்சப்படாமலும் ஆச்சரியப்படாமலும் வரிசைப்படி உட்கார்ந்தனர். மிகச்சிறந்த ஆலங் காரங்களோடு கூடிய வேலைக்காரர்களும் வேலைக்காரிகளும் பரிமாறு

கிறவர்களும் பொன்வெள்ளி மயமான பாத்திரங்களில் ராஜாக்கள் புஜிக்கத்தகுந்த பலவகைகளான போஜனங்களைக் கொண்டுவந்தனர் ராஜாவே! அவ்விடத்தில் அந்தவீர புருஷர்கள் தம் தம் விருப்பப் படி புஜித்தபிறகு மிகுந்த ஸந்தோஷமுற்று எல்லாத் திரவியங்களை யும் தாண்டி யுத்தத்திற்குரிய ஸாமான்களிற் பிரவேசித்தனர். த்ருபத ராஜனுடைய புத்திரர்களும் த்ருபத ராஜனும் முக்கிய மந்திரிகளை வரும் வந்து அதனைக்கண்டு ஸந்தோஷமடைந்து சக்ரவர்த்தி புத்திர ரான பாண்டவர்களென்று அவர்களை நிச்சயித்தனர்.

இருநூற்றுப்பத்தாவது அத்தியாயம்.

வைவாஹிக பர்வம். (தொடர்ச்சி.)

(துருபதன் கேட்டபிறகு தர்மபுத்திரர் தாங்கள் பாண்டவர்க ளென்று சொன்னதும், த்ரௌபதி ஐவருக்கும் மனைவியாதலைப் பற் றித் துருபதன் ஆக்ஷேபித்ததும், பிறகு வியாஸர் வந்ததும்.)

பிறகு மிகுந்த தேஜஸ்ஸுள்ள பாண்டுராஜன் ராஜபுத்திரரான யுதிஷ்டிரரையழைத்து, மிகுந்த தேஜஸ்ஸுள்ள அவரைப்பிராம்மணரு கருகிய மரியாதையினால் கௌரவித்து, தளராத மனத்துடன் கேட் கத்தொடங்கினன். "நாங்கள் உங்களைக்ஷத்திரியர்களென்று அல்லது பிராம்மணர்களென்று அல்லது குணங்கள் நிரம்பின வைசியரென்று அல்லது சூத்திரயோனியிற் பிறந்தவரென்று அல்லதுமாயாரூபமெடு த்துக்கொண்டு தேசங்களெல்லாம் திரிகின்ற ஸித்தர்களென்று எவ் வாறறிவோம். கிருஷ்ணை நிமித்தம் பார்க்க விருப்புற்றவர்களாகத் தே வர்களும் வந்திருக்கின்றனர். எங்களுக்கு நீர் உண்மையைச் சொல் லக்கடவீர். இதுவிஷயத்தில் எங்களுக்குப் பெரிய ஸந்தேகமிருக்கி றது. ஸம்சயத்தின் முடிவிலாவது எங்கள்மனம் திருப்தியடையுமா? வீரரே! எங்களுடைய அதிருஷ்டங்கள் நல்லவையாயிருக்குமா? அந் த ஸத்தியத்தை மனப்பூர்வகமாகச் சொல்லும். ராஜாக்களிடத்தில் ஸத்தியந்தான் பிரகாசிக்கும். யாகஞ்செய்வது குளம்வெட்டுவது முதலியவற்றுடன் பொய்சொல்லாமலிருப்பதும் தர்மம். பொய்மாத் திரம் சொல்லலாகாது. தேவதை போன்றவரே! சத்துருக்களை யடக் குகிறவரே! உமதுசொல்லைக்கேட்டபின் சாஸ்திரப்பிரகாரம் விவாஹம் செய்கிறதை நிச்சயமாக ஆரம்பிக்கப்போகிறேன்" என்றான்.

யுதிஷ்டிரர், "பாஞ்சாலதேசத்தரசனே! நீர் துயரப்படவேண்டாம். உமக்குச் சந்தோஷமுண்டாகட்டும். நீர் விரும்பின மனோரதம் இதோ பலித்திருக்கிறது. ஸந்தேகமில்லை. ராஜாவே! நாங்கள் க்ஷத்திரியர்கள்; மஹாத்மாவானபாண்டுவின் புத்திரர்கள். நான் குந்தியின் ஜ்யேஷ்டபுத்திரனென்றறியும். இவ்விருவரும் பீமஸேனனும் அர்ஜுனனும். ராஜாவே! இவர்களால் உன்புத்திரி ராஜஸபையில் பந்தயத்தில் ஜயிக்கப்பட்டாள். இவர்களிருவரும் இரட்டையர். கிருஷ்ணையிருக்குமிடத்திலிருப்பவள் குந்தி. புருஷச்ரேஷ்டரே! உமது மனத்துயரம் நீங்கட்டும். நாங்கள் க்ஷத்திரியர்கள். தாமரை ஒரு மடுவிலிருந்து மற்றொருமடுவுக்குப் போவதுபோல் உமது இந்தப்பெண் ஒரு ராஜகுலத்திலிருந்து மற்றொரு ராஜகுலத்திற்கேபோனாள். 'மஹாராஜாவே! நான் உமக்குச் சொல்வதெல்லாம் உண்மை. நீர் எப்களுக்குப் பூஜ்யரும் முக்கியமான ஆதரவும் அல்லவா?" என்றுசொன்னர். உடனே ஸந்தோஷமுற்று ஆனந்தக்கண்ணீர் ததும்புகின்ற கண்களோடுகூடிய அந்தத்துருபதராஜன் அந்தயுதிஷ்டிரருக்கு மறுமொழி சொல்ல மாட்டாமலிருந்தான். அந்தவீரன் அவ்வானந்தத்தைப் பிரயத்தனத்தினலடக்கிக்கொண்டு யுதிஷ்டிரரை நோக்கி அவருக்குத் தக்கபடி தன்வாக்கினல் மறுமொழிகூறினன். தர்மாத்மாவான த்ருபதன் அந்தப்பாண்டவர்கள் நகரத்திலிருந்து தப்பி ஓடிப்போன வகையைப்பற்றித் தர்மராஜாவை வினவினன். அந்தப்பாண்டவரும் அவனுக்கு எல்லாவற்றையும் முறையாகச்சொன்னர். துருபதராஜா குந்திபுத்திரருடைய அந்தச்சொல்லைக்கேட்டபோது திருதராஷ்டிர ராஜாவை இகழ்ந்தான். பேசுகிறவரிற் சிறந்த துருபதன் அந்தக்குந்திபுத்திரரான யுதிஷ்டிரரைத்தேற்றினன். ராஜ்யத்திற்காகவும் வாக்குத்தத்தஞ்செய்தான். பிறகு குந்தியும் கிருஷ்ணையும் பீமஸேனனும் அர்ஜுனனும் நகுலஸஹதேவர்களும், திருபதராஜாவினல் ஏற்படுத்தப்பட்ட பெரியமாளிகையில் கிருஹப்ரவேசஞ்செய்தனர். ஜனமேஜய ராஜாவே! அவர்கள் யஜ்ஞஸேனனல் பூஜிக்கப்பெற்று அங்கே வஸித்தனர். பிறகு புத்திரர்களுடன்கூட மனக்கலக்கம் தீர்ந்த த்ருபதமஹாராஜன் தர்மராஜாவைப்பார்த்து, "சிறந்தகைகளையுடைய இந்தக் குருவம்ச புத்திரனை அர்ஜுனன் சுபதினமாகிய இன்றைத்தினம் சாஸ்திரப் பிரகாரம் பாணிக்ரஹணம்செய்துகொள்ளட்டும். எல்லாருக்கும் உற்சாகத்தை உண்டுபண்ணட்டும்" என்று சொன்னன்.

பிறகு ராஜாவும் தர்மாதமாவுமாகிய யுதிஷ்டிரர் அந்த த்ருபதணே நோக்கி, "ராஜாவே! எனக்கும் விவாஹம் இனிததான் செய்யவேண்டியது. அதனல் நான் முதலிற்செய்துகொள்ளவேண்டும். அதற்கு நீங்கள் அனுமதி கொடுக்கக்கடவீர்கள்" என்றார்.

அங்ஙனங்கூறக்கேட்டதருபதன், "வீரனே! என்பெண்ணேச்சாஸ்திரப்படி நீர்பாணிக்ரஹணஞ் செய்தாலும் செய்யும்; அல்லதுயாருக்கு இஷ்டப்படுகிறீரோ அவருக்குக் கிருஷ்ணேயைக் குறிப்பிட்டாலும் குறிப்பிடும்" என்று சொன்னன். யுதிஷ்டிரர், "ராஜாவே! திரௌபதி எங்களனேவர்க்கும் மனேவியாயிருக்கவேண்டும். மனிதர்க்கதிபதியே! என்தாயாரால் முதலிலேயே இவ்வாறு சொல்லப்பட்டது. நானும் விவாகமாகாதவன். பாண்டுபுத்ரனை பீமஸேனனும் விவாஹமாகாதவன். ரத்னம் போன்ற இந்த உமதுபெண் அர்ச்சுனனல் பந்தயத்தில் ஜயிக்கப்பட்டவள். ராஜாவே! கிடைத்ததைச் சேர்த்து அனுபவிப்பதென்பது எங்கள் உடன்பாடு. ராஜச்ரேஷ்டரே! அந்த உடன்பாட்டை நாங்கள் விடவிரும்பேம். முறைத்தவறுக விவாஹம்செய்து கொள்ளுவதாலும் தர்மத்திற்குப் பெரியகெடுதல் உண்டாகும். தர்மப்பிரகாரமே கிருஷ்ணே எங்களனேவர்க்கும் மனேவியாகலாம். எங்களெல்லாரையும் முறையே அக்கினிசாக்ஷியாக அவள் பாணிக்ரஹணஞ் செய்யட்டும்" என்றுசொன்னர். அதற்கு த்ருபதன், "கௌரவரே! ஒருவனுக்கு அனேக மனேவிகள் இருப்பது சாஸ்திரத்தில் அங்கீகரிக்கப்பட்டது. ஒருத்திக்கு அனேக புருஷர்கள் கணவர்களாக இருப்பதை எங்கும்கேள்விப்பட்டதில்லே. நீர் சொல்வது ஒருகாலத்திலும் தர்மமென்று உலகவழக்கத்திலும் வேத சாஸ்திரத்திலும் அங்கீகரிக்கப் படவில்லே. குந்திபுத்ரரே! தர்மந்தெரிந்தவரும் பரிசுத்தருமான நீர் உலகத்திற்கும் வேதத்திற்கும் விரோதமான அதர்மத்தைச் செய்யத்தகுந்தவரல்லீர். ஏன் உமக்கு இப்படிப்பட்டபுத்தி உண்டாயிருக்கிறது?" என்று கேட்க, யுதிஷ்டிரர், "மஹாராஜாவே! தர்மம் நுட்பமானது. அதன் வழியை நாமறியோம். முன்னோர்கள் பரம்பரையாகச்சென்ற வழியை நாமனுஸரிக்கிறோம். என்வரைக்குப் பொய்சொல்வதில்லே. என்புத்தி அதர்மத்தில் செல்லாது. என்தாயாரும் இவ்வாறே சொல்லுவாள். என்மனத்திலிருப்பதும் இதுதான். ஆச்ரமத்தில் ருத்திரனல் அனுப்பப்பட்ட வியாஸரிடமிருந்து நான் கேட்டதும் இதுவே. ரா

ஜாவே! இது தர்மமென்பது நிச்சயம். இதைச் சங்கிக்காமல் நீர் நட
த்துவீராக. பூமிக்கதிபதியே! இந்தவிஷயத்தில் உமக்கு எவ்வகை
யிலும் ஸந்தேகம்வேண்டாம்" என்று சொன்னர். திருபதன், "குந்தி
புத்ரரே! நீரும்குந்தியும்என துமகனுன திருஷ்டத்யும்னனும், இன்னது
செய்யவேண்டுமென்று சொல்லுங்கள். நானேக்காலியில் செய்வோம்"
என்றன். ஜனமேஜயரே! பிறகு அவரனைவரும் சேர்ந்து பேசினர்
ராஜாவே! அப்போது தற்செயலாகவியாஸபகவான் வந்துசேர்ந்தனர்.

இருநூற்றுப்பதினேன்றுவது அத்தியாயம்.

வைவாஹிகபர்வம். (தொடர்ச்சி.)

(ஒருத்தி பலருக்கு மனைவியாவதில் உங்களுக்கென்ன ஆக்ஷேபத்
தைச் சொல்லுங்களென்று துருபதன் முதலியோர்களை வியாஸர்
கேட்கையில் அவரை தம் தம் அபிபிராயத்தைச் சொன்னதும்,
வியாஸர் திரௌபதி ஐவர்க்குப் பத்தினியாவது தர்மமென்றுசொன்
னதும்,)

பிறகு அந்தப்பாண்டவர்களனைவரும் மிகுந்த புகழ்பெற்றபாஞ்
சால தேசத்தரசனும் மஹாத்மாவான கிருஷ்ணத்வைபாயனரை எதிர்
சென்றழைத்து அவருக்கு வந்தனஞ்செய்தனர். சிறந்த மனமுள்ள
அந்த வியாஸர் அந்தப்பூஜையைப்பெற்றுக்கொண்டு குசலப்ரச்னஞ்
செய்து பிறகுபரிசுத்தமானபொன்ஆஸனத்தில்உட்கார்ந்தனர். அந்த
ப்புருஷச்ரேஷ்டர்களனைவரும் அளவற்றமஹிமைபொருந்திய கிருஷ்
ணத்வைபாயனரால் அனுமதிகொடுக்கப்பெற்று விலியுயர்ந்த ஆஸனங்
களிலிருந்தனர். ஜனமேஜய ராஜாவே! பிறகு சற்றுநேரம் பொறுத்
துத்துருபதன் திரௌபதிக்காக அந்தமஹாத்மாவினிடம்இன்சொற்
சொல்லி, "ஒருத்தி அனேகர்களுக்கு எவ்வாறுபாரியையாகலாம்? தர்
மம் எவ்வாறு பரிசுத்தமாயிருக்கும்? பகவானுகிய நீங்கள் இவற்றை
யெல்லாம் உள்ளதுள்ளபடி எனக்குச் சொல்லக்கடவீர்கள்" என்று
கேட்டான். வியாஸர், "லோகத்திற்கும்வேதத்திற்கும்விரோதமானதும்
நிச்சயம் பெறுததுமான இந்தத்தர்மத்தின் விஷயத்தில்யார்யாருக்கு
என்ன என்ன அபிப்பிராயமோ அவற்றையெல்லாம் அவரவரிடம்
கேட்கவிரும்புகிறேன்" என்றர். த்ருபதன், "இஃது உலகத்திற்கும
வேதத்திற்கும் விரோதமானதினால் இஃது அதர்மமென்பது என்கரு

த்து. பிராமணத்தமரே! ஒருத்தி அனேகர்களுக்குப்பத்தினியாவது இல்லையே! இந்த நடை முன்னோர்களான மஹாத்மாக்களாலும் அனுஷ்டிக்கப்படவில்லையே. தெரிந்தவர்கள் அதர்மத்தை எவ்வகையிலும் செய்யத்தகாது. ஆகலால், இந்த விவாஹகாரியத்தைப்பற்றிய நிச்சயத்தை நான் செய்யவில்லை. இந்த ஆசாரம் எந்தக் காலத்திலும் ஸந்தேகிக்கப்பட்டதாக வேனக்குத்தோன்றுகிறது" என்றுசொன்னன். திருஷ்டத்யும்னன், "பிராம்மணச்ரேஷ்டரே! தபோதனரே! பிரம்மஜ்ஞானிபே! நன்னடக்கையிலிருக்கின்ற ஜ்யேஷ்டனானஹோதரன் இளையவன்பாரிபையிடம் எவ்வாறு சேரலாம்? தர்மம் நுட்பமானதனால் அதன்முடிவை நாங்கள் எவ்வகையிலும் அறியமாட்டோம். பிராம்மணரே! அதர்மமென்றுவதுதர்மமென்றுவது நிர்மானஞ்செய்வதற்கு எவனேப்போன்றவர்களால் முடியாது. அதனல் கிருஷ்ணை ஐவருக்கும் பாரிபைபாகலாமென்பதை நாங்கள் எவ்வகையிலும் ஒப்பவில்லை" என்றுசொன்னன். யுதிஷ்டிரர், "என்வாக்குப்பொய்சொல்வதில்லை. என்புத்தி அதர்மத்தில் செல்லாது. என் மனம் இந்தவிஷயத்தில் பிரவர்த்திக்கிறது. ஆகலால், இஃது எவ்வகையிலும் அதர்மமாகாது. தர்மிஷ்டர்களிற் சிறந்தவளும் கௌதமகோத்திரத்தவளுமாகிய ஜடிலையென்பவள் ஸப்தரிஷிகளிடம் இருந்தாளென்று புராணத்திலும் கேள்விப்படுகிறோமல்லவா? அவ்வாறே ரிஷிபுத்திரியான * வார்க்ஷியென்பவள்தவங்களினல் மனத்தூய்மையையடைந்த பிரசேதஸுகள் என்று ஒரேபெயருள்ள பத்துச்சகோதரர்களிடம் சேர்ந்திருந்தாள். தர்மம் தெரிந்தவர்களுக்கெல்லாம் உத்தமரே! பெரியோருடைய சொல் தர்மத்துக்கு விலக்காயிராதென்று சொல்லுகின்றனர். பெரியோரெல்லாரிலும் மாதா முதன்மையான பெரியவள். அவள் 'பிக்ஷையைப்போலப் புஜியுங்கள்' என்றசொல்லை உரைத்தாள். பிராம்மணரே! அதனல் இதனைச் சிறந்த தர்மமென்று நான் நினைக்கிறேன்" என்றுசொன்னர்.

அதன்மேல் குந்தி, "தர்மானுஷ்டானம் தவறுத யுதிஷ்டிரன சொல்லுகிறபடிதான் இது நடந்தது; பிராதாக்களுடன் சேர்ந்து புஜிக்கக்கடவாய்' என்று அர்ஜுனனுக்குக் கட்டளையிட்டேன். எனக்குப் பொய்யில் மிகுந்த பயமுண்டு. நான் எவ்வாறு பொய்யிலிருந்து விடுபடுவேன்" என்றுசொன்னள். வ்யாஸர், "சிறந்தவளே நீ பொய்யி

* பெண்மரம்.

லிருந்து விடுபடுவாய், பாஞ்சாலராஜாவே! இஃதுஎல்லோருக்கும்எக்காலத்துமுள்ள தர்மந்தானென்பதைப்பற்றிச் சொலலப்போகிறேன் எப்படிச் சாஸ்திரவிஹிதமான தர்மமென்பதையும் இஃது எவ்வாறு இஃது எக்காலத்திலும் உள்ளதென்பதையும் பற்றிநான்சொல்வதைக்கேள். யுதிஷ்டிரன் சொல்லுகிறபடியே இதுதர்மமென்பதில்ஸம்சயமில்லை" என்றார். ஸமர்த்தரான த்வைபாயனரென்று சொல்லப்பட்ட வ்யாஸபகவான் உடனே எழுந்து துருபதராஜாவைக் கையில்பிடித்தழைத்துக்கொண்டு ராஜகிருஹத்துக்குள் பிரவேசித்தார். பாண்டவர்களும் குந்தியும் துருபதபுத்திரனான த்ருஷ்டத்யும்னனும் அங்கேயே பிரவேசித்தனர். அவர்கள் அந்தத்துருபதன் வியாஸர் இருவருக்கும் காத்திருந்தனர். அப்போது த்வைபாயனர் அந்தமஹாதமாவான ராஜாவுக்கு அநேகருக்கு ஒருமனைவி இருப்பது எவ்வாறு தர்மமாகும் என்பதையும் முன்னர் அந்த ராஜபுத்திரியின் தவத்தினல் ஸந்தோஷமடைந்த தர்மன் முதலிய தேவர்கள், ஐவருக்குப் பத்தினியாயிருப்பதை அவளுக்கு வரமாகக்கொடுத்ததையும் சொல்லத் தொடங்கினர்.

இருநூற்றுப் பன்னிரண்டாவது அத்தியாயம்

வைவாஹிகபர்வம். (தொடர்ச்சி)

(வியாஸர் இந்திரசேனை யென்கிற நாளாயனியின் உபாக்கியானத்தைச் சொல்ல ஆரம்பித்து அவள் வயோதிகரும் தரித்ரருமான மௌத்கல்யரை ஆராதிக்க ஸந்தோஷமடைந்த அவர் அவளுடைய வேண்டுகோளினல் ஐந்துபுத்துடன்அவளைரமித்ததையும் அவளே கிருஷ்ணையாகப் பிறந்திருக்கிறள், என்பதையும் சொல்லியது.)

"ராஜாவே! என் பெண் ஐவருக்குமனைவியா என்று உனக்கு மனஸ்தாபம் வேண்டாம். யாககாலத்திலேயே இவள் தாயார், 'என் பெண் ஐவருக்குப் பாரியையாயிருக்கவேண்டும்' என்று வேண்டிக்கொண்டாள். தர்மந் தவறுதவர்களாகிய அந்த யாஜோபயாஜர்கள் தங்கள் தவத்தினல் இவளுக்கு ஐந்து பதிகளிருக்கச் செய்தனர். அதனல் 'கிருஷ்ணை பாண்டு புத்திரர்கள் ஐவர்களாலும் பாரியையாக அடையப்பட்டாள். உன்குலம் மகிழக்கடவது. ராஜாவே! உன்னைவிட மேலானவன் இவ்வுலகத்தில் வேறொருவனு

மில்லை. எல்லா எதிரிகளுக்குமே வெல்லக்கூடாதவனாயிருக்கிறாய். இவள் ஐவருக்குப் பத்தினியாயிருக்கும்படி நேர்ந்ததற்கு மற்றொரு காரணத்தையும் நான் சொல்லுகிறேன். நீ துயரத்தை விட்டுக்கேள்.' இவள் பூர்வஜன்மத்தில் நாளாயணி யென்பவள்; சிறந்த ரூபமுள்ள இவள் கிழவரும் குஷ்டரோகியுமான மௌத்கல்யரென்று பெயர்பெற்ற கணவருக்குப் பணிவிடை செய்துகொண்டிருந்தாள். தோலும் எலும்புமாயிருப்பவரும், கெடுமையும் நிலையில்லாத சித்தமும் பொறுமையும் தடுமாறாதபுலன்களையுடையவரும், வாயில் துர்க்கந்தமுள்ளவரும், மடிப்புக்களும் நரைமயிருமுள்ள கிழவரும், அருவருக்கத்தக்க ரூபமுள்ளவரும், கதங்களும் தீதான்களும் உதிர்கின்றவீரமாகிய அம்மஹாமுனிவருடையவச்சிலைப் புஜித்துக்கொண்டு அவருக்கு இவள் பணிவிடைசெய்தாள். பிறகு ஒருகாலத்தில் அவர் போஜனஞ்செய்துகொண்டிருக்கையில் அவருடைய கட்டைவிரல் உதிர்ந்தது. அதனை அன்னத்திலிருந்து எடுத்துவிட்டு அந்த அன்னத்தை அருவருப்பின்றிப் புஜித்தாள். அப்போது அவளிடத்தில் அன்புகூர்ந்து விருப்பத்துடன் ஸமாவஷ்ணைசெய்த அம்முனிவரால், "வரம்கேள்" என்று பலமுறை சொல்லப்பட்டு பிறகு அவரை அவள் வரம்கேட்டனள். மௌத்கல்யா, "நான் கிழவனுமல்லேன்; கோடியவனுமல்லேன்; பொறுமையுமதனுமல்லேன்; கோபிஷ்டனுமல்லேன்; வாயில் துர்நாற்றமுள்ளவனுமல்லேன்; இவைத்தவனுமல்லேன்; நிலையில்லாத சித்தமுள்ளவனுமல்லேன். சிறந்தவளே! உன்னை நான் எவ்வாறு இன்புறச்செய்யவேண்டும்? எவ்வாறு வைத்துக்கொள்ளவேண்டும்? நீ உள்ளத்தில் விரும்புகிறதை உள்ளபடி எனக்குச்சொல்" என்றுகேட்டார். உயர்ந்தசெய்கையுள்ளவரும் எல்லாவிருப்பங்களையும் நிறைவேற்றுகிறவருமாகிய அந்தத் தன்பர்த்தா அனுக்ரஹத்துடன் வரம்கொடுப்பதாகச் சொல்லும்போது குற்றமற்ற ரூபமுள்ள அந்தநாளாயனி, "நினைத்தற்கரிய பிரபாவமுள்ளவரே! உலகங்களிலெல்லாம் புகழ்பெற்ற பகவானுடைய நீர் உமது சரீரத்தை ஐந்துபாகமாகச் செய்துகொண்டும் மறுபடியும் ஒரு ரூபத்தையெடுத்துக்கொண்டும் என்னிடம் ரமிக்கக்கடவீர்" என்று அவருக்கு மறுமொழிசொன்னள். சிறந்த ஞானமுள்ளவரும் தவத்திற் சிறந்தவருமான அம்மஹரிஷி 'அப்படியே ஆகட்டும்' என்று அவளுக்குச் சொல்லினர். அந்தமௌத்கல்யர் ஐந்துசரீரங்களையெடுத்துக்கொண்டு அழகிய கூந்தல் தூளியுள்ளவளும் இனிய நகையுள்ளவளு

மாகிய அந்தகாளாயனியுடன் எல்லாப்பிரதேசங்களிலும் ரமித்துக் கொண்டிருந்தார். மறுபடியும் அந்த மௌத்கல்யமுனி மஹரிஷிகளினால் விசேஷமாகப் பூஜிக்கப்பெற்று விரும்பத்தக்க சரீரத்தோடு ஆச்ரமங்களில் தமது விருப்பப்படி சஞ்சரித்தார். அவர் ஸ்வர்க்கத்திற்குப்போனபோது அந்தத்தேவலோகத்தில் அமிர்தபானஞ்செய்து கொண்டு தேவரிஷிகளுடன்கூட ஸஞ்சரித்தனர்.

இந்திரகிருஹத்திலும் இந்திராணியினால் பூஜிக்கப்பெற்று மஹேந்திரலோகத்தில் என்றுபெயருள்ள அந்தகாளாயனியுடன் ரமிக்க விருப்பத்துடன் ஸஞ்சரித்தார். ஸமர்த்தரான அந்த மௌத்கல்யபகவான் ஸூர்யனுடைய திவ்யரதத்திலேறி மறுபடியும் மஹாமேருவைச் சேர்ந்து அதில் வஸிக்கக்கருதினர். அந்தத்தபோதனர் அந்தகாளாயனியுடன்கூட ஆகாசகங்கையில் ஸ்நானஞ்செய்து சந்திரகிரணங்களினிடையில் காற்றைப்போல் வாஸஞ்செய்தார். மறுபடியும் அம்மஹரிஷி தபோபலசக்தியினால் மஹாரூபமெடுத்தார். அந்தகாளாயனியும் அவர் பிரபாவத்தினால் அம்மஹாநதியில் மஹாநதியானாள். பகவானுகிய மௌத்கல்யமுனிவர் மலர்கள் நிரம்பின மரமாக ஆனபோது காளாயனியும் அம்மரத்தைச் சுற்றிக்கொண்டகொடியாக ஆனாள். எவ்விவற்றின் உருவத்தை அவரடைந்தாரோ அவ்வவற்றிற்கொத்த உருவத்தை அவளுமடைந்தாள். பர்த்தாவுடன்கூட மானிடதேகத்தோடும் ஸஞ்சரித்தாள். அதனால் அவருக்கும் அவளுக்கும் அன்பு ஸமமாகவே விருத்தியாயிற்று. அவளும் அவரிடம் அவ்வாறிருந்தாள். அந்தப்பகவானை ரிஷிச்ரேஷ்டரும் அவளிடத்தில் அனுக்ரஹத்தினால் அவ்வாறிருந்தார். அந்தச்சிறந்தபெண்ணும் பாக்யவசத்தினால் அவரிடம் விசேஷமாக ரமித்தாள். அவரும் தமது தவத்தினாலும் யோகசக்தியினாலும் அவளிடம் ரமித்தார். அவள்முதலில் எப்போதும் அவ்வாறாக ஐந்துபுருஷர்களோடு கூடியவளாயிருந்து பிறகு ஒருபதியை அடைந்து அருந்ததியைப்போலவும் ஸீதையைப்போலவும் சிறந்தபதிவ்ரதையாகப்புகழ்பெற்றிருந்தாள். அவள் தன்தாயாகிய * தமயந்தியைப்பார்க்கிலும் அதிகமான மேன்மையைப்பெற்றுள். மஹாராஜாவே! இஃது உண்மை. உனதுபுத்தி வேறுபடவேண்டாம். ராஜாவே! அந்த காளாயனியே ஏதோ ஒருவிதி பலத்தினால் ஒளியும் அழகுமுள்ள உனது பெண்ணை கிருஷ்ணையாக யாகவேதிகையிற்

* இதனால் களுடைய பெண்காளாயனி யென்று தெரிகிறது.

பிறந்திருக்கிறாள். அந்த மௌத்கல்யமுனிவரிடம் பற்றுவைத்த அவள் மனம் ஒருகாலத்தும் சலித்ததில்லை. அந்தப் பிராம்மணரைத் தமரிடம் அவள்மனம் அவ்வாறுபற்றியிருந்தது." என்றார்.

இருநூற்றுப்பதின்மூன்றுவது அத்தியாயம்.

வைவாஹிகபர்வம். (தொடர்ச்சி.)

(நாளாயனி எனத்த எவ்வாறு பெண்ணைப் பெற்றுக்கொண்டு தருபதனுக்கு வியாஸர். மௌத்கல்யர் நாளாயனி போகத்தில் திருப்தியடையாதிருத்தலைக்கண்டு ஐந்து புருஷர்களை அடைவாய் என்று சபித்ததையும் அவள் நத்தினரைக் குறித்துத் தவஞ்செய்து பிரஸன்னரான நத்தினரிடத்தில் ஐந்து முறை பதியைக்கோரும், என்று கோடலினால் அவர் ஐந்துபதிகளை அடுத்தஜன்மத்தில் அடைவாய்என்றும் நீ பாஞ்சாலியாயிருப்பாய், என்றும் வரங்கொடுத்து நீ கங்காதீர்த்தத்திலிருந்தகையில் வருவை இந்திரனை யழைத்துவா, என்றுகட்டளையிட்டதையும் சொல்லியது.)

துருபதன், "வேதம் தெரிந்தவர் எல்லாரிலும் சிறந்த பிராம்மணரே! புண்ணியவதியான நாளாயனி என்பாகத்தில் கிருஷ்ணையாக ஜனித்ததற்குக் காரணம்யாது? அதனைச்சொல்லுக" என்றுகேட்க, வியாஸர் சொல்லலானார்.

"ராஜாவே! இவளுக்கு ருத்திரரால் எவ்வாறு வரன்கொடுக்கப் பட்டதென்பதையும் புகழ்பெற்ற இவள் உன் வீட்டில் எதற்காகப் பிறந்தாளென்பதையும் கேள். ஆ! ஆ! கிருஷ்ணையினுடைய முன் ஜன்ம சரித்திரத்தை உனக்குச் சொல்லப்போகிறேன். முன் ஜன்மத்தில் இந்திரசேனையென்று புகழ்பெற்ற பாக்யவதியான நாளாயனி மௌத்கல்யரென்னும் பர்த்தாவையடைந்து கவலையின்றிச் சஞ்சரித்தாள். ராஜாவே! மௌத்கல்யரிஷிக்கும், அவளுடன்கூடி விளையாடிக்கொண்டிருக்கையில், அநேக வருஷகாலமும் ஒரு நொடிபோல் கடந்துபோயிற்று. பிறகு ஒருகால் அந்தத் தர்மாத்மா காமபோகங்களிற் சலிப்புற்று வைராக்கியமடைந்தார். உயர்ந்ததான மோக்ஷதர்மத்தை விரும்பிப் பிரம்மத்தியானத்தைக் கடைப்பிடித்தவராயினர். அந்தப் பிராம்மணர் அந்த நாளாயனியை விட்டுவிட்டார். அவள் அப்போது பூமியில்விழுந்தாள். ராஜச்ரேஷ்டனே! மௌத்கல்யர் எப்போதும் தவத்தினால் பரிசுத்தமானவர். அப்போது நாளாயனி, "பகவானே!

என்மீது அருள்செய்யக்கடவீர். என்னை நீர் விடத்தகாது. ப்ரம்ம ரிஷியே இதுவரையில் விரும்பினவற்றை அனுபவித்ததனால் போகங் களில் திருப்திபெறுதவளாயிருக்கிறேன்" என்று கேட்க, மௌத் கல்யர், "நீ அச்சமில்லாமல் பேசத்தகாததை என்னிடம்பேசி என் தவத்திற்கு இடையூறு செய்கிறாயாதலின், நான் சொல்வதைக்கேள். நீ மனுஷ்யலோகத்தில் மஹாத்மாவான த்ருபதனென்னும் பாஞ்சால தேசத்தரசன் பெண்ணென்று புகழ்பெற்ற ராஜபுத்திரியாயிருப்பா யாயாக. அந்தஜன்மத்தில் உனக்குப்புகழ்பெறற ஐந்துகணவர்கள் இரு ப்பார்கள். அழகான உருவங்களையுடைய அவர்களுடன் வெகுகாலம் இன்பத்தையடைவாய்" என்று சொன்னார்.

புகழ்பெற்ற அந்த நாளாயனி இவ்வாறு சபிக்கப்பட்டுத் துயரத் துடன் வனத்திற் சென்றாள். அப்போது காமஸுகங்களில் திருப்தி யடையாமைபால் தேவதேவரான சங்கரரைக்குறித்துத் தவஞ் செய் தாள். விருப்பங்களைவிட்டும் காற்றைப் புஜித்தும் உணவையொழி த்தும் சூரியனைப்பார்த்துக்கொண்டு பஞ்சாக்னிமத்தியினின்று தவம் புரிந்தாள். பசுபதியும் ஸர்வலோகங்களுக்கும் ஈசுவரனும் பிரபுவுமா கிய சங்கரர் அவளுடைய கடுந்தவத்தினால் ஸந்தோஷமடைந்து உட னே, "புண்ணியவதியே! உனக்கு அடுத்த ஜன்மம் வரப்போகிறது. சிறந்த பெண்ணைப் பிறக்கப் போகிறாய். எல்லாரும் தேவேந்திரனுக் கொப்பான தேக முள்ளவர்களும் தேவேந்திரனுக்கொப்பான பரா க்கிரமமுள்ளவர்களுமான புகழ் பெற்ற ஐந்து பர்த்தாக்கள் அந்த ஜன்மத்தில் உனக்குவரப்போகின்றனர். நீ அவர்களிடமிருந்து பெ ரிய* தேவகாரியத்தைச் செய்யப்போகிறாய்" என்று வரம்கொடுத்தார். அதைக்கேட்டு நாளாயனி, "நான் ஒரு கணவனைத்தானே வரமாகக் கேட்டேன். இந்தஐவர் எதற்கு? ஒருத்திக்கு ஒருகணவன்தானே யுண்டு. அனேகர் இல்லையே. அதனை எனக்குச் சொல்லவேண்டும்" என்றுகேட்டாள். மஹேசுவரர், "புண்ணியவதியே! நீ, பதியைக்கொ டும் என்று திரும்பத்திரும்ப ஐந்துமுறை என்னைக்கேட்டாய். உன க்கு ஐந்துபதிகளும் ஸுகத்தைத் தருகிறவர்களாயிருப்பார்கள்" என்றார். நாளாயனி "பெண்களுக்கு ஒருகணவனிருப்பதுதான் தர் மம் என்பது பூர்வகாலத்திலேயே விதிக்கப்பட்டுள்ளது. புருஷனு க்குமட்டும் அனேகமனைவிகளிருப்பது தர்மம்; அஃது அனேகரால்

* பூபாரத்தையொழிப்பது.

அனுஷ்டிக்கப்பட்டும் வருகிறது. ஒருத்தி ஒரு பர்த்தாவுக்கே எப்போதும் துணையாகத் தர்மானுஷ்டானஞ் செய்யவேண்டியவளென்று சொல்லப்படுகிறது. இதுதான் முதலிலேயே ரிஷிகளினால் விதிக்கப்பட்ட ஸ்திரீதர்மம். பெண்களுக்கு இளமைப்பருவமுள்ள ஒரு கணவனிருப்பதுதான் உலகநடைக்கும் உரியது. ஆபத்காலங்களில் (ஸந்ததியில்லாதபோது) கணவன்கட்டளையின்மேல் பெண்ணுக்கு இரண்டாவது புருஷனும் சொல்லப்பட்டிருக்கிறான். மூன்றாமவனைச் சேரலாகாது. அப்படிச்சேருகிறவளுக்குப்பிராயச்சித்தம்விதிக்கப்பட்டிருக்கிறது. நாலாமவனைச்சேர்ந்தால் ஸ்திரீ பதிதையாகிறாள். ஐந்தாமவனைச் சேர்ந்தால் விபசாரியாவாள். தர்மத்தின் மார்க்கம் இவ்வாறிருக்கையில் அநேக புருஷர்களுக்குப் பாரியையாயிருப்பதை நான் விரும்பவில்லை. உலகத்தில் அனுஷ்டிக்கப்படாத அந்த அதர்மத்திலிருந்து நான்எவ்வாறு விடுபடுவேன்" என்றுகேட்டாள்.

மஹாசுவார், "மூன்று பெண்கள் கட்டில்லாமலே யிருந்தனர். ருதுகாலங்களில் அவர்கள் சுத்தையாகின்றனர். நீ, 'பதியைக்கொடும்' என்று ஒருமுறை சொல்லவில்லை. ஆதலால், உனக்கு அதர்மம்வராது" என்று சொன்னார். அதைக்கேட்டு நாளாயனி, "எனக்குஐந்துபதிகள் உண்டாயின் அவர்களுடன் தனித்தனியே ரமிப்பதைவிரும்புகிறேன். அவர்களில் ஒவ்வொருவரிடமும் சேர்க்கை நேரிடும்போதெல்லாம் எனக்கு இளமைப்பருவமே இருக்கவேண்டும். பூர்வஜன்மத்திலும் பதிசுச்ரூஷை செய்ததனாலேயே பெருந்தவப்பயன் எனக்குக்கிடைத்தது. போகத்திலுள்ளவிருப்பம்மட்டும் எனக்குத் தீரவில்லை. அந்தப் போகங்களுமும் எனக்கு உண்டாகவேண்டும்" என்று கேட்டாள். சங்கர், "புண்ணியவதியே! காமஸுகமும் தவப்பயனும் ஒன்றோடொன்று சேர்வதில்லை. நீமாத்திரம் காமஸுகங்களையும் தவப்பயனையும் யோகமஹிமையையும் அடைவாய். அடுத்த மற்றொருஜன்மத்தில் அழகும் பாக்கியமும் குணங்களும் பொருந்தினவளாக ஐந்து புருஷருடன்சேர்ந்து இளமையடைந்து மஹாபாக்கியவதியாயிருப்பாய். சிறந்தவளே! பரிசுத்தமான புன்னகையுள்ளவளே! செல். நீ கங்கா ஜலத்திலிருக்கும்போது எந்தப் புருஷனைப் பார்க்கிறையோ அத்தப்புருஷனுடைய இந்திரனே என்னிடத்துக்கு அழைத்துவா" என்றனர். உலகத்தையே உருவமாகக்கொண்ட ஈசுவரனால் இவ்வாறு சொல்லப்பட்ட அந்தநாளாயனி ருத்திரரைப் பிரதக்ஷிணஞ்செய்து புண்ணியமானதும் ஸ்வர்க்க மத்திய பாதாளமென்னும் மூன்றுவழிகளிலும் செல்லுவதுமாகிய கங்காநதியைக்குறித்துச் சென்றாள்.

ஸ்ரீ மஹாபாரதம்.

இருநூற்றுப்பதினொன்காவது அத்தியாயம்.

வைவாஹிகபர்வம் (தொடர்ச்சி)

(நைமிசாரண்யத்தில் தேவர்கள் செய்தயாகத்தில் யமன் சரித்ரம் என்னும் பசுவைக்கொல்லும் கிரியையில் அமர்ந்ததனால் உலகத்தில் பிராணிகள் அதிகமானதும் அவைகளைஸ் ரக்ஷிப்பதற்காகத் தேவர்கள் பிரமதேவரிடம்சென்றதும், இந்திரன், பிரமதேவருடை யகட்டளைப்படி நைமிசாரண்யஞ்சென்றதும், கங்கையில்வந்த தாமரைப்ரஷ்பத்தை யெடுக்கச்சென்றவகையில் அங்கு அழுதுகொண்டிருந்த பெண்ணைக்கண் டதும், அவள்பின்சென்றவன் பர்வதாகையில் தனக்கு முன்வந்திருந்த நாலு இந்திரரைக்கண்டதும், பலராமன் தேவன் தீர்த்தயாத்திரை இவர்க ளுடையஉத்பத்தியும், வ்யாஸரால் ஞானக்கண்ணையடைந்த துரியோதன் பாண்டவர்கள் த்ரௌபதிஇவர்களுடைய பழையநடத்தைக்கண்டதும், த்ரௌபதியின் அடுத்தமுன்ஜன்மத்தின் வரலாறும்.)

ராஜாவே! முற்காலத்தில் நைமிசாரண்யத்தில் தேவர்கள் ஸத்ர யாகஞ்செய்து கொண்டிருந்தனர். அப்போது அந்தயாகத்தில் யமன் (ஸாமித்ரம்) என்னும் பசுவைக் கொல்லும் வேலையைச் செய்தான். ராஜாவே! அப்போது அந்தயாகத்தில் தீக்ஷைசெய்துகொண்டிரு ந்த யமன் பிரஜைகளில் யாரையும் கொல்லவில்லை. அதனால் அந்தப் பிரஜைகள் காலங்கடந்தும் மரணமடையாமல் மிகுதியாக விருத்தி யாஞ்சென்றனர். இந்திரன், சந்திரன், வருணன், குபேரன், ஸாத்யர்கள், ருத்திரர்கள், வஸுக்கள், அசுவினிதேவர்கள் இவர்களும் மற்று முள்ள தேவர்களும் உலகத்தைப் படைப்பவராகிய பிரம்மதேவரி ருக்குமிடத்திற்குப் போய்ச்சேர்ந்தனர். அப்போது மனிதர்களின் அதிக விருத்தியினாலுண்டானபயத்தினால் உலகங்களுக்கெல்லாம் பிதாவாகிய பிரம்மதேவரைச் சந்தித்து, "ஐயா! பிரஜாவிருத்தியினால் கலக்க முற்ற நாங்களனைவரும் ஸுகத்தை விரும்பி உங்களைச சரணமாக அடைகிறோம்." எனறு கூறினர். பிரம்மதேவர், "நீங் களனைவரும் தேவர்களாயிருக்க உங்களுக்கு மனிதரிடம் பயம் யாது? மனிதர்களிடத்தில் உங்களுக்குப் பயம் வரத்தகாது" என்று சொல்ல, தேவர்கள், "இறப்பவர் இறக்காதவர்களாய்விட்டார்கள். அதனால், எங்களுக்கும் அவர்களுக்கும் வித்தியாஸம் ஒன்றுமில்லை. விசேஷ மில்லாமையால் பயந்து விசேஷத்திற்காக உங்களிடம் வந்

'ஏதாம்" என்றுசொன்னார்கள். பிரம்மதேவர் "யமண்ஸதரயாகத்திற்காகப்பிரவர்த்தித்திருக்கிறான். அதனாலேதான் இந்தமனிதர்கள் இறப்பதில்லை. காரியத்தில் ஊக்கமுள்ள அந்தவைவஸ்வதன் அந்தக்காரியத்தை முழுதும் நிறைவேற்றின பிறகு இந்த மனிதர்களுக்கு முடிவுகாலம் அவசியம்வரும். யமனுடைய தேகாம்சமே பிரிக்கப்பட்டு உங்கள் சக்திகளும்சேர்ந்து அபிவிருத்தி செய்யப்பட்டிருக்கிறது. அந்தச் சரீரந்தான் முடிவில் இம்மனிதர்களுக்கு மரணகாரணமாகப் போகிறது. அப்போதுமனிதர்களுக்குச்சக்திஇராது" என்றுசொன்னார். அப்போதுஅந்தத்தேவர்கள், முதல் தேவராகிய பிரமதேவருடைய சொல்லைக்கேட்டுத் தேவர்கள் யாகம்செய்யுமிடத்திற்குச் சென்றனர். முஹாபலசாலிகளான அந்தத் தேவர்கள் சேர்ந்து உட்கார்ந்திருக்கும்போது கங்கையில் ஒரு வெண்டாமரைபூவைக் கண்டனர். அவர்கள் அதைக்கண்டு வியப்புற்றனர். அவர்களுக்குள் நூனை இந்திரன் அவ்விடத்திற்குப் போனான். அவன் அப்போது கங்காதேவி இடைவிடாமல் பிரவாகித்துக்கொண்டிருக்குமிடத்தில் அகினிக்கொப்பான ஒளியுள்ள ஒருபெண்ணைக்கண்டான். அந்தப் பெண் ஜலத்தைவிரும்பிக் கங்கையில் இறங்கி அழுதுகொண்டிருந்தாள். அவளுடைய கணவர்த்துளிஅந்த ஜலத்தில்விழுந்தபோதேபொற்றாமரை மலராயிற்று. அப்போது இந்திரன் அந்த ஆச்சரியத்தைக் கண்டு அந்தப் பெண்ணின் அருகிற்சென்று, "சிறந்தவளே! நீ யார்? எதற்காக அழுகிறாய்? நீ உண்மையாகச்சொல்ல நான் கேட்கவிரும்புகிறேன்" என்று கேட்டான். அந்தப்பெண், "தேவராஜாவான இந்திரனே! பாக்கியமற்றவளான யான் எதற்காக அழுகிறேனென்பதைப்பற்றி இப்போதே நீயறிவாய்; ராஜாவே! நான்முன் செல்வேன். நீயும்வா. நான் எதற்காக அழுகிறேனென்பதைக் காண்பாய்" என்று சொன்னாள். அவள் செல்லும்போது இந்திரனும் பின்சென்றான். அவன் சிறந்த மலையில் கிந்தாஸனபோபட்டி விற்றிருந்து ஒரு சிறுமியுடன்கூடச் சொக்கட்டானாடிக் கொண்டிருந்த மிக அழகான சிறுவனை அருகிற்கண்டான். இந்திரன் சொக்கட்டானாடிக் கொண்டு சிறிதும் கவனிக்காமலிருந்த அந்தச் சிறுவனைக்கண்டு கோபத்துடன், "ஓ! விரோசனா! இவ்வுலகம் என்வசத்திலிருப்பதென்றும் இதற்கு நான் ஈசுவரனென்றும் அறியும்" என்று சொன்னான். ஈசுவரர் இந்திரன் கோபிப்பதைக் கண்டு நகைத்தார். அவனை மென்மையாகக் கண்ணெடுத்து நோக்கினார். அவரால் பார்க்கப்

பட்ட தேவராஜன் உடனே அசைவற்றவனைப்போல் நின்றான். அவர் போதுமானவரையில் விளையாடினபிறகு அழுது கொண்டிருந்த அந்தத் தேவகன்னிகையை நோக்கி, "நீ இவனை நானிருக்குமிடத்திற்குச் சமீபத்திற்கொண்டுவா. இவனுக்கு முறுபடியும் கர்வம் உண்டாகாமலிருக்கவேண்டும்" என்றுசொன்னர். பிறகு இந்திரன் அவளால் தொடப்பட்டவுடன் அங்கங்கள் தளர்ந்து பூமியில் விழுந்தான். உக்கிரமான சக்தியுள்ள பகவான் அவனை நோக்கி, "இந்திரா! இனி எவ்வகையிலும் இவ்வாறு செய்யாதே. அந்தச்சிறந்த பர்வதத்திற்குத் திரும்பிப்போ. உன்னுடைய பலமும் ஸாமர்த்தியமும் அளவிடக்கூடாதவைதாம் இந்தப்பர்வதத்தின்குகை நடுவில்நுழை. அதில் உன்னைப்போன்றவர்கள் ஸோயஸைப்போல்பிரகாசித்துக்கொண்டிருக்கின்றனர்" என்றார். அவன் அந்தப் பர்வதத்தினுடைய பெரிய குகையைத் திறந்து தன்னைப்போன்ற ஒளியுள்ள மற்றை நால்வரைக் கண்டான். அவர்களைக்கண்டபின் அவன், "நானும் இவர்களைப்போல ஆகாமலிருப்பேனு" என்று நினைத்துத் துயரமுற்றவனைன் பிறகு தேவரான கிரீசர் கோபத்துடன் கண்களை விழித்து இந்திரனைநோக்கி, "ரதக்ரதுவே! நீ முதலில் சிறுபிள்ளைத்தனமாக எனையவமதித்ததனால் இந்தக் குகையுள புகு" என்று சொன்னர். பிரபுவினால் இவ்வாறு சொல்லப்பட்ட தேவேந்திரன் அவருடைய கோபத்திற்கு மிகப்பயந்து அங்கங்கள் தளர்ந்து மலைத்தலையில் காற்றினைலடிக்கப்பட்ட அரசஇலைபோல் நடுங்கினான். விருஷபவாகனரால் இவ்வாறுசொல்லப்பட்ட இந்திரன் உடனேநடுக்கமுற்று விச்வரூபரும் உக்ரரூபமான ஈசுவரரைநோக்கி, கைகூப்பிக்கொண்டு, "ஈசுவரனே! இப்போது நர்தாம் எல்லா உலகங்களுக்கும் முதன்மையானவர்" என்று சொன்னன். உக்ரசக்தியுள்ள ஈசர் நகைத்துக்கொண்டு அவனை நோக்கி, "இவ்வகையான தன்மையுள்ளவர்கள் இவ்வுலகத்தில் அலுக்ரஹம் பெறுவதற்கு உரியவர்களல்லர். இங்கிருப்பவர்களும் முன்னை உன்னைப்போல் கடந்தவர்கள். ஆதலால், நீயும் இந்தக் குகையில் பிரவேசித்துக் கிட. இவள் உங்களுக்குப் பாரியையாக ஆவாள்; ஸந்தேகமில்லை. நீங்கள் அனைவரும் மானிடஜன்மத்தை அடைவீர்களாக. அந்த ஜன்மத்தில் நீங்கள் யாருக்கும் செய்யமுடியாத செய்கையைச் செய்து பகைவர்கள் அனைகர்களை வதஞ்செய்து திவ்யாஸ்திரங்களைக்கொண்டு மானிடர்களோடு யுத்தஞ்செய்து சூர்ரெல்லாரையும் போரில் வென்று நீங்கள் புண்ணியத்தி

னல் முதலில் ஸம்பாதித்த சிறந்த இந்திரலோகத்திற்குத் திரும்பி வழ் வருவீர்கள் இவ்வாறு நான் சொன்னவையெல்லாவற்றையும் அனேகப்பிரயோஜனங்களோடு கூடிய மற்றக்காரியங்களையும் நீங்கள் செய்யவேண்டும்'' என்றுசொன்னர்.

பழைய இந்திரர்கள் ''துர்லபமான சாபவிமோசனம் மனுஷ்ய லோகத்தில் எங்களுக்கு விதிக்கப்பட்டிருப்பதனல் நாங்கள் தேவ லோகத்தைவிட்டு மனுஷ்யலோகத்துக்கே செல்வோம். ஆனல், தர்மன், வாயு, இந்திரன், அசுவினிதேவர்களாகிய தேவர்களே எங்களுக்குத் தாயினிடத்தில் கர்ப்பதானஞ் செய்யக்கடவர்'' என்று கேட்டனர். புது இந்திரன் இந்தச்சொல்லைக்கேட்டுமறுபடியும்தேவசிரேஷ்டரான சுவரைப்பார்த்து, ''நான காரியத்திற்காக என் வீரியத்தினல் எனக்குப்பிறகுத புதிரிணி இவர்களுக்கு ஐந்தாமவனகக் கொடுப்பேன்'' * என்று சொன்னன். அந்த ஐந்து இந்திரர்களுள் முதலாமவன் விசுவபுக;. இரண்டாமவன் பூததாமன்; மூன்றுமவன் பராக்ரமசாலியான சிபிச்சக்கரவர்த்தி; காலாமவன் சாகதி; † ஐந்தாமவன் தேஜஸ்வி. உக்கிரமான தனுஸையுடையபகவான் தம்முடைய சிறந்த ஸ்வபாவத்தினல் அவர்கள் விருப்பிபடியனைக் கேட்டுக்கொண்டபடி கொடுத்தனர். உலகமெல்லாம விருப்பத்தக்க ராஜலக்ஷ்மியாகிய அந்தப்பெண்ணை மானிடலோகத்தில்அவர்களுக்குப்பாரியையாயிருக்கக்கட்டளையிட்டார். பிறகு அந்த சுவர் அவர்களுடன்கூடவே அரியமுடியாதவரும்அளவில்லாதவருமாகாரணபூதரும்ஜனனமில்லாதவரும் முற்காலத்திலும்எக்காலத்திலுமிருப்பவருமெல்லாம்தாமாக இருப்பவரும் அளவற்ற அவதாரரூபங்கள் எடுப்பவருமாகிய திருமாலிடம் சென்றனர். அவரும் அவையெல்லாவற்றையும் அவ்வாறே நியமித்தார். பிறகு அவர்களிணைவரும் தேவர்களில் முதன்மையான நரன் என்னுந் தேவதையை இந்திரனுக்கு ஜனிக்கத் தக்க ஐந்தாமவனை ஜிஷ்ணு என்பவனகை நிச்சயித்துப் புவனியில் ஜனித்தனர். அந்தத் திருமாலானவர் ஒன்றுவெண்மையும் மற்றொன்று கருமையுமாகிய இரண்டு கேசங்களைத் தலையிலிருந்தெடுத்தார். அந்தஇரண்டு கேசங்களும் தேவகி ரோகிணியென்னும் இரண்டு யாதவகுலத்துஸ்திரீகளின் கர்ப்பங்களில் பிரவேசித்தன. அந்தத்திருமாலினுடைய அவ்விரண்டு

* நானே நேரில் ஜனிக்கமாட்டேன்.

† இவன்தான் புதிய இந்திரன்.

கேசங்களில் வெண்மையாயிருந்தவொன்று பலராமனைப்பிறந்தது. இரண்டாவது கறுத்தநிறமாகச் சொல்லப்பட்ட கேசம் கேசவனைப் பிறந்தது. வடதிசையிலுள்ள அந்தமலையின் குகையில் இந்திரரூபத்திடன் அடைக்கப்பட்டவர்கள் எவரோ அவர்களே வீரர்களான பாண்டவர்களாக இங்கு இருக்கின்றனர். ஸவ்யஸாசி என்னும் பாண்டவன் இந்திரனுடைய அம்சமே. ராஜாவே! எவர்கள் முன்னர் இந்திரர்களாயிருந்தனரோ அவர்களே இவ்வாறு இந்தப்பாண்டவர்களாக ஜனித்திருக்கின்றனர்; திவ்யரூபமுள்ள இந்தத்ரௌபதி அவர்களுக்குப் பாரியைபோயிருக்க முன்னமே கட்டளையிடப்பட்டிருந்த ராஜலக்ஷ்மிதான். தெய்வக்கட்டளையின்றி உன்னுடைய யாகத்துக்காகப் பூமியிலிருந்து பெண்களெம்புவது எவ்வாறுஉண்டாகும்? இவளுடைய ரூபம் சந்திரனையும் ஸூர்யனையும்போல் ஒளியுள்ளது. இவளுடைய தேகமணம் ஒருகுரோசதூரம் வீசுகிறது. ராஜாவே! 'அன்பைமுன்னிட்டு உனக்குத் திவ்யதிருஷ்டியைக் கொடுக்கிறேன். ஆச்சரியமான மற்றொருவரத்தையும்கொடுக்கிறேன். புண்ணியமான பழைய தேவதேகங்களோடு பாண்டவர்களை நீ காண்பாயாக" என்றார்.

மிகச்சிறந்த செய்கையுடையவரும் பரிசுத்தரும் பிரம்மரிஷியுமாகிய வியாஸர் இவ்வாறு சொல்லித் தாமதி தவத்திலுள் அவ்வரசனுக்குத் திவ்யதிருஷ்டியை அளித்தார். அவ்வரசனும், அவர்களனைவரும் முந்திய தேவதேகங்களோடிருப்பதை உள்ளபடி பார்த்தான். அந்தத் திவ்யதிருஷ்டியினுல் பொற்கிரீடங்களையும் பொன்மாலைகளையும் அணிந்தவர்களும் இந்திரனுக்கும் அக்னிக்கும் ஆதித்யனுக்கும் ஒப்பான ஒளியுள்ளவர்களும் தலைகளில் மாலை சூட்டிக்கொண்டவர்களும் அழகிய தேகங்களுள்ளவர்களும் இளமைப்பருவத்திலிருப்பவர்களும் அகன்ற மார்புகளையுடையவர்களும் பாணமரர் பிரமனுமுள்ளவர்களுமாகிய திவ்யபுருஷர்களைக் கண்டான். அழுக்கில்லாத திவ்யவஸ்திரங்களாலும் நறுமணமுள்ள சிறந்த புஷ்பமாலைகளாலும் மிகவும் விளங்கிக்கொண்டு தேரேறவந்தமுக்கண்ணர்களோடு வஸுக்களோடு ருத்திரர்களோடு ஆதித்யர்களோடு என்னும்படி எல்லாக்குணங்களுமிரம் பினவர்களும் பழைய இந்திரர்களுமாகிய அந்த ஸுகந்தரபுருஷர்களையும் இந்திரனைப்போன்ற ரூபமுள்ள இந்திரபுத்திரனை அர்ச்சுனனையும் பார்த்துத் திருபதராஜன் மகிழ்ச்சியும் வியப்பும் அடைந்தான். அந்த அரிசர்க்கரசன் அந்தத்தேவமாயை அறிவுக்கெட்டாததென்று

நிஜைத்துச் சிறந்த அழகுள்ளவளும் சந்திரனும் அக்னியும் நேரேவந் தஜுபோல் பிரகாசிக்கின்றவளுமான அந்தத் தேவலோகத்துப்பெண் ணரசியைப்பார்த்து அழகினாலும் ஒளியினாலும் புகழினாலும் அவள் அவர்களுக்குத் தகுதியான மனைவியென்று மதித்துக் களிப்புற்றான். அவன் அந்த மிக்க ஆச்சரியமான ரூபத்தைக்கண்டு ஸத்யவதிபுத்ர ரான வியாஸருடைய பாதங்களைப்பிடித்துக்கொண்டு, "ரிஷிச்ரேஷ் டரே! உம்மிடத்தில் இது புதுமையன்று" என்று சொன்னன்.

வியாஸர் மனமகிழ்ந்து துருபதனைப்பார்த்து, "விவாஹவிஷய த்தில் பூர்வகாலத்து ராஜரிஷிகளின் பூர்வசரித்திரத்தையும் இப்போது நான்சொல்லக்கேள். இப்புவியில் நிதந்துவன்றுபெயர்பெற்ற ராஜரிஷி ஒருவன் இருந்தான். அவனுக்குப் பூமியையாளத்தக்கவர்களும் சூரர்க ளும்ஆபத்தைத்தடுப்பவர்களும்வெல்விகள்புரிபவர்களுமாகியஸால்வே யன், சூரஸேனன், சுருதஸேனன், திந்துஸாரன், அதிஸாரன் என்று சிறந்த வில்லாளிகளான ஐந்து புத்திரர்கள் இருந்தார்கள். அவர்கள் ஒருவரையொருவர்மீறுதவர்களும்ஒருவர்க்கொருவர்இன்சொற்சொல் லுகிறவர்களும் இனியனசெய்கிறவர்களும் பொறுமையற்றவர்களும் தர்மத்தைநிந்தகவர்களும் கடுமையில்லாதவர்களுமாயிருந்தார்கள். சிபி யின்புதல்வியாகியபௌமாச்வியென்பவள்நிதந்துவின்புத்திரர்களான இவ்வைந்து ராஜரிஷிகளையும் கணவர்களாக ஸ்வயம்வரத்தில் வரித் தாள். அப்போது எல்லாப்பெண்களிலும் சிறந்த பௌமாச்வியான வள் கந்தர்வகளின் ராகமூர்ச்சனையைப்போலவும் வீணையைப்போ லவும் இனிய குரலுள்ளவளாயிருந்தாள். எல்லாக்குணங்களும் நிரம்பி னவர்களும் க்ஷத்ரியச்ரேஷ்டர்களும் நிதந்துராஜபுத்திரர்களுமாகிய ஐந்து அரசர்களும் அவளுக்குப்பர்த்தாக்களாயிருந்தனர். அப்படிப் பட்ட அழகும் குணங்களும்பொருந்தின சிறந்த பௌமாச்வியென் னும் சிபியின்புத்திரியைநோக்கி 'அவ்வரசர்களுக்கு மனைவியாயிருந் தாள். ராஜச்ரேஷ்டனே! அவள் அப்போது அந்த நிதந்து புத்திரர்கள் ஐவர்க்கும் ஐந்து புதல்வர்களை ஐந்து காலங்களில் ஈன்றாள். ஸோஹா தார்களான அந்தப்பௌமாச்வியின் புத்திரர்களுக்குப் பூமியில்ஐந்துபெ யர்கள் தனித்தனியேயிருந்ததை வரிசையாகச் சொல்லுகிறேன். ரா ஜச்ரேஷ்டனே! கேள். இவர்களின் வம்சத்திற் பிறந்தவர்களும் ஸால் வேயர்கள், சூரஸேனர்கள், சுருதஸேனர்கள், திந்துஸாரர்கள், அதி ஸாரர்கள் என்னும் அரசர்களாகவே இருந்தனர். இப்படிப்பௌமா

ச்வி அனேகருக்கு ஒரு பார்யையாகப் பூமியில் பெயர்பெற்றிருக்தாள். துருபதனே! குற்றமற்றவளும் ப்ருஷத வம்சத்துக்கு அலங்காரமுமாகியதேவதாரூபமுள்ளகிருஷ்ணையென்னும் இந்த உன்பெண் பௌமாச்வியைப் போலவே ஐவருக்குப்பத்தினியாக விதிக்கப்பட்டவள்.

ஒரு தபோவனத்தில்மஹாத்மாவாகியரிஷிகன்னிகையொருத்தி இருந்தாள். அவள் அழகுள்ளகன்னிகையாயிருந்தும் அவளுக்குக் கணவன் கிடைக்கவில்லை. அவள் சங்கரரை நோக்கிக் கடுந்தவஞ்செய்தாள். ஈசுவரன் அனுக்ரஹம் செய்து பிரத்யக்ஷமாக வந்து, "வரம்கேள்" என்று அவளுக்குச் சொன்னார். இவ்வாறு சொல்லப்பட்ட அந்தக்கன்னிகை வரம்கொடுக்கும் தேவராகிய ஈசுவரனைப்பார்த்து, "எல்லாக்குணங்களும் பொருந்தின கணவனை வேண்டுகிறேன்" என்று பலமுறை சொன்னாள். அந்தத் தேவச்ரேஷ்டரான சங்கரர் மனத்தில் அன்புகூர்ந்து, "அன்புள்ளவளே! உனக்கு ஐந்துபதிகள் வருவார்கள்" என்று அவள்கேட்டவரத்தை அவளுக்குக் கொடுத்தார்! அவள் ஈசுவரன் அனுக்ரஹத்தை வேண்டி மறுபடியும், "சங்கரா, நான் குணமுள்ள ஒருபதியை உம்மிடத்திலிருந்து பெறுதற்குரியவள்" என்று சொன்னாள். தேவதேவராகிய சங்கரர் மனத்தில்அன்பு கூர்ந்து மறுபடியும் அவளைப் பார்த்து, "அன்புள்ளவளே! பதியைக் கொடுமை என்று நீ என்னைத் திரும்பத்திரும்ப ஐந்துதரம் கேட்டாய். அந்தசசொல் அவ்வாறுதான் நடக்கும். உனக்குநன்மையுண்டாகக்கடவது. மற்றொரு ஜன்மம் வரும்போது இவைபெல்லாம்உனக்குநேரிடும்" என்று சொன்னார். துருபதனே! அவள்தான் தேவதாரூபமுள்ள இந்த உன்பெண்ணைப் பிறந்திருக்கிறாள். குற்றமில்லாதவளும் ப்ருஷதவம்சத்துக்கு அலங்காரமுமாகிய கிருஷ்ணை ஐவருக்கு மனைவியாக விதிக்கப்பட்டிருக்கிறாள். அவளேதான் புவியில் ரூபத்தில்தனக்கு நிகரில்லாதகாளாயனியாகப்பிறந்து மௌத்கல்யமுனியைப்பர்த்தாவாக அடைந்து பிறகு சிவனிடம் வரம்பெற்றவள். ராஜச்ரேஷ்டனே! இந்தத் தேவரகஸ்யத்தை உனக்குச் சொன்னேன். இது தேவரகஸ்யமாயிருப்பதினாலேதான் யாருக்கும்சொல்லத்தகாது. தேவர்களுடைய ராஜலக்ஷ்மி பாண்டவர்களுக்காகத்தான் உன்மஹாயாகத்திற்பிறந்தாள். நீ கடுந்தவஞ் செய்ததினால் அவள் உன்மகளாக வந்திருக்கிறாள்: அழகுள்ளவளும் தேவர்களால் விரும்பப்பட்டவளு

மாகிய அந்தத் தேவகன்னிகை, தான்செய்தகருமத்தினால் இந்தலோ
கத்தில் தேவர்களாகிய ஐவருக்கு ஒரேமனைவியாகப் பிரம்மதேவரா
லேயேபடைக்கப்பட்டிருக்கிறாள். திருபதராஜாவே. இதைக்கேட்ட
பிறகு "உன்விருப்பத்தைச் செய்யலாம்" என்றார்.

இருநூற்றுப்பதினைந்தாவது அத்தியாயம்.

வைவாஹிகபர்வம். (தொடர்ச்சி.)

(யுதிஷ்டிரர் முதலியவர்கள் விசைப்படி திரௌபதியைப் பா
ணிக்ரஹணம் செய்தது.)

துருபதன், "மஹரிஷியே! உங்களுடைய இவ்விதமான சொல்
லைக் கேளாமல்தான் நான் முதலில் காரியம் ஆரம்பித்தேன். விதி
யைவிலக்க முடியாது. அதேவிதிதான் இதை நேர்ந்திருக்கிறது.
தெய்வத்தின் முடியை அறிந்துக்கமுடியாது. * விதியினால் செய்யப்
படும் எதுவும் ஒருவனுடைய அந்தக் கர்மாவினால்தான். ஒருவனுக்
காக இவ்விடத்தில் லக்ஷியம் உண்டாக்கப்படவில்லை; அதேவிதி இப்
போது வந்துசேர்ந்தது. கிருஷ்ணையானவள் தனக்கு அநேகம் பதி
களைக் கொடுக்கவேண்டுமென்று பகவானை முதலில் கேட்டபடியே
அந்தப்பகவானும் அவளுக்கு அதனை வரமாகக்கொடுத்தார். இந்த
விஷயத்தில் எதுமுக்கியமோ அஃது அந்த ஈசுவரருக்குத்தானே
தெரியும். சங்கரராலேயே இவ்வாறு விதிக்கப்பட்டிருந்தால் தர்மமா
யிருந்தாலும் அதர்மமாயிருந்தாலும் அந்தவிஷயத்தில் என்னுடைய
தவறுதல் ஒன்றுமில்லை. கிருஷ்ணை இவர்களெல்லாருக்கும் விதிக்கப்
பட்டிருப்பதனால் இவர்கள் நிச்சயித்தபடி யதாசாஸ்திரமாக இவ
ளைப் பாணிக்ரஹணஞ் செய்துகொள்ளட்டும்" என்றுசொன்னன்.

வ்யாஸர், "மானிடர்களுக்கு விவாஹத்தில் இது நியாயமாகாது.
இவர்களோ தேவர்கள். திரௌபதியும் லக்ஷ்மி முன்செய்த தவத்தினா
லுண்டான, சங்கரருடைய அனுக்ரஹத்தினால் பாண்டவர்களிவர்க்
கும் பத்னியானாள். ராஜாவே! மற்ற ஸ்திரீ புருஷர்களுக்கு மனு
சொன்னபடி இது தர்மமாகாது. தெய்வத்தன்மையுள்ளவர்களுக்கு

* இவ்வுலகில் தன் செய்கையினால் முடிக்கப்படுவது ஒன்றுமில்லை; ஒரு
வனுக்காக இவ்விடத்தில் லக்ஷியம் உண்டாக்கப்பட்டது; பழையவிதியே இப்
போதுவந்து நேர்ந்திருக்கிறதென்பது, உத்தரதேசபாடம்.

மட்டுமே திரௌபதி பாண்டவர்களுக்கு நடப்பதாகிய விவாஹம் போன்றது சாஸ்திரவிஹிதமாகும்" என்று சொன்னர். உடனே பீத்திரர்களுடனே குந்தியும் துருபதபுத்திரனை திருஷ்டத்யும்னனும் எங்கே இருந்தனரோ அந்த இடத்திற்கு அந்த வ்யாஸரும் துருபதனும் வந்தனர். பிறகு பகவானை கிருஷ்ணத்வைபாயனர் தர்மராஜாவான யுதிஷ்டிரரிடம்வந்து, "பாண்டவர்களுள் மூத்தவனே! சந்திரன் சுபமான * புஷ்யநக்ஷத்திரத்தோடு சேர்ந்திருக்கிற இந்தச்சுபதினத்திலேயே நீ முதலில் கிருஷ்ணையைப் பாணிக்ரஹணஞ்செய்" என்று சொன்னர். தர்மராஜாவுக்கு இவ்வாறு சொன்னபிறகு பீமன் முதலானவர்களைப்பார்த்து, "புருஷச்ரேஷ்டர்களே! முறையே உங்கள் கைகளினல் திரௌபதியின் கையைப்பிடித்துக்கொள்ளுங்கள். குற்றமற்றவர்களே! இவ்வாறுகமே இதெல்லாம் முன்னமே நடந்திருப்பதை நான் கண்டிருக்கிறேன்." என்று கூறினர். பிறகு யஜ்ஞஸேன ராஜா புத்திரர்களுடன்கூட வரனுக்காகக் குறிப்பிடப்பட்ட பற்பல உயர்ந்த பொருள்களை மிகுதியாகச் சேர்ப்பித்தான். மஹாநுபாவனை அவன் புத்திரர்களோடும் இனத்தாரோடும்கூட மகிழ்ச்சியுற்று, தன் பெண்ணாகிய கிருஷ்ணைக்கு மங்களஸ்நானஞ்செய்வித்து அனேக ரத்னபரணங்கள் பூட்டி அவளை வருவித்தான். பிறகு ராஜாவினுடைய மித்திரர்களும் மந்திரிகளும்பிராமணர்களும் பட்டணத்து ஜனங்களும் மிகுந்த ஸந்தோஷத்துடன் விவாஹத்தைப் பார்ப்பதற்குத் தகுதிப்படி வந்துசேர்ந்தனர். பிறகு மேன்மையான மனிதர்களினல் பிரகாசிப்பதும் மிகுதியான தாமரைகருநெய்தல்முதலியமாலைகளாலும் தோரணங்களாலும் அலங்கரிக்கப்பட்ட வாயிலையுடையதும் பெருஞ்சேனையினலும் ரத்னவரிசைகளாலும் விசித்திரமுமான துருபதராஜன் மாளிகை பிரகாசமான நக்ஷத்திரங்களோடு கூடிய ஆகாயம்போல் விளங்கியது. பிரபுவான ஜனமேஜயரே! அப்போது அந்த யௌவனப்பருவத்திலிருக்கும்கௌரவராஜ புத்திரர்களனைவரும் மங்களஸ்நானஞ்செய்து மங்களகாரியங்களை ச்செய்துகொண்டு குண்டலங்களையும் மற்றஅணிகலங்களையும் அணிந்து விலையுயர்ந்த ஆடைகளையுடுத்துக் கலவைச்சாந்தணிந்து அக்கினிக்கொப்பான தேஜஸை

---

* புஷ்யம்=போஷிப்பது அதாவது விருத்திகரமானதினம்என்று சொல்லவேண்டும்; எனெனில், புஷ்யம் விவாஹத்திற்குரியதன்று என்பது பழைய உரை.

யுடைய புரோஹிதரான தௌம்பியருடன்கூட மகிழ்ச்சியடைந்து மற்றவிருஷபங்கள் கொட்டிலிற் புகுவதுபோல் துருபதராஜனுடைய அந்தஃபுரவாஹஸபையில் வரிசையாகப்பிரவேசித்தனர். பிறகு வேதத்திற்கரைகண்டவரும் மந்திரங்களையறிந்தவருமாகிய அந்தத்தௌம்பியர் அக்கினிஸந்தானம்செய்வித்து ஜ்வலித்தஅக்கினியில் மந்திரபூர்வகமாக ஹோமஞ்செய்தார். யுதிஷ்டிரரை அழைத்து அவரைக்கிருஷ்ணையோடுசேர்ப்பித்தார். வேதத்தில்கரைகண்டவரான அந்தத்தௌம்பியர் பாணிக்ரஹணஞ்செய்துகொண்ட அந்தக் கிருஷ்ணையுதிஷ்டிரர் இருவரையும்அக்கினிபிரதக்ஷிணம்செய்வித்தார். அந்தராஜாவானயுதிஷ்டிரர், மூதலில் தனங்களாலும் பசுக்களாலும் பலவகையானரத்னங்களாலும்பிராம்மணர்களுக்குத்திருப்திசெய்வித்து, தௌம்பர் அக்கினிக்கொப்பான ரிஷிகளுடன்சேர்ந்து சாஸ்திரப்பிரகாரம் அக்கினியில் ஹோமம்செய்தபின் அக்கினியின் வடதிசையில் திரௌபதியைப்பாணிக்ரஹணம் செய்தார். அப்போது ஆகாயத்திலிருந்து பூமாரிகள் பெய்தன; மிக்க இனிய மலயமுல்லைகாற்று வீசியது. அப்போது மஹாபாக்யவானும் ராஜ புரோஹிதருமான தௌம்பர் ஸபையில் சோபிக்கின்ற அந்த யுதிஷ்டிரரிடம் அனுமதி பெற்றுப் பிராம்மணர்க ளெல்லாரையும் துருபதராஜாவின் சுற்றத்தாரையும் சேர்த்துக்கொண்டு உயர்ந்த ஸ்வபாவமுள்ள அந்தத்துருபத மஹாராஜாவினிடம் மறுபடியும் நடக்கவேண்டிய விஷயத்தைப்பற்றி, "ராஜாவே! இனி மற்ற ராஜகுமாரர்களும் சாஸ்திரப்படி கன்னிகையைப் பாணிக்ரஹணம் செய்யலாமே" என்றுகேட்டனர். துருபதனும் அந்தப்பிராம்மணரைக் கௌரவித்து "அப்படியே செய்வியும்" என்று அவருக்குக்கட்டளை யிட்டான். ராஜாவும் புரோஹிதரும் அனுமதி கொடுத்ததனால் அந்த ராஜபுத்திரர்கள்மகிழ்ந்தனர். உத்தமமானரூபத்தையுடையவர்களும்மஹாரதர்களும் கௌரவவம்சத்தைப் பெருகச்செய்கிறவருமாகிய அந்தமற்ற ராஜகுமாரர்களும் ஒவ்வொரு நாளும் ஒவ்வொருவராக வரிசைப்படி அந்த உயர்ந்த பெண்ணைப் பாணிக்ரஹணஞ்செய்தனர். அவ்விடத்தில் மனிதர்களிலில்லாதமற்றொரு சிறந்த ஆச்சரியம் நடந்ததைத் தேவரிஷியாகிய நாரதர் சொன்னர். மஹாபாக்யவையாகிய அந்த அழகிய இடையுள்ளபெண் ஒவ்வொருநாள்கடந்தபிறகும் கன்னிகையாகவே இருந்தனளாம். தர்மபத்னியுடைய மூத்தஸோதரரிடத்தில் கணவனும்மாமனும்என்னும்எண்ணத்தையும், கணவனுக்குக்கண்டிப்பும்

பியினிடத்தில் கணவனும் மைத்தினனுமென்னும் எண்ணத்தையும், இடையிலிருப்பவர்களிடத்தில் கணவன் மாமன்மைத்தினன் என்னும் மூவகை பெண்ணத்தையும் வைத்திருந்தனளாம். விவாஹம் நடந்த பிறகு மஹாரதர்களான பாண்டவர்களுக்குத் துருபதன் 'அமேக விதமான உயர்ந்த தனங்களையும் சிறந்தபொன்மாலைகள் கட்டினவையும். பொற்கடிவாளங்கள் போடப்பட்டவையுமான நாலுகுதிரைகள் பூட்டின நூறுரதங்களையும், பொற்கொடுமுடியுள்ள குன்றுகளைப் போன்ற தாமரைப்பூவடிவமாகச்செய்யப்பட்ட பொன் அப்பாரிகள் அமைத்த நூறுயானைகளையும்கொடுத்தான். அவ்வாறே மறுபடியும் மஹாணுபாவனை துருபதன் தேவரூபங்களாகக்காணப்படுகின்ற பாண்டவர்கள் ஒவ்வொருவருக்கும் இளமைப்பருவ ஆரம்பத்திலிருப்பவர்களும் விலையுயர்ந்த ஆடை ஆபரணங்கள் புஷ்பமாலைகள் முதலியவற்றால் அலங்கரிக்கப்பட்டவர்களுமாகிய நூறுதாதிகளையும் தன்னுடைய ஆடையாபரணங்களையும் அவர்களின் மஹிமைக்குத்தக்கபடி அக்கினியின்முன்னிலையிற் கொடுத்தான். அந்தவிவாஹம் நடந்தபிறகு மஹாபலசாலிகளும் இந்திரனுக்கொப்பானவர்களுமாகிய பாண்டவர்கள் ரத்னங்கள் நிரம்பின அந்த ஐசுவரியத்தைப் பெற்று அந்தப்பாஞ்சால நகரத்திலேயே மகிழ்ந்திருந்தனர்.

இருநூற்றுப்பதிமூன்றாவது அத்தியாயம்.

வைவாஹிகபர்வம் (தொடர்ச்சி.)

(குந்தி திரௌபதியை ஆசீர்வதித்ததும், கிருஷ்ணன்அனுப்பிய ஆபரணங்களைப் பாண்டவர்கள்பெற்றுக்கொண்டதும்.)

பாண்டவர்களுடன் ஸம்பந்தம் பெற்ற துருபதனுக்கு, தேவர்களிடத்திலுங்கூட எவ்வகையிலும் சிறிதும் பயமுண்டாகவில்லை. மஹாத்மாவான துருபதனுடைய அந்தஸ்திரீகள் குந்தியிடஞ்சென்று தங்கள் பெயரைசொல்லி அவள்பாதங்களைத் தங்கள் சிரங்களினால் அடைந்தனர். கிருஷ்ணையும் பட்டுடுத்து விவாகமங்களங்கள்செய்து கொண்டபின் மாமிக்கு வந்தனம்செய்து கைகூப்பி வணக்கத்துடன் நின்றாள். அழகும் ராஜலக்ஷணங்களும் பொருந்தினவளும் நற்குணங்களும் நல்லொழுக்கமுமுள்ளவளும் தன் மருமகளுமான திரௌபதிக்குக் குந்தி ப்ரேமையினால், "இந்திரனுக்கு இந்திராணிபோல

வும் அக்கினிக்கு ஸ்வாகாதேவியைபோலவும் சந்திரனுக்கு ரோஹிணி போலவும் நளனுக்குத் தமயந்தியைபோலவும் குபேரனுக்குப் பத்ராதேவியைபோலவும் வஸிஷ்டருக்கு அருந்ததியைபோலவும் திருமாலுக்கு ஸ்ரீ தேவியைபோலவும் நீ உன் கணவர்களுக்கிருப்பாயாக. அன்புள்ளவளே! தீர்க்காயுஸான வீரர்களைப்பெற்று மிகுந்த ஸுகமடைந்து நல்லபாக்யமுள்ளவளும் ராஜபோகங்கள்நிரம்பினவளும் யாகத்திற்குரிய பத்னியும் பதிவ்ருதையுமாக இருக்கக்கடவாய். தேடிவந்த விருந்தினர்களையும் முனிவர்களையும் இளைஞர்களையும் முதியோர்களையும் பெரியோர்களையும் முறைப்படி எப்போதும் ஆதரித்துக்கொண்டே உனக்கு வருஷங்கள் செல்லட்டும். தர்மத்தில் அன்புள்ள நீ ராஜ்யாபிஷேகம் பெறுவாயாக. மஹாபலசாலிகளான உன் கணவர்கள் பராக்ரமத்தினால் ஜயித்த பூமிமுழுதையும் அசுவமேதமென்னும் மஹாயாகத்தில் பிராம்மணர்களுக்குத்தானங்கொடுத்துவிடுவாயாக. குணங்கள் நிரம்பினவளே! சுபலக்ஷணங்கள் பொருந்தியவளே! நீ நூறுவருஷகாலம் ஸுகத்திலிருந்துகொண்டு குணங்களில் சிறந்த ரத்னங்களென்றுசொல்லப்பட்ட பொருள்கள் பூமியில் என்ன என்ன உண்டோ அவற்றையெல்லாம்அடைவாயாக" என்றுஆசீர்வதித்து "மருமகளே! இப்போதுபட்டுடுத்தின உன்னைப்பார்த்து எவ்வாறுஸந்தோஷிக்கிறேனே அவ்வாறேகுணவதியான உனக்குப்புத்திரர்கள்பிறந்தபிறகு மறுபடியும் சந்தோஷப்படுவேன்"என்றுள். பாண்டவர்களுக்கு விவாஹஞ்செய்தான பிறகு ஸ்ரேஷ்ட யாதவனான கிருஷ்ணபகவான் வைடூர்யங்களினாலும் பலவகை ரத்னங்களினாலுஞ் செய்யப்பட்ட விசித்ரமான பொன்னாபரணங்களையும் விலையுயர்ந்த பலதேசத்து ஆடைகளையும் தொடுவதற்கு இனிமையான ரத்னங்கள்போன்ற சால்வைகளையும், தோல்களையும் பலவகைப் பெரிய படுக்கைகளையும், ஆஸனங்களையும், வாகனங்களையும், வைடூர்யங்களினாலும் வஜ்ரங்களினாலும் இழைக்கப்பட்ட நூற்றுக்கணக்கான பாத்திரங்களையும் அனுப்பினர். அழகும் இளமையும் விநயமுமுள்ளவர்களும் நல்ல அலங்காரங்களுள்ளவர்களும் நல்ல அலங்காரங்கள் செய்யத்தெரிந்தவர்களுமாகிய பற்பல தேசத்துப் பணிப்பெண்களையும் கிருஷ்ணபகவான் அனுப்பினர். அறியமுடியாத ஸ்வரூபத்தையுடைய மதுஸூதனர் அவர்களுக்குப் பழகின * பத்ரங்களென்னும் யானைகளையும் நன்றாக அலங்கரிக்கப்பட்ட

* எப்போதும் மதப்பெருக்குள்ள பெரிய யானைகள்.

உயர்ந்த குதிரைகளையும் பிரகாசிக்கின்ற தங்கப்பட்டங்களிலலங் கரிக்கப்பட்ட தந்தத் தேர்களையும் கோடிக்கணக்கான பொன் நாண யங்களையும் அவ்வாறே தங்கக்கட்டிகளையும் வரிசைகளாக அனுப்பி னர். தர்மராஜாவான யுதிஷ்டிரர் தம்மிடத்தில் கோவிந்தனுடைய பிரீ தியை விரும்பினவராக அவற்றையெல்லாம் மிகுந்த ஸந்தோஷத்து டன் பெற்றுக்கொண்டார்.

வைவாஹிக பர்வம் முற்றிற்று.

ஒருநூற்றுப்பதினேழாவது அத்தியாயம்.

விதுராகமன பர்வம்.

(அரசர்கடோல் பாண்டவர்களின் விருத்தாந்தத்தைக் கேட்ட மற்றஅரசர்கள்திருதராஷ்டிரன்முதலியவர்களைநிந்திப்பதும், திருதரா ஷ்டிரபுத்திரர்கள் பாண்டவர்களைப்பற்றி ஆலோசிக்கையில்அவர்க ளைக் கொல்லவேண்டுமென்று சகுனிசொன்னதும், "அவர்களைக் கொல்லமுடியாது ஸமாதானமேசெய்து கொள்ளவேண்டும்" என்று ஸோமதத்தபுத்திரன் சொன்னதும்.)

பிறகு ராஜாக்களுக்கு நம்பிக்கையுள்ளதூதர்கள், "சிறந்தலகூ ணங்கள் பொருந்திய திரௌபதி பாண்டவர்களைக் கணவர்களாக அடைந்தாள். எந்த மஹாத்மா அந்தவில்லையெடுத்து இலக்ஷியத்தை யறுத்தானோ அவன் ஜயிப்பவர்களிற்சிறந்தவனும் பெரியவில்லையும் அம்பையும்தரித்தவனுமான அர்ஜுனன். அந்த ஸமயத்தில் ஒரு விதமான கலக்கத்தையும் அடையாமல் மத்ராஜனை சல்லியனைத் தூக்கிப்போட்டவனும் யுத்தத்தில் வந்தவீரர்களைக் கோபத்துடன் மரத்தினால் அச்சமுறச் செய்தவனும் அணுகமுடியாத அச்சப்படத் தக்கஎதிரிகளின் ஸைன்யங்களாகிய ரதகஜதுரகபதாதிகளெல்லா வற்றையும் வீழ்த்துபவனுமாகிய அவன் பலவானை பீமஸேனன். எவர் துரியோதனனோடு யுத்தஞ்செய்கையில் யுத்தத்தில் அவனை அவ்வாறு ஜயித்தாரோ அவர் புண்ணியவானும் சிறந்தபுத்திசாலியு மாகிய பாண்டவர்களுள் மூத்தவரான தர்மபுத்திரர். எவர்கள் துரி யோதனனுடைய தம்பிகளுடன் பகைவர்களைப்போல் யுத்தம்செய் தனரோ அவ்விருவரும் நல்லொழுக்கமும் பலபராக்ரமங்களும் நிரம் பின நகுல ஸஹதேவர்கள்" என்னும் செய்தியைக் கொண்டுவந்தார்

கள். பாண்டவர்களே பிராம்மணவேஷம்தரித்துக்கொண்டு அடக்க முற்றிருந்ததைக் கேட்டபிறகு அரசர்கள் வியப்புற்றனர். அரசர்களனைவரும் நகரத்திலுள்ளவர்களும் ஆச்சரியமுற்றவராயினர். புகழ் பெற்றருந்தி, புத்திரர்களுடன்கூட அரக்குமாளிகையில் எரிந்துபோனாரென்று எல்லாத்தேசத்தவர்களும் அரசர்கள் யாவரும் கேள்விப்பட்டிருந்தனர். அதனால் அவ்வரசர்கள் பாண்டவர்களே மறுபிறப்புப் பிறந்தவர்களென்றே நினைத்தனர். தர்மம், நல்லொழுக்கம், தாயாரின் விருப்பத்தில் ஊக்கமுதலிய இவ்வகைகளான குணங்கள் நிரம்பின பாண்டவர்களைக் கௌரவனான த்ருதராஷ்டிரன் புரோசனனைச் செய்யப்பட்ட மிகக்கொடியசெய்கையினால் அழிக்கக்கருதினதினால் அவனையும் பீஷ்மரையும் இகழ்ந்தனர். பாரதரான ஜனமேஜயரே! அந்த ஸ்வயம்வரம்நடந்தபிறகு கர்ணனும் சகுனியாலும் கலிக்கப்பட்ட திருதராஷ்டிரபுத்திரர்களனைவரும் அங்கே மந்திராலோசனை செய்தனர். அதில் சகுனி, "ஒருவகைச்சத்துருவுக்குப்பலத்தைக்குறைக்கவேண்டும்; மற்றொருவனைத் துன்பப்படுத்தவேண்டும். குந்திபுத்திரர்களைமட்டும் எல்லா க்ஷத்திரியர்களும் ஒழித்துவிடவேண்டுமென்பது என் அபிப்பிராயம். அபஜயமடைந்த நீங்களனைவரும் ஒரு நிச்சயத்தையும் செய்யாமல் இவ்வாறே திரும்பிப்போவீர்களாயின் நிச்சயமாக உங்கள்மனம் பின்பு துன்பப்படும். நாம் பாண்டவர்களைப்பிடிப்பதற்கு இதுதான் இடம்; இதுதான்காலம்; இவ்விதம் செய்யாமற் போவீர்களாயின் உலகம் நகைக்கத்தக்கவர்களாவீர்கள். இவர்கள் எந்த அரசனை அடுத்து வாஸஞ்செய்ய விரும்புகின்றனரோ அந்தத்துருபதன் பராக்ரமமும் ஸைனியமும் குறைந்த அரசனென்று நான் நினைக்கிறேன். சிறந்தமனமுள்ள துருபதனைத் ஒற்றுமையையடைந்திருக்கும் பராக்கிரமசாலியும் புருஷச்ரேஷ்டனும் சேதிதேசத்தரசனுமான சிசுபாலனும் யாதவவீரர்களும் இவர்கள் ஜீவித்திருப்பதை அறியாமலிருக்கையிலே தான் நமக்குப் பரிக்கிரமகாலம்; ராஜாவே! அவர்கள் இனி வெல்லக்கூடாதவர்களாக ஆகிவிடுவார்கள்; ஸந்தேகமில்லை. ராஜாக்களனைவரும் பாண்டவர்களென்ற நிச்சயத்தை எதுவரையில் அடையாமலிருக்கின்றனரோ அதற்குள்ளேயே பாண்டவர்களை வதஞ்செய்யமுயல்வோம்; அரவின்வாய்போலப் பயங்கரமான அரக்குமாளிகையிலிருந்து விடுபட்ட அவர்கள் இப்போதுமறுபடியும் விடப்படுவாராயின் நமக்குப் பெரியபயம் வந்துவிட்டதாகும்; யாதவர்முதலிய அரசர்களும்இங்குவந்துசேர்ந்து இந்தப்பலம்

டவர்களும் இங்கேயே நீண்டகாலம் ஊன்றிவாசஞ் செய்வார்களா யின் இவர்களுக்கிடையில் நாம் நிற்பது இரண்டுமஹாகஜங்களின்நடு விலிருப்பதுபோல் அஸாத்தியமாகும்; பலவான்களிற்சிறந்தவர்களே! பாண்டவர்களால் ஸம்பாதிக்கப்பட்ட ஸைனியங்கள் பறவைகள்போல் வந்து நமதுஸேனையில் விழுமுன்னே அவர்களை வதஞ்செய்யுங் கள். இந்தநகரத்தை எல்லாரும் சேர்ந்து எதிர்த்துக்கெடுக்கவேண் டும். புருஷச்ரேஷ்டனை துரியோதனனே! இதுதான் எனது அ பிப்பிராயம். காலமும் நோக்கிருக்கிறது" என்று சொன்னான். துர்ப் புத்தியுடன் பேசுகின்ற சகுனியின்சொல்லைக்கேட்டு சோமதத்தபுத் திரனாகிய அரசன்அதைக்காட்டிலும் சிலாக்கியமான வாக்கியத்தைப் பின்வருமாறு சொல்லத்தொடங்கினான்:—

"அரசன், அமைச்சன், மித்ரன்,பொக்கிஷம், தேசம், துர்க்கம் படையாகியஎழுராஜ்யாங்கங்களையும் தன்பக்கத்திலும் பிறன்பக்கத் திலும் இடத்தையும் காலத்தையும் பரிசோதித்து * 1ஸந்தி,2விக்கிர கம்,3யானம், 4ஆசனம், 5த்வைதீபாவம், 6ஸமாச்ரயம்என்னும் ஆறு வகைக்குணங்களையும் உபயோகித்தல்வேண்டும். 7ஸ்தானத்தையும், 8விருத்தியையும், 9க்ஷயத்தையும், 10 பூமியையும், 11 மித்ரர்களை யும், 12சக்தியையும், தன்பக்கத்திலும் பிறன்பக்கத்திலும்ஆராய்ந்து சத்ரு, காமம், க்ரோட்டம் முதலியவைகளால் ஏற்படக்கூடிய வ்யஸனங்களினால் நெருக்கப்பட்டபோது அவனை எதிர்க்கவேண் டும். அந்தப்படி பாண்டவர்கள் மித்திரர்களும்திரவியம்நிறைந்துள்ளவர் களும் பலபராக்கிரமங்கள் தவறுதவர்களும் தங்களுற்றுப்பிறகைகளி னால் ஜனங்களுக்குவேண்டியவர்களாகவும் மிருப்பதாக நான் நினைக்கி றேன். அர்ஜுனன் தன்வடிவத்தினாலேயே பிராணிகளின் நேத்திரங் களையும் மனங்களையும் கவருகிறான். இன்சொல்லினால் மனிதர்களை டையகாதுகளைக்கவருகிறான். கேவலம் அதிருஷ்டத்தினால்மாத்திரம் ஜனங்கள் அன்புடன்அவனையடுத்தார்களில்லை. அவர்கள்மனத்திற்கு

1. ஸமாதானம்;2. சண்டை; 3. எதிர்த்துச்செல்வது புறங்காட்டிச் செல்வது ஆகிய இரண்டு யாத்திரைகள்; 4. ஓரிடத்திலிருப்பது; 5. ஸேனை யை இரண்டாகப் பகுத்துச்செல்வது; 6. மற்றொருபலவானையடுப்பது; 7. மா றுமல் ஒருநிலையில் நிற்பது; 8. நிலைமை உயர்வது; 9. நிலைமை குறைவது; 10. அடையவிரும்பின தேசத்தின்வளப்பம்; 11. தன்மித்திரர்களுக்கும் பிறர் மித்திரர்களுக்குமுள்ள வித்தியாஸம்; 12. தன்சக்திக்கும் பிறர்சக்திக்குமுள்ள தியாஸம்.

விருப்பமாய் இருந்ததெதுவோ அதையெல்லாம் அவன்செய்து நிறை வேற்றினான். இன்மொழியனை பார்த்தனுடைய வார்த்தை, யுக்திவி ரோதமாகவாவது தனக்குப்பற்றுள்ளதாகவாவது அஸதியமாகவா வது பிறருக்கு இன்னுதாகவாவது இருந்ததில்லை. இப்படிப்பட்ட குணங்களின்பிரம்பினவர்களும் ராஜலக்ஷணங்களெல்லாம் பொருந்தின வர்களுமாகிய அந்தப் பாண்டவர்களைப் பலாத்காரமாக அழிப் பதற்கு வல்லவர்கள் சக்தர்களோ அவர்களை நான் பார்க்கவில்லை. (ஸைன்யம் பொக்கிஷங்களின் மிகுதியாகிய) பிரபுசக்தியும், (காரியங் களை ஆலோசித்துநிறைவேற்றுமையாகிய பரம்பரையாகவந்த மந்திரிசேனை பதிமுதலிய) மந்திரசக்தியும் சோர்வின்மையாகிய உற்சாகசக்தியும் பாண்டவர்களிடத்தில்மிகவும் நிரப்பியிருக்கின்றன. யுதிஷ்டிரர் மூல பலங்கள், மந்திரபலங்கள்விஷயத்தில்காலமறிந்துநடப்பவர். அதனால் யுதிஷ்டிரர் ராஜ்யமில்லாமலே ஸாமதானபேத தண்டங்களென்னும் உபாயங்களால் திரண்டு பகைவர்களை ஜயிப்பதற்கும் காலமறிந்தவ ரென்பதை யெல்லாரும் அறிவார்கள்; பாண்டுபுத்திரரான தர்மராஜா தனங்களினால் சத்ருக்களையும் மித்திரர்களையும் சேனைகளையும் வசீகரிப்பதற்காகத் தம் மூலபலத்தைவைத்துக்கொண்டு பூமியையாள்வர். எவர்க ளுக்காகவோ க்ருஷ்ணைகளிருவரும் எப்பொழுதும் ஸுகத்துடனிரு க்கிறார்களோ அந்தப்பாண்டவர்கள் இந்த்ராதி தேவர்களுக்கும் ஜயி க்கமுடியாதவர்களென்று நான் நினைக்கிறேன். உங்கள் நன்மையை நீங்கள்விரும்பியும் என்கருத்து உங்களுக்கு அபிமதமாயிருந்தா லும்பாண்டவர்களெல்லாருடனும் ஸந்திசெய்துகொண்டுவந்தவரை நாம்செல்லுவோம். பிறந்தகரங்களிலும் சிறந்ததான இந்த்ரப்ரஸ்த நகரம் உயர்மானகோபுரங்களாலும் மதில்களாலும் நூற்றுக்கணக் கான மதிற்சார்புகளாலும் காக்கப்பட்டிருக்கிறது; அகழிகளினால் சூழப்பட்டிருக்கிறது. புறகள், தானியங்கள், விறகுகள், ரஸபதார்த் தங்கள், யந்த்ரங்கள், ஆயுதங்கள், மருந்துகள்நிரம்பினதும் அனே கங்குதவகளும் உறுதியாகக்கட்டப்பட்ட திரவியசாலைகளுமுள்ளதும் பயப்படாதற்கு பெரியசக்கரம் மேலே வைக்கப்பெற்றதும் பெரிய மதிலாற்சூழப்பட்டதும், உறுதியான மதில்சிகரங்களையுடையதும் அனேக * சதகுண்டிகள் நிரம்பினதுமாகஇருக்கிறது. கல்கட்டுமதில், மரப்பிராகாரம், மணிதர்காவல் என்று, பிராகாரங்களைக்கட்டுவதில்

* பீரங்கிகள்

தேர்ந்தவர்கள்சொல்லும் மூவகைப்பிராகாரங்களும் உள்ளேமனிதர் கள் அடங்கியவைகளாகச்சிறந்துவிளங்குகின்றன. அவ்வாறே இந்தத் துருபதநகரம் மனிதர்கள் உள்ளேநிரம்பினதும் அனேகம்பேரையர முள்ள இந்தவெண்மதிலினால்மறைக்கப்பட்டதுமாகவிளங்குகின்றது. ஜனங்கள் மஹாத்மாவான துருபதனிடம்அன்புவைத்திருக்கின்றனர். நகரத்திற்குள்ளிருப்பவர்களும் வெளியிலிருப்பவர்களும் கொடை யினாலும் வெகுமதியினாலும் வசப்பட்டிருக்கின்றனர். பயங்கரமான பராக்கிரமமுள்ள ராஜாக்களால் இவர்கள் தகையப்பட்டிருப்பதை யறிந்தவுடன் யாதவர்கள் சிறந்தஆயுதங்களை ஒங்கிக்கொண்டு வந்து விடுவர். ஆதலால் என்சொல் ஸரியாயிருந்தால் பாண்டவர்களுடன் ஸ்ரீயோதனனைச் சந்திசெய்வித்துராஜ்யங்களுக்கேசெல்வோம். இதுதான் என்அபிப்பிராயம். விருப்பமிருந்தால் எல்லாரும் செய் யலாம். இதுதான் நல்லகாரியமென்றும் ராஜாக்களுக்கு ஷேமமென் றும் நான்நினைக்கிறேன்'' என்றுசொன்னான்.

இருநூற்றுப்பதினேட்டாவது அத்தியாயம்.

விதுராகமனபர்வம் (தொடர்ச்சி)

(துர்யோதனாதியர் கர்ணன் ஆலோசனையைக்கேட்டுப் பாண்ட வர்களைக்கொல்வதற்காகப் பாஞ்சாலநகரம்சென்று பாண்டவரால் தோல்வியடைந்து திரும்பி ஹஸ்தினபுரம்சேர்ந்ததும், கிருஷ்ணபல ராமர்கள் பாஞ்சாலநகரம்வந்ததும்.)

எல்லாருக்கும் வேண்டியவற்றையெல்லாம் வ்யஷிப்பவனும் எல் லாக்காரியங்களையும்செய்யவேண்டிய காலத்தையறிந்தவனும் ஸோர்ய புத்திரனுமான கர்ணன் ஸௌமதத்தி சொன்னதைக்கேட்டு அக் ாலத்திற்குரிய சொல்லைச் சொல்லலானான். ''இந்தவாக்கியம் முழுவ தும் நீதிசாஸ்திரத்தை முக்கியமாகக்கொண்டு சொல்லப்பட்டது; பொருளடங்கியது. இந்தவாக்கியத்தில் எனக்குப் பொறுமையில்லை. நான் சொல்கிறதையும் கேட்கலாமென்றுதான் சொல்லுகிறேன். மனிதர்கள் எந்தக்காரியங்களிலும் அபிப்பிராயங்களின் வேறுபாட் டுடன் இருக்கலாகாது. மனவேறுபாட்டுடன் செய்தால் எந்தக்காரி யமும் நிறைவேறாது. எதிர்த்துச் செல்வதனாலாவது இங்கேயே சேனையுடன் நிற்பதனாலாவது, வருத்தத்தையுண்டுபண்ணுவதனாலா

வது இந்தத் துருபதநகரத்தைப்பிடிப்பது முடியாது. பெரியயுத்த மூம் நல்லதன்று. நிணைத்துப்பார்க்கையில் இங்கே யுத்தத்தில் விருப் பமுள்ள யாதவர்கள் நமதுபின் இடத்தைப்பிடிப்பதற்கு முன் நாம் அவர்களை அழிப்பதற்கு இதுகாலமென்று எனக்குத்தோன்றுகிறது. நீங்களும் அதற்குத்தக்கபடி உற்சாகமுள்ளவர்களாயும் தம்தம் கை வன்மையினால் சோபிக்கின்றவர்களாயுமிருக்கிறீர்கள். நீங்கள் மதிலை யிடியுங்கள்; அகழியைத்தூருங்கள். ஜலத்தை வெளிப்படுத்திவிடுங் கள். மேடுபள்ளங்களைச் சமமாகச்செய்யுங்கள். இப்பட்டணத்தின் அகழியை மிகுதியான புற்களையும் கழிகளையும்போட்டுத் தூர்க்கவே ண்டும்; 'எதிரிகளுடைய யானைகளையும் குதிரைகளையும் காலாட் களையும், எவன் கொல்வனை அவன் தனத்தையும் வெகுமானத்தை யும் அடைவன். ஒருயானைக்குப் பதினாயிரம்பொன்னும் குதிரைக் கும் காலாட்களுக்கும் ஐயாயிரம்பொன்னும் ரதத்திற்கு யானைகிரு மடங்குபொன்னும் அரசர்கொடுப்பர்' என்று ராஜமார்க்கங்களில் பறையடித்துப் பிரவிர்த்தஞ் செய்யத்தக்கது. காபஸுகங்களிலேயே பற்றுள்ளவர்களும் சிறுவர்களும் முதிர்ந்தவர்களும் பயத்தினால் யுத் தஞ்செய்ய மனமில்லாதவர்களும் இருக்கட்டும் அவர்கள் மேல் அம்புபோடத்தகாது. கட்டளையின்றி யாரும் செல்லத்தகாது. புக ழைக்காப்பாற்றுங்கள். உங்களுக்குச் சுகமுண்டாகட்டும். நாம் பகை வரைவெல்வோம். காற்றும் நாம் செல்லும் திசையாகவே விட்டில் செல்லுகின்றது. மிருகங்களும் பக்ஷிகளும் நற்சகுனமாகவேயிருக் கின்றன. அக்கினியும் புகையின்றிப் பிரகாசமாக ஜ்வலிக்கிறது. நமது ஆயுதங்களும் கவசங்களும் பிரகாசிக்கின்றன" என்றான். அவ்வாறு கர்ணன்சொன்னதைக் கேட்டுத் துரியோதனனுடைய விருப்பத்தை அனுஸரிக்கின்ற அரசர்கள் எதிரிகளை யுத்தத்தில் துரத்துவதற்குப் புறப்பட்டனர். பலவர்களான எதிரிகளைப் பலாத்காரமாக அதம் செய்யப்போன அவ்வரசர்களுக்கு அதில் மனப்பற்று எவ்வாறிருந்த தோ அவ்வாறு விரும்பத்தக்க எந்தவிஷயங்களிலும் இருக்கவில்லை. கர்ணனென்னும் கிழக்காற்றோடு கூடியதும் ஜயத்ரதனென்னும் அலை யின் பெருமுழக்கத்தையும் துச்சாஸனனென்னும் பெரிய மத்ஸ்யத் தையும்துரியோதனனென்னும்பெருமுதலையையுமுடையதும், பயங்க ரமானசப்தத்தைக் காண்பிக்கிறதும், பயத்தைத் தரத்தக்கது மாகிய அந்த அரசக்கூட்டமென்னும் சமுத்திரம் விரைவாக அந்தநகரத்தை அபஸவ்யமாக எதிர்த்துச்சென்றது. தீயைப்போலவும் சர்ப்பங்களைப்

போலவும் ஆயுதங்கள் பிரகாசிக்க எதிர்த்துக்கொண்டிவந்த அந்த வெல்லக்கூடாத சேனையைக்கண்டு துருபதபுத்திரர்கள் கர்ச்சனைசெய்தனர். திருஷ்டத்யும்னன், சிகண்டி, ஸுமித்திரன், பிரியதர்சனன், சித்ரகேது, ஸுகேது, வீரனான தவஜகேது ஆகிய பலவான்களும் வீரர்களுமாகிய அந்தத் துருபதராஜபுத்திரர்கள் ஜயத்தைவிரும்பி மேகமுழக்கத்திற்கொப்பான உருளைகளின் சத்தமுள்ள சிறந்த ரதங்களிலேறிப் போரிற் பகைவர்கள் அச்சப்படும்படி நகரத்தின் கோட்டைவாயிலின் வழியாகப் புறப்பட்டனர். பராக்ரமமுள்ள துருபதனும் வெள்ளோத்தலிப்பாகையும் வெள்ளோக்கொடியும் வெண்சாமரமும் வெண்குடையும் வெண்மையான கொடிமரமும் வெள்ளைக்குதிரைகளுமுள்ளவனுகப் புறப்பட்டான். தன் புத்திரர்களின் கூட்டத்தின் நடுவிலிருந்த அந்த அரசன் பொன்மயமாகியில் நான்கு சத்திரக்கூட்டங்களுக்கிடையிலுதயமாகியிருக்கும் மதியைப்போல விளங்கினன். பிறகு யுதாமன்யுனிகளையுடைய கொடிகளையுடைய யுதமன்யு சேரே எதிர்த்து வருகின்ற தும் சோர்வற்றதுமான துருபதஸைன்யத்தைக் கௌரவர்களுடைய படை எதிர்த்துச்சென்றது. அவ்விரண்டு சேனைகளும் ஒன்றன்மேலொன்று எதிர்த்து வியூகிக்கும்போது இரண்டு நதிப்பிரவாகங்கள் எதிர்த்துச்சேருவதுபோலப் பெரிய ஆரவாரம் உண்டாயிற்று. அந்தச் சேனையில் நாற்புறமும் சிதறினதேர்களும் யானைகளும் குதிரைகளும் இறைந்திருக்கும நகூத்திரங்களைப்போலப் பிரகாசித்தன. கர்ச்சனைகளும் பேரிகைமுழக்கங்களும் நிரம்பின பேராரவாரம் உண்டான போது மஹாதமாக்களும் பரதச்ரேஷ்டர்களுமாகிய பாண்டவர்கள் கோபித்து மேகங்களைப்போலர்ஜிக்கின்றவையும் உயர்ந்த குதிரைகள் பூட்டப்பட்டவையும் கொடிகள் உள்ளவையுமாகிய வெண்மையான ரதங்களிலேறி அச்சத்தை யுண்டுபண்ணி நகரத்தினின்று புறப்பட்டனர். அப்போது விற்களை யெடுத்துக்கொண்டு ரதங்களேறி வரும் பாண்டவர்களைக் கண்டு அரசர்களுக்கு உடம்பிலுதறலும் உள்ளத்தில் அச்சமும் உண்டாயின. அவ்வாறு பாண்டவர்கள் புறப்பட்டபோது அந்தத் துருபதசேனைக்குயுத்தத்தில் மிகுந்த உற்சாகமும் ஜயத்தைப்பற்றி நம்பிக்கையும் உண்டாயின. சற்றுநேரம் சேனைகள்நெருங்கிக் கைகலந்தது. பிறகு மரணம்முன்நிற்பதென்னும் நிச்சயத்தைச செய்துகொண்டு தொந்தயுத்தம் செய்தனர். அந்தச்சண்டையில் ஜயத்ரதனும் கர்ணனும் அர்ச்சுனன் பார்த்திருக்கையில்முறையே ஸுமித்ரனையும் பிரியதர்சனனையும்கொ

ன்றனர். ஸுமித்ரனும் பிரியதர்சனனும் கொல்லப்பட்டதைப்பார்த்து அர்ஜுனன் தந்தையின் அருகிலிருந்த ஜயத்ரதபுத்திரனைக்கொன்றான். விருஷஸேனன் தம்பியும் கர்ணபுத்திரனும் பெரிய வில்லாளியுமான ஸுதாமனியும் அவனுடையதந்தை அருகிலிருக்கும்போதே தேர்த்தட்டிலிருந்து வீழ்த்தினான். பலசாலிகளும் சிறந்த புஜவலிமையுடையவர்களும் ராஜவம்சங்களுமான ஜயத்ரதன் கர்ணனிருவரும் தங்கள் மைந்தர்களிருவரும் கொல்லப்பட்டதைக் கண்டு மஹாகஜங்கள் அடிதாங்காமலிருப்பதுபோலக் கோபமுற்றனர். அவர்கள் அச்சப்படாமல் கையுறைகளைப் போட்டுக்கொண்டும் ஒருவீராடொருவர் சபதம்கூறிக்கொண்டும் அர்ச்சுனன்தேரை எதிர்த்துச் சென்றனர். அந்தப்பெரிய யுத்தத்தில் அவ்விருவரும் எதிர்த்ததானது இந்திரனுடன்விருத்ரனும் சம்பரனும்சேர்ந்து யுத்தத்தில் எதிர்த்ததுபோல் மிகப்பயங்கரமாயிருந்தது. அந்தப்புருஷச்ரேஷ்டர்களிருவரும் அர்ஜுனனுடைய தேர்க்குதிரைகளில் மூன்றை அடித்தனர். அப்போது அங்கே கௌரவர்களுக்குள் கலகலவென்ற சப்தமுண்டாயிற்று. அந்தக்குதிரைகள் அடிபட்டதைக்கண்டு பராக்ரமசாலியான பீமஸேனன் ஒருநிமிஷத்துக்குள்ளாகவே தேரில் குதிரைகளைப்பூட்டினான். அந்தத்தேர் வந்ததைக்கண்டு வீரர்களான சகுனியும் ஸௌனகுதியும் துரியோதனனை முன்னிட்டு யுத்தத்தில் வந்துசேர்ந்தனர். அப்போது மஹாபலசாலியான பீமஸேனன், யோகேசுவரன் ஐம்புலன்களின் விஷயங்களோடு யுத்தஞ்செய்வதுபோல் அவ்வைந்து வீரர்களோடும் மனஞ்சோராமல் யுத்தஞ்செய்தான். யுத்தத்தில் ஜயிப்பதற்கரிய பீமஸேனன் அவ்வைவரால் தடுக்கப்படும் ஐந்து மதயானைகளால் எதிர்க்கப்பட்ட வலிமைமிகுபோல் பயப்படாமலிருந்தான். அவ்வைவரும் ஒரே காலத்தில் ஐந்துகூர்மையான அம்புகளினால் பீமனுடைய ஸாரதியையும் குதிரைகளையும் யமனிடம் அனுப்பினர். மஹாரதனான பீமஸேனன் குதிரைகள் அடிபட்ட அந்தச் சிறந்த தேரினிருந்து இறங்கிக் கத்தியையெடுத்துக்கொண்டு பற்பல கதிகளில் ஸஞ்சரித்தான். குதிரைகளின் முதுகுகளிலும் தேர்ச்சக்கரங்களின்மேலும்தகத்தடிகளிலும் ஏர்க்கால்களிலும் ஏறிக்கருடன் ஸர்ப்பங்களை வீழ்த்துவதுபோல் சத்ருக்களை வீழ்த்திக்கொண்டே ஸஞ்சரித்தான். வில்லில்லாமலும் கவசமில்லாமலும் ரதமில்லாமலுமிருந்த பீமனைக்கண்டு திருஷ்டத்யும்னனும் சிகண்டியும் யுத்தத்தில் வெல்லக்கூடாத நகுல ஸஹதேவர்களுமாகிய புருஷஸிம்மங்க

ளான மஹாரதர்கள் அர்ச்சுனனை முன்னிட்டு எதிர்த்துச்சென்றனர். அந்த மஹாரதர்கள்சேர்ந்து யுத்தம் நடந்தபோது தேர்களும் கொடிமரங்களும் கொடிகளுமாகிய யாவும் சரமாரிகளால் மறைக்கப்பட்டன. அந்தச்சண்டை நடந்தபோது வெகு நேரம் நற்றத் தாழ்வில்லாமலேயிருந்தது. மறுபடியும் சிறந்த கைக்காரனான அர்ஜுனன் ரதமேறிச் சென்று அவர்களை அடித்தான். அவன் வருவதைக் கண்டதும் சிறந்த பாகுபலமுடையவனும் அஸ்திரம் தெரிந்தவர்களிற் சிறந்தவனுமான கர்ணன்வில்லெடுத்துப்பாணங்களினால் அவனைத்தடுத்தான். அந்த அர்ஜுனன்அவனால் அடிக்கப்பட்டதும் கோபித்த கர்ணனை வதஞ்செய்வதற்காக வஜ்ராயுதத்தையொத்த மூன்று பாணங்களைத் தொடுத்தான். எதிரிகளுடைய நகரங்களைஜயிப்பவனுகியகர்ணன் அந்தப்பாணங்களாலடிபட்டுக் கொடிமரத்திற் சார்ந்திருக்கையில் ஸாரதி அவனை விரைவாக ரதத்துடன் வெளியிற்கொண்டுபோனான். அவ்வாறு கர்ணன் தோற்றுப்போனபோது பாண்டவர்கள் மேன்மையுற்றதைக்கண்ட துரியோதனனுக்குப் பெரியபயம் உண்டாயிற்று. அந்தஸைனியம்அவ்வாறு அதிகமாகநடுங்கினதைக்கண்டசகுனி இனியசொல்லினால்பலமுறைதேற்றினான். அர்ஜுனனால் மிகவும் பீடிக்கப்பட்ட அந்தச்சேனை பிறகு துரியோதனன்முதலிய திருதராஷ்டிரபுத்ரர்களனைவராலும் மறுபடியும் தைரியப்படுத்தப்பட்டது. பிறகு பயங்கரமான பராக்கிரமமுள்ளவனும் சிறந்த புஜபலமுள்ளவனுமான பீமன் துரியோதனனைப் பார்த்து அரக்குமாளிகையை நினைத்துக் கோபித்தான். உடனே போர்க்களத்தினிடத்தில் ஐம்பதுதோள் உயரமுள்ளதாக மிகஉன்னதமாக நிற்கின்ற பெரியமரமொன்றைக் கண்டான். பெருத்த அடியுள்ளதும் அதிக உயரமுள்ளதும் இந்திரனுடைய த்வஜம் நாட்டப்பட்டதுபோன்றதுமாகிய அம்மரத்தை இருகரங்களாலும் பேர்த்துத் தன்கால்களையும் வீசிக்கொண்டு இந்திரன் அஸுரர்களை யெதிர்ப்பதுபோல் சண்டையில் எதிரிகளை எதிர்த்துப் போனான். பீமனுடைய பயத்தினால் கலங்கினதும் அர்ஜுனனால் டிக்கப்பட்டதுமாகிய அந்தத் துரியோதனனைனை கண்ணெடுத்துப்பார்க்கவும் சக்தியற்றதாயிற்று. போர்வீரர்கள் நடுக்கமுற்றும்,குதிரைகளும் யானைகளும் ஓய்ந்துமிருந்த அந்தப்படைகளைப் பீமன் ஆகாயத்து மேகங்களைக் காற்றுதூரத்துவதுபோலத் திசைகளெங்கும் தூரத்தினான். மகிழ்வற்றுத் திரும்பியோடின அந்த யுத்தவீரர்களையும் யானைகளையும் குதிரைகளையும் பாண்ட

வர்கள் பின் தொடரவுமில்லை; அடிக்கவுமில்லை; கடுஞ்சொல்லொன்றுஞ் சொல்லவுமில்லை; பாணங்களினலடிக்கப்பட்ட கூத்திரியர்கள் தம்தம் கூடாரங்களுக்குச் சென்றனர். மற்றவர்களும் பாண்டவரைச் சேர்ந்தவர்களும் மகிழ்ந்து பட்டணத்து ஜனங்களுக்கு ஸௌக்கியத்தைச்செய்துகொண்டு நகரத்தைநோக்கிச் சென்றனர். அந்தக் கௌரவர்களுக்குப் பாண்டவர்களுடன்கூடச்சற்றுநேரம் யுத்தம்நடந்தது. தேவாஸுரயுத்தம்போன்ற அந்தப் பெருஞ்சண்டை எவ்வளவில் உண்டானதோ அவ்வளவிலடங்கிப்போயிற்று. திரும்பிப்போனமஹாரதர்களாகிய சகுனி ஜயத்ரதன் துரியோதனன் கர்ணன் இவர்களிவரும், பாண்டவர்கள் நற்றவஞ் செய்தனரென்றும் மணமகள் நல்லநோன்பு நோற்றுளென்றும் துருபதனும் திருஷ்டத்யும்னனும் நினைத்தகாரியம் முடித்தார்களென்றும் கூறினர். அப்போது அவர்களுள்ளத்தில் துயரம் மிகுந்தது. வாக்கினல் மாத்திரம் ஒன்றுஞ்சொல்லவில்லை. பிறகு ராஜாக்களிவரும் வந்தவாறே சென்றனர். அந்தத் திருதராஷ்டிரபுத்திரர்கள் மிவரும் அப்போது ஹஸ்தினபுரத்திற்கே சென்றனர்.

நகரத்தைத் தகைவதற்குமுன்னே பாண்டவர்கள், தாங்கள் ஸௌக்கியமாயிருப்பதைச் சொல்லுவதற்காக,"கிருஷ்ணனிடம்செல்லுங்கள்" என்று குதிரைப்படைகளை யனுப்பினர். அவர்கள் சீக்கிரத்தில் யாதவர்களின் நகரத்தைச்சேர்ந்து பேசுவதிற் சமர்த்தரான ராமகிருஷ்ணர்களிடம் பின்வருமாறு சொல்லலாயினர். அந்தகர்கள் விருஷ்ணிகள் மிவருக்கும் பாண்டவர்களின் க்ஷேமத்தைச் சொன்னர்கள். "தாங்களும் அழியாமல் அரக்குமாளிகையிலிருந்து விடுபட்டதாகத் தெரிவிக்கின்றனர். ஒழுக்கம் செய்கை மனவுறுதி இவையெல்லாவற்றிலும் தங்களுக்குத்தகுதியுள்ளவளும் தாமரையிதழ்போன்ற கண்களையுடையவளுமான திரௌபதி ஸ்வயம்வரஸபையில் தங்களுக்குக்கிடைத்ததையும்சொல்லுகின்றனர்" என்றனர். அந்தச்சொல்லைக்கேட்டுக்கிருஷ்ணபகவான் அவர்களுக்கு, "அந்தராத்மஸனுடையவுதம முதலாக நடந்தவற்றையெல்லாம் நானறிவேன்" என்று மறுமொழிசொன்னர். உடனே அவர் சதுரங்கதளத்தை ஸங்காகஞ்செய்துகொண்டு பாஞ்சாலகரத்தை நோக்கி விரைவாகச் சென்றனர். அத்தையாகிய குந்தியைக் கௌரவித்து நமஸ்காரஞ்செய்து திரௌபதிக்கு முறைப்படி உயர்ந்த ஆபரணதிகளைப் பரிசாக அளித்துப்

பாண்டர்வகளே மகிழ்வித்துக்கௌரவித்தனர். மஹாத்மாவாகிய துருபதராஜாவினால் முறைப்படி பூஜிக்கவும் பெற்றனர். அப்போது மஹாத்மாக்களான பாண்டவர்களால் கௌரவிக்கப்பெற்ற அந்தயாதவர்களனைவரும் பாஞ்சால நகரத்தில் பாண்டவர்களுடன் கூடவேமகிழ்ந்திருந்தனர்.

இருநூற்றுப்பத்தொன்பதாவது அத்தியாயம்.

விதுராகமனபர்வம் (தொடர்ச்சி)

(திருதராஷ்டிரன் பாண்டவர்களுடையவிருத்தாந்தத்தை விதுரரிடம்கேட்டுத் திரௌபதியையனுப்புவதற்குப்படி ஆஜ்ஞாபித்தபிறகு அவனிடம் துரியோதனனும்கர்ணனும் ஏகாந்தமாகப்பேசினது.)

அவ்வரசர்களனைவரும் ஸ்வயம்வரம்நடந்தபிறகு பாண்டவர்கள் வரிக்கப்பட்டதைக்கண்டு வந்தபடியே திரும்பிச்சென்றனர். பிறகு ராஜாவான துரியோதனன் திரௌபதியால் அர்ச்சுனன் வரிக்கப்பட்டதைக்கண்டு, மனம்குன்றினவனாக ஸஹோதரர்களுடனும் அமைச்சர்களுடனும் மாதுலனாகசகுனியுடனும் கர்ணனுடனும் கிருபாசாரியருடனும் திரும்பிச்சென்றான். அவனேதாக்கித்துச்சாஸனன் வெட்கமில்லாமல் மெல்லமெல்ல, "இவன் பிராமணனாகஇராஜபின் திரௌபதியையடைந்தான். ராஜாவே! யாவரும் அவனைத் தனஞ்சயனென்று உண்மையாகஅறியவில்லை. தெய்வமே மேலானதென்றும் முயற்சியனற்றதென்றும் நினைக்கிறேன். பாண்டவர்கள் இவ்விடத்தில் ஜீவித்திருப்பதனால் மனிதனுடைய யோசனை பயனற்றது. இங்கே, பாண்டவர்கள் அரசர்களுடன் நமதுகண்களையும் மறைத்துத் திரௌபதியை விவாஹஞ்செய்திருக்கின்றனர். குந்திபுத்திரர்களால் ராஜாக்களின்மேல்இடக்கால்வைக்கப்பட்டது. அரக்குமாளிகைத்தீயிலிருந்து இவர்கள் எவ்வாறு விடிப்பட்டனர். அதனால் நம்முடையபிரயத்தனமும் உற்சாகமும் புத்தியும்போய்விட்டன. மாமா! புரோசனனைநம்பி இப்போது நாம்கெட்டோம். இந்தப்பாண்டவர்களைக் கொளுத்தாமல் கருப்பில் தானெரிந்துபோனான். மாமா! நம்மைவிடப் பாண்டவர்கள் மிகுந்தபுத்தியுள்ளவர்களென்று நினைக்கிறேன். அரக்குமாளிகையிலிருந்து விடுபட்ட அவர்களுக்கு மரணத்தில் பயமில்லை" என்றான்.

அவர்கள் இவ்வாறு பேசிக்கொண்டு புரோசனனையும் ஐந்து புத்திரர்களோடு கூடின வேடச்சியையும் சிலாக்கியமான புத்தியுள்ள விதுரரையும் இகழ்ந்துகொண்டும், தீயிலிருந்து விடுபட்டுத் துருபதனுடன் ஸம்பந்தஞ்செய்த மிகுந்த பராக்கிரமசாலிகளான பாண்டவர்களைக் கண்டும், எல்லாயுத்தங்களிலும் சமர்த்தரான திருஷ்டத்யும்னன் சிகண்டிமுதலிய துருபதபுத்திரர்களெல்லாரையும்நினைத்தும், பயந்துதுயரமுற்றுமனங்குன்றித்தங்கள்எண்ணங்களையெல்லாம்விட்டு அஸ்தினாபுரத்திற்பிரவேசித்தனர். பிறகுகூத்தாவென்னப்பட்டவிதுரர், அந்தப் பாண்டவர்கள் திரௌபதியினுல்சுயம்வரம்செய்யப்பட்டதையும் திருதராஷ்டிரபுத்திரர்கள் வெட்கிக்கர்வமொழிந்துவந்ததையும் கேட்டுமனமகிழ்ந்து திருதராஷ்டிரனைப்பார்த்து, "ராஜாவே! நல்லகாலமாதலால் கௌரவர்கள் விருத்தியடைகின்றனர்" என்றுசொன்னர். பாரதரே! ஜனமேஜயரே! திருதராஷ்டிரமஹாராஜன் விதுரர் சொன்னதைக் கேட்டு மிகவுமகிழ்ந்து, "நல்லகாலம்; நல்லகாலம்" என்றுசொன்னன். அறிவே கண்ணுகவுடைய அவ்வரசன் தன் ஜ்யேஷ்டபுத்திரனுகியதுரியோதனன் திரௌபதியினுல் வரிக்கப்பட்டானென்று அறியாமையால்நினைத்தான். உடனே'கிருஷ்ணையையழைத்துவா' என்றும் அவளுக்கு மிகுதியான ஆபரணங்களைக்கொடுக்கும்படிக்கும் தனது புத்திரனுகியதுரியோதனனுக்குக் கட்டளையிட்டான். அதன்பிறகு விதுரர், "கௌரவர்களென்னும் பொதுச்சொல்லால் உன்புத்திரர்களை எண்ணுதே. விருத்தியாகின்றனரென்னும் என்சொல்லினுல் பாண்டவர்கள்தாம் சிறப்பிக்கப்பட்டனர். ராஜாவே! பாக்கியவசமாகப் பாண்டவர்கள் திரௌபதியினுல் ஸ்வயம்வரஞ்செய்யப்பட்டும் ராஜாக்களின் போரினின்றும் விடுபட்டும் துருபதனுல் பூஜிக்கப்பெற்றும்க்ஷேமமாயிருக்கின்றனர்" என்றுசொன்னர். இவ்வாறு விதுரர்சொன்னதைக் கேட்டபிறகும் திருதராஷ்டிரன் எண்ணத்தைமறைப்பதற்காக விதுரா! நற்காலம், நற்காலம். இப்படியா உனக்குச்சுகமுண்டாகட்டும். பாண்டவர்கள்ஜீவித்திருக்கிறார்களா? அமிருதத்திற்கொப்பான உன்சொல்லினுலுண்டான ஆனந்தம் என்தேகத்தில் அடங்கவில்லை. அவர்கள் நன்னடக்கையுடையவர்களாதலின் மிகச்சிலாக்கியமான துருபதஸம்பந்தம் அவர்களுக்கு நேர்ந்தது; நல்லகாலம் நல்லகாலம்" என்றும்சொன்னன். "துருபதன் உபரிசரவஸுவின்வம்சமாகிய சிறந்த மத்ஸ்யகுலத்திற்பிறந்தவன்; ஒழுக்கத்தினுலும் கல்வியினுலும் தவத்தினுலும் பெரியவன்; ராஜாக்களுக்கும் பூஜ்யன். அவ

னுடைய புத்திரர்கள் பௌத்திரர்கள் அனைவரும் செம்மையாகப்பிர மசாரிவிரதம் அனுஷ்டித்தவர்கள். அவர்களோச்சேர்ந்த மற்றவரனேக ரும் மஹாபலசாலிகள். அவர்களும் எனக்குப்பாண்டு புத்திரர்களேப் போன்றவர்களும் அவர்களுக்கு அதிகமானவர்களுமாயிருக்கிறனர். விதுரா! அவர்களுடைய இந்தநடை மற்றவர்களுடைய நடைகளிலும் சிறந்ததென்று நான் நினைக்கிறேன். சமர்த்தனே! எனக்குப்பாண்டவர்களிடமுள்ள அன்புக்கீடான அன்பு மற்ற எவரிடத்துமில்லே. விதுரனே! நான் எப்போதும் உண்மையாக நினைத்திருப்பது இதுவே உனக்கு என்னத்தியத்தின்பே ஆணையிடுகிறேன். மஹாரதர்களும் வீரர்களுமான அந்தப்பாண்டு புத்திரர்கள் எளைக்கியமாக மித்திரா கனேயடைந்திருப்பதனால் துரியோதனன் முதலிய எனது புத்திரர்களும் அவ்வாறேயாயினர். பாண்டுபுத்திரர்கள் நெருப்பில் எரிந்துபோனர்களென்று எப்போது நான் கேள்விபுற்றேனே அப்போது முதல் அல்லும் பகலும் கொதிப்புற்றிருந்தேன்; உண்ணவுமில்லே; உறங்கவுமில்லே. என புத்திரர்கள் துணையில்லாமையால் சிறகொடிந்த பறவை போலிருந்தனர். விதுரா! நான் உண்மையாகச் சொல்வதைக்கேள். என்புத்திரர்களுக்குநல்லதுணையுண்டாயிற்று. இப்போதுதான்எனது ஆதிபத்யம்ஆசந்தார்க்கமாக நிலேபெற்றது. விதுரா! சுற்றத்தாருடன் கூடிய துருபதனே நண்பனுகப்பெற்றபிறகு ஐசுவரியம் போனவனுயிருந்தாலும் மேன்மையைவிரும்பின எந்த அரசன் தன்விருத்தியில் நம்பிக்கையுற்றவனுயிரான்" என்றும் சொன்னன். அவ்வாறு சொல்லுகின்ற அந்தத் திருதராஷ்டிரனுக்கு விதுரர், "ராஜாவே! நூற்றாண்டுகாலமும் இந்தஎண்ணமே உனக்கு நிலேயாக இருக்கட்டும்"என்று மறுமொழிசொன்னர். ஜனமேஜயரே! இவ்வாறு சொன்னபிறகு விதுரர் தம்இல்லம் சென்றார். ஜனமேஜயரே! பிறகு துரியோதனனும் கர்ணனும் திருதராஷ்டிரனிடம் வந்து, "விதுரர்முன்னிலேயில் உம்மிடத்திற்குற்றஞ்சொல்ல எங்களுக்குக் கூடவில்லே. இப்போது ஏகாந்தமாயிருப்பதனுற் சொல்லுகிறோம்; இப்போது நீர் என்னகாரியம்செய்யக் கருதினீர்? தந்தையே! எதிரியினது அபிவிருத்தியை உம்முடைய விருத்தியாக நினைக்கிறீர். மனிதரிற்சிறந்தவரே! விதுரரிடத்தில் அவர்களேத் தூதிக்கிறீர். குற்றமற்ற ராஜாவே! செய்யவேண்டியதொன்றிருக்க மற்றுரன்றைச் செய்கிறீர். தந்தையே! எப்போதும் நாம் அவ

ர்களின் பலத்திற்குத் தடைசெய்யவேண்டும். ஆதலால் நாம் புத்திரர்கள் சேனைகள் சுற்றத்தார்களுடன் அவர்களால் விழுங்கப்படாமலிருக்கும்படி காலத்திற்குத்தக்க உபாயத்தை ஆலோசிப்போம்" என்றனர்.

இருநூற்றிருபதாவது அத்தியாயம்.

விதுராகமன பர்வம். (தொடர்ச்சி.)

(திருதராஷ்டிரனும் துரியோதனனும் பேசிக்கொண்டது.)

ராஜாவே! துரியோதனனுலும் கர்ணனுலும் இவ்வாறு சொல்லப்பட்ட திருதராஷ்டிரன் தன் புத்திரனையும் ஸூதபுத்திரனை கர்ணனையும் நோக்கிப் பின்வருமாறு சொல்லலானுன்: "நீங்கள் நினைத்தபோலவே நானும் இதைச் செய்யக்கருதுகிறேன். ஆனுல் விதுரனுக்கு என் எண்ணத்தை வெளியிட நான் விரும்பவில்லை. அதனுல்பாண்டவர்களுடைய குணங்களையே சிறப்பித்துக்கூறுகிறேன். விதுரன் என்கருத்தைக் குறிப்புக்களினுலும் அறியாமலிருத்தல் வேண்டும். ஸூயோதனு! உனக்கு எதுயுக்தமென்றுதோன்றுகிறதோ அதையும் சொல்; கர்ணு! உனக்கும் காலோசிதமென்று எதுதோன்றுகிறதோ அதையும் உடனே எனக்குச்சொல்" என்றுன். துரியோதனன், "இப்போது ஸமர்த்தர்களும் கருத்தை வெளியிடாதவர்களும் நம்பிக்கையாகக் காரியத்தைமுடிப்பவர்களுமாகிய பிராமணர்களைக்கொண்டு அந்தக் குந்திபுத்திரர்களுகும் மாத்ரிபுத்திரர்களுக்கும் மித்ரபேதஞ்செய்விப்போம். அப்படியில்லாவிடில் துருபதனும் அவன்புத்திரர்களும் மந்திரிகளுமாகிய அனைவரும் குந்திபுத்திரனுகிய யுதிஷ்டிரனை விட்டுவிடும்படி அவர்களுக்குப் பெருந்திரவியக்குவியல்களைக் கொடுத்து வசப்படுத்துவோம். அல்லது பாண்டவர்கள் அங்கேயே வஸிப்பதை விரும்பும்படி அந்தப் பிராம்மணர்கள் செய்யட்டும். இவ்விடத்தில் அவர்கள் வஸிப்பதனுல் அவர்களுக்கு உண்டாகுந்தீங்குகளைத் தனித்தனியே பலர் விரித்துரைக்கட்டும். கலைக்கப்படுவதனுல் அந்தப் பாண்டவர்கள் அவ்விடத்திலேயே மனம் வைக்கட்டும். அன்றியும் உபாயங்களில் நிபுணராகிய சில புத்திசாலிகளான மனிதர்கள் பாண்டவர்கள் ஒருவர்மேலொருவர் வைத்திருக்கும் நேசத்தை மாற்றிவிடட்டும். திரௌபதியையாவது வேறுபடுத்திவிடட்டும். அவர்கள்

அனேகராயிருப்பதனால் அது செய்தற்கெளிது. அல்லது பாண்டவர்களுக்கு அவளிடத்திலும் அவளுக்குப் பாண்டவர்களிடத்திலும் விரோதத்தை உண்டுபண்ணவேண்டும்; ராஜாவே! அவ்வாறில்லை விடில் தந்திரங்களில் நிபுணர்களான மறைவான மனிதர்களைக்கொண்டு பீமஸேனனுக்குத் தெரியாமல் மரணத்தை யுண்டுபண்ணவேண்டும். அவர்களுக்குள் அவன் தான் பலத்தில் மிகுந்தவன். அவனுடைய அவலம் பத்தினாலே தான் யுதிஷ்டிரன் முன்னே நம்மை லக்ஷியஞ்செய்யவில்லை. அவன் கொடியவன்; சூரன்; அவர்களுக்கும் முக்கியமான ஆதாரம். ராஜாவே! அவன் கொல்லப்பட்டால் அவர்கள்உற்சாகம்கெட்டுச் சக்திபொழிந்து ராஜ்யத்திற்காக முயலாமலிருப்பர். அவன்தானே அவர்களுக்கு ஆதரவு. பீமஸேனன் பின்காப்பவனைஇருப்பதனாலேதான் யுத்தத்தில்அர்ஜுனனை ஜயிப்பது கடினமாயிருக்கிறது. அவனில்லாவிட்டால் அர்ஜுனன் யுத்தத்தில் கர்ணனில் காற்பாகமிரான். அவர்கள் பீமஸேனனில்லாவிட்டால் தங்களுக்குநேர்ந்த பெரியபலஹீனத்தையும் நமதுஅதிக பலத்தையுமறிந்து பலக்குறைவினாலேயே யுத்தமுபற்றி செய்யாமலிருப்பார்கள். ராஜாவே! அல்லது அவர்கள் இவ்விடத்தில் வந்து ஆஜ்ஞைக்குட்பட்டிருந்த பிறகு நீதிசாஸ்திரத்தையனுஸரித்து அவர்களை நிக்ரஹிக்க ஆரம்பஞ்செய்வோம். ராஜாவே! அல்லது அவர்கள் அவ்விடத்தில் கர்வப்பேச்சுப்பேசும்போது மானபூஷணவர்களாகிய திருதராஷ்டிரர்களில் சிலர் மற்றவர்களால் அவர்களிடமிருந்து பேதஞ் செய்யப்படலாம். அதுவுமில்லாவிடில் அழகான ஸ்திரீகளைக்கொண்டு குந்திபுத்திரர்களில் ஒவ்வொருவரையும்மயங்கச்செய்யலாம். அதனால் திரௌபதி வெறுப்படைவாள். பிறகு அவர்களை இங்கே அழைத்து வருவதற்காகக் கர்ணனையனுப்பலாம். கிட்டவந்தபிறகு நம்பிக்கையுள்ளவர்களைக்கொண்டு பற்பலதந்திரங்களினால்அவர்களை அழித்துவிடலாம். இந்தஉபாயங்களுக்குள் எதுக்குற்றமில்லாததென்று உமக்குத் தோன்றுகிறதோ அதைப்பிரயோகிக்க ஆரம்பஞ்செய்யும். இனிக் காலங்கடந்துபோம்; அரசர்க்கரசனுகிய திருதராஷ்டிரனிடத்தில் அவர்களுக்கு எவ்வளவுவரையில் பற்றுதலுண்டாகாமலிருக்கிறதோ அவ்வளவு வரையில் ஸாதிக்கக்கூடும். பிறகு சாதிப்பதுமுடியாது. தந்தையே அவர்களையடக்கும்விஷயத்தில் எனக்குஇவ்விதமாக ஆலோசனையுண்டாகிறது. அதுஸரியோ பிழையோகர்ணா! நீதான்என்னசெய்கிறாய்?" என்றான்.

இருநூற்றிருபத்தோராவது அத்தியாயம்.

விதுராகமன பர்வம். (தொடர்ச்சி)

(துரியோதனனுக்குக்கர்ணன்கொள்ளபுத்தியைக்கேட்ட திருத்
ராஷ்டிரன்பீஷ்மர்முதலியவர்களோடு மந்திராலோசனை செய்தது)

கர்ணன், "துரியோதனராஜனே! உன்னுடைய ஆலோசனை சரியாக இல்லையென்பது என்கருத்து. கௌரவர்களை விருத்திசெய்கிறவனே! அந்தப்பாண்டவர்களைத் தந்திரத்தினால் ஜயிக்கமுடியாது. நீ அவர்கள்விஷயத்தில்நடப்பமான உபாயங்களினால்முன்னம்ஆரம்பம் செய்திருக்கிறாயே. வீரனே! அப்போது உன்னால் அடிக்கக்கூடாமல் ஆயே. ராஜாவே! இங்கேயே உன் ஸமீபத்திலிருந்துகொண்டு சிறகு முளைக்காதகுஞ்சுகளாயிருந்த அவர்களையே உன்னால் பிடிப்பதற்கு முடியாமற்போயிற்று. இப்போது அவர்கள் சிறகுமுளைத்து வேறு தேசத்திலிருந்துகொண்டு எல்லாவகையிலும் விருத்தியடைந்திருக்கின்றனர். அந்தப்பாண்டவர்களை உபாயங்களினால் வெல்லமுடியாதென்பது எனது உறுதியான எண்ணம். அவர்களுக்கு அதிர்ஷ்டத்தின்வன்மையிருப்பதனால்காமம்,முதலியதின்பங்களையுண்டுபண்ணுவதுமுடியாதகாரியம்; அவர்கள் சக்தியுள்ளவர்கள். அவர்கள்தங்கள் பிதிர் பிதாமஹர் வசிசையாகவருகிற ராஜ்யத்தைப் பெறவிருப்பமுள்ளவர்கள். அவர்களுக்கு ஒருவரோடொருவர் மித்திரபேதஞ்செய்வதும் அஸாத்தியம்; ஒருமனைவியினிடம் நேசம்வைத்தவரெவரோ அவர்கள் ஒருவரோடொருவர் விரோதப்படார். கிருஷ்ணையும் அவர்களிடத்து விரோதப்படும்படி பிறர்செய்ய முடியாது. இனித்தவர்களையே வரித்தவள் இப்போது சிறப்படைந்திருக்கிறவர்கள் விஷயத்தில் அன்போடிருப்பதைப் பற்றிச் சொல்லவேண்டுமோ? ஒருத்திக்குப்பலகணவர்களிருப்பது பெண்கள் விரும்பத்தக்கவிசேஷம். அதைக்கிருஷ்ணையடைந்திருக்கிறாள். அவளை மித்திரபேதஞ்செய்யமுடியாது. துருபதராஜன் யோக்யமான தடையுள்ளவன். அவன் தனத்தைவிரும்புகிற அரசனல்லன். ராஜ்யங்களையெல்லாம் கொடுத்தாலும் அவன்பாண்டவர்களைவிடானென்பது திண்ணம். அவனது புத்திரனாகிய திருஷ்டத்யும்னனும் அவனைப்போலவே குணமுள்ளவன். பாண்டவர்களிடம் நேசமுள்ளவன். ஆதலால் உபாயங்களினால் அவர்களை ஜயிப்பது எவ்வகையிலும் முடியாதென்று நான் நினைக்கிறேன்; புருஷச்ரேஷ்டனே

இந்த ஒன்றுமாத்திரம் இப்போதுநாம்செய்யத்தகுந்தது. ராஜாவே! அந்தப் பாண்டவர்கள் வேரூன்றிப்போவதற்கு முன்னமே அவர்களை யுத்தத்தில் ஜயிக்கவேண்டும். அன்பனே! உன்மனமும்அதையேவிரும்பவேண்டும். எப்போது நம்முடையபக்ஷம் வலிமையுற்றும் த்ருபதராஜன் பக்ஷம் சலித்துமிருக்குமோ அப்போதே பாண்டவர்களோடு யுத்தஞ்செய்யவேண்டும். சிந்திக்காதே; காந்தாரியின் புத்திரனே! அரசனே! வாகனங்களும்சேனைகர்களும் சந்ததிகளும் அவர்களுக்கு மிகுதியாவதற்கு முன்னமே அவர்கள்மேல் எதிர்த்துச்செல். ராஜாவே! பாஞ்சாலராஜன் மஹாவீரர்களான தன் புத்திரர்களுடன்கூட யுத்தஸன்னஹஞ் செய்வதில் மனத்தைச்செலுத்துவதற்கு முன்னமே நீ எதிர்த்துச்செல்வாயாக; பாண்டவர்களுக்கு ராஜ்யம்வருவதற்காகக் கிருஷ்ணன் யாதவஸேனைகளை இழுத்துக்கொண்டு பாஞ்சாலதேசம் போவதற்குமுன்னே நீ பராக்ரமஞ்செய். தனங்களாகட்டும், பலவகைப் போகங்களாகட்டும், ராஜ்யம் முழுதுமேயாகட்டும், பாண்டவர்கள் விஷயத்திற்கிருஷ்ணன் விடக்கூடாதவை, எவ்வகையிலும் இராமனாத்மாவான பரதசக்ரவர்த்தி தன் பராக்ரமத்தால் பூமியை யடைந்தான். இந்த்ரன் பராக்ரமத்தினால் மூன்று லோகங்களையும் ஜயித்தான். ராஜாவே! பராக்ரமத்தைத்தான் க்ஷத்ரியர்களுக்குச் சிறப்பாகக் கூறுகின்றனர். ராஜச்ரேஷ்டனே! சூரர்களுக்குப்பராக்ரமம் ஸ்வதர்மம். ராஜாவே! ஆதலால், நாம் பொய் சதுரங்கஸேனையுடன் த்ருபதனைப்பிடித்துப் பாண்டவர்களைச் சீக்கிரமாக இங்கே கொண்டுவருவோம். நல்வார்த்தையினாலாவது தானத்தினாலாவது மித்ரபேதத்தினாலாவது பாண்டவர்களை வசப்படுத்தமுடியாது. ஆகலால், பராக்கிரமஞ்செய்தே அவர்களைக் கொல்வாயாக. பராக்கிரமத்தினால் அவர்களை ஜயித்து இந்தப்பூமி முழுவதையும் ஆளக்கடவாய். ராஜாவே! காரியத்திற்கு இதைக்காட்டிலும் வேறு உபாயம் எனக்குத் தெரியவில்லை." என்றுசொன்னன். கர்ணனுடைய சொல்லைக்கேட்டு, பராக்ரமசாலியான த்ருதராஷ்ட்ரன், சிலகித்துப் பின்வரும் சொல்லைச்சொல்லலானன். "கர்ண! சிறந்தபுத்தியுள்ளவனும் அஸ்த்ரங்களில் தேர்ந்தவனுமாகிய நீ பராக்ரமம் நிரம்பின இவ்வகையான இந்தச் சொல்லைச் சொல்லத்தகுந்ததுதான். ஆயினும் மறுபடியும் பீஷ்மருடனும், த்ரோணருடனும், விதுரனும், நீங்களிருவருடனும் சேர்ந்து மேன்மேலும் நமக்கு ஸௌக்கியத்தைத்தரத்தக்க ஆலோசனையைச்செய்

யுங்கள்" என்றான். ஜனமேஜயமஹாராஜாவே! அதன்பிறகு மிக்க கீர்த்திபெற்ற திருதராஷ்டிரன் அந்தப்பீஷ்மர் முதலிய மிகுந்த புகழுடைய எல்லாமந்திரி வர்க்கங்களையும் வருவித்து ஆலோசனை செய்தான்.

இருநூற்றிருபத்திரண்டாவது அத்தியாயம்

விதுரபாகமன பர்வம். (தொடர்ச்சி)

(பாண்டவர்களுக்குப் பாதிராஜ்யம் கொடுக்கவேண்டுமென்று பீஷ்மர் சொன்னது.)

அப்போது பீஷ்மர், "பாண்டுபுத்திரர்களினிடம் விரோதம் எனக்கு எப்வகையிலும் இஷ்டமில்லை. எனக்குத் திருதராஷ்டிரன் எப்படியோ அப்படியேதான் பாண்டுவென்பதும் நிச்சயம். எனக்குக் குந்தி புத்திரர்களும் காந்தாரியின்புத்திரர்களைப்போன்றவர்கள் தாம். அந்தப் பாண்டுபுத்திரர்களைக்காப்பாற்றுவது எனக்குஎப்படியோ அப்படியே உனக்கும்கடமைதான். ராஜாவே! எனக்கும் உனக்கும் எப்படியோ அப்படியேதான் துரியோதனனுக்கும் பாற்றக் கௌரவர்களுக்கும் அதுகடமை. இப்படியிருக்க அவர்களுடன் கலகஞ்செய்வதில் எனக்குவிருப்பமில்லை. அந்தவீரர்களினிடம் ஸமாதானஞ்செய்துகொண்டு ராஜ்யத்திற்பாதியை அவர்களுக்குக் கொடுப்பது தகும். இது கௌரவச்ரேஷ்டர்களான அவர்களுக்கும் தகப்பன், பாட்டன், அவன் தகப்பன்வழியாகவந்த ராஜ்யம்தான். துரியோதனா! குழந்தாய்! இந்த ராஜ்யத்தை நீபாலிப்பதுபோலவே அந்தப்பாண்டவர்களும் தபஸுபிதி ரார்ஜிதமென்று பார்க்கின்றனர். புகழ்பெற்ற அந்தப்பாண்டவர்கள் இந்தராஜ்யத்திற்குரியவராகாவிடில் இஃதுஉனக்குத்தான்ஏது? பரதவம்சத்திற்பிறந்த மற்றவர்களுக்குத்தான்ஏது? பரந்த்ச்ரேஷ்டனே! நீராஜ்யத்தை முறைதவறாத அடைந்திருக்கிறாய்; அவர்களும்உனக்குமுன்னமே ராஜ்யத்தை யடைந்தவர்களென்பது என்கருத்து; நயமாகவே அவர்களுக்குப் பாதிராஜ்யம் கொடுப்பது நியாயம். புருஷச்ரேஷ்டனே! இதுதான் எல்லாஜனங்களுக்கும் விருப்பம். இதற்குமாறாகச் செய்தால்நமக்கு அஃது இஷ்டமாகாது; உனக்கும் அபகீர்த்தி நிரம்ப உண்டாகுமென்பதில் சந்தேகமில்லை. கீர்த்தியைக்காப்பாற்றமுயல்; புகழ்தான் சிறந்தவல்லமை; புகழழிந்தமனிதனுடையவாழ்வுபயனற்ற

தாக உரைக்கப்படுகின்றது; கௌரவனே! காந்தாரியின் புதல்வனே! கீர்த்தியழியாமலிருக்கும் வரையில்தான் மனிதன் ஜீவித்திருப்பவன்; புகழழிந்தவன் அழிந்தவனே, ஆதலால் குருவம்சத்திற்குத் தகுதியான இந்தத்தர்மத்தைக் கடைப்பிடி; சிறந்த புஜபலமுடையவனே! உனக்கும் உன்முன்னோர்களுக்கும் தகுதியான காரியத்தைச் செய்; நல்லகாலத்தினால் பாண்டவர்கள் ஜீவித்திருக்கின்றனர். நல்லகாலத்தினால் அந்தக்குந்தி ஜீவித்திருக்கிறாள். நல்லகாலத்தினால் பாபியான புரோசனன் தன்னெண்ணம் முடியாமல் முடிவடைந்தான்! காந்தாரியின் புத்திரனே! அந்தக்குந்திபுத்திரர்கள் தகிக்கப்பட்டுக் குந்தியும் அவ்வாறு ஆய்விட்டாளென்று கேட்டதுமுதல் இவ்வுலகத்துள்ள பிராணிகளில் எதையும் நான்பார்க்கமுடியாமற் போனேன். புருஷச்ரேஷ்டனே! உலகம் உன்னைக் குற்றமுள்ளவனாக நினைப்பது போலப் புரோசனனை நினையாது. ஆதலால் அவர்கள் தப்பிப்பிழைத்திருத்தல் உனது தவறுதலுக்குப் பரிகாரம்; மஹாராஜாவே! பாண்டவர்களின் காட்சியை நீவிரும்பவேண்டும். கௌரவபுத்திரனே! அந்த வீரர்கள் ஜீவித்திருக்கையில் அவர்களின் பிதிராரஜ்ஜியபாகத்தை யெடுத்துக்கொள்ள வஜ்ரபாணியான இந்திரன் நேரேவந்தாலும்முடியாது; அவர்களனைவரும்தர்மம்தவறுதவர்கள்; அனைவரும் ஓமேமனமுள்ளவர்கள், ராஜ்யம் உனக்கும்அவர்களுக்கும் பொதுவாயிருக்க மிகுந்த அதர்மத்தினால் நீஅவர்களைவிலக்குகிறாய்; நீ தர்மத்தையும் வன்னியிருப்பத்தையும் உன்க்ஷேமத்தையும் செய்வதாயிருந்தால் அவர்களுக்குப் பாதிராஜ்யம் கொடுத்துவிடு" என்றுசொன்னர்.

இருநூற்றிருபத்துமூன்றுவது அத்தியாயம்.

விதுராகமனபர்வம். (தொடர்ச்சி.)

(பீஷ்மர்சொன்னதை அனுஸரித்துத்துரோணர்சொல்ல அவர் மனைவி.கேசினிமறுத்ததன்மேல்துரோணர் கர்ணனைக்கண்டித்தது.)

துரோணர், "திருதராஷ்டிரமஹாராஜாவே! ராஜ்யாலோசனைக்காக அழைக்கப்பட்ட ஆப்தர்கள் அறம்பொருள் புகழ்களுக்கு ஒத்ததாகச் சொல்லவேண்டுமென்று கேட்டிருக்கிறீர்; ஐயா, மஹாத்மாவான பீஷ்மருடைய அபிப்பிராயந்தான் எல்லாருடைய அபிப்பிரா

யுமும்; பாண்டவர்களுக்குப் பாகம்கொடுக்கவேண்டுமென்பதுபழமை யானதர்மம்; பாரதனே! பாண்டவர்களுக்காக மிகுதியாகச் சிறந்த பொருள்களையெடுத்துக்கொண்டு துருபதனிடம் சென்றும்படி இன் சொல்லாகப் பேசத்தக்க ஒருமனிதனை உடனே அனுப்பவேண்டும். அந்தமனிதன் காரியத்தை ரஹஸ்யமாகவைத்துக்கொண்டு பொருளு டன் துருபதனிடஞ்செல்லவேண்டும்; மேலும் துருபதனுடைய ஸம் மந்தத்தினால் மிகுந்தபெண்மைஉண்டாயிருப்பதாகவும் சொல்லவே ண்டும். ராஜதேவ! நீயும் துரியோதனனும் மிக்ககளிப்புள்ளவர்களாகவிரு ப்பதாகவும்அவன் சொல்லக்கடவன். பாரதனே! துருபதனிடத்திலும் திருஷ்டத்யும்னனிடத்திலும்அவர்களுடையசம்பந்தம்யோக்கியமென் பதையும் பிரியமென்பதையும் பலமுறைவிரித்துரைக்கவேண்டும். ரா ஜச்ரேஷ்டனே! உனது சொல்லாகக் குந்திபுத்திரர்களுக்கும் மாத்ரி புத்ரர்களுக்கும் பலமுறை பிரியவசனம்சொல்லி ஒளியுள்ள ஆனைகளும் பொன்னணிகலங்களும் திரௌபதிக்குக் கொடுக்கக்கடவன். பரதச் ரேஷ்டனே! அப்படியே துருபதபுத்திரர்கள் எல்லாருக்கும், பாண்ட வர்கள் எல்லாருக்கும், குந்திக்கும் தகுதியானவை எவையோ அந் தவிலேபெற்ற பொருள்களைத் தந்து பாண்டவர்களை மகிழ்விக்கவேண் டும்; இவ்வாறு பாண்டவர்களுக்கும் துருபதனுக்கும் பிரியவசனம் சொல்லிப் பிறகு அந்தத்தூதன் பாண்டவர்கள் இங்கே வரவேண்டு மென்பதைப்பற்றித் துருபதனிடம் சொல்லக்கடவன். திருபதன் அந்த வீரர்களுக்கு அனுமதி கொடுத்தபிறகு துச்சாஸனனும் விகர் ணனும் அவர்களையழைத்துவர நமது சேனைகளுடன்செல்வது நலம். அதன்பிறகும் அந்தச்ரேஷ்டர்களான பாண்டவர்கள் மந்தக்கால மும் உம்மால் கௌரவிக்கப்பெற்று மந்திரிவர்க்கத்தின் அனுமதியை யடைந்து தங்கள் பிதாவின் ராஜ்யத்திலிருக்கட்டும். மஹாராஜாவே! பாரதனே! இதுதான் நீ அவர்களிடத்திலும் உனது புத்திரர்களிடத் திலும் நடந்துகொள்ளவேண்டிய நியாயமென்று பீஷ்மமுதலி முதலா னான அமைச்சர்களாயப்படுகிறோம்" என்றுசொன்னர்.

அதனைக்கேட்டு, கர்ணன், "உம்மிடத்துப் பொருளையும் பெ ருமையையும் பெற்று எல்லாக் காரியங்களிலும் உமக்கு அந்தரங் கமாயிருப்பவர்களாகிய இவ்விருவரும் உமது நன்மையை ஆலோசிக் காமலிருப்பார்களாயின் அதற்கு மேற்பட்ட புதுமை என்னவிருக் கிறது! எவன் மனத்திற் கெடுதியை வைத்துக்கொண்டு உள்ளத்

மதை வெளிப்படுத்தாமல் நன்மையைப்போலப் பேசுகிறானே அவன் சத்புருஷர்களுடைய கொள்கையை நடத்துவ தெவ்வாறு? காரியங்களில் கஷ்டம் வரும்போது நன்மைக்கும் தீமைக்கும் மித்திரர்கள் உபமையாகமில்லை. பலனுக்கும் இன்பமும் துன்பமும் விதியையனுஸரித்தவை. மனிதன் அறிவின் திருத்த முள்ளவனுயிருந்தாலும் இல்லாதவனுயிருந்தாலும் சிறியவனுயிருந்தாலும்பெரியவனுயிருந்தாலும் சகாயமுள்ளவனுயிருந்தாலும் இல்லாதவனுயிருந்தாலும் எல்லா விடங்களிலும் எல்லாவற்றையும் தன் லிதிக்குத்தக்கபடி அடைகிறான்; முன்னர், ராஜரிருகபென்னும் நகரத்தில் மகததேசத்தரசர்களுள் சிறந்தவனுகிய அப்புயீசனென்னும் ஓர் அரசன இருந்ததாகக் கேள்விப்படுகிறோமல்லவா. அப்போது அவ்வரசன் எல்லா * இந்திரியங்களுமற்று மூச்சுவிடுவதைத மாத்திரம் பிரதானமாகக் கொண்டு எல்லாக் காரியங்களிலும் மந்திரிகளேயை நம்பியிருந்தான். அப்போது அவனுடைய மந்திரியாகிய மதுரகாணி பென்பவன் தனி அரசனுக இருந்தான். அவன் தான் தனக்குப் பலம் கிடைத்ததாக நினைத்து ராஜாவையவமதித்தான். அப்போது அந்தபுரமுடன் ராஜ்போகத்திற்குரிய மங்கையர்களையும் புத்திரர்களையும் தனங்களையும் ஸேவரியங்களையும் அதிகாரத்தையும் மூழுமையும் தானே பெறுத்துக்கொண்டான்; அதைபெறுத்துக்கொண்ட பின்னும் அந்த மஹாபிகு ஆசையின் மேல் ஆசை பெருகிற்று; அதனல். எல்லாவற்றையும் எரித்துக் கொண்டும் எல்லாப் புலன்களுமற்று மூச்சுவிடுவது மாத்திரமே பிரதானமாகவுள்ள அவ்வரசனுடைய ராஜ்யத்தையும அபகரிக்கக் கருதினன். முயற்சிசெய்தும் அவனுடைய ராஜ்யத்தைபெறுத்துக்கொள்ள முடியவில்லை யென்று நாம் கேள்வியுற்றிருக்கிறோம். வேறு என்ன காரணம் இருக்கிறது? அவ்வரசனுக்கு ராஜ்யாதிகாரம்விதியினுல் வற்பட்டதென்பது நிச்சயம். அரசனே! உனக்கும் ராஜ்யம் விதியினுல் வற்பட்டதாக விருக்குமானுல் எல்லாஜனங்களும் அபகரிக்கஜாக்கிரதையாகஇருக்கும்போதே நிச்சயமாகஅஃது உன்னைவிட்டுப்போகாபிருக்கும். இதற்குமாருக விதியிருக்குமானுல் முயற்சி செய்தும் ராஜ்யத்தை அடையாய். தெரிந்தவனே! இவ்வாறே மந்திரிகளுடைய யோக்கியதையையும் அயோக்கியதையையும் கண்டறிந்துகொள்; கெட்டவர்களுடைய சொல்லியும் நல்லவர்களுடைய சொல்லையும்

* சுவயம்ஞானமில்லாமல்.

அறியவேண்டும்" என்றுசொல்ல, துரோணர், "துஷ்டா! நீ கெட்ட எண்ணத்துடன் எதற்காக இந்தச் சொல்லைச் சொல்லுகிறாயென்பதை நாங்களறிவோம். நீ பாண்டவர்களுக்காக எங்கள் மேலும்தூற்றத்தைச்சொல்லுகிறாய். கர்ணா! குலத்திற்கு அபிவிருத்திகரமானதே லான நன்மையை நான்சொல்லுகிறேன். நீ அதைக்கேட்டதலைகீழாகத்தால் ஏற்றி இதிலும்கிறந்தநன்மைபோ அதைச்சொல். நான் எந்தச் சிறந்த நன்மையைச்சொல்லுகிறேனோ அதற்குமாறாகச் செய்யப்படுமாயின் கௌரவர்கள் வெகுசீக்கிரத்தில் அழிந்து போவார்களென்பதுவே என் கருத்து" என்றார்.

இருநூற்றிருபத்துநான்காவது அத்தியாயம்.

விதுராகமன பர்வம். (தொடர்ச்சி.)

(பீஷ்மரும் துரோணரும் சொல்லியதைஸ்போதித்து, விதுரர் திருதராஷ்டிரனுக்கு உரைத்தது.

விதுரர், "திருதராஷ்டிர ராஜாவே! உன்னுடைய பந்துக்கள் நிச்சயமாக உனக்கு நன்மையைச் சொல்லவேண்டும். ஆனால் உனக்குக் கேட்க விருப்பமில்லாமலிருந்தால் அந்தச்சொல் இப்போது நிலைபெறாது. ராஜாவே! மந்தனுபுத்திரரும் கௌரவச்ரேஷ்டருமாகிய பீஷ்மர் நீ விரும்பத்தக்கதும் நன்மையைத் தருவதுமான வசனத்தைச் சொல்லியிருக்கிறார். நீ அதனை மதித்துக்கொள்ளவில்லை. அவ்வாறே த்ரோணரும் மேலான நன்மையைப் பலமுறைசொன்னார். அதையும் ராதையின் மகனை கர்ணன் உனக்கு நன்மையாக நினைக்கவில்லை. ராஜாவே! நான் நினைத்துப்பார்க்கையில், இந்தப் பீஷ்மதுரோணர்களைக்காட்டிலும் இவ்விடத்திலுள்ளவர்களில் அதிக ஆர்த்தன் உனக்கிருப்பதாக்கான் அறியவில்லை. அரசர்க்கரசே! இவர்களிருவரும், பிராயத்தினாலும் புத்தியினாலும் கல்வியினாலும் முதிர்ந்தவர்கள். உன்னிடத்திலும் பாண்டுபுத்திரர்களிடத்திலும் வேறுபாடில்லாமலிருப்பவர்கள். பாரதனே! தர்மத்தினாலும் சத்யத்தினாலும் தசரத புத்திரராகிய ராமருக்கும் சமனுக்கும். தாழ்ப்படாதவர்கள்; ஸந்தேகமில்லை. இதற்கு முன்னும், யாதொரு தீங்கையும் சொன்னவர்களல்லர். உன் விஷயத்தில் இவர்கள் ஒரு தீங்குஞ் செய்ததாகவும் தெரியவில்லை. அப்படிப்பட்ட தோல்வியடையாத பரா

க்ரமமுள்ள அவ்விரண்டு புருஷச்ரேஷ்டர்களும் நீ ராஜாவாகவும நிரபராதனாகவுமிருக்க உன்நன்மையைப்பற்றி ஏன் ஆலோசிக்கமாட்டார்கள்! குருச்ரேஷ்டனாகிய ராஜாவே! ஆதலால், சிறந்த ஞானமுள்ளவரும் இவ்வுலகத்தில் மிகச்சிறந்தவருமாகிய இவ்விருவரும் உன் விஷயத்தில் யாதொரு கெடுதலும் சொல்லாரென்பது எனது உறுதியான எண்ணம். தர்மந்தெரிந்த இவர்கள் பொருளாசையினால் ஒருபக்ஷத்தில் சார்பாகப்பேசார். பாரதனே! இவர்கள் சொன்ன இதுதான் உனக்கு மேலானநன்மையென்று நான்நிச்சயிக்கிறேன். ராஜாவே! துரியோதனன்முதலியவர்கள் எப்படி உன்புத்திரர்களோ அப்படியேதான் பாண்டவர்களும் உன்புத்திரர்கள். ராஜாவே! இது நிச்சயம். விஷயந்தெரியாதமந்திரிகள் அந்தப்பாண்டவர்களுக்குத் தீங்கானதொன்றை ஆலோசனையிற்சொல்வாராயின் அவர்கள் முக்கியமாக உன்க்ஷேமத்தைக் கருதாதவர்கள். ராஜாவே! அல்லது உனகு உன்புத்திரர்களிடத்தில் அதிகஅன்பிருக்குமானால் அதுமறைந்திருப்பதை வெளிப்படுத்துகிற அந்தமந்திரிகள் உன்நன்மையைச்செய்யாதவர்களென்பது நிச்சயம். ராஜாவே! மஹாத்மாக்களும் மஹாசக்தியுள்ளவர்களுமாகிய இந்தப்பீஷ்மதுரோணர்களிருவரும் இதற்காகத்தான் ஒன்றையும் வெளிப்படையாகச்சொல்லவில்லை. இஃது உன்னுடைய எண்ணமுமல்லவே. புருஷச்ரேஷ்டனே! புருஷச்ரேஷ்டர்களான பீஷ்மதுரோணர்கள் பாண்டவர்களை வெல்லமுடியாதென்றுஉனக்குச்சொன்னார்களே; அதுவும் உண்மைதான். அதனால் உனக்குஸுகமுண்டாகவேண்டும். ராஜாவே! சிறப்புள்ளவனும் *ஸவ்யஸாசியும் பாண்டுபுத்ரனுமான தனஞ்சயனை யுத்தத்தில் ஜயிப்பதற்குத் தேவேந்திரனாலும் முடியுமா? பீமஸேனன் சிறந்த கைகளையுடையவன்; பதினாயிரம் யானை பலமுள்ளவன். ச்ரேஷ்டன்; ராக்ஷஸர்களுக்குப் பயத்தைத்தருபவன்; தன்கைகளினாலேயே புகழ்பெற்றவன்; அளவற்றபலமுள்ளவன். பாரதனே! அரசர்க்கரசே! மஹாபலசாலியான ஹிடிம்பனையும் யுத்தத்தில் ராவணனுக்கொப்பான பகனென்னும் அரக்கனையும் எவன் கைச்சண்டையினால் கொன்றானோ அந்தப் பயத்தைத்தரத்தக்க பராக்ரமத்தைதாங்கூடிய பீமன் யுத்தஞ்செய்யும் போது அவனையுத்தத்தில் வெல்லுவதற்குத் தேவராலும்முடியுமா? அவ்வாறேசமர்த்தர்களும் யுத்தத்தில் யமபுத்திரர்களைப் போன்றவர்களுமாகிய அந்த ஸுஸஹோதரர்களை உயிரோடிருக்கவிரும்புகிற

* இரண்டு கைகளினாலும் பாணம் விடுபவன்.

ஒருவன் யுத்தத்தில்ஜயிக்க ஆரம்பிக்கக்கூடுமோ? தைரியமும் தயையும் பொறுமையும் ஸத்தியமும் பராக்கிரமமும் எவரிடத்தில் ஸ்திரமாயிருக்கின்றனவோ, அந்தப்பாண்டவர்களில் மூத்தவராகிய யுதிஷ்டிரரை யுத்தத்தில்வெல்வதெவ்வாறு? எவர்கள்பக்ஷத்தில் பலராமன் ஆதாரமோ, எவர்களுக்குக் கண்ணன் மந்திரியோ, எவர்கள்பக்ஷத்தில் சாத்யகியிருக்கிறானோ, எவர்களுக்குத் துருபதன்மாமனாரோ, எவர்களுக்குத் துருபதபுத்திரர்களான திருஷ்டத்யும்னன்முதலிய வீரர்களானஸஹோதரர்கள் மைத்துனர்களோ, எவர்களுக்குச் சேதிதேசத்தரசனும் மஹாரதனுமாகிய சிசுபாலன் பிராதாவோ அவர்கள் யுத்தத்தில்ஜயிக்காதது என்னஉண்டு? பாரதனே! ஆதலால், நீ அவர்களைஜயிக்கமுடியாதென்பதையும் அவர்கள் ஆதியிலேயே ராஜ்யத்துக்குரியவர்களென்பதையும் செவ்வையாகஆராய்ந்து அவர்களிடம் சரியானதர்மத்துடன் நடந்துகொள். ராஜாவே! புரோசனனுண்டாக்கப்பட்ட இந்தப் பெரியஅபகீர்த்தியான அழுக்கு உன்மேல் ஏற்றப்பட்டிருக்கிறது. இப்போது பாண்டவர்களுக்கு அனுக்ரஹஞ்செய்வதென்னும் நீரினால் அதனைச் சுத்தஞ்செய்துகொள். இப்போது அவர்களிடம் அனுக்ரஹஞ்செய்வது நமதுகுலத்தோர் எல்லாருக்கும் பிராணதாரமும் மேலானக்ஷேமமும் க்ஷத்ரியஜாதிக்கே அபிவிருத்திகரமுமாயிருக்கும். துருபதனும் பெரியராஜா. நம்மிடத்திலும் முன்னமே விரோதஞ்செய்தவன். ராஜாவே! அவனைச் சேர்த்துக்கொள்வது நம்முடையபக்ஷத்தின் அபிவிருத்திக்குக் காரணம். ராஜாவே! யாதவர்களும் மிகுந்தபலசாலிகள்; அனேகர்கள்; அவர்களெல்லாரும் கிருஷ்ணன்எந்தப்பக்கமோ அந்தப்பக்கமிருப்பர். கிருஷ்ணன் எங்கேயோ அங்கேயே ஜயம். ராஜாவே! எந்தக்காரியம் இனியசொல்லினால் செய்யக்கூடியதோ அந்தக்காரியத்தை விரோதத்தோடுசெய்பவன் சாபத்தையடைந்தவன். ராஜாவே! பாண்டவர்கள் ஜீவித்திருப்பதைக்கேட்டு நகரத்திலும் தேசத்திலுமுள்ள ஜனங்களும் அந்தப்பலவான்களைப்பார்க்க உற்சாகமுள்ளவர்களாயிருக்கின்றனர். அவர்களின்விருப்பத்தையும் செய்யக்கடவாய். துரியோதனனும் கர்ணனும் ஸுபலபுத்திரனான சகுனியும் பாவத்திற்பிரவர்த்திப்பவர்கள்; புத்திகெட்டவர்கள்; சிறுவர்கள். இவர்கள்சொன்னதைச் செய்யாதே. ராஜாவே! துரியோதனன் ஒருவனுடைய அபராதத்தினால் இந்தஜனங்களெல்லாம் அழியப்போகின்றனரென்பதைக் குணவானானஉனக்கு முன்னமே நான் சொல்லியிருக்கிறேன்" என்றனர்.

இருநூற்றிருபத்தைந்தாவது அத்தியாயம்.

விதுராகமனபர்வம். (தொடர்ச்சி.)

(விதுரர் துருபதநகரம்சென்று அங்கே கிருஷ்ணன்முதலானோர் இருக்கும்போது திருதராஷ்டிரன் சொல்லியசெய்தியைத் தெரிவித்தது.)

திருதராஷ்டிரன், "வித்துவானும் சந்தனுபுத்திரருமாகிய பீஷ்மரும் மகிமைபொருந்திய ரிஷியாகிய துரோணரும் மிக்கநன்மையும் உண்மையும் பயனுமுள்ளதான சொல்லுரைத்தனர். நீயும் எனக்கு மிக்கநன்மையும் சத்தியமுமானவார்த்தையைச்சொல்லுகிறாய். மஹாரதர்களும் வீரர்களுமான அந்தப்பாண்டவர்கள் பாண்டுவுக்கெப்படியோ அப்படியே தர்மப்படி எனக்கும்புத்திரர்களென்பதில் ஸந்தேகமில்லை. இந்தராஜ்யம் என்புத்திரர்களுக்கெப்படியரியதோ அப்படியே பாண்டுபுத்திரர்களுக்குமென்பதிற் சந்தேகமில்லை. பாரதஞனவிதுரா! நீ செல். தேவதைபோன்றஞபமுள்ள கிருஷ்ணையுடன் பாண்டவர்களையும் அவர்கள் தாயாரானகுந்தியையும் அழைத்துவா. நல்லகாலம்; அந்தப்பாண்டவர்கள் ஜீவித்திருக்கின்றனர். அந்தக் குந்தி ஜீவித்திருப்பதும் நல்லகாலம். மஹாரதர்களான பாண்டவர்கள் திரௌபதியையடைந்ததும் சந்தோஷம். அதிருஷ்டத்தினால் நாமெல்லாரும் அபிவிருத்தியாகிறோம். புரோசனன்ஒழிந்ததும் நல்லகாலம். சிறந்தகீர்த்தியுள்ளவனே! என்னுடையபெருந்துயரம் நல்லகாலத்தினால் விலக்கப்பட்டது. விதுரா! நீயேசென்று அவர்களை உடனே இங்கேஅழைத்துவா" என்றான். அவன் இவ்வாறுசொல்ல, ராஜதர்மந்தெரிந்தவிதுரர் விரைவாகச்செல்லத்தக்க ரதத்திலேறிச் சிலதினங்களில் பாஞ்சாலதேசஞ்சேர்ந்தார். பாரதனே! பிறகு விதுரர், திருதராஷ்டிரனுடைய அந்தஆஜ்ஞையால் திரௌபதிக்கும் பாண்டவர்களுக்கும் துருபதனுக்கும் பலவகைத்தனங்களையும் ரத்னங்களையுமெடுத்துக்கொண்டு துருபதனும் பாண்டவர்களுமிருக்குமிடத்திற்குச் சென்றார். ராஜாவே! தர்மந்தெரிந்தவரும் ஸர்வசாஸ்திரங்களிலும்நிபுணருமாகிய விதுரர், அவ்விடஞ்சென்று சம்பந்தியான துருபதனிடம் முறைப்படி சேர்ந்தார். அப்போது அந்தத்துருபதனும் விதுரரை முறைப்படியழைத்தான். ஒருவர்க்கொருவர் மரியாதைப்பிரகாரம் யோகக்ஷேமமம்விசாரித்துக்கொண்டனர். பாரதரே! விதுரர் அவ்விடத்தில் பாண்டவர்களையும் கண்ணபிராணையும்கண்டு உடனே அன்புடன் அவர்களைத்தழுவிக்கொண்டு க்ஷேமத்தைவிசாரித்தார். ராஜாவே! அளவற்றஞானமுள்ள அந்தவிதுரர் அவர்களா

லும் கிரமப்படி பூஜிக்கப்பெற்று அந்தப்பாண்டவர்களோத் திருதராஷ்டிரன் சிநேகத்துடன் பலமுறை குசலப்பிரச்னம்செய்ததாகவும் சொன்னர். ராஜாவே! பாண்டவர்களுக்கும் குந்திக்கும் திரௌபதிக்கும் துருபதனுடையபுத்ரர்களுக்கும் கௌரவர்கள்கொடுத்த அனேகவிதங்களான இரத்தினங்களோயும் தனங்களோயும்கொடுத்தார். அளவற்றபுத்தியுள்ளவிதுரர், வினயத்துடன் பாண்டவர்கள் கிருஷ்ணன் இவர்கள்முன்னிலையில் வணக்கமுள்ள துருபதனிடம் பேசத்தொடங்கினர்.

"ராஜாவே! அமைச்சரோடும் புதல்வரோடுங்கூட என்சொல்லைக்கேளும். ராஜாவே! திருதராஷ்டிரனும் தன்புத்திரர்களோடும் மந்திரிகளோடும் பந்துக்களோடும்கூட அன்புகூர்ந்து அநேகமுறை குசலப்பிரச்னம்செய்கிறன். ராஜாவே! உன்ஸம்பந்தத்தினால் மிகுந்த ஸந்தோஷமடைந்திருக்கிறன். அப்படியே ஞானவான்களிற்சிறந்தவரும் சந்தனுபுத்திரருமான பீஷ்மரும் கௌரவரனைவருடனும்கூட எல்லாவகைகளிலும் உன்க்ஷேமத்தைவிசாரிக்கிறர். உனக்கு அன்புள்ள ஸ்நேஹிதரும் சிறந்தஞானவானும் பரத்வாஜபுத்திரருமான துரோணர் உன்னைத்தழுவிக்கொண்டு குசலப்ரச்னம்செய்கிறர். பாஞ்சாலராஜனே! திருதராஷ்டிரனும் மற்றக்கௌரவர்களனைவரும் உன்ஸம்பந்தத்தைப்பெற்றதனால் தம்மைக் கிருதார்த்தராக நினைக்கின்றனர். யஜ்ஞஸேனனே! உன்னுடன் ஸம்பந்தம்பெற்றதெப்படியோ அப்படி ராஜ்யலாபங்கூட ஸந்தோஷத்தையுண்டாக்குவதாக அவர்கள் நினைக்கவில்லை. நீ இதையறிந்து பாண்டவர்களோ அனுப்பவேண்டும். பாண்டுபுத்திரர்களைப்பார்ப்பதற்குக் கௌரவர்கள் மிகவும்ஆவலோடிருக்கின்றனர். புருஷச்ரேஷ்டர்களான இந்தப்பாண்டவர்களும் குந்தியும் நெடுங்காலமாகத் தேசம்விட்டுப்போனதினால் நகரத்தைப்பார்க்க ஆவலுள்ளவர்களாயிருப்பார்கள். பாஞ்சாலியையும் கௌரவராஜஸ்திரீகளனைவரும் பார்க்கவிரும்புகின்றனர். எங்கள்நகரத்திலும் தேசத்திலுமுள்ள ஜனங்களும் எதிர்பார்க்கின்றனர். ஆதலால், நீ பாண்டுபுத்திரர்களைப் பாரியையுடன்கூட உடனே அவ்விடம்போவதற்கு விடைகொடுக்கவேண்டும். இந்தவிஷயத்தில் இதுவே என்னுடையஅபிப்பிராயம். ராஜாவே! மஹாத்மாக்களான பாண்டவர்களுக்கு நீ விடைகொடுத்தபிறகு, குந்திபுத்திரர்களானவர்களும் குந்தியும் கிருஷ்ணையுடன்கூட வரப்போகிறார்களென்று விரைவாகப் போகத்தக்க தூதர்களை நான் திருதராஷ்டிரனுக்கு அனுப்புவேன்" என்றுகூறினர்.

இருநூற்றிருபத்தாருவது அத்தியாயம்.

விதுராகமனபர்வம். (தொடர்ச்சி.)

(துருபதன், பாண்டவர்களுக்கு ஹஸ்தினபுரம்செல்லும்படி அனுமதி கொடுத்ததும், விதுரர் குந்தியைப்பார்த்துப்பேசியதும், பாண்டவர்கள்புறப்படுவதும், அவர்களுக்குத் துருபதன் சீரனுப்பியதும், அவர்கள் கௌரவர்களால் எதிர்கொண்டழைக்கப்பட்டுக் கிரகப்பிரவேசம்செய்ததும்.)

துருபதன், "மஹாஞானவானான விதுரரே! நீர் இப்போது எனக்குச்சொல்வது ஸரி. கனவானே! இந்தஸம்பந்தஞ்செய்ததில் எனக்கும் அதிகஸந்தோஷமே. இந்தமஹாத்மாக்களானபாண்டவர்கள் தங்கள்தேசம்போவதும் உசிதமாகத்தானிருக்கும். ஆனால் நானே என்வாக்கினால் இதைச்சொல்லத்தகாது. வீரரும் குந்திபுத்திரருமான யுதிஷ்டிரரும் பீமஸேனனும் அர்ச்சுனனும் புருஷச்ரேஷ்டர்களான நகுலஸஹதேவர்களும் தர்மத்தையறிந்தவர்களான கிருஷ்ணபலராமர்களும் எப்போதுநினைக்கிறார்களோ அப்போதே பாண்டவர்கள் போகலாம். புருஷச்ரேஷ்டர்களாகிய இந்தராமகிருஷ்ணர்கள் பாண்டவர்களுடையவிருப்பத்தையும் நன்மையையும் கருதுகிறவர்கள்" என்றுசொன்னன். யுதிஷ்டிரர், "ராஜாவே! நாமும் நம்மைச்சேர்ந்தவர்களனைவரும் உமக்குஅதீனர்கள். நீர் அன்புடன் எங்களுக்கு எதைச்சொன்னாலும் அதை நாங்கள்செய்வோம்" என்றார். பிறகு கிருஷ்ணபகவான், "மேலேசொல்லியது யுக்தமென்று எனக்குத்தோன்றுகிறது. எல்லாத்தர்மங்களும்தெரிந்த துருபதராஜா எவ்வாறுநினைக்கிறாரோ" என்றார். அதைக்கேட்டுத் துருபதன், "வீரரும் புருஷோத்தமரும் சிறந்தகைகளையுடையவருமாகிய கிருஷ்ணன் எஃது இந்தக்காலத்திற்குத் தகுதியான்தென்று நினைக்கிறாரோ அதுதான் என்னுடையநிச்சயமான எண்ணம். மஹானுபாவர்களான பாண்டவர்கள் இப்போது எனக்குஎப்படியோ அப்படியேதான் கிருஷ்ணனுக்குமென்பதிற் சந்தேகமில்லை. இந்தப்பாண்டவர்களின்நன்மையைப்பற்றிப் புருஷச்ரேஷ்டராகியகிருஷ்ணன் சிந்திப்பதுபோலக் குந்திபுத்திரரும் பாண்டுபுத்திரருமான யுதிஷ்டிரரும் சிந்திப்பதில்லை" என்றான். பிறகு மஹாபுத்திமானவிதுரர் குந்தியிருக்கும்இடம் சென்று குந்தியின்பாதங்களிற் சிரம்படும்படி பூமியில்பணிந்தார்.

மைத்துனரைக்கண்டு குந்தி மிகவும்விசனப்பட்டு, "விசித்திரவீர்யபுத்திரரே! உமதுபுத்திரர்களை நீர் எப்படியோபிழைப்பித்தீர். அக்குமாளிகையில் இறந்துபோனவர் உமதுகருணையினால் திரும்பிவந்தனர். ஆமை, தான் எந்தவிடத்திலிருந்தாலும் குஞ்சுகளைநினைப்பதுபோல, உமதுநினைவினாலேயே உமதுபுத்திரர்கள் க்ஷேமமாயிருக்கும்படி விருத்திசெய்யப்பட்டிருக்கின்றனர். பாதச்ரேஷ்டரே! உமதுபுத்திரர்கள் உம்மிடத்தில்வைத்திருக்கும் பக்தியினாலேயே பிழைத்திருக்கின்றனர். ஐயா! எப்படி குயிற்குஞ்சுகளைக் காக்கைவளர்க்குமோ அப்படியே என்புத்திரர்களை நீர் எப்போதும்காப்பாற்றுகிறீர். உயிர்முடிவையும் உண்டாக்கத்தக்க அனேககஷ்டங்களை நானடைந்தேன். இதற்குமேல் நானறியேன். செய்யவேண்டியகாரியத்தை நீர்தாம் அறியத்தகுந்தவர்" என்றாள். விதுரர், "குந்தி! உலகங்களுக்குள் மஹாபலசாலிகளான உன்புதல்வர் அழிவதில்லை. சொற்பகாலத்தில் அவர்களெல்லாரும் சுற்றத்தாருடன்சேர்ந்து தங்கள்ராஜ்யத்தைப் பெற்றவராவர். நீதுயரப்படாதே" என்றுசொன்னர்.

பிறகு மஹாத்மாவான துருபதனால் அனுமதிகொடுக்கப்பட்ட அந்தப்பாண்டவர்களும் கிருஷ்ணனும் சிறந்தபுத்திமானான விதுரரும் புகழ்பெற்ற திரௌபதியையும் குந்தியையும் அழைத்துக்கொண்டு விரைவாகவும் ஸுகமாகவும் அஸ்தினபுரத்துக்குச்சென்றனர். அப்போது துருபதன் பொன்மயமானகச்சைகளும் கழுத்துப்பட்டைகளுமுள்ளவையும் பொன்அங்குசத்தினால் அலங்கரிக்கப்பட்டவையும் பொன்னுபரணங்களையுடையவையும் கன்னங்களிலும் முகங்களிலும் மதஜலம்பெருகுகின்றவையும் பாகர்களால்நடத்தப்பட்டவையும் எல்லாஆயுதங்களோடும் கூடியவையும் உயர்ந்தகவசங்களுள்ளவையுமான ஆயிரம்யானைகளையும், பொன்னினாலும் ரத்னங்களினாலும் சித்திரமாகச்செய்யப்பட்டவையும் நாலுகுதிரைகள்பூட்டப்பட்டவையும் பிரகாசமுள்ளவையுமான ஆயிரம்தேர்களையும், பொன் ஆபரணங்களோடுகூடியவையும் உயர்ந்தசாமரங்களை மாலைகளாகஉடையவையுமான ஐம்பதினாயிரம் உயர்ந்த ஜாதிக்குதிரைகளையும், சிறந்தஅணிகளணிந்த பதினாயிரம் தாதிமார்களையும், சிறந்தவில்லாளிகளான பதினாயிரம் சேவகர்களையும் ஸேவகர்களுக்கும்கொடுத்தான். பாஞ்சாலராஜன் மிக்கசந்தோஷமுள்ளவனாகிப் பொன்மயமான படுக்கைகள் ஆஸனங்கள் பாத்திரங்கள்முதலியபொருள்களையும் பசுக்களையும் கோடிகோடியாக ஒவ்வொருவருக்கும் கொடுத்தான். நூறுபல்லக்குக்களையும் அவற்றையெடுப்பவரான ஐந்நூறுமனிதர்களையும் இவ்வாறு இன்னும்

அனேகங்களையும் மருமக்களுக்குத் தனமாகப் பாஞ்சாலராஜன் குறைவின்றிக்கொடுத்தான். ஸோமகராஜன் பாஞ்சாலிக்குத் தந்தை கொடுக்கவேண்டியசீரையும்கொடுத்தான். பாரதரான ஜனமேஜயரே! அப்போது திருஷ்டத்யும்னன் ஆபிரக்கணக்காக வாத்தியகோஷங் கள்முழங்கத் தன்னுடன்பிறந்தவளையழைத்துக்கொண்டு சென்றான். பாரதரே! அம்பிகாபுத்திரனை திருதராஷ்டிரன், வீரர்களானபாண்ட வர்கள் வந்ததைக்கேட்டு அவர்களையெதிர்கொண்டழைப்பதற்குக் கௌரவர்களும் சிறந்தவில்லாளிகளுமான விகர்ணன் சித்ரஸேனன் இவர்களையும் முதன்மையானவில்லாளியாகிய துரோணரையும் கௌ தமரான கிருபரையும் அனுப்பினான். அப்போது சூரர்களால்சூழப் பட்ட மஹாரதர்களான அந்தப்பாண்டவர்கள் உத்ஸாகத்துடன் மெல் லமெல்ல அஸ்தினபுரத்தில்பிரவேசித்தனர். நகரத்துஜனங்கள் பாண் டவர்கள்வந்ததைக்கேட்டு ஸந்தோஷத்துடன் அந்த அஸ்தினநகரத் தை அலங்காரஞ்செய்தனர். எங்கும் தனிமலர்கள்தூவப்பட்டதும் எங்கும் ஜலம்தெளிக்கப்பட்டதும் உயர்ந்ததூபம் போடப்பட்டதும் மங்களத்ரவியங்கள் நிரம்பினதும் உயர்ந்தகொடிகளில் பூமாலைகள் கட்டப்பட்டதுமாகிய அந்நகரம் ஒப்பற்றதாகவிளங்கிற்று. சங்கம் பேரிமுதலிய பற்பலவாத்தியங்களின் முழக்கங்களிலும் பட்டண மே ஸந்தோஷத்தினல் நிரப்பப்படுவதுபோலிருந்தது. அங்கே பாண் டவர்களின்விருப்பத்தைச் செய்யக்கருதினஜனங்கள் மனக்கொதிப் போடும் துயரத்தோடும், "இந்தச்சூரர்கள் திருதராஷ்டிரனல் பீடிக் கப்பட்டுத் தாயாருடன்கூட முன்னமே நகரத்திலிருந்து வெளிப்பட் டனர். இப்போது நல்லகாலமாக மீண்டுவந்தனர்" என்று உள்ளங் கவரும் பிரியவசனம்சொல்லுகிறதைப் புருஷச்ரேஷ்டர்களான பாண் டவர்கள் எல்லாவிடங்களிலும் கேட்டனர். பட்டணத்துஜனங்கள்," "எவர் நம்மைத் தம்மக்களைப்போலத் தர்மமாகக்காப்பவரோ அந்தத் தர்மந்தெரிந்தபுருஷச்ரேஷ்டர் இதோ திரும்பவும், வனத்திலிருந்து இப்போதுவந்திருக்கிறார். இது பாண்டுமஹாராஜாவே நமது மன விருப்பத்தைச்செய்யக்கருதி வனத்திலிருந்து திரும்பிவும் வந்தது போலிருக்கிறது. இதில் ஸந்தேகமில்லை. நாம் என்னபுண்ணியம் செய்தோம். நம்மெல்லாருக்கும் சிறந்ததான விரும்பியபொருள் கிடைத்திருக்கிறது. ஏனெனில், வீரர்களான குந்திபுத்திரர்கள் திரு ம்பவும் நம்மையாளுகிறவர்களாக வந்திருக்கின்றனர். நாம்செய்த தானமும் ஹோமமும் தபஸும் இருக்குமாயின் அவற்றின்பயனைப் பாண்டவர்கள் நூறுவருஷகாலம் இந்தநகரத்திலிருக்கவேண்டும்"

என்றுசொல்லிக்கொண்டனர். பிறகு அந்தபபாண்டவாகள திருதராஷ்டிரனையும் மஹாத்மாவான பீஷ்மரையும் மற்றும் வந்தனத்திற் குரியவர்களாகிய எல்லோரையும் பாதவந்தனஞ்செய்தனர். அவர்கள், நகரத்தாரெல்லாராலும் குசலப்பிரச்னஞ்செய்யப்பட்டுத் திருதராஷ்டிரன்கட்டளைப்படி கிருஹப்ரவேசஞ்செய்தனர்.

விதுராகமனபர்வம் முற்றிற்று.

இருநூற்றிருபத்தேழாவது அத்தியாயம்.

ராஜ்யலாபபர்வம்.

(திருதராஷ்டிரன் தர்மபுத்திரருக்கு அரித்தராஜ்யாபிஷேகஞ்செய்ததும், பிறகு பாண்டவர்கள் காண்டவப்பிரஸ்தம்சென்றதும், ஸ்ரீகிருஷ்ண ரால்நியமிக்கப்பட்ட இந்திரன் விசுவகர்மாவை யனுப்ப அவன் இந்திரப்பிரஸ்தத்தை நிர்மாணஞ்செயததும், கிருஷ்ணன் துவாரகைசென்றதும்.)

அப்போது துரியோதனன் மனைவியாகிய காசிராஜன்பெண் மற்றத் திருதராஷ்டிரபுத்திரர்களுடைய மனைவிகளுடன் சேர்ந்து பதிவிரதையும், இரண்டாவது லக்ஷ்மியையும் இந்திராணியையும் போல வந்திருப்பவளும், மரியாதைக்குரியவளுமான திரௌபதியை மரியாதைசெய்து அழைத்தாள். அவ்விடத்தில் திரௌபதியுடன் கூடக் குந்தி, காந்தாரிக்குநமஸ்காரஞ்செய்தாள். அந்தக்காந்தாரி ஆசீர்வாதங்களைச்சொல்லிப் பாஞ்சாலியைத் தழுவிக்கொண்டாள். அவள் தாமரைக்கண்ணியான கிருஷ்ணையைத் தழுவிக்கொண்டவுடன், "இவள்தான் என்புத்திரர்களுக்குநமன்" என்றுநினைத்தாள். ஸுபலன்புத்திரியான காந்தாரி யுக்திகளைக்கொண்டு நன்றுகஆராய்ந்துபார்த்து விதுரரைநோக்கி, "விதுரரே! உமக்குயுக்தமாகத்தோன்றினால் ராஜபுத்திரியானகுந்தியை அவள்மருமகளோடும் பண்டங்களோடும்கூடச் சீக்கிரத்தில் சுபமான நல்லநக்ஷத்திரமும் காணமும் லக்னமும்சேர்ந்ததினத்தில் பாண்டுவின்கிருஹத்திற்கு அழைத்துக்கொண்டுபோகவேண்டும். குந்தி தன்புத்திரர்களுடன்கூட அவள் வீட்டில் ஸுகமாகமகிழ்ந்திருக்கட்டும்" என்றுசொன்னாள். அப்போது விதுரரும், 'அப்படியே' யென்று அங்கிகரித்து அவ்வாறே அதைச்செய்வித்தார். அப்போது சுற்றத்தார்களும் நகரத்துஜனங்களும் சங்கத்தலைவர்களும் பாண்டவர்களுக்கு மரியாதைசெய்தார்கள். பீஷ்மரும் துரோணரும் கிருபரும் கர்ணனும் பாஹ்லீகனும்

அவன்புத்திரனும் திருதராஷ்டிரன்கட்டளையினல் ஆதித்தியஞ்செய் தனர். இவ்வாறு சந்தோஷமாகவிருந்த அந்த மஹாத்மாக்களான பாண்டவர்களின் காரியங்களையெல்லாம் திருதராஷ்டிரமஹாராஜா வின்கட்டளையினல் விதுரர்நடத்தினர்.

மஹாத்மாக்களான அந்தப்பாண்டவர்கள் கிருஷ்ணனுடன்கூடச் சிலகாலம் வஸித்தபிறகு, திருதராஷ்டிரமஹாராஜாவும் பீஷ்மரும் அவர்களைவருவித்தனர். அப்போது திருதராஷ்டிரன், "யுதிஷ்டி ரனே! நான்சொல்லப்போகிறதை உன்ஸஹோதரர்களுடன் கேள். இந்தராஜ்யம் பாண்டுவினல் விருத்திசெய்யப்பட்டது. ஜனங்கள் காப் பாற்றப்பட்டனர்; குந்திபுத்ரா! ராஜாவே! மஹாபலசாலியான என்ஸஹோதரன் எந்தக்காலமும் என்கட்டளையின்மேல் செயற்கரிய செய்கையைச் செய்துவந்தான்; கௌந்தேயனே! ஆதலால், நீயும் என்கட்டளையை உடனேசெய்; யுதிஷ்டிரா! என்மைந்தர்களைவரும் துராத்துமாக்கள்; அகங்காரமுள்ளவர்கள்; ஒருபோதும் என்கட் டளையைச்செய்யார். எப்போதும் ஸ்வயநயத்திலேயே ஊக்கமுள்ளவர் களும் கர்வித்தவர்களும் துராத்துமாக்களுமாகிய இவர்களோடு மறு படியும் விரோதம்வளராகாது; நீ காண்டவபிரஸ்தத்துக்குச்செல்; இந்திரனல் தேவர்கள்காக்கப்படுவதுபோல் அர்ஜுனனல்காக்கப் பட்டு அங்கேவஸிக்கும்உங்களைப் பீடிக்க எவனலும்முடியாது. பாதி ராஜ்யத்தைப்பெற்றுக்கொண்டு காண்டவப்பிரஸ்தம்சேர்; கிருஷ்ண னுடையஸம்மதமிருந்தால் அதை நிச்சயமாகச்செய்யலாம்" என்று சொன்னன். பாண்டவர்களெல்லாரும் அந்தத் திருதராஷ்டிரமஹா ராஜாவின்வாக்கியத்தை அங்கீகரித்து அவனுக்கு நமஸ்காரஞ்செய்து கிருஷ்ணனுடன் ஆலோசனைசெய்துகொண்டு உட்கார்ந்திருந்தனர். அப்போது திருதராஷ்டிரன், "விதுரா! அபிஷேகத்திற்குரியபொரு ள்களைச் சீக்கிரம் சேகரிப்பாயாக. யுதிஷ்டிரனுக்கு இப்போதே ராஜ்யாபிஷேகஞ் செய்யப்போகிறேன். பிராமணர்களையும் நகரத்தி லுள்ளபெரியமனிதர்களையும் சங்கத்தலைவர்களைவரையும் மந்திரி களையும் முக்கியமானபந்துக்களையும் அழைக்கவேண்டும். அப்பா! புண்ணியாகவாசனஞ்செய்விக்கத்தக்கது. ஆயிரம்கோதானம் செய் யவேண்டும். பிராமணர்களுக்கு மிகுதியானதக்ஷிணைகளோடு முத ன்மையான கிராமங்களைத் தானம்கொடுக்கவேண்டும். விதுரா! தோள்வளைகளையும் கிரீடத்தையும் மோதிரத்தையும் முத்துஸரங் களையும் ஹாரங்களையும் பவுன்மாலைகளையும் தோடாக்களையும் அரை ஞாணையும் பொற்பூணூலையும் அரைக்கச்சையையும் கொண்டுவா;

புரோஹிதர்களானபிராமணர்களால் ஏறப்பட்ட ஆயிரத்தெட்டுயாகங்கள் சிக்கிரம் கங்காஜலம் கொண்டுவரட்டும். குந்தியின் ஜ்யேஷ்ட புத்திரனும் அஜமீடவம்சத்தவனுமாகிய யுதிஷ்டிரன் பட்டாபிஷேக ஜலத்தினால் ஸ்நானஞ்செய்தபிறகு எல்லா ஆபரணங்களையும்அணிந்து இராஜவாகனத்தின்மேலேறிக்கொண்டு உயர்ந்த சாமரங்கள்போடவும் பொன்னினாலும் ரத்தினங்களினாலும் விசித்ரமானவெண்குடைகளினங்களும் பிராம்மணர்களும் அரசர்களும் 'ஜயஜய' வென்றுதுதிசெய்யவும்கண்டு அவன்சினேகிதரான மற்றஜனங்களும் உள்ளன்புகூர்ந்து சிலாகிக்கட்டும். இந்தராஜ்யத்தை நான் அவனுக்குக்கொடுப்பதனால், எனக்கு உபகாரஞ்செய்தபாண்டுவுக்குப் பிரத்யுபகாரஞ் செய்ததாகுமென்பதிற்சந்தேகமில்லை" என்றுசொன்னன்.

அப்போது பீஷ்மரும் துரோணரும் கிருபரும் விதுரரும் "சரி சரி" என்றனர். கிருஷ்ணமூர்த்தி, "மஹாபாக்கியம் பெற்றவரே! அரசர்க்கரசே! இதுதகும். இது கௌரவர்களுக்குக்கீர்த்தியைத் தரத்தக்கது. நீர்சொன்னதை இப்போதே விரைவாகச்செய்யக்கடவீர்" என்றுசொன்னர். இவ்வாறு சொல்லிக் கிருஷ்ணன் தூரிதப்படுத்தித் திருதராஷ்டிரன்சொன்னதை அப்போதே செய்வித்தார். ஜனமேஜயமஹாராஜாவே! அந்தநிமிஷத்தில் கிருஷ்ணத்வைபாயனர் வந்து மித்திரர்களின்கூட்டத்தோடுசேர்ந்த கௌரவர்கள் அனைவராலும் பூஜிக்கப்பட்டு ராஜ்யாபிஷேகஞ்செய்துகொண்ட அரசர்களோடும் வேதங்களிற்கரைகண்ட பிராம்மணர்களோடும்சேர்ந்து கிருஷ்ணன்சொற்படி சாஸ்திரோக்தமாக அபிஷேகத்தைச்செய்வித்தார். அப்போது கிருபரும் துரோணரும் பீஷ்மரும் தௌமியரும் வியாஸரும் கிருஷ்ணனும் பாஹ்லீகனும் லோமஹர்ஷனும் நாலுவேதமுங்கரைத்தெரிந்தபிராம்மணர்களும் முன்னிட்டுக்கொண்டு யுதிஷ்டிரரை ஸிம்மாஸனத்தில் உட்காரவைத்து மந்திரபூர்வமாகப் பட்டாபிஷேகஞ்செய்தனர். வியாஸர், "நீ பூமிமுழுதையும்ஜயித்து ராஜாக்களையுட்படுத்திச் சிறந்ததக்ஷிணையோடுகூடிய ராஜஸூயமுதலான யாகங்களைச் செய்து *அவபிருதஸ்நானஞ்செய்து வேண்டியவர்களுடன் மகிழ்ந்திருக்கக்கடவாய்" என்றுசொன்னர். அவர் இவ்வாறுசொன்னபிறகு அங்குள்ளாரனைவரும் ஆசீர்வாதங்களினால் தர்மராஜாவைச் சிறப்பித்தனர். சிரஸில் பட்டாபிஷேகஞ்செய்யப்பெற்ற கௌரவராஜாவான யுதிஷ்டிரர் எல்லா ஆபரணங்களையுமணிந்துகொண்டு 'ஜயஜய' வென்று துதிசெய்யப்பெற்று அளவற்றதனத்தைத்தானஞ்செய்

* யாகமுடிவில்செய்யும்ஸ்நானம்.

தார். ராஜாவாகஎற்படுத்தப்பட்டயுதிஷ்டிசர் தேவர்களால் தேவேந் திரன் கௌரவிக்கப்படுவதுபோல ராஜ்யாபிஷேகஞ்செய்துகொண்ட ராஜாக்களனைவராலும் கௌரவிக்கப்பெற்று அசசர்க்குரியவாகனத்தி லேறி வெண்குடைகவிக்க விளங்கினர். பிறகு ராஜாவானவர் அஸ் திஞநகரத்தை வீ திவலஞ்செய்து பட்டணத்துஜனங்களினுல்கொண் டாடப்பட்டவராகத் தமதுஅரண்மனையிற் பிரவேசித்தார். இவ்வாறு பட்டாபிஷேகஞ்செய்துகொண்ட தர்மராஜாவினிடம் காந்தாரியின் புத்திரர்களாகிய அவர்கள் சுற்றத்தாருடன் விசனப்பட்டுக்கொண்டு வந்தனர். திருதராஷ்டிரன் தன்புத்திரர்களுடைய துயரத்தைக்கண்டு கிருஷ்ணனுக்கும் குருவம்சத்தாருக்கும் முன்னிலையில் யுதிஷ்டிரரை ப்பார்த்து, “கௌரவராஜாவே! மனத்திருத்தமில்லாதவர்கள் பெறக் கூடாத ராஜ்யாபிஷேகத்தை நீபெற்றும். உன்காரியம்ஆயிற்று. இப் போதே நீசெல். அசசரிற்சிறந்தஅரசே! ஆயுவும் புரூரவஸும் நகு ஷனும் யயாதியும் அந்தக்காண்டவப்பிரஸ்தத்திலேதான் வாஸஞ் செய்தனர். சிறந்தபுஜபராக்ரமமுடையவனே! பூருவம்சத்தவரெல் லாருக்கும் அதுதான் ராஜதானி. புதன்புத்திரனுகிய புரூரவஸி னுடைய லோபத்தன்மையினுல் ரிஷிகள் அதையழித்தனர். ஆத லால், நீ காண்டவப்பிரஸ்தமென்னும்பட்டணத்தையும் அதைச்சேர் ந்ததேசத்தையும் விருத்திசெய்வாய். குணங்களால்சிறப்புற்ற பிராம் மணர்களும் க்ஷத்திரியர்களும் வைசியர்களும் சூத்திரர்களும் மற்றப் பிராணிகளும் உன்னிடத்திலுள்ளபக்தியினுல் அந்தஅழகானபட்ட ணத்தை அவசியம்அடைவர். அந்தத்தேசங்களும் வளப்பமுள்ளவை. தனங்களும் தான்யங்களும்நிரம்பியவை. குற்றமற்றகௌரவனே! ஆதலால், உன்ஸஹோதரர்களுடன் நீசெல்லலாம்” என்றுசொன் னன். புருஷச்ரேஷ்டரான பாண்டவரனைவரும் திருதராஷ்டிரன்சொ ல்லை அங்கீகரித்து அவனுக்குநமஸ்காரஞ்செய்து தேர்களும் யானைக ளும் குதிரைகளும் காலாட்களுமாகிய சதுரங்கஸைனைகளுடன் சப் திக்கின்ற சிறந்ததேர்களிலேறி அங்கிருந்துபுறப்பட்டனர். அவர் கள் போகிறதைக்கண்டு நகரத்துஜனங்களனைவரும் அவர்களிட முள்ளஅன்பினுல் தாமும்புறப்பட்டனர். பாண்டவர்களுடன்செல் லுகின்ற அஸ்திஞபுரிஜனங்களைக்கண்டு துரியோதனனும் சகுனியும் பாண்டவர்களுடன்சேர்ந்து யாரும்போகக்கூடாதென்று நகரத்தில் பறையறைவித்தனர். பிறகு பாண்டவர்கள் கிருஷ்ணனைமுன்னிட் டுக்கொண்டு அவ்விடம்சென்று அந்தக்காண்டவப்பிரஸ்தநகரத்தை ஸ்வர்க்கத்திலிருந்து நழுவின ஒருபாகத்தைப்போலிருக்கும்படி அல

ங்கரித்தனர். லோகநாதராகிய கண்ணபிரான் இந்திரனிடத்தார். ராஜாவே! அவரால் சிருஷ்டிக்கப்பட்ட தேவேந்திரன் விசுவகர்மாவைப் பார்த்து, "அறிவிற்சிறந்தவிசுவகர்மாவே! இன்றுமுதல் அந்தநகரம் இந்திரப்பிரஸ்தமென்று புகழ்பெற்றுப் பூமியிலுள்ளதேவலோகமாக இருக்கவேண்டும்" என்று கட்டளையிட்டான். இந்திரனுடையகட்டளையினால் விசுவகர்மாசென்று யாவரும்பணியத்தக்கவரான கண்ணபிரானிடத்தில்பணிந்து, "நான் என்னசெய்யவேண்டும்?" என்றுகேட்டான். கிருஷ்ணபகவான் அதைக்கேட்டு விசுவகர்மாவைப்பார்த்து, "இந்திரன்பெயரால் இந்திரப்பிரஸ்தம்என்று சொல்லப்பட்டதும் அவனுடைய அமராவதிநகருக்கொப்பானதுமான மஹாநகரத்தை யுதிஷ்டிரருக்காக நிர்மாணஞ்செய்வாயாக" என்றுகட்டளையிட்டார். மஹாரதர்களான பாண்டவர்கள் வியாஸரைமுன்னிட்டுப் பரிசுத்தமும் மங்களகரமுமான பிரதேசத்தில் சாஸ்திரப்படி சாந்திஹோமமும் ஸ்வஸ்திவாசனமும்செய்வித்து, "இஃது இந்திரப்பிரஸ்தமாகஇருக்கட்டும்" என்றுசொல்லி அந்தப்பட்டணத்திற்கு அனுமதிக்கச்செய்தனர். அதன்மேல், அந்தவிசுவகர்மாவானவன் உத்தமமானநகரத்தைச் செய்யத்தொடங்கினன். கடலுக்கொப்பான அகழிகளினால்சூழப்பட்டதும், வெண்மேகம்போலவும் சந்திரன்போலவும் விளங்கி ஆகாயத்தை மறைத்துநிற்கின்ற மதிலோடுகூடியதுமான அந்தச்சிறந்தநகரம் நாகங்களினுற்சுற்றப்பட்ட போகவதியென்னும் நாகலோகத்து நகரம் போல விளங்கிற்று. அந்தச் சிறந்தநகரம், இரண்டு(கதவுகளென்னும்) பக்ஷங்களுடைமையால் கருடனைப்போல்பிரகாசிக்கின்ற வாயில்களாலும், மேகக்கூட்டத்துக்கொப்பான மாளிகைகளாலும், மந்தரமலைக்கொப்பானவையும் தகர்க்கப்படாதவையும் ஆயுதங்கள்நிரம்பி நன்றாகக்காப்பாற்றப்பட்டவையுமான அனேகவிதமோபுரங்களாலும் விளங்கியது. அஃது இரண்டுநாவுள்ளஸர்ப்பங்களைப்போன்ற சக்தியாயுதங்களால் நிரம்பினதும், பயிற்சிக்களங்களோடுகூடியதும், படைச்சேவகர்காவலுள்ளதும், கூர்மையானஈட்டிகளாலும் பீரங்கிகளாலும் அனேகயந்திரவலைகளாலும் இரும்பினாற்செய்யப்பட்ட பெருஞ்சக்கரங்களாலும் அலங்கரிக்கப்பட்டதுமாய் விளங்கியது. நன்றாகவகுக்கப்பட்ட பெரியவீதிகளுள்ளதும் தெய்வக்குற்றமில்லாததும் வெண்மையான பற்பலஉயர்ந்தவீடுகளினால்விளங்குவதும் ஸ்வர்க்கத்தைப் போலப்பிரகாசிப்பதுமான அந்தஇந்திரப்பிரஸ்தநகரம், ஆகாயத்தில் நிலையாகநிறுத்தப்பட்ட மின்னலோடுகூடிய மேகக்கூட்டம்போலவும் விளங்கியது. அந்தநகரத்தில் அழகியதும் சாஸ்திரலக்ஷணம்பொரு

ந்தியதுமான ஓர்இடத்தில் தர்மராஜாவின் தனங்கள்நிரம்பின அரண்மனை குபேரன் அரண்மனைக்கொப்பாகவிளங்கியது. ராஜாவே! வேதம் தெரிந்தவரெல்லாரிலும் சிறந்தவர்களும் எல்லாத்தேசபாஷைகளையு மறிந்தவர்களுமாகிய பிராமணர்கள் அங்கேசென்று வஸிக்கவிரும்பினர். பொருளீட்டும்வணிகர்களும் பற்பலதேசங்களிலிருந்து அவ்விடத்திற்குவந்தனர். அப்போது எல்லாவகைச்சிற்பிகளும் அங்கே வாஸஞ்செய்யவந்தனர். அழகியபுஷ்பங்களோடு மனத்தைக்கவருகின்றவையும் கனிகளின்மிகுதியினால் வளைக்கப்பட்டவையுமான மாமரங்களாலும் ஆம்ராதகமரங்களாலும் கடம்பமரங்களாலும் அசோகங்களாலும் சண்பகங்களாலும் புன்னைமரங்களாலும் நாககேஸரங்களாலும் எலுமிச்சமரங்களாலும் பலாமரங்களாலும் ஆச்சாமரங்களாலும் பனைமரங்களாலும் பச்சிலைமரங்களாலும் மகிழமரங்களாலும் தாழைகளாலும் அரிநெல்லிமரங்களாலும் லோத்திரமரங்களாலும் அங்கோலமரங்களாலும் நாவல்மரங்களாலும் பாதிரிமரங்களாலும் நீர்நொச்சில்மரங்களாலும் தினிசமரங்களாலும் அலரிச்செடிகளாலும் பாரிஜாதமரங்களாலும் எப்போதும் புஷ்பங்களும் பலங்களும் நிரம்பினவையும் அனேகபக்ஷிக்கூட்டங்கள்சேர்ந்தவையுமான இன்னுமனேகவகைமரங்களினாலும் சோபிக்கின்றதோட்டங்களும் அந்நகரத்தைச்சுற்றியிருந்தன. மயில்களும் குயில்களும் எப்போதும் களிப்புடன் கூவிக்கொண்டிருப்பனவும் கண்ணாடிகள்போல் விளங்குவனவுமான வீடுகளாலும், பலவகைக்கொடிப்பந்தல்களாலும், மனத்தைக்கவருகின்ற சித்ரசாலைகளாலும், செய்குன்றுகளாலும், நல்லஜலம்நிரம்பின அனேகம்வாவிகளாலும், தாமரைமலர்கள் நீலோத்பலங்கள்முதலிய இனியமணமுள்ள புஷ்பங்களுள்ளவையும் அன்னங்களும் நீர்க்காக்கைகளும் சக்கரவாகங்களும் விளங்காநின்றவையுமான மிக்கஅழகான நீர்நிறைந்ததடாகங்களாலும் அந்தநகரம்சோபித்தது. அங்கே மரக்கட்டிடங்களினால் மறைக்கப்பட்ட அழகிய தாமரையோடைகளனேகமும் அழகும்விசாலமுமான குளங்களனேகமுமிருந்தன. நந்தினியென்றுபேர்பெற்றஒருநதியும் அந்தநகரத்தைச்சுற்றி ஓடிற்று. நாலுவருணங்களும்நிரம்பினதும் அனேகம்சிற்பிகளாலடையப்பட்டதும் எப்போதும் ஸாதுக்கள்வரப்பெற்றதும் வேண்டியபோகங்கள் நிரம்பினதும் எல்லாப்பொருள்களிலும்குறைவில்லாததும் யோக்கியர்களானஜனங்கள் எப்போதுமிருப்பதும் புருஷர்களும்பெண்களும் கூட்டங்களாகச்சேருவதும் குதிரைகளும் யானைகளும்நிரம்பினதும் பசுக்களும் ஒட்டகங்களும் கோவேறுகழுதைகளும் ஆடுகளுமுள்

ளதுமாக விசுவகர்மாவினால் நிர்மாணஞ்செய்யப்பட்ட அந்த இந்திரப் பிரஸ்தநகரம் தேவலோகத்திற்குநிகராக விளங்கியது. ராஜாவே! எல்லாச்சிறப்புக்களும்நிரம்பினதாக விசுவகர்மாவினால் உண்டாக்கப் பட்ட அந்தநகரத்தில் பௌரவர்களுக்கு முதன்மையானவரும் குந்தி புத்திரருமான தர்மபுத்திரர் ஸுஹ்ருத்தர்களுடன்கூடி மங்களகரமான காரியங்களைச்செய்கிறவர்களும் வேதங்களிற் பாரங்கதர்களுமான பிராம்மணர்களோடு வியாஸமஹரிஷியை முன்னிட்டுத் தௌம்ய ருடையகருத்தையும்அனுஸரித்துப் பிரவேசித்தார். எதிரிகளையடக் குகிறவரும் மஹாபராக்கிரமசாலியுமான தர்மராஜாவானவர் கண்ண பிரானுடன ராஜவாஹனமென்ற ராஜமார்க்கத்தைத்தாண்டி., முகம் போன்ற முதற்கோட்டைவாயிலோடுகூடியதும் முப்பத்திரண்டுவாயி ல்களோடுகூடியதுமாகிய நகரத்தில் முதல்வாயில்வழியாகப்பிரவே சித்தார். அப்போது சங்கதுந்துபிவாத்தியங்களின்முழக்கங்கள் மிக ப்பெரிதாகக்கேட்கப்பட்டன. 'ஜயஜய' வென்னும்பிராமணர்களின் வாக்குகள் மிகுதியாகக்கேட்கப்பட்டன. ராஜவாஹனமென்றும்தர்ம ராஜா, முனிவர்களாலும் ஸூதர்களாலும் மாகதர்களாலும் வந்திக ளாலும் ஸ்துதிசெய்யப்பெற்று ராஜமார்க்கத்தைத்தாண்டி மங்களா சாரங்கள்செய்யப்பட்டிருந்த தமது சிறந்தஅரண்மனையிற் பிரவேசித் தார். அரண்மனையிற்பிரவேசித்தபிறகு தர்மராஜாவானவர் ஆனந்த மும் உத்ஸாகமுமுள்ள நகரஜனங்களாற்சூழப்பட்டுக் காணிக்கை களாற்கௌரவிக்கப்பெற்றனர். பிராம்மணசிரேஷ்டர்களையும் மஹா த்மாவானகிருஷ்ணனையும் பூஜித்தனர். பிறகு அந்தநகரமும் அந்தத் தேசமும் புருஷர்களும் ஸ்திரீகளும் கூட்டமாகச்சேரப்பெற்றும் கோதனங்கள்நிரம்பப்பெற்றும் பயிர்களால் அபிவிருத்தியடையப்பெ ற்றுமிருந்தன. மஹாராஜாவே! தர்மிஷ்டர்களானஜனங்களுள்ள அந்தப்பெரியதேசத்தில் பிரவேசிக்கும்போது பாண்டவர்களுக்குச் சந்தோஷம் மேன்மேலும்விருத்தியாயிற்று. காண்டவப்பிரஸ்தத்தில் வஸிக்கும் பாண்டவர்கள் சகுனியினாலும் கர்ணனாலும் திருதராஷ் டிரபுத்திரர்களாலும் கிருபாசாலும் பீஷ்மராலும் தர்மத்தில்விருப்ப முள்ள திருதராஷ்டிரமஹாராஜாவாலும். சிறப்பிக்கப்பெற்றனர். சிறந் தவில்லாளிகளும் இந்திரனைபோன்றவர்களுமாகிய அந்தப்பஞ்சபாண் டவர்களால் ஆளப்பட்ட அந்தச்சிறந்தநகரம் நாகர்களோடுகூடிய போகவதியென்னும் பாதாளலோகநகரம்போலவிளங்கிற்று. பிறகு தர்மபுத்திரர் விசுவகர்மாவையும் வியாஸரையும் பூஜித்து விடைகொடு த்தனுப்பிவிட்டு, செல்லும்விருப்பத்துடன் புறப்படுவதற்கு ஸமயத்

தைப்பார்த்துக்கொண்டிருந்த கிருஷ்ணனைப்பார்த்து, "விருஷ்ணிவம்சதிலகமே! குற்றமற்றவரே! கிருஷ்ணா! தோஷமற்றவரே! உமது அனுக்கிரஹத்தினால் எனக்கு ராஜ்யம்கிடைத்தது. வீரரே! உமது அனுக்ரஹத்தினாலேதான் பாழ்த்திருந்ததேசம் எதிரிகள்பிரவேசிக்க முடியாததாயிற்று; உமது அனுக்கிரஹத்தினாலேதான் நாங்களும் ராஜ்யாதிகாரத்திலிருக்கிறோம்; மாதவா! பாண்டவர்களுக்கு எந்த ஆபத்துக்காலத்திலும் நீரேகதி; குற்றமற்றவரே! பாண்டவர்கள்விரும்பத்தக்கதும் நீர் ஒப்புக்கொள்ளத்தக்கதுமானகாரியத்தை நீரே அறிந்து எங்களைக்கொண்டுசெய்விக்கக்கடவீர்" என்றுசொன்னார். கிருஷ்ணபகவான், அதைக்கேட்டு, "பிரபுவே! உமதுசக்தியினால் தர்மப்படி பெரியராஜ்யம் உமக்குக்கிடைத்தது. தகப்பன் பாட்டன் வரிசையாகவந்தராஜ்யம் உமக்கு என்இல்லாமற்போகும்; கெட்டநடையுள்ள திருதராஷ்டிரபுத்திரர்கள் பாண்டவர்களை என்னசெய்யலாம்; தர்மத்தோடு ராஜ்யபாரத்தைவகித்து ஜனங்களின்இஷ்டத்தையனுஸரித்து உலகத்தைப்பரிபாலனஞ்செய்யும்; பௌரவரே! மேல்மேலும் ஸந்தோஷமாயிருக்கும்படி பிராம்மணர்களைக் காப்பாற்றும்; மஹிமைபொருந்திய நாரதமாமுனிவர் இப்போதே விரைவில்வருவர்; அவர்சொல்லும்சொற்களை வாங்கிக்கொள்ளும்; அவருடையஉபதேசத்தை நடத்தும்" என்றுசொன்னார். கிருஷ்ணன் இவ்வாறுசொன்னபின் குந்தியை வந்தனஞ்செய்து, "உனக்கு நமஸ்காரம்; நான் செல்லுகிறேன்" என்று நயமானசொல்லைச்சொன்னார். குந்தி, "குற்றமற்றவனே! யாதவசிரேஷ்டனே! நான் எப்போது அக்குமாளிகையிற்சேர்ந்திருந்தேனோ அப்போதே உனக்கும் பலராமனுக்குந்தானே தெரிந்திருந்தது; கோவிந்தா! நீ நாதனாகஇருப்பதனால் மிகப்பெருந்துயரத்தைத் தாண்டினேன்; நாதனில்லாதவர்களுக்கும் ஏழைகளுக்கும் முக்கியமாக நீ நாதனல்லவா? உன்னைப்பார்த்தமாத்திரத்திலேயே என்துயரங்களெல்லாம் விலகிப்போகின்றன; மஹாஞானியே! இந்தப்பாண்டவர்களை நீ ஞாபகத்தில்வை; நீ சிந்திப்பதனால் தான் இவர்கள் ஜீவித்திருக்கின்றனர்" என்றுசொன்னாள். கண்ணபிரானும், அப்படியே யென்றுசொல்லித் தம்அத்தையானகுந்தியை வணங்கி விடைபெற்றுக்கொண்டு தம்பின் வந்தவர்களுடன்கூடப் போவதற்குஎண்ணினார். ராஜாவே! உடனே அந்தவீரர் அந்தப் பாண்டவர்களைநிறுத்திவிட்டு அவர்களிடம் அனுமதிவாங்கிக்கொண்டு பலராமருடன் துவாரகாநகரம்சென்றார்" என்று வைசம்பாயனர் சொல்லினர்.

இருநூற்றிருபத்தெட்டாவது அத்தியாயம்.

ராஜ்யலாபபர்வம். (தொடர்ச்சி.)

(நாரதர் பாண்டவர்களிடம்வந்து அவர்களுக்கு ஹிதம்சொல்லியது.)

ஜனமேஜயர், "தபோதனரே! மஹாத்மாக்களும் என்கூடஸ்தர்களும் புருஷச்ரேஷ்டர்களுமாகிய பாண்டவர்களனைவரும் இந்திரப்பிரஸ்தத்தில் இவ்வாறு ராஜ்யாதிகாரத்தையடைந்து அதற்குமேல் என்னசெய்தனர்? அவர்களுடையதர்மபத்னியான திரௌபதியும் அவர்களிடம் எவ்வாறுநடந்துகொண்டாள்? மஹானுபாவர்களான அந்தப்புருஷச்ரேஷ்டர்கள் கிருஷ்ணை ஒருத்தியிடம் எவ்வாறிருந்தனர்? ஒருவருக்கொருவர் விரோதப்படாமலிருந்தனரா? அவ்விடத்தில் கிருஷ்ணையுடன்கூடினபாண்டவர்கள் ஒருவர்க்கொருவர் நடந்துகொண்டதை நடந்தபடி விரிவாகநான்கேட்கவிரும்புகிறேன்" என்றுகேட்க, வைசம்பாயனர்சொல்லுகிறார்.

"புருஷச்ரேஷ்டர்களானபாண்டவர்கள் திருதராஷ்டிரனால் அனுமதிகொடுக்கப்பெற்று அந்த இந்திரப்பிரஸ்தநகரம்போனபிறகு கிருஷ்ணையுடன்கூடிச் சுகித்திருந்தனர். மிகுந்தசக்தியுள்ளவரும் ஸத்தியஸந்தருமான யுதிஷ்டிரர் இராச்சியத்தையடைந்தபின் சகோதரர்களுடன் தர்மந்தவறாது தேசத்தைப் பரிபாலனஞ்செய்தார்.

மஹாத்மாக்களும் ஸத்தியத்தையும் தர்மத்தையும்விடாதவர்களுமாகிய பாண்டவர்கள் இவ்வாறு அந்தநகரத்தைச்சேர்ந்து பகைவரையடக்கி அங்கேவாஸஞ்செய்தனர். அந்தப்பரதச்ரேஷ்டர்கள் நகரத்தின்வியவகாரியங்களெல்லாவற்றையும் நடத்திக்கொண்டு அரசர்க்குரிய விலேபெற்றஸிம்மாஸனங்களில் வீற்றிருந்தனர். அந்தமஹாத்மாக்களான பாண்டவர்கள் அங்கேஉட்கார்ந்திருக்கையில் ஒருகால் நாரதமஹரிஷி, தர்மராஜாவைப்பார்க்கவிரும்பி, நக்ஷத்திரங்களினூலகீடையப்பட்டதும் கருடன்ஸஞ்சரிப்பதும் சந்திரசூரியர்கள் பிரகாசிப்பதும் மஹரிஷிகள்நடப்பதும் சிறந்ததபஸில்லாதவர்களுக்குஅடையமுடியாததுமாகிய சிறந்தஆகாயமார்க்கமாக வந்தனர். எல்லாப்பிராணிகளாலும்பூஜிக்கப்பட்டவரும் ஒளிமிகுந்தவரும் பெருந்தவமுள்ளவரும் ஸகலவேதாந்தங்களையுமறிந்தவரும் வேதாங்கள் அங்கங்கள் எல்லாவற்றிலும்பாரங்கதரும் எக்காலமும் சிறந்ததவத்தைவிடாதவரும் பிரம்மஞானமுள்ளவரும் யுக்தியிலும் ராஜநீதிசாஸ்திர

த்திலும் ஊக்கமுள்ளவரும் மஹாமுனிவரென்று கியாதிபெறறவரும பரத்துக்கும்பரமான பொருளைப்பற்றினவரும் தர்மங்களைச்செம்மையாகஅறிந்தவரும் சுத்தமான ஆத்மாவுடையவரும் ஆசையைவிட்டவரும் ஐம்புலன்களையும்அடக்கினவரும் கோபமில்லாதவரும் கபடமில்லாதவரும் பிராம்மணருமாகிய நாரதர் தேசங்களாலும் வீடுகளாலும் அலங்கரிக்கப்பட்ட பூமியைப்பார்த்துக்கொண்டே வந்தனர். தமது தர்மத்தினால் தேவர்கள் அஸுரர்கள் மனிதர்கள் அனைவராலும் கௌரவிக்கப்பெற்றவரும் செய்கருமங்களைவிட்ட பாபிகளான பலவகைப் பிராணிகளுக்கும் பலவிதங்களான வேதோதாதேசங்களையனுசரித்து அவரவர்களுக்குத்தக்க தர்மவியவஸ்தை செய்பவரும் சுத்தமானயாகத்தில் ஸோமபானஞ்செய்பவரும் புண்ணியஞ்செய்கிறவரும் அக்நிஹோத்ரஞ்செய்பவரும் ருக்வேதம் யஜுர்வேதம் ஸாமவேதம்தெரிந்தவரும் நியாயசாஸ்திர தர்மசாஸ்திரங்களில்நிபுணரும் மனுவாக்குக்காயங்கள் ஒத்திருப்பவரும் மேன்மேலும் உயர்ந்தபடியிற்செல்லுகிறவரும் எப்போதும்வழிநடப்பவரும் குற்றமில்லாதவரும் அழகான குடுமியுள்ளவரும் மிகுந்தஒளியுள்ளவருமான நாரதர், தேவேந்திரனல்அளிக்கப்பட்டவையும் தூயவையும் நுண்ணியவையுமான இரண்டுஅழகான பெரியதிவ்யவஸ்திரங்களையும், மண்ணுண்ணிப்பாம்பின்முகம்போன்றமுகமுள்ளவையும் அக்னிக்கும் ஸூர்யனுக்கும் ஒப்பானவையும் புதியவையும் அழகியவையுமான இரண்டுஉயர்ந்த பொற்குண்டலங்களையுந் தரித்துக்கொண்டும்,விசித்ரமும் மிகுந்தஒளியுள்ளதுமாகிய வெள்ளிக்குடையைப்பிடித்துக்கொண்டும், யாருக்குங்கிடையாத உயர்ந்தபிரம்மதேஜஸைவகித்தவராகி இரண்டாவது பிருஹஸ்பதியைப்போலத் தர்மராஜாவின்ஸபையில்இறங்கினார். வேதங்களிலும் தர்மசாஸ்திரங்களிலும் சொல்லப்பட்டிருக்கும் பிரவிருத்தி நிவிருத்தியென்னும் இரண்டுபாகுபாடுடையதர்மத்தையும் வருணச்சிரமதர்மத்தையும் கரைகண்டவரும் *காதைகளையும் மிக்கஅழகான ஸாமவேதங்களின் மந்த்ரப்பிராம்மணங்களையும் பரமாத்மாவையும் அறிந்தவரும் முக்திமார்க்கத்திலிருப்பவர் எல்லாரைப்பற்றியும் முயற்சிசெய்பவரும் காரியோபாயங்களையறிந்தவரும் யஜுர்வேதங்களிற் சொல்லப்பட்ட அலோகவிதமானயாகம்முதலிய நற்கருமங்களையறிந்தவரும் புத்திமான்களிற்சிறந்தவரும் எல்லாவிஷயங்களும் தெரிந்தவரும் எல்லாரிடத்திலும் வித்தியாஸமில்லாமலிருப்பவரும் வேதங்களிலுள்ளஸந்தேகங்களை நீக்குகிறவரும் பொருள்களைப்பகுத்துரைப்

* தேசபாஷைச்செய்யுட்கள்.

பதில்வல்லவரும் யேங்களேப்போக்குகிறவரும், தமக்குளப்போதும் ஸ்ந்தேகமில்லாதவரும், இயற்கையில் தர்மந்தெரிந்தவரும், பிறர்க்குத் தர்மோபதேசம்செய்பவரும், பதங்களுக்குள்ளகெடிதல் தோன்றல் புணர்ச்சி ஸமாஸம், ஒருசொல்லுக்குப்பலபொருள் ஒருபொருளுக்கு அனேகம்சொல், ஒவ்வொருபொருளுக்கும் ஒவ்வொருசொல்லுக்கு முள்ளவேறுபாடுகள், அவற்றின் உபயோகங்கள் இவற்றையெல்லாம் ஆராய்கிறவரும், லோகவியவகாரங்கள் மீமாம்ஸாவியவகாரங்களெல் லாவற்றிலும் யாரும்நம்பத்தக்கவரும், எழுத்துக்களெல்லாவற்றின் பிரிவுகளேயும்அறிவதில் பண்டிதர்களாலெப்போதும் பூஜிக்கப்பெற்ற வரும், பலவகைஸ்வரங்களிலும் (உயர்த்திச்சொல்வது அந்தஸ்வரத்தி லும்தாழ்ந்துசொல்வது) பலவகைச்சந்தங்களிலும் ஒரேஉறுப்பிலுண் டாகும் எழுத்துக்களேனத்திலும் சமஸ்தமானசூத்திரங்களிலும் பகு திகளிலும் இலக்கியங்களேச்சொல்லுகிறவரும், இலக்கியமெல்லாவற் றிற்கும் லக்ஷணம்சொல்லுகிறவரும், வாக்கியங்களுடைய உட்கருத் தின் உண்மையையறிந்தவரும், சொற்களேயும் அவற்றின்பகுதி விகு திமுதலிய பாகுபாட்டையும் நினேவில் வைத்திருப்பவரும், இறந்தகா லம் நிகழ்காலம் எதிர்காலங்களின் பிரயோகத்தை விஷயத்துக்குத் தக்கபடி விசாரிப்பவரும், விகற்பமாகச்சொல்லப்பட்டதும் விதிக்கப் பட்டதும் அழுகியதுமாகிய பிரயோகிக்கவேண்டியபதத்தை உலகவ ழக்கிலுள்ளபடி அறிகிறவரும், * ஆத்மனேபதம், பரஸ்மைபதம் அவற்றிற்கு உறுப்புக்களாயுள்ள உயிரெழுத்து மெய்யெழுத்துக்கள் இவைகளின் உபயோகங்களேயறிந்தவரும், இவற்றிற்குத்தகுந்த உச் சாரணங்களேயறிந்தவரும், சமயங்களில்நினேவுடன் பிறருக்குச்சொல் லுபவரும், தனக்குத்தானேபிரகாசிக்கும் ஞானமுள்ளவரும், பிறர் சொல்லுகிறவாக்கியங்களின் பொருளின்ஒற்றுமையையும் பொருள் வேறுபாட்டையும் அறிபவரும், ஆழ்ந்தகருத்துக்களேயும் பலவகைக் குற்றங்களேயும் சேர்த்தும் பகுத்தும் விசுதியாகஅறிந்தவரும், தா மும் பலவகைவாக்கியங்களேப் பேசுகிறவரும், பற்பலதேசங்களேப்பா ர்த்தவரும், தாதுவிலும் பிரத்யயத்திலும் உபசர்க்கத்திலும் ஸந்தியி லும்•ஸமாஸத்திலும்வருகிற ஐந்துவகை ஆகமங்களேயும் (தோன்றல்) பலவகைஆதேசங்களேயும் (திரிதல்) பலவிபாருள்குறிக்கும் சொற்க ளேயும் தெரிந்தவரும்,தத்திதவிகுதிகளெல்லாம் தெரிந்தவரும், சொற்

* ஒருவன் தனக்காகச்செய்துகொள்ளும் செய்கையைக்குறிக்கும்விகு திக்கு, ஆத்மனேபதம் என்றும், பிறர்க்காக வேலைசெய்வதைக்குறிக்கும் விகு திக்குப் பரஸ்மைபதம் என்றும் வடமொழியில் பெயர்கள்வழங்குகின்றன.

சுலோபரிசெழுத்து மெய்யெழுத்துகளின் உச்சரிப்பிலும் பொருளிலும் அலங்காரஞ்செய்பவரும், ஒவ்வொரு பகுதியையும் விகுதியையும் விளக்கமாக விரித்துரைப்பவரும், எழுத்துக்களின் கசடதப என்னும் ஐந்துவர்க்கங்களையும் உயிரெழுத்துக்களையும் அறிந்தவருமான நாரதர் வந்தார். அந்தரிஷிவரக்கண்டு யுதிஷ்டிரர் எதிர்சென்றழைத்து அபிவாதனஞ்செய்து அவருக்கு அழகானஆஸனத்தைக்கொடுத்தார். கிருஷ்ணஜினம்மேலே போடப்பட்ட அந்த ஆஸனத்தில் நாரதமஹரிஷி உட்கார்ந்தார். உட்கார்ந்ததேவரிஷிக்குப் புத்திமானயுதிஷ்டிரர் சாஸ்திரப்படி அர்க்கியத்தைத் தாமேகொடுத்தார். ராஜ்யத்தையும் அவரிடம்ஒப்புவித்தார். அப்போது அந்தப்பூஜையைப்பெற்றுக்கொண்டு மனங்களித்த நாரதமஹரிஷி ஆசீர்வாதத்தினால் யுதிஷ்டிரரைச்சிறப்பித்து 'உட்காரலாம்' என்றுசொன்னர். அவரால் அனுமதிகொடுக்கப்பெற்றபிறகு தர்மராஜா உட்கார்ந்தார்; நாரதபகவான்வந்திருப்பதாகத் திரௌபதிக்குச் செய்தியனுப்பினர். அதைக்கேட்டஉம், திரௌபதி சுகியுள்ளவளாக அவரிடம் மனத்தைதிறுத்திக்கொண்டு நாரதர் வீற்றிருக்குமிடம்சேர்ந்தாள். தர்மத்தைச்செய்கிறவளாகிய திரௌபதி அந்தத்தேவரிஷியின்பாதங்களில் வணங்கிச் செவ்வையாக வஸ்திரத்தைப்போர்த்துக்கொண்டு கைகூப்பிநின்றாள். தர்மாத்மாவும் ஸத்தியஸந்தரும் ரிஷிச்ரேஷ்டருமாகிய நாரதபகவான் அந்தராஜபுத்திரியான திரௌபதிக்கு அனேக ஆசீர்வாதங்களைச்சொல்லிக் குற்றமற்றவளான அவளைப்பார்த்துச் 'செல்லலா' மென்றுசொன்னர். கிருஷ்ணைசென்றபிறகு நாரதபகவான் யுதிஷ்டிரர்முதலான பாண்டவர்களனைவரையும்பார்த்து, "புகழ்பெற்றபாஞ்சாலி உங்களெல்லாருக்கும் ஓரேதர்மபத்தினியாயிருக்கிறாள். இதுவிஷயத்தில் உங்களுக்கு எவ்வாறு விரோதம்வராமலிருக்குமோ அப்படிப்பட்டமுறையை நீங்கள் செய்துகொள்ளவேண்டும். முன்னர் மூன்றுலோகங்களிலும் பிரஸித்திபெற்ற ஸுந்தோபஸுந்தரென்னும் ஸஹோதரர்களிருவர் ஒன்றுசேர்ந்து யாராலும்வதஞ்செய்யமுடியாதவர்களாயிருந்தார்கள்; அவர்களுக்கு ராஜ்யமொன்று; கிருகமொன்று; பூமிக்கையொன்று; ஆஸனமொன்று; போஜனமொன்று; அவர்களிருவரும் திலோத்தமைகாரணமாக ஒருவரையொருவர் கொன்றனர்; ஆதலால், ஒருவர்க்கொருவர் அன்பைஉண்டாக்குவதாகிய சிநேகத்தைக் காப்பாற்றவேண்டும். யுதிஷ்டிரா! இதுவிஷயத்தில் உங்களுக்கு விரோதம்உண்டாகாமலிருக்கும்படி செய்துகொள்ளு" என்று ரகஸ்யத்திற்சொன்னர். யுதிஷ்டிரர், "மஹாமுனிவரே! ஸுந்

தோபஸ்ந்தர்களென்னும் அஸுரர்கள் யாருடையபுத்திரர்கள். அவர்களுக்கு எவ்வாறுவிரோதமுண்டாயிற்று; ஒருவரை ஒருவர் எவ்வாறுகொன்றனர். எவள்மேல் காமவெறியுற்று அவர்கள் பரஸ்பரம் வதஞ்செய்துகொண்டனரோ அந்தத்திலோத்தமையென்னும் தேவகன்னியான அப்ஸரஸ் யாருடையபெண்; தபோதனரே! திலோத்தமை அப்ஸரஸ்என்னுந் தேவகன்னிகையல்லவா? அவள் யாருக்குச் சொந்தம்? தபோதனரே! இதையெல்லாம் நடந்தபடி விரிவாகக் கேட்கவிரும்புகிறோம்; பிராம்மணரே! எனக்கு இதில் மிகுந்தவிருப்பமிருக்கிறது" என்றார்.

இருநூற்றிருபத்தோன்பதாவது அத்தியாயம்.

ராஜ்யலாபபர்வம். (தொடர்ச்சி.)

(நாரதர்சொல்லும் ஸுந்தோபஸுந்தஉபாக்கியானத்தில் ஸுந் தோபஸுந்தர்கள் பிரம்மாவினிடம் வரம்பெற்றது.)

நாரதர், "குந்திபுத்ரா! யுதிஷ்டிரா! நீ உன்ஸஹோதரர்களுடன்கூட இந்தப்பழமையானசரித்திரத்தை என்னிடம் விரிவாகக் கேள். முற்காலத்தில் ஹிரண்யகசிபுவென்னும் அஸுரராஜன்வம்சத்தில் மிகுந்தபராக்கிரமமுள்ளவனும் பலசாலியுமான நிகும்பனென்னும் அஸுரராஜன் ஒருவன்இருந்தான். அவனுக்கு மஹாவீரர்களும் பயங்கரமான பராக்கிரமமுள்ளவர்களும் கொடியவர்களும் கொடியஎண்ணமுள்ளவர்களும் அஸுரச்ரேஷ்டர்களுமாகிய ஸுந் தோபஸுந்தர்களென்னும் புத்திரர்கள் இருவர்இருந்தனர். அந்த இரண்டுஅஸுரரும் எப்போதும் ஒரேஎண்ணமுள்ளவர்களும் ஒரே காரியத்தையும் ஒரேபிரயோஜனத்தையும் நினைப்பவர்களும் ஒரே சுகதுக்கமுள்ளவர்களுமாக எப்போதும் பேதமில்லாமலிருந்தனர். ஒருவனைவிட்டு மற்றொருவன் உண்பதுமில்லை; பேசுவதுமில்லை; ஒருவனுக்குமற்றொருவன் இனியதையேசெய்துகொண்டும் இனியதையே பேசிக்கொண்டும் ஒரேஒழுக்கமும் செய்கையுமுள்ளவர்களாய் ஒருவனே இரண்டாகவகுக்கப்பட்டதுபோலிருந்தனர். மஹாபராக்கிரமசாலிகளும் காரியங்களில் ஒரேநிச்சயமுள்ளவர்களுமாகிய அவர்கள் விருத்தியடைந்து மூவுலகங்களையும் ஜயிப்பதற்காக ஒற்றுமையாக நிச்சயத்தைச்செய்துகொண்டு தவத்திற்குத்தீக்ஷைசெய்துகொண்டு

விந்தியமலைசென்று உக்கிரமானதவஞ்செய்தனர். அவர்கள் நீண்ட காலம் தவஞ்செய்துகொண்டிருந்தனர். பசிதாகங்களினுற்சோர்வுற்று ஜடையும் மரவுரியுந்தரித்து உடம்பெல்லாம் அழுக்குப்படிந்தவர்களாய் வாயுபக்ஷணஞ்செய்துகொண்டிருந்தனர். தங்கள்மாமிசங்களே ஹோமஞ்செய்துகொண்டும் காற் கட்டைவிரல்நுனிகளேஊன்றி நின்றுகொண்டும் கைகளே உயரத்தூக்கிக்கொண்டும் இமைகொட்டாமலும் நெடுங்காலம் தவத்திலிருந்தனர். அவர்கள் தவத்தின்மஹிமையினால் வெகுகாலம் கொதிப்புண்டாக்கப்பட்ட விந்தியமலையானது புகையைவெளிவிட்டது. அஃது ஓர் ஆச்சரியமாயிருந்தது. அப்போது அவர்களின் உக்கிரமானதவத்தைக்கண்டு தேவர்கள் அச்சமுற்றனர். பிறகு தவத்தைக்கெடுப்பதற்காகத் தேவர்கள் இடையூறுகளேயுண்டாக்கினர். அவ்விருவருக்குஞ் ரத்னங்களேயும் ஸ்திரீகளேயும் பலமுறைகாட்டி ஆசைமூட்டினர். மிகப்பெரிய உறுதியுள்ள அவர்கள் தவத்தைக்கெடுத்துக்கொள்ளவில்லே. பிறகு, தேவர்கள் மஹாத்மாக்களான அவர்களிடத்தில் மாயையை மறுபடியும்உண்டுபண்ணினர். அவர்களுடையஸஹோதரிகளும் தாய்மார்களும் மனைவிகளும் சுற்றத்தாரும் சூலாயுதத்தைக்கையிற்பிடித்த ராக்ஷஸனுல் தள்ளப்பட்டு விழுந்தனர். கூந்தல்கள் ஆபரணங்களோடுவிழுவும் நகைகளும் ஆடைகளும்விழுவும் அவர்களனைவரும் ஸந்தோபஸந்தர்களேயழைத்து, "காப்பாற்று" என்றுகூவினர். மிகவுறுதியானதவமுள்ள அவர்கள் தவத்தைக்கைவிடவில்லே. எப்போது அவர்களிருவரிலொருவரும் மனக்கலக்கத்தையாவது துயரத்தையாவது அடையாமலிருந்தனரோ அப்போது அந்தப்பெண்களும் அதற்குக்காரணமான மாயையாகியபிசாசமும் எல்லாம்மறைந்துபோயின. அதன் பிறகு எல்லாலோகங்களுக்கும் பந்துவும் பிரபுவுமான பிரம்மதேவர் அம்மஹாஅஸுரர்களிடம் நேரேவந்து வரம்கொடுப்பதாகச்சொன்னர். அப்போது உறுதியானபராக்கிரமமுள்ள ஸஹோதரர்களாகிய அந்தஸந்தோபஸந்தர்கள் பிரம்மதேவரைக்கண்டவுடன் கைகூப்பிநின்றனர். அப்போது அவ்விருவரும்சேர்ந்து பிரபுவான பிரம்மதேவரைநோக்கி, "எங்களுடைய இந்ததவத்தினுல் பிரம்மதேவரான உங்களுக்குச் சந்தோஷமுண்டாயிருந்தால், எங்களிடத்தில் பிரபுவானஉங்களுக்கு அனுக்கிரஹ முண்டாயிருந்தால், நாங்களிருவரும் மாயைகளேயும் அஸ்திரங்களேயும் அறிந்தவர்களாகவும் அதிக பலசாலிகளாகவும் நினைத்தரூபமெடுப்பவர்களாகவும் மரணமில்லாதவர்களாகவும் இருக்கக்கடவோம்" என்றுகேட்டனர். அவர்களேப்

பார்த்துப் பிரம்மதேவர், "மரணமில்லாமையைத்தவிர மற்றும் நீங்கள் கேட்டவையெல்லாம் உங்களுக்கு உண்டாகும். மரணத்தைத்தவிர மற்றப்பாக்கியங்களோத் தேவர்களோடு ஸமமாக நீங்கள்கேளுங்கள். ஐசுவரியத்தையடையக்கடவோமென்றுநினைத்து நீங்கள் மஹத்தான தவத்தைச்செய்யத்தொடங்கினீர்கள். ஆதலால், உங்களுக்கு அமரத்வம்கொடுக்கப்படாது. அஸுராராஜர்களே! மூன்றுலோகங்களையும் ஜயிப்பதற்காக நீங்களிருவரும் தவஞ்செய்தீர்களாதலின், உங்கள்விருப்பத்தை நான்செய்யேன்" என்றார். ஸுந்தோபஸுந்தர்கள், "பிதாமஹரே! எங்களில் ஒருவனைத்தவிர வேறு இம்மூன்றுலகிலுமுள்ள தாவரமாவது ஜங்கமமாவது எந்தப்பொருளினாலும் எங்களுக்குப் பயம்உண்டாகாமலிருக்கவேண்டும்" என்றுகேட்டனர். அதற்குப் பிரம்மதேவர், "நீங்கள்கேட்டவரத்தை நீங்கள்கேட்டபடியே நான்கொடுக்கிறேன்; மரணத்தைப்பற்றியவிதியும் உங்களுக்கு இப்போது நீங்கள்கேட்டவாறே உண்டாகும்" என்றார். பிரம்மதேவர் அவர்களுக்கு அப்போதே இந்தவரத்தைக்கொடுத்து அவர்களைத் தவத்திலிருந்துவிருத்தித்து ஸத்யலோகம்சென்றார். வரங்களையடைந்தபிறகு ஸஹோதரர்களாகிய அவ்விரண்டுஅஸுராராஜர்களும் உலகத்திலுள்ளவர் எவராலும் வதஞ்செய்யக்கூடாதவர்களாகித் தம்மில்லம்சென்றனர். மனவுறுதியுள்ள அவ்விருவரும் வரங்களைப்பெற்று விருப்பம்நிறைவேறிவருகிறதைக்கண்டு அவர்களுக்குவேண்டியஜனங்களனைவரும் மகிழ்வுற்றனர். அதன்பிறகு, அவர்கள் ஜடைகளைநீக்கிக் கிரீடம்தரித்து விலையுயர்ந்த ஆபரணங்களையணிந்து மாசற்ற வஸ்திரங்களைத்தரித்திருந்தனர். நிலாக்காலமில்லாதகாலத்திலும் நிலவைஉதித்திருக்கச்செய்தனர். அவர்களுடையசுற்றத்தாரும் ஸதாகாலமும் ஆனந்தத்தோடிருந்தனர். ஒவ்வொருவீட்டிலும் "பக்ஷிணம்தின்; உண்; கொடு; விளையாடு; பாடு; குடி" என்றசப்தங்களே எந்தக்காலமும்இருந்தன. ஆங்காங்கு பெரியவாத்தியகோஷங்களோடும் உயர்ந்தகைகொட்டலின் பெருஞ்சத்தங்களோடும் அஸுரர்கள் நகரமுழுதும் உற்சாகமும் ஆனந்தமுமாயிருந்தது. நினைத்தரூபங்களையெடுத்துப் பற்பலவிளையாட்டுக்கள் விளையாடிக்கொண்டிருந்த அவ்வஸுரர்களுக்கு அனேகவருஷங்கள் ஒருதினம்போற்சென்றன.

அஉஉ ஸ்ரீ மஹாபாரதம்.

இருநூற்றுமுப்பதாவது அத்தியாயம்.

ராஜ்யலாபபர்வம். (தொடர்ச்சி.)

(ஸுந்தோபஸுந்தர்கள் திக்குவிஜயஞ்செயது குருக்ஷேத்திரத்தில் வஸித்தது.)

உத்ஸவம்நடந்தவுடன் அந்த ஸுந்தோபஸுந்தர்களிருவரும் திரிலோகாதிபத்யத்தைவிரும்பி ஆலோசனைசெய்து உடனே சேனையைவகுத்தனர். ஸ்நேஹிதர்களிடத்தும் அஸுரப்பெரியோரிடத்தும் மந்திரிகளிடத்தும் விடைபெற்றுக்கொண்டும் யாத்திரைக்குரிய மங்களகாரியங்களைச் செய்துகொண்டும் மகாகூத்திரத்தோடுசேர்ந்த ராத்திரியில் புறப்பட்டனர். கதைகளையும் ஈட்டிகளையும் சூலங்களையும் உலக்கைகளையும் கைகளில்பிடித்தும் கவசங்களைத்தரித்துமிருக்கிற பெரியஅஸுரசேனையோடுகூடிப்புறப்பட்டனர். அவர்கள்சாரணரென்னும்பாடகர்கள் "ஜயஜய" என்றுசொல்லி மங்களங்களையும் தோத்திரங்களையும் பாடித்துதிசெய்ய மிகுந்த உத்ஸாஹத்துடன்சென்றனர். நினைத்தபடிசெல்லுந்திறமையுள்ள அவ்விரண்டுஅஸுரர்களும் யுத்தஞ்செய்வதற்காகக் கொடியஇறுமாப்புடன் ஆகாசத்திற்கிளம்பித் தேவலோகத்திற்கேசென்றனர். பிறகு தேவர்கள் அவர்களின்வரவையும் அவர்களுக்குப் பிரம்மாகொடுத்தவரத்தையும்நினைத்து ஸ்வர்க்கலோகத்தைவிட்டுப் பிரம்மலோகத்திற்குச் சென்றனர். உக்கிரமானபராக்கிரமமுள்ள அவ்வஸுரர்களிருவரும் இந்திரலோகத்தை ஜயித்தபிறகு யக்ஷராக்ஷஸக்கூட்டங்களையும இன்னும்ஆகாசத்தில் ஸஞ்சரிக்கின்ற பிராணிகளையும் கொன்றனர். மஹாரதர்களான அந்தஸுந்தோபஸுந்தர்கள் பூமியின்உட்புறமாகிய பாதாளலோகத்திலிருக்கும் நாகர்களைஜயித்தபிறகு ஸமுத்திரத்தீவுகளில்வஸிக்கின்ற மிலேச்சஜாதிகளெல்லாரையும் ஜயித்தனர். கொடுங்கோலுள்ளவர்களாகிய அவர்கள் அதன்பிறகு பூமிமுழுமையும்ஜயிக்கஆரம்பித்துத் தம்படையாட்களையழைத்து மிகக்கொடிய வசனத்தையுரைத்தனர். அதாவது, "ராஜரிஷிகள் மஹாயாகங்களினாலும் பிராமணர்கள் ஹோமங்களினாலும் சிராத்தங்களினாலும் தேவர்களுக்குச் சக்தியையும் பலத்தையும் ஐசுவரியத்தையும் விருத்திசெய்கின்றனர். அசுரர்களுக்குவிரோதிகளாக இவ்வாறுஆரம்பித்திருக்கிற அவர்களெல்லாரையும் நாமெல்லாரும்சேர்ந்து எவ்வகையிலும் வதஞ்செய்யவேண்

டும்" என்பது. எல்லாருக்கும் இவ்வாறுகட்டளையிட்டுக் கொடிய ஆலோசனைசெய்து மஹாஸமுத்திரத்தின்கிழக்கையில் எல்லாத்திசைகளையும்நோக்கிச் சென்றனர். பலசாலிகளான ஸகரபுத்திரர்கள் சாந்தப்பிராமணர்கள்யாகம்செய்கின்றனரோ எந்தப்பிராணர்கள் யாகம்செய்விக்கின்றனரோ அவர்களெல்லாரையும் பலவந்தமாகக் கொன்று ஆங்காங்குதிரிந்தனர். அவர்களுடைய படையாட்கள் பரிசுத்தாத்மாக்களான முனிவர்களின் ஆச்ரமங்களிலுள்ள அக்நிஹோத்ரங்களையெடுத்து அச்சமின்றி ஜலத்தில் சேர்த்தனர். மஹாத்மாக்களாகிய தபோதனர்கள் அவர்களைமேற்கோபித்துச்சொன்னசாபங்களுங்கூடப் பிரம்மாவின்வரதானத்தால் விலக்கப்பட்டு அவர்களை ஒன்றும்செய்யவில்லை. அந்தச்சாபங்கள் கற்களிற்பிரயோகிக்கப்பட்டபாணங்களைப்போல் அவர்களையொன்றும் செய்யாமலிருந்தபோது அவ்வந்தணர்கள் அனுஷ்டானங்களைவிட்டு ஓடினர். இப்புவனத்துள் தவத்தில்மேதகுனினவர்களும் மனத்தையும்புலன்களையும் அடக்கினவர்களுமான முனிவர்களும், ஆச்ரமங்கள்மிதிக்கப்பட்டும் இடிக்கப்பட்டுமிருந்ததனாலும் தண்ணீர்க்குடங்களும் யஜ்ஞபாத்திரங்களும் சிதறஅடிக்கப்பட்டதனாலும் அவர்களிடம்பயந்து கருடனைக்கண்டஸர்ப்பங்களைப்போல் ஓடிப்போயினர். அப்போது உலகமெல்லாம் பிரளயகாலத்திலழிக்கப்பட்டதுபோலப் பாழாயிற்று. ராஜாவே! அப்போது ரிஷிகள் காணப்படாமற்போனதனால் அம்மஹாஸுரர்களிருவரும் அவர்களைவதஞ்செய்ய மனத்தில் நிச்சயஞ்செய்துகொண்டு பலவடிவங்களெடுத்தனர். அவர்கள் கன்னங்களில் மதஜலம்பெருகுகின்ற மதயானைஉருவமெடுத்து மலைச்சாரல்களில் ஒளிந்திருந்தவர்களையும் யமலோகத்துக்கனுப்பினர். அவ்விரண்டு கொடியஅஸுரர்களும் லிம்பங்களும் புலிகளுமாக ரூபமெடுத்தும் மறைந்தும் பற்பலவுபாயங்களிலும் திரும்பத்திரும்ப ரிஷிகளைக்கண்டுபிடித்துக் கொன்றனர். அப்போது பூமியில் யாகங்களும் வேதாத்யயனங்களுமில்லை. ராஜாக்களும் பிராம்மணர்களும் அழிந்தனர். கலியாணம்முதலியஉற்சவங்களும் புண்ணியகருமங்களுமில்லாமற்போயின. பூமியானது, ஹாஹாகாரம்உண்டானதாகவும், பயத்தால்நிலையற்றதாகவும், கடைகளும் கடைத்தெருவுகளும் எடுபட்டதாகவும், தேவகாரியங்களும் விவாஹம்முதலியபுண்ணியகாரியங்களும் அற்றதாகவும், பயிர்செய்வதும் பசுமேய்ப்பதும்விடப்பட்டதாகவும், நகரங்களும் ரிஷ்யாச்ரமங்களும் நாசம்செய்யப்பட்டதாகவும், எங்கும்எலும்புக்கூடுகளிறைபட்டதாகவும், பார்ப்பதற்குப் பயங்

காமாகவுமிருந்தது. அப்போது உலகத்தில் சிராத்தங்களும் யாகங்களும் ஜயகாரியங்களுமற்றுப் பயங்கரமும் பார்க்கக்கூடாததுமாக ஆய்விட்டது. ஸுந்தோபஸுந்தர்களுடைய அந்தச்செய்கையைக் கண்டு சந்திரசூரியரும் நவக்கிரகங்களும் ஸப்தரிஷிகளும் அச்வினி முதலான நக்ஷத்திரங்களும் தேவர்களும் துயரமுற்றனர். அவ்வஸுரர்கள் இவ்வாறான கொடியசெய்கையால் எல்லாத்திசைகளையும்ஜயித்து எதிரில்லாதவர்களாய்க் குருக்ஷேத்திரத்தில் வாஸஞ்செய்தனர்.

இருநூற்றுமுப்பத்தோராவது அத்தியாயம்.

ராஜ்யலாபபர்வம். (தொடர்ச்சி.)

(தேவர்கள் ஸுந்தோபஸுந்தர்களுடைய உபத்திரவத்தைப் பிரமதேவரிடம்தெரிவித்ததும், பிரமதேவர்கட்டளைப்படி விசுவகர்மா திலோத்தமையைப்படைத்ததும், அவள் பிரமதேவரிடம் விடைபெற்றுக்கொண்டதும்.)

பிறகு ஸமஸ்தமானதேவரிஷிகளும் ஸித்தர்களும் சிரேஷ்டர்களான பிரம்மரிஷிகளும் அந்தப்பெருந்துன்பத்தைக்கண்டு மிகுந்த துயரத்தையடைந்தனர். அப்போது கோபத்தையடக்கினவரும் மனத்தையும் இந்திரியங்களையும் ஜயித்தவருமாகிய அவர்கள் உலகத்தின்மேலுள்ளகருணையினால் பிரம்மலோகம்சென்றனர். அவ்விடத்தில் ஸித்தர்களாலும் பிரம்மரிஷிகளாலும் நாற்புறமும் சூழப்பட்டுத் தேவர்களுடன் வீற்றிருக்கும் பிரம்மதேவரைக்கண்டனர். ஈசுவராகியசங்கரரும் அக்கினியும் வாயுவும் சந்திரஸூர்யர்களும் இந்திரனும் பிரம்மலோகத்தியரிஷிகளாகிய வைகானஸர்கள் வாலகில்யர்கள், வானப்பிரஸ்தர்கள், மரீசிபர்களென்னும்ஸூர்யரச்மியை ஆகாரமாகக்கொண்டவர்கள், அஜர்கள், அவிமூடர்கள் (ஞானிகள்) தேஜோகர்ப்பர்கள்ஆகிய சிறந்ததவமுள்ள அந்தமுனிவர்களனைவரும் பிரம்மதேவரைச் சேர்ந்திருந்தனர். துயரமுற்ற அந்தரிஷிகளனைவரும் அங்கேசென்று, ஸுந்தோபஸுந்தர்களின் செய்கையெல்லாவற்றையும் தெரிவித்தனர். அவர்கள்செய்கையையும் தங்கள்பொருள்களை அபகரித்ததையும் எல்லாம்விரிசையாக ஒன்றும்விடாமல் பிரம்மாவினிடம் தெரிவித்தனர். அந்தத்தேவர்களும் ரிஷிச்ரேஷ்டர்களுமாகிய எல்லாரும் அப்போது அதேவிஷயத்தைப்பற்றிப் பிரம்மாவைக்கேட்டனர். அவர்களனைவரும்சொன்னதைக்கேட்ட பிரம்மதேவர், செய்ய

வேண்டியகாரியத்தின் நிச்சயத்தைப்பற்றிச் சற்றுநேரம்சிந்தித்து அவர்களைக்கொல்லுவதற்குரிய உபாயத்தைஉத்தேசித்து விசுவகர்மாவையழைத்தார். மிகுந்ததவமுள்ளபிரம்மதேவர் விசுவகர்மாவைப் பார்த்து, "யாவரும்ஆசைப்படத்தக்க ஒருபெண்ணை யுண்டுபண்ணு" என்று கட்டளையிட்டார். விசுவகர்மா பிரம்மாவுக்கு நமஸ்காரஞ் செய்து அவர்சொல்லையங்கீகரித்து அடிக்கடி மனத்தால்ஆராய்ந்து பார்த்து ஒரு சிறந்தபெண்ணைப்படைத்தான். எல்லாவற்றையும் அறிந்த விசுவகர்மா மூன்றுலோகங்களிலும் அசைவனவும் அசையாதனவுமாயுள்ள பொருள்களில் காட்சிக்கினியபாகம் எதுஎதுவோ அவற்றையெல்லாம் அந்தப்பெண்ணினிடம் ஒருங்குசேர்த்தான். கோடி கோடியாகவுள்ள இரத்தினங்களை அவள் அவயவங்களில் பதிப்பித்தான். தேவதாரூபமுள்ள அந்தப்பெண்ணை ரத்னங்களின்சேர்க்கையினாலேயே உண்டாக்கினான். விசுவகர்மா மிகுந்தபிரயத்தனத்தோடு படைத்த அந்தப்பெண் மூன்றுலோகங்களிலுமுள்ள ஸ்திரீகளில் அழகில்நிகரற்றவளாயிருந்தாள். அழகுநிரம்பியிருந்ததனால் பார்ப்பவர்களுடையபார்வை வைத்தஇடத்திலேயே பதிந்துபோகாமலிருக்கும்படி ஒரு சிறியஇடங்கூட அவள்தேகத்திலில்லை. மனிதஉருவத்தோடுவந்த ஸ்ரீதேவிபோன்றவளும் நினைத்தரூபமெடுப்பவளும் திடசரீரமுள்ளவளுமாகிய அந்தப்பெண் பிரம்மாவினிடம்சென்று, "நான் என்னசெய்யக்கடவேன்?" என்றுகேட்டனள். அவர் அவளைக்கண்டதும் மகிழ்ச்சியுற்று அன்புடன் அவளுக்குவரமளித்தனர். அவள் பிரம்மதேவருடைய அந்தவரதானத்தினாலும் விசுவகர்மாவின் வேலைத்திறத்தினாலும் எல்லாவற்றிற்கும் மேற்பட்டஅழகையும் ஒளியில் ஒப்புயர்வற்ற தேகத்தையும்அடைந்து எல்லாப்பிராணிகளின் கண்களையும் மனங்களையும் கவர்ந்தாள். ரத்னங்களிலுள்ள ஸாராம்சங்களை எள்ளளவுஎள்ளளவாகஎடுத்து உண்டுபண்ணப்பட்டதனால், பிரம்மதேவர் அவளுக்குத் 'திலோத்தமை' என்று பெயரிட்டனர். அவள் பிரம்மாவுக்கு நமஸ்காரஞ்செய்து கைகூப்பி, "லோகேசுவரரே! நான் செய்யவேண்டிய காரியம் யாது? என்னை ஸ்ருஷ்டிசெய்தது எதற்காக?" என்று கேட்டனள். அதற்குப் பிரம்மதேவர், "திலோத்தமையே! ஸுந்தோபஸுந்தர்களென்னும் அஸுரர்களிடம்செல். இனியவளே! விரும்பத்தக்கஉன் அழகினால் அவர்களை மயங்கச்செய். உன்னைப்பார்த்தவுடன் உன் அழகின்சிறப்பிற்காக உன் விஷயத்தில் அவ்விருவருக்கும் பரஸ்பரவிரோதமுண்டாகும்படி செய்வாயாக" என்றுசொன்னர். அவள், "அப்படியேயாகட்டும்" என்று

பிரதிஜ்ஞைசெய்து பிரம்மாவைநமஸ்கரித்து அவருக்கும் அங்குள்ள தேவக்கூட்டத்துக்கும் பிரதக்ஷிணஞ்செய்தாள். * பிரம்மதேவர் கிழக்குமுகமாகஇருந்தார். சங்கரர் தென்புறத்திலிருந்தார். தேவர்கள் வடபுறத்திலிருந்தனர். ரிஷிகள் நாற்புறத்திலுமிருந்தனர். அந்தக் கூட்டத்தை அவள்பிரதக்ஷிணஞ்செய்யும்போது இந்திரனும் பகவானுஞ்சங்கரரும் † மனநிலைதவறிப்போயினர். பக்கத்தில் மிகநெருக்கமாக அவள்வரும்போது அவளைப்பார்க்க விருப்பமுற்றசங்கரருக்கு மலர்ந்த தாமரைப்புஷ்பம்போன்றகண்களையுடைய வேறொருமுகம் தென்பக்கம்புறப்பட்டது. அவள்பின்னே பிரதக்ஷிணம்வரும்போது மேற்றிசைமுகம் கிளம்பிற்று. வடபுறம்செல்லும்போது வடபுறம் முகம் வெளிப்பட்டது. இந்திரனுக்கும் பின்னும் முன்னும் பக்கங்களிலும் எங்கும் கடை சிவந்தும் அகன்றுமிருக்கும் ஆயிரம்கண்கள் உண்டாயின. இவ்வாறு முன்னே மஹாதேவரானசங்கர் சதுர்முகரானார். அவ்வாறே இந்திரனும் ஸஹஸ்ரநேத்ரனானன். தேவக்கூட்டங்களுக்கும் மஹரிஷிகளுக்கும் திலோத்தமையோடு பக்கத்திலேயே முகங்கள் திரும்பின. பிரம்மதேவரைத்தவிர அங்குள்ள மற்ற மஹாத்மாக்கள் எல்லாருடையதிருஷ்டியும் அவள்தேகத்தில் அதிகமாகப்பதிந்தது. ஸகலதேவர்களும் ஸகலமஹரிஷிகளும் அவளுடைய சிறந்தரூபத்தைக்கண்டு, அவள்செல்வதனால் காரியம்முடிந்ததென்றே நிணைத்தனர். உலகங்களைப்படைப்பவராகிய பெருமைபெற்ற பிரம்மதேவரும் திலோத்தமை சென்றபிறகு காரியம் ஆனதுதானென்றுசொல்லி அந்தத்தேவர்கள்ரிஷிகள் எல்லாருக்கும் விடைகொடுத்தனுப்பினர்.

இருநூற்றுமுப்பத்திரண்டாவது அத்தியாயம்.

ராஜ்யலாபபர்வம். (தொடர்ச்சி.)

(திலோத்தமைக்காக ஸுந்தோபஸுந்தர்கள் ஒருவரையொருவர் வதஞ்செய்ததைதையை நாரதரிடம்கேட்டபாண்டவர்கள் த்ரௌபதிக்காக வியவஸ்தைசெயதுகொண்டது.)

எதிரிகளில்லாமலும் கவலையில்லாமலுமிருந்த அந்தஇரண்டு அஸுரர்களும் பூமியைஜயித்து மூன்றுலோகங்களையும் ஸ்திரமாக

* மூலத்தில், 'பகவான்' என்றிருக்கிறது. பகவான்என்பதற்கு விஷ்ணுவென்பது பழையவுரை.

† 'ப்ரத்யவஸ்திதௌ' என்பது உத்தரதேசபாடம். அதற்கு, 'தைரியமாகஇருந்தனர்' என்பதுபொருள்.

ஸ்வாதீனப்படுத்திக்கொண்டு கவலையற்று மகிழ்ந்திருந்தனர். தேவர்கள், கந்தர்வர்கள், யக்ஷர்கள், நாகர்கள், அரசர்கள், ராக்ஷஸர்கள் இவர்களிடமிருந்து சிறந்தபொருள்களையெல்லாம் அபகரித்துக்கொண்டு மிகுந்தஸந்தோஷத்தையடைந்தனர். அவர்களிருவரையும்தடுப்பவர்கள் உலகத்தில்யாருமில்லாமையால், அவர்கள் யுத்தமுயற்சியைவிட்டுத் தேவர்களைப்போல விளையாடிக்கொண்டிருந்தனர். ஸ்திரீகளாலும் பூமாலைகளாலும் சந்தனம்முதலிய வாஸனைகளிஞ்லும் விலைபெற்றபக்ஷணங்களாலும் உணவுகளாலும் பலவகைஇனியபானங்களாலும் மிகுந்ததிருப்தியடைந்தனர். அத்தப்புரத்தின்தோட்டங்களிலும் வெளித்தோட்டங்களிலும் மலைகளிலும் காடுகளிலும் விரும்பினதேசங்களிலும் தேவர்களைப்போல்விளையாடினர். பிறகு ஒருகாலத்தில் மேடுபள்ளமில்லாத பாறைகளையுடைய விந்தியமலைச்சாரலில் தலைகளிற்புஷ்பங்கள்நிறைந்தமரங்களில் விளையாடச்சென்றனர். தேவலோகத்திலுள்ள பிரியமானபொருள்களையெல்லாம் கொணர்ந்துவைத்துக்கொண்டு அவரிருவரும் மகிழ்ந்து ஸ்திரீகளுடன்கூட உயர்ந்தஆஸனங்களில்உட்கார்ந்தனர். அப்போது மங்கையர்கள் வாத்தியங்களினாலும் நர்த்தனங்களினாலும் அவர்களைப்பற்றியஸ்தோத்திரமுள்ளபாட்டுக்களினாலும் அவர்களிருவரையும் மகிழ்வித்துச் சமீபத்திலிருந்தனர். அப்போது அந்தத்திலோத்தமை ஒருசிவந்த ஒற்றையாடையோடு வெளிப்படையாகத்தெரிகின்ற உருவத்தையுடுத்துக்கொண்டு அந்தவனத்திலுள்ளபுஷ்பங்களையும் நதிக்கரைகளில் மூளைத்த கொன்றைப்புஷ்பங்களையும் கொய்துகொண்டு அம்மஹாஸுரர்களிருக்குமிடத்துக்கு மெல்லமெல்லச்சென்றாள்.

சிறந்தமதுவைப்பானஞ்செய்து குடிமயக்கத்தினால் கடைக்கண்கள்சிவந்த அந்தஅஸுரர்கள் அந்தச் சிறந்தபெண்ணைப்பார்த்ததும் கலங்கிப்போயினர். அவர்கள் ஆஸனத்தைவிட்டெழுந்து அவள்இருந்தஇடம்சென்றனர். இருவரும் காமவெறிகொண்டு அவ்விருவரும் சேர்ந்தே அவளைவிரும்பினர். அழகியபுருவங்களையுடைய அந்தத்திலோத்தமையை ஸுந்தன்வலக்கையையும் உபஸுந்தன் இடக்கையையும்பிடித்துக்கொண்டனர். வரத்தின்மஹிமையாலும், மார்பின் பலத்தினாலும் தனத்தினாலும் ரத்னங்களினாலுமுண்டானகர்வத்தினாலும், கள்ளுண்டமயக்கத்தினாலும் கொழுத்த அவ்விருவரும் ஒருவரையொருவர் நோக்கிப் புருவங்களைநெறித்தனர். மதத்தினாலும் காமத்தினாலும் ஆவேசங்கொண்டு ஒருவருக்கொருவர் பேசிக்கொண்டனர். "இவள் என்னுடையமனைவி; நீ மரியாதைசெய்யத்தக்க

வள்" என்று ஸுந்தன்சொன்னன். உபஸுந்தன், "என்மனைவி, உனக்குமருமகள்" என்றுசொன்னன். "இவள் உனக்கன்று; எனக்குத்தான்" என்று இருவரும்சொல்லிக்கொண்டனர். அதன்பிறகு அவர்களுக்குக் கோபாவேசம்உண்டாயிற்று. அவளுடையரூபத்தினல்மயங்கின அவ்விருவரும் நேசமும் மனஒற்றுமையும்ஒழிந்து அவளுக்காகப் பயங்கரமான இரண்டுகதைகளையெடுத்துக்கொண்டனர். அவளிடத்தில் காமத்தினல்மோகங்கொண்ட அவ்விருவரும் பயங்கரமானகதைகளை யோங்கிக்கொண்டு, 'நான்முன்னே, நான்முன்னே'யென்று ஒருவரையொருவர் அடித்துக்கொண்டனர். பயங்கரமான அந்தஅஸுரர்கள் கதைகளினலடிக்கப்பட்டு ரக்தத்தினல் அங்கமெல்லாம்நனைந்து ஆகாசத்திலிருந்து இரண்டுஸூர்யர்கள்விழுந்ததுபோலத் தரையில்விழுந்தனர். பிறகு அந்தப்பெண்களும் அஸுரக்கூட்டங்களும் மருண்டோடினர். எல்லாரும் துக்கத்தினலும் பயத்தினலும் பதைபதைத்துப் பாதாளலோகம்சென்றனர்.

பிறகு பரிசுத்தஆத்மாவாகிய பிரம்மதேவர் திலோத்தமையைக் கௌரவிப்பதற்காகத் தேவர்களோடும் மஹரிஷிகளோடும் அங்கே வந்தனர். பகவானுனை பிரம்மதேவர் அவளுக்கு வரந்தருவதாகச் சொன்னர். அந்தப்பிரமதேவர் அன்புடன் வரங்கொடுக்கக்கருதி அவளைப்பார்த்து, "பெண்ணரசியே! ஆதித்தன்சஞ்சரிக்கும் லோகங்களெல்லாம் நீ சஞ்சரிப்பாயாக. உன்ஒளியினல் உன்னை யாரும் உற்றுப்பார்க்கமுடியாது" என்றுசொன்னர். உலகங்களையெல்லாம் படைத்தவராகியபிரபு இவ்வாறு அவளுக்குவரங்கொடுத்து இந்திரனுக்குத் திரிலோகாதிபத்யத்தையளித்துப் பிரம்மலோகத்துக்குச் சென்றனர். இவ்வாறு ஸுந்தோபஸுந்தர்களிருவரும் சினேகிதர்களாகவும் எல்லாக்காரியங்களிலும் ஒரேநிச்சயமுள்ளவர்களாகவுமிருந்தும் திலோத்தமைக்காகக்கோபித்து ஒருவரையொருவர் கொன்றனர். பரதச்ரேஷ்டர்களே! ஆதலால், நான் ஸ்நேஹத்தினற் சொல்லுகிறேன். என்அபிப்பிராயத்தை நீங்கள் அனுஸரிப்பீர்களானல் உங்களெல்லாருக்கும் திரௌபதிநிமித்தம் வேறுபாடுவராதிருக்கும்படி நீங்கள்செய்யுங்கள். அதுதான் உங்களுக்குநன்மை" என்று நாரதர்சொன்னர்.

ஜனமேஜயமஹாராஜாவே! நாரதமஹரிஷியினல் இவ்வாறுபோதிக்கப்பட்ட அந்தமஹாத்மாக்களான பாண்டவர்கள் ஒருவர்க்கொருவர் வசப்பட்டு அளவற்றமஹிமையுள்ள அந்ததேவரிஷியாகிய நாரதர்முன்னிலையிலேயே ஒருவியவீஸ்தை செய்துகொண்டனர்.

அதாவது, "குற்றமற்றகிருஷ்ணை ஒவ்வொருவன்கிருஹத்தில் ஒவ்வொருவருஷம் வஸிக்கவேண்டும். நமக்குள் ஒருவன் திரௌபதியோடுகூட இருக்கையில் பார்த்தமற்றொருவன் பன்னிரண்டுமாதம் பிரம்மசாரியாக வனத்தில்வஸிக்கக்கடவன்" என்பது. தர்மாநுஷ்டானஞ்செய்ப்வராகியபாண்டவர்கள் அந்தஉடன்பாட்டைச்செய்துகொண்டபிறகு நாரதமஹாமுனிவரும் ஸந்தோஷமடைந்து காம்பிலீத்தவிடம் சென்றார். நாரதர்கட்டளையினால் அந்தப்பாண்டவர்கள் முன்னம் இவ்வாறு ஏற்பாடுசெய்துகொண்டனர். பாரதரே! அவர்களெல்லாரும் அதனால் பரஸ்பரவிரோதமடையவில்லை. அந்தப்பாண்டவர்களெல்லாரும் ஒருவரையொருவர் நேசித்திருந்தனர். ஜனமேஜயராஜாவே! அந்தச்செல்வம்நிறைந்தகாலத்தில் நடந்தவற்றையெல்லாம் நடந்தபடி விரிவாக உமக்கு இவ்வாறுரைத்தேன்.

ராஜ்யலாபபர்வம் முற்றிற்று.

இருநூற்றுமுப்பத்துமூன்றுவது அத்தியாயம்.

அர்ஜுனவனவாஸபர்வம்.

(திருடர்களாற்கொண்டுபோகப்பட்ட பசுக்களைப் பிராம்மணனுக்குத் திருப்பிக்கொடுப்பதற்காக அர்ஜுனன் ஆயுதமெடுக்கையில் அவன் த்ரௌபதியும் யுதிஷ்டிரருமிருந்த கிருகத்திற்பிரவேசித்ததனால் தீர்த்தயாத்திரைக்குப்போனது.)

அந்தப்பாண்டவர்கள் இவ்வாறு வியவஸ்தைசெய்துகொண்டபிறகு அஸ்த்ரப்பயிற்சியின்வன்மையினால் மற்றஅரசர்களைக் கீழ்ப்படித்திக்கொண்டு அங்கேகவஸித்தனர். அளவற்றபராக்ரமமுள்ளவர்களும் புருஷச்ரேஷ்டர்களுமாகிய அந்தப்பாண்டவர்களனைவருக்கும் கிருஷ்ணை கூட்பட்டவளாயிருந்தாள். ஐந்து யானைகளோடுகூடிய * ஸரஸ்வதியென்னும் நதிபோல் அவ்வைந்துவீரர்களான கணவர்களோடுகூடியதனால் த்ரௌபதியும், திரௌபதியுடன் சேர்ந்ததனால் பாண்டவர்களும் மிகுந்த ஸந்தோஷமடைந்திருந்தனர். மஹாத்மாக்களானபாண்டவர்கள் தர்மமாகநடந்துவரும்போது குருக்ஷேத்ரத்தைச்சேர்ந்தமேதசமெல்லாம் குற்றங்கள்நீங்கி ஸௌக்கியமடை

* ஸரஸ்வதியென்பதற்கு தடாகமுள்ளகாடு என்பதுபழையவுரை.

ந்து பெருகிற்று. 'ஜனமேஜயராஜாவே! அரசர்க்கரசே! பிறகு நீண்டகாலத்திற்குப்பின் ஒருபிராமணனுடைய பசுக்களைச் சிலதிருடர்கள்கொண்டுபோயினர். அந்தப்பசுக்கள் அபகரிக்கப்பட்டதனால் அந்தப்பிராமணன் கோபம்மிகுந்து காண்டவப்பிரஸ்தத்துக்குவந்து "இந்தக்கோதனம் அற்பர்களும் கொடியவர்களும் விவேகமில்லாதவர்களுமான ஜனங்களினால் நமதுதேசத்திலிருந்து பலாத்காரமாகக் கொண்டுபோகப்படுகின்றது. பாண்டவர்களே! ஓடிவாருங்கள். சாந்தமான பிராம்மணனுடைய ஹவிஸானது காக்கைகளினால்கெடுக்கப்படுகின்றது. புலியின்குகையை அஞ்சாதஇல்லாதபோது அற்பமானஎரி மிதிக்கிறது. ஆறில்ஒருபாகம் தீர்வைவாங்கிக்கொண்டு ரக்ஷிக்காமலிருக்கின்ற ராஜா எல்லாஉலகங்களிலும் முதன்மையானபாபிஷ்டனாகிறானென்றுசொல்லுகின்றனர். பிராமணனுடைய சொத்துச் சோரர்களாற்கொள்ளையடிக்கப்பட்டுத் தர்மகாரியமும்கெடுக்கப்பட்டு நானும்மிகக்கதறிக்கொண்டிருக்கையில் நீங்கள் கைகொடுக்கவேண்டும்" என்றுசொன்னான். ஸமீபத்தில்வந்து அடிக்கடி முறையிடும் பிராம்மணனுடைய அந்தவசனங்களைக் குந்திபுத்திரனாகிய தனஞ்சயன் கேட்டான். கேட்டவுடன் அந்தமஹாவீரன் "நீ, பயப்படாதே" என்றுஅந்தப்பிராம்மணனுக்குச் சொன்னான். மஹாத்மாக்களாகிய பாண்டவர்களுடைய ஆயுதங்களிருந்த அந்தக்கிருகத்தில் தர்மராஜாவானயுதிஷ்டிரர் திரௌபதியுடன் இருந்தார். அர்ஜுனன் கிருகத்திற்பிரவேசிப்பதற்கும் யுத்தத்திற்குப்போவதற்கும் முடியவில்லை. துயரமுற்ற அந்தப்பிராம்மணனுடைய அந்தச் சொற்களினால் பலமுறைதூண்டப்பட்ட அவன், அழுகையினால் துன்பமுற்றுச் சிந்திக்கலானான். "தபஸ்வள்ளபிராம்மணனுடைய பசுக்கள் கொண்டுபோகப்படும்போது அவன்கண்ணீரைத்துடைக்கவேண்டுமென்பது சாஸ்திரத்தின்துணிபு. ராஜாவைப்பார்ப்பதனால் மிகப்பெருந்தர்மலோபமுண்டாகும். நமதுவாயிலில் அழுகின்ற இவனை இப்போது காப்பாற்றாமற்போவேனையின் நம்மெல்லாருக்கும் ராஜ்யரக்ஷணவிஷயத்தில் சிரத்தையில்லையென்றபேர் இவ்வுலகத்தில் நிலைநிற்கும். நமக்குத் தர்மலோபமும்உண்டாகும். ராஜாவைக்கேட்டுக்கொள்ளாமல் நான்போவேனையின் நிச்சயமாக அஜாதசத்ருவான ராஜாவுக்கும் எனக்கும் சத்தியந்தவறிவிடும். ராஜா இருக்குமிடத்தில் பிரவேசித்தால் எனக்கு வனவாஸம்நேரிடும். மற்ற (என்னைளகார்யம்) எல்லாம்விடப்பட்டதாகும். ராஜாவை அதிக்கிரமிப்பதனால் எனக்குப்பெரியதர்மலோபமும் வனத்திலே

யே மரணமும் வந்தாலும்வரட்டும். சரீரம்போனாலும் தர்மந்தான். அதுவே சிறந்தது" என்றுசிந்தித்தான். ஜனமேஜயராஜாவே! குந்திபுத்திரனை தனஞ்சயன் இவ்வாறுநிச்சயித்து உள்ளேபிரவேசித்து ராஜாவைக்கேட்டுக்கொண்டு மேல்வஸ்திரத்தினால் முகத்தைநன்றாக மூடிக்கொண்டு தமையனாகியதர்மராஜாவை நமஸ்காரஞ்செய்து கிருகத்திலிருந்து விசைவாகப் புறப்பட்டான். வில்லையெடுத்துக்கொண்டு மனதோஷமடைந்து பிராம்மணனைப்பார்த்து, "பிராம்மணரே! சிக்கிரம்வாரும்; அயலார்பொருளில்ஆசைவைத்த அந்த அபாக்கியர்கள் நெடுந்தூரம்போவதற்குமுன்னே நாம்தொடர்ந்துசெல்வோம். உமது தனத்தை இப்போது திருடர்கையிலிருந்து மீட்டுக்கொடுப்பேன்" என்றுசொன்னான். மஹாபராக்கிரமசாலியும் வீரனும் ஸவ்யஸாசியுமாகிய அந்தஅர்ஜுனன் வில்லெடுத்துக் கவசம்தரித்துக் கொடிகட்டினதேரிலேறிப் பாணங்களினால் அந்தச்சோரர்களையழித்து அந்தப் பசுக்களையடித்து அந்தப்பிராம்மணனுக்குக்கொடுத்துப் பிராம்மணனுக்கு உபகாரஞ்செய்ததனாலுண்டான புகழையடைந்து நகரத்துக்கு வந்துசேர்ந்தான்.

அவன் பெரியோரெல்லாரையும் வந்தனஞ்செய்து அவர்களெல்லாராலும் ஆசீர்வதிக்கப்பெற்றபிறகு தர்மராஜரைப்பார்த்து, "மஹாராஜாவே! எனக்கு ஒருவிரதத்தைக்கட்டளையிட்டருளுவீர். நான் தங்களைப்பார்த்ததனால் நமதுஉடன்படிக்கையைக் கடந்தவனாயிருக்கிறேன். நான் வனவாஸத்துக்குச் செல்வேன். இதுதானே நாம் செய்துகொண்ட ஏற்பாடு" என்றான். அவன் திடீரென இந்த அப்பிரியமானசொல்லைச் சொல்லக்கேட்ட தர்மராஜா வியசனமுற்று, "என்ன" என்று தழுதழுத்தசொற்களினால் கேட்டனர். ராஜாவானயுதிஷ்டிரர் ஸத்தியந்தவறாதவனும் தம்மைஹாதரனும் * குடாகேசன் என்று சொல்லப்பட்டவனுமான தனஞ்சயனைப்பார்த்துத் துக்கமுற்று, "குற்றமற்றவனே! நான் உனக்கு விதிக்கத்தக்கவனாக இருந்தால் நான்சொல்லுகிறதைக் கேள். வீரனே! உள்ளேபிரவேசித்ததனால் நீ எனக்குச்செய்த அப்பிரியத்தையெல்லாம் நான் அனுமதிசெய்கிறேன். என்மனத்தில் வெறுப்பில்லை. பெரியவனிருக்கும்மிடத்தில் இளையவன்போவது விரோதமாகாது. இளையவனிடத்தில் பெரியவன்போவது நியமத்தைக்கெடுப்பது. சிறந்த கைகளையுடையவனே! நிறுத்தியடை; நான்சொல்வதைச் செய். உனக்குத் தர்ம

* வளர்ந்தகேசத்தையுடையவன் என்றும், நித்திரையையடைத்தவனென்றும்பொருள்.

லோபமில்லை. நீ 'அதிக்கிரமஞ்செய்யவுமில்லை" என்றுசொன்னார். அதைக்கேட்டு அந்தஅர்ஜுனன், "கபடமாகத் தர்மஞ்செய்வது தகாதென்று நான் தங்களிடம்கேட்டேன். நான் ஸத்தியத்திலிருந்து விலகேன். ஆயுததைத்தொட்டு ஸத்தியஞ்செய்கிறேன்"" என்று சொல்லி ராஜாவினிடம் அனுமதிபெற்று வனத்தில்வஸிப்பதற்குரிய தீக்ஷைசெய்துகொண்டு பிறகு பன்னிரண்டுமாஸம் வனவாசத்துக் குச் சென்றான்.

இருநூற்றுமுப்பத்துநான்காவது அத்தியாயம்.

அர்ஜுனவனவாஸபர்வம். (தொடர்ச்சி.)

(ஸ்நானஞ்செயவதற்குக் கங்கையில்இறங்கின அர்ஜுனன் உலூபியென் னும் நாககன்னிகையினால் பாதாளலோகத்திற்கு அழைத்துக்கொ ண்டு போகபபட்டதும், அங்கே இராவானென்னும் புத் திரன்பிறந்ததும், அத்தஉலூபியினாலேயே கங்கை த்துறைக்குக் கொண்டுவந்துவிடபபட்டதும்.)

குருவம்சத்தாருக்குக் கீர்த்தியைவிளைபபவனும் மஹாவீர னுமாகிய அர்ஜுனன் போகும்போது மஹாத்மாக்களும் வேதங் களில் கரைகண்டவர்களுமாகிய பிராம்மணர்கள் அவனுக்குப் பின் சென்றனர். வேதங்களையும் வேதாங்கங்களையும் அறிந்தவர்களும் ஆத்மத்தியானமுள்ளவர்களும் பிக்ஷையெடுப்பவராகிய பிரம்மசாரி களும் பகவத்பக்திசெய்கிறவர்களும் புராணங்கள்சொல்லும்ஸூத ர்களும் கதைசொல்லுகிறவர்களும் காட்டில்வஸிக்கின்ற *சிரமணர் களும் சிறந்த இதிஹாஸங்களை இனிமையாகப்படிக்கத்தக்க பிராம் மணர்களும் உடன்சென்றனர். இனியகதைகளைச்சொல்லுகின்ற இவ ர்களாலும் இன்னும்அனேகம் துணைவர்களாலும் சூழப்பட்டவனாகி அர்ஜுனன் தேவர்களாற்சூழப்பட்ட இந்திரனைப்போலச் சென்றான். ஜனமேஜயரே! பதச்ரேஷ்டனான அர்ஜுனன் அழகியவையும் புதி யவையுமான வனங்களையும் தடாகங்களையும் நதிகளையும் கடலையும் தேசங்களையும் புண்ணியதீர்த்தங்களையும் கண்டான். பிரபுவான அர்ஜுனன் கங்கோத்பத்தியையடைந்து வாஸஞ்செய்தான். ஜன மேஜயரே! அவ்விடத்தில் பரிசுத்தமான மனமுள்ளபாண்டவச்ரே ஷ்டனாகிய அர்ஜுனன்செய்த ஆச்சரியமானசெய்கையை நீர் கேளும்.

* ஸந்யாஸிகள்.

ஜனமேஜயரே! அர்ஜுனனும் பிராம்மணர்களும் அங்கே வாலஞ் செய்தபோது அந்தப்பிராம்மணர்களில் அனேகர்கள் அக்கினிஹோத்ரங்களைச்செய்ய ஆரம்பித்தனர். ராஜாவே! வித்துவான்களும் நியமந் தவறுதவர்களும் ஸன்மார்க்கத்திலிருப்பவர்களுமாகிய அந்தமஹாத்மாக்களால் கங்கைக்கரையில் அந்த அக்கினிகள் ஜ்வலிக்கும்படி மூட்டப்பட்டு ஹோமமும் புஷ்பார்ச்சனையும் செய்யப்பட்டபோது அந்தக் கங்கோத்பத்திஸ்தானமானது மிகஅழகாயிருந்தது.

அந்தஇடம் அவ்வாறுநிரம்பியிருந்தபோது பாண்டவச்ரேஷ்டனானஅர்ஜுனன் ஸ்நானஞ்செய்வதற்குக் கங்கையில் இறங்கினான். ராஜாவே! அந்தமஹாவீரன் அங்கே ஸ்நானஞ்செய்து பிதிர்தர்ப்பணமுஞ்செய்து, அக்கினிஹோத்ரம்செய்வதற்காக ஜலத்திலிருந்து கரையேறநினைக்கையில் (அவன்மீது) காமமுற்ற உலூபியென்னும் நாககன்னிகையினால் ஜலத்துக்குள்இழுக்கப்பட்டான். நியமந் தவறுதவனாகிய அந்தஅர்ஜுனன் அந்தநாகலோகத்தில் மிகச்சிறந்த தான கௌரவ்யனென்னும் நாகனுடையவீட்டில் அக்கினியைப்பார்த்தான். குந்திபுத்ரனான தனஞ்சயன் அதில் அக்நிஹோத்ரஞ்செய்தான். அவன் எவ்வளவும் சங்கைப்படாமல் ஹோமஞ்செய்ததனால் அக்கினிபகவான் திருப்தியடைந்தார். அந்தஅர்ஜுனன் அக்நிஹோத்ரஞ்செய்தபிறகு நாகராஜன்பெண்ணாகிய உலூபியைப்பார்த்து நகைத்துக்கொண்டு, "அச்சப்படுகிறவளே! பெண்ணரசியே! இஃதென்ன ஸாஹஸகாரியம்செய்திருக்கிறாய். அழகியவளே! இஃதெந்தஇடம்? நீயார்? யாருடையபெண்?" என்றுகேட்க, உலூபி, "ராஜாவே! ஐராவதநாககுலத்தில்பிறந்த கௌரவ்யனென்னும் நாகராஜன் ஒருவன் இருக்கிறான். நான் அவன்பெண்ணாகிய உலூபியென்றுபெயருள்ள நாககன்னிகை. புருஷச்ரேஷ்டனே! அப்படிப்பட்ட நான், ஸ்நானஞ்செய்வதற்காக இம்மகாநதியிலிறங்கின உன்னைப்பார்த்தவுடன் மன்மதனால் மயக்கப்பட்டேன். கௌரவபுத்திரனே! குற்றமற்றவனே! உன்னிமித்தமாக அனங்கனுற்பீடிக்கப்பட்டவளும் விவாகமில்லாதவளுமாகிய எனக்கு நீ இப்போது * ஆத்மதானஞ்செய்வதனால் ஆனந்தத்தையுண்டாக்குவாய்" என்றாள். அதைக்கேட்டஅர்ஜுனன், "அன்புள்ளவளே! எனக்குப் பன்னிரண்டு மாஸம்வரையில் இந்தப்பிரம்மசாரிவிரதம் தர்மராஜாவினால் கட்டளையிடப்பட்டிருக்கிறது. நான் ஸ்வதந்திரன்அல்லேன். ஜலத்திற்சஞ்சரிப்பவளே! உன்விருப்பத்தையும் செய்யவிரும்புகிறேன். நான்

* உன்னையேகணவனுக்கக்கொடுப்பதனால்.

முன்னே ஒருபோதும் பொய்சொன்னதில்லை. நாககன்னிகையே! நான் பொய்யனாகாமலிருப்பதும் உன்விருப்பம்நிறைவேறுவதும் எவ்வாறு? என்னுடையதர்மம் கெடாமலிருக்கும்படி நீ செய்யக்கடவாய்" என்றுசொன்னன்.

உலூபி, "பாண்டவனே! நீ எதற்காக இந்தப்பூமியில் சஞ்சரிக்கிறையென்பதும் உனது ஜ்யேஷ்டர் எதற்காகப் பிரம்மசரியவிரதத்தை உனக்குரியமித்தாரென்பதும் எனக்குத்தெரியும். 'நம்மிலொருவன் திரௌபதியினிடத்திலிருக்கும்போது மற்றொருவன் தெரியாமற்பிரவேசிப்பானாயின் அவன் பன்னிரண்டுமாஸம் வனத்தில் பிரம்மசாரிவிரதத்தோடு சஞ்சரிக்கவேண்டும்' என்றுசெய்துகொண்ட உடன்பாட்டின்படி நீங்கள் ஒருவர்க்கொருவர் திரௌபதியைப்பற்றித் தர்மந்தவறுமலிருப்பதற்கு இந்தவனவாஸத்தைத் தர்மராஜர் உனக்கு விதித்திருக்கிறார். அந்தத்தர்மம் என்விஷயத்தில்கெடாது. விசாலமானகண்களுடையவனே! கஷ்டப்பட்டவரைக்காப்பாற்றுவதும் கடமைதான். என்னைக்காப்பாற்றுவதனால் உன்னுடையதர்மம்கெடாது. அர்ஜுனா! அன்றியும் இந்த உன்தர்மத்திற்குச் சொற்பவித்தியாஸம் நேர்ந்தாலும் எனக்கு உயிரைக்கொடுப்பதினால் அதுவும் உனக்குத் தர்மமாகவேமுடியும். குந்திபுத்ரா! அன்புள்ளஎன்னிடம் அன்புவை. பிரபுவே! இது ஸாதுக்களின்கொள்கை. நீ இவ்வாறுசெய்யாவிடின் என்னை இறந்தவளாகவே நம்பு. சிறந்தகைகளையுடையவனே! உயிரைக்கொடுப்பதினால் உயர்ந்ததர்மத்தைச்செய். புருஷச்ரேஷ்டனே! இப்போது உன்னைச் சரணமாகஅடைந்திருக்கிறேன். குந்திபுத்ரனே! துக்கப்பட்டவர்களையும் அனுதைகளையும் என்றும் காப்பாற்றுகிறாய். ஆதலால், சரணமடைகிறேன்; துக்கத்துடன் கதறவும்கதறுகிறேன். விருப்பத்துடன் உன்னை நான்வேண்டுகிறேன். ஆதலால், என்விருப்பத்தைச்செய். நீ உன்னைஆத்மதானஞ்செய்வதனால் என்மனோதம் நிறைவேறச்செய்" என்றாள்.

நாககன்னிகையாகிய உலூபியினால் இவ்வாறுசொல்லப்பட்ட * கௌந்தேயன் தர்மத்தையேகாரணமாகநினைத்து "அவள்சொன்னவற்றையெல்லாம் அப்படியே செய்தான். பராக்கிரமசாலியாகிய அந்தஅர்ஜுனன்" அந்தநாகராஜன்வீட்டில் அந்த இரவுமுழுதுமிருந்து அவளிடத்தில் மஹாபாக்கியசாலியும் மஹாபராக்கிரமசாலியுமான இராவான்என்னும் அழகியபுத்திரனை உண்டுபண்ணினான். ஸூர்யோதயமானவுடன் கௌரவ்யன் நிருகத்திலிருந்தெழுந்து அவளுட

* அர்ஜுனன்.

ன்கூட அந்தக் கங்கோத்பத்திஸ்தானத்திற்கு மறுபடியும் வந்துசேர்ந்தான். ஜனமேஜயரே! கற்புள்ளஉலூபி அர்ஜுனனை அங்கே கொண்டுவந்துவிட்டபிறகு எந்தஜலத்திலும் யாராலும் ஜயிக்கப்படாமையையும் ஜலசரங்களெல்லாம் நிச்சயமாக வசப்படுத்தப்படுமென்பதையும் வரங்களாக அளித்துத் தன் இல்லம்சென்றாள்.

இருநூற்றுமுப்பத்தைந்தாவது அத்தியாயம்.

அர்ஜுனவனவாஸபர்வம். (தொடர்ச்சி.)

(அர்ஜுனன் *மணலூருக்குச்சென்று சித்ரவாகனனின்மகளாகிய சித்ராங்கதையை மணம்புரிந்தது.)

ஜனமேஜயரே! அந்த இந்திரபுத்ரனாகிய அர்ஜுனன் நடந்தவற்றையெல்லாம் பிராமணர்களுக்குச்சொல்லிப் பிறகு இமயமலைச்சாரலுக்குச் சென்றான். அகஸ்தியவடம் வஸிஷ்டபர்வதமென்னும் இடங்களையடைந்து பிருகுதுங்கமென்னுமிடத்தில் அவன் ஸ்நானம்செய்தான். ஜனமேஜயரே! அந்தக் குருச்ரேஷ்டன் அனேகமாயிரம் கோதானங்களையும் கிருகதானங்களையும் பிராம்மணர்களுக்குக் கொடுத்தான். புருஷச்ரேஷ்டனும் பாண்டவச்ரேஷ்டனுமாகிய அர்ஜுனன் ஹிரண்யபிந்துமஹரிஷியின்தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து புண்ணியமானகூத்திரங்களைக்கண்டான். ஜனமேஜயரே! புருஷச்ரேஷ்டனும் பரதச்ரேஷ்டனுமான அந்தஅர்ஜுனன் பிராம்மணருடன்கூட ஸ்நானஞ்செய்து கிழக்குத்திக்கைநோக்கிச்சென்றான். கௌரவச்ரேஷ்டனாகிய அவன் வரிசையாகத் தீர்த்தங்களைக்கண்டான். நைமிசாரண்யத்துக்குச்சமீபத்தில் அழகானஉத்பலினிநதி, †நந்தாநதி, அபரநந்தாநதி, கௌசிகிநதி, ‡கயாகூத்திரம், மஹாநதி, கங்கையாகியதீர்த்தங்களெல்லாவற்றையும் ஆச்ரமங்களையும்தரிசித்துத் தன்ஆத்மசுத்திசெய்துகொண்டு பிராம்மணர்களுக்குக் கோதானம்செய்தான். அங்க வங்க களிங்கதேசங்களிலுள்ள தீர்த்தங்கள் புண்ணியகூத்திரங்கள் எல்லாவற்றிற்கும்போனான். அவற்றையெல்லாம்பார்த்து அங்கே சாஸ்திரப்பிரகாரம் பொருள்களைத்தானஞ்

* 'மணிபுரம்' என்பது உத்தரதேசபாடம்.

† அலகநந்தையென்பது தக்ஷிணதேசபாடம்.

‡ கூத்திரமும் தீர்த்தமென்றுசொல்லப்படுதலின் கயை தீர்த்தத்துடன்சொல்லப்பட்டது.

செய்தான். ஜனமேஜயரே! அர்ஜுனனோடு பின்சென்ற பிராம்மணர்கள் களிங்கதேசத்தின் ஆரம்பத்திலேயே அவனுக்குவிடைகொடுத்துத் திரும்பிச்சென்றனர். குந்திபுத்ரனும் சூரனுமாகிய அந்தத் தனஞ்சயன் அவர்களால் விடைகொடுக்கப்பெற்றுச் சில துணைவருடன்கூடக் கடற்கரைக்குச்சென்றான். ஸமர்த்தனான அவன் களிங்கதேசத்தைத்தாண்டி அழகான தேவாலயங்களையும் மாளிகைகளையும் பார்த்துக்கொண்டு சென்றான். மஹாபலசாலியான அவன் ரிஷிகளால்சோபிக்கின்ற மஹேந்திரபர்வதத்தைக்கண்டு, அதன்பிறகு கோதாவரியில் ஸ்நானஞ்செய்து, அதைத்தாண்டி ஸமுத்திரஸங்கமத்தில் பிரசித்திபெற்ற காவேரியையடைந்து ஸ்நானஞ்செய்து, தேவரிஷிபித்ர்தர்ப்பணஞ்செய்து, ஸமுத்திரக்கரையாலேயே கிரமமாக மணலூரென்னுமிடத்துக்குச்சென்றான். ராஜாவே! சிறந்தகைகளையுடைய அர்ஜுனன் அவ்விடத்திலுள்ள புண்ணியதீர்த்தங்களையும் தேவாலயங்களையும் அடைந்து தர்மந்தெரிந்தவனான சித்ரவாஹனனென்னும் மணலூரரசனிடம் போனான். அவனுக்குச் சித்ராங்கதையென்னும் காட்சிக்கினியபெண் ஒருத்தி இருந்தாள். அவள் அந்தப்பட்டணத்தில் தன்னிச்சைப்படி ஸஞ்சரிப்பதை அவன்கண்டான். சிறந்தபெண்ணுகிய அந்தச்சித்திரவாகனன்மகளைக்கண்டு அவன்விருப்புற்றான். ராஜாவினிடம்சென்று, "ராஜாவே! மஹார்த்துமாவும் க்ஷத்திரியனுமாகிய எனக்கு இந்தப்பெண்ணைக் கொடு" என்று தன்காரியத்தைத்தெரிவித்தான். அவ்வரசன், அதைக்கேட்டு, "நீ யாருடைய புதல்வன்? உன்பெயர் என்ன?" என்றுகேட்க, அர்ஜுனன், "நான் பாண்டவன்; குந்திபுத்ரனானதனஞ்சயன்" என்று அவனுக்கு உத்தரம்மிசான்னான். அதன்பிறகு அவ்வரசன், அர்ஜுனனைப்பார்த்துப் பிரியவசனமாகப் பின்வருமாறு சொல்லுற்றான்.

"பிரபஞ்சமென்னும்ராஜா இந்தக்குலத்திற் பிறந்திருந்தான். அவனுக்கு ஸந்ததிஇல்லாமலிருந்ததனால் ஸந்ததியைவிரும்பிச் சிறந்ததவஞ்செய்தான். அர்ஜுனா! அவனுடைய உக்கிரமானதவத்தினால் தேவர்களுக்குத்தேவரும் பிரகமமென்னுமதனுஸைத் தரித்தவரும் உமாபதியுமாகிய சங்கரர் ஸந்தோஷமடைந்தார். தேவர்களுக்குத் தேவரும் பகவானுமாகிய அந்தஉமாபதி அவனுக்கு 'இந்தக்குலத்தில் ஒவ்வொருகுழந்தைதான்பிறக்கும்' என்றவரத்தைக் கொடுத்தார். அதனால் இந்தக்குலத்தில் எப்போதும் ஒவ்வொருஸந்ததிதான் உண்டாகிறது. என்முன்னோர்களெல்லாருக்கும் புத்திரர்களே பிறந்தனர். எனக்கு இந்தக்கன்னிகை ஒருத்திதான். இவள்தான்

என்குலத்தைமுழுதும் விருத்திசெய்கிறவனென்பது நிச்சயம். புருஷச்ரேஷ்டனே! பரதச்ரேஷ்டனே! * புத்ரிகாதர்மமென்கிற சாஸ்திரவிதியினால் இவளைப்புத்திரனென்றே நிஜைத்துக்கொண்டிருக்கிறேன். பரதவீம்சத்தவனே! உனக்கு இவளிடம்பிறக்கும்ஒருபுத்ரன் எனக்குக் † கன்னியாசுல்கமாகஇருக்கட்டும். அவன் இங்கிருந்து என்னைத் ததியை விருத்திபண்ணுகிறவனாக இருக்கக்கடவன். இந்தஉடன் பாட்டின்படி இவளை நீவிவாஹஞ்செய்துகொள்" என்றான். அர்ஜுனன், "அப்படியேயாகட்டும்" என்று பிரதிஜ்ஞைசெய்து அந்தக் கன்னிகையைவாங்கிக்கொண்டு பதின்மூன்றுவதுமாஸத்தில் விவாஹச்சடங்கைச்செய்து அங்கே மூன்றுமாதகாலமிருந்தான்.

இருநூற்றுமுப்பத்தாறுவது அத்தியாயம்.

அர்ஜுனவனவாஸபர்வம். (தொடர்ச்சி.)

(முதலையாயிருந்த வர்க்கையென்னும் அப்ஸரஸை அர்ஜுனன் சாபத்தினின்றும் விடுவித்தது.)

பிறகு பரதச்ரேஷ்டனான அர்ஜுனன் தென்சமுத்திரக்கரையில் ரிஷிகளால்சேவிக்கின்ற புண்ணியதீர்த்தங்களுக்குச் சென்றான். அங்கே முன்னே ரிஷிகள்நிரம்பியிருந்த ஐந்துதீர்த்தங்களைமாத்திரம் அப்போது அவர்கள் விலக்கியிருந்தனர். அகஸ்தியதீர்த்தம், ஸௌபத்ரதீர்த்தம், மிகப்பரிசுத்தமான பௌலோமதீர்த்தம், தெளிவுள்ளதும் அசுவமேதயாகத்தின்பலனைத்தரத்தக்கதுமாகிய காரந்தமதீர்த்தம், பாவத்தைப்போக்குவதிற்சிறந்ததாகிய பரத்வாஜதீர்த்தம் ஆகிய இவ்வைந்துதீர்த்தங்களையும் கௌரவச்ரேஷ்டனான அர்ஜுனன் கண்டான். பிறகு அர்ஜுனன் அந்ததீர்த்தங்கள் ஜனங்களில்லாமலிருப்பதையும் தாமதத்தில்எண்ணமுள்ளரிஷிகளால் விடப்படுவதையும்கண்டு, அங்குள்ளரிஷிகளைப்பார்த்து அஞ்சலிசெய்துகொண்டு, "பிரம்மரிஷிகள் இந்ததீர்த்தங்களைவிடுதற்குக் காரணம்யாது?" என்றுவினவினான். ரிஷிகள், "கௌரவபுத்ரனே! இந்ததீர்த்தங்

---

* எவளுக்குப்பிறக்கும்புத்திரனை அவள்தந்தை தனக்குப்புத்திரனாக எடுத்துக்கொள்ளுகிறதென்ற உடன்படிக்கையோடு கன்னிகாதானம்செய்கிறானோ அவளுக்குப் புத்ரிகையென்றும், அவளுக்குப்பிறக்கும்பிள்ளைக்குப் புத்ரிகாபுத்திரனென்றும் பெயர்களாம்.

† பெண்ணுக்காக அவளுடையபெற்றோர்களுக்குக்கொடுக்கும் பொருள்.

களில் ஐந்துமுதலைகள் இருக்கின்றன. அவை ரிஷிகளை இழுத்துக் கொண்டுபோகின்றன. அதனால் இந்தத் தீர்த்தங்கள் விடப்படுகின்றன" என்றனர். மஹாவீரனும் புருஷச்ரேஷ்டனுமாகிய அர்ஜுனன் அவர்கள்சொல்லைக்கேட்டு அவர்களால்தடுக்கப்பட்டும் அந்தத் தீர்த்தங்களைப்பார்ப்பதற்கே சென்றான். பிறகு பகைவரைத் துன்புறச்செய்கிறசூரனான அர்ஜுனன் ஸுபத்ரனென்னும்மஹரிஷியின் பேரால் ஸௌபத்ரமென்று வழங்கப்பெற்ற உத்தமதீர்த்தத்திற்குச் சென்று உடனே அதிலிறங்கி ஸ்நானஞ்செய்தான். அப்போது புருஷச்ரேஷ்டனும் குந்திபுத்ரனுமான அந்ததனஞ்சயனை ஜலத்துக் குள்ஸஞ்சரிக்கின்ற ஒருபெரியமுதலை காலில்பிடித்தது. மஹாவீரனும் பலவான்களிற்சிறந்தவனுமாகியஅந்தஅர்ஜுனன் அந்தத் துள்ளுகின்றமுதலையைத்தூக்கிக்கொண்டு கிளம்பினான். ஜனமேஜயராஜாவே! அந்தமுதலை புகழ்பெற்றஅர்ஜுனனால் தூக்கப்பட்டவுடன் எல்லாஆபரணங்களையும் அணிந்துகொண்டவளும் ஒளியிழல்பிரகாசிப்பவளும் தேவதாரூபமுள்ளவளும் மனத்தைக்கவருகின்றவளுமாகிய அழகியபெண்ணாகியிருந்தது. அந்தப்பெரியஆச்சரியத்தைக் கண்டு குந்திபுத்ரனாகியதனஞ்சயன் அந்தப்பெண்ணைநோக்கி மிக்க அன்புடன், "அழகியே! நீயாவள்? என்முதலையானாய்? எதற்காக முன்னே இப்படிப்பட்ட பெரும்பாவஞ்செய்தாய்?" என்றுகேட்டான். அந்த வார்த்தையைன்னும்பெண் அவனைப்பார்த்து, "மஹாவீரனே! நான் தேவர்களுடைய உத்யானவனங்களில்விளையாடும் அப்ஸரஸ். மஹாபலவானே! நான் வர்க்கையென்பவள்; குபேரனுக்குமிகவும்பிரியமானவள். எனக்குத்தோழிமார் இன்னும்நால்வர் இருக்கின்றனர். அவர்கள்எல்லாரும் நினைத்தபடி ஸஞ்சரிப்பவர்; அழகுள்ளவர்கள். அவர்களுடன்கூடத் திக்பாலகனாகிய குபேரனுடைய கிருகத்துக்கு நான்போய்க்கொண்டிருந்தேன். அங்கே உக்ரமானதவமுள்ளவனும் அழகுள்ளவனும் அத்தியயனஞ்செய்பவனும் ஜனமில்லாதஇடத்தில் தனியாக ஸஞ்சரிப்பவனுமான ஒருபிராம்மணனை நாங்கள்எல்லோரும் கண்டோம். ராஜாவே! அவன் தவத்தினாலேயே அத்தவனம் பிரகாசமுள்ளதாயிருந்தது. அவன் ஆதித்தியனைப்போல் அத்தப்பிரதேசமுழுமையும் பிரகாசிக்கச்செய்தான். மிக்கஅரிதான அவனுடையதவத்தையும அப்படிப்பட்ட ஆச்சரியப்படத்தக்க உயர்ந்தரூபத்தையும்கண்டு தவத்திற்கு இடையூறுசெய்ய நினைத்து அந்தஇடத்தில் இறங்கினோம். பாரதனே! நானும் ஸௌரபேயியும் ஸமீசியும் புத்புதையும லம்பையுமாகிய ஐவரும் ஒரேகாலத்

தில் பாடியும் சிரித்தும் அந்தப்பிராம்மணனுக்கு விருப்பத்தையுண்டாக்கிக்கொண்டு அவனிடம்போனும். வீரனே! அவன் எவ்வகையிலும் எங்களிடம் மனம்வைக்கவில்லை. குற்றமற்றதவத்தில் நிலைபெற்றிருந்த அந்தமஹாமஹிமையுள்ளவன் சலிக்கவில்லை. க்ஷத்திரியச்ரேஷ்டனே! ஆனால் அந்தப்பிராமணன் கோபித்தது, "நீங்கள் மூதலைகளாக மூன்றுவருஷகாலம் ஜலத்தில்வஞ்சரிப்பீர்கள்" என்று எங்களுக்குச் சாபம்கொடுத்தான்.

இருநூற்றுமுப்பத்தேழாவது அத்தியாயம்.

அர்ஜுனவனவாஸபர்வம். (தொடர்ச்சி)

(முதலையாயிருந்த மற்ற நாலுஅப்ஸரஸ்ஸுகளையும் அர்ஜுனன் ஜலத்திலிருந்து எடுத்தது, அவர்களுக்குப் பாபநிவிர்த்தியும், திரும்பவும் அர்ஜுனன் மணஸ்ஸார்வந்து முன்னாங்களைத்தபடியாகவே பிராமணனைத் தன்மாமனுக்குப் புத்திரிகாபுத்திரர்களைக்கொடுத்து விடுதற் கோகர்ணக்ஷேத்திரம்சென்றதும்.)

பரதவம்சத்தவரிற்சிறந்தவனே! அதன்பிறகு நாங்களெல்லாரும் துயரமுற்று, நியமந்தவறுதற்போதனராகிய அந்தப்பிராம்மணனையே சரணமடைந்தோம். "பிராம்மணரே! நாங்கள் அழகினலும் யௌவனத்தினலும் காமத்தினலும் கர்வங்கொண்டு பிழைசெய்தோம். அதனைஎங்கள்விஷயத்தில் பொறுக்கக்கடவீர். தபோதனரே! நாங்கள் கலங்காதமனமுள்ள உம்மை மயக்குவதற்கு இவ்விடம்வந்தோமென்பதை எங்களுக்குச் சுயமாகவேகர்ந்த*வதம். தர்மானுஷ்டானம் செய்கிறவர்களுக்கு பெண்களுடன் ஹிம்ஸிக்கப்படத்தகாதவர்களாகவே படைக்கப்பட்டவரென்று நினைக்கின்றனர். நீரும் தர்மத்தில்விருத்தியாகக்கடவீர். ஆதலால், எங்களைத் தண்டப்படுத்தலாகாது. தர்மந்தெரிந்தவரே! எல்லாப்பிராணிகளிடத்தும் ஸ்நேஹமாயிருப்பவன் பிராம்மணனென்று சொல்லுகின்றனர். நல்லவரே! அறிஞர்சொல்லும் இந்தஇனியசொல் சத்தியமாயிருக்கட்டும். மேலும் யோகிகளர்கள் சரணுகதிசெய்தவர்களைப் பரிபாலனஞ்செய்கின்றனர். நாங்கள் உம்மைச்சரணமடைந்திருக்கிறோம்; ஆதலால், நீரும் பொறுக்கக்கடவீர்." என்றோம். வீரனே! தர்மாத்மாவும் நல்லகாரி

---

* விரும்பாதவனை விரும்புவது மானஹீனமாதலால், 'வதம்' என்னப்பட்டது.

யத்தைச்செய்கிறவனும் சூரியனுக்குஞ்சந்திரனுக்கும்ஒப்பானதேஜஸ்ஸுள்ளவனுமாகிய அந்தப்பிராம்மணன் நாங்கள் இவ்வாறுசொன்னபின் அனுக்கிரஹம்செய்தான். அவன்சொன்னதாவது: "நூறு நூறுயிரம்என்பவை முதலியவையெல்லாம் அளவற்றதைச்சொல்லும். ஆகிலும் நான்சொன்ன நூறென்பது எண்தான். இஃதுஅளவற்றதைச்சொல்வதன்று. நீங்கள் ஜலத்தில் முதலைகளாயிருந்து மனிதர்களைப்பிடித்துக்கொண்டிருக்கையில் உங்களை ஒருபுருஷச்ரேஷ்டன் அந்தஜலத்திலிருந்து கரைக்குத்தூக்குவான். அப்போது நீங்களீனவரும் மறுபடியும் உங்கள்உருவத்தையடைவீர்கள். நான்ஒருபோதும் பரிகாசத்திலும் பொய்சொன்னதில்லை. உங்களுக்குச் சாபவிமோசனமானகாலமுதல் அந்தத்தீர்த்தங்களெல்லாம் * நாரீதீர்த்தங்களென்றபெயரால் எங்கும் பிரஸித்தியடையும். ஞானவான்களுக்கும் ஞானசுத்தியைக்கொடுப்பவையான புண்ணியதீர்த்தங்களாகும்" என்றான். பிறகு அந்தப்பிராமணனைப் பிரதக்ஷிணநமஸ்காரங்கள் செய்து அந்தஇடம்விட்டுச்சென்று மிகுந்ததுயரத்துடன், "நமக்கு மறுபடியும் முன்னுருவத்தைச் சொற்பகாலத்தில் கொடுக்கத்தக்க மனிதனை நாமெல்லாரும் எங்கேசந்திக்கலாம்" என்று ஆலோசித்தோம். பாரதனே! நாங்கள் சிந்தித்துக்கொண்டிருக்கையிலேயே சற்றுநேரத்துக்கெல்லாம் மஹாமஹிமைபெற்ற தேவரிஷியாகிய நாரதரைக்கண்டோம். அர்ஜுனனே! அளவற்றதேஜஸ்ஸுள்ள அந்ததேவரிஷியைக்கண்டு களித்து அவருக்குநமஸ்காரஞ்செய்து வெட்கினமுகத்தோடுநின்றோம். அவர் எங்களுடைய துக்கத்திற்குக் காரணத்தைக்கேட்டனர். நாங்களும் அவருக்குச் சொன்னோம். அவர் அங்கேநடந்ததை நடந்தபடி கேட்டு, "தென்சமுத்திரக்கரையில் புண்ணியமும் ரம்யமுமான ஐந்துதீர்த்தங்களிருக்கின்றன. சீக்கிரம் அவற்றிற்குச்செல்லுங்கள். புருஷச்ரேஷ்டனும் பாண்டுபுத்திரனும் பரிசுத்தமானமனமுள்ளவனுமான தனஞ்சயன் அவ்விடம்வந்து உங்களை இந்தத்துக்கத்திலிருந்து சீக்கிரத்தில் விடுவிப்பன். சந்தேகமில்லை" என்றுசொன்னார். வீரனே! எங்களெல்லாருக்கும் இவ்வாறு சொல்லிவிட்டு அவர் அங்கேயே அந்தர்த்தானமாயினர். வீரனே! அவர்சொல்லியதைக்கேட்டு நாங்களெல்லாரும் இங்கேவந்து சேர்ந்தோம். அஃது இப்போது உண்மையாயிற்று. குற்றமற்றவனே! உன்னால் நான் விடுவிக்கப்பட்டேன். என்னுடைய மற்றநான்குதோழிகளும் இதோ ஜலத்திலிருக்கின்றனர். வீரனே! புண்ணிய

* பெண்.

கருமம்செய். இவர்களெல்லாரையும் சாபத்திலிருந்துவிடுவி" என்று சொன்னாள்.

ஜனமேஜயராஜாவே! அதன்பிறகு பாண்டவச்ரேஷ்டனாகிய அர்ஜுனன் அந்ததீர்த்தத்திலிறங்கிப் பெண்முதலைகளாற்பிடிக்கப் பட்டு உடனே அவைகளைவாடுகரையிலும் அவைகளையெல்லாம் அப் போதே சாபத்திலிருந்துவிடுவித்தான். அவர்களும் உடனே ஸர்வா பரணபூஷிதைகளான அப்ஸரஸாஸ்த்ரீகள். இவ்வாறு அந்தவீரன் வரி சையாக அவர்களெல்லாரையும் விடுவித்தான். ஜனமேஜயராஜாவே! அந்தஅப்ஸரஸ்ஸுகள் அப்போது அந்தஜலத்திலிருந்துமுழுகுதங் கள் பூர்வதேகங்களையடைந்துமுன்போலவே காணப்பட்டனர். பிரபு வான அர்ஜுனன் அந்தத்தீர்த்தங்களை அவ்வாறு (உபத்திரவமில்லா மல்) சுத்தமாகச்செய்து அந்தஅப்ஸரஸ்ஸுக்களுக்கும் விடைகொடுத் துச் சித்ராங்கதையைப்பார்ப்பதற்காக மறுபடியும் மணலூருக்குச் சென்றான். ராஜ்யத்திற்குரியவனான பப்ருவாகனனென்னும் புத் திரனை அவளிடம் உண்டுபண்ணினான். ராஜாவே! பிறகு அவன் அந்தப்புத்திரனைப்பார்த்துச் சித்ரவாகனனிடத்திற்போய், "சித்ராங் கதையின் கன்னியாசுல்கமான பப்ருவாகனனை நீவாங்கிக்கொள். ராஜாவே! நீ வாங்கிக்கொள்வதினால் நான் கடனிலிருந்து விடுபட்ட வனாவேன்" என்றுசொன்னான். மறுபடியும் அர்ஜுனன் சித்ராங் கதையைப்பார்த்து, "நீ இங்கேயிரு. உனக்கு ஸுகமுண்டா கட்டும். பப்ருவாகனனைப் போஷித்துவா. எனதுஇருப்பிடமாகிய இந்திரப்பிரஸ்தத்திற்குவந்தபிறகு என்னுடன்கலந்திருப்பாய். குந்தி, யுதிஷ்டிரர், பீமன், என்னுடையஇளையசகோதரர்கள் இவர்களையும் மற்ற என்னுடையபந்துக்களையும் நீ அங்கேவந்துபார்க்கலாம். சிலாக் கியமானவளே! என்பந்துக்களெல்லாருடனுஞ்சேர்ந்து நீ சந்தோஷ மடைவாய். தர்மத்திலிருப்பவரும் ஸத்தியத்தைவிடாதவரும் குந்தி புத்திரருமான யுதிஷ்டிரர் பூமியைமுழுதும்ஜயித்து ராஜஸூயயாகம் செய்யப்போகிறார். இப்புவியில் ராஜாவென்று பெயர்பெற்ற அரசர் கள் மிகுந்த இரத்தினங்களைகொண்டு அதற்குவருவார் கள். அப்போது உன்பிதாவும் வருவார். அவர் யுதிஷ்டிரரை சேவை செய்யவரும்போது நீயும் சேர்ந்துவருவாய். ராஜஸூயயாகத்தில் உன்னைப்பார்ப்பேன். புத்திரனைக்காப்பாற்று. துயரப்படாதே. எனது உயிரே பப்ருவாகனனென்னும் பெயரோடு வெளியில் உலாவுகின் றது. ஆதலால், வமசததை விருதபிரணஞ்சுகிற ஆணுகுழந்தையை வளர். ஆதலால், சித்ரவாகனனுடைய தாயபாகத்தைப் பெறுகிறவ

னும் தர்மப்படி பூருவம்சத்தை விருத்திபண்ணுகிறவனுமாகிய பாண்டவர்களுடைய அன்புள்ள புத்திரனே எப்போதும் காப்பாற்று. சிலாக்கியமானவளே! என்பிரிவினால் நீ வருத்தப்படாதே" என்று சொன்னான். சித்ராங்கதைக்கு இவ்வாறுசொல்லித் தூரத்திலுள்ள கடற்கரையின் இடத்தைச்சேர்ந்து அங்கே ஸ்நானஞ்செய்து மிகுதியான தனங்களைத் தானஞ்செய்து கேரளதேசம்தாண்டித் தர்சனத்தினாலேயே முக்தியைக்கொடுப்பதும் பசுபதியினுடைய முதன்மையான கூஷேத்திரமும் பாபியானமனிதனுக்கும் பாபபயமில்லாத உயர்ந்த மேற்கதியைக் கொடுக்கத்தக்கதுமாகிய கோகர்ணகூஷேத்திரத்தைநோக்கிச் சென்றான்.

இருநூற்றுமுப்பத்தெட்டாவது அத்தியாயம்.

அர்ஜுனவனவாஸபர்வம். (தொடர்ச்சி.)

(அர்ஜுனன் பிரபாஸதீர்த்தத்துக்குச் சென்றதும், கிருஷ்ணன் அர்ஜுனன் வர்த்தையைக்கேட்டு அங்கேவந்து அவனோடு ஸம்பாஷணைசெய்து துவாரகைக்குத் திரும்பினதும்.)

அளவற்ற பராக்கிரமமுள்ள அந்தஅர்ஜுனன் மேற்குத்திசையிலுள்ள புண்ணியதீர்த்தங்கள் புண்ணியகூஷேத்திரங்களெல்லாவற்றிற்கும் வரிசையாகச் சென்றான். மேற்குச்சமுத்திரத்திலுள்ள தீர்த்தங்கள் கூஷேத்திரங்கள் எல்லாவற்றிற்கும் சென்றபிறகு பிரபாஸதீர்த்தத்தை யடைந்தான். கதனென்னும் யாதவன் முன்னே ஸுபத்திரையின் இனிமையையும் அழகையும் பாக்கியத்தையும் குணங்களையும்பற்றிச் சொல்லியிருந்ததை இராத்திரியில் நினைத்தான்; அவளையடைவதற்கு எந்தஉபாயம் பொருந்துமென்று சிந்தித்தான். "இயற்கைவேஷத்தைமாற்றிச் சன்னியாசிவேஷம்பூண்டு அதனால் குகுரர்கள், அந்தகர்கள், விருஷ்ணிகள் இவர்களாலறியப்படாமல் அந்தவேஷத்துடன் பிக்ஷையெடுத்துத் திரிந்துகொண்டு ஏதாவதொரு தந்திரத்தினால் பெரிய ராஜகிருகத்தில் பிரவேசித்துக் கிருஷ்ணனுடைய தங்கையும் ஒப்பற்ற அழகுள்ளவளுமான ஸுபத்ரையைக்கண்டு கிருஷ்ணனுடைய எண்ணத்தையுமறிந்துகொண்டு வேண்டிய சுபத்தை முடித்துக்கொள்வேன்" என்று நிச்சயம்செய்து அர்ஜுனன் அப்போதே ஸந்யாஸதீக்ஷையெடுத்துக்கொண்டான். திரிதண்டம்தரித்துத் தலையை மொட்டையடித்துக்கொண்டு கமண்டலுவை

யெடுத்து அக்ஷமாலையை விரலில் மோதிரமாயிட்டு யோகபாரத்தை யெடுத்துக்கொண்டு மழைபெய்யும்போது ஆலமரத்தின்புதரில் பிரவேசித்துத் தேவசிரேஷ்டரும் துயரம்தீர்ப்பவருமாகிய கிருஷ்ணபகவானைத் தியானித்தான். ஜனமேஜயராஜாவே! ஸத்தியபாமையுடன் கூடத் திவ்வியசயனத்தில் படுத்திருந்த கிருஷ்ணபகவான் தமது திவ்யஜ்ஞானத்தினால் அர்ஜுனன் கருத்தைத் தெரிந்துகொண்டு, மிகுசென்றுசிரித்துச் சந்தோஷமடைந்தார். ஸத்தியபாமை, "பகவானே! படுக்கையில் ஸுகமாகப்படுத்திருந்தீர் பலவாறுகச் சிந்தையுற்றீர். பலமுறை நீர்சிரித்தீர். தேவதேவா! கிருஷ்ணு! அது நான் கேட்கக்கூடியதாயிருந்தால், உமக்கு என்னிடத்தில் அனுக்ரகமிருந்தால், சொல்லக்கடவீர். அதனை நான் கேட்க விரும்புகிறேன்" என்று புருஷோத்தமரான கிருஷ்ணபகவானைப் பலமுறைகேட்டாள். பகவான், "எனது அத்தைமகனும் பீமசேனனுக்கினியவனுமான அர்ஜுனன் பாண்டவர்கள் செய்துகொண்ட வியவஸ்தைகாரணமாகத் தீர்த்தயாத்திரைக்குச் சென்றான். தீர்த்தயாத்திரைமுடிந்து திரும்பிவருகையில் அந்த அர்ஜுனன், அழகில் பூமியில்ஈடில்லாத ஸுபத்திரையை இரவில்நினைத்தான். அவளைச் சிந்தித்தஉடனே அவன் மதிமோஷமடித்து, "நான் மதிமோஷத்தினால் மறைந்துகொண்டு துவாரகாபட்டணம்போய் எந்தஉபாயத்தினாலாவது பெண்களிற்சிறந்த ஸுபத்ரையைப்பார்த்துக் கிருஷ்ணனுடைய அபிப்பிராயத்தையும் தெரிந்துகொண்டு என்மனோரதத்தை நிறைவேற்றமுயல்வேன்" என்றுநிச்சயித்து அந்தமோஷத்துடன் மழைபெய்யும்போது ஆலமரத்தின்நிழலில் யோகபாரமென்னப்பட்ட காவடியைச் சுமந்துகொண்டே மனத்தில் துயரத்தை யடைந்திருக்கிறான். அன்புள்ளவ்வே! இதற்காகத்தான் சந்தோஷத்துடன் நான் சிரித்தேனென்றறி. உன்னுடைய பிராதாவைப்பார்" என்றுசொல்லி ஸத்திய பாமையைவிட்டுவிட்டு அந்தச்சயனத்திலிருந்தே புறப்பட்டார். தோல்வியடையாத அர்ஜுனன் தீர்த்தங்களெல்லாம் யாத்திரைசெய்து பிரபாஸதேசம் வந்துசேர்ந்ததைச் சாரர்கள்சொல்ல, மதுஸூதனர் கேட்டார். ஸ்ரீபதியான அந்தஜனார்த்தனர் அங்கே மஹாத்மாவான அர்ஜுனனிடம் தனித்துவந்தார். அப்போது கிருஷ்ணபாண்டவர்களிருவரும் பிரபாஸதீர்த்தத்தில் ஒருவரையொருவர் கண்டனர். அன்புள்ளஸ்நேஹிதர்களும் நரநாராயணர்களென்னும் ரிஷிகளுமாகிய அந்தக் கிருஷ்ணார்ஜுனர்களிருவரும் அந்தவனத்தில் ஒருவரையொருவர் ஆலிங்கனஞ்செய்துகொண்டு குசலப்பிரச்

னம்செய்து உட்கார்ந்தனர். பிறகு கிருஷ்ணபகவான் அர்ஜுனனைப்பார்த்து, "அர்ஜுனா! எதற்காக இந்தத் தீர்த்தங்களிலெல்லாம் விடாமற்சஞ்சரிக்கிறாய்?" என்று அந்தத் தீர்த்தயாத்திரையைப்பற்றிக் கேட்டனர். பிறகு, அர்ஜுனன் எல்லாவற்றையும் நடந்தவாறு சொன்னான். அதைக்கேட்டுப் பிரபுவான கிருஷ்ணமூர்த்தி 'இஃது இப்படியா' என்றுசொன்னார். அந்தக் கிருஷ்ணபாண்டவர்கள் பிரபாஸதீர்த்தத்தில் இஷ்டப்பிரகாரம் சஞ்சரித்து வஸிப்பதற்காக ரைவதகபர்வதத்திற்குப்போயினர். முன்னமே கிருஷ்ணனுடைய கட்டளையினால் வேலைக்காரர்கள் அந்தமலையை அலங்காரஞ்செய்து போஜனமும் கொண்டுவந்திருந்தனர். பாண்டவனான அர்ஜுனன் கிருஷ்ணனுடன்கூடவே அவற்றையெல்லாம்வாங்கிப் புஜித்து நாடகம் ஆடுகிறவர்களையும் நர்த்தனஞ்செய்கிறவர்களையும் பார்த்தான். அவர்களெல்லாரையும் கௌரவித்து விடைகொடுத்து அனுப்பிவிட்டுச் சிறந்தபுத்தியுள்ள அவன் அலங்கரிக்கப்பட்ட உயர்ந்தபடுக்கைக்குப் போனான். பிறகு மஹாவீரனான அர்ஜுனன் அந்தச் சிறந்தபடுக்கையிற் படுத்துக்கொண்டே புண்ணியதீர்த்தங்களையும் தடாகங்களையும் பர்வதங்களையும் நதிகளையும் வனங்களையும் தான் பார்த்ததைப்பற்றிக் கண்ணனிடம்சொன்னான். ஜனமேஜயரே! இவ்வாறு சொல்லிக்கொண்டிருக்கும்போதே அர்ஜுனன் ஸ்வர்க்கத்துக்கொப்பான அந்தச்சயனத்தில் தூக்கத்தினால் பாவசமானான். இனியஸங்கீதத்தினாலும் வீணைவாத்தியத்தினாலும் மங்களமான ஸ்தோத்திரங்களினாலும் எழுப்பப்பட்டவனாகக் கண்விழித்துக்கொண்டான். அவன் காலைக்கடன்களைக் கழித்தபின் கிருஷ்ணனால் மரியாதைசெய்யப்பெற்று, கிருஷ்ணனுக்கு விடைகொடுத்து அங்கேவஸிப்பதை விரும்பினான். கிருஷ்ணனும் அப்படியே யென்றுசொல்லி, போஜனம்கொண்டுவரும்படி, கட்டளையிட்டார். யதிவேஷம்பூண்ட அர்ஜுனனைவிட்டு, கிருஷ்ணன் பொன்மயமான தேரிலேறி உடனே துவாரகைக்குச் சென்றார். ஜனமேஜயரே! துவாரகை அலங்கரிக்கப்பட்டிருந்தது. கிருஷ்ணனைக்காணுவதற்காகத் துவாரகையிலுள்ளஜனங்கள் நூற்றுக்கணக்கும் ஆயிரக்கணக்குமாக விரைந்து ராஜமார்க்கத்துக்குவந்தனர். அரைநிமிஷமும் கிருஷ்ணனுடைய பிரிவாற்றாதவர்கள் மிகவும் ஆவலுற்றவர்களாகக் கண்கொட்டாமல் பார்த்துக்கொண்டே நின்றனர். பார்க்கும்இடங்களிலெல்லாம் ஆயிரக்கணக்காகவும் நூற்றுக்கணக்காகவும் ஸ்திரீகளின்கூட்டமும் போஜர்கள் விருஷ்ணிகள் அந்தகர்களின்கூட்டமும் இருந்தன. மகாபல

சாலியான கிருஷ்ணன் அவ்வாறு போஜர்கள் விருஷ்ணிகள் அந்தகர்கள் இவர்களுடைய குமாரர்களனைவராலும் கௌரவிக்கப்பட்டு வந்தனம் செய்யத்தக்கவர்களுக்கு வந்தனஞ்செய்து அவர்களெல்லாராலும் ஆசீர்வதிக்கப்பெற்றும் குமாரர்களெல்லாராலும் பூஜிக்கப்பெற்றும் ஒத்தபிராயமுள்ள எல்லாரையும் பலமுறை தழுவிக்கொண்டும் அழகான தமதுகிருகத்திற்பிரவேசித்தார். பிரபாஸதீர்த்தத்திலிருந்துவருத கண்ணபிராணைத் தேவிமாரனைவரும் பூஜித்தனர்.

அர்ஜுனவனவாஸபர்வம் முற்றிற்று.

இருநூற்றுமுப்பத்தொன்பதாவது அத்தியாயம்.

ஸுபத்ராஹரணபர்வம்.

(ரைவதகபர்வதத்தில் உத்ஸவத்துக்குக் கிருஷ்ணன் முதலானவர்கள்போன போது ஸந்யாஸியாகவந்த அர்ஜுனனைக்கண்டதும், அவனுக்கு ஸுபத்திரையிடம் விருப்பமிருப்பதைத்தெரிந்து ஸுபத்திரையை அவன்எடுத்துக்கொள்ளும்படி கிருஷ்ணன் அனுமதிசெய்ததும், ஸுபத்ரா கல்யாணவிருத்தாந்தத்தை யுதிஷ்டிரர்முதலானவர்களுக்குத் தூதர்களால் தெரிவிக்க அவர்களும் அதை அங்கீகரித்ததும்.)

ராஜச்ரேஷ்டனே! பிறகு சிலநாளானபின் அந்த ரைவதகபர்வதத்தில் விருஷ்ணிகளும் அந்தகர்களும் செய்கிறஉத்ஸவமொன்று நடந்தது. அந்தக்கிரிபூஜையென்னும் உத்ஸவத்தில் வீரர்களான போஜர்களும் விருஷ்ணிகளும் அந்தகர்களும் ஆயிரக்கணக்கான பிராமணர்களுக்குத் தானங்கள்செய்தனர். ராஜாவே! அந்தப்பர்வதத்தின்நாலுபக்கங்களிலுமுள்ள பிரதேசங்களெல்லாம் அனேகஇரத்தினங்களினுலிழைக்கப்பட்ட விசித்ரங்களானமாளிகைகளாலும் கற்பகவிருக்ஷங்களாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தன. அங்கே சிலவாத்தியக்காரர்கள் வாத்தியங்களைவாசித்தனர். நர்த்தனஞ்செய்பவர் நர்த்தனம்செய்தனர். பாடகர்கள் சங்கீதம்பாடினர். மஹாபாக்கிரம சாலிகளான விருஷ்ணிவம்சகுமாரர்கள் அலங்காரங்களைச் செய்துகொண்டு பொன்னிலுல் விசித்திரங்களானதேர்களிலேறி எங்கும் திரிந்தனர். நகரத்துஜனங்கள் மணிவிகளோடும் வேலிக்காரர்களோடும் நூற்றுக்கணக்காகவும் ஆயிரக்கணக்காகவும் காலால்நடந்தும் பலவிதவாகனங்களிலேறியும் சஞ்சரித்தனர். ஜனமேஜயரே! அப்போது பிரபுவானபலராமர் மதுபானத்தினுல்மயங்கி ரேவதி

புடன்கூடக் * கந்தர்வர்களால்பின்செல்லப்பெற்றவராக அங்கேசஞ் சரித்தனர். அவ்வாறே யாதவர்களுக்குஅரசனும் பராக்கிரமசாலியு மான உக்கிரசேனன், கந்தர்வர்கள்பின்னேபாட பங்கையர்களேனை கைத்துணையாகக்கொண்டு சஞ்சரித்தான். யுத்தத்தில்அடங்காத கர் வமுள்ளவர்களும் மதுபானத்தால் மயக்கமுள்ளவர்களுமான் பிரத் யும்னனும் சாம்பனும் உயர்ந்தபுஷ்பங்களேயும் வஸ்திரங்களேயும்தரித் துத் தேவர்களேப்போலஉலாவினர். அக்ரூர், ஸாரணன், கதன், பப்ரு, விதூரதன், நிசடன், சாருதேஷ்ணன், பிருது, விப்ருது, ஸத்யகன், (அவன்குமாரன்) ஸாத்யகி, பங்ககாரன், மகாரவன், ஹார்த்திக்யன், உத்தவர்ஆகியஇவர்களும் இங்கேசொல்லப்படாத இன்னுமனேகரும் பெண்களாற்சூழப்பட்டுப் பாடகர்களுடன் தனித்தனியே ரைவதக மலேயில்நடக்கும் அந்தஉத்ஸவத்தைச் சிறப்பித்தனர். கிருஷ்ணன் மகிழ்வுற்றுத் தமதுஸ்திரீகளுடன்கூட அவ்விடம்சென்று பிராம் மணர்களுக்குத் தானங்களேக்கொடுத்துப் பிறகு ஸ்யாஸியைக்கண் டார். மிக்கஆச்சரியமும் விநோதமுமான அந்தஉத்ஸவம் நடந்து கொண்டிருக்கையில் கிருஷ்ணனும் அர்ஜுனனும் சேர்ந்து உலா வினர். அங்கே உலாவிக்கொண்டிருந்தஅவர்கள், வஸுதேவர்பெண் ணுகிய அழகியஸுபத்திரை அலங்காரஞ்செய்துகொண்டு தோழி மார்களின் நடுவிலிருக்கக்கண்டனர். அவளேக்கண்டவுடன் அவள் மேல் அர்ஜுனனுக்கு விருப்பம் உண்டாயிற்று. அப்போது மனத் தில் ஒன்றையேசிந்தித்துக்கொண்டிருந்த அந்தஅர்ஜுனன்கருத் தைப் புருஷச்ரேஷ்டரானகிருஷ்ணபகவான் கண்டறிந்து நகைத்து, "பாரதனே! இதென்ன காட்டிலிருக்கும் ஜிதேந்திரியனுடையமனம் சிற்றின்பப்பற்றிலுல் கலங்குகிறது. அர்ஜுனு! இவள் எனக்கும் ஸாரணனுக்கும் உடன்பிறந்தவளாகிய ஸுபத்ரையென்பவள். என் பிதாவுக்கு அன்புள்ளபெண்; உனக்கு ஸுகமுண்டாகட்டும்; உன க்குவிருப்பமிருந்தால் என்பிதாவுக்கு நானேதெரிவிப்பேன்" என் றார். அவர் அப்படிச்சொல்ல, அர்ஜுனன், "இவள் வஸுதேவ ருடையபெண்; வாஸுதேவனுக்குச்சகோதரி; அழகுநிரம்பினவள். இவள் யாரைத்தான் மயங்கச்செய்யாள்; உமதுதங்கையான இந்த யாதவப்பெண் என்மனேவியாவாளாயின் எனக்கு எல்லாநன்மைகளே யும் செய்ததாகுமென்பதுதிண்ணம். ஜனார்த்தனு! நான் இவளே அடைவதற்கு என்னஉபாயம்? அதைச்சொல்லும். மனிதன்செய் யக்கூடியவற்றையெல்லாம் நான் செய்வேன்" என்றுசொன்னன்.

* பாடகர்கள்.

கண்ணபிரான், "புருஷச்ரேஷ்டனனஅர்ஜுன! ஸ்வயம்வரம்தான் க்ஷத்திரியர்களுக்குரியவிவாஹம். ஆனல், ஸ்திரீகளின்ஸ்வபாவம் நிச்சயிக்கக்கூடாததாயிருப்பதனல் அதில் நிச்சயமில்லை. பலாத்காரமாக எடுத்துக்கொண்டுபோவதும் க்ஷத்திரியவீரர்களுக்கு நியாயமான விவாஹமென்று தர்மசாஸ்திரம்தெரிந்தவர்கள் அறிகின்றனர். அர்ஜுன! சூரனும் யதிவேஷத்தைத்தரித்தவனுமாகிய நீ காலத்தினுடைய அனுகூலத்தையெதிர்பார்த்து எனது சிறந்தஸஹோதரியைப் பலவந்தமாகஎடுத்துக்கொண்டுபோ. ஸ்வயம்வரஞ்செய்தால் அவளுடையகருத்தை யார் கண்டார்?" என்றார். அதன்பிறகு அர்ஜுனனும் கிருஷ்ணனும் செய்யவேண்டியஉபாயத்தை நிச்சயம் செய்துகொண்டு சீக்கிரம்செல்பவர்களாகிய சிலதூதர்களை இந்திரப்பிரஸ்தத்தில்வஸிக்கும் தர்மராஜாவுக்கு அதையெல்லாம்தெரிவிப்பதற்காக அப்போதே அனுப்பினர். மஹாவீரரான தர்மபுத்திரர் அதைக்கேட்டதும் குந்திதேவியாடிகூட அனுமதிகொடுத்தார். பீமஸேனனும் அதைக்கேட்டுத் தங்கள்காரியம்நிறைவேறினதாகநினைத்தான். இவற்றையெல்லாம் தூதர்வந்துசொல்லக்கேட்டு, சிறந்தபுத்தியுள்ள கிருஷ்ணன் அர்ஜுனனுக்கு அனுமதிகொடுத்துவிட்டுக் காரியம் இவ்விதம்செய்யவேண்டுமென்று மனத்திற்குள்வைத்துக்கொண்டு தூதர்களுடன்கூடவே துவாரகைக்குச்சென்றார்.

இருநூற்றுநாற்பதாவது அத்தியாயம்.

ஸுபத்ராஹரணபர்வம். (தொடர்ச்சி.)

(துவாரகைபின்வெளித்தோட்டத்திலிவஸித்த அர்ஜுனஸந்யாஸியையாதவர்கள்கண்டதும், அவனை ஸுபத்தையின்கன்னியாந்தப்புரத்திலிவஸிக்கும்படி பலராமர்சொன்னதும்.)

சாரர்களால் சமாசாரம்தெரிவிக்கப்பட்ட யுதிஷ்டிரர் அனுமதிகொடுத்தார். பிறகு கிருஷ்ணனல் செய்யவேண்டியஉபாயத்தைச் சொல்லி விடைகொடுக்கப்பெற்ற அர்ஜுனன் கிருஷ்ணனுடையஅபிப்பிராயப்படி சென்றான். அவன் காரியத்தைநிறைவேற்றுவதற்காகத் துவாரகாநகரத்தின்ஸமீபத்திலுள்ள ஒருசோலையில் தங்கினான். அப்போது ரைவதகமலையில் அந்தஉத்ஸவம்முடிந்து யாதவர்களனைவரும் துவாரகாநகரத்துக்குச்சென்றனர். அனேகமாங்களாற்சூழப்

பட்ட அழகிய அந்தஉத்தியானவனத்தில் சுபத்திரையைநினைத்துக் கொண்டே ஒருகற்பாறையின்மேல் அர்ஜுனன்உட்கார்ந்திருந்தான். ஆச்சாமரங்கள், பனைமரங்கள், அசுவகர்ணமரங்கள், மகிழமரங்கள், மருதமரங்கள், சண்பகமரங்கள், அசோகமரங்கள், புன்னைமரங்கள், தாழைகள், பாதிரிமரங்கள், கொன்றைமரங்கள், அங்கோலமரங்கள், தினிசமரங்கள்முதலிய அனேகமரங்களினால்சூழப்பட்ட கற்பாறையின்மேலுட்கார்ந்து, அழகாகப்பேசும் ஸுபத்ரையை அடிக்கடிநினைத்துக் கொண்டிருந்த அந்தஅர்ஜுனன் தற்செயலாகவந்துசேர்ந்த யாதவவீரர்களைக் கண்டான். பலராமர், க்ருதர்மன், ஸாம்பன், ஸாரணன், ப்ரத்யும்னன், கதன், சாருதேஷ்ணன், விதூரதன், பானு, ஹரிதன், விப்ருது, ப்ருது இவர்களையும் மற்றுமுள்ள அநேகரையும்கண்டு மனத்திலுள்ளதுயரத்தை அடக்கிக்கொண்டான். பிறகு யாதவர்களனைவரும் சேர்ந்துவந்து அந்தஸந்யாஸியைக்கண்டு அன்போடும் வணக்கத்தோடும் சுற்றிநின்றனர். பிறகு அந்தஅர்ஜுனன் மனமகிழ்ந்து நல்வரவை விசாரித்தான். "இந்த அழகான கற்பாறையின்மேல் யாவரும் உட்காருங்கள்; உட்காருங்கள்" என்று அந்த யதிபுங்கவரால்சொல்லப்பட்ட அந்தயாதவச்ரேஷ்டர்களெல்லாரும் 'நல்வரவு' என்றுசொல்லிச் சமீபத்தில்உட்கார்ந்தனர். யதுவீரர்கள் பக்கங்களில் உட்கார்ந்தபின், அர்ஜுனன் தன்கருத்தைமறைத்துக் கொண்டு க்ஷேமம்விசாரித்தான். பலராமர் 'எல்லாம்க்ஷேமம்' என்று சொல்லி, "ப்ராம்மணரே! எங்கிருந்துவந்திருக்கிறீர்; புண்ணியங்களான அநேகதீர்த்தமலைகளையும் தீர்த்தங்களையும் க்ஷேத்திரங்களையும் வனங்களையும் பார்த்திருக்கிறீர்; பேசுகிறவர்களிற்சிறந்தவரே! தீர் என்மீது அனுக்ரஹஞ்செய்து சொல்லக்கடவீர்" என்றுசொன்னார்.

ஜனமேஜயரே! அவன், தீர்த்தங்களையும் பர்வதங்களையும் நதிகளையும் வனங்களையும் தான்பார்த்ததைப்பற்றிய விருத்தாந்தங்களைச் சொன்னான். ஜனமேஜயரே! அப்போது பரிசுத்தமான தர்மகதைகளைக்கேட்டுச் சந்தோஷமடைந்தயாதவவீரர்கள் கதையின் முடிவில் அந்தஸன்யாஸியைப்பூஜித்தனர். ஜனமேஜயரே! பிறகு யாதவர்களனைவரும், "ஸந்யாஸிவேஷத்தோடுகூடிய இந்தச்சிறந்த ப்ராம்மணர் நம்முடையதேசத்துக்கு அதிதியாகவந்திருக்கிறார். எந்தஇடத்திலிருந்து உபத்ரவமில்லாமல் இவர்வஸிக்கலாம்" என்று ஆலோசித்தனர். பலராமரோடு இவ்வாறுசொல்லிக்கொண்டிருந்த யாதவர்களனைவரும், தங்களையெல்லாம் ஸந்தோஷப்படுத்துகிறவராகிய கண்ணபிரான் வருகிறதைக்கண்டனர். பலராமர், "சூழந்தாய்!

கேசவா! வா" என்றழைத்து, "ஸ்யாஸாச்ரமத்தைவகித்திருக்கும் இந்தவித்வானை அந்தணர் நம்முடையயாகசத்துக்கு அதிதியாக வந்திருக்கிறார். மழைக்காலத்திய நான்குமாதங்களிலும் வஸிப்பதற்காக நமதுநகரத்தைநோக்கி வந்தவர். கிருஷ்ணா! இவர் எந்தஇடத்தில் வஸிக்கலாமென்பதை எனக்குச்சொல்" என்றுகேட்டார். அதைக் கிருஷ்ணன்கேட்டு, "மஹாதபாவரே! நீங்களிருக்கையில் நியாயமாக நான் பாதீனன். யாதவர்களைப் பெருமைப்படுத்துகிறவரே! உமக்குப் பிரியமானஇடத்தில் இவரை வஸிக்கச்செய்யலாம்" என்று சொன்னார். மஹாபலசாலியான அந்தப் பலராமர் அந்தச்சொல்லினால் ஸந்தோஷமடைந்து கிருஷ்ணனைத் தழுவிக்கொண்டு ஆலோசனை செய்து, "இந்தப்புத்திமானனஸ்யாஸி வருஷாகாலத்தியநாலுமாதங்களும் ஸுபத்ரையின் கன்னியாந்தப்புரத்தில் வேண்டியபோஜனத்தைப் புஜித்துக்கொண்டு தோட்டத்தில் கொடிப்பந்தல்களில்வஸிக்கலாமென்று எனக்குத்தோன்றுகிறது. குழந்தாய்! உன்அனுமதிபெற்றால் யாதவர்களெல்லாரும் ஸந்தோஷப்படுவர்" என்றுசொன்னார். ஸ்ரீ கிருஷ்ணபகவான், "இவர் கிறந்தபலசாலியும் பார்ப்பதற்குஅழகுள்ளவரும் இன்சொற்சொல்லுகிறவரும் ஒளியுள்ளவரும் கல்வி கேள்விமிகுதியாகஉடையவருமாயிருக்கிறார். இவர் கன்னியாமாடத்தின்ஸமீபத்தில் வஸிப்பதுதகாதென்பது என்கருத்து; ஆனால், நீர் பெரியவர்; திதிக்கத்தக்கவர்; நடத்துகிறவர்; சாஸ்திரம்தெரிந்தவர்; தர்மத்தைச்செவ்வையாகஅறிந்தவர்; நீர்சொல்லுகிறதை நான்தடுப்பதில்லை; நீர்சொன்னதைச் செய்வேன்; நன்மைதீமைகளைஅறிபவர் உம்மைவிட வேறுயாருமில்லை" என்றுசொன்னார். அந்தப்பலராமர், "இவர்தேசத்துக்கே அதிதி; மகிமைபொருந்தினவர்; தர்மிஷ்டர்கள்மேலும் சிறந்தவர்; திருப்தியுள்ளவர்; வினயமுள்ளவர்; ஸத்தியமே பேசுகிறவர்; ஜிதேந்திரியர். இவர் ஸ்யாஸ்ரமத்தைவஹிப்பவர்; மனத்தை யாறியலார். தாமரைக்கண்ணா! என்சொல்லினால் கட்டளையிடப்பட்டீர், இவரை அழகான கன்னியாந்தப்புரத்துக்கு அழைத்துக்கொண்டுபோய் ஸுபத்ரைக்குத் தெரிவி. பக்ஷணங்களையும் போஜனங்களையும் பானங்களையும் விருப்பமானபற்றஉணவுகளையும் கொடுத்து உபசரி" என்றுசொன்னார்.

இருநூற்றுநாற்பத்தோராவது அத்தியாயம்.

ஸுபத்ராஹரணபர்வம். (தொடர்ச்சி.)

(தான் முன்கேட்டிருந்த லக்ஷணங்களினால் அர்ஜுனனென்று சந்தேகித்த ஸுபத்ரை பாண்டவர்களுடைய க்ஷேமத்தைவிசாரித்ததும், அர்ஜுனன் உண்மைசொன்னதனால் காதல்கொண்ட அவளப்பற்றி நுக்மிணி தேவகிக்குத்தெரிவித்ததும், ஸுபத்ரா விவாஹத்தை நடத்துவதற்காகச் சிவோத்ஸவம்என்ற காரணத்தைக் கொண்டு கிருஷ்ணன் யாதவர்களோடு கடலிலுள்ள தீவிற்குச்சென்றதும்.)

அந்தக்கிருஷ்ணன் 'அப்படியேசெய்யலாம்' என்றுசொல்லி அந்தஸந்யாஸியுடன் ஸங்கேதஞ்செய்துகொண்டு சந்தோஷமடைந்தார். ரைவதகபர்வதத்தில் கிருஷ்ணனும் அர்ஜுனனும் இஷ்டப்பிரகாரம் சஞ்சரித்தபிறகு அர்ஜுனனைக் கையினாற்பிடித்துக்கொண்டு கிருஷ்ணன் துவாரகாநகரத்தில் பிரவேசித்தார். ஸௌக்கியத்துக்குரிய பொருள்களெல்லாம்நிரம்பியதும் அழகியதுமான தமது அரண்மனையில் பிரவேசித்து ருக்மிணிக்கும் ஸத்தியபாமைக்கும் அர்ஜுனன் தீர்த்தயாத்திரைக்கு வந்திருப்பதைத் தெரிவித்தார். அவர்களிருவரும் கிருஷ்ணன் சொன்னதைக்கேட்டு, "பாண்டுபுத்திரனான அர்ஜுனன் நம்ஊருக்குவருகிறதை நாம்எப்போதுகாண்போமென்ற பெரியஆசை எங்களிருவருக்கும் எப்போதும் மனத்திலிருந்துகொண்டேயிருக்கிறது" என்றுசொன்னார்கள். இவ்வாறு ருக்மிணியும் ஸத்தியபாமையும் மிகப்பிரியமாகச் சந்தோஷத்துடன்பேசுவதைக்கண்டு அந்தஸந்யாஸி ஸந்தோஷமடைந்தார். எல்லாரும் ஸந்தோஷப்படுவதனால் (அந்த) ஸந்யாஸிவேஷந்தரித்த அர்ஜுனனும் ஸந்தோஷமடைந்தான். நிசரூபம்தெரியாமல் வந்துசேர்ந்திருக்கும் அர்ஜுனனை எல்லாரும்பூஜிக்கக்கண்டு கிருஷ்ணபகவான் தாமும் சந்தோஷத்துடன் கௌரவித்துப் பூஜைசெய்தார். மனத்துக்கினிய அதிதியும் மிகச்சிறந்தவனுமாகவந்திருக்கிற அந்தயதியைப்பார்த்து அந்தக்கிருஷ்ணபகவான் தம்முடன்பிறந்த சகோதரியான ஸுபத்ரைக்குப் பின் வருமாறு சொல்லலானார்:

"ஸுபத்ரையே! இந்தரிஷி நமதுதேசத்துக்குப் புதியவராகவந்தவர்; உறுதியானநியமமுள்ளவர். இவர் உன்கன்னியாந்தப்புரத்தில் வஸித்துக்கொண்டு எப்போதும் பூஜையைப்பெறக்கடவர். இந்தயதிக்கு நீ பூஜைசெய்யவேண்டுமென்று நமதுபெரியவராகிய பலராம

ரும் நியமித்திருக்கிறார். யதுபுத்திரியே! பக்ஷணங்களையும் போஜனங்களையும் அன்புடன்கொடுத்து எப்போதும் ஸந்யாஸியை ஆராதனம்செய். இந்தரிஷி என்னசொல்வாரோ அதையெல்லாம் சந்தேகமில்லாமல் நீசெய்யவேண்டும். ஸுபத்ரே! நீ உன்ஸகிகளுடன் கூட இவர்வசத்திலிருப்பாயாக. ஸுபத்ரையே! முற்காலங்களிலும் பிக்ஷைக்காகத்தேடிவந்த யதிகள் யாதவர்கள்கன்னியாந்தப்புரங்களிலேதான் வாஸஞ்செய்துகொண்டிருந்தனர். சிறந்தபுகழுள்ளவளே! கன்னியாந்தப்புரத்திலுள்ள கன்னிகைகள் சோம்பாமல் சரியான காலங்களில் அவர்களுக்குப் போஜனங்களையும் பக்ஷணங்களையும் கொடுப்பதுவழக்கம்" என்றார். அந்தஸுபத்ரை, கிருஷ்ணைப்பார்த்து, "அப்படியேயாகட்டும்; நீர்சொன்னபடி செய்வேன். என் ஒழுக்கத்தினலும் பணிவிடையினலும் பிராமணச்ரேஷ்டரைச் சந்தோஷிக்கச்செய்வேன்" என்றாள். இவ்வாறு தனஞ்சயன் ஸுபத்ரையினல் பக்ஷணபோஜனங்களினல் மிகவும்ஆராதிக்கப்பட்டு ஸந்யாஸிரூபமாகவே சிலகாலம் வஸித்தான். குணங்களெல்லாம் நிரம்பினவளும் கிருஷ்ணனுக்குச்சமோதரியுமான ஸுபத்ரையை எப்போதும்பார்ப்பதனல் அவனுக்கு அவள்மீது காதலுண்டாயிற்று. அந்தச் சிறந்தபெண்ணைக்கண்டு தன்எண்ணத்தை வெளிப்படுத்தாமலே உஷ்ணமான நீண்டபெருமூச்சுவிட்டு மன்மதனுக்குட்பட்டான். துருபதன்புத்திரியான கிருஷ்ணையையுங்கூட அழகில் ஸுபத்ரைக்கு ஒப்பாகஅவன்நினைக்கவில்லை. இந்திரசேனையென்னும்பெண்ணே, அல்லது வருணன்மகளோ நேரே பூமியில் வந்திருப்பதாக நினைத்தான். பூர்வகாலத்தில் சிறந்தவர்களான அந்ததேவகன்னிகைகளுங்கூட இப்போது இந்தஸுபத்ரைக்கு ஒப்பாகஇரார்களென்னும் நினைத்தான். தீர்த்தயாத்திரைக்குக் குறித்தகாலஞ்சென்றும், காமனுடையஅங்குசத்தினல் ஸுபத்திரையினிடம் தடுத்துநிறுத்தப்பட்ட அர்ஜுனன் தன்ஸஹோதர்களையும் நினைக்கவில்லை. தோழிமார்களின் கூட்டத்தோடுசேர்ந்து விளையாடும் விஞ்ஞதமுமாயிருந்த ஸுபத்ரையைக்கண்ட அவன், ஸ்வாஹாதேவியைக்கண்ட அக்கினிபோல் வீருப்புற்றான். புகழ்பெற்ற அர்ஜுனனுடையஜனனத்தையும் மகிமையையும்பற்றிக் கதனென்னுமாதவன் ஸுபத்ரையினிடத்தில் முன்னமேசொல்லியிருந்தான். சிறந்தஞானமுள்ள கண்ணனும் முன்னர் இடிமுழக்கத்தைக்கேட்டு அதற்கு அர்ஜுனனை உபமானமாகக்கூறி அவன்வரலாற்றைச் சொல்லியிருந்தார். சிறந்தவில்லாளிகளான யாதவர்களுக்குள் அர்ஜுனனை உபமானமாகவைத்

துத்தான் கோபித்தும் கர்வித்தும்பேசுவதும், பராக்கிரமத்தைச்செய்வதும் நடந்தன. யாதவர்கள் ஒருவர்க்கொருவர் சண்டைபூசல்களில், "அர்ஜுனன்கூட எனக்குஈடாகான். நீ எக்கே" என்று சொல்லிக்கொள்வர். யாதவர்கள் தங்களுக்குப்பிறந்த பிள்ளைகளை எடுத்துக்கொள்ளும்போது, "குழந்தாய்! பராக்ரமத்தில் அர்ஜுனனுக்கொப்பான வில்லாளியாகக்கடவாய்" என்று ஆசீர்வாதங்களைக் கூறுவர். அதனால் அர்ஜுனனுடைய பராக்ரமத்தைப்பற்றியே பரத்ச்ரேஷ்டனான அவன்மேல் ஸுபத்திரை ஆசைகொண்டிருந்தாள். அந்த ஸத்தியஸந்தனுடைய அழகினாலும் திறமையினாலும் மயலுற்றாள். தூதர்களிடத்தும் அதிதிகளின்கூட்டங்களிடத்தும் கதனென்னும் யாதவனிடத்தும் கேள்விப்பட்டே, தான்காணுத அர்ஜுனன்மேல் அந்தஸுபத்ரை மனம்வைத்தவளாயிருந்தாள். எவன்எவன் குருஜாங்கலதேசத்தைப்பற்றிப் பேசுவதாகக் காணப்பட்டானோ, அவன் அவனையெல்லாம் அப்போதே ஸுபத்திரை அர்ஜுனனைப்பற்றிக்கேட்பதுவழக்கம். இவ்வாறு அடிக்கடி கேள்வியுற்றிருந்ததனாலும் பலமுறை விசாரித்தறிந்ததினாலும் அர்ஜுனன் ஸுபத்திரைக்குக் கண்முன்நின்றவன்போலானான். நாண் உரசுவதனால் வடுப்பட்டவையும் ஸர்ப்பங்களைப்போன்றவையுமான புஜங்களைப் பார்த்தபோது ஸுபத்திரைக்கு இவன் அர்ஜுனன்தானென்று நிச்சயமுண்டாயிற்று. ஸுபத்திரை அர்ஜுனனுடைய உருவத்தை எப்படிப்பட்டதாகக்கேட்டிருந்தாளோ அப்படிப்பட்ட உருவத்தைதாடுகூடிய யதியைக்கண்டு மிகுந்த ஆனந்தமடைந்தாள்.

ஒருகால் அர்ஜுனன் உட்கார்ந்திருக்கும்போது ஸுபத்ரை, "முனிவரே! நீர் பலதேசங்களிலும் கிராமங்களிலும் எவ்வாறுஸஞ்சரித்தீர். நீர் இடைவிடாமல் சஞ்சரிக்கும்போது தடாகங்கள், நதிகள், காடுகள், தேசங்கள் எவ்வெவற்றையடைந்தீர்?" என்றுகேட்டாள். ஸுபத்ரையால் அவ்வாறுகேட்கப்பட்ட அர்ஜுனன் மிகுந்த ஸந்தோஷத்துடன் அவளைப்பார்த்து அமிர்தம்போன்ற அனேகம் வேடிக்கைவார்த்தைகளைப்பேசி, பலவிதமானகதைகளைச்சொன்னான். அவன் உலகத்தில் அனேகவிதமாக ஸஞ்சரித்தவிஷயத்தைக்கேள்வியுற்ற அந்தக்கன்னிகைக்குத் தான் நினைத்ததுநினைத்தவாறே நிச்சயமாயிற்று. ஒருபுண்ணியகாலத்தின்ஸந்தர்ப்பத்தில் ரஹஸ்யத்தில் தனிமையாக ஸுபத்ரை அர்ஜுனனிடம்சென்று ஸந்தோஷத்துடன், "பகவானுனஸ்வாமிகள் தேசங்களெல்லாம்சஞ்சரித்தபோது காண்டவப்பிரஸ்தத்தில் வாஸஞ்செய்கிற ஈங்கள் அத்தையாகிய குந்தியைக்

கண்டதுண்டா? யுதிஷ்டிரர் ஸஹோதரர்களெல்லாரோடுங்கூட ஸ்நேகமாகவும் ஸந்தோஷமாகவும் இருக்கிறாரா? புத்திசாலியான தர்ம ராஜாவினிடம் பீமன் தன்கடமையைச் செய்துவருகிறானா? தர்ம ராஜரின் இஷ்டத்தையேகருதும் தனஞ்சயன் தன்பிழையினால் காம போகங்களை விலக்கியிருந்தவன் குறித்தகாலத்தைக் கழித்தானா? ஸுகங்களில் பழக்கப்பட்டவனும் கஷ்டங்களையறியாதவனும் நீண்ட கைகளுடையவனும் எதிரிகளையடக்குகிறவனுமாகிய பார்த்தன் வெளித்தேசங்களில்வசித்தவன் இப்போது எங்கேஸஞ்சரிக்கிறான். பகவானேயரீங்கள் அர்ஜுனனைக்கண்டாவது கேட்டாவதிருப்பீர்களா" என்றுகேட்டனள். அவள்சொன்னதைக்கேட்டுச் சிரித்துக்கொண்டு அவளைப்பார்த்து, "குந்திதேவி புத்திரர்களோடும் மருமகளோடும் ஸுகமாகஇருக்கிறாள்; பிள்ளைகளைப்பார்த்துச் சந்தோஷமடைந்து கொண்டு காண்டவப்பிரஸ்தத்திலிருக்கிறாள். பாண்டவனான தனஞ்சயன், தாயாரும் ஸஹோதரர்களும் அனுமதிகொடுக்கப்பெற்றுச் சன்னியாசிரூபத்தோடு தனிமையாகத் துவாரகையில்வஸிக்கிறான். கிருஷ்ணஸஹோதரியே! நீ எப்போதும் பார்த்துக்கொண்டிருந்தும் ஏன் கண்டுபிடிக்காமலிருக்கிறாய்?" என்றுசொன்னன். கிருஷ்ணனுடையதங்கையான ஸுபத்திரை அவன்சொன்னதைக் கேட்டபோது பெருமூச்சுவிட்டுநிலத்தைக்கீறிக்கொண்டுநின்றனள். அப்போது ஆயுததாரிகளெல்லாரிலும் சிறந்தவனான அர்ஜுனன் மிகுந்த ஸந்தோஷமடைந்து, "அர்ஜுனன் நான்தான்; சிறந்தபெண்ணே! கேள்வியினால் என்னிடத்தில் உனக்கு விருப்பமுண்டானதுபோல எனக்கும் எப்போதும் உன்குணங்களைக்கேட்டதனால் உன்மேல் விருப்பமிருக்கிறது. ஸுபத்திரையே! நல்லநாளில் தர்மப்பிரகாரம் நான் உன்னால் சுயம்வரஞ்செய்யப்பட்டு ஸாவித்திரிக்கு ஸத்தியவான்போல உனக்குக் கணவனாகக்கடவேன்" என்றுசொன்னன். இவ்வாறு சொன்னவுடன் அர்ஜுனன் ரதாகிரூஹத்துக்குள்பிரவேசித்தான். அதன்பிறகு மெல்லியவளானஸுபத்ரை வெட்கமும் காதலுமுற்ற வளாய் உயர்ந்தசயனத்திற்படுத்துக்கொண்டு என்றும்மயங்காதவள் மயக்கமடைந்தாள். அவள் மனத்தில் வெட்கமுள்ளவளாயிருந்ததனால் சன்னியாசிக்குரியபூஜையைச்செய்யவில்லை. கன்னியாந்தப்புரத்தில் நடந்தவிஷயத்தைக் கிருஷ்ணபகவான் ஞானதிருஷ்டியினாலறிந்து அப்போதே அர்ஜுனனுக்குப் போஜனமுதலியவற்றைக்கொடுக்கும்படி ருக்மிணிக்குக் கட்டளையிட்டார். அப்போதுமுதல் அர்ஜுனன் அந்தஸுபத்திரையையெண்ணித்துக்கொண்டு காமத்தினால்

மிகவும்பீடிக்கப்பட்டு அந்தத்தோட்டத்திலிருந்தான். ஸுபத்திரையும் அர்ஜுனன்பிரிவை ஆற்றுதவளாயிருந்தாள். மனங்கலங்காத ஸுபத்திரை இளைத்தும், முகநிறமாறியும், மனக்கவலையும் வ்யஸனமும் மிகுந்தும் எக்காலமும் பெருமூச்சுவிட்டுக்கொண்டும், படுக்கை ஆஸனம் சந்தனம் புஷ்பம் போகங்கள் இவற்றில்ஒன்றினுலும் ஆறுதலையடையாமலுமிருந்தாள்; இரவும்பகலும் படுப்பதில்லை. பார்ப்பதற்குச் சித்தப்பிரமைகொண்டவள்போலிருந்தாள். இப்படிவியஸனப்பட்டுக்கொண்டிருக்கிற ஸுபத்ரையைநோக்கி ருக்மிணிதேவி, "யதுவம்சத்துப்பெண்ணே! சிறந்தவளே! தைரியத்தைக்கைப்பற்றி வியஸனப்படாமலிரு" என்றுசொன்னுள்.

இவ்வாறு கிருஷ்ணன் உத்தரவினுல் ஸுபத்திரைக்குச்சொல்லி ருக்மிணி தன்மாமியாரானதேவகியினிடம்சென்று, "அர்ஜுனன் யதிவேஷத்தோடு மிகுந்தநியமமுள்ளவனுக வந்தான். அவன் கன்னியாந்தப்புரத்துக்குட்போய் ஸுபத்திரையால் சந்தோஷத்துடன் பூஜிக்கபபட்டான். ஸுபத்திரையும் அவனையறிந்துகொண்டு லஜ்ஜைப்பட்டு மயல்கொண்டிருக்கிறுள். அவள்அல்லும்பகலும்உண்பது முதலியவற்றைவிட்டுப் படுத்தபடி இருக்கிறுள்" என்று ரகஸ்யமாகச்சொன்னுள். ருக்மிணி இவ்வாறுசொல்லக்கேட்ட தேவகி வ்யஸனப்பட்டுக்கொண்டிருக்கின்ற ஸுபத்திரையினருகேசென்று, அவளைப்பார்த்து, நயமாக, "யாதவியே! சிறந்தவளே! தைரியத்தைக்கைப்பற்றி வ்யஸனப்படாமலிரு. ஸுபத்திரையே! சிறந்தபுத்தியுள்ள ராஜாவாகிய வஸுதேவருக்கும் கிருஷ்ணனுக்கும் தெரிவித்தாவது உனக்கு ஸந்தோஷத்தைச் செய்விக்கிறேன். உன்சமாசாரத்தைப் பிறகுதெரிந்துகொள்ளுகிறேன்; பெண்ணரசியே! வியஸனப்படாதே" என்றுசொன்னுள். ஸுபத்திரையின் பிரியத்தைச்செய்கிறவளாகிய அந்தத்தாயார் இவ்வாறு அவளுக்குச்சொல்லிவிட்டு அப்போதே ஸுபத்திரையைப்பற்றி வஸுதேவருக்குத் தெரிவித்தாள். "ஸுபத்திரை ஏகாந்தத்தில் தனித்துஉட்கார்ந்திருக்கிறுள்; ஸுகமாக இல்லை; தோட்டத்திலிருக்கும் அழகுள்ளஸ்யாலி அர்ஜுனனென்றுநாங்கள் கேள்விப்படுகிறோம். உயர்ந்தபுத்தியுள்ளவரே! நமது உறவினர்கேட்கக்கூடியதாயிருந்தால் அக்ரூரனுக்கும் கிருஷ்ணனுக்கும் ஆஹுகனுக்கும் சாத்யகிக்கும் இதுதெரிவிக்கத்தக்கது" என்று சொன்னுள். அதைக்கேட்டு வஸுதேவர் அக்ரூரருக்கும் ஆஹுகனுக்கும் தெரிவித்து அவர்களோடும் கிருஷ்ணனோடும்கூட ஆலோசித்தார். அக்ரூரரும் உக்ரஸேனனும் சாத்யகியும் கதனும் பிருதுவிர

வனும் ஸ்ரீ கிருஷ்ணனும் சினியுடன்சேர்ந்து, "இதுசெய்யலாம்; இதைச்செய்யவேண்டும்; இதைத்தான் செய்யவேண்டும்" என்று அடிக்கடிசொல்லி நிச்சயம்செய்தனர். ஜனமேஜயரே! ருக்மிணியும் ஸத்யபாமையும் தேவகியும் ரோகிணியும் வஸுதேவரோடுகூடப் புரோகிதர்சொற்படிநின்று பன்னிரண்டாவதுதினத்தில் விவாகத்தை நடத்தஆலோசனைசெய்தனர். ஜனமேஜயரே! கிருஷ்ணன் அர்ஜுனனுடையவிருப்பம் நிறைவேறுவதற்காகவும் ஸுபத்திரையின்துயரத்தைநீக்குவதற்காகவும் பலராமருக்கும் உத்தவருக்குந்தெரியாமல் கல்யாணஞ்செய்யக்கருதி மஹாதேவபூஜைக்காக முப்பத்துநான்குதினம் இரவும்பகலும் மஹோத்ஸவம்நடப்பதென்றுசொல்லி, "இன்றைக்கு நாலாவதுநாள் எல்லாவருணத்தாரும் யாதவர்களனைவரும் பெண்டுபிள்ளைகள்சுற்றத்தார்வேலைக்காரர்களுடன் கடலில் உள்தீவுக்குச்செல்லக்கடவர்" என்று நகரத்தில்பறையறைவித்தார். இவ்வாறு கட்டளையிடப்பட்ட அவர்களெல்லாரும் அவ்வாறே எல்லாவற்றையும்செய்தனர். ஜனமேஜயரே! பிறகு எல்லாயாதவர்களுக்கும் கடலின்உள்தீவில் முப்பத்துநான்குஇராப்பகல் பெரியஉத்ஸவம்நடந்தது. கிருஷ்ணன், பலராமர், ஆஹுகன், அக்ரூரன், பிரத்யும்னன், சினி, ஸத்யகன் இவர்களும், குகுரதேசத்தவர்களும் அந்தகதேசத்தவர்களும் யாதவர்களும் மகிழ்ச்சியுற்று ஸமுத்திரத்திற்குச்சென்றனர். யாதவர்களும் நகரத்துஜனங்களுமாகியஅனைவரும் பிராம்மணர்களுடன் யந்திரங்கள்பூட்டிக் கொடிகள்கட்டின கப்பல்களிலேறிச்சமுத்திரயாத்திரைபோயினர். அப்போது ஸுபத்திரை, அர்ஜுனனால் எவப்பட்டு யாதவரெல்லாராலும்பூஜிக்கப்பட்ட தாமரைக்கண்ணனிடம் விரைவாகச்சென்று, "அந்தப்பகவானை ஸந்தியாஸி பன்னிரண்டுநாள் காரியத்துடன் இங்குஇருக்கப்போகிறாராம். அவரிருக்கும்வரை அவருடையபூஜைமுறையை யார் விடாமல்நடத்துவது" என்றுகேட்டாள். கண்ணபிரான் அவளைப்பார்த்து, "யதுபுத்திரியே! அந்தரிஷியைப்பூஜிப்பதற்கு உன்னைத்தவிர வேறுயார் சிறந்தவர். இங்கே யாரும் அதற்குத் தகுதியுள்ளவரில்லை. இப்போது நம்அபிப்பிராயப்படி நீயே அம்மஹரிஷியின்சொல்லில் கட்டுப்பட்டுப் புகழையும் தர்மத்தையும் கவனித்து அவருடையகாரியங்களையெல்லாம் செய்வாயாக. ஸுபத்திரையே! அந்த முக்கியமான அதிதிக்கும் மற்றுமுள்ள தபஸிகள்எல்லாருக்கும் நீயே வேண்டியவற்றைச்செய்து அடக்கியிருப்பாயாக" என்றுசொன்னர். இவ்வாறு மதுஸூதனர் யதிபிரதிஷ்டைக்காக ஸுபத்திரைக்குக் கட்டளையிட்டுச் சங்கவாத்தியத்

தோடும் பேரிகையின் முழக்கத்தோடும் சென்றார். பிறகு குகுரர்களும் அந்தகர்களும் உக்கிரஸேனன் முதலியவரோடும் பறைகளும் பேரிகைகளும் முழங்க உள்ளேவைச்சேர்ந்து தானதர்மங்களைச்செய்தனர். மஹேலைகளோடும் மஹாவனங்களோடுங்கூடிய அப்பெருந்தீவு ஏழுயோசனை அகலமும் பத்துயோசனைநீளமுமுள்ளதாயிருந்தது. கரைகளோடுகூடிய அனேக தடாகங்களோடும் வாவிகள்குட்டைகளோடும் அழகியகாடுகளோடும்கூடிய தோட்டங்கள் எல்லாயாதவர்களுக்கும் கிருஷ்ணனுக்கும் மிகுந்தஸந்தோஷத்தோடு விளையாடுவதற்கு யோக்கியமாகவும் குகுரர்களுக்கும் அந்தகர்களுக்கும் யாதவர்களுக்கும் பிரியமாகவும், இரண்டாவது ஸ்வர்க்கம்போலச் சிறப்புள்ளதாயிருந்தது. உக்கிரஸேனனைத் தலைவனாகவுடைய குகுரர்களும் அந்தகர்களுமாகிய அனைவரும் தானதருமங்களைச் செய்துகொண்டு முப்பத்துநான்கு இராப்பகல்கள் ஸந்தோஷமாகப் பொழுதுபோக்கினர். யாதவர்களெல்லாரும் பலவிதமான மாலைகளையும் ஆபரணங்களையும் சந்தனங்களையும் அணிந்து மனங்களித்து விளையாடிக்கொண்டிருந்தனர். அப்போது அழகான ஆட்டம் பாட்டு வாத்தியங்களினால் ஸந்தோஷமடைந்தனர். யாதவச்ரேஷ்டரான சார்ங்கபாணி நகரில்திரும்பிவரும்போது ஸுபத்ரா விவாஹஞ்செய்துகொள்வதற்குச் சரியானகாலமென்று அர்ஜுனன் நினைத்தான்.

இருநூற்றுநாற்பத்திரண்டாவது அத்தியாயம்.

ஸுபத்ராஹரணபர்வம். (தொடர்ச்சி.)

சுபத்ராகல்யாணம்.

பாண்டவனான அர்ஜுனன் குகுரர்களும் அந்தகர்களும் யாதவர்களும் தீவுக்குச்சென்றதைத் தெரிந்துகொண்டபின், ஸுபத்ரையைப்பார்த்து பின்வருமாறு சொல்லலானான் : "ஸுபத்ரையே! எல்லாவருணங்களிலுமுள்ள ஸ்ரேஷ்டர்களுக்கும் நன்மைக்காகத் தர்மமுள்ளவிவாஹம் ரிஷிகளால் சாஸ்திரத்தையனுஸரித்து அனேகவகைகளாக விதிக்கப்பட்டிருக்கிறது. அதைக்கேள். தந்தை, ஸோதரன், தாய், மாதுலன், தந்தையின்தந்தை, தந்தையின் ஸோதரன் இவர்கள் கன்னிகையைத் தானஞ்செய்வதற்கு அதிகாரமுள்ளவர்கள். ஸுபத்ரையே! உன்தந்தை சிவபிரானுடையமஹோத்ஸவத்தைத் தரிசிக்கவிரும்பிப் பிள்ளைகளோடும் பேரர்களோடும் சுற்றத்தார்க

தோடும்கூட உள்ளீடுக்குப் போயிருக்கிறார். விசாலமான நேத்திரங்களையுடையவளே! என்ன காரணமும் துரதிருஷ்டத்தினிருக்கின்றனர். ஸுபத்ரையே! ஆதலால், விவாகங்களில் மிகுதியான காந்தர்வ விவாகந்தான் நமக்குச் சாஸ்திரத்துக்குழுக்கது. யாதவியே! கன்னிகை வரனிடமிருந்தும்விஷயத்தில் நான்குவகையான கிரியைகள் விதிக்கப்பட்டுள்ளன. பிராமணரான விவாகங்களின்வரலாறு எப்படியென்றுகேள். கன்னிகையைவேண்டிவரணையத்தைத்தச் சாஸ்திரவிதிகளைச்செய்து அவனுக்குத் தானத்தினால் கொடுக்கப்பட்டவள் பத்னியென்று பெரியோர்கள் சொல்லுகிறார்கள். அவள் கணவனுக்கு அடங்கினவளும் தர்மபுத்தியுள்ளவளுமாயிருப்பவள் தேவலோகத்தைநடத்துவதற்கும தன்னைக்காப்பாற்றுவதற்கும் கன்னிகாதானத்தில் வாங்கிக்கொள்ளப்பட்ட பெண் பார்யையென்று முனிவரால் சொல்லப்படுகிறாள். வாலுடையதானதர்ப்பையினால் தர்மமாகவரிக்கப்பட்டுத் தன்வீட்டுக்கழைத்துக்கொண்டுவரப்பட்டுவயதுவந்ததின் சாஸ்திரோக்தமாக வரன்தானத்தினால் கன்னிகாதானஞ்செய்யப்பட்டவள் தர்மினியென்றும் பிதிர்க்களுதவியென்றும் சொல்லப்படுகிறாள். தானே விரும்பிப் புத்திபூர்வத்தினிமித்தமாக காந்தர்வவிவாகஞ்செய்துகொள்ளப்பட்டு அடங்கின பெண் பிரஜாவதியென்னப்படுகிறாள். தனக்குக் கணவனைத் தானே அன்பினால்நிச்சயிக்கிறவள் (ஸ்வயம் வரத்தைவரிப்பவள்) ஜாயையென்னும் பெண். இந்த நான்கு வகைகளிற்சேர்ந்த பத்னி, பார்யை, தாரை, ஜாயையென்னும் நால்வர்மட்டும் அக்னிஸாக்ஷிபூர்வத்தர்மசாஸ்திரத்திற்சொல்லப்பட்ட கிரியைகளோடு விவாஹம்செய்யப்படுகிறவர்கள். காந்தர்வவிவாகத்திற்குக் கிரியைகளில்லை. அதற்கு விருப்பந்தான் முக்கியமாகவேண்டியது. விருப்பமுள்ளபெண்ணுக்கு விருப்பமுள்ளபுருஷனுடன்பரஸ்பரத்தில் மந்திரமில்லாமற் செய்யப்படுவதாகச் சொல்லப்படுகிறது. யாதவபுத்திரியே! நான்சொல்லுகிற கிரியையில்லாத விவாஹத்தைத்தான் நீ செய்யவேண்டும். அயனமுர் ருதுவும் பாதமும் பக்ஷமும் திதியும் கரணமும் முகூர்த்தமும் லக்னபலமும் சேர்ந்திருக்கின்றன. விசாலமானநேத்திரங்களையுடையவளே! உத்தராயணம விவாஹத்திற்குச் சிறந்தது. மாதங்களில் வைகாசிமாதமும பக்ஷங்களில்சுக்லபக்ஷமும் நக்ஷத்திரங்களில்ஹஸ்தமும திதிகளில்திருதியையும் கரணங்களில் பவமென்னும்கரணமும் லக்னத்தில்மகரமும் சிறந்தவை. மைத்ரம்என்னும்முகூர்த்தம் நமமிருவருடைய சுபகாரியமான விவாஹத்திற்கும் உரியது. ஸுபத்திரையே! இன்றுஇரவில் இவையெல்லாம்

சேரப்போகின்றன. பிரகாசிப்பவரில் சிறந்தவரான சூரியபகவான் அஸ்தமனமாகிறார். மேற்சொன்னவிவாஹலக்னம் இந்தராத்திரியில் வரப்போகிறது. ஸந்தேஹமில்லை. ஜகத்துக்குக்கர்த்தாவும் ஸர்வஜ்ஞருமான நாராயணனுங்கூட அறியமாட்டார். இந்தத்தர்மசங்கடம் வந்திருக்குட்போது எதைச்செய்தால் ஸுகமுண்டாகும். பாதவியே! மனத்திலுண்டானகாதலினால் ஒன்றுந்தெரியாமல் பிதற்றுகின்ற எனக்கு யதுபுத்திரியானதேவி யன் மறுமொழிசொல்லாமலிருக்கிறாய்?" என்றான்.

சுபத்ரை, அர்ஜுனன்சொன்னதைக்கேட்டுக் கிருஷ்ணனையே சிந்தித்துக் கண்ணீரினால்மறைக்கப்பட்டகண்களோடு ஒன்றும்சொல்லாமலிருந்தாள். ஜயிப்பவரிற்சிறந்தவனான அர்ஜுனன் விருப்பத்தினாலுண்டானபிரமையினால் பிதற்றிக்கொண்டு லதாகிருஹத்துக் குட்சென்று தன்பிதாவானஇந்திரனைத் தியானஞ்செய்தான். அர்ஜுனன் தியானிப்பதையறிந்து பெரியமனமுள்ளஇந்திரன் இந்திராணியும் நாரதர்முதலானமுனிவர்களும் கந்தர்வர்களும் தெய்வலோகநாட்டியப்பெண்களும் சாரணர்களும் யக்ஷர்களும் அருந்ததியும் வஸிஷ்டரும்சூழக் குசஸ்தலியென்னும் இடத்திற்குவந்தான். கிருஷ்ணனும் சுபத்தையறிந்துகொண்டு நித்திரையினால் ஒன்றுந்தெரியாதிருந்த பலராமரைவிட்டுவிட்டு அக்ரூரர், சினி, ஸத்யகன், கதன், வஸுதேவர், தேவகி, புத்திமானுஆகுகன்இந்தப்பக்கங்களுடன்கூடஇரவில் துவாரகாபுரிக்குவந்தார். பெரும்புகழ்பெற்ற தேவதேவரான கிருஷ்ணபகவான் நாரதர்முதலான ரிஷிகளைப்பூஜித்துக் குசலபிரச்னம்செய்தார். தேவேந்திரன் விவாஹகாரியத்தைக்குறித்து வேண்டஅவர் அப்படியேயாகட்டுமென்று மறுமொழிகூறினார். ஆகுகனும், வஸுதேவரும், அக்ரூரரும், ஸாத்யகியும், இந்திரனுக்குத்தலைவணங்கி, "தேவர்களுக்குந்தேவனே! லோகங்களுக்குநாதனே! ஜகத்தைக்காப்பவனே! உனக்குநமஸ்காரம். விசுவத்தைஜயிப்பவனே! பிரபுவே! நீகேட்டதனால் அனுக்கிரகிக்கப்பெற்றநாங்களும் எங்கள் சுற்றத்தாரெல்லாரும் கிருதார்த்தர்களானோம்" என்றுகூறினார்கள். இவ்வாறுசொல்லி இந்திரனைக்கௌரவித்தும் பூஜைசெய்தும் இந்திரனுடையஅனுமதிப்படி அவர்களெல்லாரும் ரிஷிகளுடன்கூடப்பிரியத்தோடு இந்திரபுத்திரனஅர்ஜுனனுக்குச் சாஸ்திரோக்தமாக விவாகத்தைச்செய்வித்தனர். அருந்ததியும் இந்திராணியும் ருக்மிணியும் தேவகியுமாகிய இவர்கள் தெய்வப்பெண்களுடன்சேர்ந்து ஸுபத்ரைக்கும் அர்ஜுனனுக்கும் எல்லா மங்களாசாரங்களையும்செய்

தனர். காசியபமஹரிஷி ஹோமம்செய்தார். சபையிலிருந்த நாரதர்முதலானவர்கள்எல்லாரும் அப்போது அர்ஜுனனுக்குச் சிறந்த ஆசீர்வாதங்களைச்செய்தனர். எல்லாத்தேவர்களாலும் ஸ்தோத்திரம் பண்ணப்பட்ட தேவேந்திரன் அப்போது திக்பாலகர்களுடன்கூட அர்ஜுனனுக்கு ஸ்நானஞ்செய்வித்துக் கிரீடம், தோள்வளைகள், ஹாரங்கள், தோடாக்கள், குண்டலங்கள்முதலிய ஆபரணங்களினால் இரண்டாவதுஇந்திரனைப்போல அவனை அலங்கரித்து அவனைத்தழுவிக்கொண்டு மகிழ்வுற்றான். அப்போது இந்திராணியும் யாதவஸ்திரீகளும் அருந்ததிமுதலானவர்களுடன்கூட ஸுபத்தையின்விவாகத்துக்குரிய மங்களங்களை நடத்தினர். அங்குள்ளதேவஸ்திரீகள் அப்ஸரஸுகளுடன் தங்களுடையஆபரணங்களினால் ஸுபத்ரைக்குஅலங்காரஞ்செய்து அவளை இந்திராணியைப்போலநினைத்தனர். பிறகு எல்லாச்சிறப்புக்களோடுஞ்செய்யப்பட்டவிவாகம் சோபித்தது. அர்ஜுனன் மந்திரங்களினால்ஹோமம்செய்து ஸுபத்திரையைப் பாணிக்கிரஹணம்செய்துகொண்டபோது இந்திராணியோடுகூடிய இந்திரனைப்போல விளங்கினான். அழகானஆபரணங்களை அந்தஸுபத்திரையும் அர்ஜுனனிடம் அதிகப்பற்றுள்ளவளானாள். அப்போது இந்திரன் முதலானதேவர்கள் ஸந்தோஷமடைந்து, "அர்ஜுனனுக்கு ஸுபத்திரைதான் பிரியத்தினாலும் அழகினாலும் உத்தமலக்ஷணங்களினாலும் தகுதியுள்ளவள். அர்ஜுனனும் ஸுபத்திரைக்குத்தகுந்தவன்" என்றுசொன்னார்கள். இவ்வாறு அந்தத்தேவர்களும் கந்தர்வர்களும் அப்ஸரஸுகளனைவரும் யாதவர்களனைவரும் விவாகஞ்செய்வித்து விடைபெற்றுக்கொண்டு வந்தவாறேசென்றனர். யாதவர்கள் அர்ஜுனனிடம்விடைபெற்றுக்கொண்டவுடனே உள்தீவுக்குச்சென்றனர். அப்போது யதுநந்தனராகியகிருஷ்ணன் அர்ஜுனனைப்பார்த்து, "பாதச்ரேஷ்டா! அர்ஜுனா! இருபத்திரண்டுதினங்கள் இவ்விடத்தில் வாஸஞ்செய்தபிறகு, சைப்யம், ஸுக்ரீவம்*முதலிய குதிரைகள்பூட்டின என்னுடையரதத்தில் ஸுபத்திரையுடன்கூடவறி, ஸுகமாகக் காண்டவப்பிரஸ்தம்செல். பாரதனே! யாதவர்களுடன் கூடப் பின்புநான்வருவேன். நீ, யதிதேவஷத்தேதரதுகூடவே நியமத்தைவிடாமல் அதுவரையில் ருக்மிணியின்கிருஹத்தில் வாஸம்செய்" என்றுசொன்னார். இவ்வாறுசொன்னபின் கிருஷ்ணபகவான் உள்தீவுக்குச் சென்றார். அர்ஜுனன் விவாஹம்செய்துகொண்ட

---

* மேகபுஷ்பம் வலாஹகம் என்கிறஇரண்டும் பின்சொல்லப்படுவதனால் முதலியஎன்பது சேர்க்கப்பட்டது.

பிறகு தன்னைக்கிருதார்த்தனாகநினைத்தான். மஹாத்மாவாகிய அவனுக்கு ஸுபத்ரைமேலும் அவளுக்குஅவன்மேலும் ஒருவருக்கொருவர் அன்புவிருத்தியாயிற்று. குணங்களிற்சிறந்த ஸீதையுடன் ராமர் சேர்ந்ததுபோல அந்தஸுபத்ரையுடன் அந்தவீரனான அர்ஜுனன் சேர்ந்தான். அர்ஜுனன் அவளை அழகிலும்கற்பிலும், "ஹ்ரீ, ஸ்ரீ, ஸந்நதி" என்னும் உத்தமமான தேவஸ்திரீகளுக்கு ஒப்பானவளாக நினைத்தான். அந்த ஸுபத்ரையுடன்சேர்ந்த அர்ஜுனன் அப்போது, சரத்காலத்தில் பூர்ணப்ரகாசத்தோடு உதயமாகிய ஸுரியன்போல் இயற்கையழகினாலும் விவாகசோபையினாலும் அதிகமாகப்பிரகாசித்தான். புகழ்பெற்ற அந்தஸுபத்திரை அந்தபபுருஷச்ரேஷ்டனிடம் அன்புவைத்துக் கன்னியாந்தபபுரத்தி லிருந்துகொண்டு அவனையே பற்றினவளாயிருந்தாள்.

இருநூற்றுநாற்பத்துமூன்றுவது அத்தியாயம்.

ஸுபத்ராஹரணபர்வம். (தொடர்ச்சி.)

(அர்ஜுனன் ஸுபத்ரையுடன் கிருஷ்ணனுடையதேரிலேறிக் காண்டவப்ரஸ்தம்சேர்ந்த ஆரம்பித்தது.)

அர்ஜுனன், விருஷ்ணிகள் அந்தகர்களுடைய அந்தகரமாகிய துவாரகையிலிருந்து ஸுபத்ரையுடன்புறப்பட்டுப் போவதற்காக நிச்சயஞ்செய்து ஸுபத்ரையைப்பார்த்து, "ஸுபத்ரையே! நீ ஒரு பெரியவிரதம் முடிப்பதாகச்சொல்லிக் குணங்களிற்சிறந்த பிராமணர்களுக்குப் போஜனங்களையும் பக்ஷணங்களையும் வேண்டியமற்றவெல்லாவற்றையும் அவரவர்தகுதியையனுஸரித்துத் தானம்செய். பிறகு நாம் நமதுபட்டணத்துக்குச் செல்லவேண்டும். ஸுபத்ரையே! உடனே மஹாராஜாவின் அரண்மனைக்குச்செல். அழகும் வேகமுமுள்ள சைப்யம், ஸுக்ரீவம், மேகபுஷ்பம், வலாஹகம்என் னும்உயர்ந்தவெண்மையானகுதிரைகள் பூட்டப்பட்டதும் செம்மையாகஅலங்கரிக்கப்பட்டதுமாகிய சிறந்தஇரதத்தை நீயே சீக்கிரமாகக்கொண்டுவா. அழகியவளே! உன்தோழிமார்களுக்கு விரதத்துக்காகஎன்று சொல்லிவிட்டு எல்லாஆயுதங்களோடும்கூடச் சீக்கிரம் இரதத்தைக்கொண்டுவா. நூறுத்தடியின் ஆதாரங்களையும் கொடிகளையும் அம்பறாத்தூணிகளையும் விற்களையும் உயரமுள்ள பெரியகதாயுதங்களையும் ரதத்தில் அமைத்துக்கொண்டுவா" என்றுசொன்னான்.

இன்சொற்சொல்லுகிறவளாகிய அந்தஸுபத்ரை அர்ஜுனனால் இவ்வாறு சொல்லப்பட்டவுடன் சகிதேவனுடகூட ராஜகிருகத்துக்குப் போனாள். அங்கிருக்கிற காவலாளிகளைப்பார்த்து, "நான் ஒருவிரதத்துக்காக வந்திருக்கிறேன். ஒருபெரியவிரதத்தை முடிப்பதற்கு இந்நகரத்தில்வசிக்கவேண்டுமென்பதாகிறேன். சைப்யம், ஸுகீர்வம்முதலிய குதிரைகள்பூட்டியதும் ஆயுதங்களையுடையதும் அழகியதுமான கிருஷ்ணனுடைய அழகான ரதத்திலிருந்து நான் விரதத்துக்குப்போகவேண்டும்" என்றுசொன்னாள். ஸுபத்ரை இவ்வாறு சொல்ல, காவற்காரர்கள் அந்தச்சிறந்தரதத்தில் குதிரைகளைப்பூட்டிக்கொடுத்து அவளுக்கு மங்களாசீர்வாதஞ்செய்து கைகூப்பிநின்றனர். உயர்ந்தலக்ஷணங்கள் அமைந்த ஸுபத்ரை அர்ஜுனன்சொற்படி ஆயுதங்களையும் மற்றெல்லாவற்றையும் பற்றிக்கொண்டு சீக்கிரமாக ரதத்தைச்செலுத்தி அர்ஜுனனிடம்வந்து அவனைப்பார்த்து, "தேசாளிகளிற்சிறந்தவனே! உன்னுடையகட்டளையின்படி இதோ தேரைக் கொண்டுவந்திருக்கிறேன். கௌரவர்களை மகிழ்விப்பவனே! நீ விருப்பத்தின்படி குருதேசத்துக்குச்செல்லலாம்" என்றுசொன்னாள். சுபங்களில்விருப்பமுள்ளஸுபத்திரை தன்பர்த்தாவுக்கு ரதம்வந்ததைத் தெரிவித்தபிறகு சந்தோஷத்துடன் பிராம்மணர்களுக்கு மிகுதியான பொருள்களைக்கொடுத்தாள். மெய்யுடன்கூடிய சுவைமிக்க போஜனங்களையும் பற்பலவஸ்திரங்களையும் அவர்கள் வேண்டியஅளவு சிரத்தையோடுகொடுத்தாள். பலவகைஉணவுகளினால் திருப்திசெய்விக்கப்பட்டபிராமணர்கள் அந்தச்செல்வங்களையுமடைந்து உயர்ந்த ஆசீர்வாதங்களைச்செய்து தங்கும்இருப்பிடம்சென்றனர். அர்ஜுனனிடத்தில் ஸுபத்திரை, "அர்ஜுனரே! கடிவாளம்பிடிப்பதில் எனக்கீடானவர்கள் பூமியில் இல்லை" என்று முன்னமே சொல்லியிருந்தாள். அதனால் அந்தக்கிருஷ்ணஸமீஹாரியானசுபத்திரை முதலில் தேரிலேறிக் குதிரைகளுக்கு மங்களகாரியங்களைச்செய்து குதிரைகளின் கடிவாளங்களைப்பிடித்தாள். வீரனுகியஅர்ஜுனன் அந்தச் சன்னியாஸிவேஷத்துக்குரிய அடையாளங்களைக்களைந்து கவசத்தையணிந்துகொண்டு பெரியவில்லைக் கையிற்பிடித்து வெள்ளைஸுஸ்திரத்துடன் அந்தச் சிறந்ததேரிலேறினான். அவன் இந்திரன்கொடுத்த கிரீடத்தையும் ஆபரணங்களையுமணிந்துகொண்டு புறப்படத்தொடங்கினான். அம்பையும் கத்தியையும் வில்லையுந்தரித்த புருஷச்ரேஷ்டனான அர்ஜுனனையும் கையும்கடிவாளமுமாக அவனுடன் தேரிலிருக்கும் ஸுபத்ரையையும்கண்டு கன்னியாந்தப்புரத்தில் பெரிய இரைச்சல்

உண்டாயிற்று. அப்போது அங்குள்ளகன்னிகைகள் கிருஷ்ணஸோஹரியான ஸுபத்ரையேபோவதைப்பார்த்து, "ஸுபத்ரையே! அழகாகபேசுகிறவளே! கிருஷ்ணனுடையஅன்பனும் வீரனுமான அர்ஜுனனைக் கணவனைஅடைந்து எல்லாமனோரதங்களும் நிறைவேறினவளாஞய். மஹாபாக்யமுள்ளஸுபத்ரையே! இனிமையாகபேசுகிறவளே! எல்லாமனிதருள்ளும் சிறந்தவனும் எல்லாஉலகங்களிலும் மஹாரதனும் வீரனுமான அர்ஜுனனைக் கணவனை அடைந்தாய். கிருஷ்ணஸோஹரியானஉன்னை எல்லாப்பெண்களிலும் சிறந்தவளாகநினைக்கிறோம். ஓ! ஸுபத்ரையே! உன்கிருகத்துக்குப்போ. உனக்கு உன்பந்துக்களுடன் சேர்க்கைஉண்டாகக்கடவது" என்றுசொன்னார்கள். ஸந்தோஷமுள்ளஸ்திரீகளினால் இவ்வாறுசொல்லிச் சிலாகிக்கப்பட்டஸுபத்ரை, பிறகு அடக்கமும்வேகமுமுள்ள குதிரைகளை மறுபடியும்ஓட்டினாள். அவளுடையதோழிப்பெண் கையில் சாமரம் வைத்துக்கொண்டு அவள்பக்கத்திலிருந்தாள். பிறகு இரைச்சலுடன் கன்னியாமாடத்தின்வாயில்வழியாக வெளியேவருகின்றதும் மேககர்ச்சனம்போன்ற சப்தமுள்ளதுமாகிய அந்தஉயர்ந்ததேரை ஜனங்கள்கண்டனர். ஸுபத்ரையினால் குதிரைக்கடிவாளங்கள் பிடிக்கப்பட்ட அப்பெருந்தேரின்சப்தம் ஆகாசத்தில் மேகமோகாஷம்போலிருப்பதை நகரத்தில்வஸிக்கும்ஜனங்கள் கேட்டனர். ஸுபத்ரையினால் ஓட்டப்பட்ட உயர்ந்ததேரில் அவளுடன்இருந்த அர்ஜுனன் கங்கையுடன்சேர்ந்த கைலாஸம்போலவிளங்கினான். ஜனமேஜயராஜாவே! மஹாரதனான அர்ஜுனன் ஸுபத்ரையுடன்சேர்ந்து இந்திராணியுடன்சேர்ந்த இந்திரன்போலவும் விளங்கினான். புகழ்பெற்றஸுபத்ரை அர்ஜுனனால் எடுத்துக்கொண்டுபோகப்படுகிறதைப்பார்த்து அனேகஜனங்கள் ஓடிவந்து கலகலவென்று சப்தம்செய்து, "யாதவர்களுடையகுலத்துக்கு லக்ஷ்மிபோன்றவளும் இன்சொற்சொல்லுபவளுமாகிய ஸுபத்ரை தன்மீதுவிருப்பமுற்ற அர்ஜுனனுடன் தானும்விருப்பமுள்ளவளாகப்போகின்றாள்" என்றனர். சிலர்கோபம்கொண்டு, "பிடியுங்கள், அடியுங்கள், தாமதம்வேண்டாம்" என்றுசொல்லி நாலுபக்கங்களிலும் சூழ்ந்துகொண்டு ஆயுதங்களைப்பொழிந்தனர். இவ்வாறுபேசுகின்ற ஜனங்களுடையசப்தம் மிகப்பெரிதாயிருந்தது. அந்தவீரன் அந்தஜனங்களுடையகூச்சலினால் யானையைப்போலப் பீடிக்கப்பட்டு யாரையும்கோபமூட்டாமல் சரமாரிகளைப்பொழிந்தான். தம்ஒளியினால்ஜ்வலிக்கின்ற கூரியஅம்புகள் அரண்மனைகளிலும் தனவான்களுடையவீடுகளிலும் பிரயோகித்தான். அர்

ஜுனன் அந்தஉயர்ந்தபட்டணத்தைக் கருடன்சமுத்திரத்தைக்கலக்குவதுபோலக் கலக்கி ரைவதகபர்வதத்தின் குகைபைப்பார்த்துக் கொண்டே சென்றான்.

இருநூற்றுநாற்பத்துநான்காவது அத்தியாயம்.

ஸுபத்ராஹரணபர்வம். (தொடர்ச்சி.)

(துவாரகையிலிருந்து வெளிப்பட்ட அர்ஜுனன் யுத்தத்தில் *விப்ருது வைஜயித்துக் காண்டவப்பிரஸ்தம்சென்றதும், யுத்தத்திற்கு ஆரம்பித்த மற்றயாதவர்களோடு பலராமர்தடுத்ததும், அவர் அர்ஜுனனைக்கோபித்ததும்.)

பலசாலியான விப்ருதுசிரவஸ்என்பவன் புருஷச்ரேஷ்டனான கிருஷ்ணனுடையகட்டளையினால் பெரியசேனையுடன் ரைவதகமலையில் எப்போதும்இருந்தான். கிருஷ்ணன் ஊரைவிட்டுப்போயிருந்த பொழுது பலராமருக்குஒப்பானவனும் நகரத்தைவிருத்திசெய்பவனுமான விப்ருதுசிரவஸ் நகரத்தரக்ஷகனாகஇருந்தான். பாண்டவன் புறப்படுகிறதையறிந்து விப்ருதுசிரவஸும் புறப்பட்டான். ஊர்இரைச்சலைக்கேட்டுத் தன்சேனையைவிலக்கினான். அவன்வழியில்வந்து, ஆகாயத்திலிருந்து ஸூர்யன்வருவதுபோலத் துவாரகையின்கோபுரவாயிலிலிருந்துவருகின்ற அர்ஜுனனைக்கண்டான். வில்லைத்தரித்து மின்னலோடுகூடிய மேகத்தைப்போலிருந்த அர்ஜுனனைக்கண்டகளுல் யாதவவீரர்களுக்கு ஆச்சரியமுண்டாயிற்று. தேர்களும் யானைகளும் குதிரைகளும் கிளம்புகின்ற அந்தச்சேனையைக்கண்டு மங்களகரமான சொல்லைச்சொல்லுகின்ற ஸுபத்ரையிடத்தில் பக்தியுடன், "புருஷச்ரேஷ்டனே! நீ யுத்தஞ்செய்யும்போது அந்தயுத்தகாலத்தில் உன்தேரைநடத்தவேண்டுமென்பது நான் வெகுநாளாகக்கொண்டிருந்த எண்ணம். பார்த்தனே! வேகமும் பராக்ரமமும் ஒளியும் பலமுமுள்ள மஹாத்மாவாகிய உனக்கு ஸாரதியாகும்படி நான்கற்பிக்கப்பட்டிருக்கிறேன்" என்றுசொன்னாள். அவள்இவ்வாறுசொல்ல, அதைக்கேட்ட அர்ஜுனன் மகிழ்வுற்றுத் தன்அன்புள்ளம்மனைவியைநோக்கி, "ஸுபத்ரையே! நீ குதிரைகளை அடக்காமல்விடு. அதுவிப்ருதுவின்சேனையில் பிரவேசிக்கட்டும். பலருடன்யுத்தஞ்செய்து உன்னைச்சேர்ந்தவர்களைக்கொல்லக்கருதிப் பாணங்களைப்பிரயோகிக்கின்ற எனதுகைவன்

* இவனுக்கு விப்ருதுசிரவஸ்என்றும் பெயர்வழங்கும்.

மையைப்பார்" என்றுசொன்னன். ஜனமேஜயராஜாவே! அர்ஜுனனால் இவ்வாறுசொல்லப்பட்ட அந்தஸுபத்ரை அப்போதே ஸந்தோஷத்துடன் குதிரைகளை ஓட்டினாள். உடனே அவை சேனையில்பிரவேசித்தன. பெரியவாத்தியங்கள் அடிக்கப்பெற்றதும் கொடிகள் தூக்கிக்கட்டப்பட்டதுமாகிய அந்தவிப்ருதுவின்சேனை உற்சாகத்துடன் அர்ஜுனனைஎதிர்த்தது. அந்தச்சேனைவீரர்கள் அனேகவிதமான வடிவங்களைஉடையரதங்களின்மேலும் மிகுந்தவேகமுள்ள உயர்ந்தகுதிரைகளின்மேலுமிருந்து பாணவர்ஷங்களைவர்ஷித்துக்கொண்டு அர்ஜுனனைச்சூழ்ந்தனர். உயர்ந்தஅஸ்திரங்களையறிந்தவனும் எதிரிகளின்பாணங்களைஜயிப்பவனுமாகிய அர்ஜுனன் தனதுதிவ்யஅஸ்த்ரத்தினால் அவர்களுடையஅஸ்த்ரங்களைத்தடுத்துப் பாணங்களினால்விசாலமான ஆகாசத்தை மறைத்தான். சிறந்தகைகளையுடைய அர்ஜுனன் கூரம்புகளினால் அவர்களுடையபாணங்களையும் கிரீடங்களையும் தேரால்வீழ்களையும் தேரதண்டங்களையும் தேரின்நுகத்தடிகளையும் சக்கரங்களையும் தேரச்சுக்களையும் அதன்பலவகையந்திரங்களையும் துணித்தான். எதிரிகளைக்கொல்லவிருப்பமில்லாமையினால்கூரம்புகளைச்சேர்த்த அர்ஜுனன் அம்மஹாரதர்களை வில்லுகளும்கவசங்களும்ரதங்களும்இல்லாதவர்களாகச்செய்து ஸந்தோஷத்துடன் தன்காதலியைநோக்கிப் பாரென்றுகாண்பித்தான். ஸுபத்ரை, அந்தப்பெரியஆச்சரியத்தைக்கண்டு அர்ஜுனனைப்பார்த்து, "அர்ஜுனா! நான் கிருதார்த்தையானேன். உனக்குஸுகமுண்டாகட்டும்; நீ ஸுகமாகச்செல்" என்றுசொன்னாள். அந்தவிப்ருது அர்ஜுனனோடு யுத்தத்துக்குவந்துசேர்ந்த தன்சேனையைக்கண்டு, துரிதமாக "ஓடிவந்துநில்லுங்கள்; யுத்தம்செய்யவேண்டாம்" என்றுசொன்னன். அப்போது கடலில் காற்றினால்கிளப்பப்பட்ட பெரியஅலைகள் கரையைக்கடந்துபோகாமலிருப்பதுபோல யாதவர்கள் சேனைபதியின்சொல்லை அதிக்ரமிக்காமலிருந்தனர். உடனே புருஷச்ரேஷ்டனான விப்ருது உயர்ந்தரதத்திலிருந்து சீக்ரமாகஇறங்கிப் புருஷச்ரேஷ்டனான அர்ஜுனனிடம்சென்று ஸந்தோஷத்துடன் தழுவிக்கொண்டான். அவன் அர்ஜுனனைச்சந்தித்து, "நீ, நெடுநாளாகக் இவ்விடம் வஸிப்பதைச் சங்கசக்ரகதாதாரியான கிருஷ்ணனால் தெரிந்துகொண்டிருக்கிறேன். ஸுபத்ரையின்மேலுள்ள ஆசையினால் நீசெய்தவற்றில் ஒன்றும் எனக்குத்தெரியாததில்லை. ஜனார்த்தனர், பதிவேஷத்தோடுவந்தஉன்னை அன்புகூர்ந்துதான் வீட்டில்வஸிக்கச்செய்தனர். பலராமரையும் தேவகீவஸுதேவருக்குத்தம்பியானகிருஷ்ணனையும்

உனக்குப்பந்துக்களாக அடைந்திருக்கிறாய். பிரியமானதனஞ்சய! உன்னையும் ஸுபத்ரையையும்பற்றின ஆலோசனையில் மதுஸூதனர் எண்ணியே எப்போதும் மந்திரியாகவிரும்பினவர். வீரனே! அப்போதே எல்லாஆயுதங்களும்நிரம்பிய இந்தச்சிறந்த தேரையும் உடன் வரும் இந்தச்சேனையையும் உனக்காகக்கட்டளையிட்டு யாதவர்களின் ஸந்தோஷத்தைச்செய்வதற்காகக் கிருஷ்ணன் உள்தீவுக்குச்சென்றார். வெகுகாலமாகமறைந்திருந்து இப்போது காதலியுடன்வந்து சேர்ந்தஉன்னை உன்சகோதரர்களனைவரும் தேவர்கள் இந்திரனைப்பார்ப்பதுபோலப்பார்க்கட்டும். யாதவச்ரேஷ்டரான சார்ங்கபாணிவந்த பிறகு ஸுபத்ரையின்பின்னாலே ரதங்களும் தனங்களும்வரும். தனஞ்சயனே! க்ஷேமமாக வழியிற்செல்க; ஸுகம்பெறுவாயாக. வ்யஸனம்நீங்கினஉனக்கு வ்யஸனம்நீங்கின உன்சுற்றத்தாருடன் சேர்க்கையுண்டாகக்கடவது" என்றுசொன்னான். பிறகு அர்ஜுனன் கிருஷ்ணனுடைய அபிப்பிராயத்தையறிந்து சந்தோஷமடைந்து விப்ருதுவை நமஸ்காரஞ்செய்து விடைபெற்றுக்கொண்டு முன்னமே அர்ஜுனனுக்காகவென்று கிருஷ்ணனால்கட்டளையிடப்பட்டதும் எல்லாரத்னங்களும் உபயோகத்திற்குவேண்டிய எல்லாப்பொருள்களும் நிரம்பினதுமாகிய கிருஷ்ணனுடையரதத்தில் ஏறிப்போயினான். பொன்மயமும் நிரமமாகஅலங்கரிக்கப்பட்டதும் சைப்யசுக்ரீவங்களென்முதலிய குதிரைகள் பூட்டப்பட்டதும் கிங்கிணிகள் வரிசையாகக்கட்டப்பட்டதும் எல்லாஆயுதங்களும்நிரம்பினதும் மேககர்ஜனம்போன்ற சப்தமுடையதும் ஜ்வலிக்கின்ற அக்னியைப்போற்பிரகாசிப்பதும் எதிரிகளின்ஸந்தோஷத்தைக்கெடுப்பதுமாகிய தேரிலேறி யுத்தத்துக்குஆயத்தமாகக் கவசந்தரித்துக் கத்திபிடித்து மணிக்கட்டில் நாண்தடையும் விரலுறையும்போட்டுக்கொண்டு, பின்னேவருஞ்சேனையுடன்கூட, ஆகாசத்திற்போவதுபோன்ற வேகமுள்ளரதத்தில் சுபத்திரையை ஏற்றிக்கொண்டு தன்நகரத்தை நோக்கிச்சென்றான். அந்தஸுபத்ரை கொண்டுபோகப்படுகிறதைக்கண்டு சேனையிலுள்ள ஜனங்களனைவரும் கூவிக்கொண்டு துவாரகாநகரத்தைநோக்கி ஓடினர். அவர்களெல்லாரும் ஸுதர்மையென்கிறஸபைக்குப்போய் ஸபையின்காவலாளியினிடம் அந்தஅர்ஜுனன்செய்கையை முழுதும்சொன்னார்கள். அவர்கள் சொல்லக்கேட்டவுடன் ஸபைக்காவலாளியானவன் யுத்தஸன்னகம்செய்வதற்காகப் பொன்னலங்கரிக்கப்பட்ட பெரியகோஷமுள்ள பேரிகையையடித்தான். அந்தச்சப்தத்தினால் போஜர்களும் விருஷ்ணிகளும் அந்தகர்களும் கலக்கப்பட்டு ஒன்று

சேர்ந்து உள்த்வீபத்திலிருந்து உடனேகிளம்பினர். அவர்கள் அன்னபானங்களைவிட்டு நாலுபக்கங்களிலிருந்தும் வந்துசேர்ந்தனர். அங்கே மஹாரதர்களும் புருஷச்ரேஷ்டர்களுமாகிய விருஷ்ணிகளுஞ் அந்தகர்களும், பொன்மயமானவையும், விலைபெற்றமெத்தைகளுள்ளவையும், ரத்னங்களினாலும் பலழங்களினாலும் விசித்ரமானவையும், ஜ்வலிக்கின்ற அக்னியைப்போன்ற ஒளியுள்ளவையுமான ஸிம்மாஸனங்களில் அக்னிஹோத்ரகுண்டங்களில் அக்கினிகளிருப்பதுபோல நூற்றுக்கணக்காகவீற்றிருந்தனர். தேவர்களைப்போல உட்கார்ந்திருக்கும் அவர்களுடையஸபையில் வேலைக்காரர்களுடன்கூடிய ஸபைத்தலைவன் அர்ஜுனன்செய்ததைச்சொன்னன்.

அதைக்கேட்டு மதுபானத்தாற்கண்சிவந்த அந்தயாதவவீரர்கள் பார்த்தன்செய்ததைச் சகிக்காதவர்களாகிக் கோபத்துடன்கிளம்பினர். "சீக்கிரம்ரதத்தைப்பூட்டுங்கள். ஈட்டிகளையும் வில்லுகளையும் விலையுயர்ந்த பெரியகவசங்களையும் கொண்டுவாருங்கள்" என்று சொன்னார்கள். சிலர் தேரைப்பூட்டுங்களென்று சாரதிகளைக்கூவினர். இன்னுஞ்சிலர் பொன்னுபரணங்களையணிந்த குதிரைகளைத் தாங்களே தேரில்பூட்டினர். அந்தவீரர்களுடையயுத்தத்தில் ரதங்களும் கவசங்களும் த்வஜங்களும் கொண்டுவரப்படும்போது பெருங்கலக்கமுண்டாயிற்று. பிறகு வனமாலிதரித்தவரும் மதுபானஞ்செய்தவரும் கைலாசமலையின் சிகரம்போன்றவரும் நீலவஸ்த்ரம்தரித்தவருமான பலராமர் மதத்தினாற் கர்வமுற்றுப் பின்வருமாறுசொல்லலானார். "யாதவர்களே! கிருஷ்ணன் பேசாமலிருக்கும்போது இதென்ன காரியஞ்செய்கிறீர்கள். இவனுடைய அபிப்பிராயத்தையறியாமல் கோபித்து வீண்கர்ச்சனைசெய்கிறீர்கள். சிறந்தபுத்தியுள்ள இந்தக் கிருஷ்ணன் தன்அபிப்பிராயத்தை முதலிற்சொல்லட்டும். இவனுக்கு எதுசெய்யஇஷ்டமோ அதைப் பின்வாங்காமற்செய்யுங்கள்" என்று சொன்னர். சிலாக்கியமாக எடுத்துக்கொள்ளத்தக்கதாகிய அந்தப் பலராமர் சொல்லைக்கேட்டு யாதவர்களனைவரும், "நல்லது நல்லது" என்றுசொல்லிவிட்டு மௌனமாயிருந்தனர். சிறந்தபுத்தியுள்ள பலராமர் சொன்னதைக்கேட்டவுடன் அவர்களெல்லாரும் மறுபடியும் ஒருமிக்கச் சபைநடுவில் உட்கார்ந்தனர். அதன்பிறகு சத்துருக்களை வருத்துபவராகிய பலராமர் கிருஷ்ணனைப்பார்த்துப் பின்வருமாறு சொன்னர். "மூவுலகங்களுக்குமீசனே! நடந்ததையும் நடக்கிறதையும் நடப்பதையும் படைப்பவனே! கிருஷ்ணா! ஜனார்த்தனா! என்தலைகுனிந்து பார்த்துக்கொண்டிருக்கிறாய். அச்சுதனே! நாங்களெல்

லாரும் உன்னைப்பற்றி அர்ஜுனனுக்கு மரியாதைசெய்தோம். கெட்ட எண்ணமுள்ளவனும் குலத்தைக்கெடுத்தவனுமாகிய அவன் அந்த மரியாதைக்குரியவனல்லன். தன்னைக் குலீனனாகநினைக்கிறபுருஷன் எவன் ஓரிடத்தில் அன்னத்தைப்புஜித்து அங்கேயே பாத்திரத்தை உடைப்பான். முன்னமேசெய்த ஸம்பந்தத்தைக்கொண்டாடிப் பின் னும்ஸம்பந்தத்தை விரும்பியிருப்பவன் எவன்தான் தன்சிரேயஸை வேண்டினவனுயிருந்தால், இந்தஸாஹஸத்தைச்செய்வான். அவன் நம்மையெல்லாம் அவமதித்து உன்னையும் கவனியாமல் தனக்கு மிருத்தியுவாகியஸுபத்ரையைப் பலாத்காரமாக இப்போதுகொண் டுபோயிருக்கிறன். கோவிந்தா! கிருஷ்ணு! என்தலைமேல் காலைவைத் தான். காலால்மிதிப்பதைப் பாம்புபொறுக்காததுபோல நான் இதை ப்பொறுக்கவில்லை. இப்போது நானொருவனே இந்தப்பூமியில் கௌர வர்களேயில்லாமலிருக்கச்செய்வேன். இந்தஅர்ஜுனன்செய்த அக் கிரமத்தை நான்பொறுக்கமுடியாது" என்றார். மேகமுழக்கம்போல வும் துந்துபிவாத்தியம்போலவும் அவ்வாறுகார்ஜுனைசெய்த பலராமரை அப்போது போஜர்களும் விருஷ்ணிகளும் அந்தகர்களுமாகிய அனை வரும் ஒத்துப்பேசினர்.

ஸுபத்ராஹரணபர்வம் முற்றிற்று.

இருநூற்றுநாற்பத்தைந்தாவது அத்தியாயம்.

ஹரண்ஹரணபர்வம்.

(கிருஷ்ணன் பலராமருடைய கோபத்தைத்தணித்தபிறகு அர்ஜுனனை யழைத்துவர யாதவர்கள்சென்றதும், அர்ஜுனன் வேதுதூரம்போன தை விரந்துசொல்லக்கேட்ட அவர்கள் திரும்பிவந்ததும், ஸுப த்ரையும் அர்ஜுனனும் காண்டவப்ரஸ்தம் சேர்ந்ததும்.)

யாதவர்களெல்லாரும் தங்கள்பராக்கிரமத்துக்குத்தக்கபடி பல வார்த்தைபேசினர். பிறகு கிருஷ்ணன் தர்மார்த்தங்கள்பொருந்திய ஒரு வசனத்தைச் சொல்லலுற்றார். "யாதவர்களெல்லீரும்சேர்ந்து முன் னே நான்சொன்னதைக் கேளாமற்போனீர்கள். சென்றது சென் றதுதான். ஒருபோதும் திரும்பிவராது. யுக்தியுக்தமாக நான்சொல் வதற்கு நீங்களெல்லாரும்சேர்ந்து செவிகொடுங்கள். அர்ஜுனன் இந்தக்குலத்திற்கு அவமானத்தைச்செய்தவனல்லன். அவனல் இப்

போது விசேஷகௌரவந்தான் செய்யப்பட்டதென்பது நிச்சயம். அர்ஜுனன் யாதவராகிய உங்களைப் பொருளாசையுள்ளவர்களாக நினைப்பது ஒருபோதுமில்லை. * ஸ்வயம்வரத்தைச் சிலாக்கியமாக அர்ஜுனன்நினைத்திருக்கலாம். பசுவைப்போலக் கன்னிகையைத் தானஞ்செய்வதை எவனெப்புவான். பூமியில் எந்த ஆண்பிள்ளை கன்னியாவிக்ரயம்செய்வன். மற்றவிவாகங்களில் இந்தத்தீகாஷங்களை அர்ஜுனன் நினைத்திருக்கலாமென்பது என்கருத்து. பராக்கிரமத்தினால் பலாத்காரமாகக்கொண்டுபோவது க்ஷத்திரியர்களுக்குச்சிறப்பு. ஆதலால், பாண்டவனான அர்ஜுனன் நமதுகன்னிகையைப் பலாத்காரமாகக் கொண்டுபோனது தர்மந்தான். இது ஸரியானஸம்பந்தமுந்தான். ஸுபத்ரையும் புகழ்பெற்றவள். அர்ஜுனனும் அப்படியே புகழ்பெற்றவன். ஆதலால், பலாத்காரமாகக்கொண்டுபோனன். மிருந்தகீர்த்திமான்களாகிய பரத சந்தனுக்களின் வம்சத்திற்பிறந்தவனும் குந்திபோஜன்புத்திரியான குந்தியின்புதல்வனுமாகிய அர்ஜுனனை அடைவதற்கு எந்தப்பெண்விரும்பாள்? ஐயா! பகனென்னும் தேவதையின்நேத்திரத்தைப் பிடுங்கினவரும் முக்கண்ணருமான சிவபிரானைத்தவிரத் தன்பலத்தினால் யுத்தத்தில் அர்ஜுனனை வெல்லக்கூடியவன், இந்திரனும் ருத்திரர்களுமாகியதேவதைகளோடுகூடிய உலகங்கள்எல்லாவற்றிலும் யாருமிருப்பதாக நான்நினைக்கவில்லை. அவன் செல்லுகிறதமும் அப்படிப்பட்டகுதிரைகளும் அந்தஆயுதங்களும் அம்புகள்வற்றுத தூணிகளும் என்னுடையவையென்பதும் அதிக விசேஷம். அர்ஜுனனும் சீக்கிரமாகஅஸ்த்ரங்களைவிடத்தக்க யுத்த வீரன். யார் அவனைத் ஒப்பாகநிற்பார்கள். நீங்கள் சந்தோஷமடைந்து சிறந்தகல்வார்த்தையுடன் அவனிடம்சென்று அவனைத் திருப்பி அழையுங்கள். இஃதே எனதுமுடிவான ஆலோசனை. அர்ஜுனன் பலத்தினால் உங்களை ஜயித்துத் தன்ஊருக்குச்செல்வானையின் உங்கள் கீர்த்தி உடனேயழிந்துபோம். ஸமாதானஞ் செய்துகொள்வதில் தோல்வியில்லை. என் அத்தைமகன், எதிரிகளுடன்சேர்க்கத்தகான்" என்றனர். ஜனமேஜயராஜாவே! அந்தயாதவர்கள் கிருஷ்ணன்சொல்லைக்கேட்டுப் பேரிகைகளையடித்துக்கொண்டு அவ்வாறே செய்யஆரம்பித்தனர். அப்போது அந்தப்பெரும்பேரிகைகளின்முழக்கத்தைக் கேட்டுக் குந்திபுத்திரனான அர்ஜுனன் பரபரப்புடன் ஸுபத்ரையைப்பார்த்து, "யாதவர்களெல்லாரும் உனக்காக யுத்தஞ்செய்ய எண்

* தானே கன்னிகையையழைத்துவரித்தல்; கன்னிகை ஸ்வயம்வரம் செய்வதுபோலவே புருஷனுஞ்செய்யலாமென்பது கருத்து.

ணங்கொண்டு மதுபானத்தாற் கடைக்கண்சிவந்தவர்களாகச் சினே
கிதர்களோடும் உறவினரோடும் வருகின்றனர். மதுபானத்தினால்மதி
த்துஅறிவுகெட்டுக் குடிமயக்கமுள்ளவர்களும் மூடர்களும் அசுத்
தர்களும் அதமர்களுமான இத்தக்குடியர்களை உயர்ந்தபாணங்களி
னால் குடித்ததைக்கக்கும்படி செய்வேன். அல்லது குடிவெறி
கொண்டஅவர்களை நமனிடம் அனுப்புவேன்" என்று தன்அன்புள்ள
ஸுபத்திரைக்குச் சொல்லி மிகுந்தபலமுள்ளஅவன் திருப்பினான்.
அவன் திரும்புவதைப்பார்த்ததும், ஸுபத்திரை அஞ்சினாள். அப்
போது, "இவ்வாறுசொல்லாதே அர்ஜுனா" என்று அவன்கால்களில்
விழுந்து, "பிரபுவே! 'யாதவர்களையழிப்பதற்காகக் கலியே ஸுபத்
ரையாகப்பிறந்திருக்கிறது' என்றுசொல்லி இந்தப்பட்டணத்துஜனங்
கள் என்னைத்தூஷித்து எனக்குத் துயரத்தைவிருத்திசெய்வர். அத
னால், வதம்செய்வதை நான்அங்கீகரிக்கவில்லை. உன்அனுக்ரஹத்தி
னால்நான்உலகநிந்தனையிலிருந்து விடுபட்டவளாகக்கடவேன்" என்று
சொன்னாள். தவறுதபாக்ரமமுள்ள அர்ஜுனன் அன்புள்ளஸுப
த்திரை இவ்வாறுசொல்லக்கேட்டு (தன்பட்டணம்) போவதற்கேயெண்
ணங்கொண்டான். அப்போது அவன் தன்காதலியைப் புன்சிரிப்
புடன்அழைத்துத் தழுவியெடுத்து மறுபடியும், "செல், செல்" என்று
சொன்னான். அதன்பிறகு ஸுபத்ரை கையினால் கடிவாளங்களை உட
னே பிடித்து வேகமுள்ளகுதிரைகளை முன்னிலும்வேகப்படுத்தி
ஓட்டினாள். யாதவர்கள் அர்ஜுனனைத் திருப்பியழைப்பதற்காக வேக
முள்ள உயர்ந்தகுதிரைகளிலேறி ராஜமார்க்கத்தை அனுஸரித்தனர்.
மாளிகைகளின்தூண்களிலும் மேடைகளிலும்விறி அர்ஜுனனுடைய
பாணங்களையும் பராக்ரமங்களையுங்கண்டு கிருஷ்ணன் சொன்னவார்
த்தைநிசமென்று நினைத்து யாதவர்கள் மிக்கஆச்சரியமடைந்தனர்.
அர்ஜுனன்செய்ததைக்கேட்டுத் தொடர்ந்துசெல்லஆரம்பித்தயாதவ
வீரர்கள், ரைவதகமலையைத்தாண்டி அவன் வெகுதூரம்சென்றதாக
விப்ருதுசொல்லக்கேட்டுத் திரும்பினர். சிறந்தபுஜபராக்கிரமத்தை
யுடைய அர்ஜுனன் பட்டணத்தைச்சார்ந்த தோட்டங்களையும்
விசாலமான 'கிரிவ்ரஜம்'என்கிற ஊரையும் மலைச்சரிவுகளையும் உஜ்ஜ
யனியையும் காடுகளையும் தோட்டங்களையும் புண்ணியமான ஆனர்த்த
தேசத்திலுள்ள வாவிகளையும் தாமரைக்குளங்களையும் தாண்டி,
தேனுமதிதீர்த்தத்தையடைந்து, அசுவரோதம்என்ற தடாகத்தையும்
அங்கிருந்து ப்ரேக்ஷாவர்த்தமென்னும் மலையையும் சிகரங்களோடு
கூடிய அம்புதமென்னும்உயர்ந்தமலையையும் அடைந்து, பிறகு காவதி

நதியைத்தாண்டி, ஸால்வதேசத்தையும் நிஷததேசத்தையும்கடந்து தேவபிருதுவென்னும் நகரத்தைக் கவனத்தோடு சுற்றிப்பார்த்து, அதைத்தாண்டித் தேவாரண்யமென்னும் இடத்தைப்பார்த்தான். தேவாரண்யத்திலுள்ளமஹரிஷிகள் அங்குவந்தஅர்ஜுனனுக்கு மரியாதைசெய்தனர். அந்தஅர்ஜுனன் ஸுபத்ரையைச் சாரதியாகவைத்துக்கொண்டே காடுகளையும் நதிகளையும் மலைகளையும் மலையருவிகளையும்தாண்டிக் கௌரவதேசத்தைஅடைந்து கவலையற்றவனுனன். சிறந்தகைகளையுடைய அர்ஜுனன் வெகுதூரம்வரையில் தோட்டங்களுள்ளதும் நாற்புறத்தும் ஜலம்சூழ்ந்ததுமான தன்ஸஹோதரர்கள்வஸிக்கும்இடமும் ஸிம்மத்தின்குகைபோன்றதுமான * விருஜினமென்னும் நகரத்தை ஸுபத்ரையுடன் ஸந்தோஷமாகத் தூரத்திலேயேகண்டான்.

இருநூற்றுநாற்பத்தாறுவது அத்தியாயம்.

ஹரண ஹரண பர்வம். (தொடர்ச்சி.)

(இடைச்சிவேஷத்தோடு திரௌபதியினிடம்போதும்படி அர்ஜுனன்சொல்ல, அப்படியேவந்து தமஸ்காரஞ்செய்த ஸுபத்ரைக்குக் குந்தியும் திரௌபதியும் ஆசீர்வாதஞ்செயததும், அர்ஜுனன் தன்ஸஹோதரர்களுக்குத் தீர்த்தயாத்திரைச் சமாசாரத்தைச்சொன்னதும்.)

அந்தப்பட்டணத்துக்கு ஒருகுரோசதூரத்தில் பார்த்தனுடைய அழகானகொட்டில் இருந்தது. அர்ஜுனன் யாதவகன்னிகையான ஸுபத்ரையுடன்கூட அங்கேயே இறங்கினான். அப்போது அவன் ஸுபத்ரையைக் கௌரவித்து, "நீ இடைச்சிவேஷத்துடன் விருஜினபுரிக்குச்செல். கிருஷ்ணை நிஜத்தைச்சொல்லுகிறவள். என்சொல்லை நீ அங்கீகரிக்கவேண்டும். என்னுடன்கூடவந்தால் உன்னைப்பார்த்ததும், கடுஞ்சொற்சொல்வள். மாறுவேஷத்தோடுபோகிற உன்னைப்பார்த்தால் இன்சொற்சொல்வள். அவள் முதலில் எதைச்சொல்லுகிறாளோ அதற்குமாறுதலிராது. ஆதலால், கௌரவத்தையும் கர்வத்தையும்வீலக்கி நீமட்டும் செல்" என்றுசொன்னான். அவனுடைய அந்தச்சொல்லைக்கேட்டு ஸுபத்ரை, "பார்த்தா! நீசொல்லுகிறதை, அப்படியேசெய்கிறேன்" என்று மறுமொழிசொன்னாள். அந்தஅர்ஜுனன் ஸுபத்ரைசொன்னதைக்கேட்டு மிகுந்தஸந்தோ

---

* இந்திரப்பிரஸ்தத்திற்கு மற்றொருபெயர்.

ஷத்துடன் சீக்கிரமாக இடையர்களோவாவழைத்துக் கட்டளையிட்டான். "சிறுவயதுள்ள இடைப்பெண்கள் எவ்வளவுபெயர் இருக்கின்றனரோ அவ்வளவுபெயருர், புகழ்பெற்ற திரௌபதியைப்பார்ப்பதற்கு இந்திரப்பிரஸ்தத்திற்குப்போகிற ஸுபத்ரையுடன்கூடச் சேர்ந்துவர வேண்டும்" என்றான். அதைக்கேட்டவுடன் கோபாலர்கள் கோபஸ்திரீகளை அழைத்துவந்தனர். பிறகு அந்தக்கோபஸ்திரீகளினால் சூழ்ந்துகொண்டு இடைச்சிவேஷந்தரித்துச் சிவப்புப்பட்டுடுத்துக்கொண்டிருந்த ஸுபத்ரையை அர்ஜுனன் துரிதமாகப்பயணப்படுத்தினான். அந்தப்புகழ்பெற்றஸுபத்ரை அந்த வேஷத்தினாலும் மிக அழகாகவே இடைச்சிகளின்நடுவிலிருந்துகொண்டு விருஜினமென்னும்பட்டணத்திற்குச்சென்றாள். துரிதமாகக் கண்டவப்பிரஸ்தம் சென்று கிருஷ்ணத்திற்பிரவேசித்தாள்.

வீரபத்னியும் அகன்றும் சிவந்துமிருக்கிற கண்களையுடையவளும் பெண்ணரசியுமான ஸுபத்ரை அந்தச்சிறந்தகிருஷ்ணத்தைச்சேர்ந்து தன்அத்தையானகுந்தியை நமஸ்கரித்தாள். குந்தியானவள் எல்லாஅங்கங்களுமழகான அந்தஉயர்ப்பற்றஸுபத்ரையை மிகுந்தஅன்புடன் உச்சியில்மோந்து அவளுக்கு ஆசீர்வாதஞ்செய்தாள். பூர்ணசந்திரனுக்கொப்பானமுகமுள்ள ஸுபத்ரை அகன்பிறகு விரைந்து த்ரௌபதியினிடம்போய் நமஸ்காரஞ்செய்து, "நான் உனக்கடிமை" என்றுசொன்னாள். அப்போது கிருஷ்ணை கிருஷ்ணஸஹோதரியான ஸுபத்ரையை எதிர்கொண்டழைத்து அன்புடன் ஆலிங்கனஞ்செய்துகொண்டு, "உனதுகணவன் வேதிரியில்லாமலிருக்கக்கடவன்; ஸுபத்ரையே! நீ வீரனானபுத்திரனைப் பெறுவாயாக; அவ்வாறே கணவன் அன்புக்குரியவளாயிருக்கக்கடவாய்" என்றுசொன்னாள். பராக்ரமத்தினால்உண்டாகத்தக்க அனேகமான உயர்ந்தஆசீர்வாதங்களைச்சொன்னாள். ஸுபத்ரையும் அப்படியே ஸந்தோஷமடைந்து, "அப்படியே ஆகவேண்டும்" என்று த்ரௌபதியிடம்சொன்னாள். அதன்பிறகு குந்தி அழகானமுகமுள்ள ஸுபத்ரையைக்கட்டிக்கொண்டு மடியில் உட்காரவைத்துவஸுதேவரைப்புகழ்ந்துமகிழ்ந்தாள். பிறகு உடனே விருஜினபுரத்திற்குவந்துசேர்ந்த யாதவவீரர்களுடைய ஸந்தோஷத்தோடுசேர்ந்தகலகலசப்தம்உண்டாயிற்று. தேவகுமாரர்களைப்போலப் பிரகாசிக்கின்ற அந்தயாதவர்கள் பொன்மயமானகொடிகளைக்கட்டிக்கொண்டு தேவர்கள் இந்திரனைத்தொடர்வதுபோல் அர்ஜுனனைப்பின் தொடர்ந்தனர். எருதுகளும் ஓட்டகங்களும் உயர்ந்தகுதிரைகளும் கட்டின யாதவர்களுடையசிறந்ததேர்களை ஜனங்கள்கூட்டம்கூட்ட

மாகச்சேர்ந்து பார்த்தனர். அந்தச்சிறந்தநகரத்திலுள்ள சிறுபிராய முள்ளஆண்பிள்ளைகள் தேசம்விட்டுப்போய்வந்தஅர்ஜுனனைக்கண்டு தங்கள் பந்துவைக்கண்டதுபோல மகிழ்ந்துசொன்ன வசனங்களை அவன் எல்லாவிடங்களிலும்கேட்டான். அந்தப்புருஷச்ரேஷ்டனை அர்ஜுனன் அனேகயாதவர்களால்சூழப்பட்டுப் பட்டணத்துஜனங் களால்எதிர்கொண்டழைக்கப்பெற்று அதிகசந்தோஷத்துடன் பட்ட ணத்துக்குள்பிரவேசித்து அந்தப்புரத்தின் வாயிலையடைந்து தேரி லிருந்துஇறங்கித் தெளம்யரிடமும்தாயாரிடமும்சென்று நமஸ்காரஞ் செய்தான். தர்மபுத்திரர் பீமன் இவர்களுடையபாதங்களில்வணங்கி யும் நகுலஸஹதேவர்களால் நமஸ்கரிக்கப்பட்டுச் சந்தோஷத்துடன் அவர்களைத் தழுவிகொண்டும் சுகமாகவிருந்தான். ஸஹோதரர்களு டன்சேர்ந்து, பிராமணர்கள்முதலிய பட்டணத்துஜனங்கள் தேசத்து ஜனங்களெல்லாரையும் அவர்களுக்குத்தக்கபடி மரியாதைசெய்தான். ஜனமேஜயரே! அங்கங்கே தான்போனதிசைத்தங்களையும் க்ஷத்திரங் களையும் அங்கங்கே தான்செய்மையாகச்செய்த காரியங்களெல்லாவற் றையும் தர்மராஜாவுக்கும் மற்றச்சகோதரர்களுக்கும் சொன்னன். மிகப்பிராஜ்ஞரும் தர்மந்தவறுதவருமாகிய யுதிஷ்டிரர்கேட்டு ஸஹோ தரர்கள்முன்னிலையிலேயே அர்ஜுனனைக்கொண்டாடினர். பூஜிப்ப தற்குரிய புகழ்பெற்ற தர்மராஜாவினால் தக்கபடிகௌரவிக்கப்பட்ட அர்ஜுனன் அவரனுமதிபெற்றுச் சந்தோஷமாக உட்கார்ந்தான். தாழ்வில்லாதவளும் சிறந்தகௌரவத்திற்குரியவளும் ஸந்தோஷத்தை விருத்திசெய்கிறவளும் கிருஷ்ணனுக்குத்தங்கையுமான ஸுபத்ரை யைப் பாண்டவர்கள் லக்ஷ்மியேதேவதிருப்பதாக நினைத்தனர். ஸுபத்ரை அவளுடைய ஒழுக்கத்தினால் பெரியோர்களுக்கும் மாமன் மார்களுக்கும் மைத்துனர்களுக்கும் மிகவும் பிரியமாகஇருந்தாள். பிறகு மஹாரதர்களான அந்தப்பாண்டவர்கள் மனத்தில்ஸந்தோஷ மடைந்தனர். குந்தியும் கிருஷ்ணையும் எப்போதும் அவளுடன் மிகுந்தஅன்புடனிருந்தனர்.

இருநூற்றுநாற்பத்தேழாவது அத்தியாயம்.

ஹரணஹரணபர்வம். (தொடர்ச்சி.)

(கிருஷ்ணன் யாதவர்களோடு காண்டவப்பிரஸ்தத்திற்குவந்து சுபத்திரைக் குச்சிறப்புக்களைச்சேர்ப்பித்ததும், எல்லாயாதவரும் திரும்பிப்போ னபிறகு அவர் காண்டவப்பிரஸ்தத்தில் அர்ஜுனனோடுவசித் ததும், அபிமன்யுஜனனமும், திரௌபதிக்குஐவரிடத் திலும் ஐந்துபுத்திரர்கள் பிறந்ததும்.)

பிறகு யாதவர்களுடைய சிறந்தஉத்ஸவம்முடிந்தபின் சங்கசக் கரகதாதரானகிருஷ்ணன், அர்ஜுனனுல் ஸுபத்ரைகொண்டுபோகப் பட்டதைக் கேட்டனர். அந்தப்பட்டணத்துஜனங்களுக்கு முன்னமே ஸந்தேஹமுண்டாயிருந்தது. தாம்தெரிந்துகொண்டே கிருஷ்ணன் அர்ஜுனனை வீட்டில்வஸிக்கச்செய்தாரென்பது ஜனங்களுக்கு இப் போதுதான் தெரிந்தது. "விப்ருதுவுக்குப் முன்னமேமதிரியப்ப, கரு டத்வஜரானகிருஷ்ணன் தகுந்தராஜரிஷ்டனை அர்ஜுனனுக்கு ரீண்டகண்களையுடையவளான தம்ஸகோதரியைக்கொடுக்க இஷ்டப் பட்டுத் தைரியப்படுத்தி அனுமதிகொடுத்ததினுலேதான் அர்ஜுனன் ஸுபத்ரையுடன்ரீசர்ந்தான். பாண்டவச்ரேஷ்டனை அர்ஜுனனைக் கௌரவித்தும் அனுப்பினர். ஸுபத்ரையுடன்கூட அர்ஜுனன் விரு ஜினபுரத்திற்சேர்ப்பிக்கவும்பட்டான்" என்று பட்டணத்திலுள்ள ஜனங்களெல்லாரும் பேசிக்கொண்டனர். பாண்டவச்ரேஷ்டனை அர்ஜுனன் தனது சிறந்தபட்டணமாகிய இந்திரப்பிரஸ்தத்திற்குப் போய்ச்சேர்ந்ததைக்கேட்டுக் கிருஷ்ணன் காண்டவப்பிரஸ்தமென் னும்பெயரையுடைய அவ்விடத்துக்குப்போவதற்காக ஆலோசனைசெ ய்தார். கிருஷ்ணன் ராஜாவாகியஉக்ரஸேனனையும் அகூகனையும் விப் ருதுவையும் அக்ரூரனையும் பலராமனையும் விதூரனையும் முதலில் மரியாதைசெய்துஅழைத்து முதலிலேயே விஷயம்தெரிவிக்கப்பட் டிருந்த அவர்களுடன்கூட ஆலோசனைசெய்தார். பெரியமனமுள்ள அவர் யாதவர்களுக்காசான பலராமரோடு ஆலோசனைசெய்து அவ ரால் அன்புடன் அனுமதிகொடுக்கப்பெற்றார்; ஸந்தோஷமடைந்தபல ராமர் ஆலோசித்து அனுமதிகொடுத்தபிறகு சேனையைஸன்னஹம்செய் தார். அதன்பிறகு வாகனங்களிலேறின புகழ்பெற்ற யாதவவீரர்க ளின் ஸந்தோஷகரமானஜனமானது உடனே உண்டாயிற்று. யாதவர்கள் மிகுந்தஸந்தோஷத்துடன் நல்லகுதிரைகளையும் தேர்க்குதிரைகளையும்

தேர்களையும் யானைகளையும் சித்தப்படுத்திக்கொண்டிருந்தனர். கிருஷ்ணன் வீரர்களும் மஹாரதர்களுமான விருஷ்ணி அந்தகர்களுடைய மந்திரிகளோடும் சகோதரர்களோடுங்கூட அநேகசம்படைவீரர்களாற் சூழப்பெற்றுப் பெரியசேனையினால் நாற்புறமும் காப்பாற்றப்பட்டிருந்தார். அந்தச்சேனையில் பெருமைபொருந்தினவரும் மிகுந்தபுகழ் பெற்றவரும் யாதவவீரர்களின்னேனபதியும் சத்துருக்களையடக்குகிறவருமாகிய * தானபதியென்னப்பட்ட அக்ரூரரும் மிகுந்தபராக்கிரமசாலியான அனாதிருஷ்டியும் பெரும்புகழ்பெற்றவரும் பிருஹஸ்பதிக்குநேரேசிஷ்யரும் சிறந்தபுத்தியுள்ளவரும் உயர்ந்தமனமுள்ளவருமாகிய உத்தவரும் ஸத்தியகனும் ஸாத்யகியும் யாதவனுகியகிருதவர்மாவும் பிரத்யும்னனும் சாம்பனும் நிசங்குவும் சங்குவும் பராக்ரமசாலியானசாருதேஷ்ணனும் ஜில்லியும் விப்ருதுவும் சிறந்தகைகளையுடையசாரணனும் வித்வான்களிற்சிறந்தகதனுமாகியஇவர்களும் இன்னுமனேகவிருஷ்ணிகளும் போஜர்களும் அந்தகர்களும், பெண்ணுக்குக்கொடுக்கும் சிறப்பைமிகுதியாகவிடுத்துக்கொண்டு காண்டவப்பிரஸ்தத்துக்குவந்தனர். பிருதுமுதலிய யாதவசிரேஷ்டர்கள் பெரியகாணிக்கைகளையெடுத்துக்கொண்டு ஸிம்மாஸனத்தோடு ஸபத்தையைப்பார்க்கப்புறப்பட்டனர். அந்தயாதவர்கள் கிருஷ்ணனுடன் கூடச் சிறிதுகாலத்தில் பாண்டவர்களுடையபட்டணத்தைச்சேர்ந்து மிகுந்தஸந்தோஷமடைந்தனர். பிறகு ராஜாவானயுதிஷ்டிரர் கிருஷ்ணன்வந்ததைக்கேட்டு அப்போது கிருஷ்ணனையழைத்துவருவதற்காக நகுலஸஹதேவர்களை அனுப்பினர். மிகுந்தஆசுவரியத்தோடு வந்தயாதவக்கூட்டம் நகுலஸஹதேவர்களால்அழைக்கப்பட்டுத்துவஜங்கள்கட்டியகொடிமரங்களால் சோபிக்கின்ற காண்டவப்பிரஸ்தநகரத்திற்பிரவேசித்தது. குப்பைகளைப்போக்கியும் ஜலம்தெளித்தும் புஷ்பங்கள் இறைத்தும் விளங்குகின்றமார்க்கத்தோடு கூடியதும், இனியமணமுள்ள குளிர்ச்சியான சந்தனக்குழம்புகளினால்நிரப்பப்பட்டதும், ஒவ்வோரிடத்திலும்நல்லவாஸனையுள்ள அகில்எரிக்கப்பட்டதும், ஸந்தோஷமும் செல்வமுமுள்ளஜனங்கள்நிரம்பினதும், வணிகர்களால்அலங்கரிக்கப்பட்டதுமாகிய நகரத்தைச் சிறந்தகைகளையுடையகிருஷ்ணன் பலராமரோடு அடைந்தார். விருஷ்ணிகளோடும் அந்தகர்களோடும் போஜர்களோடுங்கூடிய புருஷோத்தமராகியகிருஷ்ணபகவான் ஆயிரக்கணக்கானபட்டணத்துஜனங்களாலும் பூஜிக்கப்பெற்று இந்திரனுடையகிருஹத்துக்கொப்பான தர்மராஜாவின்

* தானாதிகாரி.

அரண்மனையில் பிரவேசித்தார். யுதிஷ்டிரர், பலராமருடன் முறைப்படி சேர்ந்தார்; கிருஷ்ணனுடன் உச்சியில்மோந்து கைகளினால் அணைத்தார். கிருஷ்ணன் அன்புடன் தலைவணங்கி அவருக்குமரியாதைசெய்து புருஷச்ரேஷ்டனுகியபீமசேனனையும்கிரமப்படி கௌரவித்தார். குந்தி புத்ரரானயுதிஷ்டிரர் அந்தயாதவச்ரேஷ்டர்களையும் அந்தகச்ரேஷ்டர்களையும் வந்தவுடன் சான்றிரப்படியும் கிரமப்படியும் மரியாதைகளைச் செய்து அழைத்தார்; சிலரைப்பெரியோரைப்போலவும் சிலரைச் சினேகிதரைப்போலவும் கௌரவித்தார்; சிலரிடம் பிரேமையுடன் பேசினார்; சிலரால் தாம் நமஸ்கரிக்கப்பட்டார். பிறகு குந்தியும் பாண்டவர்களும் திரௌபதியுடன் சந்தோஷத்தோடு கிருஷ்ணனையடைந்து ஸ்திரீபுருஷர்களும் ஆனந்தமுற்றவரானார்கள். ராமகிருஷ்ணர்கள் சந்தோஷமாயிருப்பதைக்கண்டு குந்தி யுதிஷ்டிரருக்குப் பங்குக்களிருப்பதாகநினைத்தாள். அதன்பிறகு அறியமுடியாதமகிமையுள்ள பல ராமரும் அக்ரூரரும் சந்தோஷமாக எல்லாச்சிறப்புப்பொருந்திய ஸுபத்ரைக்குச் சிறப்புக்காகத் திரவியக்குவியலைக்கொடுத்தனர். ஆயிரக்கணக்காகப் பவழங்களையும் முத்தாஹாரங்களையும் மற்றஆபரணங்களையும் ரத்னகம்பளங்களையும் மெத்தைகளையும் புலித்தோல்மேலே போர்க்கப்பட்டஆஸனங்களையும் கொடுத்தனர். யுதிஷ்டிரருடைய வீடு அனேகவீதங்களான இரத்தினக்குவியல்களாலும் படுக்கைகளாலும் ஆஸனங்களாலும் வாகனங்களாலும் ஜ்வலிப்பதுபோலவிளங்கிற்று. பிறகுநல்லலக்ஷணங்கள்பொருந்திய ஸுபத்ரைக்கு, சிறுவர்களுக்குச் சந்தோஷமுண்டாக்கத்தக்க சிறந்தகலியாணஉத்ஸவம்வழிராத்திரிகள்நடந்தது. கிருஷ்ணன் பாண்டவர்களுக்குச் சம்பந்தி மரியாதைக்காக உயர்ந்தசம்பத்தைக்கொடுத்தார். சிறந்தபுகழ்பெற்ற கிருஷ்ணன் ஸுபத்ரையின் உறவினர் கொடுக்கவேண்டியபெண்சிறப்பைப் பாண்டவர்களுக்குக்கொடுத்தார். பொன்மயமான சதங்கைகளின் வரிசைகள்தொங்குகின்ற நாலுகுதிரைகள்பூடடப்பட்டவையும் சமர்த்தர்களான சாரதிகளுள்ளவையுமான ரதங்களில்ஆயிரத்தையும், மதுராதேசுத்திலுண்டானவையும் பார்க்கஅழகானவையுமான கறவைப்பசுக்கள்பதினாயிரத்தையும், சந்திரகிரணங்களைப்போலவெண்ணிறமுள்ளவையும் பொன்அலங்காரமுள்ளவையுமான பெண்குதிரைகளில்ஆயிரத்தையும், ஸ்ரீமானனகிருஷ்ணபகவான் அன்புடன்கொடுத்தார். அவ்வாமேற காற்றைப்போன்றவேகமுள்ளவையும் பழக்கப்பட்டவையுமான கோவேறுகழுதைகளில் மைந்நிறமான மயிருள்ளவை ஐந்நூற்றையும், வெளுத்தவைஐந்நூற்றையும்கொடுத்தார். ஸ்நானத்

திலும்பானத்திலும் உத்ஸவகாலத்திலும் உபயோகப்படுகிறவர்களும், சிறந்த அலங்காரங்களுள்ளவர்களும், சிறந்தஒளியுள்ளவர்களும், பொன்மயமான அனேகஆபரணங்களைக் கண்டங்களில்தரித்தவர்களும், தேகத்தில்ரோமங்களில்லாதவர்களும், நன்றாகஅலங்காரஞ்செய்யப்பட்டவர்களும், வேலைகளில்சுறுசுறுப்புள்ளவர்களுமாகிய பொன்னிறமான இளமைப்பருவத்துப்பெண்கள் ஆயிரவரையும் தாமரைக்கண்ணன்அளித்தார். பாஞ்ஜலீகதேசத்திலுண்டான புறத்தக்கதுரைகளில் லக்ஷத்தையும் சிறந்தகன்னியாதனமாக ஜனார்த்தனர்கொடுத்தார். நாணயஉருவமுள்ளவையும் கட்டிகளுமாயுள்ள நெருப்புக்கொப்பான உயர்ந்தபொன்னைப் பத்துமனிதர்சுமக்கக்கூடியஅளவுயாதவராகிய ஜனார்த்தனர்கொடுத்தார். பாக்கிரமத்திற்பிரியமுள்ளவரும் கலப்பையைஆயுதமாகஉடையவருமாகிய பலராமர் மதக்கண்திறந்து * மும்மதமும்பெருகுகின்றவையும் மலைச்சிகரங்களுக்கொப்பானவையும் யுத்தங்களிற்பின்வாங்காதவையும் அலங்கரிக்கப்பட்டவையும் உரத்தமணிகள்சப்திக்கின்றவையும் பொன்மாலைகள் அணிந்தவையும் பாகர்களோடுகூடியவையுமான அழகான யானைகளாயிரத்தை விவாககாலத்தில் சம்பந்தத்தைக்கௌரவித்து அன்புடன் அர்ஜுனனுக்குக்கொடுத்தார். வெண்மையானவஸ்திரங்களையும சால்வைகளையுமே துரைகளாகவும் மஹாகஜங்களையேபெரியமுதலைகளாகவும் ஜயக்கொடிகளையே பாசிக்கொடிகளாகவும்கொண்ட மிகுதியான தனரத்னக்குவியலென்னும் அந்தப்பெரும்புனல், முன்னமேநிரம்பியிருந்தபாண்டவர்களென்னும்கடலில் நிரம்பவேகமாகப்பிரவேசித்து அவர்களின்பகைவர்களுக்கு வ்யஸனத்தையுண்டுபண்ணிற்று. தர்மராஜரானயுதிஷ்டிரர் அவற்றையெல்லாம்பெற்றுக்கொண்டு மஹாரதர்களான அந்தவிருஷ்ணிகளையும் அந்தகர்களையும் சிறப்பித்தார். மஹாத்மாக்களும் உத்தமர்களுமாகிய அந்தக்கௌரவர்களும் விருஷ்ணிகளும் அந்தகர்களும் சேர்ந்து புண்ணியம்செய்தவர்கள் தேவலோகத்திலிருப்பதுபோல மகிழ்ந்திருந்தனர். கௌரவர்களும் விருஷ்ணிகளும் அவரவர்சேர்க்கைக்குத்தக்கபடியும் ஸந்தோஷத்துக்குத்தக்கபடியும் பெரியசுப்தங்களோடும் அதிக கரகோஷத்தோடும் ஆங்காங்கு விளையாடினர். அந்தச்சிறந்தவீரர்கள் இவ்வாறு அனேகதினங்கள்விளையாடிக் கௌரவர்களிடமிருந்து மரியாதைசெய்யப்பெற்றுத் திரும்பவும் துவாரகையைநோக்கிச் சென்றனர். மஹாரதர்களான விருஷ்ணிகளும் அந்தகர்களும் கௌரவசிரேஷ்டர்களால் கொடுக்

* கண் தாடை துதிக்கை ஆகிய மூன்று இடங்களிலுமுள்ளமதம்.

கப்பட்ட உயர்ந்தரத்னங்களைப் பெற்றுக்கொண்டு பலராமரைமுன்னிட்டுச் சென்றனர். மஹாபலசாலியான பலராமர் சகோதரியான ஸுபத்ரைக்கு மரியாதைசெய்து அவளைத்தழுவிக்கொண்டு திரௌபதியினிடம், "இவள் உன்அடைக்கலம்" என்றுசொல்லி ஒப்பித்துவிட்டு அத்தையான குந்தியின்பாதங்களில்வந்தனஞ்செய்து புறப்பட்டார். அந்தக்காலத்தில் குந்தியும் பிரீதியுடன் அவரைக் கௌரவித்தாள். அந்தயாதவவீரராகியபலராமர் பாண்டவர்களாலும் நகரத்தாராலும் நிரம்பப்பூஜிக்கப்பட்டு யாதவர்களுடன்சேர்ந்து துவாரகைக்குச்சென்றார். ஜனமேஜயரே! மஹாபலசாலியானகிருஷ்ணன் மாத்திரம் மஹாத்மாவான அர்ஜுனனுடன்கூட முப்பத்துநான்கு நாள் அந்த அழகான இந்திரப்பிரஸ்தநகரத்திலேயே உல்லாஸமாகஇருந்தார். பெருங்கீர்த்தியுள்ளகிருஷ்ணபகவான் அர்ஜுனனுடன்கூட வேட்டையாடி மான்களையும் பன்றிகளையும்அடித்துக்கொண்டு யமுனைக்கரையில்ஸஞ்சரித்தார். பிறகு கிருஷ்ணனுடையஇனியசகோதரியானஸுபத்ரை, இந்திராணி ஜயந்தனைப்பெற்றதுபோல் புகழ்மிகுந்த புத்திரனைப்பெற்றாள். நீண்டகைகளும் அகன்றமார்பும் விருஷபம்போன்றகண்களுமுடையவனும் பகைவர்களையடக்குகிறவனும் வீரனும் புருஷச்ரேஷ்டனுமாகிய அபிமன்யுவை ஸுபத்ரைபெற்றாள். அபி = பயமற்றவன்; மன்யு = கோபமுள்ளவன் என்கிறகாரணத்தினால் எதிரிகளையழிப்பவனும் புருஷச்ரேஷ்டனுமாகிய அந்தஅர்ஜுனபுத்திரனுக்கு அபிமன்யுவென்றுபெயரிட்டனர். யஜ்ஞத்திற்கடைகிற அரணிக்கட்டையிலிருந்து அக்னிஉண்டாவதுபோல அதிரதனான அந்தப்புத்திரன் ஸுபத்ரையிடம் தனஞ்சயனால்உண்டானான். ஜனமேஜயரே! சக்தியுள்ளவரும் குந்திபுத்ரருமானயுதிஷ்டிரர் அவன்பிறந்தபோது பிராம்மணர்களுக்குப் பதினாயிரம்பசுக்களையும் பொன்னணயங்களையும் கொடுத்தார். அவன்குழந்தையாயிருந்ததுமுதல் கிருஷ்ணனுக்கும் தகப்பன்மார்களைவருக்கும், பிரஜைகளுக்குச்சந்திரனிருப்பதுபோலப் பிரியமாகஇருந்தான். அவனுக்கு ஜாதகர்மமுதலிய சுபகாரியங்களையெல்லாம் கிருஷ்ணனேசெய்தார். அந்தப்பாலன் வளர்பிறைமதியைப்போல வளர்ந்தான். சத்துருக்களையடக்குகிறவனும் வேதங்களையறிந்தவனுமாகிய அபிமன்யு * நான்குபாதங்களுள்

நான்குபாதமாவன :—

1. ஸுத்ரம் = சாஸ்திரோபதேசம்.
2. சிக்ஷை = பழக்கம்.
3. ப்ரயோகம் = ஸமயத்துக்குத்தக்கபடி உபயோகிப்பது.
4. ரஹஸ்யம் = காரியகாரணஸம்பந்தத்தை யறிவது.

இவற்றை வேறுவகையாகவும் கூறுவர். 520-வதுபக்கத்துக் குறிப்பிற்காண்க.

ளதும் * பத்துவகையுள்ளதுமான தனுர்வேதத்தையும் தேவலோகத்திலும் மானிடலோகத்திலுமுள்ள எல்லாவித்தையையும் அர்ஜுனனிடமிருந்து தெரிந்துகொண்டான். மஹாபலசாலியான அர்ஜுனன் அஸ்த்ரவித்தைகளிலும் அங்கங்களினமைப்பிலும் எல்லாவித மானசெய்கைகளிலும் விசேஷங்களைக் கற்பித்தான். சாஸ்திரஜ்ஞானத்திலும் கைப்பழக்கத்திலும் தனக்கொப்பாகச்செய்தான். தனஞ்சயன் பூர்ணமானசரீரக்கட்டுள்ளவனும் லக்ஷணங்களெல்லாம்பொருந்தினவனும் ஜயிக்கமுடியாதவனும் விருஷபத்தின்கொண்டையைப்போன்ற தோள்களையுடையவனும் வாய்திறந்த ஸர்ப்பத்தைப் போன்றவனும் ஸிம்மத்தைப்போன்றகர்வமுள்ளவனும் பெரியவில்லாளியும் மதயானைபோல்நடப்பவனும் மேகத்தையும் துந்துபிவாத்தியத்தையும்போன்ற த்வனியுள்ளவனும் பூர்ணசந்திரன்போன்றமுகமுள்ளவனும் தனதுபுத்திரனுமாகிய அபிமன்யுவைக்கண்டு களிப்புற்றான். இந்திரன் அர்ஜுனனைப்பார்த்ததுபோலப் பராக்ரமத்திலும் உற்சாகத்திலும் அழகிலும் தேகஉருவத்திலும் கிருஷ்ணனைப்போன்ற புத்ரனை அர்ஜுனன்பார்த்தான். அழகானலக்ஷணங்களுள்ள த்ரௌபதியும் ஐந்துமகன்களைப்போலத் தைரியமுள்ளஐந்துசிறந்தபுத்திரர்களை ஐந்துபதிகளாற்பெற்றாள். யுதிஷ்டிரருக்குப் பிரதிவிந்தியனையும், விருகோதரனுக்கு ஸுதஸோமனையும், அர்ஜுனனுக்குச் சுருதகர்மாவையும், நகுலனுக்குச் சதானீகனையும், ஸஹதேவனுக்குச் சுருதஸேனனையுமாக ஐந்துமஹாரதர்களானவீரர்களை அதிதிதேவர்களைப்பெற்றதுபோலப் பாஞ்சாலிபெற்றாள். பிராம்மணர்கள் சோதிடசாஸ்திரஜ்ஞானத்தினால், யுதிஷ்டிரருடைய புத்திரனைப் பற்றி, "எதிரிகளுடையஆயுதஅடிகளின்உணர்ச்சியில் இவன் விந்தியமலைக் கொப்பாயிருப்பான். ஆதலால், இவன்பிரதிவிந்தியன்" என்றுபெயரிட்டனர். அனேகமுறை ஸோமயஸம்பிழிந்து யஜ்ஞஞ் செய்தபிறகு சந்திரசூரியருக்கொப்பான தேஜஸ்ஸுள்ள சிறந்தவில்லாளியானசுமாரனைப் பீமஸேனனுற் பெற்றாளாதலால் அவனுக்கு ஸுதஸோமனென்றுபெயராயிற்று. சுருதம்என்னப்பட்ட சாஸ்திரோக்தமான பெரியகர்மங்களாகிய தீர்த்தயாத்திரைமுதலியவற்றைச்

* 1. ஆதானம் தூணியிலிருந்து பாணத்தையெடுப்பது; 2. ஸந்தானம்=தொடுப்பது; 3. மோக்ஷணம்=நாணியிலிருந்துவிடுவது; 4. நிவர்த்தனம்=எதிரிவிடுவதை லிலக்குவது; 5. ஸ்தானம்=வில்லாளியின்நிலை; 6. முஷ்டி=பிடி; 7. பிரயோகம்=லக்ஷ்யத்தையடிப்பது; 8. பிராயச்சித்தம்=தவறுதலுக்குப் பரிஹாரம்; 9. மண்டலம்=சுற்றிநடப்பது; 10. ரஹஸ்யம்=சப்தத்தினால் லக்ஷியத்தையடிப்பது.

செய்து திரும்பிவந்தபிறகு அர்ஜுனனுக்குப்பிறந்ததனால் அவன்புத்திரனுக்குச் சுருதகர்மாவென்றுபெயரிடப்பட்டது. நகுலன், தன்புகழை விருத்திசெய்கிறவனுகியபுத்திரனுக்குக் கௌரவவம்சத்திற் பிறந்தமஹாத்மாவாகிய சதானீகனென்னும்ராஜரிஷியின்பெயரையிட்டான். திரௌபதி, அக்நிதேவதையின்அம்சத்திரமாகியகிருத்திகையில்ஸஹதேவனுக்குஒருபுத்திரனைப்பெற்றாள். அதனால், அவனுக்கு * சுருதசேனனென்று பெயரிட்டனர். அபரிக்கரசானஜனமேஜயரே! புகழ்பெற்றவர்களும் ஒருவர்க்கொருவர் கண்மையைக்கருதுகிறவர்களுமாகிய இந்தத்திரௌபதிபுத்திரர்கள் ஒருவர்க்கொருவர் ஒருவருஷவித்தியாசமுள்ளவர்களாகப்பிறந்தனர். பாதசரேஷ்டரே! தௌம்யரிஷி அவர்களுக்கு ஜாதகர்மம் சௌளம உபநயனமுதலியவற்றைப் பிராயத்தின்வரிசைபடி சாஸ்திரபிரகாரம்செய்தார். பிறகு வேதாத்யயனஞ்செய்து பிரம்மசரியவிரதத்தைச் செம்மையாகநடத்தித் தேவர்கள்மனிதர்களுடையஸம்பந்தமான அஸ்த்ரங்களையும் பாணங்களெல்லாவற்றையும் அர்ஜுனனிடத்திலிருந்து கிரஹித்தார்கள். ராஜசரேஷ்டரானஜனமேஜயரே! விசாலபானமார்புகளுடையவர்களும் மஹாரதர்களுமான தேவகுமாரர்களைப்போன்ற புத்திரர்களுடன்சேர்ந்து பாண்டவர்கள் மகிழ்ந்திருந்தனர்.

ஹரிணஹரணபர்வம் முற்றிற்று.

இருநூற்றுநாற்பத்தேட்டாவது அத்தியாயம்.

காண்டவதாஹபர்வம்.

(கிருஷ்ணனும் அர்ஜுனனும் ஸ்திரீகளுடன் ஜலக்கிரீடைக்காக யமுனைக்குச் சென்றபோது பிராம்மணவடிவமாகவந்த அக்நியைக்கண்டது.)

அந்தப்பாண்டவர்கள், இந்திரப்பிரஸ்தத்தில்வஸித்துக்கொண்டிருக்கையில் திருதராஷ்டிரமஹாராஜா பீஷ்மர்இவர்களுடையகட்டளைப்படி பங்கயர்சர்களைஜயித்தார்கள். சிறந்தகுணங்களும் செய்கைகளுமுள்ள தர்மராஜாவைஅடித்தபிறகு எல்லாஜனங்களும் நல்லலக்ஷணமுள்ளதும் புண்ணியகாரியத்தைச்செய்வதுமாகிய சரீரத்தையடைந்த ஆத்மாக்களைப்போலஸுகமாகஇருந்தனர். ஜனமேஜயரே! நீதி

* அக்னியைப் போலப்பிரகாசமானசருதம்என்னும்சாஸ்திரஞானத்தை யேனைபோல்ப் பலமாகவுடையவன்என்பதுபொருள்.

யோடுகூடியஅந்ததத்தர்மராஜர் தர்மார்த்தகாமங்களென்னும் மூன்று புருஷார்த்தங்களைத் தமக்குச்சரியானநிலைமையிலிருக்கும் மூன்று பந்துக்களைப்போல மரியாதையாக நடத்தினர். சரீரத்தோடுகூடியிருப்பனபோலவே அந்ததத்தர்மார்த்த காமங்களுக்கும் ஸமமாகத் தமதுதிரவியத்தைப்பகிர்ந்துகொடுத்து அவற்றோடு தாம் * நான்காவதுபங்காளிபோலிருந்தார். ஜனங்கள் வேதங்களைஓதுகிறவரிற்கிறந்தவரும் அவற்றைமஹாயஜ்ஞங்களில்உபயோகிப்பவரும் புண்ணியலோகங்களைக் காப்பாற்றிக்கொள்பவருமாகிய அந்ததத்தர்மராஜாவை ராஜாவாகக்கிடைக்கப்பெற்றனர். அந்தராஜாவினுல் ராஜ்யலக்ஷ்மி நிலையானஇடம்பெற்றது. அறிவானது சிறந்தஆதரவையடைந்தது எல்லாத்தர்மங்களும் அபிவிருத்தியடைந்தன. அந்தராஜா நான்குசகோதரர்களுடன்கூடி நான்குவேதங்களையும் பிரயோகித்துச்செய்யப்பட்ட மஹாயாகம்போல மிகவும்பிரகாசித்தார். பிருஹஸ்பதிக்கொப்பான தௌம்யர்முதலிய பிராம்மணஶ்ரேஷ்டர்கள் பிரம்மாவினிடம் தேவர்களிருப்பதுபோல அவரைச்சுற்றியிருந்தனர். பூர்ணசந்திரனைப்போல மாசற்றதர்மராஜாவினிடம் பிரஜைகளுடையகண்களும் உள்ளங்களும் ஒரேகாலத்தில் மிக்கஆனந்தமடைந்தன. பெரிய அதிருஷ்டத்தினுலேபலாத்திரம் பிரஜைகள் அந்தராஜாவினிடம் உள்ளன்புவைக்கவில்லை; ஜனங்கள் மனத்திற்கினியனவற்றையெல்லாம் அவர்கிரியையினுல் நிறைவேற்றினர். சிறந்தபுத்தியுள்ளவரும் அழகாகப்பேசுகிறவருமாகிய அந்ததத்தர்மராஜாவினிடத்தில் அயுக்தமாகவாவது அஸத்யமாகவாவது கடுமையாகவாவது மனத்தைக்கவராததாகவாவதிருக்கும்சொல் இருந்ததில்லை. ஜனமேஜயரே! மிகப்பெரிய சக்திமானான தர்மபுத்திரர்எல்லாப்பிரஜைகளுக்குந் தமக்கும்நன்மையானவற்றையே செய்யக்கருதி அன்போடிருந்தார். அவரைப்போலவே பாண்டவர்களனைவரும் ராகித்வேஷத்தைத் துயரம்விட்டுத் தங்கள்பராக்ரமத்தினுல் மற்றஅரசர்களையெல்லாம் அச்சப்படுத்திக்கொண்டுவஸித்தனர்.

பிறகு சிலநாட்கள்கடந்தபின் அர்ஜுனன் கிருஷ்ணனைநோக்கி, "கிருஷ்ணை! தாபம்அதிகமாகவிருக்கிறது; நாம்யமுனைக்குச்செல்வோம். மதுஸூதனை! நாம்வேண்டியவர்களுடன்கூட அங்கேவஸிக்

* இம்மூன்றையும் ஒன்றுக்கொன்று விரோதமில்லாமல் நடத்தினபிறகு தம் ஸௌக்கியத்தைக்கருதினர் என்பது கருத்து; "மூன்றுமந்திரிகளையுடையஅரசன் அவர்களால்உபாவிக்கப்படுவதுபோலவும், மோக்ஷஸ்வரூபனஆத்மா தர்மார்த்தகாமங்களால் உபாவிக்கப்படுவதுபோலவும், அவர் தர்மார்த்தகாமங்களால் உபாவிக்கப்பட்டார்" என்பது இங்கேபழையஉரை.

யுடிவிட்டு ஸாயங்காலத்தில் திரும்பிவருவோம். ஜனார்த்தன! நீர் மனம்வைக்கவேண்டும்" என்றுசொன்னன். அதற்குக் கிருஷ்ணபகவான், "குந்தியின்புத்திரனே! அர்ஜுனா! நாம்வேண்டியஜனங்களுடன் ஸுகமாக ஜலக்கிரீடைசெய்யலாமென்பது எனக்கும் இஷ்டந்தான்" என்றுசொன்னர். ஜனமேஜயரே! அந்தக்கிருஷ்ணர்அர்ஜுனர்களிருவரும் தர்மபுத்திரரைக்கேட்டு அனுமதிபெற்றுக்கொண்டு வேண்டியவர்களுடன்கூட அவ்விடம்சென்றனர். காண்டவப்பிரஸ்தத்தில் நாடுகளில்விளையாடிக்கொண்டிருந்த கிருஷ்ணன் புஷ்பத்தோட்டங்களோடுகூடிய சிறந்தயமுனாநதியைக்கண்டார். நதியையும் சுகந்தத்தையுமெடுத்துக்கொண்டு யமுனைக்கரையில், எல்லாப்பருவங்களிலும்அழகானதும் எல்லாப்பிராணிகளுக்கும் இருப்பிடமுமாகிய உயர்ந்தகாண்டவவனத்தையும்,அதைச்சேர்ந்தஎல்லாப்பிரதேசங்களையும் அர்ஜுனனோடுகூடப் பார்த்தார். கொண்டைமுகிறுகள், நரிகள், புலிகள், செந்நாய்கள், மான்கள், குரங்குகள், யானைகள், சிறுத்தைகள்முதலிய அனேகமிருகங்களும், கிளிகள், மயில்கள், காலகண்டபக்ஷிகள், ஹம்ஸபக்ஷிகள், ஸாரஸபக்ஷிகள்முதலியபக்ஷிகளும் சப்தித்துக்கொண்டுநிரம்பியிருப்பதும், தேவாஸுராரக்ஷஸர்கள்முதலியஎல்லாராலும் கொண்டாடத்தக்கதும், பன்னகராஜாவானதக்ஷகனுக்குஇருப்பிடமும், முங்கில், இலவு, வில்வம், குருக்கத்தி, நாவல், மா, சண்பகம், அசோகம், பலா, அரசு, பலீ, எலுமிச்சை, மகிழ், வகபத்மகம், தாளிப்பனீ, சந்தனம்முதலியஅனேகமரங்கள்நிரம்பினதும், அநேகம்புதர்களால்மூடப்பட்டதும், பிரப்புகளும்வண்டுமூங்கில்களுமுள்ளதும், ஸர்ப்பங்கள்நிறைந்ததும், விஸ்தாரமானபெருமரங்கள் நெருங்கினதனால் ஸூர்யரச்மிபடாததும், கோரப்பற்களுள்ளதுஷ்டமிருகங்கள் கூட்டங்களாயிருப்பதும், மனிதர்களேயில்லாததும், ராக்ஷஸர்களுக்கும் மஹாஸர்ப்பங்களுக்கும் பக்ஷிகளுக்கும் முக்கியமானஇடமுமாகிய காண்டவவனத்தை, மிகுந்தபிரஜ்ஞையுள்ளவரும் எல்லாலோகங்களின்பிரியஹிதமுள்ளவரும் ஸர்வலோகநாதருமாகிய் கிருஷ்ணபகவான் அர்ஜுனனுடன்பார்த்தார். பீதாம்பரத்தைத்தரிப்பவராகிய கிருஷ்ணபகவான் அந்தவனத்தில் அனேகமுறை சஞ்சரித்துக்கொண்டிருக்கையில் மரங்களோடும் யக்ஷர்களோடும் பிராணிகளோடும் பக்ஷிகளோடும் காண்டவவனத்தையழிக்கக் கருதினர். அனேகமரங்களுள்ளதும் அனேகவிதங்களான வீடுகள் நிரம்பினதும் சுவையுள்ளவையும் விலைபெற்றவையுமான பக்ஷணங்களும் போஜனங்களும் பானங்களுமுள்ளதும் அனேகவகையான

புஷ்பமாலைகளும் சந்தனங்களும் அளவற்ற உயர்ந்தரத்னங்களும் நிரம்பினதும் அமராவதிக்குஒப்பானதுமான அந்தக்கிரீடாப்பிரதேசத்தையடைந்து கிருஷ்ணார்ஜுனர்கள் உள்ளேபிரவேசித்தனர். ஜனமேஜயரே! எல்லாஜனங்களும் தத்தம்விருப்பப்படிவிளையாடினர். பருத்தநிதம்பங்களும் அழகிய பெரிய கொங்கைகளுமுள்ளவரும் அழகிய கண்களையுடையவருமான ஸ்திரீகளும் மதுபானத்தினால் தூண்டப்பட்டையுடன்விளையாடினர். கிருஷ்ணார்ச்சுனர்களின்மனைவிகளான சிறந்தமங்கையர்கள் காட்டிற்சிலரும் ஜலத்திற்சிலரும் வீடுகளிற்சிலருமாகத் தங்கள்விருப்பப்படி தாந்தாம் விரும்பினஇடங்களில் கிரீடித்தனர். ஜனமேஜயமஹாராஜாவே! கிருஷ்ணனுக்கு எப்போதும் அன்புள்ளபெண்ணரசியாகிய ஸத்தியபாமையும் த்ரௌபதியும் ஸுபத்ரையும் மதுமயக்கம்மிகுந்தவர்களாய் ஸ்திரீகளுக்குவஸ்திரங்களையும் ஆபரணங்களையும் தானம்செய்தனர். அங்கே சில பெண்கள் ஸந்தோஷத்துடன் ஆடினர். மற்றும்சிலர் கூவினர். வேறு சிலர் சிரித்தனர். மற்றுமுள்ளசிலர் உயர்ந்தமதுவைக்குடித்தனர். ஒருசிலர் அங்கே ஒருவரையொருவர் தழுவினர்; ஒருவரையொருவர் அடித்தனர். சிலர் ஒருவருக்கொருவர் ரஹஸ்யங்கள்பேசினர். புல்லாங்குழல்கள் வீணைகள் மிருதங்கங்கள் இவற்றின் இனியஓசைகளினால் அந்தமாளிகையும் மிகவும்நிறப்புள்ள அந்தவனமும் நிரப்பப்பட்டன. அங்கே அவ்வாறுநடந்துகொண்டிருக்கையில் கிருஷ்ணனும் அர்ஜுனனும் ஸமீபத்திலுள்ள மிக்கஅழகான ஒருபிரதேசத்துக்குச் சென்றனர். ஜனமேஜயராஜாவே! மஹாத்மாக்களும் எதிரிகளின்பட்டணங்களை ஜயிப்பவருமாகிய கிருஷ்ணார்ஜுனர்கள் அங்கேசென்று உயர்ந்தவிலைபெற்ற ஆஸனங்களில்வீற்றிருந்தனர். முன் நடந்த பராக்கிரமச்செய்கைகளையும் மற்றுமுள்ள அனேகவிஷயங்களையும் பேசிக்கொண்டு அவ்விருவரும் அவ்விடத்தில்மகிழ்ந்திருந்தனர். தேவலோகத்தில் அசுவினிதேவர்கள்இருப்பதுபோல அவ்விடத்தில் ஸந்தோஷமாகஉட்கார்ந்திருக்கும் கிருஷ்ணார்ஜுனர்களிடம் ருஷிப்ராமணன்வந்தான். பெரியஆச்சாமரம்போல உயரமானவனும், உருக்கிவிட்டதங்கம்போன்ற நிறமுள்ளவனும், பசுமையும்செம்பட்டையுமாகப்பிரகாசிக்கின்ற மீசையும் உயரத்துக்குத்தகுந்தபருமனுமுள்ளவனும், பாலஸூர்யனைப்போலப்பிரகாசிப்பவனும், மாவுரியுடுத்தவனும், ஜடையைத்தரித்தவனும், தாமரையிதழ்போன்ற கண்களையுடையவனும், தன்சிவந்தஒளியினால் ஜ்வலிப்பவன்போன்றவனுமாகிய அந்தப்பிராமணன் காண்டவவனத்தையெரிக்கக்கருதிக் கிருஷ்

ணர்ஜுனரையடைந்தான். ஜ்வலிக்கின்றஅந்தப்பிராம்மணத்தமன் அணுகிவரக்கண்டு பிரபுவானகிருஷ்ணபகவான் இவன் அக்கினியாக இருக்கலாவேண்டுமென்று நினைத்தார். அர்ஜுனனும் கிருஷ்ணனும் உடனே எழுந்துநின்றனர்.

இருநூற்றுநாற்பத்தொன்பதாவது அத்தியாயம்.

காண்டவதாஹபர்வம். (தொடர்ச்சி.)

(காண்டவவனத்தையெரிக்கவேண்டுமென்று கிருஷ்ணார்ஜுனர்களிடம் அக்னிவேண்டினதாக வைசம்பாயனர்சொல்ல, ஜனமேஜயர், அதன்காரணத்தைக்கேட்டதும், சுவேதகிராஜன்செய்தயாகத்தில் அதிகபோஜனம் செய்ததனால் சக்திகுறைந்தஅக்னி தன்சக்திவருவதற்காகப் பிரம்மாவினிடம் வேண்ட அவர்கொடுத்தவரத்தால் காண்டவவனத்தைஎரிக்கஆரம்பித்தும், அதற்கு ஏழுதரம்விக்கினம்வந்ததனால் கிருஷ்ணார்ஜுனரைஸஹாயத்திற்காக வேண்டிக்கொண்டானென்று வைசம்பாயனர் சொன்னதும்.)

அந்தப்பிராம்மணன் காண்டவவனத்தின் ஸமீபத்திலிருக்கும் லோகவீரர்களாகிய அர்ஜுனனையும்பாதவீரராகியகிருஷ்ணனையும் பார்த்து, "கிருஷ்ணார்ஜுனர்களே! நான்பிராம்மணன்; அதிகபோஜனம்செய்பவன்; எப்போதும் குறைவாகவேபோஜனம்செய்கிறேன்; உங்களிடம்யாசிக்கிறேன்; எனக்கு ஒருதிருப்தியைக்கொடுங்கள்" என்றுசொன்னன். அவன்இவ்வாறுசொன்னவுடன் அந்தகக்கிருஷ்ணார்ஜுனர்கள், "நீர்எவ்வகையானஉணவினால் திருப்தியடைவீர்; அந்தஉணவுக்காக முயலுகிறோம்" என்றுஅவனுக்குச்சொன்னார்கள். இவ்வாறுசொல்லப்பட்ட அந்தஅக்னிபகவான், எவ்வகையாகாரம்லித்தம் செய்யலாமென்றுபேசிக்கொண்டிருக்கும் அவ்விரண்டுவீரர்களையும்பார்த்து, "நான்அன்னத்தைப்புஜிக்கவிரும்பவில்லை. என்னை அக்னியென்றுஅறியுங்கள். எனக்குத்தகுதியானஆகாரமெதுவோ அதனைநீங்கள் கொடுங்கள். இந்தக்காண்டவவனத்தை எப்போதும் இந்திரன்காக்கிறான். அந்தமஹாத்மாவினால் ரக்ஷிக்கப்பட்ட இவ்வனத்தை நான்கொளுத்தமுடியவில்லை. இந்திரனுடையஸ்நேஹிதனாகிய தக்ஷகன் இனத்தாருடன் எப்போதும் இவ்வனத்தில்வஸிக்கிறான். அவனுக்காக வஜ்ரபாணி இந்தக்காட்டை ரக்ஷிக்கிறான். இந்தக்காட்டில் தக்ஷகனுடையஸம்பந்தத்தினால் இன்னும்அனேகம்பிராணிகள் காப்பாற்றப்படுகின்றன. நான்கொளுத்தவிரும்பியும் இந்திரனுடைய

பிரபாவத்தினால் கொளுத்தமுடியாதவனாக இருக்கிறேன். அவன், நான்எரிக்கிறதைக்கண்டு மேகங்களைக்கொண்டு ஜலத்தைவருஷிக்கச் செய்கிறான். அதனாலேதான் நான்எரிக்கஆரம்பித்தும் எனக்குப் பிரியமானகாட்டை நான்கொளுத்தமுடியவில்லை. அப்படிப்பட்டநான் அஸ்த்ரங்கள்தெரிந்தவர்களாகியஉங்களைச் சகாயர்களாகஅடைந்து காண்டவவனத்தைஎரிப்பேன். இந்தஅன்னந்தான் யான்வேண்டினது. உத்தமமான அஸ்த்ரங்களையறிந்த நீங்களிருவரும் அந்தமழைத் தாரைகளையும் எல்லாவிடங்களிலுமுள்ளபிராணிகளையும் எங்கும்தடுத்துவிடுவீர்கள்" என்றுசொன்னான்.

ஜனமேஜயர், "பிராம்மணரே! இந்திரனால்காப்பாற்றப்பட்டதும் அனேகம்பிராணிகள் சேர்ந்திருந்ததுமான காண்டவவனத்தை அக்னிபகவான் எரிக்கக்கருதினதுஏன்? அக்னி மிகுந்தகோபத்துடன் காண்டவவனத்தைக்கொளுத்தினதற்குக்காரணம் சிறிதாயிருக்குமென்று நான்நினைக்கவில்லை. பிராம்மணரே! முனிவரே! முன்னேகாண்டவவனதகனம் எவ்வாறு நடந்ததென்பதை நடந்தபடி விரிவாகக்கேட்கவிரும்புகிறேன்" என்றுகேட்க, வைசம்பாயனர்சொல்லுகிறார். "ராஜாவே! பூமிக்கரசனே! அக்னி காண்டவவனத்தை யெரித்ததற்குக்காரணத்தை நடந்தபடிநான்சொல்லுகிறேன்; எல்லாவற்றையும்கேளும். புருஷச்ரேஷ்டரே! ஸத்தமரே! புராணத்திலுள்ளதும் ரிஷிகளாற்சொல்லப்பட்டதுமாகிய காண்டவவனத்தின் நாசத்தைப்பற்றிய இந்தக்கதையை உமக்குரைப்பேன்.

ராஜாவே! இந்திரனுக்கொப்பான பலபராக்கிரமங்களுள்ளவனும், சாஸ்திரப்படியாகஞ்செய்தவனும், தனக்கிடு வேறொருவனுமில்லையென்று சொல்லத்தக்க கொடையாளியும், சிறந்தபுத்தியுள்ளவனுமாகிய சுவேதகியென்னுமரசனாதிபெற்றஅரசனைப்பற்றிப் புராணத்திற்கேட்டிருக்கிறோம். அந்தராஜா பன்னிரண்டுவருஷகாலத்திற்கு ஒருயஜ்ஞதீக்ஷைசெய்துகொண்டான். அவனுடைய அந்த ஸத்ரயாகத்தில் மஹரிஷிகளும் வேதவேதாங்கங்கள்தெரிந்தபிராம்மணர்களும் மிகுதியாக எப்போதும் சேர்ந்திருந்தனர். அவன் நிரம்பினதக்ஷிணையோடுகூடிய வேள்விகளையும் * மஹாயஜ்ஞங்களையும் செய்தான். ராஜாவே! அவனுக்கு ஒவ்வொருநாளும் யாகத்தைச் சேர்ந்தகிரியைகளைச்செய்வதிலும் அனேகமானதானங்களைச்செய்வதிலும்தவிர வேறொன்றிலும்புத்திசெல்லவில்லை; அந்தப்புத்திமானான அரசன் ரித்விக்குக்களோடுசேர்ந்து இவ்வாறுயாகஞ்செய்துகொண்

* தேவயஜ்ஞம் பித்ர்யஜ்ஞம் ரிஷியஜ்ஞம் பூதயஜ்ஞம் மனுஷ்யயஜ்ஞம்.

டிருந்தான். பிறகு வெகுகாலத்திற்குப்பின் புகையினால்கண்கள்கலங்கின அந்தரித்விக்குக்கள் களைப்படைந்து ராஜாவைவிட்டனர். பிறகு அரசன் அந்தரித்விக்குக்களைவேண்டினன். கண்டெட்டுப்போனதனால் அவர்கள் யஜ்ஞத்திற்குவரவில்லை. அதன்பிறகு அரசன் அவர்களுடைய அனுமதியினால் அவர்களைச்சேர்ந்த வேறுபிராமணர்களை ரித்விக்குக்களாகக்கொண்டு அந்தஸத்ரயாகத்தைப்பூர்த்திசெய்தான். இப்படிநடத்திக்கொண்டிருந்த அந்தமஹாத்மாவான அரசன் சிலகாலத்துக்குப்பின் ஒருஸமயத்தில் நூறுவருஷங்களிற்செய்யக்கூடிய ஒருஸத்ரயாகத்தைச்செய்யநினைக்கும்போது அவரித்விக்குக்கள்மற்றுக்கொள்ளவில்லை. பெரும்புகழோனான அவ்வரசன் தனக்குவேண்டியவர்களுடன்கூட நமஸ்காரஞ்செய்தும் நல்வார்த்தைசொல்லியும்வேண்டியவற்றைக்கொடுத்தும் பிருந்தமுயற்சிசெய்து விடாமல் பலமுறை ரித்விக்குக்களைவேண்டினன். அளவற்றமஹிமையுள்ள அவர்கள் அவனுடைய அந்தவிருப்பத்தைச்செய்யவில்லை. அந்தராஜரிஷியிடம்கோபங்கொண்டு ஆச்சமங்களிலிருக்கும் அந்தரித்விக்குக்களைப்பார்த்து,, "பிராம்மணர்களே! நான்பதினாயிரந்தானும் உங்களுக்குச்சுச்ரூஷைசெய்யாதவனாயிருந்தாலும் பிராம்மணர்கள் அருவருக்கத்தக்கவனாயிருந்தாலும் நீங்கள் என்னைஉடனேவிட்டுவிடுங்கள்; பிராம்மணோத்தமர்களே! அவ்வாறில்லாமையால் எனக்குள்ளயாகச்சத்தையும் இப்போது நீங்கள் தடைசெய்யவும், காரணமில்லாமல் என்னைவிட்டுவிடவும் தகாது. பிராம்மணர்களே! உங்களையே சரணமடைந்திருக்கிறேன்; அனுக்கிரஹம்செய்யக்கடவீர்கள். பிராம்மணோத்தமர்களே! எனக்குக்காரியமிருப்பதனால் உண்மையுள்ளபிரியவசனங்களாலும் கொடுப்பதாகச்சொல்வதனாலும் உங்களைச்சந்தோஷப்படுத்தி உண்மையாக என்காரியத்தைப்பற்றிக் கேட்டுக்கொள்ளுகிறதை நீங்கள்செய்யவேண்டும். பிராம்மணோத்தமர்களே! அவ்வாறின்றி விரோதமேகாரணமாக நீங்கள்என்னைவிட்டுவிட்டால் எனக்கு யஜ்ஞம்செய்விக்கத்தக்க வேறுரித்விக்குக்களிடம்செல்வேன்" என்றுசொல்லி அவ்வரசன்ஓய்ந்தான். வீரரானஜனமேஜயரே! அந்தயாகம்செய்விப்பவர்கள் அந்தராஜாவுக்கு யஜ்ஞம்செய்விப்பது தங்களாலல்முடியாமையால் கோபத்துடன்அவனைப்பார்த்து, "ராஜச்ரேஷ்டனே! உனக்குயாகக்கிரியைகள் இடைவிடாமல்தான் இருக்கின்றன. எப்போதும் அந்தக்கிரியைகளைச் செய்ததனாலேயே நாங்கள் களைத்துப்போனோம். குற்றமற்றவனே! இந்தச்சிரமத்தினாலேயே ஓய்ந்துபோனஎங்களைவிட்டுவிடவேண்டும். அவஸரப்பட்டுப் புத்திப்பிரமைகொண்டநீ ருத்

திரிடம்செல். அவர்உனக்குயஜ்ஞம்செய்விப்பார்" என்றுசொன் ஞர்கள். ஜனமேஜயராஜாவே! அவர்கள் நிராகரித்துச்சொன்ன சொல்லைகேட்டு, சுவேதகியென்னும்அரசன் கோபத்தோடு கைலாஸ பர்வதம்சென்று கடுந்தவத்தைமேற்கொண்டு நியமத்தோடும் உறுதி யானவிரதத்தோடும் ஆசாரத்தோடும்கூடியவனுகி உபவாஸத்துடன் நெடுங்காலம் சிவபிரானையாராதித்துக்கொண்டிருந்தான். அவ்வரசன் சிலநாள் பன்னிரண்டாவது * முகூர்த்தத்திலும் மற்றும் சிலநாள் பதினுறுவதுமுகூர்த்தத்திலும் கிழங்குகளையும் கனிகளையும் ஆகார மாகக்கொண்டான்.

சுவேதகிராஜன் மனத்தைச்செம்மையாகத்தியானத்தில் நிறு த்தி ஆறுமாதகாலம் கைகளைத்தூக்கிக்கொண்டும் இமைகொட்டாம லும் கட்டையைப்போல அசையாமல் நின்றுகொண்டிருந்தான். பாரதமே! அவ்வாறு பெருந்தவஞ்செய்துகொண்டிருந்த அந்த ராஜச்ரேஷ்டனுக்கு, பகவானுகியசங்கர் மிகுந்த கிருபையுடன் பிரத்தியக்ஷமாகி இனியதும் கம்பீரமுமானவாக்கினால், "புருஷச் ரேஷ்டா! எதிரிகளைவாட்டுகிறவனே! உன்தவத்தினால்நான்தோஷ மடைந்தேன். உனக்குமோக்ஷமமுண்டாகட்டும். ராஜாவே! நீவிரும்பு கிறவரத்தைக்கேள்" என்றுசொன்னர். அளவற்றமஹிமையுள்ளருத் திரருடையஇந்தச்சொல்லைக்கேட்டு அந்தமஹாத்மாவுக்குநமஸ்காரஞ் செய்து, "தேவர்களுக்கெல்லாந்தேவரே! தேவச்ரேஷ்டரே! ஈசு வரரே! எல்லாலோகங்களாலும் நமஸ்கரிக்கப்பெற்ற பகவானுகிய உங்களுக்கு என்மேல்அருளிருக்குமாயின் நீங்களே எனக்கு யாகம் செய்விக்கக்கடவீர்கள்" என்றுஅந்தராஜரிஷிசொன்னன். ராஜா வாற்சொல்லப்பட்டஇந்தச்சொல்லைக்கேட்டுப் பகவான், கிருபைகூர் ந்து புன்னகையுடன், "ராஜாவே! யாகஞ்செய்விப்பது நம்முடைய வேலையன்று. நீயோ இந்தவரத்தைவேண்டி மிகப்பெரியதவம்செய் திருக்கிறாய். ராஜாவே! வீரனே! ஓர்உடன்படிக்கையின்மேல் உன க்கு யாகஞ்செய்விப்பேன். பன்னிரண்டுவருஷம் பிரம்மசரியநியமத் துடன் இடைவிடாதநெய்த்தாரைகளால் அக்னிக்குத் திருப்திசெய் விப்பாயாயின் நீ என்னிடத்தில்விரும்புகிறவரத்தைப்பெறலாம்" என் றனர். சூலபாணியானருத்ரரால் இவ்வாறுசொல்லப்பட்டசுவேதகி ராஜன், அவர்சொன்னபடியே எல்லாவற்றையும்செய்தான். பன்னி ரண்டாவதுவருஷம் நிரம்பினபின் உலகங்களைச்சிருஷ்டிப்பவரும் மஹேசுவரருமானசங்கர் திரும்பவும்வந்துராஜச்ரேஷ்டனை அந்தச்

* ஒருமுகூர்த்தம் இரண்டுநாழிகை.

சுவேதகிராஜனைப்பார்த்து மிக்கஅன்புடன், ''ராஜச்ரேஷ்டனே! உன்னுடையமுதன்மையானகிரியையினால் நான்ஸந்தோஷம்செய்விக்கப்பட்டேன். வீரனே! யஜ்ஞஞ்செய்விப்பது பிராம்மணர்களுக்குவிதித்திருப்பதனால் நான் நேராக உனக்குஇப்போதுயாகஞ்செய்விப்பதில்லை. ஆகிலும், பூமியில் எனதுஅம்சமாகவிருக்கும் சிறந்தசக்திமானான துர்வாஸஸ்என்றுபெயர்பெற்ற மஹாநுபாவனான பிராம்மணோத்தமர் உனக்குயாகம்செய்விப்பர்; நீ ஸோமக்கிரிகளைச்சேர்க்கலாம்'' என்றுசொன்னார். இவ்வாறு சிவபிரான் சொன்னசொல்லைக்கேட்டுத் திரும்பவும்தன்னூருக்குவந்து ஸோமக்கிரிகளைச்சேர்த்தான். ஸோமக்கிரிகளைச்சேர்த்தபிறகு சுவேதகிராஜன் மறுபடியும் ருத்திராிடம்சென்று வணங்கிக் கைகூப்பிநின்றுகொண்டு, ''மஹாதேவா! எல்லாப்பொருள்களும் எல்லாக்கருவிகளும் உமதுஅனுக்கிரஹத்தினால் சம்பாதிக்கப்பட்டிருக்கின்றன. எனக்கு யாகதீக்ஷை நாளைக்குநடக்கவேண்டும்'' என்றுசொன்னான். மஹாத்மாவாகிய அவ்வரசனுடைய இந்தச்சொல்லைக்கேட்டு, ருத்திரர் துர்வாஸரை மிழைத்து, ''பிராம்மணோத்தமரே! இந்தச்சுவேதகிராஜன் மஹாநுபாவன். இவ்வரசனுக்கு என்கட்டளையினால் நீர் யாகம்செய்விக்கக்கடவீர்'' என்றுசொன்னார். துர்வாஸமஹரிஷி ருத்திரரிடத்தில் அப்படியேயாகட்டுமென்றுசொன்னார். அதன்பிறகு மஹாத்மாவாகிய அவ்வரசனுடைய அந்தஸத்ரயாகமானது விதிதவறாமலும் விதித்தகாலந்தவறாமலும் சாஸ்திரோக்தமாகநிறைவேறியபின் தக்ஷிணையோடுநடந்தது. மஹாத்மாவான அந்தஅரசனுடையயாகம்முடிந்தபின் அந்தயஜ்ஞத்தில் தீக்ஷைசெய்துகொண்ட ரித்விக்குக்களும் மிகுந்தமகிமையுள்ளஸபையோருமாகிய எல்லாரும் துர்வாஸரிடம் விடைபெற்றுச்சென்றனர். அப்போது மஹாநுபாவனான அவ்வாசனும் மஹாநுபாவர்களும் வேதங்களில்கரைகண்டவர்களுமாகிய பிராம்மணர்கள் பூஜிக்கவும் வந்திகள்துதிக்கவும் நகரத்துஜனங்கள்எதிர்கொண்டழைக்கவும் தன்நகரத்தில் பிரவேசித்தான். இவ்விதமாகியநற்செய்கையுள்ளஅந்தராஜச்ரேஷ்டனான சுவேதகியென்னும்ராஜரிஷிஎல்லாராலும்சிலர்க்கப்பட்டு வெகுகாலத்திற்குப்பின் ரித்விக்குக்கள்ஸதஸ்யர்கள்எல்லாருடனும்கூட ஸ்வர்க்கத்துக்குச்சென்றான். அவனுடையஸத்ரயாகத்தில் பன்னிரண்டுவருஷகாலம் அக்நிபகவான் நெய்யைக்குடித்தான். ஓர்உறுதியானமனத்துடன்செய்த அந்தசேவள்ளியில் இடைவிடாதநெய்த்தாரைகளாலும் ஹோமம்செய்த அன்னத்தினாலும் அக்னிக்கு மிகுந்ததிருப்தியுண்டாயிற்று. பிறகு மற்ற யாரு

டைய தேஹாமத்திரவியங்களையும் வாங்கிக்கொள்ள விரும்பவில்லை. வெளுத்ததிறமுள் ளவனுகவும் ஒளிமழுங்கினவனுகவுமானதால், அக்னி முன்போலப் பிரகாசிக்காமலிருந்தான். அதனுல், அக்னி பகவானுக்கு வேறுபாடுஉண்டாயிற்று. ஒளிகுறைந்து வாட்டமுண்டாயிற்று. அந்தஅக்னிபகவான் தன்சக்திமோனதைக்கண்டு உலகங்களினுல் பூஜிக்கப்பட்டதும் புண்ணியமுமான பிரம்மலோகத்திற்குச் சென்றுன். அவ்விடத்தில் ஆஸனத்திலிருந்த பிரம்மதேவரைக்கண்டு, "பகவானே! சுவேதகிராஜனுல் எனக்குஅதிகதிருப்திசெய்விக்கப்பட்டது, (அதனுல்) அருசி அதிகமாகஉண்டாயிருக்கிறது. அதை நிவிருத்திசெய்ய எனக்குமுடியவில்லை. ஜகத்பிரபுவே! ஒளியும் வலிமையும் குன்றியிருக்கிறன். தங்களுக்கு ஹிதத்தினுல் எனது இயற்கை நிலைக்கவேண்டுமென்று விரும்புகிறேன்" என்றுசொன்ஞன். எல்லாஉலகங்களையும்படைப்பவராகிய பகவானை பிரம்மா இவ்வாறு அக்னிசொன்னதைக்கேட்டு, புன்னகையுடனே அக்னியைப்பார்த்து, "மஹாபாவனே! பன்னிரண்டுவருஷகாலம் ஒரு பாத்திரத்திலிருந்து இடைவிடாததாரையாக விழுந்தநெய்யையும் தேஹாமஞ்செய்தஅன்னத்தையும் நீஉண்டதனுல் உனக்குத் தளர்ச்சியுண்டாயிருக்கிறது. தேவர்களுக்குஹவிஸ்களைவஹிக்கின்ற அக்னியே! திடீரென்று ஒளிகுன்றினமையைபற்றி உனக்குத்துயரம் வேண்டாம். மறுபடியும் ஸ்வபாவமாயிருப்பாய். காலம்வந்தபோது உன்னுடையஅரோசகத்தை நான்போக்கிவிடுவேன். தேவர்களின் கட்டளையின்படி உன்னுல் எது முழுதும்நிரூபிக்செய்யப்பட்டதோ அந்தக்காண்டவவனமானது தேவசத்துருக்களுக்கிருப்பிடமும் மிகக்கொடியதுமாயிருக்கிறது. அக்னியே! அதில் எல்லாப்பிராணிகளும் வஸிக்கின்றன. அவற்றின்கொழுப்பினுல் திருப்தியடைந்தபிறகு நீ உன்இயற்கையைப்பெறுவாயாக; நீ உடனே அதையெரிக்கச்செல்; இந்தநோயிலிருந்துவிடுபடுவாய்" என்றுசொன்ஞர். பிரம்மாவின் வாயிலிருந்துவந்த இந்தவாக்கியத்தைக்கேட்ட அக்னி மிகுந்தவேகத்துடன்ஓடிக் காண்டவவனத்தைச்சேர்ந்து முழுச்சக்தியும்எடுத்துக்கொணடு காற்றினுல்தூண்டப்பட்டுக் கோபத்துடன் அதிகமாக ஜ்வலித்தது. காண்டவவனம்எரிவதைக்கண்டு அங்குள்ளவைகள் நெருப்பையவிக்கப் பெரியமுயற்சிசெய்தன. நூற்றுக்கணக்கும் ஆயிரக்கணக்குமானயானைகள் கோபத்துடன் தங்கள்துதிக்கைகளினுல் சீக்கிரமாகஜலத்தையெடுத்து அக்னியைவிரைவாகஅவித்தன. அங்கே அனேகந்தலைகளோடுகூடிய பாம்புகள் மிகுந்தகோபமும்வேகமும்

கொண்டு தலைகளால்ஜலத்தைக்கொண்டுவந்து தாரையாகத் தீயின் மேலே பொழிந்தன. ஜனமேஜயரே! இன்னுமனேகம்பிராணிகளும் அவ்வாறே தந்தம்கருவிகளைக்கொண்டு முயற்சிசெய்து தீயைச்சிக்கி ரத்தில் அவிந்தன. இவ்வாறுகவே காண்டவவனத்தில் எரிந்தஅக்நி ஏழுமுறை திரும்பத்திரும்ப அவிக்கப்பட்டது.

இருநூற்றைம்பதாவது அத்தியாயம்.

காண்டவதாஹபர்வம். (தொடர்ச்சி.)

(அர்ஜுனன் அக்னியிடம் தேர்குதிரைவில்முதலியவற்றை யாசிப்பது.)

அந்தஅக்நிதேவன் மிகவேகமுடன் தாரையாய்க்கவிப் படைந்து கோபத்துடன் பிரம்மாவினிடம்சென்று அவ்வாறுநடந் தையெல்லாம் நடந்தவாறு தெரிவித்தான். அந்தப்பகவானுகிய பிர ம்மதேவர் சற்றுநேரம்ஆலோசித்து அக்னியைப்பார்த்து, "குற்ற மற்றவனே! எதனால் காண்டவவனத்தை நீ தகிக்கலாமோ அந்தஉபா யத்தை நான்கண்டுறிந்தேன். நீ சிலகாலம் பொறுத்துக்கொள். பிறகு அதையெரிக்கலாம். அந்தக்காலத்தில் நாராயணர்கள் உனக்கு உதவியாகஇருப்பார்கள். அக்னியே! நீ அவர்களுடன்சேர்ந்து காண் டவவனத்தையெரிக்கலாம்" என்றுசொன்னார். அந்தப்பிரம்மாவுக்கு அக்னி, அப்படியேயாகட்டுமென்றுமறுமொழிசொன்னான். ராஜாவே! நீண்டகாலத்திற்குப்பின் அந்தரிஷிகளாகியநரநாராயணர்கள் அவ தரித்திருப்பதையறிந்து அந்தப்பிரம்மதேவர் சொன்னதைநினைத்து மறுபடியும் பிரம்மாவினிடம்சென்றான். அப்போது பிரம்மா, "அக் னியே! இப்போது இந்த இந்திரன் விழித்துக் கொண்டிருக்கும் போதே நீ காண்டவவனத்தைத்தகிக்கலாம். அக்னியே! முதல்தேவர் களாகிய எந்தநரநாராயணர்கள் தேவகாரியார்த்தமாக மானிடலோகத் தில் வந்து சேர்ந்திருக்கின்றனரோ அவர்களே அர்ஜுனனென்றும் வாஸுதேவனென்றும் உலகர்நினைக்கிறது. இதோ காண்டவவனத் தின்ஸமீபத்தில் சேர்ந்திருக்கும். அவர்களிடம்செல்லு. காண்டவவனத் தைத்தகிப்பதற்கு உதவிசெய்யும்படி அவர்களைக்கேட்டுக்கொள். அப் போது தேவர்களால்காக்கப்பட்டிருந்தாலும் அந்தவனத்தை நீ தகி க்கலாம். அவர்களிருவரும்சேர்ந்து எல்லாப்பிராணிகளையும் இந்திர னையும் முயற்சிசெய்துதடுத்துவிடுவார்கள். எனக்குச்சந்தேகமில்லை" என்றுசொன்னார். ராஜச்ரேஷ்டரே! இந்தச்சொல்லைக்கேட்டு அக்னி

விரைவாகக் கிருஷ்ணர்ச்சுனர்களிடம்வந்து கேட்டவிஷயத்தை உமக்குமுன்னமேசொல்லியிருக்கிறேன். ராஜச்ரேஷ்டரே! அர்ஜுனன் அக்னிசொன்னதைக்கேட்டு இந்திரனுடையஇஷ்டமில்லாமலே காண்டவவனத்தை எரிக்கவிரும்புகின்ற அந்தஅக்னிபகவானைப்பார்த்து அக்காலத்திற்குத்தகுதியானசொல்லைச் சொல்லலானான்.

"அக்னிபகவானே! என்னிடத்தில் சிறந்தஅஸ்திரங்கள் அனேகமிருக்கின்றன. அவைகளிலுல் அனேகஇந்திரர்கள்வந்தாலும் நான் யுத்தம்செய்யமுடியும். ஆனால் யுத்தத்தில் வேகம்செய்யும்போது என்னுடையவேகத்தைத் தாங்கக்கூடியதும் என்கைவன்மைக்குஒத்ததுமாகிய வில்லொன்றுமாத்திரம் எனக்கில்லை. மேலும் ஓய்வில்லாமல் அனேகபாணங்களை வெகுசீக்கிரத்தில்விடுகின்றஎனது காரியத்திற்குப் பாணங்கள் மிகுதியாகவும் வற்றாமலுமிருக்கவேண்டும். நான் இஷ்டப்படி பாணங்களைப்பிரயோகிக்குப்படிஉடற்தகுதியுமில்லை. காற்றைப்போன்றவேகமுள்ள வெண்மையான திவ்யகுதிரைகளையும் மேகத்துக்கொப்பான ஒலியும் ஸூரியனுக்கொப்பான ஒளியுமுள்ளரதத்தையும் நான்விரும்புகிறேன். அப்படிப்பட்ட இந்த ஆயுதத்தினால் கிருஷ்ணன் யுத்தத்தில் நாகர்களையும்பிசாசர்களையும் கொல்லுவதோ அந்தஆயுதம் ஒன்று கிருஷ்ணனுடையசக்திக்குச்சரியானதாயில்லை. அக்னிபகவானே! அந்தப்பெரியவனத்தில் வருஷிக்கும்இந்திரனை நான்எதனால்தடுக்கலாமோ உன்காரியசாதகமான அந்த உபாயத்தை நீசொல்லக்கடவாய். அக்னிபகவானே! மனுஷ்யனுடைய சக்தியினால்செய்யக்கூடியதை நான்செய்வேன். எனக்குப் போதுமானகருவிகளைக் கொடுக்கக்கடவாய்" என்றான்.

இருநூற்றைம்பத்தோராவது அத்தியாயம்.

காண்டவதாஹபர்வம். (தொடர்ச்சி.)

(அக்னி தேர்முதலியவற்றை அர்ஜுனனுக்கும் சக்கரத்தையும்கதையையும் கிருஷ்ணனுக்கும் கொடுத்ததும், அவர்களுமதியிறல் அக்னி காண்டவவனத்தைக் கொளுத்தஆரம்பித்ததும்.)

புகையைக்கொடியாகவுடைய அக்னிபகவான் அர்ஜுனனால் இவ்வாறுசொல்லப்பட்டவுடன், அதிதியின்புத்திரனும் ஜலத்தில் வஸிப்பவனும் ஜலத்துக்குஅதிபதியுமான வருணனென்னும்திக்குப் பாலகனைப்பார்க்கவேண்டுமென்று நினைத்தான். அக்னி நினைத்த

தைத்தரிந்துகொண்டு வருணன் அவன்முன்வந்தான். திக்பாலகர்களால்வரிலொருவனும் தேவச்ரேஷ்டனும் எப்போதும்அழியாதவனுமாகிய வருணனுக்கு மரியாதைசெய்து, "உனக்கு ராஜாவான சந்திரனுற்கொடுக்கப்பட்ட வில்லையும் இரண்டுதூணிகளையும் வானரக்கொடியோடுகூடியரதத்தையும் ஒக்கிரம்கொடு. காண்டீவத்தினால் பார்த்தனும் சக்கரத்தினால் கிருஷ்ணனும் மிகப்பெருங்காரியம்செய்யப்போகின்றனர். அவர்களுக்கு இப்போதே நீ கொடுத்துவிடம்கொடு" என்றுசொன்னன். "கொடுக்கிறேன்" என்றே வருணன் அக்கினிக்கு மறுமொழிசொன்னன். ஆச்சரியப்படத்தக்கதும், மிகுந்தவன்மையுள்ளதும், புகழையும்பெயரையும்விருத்திசெய்வதும், எந்தஆயுதங்களினாலும்வெல்லமுடியாததும், எந்தஆயுதங்களையும்வெல்லுவதும், ஆயுதங்களெல்லாவற்றினாலும்நிறைந்ததும், எதிரிகளின்சேனைகளைக்கலக்குவதும், ஒன்றுமே லக்ஷ்யங்களுக்குச்சரியானதும், பலவகைநிறத்தாற்சோபிப்பதும், விசித்திரமானதும், பேடுபல்லாயிரமில்லாததும், அடிபடாததும், நெடுங்காலமாகத்தேவர்களாலும் அஸுரர்களாலும் கந்தர்வர்களாலும் பூஜித்துவருவதுமாகிய உயர்ந்தவில்லையும், அம்புகள்குறையாதஇரண்டுபெருந்தூணிகளையும், வெள்ளிநிறமுள்ளவையும் வெண்மேகம்போற்பிரகாசிப்பவையும் வேகத்தில்மனஸுக்கும் காற்றுக்கும் ஒப்பானவையும் பொன்மாலைபோடப்பட்டவையும் கந்தர்வலோகத்தியவையுமான நான்குகுயர்ந்தகுதிரைகள்பூட்டப்பட்டதும் ஹனுமக்கொடியுள்ளதும் வேண்டியசகலவஸ்துக்களுள்ளதும் தேவர்களாலும்அஸுரர்களாலும்ஜயிக்கமுடியாததும் ஒளியுள்ளதும் கம்பீரமானசப்தமுள்ளதும் எல்லாவகைரத்னங்களும் இழைத்திருப்பதனால் அழகியதுமான ரதத்தையும்கொடுத்தான். மஹிமைபொருந்தினவரும் உலகங்களுக்குப்பிரபுவுமாகிய பிரம்மதேவர் சிறந்ததவத்தினால் எதைப்படைத்தாரோ எதுன்உருவம் ஸூர்யனைப்போன்றதோ ராஜாவானசந்திரன்எதன்மேலேறி அஸுரர்களைஜயித்தானோ எதுநீருண்டமேகம்போலவும் பளபளப்பினால்ஜ்வலிப்பதுபோலவுமிருக்கிறதோ அந்தச்சிறந்தரதத்தை வானவில்லைப்போன்றநிறமுள்ளகிருஷ்ணர்ஜுனர்களிருவரும்அடைந்தனர். மிகஅழகியதும் பொன்மயமாகியதுமான சிறந்தகொடிமரம் அதிலிருந்தது. லிம்மக்கொடிகளோடும் புலிக்கொடிகளோடுங்கூடியவரும் திவ்யசக்தியுள்ளவரும் நினைத்தரூபமெடுப்பவரும் மிகுந்தபராக்ரமமுள்ளவருமான ஹனுமானென்னும்வானரவீரர் எல்லாவற்றையும்எரிக்கப்போவதுபோல அந்தக்கொடித்தலையிலிருந்துவிளங்கினர். அந்தக்கொடியில் தங்கள்சப்

தத்தினுலேயே எதிரிசைனியங்களின் பிரஜ்ஞையைக்கெடுக்கும்படி யான அனேகவிதங்களான பெரியபேய்பிசாசுமுதலிய பூதகணங்களி ருந்தன. பலவகைக்கொடிகளினுல்சோபிக்கின்ற அந்தச்சிறந்தரதத் தைஅர்ஜுனன் பிரதக்ஷிணஞ்செய்து, தேவதைகளுக்கும்நமஸ்காரஞ் செய்து, யுத்தஸந்நாஹத்துடன் கவசந்தரித்துக் கத்திபிடித்து மணி க்கட்டில்உடும்புத்தோலாற்செய்த நாண்தடையும் விரலுறைகளும்கட் டிக்கொண்டு புண்ணியஞ்செய்தவன் தேவவிமானத்திலேறுவது போல் அந்தத்தேரிலேறினுன். முன்னே பிரம்மாவினுல்ஸ்ருஷ்டிசெய் யப்பட்டதும் தேவலோகத்ததுமான அந்தக்காண்டீவமென்னும் தனுஸையெடுத்துக்கொண்டபோது அர்ஜுனன் ஸந்தோஷமடைந் தான். வீரனுனஅர்ஜுனன் முதலில்அக்னியைப்பூஜைசெய்து பிறகு அந்தத்தனுஸையெடுத்துத் தன்பலத்தினுல் அதில் நாண்பூட்டினுன். பலசாலியானஅர்ஜுனனுல் அதில் நாண்பூட்டப்படும்போது உண் டானசப்தத்தை எவர்கள் எங்கேகேட்டனரோ அவர்கள்மனஸும் அங்கேயேபயமுற்றது. அர்ஜுனன் ரதத்தையும் வில்லையும் அம்பு கள்வற்றுதபெருந்தூணிகளையும் அடைந்தபின் அதிகசக்திபெற்று, அக்னிக்கு உதவிசெய்ய உத்ஸாஹமுள்ளவனுனன். பிறகு அக்னி வஜ் ராயுதத்தைநாபியென்றுசொல்லப்பட்ட நடுவாகவுடைய சக்கராயுதத் தையும் தனக்குப்பிரியமானஆக்னேயாஸ்திரத்தையும் கிருஷ்ணனுக் குக்கொடுத்தான். அப்போது அவரும் சக்தியுடையவரானர். அப் போது அக்னி கிருஷ்ணனைப்பார்த்து, "மதுஸூதனு! இதனுல் மானிடரல்லாதவர்களையும் தேவர்கள்முதலியவர்களையும் நீர் யுத்தத் தில்ஜயிப்பது திண்ணம். இதனுல் நீர் யுத்தங்களில் மனிதர்களுக் கும் தேவர்களுக்கும் ராக்ஷஸர்களுக்கும் பிசாசர்களுக்கும் அஸு ரர்களுக்கும் நாகர்களுக்கும் மேலாகவும் அவர்களைஜயிப்பதில்ஸமர்த் தராகவும் ஆவீர். அதற்குச்சந்தேகமில்லை. மாதவனே! யுத்தத் தில் சத்துருக்களின்மேல்போடப்போடத் தடுக்கப்படாததாகவே சென்று எதிரிகளைக்கொன்றுவிட்டுத் திரும்பவும் உமதுகைக்குவந்து சேரும்" என்றுசொன்னன். பிரபுவானவருணனும் அந்தக்கிருஷ் ணனுக்கு இடியைப்போலச்சத்தமுள்ளதும் அஸுரர்களைப்பழிப்பது மாகிய கௌமோதகியென்னும்பெயருடைய பயங்கரமானகதையைக் கொடுத்தான். அதன்பிறகு அஸ்த்ரசஸ்த்ரங்களைநிரம்பஉடையவரும் ரதமும்துவஜமுமுள்ளவருமான கிருஷ்ணார்ஜுனர்கள் ஸந்தோஷத் துடன் அக்னியைப்பார்த்து, "அக்னிபகவானே! தேவாஸுரர்கள் எல்லாரும் சேர்ந்துவந்தபோதிலும் நாங்கள் யுத்தஞ்செய்யச் சமர்த்

தர்களாயிருக்கிறோம். தக்ஷகனுக்காக யுத்தஞ்செய்யவிரும்புகிற இந்திரன்ஒருவனேமாத்திரம்பற்றிச் சொல்லவேண்டுமா" என்றனர். அர்ஜுனன், "சக்கரபாணியும் வீரருமாகிய கிருஷ்ணன், யுத்தத்தில் சஞ்சரித்துக் சக்காயுதத்தைப்பிரயோகஞ்செய்வதனால் எதையும் சாம்பலாகச்செய்வார். ஜனார்த்தனர்செய்யக்கூடாதகாரியம் மூன்று லோகங்களிலும் ஒன்றுமில்லை. அக்னியே! நானும்காண்டவமென்னும்வில்லியும் அம்புகள்வற்றாதஆணிகளையும்உடையரதத்தில் உலகங்களையெல்லாம் ஜயிக்கச் சக்தியுள்ளவனாயிருக்கிறேன். மஹாப்பிரபுவே! இந்தக்காட்டை எல்லாப்புறமுஞ்சூழ்ந்துகொண்டு இப்போதே வேண்டியவளவு நீ ஜ்வலிக்கலாம். உனக்கு உதவிசெய்வதில் நாங்கள் ஸமர்த்தர்களாயிருக்கிறோம். தெரியாமையினால் இந்திரன் தேவக்கூட்டங்களுடன் காண்டவவனத்தைக் காப்பாற்றுவதற்கு வருவானாயின், பாணங்களினல்அடிபட்ட அவயவங்களையும் குண்டலங்களையுமுடைய தேவஸேனைகளின் தலைகளைக்காண்பான்" என்றுசொன்னன். கிருஷ்ணர்ஜுனர்களால் இவ்வாறுசொல்லப்பட்ட அக்னிபகவான் ஜ்வாலாரூபத்தையெடுத்துக்கொண்டு வனத்தையெரிக்கஆரம்பித்தான். ஏழுஜ்வாலைகளுடன் அக்னி நாற்புறமும் சூழ்ந்துகொண்டு பிரளயகாலத்தைக்காண்பிப்பவன்போலக் காண்டவவனத்தையெரித்தான். ஜனமேஜயரே! அக்னி அந்தவனத்தைப் பிடித்து உட்புகுந்து மேககர்ஜனையைப்போலக் கர்ஜித்து எல்லாப் பிராணிகளையும்நடுங்கச்செய்தான். ஜனமேஜயரே! எரிக்கப்படுகின்ற அந்தவனத்தின்ரூபம், ஸுர்யகிரணங்களினல் வியாபிக்கப்பட்ட மேருமலையின்உருவம்போல விளங்கிற்று.

இருநூற்றைம்பத்திரண்டாவது அத்தியாயம்.

காண்டவதாஹபர்வம். (தொடர்ச்சி.)

(காண்டவவனம் எரிகிறதை அவிப்பதற்காக இந்திரன் மழைபெயவித்தது)

தேர்ர்ளிகளிற்சிறந்தவர்களாகிய அந்தக் கிருஷ்ணர்ஜுனர்களிருவரும் இரண்டுரதங்களிலேறிக் காட்டிற்குஇருபுறமும்நின்றுகொண்டு எல்லாத்திசைகளிலும் பிராணிகளுக்குப் பெரியமரணத்தைச்செய்தனர்.காண்டவவனத்தில்வஸிக்கின்றபிராணிகள்ஓடிப்போவதைஅந்தவீரர்களிருவரும் எங்கெங்கேகண்டனரோ அங்கங்கே எதிர்த்தோடினர். விரைவாகஓடுகின்ற அவ்விரண்டுரதங்களின் இடைவெளியை

யாரும்பார்க்கவில்லை. அவ்விரண்டுதேராளிகளுடைய அவ்விரண்டுதேர்களும் ஒன்றோடொன்று சேர்ந்தனவற்றைப்போற் காணப்பட்டன. காண்டவவனம்எரிக்கப்படும்போது அங்குள்ள அனேகம்பிராணிகள் பயங்கரமானகூச்சலிட்டுக்கொண்டு காற்புறங்களிலும் மேலேகிளம்பின. அனேகம்பிராணிகள் தேகத்தின்ஒருபாகம்எரிந்தும், சில கொதிப்புற்றும், சில கண்கள்வெடித்தும், கைகால்கள்சிதறியும், மற்றும் சில அழிந்தும்போயின. சிலர்பிள்ளைகளையும் மற்றும்சிலர்தாய்தந்தைகளையும் வேறுசிலர்சகோதரர்களையும் கட்டிக்கொண்டு ஸ்நேஹத்தினால் விடமுடியாமல் அங்கேயேமரணமடைந்தனர். இன்னும் அனேகம்பிராணிகள் பற்களைக்கடித்துக்கொண்டு மேலேகிளம்பி அதிகமாகத்துள்ளி மறுபடியும்நெருப்பிலேவிழுந்தன. ஆங்காங்கு இறகுகளும் கண்களும் கால்களும் எரிந்துபோய்த் தரையில்விழுந்து துடித்து இறந்து போகின்றபிராணிகள் காணப்பட்டன. நெருப்பினால்காய்ச்சப்பட்டுக் கொதிக்கின்றதடாகங்களிலெல்லாம் இறந்துபோன ஆமைகளும் மீன்களும்காணப்பட்டன. அந்தவனத்திலுள்ள வேறுசிலபிராணிகள் எரியும்சரீரங்களோடு பிரளயகாலத்தில் உருவங்களோடுவந்த அக்னிகளைப்போலக் காணப்பட்டன. அர்ஜுனன் மேலேகிளம்பினசில பறவைகளைப் பாணங்களினால் துண்டுதுண்டுகளாகவெட்டி ஜ்வலிக்கின்றஅக்னியில்வீழ்த்தினன். அவை, எல்லாஅங்கங்களிலும், பாணங்கள்தைத்துக்கொண்டவைகளாய்ப் பேரிரைச்சலிட்டு, வேகமாக எழும்பித் திரும்பவும்காண்டவவனத்திலேயே விழுந்தன. பாணங்களினால் கூட்டங்கூட்டமாக அடிக்கப்பட்ட காட்டுப்பிராணிகளின் பேரொலி சமுத்திரம்கடைகிறசப்தம்போற் கடுமையாகக்கேட்கப்பட்டது. ஜ்வலிக்கின்றஅக்னியின்பெரியஜ்வாலைகள் ஆகாயத்திற்கிளம்பித் தேவர்களுக்குப் பெரியநடுக்கத்தையுண்டாக்கின. தேவர்களும் ரிஷிகள்முதலியமஹாத்மாக்களான ஸ்வர்க்கவாஸிகளுமாகியஅனைவரும் அந்தஜ்வாலையினால்சுடப்பட்டு ஆயிரம்கண்களுடையவனும் தேவர்களுக்குப்பிரபுவும் அஸுரர்களைப்பீடிப்பவனுமாகிய இந்திரனிடம் சென்று, "தேவேசுவரனே! இந்தமனிதர்களெல்லாரும் அக்னியினால்தகிக்கப்படுகின்றனர். இதுஎன்ன? லோகங்களுக்குப்பிரளயம் வராமலிருக்குமா?" என்றுகேட்டனர். ஹரிகளென்னும்குதிரைகளையுடையஇந்திரன் அவர்களுடைய சொல்லைக்கேட்டும் தான் பார்த்தும் காண்டவவனத்தை விடுவிக்கப்புறப்பட்டான். தேவர்களுக்குப்பிரபுவான இந்திரன் பலவிதமான பெரியமேகக்கூட்டத்தினால் ஆகாசத்தைமறைத்து மழையைப்பொழிந்தான். அப்போது

இந்திரனல்ஏவப்பட்டமேகங்கள் காண்டவவனத்திற்கு மேலாகத் தே ரச்சின் அளவான நீர்த்தாரைகளைப்பொழிந்தன. அத்தத் தாரைகள் அக்கினியின்சக்தியினால் காண்டவவனத்திற்படாமல் ஆகா யத்திலேயே வற்றிப்போயின. எவையும் அக்கினியைச்சேரவில்லை. பிறகு அக்கினியின்மேல் மேகமுற்றும்இந்திரன் மறுபடியும் மழை மேகங்களைக்கொண்டு மிகுதியாக ஜலத்தைவருஷிக்கச்செய்தான். அத்தவனம் அக்கினிஜ்வாலைகளும், புகையும் மழைத்தாரைகளும் மின் னலும் மேகங்களும்சேர்ந்து பயங்காரமாயிருந்தது.

இருநூற்றைம்பத்துமூன்றுவது அத்தியாயம்.

காண்டவதாஹபர்வம். (தொடர்ச்சி.)

(அர்ஜுனன் மழையைத்தடுத்தபின், நாககன்னிகைவிழுங்கியதன்புத்திரனை விழுங்கியெடுத்துக்கொண்டு கோபம்நிறைந்தபாதாளலோகத்தை அர்ஜுனன்அம்பால்மூடியபின்பு அக்கினிதேவன் காண்டவவனத்தை தகிக்கத்தொடங்கியது.)

பாண்டுபுத்திரனாகிய அர்ஜுனன் உயர்ந்தஅஸ்திரஸாமர்த்தியத் தைக்காண்பித்து இந்திரன்வருஷித்தகாரணத்தைவருஷத்தினால் தடுத்தான். அள்விடக்கூடாதமஹிமையையுடைய அர்ஜுனன், சந் திரன்பனியினால்மறைப்பதுபோல அஸ்திரங்களினால் காண்டவவனத்தை யெல்லாம் மறைத்தான். பாம்புப்பிரியாகாம்செய்தஅர்ஜுனன் பாண ங்களால்மேற்பாகத்தைமறைத்தபோது ஒருபிராணியும் அங்கிருந்து வெளிப்படமுடியவில்லை. மஹாபலசாலியான தக்ஷகனென்னும்நாக ராஜன் அங்கேயிருக்கவில்லை. அத்தவனம் எரிக்கப்படும்போது அவன் குருக்ஷேத்திரத்திற்குப் போயிருந்தான். பலவானாகிய அசுவசேனனென்னும்தக்ஷகபுத்திரன் அங்கிருந்தான். அவன்தீயிலிருந்துவிடுவித்துக்கொள்ளப்பெருமுயற்சிசெய்தான்; அவன் அர்ஜுனனுடைய பாணங்களால் தடுக்கப்பட்டு வெளியிற்போகமுடியாமலிருந்தான். அவனை அவனுடையதாயாராகிய நாககன்னிகை விழுங்கிப்பின்விடுவிக் கத்தொடங்கினாள். அவளுடையதலையை முன்னேவிழுங்கினாள். அந்த நாககன்னிகை தன்பிள்ளையைவிடுவிப்பதற்காக வாலைவிழுங்கிக்கொண் டேமேலேகிளம்பினாள். அவள்போகும்போது அர்ஜுனன் அவளு டையதலையைக் கூர்மையும் அகலமுமானமுனையுள்ளபாணத்தினால் அறுத்தான். அதை இந்திரன்பார்த்தான். அசுவசேனனைவிடுவிக்கக்

கருதினஇந்திரன் காற்றுமழையினால் அர்ஜுனனைமயங்கச்செய்தான். அந்தக்காலத்தில் அசுவசேனன்மாத்திரம் விடுபட்டான். (அர்ஜுனன்,) அந்தக்கொடியமாயையைக்கண்டு நாகத்தினால்வஞ்சிக்கப்பட்டான். அர்ஜுனன் ஆகாயத்திலிருந்தபிராணிகளை இரண்டுமூன்று துண்டங்களாகத்துணித்தான். அந்தஅசுவசேனனை அர்ஜுனனும் அக்னியும் கிருஷ்ணனும் கோபத்துடன், "நீநிலையற்றவனுகப்போகக் கடவாய்" என்றுசபித்தனர். பிறகு அர்ஜுனன் அந்தமோசத்தை நினைத்துக் கோபத்துடன்விரைவாகச்செல்லுகிறபாணங்களினால்ஆகாயத்தைமறைத்து இந்திரனோடுயுத்தஞ்செய்தான். யுத்தத்தில் கோபத்தோடிருந்தஅர்ஜுனனைக்கண்டு இந்திரனும் ஆகாயத்தைமுழுதும் மறைத்துத் தன்னுடையஉக்கிரமான ஐந்திராஸ்திரத்தைவிடுத்தான். அப்போது ஆகாயத்திலிருந்து பெரியகோஷத்தோடுகூடியகாற்று ஸமுத்திரங்களையெல்லாம் கலக்கிக்கொண்டு மழைத்தாரைகளைமிகுதியாகவருஷிக்கின்றவையும் இடிகளையும் மின்னல்களையும் கர்ஜனைகளையுமுண்டாக்குகின்றவையும் பயங்காங்களுமான மேகங்களையுண்டாக்கிற்று. பிரதிசெய்வதில்ஸமர்த்தனுகிய அர்ஜுனனும் அதைத்தடுப்பதற்காக உடனே வாயுஅஸ்த்ரத்தை மந்திரத்தோடு பிரயோகித்தான். அதனால் இந்திரனுடையஇடிகள் மேகங்கள் இவற்றின்பலமும் ஒளியும் அழிக்கபபட்டன. அந்தமழைத்தாரைகளெல்லாம் வற்றிப்போயின. மின்னல்கள்மறைந்தன. ஒருநொடியில் ஆகாயத்திலுள்ளகலக்கமும் இருளும் நீங்கின. குளிர்ந்தகாற்று ஸுகமாகஅடித்தது. ஸூர்யமண்டலம் எப்பொழுதும்போலப் பிரகாசித்தது. விஷாதம் நீங்கினதனால் ஸந்தோஷமடைந்தஅக்னி, பிராணிகளின்தேகங்களிலிருந்து பெருகின கொழுப்புக்களின்பிரவாகங்களினால் நனைக்கப்பட்டுத் தன்சப்தத்தை உலகமெல்லாம்பரவச்செய்துகொண்டு பலவகை ஜ்வாலைகளோடு ஜ்வலித்தது.

ஜனமேஜயமஹாராஜாவே! காண்டவவனம் கிருஷ்ணார்ஜுனர்களால் ரக்ஷிக்கப்படுவதைக்கண்டு கருடன்முதலியபக்ஷிகள் அகங்காரத்துடன் ஆகாயத்தில்பறந்தன. கருடன் வஜ்ராயுதத்துக்கொப்பானசிறகுகளினாலும் மூக்கினாலும், நகங்களினாலும் கிருஷ்ணனையும் அர்ஜுனனையும் அடிப்பதற்கு ஆகாயத்திலிருந்துஇறங்கினர். நாகர் கூட்டங்களும் கொடியவிஷத்தைக்கக்கிக்கொண்டு ஜ்வலிக்கின்றவாய்களுடன், அர்ஜுனன்சமீபத்தில் வந்துவிழுந்தன. அர்ஜுனன் தன் கோபாக்னியோடுகூடினபாணங்களினால் அவற்றையறுத்தான். அவை தீகநாசம்வரும்படி அந்தஜ்வலிக்கிறஅக்கினியில் விழுந்தன.

பிறகு தேவர்களும் கந்தர்வர்களும் யக்ஷர்களும் ராக்ஷஸர்களும் நாகர்களும் ஒப்பில்லாத இரைச்சலிலைச்செய்துகொண்டு இருப்புக்குண்டுகளையுட்கொண்டசக்கரயந்திரங்களையும் கற்களையும் கவண்களையும் கைகளில் ஏந்திக் கிருஷ்ணனையும் அர்ஜுனனையும் கொல்லக்கருதிக் கோபத்தினால் அதிகபராக்கிரமங்கொண்டு யுத்தஞ்செய்யக் கிளம்பினர். அதிகமாகப்பேசி ஆயுதங்களைவருஷித்த அவர்களுடையதலைகளை அர்ஜுனன் கூரியபாணங்களினால் சிதைத்தான். மிகவும்அதிகமான சக்தியுள்ளவரும் சத்துருக்களையழிப்பவருமாகிய கிருஷ்ணனும், தைத்தியர்கள் தானவர்களின்கூட்டங்களுக்குப் பெரியஹிம்ஸையைச் செய்தார். அளவற்றபராக்கிரமமுள்ளமற்றுஞ்சிலர் பாணங்களினால் அடிக்கப்பட்டும் சக்கரத்தின்வேகத்தினால் தள்ளப்பட்டும், ஸமுத்திரத்தின்கரையிலடங்கியிருப்பதுபோல அடங்கிநின்றனர். பிறகு தேவர்களுக்குசுவரனும் அஸுரர்களையழிப்பவனுமாகிய இந்திரன் மிகக் கோபித்து வெள்ளையானையிலேறி வஜ்ராயுதத்தைஎங்கிக்கொண்டு கிருஷ்ணார்ஜுனர்களினருகில்ஓடினன். அவன் வேகத்தோடுஇடியையெடுத்து வஜ்ரிமென்னும் அஸ்திரத்தை விடத்தொடங்கினன். அஸுரர்களை ஸம்ஹரிக்குமிந்திரன் தேவர்களைப்பார்த்து, "இவரிருவரும் இறந்தனர்" என்றுசொன்னன். அப்போது தேவேந்திரனால் வஜ்ராயுதம்ஓங்கப்பட்டதைக்கண்டு தேவர்களும் தம்தம் அஸ்திரங்களையெல்லாம்எடுத்தனர். ஜனமேஜயராஜாவே! யமன் காலதண்டத்தையும், குபேரன்கதையையும், வருணன்பாசத்தையும், விசித்திமான அசனியென்னும்அஸ்திரத்தையும்எடுத்துக்கொண்டனர். முருகக்கடவுள் சக்தியாயுதத்தையெடுத்துக்கொண்டு மகாமேருவைப்போல் அசையாமல்நின்றனர். அசுவினிதேவர்கள் ஜ்வலிக்கின்றசிகாதிவிருக்ஷங்களையெடுத்துக்கொண்டனர். தாதாவென்னுந்தேவதை விஷ்ணயுதத்தை, ஜயனென்பவன் உலக்கையையும், மிருத்தபலமுள்ளத்வஷ்டா மலையையும் கோபத்துடன் எடுத்துக்கொண்டனர். அர்ச்சனனென்னுந்தேவதை சக்தியாயுதத்தையும் மிருத்யுவென்னுந்தேவதை கோடாலியையும் எடுத்தனர். அரிபமனென்பவன் பயங்கரமானபரிகாயுதத்தையெடுத்து உலாவினான். மித்ரன்என்பவன் மூனையில் கத்தியுள்ளசக்காயுதத்தையெடுத்துநின்றான். ஜனமேஜயராஜாவே! பூஷாவும் பகனும் ஸவிதாவும் கோபித்து விற்களையும் கத்திகளையுமெடுத்துக் கிருஷ்ணார்ஜுனர்களையெதிர்த்தோடினர். மஹாபலசாலிகளாகிய ருத்திரர்களும் வஸுக்களும்.மருத்துக்களும் தங்கள்பராக்ரமத்தினால் பிரகாசிக்கின்றவிசுவேதேவர்களும் சாத்தியர்களும் மற்றுமுள்ள அனேகதேவர்களும்

பற்பலஆயுதங்களையெடுத்துப் புருஷோத்தமர்களான கிருஷ்ணர்ஜுனர்களை வதஞ்செய்யக்கருதி எதிர்த்துச்சென்றனர். அந்தப்பெருஞ் சண்டையில் பிரளயகாலத்துக்கொப்பானவையும் பிராணிகளுக்கு பயங்கரங்களுமான அனேகம்புதியஅபசகுனங்கள் காணப்பட்டன. அவ்வாறு தேவர்களுடன் மிகக்கோபித்துவந்த இந்திரனைக்கண்டு கிருஷ்ணர்ஜுனர்கள் பயமின்றியும் பின்வாங்காமலும் யுத்தத்தில் பகைவர்களால் எதிர்க்கமுடியாதவர்களாக விற்களை வைத்துக் கொண்டுநின்றனர். யுத்தத்திற்குவந்ததேவர்களை யுத்தத்தில்ஸமர்த்தர்களாகியகிருஷ்ணர்ஜுனர்களிருவரும் கோபத்துடன் வஜ்ராயுதங்கள்போன்றபாணங்களினால்அடித்தனர். தேவர்கள் பலமுறை எண்ணம்நிறைவேறுதவர்களாய்ப் பயத்தினால்யுத்தத்தைவிட்டு இந்திரனையேஆச்ரயித்தனர். கிருஷ்ணர்ஜுனர்களால் தேவதைகள்தடுக்கப்பட்டதைக்கண்டு அங்கே ஆகாயத்திலிருந்தரிஷிகள் வியப்புற்றனர். இந்திரனும் அவர்களுடையபராக்ரமத்தை யுத்தத்தில்பலமுறைகண்டு மிகுந்தஸந்தோஷமடைந்து மறுபடியும் அவர்களோடுயுத்தஞ்செய்தான். அப்போது இந்திரன் அர்ஜுனனுடையமுன்னிலும் அதிகமானபராக்கிரமத்தை அறியவிரும்பி மிகப்பெருங்கல்மழையைப்பொழிந்தான். அர்ஜுனன் மிகுந்தகோபத்துடன் அந்தக்கன்மழையைப் பாணங்களினால்தடுத்தான். அதுவும் வீணாகச்செய்யப்படுவதைப் பார்த்து இந்திரன் மறுபடியும் அந்தக்கல்மழையையே அதிகப்படுத்தினான். இந்திரபுத்திரனை அர்ஜுனன் தன்பிதாவானஇந்திரனைச் சந்தோஷப்படுத்துவதற்காக மஹாவேகமுள்ளஅம்புகளினால் அந்தக்கல் மழையையழித்தான். பிறகு இந்திரன் மந்தரபர்வதத்திலிருந்து மரங்களுடன்கூடிய ஒருபெருஞ்சிகரத்தை இருகைகளினாலும்பெயர்த்து அர்ஜுனனைக்கொல்வதற்காக அதை அவன்மேலெறிந்தான். பிறகு அர்ஜுனன் மிகுந்தவேகமுள்ளவையும் ஜ்வலிக்கின்றமுனைகளுள்ளவையும் நேராகச்செல்கின்றவையுமானபாணங்களினால் மந்தரமலையின்சிகரத்தை ஆயிரம்துண்டுகளாக நாசஞ்செய்தான். அந்தமலைசிதறும்போது அதன்உருவம் ஸூர்யசந்திரர்களோடும் நக்ஷத்ரங்களோடுங்கூட ஆகாசம்சிதறிவிழுவதுபோலிருந்தது. அந்தமலையின்பெருங்கொடுமுடி காட்டில்விழுந்ததனால் அந்தக்காண்டவவனத்திலிருந்தபிராணிகள்கொல்லப்பட்டன.

காண்டவதாஹபர்வம் முற்றிற்று.

இருநூற்றைம்பத்துநான்காவது அத்தியாயம்.

மயதர்சனபர்வம்.

(தக்ஷகன்ஜீவித்திருப்பதையும் கிருஷ்ணரீஜுனர்களோடு யுத்தம்செய்ய முடியாதென்பதையும் அசரீரிவாக்கியால் அறிந்தமயன் யுத்தஞ் செயயாமற்போனதும், அர்ஜுனபோது தடபியோடும்மயனைக் கிருஷ்ணன்கொல்லஆரம்பிக்கையில் அவன்சரணகதி செயததாலே அர்ஜுனன் அவனைவிடுவித்ததும்.)

அவ்வாறு மலைகள்வீழ்ந்ததனால் பயமுறுத்தப்பட்ட காண்டவ வனத்திலிவசித்த அனேகம்அஸுரர்களும் ராக்ஷஸர்களும் நாகர்களும் சிறுத்தைகளும் காடைகளும் காட்டுமனிதர்களும் மதயானைகளும் புலிகளும் முகமயிர்களோடுகூடியசிம்மங்களும் மான்களும் எருமைகளும் பறவைகளும் இன்னுமனேகம் பேய்பிசாசுஜாதிகளும் மரணடுஓடின. அவைகள் அந்தக்காட்டுத்தீயையும் ஆயுதபாணிகளாகியகிருஷ்ணரீஜுனர்களையும் பார்த்தன; பிரளயகாலசமுத்தம் போன்றசப்தத்தினால் பயமுறுத்தப்பட்டன. அவைகள் அனேக இடங்களிற் கொளுத்தப்படும்வனத்தையும் ஆயுதத்தைத்தரித்துக் கொண்டிருக்கும்கிருஷ்ணனையும்கண்டு பேரிசைச்சலிட்டன. அந்தப் பயங்கரமான இசைச்சலாலும் அனலின்சத்தத்தினாலும் பிரளயகால கார்ஜனபோல ஆகாயமெல்லாம்கர்ஜித்தது. அப்போது சிறந்தகை களையுடையகிருஷ்ணன் ஒளியினால்பிரகாசிக்கின்ற அதிபயங்கரமான மஹாசக்கரத்தை அவர்களையழிப்பதற்குப்பிரயோகித்தார். அஸுரர் பிசாசுகள்முதலிய அற்பஜாதிகளெல்லாம், பயந்து அந்தச்சக்கரத்தினால் நூறுதுண்டுகளாகவெட்டப்பட்டு ஒருநொடியில்தியில்விழுந்தன. கிருஷ்ணனுடையசக்கரத்தினால்வெட்டப்பட்டுக் கொழுப்பும்இரத்தமும் உடம்பெல்லாம்பூசியிருக்கும் அந்தஅஸுரர்கள் அங்கேமலைக் காலச் செம்மேகங்களைப்போலக் காணப்பட்டனர். ஜனமேஜயரே! அங்கே கிருஷ்ணன் ஆயிரக்கணக்கானநாகங்களையும் மிருகங்களையும் யமனைப்போலக் கொன்றுகொண்டிருந்தார். சக்கரமானது ஒவ்வொரு தடவைபோடப்படும்போதும் அனேகம்பிராணிகளைவெட்டிச் சத்துருக்களைஹிம்ஸிப்பவராகிய கிருஷ்ணனுடையகையில் திரும்பத்திரும்பவந்தது. அவ்வாறு பிசாசர்களையும் நாகர்களையும் ராக்ஷஸர்களையும் கொல்லுகின்றவரும் எல்லாப்பிராணிகளுக்கும் ஆத்மாவுமாகிய கிருஷ்

ணனுடையரூபம் மிகப்பயங்கரமாயிருந்தது. ஒன்றுசேர்ந்த எல்லா அஸுரர்களினும் கிருஷ்ணர்ஜுனர்களே யுத்தத்தில்ஜயிப்பவன் ஒருவனுமில்லை. அந்தக்கிருஷ்ணர்ஜுனர்களுடையபலத்தில் அகப்பட்ட பிராணிகளைக்காப்பாற்றவும் அந்தக்காட்டுத்தீயையவிக்கவும் எப்போதுதேவர்களால்முடியவில்லையோ அப்போது திரும்பிப்போயினர். ஜனமேஜயராஜாவே! அவ்வாறு திருப்பிஓடினதேவர்களைக் கண்டு மகிழ்வுற்றஇந்திரன் கிருஷ்ணர்ஜுனர்களைச் சிலாகித்துக் கொண்டிருந்தான். தேவர்கள் திரும்பிப்போனபின் மிக்ககம்பீரத்வனியுடையஓர் அசரீரிவாக்கு இந்திரனைவிளித்து, "உன்னுடையஸ்நேஹிதனான தக்ஷகனென்னும்நாகராஜன் இங்கில்லை. காண்டவவனத்தையெரிக்கும்போது அவன்குருக்ஷேத்திரம்சென்றான். இந்திரனே! எவ்வகையிலும் இந்தக்கிருஷ்ணர்ஜுனர்களை யுத்தத்திலுல்ஜயிப்பதுமுடியாதென்பதை என்சொல்லினுல் தெரிந்துகொள். இவர்கள் ஆதிதேவர்களாகத் தேவலோகத்தில் கியாதிபெற்ற நரநாராயணர்கள். அவர்களுடையவன்மையையும் பராக்ரமத்தையும் நீயுமறிவாய். பிறரால்வெல்லமுடியாதவர்களும் இதற்குமுன்வெல்லப்படாதவர்களுமான இவர்களோடு யுத்தஞ்செய்யமுடியாது. புராணபுருஷர்களும் ரிஷிச்ரேஷ்டர்களுமாகிய இவர்கள் எல்லாஉலகங்களிலும் தேவர்கள் அஸுரர்கள், யக்ஷர்கள், ராக்ஷஸர்கள், கந்தர்வர்கள், மனிதர்கள், கின்னரர்கள், நாகர்கள்முதலிய எல்லாராலும் பூஜிக்கப்படுவதற்குரியவர்கள். இந்திரா! அதனுல் தேவர்களுடனுங்கூட நீ இதைவிட்டுப் போவது தகுதி. இந்தக்காண்டவவனம் அழிவது விதியினுல்நேர்ந்ததென்றும் அறியக்கடவாய்" என்றுசொல்லிற்று. தேவேந்திரன் இந்தவாக்கைக்கேட்டு உண்மையென்றறிந்து கோபத்தையும்பொறுமையையும்விட்டு ஸ்வர்க்கத்திற்குப்போனான். ஜனமேஜயராஜாவே! மஹாத்மாவான இந்திரன்போகக்கண்டு தேவர்கள் சேனையுடன் அவன்பின்னேசென்றனர். தேவராஜன் தேவர்களுடன்கூடப்போவதைப்பார்த்து வீரர்களானகிருஷ்ணர்ஜுனர்கள் ஸிம்மநாதஞ்செய்தனர். ஜனமேஜயராஜாவே! இந்திரன்போனபின் வீரர்களாகியகிருஷ்ணர்ஜுனர்கள் ஸந்தோஷத்துடன் விசாரமின்றிவனத்தையெரிப்பித்தனர். அந்தி அர்ஜுனன் மேகங்களைக்காற்றுஓட்டுவதுபோலத் தேவர்களையோட்டிக் காண்டவவனத்திலுள்ளபிராணிகளைச் சரக்கூட்டங்களினுல்அடித்தான். பாணப்பிரயோகஞ்செய்யும் ஸவ்யஸாசியின் பாணங்களினுல் சேதிக்கப்பட்டு ஒருபிராணியும் அங்கிருந்துவெளிப்படமுடியாமற்போயிற்று. யுத்தத்தில்வீண்போகாத அஸ்திரங்களைப்

பிரயோகிக்கின்ற அர்ஜுனனை ராக்ஷஸர்முதலியமஹாபூதங்களும் கண்ணெடுத்துப்பார்க்கவும் முடியவில்லை; போர்க்களத்தில் யுத்தஞ்செய்வதேது. ஒருபாணத்தினால் நூறுபிராணிகளையும் அடித்தான். நூறுபாணங்களினால் ஒருபிராணியையும் அடித்தான். அந்தப்பிராணிகள் நேரேவந்தயமனுலேயே கொல்லப்பட்டவைபோல உயிர்போய் அக்னியில்வீழ்ந்திறந்தன. அலைகள் ஜலக்கரைகளிலும் மேடுபள்ளங்களிலும்ஒளிந்துர் ஸுகத்தையடையவில்லை. பிதிர்லோகங்களிலும் தேவலோகங்களிலுங்கூடக் கொந்தளிப்புஉண்டாயிற்று. அனேகம்பிராணிக்கூட்டங்கள் தூயரமுற்றுப்பெருஞ்சத்தஞ்செய்தன. யானைகளும் மான்களும் புலிகளும் கதறின. அந்தச்சப்தத்தினால் கங்கையிலும் ஸமுத்திரத்திலுமுள்ள மத்ஸ்யங்களும் விந்யாதரக்கூட்டங்களும் மற்றும்அந்தவனத்திலுள்ளபிராணிகளும் பயந்தன. சிறந்தகைகளையுடையஜனமேஜயரே! ஒருபிராணியும் அர்ஜுனனையும்கிருஷ்ணனையும் பார்ப்பதற்குக்கூடமுடியவில்லை; யுத்தம்செய்வதேது. ஒருமார்க்கமாக அந்தவனத்திலிருந்து வெளிப்பட்டராக்ஷஸர்களையும் அஸுரர்களையும் நாகங்களையும் கிருஷ்ணன் சக்கராயுதத்தினால்கொன்றார். அவர்கள் சக்கரத்தின்வேகத்தினால் தலைகளும் உடல்களும்அறுபட்டு உயிர்துறந்தனர். மற்றுமுள்ளபெரியதேகமுள்ளவர்கள் ஜ்வலிக்கின்றதீயில்விழுந்திறந்தனர். மாம்ஸங்களோடுகூடியரத்தப்பிரவாகங்களினாலும் கொழுப்புகளினாலும் திருப்திசெய்யப்பட்டஅக்னி ஆகாசம்வரையில் மேல்எழுந்து புகையற்றதாயிருந்தது. ஜ்வலித்தகண்களும் ஜ்வலிக்கின்றநாவும் ஜ்வலிக்கின்ற பெரியவாயும் ஜ்வலித்துநெறித்திருக்கும்கேசங்களுமுடைய அக்னிபகவான் பிராணிகளின்கொழுப்பைக்குடித்துக்கொண்டிருந்தான். கிருஷ்ணர் ஜனார்களால்கொடுக்கப்பட்ட அந்தஅமுதத்தைபபெற்று அக்னி ஆனந்தத்தையும் திருப்தியையும் பெரியஸுகத்தையும் அடைந்தான்.

அப்படியிருக்கையில் மயனென்னும்அஸுரன் தக்ஷகனுடைய வீட்டிலிருந்து வேகமாகஓடுவதைக் கிருஷ்ணன்கண்டார். வாயுவைச் சாரதியாகவுடைய அக்னி, சரீரமெடுத்து ஜடைதரித்து மேகம்போற் கர்ஜித்து, அவனைக்கொலுத்துவதற்காகக் கிருஷ்ணனிடம்கேட்டுக்கொண்டான். அவன் அஸுரராஜாக்களின் சிற்பவேலைக்காரரிற்சிறந்தவனுன மயனென்றறிந்து கிருஷ்ணபகவான் அவனைக்கொல்வதற்குச் சக்கரத்தையுங்கிங்கின்றார். ஒங்கினசக்கரத்தையும் எரிக்கவிரும்பும்அக்னியையும்கண்டு அந்தமயன், "அர்ஜுனா! ஓடிவா" என்றும், "என்னைக்காப்பாற்று" என்றும்சொன்னன். ஜனமேஜயரே!

அவனுடைய மருண்டசத்தத்தைக்கேட்டுத் தனஞ்ஜயன், பேச்சினு லேயேஅவனைப்பிழைப்பிக்கிறவன்போலப் "பயப்படாதே" என்று மறுமொழிகூறினன். தயைமிகுதியாகவுடைய அர்ஜுனன் பயப் படாதேயென்றுசொல்லி மயனுக்குஅபயம்கொடுத்தபிறகு நமுசியின் ஸஹோதரனை மயனைக்கொல்வதற்குக் கிருஷ்ணனும்கருதவில்லை. அக்னியும்தகிக்கவில்லை. புத்திமானுகிய அக்னிபகவான் கிருஷ்ணர் ஜுனர்களால் இந்திரனிடமிருந்து ரக்ஷிக்கப்பட்டு, அந்தவனத்தைப் பதினேந்துநாள்எரித்தான். அந்தவனம்எரிக்கப்படும்போது அசுர லேனன், மயன், நான்கு * சார்ங்கமென்னும்பக்ஷிகள் இவ்வறு வரைமட்டும் அக்கினிதகிக்கவில்லை.

இருநூற்றைம்பத்தைந்தாவது அத்தியாயம்.

மயதர்சனபர்வம். (தொடர்ச்சி.)

(சார்ங்கங்களை அக்னிதகிக்காமலிருந்ததற்குக் காரணத்தை ஜனமே ஜயர்கேட்க வைசம்பாயனர் அவை மந்தபாலரிஷியின்குஞ்சுக ளென்றும் தம்குஞ்சுகளைக்காப்பாற்றும்படி அக்னியினிடம் அவர் வரம்பெற்றரென்றும் சொல்லியது.)

ஜனமேஜயர், "பிராம்மணரே! அந்தவனம்எரிக்கப்பட்டு அவ் வாறுனபோது சார்ங்கங்களை அக்னிஎன்கொளுத்தவில்லை? இதனை எனக்குச்சொல்லுங்கள். அசுவலேனனையும் அஸுரனுகியமயனையும் கொளுத்தாமைக்குக்காரணம்சொல்லப்பட்டது. பிராம்மணரே! சார் ங்கங்களைக்கொளுத்தாமைக்குக்காரணம் சொல்லப்படவில்லை. பிரா ம்மணரே! சார்ங்கங்களுக்குத் தீங்கில்லாமலிருந்தது ஆச்சரியம். பெரியஅக்னியின் மிக்கஉபத்திரவத்தில் அவை எவ்வாறு அழிக்கப் படாமலிருந்தனஎன்பதைச்சொல்லுங்கள்" என்றுகேட்க, வைசம் பாயனர் சொல்லுகிறார்.

"வீரரே! அவ்வாறுநடந்தபோது சார்ங்கங்களைமட்டும் அக்னிதகிக்காமலிருந்தகாரணத்தை முழுதும் நடந்தபடி உமக்குச் சொல்வேன். தர்மந்தெரிந்தவர்களில்முதன்மையானவரும் ஆத்மத் தியானமுள்ளவரும் உறுதியானநியமமுள்ளவரும் சாஸ்திரஜ்ஞான முள்ளவருமாகிய மந்தபாலரென்னும்பெயருள்ளமஹரிஷி ஒருவரிருந்

* வில்லிபுத்தூரார் பாரதத்தில், சாதகப்பறவைகள் என்று கூறப்பட் டுள்ளன.

தார். ராஜாவே! வேதமெல்லாம்ஒதினவரும் தர்மத்தில்ஊக்கமுள்ள வரும் ஆத்மநிஷ்டரும் ஜிம்புலன்களையுமடக்கினவருமாகிய அவர் ஊர்த்வரேதஸுகளான ரிஷிகளுடையமார்க்கத்திலிருந்தார். ஜனமேஜயரே! அவர் தவத்தின்கனையையடைந்து தேகம்விட்டபிறகு பிதிர் லோகத்திற்குச்சென்றார். அங்கே தவப்பயனையடையவில்லை. அவர் தமதுதவத்தினல்ஜயிக்கப்பட்டஉலகங்கள் பயன்படாமற்போனதைக் கண்டு யமனுடையஸபீபத்திலிருந்த தேவர்களைப்பார்த்து, "என் னுடையதவத்தினல்ஸம்பாதிக்கப்பட்ட இந்தஉலகங்கள் என்மூடப் பட்டிருக்கின்றன? இந்தஉலகங்களின்பலனைத்தரத்தக்க எந்தக்கரு மத்தை நான்செய்யாமற்போனேன்? எதற்காக இந்தஉலகங்கள் மூடப் பட்டிருக்கின்றன? அதை, நான்முன்னிருந்தஅந்தஉலகத்தில்செய் வேன். தேவர்களே! சொல்லுங்கள்" என்றுகேட்டனர். அதைக் கேட்டதேவர்கள், "பிராம்மணரே! மனிதர்கள் பிறக்கும்போதே எதனுற்கடன்காரராகப்பிறக்கிறரென்பதைச் சொல்லுகிறோம்; கே ளும். சாஸ்திரோக்தகருமங்களைச்செய்வது, பிரம்மசரியமிருப்பது, ஸந்ததியுண்டாக்குவது இம்மூன்றுகடன்கள் நிச்சயமானவை. அந் தக்கடன்களெல்லாம் முறைபோல பாகம்செய்வதனலும் குருகுல வாஸஞ்செய்வதனலும் ஸந்ததியுண்டாக்குவதனலும் நிவிருத்திசெய் யப்படவேண்டும். நீர் பிரம்மசாரிவிரதமுமிருந்தீர். பாகங்களுஞ் செய்தீர். ஆனல் உமக்குச் சந்ததிமட்டுமில்லை. உமக்குச்சந்ததி யில்லாமைபற்றி இந்தஉலகங்கள் மூடப்பட்டிருக்கின்றன. ஆதலால், சந்ததியையுண்டுபண்ணும்; இந்தஉலகங்களைப் பூர்ணமாகஅனுபவிப் பீர். 'புத்என்னும்நரகத்திலிருந்துபிதாவைக்காப்பாற்றுகிறன்' என் பதனல் புத்ரன்என்றுபெயர். பிராம்மணச்ரேஷ்டரே! ஆதலால், புத்ரஸந்தானம்உண்டாக்குவதற்கு முயற்சிசெய்யும்" என்றனர். அப் படி அந்தத்தேவர்கள்சொன்னதைக்கேட்டு மந்தபாலரிஷி, "எந்த ஜன்மத்தில் அதிகஸந்ததிகள் சீக்கிரத்தில்உண்டாகும்" என்று ஆலோசித்தார். அவர்நித்திக்கும்போது பறவைகளுக்குக் குஞ்சு கள் அதிகமென்றறிந்தார். சார்ங்கபக்ஷிரூபமெடுத்து ஜரிதையென் னும்பெயருள்ள பெண்சார்ங்கிகையை அடைந்தார். அதனிடம் வேதங்களைஓதுகின்றவரான நான்குபுத்திரர்களையுண்டாக்கினர். அந் தப்புத்திரர்களைச் சிறுகுஞ்சுகளாக முட்டைகளிலிருந்தபடியேதாயா ருடன்கூட அவ்வனத்திலேயே விட்டுவிட்டு லபிதையென்னும்மற் றொருபறவையிடஞ்சென்றார். ஜனமேஜயரே! அம்மஹா னுபாவர் ஒபிதையிடம்போனபோது தன்பிள்ளைகளிடம் அன்புவைத்தஜரிதை

பலவகையாகச்சிந்தித்தது. விடத்தகாத ரிஷிகளானபுத்திரர்கள் முட்டையிலிருக்கும்போதே அவரால்காட்டில்விடப்பட்டபிறகும் புத்திர சோகத்தினால் துயரமுற்றஜரிதை தன்பிள்ளைகளைக் காண்டவவனத்தில்விடவில்லை. நேசத்தினால் மனமிரங்கினஜரிதை முட்டையிலிருந்துபிறந்த அந்தப்பிள்ளைகளைத் தனதுஆகாரத்தினால் வளர்த்தது. அதன்பிறகு காண்டவவனத்தைக்கொளுத்தவருகின்ற அக்னியை லபிதையுடன் வனத்திற்சஞ்சரித்துக்கொண்டிருந்த மந்தபாலரிஷி கண்டனர். பிரம்மஞானியாகிய அந்தப்பிரம்மரிஷி அக்னியினுடைய அந்தஎண்ணத்தையும் சிறுவரானதமதுபுத்திரர்களையும் நினைத்துப் பயத்துடன் புத்திரர்களைப்பற்றிச் சொல்லிக்கொண்டே திக்பாலகனும் மஹாமஹிமையுள்ளவனுமாகிய அக்னியைத் துதித்தார். அதாவது, "அக்னியே! நீ எல்லாஉலகங்களுக்கும்முகம். நீஹோமம் செய்தவற்றைவஹிப்பவன். பரிசுத்தம்செய்பவனே! எல்லாப்பிராணிகளுள்ளும் நீமறைந்துஸஞ்சரிக்கிறாய். நிரம்பினஞானமுள்ளவர்கள் உன்னை ஒருவனென்றும்சொல்லுகின்றனர்; * மூன்றுவிதமாகவும் சொல்லுகின்றனர்; உன்னை † யெட்டுமூர்த்திகளாகப்பகுத்து யஜ்ஞங்களைநடத்துகிறவனைச் செய்திருக்கின்றனர். இந்தஉலகமெல்லாம் உன்னால்படைக்கப்பட்டதென்று மஹரிஷிகள்சொல்லுகின்றனர். அக்னியே! நீஇல்லாமற்போனால் உலகமெல்லாம், உடனேயழிந்துபோம். பிராம்மணர்கள் உனக்குநமஸ்காரஞ்செய்துதான் தங்கள்நல்வினைகளால்ஜயிக்கப்பட்ட அழிவில்லாதமேற்கதிக்கு மனிஷிமக்களுடன் போகின்றனர். அக்னியே! ஆகாயத்தில் மின்னலுடனிருக்கின்ற மேகங்களும் நீயேயென்றுசொல்லுகின்றனர். உன்னிடத்திலிருந்து புறப்பட்டஜ்வாலைகள் எல்லாப்பொருள்களையும்எரிக்கின்றன. மிகுந்தஒளியுள்ள அக்னியே! இவ்வுலகம் உன்னாலேதான் படைக்கப்பட்டது. ஜங்கமங்களும் ஸ்தாவரங்களுமாகியயாவும் உன்செய்கைகளினால் உண்டாக்கப்பட்டவை. முதலில் ஜலத்தைப்படைத்தவன் நீ. இவ்வுலகமனைத்தும்உன்னிடத்திலிருப்பது. ‡ ஹவ்யமும், § கவ்யமும் உன்னிடத்திலேதான் சாஸ்திரப்படி வைக்கப்படுகின்றன. நீயேஎரிப்பவன்; நீதான் படைப்பவன்; நீதான் பிரம்மா; நீதான் பிருஹஸ்பதி; இருவர்களாகிய அசுவினிதேவர்களும் நீயே. ஸூர்யனும்

* 1. ஆகாயத்தில் மின்னல்; 2. பூமியில் நீ; 3. பிராணிகளிடத்தில் ஜடராக்கினி.

† பூமி, ஜலம், தேஜஸ், காற்று, ஆகாயம், ஸூர்யன், சந்திரன், யாகம் செய்கிறவன் என்றுஎட்டுவகை.

‡ தேவதைகளுக்குச்செய்யும் ஹோமம். § பிதிர்க்களுக்குச்செய்யும்ஹோமம்.

நீயே. சந்திரனும் நீயே. வாயுவும் நீயே" என்பது. ராஜாவே! அந்தமந்தபாலரால் இவ்வாறு திருசெய்யப்பட்ட அக்னி அப்போதே அளவற்றமேதஜஸுள்ள அந்தரிஷியின்விஷயத்தில் ஸந்தோஷமடைந்தான். அவ்ன், "உமக்கு என்னவிருப்பத்தை நான்செய்யவேண்டும்" என்றுமனமகிழ்ந்து அவரைக்கேட்டான். மந்தபாலர் கைகூப்பி அந்த அக்னியைப்பார்த்து "காண்டவவனத்தைக் கொளுத்தும்போது என்புத்திரர்களைவிட்டுவிடவேண்டும்" என்றுகேட்டுக்கொண்டார். அக்னிபகவான் அப்படி யேஆகட்டுமென்று வாக்குத்தத்தஞ்செய்ததனால் அந்தக்காலத்தில் காண்டவவனத்தில் சார்ங்ககங்களே எரிக்கவில்லை.

இருநூற்றைம்பத்தாறுவது அத்தியாயம்.

மயதர்சனபர்வம். (தொடர்ச்சி.)

—→**←—

*(மந்தபாலரீமனைவியாகிய ஜரிதையென்னும்பக்ஷிக்கும் அதன்தஞ்சுகளாகிய நான்குசார்ங்ககங்களுக்கும் நடந்தசம்பாஷணை.)

அந்தக்காண்டவவனத்தில் தீப்பற்றியெரியும்போது மிகத்துயரமுற்றவையும் துணையற்றவையும் மிகப்பதைத்தவையுமான அந்தச்சார்ங்ககங்கள் தப்பிக்கும்உபாயத்தைபறியவில்லை. இளங்குழந்தைகளைப்பார்த்து அவற்றின்தாயும் எழையுமான ஜரிதை, பிள்ளைகளின் வ்யஸனத்தைக்குறித்துத் துயரமுற்றுக் கண்ணீர்விட்டுப்புலம்பிற்று. "உலகத்தையெல்லாம்எரிப்பதும் என்றுக்நத்தை விருத்திசெய்வதுமாகிய இந்தப்பயங்கரமானஅனல்காட்டையெரித்துக்கொண்டு இதோ என்னிடம்வருகிறதே. மனத்தில்தைரியமில்லாதவையும் சிறகும் கால்களுமில்லாதவையும் நமதுமுன்னோர்களுக்குஆதாரமான ஸந்ததிகளாயிருப்பவையுமான இந்தக் குஞ்சுகள் என்னைத் துயரப்படுத்துகின்றன. இந்த அக்னி அடிக்கடி ஜ்வாலையால் மரங்களை வளைத்துப் பயமுறுத்திக்கொண்டு வருகிறது. என் பிள்ளைகள் சிறகுமுளையாதவை. குஞ்சுகளை நானேதூக்கிக்கொண்டு தாண்டத் திறமையில்லாதவள். அவைகளை விடவும் முடியவில்லை. என் உள்ளம் கொதிக்கின்றது. நான் எந்தப்பிள்ளையை விடுவேன்; எந்தப் பிள்ளையை எடுத்துக்கொண்டுசெல்வேன். பிள்ளைகளே! நான் என்னசெய்யலாம்." செய்தபிறகு நீங்கள் என்ன நினைப்பீர்கள். உங்களை விடுவிப்பதைப் பற்றியோசித்தும் எனக்கொன்றும் தெரியவில்லை. உங்களை என் அங்

கத்தினால் மறைத்துக்கொண்டு உங்களுடன்கூட இறக்கப்போகி றேன். 'ஜரிதாரியென்னும் புத்ரன் ஜ்யேஷ்டனுதலால் இந்தக் குலத் திற்கே அவன் ஆதாரம். ஸாரிஸ்ருக்வன் தன் பிதிர்வம்சத்தை ஸந் ததியினால் விருத்திசெய்யும்படியானவன். ஸ்தம்பமித்ரன் தவஞ்செய் பவன். த்ரோணன் பிரம்மஜ்ஞானிகளிற் சிறந்தவன்' என்று முன்னே உங்கள் பிதா சொல்லிவிட்டுத் தயையில்லாமல் போய்விட்டார். உங் களில் யாரையெடுத்துக்கொண்டு போகமாட்டுவேன். இது பெருங் கஷ்டமான ஆபத்து. எதைச்செய்தால் செய்யவேண்டியதைச் செய் ததாகும்" என்று கவலைப்பட்டுக்கொண்டு தன்புத்தியினால் தீயிலிரு ந்து தன்பிள்ளைகளைவிடுவிக்க வகையறியாமலிருந்தது.

இவ்வாறு சொல்லுகின்ற தாயைப்பார்த்து அந்தச் சார்ங்கக பக்ஷிகள், "தாயே! எங்களிடமுள்ள ஸ்நேஹத்தைவிட்டு அக்னியில் லாமலிருக்கிற இடத்திற்குப் பறந்துபோ. நாங்களிங்கேயிறந்தாலும் உனக்குப் பிள்ளைகளுண்டாகும். அம்மா! நீ இறந்தால் நம்முடைய குலத்திற்குச் சந்ததியுண்டாகாது. அம்மா! இவ்விரண்டையும் ஆரா ய்ந்து எது நமது குலத்திற்கு க்ஷேமமாயிருக்குமோ அதைச்செய்ய இதுதான் உனக்கு முக்கியமானகாலம். எல்லாமழிந்துபோகும்படி பிள்ளையாகிய எங்களிடத்தில் நீ ஸ்நேஹம் பாராட்டாதே. புண்யலோ கங்களை விரும்பின எங்கள் பிதாவினுடைய இந்த ஆரம்பம் வீணாக மலிருக்கவேண்டும்" என்றுசொல்லின. அதற்கு ஜரிதை, "பிள்ளை களே! இந்தமரத்தினருகில் பூமிக்குள் இதோ ஓர் எலிவளையிருக் கிறது. சீக்கிரமாக இதில்நுழையுங்கள். இதில் உங்களுக்கு அக்னி பயமிராது. பிறகு நான் இந்தவளையைப் புழுதியினால் மூடிவிடுகி றேன். இவ்வாறுசெய்வதுதான் ஜ்வலிக்கின்ற அக்னிக்குப் பரிகார மென்று நான் நினைக்கிறேன். அக்னியவிந்தபிறகு இந்தப்புழுதிக் குவியலை விலக்குவதற்கு நான் வருவேன். அக்னியிலிருந்து தப்பித் துக்கொள்வதற்கு இந்த என்சொல்லைக்கேளுங்கள்" என்றுசொல் லிற்று. சார்ங்கபக்ஷிகள், "மாமிசம்தின்னும் எலி சிறகுமுளைக்காத எங்களை மாமிசங்களாகத்தின்று அழித்துவிடும். இந்தப்பயத்தை அறிந்திருந்தும் எலிவளையில் நாங்கள் புகமாட்டோம். எங்களை அக் னிகொளுத்தாமலும், எலி அழிக்காமலும் இருப்பதெவ்வாறு? பிதா வினுடைய கொள்கை எப்படி வீணாகாமலிருக்கும்? எங்கள்தாயார் எப்படிப்பிழைத்திருப்பாள்? வளையிற் புகுந்தால் எலியால்நாசம்; ஆகாயத்திற்பறந்தால் அக்னியால் நாசம். இவ்விரண்டையும்பார்க்கும் போது அக்னியில் எரிந்துபோவதுநிறந்தது. எலி தின்பதுநீது. வளை

க்குள் எலியால்தின்னப்பட்டால் இழிவானமரணம்வரும். சிலாக்கிய மான அக்னியில் சரீரத்தைவிடுவது நமக்குவிருப்பம். அக்னியில்லாரி ங்கால் பிரம்மலோகத்தில் சாசுவதமான வாஸம் நிச்சயம்" என்றன.

இருநூற்றைம்பத்தேழாவது அத்தியாயம்.

மயதர்சனபர்வம். (தொடர்ச்சி.)

(தான்சொன்னதைக் குருக்கள்அங்கீகரிக்காமையால் ஜரிதை வேற்றம்கொள்றது.)

ஜரிதை, "இந்தவளையிலிருந்து வெளிப்பட்ட அந்தத்துஷ்ட எலியைப் பருந்து கால்களினுல்இடுக்கி எடுத்துக்கொண்டுபோய்விட் டது. இதில் உங்களுக்குப்பயமில்லை" என்றுசொல்ல, சார்ங்ககங் கள், "அந்தஎலியைப் பருந்துகொண்டுபோனதை நாங்கள் எவ்வகை யிலும்அறியோம். வேறுஎலிகளும் இங்கேஇருக்கும். அவற்றினிட மும் எங்களுக்குப்பயந்தான். நீ வருவது ஸந்தேஹம். காற்றுத்திரு ம்பியடிப்பதைப் பார்க்கிறோம். வளையிற்போனுல் வளையிலிருப்பவற் றினுல் எங்களுக்குமரணம்வருமென்பதுநிச்சயம். தாயே! நிச்சய மானமரணத்தைப்பார்க்கிலும் ஸந்தேஹப்பட்டமரணம் சிறந்தது. நீ வழக்கப்படி ஆகாயத்திற்பற; நல்லபுத்திரர்களையடையலாம்" என் றன. ஜரிதை, "குழந்தைகளே! மிகுந்தபலமுள்ளதும் பறவைக ளிற்சிறந்ததுமாகிய அந்தப்பருந்து அந்தவளையிலிருந்து எலியைத் தூக்கிக்கொண்டு வேகமாகப்போனதை நான்கண்டேன். அதுபறந்து போகும்போது, வளையிலிருந்து எலியைக்கொண்டுபோகும் பருந் துக்கு, "பருந்துக்கரசே! எங்களுக்குவிரோதியானஎலியையெடுத் துக்கொண்டுபறக்கிற நீ பகைவர்களில்லாமல் பொன்மயமான சரீரத் தோடு ஸ்வர்க்கந்தையடைந்திருக்கக்கடவாய்" என்று ஆசீர்வாதங் களைச்சொல்லிக்கொண்டு மிகுந்தவேகத்துடன் பின்சென்றேன். அந்த எலி அந்தப்பருந்தினுல் எப்போதுதின்னப்பட்டதோ அப்போது அந்தப்பருந்தினிடம் விடைபெற்றுக்கொண்டு மறுபடியும் வீடுவந்து சேர்ந்தேன். புத்திரர்களே! சிந்தைப்படாமல் வளையில்புகுங்கள். உங்களுக்குப்பயமில்லை. நான்பார்த்திருக்கையில் மஹாதைரியமுள்ள பருந்தினுல் எலிகொண்டுபோகப்பட்டது" என்று ஜரிதைசொல் லிற்று. சார்ங்ககங்கள், "தாயே! பருந்தினுல் எலிகொண்டுபோகப் பட்டதை நாங்கள் எவ்வகையிலும்அறியோம். தெரியாமல் பூமியின்

வனேக்குள் பிரவேசிக்க எங்களால்முடியாது" என்றன. அதைக் கேட்ட ஜரிதை, "அந்தஎலி பருந்தினற்கொண்டுபோகப்பட்டதை நான் அறிவேன். புத்திரர்களே! உங்களுக்கு இங்கேபயமில்லை. சொன்னதைச்செய்யுங்கள்" என்றது. சார்ங்ககங்கள், "நீ அறிவுகளெல்லாம்கலங்கியிருக்கும்போது பொய்யானஉபசாரவசனங்களினல் எங்களைப்பயத்திலிருந்துவிடுவிக்கலாகாது. அப்படிச்செய்வது புத்தியோடுசெய்ததுமாகாது. நாங்கள் உனக்கு ஒருதவியும்செய்ததில்லை. நாங்கள் யாரென்பதையும் நீயறியாய். எங்களால்உபத்திரவிக்கப்பட்ட நீ எங்களைக்காப்பாற்றுகிறாய். எங்களுக்கு நீ யார்? உனக்கு நாங்கள் யார்? சிறுபெண்ணைகவும் அழகாகவும் பர்த்தாவின் விருப்பத்திற்கு உரியவளாகவுமிருக்கிறாய். தாயே! கணவனிடம் செல். நல்லபுத்திரர்களையடைவாய். நாங்கள் அக்கினியில்பிரவேசித்து நல்லலோகங்களையடைவோம். எங்களைத் தீயெரிக்காமலிருந்தால் நீஎங்களிடம்வரலாம்" என்றுசொல்லின. அவைகள் இவ்வாறு சொல்ல, சார்ங்கி பிள்ளைகளைக்காண்டவவனத்தில்விட்டுவிட்டு விரைவாக அக்னிபயமில்லாத சூக்ஷமமானஇடத்திற்குச் சென்றது. பிறகு அக்னி உக்கிரமானஜ்வாலைகளோடு விரைவாக மந்தபாலருடையபுத்ரர்களான சார்ங்ககங்களிருந்தஇடத்திற்குவந்தது. பிறகு உக்கிரஜ்வாலையுடன் விரைவாகஜ்வலித்த அக்னியைக்கண்டு அந்தப்பக்ஷிகள் துக்கத்துடன் அழுகைச்சொற்களை அக்னியின்சமீபத்தில் கூறின. அவற்றுள், ஜரிதாரியென்னும்பக்ஷி, அக்னியைப்பார்த்துச் சொல்லத் தொடங்கிற்று.

இருநூற்றைம்பத்தேட்டாவது அத்தியாயம்.

மயதர்சனபர்வம். (தொடர்ச்சி.)

(சார்ங்ககங்கள்நான்கும் அக்னியைத்துதிசெய்ய, அவைகளுக்கு அக்னி வரங்கொடுத்தது.)

ஜரிதாரி, "புத்தியுள்ளமனிதன் கஷ்டகாலம் வருவதற்குமுன்னமே ஜாக்கிரதைப்படுகிறான். அப்படிப்பட்டவன் கஷ்டகாலம்வரும்போது ஒருகாலும் துன்பப்படுவதில்லை. எவன் புத்தியில்லாமல் கஷ்டகாலம் வந்திருப்பதைத் தெரிந்துகொள்ளாமலிருக்கிறானோ அவன் கஷ்டகாலம்வந்தபின் துக்கப்படுகிறான். அவன் பெரியநன்மையையடைவதில்லை" என்றுசொல்லிற்று. சாரிஸ்ருக்வன், "நீ

கலங்காதவன், புத்திசாலி; நமக்குவந்திருக்கிறது உயிருக்கபாயம். அனேகரில் ஒருவன்தான் புத்திசாலியாகவும் சூரனுகவும்இருப்பானென்பது நிச்சயம்" என்று ஜரிதாரியைப்பார்த்துச்சொல்லிற்று. ஸ்தம்பமித்ரன், "தமையன்பிதாவைப்போன்றவன். தமையன்தான் கஷ்டங்களிலிருந்துவிடுவிப்பவன். தமையன் அநியாயமிருப்பானுனல் இளையவன் என்னசெய்வான்" என்றுசொல்லிற்று. திரோணன், "அக்னிவிஷைவாக ஜ்வலித்துக்கொண்டு நாமிருக்குமிடத்திற்குவருகிறது. ஏழுஜ்வாலைகளென்னும் நாவுள்ளவாயுடன் கொடிய நெருப்பு எல்லாவற்றையும்வளைத்துக்கொண்டு வியாபிக்கிறது" என்று சொல்லிற்று.

அந்தமந்தபாலருடையபிள்ளைகள் இவ்வாறு ஒன்றோடொன்று பேசிக்கொண்டபிறகு பக்தியுடன் அக்னியைஸ்துதிசெய்தவகையைச் சொல்லுகிறேன். ஜனமேஜயராஜாவே! கேளும். அவைகளுள் ஜரிதாரி, "அக்னியே! நீ * காற்றுக்கு ஆத்மாவைப்போலிருக்கிறாய். † ஓஷதிகளுக்கெல்லாம் சரீரம்போலிருக்கிறாய். ‡ ஜலம் உனக்குக்காரணம். § நீ ஜலத்திற்குக்காரணம். நீ பரிசுத்தமாயிருக்கிறாய். பிரகாசத்தியுள்ளவனே! உன்னுடையஜ்வாலைகள் ஸூர்யனுடையகிரணங்கள்போல மேலும் கீழும் பின்னும் பக்கங்களிலும் பரவுகின்றன" என்றுசொல்லிற்று. ஸாரிஸ்ருக்வன், "அக்னியே! தாயார்போய்விட்டாள். தந்தையையறியோம். எங்களுக்குச்சிறகுஉண்டாகவில்லை. எங்களைக்காப்பவன் உன்னைவிடவேறுயாருமில்லை. அக்னியே! ஆதலால், சிறுவர்களானஎங்களை நீகாப்பாற்றுவாயாக. சுபமானரூபத்தாலும் ஏழுஜ்வாலைகளாலும் துயரப்பட்டுச் சரணுகதிசெய்யுமெங்களை ரக்ஷிக்கக்கடவாய். அக்னிபகவானே! நீஒருவன்தான் தவத்திற்குக்காரணம்; ஸூர்யகிரணங்களுக்கும் உஷ்ணம்கொடுப்பவன் உன்னைத்தவிரவேறில்லை. சிறுவரும் ரிஷிகளுமான எங்களைப் பரிபாலனம்செய். ஹவிஸ்ஸுகளைவஹிப்பவனே! எங்களைவிட்டு விலகிச்செல்" என்றது. ஸ்தம்பமித்திரன், "அக்னியே! எல்லாம்நீ ஒருவன்தான். இந்தஜகத்தெல்லாம் உன்னிடமிருப்பது. நீதான் பிராணிகளைத்தாங்குகிறாய். நீதான் உலகத்தைவளர்க்கிறாய். நீதானே முன்னுக்குக்

---

* உஷ்ணமில்லாமல்காற்றுஅசைவதில்லை. † உயிருக்குச்சரீரம்ஆதாரமாவதுபோல் வளருகிறவற்றிற்கு உஷ்ணம் ஆதாரம். ‡ ஸமுத்திரத்தில்வடவாக்னியுண்டானதனால் ஜலம்அக்னிக்குக்காரணம். § ஸ்ருஷ்டிக்ரமத்தை ஆகாயத்திலிருந்து வாயுவும் வாயுவிலிருந்து அக்னியும் அக்னியிலிருந்து ஜலமும் ஜலத்திலிருந்து பூமியும் உண்டாயிருப்பதாக வேதம் சொன்னதனால் ஜலத்திற்கு அக்னிகாரணம்.

கொண்டுபோகிறவன், நீ, ஹோமம்செய்யப்பட்டவற்றைத் தேவர்களுக்குச்சேர்ப்பிக்கிறவன். சிறந்தஹோமத்திரவியமும் நீயே. ஞானிகள் உன்னைப் பலவாகவும் ஒன்றாகவும் அறிகின்றனர். ஹவிஸ்ஸுகளை வஹிப்பவனே! நீ இந்தமூன்றுலகங்களையும்படைத்துப் பிரளயகாலம்வரும்போது நீயேவிருத்தியாகி மறுபடியும் ஸம்ஹாரஞ்செய்கிறாய். அக்னியே! ஸ்ருஷ்டியில்லகங்களுக்கெல்லாம் பிறக்குமிடமும் நீயே. பின்பு லயிக்குமிடமும் நீயே" என்றது. துரோணன் "ஜகத்பிரபுவே! நீ சரீரத்திற்குள்மறைந்திருந்துகொண்டு எப்போதும் விருத்தியடைந்து பிராணிகள்புஜிக்கும்அன்னத்தைப் பக்குவஞ்செய்கிறாய். எல்லாம் உன்னை ஆதாரமாகக்கொண்டிருப்பன. அக்னியே! சுத்தனே! நீ ஸூர்யனுகஇருந்து பூமியின்ஜலத்தையும் பூமியிலுண்டானவற்றின்ஸாரங்களெல்லாவற்றையும் கிரணங்களினால்இழுத்து மறுபடியும் (வேண்டுங்காலத்தை) அறிந்துவருஷாகாலத்தில் வருஷித்து அந்தமழையினால் இவ்வுலகத்திலுள்ளவற்றை விருத்திசெய்கிறாய். சுத்தனே! தீக்ஷ்ணமானகிரணங்களையுடையவனே! மறுபடியும் பச்சையிலைகளோடுகூடிய இந்தஓஷதிகளும் தடாகங்களும் வருணனுக்குமுக்கியஇடமாகிய பெருங்கடலும் உன்னால்உண்டாகின்றன. எங்களுக்கு க்ஷேமத்தைச்செய்து காப்பாற்றுகிறவனுகஇருக்கக்கடவாய். இப்போது எங்களை அழித்துவிடாதே. * பொன்னிறமானகண்களையும் சிவந்தகழுத்தையுமுடையவனே! கறுத்தவழியுள்ளவனே! ஹோமஞ்செய்தலைப்புஜிப்பவனே! விளங்குபோ. ஸமுத்திரபத்னிகளாகிய நதிகளை விடுவதுபோல எங்களைவிடு" என்று சொல்லிற்று. பிரம்மஞானியான துரோணனால் இவ்வாறுதுதிக்கப்பட்டஅக்னி, மந்தபாலருக்குத் தான்செய்தவாக்குத்தத்தத்தைப்பற்றி மனமகிழ்ச்சியுடன் துரோணனைப்பார்த்து, "நீ துரோணனென்னும் ரிஷியாயிருக்கிறாய். நீசொன்னது வேதம். நீவிரும்பினதைச்செய்வேன். உனக்குப்பயமில்லை. மந்தபாலர் முன்னமே என்னிடத்தில் உங்களைப்பற்றி, "நீவனத்தைத்தகிக்கும்போது என்புத்ரர்களைவிடக்கடவாய்" என்றுதெரிவித்திருக்கிறார். துரோணனே! அவர் அப்போது சொன்னதும் நீஇப்போதுசொன்னதுமாகிய இவ்விரண்டும் எனக்கு மிகப்பெரியன. உனக்குஎன்னசெய்யவேண்டும்? சொல். மிகச்சிறந்தபிராம்மணனே! நீசெய்த இந்தஸ்தோத்திரத்தினால் நான் மிகவும் ஸந்தோஷமடைந்தேன். உனக்குஸுகமுண்டாகக்கடவது" என்று

* ஜ்வாலையைக்கண்ணாகவும் தணலைக்கழுத்தாகவும் புகையைவழியாகவும் கருதிச்சொன்னது.

சொல்ல, அதைக்கேட்டு, துரோணன், "தூயவனே! இந்தப்பூனைகள் எங்களை நித்தியம்பயமுறுத்துகின்றன. ஹரதாசனனே! இவற்றை,இனங்களுடன் எரிப்பாயாக" என்றுசொல்லிற்று. ஜனமேஜயரே! சார்ங்கசங்கள்சொன்னதைஒப்புக்கொண்டு விடைகொடுத்தபின் அக்னி அவ்வாறேசெய்து (பூனைகளையெரித்து) விருத்தியடைந்து காண்டவவனத்தை எரித்தது.

இருநூற்றைம்பத்தொன்பதாவது அத்தியாயம்.

மயதர்சனபர்வம். (தொடர்ச்சி.)

(அக்னியவிந்தபிறகு சுஜீகளையும் மனைவியையும் பார்க்கவந்த மந்தபாலரை அவைகள் அதரவுசெயதது.)

ஜனமேஜயரே! மந்தபாலர் அக்னியிடம் பிரார்த்தித்திருந்தும் தமதுபுத்திரர்களைப்பற்றிச் சிந்தையில்ஸுகத்தையடையவில்லை. புத்திரர்களைக்குறித்து வருத்தமுற்ற அம்முனிவர், லபிதையைப் பார்த்துப் பின்வருமாறு சொல்லலானார். "லபிதையே! என் சிறிய புத்திரர்கள் எவ்வாறு தங்களைக்காப்பாற்றிக்கொள்ளமாட்டுவர். அக்னியெரியும்படி காற்று விரைவாக வீசினால் என்புத்திரர்கள் தங்களை விடுவித்துக்கொள்வதற்கு முடியாமற் போவார்கள். பரிதபிக்கத்தக்க அவர்களுடைய தாயாரும் புத்திரர்களைக் காப்பாற்றச் சக்தியற்றவளாய்ப் புத்திரர்களை ரக்ஷிப்பவரைக்காணுது துயரமுற்று எவ்வாறிருப்பாளோ. மேலே கிளம்புவதற்கும் பறப்பதற்கும் சக்தியில்லாத என்னுடைய புத்ரர்களைப்பற்றிப் பலவிதமாகத் துக்கப்பட்டுக் கதறிக்கொண்டு எவ்வாறு ஓடுவள். என்னுடைய ஜரிதாரி யென்னும் புத்திரன் எப்படியானானோ. ஸாரிஸ்ருக்வன் எப்படியோ. ஸ்தம்பமித்ரன் எப்படியோ. துரோணன் எப்படியோ. அந்தப் பரிதபிக்கத்தக்க ஜரிதை எப்படியானாளோ" என்றார். ஜனமேஜயரே! அந்த வனத்தில இவ்வாறு அடிக்கடி சொல்லிக்கொண்டிருந்த ஸ்ரீமந்தபாலரிஷியைப்பார்த்து லபிதை பொறுமையுடன், "உமக்குப் புத்திரர்களைப் பற்றினகவலை வேண்டாம். அவர்கள் பிரம்மதேஜஸும் மஹிமையுமுள்ள ரிஷிகளென்று சொல்லியிருக்கிறீர். அவர்களுக்குத் தீயின்பயமில்லை. நீர் அவர்களைப்பற்றி அக்னியினிடம் என்முன்னேபிரார்த்தித்திருக்கிறீரே. மஹாத்மாவாகியஅக்னியும் அப்படியேஆகட்டுமென்று

உமக்கு வாக்குத்தத்தம்செய்திருக்கிறான். திக்குப்பாலகனை அக்னி தான் ஒரு சொல்லே நேரிற்சொல்லி அதைப் பொய்யாக்கமாட்டான். கவலையில்லாதவரே! ஆதலால், உமதுபிள்ளைகளுக்குச் செய்யவேண் டியபந்துகாரியத்தில் இப்போது உமதுமனம்பற்றவில்லே. என் பகை யாளியான அந்த ஜரிதையைப்பற்றித்தான் நினைத்துப் பரிதாபப்படு கிறீர். அவளிடத்தில் முன்னே உமக்கிருந்த ஸ்நேஹம்போல் என் னிடத்திலில்லையென்பது நிச்சயம். ஸஹாயர்களுள்ளவனும் திறமை யுள்ளவனுமான ஒருவன் வேண்டியவர்களாகிய நம்மிடத்தில் அள் பில்லாமல் நம்மைப்பீடிப்பதை நாம் பார்ப்பது எவ்வகையிலும் நியா யமாகாது. நீர் எவளுக்காகப் பரிதாபப்படுகிறீரோ, அந்த ஜரிதை யினிடமே போம். நான் கெட்டபுருஷனையடைந்தபெண் இருப்பது போலச் சகாயமில்லாமற் சஞ்சரிப்பேன்" என்றது அதைக்கேட்ட மந்தபாலர், "நீ நினேப்பதுபோல இவ்வுலகத்தில் நான் சஞ்சரிக்க வில்லே. நான் புத்திர ஸந்தானத்துக்காகச் சஞ்சரிக்கிறேன். என்னு டைய அந்தச்சந்ததி கஷ்டத்திலிருக்கிறது. உள்ளதை விட்டுவிட்டு இனி வருவதைப் பிடிப்பவன் மதிகெட்டவன். அவனே உலகம் அவ மதிக்கும். நீ உன்விருப்பம்போற் செய்யலாம். இந்த அக்னி மரங்களே அடிக்கடி சூழ்ந்து ஜ்வலித்துப் பயமுற்ற என் உள்ளத்தில் அமங்க ளமான கொதிப்பையுண்டுபண்ணுகிறது" என்று சொன்னர் அவ் வாறு பர்த்தாசொன்னதைக்கேட்டுக் கணவனிடத்தில் அன்புள்ள அந்தலபிதை தானும் துக்கமடைந்து கணவனுக்குத் திரும்பவும் நல் வார்த்தை சொல்லியது. அந்தச்சார்ங்கங்களிருந்த இடத்தைவிட்டு நீங்கினபின்பு குஞ்சுகளின்மேல் அன்புள்ள ஜரிதை அவைகளிடமே மறுபடியும் வந்தது. அந்தஜரிதை அந்த வனத்தில் அந்தக்குஞ்சுக ளெல்லாம் தீயிலிருந்துவிடுபட்டுத் தீங்கில்லாமல் சூக்ஷமமாகச் சப்தித் துக்கொண்டிருக்கக் கண்டது. அவற்றைப்பார்த்ததனல் இடைவி டாமல் கண்ணீர்சொரிந்தது. அப்போது அன்புள்ளஜரிதை தன்பிள் ளேகளேப்பார்த்தது. நம்பத்தக்கதன்றென்று பலமுறைநினேத்து அவை களிடம் கதறிக்கொண்டு அந்தப்பிள்ளேகள் ஒவ்வொன்றினிடமும் போய்ப் பேசியது ஜரிதை பிள்ளேகளிடமுள்ள அன்பினல் அவை களேத்தழுவிக்கொண்டு முத்தமிட்டது. ஜனமேஜயரே! அப்போது மந்தபாலரும் வேகமாகவந்தனர். பிறகு அந்தப்பிள்ளேகளிலொன் றும் அரசைச் சந்தோஷமாகஅழைக்கவில்லே. "மந்தபாலர் பிதா வாயிருப்பதனலும் அவருடைய தவத்தின் சிறப்பினலும் சிறகு முளேத்தநாங்கள்யாவரும் அவர் அனுக்கிரகத்திற்காக அவரை நம

ஸ்கரிக்கிறேம்" என்றன. இவ்வாறு அந்தப்பிள்ளைகள் சொன்னதைச் சந்தோஷமாகக்கேட்டுச் சிறந்த தவமுள்ள கௌதமராகிய மந்தபாலர் குழந்தைகளான தமதுபிள்ளைகளைத்தழுவி உச்சியில் மோந்து அன்புடன் தாமாகஅழைத்து, அடிக்கடி பேசுகின்ற ஓவ்வொருபிள்ளையினிடத்தும் ஜரிதையினிடத்தும் பலமுறைபேசினர். அப்போது அவை அந்தரிக்ஷியினிடம் நல்லதோ கெட்டதோஎதையும் சொல்லவில்லை. மந்தபாலர், "ஜரிதை!! இவர்களில் உன்னுடைய பூர்த்தபுத்திரன் எவன்? அவனுக்குஇளையவன் எவன்? மத்தியிலுள்ளவன் எவன்? எவன் கடைசியவன்? தாய்முற்று இவ்வாறுபேசுகிறஎனக்கு ஏன்மறுமொழிசொல்லாமலிருக்கிறாய்? நான் அக்னியினிடத்தில் செய்யவேண்டியதைச் செய்தேன். அதனாலேயும் என்மனத்திற்குத் திருப்தியுண்டாகவில்லை" என்றார். மந்தபாலர் இவ்வாறுசொல்லிப் பத்னியைத்தடுத்திக்கொண்டிருந்தார். அப்போது ஜரிதை, "ஜ்யேஷ்டபுத்திரனால் உமக்கு ஆகவேண்டியதென்ன? அவனுக்கிளையவனால் என்னஉபயோகம்? முன்றாமவன்தான் எதற்கு? கடைசியவன்தான் என்னத்துக்கு? என்னை ஒன்றுமில்லாமல்விட்டுவிட்டு யாரைமுன்னேஅழைத்தீரோ அந்தபுண்ணையுள்ள சிறுபெண்ணுகிய லபிதையிடம்போம்" என்றுசொல்லிற்று. மந்தபாலர், "பெண்களுக்கு வேறுபுருஷனையடைவதைப்பார்க்கிலும் பரலோகத்திற் புருஷார்த்தத்தைக்கொடுப்பது வேறொன்றுமில்லை. மாற்றாளிருப்பதைத்தவிர வேறொன்று இவ்வுலகில் புருஷார்த்தத்தைக்கெடுப்பதில்லை. மாற்றாளிருப்பது தூவேஷமென்கிற அக்னியை ஜ்வலிக்கச்செய்வதும் மிகுதியாதரத்தையுண்டுபண்ணுவதாமன்று. சிறந்தகவமுள்ளவளும் நற்குணங்களுள்ளவளும் எல்லாப்பிராணிகளிலும் தியாதிபெற்றவளுமாகிய அருந்ததியும் பதிவிரதாமானவளிஷ்டரைப்பற்றிச் சங்கித்தாள். மிகவும்பரிசுத்தமான மனமுள்ளவரும் எப்போதும் அவள் விருப்பத்தையும் நன்மையையும் தேடுகிறவரும் மனோநிச்சயமுள்ளவரும் ஸப்தரிஷிகளிற்சிறந்தவருமான அந்தவளிஷ்டமஹரிஷியை அவள் அவமதித்தாள். அவன் அந்தக்கோபத்தினால் புகைபட்டதுபோல் கண்கள்சிவந்து அவர்கண்ணீர்பட்டுமம் படாமலும் அழுகுசெய்து கொள்ளாமலும் ஸ்நேஹமுக்குறிகளைத் தேடிக்கொண்டிருந்தாள். புத்திரர்களேநீங்கள் பிரியத்துடன்வந்திருக்கிறேன். இப்படிநடந்திருக்க என்னை அந்தஅருந்ததி வளிஷ்டரைநடத்தினதுபோல வேறியும் நடத்துகிறாய். மனவியென்றநம்பிக்கை புருஷன் எவ்வகையிலும் வைக்கத்தகாது. புத்ராக்களைப்பெற்றஸ்திரீ புருஷனிடத்தில்

கூடாது மிருப்பதாகநினைப்பதில்லை" என்றுசொன்னார். அதன்பிறகு அந்தப்பிள்ளைகளெல்லாம் அந்தரிஷியைச் செவ்வையாகஉபாஸித்தன. அவரும் அந்தப்பிள்ளைகளையெல்லாம் தேற்றுவதற்கு ஆரம்பித்தார்.

இருநூற்றறுபதாவது அத்தியாயம்.

மயதர்சனபர்வம். (தொடர்ச்சி.)

(மரீதபாலர் பிள்ளைகளுடன் ஸமாதானம் செய்துகொண்டு வேறிடம் சென்றதும், இந்திரன் கிருஷ்ணர்ஜுனருக்கு வரங்கொடுத்து ஸ்வர்க்கத்துக்குத்திரும்பிச்சென்றதும், அக்னியையனுபவியபின் கிருஷ்ணர்ஜுனர் மயனோடு நதிக்கரையிலுட்காந்ததும்.)

"உங்களைவிடுவிப்பதற்காக என்னால் அக்னி பிரார்த்திக்கப்பட்டான். மஹாத்மாவான அக்னியினால் 'அப்படியேயாகட்டும்' என்று எனக்குவாக்குத்தத்தஞ்செய்யப்பட்டது. அக்னி வாக்குத்தத்தம் செய்ததையும் உங்கள் தாயார் தர்மந்தெரிந்தவளென்பதையும் உங்களுடைய சிறந்த மஹிமையையும் அறிந்துதான் நான்முன்னமே இங்கே வரவில்லை. புத்ரர்களே! என்னைப்பற்றி நீங்கள் உளைத்தில் வருத்தம்வைக்கத்தகாது. நீங்கள் ரிஷிகளென்பது அக்னிக்கும் தெரியும். அக்னி பிரம்மமென்பது உங்களுக்கும் தெரியும்" என்று தேற்றிக் குழந்தைகளையும் மனைவியையும் அழைத்துக்கொண்டு அந்த மந்தபாலரென்னும்பிராம்மணர் அந்த இடத்தைவிட்டு வேறுதேசம் சென்றார். அப்போது அக்னிபகவானும் கிருஷ்ணர்ஜுனர்களுடன் உலகத்திற்கு நன்மையைச்செய்வதற்காக விருத்திபடைந்து காண்டவவனத்தை யெரித்தான். அங்கே வாய்க்கால்களாகஓடும்கொழுப்புகளையும் உடல்நீரையும் குடித்து மிகுந்ததிருப்தியையடைந்த அக்னி அர்ஜுனனைக்கண்டான். பிறகு பகவானுகிய இந்திரன் தேவக்கூட்டங்களாற் சூழப்பட்டவனாக ஆகாயத்தினின்றும் இறங்கி, கிருஷ்ணர்ஜுனர்களைப்பார்த்து, "நீங்களிருவரும் தேவர்களாலும் செய்யமுடியாதகாரியத்தைச் செய்திருக்கிறீர்கள். நான் ஸந்தோஷமடைந்தேன். இந்தலோகத்தில் மனிதருக்குக்கிடைத்தற்கரிதான வரம் கேளுங்கள்" என்றுசொன்னன். அர்ஜுனன் இந்திரனிடத்தில் அஸ்த்ரங்களெல்லாவற்றையும் வரமாகக்கேட்டான். மிகுந்தமகிமையுள்ள இந்திரனும் அவன்கேட்டதைக்கொடுப்பதற்கு ஒருகாலநியமஞ்செய்.

தான்: "பாண்டவனே! பகவானுகியசிவபிரான் எப்போது உனக்குப் பிரஸன்னராவரோ அப்போது உனக்கு எல்லா அஸ்த்ரங்களையும் கொடுப்பேன். கௌரவச்ரேஷ்டனே! அந்த அணுக்கிரஹகாலத்தை நானுகவேதிரிந்துகொள்வேன். நீ பெருந்தவஞ்செய்தபிறகு நான் ஆக்னேயாஸ்திரங்கள் வாயு அஸ்த்ரங்கள் எனது ஔந்த்ராஸ்த்ரங்கள்ஆகிய இவற்றிலுள்ள எல்லாவகைகளையும் உனக்குக் கொடுப்பேன். தனஞ்சயனே! நீ அப்போது பெற்றுக்கொள்ளலாம்" என்றான். கிருஷ்ணனும் அர்ஜுனனோடு சாசுவதமான ஸ்நேஹத்தை வரமாகக்கேட்டார். சிறந்தபுத்திமானான கிருஷ்ணனுக்கும் இந்திரன் அந்தவரத்தைக்கொடுத்தான். இவ்வாறு அவர்களிருவருக்கும் வரம் கொடுத்து அக்னிக்கும் விடைகொடுத்துவிட்டுப் பிரபுவானதேவேந்திரன் தேவர்களுடன் ஸ்வர்க்கத்திற்குச்சென்றான். அக்னியும் அவ்வனத்தை மிருகபக்ஷிகளுடன் கொளுத்தி மாம்ஸங்களையுண்டும் கொழுப்புக்களையும் ரக்தங்களையும் குடித்தும் மிகுந்ததிருப்தியடைந்துஇருபத்தொருநாளைக்குப்பின் அடங்கினான். அக்னி மிகுந்தபிரீதியுடன் அந்தக்கிருஷ்ணர்அர்ஜுனர்களைப்பார்த்து, "புருஷச்ரேஷ்டர்களான உங்களிருவராலும் நான் என்னிருப்பப்படி திருப்திசெய்விக்கப்பட்டேன். வீரர்களே! உங்களுக்கு விடைகொடுக்கிறேன். நீங்கள் இஷ்டமானஇடம் செல்லுங்கள். அர்ஜுன! சிறந்தபுத்தியுள்ளவனே! காண்டீவமென்னும் உயர்ந்தவில்லும் பாணம்வற்றாத பெருந்தூணிகளும் ஹனுமத்வஜமுள்ள இந்ததேரும் உனக்குக்கொடுக்கப்பட்டன. இந்தவில்லினாலும் இந்ததேரினாலும் தேவாஸுரமனிதர்களுள்படச் சத்துருக்களெல்லாரையும் யுத்தத்தில்ஜயிப்பாய்" என்றுசொன்னான். ஜனமேஜயரே! மஹாத்மாவான அக்னியினால் இவ்வாறு விடைகொடுக்கப்பெற்ற அந்தக்கிருஷ்ணர்அர்ஜுனர்களும் மயனென்னும்அசுரனும்ஆகியமூவரும் கால்நடையாகச்சென்று அழகானகாண்டவவனத்தைச்சேர்ந்து உட்காராதனர்.

மயதர்சனபர்வம் முற்றிற்று.

ஆதிபர்வம் முற்றிற்று.